உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவசண்முகன் றுணை.

ஸ்ரீகாஞ்சிபுரத்தில், ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளின்

வரப்பிரசாதமாயெழுந்தருளியிருந்த

கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளியற்றிய

# கந்தபுராண மூலமும்

முத்தமிழ் ரத்நாகரம்

## ம. தி. பானுகவி அவர்களியற்றிய

## கலாபூஷணமென்னும் உரையும்

இவை

தா-குப்புசாமிநாயகர் கம்பெனியாரால்

தமது

சென்னை ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1907.

**Vol. 1**

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கச்சியப்ப சிவாசாரியர் சரித்திரச்சுருக்கம்.

## கச்சியப்ப சிவாசாரியர்.

இவர், இற்றைக்கு ஆயிரத்து ஒருநூறு வருடங்களுக்கு முன்னர்க் காஞ்சிமா நகரில் ஆதிசைவ சிவாசாரியர் பரம்பரையில் வந்த காளத்தியப்பக்குருக்களைத் தந்தையாகக்கொண்டிப்பூமண்டலஞ்செய்த புண்ணியத்தாலே அவதரித்துக் கச்சியப்பரென நாமகரணஞ் சூட்டப்பெற்றுத் தக்கபருவத்தில் உபநயனமும் சமயவிசேஷ தீட்சைகளும் பிதாவின் வழியெய்தி வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று வடமொழி தென்மொழிகளில் மிகுந்த வல்லவராகி வேதாகமபுராணேதிகாசங்களைக் குருகுல வாசஞ்செய்து பயின்று கலாபூரணராகிப்பிரமசரிய விரதமுடித்துக் கிரகத்தாச் சிரமந்தாங்கித்தங்குலமுறைப்படி கலாசோதனையுடன் ஆசாரியாபிஷேகமும் பெற்றுக் கச்சியப்பசிவாசாரியராய்க் குமரகோட்டத் தெம்பெருமானை யுவப்பிக்கும் அருச்சகராகிச் சுப்பிரமணியோபாசனஞ்செய்து மந்திரசித்தி தியானசித்தி தரிசனசித்திகளான உபாஸனை சம்பூரணத்தைப்பெற்றுச்சண்முகசடாட்சர சித்தராய்க் கற்றறிபுலமையுடன் அருட்புலமையுமெய்தி அனைவரும் வணங்கத்தக்க மஹாகவியாய் விளங்கினர்.

தமிழ் நாட்டினர்செய்த புண்ணிய விசேஷத்தால் இவ்வாசிரியர் பதினெண்புராணங்களுள் ஒன்றான காந்தமகாபுராணத்துள் விஸ்தாரமாகவுரைக்கும் சண்முகப்பெருமான் சரிதத்தினைப் பாராயணஞ் செய்துவரு நியமங்தவுறுதிருந்தனர். ஒருநாள்குமாரசுவாமியார் நீ எமதுசரிதத்தினைத் தமிழ்யாப்பாலியற்றுதி என்றருளிச்செய்ய அவ்வாணையைநிறைவேற்றுவான் ஆரம்பித்துத் தமிழில்யாப்பாற் காந்தப்புராணத்துள்ள சிவரகசியகண்டத்துச் சங்கரசங்கிதையின் ஆறுகாண்டங்களை ஐந்திலக்கண வமைவுடன் சொற்சுவையும் பொருட்சுவையுநிரம்பிவிளங்க ௧௦, ௩௪௯-பாக்களாற்பாடி முடித்ததற்குக்கந்தபுராணமெனப்பெயரிட்டனர். குமரக்கடவுளின் திருவருண் மேற்கொண்டியற்றிய அந்நூலினைத்தக்கவண்ணம் அரங்கேற்றுமாறக்கடவுளின் திருவருளாற் காஞ்சிநகரவாசிகளும் பிறநகரினரும் ஒருங்குகுழுமிக் கந்தபுராணத்தினையும் கச்சியப்பசிவாசாரியரையும் பொற்சிவிகையி லெழுந்தருளுவித்துநகரிவலம்வந்து ஸ்ரீகுமரகோட்டத்தெம்பெருமான் சன்னிதியிற்சேர்த்தனர். கந்தபுராணத்துடன் சிவிகையினின்றிறங்கியவாசிரியர் குமரக்கடவுளின் சன்னிதானத்தையடைந்து அவர்திருவடியிற் கந்தபுராணத்தினைவைத்தருச்

சனை செய்தடிபணிந்து இருகரங்களாலு மேந்திவந்து அரங்கேற்றுதற்கென வமைத்திருந்த சன்னிதானத்தின் முன்னிடத்துள்ள அதியற்புத விசித்திர விநோதரம்மிய மண்டபத்திலிட்டிருந்தவறுகாற்பீடத்தி லெழுந்தருளி இருந்து ஆமர்த்தக சிகரத்திற் சிவபெருமான் முனிகணங்களுக் குபதேசம்புரிந்ததை யொப்பச் சாதுர்வர்ணத்துச் சாதுசனங்களுங் கேட்டுய்யுமாறு தாமே படித்துப் பொருளருளிச்செய்து கேட்டாரனைவரும் உள்ளமகிழ்வுறுமாறு செய்தனர். தெய்வத்திருவருள் கைவந்த விவ்வாசிரியரியற்றிய விந்நூலினை யவர்காலந்தொட்டே சிவனடியவர்கள் பொன்னே போற்போற்றிப் பயின்று பலவகை யபீஷ்டங்களையுந் தட்டின்றியெய்தி வருகின்றனர்.

நியமத்துடன் இக்கந்தபுராணத்தினைப் பாராயணஞ்செய்வோர் கந்தக்கடவுளின் கருணையால் வித்தியாலாபமுதலிய நல்லபீஷ்டங்களை இக சன்மத்திலேயே எய்துவரென்பது திண்ணம் திண்ணம். இத்தகைய மகத்துவமமைந்த கந்தபுராணத்தினை இயற்றிய ஆசிரியர் குமரக்கடவுளின்றிருவடிக்கமலத்தினைமறவாதாராய்ப் பல நன்மாணுக்கர்கட்குக் கந்தபுராணமுதலியவைகளைக் கற்பித்திருந்து சிவசாயுச்சிய மெய்தினர்.

இவர் மாணவருளொருவரான கோனேரியப்ப நாவலர் ஏழாவது காண்டமான உபதேச காண்டத்தினைத் தமிழிலியற்றி ஆசிரியரெதிரி லரங்கேற்றினரென்ப.

முதலாவதாக விருத்தப்பாவிற் பாரகாவியமாகத் தோன்றி உலகினின்று நிலவு வதிக் கந்தபுராணமேயன்றி மற்றொன்றின் றென்னவெவரும் பின்னிடார்.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமே இவ்வாசிரியர் காலத்திலக்கணம். சங்கச்செய்யுட்களான பஞ்சகாவியமுதலியவையே இவர்க்கிலக்கியங்கள் என்பதை, இவரியற்றிய விக்கந்தபுராணத்தினை நல்லாசிரியன் வழிக் கேட்குமுறையிற் கேட்டாரறிவர்.

இவ்வாசிரியர் கந்தபுராணம் அரங்கேற்றியகாலத்து அபியுக்தர் கூறியதாக இரண்டு பாக்கள் வழங்குகின்றன; அவைகளே அவரது பெருமிதங்களை நன்கு விளக்குகின்றன. அவை,

உச்சிதமாஞ்சிவ வேதியன்காளத்தி யோங்குமைந்தன்
கச்சியப்பன்செய்த கந்தபுராணக் கலைக்கடலின்
மெச்சிய கல்விமதியும் வெண்டாமரைமேவுமின்னு
மிச்செவிநாவினுக்கின்பா மமுதுமெழுந்தனவே.

வேதமொடு வேதாங்கம் பயின்றுவல்லோன்
விரிந்தசிவாகம முணர்ந்துமேன்மை பூண்டோன்
போதநிறை சிவமறையோன் காஞ்சிவாழும்
புனிதமிகுகச் சியப்பகுரவனுனேன்

வாதமுறுபுலவர் குழாமகிழ்ந்துபோற்ற
மதிமலிமாடம் புடைசூழ்குமரகோட்டத்
தேதமறுசகாத்த மெழுநூற்றின் மேலா
யிலகுகந்தபுராண மரங்கேற்றினனே. என்னும் இவையேயாம்.

இவ்வாசிரியர் சிறப்பைவியந்து பிற்காலத்தான்றோரானபடிக்காசுப் புலவர் தாம்பாடிய தொண்டைமண்டல சதகத்துள்

அந்தப்புரமுமறுநான்கு கோட்டகத்தாருமொன்றாய்க்
கந்தப்புராணம் பதினாயிரஞ்சொன்ன கச்சியப்பர்
தந்தப்பல்லக்குச் சிவிகையுந்தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப்புராணமரங்கேற்றினர் தொண்டைமண்டலமே.

என்று கந்தபுராண மரங்கேற்றுதற்கு ஆசிரியரைக் காஞ்சிநகர்வாசிகளும் இருபத்துநான்குகோட்டத்து வேளாளர்களும் ஒருங்குகுழுமி அவர் திருமாளிகைக்குச் சென்று அவரைத்தந்தப் பல்லக்குச் சிவிகையிலேற்றித் தாமே சுமந்து குமரக்கடவுளின் சந்நிதிக்கு அழைத்துவந்து அரங்கேற்றுவித்தனர் என்று கூறுதலின் கச்சியப்பசிவாசாரியர் அவனிவரானும் வணங்கத்தக்க அருண்மூர்த்தியாய்க் குருமூர்த்தியாய் விளங்கிய சடாட்சரமந்திர சித்து மூர்த்தியே என அறியநிற்கின்றார்.

இவ்வாசிரியர் பெருமானுடைய சரிதம் வெகுகாலத்துக்கு முந்தியதாதலின் அறிந்தவளவெழுதினேம்.

கச்சியப்பசிவாசாரியர் திருவடிவாழ்க.

ம-தி-பானுகவி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# காண்ட அட்டவணை.



## உற்பத்திகாண்டத்தின் படல அட்டவணை.

உ

# அசுரகாண்டத்தின் படல அட்டவணை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவசண்முகன் றுணை.

# கந்தபுராண மூலமும்

## அதனுரையான கலாபூஷணமும்

விகடசக்கர விநாயகர் காப்பு.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

(இதன் பதவுரை.) திகழ் - பிரகாசிக்கின்ற, தசம்-பத்து, கரம் - அத்தங்களையும்:, செம்முகம் - அழகிய முகங்கள், ஐந்தும் - ஐந்தினையும், உளான் - உடைய சிவபெருமானது, சகடம் - தேரினது, சக்கரம் - சக்கரமான, தாமரைநாயகன்-கமலநாதனான சூரியன், அகடு - வயிற்றினிடத்து, அசக்கு-கட்டப்பட்ட, அரவின் - ஆதிசேடனுடைய, மணியா - சுடிகாமணிபோன்று, உறை-(லம்போதரசமீபத்திற் பொருந்தப் பேருருவங்கொண்டெழுந்தருளி) இருக்கின்ற, விகடசக்கரன் - விகடசக்கர விநாயகப்பெருமானுடைய , மெய் - நித்தியமான, பதம்-திருவடிகளை, போற்றுவாம்-துதிப்பாம் என்றவாறு.

(பொழிப்புரை.) விளங்காநின்ற பத்துக்கரங்களையும் ஐந்து திருமுகங்களையுமுடைய சிவபெருமானது திருத்தேரின் சக்கரமான சூரியனானவன் வயிற்றினிடத்துக் கட்டப்பட்ட உதரபந்தனமான ஆதிசேடனுடைய சுடிகாமணிபோல விளங்கும் வண்ணம் எழுந்தருளி இருக்கின்ற விகடசக்கர விநாயகப்பெருமானுடைய அழியாத சரணகமலங்களைத் துதிப்போம்.—எ-று.

சிவபெருமான் ஐந்துதிருமுகங்களையும் பத்துத்திருக்கரங்களையுமுடையராதலின் திகடசக்கரச் செம்முகமைந்துளான் என்றார். ஐம்முகங்களையுடைய சிவபெருமான் சதாசிவ மூர்த்தியும் அருவுருவத்திருமேனியு முடையராதலானும் வைதீக சைவசித்தாந்தங்கள் இப்பெருமானையே "துரீயோசிவ" என்று கொண்டாடித் துதித்தலானும் உருத்திரன் முதலிய பெயர்களையேற்றுநிற்பவரு மிச்சதாசிவ மூர்த்தியேயாதலானும் சதாசிவமூர்த்திக்கு மேல்நிற்பதொரு தியான மூர்த்தியின்மையானும் இவ்வைம்முகத்தேவின் அருள்விளையாட்டே இந்நூல்முழுதுமாதலானும், இவ்வைம்முகப்பெருமானே அறுமுகப்பெருமானாய்ச் சூரசங்காரஞ் செய்தனராதலானும் குமரக்கடவுளின் விசித்திரலீலைகளையுட்கொண்டு நிற்குமிந்நூல் குமரக்கடவுளைச் சதாசிவப்பெரு

மானேயென்று பிரகாசப்படுத்துதலானும் இந்நூல்முற்றிலும்சிவபாரம்மியத்தையன்றி மற்றொன்றையும் மயங்கக்கூறாதாதலானும் இந்நூல் சைவசமயிகளனைவருக்கு முரித்தென்று காட்டவேண்டுமென்னுங் கருத்தானும் சிவபெருமானையன்றி யுயர்ந்த மங்கலப் பொருள்களின்றென்ப துண்மையாதலானும், ஆசிரியர் சதாசிவப்பெருமானை இந்நூலினாரம்பத்திலுத் தேசத்தாற்றுதித்து, நூதனகருமந் தொடங்குவோர் விநாயகரை வணங்கித் தொடங்கவேண்டுமென்று சிவபெருமானாணையிட்டிருத்தலின் விநாயகப் பெருமானைத் துதித்தனர் என்க.

காணாபத்திய மதத்தினர் விநாயகக்கடவுளே சிறந்த கடவுள், சிவபெருமான் முதலியோர் விநாகப்பெருமானிற் குறைந்தாரென்று விநாயகபுராணத்து விமலனருள் பெறுசரிதமாதியவற்றைக்கண்டு மருண்டுரைக்குமாறும், குமரக்கடவுளிடம் சிவபெருமான் மந்திரோபதேசம் பெற்றனர் ஓங்காரப்பொருளறிந்தனர் ஆதலின் முதற்கடவுள் முருகவேளே என,

“எதிருறுங் குமரனையிருந்தவி சேற்றியங்
கதிர்கழல் வந்தனை யதனொடு தாழ்வயிற்
சதுர்பட வைகுபுதாவரும் பிரணவ
முதுபொருட் பொலிவெலா மொழிதரக்கேட்டனன்.” என்று கூறுந் தலபுராணங்களினுட்கிடைகளையுணராது கூறுமாறும், மயங்கிக் கூறுவண்ணமும், இந்நூலினைப் பாராயணஞ்செய்வார் இந்நூல் முற்றிலுஞ்சிவபாரம்மியமே கூறுமென்றுணருமாறும், இந்நூலினைப்பாராயணஞ் செய்தோர் சிவசாயுச்சியமாதியபீஷ்டங்களையே பெறுவர் என்று சைவரனைவரும் இந்நூலினுட் கிடையிவையென வறிந்துவக்குமாறும் முதற்கண் திகடசக்கரச் செம்முகமைந்துளான் என்றனர் என்க.

ஸ்ரீ சதாசிவமூர்த்தியே வேதாகம புராணேதிகாசங்களை ஜகத்ரட்சணார்த்தமருளிச்செய்தவராதலி னவரருள்வழித்தோன்றிய காந்தமகாபுராணத்தினைத் தமிழில் யாப்பான்புக்க வாசிரியர் முதலில் ஆதிகுரவனை நினைந்து காப்புரைத்தனரென்னினுமாம்.

சிவபெருமான் பத்துத்திருக்கரங்களையு மைந்துதிருமுகங்களையும் உடையராயிருத்தலை “சாந்தம் பத்மாஸனஸ்தம் சசிதரமகுடம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம் சூலம் வஜ்ரஞ்ச கட்கம் பரசுமபயதம் தட்சபாகே வஹந்தம், நாகம் பாசஞ்சாகண்டம் ப்ரளய ஹுதவஹம் ஸாங்குசம் வாமபாகே, நானாலங்கார தீப்தஸ்படிகமணி நிபம் பார்வதீசம் நமாமி” என்னும் பஞ்சாட்சரத்தியான சுலோகத்தாலுணர்க.

இக்கந்தபுராணத்தினுக்குப், பிறப்பிறப்பாதி யுயிர்க்குணமற்ற சிவபெருமானே கருத்தாவதலின் இங்கு மங்கலப் பொருத்த முதலியவைகளிதனுள் நிறைந்து சிறந்து காணப்படினும் அவைகூற வேண்டாதனவென வாளாவிடுத்தனம்.

இது, சிவபெருமானுடைய அனந்த சத்தித்திறமனைத்தும் விளக்குநூலாதலின் முதற்கண் சத்திபீசமான இகரத்தை முன்காட்டிச் சிவபீசமான அகரத்தைப் பின்னமைத்துத் திகழ் என்றனர் என்க.

திகழ் தசக்கரமென்பது திகடசக்கரமெனத் திரிதற்கு ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் விதிகூறினாரிலர். அவர், “ழகாரவிறுதி ரகாரவியற்றே” என்றும், “அல்வழியெல்லா மியல்பென மொழிப” என்றுங் கூறினர். ஆதலின் இயல்பாகவே புணரவேண்டுமென்பாரும், அது குமரக்கடவுள் புணர்த்ததென்பாரும் குமரக்கடவுள் வீரசோழிய விலக்கணத்தினை அடியவருருவங்கொண்டுவந்து காட்டியைய மொழித்

தனரென்பாரும் தொல்காப்பியத்துள் "கிளந்த வல்ல செய்யுட்டிரிநவும், வழங்கியன் மருங்கின் மருவோடு திரிநவும், விளம்பிய வியற்கையின் வேறுபடத் தோன்றின் வழங்கியன்மருங்கி லுணர்ந்தனரோழுக்க னன்மதிநாட்டத் தென்மனூர் புலவர்" என்று கூறியிருத்தலை மறந்துரைத்தாரே யாவர்.

இங்கு ழகரம் டகரமாகத் திரிந்தது விகட சக்கரனென்னு மெதுகையை நோக்கியாதலின் திகழ்தசக்கரமென்பது திகட சக்கரமெனத்திரிந்து புணர்ந்தது தொல்காப்பிய விதியேயாமென வறிக.

ழகரம் டகரமாதற்கு வீரசோழிய விலக்கணம் விதிகூறுகின்றதேயென்பார், கந்தபுராண நூலாசிரியர் காலத்துக்கு உத்தேசம் முந்நூறுவருஷங்களுக்குப் பின்னுண்டானது வீரசோழியமென வறியாதாரேயாவர்.

தற்போதை மாத்திரங் கருதி வீரசோழியத்துள தென்பாரை மறுப்பாரெவருமிலர். கந்தபுராணமுண்டாக்கிய வாசிரியர்காலத்து வீரசோழிய மின்மையுடன் கந்தபுராண முதலிய விலக்கியங்களைக்கண்டு வீரசோழியவாசிரியன் அவ்வாறிலக்கணமமைத்தனன் என்பதே அமைவுடைத்தாம்.

சூரியன் பூமியாகிய தேருக்குச் சக்கரமாயிருந்தவனென்பதை "பருதி வெண்மதி பல்லுருளாகவும், இருதவற்றினிடுங் கதிராகவும், மருவுகின்ற மதங்களுள்ளாகவு, மருளுமானென்னுமாயை சூட்டாகவும்" என்னும் விநாயக புராணத்தாலுணர்க.

விநாயகப்பெருமானுடைய திருமேனியினொளியினெதிரில் சூரியன் மழுங்கிய ஒளியினையுடைய நீலவண்ணம் பெற்றனன் என்பார், "தாமரை நாயகன் அகடசக்கரவின் மணியாவுறை" என்று அரவமணியை யுவமை காட்டினர் எனினுமாம்.

(மற்றோருரை.) திகழ் - விளங்காநின்ற, தசக்கரம் - பத்துக்கரங்களையும் செம்முகம் - செவ்விய ஐந்து திருமுகங்களையுமுடையவனும், சகடம்-பூமியாகிய தேருக்கு, சக்கரம் - சக்கரமாகிய, தாமரை நாயகன்-கமலநாதனென சூரியனது, அகடு-மண்டல மத்தியத்தில், அசம்-இயல்பாயமைந்துள்ள, கரம்-கிரணங்களையுடைய, வில்மணியா-ஒளிமணியாக; உறை - எழுந்தருளி இருப்பவனுமான, விகடசக்கரன் - விகட சக்கர விநாயகனது, மெய்ப்பதம் - நிலைபேறான திருவடிகளை, ஏத்துவாம் - துதிப்பாம்.—எ-று.

விளங்காநின்ற பத்துத் திருக்கரங்களையும் செவ்விய ஐந்து திருமுகங்களையுமுடையவனும் பூமியாகிய தேருக்குச் சக்கரமாயமைந்த கமலநாதனென சூரியனுடைய மண்டல நடுவில் இயல்பான கிரணங்களையுடைய சோதிமணியாக எழுந்தருளி இருப்பவனுமான் விகடசக்கர விநாயகனுடைய அழியாத திருவடிகளைத்துதிப்போம்-எ-று.

சகட சக்கரத் தாமரை நாயகன் அகட சக்கரவின்மணி யாவுறை என்றது, இயற்கை யொளியினையுடைய விநாயகப்பெருமானுடைய கிரணக்கதிர்களால் விளங்குபவன் சூரியனாதலின் என்றறிக.

விநாயகப்பெருமான் சூரியமண்டல நடுவணிருக்கின்றா னென்பதனை, "விம்சப் புஜ சோரூபன் சூரியமண்டல மத்தியஸ்தன்" என்னும் விநாயக புராணத்தாலுணர்க.

விநாயகப்பெருமான் ஐந்து திருமுகங்களையும் பத்துக்கரங்களையுமுடையரென்பதனை,

"இரந்த தம்பிரான் முகத்தினின் றெம்பிரான் றேன்றிப்
பரந்ததேசுமைவதனமும் பத்திருங்கரமுஞ்
சுரந்தபேரொளி முத்துமாலையுஞ் சுடரணியு
மரந்தை தீர்த்திடு மருளுங்கொண்டாங்கெதிர் நின்றர்" என்னும் விநாயக புராணத்தாலுணர்க.

இந்நூலாசிரியர் காஞ்சி நகரிலிருந்திப் புராணமியற்றின ராதலினத்தல விநாயகரான விகட சக்கர விநாயகரைத்துதித்தனர் என்க.

இவ்விநாயகர் ஏகாம்பராலயத் தாயிரக்கான் மண்டபத்துள் எழுந்தருளி இருப்பவர். காஞ்சி விநாயகர் விகடசக்கர விநாயகரான சரிதம். திருமாலானவர் தக்கன் செய்த யாகத்தில் வீரபத்திரக் கடவுண்மீது விடுத்த சுதரிசனமென்னுஞ் சக்கரத்தை அக்கடவுளணிந்த வெண்டலையிலொன்று கௌவியது. அவரது சேனதிபதியாகிய விடுவசேனன் திருமால்பொருட்டு அச்சக்கரத்தைப் பெறக்கருதி, காஞ்சிநகரத்தையடைந்து சிவலிங்கந்தாபித்துப் பூசைசெய்தனன். வீரபத்திரக் கடவுள் அங்கெழுந்தருளியபோது விடுவசேனன் அச்சக்கரத்தைத் தரும்படியவரைப்பிரார்த்திக்க, அவர், "சக்கரம் நம்மிடத்து இல்லை; கபாலங்கௌவியதாயின், எவ்விதத்திலேனும் அதுவேதரப்பெற்றுக்கொள்" என்று கூறியருளினர். விடுவசேனன் காலிரண்டையும் மடக்கிக் கையிரண்டையும் வளைத்து, வாயையும் நாசியையுங் கண்களையுஞ் சுரித்து அசைத்துப் பற்கடோன்ற விகடக்கூத்தாடினன். அதனைக்கண்டோரனைவரும் நகைக்க வெண்டலையும் நகைத்தது. நகைத்தலும் சக்கரம் அதன்வாயினின்றும் பூமியில் விழ, அதனை விநாயகக்கடவுள் விரைந்து கவர்ந்துகொண்டு ஒன்றுமறியார் போன்றிருந்தனர். விடுவசேனன் அதனைக்கண்டு அவர்திருமுன்னும் விகடக்கூத்தாடிவேண்ட, அவர் அச்சக்கரத்தை அவன் கையிற் கொடுத்தருளினர். இக்காரணத்தால் அவ்விநாயகக்கடவுளுக்கு விகடசக்கர விநாயகர் என்னுந் திருநாமமுண்டாயிற்றென வறிக. இதனை.—

## காஞ்சிப்புராணம்.

"போராழியதன்வாயிற்கழிந்துபுவி மிசைவீழப்பொருக்கென்றங்கை
யோரானைமுகக்கடவுளதுகவர்ந்தங் கறியான்போன்றிருப்பநோக்கிப்
பேராண்மைப்படைத்தலைவனினிச்செயலே தென்றழுங்கிப் பேதுற்றந்தச்
சீராளன்றிருமுன்புங்கைகண்ட விகடநடஞ்செய்துவேண்ட.
ஏக்கறவானவனியற்றும் விகடநடநெடும்போதெம்பெருமானேக்கி
மாக்கருணைசுரந்தருளியாழியவன் றனக்களித்தான்வரத்தான்மிக்கீர்
போக்கறதேகாரணத்தாலன்றுமுதற் காஞ்சியினப்புழைக்கைத்தேவை
யூக்கமுறுந்திறல்விகடசக்கர விநாயகனென்றுலகங்கூறும்" என்று வருவனவற்றுலுணர்க.

(சு)

உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னெற்றை மணிகொள்கிம் புரிவயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டேற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக்கன்பு செய்வாம்.

(இ-ள்.) திருமுடியில் மகுடம் மின்னவும், திருநுதலில் நெற்றிப்பட்டம் விளங்கவும், வயிரம்போன்ற ஏகதந்தத்தில் இரத்தினங்கள் பதித்த தந்தப்பூண்விளங்

கவும், மெய்ம்மைபொருந்திய திருச்செவியாகிய சாமரைகள் வீசவும் பெருமைமிக்க யானைமுகங்கொண்டவதரித்தருளிய ஸ்ரீகாஞ்சிப்பதியில் (ஆயிரக்கால் மண்டபத் தருகில்) வீற்றிருந்தருளும் விகடசக்கர விநாயகக்கடவுளுக்கு (இடைவிடாது) அன்புசெய்வோம்.—எ-று.

ஸ்ரீவிகடசக்கர விநாயகப்பெருமான் மாறுபட்டுள்ள திருமேனியையுடையவ ராகலின்,'வேழமாமுகங்கோண்டுற்ற' என்று கூறினர். அவர் வேழமாமுகங்கொண் டதற்கேற்பவே,'வச்சிரமருப்பினேற்றை மணிகோள்கிம்புரி'என்றும், மெய்ச்சே விக்கவரி, என்றுங் கூறப்பட்டன, இப்பெருமான் சிவகணநாதராகலின்,'உச்சியின் மதடமின்ன வொளிர்தரநுதலினேடை'என்றும், எத்தகைய வலிய ஆயுதங்களாலு மிறவா வரம்பெற்ற அசுரனை மிக விலேசானே யழித்தவன்மை பெற்றுள்ளது இவ ரது திருக்கோடாகலின், 'வச்சிரமருப்பின்'என்றும், சாமரகர்ணனென்னுந் திருநாம முடையாராகலின், 'மெய்ச்சேவிக்கவரி'என்றுங்கூறினர். யானைக்கு இருமருப்பிரு த்தல் வேண்டியிருப்ப, ஈண்டு ஒற்றைமருப்பைக்கூறிய தென்னையெனின், எவ்வகை யாயுதங்களாலு மிறவாவரம்பெற்ற கயமுகாசுரனை யழித்தற்பொருட்டு முரித்த ஒரு மருப்புநீங்க, எஞ்சிநின்ற ஒற்றைமருப்பே யமைந்துளதாகலின் என்க. எல்லா அங் கங்களினும் சிரம் உத்தமாங்கமாகலானும், அது பிரணவவடிவினதாகலானும்,'வேழ மாமுகம்' என்று கூறினர். இவர் மாறுபட்ட திருவுருவமுடையவரென்பது சிரமுந் திருமேனியும் வேறுபட்டிருத்தல் நோக்கியெனவறிக. அதனை:—

"மணிகொண்டகோடொருமருங்குண்மையாலாண்மை வடிவென்றுமஃதின்மை மருங்குண்மையாற்பெண்மைவடிவென்றுமீதுகீழ் மாறியதிருக்காட்சியா [யோர் லணிகொண்டவுயர்திணையதென்றுமஃறிணையென்று மார்க்குங்கிளத்தலரிதாம் ஐங்கரச்சிந்துரம்" எனச் சிவஞானமுனிவர் கூறியதனானுணர்க.

'கச்சியின் விகடசக்ரகணபதி' என்று கூறவே, ஆயிரக்கால்மண்டபத்தருகில் என வருவித்துப்பொருள் கூறினும், அதனை:—

"சாற்றரியவாயிரக்கான் மண்டபத்தின்சார்வாக
வேற்றமுடனே யினிதிருந்து—போற்றும்
விறல்விகடசக்ரவிநாயகனையேத்துந்
திறல்விகட சக்ராயுதம்" என்று கூறிய இரட்டைப்புலவர் திருவாக்கா

னுணர்க, மின்ன-ஒளிர்தர-வயங்க-தூங்க என்னும் வினையெச்சங்கள் உற்ற என்னும் பெயரெச்சத்தையும்,அது விகடசக்ரகணபதிஎன்னும்பெயரையுங்கொண்டுமுடிந்தன.

ஒருகாரியஞ்செய்யத் தொடங்குவோர் அஃது முட்டின்றிமுடிதற்பொருட்டு முன்னர் விநாயகக்கடவுளைவணங்கித் தொடங்குதல்முறைமையாகலின், இந்நூலா சிரியரும் தாம்பாடத்தொடங்கிய கந்தபுராணம் இனிது நிறைவேறும்பொருட்டு ஸ்ரீ விகடசக்கரவிநாயகக்கடவுளை இரண்டு திருவிருத்தங்களால் முதலில் துதித்தனர். அதனை.—

இந்நூல் - கயமுகனுற்பத்திப்படலம்.

"என்னரேயாயினும் யாவதொன்றெண்ணுதன்
முன்னரேயுனதுதாண் முடியுறப்பணிவரே
லன்னர்தஞ்சிந்தைபோ லாக்குதியலதனை
யுன்னலார்செய்கையை யூறுசெய்திடுதிநீ" எனவருமாற்றானுணர்க.

இவ்விருசெயயுள்களும் மேற்செய்யுள்களும் பாடாண்டிணையுள் கடவுள்வாழ்த்தென்னுந்துறை. இதனை, "அமரர்கள்முடியுமறுவகையானும்-புரைதீர்காமம்புல்லியவகையினும்-ஒன்றன்பகுதியொன்றுமென்ப" எனவரும் தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியற் சூத்திரத்தானுணர்க. (உ)

## சுப்பிரமணியர்காப்பு.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
யேவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

(இ-ள்.) காஞ்சிப்பதியில் மாவிருக்ஷத்தடியில் வீற்றிருந்தருளும் ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளுடைய ஆறு திருமுகங்களுக்குவந்தனம்; அவ்வாறுதிருமுகங்களும் பொழியாநின்ற பெருங்கருணைவெள்ளத்திற்குவந்தனம்; யாவருந் துதிசெய்யும்படி விளங்காநின்ற பன்னிரண்டு திருத்தோள்களுக்குவந்தனம்; செந்தாமரைமலர்போன்ற திருவடிகளுக்குவந்தனம்; அவ்வெம்பெருமானது(துவசமாகிய)சேவலுக்கும்,(வாகனமாகிய) மயிலுக்கும் வந்தனம்; அவரது திருக்கரத்திலுள்ள வேற்படைக்குவந்தனம் வந்தனம்.—எ-று.

"அண்டகோடிகளுடன்றந்தவுடல் யாவையு மரியமறைமுதலகலையு - மக்கரமுமெய்ப்பதமு மைங்கலையுமந்திரமு மானபதகதியும்வாச்கு - மண்டியுண்டாகவருகுண்டலியொடைஞ்சத்தி மாமுகமெனப்படைத்த - வள்ளிநாயகன்" என்னும் பிரமாணப்படி, இச்சை-ஞானம்-கிரியை-ஆதி-பரை என்னும் ஐந்துசத்திகளுடன் குண்டலிசத்தியுங்கூடிய ஆறுசத்திகளையும் ஆறுதிருமுகங்களாகப் பெற்றுள்ளவராகலின், '**மூவிருமுகங்கள்போற்றி**' என்றும், அச்சத்திவடிவாயமைந்த ஆறுதிருமுகங்களும் வேண்டினோர் வேண்டியவண்ணம் பொழிவன அவரது, பெருங்கருணையேயாகலின், '**முகம்பொழிகருணைபோற்றி**' என்றும், சூரபன்மனாதியரால் இடுக்கணுற்றுழன்ற அரிபிரமேந்திராதி தேவர்களனைவரும் அவ்வசுராதியரால்நேர்ந்த துன்பத்தை யொழித்துத் தாங்களின்புற்றிருப்ப வேண்டற்பாலது முருகப்பெருமானது திருத்தோட்டிறனேயாகலான், '**ஏவருந்துதிக்கநின்ற விராறுதோள்போற்றி**' என்றும், முத்திநகரங்களேழனுட் சிறந்தகாஞ்சிப்பதியின் கண்ணதாய வேதவடிவமாகிய மாவிருக்ஷத்தடியில் சத்ரூபமாயும்,சித்ரூபமாயும் விளங்கும் இறைவனும் இறைவியும் வேதப்பொருளாய் விளங்கல்போல் ஆனந்தரூபியாகிய தாமும் அவ்வேதப்பொருளேயென் றுணர்த்தற்பொருட்டு வீற்றிருந்தருளும் முருகக்கடவுளது திருவடிகளைவணங்குதலே புண்ணியபூமியுட் சனித்துச்சகலவேதங்களையு மோதியுணர்ந்து முத்திப்பேறடைதற் கேதுவாகலின், '**காஞ்சிமாவடிவைகுஞ் செவ்வேண் மலரடிப்போற்றி**' என்றும், மாவடிவங்கொண்டசூரனது இருகூறுயபிளப்பினுள் ஒன்றுசேவலாகவும் மற்றொன்றுமயிலாகவு முருவங்கொண்டுவர முன்னதைப்பதாகையாகவும் பின்னதைப் பரியாகவுங்கொண்டுநடத்தலின் அவற்றைப்பணிதல் புண்ணியத்துட்சிறந்த பெரும்புண்ணியமாகலின், '**அன்னான் சேவலும் மயிலும் போற்றி**' என்றும், தமக்குநேர்ந்த சத்துருபயத்தைத் தவிர்த்து மும்மைப் பயனைத் தரத்தக்கது அவரது திருக்கரத்தமைந்த வேற்படையேயாகலின், '**திருக்கைவேல்போற்றிபோற்றி**' என்றுங்கூறினார்.

பொழி என்றதற்கேற்பக்கருணையை வெள்ளமெனக்கூறினும். ஈராறுஎனற்பாலது இராறு என குறுக்கல் விகாரம்பெற்றது. (௩)

## நூற்பயன்.

இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.

(இ-ள்.) முடிவில்லாத அசுரர்களது வலிமைகெடும்படி கோபித்து அழித்த சிவந்தவேற்படையையுடைய முருகக்கடவுளது மான்மியமாகிய இக்கந்தபுராணத்தைவிரும்பிப் பாராயணஞ்செய்யு மெய்யடியார்கள் தேவேந்திரபட்டம் பெற்றுப் (போகத்தை யனுபவித்துப்) பின் இந்நிலவுலகத்தில் (அரசர்களாகப்பிறந்து) மிக்க இன்பத்தையடைந்து இனிமையாக வாழ்ந்திருந்து, தங்கள் மனத்தில்நினைந்திருந்த இஷ்டகாமியங்கள் நிறைவேறப்பெற்று, பின் சிவபதமடைவார்கள்.—எ-று.

அசுராதியர்களையழித்து அரிபிரமேந்திராதியர்களைக் காத்தருளிய கந்தப்பெருமானது புராணத்தைவிரும்பியோதும் ஆன்மாக்கள் போகங்களிற் சிறந்த இந்திரபோகந்துய்த்திருப்பரென்பார், '**இந்திரராகி**' என்றும், பின் அப்போகசேடத்தை நுகர்தற்கேதுவாகிய அரசராய்ப்பிறந்து இந்நிலத்தில் வாழ்ந்திருப்பரென்பார் '**பார்மேலின்பமுற்றினிதுமேவி**' என்றும், அவ்விண்ணுலகிலும் இம்மண்ணுலகிலும் சிந்திக்கற்பாலவாய அணிமாமுதலிய எண்வகைச்சித்திகளும், சற்புத்திரப்பேறு முதலிய பதினாறுபேறுகளும், மற்றையவின்பங்களும் இனிது கைகூடப்பெறுவரென்பார், '**சிந்தையினினைந்தமுற்றி**' என்றும், அவையனைத்தும் நுகர்ந்துமுடிந்தபின், மீளாமுத்தியாகிய சிவசாயுச்சியம் பெற்றுவாழ்வரென்பார், '**சிவகதியதனிற்சேர்வர்**' என்றுங்கூறினார். அல்லதூஉம், இந்திரராகி என்றதனால் மறுமையின்பத்தையும், பார்மேலின்பமுற்றென்றதனால் இம்மையின்பத்தையும், சிவகதியதனிற் சேர்வரென்றதனால் வீட்டின்பத்தையும் முறையே அடைவரென்பதூஉமாம்.

'**இந்திரராகிப்பார்மேலின்பமுற்று**' என்பதற்கு, நரேந்திரர்களாய்ப்பிறந்து உலகத்தில் இன்புற்றுவாழ்ந்து, என்று பொருள்கூறினும் பொருந்தும். அந்தமிலவுணர் என்றது ஆயிரத்தெட்டண்டங்களினும் நிறைந்துவாழ்ந்திருந்த எண்ணில்கோடியசுரர்களை. அவ்வசுரர்களனைவரையும் முருகக்கடவுள் ஹுங்காரத்தாலுந் திருஷ்டி முதலிய பிறவாற்றாலுமழித்திருக்கச் செவ்வேல்முனிந்த தென்றதென்னையெனின், அவ்வசுரர்கட்கிறைவனாய் அவ்வண்டங்களனைத்தையு மாண்டுவந்த சூரபன்மனையழித்தமைகருதியென்க. அவ்வாறன்றி, முனிந்த என்னும்பெயரெச்சத்தைக்கந்தவேள் என்பதனோடுங்கூட்டி, செவ்வேல் என்பதனை கந்தவேளுக்கு விசேடணமாக்கினும் பொருந்தும். காதலித்தோதுவோர், ஆகி-உற்று-மேவி-முற்றி-சேர்வரெனக்கூட்டுக. கதியதனில் என்பதில், அது - பகுதிப்பொருள்விகுதி, கந்தவேள்-இப்பெயரொட்டுப்பண்புத்தொகை. (௪)

## வாழ்த்து.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

(இ-ள்.) சிறந்த மேகங்கள் காலந்தவறாமல் மழைபெய்யக்கடவன; நிறைந்த பலவகை வளங்கள் அதிகரிக்கக்கடவன; அரசன்செங்கோல்முறைப்படி அரசுசெலுத்தக்கடவன்; எல்லாவுயிர்களும் சிறிதுங்குறைவின்றிச் சுகித்துவாழக்கடவன; நான்கு வேதங்களினுங்கூறப்பட்ட அறங்கள் சிறந்தோங்கக்கடவன; நல்லதவங்களும் யாகங்களும் விருத்தியடையக்கடவன; மேன்மைபொருந்திய சைவசமயமானது உலகமெங்கும் விளங்கக்கடவது.—எ-று.

"கைம்மாறுவேண்டாகடைப்பாடு மாரிமாட்டென்னாற்றுங்கொல்லோவுலகு" என்றபடி, மேகங்கள் கைம்மாறுகருதாமல் உலகிற்கு நீரைப்பொழிதலின் 'வான்முகில்' என்றும், வேண்டுங்காலத்துப்பெய்யா தொழிதலும், வேண்டாக்காலத்துப் பெய்து உள்ளவளங்களை யழித்தலுமின்றி, முறைப்படி மாதமும்மாரிபெய்கவென்பார், 'வழாதுபெய்க' என்றும், அவ்வாறுபெய்யவே முப்போகமுந்தப்பாதுவிளைகவென்பார், 'மலிவளஞ்சுரக்க' என்றும், வளஞ்சுரக்கவே அரசன் ஆறிலொருகடமைபெற்று நீதிகோடாது அரசுரிமையைச் செலுத்துவனென்பார், 'மன்னன்கோன்முறையரசுசெய்க' என்றும், "அரசனெவ்வழி யவ்வழிகுடிகள்" என்றபடி மன்னன் செங்கோல்செலுத்தவே குடிகளும்குறைவின்றித்தங்குலமுறைதவறாது இனிது வாழ்வரென்பார், 'குறைவிலாதுயிர்கள்வாழ்க' என்றும், குடிகள் இனிதுவாழவே நல்லறங்கள் நாளுக்குநாள் விருத்திபெறுமென்பார், 'நான்மறையறங்களோங்க' என்றும், அவையோங்கவே அவற்றாலடையவேண்டியதவமும்,இம்மை மறுமைகட்கேதுவாகிய வேள்வியுமினிதோங்குமென்பார். 'நற்றவம்வேள்விமல்க' என்றும், இவையனைத்து மினிதுவளர்ந்தோங்கவே வீட்டின்பத்திற்கேதுவாகிய சித்தாந்தசைவஞ் செழித்தோங்குமென்பார், 'மேன்மைகொள்சைவநீதிவிளங்குக' என்றுங்கூறினர்.

இதனால் மழைபெய்வதால் வளஞ்சுரக்குமெனவும், அவ்வளத்தால் அரசன் கொடுங்கோல்செலுத்தாது செங்கோல் செலுத்துவனெனவும், அச்செங்கோலால் உலகினர் இன்புற்றுவாழ்வரெனவும், இம்முறையான் இம்மையின்பம் அனுபவிக்கப்பெற்றவர் மறுமையினும் இன்பமேபெருக நான்மறைகளில் விதிக்கப்பட்ட அறங்களையும், தவங்களையும் வேள்விகளையுமே செய்வரெனவும், இம்மையினும் மறுமையினும் அனுபவிக்கப்பெற்ற வின்பத்தின் மேம்பட்ட பேரின்பமும் நுகரச் சைவநீதியிற்றலைப்படுவரெனவுங் கூறியவாறுமாகும். "வேதநெறிதழைத்தோங்க" என்றும், "மிகுசைவத்துறைவிளங்க" எனவும் பெரியோர் கூறினராதலின், இந்நூலாசிரியரும் வேதத்திற் கடைகொடாது மேன்மைகொள் சைவநீதி என ஆகமத்திற் கடைகொடுத்துங் கூறினர். (௫)

உ

கணபதிதுணை.

# கடவுள் வாழ்த்து.

## சிவபெருமான்.

திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய் தறிதற்கரும் பெற்றி யெய்தி
யருவந் தனையு முருவத்தையு மன்றி நின்ற
னொருவன் றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம்.

(இ-ள்.) சிறப்புமிக்க பழைமையாகிய நிலவுலகத்துள்ள பெரியோர்களும் தேவர்களும் மிக்கவந்தனைசெய்து உணர்தற்கருமையாகிய பெருந்தன்மையையடைந்து, அருவம்-உருவமென்னு மிரண்டையும் அன்றி நின்றவனாகிய ஒப்பற்ற சிவபெருமானது திருவடிகளை (யாம்) எமது உள்ளத்திற் சிந்தித்துத்துதிப்போம். எ-று.

கருமபூமியாகிய இந்நிலவுலகமே சிந்தையுமனமுஞ் செல்லாநிலைமைத்தாய வீட்டின்பத்தை விளைந்தெய்தற்கேதுவாந் தன்மையதென்பதும், மற்றைய விண்ணுலகாதி போகபூமிகள் புண்ணியத்தளவு போகநுகர்தற்பயனைத் தருதலேயன்றி வீட்டின்பத்தைத் தராவென்பதும், இவ்வேதுக்களால் இந்நிலவுலகமே மற்றைச் சுவர்க்கமாதி யெவ்வுலகினும் பெருஞ்சிறப்பினதென்பதுந்தோன்ற 'திருவந்த' என்றும், அத்தகைய மேன்மையமையப்பெற்ற இவ்வுலகம் சிவபெருமானது பரிக்கிரக சத்தியாகிய மாயையின் காரியப்பாடெனபது தோன்ற, 'தொல்லைப்புவனம்' என்றும், மும்மலப்பசுக்களாக வெண்ணப்பட்ட பசுஞானிகளும் அவர்களுட்சிறந்த பிரமன் முதலியோரும் தற்போதவயத்தர்களாய்ப் பெருமானை வந்தித்துணர முயன்றும் "உணர்ந்தார்க்குணர்வரியோனும்" "விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போல்" மறைந்து நிற்பவனுமாகலின் அம்முயற்சியா லுணர்தற்கரியானென்பது தோன்ற, 'புவனத்தோடுதேவர்போற்றிப் - பெருவந்தனைசெய்தறிதற்கரும்பெற்றியெய்தி' என்றும், அருவுருவாதியனைத்தும் ஆன்மாக்கட் கருள்செய்தற் பொருட்டுக்கொண்டருளும் நாடகப்படிவமேயன்றித் தனக்கென வொன்றில்லானெம்பெருமா னென்பது தோன்ற, 'அருவந்தனையு முருவத்தையுமன்றி நின்றன்' என்றும், தன்னிகருயர்ச்சியில்லாத் தலைவனென்பதுதோன்ற, 'ஒருவன்' என்றும், அவ்வெம்பெருமானது திருவடிப்பேறே சிறந்தமுத்தியாகலின், அத்திருவடியைவணங்குதலே பொருத்தமுடைத்தென்பதுதோன்ற, 'பதந்தன்னை' என்றும், மனம் வாக்குக்காயம் என்னுந்திரிகரணங்களில் மனங்கலவாதம்பாது மற்றிரண்டுமின்மையால், அம்மனத்தால் வழிபடுதலே சிறந்ததென்பது தோன்ற, 'உளத்துள்வைப்பாம்' என்றுங்கூறினர்.

உலகம் மாயையின் காரியப்பாடென்பதனை:—

சிவஞானசித்தியார்.

" தோற்றமுநிலையுமீறு மாயையின்றொழிலதென்றே
சாற்றிடுமூலகம்வித்துச் சாகாதியணுக்களாக
வேற்றதேலீண்டிநிற்கு மில்லதேலில்லையாகு
மாற்றநீமறந்தாயித்தான் மாயையைமதித்திடாயே." என்பதனாலும்,

சிவபெருமான் அருவமுமுருவமுமன்றி நின்றவனென்பதனை.—

2

சிவப்பிரகாசம்.

" பலகலையாகமம்வேதம்யாவையினுங்கருத்துப் பதிபசுபாசந்தெரித்தல்பதிபரமேய னிலவுமநவுநுவின்றிக்குணங்குறிகளின்றி நின்மலமாயேகமாய்நித்தமாகி [அதா யலகிலுயிர்க்குணர்வாகியசலமாகி யகண்டிதமாயானந்தவுருவாயன்றிச் செலவரிதாய்ச்செல்கதியாய்ச்சிறிதாகிப் பெரிதாய்த்திகழ்வதுதற்சிவமென்பர்தெ ளிந்துளோரே." எனவும்.

இந்நூல்-சூரனமைச்சியற்படலம்.

" அருவுமாகுவனுருவமு மாகுவன்ருவு
முருவுமில்லதோர் தன்மையுமாகுவனூழின்
கருமமாகுவனிமித்தமு மாகுவன்கண்டாய்
பரமனுடலையாவரோ பகர்ந்திடற்பாலார்" எனவும் வருமாற்றானுணர்க.

புவனம் - இடவாகுபெயர். நின்றான் என்பது, முற்றெச்சம். (௬)

ஊனாகி யூனு ளுயிராயுயிர் தோறு மாகி
வானாதி யான பொருளாய்மதி யாகி வெய்யோன்
றானாகி யாண்பெண் ணுருவாகிச் சரா சரங்க
ளானான் சிவன்மற் றவனீள்கழற் கன்பு செய்வாம்.

(இ-ள்.) சிவபெருமான் சரீரமாகியும், அச்சரீரங்கடோறுமுலாவுகின்ற உயிராகியும், அவ்வுயிர்க்குயிராகியும், ஆகாயமுதலிய பஞ்சபூதப்பொருளாகியும், சந்திரனாகியும், சூரியனாகியும், ஆணுருவாகியும், பெண்ணுருவாகியும், மற்றைச்சராசரங்களனைத்துந் தாமேயாகியுமுள்ளான்; ஆதலால், அத்தகைய வெம்பெருமானது சிறந்த திருவடிகளுக்கு (யாம் இடைவிடாது) பேரன்புசெய்வோம்.—எ-று;

சிவன் இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாய் நிற்பவனாதலால் '**சராசரங்களானன்**' எனவும், அச்சராசரங்கள் ஆண் பெண்ணுருவாய் நிற்றலால் **ஆண் பெண்ணுருவாகி** எனவும், அவ்விரண்டுருபங்களும் பஞ்சபூதபௌதிக வடிவங்களாயும்,அவ்வடிவங்கள் சந்திரசூரியர்களால் விளங்குதலால் '**வானாதியான பொருளாய் மதியாகி வெய்யோன்றனாகி**' எனவும், இவையாவும் ஆன்மாவன்றி இயங்காவாகலான் '**உயிராய்**' எனவும், அவ்வுயிர் உடலன்றிக் காணக்கூடாதாகலான் '**ஊனாகி**' எனவுங்கூறினர்.

வானாதியானபொருளாய் மதியாகிவெய்யோன்றானாகி என்பதுகாறும் இறைவனுக்குக்கூறி யிருக்கும் எண்வகை வடிவங்களாக; இவை இறைவனுக்கு வடிவங்களேயாயினும் அருள்வடிவுபோலன்றென்பதுதோன்ற அவ்வடிவங்களை ஆண்பெண்ணென்றும், சராசரங்களென்றும், இவற்றை உண்மையாகவேவடிவமாகவுடையவர் உயிர்களென்பது தோன்ற ஊனினுயிராயென்றுங் கூறினர். ஆயினும்"அவனன்றியோரணுவுமசையாது" என்பது பிரமாணமாகலின் அருள்வடிவினனாகிய இறைவன் கருணையான் ஊன்முதலாகக் கூறிய யாவுமாயசைவித்தனனாதலால் சராசரங்களானன் சிவனென்றார்.இதனால் சிவன்யாவுமானது அருளாலென்றுபெறப்பட்டது. படவே அவனீள்சுழற்கன்பு செய்வாமென்றுங் கூறினர்.

ஊன்முதல் சராசரங்களிறுதியாகவுள்ளான் சிவபெருமானொருவனேயென்பதனை:—

" வானாகிமண்ணாகி வளியாகியொளியாகி, யூனாகியுயிராகியுண்மையுமாயின்மையுமாய்க், கோனாகியானெனதென் றவரவரைக்கூத்தாட்டு, வானாகிநின்றாயை

யென்சொல்லிவாழ்த்துவனே'' எனவும், "நிலநீர்நெருப்புயிர் நீள்விசும்புநிலாப்பக லோன்,புலனாயமைந்தனோடெண்வகையாய்ப்புணர்ந்துநின்றா,னுலகேழெனத்திசை பத்தெனத்தானொருவனுமே, பலவாகிநின்றவா தோணோக்கமாடாமோ'' எனவும், "அண்ணாமலையானடிக்கமலஞ் சென்றிறைஞ்சும், விண்ணோர்முடியின்மணித்தொகை வீறற்றாற்போற், கண்ணாரிரவிகதிர்வந்து கார்கரப்பத், தண்ணாரொளிமழுங்கித் தாரகைகடாமகலப், பெண்ணாகியாணயலியாய்ப் பிறங்கொளிசேர், விண்ணாகிமண்ணாகி யித்தனையும்வேறாகிக், கண்ணாரமுதமாய்நின்றான் கழல்பாடிப் - பெண்ணே யிப்பூம் புனல் பாய்ந்தாடேலோரெம்பாவாய்'' எனவும், "ஒன்று நீயல்லையன்றியொன்றில்லை யாருனையறியகிற்பாரே'' எனவும் அருளிச்செய்த ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்கானுணர்க. நீட்சி-ஈண்டுச்சிறப்பென்னும்பொருட்டு. ஆகி என்னும் வினையெச்சங்களனைத்தும் ஆனான் என்னும் வினையாலணையும் பெயராக்கொண்டுமுடிந்தன. சிவன் ஆனான் அவனீள்கழற்கன்பு செய்வாம், எனக்கூட்டுக. (உ)

வேறு.

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையு
மறப்பது நினைப்பதும் வடிவம் யாவையுந்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.

(இ-ள்.) (தாய்வயிற்றிற்றங்கிப்) பிறத்தலும், பின் இறத்தலும், பெயரும், தொழிலும், (ஒன்றை) மறத்தலும்,பின்நினைத்தலும், எத்தகையவடிவங்களையுந் துறந்துநிற்றலும், அஃதின்மையும் (இவைபோன்ற) மற்றவையனைத்துமடையப் பெறாத பெருஞ் சிறப்பினையுடைய சிவபெருமானது திருவடிகளை(யாம்) எமது சிரசின்கண்வைத்து வணங்குவோம்.—எ-று.

பிறரது பிறப்பிறப்புக்களையொழித்து வீடருள்வல்ல பேரருளானாகிய சிவபெருமான் மண்ணிற்பிறந்திருந்து மாளுந்தெய்வங்களோ டெண்ணப் படாதவனென்பார், '**பிறப்பது மிறப்பதும்**' என்றும். நாமமற்றவனென்பார், '**பெயரும்**' என்றும், சூரியனுக்குமுன்னே மலர்தலாதி முத்தொழிலுந்தாமே நிகழ்தல்போலத் தமது திருமுன்னே மும்மூர்த்திகளும் முத்தொழிலைச்செய்திருப்பத்தாஞ்செயலற்றிருப்பவனென்பார். '**செய்கையும்**'என்றும், மாயையின்வலியால் மறப்புநினைப்புண்டுழலும் மாலயனாதியர்போலாது அவற்றைக்கடந்து நிற்பவரென்பார், '**மறப்பதுநினைப்பதும்**'என்றும், எத்தகையவடிவமுந் தமக்கெனப் பெற்றுள்ளவரன்றென்பார், '**வடிவம் யாவையுந்துறப்பது மின்மையும்**' என்றும், இத்தகையபதியிலக்கணத்திற் பழுதாயுள்ளனவற்றுளொரு சிறிதுமடையப்பெறாதவரென்பார், **பிறவுஞ்சூழ்கலாச் சிறப்புடையரன்**, என்றுங்கூறினார்.

மேலைச்செய்யுளில் இறைவன்யாவுமாயிருந்தியக்குந்தன்மையைக் கூறியதாகும். எங்ஙனமெனின் அதில் சராசரங்களானான் சிவனென்றார்.இச்செய்யுளில் பிறவுஞ்சூழ்கலாச்சிறப்புடையரனென்றார். அச்சிறப்பு ஈதென்றுணர்த்தவே இறைவன் இன்னவிடத்திற் பிறந்தான் இன்னகாலத்திலிறந்தான் இப்பிறப்பிலோ அவன் இன்னபெயருஞ் செய்கையுமுடையவன், வினைவழியே வேண்டியவற்றை மறத்தலும் வேண்டாதனவற்றை நினைத்தலுமாகிய மாயாமயக்குடையவன், ஓர்கால் இம்மாயாமயக்கொழிய முத்திநெறியிற்றலைப்பட்டவன், அன்றி ஆணவச்செருக்கான் நன்னெறியிற் றலைப்படாதவன், அந்நன்னெறியிற்றலைப்படாமையான் பிறவிப்பேதங்களை யடைதற்குரிய வினைகளையெல்லாம் நாட்டற்குரியவன்,என்று பெத்தான்மாக்களுக்குக்கூறும் பாசவிலக்கணங்களில்லாத பதி என்னுஞ் சிறப்பிலக்கணமுடைய அநாதிமலமுத்தனென்று கூறியவாறும்.

சிவபெருமான் பிறப்பிறப்பற்றவரென்பதனை:—

சிவஞானசித்தியார்.

“ யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே
மாதொருபாகனார்தாம்வருவர்மற்றத்தெய்வங்கள்
வேதனைப்படுமிறக்கும்பிறக்குமேல்வினையுஞ்செய்யு
மாதலாலிவையிலாதானறிந்தருள்செய்வனன்றே”

அருணகிரியந்தாதி.

“ எல்லார்பிறப்புமிறப்பு மியற்பாவலர்தஞ்
சொல்லாற்றெளிந்தோநஞ்சோணேச - ரில்லிற்
பிறந்தகதையுங்கேளேம் பேருலகில்வாழ்ந்தூண்
டிறந்தகதையுங்கேட்டிலேம்” என்பதனாலும்,

பெயரற்றவ ரென்பதனை:—

திருவாசகம்.

“ திருமாலும்பன்றியாய்ச்சென்றுணராத்திருவடியை
யுருநாமறியவோரந்தணனாயாண்டுகொண்டா
னொருநாமமோருருவமொன்றுமில்லாற்காயிரந்
திருநாமம்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ” என்பதனாலும்,

செய்கையற்றவரென்பதனை:—

திருவிளையாடற்புராணம்.

“ பூவண்ணம்பூவின்மணம்போலமெய்போதவின்ப
மாவண்ணமெய்கொண்டவன்றன்வலியாணைதாங்கி
மூவண்ணறன்சந்நிதி முத்தொழில்செய்யவாளா
மேவண்ணலன்னான் விளையாட்டின்வினையையெல்லாம்.” என்பதனாலும்,

மறப்பு நினைப்பற்றவரென்பதனை:—

கந்தரநுபூதி.

“ உதியாமரியா வுணராமறவா
விதிமாலறியா விமலன்புதல்வா
அதிகாவனகாவபயாவமரா
பதிகாவலசூரபயங்கரனே.” என்பதனாலு முணர்க. (௫)

பூமலர் மிசைவரு புனித னாதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம்.

(இ-ள்.) பொலிவினையுடைய தாமரைமலரின்கண்ணெழுந்தருளிய பிரமன் முதலிய தேவர்களா லுணர்தற்கரிதாகிய ஒப்பற்றமுதன்மையையடைந்து, சிறந்த வேதத்தின் முதற்பொருளாகிய பிரணவத்திற்கு ஒருதிருவுருவமாக வமைந்துள்ள சிவபெருமானது அழகுபொருந்திய செந்தாமரைமலர்போன்ற திருவடிகளை (யாம்) துதிப்போம்.—எ-று.

பிரமன் முதலியதேவர்கள் தற்போத முற்றுள்ளவர்க ளாகலான்அவர்களா லுணரப்படாதவரென்பதுதோன்ற, ‘பூமலர்மிசைவருபுனிதனாதியோர்’ என்றுகூறினார். மாமறைமுதல் என்றதனால் வேதத்தின்மூலமந்திரமாகிய பிரணவம்எனப் பொருள் கூறினும். ‘பூமலர்மிசைவரு புனிதனாதியோர் - தாமுணர்வரியதோர் தலைமை’ என்பதனை:—

சிவஞானசித்தியார்.

"மறையினலயனுன்மாலான் மனத்தினல்வாக்கான்மற்றுங்
குறைவிலாவளவினலுங் கூறெண்ணுதாகிநின்ற
இறைவனர்கமலபாத மின்றியானியம்புமாசை
நிறையினர்குணத்தோர்க்கெல்லாம் நகையினைநிறுத்துமன்றே" எனவும்,

போற்றிப்பஃறொடை.

பூமன்னுநான்முகத்தோன் புத்தேளிராங்கவர்கோன்
மாமன்னுசோதி மணிமார்பன்—நாமன்னும்
வேதம்வேதாந்தம் விளக்கஞ்செய்விந்துவுடன்
நாதநாதாந்தநடுவேதம்—போதத்தா
லாமளவுந்தேட வளவிறந்தவப்பாலே" எனவும் வருமாற்றானுணர்க.

சாமரு என்பதில் உகரம் சாரியையாக வந்தது. (ச)

பங்கயன் முகுந்தனும் பரமென் றுன்னியே
தங்களி லிருவருஞ் சமர்செய் தற்றுழி
யங்கவர் வெருவர வங்கி யாயெழு
புங்கவன் மலரடி போற்றி செய்குவாம்.

(இ-ள்.) பிரமன் திருமாலென்னுமிருவரும் (ஒருவருக்கொருவர்) தாமே பரம் என்றுகருதி, தங்களுள்ளே போர்செய்திருந்தபொழுது, அவ்விருவரும் அஞ்சும்படி (நடுவில்) அக்கினிஸ்தம்பமாக வெழுந்தருளிய சிவபெருமானது தாமரைமலர்போன்ற திருவடிகளைத் துதிசெய்வோம்.—எ-று.

பிரமவிஷ்ணுக்க ளிருவருந்தாங்களே பரம்பொருளெனக் கருதிப்போர் புரிந்த வரலாறு:—

முன்பொருகாலத்தில் திருமாலினுடைய நாபிக்கமலத்திற்றோன்றிய பிரமனவன் தானே பரப்பிரமமென்றகங்கரித்துத் திருமாலையடைந்து நீயாவனென்று கேட்டனன். அதற்கு அவர் நானுன் பிதாவல்லவோவென, பிரமன் கோபித்தெழுந்து பலவாறிகழ்ந்து கூறி, நாமிருவரும் போர்புரிவோம், அப்போரில் வென்றவரோ பரமாவர் என்றுகூற, இருவருஞ் சம்மதித்து நெடுநாள் பெரும்போர் புரிந்தனர். அப்பொழுது சிவபெருமான் அவர்கட்குமத்தியில் அக்கினிமலை யுருவங்கொண்டு பூமிக்கும் ஆகாயத்துக்கு மொன்றாயோங்கி நின்றருளினர். அவர்கள் அதனைக்கண்டு போர் செய்தலை யொழிந்து, இம்மலையின் அடிமுடியைக்கண்டவர்களே பரமாவாரென்று கூறி, பிரமன் முடியைக்காணும்பொருட்டு அன்னப்பறவை யுருவங்கொண்டு ஆகாயத்திற் பறந்து சென்றனன். திருமால் பன்றியுருவங்கொண்டு பாதலத்தைக் கீண்டு சென்று நெடுநாள் வருந்தியுந் திருவடியைக்காணது திரும்பிவந்தனர். பிரமன் அனேககோடிகாலம் பறந்து சென்று சிறகுகள்முரிந்து வருந்தித்திருமுடியைக் காணமல், அங்குத்தோன்றிய ஓரசரீரிவாக்கினல் மனந்தெளிந்து திரும்பிவந்து திருமாலைக்கண்டு நின்றனன், பின் இருவரும், தாங்கள் அகாரணரென்பதை யுணர்ந்து அகந்தையொழிந்துசிவலிங்கந்தாபித்துப்பூசிக்க, பெருமான்பார்வதிசமேதரா யெழுந்தருளி உங்கட்குவேண்டிய வரங்களைக்கேளுங்களென்ன, அவர்கள் எம்பெருமானே! அடியேங்கட்குத்தேவரீரது திருவடிக்கண் அன்பு ஒன்றே வேண்டுமென்று,வணங்கினர்; பெருமான் அவ்வாறேயருளி,அவர்களைத்தங்கள் பதவியிலிருக்க அனுக்கிரகித்து, அவ்வழல்வடிவாக வெழுந்தருளிய தமது வடிவத்தைச்சுருங்கி, ஒருமலையுருவாக வெழுந்தருளினர்; அஃதே இன்றும் சோணசலம் அருணசலம்முதலிய பலகாரணப்பெயரோடு விளங்குகின்றது. எனவறிக. (ரு)

காண்பவன் முதலிய திறமுங் காட்டுவான்
மாண்புடை யோனுமாய் வலிகொள் வான்றொடர்
பூண்பதின் றாய்நயம் புணர்க்கும் புங்கவன்
சேண்பொலி திருநடச் செயலை யேத்துவாம்.

(இ-ள்.) காண்பான்-காட்சி-காட்சிப்பொருள் என்னும் மூவகைத்திறமுந் தாமாகவே யுள்ளவரும், அவற்றைத் தம்மையடைந்தார்க்குக் காட்டுபவராகிய மாட்சிமையுடையவரும், வலிமைபொருந்திய மிகுந்த பந்தத்தையடையாதவராய்(தம்மையடைந்த ஆன்மாக்களுக்குப்) பேரின்பசுகத்தை யுண்பித்தருளும் மேன்மைபெற்றவருமாகிய சிவபெருமான் செய்தருளும் சிதாகாசத்தில் விளங்குகின்ற ஆனந்தத் தாண்டவத் திருச்செயலைத் துதிசெய்வோம்.—எ-று.

ஞாதுரு ஞான ஞேயங்களாகிய திரிபுடிப்பொருள்கள் தாமாகவேயுள்ளவரென்பார், 'காண்பவன்முதலிய திறமும்'என்றும்,அவற்றைத்தாமாய்நிற்குஞ் ஞானமுடையோர்க்குத்தாமாகவே காட்டுதலன்றித்தனக்கன்னியமாகவுங்காட்டும் பேராற்றலுடைய பெருமானென்பார். "காட்டுவான் மாண்புடையோனுமாய்" என்றும், இயல்பாகவே பாசங்கணீங்கினவனென்பார்:'வலிகோள்வான்தோடர் பூண்பதின்றய்' என்றும், இயல்பாகவே பாசங்களுடைய ஆன்மாக்களுக்கு அவையொழியுமாறு திரோதானசத்தியான் உருசிப்பித்தொழிக்கும் பேரருளுடையவனென்பார், 'நயம் புணர்க்தும் புங்கவன்' என்றும், அவ்வெம்பெருமான் சிதாகாசத்தில் பஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு செய்யுந் திருநடனம் பரப்பிரயோசனங் கருதியேயன்றி ஸ்வப்பிரயோசனங்கருதி யன்றாகலானும், பஞ்சகிருத்தியத் திருத்தாண்டவமாகலானும் அதுவே பெருஞ்சிறப்பினதென்பார், 'சேண்போலி திருநடச்சேயல்' என்றுங் கூறினர்.

அல்லதூஉம் வலிகொள்வான்றொடர் பூண்பதில்லானாகிய பெருமான் திருநடனச்செயலைச் செய்தல் அவ்வலி கொள்வான்றொடர் புடையோராகிய ஆன்மாக்களுக்கு அத்தொடர்பொழிக்கவேயாகலான் திருநடச்செயலை யேத்துவாம் என்றானெனவும், அந்நடனச்செயலால் விளையும்முத்திநயம் காண்பான்முதலிய திருபுடிகளுந்தோன்றுவதுமின்றி தோன்றாமற்போதலுமின்றி யுள்ளனவா யின்பத்தைவிளைவித்தலின் காண்பவன்முதலிய திறமுங் காட்டுவான்மாண்புடையோனுமாய் நயம் புணர்க்கும்புங்கவனென்றானெனவுங்கொள்ளலு மொன்று.

சிவபெருமான் பஞ்சாக்கரமே திருவுருவாகக்கொண்டு நடித்தருளுவனென்பதனை;—

உண்மைவிளக்கம்.

" ஆடும்படிகேணல்லம்பலத்தானையனே
நாடுந்திருவடியிலே நகரம்—கூடு
மகரமுதரம்வளர் தோள்சிகரம்
பகருமுகம்வா முடியப்பார்.

சேர்க்குந்துடிசிகரம் சிக்கனவாவீசுகரம்
ஆர்க்கும்யகரமபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கிநகரமடிக்கீழ் முயலகனார்
தங்குமகர மதுதான்" எனவும்,

பஞ்சகிருத்தியத்திருத்தாண்டவமென்பதனை:—

" தோற்றந்துடியதனிற் றேயுந்திதியமைப்பிற்
சாற்றியிடுமங்கியிலே சங்கார—மூற்றமா
யூன்றுமலர்ப்பதத்தி லுற்றதிரோதமுத்தி
நான்றமலர்ப்பதத்தே நாடு" எனவும் வருமாற்றானுணர்க.

திருவந்த என்னுஞ்செய்யுளால் பரசிவத்தின் நிஷ்களசொரூபத்தையும், ஊனாகி என்னுஞ்செய்யுளால் அச்சிவம் யாவுமாயிருக்குந் தன்மையையும், பிறப்பதும் என்னுஞ்செய்யுளால் அல்லவாயிருக்குந் தன்மையையும், பூமலர், பங்கயன் என்னும் இவ்விரண்டுசெய்யுள்களால் எல்லாமாயல்லவுமாயிருக்கும் அச்சிவம் சகளவடிவங் கொண்டருளுந் தன்மையையும், காண்பவன் என்னுஞ்செய்யுளால் முத்திநிலையை ஆன்மாக்களுக்கருளுந் தன்மையையும் விளக்கியவாறாகும். (சு)

சிவசத்தி.

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

(இ-ள்.) (உலகத்தில்) நெருங்கியுள்ள ஆன்மாக்கடோறும் விளங்கிவீற்றிருந் தருளுங் குற்றமற்ற சிவபெருமானது இடப்பாகத்தில் முறைமைப்படி பொருந்தி யிருந்து, அறுவகைச்சமய நெறிகளையும் மற்றைச்சமயபேதங்களையும் நிலைபெறச் செய்தருளிய முதல்வியாகிய உமாதேவியாரது தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கித்துதிசெய்வோம்.—எ-று.

எண்ணிறந்த ஆன்மாக்கடோறும் உயிர்க்குயிராயுவந்தெழுந்தருளும் பெருமானென்பதும், அவ்வாறெழுந்தருளியிருப்பினும் அவ்வான்மபாசத்திற் பிணிப்புறாதவனென்பதுந்தோன்ற,'செறிதருமுயிர்தொறுந்திகழ்ந்து மன்னிய மறுவறுசிவன்'என்றும், அவ்வெம்பெருமானோடு நீரிற்றண்மைபோல அபேதமாயுள்ளாரெம்பெருமாட்டியாரென்பதுதோன்ற, 'அரனிடம்மரபின்மேவி' என்றும், வேதாகமங்களிற்கூறும் அறுவகைச் சமயபேதங்களையும் மற்றைச்சமயபேதங்களையும் நிலைபெறச் செய்தவரென்பதுதோன்ற,'அறுவகைநெறிகளும்பிறவுமாக்கியஇறைவி' என்றுங்கூறினர்.

ஆன்மாக்களுக்குச் சமயநெறிகள் பாசச்சேதம் வரச்செய்து சத்திபதிவித்தல் சத்தியின்செயலேயன்றிச் சத்தன்செயலன்றாகலான், 'அறுவகைநெறிகளும் பிறவு மாக்கிய விறைவி' என்றார்.

சிவபெருமான் உயிர்கடோறு மெழுந்தருளியுள்ளவரென்பதனை:—

சிவஞானதீபம்.

" எவ்வுயிரும்பராபரன் சந்நிதியதாகு
மிலங்குமுயிருடலனைத்து மீசன்கோயில்" என்பதனாலும்,

உமாதேவியார் சிவபெருமானிடப்பாகத்துள்ளவரென்பதனை:—

திருவாசகம்.

" தோலுந்துகிலுங்குழையுஞ்சுருடோடும்
பால்வெள்ளைநீறும் பசுஞ்சாந்தும்பைங்கிளியுஞ்
சூலமுந்தொக்கவளையு முடைத்தொன்மைக்
கோலமேநோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ" என்பதனாலுமுணர்க.

வேதாகமங்களிற்கூறியபடி அறுவகைச்சமயங்களாவன:—சைவம்-பாசுபதம்-மகாவிரதம்-காளாமுகம்-வாமம்-வைரவம்என்பன. மற்றைச்சமயபேதங்களாவன,—உலோகாயதம்-நால்வகைப்பௌத்தமாகிய சௌத்திராந்திகம்-யோகாசாரம்-மாத்மீகம்-வைபாடிகம்-ஆருகதம் என்னும் புறப்புறச்சமயங்களும், தார்க்கிகம், மீமாஞ்சம்-மாயாவாதம்-சாங்கியம்-யோகம்-பாஞ்சராத்திரம் என்னும் புறச்சமயங்களுமாம். அறுவகை நெறியெனப்பொதுப்படச் கூறியதனால், பாஷாண மோக்ஷவாதம்-சங்கிராந்தவாதம், அவிகாரவாதம்-நிமித்தகாரணபரிணாமவாதம் - ஐகக்கியவாதம் - பேதவாதம் என்னும் உட்சமயங்களையுங்கொள்க. (எ)

விநாயகக்கடவுள்.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
வெண்ணிய பொருளௌலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

(இ-ள்.) நிலவுலகத்திற் பிறத்தலாகிய குற்றம் நீங்கும்பொருட்டும் (மனதிற்) கருதியபொருள்களனைத்தும் எளிதாக முற்றுப்பெறுதற்பொருட்டும் நெற்றிக்கண்ணையுடைய ஒப்பற்ற யானைமுகமுள்ள ஸ்ரீவிநாயகக்கடவுளது தாமரை மலர்போன்ற திருவடிகளை (யாம்) வணங்கித்துதிசெய்வோம்.—எ-று.

மாயையினாற் பந்திக்கப்பட்டு மண்ணுலகத்தில் நால்வகைத்தோற்றத்தெழுவகைப்பிறப்பினுழன்று பிறந்திறத்தல் பெருந்துன்பமுடைத்தாகலான் அதுநீங்கவென்பார், 'மண்ணுலகத்தினிற் பிறவிமாசற' என்றும், உயிர்க்குப் பேரின்பும், பேருறுதியுந்தருவதாகிய இம்மை மறுமை வீடென்னும் மும்மைப்பயன்களும் எளிதினெய்துகவென்பார், 'எண்ணியபொருளௌலா மெளிதின்முற்றுற'என்றும், மாசறச்செய்தற்கும் முற்றுறச்செய்தற்குங் காரணராயுள்ள பெருமான் அஃறிணையாகிய யானைமுகமுடையவராயிருப்பினும்பரம்பொருளாயுள்ளவரேயென்பார்,'கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுகப்பண்ணவன்' என்றும்,அப்பெருமானடியை வணங்கிவாழ்த்தவே மேற்கூறியவிரண்டுமினிது கைகூடுமென்பார்,'மலரடிபணிந்துபோற்றுவாம் என்றுங் கூறினர். (அ)

வைரவக்கடவுள்.

பரமனை மதித்திடாப் பங்க யாசன
னொருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப்போற்றி செய்குவாம்.

(இ-ள்.) முற்காலத்தில் சிவபெருமானை மதியாமலகங்கரித்திருந்த கமலாசனனாகிய பிரமனுடையஒருதலையைக்கிள்ளி,அப்பிரமனொழிந்த மற்றத்தேவர்களுடைய உதிரத்தையும் அகங்காரத்தையுங் கொண்டு (அவர்களைத்) தண்டனைபுரிந்தருளிய வைரவக்கடவுளைத் துதிசெய்வோம்.—எ-று.

அகிலகாரணராகிய சிவபெருமானே பரமபதியென்பார், 'பரமன்' என்றும் பாசவசத்தாற்பரமனைமதித்திடாத பசுக்களிலொன்றுய்ப்படிக்கப்பட்டவனென்பார், 'பங்கயாசனன்' என்றுங் கூறினர். பங்கயாசனன் ஒருதலை கிள்ளியவரலாறு.—

முன்பொருகாலத்தில் திருமால் பிரமனென்னுமிருவரும் மேருமலையிலிருக்கும்பொழுது முனிவர்களுந்தேவர்களும் வந்துவணங்கிநின்று திரிமூர்த்திகளிற் சிறந்தவர்

யாவவொன்று வினவினர்கள். அப்பொழுது பிரமன் நானேபரம்பொருளென்று கூறினன்; திருமாலும் அவ்வாறே கூறினர். இவ்வாறு இருவரும் நான் பரம் நான் பரம் என்று போர் புரியுங்கால் சிவபெருமான் ஒரு சோதிவடிவமாய் அங்கெழுந்தருளக் கண்டு திருமால் வணங்கி வைகுந்தஞ் சென்றனர். பிரமன் அகங்கரித்து அவ் வெம்பெருமானை யிகழ்ந்துகூறினன். அப்பொழுது சிவபெருமான் தமது மனத்தில் வயிரவரை யுண்டாக்க, அவர் சென்று தமது நகத்தினல் பிரமனது நடுத்தலையைக்கிள்ளவும் அவன் அஞ்சி வணங்க, அருள் செய்து, வைகுந்த மடைந்து திருமாலைக் கண்டு உதிரபலி கேட்டனர். உடனே திருமால் தன் நெற்றியைப்பிளந்து உதிரம் பொழிய, அதனைப் பிரமகபாலத்தில் நெடுநா ளேற்றனர். அதனல் திருமால் மூர்ச்சித்துவிழ, அவரை யெழுப்பி அகங்கரித்துள்ள மற்றத்தேவர்க ளுதிரங்களை யேற்று ஸ்ரீகைலாயத்தை யடைந்து, சிவபெருமான் திருவருளால் சகல அண்டங்களையுங் காவல்செய்திருந்தனர் என்பதாம். (கூ)

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு
மஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்.

(இ-ள்.) வெவ்விய கோபத்தினையுடைய வடவாமுகாக்கினியின்மேல் போர்க்கப்பட்ட கருநிறம்பொருந்திய புகைபோலவும், ஆலாகல விஷம்போலவும் விளங்கும்படி சிவந்த சூரியன்போல் விளங்குந் தமது திருமேனியின்மேல் போர்த்தருளிய சிறந்த நீலநிறத்தையுடைய (வாமனனது தோலாகிய) மேற் போர்வையையணிந்த வைரவக்கடவுளது அழகிய திருவடிகளைத் துதி செய்வோம்.—எ-று.

கடல்நீரைச் சதாகாலமும் விரைந்துண்டு வற்றச்செய்யும் வடவா முகாக்கினி யென்னும் பெருந்தீயானது பெட்டைக் குதிரை முகம்போல்வ தாகலின், 'வெஞ்சினப்பரியழல்' என்று கூறினர். பரியழன்மீது போர்த்த புகையைப்போலவும் விஷத்தைப்போலவும் தமது சிவந்த திருமேனியின்மேல் போர்க்கப்பட்ட நீலச்சட்டையையுடைய வயிரவக்கடவுளென்க. செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக் கஞ்சுகமாவது, திருமாலவதாரமாகிய வாமனனது தோலை யுரித்துப் போர்த்த சட்டையை அதன் வரலாறு.—திருமால் பிருகு முனிவரது சாபத்தினல், காசிபமுனிவருக்குப் புத்திரராக வாமனனென்னும் பெயரோடு தோன்றி, அசுரராஜனகிய மாபலிச்சக்கரவர்த்தியிடஞ்சென்று மூன்றடிமண்ணை யாசித்துப்பெற்று, ஓரடியினல் இந்நிலவுலகத்தை யளந்து, மற்றேரடியால் மேலண்டங்களை யளந்து, மூன்ருவதடிக் கிடமில்லாமல் அவன் தலைமீது வைத்தழுத்தித் தனது பேருருவத்தால் ஆகாய மறையும்படி அகங்கரித்து நின்றனர். அதனை யுணர்ந்த பிரமன் முதலிய தேவர்கள் திருக்கயிலையை யடைந்து சிவபெருமானை வணங்கித் தங்குறைகூறி வேண்டச் சிவபெருமான் அவர்கள் வேண்டுகோட்கிரங்கி வயிரவக்கடவுளை நோக்கியருள, வயிரவர் சிவபெருமானது திருவுள்ளக் குறிப்பை யுணர்ந்து அத்திரிவிக்கிரமனிடஞ் சென்று, "நீ கொண்ட இவ்வுருவையும் அகங்காரத்தையு மொழிக்கக்கடவை" என்று கூற, அவ்வாமனன் பின்னுஞ் செருக்குற்று நின்றனன். அதனல் வயிரவர் கோபங்கொண்டு தமது தண்டாயுதத்தினல் வீசியடித்துக் கீழேதள்ளி மிதித்து அவ்வாமனனது கரியமேற் றேலையுரித்து ஆடையாகத் தரித்து முதுகெலும்பைப் பிடுங்கித் தண்டமாகத் திருக்கரத்தில் தரித்தனர். அதனல் அவ்வாமனனகிய திருமால் செருக்கொழிந்து சிவபெருமானை வணங்கித் தம்பழைய வுருவோடு வைகுந்தத்தை யடைந்தனர் என்பதாம், இதனை:—

உபதேசகாண்டம் - வாமனவதாரச் சருக்கம்.

"சென்றன னெதிரா நின்றோ ராணவச் செருக்கி னிற்கு
மன்றளந் துளவி னாற்கு மாமயக் கொழிய நேரா
வின்றியல் பிறவுஞ் சொன்ன னஃதவன் சிறிது மெண்ணான்
கன்றிய வெகுளி மிக்கான் வயிரவக் கடவுட் செல்வன்.

பற்றினன் வயிரத் தண்டம் பகிரண்ட மதிர வோச்சிச்
சுற்றின னுருமுக் காலத் தெழித்தனன் றுளவ மார்பி
னெற்றின னெற்ற லோடு மெறிபடு சண்ட வாயு
முற்றுற விற்று வீழ மூரிவெங் கிரியிற் சாய்ந்தான்.

கருநிறக் கமஞ்சூன் மேகக் காரத ளுரித்து வாங்கித்
திருநிறத் தமையக் காள கஞ்சுக மென்னச் சேர்த்தி
வெரிநுறப் பிடுங்கு மென்பு தண்டென விடுத்துக் கொண்டான்
மருமலர்த் துளவ மாயோ ணவ மயக்கந் தீர்ந்தான்" எனவும்,

காஞ்சிப்புராணம்.

எளியவை வலியர் வாட்டின் வலியவை யிருநீர் வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுறைக் கமைய வன்றே
தெளியுமா வலியைச் செற்றோற் செகுத்துரிக் கவயம் போர்த்த
வளியுளர் கச்சி காவல் வயிரவர்க் கன்பு செய்வாம்". எனவும் வருவனவற்றானுணர்க. (கo)

**வீரபத்திரக்கடவுள்.**

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரு
முடிந்திட வெருவியே முனிவர் வேதிய
ருடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

(இ-ள்.) (தக்கன்செய்த வேள்வியை) அடைந்து அவிப்பாகத்தைப்பெற்று உண்ட தேவர்க ளனைவரு மிறக்கவும், முனிவர்களும் வேதியர்களும் அஞ்சி யோடவும் அவன்பெருமையோடுசெய்த வேள்வியழியவும் தக்கனை வெட்டி யழித்தருளிய வீரபத்திரக்கடவுளது திருவடிகளை வணங்குவோம்.—எ-று.

பிரமபுத்திரனாகிய தக்கன் செய்த யாகம் நற்காரியமாயிருப்பினும் அது சிவபெருமானை விரோதித்துச் செய்தமையான் தீமையாகவே யமைதலின், அதனை யொழித்தற்பொருட்டுத் தக்கனைத் தடிந்தருளின ரென்பார் 'தக்கனைத் தடிந்திடுசேவகன்' என்று கூறினர். இச் சரிதம் மேல் தக்ஷகாண்டத்து விளங்கக் கூறுதலின் ஆண்டுக் கண்டுணர்க. தக்கன் செய்த வேள்வி தீமையாயிற் றென்பதனை:—

சிவஞானசித்தியார்.

"அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறமதாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற்பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே."—என்பதனானுணர்க. ()

**சுப்பிரமணியக்கடவுள்.**

இருப்பரங் குறைத்திடு மெஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

(இ-ள்.) இரும்பு-இரும்பினாற் செய்யப்பட்ட, அரம் - அரத்தினால், குறைத்திடும் - அராவப்பெற்ற, எஃகவேலுடைய - எஃகமாகிய வேற்படையை யுடைய, பொருப்பர் - குறவர்கள், புதல்வி தன்மிசை விருப்பு - தங்கள் புதல்வியாகிய வள்ளி நாச்சியார்மீது வைத்துள்ள விருப்பத்தை, அரங்கு அமரிடை-(பகைவர்கள்) அழிதற் கேதுவாகிய போர்க்களத்தில், உணர்வுற - அறியுமாறு, விளங்கக் காட்டிய-(இனிது) விளங்கும்படி காட்டியருளிய, திருப்பரங்குன்று அமர் சேயை- திருப்பரங்குன்றமென்னுந் திருப்படைவீட்டி லெழுந்தருளிய குமாரக்கடவுளை, போற்றுவாம்-துதிசெய்வோம்.—எ-று.

வேற்படை யேந்திய குறவர்கள் தங்கள் புதல்வியாகிய வள்ளிநாச்சியார் மீது தாம் வைத்துள்ள விருப்பத்தைப் போர்க்களத்தில் அறியும்படி விளங்கக் காட்டியருளிய திருப்பரங் குன்றத் தெம் முருகப்பிரானைத் துதிப்பாமென்க.

குறிஞ்சிநிலமாக்களாகிய குறவர்கள் கூரிய வேற்படையினைப் பெற்றுள்ளவர்க ளென்பார், இருப்பரங் குறைத்திடு மெஃக வேலுடைப் - பொருப்பர்' என்றும், அத்தகைய குறவர்கள் தாங்கள் புத்திரியாகப் பாராட்டிப் பெருவிருப்புடன் வளர்த்துவந்த வள்ளிநாச்சியாரிடத்து முருகப்பெருமான் தாமும் பெருவிருப்புற்றுள்ளா ரொன்பதை யவர்களோடு புரிந்த போர்க்களத்து விளங்கக்காட்டியருளின ரொன்பார், அங் குணர்வுறப் புதல்வி தன்மிசை - விருப்பரங் கமரிடை விளங்கக் -காட்டிய-திருப்பரங் குன்றமர் சேய்" என்றுங் கூறினர்.

இத்தலம் பராசரபுத்திரர்களுக்கு ஞானோபதேசஞ் செய்யப்பெற்றதும், இந்திரன்மகளாகிய தெய்வயானை நாச்சியாரைத் திருமணம்புரியப்பெற்றது மாகிய மேன்மையோடு விளங்குவதும், திருப்படைவீ டாறனுள்ளே முத லெண்ணப்படுவதும், பாண்டித் திருநாட்டுள்ள மதுராபுரிக்கு மேற்றிசைக்கண் ணுள்ளது மாமென வறிக. இதனை:—"மலையுருக் கொண்ட வுடல்வா ளரக்கர் - வெள்ளமுஞ் சூரும் புள்ளியற் பொருப்பும் - நெடுங்கடற் கிடங்கு மொருங்குயிர் பருகிய - மணிவேற் குமரன் முதனிலை வாழுங் - குன்று" என வருங் கல்லாடத்தானும், "மாடமலி மறுகிற் கூடற் குடவயி - னிருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த-முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக் - கட்கமழ் நெய்த லூதி யெற்படக் - கண்போன் மலர்ந்த காமர் சுனைமல - ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்-குன்றமர்ந் துறைதலு முரியன்" என வருந் திருமுருகாற்றுப்படையானு முணர்க.

அரங்கமரிடை என்றதனால், பகைவர்கள் என வருவித்துப் பொருள் கூறினும். இரும்பு என்பது தொடைநோக்கி இருப்பு என வலித்தல் விகாரம் பெற்றது. எஃகவேல் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை; அன்றி எஃகினாற் செய்யப்பட்ட வேல் என மூன்றாம்வேற்றுமைத் தழாநிலைத்தொடராகக் கொள்ளினுமாம். உடைய என்னுங் குறிப்புப் பெயரொச்சம் ஈறுகெட்டு நின்றது. அரங்கு முதனிலைத்தொழிற் பெயர். (கஉ)

சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்
டீரலை வாயிடு மெஃக மேந்தியே
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்.

(இ-ள்.) சூர் - சூரபதுமனை, அலைவாயிடைத் தொலைத்து - கடலினிடத்துக்கொன்று, மார்பு கீண்டு - மார்பைப் பிளந்து, ஈரலைவாய் இடும் - அவன் ஈருளை வாயிற்கொண்ட, எஃகம் ஏந்தி - வேற்படையைத் தாங்கி, வேரல் ஐவாய்தரு - பிரப்பங் காடுகள் அழகாக வாய்க்கப்பெற்றுள்ள, வெள்ளி வெற்பு ஒருவி - வெள்ளியங்கிரி

யை யகன்று, சீரலை வாய்வரு - திருச்சீரலைவாய் என்னுந் திருப்படைவீட்டி லெழுந்தருளிய, சேயை - குமாரக்கடவுளை, போற்றுவாம் - துதிப்போம்.—எ-று.

கடலிற் சூரபதுமனை வீட்டிய வேலையேந்தித் திருச்சீரலைவா யென்னுந் திருப்பதியி லெழுந்தருளிய குமாரக்கடவுளைத் துதிப்பாமென்க.

வேற்படைக் கஞ்சியகன்றோடி மாவடிவங் கொண்டு கடற்கண்ணிருந்த சூரனை இருகூறாகப்பிளந்த வேல் என்பார், 'சூரலை வாயிடைத் தோலைத்து மார்பு கீண் டீரலை வாயிடு மெஃகம்' என்றும், அவ்வெஃகப் படையேந்திய பெருமான், சூராதியரையழித்த பிரதமத்தில் எழுந்தருளியது இத்திருப்பதியேயென்பார், 'வெள்ளிவெற்போரீஇச்-சீரலைவாய் வருசேய்' என்றுங் கூறினர். சூர்-என்றது, சூரபதுமனை. வேரலைவாய்தரு என்பதற்கு,பிரப்பங்காடுகளைவாய்க்கப்பெற்றஎன இரண்டாம் வேற்றுமைத்தொகாநிலைத்தொடராகப்பொருள்கூறினுமாம். வெள்ளிவெற்புஎன்றது திருக்கயிலாயத்தை. இத்தலத்திற்கு செயந்தி நகரம், சந்தனசலம், சீரலைவாய், செந்தில் எனப் பல திருநாமங்கள் நூல்களிற் கூறப்படும். சீரலைவாய் என்றது, கடற்கரைக் கருகிலிருத்தல் கருதியென வறிக. 'மார்புகீண் டீரலைவாயிடு மெஃகம்' என்றது வேற்படையினது வீரத்தைச் சிறப்பித்துக்கூறியபடி. அலைவாயிடை என்புழி உருபின்மேலுரு பேற்றது. அலை என்பது சினையாகுபெயராய்க் கடலையுணர்த்தியது. ஈருள் என்பது - ஈரல் என மரீஇயது. ஓரீஇ - சொல்லிசை யளபெடை. ஏந்தி ஓரீஇ - வருசேய் எனக் கூட்டுக. (கங)

காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
வாவினன் குடிவரு மமலற் போற்றுவாம்.

(இ-ள்.) காவினன் - இந்திரனானவன், குடில் உறு - ஆகாயத்திற்பொருந்திய, காமர்-அழகிய, பொன்னகர்- பொன்னுனகரத்தை, மேவினன் - அடைந்தவனாய், குடிவர - குடியேறப் பெறவும், சூர்முதல் - சூரபதுமனாகிய முதல்வன், விளிய - இறக்கவும், பூவினன் - தாமரைமலரில் வசிக்கும் பிரமன், குடிலையம் பொருட்கு - பிரணவப் பொருளுக்கு, மால் உற - (சொல்லத்தெரியாமல்) மயக்கமடையவும், ஆவினன் குடிவரும் - திருவாவினன் குடி என்னுந் திருப்படைவீட்டி லெழுந்தருளிய, அமலன்- மலரகிதராகிய குமாரக்கடவுளை, போற்றுவாம் - துதி செய்வோம்.—எ-று.

இந்திரன் பொன்னகரிற் குடிபுகவும், சூரபதும னிறக்கவும், பிரமன் பிரணவப்பொருள் தெரியாது மயங்கவும் திருவாவினன்குடியி லெழுந்தருளிய முருகக்கடவுளைத் துதிப்பா மென்க.

கற்பகம்-மந்தாரம்-அரிசந்தனம்-பாரிசாதம்-சந்தானம் என்னும் பஞ்சதருக்களுக்குந் தலைவனென்பார், 'காவினன்' என்றும், அவன் வாழுலகம் விண்ணகத்துள தென்பார், 'குடிலுறு' என்றும், பசும்பொன்மயமாய்ப் பேரழகோடு பொலியும் பெருநகரொன்பார், 'காமர்பொன்னகர்' என்றும், சூரபதுமன் மூத்தமகனாகிய பானுகோபனால் தீக்கொளுத்தப்பட்டுப் பின்னர் குமாரக்கடவுளால் குடியேறப் பெற்றனனென்பார், 'மேவினன்குடிவர' என்றும், சிங்கமுகன் - தாரகன் முதலியோரனைவரும் இவனுக்குள்ளிட்டவரே யென்பார், 'விளியச்சூர்முதல்' என்றும், பிரணவப்பொருளுணராது குழறிய நான்முகனைச் சிறையிடப்படுத்த அவன் மயக்குற்று வருந்தினனென்பார், 'பூவினன் குடிலையம் பொருட்டு மாலுற' என்றும், காவினன்குடி வருதற்கும், சூர்முதல் விளிதற்கும், பூவினன்மாலுறுதற்குங் காரணராயுள்ளவர் ஸ்ரீகுமாரக்கடவு

ளேயென்பார், 'ஆவினன்குடிவரு மமலன்' என்றும், அவ்வமலனைப் போற்றின், இந்திராதிபோகமும், சத்துருசங்காரமும், மெய்ப்பொருளுணர்ச்சியும் மேவிவாழ்தல் அருமையன்றென்பார், 'போற்றுவாம்' என்றுங் கூறினர்.

காவினன் என்பதற்கு, காவின் கூட்டங்கட் கிறைவன் [இந்திரன்] எனப் பொருள்கொள்க. இனம்=கூட்டம். குடிவுறு காமர் பொன்னகர் என்பதற்கு, வசிக்கின்ற அழகிய பொன்னகரை எனப் பொருள்கூறுதலு மொன்று. மேவினன்-முற்றெச்சம். பூவினன் என்புழி இன்சாரியை. மேவினன் குடிவர என்பதற்கு, அடைந்து நல்ல குடியேறப்பெறவும், எனப் பொருள் கூறினுமாம். இத்தலம் இக்காலத்துப் பழநி என வழங்குகின்றது. (கச)

நீரகத் தேதனை நினையு மன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடுந்
தாரகத் துருவமாந் தலைமை யெய்திய
வேரகத் தறுமுக னடிக ளேத்துவாம்.

(இ-ள்.) நீர் அகத்து - நற்குண மமைந்த மனத்தினால், தனை நினையும் - தம்மைச் சிந்திக்கின்ற, அன்பினோர் - அன்பினையுடைய மெய்யடியார்களது, பெரு அகத்து - பெரிய மனத்தின்கண், அலமரும் - சுழலச்செய்யும், பிறவி நீத்திடும் - பிறப்பினை யொழிக்கின்ற, தாரகத்து உருவம் ஆம் - பிரணவப்பொருளின் வடிவமாகிய தலைமை யெய்திய - தலைமைப்பாட்டினை யடைந்த, ஏரகத்து அறுமுகன்-திருவேரகமென்னுந் திருப்படைவீட்டி லெழுந்தருளிய ஆறு திருமுகங்களையுடைய குமாரக் கடவுளது, அடிகள் - திருவடிகளை, ஏத்துவாம் - துதிசெய்வோம்.—எ-று.

தம்மை விரும்பித் துதிக்கும் மெய்யன்பர்களுடைய பிறவித்துன்பத்தை யொழித்தருளுந் தாரக சொரூபராகிய திருவேரகத் திருப்பதியி லெழுந்தருளும் சண்முகப்பெருமான் திருவடிகளைத் துதிப்பாமென்க.

பேரன்போடு இடைவிடாது சிந்திக்கும் மெய்யன்பின ரொன்பார், 'நீரகத் தேதனை நினையு மன்பினோர்' என்றும், அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயனைத் தரத்தக்க, நிறைமொழிமாந்தராகலான் அவர் மனஞ் சிறப்புடையதென்பார், 'பேரகம்' என்றும், அத்தகைய மனத்தையுங் கலங்கச்செய்வது இப் பிறவியேயென்பார், 'அலமரும் பிறவி' என்றும், அப் பிறவியை யொழிக்கத்தக்கது தாரகமந்திரமென்பார், 'நீத்திடுந் தாரகம்' என்றும், அத் தாரகவடிவமாயுள்ள முதற்கடவுள் குமாரக்கடவுளேயென்பார், 'தாரகத் துருவமாந் தலைமையெய்திய ஏரகத் தறுமுகன்' என்றுங் கூறினர். தாரகம்=பிரணவம். ஏரகம் என்பது மலைநாட்டகத்தோர் திருப்பதி; இதனை—'ஏரகத் துறைதலு முரியன்' என்னுந் திருமுருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் கூறிய வுரையா னுணர்க. அஃது இக்காலத்துஉடுக்கைச் சுப்பிரமணியமென வழங்குகின்றது. அன்றிச் சோழநாட்டகத்துள்ள சுவாமிமலையெனக் கூறுவாரு முண்டு.

குமாரக்கடவுள் பிரணவப்பொருளா யுள்ளவர் என்பதுதோன்ற, தாரகத் 'துருவமாந் தலைமை யெய்திய-ஏரகத் தறுமுகன்' என்று கூறினர். இதனை. இப்புராணம், உற்பத்திகாண்டம். அயனைச் சிறைபுரி படலத்தில் :—"முகத்தி லொன்றதாவவ்வெழுத் துடையதோர் முருக-னகைத்து முன்னெழுத் தினுக்குறா பொருளெனநவில- மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன் விக்கித் - திகைத்தி ருந்தனன் கண்டில னப்பொருட் டிறனே." எனவும், மகேந்திரகாண்டம். அவைபுகுபடலத்தில். தாம வாக்கணுன் முதலிய பண்ணவர் தமக்கு - மேமு றப்படு மறைக்கெலா மாதிபெற்றியனு - மோமெ னப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்-மாமு கத்து ளொன் றுமவன் றன்மையார் வகுப்பார்." எனவும்,காஞ்சிப்புராணம்.குமரகோட்டப்படலத்தில்:-

'புக்கிறைவன் றனைவணங்கி நிகழ்ந்தவெலாம் விண்ணப்பஞ்செய்யப் பூந்தே - னக்க னறுந்தொடையிதழிக் கடவுளவர் தமைநோக்கி நவில்வானென்னே-அக்கமலன் விள ம்பியவா நம்மையுநம் புதல்வனையு மன்றே மான - மிக்கபுகழ்ச் சுருதியெலாம் பிரண வத்தின் பொருளாக விளம்பு மாறே." எக்கலைக்கும் பூதங்க ளெவற்றினுக்கும் பிரம னுக்கு மீச னென்னத் - தக்கமுதல் பரம்பிரமஞ் சதாசிவனே மெனவேதஞ் சாற்று மல்லான் - முக்கனல்சூழ் வேள்வியிற்சுப் பிரமணிய னேமெனவு முக்காற் கூறு - மிக் கருத்தை யறியானை யெவ்வாறு விடுவிப்ப தியம்பு மின்னே." எனவும் வருவனவற்ற னுணர்க. குடிவர - விளிய - மாலுற - வருமமலன், எனக் கூட்டுக. (கரு)

ஒன்றுதொ றுடலை யொருவி யாவிமெய்
துன்றுதொ றுடலைத் தொடங்கி யைவகை
மன்றுதொ றுடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ றுடிய குமரற் போற்றுவாம்.

(இ-ள்.) ஆவி - உயிர்கள், ஒன்றுதொறு - சங்காரத்தொடுங்குந்தோறும், ஆடலை ஒருவி-திருநடனஞ்செய்தலை யொழிந்தும், மெய்துன்றுதொறு - (அவ் வுயிர்கள்) உடம்பிற் பொருந்துஞ் சிருஷ்டிதோறும், ஆடலைத் தொடங்கி- திருநடனஞ் செய்யத்தொடங்கியும், ஐவகை மன்றுதொறு - பஞ்சசபைகளிலும், ஆடியவள்ளல்-திரு நடனஞ் செய்தருளுஞ் சிவபெருமான், காமுற -விரும்பும்படி, குன்றுதொறு ஆடிய- குன்றுகள்தோறுந் திருவிளையாடல் புரிந்தருளும், குமரன்-குமாரக்கடவுளை, போற்று வாம் - துதிசெய்வோம்.—எ-று.

தமது ஆடலைச் சர்வசங்காரகாலத்து ஒழிந்தும், சிருட்டிக்காலத்துத் தொ டங்கியும், பஞ்சசபைகளில் திருநடனஞ்செய்தருளும் சிவபெருமான் விரும்பும்பொரு ட்டுக் குன்றுதொறாடுங் குமாரக்கடவுளைத் துதிப்பாமென்க.

மகா சங்காரகாலத்தில் அனைத்தும் ஒடுங்குதலான் அக்காலத்தும் பஞ்ச கிருத்தியத் திருத்தாண்டவ மொழிந்திருப்பனென்பார், ஒன்றுதோ றுடலை யொருவி என்றும், பின் சிருஷ்டிக்காலத்து அதனைச் செய்தருளுவனென்பார்,'ஆவிமெய் துன்று தோ றுடலைத்தொடங்கி' என்றும், அவ்வாடலைக் கனகசபைமுதலிய பஞ்சசபைகளி னுஞ் செய்தருளுவனென்பார், ஐவகைமன்றுதோறுடியவள்ளல்' என்றும், அவர் மன் றுதொறாடியபடியே இளையபிள்ளையார்குன்றுதொறாடுதலின் அச்சிவபெருமானுக்குப் பெருமகிழ்வு விளையுமென்பார், 'காமுற' என்றும், குறிஞ்சிநிலக்கடவுளென்பார். 'குன் றுதோ றுடிய குமரற்போற்றுவாம்' என்றுங் கூறினர். இதனல் சிவபெருமான் செய் தருளும் திருநடனம் பஞ்சகிருத்திய நடனமாகலான் சிருஷ்டிதொடங்கிய காலத்து நடித்தலும் அஃதொழிந்த காலத்துவிடுத்தலுங்குறித்தவாறாயிற்று.பஞ்சசபையாவன- திருவாலங்காட்டில் இரத்தினசபையும், தில்லையில்கனகசபையும், மதுரையில் இரசித சபையும், திருநெல்வேலியில் தாமிரசபையும். திருக்குற்றாலத்தில் சித்திரசபையு மாம். தொறு என்பது ஏழாவதன்பொருண்மைக்கண்வந்த பன்மையுருபிடைச்சொல். ஒன்று-துன்று என்னும் வினைத்தொகை வினைச்சொற்கள் தொறு என்னு மிடைச் சொல்லைக்கொண்டு முடிந்தன. ஆவி என்பது சாதியொருமை. வள்ளல் என்பது ஈகைத்தன்மை: அது பண்பாகுபெயராய் அதனையுடைய சிவபெருமானுக் காயிற்று. காமம் உற என்பது, காமுற எனத் தொகுத்தல் விகாரம்பெற்றது. (கசு)

எழமுதி னைப்புனத் திறைவி முன்புதன்
கிழமுதி ரிளநலங் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்.

(இ-ள்.) முதிரைப்புனத்து - முதிரை விளையும் புனத்தில், இறைவிமுன்பு எழ - வள்ளிநாச்சியார் முன்னே எழுந்தருளுதலும், தன் கிழம்-தாம் கொண்டருளிய கிழப்படிவத்திலேயே, முதிர் இளநலம் கிடைப்ப - மிக்க இளமைப்பருவத்திற்குரிய காமவின்பந் துய்க்கும்படி, முன்னவன் - தம் முன்னவராகிய விநாயகக் கடவுள், மழமுதிர்களிறு என-இளமை முதிர்ந்த யானை வடிவமாக, வருதல்வேண்டிய-வருதலை விரும்பியருளிய, பழமுதிர்சோலை யம்பகவன்-பழமுதிர்சோலை யென்னுந்திருப்படைவீட்டிலெழுந்தருளும் அழகிய குமாரக்கடவுளை, போற்றுவாம்- துதிப்போம்.—எ-று.

வள்ளிநாச்சியார் தினைப்புனத்தின்கண் முன்செல்ல அவரைத்தழுவும் பொருட்டுத் தம் முன்னோனை யானையாக வரும்படிவேண்டிய பழமுதிர்சோலையி லெழுந்தருளிய கந்தப்பிரானைத் துதிப்பா மென்க.

இது குமாரக்கடவுள் விருத்த வேதிய வடிவங்கொண்டு வள்ளிநாச்சியாரிடத்துச் சென்று நீர்விடாய் தணிக்கவேண்டவும், அவ்வம்மையார் சுனையருகழைத்துச் சென்று நீருண்ணச்செய்து திரும்புங்கால், தம் முன்னவராகிய விநாயகக்கடவுள் யானையுருவெடுத்து அவ்வள்ளிநாச்சியார் முன்னே வரும்படி வேண்டினரென்பது. இதன் வரலாற்றை இந்நூலில் தக்ஷகாண்டம் வள்ளிநாச்சியார் திருமணப்படலத்தில் விளங்கக் கூறுதலின் ஆண்டுக்கண்டுணர்க. முதிரிள நலம் என்பது, மிக்க யவ்வனபருவத்திலனுபவிக்குங் காமம் என்னும் பொருள்பட நின்றது, மழமுதிர்களிறு=இளமைமுதிர்ந்த களிறு. அதாவது பெருங்களிறு என்னும்பொருளில் வந்தது. தன்கிழமுதிர் என்பதற்கு,தன்முதிர்ந்த கிழப்பருவத்தில் எனப் பொருள்கூறினுமாம். ஐசுவரியம்-வீரியம்-புகழ்-திரு - ஞானம் - வைராக்கியம் - என்னும் ஆறுக்கும் பகமென்னும் பெயருண்மையால். பகவனென்பதற்கு இவ்வறுகுணங்களையு முடையோனென்பதுபொருள். முதிரை-துவரைப்பயறு முதலியன. முதிரைப்புனத்து எழ எனக்கூட்டுக. இத்தலம் இக்காலத்துச் சோலைமலை என்று வழங்குகின்றது. (கள)

ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியிற்
கூறுசீர் புனைதரு குமர கோட்டம்வா
ழாறுமா முகப்பிரா னடிகள் போற்றுவாம்.

(இ-ள.) யுகாந்தகாலத்திலும் அழிவில்லாமல் (சிறிதும்) மாறுபாடின்றியிருக்கும் வளப்பமிக்கோங்குகின்ற ஸ்ரீ காஞ்சிப்பதியில் (கலைகளால் புகழ்ந்து) கூறும் சிறப்பினையுடைய குமரகோட்டமென்னுந் திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் ஆறு திருமுகங்களையுடைய குமாரக்கடவுளது திருவடிகளைத் துதிசெய்வோம்.—எ-று.

பிரமகற்பங்கடோறு மழிவுபெறாது சிறந்து வளர்ந்தோங்குவது இக்காஞ்சிப்பதியே யென்பார், **ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே - மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சி'** என்றும்,வேதாதி கலைகளிற் புகழ்ந்தோதப் பெறுவதென்பார் **'கூறுசீர் புனைதரு குமரகோட்டம்'** என்றும், அக் குமரகோட்டத்துள் வீற்றிருந்தருளும் விழுப்பொருளாயுள்ள பெருமான் ஸ்ரீசண்முகக்கடவுளென்பார், **'ஆறுமாமுகப் பிரான்'** என்றுங் கூறினர்.

ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சி. என்பதனை,—

"சுருதியா னுறங்கு மிராத்தொறு முடிவிற் றுஞ்சிய வூழிகடோறும்
வினையவந் துலக மழித்திடுங் கடலவ் வியன்பதி யெல்லையுட் சிறிதும்
வருவ்தை யஞ்சிப் புறந்தனிற் சூழ வந்தொரு சத்திகாத் திடலாற்
பிரளய சித்தென் றொருதிரு நாமம் பெற்றதக் காஞ்சியம் பேரூர்." என இந்நூலிற் பின் வருமாற்று னுணர்க. (கஅ)

திருநந்திதேவர்.

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

(இ-ள்.) சிவபெருமானுக்குப் பத்துப்புராணங்களை யோதியும், செவ்விய பல வேதங்களை யாராய்ந்தறிந்தும், மாயையினால் (மயங்கி) மெய்யுணர்ச்சி யில்லாத பொய்ச்சத்தியங்கூறிய வியாசமுனிவன் நீட்டிய கையை ஸ்தம்பிக்கச்செய்த திருநந்திதேவரது திருவடிகளை வணங்குவோம்.—எ-று.

"எதிரில் சைவமே பவிடிய மார்க்கண்ட மிலிங்க - மதிகொள் காந்தநல் வராகமே வாமன மற்சம் - புதிய கூர்மமே பிரமாண்ட மிவைசிவ புராணம்" என்று இந்நூலிற் கூறப்பட்டபடி வியாசமுனிவன் சிவபெருமானே பரமெனப் பத்துப் புராணத்துக் கூறியதுமன்றி, வேதங்களையு மோதா துணர்ந்தானென்று கூறுதலான், '**ஐயிரு புராணநூ லமலற்கோதியுஞ் செய்யபன் மறைகளுந் தெரிந்தும்**' என்றும், அவ்வாறு ஓதியும் உணர்ந்தும், சிவனருள் விரவாமையால், விண்டுவே பரமென மயங்கிப் பொய்ச்சத்தியஞ் செய்தனனென்பார், '**மாயையான் மெய்யறு சூள்புகல் வியாதன்**' என்றும், அவன் சத்தியஞ்செய்ய நீட்டிய கையை அவ்வாறே ஸ்தம்பிக்கச் செய்தனரென்பார், '**நீட்டிய கையடு நந்தி**' என்றுங் கூறினர். வேதங்கள் சிவபெருமானாலருளிச்செய்யப்பட்டமையின், '**செய்ய**' என்றும், அவை ஆயிரமெனச் சங்கேதமாகலின், '**பல்**' என்றும் அடைகொடுக்கப்பட்டன.

"மாயையான் மெய்யறுசூள் புகல்வியாத னீட்டிய கை யடுநந்தி' என்பதன் வரலாறு.—பராசரபுத்திரராகிய வியாசமுனிவர் காசிப்பதியை யடைந்து தவஞ்செய்யுங்கால், அங்குவசிக்கும் முனிவர்க ளடைந்து வணங்கி, சுவாமீ! வேதாந்தப் பொருளை விரித்துரைக்கவேண்டுமென்று வேண்ட,வியாசர் வேதாதிகலைகளைத் தனித்தனி விரித்துரைக்கக் கேட்டு, முனிவர்கள் தெளிவுபெறாமல், ஒரு வார்த்தையினால், முடிந்தபொரு ளிதுவென்று தொகுத்துரைக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, வியாசமுனிவர் அவ்வாறே யுணர்த்துதுமென்று முன்னதற்கு விரோதமாய் "**நாராயணனே பரப்பிரமம், இது சத்தியம் சத்தியம்**" என்று கையெடுத்துக் கூறினர். அதுகேட்ட முனிவர்கள் நீர் கூறியது சத்தியமாயின் விசுவநாதர் திருமுன்னே கையெடுத்துக் கூறுமென் றுரைப்ப, வியாசமுனிவர் அவ்வாறேசென்று நின்று, சிறிதும் பயப்படாமல் கை தூக்கி, **நாராயணனேபரப்பிரமம்** என்று முக்காற் கூறினர். அப்பொழுது திருநந்திதேவர் வெகுண்டு எடுத்த கைகள் அவ்வாறே ஸ்தம்பிக்கும்படி சபித்தனர். அதனால் வியாசர் செயலற்று திருமாலைச்சிந்திக்க, அவரெழுந்தருளித் தாம் பசுவென்பதும், சிவபெருமான் ஒருவரே பசுபதியென்பதும் விளங்க வுணர்த்தி, அவ்வெம்பெருமானைத் துதிக்கும்படி கட்டளையிட்டு மறைந்தருளினர். பின் வியாசர் சிவபெருமானைத் துதிக்கவும், ஸ்தம்பித்த கைகள் முன்போ லமைந்தன. பின் அம்முனிவர் சிவபெருமானைப் பலவாறுப்புகழ்ந்து துதிக்கவும் பெருமா னெழுந்தருளி வேண்டிய வரங்களைக் கொடுத்து மறைந்தருளினர். பின்பு வியாசமுனிவர் சிலகாலஞ்சென்று காசியினின்றுநீங்கிக் காஞ்சிப்பதியையடைந்து சிவலிங்கந்தாபித்துப்பூசித்து வேண்டிய வரங்களைப்பெற்று மகிழ்ந்துசென்றனர் என்பதாம். இதனை—காஞ்சிப்புராணம் - சார்ந்தாசயப்படலம். "உறுவர் யாரையு நோக்கிமுன் னுரைக்குமா முகத்-தறுகணுண்மையிற் கூறுத லுற்றனன்றவத்தி-ரறிவு நூலெலாம் பன்முறை யாயினுந் தெளியப் - பெறுவ தொன்றது நாரணனே பரப் பிரமம். வண்ண மாமறை நூற்குமே னூலிலை மதியோ - ரெண்ணு கேசவன் றனக்குமேற் றெய்வமு மில்லை - கண்ணு மெவ்வகை நூல்

கட்குந் துணிபிது காண்மி-னுண்மை யுண்மையீதெனக்கர மெடுத்துநின் றுரைத்தான். கேட்ட மாதவர்வெரீஇனர் கிளர்மறைப் பொருட்குக்-கோட்ட மாமிது வெம்மனோர் கோட்டக்கதன்று - னுட்டி யீங்கிவன் புகன்றதென் னென்றுள நடுங்கி - நீட்டு செஞ் சடை முனிவரன் றன்னைநேர் நோக்கி" "வாதராயண நீயிவண மொழிதரு மாற்றம்-வேத நூற்பொரு ளுண்மையே யாமெனில் விசுவ - நாத னுர்திரு முன்பெமக் குரை யெனநவின்று-ரோதுகேனென மூர்க்கனு மெழுந்துசென் றுற்று" "விச்சுவேசன்முன் னின்றிரு கரமிசை நிமிர்த்தாங் - கச்ச மின்றிமுன் புகன்றதே புகன்றன னந்தோ - விச்சைநூல்பல கற்பினுஞ் சிவனருள் விரவாக்-கொச்சை யோர்தமை விடுவதோ கொடு மலச் செருக்கு". "நந்தி யெம்பிரான் வெகுண்டுநோண் மலர்க்கர மெடுத்த - வந்த வண்ணமே யசைவற நிற்குமா சபிப்ப - மந்த னுயினு னிமிர்த்தகை மடக்கவல் லாமை-நிந்தை யாற்சிலைத் தூணமொத் தசைவற நின்றான்" என வருவனவற்றா னுணர்க.

**திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.**

பண்டைவல் வினையினற் பாயு டுத்துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடு
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம்.

(இ-ள்.) முற்பிறப்பிற்செய்த வலிய தீவினையினல் (இடையில்) பாயை யுடுத்துத் திரிந்த சமணர்களாகிய கீழ்மக்களை வெற்றிகொண்டு முன்பு நான்மாடக் கூடலாகிய மதுரைப்பதியி லெழுந்தருளித் திருவெண்ணீற்றினெளி (தமிழ்நாடு முழுதும்) விளங்கும்படி செய்தருளிய தண்ணிய தமிழ் விரகனென்னுந் திருஞானசம்பந்தப் பிள்ளையாரது மெய்ம்மைபொருந்திய திருவடிகளைத் துதிப்போம்.—எ-று.

ஈச்சம்பாயை இடையி லுடுத்துழல்வது சமணர்களது முன்னைய தீவினைப் பயனென்பார், '**பண்டைவல்வினையினற் பாயுடுத்துழல்குண்டர்**' என்றும், அவரைப் புனல்வாதம், அனல்வாதம் என்னுமிரண்டாலும் வெற்றிகொண்டு கழுவேற்றினரென் பார், 'வென்று' என்றும், குலச்சிறையாரும் பாண்டிமாதேவியாரும் வேண்டிக்கொண்ட அன்புகாரணமாக வெழுந்தருளினரென்பார், '**முன் கூடல்வைகி**' என்றும், பாண்டியன் சுரந்தீர்த்துக் கூனையுமொழித்து அவனை வைதிகசைவத் தொழுகச் செய்ததுமன்றி, அப்பாண்டிநாடும் பிறநாடுகளும் சிவநேசமெய்தத் திருநீறுசாத்துவித்தருளினரென்பார், '**வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடு**' என்றும், அவ்வாறு செய்தவர் ஆளுடைய பிள்ளையாரென்பார், '**தண்டமிழ் விரகன்**' என்றுங் கூறினர்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் பாண்டிநாட்டிற் கெழுந்தருளக்கண்ட சமணர்கள் பொறாது, அவரெழுந்தருளிய திருமடத்திற்றீயிட்டனர். அதைக்கண்ட பரிசனங்கள், பிள்ளையார்க் கறிவிக்கப் பிள்ளையார், "பொய்யராமமணர் கொளுவுஞ்சுடர்-பையவேசென்று பாண்டியற் காகவே" என்றமைத்துத் திருப்பதிகம் பாடியருள, அது வெப்புநோயாய்ப் பாண்டியனை வருத்தியது. அது காரணமாகக் குலச்சிறையாரும் பாண்டிமாதேவியாரும் பிள்ளையாரை வணங்கிவேண்டப் பிள்ளையார், "மந்திரமாவது நீறு" என்னு முதலையுடைய திருநீற்றுத் திருப்பதிகம் பாடியருளி அந்நோயைத் தணித்துப் பாண்டியனுக்குத் திருநீறுசாத்த, அதைக்கண்ட சமணர்கள் மனம்பொறாது வாதுக்கழைப்ப, அவ்வாறுசென்று, "போகமார்த்த பூண்முலையாள்" என்னு முதலையுடைய திருப்பதிகந்தீட்டிய திருவேட்டைத் தீயிலிட்டு வேகா திருக்கச்செய்தும், "வாழ்கவந்தணர்" என்னு முதலையுடைய திருப்பதிகத்தைப் பாடி வைகையிலிட்டெதிரேறச்செய்தும் அவர்களைக் கழுவேற்றினமையால், 'பண்டைவல் வினையினல் பாயு டுத்துழல் குண்டரை வென்று' என்றும், பின்னர் மதுராபுரியில் வீற்றிருந்

தருளித் திருநீற்றொளிவிளங்கச் செய்தமையால், 'முன்கூடல்வைகியே வெண்டிருநீற்றொளிவிளங்கச் செய்திடும்' என்றுங் கூறினர். (உ0)

திருநாவுக்கரசுநாயனர்.

பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடு
வெய்யகற் றோணியா மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தா டொழுது போற்றுவாம்.

(இ-ள்.) பொய்ப்பொருளை (மெய்ப்பொருளாகப் புனைந்துரைக்கின்ற) சில நூல்களைக் கூறுங் கொடிய சமணர்களாகிய கீழ்மக்கள் தம்மைக் கட்டிக் கடலிற் போடப்பட்ட கொடிய கருங்கல்லே தோணியாக மிதப்ப, அக்கல்லின்மேல் (ஒரு அபாயமுமின்றி வந்தருளிய) தூய்மையாகிய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளை வணங்கித் துதிப்போம்.— எ-று.

முத்தியின்பத்தைப் பயவாது நிரயத்துன்பத்தைப் பயக்கும் நூலென்பார், 'பொய்யுரை நூல்' என்றும், அவையுஞ் சிலவேயென்பார், 'சில' என்றும், அவற்றை நன்மை பயப்பனவாகக் கடைப்பிடித் துழலுங் கொடியவர்களென்பார், 'புகலுந் தீய மண்கையர்கள்' என்றும், அவ்வமணர்கள் எமது ஆளுடைய வரசைப்பிணித்துக் கடலிற் செலுத்தப்பட்ட கல் கருங்கல்லென்பார், 'பிணித்துமுன் கடலகத்திடு வெய்ய கல்' என்றும், அக்கல்லே தெப்பமாகக்கொண்டு கரையேறப்பெற்றது தாம் அருளிச்செய்த "சொற்றுணை வேதியன்" என்னும் முதலையுடைய தேவாரத் திருப்பதிகமே யென்பார், 'தோணியா மிதப்பமேற்படு துய்ய சொல்' என்றும், இத்தகைய மான்மியம் விளங்கப்பெற்றவர் எமது திருநாவுக்கரசுசுவாமிகளே யென்பார், 'சொல்லரசர்' என்றுங் கூறினர். இதனை— "அப்பரிசவ் வினைமுற்றி யரசகன்றே கியபின்னர் - ஒப்பறுமாக் கடல்புக்க வுறைப்புடைமெய்த் தொண்டர்தாமும் - எப்பரிசா யினுமாக வேத்துவனெந் தையையென்று-செப்பிய வண்டமிழ் தன்னாற் சிவனஞ் செழுத்துந்துதிப்பார்." "சொற்றுணைவேதிய னென்னுந் தூமொழி-நற்றமிழ் மாலையா நமச்சிவாயவென்-றற்றமுன் காக்குமைந் தெழுத்தை யன்பொடு பற்றிய வுணர்வினாற்பதிகம்பாடினர்." "பெருகியவன்பினர் பிடித்த பெற்றியா-லருமலரோன் முதலமரர்வாழ்த்துதற்-கரியவஞ் செழுத்தையு மரசு போற்றிடக்-கருநெடுங் கடலினுட் கன்மி தந்ததே." "அப்பெருங் கல்லுமங் கரசுமேற்கொளத்-தெப்பமாய் மிதத்தலிற் செறிந்தபாசமும் - தப்பிய ததன்மிசை யிருந்த தாவில்சீர் - மெய்ப்பெருந் தொண்டனார் விளங்கித் தோன்றினர்" என்று வரும் பெரியபுராணத்தில் திருநாவுக்கரசுசுவாமிகள் புராணத்தானுணர்க. (உக)

ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனர்.

வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவ
னுணறந்திடு முதலைவந் துதிப்ப வன்னதா
லிறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்.

(இ-ள்.) நீர்வற்றியிருந்த பொய்கை முன்னே நிரம்பவும், அப்பொய்கையில் வசித்திருந்த முதலை (மீளவும்) வந்து தோன்றவும், அம்முதலையினல் (உண்ணப்பட்டு) இறந்த பிராமணச்சிறுவன் தன் பருவம் வளர்ந்து தோன்றவும் ஒரு திருப்பதிகம் பாடியருளிய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளது திருவடிகளைத் துதிப்போம்.—எ-று.

ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் முதலையுண்ட பிராமணச்சிறுவனைத் திருப்பதிகம் பாடியருளி யெழுப்பின வரலாறு.

திருநாவலூரராகிய ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் கொங்குநாட்டிலுள்ள அவிநாசியைத் தரிசிக்கச் சென்றபொழுது அந்நகரத்தின் அக்கிராரத்தில் ஒரு மாளிகையில் அழுகுரலோசையும், மற்றொருமாளிகையில் மங்கலவாத்திய வோசையுமாயிருப்பக்கண்டு தம் பரிசனங்களை விடுத்துக் கேட்ப, அவ்வூரார் அவர்களைப்பார்த்து, இங்கு இரண்டு பிராமணச்சிறுவர்கள் ஒரு பொய்கையில் நீராடச்சென்றனர். அவர்களிலொருவன் முதலைவாய்க்கிரையாயினன். மற்றொருவன் பிழைத்துவந்தான். பிழைத்தவனுக்கு இங்கு உபநயனச் சடங்கு நடக்கையால், இறந்தபிள்ளையின் தாய்தந்தையர்கள் வருந்தி யழுகின்றனரென்று கூறினர். அதைக்கேட்ட பரிசனங்கள் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளுக்குத் தெரிவிக்க, அவர் இறந்தபுதல்வனை யெழுப்புவேனென்று அத்தடாகத்தருகிற் சென்று, அவிநாசிப்பெருமானை, "உரைப்பா ருரையுகந் துள்கவல்லார் தங்க ளுச்சியாய் - அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினாய் - புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே - கரைக்கான்முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே" என்னுந் தொடரையுடைய திருப்பதிகம் பாடியருளி, வறண்ட பொய்கைநீர் நிரம்பச் செய்து முதலையை வருவித்து இறந்த புதல்வனை அக்காலத்தில் நிரம்பின பருவத்துடன் வருவித்தனரென் றறிக. இதனை—"நன்னீர்ப் பொன்னித் திருநாட்டு நாதர் மகிழுந் திருப்பதிகண் - முன்னி யிறைஞ்சி யகன்றுபோய் முல்லைப் படப்பைக் கொல்லைமான் - றுன்னி யுகைக்குங் குடக்கொங்கி லணைந்து தூய மதிவாணீர் - சென்னி மிசைவைத் தவர்செல்வத் திருப்புக்கொளியூர் சென்றடைந்தார்". "மறையோர் வாழு மப்பதியின் மாடவீதி மருங்கணைவார் - நிறையுஞ் செல்வத் தெதிர்மனைக ளிரண்டி னிகழ்மங் கலவியங்கள் - அறையு மொலியொன் றினிலொன்றி லழுகை யொலிவந் தெழுதலுமாங் - குறையு மறையோர் களையிரண்டு முடனே நிகழ்வ தென்னென்றார்". "அந்த ணாளர் வணங்கியரும் புதல்வ ரிருவ ராயாண்டு-வந்த பிராயத் தினர் குளித்த மடுவின் முதலை யொருமகவை - முந்த விழுங்கப் பிழைத்தவனை முந்நூ லணியுங் கலியாணம் - இந்த மனைமற் றந்தமனை யிழந்தா ரழுகை யென்றுரைத்தார்". "இத்தன் மையினைக் கேட்டருளி யிரங்குந் திருவுள் ளத்தினரா - மொய்த்த முகைத்தார் வன்றொண்டர் தம்மை முன்னே கண்டிறைஞ்ச - வைத்த சிந்தை மறையோனு மனைவி தானு மகவிழந்த - சித்த சோகந் தெரியாமே வந்து திருத்தா ளிறைஞ்சினார்". "துன்ப மகல முகமலர்ந்து தொழுவார் தம்மை நோக்கியந்த-இன்ப மைந்தன் றனை யிழந்தீர் நீரோ வென்ன வெதிர்வணங்கி - முன்பு புகுந்து போனத்து முன்னே வணங்க முயல்கின்றோம் - அன்பு பழுதா காமலெழுந் தருளப் பெற்றே மெனத்தொழுதார்". "மைந்தன் றன்னை யிழந்ததுயர் மறந்து நான்வந் தணைந்ததற்கே - சிந்தை மகிழ்ந்தார் மறையோனு மனைவி தானுஞ் சிறுவனையான் - அந்த முதலை வாய்நின்று மழைத்துக் கொடுத்தே யவிநாசி - யெந்தை பெருமான் கழல்பணிவே னென்றார் சென்றா ரிடர்களைவார்". "இவ்வா றருளிச் செய்தருளி யிவர்கள் புதல்வன் றனைக்கொடிய-வெவ்வாய் முதலை விழுங்குமடு வெங்கே யென்று வினவிக்கேட் - டவ்வாழ் பொய்கைக் கரையிலெழுந் தருளி யவனை யன்றுகவர் - வெவ்வா ளெயிற்று முதலை கொடு வருதற் கெடுத்தார் திருப்பதிகம்". "உரைப்பா ருரையென் றெடுத்ததிருப் பாட்டு முடியா முன்னுயர்ந்த-வரைப்பான் மையினீ டடம்புயத்து மறலி மைந்த னுயிர் கொணர்ந்து - திரைப்பாய் புனலின் முதலைவயிற் றுடலிற் சென்ற வாண்டுகளுந் - தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப முதலை வாயிற் றருவித்தான்". "பெருவாய் முதலை கரையின்கட் கொடுவந் துமிழ்ந்த பிள்ளைதனை, யுருகா நின்ற தாயோடி யெடுத்துக் கொடுவந் துயிரளித்த - திருவா ளன்றன் சேவடிக்கீழ்ச் சில மறையோ னொடுவீழ்த் தாண்-மருவார் தருவின் மலர்மாரி பொழிந்தார் விசும்பில் வானோர்கள்."—என வரும் பெரியபுராணம் வெள்ளானைச் சருக்கத்தா னுணர்க. (உஉ)

**மாணிக்கவாசகசுவாமிகள்.**

கந்தமொ டுயிர்படு கணபங் கம்மெனச்
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித் தெந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம்.

(இ-ள்.) உயிர்கள் பஞ்சகந்தங்களோடு கணந்தோறுந் தோன்றி யழியுமென்று தமது சிந்தையில் துணிவுகொண்டிருக்கும் பௌத்தர்கள் ஊமையர்களாய் மயங்க, முன்னே ஒரு ஊமைப்பெண்ணைப் பேசுவித்து எமது சிவபெருமானை யடைந்தருளிய ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகளை வணங்குவோம்.—எ-று.

பஞ்சகந்தங்கெடுதலே முத்தியென்பவராகலின், '**கந்தமோ டுயிர்படு கணபங் கம்மெனச்-சிந்தைகொள் சாக்கியர்**' என்றும், அவர்களை மூகராகச் செய்தமையின், '**தியங்க மூகராய்**' என்றும், மூகையாய்ப் பிறந்த ஈழராஜபுத்திரியைப் பேசுவித்து மெய்ப்பொருளுணரப்பச் செய்தமையின், '**முந்தொரு மூகையை மொழிவித்து**' என்றும், திருச்சிற்றம்பலத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவடியிற் சோதிமயமாயிரண்டறக் கலந்தமையின், '**எந்தைபால் வந்திடு மடிகள்**' என்றுங் கூறினார்.

கணபங்கம் என்பது கணந்தோறுந் தோன்றி யழிதல். கந்தம் = கூட்டம். அவை-உருவம்-வேதனை-குறிப்பு-செய்கை-ஞானம் என்பன. "நின்றவுரு வேதனையே குறிப்புச் செய்கை நேர்நின்ற ஞானமென நிகழ்ந்த வைந்து-மொன்றியகந் தத்தழிவே முத்தி யென்ன வுரைசெய்தான் பிடகநூ லுணர்வு மிக்கான்" எனப் பெரியபுராணத்தும், "உருவியல் பூத மோடங் குபாதான ரூப மாகு-மருவியல் சித்தங் கன்ம மெனவிரண் டாகும் வீட்டின்-மருவியல் குற்றங் கந்த மெனவழங் கிடும் வழக்கி- னிருவிய வுள்ள தோடங் கில்லதா மியம்புங் காலே" எனச் சிவஞானசித்தியார் பரபக்கத்தும், "எட்டிவை யுருவ மூன்று வேதனை யாறு ஞான - மொட்டிய குறிப்போ ராறு செய்கையு மிருப தாகக் - கட்டிய பஞ்ச கந்தங் கணத்தினிற் பங்க மாகித் - தொட்டோற் பத்து மூன்றுஞ் சுகதநூற் றுணிவு தானே" எனப் பௌத்த நூலினும் வருமாற்றானுணர்க.

பவுத்தர்களை மூகராய்ச் செய்து மூகையைப் பேசுவித்தன ரென்பதனை, "அஞ்சி வஞ்சகர் நாவி னின்று மகன்ற பின்பவர் தாமெலாம் - நஞ்ச ருந்தினர் போலொ டுங்கி நடுங்கி மூகர்க ளாயினர் - நெஞ்ச நொந்துபி னீழ நாட னிறைந்தி டுஞ்சிவ ஞானநூ - லெஞ்ச லின்றிய செல்வர் பாத மிறைஞ்சி நின்றிது கூறினன். சொல்ல வல்லவர் மூகை யாயினர் சொல்லி லாவொரு மூகையாம் - வல்லி யென்புதல் விக்கு மூகைம றைந்து நல்லுரை கூடினு - னல்ல தொண்ட னுமக்கு நானென நாயனு ரவ டன்னைநீ - யொல்லை யிங்கழை யென்ன வந்தவ ளுண்மை சேரவை நண்ணினள். நண்ணி யங்குமு னின்ற கன்னியை நன்மை யாளரு நாடியே - கண்ணி னின்னருள் செய்து பின்னர் கரைத்து முன்ன ரிருத்தியே - யுண்ண டுங்கி யிருந்த புத்த னுரைத்த தர்க்க மவைக்கெலாந் - தண்ண றுங்குழல் வல்லி நல்லுரை சாற்று கென்று விளம்பினர்." என வருந் திருவாதவூரர் புராணத்தா னுணர்க. (உரு)

**திருந்தொண்டர்கள்.**

அண்டரு நான்முகத் தயனும் யாவருங்
கண்டிட வரியதோர் காட்சிக் கண்ணவா
யெண்டகு சிவனடி யெய்தி வாழ்திருத்
தொண்டர்தம் பதமலர் தொழுது போற்றுவாம்.

(இ-ள்.) தேவர்களும் நான்குமுகங்களையுடைய பிரமனும் மற்றையாவரும் காணுதற்கரிதாகிய காட்சியினிடத்தாகி யாவரும் சிந்திக்கத்தகுந்த சிவபெருமானது திருவடிகளையடைந்து சிவானந்தப் பெருவாழ்வடைந்த திருத்தொண்டர்களுடைய திருவடித்தாமரைகளை வணங்கித் துதிப்போம்.—எ-று.

பிரமன் முதலிய தேவர்க ளனைவரும் பசுஞானிக ளாதலின் அவர்களால் காண்டற்கருமையும், சிவனடியைச் சிந்தித்திருக்கும் மெய்யடியார்கள் சிவஞானிக ளாகலான் அவர்களா லடைதற் கெளிமையுந் தோன்ற, அண்டரும் * * * எய்திவாழ் திருத்தொண்டர் என்று கூறினர். "அண்டருக்கரியாய்போற்றி யடியவர்க் கெளியாய் போற்றி" என்றார் பெரியோரும்.

பசுபாசஞானங்களால் சிவபெருமானைக் காண்டற் கருமையும் பதிஞானத் தாற் காண்டற் கெளிமையுந் தோன்ற 'எண்டகுசிவன்' என்றார்; இதனை, "தொல்லை மால் வரைபயந்த தூயாடன் திருப்பாகன் - அல்லநீர்ந் துலகுய்ய மறையளித்த திரு வாக்கால் - தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேனென் - றெல்லையில்வண் புக ழாரை யெடுத்திசைப்பா மொழியென்றார்." என்றும், "மன்னுசீர் வயலாரூர் மன்ன வரை வன்றொண்டர் சென்னியுற வடிவணங்கித் திருவருண்மேற் கொள்பொழுதின் - முன்னமா லயனறியா முதல்வர்தா மெழுந்தருள - அங்கிலைகண் டடியவர்பாற் சார்வ தனுக் கணைகின்றார்" என்றும், "தூரத்தேதிருக்கூட்டம் பலமுறையாற்றொழுதன்பு- சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி நின்றறியா-வீரத்தா லெல்லார்க்குந் தனித்த னிவே றடியேனென் - றார்வத்தாற் திருத்தொண்டப் பதிகமவை யருள்செய்வார்." என்றும், "தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்-செம்பொருளாற் திருத்தொண்டத் தொகையானதிருப்பதிகம் - உம்பர்பிரான் றானருளு முணர்வுபெற வுலகேத்த - எம்பெருமான் வன்றொண்டர் பாடியவ றெதிரணைந்தார்.' என்றும்வருந் திருத்தொண்டர் புராணத்தானறிக. எண்டகுதொண்டர் எனக்கொண்டு யாவரானு மெண்ணத்தகுந்த தொண்டரெனக்கொள்ளினு மமையும். தொண்ட ரென்பது தனித் தொண்டரையும், கூட்டத்தாரையுமாம்,பிரமன்மாலென்னுமிருவர் தம்மறியாமையாற் பரமமியாம் பரமமியாமென்று இறைவனழற்பிழம்பாய் நின்றவழி அதனடிமுடிகளைப் பன்றியு மன்னமுமாகத் தேடி யறியாமையான் 'அண்டரு நான்முகத் தயனும் யாவ ருங் - கண்டிட வரியதோர் காட்சி' என்றுகூறினர். இதனை, "பிரமனரியு மிருவருந் தம்பேதைமையாற் - பரம'மியாம் பரமமென் றவர்கள் பதைப்பொடுங்க-அரனாரழ லுருவா யங்கே யளவிறந்த - பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ' எனவும், 'பிரமன்மா லறியாப் பெற்றியோனே' எனவும்வருந் திருவாசகத்தானுணர்க. (உ௬)

சரசுவதி.

தாவரு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

(இ-ள்.) கெடுதலில்லாத உலகமுழுதுஞ் சிருட்டித்த நான்கு முகங்களை யுடைய பிரமதேவனுக்கு மனையாளாகி, இவ் வுலகிற் பொருந்திய பல உயர்திணைப் பொருள்களினுடைய நாக்கடோறு மிருந்து நன்மையைச் செய்யுங் கலைவாணியினு டைய தாமரைமலர்போன்ற பாதங்களை முடிமேல் அலங்கரித்துத் துதிப்பாம். எ-று.

மாயையின் காரியமாகிய பிரபஞ்ச மழியினும் காரணமாகிய மாயை யழி யாமையால் 'தாவரு முலகெலாம்' என்றும், அவற்றைச் சிவபெருமானது திருவரு ளாற் காரியப்படுத்திச் சிருட்டித்தொழில் செய்வதனுன் 'தந்தநான்முகத்தேவு' என்

றும், அவன் இல்லறத்துக்குரியாளா யிருமையும் பயத்தலால் துணைவியாய் என்றும், சிறப்புடை யுயர்திணையொன்றே பேசுதற் றொழிலுடைமையாற் 'செறிந்த பல்லுயிர் நாவுதொ றிருந்திடு' என்றும், அவ்வுயிர்கள் சிவபெருமானை வாழ்த்தச்செய்கின்றமை யால் 'நலங்கொள்வாணி' என்றும், பூவினுட் சிறந்த தாமரைமலரை யடிகட்கு ஒப்புமையாகக்கூறலால் 'பூவடி' என்றும், அதனை முடிக்கழகுபெறச் செய்து வாழ்த்தினல்லது நால்வகைச்சொல்லினாலாகியநல்லதோர்பாமாலையியற்றப்பெறாமையான், 'சென்னியிற்புனைந்துபோற்றுவாம்' என்றுங்கூறினார். நாவுதொறிருந்திடும் என்றது நாமகளென்னும் பெயர்பற்றி யென்க. வாணியென்றது வாக்கிறைவியென்பதுகருதி. பூவினுட்டாமரை சிறந்ததென்றது "பூவினுக் கருங்கலம் பொங்குதாமரை" என்றும், 'பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச்சாம்புநதம்' என்றும்வரும் அருமைத்திருவாக்குகளா னுணர்க. (௨௫)

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩0.

---

## அவையடக்கம்.

இறைநில மெழுதுமு னிளைய பாலகன்
முறைவரை வேனென முயல்வ தொக்குமா
லறுமுக முடையவோ ரமலன் மாக்கதை
சிறியதோ ரறிவினேன் செப்ப நின்றதே.

(இ-ள்.) ஆறு திருமுகங்களையுடைய ஒப்பற்ற அனாதிமலமுத்தனாகிய குகப்பெருமான் பெருமையமைந்த இக் கந்தபுராணத்தை சிற்றறிவினையுடைய அடியேன் சொல்லப்புகுந்தது (யாதுபோலுமெனில்) இளஞ்சிறுவன் விரலாற் பூமியி லெழுதுவதற்கு முன்னமே ஒருபுத்தகத்தை யெழுதுவனென்று முயல்வதை யொக்கும். எ-று.

இறை ஆகுபெயர். அறுமுக னென்றதற்கு மேலே யுரைத்தாம். அமலனென்றார் நின்மலவடிவனாகலின். இவன் பிறப்புடையனன்றோ வெனின் பிறவாதே தோன்றினா னென்பதுபற்றி யென்க. யான் சிற்றறிவுஞ் சிறுதொழிலு முடையேனாகலின் இவனது காதையைக் கூறவல்லனல்லே னென்பார் 'இறைநில மெழுதுமு னிளைய பாலகன் - முறைவரை வேனென முயல்வ தொக்கும்' என வுவமைமுகத்தாற் கூறினார். ஆல் அசை. யான் புகழ்கூறுதற்குக் கடவனல்லே னென்றவாறு.

அவையடக்கமாவது - கல்வி கேள்விகள் நிறைந்த அவையிலுள்ள புலவர்கள் பலர்க்கும் வழிபடுகிளவியாக அடங்கிக் கூறுவது. அதனை இங்கு, 'இறைநில மெழுதுமுன்' என்பது முதலாகப் பல செய்யுட்களாற் பலபடக்கூறினார். தொல்காப்பியம் பொருளதிகாரம்-செய்யுளியலில், "அவையடக் கியலே யரிறபத்தெரியின்-வல்லார் கூறினும் வகுத்தனர் கொண்மினென் - றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தனரே" என வருஞ் சூத்திரத்தால் அவையடக்கவிலக்கண முணர்க. (௧)

ஆன சொற்றமிழ் வல்ல வறிஞர்முன்
யானு மிக்கதை கூறுதற் கெண்ணுதல்
வான கத்தெழும் வான்கதி ரோன்புடை
மீனி மைப்ப விரும்பிய போலுமால்.

(இ-ள்.) யாவரும் விரும்புதற்கேதுவான சொற்களையுடைய தமிழினை நன்றாகக்கற்றுவல்ல அறிவுடையோர்முன்பு அறிவிலியாகியசிறியேனும் இக்காதையைச்

சொல்வதற்கெண்ணியது ஆகாயத்தின்கணெழுகின்ற சிறந்த கதிரையுடைய சூரியன் முன்னே நக்ஷத்திரங்கள் பிரகாசிக்க விரும்பியவாறொக்கும்.—எ-று.

பத்தழகையும்பெற்றுப் பத்துக்குற்றமுநீங்கியிருப்பதுபற்றி, 'ஆன சொற்றமிழ்' என்றும், "அர்ச்சனை பாட்டே யாகு மாதலா னம்மை யென்றுஞ்-சொற்றமிழ் பாடுகென்றார் தூய்மறை பாடும் வாயார்" என இறைவனே நம்மைப் பாடுகவென்று கூறியநலமுடைமையான், 'சொற்றமிழ்' என்றும், இனிமைமிகுந்த மொழியாதலால், 'தமிழ்' என்றும், அதனை முறையாகக் கற்றோரை,'வல்லவறிஞர்' என்றும்,அத்துணைச் சிறப்பிலேனென்றுமில னென்பதுபற்றி 'யான்' என்றும், தமிழ்ப்பெருமையினையும் தன் சிறுமையினையுமுணர்த்த இழிவு சிறப்பும்மை விரித்து 'யானும்' என்றும், அவ்விறைவன் தன்னை யடைந்தார்க்கெளியனென்பது தோன்ற அண்மைச்சுட்டால், 'இக்கதை' என்றும், யான் இக்கதையினை அறிஞர் முன்னே கூற எண்ணுதல் பயனற்ற தாகுமன்றிச் சிறப்பெய்தா தென்பதுபற்றி உவமை முகத்தால், 'வானகத்தெழும் வான்கதிரோன்புடை மீனிமைப்ப விரும்பியபோலும்' என்றுங் கூறினர். (௨)

முன்சொல் கின்ற முனிவட நூறெரீஇத்
தென்சொ லாற்சிறி யேனுரை செய்தலான்
மென்சொ லேனும் வெளிற்றுரை யேனும்வீண்
புன்சொ லேனு மிகழார் புலமையோர்.

(இ-ள்.) முன் இந்தப் புராணத்தைச் சொல்லிய வியாசமுனிவருடைய வடநூற்புராணத்தைத் தெரிந்து தமிழ்மொழியால் அறிவிற்சிறியேன் சொல்லுதலால் அறிவிற் சிறந்த புலவர்கள் இது மெல்லியசொல்லெனினும், பொருளீடில்லாத சொல்லெனினும், பயனில்லாத அற்பமொழி யெனினும் ஒரு பொருளாகக்கொண்டு இகழமாட்டார்கள்.—எ-று.

வியாசர் தமக்கு முன் இக்கந்தபுராணங் கூறினமையான், 'முன் சொல்கின்ற முனி' என்றும், அவர் வடமொழியிற் கூறினமையான் அதனை யறிந்தே கூறவேண்டுதலின், 'வடநூறெரீஇ' என்றும், அதனைத் தமிழாற் கூறத்தொடங்கிய ஆசிரியர் தாம் அறிவிற் சிறியரென்பது தோன்ற 'தென்சொலாற் சிறியே னுரைசெய்தலால்' என்றும், தாழ்ம்பட்ட ஓசையுடைய சொல்லென்பது தோன்ற 'மென்சொலேனும்' என்றும், பொருள்புணராமொழியென்பதுதோன்ற 'வெளிற்றுரையேனும்' என்றும், பயனில்சொல்லென்பது தோன்ற 'வீண் புன்சொலேனும்' என்றும், தாம் வடநூல் தெரிந்தே கூறலான் இகழப்படுவ தன்றென்பது தோன்ற 'இகழார்' என்றும், இது அறிவுடையோர் செயலென்பது தோன்ற 'புலமையோர்' என்றுங் கூறினர். தென்சொலென்பதற்கு அழகிய சொல்லெனினுமாம். உம்மை எண்ணின்கணின்றன. (௩)

சிந்து மென்பு சிரம்பிறை தாங்கினோன்
மைந்த னாதலின் மற்றவன் றானுமென்
சந்த மில்லுரை யுந்தரிப் பானெனக்
கந்த னுக்குரைத் தேனிக் கதையினை.

(இ-ள்.) சிந்துகின்ற எலும்பையும் தலைமாலைகளையும் இளம்பிறையையுமணிந்த சிவபெருமானுடைய திருக்குமாரராகலின், அவர் அடியேனுடைய ஓசை புணராத சொல்லையும் (அங்கீகரித்து) அணிந்தருளுவாரென்றுகருதிக் கந்தப்பெருமானுக்கு இக்கதையினைத் தமிழிற் கூறினேன்.—எ-று.

ஏன்பும் சிரமும் பிறையும் தாழ்வாகிய பொருள்களேனும் அவற்றைத் தாழ்வாயினவாகக்கொள்ளாது தன் சென்னிமேற்கொள்ளுதல்சிவபெருமானதுஇயற்கை

யென்பார் 'சிந்துமென்பு சிரம்பிறை தாங்கினேன்' என்றும், 'மகனறிவு தந்தையறிவு' என்றபடி தானுமென் நலமில்லாத புன்சொல்லுந் தரிப்பா னென்பார் ' மைந்த னுத லின் மற்றவன் றானுமென் சந்தமில்லுரையுந் தரிப்பான்' என்றும், அதுபற்றியே யான் கூறியதன்றி வேறன் றென்பார் 'கந்தனுக் குரைத்தே னிக்கதையினை' என்றுங் கூறி னார். பிறை தாங்கினமை தக்கன் மகளிர் இருபத்தெழுவராகிய அசுவினி முதலியோ ரைச் சந்திரனுக்கு மணஞ்செய்வித்து,யாவரிடத்து மொரோதன்மையாகக் காதல்வை த்திருவென்றனுப்பச் சந்திரன் அதனைமறுத்துஉரோகணியிடத்துஅதிக காதல்கொண் டிருக்க, ஏனையோர் பொருது தந்தையிடத்து முறையிட அவன் கலையெல்லாங்குறை யும்படி சபிக்க அச் சாபவசத்தனாகிச் சந்திரன் திருக்கயிலையை யடைந்து சிவபெரு மானால் ஒற்றைக்கலை புனையப்பெற்று பதினைந்துநாள்களிற் கலைநிரம்பவும், பின்னர் குறையவும் இவ்வாறு வரம்பெற்றானெனவும், சிந்துமென்பு சிரமென்றது, பிரமன் மால் முதலிய தேவர்கள் சர்வசங்காரகாலத்துத் தகிக்கப்படுகையில் அவர்களென் பினையும் சிரங்களையும் மாலையாகத் தரித்தனரெனவும் மேல் தக்ஷகாண்டத்து வருமா ற்றா னுணர்க. (சு)

வெற்றெ னத்தொ டுத் தீர்த்து வெளிற்றுரை
முற்று மாக மொழிந்தவென் பாடலிற்
குற்ற நாடினர் கூறுப தொல்லைநூல்
கற்று ணர்ந்த கலைஞரல் லோர்களே.

(இ-ள்.) (பொருளென்னுங் கருக்கொள்ளாமல்) வெளிறுபடச் சொற்களைச் சேர்த்துவைத் திழுத்துப் (பொருள் புணராத) வெள்ளைச் சொற்களே முழுது நிரம்ப வமைத்துக்கூறிய வெனது பாடலில்,பழமையான நூற்களை வாசித்தறிந்த கலைவாண ரல்லாத கீழ்மக்கள் குற்றங்களை நாடிக் கூறுவார்கள்.—எ-று.

வெள்ளறிவினேன் ஆதலால், என் சொற்களனைத்தும் பயனில் வெளிற் றுரையன்றி வேறன்றென்பார் 'வெற்றெனத் தொடுத்தீர்த்து வெளிற்றுரை முற்று மாகமொழிந்த வென்பாடலில்' என்றும், கல்லாதார் பிறர்குற்றங்காண்பதன்றிக் கற் றோர் பிறர்குற்றங் காணாரென்பார் 'தொல்லை நூல் கற்றுணர்ந்த கலைஞரல்லோர்கள் குற்றநாடினர்கூறுப' என்றுங்கூறினார். இதனை;—"நல்லோர் பிறர்குற்ற நாடார் நலந் தெரிந்து-கல்லார் பிறர்குற்றங் காண்பரோ-தொல்லுலகி லென்போல்வா ரென்னை யிகழ்வரோ வென்கவிக்குப்-பின்பாரோ காண்பார் பிழை" எனப் பிறருங் கூறுதல் காண்க. உம்மை-முற்று. நாடினர் - முற்றெச்சம்.

குற்ற மேதெரி வார்குறு மாமுனி
சொற்ற பாவினு மோர்குறை சொல்வராற்
கற்றி லாவென் கவிவழு வாயினு
முற்று நாடிவல் லோருய்த் துரைக்கவே. எ

(இ-ள்.) பிறர் நூலிற் குற்றமாராய்ந்து சொல்பவர்கள் சிறந்த அகத்திய முனிவர் அருளிச்செய்த பாவேயாயினும் அதனிடத்து மொருகுற்றங் கூறுவார்கள். ஆதலால், கற்றறிவில்லாத என்கவிகள் வழூஉச் சொற்புணர்க்கப்பட்டனவேனும் அறிவுடையோர் பொருந்தி நாடி ஆராய்ந்துரைக்கக்கடவர்.—எ-று.

குற்றங்கூறு மியல்புடையோர் தமிழ்த்தலைவராகிய அகத்தியர் கூறிய பா வேயாயினும், அதற்கு மொருகுற்றம் கூறுதலியற்கை யென்பார், 'குற்றமேதெரிவார் குறுமாமுனி சொற்ற பாவினுமோர் குறைசொல்வர்' என்றும், அவரை நோக்க யான் கல்வியென்பதனுத் துணையுமில்லாதவ னென்பார் 'கற்றிலா'என்றும, யான் பாடிய கவிகள் வழூஉச் சொற்புணர்த்தல், சென்று தேய்ந்திறுதல், முதலிய குற்றங்கட் கிட

னுமென்பார், 'என்கவிவழுவாயினும்' என்றும், அறிவுடையோர் பிறரைக் குற்றங்கூறு ரென்பார், 'உற்று நாடிவல்லோருய்த் துரைக்க' என்றுங்கூறினர். உம்மை இரண்டில் முன்னது உயர்வு சிறப்பு, பின்னது-இழிவுசிறப்பு. வல்லோர் என்றது கல்வி கேள்வி களை யுடையோரை. (சு)

வேறு

குறைபல மாமதி கொளினு மன்னதா
லுறுபய னோக்கியே யுலகம் போற்றல்போற்
சிறியவென் வெளிற்றுரை சிறப்பின் றாயினு
மறுமுகன் கதையிதென் றறிஞர் கொள்வரே.

(இ-ள்.) சந்திரன் பல குறைகளை யுடையனு யிருந்தாலும் அச்சந்திரனால் விளையும் மிகுந்தபிரயோசனத்தைக்கருதி உலகினர் அச்சந்திரனைத் துதிப்பதுபோல, அறிவாற் சிறிய என் வெளிற்றுமொழியானது சிறப்பில்லையாயினும், இது, ஆறுதிரு முகங்களையுடைய சுப்பிரமணியக்கடவுளது கதையென்று அறிவுடையோர் அங்கீகரிப் பார்கள்.—எ-று.

'குறைபல மாமதி' என்றது, களங்கமும் கலைகுறைதலும் கயரோகமுமுதலி யன. களங்கத்தை முயலென்றும் மானென்றுங் கூறுவர். கலைகள் குறைதல் தக்கன் சாபமும், கயரோகமுடைமை வியாழபகவான் மனைவியாகிய தாரையை விரும்பிய வழி அவனுற் பெற்ற சாபமுமென்க. 'அன்னதாலுறுபயனோக்கியே யுலகம் போற்றல்' என்றது, பைங்கூழை வளரச்செய்தல் முதலியன; "குண நாடிக் குற்றமுநாடி யவற்றுண் மிகை நாடி மிக்க கொளல்" என்பதுபற்றி 'அன்னதா லுறுபயனோக் கியே யுலகம் போற்றல் போல்' என்றார். போற்றலென்றது-மேலாக மதித்தல். உலகம் - ஆகுபெயர். ஆயினு மென்ற வும்மை ஆகாமையை யுணர்த்திநின்றது. (எ)

நாதனு ரருள்பெறு நந்தி தந்திடக்
கோதிலா துணர்சனற் குமரன் கூறிட
வாதரா யணமுனி வகுப்ப வோர்ந்துணர்
சூதனே தியதுமூ வாறு தொல்கதை.

(இ-ள்.) சிவபெருமானது திருவருளைபெற்ற திருநந்திதேவரருளிச்செய்ய, அதனைக் குற்றமறத் தெரிந்துணர்ந்த சனற்குமாரமுனிவர் சொல்ல, (அதையுணர்ந்த) வியாசமுனிவர் வகுத்துரைப்ப ஆராய்ந்தறிந்த சூதமுனிவர் சொன்னது பதினெண் புராண மெனப்படும்.—எ-று.

புராணங்கள் மிகச் சிறந்தனவென்பதும், வேதத்தோ டொத்தன வென்பது நோக்கியன்றே ஆளுடையபிள்ளையார் "வேதம் முதல்வன் முதலாக விளங்கி வைய-மேதப் படாமே யுலகத்தவ ரேத்தல் செய்யப் - பூதம் முதல்வன் முதலே முதலாப் பொலிந்த - சூதன் னொலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே' என்றருளிச்செய்த தமிழ்வேதத்தானும், வேத முதல்வம் னென்னு மெய்த்திருப் பாட்டினினேர் - ஆதி யுலகோ ரிடர்நீங்கிட வேத்த வாடும் - பாத முதலாம் பதினெண் புராணங்க ளென்றே-யோதென்றுரைசெய்தனர் யாவுமோதா துணர்ந்தார்" என்ற திருத்தொண்டர் புராணத்தானுமறிக. எப்பொருட்குமிறைவனுதலான் நாதனுென்றதென்க. மூவாறு தொல்கதை என்றது சைவம், பவுடியம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மற்சம், கூர்மம், பிரமாண்டம், பிரமம், பதுமம், காருடம், நாரதம், விஷ்ணு, பாகவதம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தமென்பன. இவை முறையே சிவபெருமானு க்குப் பத்தும், பிரமனுக் கிரண்டும், திருமாலுக்கு நான்கும், அக்கினிக் கொன்றும், சூரியனுக் கொன்றுமாம். "அண்ணல்பாற் றெளிந்த நந்தியடிகள்பாற் சனற்கு மார-

னுண்ணிறை யன்பி ஞய்ந்து வியாதனுக் குணர்த்த வந்தப்-புண்ணிய முனிவன் சூதற் கோதிய புராணமூவாறு" எனவருந் திருவிளையாடற்புராணத்தானு முணர்க. (அ)

சொல்லிய புராணமாந் தொகையு ளீசனை
யல்லவர் காதைக ளனையர் செய்கையு
ணல்லன விரித்திடு நவைகண் மாற்றிடு
மில்லது முகமனு லெடுத்துக் கூறுமே.

(இ-ள்.) மேலெடுத்துக்கூறிய புராணமாகிய தொகைகளில் இறைவனுகிய சிவபெருமானை யொழிந்த (பிரமன் மால் அக்கினி சூரியனென்னுந்) தேவர்களைச்சிறப்பித்துக் கூறிய புராணங்கள் அவர் செய்கைகளில் நல்லனவற்றை விரித்துக் கூறும், (அவர்க் குள்ளனவாகிய) குற்றங்களை மறைத்துக் கூறும், அவர்கட் கில்லாத சிறப்புக்களை உபசாரமாக வெடுத்துக் கூறும்.—எ-று.

இராசத தாமதகுணங்களையுடையராதலின் 'அனையர்செய்கையு ணல்லன விரித்திடு நவைகண் மாற்றிடும், என்றும், அவர்கள் பரம்பொருளல்லாமையாற் பரம்பொருளென உபசரித்துக் கூறுதலின், 'இல்லது முகமனுலெடுத்துக் கூறும்' என்றுங் கூறினர். அவர்கள் பரம்பொருளல்லாமையைச் சிறுவிதியாகிய தக்கன்யாகத்து நிகழ்ந்தசெயலாற் பரக்கக் காண்க. முகமன் - உபசாரம்; அது இல்லதனை உள்ளதுபோல உபசரித்துக்கூறுவது. தொகையுள், செய்கையுள் என்புழி ஏழனுருபு கூட்டிப் பிரித்தற் பொருளது. ஈசன் என்றது தன்னை யடைந்தோர்க்கு அருட்செல்வந் தருபவனென்னும்பொருளது. (௯)

பிறையணி சடைமுடிப் பிரான்றன் காதைக
ளிறையுமோர் மறுவில யாவு மேன்மையே
மறைபல சான்றுள வாய்மை யேயவை
யறிஞர்க ணுடியே யவற்றைக் காண்கவே.

(இ-ள்.) இளம்பிறையையணிந்த சடைமுடியினையுடைய சிவபெருமானது புராணங்கள் ஒருசிறிதேனும் குற்றமில்லாதன; அவையனைத்துஞ் சிறப்புடையனவேயாம்; அவற்றிற்குப் பலவேதங்கள் சான்முகவுள்ளன. அவையனைத்துஞ் சத்தியமே. அவற்றினைஅறிவுடையோர் ஆராய்ந்து காணக்கடவர்.—எ-று.

சத்துவகுணமுடைமையானும் அநாதிமலமுத்தசித்துருவாடள்ளவராகையானும் அவர்புகழினை யெடுத்துக்கூறும்புராணங்கள் 'மறுவில' என்றும், 'மேன்மை' என்றுங் கூறியதன்றி, அவர் பரம்பொருளென்பதற்கு, 'மறைபலசான்றுள வாய்மையேயவை' என்றுங் கூறினரென வறிக. (௧௦)

புவியின ரேனையர் புராணந் தேரினுஞ்
சிவகதை யுணர்கில ரொன்னிற் றீருமோ
வவர்மய லரசனை யடைந்தி டாரெனி
லெவரொவ ராக்கமு மினிது போலுமால்.

(இ-ள்.) பூமியின்கணுள்ளோர் பிறகடவுளருடைய புராணங்களைத் தெளிந்தாராயினும் சிவபெருமானைக்குறித்துக் கூறும் புராணங்களைத் தெளியாராயின் அவர்மயக்கம் நீங்குமோ? (நீங்காது). (அஃது எதுபோலுமெனின்,) அரசனை யடையாராயின் எவரொவர்களுடைய செல்வமு மினியதுபோலும்.—எ-று.

பிறர் கதை யவகதை யாகலின், சிவகதை கேட்டாலன்றிக் கழிபேருவகை யொருவர்க் கெய்தாமையின், 'சிவகதை யுணர்கிலரொன்னிற் றீருமோ' என்முர். போலும் என்றது ஒப்பில் போலி; "ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்." என்பதனு

னறிக. அரசச் செல்வத்தினேடு பிறர் செல்வத்தை யொப்புமை கூறுவது நிரம்பா தென்பனை உவமை முகத்தாற் சுட்டி யறிவித்தார். எவரொவ ரொன்னு மடுக்குப் பன்மை. ஆல் - அசை. (௧௧)

மங்கையோர் பங்குடை வான நாயகற்
கிங்குள பலபுரா ணத்து ளெஃகவேற்
புங்கவன் சீர்புகழ் புராண மொன்றுள
தங்கதி லொருசில வடைவிற் கூறுகேன்.

(இ-ள்.) உமாதேவியை இடப்பாகத்திலுடைய தேவர்கள் நாயகராகிய சிவபெருமானைச் சுட்டிக் கூறும் இங்குள்ள பல புராணங்களில் கூர்மையாகிய வேலாயுதத்தையேந்திய பரிசுத்தராகிய முருகக்கடவுளது புகழினை யெடுத்துச்சொல்லும் புராணமொன்றுண்டு, அதில் சிலவற்றை முறைபடச் சொல்லுவேன்.—எ-று.

மங்கையோர் பங்குடையா ரென்பது, "தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்-பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி-பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர் விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ' என்ற திருவாக்கானு மறிக. எந்தப்புராணத்தும் முருகக்கடவுள் புகழ்மை நிரம்ப விரவாமையானும், இதிற் சிறப்பித்துக் கூறப்படுவேதனுனும், இதுவே சிறந்ததென்பார், 'வான நாயகற் கிங்குள பல புராணத்து ளெஃகவேற் புங்கவன் சீர்புகழ் புராண மொன்றுளது' என்றும், அதனை என்னொரு நாவான் முற்றுங் கூறுந்தன்மையதன்றென்பார், 'அங்கதி லொருசில வடைவிற் கூறுகேன்' என்றுங் கூறினர். (௧௨)

புதுமயி லூர்பரன் புராணத் துற்றிடாக்
கதையிலை யன்னது கணித மின்றரோ
வதுமுழு தறையவெற் கமைதற் பாலதோ
துதியுறு புலமைசேர் சூதற் கல்லதே.

(இ-ள்.) புதுமையாகிய மயிலை வாகனமாக ஏறி நடத்தும் முருகப்பெருமானைச் சிறப்பித்துக் கூறும் இப்புராணத்தி லடையாத கதைகளொன்றுமில்லை; அவற்றிற்குக் கணிதமுமில்லை; அக்கதைகளை முழுது மெடுத்துச்சொல்ல, யாவரானுந் துதிக்கப்படுகின்ற புலமையமைந்த சூதமுனிவருக்கன்றி, அடியேன் அவை முழுதுஞ் சொல்லுதற் கமையும் பகுதியதோ.—எ-று.

இந்திரனை யூர்தியாகக்கொண்டு கடைநாட்போரிற் சூரபதுமனேடு பிள்ளையார் போர்செய்துவருகையில், மாமர வுருக்கொண்டு கடலிற்புகுந்த தன்னை வேலாற் பிளக்கக்கண்டு, தனக்குய்தியில்லை யெனத்துணிந்த கெடாத வரமுடையானுகலின் மயிலுஞ் சேவலுமாக வர, அம் மயிலை யேறி நடத்தினமையால் 'புதுமயி லூர்பரன்' என்ருர். இதனை—"கீழ்மே னின்றவக் கொடுந்தொழிற் கொக்கின் - கூறிரண் டாய வொருபங் கெழுந்து - மாயாப் பெருவரத் தொருமயி லாகிப் - புடவிவைத் தாற்றிய பஃறலைப் பாந்தண் - மண்சிறுக விரித்த மணிப்படந் தூக்கி-விழுங்கிய பல்கதிர் வாய்தொறு முமிழ்ந்தென - மணிநிரை சிந்தி மண்புக வலைப்பக் - கார்விரிந் தோங்கிய மலைத்தலைக் கதிரொன - வோவறப் போகிய சிறைவிரி முதுகிற் - புவனங் காணப் புகழொடு பொலிந்தோய்" எனக் கல்லாடர் கூறியதனு முணர்க. எந்தக்கதையுங் காந்த மொன்றிலேயே யமைந்திருக்கும் என்றுகூறுவது உலகவழக்காகலின்,'புதுமயி லூர்பரன் புராணத் துற்றிடாக் - கதையிலை யன்னது கணிதமின்று' என்று கூறினர். அரோ-அசைநிலை. (௧௩)

காந்தமா கியபெருங் கடலுட் கந்தவேள்
போந்திடு நிமித்தமும் புனிதன் கண்ணிடை
யேந்தல்வந் தவுணர்கள் யாரு மவ்வழி
மாய்ந்திட வடர்த்தது மற்றுங் கூறுகேன்.

(இ-ள்.) காந்தபுராணமாகிய பெரிய கடலின்கண் கந்தப்பெருமான் அவதரித்தருளிய காரணமும், சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினிடத்து அவ்வெம்பெருமான் அவதரித்து அசுரர்கள் யாவரு மவ்வழியில் அழியும்படி போர்செய்து அழித்த சரித்திரமும் மற்றைச் சரித்திரங்களையும் கூறுகின்றேன்.—எ-று.

சூரபதுமன் தேவர்களைவருத்த அதனைப்பொறாத தேவர்கள் சிவபெருமானை வேண்டி நின்றாராக, பெருமான் நமது குமாரனால் உங்கள் துன்பமனைத்துந் தீருமென்றாராகலின், 'கந்தவேள் போந்திடுநிமித்தமும்' என்றும், அவர்நெற்றிக்கண்ணிற் றீப்பொறியாகத் தோன்றி, வாயுவும் அக்கினியும் சிவபெருமானாணையிற் கங்கையில் விடுப்பக் கங்கையும் சரவணப்பொய்கையில் விடுப்ப அப்பொய்கையிற் பதுமப்பாசடையிற் சிறுகுழந்தைகளாக அறுமீன் முலைப்பாலுண்டு விளையாடிக்கொண்டிருப்ப, சிவபெருமானது ஏவலாற்சென்று உமையம்மையெடுத்தலும் ஆறு திருமுகங்களும் பன்னிருதிருக்கரங்களுமாக விளங்கினராகலின், 'புனிதன் கண்ணிடை யேந்தல் வந்து' என்றும், அவ்வெமது குகப்பெருமான் சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் முதலிய அவுணர்களைக்கொன்று சத்துரு சங்காரஞ்செய்து தேவர்கட்குத் தத்தம்பதங்களை யளித்தமையால், 'அவுணர்கள் யாரு மவ்வழிமாய்ந்திட வடர்த்ததும்' என்றும், வள்ளிநாச்சியார் தெய்வயானை நாச்சியார் திருமணமுதலியனவுங் கூறுதலின், 'மற்றுங்கூறுகேன்' என்றுங் கூறினர். புராணம் பதினெட்டனுள் காந்தபுராணம் இலக்ஷங் கிரந்தமுடைமையானும், பிறபுராணத்திற்கு அத்தனைக் கிரந்த மின்மையானும், 'காந்தமாகிய பெருங்கடலுள்' என்றதென்க. (௧௪)

வேறு.

ஏதி லாக்கற்ப மெண்ணில சென்றன
வாத லாலிக் கதையு மனந்தமாம்
பேத மாகுமப் பேதத்தி னுள்விரித்
தோது காந்தத்தி னுண்மையைக் கூறுகேன்.

(இ-ள்.) குற்றமில்லாத கற்பகாலங்கள் அளவில்லாதன கழிந்தன; ஆகையால், இக்கதையும் அளவற்ற பேதங்களாகும். அப்பேதத்தினுள்ளே விரித்துச்சொல்லும் காந்தபுராணத்தினுடைய வுண்மையைச் சொல்லத் தொடங்கினேன்.—எ-று.

கற்பங்கள் சிவபெருமானது கட்டளையா னிகழ்தலின், 'ஏதிலாக்கற்பம்' என்றும், அவை பலவாக நிகழ்தலின், 'எண்ணில சென்றன' என்றும், அக்கற்பங்கடோறும் நிகழுமற்புதசரிதங்கள் வேறுபடுதலின், 'ஆதலா லிக்கதையு மனந்தமாம் பேதமாகும்' என்றும், அவ்வேறுபாடுகெழிய உண்மை யின்னதென் றுணர்த்துங் காந்தபுராணம் சத்தியமா யுள்ளதென்பது தோன்ற, 'அப்பேதத்தினுள்விரித்தோது காந்தத்தினுண்மையைக் கூறுகேன்' என்றுங் கூறினர். (௧௫)

முன்பு சூதன் மொழிவட நூற்கதை
பின்பி யான்றமிழ்ப் பெற்றியிற் செப்புகே
னென்ப யன்னெனி லின்றமிழ்த் தேசிகர்
நன்பு லத்தவை காட்டு நயப்பினால்.

(இ-ள்.) முன்னுளில் சூதமுனிவர் சொல்லியருளிய வடமொழிப் புராணத்தைப் பின்னே அடியேன் தமிழ்ப்பாவினுல் சொல்லத் தொடங்கினேன்; அதனுல் யாது பிரயோசனமெனின், இனிமையான தமிழையறிந்த ஆசிரியத்தன்மை யுடையோரது நல்ல சபையில் அவற்றைக்காட்டும் விருப்பத்தினுலாகும்.—எ-று.

நன்புல மென்ருர்; அறிஞர்களது கல்விக்கழகம் நன்மை பயத்தலன்றித் தீமை பயவாமையா னென்க. (௧௬)

தோற்ற மீறின்றித் தோற்றிய சூர்ப்பகைக்
கேற்ற காதைக் கெவன்பெய ரென்றிடி
னுற்று மைம்புலத் தாறுசென் மேலையோர்
போற்று கந்த புராணம தென்பதே.

(இ-ள்.) ஆதியு மந்தமுமில்லாமல் (பிறவாமே) பிறந்த சூரசங்காரமூர்த்தியாகிய கந்தப்பெருமானுக்குத் தக்க இப்புராணத்திற்கு யாது பெயரெனின், ஐம்புலன்களையு மடக்கி நன்னெறியிற் சென்ற மெய்யுணர்ச்சியையுடைய பெரியோர்கள் புகழ்ந்து கூறுங் கந்தபுராணமென்று சொல்லப்படுவதாம்.—எ-று.

செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளராகிய முருகப்பெருமான் பிறவாதே தோன்றினவரென்பார், 'தோற்ற மீறின்றித் தோற்றிய சூர்ப்பகை' என்றும், அவர் சரிதங்கூறும் புராணத்திற்கு அவ்வெம்பெருமானது சம்பந்தமாகவே பெயரமைய வேண்டுமென்பார், 'மேலையோர் போற்று கந்தபுராணம தென்பதே' என்றுங் கூறினர். ஐம்புலன்களையு மவித்த மெய்ஞ்ஞானிகளே அந்நூலைப் போற்றத்தக்கவராகலின் 'ஐம்புலத்தாறு சென்மேலையோர் போற்று' என்ருர். (௧௭)

பகுதி கொண்டிடு பாக்களி னத்தினுண்
மிகுதி கொண்ட விருத்தத் தொகைகளாற்
றொகுதி கொண்டிடு சூர்கிளை சாய்த்தவன்
தகுதி கொண்ட தனிக்கதை சாற்றுகேன்.

(இ-ள்.) பலவகைப் பகுதியைக் கொண்டிருக்கின்ற பாக்களினத்தில் மிகுதியைக்கொண்ட விருத்தத்தின் தொகைகளால், தொகையை மிகுதியாகக்கொண்ட சூரபதுமனை அவன் வருக்கத்தோடு கொன்றருளிய முருகக்கடவுளது தகுதிப்பாட்டினையுடைய ஒப்பற்ற கதையைச் சொல்லுவேன்.—எ-று.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாக்கள் நான்கனுள் ஒவ்வொன்றினும் தாழிசை, துறை, விருத்தம் என்பனஉண்மையால், இந்நூல் முழுதும் பெரும்பாலும் வெண்பா, வஞ்சியொழிந்த பாக்களினமாகிய விருத்தத்தாற் செய்யப்பட்டமையான், 'பகுதிகொண்டிடு பாக்களினத்தினுள் மிகுதிகொண்ட விருத்தத் தொகைகளால்' என்றும், சூரபதுமனைச் சிங்கமுகன் தாரகன் என்னும் தம்பியருடனும், பானுகோபன்முதலிய புத்திரவர்க்கத்துடனும் ஆயிரவெள்ளம் அவுணப்படைகளுடனும் கொன்று வெற்றிகொண்டமை தோன்ற, 'தொகுதிகொண்டிடு சூர்கிளைசாய்த்தவன்' என்றும், அவன் கதையை யல்லது வேறு கதையை யறியே னென்பது பற்றி 'தகுதி கொண்ட தனிக்கதை சாற்றுகேன்' என்றுங்கூறினர். கிளை-ஆகுபெயர்.

செந்த மிழ்க்கு வரம்பெனச் செப்பிய
முந்து காஞ்சியின் முற்றுணர் மேலவர்
கந்த னெந்தை கதையினை நான்முறை
தந்தி டென்னத் தமிய னியம்புகேன்.

(இ-ள்.) செந்தமிழ்மொழிக்கு எல்லையாக(ப்புலவர்களால்) சொல்லப்பட்ட முதன்மைபொருந்திய காஞ்சிநகரத்திலுள்ள முழுதுமறிந்த அறிவுடையோர் கந்தனாகிய எமது கடவுளது புராணத்தை நூலின் முறையாகச் சொல்லென்று கட்டளையிட, தன்னந்தனியனாகிய அடியேன் சொல்லத் தொடங்குவேன்.—எ-று.

செந்தமிழ்க்கு வடக்கு எல்லையாகிய வேங்கடத்தைத் தன்னகத்தடக்கிய நாடாகலின் தொண்டைநாட்டிலுள்ள காஞ்சியை, 'செந்தமிழ்க்கு வரம்பெனச் செப்பிய' என்றும், உமையம்மை தழுவக்குழைந்தமையானும், வளைச்சுவடும் முலைச்சுவடும் பெற்றமையானும் அச்சிறப்பினையெய்திய காஞ்சியை 'முந்துகாஞ்சியின்' என்றும், அருட்பணிக்குரிய மகேச்சுரர் முதலாநால்வரும் பொருந்தியிருப்பதனான், 'முற்றுணர் மேலவர்' என்றும், தான் வழிபடுமிறைவனாகலின் அவர் காதையை, 'கந்தனெந்தை கதையினை' என்றும், வடநூற்படி கூறுகவென்பார் சொல்லைக் கடைப்பிடித்துச் செய்தலின், 'நூன்முறை தந்திடென்னத் தமியனியம்புகேன்' என்றுங் கூறினார். ()

வெம்பு சூர்முதல் வீட்டிய வேற்படை
நம்பி காதையை நற்றமிழ்ப் பாடலா
லும்பர் போற்ற வுமையுடன் மேவிய
கம்பர் காஞ்சியிற் கட்டுரைத்தே னியான்.

(இ-ள்.) கோபிக்கின்ற சூரபதுமனை வேரொடுங் களைந்த வேற்படையையுடைய சுப்பிரமணியக் கடவுளது சரித்திரத்தை நல்ல தமிழ்ப்பாடல்களால் தேவர்கள் போற்றும்படி உமாதேவியுடனெழுந்தருளியிருக்கும் திருவேகம்பநாதரது ஸ்ரீ காஞ்சிநகரத்தின்கண் அடியேன் உறுதிபடக் கூறினேன்.—எ-று.

தேவரைப் பகைத்தழித்தது வேற்படையேயாகலின் 'வெம்புசூர்முதல் வீட்டியவேற்படை' என்றும், அதனையுடைய முருகப்பெருமான்சரித்திரத்தை, 'நம்பி காதையை' என்றும், அவரைச் சுட்டிக்கூறிய தமிழ்ச்செய்யுளாகலின், 'நற்றமிழ்ப்பாடலால்' என்றும், தேவர்கள் நெருங்கி வாழ்த்துவதனால், 'உம்பர் போற்ற' என்றும், ஏலவார் குழலாளுடன் எழுந்தருளி இகபரங்களைத்தருகின்றதிருநகரமாதலின், 'உமையுடன் மேவியகம்பர் காஞ்சியில்' என்றும், அவரருளாற் கூறுதலால், 'கட்டுரைத்தேனியான்' என்றுங் கூறினார்.

கம்பர் எனப் பொதுப்படக் கூறியதனால் திருவேகம்பப் பெருமானையன்றி, உருத்திரரால் வழிபடப்பட்ட நல்ல கம்பரையும், மாயோனால் வழிபடப்பட்ட கள்ளக் கம்பரையும், பிரமனால் வழிபடப்பட்ட வெள்ளைக்கம்பரையுங் கொள்க. இதனை ஏலவார்குழலாளுமை நங்கையென்றுமேத்தி வழிபடப்பெற்ற காலகாலனைக் கம்பனெம்மானை" என்றும் "நல்ல கம்பனை யெங்கள் பிரானை" என்றும், "கள்ளக்கம்பனை யெங்கள்பிரானை" என்றும்வருந் தேவாரத்தானுணர்க. காஞ்சிப்புராணத்து இதனைப் பரக்கக் கூறுதலானுமறிக. முதல்-ஆகுபெயர். (உ0)

அவையடக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௩0.

உ

முருகன்றுணை.

# ஆற்றுப்படலம்.

செக்கரஞ் சடைமுடிச் சிவனுக் கன்பராய்த்
தக்கவ ரறிஞர்க டவத்தர் செல்வராய்த்
தொக்கவர் யாரும்வாழ் தொண்டை நாட்டினின்
மிக்கதோ ரணியிய லதுவி ளம்புகேன்.

(இ-ள்.) செவ்வானம்போலும் அழகிய சடைமுடியையுடைய சிவபெருமானுக்கு மெய்யன்பர்களாயுள்ள தக்கவர்களும், புலவர்களும், தவசிரேஷ்டர்களும், செல்வவான்களாய் நெருங்கியுள்ளவர்களு மாகிய யாவரும் (சேர்ந்து)வாழ்கின்ற தொண்டைநாட்டினது சிறந்துவிளங்குவதாகிய ஒப்பற்ற அழகின் இயலை (யான்) சொல்லத் தொடங்குவேன்.—எ-று.

“பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி பொலிந்திலங்கு-மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை” என்னும் பிரமாணப்படி மின்போற் செந்நிறமுற்று விளங்குவது எம்பெருமானுடைய சடைமுடியென்பார், ‘செக்கரஞ் சடைமுடிச் சிவன்’ என்றும், ‘அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலினர் என்பார், ‘அன்பராய்த் தக்கவர்’ என்றும், கல்வி கேள்விகளால் நிரம்பிய பேரறிவினரென்பார், ‘அறிஞர்கள்’ என்றும், சிவபரம்பொருளைச்சிந்தையினிருத்திப் பெருந்தவம் புரியும் பெட்பினரென்பார், ‘தவத்தர்’ என்றும், அளகேசனு மஞ்சத்தக்க பெருநிதிக்குவையினரென்பார், ‘செல்வராய்த் தொக்கவர்’ என்றும், சிவனுக்கன்பராய்த் தக்கவர்களும் அறிஞர்களும் தவத்தர்களும் செல்வராய்த் தொக்கவர்களுமாகிய யாவரும் நன்னிலையுடையதென்று விரும்பி வாழ்தற்குரியது இத் திருநாடேயென்பார், ‘யாரும்வாழ் தொண்டைநாடு’ என்றும், அத்தகைய தொண்டைநாட்டினணியியலைக் கூறுதலே யமைவுடைத்தன்றி ஏனைய நாட்டியலைக் கூறுதல் கற்பனைமாத்திரமாகலா னதனை யொழித்து உள்ளதை யுள்ளபடியே கூறுத லுயர்ச்சியாகலின் யானு மந்நெறியே நின்று, அந்நாட்டி னணியியலைக் கூறுவனென்பார், ‘மிக்கதோ ரணியியலது விளம்புகேன்’ என்றுங் கூறினர். இதனை,—

“வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வள்நாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.” என்று ஒளவையார் கூறியதனாலுணர்க.

சுந்தர மாயவன் றுயிலு மாழிபோ
லிந்திர னூர்முகிலி யாவு மேகியே
யந்தமில் கடற்புன லருந்தி யார்த்தெழீஇ
வந்தன வுவரியின் வண்ண மென்னவே.

(இ-ள்.) தேவேந்திரன் வாகனமாக வூர்ந்துசெல்லும் மேகங்க ளனைத்தும் அழகிய திருமால் பள்ளிகொள்ளும் பாற்கடல்போலப் (பரவிச்) சென்று, முடிவில்லாத கடல்நீரை யுண்டு (ஆகாயத்தில்) ஆரவாரித்து எழுந்து, உவர்நீர்க்கடலின் வண்ணம்போல (த்திரும்பி) வந்தன.—எ-று.

திருமறு மார்பினனாகிய திருமால் ஆடவர் பெண்மையை யவாவும் பேரழகி னனென்பார், 'சுந்தரமாயவன்' என்றும், அத்திருமால் பள்ளிகொள்ளும் பாற்கடல் வெள்ளொளி வீசும் விழுப்பமிக் குடையதென்பார், 'துயிலுமாழி' என்றும், சம்வர்த்தம் - ஆவர்த்தம் - புட்கலாவர்த்தம் - சங்காரித்தம் - துரோணம் - காளமுகி - நீலவருணம் என்னுஞ் சப்தமேகங்களும் சுவர்க்காதிபதியாகிய இந்திரனுக்கிசைந்த வாகனமென்பார், 'இந்திரனூர்முகில்' என்றும், அம்முகிலேழும் நீர்ப்பசையற்றுப் பாற்கடல் போலவெண்ணிறமுற்றுப் பரவிச்சென்றன வென்பார், 'ஆழிபோல் யாவுமேகி' என்றும், எத்தகைய கணிதர்களாலு மளவிட்டுரைத்தற்கரிய பெருங்கடலென்பார், 'அந்தமில்கடல்' என்றும், அப்பெருங்கடனீரைப் பருகிச் சூல்கொண்டு இடிமுழக்கத்துடனெழுந்தன வென்பார், 'புனலருந்தியார்த் தெழீஇ, என்றும், அவ்வாறெழுந்த மேகம் உவர்நீர்க் கடல்போற் கருநிறமுற்றுக் கவிந்துவந்தன வென்பார், 'வந்தன வுவரியின் வண்ணமென்ன' என்றுங் கூறினர். ஆழி-ஆழத்தையுடையது, உவரி-உவர்நீரையுடையது. உவர்=உப்பு. எழீஇ-சொல்லிசை யளபெடை. முகில் ஏகி - அருந்தி-எழீஇவந்தன வெனக்கூட்டுக. (உ)

பார்த்தென துலகடும் பரிதி யென்னொடும்
போர்த்தொழில் புரிகெனப் பொங்கு சீற்றத்தால்
வேர்த்தெனப் பனித்துவெள் ளெயிறு விள்ளநக்
கார்த்தென வேதடித் தசனி கான்றவே.

(இ-ள்.) (சூரியனைப்) பார்த்து எனது உலகத்தை (க்காய்ந்து) அழித்துவருகின்ற சூரியனே! நீ என்னுடன் போர்த்தொழில் செய்யக்கடவை யென்று மிகுந்த கோபத்தினால் வியர்த்தைப்போலப் பனித்து, வெள்ளிய பற்கள் தெரியும்படி சிரித்து ஆர்ப்பரித்தாற்போல மின்னி இடியைக் கக்கின.—எ-று.

பெருங்கோப முற்றவர்களுக்கு உடல் வியர்த்தலும் வீரநகையாற் கனைப்பு முதலியன தோன்றலு முண்மைபோல, மேகங்களும் பனித்து மின்னி இடித்தனவென்க. எனதுலகு என்பது-என்னாற் பாதுகாக்கப்பட்டு வருகின்ற உலகமென்னும்பொருட்டு. போர்முதனிலைதிரிந்த தொழிற்பெயர். புரிக, வேர்த்தது-ஆர்த்தது, என்பவை ஈறுதொகுத்தலாய் நின்றன. (ங)

சுந்தர வயிரவத் தோன்றன் மீமிசைக்
கந்தடு களிற்றுரி கவைஇய காட்சிபோன்
முந்துறு சூன்முகின் முழுது முற்றுற
நந்தியம் பெருவரை மீது நண்ணிய.

(இ-ள்.) அழகிய வயிரவக்கடவுளின்மேல் கட்டுத்தறியை முறிக்கின்ற மதயானையினது தோலைப் போர்த்த காட்சியைப் போல முற்பட்டெழுந்த சூலினைக் கொண்ட மேகங்களனைத்தும் பெரிய நந்திமலையின்மேல்வந் தடைந்தன.—எ-று.

வயிரவக்கடவுள்மேல் யானைத்தோலைப் போர்த்தாற்போல கரியமேகங்கள் நந்திமலையைச் சூழ்ந்து கவிந்தன வென்க. (ச)

வேறு.

வாரை கான்றநித் திலமென வாலிகண் மபங்கச்
சீரை கான்றிடு தந்திரி நரம்பெனச் செறிந்த
தாரை கான்றவோ ரிருதுவி னெல்லையுந் தண்பால்
வீரை கான்றிடு தன்மைய தாமென மேகம்.

(இ-ள்.) சப்தமேகங்களும் குளிர்ந்த திருப்பாற்கடலை (யுண்டு) கக்குந் தன்மையைப்போல ஒரு கார்காலமாகிய இரண்டுமாதவனாயிலும் மூங்கிலினின்றுஞ் சிந்திய முத்துக்களைப்போல நீர்த்திவலைகள் மயங்கும்படி, தாளவொத்தைத் தெரிவிக்கின்ற யாழின் நரம்பைப்போல நெருங்கிய நீர்த்தாரைகளைச் சிந்தின.—எ-று.

வனை என்பது வாரை என நீட்டல் விகாரம் பெற்றது. "தந்தி வராக மருப்பிப்பி பூகந் தழைகதலி-நந்து சலஞ்சல மீன்றலை கொக்கு நளினமின்னார்-கந்தரஞ் சாலி கழைகன்ன லாவின்பல் கட்செவிகா-ரிந்து வுடும்பு கராமுத்த மீனு மிருபதுமே" என்றபடி, இருபதிடங்களிற் றோன்றும் முத்துக்களில் மூங்கிலினின் றுதிரும் முத்தைப்போல நீண்ட நீரொழுக்கினிடத் தவாய் ஆலிகள் மயங்கலின் 'வாரை கான்ற நித்திலமென வாலிகண் மயங்க' என்று கூறினர். சீரை கான்றிடு என்னும் இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடரில் ககரம் மிகாமல் விகாரத்தாற் றொக்கது.

சீர் – தாளவொத்து; அதனையுடைய யாழ்-பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என நால்வகைப்படும், அவற்றிற்கு நரம்புகொள்ளுமிடத்து, பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்குப் பதினேழும், சகோடயாழிற்குப் பதினாறும், செங்கோட்டியாழிற்கு எழுமாம். இவற்றை, "பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன், சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினர்-தார்பொலிந்து, மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே, பின்னு முளவே பிற."—எனவும், "ஒன்று மிருபதுமோரேழ்மேற்பத்துடனே, நின்ற பதினாறேழு நேடுங்காற் - குன்றாத, நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே மேல்வகை நூலோர்விதி" எனவும், வருமாற்றானுணர்க. இவ் வியாழ்வகையின் விரிவை இசைநூலிற் காண்க.

இவ்வாறன்றி, சீரை கான்றிடு தந்திரி என்பதற்கு, உறைச்சீலையினின்று நீங்கிய யாழ் எனப் பொருள் கூறினும் பொருந்தும். இருது இரண்டுமாதங்கொண்ட பருவம். அது ஒரு வருடத்திற்கு ஆறு பருவங்களாகப் பகுக்கப்பட்டு, அவ்வாறனுள் கார்ப்பருவமே மழை பெய்தற்குரிய பருவமாகலின் அதனை வேறு பிரித்தற்கு, 'ஓரிருதுவினெல்லையும்' எனக் கூறினர். "காரோ கூதிர் முன்பனி பின்பனி-சீரிளவேனில் முதுவேனி லென்றாங்-கிருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே" என்ற அகப்பொருள்விளக்கத்துங் காரை முற்கூறியது இதுபற்றியே யென்க.

உயிர்களுக் கின்பம் பயப்ப மேகங்கள் நீரைப்பொழிவதால் யாழினிசை போலுமென்று கூறினர். மேகம் தாரைகான்ற எனக் கூட்டுக.

இச்செய்யுள்முதல்மேகங்கள் நீர் பொழிதலின் சிறப்பெடுத்துக்கூறுவதாகும்.

பூட்டு கார்முகந் தன்னொடுந் தோன்றிய புயல்வா
யூட்டு தண்புன னந்தியங் கிரிமிசை யுகுத்தல்
வேட்டு வக்குலத் திண்ணனார் மஞ்சனம் விமலற்
காட்டு கின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே.

(இ-ள்.) பூட்டப்பட்ட இந்திரதனுசோடும் விளங்குகின்ற மேகங்கள் வாயினால் உண்ட குளிர்ந்தகடல்நீரை நந்திமலையின்மேல் பொழிதல் (எதுபோலுமெனின்) வேடுவக்குலத்தி லவதரித்த ஸ்ரீ கண்ணப்பசுவாமிகள் அநாதிமல முத்தராகிய சிவபெருமானுக்குத் திருமஞ்சனஞ் செய்கின்ற ஒப்பற்ற செயலை யொத்திருந்தது.—எ-று.

திண்ணனாரது செயலை யீண்டு வெமையாகக்கூறிய தென்னையெனின், சிவபெருமான்போல் நந்தியங்கிரி செந்நிறமுடைமையாலும், திண்ணனார் வில்லைப் பிடித்துப் பொன்முகலியாற்றுநீரைத் தம் வாயினுன் முகந்து சிவபெருமான் திருமுடியிற் றிருமஞ்சனஞ் செய்தல்போல் புயல் இந்திரதனுசுடன் விளங்கித் தம்வாயினின்றும்

நீரை அந் நந்திவாயிற் சொரிதலாலும், திண்ணனார் கரிய திருமேனியராய் விளங்க ல்போல், புயல் சூல்கொண்டு கருநிறமுற்று விளங்கலானும், வேட்டுவக்குலத்திண்ண னார் மஞ்சனம் விமலற்காட்டுகின்றதோர் தனிச்செயல் போன்றுளது என்றுகூறினர். வளைந்த இந்திரதனுசு என்னும் பொருள்பட, 'பூட்டு கார்முகம்' என்றார்.

திண்ணனார் விமலற்கு மஞ்சனமாட்டிய திருச்செயலாவது:—திண்ணனார் பொத்தப்பிநாட்டிலே உடுப்பூரிலே வேடர்குலத் தலைவனாகிய நாகனுக்கும் அவன் மனைவி தத்தை யென்பவளுக்கும் புத்திரராகத் தோன்றி நாணன் காடன் என்பவர்க ளுடன் வேட்டையாடச்சென்று சீகாளத்தித் திருமலையை யடைந்து காளத்திநாத னைத் தரிசித்து அவர் திருமுடியில் நீர் வார்த்து மலரிட்டிருக்கக் கண்டு நீங்காத பேர ன்பினால், இதுதான் எம்பெருமானுக் கிசைந்ததுபோலுமென்று தாமு மவ்வாறே செ ய்யக் கருதி, முன்பு வேட்டையில் வீழ்த்திய பன்றி இறைச்சியைப் பாகஞ் செய்து தேக்கிலைக் கல்லையி லெடுத்துக்கொண்டு மலர்களைப் பறித்துத் தமது குடுமியிற் செரு கிக்கொண்டு பொன்முகலியாற்று நீரை வாயினால் முகந்துகொண்டுவந்து சிவபெரு மானை யடைந்து அவர் திருமுடியி லணிந்திருந்த மலர்களைத் தமது செருப்புக்காலா லகற்றி, வாயிற் கொண்டுவந்த நீரை சுவாமியினுடைய திருமுடியி லுமிழ்ந்து திருமஞ் சனமாட்டி, குடுமியிற் செருகிக்கொணர்ந்தமலரைப் பெருமான் திருமுடியிற் சாத்திக் கல்லையிற் கொண்டுவந்த இறைச்சியை யூட்டி யன்புசெய்து வந்தனர். இவ்வாறு ஐந் துநாள் செய்துவர, ஆறுநாள் இவரது அன்பைச் சிவகோசரியாருக்கு வெளிப்படுத் தும்பொருட்டுச் சிவபெருமான் தமது வலத்திருக்கண்ணில் உதிரம் பெருகச் செய்த னர். அதனைக்கண்ட திண்ணனார் எம்பெருமானுக்கு இவ்விடுக்கண் யாவர் விளைத்த னரோ வென்று வருந்தி அது எவ்வகையிலுந் தீராமைகண்டு பின் தமது கண்ணைப் பிடுங்கிப் பெருமான் திருக்கண்ணி லப்ப அவ்வுதிர நின்று செவ்வையான துணர்ந்து மகிழ்ந்து சென்று பின் வந்து பார்த்தபொழுது, இடக்கண்ணிலு முதிரம் பெருகக் கண்டு வருந்தித் தமது மற்றொரு கண்ணையுந் தோண்டி யப்பத் தொடங்கும்பொழுது சிவபெருமான் அவ்விலிங்கத்திடமாக வெழுந்து தமது திருக்கரத்தினால் அவரது திருக்கரத்தைத் தடுத்து "நில்லுகண்ணப்ப" என்று அருளிச்செய்து அவருக்குமுன் போலக் கண்ணையருளித் தமது வலப்புறத்திருக்கத் திருவருள்செய்தனர். இக்காரண த்தால் அவருக்குக் கண்ணப்பநாயனா ரென்னுந்திருநாமமுண்டாயிற்று எனவறிக.

இச்செய்யுளால் ஏனையோரன்பு கண்ணப்பரன்புக் கொப்பாகாமைபோல், இந் நாட்டிற்பெய்தமழை ஏனையநாட்டிற்பெய்த மழைபோலன்றென்று கூறியதாகும்.

கல்லென் பேரிசைப் புனன்மழை பொழிதலாற் கானத்
தொல்லும் பேரழல் யாவையு மிமைப்பினி லொளித்த
வெல்லுந் தீஞ்சல மருவுமிக் காருக்கு வியன்பார்
செல்லுங் காலையி லங்கண்வீற் றிருப்பரோ தீயோர்.

(இ-ள்.) (எல்லாப் பொருள்களையும்) வெல்லத்தக்க மதுரமாகிய நீர் பொரு ந்திய இம்மேகங்கள் விசாலமாகிய இந் நிலவுலகத்தில்பரவிச் செல்லும்பொழுது அங் குத் தீத்தொகுதிகள் வீறுபாட்டுடன் இருக்குமோ? (இரா); ஆதலால், மேகங்கள் கல்லென்னும் பேரோசையினையுடைய நீரைப் பொழிதலால் காட்டில் பொருந்திய பெரிய தீத்திரள்களனைத்தும் இமைப்பொழுதில் (அவிந்து) ஒளித்தன.—எ-று.

'வெல்லுந் தீஞ்சல மருவுமிக் காருக்கு வியன்பார் - செல்லுங் காலையி லங்கண்வீற் றிருப்பதோர் தீயோர்' என்பதனைச் சிலேடைவகையாகப் பொருள்கொள் ளுங்கால், எல்லாவற்றையும் வெல்லத்தக்க கொடிய கோபத்தை யடைந்த பெரி

யோர்கள் பெரிய நிலவுலகத்தில் செல்லும்பொழுது அங்குத் தீயவர்கள் அவர்களுக்கு முன்னேநிற்பார்களோ ? (நில்லார்) என வேறுபொருள்படுமாறுகாண்க. கல் என்பது அநுகரணவோசை. கானத்தொல்லும்பேரழல் - காட்டில் மரங்களொன்றோடொன்று தேய்தலாலுண்டாகு மழல். இல்லடைப்பொருள் பயத்தல்கருதித் தீயோர் எனப் பலர் பால்விகுதியேற்றிக் கூறினர்.

இச் செய்யுளால் குணமென்னுங் குன்றேறி நின்ற பெரியோர் வெகுளியை மேற்கொள்வாராயின் எவ்வளவு பெருந் தீயோரும் அடங்கி அவர்வழிநிற்றல்போல், அந்நாட்டில் பெருங்கொடுமை பயந்திருந்த மிக்க வெப்பம் கணப்பொழுதில் மாறியது அவ் வெள்ளத்தாலென்று அதன் பெருமையைக் கூறியதாகும். (எ)

தேக்கு தெண்டிரைப் புணரிநீர் வெம்மையைச் சிந்தி
யாக்கி வாலொளி யுலகில்விட் டேகலா லடைந்தோர்
நீக்க ரும்வினை மாற்றிநன் னெறியிடைச் செலுத்திப்
போக்கின் மேயின தேசிகர்ப் பொருவின புயல்கள்.

(இ-ள்.) மேகங்கள் பொங்குகின்ற தெள்ளிய அலைகளையுடைய கடல்நீரின் வெம்மையை யொழித்து வெள்ளொளியாகச் செய்து உலகத்திற் பொழிந்து செல்லுதலால், அவை தம்மை யடைந்த ஆன்மாக்களினது நீக்குதற்கரிய இருவினைகளை யொழித்து நன்மார்க்கத்திற் செலுத்தி நடத்துதலிற் சிறந்துவிளங்கும் ஞானசாரியர்களை யொத்திருந்தன.—எ-று.

புயல்கள் கடல்நீரின் வெம்மையைத் தணித்து வெண்ணிறமுடையதாக்கி உலகுக் குபகரித்துச் செல்லுதலாலும், தேசிகர் ஆன்மாக்களின் வினைகளாகிய வெம்மையை யொழித்துச் சுத்தர்க ளாக்கி நன்னெறியிற் செலுத்துதலாலும் 'தேசிகர்ப் பொருவின புயல்கள்' என்று கூறினர். தேக்கு-வலித்தல்விகாரம். நீக்கு-முதனிலைத் தொழிற்பெயர்.

மேலைச் செய்யுளில் பெரியோர் அடங்காரிடத்துக் கொள்ளும் மறக்கருணைபோல், அடங்கினவரிடத்து அப் பெரியோர் செய்யும் அறக்கருணைபோலாகும் இவ் வெள்ளத்தால் விளையும் பயனென்று இச் செய்யுளாற் கூறியதாகும். (அ)

கழிந்த பற்றுடை வசிட்டன திருக்கையாக் கவிஞர்
மொழிந்த நந்தியம் பெருவரை மொய்த்தசூன் முகில்கள்
பொழிந்த சீதநீர் பொற்புறு சாடியிற் பொங்கி
வழிந்த பாலெனத் திசைதொறு மிழிந்தன மன்னோ.

(இ-ள்.) பாசபந்தங்க ளொழியப்பெற்றுள்ள வசிட்டமுனிவரரது வாசஸ்தானமாகக் கவிவல்லோர்களால் சொல்லப்பட்ட பெரிய அழகிய நந்திமலையைச் சூழ்ந்த சூல் கொண்ட மேகங்கள் பொழிந்த குளிர்ச்சிபொருந்திய நீர்ப்பெருக்குகள் அழகுபொருந்திய சாடியினின்றும் பொங்கிவழிந்த பாலைப்போலத் திக்குகள்தோறும் பரவி யோடின.—எ-று.

வசிட்டர் சப்த முனிவர்களிற் சிறந்தவரும், முற்றத்துறந்த முனிவர்களும் வணங்கத்தக்க முதல்வருமாக விளங்குகின்றவ ராகலின், 'கழிந்த பற்றுடை வசிட்டன்' என்று கூறினர்.

இதனுள் நந்திவரையே சாடியாகவும், அதன்மேற் பெய்யும் மழைநீரே அச் சாடியினின்றும் பொங்கிவழிந்த பாலாகவும் உவமைப்படுத்திக் கூறினர்.

கவிஞர் என்றது கல்வி கேள்விகளிற் றேர்ந்த அறிஞராகியபெரியோர்களை. முகில்கள் நந்திவரையிற் பொழிந்த நீர் சாரலிற்பொங்கிவழிந்தபாலென இழிந்தன வெனக் கூட்டுக.

இச்செய்யுளால், பால் உடம்புநோயின்றி வளரச்செய்யும் ஆற்றலுடைத் தாயிருத்தல்போல, அச்சிறப்புத்தன்மை இவ் வெள்ளத்தி லிருக்கின்றமை நோக்கிப் பாலென வென்று கூறியதாகும். (கூ)

சீல மேதகு பகீரதன் வேண்டலுஞ் சிவன்றன்
கோல வார்சடைக் கங்கையம் புனலினைக் குன்றின்
மேலை நாள்விட வந்தென நந்திவீழ் விரிநீர்
பாலி யாறெனும் பெயர்கொடு நடந்தது படிமேல்.

(இ-ள்.) முற்காலத்து நல்லொழுக்கத்தையே தகுதியாகப்பெற்ற பகீரதமகாராசன் வேண்டவும் சிவபெருமான் தமது அழகிய நீண்ட சடைமுடியிலுள்ள கங்கைநீரை இமயமலையின்மேல் விட (அக்கங்கைநீர்) பெருக்கெடுத்துவந்தாற்போல, நந்திமலையினின்றும் (பெருகி)விழுகின்ற விரிந்த நீர்ப்பெருக்கானது பாலிநதியென்னும் பெயரைக்கொண்டு நிலவுலகத்திற் சென்றது.—எ-று.

தங்குலத்துமுன்னோராகிய சகரர்கள் அறுபதினாயிரவரும், நரகத்தினின்று நீங்கிச் சுவர்க்கம்பெற் றுய்யும்பொருட்டுப் பெருந்தவஞ்செய்து அவ் வெண்ணம் நிறைவேறப்பெற்ற நல்லொழுக்கின னென்பார், 'சீலமேதகு பகீரதன்' என்று கூறினார். பகீரதன் சிவபெருமான் திருமுடியினின்றுங்கங்கையைக்கொணர்ந்தவரலாறு:-

பூர்வத்தில் அயோத்தியாபுரியை யாண்ட சகரமகாராசன் அஸ்வமேதயாகஞ்செய்ய விடுத்த குதிரையைத் தேவேந்திரன் வஞ்சகமாகக்கொண்டுபோய்ப் பாதலத்தில் கபிலமகாமுனிவர் தவஞ்செய்யுமிடத்தில் ஒளித்துவைத்தனன். அதனை அவ்வரசன் புத்திரர்களாகிய சகரர்கள் அறுபதினாயிரம்பேரும் உலகெங்கும் தேடியுங் காணமல், பூமியைத் தோண்டிப் பாதலத்திற் சென்று அங்குத் தவஞ்செய்திருந்த கபிலமுனிவருக்குச் சமீபத்தில் குதிரையைக் கண்டு, அவர் அதனைக் களவுசெய்ததாக எண்ணி வைதார்கள். அப்பொழுது முனிவர் கோபத்தினால் விழித்துப் பார்க்க, அவ்வறுபதினாயிரம்பெயரும் சாம்பராயினர். அதனை யுணர்ந்த அஞ்சுமானென்பவன் அவர்க்கு இதங்கூறிக் குதிரையைக் கொணர்ந்து தனது பிதாமகன்செய்யும் வேள்வியை முடித்தான். அவன் சந்ததியில் வந்த பகீரதனென்பவன் கபிலமுனிவர் கோபத்தினால் சாம்பலாயெரிந்து நரகமடைந்த தன் முன்னோர்களாகிய சகரர்கள் அறுபதினாயிரம்பெயரையும் சுவர்க்கத்திற் சேர்க்கக் கருதிப் பிரமனை நோக்கித் தவஞ்செய்தான். அப்பொழுது பிரமன் பிரசன்னமாய் ஆகாயகங்கை வந்து அவர்கள் அஸ்தியில் படின் சுவர்க்கமடைவார்கள். அக் கங்கை பூமியில் வரின் அதன் வேகத்தைச் சிவபெருமானையன்றித் தடுப்பவரொருவருமில்லை; ஆதலால், அவரை நோக்கித் தவஞ்செய்யென்று கூறியகன்றனன். அவ்வாறே பகீரதன் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து கங்கையைப் பெற்றுவருகையில் அது சுவர்க்க மத்திய பாதலமென்னும் மூன்றுலகமும் நடுங்கும்படியாக விரைந்து வர, அதனைப் பெருமானுணர்ந்து தமது சடையின் ஒரு நுனியில் தரித்தனர். பின்பு பகீரதன் வருந்தி வேண்டி அதில் ஒரு சிறுதுளியைப் பெற்றுக்கொண்டு வரும்பொழுது அக் கங்கை வழியில் தவஞ்செய்து கொண்டிருந்த சன்னுமுனிவருடைய யாகசாலையை யழிக்க, அவர் அதனை உள்ளங்கையி லேற்றுப் பானஞ்செய்தனர். இப்பால் பகீரதன் தன்பின்னே கங்கை வராததைக் கண்டு, இது இம் முனிவரால் நேரிட்டதென் றறிந்து அவரை வருந்திவேண்ட,

சன்னுமுனிவர் இரங்கி அக் கங்கையைக் காதின்வழியாகப் பூமியில்விட்டார். பின்பு பகீரதன் பாதலத்திற் கொண்டுபோய்ச் சாம்பராய்க் கிடந்த சகரர்கள் எலும்பிற் படிவித்து அவர்களைச் சுவர்க்கத்திற் சேர்த்தான் என்பதாம். கங்கை பகீரதனுல் பூமியிற் கொண்டுவரப்பட்டமையால் பாகீரதி என்றும், சன்னுமுனிவர் காதின்வழியே வந்தமையால் சானவி என்றும் சொல்லப்பட்டது.

மேலைச் செய்யுளில் பால்போலென்று பொதுமையாற் கூறி அதனை இச் செய்யுளில் பாலியாறென்றே கூறினுர். (சo)

வாலி தாகிய குணத்தினன் வசிட்டனென் றுரைக்குஞ்
சீல மாமுனி படைத்ததோர் தேனுவின் றீம்பால்
சால நீடியே தொல்லைநாட் படர்ந்திடு தன்மைப்
பாலி மாநதிப் பெருமையான் பகர்வதற் கெளிதோ.

(இ-ள்.) பரிசுத்தமாகிய நற்குணத்தினையுடைய வசிட்டனென்று சொல்லப்படும்நல்லொழுக்கமிக்கசிறந்த முனிவரர் (அடையப்) பெற்றதாகிய காமதேனுவின் மதுரம் பொருந்திய பாலானது முன்னுளில் மிகப் பெருகிப் பரந்த தன்மையையுடைய பெரிய பாலிநதியின் மேன்மையினை யான் சொல்வதற் கெளிதாகுமோ (ஆகாது.)—எ-று.

இச் செய்யுள் பாலியாறென்றதைக் காரணங்காட்டி வலியுறுத்தியதாகும்.

மெய்யுணர்வினராகிய சிவபெருமானைக் குறித்துச்செய்யுந்தவத்தாற் றூய்மைபெற்றுள்ளவனென்பார் ‘வாலிதாகிய குணத்தினன்’ என்றும், ‘ஒழுக்கத்து நீத்தார் பெருமை’ என்றபடி யானென தென்பதைத் துறத்தலே முதற்குண மாகலின் அதனையே கடைப்பிடித்துள்ளவ னென்பார், ‘வசிட்டனென் றுரைக்குஞ்சீலமாமுனி’ என்றும், அவர் சொல்லின்வழியே யொழுகி யேவல்புரியப்பெற்றதென்பார், ‘படைத்ததோர் தேனு’ என்றும், அம்முனிவர் நந்திமலையை யடைந்தபொழுது அங்கு இடபதேவரைக் கண்டு மோகித்த காரணத்தா னெழுகிய பாற்பெருக்கென்பார், ‘தீம்பால் சாலநீடியே தொல்லைநாட்படர்ந்திடுதன்மைப் பாலி மாநதி’என்றும், அத்தகைய நதியினீரைப் பரிசித்தோரும் பருகினேரும் அடைந்த புத்திமுத்திப்பயன் என்னுற் சொல்லப்படுந்தரத்ததன்றென்பார், ‘பெருமையான்பகர்வதற் கெளிதோ’ என்றுங் கூறினுர்.

வாலிது மெய்ம்மையை யுடையது. இதனை,—“கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ-னற்றுடொழாஅரெனின்” என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகர் கூறிய உரைவிசேடத்தா னுணர்க. ‘தேனுவின் றீம்பால் - சால நீடியே தொல்லைநாட் படர்ந்திடு தன்மைப் பாலி மாநதி’ என்பதன் வரலாறு.—முன்னெருகாலத்தில் வசிட்டமுனிவர் நந்திபருவதத் தெழுந்தருளியிருந்தபோது அவரிடத்துள்ள காமதேனுவானது, சிவபெருமான் வாகனமாகிய இடபதேவரைக் கண்டு காமுற்று அதனுல் பால் வற்றி நிற்க, அதனை யுணர்ந்த முனிவரர் ஒரு தருப்பையைக் கன்றுகச் சமைத்தனுப்ப, அதனைக் காமதேனு நோக்கிப் பாலைச்சுரக்கவும், அப்பால் ஆறுகப்பெருகிய காரணத்தால் பாலாறு எனப் பெயராயிற்றுஎனவறிக. இதனை,“மேகமுட்டி விழுப்புனல் சிந்தும்வி ளைப்பொழில் - நாக முட்டி யுடன்றம ராற்ற நகிற்றுணை - யாக முட்டர மாதர்க ளேக்கின ராட்டயர்- மாக முட்டி வளர்ந்துயர் நந்தி வரைக்கணே. மாதவத்தி னுயர்ந்த வசிட்டன் மகத்தினுக் - கேத மில்சுதைத் தீம்பய மீந்திடு தேனுவங்-கோத நஞ்ச மிடற்றவ னூர்விடை யேற்றினைக்- காத லாலொரு நாள்விழி முந்துறக் கண்டதால். 'கண்டு மீமிசை மிக்குல வாதெழு காமநோய் - கொண்டு நொந்துவிம்

மாந்து மெலிந்து குழைந்துபான் - மண்டி யூறு செருத்தலும் வற்றி யுலர்ந்ததா - லண்டர் யாரு முறுப்பி லடங்கிய தேனுவே. அன்ன தன்மை வசிட்ட னறிந்து தருப்பையை - மன்னு மாமனு வாலொரு கன்றின் வரச்செய்து - முன்ன ருய்த்தலு மோந்துடனக்கி முகிழ்த்தெழு - நன்ன ரன்பி னயந்தது காம நலிந்ததே. மழையெ லாங்குழுமிச்சொரி மாண்பென வோகையாற் - கழிய நீண்முலைத் தாரைகள் கான்றன கான்றபான் - முழுது மோர்நதி யாயவ ணின்றுமுந் நீர்புகுந் - தழிவி லும்பரு மாட்டயர் தீர்த்தம தாயதே "—என வருங் காஞ்சிப்புராணச் செய்யுள்களா னுணர்க.

சுந்தரமாயன் - என்னுஞ் செய்யுள் முதல் இச்செய்யுள்காறும் பாலிநதியின் வரலாற்றைக்கூறியதாகும். (கக)

எய்யும் வெஞ்சிலைப் புளிஞரை யெயிற்றியர் தொகையைக்
கைய ரிக்கொடு வாரியே சிறுகுடி கலக்கித்
துய்ய சந்தகில் பறித்துடன் போந்தது தொன்னாள்
வெய்ய சூர்படை வான்சிறை கவர்ந்துமீண் டதுபோல்.

(இ-ள்.) முற்காலத்தில் கொடிய சூரபதுமனது சேனைகள் விண்ணுலகத்தைச்சிறைகவர்ந்து மீண்டதுபோல, (அம்பை) எய்கின்ற கொடிய வில்லையுடைய வேடர்களையும், வேடமாதர் கூட்டங்களையும் அரித்து வாரிக்கொண்டு; அவர்களது சிறிய குடியிருப்பினைக் கலக்கி, தூய்மையாகிய சந்தனவிருக்ஷங்களையும், அகில் விருக்ஷங்களையும் வேரோடு பறித்து, அடித்துக்கொண்டுவந்தது.—எ-று.

வேடர்கள் மறத்தொழில்புரியும் வில்லினரென்பார், 'எய்யும் வெஞ்சிலைப் புளிஞர்' என்று கூறினர். அசமுகியென்பவள் சாத்தாவினுடைய ஏவலாளராகிய மாகாளரால் அவயவபங்க முற்றுவருந்திச் சூரபதுமனிடத்து முறையிட, அவன் தன் புத்திரனாகிய பானுகோபனைப் போர்செய்தற் கனுப்ப அப் பானுகோபன் சென்று தேவர்களையும் தேவமாதர்களையுஞ் சிறைகவர்ந்து அவர்கள் குடியிருப்பை நெருப்பிட்டழித்துப் பஞ்சதருக்களையும் பறித்துச் சென்றமைபோல, பாலிநதி புளிஞரையும் எயிற்றியர் தொகையையும் வாரிக்கொண்டும், சிறிகுடியைக் கலக்கி யழித்தும், சந்து அகில்முதலிய மரங்களைப் பறித்துஞ் சென்றதென உவமைமுகத்தாற் கூறினர். புளிஞர் எயிற்றியர் பாலைநிலமாக்க ளாகலானும், சந்து மகிலுங் குறிஞ்சிநிலக் கருப்பொருளாகலானும் இவ் விரண்டும் விரவக் கூறினமையான் இச் செய்யுள் திணைமயக்கங் கூறியவாறாயிற்று. குடி-வான் என்பன ஆகுபெயர்.

இச் செய்யுளால் பாலிநதி குறிஞ்சித்திணையி னின்றும் பாலைத் திணையை யடையுந் தொடக்கங் கூறியதாகும். (கஉ)

காக பந்தரிற் கருமுகிற் காளிமங் கனூஉ
மாக நீள்கரி யாவையுங் குழுவொடும் வாரிப்
போகன் மேயின மேற்றிசைப் புணரியுண் டமையா
மேக ராசிகள் குணகடன் மீதுசெல் வனபோல்.

(இ-ள்.) மேகக்கூட்டங்கள் மேற்குத்திசையிலுள்ள சமுத்திரநீரை யுண்டு அமையாமல் கீழ்த்திசைக்கடலின்மேல் போகுந் தன்மைபோல, பாலிநதி காகங்கள் பந்தரிட்டாற்போன்றுள்ள கருமையாகிய மேகத்தினது கருமைத்தன்மை யமைந்த மிகவு நீண்ட யானைகளனைத்தையும் அதன் கூட்டத்துடன் வாரிக்கொண்டு போயின.—எ-று.

மேகங்கள் மேற்றிசைக்கடலையுண்டமையால் கீழ்த்திசைக்கடன்மேற் செல்வனபோல, பாலிநதி கீழ்த்திசைநோக்கி யானைகளை வாரிச் சென்றன வென்க.

காகபந்தரில் என்றது மேகத்தினது கருமையைச் சிறப்பித்துக்கூறியபடி. முகில் கருநிறமுற்று இடித்து நீரைப்பொழிதல்போல, யானைகள் கருநிறமுடையனவாய்ப் பிளிறிட்டு மதநீரைப் பொழிதலின், 'கருமுகிற் காளிமங் கனலு மாகநீள் கரி' என்று கூறினர். மாகநீள்கரி = ஆகாயமளவு முயர்ந்த யானை. கனலல் = நெருங்கல். காளிமம் = கருமை. மாகநீள் கரி என்றது, இலக்கணை. அமையா என்பது ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம்.

இந்த விரண்டு செய்யுளால் அந் நாட்டிற் பரவிய பாலிநதியின் பெருமை கூறும் அவாவான் அந் நதி மலையினின்றும் சந்து அகில்முதலியவற்றைப் பறித்து யானைகளைப் புரட்டிவரும் பெருவெள்ளமென்று கூறியதாகும். (கரு)

குவட்டு மால்கரிக் குருகுதே ரரிபுலிக் குவையுண்
டுவட்டி யுந்திடு திரைப்புனன் மதூகநல் லுழிஞ்சில்
கவட்டி ஞெமைசாய்த் தாறலை கள்வரூர் கலக்கித்
தெவிட்டி வந்தது பாலையுட் கொண்டிடு செருக்கால்.

(இ-ள்.) மலைபோலும் பெரிய யானைகளின் மூளைகளைத் தேர்ந்துண்ணுகின்ற சிங்கங்களையும், புலிக்கூட்டங்களையுந்தன்னுட்கொண்டு உவட்டெடுத்துத்தள்ளுகின்ற அலைகளையுடைய நீர் வெள்ளமானது இருப்பை மரங்களையும், நல்ல உழிஞ்சில் மரங்களையும், கிளைகளையுடைய ஞெமைமரங்களையுஞ் சரியச்செய்து, வழிபறிக்குங் கள்வர்களுடைய ஊரைக்கலக்கியலைத்து, பாலை உட்கொண்ட செருக்கினால் தெவிட்டெடுத்து வந்தது.—எ-று.

'பாலை யுட்கொண்டிடு செருக்கால்' என்பதற்கு, காமதேனுவின் பாலைத் தன்னுட்கொண்ட செருக்கின லெனவும், பாலைத்திணையைத் தன்னிடங்கொண்ட செருக்கினால் எனவும் சிலேடைப்பொருள் அமைத்துக்கொள்க. குவட்டுமால்கரி என்பதற்கு, மலைகளில் வசிக்கும் மதமயக்கத்தையுடைய யானை எனப் பொருள்கூறினுமாம். குருகு = யானையின் மத்தகத்திலுள்ள மூளை. மதூகம், உழிஞ்சில், ஞெமை என்பன பாலைநிலக்கருப்பொருள்கள். ஞெமை - என்பது பாலைநிலத்துள்ள ஒருவகைமரம், இதற்கு மாமரமெனப் பொருள்கூறுவாருமுளர். அது பாலைநிலக் கருப்பொருளன்மையான் விடுக்க.

அன்றியும், மதூகம் - உழிஞ்சில் - ஞெமை என்னும் மரங்களைக் குறிஞ்சி நிலக்கருப் பொருளாகக்கொண்டு உரை கூறுவாருமுளர். அவை பாலைநிலக் கருப்பொருளேயன்றிக் குறிஞ்சிநிலக்கருப்பொரு ளன்மையான், உரையன்றென வறிக. இவை பாலைக்குரிய கருப்பொருளென்பதனை, "கன்னி விடலை காளை மீளி-யின்னகை யெயிற்றி யெயின ரெயிற்றியர்-மறவர் மறத்தியர் புறவுபருந் தெருவை - கழுகு செந்நாய் கல்கெழு குறும்பு-குழிவறுங் கூவல் குரா அ-மரா அ-வுழிஞை பாலை யோமை யிருப்பை - வழங்குகதிக் கொண்டன செழும்பதிக்கவர்ந்தன-பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம் - பகற்சூறை யாடல் பாலைக்கருப்பொருளே" என்னும் அகப்பொருள் விளக்கத்தானுணர்க.

இச் செய்யுளால் பாலிநதி பாலைநிலத்தின் குணத்தைப் போக்கித் தன்குணத்தைக் காட்டியதென் றுணர்த்தப் பாலையுட் கொண்டிடு செருக்கா லென்று கூறியதாகும்.

இது பாலைத்திணையிற் பாலிநதி சென்றமையை யறிவித்தது. (சஉ)

காலை வெம்பகல் கதிரவன் குடதிசைக் கரக்கு
மாலை யாமம்வை கறையெலாஞ் செந்தழல் வடிவாய்

வேலை யும்பரு கியவெழும் வெம்மைபோய் விளிந்து
பாலை காண்கிலா வாரியின் பெருமையார் பகர்வார்.

(இ-ள்.) காலைப்பொழுதும், வெவ்விய நடுப்பகலும், சூரியன் மேற்றிசையில் அஸ்தமிக்கும் மாலைக்காலமும், நள்ளிரவும், விடியற்காலமுமாகிய சிறுபொழுதைந்திலும் சிவந்த அக்கினிவடிவமாய்க் கடலையு முண்ணும்படி யெழுகின்ற வெப்பம் நீங்கியழிந்து அப்பாலைத்திணையைக் காணவறியாத வெள்ளத்தின் பெருமையை யாவரொடுத்துச் சொல்ல வல்லவர்கள். (ஒருவருமில்லை.)—எ-று.

மிக்க வெப்பந்தரும் பொழுதாகலின், 'வெம்பகல்' என்று கூறினர். காலை முதல் வைகறையீறாக வுள்ள வைந்துஞ் சிறுபொழுதென்க. இதனை :—"காலையும் பகலுங் கையறு மாலையும்-ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்-பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்" என வருங் குறுந்தொகையானும், "மாலை யாமம் வைகறை யெற்படு - காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்-கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்" என வரும் அகப்பொருள்விளக்கத்தானு மறிக. பருகிய என்பது செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். யார் என்னும் வினாவினைக் குறிப்பு வினைமுற்று ஈண்டு இன்மைப்பொருளை யுணர்த்தி நின்றது.

இச் செய்யுளால் பாலிநதி பாலையை யுட்கொள்ளவே அந்நாட்டில் காலை முதலாகக் கூறும் ஐந்துகாலங்களிலும் அதன் தண்மையையே விளக்கியதென்றுணர்த்த வெம்மைபோய் விளிந்து பாலை காண்கிலா என்று கூறியதாகும். (கரு)

குல்லை மாலதி கொன்றைகா யாமலர்க் குருந்து
முல்லை சாடியே யானிரை முழுவது மலைத்து
மெல்ல மற்றவை நீந்தலுங் கரைக்கண்விட் டுளதாற்
றொல்லை மாநதி யான்வழித் தோன்றிய தொடர்பால்.

(இ-ள்.) பழமையாகிய பெரிய அப் பாலிநதியானது வெட்சியும், மல்லிகையும், கொன்றையும், காயாவும், மலரையுடைய குருந்தும், முல்லையுமாகிய இவைகளை மோதி, பசுக்கூட்டங்கள் முழுவதையு மலைத்து, அப் பசுநிரைகள் மெல்ல நீந்துதலும், தான் காமதேனுவின் வழியே தோன்றிய சம்பந்தத்தினால் அவைகளைக் கரையிடத்து விட்டுச் சென்றது.—எ-று.

பாலிநதி குல்லை மாலதி முதலியவற்றை மோதிக்கொண்டும், பசுநிரைகளை யலைத்து அவை நீந்தக் கரையில் விடுத்துஞ் சென்றதென்க. பாலிநதி, 'இனத்தை யினங்காக்கும்' என்னும் பழமொழிக் கிணங்க, ஆனிரை நீந்தக் கரையில் விடுத்துங் குல்லைமுதலியவற்றை யலைத்துஞ் சென்றமை காமதேனுவின் வழியே தோன்றிய முறைமை கருதியென வறிக. குல்லை மாலதி முதலியன முல்லைக் கருப்பொருள்.

இச் செய்யுளால் பாலிநதி தன் குணத்தைக் காட்டியதுபோல் பெருஞ் சிறப்புற்றகாலத்து இனத்தார்க் கிடுக்கணுற்றுழி அதனைப் போக்கிப் பாதுகாப்பதில் மறவாத தன்மையை யுணர்த்த மற்றவை நீந்தலும் ஆன்வழித் தோன்றிய தொடர்பால் கரைக்கண் விட்டுள தென்று கூறினர்.

இது முல்லைத்திணையில் பாலிநதி வந்தமை கூறியது. (கசு)

சுனையு டைப்பல வாசினி பூகமாந் துடவை
யுளைம லர்ச்சினை மருதமோ டொழிந்தன பிறவுங்
களைத லுற்றுமாட் டெறிந்தது கண்ணகன் குடிஞை
யளவின் மிக்குறு பாணிபெற் றதற்கவை யரிதோ.

(இ-ள்.) விசாலமாகிய பாலிநதியானது சுளைகளையுடைய பலா-ஈரப்பலா-கமுகு-மா இவைகளடர்ந்ததோட்டத்தையும், அரும்பிய மலர்கள் நிறைந்த கிளைகளையுடைய மருதமரத்தோடு மற்ற மரங்களையுங் களைந்து பக்கங்களில் வீசியது ; அளவில்லாதமிகுந்த நீரைப்பெற்ற அந்நதிக்கு அக்காரியம் அரிதாகுமோ? (ஆகாது.)—எ-று.

அளவின் மிக்குறு பாணி பெற்றதற்கு, என்பதற்குச் சிலேடை வகையால், அளவில்லாத மிகுந்த கைகளைப் பெற்றதற்கு எனப் பொருள் கூறி, அளவற்ற கைகளைப் பெற்ற அந்நதிக்குப் பலாமுதலிய அவற்றைப் பிடுங்கி யெறிதல் மிகவிலேசாகுமெனவும் பொருளமைத்துக்கொள்க.

இது மருதத்திணையில் ஆறு நடந்தமை கூறியது. (கஎ)

இலைவி ரித்துவெண் சோறுகால் கைதையு மெழுதுங்
கலைவி ரித்திடு பெண்ணையுங் களைந்திடுங் களைபோ
யலைவி ரித்திடு கடல்புக வொழுகுமா றனந்தன்
றலைவி ரித்துழி யுடனெளித் தன்னதோர் தகைத்தால்.

(இ-ள்.) இலைகளை விரித்து வெண்மையாகிய சோற்றைச் சிந்துகின்ற தாழையும், எழுதுகின்ற நூல்களை விரிக்கின்ற பனையுமாகிய களைகின்ற களைகள் சென்று அலைகளைவிரிக்கின்ற கடலிற் செல்லும்படி ஓடுகின்ற பாலிநதியானது, ஆதிசேடன் தலையை விரிக்கும்பொழுது தன்னுடலை நெளித்தாற்போலுந் தன்மையையுடையது.—எ-று.

இலைகளை விரித்து வெண்சோறிடுவதுபோலத் தாழை தன்மடல்களை விரித்து வெள்ளிய மகரந்தங்களை அவற்றின்மேற் சிந்துதலின், 'இலைவிரித்து வெண்சோறு கால் கைதை' என்றும், சகல சாஸ்திரங்களையும் பனையேட்டில் வரைந்தோதுவது தொன்றுதொட்டுள்ள மரபாகலின், 'எழுதுங்கலை விரித்திடு பெண்ணையும்' என்றுங் கூறினர். கைதையும் பெண்ணையும் அடியோடு களையப்பட்டுத் தன்மேல் வளைந்துவளைந்துசெல்வது எதுபோலுமெனின், ஆதிசேடன் தலையை விரித்துழி அவனுடல் வளைந்து நெளிவதுபோன் றிருந்ததென்க.

இது ஆனினங்களாகிய நாற்காற்பசுக்களைப் பாதுகாத்ததுபோலும், ஏனைய விருகாற்பசுக்களையும் பாதுகாக்க இன்றியமையாத சாலிக்கு இனமில்லாத ஏனையவற்றை யொழிக்கும் தண்டச்செயலு முடையதெனவும், உவர்நீரைப்பருகி உவரைப்போக்கி நன்னீராகப் பெய்ததுபோல் தான்பரவியநிலத்திலுள்ள களைகளைக் களைந்து நல்விடமாக்கியதெனவும் கூறியதாகும்.

இது பாலிநதி நெய்தற்றிணையி லடைந்தமை கூறியது. (கஅ)

கொங்கு லாமலர்க் கொன்றைகூ விளைகுர வுழிஞை
பொங்கு மாசுணந் தாதகி பாடலம் புன்னை
துங்க மார்திருத் தலைமிசைக் கொண்டுறுந் தொடர்பா
லெங்க ளுயகன் றன்னையு மொத்ததவ் விருநீர்.

(இ-ள்.) அப் பெரிய பாலிநதிப்பிரவாகமானது வாசனை வீசுகின்ற மலர்களையுடைய கொன்றையும், வில்வமும், குராவும், உழிஞையும், விஷம் பொங்குகின்ற பாம்பும், ஆத்தியும், பாதிரியும், புன்னையும் ஆகிய இவற்றை உயர்வமைந்த சிறந்த அலைகளின் மேற்கொண்டடையுஞ் சம்பந்தத்தினுல், எமது முதல்வராகியசிவபெருமானையும் ஒத்திருந்தது.—எ-று.

சிவபெருமானுக்குச் சிலேடைவகையாகப் பொருள் கொள்ளுங்கால், கொன்றைமலர்முதல் புன்னை யீறாக வுள்ள மலர்களனைத்தையுஞ் சிவபெருமான்

தமது திருமுடியிற் றரித்தலால் நதி அவ்வெம்பெருமானை யொத்ததெனக் கொள்க. திருத்தலை என்பதை, திருத்து-அலை என்றும், திரு-தலை என்றும் சிலேடை நோக்கிப் பிரித்துப் பொருளமைத்துக்கொள்க. (௧௯)

கொலைகொள் வேன்மற வீரர்த மிருக்கையிற் குறுகாச்
சிலையும் வாளொடு தண்டமுந் திகிரிவான் படையு
நிலவு சங்கமுங் கொண்டுசென் றடல்புரி நீரா
னுலக மேழையு முற்பக லயின்றமா லொக்கும்.

(இ-ள்.) (வெள்ளமானது) கொலைத்தொழிலைக் கொண்ட வேலையேந்திய மறவர்க ளிருக்கையிற் சென்று, வில்லையும், வாளையும், தண்டையும், சிறந்த சக்கரத்தையும், விளங்குகின்ற சங்கையும் அடித்துக்கொண்டு சென்று வலிமைமிகுந்தோடும் நீரினாலும் (சிலேடைவகையால்) வில்லையும், வாளையும், தண்டத்தையும், சிறந்தசக்கரப்படையையும், விளங்குகின்ற சங்கத்தையும் பிடித்துச் சென்று போர்செய்யுந் தன்மையினாலும் (அது) சப்தலோகங்களையும் முன்னாளில்உண்ட திருமாலை ஒத்திருக்கும்.—எ-று.

மறவர்கள் கொடுந் தொழிலின ராகலின், 'கொலைகொள் வேன் மறவீரர்' என்று கூறினர். நிலவு சங்கம் என்றது, வெள்ளொளி வீசுதலும் ஊதுங்கால் பேரொலி பிறங்கலுங் கருதி யென்க. பிரமப்பிரளயத்து உலகமுழுதும் நீரான் மூடியகாலத்துத் திருமால் அவ் வுலகனைத்தையுந் தமது திருவயிற் றடக்கிக் காத்தலான், 'உலக மேழையு முற்பக லயின்றமால்' என்று கூறினர். அடல் என்பதற்கு, வலிமை-போர் எனவும், நீர் என்பதற்கு, ஜலம். குணம் எனவும், சிலேடை நோக்கிப் பொருள் வகுத்துக் கூறப்பட்டது. குறுகா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். உம்மைகள் எண்ணின்கணின்றன. ஒக்கும் என்னும் பயனிலைக்கேற்ப வெள்ளமென்னுந் தோன்றாவெழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. (௨௦)

தேன்கு லாவிய மலர்மிசைப் பொலிதரு செயலா
னன்க வாமுகந் தொறுமறை யிசையோடு நணுகிக்
கான்கு லாவிய கலைமரை மான்றிகழ் கவினால்
வான்கு லாமுல களிப்பவ னிகர்க்குமால் வாரி.

(இ-ள்.) வெள்ளமானது தேன்பொருந்திய (பலவகை) மலர்கள் தன்மேல் விளங்கப்பெற்ற செயலினாலும், நான்கு திக்குகடோறுஞ் சப்திக்கின்ற பேரோசையோடு மடைந்து, காட்டில் வசிக்குங் கலைமானும்-மரையும் - வெளிமானும் விளங்கும் அழகினாலும், (சிலேடை வகையால்) தேன் பொருந்திய தாமரைமலரின்மேல் விளங்குஞ் செயலினாலும், நான்காகிய முகங்களிலும் வேதவோசையோடும் பொருந்தி நறுமணங் கமழும் வெண்டாமரையில் வீற்றிருக்கும் கலைமகள் விளங்கும் அழகினாலும், உயர்வு பொருந்திய உலகத்தைச் சிருஷ்டிக்கும் பிரமனை யொத்திருக்கும்.—எ-று.

சிலேடை நோக்கி, 'மலர்மிசை' என்பதற்கு, மலர்கள்தன்மேல் என்றும், தாமரைமலரின்மேல் என்றும், 'நான்கவாமுகம்' என்பதற்கு, நான்கு திக்கு என்றும், நான்காகிய முகம் என்றும், அறையிசை என்றும், மறையிசை என்றும், கான்குலாவிய என்பதற்கு, காட்டில் வசிக்கும் என்றும், நறுமணங் கமழும் என்றும், கலைமரைமான் என்பதற்கு, கலையும், மரையும், மானும் என்றும், கலைமகளாகிய வெண்டாமரை மான் என்றும் பிரித்துப் பொருள் கூறப்பட்டன. மான் என்பதற்குக் கலைமகள் சார்பாய்ப் பொருள்கொள்ளுங்கால் உவமையாகுபெயர். தாமரை என்பது மரை என முதற்கு

றையாயிற்று. முத்தொழிலின் முதற்றொழிலாகிய சிருட்டியைச் செய்பவ னாகலின், 'வான்குலா முலகளிப்பவன்' என்று கூறினர்.

கொங்குலாமலர் என்னுஞ் செய்யுள்முதல் இம் மூன்றுசெய்யுள்களால் உலகினைப் படைத்தளித் தழிக்கும் ஆற்றலுடைய மும்மைத்தேவர்களையும் இந்நதி யொத்திருந்ததென் றுணர்த்தியதாகும். (உக)

மீது போந்திரி சங்கைவிண் ணிடையின்மீ னேடும்
போத லர்யுற வீசலாற் சலமிகும் புலனாற்
றீதின் மாக்களைச் செறுத்தலா லளித்திடுஞ் செயலாற்
காதி காதல னிகர்க்குமாற் கன்னிமா நீத்தம்.

(இ-ள்.) அழியாத பெருவெள்ளமானது நீர்மேற் செல்கின்ற சுரிமுகத்தினையுடைய சங்குகளை மச்சங்களோடும் ஆகாயத்திற் செல்லும்படி (அலைக்கரங்களால்) வீசுதலாலும், நீர் நிறைந் திருக்கும் இடத்தினாலும், குற்ற மற்ற மிருகங்களை யழித்தலாலும், (அவைகளைக்) காக்குஞ்செயலினாலும், (சிலேடைவகையால்) மேற்சென்ற திரிசங்குமகாராசனை ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரமண்டலத்தோடும் போகும்படி செலுத்துதலாலும், கோப மிகுந்திருக்கு முணர்வினாலும், குற்றமற்ற மனிதர்களைக் கோபித்தலாலும், (அவர்களைக்) காக்குஞ் செயலினாலும், காதி புத்திரராகிய விசுவாமித்திரமுனிவரை யொத்துள்ளது.—எ-று.

சிலேடை நோக்கி, திரிசங்கு என்பதற்கு, சுரிமுகச் சங்கு என்றும், திரிசங்குராசன் என்றும், மீன் என்பதற்கு, மச்சங்கள் என்றும், நக்ஷத்திரங்கள் என்றும், சலம் என்பதற்கு, நீர் என்றும், கோபம் என்றும், புலம் என்பதற்கு, இடம் என்றும், அறிவு என்றும் பொருள் கூறப்பட்டன. புலன் மொழியீற்றுப்போலி. 'மீதுபோந்திரிசங்கை' என்பதனை, மீதுபோந்து இரி சங்கை எனப் பிரித்து நீர்மேற் சென்றோடுகின்ற சங்குகளை எனப் பொருள்கூறினும் பொருந்தும். (உஉ)

தெழித்த மால்கரி யினங்கட மெயிற்றினாற் சிதையக்
கிழித்த பேரிறால் சொரிந்ததேன் கிரியுள வெல்லாங்
கொழித்து வந்துற வணைதரும் பாலியின் கொள்கை
சுழித்த நீர்க்கங்கை யமுனையைக் கலந்தெனத் தோன்றும்.

(இ-ள்.) பிளிறுகின்ற மதமயக்கத்தையுடைய யானைக்கூட்டங்கள் தமது கோடுகளினால் சிதையும்படி கிழித்த பெரிய தேன்கூடுகள் பொழிந்த தேன்கள் மலையிடங்களிலுள்ளன வனத்தையு மலைத்துவந்து பொருந்தப்பெருகுகின்ற பாலிநதியின் தன்மை (எதுபோலுமெனின்,) சுழித்தலையுடைய நீர்நிறைந்த கங்கைநதியானது யமுனாநதியைக் கலந்த காட்சிபோன்று விளங்கும்.—எ-று.

தேன்பெருக்கு யமுனை யாகவும், பாலிநதிப்பெருக்குக் கங்கையாகவும், அத் தேன்பெருக்கை யலைத்துவருதல் கங்கை யமுனையைக் கலந்ததுபோலவும் உவமித் துரைக்கப்பட்டது. பாலிநதி வெண்ணிறமும் தேன் கருநிறமு மமைந்துள்ளனவாகலின், வெண்ணிறமுடைய கங்கை கருநிறமுடைய யமுனையைக் கலந்தமைபோன்றிருந்ததென் றுவமைகூறினர். எக்காலத்தும் நீங்காப் பெருக்குடன் நீர்சுழித்து வருந்தன்மையதாகலின், 'சுழித்தநீர்க்கங்கை' என்று கூறினர். கலந்தென என்பது தொகுத்தல் விகாரம்.

இச்செய்யுளால் தெய்வத்தா லாகுங் காரியங்களை உலகினர்க் கறிவுறுத்தித் தீயமாந்தர்களை யொழித்து நல்லோரை மேலுலகிற் செலுத்தும் அருளுடைய முனிவர்கள் தன்மையையும் இந் நதியடைந்துளதென் றுணர்த்தியதாகும். (உரு)

சங்க மார்த்திடத் திரையெழ நதியுறுந் தகைமை
யங்கம் வெம்பினை பனிக்கதி ரல்லைநீ யழலோ
யிங்கு வாதிளைத் தேகுதி யெனக்கர மெடுத்தே
பொங்கும் வாய்விடா விரவியை விளிப்பதுபோலும்.

(இ-ள்,) சங்கங்க ளிரைச்சலிடவும், அலைகள் மேலெழுந்து வீசவும் பாலி நதி பொருந்தியிருக்குந் தன்மை (எதுபோலுமெனின்,) வெவ்விய கிரணங்களையுடைய சூரியனே! நீ உடல்வெதும்பினுய், குளிர்ந்த கிரணமுடையையல்லை; (ஆதலால்) இங்கேவா; (உனது வெம்மைதணிய) முழுகிச் செல்லென்று தனது கைகளைநீட்டிப் பெரியவாயைத் திறந்து அச் சூரியனை யழைப்பதை யொத்திருக்கும். எ-று.

நதியில் சங்குக ளிரைச்சலிடுதல், சூரியனை வாய்விட்டழைப்பதுபோலவும், அலைகளெழுதல் கைநீட்டி யழைப்பதுபோலவு மிருந்தனவென்க. பேரிரைச்சலுடைமையின், 'வாய்விடா விரவியை விளிப்பதுபோலும்' என்று கூறினர். (உசு)

வேத மேமுதல் யாவையு முணர்கினு மேலா
மாதி வானவன் கறைமிடற் றிறையென வறியாப்
பேதை மாக்கட் முணர்வென வலைந்துபேர் கின்ற
சீத நீரொலாந் தெளிதலின் றுயது சிறிதும்.

(இ-ள்.) வேதம்முதலாகிய கலைகளனைத்தையு முணர்ந்தாலும், மேலாகிய முதற்பெருங்கடவுளாயுள்ளவர் காளகண்டராகிய சிவபெருமானேயென் றுணராத மூடர்களுடைய அறிவைப்போல, அலைந்து பெயர்ந்தோடுகின்ற குளிர்ந்த நீர்ப்பெருக்குகளனைத்தும் சிறிதுந் தெளிவில்லாமல் கலங்கலாயிருந்தன. எ-று.

வேதம் வேதாங்கம் ஸ்மிருதிபுராணேதிகாசமுதலியவனைத்து மடங்க, 'வேதமே முதல் யாவையும்' என்றும், "நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே-யெல்லையிலாத சிவம்" என்றபடி அக்கலைகளனைத்தைய மோதியுணரினும், நஞ்சுண்டமரருயிரை நாட்டிய வெம்பெருமானை யல்லது பிறதெய்வங்களைப் பதியெனக்கருதலுந் தாமே பிரமமெனக் கருதலுமுடைய மாக்களறிவீனர்களாகலின், 'மேலாமாதி வானவன் கறைமிடற் றிறையென வறியாப் பேதைமாக்கள்' என்றும், அவர்க ளுணர்வு ஒரு நிலையின்றிச் சதாகலக்கமுற்றிருக்குந் தன்மையவாகலின், 'உணர்வென' என்றுங் கூறினர். உயர்திணையாகிய மக்களினத்திற் சேர்க்காது அஃறிணையாகிய விலங்கினத்திற் சேர்க்கத்தக்கவ ரென்பதுதோன்ற, மக்களென்னது, 'பேதைமாக்கள்' என்றார். பேதைமாக்களுணர்வைப்போலச் சீதநீர் தெளிவின்றிக் கலங்கியதென்க. ஆயது என்பது, வழுவமைதி. (உரு)

செம்பொன் மால்வரை யல்லன கிரிகளுந் திசையு
மும்பர் வானமுந் தரணியுந் துளங்கவந் துறலா
லெம்பி ரான்முனம் வருகென நதிகளோ டெழுந்த
கம்பை மாநதி யொத்தது கரைபொரு பாலி.

(இ-ள்.) கரையைமோதுகின்ற பாலிநதியானது, பெரிய மேருமலையொழிந்தனவாகிய மற்றையமலைகளும் திக்குகளும் தேவர்கள் வசிக்கும் விண்ணுலகமும் மண்ணுலகமும் நடுங்கும்படி பெருகிவருதலால், எமது சிவபெருமான் முற்காலத்து

வருகவென் றழைப்ப, எல்லா நதிகளுடன்வந்து பெருகிய கம்பாநதியை யொத்துள்ளது.—எ-று.

'செம்பொன்மால்வரை உலகிற் கச்சாணிபோன்றுள தாகலின், அது துளங்கின் அனைத்துங் கெடுமாகலின் அது நீங்கவென்பார். 'செம்பொன்மால்வரை யல்லனகிரிகளும்' என்று கூறினர். 'எம்பிரான் முனம்வருகென நதிகளோடெழுந்த கம்பைமாநதி' என்பதன்வரலாறு:—ஸ்ரீ மகாகயிலாசத்தில் சிவபெருமானிடத்துச் சிவபூசனையின் மேன்மையைக் கேட்டுணர்ந்த உமாதேவியார் அவ்வெம்பெருமானைப் பூசிக்கக்கருதிக் காஞ்சிப்பதியையடைந்து மாவிருக்ஷத்தடியில் சிவலிங்கப்பெருமானைப் பிரதிஷ்டைசெய்து அன்புடன் பூசித்துவருகையில், பெருமான் அவ்வம்மையாருக்குத் திருவருள்செய்யவேண்டி ஒரு திருவிளையாட்டாகச் சப்தசமுத்திரங்களு மொன்றாகப் பெருகிவருவதுபோலக் கம்பாநதியைப் பெருகிவரச் செய்தருளினர். அதனையுணர்ந்த உமாதேவியார், அஞ்சி மனம்பதைத்து அவ்வெள்ளத்தைத் தடுக்க, அது தடைபடாமையால், சிவலிங்கப் பெருமானைத் தமது முலைச்சுவடும் வளைச்சுவடும் பொருந்தத் தழுவிக்கொள்ளவும், பெருமான் அம்முலைச்சுவட்டையும் வளைச்சுவட்டையும் விரும்பியேற்றருளினர். கம்பாநதியும் வணங்கி யொதுங்கியோடியது என்பதாம். இதனை:-பெரியபுராணம். "நாதரும்பெருவிருப்பொடு நயந்து நங்கையர்ச்சனைசெய்யு மப்பொழுதிற் - காதன் மிக்கவோர் திருவிளையாட்டிற் கனங்குழைக்கருள்புரிந்திட வேண்டி-யோதமார்கட லேழுமொன்றாகி யோங்கி வானமு முட்படப் பரந்து - மீது செல்வதுபோல்வரக் கம்பை வெள்ளமாந் திருவுள்ளமுஞ் செய்தார். அண்ணலாரருள்வெள்ளத்தை நோக்கி யங்கயற்கண்ணி தம்பெருமான்மேல்-விண்ணெலாங் கொளவரும் பெருவெள்ள மீது வந்துறுமென வெருக்கொண்டே-யுண்ணிலாவிய பதைப்புறுகாதலுடன் திருக்கையாற் றடுக்கநில்லாமை - தண்ணிலாமலர் வேணியினாைத் தழுவிக் கொண்டன டன்னையே யொப்பாள். மலைக்குலக்கொடி பரிவுறுபயத்தான் மாவின் மேவிய தேவர்நாயகரை - முலைக்குவட்டொடு வளைக்கையா னெருக்கி முருகுகாதலாவிறுகிடத் தழுவச் - சிலைத்தனித் திருநுதறிரு முலைக்குஞ் செந்தளிர்க் கரங்களுக்கு மெத்தெனவே-கொலைக்களிற் றுரிபுனைந்த தம்மேனி குழைந்து காட்டினர் விழைந்த கொள்கையினர்". எனவும், காஞ்சிப்புராணம்:—"விழுமியவண்டத்துள்ளும் புறத்தினும் விரவுந்தீர்த்த - முழுவது மொருங்குநண்ண முன்னினர் முன்னலோடு - மொழுகுநீர்க் கம்பையாற்றி னுடன்விராய்க் கடைக்கால்வெள்ள - மெழுவது கடுப்பவெல்லாப் புனலும்வந் திறுத்தவன்றே." எனவும், "ஒருகொடி யெழுந்துசெம்பொ னுயர்வரைக் குவடுதன்னை - யிருகொழுந் திருபாற்போக்கித் தழீஇயென வெழுந்துவல்லே - முருகலர் வேதியும்பர்த் தன்வல முழந்தாளூன்றிக்- கருமணிப் பாவையன்னாள் கணவரைத் தழுவிக்கொண்டாள். மணிமுலைக் குவட்டினோடு வளைக்கையா னெருக்கிப்புல்லித் - தணிவருங் காதல்விம்மக் காதலி தழுவலோடுந் - திணியிரு ளறுக்குஞ் சோதித் திருவுருக் குழைந்துகாட்டி - யணிவளைத் தழும்பினோடு முலைச்சுவ டணிந்தாரையர்." எனவும் வருவனவற்றா னுணர்க. வருகவென என்பது, வருகென' எனத் தொகுத்தலாயிற்று. (உகூ)

உதிரு கின்றசிற் றுண்டிகொண் டொலிபுனற் சடைமேன்
மதுரை நாயகன் மண்சுமந் திட்டமா நதியின்
முதிரு முத்தமிழ் விரகன தேடென மொய்ம்பீ
னெதிர்பு குந்திடப் போவது பாலியா மியாறு.

(இ-ள்.) ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் உதிர்கின்ற பிட்டைக் கூலியாகப் பெற்று, சப்திக்கின்ற கங்கைநதியை யணிந்த சடைமுடியின்மேல் மண்சுமக்கப் பெ

ற்ற பெரிய வைகைநதியில் முதிர்ந்த முத்தமிழ்விரகராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் இட்டருளிய (திருப்பதிகத்) திருவேட்டைப் போல, நெருங்கிய மீன்கூட்டங்கள் (வெள்ளத்தின்) எதிர்செல்லும்படி போகப் பெறுவது பாலிநதி.—எ-று.

அரிமருத்தன பாண்டியன் தன்பொருளைச் செலவிட்ட வாதவூரடிகளை வைகைநதியிலிட்டுத் துன்புறுத்த, அதனைப்பொறாத சிவபெருமான் வைகையாறு பெருக்கெடுப்பச் செய்தனர். அதனை மன்னவனுணர்ந்து வாதவூரடிகளை வருவித்து இந்நதிப் பெருக்கு நம்மூரிற் பெருகாதிருப்பக் கரை கோலுகவென, அவ்வாறே அவரும் அவ்வவர்க்குக் கோலிட்டளந்து கொடுப்ப, அப்பங்கிற்பட்டவளாகிய பிட்டுவிற்றுண்பாள் இதற்கு யாது செய்வதென்று வருந்தச் சிவபெருமான் அவள்பொருட்டு, மண் சுமந்து வைகையையடைப்பக் கூலியாளாய்வந்து உதிர்ந்தபிட்டைக் கூலியாகப்பெற்றன ரென்பதும், திருஞானசம்பந்தப்பிள்ளையார் மந்திரியாரும் மங்கையர்க்கரசியாருங்கொண்ட அன்புகாரணமாக மதுராபுரிக் கெழுந்தருளுங் கால், அங்குவசித்திருந்த சணர்கள் பொருது வாதுக் கழைப்பப் பிள்ளையார் முன்னர் அனல்வாதத்தில், "போகமார்த்த பூண்முலையாள்" என்னு முதலையுடைய திருப்பதிகமெழுதிய திருவேட்டைத் தீயிலிட்டு வேகாதிருப்பச் செய்தும், பின்னர் புனல்வாதத்தில், "வாழ்க வந்தணர்வானவரானினம்-வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக-ஆழ்க தீயதெல் லாமரனுமமே - சூழ்கவையக முந்துயர்தீர்கவே" என்னு முதலையுடைய திருப்பதிகம் அருளிச்செய்து எழுதிய திருவேட்டை வைகைநதியிலிட்டு எதிரேறச் செய்து அச்சமணர்களைக் கழுவேறச்செய்தருளின ரென்பதும் புராணவரலாறு. ஓதியுணர்ந்து தேர்ந்த முத்தமிழறிஞர்போலாது, மூவாண்டின்மெய்ஞ்ஞானப் பாலூட்டியவளவே சகலகலைஞானங்களையு மோதா துணரப்பெற்றவ ராகலின், 'முதிரு முத்தமிழ் விரகன்' என்று கூறினர். சலசரங்களாகிய வாளை முதலிய மீன்வர்க்கங்கள் பாலிநதிப்பெருக்கில் எதிரேறிச் செல்லுதல், திருஞானசம்பந்தப்பிள்ளையார் வைகைநதியிலிட்ட திருப்பதிகத்திருவேடு எதிரேறிச்சென்றதன்மையை யொத்திருந்தனவென உவமைமுகத்தாற் கூறினர். (௨௭)

## வேறு.

மாசறத் துளங்கு துப்பு மரகதத் திடைவந் தென்னப்
பாசடை நடுவட் பூத்த பங்கயத் தடாகம் யாவுந்
தேசுடைத் தரங்க நீத்தச் செலவினாற் சிந்தை மன்னே
பேசிடிற் சிறுமை யெல்லாம் பெருமையா லடங்கு மன்றே.

(இ-ள்.) குற்றமற்றுவிளங்குகின்ற பவளமானது மரகதரத்தினத்திடையில் வந்தாற்போல, பசிய இலைகளுக்கு நடுவில் பூத்த தாமரைமலர்களை யுடைய தடாகங்களனைத்தும் அழகமைந்த அலைகளையுடைய வெள்ளப்பெருக்கினால் அழிந்தன ; சொல்லுமிடத்தில் சிறுமை யனைத்தும் பெருமையினால் அடங்கிவிடும்.—எ-று.

பச்சிலையின் நடுவில் பூத்திருக்கின்ற தாமரைமலர்கள், மரகதரத்தினத்திடையில் பவளம்வந் தமைந்ததுபோலுங் காட்சியி னமைந்து தோன்றலின், 'மாசறத்துளங்குதுப்பு மரகதத்திடை வந்தென்னப் பாசடைநடுவட் பூத்தபங்கம்' என்றுகூறினர். பவளம் செந்நிறமும் மரகதம் பச்சைநிறமு மாகலின் பவளத்தைத் தாமரைக்கும் மரகதத்தைப் பச்சிலைக்குமாக வுவமித்துக்கூறினர். பெருமையாற் சிறுமை யடங்குதல் போலச் சிறிதாகிய தாமரைத் தடாகங்க ளனைத்தும் பெரிய நீர்ப்பெருக்கினா லடங்கினவென்க. (௨௮)

வளவயன் மருத வைப்பின் வாவியங் கமலம் யாவுங்
கிளையொடும் பறித்து வாரிக் கேழுறப் பொலிந்த தோற்றம்
விளைதரு பகையிற் றேலா வெவ்வழற் சிறுமை நோக்கிக்
களைதலைப் புரிந்து பற்றிப் பெயர்ந்தெனக் காட்டிற் றன்றே.

(இ-ள்.) (நீத்தமானது), வளவிய வயல்களையுடைய மருதநிலத்தூரிலுள்ள தடாகங்களில் மலர்ந்த அழகிய தாமரைக ளனைத்தையும் கிளைகளுடன் பிடுங்கி வாரிக்கொண்டு ஒளிவிளங்கும்படி பொலிவுபெற்றிருக்குங் காட்சியானது (எதுபோலுமெனின்,) மேன்மேலு முண்டாகின்ற பகைமையினின்று நீங்காத கொடிய அக்கினியின் சிறுமையைப் பார்த்து அவற்றைக் களைந்து பற்றிக்கொண்டு சென்றாற்போலக் காட்டியது.—எ-று.

நீர்வளத்தாற் செழித்தோங்குந்தன்மையதென்பார், 'வளவயல்' என்றும், தடாகத்திற் கழகுசெய்வன தாமரையே யென்பார், 'வாவியங் கமலம்' என்றும், அக்கமலத்தை இலை நாளத்தோடு பறித்துச் சென்றதென்பார், கிளையொடும் பறித்துவாரி' என்றும், நீங்காப் பெரும்பகை யென்பார், 'விளைதரு பகையிற் றேலா' என்றும், எப்பொருள்களையு மெரித்தழிக்குந் தீ யென்பார், 'வெவ்வழல்' என்றுங் கூறினார். நீத்தம் பெயர்ந்தெனக் காட்டிற்று எனக் கூட்டுக. கமலம் செந்நிறமுடையதாகலின் அதனையும் நெருப்பின்றன்மையதென் றலைத்துச் சென்றதென்க. நீத்தம் தோன்றா வெழுவாய். (உக)

திரைகட னீத்தங் கொண்மூ வினத்தொடு சேண்போய் நோக்கித்
தரையிடை யிழிந்து சென்று தன்பொருள் கொடுப்போந் தென்னப்
பரதவ ரளவர் வாரிப் படுத்தமீ னுப்பின் குப்பை
யிருபுடை யலைத்து வெளவி யேகிய தெறிநீர்ப் பாலி.

(இ-ள்.) திரைகின்ற கடல்வெள்ளமானது மேகக்கூட்டங்களோடும் ஆகாயத்திற் சென்று நோக்கிப் பூமியி லிறங்கிச் சென்று தனது பொருளைக் கொண்டுபோனாற்போல, அலை யெறிகின்ற நீரையுடைய பாலிநதியானது பரதவர்களும் அளவர்களும் சமுத்திரத்தில் பிடித்த மீன்குவியல்களையும் உப்புக்குவியல்களையும் இருபக்கங்களிலும் அலைத்து வாரிக்கொண்டு சென்றது.—எ-று.

பரதவர் அளவர் என்பவர்கள் நெய்தநிலமாக்கள். பரதவர் படுத்த மீன் குப்பைகளையும், அளவர்கள் படுத்த உப்புக் குப்பைகளையும் எறிநீர்ப் பாலி வெளவி யேகியதென்க. அளவர்—உப்பமைப்போர். வாரிப்படுத்தமீன் என்பதற்கு, வாரிக் குவித்த மீன் எனப் பொருள்கூறினுமாம். கடனீரே மழைநீராகலின், 'திரைகட னீத்தங் கொண்மூவினத்தொடுஞ் சேண்போய்' என்றுகூறினார். திரைகடல்-வினைத்தொகை, அலைகின்றகடல். போந்தென்ன - தொகுத்தல்விகாரம். (௩௦)

பாரிடை யினைய பண்பிற் படர்ந்திடு பாலி யந்தத்
தாருயி ரனைத்துந் தத்த மருவினைக் கமைத்த நீராற்
சேருறு கதிக ளென்ன மரபினிற் றிறமே யென்னத்
தாருவின் கிளைக ளென்னத் தனித்தனி பிரிந்த தன்றே.

(இ-ள்.) நிலவுலகத்தில் இவ்வகையாகிய தன்மையோடும் படர்ந்து செல்கின்ற பாலிநதியானது, சர்வசங்கார காலத்தில் அரிய உயிர்க ளனைத்தும் தத்தமது அரிய வினைகளுக் கேற்ப வமைத்த முறைமைப்படி அவைகளடையும் (சுவர்க்கநரகாதி) கதிகளைப்போலவும், அவ்வக்குலமரபின் றிறத்தைப்போலவும், மரத்தினின்றும் பிரிந்த கிளைகளைப்போலவும் வெவ்வேறாகப் பிரிந்து சென்றது.—எ-று.

சர்வசங்காரகாலத்தில் எல்லாவுயிர்களு மொடுங்குங்கால், தத்தம் வினைக்க மைந்த கதிகளையடைத லுண்மையால், 'அந்தத் தாருயி ரனைத்துந் தத்த மருவினைக் கமைத்த நீரால் சேருறு கதிக ளென்ன' என்று கூறினர். பாலி தனித்தனி பிரிந்தது எனக் கூட்டுக. (௬௧)

கால்கிளர் கின்ற நீத்தங் கவிரிதழ்க் கலசக் கொங்கைச்
சேல்கிளர் கரியவுண்கட் டிருநுதன் மிழற்றுந் தீஞ்சொன்
மேல்கிளர் பரவை யல்குன் மெல்லிய லறன்மென் கூந்தன்
மால்கிளர் கணிகை மாதர் மனமெனப் போயிற் றுமால்.

(இ-ள்.) பல கால்களாக விளங்கி யோடுகின்ற பாலிநதியின்வெள்ளமானது முருக்கம்பூப்போன்ற இதழையும், கலசம்போன்ற கொங்கையையும்,சேற்கெண்டை போல் விளங்கும் கரிய மையுண்ணப்பெற்ற கண்களையும், அழகிய நெற்றியையும், (யாழோசைபோன்று) இசைக்கும் மதுரமாகிய சொற்களையும், உயர்ந்து விளங்குகின்ற கடல்போன்று விசாலித்த நிதம்பத்தையும், மெல்லிய சாயையினையும்,கருமணல் போலும் மிருதுவாகிய கூந்தலையு முடைய மயக்க மிக்க விலைமாதர்களது மனம்போலப் பலவாறு பிரிந்து சென்றது.—எ-று.

விலைமாதர்களது மனம் ஒருவழி நில்லாமல் பலபுருடர்கள்மேலுஞ் சென்ற லைதல்போல, பாலிநீத்தமும் பல கால்களாகப் பிரிந் தோடுந் தன்மையுண்மையால் அதனைக் கணிகைமாதரது மனத்தோடுவமித்துக் கூறினர். கால் கிளர்கின்ற நீத்தம் போயிற்று எனக் கூட்டுக. (௬௨)

பாம்பளை புகுவ தேபோற் பாய்தரு பரவைத் தெண்ணீர்
தூம்பிடை யணுகு மாற்றாற் சொன்முறை தடைசெய் வோரிற்
றும்புடை பெயரா வண்ணந் தலைத்தலை தள்ளு மள்ள
ரேம்பலோ டார்க்கு மோதை யுலகெலா மிறுக்கு மாதோ.

(இ-ள்.) பாய்ந்து செல்கின்ற பரந்த தெள்ளிய நீர்வெள்ளமானது பாம்புகள் புற்றில் நுழைவதுபோலக் கால்வாய்களில் அடைந்து செல்லும் வகையினால், சொல்லப்பட்ட முறைமைப்படி அந்நீரைத் தடைசெய்பவர்களில் இடம்விட்டுப் பெயராத விதமாக அவ்வவ்விடங்களில் நீரைத் தடுத்தொதுக்குகின்ற மள்ளர்கள் எம்பலித்தலோடு ஆரவாரிக்கும் பேரோசையானது உலகமுழுதுஞ் சென்றடையும்.—எ-று.

பாலி நீர்ப்பெருக்கு வாய்க்காலிடங்களில் வளைந்தோடுதலின், 'பாம்பளை புகுவதேபோல்' என்றும், அதனைத் தடைசெய்து வயல்களுக்குப்புகட்டும் மள்ளர்கள் பெருங்களிப்போடு ஆரவாரித்தலின், 'சொன்முறை தடைசெய்வோரிற்-றும்புடை பெயராவண்ணந் தலைத்தலை தள்ளுமள்ள-ரேம்பலோடார்க்கு மோதை' என்றும், அவ்வோதை அந்நாடெங்கும் நிறைந்து பரவுதலின், 'உலகெலா மிறுக்கும்' என்றுங் கூறினர். எம்பல்=அங்கலாய்த்தல். மாது ஓ-அசைநிலைகள். (௬௩)

பணையொலி யிரலை யோதை பம்பையின் முழக்கமங்கட்
கிணையொலி மள்ள ரார்ப்புக் கேழ்கிளர் தரங்க நன்னீ
ரணையொலி யவற்றை வானத் தார்ப்பொலிக் கனிதானு
மிணையொலி காட்டிற் றேயென் றெண்ணுவார் விண்ணு ளோரும்.

(இ-ள்.) முரசினோசையும், ஊதுகொம்பினோசையும், பம்பை வாத்தியவோசையும், அழகிய கண்களோடு கூடிய மருதநிலப் பறையினோசையும், மள்ளர்களது ஆரவாரமும், ஒளிவிளங்கும் அலைகளையுடைய நல்ல நீரைத் தடைசெய்தணைக்கின்ற

வோசையுமாகிய அவ்வோசைகளைதேவர்களுங் கேட்டு நமது விண்ணுலகத்தில் முழங்குமொலிக்குஇந்நிலவுலகமும்சமமாகிய ஒலியைக் காட்டினதோவென்று நினைப்பார்கள்.—எ-று.

விண்ணுலகத்திற் சதா மங்கலகரமாக முழங்குகின்ற தேவதுந்துபியின் ஒலிபோல, இந்நாட்டிலும் பணையொலி முதலிய பல்வகை யொலிகளும் இடைவிடாது பெருகி யோங்குதலின் "வானத்தார்ப் பொலிக் கவனிதானு - மிணையொலி காட்டிற்றேவென் றெண்ணுவார் விண்ணு ளோரும்' என்று கூறினர். (௫௪)

இயல்புகுங் களிநல் யானை யினந்தெரிந் தெய்து மாபோற்
கயல்புகுந் துலவுஞ் சின்னீர்த் தடம்புகுங் காமர் காவி
னயல்புகுங் கோட்ட கத்தி னகம்புகு மார்வத் தோடி
வயல்புகுங் களிப்பு நீங்கா மாக்களின் மயங்கு மாதோ.

(இ-ள்.) இயல்பாகச் செல்லுகின்ற மதச்செருக்கினையுடைய யானையானது தன்னினத்தைத் தெரிந்து அடையுமாறுபோல, (வெள்ளநீரானது) கயல்மீன்கள் புகுந்து உலாவுகின்ற சில நீரையுடைய தடாகத்திற் புகுந்து செல்லும், அழகிய சோலைகளினயலில் புகுந்துசெல்லும், பெரிய குளங்களில் புகுந்து செல்லும், இரைச்சலிட்டோடிவயல்களிற் புகுந்து செல்லும், இவ்வாறு களிப்பு நீங்காத மாந்தரைப்போல மயங்கிச்சுழலும்.—எ-று.

மதயானை தன்னினமுள்ள விடங்களை யறிந்து விரைந்துசெல்லுதல்போல, நீர்ப்பெருக்குந் தடாகமுதலிய விடங்களில் விரைந்து செல்லுதலால், இயல்புகுங் களி நல்யானையையும், மதுக்களிப்புக் காமக்களிப்புடையோர் ஒரு நெறிப்படாது பல விடத்தும் மயங்கி நிற்றல்போல அவ்வவ்விடங்கடோறுந் தங்கிநிற்றலால், களிப்பு நீங்காமாக்களையும் உவமையாகக் கூறினர். (௫௫)

எங்கணு நிறைந்து வேறோ ரிடம்பிறி தின்மை யாகச்
சங்கமா யீண்டு மள்ளர் தாங்குபல் லியமு மார்ப்பப்
பொங்கிய நகரந் தோறும் புறமெலாம் வளைந்த நீத்த
மங்கண்மா ஞாலஞ் சூழு மளக்கரை நிகர்த்த தாமே.

(இ-ள்.) வெற்றிடஞ் சிறிதுமில்லாமல்எவ்வெவ்விடங்களிலு நிறைந்து கூட்டமாக நெருங்கிய மள்ளர்கள் எந்தியபலவாத்தியங்களும் ஆரவாரிக்கச்சிறந்த நகரங்கள்தோறும் புறவிடங்கள்முழுதும் வளைந்த பாலிநதிப் பிரவாகமானது, அழகிய இடமகன்ற பெரிய நிலவுலகத்தைச்சூழ்ந்த சமுத்திரத்தை யொத்துள்ளது.—எ-று.

பாலிநீத்தம் பிரவகித்து மேபெள்ளங்களைச் சமப்படுத்தி வெற்றிடமின்றி நிறைந்து நிற்றலின், 'எங்கணு நிறைந்து வேறோரிடம் பிறிதின்மையாக' என்றும், அவ்வெள்ளப் பெருக்காற் களிகூர்ந்து மள்ளர்க ளொருங்கு கூடிப் பல்லிய முழக்கலின், 'சங்கமா யீண்டுமள்ளர் தாங்குபல்லியமு மார்ப்ப' என்றும், நகரங்களின்மேற் செல்லாது அணைசெய்து தடுத்தலின், 'பொங்கிய நகரந்தோறும் புறமெலாம் வளைந்த நீத்தம்' என்றும், நகரங்களை நீத்தஞ் சூழ்ந்திருத்தல் உலகைச்சூழ்ந்த கடல்போன்று விளங்கலின், 'அங்கண்மா ஞாலஞ்சூழு மளக்கரை நிகர்த்ததாமே' என்றுங் கூறினர்.

மாறடு மள்ள ருய்ப்ப மருதத்தி னிறைந்து விஞ்சி
யேறிய நார மீட்டு மிருங்கட ஞேக்கிச் சென்ற
வேறுகொள் புலனை வென்றோர் மேலைநன் னெறிப்புய்த் தாலுந்
தேறிய வுணர்வி லாதோர் செல்வழிச் செல்வ ரன்றே.

(இ-ள்.) வேருகக்கொண்ட ஐம்புலன்களை வென்ற பெரியோர்கள் மேன்மையாகிய நன்னெறியிற் செலுத்தினுலும் தேர்ந்த நல்லுணர்வில்லாத கீழ்மக்கள் (அந் நன்னெறியிற் செல்லாமல்) தாங்கள் செல்லுந் தீநெறியே செல்வார்கள், (அதுபோல) பகைமையை யொழித்த மள்ளர்கள் (தடுத்துச்) செலுத்த மருதநிலத்தில் நிறைந்து மிகுதியாகப் பொங்கிய நீர்ப்பெருக்குகள் பெரியகடலைநோக்கிச்சென்றன.—எ-று.

புலனை வெல்லுதலாவது—ஐம்புலன்களின் வழியே மனதைச் செலுத்தாமல் அடக்கித் தன் வசப்படுத்துதல். புலனை வென்றோர் நல்லறிவுணர்த்தி நன்னெறியிற் செலுத்தினுங் கீழ்மக்கள் அவ்வாறு செல்லாமல் தமது தீயவழியே செல்லுமாறுபோல, மள்ளர்கள் நீரைத் தடுத்தடைப்பினும் தடைபடாமற் கடந்து சென்றனவென்க. நல்லுணர்ச்சியில்லாக் கீழ்மக்கட்கு நல்லுணர்வைப் பன்னு ளுணர்த்தினுந்தந் தீய நெறியே செல்வ ரென்பதனை ;— "பாலாற் கழீஇப் பலநா ளுணக்கினும் - வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்று-கோலாற் கடாஅய்க் குறினும் புகலொல்லா - நோலா வுடம்பிற் கறிவு."—என வரும் நாலடியாரா னுணர்க. செல்வுழி என்னுமிடத்து வகரம் உடம்படு மெய்யல்லாத மெய்பெற்றது. (கூஎ)

வாளெனச் சிலையெ தென்ன வால்வளை யென்னத் தெய்வக்
கோளெனப் பணிக ளென்னக் குலமணி குயிற்றிச் செய்த
மீளிவெஞ் சரங்க ளென்ன வேலென மிடைந்து சுற்று
நாளெனப் பிறழு மீன்க ணடவின நார மெங்கும்.

(இ-ள்.) வாளைப்போலவும், வில்லைப்போலவும், வெள்ளிய சங்கைப்போலவும், தெய்வத்தன்மைபொருந்திய நவகோள்களைப்போலவும், பாம்புகளைப்போலவும், சிறந்த இரத்தினங்க ளிழைத்துச்செய்த வீரர்கள்கையிலுள்ள வெவ்விய அம்புகளைப் போலவும், வேலைப்போலவும், நெருங்கிச் சுற்றுகின்ற நக்ஷத்திரங்களைப்போலவும் விளங்குகின்ற மீன்கள் நீர்ப்பெருக்கெங்கும் மேய்ந்தன.—எ-று. (கூஅ)

மாண்டகு பொய்கை தோறும் வயலொறு மற்று மெல்லாம்
வேண்டிய வளவைத் தன்றி மிகுபுனல் விலக்கு கின்ற
வாண்டகை மள்ளர் தம்பா லமைந்திடுங் காலை யெஞ்சி
யீண்டிய வெறுக்கை வீசு மிடைப்படு வள்ள லொத்தார்.

(இ-ள்.) மாட்சிமை மிக்க தடாகங்களிலும், வயல்களிலும், மற்றெவ்விடங்களிலும் தங்களுக்கு வேண்டிய அளவினதல்லாமல் மிகுதியாக வருகின்ற நீரைத் (தடுத்து) விலக்குகின்ற ஆண்தன்மையையுடைய மள்ளர்கள் (செல்வம்) தம்மிடத் தடைந்தபொழுது தமக்கு மிஞ்சிப் பொருந்திய செல்வத்தை இரவலர்க்குத் தானஞ்செய்கின்ற இடையெழு வள்ளலை யொத்தார்கள்.—எ-று.

நீர் நிலைபேறுடையதாய் அன்னபானுதிகளுக் காதாரமாயுள்ள தாகலின், 'மாண்டகு பொய்கை' என்று கூறினர். இடைப்படு வள்ளல்கள் தம்மளவைக்கு வேண்டியவற்றை வைத்துக்கொண்டு அதிகமாயுள்ளவற்றைக் கொடுத்தல்போல மள்ளர்கள் தமக்கு வேண்டிய நீரைத்தடுத்து அணைசெய்து மற்ற நீரைப் புறத்திற் போகவிடுதலால், 'எஞ்சியீண்டிய வெறுக்கைவீசு மிடைப்படு வள்ளலொத்தார்' என்று கூறினர்.

**ஆற்றுப்படல முற்றிற்று.**

ஆ திருவிருத்தம் - அகூ.

உ

முருகன்றுணை.

# திருநாட்டுப்படலம்.

அவ்வியல் பெற்றிடு மாற்றன் மள்ளர்கண்
மைவரு கடலுடை மங்கை தன்னிடை
மெய்வளங் கொள்வதை வேண்டி யங்நிலச்
செவ்விக ணுடியே யினைய செய்குவார்.

(இ-ள்.) அத்தன்மையாகிய இயல்பினைப்பெற்ற வலிமைமிக்க உழவர்கள் கருநிறமமைந்த கடலை ஆடையாகவுடைய பூமிதேவியினிடத்தில் மெய்ம்மையாகிய வளப்பமிக்க பொருள்களைப் பெறவேண்டி அவ்வங்நிலங்களின் பக்குவங்களையறிந்து இக்காரியங்களைச் செய்வார்கள்.—எ-று.

நீர்ப்பெருக்கின் மிகுதியால் களிகூர்ந்து அதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்வதில் சிறிதுஞ் சோர்வில்லாதவர்க ளென்பார், 'அவ்வியல் பெற்றிடு மாற்றன் மள்ளர்கள்' என்றும், உவர்நீர்க்கடல் கருநிறமமைந்துள்ள தென்பார், 'மைவரு கடல்' என்றும், அக்கடல் நிலத்தைச்சூழ்ந்திருத்தல், நிலமகளிடையிற்றரித்த ஆடைபோன்றமைந்துள்ள தென்பார், 'கடலுடைமங்கை' என்றும், அங்நிலத்திடை விளையுஞ் செல்வங்கள் என்று மழியா நன்னலத்தவாகலி னவ்வளத்தையே பெற விருப்புறுவரென்பார் 'மெய்வளங்கொள்வதை வேண்டி' என்றும், பக்குவமறிந்து பயிர்செய்தாலன்றி அவ்வளங்கள் கைகூடாவாகலான் பதமறிந்தே பண்படுத்துவரென்பார், 'செவ்விகணுடியேயினைய செய்குவார்' என்றுங் கூறினுர். (க)

சேட்டிளந் திமிலுடைச் செங்க ணேற்றொடுங்
கோட்டுடைப் பகட்டினம் விரவி கோன்முறை
காட்டினர் நிரைபட வுழுப காசினி
பூட்டுறு பொலன்மணி யாரம் போலவே.

(இ-ள்.) (மள்ளர்கள்) உயர்ந்த இளமையாகிய முசுப்பினையுடைய சிவந்த கண்களமைந்த எருதுகளோடும் கொம்புகளையுடைய எருமைக்கடா வினினங்களையுங் கலந்து பூமிதேவியானவள் தரித்த அழகிய இரத்தினமாலைபோல, தாற்றுக்கோல்களை முறையாகக் காட்டினவர்களாய் வரிசையாக உழுவார்கள்.—எ-று.

மள்ளர்கள் எருதுகளையும் எருமைகளையும் பூட்டி வரிசைப்பட வயல்களில் எருழுதல்,பூமிதேவிகழுத்திற்பூட்டிய இரத்தினமாலைபோன்றுவிளங்குந்தன்மையால், 'காசினி பூட்டுறு பொலன்மணியாரம் போல வுழுப' என்று கூறினுர். சேட்டிளந்திமில் - மிக்க இளந்திமில் எனினுமாம். காட்டினர் - முற்றெச்சம். மள்ளர் என்னு மெழுவாய் வருவித் துரைக்கப்பட்டது. மள்ளர்கள் பொலன்மணியாரம் போல நிரைபட வுழுப எனக்கூட்டுக.

செங்கணேறு, பகட்டினம் எனவும், பொலன் மணி எனவும், கூறியதனுல் பொன்னுர மெனவும், மணியார மெனவும் கொள்ளலு மொன்று. கோன்முறை என்

றதனல் அரசன் செங்கோலைச்செலுத்து முறைமையைக் காட்டினனெனக் கொள்ள லுமொன்று. (உ)

காற்றினு மனத்தினுங் கடுமை சான்றன
கொற்றொழில் வினைஞர்தங் குறிப்பிற் செல்லுவ
வேற்றினஞ் சேறலு மிரிந்த சேலினம்
பாற்றின மருளவிண் படர்ந்து பாயுமால்.

(இ-ள்.) வாயுவேகத்தினும் மனவேகத்தினும் மிக்க கடுமை நிரம்பப் பெற்றுள்ளனவும், தாற்றுக்கோலால் ஓட்டுந் தொழிலையுடைய உழவர்களது குறிப்பின் வழியே செல்வனவுமாகிய பகட்டினங்கள் (வயலில்உழுது) செல்லவும், அங்கு நின்று நீங்கிய சேற்கெண்டையி னினங்கள் பருந்தின் கூட்டங்கள் மயங்கும்படி ஆகாயத்தில் சென்று பாயும்.—எ-று.

பகடு - எருதும் எருமைக்கடாவுமாம். அவ்விடங்களிலுள்ள மீனினங்களானவை ஏற்றினங்கள் வயல்களிடத்து வரவும், தமக்கினமல்லாத வேற்றினங்கள் வந்தனவென்றெண்ணி விண்ணிலுள்ள மீன் நக்ஷத்திரங்களோடு படர்ந்தனவென்று கொள்ளலுமொன்று. (ங)

சால்வளை தரவுழும் வயலிற் றங்கிய
வால்வளை யினம்வெரீஇ யலவன் மாப்பெடைச்
சூல்வளை புகுவதங் கறிஞர் சூழ்விலைக்
கோல்வளை மகளிர்பாற் கூட்ட மொத்ததே.

(இ-ள்.) படைச்சால்கள் வளையும்படி யுழுகின்ற வயல்களிற் பொருந்திய வெள்ளிய சங்கினங்கள் வெருவுற்றுச் சூல்கொண்ட பெரிய பெட்டை நண்டுகளின் வளைகளிற் புகுதல் (எதுபோலு மெனின்) மெய்யறிவினையுடைய பெரியோர்கள் அழகிய வளையையணிந்த விலைமாதர்களிடத்துச் சேருந்தன்மையை யொத்திருந்தது.

வெரீஇ - சொல்லிசை யளபெடை. அங்கு - அசைநிலை. கோலம் என்பது கோல் எனக் கடைக்குறையாயிற்று. கூட்டம் - தொழிற்பெயர். சங்குகள் நண்டுவளையிற் புகுதல் அறிஞர்கள் வேசையர் வீட்டிற் புகுதல் போன்றிருந்த தென்க.

இவ்விரண்டு செய்யுளாலும் தாங்கள் தாங்கள் வாழுமிடத்திற்கு இடையூறு நேர்ந்துழி இனவொற்றுமையாவது இடவொற்றுமையாவது அடுத்ததொன்றைஅமைத்துக்கொள்வதும் மரபென்று குறித்ததாமென்று கொள்ளலு மொன்று. (ச)

உலத்தொடு முறழ்புயத் துழவர் பொன்விளை
புலத்தினும் வியத்தகு வயலிற் போக்கிய
வலத்திடைப் பிறழ்மணி வேள்வி யாற்றிடு
நிலத்திடைப் பிறந்தமின் னிகர்க்கு நீர்மைய.

(இ-ள்.) திரண்ட கல்லை யொத்த புயத்தினையுடைய உழவர்கள் பொன்விளையத்தக்க பூமியினுஞ் சிறப்பாக வியக்கத்தக்க வயல்களில் செலுத்திய கலப்பையினிடத்து விளங்குகின்ற மணிகள், (சனகமகாராஜன்) புத்திரகாமேட்டி யாகத்தைச் செய்யத்தொடங்கிய யாகபூமியில் தோன்றிய சீதேவியை யொத்திருக்குந் தன்மையனவாய் விளங்கும்.—எ-று.

சனகமகாராசன் புத்திரப்பேறு கருதியாகஞ் செய்தற்பொருட்டு நிலத்தினை யுழுங்கால், அவ்வுழுபடைச்சாலின்வழியே சீதை வெளிப்பட்டு அப்பிள்ளைக்கலி தீர்த்தனளென்பது புராணவரலாறு. சிறந்தவளமுடையதென்பார், 'பொன்விளை நில

த்தினும் வியத்தகுவயல்' என்றும், அவ்வயலில் எருழும்படைச்சாலில் விளங்கும் முத்துமுதலிய மணிகள் சிதேவி போன்று சிறந்து விளங்கினவென்பார், 'வயலிற் போக்கிய வலத்திடைப் பிறழ்மணி வேள்வியாற்றிடு நிலத்திடைப்பிறந்த மின்னிகர்க்கு நீர்மைய' என்றுங் கூறினர். உலம்=திரண்டகல். மின் - உவமையாகு பெயர். மணி மின்னிகர்க்கும் நீர்மைய எனக்கூட்டுக. (டு)

நாறுசெய் குநர்சிலர் நார நீர்வய
லூறுசெய் குநர்சில ரொத்த பான்மையிற்
சேறுசெய் குநர்சிலர் வித்திச் செல்லுநீர்க்
காறுசெய் குநர்சில ரளப்பின் மள்ளரோ.

(இ-ள்.) சிலர் நாற்றங்கால் விதைக்கின்றவர்களும், சிலர் தண்ணீரை வயல்களில் ஊறச்செய்கின்றவர்களும், சிலர் நீரூறிப் பதமாயிருக்குந் தன்மையினல் (வயலைச்) சேடையாக்குகின்றவர்களும், சிலர் (விதை) விதைத்துச் செல்லுகின்ற தண்ணீர்க்கு (க்கால்வெட்டி) வழிவிடு கின்றவர்களுமாக (இவ்வாறு) அளவில்லாத உழவர்கள் (இருப்பார்கள்).—எ-று.

ஒருவனுக்குச் செல்வப்பெருக்கம் ஒரோகாலத்தி லுண்டாயினும் அதுகொண்டு பல தொழில்செய்து வளம்பெறுத லியல்பாதல்போல, பாலிநதிப்பெருக்கு ஏககாலத்திற் பிரவேசித்த தெனினும், அதுகொண்டு செய்யுந் தொழில் பலவாக வுண்மையால், மள்ளர்களிலும், நாறு செய்குநரும், ஊறு செய்குநரும், சேறு செய்குநரும், ஆறுசெய்குநருமாகத் தந்தந்தொழில்களை வெவ்வேறாகச் செய்தன ரெனவறிக.இதனை: தணிகைப்புராணம் - "உழுநர்க ளொருபா லுழுதசே றழுந்த லொண்புனல் பாய்த்துன ரொருபா-லழுகுசே றறிந்து மறுவலும் விளாவி யைதுறக் குழப்பிநேராக்கி - விழுமிய முளைக டெய்வதம் போற்றி மேதக வித்துந ரொருபாற்-கெழுமுளை சேற்றிற் பதிந்தபின் றெளிநீர் கீழ்மடை கவிழ்க்குந ரொருபால்" என்பதனுனுணர்க. நாரநீர்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இருப்பார்கள் என்னும் பயனிலை வருவிக்கப்பட்டது.

இச்செய்யுள் நிலந்திருந்திய பின்னர் செய்யத்தகுந் தொழிலிது வென்றுணர்த்தியதாகும். (சு)

குச்செனப் பரிமிசைக் குலாய கொய்யுளை
வைச்செனத் தளிர்த்தெழு நாற்றின் மாமுடி
யச்செனப் பதித்தனர் கடைஞ ராவியா
நச்சின மகளிரை நினைந்து நைந்துளார்.

(இ-ள்.) உழவர்கள் தமதுயிர்போல விருப்பமுற்றிருக்கின்ற பரஸ்திரீகளை நினைந்து (அதனல்) மனம் வருந்தி யிருக்கின்ற உழத்தியர்கள் பாவாற்றியைப்போலவும், குதிரையின்மேற் பொருந்திய புறமயிரை வைத்தாற்போலவுந் துளிர்த்தெழுகின்ற நாற்றினது பெரிய முடிகளை அச்சுப்போல வரிசைப்படநட்டார்கள்.—எ-று.

பாவாற்றியாவது, நெசவுத்தொழில் செய்வோர் நூற்பாவுகளை ஒழுங்குபடச் செய்தற்பொருட்டு, அப்பாவுகளின்மேல் ஈர்த்துச்செல்லும் ஒருவகைக் கருவி. கொய்யுளை - கத்திரித்த புறமயிர். அச்சு - ஒழுங்கென்னும்பொருட்டு. வைத்த என்பது வைச்ச எனப் போலியாயிற்று. வைச்சென என்புழி நிலைமொழி யீறுதொக்கது. நைந்துளார்-வினையாலணையும்பெயர். நைந்துளார் நாற்றின்மாமுடி பதித்தனர் எனக்கூட்டுக.

இத் திருவிருத்தத்திற்கு இவ்வாறு பொருள் கூறுதலன்றியும், 'குச்செனப் பரிமிசைக்குலாய கொய்யுளை-வைச்செனத்தளிர்த்தெழுநாற்றின் மாமுடி-அச்செனப் பதித்தனர்' எனவும், 'கடைஞ ராவியா-நச்சின மகளிரை நினைந்து நைந்துளார்' எனவும் இரண்டு முடிபாகப் பிரித்துப் பொருள்கொள்ளுதலுமாம்; இவ்வாறு பொருள் கொள்ளுங்கால், முன்னதற்கு, உழத்தியர் என்னுந் தோன்றாவெழுவாயை வருவித்துப் பதித்தனர் என முடித்தும். பின்னதற்கு, கடைஞர்கள் தம் உயிர்போல விரும்பியிருக்கின்ற தங் குலமாதர்கள் (செய்யுங் கஷ்டத்தொழிலை) நினைந்து மனம் வருந்தினார்கள், எனப் பொருள்விரித்தும் அமைத்துக்கொள்க. இவ்வாறு பொருள்கொள்ளுங்கால் நைந்துளார், என்பதனை வினைமுற்றாகக் கொள்க. இவ்வாறன்றி, கடைஞர் குச்செனப் பரிமிசைக் குலாய கொய்யுளை வைச்செனத் தளிர்த்தெழு நாற்றின் மாமுடி அச்செனப் பதித்தன ராகிப் (பின்னர்) ஆவியா நச்சின மகளிரை நினைந்து (பிரிவாற்றாமையால்) நைந்துளார் எனக் கூட்டிப் பொருள்கூறுவாருமுளர்.

இச் செய்யுளால் இந்நிலத்துள்ள உழத்தியர்கள் மனம் வருத்தமுற்ற காலத்தும் செய்யுந் தொழிலிற் றிறம்பாது முறைபடச் செய்வதொன்று குறித்ததாகும். (எ)

வாக்குறு தேறலை வள்ள மீமிசைத்
தேக்கின ருழவர்தந் தெரிவை மாதரார்
நோக்குறு மாடியி னுனித்து நோக்கினர்
மேக்குறு காதலின் மிசைதன் மேயினார்.

(இ-ள்.) உழவர்களது மாதர்களாகிய உழத்தியர்கள் கிண்ணத்தில் ஊற்றிய மதுவினைத் தேக்கெறிந்துண்டவர்களாய்ப் (பின்)பார்த்தற்குரிய கண்ணாடியைப்போல அதனை நிதானித்துப்பார்த்து,மிகுதியாகப்பொருந்திய பெருவிருப்பினால் (பின்னும் அம் மதுவைக்) குடிக்கத்தொடங்கினார்கள்.—எ-று.

நுனித்து நோக்குதல் = உற்றுப்பார்த்தல். மது வுண்போர் தம்முன்னே வள்ளத்திற் பெய்துள்ளதை உண்டு, மிகுந்த கள்ளில் தங்கள் முகத்தை நிதானித்துப் பார்த்துப் பின்னும் ஆனந்தத்தால் உண்ணுவ ரென்பார் நோக்குறு மாடியி னுனித்து நோக்கினர் - மேக்குறு காதலின் மிசைதன்மேயினார்' என்று கூறினார்.

மீமிசை-ஒருபொருட்பனமொழி. தேக்கினர்-நோக்கினர் என்பன முற்றெச்சம். தெரிவை மாதரார்-இருபெயரொட்டு. மாதரார் என்பது விகுதிமேல் விகுதிபெற்றது. (அ)

வாடுகின் றார்சிலர் மயங்கி நெஞ்சொடு
மூடுகின் றார்சில ருயிர்க்கின் றார்சிலர்
பாடுகின் றார்சிலர் பணிகின் றார்சில
ராடுகின் றார்சிலர் நறவ மார்ந்துளார்.

(இ-ள்.) மதுவையுண்ட உழத்தியர்கள் சிலர் (வெறியால்) வாட்டமுறுகின்றவர்களும், சிலர் மயக்கமுற்று மனத்தோடும் பிணங்குகின்றவர்களும், சிலர் பெருமூச்சு விடுகின்றவர்களும், சிலர் (மருதநிலக்கடவுளைப்) பாடுகின்றவர்களும், சிலர் பணிகின்றவர்களும்,சிலர் குரவையாட்டாடுகின்றவர்களும் (ஆக இருந்தார்கள்).—எ-று.

வாடுதல் முதலிய செய்கைகளனைத்தும் நறவமார்ந்ததனாலுண்டாகிய செயற்கைக்குணமேயன்றி, உழத்தியர்களது இயற்கைக்குணமன்றாகலின், 'நறவ மார்ந்துளார்' வாடுகின்றார், ஊடுகின்றார் என்றித்தொடக்கத்தனவாகக் கூறினார்.

குரவைக்கூத்தாவது காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரோனும்எண்மரோனும்ஒன்பதின்மரோனும் கைபிணைந்தாடுவது. இதனை, "குரவை யென்பது கூறுங் காலைச்-செய்தோர் செய்த காமமும் விறலு-மெய்த வுரைக்கு மியல்பிற் றென்ப" எனவும், "குரவை யென்ப தெழுவர் மங்கையர் - செந்நிலை மண்டலக் கடகக் கைகோத் - தந்நிலை கொட்பநின் றாட லாகும்" எனவும் வருவனவற்றா னுணர்க. (௯)

அந்தரப் புள்ளொடு மளிக டம்மொடும்
வந்தடுத் தவரொடு மயக்கு தேறலை
யிந்திரத் தெய்வத மிறைஞ்சி வாமமாந்
தந்திரக் கிளைஞர்போற் றாமு மேயினர்.

(இ-ள்.) உழத்தியர்கள் சத்தியை வணங்கி மதுவுண்ணும் வாமதந்திரச் சமயிகளைப்போல அறிவை மயக்குகின்ற மதுவினை இந்திரனாகிய தெய்வத்தை வணங்கி, ஆகாயத்திற்பறந்துசெல்லும் பறவைகளோடும் வண்டுகளோடுந் தம்மைவந்தடுத்த உறவினரோடும் உண்டார்கள்.—எ-று.

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்-சேயோன் மேய மைவரை யுலகமும்-வேந்தன் மேய தீம்புன லுலகமும்-வருணன் மேய பெருமண லுலகமு - முல்லை குறிஞ்சி மருதநெய் தலெனச்-சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" என்றபடி இந்திரன் மருதநிலக் கடவுளாகலின் அவனை வணங்கிப் பருகுதல் முறைமை யென்பது கருதி இறைஞ்சின ரென்பார், 'இந்திரத் தெய்வத மிறைஞ்சி' என்றும், வாமதந்திரிகள் சத்திபூசை செய்யுங்கால் மது முதலிய லாகிரி வஸ்துக்களைப் படைத்துண்ணுமாறுபோல இவர்களும் அம்மதுவை விரும்பி யுண்ணுதலின், 'வாமமாந் தந்திரக் கிளைஞர்போற் றாமு மேயினர்' என்றுங் கூறினார். இந்திரத் தெய்வதம்-இருபெயரொட்டு. கிளைஞர்-பிரிவினர் என்னும் பொருளில் வந்தது. (௧௦)

விள்ளுறு நாணினர் விரகத் தீயின
ருள்ளுறு முயிர்ப்பின ருலையு நெஞ்சினர்
தள்ளுறு தம்முணர் வின்றிச் சாம்பினார்
கள்ளினு முளதுகொல் கருத்த ழிப்பதே.

(இ-ள்.) வெட்க நீங்கப் பெற்றவர்களும், காமத் தீயை யுடையவர்களும், உள்ளே பொருந்திய பெருமூச்சை யுடையவர்களும், (நிலையற்று) அழிந்த மனமுடையவர்களுமாகிய உழத்தியர்கள் (தொழில்களில்) செலுத்துகின்ற தம்முடையஇயற்கையுணர்ச்சி யில்லாமல் சோர்ந்திருந்தார்கள்; (ஆதலால்) மனக்கருத்தை யழிக்கின்ற பொருள் கள்ளைப்பார்க்கிலும் வேறொன்றுண்டோ? (இல்லை.)—எ-று.

"நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்-பேணப் பெருங்குற்றத் தார்க்கு" என்றபடி கள்ளுண்பார்க்கு நாண மகலுமென்பார், 'விள்ளுறு நாணினர்' என்றார். விள்ளுறு நாணினர்=நீங்கிய நாணுடையவர்கள்; அதாவது நாண நீங்கினவர்கள் என்பது பொருள். எத்தீயினுங் காமத்தீ கொடிதாகலின், 'விரகத்தீயினர்' என்று கூறினார். இதனை—"ஊருளெழுந்த வுருகெழு செந்தீக்கு-நீருட் குளித்து முயலாகும்—நீருள்-குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி-யொளிப்பினுங் காமஞ் சுடும்" என்பதனா னுணர்க. (௧௧)

பளிக்கறை யன்னதோர் படுகர்ப் பாங்கினுந்
தளிர்ப்புறு செறுவினுந் தவறுற் றேகுவார்

தெளிப்பவ ரின்மையி னெறியிற் சென்றிலர்
களிப்பவர் தமக்குமோர் கதியுண் டாகுமோ.

(இ-ள்.) பளிங்கின்பாறையை யொத்துள்ளதாகிய தடாகங்களின் பக்கங் களிலும், (பயிர்கள்) தளிர்த்திருக்கின்ற வயல்களிலும் தவறி விழுந்துபின்னெழுந்து செல்கின்ற உழத்தியர்கள் (இது வழியென்று) தெரிவிப்பவர்க ளில்லாமையினுல் வழியே நடந்து செல்லார்கள்; (கள்ளையுண்டு) களிப்பவர்களுக்கும் ஒரு கதியுண் டாகுமோ?—எ-று.

பால்போற் றெண்ணீ ரமையப்பெற்றுள்ள தென்பார், 'பளிக்கறை யன்ன தோர் படுகர்' என்றும், தவத்தான் வருந்தி இடைவிடாது சிந்திப்பவர்க்கே நற்கதி யுண்டாமன்றிக் களியாட்டு முதலியவற்றுற் களிகூர்ந்திருப்பார்க்கு நற்கதி கிட்டா வென்பார், 'களிப்பவர் தமக்குமோர் கதியுண்டாகுமோ' என்றுங் கூறினுர். தெளிப் பவர்-பிறவினை வினையாலணையும்பெயர். (கஉ)

இன்னன பற்பல வியற்றி யீண்டின
ருன்னருந் தொல்லையி லுணர்வு வந்துழிக்
கன்னெடுந் திரள்புயக் கணவ ரேவலிற்
றுன்னின ரவரொடுந் துவன்றிச் சூழ்ந்துளார்.

(இ-ள்.) கல்லைப்போலுந் திரண்டபுயத்தினையுடையதங்கள் கணவர்களது ஏவுதலினுல், இத்தன்மையாகிய பற்பலதொழில்களைச்செய்து நெருங்கிய உழத்தியர் கள் நினைத்தற்கரிய முன்னுணர்ச்சி வந்தபொழுது, அக்கணவர்களோடும் நெருங்கிச் சூழ்ந்தவர்களாய்ப் பொருந்தினுர்கள்.—எ-று.

ஈண்டினர் தொல்லையி லுணர்வு வந்துழி துவன்றிச் சூழ்ந்துளார் எனக் கூட்டுக. ஈண்டினர்-வினையாலணையும்பெயர். உன்னரும்-வந்துழி என்பன தொகுத் தல் விகாரம். (கரு)

மள்ளர்தம் வினைபுரி மழலைத் தீஞ்சொலார்
கள்ளுறு புதுமணங் கமழும் வாலித
முள்ளுறு நறுவிரை யுயிர்த்து வீசிய
வெள்ளிய குமுதமென் மலரின் மேவுமே.

(இ-ள்.) உழவர்களது ஏவற்றெழிலைச் செய்கின்ற மதுரமாகிய மழலைச் சொல்லையுடைய உழத்தியர்களது கள்ளமைந்த புதிய வாசனையானது வீசப்பெற்ற வெள்ளிய இதழ்கள், உள்ளே பொருந்திய நற்கந்தத்தைப் பெற்று வீசுகின்ற வெண் மையாகிய மெல்லிய குமுதமலர்போலப் பொருந்தி விளங்கும்.—எ-று.

கள்ளுண்ட உழத்தியர்களது இதழ்கள் செந்நிற நீங்கிச் சிலிர்த்து விளர்த் திருத்தலாலும், கள்ளின் நாற்ற முள்ளிருந்து வெளியே வீசிப் பரவுதலாலும், அம் மணம் கள்ளுண்டகாரணத்தா னுண்டாதலானும், 'கள்ளுறு புதுமணங் கமழும் வா லித - முள்ளுறு நறுவிரை யுயிர்த்து வீசிய - வெள்ளிய குமுதமென் மலரின் மேவும்' என்று கூறினுர். வெள்ளிய குமுதம்=வெள்ளல்லி. (கச)

நட்டமே தோர் குழுவினை நடாத தோர்குழு
வொட்டலர் போலநின் றெறுத்த லுன்னியே
யட்டன ராமென வடாத வான்கனை
கட்டனர் வேற்றுமை யுணருங் காட்சியார்.

(இ-ள்.) நடப்பட்டதாகிய பயிர்க்கூட்டங்களை, அவ்வாறு நடப்படாத களைக் கூட்டங்கள் பகைவர்களைப்போல இடையிடையே நின்று அழித்தலைச்சிந்தித்து(ச்சமயமறிந்து) அவற்றை யழித்தாற்போல, (பயிரிது களையிதுவென்று) வேறுபாட்டை யுணருங் காட்சியினையுடைய உழத்தியர்கள் பயிருக்கடாத பெரிய களைகளைப் பிடுங்கி யெறிந்தார்கள்.—எ-று.

'நட்டதோர் குழுவினை நடாத தோர்குழு - வொட்டலர் போலநின் றொருத்த லுன்னி - வேற்றுமை யுணருங் காட்சியார் அட்டனராமென' என்பதற்கு, நட்புக்கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தாரை நட்பில்லாத மற்றொரு கூட்டத்தார் பகைவர்களைப்போலநின்று வருத்துதலைச் சிந்தித்து, வேற்றுமை யுணருங் காட்சியாராகிய நடுவுநிலைமையை யுணர்ந்த பெரியோர்கள், அந் நட்பில்லாத கூட்டத்தாரை அறநெறிப்படி நெருங்கிநின் றழித்தல்போல, எனச் சிலேடைவகையால் வேறொரு பொருளுந் தொனிக்குமாறு காண்க. (கரு)

ஏயின செயலெலா மியற்றி வேறுவே
றுயிடை வேண்டுவ தமைய வாற்றியே
மாயிரும் புவிமிசை மகவைப் போற்றிடுந்
தாயென வளர்த்தனர் சாலி யீட்டமே.

(இ-ள்.) பொருந்திய பயிர்த்தொழில்க ளனைத்தையுஞ் செய்து, வெவ்வேறாக அங்குச் செய்யவேண்டுவதாகிய காவல் முதலியவற்றைப் பொருந்த நடத்தி மிகப் பெரிய நிலவுலகத்தில் தங் குழந்தைகளைப் பாதுகாக்கின்ற தாயைப்போலச் செந்நெற்பயிர்த்தொகைகளை வளர்த்தார்கள்.—எ-று.

தாயென வளர்த்தலாவது :—தாய் தன்குழந்தைகளுக்குப் பாலூட்டி நோய் முதலியன அணுகாமற்காத்து மகிழ்வூட்டி வளர்த்தல்போல, நெற்பயிர்களுக்குக் காலமறிந்து நீர் பாய்ச்சிக் களைகளைந்து அவற்றிற் கொருகுறைவும் நேரிடாமற் பாதுகாத்தல். இதனை.— காஞ்சிப்புராணம். "இளமகப் பசிதனக் கேந்து கொங்கைப்பா-லளவறிந்தூட்டுதாய் மான வாறறி - களமர்கண் முளைப்புனல் செவ்வி கண்டுநீள் - வளவயல்பாய்த்தித்தம் மகவி னோம்புவார்."—என்பதனு னுணர்க.

குச்சென என்னுஞ் செய்யுள்முதல் இச் செய்யுள்காறும் உழவர் உழத்தியர்கள்செய்யுந் தொழில் இவையென் றுணர்த்தியதென்க. (கசு)

மன்சுடர் கெழுமிய வயிர வான்கணை
மின்சுடர் தூணியின் மேல கீழுறத்
தன்சுடர் பொலிதரச் செறித்த தன்மைபோற்
பொன்சுட ரிளங்கதிர் புறத்துக் கான்றவே.

(இ-ள்.) நிலைபெற்ற ஒளிவிளங்குகின்ற சிறந்த வயிரக்கணையை மின்போல் விளங்கும் அம்பறாத்தூணியில் மேல்கீழாகப் பொருந்தும்படி தன்னொளி வீச நெருக்கிவைத்த தன்மையைப்போல, (பயிர்கள்) பொன்போ லொளிவீசும் இளங்கதிர்களை வெளியில் காட்டின.—எ-று.

இச்செய்யுளால்,தொண்டைநாட்டிற்பரவிய வெம்மையென்னும் பகைவனை யழிக்கவெழுந்தது பாலிநதியாகலின் அதனை அரசனாகவும், அந்நதியால் விளைந்த பயிர்களை அம்பாகவும் கூறவேண்டுவது மரபாகலின், வயல்களில் முளைத்த பயிர்க்கதிர்களை அம்பறாத்தூணியில் தலைகீழாக நிறைத்துவைத்த பாணங்களாகக் கூறியதாகும்.

பச்சிளங் காம்புடைப் பணையின் மீமிசை
வச்சிரத் தியற்றுமோ ரிலைகொள் வான்படை
யுச்சிமே லுறநிறீஇ யொருங்கு செய்தெனக்
குச்சுறு சாலிமென் கதிர்கு லாவுமால்.

(இ-ள்.) வயிரத்தினால் செய்யப்பட்ட ஒப்பற்ற அச்சவடிவாகிய சிறந்த வேற்படைகளைப் பசிய இளங்காம்பினையுடைய மூங்கிலின்மேல் அதனுச்சியில் பொருந்த நிறுத்தி வரிசைப்படச் செய்துவைத்தாற்போலக், கொத்தாகப் பொருந்திய செந்நெற்பயிரினது மெல்லிய கதிர்கள் விளங்கும்.—எ-று.

பயிர்கள் பச்சைநிறமும் கதிர்கள் வெண்ணிறமு முடையனவாகலின், பச்சிளங்காம்புடைப்பணையைப் பயிர்த்தாளுக்கும், வச்சிரத்தியற்றுமோரிலைகொள்வான் படையை நெற்கதிருக்குமாக வுவமைகூறினர்.

இச்செய்யுளால், முன்வயல்க ளென்கிற அம்பறாத்தூணிகளில் செருகிவைத்த பாணங்களைத் தொடுத்துப் பிரயோகஞ்செய்வது மரபாகலின், வச்சிரத்தினாற் செய்த படைகளை மூங்கிலினுச்சியில் வைத்தாற்போலச் செந்நெற்பயிர்கள் மேலோங்கிவளர்ந்தன வென்று கூறியதாகும். (௧அ)

சுற்றுறு பன்றலைச் சுடிகை மாசுணம்
பெற்றுறு குழவிகள் பெயர்த லின்றியே
முற்றுறு நிவப்பொடு முறையி னிற்றல்போ
னெற்றுறு பசுங்கதிர் நிமிர்தன் மிக்கவே.

(இ-ள்.) சூழ்ந்துள்ள பல தலைகளில் உச்சிக்கொண்டையையுடைய பெரும் பாம்பானது பெற்ற குட்டிகள் இடம் விட்டுப் பெயராமல் அவை முழுதும் நிமிர்தலோடும் முறையே நிற்றல்போல, நெற்கள் பொருந்தப்பெற்ற பசுங் கதிர்கள் நிமிர்ந்தோங்கின.—எ-று.

சுத்தவீரர்கள் பகைமையின் திறத்தை நோக்கிப் போர்முகத்தில் அநேகமாயிரம் பாணங்களை யேககாலத்திற்றொடுத்தல் வீரச்செயலாதலால், அதுபோலாகும் இப் பசுங் கதிர்கள் ஒழுங்குபட நிமிர்ந்து செவ்வனே நிற்றலெனவும், அவ் வீரர்கள் விடும் பாணங்கள் செல்லுங்கால் சர்ப்பவேகமாகச் செல்லுதல் மரபாதலால் அவ் விளம்பயிர்களைப் பாம்பின் குட்டிகளாகவும் இச் செய்யுளாற் கூறியதாகும்.

மன் என்னுஞ் செய்யுள் முதல் இச் செய்யுள்காறும் உழவர் உழத்தியரால் விளைந்த பயிர்களின் சிறப்பைக் கூறியதாகும். (௧௯)

மையுறு கணிகையர் மகிழ்நர் வந்துழிப்
பொய்யுறு மளியெனப் பயனில் புன்கதிர்
கையுறு முவகையாற் பணியுங் கற்பினோர்
மெய்யுறு பரிவென விளைந்து சாய்ந்தவே.

(இ-ள்.) மை தீட்டிய (கண்களையுடைய) விலைமாதர்கள் ஆடவர்கள் வந்தவிடத்துப் பொய்யாகப் பாராட்டுகின்ற அன்பைப்போல, (அரிசியாகிய) உள்ளீடில்லாத சாவிக்கதிர்கள், ஒழுக்க மமைந்த பெருவிருப்போடும் பணிகின்ற கற்பினையுடைய குலமாதர்களது மெய்ம்மை பொருந்திய அன்பைப்போன்று (நெற்கதிர்களோடும்) விளைந்து சாய்ந்தன.—எ-று.

விலைமாதர்கள் தம்மை யணைதற் பொருட்டுப் பரபுருடர்கள் வந்தவிடத்து அவர்களிடத்துள்ள பொருளைப் பறிக்க விரும்பி உள்ளன்பின்றி வெளிக்கு அன்பு

போல் நடித்து உபசரித்து நிற்றல்போலச் சாவிக்கதிர்களும் அரிசியென்னு முள்ளீடில்லாமல் அந் நெல்லைப் போன்றிருத்தலின், 'மையுறு கணிகையர் மகிழ்நர் வந்துழிப்-பொய்யுறு மளியெனப்பயனில் புன்கதிர்' என்றும், "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்-பெய்யெனப் பெய்யு மழை" என்றபடி தங்கணவனையே தெய்வமாக வழிபட்டு வணங்கி நிற்குங் கற்புடை மகளிர்போலச் செந்நெற்கதிர்களுடன் சாவிக்கதிர்களும் விளைந்து சாய்ந்திருத்தலின், 'கையுறு முவகையாற் பணியுங் கற்பினோர் - மெய்யுறு பரிவென விளைந்து சாய்ந்த' என்றுங் கூறினார். வந்துழி என்பது, தொகுத்தல். கை = ஒழுக்கம். புன்கதிர் விளைந்து சாய்ந்த எனக் கூட்டுக. (௨௦)

மாலுறு பொன்னகர் மருவு மன்னற்குப்
பாலுறு தீம்பதம் பலவு மார்த்தியே
மேலுறு சாலியின் விளைவு நோக்கியே
கோலிநின் றரிந்தனர் குழாங்கொண் மள்ளரே.

(இ-ள்.) கூட்டமாகவுள்ள உழவர்கள் பெருமை பொருந்திய சுவர்க்கலோகத்தில் வசிக்கும் இந்திரனுக்கு இனிமை மிக்க பலவகைப் பாற்சோற்றைப் பொங்கவிட்டு நிவேதித்து, உயர்ந்து வளர்ந்திருக்கின்ற செந்நெற்பயிரின் விளைவைப்பார்த்துச் சூழ்ந்து நின்று அரிந்தார்கள்.—எ-று.

சுவர்க்காதிபதியாகிய இந்திரன் பெரும்போகந் துய்த்து வாழ்தற்கமைந்துள்ள விண்ணுலகானது இந்நிலவுலகம் போன்று மண்ணினனமையாது பசும்பொன்னினு னமையப் பெற்றுள்ளதாகலின் பெருஞ்சிறப்பினதே யென்பார், 'மாலுறு பொன்னகர்' என்றும், அந்நகர்க்கதிபனாகிய தேவேந்திரன் மருதநிலக்கடவுளாகலின் அந்நிலமாக்கள் தாங்கள் அருமையாகப் போற்றிவளர்த்த செந்நெலரிசியை முதற்கணறுத்துப் பாற்பொங்கலிட்டு நிவேதித்துப் பின்னரவற்றை யரிந்து போரிடுதல் முறைமையாகலின், 'பாலுறுதீம்பதம் பலவுமார்த்தி' என்றும், நெல்விளைவின் முதிர்ச்சியை நோக்கி முன் பின் வரிசைக்கிரமமாக அறுக்கவேண்டுதலின், 'மேலுறு சாலியின் விளைவு நோக்கி' என்றும், அவ்விளைவை நோக்கியரியுங்கால் தனித்தனியே யரியாமல் குழாங்குழாமாகக்கூடிச் சூழ்ந்துநின் றரித லியல்பாகலின், 'கோலிநின் றரிந்தனர் குழாங்கொண் மள்ளர்' என்றுங் கூறினார். "—'மாலுறு பொன்னகர் மருவுமன்னன்' என்பதற்கு, மேகத்தை வாகனமாகவுடைய சுவர்க்காதிபதியாகிய இந்திரன் எனப் பொருள் கூறினுமாம். (௨௧)

அரிந்திடு சுமைகளா லவனிப் பேருட
னெரிந்திடச் சேடனு நெளிந்து நீங்கிடத்
தெரிந்திடும் போர்கள்சே ணளவுஞ் சேறலால்
விரிந்திடு கதிர்சுலா மேரு வாயவே.

(இ-ள்.) அவ்வாறு அரிந்துபோடப்பட்ட சுமைகளினால் பூமிதேவியினது உடல் வருந்தவும், ஆதிசேடனும் உடல் நெளிந்து நீங்கவும், காணப்பட்ட அரிப்போர்கள் ஆகாயமளவு முயர்ந்திருக்குங் காரணத்தினால் ஒளி விளங்குகின்ற சந்திர சூரியர்கள் சூழ்ந்து வலம்வருகின்ற மேருமலைபோல விளங்கின.—எ-று.

எங்கும் பரவி விளைந்திருந்த நெற்பயிர்களையரிந்து ஓரிடத்துச் சுமையாகப் போர் செய்தலின் பூமிதேவிக்கு உடல்நெரிதலும், வயல்களெங்கும் பரவியிருந்த பளுவை யோரிடத்திற் கூட்டிச் சேர்த்தலின் ஆதிசேடன தாயிரம்பணாமுடிகளினு நிறைந்திருந்த பளுவனைத்து மாறி யொவ்வோ ரிடத்துப் பளு வுறுத்துதலின் அவன் நெளிந்து நீங்குதலு முண்மையால், 'அரிந்திடு சுமைகளா லவனிப் பேருட-னெரிந்தி

டச் சேடனு நெளிந்து நீங்கிட' என்றும், யாவர்க்குந் தெரியத்தக்க பெரும்போரொன் பார், 'தெரிந்திடும் போர்கள்' என்றும், அப் போர்கள் விண்ணளவு முயர்ந்தோங்கி யிருக்கு மென்பார், 'சேணளவுஞ் சேறலால்' என்றும், அவை செந்நிறமுற்றுப் பெரு மலைபோ லுயர்ந்துவிளங்கலின், செம்பொன்மயமாகிய மேருவேயென் றுரைக்கத்தக் கதாகு மென்பார், 'விரிந்திடு கதிர்சுலா மேரு வாயவே' என்றுங் கூறினர். தெரிந்திடு போர்கள் என்பதற்கு, இடந்தெரிந்து போட்ட போர்கள் என்றுரைப்பினுமாம். மேரு மலைபோன்று பெரும்போர்க ளிட்டன ரென்பதனை— "கொடும்பிறை வடிவிற்செய்த கூனிரும் பங்கை வாங்கி - முடங்குகால் வரிவண் டார்ப்ப முள்ளரைக் கமல நீல - மடங்கவெண் சாலி செந்நெல் வேறுவே றரிந்தீ டாக்கி-நெடுங்களத் தம்பொற் குன் ற நிரையெனப் பெரும்போர் செய்தார்." என வருந் திருவிளையாடற் புராணத்தா னும், "அரிவர் சேர்ப்ப ரடுக்குவர் சிக்கென - வரிவர் சென்னியில் வைப்பர் களஞ் செலப் - புரிவர் பொன்னங் கிரியெனப் போர்செய்வர் - பிரிவர் மீள்வரிப் பெற்றிய ரெங்கணும்" "சிறைசெய் தீம்புன லுட்டிறை செற்றுமுன்-சிறையரிந்த வரைகளைச் சீற்றத்தாற் - சிறைசெ யக்கரு தித்தன் னிலத்தொரு - சிறைவைத் தாலெனப் போர்கள் சிறக்குமால்" எனவருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க.

இச்செய்யுளால் விளைந்த பயிரின் மிகுதியைக் கூறியதாகும். (உஉ)

ஏற்றொடு பகட்டின மிசைத்துப் போருரு
மாற்றினர் வலமுறை திரித்து வாழ்த்தொலி
சாற்றினர் பரனொடு தமது தெய்வதம்
போற்றினர் மீமிசை பொலிகென் றோதுவார்.

(இ-ள்.) (உழவர்கள்) அந்நெற்போரி னுருவத்தைக் கலைத்து எருதுகளோடு எருமைக்கடா வினங்களையுஞ் சேர்த்துப் பூட்டி, வலமுறையாகச் சூழ்வித்து வாழ்த்தொலி கூறிச் சிவபெருமானையுந் தங்கள் கடவுளாகிய இந்திரனையுந் துதித்தவர்க ளாய் (இந் நெற்குவைகள்) மேலுமேலும் விருத்தியாகுக வென்று கூறுவார்கள்.எ-று.

போரடிப்பவர்கள் போரைச் சரித்துக் கடாக்களைப்பூட்டி வலமுறையாக மிதிப்பித்துச் சீர்ப்படுத்துதல் முறைமையாகலின், 'ஏற்றொடு பகட்டின மிசைத்துப் போருரு-மாற்றினர் வலமுறை திரித்து' என்றும், அக்கால் மங்கலவாழ்த்துக்கூறின் நெல்வள மிகுமென்பது கருத்தாகலின், 'வாழ்த்தொலி சாற்றினர்' என்றும், இகப ரங்களை இனி தறிந்தூட்டு முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானையும், அம் மருத நிலக்கடவுளாகிய இந்திரனையுந் துதிக்கவேண்டிய தின்றியமையாததாகலின், 'பர னொடு தமது தெய்வதம் போற்றினர்' என்றும், வாழ்த்தொலி சாற்றுதலும் தெய்வதம் போற்றுதலும் நெற்போர்ப்பொலிவைக் கருதியேயாகலின், 'மீமிசைப்பொலிகென் றோதுவார்' என்றுங் கூறினர். தமது தெய்வம் என்பதற்கு, தங்கள் குல தெய்வங் களை எனினுமாம். மாற்றினர்-சாற்றினர்-போற்றினர் என்பன முற்றெச்சம். பொலி கென்றோதுவார் என்பது தொகுத்தல் விகாரம். உழவர் என்னுந் தோன்றாவெழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. (உழவர்) இசைத்து - மாற்றி - சாற்றி - போற்றி ஓதுவார் எனக் கூட்டுக.

இச்செய்யுளால் பூமிதேவியும் ஆதிசேடனும் தாங்கப்பெறாது வருந்துதலைக் கண்டு ஆற்றாது உழவர்கள் அப்போர்களைப் பகட்டினங்களால் மாற்றினரென்று கூறி யதாகும். (உஙு)

தொங்கலம் பூமுடித் தொழுவர் போரினை
யங்குறப் படுத்துவை யகற்றி யாக்கிய
பொங்கழிப் பதடிகள் புறத்து வீசியே
யெங்கணு நெற்குவை யியற்று வாரரோ.

(இ-ள்.) அழகிய மலர்மாலையையணிந்த முடியினையுடைய உழவர்கள் நெற்போர்களை அம் மருதநிலத்திற் பொருந்தச்சேர்ப்படுத்து, வைக்கோல்களை நீக்கிச் சேர்த்த தூற்றுத நெற்குவியலிலுள்ள பதர்களைப் புறத்தில் வீசி யொதுக்கி, அவ் வயலிடமெங்கும் நெற்குவியல்களைச் சேர்ப்பார்கள்.—எ-று.

உழவர்கள் களத்தொழில் செய்யுங்கால் மலர்மாலையணிதல் முதலியவற்றை யொழித்துச் செய்தலுண்மையால், ஈண்டுக்கூறியது அவர்கள் சிறப்பிலக்கணங்கருதியெனவறிக. பொங்கழி = தூற்றுத நெல். தொங்கல்-ஆகுபெயர். அரோ-அசைநிலை.

இச்செய்யுளாலும் மேற்கூறிய இருவருக்கும் பெரும்பாரமாயிருந்த பெரும்போரை மாற்றிச் சிறிய பாரமாக்க உழவர்கள் வைக்கோல் முதலியவை மாற்றி நெற்குவையாக்குவாரெனக் கூறியதாகும். (௨௪)

களப்படு கைவலோர் கால்க ளான்முகந்
தளப்புறு நெற்குழா வற்றுண் மன்னவற்
குளப்படு கடன்முறை யுதவி மள்ளருக்
களித்தனர் வேண்டிய தனைய நாட்டுளோர்.

(இ-ள்.) அத்தன்மையாகிய வளப்பமிக்க தொண்டைநாட்டிலுள்ள வேளாண்டலைவர்கள், களத்திலிருக்கின்ற அளவாளிகளால் மரக்கால்களைக்கொண் டளக்கப்பட்ட நெற்குவைகளுள் அரசனுக்குக்கொடுக்கவேண்டிய ஆறிலொருகடைமையை முறைப்படி கொடுத்துப் பின் உழவர்களுக்குவேண்டிய நெற்களைக் கொடுத்தார்கள்.

இல்வாழ்வோன், "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொனென்றாங் - கைம்புலத்தா றோம்ப றலை" என்றபடி, ஐந்தறங்களுஞ் செய்தற்குரியவ னாகலான், தனக்குண்டாகிய விளைவினை ஆறாகப் பகிர்ந்து அரசனுக்கொன்றும் தனக்கைந்துமாகக் கொள்ளவேண்டியது முறைமையாகலான், அவ்வாறே ஆறிலொருகடமை யுதவினரொன்பார், 'மன்னவற் குளப்படு கடன்முறை யுதவி' என்றும், மள்ளர்கள் செய்த களத்தொழிலிற் கிசைந்த படித்தொகைகளை நிரம்பக் கொடுத்தன ரொன்பார், 'மள்ளருக் களித்தனர் வேண்டியது' என்றுங் கூறினர். நாட்டுளோர் மன்னவற்கு உதவி மள்ளருக் களித்தனர் எனக் கூட்டுக.

இச்செய்யுளால் உழவர்கள் வானோக்கிவாழும் இயற்கையுடையராயினும் அரசன் கோனோக்கமன்றி ஒன்றும் அமையாவென்னும் நீதியை யுணர்ந்து அந்நெறியிற் றவறுதவரொன்றுணர்த்த முன்னர் மன்னரளவையைக் கொடுத்துப் பின்னர் மள்ளருக்களித்தனரொன்று கூறியதாகும். (௨௫)

சொற்குவை வழிபடப் புகழிற் றோன்றுந்தம்
மிற்குவை வேண்டுவ தேவி யெஞ்சிய
நெற்குவை குரம்பையி னிரப்பு வித்தனர்
பொற்குவை யிரிந்தனர் பொதிவித் தென்னவே.

(இ-ள்.) (அவ்வேளாண்டலைவர்கள்) புலவர்கூட்டங்களால் துதிக்கப்பெற்ற புகழோடும் விளங்குகின்ற தமதுமாளிகைகளுக்கு அந்நெற்குவைகளில் வேண்டுவன

வற்றைச் செலுத்தி மிகுதியாகிய நெற்குவைக ளனைத்தையும் பொற்றிரள்களை யரிந்துவந்தவர்கள் (அவற்றை) மறைத்து மூடிவைத்ததுபோலக் கூடுகளிற் சேர்த்து நிறைவித்தார்கள்.—எ-று.

"உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா - தெழுவாரை யெல்லாம் பொறுத்து" என்றும், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்-தொழுதுண்டு பின் செல் பவர்" என்றும், "மேழிச் செல்வங் கோழை படாது" என்றுங் கூறிய அருள் வாக்கியப்படி மேழிச்செல்வமே சிறந்தசெல்வமாகலின், அதனையுடைய வேளாண்டலைவர்களை ஆசு-மதுரம்-சித்திரம்-வித்தார மென்னு நாற்கவிப்புலவர்களு நண்ணிப்புகழ்த வியல்பாகலின், 'சொற்குவை வழிபடப் புகழிற்றேன்று தம் இல்' என்றும், தம்மில்லத்திற்கு வேண்டுவனமாத்திரங் கொள்வரென்பார், 'வேண்டுவ தேவி' என்றும், எஞ்சியவற்றைக் கூடுகளி னிரப்பிப் பொன்னேபோற் பொதிந்து காப்பரென்பார், 'பொற்குவை யரிந்தனர் பொதிவித் தென்ன எஞ்சிய நெற்குவை குரம்பையினிரப்பு வித்தனர்' என்றுங் கூறினார். சொல் என்பது ஆகுபெயராய் அதனை யுணர்ந்த புலவர்களை யுணர்த்திற்று. உவை-பன்மைச்சுட்டு. மேலைச்செய்யுளிலுள்ள 'நாட்டுளோர்' என்னுமெழுவாய் ஈண்டுவருவித்துப் பொருள்கூறப்பட்டது. நாட்டுளோர் வேண்டுவது ஏவிக்குரம்பையி னிரப்புவித்தனர், எனக் கூட்டுக.

இச்செய்யுளால் அரசனுக்கும் ஏவலாளிகளுக்கும் அளவறிந்து கொடுத்தவைபோக நின்றவற்றுள் இல்லறவியல் நடத்த அளவிட்டுக்கொடுத்து எஞ்சியவற்றைப்பொன்னிலுஞ் சிறந்து காத்தாரென்று கூறியதாகும்.

எற்றொடு என்னுஞ் செய்யுள்முதல் இச்செய்யுள்காறும் விளைந்த பயிரை நெற்குவையாக்கிய வகையையும், அக்குவையை அரசன் முதலாயினருக்கு வகுத்த வகையையும், பின் தம்மில்லிற்கு அளவிட்டுக்கொடுத்த வகையையும், இந்நிலை என்றுங் குன்றாதிருக்க வமைத்துக்கொண்ட சேமநிலையையுங் கூறியவாறாகும். (உசு)

தலத்திடை வேறிடத் தொதுங்குந் தண்ணிய
குலத்திடைப் பிறந்தவர் கூட்ட மாமென
நலத்திடை வந்திடு முதிரை நல்வள
நிலத்திடை யொருசிறை விளையு நீரவே.

(இ-ள்.) நிலவுலகத்தில் வேறாகிய தனியிடத்தில் ஒதுங்கி வசிக்கும் இழிகுலத்திற்பிறந்த கீழ்மக்களது கூட்டத்தைப்போல, நன்மையாகத்தோன்றிய (துவரை- பயறுமுதலிய) புன்செய்த் தானியங்களாகிய நல்ல வளப்பமிக்க பயிர்வகைகள், அம்மருதநிலத்தில் ஒருபுறத்தில் விளையுந் தன்மையவாயின.—எ-று.

ஊர்ப்புறக் குடிகளாகிய பஞ்சமர் முதலிய கீழ்மக்கள் தீண்டப்பெறாதவர்களாகலின் ஊரினுள்ளே செல்லப்பெறாமல் புறத்திற்றங்கி வசித்தலுண்மையால், தலத்திடைவேறிடத் தொதுங்குந் தண்ணிய - குலத்திடைப் பிறந்தவர் கூட்டம், என்றும், அவ்விழிகுல மாக்களைப்போல முதிரைப்பயிர்கள் நன்செய்ப்புலத்தில் விளைதலின்றி அதன்புறத்துள்ள புன்செய்களில் விளையுந்தன்மைய வாகலின், 'நலத்திடை வந்திடு முதிரைநல்வள - நிலத்திடையொருசிறை விளையுநீரவே' என்றுங்கூறினார்; தண்ணிய குலத்திடைப்பிறந்தவர் வேறிடத்தொதுங்கி வசித்தல்போல முதிரைநல்வளம் ஒருசிறைவிளையுநீர என்க, தண்ணியகுலம் = இழிகுலம் 'நலத்திடைவந்திடு' என்பதற்கு, நன்மைமிக்க யாகாதிகாரியங்களுக்கு மிக்க பிரயோசனமாக வருகின்ற எனப்பொருள் கூறினுமாம். ஆகுமென என்பது, ஆமென எனவந்தது.

ஊர்ப்புறத்திலுள்ள பஞ்சமர் செழித்திருந்தாலன்றி உழவர்சிறப்புற்றிருத்தல் கூடாமைபோல் மருதநிலப்புறத்தில் விளையும் முதிரைமுதலிய பயிர்கள்வளம்பெறவிளைந்தாலன்றி ஏனையதானியம் நிலைபெற்றிராவாகலான், 'நலத்திடைவந்திடு முதிரைநல்வளம்' என்றாரென்னலுமொன்று. இச்செய்யுளால் புன்செய் நிலத்தின் வளத்தைக்கூறியதாகும். (உஎ)

பிறப்பதும் வளர்வதும் பின்னர் மூப்புவந்
திறப்பதும் வைகலு முலகி லேய்ந்தெனச்
சிறப்புட னடுவதும் பருவஞ் செய்வது
மறுப்பதுந் தொகுப்பது முலப்பின் றுயவே.

(இ-ள்.) பிறத்தலும், வளர்தலும், பின்னர் முதுமைப்பருவம்வந்து இறத்தலுமாகிய இவைகள் எப்பொழுதும் உலகத்தில் இயல்பாகவே யமைந்துள்ளவாறுபோன்று (பயிர்களைச்) சிறப்போடு நடுவதும் காலமறிந்து வளர்ப்பதும், அவற்றையரிவதும், போர்களாகக் குவிப்பதுமாகிய வித்தொழில்கள் கெடுதலின்றி மிகுத்தோங்கின.—எ-று.

ஆன்மாக்க ளுலகில் பிறந்து வளர்ந் திறந்தொழிதல் போலப் பயிர்களும் தோன்றி வளர்ந்து அறுபட்டுத் தொகுக்கப்படுமெனவறிக. ஏய்ந்தால் என என்பது, ஏய்ந்தென எனத்தொகுத்தலாயிற்று.

சிவபெருமானுடைய முத்தொழிலும் நீங்காதிருத்தல்போல பயிருக்குரிய நடுதல் முதலியதொழில்களும் நீங்காதிருக்குமென்று இச்செய்யுளால் கூறியதாகும்.

முழவொலி விண்ணவர் முதல்வற் காக்குறும்
விழவொலி கிணையொலி விரும்பு மென்சிறார்
மழவொலி+கடைசியர் வள்ளைப் பாட்டொலி
யுழவொலி யல்கலு முலப்பு றுதவே.

(இ-ள்.) முழவின் ஒலியும், (மருதநிலக்கடவுளாகிய) தேவேந்திரனைக்குறித்துச் செய்யுந் திருவிழாவினொலியும், மருதநிலப்பறையி னொலியும், விரும்புகின்ற மெல்லிய சிறுவர்கள் (சிறுதே ருருட்டுதல் முதலியவற்றா லுண்டாகிய) இளஞ் சொற்களி னொலியும், உழத்தியர்கள்பாடும் வள்ளைப்பாட்டினொலியும், உழவுத்தொழில் செய்தலா லுண்டாகின்ற வொலியும் எந்நாளும் நீங்காதனவா யிருக்கும்.—எ-று.

முழவு—அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமை முழவு, நாண்முழவு, காலைமுழவு என எழுவகைப்படும். அவற்றுள் அகமுழவாவன உத்தமமான மத்தளம் சல்லிகை இடக்கை கரடிகை பேரிகை படகம் குடமுழாவென விவை; "தரித்த மதங்க மத்தளஞ் சல்லி - பெருத்த கரடிகையே பேரி—யுரத்த, படகங் குடமுழவம் பாங்காய வேழு - மடைவே முதற்கருவி யாம்." எனவரும் சுத்தாநந்தப்பிரகாசத்தா னுணர்க. அகப்புறமுழவாவன, மத்திமமான தண்ணுமை, தக்கை, தகுணிச்ச முதலாயின; புறமுழவாவன - அதமக்கருவியான கணப்பறை முதலியன; புறப்புறமுழவாவன-நெய்தற்பறை முதலியன; பண்ணமை முழவாவன, முரசு, நிசாளம், துடுமை திமிலை என்னும் வீரமுழவு நான்குமாம். நாண்முழவாவது, நாட்பறை; அதாவது நாழிகைப்பறை. காலைமுழவாவது துடியென்பது. கிணை = மருதநிலப்பறை. வள்ளைப்பாட்டாவது - உலக்கைப்பாட்டு. அது-சிலப்பதிகாரம், "தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம் - பூங்காஞ்சி நீழல்வைப்பார் புகார்மகளி - ராழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்த்தார்ப் - பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல் - பாவைமா ராரிக்கும் பாடலே பாடல்" என்றிதுபோன்றுவருவன.

"மனையளகு - வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனர் வெள்ளைக் குறட்பா விரி" என்ருர் திருவள்ளுவமாலையினும், முழவொலி முதல் உழவொலி யீருகிய பல்வகை யொலிகளும் என்று நீங்கா நிலைமையான் பெருவள முடையதென்பது பெறப்பட்டமை காண்க.

அந்நிலமாக்கள் தாங்கள் செய்த உழவுத்தொழிலால் விளைந்த பெருஞ்செல்வ நோக்கி களிப்பாடலைச் செய்யத்தொடங்கினு ரென்று இச் செய்யுளாற் கூறியதாகும். (உக)

காலுற நிமிர்ந்திடு காமர் சோலையு
நீலமுங் கமலமு நிறைந்த பொய்கையு
மாலையங் கழனியு மநங்கற் காயுத
சாலைக ளிவையெனச் சாற்ற நின்றவே.

(இ-ள்.) கால்கள் பொருந்த வுயர்ந்திருக்கின்ற அழகிய சோலைகளும், நீலோற்பலமுந் தாமரைகளும் நிறைந்திருக்கின்ற தடாகங்களும், கரும்பையுடைய அழகிய வயல்களு மாகிய இவைகள் மன்மதனுக்கு ஆயுதசாலைக ளென்று சொல்லும்படி நிலத்திருந்தன.—எ-று.

விண்ணளவோங்கும் பெருஞ்சோலையென்பார் 'காலுற நிமிர்ந்திடுகாமர்சோலை' என்றுகூறினுர். மன்மதனுக்குப் பூஞ்சோலை படைவீடும், அங்குள்ள அசோகமலர் மாமலர் முல்லைமலர் தடாகத்துள்ள நீலமலர் கஞ்சமலர் இவைகள் அம்புகளும், வயற்கண்ணுள்ள கரும்பு வில்லும் ஆக வமைந்துவிளங்கலான், "சோலையும் பொய்கையுங் கழனியும் அநங்கற் காயுதசாலைக ளிவையெனச் சாற்றநின்ற' என்ருர். இவற்றை:— "தொடையிலஞ்சிமஞ்சளிளஞ் சோலை படைவீடு, படைமங் கையர்கமுகம் பாளை - யிடிகெவரி, காளாஞ்சி மல்லிகையாங்காரிகையீர் மாரனுக்கு, வாளாமோலைப்பூவுமால்" "ஆலைக் கரும்புசிலை யைங்கணைபூ நாண்சுரும்பு, மாலைக் கிளிபுரவி மாருதந்தேர்—வேலை, கடிமுரசங் கங்குல் களிறுகுயில் காளங் - கொடிமகரந் திங்கள் குடை" "குடைகவித்த நன்கஞ்சங் கோதறுசூ தப்பூ. கடியுமசோ கந்தளவு காவி—படையெடுத்து, வாங்காச் சமர்விளைக்கு மாரனுக்கெப் போதுமங்கை, நீங்காக் கணையாநினை" எனவரும் இரத்தினச்சுருக்கத்தா னுணர்க.

மேற்கூறிவந்த உணவுப்பொருள்களும் சோலை முதலியவைகளும் நிறைந்திருக்குமாயின் அந்நாட்டிலுள்ளார் இம்மையி லனுபவித்தற்குரிய சிற்றின்பத்தைப் பேரின்பமாகவே யனுபவித்தற் குரியவராவா ரென்பது தோன்ற 'அனங்கற் காயுதசாலைகளிவை யெனச் சாற்ற நின்ற' என்று இச் செய்யுளாற் கூறினுர். (௬௦)

நெறியிடை யொழுகலா விழுதை நீரரை
மறலிதன் னகரிடை வருத்தல் போலுமாற்
குறைபடத் துணித்தவண் குவைசெய் கன்னலை
யறைபடு மாலைக ளிடையிட் டாட்டலே.

(இ-ள்.) துண்டாக வெட்டப்பட்ட வளவிய குப்பலாக வுள்ள கருப்பங்கழிகளை அறைத்துப்பிழிகின்ற ஆலைகளி விட்டு ஆட்டுதல் (எதுபோலுமெனின்) நன்மார்க்கத்தில்நடவாத இழிகுணமாக்களை இயமனுனவன் தமது (சயமினி யென்னும்) நகரத்தில் (ஆலையிலிட்டு) வருத்துவதுபோல விளங்கும்.—எ-று.

கருப்பங்கழிகளை ஆலையிலிட் டாட்டுஞ் செயல், தீவினை யுடையோரை இயமன் தன்னகரத்து ஆலையிட்டாட்டன் முதலிய கொடுமைகளைச்செய்து அவர்கள் தீமையை யொழிக்குந்தன்மைபோன்று விளங்குமென்க.

நன்னெறியொழுகி நல்லறப்புரியாக் கீழ்மக்க ளறிவினரோ யென்பார், 'நெறியிடை யொழுகலா விழுதை நீரனா' என்றும், அவர்கட்கே நரகவேதனை யுண்டாமென்பார், 'மறலிதன் னகரிடை வருத்தல்' என்றும், பெருங் கழிகளை யாலையிலிடுதல் கூடாமையின், 'குறைபடத் துணித்த' என்றும், நீர்வளத்தாற் பருத்துச் செழித்துள்ளனவென்பார், 'வண் குவைசெய் கன்னல்' என்றும், அவற்றை நெருக்கிப் பிழியும் நிலைமைய வென்பார், 'அறைபடு மாலைகள்' என்றுங் கூறினர்.

"தாயினும் நல்ல சங்கரன்" என்னுந் தமிழ்வேதப்படி சிவபெருமான் எவ்வுயிர்கட்குந் தாய்போற் றண்ணருள் புரியுந் தலைவனாயிருந்தும் உயிர்கள் நரகவாதனையிற் றுன்புறச் செய்வித்த தன்றோ வெனின், அஃது அவ்வவ் வான்மாக்கள் செய்யுந் தீவினைக் கீடாகத் தண்டித்து அத் தீமையை யொழித்துப் புனிதராக்கற் கமைந்த மறக்கருணையேயாமென்க. இதனை, போற்றிப்பஃறொடை, "நட்டோங்கு, மிந்நிலைமைமானுடருக் கேயன்றியெண்ணிலா, மன்னுயிர்க்குமிந்தவழக்கேயாய்—முன்னுடைய, நாளுள்வாயி லுடல்பிரித்துநல்வினைக்கண், வாளின்மாலா யயனுகி—நீளுகர், வானுடர்கோமுதலாம் வந்தபெரும்பதத்து, நானாவிதத்தா னலம்பெறுநாட்—டான்மாள, வெற்றிக்கடுந்தூதர் வேகத்துடன்வந்து, பற்றித்தம்வெங்குருவின் பாற்காட்ட—விற்றைக்கு, மில்லையோபாவி பிறவாமையென்றெடுத்து, நல்லதோரின்சொனடுவாகச்—சொல்லியிவர், செய்திக்குத் தக்க செயலுறுத்து வீரென்று, வெய்துற்றுணக்கவிடைகொண்டு—மையறருஞ்,செக்கினிடைத்திரிந்துந் தீவாயிலிட்டெரித்துந், தக்கநெருப்புத்தூண்டழுவித்து—மிக்கோங்கு, நாராசங்காய்ச்சிச் செவிமடுத்துநாவரிந்து, மீராவுன் னூனைத்தின் னென்றடித்தும்—பேராம, லங்காழ்நகரத் தழுத்துவித்தும்பின்னுந்தம், வெங்கோபமாறாத வேட்கையரா—யிங்கொருநா, ளெண்ணிமுதற் சாரத வின்னற்கடுநரகம், பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு—முன்னடிக், கண்டுகெடன்கழித்தல் காரியமாமென்றெண்ணிக், கொண்டுவருநோயின் குறிப்பறிவார்—மண்டெரியிற், காய்ச்சிச்சுடவறுக்கக் கண்ணுரிக்கநன்னிதிய, மீய்த்துத்தாய் தந்தைதம ரின்புறுதல்—வாய்த்தநெறி, யோடியதேரின்கீ ழுயிர்போனகன்றாலே, நீடுபெரும்பாவமின்றே நீங்குமென—நாடித்தன், மைந்தனையுமூர்ந்தோன் வழக்கேவழக்காக, நஞ்சனையசிந்தை நமன் றூதர்—வெஞ்சினத்தா, லல்லலுறுத்து மருநரகங்கண்டு நிற்க, **வல்லகருணை மறம் போற்றி**" என வருமாற்றா னுணர்க.

இச்செய்யுள் நரகயாதனை உவமையால் கரும்பினையாட்டுந் தன்மையை விளக்கியவாறாகும். (கூக)

ஏறுகாட் டியதிற லிளைஞ ரெந்திரங்
கூறுகாட் டியகழை யழுங்கக் கோறலுஞ்
சாறுகாட் டியததரோ யாதுந் தம்மிடை
யூறுகாட் டினர்க்கலா லுலோப ரீவரோ.

(இ-ள்.) ஆண் சிங்கம்போலும் வல்லமை பொருந்திய இளைஞர்கள் ஆலையின்கண் துண்டாக வெட்டப்பட்ட கருப்பங்கழி யழுந்தும்படி இட்டு ஆட்டுதலும் (அக்கழி) சாற்றைப் புறத்திற்சிந்தியது ; உலோபர்கள் தம்மிடத்து யாதேனும் சிறிது துன்பஞ் செய்பவர்களுக் கல்லாமல் (அவ்வாறு செய்யாதவர்களுக்குக்) கொடுப்பார்களோ? (கொடார்).—எ-று.

"ஈயார் தேட்டை தீயார் கொள்வர்" என்றபடி தாமுண்ணமலும் பிறர்க்குக் கொடாமலுஞ் சேகரித்துச்சேமித்துவைத்திருக்கு முலோபர்தம்முடைய செல்வ

த்தைக் கள்வர் முதலிய தீயோர் வருத்தப் பறிகொடுத் திழந்து துன்புறுவதுபோலக் கரும்பும் ஆலையிலிட்டாட்டச் சாற்றைப் பொழிதலின் அவ் வுலோபரோ வெமித்துக் கூறினர். "உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங் - கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது, வைத்தீட்டி னரிழப்பர் வான்றோய் மலைநாட, வுய்த்தீட்டுந் தேனீக் கரி" எனவரும் நாலடியா னுமுணர்க. அரோ-அசைநிலை.

இதுவும் உலோபகுணத்தார் உதாரம் தங்களை வருத்துவோரிடத்ததென்று இவ்வுவமையாற் கூறியதாகும். (ருஉ)

மட்டுறு கழையினும் வலிதிற் கொண்டபி
னிட்டகொள் கலங்களி னிருந்த தீம்புன
றொட்டிடு கடலெனத் தோன்று மன்னவை
யட்டதோர் புகைமுகி லளாவிற் றொக்குமே.

(இ-ள்.) அளவாகத் துண்டிக்கப்பட்ட கரும்பினின்றும் (சாற்றினை) வலிதாகக் கொண்டபின்பு, (ஆலையினருகில்) வரிசையாக வைத்துள்ள பாத்திரங்களில் ஊற்றிவைக்கப்பட்ட மதுரம்பொருந்திய அச்சாற்றின் பெருக்குகள் சகரர்களால் தோண்டப்பட்ட கடலைப்போல விளங்கும்; அச்சாற்றின்பெருக்குகளைக் காய்ச்சப்பட்டதனாலுண்டாகிய ஒப்பற்ற பெருப்புகையானது மேகங்கள் நிறைந்திருத்தலை யொத்திருக்கும்.—எ-று.

சகரர்கள் அறுபதினாயிரவரால் அசுவத்தைத் தேடும்பொருட்டுத் தோண்டப்பட்ட கடலாதலின் 'தொட்டிடுகடல்' என்று கூறினர். கலசத்திலுள்ள சாறு கடல் போன்றும் அதனைக் காய்ச்சும் புகை மேகம்போன்றும் விளங்குமென்க.

தீயோருக்கும் உலோபருக்கும் சான்றாய் நின்ற கருப்பாலையின் சிறப்பை இச் செய்யுளாற் கூறியதாகும். (ருரு)

கூடின தேனிசை யிளமென் கோகிலம்
பாடின மயில்சிறைப் பறைய டித்தன
வாடின வஞ்சிதந் தலைய சைத்திடா
நாடின பாதவம் புகழ்வ நாரையே.

(இ-ள்.) வண்டுகள் இசைகூடின; இளமை பொருந்திய மெல்லிய அன்னப்பறவைகள் பாட்டுப்பாடின; மயில்கள் தஞ் சிறகுகளாகிய பறைகளையடித்தன; பூங்கொடிகள் ஆடின; மரக்கிளைகள் தந் தலைகளையசைத்து அவற்றைவிரும்பின; நாரைகள் புகழ்வனவாக விருந்தன.—எ-று.

ஒருவன் நடிக்கத்தொடங்கின் அதற்குப் பாடலும், இசையும், பறையும், தலையசைத்துக் கேட்போரும், புகழ்வோரும் வேண்டுவது அவசியமானவாறுபோல, அஃறிணைப் பொருள்களாகிய தேன்முதல் நாரையீறாக வுள்ள வனைத்தும் இசைகூட்டல் முதலிய தொழில்களைக் குறைவின்றிச் செய்தனவென்க. (ருசு)

காசொடு நித்திலப் பொதியுங் காட்டியே
பாசடை மாதுளை சினையிற் பைங்குயில்
பேசிட நிற்பன பெரீஇயர் வம்மென
வீசுதல் கருதிமே விளித்தல் போன்றவே.

(இ-ள்.) பச்சிலைகளை யுடைய மாதுளைமரங்கள் இரத்தினக்கிழிகளோடு முத்துக்கிழிகளையுங் காட்டிக் கிளைகளில் பசிய குயில்கள் பேசும்படி (உயர்ந்து) நிற்றல் (எதுபோலுமெனின், அவற்றை வேண்டுவோர்க்குக்) கொடுக்கக்கருதிப் பெற வேண்டியவர்கள் வாருங்களென்று அழைத்தலை யொத்திருந்தன.—எ-று.

மாதுளங்கனி விதை செந்நிறமும், காய் விதை வெண்ணிறமு முடையன வாகலின், செந்நிறம் காசுப்பொதியாகவும், வெண்ணிறம் நித்திலப்பொதியாகவு முவமித்துக்கூறினர். வீசுதல் = எறிதல்; அதாவது, சிறிதும் அஞ்சாது விரைந் தீதல். பொதி = முடிச்சு. பொதிகிழி என்பன ஒருபொருட்கிளவி. பொதி-முதனிலைத்தொழி லாகுபெயர். கனிகாய்கள் நிறைந்துள்ள மாதுளை மரங்கள் கிளைகளில் குயிலிருந்து கூவும்படி நிற்றல் தானங்கொடுக்க இரவலரை யழைத்தல்போன்றிருந்தனவென்க.

சித்திரக் கதலிமா வருக்கைத் தீங்கனி
துய்த்திட வரும்பய னுதவுந் தோற்றத்தா
லுத்தம முதலிய குணத்தி னோங்கிய
முத்திறத் தவர்கொடை மொழிய நின்றவே.

(இ-ள்.) அழகிய வாழையும், மாவும், பலாவுமாகிய இவற்றின் மதுரம்பொருந்திய பழங்கள் (யாவரும்) உண்ணும்படி வருகின்ற பயனைத்தருகின்ற காட்சியினால், உத்தமமுதலாகிய முக்குணங்களோடுஞ் சிறந்து விளங்குகின்ற மூவகை வள்ளல்களது ஈகைத்தன்மையை (யொப்பாகச்) சொல்லும்படி நின்றன.—எ-று.

மூவகை வள்ளலாவார்-முதலெழுவள்ளல், இடையெழுவள்ளல், கடையெழுவள்ளலென்பவர்கள். இவருள், முதலெழுவள்ளல் உத்தமகுணத்தோடு வரையாவின்றி யாவர்க்குங் கொடுக்கும் வள்ளற்றன்மைபோல, கதலியும் உண்ண விரும்பியவர்கள் இலேசானே தோலை யுரித்தவுடனே யுண்ணப் பயன்படுந்தன்மையால் அதனை முதலெழுவள்ளலோ டுவமித்தும், இடையெழுவள்ளல் மத்திமகுணத்தோடு தம்பாலடைந் திரந்தோர்க்குக் கொடுக்குந் தன்மைபோல, மாவும் உண்ண விரும்பியவர்கள் சுரிகையா லரிந்து அல்லது கடித்துண்ணப் பயன்படுந் தன்மையால், அதனை இடையெழுவள்ளலோ டுவமித்தும், கடையெழுவள்ளல் அதமகுணத்தோடு தம்மைப் புகழ்வோர்க்குக் கொடுக்குந் தன்மைபோல வருக்கையும் உண்ண விரும்பியவர்கள் சுரிகையால் முட்புறத்தோலை யறுத் தகற்றிப் பிளந்து சுளைகளைச்சூழ்ந்துள்ள நரம்புமுதலியவற்றைக் களைந்தெறிந்தபின்னுண்ணப் பயன்படுந் தன்மையால் கடையெழுவள்ளலோ டுவமித்துங் கூறினர். மூவெழுவள்ளலாவா ரிவரென்பதனை—"மிக்கசெம்பியனே காரி விராடனே நிருதி தானுந்-தக்கதுந் துமாரி தானுஞ் சகரனு நளனுந் தாமுன் - னக்கிரன் சந்தி மானே டந்திமான் சிசுபா லன்னே - வக்கிரன் கன்னன் சந்த னிடைவள்ளல் வகுத்த வாறே" பாரியா யெழிலி நள்ளி பசுந்தொடை மலையன் பேக - னோரியே கடையி லுற்றோ ருறுபொரு டண்டா தீந்தும் - வாரியி லிரந்தோர்க் கிட்டும் வளர்புகழ் துதிக்க வீந்தும் - பேரியல் வைய மெண்ணப் பெற்றனர் முப்பாலாகும்" என வருஞ் சூடாமணி நிகண்டா னுணர்க. பல்வேறுவகைப்பட்ட நிறங்களையு முருவங்களை யுமுடைமையால், 'சித்திரக்கதலி' என்றும், முக்கனிகளில் மதுரமிக்கதென்பார், 'வருக்கைத் தீங்கனி' என்றுங் கூறினர். (ருசு)

வீசுகால் பொரவசை விசும்பிற் றுழைகட
டேசுலாம் பரிதிமெய் தீண்டுஞ் செய்கைய

காசினி தன்கையாற் கலைவெண் டிங்கள்போன்
மாசுறு வகைதுடைத் திடுதென் மானுமே.

(இ-ள்.) வீசுகின்ற காற்றானது மோதுதலால் ஆகாயத்திலுயர்ந்து அசைகின்ற தென்னமரங்கள் ஒளிவிளங்குகின்ற சூரியனது உடலைத் தொடுகின்ற செய்கை யெதுபோலுமெனின், கலைகள் பொருந்திய வெள்ளிய சந்திரனைப்போல அழுக்கடையாவண்ணம் பூமிதேவியானவள் தன்னுடைய கைகளினால் (அச்சூரியனைத்) துடைத்தலை யொத்திருக்கும்.—எ-று.

காற்று சதாகதி யென்னும் பெயரினதாகலின், 'வீசுகால்' என்றும், அது உரத்துத் தாக்குதலின், 'பொர' என்றும், அதுகாரணமாக அவ்வாயுமண்டலத்தையுங் கடந்தோங்கிய தாழைகளசைதலின், 'அசைவிசும்பிற்றாழைகள்' என்றும், முச்சுடரினும் முதற்சுடராய சூரியன் எச்சுடரையுந் தன்னொளியுள் ளடக்கி யோங்கும் பேரொளியினனாதலின், 'தேசுலாம்பரிதி' என்றும், காற்றானசையுந் தென்னமரங்களச்சூரியனைத் தொடுதல் உடற்களங்கத்தையுடைய சந்திரனைப்போலக் களங்குறுவண்ணம் பூமிதேவி தன் கையாற் றுடைத்தல் போன்று விளங்குதலின், 'மெய்தீண்டுஞ் செய்கைய - காசினி தன்கையாற் கலைவெண் டிங்கள்போன் - மாசுறு வகைதுடைத் திடுதென் மானும்' என்றுங் கூறினார். தாழைகள் தீண்டுஞ் செய்கைய காசினி தன் கையால் துடைத்திடுதல் மானும்' எனக் கூட்டுக. (சுஎ)

வாசநீள் பொதும்பரின் மைந்தர் மாதர்கள்
காசுநூன் மேகலை பரியக் கைவளை
பூசலிட் டலமரப் புணருஞ் செய்கைகண்
டாசைமிக் கழுங்குவ பிரிந்த வன்றிலே.

(இ-ள்.) வாசனைமிக்க பூஞ்சோலைகளில் ஆடவர்களும் மங்கையர்களும், இரத்தினநூல்களி னமைக்கப்பட்ட மேகலாபரணம் நெகிழவும், கையிலணிந்த வளையல் ஒன்றோடொன்று தாக்கி யலைந்து சப்திக்கவும் புணர்கின்ற செய்கையைப் பார்த்துத் (தன் துணையைப்) பிரிந்த அன்றிற்பறவைகள் காமமிக்கு வருந்துவனவாகும்.

அன்றிற்பறவைகள்தந் துணையைப் பிரிந் திறையளவேனுந் தனித்துத் தரித்திராத் தன்மையன வாகலின் அவை மைந்தரும் மங்கையரும் புணர்தலைக் கண்டு தந் துணையைச் சிந்தித்து நாமுமிவ்வாறு புணர்தற் கமையவில்லையே யென்று வருந்தினவென்பார், 'ஆசைமிக்கழுங்குவபிரிந்தவன்றில்' என்று கூறினார். அன்றில்-பிரிவாற்றாப்பறவை வர்க்கத்துட் சிறந்தது.

கூடின என்னுஞ் செய்யுள்முதல் இச்செய்யுள்காறும் பறவைகளின் சிறப்பும் பல விருக்கங்களின் சிறப்பும் வியந்து கூறியதாகும். ,, (சுஅ)

கானுலா நந்தன வனமுங் காரொன
வானுலாந் தண்டலை மருங்கும் வைகலும்
வேனிலா னன்னவர் மகளிர் மேயினா
ரூனுலாங் குரம்பையு ளுயிருற் றென்னவே.

(இ-ள்.) நறுமணங்கமழும் நந்தனவனங்களிலும், மேகம்போன்று விண்ணுலகத்தை யளாவிய சோலைகளி னருகிலும் நாள்தோறும் ஊன் அமைந்த உடம்பின்

கண் உயிர் பொருந்தி யிருப்பதுபோல், மன்மதனையொத்த (அழகினையுடைய) புருடர்களும் மாதர்களுங் கலந்திருந்தார்கள்.—எ-று.

பல்வகை மலர்களும் பூத்து மணம்விரியப்பெற்றதாகலின், 'கானுலா நந்தனவனம்' என்றும், செழித்து வளர்ந் தோங்கி யிருக்கப்பெற்ற தாகலின், 'காமன வானுலாந் தண்டலை' என்றும், காமவின்பந் துய்த்தற்கு வசதியாயுள்ளன நந்தனவன முதலியனவே யாகலின், 'நந்தவனமும் தண்டலைமருங்கும் வைகலும் வேனிலா னன்னவர் மகளிர் மேயினர்' என்றும், அவர்கள் உடலு முயிரும்போல நீங்கா துட்னுறை யப்பெற் றின்புற்றிருத்தலின், 'ஊனுலாங் குரம்பையு ளுயிருற் றென்ன' என்றுங் கூறினர். வசந்தகாலம் மன்மதனுக்குரியதாகலின், அவனுக்கு 'வேனிலான்' என்னும் பெயர் வழங்கப்பட்டது.

இச் செய்யுளால் மேற்கூறிய வளமிக்க அச்சோலை காமுகருக்கு அந்தரங்க விடமா யுள்ளதென்று கூறியதாகும். (௩௯)

அசும்புறு மகன்புன லறுத சூழலின்
விசும்புற வோச்சிய விரைமென் றுதினாற்
பசும்பொனிற் குயிற்றிய பதியிற் றூபிகைத்
தசும்பெலாம் வெள்ளிய தாக்குந் தாழையே.

(இ-ள்.) சுரக்கின்ற மிக்க நீர்நீங்காத நல்லிடங்களினின்றும், ஆகாயத்திற் பொருந்தும்படி வீசிய நறுமணங்கமழும் மகரந்தப்பொடிகளினால், அவ்வந் நகரங்களில் பசும்பொன்னினாற் செய்யப்பட்ட ஸ்தூபிகைக் கலசங்க ளனைத்தையும் தாழைகள் வெண்ணிறமாகச்செய்யும்.—எ-று.

மழை இடை விடாது மாதமும்மாரி பெய்யுங் காரணத்தால் சதாகாலமும் சுரப்பு நீர் மிகுதியாகப் பெற்றிருக்குந் தன்மையுண்மையால், 'அசும்புறு மகன்புன லறுத சூழலின்' என்றும், தாழைகள் மடலவிழ்ந்து வீசிய மகரந்தங்கள் விண்ணளவுஞ் சென்று பரவுதலினால், 'விசும்புற வோச்சிய விரைமென் றுதினால்' என்றும், அம் மகரந்தங்கள் பரவிப் படியுங் காரணத்தால் மாளிகைகளின் மேலமைத்துள்ள பசும்பொற் கலசங்களனைத்தும் அப் பொன்னிற நீங்கி வெண்ணிறமுற்று விளங்கலால், 'பசும் பொனிற் குயிற்றிய பதியிற் றூபிகைத்-தசும்பெலாம் வெள்ளிய தாக்குந் தாழை' என்றுங் கூறினர்.

இச்செய்யுளால், மாளிகைகளின்மேலுள்ள பசும்பொற் கலசங்கள் வெண்பொற்கலசங்கள்போன்று விளங்கி, அவற்றை யுடையோர்க்கு வியப்புண்டாகச் செய்யுமென்று கூறியதாகும். (௪0)

உற்றிட வரிதவ னுழவர் நீத்ததார்
சுற்றிடுந் தாண்மிசை யிடறுஞ் சூல்வளை
தெற்றிடும் பூங்கொடி புடைக்குஞ் சேலின
மெற்றிடுந் தேம்பழ மிழுக்குந் தேன்களே.

(இ-ள்.) உழவர்கள் கழற்றியெறிந்த மாலைகள் கால்களில் சுற்றிக்கொள்ளும், சூல்கொண்ட சங்கினங்கள் காலிடறச்செய்யும், பூங்கொடிகள் தடுக்கும், சேற்கெண்டையின் கூட்டங்கள் சுழன்றடிக்கும், மதுரமாகிய பழங்கள் மோதும், தேனி

ன் பெருக்குகள் காலை வழுக்கும்; ஆதலால், அம் மருதநிலவிடங்களில் யாவரும் அடைதற் கருமையாகும்.—எ-று.

உழவர்கள் தமது தொழிற் கிடையூறுயுள்ள காரணத்தால் நீக்கிய மலர்மாலைகள் கயிறுபோன்று வளைந்தும் நீண்டுமிருக்கின்றமையால், 'உழவர் நீத்ததார் தாள்மிசை சுற்றிடும்' என்றும், சங்கினங்கள் அங்கங் குயர்ந்து கற்குண்டுகள் போன்று காலிடறச்செய்தலின், 'இடறுஞ் சூல்வளை' என்றும், பூங்கொடிகள் கயிறுபோலக் கால்களைத் தடுத்தலின், 'தெற்றிடும் பூங்கொடி' என்றும், சேலினங்கள் தாவிப்பாய்தலின், 'புடைக்குஞ் சேலினம்' என்றும், தேம்பழங்களும் சேலினம்போலவே வீழ்ந்து தெறித்துத் தாக்குதலின், 'எற்றிடுந் தேம்பழம்' என்றும், தேன் பெருக்குகள் சேறுபோலக் கால்வழுக்கச்செய்தலின், 'இழுக்குந் தேன்கள்' என்றும், இத்தகைய பல காரணங்களால் அவ்வயலிடங்களில் எவர்களு மடைதற் கருமையாகலின், 'உற்றிட வரிதவண்' என்றுங் கூறினர்.

இச்செய்யுளால் தொண்டைநாட்டிலுள்ள மருதநிலம் அந்நிலமாக்களோடு ஏனைய நில மாக்களாலும் அடைதற்கரிதென்று கூறியதாகும். (சக)

காணிமிர் கந்திகள் கான்ற பாளைமேன்
மீனினம் பாய்தலுஞ் சிதறி வீழ்வுறு
வானதோர் மருதவைப் படையுந் தன்மைய
வானுறு தாரகை வழுக்கிற் றெருக்குமால்.

(இ-ள்.) கால்க ளுயர்ந்திருக்கின்ற கமுகமரங்கள் ஈன்ற பாளைகளின்மேல் சேற்கெண்டையினினங்கள் தாவிவிழவும் அப்பாளைகள் சிதறுண்டு வீழ்ந்து நீர்வளமிக்க வயலிடங்களை யடையுந் தன்மையனவாயிருத்தல் (எதுபோலுமெனின்,) ஆகாயத்திற் பொருந்திய நக்ஷத்திரங்கள் தவறி விழுதலை யொத்திருக்கும்.—எ-று.

மீனினம் பாய்தலால் கமுகம்பாளையி னரும்புகள் சிதறி வீழ்ந்து வயலிடங்களை யடைதல் நக்ஷத்திரங்கள் வழுக்கி வீழ்தல் போன்றிருக்குமென்று கூறியதனால், அவ்வரும்புகள் வெண்ணிறமுடையதென்பதும், அவ்வரும்பையுடைய கமுகமரங்கள் விண்ணளவும் வளர்ந்தோங்கியுள்ளன வென்பதுங் கூறியதாகும். அன்றியும், தாரகைகள் விண்மீன் என்னும் பெயரினவாகலின், அவ் விண்மீன் இம் மண்மீனோடு பொருந்திய நட்பின் றன்மையாலும், அவ் விண்ணகத்திலும், இம் மண்ணகத்துள்ள மருதவைப்பே தாம் குறைவின்றி வசித்தற்குரிய நீர்வளமுடைமையாலும் இங்கு வசித்தற்குக் கருதி வழுக்கி வீழ்ந்தது போன்றிருந்ததெனக் கூறலும் ஒன்று. (சஉ)

மாகுல வல்லியின் மஞ்ஞை யாடல்போற்
கோகில மார்தருக் குழாத்தி னூசன்மேற்
பாகுல வின்சொலார் பனிக்கு மெல்லிடைக்
காகுலம் பிறர்கொள மகிழ்வி னடுவார்.

(இ-ள்.) சிறந்த பூங்கொடியின்மேல் மயில்க ளாடுவதுபோலக், குயில்கள் வசிக்கின்ற மாமரக்கூட்டங்களிற் கட்டிய ஊசல்களின்மேல் பால்போலும் இனிய சொற்களையுடைய மாதர்கள் துவளுகின்ற மெல்லிய இடையைக்குறித்துப் பிறர் துன்பமுறும்படி சந்தோஷத்தோடும் ஆடுவார்கள்.—எ-று.

நறுமலர்பொலியும் பூங்கொடியென்பார், 'மாகுலவல்லி' என்றும், குயிற்றொகுதிகள் சிறந்து வசித்தற்குரியன மாந்தருக்களென்பார்,'கோகிலமார்தருக்குழாம்' என்றும், பால்போலு மினிமையுந் தெளிவு முடைய சொல்லினரென்பார், 'பாகுலவின்சொலார்' என்றும், அத்தன்மைய சொற்களையுடைய மாதர்களாதலின் இடைதுவளுந்தன்மையால், அதனைக் காண்போரும் அம்மாதர்கட்குரிய நாயகர்களும் வருந்துவரென்பார்' 'பனிக்கு மெல்லிடைக் காகுலம் பிறர்கொள' என்றும், அவ்வாறு அவர்கள் வருந்தினும் தங்கட்குச் சிறிதுந் துன்பின்றி மகிழ்ந்தாவரென்பார், 'மகிழ்விணுவோர்' என்றுங் கூறினார். (சரு)

## வேறு.

ஊச லுற்றவர் குழைக்குடைந் திடுதலா லுவளை
வீச லொப்பன வாடுதல் கிளிமொழி வெருவிப்
பேச லொப்பன வீழ்ந்திலர் பிழைத்ததீ தென்று
வேச லொப்பன கோகிலப் பறவைக ளிசைத்தல்.

(இ-ள்.) ஊசல்கள் ஆடுதல் (எதுபோலுமெனின்) தம்மேலேறி யாடுகின்ற மாதர்களுடைய செவிகளுக்கு (ஒப்பாகாமல்) தோற்ற தன்மையினால், அம் மாதர்களை வீசுதலை யொத்திருக்கின்றன; கிளிகள் சொல்லும் சொற்கள் (அவ்வாறு எறிதலைக்கண்டு) பயந்துபேசுதலை யொத்திருக்கின்றன; குயிற்பறவைகள் பேசுதல் (அம்மாதர்கள் அவ்வீசுதலினால்) கீழே விழாதவர்களாய்ப் பிழைத்திருத்தல் ஈதென்ன வியப்பென்று அவர்களை இகழ்தலை யொத்திருக்கின்றன.—எ-று.

"காதிற்கு வள்ளை-ஒப்பரிய கத்தரிகை யூசலாம்" என்றபடி காதிற்கு உவமிக்கப்படு பொருள்களில் ஒன்றாகவுள்ள ஊசல், மாதர்களது செவிகளுக்குத் தோற்ற காரணத்தால் அவர்களை வீசி யெறிவது போன்று விளங்குதலின், 'ஊச லுற்றவர் குழைக்குடைந் திடுதலா லுவளை-வீச லொப்பன வாடுதல்' என்று கூறினார். வீழ்ந்திலர் பிழைத்த தீது என்பதற்கு, இம்மாதர்கள் விழாமல் பிழைத்ததன்மை தீமையாகும் எனப் பொருள் கூறினுமாம். (சச)

கூர்ப்புக் கொண்டகட் கொடிச்சியர் குளிர்புனங் காப்போ
ரார்ப்புக் கொண்டுகை விசைத்தெறி மணிக்கல்வந் தணையச்
சார்ப்புக் கொண்டதஞ் சிறகரால் விலக்கியத் தடத்துப்
பார்ப்புக் கொண்டுகொண் டெழுவன தோலடிப் பறவை.

(இ-ள்.) குளிர்ந்த வயல்களைக் காக்கின்றவர்களாகிய கூரிய தன்மையைக் கொண்ட கண்களை யுடைய உழத்தியர்கள் ஆரவாரித் தெழுந்து தங் கைகளால் வீசியெறிகின்ற மாணிக்கக்கற்கள் வந்தடைதலினால் தோலடிகளையுடைய அன்னப்பறவைகள் சார்பாகக்கொண்ட தமது சிறகுகளினால் அக்கற்களைத் தடுத்து, அத்தடாகங்களிலுள்ள தங் குஞ்சுகளை யணைத்துக்கொண்டு செல்வனவாகும்.—எ-று.

வேல்போற் கூரிய கண்ணினராகலின், 'கூர்ப்புக்கொண்ட கட்கொடிச்சியர்' என்றும், நீங்கா நீர்வளத்தனவாகலின், 'குளிர்புனம்' என்றும், அப் புனங்காப்போர் வளங்களை யழிக்கும் பறவைகளைத் துரத்துங்கால் ஒருவகைப் பேரிரைச்சலுடன் மணிக்கற்களை வீசுதலின், 'ஆர்ப்புக் கொண்டு கை விசைத்தெறி மணிக்கல்' என்றும், அக்கற்களை வீசுதலால் அன்னப்பறவையினங்கள் அவற்றைச் சிறகாற் றடுத்துத் தங்

குஞ்சுகளைத் தூக்கிப் பறந்து செல்லுதலின், 'சார்ப்புக் கொண்டதஞ் சிறகரால் விலக்கியத் தடத்துப்-பார்ப்புக் கொண்டுகொண் டெழுவன தோலடிப் பறவை' என்றுங் கூறினர். சார்பு என்பது சார்ப்பு என விரித்தல் விகாரம் பெற்றது. (சரு)

வேறு.

கடற்பரு கியமுகில் பெய்யுங் காட்சிபோ
லடற்பெரு மேதிக ளனைத்தும் புக்குராய்த்
தடப்புனல் வறிதெனப் பருகித் தம்முலைக்
குடத்திழி பாலினுற் குறையைத் தீர்க்குமே.

(இ-ள்.) கடல் நீரை யுண்ட மேகங்கள் பின் மழை நீரைப் பெய்யுங் காட்சியைப்போல, வலிமைமிக்க பெரிய எருமைக்கடாக்க ளனைத்துஞ் சென்று விழுந்து கலக்கித் தடாகத்துள்ள நீரை யில்லையென்று சொல்லும்படி யுண்டு, தம் மடிகளாகிய குடங்களினின்று மொழுகுகின்ற பாற்பெருக்கினுல் அத்தடாகத்தின் நீர்க்குறையை யொழிக்கும்.—எ-று.

இதனுல், கடநீரைப் பருகிய மேகங்கள் அந்நீரை நன்னீராக்கி அக்கடலுக்குத் தருந்தன்மைபோல, தடாகத்துள்ள நீரை யுண்ட எருமையினங்கள் அந்நீரைப் பானீராகத் தம் மடிவழியே தருமென்றதனுல், அஃறிணையாகிய மேதியினங்களும் கைம்மாறு கருதிச் செய்யுமென்று குறித்ததாகும். (சசு)

பாட்டிய லளிமுரல் பதுமக் கோயிலி
னுட்டிய நிமலன்மு னந்தி நீரிடை
மாட்டிய பல்பெருஞ் சுடரை மானுமாற்
கோட்டுயர் தடந்தொறுங் குவளை பூத்தவே.

(இ-ள்.) கரைகளினுலுயர்ந்திருக்குந் தடாகங்கடோறும் செங்குவளை மலர்கள் பூத்திருக்குங் காட்சியானது, (எதுபோலுமெனின்) பாட்டினியலை யுணர்ந்த வண்டுகள் சூழ்ந்து மொய்க்கின்ற கமலாலயமென்னுந் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுஞ் சிவபெருமான் றிருமுன்னே நமிநந்தியடிகளுயனுர் (திருக்குளத்து) நீரைவார்த்துக் கொளுத்திய பெரிய பல தீபங்களை யொத்திருக்கும்.—எ-று.

பதுமம் என்றதற்கேற்பப் 'பாட்டியலளி,' என்று கூறினர். முத்தமிழ்ப் பாட்டி னியலையுணர்ந்த (மெய்யடியார்களாகிய) வண்டுகள் சூழ்ந்து துதிக்கின்ற கமலாலயம் என்னும் பொருள் விளங்க, 'பாட்டியலளி முரல்பதுமக் கோயில்' என்ருர்.

'நிமலன்முனந்திநீரிடை - மாட்டியபல்பெருஞ்சுடர்' என்பதன் வரலாறு.—சோணுட்டில் ஏமப்பேரூரில் அந்தணர் குலத்திற்பிறந்த நமிநந்தியடிகளுயனுர் திருவாரூருக் கெழுந்தருளி அத்தலத்திலுள்ள அரனெறியப்ப ராலயத்திற் சென்று தரிசனஞ் செய்கையில் அவ்வாலயத்தில் தீபங் குறைவாயிருந்தமை கண்டு மிகுதியுந்தீபம் வைக்கவேண்டுமென்று அன்பு மேற்கொண்டு, அருகிலிருந்த வீடுகளிற் சென்று நெய்கேட்க, அவர்கள் சமணராகையால் உங்கள் கடவுள் கையில் தீயிருக்கையால் வேறு தீபம் வைக்கவேண்டுமென்பது மிகையென்றும், அவ்வாறு தீபம் வைக்கவேண்டுமென்ற கருத்துண்டாயின் இத்திருவாரூர்க் கமலாலய தீர்த்தத்தினீரையே யகலிற்பெய்து விளக்கெரிக்கலாமென்றுமிகழ்ந்துகூற, அதைக்கேட்டு மனம்வருந்திநின்றனர். அப்பொழுது சிவபெருமான் அசரீரிவாக்கான் அன்பனே நீ யஞ்ச

வேண்டா, நீ இத் திருக்குளத்து நீரானே தீபமேற்றலாமென்ன, அவ்வாறே யவ் வாலயத்தி னகல்களிற் பெய்து விளக்கெரித்தனனென்பதாம். (சஎ)

கலனிடைத் தருவதுங் கானத் துள்ளதும்
பொலனுடைப் பொருப்பிடைப் பொருளு மல்லது
நலனுடை நாட்டவர் நயத்த லின்றியந்
நிலனிடைப் பொருள்பகர் வழக்க நீத்ததே.

(இ-ள்.) கப்பல்களிற் கொண்டுவரப்பட்ட கடல்படு பொருள்களும், காட்டிலுள்ளதாகிய காடுபடுபொருள்களும், பொற்சுரங்கங்களையுடைய மலைகளிலுள்ளதாகிய மலைபடுபொருள்களுமேயன்றி, நன்மைமிக்க அந்நாட்டிலுள்ளவர்கள் வேறுபொருள்களை விரும்பி வாங்குத லின்மையினால், நாடுபடுபொருள்களை விற்கின்றவழக்கத்தை அந்நாடு ஒழிந்துள்ளது.—எ-று.

கடல்படுபொருள் ஐந்து,—அவை-ஒக்கோலை, உப்பு, சங்கு, பவளம், முத்து என்பன ; காடுபடுபொருள் ஐந்து,—அவை-அரக்கு, இருல், தேன், நாவி, மயிற்பீலி யென்பன ; மலைபடுபொரு ளைந்து,—அவை-கோட்டம், மிளகு, அகில், தக்கோலம், குங்குமம் என்பன ; நாடுபடுபொரு ளைந்து,—அவை கரும்பு, சிறுபயறு, செந்நெல், செவ்விளநீர், வாழையென்பன. (சஅ)

யாழ்க்கையர் பொருநருக் கிறைவ ரேழிசை
வாழ்க்கைய ரளவையின் வகுத்த பாடலைக்
கேட்குநர் நன்றென மருப்புக் கிம்புரிப்
பூட்கைக ளுதவுவார் பொதுவி றோறுமே.

(இ-ள்.) யாழைக்கையிலுள்ளவர்களும், ஆடலாசிரியர்களும், சப்தசுரங்களும் இனிதுவாழப்பெற்றவர்களு மாகிய சங்கீதவித்துவான்கள் (பாணியின்) அளவைப்படி வகுத்துப் பாடுகின்ற இசைப்பாடல்களைக் கேட்கின்ற பிரபுக்கள் நன்றென்று மதித்து பூண்கட்டப்பட்ட தந்தங்களையுடைய யானைகளைப் பரிசாகச் சபையிடங்கடோறுங் கொடுப்பார்கள்.—எ-று.

நால்வகை யாழினையும் இடைவிடாது வாசித்தலிற் கைதேர்ந்தவர்களென்பார், 'யாழ்க்கையர்' என்றும், பலவிடத்தும் நடித்துத்தேர்ந்தவர்களென்பார், 'பொருநருக்கிறைவர்' என்றும், சப்தசுரங்களுங் குடிகொண்டிருக்கப்பெற்ற கொள்கையினரென்பார், 'ஏழிசைவாழ்க்கையர்' என்றும், அவர்களுக்குப் பரிசாகத்தருவது மதயானைகளேயென்பார், 'மருப்புக்கிம்புரிப் பூட்கைகளுதவுவார்' என்றுங்கூறினர்.

நால்வகையாழ்:—பேரியாழ்-சகோடயாழ்-மகரயாழ் - செங்கோட்டியாழென்பன, இவற்றின் வகையை முன்னர்க் காண்க.

ஏழிசை யாவன :—குரல் - துத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி - தாரம் என்பன. இவையே சப்தசுரமெனவும், வீணையினேழ் நரம்பெனவும் பெயர்பெறும் இவற்றுள், குரலே குரலாயிற் செம்பாலையும், துத்தமே குரலாயிற் படுமலைப்பாலையும், கைக்கிளையே குரலாயிற் செவ்வழிப்பாலையும், உழையே குரலாயின் அரும்பாலையும், இளியே குரலாயிற் கொடிப்பாலையும், விளரியே குரலாயின் விளரிப்பாலையும், தாரமே குரலாயின் மேற்செம்பாலையுமாகும். செம்பாலைக்குப் படுமலைப்பாலையும், படுமலைப்பாலைக்குச் செவ்வழிப்பாலையும், செவ்வழிப்பாலைக்கு அரும்பாலையும், அரும்பாலைக்குக் கொடிப்பாலையும், கொடிப்பாலைக்கு விளரிப்பாலையும், விளரிப்பாலைக்கு மேற்செம்பாலையும் வலியன. தாரத்துள் உழையும், உழையுள் குரலும்,

குரலுள் இளியும், இளியுள் துத்தமும், துத்தத்துள் விளரியும், விளரியுள் கைக்கிளையும் பிறப்பதுதகுதி. இவற்றுள் மிடற்ருல் குரலும், நாவிஞல் துத்தமும், அண்ணத்தால் கைக்கிளையும், சிரத்தால் உழையும், நெற்றியால் இளியும், நெஞ்சால் விளரியும், மூக்கால் தாரமும் பிறக்கும்; இவற்றிற்கு மாத்திரை குரல்நான்கு, துத்தம்நான்கு, கைக்கிளைமூன்று, உழை இரண்டு, இளிநான்கு, விளரிமூன்று, தாரம் இரண்டு. இவற்றிற்கோசை வண்டு - கிளி - குதிரை - யானை-குயில் - தேனு - ஆடு. இவற்றினெழுத்து, ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ - ஔ. இவற்றின் மணம்- மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், தாமரை, புன்னை. இவற்றின் சுவை-பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி. இவற்றிற்குத் தலைவர் - விசுவாமித்திரன் - இயமன் - அங்கி - சந்திரன் சூரியன், கௌதமன், காசிபன் என்பவர்களாம். இவற்றை :—குரலேதுத்தங் கைக்கிளையுழையே - யிளியேவிளரிதாரமென்றிவை - யேழும் யாழினிசைக்கெழுநரம்பே" எனவும், "குரல் குரலாயிற் செம்பாலையென்ப" "துத்தங்குரலாகிற் படுமலைப்பாலை" "கைக்கிளை குரலேற் செவ்வழிப்பாலை" "உழைகுரலாகிலரும் பாலையென்ப" "இளிகுரலாகிற் கோடிப்பாலையென்ப" "விளரிகுரலாகின் விளரிப்பாலை" "தாரங்குரலேன்மேற்செம்பாலை" எனவும், "ஆயவையேழும் பாலையவற்றுட் - செம்பாலைக்குப் படுமலைப்பாலை - படுமலைப்பாலைக்குச் செவ்வழிப்பாலை - செவ்வழிப்பாலைக் கரும்பாலையாகும் - அரும்பாலைக்குக் கோடிப்பாலைவலிதே - கோடிப்பாலைக்கு விளரிப்பாலை - விளரிப்பாலைக்கு மேற்செம்பாலை - வலிதென் றுரைத்தனர் வான்றமிழ்ப்புலவர்" எனவும், தாரத்துளுழையு முழையுட் குரலுங்-குரலுளிளியு மிளியுட்டுத்தமுந்-துத்தத்துள் விளரியும் விளரியுட் கைக்கிளையுந்-தம்மிற்பிறக்குந் தகுதியவென்ப" எனவும், "குரலதுமிடற்றிற் றுத்தநாவினிற் - கைக்கிளை யண்ணத்திற் சிரத்திலுழையே - இளிநெற்றியினில் விளரிநெஞ்சினில் - தாரநாசியிற் றம்பிறப்பென்ப" எனவும், "நான்கு நாலு மூன்றுமிரண்டு - நான்கு மூன்றுமிரண்டு மாத்திரை - குரன்முதலாகக் கூறுமென்ப" எனவும், "வேண்டியவண்டுமொண்டகு கிளியுங் - குதிரையும் யானையுங் குயிலுந்தேனுவு-மாடுமென்றிவை யேழிசையென்ப" எனவும், "ஆஈ ஊஏ ஐஓ ஔ வென்-றேழுமேழிசைக் கெய்துமக்கரங்கள்" எனவும், "மௌவன் முல்லை செவ்விணர்க்கடம்பு - வஞ்சிநெய்தல் வனசம் புன்னை - எஞ்சலில்லா வேழிசைமணமே" எனவும், "பாலுந்தேனுங் கிழானுநெய்யு - மேலமும் வாழையு மாதுளங்கனியு - மாகுமேழிசைக் கமைந்தநன்சுவையே" எனவும், "விசுவாமித்திரனியமனங்கி - திங்கள் வெய்யோன் கௌதமன் காசிப - னென்றிவரேழிசைக்கிறைவரென்ப" எனவும் வரும் பிங்கலந்தைச் சூத்திரங்களானுணர்க. (௬௧)

கஞ்சிதேய்ப் புண்டகில் கமழும் பூந்துகில்
வஞ்சிதேய்ப் புண்டன மருங்குலாரடி
பஞ்சிதேய்ப் புண்டன பணியத் தாக்கலாற்
குஞ்சிதேய்ப் புண்டன குமரர் கூட்டமே.

(இ-ள்.) கஞ்சியினுல் தேய்க்கப்பெற்று அகில்மணம்வீசுகின்ற அழகிய ஆடையையணிந்த பூங்கொடிபோலுஞ் சிற்றிடையினையுடைய மாதர்களது கால்கள் செம்பஞ்சின் குழம்பூட்டப்பெற் றுள்ளன, ஆடவர்கள் வணங்க அம்மாதர்கள் உதைத்தலினுல் புருடர் கூட்டங்கள் தலைமயிர்தேய்ப்புண்டன.—எ-று.

மாதராருடலில் ஆடவர் அவர் கான்மலரிற் பணிதலியற்கை; அது ஊடனீங்கும்பொருட்டென்க. அவ்வூடனிகழாமையிற் காமவின்பந் தோன்ருதெனவறிக. இதனை - "ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங் - கூடி முயங்கப்பெறின்" என

வரும் திருக்குறளா லுணர்க. இதுபற்றியே "குளிர்புனமொய்த்திட்ட சாரலிற்போய்ச் சிறு குறவர்மகட்குச் சலாமிடற்கேக்கறுகுமரனே" எனவும், "வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப்-பாதா குறமின்பதசேகரனே" எனவும் ஆன்றோ ரருளிச்செய்தமை யானு மறிக. (௫௦)

அன்றிலம் பெடைகளை யணுகி யன்னைகே
ணன்றென வினையின்மே னடந்த நாயக
ரின்றுவந் திடுவரிங் கெம்பொ ருட்டினா
லொன்றுநீ யிரங்கலென் றுரைக்கின் றார்சிலர்.

(இ-ள்.) அந்நாட்டிலுள்ள சிலமாதர்கள் அழகிய அன்றிற்பேடைகளையடைந்து, தாயே! இதனைக்கேட்பாயாக; நன்றென்றுகருதிவினைவயிற்பிரிந்த தலைவர் இன்றைக்கு இவ்விடத்துவந்துவிடுவார், ஆதலால், எங்கள் நிமித்தமாக நீசிறிதும் வருந்தாதேயென்றுசொல்லுவார்கள்.—எ-று.

போர்வயிற்பிரிந்த தலைமகன் பாசறைநீங்கி வருதல் கார்ப்பருவநோக்கியாகலானும் தேரோசை செய்மையிலேயே கேட்டுக் களிப்பாளாகித் தன்னைக் குறித்து இதுகாறும் வருந்திய அன்றிலைநோக்கி வருந்தாதையென்றாளென்க. (௫௧)

ஆடியல் கருங்கணுஞ் சிவப்புற் றங்கமும்
வாடுவ தாகியே மதன வேர்வுறக்
கூடிய மகளிருங் குமரர் தங்களை
யூடிய மகளிரு முலப்பின் றாயினார்.

(இ-ள்.) இமைக்கு மியல்பினையுடைய கரியகண்களுஞ் செந்நிறமுற்றுத் தேகமும் வாட்டமுறுவதாய் மதனவியர்வையரும்பித் (தங்கள் நாயகரைத்) தழுவுகின்ற மாதர்களும், தங்கள் நாயகரிடத்து ஊடல்கொண்டிருக்கின்ற மாதர்களும் அளவற்றிருந்தார்கள்.—எ-று.

கலவியினை யனுபவிக்கு மாதர்கட்கு விழி சிவத்தலும் தேகம் வாட்டமுறுதலுமியல்பாதலால், 'ஆடியல் கருங்கணுஞ் சிவப்புற் றங்கமும் வாடுவதாகி' என்றார். "வாயிற் சிவப்பை விழிவாங்க மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்கத், தோயக்கலவிய முதளிப்பீர்" எனப் பிறருங் கூறுதல் காண்க. (௫௨)

அகனமர் கணிகைய ரடிகள் சூடியே
முகனுறு முவகையான் முயங்கி யன்னவர்
நகனுறு குறிகொளீஇ நாளுங் காமநூற்
றகைமைசெய் காளையர் தொகுதி சான்றதே.

(இ-ள்.) மனத்தில் விருப்பங்கொண்டிருக்கின்ற விலைமாதர்களுடைய கால்களை (த்தங்கள்தலையில்) வைத்துக்கொண்டு, அவர்கள் முகத்தினிடத்திற் பொருந்திய மகிழ்ச்சியினால் தழுவி, அவ்விலைமாதர்களது நகக்குறிகளைப்பெற்று, எந்நாளும் மதனாகமத்தினது முறைமைப்படி கலவிசெய்தொழுகுகின்ற ஆட்வர்களது கூட்டங்கள் நிரம்பப்பெற்றுள்ளது; (அந்நாடு).—எ-று.

காமநூல் என்றது மதனாகமம், அந்நூல் வல்லாராகிக் கலவியின்பந் துய்க்கின்ற ஆடவரை அந்நாடுடைமையான் 'காமநூற் - றகைமைசெய் காளையர், தொகுதி சான்றதே' என்றார். கொளீஇ - கொண்டு, நகக்குறிகலவியினிகழ்வ தென்பதனை— "முலைமீது கொழுநன்ற னகமேவுகுறியை - முன்செல்வமில்லாத வவர்பெற்றபொருள்போல்" எனப் பிறருங் கூறுதல்காண்க. (௫௩)

வாளைக ளிகல்புரி வயலும் வாவியும்
பாளையொ டுற்பலம் பதும நாறுமால்
வேளயர் தடங்கணா் விரைமென் றாளிணை
காளையர் குஞ்சியுங் கரமு நாறுமால்.

(இ-ள்.) வாளைமீன்கள் (ஒன்றோடொன்று) போர்செய்கின்ற வயல்களிலும் தடாகங்களிலும் பூம்பாளைகளோடு நீலோற்பலமலர்களும் தாமரைமலர்களும் விளங்கும்; மன்மதனும் சோர்வடையத்தக்க விசாலமாகிய கண்களையுடைய மாதர்களது மணம்வீசுகின்ற மெல்லிய இரண்டு கால்களில் புருடர்களது குடுமியும் கைகளும் விளங்கும்.—எ-று.

மாதரார் கண்ணே ஆடவரை வருத்து மியல்புடையதாகலின்,அதனையுடையாரை 'வேளயர் தடங்கணார்' என்றும், அவர் பாதமலரால் ஆடவர் குஞ்சியிலுதைப்ப அவ் வுதைபடச் சிவத்தலால், 'விரைமென் றாளிணை காளையர் குஞ்சி நாறும்' என்றும், கைகளால் அம் மாதர்களது பாதமலரை வருடலால், 'கரமு நாறும்' என்றும் கூறினார். 'வயலும் பாளையொ டுற்பலம் பதும நாறும்' என்றும், வாவியும் பாளையொடுற்பலம் பதும நாறும்' என்றும் பிரித்துப் பொருள் கொள்க. பாளை வயலுக்குக் கூறுங்கால், பதர் என்றும், வாவிக்குக் கூறுங்கால் பூம்பாளை யென்றும் பொருளமைத்துக்கொள்க. 'வாளைகளிகல்புரி' என்பது வயல்-வாவி இரண்டிற்கும்விசேடம்.

சேவக மணைவன கரிகள் சேனைகள்
காவக மணைவன கலைகள் புள்ளினம்
பூவக மணைவன பொறிவண் டாயிடைப்
பாவக மணைவன பாட லாடலே.

(இ-ள்.) அந்நாட்டில், கரிகள் சேவகமணைவன = யானைகள் துயிலுமிடத்தைச் சேர்வன; சேனைகள் சேவகமணைவன=சேனாவீரர் கூட்டங்கள் வீரத்தன்மையைப் பொருந்துவன; கலைகள் காவகமணைவன=சாஸ்திரங்கள் (அறிஞர்களுடைய) பாதுகாக்கத்தக்க மனத்தின்கண் நிலைபெற்றிருப்பன; புள்ளினம் காவகமணைவன= ப்றவைக்கூட்டங்கள் சோலையினிடத்தைப் பொருந்துவன; பொறி பூ அக மணைவன =அஷ்டலக்ஷ்மிகளும் பொலிவினையுடைய வீடுகள்தோறும் வாழ்வார்கள்; வண்டு பூவகமணைவன=வண்டுகள்மலரிடங்களைப்பொருந்துவன;பாடல் பாவகமணைவன= பாடல்கள் பாக்களினுறுப்பைப் பொருந்துவன; ஆடல் பாவகமணைவன=நிருத்தங்கள் அபிநயத்தைப் பொருந்துவனவாம்.—எ-று.

சேவகம் - காவகம் - பூவகம் - பாவகம் என்னுஞ் சொற்களை இருவகைச் சிலேடைப்பொருள் விளங்கவமைத்துக் கூறினார். சேவகம் என்பதைக் கரிகளுக்கு இயைபப்பொருள் கொள்ளுங்கால் துயிலிடம் எனவும்,சேனைகட்குக் கொள்ளுங்கால் வீரம் எனவும், காவகம் என்பதைக் கலைகட்குக் கொள்ளுங்கால் (புலன்களின் வழிய செல்லாமற்) காக்கத்தக்க மனம் எனவும், புள்ளினத்திற்குக் கொள்ளுங்கால் சோலையினிடம் எனவும், பூவகம் என்பதைப் பொறிக்குக்கொள்ளுங்கால் பொலிவினையுடைய வீடுகள் எனவும், வண்டுகளுக்குக் கொள்ளுங்கால் மலர்களினிடம் எனவும், பாவகம் என்பதைப் பாடலுக்குக் கொள்ளுங்கால் பாக்களினிடம்எனவும், ஆடலுக்குக்கொள்ளுங்கால் அபிநயம் எனவும் பொருளமைத்துக் கொள்க. இவ்வாறன்றி, பூவகம் - என்பதற்கு பொறி, வண்டு இரண்டிற்கும் பூவினிடம் என்றே யமைத்துப்

பொருள்கூறுவாருமுளர். அங்ஙனங்கூறின், சிலேடைபொருள்பயவாமையின் அஃது மரபன்றெனவிடுக்க. (நரு)

ஆடக மாமதி லம்பொற் கோபுர
நீடிய மண்டப நெறிகொ ளாவணம்
பாடலொ டாடிடம் பிறவும் பாலிநன்
னாடுள பதிதொறு நண்ணி யோங்குமே.

(இ-ள்.) பொன்மயமாகிய பெரியமதில்களும், அழகிய பொன்னாலாகிய கோபுரங்களும், பெரியமண்டபங்களும், (விசாலமாகிய) வழிகளையுடைய கடைவீதிகளும், பாடகசாலைகளும், நாடகசாலைகளும் மற்றுஞ் சிறந்தவிடங்களும் பாலிநதி சூழ்ந்த நல்ல தொண்டைநாட்டிலுள்ள நகரங்கடோறும் நிலைபெற்றோங்கும்.—எ-று.

ஆடகம்-கிளிச்சிறை-சாதரூபம்-சாம்பூநதமென்னும் பொன்வகை நான்கில் ஆடகமென்பதுமொன்று, பிறவுமென்றது பட்டிமண்ட முதலியன. பாலிநாடென்னாது நன்னாடென்றது “தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடுசான்றோருடைத்து” என்றமை கருதியென்க. (நசு)

தெண்டிரை யுலகினிற் சீர்பெற் றோங்கிய
மண்டல மெங்கணு மதிக்க நின்றமேதார்
தொண்டைநன் னாட்டணி சொல்லி னாமினித்
தண்டமிழ் வளநகர்த் தன்மை கூறுவாம்.

(இ-ள்.) தெள்ளிய அலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த இந்நிலவுலகத்தில் சிறப்புற்றோங்கிய எந்தநாடுகளும் புகழும்படி நிலைபெற்றுள்ளதாகிய ஒப்பற்ற நல்ல தொண்டைவளநாட்டின் சிறப்பைச் சொல்லினோம்; இனி குளிர்ந்த தமிழ்வளம் பொருந்திய காஞ்சிமாநகரத்தினது மேன்மையைச் சொல்லுவோம்.—எ-று.

மண்டலமென்றது, உலகத்தைத் தனித்தனியாகப் பிரித்துப் பல்வேறரசர்களால் அரசாட்சி செய்யப்பெற்ற ஐம்பத்தாறுதேசங்களை; அவர்கள் மதித்தலாவது - சிவராஜதானியாக வுள்ளதும், முத்தித்தலங்களேழனுட் சிறந்ததும், சகலசெல்வங்களும் நிரம்பப்பெற்றிருப்பதுங் கருதிப் புகழ்ந்து கூறுதல். (நஎ)

திருநாட்டுப்படலம்

முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம் - கசசு.

உ

முருகன்றுணை.

# திருநகரப்படலம்.

மாவுல கெங்கு மலர்த்தட மாகத்
தாவறு சீர்புனை தண்டக நாடே
மேவிய கஞ்சம தாவதின் மேவுந்
தேவினை யொத்தது சீர்பெறு காஞ்சி.

(இ-ள்.) பெருமைமிக்க இந்நிலவுலகமனைத்துந் தாமரைத் தடாகமாகவும், கெடாதசிறப்பினையுடையதொண்டைநாடே நிலைபெற்றதாமரைமலராகவும் விளங்கி, சிறப்புப்பொருந்திய காஞ்சிமாநகரமானது அத்தாமரைமலரிற் பொருந்திய பிரமனை யொத்துள்ளது.—எ-று.

இம்மை மறுமைப்பயனை யடைதற்கேதுவாகிய புண்ணிய பூமியாகலின், "மாவுலகு' என்றும், பலவேறுவகையாகிய செல்வங்களு நிரம்பப்பெற்ற சான்றோரினிது வாழுந் திருநாடாகலின், 'தாவறு சீர்புனை தண்டகநாடு' என்றும், திரைமுதலியவற்றாற் சலிப்பினையடையும் நீர்க்கமலம் போலாது என்றும் நிலைபேறுடைமையின், 'மேவிய கஞ்சமதா' என்றும், அக்கஞ்சத்தின்கண்வாழும் பிரமன் நான்கு முகங்களை யுடையவனும், அம்முகங்களின் வழியாக வேதங்களை யோதுந் தன்மையையுடையவனும், சகல கலாவல்லியாகிய சரஸ்வதிவாழும் நன்னுவினை யுடையவனும், சராசரப் பிரபஞ்சங்க ளனைத்தையுஞ் சிருட்டிக்கும் பேராற்றலுடையவனும், ஆன்மநாயகராகிய சிவபெருமானைத் தனதிதய புண்டரீகத் திருத்தித் தியானிக்குஞ் சிந்தனையுடையவனுமாயிருத்தல்போல, இக்காஞ்சித் திருநகரமும் நான்கு திக்குகளினும் நான்கு திருவாயிலை யுடையதும், வேதப்பயனாகிய சதுர்வித புருஷார்த்தங்களும் வெளிப்படுதற் கேதுவாயுள்ளதும், பதினெண்டேசத்து மொழிகளினும் பிறமொழிகளினுந் தேர்ந்து வல்ல அறிஞர்கள் இனிது வாழப்பெறுவதும், அணியாடை முதலிய வெல்லாப்பொருள்களுந் தோன்றி விருத்திசெய்யப் பெறுவதும், அப்பிரமனால் பூசிக்கப்பட்ட சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கப் பெறுவதுமாகிய பெருந்தன்மையுடைமையின், 'அதின் மேவுந் தேவினையொத்தது சீர்பெறுகாஞ்சி' என்றுங் கூறினார். சீர்பெறு காஞ்சி தேவினை யொத்தது, எனக்கூட்டுக. (க)

பூங்கம லத்துறை புங்கவன் மாயோன்
பாங்குறை தேவர்பல் லாண்டிசை பரவ
வோங்கிய புள்ளின மூர்ந்தவ ணுறலா
லாங்கவர் மேவு மரும்பத மாமே.

(இ-ள்.) பொலிவினையுடைய தாமரை மலரில்வாழும் பிரமனும், திருமாலும் தம் பக்கங்களிற் பொருந்தி வசிக்கின்ற மற்றைத்தேவர்கள்வாழ்த்தொலிகூறித் துதிக்கும்படி சிறந்த அன்னமுங் கருடனுமாகிய பறவைகளை யேறிச்செலுத்தி அங்குவருங்

காரணத்தினல் (அக்காஞ்சிநகரம்) அவர்கள் வசிக்கின்ற அருமையாகிய பிரமபதத்தையும் விண்டுபதத்தையும் ஒத்திருக்கும்.—எ-று.

"பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை" என்று கூறுந் தமிழ்வேதப்படி மலர்களுட் சிறந்தது தாமரைமலரே யாகலான், 'பூங்கமலம்' என்றும், அக்கமலத்து வாழும் பிரமன் முதற்றொழிலாகிய சிருட்டித் தலைவனாகலின், 'புங்கவன்' என்றும், திதித்தலைவனாகிய திருமால் மாயாவிசித்திரங்களைப் புரிந்தருளுந் திறத்தினனாகலின், 'மாயோன்' என்றும், இவ்விரு தேவர்களும் திரிமூர்த்திகளுட் சேர்த்தெண்ணப் பட்டவராகலா னிவர்களைச் சூழ்ந்து போற்றிசைத்தல் மற்றைத் தேவர்கட் குரிய கடமையாகலின், 'பாங்குறை தேவர் பல்லாண்டிசைபரவ' என்றும், அவ்விரு வகைத் தேவரையுஞ் சுமக்கும் அன்னமும் கருடனும் பெருநலத்தனவாகலின், 'ஓங்கிய புள்ளினம்' என்றும், அவை அவ்விருதேவர்க்கு முரிய வாகனமாகலினவற்றை யூர்ந்து வந்தமையின், 'ஊர்ந்தவ்வுறுறலால்' என்றும், அவர்கள் வந்துவந்துறையுங் காரணத்தாலவர்கள் வாழும் புண்ணியப்பதவிகளோடுவமைகூறுதல் தக்கதேயாகலின், 'ஆங்கவர்மேவு மரும்பதமாம்' என்றுங் கூறினர். பல்லாண்டு=பல்லூழிகாலம் வாழ்குகவென்று கூறும் மங்கலவாழ்த்து. அது-"மன்னுக தில்லைவளர்க நம்பத்தர்கள் வஞ்சகர்போயகலப் - பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க - வன்னநடைமட வாளுமைகோனடி யோமுக்கருள் புரிந்து - பின்னைப்பிறவி யறுக்கநெறிதந்த பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே." என்றித் தொடக்கத்தனவாகவருந் திருவிருத்தங்கள். (உ)

இன்னிய றேர்தரு மிந்திரன் முதலா
மன்னிய வானவர் மற்றுளர் யாருந்
துன்னின ராயிடை சூழ்ந்துறை செயலாற்
பொன்னக மென்று புகன்றிட லாமால்.

(இ-ள்.) இனிய இலக்கணத்தைத்தேர்ந்துணர்ந்த இந்திரன்முதலாகிய நிலைபெற்ற தேவர்களும் மற்றை யாவரும் அங்கடைந்து சூழ்ந்து வசிக்குஞ் செய்கையினல், (அக்காஞ்சிநகரம்) பொன்னுலகமென்று சொல்லத்தகும்.—எ-று.

ஐந்திரமென்னும் வடமொழிவியாகரணத்தையியற்றிய முதல்வனாகலின், 'இன்னியறேர்தருமிந்திரன்' என்றும், அவ்விந்திரன்முதலிய முப்பத்துமுக்கோடி தேவர்கூட்டங்களுஞ் சேர்ந்துள்ளாராகலின், 'முதலாமன்னியவானவர் மற்றுளர்யாரும்' என்றும், இவர்களனைவரும் தங்கள் பொன்னுலகத்தைவிட்டிஇத்திருப்பதியை யடைந்து சூழ்ந்துறையுங் காரணத்தாலப்பொன்னுலகமே இஃதாமென் றுரைக்கத் தக்கதாகலின், 'துன்னினராயிடை சூழ்ந்துறைசெயலாற் பொன்னகமென்று புகன்றிடலாமால்' என்றுங் கூறினர். (ங)

கின்னரர் சித்தர் கெழீஇயத னலத்
தந்நிக ரில்லவர் தம்பதி போலும்
பன்னக வேந்தர் பராயின ருறலா
லன்னவர் தம்பதி யாகிய தன்றே.

(இ-ள்.) (இக்காஞ்சிநகரமானது) கின்னரர்களும் சித்தர்களும் நெருங்கி வசிக்குங்காரணத்தினல், ஒப்பற்றவர்களாகிய அக்கின்னர சித்தர்கள்வாழுங் கின்னரலோகத்தையுஞ் சித்தலோகத்தையு மொத்திருக்கும்; நாகேந்திரர்கள் (சிவபெருமானைத்) துதித்து வசிக்குங் காரணத்தினல் அவர்கள்வாழும் நாகலோகத்தை யொத்திருக்கும்.—எ-று.

கின்னரர் சித்தர் என்பவர்கள் தேவர்கள் வகுப்பிற் சேர்ந்தவர்கள். நரவுருவமும் குதிரைமுகமுமுடையவராகலின், 'கின்னரர்' என்ருர். கிஞ்சித் நரர் என்பது பொருள். தன்னிகரில்லவர்-தங்களுக்குத் தாங்களே சமானரா யுள்ளவர்கள். செழீஇயது - சொல்லிசையளபெடை. பராயினர்-முற்றெச்சம். (ச)

எண்டிசை காவலர் யாவரு மீண்டப்
பண்டவர் பெற்ற பதங்களை மானு
மண்டல மார்சுடர் மற்றைய வுறலா
லண்டமு மாகிய தப்பதி யென்பார்.

(இ-ள்.) அஷ்டதிக்குப்பாலகர்கள் யாவரும் நெருங்கியிருக்குங் காரணத்தினல் முன்னளில் அத்திக்குப்பாலகர்கள் (சிவபெருமானைப்பூசித்துப்) பெற்றபதவிகளையொத்திருக்கும்; வட்டவடிவாகிய சந்திர சூரியர்கள் முதலிய சுடர்களனைத்துமடைந்து வசிக்குங் காரணத்தினல் இப்பிரமாண்டத்தையு மொத்துள்ளது இக்காஞ்சிநகரம்.—எ-று.

எண்டிசையாவன;—கிழக்கு, தென்கிழக்கு,தெற்கு தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்பன; அத்திசைக்காவலர்கள்:—இந்திரன்- அக்கினி-இயமன்-நிருதி-வருணன்- வாயு - குபேரன் - ஈசான் என்பவர்கள். அவர்கள் சிவபெருமானைப் பூசித்துப் பெற்ற பதங்களாவன:—இந்திரனுலகம், அக்கினியுலகம், இயமனுலகம், நிருதியுலகம், வருணனுலகம், வாயுவினுலகம், குபேரனுலகம், ஈசானனுலகம் என்பன. இவ்வெண்டிசைக்காவலரும் முன்னளில் சிவபெருமானைப் பூசித்து அவரருளால் தத்தமக்குரிய பதங்களைப் பெற்றனராகலின், 'பண்டவர்பெற்ற பதங்கள்' என்றும், அத்திசைக்காவலர்சதா இத்திருப்பதியில் நெருங்கிச் சூழ்தலால், 'பதங்களைமானும்' என்றும், அண்டத்தின் சார்பாயுள்ள சந்திரசூரியர்களும் மற்றைச் சுக்கிரன்முதலிய பிறகோள்களும் அடைந்து சூழ்தலால் இப்பிரமாண்டத்தையே யிந்நகரமொத்தலின் 'மண்டலமார்தரு மற்றையவுறலா - லண்டமுமாகிய தப்பதி' என்றும், இஃது நூல்வழக்கு மான்ருேர்வழக்கு மாகலின், 'என்பார்' என்றுங்கூறினர்.

மேல் மூன்றுசெய்யுட்களால் பிரமலோகமுதல் பலவுலகங்களை யொக்குமெனத் தனித்தனிக்கூறி, இச்செய்யுளால் அவையனைத்து மொருங்கே யமையம்பெற்றுள்ளதாகிய இவ்வண்டத்தையே யொக்குமெனக் கூறிமுடித்தனர். (ரு)

இப்படி யாவரு மெய்திய திறனு
லொப்பன போல வுரைத்திட லொப்போ
வப்பதி யேயத னுக்கிணை யன்றிச்
செப்பரி தாற்பிற சீர்கெழு காஞ்சி.

(இ-ள்.) இவ்வாறு பிரமன்முதலிய தேவர்களனைவரு மடைந்து வசிக்குந் தன்மையினல் (அவ்வவர்கள்வாழும் பதங்களை) ஒத்திருத்தல்போலக் கூறுதல் தகுதியோ? சிறப்பு மிக்க அக்காஞ்சிநகரமானது, அந்நகரமே தனக்கு ஒப்பன்றி வேறு பதிகளை அதனேடு ஒப்புக்கூறுத லரிதாகும்.—எ-று.

பிரமனுதியர் தத்தம்பதங்களைவிட்டு இத்திருப்பதியில் விரும்பி வசிக்குங் காரணத்தா லொருவாறு ஒப்புக்கூறுதல் உபசாரமேயன்றி உண்மையாக விசாரிக்குமிடத்தில் ஒப்பாகாதென்பார் 'ஒப்பனபோல வுரைத்திடலொப்போ' என்றும், தனக்கு ஒப்புமுயர்வும் வேறொன்றெய்தப் பெருத அத்திருப்பதி தனக்குத்தானே யொப்

பன்றி வேறொப்பின்றென்பார், 'அப்பதியே யதனுக்கிணையன்றிச் செப்பரிதால்' என்றும், "ஆதிநாண்முக்கணெம்மா னயன்றனைப் படைத்துவேத - மோதுவித்தருளி னோக்கி யுலகெலாம் படையென்றேவும் - போதிதுபார்த் திவ்வாறு படையெனப்புகன்றுவைத்தா - னீதெனலாகுங்காஞ்சி யென்னுநா யளவைத்தாமே" என்றபடி சிவபெருமானால் பிரமனது சிருட்டிகாரணமாகப் படைக்கப்பட்ட பெருமையினதென்பார், சீர்கெழுகாஞ்சி' என்றுங் கூறினார். (கூ)

மறைமுத லோர்தனி மாவி னிழற்கீ
ழுறைதரு காஞ்சி தனக்குல கெல்லாம்
பெறுமய னாதியர் பெற்றிட வன்னா
னிறுவிய தொன்னக ரோநிக ராமே.

(இ-ள்.) வேதத்திற் கூறும் மூலகாரணராகிய சிவபெருமான் ஒப்பற்ற மாவிருக்ஷத்தின்கீழ் (ஏகாம்பரநாதரென்னுந் திருப்பெயரோடு) எழுந்தருளியிருக்கப்பெற்ற ஸ்ரீ காஞ்சிமாநகரத்திற்கு, உலகமனைத்தையுஞ் சிருட்டிக்கின்ற பிரமன் முதலிய தேவர்கள் பெற்று வாழும்பொருட்டு அவ்வெம்பெருமானால் படைத்துக் கொடுக்கப்பட்ட பழைமையாகிய நகரங்களோ? ஒப்பாகக் கூடியன.—எ-று.

வேதமே மாமரமாகலின், 'ஓர் தனிமா' என்றும், அம்மாவின்கீழ் வீற்றிருந்தருளும் மறைமுதற் பெருங்கடவுளாகிய சிவபெருமான் விருப்புற்று வாழும் காஞ்சித் திருப்பதிக்கு, அயனாதியர் பொருட்டு அவ்வெம்பெருமானால் சிருட்டித்துத் தரப்பட்டபிரமலோகம் விஷ்ணுலோக முதலிய மற்றைய நகரங்களொப்பாகாமையின், 'அயனாதியர் பெற்றிட வன்னா - னிறுவிய தொன்னகரோ நிகராமே' என்றுங் கூறினார்.

வேதமே மாமரமென்பதனை—"மீது மன்னிய மூலமுங் கிழக்குநோக்கு சாகையு மாய்வினா கமழும், பாத வந்தனை யுணர்ந்தவன் வீடு பற்று மாங்கது பலகனிபடைத்துச்-சீத வார்புன லொழுக்கருக் கம்பைத் திருந திக்கரை மருங்கொலி வேதச்-சூத மாமர மெனத்திகழ்ந் தொளிருந் தொல்லை வையகம் பெரும்பயன் படைப்ப" எனவும், "எழிரட்டிய கல்வியு மதன்மேன் மல்லி கைக்கொடியெனப் படர்ந்தமரும், பாழி விச்சைகட் கிறைவியாங் காமக் கண்ணியத்தகு பசுங்கொடிக் கினியா - ளூழியீற்றினு முலப்பருந் தகைசான் றேங்கு மாவினுக் குரிமையம் யாமே, யாழி யேந்திய நாரணன் விரிஞ்ச னரனெனப்படு மன்புடைப் புதல்வீர்" எனவும் வருங் காஞ்சிப் புராணத்தானுணர்க.

சிவபெருமான் தன்னை வழிபட்டுய்ந்த பிரமன்முதலிய தேவர்களுக்கு அமைத்துக் கொடுத்தருளிய சத்திய லோகாதிபதங்கள் அவ் வெம்பெருமான்தானே விரும்பிவீற்றிருந்தருளும் ஸ்ரீ காஞ்சிப்பதிக்கு ஒப்பாகாவென்பது இதனாற் கூறப்பட்டது.

மேயதொல் லூழியில் வேலைக ளேழுந்
தூயத னெல்லை சுலாவுற நிற்ற
லாய பரஞ்சுட ராங்குள தாயு
மாயைகள் சுற்றிய மன்னுயி ரொக்கும்.

(இ-ள்.) மெய்ம்மைபொருந்திய பரஞ்சுடராயுள்ள சிவபெருமான் அதன் மத்தியி லெழுந்தருளியிருந்தும் பழைமையாகிய ஊழிக்காலத்தில் சப்த சமுத்திரங்களுந் தூய்மையாகிய அக்காஞ்சித்திருப்பதியி னெல்லையைச் சூழ்ந்து நிற்றல் (எதுபோலுமெனின்) மாயைகளால் சுற்றப்பட்டிருக்கின்ற நிலைபெற்ற ஆன்மாக்களை யொத்திருக்கும்.—எ-று.

நெடுநாட் கடந்து தோன்றுதலும், அவ்வாறு தோன்றியக்கால், பன்னெடு நாள் நிலைபெற்றிருத்தலு முடைமையின், 'மேயதொல்லூழியில்' என்றும், அவ்வூழியில் சப்த சமுத்திரங்களு மொன்றாய்ப் பொங்கியெழும் பெருவெள்ளமானது உள்ளே புகப்பெறுமல் வேலிபோற் சூழ்ந்து நிற்றலின், 'வேலைகளேழுந் தூயதனெல்லை சுலாவுற நிற்றல்' என்றும், எச்சுடருந் தன்னுள்ளடங்க அவ்வச் சுடர்கட்குக் காரணமாக விளங்கும் பெருஞ்சுடராயுள்ளவர் சிவபெருமானுகலின், 'ஆயபரஞ்சுடர்' என்றுங் கூறினர். தூயவதன் என்பது, தூயதன் எனத் தொகுத்தலாயிற்று.

ஸ்ரீ காஞ்சிப்பதியின்கண் சிவபெருமான் எழுந்தருளியிருந்தும் அதனைப் பிரளய வெள்ளஞ் சூழ்ந்திருத்தல், ஆன்மாக்களுடைய இதய புண்டரீகத்திற் சிவபெருமா னெழுந்தருளியிருந்தும் அவ்வான்மாக்களை மாயைகள் சூழ்ந்திருப்பதுபோலுமென உவமைமுகத்தாற் கூறினர். (அ)

வேறு.

பாழி மால்வரை யெறிதிரை வையகம் பலவும்
வாழு மண்டங்கள் சிற்றுரு வமைந்துவந் தென்னச்
சூழு நேமியம் புள்ளின முதலிய சுருங்கு
மாழி நீத்தம தொத்தது மதிற்புறத் தகழி.

(இ-ள்.) வலிமைமிக்க பெரிய மலைகளும், அலையெறிகின்ற கடல்சூழ்ந்த பலவுலகங்களும் பொருந்திய பலவண்டங்கள் சிற்றுருவங் கொண்டுவந்தாற்போலச் சூழ்ந்துள்ள சக்ரவாகமுதலிய பறவையினங்கள் நெருங்கப்பெற்ற மதிலின்புறத்துள்ள அகழியானது பெரும்புறக்கடலின் வெள்ளத்தை யொத்துள்ளது.—எ-று.

ஒவ்வோரண்டங்களிலும் எண்ணில்கோடிமலைகளும் பலபுவனங்களும் நெருங்கியிருத்தலின், 'பாழிமால்வரையெறிதிரை வையகம்பலவும் - வாழுமண்டங்கள்' என்றும், அத்தகைய அண்டகோடிகள் சிற்றுருக்கொண்டு நெருங்கியிருத்தல்போல, உருண்டைவடிவாகவுள்ள சக்கரவாகப்பறவைகள் அகழியில் மிகுதியாக நெருங்கியிருத்தலின், 'அண்டங்கள் சிற்றுருவமைந்து வந்தென்னச்-சூழு நேமியம்புள்ளின முதலிய சுருங்கும்' என்றும், மதிலைச்சூழ்ந்த அகழியானது சக்ரவாளகிரியைச் சூழ்ந்த பெரும்புறக்கடல்போல் விசாலித்திருத்தலின், 'ஆழிநீத்தம தொத்தது மதிற்புறத்தகழி' என்றுங்கூறினர்.

இத்திருவிருத்தத்திற்கு இவ்வாறு பொருள்கூறுதலன்றி, 'சுருங்கும் நேமியம் புள்ளினமுதலியவை ஆழிநீத்தம தொத்ததாகிய மதிற்புறத்தகழியில், பாழிமால்வரை யெறிதிரைவையகம் பலவும் வாழுமண்டங்கள் சிற்றுருவமைந்து வந்தென்னச் சூழும். என அந்வயித்துக்கூட்டி நேமியம் புள்ளினத்தை யெழுவாயாகக்கொண்டு பொருள்கூறுவாருமுளர். (கூ)

மண்ட லப்பொறை யாற்றுவான் பற்பல வகுத்து
முண்ட காசன பீமிசை யிருந்திடு முதல்வ
னண்ட கோளகை தாங்கவோர் சுவர்த்தல மதுவும்
பண்டு செய்தென வோங்கிய நெடுமதிற் பரப்பு.

(இ-ள்.) தாமரைமலராகிய ஆசனத்தின்கண் வீற்றிருக்கின்ற பிரமதேவன் பூமியாகிய பளுவைத்தாங்கும்படி பற்பல பொருள்களைவகுத்து, பின் அண்டகோளகையைத்தாங்கும்படி ஒரு சுவர்த்தலத்தையும் முன்னளில் சிருஷ்டித்தமைத்ததுபோலநீண்ட மதிலின்பரப்பு ஓங்கியுள்ளது.—எ-று.

பற்பலவாவன:—அஷ்டகுலபருவதங்கள் அஷ்டதிக்கியானைகள், அஷ்டமாநாகங்கள் கூர்மம் முதலியன. அண்டகோளகை - அண்டவுருண்டை. மதிற்பரப்புகள் நூதனமாகச் செய்யப்பட்டதன்றி நெடுங்காலத்திற்குமுன்னரேசெய்யப்பட்டமைந்துள்ளதுபோல உயர்ந்து விளங்கலின், 'பண்டுசெய்தெனவோங்கிய' என்று கூறினர். (கo)

இதனால் இம்மதிற் பரப்பு அளவைக்கடந்து விண்ணூடுருவச் சென்றோங்கியிருத்தலின், அண்டகோளகையைத் தாங்கும்பொருட்டமைக்கப்பட்டனவேயன்றி வேறன்றென அதனுயர்ச்சியைச் சிறப்பித்துக் கூறியதாகும்.

சென்று மூவெயி லழலெழ நகைத்தவன் செழும்பொற்
குன்று தோளுற வாங்கலு முலகெலாங் குலைந்த
வன்று நான்முக னனைத்தையுந் தாங்குகென் றருள
நின்ற தென்னவும் பாதலம் புகுந்துமே னீண்ட.

(இ-ள்.) மேலும்,அம்மதிலானது (போர்செய்யச்) சென்று முப்புரங்களெரியும்படி புன்னகைகொண்டருளிய சிவபெருமான் செழிய மேருமலையை வில்லாகவளைக்கவும், (அதனால்) உலகமனைத்தும் தத்தம் நிலைகலங்கிய அக்காலத்தில் நான்குமுகங்களையுடைய பிரமதேவன் அவ்வுலகனைத்தையுந் தாங்குவாயாக வென்றருள, ஓங்கிநின்றாற்போன்று பாதலவளையிற் புகுந்து மேலுயர்ந்து நீண்டன.—எ-று.

திரிபுரசங்காரத்தின் பொருட்டு மேருமலை வில்லாகவமையவும், அதுகாரணத்தால் உலகம் நிலைகுலையவும் அதனையுணர்ந்த பிரமன் அம்மேருவுக்கிணையாக இச்சுவர்த்தலத்தை யமைத்துத் தாங்கவிடுக்கவும், அது பாதலவளையினாழ்ந்து அண்டமுகடுவளையி னுயர்ந்ததுபோன் றிருந்ததென்க. தாங்குகவென்று என்பது, தாங்குகென்று, எனத் தொகுத்தலாயிற்று. (கக)

மேக நாட்டிற்கும் விஞ்சையர் நாட்டிற்கும் விண்ணோர்
மாக நாட்டிற்கு மலரய னாட்டிற்கு மற்றை
நாக நாட்டிற்கும் பாதல நாட்டிற்கு நணுகிப்
போக நாட்டிய பொன்மதி லானதப் புரிசை.

(இ-ள்.) அம்மதிலரணனது மேகமண்டலத்திற்கும், வித்தியாதர ருலகத்திற்கும், தேவர்கள்வாழும் விண்ணுலகத்திற்கும், பிரமனுலகத்திற்கும், மற்றைய நாகலோகத்திற்கும் பாதலலோகத்திற்கும் அடைந்து செல்லும்பொருட்டு அமைத்துள்ள பொன்மதில்போன் றுள்ளது.—எ-று.

முதலில் மேகமண்டலமும் அதன்மேல் வித்தியாதரருலகமும், அதன்மேல் தேவர்களுலகமும், அதன்மேல் பிரமனுலகமும் ஒன்றன்மேலொன்றாக உயர்ந்திருத்தலானும், கீழே நாகருலகமும், அதன்கீழ்ப் பாதல வுலகமுந் தாழ்ந்திருத்தலானும், இம்மதில், அம்மேலுலகங்களுக்கு ஏறிச்செல்லவும், கீழுலகங்களுக் கிழிந்துசெல்லவுமாக உயர்ந்துந் தாழ்ந்து மிருத்தலின்,அவ்வந்நாட்டிற்குச் சேரபானமுறைப்படி செல்ல நிறுத்தப்பட்ட பொன்மதில்போன் றிருந்ததென்றார்.

இதனால் அம்மதிலின் அஸ்திவாரம் பாதலம்வளையி லாழ்ந்துள்ளதென்பதும், உயரம் எல்லாவுலகங்களையுங் கடந்து மேலோங்கியுள்ளதென்பதுங் கூறியவாறாயிற்று. (கஉ)

முதிரா வண்ணமா நவமணிக் குவையும்வான் முளைக்குங்
கதிரி னெல்லெனும் பொருளுட னெனவுங் காட்டிப்

பொதிவ தாகியே முழுவது நிரம்புதல் பொருந்தா
நிதிய மேயகூ டொத்தது நெடியமா மதிலே.

(இ-ள்.) உயர்ந்த பெரிய மதிலானது நவதானியவண்ணமாகப் பொருந்திய நவரத்தினக்குவைகளையும், ஆகாயத்திற்றோன்றுகின்ற சூரியனொளிபோன்று விளங்கும் பொன்னென்னும் பொருளுடன் மற்றப்பொருள்களையும் விளக்கிப் பொதியப்பெற்றதாய் முழுவதும் நிரம்பப்பெற்றுப் பல்வகைப்பொருள்களும் பொருந்தப்பெற்றுள்ள நிக்ஷேபத்தை யொத்துள்ளது.—எ-று.

முதிரை என்றது புன்செய்ப்பொருளாகிய நவதானியங்களுக்கும் பொதுப்பெயர்; அவை, கோதுமை - பச்சமுது - துவரை - பயறு, கடலை - மொச்சை-எள்-உழுந்து - கொள் என்பன. நவமணியாவன - மாணிக்கம் - முத்து. பவளம்-மரகதம் - புருடராகம் - வச்சிரம் - நீலம் - கோமேதகம் - வைடூரியம் என்பன. நவதானிய நிறம்போல நவமணிகளும் விளங்குதலின் 'முதிரைவண்ணமா நவமணிக்குவையும்' என்றும், பொன்னொளியுங் கதிரொளிபோன்று விளங்கலின், 'வான்முளைக்குங் கதிரினெல்லெனும் பொருள்' என்றும், மதில்கள் நவமணிகளும் பொன்னும் மற்றப்பொருள்களும் முழுவது மமைத்திருக்கப் பெறுதலின், 'பொதிவதாகியே முழுவதுநிரம்புதல் பொருந்தா நிதிய மேயகூடொத்தது' என்றுங் கூறினார். முதிரை யெனவும், கதிரினெல்லெனும் பொருளெனவுங் கூறியதனால், நவதானியங்களும் நெல்லும் பொதிந்தகூடு எனச் சிலேடைப் பொருளுந் தோன்றுமாறு காண்க. (கங)

நிறையும் வார்கடல் சுற்றிய நேமியு நேமிக்
குறையு ளாகிய கணிப்பிலா வண்டமு மொப்ப
சிறையில் வான்கிரி நிரையெனச் செவ்விதிற் கிளர்ந்து
மறுகெ லாந்திகழ் மாளிகைப் பத்திசூழ் மதிலே.

(இ-ள்.) சிறகில்லாத பெரிய மலைவரிசைகளைப் போலச் செப்பமாக வுயர்ந்து வீதிகள் தோறும் விளங்குகின்ற மாளிகை வரிசைகளைச் சூழ்ந்த மதிலானது, நீர் நிறைந்த பெரும்புறக்கடலாற் சூழப்பட்ட சக்கரவாளகிரியையும், அச்சக்கரவாளகிரிக்கிருப்பிடமாகிய அளவில்லாத அண்டங்களையும் ஒத்திருக்கும்.—எ-று.

எல்லாக் கடல்நீரினும் பெருநீருடையதும், சக்ரவாளகிரிக்கப் புறத்தது மாகலின், 'நிறையும் வார்கடல் சுற்றிய நேமியும்' என்றும், அந்நேமி தன்னுள்ளடங்கப்பெற்று உயர்ந்திருத்தலின், 'நேமிக்குறையுளாகிய கணிப்பிலா வண்டமும்' என்றும், அச்சக்ரவாளகிரியும், அதற்குறையுளாகிய அண்டமும் உலகைச்சூழ்ந்து வட்டமாயுயர்ந்திருத்தல்போல இம்மதிலும் இந்நகரத்தை வட்டமாகச் சூழ்ந்துயர்ந்திருத்தலின், 'ஒப்ப' என்றும், இந்நகரத்துள்ள மாளிகைகள் மலைபோலுயர்ந்து வரிசைவரிசையாக விருத்தலின், 'சிறையில் வான்கிரி நிரையெனச் செவ்விதிற்கிளர்ந்து' என்றும், மாளிகைகளைச் சூழ்ந்து மதிலிருத்தல், மலைகளைச் சூழ்ந்து சக்ரவாளமும், அண்டச்சுவரு மிருத்தல் போன்றிருத்தலின், 'மாளிகைப்பத்தி சூழ்மதில் ஒப்ப' என்றும் உவமித்து முடித்துக் கூறினார். (கச)

தடுக்கு மாற்றலர் நால்வகைப் படையொடுஞ் சாய
முடுக்கும் வாள்கொடு விதிர்த்திடு மெழுவினுன் முருக்கு
மெடுக்கு மெற்றிடு மெறிந்திடும் விழுங்கிடு மீர்க்கும்
படுக்குங் கன்மழை சொரிந்திடும் விற்படை பயிலும்.

(இ-ள்.) (மதின்மேலுள்ள பொறிகள் பகைவர்கள் வரவொட்டாமல்) தடுக்கும்; அப்பகைவர்கள் சதுரங்க சேனைகளோடுந் தோற்றோடும்படி துரத்தும்; (அவர்களுக்கெதிரில்) வாளைக்கொண்டு சுழற்றும்; எழுத் தண்டினால் கோபித்தடிக்கும்; அவர்களை மேலே யெடுக்கும், பின்னும் நிலத்தில் மோதும், வீசி எறியும், வாயிலிட்டு விழுங்கும்; (பிடித்துவெளியில்) இழுக்கும்; (அப்பகைவர்களைப்) பின்னுங் கொல்லும்; கல்மழையைச் சிந்தும்; வில்வித்தையைப் பயிற்றும்.—எ-று.

நால்வகைப்படையாவன—இரதம் கஜம் துரகம் பதாதி யென்பன. மேல் திகழும் வெங்கனல் என்னுஞ் செய்யுளிலுள்ள, 'மதின்மேலுறும் பொறிகள்' என்பதனை ஈண்டு எழுவாயாக வருவித்துப் பொருள்கூறப்பட்டது.

பொறிகளென்றது எந்திரங்களை; அவை நகரத்து மதிலின்கண் அமைந்திருந்து பகைவர் முதலியோர் படையெடுத்துவராமல் ஆயுதங்களைப் பயிற்றிக் காத்து நகரத்திற் கழகுசெய்வது, இதனை:—

"நொச்சியுச்சிவேய்ந்துநீண்ட நொச்சியோடுபோர்செய - இச்சையுற்றுமன்னர்வந் ததிர்க்கும் வண்ணமுண்டெனின் - நச்சுமிந்நகர்க்கண்வாழு நல்லவீரர் வேண்டுமோ - மெச்சவெந்திரங்களே விரைந்துபோர்விளைக்குமே"—"வந்துமன்னர்நொச்சிமுற்றின் வார்ந்ததண்டமோச்சியே - எந்திரக்கடாக்களிற் றினங்கதிர்த்ததோடென்-முந்தவோடிமாமடங்கள் முற்றும்வேழமட்டெழும்-குந்தமள்ளர்வாம்பரிக் குலஞ்சவட்டும்வேங்கையே"—"எழுக்கள்கப்பணங்கள்வேலிருப்புலக்கைநாந்தகம்-கழுக்கடைக்குலங்குயங் கதைக்குலங்கலப்பைகள் - மழுக்கள்பிண்டிபாலம்வார்வில் வாளிசூலநேமிகள் - முழுக்கவுய்க்குமோடுநீளு மொய்ம்பினெந்திரங்களே"—"செருப்புகன்றுவந்தமன்னர் சேனைமேலுருக்கிய - விருப்புநீர்கள்செப்புநீர்க ளீயமோடிளைப்பன - நெருப்பினோடுகல்லுலோக நீளிடைச்செலுத்துவ-உருப்பமிக்கயாவுமங்குலப்பிலாதமல்குமே."—எனவரும் விநாயக புராணத்தானுணர்க. (கரு)

உருக்குஞ் செம்பினை வங்கத்தை யிழுதொடு மோச்சும்
வெருக்கொ ணேமிக ளெறிந்திடும் வச்சிரம் வீசி
யிருக்கு நின்றிடுங் குப்புறுஞ் செறுநரை யிகலி
நெருக்குந் தாழ்ந்திடு முலகளந் தோனென நிமிரும்.

(இ-ள்.) உருக்கிய செம்பினையும் ஈயத்தையும் நெய்யோடு காய்ச்சி வீசும்; (யாவரும்) அஞ்சத்தக்க சக்கரங்களையெறியும்; வச்சிரப்படையை வீசிக்கொண்டிருக்கும்; நிற்கும்; அவ்வாறு நின்று குதிக்கும்; பகைவர்களைக் கோபித்து எதிர்க்கும்; சற்றுத்தாழ்ந்து செயலற்றிருக்கும்; இறுமாந்து உலகத்தையளந்த திரிவிக்கிரமனைப் போல வுயர்ந்துவளரும்.—எ-று.

உலகத்தையளந்த திரிவிக்கிரமனென் றுவமைகூறினர், நீண்டமைநோக்கி; மாபலிச்சக்கரவர்த்தி உலகமுழுதுந் தன்னடிப்படுத்து இந்திர திருவனைத்தையுந்தான் கவரக்கருதுகையில் தேவர்கள் திருமாலிடத்துச் சென்று முறையிட, அவர் காசிபனுக்கும் அதிதிக்கும் வாமனத்திருவுருவத்தையுடையமகனாகப் பிறந்து, மாபலி வேள்விசெய்யத் தொடங்குகையில் அவ்வேள்விச்சாலையிற் சென்று மூவடிமண்தானங் கேட்ப, அதற்கு மாபலிகொடுப்பதாகத் துணிகையில்அசுரகுருவாகிய சுக்கிராசிரியர் தடுப்பவும், தான் அதை மேற்கொள்ளாமல் அவருக்கேதானங்கொடுக்க, அவர் திரிவிக்கிரமனாக நீண்டனரென்க. (கசு)

பீடு தங்கிய பணைமுர சியம்பிடும் பிடிக்குங்
கோடு மார்த்திடுந் துடிகளு மொலித்திடுங் கொட்புற்

ருடு மீயுயர் புள்ளேயு மெறிந்திடு மரண்மே
லோடு மீளுமக் கதிரையுந் தடுப்பபோ லுந்தும்.

(இ-ள்.) வலிமைபொருந்திய வேய்ங்குழலையும், முரச வாத்தியத்தையும் முழக்கும்; கையிற்பிடித்த சங்குகளையூதும்; உடுக்குகளையொலிக்க வடிக்கும், சுழன்று ஆடும்; ஆகாயத்தில் உயர்ந்துசெல்கின்ற பறவைகளையும் மோதும், மதிலின்மேலோடிச்செல்லும், சென்று பின்திரும்பும்; ஆகாயத்துலாவும் சந்திரசூரியர்களாகிய அவ்விருகதிர்களையுந் தடுப்பனபோன்று பாயும்.—எ-று.

பீடு-வன்மை; பணை-மூங்கில், அது அதனாலாகிய குழலுக்காயிற்று. கொட்புறல் - சுழலல்; அரண்-நீரரண், நிலவரண், காட்டரண், மதிலரண் என நான்கேனும் ஈண்டரணென்றது மதிலரணை. அக்கதிரென்றது சூரியசந்திரர்களை. (கஎ)

சூலம் வீசிடுந் தோமரம் வீசிடுஞ் சுடர்வே
லாலம் வீசிடுஞ் சுடுமணல் வீசிடு மளப்பில்
சாலம் வீசிநின் றீர்த்திடு மகழியிற் றள்ளுஞ்
சீலம் வீசிய பாரிட மாமெனத் திரியும்.

(இ-ள்.) சூலம் - தோமரம் - விளங்குகின்ற வேல்-ஆலம்- சுடுமணல் இவற்றை யெடுத்துவீசும்; அளவற்ற வலைகளை வீசிநின்று பகைவர்களைப்பற்றி யிழுக்கும்; மீண்டும் அவர்களை அகழியில் விழத்தள்ளும், ஒழுக்கமற்ற பூதத்தைப்போன்று உலாவும்.—எ-று.

ஆலம்=ஓர் ஆயுதம்; சீலம் வீசியபாரிடம் - நல்லொழுக்கத்தை யொழித்த பூதம். (கஅ)

திகழும் வெங்கன லுமிழ்ந்திடு மொன்னலர் செலுத்தும்
பகழி மாரியை விழுங்கிடும் பறவையிற் படரு
மிகழு நாவையு மனத்தையு மெறிந்திடு மென்னாற்
புகழு நீரவன் றம்மதின் மேலுறும் பொறிகள்.

(இ-ள்.) பிரகாசிக்கின்ற வெவ்விய அக்கினியைக்கக்கும்; பகைவர்கள்விடுகின்ற பாணவருஷத்தை விழுங்கும், பறவைகளைப்போலப் பறந்து செல்லும், தம்மையிகழ்ந்து கூறுகின்றவர்களது நாவையும் மனோதிடத்தையும் எறியும்; (ஆதலால்) அம்மதிலின்மேற் பொருந்திய பொறிகளின் சிறப்புக்கள் என்னால் புகழ்ந்துரைக்குந்தன்மையுடையனவல்ல.—எ-று.

பெருமழைபோன்று விடாது அம்பைச் சொரிதலின் 'பகழிமாரி' என்றார்.

பூணி னேர்தரும் பொன்னவாம் புரிசைமேற் புனைந்த
வாணி லாநெடுந் துகிலிகை பெயர்வன மலரோன்
சேணு லாயதீஞ் சுடரொனுங் கோபுர சிகரங்
காண வேபல வெகினமாய்த் தேடல்போற் கவினும்.

(இ-ள்.) இத்தகைய பொறிகள் ஆபரணங்களைப்போன்று அழகுசெய்யப்பெற்றுப் பொன்னுனமைக்கப் பெற்றுள்ள மதிலின்மேல் கட்டிய ஒளிபொருந்திய சந்திரிகையை வீசும் நீண்டவெண்கொடிகள் அசைந்துகொண்டிருக்குந் தோற்றம் (எதுபோலுமெனின்,) பிரமதேவன் ஆகாயத்தி லுயர்ந்தோங்கிய செழிய சுடரொன்று கூறுங் கோபுரத்தின் சிகரத்தைக் காணும்பொருட்டுப் பல அன்னப்பறவைகளாக உருவங்கொண்டு தேடுதல்போல அழகுற்று விளங்கும்.—எ-று.

பிரமன் அவிச்சைவலியால் தானே பிரமமென்று அழலுருவாய் நின்ற சிவபெருமானை யறியாமையாற் பல வன்னவுருவங்கொண்டு இக்கோபுரசிகரமாகிய செஞ்சுடாையுந் தேடுவோனுயினனெனக் கற்பித்துக் கூறினமை காண்க. (௨௦)

ஈர்த்த மாமதி சசியென்ப துலகுளோ ரிட்ட
வார்த்தை யல்லது சரதமோ கடிமதின் மருங்கிற்
றார்த்த கேதன மவன்மணி மேனியிற் றுடக்கப்
போர்த்த வெண்ணிலாக் கஞ்சுகம் பீறிய போலாம்.

(இ-ள்.) குளிர்ச்சிபொருந்திய சந்திரனை முயற்களங்க முடையவனென்று கூறுவது உலகத்தார் இட்டுவழங்கும் கற்பனுவார்த்தையேயன்றி உண்மையாகுமோ? ஆகாது, (மற்றென்னையோவெனின்) காவலமைந்த மதிலின்பக்கத்திலே நெருங்கப் பெற்றுள்ள கொடிகள் அச்சந்திரனது கறுத்த சரீரத்தில்பொருந்தத் தாக்குதலினுல் அவன்மேற் போர்த்துள்ள வெண்ணிலாவாகிய சட்டையானது கிழிந்தனவேயாம்.

தண்ணிய கதிரினையும் சிவபெருமான் திருமுடிமீதிருக்குஞ் சிறப்பினையுமுடையவனுகலின், 'ஈர்த்தமாமதி' என்றும், அச்சந்திரனிடத்து மானுளதென்றும், மற்றும் பலவகைப் பொருளுளதென்று முலகத்தார் கூறுதல்போல, முயற்களங்கமுள்ளானென்று கூறுதல் உலகவழக்கேயன்றி உண்மையன்ருகலின், 'சசியென்பதுலகு ளோரிட்ட வார்த்தையல்லது சரதமோ' என்றும், அதன் உண்மையைவிசாரிக்குமிடத்து, அச்சந்திரன் கறுத்ததேகமுடையவனென்பதும், அவன்தன்மேற்போர்த்துள்ள போர்வையே வெண்ணிலாவை வீசுகின்றதென்பதும், அது இம்மதின்மேற் கட்டிய கொடிகளால் கிழிப்புண்டபோது அவன் தேகத்தின் கருநிறந்தானே விளங்குகின்ற தென்பதும், அவனை 'வெண்கதிர்' முதலிய பல சொற்களாற் சிறப்பித்துக் கூறுதல் உபசாரமேயென்பதுந் தோன்ற 'கடிமதின்மருங்கிற் - றூர்த்தகேதனமவன்மணிமேனியிற்றுடக்கப் - போர்த்தவெண்ணிலாக் கஞ்சுகம் பீறியபோலாம்' என்றுங் கற்பனையாகக் கூறினர். "ஒழுகொளிவிரிந்த கதிர்மணிவண்ண னுந்தியந் தாமரையுறைவோன் - முழுமதிக்கலையு ணிறைந்தபேரழகை மொண்டுகொண்டரிபரந்தகன்ற-மழைமதர்நெடுங்கண்டமயந்திவதனம்வகுத்தனன் கரத்தினுலெடுத்த-புழைவழித்தோன்றும் விசும்பினையன்றே களங்கமென்றின்னமும் புகல்வார்" என்றூர் பிறரும்.

இவ்வாறன்றி, சசி என்பதற்குக் கர்ப்பூரமெனப் பொருள்கூறி, அக்கர்ப்பூரம் போல் வெண்ணிறமுடையனு யிருக்குங் காரணத்தினுல் சசி எனச் சந்திரனுக்குப் பெயர்வந்ததெனக் கூறுவாருமுளர். அவ்வாறு கொள்ளின் கர்ப்பூரம் வெண்ணிறமுடைத்தாயிருத்தல்போலச் சந்திரன் சுத்தவெண்ணிறமுடையனு யிராமல், உடற்களங்கமுடையனு யிருத்தலின் அஃதுாையன் றெனவிடுக்க. சசி=முயற்களங்கமுடையவன். சசம்=முயல்.

இச்செய்யுளில் சந்திரன் கறுத்த சரீரமுடையவனென்றும், அவன் மேற்சட்டையே வெண்ணிறத்த தென்றும், அஃது இக்கொடிதாக்கிப் பீறியதனுல் வெளியாகியதென்றுங் கூறியது உண்மையோவெனின்,அற்றன்று, உபசாரமேயாம்.ஈண்டு, மதிற்கொடிகளின் சிறப்பைக்கூறத் தொடங்கினவர். அக்கொடிகள் சந்திரமண்டலத்தளவு முயர்ந்தோங்கியிருக்கின்றனவென ஓர் காரணவணியாகக் கற்பித்துக்கூறியதேயாம்.

இதனுல் மதிலின் உயர்வு கூறப்பட்டது. (௨௧)

காட்சி மேயவக் கடிமதிற் கதலிகை காணுஉச்
சூட்சி நாடிய பரிதியுங் கீழுறத் தொடர்ந்தான்

மாட்சி தேய்ந்திலன் வரன்முறை மனப்படு மதியோர்
தாட்சி செய்யினு மனையர்பா லணுகுமோ தவறு.

(இ-ள்.) இத்தகைய பலவகைத் தோற்றங்க ளமையப்பெற்ற அந்தக் காவலோடுகூடிய மதிலின்மேற் பொருந்திய கொடிகளைப்பார்த்துத் தந்திரத்தில் வல்ல சூரியனும் அக்கொடிகளின் கீழேநுழைந்து சென்றனன்; அதனால் அவன் தனது பெருமையில் சிறிதுங் குறைவற்றனுயினன், நன்னெறியின் முறைமையினை மனதிற் கொண்டுள்ள பெரியோர் தாங்கள் வணக்கமாக அடங்கி நடந்தாலும் அவர்களிடத்துச் சிறிதுந் தவறுகளுண்டாகுமோ? உண்டாகா.—எ-று.

தாழ்ந்தவர்கள் உயர்வார்களென்றும், உயர்ந்தவர்கள் தாழ்வார்களென்றுங் கூறிய பழமொழிப்படி, சூரியன் கொடிகளின்கீழே நுழைந்து சென்றதனுல் தனக்கொரு குறையு நேராமற் செவ்விதிற் சென்றான். சந்திரன் அவ்வாறு நுழைந்து செல்லாமையால் தனது உடற்கஞ்சுகம் பிறப்பெற்றான். ஆதலால், தாழ்வோர்க்கு ஒரு குறையு மடையாதென்பதும், இறுமாப்பா னுயர்வோர்க்குத் தீங்குண்டா மென்பதுங் குறிப்பித்ததாயிற்று. சூழ்ச்சி-தாழ்ச்சி என்பன, தொடைநோக்கி, சூட்சி-தாட்சி என வந்தன.

மேற்செய்யுளாலும் இச்செய்யுளாலும் சந்திரமண்டலம் கொடியின் சிகரத்துள்ளதென்றும், சூரியமண்டலம் அக்கொடிக்குக் கீழேயுள்ளதென்றுங் கூறியவாறு காண்க. (உஉ)

புடைப ரப்பிய புரிசையி னாற்றிசைப் புறத்துந்
தடநி லைப்பெருங் கோபுர முளதழ னிறத்துக்
கடவு ளுச்சியின் வதனமொன் றின்றியே காண்பா
னடைத லுற்றிடு திசைமுகம் பொருவின வவையே.

(இ-ள்.) இடமகன்ற மதிலின் நான்கு திசைகளினும் விசாலமாகிய பெரிய நிலைகளையுடைய கோபுரங்களுள்ளன; அக்கோபுரங்கள் அக்கினி வண்ணராகிய சிவபெருமானது உச்சியின்கண்ணுள்ள முகமொன்று நீங்க மற்ற நான்கு முகங்களும் இந்நகரைக் காணும்படி வந்த தன்மையை யொத்தன.—எ-று.

அஸ்திவாரமகன்று கனத்து வலிபெற்றுள்ள மதிலென்பார், 'புடைபரப்பிய புரிசை' என்றும், அப்புரிசையைக்கடந்து உள்ளே புகுதற்கு நாற்றிசையிலும் நான்கு பெருநிலைக் கோபுரங்களுள வென்பார், 'நாற்றிசைப் புறத்துந் தடநிலைப் பெருங் கோபுரமுள' என்றும், அவை சூரியமண்டலம் அக்கினிமண்டலம் வரையினுயர்ந்தோங்கிச் செந்நிற முற்றிருத்தலான், தழல்வண்ணராகிய சிவபெருமானது ஐந்து திருமுகங்களுள் நடுமுகமொழிய மற்ற நான்கு திருமுகங்களும் நாற்றிசையினும் நின்று அந்நகரக் காட்சியைக் காண்பானமைந்து தோன்று மாறுபோன்று விளங்குமென்பார், 'தழனிறத்துக் கடவுளுச்சியின் வதனமொன் றின்றியே காண்பா - னடைத லுற்றிடு திசை முகம் பொருவினவவை' என்றுங் கூறினர். 'தழனிறத்துக் கடவுள்' என்பதற்குப் பிரமன் எனப் பொருள்கூறுவாருமுளர், தழல்நிறம்பிரமனுக்கு எந்நூலினுங்கூறாமையான் அஃதுரையன்மை தெளிக. கோபுரமுள அவை திசைமுகம் பொருவின, எனக்கூட்டுக. (உஙு)

என்று மாமதிக் கடவுளும் பிறருமீ ரியல்பாங்
குன்ற மேயெனக் கீழ்த்திசை யதனெடுங் குடபா
னின்ற கோபுரங் கடக்கலர் வாய்தலி னெறியே
சென்று சென்றுபோ யப்புறத் தேகினர் திரிவார்.

(இ-ள்.) சூரியனும், பெருமைவாய்ந்த சந்திரனும், மற்றைக் கோள்களும் உதயாத்தமனங்களுக்கு இடமாகிய உதயகிரி அஸ்தகிரிகளைப்போல, கீழ்த்திசைக் கோபுரத்தையும் மேற்றிசைக் கோபுரத்தையுந் தாண்டிச் செல்லாதவர்களாய் அக்கோபுர வாயிலின் வழியே நுழைந்து நுழைந்து வெளியிற் சென்று திரிவார்கள்.—எ-று.

என்று = சூரியன். ஈரியல்பாங் குன்று = உதயகிரி அஸ்தமனகிரிகள். சூரிய சந்திரர்களும் மற்றைச்சுடர்களுங் கிழக்கே யுதயமாய்க்கீழ்த்திசைக் கோபுரவாயிலின் வழியே நுழைந்து பின் மேற்றிசைக் கோபுரவாயிலின் வழியே புகுந்து சென்று விண்ணிற்படர்ந்து அஸ்தமனகிரியை யடைவார்களென்று கூறியதனால், அவ்விரு திசைக் கோபுரங்களுஞ் சூரியசந்திர மண்டலத்தையுங் கடந்து மேலோங்கி யுள்ளன வென்று கூறியவாறாயிற்று.

மேலைச் செய்யுளில் நாற்றிசையினும் கோபுரங்க ளுளவென்று கூறி, இச் செய்யுளில் அக்கோபுரங்களில் கீழ்த்திசை மேற்றிசைக் கோபுரங்களி னுயர்ச்சியைக் காட்சிப் பிரமாண முகத்தாற்கூறி முடித்தனர். இவ்விரு கோபுரங்களி னுயர்ச்சியைக் கூறவே, மற்றைத் தென்றிசை வடதிசைக் கோபுரங்களி னுயர்ச்சியும் அத்தகை யினவே யென்பது தானே கொள்ளக் கிடந்தமை காண்க. (உச)

தீபு ரத்திடை மடுத்தவ னாணையாற் சிறந்த
மாபு ரத்திடை வான்றொடுங் கடிமதில் வளைப்பி
லாபு ரத்தவாய்க் கிளர்ந்தவே யமைத்தவன் றென்னக்
கோபு ரத்திடைக் கொழுந்துபோ லோங்கிய கொடிகள்.

(இ-ள்.) தமது புன்சிரிப்பாலுண்டாகிய அக்கினியைத் திரிபுரங்களழியச் செலுத்திய சிவபெருமானது ஆக்கினையினால் சிறப்புற்று விளங்குகின்ற பெரிய இக் காஞ்சிநகரத்தின்கண் ஆகாயமளாவிய காவலையுடைய மதிலினிடத்து அந்நகரத்தோ டுண்டாயினவேயன்றி இடையி லேற்படுத்தப்பட்டன வல்லவென்றுகூறும்வண்ணம் கோபுரத்தினிடத்தில் அவற்றின் துளிர்போன்று கொடிகள் உயர்ந்துள்ளன. —எ-று.

பிரமனது சிருட்டி காரணமாகச் சிவபெருமானால் ஆதியில் சிறப்புறப்படைக்கப்பட்ட திருநகரமென்பார், 'தீபுரத்திடைமடுத்தவனாணையாற் சிறந்த மாபுரம்' என்றும், அந்நகரைச் சூழ்ந்த மதில் மலரயனுலகக் கப்புறத்து மோங்கியுள்ளதாகலின், 'வான்றொடுங் கடிமதில்வளைப்பின்' என்றும், அம்மதிலோடமைந்த கோபுரத்தின்மேல் அவற்றின் கொழுந்து போன்றோங்கிய கொடிகள், நகரோடு மதில்கோபுர முதலியவற்றைச் சிவபெருமான் சிருட்டித்த காலத்து அவற்றுடனே இவையுஞ் சிருட்டிக்கப் பட்டனவேயன்றி இடையிற் பிறரா லமைக்கப்பட்டனவன்றாகலி னவற்றின் கொழுந்தே யாகுமென்று கண்டோர் புகழ்ந்துரைக்க விளங்குமென்பார், 'ஆபுரத்தவாய்க் கிளர்ந்தவே யமைத்தவன் றென்னக் - கோபுரத்திடைக் கொழுந்துபோ லோங்கிய கொடிகள்' என்றுங் கூறினார். அமைத்தவன் றென்ன என்பதை, அன்று அமைத்த என்ன, எனப்பிரித்து அக்காலத்துச் சிவபெருமான் சிருட்டித்த தன்மைபோலவே எனப் பொருள்கூறியமைத்துக் கொள்ளினுமாம். ஆபுரத்தவாய் என்பதை, புரத்தவா யாக எனக்கூட்டுக.

இதனால், அந்நகர்க் கோபுரக்கொடிகள் நெடுங்காலமாகவே யுள்ளன வெனவும், அவை அக்கோபுரக் கொழுந்துகளே யாமெனவுங் கூறியதாயிற்று.

இது கோபுரக்கொடிகளின் சிறப்பைக் கூறியதாகும். (உரு)

மாட மாளிகை மண்டபங் கோபுர மறுகிற்
கோடி கோடியின் மேலுமுண் டன்னதார் குணிப்பா
ராடு கேதனத் தளவையு மன்னதே யகல்வா
னூடு போகலா தலமரும் பறவைக் ளொப்ப.

(இ-ள்.) மாடங்களும் மாளிகைகளும், மண்டபங்களும் கோபுரங்களும் ஒவ்வொரு வீதிகளில் கோடா கோடிகளினும் அதிகமாகவே யுள்ளன ; அவற்றை யாவர் கணித்துரைக்க வல்லவர், அகன்ற ஆகாயத்தில் பறந்து செல்லமாட்டாமல் சுழல்கின்ற பறவைகளைப்போல அசைகின்ற கொடித்தொகைகளி னளவும் அவ்வாறளவில்லனவேயாம்.—எ-று.

மாடமாளிகை முதலியன அளவில்லனவாய்ப் பெருகி நெருங்கியிருத்தலின், எத்தகையராலுங் கணக்கிட்டுரைப்பக் கூடாமையின், 'அன்னதார் குணிப்பார்' என்றும், கொடிகளு மவ்வாறே மிகுதியாகப் பெருகி ஆகாயத்திற் பறந்து செல்லாப் பறவைகள் போன்று கட்டப்பட்ட அவ்வவ்விடங்களிலேயே சுழன்றிருத்தலின், ஆடு கேதனத் தளவையு மன்னதே யகல்வா-னூடு போகலாதலமரும் பறவைகளொப்ப' என்றுங் கூறினர்.

இது, கொடிகளின் மிகுதியையும் அவை காற்றுலசையுங் காட்சியையுங் கூறியதாகும். (உசு)

சிகர மால்வரை யன்னமா ளிகைதொறுஞ் சிவணு
மகர தோரண மாடிகள் பலவுற வயங்க
விகலும் வெய்யகோ ளிரண்டுமா யொருவடி வெய்தி
யகல்வி சும்பிடைக் கதிர்களின் புறமறைத் தனைய.

(இ-ள்.) சிகரங்களையுடைய பெரிய மலைகள் போன்ற மாளிகைகள்தோறுங் கட்டியுள்ள மகரதோரணங்கள் பல நிறக்கண்ணாடிகளிற் பொருந்த விளங்குதல் (எது போலுமெனின்) பகைக்கின்ற கொடிய இராகுகேதுக்களிரண்டும் ஒரு வடிவங் கொண்டு பெரிய ஆகாயத்தில் (சந்திர சூரியர்களென்னும்) இரு சுடர்களின் புறத்தை மறைத்த தன்மையை யொத்திருக்கும்.—எ-று.

மாளிகைகடோறுங் கட்டிய மகர தோரணங்கள் ஒருருவங்கொண்ட இராகு கேதுக்களாகவும், அவை பல நிறக்கண்ணாடிகளிற் பிரதிபிம்பப் படுங்கால், செந்நிறக் கண்ணாடியிற் படிதல் சூரியன் புறத்தைக் கேதுக்கோள் மறைத்தல் போலவும், வெண்ணிறக் கண்ணாடியிற் படிதல் சந்திரன் புறத்தை இராகுக்கோள் மறைத்தல்போலவும் விளங்குமென உவமித்துக் கூறினர்.

இது மாளிகைகளிற் கட்டிய மகரதோரணச்சிறப்பைக் கூறியதாகும்.(உஎ)

செம்பொ னிற்புரி நிலையுடைத் திகிரிபந் தேர்க
ளம்ப ரத்திடை வசியுற வீற்றுவீற் றுருகுந்
தம்ப முற்றல மருவன செய்யகோற் றலையிற்
பம்ப ரத்துருத் திரிப்புறக் கறங்கிய படிய.

(இ-ள்.) பசும்பொன்னினாற் செய்த பல அடுக்குகளையுடைய சுழற்றேர்கள் ஆகாயத்தில் தம் நுனிபொருந்த வெவ்வேறாகிய பல ஸ்தம்பங்களையடைந்து சுழன்று கொண்டிருத்தல் (எது போலுமெனின்,) செப்பமாகிய கோல்களி னுச்சியிலே பம்பரத்தி னுருவத்தைச் சுழற்ற, அவை சுழன்று கொண்டிருக்குந் தன்மையை யொத்துள்ளன.—எ-று.

சுழற்றேர்கள் மாளிகைகள்தோறும் பலவகைத் தம்பங்களி னுச்சியிற்கூர்மைபொருந்தச் சுழன்றுகொண்டிருத்தல் கோலினுச்சியிற் பம்பரஞ் சுழன்றுகொண்டிருக்குந் தன்மையை யொக்குமென்று கூறியதனுல், தம்பங்கோலாகவும், அத்தம்பத்தின்மேற்சுழலுந் திகிரியந்தேர் பம்பரத்துருவமாகவும், அத்தேர்ச்சுழற்சி பம்பரச்சுழற்சியாகவும் உவமைகூறப்பட்டது. வீற்றுவீற்ருகுந்தம்பமாவன - பொன்வெள்ளி முதலியவற்ருனமைத்த பன்னிறத்தம்பங்கள். திரித்தல்=நாற்றிசைகளினுஞ் சுழலச்செய்தல். இது மாளிகைகடோறுங் கட்டப்பட்டு இரவும்பகலுமாகச் சுழன்றுகொண்டிருக்கும் ஒருவகைச்சுழற்றேர். இஃது காற்றினு லசைக்கப்பட்டுச் சுழலுதலின், மரக்காற்ருடியெனவும், இராட்டினமெனவும் வழங்கும். கறங்கோலையென்பது மிதுவே "கறங்கோலைபோல்வ தோர் காயப்பிறப்போடிறப்பு" என்ருர், ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகளும்.

இது சுழற்றேரின் சிறப்புக் கூறியதாகும். (உஅ)

பளிங்கி னுற்செய்த தெற்றியின் றலைமிசைப் பனிதோய்
வளங்கொ ணித்திலஞ் செம்மணி குயிற்றிய வைப்பிற்
றுளங்க நாற்றிய பொன்மணிப் பாலிகை தொகுவ
குளங்கொ டாமரை மலர்ப்பொகுட் டாயின குறிக்கின்.

(இ-ள்.) பளிங்குக்கற்களினுற் செய்யப்பட்ட திண்ணைகளின்மேல் குளிர்ச்சியும் வளப்பமுந்தங்கிய முத்துக்களும் மாணிக்கங்களும் பதிக்கப்பட்ட இடங்களின்மேல் விளங்கும்படி நிறுத்திய பொன்னுலாகிய அழகிய பாலிகைகள் சேர்ந்திருத்தல், ஆலோசிக்குமிடத்து, தடாகத்திற் பூத்த தாமரைமலரினது பொகுட்டையொத்திருக்கும்.—எ-று.

பளிங்குக்கற்படுத்த திண்ணையே தடாகமாகவும், அதன்கண் முத்தினையும் மாணிக்கத்தையும் பதித்திருத்தல் வெண்டாமரை செந்தாமரைமலர்களாகவும், ஆங்கு மணிப்பாலிகைதொகுவன மலர்ப்பொகுட்டாகவும் உருவகப்படுத்திக் கூறினர். (உகூ)

ஓவி யத்தியன் மாகதத் தலத்தின தும்பர்த்
தாவி லாடகத் தலமிசை நித்திலத் தலமேற்
கோவ்வை பட்டசெம் மணித்தலம் பொலிதலாற் கொண்மூ
மூவ கைக்கதிர் வியலிடந் தெரிப்பதம் மூதூர்.

(இ-ள்.) சித்திரங்கள்பொருந்திய மரகதநிலையின்மேல் கெடுதலற்ற பொன்னிலையும், அதன்மேல் முத்துக்களாலாகிய நிலையும், அதன்மேல் வரிசையாயமைக்கப்பட்டுள்ள மாணிக்கநிலையும் விளங்குதலால், அவை மேகமண்டலமும், சூரியமண்டலமும் சந்திரமண்டலமும் அக்கினிமண்டலமும் ஒன்றின்மேலொன்ருக இருக்குந்தன்மையை அப்புராதனநகரமானது காட்டுகின்றதாகும்.—எ-று.

மரகதத்தலத்தை மேகமண்டலமாகவும், ஆடகத்தலத்தைச் சூரியமண்டலமாகவும், நித்திலத்தலத்தைச் சந்திரமண்டலமாகவும், செம்மணித்தலத்தை அக்கினிமண்டலமாகவும் உருவகஞ்செய்து அவை முறையே ஒன்றற்கொன்று உயர்ந்துள்ளனவென்பதையுங் குறித்தவாறு காண்க. (௩௰)

கன்னல் வேளெனு மைந்தரு மாதருங் கலந்து
மன்னு நித்தில மாளிகைப் பத்தியின் மாடே
பொன்ன வாஞ்சிறை மணிமுயிற் குழாத்தொடும் போகு
மன்ன மாமதி முகிலிடை நுழைந்துபோ யனைய.

(இ-ள்.) கரும்புவில்லினையுடைய மன்மதனென்று சொல்லத்தக்க (அழகினையுடைய) வாலிபர்களும், மாதர்களுங்கூடி வசிக்கின்ற நிலைபெற்ற முத்துமாளிகைவரிசையின் பக்கத்தில், பொன்னினுஞ் சிறந்த வொளியமைந்த சிறகுகளையுடைய அழகிய மயிற்கூட்டத்தோடு (தனித்துச்) செல்லும் அன்னப்பறவையானது, (கரிய) மேகங்களின் நடுவில் பூரணச்சந்திரன் நுழைந்துசென்ற தன்மையை யொக்கும்.

வேளென முருகனுக்கும் மன்மதனுக்கும் பெயரோயாயினும், கன்னலென்றமையாற் கன்னல்வேள் பிறிதினையைபுநீக்கிய விசேடணமாயிற்று என்க. பத்தியென்றது வடமொழிச்சிதைவு. பொன் அவாம் என்றதற்கு அழகென்பதை யவாவப்படுகின்றவெனினு மமையும். மயிற்கூட்டம் கலாபத்தை விரித்துக் கொண்டேகலான் மேகமண்டலமாகவும், அதனருகே செல்லுவதாகிய அன்னத்தைச் சந்திரனாகவுங் கூறுதலான், 'அன்னமாமதி முகிலிடைநுழைந்து போயனைய' என உவமை முகத்தாற்கூறினர். (கூக)

தண்ட மாகியே புவியுறு பணியெலாந் தழுவி
யண்ட மீமிசை யிரவியு மதியமு மடைதல்
கண்டு மாளிகைச் சூளிகை மருங்குபோய்க் கவர்வான்
கொண்ட சீற்றத்தி னுவெறிந் தன்னபூங் கொடிகள்.

(இ-ள்.) ஆகாயத்தில் சூரியசந்திரர்கள்உதயமாய்வருதலைப்பார்த்து உலகின்கண்ணுள்ள பாம்புகளனைத்து மொருங்குசேர்ந்து தண்டாகாரமாய் நிமிர்ந்து (அந்நகரினிடத்துள்ள) மாளிகைகளுக்கும் மண்டபங்களுக்கும் அருகிற்சென்று அவர்களைப் பிடிக்கும்பொருட்டுத் தாங்கொண்டகோபத்தினால் தங்கள் (பிளவினையுடைய) நாவைநீட்டியசைத்ததன்மையையொக்கும்; அழகியகொடிகளசையுங்காட்சி.—எ-று.

சூரியசந்திரர் உதயமாய்வருதலைநோக்கிப் பாம்பனைத்துஞ்சென்று அவர்களைப் பிடிப்பதற்குத் தம்பிளப்பாகிய நாவைநீட்டி யசைத்தல்போல, கொடிகளுயரப்பெற்றுப் பிளவாகக் கத்திரித்துக் கட்டப்பட்டிருக்குந் தன்மையாலும், பலவகைச்சித்திரங்களோடும் விளங்குகின்றமையாலும், அவை பாம்புகள் உயர்ந்து நாவை நீட்டியசைத்தல் போலுமென உவமை முகத்தாற் சிறப்பித்துக் கூறினர். (கூஉ)

தேனை வென்றசொல் லாரொடு மைந்தருந் திளைக்கு
மின வாவிபோல் வியன்படி கத்தினால் விளங்குந்
தான மீமிசைத் தயங்கிய முழுமணித் தலந்தான்
வான நின்றிடு தெய்வத மானமே மானும்.

(இ-ள்.) தேனினும் இனிய சொற்களையுடைய மாதர்களோடு புருடர்களும் மூழ்குகின்ற மீன்களையுடைய தடாகத்தைப்போல, விசாலமாகிய படிகக்கற்களினால் விளங்குகின்ற இடத்தின்மேல் பிரகாசிக்கின்ற மாணிக்கக்கற்களமைத்த மேன்மாளிகை விளங்குதல் (எதுபோலுமெனின்,) அந்தரத்தில் நிற்கின்ற தெய்வவிமானத்தை யொத்திருக்கும்.—எ-று.

நாள்செல்லக் கேட்டழியுந் தேன்போலாது, கேட்கக்கேட்க மிகுதியு மினிமை பயத்தலானும், அத்தேன் உண்டவழி மயக்கத்தைத் தருவதன்றிக் கேட்டவழியே மயக்கத்தைத் தருவதன்றாதலானும் 'தேனைவென்ற சொல்லார்' என்றார். (கூரு)

தேவர் தானவர் முனிவரர் சித்தரோ டியக்கர்
வாவு கின்னர ருவணர்கந் தருவர்மற் றுள்ளோ

ரேவ ருந்தம தகன்பதி யிகந்தவ ணெய்தா
மேவு கின்றன தனித்தனி யிருக்கைகண் மிகுமால்.

(இ-ள்.) தேவர்களும், அசுரர்களும், முனிவர்களும், சித்தர்களும், இயக்கர்களும், தாவிச்செல்கின்ற கின்னரர்களும், கருடர்களும், கந்தருவர்களும், மற்றைத் தேவர்களனைவரும் தங்கள் தங்களுடைய பெரிய நகரங்களினின்று நீங்கி இந்நகரத்தை யடைந்து வாசஞ்செய்கின்றனவாகிய வெவ்வேறிடங்கள் மிகுதியாக நிலைபெற்றிருக்கும்.—எ-று. (கூச)

தூங்கு குண்டிகை யருகுறக் காலெதிர் தூண்டி
யோங்கு நாசிமேல் விதிமுறை நயனங்க ளுறுத்தி
யாங்கொ ராசனத் திருந்தர னடியகத் தடக்கிப்
பாங்கர் மாதவம் புரிகுநர் சாலைகள் பலவால்.

(இ-ள்.) கையினிடத்தில் தொங்குகின்ற கமண்டலம் பக்கத்திலிருக்க, பிராணவாயுவை யெழுப்பி (இரேசக பூரக கும்பகங்களைச்செய்து) உயர்ந்த நாசிநுனியில் விதிப்படியே விழிகளைச் செலுத்தி (ஒன்பதுவகை யாசனத்தில்) ஒருவகை ஆசனத்திலிருந்து சிவபெருமான் றிருவடிகளை இருதய கமலத்திருத்தி, பக்கங்களிலிருந்து மகத்தாகிய தவத்தைச் செய்கின்றவர்களது பன்னசாலைகளும் (அந்நகரத்தில்) பல வுள்ளன.—எ-று.

இத்தகைய யோகத்திற்குரிய அங்கங்கள்-இயமம், நியமம், ஆதனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டுவகைப்படும். இவற்றுள், இயமமாவன-கொல்லாமை, மெய்ம்மைகூறல், கள்ளாமை, பிறர் பொருளிச்சியாமை, இந்திரியமடக்கல் என்பன. நியமமாவன-தவம், தூய்மை, தத்துவநூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல் என்பன. ஆதனம்-சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம் என ஒன்பதுவகை; அவற்றுள், சுவத்திகம்-தொடைக்குமுழங்காற்கு நடுவே இரண்டுள்ளங் காலையுஞ் செலுத்தியிறுமாந்திருத்தல். கோமுகம் - சகனப்பக்கத்தி விருகாற் பரட்டையு மாறவைத்து அவ்விருகாற்பெருவிரலைக் கையிற்பிடித்திருத்தல். பதுமம்-இருதொடை மேலுமிரண்டுள்ளங்காலையுமாறித்தோன்றவைத்தல். வீரம்-வலத்தொடையி லிடக்கார்ப்பரட்டைச் சேர்த்தி யிறுமாப்புற்றிருத்தல். கேசரி - பீசத்தின் கீழ்ச்சீவினியிடத்துப் பரட்டை வைத்திட முழங்கையை முழந்தாளில் வைத்து அங்குலிவிரித்து நாசியைப் பார்த்திருத்தல். பத்திரம்-பீசத்தின்கீழ்ச்சீவினியிடத்துஇருகாற்பரட்டையும் வைத்து அவ்விரு பதத்தையு மிருகையாலிறுகப் பிடித்தசையா திருத்தல். முத்தம்-இடக்காற்பரட்டாற் சீவினியை யழுத்தி வலக்காற்பரடு அப்பரட்டின் கீழுந்தவிருத்தல். மயூரம்-முழங்கையிரண்டு முந்திப் புறத்திலழுந்தப் புவியிற் கையூன்றிக் கானீட்டித் தலை நிமிர்ந்திருத்தல். சுகம்-சுகமுந்திடமு மெவ்வாறிருக்கி னெய்துமோ அவ்வாறிருத்தல். பிராணுயாமமாவது - பிராணவாயுவை இரேசக பூரக கும்பகஞ்செய்தல். பிரத்தியாகாரமாவது,—உபாதியை நீக்கி யுண்ணோக்கல். தாரணையாவது,—கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவற்றி லொன்றிற் சந்ததம் சிந்தைவைத்தல். தியானமாவது,—ஐம்புலனையடக்கி யோகஞ் சேர்தல். சமாதியாவது—இந்திரிய முதலிய தத்துவ சேட்டைகட் கேதுவா யாக்கையு ணின்றவற்றோடு கூடினுமவற்றிற் பற்றின்றியிருக்கு மான்மாவாகிய தன்னைத்தான் காண்டல், எனவறிக. இதனை:—"இயமநன் னியமேத்து மாசனம் பிராணுயாம -முயிர்புலனுளத்தில் வாங்கும் பிரத்தியாகாரமோங்கு - தயையுடன் சித்தஞ்சேர்த்துந் தாரணை தியானமென்று-மயர்வறு சமாதியெட்டும் வகுத்தநல் யோகத்

தங்கம்'' எனவருங் கூர்மபுராணத்தானும், "இயம நியம மாசனமே யிலங்கு பிராணா யாமமே, வயமார் பிரத்தி யாகாரம் வருதாரணையே தியானமே, பயமார் சமாதியென வெட்டெட் பகர்முன் னின்றவியமந்தா, நயமார் பத்துவகையாகு நவில்வாமவற்றையுங் கேண்மின்'' எனவருஞ் சூதசங்கிதையானும், 'காலெதிர் தூண்டி-யோங்குநாசிமேல் விதிமுறை நயனங்களுறுத்தி' என்பதனை :—"நெற்றிற்கு நேரோ நிறைந்த வொளிகா ணில்-முற்றுமழியாதுடம்பு'' எனவும், "புருவத்திடையிருந்து புண்ணியனைக்காணி-லுருவற்று நிற்குமுடம்பு'' எனவும், "மயிர்க்கால் வழியெல்லா மாய்கின்ற வாயு-வுயிர்ப்பின்றி யுள்ளேபதி'' எனவும், "வாயு வழக்க மறிந்து செறிந்தடங்கி-லாயுட் பெருக் கமுண்டாம்'' எனவும் வரும் ஔவைக்குறளா னுணர்க. (௫௫)

பாடு நான்மறை யந்தணர் வேள்விகள் பயில
மூடு தண்புகை யண்டமுங் கடந்தன முன்னந்
தேடு கின்றதோர் பரஞ்சுடர் மீட்டுமித் திறத்தா
னீடு கின்றதோ வென்றுநான் முகத்தனு நினைய

(இ-ள்.) முன்னாளில் நாம் திருமுடியைத் தேடும்வண்ணம் ஒப்பற்ற தழல் வடிவாய்நின்ற சிவபெருமான் மீண்டும், இத்தகைய உருவத்தோடு உயர்ந்திருக்கின்ற னரோவென்று பிரமதேவனுஞ் சிந்திக்கும்பொருட்டு, (சந்தவிலக்கணந் தவறாது) ஓதத்தக்க நான்கு வேதங்களையுமுணர்ந்த வேதியர்கள் வேள்விகளைச் செய்வதனால் நிரம்பிய தண்ணிய புகைப்படலம் அண்டமுகட்டையுங்கடந்து சென்றன.—எ-று.

வேதம் ஸ்ருதிவடிவா யுள்ளதாகலின், 'பாடுநான்மறை' என்றா ரென்னலு மொன்று. முன்பு செந்நிறப் பிழம்பாய்நின்ற சிவபெருமான், இப்பொழுது கருநிறப் பிழம்பாய்த் தோன்றினரோவென்று ஐயுறும் வண்ணம் புகைப்படலம் அண்ட மூடுருவிப் படர்ந்திருந்தன வென்று குறிப்பித்தவாறு காண்க. (௫௬)

நான்ம றைக்குலத் தந்தணர் நவையறு காட்சி
யூன்ம றைத்திடு முயிரென வோம்பிய வொழுக்கார்
மேன்மு றைக்கணோ ரைம்புலப் படிற்றினை வென்றோர்
வான்ம றைத்திடு மாளிகை வீதியு மலிந்த.

(இ-ள்.) நான்குவேதங்கட்குரிய அந்தணர்குலத்திற் பிறந்தவர்களும், குற்றமற்ற மெய்யறிவினால் உடம்பால் மறைக்கப்பட்ட உயிரைப்போலப் பாதுகாக்கின்ற நல்லொழுக்கமுடையவர்களும், மேலாகிய முறைமையில் நிற்பவர்களும், பஞ்சேந்திரியமாகிய பொய்ம்மையைச் செயித்தவர்களுமாகிய வேதியர்களது ஆகாயத்தையளாவிய மாளிகைவீதிகளும் (அக்காஞ்சிநகரத்துள்) நிறைந்துள்ளன.—எ-று.

அந்தணரென்றது அழகிய தட்பமாகிய குணமுடையா ரென்க. வேதாந்தத்தை யவாவுவாரென்பாருமுளர். "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்-பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்' என்றாராகலின் வேதவுணர்ச்சியினு மொழுக்கமே சிறந்ததாகலின் "ஊன் மறைத்திடு முயிரென வோம்பிய வொழுக்கார்'' என்று கூறினார். இந்திரியங்களை யவித்தமைவோராதலால் 'ஐம்புலப் படிற்றினை வென்றோர்' என்று கூறினார்.

இச்செய்யுள் வேதியர்வீதியின்விழுப்பமுரைத்தது. (௫௭)

ஏவு பல்படை வலியினர் வெஞ்சம மிகந்தோர்
நாவி னுன்மறை பயில்பவர் நணுகுறு நலத்தாற்

கோவு நீணகர் மறுகெலாங் குருமணிச் சிகரத்
தேவு நீணகர் நிலைமையே போல்வது தெரியின்.

(இ-ள்.) (பகைவர்கள்மேல்) பிரயோகிக்கும் பலவகையாயுதங்களையுடைய பலசாலிகளும், வெவ்விய போரைக் கடந்தவர்களும், நான்குவேதங்களை யப்பியசிக்கும் நாவினை யுடையவர்களுமாகிய அரசர்களது நன்மைமிக்க நீண்ட இராஜவீதிகளனைத்தும் ஆராயுமிடத்தில், நன்னிறம் விளங்கும் மணிகளிழைத்த சிகரங்களை யுடைய பெரிய தேவலோகத்தின் சிறப்பினை யொத்து விளங்கும்.—எ-று.

ஏவு பல்படை வலியினர் வெஞ்சம மிகந்தோர் - நாவி னுன்மறை பயில்பவ ரென்றார்; அரசர் அறுதொழிலில் படைக்கலம்பயிறலும், பொருதலும், வேதமோதலுமே சிறப்புடைமைபற்றி; ஏனைய உலகோம்பல், வேட்டல், ஈதலென்பன. அந்தணர் ஓதலும் ஓதுவித்தலும், அரசர் ஓதலும், வணிகர் கேட்டலு முரிமை யுடைமையான் இருபிறப்பாள ரென்னுஞ் சிறப்புப்பற்றி, நாவி னுன்மறை பயில்பவரென விதந்தார்.

இது அரசர்வீதியின் அணியினை யுரைத்தது. (ருஅ)

அணியி னோங்கலும் பன்மணிக் குவால்களு மார்வந்
தணிவி லாடகக் குவைகளும் பிறவுமுன் றழைப்பக்
கணிக ணுனுறு கற்பக மனையன காட்சி
வணிக ராவணத் தெற்றிகள் வயின்றொறும் வயங்கும்.

(இ-ள்.) ஆபரணக்குன்றுகளும், பல நவமணிக் குவைகளும், விருப்பநீங்காத பொற்குவைகளும், மற்றைப்பொருள்களும் முன்னே மிகுதியாக நிறைந்திருக்க, கணிதர்களும் (அளவிடக்கூடாமல்) நாணடையத்தக்க கற்பகத்தருவினை யொத்தனவாகிய (வளப்பமிக்க) தோற்றத்தினையுடைய வைசியர்களது கடைவீதிகள் அவ்வவ்விடங்கடோறும் விளங்கிக்கொண்டிருக்கும்.—எ-று.

கணிகள்-கணிதர் ; அவர் கணிதத்தினு மளவைபடாதனவாகிய பல்வகைப் பொருள்களும் நிறைந்திருக்கும் மாட்சிமை சிறத்தலின் கற்பகத்தை யுவமங் கூறினர்.

இது வைசியர் வீதியின் வண்மை யுரைத்தது. (ருக)

கங்கை மாமக டொல்பெருங் குலத்தர்கா சினியின்
மங்கை யாளருள் புரிதரு மகாரெனும் வழக்கோர்
செங்கண் மானிகர் வெறுக்கைய ரயன்பதஞ் சேர்ந்தோர்
துங்க வீதியு மேனையர் மறுகொடுந் தொகுமே.

(இ-ள்.) பெருமை பொருந்திய கங்காதேவியினது பழைமையாகிய சிறந்த குலத்திற் பிறந்தவர்களும், பூமிதேவி பெற்ற புத்திரர்களென்று கூறும் வழக்கத்தினையுடையவர்களும், செந்தாமரை மலர்போலுங் கண்ணையுடைய திருமாலை யொத்த பெருஞ் செல்வத்தை யுடையவர்களும், பிரமதேவனது பாதத்திற் பிறந்தவர்களுமாகியவேளாளர்களது உயர்ந்த வீதிகளும் மற்றைய முக்குலத்தவர்களுடைய வீதிகளுடன்சேர்ந்திருக்கும்.—எ-று.

கங்கைமாமகள் தொல்பெருங் குலத்தர் என்றது வேளாளரை ; இதனை கங்கைதன் மரபின்வந்த விழுக்குடிப் பிறப்பு என்ற திருவிளையாடற் புராணத்தானும், ‘ பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர் ’ என்ற சிலப்பதிகாரம் நாடுகாண் காதையானும் அதனுரையானு மறிக.

பிரமதேவனது முகத்தில் பிராமணர்களும், புயத்தில் க்ஷத்திரியர்களும், தொடையில் வைசியர்களும், பாதத்தில் சூத்திரர்களுந் தோன்றினமையின். ‘அயன்பத

ஞ்சேர்ந்தோர்' என்று கூறினர். இதனை "மதுமடை யுடைக்குஞ் செந்தா மரைமலர்ப்பீடமேலோன் - விதுமுகத்தினின் முன்றோற்ற விளங்குவாசனையான்முன்னோர்-கதுமென மடவாரோடு முதித்தனர் கவின்செய்தோளின் - வதுவைசெய் மடவாரோடு மன்னவருதித்தாரன்றே" "ஊருவி னுயகர்மாத ருடனுதித் தனராற் பின்னோர்-சாருமா மடவாரோடுந் தாளிடையுதித்தாராக - வாருமிந்நால்வர் கூட்டத்தாயினபற்பல்சாதி - யோருமாறுரைப்பமற்றீ துலகுபகாரமாமால்" எனவருஞ் சூதசங்கிதையானுணர்க.

இது வேளாளர் வீதியின் மேன்மை யுரைத்தது. (சo)

கண்டு கேட்டவை யுண்டுயிர்த் துற்றறி கருவி
கொண்ட வைம்புல னொருங்குற நடாத்திய கொள்கைத்
தொண்டர் கூட்டமும் விழிவழிப் புனலுகத் தொழுங்கை
யண்டர் கூட்டமு மாலயந் தொறுந்தொறு மறுவால்.

(இ-ள்.) கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறிகின்ற கருவிகளைக்கொண்டிருக்கின்ற ஐம்புலவுணர்ச்சிகளையும் ஒருவழிப்படுத்திச் செலுத்துகின்ற கோட்பாட்டினையுடைய மெய்யடியார்களது திருக்கூட்டங்களும், விழிகளின்வழியே ஆனந்தபாஷ்பஞ் சிந்தச் (சிரசிற் குவித்து) வணங்குகின்ற கைகளையுடைய தேவர் கூட்டங்களும் ஆலயங்கள்தோறும் நீங்காதிருக்கும்.—எ-று.

கண்ணாதி யைந்தினையுங் கருவியாகக்கொண்டு புலனறியுந் தன்மையாதலான், 'கண்டுகேட்டவை யுண்டுயிர்த்துற்றறிகருவி - கொண்ட வைம்புலன்' என்றார். பொறியாவன-கண் செவி வாய் மூக்கு மெய் யென்பன; இவற்றைப்புலனைந்துமறிகருவியாகக் கொண்டறிதலின் அங்ஙனங் கூறியதென்க. இதனை "ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்க ணான்குஞ் - சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிதமே யாக, இந்துவாழ் சடையா னாடுமா னந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின், வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்" என்னுந் திருத்தொண்டர் புராணத்தானு மறிக. இறைவனைக் கண்டவழி அன்பிற் கரைந்து கண்ணீரொழுகப் பெறுதலானும் சிரமேற் கைகூப்புதலானும் 'விழிவழிப் புனலுகத் தொழுங்கை யண்டர்கூட்டமும்' என்றதென்க. (சக)

ஆதி நான்முக னெகினத்தி னடிகளு மமலன்
பாதி யாளன்ற னுவணத்தி னடிகளும் பனிக்கார்
நாத னூர்தரு தந்தியி னடிகளு நாளும்
வீதி வீதிக டொறுந் தொறுங் காண்வர விளங்கும்.

(இ-ள்.) முதல்வனாகிய பிரமதேவனது வாகனமாகிய அன்னத்தினுடைய அடிச்சுவடும், மலரகிதராகிய சிவபெருமானது பாதித் திருமேனியிலுள்ள விஷ்ணுவினது வாகனமாகிய கருடனுடைய அடிச்சுவடும், குளிர்ந்த மேகாதிபதியாகிய இந்திரனேறிச் செலுத்துகின்ற வெள்ளையானையினுடைய அடிச்சுவடும் எந்நாளும் (காஞ்சிநகரத்தின்) அவ்வவ்வீதிகள்தோறும் யாவரும் பார்க்கும்படி விளங்கிக்கொண்டிருக்கும்.

பிரமன் பஞ்சகிருத்தியங்களிற் சிருட்டிமுதல்வனாகலான் 'ஆதிநான்முகன்' என்றும், சிவசத்தியைப்போலவே மாயோனும் சிவபிரானிடப்பாகம் பெற்றோனாகலின் 'அமலன்பாதியாளன்' என்றுங்கூறினர். அமலன் பாதியாளனென்றதனை "இடமால் வலந்தானிடப்பாறுழாய் வலப் பாலொண்கொன்றை, வடமாலிடந்துகில் தோல்வலமாழி யிடம் வலமான், இடமால் கரிதால்வலஞ்சே திவனுக் கெழினலஞ்சேர்,

குடமா விடம்வலங் கொக்கரை யாமெங்கள் கூத்தனுக்கே" என்ற பொன்வண்ண த்தந்தாதி யானுமுணர்க. (சஉ)

மாவி னோதையுங் களிற்றின தோதையு மருங்கின்
மேவு தேர்களி னோதையுங் கவிகையாய் விரிந்த
காவு சூழ்தரு மன்னர்சீ ரோதையுங் கறங்குந்
தேவ துந்துபி யோதையு மிறுத்தில தெருவு.

(இ-ள்.) குதிரைகளின் கனைப்போசையும், யானைகளின் பிளிறோசையும், பக்கங்களிற் பொருந்திய தேர்களினோசையும், குடையாக விரிந்த சோலைசூழ்ந்த அரசர்களது சிறப்புமிக்க வோசையும், (இடைவிடாது) ஒலிக்கின்ற தேவதுந்துபிகளி னோசையும் அவ்வவ்வீதிகளும் நீங்காதிருந்தன.—எ-று.

குடைகளின் மிகுதிபற்றிக் கவிகையாய் விரிந்தகாவென் றுவமித்தார்.
"கலகல முழக்குங் களகள முழக்குங் கலின்கலின் முழக்கமுங் கருவிச்
சலசல முழக்குஞ் சளசள முழக்குஞ் சடசட முழக்கமு மென்னச்
சிலசில முழக்கு மரகர முழக்குஞ் செயசெய முழக்குமெண் டிசைவாய்ப்
பலபல முழக்கு மடைத்துமே லோங்கிப் படியொடு வானமு நிறைப்ப"—
என்றதனால், மாவினோசை முதலிய வாய வோசைகள் இறுத்தில தெருவு என்றதென்க.

நாட்டி யச்செயல் யாவையுஞ் சிவனது நடனம்
பாட்டி சைத்திறம் யாவையு மன்னதே பதியோர்
கேட்டி ருப்பன யாவையு மவனிசைக் கேள்வி
கூட்டம் யாவையு மன்னவன் றொண்டுசெய் கூட்டம்.

(இ-ள்.) (அந்நகரத்திற்செய்யும்) நடனங்களனைத்தும் சிவபெருமானுக்குச் செய்யும் நடனங்களேயாம்; பாடல்களின் இசைப்பகுதிகளனைத்தும் அவ் வெம்பெருமானைக்குறித்துச் செய்யுந் தோத்திரப்பாடல்களேயாம்; (அந்நகரத்துள்ளவர்கள் செவிகொடுத்துக்) கேட்டுக்கொண்டிருப்பன வனைத்தும் அவ் வெம்பெருமானது புகழாகிய கேள்விகளேயாம்; (அவ்வவ்விடங்களிற் சூழ்ந்துள்ள) கூட்டங்களனைத்தும் அவ்வெம்பெருமானுக்குரிய திருத்தொண்டுகளைச் செய்கின்ற அடியார் கூட்டங்களே யாம்.—எ-று.

அந்நகர மாந்தரெல்லாரும் சிவ நேசமுடைய ராதலின், அவராடுதல் சிவநடனம் என்றும், கூறுதல் எல்லாம் அவனது தோத்திரப்பாட்டே என்றும், கேட்டலும் அவனது புகழேயென்றும், அங்குள்ளார்கூட்டமுந் திருத்தொண்டர் கூட்டமே யென்றுங் கூறினமை அமைந்துகிடந்ததென்க. "வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு-காவணங்க ளெல்லாங் கணநாதர்-பூவுலகில்-ஈது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர்-ஓதுந் திருவொற்றி யூர்' என்றார் பட்டினத்துப்பிள்ளையாரும்.

பாலு றுந்ததி யிழுதுதே னிருக்கைகள் பலவுங்
கோல மாகுமந் நகரிடை யவையுறை கூவல்
போலு மாயிடை மாதவத் தவளறம் புரியுஞ்
சாலை யாயின வரம்பிலா வடிசிலஞ் சாலை.

(இ-ள்.) அழகுபொருந்திய அக்காஞ்சிமாநகரத்தில் பாலும், பொருந்திய தயிரும், நெய்யும், தேனுமாகிய பலபொருள்களும் அவ்வப்பொருள்களிருக்குங் கிணறுகள் போன்றிருக்கும், அளவற்ற அன்னசத்திரங்கள் அந்நகரத்தில் மகத்தாகிய தவத்தினையுடைய ஸ்ரீ காமாட்சியம்மையார் முப்பத்திரண்டு தருமங்களைச் செய்தருளிய அன்னசாலையை யொத்திருக்கும்.—எ-று.

இறைவி சிவபெருமானைப் பூசனையாற்றியதன்றி முப்பத்திரண்டறமுஞ் செய்தமையின் அந்நகரின் அடிசிலஞ்சாலையை அறப்பெருஞ் செல்வியின் அறசாலையோடுவமித்தார். அம்மையா ரறஞ்செய்தனளென்பதனை "எண்ண ரும்பெரு வரங்கள் முன்பெற்றங் கெம்பி ராட்டிதன் பிரான்மகிழ்ந் திருள-மண்ணின் மேல்வழி பாடு செய்தருளி மனைய றம்பெருக் குங்கரு ணையினால், நண்ணூறு மன்னுயிர் யாவையும் பல்க நாடு காதலி னீடிய வாழ்க்கைப்-புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப் பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும்" என்ற திருத்தொண்டர் புராணத்தானுமறிக. (சடு)

அளவில் பற்பக றம்மினு நீங்கியோ ரடுத்த
கிளைஞர் வந்துழி யெதிர்தழீஇ நன்னயங் கிளத்தி
யுளம கிழ்ந்தவர்க் கூட்டுமின் னடிசில்போ லுறுவோ
ரொளிதி னுங்கிட வழங்குமா லோதன விருக்கை.

(இ-ள்.) (அக்காஞ்சிமாநகரத்துள்ள) அன்னசாலைகள் அளவற்ற பலகாலங்களுக்கு முன்னே தம்மினின்றும் நீங்கினவர்களாகிய நெருங்கிய பந்துக்கள் (தம் வீட்டிற்கு) வந்தபோது (அவர்களை) எதிர்கொண்டு தழுவி இனிய மொழிகளைக்கூறி மனமகிழ்ந்து அவர்களுக்கு உண்பிக்கின்ற இனிய உணவைப்போலத் தம்மிடத்து வருகின்றவர்கள் இலேசாக வுண்ணும்படி யுதவும்.—எ-று.

விருந்தோம்பலுக்கு முதற்கண் இன்முகம் வேண்டுமாதலானும், மனத்தினுவகையை வெளிப்படுத்துவதாகிய இனிய மொழிவேண்டப் படுவதானும், இனியமொழியை விதந்து கூறினர். இதனை "இன்சொலா லீர மளைஇப் படிறிலவாம்-செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" என்ற திருக்குறளா னறிக. (சசு)

வேறு.

மாட மாளிகை வாயி றொறுந்தொறு
நீடு கண்ணுள ராமென நின்றுநின்
றாடு சித்திரப் பத்தி யமரரு
நாடி நோக்கி நயந்திடப் பட்டதே.

(இ-ள்.) மேல்மாடங்க ளமைந்த மாளிகைகளின் வாயில்கடோறும் உயர்ந்தாடுகின்ற கழைக்கூத்தர்களைப்போல அவ்வவ்விடங்களில் நிலைத்து ஆடுகின்ற சித்திரப்பதுமைகளின் வரிசைகள் தேவர்களும் உற்றுப்பார்த்து விரும்பத்தக்கனவாயிருக்கும்.—எ-று.

மேல்மாடங்கள் ஆகாயமளாவி யிருத்தலால் தேவர்கள் உற்றுப்பார்த்து விரும்பத்தக்கனவா யிருக்குமென்பார், 'அமரரு நாடிநோக்கி நயந்திடப்பட்டது' என்றார். உம்மை உயர்வு சிறப்பு. (சஎ)

எல்லை தீர்ந்த விரவிக ளூண்டிய
சில்லி யாழித் திகிரிகண் மானுமான்
மல்லன் மாநகர் மைந்தர்க ளூர்தரும்
பல்வ கைச்சுடர்ப் பண்ணுறு தேர்களே.

(இ-ள்.) வளப்பமிக்க சிறந்த காஞ்சிமாநகரத்திலுள்ள இளஞ்சிறுவர்கள் ஊர்ந்து விளையாடுகின்ற பலவகைப் பிரகாசத்தோடும் அலங்கரிக்கப்பட்ட சிறு தேர்கள் அளவற்ற பல சூரியர்கள் செலுத்திய துவாரமமைந்த சக்கரத்தேர்களை யொத்திருக்கும்.—எ-று.

உமையவள் தவஞ்செய்யப்பாக்கியமுடைமையானும், நகரத்திற் சிறந்த நகரமெனப் படுவதனானும், 'மல்லன் மாநகர்' என்றார். சிறுவர்கள் யாவரும் சிறுதேருருட்டி விளையாடுவதனான், சூரியனொற்றை யுருளைத் தேரோடுவமித்துக்கூறினார். (சுஅ)

வெள்ளை யாதி வியன்கவி யாவையுந்
தெள்ளி தின்மொழி தென்கலை யேமுத
லுள்ள பல்கலை யோதுகின் றார்களும்
வள்ளி யோர்களு மன்றுதொ றீண்டுவார்.

(இ-ள்.) வெண்பாமுதலிய சிறந்த பாக்களனைத்தையும் தெளிவாகப் பாடுகின்ற தமிழ்ப் பாஷையே முதலாகப் பொருந்தியுள்ள பல பாஷைகளையு மோதுகின்றவர்களும், இரப்போர்க்கில்லை யென்னாது கொடுக்கும் வள்ளற்றன்மையையுடைய கொடையாளிகளும் (அந்நகரத்திலுள்ள) சங்கங்கடோறும் நெருங்கியிருப்பார்கள்.

" எல்லாப்-புலவர்க்கும் வெண்பாபுலி " என்பவாகலின், 'வெள்ளையாதி வியன்கவி' என்றார். வெள்ளையென்றது வெண்பாவை; ஆதியென்றமையான் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாவென்பனவும் அவற்றினினமாகிய தாழிசை துறை விருத்தங்களுமாம்.

தமிழ்ப்பாஷை யொழிந்த பாஷைகளாவன :—'சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துழுக்குடகம், கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கம், கங்க மகதங் கடாரங் கவுடங் கடுஞ்குசலந், தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதினேழ்புவி தாமிவையே' என்றதனானும், இவற்றுள் செந்தமிழே சிறந்த தென்பதனை- "சந்தனப் பொதிகைச் செந்தமிழ் முனிவனுஞ்-சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்-சங்கப் பலகையுந் தழைத்தினி திருந்த-மங்கலப் பாண்டி வளநா டென்ப " என்றதனானு முணர்க. (சுகூ)

இகலும் வேழத் தெயிற்றிணை யேய்ந்திடு
நகிலி னார்க ணறுங்குழன் மேலிடு
மகிலி னவியு மாய்மணி மாடமேன்
முகிலும் வேற்றுமை யின்றி முயங்குமே.

(இ-ள்.) போர்செய்கின்ற யானைக்கோடுகளை யொத்த ஸ்தனங்களையுடைய மாதர்கள் நறுமணங்கமழுந் தங்கள் கூந்தலின் மேலிட்ட அகிற்கட்டையின் புகையும் சிறந்த மணிகள் பதித்துள்ள மேலுப்பரிகைகளின் மேலுலாவும் மேகங்களும் ஒன்றற்கொன்று வேற்றுமை தோன்றாது கலந்திருக்கு மென்க.—எ-று.

மாதர் குழற்கிடு மகிற்புகைக்கும், மேன்மாடத்திற் றங்கு மேகங்கட்கும் வேற்றுமை தோன்றாது கலந்திருக்கு மென்க. (எo)

பண்ணி னோசையும் பானலை வென்றிடுங்
கண்ணி னார்கள் களிநட வோசையுந்
தண்ண ரம்பிய நந்திரி யோசையும்
விண்ணு ளோர்க்கும் விருந்தென லாயவே.

(இ-ள்.) நால்வகைப் பணிகளினோசையும், நீலோற்பல மலரைவென்ற கண்களையுடைய மாதர்கள் செய்யுங் களிப்பைத்தருகின்ற நடனத்தினோசையும், குளிர்ந்த நரம்புகளி னிசையையுடைய வீணைகளி னோசையும், தேவர்களது செவிகளுக்கும் விருந்தென்று சொல்லத்தக்கனவா யிருக்கும்.—எ-று.

நால்வகைப் பண்ணென்றது:—“பாலை குறிஞ்சி மருதஞ் செவ்வழியென-நால்வகையாழா னாற்பெரும் பண்ணே” எனவும், அவற்றுள் பாலையாழ்:—“அராகநேர்திறமுறுப்புக் குறுங்கலி,யாசானைந்தும் பாலையாழ்த்திறனே” என்றும், குறிஞ்சியாழ்:—“நைவளங் காந்தாரம் படுமலை மருளொடு, வயிர்ப்புப் பஞ்சுர மாற்று செந்திற-மிவ்வகை யெட்டுங் குறிஞ்சியாழ்த்திறனே” என்றும், மருதயாழ் :—‘நவிர் வடுகு வஞ்சி செய்திற நான்கு-மருதயாழ்க்கு வருந்திறனாகும்’’ என்றும், செவ்வழியாழ்:—“நேர்திறம் பெயர்திறஞ் சாதாரி முல்லையென-நாலுஞ் செவ்வழி நல்யாழ்த்திறனே” என்றுங் கூறிய பிங்கலந்தைச் சூத்திரத்தானறிக

நடனமெனினும் கூத்தெனினுமாம்.

கூத்து: சாந்தியும் விநோதமு மென்றிருவகைப்படும், என்னை ? “அவைதாம்-சாந்திக்கூத்தும் விநோதக்கூத்துமென், றாய்ந்துறவகுத்தன னகத்தியன்றானே” என்றாராகலின், “சாந்திக்கூத்தே தலைவனவிநய - மேந்தி நின்றாடிய வீரிருநடமவை-சொக்கமெய்யே யவிநய நாடக - மென்றிப் பாற்படூஉ மென்மனார் புலவர்” என்பதனால், நாயகன் சாந்தமாக ஆடிய கூத்துச் சாந்திக் கூத்தெனப்படும். இவற்றுள், சொக்க மென்பது சுத்த நிருத்தம். அது நூற்றெட்டுக் கரண முடைத்து. மெய்க்கூத்தாவது, தேசி வடுகு சிங்களமென மூவகைப்படும். இவை மெய்த்தொழிற்கூத்தாகலின் மெய்க்கூத்தாயின. இவைஅகச்சுவைபற்றியெடுத்தலின்,அகமார்க்கமென நிகழ்த்தப்படும். அகச்சுவையாவன இராசதம், தாமதம், சாத்துவிக மென்பன. “ குணத்தின் வழியதகக் கூத்தெனப்படுமே” எனக்குண நூலுடையாரும். “ அகத்தெழு சுவையானகமெனப்படுமே” எனச்சயந்த நூலுடையாருங் கூறலானும், அவிநயக் கூத்தாவது நிருத்தத்கை தழுவாது, பாட்டினது பொருளுக்குக்கைகாட்டி வல்லபஞ்செய்யும் பலவகைக் கூத்து. நாடகம்-கதைதழுவி வருங்கூத்து. விநோதக்கூத்தாவது குரவை, கவிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்பர். இவற்றுள் - குரவையென்பது, காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரோனும் எண்மரோனும் ஒன்பதின்மரோனுங் கைபிணைந்தாடுவது. கவிநடம் என்பது கழாய்க் கூத்து. குடக்கூத்து பஞ்சலோகங்களாலும் மண்ணாலுங்குடங்கொண் டாடுவது. கரணமாவது பதிந்தவாடல். நோக்கென்பது பாரமுநுண்மையுமாயமு முதலானவற்றை யுடையது. தோற்பாவை என்பது தோலாற் பாவைசெய்து ஆட்டுவிப்பது. இன்னும் வசைக்கூத்தோடேழென்பாருமுளர் அவை யிழிந்தோராடற்குரியன. இதனை, “இருவகைக் கூத்தி னிலக்கணமறிந்து” என்ற சிலப்பதிகார வரங்கேற்றுகாதையில் அடியார்க்கு நல்லாருரைாத்தலானு மறிந்துகொள்க. இன்னும் விரிப்பிற் பெருகும் ஆண்டுக்காண்க. (ருக)

அணிகு லாவு மரம்பையர் காளையர்
நணிய தோளை நயப்புற நாகருங்
கணிகை மாதரைக் காமுற மேவலான்
மணிகொள் காஞ்சி மதனர சாயதே.

(இ-ள்.) அழகு விளங்குகின்ற அரம்பைமாதர்கள் (அந்நகரத்திலுள்ள) வாலிபர்களது அழகுபொருந்திய புயங்களைத் தழுவ விருப்பங்கொள்ளவும், தேவர்களும் அந்நகரத்துள்ள விலைமாதர்களை விரும்பவும் அங்கு அடைகின்ற காரணத்தினால் அழகுபொருந்திய காஞ்சிமாநகரமானது மன்மதனுடைய இராஜதானியை யொத்துள்ளது.—எ-று.

இயற்கை யழகுடையராதலால் அணிகள் தாமழகுபெற விரும்புதலின், 'அணிகுலாவு மரம்பையர்' என்றார். "அன்றியுங் காமக்கிறையவர் தனத ரனையவர் கோடியர்த் தரலா,லென்றுமோ ரியல்பி னெங்கணும் விரவி யெவற்றினுங் கடந்தபே ரொளியைக், குன்றுழற் கொம்மைக் குவிமுலைத் தடத்தாற் குழைத்தருள் கருணையெம்பிராட்டி, நன்றுவீற் றிருக்கும் பேரொளிப் பிலத்திற் கப்பெயர் நாட்டலு மாமால்" என்றகாஞ்சிபுராணத் திருவிருத்தத்தின்படி இந்நகரம் அநேக மன்மதருக் கிருக்கையாதலானும், 'மணிகொள் காஞ்சி மதனர சாயதே' என்ற தென்க. கன்மநோய்க் குடைபவர் கடப்பச்செய்திடும்-பன்மலர் துவன்றிய தீர்த்தத்தி னீராடும்பெருமிதத்தால் அங்குள்ளவாடவர்தேவர்களைப்போல் அழகுமுதலியன பெற்றிருத்தலின் அவருடைய தோளை அரம்பையர் நயந்தாரெனவும், தேவகன்னிகையர் மிக்கவழகுடையராயிருந்தும் தம் இறைவனுக்குக்குற்றேவல்செய்யு மாட்சியினுல் தம்மடந்தையரினு மிவரை மிகவிரும்புகின்றமையால், 'நாகருங் கணிகைமாதரைக் காமுற'எனவுங் கூறினர். ()

கூற்றிற் செல்லுங் கொலைக்கரித் தானமு
மேற்றிற் செல்லு மிடையர்தஞ் சேரியி
னூற்றிற் செல்லு மொண்பாலு முடனுரு
வாற்றிற் செல்லுமவ் வாவணந் தோறுமே.

(இ-ள்.) இயமன்போல(பூமிநடுங்கச்)செல்கின்ற கொலைத்தொழிலையுடைய யானைகளின் மதநீர்ப் பெருக்கும், இடபத்தின்மே லேறிச் செல்கின்ற இடையர்களுடைய சேரிகளில் ஊற்றுபோலச் சுரந்து பாய்கின்ற வெள்ளொளி பொருந்திய பாற்பெருக்கும் ஒன்றாகக் கலந்து அந்நகரத்துள்ள கடைவீதிகடோறும் ஆறுபோலப் பெருகியோடும்.—எ-று.

அந்நகரத்து யானையின் மதநீரும் பாலு மொன்றாய்க்கலந்து ஆவணவீதிகளில் ஆறுபோற் பெருகும் என்றதனுல், அது பெருஞ்செல்வ முடையதென்பது கூறியதாயிற்று. ஏற்றிற் செல்லு மிடையர் என்பதற்கு, இடபம்போற் செல்லு மிடையர் எனினு மாம். (௩௩)

வேறு.

பண்ணுளர் நரம்பியல் பாணிக் கேற்றிட
வெண்ணுள கணிகைய ரினத்தொ டாடலுங்
கண்ணுள ராடலுங் காம னூடலும்
விண்ணுள ராடலும் வெறுப்ப மேவுமே.

(இ-ள்.) பண்ணைத் தருகின்ற வீணையின் நரம்புகள் தாங்கள் பாடும் இசைக்குப் பொருந்தும்படி, யாவரும் மதிக்கத்தக்க விலைமாதர்கள் தங்கள் கூட்டத்தினரோடு ஆடுதலும், கழைக்கூத்தர்களாடுதலும், மன்மதன் (அங்குள்ள ஸ்திரீபுருஷர்கள்மேல்) போர்செய்தலும், விண்ணுலகத்துள்ள அரம்பைமாதர் நடித்தலும் யாவரும் வெறுக்கும்படி மிகுதியாக நெருங்கியிருக்கும்.—எ-று.

நரம்பு-வீணைநரம்பு, பண் என்றது நரப்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படாநின்ற பண்ணும், பண்ணியற்றிறமும், திறமும், திறத்திறமுமாம். பண்ணென்னும் பெயர்க்குக்காரணம், "பாவோ டணைத லிசையென்றார் பண்ணென்றார்-மேவார்பெருந்தான மெட்டானும் - பாவா-யெடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப் - படுத்தமையாற் பண்ணென்று பார்" என்பதனு னுணர்க. பாணி என்றது இருவகைத்தாளவிகற்பங்கள். (௩௪)

அரிவையர் மைந்தர்க ளணிந்து நீத்ததே
திருமகள் காமுறுஞ் செல்வ மாகுமேற்
கருதரு நான்முகக் கடவுட் காயினும்
பொருவரு நகர்வளம் புகலற் பாலதோ.

(இ-ள்.) (அந்நகரத்துள்ள) மாதர்களும் புருஷர்களும் அணிந்து நீக்கிய அணியாடை முதலிய பொருள்களே இலக்ஷுமி விரும்பத்தக்க செல்வமாக விருக்குமாயின், ஒப்பற்ற அந்நகரத்தின் வளப்பத்தை நினைத்தற்கரிய நான்கு முகங்களையுடைய பிரமனுக்காயினுஞ் சொல்லமுடியுமோ? (முடியாது.)—எ-று.

திருமகள் யாவருக்கும் பெருந்திருவளிக்குந் தெய்வமகளேனும் அந்நகரத்தாடவரு மாதரு மணிந்து நீத்த வணிகளையே அவள் காமுறுவாளாயின் அந்நகரஞ் செல்வத்திற் கிருப்பிடமென்பது கூறாமே விளங்கிக்கிடந்தது. (ருரு)

வேறு.

மாறாய்ச் சிறார்க ளெறிந்தாடிய மான்ம தத்தாற்
சேறாய்ப் பொற்சுண்ணத் துலர்வாய்ப்பனி நீர்கள் சிந்த
வாறாய்ப் பளிதத்திினில்வாலுகத் தாறு மாகி
வேறாய்ப் புவியோ ருணர்வாமென மேய வீதி.

(இ-ள்.) சிறுவர்கள் ஒருவர்மேலொருவர் மாறுபட்டு வீசிவிளையாடிய கஸ்தூரிக்குழம்பினால் சேறாகியும், பொற்சுண்ணத்தினாலுலர்ந்தும், பனிநீரைச் சிந்துதலினால் ஆறாகியும், பச்சைக்கர்ப்பூரப் பொடியால் வெண்மணல் வழியாகியும், இவ்வாறு பல் வேறுவிதமாகியும், உலகத்துள்ள ஆன்மாக்களின் அறிவைப்போலப் பொருந்தியிருந்தன; அந்நகரத்து வீதிகளனைத்தும்.—எ-று.

வீதிகளெல்லாம் சிறுவர்கள் விளையாட்டால் வீசிய கஸ்தூரியாற் சேறுபட்டும், அவையே பொற்சுண்ணத்தா லுலர்ந்தும், பனிநீரைச் சிந்துதலால் ஆறாகியும், பச்சைக்கருப்பூரப் பொடியால் வெண்மணல் வழியாயுந் தோன்றுதலால், புவியோருணர்விற் குவமை கூறினார். (ருசு)

தண்டாமரை யேந்திய வானவன் றன்னை யொத்தா
னெண்டாவிய மாமத னேந்திழை யாரி லஞ்சி
வண்டாமரை பூத்தன வொத்தனர் வந்து செந்தே
னுண்டாடிய தேன்களை யொத்தன ரோங்கன் மைந்தர்.

(இ-ள்.) யாவராலும் மதிக்கத்தக்க சிறப்பினையுடைய மன்மதனானவன் குளிர்ந்த தாமரை மலரைத் தனது திருக்கரங்களில் தாங்கிய சூரியனை யொத்தான்; சிறந்த ஆபரணங்களையணிந்த மாதர்கள் தடாகங்களில் வளவிய தாமரைமலர் பூத்ததன்மையை யொத்தார்கள்; வலிமைபொருந்திய வாலிபர்கள் அத்தாமரை மலரையடைந்து செவ்விய தேனையுண்டு களித்து விளையாடுகின்ற வண்டுகளை யொத்தனர்.—எ-று.

மன்மதனுடைய கணைகளில் தாமரை யொன்றாகலின், அவன் கையிற் றாமரைமலரைப் பிடித்திருப்பதனால் தாமரைமலரைக் கையிலேந்திய சூரியனை யொத்தனனென்றும், கண்முகம் கைகால் முதலியன தாமரை மலர்களோடொப்பவாகலின் எந்திழையார் தடாகத்திற் பூத்த தாமரைமலரை யொத்தனரென்றும், ஆடவர் அவர்களின்பமாகிய தேனை நுகர்தலின், தாமரைமலரில் தேனைநுகரும்வண்டினை யொத்தனரென்று முவமை கூறினார். (ருஎ)

ஏமங் குலவு முரசங்க ளிரட்ட வாசத்
தாமங் கமழ்பந் தரினூடு தமக் கியன்ற
வோமங் களின்மா மணஞ்செய்தன ரூர்கு லாவு
மாமங் கலமே யுலப்பின்றி மலிந்த தன்றே.

(இ-ள்.) இன்பத்தைத் தருகின்ற முரசவாத்தியங்களடிக்கவும், நறுமணங் கமழும் மலர்மாலை கட்டிய மணப்பந்தல்களில் தங்கள் தங்களுக்கியன்ற ஓமங்களை வளர்த்திச் சிறந்த கலியாணஞ்செய்து ஊர்க்கோலம் வருகின்ற மிக்க மங்கலவாத்தியங்களே நீங்காமல் அந்நகரமெங்கும் நிறைந்திருந்தது.—எ-று.

மணம் எண்வகைத்தாதலின், 'தமக்கியன்ற ஓமங்களின் மாமணஞ் செய்தனர்' என்று கூறினார். எண்வகை மணமாவன:—பிரமம், தெய்வம், ஆரிடம், பிரசாபத்தியம், ஆசுரம், காந்தருவம், இராக்கதம், பைசாசமென்பன. இவற்றுள், பிரமம்-பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது. தெய்வம் - வேள்வியால் வந்த கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது. ஆரிடம் - ஒன்றிரண்டு பசுவு மெருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது. பிரசாபத்தியம் - தலைமக னினத்தார் வேண்டத் தலைமக ளினத்தார் உடன்பட்டு அவளைத் தீமுன்னர்க்கொடுப்பது. ஆசுரம்-பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கு வேண்டிய பொன்னைக்கொடுத்துக் கொள்வது. காந்தருவம்-கேட்பாருங் கொடுப்பாரு மின்றி இருவருந் தனியிடத் தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது. இராக்கதம் - பெண்ணும் பெண்ணி னினத்தாரும் உடன்படாமல் வலிதிற் கொள்வது. பைசாசம் - துயிலுறுபவளைச் சென்றுகூடுவது, என வறிக. இவற்றை:—" பிரமநற் றெய்வ மாரிடம் பிரசா பத்திய மாசுரம் பெட்பின் - மருவுகாந் தருவ மிராக்கதம் பசாச மெனமண மெட்டுள வவற்றுள் - கருதுமுற் பிரம மொருவனை யழைத்துக் கலனொடுங் கன்னியை யளித்த - லருளுமத் தெரிவை பயந்தசேய் மூவேழ் குலமுநற் கதியுற வளிக்கும்." " மகவினை விதியி னாற்றுவித் தோர்க்கு மகட்கொடுத் தருளுதல் தெய்வம் - புகலுமாங் கவள்சே யீரெழு மரபும் பொருவருங் கதியிடைப் புகுத்துந் - தகைவினா னிரண்டு பகர்பொருள் கவர்ந்து தன்மகட் கொடுத்தலா ரிடமா - முகிண்முலைப் புதல்வன் மூவிரு குலனு முறையினிற் கதியிலுய்த் திடுமால்." " அற்பொடு பிரசா பத்தியங் கேட்போர்க் கரிவையைப் பொருள்கொளா தளித்தல் - கற்புடை யவள்சேய் மூவிரு குலனுங் கருதுநற் கதியிடைப் போக்குஞ் - சொற்றவிந் நான்கு மறையவர்க் குரிய தொகுபொருள் விழைவொடுங் கவர்ந்து - பொற்றொடி நெடுங்கட் கன்னியை யளித்த லாசுர மாமெனப் புகல்வார்." " கன்னியுங் காதற் குமரனுந் தம்மிற் கலத்தல்காந் தருவம்ராக் கதந்தான்-வன்மையைப் பற்றிக் கன்னியைக் கோடல் வகுத்தவிம் மூன்றுமன் னவர்க்கா-முன்னருங் களவிற் களிப்பினிற் றுயிலின் முகிண்முலைக் கன்னியைக் கலத்த-லின்னல்கூர்ப் பசாச மணமிஃ துலகி லிகழ்ந்திடு மணமென விசைப்பார்." என வருங் காசிகண்டத்தா னுணர்க. (௫௮)

மாகந் திகழு மகிலாவிகொண் மாட மீதிற்
பாகின் மொழியா ரிளமைந்தர்தம் பாலி னோச்சப்
போகுஞ் சிவிறிப் பனிநீர்புறஞ் சிந்த வென்று
மேகஞ் சிதறும் பெயலென்ன விளங்கும் வீதி.

(இ-ள்.) ஆகாயத்திலுயர்ந்து விளங்கும் அகிற்புகை படிந்துள்ள மாடங்களின்மேல் பால்போலும் இனிய சொற்களையுடைய மாதர்கள் வாலிபர்களிடத்து விசிறவும் அவ்விசிறியிலுள்ள பனிநீரானது வெளியே சிதறுதலால், அந்நகரத்து வீதிகள்

எக்காலத்திலும் மேகங்கள்சிந்துஞ் சிறு துளிகளைப்போன்று விளங்கிக்கொண்டிருக்கும்.—எ-று.

மாளிகை மேற்படரும் அகிற்புகையை மேகமாகவும், மாதர் ஆடவர்மேல் விசிறும் பனிநீரை மழைத்துளியாகவும் உவமித்துக்கூறினர். (ருகூ)

வன்மா முலையேந் தியமங்கையர் மைந்த ரானோர்
தொன்மாட மீதி லெறிந்தாடுபொற் சுண்ண மோடு
நன்மா மலர்த்தாது விசும்புற நண்ண மேகம்
பொன்மா முகிலாய்ப் பனிநீரிற் பொழியு மன்றே.

(இ-ள்.) சூதாடு கருவியைப்போன்ற சிறந்த ஸ்தனங்களையுடைய மாதர்களும், புருஷர்களும் பழைமையாகிய மேல்மாடங்களிலிருந்து வீசி விளையாடுகின்ற பொற்சுண்ணத்துடன் நறுமணங் கமழுஞ் சிறந்த மலர்களிலுள்ள மகரந்தப்பொடிகள் ஆகாயத்திற் பொருந்துதலால், அங்குள்ள மேகங்கள் பொன்னிறமுள்ள பெரிய மேகங்களாகப் பனிநீரைப்போல மழையைப் பெய்யும்.—எ-று.

மேன்மாடங்களில் மாதர்கள் வீசியெறியும் பொற்சுண்ணமும், மலரினுள்ள மகரந்தப்பொடியும் மேகத்திற்கலந்து பொன்னிற மேகமென்னத் தோன்றுவதனால் மயக்கவணியாம். பொன்மாமுகிலாய் என்புழி, ஆய் என்பது ஆக்கப்பொருள் குறித்து நின்றது. (சுO)

தாராற் பொலிபொற் புயவீரர் தவாது செல்லுந்
தேரார்ப்பு நால்வாய்க் கரியார்ப்பும்வெஞ் சேனை யார்ப்பு
மேரார்ப்பு மிக்க பதிமானவ ரீண்டு மார்ப்புங்
காரார்ப்பும் வேலைக் கடலார்ப்புங் கடுத்த வன்றே.

(இ-ள்.) மாலைகளால் விளங்குகின்ற அழகிய புயங்களையுடைய வீரர்கள் இடைவிடாமல் ஊர்ந்து செல்கின்ற இரதங்களி னரவாரமும், துதிக்கையையுடைய யானைகளி னரவாரமும், கொடிய சேனைவீரர்களி னரவாரமும், ஏருழுதலாலுண்டாகுமாரவாரமும், பலதேசத்திருந்துவந்தமனிதர்கள் ஒருவரோடொருவர் நெருங்குதலாலுண்டாகுமாரவாரமும், (எவைபோலு மெனின்) மேகமுழக்கத்தையுஞ் சமுத்திர முழக்கத்தையு மொத்துள்ளன.—எ-று.

நால்வாய்=தொங்கும்வாய்; துதிக்கை. சேனைவீரர் கோபத்தையே மேற்கொண்டுள்ளவ ராகலின், 'வெஞ்சேனை' என்றும், பதினெண்டேயமாக்களும் நெருக்கியிருத்தலின், 'மிக்கபதி மானவர்' என்றுங் கூறினர். (சுக)

வானோக்கி நிற்கு முலகென்னவு மன்னவன் செங்
கோனோக்கி நிற்குங் குடியென்னவுங் கோதிலும்ப
ரானோர்க்கு நாக ருலகோர்க்கு மவனியோர்க்கு
மேனோர்க்கு நாடு நகராகி யிருந்த தவ்வூர்.

(இ-ள்.) மழையை யெதிர்நோக்கியிருக்கு முயர்களைப்போலவும், அரசனுடைய செங்கோன் முறைமையை யெதிர்பார்த்திருக்கின்ற குடிகளைப்போலவும், குற்றமற்ற தேவர்களாயுள்ளவர்களுக்கும், நாகலோகவாசிகளுக்கும், இந்நிலவுலகத்துள்ளவர்களுக்கும் மற்றைய உலகங்களில் வசிப்பவர்களுக்கும் விரும்புதற்குரிய நகரமாயிருந்தது அக்காஞ்சிமாநகரம்.—எ-று.

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை" என்றபடி, மழையே யுயிர்களுக்கின்றியமையாததாகலின், 'வானோக்கி நிற்கு முலகென்னவும்' என்றும், குடிகள்

அரசன் செங்கோல் முறைமைப்படி நடக்கவேண்டுதலின், 'மன்னவன்செங் - கோ னோக்கி நிற்குங் குடி யென்னவும்' என்றுங் கூறினர். இதனை—"வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன் - கோனோக்கி வாழுங் குடி" என்னுந் திருக்குறளானு முணர்க.

நோக்கிவாழ்தல் - இன்றியமையாமை; வானினுயவுணவை வானென்றும், கோலினுய வேமத்தைக் கோலென்றுங் கூறினரென்பர் பரிமேலழகர். 'உலகெலாம் வியப்ப - எவ்வுகங்களுமுள்ளதென் றியாவருமேத்தக்-கைவ்விளங்கிய நிலையது காஞ்சிமாநகரம்' எனப்படுதலின், கோதிலும்ப-ரானோர்க்கு நாகருலகோர்க்கு மவனியோர்க்கு, மேனோர்க்குநாடு நகராகியிருந்ததவ்வூர்' என்றார். (கூஉ)

கோடு நெறியு மிகலும்மனக் கோட்ட மாய
கேடும் பிணியு முதலாகிய கேதம் யாவு
நீடும் பரிவோ டுறைவா ரிடைநீங்க லாலே
வீடந் நகரோ யெனிலென்னின் விளம்ப வற்றோ.

(இ-ள்.) துன்மார்க்கமும், பகைமையும், மனக்குற்றத்தால் விளையுங்கெடுதிகளும், நோய்முதலிய துன்பங்களனைத்தும் மிக்கவிருப்பத்தோடும் அங்குவசிப்பவர்களிடத்தினின்றும் நீங்கியிருத்தலால்,அக்காஞ்சிமாநகரமே மோக்ஷஸ்தானமென்று சொல்வார்களாயின், (அதன்பெருமை) என்னால் சொல்லுந்தரத்ததோ?—எ-று.

கோடுநெறி - கோட்டமாகியநெறி. இகல் - பகை. பிணி-நோய். பரிவான் அந்நகரில் வசிக்குமாடவர்மகளிரிடத்துக் கோடு நெறிமுதலிய கேதமனைத்துங் கெடுதலான் 'வீடந்நகரோ'என்றார். கேதம்யாவுமென்றது வாக்கின் குற்றம், காயக்குற்றம், மனக்குற்றங்களை. (கூரு)

வேறு.

ஏமமே தருவாச் சினைகளு மனைத்தா விலைதளிர் செய்யபூந் துகிராக்
காமர்பூ மணியா வுதித்தொரு காஞ்சி கண்ணரோ வைவர்முன் கண்டு
தாமினி தருளும் பொய்கையின் மருங்கே தன்னிழல் பிரிகிலா துறலாற்
பூமியெண் காஞ்சி மாபுர மெனும்பேர் புனைந்ததப் பொருவிலா நகரம்.

(இ-ள்.) பொன்னேமரமாகவும், கிளைகளும் அப்பொன்னேயாகவும், இலைகளும் துளிர்களும் பொலிவினையுடைய சிவந்த பவளங்களாகவும், அழகியமலர்கள் நீலரத்தினங்களாகவும் தோன்றி (விளங்குகின்ற) ஒப்பற்ற காஞ்சிவிருக்ஷமானது, ஐந்து அவதார விஷ்ணுக்களை தனக்குமுன்னேபார்த்து, அவ்விஷ்ணுக்களால் இனிமையாகவமைக்கப்பட்ட தடாகத்தின்பக்கத்தில் தன்னிழலானது இடம்விட்டுப் பெயராமல் நிலைத்திருக்குங்காரணத்தில், ஒப்பில்லாத அந்த நகரம் உலகத்தாரால் மதிக்கத்தக்க சிறந்த காஞ்சிபுரமென்னும் பெயரைப்பெற்றது—எ-று.

பொன்மணிகளாலாகிய உறுப்பினமைந்த காஞ்சிவிருக்ஷ மிருக்குங்காரணத்தா லிதற்குக் காஞ்சிபுரமெனப் பெயர் வந்த தென்பதனை—"முழங்குமறை யாகமநூல் வடிவமாகி மூலமுதன் முழுவதுஞ்செங் கனகமாகிச் - செழுங்கனிபூத் தளிர்கணவ மணிகளாகிச் சேர்ந்தவர்க்கு நாற்பயனு மளிப்பதாகி - வழங்கிரவி மண்டலத்தின் காறுமோங்க வளர்ந்துநிழல் பிரியாத வண்மைத்தாய - தழங்குபுகழ்த் திருக்காஞ்சி நிலைபெறெய்துந் தன்மையினாற் காஞ்சியெனும் பெயரிற்றாமால்" என வருங் காஞ்சிப்புராணத்தானுமுணர்க.—அன்றியும், காஞ்சி யென்பதனை, க-அஞ்சி எனப் பிரிக்கப்பட்டு-க-பிரமம், பிரமன் என்றும் அஞ்சித்தல்-பூசித்தல் என்றும் அக்காரண

த்தால் காஞ்சியெனப் பெயர்வந்ததென்றும், மற்றும் பல காரணங்களுங் கூறப்படும். இவற்றை :—" கறங்கு வண்டிமிர் கமலமுந் துழாயுங் கடுக்கை மாலையுந் துயல்வரு புயத்தீர்-பிறங்கு கவ்வெனு மொழிப்பொருள் பிரமம் பிரம மானயா மஞ்சிக்கப்படலா-லுறங்கி டாப்புகழ்க் காஞ்சியென் றுரைக்கு மொருதி ருப்பெய ரெய்துமிந் நகர-மறங்க ளைந்தநூ லெமைப்பரம் பிரம மகில காரண மென்பதுதெளிவீர்." "இலகு வாணகை யரிமதர் மழைக்க ணிருண்ட வார்குழல் வேய்மருள் பணைத்தோட்-கலப மாமயி லியலெழின் மடவா ருந்தித் தானத்தைக் காஞ்சி யென்றுரைப்ப-சுலவு வெண்டிரைப் பனிக்கட லுடுக்கைத் தொல்லை மாநில மடக்கொடி தனக்குக் - குலவு காஞ்சிநற் றானமாய்ப் பொலிந்த கொள்கை யானுமத் திருப்பெயர் வழங்கும்" "மற்றுங் கவ்வெனல் சென்னியோ டின்ப மலர வன்றனை யுணர்த்துமஞ் சித்தல்-சொற்ற பூசனை யடைவுமாம் யாருஞ் சென்னி மேற்கொடு தொழத்தகுஞ் சிறப்பாற் - பற்றி வைகுநர் பேரின்ப முறலாம் பங்க யத்தவன் வழிபட லானும்-பெற்ற தாகுமித் திருப்பெய ரிதனுற் பிரம லோகமென் றுரைக்கவும் படுமால்" எனவும், "இன்னுமொரு வாறியம்பக் கேண்மதிநீ கம்மென்றல் சிரமா மந்தச்-சென்னிமிசைச் சயனமுறு வது கேச மதுதனையஞ் சித்தல் காஞ்சி-யன்னதனுற் காஞ்சியொடு கேசமொரு பொருட்கிளவி யாகுந் தேம்பு - மின்னிடையாய் கேசாந்த மாவதுமே தகுகாஞ்சி யந்த மாமால்" எனவும், "ஆசில் கவ்வெனு மயனஞ் சித்திடு - மாசில் சீர்மையி னுனு மாநகர்-காசி லாப்புகழ்க் காஞ்சி யாயதாற்-பேசு காரணம் பிறவு முள்ளவே" எனவும் வருங் காஞ்சிப்புராணத் திருவிருத்தங்களானு முணர்க. கண்ணரோ ளைவர் என்றது, பஞ்சகிருத்தியங்களில் திதித்தொழில் புரிந்து, தம் வாணு லுலப்ப விறந்துபட்ட மூல விஷ்ணுக்களை. (சுசு)

சுருதியா னுறங்கு மிராத்தொறு முடிவிற் றுஞ்சிய வூழிக டோறும்
விரையவந் துலக மழித்திடுங் கடலவ் வியன்பதி யெல்லையுட் சிறிதும்
வருவதை யஞ்சிப் புறந்தனிற் சூழ வந்தொரு சத்திகாத் திடலாற்
பிரளய சித்தென் றொருதிரு நாமம் பெற்றதக் காஞ்சியம் பேரூர்.

(இ-ள்.) பிரமதேவன் நித்திரைகொள்ளுமிரவாகிய தினகற்பங்கடோறும், அவன் முடிவிலிறக்கின்ற ஊழிக்காலங்கடோறும் விரைந்துவந்து உலகத்தை யழிக்கின்ற கடலானது அந்த விசாலமாகிய காஞ்சிமாநகரத்தின் எல்லைக்குள்ளே சிறிதும் பிரவகித்து வருவதற்குப்பயந்து வெளியிலே சூழ்ந்துபோகும்படி ஒரு சத்தியானவள் சதாவந்து காத்திருக்குந்தன்மையினுல் அழகுபொருந்திய அக்காஞ்சிமாநகரமானது பிரளயசித்து என்று ஒருசிறந்த பெயரைப்பெற்றது.—எ-று.

சுருதியானுறங்கு மிரவாவது-பிரமனது தினகற்பம். முடிவிற்றுஞ்சிய வூழியாவது-அப்பிரமனுயுள் முடிந்து இறக்குங்காலம். அவை; கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய சதுர்யுகங்களுக்கு வருஷம் நாற்பத்துமூன்றுலக்ஷத் திருபதினுயிரம். இந்தச் சதுர்யுகம் ஆயிரங் கொண்டது பிரமனுக் கொருபகல். ஆயிரம் சதுர்யுகங்கள் பிரமகற்பமென்று சொல்லப்படும். இரவும் அவ்வளவினவே. அப்பகலு மிரவுங் கூடியது ஒருநாள். அத்தகைய நாட்களாலாகிய வருஷங்கள் நூறுசென்றால் அப்பிரமனுயுள்சென்று இறந்துவிடுவன். அது ஊழியெனப்படும். இதனை:— "ஈண்டுமோ ரிருபா னுயிரந் தலையிட் டியன்றநாற் பத்துமூன் றிலக்க-யாண்டெனப் படுவ நான்குகத்தளவை யிம்முறை யாயிர மிறந்தாற்-காண்டகு மயனுக் கொருபகலதுவே கற்பமா மிரவுமத் துணைத்தவ்-வாண்டகைக் கந்நாண் முப்பதோர்திங்க ளாஃ

தொரு பன்னிரண் டாண்டே" "பகர்ந்தவாண் டொருநூ றிருவகைப் பரார்த்தம் பற்றில் வெள்ளிவண் டோடு - தகர்ந்திட வுடைத்து முடங்குகான் ஞிமிறு தழங்கிசைப் பேட்டொடு நறுந்தே-னுகர்ந்துபண் பயிற்றும் பொருட்டலர் கமல நோன்மலரணங்கினுக் கரங்க - நிகர்ந்தநா வகத்துப் பழமறை கொழிக்கு நெடுந்தகைக் கிறுதிவந் தெய்தும்" என வருங் காஞ்சிப்புராணத்தா னுணர்க. இவ்வா றுண்டாகு மிருவகைப் பிரளயங்களினும் பிரவகிக்குங் கடற்பெருக்கு இந்நகர்மேற் புரண்டுசெல்லாமல் வேலிபோற் சூழ்ந்து நிற்கும் வண்ணம் ஒரு சிவசத்தியாற் காக்கப்படுதலாற் பிரளயசித்து என்னும் பெயரைப்பெற்றதென்க. இதனை:—இலயப்புனல் வெள்ள மெழாது தணிந்-துலயப்புரி யுத்தமி மீண்டருளா - லலயப்பணி வார்திரு முன்னமர்பூ-வலயத் தவர் போற்ற வதிந்தனளே." "வெருவிப் பருவந்த விணுேரெவருங் - கருணைச் செயல் கண்டு களித்தனர்நோ - யொருவித் தனிமா வடியும்பர்பிரா - னிருபொற் கழலேத்தி யிறைஞ்சினரால்." "எற்றித் திரைபா யிலயப் புனலை - வெற்றித் திறல்காட்டி விலக்குதலாற் - றெத்துப் பொழில் சூழ்நகர் தானிலய - சித்துப் பெயர்வாய்ந்து திகழ்ந்ததுவே" எனவருந் திருவிருத்தங்களானு முணர்க. பிரளயசித்தெனினும், இலயசித்தெனினு மொக்கும். (சுசு)

கயிலையி லரனை யம்மைபூங் காவிற் கண்களை முடலு முலகிற்
பயிலுறு கொடிய வினையிரு ளகலும் பான்மையால் வந்துமா நிழற்கீ
ழியலொடும் பரமன் பூசனை யியற்றி யிரைத்தெழு கம்பைகண் டஞ்சிச்
செயன்முறை தழுவக் குழைந்தருள் செய்யச் சிவபுர மானதச் சீரூர்.

(இ-ள்.) திருக்கயிலாயத்தில் திருநந்தனவனத்திலே உமாதேவியார் சிவபெருமானது திருக்கண்களை மூடியபோது உலகத்தில் நிறைந்த கொடிய தீவினையென்னுமிருள் நீங்கும்பொருட்டு உலகத்தில்வந்து மாவிருக்ஷத்தின்கீழே சிவாகமமுறைமைப்படி சிவபெருமானைப்பூசித்து (அப்பூசனையை யழிக்கும்படி) இரைச்சலிட்டுப் பிரவகித்துவந்த கம்பாநதியைப்பார்த்துப்பயந்து, தழுவவேண்டிய முறைமைப்படி தழுவிக்கொள்ளுதலும் சிவபெருமான் திருமேனிகுழைந்து திருவருள்புரிந்த காரணத்தினால், அச்சிறப்புப்பொருந்திய காஞ்சிமாநகரமானது சிவபுரமென்னும் பெயரைப் பெற்றது.—எ-று.

உமாதேவியார் சிவபெருமானது திருக்கண்களை மூடுதலும் உலகமெங்கும் இருள் மூடிக்கொண்ட தென்பதனை :—"நாயகன் கண்ணை யப்பா லுயகி புதைப்பவெங்கும்-பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித் - தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பிற்-றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேசதென்னூர்" என வருஞ் சிவஞானசித்தியாரானும், "கைம்மிக் கெழுகாதல் விருப்புமீ தூர் குறிப்பின்-விம்மிப் பணைத்துப் புடைவீங்கி யெழுந்த கொங்கைப் - பொம்மற் பெருமாட்டி வெரிந்புறத் தெய்திவல்லே - செம்மற்பிறை வேணிய னார்திருக் கண்புதைத்தாள்" "இருண்ட பூங் குழலாள் செங்கை யிறுகுறப் புதைத்த லோடு - மிருண்டகந் தரத்தார் நோக்கி னிருசுடர் மறைந்த வாற்று-லிருண்டது புவனி முற்று மிருண்ட வெண் டிசையு மென்று - மிருண்டறி யாத விண்ணோ ரிருக்கையு மிருண்ட தந்நாள்" என வருங் காஞ்சிப்புராணத்தானும், அவ்வம்மையார், சிவபெருமானைப் பூசனைபுரியுங்கால் கம்பையாறு பெருகி வரவும் அதனைக்கண் டஞ்சிச் சிவபெருமானைத் தழுவக் குழைந்தருளின னென்பதனை.—"மலைக்குலக்கொடி பரிவுறு பயத்தான் மாவின்மேவிய தேவர் நாயகனை - முலைக்கு வட்டொடு வளைக்கையா னெருக்கி முறுகு காதலா லிறுகிடத் தழுவச்-சிலைத்தனித்திரு நுதறிரு முலைச்சுஞ் செந்தளிர்க் கரங்க

ளுக்கு மெத்தெனவே - கொலைக்களிற்றுரி புனைந்த தம்மேனி குழைக்கு காட்டினுர் விழைந்த கொள்கையினுர்" என வரும் பெரியபுராணத்தானும், இக் காஞ்சிமாநகரம் சிவபுரமென்னும் பெயரினைப்பெற்ற தென்பதனை :—" தூய வைந்தொழி லுயிர்க் கெலா மியற்றிமின் றுறுத்த-பாய மேகலை வழிபடப் பரிந்துவீற் றிருக்கு - மாய சீர் மையா லகிலமும் புகழ்திருக் காஞ்சி - மேய தாற்சிவ புரமெனு மேதகு நாமம்" என வருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (சுசு)

விண்ணுறை மகவான் கரிபுரி தவத்தால் வெற்பதாய்த் தன்னைமுன் றாங்கு
புண்ணிய கோடி யிபகிரி மிசையே பொருவிலா வேதியுத் தரத்தி
லண்ணலங் கமலத் திசைமுகன் வேள்வி யாற்றலு மவற்கருள் செய்வான்
கண்ணன்வந் திடலால் விண்டுமா புரமாங் கட்டுரை பெற்றதக் காஞ்சி.

(இ-ள்.) தேவலோகத்தில் வாழும் இந்திரனுடைய வெள்ளையானையானது செய்ததவத்தினுல் மலையுருவங்கொண்டு தன்னைமுன்னேதாங்கப்பெற்ற புண்ணிய கோடியென்னும் யானைமலையின்மேல் ஒப்பற்ற உத்தரவேதியிலே பெருமைபொருந் திய அழகியதாமரைமலரில் வசிக்கும் பிரமதேவன் யாகஞ்செய்யவும் அப்பிரமனுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தருளும்பொருட்டுத் திருமால் அங்குவந்தகாரணத்தி னுல், அக்காஞ்சிமாநகரமானது சிறந்த விண்டுபுரமென்று கூறுமுறுதியான பெய ரைப்பெற்றது.—எ-று.

இதனை :—" நாற்றக்கஞ்சநறும்பொருட்டண்ணரு - ஞற்றப்புக்க மகத்தவிப் பாகநீ - யேற்றிட்டுத்தர வேதியிருத்தியென் - றூற்றுத்தேமொழியோதி யருளினுர்" " தயங்கு செஞ்சடையாரருடாங்கியங் - கியங்குவேள்வியி னின்னவிப்பாகமேற்-று யங்கு சிற்றிடை யொண்டிருமாதொடும்-வயங்குமுத்தரவேதி வதிந்தனன் " " ஆங் கணன்னணங் கம்ப ரருளினுற் - பூங்கள் வார்துள வப்புயல் வைகலா - லோங்குவி ண்டு புரமெனவோர்பெயர்-தீங்கு தீர்திருக் காஞ்சி புனைந்ததே" எனவருங்காஞ்சிப் புராணத்தானுமுணர்க, புண்ணியகொடியிபகிரி என்றது, புண்ணிய கோடீசமாகிய அத்தி கிரியை. இது, திருமால் சிவபெருமானைப்பூசித்து வரதராசன்,தாமரைக்கண்ண னென்னும் பெயரைப்பெற்றது. (சுஎ)

காரத்திரு மேனித் தண்டுழாய் மௌலிக் கண்ணனுங் கமலமே லயனு
மார்த்திடுந் தரங்கப் பகிரதி மிலைந்த வவிர்சடை யமலனு மாகு
மூர்த்திக டத்த முலகமே போல முன்னியப் பதியமர் செயலாற்
சீர்த்திரி மூர்த்தி வாசமா கியபேர் சிறந்ததக் கச்சிமா நகரம்.

(இ-ள்) மேகம்போலுங்கரிய திருமேனியையும், குளிர்ந்த துளசிமாலையை யணிந்த திருமுடியையுமுடைய திருமாலும் தாமரைமலரில்வசிக்கும் பிரமனும், சப்தி க்கின்ற அலைகளையுடைய கங்கைநதியைத்தரித்தவிளங்குகின்றசடைமுடியையுடைய சிவபெருமானுமாகிய மும்மூர்த்திகளும் தங்கள் தங்களுலகமாகிய வைகுந்தம் சத்திய லோகம் சிவலோகங்களைப்போல விரும்பி அந்நகரத்தில் வசித்தருளுங் காரணத்தி னுல், அக்காஞ்சிமாநகரமானது சிறப்பினையுடைய மும்மூர்த்திவாசமென்னும் பெயர் சிறக்கப்பெற்றது—எ-று.

விடவேகத்தாற்கறுத்த திருமேனியினையுடைய பேரழகராதலின், 'கார்த் திருமேனித்தண்டுழாய் மௌலிக்கண்ணன்' என்றும், அத்திருமாலின் நாபியங்கம லத்துறைவோனுகலின், 'கமலமேலயன்' என்றும், நதியரசாகிய, கங்கையை உலக சம்ரக்ஷணுர்த்த முடித்த பெருமானுகலின், 'ஆர்த்திடுந்தரங்கப்பகிரதி மிலைந்தவவிர் சடையமலன்' என்றும், இவர்கள் மூவரும் முத்தொழிற் கர்த்தர்களாதலின், 'மூர்

த்திகள்' என்றும், அத்திருமூர்த்திகளுந் தத்தம் பதியைப்போல விரும்பிவசித்தலின் அம்மூர்த்திகளது திரிலோகத் தன்மைகளையும் இதுதன்னுள்ளடக்கி யிருத்தலின், 'சீர்த்திரிமூர்த்தி வாசமாகிய பேர்சிறந்தது கச்சிமாநகரம்' என்றுங் கூறினர். இதனை—"இருவருநாடொணு விறைவரோமெற்-றிருவருமின்னணம்வதியு மேதுவான்-மருமலிகாஞ்சி மும்மூர்த்திவாசமென்-றொருபெயர் படைத்ததா லுலகுபோற்றவே" எனவருங்காஞ்சிப் புராணத்தானுமுணர்க. (சுஅ)

தரணிகண் முழுதும் புரிதரும் விரிஞ்சன் றன்மனம் புனிதமாம்பொருட்டாற்
றிருமகள் கணவன் கமடமாய்ப் பூசை செய்திடு கச்சபா லயத்தி
லரனடி பரவி யருச்சனை யியற்றி யங்கண்வீற் றிருந்திடு நெறியால்
வரமிகு பிரம புரமென வொருபேர் மன்னிய தன்னதோர் நகரம்.

(இ-ள்.) சர்வலோகங்களையுஞ் சிருட்டித்த பிரமதேவன் தன் மனம் பரிசுத்தமடையும்பொருட்டு மலர்மகள் மணாளனாகிய மாயோன் ஆமைவடிவத்தோடு பூசனைபுரிந்த கச்சபாலயத்தில் சிவபெருமான் திருவடிகளைத் தொழுது பூசித்துக்கொண்டு அவ்விடத்தில்வசித்திருந்த காரணத்தினல், ஒப்பற்ற அக்காஞ்சிமாநகரமானது சிறப்பு மிக்க பிரமபுரமென்னு மொரு பெயரைப்பெற்றது.—எ-று.

'திருமகள்கணவன் கமடமாய்ப் பூசைசெய்திடு கச்சபாலயம்' என்பதன்வரலாறு :—தேவர்களுமசுரர்களும் அமுதம்பெறும்பொருட்டுத் திருப்பாற்கடலைக்கடைந்தபொழுது மத்தாகிய மந்தரமலை கடலிலாழவும் திருமால் ஆமையுருவெடுத்து அம்மலையைத்தாங்கி முன்போலநிறுத்தி அதுகாரணத்தாலகங்கரித்து,உலகம்வருந்தும்வண்ணம் அக்கடலைக்கலக்க, சிவபெருமான் எழுந்தருளி அவ்வாமையைக்கொன்று அதனோட்டையாபரணமாக வணிந்தருளினர். அதனல்,திருமால்வருந்தி இக்காஞ்சிநகரையடைந்து சிவபெருமானைப்பூசித்து வேண்டிய வரங்களைப்பெற்றுச் சென்றனன், என்பதாம், இதனை—அச்சநீத்தாருயி ருய்வகை யருள்சுரந்தாங்குறீ இக்-கச்சபத்தினுயிர்செற்றதனோட்டினைக்கதுமென-நச்சியவெண்டலைமாலிகை நடுவுறக்கொண்டனன் - பச்சிளங்கிள்ளைபால் வீற்றிருந்தருளிய பண்ணவன்" எனவும், "இப்பெரும் பிழைதவிர்ந் துய்யுமா நாரணனெம்பிரான் - வைப்பெனுங் காஞ்சியிற் சோதிலிங்கத்தினைவழிபடே - மெய்ப்படு மன்பினு விரந்திரந்தேத்தலும் விடைமிசைத் - துப்புறழ்செஞ்சடைத் தோன்றலங்கவனெதிர் தோன்றினன்" எனவும் வருந்திருவிருத்தங்களானுணர்க. 'வரமிகு பிரமபுரமென வொருபேர் மன்னியது' என்பதனை :—"நாறுதாமரைச் சேக்கையான்றன்பதநாடி-யேறுயர்த்தவரருள் கிடைத்திருந்த காரணத்தாற் - பேறுதந்தருள் பிரமமாபுரமெனு நாம - மீறுகண்டிடாக் காஞ்சிமாநகரமெய்தியதே" என்பதனானுமுணர்க. (சுகூ)

வீடுறு முத்தி போகமென் றவற்றில் வெஃகிய வெஃகியாங் கென்றுங்
கூடுறு தவத்தால் வழிபடு வோர்க்குக் கொடுத்திடுந் தன்மையாற் காம
பீடமென் றொருபேர் பெற்றது மலர்மேற் பிரமனே முதலினோர் தவத்தை
நாடினர் செயலாற் றபோமய மெனும்பேர் நணியது கச்சிமா நகரம்.

(இ-ள்.) பாசநீக்கத்தினையுடைய மோக்ஷமும் போகமுமென்று கூறுமிவற்றில் அவரவர்கள் விரும்பியவண்ணம் முக்காலத்திலும் பொருந்திய தவத்தினல் பூசிப்பவர்களுக்கு, (அபீஷ்டங்களைக்) கொடுத்தருளும் முறைமையால் காமபீடமென்னு மொரு பெயரைப்பற்றது; அன்றியும், தாமரைமலரில் வசிக்கும் பிரமன் முதலிய தேவர்கள் தவத்தை விரும்பிச்செய்யுங் காரணத்தினல் தபோமயமென்னும் பெயரைப் பெற்றது. அக்காஞ்சிமாநகரம்.—எ-று.

'காமபீடமென்றொருபேர் பெற்றது' என்பதனை :—"இவ்வாறு காமுற்ற நாற்பயனுமொருங்கீந்த-வவ்வாய்மை யாற்காம பீடமென வயங்கியதாற் -செவ்வாய் மைக்காசிமுதற் றிருத்தகுமூவிருநகரு - மொவ்வாதமேன்மையதாயோங்கு புகழ்த்தி ருக்காஞ்சி" எனவும், தபோமயமெனும்பேர் நணியது, என்பதனை—"பிறைநுதல் வாணிநீத்தப்பெருக்கினைத் தவிர்ப்பச்செய்யு - நறைமலர்ப்பொருட்டு மேலா னற்ற வம் வளர்ந்தவாற்று-லிறையினி விடும்பையொப்புந் தபோமயமென்னுநாம - மறைபு னற்பழனக்காஞ்சி யணிநகரடைந்ததன்றே" எனவும்வருஞ்செய்யுட்களானுமுணர்க. வீடு - முதனிலை திரிந்ததொழிற்பெயர். கச்சிமாநகரம் பெற்றது நணியது எனக்கூட்டுக. (எ0)

சகங்களோர் மூன்றி லறம்பெரி துளதித் தரணியித் தரணிமா நகர்க்குண்
மிகுந்தரு மத்தின் பலத்தினைத் தரலால் வியன்சகற் சாரமென் றொருபேர்
புகும்புரி சுடைய தட்டசித் திகளும் பொருவின்மா தவர்க்கரு டிறத்தாற்
பகர்ந்திடுஞ் சகல சித்தியென் றொருபேர் படைத்தது கச்சியம் பதியே.

(இ-ள்.) மூன்றுலகங்களிலும் இந்நிலவுலகமே மிகுந்த தருமத்தை யுடையது ; இவ்வுலகின்கண்ணுள்ள பெரிய நகரங்களுக்குள் இந்நகரமானது மிக்க தருமத்தின் பலனை (ஒன்று கோடியாக உடனே) கொடுத்தருளுங் காரணத்தினால் சிறந்த சகற்சாரமென்னு மொருபெயரைப் பெற்றுள்ளது. அணிமாமுதலிய அட்டமா சித்திகளையும் ஒப்பற்ற தவத்தினையுடைய பெரியோர்களுக்குக் கொடுத்தருளுங் காரணத்தினால் (யாவரும்) புகழத்தக்க சகல சித்தியென்னு மொரு பெயரைப் பெற்றது; அக்காஞ்சிமாநகரம்.—எ-று.

இக்கருமபூமியே புண்ணியபூமியாகலின், 'சகங்களோர் மூன்றிலறம்பெரிதுளதித்தரணி' என்றும், இக்காஞ்சிமாநகரம் ஒன்றுகோடியானபயனையுடனே தருதலின், 'வியன்சகற்சாரம்' என்றுங்கூறினர். அட்டசித்திகளாவன:—அணுமா-மகிமா-கரிமா-இலகிமா-பிராத்தி-பிராகாமியம்-ஈசத்துவம்-வசித்துவம் என்பன. அவற்றுள், அணிமா ஆன்மாப்போலாதல். மகிமா-மகத்தாதல். கரிமா-தன்னுடல்கண்டிப்பின்றாய்க் கண்டிப்புள்ளவற்றை யுருவவல்லவனாதல். இலகிமா-இலகுத்துவமாதல். பிராத்தி-வேண்டுவனவற்றை யடைதல். பிராகாமியம்-நிறையுளனாதல், ஈசத்துவம் - ஆட்சியுளனாதல். வசித்துவம்-எல்லாந்தன் வசமாக்கவல்லனாதல் என்பனவாம். இவற்றை :—"அணிமா மகிமா விலகிமா வரியகரிமாப்பிராத்திமலப்-பிணிமாசுடையோர்க்கடைமரிய பிராகாமியமீசத்துவமெய்-துணிமாயோகர்க்கெளியவசித்துவமென்றெட்டாமிவையுளக்கண் -மணிமாசறுத்தோர்விளையாட்டின்வகையாமவற்றின்மரபுரைப்பாம்," "அறவுஞ்சிறிய வுயிர்தொறுந்தான்பரமகாட்டையணுவாய்ச்சென்-றுறையுஞ் சிறுமையணிமாவாமுவரிஞாலமுதன்மேலென்-றறையுஞ்சிவாந்த மாறுறுமுள்ளும் புறனுமகலாதே-நிறையும் பெருமைதனையன்றே மகிமாவென்னு நிரம்பியநூல்." "இலகுமேருபாரம்போ விருக்கும் யோகிதனையெடுத்தா-லிலகுவானதூலமென விருப்பதிலகிமாவாகு-மிலகுவான பரவணுப்போலிருக்கும்யோகிதனையெடுத்தா-லிலகுமேருபாரமென விருப்பதன்றே கரிமாவாம்" "பிலத்திலிருந்தோனய னுலகிற்புகுதன்மீண்டும் பிலமடைதல்-பலத்தின் மிகுந்தபிராத்தியதாம்பரகாயத்தி னண்ணுதல்வான்-புலத்தினியங்க விச்சித்தபோகமனைத்துந்தானிருக்குந்-தலத்தினினைந்தபடி வருதல் பிராகாமியமாந் தவக்கொடியீர்." "விண்ணிலிரவி தன்னுடம்பின் வெயிலாலனைத்தும் விளக்குதல்போல் - மண்ணிலுளவாம் பொருள்பலவுங்கால மூன்றும் வானத்தின்-கண்ணிலுளவாம் பொருளுந்தன்காயத்தொளியாலிருந்தறித-லெண்ணி விதுவுமறையொருசார் பிராகாமியமென்றியம்புமால்." "ஈசனென முத்தொழிலுந்த னிச்சைவழிசெய்தெழுபுரவித் - தேசன்

முதற்கோள் பணிகேட்பத் திகழ்வதீசத்துவமாகும் - பூச லவுணர் புள்விலங்கு பூத மனிதர் முதலுலகும் - வாசவாதி யெண்மருந்தன் வசமாக்கொள்கை வசித்துவமாம்'' எனவருந் திருவிளையாடற் புராணத்தானும், சகற்சாரமென் றொருபேர் புகும்பரிசு டையது என்பதனை,—“ மற்றைக் கற்பத் ததினின்றுஞ் சிறிது வாங்கி வண்டினங்க ண் - முற்ற மதுநுண் டுளிதுவற்றி முருகு நாறி யிதழ்துறுமிப் - பொற்ற மலர்ப்பூஞ் சேக்கையினுன் புவனம் படைத்த காரணத்தா - லற்ற மறுஞ்சீர் முப்புவன சார மெ னும்பே ரணிந்ததுவே.'' எனவும், “ சகல சித்தி யென்றொருபேர் படைத்தது என்ப தனை,—“ காதர மிரிக்குங் காமக் கண்ணித னருளால் வேந்தன்-தீதறு சித்தி யெட் டுந் திருத்தகப் பெற்ற வாற்றுன்-மேதகு சருவ சித்தி கரமென விளங்கு நாம-மாதர் வண் மதில்சூழ் காஞ்சி மாநகர் பூண்ட தன்றே.” எனவும் வருங் காஞ்சிப்புராணத் தானு முணர்க.

உன்னருங் கயிலை நாயக னுமையை யொருபக னீலியென் றுரைப்ப
வன்னவ டனது காளிமங் கழிப்ப வங்கதி லையைவந் தெழலு
முன்னவ னவளை யிந்நக ரிருந்து முறைபுரிந் தருளென விடுப்பக்
கன்னிகாத் திடலாற் கன்னிகாப் பென்னுங் கவின்பெய ருடையது கச்சி.

(இ-ள்.) நினைத்தற்கரிய கயிலாசபதியாகிய சிவபெருமான் ஓர் நாள் உமா தேவியாரை நீலியென்று கூற, அவ்வுமாதேவியார் தமது கருநிறத்தை நீக்க அதில் துர்க்கைதோன்றி முன்னே வரவும், முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் அத்து ர்க்கையை (ப்பார்த்து) இந்நகரத்திலிருந்து முறைப்படி காக்கக்கடவையென்று கட் டளையிடவும் அக்கன்னி காக்குங் காரணத்தினுல், அக்காஞ்சிமாநகரமானது கன்னி காப்பென்னும் பெயரைப் பெற்றது.—எ-று.

சிவபெருமா னுமாதேவியாரைக்காளியென்றழைப்ப, அவ்வம்மையார் அக்கா ளிமத்தைக்கழித்தன ரென்பதனை—“ வாளை வென்றுமதர்த்துக் குடங்கையி- னீளும் வேல்விழி நித்திலவெண்ணகைத்-தாளமென்முலைப் பார்ப்பதித்தையலைக் - காளியெ ன்றுகரைந்துவிளித்தனர்'' “கருணைநாயகர் காளியென்றோதிய-வுரைசெவித்துளை யேறலுமொய்யெனப்-பொருமியுள்ளம் புழுங்கித்தவம்புரிந் - தருளினுலவ்வுருத்தனை நீக்கினுள்'' எனவும், அக்காளிதுர்க்கையென்னும் பெயரோடு இக்காஞ்சிநகரைக்கா த்தலால், கன்னிகாப்பு எனப்பெயர்பெற்றதென்பதனை :—“ அருளும்வண்ணமவுண ரையாவியுண்- டிருளுமென்மலர்ச் சோலைகளீண்டிய-தெருளுலாந்திருக் காஞ்சியைக் காவல்பூண் - டொருமையன்பி னுறைந்தனள் கன்னியே.” “அன்னை காளிமவாக் கையிற்றோன்றிய - கன்னிகாத்தருள் காரணத்தாற்றிருக் - கன்னிகாப்பெனு நாமங் கைக்கொண்டதா - லன்னமாமெகன்றுறைக் காஞ்சியே'' எனவும் வருங்காஞ்சிப் புராணத்தானுமுணர்க. (எஉ)

அரியதோர் கயிலைக் கணங்களி லொருவ னனதுண் டீரன்மா லதிபாற்
பெருமயல் கொள்ளச் சிவனிவ ளொடுநீ பிறந்திருந் தின்பமுற் றெம்பால்
வருகென நிலமேன் மன்னர்பாற் றோன்றி மற்றவ ளோடுசேர்ந் தரசு
புரிதரு செயலாற் காஞ்சிதுண் டீர புரமெனப் புகலநின் றதுவே.

(இ-ள்.) ஒப்பற்ற அருமையாகிய திருக்கயிலாசத்தில் வசிக்கின்ற சிவகணங் களி லொருவனுகிய துண்டீரனென்பவன் மாலதியென்னும் பெண்ணின்மீது மிகுந்த காதல்கொண்டதையுணர்ந்தசிவபெருமான் (அவனைநோக்கித்துண்டீரனே !) நீ இம் மாலதியோடு பூமியிற்பிறந்து இவளது கலவியின்பத்தை யனுபவித்துப் பின்னர் எம் மிடத்திற்குவருவாயாகவென்று கட்டளையிட்டவண்ணம் (அத்துண்டீரன் நிலவுலக

த்தில் அரசர்குலத்திற்பிறந்து அம்மாலதியைமணந்து இந்நகரத்திருந்து அரசாட்சிசெய்த காரணத்தினுல் இக்காஞ்சிமாநகரம் துண்டீரபுரமென்னும் பெயரைப்பெற்றது.

துண்டீரனென்னுஞ் சிவகணத்தவன் மாலதியென்பாள்மீதுகொண்ட காதல் காரணமாகப்பிறந் தரசாண்டமையால் துண்டீரபுரமென்னும் பெயர்வந்ததென்பதனை:—"எற்றுதெண்டிரைவேலைசூழ் ஞால மேந்துதாளிணை பரித்திகல்கடந்து - முற்றுசீர்த்தியன்வயங்குதுண்டீரன் முழுத்தகேள்வியனுண்டகாரணத்தாற் - கற்றைவார்சடைத்தெய்வநா யகரோ கம்பநாயகர்காக்குநாயகர்வாழ் - பொற்றமாநகர்காஞ்சி துண்டீரபுரமெனும் பெயர்பூண்டதுமாதோ" என்பதனுனுணர்க.

'ஏமமேதருவா' என்னுந் திருவிருத்தந்தொடங்கி இத்திருவிருத்தங்காறும் ஸ்ரீ காஞ்சிமாநகரத்திற்குள்ள பன்னிரண்டு திருநாமங்களையும் அவற்றின் காரணங்களோடு விளக்கிக் கூறினமை காண்க. "உருக்காஞ்சிமுப்புவன சாரங்காமபீடமுயர் தபோமயமும் மூர்த்திவாச - மிருக்காலுந்துண்டீரபுரம்வாழ்வெய்து மிலயசித்துப் பிரமபுரமிருண்டநெஞ்சிற் - றிருக்கீரும்விண்டுபுர மருளானந்த சிவபுரமேசகல சித்திகரமேயுள்ளப்-பருக்காழைத்தபுங்கன்னிக்காப்பென்றேதப் பட்டன பன்னிரு திருப்பேராகுமாலோ" எனவும், "புவனசாரமும்மூர்த்திவாசம் விண்டு புரங்காஞ்சி-தவமார்கலிசித்திலயசித்து சகலசித்திதபோமயவூர் - கவினர் பிரமபுரமாதி பீடங்கன்னிகாப்புவினைப் - பவநோயறுக்குஞ்சிவபுரமாம் பகர்பன்னிரண்டுதிருப்பெயர்த்தால்" எனவும் வருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (எ௩)

தன்னையே யருச்சித் திடமலர்க் கேகித் தடந்தனிற் கராவின்வாய்ப் பட்டுத்
தன்னையே நினைந்து தன்னையே யழைத்த தந்தியைக் காத்தவொண் புயமா
றன்னையே வேண்டித் தழன்மகஞ் செய்யத் தண்டகற் கெண்டிசை யரசு
தன்னையீந் திடலாற் றண்டக புரமாந் தனிப்பெயர் பெற்றதத் தனியூர்.

(இ-ள்.) தன்னை அருச்சிக்கும்வண்ணம் மலரைவிரும்பிச் சென்று தடாகத்தில் முதலையின்வாயி லகப்பட்டுக்கொண்டு தன்னைச் சிந்தித்துத் தன்னை (ஆதிமூலமேயென்று ஓலமிட்டு) அழைத்த கஜேந்திரனென்னும் யானையைப் பாதுகாத்தருளிய அழகிய புயங்களையுடைய திருமாலினைக்குறித்து அக்கினிசம்பந்தமாகிய வேள்வியைச் செய்த தண்டகனுக்கு எட்டுத் திக்கையும் ஆளுகின்ற அரசுரிமையைக் கொடுத்தகாரணத்தினுல், அவ்வொப்பற்ற காஞ்சிமாநகரம் தண்டகபுரமென்னும்பெயரைப் பெற்றது.—எ-று.

திருமாலைவேண்டி யாகஞ்செய்த தண்டகனென்பவனுக்கு அத்திருமால் அரசளிக்க வருள்செய்தகாரணத்தினுல் அவனரசாட்சிசெய்தமையால், தண்டகபுரமென்னும் பெயரைப்பெற்றதெனவறிக. இதனை:—"தண்ணளிபுரிதுண்டீரனுநள்ளார் சமர்த்தொழில்கடந்ததண்டகனும் - அண்ணலங்கரிகால்வளவனும்பிறரு மரசுசெய்தளித்ததந்நகரம்" என மேல்வருமாற்றுனும், "அண்டரும்புகழ்துண்டீரனுண்டு துண்டீரநாடாய்த்-தண்டகன்பின்னராண்டுதண்டகநாடாய்ப்பின்னைத்-தொண்டைமானுண்டுதொண்டை நாடெனத்துலங்கிற்றென்ப - பண்டயன்படைப்புத்தொட்டுப் பயிலுமித்தொல்லைநாடு" எனவரும் விநாயகபுராணத்தானு முணர்க. (எ௪)

அழகிய வயோத்தி மதுரையே மாயை யவந்திகை காசிநற் காஞ்சி
விழுமிய துவரை யெனப்புவி தன்னின் மேலவாய் வீடருள் கின்ற
வெழுநக ரத்துட் சிறந்தது காஞ்சி யென்றுமுன் னெம்பிரா னுமைக்கு
மொழிதரு நகரந் நகரெனி லதற்கு மூவுல கத்துநே ருளதோ.

(இ-ள்.) அழகுவாய்ந்த அயோத்தியும், மதுரையும், மாயையும், அவந்தியும், காசியும், நல்லகாஞ்சியும், சிறப்பு மிக்க துவாரகையுமென்று இந்நிலவுலகத்தில் மேன்மையினையுடையனவாய் முத்தியைக்கொடுக்கின்ற இவ்வேழுநகரங்களுள் காஞ்சிநகரமே சிறப்பினையுடையதென்று ஆதிகாலத்தில் எமது சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்தருளிய நகரம் அக்காஞ்சிமாநகரமேயாயின், திரிலோகங்களிலும் அதற்குச் சமானமான நகரம் வேறொன்றுண்டோ? (இல்லை.)—எ-று.

அயோத்திமுதலிய வேழுநகரங்களும் முத்தியைத்தரும் நகரமாதலின், 'வீடருள்கின்ற - வெழுநகர்' என்று கூறினர். இதனை:—"காசிமாயாபுரியவந்திகாஞ்சிமற் - றேசைகொளயோத்திவண்டுவரை யொப்பறு - மேசிலாமதுரையென்றுரைக்குமேழ்பதி- மாசறுமுத்தியைவழங்குமென்பவே" எனவருங் காசிகண்டத்தானும், அவ்வேழ்நகரத்துள்ளுங் காஞ்சியேசிறந்ததென்பதனை:—"கயிலையிலிழைத்தகுற்றங் கழுவுதல்வேண்டிப்போந்த - மயிலியலுமையாளாறு நகரையும்வழியிற்போக்கி - யுயரியநகரிதென்றே யுற்றமாகாஞ்சிமூதூர் - செயிரறத்தான்பாற்கொண்டு சிறந்தது தொண்டைநாடு" எனவரும் விநாயகபுராணத்தானு முணர்க. (எரு)

பங்கமில் வசிட்டன் பசுப்பொழி பாலி படர்ந்திடு முத்தரஞ் சேயைச்
செங்கம லத்தோன் முதலினோ ராட்டுந் திருநதி தென்றிசைச் செல்லு
மங்கவற் றிடையே கம்பமே முதலா மாலயத் தந்தரு வேதி
கங்கைகா ளிந்தி யிடைப்படுந் தலத்தின் முற்படுங் காஞ்சிமா நகரம்.

(இ-ள்.) குற்றமற்ற வசிட்டமுனிவருடைய காமதேனுவானது பொழியப்பெற்றுவருகின்ற பாலிநதியானது வடதிசையிற்செல்லாநிற்கவும், முருகக்கடவுளைச் செந்தாமரைமலரில் வாழும் பிரமன்முதலிய தேவர்கள் அபிஷேகஞ்செய்த சேயாறானது தென்றிசையிற் செல்லாநிற்கவும் அவ்விருநதிகளுக்கும் நடுவில்திருவேகம்பமுதலாகிய ஆலயங்களையுடைய அந்தர்வேதியாகிய காஞ்சிமாநகரம், கங்கைக்கும் யமுனைக்கும் நடுவிலுள்ள அந்தர்வேதியாகிய காசியினுஞ்சிறந்துவிளங்கும்.—எ-று

வடதிசைப்பாலியாற்றிற்குந் தென்றிசைச் சேயாற்றிற்குமிடையிலுள்ள அந்தர்வேதியாகிய காஞ்சிமாநகரம், கங்கையாற்றிற்கும் யமுனையாற்றிற்குமிடையிலுள்ள அந்தர்வேதியாகிய காசிமாநகரினுஞ் சிறந்ததென்பது கருத்து. அந்தர்வேதி-நடுவிலுள்ளசமபூமி. காஞ்சிநகரம் - பாலியாற்றிற்கும் சேயாற்றிற்குமிடையிலுள்ளதென்பதனை—"மருமலர்க்குவையல்கொட்கும் வளந்திரைப்பாலியென்று - வருசெழுமணிகளுந்தி யொழுகுபூஞ்சேயாறென்று-விருவகைநதியுங்காஞ்சி யெழினகர்வடபாற்றென்பான்- மருவிடுமெல்லையாகித் தீர்த்தமாய்வயங்குமன்றே" எனவும், "அச்செழுநதிகளுப்ப ணந்தருவேதியாகி - யெச்சமில்யமுனைகங்கை யிடைப்படுமந்தர்வேதிக் - குச்சமாய்முதுவதாயெவ் வூழியுமழிவின்றோங்கும்-கச்சிமாநகரமங்க ணிகழ்சிலகாதைசொல்வாம்" எனவும் வருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (எசு)

தொல்லையோர் பிரமன் றுஞ்சிய காலைத் தோன்றிய நீத்தமே லரிபோற்
செல்லுமார்க் கண்டன் கரத்தினிற் கம்பை சேர்ந்ததோர் தனிப்பெருஞ் சூத
மெல்லைநீ ரிகந்து வளர்தலு மருப்பொன் றெய்தவக் கொம்பர்தொட் டிழிந்து
நல்லுமை குறிக்கொண் முதல்வனை வணங்கி நயந்தவ னிருந்ததந் நகரம்.

(இ-ள்.) முன்னாளில் ஒருபிரமனது ஆயுள்முடிவிலுண்டாகிய ஜலப்பிரளயத்தின்மேல் தவளையைப்போலச் சென்ற மார்க்கண்டமுனிவரது திருக்கரத்தில் கம்பாநதியினருகிலுள்ள ஒப்பற்ற பெரிய மாமரமானது அவ்வூழெல்லையைச் சூழ்ந்து

நிற்கின்ற பிரளய வெள்ளத்தினையுங்கடந்து உயர்ந்து வளர்ந்து நிற்கவும், அதன்கிளை யொன்று கிடைக்க, அக்கிளையைப்பிடித்துக்கொண் டிறங்கி, சிறந்த உமாதேவியா ரது வளைச்சுவடும் முலைச்சுவடும்பெற்ற ஏகாம்பரநாதனைவணங்கி அம்முனிவரர் விரு ம்பி வசிக்கப்பெற்றது அக்காஞ்சிமாநகரம்.—எ-று.

அரி = தவளை. தவளை நீரில் மூழ்கியும் மேற்கிளம்பி நீந்தியுஞ் செல்லுமாறு போல, மார்க்கண்டேயமுனிவர் சிரஞ்சீவித்துவமுள்ளவராகலின், இறவாமல் நீருள் மூழ்கியும் வெள்ளமேன் மிதந்துஞ் சென்றன ரென்பார், 'நீத்தமே லரிபோற்செல்லு மார்க்கண்டன்' என்று கூறினர். பிரளயப் பெருக்கு நகர்மேற் செல்லாது புறத்தில் வேலிபோற் சூழ்ந்தோங்கியிருத்தலின், மாமரத்தின் கிளை அவ் வெள்ளத்தினைக் கட தோங்கித் தழைத்திருத்தலான் அதனைத் தொட்டிழிந்து சிவபெருமானை வணங்கின ரென்க. நல்லுமை குறிக்கொண் முதல்வன் என்றது, உமாதேவியாரது முலைத்தழும் பும் வளைத்தழும்பும் பெற்ற ஏகாம்பரநாதனை. மார்க்கண்டேயமுனிவர் மாமரக் கிளை யைத்தொட்டிழிந்து சிவபெருமானைப் பூசித்த வரலாறு:—முன்பொரு பிரமப்பிரளய த்தில் உலகமுற்று மழிய, அவ்வெள்ளத்தில் மிதந்து சென்ற மார்க்கண்டமுனிவரர் அதன்மேல் சேஷசயனத்தில்பள்ளிகொண்டிருந்த திருமாலைக்கண்டு வணங்கி, உலக த்திலுள்ள பொருளனைத்து மெங்ககன்றனவென்று கேட்கத் திருமால் அவை யனை த்தும் என் வயிற்றினிடத் துளவாகலின் நீர் சென்று காண்கவென் றுரைப்ப, அ தைக்கேட்ட முனிவரர் அத்திருமாலையிகழ்து கூறி அப்பாற்செல்ல, அங்கு மாமரத் தின் கிளையைக்கண்டு அதனைப்பிடித்திறங்கிக் காஞ்சிநகரையடைந்து மாவடிப்பெரு மானைப் பூசித்துப் போற்றினர் என்பதாம். இதனை:—"முள்ளரைச்செழுந்தாண் ம லர்முளரிவீற்றிருக்கும் - வள்ளல்கற்பமொன்றிறுதலும் யாவையுமலங்கப் - பொள் ளெனப்பரந்துலகெலாம்விழுங்கியபுணரி - வெள்ளநீர்மிசைமிதந்தனன்மார்க்கண்டி மேலோன்" எனவும், செல்லுமெல்லை நீர்மிசைத்தோன்றும்வேதமாஞ்சினைப்-பல்ல வங்கள்கண்டவை பற்றியுள்ளிழிந்தன - ஞெல்லையங்கணேக்கினு னெளிப்பிழம்பி னீடிய - மல்லலம்பொனிஞ்சிசூழ் மாடக்காஞ்சிமாநகர்" "எற்றுதெண்டிரைப்புன லிஞ்சியின்வளைப்பவெண் - புற்புதத்தினுள்வெளிப் பொற்பெனத்திகழ்ந்துநீ-ளொற் றைமாவி னருளொளிதுளும்பமன்னுமூ - ரற்புதத்தைநோக்குதோ றற்புதத்தனாயி னன்." "அங்கணெய்ப்புநீத்தபி னண்ணல்கம்பவாணனை - யுங்கணெய்தியர்ச்சனை யுஞற்றியவ்விராவெலாந் - துங்கமாவினீழல்வாழ் சோதிமுன்னர்வைகினன்-சங்கமா ழியேந்தியோன் முனுந்தொடரநண்ணினன்" எனவும் வருங் காஞ்சிப்புராணத்தா னுணர்க. (எஎ)

சமையமா றினையுந் தாயென வளர்த்துச் சராசர வணுக்களுய்ந் திடுவா
னமைதரு மெண்ணான் கறத்தினைப் போற்றி யாதிபீ டத்தில்வீற் றிருக்கு
முமையமர் காமக் கோட்டியைக் கதிரோ னுடுபதி கணங்கள்சூழ் தரலா
லிமையவர் தமக்குந் திசைமயக் குறுத வியல்புடைத் தந்நக ரென்றும்.

(இ-ள்.) அறுவகைச்சமயங்களையுந் தாய்போல்வளர்த்து, சராசரங்களா கிய உயிர்களுய்யும்பொருட்டுப் பொருந்திய முப்பத்திரண்டு தருமங்களையுஞ்செய்து ஆதிபீடத்தி லெழுந்தருளியிருக்கின்ற உமாதேவியார் வீற்றிருந்தருளுங் காமகோட் டிப் பீடத்தைச் சூரியசந்திர நக்ஷத்திரங்கள் பிரதக்ஷணமாகச் சூழ்ந்து செல்லுதலால் அக்காஞ்சிமாநகரம் எக்காலத்தும் தேவர்களுக்குந் திசைமயக்கத்தைச் செய்யும் இய ல்பினையுடையது.—எ-று.

ஆன்மாக்களின் பரிபாகங்கட்கேற்ப வடைந்தனுபவித்தற்பொருட்டு அறுவகைச்சமயங்களையும் விருத்திசெய்தல் இன்றியமையாதனவாகலின், 'சமையமாறினையுந்தாயென வளர்த்து' என்று கூறினார். சராசரவணுக்களென்றது, இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாயுள்ள ஆன்மாக்களை. அமைதருமெண்ணான்கறங்கள், ஆதுலர்க்குச்சாலை முதலியன; அவற்றை ;-" ஆதுலர்சாலை யோதுவார்க்குணவறு-சமயத் தார்க்குண்டிபசுவிற்குவாயுறை - சிறைச்சோறைய நடைதின்பண்ட - மறவைச்சோறுமகப்பெறுவித்தன் - மகவுவளர்த்தன் மகப்பால்வார்த்த - லறவைப்பிணஞ்சுடுதலறவைத்தூரியஞ் - சுண்ணநோய்மருந்து வண்ணார் நாவிதர் - கண்ணாடி காதோலை கண்மருந்து தலைக்கெண்ணெய் - பெண்போகமற்றும் பிறர்துயர்காத்த - றண்ணீர்ப்பந்தர் மடந்தடங்காவே - யாவுரிஞ்சுதறி விலங்கிற்குணவோ - டேறுவிடுத்தல் விலைகொடுத்துயிர்விடுத்த - றன்னிலையுயர்ந்த கன்னிகாதான - மிந்நான்கெட்டு மிறைவிசெய் தருமம்." என்னும் பிங்கிலந்தைச்சூத்திரத்தானுணர்க.

உமாதேவியார் வீற்றிருந்தருளுங் காமக்கோட்டிபீடம், சத்திபீடம் அறுபத்து நான்கினுள் முதற்பீடமாதலால், " ஆதிபீடத்தில் வீற்றிருக்கு முமையமர்காமக் கோட்டியை" என்று கூறினார். இதனை :—" விந்துவின் மயங்கி யம்மைவீற் றிருக்கும் வியன்றிருச்சக்கரவடிவாம் - அந்தவான்பிலந்தாளியம்பியகாம மனைத்திற்கு மாதரமாகிப் - பந்தமில் காமக்கோட்டமென்றொருபேர் பரித்திடுமெற்றெவற்றினுக்கு-முந்திய பீடமாதலினாதி பீடமுமொழிந்திடப்படுமால்" எனவருங் காஞ்சிப் புராணத்தானுமுணர்க.

சத்திபீடம் அறுபத்துநான்காவன:—(௧) காமக்கோட்டிபீடமும், (௨) அன்னபூரணி பீடமும் ஸ்ரீகாஞ்சியிலுள்ளன. (௩) இலக்ஷ்மி பீடம் கோபாலபுரத்திலுள்ளது. (௪) ரேணுகா பீடமும், (௫) துளஜா பீடமும், (௬) சப்தசிருங்க பீடமும் மாதுபுரத்திலுள்ளன. (௭) ஜ்வாலாமுகி பீடம் இங்குலையிலுள்ளது. (௮) பிராமரி பீடம் சாகம்பரியிலுள்ளது. (௯) துர்க்கை பீடமும், (௧0) விந்தியாசல பீடமும் ஸ்ரீரர்த்ததந்திகையிலுள்ளன. (௧௧) பீமாதேவிபீடம் விமலையிலுள்ளது. (௧௨) கௌசிகிபீடம் ஸ்ரீசந்திரலையிலுள்ளது. (௧௩) நீலாம்பரிபீடம் நீலபருவதத்திலுள்ளது. (௧௪) சாம்புநதேஸ்வரி பீடம் ஸ்ரீநகரத்திலுள்ளது. (௧௫) இரகசியகாளி பீடம் நேபாளத்திலுள்ளது. (௧௬) மீனாக்ஷி பீடம் மதுரையிலுள்ளது. (௧௭) சுந்தரிபீடம் வேதாரணியத்திலுள்ளது. (௧௮) யோகேஸ்வரிபீடம் மகாலசத்திலுள்ளது. (௧௯) நீலசரஸ்வதிபீடம் சீனாவிலுள்ளது. (௨0) வகலைபீடம் வைத்தியநாதத்திலுள்ளது. (௨௧) புவனேஸ்வரி பீடமும், (௨௨) காமயோனிமண்டலமென்னுந் திரிபுரபைரவிபீடமும் மணித்தீபத்திலுள்ளன. (௨௩) காயத்திரிபீடம் புஷ்கரத்திலுள்ளது. (௨௪) சண்டிகை பீடம் அமரோசத்திலுள்ளது. (௨௫) புஷ்கரோக்ஷணி பீடம் பிரபாசத்திலுள்ளது. (௨௬) தேவிபீடம் நைமிசத்திலுள்ளது. (௨௭) புருகூதபீடம் புஷ்கராக்ஷத்திலுள்ளது. (௨௮) இரதிபீடம் ஆஷாடத்திலுள்ளது. (௨௯) தண்டினிபீடம் சண்டமுண்டியிலுள்ளது. (௩0) பூதிபீடம் பாரபூதியிலுள்ளது. (௩௧) நகுலேஸ்வரிபீடம் நாகுலத்திலுள்ளது. (௩௨) சந்திரிகைபீடம் அரிச்சந்திரத்திலுள்ளது. (௩௩) சாரதாபீடம் ஸ்ரீகிரியிலுள்ளது. (௩௪) திரிசூலபீடம் பஞ்சநதத்திலுள்ளது. (௩௫) சூக்ஷ்மபீடம் ஆம்பிராதகேஸ்வரத்திலுள்ளது. (௩௬) சாங்கரிபீடம் மகாகாளத்திலுள்ளது. (௩௭) சர்வாணிபீடம் மத்திய மாபிதத்திலுள்ளது. (௩௮) மார்க்கதாயினி பீடம் கேதாரத்திலுள்ளது. (௩௯) பைரவி பீடம் பைரவத்திலுள்ளது. (௪0) மங்களைபீடம் கயையிலுள்ளது. (௪௧) ஸ்தாணுப்பிரியை பீடம் குருக்ஷேத்திரத்திலுள்ளது. (௪௨) ஸ்வாயம்புபீடம் வியபிநாகுலத்திலுள்ளது. (௪௩) உக்கி

ரபீடம் கனகலத்திலுள்ளது. (சுசு) விஸ்வேசைபீடம் விமலேஸ்வரத்திலுள்ளது. (சுடு) மஹாநந்தை பீடம். அட்டகாசத்திலுள்ளது. (சுகூ) மகாந்தகை பீடம் மகேந்திரத்திலுள்ளது. (சுஎ) பீமபீடம் பீமத்திலுள்ளது. (சுஅ) பவானிபீடம் வஸ்திராபதத்திலுள்ளது. (சுகூ) உருத்திராணிபீடம் அர்த்தகோடிகையிலுள்ளது. (டுo) விசாலாக்ஷி பீடம் அவிமுத்தத்திலுள்ளது. (டுக) மகாபாகைபீடம் மகாலயத்திலுள்ளது. (டுஉ) பத்திரகாளி பீடம் கோகர்ணத்திலுள்ளது. (டுரு) பத்திரைபீடம் பத்திரிகர்ணிகத்திலுள்ளது. (டுச) உற்பலாக்ஷி பீடம் சுவர்ணாக்ஷத்திலுள்ளது. (டுடு) ஸ்தாண்வீசை பீடம் ஸ்தாணுவிலுள்ளது. (டுசு) கமலை பீடம் கமலாலயத்திலுள்ளது. (டுஎ) பிரசண்டை பீடம் சகலண்டத்திலுள்ளது. (டுஅ) திரிசந்திரிகை பீடம் குரண்டலத்திலுள்ளது. (டுகூ) மகுடேஸ்வரி பீடம் மாகோடத்திலுள்ளது. (சுo) சாண்டிகை பீடம் மண்டலேசத்திலுள்ளது. (சுக) காளிபீடம் காலஞ்சரத்திலுள்ளது. (சுஉ) தொனி பீடம் சங்குகர்னத்திலுள்ளது. (சுரு) தூலபீடம் தூலசேஸ்வரத்திலுள்ளது. (சுச) பரமேஸ்வரிபீடம் சிவஞானிகளிதய கமலத்திலுள்ளது. என்க. இவ்வாறு வடமொழித் தேவிபாகவதத்திற் கூறப்பட்டுள்ளன. உடுபதி - சந்திரன். கணம் - நக்ஷத்திரக்கூட்டம். உய்ந்திடுவான் - வினையெச்சம். அந்நகர் என்றும் திசைமயக்கருத வியல்புடைத்து எனக்கூட்டுக.

பாவமோர் கோடி புரியினு மொன்றும் பரிவினிற் றருமமொன் றியற்றி
னேவரும் வியப்பக் கோடியாய் மல்கு மின்னதோர் பெற்றியை நாடித்
தேவர்கண் முனிவர் தம்பதம் வெறுத்துச் சிவனருச் சனைபுரிந் தங்கண்
மேவினர் தவஞ்செய் திருத்தலாற் காஞ்சி வியனகர்ப்பெருமையார்விரிப்பார்.

(இ-ள்.) (அந்நகரத்தில்) கோடி பாவங்களைச் செய்யினும் ஒன்றாகச் சுருங்கும், அன்புடன் ஒருதருமத்தைச்செய்தால் அது யாவர்களும் அதிசயிக்கும்படி கோடியாய்ப் பெருகும், இத்தன்மையாகிய கிரமத்தை யாலோசித்துத் தேவர்களும் முனிவர்களுந் தங்கள்தங்கள் பதங்களை வெறுத்துச் சிவார்ச்சனை செய்து அவ்விடத்திலேயே தவஞ்செய்துகொண்டிருக்குந்தன்மையால் சிறந்த காஞ்சிமாநகரத்தின் மேன்மையை யாவர் விரித்துச்சொல்லவல்லவர்கள்.—எ-று.

தீவினைச் சுருக்கத்தையும் நல்வினைப் பெருக்கத்தையுந் தருந்திருநகரமாகவின், 'பாவமோர் கோடிபுரியினுமொன்றும் பரிவினிற் றருமமொன்றியற்றி-னேவரும் வியப்பக்கோடியாய் மல்கும்' என்றும், இஃது சர்வலோகப் பிரசித்தமாயுள்ளதாகலினிதனையுணர்ந்த தேவர்கள் முதலியோரடைந்து சிவபூசனை புரிந்து அங்குத் தவஞ்செய்து ஒன்று கோடியான புண்ணியப்பயனைப் பெறுதலான், 'இன்னதோர் பெற்றியைநாடித் - தேவர்கண் முனிவர் தம்பதம் வெறுத்துச் சிவனருச்சனை புரிந்தங்கண் - மேவினர் தவஞ்செய் திருத்தலாற் காஞ்சி வியனகர்ப் பெருமையார் விரிப்பார்' என்றுங் கூறினர். புண்ணியப்பயன் ஒன்று கோடியாய்ப் பெருகுமென்பதனை, —" ஒருமுறை யங்கட் காமமாந் தரும முஞற்றுநர் தமக்கு மத்தருமந் - தருபயன் கோடி யாதலிற் கரடத் தடத்திழி கடாம்படு கலுழிப்-பெருவரை வதனப்பிள்ளையைக் குகனைபெற்றவ ளமர்பில மதுதான்-கருதரு காமக்கோடியென்றுலகிற் காரணப் பெயரினால் விளங்கும்" எனவருங் காஞ்சிப்புராணத்தானுமுணர்க. (எகூ)

கங்கைதன் சிறுவ னருள்பெறு வேதாக் கன்படை கொண்டகா லையினு
மங்கவன் றுஞ்சும் பொழுதினுங் காஞ்சி யழிவுறா திருந்தபான் மையினாற்
றுங்கவெண் பிறையு மிதழியு மரவுஞ் சுராதிபர் முடிகளு மணிந்த
மங்கையோர் பங்கன் படைத்ததே யன்றி மலரயன் படைத்ததன் றதுவே.

(இ-ள்.) கங்காதேவி புத்திரராகிய ஸ்ரீகுமாரக்கடவுளினது திருவருளைப்பெற்ற பிரமன் நித்திரைசெய்யும்பொழுதும் அவனிறக்கும்பொழுதும் (உண்டாகும் பிரளயத்தில்) காஞ்சிமாநகரம் அழியாதிருந்த தன்மையால், அந் நகரம் பரிசுத்தமான வெள்ளிய இளம்பிறையையும், கொன்றைமாலையையும், பாம்பையும், இந்திராதியர்களது சிரமாலைகளையு மணிந்தருளிய பார்வதிபாகராகிய சிவபெருமான் படைத்ததேயல்லாமல், தாமரை மலரில் வசிக்கும் பிரமன் படைத்ததன்று.—எ-று.

ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் அனற்பொறி யுருவாய் விளங்கி அக்கினிதேவனும் வாயுதேவனுந் தாங்கிச் சென்று கங்கையினுய்ப்ப, அங்குச் சரவணத்திற் பச்சிளங் குழவியாய் விளங்கித் தோன்றினமையின், 'கங்கை தன் சிறுவன்' என்றும், அவ்வெம்பெருமானை மதியாது வணங்கிச்சென்ற பிரமனைச் சிறையிடைப்படுத்திப் பின்னர் சிவபெருமானது கட்டளையால் அருள்செய்து விடுத்தமையின், 'அருள்பெறு வேதா' என்றுங் கூறினர். கண்படைகொண்ட காலை-தினகற்பமும், அங்கவன்றுஞ் சும்பொழுது-ஊழிக்காலமுமாம். சந்திரன் அமுத கிரணமுடையவனாகலின், 'துங்க வெண்பிறை' என்றும் சிவபெருமான் ஆன்மாக்களுக்குப் போகமோக்ஷங்களைத்தரும் அருள்வள்ளலாகலின், 'மங்கையோர் பங்கன்' என்றுங் கூறினர். 'மங்கையோர் பங்கன் படைத்தது' என்பதனை—"ஆதிநாண் முக்கணெம்மா னயன்றனைப்படைத்துவேத-மோதுவித் தருளினேக்கி யுலகெலாம் படையென்றேவும்-போதிது பார்த்திவ்வாறு படையெனப் புகன்றுவைத்தா - னீதெனலாகுங் காஞ்சி யென்னுமா யளவைத்தாமே" எனவும், "அக்காஞ்சி கலிநாசப் பொருட்டுநாம் படைத்துவைத்த தாதலாலே - யெக்காலு மந்நகரி னகத்துயரும் வினைத்துயரு மெய்தாவாகு - மைக்காளஞ்சுவையழ்தின் மணந்தவிழி மணிநீவி யல்குலெட்டுத் - திக்காளர் தமைப்பொதியும் பெருங்கீர்த்தி நகரவளஞ் சிறிது கேட்டி" எனவும்வருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க.

அரியபல் லிசையு மறைபுனல் கங்கை யருஞ்சிலை யிலிங்கமங் குறைவோர்
சுரர்தரு வனைத்துங் கற்பக மின்பந் துய்ப்பது வேள்வியூண் பூசை
யுரைசெப நடத்தல் வலம்வருந் தன்மை யுன்னலே தியானம்வீழ்ந் திடுதல்
பரனடி வணக்க மாவது காஞ்சிப் பதிக்கலா லெந்நகர்க் குளதே.

(இ-ள்.) அருமையான பலவித இசைக ளனைத்தும் வேதமும், நீரனைத்துங் கங்கையும்; அரிய கற்களனைத்துஞ் சிவலிங்கமும்; அங்கு வசிப்பவர்களனைவருந் தேவர்களும்; மரங்க ளனைத்துங் கற்பகவிருக்ஷமும்; இன்ப மனுபவிப்பவை யனைத்தும் வேள்வியும்; உண்ணுதலனைத்தும் பூசையும்; சொல்லும் வார்த்தைக ளனைத்துஞ் செபமும்; நடத்த லனைத்தும் பிரதக்ஷணஞ்செய்தலும்; நினைத்த லனைத்துந் தியானமும்; வீழ்தலனைத்துஞ் சிவபெருமான் திருவடியில் வணக்கமுமாக வுள்ளது காஞ்சிமாநகரத்திற்கன்றி வேறு எந்த நகரத்திற் குண்டு?—எ-று.

சிவபெருமான் திருவாக்காயுள்ள எழுதாக்கிளவியாகிய வேதம் இசைவடிவினவாகலின், 'அரிய பல்லிசையுமறை' என்றும் எத்தகைய தீர்த்தங்களினுங் கங்கைநதி தீர்த்தமே சிறந்ததாகலின், 'புனல்கங்கை' என்றும், அங்குள்ள கற்களனைத்துஞ் சிவவடிவமாகலின், 'அருஞ்சிலையிலிங்கம்' என்றும், தேவர்கள் புண்ணியப்பயன் புசிப்பவராகலின், 'அங்குறைவோர் சுரர்' என்றும், கற்பகம் வேண்டுவோர் வேண்டியவற்றை யுதவுஞ் சிறப்பினவாகலின், 'தருவனைத்துங் கற்பகம்' என்றும், வேள்விப்பயன் பேரின்பம் பயப்பனவாகலின், 'இன்பந் துய்ப்பது வேள்வி' என்றும், உண்ணுதல் சிவபூசை செய்வதோ டொப்பனவாகலின், 'ஊண்பூசை' என்றும், அந்நகரத்துள்ளார் கூறும் வார்த்தைகளனைத்துஞ் செபஞ் செய்தலோ டொப்பனவாக

லின், 'உரைசெபம்' என்றும், அவர்கள் நடத்தல் சிவாலயத்தைப் பிரதக்ஷிணஞ் செய்தலோ டொத்தலின், 'நடத்தல் வலம்வருந் தன்மை' என்றும், அவர்களொன்றைச் சிந்தித்திருத்தல் சிவத்தியானஞ் செய்தலோ டொப்பனவாகலின், 'உன்னலே தியானம்' என்றும், அவர்கள் பூமியில் வீழ்தல் சிவபெருமான் திருவடியை நமஸ்கரித்தலோ டொப்பனவாகலின், 'வீழ்ந்திடுதல் பரனடிவணக்கமாவது' என்றும், இவ்வாறு ஒன்று மற்றொன்றாகிய புண்ணியப்பயனைத் தருவது இக்காஞ்சிமாநகரத்திற்கன்றி வேறொன்றற்கின்மையின், 'காஞ்சிப்பதிக்கலா லெந்நகர்க்குளதே' என்றுங் கூறினார்.

கணமுகில் செக்கர் போர்த்தெனுங் கரிய கஞ்சுகச் செந்நிறக் கடவுண்
மணிசுடர் வயிரக் கிம்புரி மருப்பு மால்கரி முகத்தவன் வருசூர்
துணிபட வெறிந்த வேலவ னயன்போற் றோன்றிய சாத்தன்மால் விசயை
யிணையில்சீர்க் காளி முதலினோ ரென்று மினிதுகாத் திடுவதந் நகரம்.

(இ-ள்.) (நீருண்டு) தடித்த மேகத்தால் சூழப்பட்ட செவ்வானம்போல, கரிய கஞ்சுகத்தை யணிந்த சிவந்த திருமேனியை யுடைய வைரவக்கடவுளும், அழகிய ஒளியோடுகூடிய வயிரங்க ளிழைத்த கிம்புரிகட்டிய தந்தத்தை யுடைய பெரிய யானைமுகக்கடவுளும், சூரபதுமனுடல மிருபிளவாகும்வண்ணம் எறிந்த வேற்படையையுடைய குமாரக்கடவுளும், பிரமனைப்போலத் தோன்றிய சாத்தனும், திருமாலும், துர்க்கையும், ஒப்பற்றசிறப்பினையுடையகாளியும் முதலியவர்களால் எப்பொழுதும் இனிமையாகக் காக்கப்படுவது அக் காஞ்சிமாநகரம்.—எ-று.

'கணமுகில் செக்கர் போர்த்தெனுங் கரிய கஞ்சுகம்' என்றது, மாவலிபாற் சென்று மூவடிமண்பெற் றுலகினையளந்த விஷ்ணுவாகிய வாமனனது தோலாகிய சட்டையை. இதனை :—"வெஞ்சுடர்ப் பரியழன் மீது போர்த்திடு - மஞ்சனப்புகையெனவாலமாமெனச் - செஞ்சுடர்ப் படிவமேற் செறித்தமாமணிக்-கஞ்சுகக்கடவுள்" என முன்னர்க்கூறியதனானும், "தெளியுமாவலியைச் செற்றோற் செகுத்துரிக் கவயம் போர்த்த - வளியுளர் கச்சிக்காவல் வயிரவர்" எனவருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. கிம்புரி—தந்தப்பூண். பிரமனைப்போலச் சிவ விஷ்ணுக்களிடத்தினின்றுந் தோன்றினமையால், 'அயன்போற்றோன்றிய சாத்தன்' என்றார். உமாதேவியாரது காளிமத்துருவாய் வந்தனளென்பது தோன்ற, 'இணையில் சீர்க்காளி' என்றுகூறினார். வயிரவக்கடவுள் முதலியோர் காஞ்சிமாநகரத்தைக் காவல்பூண் டொழுகுவதொன்பதனை—"துற்கையுஞ் சாத்தனு மிரவியும் வயிரவத்தோன்றலு - நற்கரிமுகனுடனை வருங் கச்சபநாயகன் - பொற்கமலப்பதம் பூசனை யாற்றியங் குடனமர்ந்-தொற்கமில் கணங்களோடப்புரிகாவல்பூண்டுறுவரால்" எனவருங்காஞ்சிப்புராணத்தானுமுணர்க.

அறுசம யத்திற் கடந்தசை வத்தி னன்றிவீ டிலதெனத் தெளிந்து
பிறரறி யாது தொன்மைபோ லிருந்து பிஞ்சகன் மீதுகன் மலரா
லெறிதரு தேர ரன்பர்தங் கலிங்க மெழிலிக ணனைத்தலுஞ் சிரத்தை
முறைபுரி சிலைமேன் மோதினோர் முதலோர் முத்திபெற் றுடையதம் மூதூர்.

(இ-ள்.) அறுவகைச் சமயங்களினும் மேம்பட்டுள்ள சைவசமயத்திலல்லாமல் மற்றைச் சமயங்களில் முத்தியில்லை யென்று தெளிந்து அயலா ரறியாவண்ணம் முன்னிருந்த வேடத்துடனே யிருந்து சிவபெருமான்மீது கல்லை மலராகக்கொண்டு எறிந்து பூசித்த சாக்கியநாயனாரும், அடியார்களது ஆடையை மழைநீர் நனைத்தமையால் தமது தலையைத் தந்தொழில் முறையைச் செய்கின்ற பாறையின்மேல் மோதிய திருக்குறிப்புத்தொண்டநாயனாரும் முதலிய அடியார்கள் முத்திபெற்ற ஸ்தானமாயுள்ளது, அப் பழைய காஞ்சிமாநகரம்.—எ-று.

'அறுசமயம்' எனப்பொதுப்படக்கூறியதனுல், புறப்புறம், புறம்-அகப்புறம் - அகம் என்றுகூறும் நான்குவகையினை யுடையனவாய் ஒவ்வொன்றினும் அறுவகைப்பேதங்களையுமுடைய இருபத்துநான்கு வகைச்சமயபேதங்களையுங் கொள்க. இவருள் புறப்புறச்சமயத்தார் அறுவருள், உலகாயதன் பதி பசு பாசம் என்பன இலவாம். மகளிரிடத்துண்டாம் இன்பமொன்றுமே பொருளென்று கூறுவன். புத்தரிற் சௌத்திராந்திகன் உருவம்-ஞானம் - வேதனை - குறிப்பு - வாசனை என்னும் பஞ்சகந்தங்களுந் தொடர்ச்சியாயழிவது பந்தமென்றும், அவைமுற்றுமொழிதலே முத்தியென்றுங்கூறுவன். யோகாசாரன் சௌத்திராந்திகனிற் சிறிதுவேறுபட்டு அறிவு அரூபமென்றும் பிரபஞ்சம் பொய்யென்றுங்கூறுவன். மாத்மீகன் அறிவும், அறியப்படுபொருளுஞ் சூனியமென்றும், அதனுலேபிரபஞ்சந் தோன்றுதென்றுங் கூறுவன். வைபாடிகன் மஞ்சளுஞ் சுண்ணும்புங் கூடியவிடத்துச் செந்நிறந் தோன்றுமாறுபோல இந்திரியங்கள் கூடியவிடத்துப் பிரபஞ்சந் தோன்றுமென்று கூறுவன். ஆருகதன் ஞானவரணீய முதலிய எண்வகைக்கன்மத்தையும், பசித்தல்முதலிய பதினெண் குணத்தையும், அரசிகம்முதலிய ஆறுகுணத்தையும் விடுத்து முன்னைக்கன்மம்புசித்துத் தொலைந்தவிடமே முத்தியின்பமென்று கூறுவன்.

இனி, புறச்சமயத்தா ரறுவருள், தார்க்கிகன் வித்தியா கற்பனை, தோஷம், பிரவிருத்தி, சனனம், துக்கமென்பவைகளைத் தனித்தனி நீக்கிச்செல்ல, முடிவினின்ற துக்கமொழியுமென்றும், இதுவே முத்தியென்றுங் கூறுவன். மீமாஞ்சகன் வேதம் அநாதியென்றும், ஈசனை வேண்டாது கன்மமே பலனைக் கொடுக்குமென்றுங் கூறுவன். மாயாவாதி சுத்தமாகிய பரப்பிரமம் மாயோபாதியினுலே வாதிக்கப்பட்டுச் சரீரத்தினுள்ளே சீவான்மாவாக நிற்குமென்றும், சீவான்மாவும் விவேக ஞானமடைந்து மாயாவத்தை கடந்து பரமான்மாவோடு கடாகாசமும் மகாகாசமும்போல் அபேதமாய் விடுமென்றுங் கூறுவன். சாங்கியன் புமானுகிய சுத்தபுருடன் அறியாமை யுற்றபோது பிரபஞ்சமெல்லாந் தானே விரிந்து நிற்பனென்றும், விவேகஞான மெய்தியபோது அவை யனைத்தும் பிரகிருதிக்கேயன்றித் தனக்கில்லையென்றுங் கூறுவன். யோகி நின்மல சத்துவபரிணும ரூபமாகிய சித்தவிருத்திகளை உன்முகமாகத் திரும்பி, அவைகளை அவற்றின் முதற்காரணத்தினுலே ஒடுக்குதலே முத்தியென்று கூறுவன். பாஞ்சராத்திரி நாராயணர் தம்மை வழிபட்டவர்களுடைய பாசபந்தத்தை யொழித்து அவர்களை விரசாநதியிலே மூழ்குவித்துச் சுத்தர்களாக்கி, வைகுண்டத்திலே தமது சாரூபத்தைக் கொடுத்தருளுவரென்று கூறுவன்.

மேல், அகப்புறச்சமயத்தா ரறுவருள். சைவன் சிவபெருமான் தாண்டவபூஷணமூர்த்தியா யருளுவரென்றும், பாசுபதன் விபூதியுஞ் சடைமுடியுந்தரித்த மூர்த்தியா யருளுவரென்றும், மகாவிரதன் என்பு மாலைதரித்த மூர்த்தியா யருளுவரென்றும், காளாமுகன் படிகமும் புத்திர தீபமணியுந்தரித்த மூர்த்தியா யருளுவரென்றும், வாமன் அக்கினியும் உபவீதமுந் தரித்த மூர்த்தியா யருளுவரென்றும், பைரவன் தமருகமுஞ் சிலம்புந் தரித்த மூர்த்தியாயருளுவரென்றுங் கூறுவர்.

இனி, அகச்சமயத்தா ரறுவருள், பாடாணவாதசைவன் ஆன்மா முத்தியிலும் சகசமலம் நீங்காது கல்லைப்போற் கிடக்குமென்று கூறுவன். சங்கிராந்தவாதசைவன் விகாரமின்றி நிற்கும் ஆன்மசந்நிதியிலே அசத்தாகிய கருவிகளே சத்தாகிய சிவத்தைச் சிவகரணமா யறியுமென்று கூறுவன். அவிகாரவாதசைவன் கொடிய வெய்யிலிலே யடைந்தோரா லடையப்படுகின்ற மரநிழல்போல, கடவுள் விகாரமின்றி நிற்ப, ஆன்மாவானது தானே பக்குவமடைந்தபோது ஞானம்பெற்றுப் பதி

யைச் சேருமென்று கூறுவன். பரிணாமவாதசைவன் உயிர்கெட்டுக் கூடிச் சிவபெருமானது திருவடியில் ஒன்றாய் விடுமென்று கூறுவன். சுத்தசைவன் ஆன்மாவுஞ் சிவமுங் கூடியவிடத்து ஆன்மா சிவாநுபவத்திற் குரித்தாகாதென்று கூறுவன். பேதவாதசைவன் ஆன்மா மெய்ஞ்ஞானத்தை யடைந்தபொழுதே மலம் நீங்கிவிடுமென்றும் இதுவே முத்தியென்றுங் கூறுவன்.

இத்தகைய முத்திபேதங்களையும் மூர்த்திபேதங்களையுமுடைய நாற்பகுப்பாகிய அறுவகைச் சமயபேதங்களையுங் கடந்த சமயாதீதமாகிய சித்தாந்த சைவமே சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாய முத்தியைத்தருவதாகலின், 'அறுசமயத்திற் கடந்த சைவத்தினன்றி வீடிலது' என்று கூறினர். இதனை:—"பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல் வழியனைத்தும் பிழையேயன்றி-வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த வழிதேறி யதீதவாழ்விற்-போயண்மி யஞ்செழுத்துந் திருநீறுங் கண்டிகையும் பொருளாக்கொண்ட - நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெரும்பேறு நான்பெற் றேனல்" எனவருங் காஞ்சிப்புராணத்தானும், இச் சைவசித்தாந்தமே முத்தியைத் தரத்தக்க தென்பதனையும், இதனினுஞ் சிறந்தது வேறொன்றின்றென்பதனையும், "தன்மையு முன்னிலையுந் தானாய்ப் படர்க்கையுமா, யென்னொழிவி லின்பமாயின்பு மிது-வென்னாத, வேதாந்த சித்தாந்த மேபிறவா வீடென்றான்-ஓதாமல் வேதமுணர்ந்தோன்" எனவரும் ஒழிவிலொடுக்கத்தானும், "பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண்டுய்கெனக் - குடிலையென்னுந் தடவயனாப்ப-ணருள்வித்திட்டுக் கருணைநீர்பாய்ச்சி - வேதமென்னும் பாதபம் வளர்த்தனை-பாதபமதனிற் படுபயன்பலவே - அவற்றுள், இலைகொண் டுவந்தனர்பலரே யிலையொரீஇத் - தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ - யரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை - விரும்பினர்கொண்டுகொண் டுவந்தனர் பலரே - யவ்வாறுறுப்பு மிவ்வாறு பயப்ப - ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த - வாராவின்ப வருங்கனி பிழிந்து - சாரங்கொண்ட சைவசித்தாந்தத்-தேனமு தருந்தினர் சிலரே" எனவரும் பண்டார மும்மணிக்கோவை யானும், "தெய்வஞ்சிவனே சிவனருள்சமயஞ்-சைவஞ்சிவத்தொடு சம்பந்தமென்றான் - சைவம் வளர்க்குஞ் சம்பந்தமூர்த்தி" எனவருந் திருச்செந்தூரகவலானும், "விண்ணவரிந் திரன்முதலோர் நாரதாதி விளங்குசப்த ரிஷிகள்கன வீணைவல்லோ - ரொண்ணரிய சித்தர்மனுவாதிவேந்த ரிருக்காதி மறைமுனிவ ரொல்லாமிந்தக் - கண்ணகன்ஞா லம்மதிக்கத் தானேயுள்ளங் கைநெல்லிக்கனிபோலக்காட்சியாகத்-திண்ணியநல்லறிவாலிச்சமயத்தன்றேசெப்பரியசித்திமுத்திசேர்ந்தாரொன்றும்," "செப்பரிய சமயநெறியெல்லாந் தன்றன் றெய்வமே தெய்வமெனுஞ் செயற்கையான - வப்பரிசாளருமஃதேபிடித்தாலிப்பாலடுத்ததந்நூல் களும்விரித்தே யனுமனாதி - யொப்ப விரித்துரைப்பரிங்ஙன் பொய்மெய்யென்ன வொன்றிலையொன் றெனப்பார்ப்ப தொவ்வாதார்க்கு - மிப்பரிசாஞ் சமயமுமா யல்லவாகி யாதுசம யமும்வணங்கு மியல்பதாகி" "இயல்பென்றுந் திரியாம லியமமாதி யெண்குணமுங் காட்டியன்பா லின்பமாகிப் - பயனருளப் பொருள்கள்பரி வாரமாகிப் பண்புறவுஞ் சௌபான பக்ஷங்காட்டி - மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதிடாதி மற்றங்க நூல்வணங்க மௌனமோலி - யயர்வறச்சென் னியில்வைத்து ராசாங்கத்தி லமர்ந்தததுவை திகசைவ மழகிதந்தோ" "அந்தோவீ ததிசயமிச் சமயம்போலின் றறிஞரொலா நடுவறிய வணிமாவாதி - வந்தாடித் திரிபவர்க்கும் பேசாமோனம் வைத்திருந்த மாதவர்க்கு மற்றுமற்று - மிந்த்ராதி போகநலம் பெற்றபேர்க்கு மிதுவன்றித் தாயகம்வே றில்லையில்லை - சந்தான கற்பகம்போலருளைக்காட்டத் தக்கநெறி யிந்நெறியே தான்சன்மார்க்கம்" எனவும், சைவசமய

மேசமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக் - கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப் - பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந் - தெய்வச்சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே.'' எனவும் வருந் தாயுமானவர் திருவாக்கானும், "சைவத்தின் மேற்சம யம்வே றிலை யதிற் சார்சிவமாந் - தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்-மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமு - முய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.'' எனவருந் திருவருணைக்கலம்பகத்தானு முணர்க.

'பிஞ்சகன் மீதுகன் மலரா லெறிதரு தேரர்' என்பதன் வரலாறு:—சாக்கியநாயனார் சங்கமங்கையென்னும்பதியி லவதரித்துப் பௌத்தசமயஞ்சார்ந்து அதற்குரிய நூல்களையோதி யுணர்ந்து அது பொய்ச்சமயமென்று கழித்து, ஸ்ரீ காஞ்சிபுரத்தையடைந்து அப் பௌத்தவேட நீங்காமலேயிருந்து சிவலிங்கப்பெருமானைக் கண்டு செங்கல்லையே மலராகக்கொண்டு அருச்சித்து உணவுகொள்ளும் நியமம் பூண்டொழுகுநாள்களில்,ஒருநாள் அக் கல்லெறிதலை மறந்து உணவுகொள்ளச் செல்லுங்கால் ஞாபகம் வரவும், உடனே திடீரென்றெழுந்து விரைந்தோடிவர, சிவபெருமான் இடபாரூடராயெழுந்தருளி முத்திதந்தருளினு ரென்பதாம். இதனை:—"நாடோறுஞ் சிவலிங்கங் கண்டுண்ணு மதுநயந்து-மாடோர்வெள் ளிடைமன்னுஞ் சிவலிங்கங் கண்டுமன - நீடோடு களியுவகை நிலைமைவரச் செயலறியார் - பாடோர்கற் கண்டதனைப் பதைப்போடு மெடுத்தெறிந்தார்.'' எனவும், "கல்லாலே யெறிந்ததுவு மன்பான படிகானில் - வில்வேடர் செருப்படியுந் திருமுடியின் மேவிற்றால் - நல்லார்மற் றவர்செய்கை யன்பாலே நயந்ததனை-யல்லாதார் கல்லென்பா ரரனார்க்கஃதலராமால்.'' "அங்கொருநா ளருளாலே யயர்ந்துண்ணப் புகுகின்று - ரெங்கள்பிரான் றனையெறியா தயர்த்தேன்யா னெனவெழுந்து - பொங்கியதோர் காதலுடன் மிகவிரைந்து புறப்பட்டு-வெங்கரியி னுரிபுனைந்தார் திருமுன்பு மேவினார்.'' "கொண்டதொரு கல்லெடுத்துக் குறிகூடும் வகையெறிய - உண்டிவினை யொழிந்தஞ்சி யோடிவரும் வேட்கையெ டுங்-கண்டருளுங் கண்ணுதலார் கருணைபொழி திருநோக்காற் - றெண்டரொதிர் நெடுவிசும்பிற் றுணைவியொடுந் தோன்றுவார்.'' எனவும்வரும் பெரியபுராணத்தா னுணர்க.

'அன்பர்தங் கலிங்க மெழிலிக ணனைத்தலுஞ் சிரத்தை - முறைபுரி சிலைமேன் மோதினோர்' என்பதன் வரலாறு.—ஸ்ரீகாஞ்சிபுரத்திலே ஏகாலியர்குலத்திலேயவதரித்த திருக்குறிப்புத்தொண்டநாயனார் சிவனடியார்களது அழுக்காடையைத் தோய்த் துலர்த்திக் கொடுக்குந் திருத்தொண்டு செய் தொழுகுநாளில், சிவபெருமான் விருத்த அடியார்வேடங் கொண்டு வர, நாயனார் அவரை யுபசரித்து அவர்மேற் போர்த்திருந்த கந்தையைத் தோய்த்துலர்த்திப் பொழுதுபோவதற்குள் கொடுப்பதாக உறுதிகூறி வாங்கித் தோய்க்குங்கால், சிவபெருமான் றிருவருளால் இடிமின்னலுடன் பெருமழை பெய்ய, அதனால் அக் கந்தைவஸ்திர முலராமையை யுணர்ந்த நாயனார் தமது சொற்றவறியதோடு அடியவர்க் கபராதமிழைத்தோமே யென்னும் வருத்தத்தினால் ஆடையொலிக்கும்பாறையில் தன்றலையை மோதிக்கொள்ளச் சிவபெருமானது திருக்கரம் அப்பாறையின்வழியாக வெளிப்பட்டுத் தடுத்து பின்ன ரிடபாரூடராயெழுந்தருளி முத்திதந்தருளின ரென்பதாம். இதனை.—"விழுந்தமழை யொழியாது மெய்த்தவர்சொல் லியவெல்லை- கழிந்ததுமுன் பொலிச்துமனைக் காற்றேற்க வறிந்திலேன் - செழுந்தவர்தந் திருமேனி குளிர்காணுந் தீங்கிழைத்த - தொழும்பனேற்கினியிதுவே செயலென்று துணிந்தெழுந்தார்.'' "கந்தையுடைத் திடவெற்றுங் கற்பாறை மிசைத்தலையைச் - சிந்தவெடுத் தெற்றுவனென் றணைந்துசெழும் பாறைமி

சைத் - தந்தலையைப் புடைத்தெற்ற வப்பாறை தன்மருங்கு - வந்தெழுந்து பிடித்த தணி வளைத்தழும்பர் மலர்ச்செங்கை " என வரும் மேற்படி புராணத்தானு முணர்க.

ஈசன தருளாற் கயிலையை நீங்கி யிமையமா மயிலறம் புரிவான்
காசியி லிருந்து முடிவுறு தேகிக் கனகமா நீழலிற் பரனைப்
பூசனை புரிந்து கம்பைகண் டஞ்சிப் பூண்முலை வளைக்குறிப் படுத்தி
யாசிலா வருள்பெற் றின்னுநோற் றிடலா லணையகாஞ் சிக்குநே ரதுவே.

(இ-ள்.) சிவபெருமானுடைய திருவருளினால் உமாதேவியார் திருக்கயிலையினின்று நீங்கித் தருமங்களைச் செய்யும்பொருட்டுக் காசிப்பதியிலிருந்து அவைமுற்றுப்பெறுமையால்,அவ்விடத்தினின்றும்வந்துபொன்மயமாகிய மாவிருக்ஷத்தினீழலில் சிவபெருமானைப் பூசித்து, (அதற் கிடையூறாகத் தோன்றிய) கம்பாநதியைக் கண்டு பயந்து ஆபரணங்களையணிந்த முலைச்சுவடும் வளைச்சுவடும் அவ்வெம்பெருமானுக்குண்டாகச்செய்து, பின் குற்றமற்ற திருவருளைப் பெற்று இன்னந் தவஞ்செய்யுங் காரணத்தினால், அக் காஞ்சிமா நகரத்திற்கு ஒப்பா யுள்ள ஸ்தலம் அந்தஸ்தலமே ; (வேறில்லை.)—எ-று.

" மறைகளி னுருவாய்ப் பொன்மலர் தனிமா " என மேற்கூறுவதனால் 'கனகமா' என்று கூறினர். மயில்-உவமையாகுபெயர். 'இமையமா மயிலறம் புரிவான் காசியிலிருந்து முடிவுறு தேகி' என்பதனை:—" மண்ணகத்து வைகுமாந்த ரின்னராக மாணிழைப் - பெண்ணினல்ல வள்விமான நின்றுமிப் பெரும்புவிப் - புண்ணியத் தலங்கடோ றிழிந்திழிந்து போர்விடை - யண்ணலா ரிலிங்கபூசை செய்துகாசி யண்மினாள்." " முச்சகம் புகழ்ந்துபோற்று மொய்கொள்காசி மாநகர் - விச்சுவேசர் பூசையாற்றி வேறிலிங்க மொன்றமைத் - தர்ச்சனைத் திறத்தினேத்தி வைகியங் ககன்றுசீர்க் - கச்சியம் பதிக்கண்வைத்த காதலுய்ப்ப வேகினாள்." எனவருங் காஞ்சிப் புராணத்தானும், 'கனகமாநீழலிற் பரனைப் பூசனை புரிந்துகம்பை கண்டஞ்சிப் பூண்முலை வளைக்குறிப் படுத்தி' என்பதனை,—" அண்ண லாரருள் வெள்ளத்தை நோக்கியங்கயற்கண்ணி தம்பெருமான்மேல்-விண்ணெ லாங்கொள வரும்பெருவெள்ள மீதுவந்துறு மெனவெருக் கொண்டே - யுண்ணி லாவிய பதைப்புறு காத லுடன்றிருக்கையாற் றடுக்கநில் லாமை - தண்ணி லாமலர் வேணியினாைத் தழுவிக் கொண்டனடன்னையே யொப்பாள்." எனவும், " மலைக் குலக்கொடி பரிவுறு பயத்தான் மாவின் மேவியதேவர் நாயகனை - முலைக் குவட்டொடு வளைக்கையா னெருக்கி முறுகுகாதலி னிறுகிடத் தழுவச் - சிலைத்த னித்திரு நுதலிரு முலைக்குஞ் செந்தளிர்க் கரங்களுக்குமெத்தெனவே -கொலைக்க ளிற்றுரி புனைந்ததம் மேனி குழைந்து காட்டினர் விழைந்தகொள்கையினர்." எனவும், " பூதியாகிய புனிதநீராட்டிப் பொங்குகங்கைதோய் முடிச்சடை புனைந்து - காதில் வெண்குழை கண்டிகை தாழக் கலந்தயோகத்தின் மருவியகருத்தா - லாதிதேவனு ராயுமாதவஞ்செ யவ்வரங்கொலோ வகிலமீன் றளித்த - மாதுமெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு வளைத்தழும் புடன்முலைச்சுவ டணிந்தார்." எனவும் வரும் பெரியபுராணத்தானு முணர்க. (௧௪)

ஆருயிர் முழுதும் வீடுபெற் றுய்வா னறம்புரி சாலைய தணித்தாப் [றும்
பேரர விறைவன் றவத்தின்மு னிருந்த பிலத்திடைக் கோயில்கொண் டென்
பூரணி நோற்று வழிபட வணையாள் பூசனை கொண்டியா வர்க்குங்
காரணமான பரசிவ னநந்த கலையொடு நிலையதக் காஞ்சி.

(இ-ள்.) அருமையாகிய ஆன்மாக்க ளனைத்தும் முத்திபெற் றுய்யும்பொருட்டு(முப்பத்திரண்டு) தருமங்களைச்செய்கின்ற அறச்சாலையினருகாகக் (கார்க்கோட

கனென்னும்) பெரிய நாகராசன் முன்னந் தவஞ்செய்துகொண்டிருந்த பிலத்துவாரத்தினிடத்துத் திருக்கோயில்கொண்டு எப்பொழுதும் ஸ்ரீகாமாட்சியம்மையார் தவஞ்செய்து பூசிக்க, அவ் வம்மையாரது பூசையையேற்றுக்கொண்டு அகிலகாரணராகிய சிவபெருமான் அளவற்ற கலைகளோடும் எழுந்தருளியிருப்பது அக்காஞ்சிமாநகரம்.

ஸ்ரீகாமாக்ஷியம்மையார் முப்பத்திரண்டு தருமங்களையுஞ் செய்தருளினமை உயிர்களின்மேல்வைத்த அன்புகாரணமேயன்றித் தனக்கென வோரறப்பயன் கருதியன்றாகலின், 'ஆருயிர்முழுதும் வீடுபெற்றுய்வானறம்புரிசாலை' என்று கூறினார். 'பேரரவிறைவன்' என்றது கார்க்கோடகனென்னும் சர்ப்பராசனை; 'பிலத்திடைக்கோயில் கொண்டென்றும் பூரணிநோற்றுவழிபட' என்பதனை:—"முற்றுவித்தெழுந்துமீண்டு மொய்யொளிப்பிலத்தின் பாங்க - ரற்றமிலறமெண்ணான்கு மருள்வழிவளர்ப்பாளாகிப்-பற்றலர் புரஞ்செற்றானை யிம்முறை யெண்ணில் பன்னாள்-சிற்றிடையெம்பிராட்டி பூசனைசெய்து வாழ்நாள்" எனவருங்காஞ்சிப் புராணத்தானுணர்க. 'யாவர்க்குங்காரணமான பரசிவன்' என்றதனால், திருமால் முதலிய மற்றைத் தேவர்களனைவரும் அகாரணர்களென்று குறிபித்தவாறாயிற்று. சிவபெருமானது அநந்தகலைகளுள் ஓர் கலையே மற்றெல்லா க்ஷேத்திரங்களினுஞ் சென்றுலாவிவர, ஈண்டெப்பெருமான் பூரண கலைகளோடும் வீற்றிருந் தருளுதலின், 'அநந்த கலையொடு நிலையதக்காஞ்சி' என்று கூறினார். (அ௫)

இன்னமு முமையா ணோற்றிடு மாங்கே யிறப்பினும் பிறப்பினு நிலையாய்
மன்னியே யுறினு மொருகண மேனும் வைகினு மறைகளாந் தனிமா
நன்னிழ லிருந்த பரஞ்சுடர் புரியு நடந்தரி சிக்கினு மதனை
யுன்னினு முத்தி வழங்குகாஞ் சியைப்போ லுலகில்வே றொருநக ருளதோ.

(இ-ள்.) ஸ்ரீ காமாட்சியம்மையார் இப்பொழுதுந் தவஞ்செய்துகொண்டிருக்கின்ற அவ்விடத்தில் இறந்தாலும் பிறந்தாலும் நிலைபெற்று வாழ்ந்தாலும், ஒரு க்ஷணநேரந் தங்கி வசித்தாலும், வேதவடிவமாகிய ஒப்பற்ற மாவிருக்ஷத்தின் நல்ல நீழலி லெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானால் செய்யப்படுந் திருநடனத்தைத் தரிசித்தாலும், அதனைச் சிந்தித்தாலும் முத்தியைத் தருகின்ற காஞ்சிமாநகரத்தைப்போல இந்நிலவுலகத்தில் வேறே யொரு நகரமு முளதோ? (இல்லை.)—எ-று.

"தில்லையைக்காணக் காசியிலிறக்கச் சிறக்குமாரூர்தனிற்பிறக்க - எல்லையிலருணகிரிதனை நினைக்கவெய்தலாமுத்தி" என்றபடி, பிறத்தல் இறத்தல் தரிசித்தல் நினைத்தலாதிய ஒவ்வொன்றினால் முத்தியைத்தரும் பிற க்ஷேத்திரங்களைப்போலாது, இறத்தல் - பிறத்தல்- நிலைத்துவசித்தல் - நினைத்தலாதிய எவ்வகையினாலும் முத்தியைத்தருத லுண்மையால், 'காஞ்சியைப்போலுலகில் வேறொரு நகருளதோ' என்றுகூறினார். இதனை,—"எண்ணிலவாம் யாமருவு மிடங்களென வுரைத்தருள விறைவிகேளா-வண்ணலே யிவற்றுள்ளுஞ் சிறந்ததலம் யாதென்ன வருளிச்செய்வான்-புண்ணியமெய்த்திருக்காஞ்சி யெவற்றினு மேம்படுபுரியா மவ்வூர்தன்னை - யெண்ணினுங்கேட்பினுஞ் சொலினும் வணங்கினும் பேரின்பவீடெவர்க்கு நல்கும்" எனவும், "தோற்றநிலையிறுதி மறைப்பருளென்னு மைந்தொழிலுநடாத்தயாமே-யேற்றமுடையேகம்பநாதனெனுந்திருப்பெயர்பூண் டிலிங்க மானேந்-தேற்றமித னாற்காஞ்சியெவற்றினுக்கு மதிகமெனத் தெளிவாயங்கட்-போற்றியொருநாளேனு மமர்ந்துறையின் முத்திநிலை புகுதலால்" எனவும், "வழிச்செலவிற் புகுந்தேனு மறந்தேனும் பொருளாசை மருவியேனுங் - கழிப்பருஞ்சீர்க்காஞ்சியினிற் கணப்பொழுது வதிந்தோருங் கல்ப்பர்முத்தி-பழிப்பிலாக் காஞ்சியெனத் தன்னியல்பாளொருபொழுது பகரிற்கண்

ணி-லொழிப்பரும் பாதகமனைத்துமொழிந்து பெருந்துறக்கவீ டுறுதலுண்மை" என வும் வருங் காஞ்சிப்புராணத்தானுமுணர்க. (அ௬)

கண்ணுதற் பரனுந் தண்டுழாப் மௌலிக் கடவுளுங் கமலமே லயனும்
விண்ணவர்க் கிறையுங் கொற்றமா லினியு மேலைநாட் பிறந்ததொன் மனுவுந்
தண்ணளி புரிதுன் டீரனு நள்ளார் சமர்த்தொழில் கடந்ததண் டகனு
மண்ணலங் கரிகால் வளவனும் பிறரு மரசுசெய் தளித்ததந் நகரம்.

(இ-ள்.) நெற்றிக்கண்ணை யுடைய சிவபெருமானும், குளிர்ந்த துளபமாலையையணிந்த திருமுடியினையுடைய திருமாலும், தாமரைமலரில் வசிக்கும் பிரமனும், தேவர்கள் தலைவனாகிய இந்திரனும், வெற்றிபொருந்திய துர்க்கையும், முன்னாளில் பிறந்த பழையமனுவும், குளிர்ந்த அருளையுடைய துண்டீரனும், பகைவர்களதுபோரை வென்ற தண்டகனும், பெருமைபொருந்திய கரிகாற்சோழனும் மற்றவர்களும் அரசு செய்து பாதுகாத்தது, அக்காஞ்சிமாநகரம்.—எ-று.

முதன் மனுவாகலான் 'மேலைநாட் பிறந்ததொன்மனு' என்றும், சிவபெருமானது திருவருளாணையாற் றிருக்கயிலையினின்றும் வந்து அறநெறிவிளக்கியரசு புரிந்தமையால், 'தண்ணளிபுரிதுண்டீரன்' என்றும், திருமாலது திருவருளைப்பெற்றுத் திக்குவிசயம்புரிந்து திசைக்காவலனா யரசுபுரிந்தமையால், 'சமர்த்தொழில் கடந்த தண்டகன்' என்றும், காட்டை நாடாகத்திருத்தி அரசுபுரிந்தமையால், 'அண்ணலங்கரிகால்வளவன்' என்றுங் கூறினார். பிறர் என்றது, அவனுக்குப்பின் வந்தமற்றையவேந்தர்களை. (அ௭)

வேலைசூ ழுலகி னெங்கணு மிருபால் விட்டினை வெஃகி னோர்க் குதவு
மாலய நூற்றெட் டுள்ளமற் றவற்று ளைம்முகப் பரஞ்சுட ரமருங்
கோலமார் நிலய மிருபது மாயோன் கோநக ரெட்டுமாக் குழுமி
னாலெழு தான முள்ளவந் நகர்போ னும்புகழ் நகரமற் றெவனோ.

(இ-ள்.) சமுத்திரஞ்சூழ்ந்த இந்நிலவுலகத்தி லெவ்விடத்தும் இருவகைப்பகுதியினையுடைய முத்திகளை விரும்பினவர்களுக்குக் கொடுக்கின்ற தேவாலயங்கள் நூற்றெட்டுள்ளன. அவற்றுள், ஐந்து திருமுகங்களையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளுஞ் சிவாலயங்க ளிருபதும், திருமால் எழுந்தருளும் உயர்ந்த விஷ்ணுவாலயங்க ளெட்டுமாகக் கலந்து ஆக இருபத்தெட்டுத் தேவாலயங்க ளிருக்கின்ற அக்காஞ்சிமாநகரத்தைப்போல நம்மால் புகழத்தக்க நகரம் வேறு யாதுளது?—எ-று.

இருபால்வீடு - என்பன, சாலோக சாமீப சாரூபமாகிய பதமுத்திகளும், சாயுச்சியமாகிய பரமுத்தியுமாம். இவற்றைப் பதமுத்தியென்றும், முத்தி முடிவென்றுங்கூறுவர். இதனை:— "சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திரமார்க்கந் தாதாமார்க்கமென்று சங்கரனையடையும் - நன்மார்க்க நாலிவைதா ஞானயோக நற்கிரியை சரியையென நவிற்றுவதுஞ்செய்வர் - சன்மார்க்கமுத்திகள் சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சியமென்று சதுர்விதமா - முன்மார்க்க ஞானத்தா லெய்துமுத்தி முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபதமென்பர்." எனவரும் சிவஞான சித்தியானுணர்க. வெஃகினோராவார், லோகதர்மிணிதீக்ஷைபெற்றுப் பதமுத்திகளை விரும்பிய புத்திகாமிகளும், சிவதர்மிணிதீக்ஷைபெற்றுப் பரமுத்தியை விரும்பிய முத்திகாமிகளுமாம். ஆலயநூற்றெட்டுள்ள என்றதனை, "அவற்றுணூற்றெட்டுமேலா மவற்றினுங் காமற்காய்ந்த - சிவச்சுடர்க்கினியவைப்பி னிருபதுசிறந்தமன்னு-முவப்புறழமிர்தம் விண்ணோர்க் கூட்டியதிருமால் வைப்பி - னவைத்தொகையிரியநூறு நாலிரண்டதிகமாமால்" எனவருங் காஞ்சிப்புராணத்தானுமுணர்க. அந்நூற்றெட்டு சிவக்ஷேத்திரங்

களையும், காஞ்சிப்புராணம் இருபத்தெண்டளிப் படலத்துள் அவ்வக்ஷேத்திரமூர்த்தித் திருநாமங்களோடு விளங்கக் கூறியிருத்தலேக்காண்க. உலகுயிர்களீடேறுதற் பொருட்டு நான்குவேதங்களையும் இருபத்தெட்டுச் சிவாகமங்களையும் அருளிச்செய்த பெருமானுகலான், 'ஐம்முகப்பரஞ்சுடர்' என்றார். ஐம்முகங்களாவன.-ஈசானம் - தற்புருடம் - அகோரம் - வாமம் - சத்தியோசாதம் என்பன. இவற்றின்வகையை முன்னர்க்காண்க (அஅ)

கச்சபா லயமே கம்பமே மயானங்கவின்கொள்கா ரோணமா காளம்
பச்சிமா லயநல் லநேகபங் கடம்பை பணுதர மணீச்சரம் வராக
மெய்ச்சுர கரமுன் னிராமம்வீ ரட்டம் வேதநா புரமுருத் திரர்கா
வச்சிர னகரம் பிரமமாற் பேறு மறைசையாஞ் சிவாலய மிருபான்.

(இ-ள்.) கச்சபாலயம், திருவேகம்பம், திருமயானம், அழகு பொருந்திய திருக்காயாரோகணம், மகாகாளேசம், திருமேற்றளி, அநேகபேசம், கடம்பை, பணுதரேசம், மணீசம், வராகேசம், மெய்ம்மைபொருந்திய சுரகரேசம், பரசுராமேசம், வீரட்டகாசம், வேதநூபுரம், உருத்திரர்கா, இந்திராலயம், சதுர்முகசங்கரம், திருமாற்பேறு, திருவோத்தூர் என்னுஞ் சிவாலயங்களிருபதாகும்.—எ-று.

திருமால் கூர்மாவதாரத்தில் சிவபெருமானைப்பூசித்து வேண்டிய வரங்களைப்பெற்ற காரணத்தால் விளங்கும் **கச்சபாலயமும்**, உமாதேவியார் வேதவடிவமாகிய மாமரத்தடியில் சிவபெருமானைப் பூசித்துக் கம்பாநதியைக்கண்டு தழுவிக்கொள்ள அவ்வும்மையாரது முலைச்சுவடும் வளைச்சுவடும் பெற்றுச் சிவபெருமான் வீற்றிருந்தருளுந் **திருவேகம்பமும்**, பிரமனிடத்து வரம்பெற்ற பண்டாசுரனுலுண்டாகிய துன்பத்தை நீக்கும்பொருட்டுச் சிவபெருமான் சர்வ ஆன்மகோடிகளிலுங் கலந்துநின்ற அவ்வசுரனை யழிக்கத்திருவுள்ளங்கொண்டு அவ்வுயிர்களனைத்தையும் யாகாக்கினியிற் செலுத்தி யழித்தகாரணத்தால் விளங்குந் **திருமயானமும்**, பிரளயவெள்ளத்திற் கஞ்சியடைந்த பிரமவிஷ்ணுக்களைச் சிவபெருமான் தமது திருத்தோள் மீதேற்றிவைத்திருந்து அவ்வெள்ளம் நீங்கியபின் அவர்களை யிறக்கியருள் செய்தகாரணத்தால் விளங்கும் **திருக்காயாரோகணமும்**, திடவிரதனென்னு மரசன் தனது விடப்பிணி நீங்கச் சிவபெருமானைப்பூசித்து அந்நோயை நீக்கிக்கொண்ட காரணத்தால் விளங்கும் **மகாகாளேசமும்**, திருமால் சிவசாரூபம் பெறவேண்டித் தவஞ்செய்து திருஞானசம்பந்தப்பிள்ளையாரது திருப்பதிகத்தினுல் அச்சிவசாரூபம் பெற்ற மேன்மையால் விளங்குந் **திருமேற்றளியும்**, ஸ்ரீ விநாயகப்பெருமான் கசமுகாசுரனைக்கொன்று அவனது கோட்டின்கண்ணுள்ள முத்துக்களால் சிவபெருமானைப்பூசித்த காரணத்தால் விளங்கும் **அநேகபேசமும்**, குமாரக்கடவுள் சத்திவேல்பெறக்கருதிச் சிவபெருமானைப்பூசித்தகாரணத்தால் விளங்குங் **கடம்பையும்**, ஆதிசேடன் வாயுவினுலிழந்த வலிபெறும் பொருட்டுச் சிவபெருமானைப் பூசித்துத் தனதாயிரம் பணுமுடிகளை அவ்வெம்பெருமான் திருமுடிமீது குடையாகக் கவித்துத் திருவருள்பெற்ற காரணத்தால் விளங்கும் **பணுதரேசமும்**, வாசுகியென்னும் நாகராஜன் தன் சுடிகாரத்தினங்களால் சிவபெருமானைப் பூசித்து அஷ்ட நாகங்களுள் முதன்மையும், அவ்வெம்பெருமான் திருமார்பிலாரமுமாக விளங்கப் பேறுபெற்றகாரணத்தால் விளங்கும் **மணீசமும்**, சிவபெருமானது திருவடியைக் காண்பமென்று சென்றதிருமாலாகிய வராகம் பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் விளங்கும் **வராகேசமும்**, தனது பார்வையினுல் உயிர்களுக்குச் சுரநோய் விளைத்துவருத்திய சுரலோசனனென்னு மசுரனைச் சிவபெருமான் குபேரனைக்கொண்டழித்து, அக்குபேரனுக்குவேண்டிய வரங்களைக்கொடுத்தருளிய காரணத்தால் விளங்குஞ் **சுரகரேசமும்**, பரசிராமன் தனதுதந்தையாகிய சமதக்கினி

முனிவரைக்கொன்ற கார்த்தவீரியார்ச்சுன னிமித்தம் சூரியவமிசத்தரசர்களைக்கொல்லும்பொருட்டுச் சிவபெருமானைப் பூசித்துப் பரசு என்னுமாயுதம் பெற்றகாரணத்தால் விளங்கும் **பரசிராமேசமும்**, எல்லாப் பொருள்களு மொடுங்கும் மகாப்பிரளய காலத்துச் சிவபெருமானொருவரேநின்று வீராட்டகாசத்தோடு திருநடனஞ்செய்தருளியகாரணத்தால் விளங்கும் **வீராட்டகாசமும்**, வேதங்களைத் திருவடிச் சிலம்பாக வணிந்த சிவபெருமானைப் பிரமன் பூசித்து அவ்வேதங்களைக்கைவரப் பெற்றகாரணத்தால் விளங்கும் **வேதநூபுரமும்**, பிரமனது சிருட்டிகாரணமாகச் சிவபெருமான் ஏகாதசருத்திரர்களைத் தந்தருளிய காரணத்தால் விளங்கும் **உருத்திரர்காவும்**, இந்திரன் சிவபெருமானைப் பூசித்து இந்திரபதம் பெற்ற காரணத்தால் விளங்கும் **இந்திராலயமும்**, பிரமன்தனது சிருட்டித்தொழில் மல்கும்பொருட்டுச் சிவபெருமானைப் பூசித்து அவர்கிருபையினால் தன்முகங்களில் வேதங்கள் தோன்றப்பெற்ற காரணத்தால் விளங்கும் **சதுர்முகசங்கரமும்**, திருமால் ஆயிரந்தாமரைமலர்களால் சிவபெருமானைப் பூசித்தபொழுது அதிலொருமலர் குறையத்தனது கண்ணிடந்தப்பிச்சக்கரம் பெற்ற காரணத்தால் விளங்கும் **திருமாற்பேறும்**, சிவபெருமான் அரிபிரமேந்திராதி தேவர்களுக்கும் முனிவர்களுக்குஞ் சந்தைகூட்டி வேதங்களை யோதுவித்த காரணத்தால் விளங்குந் **திருவோத்தூரும்** ஆகிய இருபது சிவக்ஷேத்திரங்களையுடையது, அக்காஞ்சிமாநகரமெனவறிக.

இதனை :—" கருணைகூர் திருவே கம்பங் கச்சபா லயங்காரோணம், பரவுமேற்றளியோடிந்திராலயம்பணாதரீசந், தரவுடுத்துயர்மணீச நான்முக சங்கரஞ்சீர், விரவியசுரகரீசமேதகுபரசிராமம்." "உருத்திரநகர் மாகாளம் வராகமோத்தூர்மாற்பேறு, விரித்தசீரநேகபேசம் வேதநூபுரமயானங், கருத்தபு கடம்பை மன்னும் வீராட்டகாசமென்னத், தெரித்திடுமிவை நாலைந்துஞ் சிவபிரான் றளிகளாமால்." எனவருங்காஞ்சிப்புராணத்தானுமுணர்க. (அக)

கரிகிரி யட்ட புயந்திரு வெஃகாக் கருதுமூ ரகஞ்சகா ளாங்கஞ்
சுரர்புகழ் நிராகா ரந்நிலாத் திங்கட் டுண்டநற் பாடக மினைய
வரிதிரு முற்ற மெட்டவை யன்றி யறுபதி னுயிர நிலயம்
பரசிவன் சத்தி குமரர்மால் புறத்தோர் பலரும்வீற் றிருப்பவப் பதியே.

(இ-ள்.) அத்திகிரி, அட்டபுயம், திருவெஃகா, (யாவருஞ்) சிந்திக்கின்ற திருவூரகம், சகாளாங்கம், தேவர்களால் புகழத்தக்க நிராகாரம், நிலாத்திங்கட்டுண்டம், நல்லதிருப்பாடகம் என்னும் விஷ்ணுவாலயங்க ளெட்டாகும்; அவையன்றியும், அறுபதினாயிர வாலயங்கள் சிவபெருமான், சத்தி, அவர்கள் திருக்குமாரர்கள், திருமால், மற்றைப் புறத்தெய்வங்களாகிய பலரும் வீற்றிருக்கப்பெறுவது அக்காஞ்சிமாநகரம்.

இந்திரனது வெள்ளையானை திருமாலைப்பூசித்து வரம்பெற்றுத்தனதொரு அமிசத்தால் அத்திருமாலைத் தாங்கப்பெற்ற காரணத்தால் விளங்கும் **அத்திகிரியும்**, திருப்பாற்கடலிற்றோன்றிய திருமகளைத்திருமால் எட்டுப்புயங்களோடிருந்து திருமணம்புரிந்தமேன்மையால் விளங்கும் **அட்டபுயமும்**, பிரமன்செய்த வேள்வியை யழித்தற்பொருட்டுவந்த வேகவதியைத் தடுக்கவேண்டித் திருமால் பள்ளிக்கொண்ட மேன்மையால் விளங்கும் **திருவெஃகாவும்**, மாவலிச்சக்கிரவர்த்தியினிடத்து மூன்றடியாகப்பெற்ற மண்ணையளந்து நின்றகோலத்தோடு திருமால் எழுந்தருளிய மேன்மையால் விளங்குந் **திருவூரகமும்**, கிருஷ்ணசன்மா வென்னும் வேதியன் தன்னுடன் சபதங்கூறிய வேதியர்கள் பொருட்டுக் கம்பாநதிக்கரையில் யாவருங்காணப் பாலகிருஷ்ணனையழைப்பித்துகாட்ட, திருமால் அக்கிருஷ்ணகோலத்தோடு எழுந்தருளு

ங்காரணத்தால் விளங்குஞ் சகாளாங்கழம், திருமால் சிவபெருமானைப் பூசித்துத்த னது கரியவண்ணநீங்கிப் பவளவண்ணம்பெற்று எழுந்தருளியமேன்மையோடு விள ங்கும் நீராகாரழம், திருப்பாற் கடலிற்றோன்றிய விடவேகத்தைத் தணித்தற்பொரு ட்டுத் திருமால் சிவபெருமானது திருச்சடையிலுள்ள சந்திரகலை தன்மேற்படும்வண் ணம் அவ்வெம்பெருமானைப்பூசித்துநின்ற மேன்மையோடு விளங்கும் நிலாத்திங்கட் டுண்டழம், திருமால் தனுர்வேதத்தையியற்றி அத்தொழிற்றலைவர்களுக்கருளி யெழுந் தருளிய மேன்மையால் விளங்கும் திருப்பாடகழம் ஆகிய எட்டு விஷ்ணுக்ஷேத்திரங் களையுடையது, அக்காஞ்சிமா நகரமெனவறிக.

இதனை :—நடைமலை யோங்கல் வெஃகா நகைநிலாத் துண்ட மேன்மை - யடைநிரா கார மட்ட புயஞ்சகா ளாங்கந் நீமை - யிடையுழூ ரகமேர் தங்கும் பாடக மிவையோ டெட்டுங் - குடையெனப் பறம்பு தாங்குங் குரிசிலுக் கினிய தானம்.''— என வருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. குமரர் என்றது, விநாயகக்கடவுள் குமா ரக்கடவுள் வயிரவர் சாத்தா முதலியோர்களை. புறத்தோர் என்றது அருகன் புத்தன் முதலியோர்களை. ' இவையன்றி யறுபதினுயிரநிலயம் பரசிவன் சத்தி குமரர்மால் புற த்தோர் பலரும்வீற் றிருப்பதப் பதியே' என்பதனை—'' செப்ப ரும்புகழ் பூண்ட மற்றவற்றினுட் சினகர முளவான - முப்ப திற்றுமூன் றிரட்டிய பத்துநூ றெனப்படு முறைசான்ற - வப்பெ ருந்தகு தளிகளுட் பனிவரை யணங்குபூண் முலைதோய்ந்த - துப்பு வார்சடை யண்ணலார் தளிகளெட் டிரட்டியா யிரஞ்சூழல்.'' '' காமக் கோட் டத்தி னிருந்தறம் புரிந்தருள் காமநோக் குடைமென்பூந் - தாமப்பூங்குழ லம்பிகை க்குரியநற் சத்திகளமர்கின்ற - வேமக்கோயில்களைந்துறழாயிர மெரிதவழ் சுடராழி- நாமத்திண்படை நாயகனிருக்கை முந்நான்குபத் துறழ்நூறே.'' '' உலகெலாந்தரு நான்முகற் கொருபதினுயிரத்தெழுநூறு - விலகுமுக்குடைவானவற் கொன்பதி னு யிரத்தெழுநூற்ற் - றலைமைசால்புகழ்ப்புத்தனுக்கெட்டுறெ ழாயிரஞ்சகம்போற்றக் - குலவுகொற்றவை வயிரவன் சாத்தனுக் கொவ்வொராயிரங் கோயில்.'' '' வயங்கு நெட்டிலை வேற்படைப் பண்ணவன் வாணிலாப் பிறைக்கோட்டா - னுயங்க வெம் பகை முடித்தரு ளைங்கரத் தொருமுத லுயர்வானத் - தியங்கு செங்கதிருக்கைகள் வேறுவேறைந்து நூறெனச்சொல்வர் - தயங்கு மேதகை யனந்தன்வாழ் மந்திரஞ் சாற்றிலொன் றெழிநூறே.'' என வருங் காஞ்சிப்புராணத்தா னுணர்க. (௧0)

ஒன்றுதீ விளக்க மீரிட மொருமூன் றற்றிடு தெற்றிநான் கரண
நின்றிடு தருவைந் தாறுபுள் ளேழு நெடுநதி யெண்பொது வொன்பான்
மன்றலம் பொய்கை வியன்சிலை யொருபான் மன்றவை பத்தின்மே லொன்று
நின்றமர்ந் தொழுகு நெறியிலற் புதமாய் நிகரிலா துறையுமந் நகரம்.

(இ-ள்.) ஒரு தூண்டாவிளக்கும், இரண்டு இடமும், மூன்று தெற்றியும், நான்கு எல்லையும், நிலைத்திருக்கின்ற ஐந்து தருக்களும், ஆறு பறவைகளும், எழு நதிகளும்,எட்டுப்பொதுக்களும், மணம்பொருந்திய ஒன்பதுதடாகங்களும், பெரியப த்துக்கற்களும், பதினொருசபைகளும் நிலைபெற்றோங்கி விளங்குகின்ற அற்புதமாக ஒப்பற்றுப் பொருந்தப்பெற்றுள்ளது, அக்காஞ்சிமாநகரம்.—எ-று.

ஒன்று முதல் பதினொன்றீறுகிய விம்மிதக்களனைத்தும் எக்காலத்து மாறு மல் நிலைபெற்று விளங்குதலின், ' நின்றமர்ந்துறையு நெறியிலற்புதமாய் நிகரிலாது றையு மந்நகரம்' என்று கூறினர். இதனை.—'' மற்று மூன்றிடம் வேதிகை வயல்கணு ற் றவிசு - பொற்ற வைந்தருத் தடமறு புட்களேழ் பொதியில்-பற்றுமெண்பொய்கை யொன்பது சிலைபொழில் பத்தாங்-கொற்ற மன்றுபத் தோடொரு கூவலுங் குலவும்.'' என்வருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (௧௧)

சிறந்திடு மதியு மிரவியு மாழ்கச் செகமெலாந் தனதொளி பரப்பி, யற
ம்புரி காமக் கோட்டமந் திரத்து ளம்மைவாழ் பிலத்தினு ளழியா, துறைந்
திடு தூண்டா விளக்கமொன் றுதித்த வுயிர்த்தொகை யிறந்திடா விடமொ
ன், றிறந்திடு முயிர்கள் பிறந்திடா விடமொன் றெம்பிரா னிருந்தவி ரிடமே.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய சந்திர சூரியர்கள் (தம்மொளி) மழுங்கும்படி உலகமுழுவதுந் தனது பேரொளியை வீசி, (முப்பத்திரண்டு)தருமங்களைச் செய்தருளிய காமக்கோட்டமென்னு மாலயத்தில் ஸ்ரீகாமாக்ஷியம்மையா ரெழுந்தருளியிருக்கின்ற பிலத்துவாரத்தில் கெடாதிருக்கின்ற தூண்டாவிளக்கம் ஒன்று. பிறந்த உயிர்க்கூட்டங்கள் இறவாத இடம் ஒன்றும், இறந்த உயிர்கள் பிறவாத இடம் ஒன்றும் ஆக எமது சிவபெருமான் வீற்றிருந்தருளும் இரண்டிடங்களாம்.—எ-று.

தண்கதிர் வீசுஞ் சந்திரனும் வெங்கதிர் வீசுஞ் சூரியனும் பேரொளியினராகலின், 'சிறந்திடுமதியு மிரவியும்' என்றார். மந்திரம்=கோயில். 'உதித்த வுயிர்த்தொகை யிறந்திடா விடமொன் - றிறந்திடு முயிர்கள் பிறந்திடா விடமொன்று' என்பன, இறவாத்தானம் பிறவாத்தான மென்னுந் தேவாலயங்களை. (கஉ)

தோற்றுயிர்க் குணவு நல்குமோர் தெற்றி சொற்றவை யுதவுமோர் தெற்றி
தேற்றுசொன் மூகர்க் களிக்குமோர் தெற்றி தெற்றிமூன் றிவைநகரெல்லை
யிற்றினிற் கீழ்பா லளக்கருந் தென்பா லியற்பெரும் பெண்ணைநன் நதியு
மேற்றிசைப் பவள சயிலமும் வடபால் வேங்கட வெற்புநான் கரணே.

(இ-ள்.) தோன்றுகின்ற உயிர்களுக்கு உணவைத் தருகின்ற ஒரு தெற்றியும், கேட்ட பொருள்களைத் தருகின்ற ஒரு தெற்றியும், ஊமைகளுக்குத் தெளிவான சொற்களைத்தருகின்ற ஒரு தெற்றியும் ஆக மூன்று தெற்றிகளாம். அந்நகரத்தின் கீழ்க்கோடியில் கடலும், தென்கோடியில் அழகிய பெரிய பெண்ணையாறும், மேற்றிசைக்கோடியில் பவளமலையும்,வடதிசைக்கோடியில் வேங்கடமலையும் ஆகஎல்லைகள் நான்காகும்.—எ-று.

'தெற்றிமூன்றிவைநகரெல்லை' என்பதனை.—"ஊங்க ணைந்தவர்க் கமுதுநீ ருதவிடு மொன்று - பாங்கின் வேட்டன யாவையும் பயந்திடு மொன்று - மூங்கை பேசவும் பேசினேன் மூங்கைமை யுறவும் - ஆங்க ளிப்பதொன் றுகமுத் தெற்றியு முளவால்." எனவருங் காஞ்சிப்புராணத்தாமுனுணர்க. தொண்டைநாட்டெல்லையே காஞ்சிமாநகரத்து அரணெல்லையாகக் கூறுதலின், நகரெல்லை - யிற்றினிற் கீழ்பா லளக்கருந் தென்பா லியற்பெரும் பெண்ணைநன் னதியு-மேற்றிசைப் பவள சைலமும் வடபால் வேங்கட வெற்புநான் கரணே' என்றார். இதனை—" மேற்குப் பவளமலை வேங்கடநேர் வடக்கா - மார்க்கு முவரி யணிகிழக்குப்—பார்க்குளுயர் - தெற்குப் பிறுகி திகழிருப தின்காத - நற்றொண்டை நாடெனவே நாட்டு." எனவரும் வெண்பாவானு முணர்க. (கங)

மறைகளி னுருவாய்ப் பொன்மலர் தனிமா மலரொடு காயிலா தென்று ஞ
செறிதரு பலங்க ளுதவிநுங் கினர்க்குச் சித்திகள் வழங்குறு மெகினம்
வெறிமலர் பலவு மலர்ந்திடு மதூகம் விண்ணினை நோக்குமோ ரத்தி
நறுநிழல் பிரியா திருந்ததோர் காஞ்சி நன்னகர் தன்னிலை தருவே.

(இ-ள்.) வேதவடிவமாய்ப் பொன்மலர் மலருகின்ற ஒப்பற்ற மாமரமும், மலருங்காயுமில்லாமல் எந்நாளும் நெருங்கிய பழங்களைக்கொடுத்து அவற்றையுண்டவர்களுக்குச் சித்திகளைக் கொடுக்கின்ற புளிமாமரமும், நறுமணங் கமழும் பலவகை மலர்கள் மலர்கின்ற இருப்பைமரமும், ஆகாயத்தைநோக்கி யுயர்ந்தோங்குகின்ற ஒரு

அத்திமரமும், நல்லநிழல் தன்னடிவிட்டுப் பிரியாதிருக்கிற ஒரு காஞ்சிமரமும் ஆகச் சிறந்த அக்காஞ்சிமாநகரத்தில் ஐந்துமரங்களாம்.—எ-று.

'நன்னகர் தன்னிலைந்தரு' என்பதனை :—ஓவாமை யமுதொழுக்கும் பொலம்பூச் சூதந் தன்னிழலைப் பிறர்க்குதவாக் காஞ்சியொன்று - பூவாது காயாது கனிக ணல்கும் பூம்புளிபல் வகைப்போதுந் தரும தூகம் - தாவாத செம்பொன்மல ரத்தியென்றுச் சாற்றரிய தெய்வதமாத் தருக்களைந்துந் - தேவாதி தேவரினித மருவுங்காஞ் சித் திருநகரினிறும்பூது திகழவோங்கும்." எனவருங்காஞ்சிப்புராணத்தானுமுணர்க.

உம்பருண் பகிருஞ் சாதக மணிக ளுதவிடு மன்னநூ லுணாத்துக்
கொம்புறு கிள்ளை யலகுசொல் லாந்தை குறைபெறிற் கூவுறுக் கோழி
யிம்பரிற் பாவந் துடைத்திடு நேமி யிவையறு புள்ளெழு நதிதான்
கம்பைநற் பம்பை மஞ்சனீர் பிச்சி கலிச்சிபொன் மண்ணிவெஃ காவே.

(இ-ள்.) தேவாமுதத்தைக் கொடுக்கின்ற சாதகப்பறவையும், நவரத்தினங்களைக் கொடுக்கின்ற அன்னப்பறவையும், சகல சாஸ்திரங்களையுணாத்து மரக்கொம்பில் வசிக்கின்ற கிளியும், கணிதமுணாக்கும் ஆந்தையும், குறைவு வரும்பொழுது கூவாதகோழியும், இவ்விடத்தில் பாவத்தைநீக்குகின்ற சக்கரவாகப்பறவையும், ஆகஇவை ஆறுபறவைகளாம். கம்பையும், நல்ல பம்பையும், மஞ்சனீரும், பிச்சியும், கலிச்சியும், பாலியும், வேகவதியும் ஆக எழுநதிகளாம்.—எ-று.

உம்பருண்—தேவாமிர்தம். மணிகள் என்றது, நவரத்தினங்களை. பாவந்தீமையைப் பயத்தலான், 'இம்பரிற்பாவந் துடைத்திடு நேமி' என்றார். எழுநதி என்பதனை:—"பம்பை கம்பை புண்ணியநீர் மஞ்சணதி வேகவதிபாலிசேயா-றென்பனவேழுலகுமிடு மேழ்மாலை யென வொழுகு மெய்துவோரைச் - செம்பதுமக் கரமெடுத்து விளையநகர் விளிப்பதுபோற் றெங்கு நீளும் - வம்பவிழ்பூஞ் சோலைகளுண் மழைமறைத்த கதிர்போல வயங்கு மூதூர்" எனவருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க.

குணாபுனல் வேட்டோர்க் குதவியே திரியுங் கூவலம் பொதுக்குறு முயல்போய்க், கரிதொடர் பொதுவே ழிசையுறு பொதுமால் கண்டுயின் றிடுபொது வேறோ, ருருவுசெய் பொதுவோர் புற்றின்மா முழவ மொலித்திடும் பொதுத்திசை மயக்கம், புரிதரு பொதுவென் னம்மைநோற் றருளும் பொற்பொது விவைகளெண் பொதுவே.

(இ-ள்.) ஒலிக்கின்ற நீரை விரும்பினவர்களுக்குக் கொடுத்துத்திரிகின்ற கிணற்றையுடைய அழகியபொதுவும், சிறிய முயலானதுசென்று யானையைவெருட்டுகின்ற பொதுவும், சப்த சுரங்களையுடைய பொதுவும், திருமால் பள்ளிகொண்டிருக்கும் பொதுவும் (ஒரு உருவத்தை) வேறொரு உருவமாகச் செய்கின்றபொதுவும், ஒரு புற்றின்கண் பெரிய மத்தளமொலிக்கின்றபொதுவும், திசைமயக்கத்தைச்செய்கின்ற பொதுவும், எனதன்னையாகிய ஸ்ரீகாமாக்ஷியம்மையார் தவஞ்செய்தருளுகின்ற அழகிய பொதுவும் ஆக இவைகள் எட்டுப் பொதுக்களாம்.—எ-று.

குணாபுனல் - வினைத்தொகை. கரி—கரத்தையுடையது ; யானை. எழிசை - சப்த சுரங்கள். இவற்றின் வகையை முன்னர்க்காண்க. (கூகூ)

முன்னுறு பிணிகண் மாற்றிடும் பொய்கை முதல்வர்கண் முடிவுறுங் காலைச், செந்நிற மாகும் பொய்கைமுக் காலந் தெரித்திடும் பொய்கைகண் ணுதலோன், றன்னடி காட்டும் பொய்கைவெண் டியது தந்திடும் பொய்கைமெய்ஞ் ஞானம், பொன்னிறஞ் செல்வம் வசிகரந் தருநாற் பொய்கையோ டொன்பதாம் பொய்கை.

(இ-ள்.) முன்னே யடைந்துள்ள வியாதிகளை நீக்குகின்ற பொய்கையும், அரசர்களிறக்குங்காலத்துச் செந்நிறமடைகின்ற பொய்கையும், முக்காலங்களையுந் தெரிவிக்கின்ற பொய்கையும், சிவபெருமானதுதிருவடிகளைக்காட்டுகின்ற பொய்கையும்,(அவரவர்கள்) விரும்பிய பொருள்களைக் கொடுக்கின்ற பொய்கையும், மெய்ஞ்ஞானமும், பொன்னிறமும், செல்வங்களும் வசீகரமுமாகிய இந்நான்கையுந் தருகின்ற நான்குபொய்கைகளுடன் ஒன்பது பொய்கைகளாம்.—எ-று.

முதல்வர்கள் என்றது, அரசர்களை. " மூழ்குநர்க்குப் பொன்னுருவ மளிக்கு மொன்று முழுமணியோர் தருமொன்று விண்ணோர் கோமான் - வாழ்வளிக்கு மொன்று மனக்கினிய வெல்லாந் தருமொன்று வேண்டியதை வழங்குமொன்று - வீழ்தகைத்தா மெய்ஞ்ஞான மளிக்கு மொன்று வீடுதவு மொன்றுவினைப் பிணிநோய் முற்றும் - பாழ்படுத்து மொன்றென்ன மலங்கண் மாற்றும் பனிமலர்ப்பூம் பொய்கையிருநான்கு மேவும்," என்றார் காஞ்சிப்புராணத்தும். (கள)

விடந்தனை யகற்று மொருகலா ருயிர்கண் மெய்ப்பிணி மாற்றிடு மொருக
லடைந்தவ ரெல்லா மிமையவ ராக வளித்திடு மொருகல்வெம் படையாற்
றடிந்திட வேறுய்த் துணிபடு முடலஞ் சந்துசெய் வித்திடு மொருக
னெடும்படை வரினு மவையிரிந் தோட நிலைபெறீஇ நிற்குமாங் கொருகல்.

(இ-ள்.) விஷத்தை நீக்குகின்ற ஒரு கல்லும், அழகிய ஆன்மாக்களின் உடம்பின்கண்ணுள்ள வியாதியை நீக்குகின்ற ஒரு கல்லும், தன்னிடத்து வந்தவர்களனைவரையும் தேவர்களாகச்செய்கிற ஒருகல்லும், கொடிய ஆயுதங்களால் வெட்ட அதனால் துண்டாக வேறுபட்ட சரீரத்தைக் கூட்டுவிக்கின்ற ஒரு கல்லும், பெருஞ்சேனைகள் எதிர்த்துவந்தாலும் அவை முரிந்தோடும் வண்ணம் அங்கு நிலைபெற்று நிற்கின்ற ஒருகல்லும்.—எ-று.

உயிர்களுக்கூறுவிளைக்குங் கொடுமை யுடையனவாகலின், 'வெம்படை' என்று கூறினர். 'நெடும்படை' என்றமையால், பிரமாஸ்திரம் நாராயணாஸ்திரமுதலியவைகளுங் கொள்ளக் கிடந்தமையுணர்க. பெறீஇ-சொல்லிசை யளபெடை. இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் ஒரு தொடரா யிருத்தலின் குளகமெனப்படும். இதனை :—"குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்"என்னுந்தண்டியலங்காரத்தானுணர்க.

துஞ்சினர் தம்மை யெழுப்புமாங் கொருக றொல்வழக் கறுத்திடு மொருக
லெஞ்சலி னிதியங் கெடுத்துளோர் வினவி லீதெனக் காட்டிடு மொருகல்
விஞ்சிய வினைக டீர்த்திடு மொருகல் வேந்தருக் கரசிய லுதவித்
தஞ்சம தாக நின்றிடு மொருக றக்ககல் லையிரண் டவையே.

(இ-ள்.) இறந்தவர்களை யெழுப்புகின்ற ஒருகல்லும், பழமையாகிய வழக்கைத்தீர்த்துக் கொடுக்கின்ற ஒரு கல்லும், குறைவற்ற பெருந்திரவியத்தை யிழந்தவர்கள் அடைந்துகேட்டால் இதுவே என்று காட்டுகின்ற ஒருகல்லும், மிகுதியாகவுள்ள தீவினைகளை நீக்குகின்ற ஒருகல்லும், அரசர்கட்கு அரசாட்சியைக் கொடுத்து அவர்களுக்கு ஆதரவாகநிற்கின்ற ஒருகல்லும் ஆகத் தகுதியாகியகற்கள் பத்தாகும்.—எ-று.

தீராவழக்கென்பார், 'தொல்வழக்கு' என்றும், பெரும்பொருளென்பார், 'எஞ்சலினிதியம்' என்றும், நீங்காவினை யென்பார், 'விஞ்சிய வினைகள்' என்றும், அரசர்கள் செய்யு மரசாட்சிக்குற்ற துணையாயிருக்கு மென்பார் 'அரசியலுதவித்தஞ்சமதாக நின்றிடும்' என்றுங் கூறினர், இதனை :—தீண்டினரைத் தேவாக்கு மொருகல் பாம்பின் கடிவிடந்தீர்த் திடுமொருகல் சித்தியெல்லா - மாண்டளிக்கு மொருகலும்

ருதவுமோர்கல் வழக்கனைத்து நடுவாய்நின் றறுக்கு மோர்கல் - மூண்டபிணித் தழும் புறுபுண் மாற்றுமோர்கன் மொய்யொளி மெய்த் துணியுறுப்பைப் பொருத்துமோர்க- லீண்டியதீ வினையிரிக்கு மோர்கல் ஞானந் தருமொருக லெனச் சிலைக ளொருப தோங்கும்." எனவருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (கசுசு)

அயன்மனைச் சென்றோர் கணவரைப் பிழைத்தோ ரடிகளை யிகழ்ந்து ளோ ரணுகிற், றுயருறு மூகை யாக்குமோர் மன்றஞ் சோரர்முன் சுழலு மோர் மன்றம், வியனிறம் பலவாத் தோன்றுமோர் மன்றம் விஞ்சைகள் வ ழங்குமோர் மன்ற, மயல்புரி கின்ற பொழுதொடு திசையின் மயக்கறத் தெ ளிக்குமோர் மன்றம்.

(இ-ள்.) அயல் வீட்டிற்சென்றவர்களும், தங்கள் நாயகர்களுக்குப் பிழை செய்தவர்களும், ஆசாரியர்களைப்பழித்துக் கூறியவர்களும் வந்தடைந்தால் துன்பத் தைச்செய்யு மூமையாகச் செய்கின்ற ஒரு மன்றும், திருடர்களுக்கு முன்னே சுழலு கின்ற ஒரு மன்றும், விசாலமாகிய பல நிறங்களோடு விளங்குகின்ற ஒரு மன்றும், வித்தைகளைத்தருகின்ற ஒரு மன்றும், மயக்கத்தைத் தருகின்ற பொழுதுடன் திசை க்கமும் நீங்கத்தெளிவிக்கின்ற ஒரு மன்றும்.—எ-று.

பிறவிமூகரா யுள்ளோர்க்கு, இடையினுண்டா மூக ரடையுந் துன்பத்தைப் போலப் பெருந்துன்பம் விளையாமையின், 'துயருறு மூகை' என்று கூறினர்.

இதுமுத லிரண்டுபாடல்கள் குளகம். (சoo)

நாகரூ ருய்க்கும் பிலத்ததோர் மன்ற நவமணி யுதவுமோர் மன்ற
மாகர்பே ரமிர்த மிருக்குமோர் மன்றம் வடிவினை மறைப்பதோர் மன்ற
மேகநின் றுறுது பொழியுமோர் மன்றம் வியன்பகல் கங்குலாக் கங்கு
லாகிய பகலா விருப்பதோர் மன்ற மையிரண் டொன்றுமன் றவையே.

(இ-ள்.) நாகலோகத்திற் செலுத்துகின்ற பிலத்துவாரத்தையுடைய ஒரு மன்றும், நவரத்தினங்களைத் தருகின்ற ஒரு மன்றும், தேவர்களது பெரிய அமுதமா னது பொருந்தியிருக்கின்ற ஒரு மன்றும், (அடைந்தவர்களது) உருவத்தை மறைக் கின்ற ஒரு மன்றும், மேகங்கள்பொருந்தி இடைவிடாமல் மழையைப் பொழிகின்ற ஒரு மன்றும், மிக்க பகல் இரவாகவும், இரவு பகலாகவுமிருக்கின்ற ஒரு மன்றும் ஆக அவை பதினொருமன்றுகளாம்.—எ-று.

பாற்கடலிற் கடைந்தெடுக்கப்பட்ட அருமைதோன்ற, 'மாகர்பேரமிர்தம்' என்று கூறினர். இம்மன்றின் விம்மிதங்களை :—"சொல்லருமா பாவியுறின் மூங்கை யாக்குஞ் சோரர்களை மருளுறுத்துங் கல்வி தேற்றும் - பல்வகைய வடிவுதவுஞ் சாவா மேன்மை பாலிக்கும் பாதலஞ்சேர் பிலத்தைக் காட்டும் - வல்லவர்க்குந் திசைமயக் கும் பொன்மாணிக்க மழைபெய்யும் பகலிரவு மாறுக் காட்டுஞ் - செல்லுநாைப் பிறர் காணு வியப்புஞ் செய்யு மிவைமன்ற மொருபதெனத் திகழு மாலோ." எனவருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (சoக)

ஈங்கிவை யன்றிச் சிலைகளுநுந் தருவு மிடங்களுங் கூவலு நதியும்
பாங்குறு குளனுந் தீர்த்தமும் பிலமும் பழனமுஞ் சோலையும் பிறவு
மாங்கவை யனந்த கோடியுண் டோரொன் றளவிலற் புதத்தன வவற்றைப்
பூங்கம லத்தோன் சுருக்கற விரித்துப் புகலினு முலப்புற வற்றே.

(இ-ள்.) இக்காஞ்சிமாநகரத்தில் இவ்விம்மிதங்களேயன்றி, கற்களும், விரு க்ஷங்களும், இடங்களும், கிணறுகளும், நதிகளும், செவ்வியகுளங்களும், தீர்த்தங்க

ளும், பிலத்துவாரங்களும், வயல்களும், சோலைகளும், மற்றவைகளுமாகிய இவைகள் அநேககோடியுள்ளன. அவை ஒவ்வொன்றும் அளவற்ற அற்புதத்தையுடையன. அவ்வற்புதங்களைப் பொலிவினையுடைய கமலாசனனாகிய பிரமன் நன்றாகவிரித்துச் சொல்லினாலும் முடிவுபெறுமோ?—எ-று.

'ஈங்கிவையன்றிச் சிலைகளுந் தருவு மிடங்களுங் கூவலு நதியும்-பாங்குறு குளனுந் தீர்த்தமும் பலமும் பழனமுஞ் சோலையும் பிறவும்' என்பதனை :—"ஒற்றை மறை - மாவு மிருசுடரும் வான்விலங்கு மொண்கோட்டத் - தேவியமை தீர்த்தங்களோரிரண்டு - மேவினர்க்குப் - பல்பவத்துத் தாதையைத் தாயைப்பல் கேளிரையிவ் - வொல்பவத்துக் காட்டுமிட மோர்மூன்றும் - வெல்பனுவல் - வாக்கியிழி மூகையென மூகைமொழி வாக்கியென - வாக்குவது நீரமுது மார்த்துவதுந் - தேக்கெறிய - வேட்டன யாவும் விளைப்பதுவு மென்னவிரு-ளோட்டுமெணித் தெற்றியொரு மூன்று - மீட்டுழவொன்- றின்றி விளைவிப்பதுவித் திட்டனான் றேவிளைவு - துன்றுவது கொய்யுந் தொறுமீள - நன்று - விளைவதென மும்மை வியனுலகும் போற்றும் - வளமலிந்த தெய்வவயன் மூன்று - மொளிருமென்றூழ் -வேதனரியரனை விண்ணோர் தொழத்தெரிக்கு - மாதிமடங்க லணைநான்கு - மாதரமிழ் - தூற்றுபொலம் பூஞ்சுதமொண்ணிழல்சா யாக்காஞ்சி - தோற்றுதுயில் பூவில் சுவைப்புளிபல் - வேற்றலரும்-பூக்கு மிருப்பைமலர் பொன்னத்தி யென்ற விண்ணைத் - தாக்குங் கடவுட் டருவைந்துந் - தேக்கமல - மெல்லிற் பகற்குமுத மேய்ந்தலர்வ தோர்நாளத் - தல்லிக்கமலத் தலர்மூன்று -புல்லுவது - வானர மாக்குவது வண்மை தருவதொன்றார்க் - கூனமுய்ப்ப தாந்தடங்க ளோரைந்தும் - வானமழை - காலமன்றிப் பெய்யக் கரைமஞ்ஞை வேட்ட வெலாஞ் - சாலவரு ணேமிமறை சாற்றுகிளி - நூலிசைவல் - பூவை முழுதுணர்க போதங் கணித்தாந்தை - பாவு புகழ்ப்பறவை யோராறுந் - தேவர்மொழி- கேட்ப வுரகர்மொழி கேட்ப விண்ணூர் காணவிழு - தேற்பதின்றித் தீப மெரியமுயற்-கார்ப்பொடிப - மங்கத் திசைமயக்க மல்கவொலித் துந்துமிகள் - பொங்கத்திகழ்ந்த பொதுவேழுந் - தங்குபிணி - சீப்ப மனக்கினிய சேர்ப்ப விழைந்தவெலாம் - யாப்பமணி யேரிசைப்ப வேமவுருக் - கோப்பப் - புரவலன்வாழ் வுய்க்கமெய்ஞ்ஞா னம்புணர்த்த வீடு - தரவமைந்த தண்பொய்கை யெட்டும் - வரவிமையோ - ராக்கவிடந் தீர்க்கசித்தி யார்த்தவுயிர் நல்கவழக் - கூக்கி யறுக்க வுறுபிணிபுண்—போக்கவுடல்-பட்ட துணிபொருத்தப் பாற்றவினை மெய்ஞ்ஞான - மொட்ட வமைந்தசிலை யொன்பது-மட்டு-மிரசதம்பொ னாரமில கிந்திர நீலங்-குருவிந்தங் கோதில் வயிரம்-புருடராகங்கலுழப் பச்சை கதிர்த்தவயி ரேயமென் - பொங்குமழை நல்குபொழி லொன்பதுந் - தங்கிற் - றிசைமயக்கக் கல்விநலந் தேற்றமருள் சோரர்க் - கிசைவிப்பப் பல்வடிவு மேய்ப்ப - வசைவினைஞர் - மூங்கையுறப் பாதலத்தின் முற்றுபிலங் காட்ட வுற்றோர் - தாங்கள்பிறர் காணத் தகுதிபெற - வோங்கொளிப்பொன் - மாணிக்க மாரிபொழியவரஞ் சாவாமை - பேணிக் கொடுக்கப் பிறங்குபக - லேணிரவு - மாறுபெறக் காட்ட வமைந்து வயங்கியிடர்க் - கூறுசெயு மன்ற மொருபதும் - பாறயிர்நெய் - தேன்கருப்பஞ் சாறு திகழ்ந்தனநன் முத்திநெறி-வான்கதிமற் றேனையுல கத்துவழி-தான்கருதக்-காட்டுவன சாயைபிணிப் பக்கலந்தோர் தாமயரார்-மீட்சியுற வித்தின்றி மென்பயிர்க-ளீட்ட-வியைந்தநறு நீரினவென் றெவ்வுலகும் போற்ற-வுயர்ந்தமணிக் கூவல்பதி னொன்றும் - நயந்து தன்பா - லிட்டவெட்கு நெய்யொருபா லீயுந் தனிச்செக்குந்-தொட்டனபொன் னாக்குஞ் சுடர்ச்சிலையு - முட்டும்-வினைப்பயனைத் தாமே விளைக்குமொரு கல்லுந்-தனைப்பொருவுங் கற்பாவை தானு - மெனைத்துமரு -;—ாவா

வயிரவனூர் தாங்குநட னச்சிலம்பார்ப் - போவாது கேட்கு மொலியிடமும்-பாவாண-ரெண்ணித் தளரவின்னு மீண்டுபல விம்மிதமும்"—என வருங் கச்சியானந்த ருத்திரேசர் வண்டுவிடுதூதா னுணர்க. ஆங்கவை யனந்த கோடியுண்டு' என்பதனை :— "இன்னனவா மதிசயங்கண் மற்றுமுள்ள வெல்லையிலை யவை முழுது மறிவார் யாரோ - முன்னுகத்தி னெல்லார்க்குங் காட்சியெய்து மூண்டகொடுங் கலியுகத்திற் படினும் வாழ்க்கை - மன்னினோர் சிலர்க்கன்றித் தோன்றா முத்தி மருவினர்க்கு மேலுலகின் வைத்தவண்ண - மன்னமலி வயற்காஞ்சி வரைப்பின் வாழ்வா ரகங்களிப்பக் கண்ணுதலா ரமைத்தவாகும்" எனவருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (க0உ)

தோட்டலர் வனசத் திசைமுகன் முன்னஞ் சொற்றன னவனடி வணங்கிக்
கேட்டருள் சனகன் வியாதனுக் குரைப்பக் கேடில்சீர் வியாதனங் குணர்ந்து
மாட்டுறு சூதன் றனக்கியம் புதலு மற்றவன் முனிவரர்க் கிசைத்த
பாட்டினிலடங்காக்காஞ்சியின்பெருமைபகர்ந்திடத்தமியனுக்கெளிதோ.

(இ-ள்.) இதழ்களலர்ந்த தாமரைமலரிலிருக்கின்ற நான்குமுகங்களையுடைய பிரமன் முன்னாளில்சொல்ல, அப்பிரமனது பாதங்களைவணங்கிக் கேட்டருளிய சனகமுனிவர் வியாசமுனிவருக்குச் சொல்ல, அழிவற்ற சிறப்பினையுடைய அவ்வியாசமுனிவர் அங்கறிந்து அருகிலிருந்த சூதமுனிவருக்குச்சொல்லவும் அச்சூதமுனிவர் முனிசிரேஷ்டர்களுக்குச்சொல்லிய செய்யுளிலடங்காத காஞ்சிமாநகரத்தின்மேன்மையை அடியேன் சொல்லுதற்கெளிதாகுமோ? (ஆகாது).—எ-று.

சிவபெருமான் திருவருளால் வேதங்களை யோதா துணர்ந்தவ னென்பார், 'கேடில்சீர் வியாதன்' என்றும், அவரை யடுத்து ஏவல்செய் தொழுகி நீங்காதிருந்து முறைப்படி கேட்டவ னென்பார், 'மாட்டுறு சூதன் றனக்கியம் புதலும்' என்றுங் கூறினர். இதனை :—"அழலி னீங்கா னனுகா னஞ்சி-நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ - டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம் - அறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே." எனவருஞ் சூத்திரத்தா னுணர்க. (க0ங)

வேறு.

சொற்படு மினைய காஞ்சித் தொன்னக ரதற்கு நாப்பண்
கற்புறு மிமைய வல்லி கருணையால் வைகி நோற்கும்
பொற்புறு காமக் கோட்டம் போலவே யதற்கோர் சாரி
லெற்படு குமர கோட்ட மென்றொரா லயமுண் டன்றே.

(இ-ள்.) புகழமைந்த இத்தகைய பழைய காஞ்சிமாநகரத்திற்கு மத்தியில் கற்பினையுடைய பர்வதராஜ புத்திரியாகிய ஸ்ரீ காமாக்ஷியம்மையார் கருணையோடு வீற்றிருந்தருளித் தவஞ்செய்கின்ற அழகிய காமக்கோட்டமென்னு மாலயத்தைப்போலவே, அக்காமக்கோட்டத்திற்கு ஒரு புறத்தில் ஒளிபொருந்திய குமரகோட்டமென்று ஒரு ஆலயமுள்ளது.—எ-று.

'சொற்படும்' என்பதற்கு, சொல்லப்பட்ட எனினுமாம். "பொற்புறு காமக்கோட்டம் போலவே யதற்கோர் சாரி - லெற்படு குமரகோட்ட மென்றொரா லயமுண்டு" என்பதனை :—"திசைமுகனைக் கணங்களாற் சிவபெருமான் திருமுன்னர்ச் செலுத்தி யுள்ளப் - பசையினிரு முதுகுரவ ரடிவணங்கி விடைகொண்டு பழனக்காஞ்சி - வசைகடந்த நகரெய்தி யுலகாணித் தடமேல்சார் மாகா ளப்பா - லிசைவிளங்கு தேவசே னாபதீச் சரவிலிங்க மிருத்திப் போற்றி." எனவருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (க0ச)

ஆவதோர் குமர கோட்ட மதனிடை யரன்கண் வந்து
தூவுடை யெஃகு மொன்றுற் சூர்முத றுலையச் செற்றுத்
தேவர்வெஞ் சிறையை மாற்றிச் சேண்மக பதிக்கு நல்கி
மேவிய குமர மூர்த்தி வியத்தக வுறையு மாதோ.

(இ-ள்.) அத்தன்மையாகிய குமரகோட்டத்தில், சிவபெருமானது நெற்றிக் கண்ணினிடத்து (அனற்பொறி யுருவமாக) அவதரித்துத் தூய்மைபொருந்திய வேற்படையினுல் சூரபதும னழியும்படி கொன்று, (அச்சூரனுலடைந்திருந்த) தேவர்களது கொடிய சிறையைநீக்கிச் சொர்க்கலோகத்தை இந்திரனுக்குக் கொடுத்து எழுந்தருளிய குமாரக்கடவுள் சிறப்போடு வீற்றிருந்தருளினுர்.—எ-று.

சூர்முதல்-சூரனுகிய முதல்வன் ; இருபெயரொட்டு. சேண் என்பது ஆகுபெயராய் விண்ணுலகத்தை யுணர்த்திற்று. (கoடு)

மேவருங் கூடன் மேலை வெற்பினி லலைவாய் தன்னி
லாவினன் குடியி னல்லே ரகந்தனிற் றணிகை யாதிப்
பூவுல குள்ள வெற்பிற் பொற்புறு மேனை வைப்பிற்
கோவில்கொண் டருளி வைகுங் குமரகோட் டத்து மேயோன்.

(இ-ள்.) அடைதற்கரிய மதுராபுரிக்கு மேற்றிசையிலுள்ள திருப்பரங் குன்றத்திலும், திருச்சீரலைவாயிலும், திருவாவினன்குடியிலும், நல்ல திருவேரகத்திலும், திருத்தணிகை முதலாகிய நிலவுலகத்துள்ள மலைகளிலும், அழகுபொருந்திய மற்றவிடங்களிலும் இந்நகரத்துக் குமரகோட்டத்து வீற்றிருந்தருளும் குமாரக்கடவுள் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருப்பார்.—எ-று.

'மேவருங் கூடன் மேலை வெற்பு' என்றது திருப்பரங்குன்றை. இதனை:— "மாடமலி மறுகிற் கூடற் குடவயி - னிருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த - முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக் - கட்கமழ் நெய்த லூதி யெற்படக் - கண்போன் மலர்ந்த காமர் சுனைமல - ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங் - குன்றமர்ந் துறைதலு முரியன்" எனவருந் திருமுருகாற்றுப்படையானு முணர்க. அலைவாய் - என்றது திருச்செந்திற்பதி. ஆவினன்குடி - என்பது பழனி ; இனிச் சித்தன்வாழ்வென்று சொல்லுகின்றவூர் முற்காலத்து ஆவினன்குடி யெனப் பெயர்பெற்றதென்றுமாம். இதனை :—" நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ் - வில்லந்தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்-பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின் - னுட்டுடைத்து நல்ல தமிழ்." என்னும் ஔவையா ரருமைத்திருவாக்கானுணர்க. ஏரகம்-மலைநாட்டகத்துள்ளது. தணிகையாதிப் பூவுலகுள்ள வெற்பு-என்றது குன்றுதோறாடலை. பொற்புறு மேனைவைப்பு - என்றது பழமுதிர்சோலை முதலிய திருப்பதிகளை. (கoசு)

வச்சிர மெடுத்த செம்மல் வைகிய துறக்கந் தன்னி
லச்சுதன் பதத்துக் கப்பா லானதன் பதத்தில் விண்ணோர்
மெச்சுறு கந்த வெற்பில் வீற்றிருந் தருளு மாபோற்
கச்சியிற் குமர கோட்டங் காதலித் தமருங் கந்தன்.

(இ-ள்.) வச்சிராயுதத்தை யேந்திய தேவேந்திரன் வாழ்கின்ற சுவர்க்கலோகத்திலும் விஷ்ணுலோகத்திற்கு மேலுள்ள தமது கந்தலோகத்திலும், தேவர்கள் புகழ்ந்து கூறுகின்ற கந்தகிரியிலும் எழுந்தருளி யிருப்பதுபோல எமது கந்தப்பெருமான்

காஞ்சிமாநகரத்துள்ள குமரகோட்டமென்னு மாலயத்திலும் விரும்பி வீற்றிருந்தருளு வார்.—எ-று.

ஸ்கந்தலோகம் அரிபிரமேந்திராதியர் பதங்களுக்கு மேலுள்ளதென்பார், 'அச்சுதன் பதத்துக் கப்பா லானதன் பதத்தில்' என்று கூறினர். குமாரக்கடவுள் விண்ணுலகத்திலும் ஸ்கந்தலோகத்திலும் கந்தகிரியிலும் எழுந்தருளியிருத்தல்போலக் காஞ்சியிற் குமரகோட்டத்தும் விரும்பி வீற்றிருந்தருளுவ ரென்க. (கoஎ)

ஈண்டுள தரணி முற்று மெல்லைதீர் வான வைப்பு
மாண்டகை மகவான் சீரு மம்புயன் முதலோர் வாழ்வு
மாண்டிடல் பிறத்த லின்றி மன்னிய வீடும் போற்றி
வேண்டினர் வேண்டி யாங்கு வேலவன் புரிந்து மேவும்.

(இ-ள்.) இவ்விடத்துள்ள உலக முழுமையும், அளவில்லாத விண்ணுலக வாழ்க்கையும், ஆண்தன்மையையுடைய இந்திரனது செல்வமும், பிரமன் முதலியவர்களது வாழ்க்கையும், இறத்தலும் பிறத்தலுமின்றி நிலைபெற்றுள்ள மோக்ஷவீடும் தம்மைத் துதித்து வேண்டுகின்றவர்கள் வேண்டிய வண்ணமே வேற்படையையுடைய குமாரக்கடவுள் அவர்களுக்குக் கொடுத்துக்கொண் டெழுந்தருளியிருப்பார்.

ஆண்டகை - அன்மொழித்தொகை. புண்ணியப்பயனை நுகர்ந்து அவை யொழிந்தபின் மீண்டும் பிறத்தற்கேதுவாயுள்ள போகபதவிகளைப் போலாது மீளா முத்தியைத் தருவதாகலின், 'மாண்டிடல் பிறத்தலின்றிமன்னியவீடும்' என்று கூறினர். (கoஅ)

கொண்டலை யளக்கு நொச்சிக் குமரகோட் டத்துச் செவ்வேள்
கண்டிகை வடமுந் தூநீர்க் கரகமுங் கரத்தி லேந்திப்
பண்டையி லயனை மாற்றிப் படைத்தருள் வேடந் தாங்கி
யண்டர்க ளெவரும் போற்ற வருள்புரிந் தமர்ந்தா னன்றே.

(இ-ள்.) மேகமண்டலத்தை யளாவிய மதிலாற் சூழப்பட்ட குமரகோட்டத்திலெழுந்தருளிய கந்தப்பெருமான் செபமாலையையும், தூய்மையாகிய நீரினையுடைய கமண்டலத்தையுந் திருக்கரத்தில் தாங்கி, முன்னாளில் பிரமனைச் சிறையிலிட்டு (உலகத்தைச்) சிருஷ்டிசெய்கின்ற திருவேடங்கொண்டு தேவர்களனைவருந் துதிக்க அவர்களுக்குத் திருவருள் புரிந்து வீற்றிருந்தருளினார்.—எ-று.

மேகமண்டலத்தளவு முயர்ந்தோங்கிய மதிலென்பார், 'கொண்டலையளக்கு நொச்சி' என்று கூறினர். வேள் என்பது முருகக்கடவுளுக்கும் மன்மதனுக்கும் பெயராகலின் ஈண்டு வேறுபிரித்தற்கு, 'செவ்வேள்' என்றார். 'கண்டிகை வடமுந் தூநீர்க் கரகமுங்கையிலேந்தி' என்பதனை.—''புள்ளிமான் றோலுடுக்கை முஞ்சிநாணணைப்பொலிய வக்க மாலை - தெள்ளுநீர்க் குண்டிகையுங் கரத்தொளிரத் திருக்குமர கோட்ட மென்னு-முள்ளியோர் பிறப்பறுக்கு மாச்சிரமத் தினிதிருந்தா னுறுவர் போற்ற - வள்ளியா ரிணைக்களப மணிக்கலச முலைதிளைக்கும் வாகைத் தோளான்.'' என வருங் காஞ்சிப்புராணத்தானுணர்க. பண்டையி லயனை மாற்றிப் படைத்தருளினமை- பிரமனைப் பிரணவப் பொருள் வினவி, அவனது உணராது மயங்கியபோது சிறையிடுவித்து அவனது சிருட்டித் தொழிலைப் புரிந்தமையை. (கoகூ)

ஆயதோர் காஞ்சி மூதூ ரதனிடை யம்பு யத்தின்
மேயவன் றனது புந்தி விமலமாம் பொருட்டான் மேனாண்
மாயவன் கமட மாகி வழிபடு தலத்தின் முக்க
ணாயகன் றனையர்ச் சித்து நாமக ளுடனுங் குற்றான்.

(இ-ள்.) அத்தன்மையாகிய பழைய அந்தக்காஞ்சிமாநகரத்தினிடத்து, தாமரைமலரில் வசிக்கும் பிரமன் தனது புத்தியானது பரிசுத்தமடையும் வண்ணம் முன்னாளில் திருமால் ஆமைவடிவங்கொண்டு பூசனைசெய்த கச்சபாலயத்தில் திரிலோசனனாகிய சிவபெருமானையருச்சனைபுரிந்து கலைமகளோடு அங்குவசித்திருந்தான்.

மாயவன்கமடமாகி வழிபடுதலம்-கச்சபாலயம். அம்புயத்தின்மேயவன்முக்கணையகன்றனை யர்ச்சித்து நாமகளுடனுங்குற்றான், என்பதனை:— "போற்றுசீ ரவ்விலிங்கத்தினைப்போற்றினோயாவரு-மாற்றரும்வீடுபேறெய்துவர் நான்முகன் வாணியோ - டாற்றலா னுயிடை மாதவமாற்றி யவ்வங்கண - னூற்றமா ரருளினுற் படைத்திடுந் தலைமைபெற்றேரங்கினுன்." என்னுங் காஞ்சிப்புராணத்தானுணர்க. (கக0)

உற்றிடு கின்ற நாளி னுலகினி லறத்தை யாற்றி
நற்றவம் பலவும் போற்றி நண்ணியமுனிவ ரெல்லா
மற்றவ ணேகிக் கஞ்ச மலர்மிசை யிருந்த வையன்
பொற்றிரு வடியைத் தாழ்ந்து போற்றினர் புகல லுற்றார்.

(இ-ள்.) அவ்வாறு வசிக்கின்ற நாள்களில் இவ்வுலகத்தில் இல்லறத்தை நடத்தி நல்ல தவங்கள் பலவற்றைச் செய்துவந்த முனிவரர்க ளனைவரும் அக்கச்சபாலயத்தை யடைந்து பதுமாசனத்திருந்த பிரமனது அழகிய திருவடியை வணங்கித்துதித்துச் சொல்லுகின்றார்கள்.—எ-று.

இல்லறத்தை யாற்றுதலாவது— "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலென்றாங் - கைம்புலத்தா றோம்ப றலை" என்னுந் திருக்குறட்படி ஐவகையினரையு முபசரித்துப் பாதுகாத்தல்.

"தவலோ நெறியாகுந் தவமே சிவனார் தமைக்காட்டுந்-தவமே துறக்கமடைவிக்குந் தவமே நரனைத் தேவாக்கும் - தவமே வலாரி திசைக்கிறைவர் சார்ங்கனயனு மாக்குவிக்கும் - தவமே கிடைப்பிற் கிடையாததுண்டோவென்று சாற்றினனால்." என்றபடி தவஞ்சிறந்ததாகலின், 'நற்றவம்' என்றார். பலவும் என்றது சாந்திராயணமுதலிய விரதங்களை. (கக௧)

அத்தகே ளிந்நாள் காறு மடியமில் லறத்தை யாற்றி
யித்தல நகர மெங்கு மிருந்தன மினிமே னுங்கள்
சித்தம தொருங்க நோற்றுச் செய்கட னியற்றி வைக
மெய்த்தவ வனம தொன்றை விளம்பியே விடுத்தி யென்றார்.

(இ-ள்.) ஐயனே! கேட்பாயாக, இன்றுவரையிலும் அடியேங்கள் இல்லறநடாத்திக்கொண்டு இவ்வுலகத்துள்ள நகரங்களெங்கும் வசித்தனம்; இனிமேல் நாங்கள் மனமொடுங்கும்படி தவத்தைச் செய்வதோடு செய்யவேண்டிய நித்தியகருமங்களைச் செய்துகொண்டிருக்கும்பொருட்டு உண்மையான ஒரு தபோவனத்தைச் சொல்லியனுப்புவீராகவென்று கேட்டார்கள்.—எ-று.

அத்த - அண்மைவிளி. செய்கடன் - தவவனத்திற்செய்யவேண்டிய முறைமைகள். (ககஉ)

என்றலுந் தருப்பை யொன்றை யேழுல களித்தோன் வாங்கி
யொன்றொரு திகிரியாக்கி யொய்யென வுருட்டிப் பாரி
லின்றிதன் பின்ன ராகி யெல்லிரு மேகி யீது
நின்றிடும் வனத்தி னூடே நிலைப்பட விருத்தி ரென்றான்.

(இ-ள்.) முனிவர்களிவ்வாறு கூறுதலும் எழு உலகங்களையுஞ் சிருஷ்டித்த பிரமன் ஒரு தருப்பையை யெடுத்து ஒரு சக்கரவடிவமாகச்செய்து விரைவாக

உருட்டி,இந்நிலவுலகத்தில் இன்று இத்தருப்பையின் பின்னே நீவிர்யாவருஞ்சென்று இஃது நிற்கின்ற வனத்தில் நிலைபெற்று வசிப்பீர்களாகவென்று கூறினன்.—எ-று.

மேலேழுங் கீழேழுமாகிய இருவகையுலகு மடங்கப் பொதுப்பட, 'ஏழுலகு' என்று கூறினர். திகிரி=சக்கரம். (ககரு)

திருப்பது மத்து வள்ளல் சேவடிக் கமலந் தாழா
விருப்பொடு விடைகொண் டேக விரைவினி லன்னன் விட்ட
தருப்பையி னேமி சென்றோர் தனிவனத் திறுத்த லோடு
மிருப்பிட மெமக்கீ தென்ன விருந்தவ ரிருந்தா ரங்ஙன்.

(இ-ள்.) அழகிய தாமரைமலரில் வசிக்கின்ற பிரமனது திருவடித்தாமரையை வணங்கி விருப்பத்தோடு விடைகொண்டு (அத்தருப்பையின் பின்னே) செல்ல, அப்பிரமன் வேகமாகவிட்ட தருப்பையாலாகிய சக்கரஞ்சென்று ஒரு ஒப்பற்றவனத்தில் தங்கவும், பெரிய தவத்தினையுடைய அம்முனிவர்கள் எமக்குத் தக்க இருப்பிடம் இதுவே யாகுமென்று விரும்பி அங்கு வசித்திருந்தார்கள்.—எ-று. (ககச)

தனிவனம் - தவஞ்செய்வதற்குத் தகுதியானவனம்.

தாமரை யண்ண லுய்த்த தருப்பையி னேமி தன்னா
னமம தொன்று பெற்ற நைமிசா ரணியம் வைகுந்
தூமுனி வரர்க ளெல்லாஞ் சொல்லருந் தவத்தை யாற்றி
மாமறை நெறியி னின்று மகமொன்று புரித லுற்றார்.

(இ-ள்.) பிரமதேவன் விடுத்த தருப்பைச் சக்கரத்தினால், (அவ்வாரணியம்) நைமிசாரணியமென்னு மொருபெயரைப் பெற்றது. (அங்குச்சென்று) வசிக்கின்ற தூய்மையினையுடைய முனிவரர்களனைவரும் சொல்லுதற்கரிய பல தவங்களைச்செய்து, பெரிய வைதிகநெறியில் நின்று ஒருவேள்வி செய்யத்தொடங்கினார்கள்.—எ-று.

நேமிசம்பந்தம் நைமிசமாகலின், சக்கரம்போய்த் தங்கிய ஆரணியத்தை நைமிசாரணியம் என்று கூறினர். நேமி - சக்கரம். ஶீ - கிடத்தல் : அல்லது, ஶூ- ஒழிதல். நைமிசம் - சக்கரமோய்ந்த விடம் என்பது பொருள். மகமொன்று புரிதலுற்றார் என்றது, பதினெண் யாகங்களிற் சிறந்த சத்திரயாகத்தை. இதனை :—"சீற்றங் காம மயக்கமற வெறிந்து ஞானப் பொருடேர்ந்து - மாற்ற வரிய புலனைந்து மடக்கு மறைதேர் முனிவோர்கள் - போற்றும் பருவ மீராறு புரியு முயர்சத் திரயாக- மாற்று நைமி சாரணியத் தருள்கூர் சூத முனியடைந்தான்" என்னுங் கூர்மபுராணத் திருவிருத்தத்தா னுணர்க. (ககடு)

அகனமர் புலனோர் நான்கு மான்றமை பொருட்டா லாங்கோர்
மகவினை செய்து முற்றி வாலிதா முணர்ச்சி யெய்தி
யிகலறு முளத்த ராகி யிருந்தன ரிதனை நாடிச்
சுகனென வுணர்வு சான்ற சூதமா முனிவன் போந்தான்.

(இ-ள்.) தமக்குள்ளே பொருந்திய அந்தக்கரணங்களுன்கும் அடங்கியிருக்கும் வண்ணம் அந்நைமிசாரணியத்து ஒரு வேள்வியைச் செய்துமுடித்து நின்மலவுணர்ச்சியடைந்து (காமாதி) அறுவகைப் பகைகளொழிந்த மனத்தினை யுடையவர்களாய் வசித்திருந்தார்கள். இவர்களிவ்வா றிருத்தலை விரும்பிச் சுகப்பிரமரிஷியைப் போலப் பேருணர்ச்சிவாய்ந்த சூதமாமுனிவர் அங்கு வந்தருளினார்.—எ-று.

அகனமர்புலனோர் நான்கு என்றது அந்தக்கரணத்தை. அவை, மனம்-புத்தி - சித்தம் - அகங்காரமென்பன. வாலிதாமுணர்ச்சி - பேரறிவு. பிறந்தபொழுதே

பூர்வஞானத்தோடு பிறந்தவராதலால், 'சுகனெனவுணர்வுசான்ற' என்று கூறினர். கிளிமுகத்தோடும் பிறந்தமையின் சுகன் என்றார். சுகம்=கிளி. (ககசு)

முழுதுணர் சூதன் றன்னை முனிவரர் கண்டு நேர்போய்த்
தொழுதனர் பெரியோ யெம்பாற் றுன்னலா லின்ன வைகல்
விழுமிது சிறந்த தென்ன வியத்தகு முகமன் கூறித்
தழையொடு தருப்பை வேய்ந்த தம்பெருஞ் சாலை யுய்த்தார்.

(இ-ள்.) எல்லாப் பொருள்களையுமுணர்ந்த சூதமாமுனிவரை நைமிசாரணிய முனிவர்கள் பார்த்து எதிர்சென்று வணங்கி, தவத்திற் சிறந்த சூதமுனிவரே! தேவரீர் எம்மிடத்து வந்தருளிய காரணத்தினல் இத்தினம் மிகவுஞ் சிறப்புற்றதென்று வியக்கத்தக்க உபசாரவார்த்தைகளைக் கூறி, தழைகளாலுந் தருப்பைகளாலுங் கட்டப்பட்டுள்ள தமது பெரிய பன்னசாலைக்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள்.

திரிகாலஞானமுடையவராகலின் 'முழுதுணர்சூதன்' என்றார். முனிவர்களது பன்னசாலை தழைகளாலுந் தருப்பைகளாலுங் கட்டப்பட்டதாகலான், 'தழையொடு தருப்பைவேய்ந்த தம்பெருஞ்சாலை' என்று கூறினர். பன்னம்-இலை. (ககஎ)

திருக்கிளர் பீட மொன்று திகழ்தர நடுவ ணிட்டுச்
சுருக்கமில் கேள்வி சான்ற சூதனை யிருத்தி யாங்கே
யருக்கிய முதல நல்கி யவனது பாங்க ராகப்
பொருக்கென யாரும் வைகி யிஃதொன்று புகல லுற்றார்.

(இ-ள்.) சிறப்பு மிக்க ஒரு ஆசனத்தை விளங்கும்படி மத்தியிலமைத்து, நிறைந்த கல்வி கேள்விகள் நிரம்பப்பெற்றுள்ள சூதமுனிவரை அதிலெழுந்தருளச்செய்து அருக்கிய முதலிய உபசாரங்களைச் செய்து அச்சூதமுனிவருக்கருகில் அம்முனிவர்க ளனைவரும் விரைந்தடைந்து மேல்வருகின்ற ஒரு சங்கதியைச் சொல்லத்தொடங்கினர்கள்.—எ-று.

அருக்கியமுதலாவன:—அருக்கிய பாத்திய ஆசமனங்கள். (ககஅ)

முன்றொரு ஞான்று தன்னின் முளரியந் தேவன் சொல்லால்
வந்திவ ணிருந்தே மாக மற்றியாம் புரிந்த நோன்பு
தந்தது நின்னை யற்றாற் றவப்பயன் யாங்கள் பெற்றேஞ்
சிந்தையி னுவகை பூத்தேஞ் சிறந்ததிப் பிறவி யென்றார்.

(இ-ள்.) முன்பொருகாலத்தில் தாமரைமலரி லிருக்கின்ற பிரமதேவனது கட்டளையினல் இங்கடைந்து வசித்திருந்தோம்; அடியேங்கள் செய்த தவவிரதங்கள் தேவரீரை இங்குச் சேர்த்தன; அக்காரணத்தினல் யாங்கள் தவத்தின் பயனைப்பெற்றோம்; மனத்தில் பெருமகிழ் வடைந்தோம்; (யாங்களடைந்திருக்கும்) இம்மானுடப் பிறவியுஞ் சிறப்புற்றது என்று கூறினர்கள்.—எ-று.

பிறப்பாலடையவேண்டிய பயன் பெரியோர்களைத்தரிசித்து வழிபடுதலேயாகலால், 'சிறந்ததிப்பிறவியென்றார்' என்று கூறினர். (ககக)

அன்னது சூதன் கேளா வாதியம் பரனை யேத்தி
மன்னிய வேள்வி யாற்றி வாலறி வதனை யெய்தித்
துன்னிய முனிவிர் காணுந் தொல்குழு வடைத லன்றோ
வென்னிக ராயி னோருக் கிம்மையிற் பெரும்பே றென்றான்.

(இ-ள்.) சூதமுனிவர் அவ்வார்த்தையைக்கேட்டு முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானைத் துதித்து, நிலைபெற்ற யாகங்களைச் செய்து அதனல் பேருணர்வ

டைந்து பொருந்தியிருக்கின்ற முனிவர்களே! பழமையாகிய உமது கூட்டங்களை யடைந்து வசிப்பதன்றோ? எம்போல்பவர்களுக்கு இம்மையிலடையவேண்டிய பிரயோசனம் என்று கூறினார்.—எ-று.

வேள்வியாவது பேருணர்வளித்துப் புண்ணியப்பலனை விருத்திசெய்வதாக லின், 'மன்னிய வேள்வி யாற்றி வாலுணர் வதனை யெய்தி' என்றார். இதனை :—"எச்ச மொன்றே யிருமையினு மேலா மிமையோர்க் குவப்பாவ - தெச்ச மொன்றே மகத்திறையா மெம்மான் விழையப் படுமெதுவு - மெச்ச மொன்றே நனிசாலச் சிறந்த பொருளு மிருங்கரும - வெச்ச நிகர்வே றில்லையெனப் பரத்துவாச னியம்பினனால்" என்னுங் காஞ்சிப்புராணத்தா னுணர்க. (கஉ௦)

அவ்வழி முனிவர்சொல்வா ரருமறை கண்ட வண்ணல்
செவ்விய மாணுக் கர்க்குட் சிறந்துளோய் திறற்சூ ராவி
வவ்விய நெடுவே லண்ணன் மாண்கதை தேர்வான் பன்னா
ளிவ்வொரு நசைகொண் டுள்ளே மியம்புதி யெமக்க தென்றார்.

(இ-ள்.) அதன்பின்னே முனிவர்கள் கூறுவார்கள்; அரிய வேதங்களை யுணர்ந்து பாகுபாடு செய்த வியாசமுனிவரது நல்ல மாணக்கர்களுள் சிறந்த சூதமுனிவரே! வலிய சூரபதுமன் முதலியோரது உயிரைவாங்கிய நீண்ட வேற்படையைத் தரித்த ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளுடைய மாட்சிமைபொருந்திய மான்மியத்தை யறியும் பொருட்டு அநேக நாள்களாக இவ்வொரு விருப்பத்தை யடைந்திருக்கின்றோம்; ஆதலால், எங்களுக்கு அதனைச் சொல்வீராகவென்று கூறினார்கள்.—எ-று.

'அருமறை கண்ட வண்ணல்'—அரிய வேதங்களை நான்காகப் பாகுபாடு செய்த வியாசமுனிவர். (கஉக)

அம்மொழி சூதன் கேளா வழல்படு மெழுகே யென்னக்
கொம்மென வுருக வுள்ளங் குதூகலித் தவச மாகி
மெய்ம்மயிர் பொடிப்பத் தூநீர் விழித்துணை யரும்ப வாசான்
பொய்ம்மையில் படிவ முன்னித் தொழுதிவை புகல லுற்றான்.

(இ-ள்.) அவ்வார்த்தையைச் சூதமுனிவர் கேட்டுத் தழலிற்பட்ட மெழுகைப்போல மனம் விரைந்துருகத் திருவுள்ள மகிழ்ந்து பரவசப்பட்டு, தேகத்தில் மயிர்க்கூச்செறியவும் தூய்மையாகிய ஆனந்த பாஷ்பம் இருவிழிகளினின்றுஞ் சிந்தவும் தனது ஆசாரியராகிய வியாசமுனிவரரது மெய்ம்மையாகிய திருவுருவத்தைத் தியானத்து வணங்கி இவற்றைச் சொல்லத்தொடங்கினார்.—எ-று.

கொம்மென - என்பது விரைவாக என்னும் பொருளில்வந்தது. கொம்மெனல் - அனுகரணவோசை யிடைச்சொல். இதனை:— "இம்மெனல் கல்லெனல் விழுமெனல்வல்லெனல்-பொம்மென லொல்லெனல் பொள்ளெனன்ஞெரேலெனல்-கொம்மெனல் சரேலெனல் ஞொள்ளெனல் கொல்லென - லம்மெனல் பிறவு மனுகரணவோசை" என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தானுணர்க. (கஉஉ)

மன்னவன் மதலை யாசான் மாமகன் றனது மைந்தன்
பன்னுசொற் கொள்வோ னீவோன் வழிபடு பண்பின் மிக்கோ
னென்னுமிங் கிவருக் கீவ தேனைநூ லுங்கள் போலச்
செந்நெறி யொழுகு வார்க்கே செப்புவன் புராண முற்றும்.

(இ-ள்.) அரசன் புதல்வன், ஆசாரியனது சிறந்த புதல்வன், தனது புதல்வன், தான் சொன்ன சொல்லைக்கேட்டு நடப்பவன், பொருள் கொடுப்பவன், வழி

பாடு செய்யும் நற்குண மிக்கவன் என்று கூறுமிவர்களுக்குப் போதிப்பது மற்றை இலக்கண விலக்கியக் கலைகளேயாம்; உங்களைப்போல நன்னெறியி லொழுகுந் தவ முனிவர்களுக்கே பதினெண் புராணங்களையுங் கூறுவேன்.—எ-று.

இதனை:—"தன்மக னாசான் மகனே மன்மகன்-பொருணனிகொடுப்போன் வழிபடுவோனே - யுரைகோ ளாளற் குரைப்பது நூலே" என்னுஞ் சூத்திரத்தானும், "தன்னைநித்தலும் வழிபடுந் தகுதியோர்சாலப் - பொன்னளிப்பவர் தொடுத்தமற் சர மிலாப்புனிதர் - சொன்னசொற்கட வாதவர் துகடவிர்நெஞ்சத்-தின்ன வர்க்குநூல் கொளுத்துவ தறனெனவிசைப்ப." எனவருந் திருவிளையாடற்புராணத்தானுமுணர்க. ஏனைநூல் - இலக்கண விலக்கியநூல்கள். செந்நெறி யொழுகுவோர் - வேதாகமநெறி யில் நடப்பவர்கள். (கஉரு)

தனைநிகர் பிறரின் றாய சண்முகற் கன்பு சான்ற
முனிவிர்கா ளுரைப்போர் கேட்போர் முத்திசேர் காந்தத் துண்மை
வினவினீ ரதனை யின்னே விளம்புவன் புலன்வே றின்றி
யினிதுகேண் மின்க ளென்னா வெடுத்திவை யியம்ப லுற்றான்.

(இ-ள்.) தனக்கு ஒப்பு வேறொருவரில்லாதவராகிய ஸ்ரீ சுப்பிரமணியக்கட வுளிடத்து மெய்யன்பு நிரம்பப்பெற்ற முனிவரர்களே! உரைப்பவர்களும் அதனைக் கேட்பவர்களும் மோக்ஷத்தை யடையத்தக்க காந்தபுராணத்தின் உண்மையை நீங்கள் கேட்டீர்கள், அதனை இப்பொழுதே கூறுவேன்; ஆதலால், ஐம்புலன்களையும் வேறு விஷயத்திற் செலுத்தாது விருப்பத்தோடு கேட்பீர்களாகவென்று பின் வருவனவற் றை எடுத்துரைப்பாராயினர்.—எ-று.

தன்னிகருயர்ச்சியில்லாத் தலைவனாகலின், 'தனைநிகர் பிறரின்றாய சண் முகன்' என்றார். 'உரைப்போர் கேட்போர் முத்திசேர் காந்தம்' என்றதனால், நம் மிருதிறத்தாருக்கும் இருமைப் பயனையுந் தருமென்று கூறினாராயிற்று. புலன்வே றின்றி - ஐம்புலன்களையுஞ் செவிவழியே செலுத்தி என்க. (கஉச)

**திருநகரப்படலமுற்றிற்று.**

ஆக திருவிருத்தம் - உ௫0.

உ

முருகன்றுணை.

# பாயிரப்படலம்.

முந்தொரு காலத்தின் மூவுல கந்தன்னில்
வந்திடு முயிர்செய்த வல்வினை யதனாலே
யந்தமின் மறையெல்லா மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவரு மருளுற்றார்.

(இ-ள்.) முன்பொருகாலத்தில் மூவுலகங்களிலுந் தோன்றிய ஆன்மகோடிகள் செய்த தீவினைப்பயனால் முடிவில்லாத வேதங்களனைத்தும் முதலு முடிவுந் தவறியழிய, அதனால், முனிவர்களுந் தேவர்களும் மனமயக்கங் கொண்டார்கள்.—எ-று.

முந்தொருகாலம் என்றது, ஆதிகற்பத்துத் துவாபரயுகத்தை. மூவுலகமாவன - சொர்க்கம் மத்தியம் பாதலம் என்பன. வேதங்கள் அநந்தமாயிருத்தலின், அந்தமின்மறை, என்றும், முனிவர்களுந் தேவர்களும் வேதமுறையை யனுஷ்டிப்பவர்களாதலால், 'அடிதலை தடுமாறிச் சிந்திட முனிவோருந் தேவருமருளுற்றார்' என்றுங் கூறினர். (க)

நெற்றியில் விழிகொண்ட நிமலன தருளாலே
யற்றமின் மறையெல்லா மாதியின் வரலாலே
மற்றத னியல்பெல்லா மயலற வேநாடித்
தெற்றென வெவராலுஞ் செப்புவ தரிதாமால்.

(இ-ள்.) நெற்றிக்கண்ணையுடைய மலரகிதராகிய சிவபெருமானது திருவருளினால் குறைவற்ற வேதங்களனைத்தும் பிரதம சிருஷ்டியில் தோன்றியதன்மையினால் அவ்வேதங்களின் முறைமையனைத்தும் மயக்கம் நீங்க விசாரித்து எத்தகையராலுந் தெளிவாகச் சொல்லுவது அருமையாகும்.—எ-று.

அநாதி மலமுத்தனென்பது குறித்து 'நிமலன்' என்றும், சிவபெருமானைப் போலவே அவர் திருவாக்காகிய வேதமும் அநாதியாகலின், 'ஆதியின்வரலாலே' என்றும், அவ்வேதம் பலபடக்கூறுதலின், 'அதனியல்பெல்லா மயலறவேநாடித் - தெற்றென வெவராலுஞ் செப்புவதரிதாம்' என்றுங்கூறினர். (உ)

ஆனதோர் பொழுதின்க ணமரரு முனிவோரு
மாநில மிசைவைகு மாக்களு மிறையுள்ள
ஞானம திலராகி நவின்மறை நெறிமாற்றித்
தீநெறி பலவாற்றிப் பனுவல்கள் சிலசெய்தார்.

(இ-ள்.) அவ்வாறு முதல் முடிவு தடுமாறி மயக்கமுற்றிருக்குங் காலத்தில் தேவர்களும் முனிவர்களும் பெரிய நிலவுலகத்தில் வாழும் மனிதர்களும் மனத்தில் சிறிதும் ஞானமில்லாதவர்களாய்ச் சொல்லப்பட்ட வேதமார்க்கத்தையொழித்து, பல தீயசமய நெறிகளை யேற்படுத்தி (வேதவிரோதமாகச்) சில நூல்களைச் செய்தார்கள்.

இறை - சிறுமை. 'இறையுள்ள ஞானமதிலராகி' என்பதற்கு, கடவுளுண்டென்னும் ஞானமில்லாதவர்களாய், எனப் பொருள்கூறுவாருமுளர். நவின்மறை

நெறிமாற்றித் - தீநெறிபலவாற்றிப் பனுவல்கள் சில செய்தலாவது, வேதத்திற்குப் புறம்பாகிய புறச்சமயங்களை யேற்படுத்தி அவற்றிற்கமைய நூல்களைச்செய்தல். (ரு)

அவனியி லறமெல்லா மருவினை யெனநீக்கிப்
பவநெறி யறமென்றே பற்பல ருஞ்செய்யப்
புவனம துண்டோனும் போதனு மதுகாணுச்
சிவனரு ளாலன்றித் தீர்கில திதுவென்றார்.

(இ-ள்.) உலகத்தில் தருமங்களனைத்தையும் அரிய தீவினை யென்றொழித்து பாவவழிகளே தருமமென்று கருதிப் பலருஞ் செய்துகொண்டிருக்க, அதனை, உலகத்தை யுண்ட திருமாலும் பிரமனும் பார்த்து, இது சிவபெருமான் திருவருளாலன்றி (மற்றியாவராலும்) நீங்காதென்று சிந்தித்தார்கள்.—எ-று.

வேதத்தையருளிச்செய்த சிவபெருமானே அவ்வொழுங்கின்மையை முறைப்படுத்தவேண்டியவரன்றி வேறொருவரான் முடியாதென்பது கருதி, 'புவனமதுண்டோனும் போதனுமதுகாணுச் - சிவனருளாலன்றித் தீர்கிலதிதுவென்றார்' என்று கூறினார். (சு)

வேறு.

இன்ன பான்மையை யெண்ணி யிருவரும்
பொன்னி னாடு புரந்திடு மன்னனுந்
துன்னு தேவருஞ் சுற்றினர் வந்திடக்
கன்னி பாகன் கயிலையி லேகினார்.

(இ-ள்.) இத்தன்மையைக் கருதிப் பிரம விஷ்ணுக்களிருவரும், பொன்னுலகத்தை யாளுகை செய்கின்ற இந்திரனும் பொருந்திய மற்றைத்தேவர்களுந் தம்மைச் சூழ்ந்துவர, பார்வதிபாகராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுந் திருக்கயிலாய மலைக்குச் சென்றார்கள்.—எ-று.

பிரமவிஷ்ணுக்கள் திரிமூர்த்திகளுட் சேர்ந்தவராகலின், அவர்கள் இந்திராதிதேவர்கள் தம்மைச் சூழ்ந்துவரக் கயிலையை யடைந்தனரென்க. (எ)

அந்தில் செம்பொ னணிமணிக் கோயிலின்
முந்து கோபுர முற்கடை யிற்புகா
நந்தி தேவனை நண்பொடு கண்டுநீ
எந்தை யார்க்கெம் வரவிசைப் பீரென்றார்.

(இ-ள்.) அங்குச் செம்பொன்னினால் செய்யப்பட்ட அழகிய மணிகளிழைத்த ஆலயத்தின் முன்னேயுள்ள திருக்கோபுரத்தின் முதல்வாசலிற்புகுந்து திருநந்தி தேவனை அன்போடு தரிசித்துத் தேவரீர் எமது வருகையைச் சிவபெருமானுக்குச் சொல்வீராகவென்று கூறினார்கள்.—எ-று.

அந்தில் - அசைநிலையுமாம். திருநந்திதேவர் இரண்டாஞ்சம்புவாகலின், 'நந்திதேவனை நண்பொடுகண்டு' என்றார். எந்தை-என்பது, எம்தந்தை என்பதன்மரூஉ.

தேவ தேவன் றிருமுன்ன ரேகியே
காவ னந்திக் கடவுள்பணிந் தெழீஇப்
பூவை வண்ணனும் போதனும் புங்கவ
ரேவ ருஞ்செறிந் தெய்தின ரீண்டென்றான்.

(இ-ள்.) திருக்கயிலையைக் காவல் பூண்டொழுகுகின்ற திருநந்திதேவர் தேவர்கள் நாயகராகிய சிவபெருமான் திருமுன்னே யடைந்து வணங்கி யெழுந்து, (எம

தாண்டவரே !) திருமாலும் பிரமனும் சகல தேவர்களும் இவ்விடத்தில் நெருங்கி வந்திருக்கின்றார்களென்று கூறினர்.—எ-று.

பூவை—காயாம்பூ ; முதலாகுபெயர். புங்கவர்-உயர்ந்தோர் ; தேவர்கள்.(எ)

என்ற காலையின் யாரையு மிவ்விடைக்
கொன்றை சூடி கொணர்கெனச் செப்பலு
நன்ற தேயென நந்தி வணங்கியே
சென்று மான்முதற் றேவரை யெய்தினன்.

(இ-ள்.) இவ்வாறு விண்ணப்பஞ் செய்தபொழுது, கொன்றைமலர் மாலையையணிந்த சிவபெருமான் அத்தேவர்களனைவரையும் இங்கழைத்து வரக்கடவையென்று கட்டளையிட்டருளவும், அவ்வாறாகுகவென்று திருநந்திதேவர் வணங்கிச்சென்று திருமால் முதலிய தேவர்களை யடைந்தனர்.—எ-று.

கொணர்கென என்பது தொகுத்தல். நன்றதே என்பது, அவ்வாறேசெய்கின்றேனென்னும் பொருளில்வந்தது. (அ)

செம்மை போகிய சிந்தைய ரைக்கெழீஇ
யெம்மை யாளுடை யானரு ளெய்தினு
னும்மை யங்கு வரநுவன் றானினி
வம்மி னீரென வல்லையிற் கூவினன்.

(இ-ள்.) செம்மைபொருந்திய மனத்தினையுடைய திருமால் முதலிய தேவர்களை யடைந்து, எம்மை யடிமையாகவுடைய சிவபெருமான் திருவருள் கூர்ந்து உங்களை யங்கு வரும்படி கட்டளையிட்டருளினர், ஆதலால் இனி வரக்கடவீர்களென்று விரைந்தழைத்தனர்.—எ-று.

செம்மைபோகிய சிந்தையர் - வேதவொழுக்கமாறுதலால் அதுகாரணமாக மனம்வருந்திய அரிபிரமேந்திராதியர்கள். (கூ)

விளித்த காலை விழிவழி போதநீர்
துளிக்க நின்று தொழுது கவலொரீஇக்
களிக்கு நெஞ்சினர் கண்ணுத லெந்தைமுன்
னளித்தி யாலென் றவனுட னேகினர்.

(இ-ள்.) அவ்வாறழைத்தவுடனே கண்களினின்றும்வழிகின்ற ஆனந்தபாஷ்பஞ் சிந்தநின்று வணங்கித் துன்பமொழிந்து களிப்புமிக்க மனத்தினையுடைய தேவர்கள் சிவபெருமான் திருமுன்னே (எங்களைக்கொண்டு) சேர்ப்பீராகவென்று கூறி அத்திருநந்தி தேவருடன்சென்றார்கள்.—எ-று.

செம்மைபோகிய சிந்தையரானும் சிவபெருமானது திருவருளாணையைக் கேட்டலும் நமது குறைதீரப்பெற்றோமென்று மகிழ்கூர்ந்தனராகலின், 'கவலொரீஇக் களிக்குநெஞ்சினர்' என்றார். (கo)

புடைக டந்திடு பூதர்கள் போற்றுமத்
தடைக டந்து தடுப்பரும் வேனிலான்
படை கடந்தவர் பாற்படு மெண்ணிலாக்
கடைக டந்துபி னண்ணலைக் கண்டனர்.

(இ-ள்.) பக்கங்களிலுள்ள பூதகணங்கள் காத்தல்செய்கின்ற அம்முதல் வாயிலைக்கடந்து, தடுத்தற்கரிய காமபாணத்தைச் செயித்த முனிவர் முதலியோர்கள்

பக்கங்களில் தங்கியிருக்கின்ற அளவற்ற வாயில்களைக் கடந்து, பின்பு சிவபெருமானைத் தரிசித்தார்கள்.—எ-று,

'தடுப்பரும்வேனிலான் படைகடந்தவர்' என்றது, முனிவர்கணங்களை. (கக)

முன்ன ரெய்தித் தொழுது முறைமுறை
சென்னி தாழ விறைஞ்சினர் சேணிடைத்
துன்னு மாதரந் தூண்டவந் தன்மினு
ருன்னு மன்பி னுததியி னாழ்ந்துளார்.

(இ-ள்.) திருமுன்னடைந்து வணங்கி வரிசைவரிசையாகத்தலைதாழும்படி வீழ்ந்து நமஸ்கரித்து, தூரத்திலேயே பொருந்திய பெருவிருப்பானது தூண்டுதலால் வந்தடைந்து, நினைத்தற்குரிய பேரன்பாகிய கடலுண் முழுகினார்கள்.—எ-று.

அஷ்டாங்க பஞ்சாங்கமாக வணங்கினரென்பார், 'முறைமுறைசென்னி தாழவிறைஞ்சினர்' என்றார். இவ்வஷ்டாங்க பஞ்சாங்க விதியை:—"வலஞ்செய்து தண்டனை மானவிதி வழிதழுவத் - தலந்தன்னிற் பணிந்தெழுக தலைசரமற்றிருகன்னந்-துலங்குமுகவாய்ப்புயங்க ளெனுமெட்டுந் தோயமயி-லிலங்குசிரங் கரமுழந்தா ளெனுமைந்து மிசைந்திடவே" என்னுஞ் சிவதருமோத்திரத்தா னுணர்க. (கஉ)

ஈர்க்கும் பாசத் திருவினை யின்றொடே
தீர்க்கின் றாமிவ ணென்னுஞ் செருக்கினாற்
ஆர்க்கின் றார்மலர் சோதிபொற் றாண்மிசைப்
போர்க்கின் றார்மெய்ப் பொடிப்பெனும் போர்வையே.

(இ-ள்.) வலிக்கின்ற பாசசம்பந்தமாகிய இருவினைகளையும் இன்றோடே இங்கொழிக்கின்றோமென்னுங் களிப்பினால் சிவபெருமானது அழகிய திருவடிகளில் நறுமலர்கொண்டருச்சித்தவர்களாய்ப் புளகாங்கிதமென்னும் போர்வையைப் போர்க்கின்றவர்க ளானார்கள்.—எ-று.

'ஈர்க்கும் பாசத்திருவினை' என்பதனை:—இருள்சேரிருவினையுஞ் சேரா விறைவன் - பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகர் கூறிய வுரைவிசேடத்தா னுணர்க. (கங)

நேய முந்த நெடும்பக னீங்கிய
தாயெ திர்ந்திடு கன்றின் றகைமையாய்த்
தூய வந்தனை யோடு தொழுமவர்
வாயின் வந்தன வந்தன போற்றினர்.

(இ-ள்.) அன்பானது செலுத்துதலால் அநேகநாள்கள் நீங்கியிருந்த தாய்ப் பசுவை யெதிர்கொண்டு சென்ற கன்றின்றன்மையைப்போல, தூய்மையாகிய போற்றுதலோடும் வணங்குகின்ற அத்திருமால்முதலிய தேவர்கள் (தங்கள்தங்கள்) வாய்களில்வந்த வந்தபடியே கூறித் துதித்தார்கள்.—எ-று.

அன்பின்மிகுதியால் இன்னவைகூறுவோமென்று சிந்தியாமற் றுதிப்பவராகலின், 'வாயின்வந்தன வந்தனபோற்றினர்' என்று கூறினர். (கச)

அண்ண லீசன் வடிவை யகந்தனி
லெண்ணி னெல்லையி லின்பம் பயக்குமாற்
கண்ணி னேர்வரு காட்சிய ராயிடி
னெண்ணு மோவவர் தஞ்செய லோதவே.

(இ-ள்.) பேரருளாளராகிய சிவபெருமானது திருவுருவத்தை மனதில் நினைத்தமாத்திரத்திலேயே அளவற்ற பேரின்பத்தைத் தரும்; (அங்ஙனமாகவே,அவ்வெம்பெருமானே,) தங்கள் கண்களுக்கு எதிர்ப்பட்ட காட்சியையுடைவராயிருப்பின், அத்திருமால்முதலிய தேவர்களது அன்பின்தன்மையை யுரைப்பதற்கு ஒருவரால் கூடுமோ ? கூடாது.—எ-று.

சிவபெருமானைப் பாவனையாற் சிந்திப்போர்க்கே பரமானந்தம் விளையுமாயின், நேரில் தரிசிக்கப்பெற்றோர்களது பேரானந்தப்பெருக்கைப் பேசுதற்கரிதாமென்று கூறினாராயிற்று. (கரு)

மேலை வானவர் வேந்தொடு மெம்பிரான்
சீல மேய திருமுன்பு மேவினர்
மாலு நான்முகத் தண்ணலும் வந்திரு
பாலு மாகிப் பரவின ரென்பவே.

(இ-ள்.) சிறப்பு மிக்க தேவர்கள் தங்கள் தலைவனாகிய இந்திரனோடும் எமது சிவபெருமானது நன்மைபொருந்திய திருமுன்னே யடைந்தார்கள்;திருமாலும், நான்குமுகங்களையுடைய பிரமனும் (அவ்வெம்பெருமானது) இருபக்கங்களிலும் வந்து துதித்து நின்றார்கள்.—எ-று.

இந்திரன் தேவர்களோடு வணங்கி யெதிர்நிற்றலும்,பிரமவிஷ்ணுக்கள்வணங்கித் தங்குறை கூறற்பொருட்டு இருபுடைநிற்றலுஞ் செய்தாரென்பதுகருத்து. (கசு)

வேறு.

அம்புயா சனமுடை யண்ண லாழியா
னும்பரோ டித்திற முற்றுப் போற்றுழிச்
செம்பொனேர் முடிமிசைத் திங்கள் சேர்த்திய
வெம்பிரா னருள்புரிந் தினைய கூறுவான்.

(இ-ள்.) கமலாசனனாகிய பிரமனும் சக்கரத்தையுடைய திருமாலும் இந்திராதிதேவர்களுடன் இவ்வாறடைந்து துதிசெய்தலும், செம்பொன்னைப்போலவிளங்கும் அழகிய திருமுடியில் இளம்பிறையையணிந்தருளிய எமது சிவபெருமான் திருவருள்புரிந்து இவ்வார்த்தைகளை யுரைத்தருள்வாராயினர்.—எ-று.

'செம்பொனேர்முடி மிசைத்திங்கள் சேர்த்திய வெம்பிரான்' என்றதனால், அவ்வரிபிரமேந்திராதியர்களது குறையை முடிக்கவல்ல அருட்படிவங்கொண்டருளிய பெருமானென்பது குறிப்பித்தவாறாயிற்று. (கஎ)

ஒன்றொரு குறைகளு முறாத பான்மையா
னன்றுநும் மரசிய னடந்த வோவெனக்
குன்றவில் லுடையவோர் குழகன் செப்பலு
நின்றமா றொழுதிவை நெறியிற் கூறுவான்.

(இ-ள்.) மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமான் (அத்திருமாலாதி தேவர்களை நோக்கி, ஏ தேவர்களே !) நுமதரசாட்சி ஒரு சிறிதுங் குறைவுறாத தன்மையோடு இனிது நடந்துவந்தனவோவென்று வினவியருளலும், (அப்பொழுது) அருகில்நின்ற திருமால்வணங்கிப் பின்வருவனவற்றை முறைப்படி கூறுவாராயினர்.

'ஒன்றொரு குறைகளும்' என்றது, சிறிது குறைவும் என்னும் பொருளில் வந்தது. எனு-செய்யா வென்னும் வாய்பாட்டுவினையெச்சம். (கஅ)

ஆதியி லயன்படைப் பல்ல தென்னருண்
மேதிய னடுதொழி லேனை விண்ணவ
ரோதமில் செயன்முறை யாவுங் கண்ணுத
னாதநின் னருளினா னடந்த நன்றரோ.

(இ-ள்.) நெற்றிக்கண்ணையுடைய எமதாண்டவரோ! முதலில் பிரமனது சிருட்டித்தொழிலும், அன்றியும், அடியேன்செய்யுந் திதித்தொழிலும், எருமைக்கடாவாகனத்தையுடைய இயமனது சங்காரத்தொழிலும், மற்றைத் தேவர்கள்செய்யுங் குற்றமற்ற தொழில் முறைகளனைத்தும் தேவரீரது திருவருளினால் இனிது நடந்து வந்தன.—எ-று.

சிருட்டி திதி சங்காரமென்னு முத்தொழிற் றலைவர்களுக்கு முதற்றலைவராயும், அவை தனதருள்வழியே நடக்கப்பெற்றவராயுமுள்ளவர் சிவபெருமானே யாகலால், 'கண்ணுதல் நாதநின்னருளினானடந்த நன்று'எனக்கூறினார். இதனை:—"தேவர் கோவறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்குமற்றை - மூவர் கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி மூதாதை மாதாளும் பாகத்தெந்தை - யாவர்கோ னென்னையும் வந்தாண்டுகொண்டான் யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோ - மேவினோ மவனடியா ரடியாரோடு மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே" என வருந் திருவாசகத்திருமுறையானு முணர்க. (௧௯)

கருமணி மிடறுடைக் கடவு ளின்னுநீ
யருளுவ தொன்றுள ததனைக் கூறுவ
னிருநில மேலவர் யாரு நின்றனைப்
பரமென வுணர்கிலர் மாயைப் பான்மையால்.

(இ-ள்.) கரிய நீலமணிபோலுங் கண்டத்தினையுடைய எமது பெருமானே! (அடியேங்கட்குத்) தேவரீர் இன்னுங் கிருபைசெய்தருளவேண்டுவதாகிய ஒரு குறையுள்ளது; (அஃதுயாதெனின்) பெரியநிலவுலகத்துள்ளவர்க ளனைவரும் மாயா சம்பந்தத்தினால் தேவரீரைப் பரம்பொருளென்று சிறிது முணர்கின்றிலர்.—எ-று.

மாயை மயக்கஞ்செய்வதொன்றாகலான், அம்மாயா மலசகிதர்களாகிய ஆன்மாக்கள் அண்டர்களுறுதுயர் விண்டுய்தற்பொருட்டு விடபானஞ்செய்து காத்தருளிய தேவரீரைப் பரமெனச்சிறிது மதித்திலர் என்று கூறினாராயிற்று. (௨௦)

நின்றன துரிமையை நிகழ்த்தி மேன்மையா
வென்றனை யயன்றனை யெண்ணு வார்சில
ரன்றியு நின்னுட னநேகர் தம்மையு
மொன்றென வேநினைந் துரைக்கின் றார்சிலர்.

(இ-ள்.) தேவரீருக்குரிய பதியிலக்கணங்களை யெடுத்துக்கூறி, அடியேனையும் பிரமனையும் மேலான பதிப்பொருளாகச் சிலர் நினைக்கின்றார்கள்; இதுவல்லாமலும், தேவரீரோடு (சமானியராகிய) அநேகதேவர்களையும் ஒன்றாகக்கருதிச் சிலர் கூறுகின்றார்கள்.—எ-று.

என்றனை யயன்றனை யெண்ணுவார்சிலர், என்றது பாஞ்சராத்திரிகளையும், பிரமவாதிகளையுமாம். பாஞ்சராத்திரிகள் தசாவதார பரனான திருமாலே கருத்தர்; மற்றையோர்கள் திருமாலினா லாக்கப்படுவோ ராதலாலவர்கள் கர்த்தாக்க ளல்லவென்று கூறுவர். இதனை:— "உந்தியாலயனையீன்று மவனைக்கொண் டுலகுண்டாக்கி - யுந்தநல் லுலகழிக்க வரனையு மாக்குவித்துத் - தந்திடுஞ் சகத்தினுக்குத் திதிகர்த்தா

தானேயாகி-வந்திடுந்தோற்றமீறும் நிலைமையும் பண்ணுமாயன்" என்று அவர்கள் கூற்றுகவருந் திருவிருத்தத்தானுணர்க. இஃது, அத்திருமாலுக்குச் சம்மதமன்மையை, "யாமெலா மவனிணையடித் தியானஞ்செய் பசுக்க-ளாமெனத்தெளி யவனருள்சேர்த விற்பசுவும் - பூமிசைத்தியானப்பெ ருளா மெனப்புனைந்து - தேம றச்சில நாக்பு[illegible] லுண்மையுந் துணியாய்" எனவும், "மந்திரத்தழன் மகத்திலுக்கிறையவ[illegible] - சந்தமாமறைக்கிறையவன் றுமனாக்கிழவ-னிந்திராதியாறுலகினுக்கிறையவ[illegible] மைந்தனே யெனக்கிறையவன் மணிமிடற்றிறையோன்" "அகிலநாயக[illegible] லிறையவனில்லை - அகிலலோகமு மவன்திரு வாணையி னடக்கு - மதி[illegible] படைத்தளித் தழிப்பவனவனே - யகிலநூல்களு முனைத்திடுந் துணிவிது[illegible] "வானமேத்தயான் வைகுந்த வாழ்வுபெற்றதுவு- ஞானநாயகன் சத்தியவுல[illegible] யது - மேனைவிண்ணவர் தத்தமவாழ்க்கை யெய்தியது - மானுயர்த்தவனருட்குறிய ருச்சனைப் பயனால்" என அத்திருமால் கூற்றுகவருந் திருவிருத்தத்தா னுணர்க. இனி பிரமவாதிகள் பிரமனைக்கருத்தாவாகக் கூறுவர்; அது பிரமனுக்குடன்பாடன்மையை:—"செங்கண்மாறன்னை யென்னைத்திண்டிறன் மொய்ம்பினல்கி-யங்கண்மா ஞாலங்காப்பு மளிப்பதுநல்கியாமு -முங்கள்பாலிருப்பமென்றே யுறுபொருளியற்று நின்று - னெங்களான்முடியுஞ்செய்கை யாவதுமில்லைகண்டாய்" என்னும் பிரமன் வசனத்தா னறிக.

'அன்றியு நின்னுட னனேகர்தம்மையு-மொன்றெனவே நினைந்துரைக்கின் றார் சிலர்' என்றது, அநேகேசுரவாதிகளை; இவர்கள், வீடுமுதலிய கட்டிடங்களை அனேகர் சேர்ந்தியற்றக் காண்கின்றோம்; ஆதலால், பெரிய நிலவுலகத்தையு மநேகர் சேர்ந்தியற்றுநிற்பரெனக் கூறுவர், இதனை:— "இல்லத்தைப் பல்லோர்கூடி யியற்றுதல் கண்டாமத்தாற் - செல்லொத்த குழலாய் வையஞ் செய்தவர் பலரோயன்னர் - தொல்லைக்கு ளாதனீங்கித் துயரறன் முத்தியென்பார்-அல்லுற்ற மனத்தாரான வநேகேச வாதரன்றே" என்னுஞ் செய்யுளானறிக. (உக)

காலமுங் கருமமுங் கடந்த தோர்பொருண்
மூலமுண் டோவென மொழிகின் றார்சிலர்
மேலுமுண் டோசில விளம்ப விஞ்சையின்
பாலுறு முணர்ச்சியே பரமென் பார்சிலர்.

(இ-ள்.) காலத்தையுங் கருமத்தையுங்கடந்த மூலமாகிய ஒரு பொருளுண்டோ? என்று சிலர் கூறுகின்றார்கள். மந்திரத்தினாலுண்டாகிய உணர்ச்சியே கடவுளல்லது வேறு சொல்ல இன்னஞ் சிலவுண்டோ? என்று சிலர் கூறுகின்றார்கள்.

காலமுங் கருமமுங்கடந்த தோர்பொருண் மூலமுண்டோவென மொழிகின்றார் சிலர், என்றது, காலவாதிகளையுங்கருமவாதிகளையுமாம். இவருள், காலவாதி, காலமென்பதோர் முதலின்றி, யாதுங் காரியப்படாமையால் காலமே கருத்தாவென்பன். "காலமெனுங் கடவுளினைக் கழியவுளதேதுமிலை - ஆலநிழலமர்ந்தவனு மரிபிரமாதியொருவருஞ்-சீலமுடைச் சிருட்டிமுதற் நிகழ்வனவாகச் சுழற்றற்-றாலமொடுருக்குமமாய்த் தொடர்ந்துதொடர்ந் தேவருமால்" என்னுஞ் செய்யுளானறிக. இனி, கருமவாதி, வினையினால் பலவிதமாகி நின்றே வினையின்பலத்தை விளைவிக்குமென்று கூறுவன்.

'விஞ்சையின்பாலுறு முணர்ச்சியே பரமென்பார் சிலர்' என்றது மந்திரவாதிகளை - இவர்கள், மந்திரத்தின் வல்லபமானது தேவர்களை யேவல்கொள்ளும், சாபானுக்கிரகங்களைச் செய்யும், பிரமாதியர்களை யுயரச்செய்தது மிம்மந்திரமே யாதலால், மந்திரோபாசனையையன்றி வேறுகருத்தா வில்லையென்று கூறுவர். இதனை:—

"மந்திரத்தாலழைத்திடவே வானவரும் வந்திடுவர் - மந்திரத்தால் வசீகரணமுதல்வலிகள் வந்தெய்தும் - மந்திரத்தாலாக்கி யழித்திடலுமாக்கியிடும்- மந்திரத்தின்வலியே காண் வானவருமானவர்தாம்" என்பதனாலுணர்க. (உஉ)

ஆற்றுறு புனல்படிந் தழுக்கு நீக்கலார்
சேற்றிடை வீழ்ந்தென மறைகள் செப்பிய
நீற்றொடு கண்டிகை நீக்கி வன்மையால்
வீற்றொரு குறிகொடு மேவு வார்சிலர்.

(இ-ள்.) ஆற்றிலுள்ள நீரில்முழுகிச் (சரீரத்திலுள்ள) அழுக்கைநீக்காமல் சேற்றில்வீழ்ந்ததுபோல,அஞ்ஞானவலியினால் வேதங்களிற் கூறப்பட்ட விபூதி ருத்திராக்ஷங்களைநீக்கி வேற்றுச்சின்னங்களைத் தரித்துகொண்டு சிலரிருக்கின்றார்கள்.

வேற்றுமதச் சின்னங்களைத் தரித்தவர்க்குப் பாசநீக்கமும் ஆத்துமஞானமுமமைவதின்மையால், 'ஆற்றுறுபுனல்படிந் தழுக்குநீக்கலார்- சேற்றிடைவீழ்ந்தென' என்று கூறினார். விபூதி ருத்திராக்ஷமணியாதவர்கட்கு ஒருபயனு மென்றென்பதனை:- "தயங்கியநீறுட றரித்திலாரொனி - னியங்கறமெத்துணை யியற்றிமுற்றினும்-பயங்கதுவுதலிலை பலவுமுற்றிய - வியங்கலில்பயிர்க்குறு காவலின்றென" எனவும், "உருத்திரர்க்கிரு கண்ணெனுமுருத்திரவக்கந்-தரிப்பதுண்டெனிலெவ்வுலகும்பெறத்தகுமான் - முருக்குதெவ்வரு முன்னிலார்முருங்குவரிதுநீ - யருத்திகூர்தரமேலவர்க் கேட்டுணர்ந்தறிதி" எனவும் வருஞ் செய்யுட்களா னுணர்க. நீற்றொடுகண்டிகை நீக்கி வன்மையால் - வீற்றொருகுறிகொடு மேவுவார்' என்பதனை—"எண்டிகழ்மறையீறெல்லா மியம்பும்வெண்ணீற்றுமும்மைப்- புண்டரமக்கமாலை சிவலிங்கபூசைதம்மின் - விண்டிடாவயிரங்கொண்டு திகிரியான்வெந்தபுண்ணைத் - தண்டுசெங்காழிகஞ்சக் குறிகளைத்தனுவிற்றுங்கி" என்னுஞ் செய்யுளா னுணர்க. (உரு)

காமமோ டுவகையுங் களிப்பு நல்கலால்
வாமமே பொருளென மதிக்கின் றார்சிலர்
தோமிலா மூவகைத் தொழிலும் வேள்வியு
மேமமார் பொருளென வியம்பு வார்சிலர்.

(இ-ள்.) சிலர் காமத்துடன் சந்தோஷத்தையும் மயக்கத்தையுந் தருதலால் வாமசமயமே மேலானசமயமென்று மதிக்கின்றார்கள். சிலர் குற்றமற்ற முத்தொழிலும் யாகமுமே இன்பந்தரத்தக்க மெய்ப்பொருளாமென்று கூறுகின்றார்கள்.—எ-று.

'காமமொடுவகையுங் களிப்புநல்கலால் - வாமமேபொருளெனம திக்கின்றார்,என்றது வாமசமயிகளை, இவர்கள் ஸ்ரீசக்கராதியந்திரங்களில் தேவியையாவாகித்துப்பூசிப்பதும்,பூசையிலிழிகுலமாதாயினுமவள் வாயெச்சிலைப்பிரசாதமாக அருந்துதலும்,மதுவாதிகளையுண்டு மயங்கிச் சத்தியேதானாகப் பாவித்தலும் முத்தியென்றுகூறுவர். "வலைபுலை வண்ணார்செம்மார் மற்றுமிப்படியில்வந்த - குலமதிற் றையலாளைக் குறித்துநாயகிதா னென்றே-யலமர வவளையர்ச்சித்தவளொழிற் சேடம்வாங்கித் - தலையுறக் கொண்டங்குண்ண றலைவிசந் நிதியாமன்றே." என்றும், "தண்ணியசுட்கச் சமயிகாளெவ்வுருவும்- பெண்ணுருவிற்காணும் பிறப்பதெலாம்—உண்ணறவே-புத்தியுடன்முத்திப் பொருளுந்தரும்பிணமே - சத்தியிலாததெலாந் தான்." எனவும்வருஞ் செய்யுட்களானுணர்க.

மூவகைத்தொழிலும் வேள்வியு மேமமார்பொருளென வியம்புவார்சிலர்' என்றது,பூர்வமீமாஞ்சகர்களை. இவர்கள், யசனயாசனாதி கிரியைகளும் ஆவகனீயாதியக்கினித்திரையைக் கிரியைகளும், இவைகளைக்கொண்டு செய்யும் வேள்விகளுமே

முத்தியைத் தருமமென்று கூறுவர். "முன்பு தாருகவனத்தின் முனிவரர்யாருமீசற் - கன்பிலராகிவேள்வி யளப்பிலபுரிந்துதாமே - யின்புறுமுத்திதன்னை யெய்துவானுன்னியங்கந் - துன்புறவாளாநோற்றுத் துணிவினுலொழுகலுற்றார்." என்னுஞ் செய்யுளா னுணர்க. "முற்றும் வேள்விய தேதரும்பர முத்தி யென்றுயர் புத்தியிற் - சற்று மெம்பெரு மானையெண்ணிலர் தாருகாவனமாதவர்" என்றார் பிறரும். (உச)

உரையிசை யாதியா மொழிகள் யாவையும்
பிரமம தேயெனப் பேசு வார்சில
ரரிதுசெய் நோன்பினு லடைந்த சித்திகள்
பொருள்பிறி தில்லையெனப் புகல்கின் றார்சிலர்.

(இ-ள்.) சிலர் சொல் கீதம் முதலியவற்றாலுண்டாகு மொழிகளனைத்தும் பிரமமென்று கூறுகின்றார்கள். சிலர் அருமையாக அனுஷ்டித்த விரதத்தினாலடைந்த சித்திகளே மெய்ப்பொருளன்றி வேறில்லையென்று கூறுகின்றார்கள்.—எ-று.

உரையிசையாதியா மொழிகள்யாவையும் பிரமமதேயெனப் பேசுவார்சிலர் என்றது, சத்தப்பிரமவாதிகளை - இவர்கள் ஒலியே கருத்தாவன்றி வேறுகருத்தவின்றென்றுகூறுவர். "தருமொழி பிரமம தெனச்ச மைந்திடு- மகமுறு மறிவிலி யகிலமூலமு - மிகுதரு மொழியல தலதுவேறென - யிகபரமதுவறி யாமலோதுவான்." என்னுஞ் செய்யுளா னுணர்க.

அரிதுசெய் நோன்பினு லடைந்தசித்திகள்- பொருள்பிறி தில்லையெனப் புகல்கின்றார்' என்றது சித்தவாதிகளை - இவர்கள். அவுஷதாதிகளையுண்டு பத்தியயோகாதிகளோ டிருந்து உடலழியாமற் காத்து அணிமாதிசித்திகளை யடைந்து ஆகாயகமனாதிகள் செய்வதே முத்தியென்று கூறுவர். "கோதறுசெம்புதன்னைக் குலவியவிரதஞ்சேர்ந்து - வேதகஞ்செய்யுமாபோல் மெய்யெனுங்காயந்தன்னை-வேதகமருந்தாற் செய்து மேவுநன்முத்திசித்தி - நாதனுயிருக்கநாத னுகவேநவிலுமன்றே" என்னுஞ் செய்யுளா னுணர்க. (உரு)

பெருமைகொள் குலந்தொறும் பிறந்து செய்திடும்
விரதமுஞ் சீலமும் வினைகண் மாற்றிட
வருகலும் பிறவுமா யங்கம் விட்டுயிர்
பரவுதல் வீடெனப் பகரு வார்சிலர்.

(இ-ள்.) சிலர் சிறப்புமிக்க ஒவ்வொருகுலத்திலும்பிறந்து செய்கின்ற விரதங்களும் ஆசாரங்களும் பாவங்களையொழிக்கும் வண்ணம் காயக்கிலேசவிரதஞ்செய்தலும், மற்ற (அக்கினிப்பிரவேசாதிகளினால்,) தேகத்தையொழித்து உயிர்நீங்குதலுமே முத்தியென்று கூறுகின்றார்கள்.—எ-று.

இவர்கள் விரதவாதிக ளென்பவர்கள். மகாசங்கிராந்தி சாந்திராயன கிருஸ்ராயன விரதங்களும் அக்கினிப்பிரவேசம் பிரயாகைகட்ட மாதிகளில் மரணம்முதலியகிரியைகளுமே முத்திதருமென்று கூறுவார்கள். "விரதமேபரமாகவேதியருஞ்-சரதமாகவே சாத்திரங்காட்டினர்" என்னுந் திராவிடவேதத்தா னுணர்க. (உசு)

அறிந்தறிந் துயிர்தொறு மதுவ தாகியே
பிறந்திறந் துணர்வெலாம் பெற்று நோன்பொடு
துறந்துகொன் றிட்டன துய்த்துக் கந்தமற்
றிறந்திடன் முத்தியா மென்கின் றார்சிலர்.

(இ-ள்.) சிலர் உயிர்கடோறும் அவ்வவ்வுருவத்தைப்பெற்றுப் பிறந்து அவ்வவற்றின் குணங்களையறிந்தறிந்து பின்னரிறந்து, (தான் அவ்வச்சனனங்கடோறுங் கொண்டிருந்த) உணர்வோடுதோன்றி, விரதமுடையவனுய்த் துறவுபூண்டு கொல்லப்பட்டவைகளைத் தின்று பஞ்சகந்தங்களுமொழிந்து இறத்தலே முத்தியென்றுகூறுகின்றார்கள்.—எ-று.

'கந்தமற் றிறந்திடன் முத்தியாமென்கின்றார்' என்றது பௌத்தவாதிகளை, இவர்கள்,ஒவ்வோருயிரினும் புகுந்து பிறந்து அவ்வவற்றின் குணுகுணங்களை யறிந்து பஞ்சகந்தங்களுங் கெட்டு, பாடாணம்போற் கிடத்தலே முத்தியென்று கூறுவர். "பஞ்சகந்தமும் போக்கிப் பாடாணம்போலார்த- லெஞ்சாப்பிடகவியல்." என்னுஞ் செய்யுளானுணர்க. (உஎ)

நன்னல மாதரை நண்ணு மின்பமே
யுன்னரு முத்தியென் றுட்கொள் வார்சில
ரின்னன துறைதொறு மெய்தி யாவருந்
துன்னரும் பிறவியுட் டுன்ப நீங்கலார்.

(இ-ள்.) சிலர் நல்ல அழகினையுடைய மாதர்களையடைந்து புணரும் இன்பமேநினைத்தற்கரிய முத்தியென்று சிந்தித்திருக்கின்றார்கள். இவ்வகையாகிய மார்க்கங்கடோறு மடைந்து (உலகத்தவர்கள்) அனைவரும் அடைதற்கரிய பிறவித்துன்பத்தை நீங்காதிருக்கின்றார்கள்.—எ-று.

'மாதரை நண்ணுமின்பமே யுன்னருமுத்தியென் றுட்கொள்வார்' என்றது, உலோகாயதரை ; இவர்கள், காண்டலளவைக்குரிய உலகம் நித்தியமென்றும், சடமாகிய தேகமே ஆத்மாவென்றும், மாதர்களது போகமே முத்தியென்றுங் கூறுவர். "இறந்தார்பிறவா ரிலதுவானீசன் - அறம்பாவ மாயிழையார்கூடல் - சிறந்த - நலமார்சுவர்க்க நரகம்பிரித-லுலகாயதன்ற னுணர்வு" என்னுஞ் செய்யுளானுணர்க.

இறந்தன வரம்புல கெவரும் வேதநூன்
மறந்தனர் பவநெறி மல்கி நாடொறுஞ்
சிறந்தன வவையுயிர் செய்த தொல்வினை
யறிந்தரு ளையநீ யமைத்த வாயினும்.

(இ-ள்.) உலகத்தில் வரம்பு அழிந்துவிட்டன. எவர்களும் வேதசாஸ்திரங்களை மறந்துவிட்டார்கள். பாவவழிகள் நாள்தோறும் உலகத்தில் நிறைந்து சிறப்புற்றன. அவையனைத்தும் உயிர்கள்செய்த ஊழ்வினையையறிந்து கருணாநிதியாகியபெருமானே! தேவரீராலமைக்கப்பட்டனவே யாயினும்.—எ-று.

வேதங்கள் அடிதலை தடுமாறிய காரணத்தால், யாவரும் விலக்கையே விதியாகக்கொண்டு நடத்தலின், 'இறந்தனவரம்புலகு' என்றும், அவ்வேதங்கள் பலவாறு சிதைந்தொழிதலின், 'எவரும் வேதநூன் மறந்தனர்' என்றும், தீயநெறியினையே சிறந்தனவாகக்கொண்டு நடத்தலின், 'பவநெறி மல்கி நாடொறுஞ் சிறந்தன' என்றும், இவையனைத்துந் தேவரீரது கட்டளைப்படி நடக்கின்றனவேயன்றி வேறன்றாகலான் 'உயிர்செய்த தொல்வினை யறிந்தருளைய நீயமைத்த' என்றுங் கூறினார்.

இதுமுத லிரண்டுபாடல்கள் குளகம். (உகூ)

அங்கவர் போதமுற் றுசோ ரிமனச்
சங்கையு மகன்றுநின் சரண மேயுறப்
புங்கவ சிறிதருள் புரிய வேண்டுமோ
லெங்கடம் பொருட்டென விறைவன் கூறுவான்.

(இ-ள்.) அவ்வுயிர்களெல்லாம் மெய்ஞ்ஞானத்தை யடைந்து அஞ்ஞானத்தையொழித்து மனச்சந்தேகமுநீங்கித் தேவரீரது திருவடிகளையே யடைய எமதாண்டவரே! அடியேங்கள்பொருட்டுச் சற்றுத் திருவருள் புரியவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொள்ளச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளுவார்.—எ-று.

போதமுறுவழி, ஆசொழிதலும் மனச்சங்கை நீங்கலும் திருவடிப்பேறெய்தலுங் கூடாமையால், 'அங்கவர் போதமுற் றுசொரீ இமனச் சங்கையு மகன்று நின் சரண மேயுற' என்றும், அவை, தேவரீரது திருவருளாலன்றி முடியாவாகலான், 'புங்கவ சிறிதருள் புரிய வேண்டும்' என்றுங்கூறினர். (௩0)

இனிதொரு திறமதற் கிசைத்து மாருயி
ரனையவும் புரப்பவ னுத லாலவர்
வினையறு நெறிமையால் வேண்டு கிற்றிநின்
மனனுறு மெண்ணினை மறுத்தி மாசிலாய்.

(இ-ள்.) இனிமையாகிய ஒருமார்க்கத்தை அதற்காகச் சொல்லுகின்றோம்; அரிய உயிர்களனைத்தையும் இரக்ஷிப்பவனுகையால் அவ்வுயிர்களது பாவங்களை நீக்க வேண்டிய முறைமையால் நீ வேண்டிக்கொள்கின்றாய்; குற்றமற்ற திருமாலே! உன் மனதிலுள்ள எண்ணத்தை மறுக்கக்கடவாய்.—எ-று.

திதிகர்த்தாவாகலின் உலகின் மாறுதலைக் குறித்துச் சிந்திக்கின்றனை யென்பார், 'ஆருயிரனையவும் புரப்பவ னுதலாலவர் வினையறுநெறிமையால் வேண்டுகிற்றி' என்று கூறினர். (௩௧)

காதலி னருளுமுன் கலையின் பன்மையிற்
கோதறு மோர்கலை கொண்டு நேமிசூழ்
மேதினி யதனிடை வியாத னென்றிடு
போதக முனியெனப் போந்து வைகுதி.

(இ-ள்.) விருப்பத்துடன் திதித்தொழில்செய்கின்ற உனது கலைத்தொகுதிகளுள் குற்றமற்ற ஓர் கலையோடு கடல்சூழ்ந்த நிலவுலகத்தில் வியாசனென்று கூறும் ஞானமுனிவனுகத் தோன்றி வசிக்கக்கடவை.—எ-று.

திருமாலே! நீதிதிகர்த்தாவாகலின் நீயே வியாசனுகச்செனித்து அம் மாறுதலைத்திருத்தி யுலகைச் சீர்ப்படுத்தக்கடவையென்று கூறியருளினுரொன்பதுகருத்து.

போந்தவ ணிருந்தபின் புகரி லாமறை
யாய்ந்திடின் வந்திடு மவற்றை நால்வகை
வாய்ந்திட நல்கியே மரபி னோர்க்கெலா
மீந்தனை யவரகத் திருளை நீத்தியால்.

(இ-ள்.) நீ அவ்வாறு சென்று அங்குவசித்தபின்பு,குற்றமற்ற வேதங்களைச் சிந்திப்பையாயின் அவை தாமேவந்து பொருந்தும்; அவ்வேதங்களை நான்குவகையாகப் பகுத்து அவற்றையோதவேண்டிய முறைமையினை வேதியர்முதலிய மூவர்களுக்குங் கொடுத்து அவர்களது மனமயக்கத்தை யொழிக்கக்கடவை.—எ-று.

'மரபினோர்க்கெலாம்' என்றது வேதங்களுக்குரிமைபூண்டுள்ள முதன் மூன்றுவருணத்தினராயுமாம். (௩௩)

அன்னதோர் மறையினை யறிந்து மையமா
வுன்னிய நிலையின ருள்ளந் தேறவு

மன்னவ ரல்லவர் மரபிற் றேரவு
மின்னமோர் மறையுள திதுவுங் கேண்மதி.

(இ-ள்.) அத்தகைய வேதங்களையுணர்ந்துஞ் சந்தேகமாக நினைக்கின்றவர்களது மனந்தெளியவும், (வேதமோதுதற்கு) அதிகாரிகளல்லாதவர்கள் முறையேதெளிந்துகொள்ளவும் இன்னமொரு இரகசியமிருக்கின்றது இதனையுங்கேட்கக்கடவாய்.

மன்னவரல்லவர் - வேதத்துக்கு அதிகாரிகளல்லாதவர். அவர் நான்கு வருணத்துப் பெண்களுஞ் சூத்திரருமாம். எனவே, சூத்திரர் வேதமோதுதற் கதிகாரிகளல்லரென்பது பெறப்பட்டது. ஆயினும், அவ்வேதப்பொருளாயுள்ள சிவாகமங்களையும் புராணங்களையு மோதுதற் கதிகாரமுண்டென வறிக. இதனை :—" அந்தணர் முன் மூவர்க்கு மாமறையு மாகமமுஞ்-சந்தையுற வோதுமது சால்பு" எனவும், " மற்றையவர் சைவாக மத்தை மதித்துணர்வா-ருற்றபுரா ணதிவித மும்" எனவும் வருஞ் சைவசமய நெறியா னுணர்க. (ருச)

ஏற்றம தாகிய மறைக்கும் யாமுனஞ்
சாற்றிய வாகமந் தனக்கு மாங்கது
வீற்றுற வருவது மன்று மேன்மையா
லாற்றவு நமதிய லறையு நீரதே.

(இ-ள்.) உயர்வாகிய வேதத்திற்கும் எம்மால் முன்னஞ் சொல்லப்பட்ட ஆசமத்திற்கும் அவ்விரகசியமானது வேறாகவருவதுமன்று, மிக்க சிறப்போடு நமது இலக்கணத்தையே கூறுந் தன்மையுடையது.—எ-று.

வேதங்கள் ஸ்தோத்திர ரூபமாகவும், ஆகமங்கள் கிரியாரூபமாகவும், புராணங்கள் கதாரூபமாகவு மமைந்து ஒன்றற்கொன்று வேறுபாடின்றி யனைத்து மொரே பொருளைக் கூறுந்தன்மை யுண்மையால், 'மறைக்கும் யாமுனஞ் சாற்றிய வாகமந் தனக்கு மாங்கது வீற்றுற வருவது மன்று' என்று கூறினர். (ருரு)

என்பெய ரதற்கெனி லினிது தேர்ந்துளோர்
துன்பம தகற்றிடுந் தொல்பு ராணமா
மொன்பதிற் றிருவகை யுண்ட வற்றினை
யன்புடை நந்திமுன் னறியக் கூறினேம்.

(இ-ள்.) அதற்கு யாதுபெயரோவெனில் இனிமையாகத் தெளிந்தவர்களது (பிறவித்) துன்பங்களை யொழிக்கின்ற பழையபுராணம் என்பதாம். அவை பதினெட்டுவகையினையுடையன. அவற்றை நம்மிடத் தன்புடையவனாகிய நந்திக்கு முன்பு தெரியும்படி கூறியுள்ளோம்.—எ-று.

சரிதாரூபமாய்க் கேட்போர்களது மனக் கிலேசங்களை யொழித்தலின், 'இனிது தேர்ந்துளோர் துன்ப மகற்றிடுந் தொல் புராணம்' என்றார். (ருசு)

ஆதியி னந்திபா லளித்த தொன்மைசேர்
காதைகள் யாவையுங் கருணை யாலவன்
கோதற வுணர்சனற் குமாரற் கீந்தன
னீதியொ டவனிடை நிலத்திற் கேட்டியால்.

(இ-ள்.) முதலில் நந்திக்கு நாமுபதேசித்த பழைமையாகிய புராணங்களனைத்தையும் கிருபையினாலே அந்நந்தி குற்றமறவுணருஞ் சனற்குமாரமுனிவனுக்கு உபதேசித்தனன். முறைமையோடு அச்சனற்குமார முனிவனிடத்தில் நிலவுலகத்தில் நீ கேட்கக்கடவாய்.—எ-று.

" அன்ன மாவே மண்ணொடு கிளியே-யில்லிக் குடமா டெருமை நெய்யரி-யன்னர் தலையிடை கடைமா ணாக்கர்" என்று கூறு மிலக்கணப்படி முதன் மாணாக்க ரிலக்கணம் வாய்க்கப்பெற்றவ ராகலின், 'கோதற வுணர் சனற் குமாரன்' என்று கூறினார். (௬எ)

என்னலு நன்றென விசைந்து தாழ்ந்தெழீஇ
முன்னவன் விடைகொடு முள்ளரி யான்முதற்
றுன்னிய வானவர் தொகையொ டேகியே
தன்னுல கத்தின்மால் சார்தன் மேயினான்.

(இ-ள்.) இவ்வாறு சிவபெருமா னருளிச்செய்யவும் திருமால் நல்லதென்று சம்மதித்து வணங்கியெழுந்து முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானிடத்து விடைபெற்றுக்கொண்டு பிரமன்முதலாக நெருங்கிய தேவர்கூட்டத்துடன் சென்று தனது உலகமாகிய வைகுந்தத்தை யடைந்தான்.—எ-று.

'நன்றென' என்பது, அவ்வாறே யாகுக வென்னும் பொருளில் வந்தது.()

சார்தலு மயன்றனைச் சதம கத்தனை
யார்தரு மமரரை யருளி னவ்வவர்
சேர்தரு புரந்தொறுஞ் செல்லற் கேவியே
கார்தரு மெய்யுடைக் கடவுள் வைகினான்.

(இ-ள்.) அவ்வாறு சேர்ந்தவுடனே கரிய திருமேனியையுடைய திருமால் பிரமனையும், இந்திரனையும், அருகில் நெருங்கிய தேவர்களையும் திருவருளோடும் அவரவர்கள் வசிக்கின்ற நகரங்கள்தோறும் போகும்படி யனுப்பிவிட்டு அங்கு வீற்றிருந்தருளினார்.—எ-று.

நூறு அசுவமேதயாகங்களைச் செய்தவர்கள் இந்திரராய்ச் சுவர்க்கபோகந் துய்ப்பரென்று கூறு முறைமையால், இந்திரனைச் 'சதமகத்தன்' என்று கூறினார். இதனை :—" நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல் - வேள்வி முற்றிய வென்றடு கொற்றத் - தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத் - தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை - யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனும்" என வருந் திருமுருகாற்றுப் படையானு முணர்க. (௬௯)

திருவொடு மருவியோன் செறிவுற் றெங்கணும்
பரவுறு மியல்பெறு பகவ னாதலாற்
றரணியி லருளினாற் றனது சத்தியி
லொருகலை தன்னுட னுதிக்க வுன்னியே.

(இ-ள்.) இலக்ஷுமிமணாளராகிய திருமால் எங்கும் நிறைந்து வியாபகமாயுள்ள தன்மையினையுடைய கடவுளாதலால், இந்நிலவுலகத்தில் திருவருட்டன்மையினால் தனது சத்திகளில் ஒருகலையோடு தோன்றும்படி திருவுள்ளங்கொண்டு.—எ-று

திருமாலுக்கு வியாபகமுடையா னென்னும்பொருடரும் விஷ்ணுவென்னும் பெயருடைமையால், 'திருவொடு மருவியோன் செறிவுற் றெங்கணும்-பரவுறு மியல்பெறு பகவ னாதலால்' என்று கூறினார். (௭௦)

பங்கயத் தயன்வழிப் பரச் ரப்பெயர்த்
துங்கநன் முனிபனித் தூவ லெல்லையிற்
கங்கையி லியோசன கந்தி யோடுற
வங்கவர் தம்மிடை யவத ரித்தனன்.

(இ-ள்.) தாமரைமலரிலுள்ள பிரமனது சந்ததியில்வந்த பராசரனென்னும் பெயரையுடைய உயர்வுபொருந்திய நல்லமுனிவரர் பனித்தூவலினாலேசூரியகிரணம் மறைக்கப்பட்ட பகற்காலத்தில் கங்கைநதிக்கரையிலே பரிமளகந்தியோடுசேர,அவர்களிடத்தில் (புத்திரராக) அவதரித்தனர்.—எ-று.

பிரமனது புத்திரபரம்பரையிற்சேர்ந்த வராகலின், 'பங்கயத்தயன் வழிப் பராசரப்பெயர்த்துங்கநன்முனி' என்றுகூறினர். பனித்தூவலெல்லையில் = பனித் தூவலினாலே சூரியகிரணம்மறைக்கப்பட்ட பகற்காலத்தில். கங்கைக்கரையிலோடம் விடுத்திருந்த மச்சகந்தியென்னு மாதைக்கண்டு மோகங்கொண்ட பராசரமுனிவர், அம்மச்சகந்தத்தையொழித்து நன்மணமிகச்செய்து கூடினமையால் 'யோசனகந்தியோடுற' என்றுகூறினர். (சக)

மற்றவன் வதரிகா வனத்தில் வைகியே
யற்றமில் வாதரா யணனெ னும்பெயர்
பெற்றன னாகியெம் பிரான்ற னாணையாற்
கற்றிடா துணர்ந்தனன் கரையில் வேதமே.

(இ-ள்.) அவர் வதிரிகாவனத்தில் வசித்து (அதுகாரணத்தினால்) குற்றமில்லாத வாதராயணனென்னும் பெயரைப் பெற்றவராய் எமது சிவபெருமானுடைய கட்டளையினால் அளவற்ற வேதங்களனைத்தையும் ஓதாதுணர்ந்தனர்.—எ-று.

வதிரிகாவனம் - இலந்தைமரக்காடு. பதிரி = இலந்தை. இது, வதிரி என வந்தது. திருமாலின் அவதாரபுருஷரும் பூரணஞானமுடையவருமாகலின், 'அற்றமில் வாதராயணன்' என்றும், சகலவேதங்களையு மோதாதுணர்ந்தது சிவபெருமானது திருவருட்டிறனாகலின், 'எம்பிரான்றனாணையாற் கற்றிடா துணர்ந்தனன் கரையில் வேதம்' என்றுங்கூறினர். (சஉ)

மோனக முற்றிய முனிவர் மேலவன்
றானுணர் மறையெனுந் தரங்க வேலையி
லானதோர் பொருளினை யறிஞர் பெற்றிடத்
தூநெறி கொண்டநாற் றுறைசெய் தானரோ.

(இ-ள்.) மௌன நிலையில்தேர்ந்த முனிவர்கள் தலைவராகிய அவ்வாதராயணர் தாம் ஓதாதுணர்ந்த வேதமென்னும் அலைகளையுடைய சமுத்திரத்தில்பொருந்திய உண்மைப்பொருளை அறிஞர் பெற்றுய்யும்பொருட்டுத் தூய்மையாகிய மார்க்கமமைந்த நான்குவகுப்புகளாக இயற்றியருளினர்—எ-று.

வேதங்கள் பெருங்கடல்போன்று விரிந்துகிடத்தலின், 'தானுணர்மறையெனுந் தரங்கவேலை' என்றும், அவ்வேதப்பொருளை யொருவழிப்படுத்தி நான்காகப் பிரித்து உலகிற்குபகரித்தமையின், 'ஆனதோர்பொருளினையறிஞர்பெற்றிடத் தூநெறி கொண்ட நாற்றுறைசெய்தான்' என்றுங்கூறினர். (சரு)

கரையறு வேதமாங் கடலை நான்கவாய்ப்
பிரிநிலை யாக்கியே நிறுவு பெற்றியாற்
புரைதவிர் முனிவரன் புகழ்வி யாதனென்
றொருபெயர் பெற்றன னுலகம் போற்றவே.

(இ-ள்.) அளவற்ற வேதங்களென்னுங் கடலை நான்காகப் பகுத்து நிலைபெறச்செய்த தன்மையினால் குற்றமற்ற அவ்வாதராயணமுனிவரர் புகழையுடைய வியாதனென்று கூறும் ஒருபெயரையும் உலகத்தார் துதிக்கும்படி பெற்றுக்கொண்டனர்.—எ-று.

வேதங்களையுணர்ந்து அந்நெறியே யொழுகுமுறைமையால், 'புரைதவிர் முனிவரன்' என்றும், அவ்வேதங்களைப்பகுத்து அதுகாரணமாகப் பெரும்புகழ் விளையப்பெற்றமையால், 'புகழ்வியாதனென் றொருபெயர்பெற்றன னுலகம்போற்ற' என்றுங் கூறினர். வதிரிகாச்சிரமத்தில் வைகினமையால், வாதராயணனென்றும், வேதங்களை நான்காகப் பாகுபாடுசெய்தமையால், வியாதனென்றுங் காரணப்பெயர் பெற்றனனென வறிக. (சச)

விரவிய மறைதெரி வியாத னைமவன்
குரவனே யாஞ்சனற் குமாரன் றன்னிடை
யிருவகை யொன்பதா மியல்பு ராணமு
மரபொடு கேட்டவை மனத்துட் கொண்டபின்.

(இ-ள்.) நிறைந்த வேதங்களனைத்தையு முணர்ந்த வியாதமுனிவரர் தமது ஆசாரியராகிய சனற்குமாரமுனிவரிடத்தில் பதினெண் புராணங்களையும் முறைமைப்படிகேட்டு அப்புராணங்களைத் தம்மனத்தில் அமைத்துத் தெளிந்தபின்பு—எ-று.

பதினெண்புராணங்களும் தாம் ஓதாதுணர்ந்த வேதப்பொருளாகவே யமைந்து கிடப்பினுந் தமக்கொரு ஆசிரியர்வேண்டுமென்பதும், அவ்வாசிரியர் சிவபெருமானது சிஷ்யபரம்பரைப்படியே வந்தவராயிருத்தல்வேண்டுமென்பதுங் கருதிச் சனற்குமாரமுனிவரிடத்து முறைப்படி கேட்டுணர்ந்தனரென்பார், 'குரவனே யாஞ்சனற்குமாரன் றன்னிடை யிருவகை யொன்பதா மியல்புராணமும் மரபொடு கேட்டவை மனத்துட்கொண்டனன்' என்றுகூறினர். (சரு)

ஏத்திடு சுருதிக ளிசைக்கு மாண்பொருண்
மாத்திரைப் படாவெனு மாசில் காட்சியர்
பார்த்துணர் பான்மையாற் பலவ கைப்படச்
சூத்திர மானவுஞ் சொற்று ளவகினன்.

(இ-ள்.) யாவருந் துதிக்கின்ற வேதங்கள் சொல்லிய மாட்சிமைப்பட்ட பொருள்களனைத்தும் ஒரு அளவிலடங்காவென்று, குற்றமற்ற தோற்றத்தினையுடைய அறிஞர்கள் பார்த்துணர்ந்து கொள்ளுந் தன்மையோடு அப்பொருளைப் பலவகையான சூத்திரங்களாகவுங் கூறி வசித்தருளினர்.—எ-று.

வேதம் அநாதி மலமுத்தராகிய சிவபெருமான் றிருவாக்காயுள்ளதாகலின், அதனைப்பலரும் போற்றுதலும், மெய்ப்பொருளமைந்து கிடத்தலுமுடைமையின், 'ஏத்திடு சுருதிகளிசைக்குமாண்பொருள்' என்றார். வேதம் சிவபெருமான் றிருவாக்கென்பதனை:— என்சொல்கே னென்சொல்கேனென் னேழைமையிருந்தபாவம் - புன்சொலாற் பாடிப்பாடிப் புகழ்ந்துரைந் துரையா நின்றேன் - வன்சொலார் முன்செலாத மதுரையிற் சொக்கேவேத - முன்சொலா லுன்னைவாழ்த்தி யுன்னையு முணராதன்றே" எனவரும் பரஞ்சோதிமுனிவர் திருவாக்கானுமுணர்க.

சூத்திரம்=வியாச சூத்திரம். அது, வேதாந்த சூத்திரமெனவும், பிரமமீமாஞ்சையெனவும், உத்தரமீமாஞ்சையெனவும் பெயர்பெறும். அதற்கு நீலகண்டசிவாசாரியர், சங்கராசாரியர், இராமாநுஜாசாரியர், மத்துவாசாரியர் என்னும் நால்வர் பாஷ்யங்கள்செய்தனர். சைவர்களாற்கொள்ளப்படுவது நீலகண்ட பாஷ்யம். மாயாவாதிகளாற் கொள்ளப்படுவது சங்கரபாஷ்யம். வைஷ்ணவர்களாற் கொள்ளப்படுவது இராமாநுஜ பாஷ்யம். மாத்துவர்களாற் கொள்ளப்படுவது மாத்துவபாஷ்யம். வியாசசூத்திரத்தின் மெய்ப்பொருளாயுள்ளது சைவசித்தாந்தப்பொருளாகிய நீலகண்ட பாஷ்யமேயாம். இதனை:— "தேவர்குறளுந் திருநான்மறை முடிவு - மூவர்தமிழுமுனிமொழியும் -

கோவைத் - திருவாசகமுந் திருமூலர்சொல்லு - மொருவாசகமென் றுணர்" என்னும் ஔவையா ரருமைத்திருவாக்கானுமுணர்க. இதில், முனிமொழி என்றது வியாசசூத்திரத்தை. (சசு)

மயலறு பயிலரோ வைசம் பாயனர்
சயிமினி சுமந்துவாந் தவத்தர் நால்வர்க்கும்
வியலிருக் காதியாம் வேத நான்கையு
முயர்வுறு தவத்தினன் முறையி னோதினன்.

(இ-ள்.) சிறந்த தவத்தினையுடைய வியாதமுனிவரர் மயக்கமற்ற பயிலர் - வைசம்பாயனர் - சயிமினி-சுமந்து என்றுகூறுந் தவமுனிவர்கள் நால்வர்க்கும் பெரிய இருக்குமுதலிய நான்குவேதங்களையும் முறைமைப்படி உபதேசித்தருளினர்.

'மயலறு' என்பதனை, பயிலர் - வைசம்பாயனர்-சயிமினி-சுமந்து என்னும் நால்வருக்கும் விசேடணமாகத் தனித்தனிப் பிரித்து அமைத்துக்கொள்க. இருக்காதியாம் வேதநான்காவன - இருக்கு - எசுர் - சாமம் - அதர்வணமென்பன. (சஎ)

தோல்வரு மறைகளின் சூத்தி ரத்தையு
மேல்வரு சயிமினி முதல மேதையர்
நால்வரு முணரிய நவின்று நல்கினு
னால்வரு கடவுளை யனைய தன்மையான்.

(இ-ள்.) கல்லாலவிருக்ஷத்தின்கீழ் குருமூர்த்தமா யெழுந்தருளிய தக்ஷிணாமூர்த்தியைப்போன்ற தன்மையையுடைய வியாதமுனிவரர் கெடுதலில்லாத வேதங்களின் சூத்திரத்தையும் மேன்மைபொருந்திய சயிமினிமுதலிய நான்குமுனிவர்களும் உணரும்படி அருளிச்செய்து உபதேசித்தருளினர்.—எ-று.

மேதையர் - பேரறிவினையுடையோர் - மேதை=பேரறிவு. உணரிய-செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஆல்வருகடவுள் - கல்லால விருக்ஷத்தின் கீழ்க்குருமூர்த்தமாக வெழுந்தருளிய தக்ஷிணாமூர்த்தி. (சஅ)

மெய்ம்முனி யனையவா விளித்து நீரினி
யிம்மறை யியல்பினோ ரெவர்க்கு மீமெனா
வம்முறை நால்வரு மனைய வேதநூல்
செம்மையொ டளித்தனர் சிறந்து ளோர்க்கெலாம்.

(இ-ள்.) மெய்ம்மைபொருந்திய வியாதமுனிவரர் அந்நான்கு முனிவர்களையுமழைத்து இனி நீங்கள் இவ்வேதங்களை (ஓதத்தக்க) இயல்பினையுடைய யாவருக்கும் ஓதுவிக்கக்கடவீர்க ளென்று கூறியருள, அவ்வாறே அந்நான்கு முனிவர்களும் அவ்வேதங்களைச்சிறந்த பக்குவிகளனைவருக்கும் சிறப்போடு உபதேசித்தார்கள்.—எ-று.

இயல்பினோர் - வேதமோதத் தக்கபுண்ணியமும் பக்குவமும்வாய்ந்த விலக்கணமுடையோர், ஈயும் என்பது ஈம் என நின்றது. முறைப்படியோதுவித்தனரென்பார், 'செம்மையொடளித்தனர்' என்றுகூறினர். (சகூ)

அன்னதோர் முனிவர னதற்குப் பின்னரோ
பன்னருந் தொகையினாற் பதினெண் பான்மையாய்
முன்னுறு புராணநூன் முழுது முற்றிய
வின்னருளினிலமையா லெனக்கு நல்கினன்.

(இ-ள்.) அத்தன்மையினையுடைய வியாத முனிவரர் அதன்பின்பு சொல்லுதற்கரிய தொகையினாலாகிய பதினெட்டுப் பகுப்பாகச் சிந்திக்கின்ற புராணங்கள் முழுமையும் சிறந்த திருவருட்டன்மையினால் எனக்கு உபதேசித்தருளினர்—ஏ-று.

'பன்னரும்' என்றது ஈண்டுச் சிறப்பின்மேனின்றது. முன்னுதல்-உயர்வாக மதித்தல். (ருo)

வேதம துணர்தரு வியாத மாமுனி
காதல னுமெனைக் கருணை செய்திவை
யோதுதி யாவரு முணர வென்றன
னுதலி னுலகினி லவற்றைக் கூறினேன்.

(இ-ள்.) வேதங்களை யோதாதுணர்ந்த சிறந்தவியாதமுனிவரர் சிஷ்யனுகிய அடியேன்மீது திருவருள்சுரந்து இப்புராணங்க ளனைத்தையும் யாவருமுணரும்படி சொல்லக்கடவாயென்று கட்டளையிட்டருளினர்; ஆகையால் இந் நிலவுலகத்தில் அப்புராணங்களைச் சொல்லினேன்.—எ-று.

'காதலன்' என்பதற்கு விருப்புடையனென்ருயினும், சிஷ்யபுத்திரனென்ருயினும் பொருள்கூறுதலாம். (ருக)

காமரு தண்டுழாய்க் கண்ண னுகிய
மாமுனி யருளினுன் மறைகள் யாவையுந்
தோமறு புராணநூற் ருெகுதி யாவையு
நேமிகொ ளுலகெலா நிலவி யுற்றவே.

(இ-ள்.) அழகமைந்த குளிர்ந்த துளசிமாலையை யணிந்த திருமாலாகிய சிறந்த வேதவியாசமுனிவரது திருவருளினல் சகலவேதங்களும், குற்றமற்ற பதினெண் புராணங்களும் சமுத்திரஞ்சூழ்ந்த உலகமுழுவதும் பரவி நிலைபெற்றன.—எ-று.

'காமரு' என்பதனை, காமம் மரு என்ருயினும், காமர் உ என்ருயினும் பிரித்துப் பொருள்கொள்க. காமர்+உ எனப் பிரிக்குங்கால், உகரம் சாரியை. 'புராணநூற் ருெகுதி யாவையும்' என்றதனல், இம்மகாபுராணச் சார்பாகத் தோன்றிய பதினெண் உபபுராணங்களையுங்கொள்க. அவற்றை:—"இத்தகைய புராணமூ வாறு மேனு ளிலங்குகயி லாயவரை யிறைவன் பாதப் - பத்திபுரி நந்திசனற் குமாரற் கோதப் பணிந்தவன்பால் வியாதமுனி பரிவாற் கேட்டு - மெத்தியதீ வினையோடப் பார்மேற் சால விளக்கியது போன்முனிவர் வேறு வேறு - புத்திமகிழ் வொடும்வழியே கேட்டுச் செய்த புகரிலுப புராணமூ வாறுண் டாமால்" எனவும், "சாற்றுசனற் குமாரமே நாரசிங்கந் தருகாந்தஞ் சிவதருமந் தழைதூர் வாசம் - போற்றியநா ரதமேகாபிலமெல் லோரும் புகழுசனஞ் சவுனகமாம் பிரமாண் டஞ்சீர் - மாற்றரும்வா ருணங் காளி புராண மேத்தும் வாசிட்ட லிங்கமொடு சவுரம் பாவம் - பாற்றியபா ராசரிய மாரீசம்பார் பகர்சாம்பம் பார்க்கவமென் றவற்றின் பேராம்" எனவும் வரும் விநாயக புராணத்தா னுணர்க. (ருஉ)

நம்பனுர்க் கொருபது நார ணற்குநான்
கம்புயத் தவற்கிரண் டலரி யங்கியா
மும்பர்வான் சுடர்களுக் கோரொன் றென்பரா
லிம்பரி லிசைக்குமப் புராணத் தெல்லையே.

(இ-ள்.) இந்நிலவுலகத்திற் புகழ்ந்துகூறும் அப்புராணத்தொகைகளில் சிவபெருமானுக்குப் பத்தும், திருமாலுக்கு நான்கும், தாமரை மலரிலுள்ள பிரமனுக்கு இரண்டும், அக்கினி சூரியன் என்று கூறுஞ் சிறந்த இருசுடர்களுக்கு ஒவ்வொன்றுமென்று பெரியோர்கள் கூறுவார்கள்.—எ-று. (ருங)

## வேறு.

எதிரில் சைவமே பவிடிய மார்க்கண்ட மிலிங்க
மதிகொள் காந்தநல் வராகமே வாமன மற்சம்

புதிய கூர்மமே பிரமாண்ட மிவைசிவ புராணம்
பதும மேலவன் புராணமாம் பிரமமே பதுமம்.

(இ-ள்.) ஒப்பற்ற சைவம், பவிடியம், மார்க்கண்டம், இலிங்கம், அறிவிற் கொள்ளத்தக்க காந்தம், நல்ல வராகம், வாமனம், மச்சம், புதுமையான கூர்மம், பிரமாண்டம் என்னு மிப்பத்துஞ் சிவபுராணங்களாம்; பிரமம், பதுமம் என்னுமிரண்டும் கமலாசனனாகிய பிரமனுக்குரிய புராணங்களாம்.—எ-று. (ருச)

கருது காருட நாரதம் விண்டுபா கவத
மரிக தைப்பெய ராக்கினே யம்மழற் கதையா
மிரவி தன்கதை பிரமகை வர்த்தமா மிவைதாந்
தெரியு மொன்பதிற் றிருவகைப் புராணமாந் திறனே.

(இ-ள்.) (யாவருஞ்) சிந்திக்கின்ற காருடம், நாரதம், விஷ்ணு, பாகவதம் என்னு நான்கும் விஷ்ணுபுராணங்களாம்; ஆக்கினேயம் அக்கினிபுராணமாம்; பிரமகைவர்த்தம் சூரியபுராணமாம்; இவைகளே ஆராயத்தக்க பதினெட்டுப் புராணங்களின் விவரங்களாகும்.—எ-று. (ருரு)

இத்தி றத்தவாம் புராணங்க ளொன்பதிற் றிரண்டி
னத்த னுக்குள புராணமீ ரைந்தினி லடல்வேற்
கைத்த லத்தவன் காந்தத்து ளன்னவன் கதையை
மெய்த்தொ கைப்பட வுரைப்பனென் றேமுனி விளம்பும்.

(இ-ள்.) இத்தன்மையினவாகிய பதினெண் புராணங்களில், சிவபெருமானுக்குரிய பத்துப்புராணத்தில் வலியவேற்படையேந்திய திருக்கரத்தினையுடைய குமாரக்கடவுளது கந்தபுராணத்துள் அவ்வெம்பெருமானுடைய சரித்திரத்தை உண்மையாகச் சுருக்கிச் சொல்லுகின்றேனென்று சூதமுனிவரர் கூறுவாராயினர்.—எ-று.

சிவபெருமானுக்குரிய புராணங்கள் பத்தினுள்காந்தபுராணம் ஸ்ரீசண்முகப்பெருமான் சிறப்பினையே கூறுதற் கமைந்துள்ளதாகலின், 'அடல்வேற் கைத்தலத்தவன் காந்தத்துள்' என்றுகூறினர். (ருசு)

வேறு.

பூமிசை யிருந்த புத்தேள் புரிந்திடு புதல்வர் தம்மு
ளேமுறு தக்க னீன்ற விருந்தனிக் குமரி யான
தீமையை யகற்ற வம்மை சிந்தைசெய் திமைய மன்னன்
மாமக ளாகி நோற்று வைகினள் வைகு நாளில்.

(இ-ள்.) தாமரைமலரில் வசிக்கின்ற பிரமன் சிருஷ்டித்த புத்திரர்களில் சிறந்த தக்ஷன்பெற்ற ஒப்பற்ற பெருமையமைந்த புத்திரியாகித் (தாக்ஷாயணியென்னும் பெயரோடு) இருந்த குற்றத்தை நீக்கிக்கொள்ளும் பொருட்டு உமாதேவியார் திருவுள்ளங்கொண்டு பர்வதராசனது சிறந்த புத்திரியாராக அவதரித்து (பார்வதியென்னும் பெயரோடு) தவஞ்செய்துகொண்டிருந்தனர்; அவ்வாறிருக்கும் நாளில்.—எ-று.

ஏமம் உறு,என்பது ஏமுறு எனத்தொகுத்தலாயிற்று. பர்வதராஜனது அருந்தவப்பயனாக வெழுந்தருளினமையின், 'மாமகளாகி, என்றார். (ருஎ)

அவுணர்க ளோடு சூர னவனிமேற் றோன்றி நோற்றுச்
சிவன்வர மளிக்கப் பெற்றுத் தேவர்யா வரையும் வென்று
புவிதனி லுவரி தன்னிற் புங்கவர் புனைவன் செய்த
தவலரு மகேந்தி ரத்தில் வைகினன் றானை சூழ.

(இ-ள்.) சூரபதுமன் அசுரர்களோடு உலகத்திற்பிறந்து தவஞ்செய்து சிவபெருமானால் கொடுக்கப்பட்ட வரத்தைப்பெற்று எல்லாத் தேவர்களையுஞ் செயித்து இந்நிலவுலகத்துள்ள கடலின் நடுவில் தேவதச்சனா லமைக்கப்பட்ட கெடுதலில்லாத மகேந்திரபுரியில் சேனைகள் சூழும்படி வாழ்ந்திருந்தனன்.—எ-று.

திருமால்முதலிய யாவருமடங்க, 'தேவர்யாவரையும்வென்று' என்றுகூறினார். உவரி - உப்புநீரையுடையது; கடல். நால்வகையரணு நன்கமையப்பெற்றதென்பார், 'தவலருமகேந்திரம்' என்றுகூறினார். (ருஅ)

அனையதோர் காலை வெள்ளி யடுக்கலிற் சனக னாதி
முனிவரர் தமக்குத் தொல்லை மூவகைப் பதமுங் கூறி
யினியதோர் ஞான போத மித்திற மென்று மோனத்
தனிநிலை யதனைக் காட்டித் தற்பர னிருந்தா னன்றே.

(இ-ள்.) அவ்வாறு வாழ்ந்திருக்கும் நாளில், ஸ்ரீமகாகயிலாசத்தில் சனகர் முதலிய முனிசிரேஷ்டர்களுக்குப் பழைமையாகிய சரியையாதி மூன்றுபாதங்களையு முபதேசித்து, (பின்பு) இனிமையான ஒப்பற்ற ஞானபோத மித்தகையதென்று மௌனமாகிய சிறந்த நிலைமையைக் காட்டி (உபதேசித்தவராகச்) சிவபெருமான் (தக்ஷிணாமூர்த்தமாக) வீற்றிருந்தருளினர்.—எ-று.

ஞானபோதம்-இருபெயரொட்டு. 'மோனத்தனிநிலையதனைக்காட்டி' என்பதனை:—"கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்றகேள்வி - வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய் - எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச் - சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை வெல்வாம்" என்னுந் திருவிளையாடற் புராணத்தானுணர்க. (ருகூ)

வீற்றிருந் தருளு மெல்லை வெய்யசூர் முதலா வுள்ளோ
ராற்றவுந் தீங்கு செய்தே யமரர்கள் சிலரைப் பற்றிப்
போற்றிடுஞ் சிறையி லுய்ப்பப் புரந்தரன் முதலா வுள்ளோர்
மாற்றருந் துயரின் மூழ்கி மறைந்தன ராகி வைகி.

(இ-ள்.) அவ்வாறு வீற்றிருக்குங்காலத்தில், கொடிய சூரபதுமன் முதலிய அசுரர்கள் மிகவும் பொல்லாங்குகளைச் செய்து சில தேவர்களைப் பிடித்துக் காவலமைந்த சிறையி லடைக்க இந்திரன் முதலிய தேவர்கள் நீக்குதற்கரிய துன்பத்துள் முழுகி மறைந்து வசித்து.—எ-று.

அமரர்கள் - மரித்தலில்லாதவர்கள். (கூ0)

சங்கரன் மோனத் தன்மை சதுர்முகற் குரைப்ப வன்னான்
வெங்கணை வேளை யுய்ப்ப விழித்தவன் புரநீ றாக்கிப்
பங்கயன் முதலா வுள்ளோர் பலரும்வந் திரங்கிப் போற்ற
வங்குறை மோன நீங்கி யவர்க்கருள் செய்தா னையன்.

(இ-ள்.) சிவபெருமானது மௌனநிலைமையை பிரமனுக்குச்சொல்ல, அப்பிரமன் விருப்பத்தைத்தருகின்ற புட்பபாணத்தையுடைய மன்மதனையேவ,(அவ்வெம்பெருமான் நெற்றிக்கண்ணைத்) திறந்து அம்மன்மதனது சரீரத்தைச் சாம்பலாக்கிப் பின் பிரமன்முதலிய தேவர்கள்வந்து வணங்கித்துதிக்க, சிவபெருமான் அக்கல்லாலின்நிழலி லெழுந்தருளியிருந்த மோனநிலையினின்று நீங்கி அப்பிரமனாதியர்களுக்குத் திருவருள் புரிந்தருளினார்.—எ-று.

சங்கரன் - ஆன்மாக்களுக்கு இன்பநலந் தந்தருள்பவன்; 'வெங்கணை வேள்' என்பதற்கு, கொடிய புட்பபாணத்தையுடைய மன்மதன் எனப் பொருள் கூறுவாருமுளர். (சுக)

ஓரெழு முனிவர் தம்மை யோங்கலுக் கிறைவன் றன்பாற்
பேரருண் முறையாற் றூண்டிப் பெருமணம் பேசுவித்துப்
பாரறு நோன்பின் மிக்க பராபரை யன்பு தேர்ந்து
காரணி கண்டத் தெந்தை கணங்களோ டிமையம் புக்கான்.

(இ-ள்.) சப்த முனிவர்களைப் பர்வதராஜனிடத்தில் மிக்க திருவருளோடு மனுப்பித் திருமணம்பேசுவித்து உலகவாசனையற்ற தவத்திற்சிறந்த பார்வதிதேவியாரது அன்பின் தன்மையைத் தெளிந்து நீலகண்டராகிய எமது சிவபெருமான் சிவகணங்களோடும் இமையமலையை யடைந்தருளினார்.—எ-று.

ஓரெழு முனிவராவார் :—அத்திரி - ஆங்கீரசன் - கௌதமன் - சமதக்கினி - பரத்துவாசன் - வசிட்டன் - விசுவாமித்திரன். அன்றியும், அகத்தியன் - ஆங்கீரசன் - கௌதமன் - காசிபன் - புலத்தியன் - மார்க்கண்டன் - வசிட்டன் என்பர். (சுஉ)

புடையக லிமையந் தன்னிற் புவனங்கண் முழுது மீண்ட
வடபுவி தாழ்ந்து தென்பா லுயர்தலு மலயந் தன்னிற்
கடமுனி தன்னை யேவிக் கவுரியை மணந்து பின்ன
ரடன்மத வேளை நல்கி யநங்கனே யாகச் செய்தான்.

(இ-ள்.) இடமகன்ற இமையமலையில் எல்லா வுலகத்துள்ளவர்களும்வந்து நெருங்கினமையால், பூமியில் வடபாகந்தாழ்ந்து தென்பாகமுயரவும்,(சிவபெருமான்) அகஸ்தியமுனியவரைப் பொதியமலைக்கனுப்பி (ப்பூமியைச் சமப்படுத்திப்பின்பு)உமாதேவியாரைத் திருமணம்புரிந்து அதன்பின்பு வலிமையுள்ள மன்மதனையெழுப்பி அநங்கனாகச்செய்தருளினார்.—எ-று.

கும்பத்திற் றோன்றிய முனிவராகலின், அகஸ்தியரைக் 'கடகமுனி' என்று கூறினார். (சுங)

மன்புனை கயிலை தன்னின் மலைமக ளோடு மீண்டு
முன்பென வமர்ந்து நாதன் முழுதுல குயிர்கட் கெல்லா
மின்பமும் புணர்ப்பு நல்கி யிமையவர் யாரும் வேண்டத்
தன்பெரு நுதற்கட் டீயாற் சரவண பவனைத் தந்தான்.

(இ-ள்.) சிவபெருமான் நிலைபெற்ற அழகினையுடைய ஸ்ரீமகாகயிலாயத்தில் பார்வதியாரோடு திரும்பிவந்து முன்போலவே யெழுந்தருளியிருந்து சர்வலோகங்களிலுமுள்ள எல்லாவுயிர்களுக்கும் போகமோக்ஷங்களைக் கொடுத்து, தேவர்களனைவரும் வந்து வேண்டிக்கொண்டமையால் தமது பெரிய நெற்றிக்கண்ணிடத்துள்ள அக்கினியினால் குமாரக்கடவுளைத் தந்தருளினார்.—எ-று.

சிவபெருமான் சனகாதியர்பொருட்டு யோகிருந்தகாலத்து உயிர்கள் போகத்தை யொருவியிருந்தன ராகலின், 'உயிர்கட்கெல்லா மின்பமும் புணர்ப்பு நல்கி' என்று கூறினார். (சுச)

அந்தமில் விளையாட் டுள்ள வறுமுகக் கடவு டன்னைத்
தந்திடு மெல்லை யன்னோன் றுணையந் தலைவ ராக
முந்திய விறல்சேர் மொய்ம்பன் முதலிய விலக்கத்தொன்பா
னந்திதன் கணத்தி னோரை நங்கைபா லுதிப்பச் செய்தான்.

(இ-ள்.) அளவற்ற திருவிளையாடலையுடைய ஸ்ரீ சண்முகப்பெருமானைப் பெற்றருளியபொழுது அவ் வெம்பெருமானது சேனாதிபதிகளாக முதன்மைபொருந்திய பராக்கிரமத்தையுடைய வீரவாகுதேவர் முதலிய இலக்ஷத்தொன்பது சிவகணத்தவரை உமாதேவியாரிடமாக அவதரிக்கச் செய்தருளினர்.—எ-று.

இலக்கத்தொன்பா னந்திதன்கணத்திறோராவார்—உமாதேவியாரது திருவடிச்சிலம்பினின்று முதிர்ந்த நவமணிகளின் வடிவாகிய ஒன்பது மாதர்களிடத்தினின்றுந் தோன்றிய வீரவாகு முதலிய நவவீரர்களும், அம்மாதர்களது வியர்வினின்றுந் தோன்றிய இலக்ஷம்வீரர்களுமாம். இதனை, மேல்-துணைவர்வருபடலத்து விளங்கக்காண்க. "ஓதிதுநின்றிட முன்னமொழுந்தே யோடியசங்கரி பின்புதிரும்பிச்-சோதியிடத்திலடைந்து மடங்கல் சுமந்திடுகின்ற துலங்கணைமேவக் -கோதில் சிலம்ப துடைந்து முன் வீழுங் கொன்னவ மாமணி யன்னவள் சாயை - யேய்தலு மொன்பது மங்கையராகி யெந்தை விளித்திட வின்பொடுவந்தார்." "வித்தகமங்கைய ரெம்பெருமானை விருப்பொடுகண்டு கருப்பமதாகச்-சத்திசினந்து கருப்பயவாதே தாங்குமினென்றிட வேங்கினராங்கே - மெத்தியமேனி வியர்ப்பிலிலக்க வீரருதித்தனராரியை சொல்லா-லுத்தமமாதர்கள் பின்பொருநாளி லொன்பது மைந்தரை யன்பொடுதந்தார்" என வருங் கந்தபுராணச் சுருக்கத்தாலுமுணர்க. (சுரு)

அண்ணலங் குமரப் புத்தே ளலகிலா வாடல் செய்து
மண்ணுறு கடலும் வெற்பும் வானமுந் திரிபு செய்து
துண்ணெனக் குழவி யேபோற் றேன்றிட வதனை நோக்கி
விண்ணவர் யாருஞ் சூழ்ந்து வெஞ்சமர் புரிந்து நின்றார்.

(இ-ள்.) முதல்வராகிய அழகிய குமாரக்கடவுள் அளவற்ற திருவிளையாடல்களைச் செய்து நிலவுலகத்துள்ள கடலும் மலையும் வானமுமாகிய இவைகளனைத்தையும் வேறுபடுத்தி விரைவாக குழந்தையைப்போன்று விளங்க, அவ்வாறு நிற்றலைத் தேவர்களனைவருங் கண்டு சூழ்ந்துகொண்டு பெரும்போர் புரிந்தார்கள்.—எ-று. (சுசு)

துண்ணென என்பது, விரைவுக்குறிப்பு.

ஆரமர் செய்து ளாரை யட்டட னுயிரு நல்கிப்
பேருரு நிலைமை காட்டிப் பெறலருங் காட்சி நல்கி
நாரதன் மகத்திற் றேன்றி நடந்ததோர் செச்சை தன்னை
யூர்திய தாகக் கொண்டே யூர்ந்தன னுப்பி லாதான்.

(இ-ள்.) ஒப்பில்லாதவராகிய எமது முருகக்கடவுள் அரிய போர்செய்தவர்களாகிய தேவர்களைக் கொன்று, பின்பு அங்கிறந்தவர்களை யெழுப்பித் தமது விசுவரூபத்தை யவர்களுக்குக் காட்டி, பெறுதற்கரிய தம துண்மை யுருவத்தையுந் தரிசிப்பித்து, நாரதமுனிவர் செய்த வேள்வியிற் றேன்றிவந்த ஒப்பற்ற ஆட்டுக்கடாவை வாகனமாகக்கொண்டு நடத்தியருளினர்.—எ-று.

பேருரு நிலைமையாவது, எல்லாந்தாமேயென் றுணர்த்தற்பாலதாகிய விசுவரூபம். உலகத்துயிர்களை வருத்தியழித்துத் தனக்கு ஒருவரும் நிகரின்றி யுலாவியதென்பார், 'ஓர் செச்சை' என்று கூறினர். ஊர்தியது - என்பதில், அது - பகுதிப்பொருள் விகுதி. (சுஎ)

மறைமுதற் குடிலை தன்னின் மாண்பொருண் முறைக டாவி
வெறிகமழ் கமலப் புத்தேள் விடைகொடான் மயங்கக் கண்டு
சிறையிடை யவனை வைத்துச் செகமெலா மளித்துத் தாதை
குறையிரந் திடவே விட்டுக் குறுமுனிக் கதனை யீந்தான்.

(இ-ள்.) வேதங்களுக்கு முதற்பொருளாயுள்ள பிரணவத்தினது சிறந்த மெய்ப்பொருளின் தன்மையை வினவி, நறுமணங்கமழுந் தாமரைமலரில் வசிக்கும் பிரமன் அதற்கு விடையளிக்க வறியாதவனாய் மயங்குதலைப்பார்த்து அப்பிரமனைச் சிறையிலிடடுச் சர்வலோகங்களையுந் தாமே சிருஷ்டித்துப் பின்பு தமது தந்தையாகிய சிவபெருமான் குறையிரத்தலினால் அப்பிரமனைச் சிறையினின்று நீக்கி, அப் பிரணவப்பொருளை அகஸ்தியமுனிவருக்கு உபதேசித்தருளினார்.—எ-று.

'மறைமுதற்குடிலை' வேதத்தின் முதற்பொருளாயுள்ள குடிலை; அன்றி, வேதத்தின் முதலிலெடுத் தோதத்தக்க குடிலை யெனினுமாம். குடிலை=பிரணவம்.

ஆவதோர் காலை யீச னறுமுகப் பரனை நோக்கி
யேவருமுடிக்க வொண்ணா திருந்தசூர் முதலோர் தம்பால்
மேவினை பொருது வென்று விரிஞ்சனே முதலாவுள்ள
தேவர்த மின்ன னீக்கிச் செல்லுதி குமர வென்றான்.

(இ-ள்.) அவ்வாறாகிய காலத்தில் சிவபெருமான் ஸ்ரீ சண்முகப்பெருமானைப் பார்த்தருளி, குமரனே! எவர்களாலும் அழிக்கமுடியாதிருந்த சூரபதுமன் முதலியவர்களிடத்துச் சென்று போர்செய்து வென்று பிரமன் முதலிய தேவர்களடைந்திருக்குந் துன்பத்தை நீக்கி வருவாயாகவென்று திருவாய்மலர்ந்தருளினார்.—எ-று.

மேவினை - முற்றெச்சம். (சுக)

விராவிய விலக்கத் தொன்பான் வீரரை வெய்ய பூத
ரிராயிர வெள்ளத் தோரை யிகற்படை மான்றே ரோடு
பராபர னுதவித் தூண்டப் பன்னிரு புயத்த னேகித்
தராதலம் புக்கு வெற்பைத் தாரக னோடு செற்றான்.

(இ-ள்.) நெருங்கிக் கலந்திருக்கின்ற இலக்ஷத்தொன்பது வீரரையும், கொடுமைபொருந்திய இரண்டாயிரவெள்ளம் பூதத்தலைவர்களையும், வலிய ஆயுதங்களுடனும் குதிரை பூட்டிய தேருடனும் சிவபெருமான் கொடுத்தருளியனுப்பப் பன்னிரண்டு திருப்புயங்களையுடைய குமாரக்கடவுள் சென்று நிலவுலகத்திற் பிரவேசித்துக் கிரவுஞ்சகிரியைத் தாரகாசுரனோடும் அழித்தருளினார்.—எ-று.

பராபரன் - பரம் என்பவற்றிற்கெல்லாம் பரமாயுள்ளவன். வெற்பு-மலையுருவங்கொண்டிருந்த கிரவுஞ்சனென்னு மசுரன். (எ௦)

பூவினன் முதலா வுள்ள புங்கவர் வழிபட் டேத்தத்
தேவர்தங் கிரியின் வைகித் தென்றிசை நடந்து தாதை
மேவரு மிடங்கள் போற்றி மேதகு சேய்ஞ லண்ணி
மூவிரு முகத்தன் முக்கண் முன்னவன் படையைப் பெற்றான்.

(இ-ள்.) ஆறு திருமுகங்களையுடைய குமாரக்கடவுள் பிரமன் முதலிய தேவர்கள் வணங்கித் துதிக்கத் தேவகிரியில் எழுந்தருளியிருந்து பின் தென்றிசையாக நடந்து தமது தந்தையாராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பல திருப்பதிகளையுந் துதித்து மேன்மைபொருந்திய திருச்சேய்ஞலூரை யடைந்து, அங்குத் திரிநேத்திரராகிய சிவபெருமானது படையாகிய பாசுபதாஸ்திரத்தைப் பெற்றருளினார்.எ-று.

பூவினன் என்பதில் இன்-சாரியை. சேய்ஞலூர் என்றது சேய்ஞல் என்றாயிற்று; இது குமாரக்கடவுள் சிவபெருமானைப் பூசித்துப் பாசுபதாஸ்திரம் பெற்ற க்ஷேத்திரமாகலின் இப்பெயர் பெற்றது. சேய்ஞலூர் என்பது மொழியிடைப்போலி. சேய்=குமாரக்கடவுள். (எக)

பரனருள் படையைப் பெற்றுப் பராசரன் சிறுர்வந் தேத்தத்
திருவருள் புரிந்து சென்று செந்திலின் மேவிச் சூரன்
வரமொடு திருவுஞ் சீரும் வாசவன் குறையும் வானோர்
குரவனை வினவி யன்னான் கூறவே குமரன் றேர்ந்தான்.

(இ-ள்.) சிவபெருமான் கொடுத்தருளிய அப்பாசுபதாஸ்திரத்தைப்பெற்று, பராசரமுனிவரருடைய புத்திரர்கள் வந்து துதிக்க அவர்களுக்குத் திருவருள்செய்து அங்குநின்றுஞ் சென்றருளித் திருச்செந்தூரை யடைந்து, சூரபதுமன் பெற்றுள்ள வரங்களையும் அவன் செல்வங்களையும் சிறப்பையும், (அவனால்) இந்திரனடைந்திருக்குந் துன்பத்தையும் தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவானைக்கேட்டு, அதற்கு அவன் முறைப்படி சொல்ல, குமாரக்கடவுள் அறிந்தருளினார்.—எ-று.

பராசரன்சிறார் - பராசரமுனிவரது சாபத்தால் மீனுருவமைந்து சரவணப் பொய்கையில் வசித்துப் பின்பு குமாரக்கடவுளுண்டதனொலொழுகிய பாலையுண்டு அச்சாப நீங்கப்பெற்றவர்களாகிய தத்தன் - அனந்தன் - நந்தி - சதுர்முகன் - பரிதிப்பாணி - தவமாலி யென்னும் ஆறு புத்திரர்கள். (எஉ)

அறத்தினை யுன்னி யைய னாடல்சேர் மொய்ம்பன் றன்னை
யுறத்தகு மரபிற் றூண்டி யொன்னலன் கருத்தை யோர்ந்து
மறத்தொடு கடலுள் வீர மகேந்திர மணுகி யேதன்
புறத்துள தானை யோராற் சூர்கிளை பொன்றச் செற்று.

(இ-ள்.) குமாரக்கடவுள் தருமநெறியைத் திருவுள்ளங்கொண்டு வீரவாகுதேவரைச் செலுத்தவேண்டிய முறைமைப்படி தூதாகச்செலுத்தி,அதனால், பகைவனாகிய சூரனது எண்ணத்தை யுணர்ந்து கோபத்துடன் கடலின்கணுள்ள வீரமகேந்திரபுரியையடைந்து தமக்கருகிலுள்ள சேனாவீரர்களால் சூரபதுமனுடைய சுற்றமெல்லாம் அழியும்படி கொன்றருளி.—எ-று.

ஆடல்சேர் மொய்ம்பன்=வீரவாகுதேவர். ஆடல் - வீரம். உறத்தகுமரபாவது, தூதனுப்பவேண்டிய முறைமை.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (எஙு)

சீயமா முகத்த னென்னுஞ் செருவலான் றனையு மட்டு
மாயையுந் திருவுஞ் சீரும் வரங்களும் பிறவு மாற்றி
யாயிர விருநா லண்டத் தரசனாஞ் சூரன் றன்னை
யேயெனு மளவில் வேலா லிருதுணி படுத்து நின்றான்.

(இ-ள்.) சிங்கமுகனென்னும் பெயரையுடைய அசுரனையுங் கொன்று அவ்வசுரனது மாயையையும் செல்வத்தையும் மேன்மையையும் வரங்களையும் மற்றவைகளையு மொழித்து, ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கு அரசனாகிய சூரபதுமனைத் தமது வேற்படையினால் அதிசீக்கிரத்தில் இரண்டு துண்டாக வெட்டி நின்றருளினார்.எ-று.

செருவலான் - செருச்செய்தலில் வல்லவன். செரு=போர். ஏயெனுமளவு என்றது, இமையளவு பொழுது என்னும் பொருளில் வந்தது. ஏ-என்பது ஓரொலிக் குறிப்பு. (எச)

துணிபடு சூர னோர்பால் சூட்டுவா ரணமா யோர்பால்
பிணிமுக மாகி நிற்பப் பெருந்தகை யவற்றை யூர்தி
யணிபடு துவச மாக்கி யப்பகல் செந்தில் வந்து
மணிசொரி யருவி தூங்கும் வான்பரங் குன்றஞ் சேர்ந்தான்.

(இ-ள்.) அவ்வாறு வெட்டப்பட்ட சூரபதுமன் ஒருபக்கத்தில் உச்சிக்கொண்டையையுடைய சேவலாகவும், மற்றொருபக்கத்தில் மயிலாகவு முருவங்கொண்டு நிற்க, ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் அவ்விரண்டையும் வாகனமாகவும் அழகிய கொடியாகவுங்கொண்டு அன்றைப்பொழுதே திருச்செந்திற்பதியையடைந்து முத்துக்களைச் சிந்துகின்ற அருவியாறொழுகப்பெற்ற சிறந்த திருப்பரங்குன்றமென்னுந் திருப்பதியையடைந்தருளினார்.—எ-று.

சேவலைத் துவசமாகவும், மயிலை ஊர்தியாகவுங் கொண்டருளின ரென்க. பெருந்தகை - பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. (எ௫)

தெய்வத யானை யென்னுஞ் சீர்கெழு மடந்தை தன்னை
யவ்விடை வதுவை யாற்றி யங்ஙனஞ் சிலநாள் வைகி
மெய்விய னுலகிற் சென்று விண்ணவர்க் கரச னாக்கி
யெவ்வமின் மகுடஞ் சூட்டி யிந்திரன் றன்னை வைத்தான்.

(இ-ள்.) தெய்வயானையென்னும் பெயரையுடைய சிறப்புமிக்க தேவியாரை அங்குத் திருமணம்புரிந்தருளி அவ்விடத்தில் சிலநாள்கள் வீற்றிருந்தருளி, மெய்ம்மைபொருந்திய விண்ணுலகத்திற் கெழுந்தருளி இந்திரனை (முன்போலவே) தேவர்களுக்குத் தலைவனாகச்செய்து குற்றமற்ற மகுடாபிஷேகஞ் செய்வித்து அவனை நிலைபெறுவித்தருளினார்.—எ-று.

தெய்வதயானை=தெய்வயானை. எமது சண்முகப்பெருமான் வளர்ந்தருளிய சரவணப்பொய்கையினிடத்து அவ்வெம்பெருமானைத் தழுவவேண்டி முன்னரே யருந்தவம்புரிந்தவராகலின், 'சீர்கெழுமடந்தை' என்றும், இந்திரன் முன்னரணிந்திருந்த மகுடம் சூரபதுமனால் பங்கமுற்றழிந்தமைபோலப் பின்னுமழியாமல் என்றும் நிலைபேறுறப் புனைந்து போகந் துய்த்தற்பொருட்டுச் சூட்டப்பட்டதாகலின், 'எவ்வமின்மகுடம்' என்றுங் கூறினார். (எ௬)

சில்பக லங்கண் மேவிச் சேனையோ டணங்குந் தானு
மல்லலங் கயிலை யேகி மங்கைபங் குடைய வண்ணன்
மெல்லடி வணங்கிக் கந்த வெற்புறை நகரி னேகி
யெல்லையி லருளால் வைகித் தணிகையி லெந்தை வந்தான்.

(இ-ள்.) எமது தந்தையாராகிய குமாரக்கடவுள் சிலநாள்கள் அவ்விண்ணுலகத்தில் வீற்றிருந்தருளிப் பின்பு தமது சேனைகளுடன் தெய்வயானைநாச்சியாருந் தாமுமாக வளப்பமிக்க அழகிய திருக்கயிலையை யடைந்து பார்வதிபாகராகிய சிவபெருமானது மென்மை பொருந்திய திருவடிகளை வணங்கி அங்கு நின்றுங் கந்தவெற்பினையுடைய ஸ்கந்தலோகத்திற்கெழுந்தருளி அளவற்ற திருவருளோடும் வீற்றிருந்தருளிப் பின்பு திருத்தணிகைப்பதிக் கெழுந்தருளினார்.—எ-று.

கந்தவெற்புறைநகர் என்பதற்கு, கந்தகிரியிலிருக்குங் குமாரலோகம் எனப் பொருள் கூறினுமாம்.

சிவபெருமானுடைய திருவடிகள் கூற்றுவன் முதலியோரைக் கொன்றருளிய கொடுமையுடையனவாயிருப்பினும், ஆத்துமாக்க ளடைதற்குரிய அரும்பேறுள்ளதாகலின், 'மெல்லடி' என்றார். (எஎ)

சாரலி னோங்கு தெய்வத் தணிகைமால் வரையின் மீது
வீரம துடைய வேலோன் வீற்றிருந் திடலு மங்க
ணாரதன் வந்து தாழ்ந்து நவைதவி ரொயின மாதின்
சீரெழி னலத்தைக் கூற வவள்வயிற் சிந்தை வைத்தான்.

(இ-ள்.) சாரல்களினு யுர்ந்திருக்கின்ற தெய்வத்தன்மைபொருந்திய திருத்தணிகைமலையின்மேல் வீரத்தினையுடைய வேற்படையையேந்திய குமாரக்கடவுள் வீற்றிருந்தருளுதலும், நாரதமுனிவர் அங்கு வந்து வணங்கிக் குற்றமற்ற வேடர்மகளாகிய ஸ்ரீ வள்ளிநாச்சியாரது சிறப்பமைந்த அழகின் வளப்பத்தைப் புகழ்ந்து கூற, அவ்வம்மையாரிடத்துத் திருவுள்ளங்கொண்டருளினர்.—எ-று.

இழிகுலத்தினராகிய வேடர்களிடத்து வளர்ந்தருளினமையாற் சிறிதுங் குற்றமுருதவளென்பார், 'நவைதவிரெயினமாது' என்றார். சீரொழினலம்-என்றது, மகளிரிலக்கணத்திற் சிறிதும் பழுதுருதிருக்குந்தன்மையை. அவை :—நீண்டு நுனி பிளவுபடாமல் தழைத்து மேகம்போலக் கறுத்து நுனியில் வளைந்து இயற்கை மணம் வீசி இடைவெளியின்றி நெருங்கி மெத்தென்றிருக்குங் கூந்தலும், யானை மத்தகம்போலத் திரண்டு உயர்ந்த தலையும், பூர்வபக்ஷத்து எட்டாநாள் சந்திரன்போன்று இடையில் மயிரும் நரம்புமின்றிச் செழித்து மூன்றுவிரலளவு அகன்ற நெற்றியும், கடை சிவந்து புறத்தில் பால்போல் வெளுத்து நடுவிலுள்ள கருமணி மிகக்கறுத்து அழகமைந்து இமையில் கருமயிரமையப்பெற்ற கண்களும், வளைந்த வில்லையொத்த புருவமும், இரண்டு துளையுந் தம்மிலொத்து உருட்சியடைந்து எள்ளின்பூப்போன்ற நாசியும், வள்ளைத்தண்டுபோலத் தாழ்ந்து மடற்சுழிகள் நன்கமைந்த காதுகளும், கண்ணுடி மண்டிலம்போலச் செழித்து விளங்குங் கன்னமும், திரண்டு இருபக்கமுங் குவிந்து சிவந்து இரேகை யொழுங்காகிய இதழும், மேலுங் கீழுமாகிய இரண்டு வரிசையும் இடைவெளியின்றிப் பால்போல் வெளுத்த முப்பத்திரண்டு பற்களும், தடிப்பின்றிச் சிவந்த நாவும், வட்டமாய் இரண்டங்குல வளவினையுடைய மோவாயும், தாமரை மலர் போல மணமுடைத்தாகிப் பூரணசந்திரன் போன்ற முகமும், நான்கு விரலளவாகத் திரண்டு மூன்றுஇரேகை பொருந்திய கழுத்தும், பதினெட்டு விரலளவகன்று மயிரும் நரம்புமொழிந்து உயர்ந்த மார்பும், மயிரில்லாமல் எலும்புதோன்றுமல் தசைந்த தோள்களும், நீண்டு உருண்டு கணுக்கள் பெற்று முறையே சிறுத்த கைகளும், சிவந்து உருண்டு சரசரப்பற்ற நகமும், மிருதுவாகிச் சிவந்து இடைவெளியகன்று நடுவிலுயர்ந்து நல்ல இரேகைகள் பொருந்திய உள்ளங்கையும், கடினமாய்த் தசைந்து வட்டவடிவாய் அரும்புபோன்று இரண்டுமொத்து உயர்ந்து நெருங்கிய ஸ்தனங்களும், சிறு ரோமவரிசை பெற்றுப் பக்கத்தில் மயிர் நரம்பற்ற வயிறும், வலஞ் சுழித்து ஆழ்ந்த நாபியும், மிகவுஞ் சிறுத்த இடையும், இடையே மயிர் நரம்பற்று இருபத்துநான்கு விரலளவாகி வட்டமாய்ச் சிறுத்து யானை மத்தகமும் ஆமை முதுகும் போன்ற நிதம்பமும், மயிரொலும்பகன்று யானைத்துதிக்கைபோன்ற துடையும், எலும்புதோன்றுமல் வட்டமாகிய முழந்தாளும், மயிர் நரம்பு தோன்றுமல் இணையொத்து உருண்டு சிறுத்த கணைக்காலும், மயிரொலும்பு தோன்றுமல் ஆமை முதுகுபோலத் திரண்ட புறவடியும், ஒழுங்காகத் திரண்டு வெண்ணகம் பொருந்திய கால்விரலும், மிருதுவும் சமமுமான உள்ளங்காலும், மாந்தளிர்போலச் சிவந்து எந்நாளும் வியர்வு தோன்றுமல் மெத்தென்றிருக்குந் திருமேனியும், பாதிரி - குவளை - தாமரை - மல்லிகை - சண்பகம் இவற்றின் மணம்போன்ற தேகமணமும், குயில் - கிளி - யாழ் இவற்றி னேசைபோன்ற சொற்களு முடைமையாம். இன்னு மிவற்றின் வகையினையும், அவ்வவ் விலக்கணங்களின் பயனையும் சாமுத்திரிக விலக்கணங் கூறுநூலில் விளங்கக் காண்க. (எஅ)

வள்ளிமால் வரையிற் போந்து மானிடைப் பிறந்த தெய்வக்
கிள்ளையை யடைந்து போற்றிக் கேடில்பல் லுருவங் காட்டிக்
கள்ளமோ டொழுகிப் பன்னுட் கவர்ந்தனன் கொணர்ந்து பின்னர்த்
தெள்ளுசீர் வேடர்நல்கத் திருமணஞ் செய்து சேர்ந்தான்.

(இ-ள்.) வள்ளிமலைக் கெழுந்தருளி, மானினிடமாக அவதரித்த தெய்வத் தன்மை பொருந்திய பசுங்கிளி போன்ற வள்ளிநாச்சியாரை யடைந்து துதித்து அழி வற்ற பல வடிவங்களைக் காட்டிப் பலநாள்கள் கரவடமாக மறைந்தொழுகி அவ்வம் மையாரைக் கவர்ந்துகொண்டுவந்து, அதன் பின்பு மிக்க சிறப்பினையுடைய வேடுவர் கள் சம்மதித்துக்கொடுக்கத் திருமணம்புரிந்து மீண்டுந் திருத்தணிகைக்கு எழுந்தரு ளினார்.—எ-று.

மான் - சிவமுனிவராகிய மான். இதன் வரலாற்றை உபதேசகாண்டத்தில் மாயன் வரம்பெறுசருக்கத்திற் காண்க. (எகூ)

செருத்தணி வரையில் வந்து சிலபகல் வள்ளி தன்னோ
டருத்தியின் மேவிப் பின்ன ரவளொடுங் கந்த வெற்பின்
வரைத்தனிக் கோயில் புக்கு வானமின் பிரிவு நீக்கிக்
கருத்துற விருவ ரோடுங் கலந்துவீற் றிருந்தான் கந்தன்.

(இ-ள்.) ஸ்ரீ குமாரக்கடவுள் திருத்தணிகைமலையி லெழுந்தருளிச் சிலகா லம் வள்ளிநாச்சியாரோடு அன்புடன் வீற்றிருந்தருளி, அதன்பின்பு அவ்வள்ளிநாச்சி யாரோடும் ஸ்கந்தகிரியிலுள்ள மலைபோன்ற ஒப்பற்ற திருக்கோயிலினுள் ளெழுந்த ருளி அங்குத் தெய்வயானை நாச்சியாரது பிரிவைத் தவிர்த்துத் தமது கருத்துப் பொ ருந்த அவ்விரண்டு தேவிமார்களோடுங் கலந்து வீற்றிருந்தருளினார்.—எ-று. (அ0)

என்றிவை யனைத்துஞ் சூத னியம்பலு முனிவர் கேளாத்
துன்றிய மகிழ்வாற் சென்னி துளக்கியிங் கிதனைப் போல
வொன்றொரு கதையுங் கேளே முரைத்தனை சுருக்கி யாங்க
ணன்றித னகலங் கேட்க நனிபெருங் காதல் கொண்டேம்.

(இ-ள்.) என்று இச்சரிதமனைத்தையுஞ் சூதமுனிவ ரருளிச்செய்யவும், நை மிசாரணியமுனிவர்கள் கேட்டு, பொருந்திய பெருங்களிப்பினால் சிரமசைத்து, (சூத முனிவரே! தேவரீர் கூறியருளிய) இச் சரிதத்தைப்போல ஒருசரிதத்தையும் நாங் கள் கேட்டதில்லை. நீர் இதனைச் சுருக்கமாக அருளிச்செய்தீர். அடியோங்கள் நன் மையமைந்த இப் புராணத்தின் விரிவைக் கேட்கும்பொருட்டு மிக்க பெருவிருப்புக் கொண்டிருக்கின்றோம்.—எ-று. (அக)

என்னவே முனிவ ரானோர் யாவரு மெடுத்துக் கூற
மன்னிய வருள்சேர் சூதன் மற்றவ ரார்வ நோக்கி
யன்னவை சுருக்க மின்றி யறைந்தன னவ்வா றோர்ந்து
தொன்னெறி வழாதி யானும் வல்லவா தொகுத்துச் சொல்வேன்.

(இ-ள்.) என்று இவ்வாறு நைமிசாரணியமுனிவர்க ளனைவரும் விண்ணப் பஞ்செய்துகொள்ளவும், நிலைபெற்ற பெருங் கருணையை யுடைய சூதமுனிவர் அம் முனிவர்களடைந்திருக்கின்ற பெருவிருப்பத்தைக்கண்டு அச்சரித்திரங்களை விரிவாக எடுத்துக் கூறியருளினார். அடியேனும் அவர் கூறிய முறைமையினையுணர்ந்து பழைய நான்முறைதவறாமல் கூடியவளவில் வரிசையாகச் சொல்லுகின்றேன்.—எ-று.

யானென்றும் புதிதாய்ப்புனைந்துகூறாமல், வடமொழியிற்கூறியுள்ளவாறே மொழிபெயர்த்துரைப்பனென்பார், 'தொன்னெறிவழாதியானும் வல்லவா தொகுத் துச்சொல்வேன்' என்றுகூறினார். (அஉ)

பாயிரப்படலம்
முற்றிற்று.

ஆக திருவிருத்தம் கூஉ.

க

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சிவசண்முகபரப்பிரஹ்மமணே நம:

முதலாவது,

# உற்பத்திகாண்டம்.

## திருக்கைலாசப்படலம்.

பாச நீக்கித்தன் பாற்படு நல்லரு
ளீச னல்கு மியல்பென வெய்தினோர்
தேசு மாற்றிச் சிறந்ததன் மெய்யொளி
வீசு கின்றது வெள்ளியங் குன்றமே.

(இ-ள்.) அழகிய திருக்கயிலாசத்திருமலையானது சிவபெருமான் (தம்மைச் சரணடைந்த மெய்யடியார்களது) பந்தங்களை யொழித்துத் தம்மிடத்துப் பொருந்திய சிறந்த திருவருளைப் பாலித்தருளுந் தன்மைபோல, தன்னிடத்தடைந்தவர்களது தேகநிறத்தை நீக்கிச் சிறப்புமிக்க தனது மெய்ம்மைபொருந்திய பேரொளியை வீசப் பெற்றுள்ளது.—எ-று.

சிவபெருமான் தம்மையடைந்த ஆன்மாக்களின் பாசமோசனஞ்செய்து திருவருள்பாலித்தருளுந் தன்மைபோன்று அவர்வீற்றிருந்தருளும் திருக்கயிலாயத் திருமலையும் தன்னையடைந்தாரது தேகத்திலுள்ள எவ்வகை நிறங்களையுமொழித்துத் தனது வெண்ணிறத்தையே தருகின்றதென்று கூறினாராயிற்று. (க)

ஆறு சூடிய வாதியம் பண்ணவ
னேறு மூரிவெள் ளேறுமக் கண்ணுத
னீறு சேர்தரு கோலமு நித்தனைத்
தேறு மன்பர்தஞ் சிந்தையும் போன்றதே.

(இ-ள்.) (இன்னும் அத்திருமலையானது) கங்கைநதியைத்தரித்த முதற்பெருங்கடவுளாயுள்ள அழகிய சிவபெருமான் ஊர்ந்தருளும் வலிமைபொருந்திய வெள்ளிய இடபத்தின் நிறத்தையும், அவ்வெம்பெருமானது திருவெண்ணீறணிந்த திருமேனிப்பிரகாசத்தையும், அழிவில்லாத அக்கடவுளைச் சதா சிந்தித்துணர்ந்த மெய்யடியார்களது திருவுள்ளத்தின் தன்மையையும் ஒத்துள்ளது.—எ-று.

சிவபெருமா னூர்ந்தருளுந் தருமவிடைவெண்ணிறமுடைமையால், 'ஆதியம் பண்ணவனேறு மூரிவெள்ளேறும்' என்றும், அவரது திருமேனி தழல்வண்ணமுடைமையின் அத்தழலின் செந்நிறத்தைநீக்க. 'அக்கண்ணுதல் நீறுசேர்தருமேனி

யும்' என்றும், அவ்வெம் பெருமானையடைந்துய்யு மான்மாக்களது திருவுள்ளம் நிஷ்களமுடைத்தாயிருத்தல்பற்றி 'நித்தனைத் தேறுமன்பர்தஞ் சிந்தையும்போன்றது' என்றுங்கூறினர். (உ)

மோன நன்னிலை முற்றிய பெற்றியர்
ஞான மார்பிழம் பன்ன நலத்ததா
யூனு லாய வுயிர்த்தொகை மாசொரீஇத்
தானெ லாஞ்செறிந் தென்னவுஞ் சான்றதே.

(இ-ள்.) (அத்திருமலை) சிறந்த மௌனநிலைமை முற்றப்பெற்றதன்மையையுடைய மெய்ஞ்ஞானிகளடைந்த ஞானத்திரட்சிபோன்ற சிறப்பினை யுடையதாய், உடலிற் பொருந்திச் சஞ்சரிக்கின்ற ஆன்மவர்க்கங்களனைத்தும் தமது பாசங்களை யொழித்து அவையனைத்து ஒருங்குசேர்ந்ததன்மைபோலவு மொத்துள்ளது.—எ-று.

"மோனமென்பது ஞானவரம்பு" என்றுகூறிய அருள்வாக்கியப்படி மௌனநிலைமை மெய்ஞ்ஞானமடைதற்குரிய சாதனமாயுள்ளதென்பார், 'மோனநன்னிலை முற்றிய பெற்றியர்' என்றுகூறினர். ஒரீஇ-சொல்லிசையளபெடை. தான் - வழுவமைதி. செறிந்த என்னவும் என்றது, செறிந்தென்னவும் எனத் தொகுத்தலாயிற்று.

கான மார்ந்த கடுக்கைநற் கூவிளத்
தேன வாம்பொழிற் றிண்சிக ரத்திடை
வான யாறு வருதலின் மாசிலா
ஞான நாயகன் போல நணியதே.

(இ-ள்.) (அத்திருமலையானது) வாசனை பொருந்திய கொன்றைமரங்களும் சிறந்த வில்வமரங்களும் பொருந்திய வண்டுகள் விரும்பிச் சூழ்ந்துள்ள சோலைகளமைந்த வலிய தனது சிகரத்திலே ஆகாயகங்கை (இடைவிடாது) ஒழுகிக்கொண்டிருத்தலால், குற்றமற்ற மெய்ஞ்ஞான சொரூபராகிய சிவபெருமானைப் போன்று விளங்கியுள்ளது.—எ-று.

சிவபெருமானது திருமுடியில் கொன்றைமலரும் வில்வபத்திரமும் பொருந்தியிருத்தலானும், கங்கைநீர்பெருகி யொழுகுதலானும், இத்திருக்கயிலாய மலையினும் கொன்றைமரங்களும் வில்வமரங்களும் பொருந்தியிருத்தலானும், ஆகாயகங்கையருவியாகப்பெருகுதலானும், இத்திருமலை சிவபெருமானே டொத்திருக்கின்றதென்பார், 'மாசிலா ஞானநாயகன்போலு நணியது என்றுகூறினர். (ச)

தண்ண றுந்துள வாற்புனை தார்முடிப்
பண்ண வன்கண் படுத்திடு பாற்கடல்
கண்ணு தற்குமொர் காமரு பீடமாய்
நண்ணு கின்றது போலு நலத்ததே.

(இ-ள்.) நறுமணங் கமழுங் குளிர்ந்த துளபத்தால் கட்டப்பட்ட மாலையையணிந்த முடியினையுடைய திருமால் பள்ளிகொள்ளுந் திருப்பாற்கடலானது, நெற்றிக்கண்ணராகிய சிவபெருமானுக்கும் ஒரு அழகிய பீடமாகப் பொருந்தியுள்ள தன்மையை யொத்த சிறப்பினையுடையது.—எ-று.

திருமால் பள்ளிகொள்ளுந் திருப்பாற்கடலானது நாம் ஓர் காலத்தில் வியாக்கிரபாதர் புத்திரராகிய உபமன்னியமுனிவ ருண்ணுதற்குச் சிவபெருமானாற் கொடுக்கப்பட்டோ மாகலின் சிவபெருமானுக்கும் ஒரு பீடமா யமைந்திருப்போமாயின் அத்தகைய துன்பத்திற் கிடமாகோமென்பது கருதி வந்திருந்ததுபோன்று விளங்கிய

தென்பார், 'கண்ணுதற்குமோர் காமரு பீடமாய் நண்ணுகின்றது போலு நலத்தது' என்று கூறினர். "கண்பிசைந் தொருசே யின்னுங் கலுழினுந் தனைக்கொடுப்பன்-மண்பிசைந் துண்ட மாயன் மறுத்திட வலியனல்லன் - நண்பிசைந் திறைவனுக்கே நாமிட மாவமென்று - பண்பிசைந் தலைதிரண்ட பரிசினின் றிமைக் குன்றம்" என்றார் சிவப்பிரகாசரும். (ரு)

பொதிபு மின்னமு தோடு பொருந்துவ
கதிரின் மிக்க கறையறு காட்சிய
மதிய மாயிர கோடி மணந்துதா
முதய மானது போன்றதவ் வொண்கிரி.

(இ-ள்.) அவ்வொளிபொருந்திய திருக்கயிலாசத் திருமலையானது, தம்மிடத்துப் பதிந்துள்ள இனிய அமுதத்தோடு பொருந்தியிருப்பனவும், ஒளியாற் சிறந்த களங்கமற்ற தோற்றத்தினையுடையனவுமாகிய பலகோடி சந்திரர்கள் ஒருங்குசேர்ந்து உதயமாயின தன்மையை யொத்துள்ளது.—எ-று.

அமுதம் நிரம்பப்பெற்றனவும் பேரொளி பிறங்கப்பெற்றனவும் உடற் களங்கமற்றனவுமாகிய பல்கோடி சந்திரர்கள் ஒருங்கு திரண்டுவந் தமைதலுபோலுங் காட்சியை யுடையனவாய்க் குளிர்ச்சி பெற்றுத் தண்ணொளி வீசிக் களங்கமற்று விளங்குதலின், 'மதிய மாயிரகோடி மணந்து தாமுதய மானது போன்றதவ் வொண்கிரி' என்று கூறினர். (சு)

நெற்றி மேனிமிர் கண்ணு நிலாவொளிர்
பொற்ற டம்புய நான்கும் பொருந்துறப்
பெற்றெம் மானரு ளாற்பிரம் பொன்றுகைப்
பற்று நந்தி பரிவொடு காப்பது.

(இ-ள்.) எமது சிவபெருமானுடைய திருவருளினால் நெற்றியின்மீதோங்கி விளங்கும் நேத்திரமும், வெண்ணிலாவைப்போன்றுவிளங்கும் அழகிய விசாலமாகிய சதுர்ப்புஜங்களும் பொருந்தப்பெற்று ஒரு பொற்பிரம்பைத் திருக்கரத்திற்றாங்கியிருக்குந் திருநந்திதேவர் அன்புடனே காக்கப்பெற்றுள்ளது.—எ-று.

பூர்வத்தில் சிலாத ரென்னு முனிவர் புத்திரப்பேறின்றி வருந்தித் திருவையாற்றையடைந்து தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சிவபூசை முடித்துத் திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்து சிவபெருமான் றிருமுன்னின்று வணங்கித் திருவைந்தெழுத்தைச் செபித்துப் பஞ்சாக்கினி மத்தியில் நின்று அநேககாலந் தவஞ்செய்துகொண்டிருந்தனர். சிவபெருமான் அத்தவத்திற்கிரங்கி இடபாரூடராய்ப் பார்வதியாரோடெழுந்தருளிவந்து "முனிவனே! நீ விரும்பிய வரத்தைக் கேள்" என்ன, அவர் எம்பெருமானே! அடியேனுக்கு ஒரு சற்புத்திரனைத் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குப் பெருமான் மகிழ்ந்து சகல சற்குணங்களும் நிரம்பிய ஒரு புத்திரன் பதினறு வயதுடையவனாய் நீ செய்யும் யாகபூமியில் உழுபடையின் மூலமாக வெளிப்படுவானென்று கூறி மறைந்தருளினர். பின்னர் சிலாதமுனிவர் யாகஞ்செய்யப் பொன்னேர் பூட்டி யாகசாலையை யுழுதபோது அக்கொழுவின் மூலமாக ஒரு மாணிக்கப்பெட்டி தோன்ற, முனிவரர் அதனைத் திறந்து பார்த்தபொழுது, அதனுள்ளே நெற்றிக்கண்ணும், இளம்பிறை தவழுஞ் சடைமுடியும், நான்கு திருத்தோள்களுமாகவிளங்குஞ் சிவமூர்த்தத்தைக்கண்டு மயங்கித் தோத்திரஞ்செய்து நின்றனர். அப்பொழுது சிவபெருமான் அசரீரியாக, 'முனிவனே! அப்பெட்டியை மூடித் திற' என்று கூறியருளவும், அவ்வாறே மூடித்திறந்தபொழுது, அவ்வெம்பெருமான் ஒரு

இளங்குழவியாகி யழுதனர். முனிவரர் அக்குழந்தையையெடுத்துத் தமது பத்தினியாரிடத்துக்கொடுத்துப் பாலூட்டிவளர்த்துச் செப்பேசுவரரென்று திருப்பெயரிட்டு வளர்த்துவருங்கால், அவருக்குப் பதினாறுவயதுவர, அவரது தாய்தந்தையர் தம்புத்திரரது அற்ப ஆயுளைக்குறித்து வருந்துதலையுணர்ந்து அஞ்சாதீர்கள்; யான் அழியாவரம்பெற்று வருகின்றேனென்று தேறுதல்கூறித் திருக்கோயிலையடைந்து அயனரிதீர்த்த மத்தியினின்று மருந்தவஞ்செய்ய, சிவபெருமான் இடபாரூடராயெழுந்தருளி, நித்தியகாயந்தந்து அவரது திருமுடிமேல் திருக்கரம்வைத்துத் தீக்ஷைபுரிந்து சாரூப்பியமளித்துத் தமது திருநாமமாகிய திருநந்திதேவர் என்று அபிஷேகத்திருநாமஞ்சாத்திக் குருசந்தானம்விளங்க வேத சிவாகமங்களைச் சனற்குமாரர்முதலிய முனிவரர்களுக்கு உபதேசிக்கக் கட்டளையிட்டருளிச் சுயசையென்னுங் கன்னிகையைத் திருமணம்புணர்த்திச் சிவகணங்களுக்குத் தலைவராயிருந்து தமது திருக்கோயிற்றிருவாயிலினின்று அதிகாரஞ்செலுத்தும்படி சுரிகையும் பிரம்புங்கொடுத்துத் திருமுடிசூட்டியருளினர். அத்திருநந்திதேவர் அவ்வதிகாரத்தைப்பெற்று ஸ்ரீகயிலாயமுதலிய சிவசந்நிதிகளில் எழுந்தருளியிருந்து அங்குத் தரிசனார்த்தமாகவரும் திருமால் பிரமன் முதலிய தேவர்களைச் சந்தடிவிலகும்படி தமது திருக்கரத்தேந்திய வேத்திரப்படைகொண்டோச்சி யெழுந்தருளியிருக்கின்றனர்; என்பதாம். இதனை—நெற்றியிற் கண்ணர் நாற்பெருந்தோளர் நீறணிமேனிய ரனேகர் - பெற்றமேற் கொண்ட தம்பிரானடியார் பிஞ்ஞகன் றன்னருள்பெறுவார் - மற்றவர்க்கெல்லாந் தலைமையாம் பணியுமலர்க்கையிற் சுரிகையும் பிரம்புங் - கற்றைவார் சடையானருளினாற்பெற்றான் காப்பதக்கயிலைமால்வரைதான்'' என்னும் பெரியபுராணத்தானுணர்க. இச்சரித்திரவரலாற்றை, இலிங்கபுராணம் திருவையாற்றுப் புராணமுதலிய நூல்களில் விளங்கக் கூறியிருத்தலின் ஆண்டுக்கண்டுணர்க. (எ)

புரந்த ரன்முத லாகிய புங்கவர்
வரம்பின் மாதவர் மாசறு காட்சியர்
நிரந்த பூத கணவர் நிரந்தரம்
பரிந்து போற்றிப் பயில்வதம் மால்வரை.

(இ-ள்.) அந்தப் பெரிய திருக்கயிலாயமலையானது இந்திரன் முதலிய தேவர்களும், அளவற்ற சிறந்த முனிவர்களும், குற்றமற்ற தோற்றத்தினையுடைய சித்தர்களும், நிறைந்திருக்கின்ற பூதகணங்களுஞ் சதாகாலமும் அன்புகூர்ந்து வணங்கி வசிக்குந்தன்மையினையுடையது.—எ-று.

அத்திருக்கயிலாயத்திருமலை இந்திரன்முதலிய தேவர்கள் நிறைந்து துதிக்கப்பெற்றுள்ளதென்பதனை— "வேதநான்முகன்மால் புரந்தரன்முதலாம் விண்ணவரெண்ணிலர் மற்றும் - காதலான்மிடைந்த முதற்பெருந் தடையாங் கதிர்மணிக்கோபுரத்துள்ளான் - பூதவேதாளப் பெருங்கணநாதர் போற்றிடப் பொதுவினின்றாடு - நாதனாரதி தேவனார்கோயி னாயகனந்தியெம்பெருமான்'' என்னும் பெரியபுராணத்திருவிருத்தத்தானுணர்க. (அ)

மின்ன ரம்பைய ராடலும் விஞ்சையர்
கின்ன ரம்பயில் பாடலுங் கீழ்த்திசை
மன்ன னாதியர் வாழ்த்துமவ் வானவ
ரின்னி யங்களு மெங்கணு மார்ப்பது.

(இ-ள்.) (இன்னும் அத்திருமலையானது) ஒளியோடு விளங்குகின்ற அரம்பைமாதர்கள் செய்யும் நடனமும், வித்தியாதரர்கள் கின்னரத்தில் வாசிக்கின்ற பாட

னும், கீழ்த்திசைத் தலைவனாகிய இந்திரன் முதலிய தேவர்கள் செய்யும் வாழ்த்துதலும், அத்தேவர்களது இனிமையாகிய பல வாத்தியங்களும் எவ்விடங்களிலும் முழங்கப் பெற்றுள்ளது.—எ-று.

'மின்னரம்பையர்' என்பதற்கு மின்னல்போலுந் தோற்றத்தினையுடைய அரம்பையர் எனப்பொருள் கூறினுமாம். விஞ்சையர்=வித்தியாதரர். கின்னரம் - பிட்டில்போல்வது. கீழ்த்திசை மன்னனாதியர் என்றது, அஷ்டதிக்குப்பாலகர்களும் மற்றையர்களுமாம். இயம்=வாத்தியம். அரம்பையராடலும் விஞ்சையர்பாடலும் இந்திராதியர்களது வாழ்த்தொலியும் வாத்தியவொலியும் நிறைந்தொலிப்பது அத்திருமலை யென்க. 'மின்னரம்பையராடல்' என்பதனை, "அரம்பையராடன் முழவுடன் மருங்கி னருவிகளெதிரெதிர் முழங்க - வரம்பெறுங் காதன் மனத்துடன் றெய்வ மதுமல ரிருகையுமேந்தி - நிரந்தர மிடைந்த விமான சோபான நீடுயர் வழியினாலேறிப்-புரந் தரன் முதலாங் கடவுளர்போற்றப் பொலிவதத் திருமலைப்புறம்பு" என்னும் பெரிய புராணத்தானு முணர்க. (கூ)

வேறு.

கீணி லாவுறு முலகெலா நீங்கியே கீழ்போய்ச்
சேணி லாவுறு பதமெலா முருவிமீச் சென்று
மாணி லாவுறு மண்டத்தி னடிமுடி மருவத்
தாணு வாயுல கிறுதியி னிற்பதச் சயிலம்.

(இ-ள்.) அத்திருமலையானது மகாபிரளயகாலத்தில் கீழே நிலத்துள்ள உலகங்களனைத்தையுங் கடந்து கீழ்ச்சென்றும், மேலே நிலத்துள்ள உலகங்களனைத்தையுங் கடந்து மேற்சென்றும், மாட்சிமையோடு விளங்குகின்ற பிரமாண்டத்தின் அடியும் முடியும் பொருந்த ஸ்தம்பாகாரமாய் நிற்கப்பெற்றது.—எ-று.

கீணிலாவுறுமுலகம் - கீழேழுலகம். சேணிலாவுறுபதம் - மேலேழுலகம். "அதலம் விதலம் சுதல நிதலம் - தராதலம் ரசாதலம் பாதலவுலகம் - என்றிவை கீழேழுல கெனப்படுமே" எனவும், "பூலோகம் புவலோகஞ் சுவலோக மகாலோகம் - சனலோகந் தவலோகஞ் சத்தியலோகமென - இத்திறத்தனவா மேலேழுலகே" எனவும் வரும் பிங்கலந்தைச் சூத்திரத்தானுணர்க. அத்திருக்கயிலாயத் திருமலை பாதலத்தளவு ஆழ்ந்தும், சத்தியலோகத்தளவு மேலோங்கியும் அண்டத்தினடி முடியளவும் பொருந்தியுள்ளதென்றபடி. எல்லா மழியத்தக்க சர்வசங்காரகாலத்துஞ் சிறிதுஞ் சலனமின்றி அவ்வவ் வூழிகடோறு முயர்ந்தோங்கும் பெருஞ்சிறப்பினதாகலின் 'தாணு வாயுல கிறுதியினிற்பதச்சயிலம்' என்றுகூறினர். இதனை:—"ஊழிதொ றூழி முற்று முயர் பொன்னெடித்தான்மலையைச்-சூழிசை யின்கரும்பின் சுவைநாவலூரன் சொன்ன - வேழிசை யின்றமிழா லிசைந்தேத்திய பத்தினையு-மாழிக்கடலரையா வஞ்சையப்பர்க்கறிவிப்பதே" என்னுந் தமிழ்வேதத்தானுமுணர்க. (கo)

மாடு சூழ்தரு மேருவே யாதியாம் வரைகள்
பாடு சேரினு முலகெலா மழியினும் பரந்து
கூடு மண்டங்கள் குலையினுங் கொன்றைவே ணியன்போற்
கேடி லாமலே யமர்வது கயிலையங் கிரியே.

(இ-ள்.) அழகிய அத் திருக்கயிலாயமலையானது பக்கத்திற் சூழ்ந்துள்ள மகாமேரு முதலிய பர்வதங்கள் அழிவடைந்தாலும் உலகமனைத்து மழிந்தாலும், பரவி யொருங்குசேர்ந்துள்ள அண்டகோடிக ளழிந்தாலும் கொன்றைமலர்மாலையை யணிந்த சடைமுடியை யுடைய சிவபெருமானைப் போன்று அழிவில்லாதிருப்பது.

'மாடுசூழ்தருமேரு' என்பதற்கு, பொன்னாற் சூழப்பட்டுப் பொருந்தியுள்ள மேரு எனப்பொருள் கூறினுமாம். மேருவே யாதியாம் வரைகளாவன - நிடதம்முதலிய அஷ்டகுலபருவதங்களும், மந்தரம்முதலிய மற்றப்பருவதங்களுமாம். பரந்துகூடு மண்டங்கள் என்றது பல்லாயிரங்கோடி யண்டங்களை - இதனை:— "அண்டப்பகுதியினுண்டைப்பிறக்க - மளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி- யொன்றனுக்கொன்று நின்றெழில்பகரி - னூற்றொருகோடியின் மேற்படவிரிந்தன" எனவருந் திருவாசகத்திருமுறையானும், "எண்ணரிய வாருயிர்களண்டமு மிப்படிதானே - யெண்ணரிய வெனுமமல னியலெனின் மற்றேரியலி - னெண்ணியவ னளவிடுத லென்னை யெனின் வினைவிதத்தாற் - பண்ணிடுவ னண்டவிதஞ் சிருட்டிதொறும் பலபடியால்" எனவருஞ் சிவதருமோத்திரத்தானுமுணர்க. அநாதி நித்தியராகிய சிவபெருமான் என்று மழிவில்லா திருக்குமாப்போல, இக்கயிலையங்கிரியுஞ் சிறிதுஞ் சலனமின்றிச் சிறந்தோங்குதலின், கொன்றைவேணியன்போல் கேடிலாமலே யமர்வது கயிலையங்கிரி, என்று கூறினார்.

மேருவாதிவரைகளும் அண்டகோடிகளும் சர்வசங்காரகாலத்தில் நிலைகுலைவ தியல்பாகலின், அக்காலத்தும் இக்கயிலயங்கிரி அழிவின்றி விளங்குமென்பது கருத்து. (கக)

நலம்வ ருங்கலை மதியமு மிரவியு நாகர்
குலம்வ ருந்தனுக் குறையலா மற்றைய கோளு
மலம ருஞ்சுட ருடுக்களு மமரரும் பிறரும்
வலம்வ ரும்படி யிருப்பது கயிலைமால் வரையே.

(இ-ள்.) பெரிய அத் திருக்கயிலாயமலையானது நன்மைமிக்க சோடசகலைகளையுடைய சந்திரனும் சூரியனும் தேவகுலத்திற் றேன்றிய உடற்குறையினையுடைய இராகுகேதுக்க ளல்லாத மற்றைய கிரகங்களும் அசைகின்ற ஒளியினையுடைய நட்சத்திரங்களும் தேவர்களும் மற்றையர்களும் பிரதக்ஷிணஞ் செய்யும்படி விளங்கியுள்ளது.—எ-று.

அமுதகிரணனென்பார், 'நலம் வருங்கலைமதியம்' என்றும், அசுரகுலத்திற்பிறந்து தேவர்கூட்டத்தோடு அமுதுண்ணற்பொருட்டடைந்து திருமாலது சட்டுவத்தால் தலையிழப்புண்ட இராகுகேது வென்னுமிருகோள்களும் இடம்வருந்தன்மையினவகலான், அவைநீங்க மற்றைய கிரகங்களுமென்பார், 'நாகர் குலம்வருந்தனக்குறையலா மற்றையகோள்' என்றுங் கூறினார். பிறரும் - என்றது முனிவர் சித்தர் சிவகணநாதர் முதலியோர்களை. சந்திரசூரியர் முதலிய கிரகங்களும், நக்ஷத்திரங்களும் தேவர்களும் மற்றையர்களும் வலஞ்செய்தற்குரிய கயிலைவரையென்பது கருத்து. ()

ஏற்ற மேருவே யாதியாம் வரைகளேழ் வகையாற்
சாற்று நேமிக ளாழியங் கிரிபெருஞ் சலதி
நாற்றி சைக்கணு நொச்சிபோற் சூழ்தர நடுவண்
வீற்றி ருப்பது கயிலையா கியதனி வெற்பு.

(இ-ள்.) ஒப்பற்ற திருக்கயிலாயத் திருமலையானது தகுதியினை யுடைய மேருமுதலிய மலைகளும், எழுவகையாகச் சொல்லப்பட்ட கடல்களும், சக்கரவாளகிரியும் பெரும்புறக்கடலு மாகிய இவைகள் நான்குதிசைகளிலும் அரண்போலச் சூழ்ந்திருக்க அவற்றின் நடுவே வீற்றிருக்குந்தன்மையையுடையது.—எ-று.

'மேருவேயாதியாம்வரைகள்' என்றன - மேருவும், அதனைச்சூழ்ந்துள்ள அஷ்டகுல பருவதங்களுமாம். எழ்வகையாற் சாற்றுநேமிகள் - உவர்நீர்க்கடல் முத

லிய எழுகடல்கள். ஆழியங்கிரி - சக்கரவாளகிரி. பெருஞ்சலதி - பெரும்புறக்கடல். மேருவாதிவரைகளும் எழ்கடல்களும், சக்கரவாளகிரியும், பெரும்புறக்கடலும் அரண்பொற் சூழ்ந்திருப்ப நடுவிலுள்ளது கயிலைவெற்பு என்க.

மேருவேயாதியாம் வரைகள் என்பதனை :—" நாற்றிசையில் வரைப்பரப்பு மேல்கீழ்தானு நவின்றிடின் மேருவிற்பாதி யதற்குக்கீழ்பான் - மாற்றரிய மாலியவான் மேல்பாற் கந்தமாதனந் தென்றிசை நிசதமேமகூட- மேற்றவிமம்வடபானீலஞ் சுவேத மியற்சிருங்கமெட்டுவரை யிவையா நீல - மேற்றிகழ் பொன்மணி கனகம்பனியே நீலம் வெண்மை மதிகாந்தமிவை மேனிதாமே" என மேல்வரும் அண்டகோசப்படலத்தானும், 'ஏழ்வகையாற் சாற்றுநேமிகள்' என்பதனை :—உப்புத்தேனிக்கு வெண்டயிர் நெய்பா - லப்புக்கடலேழாகுமென்ப' என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தானுமுணர்க. (கரு)

படியெ லாமுண்டு மேனமாய்த் தாங்கியும் பண்டோ
ரடியி னுலகப் படுத்தியு மிடந்துமுற் றருளு
நெடிய மாயனு முலகிறு மெல்லையி னிமலன்
வடிவ மேயெனக் காணுதற் கரியதவ் வரையே.

(இ-ள்.) அத் திருக்கயிலாயமலையானது உலகங்க ளனைத்தையு முண்டும், பன்றியுருவங் கொண்டு தாங்கியும், முற்காலத்தில் ஓரடிக்குள் அளந்து அடக்கியும், கீண்டு சென்றுமுள்ள நெடியோனுகிய திருமாலும் உலக மழிவுறுங்காலத்துச் சிவபெருமான் திருவுருவத்தைப்போலக் காணுதற்கரிதாயுள்ளது.—எ-று.

உலகத்தை உண்டும், தாங்கியும், ஓரடியினுலகப் படுத்தியும் இடந்துமுள்ள திருமாலினுலும் அத்திரு மலையினடியைக் காணுதற்கரிதாயின், மற்றையவரைக்குறித்துப்பேசுவதிற் பயனில்லையென்று கூறினுராயிற்று. (கச)

வேறு.

அன்னதோர் கயிலை நாப்ப ணம்பொனின் சுடர்மேல் கொண்ட
நன்னெடுஞ் சிமயத் தோங்க னவையொரீஇ நண்ணிற் றென்னக்
கன்னியங் காப்பு மேவிக் கதிர்மணிக் கற்றை சுற்றப்
பொன்னெடுங் கோயி லொன்று பொலிவொடும் பொருந்திற் றன்றே.

(இ-ள்.) அத்தகைய ஒப்பற்ற திருக்கயிலாயத்திருமலையின் நடுவில், அழகிய பொன்னொளியை மேற்கொண்டுள்ள சிறப்புப்பொருந்திய நீண்ட மேருமலையானது களங்கமற்றுப் பொருந்தியிருக்குந்தன்மைபோலக் கெடாத காவலினையுடையதாய்பேரொளியமைந்த நவரத்தினங்களின் கிரணங்கள் சூழப் பொன்மயமாகிய பெரிய ஒரு ஆலயமானது விளக்கத்தோடும் பொருந்தியுள்ளது.—எ-று.

திருக்கயிலையாகிய வெள்ளிமலையின்மேல் பொற்கோயிலிருத்தல், பொன்மயமாகிய மேருமலைவந்து தங்கியதுபோன்றிருந்ததென்க. (கசு)

திணிகதி ராரந் தன்னிற் சிறந்தவச் சிரத்திற் செக்கர்
மணிதனின் முழுநீ லத்தின் மற்றைய வெறுக்கை தன்னிற்
பணிபட வருளாற் றுனே பலித்திடு சிகர மாதி
யணியினுக் கணியாய் மல்கு மாலயச் சூழ லெங்கும்.

(இ-ள்.) அவ்வாலயத்தமைந்துள்ள இடங்க ளனைத்திலும் மிக்க ஒளியினையுடைய முத்தினுலும் சிறந்த வச்சிரத்தாலும் செவ்வொளியினையுடைய மாணிக்கத்தாலும் உயர்ந்த நீலத்தாலும் மற்றைய பொருள்களாலும் அழகுபொருந்தச் சிவபெருமா

னது திருவருளினால் சுயம்பா யுண்டாகிய சிகரங்கள் முதலியவை அழகுக் கழகாக விளங்கும்.—எ-று.

இயற்கை யழகினை யுடைய திருக்கயிலைச் சிகர முதலியவற்றிற்கு முத்து முதலிய மணிக ளமைக்கப்பெற்று விளங்குதல், அழகுக் கழகு செய்ததுபோலு மமைந்து விளங்கிய தென்பது கருத்து. (கசு)

என்றுமீ றென்ப தின்றி யிருந்திடுங் கயிலை வெற்பிற்
பொன்றிகழ் நகரந் தன்னுட் பொருவிலாக் கோளு நாளுந்
துன்றிய தன்மைத் தென்னத் தூமணிக் கதிர்கள் சூழ
மன்றம ருறையு ளொன்று வனப்பொடு வைகிற் றன்றே.

(இ-ள்.) எக்காலத்து மழிவில்லாமல் நிலைபெற்றுள்ள திருக்கைலாயமலையில் பொன்மயமாக விளங்கும் ஆலயத்தினுள்ளே ஒப்பற்ற கிரகங்களும் நக்ஷத்திரங்களும் நெருங்கியிருக்குந்தன்மைபோலத் தூய்மையாகிய நவரத்தினவொளிகள் சூழும் வண்ணம் திருவோலக்க மண்டப மொன்று அழகோடு விளங்கியுள்ளது.—எ-று.

திருக்கயிலையின்மீதுள்ள திருவோலக்கமண்டபத்தில் நவமணிகள் பதித்திருத்தல், நவக்கிரகங்களும், இருபத்தேழு நக்ஷத்திரங்களு மமைந்துள்ள தன்மைபோன் றிருந்ததென்க. (கஎ)

வேறு.

சோதி சேருமத் தூமணி மண்டபத்
தாதி யான வரியணை யும்பரிற்
காத லாகுங் கவுரியொர் பாங்குற
வேத நாயகன் வீற்றிருந் தானரோ.

(இ-ள்.) ஒளிபொருந்திய இரத்தினங்க ளமைந்த அத் திருவோலக்கமண்டபத்துள் ஆசனங்களுள் முதன்மையாகிய சிங்காசனத்தில் தமது இச்சாரூபமாகிய உமாதேவியார் இடப்பாகத்தில் வீற்றிருக்க வேதநாயகராகிய சிவபெருமான் எழுந்தருளியிருந்தனர்.—எ-று.

மிருகேந்திரனாகிய சிங்காசனமென்பதும், விநாயகர் முதலியோரது ஆசனங்க ளனைத்திற்குந் தலைமைபெற்றுள்ள தென்பதுந் தோன்ற, 'ஆதியான வரியணை' என்றும், அருளே சிவசத்தி யென்பது தோன்ற, 'காதலாகுங் கவுரி' என்றுங் கூறினர். (கஅ)

பீடு கொண்ட பெருந்தவப் பெற்றியோர்
தேடு கின்ற சிறப்புடைத் தாம்புகழ்
நாடு தும்புரு நாரதர் விஞ்சையர்
பாடு கின்றனர் பாணியின் பாற்பட.

(இ-ள்.) பெருமை வாய்ந்த மிக்க தவத்தினையுடைய முனிவர்களால் சதா ஆராய்கின்ற சிறப்பினையுடைய சிவபெருமானது புகழினையே விரும்புகின்ற தும்புரு நாரதர்களும் வித்தியாதரர்களும் தாள வொத்திற் கிசையப் பாடிக்கொண்டிருக்கின்றனர்.—எ-று. (கசு)

அதிகன் வேணியி லார்தரு கங்கையை
விதிபு ரந்தரன் விண்டல கத்துள
நதிக டாழ்ந்தென நன்னயத் தேவல்செய்
கதியி னோர்கள் கவரிகள் வீசினர்.

(இ-ள்.) முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானது சடைமுடியிற் பொருந்தியிருக்கின்ற கங்கை நதியைப் பிரமன் இந்திரன் திருமால்முதலிய தேவர்களுலகத்துள்ள நதிகள் வணங்குவதுபோல, அன்புடனே எவற்றெழில் செய்யுந் தவமுடையவர்கள் வெண்சாமரைகளை வீசினார்கள்.—எ-று.

தன்னிக ருயர்ச்சி யில்லாத் தலைவனாகலின், 'அதிகன்' என்றார். சிவபெருமான் திருமுடியி லணிந்துள்ள கங்கையி னுயர்ச்சியைக் கருதிப் பிரமனாதிய ருலகத்துள்ள கங்கைகள் தாழ்ந்து வணங்குவதுபோல வெண்சாமரைகளை வீசினார்க ளென்பது கருத்து. (உ०)

சீல வட்ட முடிப்பிறை தேடுவான்
ஞால வட்டத் தெழுதரு நாகர்போ
லேல வட்ட முகத்தரு கெங்கணு
மால வட்ட மசைத்தன ரன்பினோர்.

(இ-ள்.) தூய்மை யமைந்துள்ள வட்டமாகிய சடைமுடியிற் றங்கிய இளம் பிறையைத் தேடும்பொருட்டு உலகத்திற்கு வந்த சர்ப்பகூட்டங்களைப்போல (சிவ பெருமானது) அழகிய திருமுகத்தி னருகில் எவ்விடங்களிலும் மெய்யடியார்கள் ஆலவட்டங்களை வீசினார்கள்.—எ-று.

ஆலவட்டம் தலையகன்று கால் நீண்டிருத்தல் பாம்பு படம்விரித்து நின் றுயர்ந்தோங்கி யிருத்தல்போலத் தோன்றுதலான், முடிப்பிறை தேடுவான் ஞாலவட் டத் தெழுதரு நாகர்போல் - ஆலவட்ட மசைத்தனர் என்று கூறினர். ஞாலவட்டம்- பூகோளம். வட்டம் - செப்பமாகிய முகம் என்னும் பொருளில் வந்தது. (உக)

ஆதி தன்னரு ளெய்தி யவன்றிருப்
பாத தாமரை சூடியப் பண்ணவன்
கோதி லாத திருவுருக் கொண்டுளோர்
பூத ராதியர் போற்றிமு னீண்டினார்.

(இ-ள்.) முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானது திருவரு ளடைந்து அவரது திருவடித்தாமரைகளைச் சிரத்திற் றரித்து அவ் வெம்பெருமானது குற்றமற்ற திருவுருவத்தைப் பெற்றவர்களும் பூதகணங்கள் முதலியவர்களும் திருமுன்னே துதித்து அடைந்தார்கள்.—எ-று.

அப் பண்ணவன் கோதிலாத திருவுருக் கொண்டுளோராவார் - சிவசாருபம் பெற்றுள்ள மெய்யன்பர்கள். (உஉ)

திருக்கைலாசப் படலம்

முற்றிற்று.

---

ஆ திருவிருத்தம்-கூஎச.

# பார்ப்பதிப்படலம்.

அன்னுழி யுமையவ ளகத்து ளோர்செய
லுன்னின ளுணக்கமுற் றெல்லைதா னெழீஇத்
தன்னிக ரில்லவன் றளி றைஞ்சியே
முன்னுற நின்றிவை மொழிதன் மேயினுள்.

(இ-ள்.) அத்தருணத்தில் உமாதேவியார் தமது திருவுள்ளத்து ஒரு செய்கையைச் சிந்தித்து நடுக்கங்கொண்டு விரைந்தெழுந்து ஒப்பற்ற சிவபெருமான் திருவடிகளை வணங்கித் திருமுன்னே நின்று இவ்வார்த்தைகளைக் கூறியருள்வாராயினர்.

அன்னுழி - தொகுத்தல். உன்னினள் - முற்றெச்சம். எழீஇ-சொல்லிசையளபெடை. (க)

கற்பனை முதலிய கடந்த கண்ணுதற்
றற்பர நினையிகழ் தக்கன் றன்னிடைப்
பற்பகல் வளர்ந்தவன் பயந்த மாதெனச்
சொற்படு நாமமுஞ் சுமந்து ளேனியான்.

(இ-ள்.) கற்பனை முதலியவற்றைக் கடந்த நெற்றிக்கண்ணையுடைய எம்பெருமானே ! யான் தேவரீரை நிந்தை கூறிய தக்ஷனிடத்திலே அநேகநாள்கள் வளர்ந்து அவன் பெற்ற புதல்வியென்று சொல்லப்படுகின்ற தாக்ஷாயணி யென்னும்பெயரும் அடைந்தவளாகவிருக்கின்றேன்.—எ-று.

கற்பனைமுதலியன.—கற்பனை-காரணம்-காரியம் என்பன. தற்பரன் தமக்குத்தாமே பரமாயுள்ளவர். சிறிது முள்ளன்பின்றிச் சதாநிந்தித்தலையே யியற்கைக் குணமாகக் கொண்டுள்ளவனென்பார்,' நினையிகழ்தக்கன் ' என்றார். அவன் பயந்த மாதெனச் சொற்படுநாமமுஞ்சுமந்துளேன் - என்றது, அவன்மகளாயிருந்தும் அவனுடைய துர்க்குணங்க ளணுத்துணையுமின்றி அவன் மகளென்னும் பெயரைமாத்திரம் பூண்டுள்ளேனென்பது கருத்து. அப்பெயர், தாக்ஷாயிணி என்பது. ' கற்பனைமுதலிய கடந்தகண்ணுதற்றற்பர ' என்பதனை—" கற்பனைகடந்தசோதி கருணையே யுருவமாகி - யற்புதக்கோலநீடி யருமறைச் சிரத்தின்மேலாஞ் - சிற்பரவியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துணின்று - பொற்புட னடஞ்செய்கின்ற பூங்குழல் போற்றிபோற்றி ,; என்னும் பெரியபுராணத்தானும், " ஆரணங்கண் முடிந்தபதத் தானந்தவொளியுலகிற் - காரணங்கற்பனைகடந்த கருணைதிருவுருவாகிப் - பேரணங்கினுடனும்பெரும்பற்றப் புலியூர்சேர் - சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம் பலம்போற்றி' என்னுங் கோயிற்புராணத்தானுமுணர்க. (உ)

ஆங்கதோர் பெயரையு மவன்க ணெய்தியே
யோங்கினன் வளர்ந்தவிவ் வுடலந் தன்னையுந்
தாங்கினன் மேலவை தரித்தற் கஞ்சினே
னீங்குவ னவ்வகை பணித்தி நீயென்றாள்.

(இ-ள்.) அந்த தாக்ஷாயணியென்னும் பெயரையும், நான் அத்தக்ஷனிடத்திற் சென்று வளர்ந்திருந்த இச்சரீரத்தையுஞ் சுமந்திருக்கின்றேன், இனிமேல், அப்பெயரையு முடலையுந் தரித்திருப்பதற்கு அஞ்சுகின்றேன், இனிஅவற்றைவிட்டு நீங்குகின்றேன். தேவரீரும் அவ்வண்ணமே கட்டளையிட்டருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.—எ-று.

தாக்ஷாயிணியென்னும் பெயரைக்கொண்டிருப்பின், அவனது கொடுமையைச்சிந்தித்தற்கு ஓர் ஞாபகக்குறிமாயிருக்குமாதலின், அப்பெயரை யொழிக்கவேண்டுமென்பதும், அவனாற்பரிபாலிக்கப்பட்டு இனிது போஷித்துவந்த உடலையொழிக்கவேண்டுமென்பதுங்கருதி, 'ஆங்கதோர் பெயரையு மவன்க ணெய்தியே-யோங்கி நான்வளர்ந்தவிவ் வுடலந்தன்னையுந்-தாங்கினன்மேலவைதரித்தற்கஞ்சினேன்' என்றும், அவற்றைத்தாம் நீக்குதற்குக்கூடுமேனும், "மணம்புரிவதன்முன் குரவ ராணையினு மணவினைமுற்றியபின்ன - ரிணங்குற வருள்செய் கொழுநனாணையினு மிருப்பர்தம் வயமிலவொன்று - மணங்கனையவர்தாம்" என்றபடி சிவபெருமானது கட்டளையைக் கடந்து நடத்தல்கூடாமையால், 'நீங்குவனவ்வகை பணித்திநீயென்றாள்' என்றுங் கூறினர். (௫)

> மன்னுயி ராகிய மரபு முற்றவு
> முன்னுற வருளிய முதல்வி யன்பினு
> லின்னண மியம்பலு மிதனைத் தேர்ந்திடாத்
> தன்னிக ரில்லதோர் தலைவன் கூறுவான்.

(இ-ள்.) நிலைபெற்ற ஆன்மவர்க்கங்களனைத்தையும் முற்பட்டுப் பெற்றருளிய முதல்வியாகிய உமாதேவியார் அன்போடு இவ்வாறு கூறியருளவும், இவ்வார்த்தைகளை ஒப்புயர்வில்லாதவராகிய சிவபெருமான் கேட்டருளி அருளிச்செய்வாராயினார்.—எ-று.

ஆன்மாக்களநாதி நித்தியமாகலின், 'மன்னுயிர்' என்றும், அவை, சராசரமென்னு மிருவகைப்பகுதியாய் எண்பத்துநான்குலக்ஷஞ் சீவபேதங்களா யடங்குதலின், 'உயிராகிய மரபு முற்றவும்' என்றும் அவ்வுயிர்த்தொகைகளைத் தனதருளாலீன்று காத்தருள்பவராகலின் 'முன்னுறவருளிய முதல்வி' என்றும், தக்ஷனலிடப்பட்டபெயரும் அவனால் அன்பு பாராட்டி வளர்க்கப்பட்டதேகமும் பழிப்பினையுடையனவாகலி னவற்றையொழித்தலே துணிவென்று கருதிக் கூறுதலின், 'இன்னணமியம்பலும்' என்றுங் கூறினர்.

ஆன்மாக்கள் அநாதி நித்திய மென்பதனை:— "ஏக னநேக னிருள்கருமமாயையிரண்-டாகவிவை யாறுநாதி யில்" என்னுந் திருவருட்பயனாலும், அவை எண்பத்துநான்குலக்ஷஞ் சீவபேதங்களா யுள்ளனவென்பதை:—"ஊர்வபதினொன்றாமொன்பதுமானிட-நீர்பறவைநாற்காலோர் பப்பத்தாந்-தேரிய-பந்தமாந் தேவர் பதினாலயன்வகுத்த-அந்தமில்சீர்த் தாவரநாலைந்து" என்னுஞ் செய்யுளானும், 'அவ்வுயிர்களைத் தனதருளாலீன்று காத்தருளினவளென்பதனை;— "பங்கயற்கண் ணரியபரம் பரனுருவே தனக்குரிய படிவமாகி - யிங்கயற்க ணகனுலகத்தெண்ணிறந்த சராசரங்களீன்றுந் தாழாக் - கொங்கயற்கண் மலர்க்கூந்தற்குமரி பாண்டியன் மகள்போற் கோலங்கொண்ட - வங்கயற்கணம்மையிருபாதப்போ தெப்போது மகத்துள்வைப்பாம்" எனவும், "ஒளியாலுலகீன் றுயிரனைத்து மீன்போற் செவ்வியுறநோக்கி-யளியால் வளர்க்குமங்கயற்கணன்னேகன்னி யன்னமே-யளியா லிமவான் றிருமகளா யாவி யன்னமயில்பூவை - தெளியாமழலைக்கிளிவளர்த்து விளையாட்டயருஞ் செயலென்னே" எனவும் வருந் திருவிளையாடற்புராணத்தானுமுணர்க. (௬)

பத்திமை யெம்வயிற் பழுத்த பண்பினாற்
சத்தியே நின்னிகர் சகத்தி லில்லைநீ
யித்திற முயலுத லெல்லை தீர்ந்தநின்
புத்திரர் வீடுறு பொருட்டுப் போலுமால்.

(இ-ள்.) உமையவளே! எம்மிடத்தில் நீ வைத்திருக்கும் அன்பானது முதிர்ந்திருக்குந் தன்மையினால் நின்னையொப்பவர்கள் உலகத்தொருவருமில்லை. நீ இவ்வாறாக முயற்சித்தல் அளவிறந்த நினது புத்திரர்களாகிய ஆன்மாக்கள் முத்தியடைந்துய்தற்பொருட்டேயாம்.—எ-று.

சத்தியே! நீ நம்மைப்பழித்துரைத்த தக்ஷனைக்குறித்துக் கூறியது, பின் உனது புத்திரர்களாகிய ஆன்மாக்கள் சிவநிந்தை புரிதலுடன் நினைத்தலுங் கொடிதென்று கருதி யொழிந்துய்தற்பொருட்டே யாமென்பார், 'இத்திறமுயலுதலெல்லை தீர்ந்தநின் - புத்திரர் வீடுறுபொருட்டுப் போலுமால்' என்றுகூறினார். பத்திமை-அன்பின்றன்மை. வயின் - ஏழனுருபு. (ரு)

நற்றிற மேயிது நங்கை சிந்தனை
முற்றிய வேண்டுமேன் மொழிது மேருவின்
சுற்றம தாகிய விமையத் தொல்வரைக்
கொற்றவன் புரிவனாற் கொடிய மாதவம்.

(இ-ள்.) உமையவளே! நீ இவ்வாறு கூறியது நற்காரியமே; உனது எண்ணம் முடிவுபெறவேண்டுமோயிற் சொல்லுகின்றோம், மேருமலையின் உறவாகிய பழைய இமையமலையரசன் கரோமாகிய பெருந்தவத்தைச் செய்கின்றான்.—எ-று.

'மேருவின் சுற்றமதாகிய இமையத்தொல்வரை' என்பதற்கு, மேருவின் சுற்றுச் சார்பாகிய அஷ்டகுல பருவதங்களிற் சேர்ந்துள்ள இமையமலை எனப் பொருள் கூறினுமாம். முற்றிய-செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். எனில் என்பது, ஏல் என மரீஇயது. (சு)

ஏதவன் பெறத்தவ மியற்று மென்றியேன்
மாதுனை மகண்மையா மரபிற் போற்றியே
காதலொ டெமக்கருள் கருத்த தாகுமா
லாதலிற் குழவியா யவன்க ணெய்துநீ.

(இ-ள்.) உமையவளே! அவ்வரசன் யாது பெறக் கருதித் தவஞ்செய்கின்றானென்று வினவுவாயாயின், உன்னைப் புத்திரியாக முறைமையோடு வளர்த்து அன்புடன் எமக்கு மணஞ்செய்துகொடுக்கவேண்டுமென்னுங் கருத்தேயாகும்; ஆகையால், நீ குழந்தைவடிவாய் அவ்வரசனிடத்து அடைவாயாக.—எ-று.

சத்தியே நீயுமெம்மைப்போல் மாதாவுதரத்திற்றங்கி யோனிவாய்ப்பட்டுப் பிறக்கவறியாயாகையால் உன்னை மகண்மையாகப்போற்றி வளர்க்கக் கருதினனென்றும், நெருப்பிற் சூடுபோன் றெம்மைவிட்டு நீங்காத்தன்மையை யுணர்ந்தவனாகலான் எமக்கே மணஞ்செய்து கொடுக்கக் கருதினனென்றுங் கூறுவார், 'மாதுனை மகண்மையா மரபிற்போற்றியே - காதலொ டெமக்கருள் கருத்ததாகும்' என்று கூறினார்.

தளர்ந்துடன் மெலிவுறத் தவஞ்செய் வெற்பினா
னிளஞ்சிறு குழவியா யெய்தி மற்றவ
னுளங்களி கூரவாண் டோரைந் தின்றுணை
வளர்ந்தனை புரிதிமேன் மாசின் மாதவம்.

(இ-ள்.) தேகந் தளர்ந்து மெலியத் தவஞ்செய்கின்ற பர்வதராஜனிடத்து இளமைவாய்ந்த சிறு குழந்தைவடிவாய்ச் சென்று அவன் மனமகிழும்வண்ணம் ஐந்து வருடமளவும் வளர்ந்து பின்னர் குற்றமற்ற தவத்தினைச் செய்வாயாக.—எ-று.

சரீரமெலிய அருந்தவஞ்செய்கின்றனனென்பார், 'தளர்ந்துடன் மெலிவுறத் தவஞ்செய் வெற்பினன்' என்றும், அ... பபயனாக நீசெல்லவேண்டுமென்பார், 'இளஞ்சிறுகுழவியாயெய்தி' என்றும், அவ்வாறு நீசென்று அவனுக்குக் களிப்பூட்டி ஐந்து வயதளவு வளர்ந்துபின் நம்மைக்கருதித் தவஞ்செய்யக் கடவையென்பார், 'மற்றவனுளங்களிகூர வாண்டோரைந்தின்று - வளர்ந்தனை புரிதிமேன் மாசில் மாதவம்,' என்றுங்கூறினர். சரீரமெலியத் தவஞ்செய்தலை:— "மலர்தலையுலகத்துப் பலபல மாக்கண் - மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ - மனையும் பிறவுந் துறந்து நினை வருங் - காமலையும் புக்குக் கோடையிற் - கைம்மே னிமிர்த்துக் காலொன்று முடக்கி - யைவகை நெருப்பி னழுவத்தினின்று - மாரிநாளிலும் வார்பனிநாளிலு - நீரிடைமூழ்கி நெடிதுகிடந்துஞ் - சடையைப்புனைந்துந் தலையைப்பறித்து - முடையைத்துறந்து முண்ணாதுழன்றுங் - காயுங் கிழங்குங் காற்றுதிர்சருகும் - வாயுவுநீரும் வந்தனவருந்தியும் - களரிலுங் கல்லிலுங் கண்படைகொண்டுந்-தளர்வுறு மியாக்கையைத்தளர்வித்தாங்கவ - ரம்மைமுத்தியடைவதற்காகத் - தம்மைத்தாமே சாலவுமொறுப்பர்" எனவருந்திருவிடை மருதூர் மும்மணிக்கோவையானுமுணர்க. (அ)

அணங்குநீ நோற்றுழி யகிலத் துள்ளதோர்
கணங்களுந் தலைவருங் கணிப்பி றேவரு
மிணங்கினர் சூழ்தர வெய்தி நின்னையா
மணம்புரிந் தேகொடு வருது மீண்டெனா.

(இ-ள்.) உமையவளே! நீ அவ்வாறு தவஞ்செய்கையில் உலகத்துள்ள சிவகணங்களும், பூதகணத்தலைவர்களும் அளவிறந்த தேவர்களும் நெருங்கிச் சூழ்ந்துவர, யாம் அங்கு அடைந்து நின்னைத் திருமணம்புரிந்தே இக்கயிலைக்கு அழைத்துவருகின்றோமென்று.—எ-று.

தக்ஷன் அகங்கார ரூபியாகலின் நீ அவன்பால் புத்திரியாக வளர்ந்தகாலைத் திருமணம்புரிவதன்முன்னர்க்கொணர்ந்தாம்; இப்பர்வதராசன் பேரன்புடையனாகலின் நினக்கோர் பழுதுறுவண்ணம் பலருமறியத் திருமணம்புரிந்தே கொணர்துமென்பார், 'மணம்புரிந்தேகொடுவருதும்' என்றார். இணங்கினர் - முற்றெச்சம்.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (கூ)

கடல்விட முண்டிடு கடவு ளித்திற
நடைமுறை யருளலு நன்றெ னாமகிழ்ந்
தடியிணை வணங்கிநின் றன்பிற் போற்றியே
விடையது பெற்றனள் விமலை யேகினள்.

(இ-ள்.) கடலிற்றோன்றிய ஆலாகலவிடத்தையுண்டருளிய சிவபெருமான் இவ்வாறு நடக்கவேண்டிய முறைமையைக் கட்டளையிட்டருளலும், உமாதேவியார் நல்லதென்று மகிழ்வடைந்து (அவரது) திருவடிகளை வணங்கித் திருமுன்னே நின்று அன்போடு துதித்து விடைபெற்றுக்கொண்டு சென்றருளினர்.—எ-று.

அரி பிரமேந்திராதியரது துயர் தீர விடபானஞ்செய்து காத்தருளிய பெருமான் உமையம்மையாரது அபீஷ்டத்தையும் நிறைவேற்றுவ ரென்னுங் குறிப்பால், 'கடல்விடமுண்டிடுகடவுள்' என்றும், மேல் நடக்கவேண்டியவைகளை முறைப்படி கூறுதலின், 'இத்திற நடைமுறை யருளலும்' என்றும், அதற்கு அம்மையார் திருவு

ளமிசைந்தமையின், 'நன்றெனு மகிழ்ந்து' என்றும், அவ்விசைவுடன் விடைகொண்டு செல்லுங்கால், தொழுதுசெல்ல வேண்டுதலின், 'அடியிணை வணங்கிநின் றன்பிற் போற்றியே - விடையது பெற்றனள் விமலை யேகினுள்' என்றுங் கூறினர் அது-பகுதிப்பொருள்விகுதி. பெற்றனள் முற்றெச்சம். (௧0)

அல்லலு முவகையு மன்பு மெம்பிரா
னெல்லையி லருளுமா யீண்டி முன்செல
மெல்லிய லுமையவள் வெள்ளி வெற்பொரீஇ
வல்லையி னிமையமால் வரையிற் போயினள்.

(இ-ள்.) துன்பமும், மகிழ்ச்சியும், அன்பும் எமது சிவபெருமானது அளவற்ற திருவருளுமாகச் சேர்ந்து முற்பட்டுச்செல்ல, சிறந்த இலக்ஷணங்களையுடைய உமாதேவியார் திருக்கயிலாயத் திருமலையினின்று நீங்கி விரைவில் பெரிய இமைய மலைக்கு எழுந்தருளினர்.—எ-று.

சிவபெருமானைப் பிரிகின்றோ மென்று வருத்தமும், பின் சிவபெருமான் தம்மைத் திருமணம்புரிந்தருள்வதாகக் கூறியதைக் குறித்து மகிழ்வும், ஆண்டும் சிவார்ச்சனையே பலிக்கப்பெற்றமையின் அன்பும், தாம் அவ் வரையனிடத்துக் குழந்தை வடிவாகச் சேறல் உயிர்கண்மாட்டுவைத்த பெருங்கருணையாகலின் அருளுங் கொண்டு சென்றனென்பார், 'அல்லலு முவகையு மன்பு மெம்பிரா - னெல்லையி லருளுமா யீண்டி முன்செல' என்றுகூறினர். வரை-ஆகுபெயர். (௧௧)

வள்ளியன் கடகரி வடிவின் வீழ்தரு
துள்ளியம் பனிமழைச் சோனை சூழ்தலா
லெள்ளருந் தன்மைசே ரிமைய மால்வரை
வெள்ளியங் கிரியென விளங்கு கின்றதே.

(இ-ள்.) இந்திரனுடைய மதம் பொருந்திய வெள்ளையானையின் நிறத்தைப் போல வீழ்ந்துகொண்டிருக்கும் அழகிய துளிகளையுடைய பனிமழையென்னுஞ் சோனைமாரி சூழ்ந்துகொண்டிருத்தலால், இகழ்தற்கரிய பெருந்தன்மையையுடைய பெரிய இமையமலையானது அழகிய வெள்ளிமலையாகிய திருக்கயிலையைப்போன்று பிரகாசிக்கின்றது.—எ-று.

இந்திரனது ஐராவத மென்னும் யானை வெண்ணிறமுடைத்தாயிருத்தல் போலப் பனிமழை வெண்ணிற முற்று விளங்கலானும், அவை வீழுங்கால் அவ் யானைபோலத் தடித்த துளைகளாய் வீழ்தலானும், 'வள்ளியன்கடகரி வடிவின் வீழ்தரு-துள்ளியம் பனிமழைச் சோனை' என்றும், மற்றைப் பர்வதங்கள்போற் சிறப்பொழிந்திராமல் உமாதேவியா ரவதரிக்கத்தக்க பெருஞ்சிறப் பமைந்து விளங்கலின், 'எள்ளருந் தன்மைசே ரிமைய மால்வரை' என்றும், இமயவரை பொன்னுருவா யிருப்பினும் பனித்தடிப்பான் மறைக்கப்பட்டு வெண்ணிற முற்று வெள்ளிமலை போன்று விளங்கலின், 'வெள்ளியங் கிரியென விளங்குகின்றது' என்றுங் கூறினர். வள்ளியன் - இந்திரன். (௧௨)

எண்டகு மிமையமு மிமைய மேலுறு
கொண்டலு மொன்றியே குலவு காட்சிய
தெண்டிரை மிசையெழு நஞ்சுந் தீயநஞ்
சுண்டிடு மணிமிடற் றிறையு மொக்குமால்.

(இ-ள்.) (யாவரும்) மதிக்கத்தக்க இமையமலையும், அவ்விமையமலையின்மேற் பொருந்திய மேகமும் ஒன்றுபட்டு விளங்குந் தன்மை (எதுபோலுமெனின்,) தெள்

ளிய அலைகளையுடைய கடலிற் றோன்றிய விஷத்தையும், கொடிதாகிய அவ்விஷத்தை உண்டருளிய காளகண்டராகிய சிவபெருமானையு மொத்திருக்கும்.—எ-று.

இமையமலையின்மேல் மேகங்கள் படிந்திருத்தல்,பாற்கடலி னடுவில் ஆலாகலவிடந் தங்கியிருத்தல்போலவும், சிவபெருமான் தமது விபூதியணிந்த வெண்டிருமேனியில் விளங்க விடத்தைக் கண்டத்திலணிந்திருத்தல்போலவும் விளங்குமென்க.

நீலுறு மழைமுகி னிலவு மின்னொடு
மேலுற விளங்கிய விமைய வெற்பது
மாலவன் றிருவொடு மருவிக் கண்டுயில்
பாலுறு பன்னகப் பாயல் போன்றதே.

(இ-ள்.) நீலநிறம்பொருந்திய குளிர்ந்த மேகமானது விளங்குகின்ற மின்னலோடு தன்மேல் பொருந்த விளங்கப்பெற்ற இமையமலையானது, திருமாலானவர் திருமகளோடு பொருந்தி அறிதுயிலமர்கின்ற திருப்பாற்கடலிலுள்ள சேஷசயனத்தை யொத்துள்ளது.—எ-று.

இமைய வெற்பு திருப்பாற்கடலாகவும், அதன் சிகரம் சேஷசயனமாகவும், மேகம் திருமாலாகவும், அம் மேகத்திற் பொருந்தி விளங்கும் மின்னல் திருமாலது மார்பில் விளங்குந் திருமகளாகவும் உவமித்துக் கூறினர். (கச)

கரும்புய லார்த்துறு காட்சித் தாகியே
யிரும்பனி யிடையறு விமையப் பொன்வரை
சுரும்பின மிசையொடு துவன்றிச் சுற்றிட
வரும்பவி ழாதவெண் கமல மன்னதே.

(இ-ள்.) கரியமேகங்கள் குமுறியுலாவுகின்ற காட்சியினையுடையதாய்ப் பெரிய பனிக்கூட்டங்கள் நீங்காதிருக்கின்ற பொன்மயமாகிய இமையமலையானது, வண்டின் கூட்டங்கள் ரீங்காரம் பாடுதலுடனே நெருங்கிச் சூழ, இதழலராத வெண்டாமரைமலரை யொத்துள்ளது.—எ-று.

இமையவரையை வெண்டாமரை யரும்பாகவும், அதன்மேற் சூழ்ந்துள்ள கரிய மேகங்களை அவ்வரும்பைச் சூழும் வண்டுக ளாகவும், அம் மேக கர்ச்சனையை அவ் வண்டுகளின் ரீங்கார வோசையாகவும் உவமித்துக்கூறினமை காண்க. (கரு)

நீடிய மண்மக ணிதியின் குப்பையைப்
பாடுறு தண்ணிலாப் படாம தொன்றினான்
மூடினள் வைத்திடு முறைய தேயெனக்
கோடுயர் பனிகொள்பொற் குன்ற நின்றதே.

(இ-ள்.) நெடிய உலகமாதானவள் ஒரு பொற்குவியலைப் பெருமைபொருந்திய குளிர்ந்த சந்திரிகையை யொத்த ஒரு வெள்ளை வஸ்திரத்தினால் மூடிவைத்திருக்கின்ற தன்மையைப்போல உயர்ந்த சிகரங்களில் பனிக்கட்டிகளைக் கொண்டிருக்கின்ற இமையமலையானது நிலைபெற்றுள்ளது.—எ-று.

இமையவரை பொன்மலை யாதலால் அதனைப் பிறர் கவர்ந்து செல்வார்களென்று கருதி நிலமகள் அது யாவருக்குந் தெரியாவண்ணம் ஓர் வெள்ளை வஸ்திரத்தால் மூடிவைத்தாற்போன்று பனிச்சோனையால் சூழப்பட்டிருந்ததென்பது கருத்து.

பொன்னெடுங் கிரியென வீண்டும் புங்கவர்
துன்னினர் சூழ்வதொன் றுன்னித் தொன்மனு

வன்னதை மறைத்தன னிரதத் தாவியா
லென்னவு நின்றதா லிமையப் பொன்வரை.

(இ-ள்.) பொன்மயமாகிய நெடிய மகமேருமலையென்று இவ்விடத்திலுந் தேவர்கள் நெருங்கிச் சூழ்வார்களென்று கருதி, சுவாயம்பு மனுவானவர் இரசப்புகையினால் அப்பொன்னொளியை மறைத்துவைத்த தன்மையைப்போன்றும் நிலைபெற்றுள்ளது; பொன்மயமாகிய அவ்விமையமலை.—எ-று.

தேவர்கள் விரும்பியுறையு மேருமலைபோன் றிருப்பின், இங்கும் தேவர்களடைதற் கேதுவாயிருக்கும், அவ்வா றடையின் ஓர்கால் அவர்கண் மாற்றாராகிய அசுரர்களாற் றீங்குநேருமெனக்கருதி அம்மலைக்குத் தலைவனாகிய மனுவினால் இரசப்புகை யூட்டிவைத்தாற் போன்று பனி மூடி யிருந்ததென்க. தொன்மனு-சுவாயம்பு மனு.

குடகடல் குணகடல் கூடு றுவகை
யிடையொரு வாலிதா மேன மெய்தியே
தடைபுரி சிறப்பென விமையத் தாழ்வரை
நெடுநில வளவையு நிமிர்ந்து போயதே.

(இ-ள்.) மேற்றிசைக்கடலுங் கீழ்த்திசைக்கடலும் ஒருங்குசேராவண்ணம் நடுவில் ஒரு சுவேதவராகந் தோன்றித் தடைசெய்த சிறப்பினைப்போலத் தாழ்வரையினையுடைய இமையமலையானது நீண்ட பூமியின் (கீழ்மேல்) எல்லையளவும் நீண்டு சென்றுள்ளது.—எ-று.

முன்னம் பிரளயவெள்ளத்து மூழ்கிய பூமியைத் திருமால் சுவேதவராகரூபங்கொண்டு தாங்கிக் காத்தமைபோல, மேற்கடலுங் கீழ்க்கடலுங் கூடாவண்ணம் பனிப்படலத்தான் மூடப்பட்ட வெள்ளிய இமையமலை நடுவி னின்று தடுத்ததென்க. (கஅ)

விண்ணவர் ததிக்கடல் கடைந்த வெண்ணெயு
ளண்ணலம் பாற்கட லமுதம் வைத்தெனக்
கண்ணகன் பெரும்பனி கவைஇய வெற்பின்மே
லுண்ணிறை புனற்றட மொன்று வைகிற்றே.

(இ-ள்.) தேவர்கள் தயிர்க்கடலைக் கடைந்தெடுத்த வெண்ணெயின் நடுவில் பெருமைபொருந்திய அழகிய திருப்பாற்கடலிற்றோன்றிய அமுதத்தை வைத்தாற்போல, மிகுதியாகப் பெரும்பனிகள் சூழப்பெற்ற அவ் விமையமலையின்மேல் உள்ளே நிறைந்துள்ள நீரோடுகூடிய தடாகமொன்று பொருந்தியுள்ளது.—எ-று.

தயிர்க்கடலிற் கடைந்தெடுத்த வெண்ணெயின் நடுவில் பாற்கடலிற் கடைந்தெடுத்த அமுதத்தைவைத்தாற்போல இமையமலையின் சிகரத்தில் ஒரு தடாகமிருந்ததென்க. இமையவெற்பு வெண்ணெயாகவும், அதன்மீதுள்ள தடாகம் அமுதமாகவும் உவமித்துக் கூறினமைகாண்க. இத்தடாகத்தின்பெயரைப் பதுமை யென்று கூறுவர். (கக)

அன்னதோர் தடத்திடை யசல மன்னவன்
மன்னிய கௌரிதன் மகண்மை யாகவுந்
தன்னிக ரிலாவரன் றனக்கு நல்கவு
முன்னுற வருந்தவ முயன்று வைகினன்.

(இ-ள்.) அத்தன்மையாகிய தடாகத்தில் பருவதராஜனானவன், நிலைபெற்ற உமாதேவியார் தனது புத்திரியாராகவும், (அவ்வம்மையாரை) சமானரகிதராகிய சிவ

பெருமானுக்குத் திருமணஞ் செய்துகொடுக்கவும் (வேண்டுமென்று சங்கற்பஞ் செய்துகொண்டு) முன்னமே அரிய தவத்தைச் செய்துகொண்டிருந்தான்.—எ-று.

சித்தி முத்திகளை வேண்டித் தவம்புரிதலியற்கை. அங்ஙனமின்றி உமா தேவியார் தனக்குப் புத்திரியாகவர விரும்பிப் பெருந்தவம்புரிந்தமையின், 'முன்னுற வருந்தவமுயன்றுவைகினன்' என்றுகூறினர். அசலம் - மலை. இலாத - என்பது ஈறு கெட்டது. (உ0)

மெய்த்தவ மியற்றிய வெற்பன் காணிய
வத்தட மலருமோ ரரவிந் தத்தின்மேற்
பைத்ததோர் குழவியின் படிவத் துற்றன
ளெத்திறத் துயிரையு மீன்ற தொன்மையாள்.

(இ-ள்.) மெய்ம்மையாகிய தவத்தைச் செய்துகொண்டிருந்த பர்வதராஜன் காணும்வண்ணம் அத்தடாகத்தில் மலர்ந்துள்ள ஒரு தாமரைமலரின்மீது சகல ஜீவ கோடிகளையும் ஈன்றருளிய புராதனியாகிய உமாதேவியார் பசிய இளங்குழந்தை வடிவத்துடனெழுந்தருளியிருந்தனர்.—எ-று.

இடையூறற்றுக்கெடாததவமாகலின், 'மெய்த்தவம்,' என்றும், இளங்குழந்தை வடிவாயமர்தலின், 'பைத்ததோர் குழவியின் படிவத்துற்றனள்' என்றும், அக்குழந்தை வடிவாயமர்ந்தவள் எல்லாவுயிர்களையு மீன்றருளிய உலக மாதாவாயுள்ள சிவசத்தியேயாகலின், 'எத்திறத்துயிரையு மீன்றதொன்மையாள்' என்றுங் கூறினர்.

வேறு.

ஆங்கவட் கண்டு வெற்ப னடியனேன் பொருட்டா லம்மை
நீங்கினள் போலு முக்க ணிருமலன் றன்னை யென்ன
வேங்கினன் றனது நோன்புக் கிரங்கின ளிவைக ளீச
னேங்குபே ரருளே யென்னு வுவகையங் கடலுட் பட்டான்.

(இ-ள்.) பர்வதராஜன் அவ்வா றெழுந்தருளிய அம்மையாரை நோக்கி அடியேன் பொருட்டு உலகன்னையாகிய உமாதேவியார் மூன்றுகண்களையுடைய மலரகிதராகிய சிவபெருமானைவிட்டு நீங்கியருளினர்போலு மென்று பெருமூச்சுவிட்டு, தான் செய்ததவத்திற்குஇரக்கங்கொண்டவனாய் இவையனைத்துஞ் சிவபெருமானது சிறந்த திருவருளேயாகுமென்று கருதினவனாய்ப் பேரானந்தக்கடலுள் மூழ்கினன்.—எ-று.

நீரிற்றண்மைபோன்று சிவபெருமானோடமர்ந்து விளங்குஞ் சிற்சத்தியார் நமது தவத்திற்கிரங்கி யெழுந்தருளினர்போலு மென்றஞ்சினனென்பார், 'ஏங்கினன்' என்றும், தனது தவவுயர்ச்சியைக்கருதி யிரங்கினனென்பார், 'தனது நோன்புக்கிரங்கினன்' என்றும், இவை பெருமான் றிருவருளேயென்றுணர்ந்து பின்னர் மகிழ்கூர்ந்தனனென்பார், 'இவைகளீச னேங்கு பேரருளே யென்னு வுவகையங்கடலுட்பட்டான்' என்றுங்கூறினர். (உஉ)

கண்ணுறு போத வாரி கான்றிட வுரோம ராசி
யுண்ணிக ழன்பு மிக்குப் புறந்தனி லொழுகிற் றென்ன
வண்ணன்மெய் பொடிப்பத் துள்ளி யடியனே னுய்ந்தே னென்னாத்
துண்ணெனப் பாடி யாடி யமலையைத் தொழுது நின்றான்.

(இ-ள்.) உள்ளத்தில் தோன்றிய அன்பானது அதிகரித்து புறத்திலொழுகிய தன்மையைப்போல கண்களினின்றும் ஆனந்தபாஷ்பஞ் சிந்த, உரோமவரிசைகள் பர்வதராஜனுடையதேகத்தி லரும்பத்துடித்து அடியேன் பிழைத்தேனென்று விரைவாகத் துதித்து ஆனந்தக்கூத்தாடி உமாதேவியாரை வணங்கி நின்றனன்.—எ-று.

மெய்யன்பாற் பரவுவார்க்கு ஆனந்தக்கண்ணீர் வார்தலும், மயிர்க்கூச்செறிதல் முதலியன தோன்றலுமுண்மையால், 'கண்ணுறு போத வாரி கான்றிட' என்றும், 'உரோமராசி அண்ணன்மெய் பொடிப்ப' என்றுங்கூறினர். இதனை:—"நெக்குநெக்குள் ளுருகியுருகி நின்றுமிருந்துங் கிடந்துமெழுந்து - நக்குமழுதுந் தொழுதும் வாழ்த்தி நானாவிதத்தாற் கூத்துநவிற்றிச்- செக்கர்போலுந் திருமேனி திகழநோக்கிச் சிலிர்த்துச்சிலிர்த்துப் - புக்குநிற்ப தென்றுகொல்லோவென் பொல்லாமணியைப் புணர்ந்தே" என்னுந் திருவாசகத் திருமுறையானு முணர்க. (உ௫)

பங்கயத் தவிசின் வைகும் பராபரை தனைத்த ணாது
செங்கையி னெடுத்து வல்லே சென்னிமேற் றாங்கி யேகித்
துங்கநல் லிமையத் தண்ண றொன்முறை யிருக்கை புக்கு
மங்கல மேனை யென்னு மனைவிகைக் கொடுத்தான் மாதோ.

(இ-ள்.) உயர்வுபொருந்திய சிறந்த பர்வதராஜன் தாமரைமலராகிய ஆசனத்தி லெழுந்தருளியிருக்கின்ற உமாதேவியாரைத் தனது அழகிய கைகளா லெடுத்து உச்சியில் தாங்கிச்சென்று பழைய முறைமைப்படியே தனது மாளிகையையடைந்து மங்கலகரம்பொருந்திய மேனை யென்னும் பெயரையுடைய மனைவியினது கையிற் கொடுத்தனன்—எ-று.

செங்கை - செந்தாமரை மலர்போலுங் கை என்பது குறிப்பு. உமாதேவியாரவதரித்தருளும் மேன்மை வாய்ந்தமையின் 'துங்கநல்லிமையம்' என்றும், உலகமாதாவையே அரும்புதல்வியாகப் பெற்றவளாகலின், 'மங்கலமேனை' என்றுங்கூறினர்.

கொடுத்தலுந் தொழுது வாங்கிக் கொற்றவ விவணின் பாங்க
ரடுத்ததங் கெவனோ வென்ன வரசனு நிகழ்ந்த வெல்லா
மெடுத்துரை செய்யக் கேளா வீசன தருளோ வென்னா
வடுத்தவிர் கற்பின் மேனை மனமுற மகிழ்ச்சி கொண்டாள்.

(இ-ள்.) அவ்வாறு கொடுக்கவும், அவள் வணங்கி வாங்கிக்கொண்டு, தலைவரோ! இக்குழந்தை தேவரீரிடத்து எவ்வாறு கிடைத்தது என்று கேட்டலும், பர்வதராசன் நடந்த சங்கதிகளனைத்தையு மெடுத்துச்சொல்லினன்; அதனைக்கேட்ட குற்றமற்ற கற்பினையுடைய மேனையானவள் இது சிவபெருமான்றிருவருளோவென்றுகூறி மனமகிழ்வுகொண்டனள்.—எ-று.

குழந்தையாகவந்தவள் சிவசத்தியென்று மேனைதெரிந்தவளாகலின், 'தொழுது வாங்கி' என்றும், இவ்வம்மையா ரெழுந்தருளினமை யிவ்வாறென் றுணராதவளாகலின், 'இவணின்பாங்கரடுத்ததங்கெவனோவென்ன' என்றும், பின்னதனைக் கேட்டுணர்ந்து சிவ்பெருமான்றிருவருளென்று கருதி நாமிவ்வம்மையாரைப் பெறுதுபெற்றோமென்று மகிழ்கூர்ந்தனளாகலின், 'எடுத்துரை செய்யக்கேளா வீசனதருளோவென்னா - வடுத்தவிர் கற்பின்மேனை மனமுறமகிழ்ச்சி கொண்டாள்' என்றுங் கூறினர். (உ௬)

சுரந்தன கொங்கை பாலுந் துண்ணென வொழுகிற் றெங்கும்
பரந்தன பொட்டிப்பின் போர்வை பரைதன தருளே யுள்ள
நிரந்தன கவலை யாவு நீங்கின பவமுன் னுள்ள
கரந்தன விமையத் தண்ணல் காதலி தனக்கு மாதோ.

(இ-ள்.) பர்வதராஜபத்தினியாகிய மேனாதேவிக்குக் கொங்கைகளிற் பால் சுரந்து விரைந்தொழுகியது. உடல்முழுதும் புளகாங்கித முண்டாயின. உள்ளத்தில் உமாதேவியாரது திருவருள் நிறைந்தன. மனக்கவலையனைத்து மொழிந்தன. பூர்வ கன்மங்களனைத்து நீங்கின.—எ-று.

உமாதேவியாரைப் புத்திரியாகக் கோடலால், ஊட்டுதற்குப்பாலும், சிவசத்தியைப் பெற்றோமென்று புளகமும், உள்ளத்தில் அச்சிற்பாரயினருளும், அதனாற்கவலை நீக்கமும், பழவினை நீக்கமும் பெற்றனளென்க. மாது - ஓ - அசைநிலை. ()

பரிபுரந் தண்டை யம்பொற் பாடகம் பாத சாலம்
விரவிய தொடியே சங்கு வியன்மணிச் சுட்டி யார
மரிகெழு மதாணி பொற்றோ டங்கதம் பிறவுஞ் சாத்தி
வரையுறழ் தனப்பா லார்த்தி வரம்பெறு காப்பு நேர்ந்தாள்.

(இ-ள்.) காற்சிலம்பும், தண்டையும், பொன்னாலாகிய பாடகமும், பாதசரமும், நெருங்கிய கடகமும், வளையலும், பெரிய இரத்தினச்சுட்டியும், முத்துமாலையும், மரகதமிழைத்த மார்பணியும், சுவர்னகுண்டலமும், தோள்வளையும், மற்றுள்ள ஆபரணங்களு மணிந்து, மலைபோன்ற ஸ்தனங்களிலுள்ள பாலை யூட்டிச் சிரேஷ்டம் பொருந்திய திருநீற்றுக்காப்பு முதலியவற்றை யணிந்தனள்.—எ-று.

பாதசாலம்-பாதசரம். அரிகெழுமதாணி - மரகதம்பதித்தமார்பின்பதக்கம். வரம் - சிரேஷ்டம். (உஎ)

வனைதரு பவளங் காலா வயிரமே மருங்கிற் கோலாப்
புனையிரும் பலகை நீலாப் புரிந்தபொற் றொட்டின் மேலா
வனையவ டன்னை யுய்த்து மங்கையிற் கொண்டுந் தன்கோன்
மனமகிழ் திறனாற் போற்றி மதியென வளர்க்க லுற்றாள்.

(இ-ள்.) அலங்கரிக்கப்பட்ட பவளங்களே கால்களாகவும், வயிரங்களே பக்கச்சட்டங்களாகவும், சித்திரத்தொழிலமைந்த நீலரத்தினமே பலகையாகவுஞ் செய்யப்பட்ட பொன்தொட்டிலின்மேல் அவ்வுமாதேவியாரைக் கிடத்தியும், அழகிய கைகளிற் றாங்கியும், தனது நாயகன் மனமகிழும்வண்ணம் பாதுகாப்புடன் சுக்கிலபக்ஷத்துச் சந்திரனைப்போல வளர்த்துவந்தனள்.—எ-று.

சுக்கிலபக்ஷத்துச் சந்திரன் நாளுக்குநாள் கலைவளர்வதுபோல அம்மையாரை நாளுக்குநாள் சிறப்பாகப் பாதுகாத்து வளர்க்கின்றமையின், 'தங்கோன் மனமகிழ்திறனாற்போற்றி மதியென வளர்க்க லுற்றாள்' என்று கூறினார். (உஅ)

மன்னுயிர் புவன மேனை மற்றுள பொருளுக் கெல்லா
மன்னையா யுதவி நாளு மவற்றினை வளர்த்து நிற்பா
டன்னையும் வளர்ப்பா ருண்டோ வளர்ந்தது சழக்கே யந்தக்
கன்னிதன் னருளி னீர்மை காட்டினள் போலு மன்றே.

(இ-ள்.) நிலைபெற்ற ஆன்மாக்களையும், உலகங்களையும், மற்றுள்ள எல்லாப்பொருள்களையும் தாயாக நின்று பெற்றுச் சதாகாலமும் அப்பொருள்களை வளர்த்து நிற்கின்ற உமாதேவியாரையும் வளர்ப்பவர்க ளொருவருளரோ? அவ்வாறு வளர்ந்தனவொன்றுரைப்பது வீணேயாம். அவ் வுமாதேவியார் தமது திருவருட்டன்மையைத் தெரிவித்தனர்போலும்.—எ-று.

எல்லா வுயிர்களையுமீன்று அருள்கூர்ந்து வளர்த்தருளும் உமாதேவியார், மேனைவளர்க்க வளர்ந்தருளுதல் அவர்கள் விருப்பங்காரணமாகவேயன்றி வேறன்றென்பார், 'வளர்ந்தது சழக்கே' என்றும், அது அவர்கள்மீது வைத்துள்ள அருளின் தன்மையைப்பலரறிய வெளிப்படுத்தியதே யென்பார், 'அந்தக்கன்னி தன்னருளினீர்மைகாட்டினள் போலுமன்றே' என்றுங் கூறினார். (உகூ)

இந்தவா றினையர் பாலா யெம்பெரு மாட்டி வைகி
யைந்தியாண் டகன்ற பின்றை யயன்முதற் றேவர் யார்க்குந்
தந்தையா ரருளை யுன்னித் தவமினிப் புரிவ னென்னாச்
சிந்தியா விமையத் தோங்கற் செம்மலுக் குரைக்க லுற்றாள்.

(இ-ள்.) எமது பெருமாட்டியாகிய உமாதேவியார் இவ்வாறு இவர்களிடத்திருந்து ஐந்துவருடங் கழிந்தபின்பு, பிரமன் முதலிய தேவர்களனைவருக்கும் பிதாவாகவுள்ள சிவபெருமானது திருவருளைச் சிந்தித்து இனித் தவஞ்செய்வேனென்று தமக்குள் கருதினவராய்ப் பர்வதராஜனைநோக்கி யருளிச்செய்வார்.—எ-று.

"இளஞ்சிறு குழவியா யெய்திமற்றவ-னுளங்களிகூர வாண்டோரைந் தின்றுணை - வளர்ந்தனை புரிதிமேன் மாசின்மாதவம்" என்பது சிவபெருமானது கட்டளையாகலான், 'அயன்முதற் றேவர்யார்க்குந் தந்தையா ரருளையுன்னி' என்று கூறினர் (௯௰)

நாற்பெருந் தடந்தோ ளண்ண லைத்தக வரைந்து கொள்வா
னேற்பன லினைய வெற்பி னுவலரு மொருசார் வைப்பி
னேற்பதோர் கன்னி மாரோ டெனைவிடுத் தருண்மோ வென்னாப்
பார்ப்பதி யியம்ப லோடும் பனிவரை யரசன் சொல்வான்.

(இ-ள்.) பெரிய நான்கு திருத்தோள்களையுடைய சிவபெருமான் சிறப்போடு திருமணஞ் செய்துகொள்ளும்பொருட்டுத் தவஞ்செய்கின்றேன்; (ஆதலால்) இம்மலையில் சொல்லுதற்கரிய ஓரிடத்தில் தகுதியாகிய தோழியர்களோடு என்னை யனுப்புவீராகவென்று உமாதேவியார் கூறியருளவும் பர்வதராஜன் கூறுவான்.

எமது தவத்திற் கிசைந்தபடியொழுகி யேவற்பணிபுரியும் சிறுமியர்களென்பார், 'எற்பதோற் கன்னிமார்' என்று கூறினர். (௯௧)

அன்னைகே ளெம்மி னீங்கி யருந்தவ மாற்றற் கொத்த
தின்னதோர் பருவ மன்று வியாண்டுமோ ரைந்தே சென்ற
நின்னுடல் பொறுதா லீண்டிந் நிலைமையைத் தவிர்தி யென்னக்
கன்னிகை நகைத்துக் கேண்மோ விஃதெனக் கழற லுற்றாள்.

(இ-ள்.) தாயே! கேட்பாயாக, நீ எங்களை விட்டுப் பிரிந்து அரிய தவஞ்செய்தற்குத் தக்க பருவ மிதுவன்று. வயதும் ஐந்துதான் ஆயிற்று. (தவஞ்செய்தற்கு) நினது திருமேனி தாங்காது. (ஆதலால்) இப்பொழுது இத்தவஞ்செய்தலினின்று நீங்குவாயாகவென்று பர்வதராஜன் கூறவும், பார்வதிதேவியார் நகைத்து இதனைக் கேட்பாயாக வென்று கூறியருளுவார்.—எ-று.

ஐந்துவயதாகிய குழந்தைப்பருவ மென்பார், 'இன்னதோர் பருவ மன்று வியாண்டுமோ ரைந்தே சென்ற' என்றும், தேகத்தில் வலிவிருப்பின் தவவுறுதி கைகூடும், அங்ஙனமின்றி இளந்திருமேனி யென்பார், 'நின்னுடல் பொறுது' என்றும், அத்தவத்தினைப் பின்னர் செய்துகொள்ளலாமென்பார், 'ஈண்டிந் நிலைமையைத் தவிர்தி' என்றும், பார்வதியார் நம்மை யிவ்வரசன் ஓர் சாமானிய விளங்குழவியாகவே மதித்துக் கூறினனென்று நகைத்தனரென்பார், 'கன்னிகைநகைத்து' என்றுங் கூறினர். (௯௨)

ஈசனே காப்ப னல்லால் யாரையும் பிறராற் றம்மா
லாசறப் போற்ற லாகா ததுதுணி வாகு மீண்டுப்

பேசிய திறனு மன்னோன் பேரருண் மறுதி யென்ன
நேசமோ டியைந்திட் டன்னை நினைந்தநோன் பியற்று கென்றான்.

(இ-ள்.) சிவபெருமான் காத்தருளுவரேயல்லாமல் எவர்களையும் பிறராலாயினுந் தன்னாலாயினும் குற்றமறக் காத்துக்கொள்ளுதல் முடியாது; அது நிச்சயமே; இப்பொழுது பேசிய காரியங்களும் அந்தச் சிவபெருமானது மிக்க திருவருளேயாகும், (ஆதலால், தவஞ்செய்தற்குத்) தடைசொல்லவேண்டாம் என்று கூறியருள, பர்வதராஜன் அன்புடன் சம்மதித்து, தாயே! நீ சிந்தித்த தவத்தைச் செய்வாயாகவென்று கூறினான்.—எ-று.

சிவபெருமான் பேரருளுடையராகலான் அவரே யாவரையுங் காத்தருள்வரன்றிப் பிறரால் கூடாதென்பார், 'ஈசனே காப்பனல்லால் யாரையும் பிறராற் றமா - லாசறப் போற்ற லாகா ததுதுணி வாகும்' என்றும், யான் கூறியது சிவபெருமான் கட்டளையே யென்பார், 'ஈண்டுப் பேசியதிறனு மன்னோன் பேரருள்' என்றும், இதனைத் தடுப்பின் சிவாபராதமாய் முடியுமென்று கூறினரென்பார், 'மறுதி' என்றுங்கூறினர். (ருரு)

மன்னனு மியைந்து பின்னர் மால்வரை யொருசார் தன்னி
லன்னமென் னடையி னாளுக் கருந்தவச் சாலை யாற்றித்
தன்னுறு கிளைஞர் தம்பாற் றவத்தினால் வந்த பான்மைக்
கன்னியர் பலரைக் கூவிக் கௌரிபா லாகச் செய்தான்.

(இ-ள்.) இவ்வாறு பர்வதராஜன் சம்மதித்துப் பின்பு பெரிய இமையமலையினொருபக்கத்தில் அன்னம்போலும் நடையினையுடைய பார்வதிதேவியாருக்கு அரிய தவச்சாலையை யமைத்து, தனது உறவினரிடத்தில் தவத்தால் வந்து பிறந்துள்ள நற்குணமமைந்த பல கன்னியர்களை யழைத்துப் பார்வதிதேவியாருடன் இருக்கச்செய்தனன்.—எ-று.

மேல் உமாதேவியார் 'எற்பதோர் கன்னி மாரோ டெனைவிடுத் தருள்' எனக் கூறியதற்கேற்பப் பர்வதராஜனும் தம்முறவினர்க்குள்ளே தன்னைப்போலத் தவஞ்செய்து பெற்றெடுத்த கன்னியரைத் துணைசேர்த்தனுப்பினனென்க. (ருசு)

நீலுறு மணிதோய் மேனி நிமலையங் கிமையத் துச்சி
மேலுறு மரசன் றேவி விடையினான் மடவார் பல்லோர்
பாலுறு பணியிற் சூழப் பரமனை யுன்னி யந்தச்
சாலையை யடைந்து மிக்க தவத்தினை யிழைக்க லுற்றாள்.

(இ-ள்.) நீலரத்தினம்போலுந் திருமேனியினை யுடைய பார்வதிதேவியார் இமையமலையின்மேல் வசிக்கின்ற மேனாதேவியின் கட்டளையினால் அநேகம்பெண்கள் அருகில் ஏவற்பெண்களாகச் சூழ்ந்துவரச் சிவபெருமானைச் சிந்தித்து அந்தத் தவச்சாலையை யடைந்து சிறந்த தவத்தைச் செய்யத்தொடங்கினார்.—எ-று.

நீலரத்தினத்தை நவரத்தினங்கள் சூழ்ந்திருத்தல் போல, கௌரநிறம் பொருந்திய உமாதேவியாரைப் பல கன்னிப்பெண்கள் சூழ்ந்திருந்தனரென்பது கருத்து.

தங்கிய வைக றோறுந் தாதையுந் தாவில் கற்பின்
மங்கையும் போற்றி யேக மாதுநோற் றிருந்தா ளிப்பா
லங்கவட் பிரிந்த பின்றை யரும்பெருங் கயிலை மேய
வெங்கடம் பெருமான் செய்த பரிசினை யியம்ப லுற்றேன்.

(இ-ள்.) உமாதேவியார் தவஞ்செய்யத்தொடங்கிய நாள்களிலெல்லாம் தினந்தோறுந் தந்தையாகிய பர்வதராஜனும் கெடாத கற்பினையுடைய மேனாதேவியும் வந்து பாதுகாத்துச்செல்ல உமாதேவியார் தவஞ்செய்துகொண்டிருந்தனர். இப்பால், அவ்வுமாதேவியார் தம்மைவிட்டு நீங்கியபின்பு அருமையாகிய பெரிய திருக்கைலாயத்தி லெழுந்தருளிய எமது சிவபெருமான்செய்தருளியதன்மையைச் சொல்லத்தொடங்குகின்றேன்.—எ-று.

சிவசத்தியே நம்பால் குழந்தையுருவாக வந்தருளினளென் றுணர்ந்தவர்களாதலால், தாய்தந்தையர்கள் பிரிவாற்றாமையால் நாள்தோறும் வந்து போற்றிச் செல்வரென வறிக. (கூகூ)

**பார்ப்பதிப்படல முற்றிற்று.**

ஆ. திருவிருத்தம்-சுசo.

உ

முருகன் றுணை.

# மேருப்படலம்.

பன்னருஞ் சிறப்பின் மிக்க பனிவரை யரசன் றன்பாற்
கன்னியம் புதல்வி யாகிக் கௌரிநோற் றிருந்த காலைத்
துன்னிய வவுணர் சூழச் சூரபன் மாவாம் வெய்யோ
னிந்நில வரைப்பி னண்டத் திறைவனே யாகி யுற்றான்.

(இ-ள்.) சொல்லுதற்கரிய சிறப்புமிக்க பர்வதராஜனிடத்து உமாதேவியார் இளம்புதல்வியாக வெழுந்தருளித் தவஞ்செய்துகொண்டிருந்தபொழுது, நெருங்கிய அசுரர்கள் சூழும்படி சூரபதுமனென்னுங் கொடியவன் இந் நிலவுலகத்தில் (ஆயிரத்தெட்டு) அண்டங்களுக்கு அரசனாயிருந்தான்.—எ-று.

சிவசத்தியைப் புத்திரியாகவுஞ் சிவபெருமானை மருகனாகவும் பெற்ற சிறப்பினனென்பார், 'பன்னருஞ் சிறப்பின் மிக்க பனிவரை யரசன்' என்றும், சூரபதுமன், ஆயிரத்தெட்டண்டங்களுக்கு மதிபனாயிருந்தும் இந்நிலவுலகத்திலேயே யரசு செய்தன னென்பார், 'சூரபன்மாவாம் வெய்யோ னிந்நில வரைப்பி னண்டத் திறைவனே யாகி யுற்றான்' என்றுங் கூறினார். (க)

மற்றது போழ்திற் றொல்லை மறைப்பொருள் வடத்தின் பாங்கர்ப்
பெற்றிடு சனக னாதி முனிவரர் பின்னும் பன்னா
ளற்றமி றவஞ்செய் தெந்தை யருளினாற் கயிலை நண்ணி
முற்றுணர் நந்தி போற்று முதனிலை வாயில் புக்கார்.

(இ-ள்.) அக்காலத்தில் புராதனமாகிய வேதப்பொருளைக் கல்லாலவிருக்ஷ நீழலில் (சிவபெருமானிடத்து) உபதேசமாகப் பெற்ற சனகர் முதலிய முனிசிரேஷ்டர்கள் பின்னும் அநேககாலம் அழியாத தவத்தைச்செய்து எமது முதல்வராகிய சிவபெருமானது திருவருளினால் திருக்கயிலையை யடைந்து சர்வஞ்ஞராகிய திருநந்திதேவரால் காக்கப்பட்ட முதற்றிருவாயிலை யடைந்தார்கள்.—எ-று.

திருநந்திதேவர் சிவாமிசராக வெழுந்தருளியுள்ளவ ராகலின், 'முற்றுணர் நந்தி' என்று கூறினார். (உ)

நோன்மையின் முனிவ ரானோர் நுவலருங் காட்சி நந்தி
கான்முறை வணங்கி நிற்ப வனையவன் கருணை தன்னால்
வான்மலி கடவுட் கோயின் மந்திரங் கொண்டு செல்ல
நான்முகன் முதலோர்க் கெய்தா ஞானநா யகனைக் கண்டார்.

(இ-ள்.) தவவல்லமையையுடைய சனகாதிமுனிவர்கள் சொல்லுதற்கரிய தோற்றத்தினையுடைய திருநந்திதேவரது திருவடிகளை முறைப்படி வணங்கி நிற்க, அத் திருநந்திதேவர் கருணையினால் ஆகாயத்தையளாவிய திருக்கோயிலிற் கழைத்துக் கொண்டு செல்ல, பிரமன் முதலியவர்களா லடைதற்கரிய சிவபெருமானைத் தரிசித்தார்கள்.—எ-று.

சிவபோதத்தடிப்பினையுடைய பிரமனாதியர்க் கரியவ னென்பதும், சிவபோதச் சிறப்பினையுடைய மெய்யன்பர்கட் கெளியவ னென்பதுந் தோன்ற, 'நான்முகன் முதலோர்க் கெய்தா ஞானநா யகனைக் கண்டார்' என்று கூறினார். இதனை:—"அரியயனுக் கரியானை யடியவருக் கெளியானை - விரிபுனல்சூழ் திருவதிகை வீரட்டானத்தமுதைத் - தெரிவரிய பெருந்தன்மைத் திருநாவுக் கரசு மனம் - பரிவுறுசெந் தமிழ்ப்பாட்டுப் பலபாடிப் பணிசெயுநாள்." என்னுந் திருத்தொண்டர் புராணத்தானுமுணர்க. (௩)

மொழியது தவறல் செல்ல முற்றுடல் பொடிப்புக் கொள்ள
விழிபுனல் பெருகத் தீசேர் மெழுகென வுள்ளம் விள்ள
வழகிய மறைக்கு மெட்டா வாதிநா யகனை நோக்கித்
தொழுதன ருவகை பூத்துத் துள்ளினர் துளக்க முற்றார்.

(இ-ள்.) வார்த்தைகள் தமொறவும், தேகமுழுதும் மயிர்க்கூச்செறியவும், கண்களில் ஆனந்தபாஷ்பந் ததும்பவும், தழலிலிட்ட மெழுகைப்போல வுள்ளமுருகவும், அழகிய வேதங்களாலு மெட்டுதற்கரிய முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானைத்தரிசித்து வணங்கினவர்களாய் மனக்களிப்புற்று ஆனந்தக் கூத்தாடி மெய்நடுக்கமுற்றார்கள்.—எ-று.

'அழகிய மறைக்கு மெட்டா வாதிநாயகன்' என்பதனை :—"அல்லை யீதல்லை யீதென மறைகளு மன்மைச்-சொல்லி னுற்றுதித் திளைக்குமிச் சுந்தரன்"எனவும், "பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ள மதியின் - பேதங்க ளல்ல வியைவன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்-வேதங் கிடந்து தமொறும் வஞ்ச வெளியென்ப கூடன் மறுகிற்-பாதங்க ளேவ வளையிந்த னுதி பகர்வானை யாயு மவரோ" எனவும் வருந் திருவிளையாடற்புராணத்தானு முணர்க. (௪)

மண்ணவ ரமரர் யாரைவணங்கினு மவைக ளெல்லா
நண்ணிய பரமன் றாளி னற்பெருந் தவத்தி னோருந்
தண்ணளி நெறியிற் பல்காற் றாழ்ந்தன ரெழுந்து நின்று
பண்ணிசை மறைக டம்மாற் றுதித்திவை பகர்த லுற்றார்.

(இ-ள்.) நிலவுலகத்துள்ளவர் எந்தத்தேவர்களை வணங்கினாலும் அவ்வணக்கமனைத்தும்போய்ப் பொருந்தப்பெற்ற சிவபெருமானது திருவடிகளில், பெருந்தவத்தினையுடைய சனகாதி நான்கு முனிவர்களும், சிறந்த அன்பின் வழியாய்ப்பல முறை வணங்கியெழுந்து திருமுன்னின்று இரட்டைமுதலிய உச்சரிப்பிலக்கணங்களோடு ஓதத்தக்க வேதங்களால் துதித்துப் பின்வருவனவற்றை விண்ணப்பஞ்செய்கின்றார்கள்.—எ-று.

யாவர் எக்கடவுளரை வழிபடினும் அவ் வழிபாட்டைச் சிவபெருமானேற்றுச் சித்திமுத்திகளைத் தந்தருள்வ னென்பார், 'மண்ணவ ரமரர் யாரை வணங்கினு மவைக ளெல்லா நண்ணிய பரமன்' என்று கூறினர். இதனை.— "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே - மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய்வங்கள் - வேதனை படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு - மாதலா லவையிலாதா னறிந்தருள் செய்வ னன்றே" என்னுஞ் சிவஞானசித்தியாரானும், "அறிவு போலடர்ந் தெழுமறி யாமையின் வலியாற் - பொறியி லானிது ளெப்பவும் வெகுண்டிலன் புனிதன் - மறுவில் கூற்றெலாந் தன்பெய ரெனுமறை வழக்கால் - வெறிமலர்க்குழ லுமையொடு மகிழ்ந்துவீற் றிருந்தான்" என்னுங் காஞ்சிப் புராணத்தானு முணர்க. (௫)

இருட்பெருங் கடலுள் யாமத் தெறிமருத் திடைப்பட் டாங்குப்
பொருட்பெருங் கடலாம் வேதம் புடைதொறு மலைப்ப விந்நா
ளருட்பெருங் கடலே யெய்த்தே மமைந்தில துணர்வி யாங்கண்
டிருட்பெருங் கடலி னீங்கும் வண்ணமொன் றருடி யென்றார்.

(இ-ள்.) சிறந்த அருட்கடலாயுள்ள எம்பெருமானே! அடியேங்கள் பெரிய கருங்கடலின் நடுவில், (புணைபற்றிச் செல்லுகின்றவர்கள்) இராக்காலத்தில் மோதுகின்ற சுழற்காற்றி லகப்பட்டுக்கொண்டாற்போலச் சிறந்த அர்த்தசமுத்திரமாகிய வேதமானது அவ்வப்பக்ஷங்கடோறு மலைக்கச்செய்ய (அதுகாரணத்தால்) இப்பொழுது சோர்வுற்றிருக்கின்றோம்; எங்களறிவு ஒருமைப்படவில்லை. (ஆதலால்) மயக்கமாகிய பெரியகடலினின்றுங் கரையேறு மொருமுறைமையினைத் திருவருள் புரிவீராக வென்று விண்ணப்பித்தார்கள்.—எ-று.

வேதத்தைக் கடலாகவும், அவற்றின் சாகைகளைச் சுழல்காற்றாகவும், அஞ்ஞானத்தை இருட்படலமாகவும் உவமித்துக் கூறினமை யுணர்க. (௬)

நவையறு தவங்க ளாற்றி நல்லருள் படைத்த தொல்லோ
ரிவைபுகன் றிடலு மன்பர்க் கெளிவருங் கருணை வள்ள
லவர்முகந் தெரிந்து நுங்க ளறிவமைந் தடங்கு மாறு
தவலருஞ் சிறப்பி னன்னூல் சாற்றுது மிருத்தி ரென்றான்.

(இ-ள்.) குற்றமற்றதவங்களைச்செய்து சிவபெருமான் றிருவருளைப்பெற்ற புராதனர்களாகிய சனகாதிமுனிவர்களிவ்வாறு கூறுதலும், அடியார்களுக்கு எளிதில் காட்சிதந்தருளுங் கருணாநிதியாகிய சிவபெருமான் அம்முனிவர்களது முகத்தைநோக்கி உங்கள் அறிவானது அமைதியுடனடங்கும் வண்ணம் கெடாதசிறப்பினையுடைய ஞானசாஸ்திரத்தைக் கூறுகின்றோம் இருக்கக்கடவீர்களென்று திருவாய் மலர்ந்தருளினர்.—எறு.

சிவஞானமுதிர்ந்த மேலோ ராகலின், 'தொல்லோர்' என்றும், வேதப்பொருளாகிய சிவாகமம் சதாசிவமூர்த்தியின் திருமுகங்களிற் றோன்றின வாகலின், 'நன்னூல்' என்றுங் கூறினர். (௭)

என்றிவை யருள வெந்தை யிணையடி தனது முன்னர்
நன்றுணர் காட்சி கொள்ளு நால்வரு மிருந்தா ரங்கட்
சென்றிடு நந்திப் புத்தேள் சிறப்புடை வதன நோக்கிக்
கொன்றயந் தொடையல் வேய்ந்த குழகனென் றியம்பு கின்றான்.

(இ-ள்.) எமது தந்தையாகிய சிவபெருமான் இவ்வாறு கூறியருளவும்(உடனே) இரண்டு திருவடிகளினெதிரில், சிறந்தபொருளையுணர்கின்ற சிவானந்தக்காட்சியையனுபவித்தற்குரிய நான்கு முனிவர்களும் இருந்தார்கள். (அச்சமயத்தில்) அவ்விடத்திற்குவந்த திருநந்திதேவரது சிறந்ததிருமுகத்தைப்பார்த்தருளி அழகிய கொன்றைமலர்மாலையை யணிந்த சிவபெருமான் கட்டளையிட்டருளுவார்.—எ-று.

சிவபெருமா னுணர்த்தியருளும் ஞானபோதத்தை யடைதற்குரிய பரிபாகமுடையவரென்பார், 'நன்றுணர் காட்சி கொள்ளு நால்வரும்' என்று கூறினர். (அ)

பூங்கணைக் கிழவ னன்றிப் புங்கவர் யார்போந் தாலு
மீங்குறத தருதி யல்லை யீதுனக் கடைத்த தென்ன
வாங்கது புரிவ னென்னு வமலனை யிறைஞ்சி யங்க
ணீங்கியக் கணத்தி னந்தி நெறிமுதல் போற்றல் செய்தான்.

(இ-ள்.) புட்பபாணத்தையுடைய மன்மதனையன்றி மற்றையெந்தத்தேவர்கள் வந்தபோதிலும் இங்குவரும்படி விடாதிருக்கக்கடவை; இது உனக்கிட்டகட்டளையாகுமென்று கூறுதலும், திருநந்திதேவர் அவ்வாறு செய்கின்றேனென்று சிவபெருமானைவணங்கி உடனே அங்குநின்றுஞ்சென்று முதற்றிருவாயிலைக்காவல் செய்திருந்தனர்.—எ-று.

போந்தாலும் என்பதில், புகு பகுதி. நெறிமுதல்-முதற்றிருவாயில். (கூ)

நந்திமுற் கடையைப் போற்ற ஞானநா யகனு மண்ணன்
முந்துறை சனக னாதி முனிவரர் தொழுது கேட்ப
வந்தமி லாக மத்தி னரும்பத மூன்றுங் கூறப்
புந்திய தொடுங்கு ஞான போதகம் போதி யென்றார்.

(இ-ள்.) திருநந்தி தேவர் முதற்றிருவாயிலைக் காவல்செய்திருக்க, ஞானமுதல்வராகிய சிவபெருமான் தமக்கெதிரிலிருக்கின்ற சனகராதி முனிசிரேஷ்டர்கள் வணங்கிக்கேட்க, முடிவில்லாத சிவாகமங்களிலமைந்துள்ள அரியதிரிபதார்த்தலக்ஷணங்களையும் அருளிச்செய்ய, (முனிவர்கள் எம்பெருமானே! எங்கட்கு) மனோலயமுண்டாகும் வண்ணம் மெய்ஞ்ஞானத்தை யுபதேசித்தருள்வீராகவென்று விண்ணப்பஞ்செய்தார்கள்.—எ-று.

ஆகமம் என்பதில் ஆ என்பது பாசம். க என்பது ஆன்மா. ம என்பது சிவம் என்னும் பொருள் மேல் நிற்றலால், திரிபதார்த்தநிச்சயமுணர்த்தும் நூல் எனவும். ஆ என்பது சிவஞானம். க என்பது மோக்ஷம். ம என்பது மலநாசம் என்னும் பொருள்மேனிற்றலால் ஆன்மாக்களின் மலத்தை நாசஞ்செய்து சிவஞானத்தை யுதிப்பித்து மோக்ஷத்தைத் தரும் நூல் எனவும் பொருள்படுமாறு காண்க. ஆகமத்தி னரும்பத மூன்றுவன - பதி பசு பாசம் என்பன. (க0)

என்னலு நகைத்தி யாது மெதிர்மொழி புரிந்தா னல்லன்
பன்னுவ தன்றுன் மற்றிப் பரிசினு லிருத்தல் கண்டீ
ரந்நெறி யாகு மென்றே யனையவர்க் குணர்த்து மாற்று
துன்னரும் பரத்தின் மேலோ னொருசெயல் புரித லுற்றான்

(இ-ள்.) முனிவர்களிவ்வாறு கூறுதலும் நினைத்தற்கரிய பரம்பொருளாயுள்ள சிவபெருமான் புன்சிரிப்படைந்து மறுமொழியொன்றுங் கூறாதவராய் (நீவிர் வினவிய மெய்ஞ்ஞானம்) சொல்லிக்காட்டுந் தன்மையதன்று; மற்றியாதெனின்,

இவ்வாறிருத்தலே யதின்முறைமையென்று அம்முனிவர்களுக் குணர்த்தும் வண்ணம் ஒருசெயலைச் செய்யத்தொடங்கினர்.—எ-று.

ஞானம் அனுபவ வுணர்ச்சியா லறிதற் கியலுவதேயன்றி யுரைத்தல் கூடாமையால், 'நகைத்தியாது மெதிர்மொழி புரிந்தா னல்லன்' என்று கூறினர். (சக)

இருவரு முணரா வண்ண லேனவெள் ளெயிறி யாமை
சிரநிரை யநந்த கோடி திளைத்திடு முரத்திற் சீர்கொள்
கரதல மென்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி
யொருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய் வாரி னுற்றான்.

(இ-ள்.) பிரமவிஷ்ணுக்களால் அறிதற்கரியவராகிய சிவபெருமான் பன்றியின் வெள்ளைக்கொம்பும் ஆமையோடும் சிரமாலைகளும் அநேகங்கோடிகளாகப்பொருந்தியுள்ள திருமார்பில் சிறப்பமைந்த ஒரு திருக்கரத்தைவைத்துச் சின்முத்திரை காட்டி ஒரு க்ஷணநேரம் யாதொரு செய்கையுமின்றி யோகஞ் செய்பவர்களைப் போலெழுந்தருளியிருந்தனர்.—எ-று.

மோனமுத்திரை - ஞானமுத்திரை. (சஉ)

இனையதோர் தன்மை காட்டி யெம்பிரா னுணர்த்தக் கண்டு
சனகனே முதலா வுள்ளோர் தவலரு ஞான போதம்
பனுவலி னளவன் றென்னும் பான்மையைத் தெரிந்து முக்கட்
புனிதன தருளாற் றத்தம் புந்தியி னொடுக்கம் பெற்றார்.

(இ-ள்.) இவ்வாறாகிய தன்மையைக்காட்டி எமது சிவபெருமான் அறிவிக்க, அதனைக்கண்ட சனகர்முதலிய தவசிரேஷ்டர்கள் கெடாத மெய்ஞ்ஞானமானது சாஸ்திரத்தினளவினதன்று என்னுந்தன்மையை யுணர்ந்து திரிநேத்திரராகிய சிவபெருமானதுதிருவருளினால் தங்கள்தங்கள் மனவொடுக்கம் பெற்றார்கள்.—எ-று.

தவல் - கெடுதல். பனுவல் - சொல், (சங)

தத்தமுள் ளொடுங்கல் பெற்ற தாபத கணத்தர் யாரு
முத்தொழில் புரியு மூவா முதல்வனு முக்கண் மூர்த்தி
மெய்த்தவ வடிவ முன்னி மேவினர் சூழ்ச்சி மேலோன்
சித்திரம் புணர்த்த பாவை செயலற விருக்கு மாபோல்.

(இ-ள்.) புத்தியிற் சிறந்த சித்திரிகனால் எழுதப்பட்ட பதுமையானது செயலற்றிருக்குந் தன்மைபோல, தங்கள்தங்களுடைய மனமடங்கப்பெற்ற தவமுனிவர்களாகிய நால்வரும் முத்தொழிலைச் செய்கின்ற கெடாமுதல்வராகிய சிவபெருமானது மெய்ம்மையாகிய தவவடிவத்தைச் சிந்தித்திருந்தனர்.—எ-று.

'முத்தொழில்புரியு மூவா முதல்வனு முக்கண்மூர்த்தி' என்பதனை :—மலர்மக னாகி மூன்று வையமும் படைத்து மாலா- யலைவற நிறுத்தி முக்க ணாதியா யழித்தம் மூவர் - தலைவனய்ப் பரமா காச சரீரியாய் முதலீ றின்றித் - தொலைவருஞ் சோதியாமிச் சுந்தர விலிங்கந் தன்னில்" என்னுந் திருவிளையாடற்புராணத்தா னுணர்க.

தற்பர னினைய வாற்றாற் றுபதே சுணருந் தன்மை
யற்புத ஞான போத மளித்திடுங் கணம தொன்றின்
முற்படு கமலப் புத்தேண் முதலிய வமரர்க் கெல்லாம்
பற்பல யுகங்கள் சென்ற பிறர்க்கினிப் பகர்வ தென்னோ.

(இ-ள்.) சிவபெரும[illegible] இவ்வாறு முனிவர்களுணரும்வண்ணம் அற்புதமாகிய ஞானபோதத்தை உபதேசித்த க்ஷணப்பொழுதுக்குள் தலைமையாகிய பிரமன்

முதலிய தேவர்களனைவருக்கும் அநேக யுகங்களாயின. (அவ்வாறாயின்) மற்றவர்களைக்குறித்துப் பேசவேண்டுவ தென்னை ?.—எ-று.

சிவபெருமான் சனகாதியர் பொருட்டு ஞானபோத முணர்த்திய க்ஷணப்போது தேவர்கட்கே யநேககோடி யுகங்க ளாயின் ஏனையர்க்குச் சென்ற காலங்களைக் குறித்து அளவுகூற வேண்டாமென்று கூறியதாயிற்று. (கடு)

இத்திற ஞான போத மென்றுதொன் முனிவர்க் கெந்தை
கைத்தலங் கொண்டு காட்டுங் கணத்தினி லமரர்க் கெல்லா
மெத்துபல் லுகங்கள் சென்ற விழுமிய காஞ்சி தன்னி
லத்தன்மெய் குழைத்த நங்கை யவன்விழி புதைத்த நாட்போல்.

(இ-ள்.) மேன்மை பொருந்திய ஸ்ரீ காஞ்சிபுரத்தில் சிவபெருமானது திருமேனியைத் தழுவிக் குழையச்செய்த உமாதேவியார் அவ்வெம்பெருமானது திருக்கண்களை மூடியருளிய அக்காலத்தைப்போல, ஞானபோத மித்தன்மையதென்று புராதனர்களாகிய முனிவர்களுக்கு எமது தந்தையாகிய சிவபெருமான் திருக்கரத்தாற் காட்டியருளிய க்ஷணநேரத்தில் எல்லாத்தேவர்களுக்கும் மிகுந்த அநேகயுகங்களாயின.—எ-று.

கைத்தலங்கொண்டு காட்டியதாவது :— சிவபெருமான் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தமாய்த் தமது இடத்திருக்கரத்தை மார்பிலிருத்தி வலத்திருக்கரத்துள்ள ஐந்துவிரல்களுள் அங்குட்டத்தையுந் தற்சனியையு மொன்றுசேர்த்து, மற்றைய கனிட்டை-அநாமிகை-மத்திமை யென்னு மூவிரல்களையும் விரித்துச் சின்முத்திரையாகக் காட்டுதலாம். அவ்வாறு காட்டிய கணப்போது தேவர்களுக்குப் பல யுகங்களாயின வென்பது,— "கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ண-னோடி வடவா லுறங்குமே-நாடியே-அக்கண்ணர் கோடி யழியி லருணகிரி-நக்கனருள் சற்றே நகும்" என்னுந் திருவாக்கின்படி அரிபிரமேந்திராதியரது அற்பவாயுளைக் கருதி யென்க. உமாதேவியார் சிவபெருமானது திருக்கண்களை மூடியஞான்றும் இதுபோலவே கணப்போது தேவர்கட்கு அநேகயுகங்களாயினமையின், 'விழுமிய காஞ்சி தன்னி-லத்தன்மெய் குழைத்த நங்கை யவன்விழி புதைத்த நாட்போல்' என்று கூறினர். இதனை :—"வெறிமலர்த் தளவ மூரல் விழியினை மறைத்து நீக்குஞ்-சிறுபொழு துலகுக் கெல்லா மெண்ணில்பல் லூழி சென்ற· மறைநெறி படைப்புச் செய்கை யாதிய மறுத்த வாற்றா-லிறைவிதன் வதன நோக்கி யேந்தலா ரருளிச் செய்வார்" என வருங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (கசு)

காரண முதல்வன் மோனக் காட்சியா லமர ரெல்லாஞ்
சூரர மகளிர் தங்க டுணைமுலைப் போக மின்றி
யாரிடர் நிலைமை தன்னை யடைந்தன ரளக்கர் சூழ்ந்த
பாரிடை யுயிருங் காமப் பற்றுவிட் டிருந்த வன்றே.

(இ-ள்.) அகிலகாரணராகிய சிவபெருமான் எழுந்தருளியிருந்த மௌனக் காட்சியினால் தேவர்களனைவரும் தேவஸ்திரீகளோடு தழுவுதலின்றி (மாதர் போகத்தைத் துறந்த) முனிவரர்களது நிலைமையையடைந்தார்கள். கடல்சூழ்ந்த இந்நிலவுலகத்துள் ஆன்மவர்க்கங்களனைத்தும் காமமாகிய தொடக்கொழிந்திருந்தன.—எ-று.

சிவபெருமான் சனகாதியர் பொருட்டு யோகமிருந்த காலத்துச் சராசரப்பகுதிகளனைத்தும் போகமொழிந்திருந்தன வென்க. ஆரிடர்-முனிவர்கள். (கஎ)

ஆரணன் றனது மைந்தர்க் கரும்பெறன் ஞான போத
மோரிறை காட்டு முன்ன ருலகெலா மொருப்பா டொன்றி
யீருடன் முயங்கு மார்வ மின்றியே யிருந்த யார்க்குங்
காரணன் சிவனே யென்கை கழறவும் வேண்டற் பாற்றே.

(இ-ள்.) பிரமபுத்திரராகிய சனகாதி முனிவர்களுக்கு அடைதற்கரிய மெய்ஞ்ஞானபோதத்தை ஒரு க்ஷணப்பொழுதிருந்து காட்டியருளுதற்கு முன்னமே உலக முழுவதும் ஒருமைப்பாடடைந்து புணர்ச்சியில் விருப்பமற்றிருந்தன; (ஆதலால்) எத்தன்மையருக்கும் சிவபெருமானே காரணரென்பதைச் சொல்லிக் காட்டவும் வேண்டுமோ?.—எ-று.

"அவனன்றியோ ரணுவுமசையாது" என்னும் அருண்மொழிப்படி சிவபெருமான் போகமொழிந்து யோகிருப்பவும் உயிர்களும் போக மொழிந்திருந்தமையின் அனைத்திற்குங் காரணராயுள்ளவர் சிவபெருமானே யென்பார், 'யார்க்குங் காரணன் சிவனே யென்கை கழறவும் வேண்டற்பாற்றே' என்று கூறினார். (௧௮)

பிணைவிழைச் சூழ்தந் துய்ப்பப் பெருமறை விதிவ ழாம
லணைவிழச் சடங்கிற் கொண்ட வரிவைய ரோடு தேவ
ரிணைவிழைச் சியற்கை கூடா திரங்கினர் கவற்சி யெய்திப்
புணைவிழச் சலதி யாழ்ந்து புலம்புகொண் மாக்க ளேபோல்.

(இ-ள்.) தேவர்கள் புணர்ச்சிவிருப்பத்தை முன் வினையானது கூட்டுதலால், சிறந்த வேதவிதிதவறாமல் மணஞ்செய்துகொண்ட தங்கள் மனைவியர்களுடன் சயனத்திற் சேர, புணர்ச்சியினியற்கையானது தங்கட்குக் கைகூடாமையினால், கப்பல் கவிழக் கடலில் முழுகி வருந்துகிற மனிதர்களைப்போல மனக்கவலை யடைந்து வருந்தினார்கள்.—எ-று.

பிணைவிழைச்சு-புணர்ச்சியின்பம். அணைவிழ-சயனத்திற் பொருந்த. சடங்கு-வேதமுறைப்படி செய்யுங் கிரியைகள். (௧௯)

வன்முலை யணங்கி னோரும் வானவர் யாருங் காமத்
தன்மையும் புணர்ப்பு மின்றித் தளர்ந்தனர் வறிஞர் தம்பா
லின்மைகொண் டோர்கள் செல்ல லீவது கூடா வெல்லைப்
புன்மையொ டிருவர் தாமும் புலம்புறு தன்மை யேபோல்.

(இ-ள்.) தரித்திரர்களிடத்து அவர்களினுந் தரித்திரர்கள் சென்றிரப்ப, அவர்களுக்குக் கொடுக்கக்கூடாமையினால் எழ்மையுடன் அவ்விருவர்களும் (ஒருவரோடொருவர் தங்கள்குறைகளைச்சொல்லித்)துக்கிக்குமாறுபோல, சூதாடுகருவிபோலும் ஸ்தனங்களையுடைய தேவமாதர்களும் எல்லாத் தேவர்களும் காமவியற்கையும் புணர்ச்சியுமில்லாமல் சோர்வடைந்தார்கள்.—எ-று. (௨௦)

பொற்புருக் குறைவின் றுற்றும் புவனமேன் மகளிர் மைந்த
ரற்போடு கலந்து காமத் தரும்பயன் கோட றேற்றார்
தற்பர வடுக னாணைத் தன்மையா லலகை யீட்ட
நற்புன னீழல் பெற்று நணுகருந் தன்மை யேபோல்.

(இ-ள்.) சிவாமிசராகிய வயிரவமூர்த்தினது ஆக்கினையினால் பைசாசகூட்டங்கள் நல்ல நீரும் நிழலும்பெற்றும் அவற்றையடைதற்கரிய தன்மையைப்போல, அழகிய உருவத்தில் குறைவில்லாதிருந்தும் உலகத்துள்ள மாதர்களும் புருடர்களும் அன்போடுகலந்து காமத்தின் அரியபயனை அனுபவியாதவர்களானார்கள்.—எ-று.

வடுகக்கடவுள் சிவமூர்த்தங்க ளிருபத்தைந்தனுள் சேர்ந்தவராகலின், தற்பரவடுகன் ' என்றார். பேய்க்கூட்டங்கள் நல்ல நிழலுநீரும் பெற்றிருந்தும் வயிரவமூர்த்தியின் ஆக்கினையா லவற்றை யடையப்பெறாதிருக்குந் தன்மைபோல, ஆடவர்களும் மாதர்களும் எல்லாவவ்யவங்களு மமையப்பெற்றிருந்தும் புணர்ச்சியின்பங் கூடாதவர்களாய் நின்றார்களென்க. (உக)

மாடக வெழலே யன்ன பணிமொழி மகளிர் மைந்தர்
கூடின ரிருந்து மின்பங் கொண்டிலர் சிறார்கு ழாமு
மாடவர் குழாமும் வாட்க ணரிவையர் குழாமு மேனைப்
பேடியர் குழாமும் வெவ்வே றுற்றிடு பெற்றி யேபோல்.

(இ-ள்.) சிறுவர் கூட்டமும், புருடர்கள் கூட்டமும், வாள்போலுங்கண்களையுடைய மாதர்கள்கூட்டமும், மற்றைப்பேடியர் கூட்டமும், தனித்தனியிருக்குந் தன்மைபோல, முறுக்காணியமைந்த வீணையோசைபோலும் மெல்லிய மொழிகளையுடைய மாதர்களும் புருடர்களுங் கலந்திருந்தும் புணர்ச்சியின்பத்தை யனுபவியாதவர்களானார்கள்.—எ-று.

மாடகம் - முறுக்காணி - சிறுவர் கூட்டமும், புருஷர் கூட்டமும், மாதர் கூட்டமும், பேடியர் கூட்டமும், தனித்தனி யிருப்பின் எவ்வாறு கலப்பற்றிருக்குமோ அவ்வாறே ஸ்திரீ புருஷர்கள் கூடியிருந்தும் புணர்ச்சியின்ப மற்றிருந்தனரென்க. (உஉ)

இருந்திட விரிஞ்சன் மாயோ னிருவரு மீசன் றன்பாற்
பொருந்திடு முணர்ச்சி கொண்டு முத்தியிற் புக்க சேயுந்
திருந்துசீர் வசிட்டன் சொல்லாற் சிலையெனப் பன்னா ணின்ற
வருந்ததி மாதும் போன்றா ராடவர் மகளி ரெல்லாம்.

(இ-ள்.) பிரமவிஷ்ணுக்க ளிருவருங்கூட இவ்வாறிருக்க, (உலகத்துள்ள) ஸ்திரீபுருஷர்களனைவரும் சிவபெருமானிடத்திற் பொருந்தியுள்ள ஞானவுணர்வோடு முத்தியையடைந்த சுகப்பிரமரிஷியையும் திருத்தமாகிய சிறப்பினையுடைய வசிட்ட முனிவரரது கட்டளையினால் கல்லைப்போல (அசைவற) அநேககாலம் நின்ற அருந்ததியையும் ஒத்திருந்தார்கள்.—எ-று.

ஆடவர்கள் காமவிருப்பற்றிருந்தமையின், தோன்றும்பொழுதே பூரண ஞானத்தோடுஅவதரித்த சுகப்பிரமரிஷியையும்,மாதர்கள் வசிட்டர் கட்டளையால்அநேக நாள் கல்லைப்போன்றசைவற்றிருந்த அருந்ததியையு மொத்திருந்தார்களென்க. (உங)

ஏமரு புவன மூன்று மினிதருள் கமலக் கண்ணர்
பூமட மாதர் தம்பாற் புணர்கிலர் பொருவில் வேளுங்
காமரு மகளிர் கூட்டங் கருதல னிவர்போற் சிந்தை
யாமையி னொடுங்கல் பெற்றா ராசையுள் ளோர்க ளெல்லாம்.

(இ-ள்) இன்பம் பொருந்திய திரிலோகங்களையும் படைத்துக்காக்கின்ற பிரமவிஷ்ணுக்கள் (தங்கள்தேவியர்களாகிய) சரஸ்வதி இலக்ஷுமியென்னு மிரண்டு தேவியர்களோடும் புணர்ச்சியற்றவர்களானார்கள். ஒப்பற்றமன்மதனும் அழகியமாதர் கூட்டங்களைச் சிந்தியாதவனாயினான். இவர்களைப்போலக் காமவிருப்புள்ளவர்களனைவரும் (தங்கடங்கள்) மனம் ஆமைபோலடங்கப் பெற்றவர்களானார்கள்.—எ-று.

இனிதருள் கமலக்கண்ணர் பூமட மாதர்தம்பால், என்பதனை, பிரமனுக்கியைப் பொருள்கொள்ளுங்கால், இனிமையுடன் சிருஷ்டிக்கின்ற தாமரைமலரின்க

னுள்ள பிரமன் வெண்டாமரைமலரில் வசிக்கும் சரஸ்வதியினிடத்து எனவும், திருமாலுக்கியைப் பொருள்கொள்ளுங்கால், இனிமையுடன் இரக்ஷிக்கின்ற தாமரைக்கண்ணராகிய திருமால் செந்தாமரை மலரிலிருக்கும் திருமகளிடத்து எனவும் பிரித்துப் பொருள்கொள்க. அருளல் = சிருட்டித்தல்,காத்தல். இவ்வாறன்றி, 'இனிதருள்கமலக்கண்ணர் பூமடமாதர் தம்பாற் புணர்கிலர்' என்பதற்கு, இரட்சிக்கின்ற தாமரைக் கண்ணராகிய திருமாலும் பூதேவியிடத்தும் சிதேவியிடத்தும் கலந்திலர் எனப்பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங் கூறின், கமலக்கண்ணர் புணர்கிலர் எனப் பன்மை விகுதிகொடுத்துக் கூறவேண்டுவதவசியமின்றாகலின் அஃதுரையன்றென விடுக்க.

ஆமை ஐந்துறுப்பையுந் தன்னுள்ளே யடக்கிக்கொள்ளுமாறுபோல மாதராடவர்கள் தங்கள் காமவிச்சையைப் புறத்திற் செலுத்தாது அடக்கினமையின், சிந்தையாமையி னொடுங்கல் பெற்றார்' என்றார். (உ௪)

மண்ணகத் துயிர்கண் முற்று மாதிரத் துயிர்கண் முற்றும்
விண்ணகத் துயிர்கண் முற்றும் வேற்றகத் துயிர்கண் முற்றும்
பெண்ணகத் தாண்மை கூடுஞ் சிறுநலம் பிழைத்த ஞானக்
கண்ணகத் திறைவற் கண்டு கடைநின்ற காட்சியார்போல்.

(இ-ள்.) ஞானநோக்கத்தால் சிவபெருமானைத் தரிசித்துத்தத்துவமுடிவில் நிற்கின்ற சிவஞானிகளைப்போல, நிலவுலகத்துள்ள உயிர்களும், அட்டதிக்கிலுள்ள உயிர்களும் விண்ணுலகத்துள்ள உயிர்களும் மற்றிடங்களிலுள்ள உயிர்களுமாகிய எல்லாவுயிர்களும் பெண்ணோடு ஆண்புணருகின்ற சிற்றின்பத்தையிழந்தன.—எ-று.

வேற்றகம் என்றது, பாதல முதலிய கீழுலகங்களை. சிறுநலம் = சிற்றின்பம். ஞானக்கண்ணினால் சிவபெருமானைத் தரிசித்துணரு மெய்ஞ்ஞானிகள் போன்று காமவின்பத்தை யொழிந்திருந்தனவென்க. (உ௫)

நாகமார் சடிலத் தண்ண லற்பெருந் தவரு முய்ய
யோகுசேர் நிலைமை காட்டு மொருகணத் துயிரின் பொம்மல்
வாகைவே டானு நிற்க மையலும் புணர்ப்பு மற்ற
வாகையா லகில மெல்லா மவனென்கை தெரிந்த தன்றே.

(இ-ள்.) சர்ப்பாபரணத்தையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் சிறந்த தவத்தினையுடைய சனகாதிமுனிவர்கள் நால்வரும் உய்யும்வண்ணம் யோகத்தைச்செய்கின்ற நிலைமையைக் காட்டியருளிய ஒரு க்ஷணநேரத்துள் வெற்றிபொருந்திய மன்மதனு முயிரோடிருந்தும், உயிர்த்தொகுதிகள் காமவிச்சையும் புணர்ச்சியுமில்லாதனவாயின. ஆகையால் உலகமுழுமைக்கும் அச்சிவபெருமானே காரணகர்த்தனென்று விளங்கியது.—எ-று.

காமவிச்சையூட்டும் மன்மதனுயிரோடிருந்தும் உயிர்கள் போகமொழிந்திருந்தமையின், எல்லாவற்றிற்குங் காரணராயுள்ளவர் சிவபெருமானே யென்பதை விளக்கியவாறு காண்க. இதனை :—எல்லா வுயிர்க்கு முயிருணேச ரிவரசைவி - னல்லாதனவு மசையாத தென்ப தறிந்தனமே - வில்லாடன் மார னிருக்கவும் யோகம் விளைத்தவந்நாள் - புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே" என்னுஞ் செய்யுளானு முணர்க. (உ௬)

சிலையொடு பகழி வாடத் திருமதிக் குடைசீர் குன்ற
வலிதளர் வெய்தக் தென்றன் மறிகடற் சுறவு தூங்க

வலைபுரி யானை நீங்கி யாடன்மா மதனு மாதின்
கலவிய தொழிந்தா னென்னிற் பிறர்செயல் கழறற் பாற்றே.

(இ-ள்.) வெற்றிபொருந்திய சிறந்தமன்மதனும் தனது சுரும்புவில்லுடன் புஷ்பபாணம் வாடவும், அழகிய சந்திரனாகிய குடையானது சிறப்புக்குறையவும், தென்றற்றேரானது வலிகுன்றவும், சுறாமீனாகிய கொடியானது அலைமடங்குகின்ற கடலில் தூங்கவும், உயிர்களை வருத்துகின்ற தந்தொழிலினின்றுநீங்கி இரதிதேவியின் புணர்ச்சியையும் நீங்கினனென்று கூறுவோமாயின், மற்றவர்களது செய்கையைச் சொல்லவும்வேண்டுமோ?—எ-று.

மன்மதனுக்கு, அம்பு-மலரும், குடை-திங்களும், தேர்-தென்றலும், கொடி-சுறவுமாகலின், அவை வாட, சீர் குன்ற, வலி தளர்வெய்த - தூங்க என்று கூறினார். இவற்றால் ஒரு பயனு மில்லையாயிற் றென்பது கருத்து. மன்மதனுக்குரிய சின்னங்களை—"ஆலைக் கரும்புசிலை யைங்கணைபூ நாண்சுரும்பு - மாலைக் கிளிபுரவி மாருதந் தேர்-வேலை-கடிமுரசங் கங்குல் களிறுகுயில் காளங் - கொடிமகரந் திங்கள் குடை" என்னும் இரத்தினச்சுருக்கத்தானு முணர்க. (உஎ)

சாலிகள் வளரு மெல்லை தடம்புனல் வறுமைத் தாக
வாலிது குரல்வாங் காது வருத்தொடு மாய்வ தேபோன்
மேலவ னருளாற் போகம் வெறுத்தலிற் கருமல் கின்றி
ஞாலமன் னுயிர்கண் முற்று நாடொறுங் குறைந்த வன்றே.

(இ-ள்.) செந்நெற்பயிர்கள் வளர்ந்துவரும்பொழுது மிக்க நீர்வற்றிப்போகவும், (அப்பயிர்கள்) வெள்ளிய கதிர் வாங்காமல் வருத்தமுட னழியுமாறுபோல, சிவபெருமான் திருவருளினால் (உயிர்கள்) போகத்தை வெறுத்திருத்தலினால் கருவிருத்தியில்லாமல் உலகத்திற் பொருந்திய உயிர்களனைத்தும் நாளுக்குநாள் குறையுற்றன.—எ-று. (உஅ)

முள்ளரை முளரிப் புத்தேண் முதற்புரி துணையே யன்றித்
தள்ளரு முயிர்கள் பின்னுந் தலைத்தலை மல்கா துற்ற
தெள்ளிதி னுலக மீன்ற தேவியின் றாகி யீசன்
வெள்ளியங் கயிலை தன்னின் மேவிய மேலை நாட்போல்.

(இ-ள்.) சர்வலோகங்களையும் சிறப்பாகப் பெற்றருளிய உமாதேவியாரில்லாது சிவபெருமான் திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருந்த முற்காலத்தைப்போல முட்களையடியிலுள்ள தாமரைமலரில் வசிக்கின்ற பிரமன்முதலிற் சிருஷ்டித்த அளவேயன்றி கெடுதற்கரிய உயிர்கள் மேலுமேலும் விருத்தியடையாதிருந்தன.—எ-று.

போகமே கருவிருத்திக் காதாரமாகலின் அப்போக நீங்கவுங் கருவிருத்தியொழிந்தனவென்பார், 'தள்ளரு முயிர்கள் பின்னுந் தலைத்தலை மல்கா துற்ற' என்று கூறினார். (உக)

இம்முறை நிகழ நாத னீரிரு தவத்தி னோர்க்கு
மெய்ம்மைகொ ளுணர்ச்சி காட்டி வீற்றிருந் தருளு மெல்லை
தெம்முயல் சூரன் றீங்கு செய்தலான் மகவான் வானோர்
தம்மொடுந் துறக்கம் விட்டுச் சசியொடுந் தரணி புக்கான்.

(இ-ள்.) இவ்வாறு நிகழ, சிவபெருமான் சனகாதி நான்கு முனிவர்களுக்கும் உண்மை ஞானபோதத்தை யுபதேசித்துத் தக்ஷிணாமூர்த்தியாக வெழுந்தருளியிருந்தபொழுது பகைமையை விருத்திசெய்கின்ற சூரபதுமன் பொல்லாங்கு செய்த

மையால் இந்திரன் தேவர்களையும் சுவர்க்கத்தையும் விட்டுநீங்கி இந்திராணியுடன் நிலவுலகத்தையடைந்தான்.—எ-று.

"தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே - மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்" என்னு மிலக்கணத்தால், தெவ்+முயல் என்பது தெம்முயல் என்றாயிற்று. தெவ்-பகை. சசி-இந்திராணி. (௯0)

மேகமூர் கடவுள் வெள்ளி வெற்பினி லேகி முக்க
ணேகநா யகனைக் காணு மெல்லையின் றாக மீண்டு
சோகமோ டம்பொன் மேருத் துன்னியே சூரன் மைந்தன்
மாகநா டழித்துச் சேயைச் சிறைசெய்த வண்ணந் தேர்ந்தான்.

(இ-ள்.) மேகவாகனனாகிய இந்திரன் திருக்கயிலாயத் திருமலையையடைந்து திரிநேத்திரராகிய சிவபெருமானைத்தரிசிப்பதற்குக் காலமல்லாமையால் திரும்பி வருத்தத்துடன் அழகிய பொன்மயமாகிய மேருமலையை யடைந்து சூரபதுமன் புத்திரனாகிய பானுகோபன் சுவர்க்கலோகத்தையழித்துச் சயந்தனைச் சிறைசெய்த சங்கதிகளைக் கேள்வியுற்றான்.—எ-று.

மன்மதன் தவிர மற்றொருவரையும் விடப்படாதென்பது சிவபெருமானது கட்டளையாகலால், இந்திரன் திருநந்திதேவரால் தடைசெய்யப்பட்டு மேருவை யடைந்தனனென்க. (௯க)

தமனிய மேரு வெற்பிற் றன்னுள் மொருப்பா டெய்த
நிமலனை யுன்னிப் பன்னா ணெடுந்தவ முழத்த லோடு
மிமில்விடை மிசைக்கொண் டங்க ணெம்பிரா னேகக் காணூஉ
வமரர்கோன் வணங்கிப் போற்ற வனையவ னருளிச் செய்வான்.

(இ-ள்.) இந்திரன் பொன்மயமாகிய மேருமலையில் தனது மனம் ஒற்றுமைப்படும்படி சிவபெருமானைத் தியானித்து அநேககாலம் பெருந்தவஞ்செய்யவும், எமது சிவபெருமான் (அத்தவத்திற்கிரங்கி) முசுப்பினையுடைய இடபவாகனத்தின் மேலெழுந்தருளிவரக்கண்டு வணங்கித் துதிக்கச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருள்கின்றார்.—எ-று. (௯உ)

நொந்தனை யளப்பில் காலநோற்றனை யாற்ற றீர்ந்தா
யிந்திர நினக்கு வேண்டிற் றென்னைய தியம்பு கென்னா
வந்தமி லறிவின் மேலோ னறிகிலன் போலக் கேட்ப
வந்தனை புரிந்து போற்றி மகபதி புகல லுற்றான்.

(இ-ள்.) இந்திரனே! மனம் வருந்தினை, அநேககாலந் தவஞ்செய்தனை, வலிமை குறைந்திருக்கின்றனை; (ஆகலின்.) உனக்கு யாது வேண்டுவது; அதனைச் சொல்லக்கடவாயென்று முற்றுணர்ச்சியினையுடைய சிவபெருமான் (அவ்விந்திரனது) மனக்கருத்தை யறியாதவர்போன்று கேட்டருள, இந்திரன் வணங்கித் துதித்துக் கூறுவானாயினன்.—எ-று.

சிவபெருமான் முற்றுணர்ச்சியினரொன்பதும், இந்திரனைக் கேட்டருளியதும் ஓரருள்விளையாடலென்பதுந் தோன்ற, 'அந்தமிலறிவின் மேலோனறிகிலன்போலக் கேட்ப' என்றார். (௯௩)

பன்னரும் பழிசேர் சூரன் பருவரற் படுத்திப் பின்ன
ரென்னொரு புதல்வன் றன்னை யிமையவர் பலரை வாட்டித்
தன்னகர்ச் சிறையிட் டெம்மூர் தழல்கொளீஇத் தவறு செய்தா
னன்னவன் றன்னை யட்டே யளித்தியா லெம்மை யென்ன.

(இ-ள்.) சொல்லுதற்கரிய பழிப்பினையுடைய சூரபதுமன் என்னைத் துன்பப்படுத்திப் பின்பு எனது ஒரு குமாரனாகிய சயந்தனையும், அநேக தேவர்களையும் வருத்தித் தனது மகேந்திரபுரியில் சிறையிலிட்டு எமது அமராபதி நகரத்தை நெருப்பிட்டுக் கொளுத்திக் குற்றஞ்செய்தான். அத்தகைய சூரபதுமனை யழித்து எங்களைக் காத்தருள்வீராகவென்று வேண்டிக்கொள்ள.—எ-று.

இதுமுத லிரண்டு பாடலுங் குளகம். (௬௪)

மெய்ம்மைய தகன்ற தக்கன் வேள்வியி னிருந்த பாவ
நும்மிடை யிருந்த தற்றா ேனதக வுழந்தீர் மேனா
ணம்மிடை யொருசேய் வந்து நணுகிவெஞ் சூரைக் காதி
யிம்மென வும்மைக் காப்ப னெனப்புகன் றிறைவன் போனான்.

(இ-ள்.) சத்தியந் தவறிய தக்ஷனது யாகசாலையில் (நீங்கள்) சேர்ந்திருந்த பாவமானது உங்களிடத்துப் பொருந்தியுள்ளது; அக்காரணத்தால் வருத்தமுற்றீர்கள்; இனி வருங்காலத்தில், நம்மிடத்து ஒரு புத்திரன் றோன்றிக் கொடிய சூரபதுமனைக் கொன்று உங்களை விரைவாகக் காப்பனென்று கூறி (ச்சிவபெருமான்) மறைந்தருளினார்.— எ-று. (௬௫)

மறைந்தன னிறைவ னேக மகபதி யிரக்க மெய்திக்
குறைந்தன னுணர்வு துன்பங் கூர்ந்தனன் குமர னங்கட்
பிறந்துமைக் காப்ப னென்றே பிரானருள் புரிந்த பெற்றி
சிறந்ததன் மனத்தி லுன்னித் தேறின னுவகை செய்தான்.

(இ-ள்.) இவ்வாறு சிவபெருமான் மறைந்து செல்லவும் இந்திரன் மனவருத்தமுற்று உணர்வு குன்றி வியாகூலமடைந்தவனாய்ப் பின்னர், நம்மிடத்தில் ஒரு குமரன் தோன்றி உங்களைப் பாதுகாப்பனென்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய தன்மையினைச் சிறப்புப்பொருந்திய தன் மனத்தில் நினைத்துத் தேறுதலடைந்து சந்தோஷங்கொண்டனன்.—எ-று.

இந்திரன் சிவபெருமான் மறைந்தருளினமையினிரக்கமும், சூரனது துன்பத்தைக்கருதி உணர்வுகுன்றுதலும், உனது துன்பநீங்கப்புத்திரனைத் தருகின்றோமென்று சிவபெருமா னருளிச்செய்த மெய்ம்மொழியால் உவகையு மடைந்தனனென்க.

மாசறு காட்சி கொண்ட மாதவர்க் கருளி யெங்கோன்
றேசுறு கயிலை யுற்றா னுமையவ ளிமையஞ் சேர்ந்தா
ளாசறு குமர னன்னார்க் கடைவதெத் தன்மை யென்னா
வாசவ னிருந்து நாடி மனமிசைக் கவலை கூர்ந்தான்.

(இ-ள்.) குற்றமற்ற காட்சியினையுடைய சனகாதிமுனிவர்களுக்கு உபதேசித்துக்கொண்டு எமது முதல்வராகிய சிவபெருமான் ஒளிபொருந்திய திருக்கயிலாயத்தி லெழுந்தருளியிருக்கின்றார். உமாதேவியார் இமையமலையை யடைந்திருக்கின்றனர்; (இவர்க ளிவ்வாறு பிரிந்திருந்தால்) குற்றமற்ற புத்திரன் அவர்களுக்குண்டாவதெப்படியென்று இந்திரன் ஆலோசித்து மனக்கவலையடைந்தான்.—எ-று.

சிவபெருமான் திருக்கயிலையினும் உமையவள் இமாசலத்தினு மிருப்பின் இவர்கள்பாற்புத்திர னெவ்வாறு தோன்றுமென இந்திரன் வருந்தினனென்க. (௬௭)

மயர்வொடு துறக்க மன்னன் மனோவதி யென்னு மாண்டை
வியனக ரெய்தி யாங்கண் வீற்றிருந் தருளும் பொன்னி
னியன்முறை மனைவி தன்பா லில்லினை யிருத்தல் செய்தாங்
கயனுறு கடிமாண் கோயி லடைந்தன னமர ரோடும்.

(இ-ள்.) இந்திரன் மனக்கவலையோடு அம்மேருமலையிலுள்ள மனோவதியென்னும் பெரிய நகரத்தையடைந்து அங்கு எழுந்தருளியிருந்த குருபத்தினியாகிய தாராதேவியினிடத்தில் தன் மனைவியாகிய இந்திராணியை வைத்துவிட்டு, பிரமன் வசிக்கின்ற காவலையுடைய சிறந்த கோயிலுக்குள்ளே தேவர்களோடு சென்றனன்.

பொன்—பிரகஸ்பதி. இல் - இடவாகுபெயர். (௩அ)

இனையதோர் காலை முக்க ணெம்பிரான் ஞான போத
முனிவரர்க் குணர்த்தி வைகு முறையினாற் படைப்பின் றாகித்
துனியொடு வேதா வைகுந் தொன்முறை யவையை நண்ணி
யனைவன் கழன்முன் றாழூஉ வளப்பில வழுத்தி நின்றான்.

(இ-ள்.) இவ்வாறாகிய காலத்து மூன்று கண்களையுடைய எமது சிவபெருமான் சனகாதி முனிவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்துகொண்டிருந்த காரணத்தினால் பிரமன் சிருஷ்டித்தொழிலின்றி வருத்தத்துடனிருக்கின்ற பழைமையாகிய முறைமையினையுடைய சபையிற் சென்று அப்பிரமனது பாதங்களை வணங்கிப் பலவகையாகத் தோத்திரஞ்செய்து நின்றனன்.—எ-று. (௩௯)

நிற்றலு மகவான் றன்னை நீடருள் புரிந்து நோக்கிப்
பொற்றனிக் கமல மேய புங்கவர் முதல்வன் வானோர்
கொற்றவ வந்த தென்னை கூறுதி யென்ன லோடுஞ்
சொற்றனன் சூர பன்மன் செய்திடுந் துன்ப மெல்லாம்.

(இ-ள்.) அவ்வாறு நிற்கவும், ஒப்பற்ற அழகிய தாமரைமலரில் வசிக்கின்ற பிரமன் இந்திரனை மிக்க கிருபையோடு நோக்கி, தேவராஜனே! நீ வந்த காரணம் யாது? சொல்லக்கடவை யென்று வினவுதலும், (உடனே அவ்விந்திரன்) சூரபதுமன் தனக்குச் செய்கின்ற துன்பங்களனைத்தையுங் கூறினான்.—எ-று. (௪0)

வெய்யதோர் சூரன் செய்கை விளம்பியே முனிவர்க் கீச
னையமி லுணர்வு காட்டி யமர்வது முரைத்துத் தான்பின்
செய்யுறு தவங்கண் டன்னோ னருளிய திறனுஞ் செப்பி
யுய்வதோர் பரிச தென்னோ வும்பரும் யானு மென்றான்.

(இ-ள்.) (இந்திரன் பிரமனிடத்தில்) கொடிய சூரபதுமன் செய்த கொடுமைக ளனைத்தையுங் கூறி, சனகாதிகளுக்குச் சிவபெருமான் சந்தேகமில்லாத ஞான போதத்தை யுபதேசித்துக்கொண் டெழுந்தருளியிருத்தலையுங் கூறி, தான் செய்த தவத்தைநோக்கி அவ்வெம்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய விஷயங்களையு முரைத்து, பின்பு யானும் தேவர்களும் கடைத்தேறும்வகை யாதென்று வினவினான். (௪௧)

என்றலு மலரோன் கேளா வெவர்க்குமே லாகு மீச
னென்றிய வருளி னோனு முற்றவர்க் குதவு வோனு
மன்றியு முறைசெய் வோனு மாதலின் முனிபோல் வெள்ளிக்
குன்றிடை யெம்மை யாளுங் குறிப்பின்வீற் றிருந்தா னன்றே.

(இ-ள்.) இவ்வாறு இந்திரன் கூறவும் பிரமன்கேட்டு, யாவர்க்கு முதல்வராயுள்ள சிவபெருமான் திருவருளையுடையவரும், தம்மை யடைந்தவர்கட்குத் திருவருள் புரிபவரும், அன்றியும், முறைமைப்படி வினைப்போகங்களை யூட்டுபவருமாதலால் அவர் முனிவனைப்போலத் திருக்கயிலாயத் திருமலையில் நம்மை யடிமைகொள்ளுங் குறிப்புடன் தக்ஷிணாமூர்த்தியாக வெழுந்தருளி யிருந்தனர்.—எ-று.

அகிலகாரணராகிய சிவபெருமான் முனிவர்கள் போன்று யோகிருப்பதும் நம்மை யடிமைகொள்ளுதற் பொருட்டேயன்றி வேறன்றென்பது கருத்து. (சஉ)

செங்கண்மா ருனு நானுந் தேடுதற் கரிதாய் நின்ற
வெங்கடம் பிராற்கு மேலா வெண்ணவோர் தேவு முண்டோ
வங்கவன் ஞான போத மறிவருக் குணர்த்தி வைக
னங்குறை முழுது மாற்று நல்லரு ளாகு மன்றே.

(இ-ள்.) சிவந்த கண்களையுடைய திருமாலும் யானும் தேடியறிதற்கரிய வராய் நின்ற வெமது சிவபெருமானுக்கு மேலாக நினைப்பதற்கு ஒரு தெய்வமுமுள தோ? (இல்லை.) அத்தகைய சிவபெருமான் ஞானபோதத்தை முனிவரர்களுக்கு உப தேசித்துக்கொண்டெழுந்தருளி யிருத்தல் நமது குற்றமுழுவது நீக்குகின்ற சிறந்த திருவருளேயாகும்.—எ-று.

தேவர் கோவறியாத தேவதேவன் செழும்பொழிகள் பயந்து காத்தழிக்கு மற்றை-மூவர்கோனாய் நின்ற முதல்வன்" என்னுந் தமிழ்வேதப்படி தன்னிக ருயர்ச் சியில்லாப் பெருமானாகலின், 'எங்கடம்பிராற்கு மேலா வெண்ணவோர் தேவுமுண் டோ' என்று கூறினர். (சங)

படர்மதி மிலைச்சுஞ் சென்னிப் பகவனு ருயிர்க ளெல்லா
மடுவதும் வருத்தந் தீர்க்கு மாறரு ளான வாபோற்
கொடியவெஞ் சூரன் றன்னைக் கொண்டெமக் கலக்கண் செய்கை
விடலரும் பவப்பே ரூர்த்தி வீடருள் கருணை யன்றே.

(இ-ள்.) கலை வளர்கின்ற இளம்பிறையணிந்த திருமுடியினையுடைய சிவ பெருமான் அரிய உயிர்த்தொகுதிகளைச் சங்கரித்தலும் (அவ்வுயிர்கள் பிறப்பினாலிளை த்த) வருத்தத்தை நீக்குதற்பொருட்டுக்கொண்ட திருவருளே யாவதுபோல, பொல் லாத கொடிய சூரபதுமனைக்கொண்டு நமக்கு வருத்தஞ்செய்வித்தல் நீங்காதபாபத் தைப்புசிப்பித்து முத்திதந்தருளுந் திருவருளேயாம்.—எ-று.

எண்ணரிய பிறவிகடோறும் பிறந்துபிறந்துழலு மான்மாக்களினது இளைப் பொழித்தலாகிய சங்காரகிருத்திய முழுதுஞ் சிவபெருமானது திருவருளாகலின்,'அடு வதும்வருத்தந்தீர்க்குமாறருளானவாபோல்,என்றுகூறினர். இதனை :—"நித்தசங்கார மூறக்கத்து நீண்மூடம்-வைத்த சங்காரமுஞ் சாக்கிராதீதமாஞ்-சுத்த சங்காரந்தொ ழிலற்ற கேவல-முய்த்த சங்காரம் பரனருளுண்மையே" எனவும்,"நித்த சங்கார மிர ண்டுட னீவுதல் - வைத்த சங்காரமு மாயாள் சங்காரமாஞ் - சுத்த சங்காரமனுதீ தந் தோய்வித்த - லுய்த்த சங்காரஞ் சிவனருளுண்மையே"—எனவும் வருந் திருமந்திரத் தானுமுணர்க. (சச)

பெற்றிடுங் குரவ ரானோர் பிள்ளைக டம்பா னோயொன்
றுற்றிடிற் பிறரைக் கொண்டு முறுதுயர் செய்து தீர்ப்பார்
மற்றவர் தம்பா லன்போ வன்கணோ வதுபோ னம்பாற்
பற்றிய பவங்க டீர்ப்பான் பரமனு மிவைகள் செய்தான்.

(இ-ள்.) புத்திரர்களைப்பெற்ற மாதாபிதாக்களா யுள்ளவர்கள் குழந்தைக ளிடத்தில் ஒரு வியாதிவந்து பொருந்துமாயின் வயித்தியர்முதலிய அன்னியரைக் கொண்டு சத்திரமுதலிய துன்பங்களைச்செய்வித்தும் நீக்குவார்கள். (அவ்வாறுசெய் தல்) புத்திரர்களிடத்துள்ள அன்போ? (அல்லது) பகைமையோ? அதுபோல, நம்மிடத்திற்பொருந்தியுள்ள பாவங்களைத் தீர்க்கும்பொருட்டுச் சிவபெருமானும் இத் துன்பங்களை விளைத்தனர்.—எ-று.

பெற்றோர் தம்புத்திரர்கட்கு நேர்ந்த நோயைத் தாம்வருத்தித் தீர்ப்பதுடன் மருத்துவரைக் கொண்டும் வருந்தித் தீர்த்தல் அப்புத்திரரிடத்துள்ள அன்பாமாறு போலச் சிவபெருமான் நமது தீவினை நீங்கும்வண்ணம் சூரனால் இத்தகைய துன்பத்தைச் செய்தருளினா னென்க. குரவர்-தாய் தந்தையர்கள். உறுதுயர் செய்து தீர்த்தல் - சூரியால் அறுத்து உபத்திரவப்படுத்தி நீக்குதல். (௪ரு)

தெருமரு கின்ற நம்பாற் றீங்கெலா நீங்கு மெல்லை
யொருசிறி தணுகிற் றாகு மாதலா லுணர்வின் மேலோன்
பரிவொடு நின்பால் வந்து பரிசிவை யருளிப் போனா
னிருவினைப் பௌவ வேலை யேறினம் போலு மன்றே.

(இ-ள்.) வருத்தப்படுகின்ற நம்மிடத்திலுள்ள பாவங்களனைத்து நீங்கவேண்டியகாலம் சிறிதுண்டாயிருக்கக் கூடுமாதலால், ஞானக்கிரனாகிய சிவபெருமான் அருளோடு நின்னிடத்தெழுந்தருளி இவ்வாறு திருவாய்மலர்ந்து சென்றருளினர் (ஆதலால்) நாம் இருவினையாகிய கடலினின்றுங் கரையேறினவர்களாகின்றோம்.—எ-று.

தெருமரல்-மனமலைதல். நல்வினை தீவினைகளாகிய இருவினைகளும் பிறவிக்கேதுவாகலின், 'இருவினைப் பௌவவேலை' என்றார். பௌவவேலை - இருபெயரொட்டு. போலும் அன்று ஏ. அசைநிலை. (௪௬)

ஆதலி னிறைவ னேமே லருள்செயு மதற்கி யாமுந்
தீதற முயலு மாறு சிறிதுள திவற்றை மாயோற்
கோதினம் வேண்டுஞ் செய்கை யொல்லையிற் செய்து மென்னா
வேதமில் கமலப் புத்தே ளிருக்கைவிட் டெழுந்தா னன்றே.

(இ-ள்.) ஆதலால் சிவபெருமானே இனிக்கிருபை செய்தருளுவர்; (ஆயினும்) அதன்பொருட்டு நாமுங் குற்றமற முயலவேண்டுவது சிறிதுளது; இவ்விஷயங்களைத் திருமாலுக்குத் தெரிவித்தே செய்யவேண்டும்; அதனை விரைவிற்செய்வோமென்று குற்றமற்ற கமலாசனனாகிய பிரமதேவன் தனது இருப்பிடத்தினின்று மெழுந்தனன்.—எ-று. (௪௭)

வேறு.

அன்ன காலை யதுநன்று நன்றெனாத்
துன்னு வானவர் சூழலொ டிந்திரன்
பின்ன ராகப் பெயர்ந்துடன் வந்திடச்
சென்னி நான்கினன் செல்லுதன் மேயினான்.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் அவ்வாறுசெய்வதே நன்று நன்றென்று தன்னைச் சூழ்ந்துள்ள தேவர் கூட்டத்துடன் இந்திரனானவன் உடனே புறப்பட்டுப் பின்றொடர்ந்து வரும்படி, நான்குதலைகளையுடைய பிரமன் வைகுந்தத்திற்குப் போகத் தொடங்கினான்.—எ-று.

இந்திரன் தேவர் கூட்டத்துடன் பின்றொடர்ந்துவரப் பிரமன் முன்னே சென்றனா னென்க. (௪அ)

ஞாலம் யாவையு நல்கிய புங்கவன்
வாலி தாந்தன் மனைவதி நீங்குறா
மேலை வைகுந்த மென்னும் வியனக
ரால யத்தி னகன்கடை யேகினான்.

(இ-ள்.) எல்லாவுலகங்களையுஞ் சிருஷ்டித்த பிரமன் தூய்மையாகிய தனது மனோவதி நகரத்தினின்று நீங்கித் (தன்னுலத்திற்கு) மேலுள்ள வைகுந்தமென்னும் பெரிய நகரத்தின்கணுள்ள கோயிலின் பெரியதலைவாயிலையடைந்தனன்.—எ-று.

வைகுந்தம் மனோவதி நகரத்திற்கு மேலுள்ளதாகலின், 'மேலை வைகுந்த மென்னும் வியனகர்' என்று கூறினார். வாலிது - தூய்மைபொருந்தியது. (சுக)

அந்த வெல்லை யதுகண்டு நேமியுஞ்
சங்கு மேந்திய தானையங் காவலன்
செங்கண் மாயன்முன் சென்றுவிண் ணோருடன்
பங்க யத்தன் படர்ந்தது செப்பினான்.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் பிரமன்தேவர்களுடன் வருதலைநோக்கிச் சக்கரத்தையுஞ் சங்கையுமணிந்துள்ள சேனைத்தலைவனாகிய விடிவசேனன் திருமாலுக்கெதிரில்சென்று தேவர்களுடன் பிரமன்வந்த தன்மையைச்சொல்லினான்.—எ-று.

விடிவசேனன் திருமால் போன்று சங்கு சக்கரந்தரித்து வைகுந்தத்தைக் காவல்பூண்டொழுகின்றவனாகலின், 'நேமியுஞ் சங்குமேந்திய தானையங் காவலன்' என்றார். அம்-சாரியை. (ருo)

பணில மேந்திய பண்ணவ னன்னரைக்
கொணர்தி யாலெனக் கூறி விடுத்துழி
யிணையில் காவல னுய்த்திட விந்திரன்
கணமொ டேகினன் காசினி நல்கியோன்.

(இ-ள்.) 'பாஞ்சசன்னியமென்னுஞ்சங்கினை யேந்திய திருமால் அவர்களையிங்கழைத்துவருவாயென்று கூறியனுப்ப, ஒப்பற்ற விடிவசேனன் அவர்களை யழைத்துக்கொண்டுசெல்ல, உலகங்களைச் சிருஷ்டித்த பிரமதேவன் இந்திராதி தேவர்களோடு சென்றனன்.—எ-று.

அன்னர் - அத்தன்மையர். ஆல் - அசைநிலை. காவற்றலைவனாகலின், 'இணையில் காவலன்' என்றார். காசினிநல்கியோன் இந்திரன்கணமொடேகினன் என்க.

பொருவின் மாமுனி புங்கவர் போற்றுதன்
னுருவு கொண்ட வுலப்பறு கண்ணர்கண்
மரபி னேத்த மணிப்பணிப் பீடமே
லரியி ருந்த வவைக்கள நண்ணினான்.

(இ-ள்.) ஒப்பற்ற சிறந்த முனிசிரேஷ்டர்கள் துதிக்கின்ற தமது சாருபத்தைப் பெற்ற நித்தியசூரியர்கள் முறைப்படி வணங்க மணிமுடியினையுடைய சர்ப்பாசனத்தின்மேல் திருமாலெழுந்தருளியிருந்த கொலுமண்டபத்தை யடைந்தனன்.

வைகுந்தத்தில் நித்திய சூரிகளாய்த் திருமாலைச்சேவித் திருப்பவர்கள் விஷ்ணு சாருபம் பெற்றுள்ளவர்களாகலின், 'தன்னுருவு கொண்ட வுலப்பறு கண்ணர்கள்' என்று கூறினார். (ருஉ)

அன்ன மூர்தி யமருல காளுறு
மன்ன னோடுமெவ் வானவர் தம்மொடும்
பன்ன காசனப் பங்கயக் கண்ணவன்
பொன்னின் மாணடி போற்றி வணங்கினான்.

(இ ள்.) அன்னவாகனனாகிய பிரமன் சுவர்க்கலோகத்தை யரசாட்சிசெய்கின்ற இந்திரனுடனும் அங்குவந்ததேவர்களுடனும் சர்ப்பாசனத்திலெழுந்தருளியிரு

க்கின்ற பதுமாக்ஷனுகிய திருமாலினது பொன்மயமாகிய சிறந்த திருவடிகளைத் துதித்து வணங்கினன்.—எ-று.

அமருலகு - தொகுத்தல் விகாரம். (நிரு)

தரைய ளந்திடு தாளின னவ்வழிக்
கருணை செய்துதன் காதல னுகிய
பிரம னுக்கொரு பீடிகை பெற்றியா
லருளி யங்க ணவனை யிருத்தினன்.

(இ-ள்.) உலகத்தை ஓரடியாக அளந்த திருவடியையுடைய திருமால் அப்பொழுது கிருபைகூர்ந்து தனது புத்திரனுகிய பிரமனுக்கு ஒரு ஆசனத்தை முறைப்படி யிடுவித்து அதில் அப்பிரமனை யிருக்கச் செய்தனர்.—எ-று.

பிரமன் சிருட்டித்தொழிலை யுடையவனும் தனது புத்திரனுமாகலின் இந்திராதி தேவர்கணீங்கப் பிரமனுக்குமாத்திர மாதனமளித்தனரென்பார். 'பிரமனுக்கொருபீடிகைபெற்றியா - லருளியங்கணவனை யிருத்தினன்' என்றூர். (நிச)

துல்லை மாமுடிக் கொண்டவ னத்துணை
யல்லி மாமல ரண்ணலை நோக்குறீஇ
யொல்லு நின்விதி யூறில தாகியே
செல்லு கின்றகொ லென்றனுஞ் செப்புவான்.

(இ-ள்.) துளசிமாலையைச் சிறந்த திருமுடியிலணிந்த திருமால் அப்பொழுது அகவிதழையுடைய பெரிய தாமரை மலரிலிருக்கின்ற பிரமனைப்பார்த்து, பொருந்திய நினது சிருஷ்டித்தொழில் தடையின்றி நடந்துவருகின்றனவோ? வென்று வினவுதலும் பிரமன் கூறுவானுயினன்.—எ-று.

விதி—சிருட்டி. கொல்—ஐயப்பொருளில்வந்த இடைச்சொல். (நிரு)

கனக னச்சுறக் கந்திடை வந்தெழு
மனக வித்திறங் கேட்க வறிவுடைச்
சனகன் முற்படு தாபதர் நால்வரு
மெனக ருத்திடை முற்பக லெய்தினர்.

(இ-ள்.) இரணிய னஞ்சும்படி (நரசிங்கமாகத்) தூணில் தோன்றிய திருமாலே? இதனைக் கேட்பீராக; பேரறிவினையுடைய சனகன்முதலிய முனிவர்கள் நால்வரும்முன்னே என்னுடையமனத்தினின்றுந் தோன்றினர்கள்.—எ-று.

இரணியனென்னு மசுரன் உயிர்களைவருத்திக் கொடுங்கோல் செலுத்திவருகையில் அவனது புத்திரனுகத் தோன்றிய பிரகலாதன் திருமாலுக்குரிய அன்பனுய்ப்பத்தி செலுத்துவதையுணர்ந்து, அவனை வருத்த அப்பிரகலாதனுடைய வேண்டுகோளால் திருமால் தூணில் நரசிங்கவுருவங்கொண்டு தோன்றி, அவ்விரணியனது மார்பைப்பிளந் துதிரமுண்டு அழித்தனரென்பது புராணசரித்திரமாகலின், 'கனகனச்சுறக்கந்திடை வந்தெழுமனக' என்று கூறினர். சனகாதியர்கள் பிரமனது மானசபுத்திரர்களாகலின், 'சனகன் முற்படுதாபதர் நால்வரு மெனகருத்திடை முற்பகலெய்தினர்' என்றூர். (நிசு)

அறிவின் மிக்க வணைவரை நோக்கியான்
பெறுவ தாமிப் பெருந்தொழி லாற்றியீண்

டுறுதி சொன்ன வுளத்தது கொண்டிலர்
முறுவல் செய்து மொழிந்தன ரிவ்வுரை.

(இ-ள்.) சிறந்த அறிவினையுடைய அப்புத்திரர்களை யான்பார்த்து (நீங்கள்) அடைதற்குரியசிருஷ்டியாகிய இப்பெருந்தொழிலைச் செய்துகொண்டு இவ்விடத்தி லேயேயிருங்களென்றுகூற,அவ்வார்த்தையை மனத்தில் கொள்ளாதவர்களாய்நகைப் புடன் பின்வருமாறு கூறினார்கள்.—எ-று. (நுஎ)

பாச வன்சிறைப் பட்டுப் படைப்பெனப்
பேச லுற்ற பெருந்தளை பூணல
மீசன் மாணடி யெய்துதும் யாமெனா
மாசில் காட்சியர் வல்விரைந் தேகினார்.

(இ-ள்.) பாசமாகிய வலிய சிறையிலகப்பட்டுக்கொண்டு சிருஷ்டியென்று சொல்லப்பட்ட பெரிய விலங்கில் அகப்படமாட்டோம்; நாங்கள் சிவபெருமானது சிறந்த திருவடிகளை யடைகின்றோமென்று கூறி, குற்றமற்ற காட்சியினையுடைய அம் முனிவர்கள்மிக்க விரைவாகச் சென்றார்கள்.—எ-று.

சிருட்டித்தொழிலால் பேரின்பங் கைகூடாமையின், 'பாசவன் சிறைப் பட்டுப் படைப்பெனப் - பேசலுற்ற பெருந்தளைபூணலம்' என்றார். (நு அ)

மாத வத்தினை மைந்தர்க ளாற்றலு
மாதி நாயக னவ்வுழி வந்துமக்
கேது வேண்டிய தென்றலு மெண்ணிலா
வேத வுண்மை விளம்புதி யாலென்றார்.

(இ-ள்.) புத்திரர்களாகிய சனகாதியர்கள் பெரிய தவத்தைச் செய்யவும், சிவபெருமான் அவ்விடத்து எழுந்தருளி உங்களுக்கு வேண்டுவது யாதென்று கேட்டருளவும்; உடனே யவர்கள் அளவற்ற வேதத்தின் மெய்ப்பொருளை யுபதேசிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.—எ-று.

வேதவுண்மையாவது—வேதத்தில்முடிவாகத்தேர்ந்த மெய்ப்பொருள்.(நுக)

என்ற லோடு மிறையவன் வெள்ளியங்
குன்ற மீதுதென் கோட்டிடை நிற்புறு
மொன்றொ ரானிழ லுற்று மறையெலா
நன்று ணர்த்திட நால்வருந் தேர்ந்தனர்.

(இ-ள்.) அவர்களிவ்வாறு கூறவும், சிவபெருமான் திருக்கயிலாயத் திருமலையில் தக்ஷிணசிகரத்தில் நிற்கின்ற ஓர் கல்லாலவிருக்ஷத்தின்கீ ழெழுந்தருளியிருந்து வேதார்த்தங்களை நன்றாயுபதேசித்தருள நால்வருங் கேட்டுத்தெளிந்தார்கள். ()

முந்தை வேத முழுது முணர்த்தியே
யெந்தை யேக விருநிலம் போந்துதஞ்
சிந்தை யொன்றுந் திறனரி தாதலி
னொந்து பின்னரு நோற்றலை மேயினார்.

(இ-ள்.)முதன்மையாகிய வேதவுண்மைகளனைத்தையும் உபதேசித்து எமது சிவபெருமானெழுந்தருளினவுடன் (அம்முனிவர்கள்) பெரிய நிலவுலகத்திற்குவந்து தங்கள்மனம் ஒற்றுமைப்படுவது அரிதாயிருந்தமையால், பின்னும் வருந்தித்தவஞ்செய்தார்கள்.—எ-று. (சுக)

பின்னு மைந்தர் பெருந்தவ மாற்றியே
தொன்ன லம்பெறு தூய வுளத்தரா
யென்னை யாளுடை யீச னருளினன்
மன்னு வெள்ளி வரையிடை யேகினர்.

(இ-ள்.) அப்புத்திரர்கள் பின்னும் பெருந்தவத்தைச் செய்து பூர்வவுணர்ச்சியைப்பெற்ற தூய்மையாகிய மனமுடையவர்களாய் எம்மையடிமையாகவுடைய சிவபெருமானது திருவருளினல் நிலைபெற்ற திருக்கயிலையை யடைந்தார்கள். -எ-று.

ஏகல் பெற்றிடு மக்கட் கினிதுளம்
பாக முற்ற பரிசுணர்ந் தெம்பிரா
ஞக மத்தி னரும்பத மூன்றையு
மோகை பற்றி யுணர்வகை கூறியே.

(இ-ள்.) எமது சிவபெருமான் அங்கடைந்த சனகாதி முனிவர்களுக்கு மனம்பரிபாகமடைந்திருத்தலை யுணர்ந்து சந்தோஷத்துடன் அவர்களுணரும் வண்ணம் சிவாகமத்திற்கூறும் அரியமூன்றுபதங்களையும் உபதேசித்து.—எ-று.

ஆகமத்தி னரும்பத மூன்முவன - சரியை - கிரியை - யோகமென்பன; பதி பசு பாசமென்னுந் திரிபதார்த்த இலக்ஷணமெனினுமாம்.

இதுமுத லிரண்டுபாடலுங்குளகம். (௬௬)

கூனன் மாமதிக் கோடு மிலைச்சிய
வான நாயகன் மற்றவர் காண்டக
ஞான போத நவிலருந் தன்மையான்
மோன மேய முதற்குறி காட்டினன்.

(இ-ள்.) வளைவாகிய சிறந்த இளம்பிறையணிந்த தெய்வநாயகராகிய சிவபெருமான் அம்முனிவர்கள் காணும் வண்ணம் ஞானபோதத்தை (வாயால்) சொல்லக்கூடாமையால் மௌனமாகியசின்முத்திரைக் குறியைக் காட்டியருளினர். —எ-று.

அந்த வெல்லை யரனருள் கண்டுதம்
புந்தி யொன்றியப் புங்கவன் முண்மலர்
சிந்தை செய்து செயலற்று வைகினர்
முந்தி யாப்புறு முத்தளை மூட்டற.

(இ-ள்.) அந்தச் சமயத்தில் சிவபெருமான் திருவருளினல் உபதேசித்தருளியதையுணர்ந்து தங்கள்மனமொடுங்கித் தக்ஷிணமூர்த்தியாகிய அவ்வெம்பெருமானது திருவடிகளைச்சிந்தித்து அநாதிதொடங்கிப் பந்திக்கப்பட்டுள்ள மூவகைப்பந்தங்களும் நீங்கத் தத்துவச்சேட்டை யொழிந்திருந்தார்கள்.—எ-று.

முத்தளைமூட்டாவது, ஆணவங்கன்மம் மாயையென்னு மும்மலக்கட்டு. ()

வேத நாயகன் மெய்த்தவர்க் கோர்கணம்
போத யோகின் பொருண்மையைக் காட்டுழி
யோத லாகு முகம்பல சென்றன
சீத வானதி சேர்ந்ததொன் னளினே.

(இ-ள்.) வேதமுதல்வராகிய சிவபெருமான் மெய்ம்மையாகிய தவத்தினையுடைய அச்சனகாதியர்கள்பொருட்டு ஒருக்ஷணநேரம் ஞானயோகத்தின் பொருள் நிலைமையைக் காட்டிக்கொண்டிருக்கையில் குளிர்ந்த கங்கைநதி பெருகியவந்த முற்காலத்தைப்போலச் சொல்லுதற்குரிய பல யுகங்கள் சென்றன.—எ-று. (௬௬)

அன்னை தன்னை யகன்றரன் யோகிபோ
லென்ன துஞ்செய லின்றி யிருத்தலான்
முன்னை யாண்பெண் முயக்கம தின்மையாய்
மன்னு யிர்த்தொகை மல்கலின் றுயதே.

(இ-ள்.) சிவபெருமான் உமாதேவியாரை நீங்கி யோகியைப்போல யாதொரு செயலுமின்றி யிருக்குங் காரணத்தினால் பழைய முறைமைப்படி ஆணும்பெண்ணுங் கூடுதலாகிய புணர்ச்சியில்லாமல், நிலைபெற்ற உயிர்த்தொகைகள் விருத்தியடையாதனவாயின.—எ-று.

அன்னை - உலகமாதாவாகிய உமாதேவியார். (௬௭)

நவிற லென்னினி ஞாலம் விசும்புளா
ரிவறு காமப் புணர்ச்சிய தின்றியே
கவறல் கொண்டு கலங்கரு ரெய்தினர்
தவறல் கொண்டது நல்குந் தனிச்செயல்.

(இ-ள்.) இனிச் சொல்லவேண்டுவது யாதிருக்கின்றது உலகத்திலுஞ் சுவர்க்கத்திலு முள்ளவர்க ளனைவரும் விரும்புகின்ற காமப்புணர்ச்சியில்லாமல் கவலையடைந்து கலங்கி வருந்தினார்கள், ஆதலால் (எனது) படைப்புத் தொழிலுந்தவறியது.

ஞாலம்விசும்புளார் என்பதை ஞாலத்துளார் விசும்பினுளார் எனப்பிரித்துக்கொள்க. இவறல்-விருப்பங்கொள்ளல். (௬௮)

நல்கல் பெற்ற தமியனு நாமகட்
புல்கல் பெற்ற புணர்ச்சியின் றுகியே
யல்கல் பெற்ற வருந்தவ யோகரி
னொல்கல் பெற்றன னுண்மையி தாகுமால்.

(இ-ள்.) படைப்புத்தொழிலையுடைய அடியனும் சரஸ்வதியை யணைகின்ற புணர்ச்சியில்லாமல் மனவொற்றுமைப்பட்ட அரிய தவத்தினையுடைய யோகிகளைப்போல ஒடுங்கியிருக்கின்றேன் ; இது உண்மையாகும்.—எ-று. (௬௯)

நிற்க விங்கிது நித்தன்வ ரத்தினா
லொற்க மில்வள னுண்டிடு வெய்யசூ
ரொற்கு நித்தலு மேவலொன் றிட்டனன்
சொற்க நாட்டிற் றுயரினை நாட்டினான்.

(இ-ள்.) இஃதிவ்வாறிருக்க, சிவபெருமான் கொடுத்த வரத்தினால் கெடாத செல்வத்தைப் பெற்றிருக்கின்ற கொடிய சூரபதுமன் எனக்குந் தினந்தோறும் (பஞ்சாங்கஞ் சொல்லுதலாகிய) ஒரு வேலை யிட்டனன். இதுவன்றியும் சுவர்க்கலோகத்திற்குந் துன்பத்தினையே யமைத்தான்.—எ-று. (௭0)

தேசு நீங்குறு தேவரை யீண்டுள
வாச வன்றனை மாதிரத் தோர்களைப்
பாச னத்தொடு பற்றின னித்தலுங்
கூச லின்றிக்குற் றேவல்கொண் டானரோ.

(இ-ள்.) ஒளிமாழ்கிக்கிடக்கின்ற தேவர்களையும் இங்கேயிருக்கின்ற இந்திரனையும், அஷ்டதிக்குப்பாலகர்களையும் சுற்றத்தினருடன் பிடித்துத் தினந்தோறும் கூச்சமில்லாமல் அடிமைகொண்டான்.—எ-று. (௭௧)

தேவர்கள் தங்கள் போகமொழிந்து அடிமைத்தொழில் செய்தொழுகுகின்றமையின், 'தேசு நீங்குறு தேவர்' என்றூர். (எக)

நிறைபு ரிந்த நிலவினை வாளரா
மறைபு ரிந்தென வானகத் தோருட
னிறைபு ரிந்தவிவ் விந்திரன் மைந்தனைச்
சிறைபு ரிந்தனன் றீத்தொழி லாற்றியே.

(இ-ள்.) கலைகள்நிறைந்த பூரணசந்திரனை ஒளிபொருந்திய இராகுவென்னும் பாம்பானது மறைத்ததுபோல தேவர்களுடன் சுவர்க்கலோகத்தை யரசாட்சிசெய்த இவ்விந்திரன் குமாரனாகிய சயந்தனையும்வருத்தப்படுத்திச்சிறையிலடைத்தனன்.எ-று

'தீத்தொழிலாற்றி' என்பதற்கு, இந்திரலோகத்தை தீயிட்டுக் கொளுத்தி எனப் பொருள் கூறினுமாம். (எஉ)

நிரந்த பல்லுயிர் தங்கட்கு நித்தலு
மரந்தை மல்க வறிகிலன் போலவே
யிருந்த னன்சிவ னென்னினிச் செய்வது
விரைந்து கூறுதி யென்று விளம்பினன்.

(இ-ள்.) உலகில் நிறைந்த பல ஆன்மகோடிகளுக்கு எப்பொழுதுந் துன்பமதிகரித்துவரவும், சிவபெருமான் அதனை யறியாதவர் போன்றிருக்கின்றனர்.(ஆதலால்)இனிச் செய்யவேண்டியதைவிரைவிற் கூறுவீராகவென்று சொல்லினன். ()

சிவபெருமான் சர்வஞ்ஞராகலி னெல்லா முணர்ந்து முணராதவர் போன்றிருந்தன ரென்பார், 'அறிகிலன்போலவே யிருந்தனன் சிவன்' என்று கூறினர். ()

அரிய தத்துவ மையைந்தின் பேதமு
மரபி னுடினர் வாலுணர் வெய்திய
திருவி னாயகன் செங்கம லந்திகழ்
பிரமன் மாமுக நோக்கினன் பேசுவான்.

(இ-ள்.) அருமையாகிய இருபத்தைந்து தத்துவபேதங்களையும் முறையே விசாரித்துணர்ந்த பாஞ்சராத்திரிகளது அறிவில் விளங்குகின்ற இலக்ஷுமி நாயகராகிய திருமால் செந்தாமரைமலரில் விளங்கும் பிரமனது சிறந்த முகத்தை நோக்கிக் கூறுவாராயினர்.—எ-று.

தத்துவம் இருபத்தைந்தெனவும், இருபத்துநான்காந் தத்துவமாகிய குண தத்துவத்தின்மேல் இருபத்தைந்தாந்தத்துவம் வாசுதேவனென் றெருவனுள னெனவும், அவனே பரம்பொருளெனவுங் கூறுதல் பாஞ்சராத்திரமத சித்தாந்தமாகலின், 'அரிய தத்துவமையைந்தின் பேதமு மரபினுடினர் வாலுணர் வெய்திய திருவினாயகன்' என்று கூறினர். (எச)

வேறு.

ஆவிக ளனைத்து மாகி யருவமா யுருவமாகி
மூவகை யியற்கைத் தான மூலகா ரணம தாகுந்
தேவர்க டேவன் யோகின் செயன்முறை காட்டு மென்னி
லேவர்கள் காமங் கன்றித் தொன்மைபோ லிருக்கு நீரார்.

(இ-ள்.) எல்லாவுயிர்களுந் தாமே யாகியும் அருவமாகியும், உருவமாகியும், மூவகை யியல்பினையுடைய மூலகாரணராகியுமுள்ள மகாதேவராகிய சிவபெரு

மான்யோகத்தினது செய்கையின் முறைமையைத் தெரிவிப்பாராயின் காமமிக்கு முன்போலிருக்குந் தன்மையினை யுடையவர்கள் யாவர்? (ஒருவருமில்லை.)—எ-று.

"ஒன்றுநீயல்லை யன்றியொன்றில்லை யாருனை யறியகிற்பாரே" என்றபடி எல்லாமா யல்லவுமா யுள்ள பெருமா னாகலின், 'ஆவிக ளனைத்து மாகி' என்றார். அருவம் நிஷ்களமெனவும், உருவம் சகளமெனவுங் கூறப்படும். மூவகையியற்கைத் தான மூலகாரணம் என்றது உருவம் அருவம் உருவருவம் என்னும் மூவகைப்பேதங் களை இதனை :—"சிவஞ்சத்தி நாதம்விந்து சதாசிவன் றிகழுமீச - னுவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னொன்றினொன்றாய்ப்-பவந்தரு மருவநாலிங் குருவநா லுபயமொன் று - நவந்தரு பேதமேக நாதனே நடிப்பனென்பர்" என்னுஞ் சிவஞானசித்தியாரா னுணர்க. அன்றியும், சிருட்டி திதி சங்கார மென்னு முத்தொழிற்கு முதற்காரணரா யுள்ளவனெனப்பொருள் கூறினுமாம். (௭௫)

ஊழ்வினை நெறியான் முன்ன மொருபெரு வேள்வி யாற்றித்
தாழ்வினை யடைந்த தக்கன் றன்புடை யிருந்தோர் தம்பாற்
சூழ்வினை யெச்ச முற்று மருத்தியே தொலைத்துத் தொல்லை
வாழ்வினை யருள நாதன் மனத்திடை நினைந்தா னன்றே.

(இ-ள்.) பூர்வகன்மத்தால் முன்பு ஒருபெரியயாகத்தைச்செய்து இழிவினை யடைந்த தக்ஷனுடன் சேர்ந்திருந்த தேவர்களைச் சூழ்ந்துள்ள பாவத்தின் சேஷங்க ளனைத்தையு முண்பித்துத் தொலைத்துப் பழைமையாகிய இன்பவாழ்வினைக் கொடுக் கும்வண்ணம் சிவபெருமான் தமது திருவுள்ளத்திற் சிந்தித்தருளினார்.—எ-று. (௭௬)

சூரனு மவுணர்க் காற்றல் புரிந்ததுஞ் சுரர்கள் யாருஞ்
சார்வருந் திறத்தா லீசன் றவத்தருக் குணர்வு காட்டி
யாருயி ரவைக்கு மின்ன லாக்கிய வாறுந் தூக்கிற்
பேரருண் முறையே யன்றிப் பிறிதொரு செயலு மன்றால்.

(இ-ள்.) சிவபெருமான் சூரபதுமனென்னு மசுரனுக்கு மிக்கவல்லமையைக் கொடுத்ததையும், தேவர்கள் யாரும் அருகில் வராவண்ணம் முனிவர்களுக்கு ஞானோ பதேசஞ் செய்துகொண்டு அரிய உயிர்களுக்கெல்லாந் துன்பத்தை யுண்டாக்கியதை யும் ஆலோசிக்குமிடத்தில் மிகுந்த கருணையேயன்றி வேறொருவகையு மன்று.—எ-று.

முனிவருக் குணர்வு காட்டு மோனத்தை முதல்வ னீங்கிப்
பனிவரை யணங்கை மேவிற் படைப்பயன் முற்று மன்னாக்
கினியொரு குமரன் றோன்றிற் சூர்கிளை யனைத்தும் பொன்றுந்
துனியுறு முலக மெல்லாந் தொன்மைபோ லுய்யு மாதோ.

(இ-ள்.) முதற்கடவுளாகிய சிவபெருமான் சனகாதிமுனிவர்களுக்கு ஞா னத்தைத் தெளிவிக்கின்ற மௌன நிலையினின்று நீங்கிப் பர்வதராஜ புத்திரியாகிய பார்வதிதேவியாரைத் திருமணம்புரிந்தால், பிரமனே! நினது சிருட்டித்தொழில் நிறைவேறும்; பின்னர் அவர்களுக்கு ஒரு புத்திரன் தோன்றினால், (அவனால்) சூர னது வமிசமுழுமையு மழியும்; பின்பு, வருத்தமடைந்திருக்கின்ற உலகமுழுதும் பழைமைபோலச் சீவித்திருக்கும்.—எ-று.

முன்னர் வீரபத்திரர் விநாயகர்முதலிய புத்திரர்களிருத்தலின் 'இனியொரு குமரன் றோன்றில்' என்றார். (௭௭)

அத்திற முற்று மாறொன் றறைகுவ னகிலந் தன்னி
லெத்திறத் தருமால் கொள்ள வெய்திடுங் காமன் றன்னை

யுய்த்திடின் முனிவர் தங்கட் குணர்வுசெய் மோனநீங்கிச்
சத்தியை மணந்து சேயைத் தந்திடு மெந்தை யென்றான்.

(இ-ள்.) அத்தன்மை முடிவுபெறும் வண்ணம் ஒன்று கூறுகின்றேன், உலகத்திலுள்ளவர்கள் யாவரும் மயங்கும்பொருட்டுப் (புஷ்பபாணங்களைப்) பிரயோகிக்கின்ற மன்மதனையனுப்புவோமாயின், சனகாதிமுனிவர்களுக்கு ஞானவுணர்வளிக்கின்ற மௌனநிலையினின்று நீங்கிச் சிவபெருமான் உமாதேவியாரைத் திருமணம் புரிந்து புத்திரனைத் தந்தருளுவர் என்று கூறினர்.—எ-று. (எக)

பதுமபீ டிகையோ னன்ன பரிசுதேர்ந் துவகை யெய்தி
யிதுசெயன் முறைமைய யெந்தா யேற்றன புகன்று யென்ன
வதுபொழு தவனை நோக்கி யச்சுத னமலன் றன்பான்
மதனனை விளித்து வேண்டி விடுத்திநீ வல்லை யென்றான்.

(இ-ள்.) கமலாசனனாகிய பிரமன் அத்தன்மையை யுணர்ந்து மனமகிழ்வடைந்து, எந்தையே! இது செய்யத்தக்கதே; தகுந்ததேயுரைத்தீர் என்று கூறவும், அப்பொழுது திருமால் அப்பிரமனைநோக்கி நீவிரைவாக மன்மதனையழைத்துச் சிவபெருமானிடத்துச் செல்லும்படி சொல்லியனுப்பக் கடவையென்று கூறினர்.—

என்னலு மலரோ னுள்ளத் திசைவுகொண் டெழுந்து மாயன்
பொன்னடி வணக்கஞ் செய்து விடைகொடு புலவ ரோடு
மன்னொடு மங்க ணீங்கி மனோவதி யதன்பாற் சென்று
தன்னக ரடைந்து கஞ்சத் தவிசின்வீற் றிருந்தா னன்றே.

(இ-ள்.) திருமால் இவ்வாறு கூறவும் பிரமன் மனப்பூர்வமாக ஒத்துக்கொண்டு எழுந்து, திருமாலினுடைய அழகிய திருவடிகளை நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு இந்திராதிதேவர்களுடனே அவ்விடத்தினின்று நீங்கி மனோவதிநகரத்தையடைந்து தனது ஆலயத்துட்புகுந்து கமலாசனத்தில் வீற்றிருந்தருளினன்-எ-று.

மேருப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬கக.

---

உ

முருகன்றுணை.

---

# காமதகனப்படலம்.

இந்திரன் வானவ ரீட்டமொ டேகி
முந்துறு கஞ்ச முகட்டிடை யுற்றோ
னைந்திற னாகிய வாசுக வில்வேள்
வந்திடு மாறு மனத்தி னினைந்தான்.

(இ-ள்.) இந்திரனுடனும் தேவர்கள்கூட்டத்துடனும் தனது மனோவதிநகரத்திற்சென்று உயர்ந்த பதுமாசனத்தில் வீற்றிருக்கும் பிரமதேவன், ஐந்து வகையாகிய புஷ்பபாணங்களையுங் கரும்புவில்லையுமுடைய மன்மதன் வரும்படி தன் மனதில் நினைத்தனன்.—எ-று.

தேவர்கூட்டங்களுக்குத் தலைவனாகிய இந்திரனும் அவனைச்சார்ந்த தேவர்களுமுடன் செல்லச்சென்றனனென்பார், 'இந்திரன் வானவரீட்டமொடேகி' என்றும், பூவினுட் சிறந்ததாகலின், 'முந்துறுகஞ்ச முகட்டிடை யுற்றோன்' என்றும், தாமரை முதலிய ஐவகைமலர்களையும் தனக்குரிய பாணங்களாகக் கொண்டவனாகலின், 'ஐந்திறனாகிய வாசுகவில்வேள்' என்றுங்கூறினர். ஐந்திறனாகிய வாசுகம், என்பதனை :—"குடைகவித்த நன்கஞ்சங் கோதறுசூ தப்பூ - கடியுமசோ கந்தளவு காவி - படையெடுத்து - வாங்காச் சமர்விளைக்கு மாரனுக்கெப் போதுமங்கை - நீங்காக்கணையா நினை" எனவும், அவற்றையெய்யுந் தானத்தை, "நெஞ்சிலரவிந்த நீள் சூதங்கொங்கைதனிற் - றுஞ்சும்விழியி லசோகமலர் - வஞ்சியர்தஞ் - சென்னியிலே - முல்லை திகழ்நீலமல்குலிலே - யன்னவே ளெய்யுமியல் பாம்" எனவும், அவற்றின் குணத்தை, "நினைக்குமரவிந்த நீள்பசலைமாம்பூ - வனைத்துணவு நீக்குமசோகு-வனத்திலுறு - முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங் - கொல்லுமத னம்பின் குணம்" எனவும்வரும் வெண்பாக்களானும், "வனசஞ் சூதமசோக முல்லை - குவளைகாமன் கொலுமைங்கணையே" எனவும், "உன்மத்த மதனமோகனஞ் சந்தாபம் - வசீகரணம் மிவை மதன்கணைச் செயலே" எனவும், "சுப்பிரயோகமும் விப்பிரயோகமுஞ் - சோகமு மோகமு மரணமு மென்றிவை - யாகுமலர்க்கணை யைந்தினவத்தை" எனவும், "அவற்றுள், சுப்பிரயோகஞ் சொல்லாநினைவும்" "விப்பிரயோகம்வெய்துயிர்த்திரங்கல்" "சோகம் வெதுப்புத் துய்ப்பன தெவிட்டல்" "மோகமழுங்கலு மொழிபல பிதற்றலும்" "மரணமயர்ப்பு மயக்கமுமாகும்" எனவும் வரும் பிங்கலந்தைச் சூத்திரத்தானு முணர்க. (க)

நினைந்திடு கின்றுழி நீனிற மாயோன்
முனந்தரு கின்ற முரண்டகு வில்வேண்
மனந்தனி லுன்னு மலர்ப்பக வன்முன்
னினந்தரு சூழலொ டிம்மென வந்தான்.

(இ-ள்.) அவ்வாறு நினைத்தபொழுது நீலநிறத்தையுடைய திருமாலானவர் முன்பு ஈன்றருளிய வலிய கரும்புவில்லை யேந்திய மன்மதன் தன்னை மனத்தில் நினைத்த பிரமனுக்கெதிரில் தன் பரிவாரங்களுடன் விரைவாக வந்தனன்.—எ-று.

திருமாலினது மனத்தினின்றுந் தோன்றிய காரணத்தால் சித்தசனெனப் பெயர்பெற்றவனாகலின், 'நீனிறமாயோன் முனந்தருகின்ற முரண்டகுவில்வேள்' என்று கூறினர். ஐசுவரியம்-வீரியம்-புகழ்-திரு-ஞானம்-வைராக்கியம் என்னு மாறுக்கும் பகமென்னும் பெயருண்மையால், பிரமன் இவ் வாறுகுணங்களையு முடையோனென்பது தோன்ற, 'மலர்ப்பகவன்' என்றார். 'இனந்தரு சூழலொடிம்மென வந்தான்' என்பதற்கு, பலவகை யாலோசனையோடு விரைந்துவந்தான் எனப் பொருள் கூறுவாரு முளர். இம்மெனல் - விரைவுக்குறிப்பிடைச்சொல். (உ)

மாமறை யண்ணன்முன் வந்து பராவித்
தாமரை நேர்தரு தாடொழு தென்னை
நீமன மீது நினைந்ததெ னென்னக்
காமன் வினவ வயன்கழ றுற்றான்.

(இ-ள்.) மன்மதனானவன் சிறந்த வேதங்களை யுணர்ந்த பிரமனுக்குமுன்னேயடைந்து தாமரைமலர்போன்ற பாதங்களை வணங்கித்துதித்து, என்னை நீர்மனத்தில் நினைத்தது யாதுகாரணமென்று வினவ, பிரமன் சொல்லத்தொடங்கினன். எ-று

கங்கை மிலைச்சிய கண்ணுதல் வெற்பின்
மங்கையை மேவநின் வாளிக டூவி
யங்குறை மோன மகற்றினை யின்னே
யெங்கள் பொருட்டினி லேகுதி யென்றான்.

(இ-ள்.) (மதனனே !) கங்கைநதியை யணிந்த சிவபெருமான் பார்வதிதேவியாரைத் திருமணஞ் செய்யும்பொருட்டு உனது புஷ்பபாணங்களைப் பிரயோகித்து, திருக்கயிலாயத்தில் (முனிவர்கள்பொருட்டுக்) கொண்டிருக்கின்ற மௌனநிலையை நீக்கும்வண்ணம் எங்கள் நிமித்தமாகச் செல்லக்கடவையென்று கூறினான்.—எ-று.

உனக்குச் சம்மதமில்லையெனினும் எங்களது வேண்டுகோள் காரணமாகச் செல்லவேண்டுமென்று கூறினனென்பார், 'எங்கள் பொருட்டினிலேகுதியென்றான்' என்று கூறினார். (ச)

வேதனிவ் வாறு விளம்பிய கூற்றுந்
தீதுறு பொங்கழல் செய்யவள் சேயோன்
காதிடை யேநெறி யாக்கடி திற்போ
யேதமி லுள்ள மெரித்ததை யன்றே.

(இ-ள்.) பிரம னிவ்வாறு சொல்லிய வார்த்தையாகிய குற்றம் பொருந்திய கொடிய நெருப்பானது திருமகள் புத்திரனாகிய மன்மதனது காதின்வழியாக விரைந்து சென்று குற்றமற்ற அவனுடைய மனதைச் சுட்டது.—எ-று.

பிரமன் கூறியவார்த்தை தீயின் வெம்மையினு மிகக் கொடிதாயிருத்தலின், 'விளம்பிய கூற்றுந் தீதுறு பொங்கழல்' என்றும், மன்மதனுடைய உள்ளம் சிவசிந்தனையை யுடையதாகலின், 'ஏதமிலுள்ளம்' என்றுங் கூறினார். கூற்று-சொல். எரித்ததை என்பதில், ஐகாரம் சாரியை. (ரு)

கிட்டி யரன்செயல் கேடுசெ யென்னுங்
கட்டுரை யேவரு காமனு ளங்குஞ்
சுட்ட தெனிற்பிறை சூடிய வன்மெய்
யட்டிடு கின்றது மற்புத மாமோ.

(இ-ள்.) நீ சென்று சிவபெருமானுடைய மௌனநிலையைக் கெடுப்பாயாகவென்று சொல்லிய உறுதிமொழியே அங்குவந்த மன்மதனது மனதைச்சுடுமாயின், சந்திரசேகரராகிய சிவபெருமான் அம்மன்மதனது சரீரத்தை யெரித்தலும் ஒரு ஆச்சரியமாகுமோ ?—எ-று.

சிவபெருமானது மௌன நிலையைத் தவிர்க்கக் கடவையென்று பிரமன் கூறியவார்த்தையே மன்மதனது மனதைச் சுட்டதெனின், அவ்வெம்பெருமானது நெற்றிக்கண்ணினா லெரிந்தனனென்று கூறுதல் வியப்பன்றென்று கூறியபடி. (சு)

இத்திற மாமல ரோந்த லியம்பக்
கைத்துணை கொண்டிரு கன்னமும் வல்லே
பொத்தியி னைந்து புராந்தக னமஞ்
சித்தச வேளுரை செய்தன னம்மா.

(இ-ள்.) இவ்வாறு கமலாசனனாகிய பிரமன் கூறவும் மன்மதன் தனது இரண்டுகரங்களால் இருகாதுகளையும் விரைவாக மூடிக்கொண்டுவருந்திச் சிவநாமத்தை யுச்சரித்தனன்.—எ-று.

சிவநாமத்தை யுச்சரித்தலாவது—சிவசிவ வென்று ஸ்மரித்தல். இனைதல் - வருந்துதல். அம்மா - வியப்பிடைச்சொல். (எ)

ஈட்டுறு பல்பவ மெய்துவ தோர்சொற்
கேட்டன னென்று கிலேசம தாகி
வாட்டிய மென்மலர் போலணி மாழ்கிப்
பூட்டுவி லண்ணல் புகன்றிடு கின்றான்.

(இ-ள்.) நாணேறிட்ட கரும்புவில்லையுடைய முதல்வனாகிய மன்மதன் சேகரிக்கின்ற அநேக பாவங்களையடைதற்கேதுவாகிய ஒரு கொடுமொழியைக் கேட்டேனென்று மனம் வருந்தி (நெருப்பில்) வாட்டிய மெல்லிய மலரைப்போல அழகு குன்றிச் சொல்லத்தொடங்கினான்.

இவ்வொரு வார்த்தையே பிறவிக் கேதுவாகிய பல பாவங்களைத் தருமென்று வருந்தின னென்பார், 'ஈட்டுறு பல்பவ மெய்துவதோர் சொல்' என்றும், அதனைக் கேட்டலாகிய துர்ப்பாக்கியத்தைப்பெற்று வருந்தின னென்பார், 'கேட்டன னென்று கிலேசமதாகி' என்றும், அதனால் தேகமெலிவெய்தினனென்பார், 'வாட்டிய மென்மலர் போலணி மாழ்கி' என்றுங் கூறினார். (அ)

வேறு.

வன்கண் ணரும்மா சறுகாட் சியர்பா
னன்கண் ணுறினுய் யுநலம் புகல்வா
ருன்கண் ணுறினித் தவறோ தினையா
லென்கண் ணடிகட் கிலையோ வருளே.

(இ-ள்.) கொடியவர்களும் குற்றமற்ற நல்லறிவினையுடைய பெரியோர்களிடத்தில் அன்போடு செல்வாராயின் அவர்கள்கடைத்தேறுதற்குரிய நன்மையைக்கூறுவார்கள். அங்ஙனமாக, யான் உம்மிடத்திற்குவந்தால் இந்தத் தகாதமொழியைக் கூறினீர். என் விஷயத்தில் தேவரீருக்குக் கிருபையில்லைபோலும்.—எ-று.

கொடியவர்களாயிருப்பினும் நல்லோர்களை யடுத்தால் அவர்கள் நன்மையே கூறுவார்கள். அங்ஙனமாக, நீர் எனக்குத் தமையனாக விருந்தும், இக் கொடுமொழி கூறினீராகலி னென்னிடத்துத் தேவரீருக்குக் கிருபை யில்லைபோலு மென்று வருந்தினனென்பது கருத்து. அண் - முதனிலைத் தொழிற்பெயர். (கூ)

வன்னப் புவிமங் கையைமா மலர்மேற்
பொன்னைப் பிறரைப் புணர்வுற் றிடுவான்
கன்னற் சிலைபூங் கணைகொண் டமர்செய்
தென்னத் தனைவென் றிசைகொண் டிலனோ.

(இ-ள்.) (யான்) எனது தந்தையாகிய திருமாலை அழகிய நிலமகளையும், சிறந்த தாமரைமலரில் வசிக்குந் திருமகளையும் மற்றவர்களையும் புணரும் வண்ணங் கரும்புவில்லும் புஷ்பபாணமுங் கொண்டு போர்செய்து வெற்றிபெற்றுக் கீர்த்தியடைய வில்லையோ?—எ-று.

பிறரை என்றது, இராமாவதாரத்திற் சீதா பிராட்டியையும், கிருஷ்ணவதாரத்தில், உருக்குமணி முதலிய அஷ்டமங்கையரையும் பிறமாதர்களையுமாம். (க0)

வெள்ளைக் கமலத் தியைமெய் யுறவுந்
தெள்ளுற் றணிசெய் ததிலோத் தமைபா

னுள்ளப் புணர்வுற் றிடவும் முனையான்
பிள்ளைச் சமர்செய் திசைபெற் றிலனோ.

(இ-ள்.) நீர் வெண்டாமரைமலரில் வசிக்கும் சரஸ்வதியைப்புணரவும், அழகாக ஆலோசித்துச் சிருஷ்டித்த (மகளாகிய) திலோத்தமையினிடத்தில் உள்ளப்புணர்ச்சியுண்டாகவும், உம்மோடு யான் சிறுபோர்செய்து கீர்த்திபெறவில்லையோ?-எ-று.

நீர், அழகுகளெவற்றினுஞ் சிறிது சிறிதாக வெடுத்துச் சிருட்டித்த மகளாகிய திலோத்தமையினிடத்து முறைபிறழ்ந்து புணர்ச்சி விருப்புறும்படி மிக்க விலேசானே செய்தனனென்று கூறினனென்பார், 'திலோத்தமைபா னுள்ளப்புணர்வுற்றிடவும் முனையான் பிள்ளைச்சமர் செய்திசை பெற்றிலனோ' என்று கூறினர். (கக)

சீர்பெற் றிடுசெந் திருவைத் திருமான்
மார்பிற் குடியா யுறவைத் திலனோ
கார்பெற் றவிழிக் கலைமங் கையையுன்
னேர்பெற் றிடுநா விலிருத் திலனோ

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய இலக்ஷுமியைத் திருமாலினுடையமார்பில் நிலையாக வைக்கவில்லையோ? கரிய கண்ணிணையுடைய சரஸ்வதியை உமது அழகிய நாவின்கணிருத்தவில்லையோ?—எ-று.

குடியாயுறவைத்தல் - நிலைபெறுவித்தல். சதா வேதமோதுந் திருநாவென்பார், 'ஏர்பெற்றிடுநா' என்று கூறினர். (கஉ)

தண்ணின் றகுழற் சசியென் றுரைசெய்
பெண்ணின் றலையுற் றிடுபெற் றியலால்
விண்ணின் றலைவற் குளமெய்ம் முழுதுங்
கண்ணென் றிடுபல் குறிகண் டிலனோ.

(இ-ள்.) சுவர்க்கத்தலைவனாகிய இந்திரனுக்குக் குளிர்ச்சிபொருந்திய கூந்தலையுடைய இந்திராணியினிடத்து வைத்த விருப்பமல்லாமலும் தேகமுழுமையும் கண்ணென்று சொல்லப்பட்ட பல பெண்குறிகளை யுண்டாக்கவில்லையோ?—எ-று

இந்திரன் கௌதமமுனிவரரது பத்தினியை விரும்பிப் புணர்ந்தமையால் அவனுக்கு உடம்பு முழுதும் யோனியாகும்படி அம்முனிவர் சபிக்கப் பின் இந்திரன் வருந்திவேண்ட,அம்முனிவர் கருணைசுரந்து அவனுக்குமாத்திரம் யோனியாகவும்,பிறருக்குக் கண்ணாகவும் விளங்கும்படி யருள்செய்தமையின், 'விண்ணின்றலைவற்குளமெய்ம்முழுதுங்-கண்ணென்றிடுபல்குறிகண்டிலனோ' என்று கூறினனென்க. (கங)

விசையுற் றிடுசெங் கதிர்மே லவர்கீழ்த்
திசையுற் றவராங் கொருசே யிழைபோ
லிசையுற் றிடுபா கனிடைப் புணரா
வசையுற் றிடுபான் மைமயக் கிலனோ.

(இ-ள்.) விசையாகச் செல்லுகின்ற சூரியனாகிய மேலோனும், கீழ்த்திசைத் தலைவனாகிய இந்திரனும் ஒரு பெண்போல் வடிவங்கொண்டுவந்த சாரதியாகிய அருணனைப் புணர்ந்து அபகீர்த்தியடையும்வண்ணம் மயக்கவில்லையோ?—எ-று.

இதன் வரலாறு,—முன்பொருகாலத்தில் சூரியனது தேர்ப்பாகனாகிய அருணன் பெண்ணுருவங்கொண்டு இந்திரனது சபைக்குச் செல்ல, அப்பெண்ணை இந்திரன் கண்டு மோகித்துப் புணர்ந்தனன். அப்பொழுது ஒரு குழந்தை பிறந்தது. பின் அருணன் அக்குழந்தையை யெடுத்துக்கொண்டு தனது சுயரூபத்துடன் சூரியனை

வந்து காண, சூரியனிக்குழந்தை யேதென்று வினவினன். அருணன் நடந்த வரலாற்றைக் கூறக் கேட்டு அப்பெண்ணுருவைத் தானும் பார்க்க விரும்பினன். உடனே அருணன் அவ்வடிவத்தைக்கொள்ளத் தானும் மையல்கொண்டு புணர்ந்தனன் அப்பொழுது ஒரு குழந்தை பிறந்தது. இந்திரனுக்குப் பிறந்த பிள்ளை வாலி என்றும், சூரியனுக்குப் பிறந்த பிள்ளை சுக்கிரீவனென்றும் பெயர்பெற்றன ரென்பதாம். (கச)

கதனத் தொடுவந் துகலந் தவர்பா
லிதநட் புறுமா மதியென் கணையான்
மதனத் தொடுதே சிகன்மா தையுறுப்
புதனைத் தருபான் மைபுணர்த் திலனோ.

(இ-ள்.) வெப்பத்துடன்வந்துசேர்ந்தவர்களிடத்தில் இனிய நட்புக்கொள்ளுகின்ற மேன்மையினையுடைய சந்திரன் எனது பாணத்தினால் காமவிகாரத்துடன் குருபத்தினியைப்புணர்ந்து புதனைப்பெறும்வண்ணஞ் செய்யவில்லையோ?—எ-று.

சந்திரன் பிரகஸ்பதிபகவானிடத்திற் கல்வி கற்கும்பொருட்டுச் சென்று அவரது மனைவியாகிய தாரையைப்புணர்ந்து புதனென்னும் புத்திரனைப் பெற்று, அப்பிரகஸ்பதியின் சாபத்தினால் க்ஷயரோகமுற்று வருந்தும்படி நிகழ்ந்தது எனது வல்லமையேயன்றி வேறன்றென்று கூறினனென்பார், 'தேசிகன் மாதை யுறுப் புதனைத் தரு பான்மை புணர்த்திலனோ' என்று கூறினார். (கரு)

முற்றே தின்மறைத் தொகைமூ தறிவாற்
கற்றே துமுணர்ந் திடுகாட்சி பெறு
நற்றே வர்கள்யா வையுநா ரியர்தங்
குற்றே வல்செயும் படிகூட் டிலனோ.

(இ-ள்.) கெடாத வியல்பினையுடைய வேதங்களனைத்தையுந் தமது பேரறிவினாற் கற்றுச் சர்வமுமுணரத்தக்க ஞானத்தைப் பெற்றுள்ள நல்லதேவர்களனைவரையும் தேவமாதர்களுக்கு ஊழியஞ்செய்யும்வண்ணம் செய்யவில்லையோ?—எ-று.

மறைதே ரும்வசிட் டன்மரீ சிமிகக்
குறிதா முனியத் திரிகோ தமனல்
லறிவா லுயர்கா சிபனா தியராந்
துறவோர் தமதாற் றறொலைத் திலனோ.

(இ-ள்.) வேதங்களையுணர்ந்த வசிட்டரும், மரீசியும், மிகக் குறியவராகிய அகஸ்தியரும், அத்திரியும், கௌதமரும், சிறந்த ஞானத்தாலுயர்ந்த காசிபருமாகிய துறவிகளினது தவவல்லமையைத் தொலைக்கவில்லையோ?— எ-று.

வசிட்டராதி மகாமுனிவர்களும் எனது வல்லமையால் தங்கள் தவவல்லமை குறைந்தனர்களாயின் மற்றையனாக் குறித்துக் கூறவேண்டா வென்பது கருத்து. ()

மன்னன் மரபுற் றிடுமா னவரைப்
பின்னா கியமும் மைகொள்பே தகரை
மின்னார் கண்மயக் கினில்வீட் டிலனோ
வென்னா ணைகடந் தவர்யா ருளரோ.

(இ-ள்.) நிலைபெற்ற நான்கு வகுப்பாகப் பொருந்திய மனிதர்களையும், தாழ்வாகிய மூவகைப்பேதமாகிய சாதிகளையும் மாதர்களது மயக்கத்தில் செலுத்தவில்லையோ? (ஆகையால்) எனது ஆக்கினையைக் கடந்தவர்கள் யாரிருக்கின்றனர்.—எ-று.

நான் மரபுற்றிமோனவராவார்—பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்பவர்கள். பின்னுகிய மும்மைகொள் பேதகர் என்றது,—அநுலோமர், பிரதிலோமர், சங்கரசாதியார் என்பவர்களே. இவருள், பிராமணன் க்ஷத்திரிய வைசிய சூத்திர சாதிப்பெண்களைக் கூடிப் பிறந்த மூன்று சாதியாரும், அரசன் வைசிய சூத்திரசாதிப் பெண்களைக் கூடிப்பிறந்த இரண்டு சாதியாரும், வைசியன் சூத்திரசாதிப் பெண்ணைக் கூடிப்பிறந்த ஒருசாதியானுமாகிய அறுவரும் அநுலோமர். இவர்களுயர்ந்தசாதியாம். பிராமணஸ்திரீயினிடத்தில் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் இம்மூவருஞ் சேர்ந்து பிறந்த மூன்று சாதியாரும், க்ஷத்திரியஸ்திரீயினிடத்தில் வைசியன் சூத்திரனிருவருங் கூடிப்பிறந்த இரண்டு சாதியாரும், வைசிய ஸ்திரீயினிடத்தில் சூத்திரன் கூடிப்பிறந்த ஒரு சாதியானுமாகிய அறுவரும் பிரதிலோமர். இவர்கள் தாழ்ந்தசாதியாம். இவ்விருதிறத்தினருங் கூடிப் பிறந்தவர்கள் சங்கரசாதியாராம். இவருள், பிராமணனுக்கு க்ஷத்திரியப் பெண்ணினிடத்திற் பிறந்தவன் சவர்ணன். வைசியப் பெண்ணினிடத்திற் பிறந்தவன் நிஷாதனன். சூத்திரப்பெண்ணினிடத்திற் பிறந்தவன் பார்சுவன், க்ஷத்திரியனுக்கு வைசிய ஸ்திரீயினிடத்திற் பிறந்தவன் மாகிஷன். சூத்திரப் பெண்ணினிடத்திற் பிறந்தவன் தௌஷ்ண்யன். வைசியனுக்குச் சூத்திரஸ்திரீயினிடத்திற் பிறந்தவன் உக்கிரன். பிராமணஸ்திரியினிடத்தில் க்ஷத்திரியனுக்குப் பிறந்தவன் சூதன். வைசியனுக்குப் பிறந்தவன் வைதேகன். சூத்திரனுக்குப் பிறந்தவன் சண்டாளன். க்ஷத்திரியப்பெண்ணினிடத்தில் வைசியனுக்குப் பிறந்தவன் மாகதன்-சூத்திரனுக்குப் பிறந்தவன் க்ஷத்தா. வைசியப்பெண்ணினிடத்தில் சூத்திரனுக்குப் பிறந்தவன் இரதகாரன் என வறிக. பிரதிலோமத்தாணுக்கும் அநுலோமப் பெண்ணுக்கும் பிறந்தவன் விராத்தியன் எனவும், அநுலோமத்தாணுக்கும் பிரதிலோமப் பெண்ணுக்கும் பிறந்தவன் அந்தராளன் எனவும் பெயர் பெறுவர் என வறிக. (கஅ)

அறைபெற் றிடுமித் திறமா னவெலா
முறைபெற் றிடுமென் னின்முடிந் திடுமோ
பிறைபெற் றிடுகின் றபெருஞ் சடையெம்
மிறைபெற் றிடுசத் தியியற் றிடுமே.

(இ-ள்.) சொல்லப்பட்ட இவ்விஷயங்களனைத்தும் முறையே பெற்றுள்ள என்னால் முடியுமோ? பிறைச்சந்திரனையணிந்த பெரிய சடைமுடியையுடைய எமது சிவபெருமான் படைத்துள்ள வல்லபமே செய்தருளும்.—எ-று.

யான் ஒருமுன்னிலைச்சுட்டேயன்றி என்னால் ஒரு செயலு மின்றென்பதும், அனைத்துஞ் சிவபெருமானது திருவருட்செயலேயென்பதும் விளங்கக் கூறினனென்பார், 'பிறைபெற் றிடுகின்ற பெருஞ்சடையெம் மிறைபெற்றிடு சத்தி யியற்றிடுமே' என்று கூறினர். (கக)

மாலே முதலா கியவா னவர்தம்
பாலே யடல்வா கைபடைப் பதலான்
மேலே நதிசூ டியமே லவன்மேற்
கோலே வினன்வென் றிடல்கூ டுமதோ.

(இ-ள்.) திருமால் முதலாகிய தேவர்களிடத்தில் வல்லமைபொருந்திய வெற்றிபெறுவதல்லாமல், திருமுடியில் கங்கைநதியையணிந்த முதல்வனாகிய சிவபெருமான்மீது பாணங்களைப்பிரயோகித்துச் செயிக்கக்கூடுமோ?—எ-று. (உ0)

ஐதா கியசீர் கொடவன் முறைசெய்
நொய்தா னவர்போ லநுவன் றணையால்

வெய்தா மழலா கியமே லவன்மே
லெய்தா லுமென்வா ளிகளெய் திடுமோ.

(இ-ள்.) அழகிய சிறப்பினையுடைய அச் சிவபெருமானை, சாமானியத் தொழிலைச் செய்கின்ற அற்ப தேவர்களைப்போலக் கருதிக் கூறினீர். கொடிய அக்கினி வடிவமாகிய அவ்வெம்பெருமானது திருமேனியில் யான் பிரயோகிக்கத் தொடங்கினும் என் அம்புகள் சென்று தாக்குமோ?—எ-று.

சிவபெருமான் அழல்வண்ண ராகலின் எனது புஷ்பபாணம் அவ் வெம்பெருமான்மீது சென்று பயன்படாதென்று கூறினனென்பார், 'வெய்தா மழலாகிய மேலவன்மே லெய்தாலு மென்வாளிக ளெய்திடுமோ' என்று கூறினர். (உக)

கையுந் நகையுங் கதிரார் விழியு
மெய்யுந் தழலாம் விமலன் றனையா
னெய்யும் படிசென் றிடினிவ் வுயிர்கொண்
டுய்யுந் திறமு முளதோ வுரையாய்.

(இ-ள்.) திருக்கரமும், திருநகையும், ஒளிபொருந்திய திருவிழியும், திருமேனியும் அக்கினிவடிவாகப் பொருந்திய சிவபெருமானை யான் பாணப்பிரயோகஞ் செய்யும்படி செல்வேனாயின், பின், இந்தப் பிராணனோடு பிழைக்குந்தன்மையு முண்டாகுமோ? நீர் கூறுவீராக.—எ-று.

தாருகாவனத்து முனிவர்களேவிய தழல் திருக்கரத்தும், முப்புரங்களையுமெரித்ததழல் திருநகையினும், வலக்கண் இடக்கண்களாகிய சூரியசந்திராகளுடன் அக்கினி திருநுதலினும், இவையனைத்துமன்றி தழலே திருமேனியாகவுமுடைய பெருமானென்று கூறினனென்க. இதனை—"தீத்தானுன்கண்ணிலே தீத்தானுன்கையிலே - தீத்தானுமுன்றன் சிரிப்பிலே - தீத்தானுன்-மெய்யெலாம் புள்ளிருக்கு வேளூரா வுன்னையிந்தத் - தையலாளெப்படி சேர்ந்தாள்" என்னுஞ் செய்யுளானுமுணர்க.

பற்றோ டிகலற் றபரம் பொருளை
யெற்றோ மயல்செய் குவதீ சனையு
மற்றோ ரெனநின் னின்மதித் தனையாற்
சற்றோ வவனாற் றறவிர்த் திடவே.

(இ-ள்.) உறவும் பகையுமில்லாத சிவபெருமானை எவ்வாறு மயக்குவது? அச்சிவபெருமானையும் மற்றவர்களைப்போல உமது மன்தில் நினைத்தீர். அவரது பராக்கிரமம் நீக்குதற்கு அற்பமாயுள்ளதோ?—எ-று.

சிவபெருமான் விருப்பு வெறுப்பற்றவ ராகலின் அவரை மற்றவர்களைப் போல மயக்குதல் கூடாதென்று கூறினனென்பது கருத்து. 'பற்றோடிகலற்ற பரம்பொருள் என்பதனை:—"வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க் - கியாண்டு மிடும்பையில" என்னுந் திருக்குறளானுமுணர்க. (உரு)

சூறா வளிவை கியசூ ழலின்வா
யேறா வொருபூ ளையெதிர்ந் துளதே
னீறா டியமெய் யுடைநின் மலன்மேல்
வீறாய் வினையேன் பொரமே வுவனே.

(இ-ள்.) சுழல்காற்றுப் பொருந்திய விடத்தில் சென்று ஒரு பூளைப்பஞ்சு எதிர்க்குமாயின், விபூதி தரித்த திருமேனியினையுடைய சிவபெருமான்மேல் இறுமாப்புடன் தீவினையேனாகிய யான் போர்செய்தற்குச் செல்லுவன்.—எ-று.

சுழல்காற்றின்முன் பூளைப்பூவெதிர் நிற்குமாயின் யான் சிவபெருமானெதிர்நின்று போர்செய்வேனென்று கூறினனென்க. (உச)

ஆறுற் றிடுசெஞ் சடையண் ணலுடன்
மாறுற் றவருண் டெனின்மற் றவர்தா
மூறுற் றனரல் லதுளத் துயர்கொண்
டூறுற் றனரல் லதிருந் துளர்யார்.

(இ-ள்.) கங்கைநதிதங்கிய சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமானுடனே எதிர்த்தவருண்டாகில், அவர்கள் அவயவபங்கப்பட்டவர்களாகவும், அல்லது மனவருத்தத்துடன் அழிந்தவர்களாகவு மிருப்பார்களேயன்றி உயிர் பிழைத்திருந்தவர்கள் யார்.—எ-று.

சிவபெருமானோடு மாறுகொண்டவர்களில் அவயவங்கப் பட்டவர்களும் உயிர் துறந்தவர்களு மாயினர்களே யன்றி, ஒருவரும் உயிர் பெற்றுய்ந்தில ரென்பது கருத்து. (உரு)

இந்நா ரணனு தியர்யா வர்களு
மந்நா ளமலன் பணியாற் றிடலு
முன்னு வவர்சிந் தனைமொய்ந் நகையா
லொன்னார் புரமட் டதுணர்ந் திலையோ.

(இ-ள்.) இந்தத் திருமால் முதலிய யாவர்களும் அக்காலத்தில் சிவபெருமானது திருப்பணியைச் செய்தலும் அவர்கள் மனஅபிப்பிராயத்தைத் திருவுள்ளங்கொண்டருளிப் புன்னகையினால்,பகைவர்களது முப்புரங்களையு மெரித்தருளினமையை நீர்உணரவில்லையோ?—எ-று.

திருமாலாதிதேவர்கள் வேண்டுகோளால் முப்புரங்களையு மழித்தருளியசிவபெருமானுக்கு முன்னே எனதாற்றலெவ்வளவென்று கூறினனென்க. (உசு)

எந்தா யருளென் றொரிளங் குமரன்
வந்தா தியையேத் தலும்வை துசினக்
கொந்தா ரழல்போல் வருகூற் றுவனை
யந்தாள் கொடுதைத் ததறிந் திலையோ.

(இ-ள்.) எமது தந்தையே காத்தருள்வீராகவென்று ஒரு சிறுபிள்ளையாகிய மார்க்கண்டேயர் அடைக்கலமாகவந்து முதற்கடவுளாகிய சிவபெருமானைத் துதிக்கவும், பழிப்புரைகூறிக் கடிய கோபாக்கினியேயுருக்கொண்டாற்போன்று வந்த இயமனை அழகிய திருவடிகளைக்கொண்டுதைத்தருளியதை நீர் அறிந்திலீரோ?—எ-று.

எல்லா உயிர்களையுங் கொல்லத்தக்க இயமனை மார்க்கண்டேயர் பொருட்டு உதைத்துக்கொன்றருளிய சிவபெருமானது பராக்கிரமத்தை யறியீர்போலு மென்று கூறினனென்க. (உஎ)

முன்னைப் பகலீ யுமுகுந் தனுமாய்ப்
பன்னற் கரிதா யபரம் பொருள்யா
மென்னச் சிவனெய் தியிகழ்ந் தவுனைச்
சென்னித் தலைகொண் டதுதேர் கிலையோ.

(இ-ள்.) முன்பொருகாலத்தில் நீரும் திருமாலுமாகச் சொல்லுதற்கரிய பரப்பிரமம் நாமேயென்று கூறிப்பகைத்து நிற்க, அப்பொழுது சிவபெருமான் எழுந்தருளி இகழ்ந்துகூறியஉம்மை நடுத்தலை கிள்ளியதை அறியீரோ?—எ-று.

சிருஷ்டிக்கருத்தராகிய உமது தலைகளிலொன்றைக் கிள்ளிய சிவபெருமானுடைய பராக்கிரமத்தை நீரேயறியீர்போலுமென்று கூறினனென்க. (உஅ)

அடன்மே வுசலந் தரனு தியராய்ப்
படிமே லுளதோர் பலரு னவர்தா
முடிவா ரரனோ டுமுரண் டிடலுங்
கெடுமா றுபுணர்த் ததுகேட் டிலையோ.

(இ-ள்.) வலிமைபொருந்திய சலந்தராசுரன் முதலியவராக உலகத்திலிருந்த அநேக அசுரர்கள் இறப்பவர்களாய்ச் சிவபெருமானோடு பகைகொண்டெதிர்க்கவும், அவர்களிறக்கும்வண்ணம் உபாயஞ் செய்தருளினமையை நீர் கேட்டிலீரோ?

சிவபெருமானுடன் பகைகொண்ட சலந்தராசுரனாதி வலியோர்களும் அழிவுற்றனராயின், சிறியேன் அவர்பராக்கிரமத்தின் முன் எத்தன்மையினனென்று கூறினனென்பது கருத்து. (உக)

வீடெய் துறுநின் மகன்வேள் விநிலத்
தூடெ ய்தினர்யா வருமொப் பிலரன்
மாடெய் தியவீ ரனின்மா னமொரீஇப்
பாடெய் தியபுன் செயல்பார்த் திலையோ.

(இ-ள்.) அழிதலையடைந்த உமது புத்திரனாகிய தக்ஷனது யாகசாலையிற் சென்றவர்களனைவரும், ஒப்பற்ற சிவபெருமானிடத்திற் றோன்றிய வீரபத்திரரால் பெருமைகுலைந்து துன்பமடைந்த அற்பச்செய்கையை நீர் பார்த்திலீரோ?—எ-று.

உமது புத்திரனாகிய தக்ஷன் சிவபெருமானுக்கு விரோதமாகச்செய்த வேள்வியிலடைந்திருந்த தேவர்கள் வீரபத்திரமூர்த்தியால் அடைந்த துன்பத்தை நீரறியீர்போலுமென்றுகூறியதனால், அவன் சிறுவிதியென்னும் பெயர்பெற்றவனாகவிருந்தும் சிவபெருமானருகிருந்த வீரபத்திரராலழிவுறுவனாயின், அற்பனாகிய யான் நேரே சிவபெருமான்மீது காமப்போர்செய்து வெற்றிபெறுதல் கூடுமோவென்று கூறினனென்பது கருத்து. (௩0)

அண்டா தவகங் கையொடா ழியின்வாய்
விண்டா னவரச் சுறமே வுவிட
முண்டா னிகழ்கங் கையையோ ரணுவிற்
கொண்டா னவன்வன் மைகுறிக் கிலையோ.

(இ-ள்.) திருமாலானவர் அஞ்சும்வண்ணம், தடுக்கப்படாத இறுமாப்புடன் கடலிற்றோன்றிய விஷத்தையுண்டருளியவரும், பரவிவந்தகங்கையை ஓரணுவைப்போல சடையிலணிந்தவருமாகிய சிவபெருமானது பராக்கிரமத்தை நீர் சிந்தித்திலீரோ?—எ-று.

உலகமுழுவதையுந் தகித்தற்குரிய கொடிய வேகத்துடன்றோன்றிய விஷத்தையுண்டும், அவ்வுலகங்களை யழிக்கவெழுந்த கங்கையை யணுவளவாகச் சடைமுடியிலணிந்து முயிர்களைக் காத்தருளிய சிவபெருமானுக்கு முன்னே எளியேனெதிர் நிற்க வலியில்லேனென்று கூறினனென்க. (௩க)

தரியா வுளமால் கொடுதென் னிகழு
மரியோ டுகைம்மா வையடற் புலியை
யுரியா மிசைபோர் வையுடுக் கையெனப்
பரியா வரனுற் றதுபார்த் திலையோ.

(இ-ள்.) அடக்குதற்கரிய மனமயக்கத்துடன் தன்னையிகழ்ந்த நரசிங்கத்தையும் (கயாசுரனென்னும்) யானையையும், வலியபுலியையு முரித்துப்போர்வையாகவும் ஆடையாகவுங் கொண்டு சிவபெருமானெழுந்தருளி யிருத்தலை நீர்பார்த்திலீரோ?

இரணியனையழித்த திருமாலாகிய நரசிங்கமும் கயாசுரனென்னும்யானையும் தாருகாவன முனிவர்கள்செய்த அபிசார வேள்வியிற்றோன்றியபுலியும் சிவபெருமானாலழிவுபெறுமாயின், அவ்வெம்பெருமானது பராக்கிரமத்தை யுரைப்பரிதென்பது கருத்து. அரி-என்பது ஈண்டு நரசிங்கத்தை. (௬உ)

ஓரார் தனதுண் மையையுள் ளமிசை
யாரா யினுமாற் றவகந் தைபெறின்
வாரா வவர்தம் வலிமாற் றிடுமாற்
றோராய் கொல்பரஞ் சுடர்செய் கையதே

(இ-ள்.) தமது உண்மையை யுணராதவர்களாய் மனதினிடத்தில் மிகுந்த கர்வத்தை யாராயினுங்கொண்டால், அவர்களிடம் வந்து அவர்கள் கொண்ட இறுமாப்பை யழித்தருளுவர். இது சிவபெருமானது செய்கை. இதனை நீர் உணர்ந்திலீரோ?—எ-று.

தனதுண்மை-தமது பதித்தன்மை. 'ஓரார் தனதுண்மையை யுள்ளமிசை யாராயினு மாற்றவ கந்தைபெறின்' என்பதற்கு, தமது எளிமைத்தன்மையையுணராதவர்களாய் யாவராயினும் அவ்வெம்பெருமானது நிலையைக் கெடுக்கும்படி யகங்கரிப்பார்களாயின், எனப்பொருள் கூறினுமாம். ஓரார் - முற்றெச்சம். வாரா-செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். கொல்-ஐயவிடைச்சொல். (௬௩)

இறுகின் றகடைப் பகலீ றிலதோர்
கறைதுன் றுமிடற் றிறைகண் ணினும்வீழ்
பொறியொன் றதனாற் பொடிபட் டிடுநீ
யறிகின் றிலையோ வகிலங் களுமே.

(இ-ள்.) உலகங்களழியவேண்டிய ஊழிக்காலத்தில் அழிவில்லாத காளகண்டராகிய சிவபெருமானது திருக்கண்ணினின்றும் வீழ்ந்த ஒரு நெருப்புப்பொறியினால் அவைநீறுபட்டழியும்; இதனை நீர் அறிந்திலீரோ?—எ-று. (௬௪)

இப்பெற் றியனா கியவீ சனையென்
கைப்பற் றியவிற் கொடுகந் தமலா
ரப்பிற் பொருகின் றிலனா ருயிர்மேன்
மெய்ப்பற் றிலரிச் செயல்வேண் டுவரே.

(இ-ள்.) இத்தன்மையினையுடைய சிவபெருமானை என்கையிற் பிடித்த (கரும்பு) வில்லைக்கொண்டு மணம்பெருந்திய புஷ்பபாணங்களால் போர்செய்யமாட்டேன். அரிய உயிரினிடத்தில் உண்மையான அன்பில்லாதவர்கள் இக்காரியஞ்செய்யவிரும்புவார்கள்.—எ-று.

உயிர்ப்பற்றில்லார் செய்யத்தக்க இத்தகாத காரியத்தை யான் செய்யேனென்று கூறினனென்க. (௬௫)

மேனா ளகிலந் தரமெல் லியலா
வானா வருடன் னையளித் தொருபாற்
றானா கவிருத் தியதற் பரனை
நானா மயல்செய் வதுநன் றிதுவே.

(இ-ள்.) முற்காலத்தில் உலகங்களைப் படைக்கும்பொருட்டுத் தம்மைவிட்டு நீங்காத திருவருளையே ஒரு பெண்ணுருவாகச் செய்து, தமது ஒரு பாகத்திலமர்த்திக்கொண்ட சிவபெருமானை அற்பனாகியயானோ? மயக்கத்தக்கவன்; இக்காரியம் நன்றாயிருக்கின்றது :—எ-று.

சிவபெருமான் உலக சிருஷ்டி காரணமாகத் தமதருளையே ஒருபெண்ணுருவாகச் செய்து தம திடப்பாகத்திற் கொண்டனரோ யன்றி, ஏனையர்போலக் காமங் காரணமாகவன்றாகலின் அவரை மயக்கித் தவநிலையை மாற்றுதல் என்னால் முடியாத காரியமென்று கூறினனென்பார், 'மெல்லியலா வானவருடன்னை யளித்தொருபாற் றானகவிருத்திய தற்பரனைநானுமயல்செய்வது நன்றினியே' என்றுகூறினார்; இதனை,

" மாயநட் போனாயு மாயா மலமெனு மாதனையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப்பின் றாயைமறந்
தேயும தேநிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே." — என்னும்
பட்டினத்துப்பிள்ளையார் திருவாக்கானு முணர்க. (௬௬)

வே று.

என்னு மதவே ளிசையா மறுத்திடலும்
பொன்னார் கமலப் பொகுட்டுத் தலைவந்த
மன்னன வேதா மனக்கவலை கொண்டுசில்போ
துன்னு நெடிதே யுயிரா வுரைக்கின்றான்.

(இ-ள்.) மன்மதன் இவ்வாறு கூறித் தான் சொல்லியகாரியத்திற்கு ஒத்துக் கொள்ளாமல் தடைசெய்யவும், பொன்மயமாகிய தாமரைப் பொகுட்டில் தோன்றிய முதல்வனாகிய பிரமன் மனவருத்தங்கொண்டு கொஞ்சநேரஞ் சிந்தித்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு சொல்வானாயினான்.—எ-று. (௬௭)

வெண்மை யறிவாற் றமைவியக்கும் விண்ணவர்பா
லண்மை யிலனாகு மண்ணலியல் கூறினையா
லுண்மை யிதுவா முவனைப் பொருவதுவு
மெண்மை யதுவோ வெவர்க்கு மரிதன்றோ.

(இ-ள்.) (மதனனே !) அறிவின்மையால் தங்களையே புகழ்ந்துபேசுகின்ற தேவர்களிடத்தில் அடைதலில்லாதவராகிய சிவபெருமானது சிறப்பிலக்கணங்களை யெடுத்துக்கூறினை ; நீகூறியது உண்மையேயாம் ; சிவபெருமானிடத்துப் போர்செய்தலும் இலேசானதோ ? அது யாவர்க்கும் அரிதல்லவோ ?—எ-று. (௬௮)

வெண்மையறிவு - மூடபுத்தி.

அன்ன பரிசே யெனினு மடைந்தோர்த
மின்ன லகற்று மிறையருளா லிக்கரும
முன்னின் முடியு மொழிந்தோரான் முற்றுவதோ
முன்னி னிதற்கு முதற்கா ரணநீகாண்.

(இ-ள்.) அவ்வாறாயினும் தம்மையடைந்தவர்களது துன்பத்தை யொழித்தருள்கின்ற சிவபெருமானது பெருங்கருணையால் இக்காரியம் உன்னால் முடிவுபெறும்; மற்றையர்களால் முடிவுபெறக் கூடியதோ? விசாரிக்குமிடத்தில் நீயே இதற்கு முதற்காரணமாக விருக்கின்றனை.—எ-று.

எங்கள்பொருட்டு நீ சென்று இக்காரியத்தை நிறைவேற்றுதலும் சிவபெருமானது திருவருளே யன்றி உன்னால் சிறிதும் நடவாதென்று கூறினனென்பார், 'இறையருளா லிக்கரும முன்னின் முடியு மொழிந்தோரான் முற்றுவதோ' என்று கூறினர். (௬௯)

எல்லார் செயலு மிறைவ னியற்றுவதே
யல்லா திலையோ ரணுவுமசை யாதெவையு
நில்லா தருளின்றே னீயின் றவன்பாலிற்
செல்லா யுனது செயலுமவன் செய்கையதே.

(இ-ள்.) எல்லாருடைய செயல்களையும் சிவபெருமானே செய்கின்றவரன்றி வேறில்லை. அவ்வெம்பெருமானையன்றி ஓரணுவுமசையாது. அவரது திருவருளில்லையாயின், எப்பொருளும் நிலைபெற்றிரா. உனது செய்கையும் அவரது செய்கையேயாம். (ஆதலால்) இன்று நீ அச்சிவபெருமானிடத்திற் செல்லக்கடவை.—எ-று.

அனைத்துஞ் சிவன்செயலே யன்றி வேறன்றென்பது கருத்து. (௭0)

செம்மாந்து தற்புகழுந் தேவர்குழு வும்மருள
வெம்மான் பிறன்போ லிருந்தோர் துரும்புநிறீஇ
யம்மாதன் செய்கை யனைத்துமெனக் காட்டினனே
நம்மாலு முற்றுஞ் சிலவென்கை நாணன்றே.

(இ-ள்.) இறுமாப்புற்றுத் தம்மைப் புகழ்ந்த தேவர்கூட்டங்களும் மயங்கும் வண்ணம் சிவபெருமான் அன்னியன்போன்று ஆங்கடைந்து ஒரு துரும்பை நட்டு அனைத்துந் தமது செயலே யென்பதை விளங்கச்செய்தனர். (ஆதலால்) நம்மாலும் சில காரியங்கள் நிறைவேறுமென்று கூறுதல் வெட்கமன்றோ?—எ-று.

தருக்குற்ற தேவர்கள் பொருட்டுச் சிவபெருமான் ஒரு துரும்பை நட்டு அனைத்துந் தஞ் செயலே யென்பதை விளக்கியருளினமையின், நம்மா லொரு சிறிது முடியாதென்று கூறின னென்பது கருத்து. இதன் வரலாறு:—முன்னொருகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் யுத்தஞ் செய்தபொழுது தேவர்களை யசுரர்கள் வென்றார்கள். பின்பு சிவபெருமானுடைய திருவருளினால் அசுரர்களைத் தேவர்கள் வென்றார்கள். வென்றபின்பு,தேவர்களெல்லாருந் தங்கள்தங்களையேபுகழ்ந்து செருக்குற்று ஒருவரோடொருவர் பிணக்குற்றபொழுது,சிவபெருமான் ஓரியக்கவடிவங்கொண்டெழுந்தருளிவந்து அவர்க ளெதிரே ஒரு துரும்பை நட்டு இறுமாந்திருந்துகொண்டு அத்தேவர்களை நோக்கி "இத் துரும்பைத் துணிக்க வல்லவ னெவனோ அவனே அசுரர்களைவென்றவீரன்" என்றார். இந்திரன்முதலிய எட்டுத்திக்குப்பாலகர்களும், பிரமவிட்டுணுக்களும் தனித்தனியே தத்தம் படைக்கலத்தை விட்டு அத்துரும்பை யசைக்கவும் ஆற்றலில்லாதவர்களாய்ச் செருக்கழிந்து அவ் வியக்கனை நோக்கி, "நீர் யாவர்" என்றார்கள். உடனே அவ் வியக்கர் மறைந்தருளினர். உமாதேவியார் தேவர்க ளெதிரே வெளிப்பட்டு இயக்கவடிவங்கொண் டெழுந்தருளிவந்தவர் சிவபெருமானென்றுணர்த்தியருளினர் என்பதாம். இதனை.—"நிணம்புல்கு சூலம் வலமாக வேந்தி நெடுமால் விரிஞ்சன் முதலோர் - பிணம்புல்கு காட்டி நடமாட்டு கந்து பிறைவேணி வைத்த பெருமான் - கணம்புல்கு தேவர் முரணைத் தவிர்ப்ப வவர்முன்பு காம ரளிவீழ் - மணம்புல்கு தொங்க லணிதோ ளியக்க வடிவொன்று கொண்ட னுகினன்" எனவும், "அணுகித் துரும்பை யெதிர்நட்டு முன்ன ரிறுமாந்து வைகு மவனைப் - பணிலத்த ஞதி யிமையோர்க ளேக்கி யிவனீ பயிற்று மிதுவென் - றுணிபுற்று வைகு மொருநீ யெவன்கொல் புகலென்று சொல்லு மொழிகேட் - டுணர்விற் சிறந்த தவர்

கண்டு கொள்ளு முவனின்ன பேச லுறுவான்" எனவும், "எவனேனு மாக வருநா னு மாது வலியின் றளக்க லுறுவேன் - றுவளாது நம்மு னடுமித் திரும்பு துணிசெய் ய வல்ல னெவனோ-வவனே தயித்தி யனைவென்ற மீளி யறிகென் றுரைப்ப மகவா - னிவரா வெழுந்து குலிசத்தை வீசி வறிதே யிளைத்த னனரோ." எனவும் வருங் காஞ் சிப்புராணத்தா னுமுணர்க, (௬௧)

பாடு திகழ்பாவை பல்லுயிரு மல்லனவு
மாடல்புரி விப்பா னருவுருவாய் நின்றபர
னாடி லவனையின்றி நம்மாலொன் றாகவற்றோ
வேட விதனிலைமை யிந்நாளு மோர்ந்திலையோ.

(இ-ள்.) பல உயிருடைப்பொருள்களும், உயிரில் பொருள்களும் பெருமை விளங்கும் பதுமைபோல்வனவாம், அவற்றை ஆட்டுவிக்கின்றவர் அருவமாகவும் உருவமாகவு மெழுந்தருளியிருக்கும் சிவபெருமானேயாகும்; விசாரிக்குமிடத்து அச் சிவபெருமானையன்றி நம்மால் ஒருகாரியமு முடியுமோ? எடா மன்மதனே! இதனு ண்மையை இந்நாள்வரையிலும் நீ யுணரவில்லையோ?—எ-று.

இதனை—"ஆட்டுவித்தா லாலொருவ ராடா தாரோ யடக்குவித்தா லாரொ ருவ ரடங்கா தாரோ - பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரோ பணிவித்தா லாலொரு வர் பணியா தாரோ - யோட்டுவித்தா லாரொருவ ரோடா தாரோ யுருகுவித்தா லாரொ ருவ ருருகா தாரோ - காட்டுவித்தா லாரொருவர் காணு தாரோ காண்பாரார் கண்ணுத லாய் காட்டாக் காலே" என்னுந் திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரத்தானும், 'நன் னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் னூர்தப்பினுற் - றன்னுலு மாடிச் சலித்திடுமோ வந்தத் தன்மையைப்போ - லுன்னு லியானு முறைவதல் லான்மற் றுனைப்பிரிந்தா - லென்னுலிங் காவதுண் டோவிறை வாகச்சி யேகம்பனே" என்னும் பட்டினத்துப் பிள்ளையார் திருவாக்கானும், "ஈட்டிய தவப்பய னிலாதவர்கள் போலு - னூட்டமு டை யாரொதிர் நடித்திடுவ னென்றாய் - காட்டவனல் போலுடல் கலந்துயிரை யெல் லா - மாட்டுமொரு நட்டுவனெம் மண்ணலென வெண்ணாய்" என்னுந் திருவாதவூரர் புராணத்தானு முணர்க. (௬௨)

கையம்பு பூட்டிச் கருப்புச் சிலைகோட்டி
யெய்யும் படிவழிகொண் டேகா யிறுதியிலா
வையன் றனைநீ யதுவு மவனருள்காண்
மெய்யங் கதற்கேது மேனுளே கண்டனம்யாம்.

(இ-ள்.) நீ முடிவில்லாத சிவபெருமான்மீது பாணப்பிரயோகஞ் செய்யும் பொருட்டுக் கரும்புவில்லை வளைத்துக் கையிலுள்ள புஷ்பபாணத்தைப் பூட்டிக்கொ ண்டு செல்லக்கடவை. இக்காரியமும் சிவபெருமானது திருவருளேயாம். இது உண்மையாகும். அதற்குக் காரணம் முன்பே யறிந்திருக்கின்றோம்.—எ-று.

சிவபெருமான் சனகாதியர்பொருட்டு யோகஞ் செய்யத்தொடங்கியகாலத் துத் திருநந்திதேவரை நோக்கி மன்மதன் வந்தால் விடவும், மற்றையர் யாவர்வரினும் விடாதிருக்கவுங் கட்டளையிட் டருளினமையின், 'மெய்யங் கதற்கேது மேனுளே கண்டனம்யாம்' என்றார். (௬௩)

ஈங்கிதுவு மன்றி யெவரேனுந் தம்மடங்காத்
தீங்கு பெறினுதவி செய்யென் றிரந்திடனு
மாங்கொருவன் செய்யா ததுமறுத்துத் தன்னுயிரைத்
தாங்க லுலக நடைதனக்குத் தக்கதுவோ.

(இ-ள்.) இதுவன்றியும், யாராயினும் தம்மால் சகிக்கமுடியாத துன்பத்தை யடையின் அதற்கு உதவிசெய்யும்படி யிரந்துகேட்டால், ஒருவன் அதனைச் செய்யாது மறுத்துத் தன்னுயிரைக் காத்துக்கொள்ளுதல் உலகவியற்கைக்குத் தக்கதோ?

என்னானு மோருதவி யாதொருவன் யார்க்கெனினுந்
தன்னான் முடிவதெனிற் றானே முடித்தறலை
சொன்னான் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னாண் மறுத்துப் புரிதல்கடைப் பான்மையதே.

(இ-ள்.) யாரொருவன் யாதேனு மோருபகாரத்தை யாவர்க்காயினுந் தன்னால்செய்யக்கூடுமாயின், (அவர்கள் கேட்பதற்குமுன்) தானே (அதனையுணர்ந்து) செய்துமுடித்தல் உத்தமம்; சொன்னபின்பு செய்துமுடித்தல் மத்திமம். சொன்னபோதிலும் பலநாள்கள் மறுத்துக்கூறிப் பின்பு செய்துமுடித்தல் அதமலக்ஷணமாம். எ-று.

இதனை:—சொல்லாமலேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர் - சொல்லியுஞ் செய்யார் கயவரோ—நல்ல-குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்-பலாமாவைப் பாதிரியைப் பார்." எனவும், "தண்டாம லீவது தாளாண்மை தண்டி-யடுத்தக்கா லீவது வண்மை - யடுத்தடுத்துப்-பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்று-மீயானெச்சம்போ லறு" எனவும் வரும் ஔவையார் திருவாக்கானு முணர்க. (௬௫)

ஏவ ரெனினு மிடருற் றனராகி
யோவில் குறையொன் றுளரோ லதுமுடித்தற்
காவி விடினு மறனே மறுத்துளரேற்
பாவ மலது பழியு மொழியாதே.

(இ-ள்.) யாவராயினும் துன்பத்தையடைந்தவராய் நீங்காத ஒரு குறையுற்றவர்களா யிருப்பின், அக்குறையை நிறைவேற்றுவதற்கு உயிரைவிட்டாலும் புண்ணியமேயாம். (அங்ஙனஞ் செய்யாது) தடைசெய்வாராயின், அதனால் பாவமேயன்றிப் பழியும் நீங்காதிருக்கும்.—எ-று. (௬௬)

உய்கை பொருளா வொருவர்க்கு மோருதவி
செய்கை யிலனேற் சிறியோன் கழித்தபகல்
வைக லதுவோ வறிதே யவன்வாழ்க்கை
பொய்கை மலர்ந்தகொட்டி போலும் பொலிந்துளதே.

(இ-ள்.) (ஒருவன்) தான் வாழ்தலையே பொருளாகக்கொண்டு யாவர்க்கும் ஒருதவியுஞ் செய்யானாயின். அவ்வற்பன் கழித்தபொழுதும் ஒரு பொழுதோ? அது வீண்பொழுதேயாம். அவனது வாழ்வும் குளத்திற்பூத்த கொட்டிமலரின் பொலிவு போல்வதேயாம்.—எ-று.

ஒருவருக்கு முதவிசெய்யாதவனுடைய குடிவாழ்க்கையானது குளத்திற் பூத்த கொட்டிமலர்போலப் பயனற்றதாகுமென்பது கருத்து. (௬௭)

அந்நா ரணனோ டமர்முற் றியமுனியைப்
பொன்னா டருளும் புலவோ ரிறையிரப்ப
வென்னாரு மென்பு விருத்திர னுக் காவுதவித்
தன்னாருயிர்விட்ட தன்மைதனைக் கேட்டிலையோ.

(இ-ள்.) அந்தத் திருமாலுடன் போர்செய்துவென்ற ததீசிமுனிவரைப் பொன்னுலகத்தை யரசாட்சிசெய்கின்ற தேவேந்திரன்வந்து யாசிக்க, அம்முனிவர் தனதுமுதுகினிடத்திற்பொருந்திய எலும்பினை விருத்திராசுரன் பொருட்டுக் கொடுத்துத் தமது அருமையாகிய உயிரைவிட்ட தன்மையினை நீ கேட்கவில்லையோ?—எ-று

சுபனென்னும் அரசன்பொருட்டுப் பரிந்துவந்த திருமாலை வென்றவராகலின், 'அந்நாரணனோ டமர்முற்றியமுனி' என்றார். புலவோ ரிறையிரப்ப வென்னுரு மென்பு விருத்திரனுக் காவுதவித் தன்னுருயிர்விட்ட தன்மையாவது,—இந்திரன் விருத்திராசுரனோடு போர்செய்து வெல்லுதற்குத் தனது வயிரப்படை பயனற்றிருந்தமையின் ததீசிமுனிவரை வணங்கி அவரது முதுகெலும்பை வேண்ட, அம்முனிவர் யோகத்தினின்று தேகத்தைப் பிரிந்து தமது முதுகெலும்பை யுதவினரென்பது புராணவரலாறு. புலவோர்-தேவர்கள். வென்-முதுகு. (சஅ)

மேலொன் றுளதோ விளம்ப வெவரொவர்க்கு
மூலந் தலைதெரியா முன்னோன் கடலெழுந்த
வாலந் தனையுண் டமரர்க் கமுதளித்த
சீலந் தனைநீ சிறிதுந் தெளிந்திலையோ.

(இ-ள்.) சொல்லுதற்கு வேறொன்றிருக்கின்றதோ? எவராலும் முதலுமுடிவுங் காணப்படாதவராகிய சிவபெருமான் கடலிற்றோன்றிய ஆலாகலவிஷத்தைத் தாமுண்டருளித் தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்தருளிய முறைமையினை நீ சிறிதுந் தெளியவில்லையோ?—எ-று.

சிவபெருமான் தேவர்கள்பொருட்டுக் கொடியவிடத்தைத் தாமுண்டு, அமுதத்தைத் தேவர்களுக்குதவியதை நீயறியாய்போலுமென்று கூறினனென்க. (சகூ)

தேக்குஞ் சலதியிடைத் தீப்போ லெழுந்தவிடந்
தாக்கும் பொழுது தளரே லெனவுரையா
வூக்கங் கொடுமா லொருகணநின் றேநம்மைக்
காக்கும் படிக்குக் கறுத்தசெயல் கண்டிலையோ.

(இ-ள்.) நீர்நிறைந்தகடலில் நெருப்பைப்போலத் தோன்றிய விஷமானது நம்மைக்கிட்டிவந்தபொழுது அஞ்சாதீர்களென்று கூறி மனதைரியத்துடன் திருமால் ஒருக்ஷணப்பொழுது நின்று (அவ்விடவேகத்தினின்று) நம்மைக்காக்கும் பொருட்டுத் தேகங்கறுத்த தன்மையை நீ பார்க்கவில்லையோ?—எ-று.

விடவேகத்திற் காற்றாது வருந்திய தேவர்கள்பொருட்டுத் திருமால் தனது தேகங் கறுத்தமையை நீயறியாய்போலுமென்று கூறினனென்க. (ருo)

ஆரா யினுமொருவ ரன்பிற் றலைப்பட்டுப்
பேரா தரத்தாற் பிறர்க்குதவி செய்வாரேற்
றீராத வெந்துயரிற் சேர்தலே மாய்தலிவை
பாரார் புகழே பயனென்று கொள்வாரே.

(இ-ள்.) யாராயினு மொருவர் அன்பு பாராட்டி மிகுந்த ஆவலுடன் பிறருக்கு உதவிசெய்வார்களாயின், அதனால் நீங்காத கொடிய துன்பமுறுதலும் மரணமடைதலுமாகிய இவைகள் நேர்ந்தாலும் அவற்றைக்கருதார்கள். கீர்த்தியையே பயனாகக்கொள்வார்கள்.—எ-று.

பிறர்க் குதவிசெய்யத் தொடங்கினவர்கள் அதுகாரணமாகத் தமக்கு துன்பம் நேரினும் மரணம் நேரினும் அதனைக் கவனியாமல் புகழையே பெரும்பயனாகக் கொண்டு முயன்று செய்வரென்பது கருத்து. (ருக)

சூரந் தனில்வலிசேர் சூரபன்ம னேவலின்யா
மாருந் துயர்கொண் டழுங்கினோ மன்னதினித்

தீரும் படிக்குச் சிவனொருசே யைத்தருவா
னோரைம் படைசெலுத்த வுன்னையாம் வேண்டினமே.

(இ-ள்.) நாங்களனைவரும் மிக்கவல்லமையையுடைய சூரபதுமனது ஏவலி னால் பொருந்திய துன்பமுழுற்றுவருந்தினோம்; இனி அத்துன்பம் நீங்கும்வண்ணம் சிவ பெருமான் ஒருபுத்திரனையளிக்கும்பொருட்டு ஒப்பற்ற பஞ்சபாணங்களையும் பிரயோ கிக்கும்படி உன்னை யாம் வேண்டிக்கொண்டோம்.—எ-று. (௯உ)

ஆதலினா லெங்க ளலக்கணகற் றும்பொருட்டுச்
சாதல் வரினுந் தவறோ புகழ்செய்வா
ரோது வரினு மெதிர்செல்வா ரெம்பணியிற்
போதியினி மாறு புகலே லெனவுரைத்தான்

(இ-ள்.) ஆகையால் எங்களது துன்பத்தை நீக்கும்பொருட்டு உனக்கு மரணநேர்ந்தாலுங் குற்றமாமோ? கீர்த்தியை விரும்பினவர்கள் எவ்வித விடையூறுக ணேரினும் எதிர்ப்பட்டுச் செல்வார்கள்; ஆதலால், எங்கள் காரியநிமித்தஞ் செல் லக்கடவை; இனி தடுத்துக்கூறுதே யென்று சொல்லினன்.—எ-று.

புகழை விரும்பியவர்கள் எத்தகைய விடையூறு நேரினும் விரைந்துசென்று அதனை முடிப்பார்களாதலால் நீ எங்கள்பொருட்டுச்சென்று உனது தொழிலைச் செய் யென்று கூறினனென்க. (௯௩)

வேறு.

பங்க யப்பொ குட்டி ருந்த பகவ னீது புகறலு
மைங்க ணைக்க ரத்தி னோன ரந்தை யெய்தி யாதியாம்
புங்க வற்கு மாறு கொண்டு பொருகி லேனி தன்றியே
யிங்கெ னக்க டுத்த தொன்றி யம்பு செய்வ லென்றனன்.

(இ-ள்.) கமலாசனத்திலிருந்த பிரமன் இவ்வார்த்தை கூறவும், பஞ்சபாண ங்களையுடைய மன்மதன் வருத்தமுற்று, முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமா னுடன் பகைகொண்டு போர்செய்யமாட்டேன். இதனையன்றி, என்னாற் செய்யக்கூ டிய வேறொன்றைச் சொல்வீராயின் செய்கின்றேனென்று கூறினான்.—எ-று.

எனது சாமர்த்தியஞ் சாமானியரிடத்தன்றிச் சிவபெருமானிடத்திற் பயன் படாதாகலான் அதனையொழித்து என்னாற் செய்யக்கூடிய தொன்றைக் கூறின் செய் கின்றேனென்று கூறினனென்பார், 'இங்கெனக் கடுத்த தொன் றியம்பு செய்வ லெ ன்றனன்' என்று கூறினர். (௯௪)

என்னும் வேலை யமர ரோடி ருந்த வேதன் முனிவுறா
நன்ன யந்தழீஇ யுரைத்த நமது சொன்ம றுத்தியா
லன்ன பான்மை புரியி னுய்தி யல்ல தேலு னக்கியாந்
துன்னு சாப மிடுதும் யாது துணிவு சொல்லு கென்றனன்.

(இ-ள்.) இவ்வாறு கூறியபொழுது தேவர்களுடனிருந்த பிரமன்கோபித்து நாம் இதமாகக்கூறிய சொற்களைமறுத்தனை; நாம்சொன்னவண்ணஞ் செய்யிற்பிழை ப்பாய்; இல்லையாயின், உனக்குயாங்கொடிய சாபமிடுவோம்; உனது கருத்துயாது? சொல்லக்கடவாயென்று கூறினன்.—எ-று.

சிவபெருமான்மீது பாணப்பிரயோகஞ்செய்து பிழைக்க விருப்பமோ? அல் லது, எமது சாபத்தைப்பெற்றழிய விருப்பமோ? இவ்விரண்டில் நினது கருத்து யாது கூறென்று பிரமன் கேட்டனனென்க. (௯௫)

வெய்ய சாப மிடுதுமென்று வெகுளி யான்மொ ழிந்தகேட்
டைய மேனி மதன வேள ழுங்கி வெய்து யிர்த்தினிச்
செய்ய லாவ தென்னெ னத்தெ ரிந்து சிந்தை தேற்றியே
வைய கம்ப டைத்த வண்ணல் வதன நோக்கி யுரைசெய்வான்.

(இ-ள்.) கொடிய சாபங்கொடுப்போமென்று கோபத்துடன் கூறியவார்த்தையைக் கேட்டு அழகிய சரீரத்தையுடைய மன்மதன் வருந்திப் பெருமூச்சு விட்டு, இனி யாது செய்வதென்று ஆலோசித்து மனதைத் தேற்றிக்கொண்டு உலகத்தைச் சிருஷ்டித்த பிரமனது முகத்தைப் பார்த்துக் கூறுகின்றான்.—எ-று.

பிரமனது சொற்படி நடக்கிற் சிவபெருமானாலழிவும், அதனைத் தடுப்பிற் சாபமும் நேரிடுவதாயிருக்கின்றதே இதற்கு யாது செய்வதென்று யோசித்தனனென்பார், 'செய்யலாவ தென்னெனத் தெரிந்து' என்று கூறினர். ஐய-குறிப்புப் பெயரெச்சம். மதனவேள்-இருபெயரொட்டு. (௩௬)

கேளி தொன்று நாப்பல் வேத கேடு சூழு நினதுவாய்ச்
சூளின் மேலை யியல்ப கன்று துன்பு ழந்து படுதலிற்
காள கண்டன் முன்பு சென்று கடிய வெய்ய கணைகடூஉய்
மாளி னுஞ்சி றந்த தம்ம மற்று முய்ய லாகுமே.

(இ-ள்.) பிரமனே! யானொன்று சொல்லுகின்றேன் கேட்பாயாக, உமது வாயினின்றும் வருகின்ற கெடுதிபொருந்திய சாபத்தினால் முன்னையபெருமைகெட்டு வருந்தி யிறப்பதைப்பார்க்கிலுங் காளகண்டராகிய சிவபெருமானெதிரில் வேகமாகிய கொடிய பாணங்களைச்செலுத்தி (அதனால்) இறந்தாலுஞ் சிறப்பாகும். பின்னும் பிழைத்தலுங் கூடும்.—எ-று. (௩௭)

செற்ற நீர்மை கொள்ள லைய செஞ்ச டைப்பி ரானிடத்
திற்றை வைக லமரி யற்ற வேகு வேனி யானெனக்
கொற்ற வேளு ரைத்த லுங்கு ளிர்ந்த பூவி ருக்கைமே
லுற்ற போதன் மகிழ்சி றந்து ளங்க ளித்து மொழிகுவான்.

(இ-ள்.) ஐயனே! கோபங்கொள்ளவேண்டாம்; யான் சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமானிடத்து இன்றைக்கே போர்செய்யச் செல்கின்றேனென்று வெற்றிபொருந்திய மன்மதன் சொல்லவும், குளிர்ச்சிபொருந்திய தாமரைப்பீடத்தில் வசிக்கின்ற பிரமன் மகிழ்கூர்ந்து மனக்களிப்புடன் கூறுகின்றான்.—எ-று.

கொற்றம் - வெற்றி. (௩௮)

பணிந்த சொல்ல னாகி நாம்ப ணித்த வாபு ரிந்திடத்
துணிந்த வாறு நன்று நன்று சூலி பாலி னுனைவிடாத்
தணந்தி டேந்தொ டர்ந்து பின்பு சார்து மஞ்சல் போகென
வுணர்ந்து கூறி மார வேளை யேவி லன்போ டேவினான்.

(இ-ள்.) தாழ்ந்த சொல்லையுடையவனாய் நாம் சொல்லியவண்ணம் செய்வதற்குத் துணிந்தது மிகவும் நல்லது; சிவபெருமானிடத்து உன்னை யனுப்பிவிட்டு நாங்கள் இங்குநீங்கியிரோம்; உன்னைத் தொடர்ந்து பின்னே வருகின்றோம், நீ யஞ்சாதே; செல்லக்கடவாயென்று ஆலோசித்துக் கூறி, மன்மதனை மிகுந்த அன்புடனனுப்பினான்.—எ-று.

நாம் தனியே போகின்றோமென்று வருந்தவேண்டாம், யாமும் பின்னே வருகின்றோமென்று தைரியங்கூறி யனுப்பின னென்பார், 'தணந்திடேந் தொடர்ந்

துபின்பு சார்துமஞ்சல் போகெனு-வுணர்ந்துகூறி மாரவேளை யோவிலன்பொடேவி னுன்' என்றூர். ஓவிலன்பு-நீங்காத அன்பு. (௯௬)

ஏவு காலை மதனை வேள்வி யிறைதெ ரிந்து மைந்தயான்
றேவ ரோடு துயரு ழந்து சிறுமை பெற்ற தறிதியே
யோவில் வாழ்வு தருதி யென்னி னுமைம டந்தை தனையரன்
மேவு மாறு புரிகெ னுவி ரைந்து செல்ல நல்கினுன்.

(இ-ள்.) (பிரமன்) மன்மதனை யனுப்பிய சமையத்தில் இந்திரன் மன்மதனைப் பார்த்து, குழந்தாய்! யான் தேவர்களுடன் (சூரபதுமனுல்) வருந்தித் தாழ்வடைந்திருத்தலை நீ யறிவாயல்லவோ? (எங்கட்குக்) கெடாத வாழ்வைக் கொடுக்க விரும்புவையாயின், சிவபெருமான் உமாதேவியாரைத் திருமணஞ் செய்யும்வண்ணம் செய்வாயென்று கூறி விரைந்துபோகும்படி யனுப்பினுன்.—எ-று.

திருமாலினவதாரமாகிய உபேந்திரன் இந்திரனுக்குத் தம்பியாகலான், அம்முறை நோக்கி மன்மதனை மைந்த! என்று கூறினனென்க. (௬௦)

நல்க லுங்க ரங்கள் கூப்பி நான்மு கத்த னுலகொரீஇ
யல்கு தன்பு ரத்து நண்ணி யவ்வி யற்கை கூறியே
யொல்கு தேவி யைத்தெ ளித்தொ ருப்ப டுத்தி நறியதேன்
பில்கு வாளி யிட்ட தூணி பின்னி யாத்தி றுக்கினுன்.

(இ-ள்.) (இந்திரன்) விடைகொடுக்கவும், கைகளைக் கூப்பி வணங்கிப் பிரமலோகத்தைவிட்டு நீங்கிப் பொருந்திய தன்னகரத்தை யடைந்து, பிரமலோகத்தில் நடந்த விருத்தாந்தங்களைக் கூறி, அதனுல் மனம் வருந்துகின்ற இரதிதேவியைத் தெளிவித்துச் சம்மதிக்கச்செய்து, நல்ல தேனெழுகுகின்ற புஷ்பபாணங்க ளிட்டிருக்கின்ற அம்பருத்தூணியை முதுகிலிறுக்கிக்கட்டினுன்.—எ-று.

சிவபெருமான்மீது போர்செய்து வெல்லுதல் கூடுமோவென்று வருந்தினமையின், 'ஒல்குதேவி' என்றும், மலரம்புகளாகலின், 'நறியதேன் பில்குவாளி' என்றுங் கூறினுர். (௬௧)

கயக்க ணின்ற பூவின் மிக்க காம காண்டங் கன்னல்வில்
லியக்க மான பார வில்லெ டுத்து மொய்ம்பி லேந்தியே
தியக்க முற்று லாய செய்ய தண்ணெனன் மாவி ளந்தளிர்
வயக்க டுங்கண் வாள மொன்று மாம ருங்கு வைத்தரோ.

(இ-ள்.) தடாகத்திலுள்ள புஷ்பங்களையும், விற்களிற் சிறந்த காமகாண்டமென்னும் பெயருடைய கரும்புவில்லில் பழக்கமாகிய பெரிய வில்லையெடுத்துத் தோளிலேந்தி, விளங்குகின்ற சிவந்த குளிர்ச்சிபொருந்திய மாந்தளிராகிய வெற்றியமைந்த கடிவாளத்தைப் பக்கத்தில் வைத்து.—எ-று.

கயக்கணின்ற பூவின்மிக்க காமகாண்டங் கன்னல்வில் லியக்கமான பாரவில் என்பதை, 'கயக்கணின்ற பூவில்' எனப்பிரித்து, தடாகத்திற் பொருந்திய தாமரையாகிய மலர்வில் எனவும், 'மிக்க காமகாண்டங் கன்னல்வில்' எனப்பிரித்து, சிறந்த காமகாண்டமென்னும் பெயருடைய கரும்புவில் எனவும், 'இயக்கமான பாரவில்' எனப்பிரித்து, வலியமைந்த பெரிய இரும்புவில் எனவும் பொருள் கூறி, இம் மூன்று வில்லும் மன்மதனுக்குரியவெனறும், அவற்றுள், தேவர்கள்மீது மலர்வில்லைக்கொண்டு போர்செய்வனென்றும், மானுடர்மீது கரும்புவில்லைக்கொண்டு போர்செய்வனென்றும், அசுரர்கள்மீது இரும்புவில்லைக்கொண்டு போர்செய்வனென்றும் பொ

ருள்கூறுவாருமுளர். மன்மதனுக்கு வாட்படை தாழம்பூவேயன்றி மாந்தளிரு முண்மையால், 'மாவிளந்தளிர் வயக்கடுங்கண் வாளமொன்றுமா மருங்குவைத்து' என்று கூறினர். காமகாண்டம்=காமன்வில். அன்றி, காமகாண்டம் என்பதற்குக் காமபாணம் எனப் பொருள் கூறுவாரு முளர்.

இதுமுதல் மூன்று பாடலுங் குளகம். (௬௨)

கோகி லங்க ளான வுங்கு ழாங்கொள் வேலை யானவுங்
காக ளங்கண் முரச மாய்க்க றங்க வோதம் யாவதுஞ்
சீக ரங்க ளாய சைந்து செல்ல மீன கேதன
மாக வும்ப ருலவ வெண்ம திக்கு டைநி ழற்றவே.

(இ-ள்.) குயில்களும், சமுத்திரவர்க்கங்களும், முறையே எக்காளமாகவும், முரசாகவும் முழங்கவும், அலைகள்யாவும் வெண்சாமரைகளாக அசைந்துவரவும், மீனக்கொடி ஆகாயத்தி லுலாவவும் வெள்ளிய சந்திரனாகிய குடை நிழல் செய்யவும்.-எ-று.

மன்மதனுக்குக் கவரி கமுகம்பாளை எனக் கூறுவது முண்டு. (௬௩)

பொருவில் கிள்ளை யென்னு மாக்கள் பூண்ட தென்றல் வையமே
லிரதி யோடு மேறி வேளி ருந்த தொல்லை யுலகினை
யரித கன்று குறிகள் வெய்ய வளவை யின்றி நிகழவே
பரமன் வைகு கயிலை யம்ப ருப்ப தத்தை யணுகினான்.

(இ-ள்.) ஒப்பற்ற கிளியென்று கூறுங் குதிரைகள் கட்டிய தென்றலாகிய தேரின்மீது மன்மதன் இரதிதேவியோடு ஏறித் தான் வசித்திருந்த பழைமையாகிய உலகத்தை அருமையாக நீங்கித் துர்ச்சகுனங்கள் அளவில்லாம லுண்டாகச் சிவபெருமான் வீற்றிருந்தருளுந் திருக்கயிலாயத் திருமலையை யடைந்தனன்.—எ-று.

மேல் மூன்று பாடல்களாற் கூறியுள்ள மன்மதனுக்குரிய சின்னங்களை.— "தொடையிலஞ்சி மஞ்சளிளஞ் சோலைபடை வீடு-படைமங் கையர்கமுகம் பாளையிடுகவரி-காளாஞ்சி மல்லிகையாங் காரிகையீர் மாரனுக்கு-வாளாமோ லைப்பூவு மால்" எனவும், "ஆலைக் கரும்புசிலை யைங்கணைபூ நாண்சுரும்பு-மாலைக் கிளிபுரவி மாருதந் தேர்-வேலை-கடிமுரசங் கங்குல் களிறுகுயில் காளங்-கொடிமகரந் திங்கள் குடை" எனவும் வரும் புகழேந்திப்புலவர் திருவாக்கா லுணர்க. (௬௪)

கயிலை கண்டு தொழுது தேரி ழிந்து காம வேடனக்
கயலின் வந்த பரிச னத்தை யவணி றுத்தி மாதுடன்
பயிலும் வில்லும் வாளி யும்ப ரித்து வல்லி யத்தினைத்
துயிலு ணர்த்து மானெ னத்து ணிந்து போதன் மேயினான்.

(இ-ள்.) மன்மதனானவன் திருக்கயிலையைத் தரிசித்து வணங்கித் தேரினின்று மிறங்கித் தன்பக்கலில் சூழ்ந்துவந்த பரிசனத்தை அவ்விடத்தில் நிறுத்தி இரதிதேவியோடு தான் பழகுகின்ற வில்லையும் அம்பையுந் தாங்கி வேங்கைப்புலியைத் துயிலெழுப்புகின்ற மானைப்போலத் துணிந்து செல்லத்தொடங்கினான்.—எ-று. (௬௫)

கூறு லாவு மதிமி லைந்த குழகன் வைகு கயிலைமே
லேறி யேத னுது கையி ருந்த கார்மு கம்வளைஇ
மாறி லேவு பூட்டி யங்கண் வைகு புள்ளு மாக்களு
மூறி லாதி ருந்த காம முன்னு வித்தன் முன்னினான்.

(இ-ள்.) அர்த்தசந்திரனையணிந்த சிவபெருமான் வீற்றிருந்தருளுந் திருக்கயிலாய மலையின்மீதேறித் தனது கையிலிருந்த கரும்புவில்லை வளைத்து மாறுபாடில்லாத அம்பைத் தொடுத்து, அங்கு வசிக்கின்ற பறவைகளும், மிருகங்களும் புணர்ச்சியொழிந்திருந்தகாமத்தை நினைக்கும்வண்ணம் சிந்தித்தான். —எ-று.

அஃறிணைப்பொருள்களாகிய பசுபக்ஷிகளுங்கூடக் காமமற்றிருந்த தென்பார், 'புள்ளுமாக்களு மூறிலாதிருந்த காமம்' என்று கூறினர். (௬௬)

பொருவில் காம னின்ன தன்மை புந்தி கொண்டு மற்றவண்
விரவு புள்ளின் மீதி னும்வி லங்கின் மீதி னும்மலர்ச்
சரமெ லாம்வி டுப்ப வாதி தனது மந்தி ரத்துமுன்
னருளி னேடி ருந்த நந்தி யடிக ளன்ன கண்டரோ.

(இ-ள்.) ஒப்பற்ற மண்மதனனவன் இவ்வாறு மனத்திற்சிந்தித்து அங்குவசிக்கின்ற பறவைகளின்மீதும் மிருகங்களின்மீதும் புஷ்பபாணங்க ளனைத்தையுஞ்செலுத்தச் சிவபெருமானது ஆலயத்தின் முதற்றிருவாயிலில் அருளுட னெழுந்தருளியிருந்த திருநந்திதேவர் அதனைப் பார்த்தருளி.—எ-று.

இதுமுத லிரண்டு பாடலுங் குளகம். (௬எ)

கொம்மெ னச்சி னம்பு ரிந்து கொடிய பூசன் மதனனூர்
தம்மி யற்கை யாமி தம்ம சரத மென்று நினைவுறு
வும்மெ னத்தெ ழித்து ரப்ப வொலிகொள் புள்வி லங்கின்மேல்
வெம்மை யிற்செ லாது மாரன் விசிகம் விண்ணி னின்றவே.

(இ-ள்.) விரைவாகக் கோபித்து, இது கொடிய போரைச்செய்யும் மன்மதனுடைய செய்கையாகும்; இது உண்மையென்று சிந்தித்து, உம்மென்றதட்ட, மன்மதனுடைய பாணங்கள், ஒலிக்கின்ற பறவைகளின்மேலும் மிருகங்களின்மேலும் வேகமாகச் செல்லாமல் அந்தரத்திலேயே நின்றன.—எ-று.

கொம்மெனல் - விரைவுக்குறிப்பு. மதனனூர் என்பது விகுதிமேல்விகுதி பெற்றது. உம் என்பது, அதட்டுதலாகிய ஓரொலிக்குறிப்பு. (௬அ)

நிற்ற லோடு மவ்வி யற்கை நின்று நோக்கி நெடியவேள்
கொற்ற நீடு சூர லொன்று கொண்டு கோபு ரத்தலைத்
தெற்றி மேலி ருந்த நந்தி தேவர் காப்பு மாணையு
முற்று நோக்கி நெடிது யிர்த்து ளந்து ளங்கி விம்மினன்.

(இ-ள்.) பாணங்கள் அந்தரத்தில் நின்றவுடனே, அத்தன்மையை மன்மதன்பார்த்து வெற்றிபொருந்திய வேத்திரப்படையினைக்கையிலேந்திக் கோபுரத்தின் கணுள்ள சித்திரமேடையின்மீதெழுந்தருளி யிருக்கின்ற திருநந்திதேவரது காவலையும் அதிகாரத்தையும்நிதானித்துப்பார்த்துப்பெருமூச்சுவிட்டு மனநடுங்கி விம்மினன்.

சூரல் பிரம்பு. திருநந்திதேவரது அதட்டுதலால் மலரம்புக ளாகாயத்திலசைவற்று நிற்கவும், மன்மதன் அவரது காவலையு மாணையையுஞ் சிந்தித்து வருந்தினனென்க. (௬௯)

விம்மி நந்தி தேவர் முன்வி ரைந்து சென்று தாழ்ந்தெழூஉச்
செம்மை செய்க ருத்த னுய்த்தி கழ்ந்து போற்றெ டுத்தலு
மிம்ம லைக்கண் வந்த தெனனை யெனவ யன்பு ணர்ப்பெலா
மெய்ம்மை யாவு ணர்த்த லும்வி னவி யீது ளங்கொள்வான்.

(இ-ள்.) அவ்வாறு விம்முதலடைந்து திருநந்திதேவருக்கு முன்னேவிரைந்து சென்று வணங்கி யெழுந்து, தூய்மையாகிய மனமுடையவனுய் விளங்கித் துதிக்கவும், (திருநந்திதேவர்) நீ இத்திருமலையினிடத்துவந்தது யாதுகாரணமென்று வினவியருள, (அம்மன்மதன்) பிரமனது தந்திரங்களனைத்தையும் உண்மையாக எடுத்துச் சொல்லவும் அதைக்கேட்டருளி இதனைச் சிந்திப்பாராயினர்.—எ-று. (எ0)

வேத னாதி யான தேவர் விழும நோய கன்றிடு
மேது வால்வி டுத்து ளார்க ளிவனை யீசன் யோகுறும்
போதில் யாவர் வருகி னும்பு காது செய்தி மதனவேள்
சாத லெய்து வான்வ ரிற்ற டேலெ னாவி யம்பினான்.

(இ-ள்.) இம்மன்மதனைப் பிரமன்முதலிய தேவர்கள் தங்கள் துன்பநோய் நீங்குங்காரணமாக அனுப்பியிருக்கிறார்கள்; சிவபெருமான் (சனகாதியர்பொருட்டு) ஞானயோகத்தி லெழுந்தருளியிருக்கும்பொழுது,யார்வரினும் விடாதிருக்கக்கடவை; மன்மதன் இறக்கும்வண்ணம் வருவானாயின் தடைசெய்யாதேயென்று கட்டளையிட்டருளினார்.—எ-று. (எக)

புன்மை யாம்ப சுத்த டிந்து புரையில் வேள்வி யாற்றியே
தொன்மை போலெ ழுப்பு மாறு சுருதி சொற்ற வாறுபோன்
மன்ம தன்ற னைப்ப டுத்து மாதை வேட்டு மற்றதன்
பின்மு றைக்க ணல்க வெம்பி ரானி னைந்த னன்கொலாம்.

(இ-ள்.) அற்பமாகிய பசுவைக்கொன்று குற்றமற்ற யாகத்தைச்செய்து முன்போலவே (அப்பசுவை) எழுப்பும்வண்ணம் வேதங்கூறியவாறுபோல எமது சிவபெருமான் மன்மதனையழித்து உமாதேவியாரைத் திருமணம்புரிந்து: பின்னர்முறைப்படியெழுப்பும்வண்ணம் திருவுள்ளங்கொண்டனர்போலும்.—எ-று.

மன்மதனை யெரித்தல் பசுவைத் தடிதலுக்கும் சிவபெருமான் திருமணம் புரிதல் வேள்வி செய்தலுக்கும், மீண்டும் அம் மன்மதனை யெழுப்புதல் மீளவு மப்பசுவை யுயிர்ப்பித்தெழுப்புதலுக்கும் உவமித்தவாறு காண்க. (எஉ)

ஆகை யாலி தருள தேயி வன்வ ரத்து மாணையென்
றோகை யானு ணர்ந்து வேளை நோக்கி யும்ப ராகுலம்
போகு மாறி யற்றல் செய்த பொருவி லாத கருணைசே
ரேக நாய கன்றன் முன்ன ரேகல் வேண்டு மோவென்றான்.

(இ-ள்.) ஆகையால் இது சிவபெருமான் திருவருளேயாம்; இம்மன்மதனது வருகையும் சிவபெருமான் கட்டளையேயென்று விருப்பத்துட னுணர்ந்து, மன்மதனைப்பார்த்துத் தேவர்களது துன்பநீங்கும்வண்ணஞ்செய்தருளிய ஒப்பற்ற கிருபையினையுடைய முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானுடைய திருமுன்னே நீசெல்ல வேண்டுமோவென்று வினவியருளினார்.—எ-று. (எ௩)

நந்தி தேவ னினைய வாறு நவில வேயு ணர்ந்துவே
ளெந்தை கேட்டி யாலி தொன்றெ னக்கொ ரீறு குறுகினு
மந்தி வேணி யண்ணன் முன்ன மணுகு மாற மைந்திவண்
வந்த னன்ன தற்கி யைந்த வகைமை நல்கு வாயென.

(இ-ள்.) திருநந்திதேவ ரிவ்வாறு வினவியருளலும், மன்மதன் அதனைக்கேட்டு, எம்பெருமானே! இஃதொன்றைக் கேட்பீராக; அடியேனுக்கோரழிவு நேர்ந்தாலும் செவ்வானம்போலுஞ் சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமான் திருமுன்னேயடையும்வண்ணந் துணிந்து இவ்விடத்திற்கு வந்திருக்கின்றேன்; அதற்கேற்ற தன்மையைச் செய்வீராகவென்று பிரார்த்திக்க.—எ-று.

நான் சிவபெருமான்மீது போர்செய்யத் துணிந்தே வந்திருக்கின்றேனென்று கூறினனென்பார், 'அந்தி வேணி யண்ணன் முன்ன மணுகு மாற மைந்திவண் வந்தனன்' என்றார்.

இதுமுத லிரண்டு பாடலுங் குளகம். (எச)

இகலு மன்பு மிறையு மின்றி யெவ்வு யிர்க்கு முள்ளதோர்
புகுதி நாடி முறையி னைப்பு ரிந்து சேர்ப வர்க்குமேற்
றகுதி செய்து கருணை கூர்ச யம்பு முன்பு சார்தியேன்
மிகுதி கொண்ட மேலை வாய்தன் மேவி யேகு கென்றனன்.

(இ-ள்.) பகையுமுறவுஞ் சிறிதுமில்லாமல் சர்வான்மாக்க ளிடத்திலுமமைந்துள்ள வினைப்போகங்களையுணர்ந்து நிக்கிரகாநுக்கிரகங்களைச்செய்து தம்மையடைந்தவர்களுக்கு மேலான முத்தியைக்கொடுத்துக் கிருபைசெய்கின்ற சிவபெருமான் திருமுன்னேயடையவேண்டின், சிறந்தமேற்குத்திருவாயிலின்வழியேசெல்லக்கடவையென்று கூறியருளினர்—எ-று. (எ௫)

என்ற லுங்க ரங்கு வித்தி றைஞ்சி மார னேர்புறீஇ
நன்றி லங்கு வேத்தி ரக்கை நந்தி தேவர் விடைதரச்
சென்று மேலை வாயில் சார்ந்து தேவ தேவ னீற்றழற்
குன்ற மென்ன மோன மோடி ருந்த வெல்லை குறுகினன்.

(இ-ள்.) இவ்வாறு கூறியருளவும், மன்மதன் கைகுவித்து வணங்கி யெழுந்து இனிதுவிளங்குகின்ற பொற்பிரம்பேந்திய திருக்கரத்தினையுடைய திருநந்திதேவர் விடைகொடுக்கப்போய் மேற்றிருவாயிலை யடைந்து, தேவர்கள் நாயகராகிய சிவபெருமான் நீறுபூத்த நெருப்புமலையைப்போல மௌனத்துடனே முந்தி யிருக்கின்ற இடத்தை யடைந்தனன் —எ-று.

எர்பு - எழுச்சி. சிவபெருமானது சிவந்த திருமேனிமேல் திருவெண்ணீறு விளங்குதலின், 'தேவதேவனீற்றழற்குன்றமென்னமோனமோடிருந்த' என்றார். (எசு)

வேறு.

ஒருதனிச் சிம்புள் வேந்த னுறைந்தது கண்ட சீயக்
குருளையி னமலன் றன்னைக் கோலமால் புதல்வன் காணு
வெருவரு முளத்த னாகி வியர்த்துமெய் பனியா வுட்கிப்
பருவர லுழந்து கொண்ட படையொடுங் கடிதில் வீழ்ந்தான்.

(இ-ள்.) ஒப்பற்ற சரபராஜ னிருத்தலைக்கண்ட சிங்கக்குட்டியைப்போல, சிவபெருமானை அழகியதிருமாலின் புதல்வனாகிய மன்மதன்பார்த்து அச்சமுற்ற மனமுடையவனாய் வியர்த்து உடல் நடுக்கங்கொண்டு குன்றித் துன்பமுற்றுத் தன் கையிலேந்திய ஆயுதங்களுடன் விரைவில் வீழ்ந்தனன் —எ-று.

சிங்கம் மிருகேந்திர னென்னும் பெயருடையதாய்ப் பல மிருகங்களுக்குத் தலைமையாயிருப்பினும் சரபப்பட்சிக்குமுன்னே தனது வலி குன்றி யழியுமாறுபோல, மன்மதன் தனது பாணத்தால் யாவரையும் வெற்றிபெறினும் சிவபெருமான் திருமுன்னே வலிகுன்றி யழுங்கி வீழ்ந்தனனென்க. (எஎ)

எழுதரு மதனு மேக மிறைவனைக் கண்டே யஞ்சி
விழியிருண் மூடக் கோல வில்லிட்டு வியர்ப்பின் வாரி
மழைபட விடியார்ப் பெய்த மார்புமற் றதுவீழ் கின்ற
தொழின்முறை புதரங் காட்டத் துளங்கிவீழ்ந் திட்ட தன்றே.

(இ-ள்.) எழுதுதற்கரிய (அழகினையுடைய) மன்மதனாகிய மேகமானது சிவபெருமானைக்கண்டு பயந்து கண்ணிருள்மூடவும், அழகிய வில்லையிட்டு வியர்வையாகிய நீர்மழைபெய்யவும், மார்பானது இடியினாரவாரத்தைக் காட்டவும், அவ்விடி வீழ்கின்றதொழில்முறைமையை அக்கயிலைமலைகாட்ட நடுங்கிவிழுந்தது.—எ-று.

மேகம் மழைபெய்ய வெழுங்கால் இருள் மூடுதலும், இந்திரவில்லிடுதலும், மழைபெய்தலும், இடித்தலும், மலையில் வீழ்தலுஞ் செய்யுமாறுபோல, மன்மதனும் தனது கண்ணிருள்மூடிக் கரும்புவில்லைக் கீழேவிட்டு வியர்வையாகிய மழையைப் பொழிந்து மார்பிடிக்கப்பெற்று மலையின்மீது விழுந்தமையின், அம்மன்மதனை மேகத் தோடுவமித்துக் கூறினர். பூதரம்—மலை. அது புதரம் எனக் குறுகியது. (எஅ)

அஞ்சிவீழ் குற்ற மார னறிவிலா தவச மாகத்
துஞ்சினன் கொல்லோ வென்னாத் துயருழந் தெடுத்துத் தேவி
கஞ்சநேர் கரத்திற் றாங்கிக் கடிவகை யுய்த்துத் தேற்ற
நெஞ்சமே லுணர்ச்சி கூட வினையவை நினைந்து நைவான்.

(இ-ள்.) பயந்துவிழுந்த மன்மதன் அறிவுகெட்டு மூர்ச்சையாகவும், இரதி தேவியானவள் இவனிறந்தனனோவென்று வருந்தியெடுத்துத் தாமரைமலர்போன்ற கைகளில் தாங்கிக்கொண்டு மணம்பொருந்திய பலவகை உபசாரங்களைச்செய்து தெளிவிக்கவும், அவன் மனதிலுணர்வு தோன்ற இவற்றைநினைந்து வருந்துகின்றான்.

கொல் ஓ என்பன - ஐயப்பொருளில் வந்தன. கடி-மணம். (எகூ)

முறுவலி னெயின்மூன் றட்ட முதல்வனைப் பொருதி யென்றே
நறைமல ரயனு மேனைத் தேவரு நாகர் கோனு
முறுதுய ரகல விங்ங னுய்த்தனர் வினையேற் கின்னே
யிறுதிவந் தணுகிற் றாகு மிதற்குமோ ரைய முண்டோ.

(இ-ள்.) புன்சிரிப்பினால் முப்புரங்களை யெரித்தருளிய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான்மீது போர்செய்யக் கடவையென்று தேன்பொருந்திய கமலாசனனாகிய பிரமனும், மற்றைத்தேவர்களும், தேவேந்திரனும் தாங்களடைந்த துன்ப நீங்கும்படி இங்கு என்னை யனுப்பினார்கள். பாவியாகிய எனக்கு இப்பொழுதே மரணம் வந்து சம்பவித்ததுபோலும், இதற்குமொரு சந்தேகமுண்டோ?—எ-று. (அ0)

எண்டகு குணத்தின் மேலா மிறைபவ னிருந்த வண்ணங்
கண்டலும் வெருவி யாவி காண்கில னவனை யென்கைக்
கொண்டதோர் கணைகள் வாகை கொள்ளுமோ வினைய பான்மை
யண்டரு மயனும் யாரு மறிகிலர் போலு மன்றே.

(இ-ள்.) தகுதியாகிய அஷ்டகுணங்களிற் சிறந்தவராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுந் தன்மையைப் பார்த்தவுடனே பயந்து எனதுயிரைக் காணாதவனாயினேன். அவ்வெம்பெருமானை எனது கையிலுள்ள அம்புகள் வெற்றிகொள்ளுமோ? இத்தன்மையைத் தேவர்களும் பிரமனும் மற்றையர்களும் அறியார்போலும்.—எ-று.

எண்டகுகுணங்களாவன:—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன. இவற்றை,—"முடிவிலாற்றலை தன்வயத்தினை முற்றுணர்ச்சியை பேரருண் - மடிவிலாட்சியை தூய மேனியை மற்றியற்கையுணர்ச்சியை - படியிலாவியல் பாசநீங்கிய பாசநோயை வரம்பிலின் - புடையையுன்னடி யேங்களென்று முனக்கடைக்கல மையனே" என்னுங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (அக)

தாக்கினல் வலிபெற் றுள்ள மருத்தின்முன் றனித்த தீபம்
போக்கினு னிற்ப துண்டோ வனையது போலத் தேவர்
வாக்கினன் மனத்தா லெட்டா வள்ளன்மு னுய்த்தா ரன்னா
னோக்கினு லினிச்சில் போதி னுண்பொடி யாவன் போலாம்.

(இ-ள்.) வீசுந்தன்மையில் வலிபெற்றுள்ள வாயுவினெதிரில் ஒரு விளக்கைக் கொண்டுபோனால் அது அணையாமல் நிற்குமோ? அதுபோல, தேவர்கள் மனோவாசாமகோசரராயுள்ள சிவபெருமானுக்கு முன்னே என்னை யனுப்பினார்கள். அவ்வெம்பெருமானது பார்வையினால் இனிச் சிறுபொழுதுக்குள்ளே நுண்ணிய சாம்பலாவேன்போலும்.—எ-று.

தாக்கு - முதனிலைத்தொழிற்பெயர். மனோவாசாமகோசர ராகலின், 'வாக்கினான் மனத்தா லெட்டாவள்ளல்' என்றார். இதனை—"மறையினாலயனான்மாலான் மனத்தினால் வாக்கான்மற்றுங் - குறைவிலா வளவையாலுங் கூறொணாதாகி நின்ற- விறைவனார் கமலபாத மின்றியாணியம்புமாசை - நிறையினார் குணத்தோர்க்கெல்லா நகையினை நிறுத்துமன்றே" என்னுஞ் சிவஞானசித்தியாரானு முணர்க.

ஒரு சிறுதீபம் பெருங்காற்றின்முன் அவியாது நிற்குமாயின், யான் சிவபெருமான் முன்னே நின்று போர்செய்து வெற்றிபெறுவேனென்று கூறினனென்க. ()

ஏழுற வுலக மெல்லா மீறுசெய் முதல்வன் றன்னைப்
பூமலர் கொண்டு யானே பொருகின்றே னகையீ தன்றோ
வாமிது விதியின் செய்கை யதனையார் கடக்க வல்லார்
தாமரை முதல்வர்க் கேனுந் தள்ளருந் தகைய தன்றோ.

(இ-ள்.) உலகங்களனைத்துந் துன்பமுறும்படி சங்கரிக்கின்ற முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானைப் புஷ்பபாணத்தைக்கொண்டு யானோ? போர்செய்கின்றவன்; இதுநகைப்பல்லவோ, இது ஊழ்வலியின் சுபாவமேயாம், அதனைக்கடக்க வல்லவர்கள் யாவர்; அது தாமரைமலரிலுள்ள பிரமனுக்காயினும் நீக்குதற்கரிய தன்மை யுடையதல்லவோ?—எ-று.

சர்வசங்காரகாலத்தில் சர்வலோகங்களையு மழிக்கும் பேராற்றலையுடைய பெருமான் முன்னேசென்று யான் வெற்றிபெறுந் தரத்தனல்லே னென்றுகூறினனென்பதுகருத்து. விதியின்செய்கை யதனை யார் கடக்கவல்லார். என்பதனை:-ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று-சூழினுந் தான்முந்துறும்" என்னுந் திருக்குறளானு முணர்க. (அ௩)

ஈங்கிவை யமலன் சூழ்ச்சி யாவதோ முடிவ தோரேன்
றாங்கியான் கிடத்த லொல்லா துண்ணென வெழுந்து வில்லும்
வாங்கினன் சரமும் பூட்டி வல்லவா றிழைப்ப னையன்
பாங்குற நின்று மேலே பட்டவா படுக வென்றான்.

(இ-ள்.) இவ்விடத்து இவை சிவபெருமானது தந்திரங்கள் யாதாய்முடியுமோ? அறியேன்; யானுறங்கியிருத்தல் கூடாது. விரைவிலெழுந்து வில்லை வளைத்துப் பாணத்தைப்பூட்டிச் சிவபெருமா னருகினின்று என்னாற்கூடியவாறு (பாணப்பிரயோகஞ்) செய்கின்றேன். வந்ததுவரட்டுமென்று கூறினான்.—எ-று.

சிவபெருமான் திருவிளையாடல் காரணமாக ஓர்கால் நாம் வெற்றிபெறச் செய்யவுங் கூடுமாதலால், அவரது தந்திரம் எவ்வாறு முடியுமோவென்று சிந்தித்தனனென்பார், 'ஈங்கிவை யமலன்செய்கை யாவதோ முடிவதோரேன்' என்று கூறினார். வாங்கினன்-முற்றெச்சம். 'பட்டவாபடுக' என்பதற்கு, பாய்கின்றவாறுபாய்க. எனப் பொருள்கூறலுமொன்று. (அ௪)

இனையன பலவு முன்னி யெழுந்துமா மதவே ளிட்ட
தனுவினை யெடுத்து வாங்கித் தண்மலர் விசிகம் பூட்டி

மனைவிதன் னகலாள் செல்ல மதிக்குறை தவழ்ந்த சென்னிப்
புனிதன தொருசார் போகிப் பொருவகை முயன்று நின்றான்.

(இ-ள்.) இவ்வாறு பலவாக நினைத்துச் சிறந்த மன்மதனெழுந்து மேலேபோட்ட வில்லையெடுத்து வளைத்துக் குளிர்ந்த புஷ்பபாணத்தைப்பூட்டி இரதிதேவி தன்னை பிரியாமல் தொடர்ந்துவர இளம்பிறை தவழுந் திருமுடியினையுடைய சிவபெருமானுக்கு ஒருபுறத்திற்சென்று போர்செய்யும்படி முயற்சித்து நின்றான்.—எ-று. (அ௫)

மாரவே ளீண்டுநிற்ப மனோவதி நகரின் மேய
வாரண முதல்வன் றன்னை யமரர்கோன் றொழுது நோக்கிக்
காருறழ் கண்டன் றன்பாற் காமனை விடுத்தி யன்னான்
போரிய லுணர்வா னங்கட் போதரல் வேண்டு மென்றான்.

(இ-ள்.) மன்மதன் இங்கு இவ்வாறு நிற்க, மனோவதிப்பட்டணத்திலிருக்கின்ற பிரமனைத் தேவேந்திரன் வணங்கிப் பார்த்துக் காளகண்டராகிய சிவபெருமானிடத்து மன்மதனைச் செலுத்தினீர். அம்மன்மதன் போர்செய்யுந் தன்மையை யறியும்படி நாம் அங்குச் செல்லவேண்டுமென்று கூறினான்.—எ-று. (அ௬)

சதமக னினைய கூறத் தண்மலர்க் கடவு ளோராக்
கதுமென வெழுந்து வானோர் கணத்துட னன்னயன் போற்றப்
பொதிதரு கயிலை யந்தண் பொருப்பின்மே லொருசார் போகி
மதனியல் றெரிந்து முக்கண் வள்ளலை வழுத்தி நின்றார்.

(இ-ள்.) இந்திரன் இவ்வாறு கூறவும், குளிர்ந்த கமலாசனனாகிய பிரமன் அதற்குடன்பட்டு விரைந்தெழுந்து தேவர்கூட்டத்துடன் அவ்விந்திரன் துதிக்கச் சிறப்புப்பொருந்திய குளிர்ந்த திருக்கயிலைமலையி னொருபுறத்திற்சென்று மன்மதனது தன்மையை யுணர்ந்து மூன்றுகண்களையுடைய சிவபெருமானைத் துதித்து நின்றார்கள்.—எ-று.

திருக்கயிலைத் திருக்கோயிலின் நேரேசெல்லின், முன்னர் திருநந்திதேவரால் மன்மதன் தடையுற்றவாறுபோலத் தடையுறுவராகலின், ஒருபக்கத்திற் சென்றன ரென்பார், 'ஒரு சார்போகி' என்றார். (அ௭)

எறிதரு கணிச்சிச் செங்கை யீசன்மே லிலக்க நாடுங்
குறியினர் போல நின்ற கொடுந்தொழின் மாரன் றுஞ்சு
நெறியினர்க் கச்ச முண்டோ நினைத்தது முடிப்ப னென்னா
நறுமலர் வாளி யைந்து நாதன்மேற் செல்ல விட்டான்.

(இ-ள்.) வீசுதற்குரிய மழுப்படையேந்திய சிவந்த திருக்கரத்தையுடைய சிவபெருமான்மீது இலக்குப்பார்க்கின்ற குறிப்பினர்களைப்போல நின்ற கொடிய தொழிலையுடைய மன்மதன், இறக்கத்துணிந்த முறைமையினையுடையவர்க்கு அச்சமுண்டோ? (ஆதலால்) நினைத்ததை முடிப்பேனென்றுகூறி நறுமணங்கமழும் புஷ்பபாணங்களைந்தையும் சிவபெருமான்மீது பாயும்படி பிரயோகித்தான்.—எ-று. (அ௮)

விட்டவெம் பகழி யைந்தும் வியத்தகு விமலன் மீது
பட்டலுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்த லோடுங்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணாது கடிதே காமற்
சுட்டது கயிலை முற்றுஞ் சூழ்புகை பரவிற் றன்றே.

(இ-ள்.) மன்மதன் செலுத்திய கொடிய புஷ்பபாணங்களைந்தும் புகழத்தக்க சிவபெருமான்மீது படுதலும், உடனே மன்மதனைக் கொஞ்சம் பார்த்தருளினார்.

அவ்வாறு பார்த்தவுடனே மிக்க அக்கினி பொருந்திய நெற்றிக்கண்ணனது விளைந்து அம்மன்மதனையெரித்தது; அத்திருக்கயிலை முழுதுஞ் சூழ்ந்த புகை பரவியது.—எ-று.

சனகாதியர்பொருட்டு யோகாசாரியரா யெழுந்தருளியுள்ள பெருமானென்பார், 'வியத்தகுவிமலன்' என்றும், சிவபெருமான் தமது நுதல்விழியைமுற்றுந் திறப்பின், அம்மன்மதனேயன்றிச் சர்வலோகங்களுஞ் சாம்பராகவுடனே யெரிந்தழியுமாகலி னவ்வாறு திறவாமல் சிறிதே திறந்து பார்த்தனரென்பார், 'சிறிதே வேளைப்பார்த்தனன்' என்றுங் கூறினர். (அக)

ஆலயஞ் சிலைவே ளாக மழல்படக் கயிலை யின்க
ணேலவெம் புகையுந் தீயு மெழுதரு மியற்கை நாடின்
மாலயன் முதலோர் யாரு மதித்துழி விரைந்து பாலின்
வேலையி னடுவு தீய விடமெழுந் தனைய தம்மா.

(இ-ள்.) அழகிய கரும்பு வில்லையுடைய மன்மதனது தேகமானது எரிந்து போகவும், திருக்கயிலையில் மிக்கவெவ்விய புகையுந் தீயுந்தோன்றிய தன்மையையாராயுமிடத்தில், திருமால் பிரமன் முதலிய யாவருங் கடைந்தபொழுது விரைவாகப் பாற்கடலின் நடுவில் கொடிய விஷந்தோன்றிய தன்மையை யொத்தது.—எ-று.

இதனுள், திருக்கயிலையைப் பாற்கடலாகவும், அதிற்றோன்றிய புகையை அக்கடலிற்றோன்றிய ஆலாகலவிஷமாகவும், அக்கினியை அவ்விஷச்சுவாலையாகவுமுவமித்தவாறு காண்க. (கo)

செறிந்ததீப் புகையின் மாலை செல்லலுங் குணபால் வாய்த
லுறைந்ததோர் நந்தி தேவ னெல்லையி லதனைப் பாரா
விறந்துபா டாயி னுன்கொ லேகிய மதன னென்னு
வறிந்தரோ வடைந்தார்க் கோதி யொருசெய லறைய லுற்றான்.

(இ-ள்.) நெருங்கிய தீப்புகையி னொழுங்குகள் மேலெழுந்துசெல்லவும் கிழக்குத்திருவாயிலில் காவல்செய்திருந்த திருநந்திதேவர் விரைவில் அதனைப்பார்த்தருளி, சென்ற மன்மதன் இறந்தழிந்தானென்று அறிந்து அங்குவந்தபிரமன் முதலியவர்களுக்குச் சொல்லிப் பின்னொருசெய்கையைக் கூறுகின்றார்.—எ-று.

தீப்புகை வரிசைவரிசையாகப் பரவிச் செல்லுதலின், 'செறிந்த தீப்புகையின் மாலை' என்றார். (கக)

நுண்ணிய வுணர்வின் மிக்கீர் நுமக்கிது புகல்வ னெங்கோன்
கண்ணுத லுமிழ்ந்த செந்தீக் காமனைப் பொடித்த தன்றா
லண்ணலை யெய்வ னென்னு வனையவன் றுணிவிற் கூறித்
துண்ணென வீண்டு வந்த செயற்கையே சுட்ட போலும்.

(இ-ள்.) நுண்ணறிவிற் சிறந்த தேவர்களே! யான் உங்களுக்கிதனைச் சொல்லுகின்றேன். சிவபெருமானது நெற்றிக்கண்ணினின்றும் வெளிப்பட்ட நெருப்பானது மன்மதனைச் சுட்டதன்று; சிவபெருமான்மீது (பாணம்) விடுகின்றேனென்று அவன் துணிவோடுகூறித் திடீரென்றுஇங்குவந்தசெய்கையே அவனைச்சுட்டுவிட்டது.

இன்னினி மகிழ்நன் றுஞ்சு மியற்கையை யிரதி நாடி
வன்னிபெய் யலங்கல் போலாய் வயிறலைத் திரங்கி யெங்கோன்
றன்னைவந் திரப்பவேளைத் தருகுவன் காண்டி ரந்த
முன்னவ னுக்கட் காயமுறை புரியருளா லென்றான்.

(இ-ள்.) இனிமேல் தன்கணவனிறந்த செய்கையை இரதியறிந்து நெருப்பிலிட்ட பூமாலையைப்போன்று வயிற்றிலடித்துக்கொண்டு புலம்பி எமது சிவபெரு

மானை யடைந்து பிரார்த்திக்க, அவ்வெம்பெருமான் ஆன்மாக்களுக்குத்தக்க முறைமையைச்செய்கின்ற திருவருளால்(முன்போலவே) அம்மன்மதனையெழுப்பித் தந்தருளுவர் பாருங்களென்று கூறியருளினர்.—எ-று. (கூங)

ஐந்தொகை யாற்றின் மாடே யமலனை நினைந்து நோற்ற
நந்தியந் தேவ னின்ன நவிறலு மவற்சூழ் கின்ற
வந்தமில் கணத்தோர் கேளா வகிலமுய் பொருட்டா லெங்கோன்
புந்திகொ ளருளின் செய்கை போற்றெடுத் தனரா யுற்றார்.

(இ-ள்.) திருவையாறு என்னுந் திருப்பதியில் சிவபெருமானைச் சிந்தித்துத் தவஞ்செய்தருளிய திருநந்திதேவர் இவ்வார்த்தைகளைக் கூறவும், அவரைச் சூழ்ந்திருந்த அளவற்ற சிவகணங்கள் கேட்டு உலகமுய்யும்பொருட்டு எமது சிவபெருமான் திருவுள்ளத்திற் கொண்டுள்ள திருவருளின் செய்கையைத் துதித்துக்கொண்டிருந்தார்கள்.—எ-று.

ஐந்தொகை யாற்றின்மாடே யமலனை நினைந்துநோற்ற - நந்தியந்தேவன்; என்பதன்வரலாற்றை முன்னர்க்காண்க. (கூச)

வாவலங் கிள்ளை மான்றேர் மதன்புரி வினையா லன்னான்
வேவரப் புணர்த்து நோக்கி மிகைபடா தவன்சா ரான
தேவியை முடிக்கு மாற்றல் செய்திலன் இகல்பற் றின்றி
மூவரை விடுத்துத் தொன்னாள் முப்புரம் பொடித்த முன்னோன்.

(இ-ள்.) வெறுப்பு விருப்பின்றி முற்காலத்தில் மூவரைநீக்கி முப்புரத்தையெரித்தருளிய சிவபெருமான், தாவுகின்ற அழகிய கிளிகளாகிய குதிரைபூட்டிய தேரினையுடைய மன்மதன் செய்த கொடுஞ்செய்கையினால் அவன் எரியும்படி பொருந்தப்பார்த்தருளி, குற்றஞ்செய்யாது அவனருகிலிருந்த இரதியையழிக்குந் திறத்தைச் செய்தருளினரில்லை.—எ-று.

மூவராவர்,—தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி யென்பவர்கள். இவர்கள் பிழைத்துய்ந்தன ரென்பதனை:—எண்ணுடை மூவரிராக்கதர்க ளெரிபிழைத்துக்-கண்ணுதலெந்தை கடைத்தலைமுனின்றதற்பி - னெண்ணிலியிந்திர ரொத்தனையோ பிரமர்களு - மண்மிசைமால்பலர் மாண்டனர்காண்டோணேக்கம்" என்னுந் திருவாசகத் திருமுறையானு முணர்க. (கூரு)

கண்ணழல் சுடுத லோடுங் காமவேள் யாக்கை முற்றுஞ்
சுண்ணம தாகி வீழத் துஞ்சினன் போய பின்னை
யண்ணலம் பகவன் றொல்லை யமைதியி னிருந்தா னெல்லா
மெண்ணிநின் றியற்று மெங்கோற் கிணையதோ வரிதுமாதோ.

(இ-ள்.) நெற்றிக் கண்ணிலுள்ள அக்கினியானது எரித்தவுடன், மன்மதன் தேகமுழுதும் நீறாகி வீழ்ந்திறந்த பின்பு, மேன்மைபொருந்திய சிவபெருமான் பழைய நிலைமையிருந்தனர்; எல்லாப் பொருள்களையும் நினைத்துச் செய்யவல்ல எமது சிவபெருமானுக்கு இஃது ஓரருமையோ?—எ-று. (கூசு)

பாடுறு கணவன் செய்கை பார்த்தலு மிரதி யுள்ளங்
கூடின துயரம் விந்த கொண்டதொல் லுணர்ச்சி கண்ணி
ரோடின வியர்த்த மெய்முக் குயிர்த்தன வொடுங்கிற் றாவி
வீடின ளிவளு மென்ன விரைந்துகீழ்த் தலத்தின் வீழ்ந்தாள்.

(இ-ள்.) இரதியானவள் இறந்த தன்கணவனது செய்கையைப் பார்த்தவுடன் தன்மனதில் துன்பநேர்ந்தன; தானடைந்திருந்த முன்னுணர்வுகெட்டன;

கண்ணீரொழுகின ; தேகம் வியர்த்தது; மூக்குப் பெருமூச்சுவிட்டன ; பிராணனொடுங்கியது ; இவளும் இறந்தனளென்று சொல்லும்படி விரைந்து கீழேவிழுந்தனள்.

மன்மதனிறக்கக்கண்ட இரதியானவள் துன்புற்றுச் சோர்ந்து வீழ்தலின், உணர்ச்சிமாறுதல் முதலிய குணங்களையடைந்தன ளென்க. (கூள)

சுரிதரு குடிஞை யாற்றிற் சுழிதலைப் பட்ட மான்போற்
பருவரல் வாரி நாப்பட் படிந்துபற் றின்றிச் சோரு
மிரதிசில் பொழுதிற் பின்ன ரிறந்ததொல் லுணர்வு தன்பால்
வருதலு மறித்துச் செங்கை வயிறலைத் திரங்க லுற்றாள்.

(இ-ள்.) சுரிந்தோடுகின்ற ஆற்றிலுள்ள நீர்ச்சுழியி லகப்பட்ட மானைப்போலத் துன்பக்கடலில் மூழ்கி ஆதரவின்றி வருந்துகின்ற இரதியானவள் கொஞ்சநேரத்திற்குள்ளே அழிந்த முன்னுணர்ச்சி தன்னிடத்துவரவும் சிவந்த கையை மடித்து வயிற்றிலடித்துக்கொண்டு புலம்பத்தொடங்கினாள்.—எ-று.

குடிஞையாறு-இருபெயரொட்டு. ஆற்றுச்சுழலி லகப்பட்ட மான் தன்னைப் பாதுகாக்க வகையறியாது வருந்து மாறுபோல, இரதியும் தன்கணவனைப்பெறுதற்கு வகையறியாது வருந்தினளென்க. (கூஅ)

வேறு.

செம்பதுமை திருக்குமரா தமியேனுக் காருயிரோ திருமான் மைந்தா
சம்பரனுக் கொருபகைவா கன்னல்வரிச் சிலைபிடித்த தடக்கை வீரா
வம்பவளக் குன்றனைய சிவன்விழியால் வெந்துடல மழிவுற் றாயே
யும்பர்கடம் விழியெல்லா முறங்கிற்றோ வயனாரு முவப்புற் றாரோ.

(இ-ள்.) செந்தாமரைமலரில் வசிக்குந் திருமகளது அழகிய புத்திரனே! அடியாளுக்கு அரிய உயிர்போன்றவனே! திருமாலினது குமாரனே! சம்பராசுரனுக்குப் பகைவனே! கரும்பாகிய வரிந்தவில்லைப் பிடித்த பெரிய கையினையுடைய வீரனே! அழகிய பவளமலைபோன்ற சிவபெருமானது திருவிழியால் உடம்புவெந்தழிந்தனையே! (இப்போது) தேவர்களது கண்களனைத்தும் உறக்கங்கொண்டனவோ? பிரமதேவரும் மகிழ்வடைந்தனரோ?—எ-று.

சம்பரனென்னு மசுரனையழித்துச் சம்பராரியெனப் பெயர்பெற்றவனாகலின், 'சம்பரனுக் கொருபகைவா' என்றுகூறினர். இதனை—"நம்பிகருப்புவில்நல்லிசைபாடுந் - தும்பிகொணாணின் வளைத்தெதிர்தோன்றி - யம்பெனமென்மல ரைந்தும்விடுத்துச் - சம்பரனுவி தடிந்தனனன்றே" எனவருங் கூர்மபுராணத்தானுமுணர்க. நீ இவ்வாறு மடிந்தது தேவர்களுக்கும் பிரமனுக்குஞ் சம்மதமாயிற்றோவென்று வருந்தினளென்பார், 'உம்பர்கடம் விழியெல்லா முறங்கிற்றோ வயனாரு முவப்புற்றாரோ' என்று கூறினர். (கூகூ)

முன்னாளிற் புரமூன்று மட்டவன்மேற் பொரப்போதன் முறையோ வென்று
சொன்னாலுங் கேட்டிலையே யமரர்பணி புரிவதுவே துணிந்திட் டாயே
யுன்னாகம் பொடியாகிப் போயினதே யிதுகண்டு முய்வா ருண்டோ
வென்னாவி யாகியநீ யிறந்தபின்னும் யான்றனியே யிருப்ப தேயோ.

(இ-ள்.) முற்காலத்தில் திரிபுரங்களையு மெரித்தருளிய சிவபெருமான்மீது போர்செய்யச் செல்லுதல் தகுதியோவென்று (யான்) சொல்லியுங் கேட்கவில்லையே, தேவர்களது ஏவலைச்செய்வதற்கே துணிவுகொண்டனையே, உனதுதேகம் நீறாய் எரி

ந்துபோயிற்றே, இதனைப் பார்த்தும் பிழைப்பவர்களுண்டோ? என்னுயிராகிய நீ இற ந்தபின்பும் யான் தனியே யிருப்பது தகுதியோ?—எ-று. (௧00)

மாறாகப் பரமன்விழி நின்றாற்ற லிலதாக மற்றுன் மெய்யு
நீறாக விண்கெடல்லா நெருப்பாகக் கவலை விண்ணோர் நெஞ்சத் தாக
வாறாத பெருந்துயர மெனக்காக வெங்கொளித்தா யருவா யேனுங்
கூறாயோ வறிதிருந்தா யென்கணவா யான்செய்த குறையுண் டோதான்.

(இ-ள்.) நினக்குச் சிவபெருமான் விழியானது பகையாகவும், (உடனே) உனது வல்லமை கெடவும், உன்னுடம்பு நீறாகவும், இம்மலைமுழுதும் நெருப்பாகவும், தேவர்கள் மனதில் வருத்தமுண்டாகவும், எனக்கு நீங்காத பெரிய துன்பமுண்டாக வுஞ் (செய்து) நீ எங்கேயொளித்தனை; அருபியாக நின்றேனுஞ் சொல்லாயோ? என்னுயகனே! சும்மாவிருக்கின்றனையே, யான் செய்த குறை யேதேனுமுண்டோ?

உம்பர்கடம் பாலேயோ விந்திரனார் பாலேயோ வுன்னை யுய்த்த
செம்பதுமத் திசைமுகத்தோன் பாலேயோ வரன்செயலைச் சிதைப்பனென்னா
வெம்பரிடை வல்விரைந்து வந்திடுநின் பாலேயோ வீசன் கண்ணால்
வெம்பொடியாய் நீயிறந்த விப்பழிதா னெவர்பாலின் மேவிற் றையோ.

(இ-ள்.) சிவபெருமானது நேத்திரத்தினால் நீ நீறாக எரிந்திறந்த இந்தப் பழியானது தேவர்களிடத்திலேயோ? இந்திரனிடத்திலேயோ? உன்னையனுப்பிய செந்தாமரைமலரிலிருக்கின்ற பிரமனிடத்திலேயோ? சிவபெருமானது யோகத்தைக் கெடுக்கின்றேனென்று இங்கே மிக்க விரைவாகவந்த உன்னிடத்திலேயோ? ஐயோ! யாரிடத்திற் சேர்ந்தது? (அறியேன்.)—எ-று. (௧0உ)

வில்லான்முப் புரமெரித்த பரம்பொருள்யோ கந்தவிர்க்க வேண்டில் விண்ணோ, ரெல்லாரு மிறந்தனரோ வென்கணவா நீயோதா னிலக்காய் நின் றாய், கொல்லாது போலவுனைக் கொன்றனரோ யென்னுயிர்க்குங் கொலைசூழ் ந்தாரோ, பொல்லாத பேர்க்குநன்றி செய்வதுதம் முயிர்போகும் பொருட் டே யன்றோ.

(இ-ள்.) (மேருவாகிய) வில்லினால் திரிபுரங்களை யெரித்தருளிய சிவபெருமானது யோகத்தை நீக்கவேண்டில், தேவர்களனைவரு மிறந்தனரோ? என்னுயகனே! (இதற்கு) நீதானே இலக்காக விருந்தாய், (அவர்கள்) உன்னைக் கொல்லாது போலக் கொன்றார்களே, என்னுயிர்க்குங் கொலைதேடினார்களே, கொடியவர்களுக்கு உபகாரஞ்செய்தல் தமது உயிர் நீங்கும் பொருட்டல்லவோ?—எ-று.

சிவபெருமானது யோகத்தைத் தவிர்ப்பதற்கு வேறு தேவர்க ளொருவரு மில்லையோ வென்று வருந்தினளென்பார், 'விண்ணோரெல்லாரு மிறந்தனரோ' என்றும், நீ இறப்பாயென் றறிந்திருந்துந் துணிந்து உன்னை யனுப்பினார்களே யென்று துக்கித்தனளென்பார், 'கொல்லாதுபோல வுனைக் கொன்றனரோ' என்றுங்கூறினார்.

என்னபவஞ் செய்தேனோ வென்போல்வார் தமக்கென்ன விடர்செய்தேனோ
முன்னையுள விதிப்பயனை யறிவேனோ விப்படியே முடிந்த தையோ
கன்னல்வரிச் சிலைபிடித்த காவலவோ தமியேனைக் காத்தி டாயோ
வன்னிவிழி யாவுடைய பெருமானை நோவதற்கு வழக்கென் றுண்டே.

(இ-ள்.) யான் என்ன பாவஞ் செய்தேனோ, என்போன்ற மாதர்களுக்கு யாது துன்பஞ் செய்தேனோ, முன்னைய விதிப்பயனை யானறிவேனோ, அந்தோ! என க்கு இவ்வாறு முடிந்தது, வரிகளையுடைய கரும்புவில்லைப் பிடித்த எனது தலைவனே!

ஆதரவற்ற என்னைக் காவாயோ? அக்கினியைக் கண்ணாகவுடைய சிவபெருமானை நிந்திப்பதற்கு ஞாயமுண்டோ?—எ-று. (௧௦௪)

பொன்செய்தார் முடிகாணே னழகொழுகுந் திருமுகந்துப் பொலிவு
காணேன், மின்செய்பூ ணணிகுலவும் புயங்காணே னகன்மார்பின் மேன்
மை காணேன், கொன்செய்பூங் கணைகாணேன் சிலைகாணே னுடல்புரி கோ
லந் காணே, னென்செய்வே னென்கணவா வென்னையொழித் தெய்விடத்
தே யிருக்கின் றனையே.

(இ-ள்.) பொன்னரிமாலையையணிந்த கிரீடத்தைக் கண்டிலேன், அழகொழுகின்ற திருமுகத்தின் பொலிவைக் கண்டிலேன், ஒளிவீசுகின்ற ஆபரணமணிந்து விளங்குந் தோள்களைக் கண்டிலேன், அகன்ற மார்பினது மேன்மையைக் கண்டிலேன், அச்சந்தருகின்ற புஷ்பபாணங்களைக் கண்டிலேன், கரும்புவில்லைக் கண்டிலேன், போர்செய்யுங் கோலத்தைக் கண்டிலேன், யாதுசெய்வேன், என் கணவனே! என்னைவிட்டு (நீமாத்திரம்) எங்கு சென்றிருக்கின்றாய்.—எ-று. (௧௦௫)

அந்நாளி லழற்கடவுள் கரியாக வானவரோ டயன்மால் காணப்
பொன்னுரு மங்கலநாண் பூட்டியெனை மணஞ்செய்து புணர்ந்த காலை
யெந்நாளு மினியுன்னைப் பிரியலமென் றேவாய்மை யிசைத்தாய் வேனின்
மன்னவோ மன்னவோ வெனைத்தனியே விட்டேகல வழக்கோ சொல்லாய்.

(இ-ள்.) அக்காலத்திலே அக்கினிதேவன் சாக்ஷியாகத் தேவர்களுடன் பிரமவிஷ்ணுக்கள் காணும்படி பொன்னாலாகிய மங்கலநாணைத் தரித்து என்னைக் கலியாணஞ் செய்து புணர்ந்தகாலத்தில் இனி உன்னை எப்பொழுதும் விட்டுப் பிரியோமென்று சத்தியஞ்செய்தனை; வசந்தராஜனே, எனது மன்னவனே! என்னைத் தனியே விட்டு நீ செல்லுதல் ஞாயமோ சொல்வாயாக.—எ-று.

கரி—சாக்ஷி. 'பொன்னுருமங்கலநாண்' என்பதற்கு, சுபகரம்பொருந்திய மங்கலநாணெனப் பொருள்கூறலு மொன்று. (௧௦௬)

போவென்று வரவிட்ட தேவரெலாம் பொடியாகிப் போன வுன்னைப்
வாவென்று கடிதெழுப்ப மாட்டாரோ நின்றாதை வலிய னென்பா
ரோவென்று நானிங்கே யரற்றிடவும் வந்திலனு லுறங்கி னானோ
வேவென்று நின்சிரத்தில் விதித்திருந்தா லவரையெலாம் வெறுக்க லாமோ.

(இ-ள்.) நீ போகக்கடவாயென் றனுப்பிய தேவர்க ளனைவரும் சாம்பலாக வெரிந்த உன்னை வரக்கடவையென்று விரைந்தெழுப்ப மாட்டார்களோ? நினது தந்தையாகிய திருமால் மிக்க வல்லவனென்று கூறுவார்கள். நானிங்கு ஐயகோவென்று புலம்பவும் (அவர்) வரக்காணேன், நித்திரை செய்கின்றனரோ? எரிந்திறப்பாயென்று உன் தலையி லெழுதியிருந்தால் அவர்களனைவரையும் வெறுத்தல் கூடுமோ?

நேயமொடு மறைபயிலுந் திசைமுகனைப் புரந்தரனை நின்னைத் தந்த
மாயவனை முனிவர்களை யாவரையு நின்கணையான் மருட்டி வென்று
பாயதுபோன் மதிமுடித்த பரமனையு நினைந்திவ்வா றழிவுற் றாயே
தீயழலின் விளக்கத்திற் படுகின்ற பதங்கத்தின் செயலி தன்றே.

(இ-ள்.) அன்புடன் வேதமோதுகின்ற பிரமனையும், இந்திரனையும், உன்னைப்பெற்ற திருமாலையும் முனிவர்களையும் மற்றவர்களையும் உனது பாணத்தால் மருட்டி வெற்றிகொண்டாய்; அதுபோல, சந்திரனையணிந்த சிவபெருமானையும் நினைத்து இவ்வாறழிவுற்றனையே, சுடுகின்ற தீவிளக்கிலே விழுகின்ற விட்டிற்பறவையின் செய்கை யிதுவல்லவோ?—எ-று. (௧௦௮)

பிரமன்முதலியோரை வெற்றிகொண்டதுபோலக் கருதிச் சிவபெருமான் மீதுஞ் சென்றனை, இது சிறந்த பழமென்று கருதி விளக்கில் வீழ்ந்திறக்கும் அற்பமாகிய விட்டிற்பூச்சியின் செய்கைபோன் றிருந்ததென்று கூறி வருந்தினளென்பது கருத்து. (கoஅ)

தண்பனிநீர்ச் சிவிறிகொண்டு விளையாடி மலர்கொய்து தண்கா நண்ணி
வெண்படம்பூம் பள்ளிமிசைச் சிறுதென்றல் கவரிகளா யினிது செல்ல
வெண்பளித நறுஞ்சாந்தச் சேறுடி யிருவருமாய் விழைந்து கூடிக்
கண்படைகொண் டமர்வாழ்வும் பொய்யாகிக் கனவுகண்ட கதையா யிற்றே.

(இ-ள்.) குளிர்ந்த பனிநீர் தோய்ந்த விசிறியைக்கொண்டு விளையாடியும், குளிர்ந்தசோலைகளிற்சென்று மலர்களைக்கொய்தும், மதிக்கத்தக்க புஷ்பசயனத்தின் மீதுமந்தமாருதமானது வெண்சாமரங்களாக இனிமையோடுவீச,வெள்ளிய கர்ப்பூரங் கலந்த நல்ல கலவைச்சாந்துபூசி நாமிருவரும் விரும்பிப்புணர்ந்து நித்திரைசெய்திருந்த வாழ்வும் பொய்யாகிச் சொப்பனங்கண்ட கதைபோலாயிற்றே.—எ-று.

எண் - முதனிலைத் தொழிற்பெயர். (கoக)

மருகென்றே யவமதித்த தக்கனூர் வேள்விசெற்ற வள்ள றன்னைப்
பொருகென்றே தேவரெலாம் விடுத்தாரே யவராலே பொடிபட் டாயே
யெரிகின்றே னுனைப்போல வாறுத பெருந்துயரால் யானுமங்கே
வருகின்றேன் வருகின்றே னென்னுயிரே யெனப்புலம்பி வருந்து கின்றாள்.

(இ-ள்.) மருமகனென்று அவமதித்தல் செய்த தக்ஷனதுயாகத்தை யழித்த சிவபெருமான்மீது போர்செய்யக் கடவாயென்று தேவர்களுனவரு முன்னையனுப்பினரோ; அத்தேவர்களால் சாம்பராயினையே, தணியாத பெருந்துன்பத்தினுல் உன்னைப்போல நானுமெரிகின்றேன்; நீ சென்றவிடத்திற்கு (யானும்) வருகின்றேன் வருகின்றேன். என் பிராணநாயகனே! யென்று புலம்பி வருந்துகின்றவளானாள்.—எ-று.

நமது மருமகனென்னு முறைமையால் இகழ்ந்து கூறினனென் றெண்ணுமல் அவன் செய்த தீமையைக்குறித்து உடனே யழித்தருளிய பெருமானென்பதை யுணராமல் நீ சென்றெதிர்த்து எரிந்தழிந்தனை, நீ யெரிந்தழிந்ததுபோல, யானும் துயராக்கினியால் எரிந்துகொண்டிருக்கின்றேனாகலான், யானும் நீ இறந்து சென்றவிடத்திற்கு வருகின்றேனென்று கூறின ளென்க. 'அவரால்' என்பதற்கு, அச்சிவபெருமானுல், எனினுமாம். (கக0)

**காமதகனப்படலமுற்றிற்று.**

ஆ திருவிருத்தம் - கூoக.

---

உ

முருகன்துணை.

# மோனநீங்குபடலம்.

இரதி யின்னணம் வருந்திடத் தொன்மைபோ லெங்கோமான்
விரத மோனமோ டிருத்தலு முன்னரோ விறற்காமன்
கருது முன்பொடி பட்டது கண்டனர் கலங்குற்றார்
சுருதி நன்றுணர் திசைமுகன் முதலிய சுரரெல்லாம்.

(இ-ள்.) இவ்வாறு இரதிதேவியானவள் வருந்த, எமது சிவபெருமான் முன்போலவே மௌன விரதத்தோடிருக்கவும், வேதங்களை நன்குணர்ந்த பிரமன் முதலிய தேவர்களனைவரும் இதற்கு முன்னமே வலிய மன்மதன் நினைக்கு முன்னே நீறான தன்மையைக்கண்டு மனங்கலங்கினார்கள்.—எ-று.

மன்மதன் நெற்றிக்கண்ணினா லெரிந்தழிந்ததையும், சிவபெருமான் முன்போலவே மோனநிலையிலிருத்தலையும், பிரமனாதி தேவர்கள்கண்டு மனங்கலங்கினார்களென்க. (க)

சிதலை மெய்த்தொகை வன்மிகத் தெழுந்தெனச் செலக்கண்ணீர்
பதலை யொத்தன வல்லல்கூர்ந் தரற்றிடப் பகுவாய்கள்
விதலை பெற்றுமெய் வியர்ப்புற வுளநனி விதிர்ப்பெய்த
மதலை யிற்றுழி நாய்கர்போற் றுயர்க்கடன் மறிகின்றார்.

(இ-ள்.) ஈசல்கள் புற்றி னின்றுங் கூட்டமாய்ப் புறப்படுவதைப் போலக் கண்ணீரொழுகவும், திறந்தவாய்கள் பேரிகைபோன்றனவாய்த் துன்பமிக்குப் புலம்பவும், தேகம் நடுக்கமுற்று வியர்க்கவும், மனம் மிகவும் நடுங்கவும் (நடுக்கடலிற்) கப்பலுடைந்தபோது (அதனால் வருந்துகின்ற) வணிகர்களைப்போலத் துன்பமாகிய கடலில் வீழ்கின்றவர்களானார்கள்.—எ-று.

சிதலை-கறையான்; அது, ஈண்டு ஈசலின்மேனின்றது. பதலை-ஒருகட்பறை. விதலை-நடுக்கம். சரக்கேற்றிச்செல்லும் மரக்கலம் நடுக்கடலிற் கவிழ்ந்தபோது அதற்குரிய வியாபாரிகள் வருந்துமாறுபோல, வருத்தமுற்றார்களென்க. (உ)

மையு லாவரு கறைமிடற் றிறையவன் மருங்காக
வெய்யு மாரனை விடுத்தன மவனையு மிறச்செய்தான்
பொய்யி றன்னிலை தவிர்ந்திலன் றொன்மையே போனற்றா
லைய கோவினிச் செய்வதென் னோவென வயர்கின்றார்.

(இ-ள்.) கருநிறம் விளங்குகின்ற காளகண்டத்தையுடைய சிவபெருமானருகில் (புஷ்பபாணங்களை) விடுகின்ற மன்மதனை யனுப்பினோம்; அம்மன்மதனையு மிறக்கச்செய்தனர். (அவ்வாறுசெய்தும்) மெய்ம்மையாகிய தமது யோகநிலையைத் தவிர்ந்தாரில்லை; முன்போலவேயிருக்கின்றனர். ஐயோ ? இனியாது செய்வதென்று வருந்துகின்றார்கள்.—எ-று. (ங)

பூத்த ருங்கணை மாரனை விழியினாற் பொடிசெய்த
வாத்த னாற்றலைப் புணர்ப்பினா னீக்குவ தரிதன்னான்
காத்து நந்துய ரகற்றிட வேண்டுமேற் கடிதேயா
மேத்தல் செய்வதே கடனென யாவரு மிசைவுற்றார்.

(இ-ள்.) புஷ்பபாணத்தையுடைய மன்மதனை நெற்றிக்கண்ணினா லெரித்தருளிய சிவபெருமானது வல்லமையை உபாயத்தினால் நீக்குதலரிதாகும் ; அச்சிவபெருமான் நமது துன்பங்களையொழித்து இரக்ஷிக்கவேண்டுமாயின், நாம் விரைவாகத் துதிப்பதே முறைமையென்றுகூறித் தேவர்களனைவரும் இசைந்தார்கள்.—எ-று.

ஆத்தன்-உயிர்த்துணையாயுள்ளவன். (ச)

எகின மூர்பவன் முதலிய கடவுள ரெல்லோரு
மகன மார்ந்திவை யிசைந்துதொல் கயிலையி னகநாப்பட்
புகல தாயபொன் னகரிடைக் கோபுரப் புறனேகித்
தொகுதி யோடேம திறைவனை யொல்லெனத் துதிக்கின்றார்.

(இ-ள்.) அன்னவாகனனாகிய பிரமன்முதலிய தேவர்களனைவரும் மனவொற்றுமையோடு இவ்வாறு செய்தற்கிசைந்து, பழைமையாகிய திருக்கயிலையின் மத்தியில் (யாவருக்கும்) அடைக்கல ஸ்தானமாயுள்ள பொன்மயமாகிய திருநகரத்தின் கோபுரவாயிலிற் கூட்டமாகச் சென்று நின்று எமது சிவபெருமானைவிரைந்து துதி செய்கின்றார்கள்.—எ-று. (௫)

நஞ்ச ருந்தியு நதியினைச் சூடியு நடுநெற்றித்
துஞ்சும் வெங்கனல் பரித்தும்வெவ் வலியரைத் தொலைத்திட்டு
மஞ்ச லென்றுமுற் காத்தனை யின்றெமக் கருளாயேற்
றஞ்ச மாருளர் தாதையே யல்லது தனயர்க்கே.

(இ-ள்.) விஷத்தையுண்டும் கங்கைநதியையணிந்தும், நடுநெற்றியில் மிக்க அக்கினியைத்தாங்கியும் கொடிய வலியவர்களையழித்தும் பயப்படாதீர்களென்று முன்பெங்களைக்காத்தருளினீர். (அவ்வாறு காத்தருளிய தேவரீர்) இப்பொழுது எங்கட்குத்திருவருள் புரியீராயின், தந்தையையல்லது மைந்தர்களுக்கு ஆதரவுயாவரிருக்கின்றார்கள்.—எ-று.

விடபான முதலியவற்றைச்செய்து முன்பெங்களைக் காத்தருளினமை போல, இன்றுங்காத்தருள வேண்டுமென்பார்; 'தஞ்சமாருளர் தாதையரல்லது தனயர்க்கே' என்றார். (௬)

கோளி லன்பர்க ளிழுக்கிய புரியினுங் குணனுக்கொண்
டாளு மெம்பிரா னின்னடி யரணமென் றடைந்தேங்க
ளாளும் வெந்திறற் சூரபன் மாவினா லலிவெய்தி
மாளு கின்றதோ சிறிதுமெம் முறுதுயர் மதியாயோ.

(இ-ள்.) குற்றமற்றமெய்யடியார்கள் இழிவான காரியங்களைச் செய்யினும், அதனைக் குணமாகக்கொண்டு அடிமைகொண்டருளும் எமதாண்டவரோ! தேவரீரது திருவடியில் அடைக்கலமாக வடைந்துள்ள யாங்கள் கொடுஞ்செய்கையையுடைய சூரபதுமனால் நாள்தோறும் வருத்தமுற் றிறக்கவோ? எங்களது துன்பத்தைச் சிறிதுந் திருவுள்ளங் கொண்டிலீரோ?—எ-று.

அடியார்கள் செய்தகுற்றத்தைக் குணமாகக் கொண்டருள்புரிவர், என்பதனை:—"தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் வண்டத் தொடுமுடனே - பூதலத் தோர்கள் வணங்கப் பொற்கோயிலும் போனகமு மருளிச் - சோதி மணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும் - பாதகத்துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்னுந் திருப்பல்லாண்டானு முணர்க. (௭)

தைய லைப்பிரீஇ யோகியல் காட்டிடு தனிச்செய்கை
யைய நிற்கிதோ ரிறைவரை யாகுமா லதுகாலை
நைய மெங்களுக் குகம்பல சென்றன நாமெல்லா
முய்வ தெப்படி யின்னுநீ புறக்கணித் துறுவாயேல்.

(இ-ள்.) உமாதேவியாரைப் பிரிந்து யோகநிலையைக் காட்டுகின்ற ஒப்பற்ற செய்கையையுடைய எமதாண்டவரோ! தேவரீருக்கு இஃதோர் கணப்பொழுதாம்; அந்தக் கணப்பொழுதானது வருந்துகின்ற எங்களுக்கு அநேக யுகங்களாயின. இன்னும் தேவரீ ரிவ்வாறு பராமுகமாயிருப்பின் நாங்களனைவரும் பிழைத்தலெவ்வாறு.—எ-று.

தையல் - ஆகுபெயர். புறக்கணித்தல் - வேற்றுமை செய்தல். (அ)

நோற்று மாயவன் முதலினோர் யாவரு நுனதாளைப்
போற்றி யர்ச்சனை புரியவித் திருவெலாம் புரிந்துற்றாய்
தோற்ற மின்றியே யைந்தொழி லியற்றிய தொல்லோய்நீ
யாற்று கின்றதோர் தவநிலை யெம்பொருட் டளவன்றோ.

(இ-ள்.) திருமால் முதலிய யாவரும் தவஞ்செய்து தேவரீரது திருவடிகளைத்துதித்து அருச்சனைபுரிய, இச்செல்வங்க ளனைத்தையும் அருள்செய்தீர். சுயம்புவாய் நின்று பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்தருளிய பழம்பொருளாயுள்ளவரே! தேவரீர் செய்தருளுந் தவநிலையும் அடியேங்கள் பொருட்டன்றோ?—எ-று.

திருமால் முதலியோர் சிவபெருமானைப் பூசித்துச் சகல செல்வங்களையும் பெற்றன ரென்பதனை :—"வானமேத்த யான் வைகுந்த வாழ்வுபெற் றதுவு - ஞான நான்முகன் ௺சத்திய வுலகநண் ணியது - மேனை விண்ணவர் தத்தம வாழ்க்கையெய் தியது - மானுயர்த்தவ னருட்குறி யருச்சனைப் பயனால்" என்னுங் காஞ்சிப்புராணத் தானுமறிக. (௯)

எய்த்தி டுஞ்சிறி யேங்களைத் தவறுகூ ரிடர்வாளா
ணித்த லுந்துணித் தீருதி செய்வினை நெறிநேடி
யத்த விங்கினிக் காத்தரு ளல்லதே லடுவல்லே
சித்த மென்னுனக் கன்னவா றென்றினைச் செய்வாயே.

(இ-ள்.) எமது பெருமானே! சோர்வடைந்திருக்கும் அற்பர்களாகிய எங்களைக் குற்றமிக்க துன்பமாகிய வாளினால் நாடோறும் வெட்டிப் பிளக்கின்றீர்; இனி செய்யவேண்டிய முறைமையைத்தேர்ந்து காத்தருள்வீர். அஃதன்றேல், விரைவில் எங்களை யழித்தருள்வீர். தேவரீரது திருவுள்ள மெப்படியோ, அவ்வாறே (இவ்விரண்டில்) ஒன்றைச் செய்தருள்வீர்.—எ-று.

எம்பெருமானே! எங்களது துன்பத்தை யொழித்துக் காத்தருள்வதாயினும், அல்லது அழித்தருள்வதாயினும் இவ்விரண்டி லொன்றைத் தேவரீர் திருவுள்ளப்படி விரைவில் செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தன ரென்க. (௧௦)

கங்கை வேணியா யம்மையை மணந்தெமைக் கடிகொள்ளத்
திங்கள் வெண்குடை மதனனை விடுத்தனந் தெளிவில்லே
மங்க வன்புரம் பொடித்தனை முன்புபோ லமர்ந்துற்றா
யிங்கி யாந்தளர் கின்றதே யினிச்சிறி திரங்காயோ.

(இ-ள்.) கங்கைநதியை யணிந்த சடைமுடியை யுடைய எமது ஆண்டவரே! (தேவரீர்) உமாதேவியாரைத் திருமணம்புரிந்து எங்களைக் காத்தருளும்பொருட்டு, தெளிவற்றவர்களாகிய யாங்கள் சந்திரனாகிய வெண்குடையினையுடைய மன்மதனை யனுப்பினோம். அவனது சரீரத்தைச் சாம்பராக்கினீர். (அவ்வாறுசெய்தும்) முன்போலவே ஞானயோகத் தெழுந்தருளினீர். இங்குயாங்கள் துன்பப்படவோ? இனிச்சிறிது இரக்கங்கொள்ளீரோ?—எ-று.

தேவரீர் பார்வதியாரைத் திருமணம்புரிதற்கு எங்களது வேண்டுகோளே காரணமாகவிருக்க, அதனையுணராமல் மன்மதனை விடுத்தமை எங்களறிவீனமேயென்று கூறின ரென்பார், 'திங்கள் வெண்குடை மதனனை விடுத்தனந் தெளிவில்லேம்' என்றனர். புரம் - சரீரம். (௧௧)

ஆர முற்றின வயப்புலி முதலிய வடன்மாவின்
பேரு ரித்திறந் தரித்தனை சிறுவிதி பெருவேள்வி

வீர ணேக்கொடு தடிந்தனை யஃதென மிகவெய்ய
சூர பன்மனைத் தொலைவுசெய் தெந்துயர் தொலைக்கென்றார்.

(இ-ள்.) கொடிய தீப்போலுங் கோபத்தையுடைய வெற்றி பொருந்திய புலி முதலிய வலிய மிருகங்களின் பெரிய தோல்முதலியவற்றை யணிந்தருளினீர். தக்ஷன்செய்த பெரிய யாகத்தை வீரபத்திரரைக் கொண்டழித்தருளினீர். அதுபோல, மிகக்கொடிய சூரபதுமனையழித்து எங்களுடைய துன்பத்தை நீக்கியருளவேண்டு மென்று விண்ணப்பஞ் செய்தார்கள்.—எ-று.

தொலைக்கவென்றார் என்பது, தொலைக்கென்றார் எனத்தொகுத்தலாயிற்று.

முரற்கொள் வண்டுசூழ் சததளப் பண்ணவன் முதலோர்க
ளுருக்க ரக்கென மெய்தளர்ந் திவ்வகை யுளநொந்தே
யரற்றி யேத்தலு மவர்பவ முடிவதற் கணித்தாக
விரக்க மாயரு ணந்தியை நினைந்தன னிறையோனே.

(இ-ள்.) சப்திக்கின்றவண்டுகள் மொய்க்கின்ற நூறிதழ்களையுடைய கமலாசனனாகிய பிரமன்முதலியதேவர்கள் உருக்கிய அரக்கைப்போல உடல்தளர்ந்து இவ்வாறுமனம் வருந்திப்புலம்பித்துதிக்கவும், அவர்களது பாவம் நீங்குதற்குச் சமீபித்த படியால், (அப்பொழுது) சிவபெருமான் கிருபையோடு திருநந்திதேவரைச் சிந்தித்தருளினர்.—எ-று. (௧௩)

எந்தை நந்தியை யுன்னலு மவனறிந் திறைவன்முன்
வந்து வந்தனை செய்துகை தொழுதலு மறைமேலோன்
கந்த மாமலர்க் கடவுளா தியர்தமைக் கடிதெம்முன்
றந்தி டென்றன னன்றென முதற்கடை தனில்வந்தான்.

(இ-ள்.) எமது சிவபெருமான் திருநந்திதேவரை நினைத்தருளியவுடனே அத்திருநந்திதேவரதனையறிந்து சிவபெருமான் திருமுன்னடைந்து துதித்துக் கை குவித்து வணங்கவும், வேதத்தின் முடிந்தபொருளாயுள்ள அவ்வெம்பெருமான் (அவரைப்பார்த்தருளி)நறுமணங்கமழுங் கமலாசனனாகிய பிரமன்முதலியதேவர்களை விரைவில் நமது சந்நிதியிலழைத்துவரக்கடவை யென்றருளிச்செய்ய, (அவர்) அவ்வாறே செய்கின்றேனென்று முதற்றிருவாயிலில் வந்தனர்.—எ-று.

'எந்தை நந்தி' என்பதற்கு, எந்தையாகிய திருநந்திதேவர் எனப்பொருள் கூறுதலுமொன்று. (௧௪)

கணங்கள் காப்புறு முதற்கடை குறுகலுங் கண்டேத்தித்
தணங்கொள் பங்கயன் வாசவன் விண்ணவர் தாமெல்லாம்
வணங்க வெம்பிரா னுமைத்தரு கென்றனன் வறிதேனு
மணங்கு கொள்ளலீர் வம்மினோ நீவிரென் றருள்செய்தான்.

(இ-ள்.) சிவகணங்கள் காவல்செய்கின்ற முதற்றிருவாயிலில் வந்தவுடனே, குளிர்ச்சியையும் அழகையுமுடைய தாமரைமலரிலிருக்கும் பிரமனும் இந்திரனும் தேவர்களுமாகிய அனைவரும் (அத்திருநந்திதேவரைத்) தரிசித்துத்துதித்து வணங்க, (அவர்) எமது சிவபெருமான் உங்களை யழைத்துவரக் கட்டளையிட்டருளினார் நீங்கள் சிறிதும் வருந்தாதீர்கள்; வாருங்களென்றுஅருளிச்செய்தனர்.—எ-று.

தணங்கொள் என்பதனை, தண் - அம் - கொள் எனப்பிரித்துப் பொருள் கொள்க. (௧௫)

சேர்த்த நந்திவந் திவ்வகை யுரைத்தசொற் செவிதோறும்
வார்த்த பேரமு தாதலு முவகையின் மதர்ப்பாகிப்
பேர்த்தொர் மாற்றமு முரைத்திலர் பிரமனே முதற்றேவ
ரார்த்து நாதனைப் பாடின ராடின ரலமந்தார்.

(இ-ள்.) சிறப்பினையுடைய திருநந்திதேவர் வந்து இவ்வாறு கூறியருளிய வார்த்தைகள் செவிகள்தோறு மொழுக்கிய சிறந்த அமிர்தமொத்திருக்கவும், பிரமன் முதலியதேவர்கள் சந்தோஷத்தினால் பூரித்து மறுமொழிகூறாதவர்களாய் ஆரவாரித்துச் சிவபெருமானைத் துதித்து ஆனந்தக்கூத்தாடி அச்சமுற்றார்கள்.—எ-று. (கசு)

பெரிது நோயுழந் தருள்பவ ரின்றியே பெருங்கால
நிரய முற்றுளோர் தங்களை யெடுத்திடு நிலைத்தன்றோ
வருளி னீர்மையா லுமையரன் விளித்தன னனைவிரும்
வருதி ரென்றசொற் பங்கயன் முதலிய வானோர்க்கே.

(இ-ள்.) பிரமன்முதலிய தேவர்களுக்கு, திருவருட்டன்மையினால் சிவபெருமான் உங்களை யழைத்தருளினார்; யாவரும் வாருங்களென்று (திருநந்திதேவர் கூறிய) வார்த்தையானது, மிக்க துன்பத்தில் வருந்திக் காப்பவரின்மையால் அநேககாலம் நரகத்திற்கிடந்தவர்களை மேலெடுத்துக் காக்குந் தன்மையதன்றோ.—எ-று.

திருநந்திதேவர் பிரமனாதிதேவர்களைச் சிவபெருமா னழைத்தருளியதாகக் கூறியது, நெடுங்காலம் நரகத்திலழுந்தியிருப்போரைக் கரையிலெடுத்து காப்பது போன்றிருந்ததென்க. (கஎ)

செய்ய லாவதொன் றின்றியே மகிழ்ச்சியிற் றிளைத்தோராய்
மைய லாகிய பண்ணவர் தங்களை வல்லேகொண்
டையன் முன்னுற வுய்த்தன னிருவகை யறத்தோரு
முய்ய வெஞ்சம னுடைதரப் புவியினி லுதிக்கின்றோன்.

(இ-ள்) இருவகை யறத்தினையுடையவர்களு முய்யவும், கொடிய இயமன் தோல்வியடையவும் அவதரித்தருளுந்திருநந்திதேவர் செய்வதொன்றின்றிச்சந்தோஷத்தில் மூழ்கினவர்களாய் மயங்கியிருக்கின்ற தேவர்களை விரைவிலழைத்துக்கொண்டு சிவபெருமான் திருமுன்னே விட்டனர்.—எ-று.

இருவகை யறமாவன—இல்லறம் துறவறமென்பன. இருவகையறத்தோருமுய்ய வெஞ்சமனுடைதரப் புவியினிலுதிக்கின்றோன் பண்ணவர் தங்களை ஐயன் முன்னுறவுய்த்தனன், எனக்கூட்டுக. (கஅ)

வேறு.

வண்டுளர் கமலமேன் மதலை வாசவ
னண்டர்க ளனைவரு மன்பொ டேகியே
பண்டுயிர் முழுதருள் பரனைக் கண்களாற்
கண்டனர் வழுத்தினர் கரகள் கூப்பினார்.

(இ-ள்.) வண்டுகள் முரல்கின்ற தாமரைமலரில் வசிக்கும் பிரமனும் இந்திரனும் தேவர்களுமாகிய அனைவரும் அன்புடன்சென்று, அநாதியில் ஆன்மகோடிகளையளித்தருளிய சிவபெருமானைக் கண்களால் தரிசித்தவர்களாய்க் கைகூப்பித் துதித்தார்கள்.—எ-று.

அநாதியில் ஆன்மாக்களுக்குத் தனுகரண புவனபோகங்களைக் கொடுத்தருளிய பெருமானென்பார், 'பண்டுயிர்முழுதருள் பரன்' என்றார். இதனை:—"காரிட்ட

வாணவக் கருவறையி லறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல் - கட்டுண்டிருந்த வெமை வெளியில்விட்டு" எனவருந் தாயுமானவர் திருவாக்கானு மறிக. (கசு)

விண்மதி படர்சடை வேத கீதனை
யண்மினர் வணங்கின ரரிமு னூற்றிய
வுண்மகிழ் பூசனை யொப்பப் போதநீர்
கண்மல ரதனொடு கழல்கள் சேரவே.

(இ-ள்.) ஆகாயத்தில் தவழுஞ் சந்திரனை யணிந்த சடைமுடியையுடைய சாமகண்டராகிய சிவபெருமானை யடைந்தவர்களாய், திருமால் முற்காலத்துச்செய்த மனமகிழ்வினையுடைய பூசையைப்போல, ஆனந்த பாஷ்பஞ் சிந்துகின்ற கண்களாகிய தாமரைமலர்களோடு திருவடிகள்பொருந்தும் வண்ணம் நமஸ்கரித்தார்கள்.-எ-று.

திருமால் தனது விழியைப்பிடுங்கிச் சிவபெருமான் திருவடிகளில் அருச்சித்தமையை:—" பன்னுமொரு திருப்பெயர்க்கு நறுங்கமலங் காணாமைப் பதைத்து நோக்கி - யென்னினிமேற் செயலென்று தெரிந்துணர்ந்து தனதுவிழி யிடந்துபெம்மான்-கொன்மலர்த்தாண் மிசைச்சாத்திக் களிகூர்ந்தா னுறுப்பினையுங் கொடுப்பதல்லான்-மென்மையுறத் தாங்கொண்ட விரதத்தை விடுவர்களோ கொள்கை மேலோர்" என்னுங் காஞ்சிப்புராணத்தானுமுணர்க. (உ௦)

வணங்கிய பண்ணவர் வல்ல வல்லவா
பணங்கிள ரரவரைப் பரமற் போற்றலு
முணங்கிய சிந்தையீ ருமது வேண்டலு
மணங்குறு நிலைமையு மறைமி னென்னவே.

(இ-ள்.) நமஸ்கரித்த தேவர்கள் தங்கள் தங்களிஷ்டப்படி படம் விளங்குகின்ற பாம்பையணிந்த இடையினையுடைய சிவபெருமானைத் துதித்தவுடனே, (அவ்வெம்பெருமான்) வருந்திய மனத்தினையுடைய தேவர்களே! உங்களது வேண்டுகோளும் துன்பமுற்றிருக்குந் தன்மையுங் கூறுவீர்களென்றருளிச்செய்ய.—எ-று.

சிவபெருமானது புகழ் அளவிடப்படாமையால் தங்களாற் கூடியவாறு புகழ்ந்தனரென்பார், 'வல்லவல்லவா பணங்கிளரரவரைப் பரமற்போற்றலும்' என்றார்.

பேருக மளப்பில பெயர்த லின்றியே
சூரன தாணையிற் றுயர்ப்பட் டாழ்ந்தனங்
காருறழ் கந்தரக் கடவு ணீயலா
தாருள ரடியரே மலக்க ணீக்குவார்.

(இ-ள்.) அநேகம்பெரிய யுகங்களாக இடைவிடாமல் சூரபதுமனது கொடுங்கோன்மையினால் துன்பமுற்றுத் தாழ்வடைந்தோம், மேகம்போலுங் கரியகண்டத்தையுடைய எமதாண்டவரே! தேவரீரையன்றி அடியேங்களுடைய துன்பத்தை நீக்கத்தக்கவர்கள் வேறு யாவரிருக்கின்றார்கள்.—எ-று. (உஉ)

ஆயவெஞ் சூரன தாவி நீக்கவோர்
சேயினை யருளுவான் சிமைய மாகிய
மீயுயர் வரையிடை மேவி நோற்றிடு
மாயையின் முதல்வியை மணத்தல் வேண்டுநீ.

(இ-ள்.) அத்தகைய கொடிய சூரனுடைய உயிரை நீக்குதற்கு ஒருபுத்திரனைத் தந்தருளும்பொருட்டு மிகப்பெரிய இமையமலையின்கணெழுந்தருளித் தவஞ்செய்கின்ற மாயாகாரணியாகிய பார்வதிதேவியாரைத் தேவரீர் திருமணஞ்செய்தருளல்வேண்டும்.—எ-று. (உங)

என்றிவை கூறியே யாரு மெம்பிரான்
மன்றலந் தாண்மலர் வணங்கிப் போற்றநு
மின்றிகழ் பசுங்கதிர் மிலேச்சும் வேணியா
னன்றென விசைந்திவை நவிறன் மேயினன்.

(இ-ள்.) என்று இவ்வாறு விண்ணப்பஞ்செய்து தேவர்களனைவரும் சிவபெருமானது நறுமணங்கமழும் அழகிய தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கித்துதிக்கவும், ஒளிவிளங்குகின்ற இளம் பிறையை யணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் நல்லதென்று திருவுள்ளமிசைந்து இவ்வாறு அருளிச் செய்வாராயினர்.—எ-று.

தண்ணொளிவீசு மிளம்பிறையென்பார், 'மின்றிகழ் பசுங்கதிர்' என்றார். ()

புங்கவர் யாவரும் பொருமல் கொள்ளலீ
ருங்கடம் பொருட்டிலவ் வோங்கல் வைகிய
மங்கையை மணந்துநும் வருத்த நீக்குது
மிங்கினி யாவரு மேகு கென்றனன்.

(இ-ள்.) தேவர்களே! நீங்களனைவருந் துன்பமடையாதீர்கள்; உங்கள் நிமித்தமாக அவ்விமாசலத்தில் வசிக்கின்ற பார்வதியைத் திருமணம்புரிந்து உங்களது துன்பத்தை யொழிக்கின்றோம், (ஆதலால்) இனி நீங்கள் செல்லுங்களென்று திருவாய்மலர்ந்தருளினர்.—எ-று.

பொருமல் - துன்பம். வோங்கல் - ஆகுபெயர். (உரு)

முழுதுணர் பரனிது மொழியப் போதனுஞ்
செழுமையில் பொன்னகர்த் தேவும் யாவருந்
தொழுதனர் விடைகொடு துயரஞ் சிந்தியே
விழுமிய மேருவின் மிசைக்க ணேகினர்.

(இ-ள்.) முற்றுணர்ச்சியையுடைய சிவபெருமான் இவ்வாறருளிச்செய்தவுடன், பிரமனும், பொலிவழிந்திருக்கும் பொன்னுலகத்தலைவனாகிய இந்திரனும், மற்றைத் தேவர்களும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு தங்கள் துன்பமொழிந்து சிறந்த மேருமலையினிடத்துச் சென்றார்கள்.—எ-று.

சூரபதுமனா லழிக்கப்பட்டுப் பொலிவழிந்திருத்தலின், 'செழுமையில் பொன்னகர்' என்றார். (உசு)

வேறு.

அன்னார் விடைகொண் டேகியபி னதுகண் டிரதி யெம்பெருமான்
முன்னா விறைஞ்சிப் போற்றிசெய்து முறையோ முறையோ விறையோனே
பொன்னார் கமலத் தயன்முதலோர் புணர்ப்பா லெங்கோன் போந்திங்கே
யுன்னான் முடிந்தா னவன்பிழையை யுளங்கொ ளாம லருளென்றாள்.

(இ-ள்.) அத்தேவர்கள் விடைபெற்றுச் சென்றபின்பு இரதிதேவி அத்தருணம்பார்த்து எமது சிவபெருமானது திருமுன்னடைந்து வணங்கித் துதிசெய்து எமதாண்டவரே! முறையோ! முறையோ!! அழகிய தாமரைமலரில் வசிக்கும் பிரமன் முதலிய தேவர்களது தந்திரத்தினால் எனது நாயகன் இங்கு வந்து தேவரீரா லிறந்தழிந்தான். அவன் செய்த குற்றத்தைத் திருவுள்ளங்கொள்ளாமல் எழுப்பியருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள்.—எ-று.

சிவபெருமான் தேவர்களது வேண்டுகோட்கிரங்கி யருள்புரிந்தமையின், நமக்கும் பெருமான் பேரருள்புரிந்தருளுவரொன்று கருதி, இரதிதேவி சிவபெருமானைப் பிரார்த்தித்தனளென்க. (உஎ)

வேறு.

இனைய கூறின ளிரதிவேண் டிடுதலு மிணைதீர்ந்த
புனித னல்லரு ளெய்தியே மங்கைநீ புலம்பாய்கேள்
வனைக ருங்குழற் கவுரியை மேவியாம் வரைபோதி
லுனது கேள்வனை யளிக்குதும் போதியென் றுரைசெய்தான்.

(இ-ள்.) இரதிதேவி இவ்வாறுகூறி வேண்டிக்கொள்ளவும் ஒப்பற்ற சிவபெருமான் சிறந்த கருணைகூர்ந்து, பெண்ணே! நீ புலம்பாதே; இதனைக்கேள். அலங்கரிக்கப்பட்ட கரிய கூந்தலையுடைய பார்வதியை யாம் சென்று திருமணஞ் செய்யும்பொழுது உன்னுயகனைத் தருகின்றோம், நீ செல்லக்கடவை யென்று அருளிச்செய்தனர்.—எ-று. (உஅ)

தன்னை யேதனக் கொப்பவ னிரதியைத் தளரேலென்
றின்ன வாறருள் செய்தலு மகிழ்ந்தடி யிறைஞ்சிப்போய்ப்
பொன்னின் மாலிமை யக்கிரி புகுந்தொரு புடையுற்றாள்
வன்ன மாமுகில் வரவுபார்த் துறைதரு மயிலைபோல்.

(இ-ள்.) சமானரகிதராகிய சிவபெருமான் இரதிதேவியைப் பார்த்தருளி நீ வருந்தாதேயென்று இவ்வாறு அருளிச்செய்யவும், மகிழ்கூர்ந்து (அவரது) திருவடிகளை வணங்கிச் சென்று, அழகிய பெரிய மேகத்தின் வருகையை எதிர்நோக்கி வசிக்கின்ற மயிலைப்போன்று, பொன்மயமாகிய பெரிய இமையமலையையடைந்து ஒருபுறத்தில் வசித்திருந்தனள்.—எ-று.

தன்னையேதனக் கொப்பவன் என்பதனை,—"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான் - மனக்கவலை மாற்ற லரிது" என்னுந் திருக்குறளானு முணர்க. மயில் மேகத்தினது வருகையை யெதிர்நோக்கி யிருக்குமாறுபோல, இரதிதேவி சிவபெருமானது வருகையை யெதிர்நோக்கி யிருந்தனளென்க. (உகூ)

வேறு.

தமியளா யிரதிபோய்த் தானங் குற்றிட
வமரர்க ளாயுளா ரரந்தை தீர்க்கவு
மிமையமால் வரைமிசை யிருந்து நோற்றிடு
முமைதனை மணப்பவு முதல்வ னுன்னினன்.

(இ-ள்.) இரதிதேவி தனித்தவளாகச் சென்று இமயமலையில் வசித்திருக்க, முதற்கடவுளாகிய சிவபெருமான் தேவர்களது துன்பத்தை நீக்கவும், பெரிய இமயமலையிலிருந்து தவஞ்செய்கின்ற உமாதேவியாரைத் திருமணஞ் செய்யவுந் திருவுள்ளங்கொண்டருளினர்.—எ-று.

தமியள் - தனிமையானவள். இரதி சென்றபின்பு, சூராதியர்களால் துன்புற்றழிந்த தேவர்களது வருத்தத்தைத் தீர்க்கவும், பார்வதி தேவியாரைத் திருமணம் புரியவும் சிவபெருமான் திருவுள்ளங் கொண்டனரென்க. (௩௦)

மனந்தனி லித்திற மதித்து வானதி
புனைந்தவன் சனகனென் றுரைக்கும் புங்கவன்
சனந்தனற் சனதனன் சனற்கு மாரனு
மினந்தரு முனிவரை யினிது நோக்கினன்.

(இ-ள்.) ஆகாயகங்கையை யணிந்த சிவபெருமான் இவ்வாறு திருவுள்ளத்திற்சிந்தித்து, சனகனென்று கூறும் முனிவர், சனந்தமுனிவர், நல்ல சனதன முனி

வர். சனற்குமாரமுனிவர் என்னும் நான்கு முனிவரர்களையும் திருவருளுடன் பார்த்தருளினார்.—எ-று.

சனகராதி இந்நான்கு முனிவர்களும் சிவபெருமானையடைந்து மெய்ஞ்ஞானோபதேசம் பெற்றவராகலின், 'இனந்தருமுனிவர்' என்றார், இனிதுநோக்கல்-அருளோடு பார்த்தல். (௯௧)

நன்னல மைந்தர்காண் ஞான போதகஞ்
சொன்னடை யன்றது துயர நீங்கியே
யிந்நிலை மோனமோ டிருந்து நந்தமை
யுன்னுத லேயென வுணர வோதினான்.

(இ-ள்.) மிக்க நன்மையினையுடைய சிறுவர்களே! ஞானயோகமானது சொல்லளவினதன்று; அந்த ஞானமானது துன்பமொழிந்து இவ்வண்ணம் மௌன நிலையிலிருந்து நம்மைச் சிந்தித்திருத்தலேயாகு மென்று அவர்கள் தெளிந்துகொள்ளும்படி அருளிச்செய்தனர்.—எ-று.

யாவருஞ் சிவபெருமானுக்குப் புத்திரர்களே யாயினும், ஈண்டிந்நால்வர்களும் தம்மையடைந்து மெய்ஞ்ஞானோபதேசம்பெற்ற சிஷ்யபுத்திரர்களாதலின், 'நன்னலமைந்தர்காள்' என்றுவிளித்தனரென்க. ஞானபோதகம் அவாங்மானசகோசரமாகலின், 'சொன்னடையன்று' என்றார். இந்நிலை-கல்லாலின் கீழெழுந்தருளியிருக்கும் இந்த ஞானயோகமுறைமை. உன்னுதல்-தியானித்தல். (௯௨)

கட்படு மிமைத்துணை காட்சி யோகினை
நுட்பம தாகவே நுதலிக் காட்டினான்
றெட்பமொ டிவ்வகை யுரைப்ப வாற்றவுந்
தெட்பம தடைந்தனர் விதியின் சேயினோர்.

(இ-ள்.) கண்ணிமைப்பொழுதளவு ஞானயோகத்தை நுட்பமாக உணர்த்திக்காட்டியருளிய சிவபெருமான் சிறப்புடனிவ்வாறு திருவாய்மலர்ந்தருளவும், பிரமபுத்திரர்களாகிய சனகாதி முனிவர்கள் மிகவுந்தெளிவடைந்தார்கள்.—எ-று.

தெட்பம் - தெளிவு. விதி-சிருட்டித்தொழிலையுடையவன். (௯௩)

அந்தநல் வேலையி லாற்று நோன்பினோர்
சிந்தைகொ ளன்பொடு சிவன்பொற் றாண்முறை
வந்தனை செய்துநம் மருட்கை நீங்கியே
யுய்ந்தனம் யாமென வுரைத்துப் போற்றினார்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் அருமையாகச்செய்த தவத்தினையுடைய சனகாதி முனிவர்கள் உள்ளன்புடன் சிவபெருமானது அழகிய திருவடிகளை முறைப்படி வணங்கி, நமது மயக்கம் நீங்கி நாம் கடைத்தேறினோமென்று சொல்லித்துதித்தார்கள்.—எ-று.

ஆற்றுநோன்பினோர் என்பதனை, நோன்பாற்றினோர் எனப்பிரித்துக் கூட்டுக. முறைவந்தனை செய்தலாவது:— விதிப்படி அஷ்டாங்க பஞ்சாங்கமாக வணங்குதலாம். (௯௪)

போற்றலு மத்துணைப் புனித னின்னினி
யேற்றிடு நிட்டையி லிருந்து வீடுறீஇ
மேற்றிக ழெம்பத மேவு வீரெனச்
சாற்றினன் விடுத்தனன் றவத்தி னோர்தமை.

(இ-ள்.) இவ்வாறு துதிசெய்யவும், அப்பொழுது சிவபெருமான் இனிமேல் இசைவாகிய நிஷ்டையிலிருந்து பந்தநீங்கி மேலாகவிளங்குகின்ற எமது திருவடியை யடையக்கடவீர்களென் றருளிச்செய்து, அத்தவமுனிவர்களைத்தங்களிடத்திற் கனுப் பியருளினர்.—எ-று.

வீடுறீஇ என்பது, ஈண்டு பந்தமொழிந்து என்னும் பொருளில்வந்தது. வீடு - முத்தி யென்னும் பொருளதன்று; அது முதனிலைதிரிந்த தொழிற்பெயர். உறீஇ - இன்னிசை. சாற்றினன் - முற்றெச்சம். (ருடு)

மோனநீங்குபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கூசுகூ.

உ

முருகன் றுணை.

# தவங்காண்படலம்.

தீதறு முனிமைந்தர் செல்லலு மதுபோழ்தின்
மாதவ நெறிநிற்கு மலைமக ளணியன்புங்
காதலு மெனைவோர்க்குங் காட்டுத லருளாகிச்
சோதனை புரிவாரிற் றுண்ணென வெழலுற்றான்.

(இ-ள்.) குற்றமற்ற முனிவர்களாகிய புத்திரர்கள் விடைபெற்றுச்செல்ல வும், அப்பொழுது, சிவபெருமான் மகத்தாகிய தவநெறியில் நிற்கின்ற பார்வதிதேவி யாரது ஒப்பற்ற அன்பையும் விருப்பத்தையும் யாவர்களுக்குங் காட்டியருளத் திருவுள் ளங்கொண்டு பரீக்ஷிப்பவரைப்போன்றுவிரைந்து எழுந்தருளத்தொடங்கினர்.—எ-று.

சிவபெருமானிடத்து ஞானோபதேசம்பெற்று பந்தமொழியப்பெற்றவராக வின், 'தீதறுமுனிமைந்தர்' என்றார். துண்ணெனல்-விரைவுக்குறிப்பு. (க)

செறிதுவ ருடையாளன் சிகையின னணிநீற்றின்
குறியின னொளிர்நூலன் குண்டிகை யசைகைய
னுறைபனி கதிர்போற்று மோலைய னுயர்கோலன்
மறைபயின் முதியோர்போல் வடிவிது கொடுபோனான்.

(இ-ள்.) நெருங்கிய காவி வஸ்திரத்தையுடையவரும், சிகையையுடையவ ரும், அழகிய திருவெண்ணீற்றடையாள முடையவரும், விளங்குகின்ற பூணூலை யணிந்தவரும், கமண்டலமசையுந் திருக்கரத்தையுடையவரும், மழை - பனி-வெயில் (இவைகள் தம்மேற்படாமல்) பாதுகாக்கின்ற ஓலைக்குடையினை யுடையவரும், உயர் ந்ததண்டத்தை யுடையவருமாகிய வேதமோதும் விருத்த வேதியனைப்போன்று இத் தகைய திருவுருவங்கொண்டு சென்றருளினர்.—எ-று.

சிவபெருமானுக்கு வெள்ளுடையேயன்றித் துவருடையுமுடைமையால், செறிதுவருடையாளன், என்றார். துவருடை என்றது, காவிவஸ்திரத்தை, அது சிவ பெருமானுக்குண்டென்பதனை:—" காமனைமுனிந்து நெடுஞ்சடைதரித்துக் கவின்ற கல்லாடைமேற் புனைந்தி - யாமெலாம் வழுத்துந் துறவியென் றிருந்து மொருத்தித னிளமுலைச் சுவடு - தோமுறக் கொண்டா னெனச்சிறை யிடல்போற் சுடர்மனக்

குகையுளே கம்பத் - தோமொழிப் பொருளை யடக்கியானந்த முறுநர்வா ழிடம்பலவு ளவால்'' என்னுங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. 'உறை பனிகதிர்போற்று மோலை யன்' என்பதற்கு, குளிர்ச்சியமைந்துள்ள சந்திரனுந் துதிக்கத்தக்க சங்ககுண்டல முடையவர் எனப் பொருள்கூறுவாருமுளர். (உ)

போயின னிமையத்திற் புவனமொ டுயிர்நல்குந்
தாய்தளர் வொடுநோற்குஞ் சாலையி னிடைசாரத்
தூயவ ரிவரென்றே தோகையர் கடைகாப்போ
ராயவர் பலர்வந்தே யடிதொழு துரைசெய்வார்.

(இ-ள்.) இமையமலையிற் சென்று, சர்வலோகங்களையும் அவற்றிலுள்ள ஆன்மகோடிகளையுமீன்றருளிய உமாதேவியார் தளர்ச்சியோடு தவஞ்செய்கின்ற சாலையினிடத்துச்செல்ல, உடனே, இவர் மகாபரிசுத்தரென்றுகருதி, (கன்னிகாமடத்தின்) வாயில்காப்பவராகிய பலமாதர்கள்வந்து திருவடிகளை வணங்கிச்சொல்லுகின்றார்கள்.

சிவபெருமான் இன்னுந் திருவருள்புரிந்திலரோ யென்று வருந்தி நோற்கின்றமையின், 'தாய்தளர் வொடுநோற்குஞ் சாலை' என்றும், திருவெண்ணீறணிந்து சிவவேடமுடையவராய் வருதலின், 'தூயவரிவர்' என்றும், வாயில்காப்போர் பலருளராகலின், 'தோகையர் கடைகாப்போ ராயவர் பலர்வந்து' என்றுங்கூறினர். சாலை-இடம்.

தளர்நடை முதியீரித் தடவரை யிடைசேற
லெளிதல வடிகேள்வந் தெய்திய தெவனென்ன
வளமலை யரசன்றன் மகள்புரி தவநாடற்
குளமுட னிவண்வந்தே னுவகையி னுடனென்றான்.

(இ-ள்.) தளர்ந்தநடையினையுடைய வயோதிகரே! இப்பெரியமலையினிடத்துவருதல் சுலபமானகாரியமன்று. சுவாமிகளே! தாங்கள்வந்தடைந்தது யாதுகாரணமென்று வினவ, (சிவபெருமான்) வளவிய பர்வதராஜபுத்திரி செய்கின்ற தவத்தை விசாரிக்கவேண்டு மென்னு மெண்ணத்தால் மகிழ்வுட னிவ்விடத்திற்கு வந்தோமென்று அருளிச்செய்தார்.—எ-று.

பனிசார் மலையாகலின் அன்னியரொருவரும் வருதற்கருமையால், 'இத்தடவரையிடை சேற லெளிதல' என்றார். எவன் என்பது, வினாவினைக்குறிப்புமுற்று. (ச)

என்றலு மினிதென்றே யிமையவ ளிடைசில்லோர்
சென்றனர் கிழவோன்றன் செயலினை யறைகாலை
யொன்றிய முதியோரை யுய்க்குதி ரிவணென்ன
நின்றதொர் பெரியோனை நேரிழை முனமுய்த்தார்.

(இ-ள்.) இவ்வாறருளிச் செய்யவும், நன்றென்று சில மாதர்கள் பார்வதிதேவியாரிடத்திற் சென்று வயோதிகப்பிராமணரது செய்கையைக் கூறியவுடனே, (அவ்வம்மையார்) பொருந்திய விருத்தராயின் இங்கழைத்துவாருங்களென்று கூறியருள, (அம்மாதர்கள்) நின்றுகொண்டிருந்த அவ்விருத்தவேதியரை பார்வதிதேவியார் திருமுன்னே யழைத்துவந்தார்கள்.—எ-று.

பால்யர்கள் வருதல் கூடாமையின், 'முதியோரையுய்க்குதிர்' என்றார். (ரு)

உய்த்தலு மிவரொர்ந்தைக் குறுபரி வினரொன்றே
பத்திமை படுபாலாற் பார்ப்பதி தொழலோடு
மெய்த்துணை யெனநின்ற விசயையொர் தவிசிட்டு
நித்தனை யுறைவித்தா ளிமலையு மயனின்றாள்.

(இ-ள்.) அவ்வாறழைத்துவந்தவுடனே, உமாதேவியார் இவர் சிவபெருமானுக்குப் பொருந்திய அன்பரென்றுகருதி பக்தியோடு வணங்கவும், மெய்ம்மையாகிய தோழியாகவிருந்த விசயையென்பவளொரு ஆசனமிட்டுச் சிவபெருமானை அதிலிருக்கச்செய்தனள்; உமாதேவியாரும் அருகில் நின்றனர்.—எ-று.

சிவசின்ன முடையரா யிருத்தலின், 'எந்தைக்குறு பரிவின ரென்றே' என்றும், சிவனடியார்களை வணங்குதல் சிவனை வணங்கலோ டொப்பன வாகலின், 'பத்திமை படுபோலாற் பார்ப்பதி தொழலோடும்' என்றும், தோழியர் பலருள்ளுஞ் சிறந்த வுயிர்த்தோழியாகலின், 'மெய்த்துணையெனநின்றவிசயை' என்றும், சிவனடியார்களடையின் அவர்களை உதாசினஞ்செய்து நீங்கியிருத்தல் கூடாமையின், 'நிமலையுமயனின்ருள்' என்றுங் கூறினர். (சு)

அப்பொழு துமைதன்னை யாதர வொடுபாராச்
செப்புத லரிதாமுன் றிருநல னழிவெய்த
மெய்ப்படு தசையொல்க மிகுதவ முயல்கின்று
யெப்பொருள் விழைவுற்று யெண்ணிய துரையென்றான்.

(இ-ள்.) அப்பொழுது (சிவபெருமான்) உமாதேவியாரை விருப்பத்துடன் பார்த்தருளிச் சொல்லுதற்கரிய உனது நல்லழகுகெடவும், சரீரத்திலுள்ள தசைவற்றவும் மிக்க தவஞ்செய்கின்றனை, எப்பொருளை விரும்பினை, நினைத்துள்ளதைச் சொல்லக்கடவையென்றருளிச்செய்தார்.—எ-று.

தவத்தால் அழகுந் திருமேனியும் வாடியிருத்த லியல்பாகலின், 'திருநலனழிவெய்த மெய்ப்படு தசையொல்க' என்றார். (எ)

வேறு.

முடிவி லாணிவை யுரைத்தலும் விசயையை முகநோக்கிக்
கொடியி னெல்கிய நுசுப்புடை யுமையவள் குறிப்பாலே
கடிதி னீங்கிவர்க் கெதிர்மொழி யீகெனக் கண்காட்ட
வடிய னேற்கிது பணித்தன ளெனவறிந் தவள்சொல்வாள்.

(இ-ள்.) அழிவற்றவராகிய சிவபெருமான் இவ்வார்த்தைகளை யருளிச்செய்யவும், பூங்கொடிபோலுந் துவள்கின்ற இடையினையுடைய உமாதேவியார் விசயையென்பவளைப்பார்த்து, இவர்க்கு விரைவில் பதில் கூறுகவென்று குறிப்புடன் கண்சாடைசெய்யவும், (அம்மையார்) அடியேனுக்கிதனைக் கட்டளையிட்டருளினரென்றறிந்து அவ்விசயை சொல்வாளாயினள்.—எ-று.

ஈகென என்பது, தொகுத்தல்விகாரம். (அ)

மன்னு யிர்க்குயி ராகிய கண்ணுதன் மணஞ்செய்து
தன்னி டத்தினி லிருத்தினன் கொள்வதே தானுன்னிக்
கன்னி மெய்த்தவ மியற்றின ளென்றுகா தலிகூற
முன்ன வர்க்குமுன் னனவ னகைத்திவை மொழிகின்றான்.

(இ-ள்.) நிலைபெற்ற உயிர்க்குயிராக விளங்கும் சிவபெருமான் திருமணம் புரிந்து தமதிடப்பாகத்தி லமைத்துக்கொள்ளவேண்டுமென்று நினைத்து இவ்வம்மையார் மெய்ம்மையாகிய தவஞ்செய்தனளென்று விசயைகூற, முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளாயுள்ள சிவபெருமான் நகைசெய்து இவ்வார்த்தைகளையருளிச்செய்கின்றார்.—எ-று.

சிவபெருமான் அநாதிநித்த சித்துருவா யுள்ளவ ராகலின், ' முன்னவர்க்கு முன்னானவன்' என்றார். இதனை :—" முன்னைப் பழம்பொருட்டு முன்னைப் பழம் பொருளே - பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்றும், " மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன் மூவுலகுங் காப்பான்" என்றும் வரும் வாதவூர டிகள் திருவாக்கானு மறிக. (கூ)

புவிய ளித்தருண் முதல்வரு நாடரும் புனிதன்று
னிவட வத்தினுக் கெய்துமோ வெய்தினு மிணையானை
யவன்வி ருப்பொடு வரையுமோ வுமையவ ளறியாமே
தவமி யற்றின ளெளியனோ சங்கரன் றனக்கம்மா.

(இ-ள்.) உலகத்தைப்படைத்துக்காக்குந் தலைவர்களாகிய பிரம விஷ்ணுக் களுந் தேடுதற்கரிய சிவபெருமான் இவளது தவத்திற்குப் பிரசன்னமாவரோ? அவ் வாறு ஆயினும் இவளை அவர் விருப்பத்துடன் மணம்புரிவாரோ? இதனை இவ்வுமைய வள் தெரியாமலே தவஞ்செய்தனள்; சிவபெருமான் இவளுக்கெளிதானவரோ?-எ-று.

' புவியளித்தருண்முதல்வர்' என்பதனை, புவியையளித்தற்றொழிலையுடைய பிரமனாகிய முதல்வனும், புவியை யருளற்றொழிலையுடைய திருமாலாகிய முதல்வ னும் எனப் பொருள்கொள்க. அளித்தல் - சிருஷ்டித்தலும், அருளல் - காத்தலுமாம். இவ் விருதொழிலையு முடைய பிரமவிஷ்ணுக்கள் முத்தொழிற்குரிய மூவரு ளிருவரா யெண்ணப்பட்டவ ராகலின், ' முதல்வரும்' என்றனர். உம்மை முற்றுப்பொருளது.

அல்லல் பெற்றிட நோற்றிடு பகுதியா லாம்பாலொன்
றில்லை யித்துணைப் பெறலரும் பொருளிவட் கெளிதாமோ
பல்ப கற்றன தெழினலம் வறிதுபட் டனவன்றோ
வொல்லை யித்தவம் விடுவதே கடனினி யுமைக்கென்றான்.

(இ-ள்.) வருந்தும்படி தவஞ்செய்வதனால் ஆவதொன்றுமில்லை,இத்தகைய பெறுதற்கரிய சிவபெருமான் இவளுக்கு எளிதில்கிடைப்பரோ? அநேககாலம் தன து பேரழகு வீணாயிற்றல்லவோ? இனி இவ்வுமையவள் இத்தவத்தை விடுவதேதகுதி யென்றருளிச்செய்தனர்.—எ-று.

" உணர்ந்தார்க் குணர்வரியோன் றில்லைச்சிற்றம் பலத்தொருவன்" என்ற படி சிவபெருமான் அறிவதற்கரியவராகலின், ' இத்துணைப் பெறலரும் பொருளிவட் கெளிதாமோ' என்று கூறினார். பால் - பிரயோசனம். (கக)

இந்த வாசகங் கேட்டலு மெம்பிராற் கிவரன்ப
ரந்தண் மாமுது குரவரொன் றுன்னின னறியேனால்
வந்து வெம்மொழி கூறுத லெனச்சின மனங்கொண்டு
நொந்து யிர்த்துநா ணீக்கியே பொருதுமை நுவல்கின்றாள்.

(இ-ள்.) இவ்வார்த்தையைக் கேட்டவுடனே உமாதேவியார் எமது பெரு மானுக்கு இவர் அன்பரொன்றும், அந்தணர் குலத்தினராகிய மிக்க பெரியவரொன்றும், நினைத்தேன், இங்குவந்து இத்தகைய கொடுமொழி கூறுவாரென்று அறியேனென்று மனத்திற் கோபங்கொண்டு வருந்திப் பெருமூச்சுவிட்டு நாணமொழிந்து மனம் பொ றுது கூறுகின்றார்.—எ-று. (கஉ)

முடிவிலாதுறை பகவனென் வேட்கையை முடியாது
விடுவ னென்னினுந் தவத்தினை விடுவனோ மிகவின்னங்

கடிய நோன்பினை யளப்பில செய்துயிர் கழிப்பேனு
னெடிது மூத்தலின் மயங்கினை பித்தனோ நீயென்றாள்.

(இ-ள்.) நித்தியராயுள்ள சிவபெருமான் எனது விருப்பத்தை நிறைவேற்றாது விடுவாராயினும் யான் தவத்தை விடுவேனோ? இன்னுங் கொடிய அநேகவிரதங்களை யனுஷ்டித்து உயிரை விடுவேன். மிகவும் வயதுசென்றமையால் மயக்கங்கொண்டனை ; நீ பயித்தியக்காரனோவென்று கூறியருளினார்.—எ-று. (கூ)

ஈட்டு மாருயிர்த் தொகையெலா மளித்தவ ளிவைகூற
மீட்டு மோர்புணர்ப் புன்னியே மாதுநீ வெஃகுற்ற
நாட்ட மூன்றுடைப் பிஞ்ஞகன் வளத்திய னன்றாய்ந்து
கேட்டி லாய்கொலா முணர்த்துவ னஃதெனக் கிளக்கின்றான்.

(இ-ள்.) வினைகளைச்செய்கின்ற அரிய உயிர்க்கூட்டங்களையெல்லாம் ஈன்றருளிய உமாதேவியார் இவ்வார்த்தை கூறியருளலும், (சிவபெருமான்) பின்னுமோருபாயத்தைக் கருதி, பெண்ணே ! நீ விரும்பிய திரிநேத்திரராகிய சிவபெருமானது செல்வத்தினியல்பை நன்றாய் விசாரித்துக் கேட்டிலையோ ? அதனைத் தெரிவிக்கின்றேமென்று அருளிச்செய்கின்றார்.—எ-று.

வெஃகுதல் - விரும்புதல். பிஞ்ஞகன் - தலைக்கோலமுடையவன். கொல்- ஐயம். (கச)

ஆடை தோல்விடை யேறுவ தணிகல மரவென்பு
கேடில் வெண்டலை மாலிகை கேழலின் மருப்பின்ன
வோடு கொள்கல மூண்பலி வெய்யநஞ் சுலப்புற்றோர்
காட தேநடம் புரியிடங் கண்ணுதற் கடவுட்கே.

(இ-ள்.) சிவபெருமானுக்கு உடை-தோல்; வாகனம்-இடபம்; ஆபரணம்-பாம்பு-எலும்பு-கெடாத வெண்டலைமாலை - பன்றிக்கொம்பு இவை முதலியன; பாத்திரம்-மண்டையோடு; உணவு-பிச்சையும், கொடிய விஷமும்; நடனசாலை இறந்தவர்களுடைய சுடுகாடேயாகும்..—எ-று.

சிவபெருமான் தோல் முதலியவற்றை யணிந்த காரணங்களை மேல் வரும் தக்ஷகாண்டம் ததீசியுத்தரப்படலத்தில் விளங்கக் கூறியிருத்தலின் ஆண்டுக் காண்க. ஓடு - ஈண்டுப் பிரமகபாலத்தின்மே னின்னறது. (கரு)

வேய்ந்து கொள்வது வெள்ளெருக் கறுகுநீர் வியன்கொன்றை
பாந்த ணொச்சியே மத்தமென் றினையன பலவுண்டாற்
சாந்தம் வெண்பொடி சூலமான் மழுத்துடி தழலங்கை
யேந்து கின்றது பாரிடஞ் சூழ்படை யிறையோற்கே.

(இ-ள்.) சிவபெருமானுக்குத் தரித்துக்கொள்வது வெள்ளெருக்கு-அறுகு-கங்கை-பெரிய கொன்றை - பாம்பு - நொச்சி-ஊமத்தை என்றித்தகையன பலவுண்டு. பூசுஞ்சாந்து வெள்ளிய சாம்பற்பொடி - அழகியகையிலேந்தப்படுவன சூலம் - மான்-மழு-தமருகம்-அக்கினி என்பவை. சூழ்ந்துள்ள சேனை பூதங்களாகும்.—எ-று.

மத்தம் - ஊமத்தை. துடி - தமருகம். (கசு)

அன்னை தாதைகேள் வடிவொடு குணங்களி லனையானுக்
கின்ன வாகிய பலவள னுண்டவை யெவையுந்தா
னின்ன வாகவோ தவம்புரிந் தெய்த்தனை நெடுந்தொல்சீர்
மன்னன் மாமகட் கியைவதே யித்துணை வழக்கென்றான்.

(இ-ள்.) தாயும் தந்தையும் பந்துவும் உருவமும் குணமும் இல்லாத அந்தச் சிவனுக்கு இத்தன்மையாகிய பல செல்வங்களுண்டு; அவையனைத்தும் உனக்கு வேண்டுமென்று கருதியோ தவஞ்செய்திளைத்தனை ; உயர்ந்த பழைமையாகிய சிறப்பினையுடைய இராஜபுத்திரிக்கு இத்தகைய சுபாவம் தகுந்ததோவென்று திருவாய்மலர்ந் தருளினர்.—எ-று.

'அன்னை தந்தைகேள் வடிவொடு குணங்களி லனையான்' என்பதனை:—"கோயில் சுடுகாடு கொல்புலித்தோ லாடை - தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ" என்னுந் திருவாசகத்தானும், "குலமி லான்குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம் - புலமி லான்றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்து - மிலமி லான்மைந்தர் மனைவியில் லானெவ னவன்சஞ் - சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தகுமே" என்னுந் தாயுமானார் திருவாக்கானு மறிக. (கஎ)

வேறு.

புரங்கண்மூன் றினையு மட்ட புங்கவ னினையகூற
வரங்கண்மே தகைய வெற்பின் மடமயில் கேட்ட லோடுங்
கரங்களாற் செவிகள் பொத்திக் கண்ணுத லுமம் போற்றி
யிரங்கிவெஞ் சினத்த ளாகி யிடருழந் தினைய சொல்வாள்.

(இ-ள்.) முப்புரங்களையுமெரித்தருளிய சிவபெருமானிவ்வா றருளிச்செய்யவும், மிக்கசிறப்பினையுடைய பார்வதிதேவியார்கேட்டவுடனே, கைகளால் செவிகளை மூடிக்கொண்டு சிவசிவ வென்று இரக்கத்துடன் துதித்து மிகுந்த கோபங்கொண்டவராய் வருந்தி இவ்வாறு கூறுகின்றார்.—எ-று. (கஅ)

கேட்டியா லந்தணாள கேடிலா வெம்பி ரான்றன்
மாட்டொரு சிறிது மன்பு மனத்திடை நிகழ்ந்த தில்லை
காட்டுறு புள்ளின் சூழல் கவருவான் புதன்மேற் கொண்ட
வேட்டுவ னியல்போன் மேலோன் வேடநீ கொண்ட தன்மை.

(இ-ள்.) வேதியனே! கேட்பாயாக, அழிவற்ற எமது சிவபெருமானிடத்தில் அன்பு சிறிதும் உன் மனத்தில் தோன்றவில்லை. சிவவேடத்தை நீதரித்திருப்பது (எதுபோலுமெனின்,) வனத்திலுள்ள பறவைக்கூட்டங்களைப் பிடிக்கும்பொருட்டுப் புற்களைத் தன்மேற் போட்டிருக்கும் வேடனுடைய தன்மைபோலாகும்.—எ-று.

மாட்டு - ஏழனுருபு. புதல் - புல். (கக)

நேசமி லாது தக்க னிமலனை யிழித்து நின்போற்
பேசிய திறனு மன்னோன் பெற்றதுங் கேட்டி லாயோ
வீசனை யிங்ங னென்மு னிகழ்ந்தனை யிந்நாள் காறு
மாசறு மறைக ளோது மாய்ந்திலை போலு மன்றே.

(இ-ள்.) உன்னைப்போல அன்பில்லாமல் தக்ஷன் சிவபெருமானை இழிவாகப் பேசியதையும், அப்படி பேசியதனால் அவனடைந்த பயனையும் நீ கேட்கவில்லையோ? இங்கு எனக்கு எதிரில் சிவபெருமானை யிகழ்ந்துகூறினாய், இதுவரையில் குற்றமற்ற எந்தவேதங்களையு மாராய்ந்தறிந்திலைபோலும்.—எ-று.

தக்ஷன் அன்பின்றிச் சிவபெருமானை இகழ்ந்துகூறி யடைந்த துன்பத்தை இப்போ திகழ்ந்துகூறிய நீயு மடையவேண்டி வருமென்று குறிப்பித்தன ளென்பார், 'தக்க னிமலனை யிழித்து நின்போற் பேசிய திறனு மன்னோன் பெற்றதுங் கேட்டிலாயோ' என்றும், வேதவாராய்ச்சி யிருப்பின் இவ்வாறு கூறாயென்பார், 'மாசறு மறைக ளோது மாய்ந்திலை போலும்' என்றுங் கூறினர். (உ0)

முறைபடு சுருதி யெல்லா மொழியினு மதுவே சார்வா
வுறுகில ராகிப் பொல்லா வொழுக்கமே கொண்டு முக்க
ணிறைவனை யிகழ்ந்து முத்தி யெய்திடா துழல முன்னுண்
மறையவர் பெற்ற சாப நின்னையு மயக்கு றாதோ.

(இ-ள்.) முறையாகப் பொருந்திய வேதங்களனைத்தும் ஓதினும் அவ்வேத முறையினைச் சார்பாகக்கொண் டொழுகாதவர்களாய்த் தீயவொழுக்கத்தைக் கைக்கொண்டு சிவபெருமானையிகழ்ந்து முத்தியடையாமலுழலும்வண்ணம் முற்காலத்தில் மறையவர்கள் பெற்றிருக்கும் சாபமானது உன்னையும் மயக்காது விடுமோ?.—எ-று.

'முத்தி யெய்திடா துழல முன்னுண் மறையவர் பெற்றசாபம்' என்பதன் வரலாற்றை மேல் ததீசிப்படலத்தினும், சூதசங்கிதை முதலிய நூல்களினுங்காண்க.

தாதையாய்த் தம்மை நல்கித் தந்தொழிற் குரிய னாகி
யாதியாய்த் தங்கட் கின்றி யமைவுறாச் சிவனை நீங்கி
யேதிலார் பக்க மாகி யில்லொழுக் கிறந்தார் போலும்
வேதியர் முறையே செய்தாய் வெறுப்பதெ னின்னை யானே.

(இ-ள்.) பிதாவாகவிருந்து தங்களைப் பெற்றுத் தங்கள் தொழிலுக்குரிமையுடையவராய் முதல்வராகித் தங்களுக்கு இன்றியமையாதவராயுள்ள சிவபெருமானை விட்டு அன்னியராகிய பிரமாதி தேவர்கள் பக்ஷத்திற் சேர்ந்து இல்லொழுக்கங் கெட்டவர்களைப்போன்றுள்ள அந்தணர்களது முறைமையினையேநீயுஞ் செய்தனை; (இதற்காக) நின்னை யான் வெறுப்பதேன்.—எ-று.

சிவசின்னந் தரித்துச் சிவபெருமானை தூஷிக்கும் வேதியர்கள், தங்கணவனைவிட்டொழிந்து அன்னியபுருஷர்களோ டின்பமனுபவிக்குங் கற்பில் மாதரையொப்பாவரென்பது கருத்து. (உஉ)

ஆயினு மறையோர் தம்மி னருமறை முறையே வேடந்
தூயன தாங்கி யெங்கோன் றொண்டுசெய் வோரு முண்டா
னீயவர் தன்மைத் தாயு நித்தனை யிகழ்ந்தா யென்னிற்
றீயவ ருனைப்போ லில்லை யவுணர்தந் திறத்து மாதோ.

(இ-ள்.) ஆயினும், பிராமணர்களுக்குள் வேதவிதிப்படி பரிசுத்தமாகிய சிவவேடந் தரித்து எமது சிவபெருமானுக்குத் தொண்டுசெய்பவர்களுமுண்டு, நீஅவர்களைப்போன்றிருந்தும் சிவபெருமானைப் பழித்தனை; அதனால் அசுரர்களிலும் உன்னைப்போன்ற கொடியவர்களில்லை.—எ-று.

புறச்சமயச் சின்னந் தரித்தோர் சிவதூஷணஞ் செய்த லியற்கை. நீ அங்ஙனமின்றிச் சிவசின்னங்களைத்தரித்தே சிவபெருமானைத்தூஷிக்கின்றனையாகலான், உன்னைப்போலும் வஞ்சகர்கள், கபடமாயாசொரூபர்களாகிய அசுரர்களிலும் ஒருவருமிலரென்று கூறினரென்க. (உரு)

வேண்டுதல் வேண்டி டாமை யில்லதோர் விமலன்றன்னை
யீண்டுநீ யிகழ்ந்த வெல்லாம் யாரையு மளிக்கு மன்பு
பூண்டிடு குறிகா ணற்றாற் புகழ்ச்சியா மன்றி முக்க
ணாண்டகை யியற்கை யெல்லா மார்கொலோ வறிய கிற்பார்.

(இ-ள்.) விருப்புவெறுப்பற்ற சிவபெருமானைக்குறித்து இங்கு நீ யிகழ்ந்து கூறியவை யனைத்தும் யாவரையுங் காக்கின்றதற்காக அன்புபூண்டிருக்குங் குறிப்பே யாகும்; அதனால் புகழேயுள்ளது; இதுவன்றியும் மூன்றுகண்களையுடைய சிவபெருமானது இயற்கைக்குணங்களனைத்தும் அறியத்தக்கவர் யாவர்.—எ-று.

'வேண்டுதல் வேண்டிடாமை யில்லதோர் விமலன்' என்பதனை—"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க் - கியாண்டு மிடும்பையில" என்னுந் திருக்குறளானுமறிக. சிவபெருமா னணிந்துகொள்ளுஞ் சாமானியப்பொருளாக நீ யிகழ்ந்து கூறியவை யனைத்தும், ஆன்மகோடிகளைக் காத்தருளுஞ் சாருண்ணிய முடையாரென்பதை யுணர்த்துதற்குரிய வடையாளமாமென்பார், 'யாரையுமளிக்குமன்பு பூண்டிடுகுறிகாண்' என்றும், அவற்றால், எம்பெருமானுக்குச் சிறிதும் பழிப்புறாதென்பார், 'அற்றூற்புகழ்ச்சியாம்' என்றும், சிவபெருமானது காருண்ணியவிலக்கணங்க ளனைத்துந் திருமால் முதலிய தேவர்களாலும் வேதங்களாலு மளவிட்டுரைத்த லருமையாயின், சாமானியனாகிய உன்னாலறியக்கூடுமோ வென்று குறிப்பிப்பார், 'முக்கணுண்டகை யியற்கையெல்லா மார்கொலோ வறியகிற்பார்' என்றுங் கூறினார். (உச)

போதனே முதலா வுள்ள புங்கவர் வழிபட் டேத்த
வேதமி லிறைமை யாற்ற லியாவையும் புரிந்த நாதன்
காதலும் வெறுப்பு மின்றிக் கருணைசெய் நிலைமை யேகாண்
பேதைநீ யிகழ்ச்சி யேபோற் பேசிய தன்மை யெல்லாம்.

(இ-ள்.) பேதையே நின்னால் இகழ்ச்சிபோலக் கூறம்பட்டவை அனைத்தும் பிரமன் முதலிய தேவர்கள் வழிபாடுசெய்து துதிக்க, குற்றமற்ற முதன்மை வல்லமைமுதலிய எவற்றையும் கொடுத்தருளிய சிவபெருமான் விருப்பு வெறுப்பின்றித் திருவருள் புரியுந்தன்மையேயாகும்.—எ-று.

இவ்வாறு நீ இகழ்ந்துகூறியவை யனைத்தினையுஞ் சிவபெருமான் கொண்டருளினமை பிரமாதிதேவர்களதுவேண்டுகோட்கிரங்கி யவர்கட்கருள்செய்யக் கொண்டகோலமேயன்றித் தமக்கென விரும்பித் தரித்திலரென்று கூறினரென்க. (உரு)

இம்முறை மறைக ளாதி யிசைத்தன வினைய வெல்லாஞ்
செம்மைகொ ளுணர்வி னான்றோர் தெளிகுவ ரிறையை யெள்ளும்
வெம்மைகொள் குணத்தாய் நிற்கு விளம்பொணா விளம்பிற் பாவம்
பொய்ம்மறை வேடத் தோடும் போதிநீ புறத்தி லென்றாள்.

(இ-ள்.) இவ்வாறே வேதமுதலியகலைகள் கூறுகின்றன. இவையனைத்தும் நல்லுணர்ச்சியையுடைய மேலோர்களறிவார்கள். சிவபெருமானைப் பழித்துக்கூறும் தூர்க்குணத்தையுடையோய்! (இவைகளை) நினக்குரைத்தல் தகாது; கூறினும் பாவமாம். பொய்யைமறைத்துவந்த வேஷத்துடனே நீ வெளியே போகக்கடவையென்று திருவாய்மலர்ந்தருளினார்.—எ-று.

இவ்வாறு பதிவாக்காகிய வேதங் கூறுமென்பார், 'இம்முறை மறைகளாதி யிசைத்தன' என்றும், இவ்விரகசியத்தினை மெய்ஞ்ஞானிகளே நன்குணரத்தக்கவர்களென்பார், 'இனையவெல்லாஞ் செம்மைகொ ளுணர்வினான்றோர் தெளிகுவர்' என்றும், இதனைத் தீயவர்கட் குணர்த்தின் அவர்கள் மனந்தெளிந்து தேறாமையின், அதனால் பாவமாகையா லுனக்குணர்த்துதல் கூடாதென்பார், 'வெம்மைகொள் குணத்தாய்நிற்கு விளம்பொணா விளம்பிற் பாவம்' என்றும், "தீயாரைக் காண்பதுவுந் தீதே" என்றபடி உன் முகத்தைப் பார்த்தலும் மிகக்கொடியதாகலின், நீ வெளியேபோய்விடென்று சினந்துரைத்தன ரென்பார், 'பொய்ம்மறைவேடத்தோடும் போதிநீ புறத்தி லென்றாள்' என்றுங் கூறினார். (உசு)

அறத்தினைப் புரிவா ளிவ்வா றறைதலு மணங்கே யிங்குன்
றிறத்தினி லார்வஞ் செய்து சென்றவென் செயல்கே ளாது

புறத்திடைப் போதியென்றி புரைவதோ புகுந்த பான்மை
மறைச்சடங் கியற்றி நின்னை வரைந்திடற் காகு மென்றான்.

(இ-ள்.) முப்பத்திரண்டு தருமங்களையுஞ் செய்தருளிய உமாதேவியாரிவ்வாறு கூறியருளவும், (சிவபெருமான்) பெண்ணே! இவ்விடத்தில் உன்விஷயத்திலாசைகொண்டுவந்த எனது வார்த்தையைக்கேளாமல் வெளியிற்போவென்று கூறினாய்; இது சரியோ? யான்வந்த தன்மை வைதிக சடங்குகளைச் செய்து உன்னை மணம்புரியும்பொருட்டேயாகுமென் றருளிச்செய்தார்.—எ-று.

சிவபெருமான் நான் உன்னைத் திருமணஞ் செய்துகொள்ளும்படி இங்கு வந்திருக்க நீ போவென்றுரைத்தல் தகுதியோ வென்று கூறின ரென்க. இங்கு என்பது முதனீண்டது. சடங்கு - கிரியை. (உஎ)

வஞ்சக முதல்வன் சொற்ற வாசக மிறைவி கேளா
வஞ்செவி பொத்தி யாற்றா தழுங்கிமெய் பதைப்ப விம்மி
யெஞ்சலின் முதியோன் போகா னேகுவன் யானே யென்னாப்
பஞ்சடி சேப்ப வாண்டோர் பாங்கரிற் படர்த லுற்றாள்.

(இ-ள்.) கபடவேடங்கொண்டுவந்த சிவபெருமானருளிச்செய்த வார்த்தைகளைப்பார்வதி தேவியார் கேட்டருளி, அழகிய செவிகளை மூடிச்சகிக்காமல் வருந்தி, தேகம்பதைப்ப விம்முதலடைந்து நிறைந்த (வயதினையுடைய) இப்பெருங்கிழவன் போகமாட்டான்; யானேபோகின்றேனென்று கூறினவராய், செம்பஞ்சின் குழம் பூட்டிய திருவடிகள் சிவக்கும்படி அம்மலையினொரு புறத்திற்சென்றனர்.—எ-று.

பஞ்சடி என்பதற்கு, பஞ்சுபோலும் மென்மைத்தன்மையை யுடைய பாதம் எனப் பொருள்கூறலு மொன்று. (உஅ)

படர்ந்தனள் போத லோடும் பனிபடு மிமையம் வைகு
மடந்தைதன் னியற்கை நோக்கி வரம்பிலா வருண்மீ தூர
வடைந்ததொல் பனவக் கோல மகன்றுமால் விடைமேல் கொண்டு
தொடர்ந்துபல் கணங்கள் போற்றத் தோன்றினன் றொலைவிலாதோன்.

(இ-ள்.) (இவ்வாறு) நடந்துசெல்லவும், பனிக்கட்டிகள் பொருந்திய இமாசலத்திலெழுந்தருளியிருக்கும் உமாதேவியாரது தவவுறுதியைப்பார்த்து, அழிவற்ற சிவபெருமான் அளவற்ற கருணைமிகுதியாகவந்த பிராமணவேடத்தி னின்று நீங்கி திருமாலாகிய இடபவாகனத்தெழுந்தருளி அநேக சிவகணங்கள் சூழ்ந்து துதிக்கக் காட்சிகொடுத்தருளினர்.—எ-று.

படர்ந்தனள் - முற்றெச்சம். பனிபடும் என்பதற்கு, குளிர்ச்சி பொருந்திய எனப் பொருள்கூறலு மொன்று. மால்விடை என்பதற்கு, பெரிய இடபம் எனப் பொருள்கூறினுமாம். (உகூ)

தொலைவறு பகவன் வான்மீத் தோன்றலுந் துளங்கி நாணி
மலைமகள் கண்டு பல்கால் வணங்கியஞ் சலியாற் போற்றி
யலகிலா வுணர்வா லெட்டா வாதிநின் மாயை தேறேன்
புலனிலாச் சிறியே னின்னை யிகழ்ந்தவா பொறுத்தி யென்றாள்.

(இ-ள்.) கெடுதலில்லாத சிவபெருமான் ஆகாயத்தில் காட்சிதந்தருளவும் உமாதேவியார் தரிசித்து நடுங்கி வெட்கமுற்று அஞ்சலியஸ்தராய்ப் பலமுறைவணங்கித் துதித்து அளவற்ற பேருணர்ச்சியினால் எட்டுதற்கரிய பெருமானே! தேவரீ

ருடைய மாயாவிலாசத்தை அறியேன். அறிவில்லாத சிறியேனாகிய யான் தேவரீரை இகழ்ந்தவைகளைப் பொறுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.—எ-று. (௬௦)

நற்றவ மடந்தை கேண்மோ நம்மிடத் தன்பா னீமுன்
சொற்றன யாவு மீண்டே துதித்தன போலக் கொண்டாங்
குற்றமுண் டாயி னன்றே பொறுப்பது கொடிய நோன்பான்
மற்றினி வருந்த லேனீ மணஞ்செய வருது மென்றான்.

(இ-ள்.) நல்லதவத்தினையுடைய மாதே! கேட்பாயாக; நம்மிடத்துப்பொருந்திய அன்பினாலே நீ முன்பு கூறியவார்த்தைகளனைத்தும் இவ்விடத்துத் துதிசெய்தனபோல அங்கீகரித்தோம்; (நீகூறியவற்றிற்) குற்றமிருப்பினன்றோ? யாம் பொறுத்தல்வேண்டும். இனிகொடிய தவத்தினால் வருந்தாதே, நாளைக்கு மணஞ்செய்யும் பொருட்டு வருகின்றோமென்றருளிச்செய்தார்.—எ-று.

நீ அன்புருவாயிருந் துரைத்தமையின் அவை துதித்தனவோ டொப்பனவே யன்றி வேறாகாவென்று மகிழ்கூர்ந்தன ரென்பார் 'துதித்தன போலக் கொண்டாம்' என்றும், குற்றமுண்டாயிற் பொறுத்தலே யன்றிக் குணத்தைப் பொறுத்தலெங்ஙனமென்பார், 'குற்றமுண்டாயினன்றே பொறுப்பது' என்றும், செய்தற்கரிய பெருந்தவமென்பார், 'கொடிய நோன்பு' என்றுங் கூறினார். (௬௧)

சிறந்தநின் வதுவை முற்றச் செல்லுது மென்று தொல்லோன்
மறைந்தனன் போத லோடு மலைமக ளுள்ளந் தன்னி
னிறைந்திடு மகிழ்ச்சி கொண்டு நித்தனை நினைந்து போற்றி
யுறைந்தன ளிதனை வேந்தற் குரைத்திடச் சிலவர் போனார்.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய உனது கலியாணம் நிறைவேறும்பொருட்டு வருகின்றோமென்று, புராதனராகிய சிவபெருமான் மறைந்தெழுந்தருளவும், பார்வதிதேவியார் தமதுள்ளத்தில் பூரணசந்தோஷங்கொண்டு சிவபெருமானைச் சிந்தித்துத் துதித்து வசித்திருந்தனர். இந்தச்சங்கதியைப் பர்வதராஜனுக்குக்கூறும்படி சிலதோழியர்கள் சென்றார்கள்.—எ-று. (௬௨)

அண்ணல்வந் தருளிச் செய்கை யரசனுக் குரைத்த லோடு
முண்ணிக ழயர்ச்சி நீங்கி யொல்லைதன் னில்லி னோடு
நண்ணின னுமையைக் கொண்டு நலங்கொடன் னகரத் துய்த்தான்
கண்ணுத லிறைவ னங்கட் செய்தன கழற லுற்றேன்.

(இ-ள்.) சிவபெருமானெழுந்தருளி (உமாதேவியாருக்குத்) திருவருள்செய்துசென்ற சங்கதியைப் பர்வதராஜனுக்குச்சொல்லவும், அவன் மனத்திலுள்ள சஞ்சலமொழிந்து விரைவாகத் தனது தேவியுடன் (கன்னிகாமாடத்தை) அடைந்து, உமாதேவியாரை யழைத்துக்கொண்டு நன்மைமிக்க தனது மாளிகையிற்சேர்த்தனன். இனி, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் அவ்விடத்துச் செய்தவைகளைச் சொல்லத்தொடங்கினேன்.—எ-று.

உமாதேவியார் பெண்பா லாதலின், அவரையழைத்துவருதற்குத் தான் தந்தையாயிருப்பினுங் கூடாதாகலின், தனது மனைவியை யழைத்துச் சென்றன னென்பார், 'தன்னில்லினோடு நண்ணின னுமையைக் கொண்டு நலங்கொடன் நகரத் துய்த்தான்' என்று கூறினார். (௬௩)

தவங்காண் படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௬௬௬.

உ
முருகன்றுணை.

# மணம்பேசுபடலம்.

பொருடரு மலைக்கொடி புரியு நோன்புகண்
டருடனை நல்கிய வாதி நாயகன்
றெருடரு கயிலையிற் சேர்வுற் றேழ்வகை
யிருடிக டங்களை யிதயத் துன்னினன்.

(இ-ள்.) சகல செல்வங்களையுந் தருகின்ற பர்வதராஜ புத்திரியாகிய உமாதேவியார் செய்த தவத்தைப்பார்த்துத் திருவருள்புரிந்தருளிய முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் மெய்ஞ்ஞானத்தைத் தருகின்ற திருக்கயிலையை யடைந்து சப்தமுனிவர்களையுந் திருவுள்ளத்தில் நினைத்தருளினர்.—எ-று.

பொருள் - பொன் நவமணி முதலியனவாம்; அன்றி, மலைபடுதிரவியம் எனப் பொருள்கூறினும் பொருந்தும். தன்னை யடைந்த ஆன்மாக்களது அஞ்ஞானத்தைத் தவிர்த்து மெய்ஞ்ஞானத்தைத் தந்தருளுந் தன்மையுடைமையால், 'தெருடரு கயிலை' என்றார். (க)

நினைதலுங் கண்ணுத னிமல னேழ்பெரு
முனிவரு மன்னதை முன்னி யுள்வெரீஇப்
பனிவரு மெய்யொடு படர்ந்து வல்லையி
லனையனை யிறைஞ்சிநின் றறைதன் மேயினர்.

(இ-ள்.) நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் நினைந்தருளலும், சிறந்த சப்தமுனிவர்களும் அதனைச் சிந்தித்து மனத்திலச்சங்கொண்டு நடுக்கமுற்ற தேகத்தோடும் விரைவாகச் சென்று சிவபெருமானை நமஸ்கரித்து நின்று சொல்லத் தொடங்கினார்கள்.—எ-று.

முனிவர்கள் பலருள்ளுஞ் சிறந்த மகாமுனிவராகலின், 'ஏழ்பெரு முனிவரும்' என்றும், பிரமவிஷ்ணுவேந்திராதி தேவர்கள் பலரிருக்க நம்மைச் சிவபெருமான் சிந்தித்தருளினமை யாது காரணமோ வென்று மனமஞ்சி யுடனடுங்கி வந்தார்களென்பார், 'உள்வெரீஇப் பனிவரு மெய்யொடுபடர்ந்து' என்றுங் கூறினர். (உ)

பங்கயன் மான்முதற் பகரும் பண்ணவ
ருங்குன தேவனுக் குரிய ராயுற
வெங்களை யுன்னினை யாங்கள் செய்தவ
மங்கவர் தவத்தினு மதிகம் போலுமால்.

(இ-ள்) கமலாசனனாகியபிரமன் விஷ்ணு முதலாகச் சொல்லப்பட்ட தேவர்கள் இவ்விடத்துத் தேவரீரது ஏவலுக்கு உரியவர்களாயிருக்க எங்களைநினைத்தருளினீர்; அடியேங்கள் செய்த தவமானது அவர்கள் செய்த தவத்தைப்பார்க்கிலு மதிகம்போலும்.—எ-று.

தேவரீரது ஏவல் செய்வதற்குத் தவங் காரணமாதலின், அத்தவத்தில் யாங்கள்தாமோ சிறந்துள்ளோமென்று பிரார்த்தித்தனரென்க. (ங)

எந்தையெம் பெருமநீ யெம்மை வம்மென
முந்துறு கருணையின் முன்னிற் ருதலி
னுய்ந்தன மடியரோ முடைய தீப்பவஞ்
சிந்தின மினியொரு தீதுண் டாகுமோ.

(இ-ள்.) எங்கள் தந்தையாகிய எமதாண்டவரோ! தேவரீர் அடியேங்களை வாருங்களென்று முற்பட்ட கிருபையினல் நினைத்தருளியது; ஆகையால் அடியேங்கள் பிழைத்தனம்; எங்களிடத்துள்ள கொடிய பாவங்களை யொழித்தோம்; இனி யெங்கட் கொருதீங்கு சேரிடுமோ?—எ-று.

முந்துறுகருணை - அதிகரித்தெழுந்த பெருங்கருணை. (ச)

ஒருதலை யைந்தொழி லுலப்பு றுவகை
புரிதரு பகவநம் புன்மை நீக்குவான்
கருணையொ டுன்னினை கடிதிற் செய்பணி
யருளுதி யென்றன ராற்று நோன்பினோர்.

(இ-ள்.) அருமையாகச் செய்யுந் தவத்தினையுடைய சப்தமுனிவர்களும், ஒரேகாலத்தில் பஞ்சகிருத்தியங்களுங் கெடுதலடையாவண்ணஞ் செய்தருளுகின்ற எம்பெருமானே! எங்களது பாவத்தை நீக்கும்பொருட்டுக் கிருபையோடு நினைத்தருளினீர்; இனி யாங்கள் விரைவில் செய்யவேண்டிய ஏவலைக் கட்டளையிட்டருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.—எ-று.

சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியங்களையும், பிரமன் முதலிய பஞ்சமூர்த்திகளாக நின்று ஏககாலத்திற் செய்தருளுகின்றவர் சிவபெருமா னொருவரே யாகலான், 'ஒருதலை யைந்தொழி லுலப்பு றுவகை புரிதரு பகவ' என்றார். இதனை—"ஐந்தொழிலு மெனதிவைக ளாகுஞ் சிருட்டிமுத லானமுத் தொழில் சடத்து - மறிவிடத் தோரிரண் டும்வினைக் கீடா யவற்றையுயி ரறியாமை யான் - முந்திவரு தன்னையும் பிறனையுங் கருதிநனி முதிர்விழைவு வெகுளி மருவி - முன்னுசுக துன்பங்கள் மன்னியிருவினைமேவி மூடப் பிறப்பி லாழும் - பந்தமுறு முயிர்சுதந் தரமிலி சடம்பாச மானகருவிகண் முழுதுமே - பகருமற் றவைநடத் திடுமொருவ னுனிவை பகுத்துன் சுதந்தரமறச் - சிந்தனைசெய் பந்தமறும்" எனவருஞ் சிதம்பரசுவாமிகள் திருவாக்கானுமறிக.

வேறு.

அமலனம் முனிவர் மாற்றங் கேட்டலு மவரை நோக்கி
யிமையமே லிறைவன் றன்பா லேகியே யெமக்கிவ் வைக
லுமைதனை வதுவை நீரா லுதவுவான் வினவி வல்லே
நமதுமுன் வம்மி னென்னு நன்றருள் புரிந்தா னன்றே.

(இ-ள்.) சிவபெருமான் அம்முனிவர்களது வார்த்தையைக் கேட்டவுடனே அவர்களைப்பார்த்தருளி, (நீங்கள்) பர்வதராஜனிடத்திற்சென்று இன்றைப்பொழுதே எமக்கு உமையவளைக் கலியாணமுறைமையால் கொடுக்கும்படி வினவி, விரைவில் நமக்குமுன்னே வாருங்களென்று நன்மையோடு திருவாய்மலர்ந்தருளினர்.—எ-று.

நன்றருள் புரிதல் - கிருபையோடு கட்டளையிடுதல். (ரு)

நாயக னருளக் கேளா நன்றென விறைஞ்சி யேகி
யேயதொன் முனிவர் யாரு மிமையமே லிறைமு னண்ண
வாய்வன் மனைவி யோடு மடைந்தெதிர் கொண்டு தாழ்ந்து
நேயமொ டருச்சித் தேத்தி நின்றிது புகலு கின்றான்.

(இ-ள்.) இவ்வாறு சிவபெருமானருளிச்செய்யக்கேட்டு நல்லதென்று வணங்கிச் சென்று பழைமைபொருந்திய சப்தமுனிவர்களும், பர்வதராஜனுக்கு முன்னேயடைந்தவுடனே, அப்பர்வதராஜன் தன்மனைவியாகிய மேனையோடும்வந்து எதிர்கொண்டுவணங்கி அன்புடன் அருச்சித்துத் துதித்து நின்று இவ்வார்த்தைகளைச் சொல்லுகின்றான்.—எ-று. (எ)

படியறு நுந்தா ளீண்டுப் படுதலா லிமைய மேருத்
தடவரை யதனிற் றூய்தாய்த் தலைமையும் பெற்ற தன்றே
நெடியவென் பவமு மின்னே நீங்கின நீவி ரெல்லா
மடியனேன் றன்பால் வந்த நிமித்தமென் னறையு மென்றான்.

(இ-ள்.) ஒப்பற்ற உங்களுடைய திருவடிகள் இங்குப்பட்டமையினால் இவ்விமயமலையானது மேருவாகிய பெரிய மலையைப்பார்க்கிலும் பரிசுத்தமாகிய முதன்மையையுமடைந்தது. மிகுதியாகிய எனது பாவங்களும் இப்பொழுதே நீங்கிவிட்டன. அது நிற்க, நீங்களனைவரும் அடியேனிடத்து வந்தருளிய காரியம் யாது? அதனைச் சொல்வீர்களாக வென்று பிரார்த்தித்தனன்.—எ-று.

படி - ஒப்பு. மேருமலையில் தேவர்கள் முதலியோ ரிருத்தலா லுயர்ச்சியுமீண் டவர்க ளின்மையால் தாழ்வு முற்றிருந்த விவ் விமயமானது, அத் தேவர்கள் முதலியோரினுஞ் சிறந்த நீங்கள் இங்கெழுந்தருளப்பெற்றமையால் தூய்மையும் முதன்மையு மடைந்ததென்று கூறினனென்பார், 'இமையமேருத் தடவரையதனிற் றூய்தாந் தலைமையும் பெற்றது' என்றும், உங்களைத் தரிசிக்கப்பெற்றமையின் எனது தீவினையு மொழிந்ததென்று கூறினனென்பார், 'நெடியவென் பவமு மின்னே நீங்கின' என்றுங் கூறினார். (அ)

அங்கது வினவு மெல்லை யருந்தவ ரகில மீன்ற
மங்கையை வதுவை செய்வான் மன்னுயிர்க் குயிராய் நின்ற
சங்கர னினைந்துன் னோடு சாற்றுதற் கெம்மை யுய்த்தா
னிங்கிதெம் வரலா றென்ன விசைவுகொண் டிறைவன் சொல்வான்.

(இ-ள்.) அவ்விடத்தில் அவ்வார்த்தையைக் கேட்டபொழுது, அருமையாகிய தவத்தினையுடைய முனிவர்கள் (கூறுவார்கள்) உலகமாதாவாகிய உமாதேவியாரைத் திருமணம்புரியும்பொருட்டு, நிலைபெற்ற உயிர்க்குயிராக விளங்கும் சிவபெருமான் திருவுள்ளங்கொண்டு உன்னுடன் சொல்லும்படி எங்களையனுப்பியருளினார். இங்குயாங்கள் வந்தவிஷய மிதுதானென்று கூறவும், அதற்குச் சம்மதித்துப் பர்வதராஜன் சொல்லுகின்றான்.—எ-று.

'மன்னுயிர்க் குயிராய் நின்ற சங்கரன்' என்பதனை—"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன் - மறைய நின்றுளன் மாமணிச் சோதியான் - வுறவுக் கோனட்டுணர்வுக் கயிற்றினன் - முறுக வாங்கிக் கடையமுன் னிற்பனே" என்னுந் திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரத்தானு முணர்க. (கூ)

துன்னிய வுயிர்கள் யாவுந் தொல்லுல கனைத்து மீன்ற
கன்னிகை யுமையா டன்னைக் கடிமண முறையி னல்கி
யென்னையு மடிமை யாக விருகுவ னிறைவற் கென்ன
மன்னவ னயலே நின்ற மனைவியீ துரைக்க லுற்றாள்.

(இ-ள்.) நிலைபெற்ற எல்லா வுயிர்களையும், புராதனமாகிய சர்வலோகங்களையும் பெற்றருளிய கன்னிகையாகிய உமாதேவியாரைச் சிவபெருமானுக்குத் திருத்

கலியாண முறைமைப்படி கொடுத்தருளி என்னையும் அடிமையாகக் கொடுத்தருளு வேனென்று கூறியவுடனே, அவ்வரசனருகில்நின்ற மனைவியாகிய மேனாதேவி இவ் வார்த்தை சொல்லத்தொடங்கினாள்.—எ-று.

சர்வலோகங்களையு மீன்றுங் கன்னிப்பருவங் கழியா துள்ளவ ளென்பார், துன்னிய வுயிர்கள் யாவுந் தொல்லுல கனைத்து மீன்ற கன்னிகை யுமையாள்' என் றார். கடிமணம்-இருபெய ரொட்டு. உலகமாதாவாகிய உமாதேவியாரைத் திருமணஞ் செய்விப்பதுடன் யானும் அவ்வெமது சிவபெருமானுக்கடிமையாவே னென்று கூறி னனென்பார், 'கடிமண முறையி னல்கி யென்னையு மடிமையாக வீகுவ னிறைவற் கென்ன' என்று கூறினார். (சo)

மலரயன் புதல்வன் றன்னோர் மடந்தையை மணத்தி னல்க
வலைபுனற் சடிலத் தண்ண லவன்றலை கொண்டா னென்பர்
நிலைமையங் கதனை யுன்னி நெஞ்சக மஞ்சு மெங்கள்
குலமக டனைய வற்குக் கொடுத்திட லெவனோ வென்றாள்.

(இ-ள்.) தாமரைமலரில் வசிக்கும் பிரமனது புத்திரனாகிய தக்ஷன் தனது ஒப்பற்றபுத்திரியைத் திருமணஞ்செய்துகொடுக்க, அலைகின்ற கங்கைநதியையணிந்த சடைமுடியினையுடைய சிவபெருமான் அந்தத்தக்ஷனது தலையையறுத்தனனென்று கூறு வார்கள். அத்தன்மையாகிய நிலைமையைநினைத்து மனத்தி லச்சங்கொண்டுள்ள எங்க ளது குலமகளை அந்தச் சிவபெருமானுக்குக் (கலியாணஞ்செய்து) கொடுப்பது எப் படி என்று கூறினாள்.—எ-று.

சிவபெருமான் தனக்குப் பெண்ணைக்கொடுத்த தக்ஷனது தலையை யறுத்த னனென்று நேரிற்கண்டவர்கள் கூறுவனென் றுரைத்தன ளென்பார், 'மலயரயன் புத ல்வன் றன்னோர் மடந்தையை மணத்தி னல்க - வலைபுனற் சடிலத் தண்ண லவன் றலை கொய்தா னென்பர்' என்றும், அதனை நினைக்குமிடத்தில் நமக்கு மத்தகைய கதிதானே வருமென் றஞ்சுகின்றேமென் றறைந்தன ளென்பார். 'நிலைமையங் கத னை யுன்னி நெஞ்சகமஞ்சு மெங்கள்' என்றுங் கூறினார். (சக)

என்றலு மவளை நோக்கி யெழுமுனி வோருஞ் சொல்வா
ரொன்றுநீ யிரங்கல் வாழி யொப்பிலா முதல்வன் செய்கை
நன்றுதேர்ந் திலையாற் றக்க னலத்தகு மவியை மாற்றி
யன்றுதன் னிகழ்த லாலே யவன்றலை முடிவு செய்தான்.

(இ-ள்.) இவ்வாறு கூறவும் அம்மேனையைப்பார்த்துச் சப்தமுனிவர்களுங் கூறுவார்கள்; (மேனாதேவியே!) நீ சிறிதும் வருந்தவேண்டாம். ஒப்பற்ற சிவபெரு னது செய்கையை நன்றாக உணர்ந்திலை. தக்ஷனென்பவன் நன்மைமிக்க அவிர்ப்பாக த்தைநீக்கி அந்நாளில் சிவபெருமானையிகழ்ந்து கூறியதனால் அவனது தலையையறுத் தருளினார்.—எ-று.

வாழி - அசைநிலை. (சஉ)

அடைந்துளோர்க் கருளு மாறு மல்லவர் தமக்குத் தண்டம்
படுந்துணை தெரிந்து கூட்டும் பான்மையும் பரமன் செய்கை
மடந்தையித் தன்மையாரு மனப்படுத் துணர்வ ரீதே
திடம்பட வுணர்தி வேறு சிந்தனை செய்யே லென்றார்.

(இ-ள்.) தம்மை யடைந்தவர்களுக்குத் திருவருள் புரிதலும், அடையாத வர்களுக்குத் தண்டனையைத் தக்கவாறு செய்து தன்னருளிற் சேர்க்குந்தன்மையும்

சிவபெருமானது செய்கையாம். மேனையே! இந்தத்தன்மையை எவர்களும் மனத்திலாலோசித்துணர்வார்கள். இதனையே நீ உறுதியாக உணரக்கடவை; வேறொன்றுஞ் சிந்தியாதே யென்று கூறினார்கள்.—எ-று.

சிவபெருமான்தம்மை யடைந்தவர்களுக்கு அருளும், அடையாது விரோதித்தவர்களுக்குத் தண்டனையும் புரிந்தருள்பவராகலின், தம்மை விரோதித்த தக்ஷனைத் தண்டித்தருளின ரென்று கூறின ரென்க. (௧௩)

வேறு.

இயலுறு முனிவோர்க ளிவைமொழி தலுமோரா
மயலறு வரையண்ணல் வாய்மையி தெனலோடு
மயலுறு மனைமேனை யஞ்சின ளமலன்றன்
செயலிது வுணராதே செப்பின னிவையென்றே.

(இ-ள்.) தவவிலக்கணம் வாய்ந்த எழு முனிவர்களும் இவ்வார்த்தைகளைக் கூறியவுடனே, அதனையுணர்ந்து மயக்கமற்ற பர்வதராஜன் இது உண்மையேயென்று கூறவும், உடனே அவனருகில் நின்ற பத்தினியாகிய மேனாதேவியானவள் சிவபெருமானது இச்செய்கைகளை யுணராமல், யானிவ்வாறு கூறினேனென்று அச்சங்கொண்டனள்.—எ-று. (௧௪)

உண்ணலி வொடுமேனை யுவர்மல ரடிதாழூஉப்
பெண்ணறி வெவையேனும் பேதைமை வழியன்றோ
வண்ணற னருணீர்மை யணுவது மறிகில்லேன்
புண்ணிய முனிவீரென் புன்மொழி பொறுமென்றாள்.

(இ-ள்.) மனவருத்தத்துடன் மேனாதேவியானவள் அம் முனிவர்களது தாமரைமலர்போன்ற பாதங்களை வணங்கி, பெண்ணறிவானது எத்தன்மையவாயினும் அறியாமையின்வழிப்பட்டதல்லவோ? ஆதலால், சிவபெருமானது காருண்ணியவிலக்கணத்தை அணுவளவும் அறியேன். புண்ணியசொரூபராகிய முனிவர்களே! எனது அற்பமாகிய வார்த்தையை மன்னித்தருள்வீராகவென்று வேண்டினாள்.—எ-று.

'பெண்ணறி வெவையேனும் பேதைமை வழியன்றோ' என்பதனை:—"பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்" என்னும் ஔவைப் பிராட்டியா ரருள்வாக்கானும், "நுண்ணறி வுடைய ராகி நூலொடு பழகி னாலும் - பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமைத் தாத லாலுன் - கண்ணறி வுடைமைக் கேற்ற காரிய முரைத்தாய் மான - மெண்ணறி வுடையோர்க் கெல்லா மிழுக்குடைத் தன்றோ வீதால்" என்னுந் திருவிளையாடற்புராணத்தானு மறிக. (௧௫)

பணிவுட னிவைமேனை பகர்தலு மவடன்பாற்
கணிதமி லருள்செய்யக் காவல னதுகாணா
வினைதவிர் முனிவீர்கா ளிவளுரை கருதன்மின்
மணமிய லிறையோனை வரமொழி குதிரென்றான்.

(இ-ள்.) வணக்கத்துடன் இவ்வார்த்தைகளை மேனாதேவி கூறவும், (முனிவர்கள்) அவளிடத்தில் எண்ணிறந்த கிருபைசெய்யப், பர்வதராஜன் அதனைப்பார்த்து ஒப்பற்ற முனிவர்களே! (நீங்கள்) இவளது வார்த்தையைச் சிந்தியாதீர்கள். திருமணஞ் செய்தற்குத் திருவுளங்கொண்டு சிவபெருமானை இவ்விடத்திற்கு வரும்படி சொல்லுங்களென்று கூறினான்.—எ-று. (௧௬)

பனிபடு வரையண்ணல் பகர்மொழி யதுகேளா
மனமிக மகிழ்வாகி மற்றவர் தமையங்க
ணினிமையொ டுறநல்கி யெழுவரு மவணீங்கித்
தனைநிகர் பிறிதில்லாத் தண்கயி லையில்வந்தார்.

(இ-ள்.) பனிக்கட்டிகளையுடைய இமையபர்வதராஜன் கூறிய வார்த்தையைக் கேட்டு, மிக்க மனமகிழ்வடைந்து அவர்களை இனிமையோடு வாழும்படி யாசீர்வதித்துச்சப்தமுனிவர்களும் அவ்விடத்தினின்றுநீங்கித் தனக்கு ஒப்பு வேறொன்றில்லாததாகிய குளிர்ந்த திருக்கயிலாயத்தை யடைந்தார்கள்.—எ-று. (கஎ)

வந்தெழு முனிவோரு மாநக ரிடைசாரா
நந்திகண் முறையுய்ப்ப நாதனை நணுகுற்றே
யந்தமி லளியோடு மவனடி தொழுதேத்தி
யெந்தையை யிதுகேளென் றியாவது முரைசெய்தார்.

(இ-ள்.) எழு முனிவர்களும் வந்து சிறந்த ஆலயத்தைச்சேர்ந்து திருநந்திதேவர் முறைமைப்படி யுள்ளேயனுப்பச் சிவபெருமானை யடைந்து அளவற்ற அன்புடன் அவ்வெம்பெருமானது திருவடிகளை வணங்கித் துதித்து, எமது தந்தையாகிய சிவபெருமானை (நோக்கி) இதனைக் கேட்டருள்வீராகவென்று எல்லாவற்றையுங் கூறினார்கள்.—எ-று. (கஅ)

வரைமிசை யரசாள்வோன் மணவினை யிசைவெல்லா
முரைசெய வருள்செய்தே யும்பரின் முனிகாணீர்
புரிதரு செயலாற்றப் போகுதி ரெனவோடு
மரனடி தொழுதேத்தி யவர்பத மணுகுற்றார்.

(இ-ள்.) இமையமலையி லரசாட்சிசெய்யும் பர்வதராஜன் திருமணக் காரியத்திற்கு இசைந்தவை யனைத்தையும் விண்ணப்பஞ்செய்ய, அவர்களுக்குத் திருவருள் புரிந்து தவலோகத்தில் வசிக்கின்ற முனிவர்களே! நீங்கள் செய்கின்ற தவத்தொழிலைச்செய்யும் பொருட்டுச் செல்லுங்களென்று அருளிச்செய்யவும், உடனே சிவபெருமானது திருவடிகளை வணங்கித்துதித்துத் தங்கள் பதவியை யடைந்தார்கள்.—எ-று.

வரை-ஆகுபெயர். 'உம்பரின் முனிவீர்காள்' என்பதற்கு, தவவுயர்ச்சியினையுடைய முனிவர்களே எனப் பொருள்கூறலு மொன்று. (கசு)

வேறு.

எங்குறை தீர்ந்ததென் றெழுத வத்தருந்
தங்கடம் பதத்திடைத் தணப்பின் றெய்தின
ரிங்கிது நின்றிட விமைய மேலிறை
யங்கினிச் செய்தவா றறியக் கூறுவாம்.

(இ-ள்.) எங்கள் குறை நீங்கியதென்று எழு முனிவர்களும் அவரவர்களுக்குரிய ஸ்தானங்களில் நீங்காமற்சென்றார்கள். இஃது இவ்வாறிருக்க,இமையபர்வதராஜன் அங்குச் செய்தவைகளைத் தெரியும்படி சொல்லுகின்றோம்.—எ-று.

குறை - தாங்கள் செய்யவேண்டிய தொண்டு. தண்பு - பிரிவு. (உ0)

மணம்பேசுபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூஅக.

உ
முருகன்றுணை.

# வரைபுனை படலம்.

கண்ணுத லுமைதவங் கண்டு நின்னையா
மண்ணவர் புகழ்வகை மணத்து மென்றதும்
விண்ணெழு முனிவரின் வினவி விட்டது
மெண்ணினன் மகிழ்ந்தன னிமையத் தண்ணலே.

(இ-ள்.) நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் உமாதேவியாரது தவத்தை நோக்கி, உன்னை யாம் உலகத்துள்ளவர்கள் புகழும்படி விவாகஞ் செய்துகொள்ளுகின்றோமென்றுகூறியதையும், தவலோகவாசிகளாகிய எழு முனிவர்கள்மூலமாகக் கேட்டனுப்பியதையும் பர்வதராஜன் நினைத்து மகிழ்வடைந்தனன்.-எ-று.

விண் - என்றது, தவலோகத்தை. (க)

கணிதமி லுயிரெலாங் கலந்து மற்றவை
யுணர்வுதொ றிருந்தவற் கொருதன் கன்னியை
மணமுறை புரிதிற மதித்துத் தேவர்தம்
பணிபுரி தச்சனைப் பரிவொ டுன்னினான்.

(இ-ள்.) அளவற்ற சீவராசிகள் தோறுங் கலந்து, அச் சீவராசிகளி னுணர்வுக்குணர்வா யெழுந்தருளிய சிவபெருமானுக்கு ஒப்பற்ற தனது புத்திரியை முறைப்படி கலியாணஞ் செய்துகொடுக்கவேண்டிய கிரமங்களை யுத்தேசித்து, தேவர்களுக்கு வேண்டிய தொழிலைச் செய்கின்ற தேவதச்சனை அன்புடன் நினைத்தனன்.—எ-று.

தேவர்தம்பணிபுரி தச்சன் - விசுவகன்மன். (உ)

உன்னிய போதினி லும்பர் கம்மியன்
மன்னவ னெதிருற வந்து கைதொழு
தென்னைகொல் கருதினை யாது செய்பணி
யன்னதை மொழிகென வறைதன் மேயினான்.

(இ-ள்.) அவ்வாறு நினைத்தபொழுது தேவதச்சன் பர்வதராஜனெதிரில் வந்து வணங்கி, நீர் யாது கருதி என்னை யழைத்தீர். யான் செய்யவேண்டிய வேலை யாது? அதனைக் கூறுவீராக வென்று கேட்க, (பர்வதராஜன்) சொல்லத்தொடங்கினான்.—எ-று.

கொல் - அசைநிலை. மொழிகென என்பது, தொகுத்தல் விகாரம். (ங)

என்னையாள் கண்ணுத லிறைவற் கியான்பெறு
மன்னையா முமைதனை யளிப்ப னிவ்வனைக்
கன்னிமா நகரெலாங் கவின்சி றந்திடப்
பொன்னினு டாமெனப் புனைதி யாலென்றான்.

(இ-ள்.) என்னை யடிமைகொண்டருளிய நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானுக்கு யான்பெற்ற லோகமாதாவாகிய உமாதேவியாரைத் திருமணஞ்செய்து

கொடுக்கின்றேன். ஆதலால், இம்மலையிலுள்ள கெடாதபெரிய நகரமுழுமையும் அழகு சிறக்கும்படி பொன்னுலகத்தைப்போல அலங்கரிப்பாயாகவென்று கூறினன்.

அப்பொழு தத்தினி லடுக்கன் மேலையோன்
செப்பிய வாசகஞ் செவிக்கொண் டுள்ளமேன்
மெய்ப்பெரு மகிழ்ச்சியை மேவி யந்நக
ரொப்பனை செய்திட வுன்னி னனரோ.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் பர்வதராஜன்சொல்லிய வசனங்களை (த்தேவதச்சன்) கேட்டு மனத்தில் மெய்ம்மையாகிய பெருமகிழ்வடைந்து அந்நகரத்தையலங்கரிக்கும்படி (தன்மனத்தில்) நினைத்தனன்.—எ-று.

அப்பொழுதத்தினில் என்பதில், அத்துச்சாரியை. ஒப்பனை-அலங்காரம். ()

நீடுறு தருநிரை நிமிருங் கால்களாய்ப்
பாடுறு கழிகளாய்ப் பரம்பும் பல்பணை
மூடுற வதன்மிசை முகில்க ளெங்கணும்
பீடுறு பந்தர்போற் பிறங்கும் வெற்பின்மேல்.

(இ-ள்.) நீண்ட மரவரிசைகளே உயர்ந்த கால்களாகவும், பரவிய பலகிளைகள் பெரிய கழிகளாகவும் அதன்மேல் மேகமெங்கும் மூடிக்கொள்ள, அதனால் பெருமைபொருந்திய பந்தலிட்டதுபோல விளங்குகின்ற அவ்விமயமலையின்மேல்.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (சு)

மலையுறழ் கோபுர மன்றஞ் சூளிகை
நிலைகெழு செய்யதேர் நிழற்று மண்டபம்
பலவுட னறுமலர்ப் பந்த ரன்னவை
தொலைவறு மாவணந் தோறு நல்கினன்.

(இ-ள்.) மலையையொத்த கோபுரங்களையும், சபைகளையும், செய்குன்றுகளையும், நிலையாகவிளங்குகின்ற செவ்விய தேர்களையும், நிழலைச்செய்கின்ற பலமண்டபங்களையும், நறுமணம்பொருந்திய பூப்பந்தர்களையும், இவைபோன்ற பிறவற்றையுங் கெடாத வீதிகடோறுஞ் செய்தமைத்தனன்.—எ-று.

சூளிகை - செய்குன்று. நிலைகெழுசெய்யதேர் என்பதற்கு, பரப்பினையுடைய சிறந்ததேர் எனப் பொருள்கூறலு மொன்று. ஆவணம் - வீதி. (எ)

நீக்கமில் கதலிகை நெடிய கேதன
மேக்குயர் காவண மிசைத்தந் துள்ளிடை
யாக்குறு கம்பல மணிசெய் தாயிடைத்
தூக்கினன் கவரியுஞ் சுடர்கொண் மாலையும்.

(இ-ள்.) நெருக்கமாகிய துகிற்கொடிகளையும் பெருங்கொடிகளையும் மிகவுமுயர்ந்துள்ள பந்தல்களின்மீதமைத்து, அப்பந்தலினுள்ளே பின்னப்பட்ட மேற்கட்டியினாலலங்கரித்து, அதனிடையில் சாமரைகளையும் விளங்குகின்ற மாலைகளையுந் தொங்கவிட்டனன்.—எ-று.

மேக்கு-உயர்ச்சி. ஆயிடை என்பது, சுட்டுநீண்டு யகரவுடம்படு மெய் பெற்றது. மேற்கட்டி-விதானம். (அ)

குரகத முகம்புரை குலைக டூங்கிய
மரகத வொளிபடு வாழை பூகந்
னிரைகெழு தன்மையி னிறுவிப் பூந்துணர்
விரைகெழு தோரணம் விசும்பி னூற்றினன்.

(இ-ள்.) குதிரைமுகம்போன்ற குலைகள் தொங்குகின்ற மரகதம்போலொளிவீசும் வாழைமரங்களையும், கமுகமரங்களையும், நல்லவரிசையாக விளங்கும்படி நிறுத்திப் பூங்கொத்துக்களின் மணம் வீசுகின்ற தோரணங்களை ஆகாயத்தில் தொங்கும்படி கட்டினன்.—எ-று. (௯)

ஒண்ணிதி யியக்கர்கோ னுறையு ளானதும்
விண்ணவர் தொழுதிட வீற்றி ருந்திடு
மண்ணறன் கோயிலு மாக வீதிக
ளெண்ணருந் திருவுற வெழில்ப டுத்தினன்.

(இ-ள்.) சிறந்த செல்வத்தினையுடைய குபேரனது மாளிகையும், தேவர்கள் வணங்கும்படி வீற்றிருக்கின்ற இந்திரனது மாளிகையும்போல, அவ்வீதிகளை அளவற்ற அழகுபொருந்தும்படி அலங்கரித்தனன்.—எ-று.

பலவகைப்பெருஞ் செல்வமுடையவனாகலின், 'ஒண்ணிதி யியக்கர்கோன்' என்றும், தேவலோகம் போகபூமியாதலின், 'விண்ணவர் தொழுதிட வீற்றிருந்திடு மண்ணறன் கோயிலுமாக' என்றுங்கூறினர். (௧0)

ஒருபுறத் தினையினி யுமைக்கு நல்குவோ
னிருபுறத் தினும்வரு மெண்ணி றேவருந்
தருபுறப் பொருளெலாஞ் சாரச் சாலைக
டிரிபுறத் திரிபுறச் செய்த மைத்தனன்.

(இ-ள்.) தமது ஒருபாகத்தை இனி உமாதேவியாருக்குக் கொடுத்தருளும் சிவபெருமானது இருபுறத்தினுஞ் சூழ்ந்துவருகின்ற அளவற்ற தேவர்களுங்கொண்டு வருகின்றமற்றைப்பொருள்களனைத்தும்வந்து பொருந்தும்படி இருப்பிடங்களை வேறுவேறாகச் செய்தமைத்தனன்.—எ-று. (௧௧)

ஆயிரப் பத்தென வறையும் யோசனை
போயதோ ரளவையிற் புரிசை யொன்றினைக்
கோயிலி னொருபுடை குயிற்றிக் கோபுரம்
வாயில்க ணான்கினு மரபி னல்கினன்.

(இ-ள்.) பதினாயிரமென்று சொல்லப்பட்ட யோசனைதூரஞ்செல்லத்தக்க சுற்றளவினையுடையதாய் ஒருமதிலை அரண்மனையினொருபுறத்தில் அமைத்து நான்கு வாயில்களிலுங்கோபுரங்களை முறைப்படியுண்டாக்கினன்.—எ-று.

ஆயிரப்பத்து - பதினாயிரம். கோயில் என்றது, இராசமாளிகையை. (௧௨)

அங்கத னடுவுற வகன்ப ரப்பினின்
மங்கல மணஞ்செய வதுவைச் சாலையைச்
செங்கன கத்தினாற் றிகழச் செய்தனன்
கங்கையஞ் சடையினன் கயிலைக் கோயில்போல்.

(இ-ள்.) அதன் நடுவில் மிகுந்த விசாலமாய் மங்கலகரமான திருமணஞ் செய்யும்பொருட்டுக் கலியாண மண்டபத்தைச் சிவந்த சாம்பூநதப் பொன்னினால் கங்கைநதியையணிந்த அழகிய சடைமுடியினையுடைய சிவபெருமானது திருக்கயிலையின்கணுள்ள திருக்கோயிலைப்போல விளங்க வமைத்தனன்.—எ-று.

செங்கனகம் என்றது, நால்வகைப்பொன்னிற் சிறந்த சாம்பூநதப்பொன்னினை. நால்வகைப்பொன்னாவன - ஆடகம்-கிளிச்சிறை-சாதரூபம்-சாம்பூநதம் என்

பன. சாம்பூநதப்பொன் சிறந்ததென்பதனை.— "பூவிற்குத்தாமரையே பொன்னிற்குச் சாம்புநதம்" என்னுந் திருவள்ளுவமாலையா லுணர்க. (கரு)

சாலையி னிலத்திடைச் சந்த மான்மத
மேலுறு நாவிநீர் விரவிப் பூசியே
கோலமென் மலர்கடூஉய்க் குறுகும் வானவர்க்
கேலுறு பலதவி சிருப்பச் செய்தனன்.

(இ-ள்.) திருமணச்சாலையின் பூமியில், சந்தனமும், புனுகும், மேன்மை பொருந்திய சவ்வாது மாகிய இவைகளைப்பனிநீரிற்கலந்து மெழுகி அழகிய மெல்லிய மலர்களைத்தூவி, அங்குவருகின்ற தேவர்களுக்குத் தகுதியாகிய பல ஆசனங்களை யிருக்கும்படியமைத்தனன்.—எ-று.

ஏலுறுபல தவிசு - அவ்வத்தேவர்களது உயர்வு தாழ்வுக்கேற்ற பலவகை ஆசனங்கள். (கச)

வானவின் மணிமுகில் வனச மாமலர்
நீனிறம் விரிதரு நெய்தல் சண்பக
மேனைய நிறங்களா லெண்ணில் வேதிகை
யானவை புரிந்தன னயனு நாணவே.

(இ-ள்.) இந்திரவில், கரியமேகம், சிறந்ததாமரைமலர், நீல நிறம் விரிந்த கருநெய்தல்மலர், சண்பகமலர் முதலியவற்றின் நிறங்களாலும் மற்றுள்ள நிறங்களாலும் அளவற்ற மேடைகளைப் பிரமனும் வெட்கும்படி செய்தனன்.—எ-று.

மணி - கருமை. நீலநிறம் எனற்பாலது, நீனிறம் எனக் கடைக்குறையாய் நின்றது. பிரமன் சிருஷ்டிக் கருத்தாவாயிருந்தும், இதுகாறு மிதுபோலச்சிருஷ்டிக்க வறியாமையால், 'எண்ணில் வேதிகை யானவை புரிந்தன னயனுநாண' என்றார். ()

கண்ணடி பூந்தொடை கவரி பஃறுகின்
மண்ணிய செழுமணி மாலை தூங்குறப்
பண்ணுறு வித்தனன் பரமன் பால்வரும்
விண்ணவர் விழியெலாம் விருந்து கொள்ளவே.

(இ-ள்.) சிவபெருமானுடன் வருகின்ற தேவர்களது கண்களனைத்தையும் விருந்துகொள்ளும்படி, கண்ணுடியும், பூமாலையும், சாமரையும் பலவகை வஸ்திரங்களும், சாணைதீர்ந்த செழிய இரத்தினமாலைகளுந் தொங்கும்படி அலங்கரித்தனன்.

கண்ணுடி எனற்பாலது, கண்ணடி எனத்தொடைநோக்கி நின்றது. செழுமணிமாலை என்பதற்கு, மாணிக்கமாலை எனப்பொருள் கூறினுமாம். விண்ணவர் விழியெலாம் விருந்துகொள்ளப் பண்ணுறு வித்தனன் எனக் கூட்டுக. விழியெலாம் விருந்து கொள்ளல் - விழிகளைத் தன் வயப்படுத்துதல். (கசு)

தேவரு முனிவருந் திருவ னார்களும்
பாவையி னுயிருறு பண்பி னாக்கியே
மேவரு கவரிதார் வீணை யேந்தியே
யேவலர் தொழின்முறை யியற்ற நல்கினான்.

(இ-ள்.) தேவர்களும் முனிவர்களும் திருமகளை யொத்த மாதர்களுமாகிய உருவங்களைப் பிரதிமையில் உயிருள்ளனவென்று கூறும்வண்ண மமைத்து, கிடைத்தற்கரிய சாமரைகளையும், மாலைகளையும், வீணைகளையுமேந்தி ஊழியக்காரரது தொழில்முறையைச்செய்யும்படி உண்டாக்கினான்.—எ-று. (கஎ)

பெண்ணிய லாரெனப் பிறங்கும் பாவைக
டண்ணுமை முதலிய தாக்கித் தண்டியல்
பண்ணொடு களிநடம் பயிலு வித்தனன்
விண்ணவ ரரம்பையர் யாரும் வெஃகவே.

(இ-ள்.) தேவரம்பையர்கள் யாவரும் விரும்பும்படி அழகிய மாதர்களைப் போல விளங்குகின்ற பதுமைகள் மத்தளமுதலியவைகளை யடித்துக்கொண்டு வீணையிற்பொருந்திய இசையுடன் களிப்பைத்தருகின்ற நடனத்தைச்செய்யும்படி யமைப்பித்தனன்.—எ-று. (கஅ)

நெருங்கிய கிளிமயி னேமி தண்புறாப்
பொருங்கரி யரிபரி பொருநர் வானுளோ
ரொருங்குடன் மணிகளா லோவி யப்பட
வருங்கடி யிருக்கையு ளமர நல்கினன்.

(இ-ள்.) நெருங்கிய கிளிகளும், மயில்களும், சக்கரவாகங்களும், குளிர்ந்த புறாக்களும், போர் செய்யும் யானைகளும், சிங்கங்களும், குதிரைகளும், போர்வீரர்களும், தேவர்களும் ஒரோவரிசையாக இரத்தினங்களால் சித்திரமாகப் பொருந்த அருமையாகிய திருக்கலியாணமண்டபத்திற் றங்கும்படி செய்தனன்.—எ-று.

கடியிருக்கை - திருக்கலியாண மண்டபம். (கக)

குறைதவிர் நிலைமையாற் குயிற்றுஞ் சாலையு
ணிறைதரு மிந்திர நீலத் தாலொரு
திறலரி யணையினைச் சிறப்பிற் செய்தன
னிறைவனு மிறைவியு மினிது மேவவே.

(இ-ள்.) குறைவற்ற நல்ல நிலைமையோடு செய்யப்பட்ட திருக்கலியாண மண்டபத்தில் சிவபெருமானும் உமாதேவியாரும் மகிழ்ந்து வீற்றிருக்கும்பொருட்டு ஒளிநிறைந்த இந்திரநீலரத்தினத்தினால் ஒப்பற்ற வலிய சிங்காசனத்தைச் சிறப்புடன் அமைத்தனன்.—எ-று.

'நிறைதரு மிந்திரநீலம்' என்பதற்கு, இந்திரநீல முழுமணி எனப் பொருள் கூறினுமாம். (உ0)

குண்டமும் வேதிகை வகையுங் கோதில்சீர்
மண்டல மானதும் வகுத்து வேள்செய்
பண்டம தானதும் படுத்திப் பண்ணவ
ரெண்டொகை மங்கல மிருத்தி னனரோ.

(இ-ள்.) யாககுண்டமும், பலவகைப்பட்ட வேதிகைகளும், குற்றமற்ற சிறப்பினையுடைய மண்டலமும்வகுத்து, யாகஞ் செய்தற்குரிய பொருள்களும் எற்படுத்தித் தேவர்களது அஷ்டமங்கலங்களையுமமைத்தனன்.—எ-று.

வேள்விசெய்பண்டம் என்றது, மணவேள்விக்குரிய சாமக்கிரியைகளை. தேவர்களது அஷ்டமங்கலங்களாவன :—கண்ணாடி, பூரணகும்பம், இடபம், இரட்டைச்சாமரம், ஸ்ரீவற்சம், சுவஸ்திகம், சங்கம், தீபம் என்பனவாம். (உக)

கண்டொறு கதிர்மதிக் காந்தங் காஞ்சன
மொண்டுகிர் நித்தில மொளிறு வச்சிர
முண்டக வெயின்மணி முதலிய வ றுக்கையான்
மண்டப மெண்ணில மருங்கி னல்கினன்.

(இ-ள்.) கண்களைத் தெறிக்கச்செய்கின்ற ஒளிபொருந்திய சந்திரகாந்தமும், பொன்னும், ஒள்ளிய பவளமும், முத்தும், விளங்குகின்ற வயிரமும், ஒளிபொருந்திய பதுமராகமும் முதலிய பொருள்களால் அநேக மண்டபங்களைப் பக்கத்திலமைத்தனன்.—எ-று.

கதிர்மதிக்காந்தம் என்பதற்கு, சூரியகாந்தமும் சந்திரகாந்தமும் எனப்பொருள் கூறுவாருமுளர். (உஉ)

காவிகண் மலர்தரு கயங்க ளோர்பல
வோவறு முற்பல வோடை யோர்பல
பூவியல் வாரிசப் பொய்கை யோர்பல
வாவிக ளோர்பல மருங்கி லாக்கினன்.

(இ-ள்.) நீலோற்பலங்கள் மலர்கின்ற பல தடாகங்களையும், கெடுதலற்ற செங்கழுநீர் மலரையுடைய பல ஓடைகளையும், அழகிய தாமரைமலர்களையுடைய பல பொய்கைகளையும், வேறு பல வாவிகளையும் பக்கங்களி லமைத்தனன்.—எ-று.

ஓ-என்பது, ஓரெழுத்தொருமொழியாகியதொழிற்பெயர் இதனை:—"ஓவற விமைக்குஞ்சேண் விளங்கவிரொளி" எனவருந் திருமுருகாற்றுப் படைக்கு நச்சினார்க்கினியார் கூறிய வுரைவிசேடத்தானறிக. (உரு)

பாசடை மரகதம் பளிங்கு வச்சிரங்
காசறு நன்மணி கனக மன்னதாற்
றேசுறு நளிமலர் செறிந்த பூந்தடம்
வாசவன் கண்டுள மருளத் தந்தனன்.

(இ-ள்.) மரகதத்தினால் பச்சிலைகளும், படிகமும், வயிரமும், குற்றமற்ற நல்லமாணிக்கமும், சுவர்னமுமாகிய இவைகளால் ஒளிபொருந்தியகுளிர்ந்த மலர்கள் நெருங்கிய பூம்பொய்கைகளை இந்திரனுங் கண்டு மனமயங்கும்படி யமைத்தனன்.

குற்றந்தீரக் கடைந்தெடுக்கப்பட்ட மாணிக்க மென்பார், 'காசறுநன்மணி' என்றார். நளி - குளிர்ச்சி. வாசவன்கண்டுள மருளலாவது,—நமது போகபூமியிலும் இத்தகைய சிறப்பில்லையே யென்று மயங்குதல். (உச)

கற்பகஞ் சந்தகில் கதலி பூகமே
பொற்புறு வருக்கைமாப் புன்னை யாதிய
பற்பல மணிகளாற் படுத்தி யன்னவை
நற்பயன் வழங்கவு நல்கி னனரோ.

(இ-ள்.) கற்பகம், சந்தனம், அகில், வாழை, கமுகு, அழகுபொருந்திய பலா, மா, புன்னை முதலிய விருக்ஷங்களைப் பற்பல இரத்தினங்களாலமைத்து, அவைகள் நல்ல பலனைக்கொடுக்கவுஞ் செய்தனன்.—எ-று.

நற்பயன் வழங்கவு நல்குதலாவது - அவைகள் காய்கனி முதலிய பலன்களைத்தருவனபோலப் பூத்துக்காய்த்துப் பழுத்திருக்கும்படி செய்தமைத்தல். (உ௫)

இன்னவா றளப்பில விமைய வர்க்கெலா
முன்னுறு கம்மியன் முன்னிச் செய்தலும்
பொன்னிய லிமகிரிப் புரத்து மேவிய
மன்னவள் கண்டவை மகிழ்ச்சி யெய்தினன்.

(இ-ள்.) இவ்வாறு தேவர்களனைவருக்கும் நினைவிற்பொருந்திய தேவதச்சனானவன் கருதிச்செய்யவும், பொன்மயமாகிய இமையகிரியிலுள்ள நகரத்தில் வசிக்கின்ற பர்வதராஜன் அவைகளைப்பார்த்து மகிழ்வடைந்தனன்.—எ-று.

'இமையவர்க்கெலா முன்னுறுகம்மியன்' என்பதற்கு, தேவர்களனைவருக்கும் முதன்மையாகப்பொருந்திய தேவதச்சன் எனப்பொருள் கூறினுமாம், 'இமகிரிப்புரம்' என்றது, இமையகிரியில் பர்வதராஜன் வசிக்கின்ற இராஜதானியாகிய ஓஷதிப்பிரஸ்தமென்னும் நகரத்தை. (உ௬)

சீதர னயன்முதற் றேவர் மாத்தொகை
மாதவ முனிவரர் மடந்தை மாரொடு
காதலி னுமைமணங் காண வந்திடத்
தூதரை யெங்கணுந் தூண்டி னாரோ.

(இ-ள்.) திருமால் பிரமன் முதலிய தேவர்களினது பெரிய கூட்டங்களும், மகத்தாகிய தவத்தினையுடைய முனிசிரேஷ்டர்களும் தங்கள்தங்கள் பத்தினிமாருடன்விருப்பத்தோடு உமாதேவியாரது திருமணத்தைத் தரிசிக்கும்படி வரும்பொருட்டுத் தூதுவர்களை எவ்விடத்திலு மனுப்பினான்.—எ-று.

சீதரன் - திருமகளை மார்பிற் றரித்தவன். (உ௭)

ஒற்றர்தம் முரைதெரிந் தும்பர் யாவருங்
குற்றமின் முனிவருங் குன்ற வில்லினாற்
பற்றலர் புரமடு பரமற் போற்றியே
மற்றவன் றன்னொடு வருது மென்றனர்.

(இ-ள்.) தூதுவர்களது வார்த்தையைக் கேட்டறிந்து தேவர்களனைவரும், குற்றமற்ற முனிவர்களும் மேருவாகிய வில்லினால் பகைவர்களது முப்புரங்களையுமழித்தருளிய சிவபெருமானைத் துதித்து, (யாங்களும்) அவ்வெம்பெருமானுடன் வருகின்றோமென்று கூறினார்கள்.—எ-று.

மற்று - அசைநிலை. (உ௮)

வெற்றிகொள் வயப்புலி மிசையு யர்த்திடுங்
கொற்றவை யாமளை சூழி இய காளிகள்
சுற்றுறு மெழுநதி யிமையத் தொல்கிரி
யுற்றனர் தொழுதன ருமைமு னண்ணினார்.

(இ-ள்.) வெற்றிபொருந்திய சிங்கத்தைக் கொடியாக வுயர்த்திய துர்க்கையும், யாமளையும், கூட்டமாகிய காளிகளும், உலகத்தைச் சூழ்ந்துள்ள சப்தநதிகளும் பழைமையாகிய இமையமலையை யடைந்து வணங்கினவர்களாய் உமாதேவியார் திருமுன்னே யடைந்தார்கள்.—எ-று.

வயபபுலி-சிங்கம். எழுநதிகளாவன:—கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி என்பன. (உ௯)

செந்திரு நாமகள் சீர்பெ றுஞ்சசி
பந்தமி ருபத பன்னி யாயுளா
ரந்தமி லணங்கினர் யாரு மவ்வரை
வந்தன ரவரவர் மகிழ்ந ரேவலால்.

(இ-ள்.) இலக்ஷுமியும், சரஸ்வதியும், சிறப்புப்பொருந்திய இந்திராணியும், பற்றற்ற ரிஷிபத்தினியர்களாயுள்ளவர்களும், முடிவில்லாத தேவமாதர்களுமாகிய

அனைவரும் தங்கள்தங்கள் புருஷர்களது கட்டளையினால் அவ்விமையமலையை யடைந்தார்கள்.—எ-று.

அஷ்ட ஐசுவரியங்களைத் தருதலுடைமையால், 'செந்திரு' என்றும், கல்வியைத் தருதலுடைமையால், 'நாமகள்' என்றும், போகங்களை யனுபவித்தலுடைமையால், 'சீர்பெறுஞ்சசி' என்றும், பந்தமொழிந்த முனிபத்தினிகளாதலால், 'பந்தமிருபத பன்னியாயுளார்' என்றும், பலராதலால், 'அந்தமிலணங்கினர்' என்றும், இவர்களனைவரும் மாதர்கள் வர்க்கத்திற் சேர்ந்தவர்க ளாதலின், தத்தங்கணவர்கள் சொற்படி நடக்கவேண்டுதலால், 'வந்தனரவரவர் மகிழ்நரேவலால்' என்றுங் கூறினர்.(௩௦)

பங்கய மிசைவரு பாவை யேமுத
னங்கையர் யாவரு நற்ற வத்தினா
லங்கணெனாங் துறைதரு மம்மை தாடொழா
மங்கல வதுவையின் வனப்புச் செய்தனர்.

(இ-ள்.) தாமரைமலரில் வசிக்குந் திருமகள் முதலாகிய மாதர்களனைவரும், நல்ல தவத்தைச் செய்தமையினால் திருமேனி வருந்தி யெழுந்தருளியிருக்கின்ற உமாதேவியாரது திருவடிகளை வணங்கி, மங்கலகரமாகிய திருமணத்திற்கு வேண்டிய சிறப்பைச் செய்தார்கள்.—எ-று.

பாவை - உவமையாகுபெயர். (௩௧)

நெறிதரு தவத்துரு நீக்கிக் காமருக்
குறையுள தாகிய வுமைதன் மெய்யினைக்
குறைதவிர் நிலைமையிற் கோலஞ் செய்தன
ரிறைவனை வழிபடு மியல்பி னாரென.

(இ-ள்.) நல்லொழுக்கத்தையுடைய தவவடிவத்தை நீக்கி அழகுக்கிருப்பிடமாகிய உமாதேவியாரது திருமேனியைக் குறைவில்லாவண்ணம் தங்கள் நாயகனை வணங்குகின்ற தன்மையினையுடையவர்களைப் போலச் சிங்காரித்தார்கள்.—எ-று.

கற்புடையமாதர்கள் தங் கணவரிடத்துப் பேரன்புடையவர்களாய் அவர்களுக்கு வேண்டுவனவற்றை நிரம்பச் செய்யுமாறுபோல மனப்பூர்வகமாகச் சிறப்ப அலங்கரித்தமையின், 'இறைவனைவழிபடுமியல்பினாரென கோலஞ்செய்தனர்' என்றார்.

மேதகு பொலஞ்சுடர் மேரு மந்தர
மாதிய வாகிய வலகில் சுற்றமு
மோதருங் கடல்களு முரக வேந்தரு
மாதிர யானையும் பிறவும் வந்தவே.

(இ-ள்.) உயர்வுபொருந்திய பொன்னொளியினையுடைய மேருமலை, மந்தரமலைமுதலிய அளவில்லாத பந்துக்களும் சொல்லுதற்கரிய சமுத்திரங்களும், நாகராஜர்களும், அஷ்டதிக்கியானைகளும் மற்றவைகளும் வந்தன.—எ-று.

ஆயிரத்தெட்டு மாற்றுடையதாய்த் தேவர்கள் தரிப்பதற்கே யுரியதாய் விளங்குதல்பற்றி, 'மேதகு பொலஞ்சுடர்மேரு' என்றும், பிறரால் அகலநிகள வாழங்கவிவ்வளவினவென் றளத்தற் கருமைநோக்கி, 'ஓதருங்கடல்களும்' என்றுங்கூறினர். மேருமந்தர மாதியவாகிய வலகில் சுற்றமும் என்றது, அஷ்டகுலாசலங்களை. அவை- மேரு - மாலியவான் - கந்தமாதனம் - ஏமகூடம்-நீலம் - சுவேதம்-நிடதம் - சிருங்கம் என்பன. ஓதருங்கடல்க ளாவன - உவர்நீர்க்கடல்,நன்னீர்க்கடல்-பாற்கடல் - தயிர்க்கடல்-நெய்க்கடல் - கருப்பஞ்சாற்றுக்கடல் - தேன்கடல் என்பன. உரகவேந்தர்கள்-

வாசுகி-அனந்தன்-தக்ஷன்-சங்கபாலன்-குளிகன்-பதுமன்-மகாபதுமன்-கார்க்கோடன் என்பவர்கள். மாதிரயானைகள், ஐராவதம்-புண்டரீகம்-வாமனம்-குமுதம்-அஞ்சனம்-புட்பதந்தம்-சார்வபௌமம்-சுப்ரதீபம் என்பன. (௩௩)

வேறு.

ஈங்கிது காலை தன்னி லிமகிரி புரக்கு மன்னன்
பாங்குறு தமர்க ளோடும் பரிவொடுஞ் சென்று வெள்ளி
யோங்கலி னந்தி யுய்ப்ப வுயிர்க்குயி ரான வண்ணல்
பூங்கழல் வணங்கி நின்றாங் கினையன புகல லுற்றான்.

(இ-ள்.) இவ்விடத்து இவ்வாறு வந்துகொண்டிருக்குஞ்சமயத்தில் இமையபர்வதராஜன் நெருங்கியபந்துக்களுடன் அன்போடு திருக்கயிலாயமலையையடைந்து, திருநந்திதேவரனுப்ப (உள்ளேசென்று) உயிர்க்குயிராகிய சிவபெருமானது தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கி நின்று அவ்விடத்தில் இவ்வாறுவிண்ணப்பஞ்செய்யத்தொடங்கினான்—எ-று.

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்" என்றபடி எல்லாவுயிர்களையுந் தமக்காலயமாகக்கொண் டெழுந்தருளியிருக்கின்ற பெருமானாகலின், 'உயிர்க்குயிராய வண்ணல்' என்றார். (௩௪)

ஆதியி னுலக மெல்லா மளித்திடு மன்னை தன்னைக்
காதலின் வதுவை செய்யக் கருதினை கணித நூலோ
ரோதுபங் குனியின் றிங்க ளுத்தர மின்றே யாகு
மீதுநன் முகூர்த்த மெந்தா யிமையமேல் வருதி யென்றான்.

(இ-ள்.) எம்பெருமானே! முதலில் சர்வலோகங்களையும் பெற்றருளிய லோகமாதாவாகிய பார்வதிதேவியாரைத் தேவரீர் விருப்பத்துடன் திருமணம் புரியத் திருவுள்ளங்கொண்டருளினீர்; ஆதலால், சோதிடசாஸ்திரிகளால் சொல்லப்பட்ட பங்குனிமாதத்து உத்திரநக்ஷத்திரம் இன்றைத்தினமேயாம். இது நல்லமுகூர்த்தம். ஆகையால், இமயமலைக்குத் தேவரீர் வந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்.

இலளிதாவதாரத்தில் சர்வலோகங்களையுந் திரிமூர்த்திகளையும் படைத்தருளினமை கருதி, 'ஆதியினுலகமெல்லா மளித்தருளன்னை' என்றார். (௩௫)

அல்லுறழ் கண்டத் தெந்தை யரசனை நோக்கி யின்னே
யெல்லையில் கணங்கள் சூழ விமையமேல் வருது முன்னஞ்
செல்லுதி யென்ற லோடுந் திருவடி வணங்கிப் போற்றி
வல்லையின் மீண்டு போய்த்தன் வளநக ரிருக்கை புக்கான்.

(இ-ள்.) இருள்போன்ற கரிய கண்டத்தினையுடைய சிவபெருமான் பர்வதராஜனைப் பார்த்தருளி, இப்பொழுதே அளவில்லாத கணங்கள்சூழும்படி இமயமலைக்கு வருகின்றோம். நீ முன்னேபோகக்கடவையென்று அருளிச்செய்யும், (அவ்வரசன் சிவபெருமானது) திருவடிகளை வணங்கித் துதித்து விரைவாகத் திரும்பிச் சென்று தனது வளப்பம் பொருந்திய நகரத்திலுள்ள அரண்மனையை யடைந்தனன்.—எ-று.

திருமகள் விலாசந் தங்கப்பெற்றுள்ள தாகலான், 'வளநகரிருக்கை' என்றுகூறினர். (௩௬)

வரைபுனைபடல முற்றிற்று.

ஆ திருவிருவிருத்தம்-௭௨௫.

௨

முருகன் றுணை.

# கணங்கள் செல்படலம்.

அந்த வேலையிற் கயிலையி லெம்பி ரானருளா
னந்தி தேவனை விளித்துநம் மணச்செய லுடை
முந்து சீருடை யுருத்திர கணங்கண் மான் முதலோ
ரிந்தி ராதியர் யாரையுந் தருதியென் றிசைத்தான்.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் திருக்கயிலாயத்தில் எமது சிவபெருமான் காருண்ணியத்தினல் திருநந்திதேவரை யழைத்து நமது திருமணச்செய்கையைக் காணும்பொருட்டு முதன்மையாகிய சிறப்பினையுடைய உருத்திரகணங்கள் திருமால்முதலியவர்கள் இந்திராதியர்கள் யாவரையும் வரவழைக்கக் கடவையென்று கட்டளையிட்டருளினர்.—எ-று.

உருத்திரர்கள், சிவசாரூபமும்,சிவஞானமும் பெற்றுள்ளவர்களாதலானும், திருமால்முதலியோர் உலக பாலகர்களாதலானும், இந்திராதியர்கள் போகரூபிகளாதலானும் இவர்களை முறைப்படவமைத்து, 'முந்து சீருடை யுருத்திர கணங்கண்மான் முதலோ ரிந்திராதியர் யாரையும்' என்று கூறினர். (க)

இன்ன வின்பமின் றாகிய பரமனீ துரைப்ப
நன்ன யப்புட னிசைந்துபின் னந்தியம் பெருமா
னன்னர் யாவரு மணப்பொருட் டுற்றிட வகத்து
ளுன்னல் செய்தன னவரெலா மவ்வகை யுணர்ந்தார்.

(இ-ள்.) துன்பமு மின்பமு மில்லாதவராகிய சிவபெருமான் இவ்வாறு அருளிச்செய்ய,திருநந்திதேவர் நல்லவிருப்பத்துட னேற்றுக்கொண்டு,பின்பு அவர்களனைவரும் திருக்கல்யாண நிமித்தம் வரும்படி தமது திருவுள்ளத்தில் சிந்தித்தருளினர். அவ்வுருத்திரகணங்கள் முதலியவர்களும் அவற்றை யுணர்ந்தார்கள்.—எ-று.

நன்னயப்பு - பெருவிருப்பு என்னும் பொருளில் வந்தது. திருநந்திதேவர் சர்வவியாபகத்தன்மையைப் பெற்றுள்ளவ ராகலின், திருமணத்திற்கு வரவேண்டுமென்று அவர் சிந்தித்த மாத்திரத்தே அதனை யாவரு முணர்ந்தன ரெனவறிக. (உ)

உலக முய்ந்திட வெம்பிரான் மணம்புரி யுண்மை
புலன தாதலு மவனருண் முறையினைப் போற்றி
மலியும் விம்மிதம் பத்திமை பெருமித மகிழ்ச்சி
பலவு முந்திடக் கயிலையை முன்னியே படர்வார்.

(இ-ள்.) உலகத்துள்ளவர்கள் பிழைக்கும் வண்ணம் எமது சிவபெருமான் திருமணஞ் செய்துகொள்ளு முண்மையானது தங்களறிவிற்றோன்றவும், அவ்வெம்பெருமானது திருவருள்முறைமையைத் துதித்து மிக்க ஆச்சரியமும், அன்பும்,பெருமிதமும், மகிழ்ச்சியுமாகிய பலவுந் தங்களைச் செலுத்தத் திருக்கயிலாயத்தைச் சிந்தித்துக்கொண்டு வருகின்றார்கள்.—எ-று.

சூரபதுமனது துன்பத்தினின்று நீங்கி உலக மீடேறுதற்பொருட்டுத் திருமணம் புரிந்தருள்கின்றமையின், 'உலக முய்ந்திட' என்றும், அத்திருமணத்தினுக்

சூரியகாலத்தைத் தங்கள் மனத்தி லியல்பாக விளங்கச்செய்தமையின், சிவபெருமா னது திருவருளுக்கு நாம் உரியராயினேமென்று விம்மிதமும், திருமணத்தைத் தரிசிக்கவேண்டுமென்னு மன்பும், சிவகடாக்ஷத்தாற் சிறந்தவர்களாயினேமென்னும் பெருமிதமும், இது காரணத்தால் பிறப்பிறப்பொழிந்து பேரின்புறுவோமென்னுந் துணிவால் மகிழ்ச்சியு மடைந்தன வென்க. (ரு)

பாலத் தீப்பொழி விழியுடைப் பஞ்சவத் திரனே
மூலத் தீப்புரை விடைப்பெருங் கேதுவே முதலாஞ்
சூலத் தீக்கரத் தாயிர கோடியோர் சூழக்
காலத் தீப்பெய ருருத்திரன் வந்தனன் கடிதில்.

(இ-ள்.) நெற்றியிலக்கினியைக் கக்குகின்ற கண்ணினையுடைய பஞ்சானனன், மூலாக்கினியையொத்த இடபகேதுமுதலிய நெருப்பைக்கக்குகின்ற சூலத்தை யேந்திய கரத்தினையுடைய ஆயிரங்கோடியர்கள் சூழும்படி காலாக்கினி யுருத்திரர் விரைந்து வந்தனர்.—எ-று.

உருத்திரகணங்களுக்கு நெற்றிக்கண் முதலிய சிவச்சின்னங்கள் பொலிந்து விளங்குதலால், 'பாலத் தீப்பொழி விழியுடைப் பஞ்சவத் திரனே-மூலத்தீப்புரை விடைப்பெருங் கேதுவே முதலாஞ்-சூலத்தீக்கரத் தாயிரகோடியோர்' என்றனர். பஞ்சானனன் இடபகேதுமுதலிய பல்லாயிரங்கோடி யுருத்திரகணங்கள் சேவிக்கப்பெற்ற காலாக்கினியுருத்திரர், உருத்திரர்களுக்குத் தலைவரும் திரிமூர்த்திகளுட் சிரேஷ்டரும், சங்காரகருத்தரும், காபாலீசன் முதல் விலக்ஷண னீறாகவுள்ள நூறு உருத்திரர்களது புவனங்களுக்குமே லிருக்குங் காலாக்கினி புவனத்தி லிருப்பவருமாகலான், முறைபற்றி அவரை முதற்கண்ணே விரைவில் வந்தனரென்பார், 'காலத் தீப்பெய ருருத்திரன் வந்தனன் கடிதில்' என்றனர். இதனை, "அஞ்சு கோடியோசனைபுகைந் திருமடங்கழன்றவர் தமைப் போலீ-ரைஞ்சு தீயுருத் திரர்புடை யுடுத்தவ ரழற்கணுற் பூதங்க-ளஞ்சு நூறுருத் திரரண்டத் துச்சிய ரரியயன் முதற்றேவ-ரஞ்சுமாணையு மாற்றலும் படைத்தவ ரடுகுறட் படைவீரர் " என்னுந் திருவிளையாடற் புராணத்தானும், "அண்டகடா கச்சனமுண் டொருகோடி யதனடியுட்- கண்டிகொ லாங்கி யுருத்திரர்க்குக் கனகமனை- யுண்டதற்குன் னதங்கோடி யோசனையீ ரைங்கோடி-மண்டியமெய்த் தழற்கொழுந்தைங் கோடியுறும் வளர்புகையும் " என்னுஞ் சிவதருமோத்திரத்தானு மறிக. காபாலீசன் முதல் விலக்ஷண னீறாகவுள்ள நூறு ருத்திரர்களாவார், காபாலீசன்-அசன் புத்தன்-வச்சிரதேகன்-பிரமத்தனன்-விபூதி -அவ்வியன்-சாத்தா - பிணகி - திரிசோதியன் - உருத்திரன் - உதாசனன் - பிங்கலன் - காதகன்-அயன் - சுவலன் - தகனன் - வெப்புரு - பிரமாந்தகன் - க்ஷயாந்தகன் - யாமியன்-மிருத்தியு - அரன் - தாதா - விதாதா - கத்திரு - காலன் - தன்மன் - சங்யோத்தா-வியோக்கிருதன் - நிருதி - மாரணன் - அரந்தா - குரூரதிருஷ்டி - பயாந்தகன் - ஊர்த்துவகாயன் - விரூபாக்ஷன் - தூமிரு - லோகிதன்- தெங்கிட்டிருணன் - பெலன்- அதிபெலன் - பாசாஸ்தன் - மாபெலன் - சுவேதா - ஜெயபத்திரன் - தீர்க்கவாகு - ஜெலாந்தகன் - வடவாமுகன் - தீமான் - சீக்கிரன் - லகு - வாயுவேகன் - தீக்ஷணன்-சூக்குமன் - க்ஷயாந்தகன் - பஞ்சாந்தகன் - பஞ்சசிகன் - கபர்த்தி - மேகவாகனன் - நிதீசன் - ரூபவான் - தன்னியன் - சௌமியன் - சௌமியதேகன் - பிரமத்தனன் - சுப்பிரகடன் - பிரகாசன் - இலக்குமிவரன் - சோமேசன் - வியாத்தியாதீபன் - ஞானபுகன் - சருவன் - வேதபாரகன் - மாத்திருவிருத்தன் - பிங்கலாக்ஷன் - பூதபாலன் - பெலிப்பிரியன் - சர்வவித்தியாதிபன் - தாதா அனந்தன் - பாலகன் - வீரன் - பா

தாளாதிபதி - விபு - இடபத்துவசன் - உக்கிரன் - சுப்பிரன் - உலோகிதன் - சருவன் - சம்பு - விபு - செணுத்தியக்ஷன் - திரியக்ஷன் - திரீதேசகவாதகன் - சன்வாகன் - விவாகன் - நபன் - லீபசு. விலக்ஷணன் என்பவர்களாம். (௬)

சுழல லுற்றிடு சூறையும் வடவையுந் தொலைய
முழுது யிர்த்தொகை யலமர வுயிர்க்குமொய்ம் புடையோ
ரெழுப திற்றிரு கோடிபா ரிடத்தொகை யீண்ட
மழுவ லத்தின ணுயகூர் மாண்டனும் வந்தான்.

(இ-ள்.) சுழல்கின்ற சூறைக்காற்றும் வடவாமுகாக்கினியும் விலகவும்,உயிர்க்கூட்டங்கள் முழுமையும் வருந்தவும் சுவாசம்விடுகின்ற வலிமையுடையவர்களாகிய எழுபத்திரண்டுகோடி பூதகணங்கள் சூழ்ந்துவர வலக்கரத்தில் மழுப்படையேந்திய கூஷ்மாண்ட உருத்திரரும் வந்தனர்.— எ-று.

காலாக்கினி யுருத்திரபுவனத்திற்கு மேலேயுள்ள கூஷ்மாண்ட புவனத்திலே பொன்மயமான திவ்வியாலயத்திலே நரகாதிபராகிய கூஷ்மாண்டருத்திரர் நரகவாசிகளைத் தண்டிப்பவர்களும், எப்போதுஞ் சுழலும்விழியினை யுடைவர்களும், ஊர்த்துவச்சுவாசமுண்டயவர்களும், உக்கிர வடிவுள்ளவர்களு மாகிய எழுபத்திரண்டுகோடி பூதகணங்களால் எப்போதுஞ் சேவிக்கப்பெற்றவ ராகலானும் சிவரூபமே இவரது ரூபமாகலானும், ' பாரிடத்தொகையீண்ட - மழுவலத்தினணுயகூர் மாண்டனும் வந்தான்' என்று கூறினர். இதனை :—"புத்தி யட்டகர் நாலிரு கோடிமேற் புகப்பெய்த நரகங்கள் - பத்தி ரட்டியுங் காப்பவர் பாரிடப் படையுடைக் கூர்மாண்டர்-சத்தியச் சிவ பரஞ் சுட ருதவிய சதவுருத் திரரன் ஞ-ருய்த்த ளித்தவீ ரைம்பது கோடிய ருருத்திர கணநாதர்" என்னுந் திருவிளையாடற் புராணத்தானும், "மேலயபாற் கனகபுரி வீற்றிருப்பர் கூர்மாண்டர் - காலவழ லிரவியுருக் காளமுக மழுவுங்கை - கோலமுறு வட்டவிழி கொண்டுடைய ரவர்தம்மைப்- போலுமுருத் திரர்பலரும் புடையடைவர் போற்றிசைத்தே" என்னுஞ் சிவதருமோத்திரத்தானு முணர்க. (௫)

நீடு பாதலத் துறைபவர் நெற்றியங் கண்ணர்.
பீடு தங்கிய பல்வகை நிறத்தவர் பெரியர்
கோடி கோடியா முருத்திர கணத்தவர் குழுவோ
டாட கேசனு முருத்திரன் கயிலையி லடைந்தான்.

(இ-ள்.) நீண்ட பாதாளலோகத்தில் வசிப்பவர்களும், நெற்றியில் அழகிய கண்ணுடையவர்களும், பெருமைபொருந்திய பலவகை நிறத்தினை யுடையவர்களும், பெரியவர்களுமாகிய கோடாகோடி உருத்திரகணத்தினர் கூட்டத்துடன் ஆடகேசவுருத்திரர் திருக்கயிலையையடைந்தனர்.—எ-று.

கூஷ்மாண்டருத்திர புவனத்திற்கு மேலுள்ள ஆடகேசுரபுவனத்தில் பலநிறமும் நுதல்விழியுமுள்ளவர்களாய்ச் சிறந்ததம்மையொத்த வடிவினையுடைய உருத்திரர்களும், அசுரநாகாதியர்களும் வணங்க ஆடகேசருத்திர ரொழுந்தருளியிருப்ப ராகலானும்,தாஞ் செல்லுமிடங்களெவற்றினுஞ் சிறந்த திருக்கயிலைமலைக் கெழுந்தருளிச் சிவதரிசனஞ் செய்யப்போகின்றவ ராகலானும், 'உருத்திரகணத்தவர்குழுவோ-டாடகேசனு முருத்திரன் கயிலையி லடைந்தான்' என்றனர். இதனை—" அதன்மேலே நவலக்க மாடகநா யகர்புரிதான் - புதுமைதிகழ் மணிபொன்னுல் யோசனையா யிரம்புகவிற் - கதமுடைய தயித்தியர்கள் கட்டரவர் வெட்டரக்கர் - விதிமுறையிற் பதம்பணிய வீற்றிருப்பா ராடகரே" என்னுஞ் சிவதருமோத்திரத்தா னறிக. (௬)

கோர மிக்குயர் நூறுபத் தாயிர கோடி
சார தத்தொகை சூழ்தரச் சதுர்முகன் முதலோ
ராரு மச்சுறச் சரபமாய் வந்தருள் புரிந்த
வீர பத்திர வுருத்திரன் வந்தனன் விரைவில்.

(இ-ள்.) மிகுந்த கோரத்தினையுடைய பத்துலக்ஷங்கோடி பூதகணங்கள் சூழ்ந்துவர, பிரமன்முதலிய தேவர்க ளஞ்சும்படி சரபவடிவங்கொண்டு வந்து (நரசிங் கத்தைக்கிழித்து) அருள்புரிந்த வீரபத்திரவுருத்திரர் வந்தருளினர்.—எ-று.

வீரபத்திரவுருத்திரர் நரசிங்காவதாரத்திற் கருவங்கொண்ட திருமாலையடக்கச் சரபாவதாரஞ் செய்தவராகலான், 'சரபமாய் வந்தருள்புரிந்த - வீரபத்திரவுருத் திரன்' என்று கூறினர். இதனை—"விரித்த வாயல கொடுக்குறக் கடித்ததன் மெய்த் தோ - லுரித்து வாங்கியச் சரபமென் றுருத்தவோ ருருவம்- பிரித்து மீண்டனன் வீர பத் திரனெனும் பெயரோன்-சிரித்து முப்புர மெரித்தவன் றன்னுழைச் சென்றான்" என்னும் உபதேசகாண்டத்தானும், "நன்ன விரண்டு திருவடியு நனிநீள் வாலு முக மிரண்டுங் - கொன்னர் சிறகு முருத்திரமுங் கொடும்பே ரார்ப்பு மெதிர்தோற்றிச் - செந்நீர் பருகிச் செருக்குநர மடங்க லாவி செகுத்துரிகொண்-டொன்னர் குலங்கண் முழுதழிக்கு முடையான் சரபத் திருவுருவம்" என்னுங் காஞ்சிப்புராணத்தானு முணர்க. (எ)

விண்டு தாங்குறு முலகுயிர் முழுதுமோர் விரலிற்
கொண்டு தாங்குறு குறட்படை கோடிநூ றீண்டப்
பண்டு தாங்கலந் தரியர னிருவரும் பயந்த
செண்டு தாங்குகைம் மேலையோன் மால்வரை சென்றான்.

(இ-ள்.) விஷ்ணுவினல் தாங்கப்பட்ட உலகங்களையு முயிர்களையு மொரு விரலில்எடுத்துத் தாங்கக்கூடிய நூறுகோடிபூதப்படைகள்சூழ்ந்துவர, முற்காலத்தில் திருமாலுஞ் சிவபெருமானுங் கலந்து பெற்ற செண்டேந்திய கையினையுடைய மகா சாத்தர் பெரிய திருக்கயிலைமலையை யடைந்தனர்.—எ-று.

திருமா லருமையாகத் தாங்கும் புவனங்களைச்சிவபூதங்கள் மிகவிலாசானே தாங்குந் தன்மையினையுடையனவென்பதை விளக்க, "விண்டு தாங்குறு முலகுயிர் முழுதுமோர் விரலிற் - கொண்டு தாங்குறு குறட்படை" என்றார். அரியுமரனுங் கல ந்தபோதுண்டானவர் அரியரபுத்திரனென்பதைக் குறிப்பிக்கவும், சிவவீரியத்தி லுதி த்தமையால் உருத்திரரேயென்று விளக்கவும் உருத்திரர்கூட்டத்துடனமைத்து, "பண் டு தாங்கலந் தரியர னிருவரும் பயந்த-செண்டு தாங்குகைம் மேலையோன்"என்றனர்.

முந்தை நான்முகன் விதிபெறான் மயங்கவு முக்கட்
டந்தை யேவலா லாங்கவ னெற்றியந் தலத்தின்
வந்து தோன்றிநல் லருள்செய்து வானுணர் வளித்த
வைந்து மாறுமா முருத்திரர் தாமும்வந் தடைந்தார்.

(இ-ள்.) முற்காலத்திற் பிரமனானவன் சிருஷ்டித்தொழில் கைகூடாமல் மயக்கமடையவும், மூன்றுகண்களையுடைய சிவபெருமானது கட்டளையால் அவ்விடத் தில் அப்பிரமனது நெற்றியில்வந்து தோன்றிச் சிறந்ததிருவருள்புரிந்து நல்லறிவைக் கொடுத்தருளிய ஏகாதசருத்திரர்களும் வந்தடைந்தனர்.—எ-று.

ஏகாதசருத்திரர்க ளாவார், மாதேவன் - அரன் - உருத்திரன் - சங்கரன் - நீலலோகிதன் - ஈசானன் - விசயன் - வீமதேவன் - பவோற்பவன் - காபாலி - சௌமி யன் - என்பவர்கள். (கூ)

இத்தி றத்தரா முருத்திர ரல்லதை யேனை
மெத்து பல்புவ னங்களு மளித்தவண் மேவி
நித்த னன்புறு முருத்திர கணங்களு நெறிசேர்
புத்தி யட்டக முதல்வரும் வந்தனர் பொருப்பில்.

(இ-ள்.) இத்தன்மையராகிய உருத்திரர்களல்லாமல் மற்றை மிகுதியாகவுள்ள பல வுலகங்களைக் காத்து அவ்விடத்திற் பொருந்திச் சிவபெருமானது அருளைப் பெற்ற உருத்திரகணங்களும், முறைமையினையுடைய புத்தியவ்ஷ்டக முதல்வர்களும் அத்திருமலையில் வந்தார்கள்.—எ-று.

எல்லாப் புவனங்களையும் உருத்திரர்களே பரிபாலிக்கின்றவர்களாகலான், 'ஏனை-மெத்து பல்புவ னங்களு மளித்தவண் மேவி-நித்த னன்புறு முருத்திர கணங்களும்' என்று கூறினார். புத்திதத்துவத்திலுள்ள பைசாசம்-ராக்ஷசம்-யாக்ஷம்-காந்தருவம்-மாகேந்திரம்-சௌமியம்-பிராசேசுவரம்-பிராமம் என்னும் எட்டுச் சூக்கும புவனகளினது தலைவர்களாகிய அநந்தன் - சூக்ஷுமன் - சிவோத்தமன் - ஏகாக்ஷன் - ஏகருத்திரன்-திரிமூர்த்தி-ஸ்ரீகண்டன்-சிகண்டி என்னு முருத்திரர்களைக் குறிப்பிக்க, 'நெறிசேர் புத்தி யட்டக முதல்வரும் வந்தனர்' என்று கூறினார். மெத்துபல் புவனங்கள் என்றது இருநூற்றிருபத்துநான்கு புவனங்களை; அவை வருமாறு—அநாசிருதை - அநாதை-அநந்தை-வியோமரூபிநி-வியாபிநி-ஊர்த்துவகை-மோசிகை-ரோசிகை - தீபிகை-இந்திகை-சாந்தியாதீதை-சாந்தி-வித்தை-பிரதிஷ்டை-நிவிர்த்தி - சதாசிவை-சிகண்டி-ஸ்ரீகண்ட-திரிமூர்த்தி-ஏகருத்திர-ஏகநேத்திர - சிவோத்தம - சூக்ஷும - அநந்த - மனோன்மணி-சர்வபூததமனி-பலப்பிரமதனி-பெலவிகரணி-கலவிகரணி-காளி - ரௌத்திரி-ஜேஷ்டா-வாமை - அங்குஷ்ட - மாத்ரவீசான-ஏசேக்ஷண-ஏகபிங்கல-உத்பவ - பவ-வாமதேவ-மகத்யுசி-சிகேத ஏகவீர-பஞ்சாந்தக - சூர-பிங்க - ஜோதி - சம்வர்த்த - குரோத-ஏகசிவ-அநந்த-அஜ உமாபதி-பிரசண்ட-ஏகவீர - ஈசான - பவேச - உக்கிர - பீம-வாம-ஸ்ரீகண்ட-ஔம-கௌமார-வைஷ்ணவ-பிராம-பைரவ-கிருத-அகிருத-ப்ராஜேச-சௌமிய-ஐந்திர-காந்தர்வ-யக்ஷ-ராக்ஷச-பைசாச-ஸ்தலேஶ்வர - ஸ்தூலேஶ்வர-சங்குகன்ன-காலஞ்சர-மண்டலேசுவர-மாகோட-துவிரண்ட-சகலண்ட- ஸ்தாணு-சுவர்ணாக்ஷ-பத்திரகர்ண-கோகர்ண-மகாலய-அவிமுக்த-ருத்ரகோடி-வஸ்திரபாத- பீமேசுவர-மகேந்திர-அட்டகாச-விமலேச-நகல-நாகல-குருக்ஷேத்ர-கயா-பயிரவ-கேதார - மகாகாள-மத்தியமேச-ஆம்ராதக-ஜலபேச-ஸ்ரீசைல-அரிச்சந்திர-லகுளீச - பராபூதி-டிண்டி-முண்டி-ஆஷாட-புஷ்கர-நைமிச-பிரபாச-அமரேச - பத்ரகாளி - வீரபத்திர-த்ரிலோசன-விப்சு-நப-விவாஹ - சம்வாஹ-திரிதசேச-திரியக்ஷ-கணாத்யக்ஷ-விபு - சம்பு-தம்ஷ்ட்ரி-வஜ்ர-பணீந்திர-உதும்பரேச-கிரசன - ம்ருதாசன - குரோதன - அநந்த-விருஷதர - விருஷ - பலிப்பிரிய - பூதபால - ஜேஷ்ட - சர்வ - சுரேச - வேதபாரக - ஞானபுக்கு - சர்வஞ்ஞ - ஈச - வித்தியாதிப - பிரகாமத - பிரசாதக-ஸ்ரீத்ருக்-ரத்நருக்-லக்ஷுமித்ருக் - ஜடாதர - சௌமியதேக - தன்ய-ரூபவான்-நிதீச-மேகவாகன - கபர்த்தீ-பஞ்சசிக - பஞ்சாந்தக - க்ஷயாந்தக-தீக்ஷண-சூக்ஷும - வாயுவேக-லகு - சீக்கிர - சுநாத-மேகநாத-ஜலாந்தக - தீர்க்கபாகு - ஜெயபத்திர - சுவேத - மஹாபெல - பாசஹஸ்த - அதிபெல - பல - தம்ஷ்ட்ரி - லோகித - தூம்ரக - விரூபாக்ஷ - ஊர்த்துவ - சேம-பயாநக - குரூரதிருஷ்டி - ஹந்தரு - மாரண - நிருதி - தர்மபதி - தர்ம - வியோத்ரு - சம்யோத்ரு - கர்த்ரு - விதாத்ரு - தாத்ரு - ஹாமிருத்யு - யாமிய - க்ஷயாந்தக-பஸ்மாந்தக - பப்ரு - தகந - ஜ்வலன - ஹாகாதக - பிங்கள - சுதாசன - அக்நிருத்ர-த்ரிதசாதிப - பிநாகி - சாஸ்த்ரு - அவ்யய-விபூதி - பிரமரத்ன - வஜ்ரதேக - புத்த -

அஜ - காபாலீச - ரௌத்திர - வைஷ்ணவ - பிரம்ம - ஆடக - கூஷ்மாண்ட - காலாக்கினி என்பனவாம். (௧௦)

தொட்ட தெண்கடல் யாவையுந் துகளினுற் றூர்க்கு
மெட்டு நூறெனுங் கோடிபா ரிடத்தொகை யீண்டக்
கட்டு செஞ்சடைப் பவர்முத லாகவே கழறு
மட்ட மூர்த்திக ளாங்களு மொருங்குட னடைந்தார்.

(இ-ள்.) சகரர்களால் தோண்டப்பட்ட தெள்ளிய கடல்களனைத்தையும் (தங்கள்பாத) தூளிகளினுல் தூர்க்கின்ற எண்ணூறுகோடி பூதகணங்கள் நெருங்கிச் சூழ்ந்துவர, கட்டப்பட்ட சிவந்த சடைமுடியையுடைய பவர்முதலாகச் சொல்லப்பட்ட அஷ்டமூர்த்திகளும் ஒருமிக்க உடனே வந்தார்கள்.—எ-று.

அஷ்டமூர்த்திகளாவார் - பவர் - சருவர் - ஈசானர் - பசுபதி - பீமர் - மகாதேவர் - உக்கிரர் - உருத்திரர், என்பவர்களாம். இவர்களும் உருத்திரர்களாதலால் உருத்திர வரிசையிலமைத்துக்கூறினுர். இதனை—"எய்து நாமமென் னெனிற் பவன் சருவனீசானன் - வைதிகந்தரு பசுபதி பீமன்மாதேவ - னெய்திளம்பிறை யுக்கிர னுருத்திர னென்ப - மைதிகழ்ந்தொளிர் கண்டனெண் வடிவமும் வகுப்பாம்" என்னுங் கூர்மபுராணத்தா னறிக. (௧௧)

ஏறு கொண்டிடு தெழிப்பின ரெம்பிரான் விழிநீர்
நாறு கொண்டுள கலத்தொடு பொடிபுனை நலத்தோர்
நூறு கொண்டிடு கோடிபூ தத்தொடு நொடிப்பின்
வீறு கொண்டகுண் டோதரன் போந்தனன் வெற்பில்

(இ-ள்.) உயர்ந்த கர்ச்சனையை யுடையவர்களும், எமது சிவபெருமானுடைய கண்ணீராயே நாற்றுகக்கொண்டுள்ள ருத்திராக்ஷத்துடன் திருவெண்ணீற்றை யணிந்த நன்மையை யுடையவர்களுமாகிய நூறுகோடி பூதங்களுடன் விரைவாகப் பராக்கிரமம் பொருந்திய குண்டோதரர் திருக்கயிலைமலைக்கு வந்தனர்.—எ-று.

'ஏறுகொண்டிடுதெழிப்பினர்' என்பதற்கு, ஆண்சிங்கம்போலுங் கர்ச்சனையை யுடையவர்கள் எனப் பொருள் கூறினுமாம்.

இதுகாறும் உருத்திரகணங்களின் வருகையை முறையே கூறிப் பின்பு கணத்தலைவர்களின் வருகையைக் கூறுவான் புகுந்தவர், அக்கணத் தலைவர்களுள் குண்டோதரர் மிகச்சிறந்தவரும், சிவபெருமான்முன்பு சங்கீதம்பாடல்-குடைபிடித்தல்-அவ்வெம்பெருமா னிடபத்தெழுந்தருளும்பொழுது முதுகு வளைந்து கொடுத்தல் முதலிய திருத்தொண்டு செய்தலில் அணுக்கருமாதலானும், அடிக்கடி ஸ்ரீகண்டபரமேசுரரது ஸ்ரீபாதப்பரிசமுடையவராதலானும் அவரது வருகையை முதற்கண்வைத்து அவரது மேன்மைதோன்ற, 'வீறுகொண்ட குண்டோதரன்' என்று கூறினுர். இதனை—" பாட்டின்பொரு ளாயவன் பாரிட வீரன்பாடல் - கேட்டின்ப மெய்திக் கணங்கட்குக் கிழமைநல்கி - மோட்டின் புனன்மண்முறைசெய்திருந் தானளகக் - காட்டின் புறம்போய் மடங்குங்கயற் கண்ணியோடும்" எனவும், "குடையெ டுக்குமிக் குறியதாட் குறட்கொரு பிடிசோ-றிடுமெ னப்புறஞ் சோறுமா லெனத்தொழு தெல்லா - முடைய நாயகி போயினுள் குறியனு முடனே-நடைத ளர்ந்துகண் புகைந்துவாய் புலர்ந்திட நடந்தான்" எனவும் " செங்கண் மாலய னிந்திரன் முதற்பெருந் தேவர்க்கும் யாவர்க்கு-மங்க லந்தரு கடைக்கணு யகனெரு மங்கலம் புனைந்தான்போல்-சங்கை கொண்டெகும் போதரன் முதுகின்மேல் சரணம்வைத் தெதிர்போந்த - துங்க மால்விடை மேற்கொடு நடந்தனன் சுரர்கள்பூ மழைதூர்த்தார்" எனவும் வருந் திரு

விளையாடற்புராணத்தானும், "பொற்குள் - வன்மைபெற்ற குண்டோதரன் மொய்ம் பிடைவைத்துச் - சின்மயத்தனி மால்விடையேறினன் சிவனே" என மேல்வருமாற் றானுமறிக. (கஉ)

அண்டம் யாவையு முயிர்த்தொகை யனைத்தையு மழித்துப்
பண்டு போலவே தந்திட வல்லதோர் பரிசு
கொண்ட சாரதர் நூற்றிரு கோடியோர் குழுமக்
கண்ட கன்னனும் பிஞுகியும் வந்தனர் கயிலை.

(இ-ள்.) சகல அண்டங்களையும் அவற்றிலுள்ள உயிர்க்கூட்டங்க ளனைத் தையும் அழித்து முன்போலவே செய்யத்தக்க தன்மையையுடைய இருநூறுகோடி பூதங்கள் சூழ்ந்துவர, கண்டாகன்னரும் பிஞுகியுமாகிய இருவரும் திருக்கயிலாயத்தி ற்குவந்தார்கள்.—எ-று.

பூதகணங்கள் உலகங்களனைத்தையு மழித்துப் படைக்குமாற்றல் பெற்று ள்ளதென்பார், 'ஓர்பரிசுகொண்ட சாரதர்' என்று கூறினர். இதனை—"நீடு தேவர் நிலைகளும் வேண்டிடி - லூடு மைம்பெரும் பூதமு நாட்டுவ - கோடிகோடி குறட்சிறு பூதங்கள்-பாடி யாடும் பரப்பது பாங்கெலாம்" என்னுந் திருத்தொண்டர்புராணத்தா னறிக. 'நூற்றிருகோடி' என்பதற்கு நூற்றிரண்டுகோடி யெனினுமாம். (கரு)

ஆன னங்களோ ராயிர மிராயிர மங்கை
மேனி வந்தபொன் மால்வரை புரைநிற மேவித்
தானை வீரர்நூற் றைம்பது கோடியோர் சாரப்
பானு கம்பனுந் தலைவனெண் கயிலையிற் படர்ந்தான்.

(இ-ள்.) ஆயிரம் முகங்களும் இரண்டாயிரங் கைகளும், மேலோங்கிய பெ ரிய மேருமலையை யொத்த நிறத்தையுமடைந்து, நூற்றைம்பதுகோடி சேனைவீரர்கள் நெருங்கிவரப் பானுகம்பரென்னுஞ் சிவகணத்தலைவரும் ஒளிபொருந்திய திருக்கயி லைக்கு வந்தனர்.—எ-று. (கசு)

தங்கள் சீர்த்தியே மதித்திடு கடவுளர் தலையும்
பங்கி யாகிய கேசமும் படைகளும் பறித்துத்
துங்க மெய்திய கணங்கள்பல் கோடியோர் சூழச்
சங்கு கன்னன்வந் திறுத்தனன் றடவரை தன்னில்.

(இ-ள்.) தங்கள் கீர்த்திகளையே (பெரிதாகப்) புகழ்ந்துபேசுகின்ற தேவர் களது தலைகளையும் புறமயிராகிய சிகையையும், ஆயுதங்களையும் பிடுங்கி, அதனால் உயர்வடைந்திருக்கின்ற பலகோடி கணங்கள் சூழ்ந்துவரப் பெரிய திருக்கயிலைமலை யில் சங்குகன்னர் வந்து சேர்ந்தனர்.—எ-று.

சிவகணநாதர்கள் தற்புகழ்ச்சியையுடைய தேவர்களது சிரங்களையுஞ் சிகை களையு மறுத்துத் தண்டித்து நல்வழிப்படுத்துவோராதலால், 'தங்கள் சீர்த்தியே மதி த்திடு கடவுளர் தலையும் - பங்கி யாகிய கேசமும் படைகளும் பறித்துத் - துங்க மெய் திய கணங்கள்' என்றார். (கஎ)

காள கண்டனுந் தண்டியு நீலனுங் கரனும்
வாள்வ யம்பெறு விச்சுவ மாலியு மற்று
மாளி மொய்ம்பின ராயபல் பூதரு மனந்த
நீளி ருங்கடற் றானையோ டணைந்தனர் நெறியால்.

(இ-ள்.) காளகண்டனும், தண்டியும், நீலனும், கரனும், வாட்போரில் வெ ற்றிபெற்றுள்ள விச்சுவமாலியும், பின்னும் யாளிபோன்ற வல்லமையுடையவர்களா

கிய பல பூதர்களும் அனேக மிகப்பெரிய சேனுசமுத்திரத்துடன் முறைப்படி வந்தார்கள்.—எ-று.

காளகண்டன் முதலிய கணங்கள் அநந்த பூத சைனியங்களோடு வரினும், மரியாதையோடு வந்தனரென்பதைக் குறிப்பிப்பார், 'அணைந்தனர் நெறியால்' என்று கூறினர். (கசு)

கூற்றின் மொய்ம்பினைக் கடந்திடு சாரதக் குழுவோர்
நூற்று முப்பது கோடியோர் சூழ்ந்திட நொய்தின்
மாற்ற லார்புர மட்டவன் றாளிணை வழிபட்
டேற்ற மிக்கவீ சானனக் கயிலையி லிறுத்தான்.

(இ-ள்.) இயமனுடைய வல்லமையைச் செயித்தவர்களாகிய பூதகணங்கள் நூற்றுமுப்பதுகோடியர்கள் சூழ்ந்துவர, விரைவாகச் சத்துருக்களது முப்புரங்களையு யழித்தருளிய திருவடிகளைத் தொழுது மிக்க மேன்மையையடைந்த ஈசானரும் அத்திருக்கயிலைமலையில்வந்து சேர்ந்தனர்.—எ-று.

அஷ்டதிக்குப்பாலகருட் சிறந்தவரும், சிவசாரூபியுமாதலால், 'ஏற்ற மிக்க வீசானன்' என்று கூறினர். (சஎ)

எகின மாகிய மாலயன் வாசவ னிமையோர்
புகலு மாதிரங் காவலர் கதிர்மதி புறக்கோண்
மிகைய தாரகை யன்னைகள் வசுக்கள்வே றுள்ளார்
மகிழும் விஞ்சையர் முனிவரர் யாவரும் வந்தார்.

(இ-ள்.) அன்னவடிவங்கொண்ட திருமாலும், பிரமனும்,இந்திரனும், தேவர்களும், புகழ்ந்துகூறுந் திக்குப்பாலகர்களும், சூரியசந்திரர்களும், மற்றைக் கிரகங்களும், மிகுதியாகிய நக்ஷத்திரங்களும், சப்தமாதாக்களும் அஷ்டவசுக்களும் மற்றுள்ளவர்களும், மகிழ்வினையுடைய வித்தியாதரர்களும், முனிசிரேஷ்டர்களுமாகிய அனைவரும் வந்தார்கள்.—எ-று.

வேதங்களைச் சிவபெருமானது திருவருளால் பலர் பலமுறைகளில் விளக்கினர்; அவர்களைப்போலத் திருமாலு மொருகாலத்தில் வேதங்களை வெளிப்படுத்தற் பொருட்டு அன்னப்பறவை யுருவெய்தின னென்பார், 'எகின மாகிய மால்' என்று கூறினர். 'மிகையதாரகை' என்றது, அசுவினி முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்களை; தூமாதிகிரகங்க ளெனினுமாம். அன்னைகளாவார், பிராமி - மகேசுவரி - கௌமாரி - வைஷ்ணவி - வராகி - இந்திராணி - சாமுண்டி என்பவர்கள். வசுக்கள் என்றது அஷ்டவசுக்களை; இவர்கள், அனலன் - அனிலன் - ஆபச்சைவன் - சோமன் - தரன் - துருவன் - பிரத்தியூசன் - பிரபாசன் என்பவர்கள். (சஅ)

வாலி தாகிய மறைகளா கமங்கண்மந் திரங்கண்
ஞால மாதிய பூதங்க ளுலகங்க ணகர்கள்
கால மானவை யேனைய பொருளெலாங் கடவுட்
கோல மெய்திவந் திறுத்தன கயிலையிற் குறுகி.

(இ-ள்.) தூய்மையாகிய வேதங்களும், ஆகமங்களும், மந்திரங்களும், பிருதிவி முதலிய பூதங்களும், உலகங்களும், நகரங்களும், காலங்களும், மற்றுள்ள எல்லாப்பொருள்களும் தேவரூபங்கொண்டு திருக்கயிலாயத்திருமலையில் சேர்ந்துவந்திருந்தன.—எ-று.

ஆன்மாக்களை நல்வழிப்படுத்தி இரக்ஷிக்கும்பொருட்டே கடவுள் நின்மலமான வேதத்தை யருளிச்செய்தமையாலும், அவ்வேதம் முற்றிலுஞ் சிவபெருமானது புக

ழையே உண்மையாக உரைப்பதனாலும் 'வாலிதாகிய மறைகள்' என்றார்; அவை - இருக்கு - எசுர் - சாமம் - அதர்வண மென்பன. ஆகமங்கள், காமிகம் - யோகசம் - சிந்தியம் - காரணம்-அசிதம் - தீப்தம் - சூக்குமம் - சகச்சிரம் - அஞ்சுமான் - சுப்பிர பேதம் - விசயம் - நிச்சுவாசம்-சுவாயம்புவம் - அனலம் - வீரம் - ரௌரவம்-மகுடம்-விமலம் - சந்திரஞானம் - முகவிம்பம்-புரோற்கீதம்-இலளிதம் - சித்தம் - சந்தானம்-சர்வோக்தம்- பாரமேசுவரம் -கிரணம்-வாதுளம் என்னும் இருபத்தெட்டுமாம்-ஆகமம் என்பதில், ஆ - என்பது ஞானம், க-என்பது மோக்ஷம், ம - என்பது மலநாசம் என்னும் பொருள்மேனிற்றலால் ஆன்மாக்களது மலத்தை நாசஞ்செய்து ஞானத்தையுதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுக்கு நூல் எனவும், ஆ - என்பது பாசம், க - என்பது ஆன்மா, ம - என்பது சிவம் என்னும் பொருள் மேனிற்றலால் திரிபதார்த்த நிச்சயமுணர்த்தும் நூல் எனவும் பொருள்படுமாறு காண்க. மந்திரங்களென்பன - சுவாஹா - படு - வபுஷட் - உம்பட் - நம - எகி - உம் முதலிய பல்லவங்களையுடைய சப்தகோடி மஹா மந்திரங்களேயாம். ஞாலமாதிய பூதங்களென்றது, அவற்றினதி தெய்வங்களை. உலகங்கள் - நகர்கள் என்றதுமவ்வாறே. (கக)

இந்த வாற்றினாற் கயிலையில் யாவரும் யாவும்
வந்த தன்மையை நோக்கியே யாற்றவு மகிழ்ந்து
நந்தி யுள்புகுந் தமலனுக் கித்திற நவில
முந்தை யன்னவர் யாரையுந் தருகென மொழிந்தான்.

(இ-ள்.) இவ்வாறாகத் திருக்கயிலாயத்தில் யாவர்களும் யாவையும் வந்தடைந்த தன்மையைப் பார்த்தருளி மிகவு மகிழ்வடைந்து திருநந்திதேவர் உள்ளே புகுந்து சிவபெருமானுக்கு இவர்கள் வந்த தன்மையை விண்ணப்பஞ் செய்ய, முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் அவர்களனைவரையு மிங்கழைத்துவருவாயாகவென்று கட்டளையிட்டருளினார்.—எ-று.

உயர்திணை யஃறிணை யென்னும் இருபகுதியும் வந்தமையால், 'யாவரும் யாவும்' என்றுகூறினார். (உ0)

புராரி யித்திற மொழிதலுஞ் சிலாதனார் புதல்வ
னோய்மு தற்கடை குறுகியே யுருத்திர கணங்கள்
முராரி யாதியாம் விண்ணவர் முனிவரொல் லோரும்
விராவு நீர்மையிற் சென்றிடக் கோயிலுள் விடுத்தான்,

(இ-ள்.) திரிபுரதகனராகிய சிவபெருமான் இவ்வாறு அருளிச்செய்யவும், சிலாதமுனிவர் புத்திரராகிய திருநந்திதேவர் அவ்விடத்தினின்று நீங்கி முதற்றிருவாயிலையடைந்து, உருத்திரகணங்களையும், திருமால்முதலிய தேவர்களையும், முனிவர்முதலிய அனைவரையும், (ஒருவர்பின்னொருவராகத்) தொடர்ந்துசெல்லும் வண்ணந் திருக்கோயிலினுள்ளே விட்டருளினார்.—எ-று.

சிலாதனார்-சிலையை அதஞ்செய்தவரென்னுங் காரணத்தினால் வந்தபெயர். சிலை - மலை. அதம் - அழிவு. இதன்வரலாறு - முன்பொருகாலத்தில், திருமறைக்காடென்னுந் திருப்பதியில் வேதியர் குலத்தில் ஒரு சற்புத்திரர் அவதரித்து ஐந்துவயதாக வளர்ந்துவருங் காலத்தில், தம் வீட்டிற்கு ஒரு அந்தணர் அன்னபிக்ஷைக்குவந்தனர். அப்பொழுது இவர் அறியாத்தன்மையால், அவ்வேதியருடைய பிக்ஷான்னத்தில் ஒரு சிறு கல்லைப்போட்டனர். அவர் அதனை யுணராமல் பிக்ஷையேற்றுச்சென்று அந்தச் சிறு கல்லுடன் அவ்வன்னத்தை யுண்டு விட்டனர். பின்னர், இவர் தக்கவயதளவு வளர்ந்து சாஸ்திரவாராய்ச்சி செய்து, பெருந்தவமியற்றி அதுகாரணத்தால்

கோரதபசியென்னும் பெயர்பெற்று, அஷ்டமாசித்திகளிலும் வல்லவராய், அவற்றின் வல்லமையால் இயமபுரத்தைப்பார்க்க விருப்புற்றுச்சென்று அங்குள்ள பல தண்டனைகளையும் பார்த்துவருகையில் அங்கோர் பெரிய மலைக்கல்லிருக்கக்கண்டு அங்குள்ள தண்டத்தலைவர்களைநோக்கி இப்பெரும் பாறையின் வரலாறென்னையென்று வினவ அவர்கள் ஐயரோ ! உலகத்தில் கோரதபசியென்னுமொரு மகாபாபியானவன் பிக்ஷையேற்கவந்த ஒரு அந்தணன் அன்னத்திற் கல்லையெறிந்தனன். அதனையறியாத அவ்வந்தணன் அதனைப் புசித்தனன். அக்கல்லே இங்குப்பெருமலையாக வளர்ந்து வருகின்றது. அக்கோரதபசி, பின் இறந்து இங்கடைந்தபின்பு இதனை யுண்ணும்படி நேரிடும் என்றுகூற, அதனைக்கேட்ட அந்தக் கோரதவசி தாம் இளமைப்பருவத்தி லறியாமையாற்செய்த அத்தீச்செய்கையை நினைத்து அவ்வாபத்தினின்று நீங்கக்கருதி அவர்களைநோக்கி, இச்செய்கை செய்தவன் இதினின்றுந் தப்பித்துக்கொள்ளு முறைமையுளதோவென்று வினவ, அவர்கள் அவன் இவ்வளவினதாகிய ஒரு மலையைப் பூமியிலே கரைத்து உண்பானாயின், இஃது கரைந்துவிடுமென்றனர். உடனே அவர் பல வேடிக்கைகளைப்பார்த்துப் பின்பு உலகத்தில் தமது ஊரையடைந்து ஒரு பெருமலையை குறிப்பிட்டு வைத்துக்கொண்டு நாளாவர்த்தியில் அதனை யிடித்துப் பொடியாக்கி நீரிற்கரைத்து உண்டு அம்மலையை யழித்தனர். அதனால், இயமபுரத்தில் இவர்க்காக வளர்ந்திருந்த அம்மலையுங் கரைந்தொழிந்தது, இது காரணத்தால் இவருக்குச் சிலாதர் என்னும் பெயராயிற்று என்பதாம். சிலாதனுர் என்பது விகுதிமேல் விகுதி பெற்றது. சிலாதரர் என்பதும் நூல் வழக்கு. திருநந்திதேவர் இம்முனிவருக்குப் புத்திரராய் யாகசாலையிற் கொழுமுனை மூலமாகப் பொற்பெட்டியி னின்றும் வெளிப்பட்டமையால், 'சிலாதனுர் புதல்வன்' என்று கூறினுர். இதனை—"அன்னநன் மகவு தந்தனமென்ன வைம்முகக் கடவுளாண் டகலப்-பன்னருஞ் சிறப்பிற் சிலாதனுண் மகிழ்ந்து பழிப்பறு மகமினி தியற்றிக்-கொன்னுனிக் கொழுவாய் நடந்தநீள் சாலிற் குருகுபேர்க் குன்றற வெறிந்த-பொன்னெயிற் கரத்த முருகுறழ் சாயற் புதல்வனல் லெழிலொடு முதித்தான்" என்னுங் கூர்மபுராணத்தா னறிக. திருநந்திதேவர் சிலாதமுனிவருக்குப் புத்திரராகத் தோன்றிய முறைமையால் சைலாதி என்னும் பெயர் பெற்றனரென்க. திருமால் நரகாசுரனது மந்திரியாகிய முரனென்னு மசுரனைக் கொன்றவராகலின் 'முராரி' என்றுர். சிவசந்நிதியில் அவரவர்க ளுயர்வுதாழ்வுக்குத் தக்கவாறு கிரமப்படி சென்று சேவிக்க வேண்டுவது முறைமையாதலால், 'திருநந்திதேவர்முன்னர் உருத்திரர்களையும், பின்னர் சிவகணங்களையும், அதன் பின்னர் மாலயனுதியரையும் உள்ளே விட்டனரென்பார் 'உருத்திரகணங்கள்-முராரியாதியாம் விண்ணவர் முனிவரொல்லோரும் - விராவு நீர்மையிற் சென்றிடக் கோயிலுள் விடுத்தான்' என்று கூறினுர். (உக)

விடுத்த காலையி லரியணை மீமிசை விளங்கிக்
கடுத்த யங்கிய கண்டன்வீற் றிருப்பது காணூஉ
வடுத்த வன்புடன் யாவரு மிறைஞ்சியே யவன்சீ
ரொடுத்து நீடநின் றேத்தியே யணுகின ரிமைப்பில்.

(இ-ள்.) அவ்வாறு உள்ளேவிட்டருளியபொழுது, சிங்காசனத்தினுச்சியில் காளகண்டராகிய சிவபெருமான் விளக்கமுற்றெழுந்தருளி யிருத்தலைப் பார்த்து நெருங்கிய பேரன்போடு யாவரும் வணங்கி அவ்வெம்பெருமானது புகழையெடுத்து, தூரத்தில்நின்று துதித்துக்கொண்டு விரைவில் சமீபத்திற் சென்றுர்கள்.—எ-று.

சிவபெருமானது நித்தியத்துவத்தையும் மற்றையர்களது அநித்தியத்துவத்தையும் விளக்க, 'கடுத்தயங்கிய கண்டன் வீற்றிருப்பது காணூஉ' என்றுர். (உஉ)

நீண்ட சீருருத் திரர்தமை நிறைந்தபல் கணத்தை
யீண்டு தேவரை முனிவரை வீற்றுவீற் றிசையா
வாண்டு தன்விரற் சுட்டியே யாதிநா யகற்குக்
காண்டல் செய்துநின் றேத்தினன் வேத்திரக் கரத்தோன்.

(இ-ள்.) மிக்க சிறப்பினையுடைய உருத்திரர்களையும், அங்கு நிறைந்துள்ள பல சிவகணங்களையும், நெருங்கியதேவர்களையும், முனிவர்களையும் வெவ்வேறாக எடுத்துக்கூறி, அங்குத் தமது திருவிரலைக்கொண்டு சுட்டி முதல்வனாகிய சிவபெருமானுக்குக்காண்பித்துப் பொற்பிரம்பினையேந்திய திருக்கரத்தினையுடைய திருநந்திதேவர் நின்று துதித்தனர்.—எ-று.

திருநந்திதேவர் சிவபெருமானது சந்நிதியில் வந்து சேவித்து நிற்பவர்களை முறைப்படி காட்டினரென்பார், 'நீண்ட சீருருத் திரர்தமை நிறைந்தபல் கணத்தை-யீண்டு தேவரை முனிவரை வீற்று வீற்றிசையா' என்று கூறினர். (உரு)

ஆர முற்பெய ரண்ணல்கூர் மாண்டனு டகத்தோன்
வீர பத்திரன் முதலுருத் திரகண மேத்தப்
பாரி டத்தவர் யாவரு மெம்பிரான் பாங்கிற்
சேர லுற்றுநின் றேத்தினர் பணிந்தசிந் தையராய்.

(இ-ள்.) காலாக்கினியுருத்திரர், கூஷ்மாண்டர், ஆடகேசர், வீரபத்திரர் முதலிய உருத்திரகணங்கள் துதிக்க, பூதகணங்களனைவரும் எமது சிவபெருமானருகில் நெருங்கிநின்று பணிந்த சிந்தனையுடையவர்களாய்த் துதித்தார்கள்.—எ-று.

சிவகணநாதர்கள் சிவபோத மொழிந்தவர்களாகலின், 'ஏத்தினர் பணிந்த சிந்தையராய்' என்றார். (உசு)

அன்ன காலையி னுன்முக னெம்பிரா னணிவா
னுன்னி யேமுடி முதலிய பல்கல னுதவிப்
பொன்னி னுயதோர் பீடிகை யிற்கொடு போந்து
முன்ன ராகவைத் திறைஞ்சியே யித்திற மொழிவான்.

(இ-ள்.) அப்பொழுது பிரமதேவன் எமது சிவபெருமானணிந்துகொள்ள வேண்டுமென்றுசிந்தித்து மகுடமுதலிய பல ஆபரணங்களைச்செய்து பொன்னினாற் செய்யப்பட்ட ஓர் பீடத்தின்மீது வைத்தெடுத்துக்கொண்டுவந்து திருமுன்னேவைத்து வணங்கி, இவ்வாறு கூறுகின்றனன்.—எ-று. (உரு)

ஐய கேளுனக் கில்லையாற் பற்றிக லடியே
முய்யு மாறிவண் மணஞ்செய வுன்னினை யுன்பான்
மையல் மாசுணப் பணியெலா மாற்றிமற் றிந்தச்
செய்ய பேரணி யணிந்தரு ளென்று செப்பினனே.

(இ-ள்.) ஆண்டவரே! தேவரீருக்கு விருப்பு வெறுப்புக்கிடையாது; (அவ்வாறாயினும்) அடியேங்க ளுய்யும் வண்ணம் இங்குத் திருமணம் புரிந்தருளுவதற்குத் திருவுள்ளங்கொண்டருளினீர், (ஆதலால்) தேவரீரது திருமேனியிலணிந் துள்ள மயக்கத்தைத்தருகின்ற சர்ப்பாபரணங்களையெல்லாம் நீக்கி, இந்தப்பெரிய செவ்விய ஆபரணங்களை யணிந்துகொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்தனன்.—எ-று. (உகூ)

பங்க யாசனன் குறையிரந் தினையன பகர
வங்கண் மூரல்செய் தன்புட னீயளித் திடலா
லிங்கு நாமிவை யணிந்தென மகிழ்ந்தன மென்னுச்
செங்கை யாலணி கலத்தினைத் தொட்டருள் செய்தான்.

(இ-ள்.) கமலாசனனாகிய பிரமதேவன் மிகவும் வேண்டி யிவ்வாறுகூறுதலும், (சிவபெருமான்) அவ்விடத்துப்புன்னகைகொண்டு நீ அன்போடு கொடுத்தமையால் நாம் இவற்றை தரித்துக்கொண்டாற்போல மகிழ்வடைந்தோமென்று கூறியருளிச், செவ்விய திருக்கரங்களால் அழகிய அவ்வாபரணங்களைத் தொட்டருளினார். ()

பிரம னன்புகண் டிவ்வகை யருள்செய்த பின்ன
ரொருதன் மெய்யணி பணிகளே யணிகளா யுறுவான்
றிருவு ளங்கொள வவ்வகை யாகிய செகத்தை
யருள்பு ரிந்திடு பராபரற் கிச்செய லரிதோ.

(இ-ள்.) பிரமனது அன்பைநோக்கி இவ்வாறு திருவருள் செய்தபின்பு ஒப்பற்ற தமது திருமேனியிலணிந்துள்ள சர்ப்பங்களே ஆபரணங்களாக விளங்கும்படி திருவுள்ளத்திற் சிந்தித்தருளவும் அவ்வாறேயாயின; உலகத்தைப்படைத்துக் காத்தழிக்கின்ற பரம்பொருளாகிய சிவபெருமானுக்கு இச்செய்கை ஓ ரருமையோ?

கண்டி யாவரு மற்புத மடைந்துகை தொழலும்
வண்டு லாங்குழற் கவுரிபா லேகுவான் மனத்திற்
கொண்டு பாங்குறை தலைவருக் குணர்த்தியே குறிப்பாற்
பண்டு மாலயற் கரியவ னெழுந்தனன் படர.

(இ-ள்.) யாவரும் அதனைப்பார்த்து அற்புதமடைந்து கைகூப்பிவணங்கவும் வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய உமாதேவியாரிடத்திற்குச் செல்லும்பொருட்டுத் திருவுள்ளங்கொண்டு அருகிலிருந்த தலைவர்களுக்குக் குறிப்பினாலுணர்த்தி, முற்காலத்தில் பிரம விஷ்ணுக்களுக் கரியவராகிய சிவபெருமான் செல்லும்படிக்கு எழுந்தருளினார்.—எ-று.

கௌரி - கௌரவண்ண முடையவள். அல்லது, கிரிராஜபுத்திரி எனினுமாம். கௌரம் - பொன்போன்றவண்ணம். (உகூ)

கணங்கள்செல்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எ௰௪.

---

உ

முருகன்றுணை.

---

# திருக்கல்யாணப்படலம்.

நாற்ற டம்புயக் கண்ணுத னந்தியம் பெருமான்
போற்றி முன்செல வமரரு முனிவரும் புகழ
வேற்ற தும்புரு நாரதர் விஞ்சையர் யாரும்
பாற்றி யக்கமு நீழலு மாமெனப் பாட.

(இ-ள்.) விசாலமாகிய நான்கு திருத்தோள்களையுடைய நெற்றிக்கண்ணராகிய நந்தியெம்பெருமான் துதித்துக்கொண்டு முன்னேசெல்லவும், தேவர்களும் முனிவர்களும் புகழவும், தகுதியாகிய தும்புரு நாரதர் வித்தியாதரர் முதலிய அனைவரும் பருந்தின் இயக்கமும் நீழலு மொக்குமென்று சொல்லும்படி பாடவும்.—எ-று.

தும்புருநாரதர் வித்தியாதரர் முதலியவர்கள் நரப்புக்கருவியாகிய யாழின் சுதியோடு தங்கள் மிடற்றோசையை யமைத்துப் பாடுகின்றவர்களாகலானும், இசைக்

குச் சுதி தாயாகலாலும் அச்சுதி இல்லாவிடத்து இசைநயந்தராவாகலானும் சுதியோடு பாடினுறொன்பதைக் குறிப்பிக்க, 'பாற்றியக்கமும் நீழலுமாமெனப் பாட' என்று கூறினுர். "பருந்தொடு நிழல் சென்றன்ன வியலிசைப்பயன் றுய்ப்பாரும்" என்றுர் பிறரும்.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (க)

சொன்ம றைத்தொகை யாகம முதலிய துதிப்பப்
பொன்மை பெற்றதன் கோநகர் நீங்கியே பொற்றுள்
வன்மை பெற்றகுண் டோதரன் மொய்ம்பிடை வைத்துச்
சின்ம யத்தனி மால்விடை யேறினன் சிவனே.

(இ-ள்.) புகழப்பட்ட நான்குவேதங்களும் இருபத்தெட்டுச் சிவாகமமுதலியவைகளுந் துதிக்கும்படி பொன்மயமாகிய தமது திருக்கோயிலினின்று நீங்கி அழகிய திருவடிகளை வலிமைபொருந்திய குண்டோதரனது தோளில்வைத்து,மெய்ஞ்ஞாணவடிவமாகிய ஒப்பற்ற பெரியஇடபத்தின்மீதுசிவபெருமானெழுந்தருளினர்.-எ-று.

தருமம் தேஜோரூபமாக விளங்குவதாகலான், சின்மயத்தனிமால்விடை' என்று கூறினுர். (உ)

விடையின் மீமிசைத் தோன்றியே யெம்பிரான் விளங்கப்
புடையின் வந்தவ ரல்லது திருநகர்ப் புறத்துக்
கடையி னின்றவர் யாவருங் கண்டுகண் களியா
வடைய வேபணிந் தேத்தின ரளக்கரி ணுர்த்தார்.

(இ-ள்.) இடபவாகனத்தின்மீதெழுந்தருளி எமது சிவபெருமான் காட்சி கொடுத்தருளவும், அதனைத்தம்மருகில்வந்தவர்களேயன்றி அழகிய அந்நகரத்தின் வெளியில் தூரத்தில்நின்றவர்களனைவருந் தரிசித்துக் கண்களிப்படைந்து ஒருமிக்கவணங்கித் துதித்துக் கடல்போல ஆரவாரித்தார்கள்.—எ-று.

சிவபெருமானைத் திருக்கோயிலுட் சென்று தரிசித்தவர்களன்றி எஞ்சிநின்ற மற்றையர்கள் தங்களுக்குச் சிவதெரிசனங் கிட்டுமோ? கிட்டாதோ வென்று மனத்திற்கொண்டிருந்த கவற்றி நீங்க, இடபவாகனத்துக் காட்சி கொடுத்தமையால் தங்கள் மனக்குறைநீங்கத் தரிசித்துப் பெருங்களிகூர்ந்தன ரொன்பார், 'அளக்கரிணுர்த்தார்' என்றுர். (ரு)

நந்தி மேல்கொண்டு நந்திமே வுறுதலு நந்தித்
தந்தி மாமுகத் தவுணர்கோ னலமரத் தடிந்தோ
னைந்து நூற்றெழு கோடிபூ தப்படை யணுக
வந்து வந்தனை செய்துமுன் போயினன் மாதோ.

(இ-ள்.) சிவபெருமான் இடபவாகனத்தின் மீதெழுந்தருளிவரவும், கஜமுகாசுரன் தனது வலிகுன்றி மயங்கும்படி கொன்றருளிய விநாயகக்கடவுள் ஐந்நூற்றேழுகோடி பூதப்படைகள் நெருங்கும்படி எதிர்கொண்டு வந்துவணங்கி முன்னே சென்றருளினுர்.—எ-று.

நந்தி - இடபம் - சிவபெருமான். (சா)

கதிருஞ் சோமனுங் கவிகையுஞ் சீகரங் காலு
முததி யண்ணல்சாந் தாற்றியு மும்பர்தங் கோமான்
புதிய கால்செயும் வட்டமு மெடுத்தனர் புடைபோய்
முதிரு மார்வமோ டப்பணி புரிந்தனர் முறையால்.

(இ-ள்.) சூரிய சந்திரர்கள் குடையும், அலைகளை வீசுகின்ற சமுத்திரராஜனாகிய வருணன் விசிறியும், தேவேந்திரன் புதிய காற்றைத்தருகின்ற ஆலவட்டமுமெடுத்தவர்களாய்ப் பக்கத்திற்சென்று மிகுந்த அன்புடன் முறைப்படி அந்தப்பணிவிடைகளைச் செய்தார்கள்.—எ-று.

கதிர் - ஆகுபெயர். குடைபிடித்தல், ஆலவட்டம் வீசுதல் முதலிய ஊழியங்கள் ஒருவருக்கொருவர் செய்யுமிடத்து அதிகார முறைமையாற் செய்யினும் அழுக்காறுடன்செய்வர்; ஈண்டுச் சிவபெருமானுக்கு இத்திருப்பணியைச் செய்யத்தொடங்கிய வித்தேவர்கள் அங்ஙனமின்றிப் பேரன்புடன் செய்தனர்களென்பது தோன்ற, 'முதிருமார்வமோடப்பணிபுரிந்தனர் முறையால்' என்று கூறினர். (ரு)

பேரி கொக்கரை சல்லிகை கரடிகை பீலி
சாரி கைத்துடி தண்ணுமை குடமுழாத் தடாரி
போரி யற்படு காகளம் வயிர்முதற் புகலுஞ்
சீரி யத்தொகை யியம்பினர் பாரிடத் திறலோர்.

(இ-ள்.) பேரிகை - வலம்புரிச்சங்கு - சல்லரி - கரடிகை - பீலி - சாரிகை - உடுக்கை - மத்தளம்-குடமுழா - தடாரி - போரினிடத்திற் பொருந்திய எக்காளம், முதலாகச் சொல்லப்பட்ட சிறந்த வாத்தியத்தொகைக ளனைத்தையும் பூதவீரர்கள் வாசித்தார்கள்.—எ-று.

சிவபெருமான் திருமணக்கோலங்கொண் டெழுந்தருளுகின்றவ ராகலால், யாவரும் மங்கலவாத்தியங்களையே முழக்கினார்களென்பதை யுணர்த்த, 'சீரியத்தொகையியம்பினர்' என்றார். அவ்வியத்தின் தொகையினை.—"பேரிகை படக மிடக்கை யுடுக்கை - சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை - திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை - தமருகந் தண்ணுமை தாவிறடாரி - அந்தரி முழவொடு சந்திரவளையம் - மொந்தை முரசே கண்விடு தூம்பு - நிசாளந்துடுமை சிறுபறையடக்க - மாசிறகுணிச்சம் விரலேறுபாகம் - தொக்கவுபாங்கந் துடிபெரும்பறையென - மிக்கநூலோர் விரித்துரைத்தனரே" என்பதனானறிக. (சு)

அத்த னேவலா லுருத்திரர் குழுவுமா லயனு
மெய்த்த வம்புரி முனிவரு மேனைவிண் ணவரு
மொய்த்த தேரொடு மானமாப் புள்ளிவை முதலாந்
தத்த மூர்திமேல் கொண்டனர் செய்பணி தவாதோர்.

(இ-ள்.) சிவபெருமானது கட்டளையால் உருத்திரக்கூட்டங்களும் திருமாலும் பிரமனும், உண்மையான தவத்தைச் செய்கின்ற முனிவர்களும், மற்றைத்தேவர்களும் தாங்கள்தாங்கள் செய்துகொண்டிருக்கும் பணிவிடைகளில் தவறாதவர்களாய் நெருங்கிய இரதம் - விமானம் - விலங்கு - பறவை முதலிய அவரவர்களது வாகனங்களிலேறிக்கொண்டார்கள்.—எ-று.

சிவபெருமானுடன் எத்தகையோர்க்கும் வாகனத்திலிவர்ந்து செல்லுதற்கு அதிகாரமும் விருப்புமில்லாதிருப்பினும் அவ்வெம்பெருமானது கட்டளைப்படி யொழுகவேண்டுதலின், அவரவர்கள் வாகனங்களிலேறின ரென்பதையுணர்த்த, 'செய்பணிதவாதோர்' என்றார். (எ)

தாழ்ந்து தன்பணி புரியுமத் தலைவருந் தவத்தாற்
காழ்ந்த நெஞ்சுடைப் பூதரு மேனைய கணமுஞ்
சூழ்ந்து சென்றிடக் கயிலையை யகன்றுதொல் லுலகம்
வாழ்ந்தி டும்படி யேகின னிமையமால் வரைமேல்.

(இ-ள்.) வணங்கித்தங்கள் பணிவிடைகளைச் செய்கின்றவர்களாகிய அத்தலைவர்களும் தவத்தினால் திடங்கொண்டிருக்கின்ற மனத்தினையுடைய பூதர்களும், மற்றைச்சிவகணங்களுஞ் சூழ்ந்து செல்லத் திருக்கயிலையினின்று நீங்கிப் பழைமையாகிய நிலவுலகத்துள்ள ஆன்மாக்கள்வாழும்படி பெரிய இமையமலைக்கு எழுந்தருளினார்.—எ-று.

சிவபெருமானது திருவடிப்பற்றின்றி வேறொன்றினும் பற்றில்லாதவர்களென்பது தோன்ற, 'காழ்ந்த நெஞ்சுடைப்பூதர்' என்றனர் (அ)

வார்ப்பெ ரும்பணை யாதிய வரம்பில்பல் லியத்தி
னார்ப்பு மெங்கணும் வெள்ளிடை யின்றியே யகல்வான்
றூர்ப்பி னீண்டிய தானையி னோதையுஞ் சுரர்க
ளார்ப்பும் வாழ்த்தொலி யரவமும் புணரியுண் டெழுமால்.

(இ-ள்.) வாரிறுக்கிய பெரியமுரசுமுதலிய அளவற்ற பலவாத்தியங்களினாரவாரமும்,எவ்விடங்களிலு மிடைவெளியில்லாது அகன்ற ஆகாயத்தைத் தூர்க்கும்படி நெருங்கிச்சென்ற சேனைகளினோசையும், தேவர்களது ஆரவாரமும், மங்கலவாழ்த்தொலியும் கடலொலியையடக்கி மேலோங்கிச்சென்றன.—எ-று.

பூதர்கள் முதலியோர் பூமியின் வழியாகச் செல்லாது ஆகாய வழியாகச் சென்றமையின்,அவ்வாகாயத்தி லுண்டாகிய நெருக்கத்தைக் குறிப்பிப்பார், 'அகல் வான்றூர்ப்பினீண்டியதானை' என்று கூறினார். (கூ)

வேறு.

அனைய தன்மையி லாதியம் பண்ணவன்
பனிகொள் வெற்பிற் படரவம் மன்னவ
னினிய கேளொ டெதிர்கொடு தாழ்ந்துதன்
புனித மாநக ரிற்கொடு போயினான்.

(இ-ள்.) அவ்வாறாகிய தன்மையோடு முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் இமையமலைக் கெழுந்தருளவும், அந்தப்பர்வதராஜன் இனிய சுற்றத்தினருடன் வந்து எதிர்கொண்டு வணங்கித்தனது பரிசுத்தமாகிய சிறந்தநகரத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றனன்.—எ-று.

அரசர்களுக்குரிய கேளாவார் ஐம்பெருங்குழுவு மெண்பேராயமுமாகலின், 'மன்னவ னினியகேளொடெதிர்கொடுதாழ்ந்து' என்று கூறினார். ஐம்பெருங்குழுவு மெண்பேராயமு மென்றதனை,—"அமைச்சர் புரோகிதர் சேனாபதியர் - தவாத்தொழிற்றூதுவர்சாரணமென்றிவர்-பார்த்திபர்கைம்பெருங்குழுவெனப்படுமே" எனவும், "காரணத்தியலவர் கருமவிதிகள் கனகச்சுற்றங் கடைகாப்பாளர் - நகரமாந்தர் நனிபடைத்தலைவர் - யானைவீரரிவுளிமறவ - ரினையவொண்பேராயமென்ப" எனவும், "சாந்துபூக்கச்சாடைபாக்கிலைகஞ்சுகநெ - யாய்ந்த விவவொண்ம ராயத்தோர் - வேந்தர்க்கு - மாசனம்பார்ப் பார்மருத்தர் வாழ்நிமித்த ரோடமைச்ச - ராசிலவைக் களத்தரைந்து" எனவும் வருஞ்செய்யுட்களானறிக. (கய)

போத லோடும் புனிதன் வரத்தினைக்
காத லாற்கண்டு கண்களிப் பாகியே
யாத மெய்திநின் றஞ்சலித் தேத்தியே
வீதி யாவும் விழாவயர்ந் திட்டவே.

(இ-ள்.) அவ்வாறு செல்லவும், சிவபெருமானது வருகையை அன்புடன் தரிசித்துக் கண்களிப்படைந்து விருப்புற்று எதிரில் நின்று அஞ்சலித்துத் துதித்து வீதிகளனைத்தினுந் திருவிழாக் கொண்டாடப்பட்டன.—எ-று.

ஆதம் - விருப்பம். (௧௧)

மிண்டி நின்றிடும் வீதியின் மாதரா
ரண்டர் நாயக னற்புதப் பேருருக்
கண்டு தாழ்ந்து களைதவிர் காதலாந்
தெண்டி ரைப்படிந் தார்செயல் வேறிலார்.

(இ-ள்.) வீதிகளில் நெருங்கிநிற்கின்ற மாதர்கள், தேவர்கள்நாயகராகிய சிவபெருமானுடைய அற்புதமமைந்த சிறந்ததிருவுருவத்தைத்தரிசித்துவணங்கி வேறு செயலில்லாதவர்களாய் எல்லையில்லாத ஆசையாகிய கடலில் மூழ்கினார்கள்.—எ-று.

சிவபெருமானைக் கண்டவுடனே காமமிக்குச் செயலற்றார்க ளென்பார் 'காதலாந்தெண்டிரைப் படிந்தார் செயல்வேறிலார்' என்று கூறினார். (௧௨)

நிறைத்த பூண்களு நேர்ந்தபொன் னாடையு
நறைத்த சாந்தமு நாண்மலர்க் கண்ணியும்
பிறைத்தி ருச்சடைப் பிஞ்ஞகன் பேரெழில்
மறைத்த தென்று மனந்தளர் வார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள், திருமேனி நிறையத் தரித்துள்ள ஆபரணங்களும் மிருதுவான பீதாம்பரங்களும், மணம்பொருந்திய கலவைச்சாந்தும், புதியமலர்மாலைகளும், இளம்பிறையணிந்த அழகிய சடைமுடியையுடைய சிவபெருமானது பேரழகை மறைத்தனவென்று மனத்தளர்ச்சியடைவார்கள்.—எ-று.

இயற்கையாகவே பேரழகினையுடைய சிவபெருமானது திருமேனியினவயவங்களுக்கு, இயற்கையழகில்லார்க்கு அழகைத்தரும்படியணிகின்ற பூண் - ஆடை - சாந்தம் - மலர்முதலியன மிகையாகலின் அவை அவ்வெம்பெருமானது திருவுருவத்தை மறைத்தனவென்று வருந்தினர்களென்பார், 'பேரெழின் - மறைத்ததென்று மனந்தளர்வார்' என்றார். (௧௩)

உய்யு மாறெ னுவர்தமைக் காண்டலும்
வெய்ய காமக் கனல்சுட வேவுறுந்
தைய லார்க டனுவுறு நீறுகொ
லைய ராகத் தணிந்ததென் பார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள், நாம் பிழைப்பது எவ்வண்ணம்; இவரைத்தரிசித்தவுடனே வெவ்விய காமாக்கினியானது சுட, அதனால் (உடலம்) வேவப்பட்ட மாதர்களினது உடம்பிலுண்டாகிய நீறுதானோ? இவர் தமது திருமேனியிலணிந்துள்ள தென்று கூறுவார்கள்.—எ-று.

காமமிகுதியினால் தங்களுடலம் வெந்துபோவதுபோல் காணப்பட்டமாதர்கள், முன்னம் இவர் பலமாதர்களை காமாக்கினியாற் சுட்டெரித்த சாம்பலைத்தானோ திருவெண்ணீறாகத் தரித்திருக்கின்றனரென்று தாங்கொண்டுள்ள மிக்கமோகத்தாலுரைத்தனரென்க. (௧௪)

ஏழாலை யன்னசொ லேந்திழை மாதரார்
குழாம கன்று குழகனைச் சேர்தலுங்
கழாலு கின்றபல் காழுடை மேகலை
விழாதி றைஞ்சினர் மெல்லிய லார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள், வீணையினோசைபோன்ற சொற்களையும் உயர்ந்த ஆபரணங்களையு முடையமாதர்களது கூட்டத்தினின்று நீங்கிச் சிவபெருமானையடைந்தவுடனே, கழலுகின்ற பலவயிரமணிகளிழைத்த மேகலாபரணங்கள் கீழேவிழாமல் வணங்கினார்கள்.—எ-று.

மேகலை - எண்கோவைமணி. இதனை—எண்கோவை மேகலை காஞ்சி யிரு கோவை - பண்கொள் கலாபமிரு பத்தொன்று - கண்கொள் - பருமம் பதினான்கு முப்பத்திரண்டு -விரிசிகை யென்றுணரற் பாற்று" என்னுஞ் செய்யுளானறிக. (கடு)

அல்லி சேர்தரு மம்புய மீமிசை
வல்லி யன்னவர் வான்றுகில் சோர்வுற
மெல்ல வீழ்தலு மின்னிடை யார்க்கெலா
மில்லை யோபுனை யென்றுரைப் பார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள், அகவிதழையுடைய தாமரைமலரில் வசிக்குந் திருமகளை யொத்த மாதர்களது பெரியவஸ்திரங்கள் நழுவி மெல்லவிழுதலும், அதைக் கண்டு மின்போன்ற இடையினையுடைய மாதர்களனைவருக்கும் வஸ்திரம் இல்லையோ வென்று கூறுவார்கள்.—எ-று.

காமமயக்கத்தினால் துகிலிழந்த மாதர்கள் தங்களிடையிலாடை யில்லா திருத்தலை யுணராது பிறமாதர்கள் வஸ்திரமிழந்திருத்தலை நோக்கி வியந்து கூறினரென்பார், 'மெல்லியலார்க்கெலா மில்லையோபுனை யென்றுரைப்பார்' என்றார். (கசு)

வாசம் வீழ்தலும் வந்துவந் தில்லிடைத்
தூசு டுத்தில மென்றொர் துகில்புனைந்
தாசை யோடுசென் றன்னதும் வீட்டியே
யூசல் போன்றன ரொண்டொடி மார்சிலர்.

(இ-ள்.) ஒள்ளிய வளையலையணிந்த சிலமாதர்கள், ஆடையவிழ்ந்துவிழவும், திரும்பி வீட்டிற்கு வந்து வந்து நாம் ஆடையணிந்து சென்றிலமென்று கூறி, ஓராடையை யணிந்துகொண்டு விருப்பத்துடன்சென்று, அதனையும் நழுவவிட்டு, பின்னுஞ்சென்று உடுத்திவருவதால், ஊஞ்சல்போலத் தெருவிற்கும் வீட்டிற்குமாய்த் திரிந்துகொண்டிருந்தார்கள்.—எ-று.

காமவெறி யேறினமையால் துகிலிழந்தமையை யுணராது பன்முறை வீட்டிற்குச் சென்று வஸ்திரமணிந்து, வீட்டிற்குந் தெருவிற்குமாக உழலுகின்றமையால், 'ஊசல்போன்றன ரொண்டொடிமாரொலாம்' என்றார். வாசம்=ஆடை. (கஎ)

மாண்ட சாயன் மடந்தைய ரேதனை
வேண்டி மால்கொடு வீடுறும் வேலையி
லீண்டு போற்று கெனவுமெண் ணுதகோ
வாண்ட கைக்கிய லாகுமென் பார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள், மாட்சிமையாகிய சாயலையுடைய மாதர்களே தன்னை விரும்பி மயக்கங்கொண்டழியுந் தருணத்தில், இவ்விடத்தில் காக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளவும், அதனை சற்றுங் கவனியாதிருத்தல் தானோ? ஆண்தன்மையை யுடையவர்களுக்குச் சுபாவம் என்று கூறுவார்கள்.—எ-று.

உலகத்தில் ஆடவர் மாதர்கள்மீது விருப்புற்றுழலுதலியற்கை. அங்ஙனமின்றி, மாதர்களே தேவரீர்மீது விருப்புற்றுச்சென்றுங் கருணைசெய்யா திருத்தல் உமதுபெருந்தன்மைக்கழகோவென்று கூறிவருந்தினரென்க. (கஅ)

கரும்பு நேர்மொழிக் காரிகை மாதரார்
விரும்பி வேண்டவு மேவலர் போலுமா
லரும்பொன் மேனியெம் மண்ணலுக் குள்ளமு
மிரும்பு கொல்லென் றியம்பிடு வார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள், கரும்புபோலும் இனியசொற்களையுடைய அழகியமாதர்கள் விருப்புற்று வேண்டிக்கொள்ளவும் அணைகின்றிலர், அரிய பொன்போன்ற திருமேனியையுடைய எமது சிவபெருமானுக்கு மனமும் இரும்போ? என்று கூறுவார்கள்.—எ-று.

'மேவலர்போலும்' என்றதற்கு, பகைவர் போன்றிருக்கின்றனர் எனப் பொருள்கூறினுமாம். செம்பொன் கரும்பொன்னென்னுமிரண்டில் செம்பொன்னைத் தமது திருமேனியாகக்கொண்டு,கரும்பொன்னாகிய இரும்பைத் தம்மனமாகக்கொண்டனரோ? வென்று வருந்தினரென்க. இம்மாதர்களது காமவிகாரத்தை நோக்கிச் சிறிது மிரங்காமைகருதி 'இரும்புகொல்லென் றியம்பிடுவார்' என்று கூறினர். (௪௯)

நெருக்கு பூண்முலை நேரிழை யார்க்குமால்
பெருக்கி னாரவர் பேதுற லோர்கிலா
ருரைப்ப தென்கொ லுயிர்க்குயி ராகியே
யிருக்கு மிங்கிவ ரென்றுரைப் பார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள்,ஆன்மாக்க ளனைத்தினும் பரமான்மாவாகவிளங்கும் இச் சிவபெருமான் நெருக்கமாகிய ஆபரணங்களையணிந்த ஸ்தனங்களையுடையமாதர்களுக்கு ஆசையை அதிகரிக்கச்செய்தனர்; அம்மாதர்கள் வருந்துதலை அறிந்திலர்; யாது சொல்வது என்று கூறுவார்கள்.—எ-று.

உயிர்க்குயிராயுள்ள விக்கடவுள் எங்கள் வருத்தத்தைச் சிறிதுமுணர்ந்தாரில்லை; இஃதென்ன வியப்பென்று வருந்தினரென்க. (௫0)

திருகு வார்சடைச் செய்யனை நோக்கிநின்
றுருகு வார்சில ருள்ளுற வெம்பியே
கருகு வார்சிலர் காதலி மாரொடும்
பெருகு காதலைப் பேசுகின் றார்சிலர்.

(இ-ள்.) சிலர் முறுக்காகிய நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமானைத் தரிசித்துநின்று மனமுருகுவார்கள்,சிலர் (காமம்விளைய அது காரணமாக) உள்ளத்திற் பொருந்த வெதும்பிக் கருகுவார்கள். சிலர் தோழிகளிடத்தில் தமக்கு மிகுதியாக உண்டாகின்ற ஆசையைப்பற்றிச் சொல்லிக் கொள்ளுகின்றார்கள்.—எ-று.

திருகு-முறுக்கு. கருகுதல்-காமத்தா லுடல் வெதும்பிப் பொலிவு மாறியிருத்தல். காதலிமார்-உயிர்த்தோழியர்கள். (௫௧)

வேறு ளார்மெய் விளர்ப்பினை நோக்கியே
யீறி லாரை யிவரணைந் தார்கொலோ
நீறு மெய்யி னிலவிய தென்றவர்ச்
சீறி யேயிகல் செய்திடு வார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள்அன்னியமாதர்களது உடலில் (காமத்தாலுண்டாகிய) வெண்ணிறத்தைப்பார்த்து, அழிவற்றவராகிய சிவபெருமானை இவர்க ளணைந்தார்களோ? இவர்களுடம்பில் விபூதி தங்கியிருக்கின்றதென்று அவர்களைக்கோபித்துச் சண்டையிடுவார்கள்.—எ-று.

காமத்தினு லுடல் வெளுத்திருத்தலை நோக்கி இவர்கள் சிவபெருமானை யணைந்தனர்போலும்; அதனுற்றான் இவர்கள் தேகத்தில் விபூதி படியப் பெற்றிருக்கிறதென்று அவர்களைச் சினந்து பகைப்பரென்க. (உஉ)

கட்டு செஞ்சடைக் கான்மிசை யூர்தர
விட்ட வெண்மதி மெல்லிய லார்தமைச்
சுட்ட தம்ம சுமப்பதென் னீரெனுக்
கிட்டி நின்று கிளத்திடு வார்சிலர்.

(இ-ள்.) சில மாதர்கள், கட்டப்பட்ட சிவந்தசடையாகிய காட்டினிடத்தி லுலாவும்படிவிட்ட வெள்ளிய சந்திரன் மாதர்களைத் தகித்துவிட்டது, இச்சந்திரனை நீ ரெவ்வாறுதாங்குகின்றீர் என்று அருகிலடைந்து கூறுவார்கள்.—எ-று.

சந்திரன் தூரத்திலிருந்தே எங்களுடம்பைச்சுடுகின்றது; அங்ஙனமாகவும், தேவரீ ரதனைத் திருமுடியில் தரித்திருப்பது தகுதியோ? வென்று வருந்தினரென்க. காமங்கொண்டவர்களுக்குச் சந்திரனொளி கூடாதென்பதை—“ கந்தங் கமழ்மென் குழலீ ரிதுவென் கலைவாண் மதியங் கனல்வா னெனை ” எனவருந் திருத்தொண்டர் புராணத்தா னறிக. (உ௩)

கஞ்ச மேலய னாதிக் கடவுளர்
தஞ்ச மென்று சரண்புக வுண்டதோர்
நஞ்சின் வெய்யகோ னங்கையர் கொங்கைமேற்
றுஞ்சு கின்ற துயிலதென் பார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள், தாமரைமலரில் வசிக்கும் பிரமன் முதலிய தேவர்கள் அடைக்கலம் புகுந்தகாலத்து உண்டருளிய ஒப்பற்ற விஷத்தைப்பார்க்கிலும் மாதர்களது கொங்கைகளின்மீது தூங்குகின்ற தூக்கமானது கொடியதோ? என்று கூறுவார்கள்.—எ-று.

பிரமனாதிதேவர்களுய்யும்பொருட்டு உண்டருளியவிடத்தினும், மாதர்களது ஸ்தனங்களைத் தழுவிக் காமநோயைத் தவிர்த்தல் கொடியதோவென்று வருந்தினரொன்பார், ‘நஞ்சின் வெய்யகொ னங்கையர் கொங்கைமேற் - றுஞ்சு கின்ற துயில தென்பார்’ என்று கூறினர். (உ௪)

பின்ன ருள்ள பெருந்தொழி லாற்றுவான்
றுன்னு வீரெனிற் றொல்குழு வாடவர்
நன்ன லத்தொடு நண்ணமின் னாரையே
யின்னல் செய்வதெ னென்றுரைப் பார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள் ஊழிக்காலத்துள்ள சங்காரத்தொழிலைச் செய்வதற்கு வருகின்றவராயின் கூட்டமாக வருகின்ற புருஷர்கள் சுகத்தோடிருக்கப் பெண்களையே வருத்துவது யாதுகாரணமென்று கூறுவார்கள்.—எ-று.

தேவரீர் திருமணம்புரிந்தருளச் செல்லுதல் உயிர்களுக் கருள்செய்தற்பொருட்டேயன்றி வேறன்றாகலான், அவ்வுயிர்களுள் ஆண்பாலார் திருமணத்தைத் தரிசித்தற்பொருட்டுச் சுகமுற்றிருக்கப் பெண்பாலாராகிய வெங்கள் காமநோயைத் தவிர்க்காது செல்லுதல் தகுதியோவென்று வருந்திக் கூறினரொன்பார், ‘தொல்குழு வாடவர்-நன்னலத்தொடு நண்ணமின் னாரையே-யின்னல் செய்வதெ னென்றுரைப்பார்’ என்று கூறினர். (உ௫)

சாற்றி யிங்கினி யாவதென் னையன்மீ
ரேற்றின் மேவின ரெம்மை மணந்திட

மாற்றி லாத மலைமகள் போலயா
நோற்றி லோமென நொந்துயிர்ப் பார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள், மாதர்களே! இவ்விடத்துச்சொல்லி ஆகவேண்டியது யாது? இடபவாகனத்தி லெழுந்தருளி வருகின்றவர் எம்மை மணஞ்செய்யும்பொருட்டு, மாறுபாடில்லாத பார்வதி தேவியாரைப்போல யாம் தவஞ்செய்திலோமென்று வருந்திப் பெருமூச்சுவிடுவார்கள்.—எ-று.

பார்வதியாரைப்போன்று நாமுந் தவஞ்செய்திருப்போமாயின் இவரை மணத்தல் கூடும்; நமக்கு அஃதில்லாமையின், நாமிவ்வாறு வருந்துவதிற் பயனில்லையென்று தம்மிற்றாமே வருந்தி யுயிர்த்தனரென்க. (உசு)

தேவ ருய்யத் திருமணஞ் செய்திட
மேவு கின்றவர் மெல்லியன் மங்கைய
ராவி கொள்ள வமைந்தன ரித்திற
மேவர் செய்வ ரெனவுரைப் பார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள், தேவர்களுய்யும்படி திருமணஞ்செய்தற்கு எழுந்தருளுகின்ற சிவபெருமான் மெல்லிய தன்மையையுடைய மாதர்களது உயிரை வாங்குதற்கு ஏற்பட்டிருக்கின்றார். இவ்வாறு யாவர் செய்வார்களென்று கூறுவார்கள்.—எ-று.

வலியமைந்த தேவர்களுய்தற்பொருட்டுத் திருமணஞ்செய்யச்சென்ற விவர் மெல்லிய தன்மையையுடைய மாதர்களது உயிர் நீங்கும்படி வருத்திச்செல்கின்றனர். வலியோரைத் தடிதலும் மெலியோரைப் பாதுகாத்தலும் முறைமையாகவிருக்க, இவரதற்கு மாறாகச் செய்கின்றனர்; இது தகுதியோவென்று வருந்தினரென்பார், 'இத்திற மேவர்செய்வரெனவுரைப்பார்' என்று கூறினார். (உஎ)

மையல் வேழம் வயப்புலி போல்வரும்
வெய்யர் தம்மை மெலிவிப்ப தன்றியே
நொய்ய மான்புரை நோக்கியர்க் குந்துயர்
செய்யு மோவெனச் செப்புகின் றார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள்,மதமயக்கத்தையுடைய யானைபோன்றும் வெற்றிபொருந்திய சிங்கம்போன்றும் வருகின்ற துஷ்டர்களை வருத்துவதல்லாமல், மிருதுவான மான்போலுங் கண்களையுடையமாதர்களுக்கும் (சிவபெருமான்) துன்பஞ்செய்தருளுவரோவென்றுகூறுவார்கள்.—எ-று.

யானையுஞ் சிங்கமும் மதமும் வெற்றியு முள்ளன வாகலான், அவற்றைப் போன்று வருங் கொடிய வீரர்களை வருத்துதல் தக்கதேயன்றி, அற்பமாகிய மான் போன்ற மாதர்களை வருத்துதல் தகுதியோவென்று வருந்தினரென்க. (உஅ)

நங்கள் கொற்றவ னற்றவத் தாற்பெறு
மங்கை பாலின் மணப்பொருட் டேகின
ரிங்கெ மக்கினி மைத்திறஞ் செய்கலார்
சங்க ரர்க்குத் தகாதிதென் பார்சிலர்.

(இ-ள்.) சிலமாதர்கள், நமது பர்வதராஜன்செய்த நல்லதவத்தினால் பெற்ற உமாதேவியாரிடத்தில் திருமணத்தின்பொருட்டுச் சென்றருளினர்; இங்கு எனக்கு ஒரு நன்மையுஞ் செய்திலர். இது சங்கரர் என்னும் பெயரினை யுடைய சிவபெருமானுக்குத் தகுதியோ? வென்று கூறுவார்கள்.—எ-று.

யாவருக்குஞ் சுகத்தையருள்பவனென்னும் பொருள்பட, சங்கரனென்னும் பெயர் பெற்றனர். அவ்வாறு பெற்றுந் தேவர்கள் முதலியோர்க்கு இன்பத்தையும், மாதர்களுக்குத் துன்பத்தையுந் தருதலால் இவர்க்கிச்செய்கை தகாதென்றுகூறி வருந்தின ரென்க. (௨௯)

பேதை நீரவர் பேரிளம் பெண்மையோ
ராதி யந்தத் தணங்கின ரின்னணம்
வீதி தோறும் விரவியத் தாருக
மாத ராரினு மாதர்பெற் றாரரோ.

(இ-ள்.) பேதையர்முதல் பேரிளம்பெண் ணீறாகவுள்ள மாதர்கள் இவ்வாறு வீதிகடோறு நெருங்கி, அந்தத் தாருகாவன மாதர்களைப்பார்க்கிலும் மிகுந்த மயக்கத்தை யடைந்தார்கள்.—எ-று.

'பேதை நீரவர் பேரிளம் பெண்மையோ ராதி யந்தத் தணங்கினர்' என்றது, பேதை-பெதும்பை-மங்கை-மடந்தை-அரிவை-தெரிவை-பேரிளம்பெண் என்னும் எழுவகைப்பருவ மாதர்களை. இப்பருவம் அவரவர்களுக்குரிய வயதினளவால் வருவன. ஐந்துமுதல் எழுவயதளவும் பேதை. எட்டுமுதல் பதினொருவயதளவும் பெதும்பை. பன்னிரண்டுமுதல் பதின்மூன்றுவயதளவும் மங்கை. பதினான்குமுதல் பத்தொன்பதுவயதளவும் மடந்தை. இருபதுமுதல் இருபத்தைந்துவயதளவும் அரிவை. இருபத்தாறுமுதல் முப்பத்தொருவயதளவும் தெரிவை. முப்பத்திரண்டுமுதல் நாற்பதுவயதளவும் பேரிளம்பெண் என்பனவாம். இதனை—"பகருங்கா லைந்தேழ் பதினொன்று பன்மூன்-றகலாத பத்தொன்பா னையைந்-திகலாத - முப்பத்தொன் றீரிருபான் பேதை முதலோர்க்குச் - செப்புவராண் டெல்லைத் திறம்" என்னும் வச்சணந்திமாலையா னறிக. (௩௦)

பண்டை வேதன் பதத்தினும் பேரெழில்
கொண்டு நின்றவக் கோநகர் வீதியி
னண்டம் வெஃக வணிபடுத் திட்டவை
கண்டு போந்தனன் கண்ணுத லண்ணலே.

(இ-ள்.) பழைமையாகிய பிரமனது பதவியைப்பார்க்கிலும் மிக்க அழகினையுடைய அந்நகரத்து இராஜ வீதியில் உலகத்தார்விருப்புறும்படி யலங்கரித்துள்ளவைகளை நெற்றிக்கண்ணராகிய சிவபெருமான் நோக்கிச் சென்றருளினர்.—எ-று. (௩௧)

செய்ய தான செழுங்கம லாசனத்
தையல் காமுறத் தக்கன வீதிகள்
பைய நீங்கிப் பராபரை யாகிய
வையை கோயி லணித்தென நண்ணினன்.

(இ-ள்.) செழுமையாகிய செந்தாமரை மலரில் வாழுந் திருமகள் விரும்பத்தக்கனவாகிய வீதிகளை மெதுவாகக்கடந்து பராபரையாகிய பார்வதி தேவியார் வீற்றிருந்தருளும் அரண்மனைக்கருகில் சென்றருளினர்.—எ-று.

வீதிகளனைத்தும் பெருஞ்சிறப்பினவா யலங்கரிக்கப் பெற்றிருக்கின்றமையின், 'செய்ய தான செழுங்கம லாசனத் தையல் காமுறத் தக்கன வீதிகள்' என்றார்.

வேந்த னேவலின் வேதங்க ளின்றுகா
ணுய்ந்து நாடற் கரியவெம் மண்ணன்முன்
பூந்த டம்புனல் பூரித்த பல்குட
மேந்தி வந்தனர் மாதவ ரெண்ணிலார்.

(இ-ள்.) வேதங்களால் இன்று வரையிலுந் தேடியறியப்படாதவராகிய எமது சிவபெருமான் திருமுன்னே பர்வதராஜனுடைய கட்டளையினால் அளவற்ற பெரிய தவமுனிவர்கள் அழகிய தடாகநீரினால் நிறைக்கப்பெற்ற பூரணகும்பங்களை யேந்திவந்தார்கள்.—எ-று.

'வேதங்க ளின்றுகாறுய்ந்து நாடற் கரியவெம் மண்ணல்' என்பதனை—"நின்னான் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும் - பன்னா ளருச்சித்தும் பாதந் தலைச்சுமந்து - முன்னுமம் வாசித்து முன்னையறி யேனென்று- சொன்னா லடியேனை ன் சோதனைத்தோ னின்னியல்பே" என்னுந் திருவிளையாடற் புராணத்தா னறிக. ()

இருவ கைப்படு மெண்வகை மங்கலப்
பொருண்மை முற்றவும் பூவையர் பற்பல
வரிசை யிற்கொடு வந்தெதி ரெய்தினா
ரரிய யற்கரி தாகிய வண்ணன்முன்.

(இ-ள்.) இருவகைப்பட்ட அஷ்டமங்கலப்பொருள்க ளனைத்தையும் பிரம விஷ்ணுக்களுக் கரியவராகிய சிவபெருமானுக்கு முன்னே மாதர்கள் பற்பல வரிசையாகக் கொண்டு வந்தடைந்தார்கள்.—எ-று.

'இருவகைப்படு மெண்வகை மங்கலம்' என்றது, இருவகையாகப் பொருந்திய அஷ்டமங்கலங்களை. அவை, கண்ணாடி-இடபம்-தீபம் - சீவற்சம்-இரட்டைச்சாமரம்-சங்கம்-சுவஸ்திகம்-பூரணகும்பம் என்பன. மற்றொருவகை, கொடி-முரசு-கண்ணாடி-குடம்-மணி-தீபம்-அங்குசம்-கவரி என்பன. இவற்றை—"வேள்விச் சாலையும் வேதியுங் குண்டமு மேகலை யொடுதொன்னூற் - கேள்விச் சார்வினாற் கண்டுகண்ணடிவிடை கிளர்சுடர் சீவற்ச - நீள்விற் சாமரம் வலம்புரி சுவத்திக நிறைகுட மெனவெட்டு-வாள்விட் டோங்குமங் கலத்தொழில் செய்பொறி வகையினா னிருமித்தார்" எனவும், "கொடிமுர சாடி யம்பொற் குடமணி நெய்யிற் பூத்த - கடிமல ரனைய தீப மங்குசங் கவரி யென்னும் - படிவமங் கலங்க ளெட்டும் பரித்துநேர் பதுமக் கொம்பர் - வடிவினார் வந்து காட்ட மாளிகை மருங்கிற் செல்வான்" எனவும் வருந் திருவிளையாடற் புராணத்தா னறிக. (௩௪)

அறுகு நிம்ப மடிசி லரிசனஞ்
சிறுகு மையவி செம்பஞ்சின் வித்திவை
குறுகு தண்புனற் கொள்கல மேந்தியே
மறுகில் வந்தனர் மங்கைய ரெண்ணிலார்.

(இ-ள்.) அறுகு-வேம்பு-சோறு-மஞ்சள்- சிறுவெண்கடுகு-செஞ்சின்வித்து ஆகிய இவைகளுடன் குளிர்ந்த நன்னீரையுடைய நிறைகுடம் முதலியவற்றை யேந்தி அளவற்ற மாதர்கள் வீதியில் வந்தார்கள்.—எ-று.

ஐயவி - சிறுவெண்கடுகு. அறுகுமுதலியனவும் மங்கலப்பொருள்க ளாதலின், அவற்றையு மாதர்களேந்திவந்தன ரென்க. (௩௫)

நெருக்கு பூண்முலை நேரிழை யாரவர்
பொருக்கெ னாவெதிர் போந்துயிர் யாவினு
மிருக்கு மாதி யிறைவனை யேத்தியே
தருக்கொ டேநின்று தந்தொழி லாற்றினார்.

(இ-ள்.) நெருக்கமாகிய ஆபரணங்களையணிந்த ஸ்தனங்களையுடைய மாதர்கள் விரைவாக எதிரில் வந்து சர்வான்மாக்களுள்ளும் (உயிர்க்குயிராய்) எழுந்தருளி

யிருக்கின்ற முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானைத் துதித்து மகிழ்வுடன் நின்று தங்கள் தங்கள் பணிவிடைகளைச் செய்தார்கள்.—எ-று.

சாமுத்திரிக விலக்கணம் பூரணமாக நிரம்பப்பெற்ற உத்தமமாதர்க ளென்பார், 'நெருக்குபூண்முலை நேரிழையாரவர்' என்றார். அவர்- பகுதிப்பொருள் விகுதி.

எங்க ளாதை னெதிருற வெண்ணிலா
மங்கை மார்சுடர் மன்னிய தட்டைகள்
செங்கை யிற்கொடு சென்று வலன்வளை இ
யங்கண் மும்முறை யன்பொடு சுற்றினர்.

(இ-ள்.) எமது சிவபெருமான் திருமுன்னே அநேக மாதர்கள் தீபத்தட்டுகளைச் சிவந்த கரங்களிலேந்திச்சென்று, அங்கு அன்புடனே வலமாக மும்முறை பிரதக்ஷிணஞ்செய்தார்கள்.—எ-று.

சிவபெருமான் உலகத்திற்கு இன்பமளித்தற் பொருட்டே திருமணஞ்செய்கின்றமையின், மாதர்கள் அவ்வெம்பெருமானை புத்திகாமத்திற்குரிய வலப்பிரதக்ஷிணஞ்செய்தன ரென்க. தட்டை என்பதில், ஐகாரம் சாரியை. (௬௭)

ஆன காலை யருமணச் சாலைமுன்
ஞான நாயக னட்பொடு நண்ணியே
வானு லாய மழவிடை நீங்கினன்
யான மீதினின் றியாரு மிழிந்திட.

(இ-ள்.) அவ்வாறாகியபொழுது அரிய திருமணப்பந்தலுக்கெதிரில் ஞான முதல்வராகிய சிவபெருமான் விருப்பத்தோடு சென்று, யாவரும் தங்கள்தங்கள் வாகனங்களினின்று மிறங்கும்படி, விண்ணிலுலாவுகின்ற இளமையாகிய இடபத்தினின்று மிறங்கியருளினார்.—எ-று.

சிவபெருமானெழுந்தருளி வந்த இடபம், ககனமார்க்கமாக வந்தமைநோக்கி, 'வானுலாய மழவிடை' என்றுகூறினார். யானம் - வாகனம். (௬௮)

விடையி ழிந்துழி மேனைவின் னாட்டவர்
மடமின் னாரொடு வந்து பராபர
னடிகண் மீதினி லான்பொழி பால்கொடு
கடிதி னாட்டினள் கைதொழு தேகினள்.

(இ-ள்.) இடபத்தினின்று மிறங்கியபொழுது மேனையானவள் மடப்பந் தங்கிய தேவமாதர்களுடன் வந்து சிவபெருமானது திருவடிகளில் காமதேனுவினால் பொழியப்பட்ட பாலைக்கொண்டு விரைவில் அபிஷேகித்து வணங்கிச் சென்றனள்.

மணமகனாக வெழுந்தருளிய சிவபெருமானைச் சாமானியரைப்போன்று தாமசப்படுத்துவது முறைமையன்றாகலான், விரைந்து திருவடியை விளக்கினளென்பார், 'கடிதினாட்டினள்' என்றார். (௬௯)

நாத னவ்வழி நந்திக ளுய்த்திடும்
பாது கைக்கட் பதமலர் சேர்த்தியே
போதன் மாதவன் பொற்கரந் தந்திடக்
கோதின் மாமணக் கோயிலு ளெய்தினன்.

(இ-ள்.) சிவபெருமான் அப்பொழுது திருநந்திதேவரால் வைக்கப்பட்ட பாதுகைகளில் திருவடித்தாமரையைவைத்து, பிரமவிஷ்ணுக்கள் அழகிய கைலாகு கொடுக்கக் குற்றமற்ற திருமணப்பந்தலுக்குள் எழுந்தருளினார்.—எ-று.

திருமணச்சாலையானது சர்வமங்களங்களும் நிரம்பப்பெற்றுள்ள தென்பார், 'கோதின்மாமணக் கோயில்' என்றார். (௬௦)

வேறு.

பல்லிய மியம்ப வானோர் பரவவிஞ் சையர்கள் பாட
வொல்லெனக் கணங்க ளார்ப்ப வுருத்திரர் யாருஞ் சூழ
மெல்லெனச் செல்லு மண்ணல் விரிஞ்சனு மாலும் வேண்ட
மல்லலங் கோயி லுள்ள வனப்பெலா நோக்க லுற்றான்.

(இ-ள்.) பலவகைவாத்தியங்கள் வாசிக்கவும், தேவர்கள் துதிக்கவும், வித்தியாதரர்கள் பாடவும், சிவகணங்கள் ஒல்லென்று ஆரவாரிக்கவும், உருத்திரர்களனைவருஞ் சூழ்ந்துவரவும் மிருதுவாகச் சென்றருள்கின்ற சிவபெருமான் பிரமவிஷ்ணுக்கள் வேண்டிக்கொண்டமையால், சிறப்புமிக்க அத்திருக்கலியாண மண்டபத்திலுள்ள அழகனைத்தையும் பார்த்தருளத் தொடங்கினார்.—எ-று.

தமக்கென்று ஒருவிருப்பும் வெறுப்பு மில்லாதவராகலின், பிரமவிஷ்ணுக்களின் வேண்டுகோளால் திருமணச்சாலையின் பொலிவைப்பார்த்தருளத் தொடங்கின ரென்க. (௬௧)

உலாவுறு சுரும்பு மூசா வொண்மலர்ச் சோலை வாவி
நிலாவுறழ் புனல்சே ரோடை நெடுந்தட நிறம்வே றாகிக்
குலாவுமண் டபங்க ளின்ன கொண்டியல் வனப்புக் காட்டிச்
சிலாதனன் மதலை கூறச் சென்றுசென் றிறைவன் கண்டான்.

(இ-ள்.) சஞ்சரிக்கின்ற வண்டுகள் மொய்க்காத வளப்பமிக்க மலர்ச்சோலைகளையும், தடாகங்களையும், வெண்ணிலவை யொத்த நீர்நிறைந்த ஓடைகளையும், பெரிய குளங்களையும், நிறம் வெவ்வேறாக விளங்குகின்ற மண்டபங்களையும், இவை போன்ற பிறவற்றையுங்கொண்டு விளங்குகின்ற அழகுகளனைத்தையுங் காட்டிச்சிலாதமுனிவர் புத்திரராகிய திருநந்திதேவர் கூற, அவற்றை முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமான் சென்று பார்த்தருளினார்.—எ-று.

'உலாவுறு சுரும்புமூசா வொண்மலர்ச்சோலை' என்றது, சண்பகச்சோலையை. "வண்டுபடாதலர் சம்பகமேயெனமாதேவி" என்றார் பிறரும். வாவி - ஓடை - தடம் என்னு மூன்றும் நீர்நிலைகளே யெனினும், வாவியென்பது சிறுகுளத்தையும், ஓடையென்பது சிறிதுதூரம் நீரோட்டத்தினைப்பொருந்தியுள்ள மடுவையும், தடம் என்பது நாற்புறமு மோரளவினதாகிய பெருங்குளத்தையு முணர்த்துதலின், 'வாவி-நிலாவுறழ் புனல்சேரோடை நெடுந்தடம்' என்று கூறினார். 'நிறம்வேறாகிக் குலாவு மண்டபங்கள்' என்பன, பலவகை இரத்தினங்களா லமைக்கப்பட்ட பல நிறங்களையுடைய மண்டபங்களை. (௬௨)

கண்டலுந் தம்போற் றங்கள் காமர்விண் ணகரந்தானு
மண்டல வரைப்பின் வந்து வைகிய தாங்கொ லென்னா
வண்டர்கள் வாவி கேணி யகன்புனல் குடைந்துங் காமர்
தண்டலை யாடல் செய்துந் தலைத்தலை திரிதந் துற்றார்.

(இ-ள்.) அவ்வாறு பார்த்தருளவும், தேவர்கள் தங்களைப்போலத் தங்களது அழகிய பொன்னகரமும், இந்நிலவுலகத்தில் வந்துதங்கியதுபோலு மென்று, தடாகங்களிலுங் கிணறுகளிலுமுள்ள விசாலமாகிய நீரில் மூழ்கியும், அழகியசோலைகளிற் சென்று விளையாடியும் நானாவிடங்களிலு முலாவினார்கள்.—எ-று.

விசுவகன்மன் விண்ணுலகத்தினுஞ் சிறப்ப வலங்கரித்தமையின், அதனை நோக்கிய தேவர்கள் தமது விண்ணுலகமும் தம்போல் திருமணங் காணவந்ததோ வென்று வியப்புற்று அங்குள்ள வாவிசோலைமுதலிய விடங்களில் களிப்புற்றுலாவின ரென்க. (௬௩)

நந்தியந் தேவு காட்ட நல்வனப் பனைத்து நோக்கிக்
கந்தமென் போது வேய்ந்த கடிமணச் சாலை தன்னி
லிந்திர நீலத் திட்ட வெழினலத் தவிசி னும்பர்
வந்துவீற் றிருந்தா னெல்லா மறைகட்கு மறையாய் நின்றான்.

(இ-ள்.) திருநந்திதேவர் காட்டியருளவும், எல்லாவேதங்களாலுங்காணுதற்கரியவராய் நின்றருளிய சிவபெருமான், நல்ல அலங்காரங்களனைத்தையும் பார்த்தருளி, மணம்பொருந்திய மெல்லிய மாலைகள் கட்டப்பட்டுள்ள திருமணப்பந்தலில் இந்திர நீலரத்தினத்தினால் செய்யப்பட்ட அழகிய நல்ல ஆசனத்தின்மீது வந்து வீற்றிருந்தருளினார்.—எ-று.

இந்திரநீலரத்தின மென்பது, விசுவரூபனைக்கொன்ற இந்திரன் அப்பழியை நீக்கிக்கொள்ளும்பொருட்டுச்செய்த அசுவமேதயாகத்தி லுண்டாகிய நறியபுகையானது அவ்வேள்விப் பரியினது இமையாவிழிகளி னுழைந்து கலக்கியபோது அதன் கண்ணினின்றும் வடிந்த பீளைசிதறியவிடத்தில் தோன்றிய மணியேயாம். இதனை:— முந்திய விந்திரநீலம் விச்சுவரூபனை மகவான்முடித்த நாளி- னந்தியடு பழிதவிர்ப்பான் புரியுமகப் பரிமதத்தி னறியதூம - முந்தியரும் பரியிமையா நாட்டதுழைந் தளிசேற்றி னொழுகும்பீளை - சிந்தியமா நிடைப்படுமொன் றிந்திரவின் னீலமெனத் திகழுநீலம்" என்னுந் திருவிளையாடற் புராணத்தா னறிக. (௬௪)

வீற்றிருந் தருளு மெல்லை வீரபத் திரன்றீப் பேரோ
னாற்றல்கொள் கூர்மாண் டேச னாடக னைய னேனோர்
போற்றிசெ யயனே மாலே புரந்தரன் முனிவர் தேவ
ரேற்றிடு தவிசு தோறு மிருந்தன ரிறைவற் சூழ.

(இ-ள்.) அவ்வாறு வீற்றிருந்தருளிய பொழுது, வீரபத்திரர் காலக்கினிருத்திரர், வல்லமைபொருந்திய கூஷ்மாண்டருத்திரர், ஆடகேசருத்திரர் மகா சாத்தா முதலியோர்களும், துதிக்கப்பட்ட பிரமன் திருமால் இந்திரன் முனிவர்கள் தேவர்கள் முதலியவர்களும் அவரவர்களுக்குத் தக்க ஆசனங்களில் சிவபெருமானைச் சூழ்ந்திருந்தார்கள்.—எ-று.

அவரவர்களது தன்மைக்குத்தக்க ஆசனத்திலிருந்தன ரென்பார், 'ஏற்றிடு தவிசுதோறு மிருந்தனர்' என்று கூறினார். (௬௫)

வேறு.

அமையப்படு மப்பொழு தத்தினி லாதி யண்ணல்
விமலத்திரு மாமணங் காணுற மேலை யண்டச்
சுமையுற்றிடு மெப்புவ னத்தருந் தொக்க நீரா
லிமையச்சயி லந்துளங் குற்ற திடுக்க ணெய்தி.

(இ-ள்.) இவ்வாறமைந்துள்ள அச்சமயத்தில் முதற்கடவுளாகிய சிவபெருமானது திருக்கலியாண மகோற்சவத்தைத் தரிசிக்கும்பொருட்டு, மற்றைய அண்டங்களிலுள்ள எல்லாப்புவனத்தி லுள்ளவர்களும் வந்து நெருங்கினமையால் இமயமலையானது வருந்தி நடுங்கியது.—எ-று.

'அப்பொழுதத்தினில்' என்பதில், அத்து-சாரியை. சிவபெருமான் புரிந்தருளுந் திருமணம் மற்றையர்புரியும் மணத்தினைப்போலப் பாச சம்பந்தமுடையதன்றாகலின், 'விமலத்திருமாமணம்' என்று கூறினர். (சகூ)

பொன்பா லிமையந் துளங்குற்றுழிப் போற்று சேடன்
றன்பா லவனி யெனலாந் துலைத்தட்டி ரண்டின்
வன்பால தான வடபா லதுதாழ மற்றைத்
தென்பால தாற்ற வுயர்ந்திட்டது தேவ ருட்க.

(இ-ள்.) பொற்பகுதிகளையுடைய இமையமலை நடுங்கியபொழுது, புகழத்தக்க ஆதிசேஷனிடத்துள்ள பூமியென்று கூறு மிரண்டு தராசுத்தட்டுகளில் கனத்தினையுடைய வடபக்கந்தாழவும், மற்றைத் தென்பக்கமானது தேவர்களஞ்சும்படி மிகவுமுயர்ந்தது.—எ-று.

பொன்னே யுருவமாகவுடைய மேருமலையினின்றும் வேறு பிரித்தற்பொருட்டு, 'பொன்பாலிமையம்' என்றும், தென்றிசையினும் வடதிசை பர்வதவிசேஷங்களை மிகுதியாகவுள்ள தாகலான், 'வன்பாலதான வடபால்' என்றுங் கூறினர். ()

ஓங்குற் றதுதென் புவியாதலு மும்ப ரெல்லா
மேங்குற் றனர்மண் ணுலகோர்க ளிடுக்க ணுற்றுத்
தீங்குற் றனவோ வெமக்கென்று தியக்க முற்றார்
பாங்குற் றிடுதொன் முனிவோரும் பரிய லுற்றார்.

(இ-ள்.) பூமியின் தென்பாகமுயரவும்,தேவர்களனைவரும் ஏக்கமடைந்தார்கள்; நிலவுலகத்துள்ளவர்கள் வருந்தி நமக்குத் தீங்குநேர்ந்தனவோவென்று மயங்கினார்கள்; அருகிலுள்ள பழைமையாகிய முனிவர்களும் வருந்தினார்கள்.—எ-று.

உலகிற் கழிவுநேருங்காலத்தில் பூகம்பமுதலிய உற்பாதங்களுண்டாவது சுபாவமாதலால், இப்போதுண்டாகிய பூமியினுயர்வு தாழ்வு நமக்கு நாசத்தை விளைக்குங் கொல் என்று வருந்தினரென்பார், 'தீங்குற்றனவோ வெமக்கென்று தியக்கமுற்றார்' என்று கூறினர். (சஅ)

இன்னோ ரெவருஞ் சிவனேயென் றிரங்க லோடு
முன்னோனு மன்ன செயல்கண்டு முறுவ லெய்தி
யன்னோர் குறைநீத் திடநந்தியை நோக்கி யாழி
தன்னோர் கரத்திற் செறித்தானைத் தருதி யென்றான்.

(இ-ள்.) இவர்களனைவரும் சிவனே! யென்று (ஓலமிட்டு) இரங்கவும், முதற்கடவுளாகிய சிவபெருமானும் அதனை நோக்கிப் புன்னகைகொண்டருளி அவர்களதுகுறையை நீக்கும்பொருட்டுத் திருநந்திதேவனைப் பார்த்தருளி, கடலை ஓர்கரத்திலடக்கிய அகத்தியனை அழைத்துக்கொண்டு வரக்கடவையென்று கட்டளையிட்டருளினார்.—எ-று.

பிறரால் செய்தற்கரிய காரியத்தைச் செய்து முடிப்பவர் அகஸ்தியமுனிவரே யாகலால், அவரைத் தருதியென்று சிவபெருமானருளிச் செய்தனரென்க. (சகூ)

என்றா னதுகாலையி னந்தி யிறைஞ்சி யேகிக்
குன்றாத கும்ப முனிவன்றனைக் கூவ வங்கட்
சென்றா னவனைக் கொடுபோய்ச்சிவன் முன்ன ருய்ப்ப
மன்றார் கழல்கள் பணிந்தான் மலயத்து வள்ளல்.

(இ-ள்.) இவ்வாறு சிவபெருமான் கட்டளை யிட்டருளியபொழுது திருநந்திதேவர் நமஸ்கரித்துச்சென்று, குறையாத (தவத்தினையுடைய) அகத்தியமுனிவரை

யழைக்க, அவர் அங்குச்சென்றனர். திருநந்திதேவர் அவனையழைத்துச் சென்று சிவ பெருமான் திருமுன்னே விடவும், அகத்தியமுனிவர் திருச்சிற்றம்பலத்தில் திருநட னஞ்செய்தருளும் சிவபெருமானது திருவடிகளை வணங்கினர்.—எ-று.

பொதியமலையில் விற்றிருந்து நிலவுலகத்தில் செந்தமிழ் மாரியைப் பெய்த பெருங்கருணையாள ராகலின், 'மலயத்துவள்ளல்' என்று கூறினர். (௰)

தாழுந் தவத்தோன் றனைக்கண்ணுதற் சாமி நோக்கித்
தாழுங் குறியோ யிவண்யாவருஞ் சார்த லாலே
தாழும் புவிதக் கிணமுத்தரஞ் சால வோங்கத்
தாழுஞ் சுவர்க்க நிலனுந் நனிதாழு மன்றே.

(இ-ள்.) தம்மை வணங்கிய அகத்தியமுனிவரை நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் பார்த்தருளி, வணங்குகின்ற முனிவனே! இவ்விடத்தில் யாவரும் வந்தமையால் தாழப்பட்ட உலகமானது தென்பக்க மிகவுமுயர, வடபக்கந் தாழ்ந்தி ருக்கின்றது; ஆதலால் சுவர்க்கலோகமும் மிகவுந் தாழும்.—எ-று.

புவிதக்கிணஞ் சாலவோங்க உத்தரந்தாழும் எனக் கூட்டுக. (௰௧)

தெருமந் துழலுந் தனைமன்னுயிர் செய்த தொல்லைக்
கருமந் தனைவிட் டயர்வெய்திக் கலங்குகின்ற
பெருமந் தரமே முதலாய பிறங்கல் யாவு
மருமந்த மேரு வரையுந்தவ றுகு மம்மா.

(இ-ள்.) மயங்கித் திரிகின்ற உலகத்துள்ள ஆன்மாக்கள், தாம்செய்த பழைய கன்மங்களை விட்டுச் சோர்ந்து கலங்குகின்றன. இனி பெரிய மந்தர முதலிய மலைகளும், அரிய மருந்தையொத்த மேருமலையும் நிலை தவறும்.—எ-று.

அருமருந்தன்ன என்பது, அருமந்த எனமரீஇயது. அம்மா- வியப்பிடைச் சொல். (௰௨)

ஆனன் முனிகே ளொருநீயிவ் வசல நீங்கித்
தேனர் மருத வளமேயதென் னுடு நண்ணி
வானர் பொதிய மலைமேவுதி வைய மெல்லா
மேன ளெனவே நிகராகி விளங்கு மென்றான்.

(இ-ள்.) அவ்வாறாயின் முனிவனே! கேட்கக்கடவை; ஒப்பற்ற நீ இவ் விமயமலையினின்று நீங்கித் தேன்பொருந்திய வயல்வளங்களையுடைய தென்னாட்டை யடைந்து ஆகாயத்தையளாவிய பொதியமலையை யடையக்கடவை, (நீ அவ்வாறு செய்யின்) உலகமனைத்தும் முன்போலவே சமமுற்று விளங்குமென்று அருளிச்செய்த னர்—எ-று.

ஐந்திணைகளுள் ளொன்றாகிய மருதநில வளப்பமே தென்னாட்டில் மிகுதி யாகவுடைமையால், 'தேனர்மருத வளமேய தென்னாடு' என்று கூறினர். மருதம்- வயலும் வயல்சார்ந்தவிடமும்; இம் மருதநிலத்தின் வகையினை—"இந்திரனூரன் பைந்தார்மகிழ்நன் - கெழுதகுகற்பிற் கிழத்திமனைவி - உழவருழத்தியர் கடையர் கடைச்சியர் - மழலைவண்டான மகன்றினை - யன்னம்போதா நன்னிறக்கம்புள் - குருகுதாரா வெருமைநீர்நாய் - பெருகியசிறப்பிற் பேரூர்மூதூர் - யாறு மனைக்கிணை நிலஞ்சிதாமனை - நாறிதழ்க்கழுநீர் நறுமலர்க்குவளை-காஞ்சிவஞ்சி பூஞ்சினைமருதஞ்- செந்நெல்வெண்ணெ லந்நெலரிகிணை - மன்றன்முழவ மருதயாழ்மருத - மன்றணி விழாக்கோள் வயற்களைகட்ட - லரிதல்கடாவிட லகன்குளங்குடைதல் - வருபுன லாடன் மருதக்கருப்பொருளே" என்னும் அகப்பொருட் சூத்திரத்தானறிக. (௰௩)

பிறையொன்று வேணிப் பரனிங்கிது பேச லோடு
மறையொன்று தீஞ்சொற் றமிழ்மாமுனி யச்ச மெய்திக்
குறையொன் றியான்செய் துளனோகொடி யேனை யீண்டே
யுறையென் றிலைசே ணிடைச்செல்ல வுணர்த்தி யெந்தாய்.

(இ-ள்.) இளம்பிறை தங்கிய சடைமுடியையுடைய சிவபெருமான் இவ்விடத்தில் இதனை யருளிச்செய்யவும், இனிமையாகச் சொல்லப்பட்ட தமிழ்ச்சொற்களையுடைய மகத்தாகிய அகத்தியமுனிவரர் அச்சமடைந்து, எமது பிதாவே! அடியேன் யாதேனு மொரு குறை செய்திருக்கின்றேனோ? கொடியேனாகிய அடியேனை இங்கே யிருவென்று அருளிச்செய்யவில்லை; நெடுந்தூரத்திற் செல்லும்படி கட்டளையிட்டருளினீர்.—எ-று.

சிவபெருமானா லருளிச்செய்யப்பட்ட வடமொழி வேதத்தைப்போலவே, திருஞானசம்பந்தப்பிள்ளையார் முதலிய ஆசாரியர்களா லருளிச்செய்யப்பட்ட தேவாரதிருவாசகங்களாகிய செந்தமிழ்வேதத்தை யுடைமையால், 'அறையொன்று' என்றும், மற்றைய பாஷைகளைப்போலன்றிக் கேட்போர்க் கினிமை பயத்தலுடைமையால், 'தீஞ்சொற்றமிழ்' என்றுங் கூறினர். (ருச)

என்னக் குறிய முனிவன்றனை யெந்தை நோக்கி
யுன்னைப் பொருவு முனிவோ ருலகத்தி லுண்டோ
வன்னத் தவனு முனைநேர்கில னாத லானீ
முன்னிற் றெவையுந் தவறின்றி முடித்தி மன்னோ.

(இ-ள்.) என்றிவ்வாறு கூறவும், அகத்தியமுனிவரை எமது சிவபெருமான் பார்த்தருளி, உன்னையொத்த முனிவர்கள் உலகத்திலிருக்கின்றார்களோ? அன்னவாகனத்தையுடைய பிரமனும் உனக்குஒப்பாகான்; ஆகையால், நீ நினைத்தவைகளனைத்தையுந் தவறாமல் முடிப்பாய்.—எ-று.

சிருஷ்டிக்கர்த்தனாகிய பிரமனும் நின்போற் பெருந்தவமுடைய னல்லனென்பார், 'அன்னத்தவனு முனைநேர்கிலன்' என்று கூறினர். (ருரு)

வேறுற்றிடு தொன்முனி வோர்களின் விண்ணு ளோரி
னீறுற்றிடு மோவிது செய்கை யெவர்க்கு மேலாம்
பேறுற்ற நின்னான் முடிவாகும் பெயரு கென்று
கூறுற் றிடலு முனியீது குறித்து ரைப்பான்.

(இ-ள்.) வேறாகப்பொருந்திய பழைய முனிவர்களாலும், தேவர்களாலும் இதனைச்செய்தல் முடியுமோ? யாவரினுஞ் சிறந்த பேறுபெற்றுள்ள உன்னால் முடிவாகும்; ஆதலால், போகக்கடவையென்று அருளிச்செய்யவும், அகத்தியமுனிவர் இதனைச் சுட்டிக்கூறுகின்றார்.—எ-று.

சிவோகம் பாவனைத் திறத்திற்சிறந்துள்ளோரில் நீயே முதன்மைபெற்றுள்ளவனென்பார், 'எவர்க்குமேலாம் பேறுற்றநின்னால்' என்று கூறினர். (ருசு)

வான்செய்த மேனி நெடுமான் மகவேள்வி மன்னன்
றேன்செய்த கஞ்சத் தயனிற்கவிச் செய்கை நீயேன்
முன்செய் திடவே பணித்திட்டனை தன்மை யீதே
னன்செய் ததுவே தவம்போலு நலத்த தெந்தாய்.

(இ-ள்.) மேகம்போலு நிறத்தினையுடைய திருமாலும் யாகத்தலைவனாகிய இந்திரனும், தேன்பொருந்திய கமலாசனனாகிய பிரமனும் நிற்க, இச்செய்கையைக்

கொடியேனாகிய அடியேன் செய்யும்படி கட்டளையிட்டருளினீர்; இவ்வாறாயின், எமது பெருமானே! அடியேன்செய்த தவந்தானே நன்மையினையுடையது.—எ-று.

ஈங்கிப் பணியை யளித்தா யெனி லெந்தை யுன்றன்
பாங்குற்ற புத்தேண் மனக்காட்சி பணிந்தி டாம
னீங்கற் கரி தாங் கவல்கின்றதென் னெஞ்ச மென்ன
வோங்கற் கயிலைத் தனிநாயக னோத லுற்றான்.

(இ-ள்.) இவ்விடத்தில் இப்பணிவிடையைக் கட்டளையிட்டருளுவீராயின், எமது ஆண்டவரே! தேவரீரிடத்துப்பொருந்திய தெய்வத் திருமணக்காட்சியைத் தரிசிக்காமல் நீங்குதற் கருமையாகும்; ஆதலால் அடியேன் மனம்வருந்துகின்றது என்று பிரார்த்திக்க, உயர்ந்தோங்குகின்ற திருக்கயிலாயத் திருமலையில் வீற்றிருந்தருளும் ஒப்பற்ற சிவபெருமான் அருளிச்செய்கின்றார்.—எ-று.

புத்தேள் மணக்காட்சி என்றது, தேவவுருவத்தோ டெழுந்தருளித் திருமணம்புரிந் தருளுகின்ற காட்சியை. பிரளயந்தோறு முயர்ந்தோங்குந் தன்மையுடைமையால், 'ஓங்கற்கயிலை' என்றார். இதனை:—"புரந்த ராதிவானவர்பதம் போதுறை புத்தேள் - பரந்த வான்பதஞ்சக்கரப் படையுடைப் பகவன் - வரந்த வாதுவாழ் பத மெலா நிலைகெட வருநா-ளூரந்த வாதுநின் றூழிதோ றோங்குமவ் வோங்கல்" என்னுந் திருவிளையாடற் புராணத்தானு மறிக. (ருஅ)

வேறு.

சிந்தைய தழுங்க லின்றித் தென்மலைச் சேறி யங்கண்
வந்துநம் வதுவைக் காட்சி வழங்குது மகிழ்ந்து காண்டி
நந்தமை யுன்னி யாங்கே நாள்சில விருத்தி பின்னர்
முந்தையி லெமது பாங்கர் வருதியான் முனிவ வென்றான்.

(இ-ள்.) முனிவனே! மனம்வருந்தாமல் பொதியமலைக்குச் செல்லக்கடவை, யாம் அங்கெழுந்தருளி நமது திருமணக்காட்சியைத் தெரிசிப்பிக்கின்றோம், அங்குவிருப்புற்றுத் தரிசிக்கக்கடவை, ஆதலால் நம்மைச் சிந்தித்து அங்குச்சிலகாலம் வசிக்கக்கடவை; பின்பு முன்போலவே எம்மிடத்து வரக்கடவை யென்று திருவாய் மலர்ந்தருளினர்.—எ-று. (ருக)

என்றிவை யமலன் செப்ப விசைதரு புலத்த னாகி
மன்றமர் கழல்க டம்மைப் பன்முறை வணக்கஞ் செய்து
நின்றுகை தொழுது போற்றி நெடிதுயிர்த் தரிதி னீங்கித்
தென்றிசை யெல்லை நோக்கிச் சிறுமுனி கடிது போனான்.

(இ-ள்) இவ்வாறு சிவபெருமான் அருளிச்செய்யவும், அகஸ்தியர் சம்மதங்கொண்ட மனத்தினையுடையவராய், கனகசபையில் ஆனந்தத் தாண்டவஞ்செய்தருளும் (அவ்வெம்பெருமானது) திருவடிகளைப் பலதரம்வணங்கி நின்று கைகூப்பித் துதித்துப்பெருமூச்சுவிட்டு, (அவ்விடத்தினின்றும்) அருமையாக நீங்கித் தெற்குத்திசையின் எல்லையைநோக்கி விரைந்துசென்றனர்.—எ-று.

சிவபெருமானது திருமணக்காட்சியைத் தரிசிப்பதைவிட்டுநீங்குதற்கு மனமிசையாதிருப்பினும் சிவபெருமானது கட்டளையைக் கடத்தல் கூடாமையால், 'அரிதினீங்கி' என்றும், நமது திருமணக்காட்சியை மலயாசலத்தில் தெரிசிப்பிக்கின்றோமென்று அருளிச்செய்தமையால், 'கடிதுபோனான்' என்றுங் கூறினார். (சுഠ)

கிற்புறு மாயை வல்ல கிரவுஞ்ச வரையும் விந்த
வெற்பதும் வன்மை சிந்த வில்வல னெடுவா தாவி

கற்பனை யகன்று மாயக் காவிரி நீத்தத் தோடு
முற்பகல் படர்ந்த தென்ன முனிவரன் றென்பாற் போனான்.

(இ-ள்.) பந்திக்கப்பட்ட மாயையில் சிறந்த கிரவுஞ்சமலையும் விந்தமலையும் வலியிழக்கவும், வில்வலனும் வாதாவியும் தாங்கள் செய்யும் வஞ்சனை யழிந்து இறக்கவும், காவிரிதீர்த்தத்துடனே முற்காலத்துச் சென்றமைபோல முனிசிரேஷ்டராகிய அகஸ்தியர் தென்றிசைநோக்கிச் சென்றனர்.—எ-று.

மாயா வல்லபத்தினை யுடைய அசுரனே மலைவடிமாக வமைந்தமையின், 'கிற்புறுமாயைவல்ல கிரவுஞ்சவரை' என்று கூறினர். கிரவுஞ்சம்-விந்தம்-வில்வலன் வாதாவி-காவிரி இவைகளின் சரிதங்கள் மேல் அசுரகாண்டத்தில் கூறப்படுதலின் ஆண்டுக் கண்டுணர்க. (சுக)

மறைபுகல் வேள்வி யாற்று மாவலி வலிகொள் காட்சிக்
குறியவன் றுணையாய் மற்றோர் குறளுமுண் டாங்கொ லென்னு
நெறியெதி ரவுணர் தம்மு ளொருசிலர் நில்லா தோடச்
சிறுமுனி வான நீந்திச் சிமையமா மலயம் புக்கான்.

(இ-ள்.) வேதத்திற்கூறும் யாகத்தைச்செய்த மாவலிச் சக்கிரவர்த்தியினது வல்லமையையடக்கத்தக்க தோற்றத்தினையுடைய வாமனனுக்குத்துணையாக வேறொரு வாமனனு முளனோவென்று வழியிலெதிர்ப்பட்ட அவுணர்களில் சிலர் முன்னிற்காமலோடும்படி அகஸ்தியமுனிவரர் ஆகாயவழியாகக் கொடுமுடிகளையுடைய பொதியமலையை யடைந்தனர்.—எ-று.

அசுரனாகிய மாவலியை யழித்த வாமனனைப்போல அகத்தியமுனிவருங் குறியவராகலான், இவரைக்கண்ட அசுரர்கள், இவர் அவ்வாமனனுக்குத் துணைவரோவென்று அஞ்சியோடின ரென்க. (சுஉ)

முண்டகன் வலிகொண் டுற்ற மூவெயி லழிப்பான் முன்னி
யண்டரும் புவன முற்று மாகிய கொடிஞ்சி மான்றேர்
பண்டொரு பதத்தா லூன்றிப் பாதலத் திட்ட வண்ணல்
கொண்டதொல் லுருவ முன்னிக் குறுமுனி யங்க ணுற்றான்.

(இ-ள்.) பிரமனது வல்லமையாகிய வரத்தைப்பெற்றுள்ள முப்புரங்களையுமழிக்கும்பொருட்டுத் திருவுள்ளங்கொண்டு,தேவர்களும் உலகமுழுதுமாகிய மேற்றட்டினையுடைய குதிரை பூட்டிய இரதத்தை முற்காலத்தில் ஒரு திருவடியினா லூன்றிப் பாதலத்திலிட்டருளிய சிவபெருமா னடைந்துள்ள பழைமையாகிய திருவுருவத்தைத் தியானித்து அகஸ்திய முனிவரர் அங்கு வசித்திருந்தனர்.—எ-று.

அகஸ்தியமுனிவர் தாம் மிகக் குறியவராயிருப்பினுந் தமது இதயத்தில் சிவபெருமானது திரிபுரசங்காரத் திருவுருவத்தைத் தியானித்துச் சென்றன ரென்றமையால், குறிய முனிவரது திருவுள்ளத்தில் மேருமலையை வில்லாகக்கொள்ளத்தக்க பெரிய திருவுருவந் தியானரூபமாக வமையப்பெற்றதனால்,பூமிசம மாதற்கேதுவாயிற்றென்று குறிப்பித்ததாயிற்று. அத்திருவுருவத் தன்மையை,—"பொருப்புச் சிலையில் வாசுகிநாண் பூட்டி யரிகோல் வளியீர்க்கு - நெருப்புக் கூராம் படைதொடுத்துப் பிரமவலவ னெடுமறைமா - விருப்பிற் செலுத்து நிலத்தேர்மே னின்று தெவ்வூர் வெந்தவிய - வருப்புக் குறுவெண் ணகைமுகிழ்த்த வந்தணாளன் றிருவுருவம்"—என்னுங் காஞ்சிப்புராணத்தா னறிக. (சுரு)

பொதியம தென்னும் வெற்பிற் புனிதமா முனிவன் வைகத்
துதியுறு வடபாற் றென்பாற் புவனியோர் துலைபோ லொப்ப
வதுபொழு துயிர்க ளானோ ரணங்கொரீஇ யரனை யேத்தி
மதிமகிழ்ந் தமர்ந்தார் தொல்லை வதுவையின் செய்கை சொல்வாம்.

(இ-ள்.) பொதியமென்னும் பெயரையுடைய மலையில் தூய்மையாகிய சிறந்த அகஸ்தியமுனிவரர் தங்கியிருக்கவும், துதிக்கப்பட்ட வடபூமியுந் தென்பூமியும் ஒரு தராசுபோலச் சரியாக நிற்க, அச்சமயத்தில் உயிர்களனைத்துந் துன்பநீங்கிச் சிவபெருமானைத் துதித்து மனமகிழ்ந்திருந்தார்கள். இனி, முற்கூறிய திருமணத்தின் சிறப்பைச் சொல்லுவோம்.—எ-று.

சர்வலோக காரணராகிய சிவபெருமான் பிரத்தியக்ஷரூபமாக வெழுந்தருளியிருக்கப்பெற்ற திருக்கயிலாயத் திருமலை முதலியவற்றை யுடைமையால், 'துதியுறு வடபால்' என்று கூறினர். (௬௪)

கதுமென மலயந் தன்னிற் கடமுனி சேற லோடு
முதுமைகொ ளிமையம் புக்க முனிவருஞ் சுரருந் தேர்ந்து
மதிமலி சடையெம் மண்ணல் வரம்பில்பே ரருளு மன்னோன்
பதமுறை வழிபட் டோர்தம் பான்மையும் பரவ லுற்றார்.

(இ-ள்.) விரைவாகப் பொதியமலையில் அகஸ்தியமுனிவர் சேர்ந்தவுடனே, பழைமையாகிய இமையமலையில் வந்திருக்கின்ற முனிவர்களுந் தேவர்களு முணர்ந்து, இளம்பிறை விளங்குஞ் சடைமுடியையுடைய எமது சிவபெருமானது எல்லையில்லாத பெருங்கருணையையும் அவ்வெம்பெருமானது திருவடிகளை முறையாக வழிபட்டவர்களது தன்மையையுந் துதிக்கத்தொடங்கினார்கள்.—எ-று.

அகத்தியமுனிவர் பொதியமலைக் கெழுந்தருளுதலால், பூமி சமமானதைக் கண்ட முனிவர்கள் முதலியோர் இத்தகைய மிகுந்த வல்லபமானது சிவார்ச்சனையின் பெரும்பேற்றினாலேயே அம்முனிவர்க்குண்டாயிற் றென்பதை யுணர்ந்து, சிவபெருமானது திருவருட்டன்மையையும், அவரருளைப்பெற்ற மெய்யன்பர்களின் தன்மையையும் வியந்து துதிக்கத்தொடங்கினர்க ளென்க. (௬௫)

அங்கது பொழுது தன்னி லரசன திசைவா லெங்கள்
சங்கரி யையை காப்பச் சசியென்பா ளடைப்பை யேந்தக்
கங்கைகள் கவரி வீசக் காளிகள் கவிகை பற்றப்
பங்கய மான்கை பற்றிப் பாரதி பரவ வந்தாள்.

(இ-ள்.) அங்கு அந்தச் சமயத்தில் பர்வதராஜனது கட்டளையினால் எமது உமாதேவியார் துர்க்கையானவள் காவல் செய்யவும், இந்திராணி அடைப்பை யேந்தவும், கங்கைகள் சாமரை வீசவும்,காளிகள் குடைபிடிக்கவும்,இலக்ஷ்மியினது திருக்கரத்தைப்பிடித்துக்கொண்டு சரஸ்வதி துதிக்கும்படி யெழுந்தருளி வந்தனர்.—எ-று.

துர்க்கை பராக்கிரமமுடையவளாகலால்,'ஐயை காப்ப' என்றும், இந்திராணி போகரூபியாகலால், போகப்பொருளாகிய அடப்பையேந்தினளென்பார், 'சசியென்பாளடைப்பையேந்த' என்றும், கங்கைகள் வெண்ணிற முடையவர்களாகலால், அந்நிறத்தையுடைய கவரி வீசினரென்பார், 'கங்கைகள் கவரிவீச' என்றும், காளி துர்க்கையினேவலாளியாகலால், 'காளிகள் கவிகைபற்ற' என்றும், திருமகள் திதிக்கர்த்தாவின் மனைவியாகலால், 'பங்கய மான்கைபற்றி' என்றும், கலைமகள் வாக்கின் செல்வியாகலால், 'பாரதி பரவவந்தாள்' என்றுங்கூறினர். (௬௬)

வந்திடு மூலகை யின்றுள் வதுவையஞ் சாலை நண்ணி
யந்தமொ டாதி யில்லா னடிகளை வணங்க முன்னோன்
முந்துறு தவிசின் றன்பான் முற்றிழை யிருத்தி யென்ன
விந்திரை முதலோர் யாரு மேத்திட விருந்தா ளன்றே.

(இ-ள்.) இவ்வாறுவந்த சர்வலோகங்களையும் பெற்றருளிய உமாதேவியார் அழகிய திருமணப்பந்தலை யடைந்து முடிவுமுதலு மில்லாதவராகிய சிவபெருமானது திருவடிகளைவணங்கவும், முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் உயர்வுபொருந்திய சிங்காசனத்தில் பார்வதியே! நீ இருப்பாயாகவென் றருளிச் செய்யவும், அவ்வம்மையார் திருமகள்முதலிய யாவருந் துதிக்கும்படி எழுந்தருளியிருந்தனர்.—எ-று.

'முந்துறு தவிசு' என்பதற்கு, முன்னே யிடப்பட்டுள்ள தவிசு எனப்பொருள் கூறினுமாம். முற்றிழை - அன்மொழித் தொகைப்பெயர்; அது, அண்மைவிளி பெற்று இயல்பாய் நின்றது. (கூஎ)

இருந்திடு மெல்லை தன்னி லேலவார் குழலி யென்னுங்
கருந்தடங் கண்ணி னாளைக் கண்ணுதற் பராப ரற்கு
விரைந்தருள் செய்ய வுன்னி வேந்தன திசைவான் மேனை
பெருந்தடம் புனலுஞ் சந்து மலர்களும் பிறவுந் தந்தாள்.

(இ-ள்.) இவ்வா றெழுந்தருளியிருந்த சமயத்தில் ஏலவார் குழலியென்னுந் திருநாமத்தையுடைய கரிய நெடியகண்களமைந்த உமாதேவியாரை நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானுக்கு விரைவாகக்கொடுக்கும்படி நினைத்துப் பர்வதராஜனுடைய சம்மதத்தினால் மேனையானவள் மிகுதியாகிய நன்னீரையும், சந்தனத்தையும், மலர்களையும், மற்ற உபகரணங்களையுங் கொண்டுவந்தனள்.—எ-று.

உமாதேவியார் முன்பு தக்ஷனிடத்துப் புத்திரியாக வளர்ந்திருந்தபொழுது அவன் அவ்வம்மையாரைச் சிவபெருமானுக்குத் திருமணஞ்செய்து கொடுக்கத்தொடங்கி முடிவதன்முன்னே மறைந்தருளினர்; ஆதலால் இப்பொழுதும்அதுபோல் மறைந்தருளப்போகின்றனரென்றுகருதி விரைந்துதிருக்கல்யாணஞ்செய்து முடிக்கத்தொடங்கின னென்பார், 'விரைந்தருள் செய்யவுன்னி' என்று கூறினார். (கூஅ)

தருதலு மிமையத் தண்ண ருழ்ந்தன னிருந்து தேவி
சிரகநீர் விடுப்ப வாதி திருவடி விளக்கிச் சாந்தம்
விரைமலர் புனைந்து நின்ற வியன்கடன் பலவுஞ் செய்து
பொருவரு மகிழ்ச்சி யோடு பூசனை புரிந்தான் மாதோ.

(இ-ள்.) கொண்டுவந்தவுடனே பர்வதராஜன் வணங்கினவனாகவிருந்து, தனது மனைவியாகிய மேனை கமண்டலநீரைவார்க்கச் சிவபெருமானது திருவடிகளை விளக்கிச் சந்தனத்தையும் மணம்பொருந்தியமலர்களையுந்தரித்து, மற்றைய சிறந்தபல கடைமைகளையுஞ் செய்து ஒப்பற்ற மனக்களிப்புடன் பூசனைசெய்தனன்.—எ-று.

"பாதாளமேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்" என்றபடி எத்தகையோராலுங் காண்டற்கரிய திருவடியைப் பிரத்தியக்ஷத்திற் கையினாற்றொட்டுப் பூசிக்கத் தக்க பெரும்பேறெய்தினமென்று மகிழ்கூர்ந்தனனென்பார், 'ஆதி திருவடிவிளக்கிச் சாந்தம் - விரைமலர் புனைந்துநின்ற வியன்கடன் பலவுஞ்செய்து - பொருவரு மகிழ்ச்சியோடு பூசனை புரிந்தான்' என்று கூறினார். (கூகூ)

பூசனை புரிந்த பின்னர்ப் புவனமீன் றுடன் கையைப்
பாசம தகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து

நேசமோ டளித்தே னென்று நெடுமறை மனுக்கள் கூறி
வாசநல் லுதக முய்த்தான் மருகனென் றவனை யுன்னி.

(இ-ள்.) அவ்வாறு பூசைசெய்தபின்பு சர்வலோகங்களையும் பெற்றருளிய உமாதேவியாரது திருக்கரங்களை இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய பழைமையாகிய சிறப்பினையுடைய சிவபெருமானது திருக்கரத்தில் வைத்து அவரை மருகனென்றுகருதி, (எமதாண்டவரே! எனது புத்திரியாகிய உமாதேவியாரைத்) தேவரீருக்கு அன்புடன்கொடுத்தேனென்று சிறந்த வேதமந்திரங்களை யோதி நறுமணங் கமழும் நல்ல நீரைவிட்டனன்.—எ-று.

சிவபெருமான் யார் யார் எவ்வெவ்வகையாக நினைக்கின்றார்களோ? அவ்வாறே யெழுந்தருளிப் பேரருள் புரிகின்றவராகலின், அவ்வெம்பெருமானை மருமகனென்றுகருதி உமாதேவியாரைத் தத்தஞ்செய்து கொடுத்தனனென்பார், 'வாசநல் லுதகமுய்த்தான் மருகனென்றவனையுன்னி' என்று கூறினர். (எ0)

எங்குள பொருளுங் கோளு மீதலுந் தானே யாகுஞ்
சங்கர னுலக மெல்லாந் தந்திடுங் கன்னி தன்னை
மங்கல முறையாற் கொண்டான் மலைமகன் கொடுப்ப வென்றா
லங்கவ னருளி னீர்மை யாரறிந் துரைக்கற் பாலார்.

(இ-ள்.) எவ்விடத்துள்ள பொருள்களும், அவற்றைப் பெறுதலும், கொடுத்தலுந் தாமாகவேயுள்ள சிவபெருமான் சர்வலோகங்களையு மீன்றருளிய உமாதேவியாரைப் பர்வதராஜன் கொடுக்கத் திருமணமுறைப்படி பெற்றுக்கொண்டனராயின், அவ்வெம்பெருமானது திருவருளின் தன்மையை யாவர் தெரிந்துகூற வல்லவர்கள்.

இதனால், ஈவோன்-ஏற்போன்-ஈயும்பொருள்களாகியவனைத்துந் தாமே யாகவுடைய சிவபெருமான், பர்வதராஜன் உமாதேவியாரைத் திருமணஞ்செய்துகொடுக்கப்பெற்றுக் கொண்டனரென்பது ஓரருள் விளையாடலென்று குறிப்பித்ததாயிற்று. இதனை :—" உடுப்பானும் பாலன முண்பானு முய்வித் தொருவர்தம்மைக் - கெடுப்பானு மேதென்று கேள்விசெய் வானுங் கெதியடங்கக்-கொடுப்பானுந் தேகியென் றேற்பானு மேற்பக் கொடாமனின்று-தடுப்பானு நீயல்லை யோதில்லை யானந்தத் தாண்டவனே " என்னும் பட்டணத்துப்பிள்ளையார் திருவாக்கானறிக. (எக)

ஆனதோ ரமையந் தன்னி லாடின ரமரர் மாதர்
கானம திசைத்தார் சித்தர் கந்தரு வத்த ராேனா
ரேனைய விருவர் தாமு மேழிசைக் கீதஞ் செய்தார்
வானவர் முனிவர் யாரு மறைகளை யறைய லுற்றார்.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் அரம்பை மாதர்கள் நடனஞ்செய்தார்கள்; சித்தர்களுங் கந்தருவர்களுங் கானம்பாடினார்கள்; மற்றைத் தும்புருநாரதர்கள் சப்தசுரங்களையுடைய கீதங்களை (வீணையில்) வாசித்தார்கள், தேவர்கள் முனிவர்கள்முதலிய யாவரும் வேதாத்தியயனஞ் செய்யத்தொடங்கினார்கள்.—எ-று.

தேவமாதர்கள் நாடகக் கணிகையர்களாதலால் 'ஆடினர்' என்றும், சித்த கந்தருவர்கள் இசைத்திறம் வல்லவர்களாதலால், 'கானமதிசைத்தார்' என்றும், தும்புரு நாரதர்கள் வீணைவல்லவர்களாதலால், 'ஏழிசைக் கீதஞ்செய்தார்' என்றும், தேவர்கள் முனிவர்கள் வைதிகர்களாதலால், 'மறைகளை யறையலுற்றார்' என்றுங் கூறினார். (எஉ)

அல்லியங் கமலந் தன்னி லரிவையும் புண்ட ரீக
வல்லியு மற்று ளோரு மங்கலம் பாட லுற்றார்
சல்லரி திமிலை காளந் தண்ணுமை சங்க மாதிப்
பல்லிய மியம்பிச் சூழ்ந்து பாரிடத் தொகையோ ரார்த்தார்.

(இ-ள்.) அகவிதழையுடைய அழகிய செந்தாமரைமலரில் வசிக்கும் இலக்ஷுமியும், வெண்டாமரைமலரில்வசிக்குஞ் சரஸ்வதியும், மற்றைய மாதர்களும் மங்கலவாழ்த்துப்பாடத்தொடங்கினார்கள்; பூதகணங்கள் சல்லரி, திமிலை-எக்காளம், மத்தளம், சங்கம் முதலிய பல வாத்தியங்களை வாசித்துச் சூழ்ந்து ஆரவாரித்தார்கள்.

திருமகள் கலைமகளென்னு மிருவரும் செந்தாமரை வெண்டாமரைகளில் வசிப்பவர்களாதலால், 'அல்லியங்கமலந்தன்னி லரிவையும் புண்டரீகவல்லியும்' என்று கூறினார். (எ௩)

அதுபொழு திமையத் தண்ண லாபொழிந் திட்ட தீம்பால்
கதலிமாப் பலவின் றீய் கனிவகை நெய்தே னாதி
மதுரமாஞ் சுவையின் வர்க்கம் வரம்பில வீற்று வீற்று
நிதிகொள்பா சனத்தி லிட்டு நிருமலன் முன்ன ருய்த்தான்.

(இ-ள்.) அப்பொழுது பர்வதராஜன் காமதேனுபொழிந்த மதுரமாகிய பாலும், வாழை - மா - பலா இவைகளில் தித்திப்பாகிய பழவகைகளும், நெய்-தேன்முதலிய மதுரமாகிய சுவைவகைகளும் அளவில்லனவாக வெவ்வேறாகிய இரத்தினபாண்டங்களில் வைத்துச் சிவபெருமானுக்கு முன்னே கொண்டுவந்தான்.—எ-று.

கதலி மா பலவு என்னு மிம்மூன்றும் மற்றைக்கனிகளுட் சிறந்தனவாய் முக்கனி என ஆன்றோர்களால் தொகுக்கப்பட்டமையின், அவை இன்றியமையாதன வென்பார், 'கதலி மா பலவின்றீய கனிவகை' என்று கூறினார். 'மதுரமாஞ்சுவையின் வர்க்கம்' எனக்கூறியதனால், அறுசுவைப் பண்டங்களையுங் கொள்ள; அவை, கைப்பு-தித்திப்பு-புளிப்பு-உவர்ப்பு-துவர்ப்பு-கார்ப்பு என்பன. (எ௪)

மறைநெறி யினைய வெல்லா மலைமக னுய்த்து மற்றெம்
மிறையிவை நுகர்தல் வேண்டு மெனத்தொழ வினிதே யென்னாக்
கறைமிடற் றணிந்த மேலோன் கரத்தினா லவற்றைத் தொட்டாங்
குறுபெருங் கருணை செய்தே யுவந்தனங் கோடி யென்றான்.

(இ-ள்.) வேதவிதிப்படி இவைகளனைத்தையும் பர்வதராஜன் கொண்டுவந்துவைத்து, எமது ஆண்டவரே! இவற்றைப் புசித்தருளல் வேண்டுமென்று பிரார்த்திக்கவும், நல்லதென்று, ஆலாகலவிஷத்தைக் கண்டத்திலணிந்தருளிய சிவபெருமான்தமது திருக்கரத்தினால் அவற்றைத் தொட்டு மிக்க திருவருள்புரிந்து நாம் மகிழ்கூர்ந்தோம், இவற்றை நீ எடுத்துக்கொள்ளக் கடவையென் றருளிச்செய்தனர்.

சிவபெருமான் பசி பிணி மூப்பில்லாதவராகையாலும் பாவனைப்பிரியராகையாலும் பர்வதராஜன் முக்கனி முதலியவற்றைக் கொணர்ந்து உண்ணும்படி பிரார்த்திக்க அவற்றைத் தமது திருக்கரத்தால் ஸ்பரிசித்து எற்றனரென்க. (எ௫)

தொன்மைகொ ளருளி னீராற் றுய்த்தன வாகத் தொட்ட
நின்மல வுணவை மன்னா னேயமோ டங்கண் மாற்றி
யின்மலர் கந்தந் தீர்த்த மிவற்றொடு மொருசா ருய்ப்ப
நன்மகிழ் வோடு வேதா நாயகற் குரைக்க லுற்றான்.

(இ-ள்.) பழைமையாகிய திருவருட்டன்மையினால் நிவேதனமாகத் திருக்கரத்தினால் தொட்டருளிய நின்மலமாகிய பிரசாதத்தைப் பர்வதராஜன் அன்புடனே அவ்விடத்தினின்று நீக்கி, நல்லமலரும், சந்தனமும், தீர்த்தமுமாகிய இவைகளுடன் ஓரிடத்திற் சேர்த்தவுடனே, சிறந்த மகிழ்ச்சியோடு பிரமன் சிவபெருமானிடத்தில் விண்ணப்பஞ் செய்யத்தொடங்கினான்.—எ-று.

சிவபெருமான் திருவருள்கூர்ந்து திருக்கரத்தால் ஸ்பரிசித்தமையின், அவை பரிசுத்த மடைந்தனவென்பார், 'தொன்மைகொ ளருளினீராற் றுய்த்தனவாகத்தொட்ட - நின்மல வுணவு' என்று கூறினார். (எசு)

படங்கிளர் சேடன் றாங்கும் பார்விசும் புறையு நீரா
ரடங்கலு மணஞ்செய் போதத் தவ்வவர்க் கடுத்த தாற்றி
நடந்திடு மொழுக்க மெந்தை நடத்திடல் வேண்டு மன்றற்
சடங்கினி யுளது முற்றத் தண்ணளி புரிதி யென்றான்.

(இ-ள்.) படம் விளங்குகின்ற ஆதிசேடனால் தாங்கப்பட்ட உலகத்திலும், சுவர்க்கத்திலும் வசிக்கின்றவர்க ளனைவருங் கலியாணஞ் செய்துகொள்ளும்பொழுது அவரவர்களுக்கேற்ற கிரியைகளைச்செய்து நடக்கின்ற முறைமையை எமது பெருமானே! நடத்தியருளல் வேண்டும்; திருமணச்சடங்காக இனி யுள்ளனவற்றை நிறைவேற்றும்படி சிறந்த திருவருள்புரிய வேண்டுமென்று பிரார்த்தித்தனன்.—எ-று.

உலகம், சுவர்க்கம் மத்தியம் பாதலம் என்று மூன்றுவகையாயிருக்க, ஈண்டுப் பாதலத்தை நீக்கி, 'படங்கிளர் சேடன் றாங்கும் பார் விசும் புறையு நீரார்' என இருதிறத்தினரைக் கூறியது, பாதலவாசிகளாகிய நாகர்கள் தேவர்களது வகுப்பிற் சேர்ந்தவர்களாகலானும் மனிதர்கள் அவரின் வேறானவர்களாகலானு மிவ்வாறு கூறினரென்க. (எஎ)

என்னலு முறுவல் செய்தே யிறையருள் புரிய வேதன்
வன்னியு மதற்கு வேண்டும் பொருள்களு மரபிற் றந்து
பொன்னொடு புகரு மேனை முனிவரும் புடையிற் சூழத்
தன்னிக ரில்லா மன்றற் சடங்கெலா மியற்றல் செய்தான்.

(இ-ள்.) இவ்வாறு கூறியவுடனே, புன்னகைபுரிந்து சிவபெருமான் திருவருள் புரியவும், பிரமனானவன் அக்கினியும் அதற்குவேண்டிய சாமக்கிரியைகளும் முறைப்படி யமைத்து தேவகுருவாகிய பிரகஸ்பதியும் அசுரகுருவாகிய சுக்கிரனும் முனிவர்களும் பக்கங்களிற்சூழ, தனக்கொப்பிலாத திருமணச்சடங்குக ளனைத்தையுஞ் செய்யத்தொடங்கினான்.—எ-று.

அக்கினியின் மூலமாகக் கடவுளை யாராதிப்போர் அவ்வக்கினியை அரணியிற் கடைந்தெடுத்துச் சேர்த்தலும், சிருக்கு, சுருவம், முதலியவைகளை அத்திமுதலிய பால்மரங்களிற்செய்து கொள்ளலும், தருப்பை முதலியவற்றைச் சுத்த பூமியினின்றுஞ் சேகரித்தலும், தானே யுலர்ந்து வீழ்ந்திருக்குஞ் சமித்துக்களைச்சேர்த்தலும், பவ்வீயுண்ணுஞ் சாமானிய பசுக்களின் ஆஜ்யத்தை யொழித்துச் சுத்த பசுக்களின் ஆஜ்யத்தைக் கொள்ளுதலும் முறைமையாதலால், 'வன்னியுமதற்குவேண்டும் பொருள்களு மரபிற்றந்து' என்றும், பொன்னும் புகரும் தேவகுருவும் அசுரகுருவு மாதலானும், முனிவர்கள் உலகினர்க்கு வைதிக முதல்வர்களாதலானும் முறைப்படி வைத்து, 'பொன்னொடு புகருமேனை முனிவரும் புடையிற் சூழ' என்றுங் கூறினார்.

அந்தணர் கரண மெல்லா மாற்றியே முடிந்த பின்னர்த்
தந்தையுந் தாயு மாகி யுலகெலாந் தந்தோர் தம்மை

முந்துற வயனும் பின்னர் முகுந்தனு மதற்குப் பின்ன
ரிந்திரன் முனிவர் வானோர் யாவரு மிறைஞ்ச லுற்றார்

(இ-ள்.) பிராமணர்களது சடங்குகளனைத்தையுஞ் செய்து நிறைவேற்றிய பின்பு, தந்தை தாயாகவிருந்து சர்வலோகங்களையு மீன்றருளிய சிவபெருமானையும் உமாதேவியாரையும், முதலில் பிரமனும், பின்பு விஷ்ணுவும், அதன்பின்பு இந்திரன், முனிவர்கள், தேவர்கள், முதலிய யாவரும் வணங்கத்தொடங்கினார்கள்.—எ-று.

சிவபெருமான் தேவர்களுள்ளே சிறந்த பிராமணராதலால் அவரது திருமணத்திலும் பிராமணக்கிரியைகளையே செய்துமுடித்தல் முறைமையாதல்பற்றி, 'அந்தணர்கரண மெல்லாமாற்றி' என்றும், சர்வலோகங்களிலும் ஆசாரியர்களாயிருந்து அக்கினி காரியமுதலியவற்றைச் செய்கின்றவர்களைச் சடங்குநடத்திக் கொண்டவர்கள் வணங்குவது முறைமையாயினும், மாதாபிதாக்களைப் புத்திரர்களே தொழுதல் முறைமையாதல்பற்றி ஆசாரியனாயிருந்து அக்கினிகாரிய நடத்திய பிரமன் முதலியோர் வணங்கினரென்பார், 'தந்தையுந் தாயுமாகி யுலகெலாந் தந்தோர்தம்மை முந்துறவயனும் * * * * யாவரு மிறைஞ்சலுற்றார்' என்றுங்கூறினார். தேவர்களுக்குள்ளே சிவபெருமான் பிராமணரென்பதனை— "பிராமணனீயே கடவுளர்தம்முட் பிஞ்ஞகாவேனையர்தம்முட்-பிராமணன்யானே பிராமணன்றனக்குப் பிராமணன்கதியுனை யிகழ்வோன் - பிராமணனல்லன் றன்குலதெய்வம் விண்டுபின் னென்றனைத் தொழுமப் - பிராமணற்கிரண்டும் பயப்படாநிரயம்புகுவனென் றுயர்மறைபேசும்" என்னுங் காஞ்சிப்புராணத்தா னறிக. (எகூ)

அரனுட னுமையா டன்னை யாங்கவர் பணித லோடு
முருகெழு நிலையுட் கொண்ட வுருத்திரத் தலைவ ரேனோர்
பரிசனர் கணங்கள் யாரும் பணிந்தன ரதன்பின் னகக்
கிரியுறை யிறைவன் மைந்தன் கேளொடு வணக்கஞ் செய்தான்.

(இ-ள்.) சிவபெருமானுடன் உமாதேவியாரை அங்கு அவர்கள் வணங்கினவுடனே, அழகுமிக்க தன்மைபொருந்திய உருத்திரத்தலைவர்களும், மற்றையர்களும், பரிசனர்களும், சிவகணங்களுமாகிய அனைவரும் வணங்கினார்கள். அதன்பின்பு, அம்மலையில் வசிக்கும் பர்வதராஜன் தனது புத்திரபந்துக்களுடன் வணங்கினான்.

'உருகெழு நிலையுட்கொண்ட உருத்திரத்தலைவர்' என்பதற்கு, அஞ்சத்தக்க நிலைமையைப் பெற்றுள்ள உருத்திரத்தலைவர்கள், எனவும், சிவபெருமானது உருவமாக விளங்குகின்ற நிலைமையைக்கொண்டுள்ள உருத்திரத்தலைவர்கள் எனவும் பொருள் கூறினுமாம். திருமணத்திற்குவந்தவர்க ளனைவரும் முன்னே வணங்கின பின்பு, பர்வதராஜன் வணங்கவேண்டுவது முறைமையாதலால், 'அதன் பின்னகக் கிரியுறை யிறைவன்மைந்தன் கேளொடு வணக்கஞ் செய்தான்' என்று கூறினார். (அ0)

தமதுமுன் பணிகின் றோர்க டமக்கெலா மீசன் றானு
முமையுநல் லருளைச் செய்ய வோர்ந்திது பதமென் றுன்னி
யிமகிரி புரந்த வண்ண லீண்டுறை நீரர்க் கெல்லா
மமலன துணவு மற்று மளிப்பனென் றகத்துட் கொண்டான்.

(இ-ள்.) தமது திருமுன்னே வணங்குகின்றவர்க ளனைவருக்கும் பார்வதி பரமேஸ்வரர்கள் நல்ல திருவருளைச்செய்யவும், அதனையுணர்ந்து இது தக்க சமயமென்று கருதிப் பர்வதராஜன் இங்கு வசிக்கின்ற நற்குணமுடையவர்களனைவருக்கும் சிவப்பிரசாத முதலியவற்றைக் கொடுப்பேனென்று தனது மனதிற் சிந்தித்தான்.

இங்கு வந்தவர்களனைவரும் சிவபெருமானைச்சேவித்துத் திருவருள்பெற்ற சமையமே நாம் விருந்துசெய்வதற்குத் தக்க சமையமென்று கருதினனென்பார், 'ஈண்டுறை நீரர்க்கெல்லா-மமலனதுணவுமற்று மளிப்பனென் றகத்துட்கொண்டான்' என்று கூறினர். (அக)

ஆய்ந்திடு மறைகள் போற்று மாதிதன் றீர்த்தம் போது
சாந்தமோ டவிக டம்மைச் சதுர்முகன் முதல்வா னோர்க்கும்
வாய்ந்திடு முனிவர் யார்க்கு மற்றுளார் தமக்கு மன்ன
னீந்திட வவற்றை யன்னோ ரியாவரு மணிந்துட் கொண்டார்

(இ-ள்.) ஆராய்ச்சிசெய்கின்ற வேதங்களால் துதிக்கப்பட்ட சிவபெருமானதுபாததீர்த்தம், மலர், சந்தனம், இவைகளுடன் நைவேத்தியங்களைப் பிரமாதிதேவர்களுக்கும் நிலைபெற்ற எல்லா முனிவர்களுக்கும், மற்றையர்களுக்கும் பர்வதராஜன் கொடுக்க, அவற்றை அவர்களனைவரும் அணிந்து உட்கொண்டார்கள்.—எ-று.

சந்தனம் மலர்முதலியவற்றை யணிந்தும், தீர்த்தம் அவிமுதலியவற்றை யுட்கொண்டும் மகிழ்ந்தனரென்பார், 'அணிந்துட்கொண்டார்' என்று கூறினர். (அஉ)

ஆலமா மிடற்றோற் கான வமலமாம் பொருளை யேற்றுச்
சீலமோ டணிந்துட் கொண்டு சிந்தையுண் மகிழ்ந்து நந்த
மூலமாம் வினைகட் கின்றே முடிபொருங் குற்ற தென்றார்
மேலவ ரன்று பெற்ற வியப்பினை விளம்ப லாமோ.

(இ-ள்.) விஷந்தங்கிய கண்டத்தினையுடைய சிவபெருமானுக்குப் பிரீதியாகிய நின்மலப் பொருள்களைப்பெற்று முறைப்படியணிந்து உட்கொண்டு மனமகிழ்ந்து, நமது முன்னைய வினைகளுக்கு இன்றைப்பொழுதே ஒருங்கே அழிவுநேர்ந்த தென்று கூறினர்கள்; உயர்வினையுடைய அவர்கள் அன்று அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லுதல் கூடுமோ?—எ-று.

சிவப்பிரசாதம் பெற்றவர்கள் பாவத்தினின்று நீங்கிப் பரிசுத்தமடைதல் நிச்சயமென்று மகிழ்கூர்ந்தனரென்பார், 'மகிழ்ந்துநந்தம் மூலமாம்வினைகட் கின்றே முடிபொருங்குற்றது' என்று கூறினர். (அ௩)

அனையதோர் காலை தன்னி லமலமாம் பொருள்க டம்மைப்
பனிவரை யிறைவன் றானும் பன்னியுந் தமரு ளாரு
மெனைவரு மருந்தி மேற்கொண் டெல்லையி லின்ப முற்றார்
வினைவலி யொருவி மேலாம் வீடுபே றடைந்து ளார்போல்.

(இ-ள்.) அவ்வாறாகிய பொழுது, நின்மலமாகிய அந்தப்பொருள்களைப் பர்வதராஜனும் அவன் பத்தினியாகிய மேனையும், உறவினராயுள்ளவர்களும், மற்றையர்களும் உட்கொண்டும், மேலணிந்தும், இருவினைகளினது வலியினின்று நீங்கி மேலாகிய முத்தியின்ப மடைந்தவர்கள்போல அளவற்ற பேரின்பமடைந்தார்கள்.—எ-று.

இன்பங்களனைத்தினுஞ் சிறந்தது முத்தியின்பமே யாகலான் 'அத்தகைய பேரின்பமடைந்தன ரென்பார், 'அருந்திமேற்கொண்டு வீடுபேறடைந்துளார்போல் எல்லையி லின்பமுற்றார்' என்றார். (அ௪)

தன்னுறு கணவன் றுஞ்சத் தாபத நிலைய ளாகி
யின்னலை யடைந்தங் குற்ற விரதியவ் வெல்லை வந்து
மன்னுயிர் முழுது மீன்ற மங்கையை மணந்த வள்ளல்
பொன்னடி வணங்கித் தீயேன் புன்கணைத் தவிர்த்தி யென்றாள்.

(இ-ள்.) தனக்குரிய நாயகனிறக்கவும், அதனால் விதவாவிரதம்பூண்டு துன்பத்தையடைந்து அங்கு வசித்திருந்த இரதியானவள் அந்தச் சமயத்தில் வந்து நிலைபெற்ற உயிர்களனைத்தையும் பெற்றருளிய உமாதேவியாரைத் திருமணம்புரிந்தருளிய சிவபெருமானது அழகிய திருவடிகளைவணங்கி (எமது ஆண்டவரே !) கொடியவளாகிய எனது துன்பத்தை நீக்கியருள்வீராகவென்று பிரார்த்தித்தனள்.—எ-று.

அவ்வெல்லைவந்து என்பதற்கு, அவ்விடத்தில் வந்து எனப்பொருள் கூறினுமாம். (அ௫)

சீருறு கணவ னில்லாள் செப்பிய மாற்றங் கேளா
வாருயிர் முழுது நின்றே யனைத்தையு முணர்ந்து கூட்டும்
பேரரு ளுடைய நாதன் பேதுறன் மடந்தை யென்னு
மாரன்வந் துதிக்கும் வண்ண மனத்திடை நினைந்தா னன்றே.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய புருஷனற்றவளாகிய இரதியானவள் சொல்லிய வசனத்தைக்கேட்டு, அரிய எல்லாவுயிர்களோடு மெழுந்தருளியிருந்து, அவ்வுயிர்களினது ஊழனைத்தையும் உணர்ந்தூட்டுகின்ற பேரருள் வள்ளலாகிய சிவபெருமான், பெண்ணே ! நீ துன்பமடையாதே யென்றருளிச்செய்து, மன்மதன் வந்து தோன்றும்படி தமது திருவுள்ளத்திற் சிந்தித்தருளினார்.—எ-று.

அவ்வவ் வான்மாக்களது வினைப்போகங்களை யுணர்ந்தூட்டுபவர் சிவபெருமா னொருவரேயாகலான், மன்மதனது தோற்றக்கேடுகளையு முணர்ந்து அவன்முன்போல் உருக்கொண்டெழுமாறு திருவுள்ளங்கொண் டருளினரென்க. (அ௬)

நினைதரு மெல்லை தன்னி னெடியமான் முதலோர் வுள்ள
வனைவரு மருட்கை யெய்த வழுங்கிய விரதி நோக்கி
மனமகிழ் சிறந்து கார்காண் மஞ்ஞையிற் களிப்ப வங்கட்
குனிசிலை கொண்ட மாரன் கொம்மெனத் தோன்றி னானே.

(இ-ள்.) அவ்வாறு சிந்தித்தருளிய பொழுது, திருமால் முதலிய யாவரும் மருட்சிகொள்ளவும், வருத்தமுற்றிருந்த இரதியானவள் பார்த்து மனமகிழ்வு கூர்ந்து மேகத்தைக்கண்ட மயில்போலக் களிப்படையவும் வளைத்த கரும்பு வில்லையுடைய மன்மதன் அங்கு விரைவாகத் தோன்றினான்.—எ-று.

மேகம் கருநிறங்கொண்டு இந்திரவில்விட்டு ஜலவருஷம் பெய்வதுபோல, மன்மதன் கருநிறமும் வளைத்தவில்லும் பாணவருஷம்பெய்தலு முடையவனாகலான், அவனை மேகமாகவும், மேகத்தைக் கண்டவுடன் மயில் மகிழ்கூர்ந்து நடிப்பதுபோல, அம் மயில்போலுஞ் சாயலையுடைய இரதிதேவி மன்மதனைக்கண்டு மகிழ்வடைந்தமையால், அவளை மயிலாகவும் உவமித்துக் கூறினர். (அஎ)

முன்பொடு தோன்று மாரன் முதல்வியோ டிருந்த நாதன்
பொன்புனை கமலத் தாண்முன் போந்தனன் றாழ்ந்து போற்றி
யென்பிழை பொறுத்தி யென்ன யாமுனை முனியி னன்றோ
பின்பது தணிவ துள்ளம் பேதுறன் மைந்த வென்றான்.

(இ-ள்.) வலிமையோடு தோன்றிய மன்மதன் உமாதேவியாருடன் வீற்றிருந்தருளிய சிவபெருமானது பொற்கழலணிந்த தாமரை மலர்போன்ற திருவடிகளின் முன்னேயடைந்து வணங்கித்துதித்து, (எம்பெருமானே !) அடியேன்செய்த குற்றத்தை மன்னித்தருள்வீராகவென்றுபிரார்த்திக்க, (சிவபெருமான்) யாம் உன்னைக்கோபித்தாலன்றோ ? பின்னை அக்கோபந் தணியவேண்டுவது, குழந்தாய் ! நீமனங்கலங்காதே யென்றருளிச்செய்தனர்.—எ-று.

சிவபெருமான் மன்மதனை யெரித்தமை நெற்றிக்கண்ணைத் திறந்தமாத்திர மேயன்றி, ஒரு தொழிலாகக் கருதியன்றாகலின் 'யாமுனை முனியினன்றே பின்பது தணிவது' என்று கூறினர்.

முன்பொடு என்பதற்கு, பெருமையோடு எனப் பொருள் கூறினுமாம்.(அஅ)

எரிபுனை நமது நோக்கா லிறந்தநின் னுடல நீறாய்
விரைவொடு போயிற் றன்றே வேண்டின ளிரதி யன்னாட்
குருவமா யிருத்தி யேனை யும்பரோ டிம்பர்க் கெல்லா
மருவினை யாகி யுன்ற னரசியல் புரிதி யென்றான்.

(இ-ள்.) அக்கினியை யுட்கொண்டுள்ள நமதுபார்வையினால் எரிந்தழிந்த நினது சரீரமானது உடனே சாம்பராய்ப் போயிற்றல்லவோ ? (ஆயினும்) இரதிதேவி வேண்டிக்கொண்டமையால் அவளுக்குமாத்திரம் உருவமா யிருக்கக்கடவை ; மற்றைத் தேவர்கள்முதலியயாவரிடத்திலும் அருவமாயிருந்து உனது அரசாட்சியை நடத்தக்கடவையென்று திருவாய்மலர்ந்தருளினர்.—எ-று.

நின்மனைவியாகிய இரதிக்கு இன்பமூட்ட வேண்டுதலின், அவளுக்குருவமாகவும், மற்றையருக் கருவமாகவு மிருக்கக்கடவையென்று சிவபெருமானருள்செய்தனவொன்க. (அகூ)

செய்வினை முறையா லீசன் சித்தசற் கினைய கூறி
யவ்வவ னரசுஞ் சீரு மாணையும் வலியு நல்கி
மைவிழி யிரதி யோடு மன்னுதொல் புரத்துச் செல்ல
மெய்விடை யுதவ வன்னோர் விரைந்துடன் றொழுது போனார்.

(இ-ள்.) தாம் முன்புசெய்தருளிய தொழிலின் முறைமைக் கேற்றபடி மன்மதனுக் கிவ்வாறருளிச்செய்து, அம் மன்மதனது அரசாட்சியும், மேன்மையும், ஆக்கினையும், வல்லமையுமாகிய இவைகளைக் கொடுத்தருளி, மைதீட்டிய கண்களையுடைய இரதிதேவியுடனே நிலைபெற்ற தங்கள் பழைமையாகிய நகரத்திற்குச் செல்லும்படி மெய்ம்மையாகிய கட்டளையிட்டருள, அவ்விரதிதேவியும் மன்மதனும் விரைவாகவணங்கிச் சென்றார்கள்.—எ-று.

சித்தசன் - (திருமாலினது) சித்தத்திற் பிறந்தவன். (௯0)

இரதியு மதனு மேக விந்திர நீலத் திட்ட
வரியணை யிருந்த நாத னம்மையொ டிழிந்து தன்னேர்
திருவுரு வுடைய மேலோர் தேவர்மா முனிவ ரேனோர்
பரவினர் செல்லப் பூதர் பல்லியந் தெழிப்பச் சென்றான்.

(இ-ள்.) இரதிதேவியும் மன்மதனுஞ் சென்றவுடனே, இந்திரநீல சிங்காசனத்தில் வீற்றிருந்தருளிய சிவபெருமான் உமாதேவியாருடன் கீழேயிறங்கி யருளி, தமது சாரூபத்தையடைந்த உருத்திரர்களாகிய மேலோர்களும், தேவர்களும், பெரிய முனிவர்களும், மற்றையர்களும் வணங்கிச் சூழ்ந்து செல்லவும், பூதர்கள் பல வாத்தியங்களை முழக்கிவரவுஞ் சென்றருளினர்.—எ-று. (௯க)

மன்னுயிர்க் குயிராய் நின்றோன் மால்விடை யேறி மாதைத்
தன்னொரு பாங்கிற் கொண்டு தழீஇக்கொடு நடத்தி வானோர்
தொன்னிலை யமைந்து செல்லத் துவன்றியே கணங்கள் சுற்றப்
பொன்னிய லிமையந் தீர்ந்து வெள்ளியம் பொருப்பில் வந்தான்.

(இ-ள்.) நிலைபெற்ற உயிர்க்குயிராக வெழுந்தருளிய சிவபெருமான் பெரிய இடபத்தின் மீதெழுந்தருளி உமாதேவியாரைத் தமது ஒருபுறத்தில் வைத்துத் தழு

விக்கொண்டு நடத்தியருளி, தேவர்கள் தங்கள் தங்களது பழைமையாகிய வாகனங்களிலூர்ந்துவரவும், பூதகணங்கள்நெருங்கிச் சூழ்ந்துவரவும், பொன்மயமாகிய இமைய மலையினின்று நீங்கி அழகிய வெள்ளிமலையாகிய திருக்கயிலையை யடைந்தருளினார்.—எ-று. (௬௨)

அன்னதோர் காலை மாலை யயனைவெற் பரசை வேள்வி
மன்னனை யமரர் தம்மை முனிவரை மாத ரார்க
ளென்னவர் தமையுந் தத்த மிடந்தொறு மேகும் வண்ண
முன்னுற விடுத்தா னென்ப மூலமு முடிவு மில்லோன்.

(இ-ள்.) அவ்வாறாகியசமயத்தில் முதலும் முடிவுமில்லாதவராகிய சிவபெருமான் திருமாலையும் பிரமனையும், பர்வதராஜனையும், யாகாதிபதியாகிய இந்திரனையும் தேவர்களையும் முனிவர்களையும், மாதர்களையும் மற்றியாவர்களையுந் தங்கள்தங்களிடங்கடோறுஞ் செல்லும்படி முன்னேயனுப்பியருளினார்.—எ-று. (௬௩)

அடுகன லவன்கூர் மாண்ட னாடகே னையன் சிம்புள்
வடிவின னாதி யான வரம்பிலா வுருத்தி ரர்க்குங்
கடகரி முகத்தி னாற்குங் கணங்களிற் றலைமை யோர்க்கும்
விடையினை யுதவி யையன் வியன்பெருங் கோயில் புக்கான்.

(இ-ள்.) சிவபெருமானவர் சங்காரத்தொழிலையுடைய காலாக்கினியுருத்திரர், கூஷ்மாண்டர், ஆடகேசர், ஐயனார், சிம்புள் வடிவங்கொண்டருளிய வீரபத்திரர் முதலிய அளவில்லாத உருத்திரர்களுக்கும், மதம்பொழிகின்ற யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளுக்கும் சிவகணத் தலைவர்களுக்கும் (தங்கள் தங்களிடத்திற்குச் சொல்லும்படி) விடைகொடுத்தருளி, விசாலமாகிய சிறந்த தமது திருக்கோயிலை யடைந்தருளினார்.—எ-று.

சிவகணத்தலைவர்களுக்கு விடைகொடுத்ததே சிவகணங்களுக்கும் விடைகொடுத்ததாகலால், 'கணங்களிற் றலைமையோர்க்கும் விடையினையுதவி' என்றார்.

ஏறெனுங் கடவுண் மீதி னிம்மென விழிந்து தன்னோர்
கூறுடை முதல்வி யோடுங் கோநகர் நடுவ ணெய்தி
யாறணி சடையெம் மண்ண லரியணைப் பீட மீதில்
வீறொடு தொன்மை யேபோல் வீற்றிருந் தருளி னானே.

(இ-ள்.) விடைத்தேவரதுமுதுகினின்றும் விரைந்து இறங்கியருளி, கங்கைநதியையணிந்த சடைமுடியையுடைய எமது சிவபெருமான், தமது ஒரு பாகத்திலுள்ள உமாதேவியாரோடும் திருக்கோயிலின் மத்தியிற்சென்று சிங்காசனத்தின் மீது மேன்மையுடன் பழைமைபோலவே வீற்றிருந்தருளினார்.—எ-று.

தருமதேவதையே சிவபெருமானுக்கு இடபமாகவந்தமையின், 'ஏறெனுங் கடவுள்' என்று கூறினார். (௬௪)

அன்பினர்க் கெளிவந் துள்ள வாதியம் பரமன் மாது
தன்புடை யாகச் சீயத் தவிசின்வீற் றிருந்த லோடுந்
துன்பகன் றிருபா லாகித் துவன்றிய வுயிர்க ளெல்லா
மின்பொடு போக மாற்றி யினிதமர் வுற்ற வன்றே.

(இ-ள்.) மெய்யன்பர்களுக்கு எளிதாகக் காட்சிகொடுத்தருள்கின்ற முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் உமாதேவியார் தமது ஒருபக்கத்தி லெழுந்தருளியிருக்கும்படி சிங்காதனத்தில் வீற்றிருந்தருளவும், (உலகத்தில் ஆண் பெண்ணென்

னும்) இரண்டு பகுதியாகப் பொருந்தியுள்ள ஆன்மாக்களனைத்தும் துன்பமொழிந்து இன்பத்துடன் போகங்களை யனுபவித்துக்கொண்டு இனிமையாக வாழ்ந்திருந்தன.

'அன்பினர்க் கெளிவந்துற்ற வாதியம்பரமன்,' என்பதனை:—"அடியார்க் கெளியன்சிற்றம்பலவன்கொற்றங்-குடியார்க்கெழுதிய கைச்சீட்டுப்-படியின்மிசைப்-பெற்றான்சாம் பானுக்குப் பேசமறந் தீக்கைசெய்து - முத்திகொடுக்கமுறை" என்னுந் திருவாக்கானறிக.

'இருபாலாகித் துவன்றிய வுயிர்கள், என்பதற்கு, உயர்திணை அஃறிணை யென்னு மிருபாலாகப் பொருந்திய வுயிர்கள் எனவும், சரம்-அசரம் என்னு மிருபாலாகப் பொருந்திய வுயிர்கள் எனவும் பொருள் கூறினுமாம். (௬௬)

திருக்கல்யாணப்படல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் அ௫௦.

---

உ

முருகன்றுணை.

---

# திருவவதாரப்படலம்.

பற்பக லினைய வாற்றாற் படர்தலும் பின்னோர் வைகன்
முற்படு மயன்மால் வேள்வி முதலவன் றிசைகாப் பாளர்
சொற்படு முனிவர் வானோர் யாவருந் தொல்லை மேரு
வெற்பினிற் குழுமிச் சூரான் மிகமெலிந் திரங்கிச் சொல்வார்.

(இ-ள்.) இவ்வாறு அனேககாலஞ் செல்லவும், பின்பு ஒருநாள் முதன்மை பொருந்திய பிரமன் திருமால் இந்திரன் திக்குப்பாலகர்கள் புகழ்ச்சியையுடைய முனிவர்கள் தேவர்கள் முதலிய யாவர்களும் பழைமையாகிய மேருமலையிற் கூட்டமாகச்சேர்ந்து சூரபதுமனால் மிகவுந்தளர்ந்து வருந்திச்சொல்லுவார்கள்.—எ-று.

திசைகாப்பாளர் என்றது, இந்திரன் நீங்கலாகவுள்ளவர்களை. (௧)

உலகினை யவுணர்க் கீந்தே யோகிபோல் வைகி நம்பான்
மெலிவினைப் படுத்தி யாம்போய் வேண்டலு மிரக்க மெய்தி
மலைமக டன்னை வேட்டான் மைந்தனைத் தந்து நம்மைத்
தலையளி புரியான் வாளா விருப்பதென் றுனு வானோன்.

(இ-ள்.) சிவபெருமானவர் உலகத்தை யசுரர்களுக்குக் கொடுத்து யோகியைப்போன் றெழுந்தருளியிருந்து நம்மிடத்துத் துன்பத்தை விளைத்து நாம்சென்று வேண்டிக்கொள்ளவும், திருவுள்ளமிரங்கிப் பர்வதராஜ புத்திரியாகிய உமாதேவியாரைத்திருமணம் புரிந்தருளினார்; பின்பு புத்திரனைப்பெற்று நமக்கு முதன்மையாகிய திருவருள் புரியாதவராய்ச் சும்மாவிருத்தல் யாதுகாரணம்.—எ-று.

அகிலாண்டசராசரங்களைத் தம்முட்டாங்கி யுயர்ந்தோங்கி நிற்கும் பெருமானென்பார், 'தாணு' என்று கூறினார். இதனை—"பிறப்போ டிறப்பு மிலனாகிப் பிரமன் மாயன் முதலெவர்க்குஞ்-சிறப்பா யுயர்ந்து கலியாணனாகித் தீதொன்றின்றியே-யறத்தோரறிய வுறைவனால் யாவுமேவியாதலின-லுறத்தா னுணர்ந்தோர் தாணுவென வுணர்ந்தே நாளுமுரைப்பரால்" என்னும் வாயுசங்கிதையானறிக. (உ

இவறலு மிகலு மின்றி யார்க்குமோர் பெற்றித் தாகி
யவரவர் வினைக ணாடி யதற்படு பொருளை நல்குஞ்
சிவனையாம் வெறுத்தல் குற்றஞ் சிறந்தநோன் பியற்றி டாதே
தவறுசெய் தனமென் றெம்மை நோவதே தக்க தென்றார்.

(இ-ள்.) உறவும் பகையுமில்லாமல் எவர்களுக்கும் ஓர்தன்மையராய் அவ ரவர்களுடைய நல்வினை தீவினைகளை யாராய்ந்து அவ்வினைக்கியைந்த பயனைத்தரு கின்ற சிவபெருமானை நாம் வெறுத்துக்கொள்வது குற்றமேயாம், சிறப்புமிக்க தவத் தைச் செய்யாமல் குற்றஞ்செய்தோமென்று நம்மை நொந்துகொள்வதே தகுதியாகு மென்றார்கள்.—எ-று.

இவறல் - ஆசை. (௩)

ஆயினு மவன்றாள் போற்றி யடையினன் கனைத்து மாகுந்
தீயன வகலு மீது திண்ணமா மதனா லின்னுங்
காய்கதிர் மதிசூழ் கின்ற கயிலையங் கிரியின் முக்க
ணாயகற் கிதனைக் கூற நாமெலாம் போது மென்றார்.

(இ-ள்.) ஆயினும், அச்சிவபெருமானது திருவடிகளைத் துதித்துச் சரண மாக வடைந்தால் நன்மைகளனைத்துஞ்சேரும், தீமைகளொழியும்; இது சத்தியமா கும்; அதனால், இன்னும், வெயிலை எரிக்கின்ற சூரியசந்திரர்கள் வலம்வருகின்ற திருக் கயிலாயத் திருமலையில் திரிநேத்திரராகிய சிவபெருமானுக்கு இதனை விண்ணப்பஞ் செய்யும்படி நாமனைவரும் போவோமென்று சொன்னார்கள்—எ-று. (௪)

போதர விசைந்த காலைப் பொன்னலர் கமலப் புத்தேண்
மேதகு பரமன் செய்கை வினவியே யேகல் வேண்டுந்
தூதுவ னொருவன் றன்னைத் தூண்டிமுன் னறிது மென்றே.
யூதையங் கடவு டன்னை நோக்கியீ துரைக்க லுற்றான்.

(இ-ள்.) அவ்வாறு போகும்படி யாவரும் இசைந்தபொழுது, பொன்மய மாக மலர்கின்ற கமலாசனனாகிய பிரமன் மேன்மையமைந்த சிவபெருமானது செய் கையை விசாரித்தறிந்தே பின்புசெல்லவேண்டும், ஆதலால் ஒரு தூதுவனை முன்னே அனுப்பித் தெரிந்துகொள்ளுவோமென்று, வாயுதேவனைப்பார்த்து இவ்வார்த்தையை ச்சொல்லத்தொடங்கினான்.—எ-று.

தேவதேவராகலின், 'மேதகுபரமன்' என்றும், சிவசந்நிதானத்திற்குச் சமய மறியாது செல்லின், தீங்கு நேருமாகலின்,' தூதுவனொருவன்றன்னைத் தூண்டிமுன் னறிதும்' என்றுங்கூறினார். (௫)

வடவரை யதனின் மூன்று மாண்குவ டெறிந்து வெள்ளி
யுடல்சின வரவ முட்க வுததியி லுய்த்த மைந்த
படர்மதி மிலைச்சுஞ் சென்னிப் பண்ணவன் செயலை வெள்ளிக்
கடிவரை நகரத் தெய்திக் கண்டனை மீடி யென்றான்.

(இ-ள்.) மேருமலையில் மாட்சிமைப்பட்ட மூன்றுசிகரங்களைச் சாடிப்பி டுங்கி, பகைக்கின்ற கோபத்தினையுடைய ஆதிசேஷன் தன்வலிகுன்றும்படி சமுத்தி ரத்தில் வீசிய வலியோனே! கலைவளர்கின்ற இளம்பிறையணிந்த சிரத்தினையுடைய சிவபெருமானது செய்கையைக் காவலையுடைய வெள்ளிமலையிலுள்ள திருநகரத்திற் சென்று பார்த்துவரக்கடவை யென்று கூறினான்.—எ-று.

முன்பொருகாலத்தில் வல்லமையைக் குறித்து ஆதிசேடனுக்கும் வாயுவுக்குந் தருக்கநேர்ந்து, ஆதிசேடன் மேருமலையையசையவொட்டாது தனதுபணாமுடிகளால்

பொத்தி யழுத்தியபொழுது, வாயுமிகுதியாக மோதியடித்து அம்மலையின் மூன்று சிகரங்களைப் பெயர்த்தெறிந்தனன் என்பதாம். இதனை :—“ வந்துவாயுவும் வந்துவந் தறைந்தனன் வரையை-முந்திவேரறப் பறித்தனன் கொடுமுடி மூன்றை - யந்தமூன் றையுங்கொடு நமன்றிசையினிலடையே சிந்தினன் றலமூன்றிலே விழுந்தனசிகரம் ” எனவருஞ்செவ்வந்திப் புராணத்தானறிக. தூதுசெல்வோர் தயி[illegible]மும் வன்மையுமு டையோராயிருக்கவேண்டுதலின், ‘ மைந்த ’ என்றார். (௬)

பல்லிதழ் வனச மேலோ னினையன பகர நோன்றாள்
வில்லுடை மதனை வேளை விழித்தடு கடவுண் முன்னஞ்
செல்லுவ தரிது செல்லிற் றீமையே பயக்கு மென்பா
லொல்லுவ தன்றிச் செய்கை யுள்ளமும் வெருவு மென்றான்.

(இ-ள்.) பல இதழ்களை யுடைய தாமரைமலரில் வசிக்கும் பிரமன் இவ் வார்த்தைகளைக்கூறியவுடன், வலிய அடியினையுடைய கரும்புவில்லையேந்திய மன்மத னைப்பார்த்தெரித்தழித்தருளிய சிவபெருமானுக்கு முன்னே யான் செல்லுதலருமை யாகும், அவ்வாறு செல்லின் தீமையேயுண்டாகும். இக்காரியம் என்னால்முடிவதன் று. (இதனை நினைத்தால்) மனமும் நடுங்குமென்று கூறினான்.—எ-று.

பிரமன் வீற்றிருக்கும் தாமரை மலர் சகஸ்திரதளங்களை யுடையதாகலின், ‘ பல்லிதழ் ’ என்றும், சிவபெருமானது பராக்கிரமத்தன்மையை மன்மதன் முன்னி லையாக வறிந்துள்ளவனாகலின், தான்செல்லுதலேயன்றித் தனதுள்ளமுஞ் செல்லு தற்கஞ்சுமென்று நடுங்கியுரைத்தன னென்பார், ‘ ஒல்லுவதன்றிச் செய்கையுள்ளமும் வெருவுமென்றான் ’ என்றுங் கூறினார். (௭)

கூற்றிது நிகழ்ந்த வேலைக் கோகனதத்து மேலோன்
காற்றினுக் கரசை நோக்கிக் கம்பலை கொள்ளேல் யாண்டு
மூற்றமொ டுலவல் செய்யு மொருவனை நீயே யன்றி
வீற்றொரு தேவ ருண்டோ மேலிது புரிதற் பாலோர்.

(இ-ள்.) இவ்வாறு கூறியபொழுது, தாமரைமலர்மேல் வசிக்கின்ற பிரம தேவன் வாயுதேவனைப்பார்த்து, நீ நடுக்கங்கொள்ளாதே ; எவ்விடத்திலும் வலிமை யோடு உலாவுகின்ற ஒப்பற்ற நீயேயல்லாமல் உன்னையன்றி இதனைச்செய்யவல்லவர் கள் வேறொருதேவர்களிருக்கின்றார்களோ ?—எ-று.

கூற்று = வார்த்தை. (௮)

உற்றுழி யுதவி செய்வோ ருலப்புறு தவையு மீவோ
ரற்றமி றவத்தா றுற்றோ ரமர்புரி வீர ராவோர்
மற்றொரு பொருளும் வெஃகார் வருத்தமு மோரா ராவி
யிற்றிட வரினு மெண்ணா ரினிதென மகிழ்வ ரன்றே.

(இ-ள்.) ஆபத்து வந்தவிடத்து உதவுகின்றவர்களும், தடையின்றி எந்தப் பொருளையுங் கொடுக்கின்றவர்களும், கெடுதலில்லாத தவநெறியிலடைந்தவர்களும், போர்செய்கின்ற சுத்தவீரர்களுமாகிய இவர்கள் வேறொருபொருளையும் விரும்பார் கள் ; (அதனாலுண்டாகின்ற) வருத்தத்தையுஞ் சிந்தியார்கள்; உயிர் போகும்படி நேர் ந்தாலும் அதனை நினையார்கள் ; நன்றென்று மகிழ்வடைவார்கள்.—எ-று.

இதனை —“ மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா - ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி - யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார் - கரு மமே கண்ணாயினார்” என்பதனானறிக. (௯)

ஆதலி னெங்கட் கெல்லா மாற்றிடு முதவிக் காகப்
போதியா லைய வென்று புகழ்ச்சியா வினைய பல்வே
றேதிடு பொருண்மை கூற விசைந்தன னெழுந்து தீயின்
காதலன் விடைகொண் டேகிக் கயிலைமால் வரையிற் சென்றான்.

(இ-ள்.) ஆதலால் எங்களனைவருக்குஞ் செய்கின்ற உபகாரத்திற்காக ஐயனே! நீ போகக்கடவையென்று புகழ்ச்சியாக இவ்வாறாகிய அநேக ஏதுக்களையுடைத்தாகிய விஷயங்களை யெடுத்துச் சொல்ல, அதற்கு ஒப்புக்கொண்டவனாய், அக்கினிக்குத் தோழனாகிய வாயுதேவன் விடைபெற்றுச்சென்று பெரிய திருக்கயிலாயமலையிற் சேர்ந்தனன்.—எ-று.

'பல்வேறேதிடுபொருண்மை' என்றது, அவ்வாயுவினது பராக்கிரமங்களைக்குறித்துக் கூறிய சரிதங்களை. (க0)

குன்றதன் புடையில் வீழுங் குரைபுன லாற்றி னாடி
மன்றலங் காமர் காவின் மலர்மண மளாவி வாரித்
தென்றியா யசைந்து மெல்லச் சினகரம் புகுது மெல்லை
நின்றதோர் நந்தி காணூஉ வுரப்பின னெடிது சீறி.

(இ-ள்.) அம்மலையினருகில் வீழ்கின்ற சப்திக்கும் நீரையுடைய காறுகளில் மூழ்கி, நறுமணங்கமழும் அழகிய சோலையிலுள்ள மலர்களின் வாசனையிற் கலந்து வாரிக்கொண்டு,சிறுதென்றலாக அசைந்து, மிருதுவாக ஆலயத்தில் பிரவேசிக்குஞ்சமயத்தில், அங்குக் காவல்செய்திருந்த திருநந்திதேவர் பார்த்தருளி மிகவுங் கோபித்து அதட்டியருளினார்.—எ-று.

திருக்கயிலைத் திருக்கோயிலி னுள்ளே பிரவேசிக்கும்போது யாவரும் தம்மை வணங்கி விடைபெற்று உட்செல்லும் முறைமைக்கு மாறாகச் சென்றமையின், பெருஞ்சீற்றங் கொண் டதட்டின ரென்பார், 'நின்றதோர் நந்திகாணூஉ வுரப்பின னெடிது சீறி' என்று கூறினர். (கக)

பொற்பிரம் பொன்று பற்றிப் பொலன்முதற் கடையைப் போற்றி
நிற்புறு மாணை வள்ள னெடுஞ்சினத் துரப்ப லோடுங்
கற்பொழி யெழிலி கான்ற கனையொலி கேட்ட பாம்பின்
முற்படர் கின்ற காலோன் மொய்ம் பிலன் வெருவி வீழ்ந்தான்.

(இ-ள்.) பொன்மயமாகிய ஒரு பிரம்பைத் திருக்கரத்திற் பிடித்து அழகிய முதற்றிருவாயிலைக் காவல்செய்து நிற்கின்ற அதிகாரநந்திதேவரானவர் மிகுந்த கோபத்துடன் அதட்டவும், கல்மழையைப் பொழிகின்ற மேகத்தினால் முழக்கப்பட்ட பேரொலியைக்கேட்ட பாம்பைப்போல, முன்னே செல்கின்ற வாயுதேவன் தனது வலி குன்றி நடுங்கி மூர்ச்சித்துவீழ்ந்தனன்.—எ-று.

எழுவகை மேகங்களுள் கன்மழையைப்பெய்கின்ற காளமுகியென்னுமேகத்தின் இடி மிக்க வுரப்பினையுடையதாகலான், அவ்விடியோசையைக்கேட்ட பாம்பு நடுங்குமாறுபோல நடுங்கினனென்பார், 'கற்பொழி யெழிலி கான்ற கனையொலி கேட்ட பாம்பின் - முற்படர் கின்ற காலோன் மொய்ம்பிலன் வெருவி வீழ்ந்தான்' என்று கூறினர். எழுவகை மேகங்களையும் அவைபெய்யு மழைகளையும், "சம்வர்த்த மாவர்த்தம் புட்கலா வர்த்தஞ் - சங்காரிதந் துரோணங் காளமுகி - நீலவருண மேழ் மேகப் பெயரே" எனவும், "மணிநீர் பொன்பூ மண்கற் றீயென்-றெழுவகை மேகம் பொழிமாரி யேழே" எனவும் வரும் பிங்கலந்தைச் சூத்திரங்களா னறிக. (கஉ)

வேறு.

ஒல்லென விழ்வுறு முயிர்ப்பின் காவல
னெல்லையி லச்சமொ டிரங்கி யேயெழீஇத்
தொல்லையி னுருக்கொடு தோன்றி நந்திதன்
மல்லலங் கழல்களை வணங்கிக் கூறுவான்.

(இ-ள்.) விரைவாக மூர்ச்சித்து வீழ்ந்த வாயுதேவன் அளவற்ற அச்சத்துடன் வருந்தியெழுந்து பழைய வுருவத்தைக்கொண்டு தோன்றி அத்திருநந்திதேவரது சிறப்புப்பொருந்திய அழகிய திருவடிகளை நமஸ்கரித்துச் சொல்லுகின்றான்.—எ-று.

தொல்லையினுரு ஆவது, தனதுபழைமையாகியசொந்தவுருவம். திருநந்திதேவர் சிவசாருப்பியமுடையவராகலின் அவரது திருவடிகளை, 'மல்லலங்கழல்' என்றார்.

மாலயன் மகபதி வானு ளோரொலா
மாலமர் கடவுளை யடைதன் முன்னிநீ
காலைய தறிந்தனை கடிது செல்கென
மேலுரை செய்தனர் வினையி னேனுடன்.

(இ-ள்.) திருமால், பிரமன், இந்திரன், தேவர்கள் முதலிய அனைவரும், கல்லாலவிருக்ஷத்தின்கீழெழுந்தருளிய சிவபெருமானை அடையும்படி நினைத்து, நீ சமயமறிந்து விரைவில் வரக்கடவாயென்று தீவினையையுடைய என்னிடத்து முன்னே சொன்னார்கள்.—எ-று.

ஆலமர் கடவுள் - கல்லாலவிருத்தின்கீழ் தக்ஷிணாமூர்த்தியாக வெழுந்தருளிய சிவபெருமான். இதனை :—"கல்லானிழன்மலை-வில்லாரருளிய-பொல்லாரிணைமலர்-நல்லார்புனைவரே" என்னுஞ் சிவஞானபோதக் காப்புச் செய்யுளானறிக. காலையது என்பதில் அது-பகுதிப்பொருள்விகுதி. செல்கென-தொகுத்தல் விகாரம். (௧௪)

கறுத்திடு மிடறுடைக் கடவு ளாடலைக்
குறிக்கரி தஞ்சுவல் குறுக வென்றியான்
மறுத்தன னனையர்தம் வருத்தங் கூறியே
யொறுத்தெனை விடுத்தன ருடைய வன்மையால்.

(இ-ள்.) நீலகண்டத்தினையுடைய சிவபெருமானது திருவிளையாடலை அளவிட்டுரைத்த லருமையாகும், ஆதலால் யான்போகப் பயப்படுகின்றேனென்று தடுத்தேன்; பின்னும், அவர்கள் தங்கள் வருத்தத்தைச் சொல்லித் தங்கள் வல்லமையினால் என்னை வெறுத்துக்கொண்டு அனுப்பினார்கள்.—எ-று.

பிரமவிஷ்ணுக்களது நிர்ப்பந்தத்தினால் வந்ததேயன்றி யானே வந்ததன்றென்று கூறினனென்பார், 'தம்வருத்தங் கூறியே யொறுத்தெனை விடுத்தன ருடையவன்மையால்' என்று கூறினார். (௧௫)

ஆதலி னடியனே னஞ்சி யஞ்சியே
மேதகு தென்றியாய் மெல்ல வந்தன
னோதிட நினைந்தில னுனக்கு மற்றிது
பேதமை யுணர்வினேன் பிழைபொ றுத்திநீ.

(இ-ள்.) ஆகையால், அடியேன் பயந்து பயந்து மேன்மைபொருந்திய சிறுதென்றலாக மெல்லென வந்தேன்; இதனைத் தேவரீருக்கு முதலிற் சொல்லவேண்டுமென்று நினையாது போனேன்; தேவரீர் மூடபுத்தியையுடைய அடியேனது குற்றத்தை மன்னித்தருளல்வேண்டும்.—எ-று.

வாடை முதலிய பலவகைக் காற்றினுள்ளே சிறுதென்றற்காற்று உயிர்களுக்குச் சுகத்தைத் தரத்தக்கதாகலின், 'மேதகு தென்றியாய்' என்றார். (௧௬)

தானவர் தொழவரு தகையில் சூரனுன்
மானம தொருவியே வருத்துற் றேய்ந்தன
னனதொன் றுணர்கிலே னறிவு மாழ்கினே
னேனைய தேவரு மினைய நீரரே.

(இ-ள்.) அசுரர்களால் வணங்கப்பட்ட தகுதியில்லாத சூரபதுமனால் மானங்கெட்டு வருந்தி யொடுங்கினேன்; ஆதலால், செய்யவேண்டியவற்றை யுணராதவனாயிருக்கின்றேன்; புத்தி கெட்டேன்; மற்றைத் தேவர்களும் இத்தன்மையர்களே.

சூரபதுமனது நகரமுதலியவற்றுள்ள குப்பைகளை யொதுக்கிச் சுத்தஞ் செய்தலாகிய இழிதொழிலைச் செய்துவருந்தினேனென்று கூறினனென்பார், 'தகையில் சூரனால் மானம தொருவியே வருத்துற் றேய்ந்தனன்' என்றார். (௧௭)

அறைதரு கணத்தரு ளாதி யாகிய
விறைவநின் முனிவினுக் கிலக்குற் றாரிலை
சிறியவென் பொருட்டினுற் சீற்றங் கோடியோ
பொறைபுரிந் தருளெனப் போற்றி வேண்டினன்.

(இ-ள்.) (புகழ்ந்து) சொல்லப்பட்ட சிவகணங்களில் முதல்வராகிய நந்தியெம்பெருமானே? தேவரீரது கோபத்திற்கு இலக்காக நின்றவர்களொருவருமில்லை; அற்பனாகிய அடியேன் பொருட்டுக் கோபங்கொள்ளலாகுமோ? மன்னித்தருள்வீராகவென்று துதித்து வேண்டிக்கொண்டனன்.—எ-று.

எத்தகைய சிறந்தோரும் தேவரீரது கோபத்திற்கு முன்னில்லாராயின் சிறியேன் அக்கோபத்தின் முன்னே நிற்றற்கு எவ்வளவினனென்று தாழ்ந்து கூறினனென்பது கருத்து. (௧௮)

ஆண்டகை நந்தியெம் மடிக ளவ்வழி
மூண்டெழு தன்பெரு முனிவு தீர்ந்தியா
மீண்டுநின் னுயிர்தனை யீது நிற்கலை
மீண்டனை போகென விடைதந் தேவினன்.

(இ-ள்.) ஆண் தன்மையை யுடைய நந்தியெம்பெருமான் அப்பொழுது மிகுத்தெழுகின்ற தமது கோபத்தன்மை யொழிந்து, நாம் இவ்விடத்தில் உனது உயிரைக்கொடுத்தோம்; நிற்காதே; திரும்பிப் போகக்கடவாயென்று விடைகொடுத்தனுப்பினார்.—எ-று.

நீ செய்த விது முதற்குற்றமாகலானும், அதுவுந் தேவர்களது கட்டாயமென்று கூறியதனாலும் உன்னை மன்னித்தோமென்று கூறினரென்பார், 'ஈண்டு நின்னுயிர்தனை யீதுநிற்கலை-மீண்டனை போகென விடைதந் தேவினன்' என்று கூறினர்.

சீரிய நந்தியந் தேவ னேவலு
மாருத னவனடி வணங்கி வல்லையி
னேரறு கயிலையி னீங்கி னீடுபொன்
மேருவில் விண்ணவர் குழுவை மேவினன்.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய எமது திருநந்திதேவர் விடைகொடுத்தனுப்புதலும், வாயுதேவன் அவரது திருவடிகளை வணங்கி, விரைவாக ஒப்பற்ற திருக்கயி

லையினின்று நீங்கிப் பொன்மயமாகிய மேருமலையி னிடத்துள்ள தேவர்கள் கூட்டத்தை யடைந்தனன்.—எ-று.

ஒப்புயர்வில்லாச் சிவபெருமா னெழுந்தருளப் பெற்றுள்ளதாகலின், 'நேரறு கயிலை' என்று கூறினர். (உ0)

மேவரு காலினன் விரிஞ்சன் மாயவன்
பூவடி வந்தனை புரிந்து நந்திதன்
காவலின் வன்மையு நிகழ்ந்த காரியம்
யாவது முறைபட வியம்பி னனரோ.

(இ-ள்.) அவ்வாறு சென்ற வாயுதேவன் பிரம விஷ்ணுக்களுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளில் நமஸ்காரஞ்செய்து, திருநந்திதேவரது காவலின் திறமும், அங்கு நிகழ்ந்த காரியங்களனைத்தும் முறைமையாகச் சொல்லினன்.—எ-று.

தான் சென்றதுமுதல் பின்பு மீண்டுவந்தவரையிலும் நிகழ்ந்தவைகளை வரிசையாகக் கூறின னென்பார், 'நிகழ்ந்த காரியம் யாவது முறைபட வியம்பினன்' என்று கூறினர். (உக)

காற்றுரை வினவியே கமலக் கண்ணனு
நாற்றிசை முகத்தனு நாகர் செம்மலுஞ்
சாற்றருந் துன்பினர் தம்மி லோர்ந்திடாத்
தேற்றமொ டினையன செப்பன் மேயினர்.

(இ-ள்.) வாயுதேவனது வார்த்தைகளைக் கேட்டு, தாமரைக்கண்ணராகிய திருமாலும், சதுர்முகங்களையுடைய பிரமனும், தேவர்கள் தலைவனுகிய இந்திரனும் சொல்லுதற்கரிய துன்பமுடையவர்களாய்த் தங்களுக்குள்ளே ஆலோசித்துத் தெளிவாக இவ்வார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினர்கள்.—எ-று. (உஉ)

எந்தைதன் செய்கைதேர்ந் தேகு நீயென
வெந்திறன் மருத்தினை விடுத்து மாங்கவ
னந்திதன் னுணையா னடுக்க முற்றிவண்
வந்தன னச்சுறு மனத்த னுகியே.

(இ-ள்.) சிவபெருமானது செய்கையையுணர்ந்து நீ வரக்கடவையென்று கொடிய வல்லமையை யுடைய வாயுவை யனுப்பினேம்; அவன் திருநந்தி தேவரது அதிகாரத்தினல் நடுக்கங்கொண்டு, அச்சமுற்ற மனமுடையவனுகி இவ்விடத்திற்கு வந்தனன்.—எ-று.

எம் தந்தை என்பது, எந்தை என மரீஇயது. (உ௩)

மன்னிய கயிலைமால் வரையின் யாமெலா
மின்னினி யேகியே யீசன் றன்முன
முன்னருங் காலமொ டுற்ற நங்குறை
பன்னுத றுணிபெனப் பலருங் கூறினர்.

(இ-ள்.) நிலைபெற்ற பெரிய திருக்கயிலாயத்தில் நாமனைவரும் இப்பொழுதே சென்று சிவபெருமான் திருமுன்னே நினைத்தற்கரிய அனேக காலமாக அடைந்துள்ள நமது குறைகளை முறையிட்டுக்கொள்வதே உறுதியென்று பலருஞ் சொல்லிக்கொண்டார்கள்.—எ-று.

இனி யினி என்பது, இன்னினி என்ருயிற்று. (உச)

இவ்வகை யவரொலா மிசைந்து செம்பொனின்
மெய்வரை நீங்கியே வெள்ளி வெற்பினிற்
றெய்வதக் கோயின்முன் சென்று நந்தியை
யவ்விடை தொழுதிவை யறைதன் மேயினார்.

(இ-ள்.) இவ்வாறு அவர்களனைவருஞ் சம்மதித்துச் செம்பொன் மயமாகிய மேருமலையை விட்டுத் திருக்கயிலாயத்திலுள்ள தெய்வத்தன்மைபொருந்திய திருக் கோயிலின் முன்னே சென்று அங்குத் திருநந்திதேவரை வணங்கி இவற்றைச் சொல லத் தொடங்கினார்கள்.—எ-று. (உரு)

வேறு.

நந்தியந் தேவுகே ணங்கள்பாற் றுன்பெலாஞ்
சிந்தைசெய் திடுதியத் தேவதே வற்கியாம்
வந்தவா றோதியே வல்லைநீ யெமையவன்
முந்துறக் காட்டெனா முகமனோ டுரைசெய்தார்.

(இ-ள்.) நந்தி யெம்பெருமானே அடியேங்களிடத் துண்டாகிய துன்பங்க ளனைத்தையுங் கேட்டுத் திருவுள்ளங் கொண்டருள்வீராக; தேவரீர் அந்தத் தேவ தேவராகிய சிவபெருமானுக்கு நாங்கள்வந்த சங்கதியை விண்ணப்பஞ்செய்து, விரை வாக எங்களை அவ்வெம்பெருமான் திருமுன்னே அழைத்துக்கொண்டுபோகவேண்டு மென்று உபசாரத்துடன் பிரார்த்தித்தார்கள்.—எ-று.

நாங்கள் சூரபதுமனால் படுந்துன்பம் பெரிதாகலின் தேவரீர் அதனைத் திரு வுள்ளங் கொண்டருள வேண்டுமென்று வேண்டின ரென்பார், 'நங்கள்பாற் றுன் பெலாஞ் சிந்தை செய்திடுதி நீ' என்று கூறினார். (உசு)

மற்றிவா றுரைசெயும் வானவத் தொகையினை
நிற்றிரா லென்றவ ணிறுவியே யுறையுள்போய்க்
கற்றைவார் சடைமுடிக் கண்ணுதற் கடவுடன்
பொற்றடந் தாள்களைத் தொழுதனன் புகலுவான்.

(இ-ள்.) இவ்வாறு கூறிய தேவர் கூட்டங்களை நில்லுங்களென்று அவ்வி டத்தில் நிறுத்திவிட்டு உள்ளே சென்று, கூட்டமாகிய நீண்ட சடைமுடியையுடைய நெற்றிக்கண்ணராகிய சிவபெருமானது பொன்மயமாகிய பெரிய திருவடிகளை வணங் கிக் கூறுகின்றார்.—எ-று. (உஎ)

அண்ணலே யுனதுபொன் னடிகளைக் காணிய
விண்ணுளோர் யாவரும் வேந்தன்மா லயனொடு
நண்ணினா ரென்றலு நந்தியைத் தெரிகுநீ இத்
தண்ணிலா வேணியான் றருதியென் றருள்செய்தான்.

(இ-ள்.) எம்பெருமானே! தேவரீரது பொன்மயமாகிய திருவடிகளைத் தரி சிக்கும்பொருட்டுத் தேவர்களனைவரும் இந்திரன் திருமால் பிரமன் முதலியவர்க ளோடு வந்திருக்கின்றார்களென்று கூறவும், குளிர்ந்த இளம்பிறையையணிந்த சிவபெ ருமான் அத்திருநந்திதேவரைப் பார்த்தருளி அவர்களை யழைத்துவரக்கடவையென்று கட்டளையிட்டருளினார்.—எ-று. (உஅ)

அருள்புரிந் திடுதலு மாதியம் பண்ணவன்
திருமலர்த் தாள்களைச் சென்னியிற் சூடியே
விரைவுடன் மீண்டுறா வேதன்மா லாதியாஞ்
சுரரெலாம் வம்மெனத் தூயவன் கூவினான்.

(இ-ள்.) முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் இவ்வாறு கட்டளையிட்டருளவும், அவரது அழகிய தாமரைமலர்போன்ற திருவடிகளைச் சிரசாகவகித்து மலரகிதராகிய திருநந்திதேவர் விரைவாகத் திரும்பிவந்து, பிரமவிஷ்ணுக்கள் முதலிய தேவர்களனைவரும் வரக்கடவீர்களென் றழைத்தருளினர்.—எ-று.

யாவு மழிந்துபோகுஞ் சர்வசங்கார காலத்துச் சேஷித்து நிற்கும் பெருமானாகலின், 'ஆதியம் பண்ணவன்' என்றார். வம்மின் என்றது, வம் என நின்றது. ()

கூவியே யருடலுங் கொண்டல்பே ரொலியினாற்
றுவிலா மகிழ்வுறுஞ் சாதகத் தன்மையாய்ப்
பூவினா யகன்முதற் புகலும்வா னவரொலாந்
தேவதே வன்முனஞ் செல்லுதன் மேயினர்.

(இ-ள்.) இவ்வா றழைத்தருளியவுடனே, மேகத்தினது பேரோசையினால் கெடாத களிப்படைகின்ற சாதகப்பறவையின் தன்மையைப்போல, கமலாசனனாகிய பிரமன் முதலாகச் சொல்லப்பட்ட தேவர்களனைவரும் தேவர்கள் நாயகராகிய சிவபெருமான் திருமுன்னே போகத் தொடங்கினார்கள்.—எ-று.

மேகத்தொனியைக் கேட்ட சாதகப்பறவைகள் இனி மழைபெய்யுமென்று மகிழ்வுறுமாறுபோல, திருநந்திதேவர் மூலமாகச் சிவபெருமானது கட்டளையைக் கேட்ட மாலயனாதி தேவர்கள் இனி நங்குறை தீருமென்று மகிழ்கூர்ந்து சென்றனரென்க. சாதகப்பறவை = வானம்பாடிப்பறவை. (௩௦)

அம்மையோர் பங்குற வரியணைக் கண்ணுறு
மெம்மையா ளிறைவன்முன் னெய்தியே யாங்கவன்
செம்மைசேர் தாள்களைச் சென்னியாற் றாழ்ந்தெழீஇப்
பொய்ம்மைதீ ரன்பினா லிணையவா போற்றுவார்.

(இ-ள்.) உமாதேவியார் ஒருபாகத்தி லெழுந்தருளி யிருப்பச் சிங்காசனத்தில் வீற்றிருந்தருள்கின்ற எம்மை யடிமையாகவுடைய சிவபெருமான் திருமுன்னே யடைந்து, அவ்வெம்பெருமானது சிறந்த திருவடிகளைச்சிரசினால் நமஸ்கரித்தெழுந்து மெய்யன்புடன் இவ்வாறு துதிக்கின்றார்கள்.—எ-று.

சர்வாபீஷ்டங்களையுங் கொடுத்தருளத்தக்க திருவடியாகலான், 'செம்மைசேர்தாள்கள்' என்றார். பொய்ம்மைதீரன்பு மெய்யன்பு. (௩௧)

வேறு.

நோக்கினு நுழைகிலை நுவலு கின்றதோர்
வாக்கினு மமைகிலை மதிப்ப வொண்கிலை
நீக்கரு நிலைமையி னிற்றி யெந்தைநீ
யாக்கிய மாயமீ தறிகி லேமரோ.

(இ-ள்.) பார்வைக்கு மகப்படமாட்டீர்; சொல்லப்பட்ட வாக்கிலும் அடங்கமாட்டீர்; அளவிடுதற்குங் கூடாதவரா யிருக்கின்றீர்; நீக்குதற் கருமையாகிய (வியாபக) நிலைமையில் நிற்கின்றீர்; எம்பெருமானே! தேவரீர் உண்டாக்கிய இந்த மாயாவிலாசத்தை யாங்கள் அறியோம்.—எ-று.

சூரியப்பிரகாசமானது கண்ணுள்ள சர்வான்மாக்களுக்கும் பவுதிகப் பிரபஞ்சத்திலுள்ள சகலபொருள்களையுந் தன்னையுங் காட்டி நிற்பினும், கூகைப்புள்ளுக்குக் கண்ணிருந்தும் பரிதிமண்டலத்தையும் பதார்த்த பேதங்களையும் பார்க்கக் கூடாவாறுபோல, சிவபெருமான் சர்வான்மாக்களது திரிகரணங்களுக்குள்ளும் புறம்பும்

நிறைந்து நிற்பினும் பெத்தான்மாக்களுக்கு மறைந்தும், முத்தான்மாக்களுக்கு வெளிப்பட்டும் நிற்கும் பேரிலக்கிண முடையவராகலின், 'நோக்கினு நுழைகிலே நுவலுகின்றதோர் - வாக்கினு மமைகிலே மதிப்ப வொண்கிலே - நீக்கரு நிலைமையி னிற்றி' என்றூர். இதனை :—"பொல்லா விருளகற்றுங்கதிர் கூகையென் புட்கண்ணினுக் - கல்லா யிருந்திடு மாறெருக்கு மேயறி வோருளத்தில் - வல்லா ரறிவா ரறியார் தமக்கு மயக்கங்கண்டா-யெல்லாம் விழிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே."என்னும் பட்டணத்துப் பிள்ளையார் திருவாக்கா னறிக. (௩௨)

இருமையு மொருமையு மிரண்டு மொன்றிய
வொருமையு மன்றென வுலகம் யாவையும்
பெருமையி னியற்றிய பெரும நின்செய
லருமறை யானவு மறிதற் பாலவோ

(இ-ள்.) பேதமும், அபேதமும், பேதாபேதமும் அல்லவென்று சொல்லும்படி சர்வலோகங்களையும் மேன்மையோடு சிருஷ்டித்தருளிய எமது ஆண்டவரோ ! தேவரீரது திருவருட்செயலை அருமையாகிய வேதங்களும் அறியுந்தன்மை யுடையனவோ ?—எ-று.

இருமை-பேதம். ஒருமை-அபேதம். இரண்டு மொன்றிய வொருமை-பேதாபேதம். சிவபெருமான் இவ்வுலகத்தோடு பேதப்பொருளாகவும், அபேதப்பொருளாகவும், பேதாபேதப் பொருளாகவும் வரையறுக்கப்பட்டவ ரன்றென்பார், 'இருமையு மொருமையு மிரண்டு மொன்றிய-வொருமையு மன்றென வுலகம் யாவையும்-பெருமையி னியற்றிய பெரும' என்றூர். இதனை, "இருமையி னொருமையு மொருமை தன்பெருமையும்" என்னுந் திருஞானசம்பந்தப் பிள்ளையாரருளிய திருவெழுகூற்றிருக்கையானும், "இன்றெனக் கருளி யிருள்கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று-நின்ற நின்றன்மை நினைப்பற நினைந்தே னியலாற் பிறிது மற்றின்மை - சென்று சென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றூந் திருப்பெருந்துறை யுறை சிவனே - யொன்றுநீ யல்லையன்றி யொன்றில்லை யாருனை யறிய கிற்பாரோ" என்னுந் திருவாசகத் திருமுறையானும். "ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று-நன்றன்று தீதன்று நானன்று - நின்ற - நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று - தலையன் றடியன்று தான்"—என்னுந் திருக்களிற்றுப் படியா ரானுமறிக. பேதம்-இருளும் வெளியும் போல்வது. அபேதம்-பொன்னும் பணியும் போல்வது. பேதாபேதம்-சொல்லும் பொருளும்போல்வது. இதனை.—"புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப் புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப் - பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ் சொற்பொருள்போற் பேதாபேதமு மின்றிப் பெருநூல் சொன்ன - வறத்திறனுல் விளைவதா யுடலுயிர் கண்ணருக்க னறிவொளிபோற் பிரிவரு மத்துவித மாகுஞ் - சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றூம்" என்னுஞ் சிவப்பிரகாசத்தா னறிக. இருமை என்பதற்கு, சிவசத்திகள் எனவும், ஒருமை என்பதற்கு, சிவம் எனவும், இரண்டுமொன்றிய வொருமை என்பதற்கு அர்த்தனரீசுரமெனவுங் கூறினுமாம். (௩௩)

உருவொடு தொழில்பெய ரொன்று மின்றியே
பரவிய நீயவை பரித்து நிற்பது
விரவிய வுயிர்க்கெலாம் வீடு தந்திடுங்
கருணைய தேயலாற் கருமம் யாவதே.

(இ-ள்.) நாமரூபவியாபாரங்கள் ஒன்றுமில்லாமல் சர்வவியாபகமாக நிறைந்திருக்கின்ற தேவரீர் அந்த நாமரூப வியாபாரங்களைக் கொண்டு நிற்பது உலகத்திற்

பரவியுள்ள எல்லாவுயிர்களுக்கும் முத்தியைத்தந்தருளுகின்ற திருவருளேயல்லாமல், வேறே யெந்தக்காரிய மிருக்கின்றது ?—எ-று.

நிஷ்கள ரூபியாயுள்ள சிவபெருமான் சகளத் திருவுருவங் கொண்டருளிய தன்மை ஆன்மாக்கள் வீடு பெற்றுய்தற்பொருட்டே யென்பார், 'உருவொடு தொழில் பெயரொன்று மின்றியே-பரவிய நீயவை பரித்து நிற்பது - விரவிய வுயிர்க்கெலாம் வீடு தந்திடுங் - கருணையதே' என்று கூறினர். இதனை—" உருவருள் குணங்களோடு முணர்வரு ளுருவிற் றோன்றலுங் - கருமமு மருள்பரன்றன் கரசர ணாதி சாங்கந் - தரு மருளு பாங்கமெல்லாந் தானரு டனக்கொன் றின்றி - யருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னசிந்த னன்றே" என்னுஞ் சிவஞானசித்தியா ரானறிக. (௯௪)

அவ்வுயிர் யாவுநின் னருளி லாவழிச்
செய்வினை புரிகில சிறிது மாதலால்
வெவ்விய நயப்பொடு வெறுப்பி லாதநீ
யெவ்வகை யோவுல கியற்றுந் தன்மையே.

(இ-ள்.) அந்த வுயிர்களனைத்தும் தேவரீரது திருவருளில்லா விடத்துத் தாஞ் செய்தற்குரிய யாதொரு தொழிலையுஞ் சிறிதுஞ் செய்யமாட்டா ; ஆதலால் மிக்க விருப்பத்துடனே வெறுப்புமற்ற தேவரீர் உலகத்தை நடாத்துந் தன்மை எவ்வண்ணமோ?.—எ-று.

சிவபெருமானது திருவரு ளில்லாவிடத்துச் சர்வான்மாக்களுஞ் செயலற்றுக் கிடக்குமென்பார், 'அவ்வுயிர் யாவு நின்னருளிலாவழிச் - செய்வினை புரிகில' என்றார். " எல்லா வுயிர்க்கு முயிரரு ணேச ரிவரன்சவி - னல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே - வில்லாடன் மார னிருக்கவும் யோகம் விளைத்த வந்நாள் - புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே" என்பதனு னறிக. (௯௫)

முன்னதின் முன்னென மொழிது மேயெனிற்
பின்னதின் பின்னுமாப் பேச நிற்றியா
லென்னவை யேயெனி லொழிந்த தல்லையோ
வென்னென நின்னையா மேத்து கின்றதே.

(இ-ள்.) முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளா யுள்ளவரென்று சொல்லுவோ மென்னின், பின்னுக்குப் பின்னு யுள்ளவரென்று சொல்லும்படி யெழுந்தருளி யிருக்கின்றீர்; அவ்விரண்டுதா னென்போமாயின், மற்றவைக ளல்லா தவரோ ? யாங்கள் தேவரீரை யாதென்றுதுதிப்பது ?—எ-று.

இதனை :—" முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே-பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்றும், " மூப்பானிளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள்-வீப்பான் வியன்றில்லை யானரு ளால்விரி நீருலகங்-காப்பான் பிரியக் கருதுகின்றார் நமர்கார்க் கயற்கட் - பூப்பா னலமொளி ரும்புரி தாழ்குழற் பூங்கொடியே" என்றும் வரும் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்கானறிக. (௯௬)

புல்லிய புரம்பொடித் ததுவுங் காமனை
யொல்லென வெரித்தது முனக்குச் சீர்த்தியோ
வெல்லையில் விதிமுத லெனைத்து மீண்டுநின்
னல்லரு ளாணையே நடாத்து மென்கையால்.

(இ-ள்.) அளவில்லாத சிருஷ்டிமுதலிய அனைத்தையுந் தேவரீரது நல்ல திருவருட்சத்தியே இங்குச்செய்தருளுமென்று கூறுமுறைமையால், அற்பமாகிய திரி

புரத்தை நகைத்தெரித்தருளியதும், மன்மதனை விழிவில் விழித்தெரித்தருளியதுந் தேவரீருக்குக் கீர்த்தியோ ?.—எ-று.

சூரிய சந்நிதானத்தில் சகல தொழிலுந் தானே நடத்தல்போலச் சிவபெருமான் நிர்விகாரியாயிருக்கவும் அவரது சந்நிதியில் சிருஷ்டி முதலிய சகல காரியங்களுந் தானே நடக்குமென்பார், 'எல்லையில் விதிமுத லெனைத்து மீண்டு நின்-னல்லருளாணையே நடாத்தும்' என்று கூறினர் இதனை :—"கந்தமல ரயன்படைக்கு முலகமெல்லாங் கண்ணனளித் திடுமவையெங் கடவு டானே - யந்தமுற வழித்திடுவ ளுதலாலே யயனரியு மவனதுய ரதிகா ரத்து - வந்தமுறை தந்தொழிலே மன்னுவிப்பனெல்லாம் வருவிப்பன் விகாரங்கண் மருவான் வானின் - முந்திரவி யெதிர்முளரி யலர்வுறுமொன் றலர்வான் முகையாமொன் றென்றுலரு முறையி னுமே" என்னுஞ் சிவப்பிரகாசத்தானும், "பூவண்ணம் பூவின் மணம்போல மெய்போத வின்ப - மாவண்ண மெய்கொண்ட வன்றன்வலி யாணை தாங்கி - மூவண்ண றன்சந்நிதி முத்தொழில் செய்ய வாளா - மேவண்ண லன்னுன் விளையாட்டின் வினையை வெல்வாம்" என்னுந் திருவிளையாடற் புராணத்தானு மறிக. (௩௭)

எங்களை முன்னரோ வியல்பி னீந்தனை
யெங்களை யிவ்வர சியற்று வித்தனை
யெங்களோ டொருவனென் றிருத்தி நின்செய
லெங்களி னறிவரி தென்று போற்றினர்.

(இ-ள்.) அடியேங்களை முற்காலத்திலேயே படைத்தருளினீர், அடியேங்களை இவ்வரசாட்சியைச் செய்யும்படி யருள்செய்தீர். எங்களில் ஒருவராகவு மெழுந்தருளியிருக்கின்றீர் ; (அவ்வாறிருப்பினும்) தேவரீரது திருவருட்செயலை எங்களால் அறிதற்கருமையாகும் என்று துதிசெய்தார்கள்.—எ-று.

அரிபிரமேந்திராதிதேவர்கள் சிவபெருமானால் படைக்கப்பட்டவர்களென்பார், 'எங்களை முன்னரோ வியல்பி னீந்தனை' என்றும் இவர்கள் தற்சுதந்தரர்களாய்ச் சிருட்டியாதி தொழில்களைச் செய்பவரன்றென்பார், 'எங்களையிவ்வரசியற்றுவித்தனை' என்றும், உபசாரமாத்திரத்தானே திரிமூர்த்தி சமானத்துவங் கூறுவதன்றி உண்மையில் திரிமூர்த்திபரரோயாவனென்பார், 'எங்களோ டொருவனென் றிருத்தி' என்றும், தேவரீரது முடிவிலாற்ற லுடைமையாகிய பேரருட்டிறத்தை யெம்மாலறிதற்கரிதென்பார், 'நின்செய லெங்களி னறிவரிது' என்றுங் கூறினர்.—"செங்கண்மாறன்னை யென்னைத் திண்டிறன் மொய்ம்பி னல்கி - யங்கண்மா ஞாலங் காப்பு மளிப்பது முதவி யாமு-முங்கள்பா லிருத்து மென்றெம் முயிருணின் றியற்று நின்று-னெங்களான் முடியுஞ் செய்கை யாவது மில்லை கண்டாய்" என்னுந் தக்ஷகாண்டத்தானும், "வான மேத்தயான் வைகுந்த வாழ்வு பெற்றதுவு - ஞான நான்முகன் சத்திய வுலக நண்ணியது - மேனை வானவர் தத்தம வாழ்க்கை யெய்தியது-மானு யர்த்தவன ருட்குறி யருச்சனைப் பயனால்" என்னுங் காஞ்சிப்புராணத்தானும், "எம்மொடு மொருவ னாகியோர் கிரியை யியற்றுவான் போலவு மியற்றும் - பொம்மல தடைந்த வுயிர்தொறு மலரிற் பொருந்திய விரையெனப் பொருந்துஞ்-செம்மைகொ ளவனே மறைமுதற் கலைக டெரிந்தெமக் குணர்த்தலாற் றெளிந்தே - மம்மர்கொள் மனத்துப் பேதையா யினையோ வவனையெம் போலநீ மதித்தாய்" என்னுங் கந்தபுராணச் சுருக்கத்தானும், "தேவரி லொருவ னென்பார் திருவுருச் சிவனைத் தேவர் - மூவராய் நின்ற தோரார் முதலுறுப் பாதி மாத - ராவது முணரா ராதி யரியயற் கறிய வொண்ணு -

மேவுறு நிலையு மோரா ரதனுரு விளைவு மோரார்'' என்னுஞ் சிவஞான சித்தியாரானு மறிக. (௩அ)

வேறு.

அவ்வகை யமர ரெல்லா மன்புசெய் தேத்து மெல்லை
மைவரு மிடற்றுப் புத்தேண் மற்றவர் வதன நோக்கி
நொவ்வுற லெய்திச் சிந்தை நுணங்கினீர் நுங்கட் கின்னே
யெவ்வர மெனினு மீதும் வேண்டிய திசைத்தி ரென்றான்.

(இ-ள்.) அவ்வாறு தேவர்களனைவரும் அன்புசெய்து துதிக்கும்பொழுது கருநிறம்விளங்குங் கண்டத்தினையுடைய சிவபெருமான் அத்தேவர்களது முகங்களைப்பார்த்தருளி, நீங்கள்வருத்தத்தால் மனத்தளர்ச்சியடைந்திருக்கின்றீர்கள். உங்கட்கு இப்பொழுது எந்தவரம் வேண்டுமாயினும் தருகின்றோம், வேண்டியதைச்சொல்லுங்களென்றருளிச்செய்தனர்.—எ-று. (௩௯)

என்றலு மமரர் சொல்வார் யாமெலா மிந்நாள் காறும்
வன்றிற லவுணர் தம்மால் வருந்தின மதனை நீங்கி
நன்றிகொ டொல்லை யாக்க நண்ணுவா னுக நின்பா
லொன்றொரு வரம்வேண் டுற்று மதனியல் புரைத்து மன்றே.

(இ-ள்.) இவ்வாறு சிவபெருமான் அருளிச்செய்யவும், தேவர்கள் விண்ணப்பஞ்செய்வார்கள், நாங்களிதுவரையிலும் கொடிய வலிமையையுடைய அசுரர்களால் வருத்தமுற்றோம்; அவ்வருத்தத்தையொழித்து நன்மைமிக்க பழையசெல்வத்தையடையும்பொருட்டுத் தேவரீரிடத்து நிலைபெற்ற ஒருவரத்தைவேண்டுகின்றோம், அவ்வரத்தின்றன்மையையும் விண்ணப்பஞ் செய்கின்றோம்.—எ-று.

பூர்வம் விசனமற்றனுபவித்த செல்வமாகலின், 'நன்றிகொ டொல்லை யாக்கம்' என்றார். (௪0)

மும்மையி னுயிர்கள் பெற்ற முகிழ்முலைக் கன்னி யாகு
மம்மையை மணந்த தன்மை யாங்கவ ளிடமா வீங்கோர்
செம்மலை யளித்தற் கன்றே தீவினைக் கடற்பட் டுள்ள
வெம்மையா ளுவதற் கேதுக் காட்டிய வியற்கை யல்லால்.

(இ-ள்.) மூன்றுவகையாகவுள்ள ஆன்மாக்களைப் பெற்றருளிய அரும்பு போன்ற ஸ்தனங்களையுடைய கன்னிகையாகிய உமாதேவியாரைத் திருமணஞ்செய்தருளிய தன்மை,அவ்வுமாதேவியாரிடத்தினின்றும் ஒருபுத்திரனையளித்தற்கன்றோ? அதுவும், தீவினையாகிய கடலிலகப்பட்டுள்ள அடியேங்களை யாட்கொள்ளுதற்குக் காரணங்காட்டிய தன்மையேயன்றிவேறில்லை.—எ-று.

மும்மையி னுயிர்களாவார்,—விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்பவர்கள். இவருள், விஞ்ஞானகலர் ஆணவ மென்னு மொருமல முடையவர்களும், பிரளயாகலர் ஆணவ கன்ம மென்னு மிருமல முடையவர்களும், சகலர் ஆணவ கன்ம மாயை யென்னு மும்மல முடையவர்களுமாம். இவர்களுக்குச் சிவபெருமா னருள்புரியுங்கால், விஞ்ஞானகலர்க்கு அறிவுவடிவாக வுள்ளேநின் றருள்புரிந்தும், பிரளயாகலர்க்கு மான்மழுசதுர்ப்புஜமூர்த்தியாய்நின் றனுக்கிரகித்தும், சகலர்க்கு ஆசாரியராக வெழுந்தருளித் திருவருள்புரிந்துங் காத்தருள்வரென வறிக. இதனை,—"உரைதருமிப் பசுவர்க்க முணரின் மூன்றா முயருமவிஞ் ஞானகலர் பிரளயாகலர் சகலர் - நிரையின் மல மலங்கன்ம மலங்கன்ம மாயை நிற்குமுத லிருவர்க்கு நிராதார மாகிக் - கரையிலருட் பரன்றுவிதா சத்திநிபா தத்தாற் கழிப்பன்மலஞ் சகலர்க்குக் கன்ம வொப்பிற் -

றளையிலா சான்மூர்த்தி யாதார மாகித் தரித்தொழிப்பன் மலஞ்சதுர்த்தா சத்திநிபா தத்தால்" என்னுஞ் சிவஞானசித்தியாரா னறிக. (௬௧)

ஆதியு நடுவு மீறு மருவமு முருவு மொப்பு
மேதுவும் வரவும் போக்கு மின்பமுந் துன்பு மின்றி
வேதமுங் கடந்து நின்ற விமலவோர் குமரன் றன்னை
நீதரல் வேண்டு நின்பா னின்னையே நிகர்க்க வென்றார்.

(இ-ள்.) ஆதிமத்தியாந்தமும் அருவமும் உருவமும் ஒப்பும் எதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பமுமில்லாமல் வேதங்களையுங் கடந்துநின்ற மலரகிதராகிய எமது ஆண்டவரே! ஒரு புத்திரனைத் தேவரீருக்கொப்பாக (உமாதேவியாரிடத்திலன்றித்) தேவரீரிடத்திலேயே யளித்தருளல் வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள்.—எ-று.

இதனை—"ஆதியுமந்தமுமில்லா வரும்பெருஞ்சோதி" என்றும், "சிவனுருவருவுமல்லன் சித்தினோடசித்துமல்லன்" என்றும், தன்னிகருயர்ச்சி யில்லான் காப்பியத்தலைவனாக' என்றும், "காரணங்கற்பனைகடந்தகருணை திருவுருவாகி" என்றும், "போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே" என்றும், "இன்பமுந் துன்பமுமில்லானே" என்றும், வேதங்களையாவெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே" என்றும் வரும் பிரமாணங்களானறிக. (௬௨)

வந்திக்கு மலரோ னாதி வானவ ருரைத்தல் கேளாப்
புந்திக்கு ளிடர்செய் யற்க புதல்வனைத் தருது மென்னா
வந்திக்கு நிகர்மெய் யண்ண லருள்புரிந் தறிஞ ராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுக மாறுங் கொண்டான்.

(இ-ள்.) துதிக்கின்ற பிரமன் முதலிய தேவர்கள் விண்ணப்பஞ் செய்துகொண்டதைக் கேட்டருளி, நீங்கள் மனதில் வருத்தங்கொள்ளாதீர்கள்; ஒரு புத்திரனைத் தந்தருளுகின்றோமென்றருளிச்செய்து, செவ்வானம்போலுந் திருமேனியையுடைய சிவபெருமான் திருவருள்புரிந்து மெய்ஞ்ஞானிகளால் தியானஞ்செய்யப்பட்ட தமது புராதனமாகிய ஆறுதிருமுகங்களையுங் கொண்டருளினார்.—எ-று.

சிவபெருமான்கொண்டருளிய ஆறுதிருமுகங்களும் மெய்ஞ்ஞானிகள் சதா தமதுள்ளத்தில் சிந்திக்கப்பெற்றுள்ளதேயன்றி, ஈண்டு நவீனமாகக்கொண்டுள்ளதன்றென்பார், 'அறிஞராயோர் - சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுக மாறுங் கொண்டான்' என்று கூறினார். ஆறு திருமுகங்களாவன :—ஈசானம் - தற்புருடம் - வாமனம் - அகோரம் - சத்தியோசாதம் - அதோமுகம் என்பன. இதனை :— "பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப் - பாங்குறையு முக்கட் பரஞ்சோதி - யாங்கொருநாள் - வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி-யைந்து முகத்தோடதோமுகமுந் - தந்து - திருமுகங்க ளாறாகிச் செந்தழற்கணாறு - மொருமுகமாய்த் தீப்பொறியாறுய்ப்ப" எனவருங் குமரகுருபர சுவாமிகள் திருவாக்கானறிக. (௬௩)

நிற்புறு மமரர் யாரு நெஞ்சுதுண் ணென்ன நீடு
மற்புத நீர ராகி யருண்முறை யுன்னிப் போற்றச்
சிற்பரன் றான்கொண் டுள்ள திருமுக மாறு தன்னிற்
பொற்புறு நுதற்கண் டோறும் புலிங்கமொன் றொன்று தந்தான்.

(இ-ள்.) திருமுன்னேநின்ற தேவர்களனைவரும் மனந்திடுக்கிட்டு மிக்க ஆச்சரியமடைந்தவர்களாய்த் திருவருண் முறையையை நினைத்துத் துதிக்கவும், சிவ

பெருமான் தாம்கொண்டருளிய ஆறு திருமுகங்களில் அழகிய நெற்றிக்கண்கள்தோறும் ஒவ்வொரு தீப்பொறிகளை யளித்தருளினர்.—எ-று.

ஆறு திருமுகங்களினும் ஆறு நெற்றிக்கண்ணுடைமையின், அந்நெற்றிக்கண்களினின்றும் ஆறு தீப்பொறி யுண்டாயின வென்க. (௪௪)

ஆவதோர் காலை யீச னறுமுக நுதற்கண் மாட்டே
மூவிரு பொறிக டோன்றி முளரியான் முதலா வுள்ளோ
ரோவரு மணுகல் செல்லா வெல்லைதீர் வெம்மைத் தாகிப்
பூவுல கண்ட முற்றும் பொள்ளெனப் பராய வன்றே.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் சிவபெருமானது ஆறுதிருமுகங்களிலுள்ள நெற்றிக்கண்களினிடத்தில் ஆறு தீப்பொறிகள்தோன்றி பதுமாசனனாகிய பிரமன் முதலிய யாவரும் அடையக்கூடாத அளவற்ற வெப்பமுடையதாய் நிலவுலகமும் தேவலோகமுமாகிய எவ்விடங்களிலும் விரைவாகப்பரவின.—எ-று.

'அண்டமுற்றும்' என்பதற்கு, பிரமாண்ட முழுதும் எனப்பொருள் கூறினுமாம். (௪௫)

மாதண்டங் குலவு நேமி வால்வளை வயிர வொள்வாள்
கோதண்டம் பரித்தோன் வேதாக் குறித்துணர் வரிய சோதி
வேதண்டம் பரவிற் றென்ன மேதினி சூழ்ந்து விண்போய்
மூதண்டங் காறுஞ் சென்ற முதல்வன்கண் ணுதலிற் செந்தீ.

(இ-ள்.) சிவபெருமானது நெற்றிக்கண்ணிற் றோன்றிய நெருப்புப்பொறிகள், பெரிய தண்டு விளங்குகின்ற சக்கரம், வெள்ளிய சங்கு, வயிரம்பொருந்திய ஒள்ளியவாள், கோதண்டம் என்னும் பஞ்சாயுதங்களையும் ஏந்திய திருமாலும், பிரமனும் தேடியறிதற்கரிய சோதிமலையானது பரவியதுபோல, உலகத்திற்பரவி விண்ணுலகிற் சென்று பிரமாண்டம்வரையிலுஞ்சென்றன.—எ-று.

சோதிவேதண்டம் என்றது, பிரமவிஷ்ணுக்க ளிருவரும் தாமேபரம்பொருளென்று ஒருவரோடொருவர் வாதிட்டுப் பெரும்போர் புரியுங்கால், அவர்கள் மத்தியில் அக்கினிஸ்தம்பமாக வெழுந்தருளிய ஸ்ரீ அருணாசலத்தை. இதனை :—" பிரமனரியென்றிருவருந்தம் பேதைமையாற்-பரமமியாம்பரம மென்றவர்கள்பதைப்பொடுங்க-வரனு ரழலுருவா யங்கே யளவிறந்து - பரமாகிநின்றவா தோணோக்க மாடாமோ" என்னுந் திருவாசகத்தானறிக. (௪௬)

வேறு.

மங்கையோர் பங்குடை வள்ள லேந்திய
செங்கன லூழியிற் செறிவ தாமென
வங்கவன் விழிபொழி யனலம் யாவையு
மெங்குள வுலகமு மீண்ட லுற்றவே.

(இ-ள்.) உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய சிவபெருமான் (திருக்கரத்தில்) ஏந்திய சிவந்த அக்கினியானது பிரளயகாலத்தில் (உலகமுழுதும்)வியாபிப்பதுபோல, அச்சிவபெருமானது நெற்றிக்கண்கள்பொழிந்த தீப்பொறிகளனைத்தும் எல்லா வுலகங்களிலுஞ் செல்லத்தொடங்கின.—எ-று.

மகாசங்காரகாலத்தில் சிவபெருமான் திருக்கரத்திலேந்திய அக்கினியே யுலகமெங்கும் பரவி யழிப்பதாகலின் 'மங்கையோர் பங்குடை வள்ள லேந்திய-செங்கன லூழியிற் செறிவ தாமென' என்றார். இதனை—" சாற்றியிடு மங்கியிலே சங்கா

ரம்" என்னும் உண்மைவிளக்கத்தானும், "தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலு-மாற்றுவ தாரழ லமைத்ததோர் கரமே" என்னுஞ் சிதம்பர மும்மணிக்கோவையானு மறிக. (௭௭)

ஆங்கனந் தழலெழ வகில முற்றுமா
யோங்கிய கால்களு முலைவுற் றோய்ந்தன
வாங்கிய திரைக்கடல் வறந்த தாயிடைத்
தீங்கனல் வடவையுஞ் செருக்கு நீங்கிற்றால்.

(இ-ள்.) அவ்வாறு நெருப்புப்பொறிக ளுண்டாகவும், உலகமுழுதும் வியாபித்துள்ள வாயுக்களும் வலிகுன்றி யோய்ந்தன. உலகத்தை வளைந்து மோதுகின்ற அலைகளையுடைய கடலும் வற்றியது. அக்கடலிலுள்ள கொடிய தீயினையுடைய வடவாமுகாக்கினியுந் தன்செருக்கொழிந்தது.—எ-று.

தீயின் காதலன், என்னும் பெயரைப் பெற்றுள்ள வாயுக்களும் இத்தீப்பொறியின் வேகத்திற்கஞ்சி யொடுங்கிய தெனவறிக. (௭௮)

பக்கன பாரகம் பதலை முற்றுற
நெக்கன பணிகண்மெய் நெளித்து நீங்கிய
திக்கய மரற்றியே தியக்கமுற்றன
தொக்கன வுயிர்த்தொகை துளக்க முற்றவே.

(இ-ள்.) பூமியினிடங்கள் பிளவுபட்டன. அஷ்டகுலபர்வதங்களும் நெக்குவிட்டன. (பூமியைத்தாங்குகின்ற) அஷ்டநாகங்களும் உடல்நெளித்து நீங்கின. அஷ்டதிக்கியானைகள்வீரிட்டுத்தியங்கின. நெருங்கிய உயிர்க்கூட்டங்கள்நடுக்கமெய்தின.

காரண மில்லவன் கண்ணிற் கான்றதீப்
பேரருள் புரிந்திடப் பிறந்த பான்மையா
லோருயிர் தன்னையு மொழிவு செய்தில
வாரையு மெவற்றையு மச்சஞ் செய்தவே.

(இ-ள்.) தனக்கோர் காரணமில்லாதவராகிய சிவபெருமானது திருக்கண்களினின்றும் வெளிப்பட்ட தீப்பொறிகள் (உயிர்களை) இரக்ஷித்தருளும் பொருட்டு உண்டாகிய தன்மையினால், ஒருயிரையும் நாசஞ்செய்யவில்லை; (ஆயினும்) எல்லாரையும் எல்லாவற்றையும் நடுக்கஞ்செய்தன.—எ-று.

காரணமில்லவன் - சுயம்பாக வுள்ளவன். தீயானது உயிர்களை வருத்துவது முறைமையாயினும், இத்தீப்பொறி எல்லாம் வல்ல இறைவனால் உலக ரக்ஷணார்த்தந் தோற்றுவிக்கப் பட்டமையால், அவை யெவ்வுயிர்களையும் வருத்தா தொழிந்தன வென்க. (௮௦)

அன்னதன் வெம்மைகண் டமலன் பாங்குறை
கன்னியும் வியர்த்தனள் கலங்கி யேயெழீஇப்
பொன்னடி நூபுரம் புலம்பித் தாக்குறத்
தன்னதோ ருறையுளைச் சார வோடினாள்.

(இ-ள்.) அத்தீப்பொறியின் வெப்பத்தைப்பார்த்துச் சிவபெருமானருகிலெழுந்தருளிய உமாதேவியாரும் வியர்த்தவராய் மனங் கலக்கமுற்றெழுந்து அழகியதிருவடியிலணிந்த பொற்சிலம்புகள் சப்தித்து ஒன்றோடொன்று தாக்கும்படி தமது அந்தப்புரத்தைச் சேருதற்கு ஓடியருளினர்.—எ-று.

சிவபெருமானது நெற்றிக்கண்ணி னின்றுந் தோன்றிய தீப்பொறியைக்கண்டு அச்சிவ பரஞ்சுடரின் வேறாகாத உமாதேவியாரும் கலங்கி வியர்த்தனராயின், மற்றையாரைக் குறித்துக் கூறவேண்டா வென்பது கருத்து. (௫௧)

முண்டக னாதியா முன்னர் நின்றுள
வண்டர்கள் யாருமவ் வழல்கண் டஞ்சியே
விண்டனர் தலைத்தலை வெருவி யோடினார்
பண்டெழு விடத்தினாற் பட்ட பான்மைபோல்.

(இ-ள்.) சிவபெருமான் திருமுன்னே நின்றுகொண்டிருந்த பிரமன்முதலாகிய தேவர்களனைவரும், அந்தத்தீப்பொறிகளைப் பார்த்துப்பயந்து, முற்காலத்துத் தோன்றிய ஆலகாலவிஷத்தினால் துன்பமடைந்த தன்மையைபோலப் பிரிந்து வெவ்வேறாக நீங்கிப் பயந்தோடினார்கள்.—எ-று.

இறவா மருந்தாகிய அமுதம் பெறக்கருதித் திருப்பாற்கடலைக் கடைந்த தேவர்கள் அதற்குப் பிரதிகூலமாக விடந்தோன்றப்பெற்று வருந்திய தன்மைபோல, சூராதிகளா லடைந்த துன்பமொழிக்கும்பொருட்டுப் புத்திரனைக்குறித்துப் பிரார்த்தித்த தேவர்கள் அதற்குப் பிரதிகூலமாகத் தீப்பொறி தோன்றப்பெற்று வருந்தினமையின், 'அழல்கண் டஞ்சியே - விண்டனர் தலைத்தலை வெருவி யோடினார் - பண்டெழு விடத்தினாற் பட்டபான்மை போல்' என்று கூறினார். (௫௨)

தீங்கன லடர்தலுஞ் செம்பொற் கோயிலின்
யாங்கணு மாகியே யிரிந்த பண்ணவர்
வீங்கிய வுயிர்ப்பொடு மீண்டு மெந்தைதன்
பாங்கரில் வந்தனர் பரியு நெஞ்சினார்.

(இ-ள்.) வெப்பம்பொருந்திய அந்த நெருப்புப்பொறிகள் எங்கும் பரவிய வளவில், செம்பொன்மயமாகிய திருக்கோயிலின் எவ்விடங்களிலும் விலகியோடியதேவர்கள் வருந்திய மனத்தினை யுடையவர்களாய்ப் பெருமூச்சுடன் பின்னும் எமது சிவபெருமானருகில் வந்து சேர்ந்தார்கள்.—எ-று.

தீங்கனல் - மெலித்தல் விகாரம். (௫௩)

வலைத்தலை மானென வன்னி சூழ்ந்துழித்
தலைத்தலை யிரிந்துளோர் தம்மின் மீள்குரு
நலத்தகு கண்ணுத லாதற் சேர்ந்தனர்
கலத்தலை யகன்றிடாக் காகம் போலவே.

(இ-ள்.) நெருப்புப்பொறி சூழ்ந்துகொண்டபொழுது வலையிலகப்பட்ட மானைப்போல வெவ்வேறாக ஓடினதேவர்கள் தங்களுக்குள்ளே திரும்பி, மரக்கலத்தின் சிகரத்தைவிட்டுநீங்காத காகத்தைப்போல, நன்மைமிக்க நெற்றிக்கண்ணராகியசிவபெருமானை யடைந்தார்கள்.—எ-று.

வலையி லகப்பட்ட மான் எவ்விடத்துச் சுழன்றோடினும் அவ்வலைக்குள்ளேயே கிடந்தலைய வேண்டுவது போலத் தீப்பொறிக்குள் ளகப்பட்ட தேவர்கள் விலகிச் செல்வதற்கு வேறிடங் காணாமையின், 'வலைத்தலை மானென' என்றும், மரக்கலத்திற் றங்கிய காக்கைகள் எங்குப் பறந்தோடினும் தாம் தங்குதற்கு வேறிடங் காணாது பின்னும் அம் மரக்கலத்திலேயே வந்து சேர்வதுபோலச் சிவசந்நிதானத்தி னின்றும் பயந்தோடிய தேவர்கள் தங்கட்கு வேறாதரவுகாணாது, பின்னும் அச்சிவபெருமானையே சரணமாக வந்தடைதலின், 'நலத்தகு கண்ணுத லாதற் சேர்ந்தனர் - கலத்தலை யகன்றிடாக் காகம் போலவே' என்றுங் கூறினார். (௫௪)

தோற்றிய நுதல்விழிச் சுடரின் சூழ்வினுக்
காற்றல ராகியே யடைந்த வானவர்
நாற்றடம் புயமுடை ஞான நாயகற்
போற்றிசெய் தினையன புகல்வ தாயினர்.

(இ-ள்.) நெற்றிக் கண்ணினின்றுந் தோன்றிய நெருப்புப் பொறிகள் பரவியதற்காகச் சகிக்காதவர்களாய்ச்சரணடைந்த தேவர்கள் பெரிய நான்கு திருத்தோள்களையுடைய ஞானமுதல்வராகிய சிவபெருமானைத்துதித்து இவ்வாறுவிண்ணப்பஞ்செய்கின்றவர்களானார்கள்.—எ-று. (௫௫)

வெந்திற லவுணரை வீட்டு தற்கொரு
மைந்தனை யருள்கென வந்து வேண்டினோ
மந்தமி லழலைநீ யருடல் செய்தனை
யெந்தையே யெங்ஙனம் யாங்க ளுய்வதே.

(இ-ள்.) கொடியவல்லமையையுடைய அசுரர்களை அழிக்கும்பொருட்டு ஒரு புத்திரனைத் தந்தருளவேண்டுமென்று வந்து பிரார்த்தித்துக்கொண்டோம்; தேவரீர் முடிவில்லாத அக்கினியை அளித்தருளினீர்; எம்பெருமானே! அடியேங்கள் எவ்வாறுபிழைப்பது.—எ-று. (௫௬)

பங்குறை யுமையவள் பாணி யின்வரு
கங்கையெவ் வுலகமுங் கலந்த தாமென
விங்குநின் னுதல்விழி யிருந்து நீங்கிய
பொங்கழ லெங்கணும் பொள்ளென் றீண்டிய.

(இ-ள்.) தேவரீரது இடப்பாகத்திற் பொருந்திய உமாதேவியாரது திருக்கரத்தினின்றுந் தோன்றிய கங்கையானது எந்த வுலகத்திலும் வியாபித்ததுபோல, இவ்விடத்தில் உமது நெற்றிக்கண்ணினின்றும் வெளிப்பட்ட மிகுந்த நெருப்புப்பொறிகள் எவ்விடத்திலும் விரைந்து பரவின.—எ-று.

பங்குறையுமையவள்பாணியின்வருகங்கை' என்பதன் வரலாற்றைத் தக்ஷகாண்டத்துக்கூறுதலின், ஆண்டுக் காண்க. (௫௭)

கற்றையஞ் சுடர்பொழி கனல்க ளின்றொகை
சுற்றியெவ் வுலகமுந் துவன்ற லுற்றவான்
மற்றொரு கணத்தவை மாற்றி டாயெனின்
முற்றுயிர்த் தொகையையு முடிவு செய்யுமால்.

(இ-ள்.) கூட்டமாகிய அழகிய சுடரைப்பொழிகின்ற நெருப்பின்றொகுதிகள் எவ்வுலகத்தினுஞ் சூழ்ந்து நெருங்கத்தொடங்கின; அவற்றை ஒரு கணப்பொழுதிற்குள்ளே நீக்காதிருப்பீராயின், அவை உயிர்க்கூட்டங்களனைத்தையும் நாசஞ்செய்துவிடும்.—எ-று. (௫௮)

விஞ்சிய பேரழல் வெம்மை யாற்றலா
தஞ்சின மிரிந்தயா மைய நின்னிரு
செஞ்சர ணடைந்தனந் தெரியி னீயலாற்
றஞ்சம துளதுகொ லெம்மைத் தாங்கவே.

(இ-ள்.) எமது ஆண்டவரே! அதிகரித்துவருகின்ற பெரிய அக்கினியின் வெப்பத்தைச் சகிக்கமுடியாமல் பயந்து கலைந்தோடிய அடியோங்கள் தேவரீரது இரண்டு திருவடிகளை அபயமாக வடைந்தோம், ஆலோசிக்குமிடத்தில் எங்களைக்காத்தருளுதற்குத் தேவரீரையன்றி வேறே ஆதரவு உண்டோ?—எ-று. (௫௯)

மலக்குறு மனத்தினேம் வருத்த முற்றவு
முலக்குற நீக்குநீ யொல்லை யெம்மிடை
யலக்கண தியற்றுதி யாயி னன்னதை
விலக்குறு நீரினூற் வேறி யாவரோ.

(இ-ள்.) கலக்கமுற்றிருக்கின்ற மனத்தினையுடைய அடியேங்களது துன்பங்கள் முழுவதுங் கெடும்படி நீக்கியருளுந்தேவரீர் விரைவாக எங்களிடத்தில் துன்பத்தைச் செய்தருளுவீராயின், அதனை நீக்குந்தன்மையினையுடையவர்கள் வேறியாரிருக்கின்றூர்கள்.—எ-று. (௬௦)

நிறைமுடிப் பணிமிசை நிலனும் வானமு
மிறைமுடிக் கின்றவிவ் வெரியை நீக்கியே
பிறைமுடிக் கொண்டிடு பெரும வெம்முடைக்
குறைமுடித் தருளெனக் கூறி வேண்டினூர்.

(இ-ள்.) இளம்பிறையைத் திருமுடியி லணிந்தருளிய எம்பெருமானே! நிறைந்தமுடியினையுடைய ஆதிசேஷன்மீதிருக்கின்ற நிலவுலகத்தையும் விண்ணுலகத்தையும் கணப்பொழுதில் நாசஞ் செய்கின்ற இந்த நெருப்பைவிலக்கி, எங்களுடைய குறையை முடித்தருளவேண்டுமென்று சொல்லி வேண்டிக்கொண்டார்கள்.—எ-று.

உலகத்தைத் தாங்கும் ஆதிசேட னென்னும் பாம்பானது ஆயிரம் பணுமுடிகளையுடையதாகலான், 'நிறைமுடிப்பணி' என்றூர். (௬௧)

அஞ்சலி னவர்புக ழுண்ண லாதியோ
ரஞ்சலி செய்திவை யறைந்து வேண்டலு
மஞ்சலி லஞ்சடை யணிந்த நாயக
னஞ்சலி ரென்றுகை யமைத்துக் கூறினூன்.

(இ-ள்.) பாஞ்சராத்திரிகளால் புகழப்பட்ட திருமால் முதலிய தேவர்கள் கைகுவித்து வணங்கி இவற்றை விண்ணப்பஞ்செய்து வேண்டிக்கொள்ளவும், அழகிய கங்கைநதியைச் சடைமுடியிலணிந்த சிவபெருமான் அபயாஸ்தமளித்து (நீங்கள்) அஞ்சாதீர்களென்று அருளிச்செய்தனர்.—எ-று.

திருமால் ஐந்திராத்திரியிற் செய்துமுடித்த ஆகமத்தைக் கடைப்பிடித் தொழுகுவோ ராதலால், 'அஞ்சலினவர்' என்றூர். நாரதமுனிவர் ஐந்திராத்திரியிற் செய்த ஆகமத்தை யனுசரித் தொழுகுவோ ரெனினுமாம். (௬௨)

பொன்மலை வில்லினூன் புதிதின் வந்திடு
தன்முக மைந்தையுங் கரந்து தாவில்சீர்
நன்முக மொன்றொடு நண்ணி யத்துணைத்
தொன்மையி னியற்கையாய்த் தோன்றி வைகினூன்.

(இ-ள்.) மேருமலையாகிய வில்லினையேந்திய சிவபெருமான் புதிதாகத்தோன்றிய தமது ஐந்து திருமுகங்களையு மறைத்துக் கெடாத சிறப்பினையுடைய நல்ல ஒரு திருமுகத்துடன் பொருந்தி அவ்விடத்திற் பழைய முறைமைப்படியே எழுந்தருளியிருந்தனர்.—எ-று. (௬௩)

தன்னரு ளிலைமையாற் சண்மு கத்திடை
நன்னுதல் விழிகளி னல்கு தீப்பொறி
யிந்நில வரைப்புவா னீண்ட லுற்றவை
முன்னுற வரும்வகை முதல்வன் முன்னினூன்.

(இ-ள்.) சிவபெருமான் தமது திருவருண்முறைமையினால் ஆறு திருமுகங்களினிடத்துள்ள நல்ல நெற்றிக்கண்களினின்றுந் தோற்றுவித்தருளிய நெருப்புப் பொறிகளாய் இந்நிலவுலகத்திலும் விண்ணுலகத்திலும் வியாபித்திருந்தவைகளைத் தமது திருமுன்னே வரும்படி சிந்தித்தருளினார்.—எ-று. (கூச)

அந்தியம் பெருநிறத் தமல னவ்வகை
சிந்தைகொண் டிடுவழிச் செறிந்த பேரழன்
முந்தையின் வெம்பொறி மூவி ரண்டவாய்
வந்துமுன் குறுகலு மகிழ்ந்து நோக்கினான்.

(இ-ள்.) செவ்வானம்போலும் பெரிய திருமேனிப் பிரகாசத்தையுடைய சிவபெருமான் அவ்வாறு சிந்தித்தருளியவுடனே எவ்விடத்தும் நிறைந்திருந்த அந்தப் பெரிய நெருப்பானது, முன்போலவே வெவ்விய ஆறு பொறிகளாய் வந்து தமது திருமுன்னே யடையவும், சிவபெருமான் அவற்றை மகிழ்வோடு பார்த்தருளினார்.

ஆதகு காலையி லமரர் தங்களு
ளோதகு செயலிலா வுலவைத் தேவையு
மூதகு தீயையு முகத்தை நோக்குறா
மேதகு கருணையால் விமலன் கூறுவான்.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் தேவர்களில் நீங்காத செயலற்றிருக்கின்ற வாயுதேவனையும், முதிர்ந்த தகுதியினையுடைய அக்கினிதேவனையும் முகத்தைப் பார்த்தருளி மிக்க பெருங்கருணையோடு சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளுவார்.—எ-று.

ஓ-ஓரெழுத்தொரு மொழியாகிய தொழிற்பெயர். இதனை.—"ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி" எனவருந் திருமுருகாற்றுப் படைக்கு நச்சினார்க்கினியர் கூறியவுரை விசேடத்தா னறிக. (கூகூ)

நீங்களிச் சுடர்களை நெறியிற் றாங்கியே
வீங்குநீர்க் கங்கையில் விடுத்தி ரன்னவை
யாங்கவள் சரவண மமர வுய்க்குமா
லீங்கிது நும்பணி யென்றி யம்பினார்.

(இ-ள்.) நீங்களிருவரும் இந்த நெருப்புப்பொறிகளை முறைமையாகச் சுமந்து சென்று மிகுந்த நீரினையுடைய கங்கைநதியில் விடக்கடவீர்கள்; அவற்றை அக்கங்கையானவள் சரவணப்பொய்கையிற் பொருந்தும்வண்ணங்கொண்டுபோய்ச் சேர்ப்பாள்; இது உங்கள் தொழிலாகுமென்று அருளிச்செய்தனர்.—எ-று.

கங்கைநதி நீருருவா யிருப்பினும் அவ்வச்சமயங்க டோறும் பெண்ணுருவெடுத்தலான், 'ஆங்கவள்' எனப் பெண்பாலாகக் கூறினார். (கூஎ)

கூற்றுயி ருண்டதாட் குழக னிவ்வகை
சாற்றிய துணர்தலுந் தாழ்ந்து மும்முறை
போற்றினர் நடுங்கினர் புலம்பு நெஞ்சினர்
காற்றொடு கனலிவை கழறன் மேயினார்.

(இ-ள்.) (மார்க்கண்டேயர் பொருட்டு) இயமனது உயிரை வாங்கிய திருவடியினையுடைய சிவபெருமான் இவ்வாறு அருளிச்செய்தமையைக் கேட்டவுடனே, வாயுதேவனும் அக்கினிதேவனும் மூன்றுதரந் தாழ்ந்து வணங்கி நடுங்கிப் புலம்புகின்ற மனமுடையவர்களாய் இவற்றைச் சொல்லத்தொடங்கினார்கள்.—எ-று. (கூஅ)

ஒருநொடி யளவையி னுலகம் யாவுமாய்ப்
பெருகிய வித்தழல் பெரும நின்னுடைத்
திருவரு ணிலைமையாற் சிறுகிற் றுதலா
லரிதரி தடியரோ மாற்ற லாகுமோ.

(இ-ள்.) எமது பெருமானே ! ஒரு க்ஷணப்பொழுதுக்குள்ளே உலகமெங்குமாகப் பரவிநின்ற இந்த அக்கினியானது, தேவரீரது திருவருட்டன்மையால் குறுகியது ; ஆதலால், இது அடியேங்களால் தாங்குதல் முடியுமோ ? இது மிகவும் அருமையாகும்.—எ-று.

முன்னரோ தீப்பொறியின் வெம்மைக் காற்றாது நெடுந்தூரம் ஓடி யலுத்து வந்தவர்களாதலால் அப்பொறியைச் சுமந்து செல்லுதற்கு மிகவும் நடுங்கினர்களென்பார், 'அரிதரி தடியரோ மாற்ற லாகுமோ' என்று கூறினர். (௬௯)

ஈற்றினை யுலகினுக் கிழைக்கு நின்கணே
தோற்றிய கனலினைச் சுமத்தற் கோர்கண
மாற்றலை யுடையரோ வவனி கேள்வனு
நாற்றிசை முகமுடை நளினத் தேவுமே.

(இ-ள்.) உலகத்திற்குச் சங்காரத்தொழிலைச்செய்கின்ற தேவரீரிடத்திலே தோன்றிய இவ்வக்கினியைச் சுமந்து செல்லுதற்கு, பூமிதேவி கணவனாகிய திருமாலும், நான்குமுகங்களையுடைய கமலாசனனாகிய பிரமனும் ஒருகணப்பொழுதேனும் வல்லமையுடையவர்களாவரோ ?—எ-று. (௭௦)

பண்டெழு விடத்தினிற் பரந்த தீச்சுடர்
கண்டலு நின்றிலங் கவலுற் றோடின
மண்டவும் வெருவுது மவற்றை யாந்தலைக்
கொண்டன மேகுதல் கூடற் பாலதோ.

(இ-ள்.) முற்காலத்துக்(கடலில்) தோன்றிய விடத்தைப்போன்று பரவிய நெருப்புப்பொறிகளைப் பார்த்தவுடனே நில்லாமல் மனம் வருந்தி யோடினோம்; அவற்றினருகிற் செல்லுதற்கும் அஞ்சுகின்றோம்; அத்தகைய பொறிகளை யாங்கள் தலையிற் சுமந்து செல்லுதல் முடியுந்தன்மையதோ ?—எ-று. (௭௧)

அப்பெருங் கனலினை யடைதற் குன்னினும்
வெப்புறு மெமதுளம் வியர்க்கும் யாக்கையு
மெப்பரி சேந்துவம் யாங்க ளென்றலுந்
துப்புறழ் படர்சடைப் பகவன் சொல்லுவான்.

(இ-ள்.) அந்தப் பெரிதாகிய தீப்பொறிகளை நெருங்குதற்கு நினைத்தாலும் எங்கள் மனம் வெதும்புகின்றது; தேகமும் வியர்க்கின்றது ; ஆதலால், அடியேங்கள் அதனை எவ்வாறு சுமந்து செல்லுவோம் என்று விண்ணப்பஞ்செய்யவும், பவளம் போலும் படர்ந்த சடைமுடியினையுடைய சிவபெருமான் அருளிச்செய்வார்.—எ-று.

ஒன்றொரு நொடியினி னுலக முற்றுமாய்த்
துன்றிய விச்சுடர் சுமந்து கங்கையிற்
சென்றிட நுங்கள்பாற் றிண்மை யெய்துக
வென்றலு நன்றென விசைந்து போற்றினர்.

(இ-ள்.) ஒரு க்ஷணநேரத்திற்குள் உலகமுழுவதும் வியாபித்த இந்நெருப்புப்பொறிகளைத் தாங்கிக்கொண்டு கங்கைநதியிற் செல்லும்பொருட்டு உங்களிடத்து

வலிமையுண்டாகக்கடவது என்றருளிச்செய்யவும், அவர்கள் அவ்வாறே யாகுகவென்று சம்மதித்துத் துதித்தார்கள்.—எ-று. (எ௩)

மற்றது தெரிதலு மால யன்முதற்
சொற்றிடு மமரர்க ளுளக்க நீங்குறா
விற்றது கொல்லெம திண்ண லின்றெனா
வுற்றன ருவகையை யுடலம் விம்மினர்.

(இ-ள்.) அந்தச்சங்கதி தெரிந்தவுடனே திருமால் பிரமன் முதலாகச் சொல்லப்பட்ட தேவர்கள் நடுக்கமொழிந்து எங்களது துன்பம் இன்றோடே யொழிந்ததென்று சந்தோஷமடைந்தவர்களாய்த் தேகம் பூரித்தார்கள்.—எ-று. (எச)

ஆங்கன மவர்தமை யாதி நோக்கியித்
தீங்கனல் சரவணஞ் செறிந்தொர் செம்மலா
யோங்குபு சூர்கிளைக் கொழிவு செய்யுமா
லீங்கினி யாவரு மேகு வீரென்றான்.

(இ-ள்.) அப்பொழுது அத்தேவர்களைச் சிவபெருமான் பார்த்தருளி, இந்தத் தீப்பொறிகள் சரவணப்பொய்கையையடைந்து ஒரு குழந்தையாகத் தோன்றிச் சூரனது வமிசத்திற்கு நாசத்தை யுண்டுபண்ணும்; ஆதலால், இனி நீங்கள் யாவரும் இவ்விடத்தினின்றுஞ் செல்லக்கடவீர்களென்று திருவாய்மலர்ந்தருளினார்.—எ-று.

இறையவ னிவையன வியம்ப வுய்ந்தனங்
குறையில மினியெனக் கூறிக் கஞ்சமே
லுறைபவ னாதியா மும்ப ரன்னவ
னறைகழ லடிதொழு தங்க ணீங்கினார்.

(இ-ள்.) சிவபெருமான் இவைகளைத் திருவாய்மலர்ந்தருளுதலும் தாமரைமலரில் வசிக்கும் பிரமன்முதலாகிய தேவர்கள் நாங்கள் பிழைத்தோம், இனி யொருகுறையு மில்லோமென்று கூறி, அவ்வெம்பெருமானது சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளை வணங்கி அவ்விடத்தினின்று நீங்கினார்கள்.—எ-று.

சிவபெருமானது கட்டளைப்படி யொழுகின் தடையின்றி யின்ப முண்டாகுமெனத் துணிந்தவர்க ளென்பார், 'உய்ந்தனங் குறையில மினிஎனக்கூறி' என்று கூறினார். (எரு)

முன்னுற மாருதன் முதல்வன் றாள்களை
வன்னியந் தேவொடு வணங்கி யேயெழீஇ
யன்னவ னருளினாற் சுடர்க ளாறையுஞ்
சென்னியின் மேற்கொடு சேறன் மேயினான்.

(இ-ள்.) முதலில் வாயுதேவன் அக்கினிதேவனோடுகூட முதற்கடவுளாகிய சிவபெருமானது திருவடிகளை வணங்கி யெழுந்து அவ்வெம்பெருமானது திருவருளினால் ஆறு நெருப்புப்பொறிகளையுந் தனது தலையிற் சுமந்துகொண்டு செல்லத்தொடங்கினான்.—எ-று. (எசு)

அரனுறு கடிநக ரதனைத் தீர்ந்தொரா
யெரிகெழு சுடர்முடி யேந்தி மாருதன்
வருதலு மயன்முதல் வானு ளோரொலாங்
கருதரு மகிழ்வொடு கண்டு கூறுவார்.

(இ-ள்.) சிவபெருமான் வீற்றிருந்தருளுங் காவலையுடைய திருநகரத்தை நீங்கிச்சென்று, சுவாலை மிகுந்த அவ்வக்கினியைத் தலையிற் சுமந்துகொண்டு வாயுதேவன் வரவும், பிரமன்முதலிய தேவர்களனைவரும் சொல்லுதற்கரிய மகிழ்ச்சியுடன் பார்த்துக்கூறுகின்றார்கள்.—எ-று. (எஅ)

செந்தழன் மேனியன் றீயின் வண்ணமாத்
தந்தனன் குமரனைத் தனது கண்ணினா
லுய்ந்திட யாமெலா முலகின் முன்னரே
வந்திடு வீரனா மதலை மானவே.

(இ-ள்.) சிவந்த அக்கினிவடிவினராகிய சிவபெருமான், நாமனைவரும் உய்யும்பொருட்டு உலகத்தில் முன்பு அவதரித்தருளிய வீரபத்திரராகிய புதல்வரையொப்பாகத் தமது நெற்றிக்கண்ணினிடமாகத் தீயுருவமாய்ப் புதல்வரைத் தந்தருளினார்.

சிவபெருமான் அக்கினி வடிவின ராதலால் தமது புதல்வரையும் அவ்வக்கினி வடிவமாகவே தந்தருளின ரென்பார், 'செந்தழன் மேனியன் றீயின் வண்ணமாத் தந்தனன் குமரனை' என்றும், முன்னஞ் சிவபெருமானிடத்துத் தோன்றிய வீரபத்திரரும் அவ்வக்கினி வடிவமாகவே யுதித்தமையின், 'முன்னரோ வந்திடு வீரனா மதலை மானவே' என்றுங் கூறினார். வீரபத்திரர் தோன்றினமையை :—"புவனகோடிகளுந் தீக்கும் புராரிவெஞ் சீற்றத் தீயிற் - கவைபடு சூல வைவேற் காய்சின வீரன் றோன்றி - துவரிதழ்க் கனிவாய்த் தீஞ்சொற் றோகையோர் பங்கன் றாளி - னுவகையின் வணங்கிச் சூழ்போந் தினையன வுரைக்க லுற்றான்" என்னுங் கூர்மபுராணத்தானறிக. (எகூ)

தொன்னிலை யாம்பெறச் சூரன் பாடுற
வின்னமுஞ் சில்பக லிருத்த லாலரன்
றன்னிகர் திருமகன் சரவ ணத்திடை
மன்னுபு குழவியாய் வளர நல்கினன்.

(இ-ள்.) நாமனைவரும், முன்னிருந்தசெல்வத்தைப் பெறவும், சூரபதுமன் அழிவடையவும் இன்னுஞ்சிலகாலம் நீங்கவேண்டியிருப்பதால், சிவபெருமான் தம்மையொத்த சிறந்தபுதல்வர் சரவணப்பொய்கையிற் பொருந்திக் குழந்தையாக வளரும்படி தந்தருளினார்.—எ-று.

பாடு - அழிவு. (அ0)

போற்றலர் புரமடு புனித நாயக
னாற்றிடு செய்கைக ளருளி னீர்மையா
லேற்றதோர் சான்றிவ ணெரியைத் தந்ததுஞ்
சாற்றருங் கருணையிற் றலைமை யானதே.

(இ-ள்.) பகைவர்களது முப்புரங்களையு மெரித்தருளிய மலரகிதராகிய சிவபெருமான் செய்தருளுந் தொழில்க ளனைத்துந் திருவருளின் தன்மையாலாகும்; இதற்குத் தகுதியாகிய ஒரு சாக்ஷி, இங்கு நெருப்புப் பொறிகளைத் தந்தருளியதும் சொல்லுதற்கரிய தலைமையாகிய கருணையேயாம்.—எ-று.

சிவபெருமானது சகல செய்கைகளும் உயிர்களின்மீது வைத்த கருணையாதலால், இத்தீப்பொறிகளைத் தந்தருளினமையும் அவரது திருவருட்டன்மையே யென்றுரைத்தன ரென்பார், 'எரியைத்தந்ததுஞ் - சாற்றருங்கருணையிற்றலைமை யானதே' என்று கூறினார். (அக)

என்றிவை பற்பல வியம்பி யின்னினிப்
பொன்றின ரவுணர்கள் புலம்பு நங்குறை
நன்றிவண் முடிந்தது நாமு மத்தடஞ்
சென்றிடு வாமெனச் செப்பி னாரரோ.

(இ-ள்.) என்று இவ்வாறு பற்பலவாகச் சொல்லிக்கொண்டு, இனிமேல் அசுரர்கள் நாசமானார்கள்; வருந்துகின்ற நமது குறையும் இவ்விடத்து நன்றாகமுடிந்தது ; நாமும் அந்தச் சரவணப்பொய்கையிற்சென்று சேர்வோமென்று சொல்லிக் கொண்டார்கள்.—எ-று.

இனி அசுரர்க ளிறத்தல் சரதமாகலின் நமது குறையுந் தீரப்பெறுவோமென்று துணிவு கூர்ந்தவர்களாகலின், மேல் நிகழ்வதை நிகழ்ந்ததாகவே கருதித் துணிந்துரைத்தன ரென்பார், 'பொன்றினரவுணர்கள் புலம்புநங்குறை - நன்றிவண் முடிந்தது' என்றுகூறினார். (அஉ)

உருப்பம தாகிய வொளிறு தீஞ்சுடர்
தரிப்பதோர் மருத்துவன் றம்முன் சென்றிடத்
திருப்பயின் மான்முதற் றேவர் வெள்ளியம்
பருப்பத மொருவியே படர்தன் மேயினர்.

(இ-ள்.) வெப்பமுடையதாகிய விளங்குகின்ற நெருப்புப்பொறிகளைத் தாங்கிச்செல்லும் ஒப்பற்ற வாயுதேவன் தங்களுக்கு முன்னேசெல்ல, திருமகள்தலைவனாகிய திருமால்முதலியதேவர்கள் திருக்கயிலாய மலையினின்று நீங்கிச் செல்லத் தொடங்கினார்கள்.—எ-று. (அ௩)

இறத்தலுங் கன்னலொன் றெரியின் றீஞ்சுடர்
பொறுத்திட லரிதெனப் புலம்பிக் காலினோன்
மறுத்தவிர் பிறைமுடி வரத னாணையாற்
றிறற்படு வன்னிதன் சென்னி சேர்த்தினான்.

(இ-ள்.) ஒருநாழிகைப்பொழுது கழிந்தமாத்திரத்தில் வாயுதேவன் வெவ்விய நெருப்புப்பொறிகளைச் சுமத்தற்கரிதென்று வருந்திக் களங்கமற்ற இளம்பிறையை யணிந்த சிவபெருமானது கட்டளையினால், வலிமைபொருந்திய அக்கினிதேவனுடைய தலையில் சேர்த்தனன்.—எ-று. (அச)

சேர்த்தலு மொருபதந் தீயின் பண்ணவன்
வேர்த்துடல் புழுங்குற மெலிவிற் றாங்கியே
பேர்த்தொரு பதமிடப் பெறாது வல்லைபோ
யார்த்திடு கங்கையி னகத்துய்த் தானரோ.

(இ-ள்.) அவ்வாறு சேர்த்தவளவில் அக்கினிதேவன் ஒருநாழிகைப்பொழுதில் தேகம் வியர்த்துப் புழுக்கங்கொள்ள வருத்தத்துடன் சுமந்துகொண்டுசென்று, பின்பு ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாமல் விரைவாகச்சென்று ஒலிக்கின்ற கங்கைநதியிலிட்டனன்.—எ-று.

பதம் - நாழிகை, பாதம். (அரு)

கூர்சுடர்ப் பண்ணவன் கொடுவெந் துய்த்திடு
மார்சுடர்த் தொகுதிவந் தடைய மூவெயி
லூர்சுடச் சிவந்தகண் ணொருவன் றுப்புறழ்
வார்சடைக் கரந்தென வறந்த கங்கைநீர்.

(இ-ள்.) மிக்க சுடரினையுடைய அக்கினிதேவன் கொண்டுவந்து செலுத்திய அருமையாகிய நெருப்புப்பொறிகள் வந்து பொருந்தியவுடனே, அக்கங்கைநீரானது முப்புரங்களை யழிக்கும்பொருட்டுச் சிவந்த கண்ணினை யுடைய ஒப்பற்ற சிவபெருமானது நீண்ட சடையில் முன்பு மறைந்ததுபோல வற்றியது.—எ-று. (அசு)

அரனருண் முறையினை யறிந்து கங்கைதன்
சிரமிசை யேந்தியே சென்றொர் கன்னலிற்
சரவண மெனுந்தடந் தன்னிற் சேர்த்தனண்
மரையித ழாயிடை மல்குற் றெலென.

(இ-ள்.) சிவபெருமானது திருவருண் முறைமையை யுணர்ந்து கங்கையானவள் தன் சிரத்தில் தாங்கிக்கொண்டு சென்று ஒரு நாழிகையில் சரவணமென்னும் பெயரையுடையபொய்கையில் அங்குத்தாமரைமலர்கள் நிறைந்திருப்பதுபோல விளங்கும்படி சேர்த்தனள்.—எ-று.

மரை - தாமரை என்பதன் முதற்குறை. (அஎ)

ஆவயின் காறும்வந் தரிய யன்முதற்
றேவர்க ளுவகையாற் றெரிந்து சூழ்ந்தனர்
மேவர வணியதாம் விளைவு நாடியே
காவல்கொ ணிரப்புடைக் காத லோரென.

(இ-ள்.) திருமால் பிரமன்முதலிய தேவர்கள் அவ்விடம் வரையிலும் வந்து சந்தோஷத்தினால் அறிந்து, பலன் கைகூடுதெற்குச்சமீபித்ததாகவுள்ள விளைவின்பக்குவத்தையுணர்ந்து ஆசையோடு காக்கின்ற தரித்திரர்களைப்போலச் சூழ்ந்து காத்திருந்தார்கள்.—எ-று. (அஅ)

ஆரணன் விண்ணக மச்சு தன்புவி
வாரணன் முதலிய மாதி ரத்துளோ
ரேரண வமரர்க ளெண்டிக் காகியே
சீரணி சரவணஞ் சேர்ந்து போற்றினார்.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய சரவணப்பொய்கையை யடைந்து, பிரமன் ஆகாயத்திலும், திருமால் பூமியிலும், இந்திரன் முதலிய அஷ்டதிக்குப்பாலகர்களும் அழகுபொருந்திய தேவர்களும் அஷ்டதிக்குகளிலுமாக அடைந்திருந்துக் காவல் செய்திருந்தார்கள்.—எ-று. (அகூ)

வேறு.

கங்கையு மொல்கப் புக்க கடுங்கனற் கடவுட் சோதி
யங்கிரு மூன்று முன்ன ரம்மைவா ழிமையச் சாரற்
றங்கிய கமலம் பூத்த சரவணம் புகலு முக்கட்
புங்கவ னருளாற் றென்மை போன்றது வறத்த லின்றி.

(இ-ள்.) கங்கைநதியும் வற்றும்படிசேர்ந்த கடுமையாகிய வெப்பத்தினையும் தெய்வத்தன்மையினையும் ஒளியினையுமுடைய ஆறுபொறிகளும் முன்பு உமாதேவியார் எழுந்தருளியிருந்த இமையமலைச்சாரலிற் பொருந்திய தாமரைமலர்கள் மலர்ந்துள்ள சரவணப்பொய்கையிற் சென்றுசேர்தலும், மூன்று கண்களையுடைய சிவபெருமானது திருவருளினால், (அக்கங்கைநதியானது) வற்றாமல் முன்போலிருந்தது. (கூ0)

விண்ணிடை யிழிந்த காலின் மேவரு கனலிற் றோன்றும்
வண்ணவொண் கமலஞ் செய்ய முளரியை மாற தாகத்

தண்ணளி யோடு நல்கித் தரித்தெனச் சரவ ணப்பேர்க்
கண்ணகன் பொய்கை யீசன் கட்டழன் மிசைக்கொண் டன்றே

(இ-ள்.) ஆகாயத்தினின்றுந்தோன்றிய வாயுவில் உற்பத்தியாகிய அக்கினியிலே உண்டாகிய அழகிய வெள்ளிய நீரானது சிவந்த அக்கினியை (அத்தோற்றத்திற்கு) விரோதமாகத் தண்ணிய கிருபையோடு முண்டாக்கித் தன்னிடத்தில் வைத்துக்கொண்டதன்மையைப்போலச் சரவணமென்னும்பெயரினையுடைய இடமகன்ற தடாகமானது சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணிற்றோன்றிய நெருப்புப்பொறிகளைத் தன்மேல் தரித்துக்கொண்டது.—எ-று.

தத்துவத் தோற்றத்தில் ஆகாயத்தின்கண் வாயுவும்,வாயுவில் தேயுவும், தேயுவில்அப்புவும், அப்புவில் பிருதிவுந் தோன்றுதல் முறைமை; ஆகவே, ஈண்டுச் சரவணப்பொய்கை நீரில் சிவபெருமானது நெற்றிக்கண்ணிற் றோன்றிய அக்கினிப்பொறிகள் தங்கியிருத்தல், அத்தத்துவத் தோற்றத்திற்கு மாறாக அப்புவில் தேயுதோன்றிய தன்மைபோன்றிருந்த தென்க. (௯௧)

அருவமு முருவு மாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய.

(இ-ள்.) அருவமாகவும் உருவமாகவும், அநாதியாகவும் பலவாகவும் ஒன்றாகவும் பிரமமாகவு மிருக்கின்ற சோதிப்பிழம்பாகிய சிவபெருமான் ஒரு திருமேனியாகச் சகளீகரித்துக் கருணைபொருந்திய ஆறுதிருமுகங்களையும் பன்னிரண்டு திருக்கரங்களையுங் கொண்டு உலகத்தார் கடைத்தேறும்பொருட்டு ஒப்பற்ற அழகிய முருகக்கடவுளாக வந்து அவதரித்தருளினர்.—எ-று.

அருவமுதலிய பதி யிலக்கணங்களையுடைய சோதிப்பிழம்பாகிய சிவபெருமானே சூராதியரை யழித்து அரிபிர மேந்திராதி எல்லா வுயிர்களையுங் காத்தருளுதற்பொருட்டு ஆறு திருமுகமும், பன்னிரண்டு திருக்கரங்களையுங் கொண்டு சரவணப் பொய்கையிற் றோன்றி யருளின ரென்க. (௯௨)

தோன்றல்வந் திடலும் விண்பாற் றுந்துபி கரங்க ளுற்ற
வான்றதொன் மறைக ளெல்லா மார்த்தன வயனு மாலும்
வான்றிகழ் மகத்தின் றேவு முனிவரு மலர்க டூவி
யேன்றெமை யருளு கென்றே யேத்திசை யெடுத்துச் சூழ்ந்தார்.

(இ-ள்.) இவ்வாறு முருகக்கடவுள் அவதரித்தருளவும், ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழங்கின; விசாலித்த பழைமையாகிய வேதங்களனைத்து மாரவாரித்தன; பிரமனும் விஷ்ணுவும் சுவர்க்கத்தில் விளங்குகின்ற யாககருத்தாவாகிய இந்திரனும் முனிவரர்களும் மலர்களை யிறைத்து எம்மை யடிமையாக வேற்றுக் காத்தருள்வீராகவென்று துதித்துக்கொண்டு சூழ்ந்தார்கள்.—எ-று. (௯௩)

ஏவர்தம் பாலு மின்றி யெல்லைதீ ரமலற் குள்ள
மூவிரு குணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவ ணத்தண் பொய்கையில் வைகு மைய
னுவிக ளருளு மாற்று லறுமுகங் கொண்டா னன்றே.

(இ-ள்.) வேறே யாவரிடத்து மில்லாமல், அழிவற்றவராகிய சிவபெருமானிடத்துப் பொருந்திய ஆறுகுணங்களும் இத்திருக்குமாரருக்கு ஆறு முகங்களாக வந்த

தென்று சொல்லும்படி, புஷ்பங்கள் பொருந்திய குளிர்ந்த சரவணப்பொய்கையில் எழுந்தருளிய முருகக்கடவுள் ஆன்மாக்களை இரட்சித்தருளும்பொருட்டு ஆறு திருமுகங்களை யடைந்தருளினர்.—எ-று.

அமலற்குள்ள மூவிரு குணங்களாவன :—சர்வஞ்ஞத்துவம் - சர்வேச்சுரத்துவம் சர்வநியந் திருத்துவம். சர்வாந்தரியாமித்துவம்-சர்வகற்பிதத்துவம் சர்வசத்தித்துவம் என்பவைகள். அன்றி, தன்வயத்தனாதல் - முதலிலனாதல் உடம்பில னாதல்-எல்லா நலமுளனாதல்-எங்கும்வியாபகனாதல்-எவற்றிற்குங்காரணனாதல் எனவுமாம். அன்றியும், இச்சை-ஞானம்-கிரியை-ஆதி - பரை-குண்டலி என்னும் ஆறுசத்திகளும் ஆறுமுகங்களாக வந்தனவெனக் கூறுதலுமொன்று இதனை :—அண்ட கோடிகளுடன் றந்தவுடல் யாவையு மரியமறைமுதல கலையு - மக்கரமு மெய்ப்பதமு மைங்கலையு மந்திரமு மானபத கதியும்வாக்கு - மண்டி யுண்டாகவரு குண்டலியொ டைஞ்சத்தி மாமுகமெனப்படைத்த-வள்ளிநாயகன்'' எனவரும் அருள்வாக்கானறிக. (௧௪)

மல்லலம் புவனத் துள்ள மன்னுயிர்க் கணங்கட் கெல்லா
மொல்லையின் மகிழ்ச்சி யெய்தி யுவகையின் குறிப்புண் டான
தொல்லையி லவுண னுகுஞ் சூரனே முதலா வுள்ள
வெல்லவர் தமக்கு மாயு மிருங்குறிப் புற்ற வந்நாள்.

(இ-ள்.) அக்காலத்தில் வளப்பமிக்க அழகிய உலகத்திலுள்ள நிலைபெற்ற உயிர்க்கூட்டங்களுக்கெல்லாம் விரைவாக மகிழ்ச்சியுண்டாகி (இனி யடையவேண்டுவதாகிய) சந்தோஷக்குறிப்புண்டாயின. பழைமைபொருந்திய அசுரனாகிய சூரபதுமன் முதலிய அனைவருக்குஞ் சாவுக்குரிய பெரிய குறிப்புகளுண்டாயின.—எ-று.

நிமித்தங்களெல்லாம் உயிர்களுக்கு வரப்போகின்ற நன்மை தீமைகளைப் பகுத்துக் காட்டுகின்ற முறைமைப்படி, ஸ்ரீகுமாரக்கடவுளது திருவவதார விசேஷத்தால் திருமால் முதலிய தேவர்களுக்கு நன்னிமித்தமும்,அசுராதியர்களுக்குத் துன்னிமித்தமுந் தோன்றின வென்க. நன்னிமித்தம் வலத்தோள் துடித்தல் முதலியன. துன்னிமித்தம் - இடத்தோள் துடித்தல் முதலியன. (௧௫)

மறைகளின் முடிவால் வாக்கான் மனத்தினு லளக்கொ ணுமை
னிறைவுடன் யாண்டு மாகி நின்றிடு நிமல மூர்த்தி
யறுமுக வுருவாய்த் தோன்றி யருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளி னானே.

(இ-ள்.) வேதங்களின் முடிவினாலும், வாக்கினாலும், மனத்தினாலும் அளவிட முடியாமல் எவ்விடத்தும் பூரணமாக விளங்கிநிற்கின்ற மலரகிதராகிய சிவபெருமான் கருணையுடன் சண்முகரூபமாகத்தோன்றியருளிச் சரவணப்பொய்கையில் நறுமணங்கமழுந் தாமரைமலரில் வீற்றிருந்தருளினர்.—எ-று.

சிவபெருமான் மனோவாசாமகோசரராகவும் பரிபூரணராக வும்விளங்குதலால், 'மறைகளின் முடிவால் வாக்கான் மனத்தினு லளக்கொ ணுமை - னிறைவுடன் யாண்டு மாகி நின்றிடு நிமல மூர்த்தி' என்றார். இதனை :—மறையினு லயனான் மாலான் மனத்தினல் வாக்கான் மற்றுங்-குறைவிலா வளவை யாலுங் கூறொணு தாகி நின்ற - விறைவனர்'' என்னுஞ் சிவஞானசித்தியாரா னறிக. (௧௬)

பாங்குறு தருச்சூழ் காலாப் பஃறழைச் சினைமென் கொம்பர்
நீங்கறப் புடைபோய் வானி னிரந்தன பந்த ராகத்

தூங்கிய பழனுங் காயுந் துணர்களு மகத்துட் டுன்ன
வாங்கத னடுவட் பொய்கை யணிநிழ லமர்ந்தா னையன்.

(இ-ள்.) பக்கங்களிற்பொருந்திய விருக்ஷங்கள் சூழ்ந்துள்ள கால்களாகவும், பலவாகிய தழைகளையுடைய கிளைகளிலுள்ள மெல்லியகொம்புகளாய் இடைவிடாமல் பக்கங்களிற்சென்று ஆகாயத்தில் பரவியுள்ளவைகளே பந்தலாகவும், தொங்குகின்ற பழங்களுங் காய்களும் பூங்கொத்துக்களும் உள்ளிடத்திற் பொருந்த அதன் நடுவிலுள்ள சரவணப்பொய்கையின் அழகிய நீழலில் முருகக்கடவுள் எழுந்தருளியிருந்தனர்.

முடிபொரு தசையு நாகர் முதியகால் பலகை வையந்
தொடர்கரை மரனே வானந் தூங்குபன் ஞணந் தெண்ணீர்த்
தடமலர் பாய லாகச் சரவண மஞ்ச மீதி
னடைதரு மைந்தன் மென்கா லசைப்பவீற் றிருந்தா னன்றே.

(இ-ள்.) (பூமியைச்சுமத்தற்கு) முடிபொருமல் அசைகின்ற சர்ப்பங்களே முதிர்ந்த கால்களாகவும், பூமியே பலகையாகவும், கரையில் பொருந்திய மரங்களே மேல் கட்டப்பட்டுள்ள மேற்கட்டியாகவும், தெளிவாகிய நீர்த்தடாகமானது புஷ்ப சயனமாகவுமுள்ள சரவணமென்னுங் கட்டிலில் எழுந்தருளிய குமாரக்கடவுள் மெல்லிய தென்றற்காற்று அசைக்கும்படி வீற்றிருந்தருளினர்.—எ-று. (கூஅ)

எண்பெரு நாகர் சேட னேந்தெழி லரிமா னகத்
தண்பொலி புனற்பூம் பொய்கை தவிசுரு வாக நாள்கோள்
விண்படர் விதான மாக வேலையந் தலைவன் காலை
யொண்பக லாடி காட்ட வுமைமக னங்க னுற்றான்.

(இ-ள்.) பெரிய அஷ்டமாநாகங்களும் ஆதிசேஷனும் தாங்குகின்ற அழகிய சிங்கங்களாகவும், குளிர்ந்த நீரையுடைய அழகிய சரவணப்பொய்கையானது ஆசனமாகவும், நக்ஷத்திரங்களுங் கிரகங்களும் மேலே படர்ந்த விதானமாகவும் (விளங்கிய சிங்காசனத்தில்) கடற்றலைவனாகிய வருணதேவன் உதயகாலத்தில் சூரியனாகிய கண்ணாடியைக் காட்டும்வண்ணம் பார்வதி புத்திரராகிய முருகக்கடவுள் அங்கு எழுந்தருளியிருந்தார்.—எ-று.

திருப்பள்ளியெழுச்சியின்போது மங்கலகரமாகக் கண்ணாடியைக் காட்ட வேண்டுவது முறைமையாகலான், வருணராசன் சூரியனாகிய கண்ணாடியைக்காட்டினனென்க. (கூகூ)

தரணியி னடுவண் வைகுஞ் சரவணப் பொய்கை தன்னில்
விரைசெறி கமலப் போதில் வீற்றிருந் தருளுஞ் செவ்வேள்
பெருவடி வமைந்த மாயன் பிறங்கிய மனத்திற் றண்ணென்
றெரிசுடர் விளக்கத் துச்சி யிருந்திடு மீசன் போன்றான்.

(இ-ள்.) பூமியின் மத்தியிற் பொருந்திய சரவணப்பொய்கையில் நறுமணங்கமழுந் தாமரைமலரின்கண் வீற்றிருந்தருளிய முருகக்கடவுள், பெரிய திரிவிக்கிரமாவதாரங்கொண்ட விஷ்ணுவினது விளங்குகின்ற இருதயகமலத்தில் குளிர்ச்சியாக சுவாலிக்கின்ற ஞானதீபத்தின் சிகரத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானை யொத்திருந்தனர்.—எ-று.

இதில், பூமியே திருமாலாகவும், அப் பூமியின் நடுவிற் பொருந்திய சரவணப்பொய்கையே அவரது இதயமாகவும், அப்பொய்கையில் மலர்ந்துள்ள தாமரை மலரே அவரது இதயத்திற் பொருந்திய ஞானதீபமாகவும், அம் மலரி லெழுந்தருளிய

குமாரக்கடவுளே அந்த ஞானதீபத்தினுச்சியிற் பொருந்திய சிவபெருமானாகவும் உவமித்துக்கூறினமையுணர்க. (௧௦௦)

பெருந்தரை நடுவ ணாகிப் பிறங்கிய சரவ ணத்தி
லிருந்தனிக் கமல மொன்றிற் குமரவே ளிருந்த பான்மை
திருந்துநல் லண்டப் புத்தேள் சிந்தையாம் புண்ட ரீக
புரந்தனில் விரும்பித் தாதை வைகிய வியற்கை போலும்

(இ-ள்.) பெரிய நிலவுலகத்தின் மத்தியில் விளங்குகின்ற சரவணப்பொய்கையில் ஒப்பற்ற பெரிய ஒரு தாமரைமலரில் முருகக்கடவு ளெழுந்தருளியிருந்த தன்மை, சிறந்த விராட்புருஷனது இருதயமாகிய புண்டரீகபுரத்தில் தமது பிதாவாகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளிய தன்மையை யொத்திருக்கும்.-எ-று.

'திருந்துநல் லண்டப் புத்தேள் சிந்தையாம் புண்டரீக புரம்' என்றது, ஸ்ரீ சிதம்பரத்தை. இதனை:—"திருவள ராரூர் மூலந் திருவானைக் காவே நாபி-மருவளர் பொழில்சூ ழண்ணு மலைமணி பூர கீலி - ரிருவருங் கண்ட மன்ற மிதயமாம்" என்னுந் திருவிளையாடற்புராணத்தானும், "விண்டலமே போற்றும் விராட்புருட னிதய - புண்டரிக மான புலியூரே" என்னும் புலியூர்வெண்பாவானு மறிக. (௧௦௧)

பாசிலை பரவித் துள்ளி படுவன வுடுவைப் பாக
வீசுசை வலங்கா ராக வேறுசூழ் கமல மெல்லா
மாசறு பகலோ ராக வவற்றிடை மலர்ந்த கஞ்சந்
தேசுடை யிரவி யாகச் சிவனெனச் சேயங் குற்றான்.

(இ-ள்.) பச்சிலைகளில் நீர்த்துளிகள் சிந்திப் பரவியிருத்தல் நக்ஷத்திரமண்டலமாகவும், அசைகின்ற கொடிப்பாசிகள்மேகமண்டலமாகவும், அவற்றிற்குவேறாகச் சூழ்ந்திருக்கின்ற தாமரைமலர்கள் சூரியர்களாகவும், அவற்றின் மத்தியில் மலர்ந்திருக்கின்ற தாமரைமலரானது ஒளிபொருந்திய சூரியனாகவும், (அச்சூரியமண்டலத்தி லெழுந்தருளியிருக்கின்ற) சிவபெருமானைப்போல முருகக்கடவுள் அத்தாமரைமலரி லெழுந்தருளியிருந்தார்.—எ-று.

துளி என்பது துள்ளி என விகாரம்பெற்றது. (௧௦௨)

மாலய னெழிலி மேலோன் வானவ ரேனோர் யாரும்
பாலுற மரனு மாவும் பறவையும் பிறவுஞ் சூழ
வேலுறு குமரன் கஞ்சத் திருந்தது பரம னாதிக்
காலையி னுயிர்க ணல்கிக் கமலமே லிருத்தல் போலும்.

(இ-ள்.) திருமாலும், பிரமனும், மேகவாகனனாகிய இந்திரனும், தேவர்களும், மற்றை யாவர்களும் பக்கத்திற் பொருந்தவும், விருக்ஷங்களும், மிருகங்களும், பறவைகளும்,மற்றவைகளுஞ் சூழவும், தகுதியாகிய முருகக்கடவுள் தாமரைமலரிலெழுந்தருளியிருந்ததன்மை, சிவபெருமான் பிரதமசிருஷ்டியில் உயிர்களைச் சிருஷ்டித்துத் தாமரைமலரில் வீற்றிருந்தருளிய தன்மையை யொத்திருக்கும்.—எ-று.

குமாரக்கடவுள் சராசரங்களாகிய எல்லா வுயிர்வர்க்கங்களுந் தம்மைச் சூழும்படி தாமரைமலர்மேலெழுந்தருளியிருத்தல், சிவபெருமான் பிரதமசிருஷ்டியிலே எல்லாவுயிர்களையும் படைத்துப்பதும பீடத்தெழுந்தருளியிருந்ததன்மைபோன்றிருந்ததென்க. (௧௦௩)

சலங்கிளர் தரங்கத் தெய்வச் சரவணக் கமலப் போதி
னலங்கிளர் குமரன் சேர்த லான்முகற் சிறைமேல் வீட்டிப்

புலங்கிள ருயிர்க ணல்கப் பொருந்துநற் பகலின் முன்ன
ரிலங்கெழிற் பதும பீடத் தேறிய வியற்கை போலும்.

(இ-ள்.) நீரோடு விளங்குகின்ற அலைகளையுடைய தெய்வத்தன்மைபொருந்திய சரவணப்பொய்கையில் தாமரைமலரின்மேல் நன்மைமிக்க குமாரக்கடவுள் எழுந்தருளியிருத்தல், பிரமனைச் சிறையிலிட்டு அறிவினையுடைய உயிர்களைச் சிருட்டிக்கும்பொருட்டு எழுந்தருளியிருக்கவேண்டிய நல்ல தினத்திற்கு முன்னமே விளங்குகின்ற அழகிய கமலாசனத்தி லெழுந்தருளியிருந்ததன்மையை யொக்கும்.—எ-று.

புலங்கிளருயிர்கள்—ஓரறிவுமுதல் ஐயறிவீறாகவுள்ள உயிர்கள்; அவை:—"புன்மரமுதலவுற்றறியுமோரறிவுயிர்" "முரணந்தாதிநாவறிவொடீரறிவுயிர்" "சிதலெறும்பாதிமூக்கறிவின் மூவறிவுயிர்" "தும்பிவண்டாதிகண்ணறிவினாலறிவுயிர்" "வானவர்மக்கணரகர்விலங்குபுள்-ளாதிசெவியறிவோ டையறி வுயிரோ" என்னும் நன்னூற் சூத்திரங்களானறிக. (௧0௪)

முண்டக மொன்றில் வைகு முருகனைச் சுற்றிச் செங்கேழ்
வண்டுளர் கமலக் காடு வான்புனற் றடத்தி னிற்ற
லண்டர்கண் முதல்வ வோர்பா லன்றியெம் மெல்லாம் பீடங்
கொண்டருண் முறையி னென்று நோற்றிடுங் கொள்கைத் தன்றே.

(இ-ள்.) ஒரு தாமரைமலரிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளைச் சூழ்ந்து வண்டுகள் மொய்க்கின்ற தாமரைமலர்க் காடானது சிறந்த நீரையுடைய சரவணப்பொய்கையிலிருத்தல், (எதுபோலுமெனின்,) தேவர்கள் தலைவராகிய எமதாண்டவரோ! தேவரீர் ஓரிடத்திலிருத்தலைவிட்டு முறைப்படி எங்களையெல்லாம் ஆசனமாகக் கொண்டருளுமென்று தவஞ்செய்யுந்தன்மைபோன் றுள்ளது.—எ-று.

அணங்குசெய் தோற்றத் துப்பி னவிர்சுடர்க் குமரற் சூழ
மணங்கிளர் கமலக் காடு மலர்ந்தன வவனைச் சேர்வான்
றணங்கெழு புனலிற் புக்குத் தபனன்மே ணாட்டஞ் சேர்த்தி
நுணங்கிடை மடவார் பல்லோர் நோற்றவ ணிற்றல் போலும்.

(இ-ள்.) அழகைச் செய்கின்ற தோற்றத்தினையுடைய பவளம்போன்று விளங்குகின்ற ஒளியினையுடைய குமாரக்கடவுளைச் சுற்றிலும் நறுமணங்கமழுந் தாமரைமலர்க்காடு வளர்ந்திருத்தல் (எதுபோலுமெனின்,) துவளுகின்ற இடையினையுடைய பலமாதர்கள் அக்கடவுளை யணையும்பொருட்டுக் குளிர்ச்சியும் அழகுமிக்க நீரில் புகுந்து சூரியன்மேல் விழிகளைச்செலுத்தி அங்குத் தவஞ்செய்து நிற்பதையொத்திருக்கும்.—எ-று.

தணங்கெழுபுனல் - தண் அம் கெழு புனல் எனப்பிரிக்க. (௧0௬)

ஒண்ணகை யுயிர்க்குஞ் சங்க மொருசில கமலம் வைகத்
தண்ணுறு நறவைப் பன்றாட் டாமரை பரித்துச் சூழ்த
லண்ணலம் பொய்கை தற்சே ரறுமுகப் பிள்ளை துய்ப்ப
வெண்ணெயுஞ் சங்குஞ் சூழ விட்டது போலு மன்றே.

(இ-ள்.) ஒள்ளிய பிரகாசத்தை வீசுகின்ற ஒப்பற்ற சில சங்குகள் தாமரைமலரில் சேர்ந்திருக்க, குளிர்ச்சிபொருந்திய தேனினைப் பல தாள்களையுடைய தாமரைகள் தாங்கிநிற்பது, (எதுபோலுமெனின்,) பெருமைமிக்க அழகிய சரவணப்பொய்கையானது தன்னிடத்தடைந்துள்ள ஆறு திருமுகங்களையுடைய குமாரக்கட

வுள் உண்ணும்பொருட்டு, எண்ணெயையுஞ் சங்கையுஞ் சூழவைத்திருப்பதையொத்திருக்கும்.—எ-று.

தடாகத்தில் சங்கும், மலர்களில் தேனும்பொருந்தியிருத்தல் குமாரக்கடவுளாகிய குழந்தைக்கு ஊட்டுவதற்குப் பாலடைச்சங்கும் எண்ணெயுஞ்சூழவைத்திருத்தல் போன்றிருந்தனவென்க. (௧0எ)

ஆரமும் வனசத் தோடு மணிமக ரந்தச் சேறும்
வேரியம் பூந்தண் டேனு முறைமுறை வீசிக் கையாற்
சேரவே கொண்டு மேலோன் றிருவடி திளைப்ப வுய்த்தல்
வாரியந் தடாக மன்பால் வழிபடும் வண்ணம் போலும்.

(இ-ள்.) முத்துக்களும் தாமரையிதழ்களும் அழகியமகரந்தக்குழம்பும் நறுமணங்கமழும் அழகிய மலரிலுள்ள குளிர்ந்ததேனும் வரிசை வரிசையாக அலையாகிய கரங்களால் ஒருசேரக்கொண்டு முருகக்கடவுளது திருவடிகளில் பொருந்தும்படி சேர்த்தல்,(எதுபோலுமெனின்)நீரையுடைய அழகிய சரவணப்பொய்கையானது அன்புடன் பூசனைசெய்யுந்தன்மையை யொத்திருக்கும்.—எ-று.

வாரி - நீர். (௧0அ)

பங்கயச் செம்மற் போது பதனழிந் தவிழ்ந்து பாங்க
ரங்குள விலைமேல் வீழ வவைபுறத் தசையு நீர்மை
சங்கரன் குமரற் சூழச் சரவணம் பசும்பூந் தட்டிற்
றுங்கநல் விளக்க மாட்டித் திரைக்கையாற் சுலவல் போலும்.

(இ-ள்.) தாமரையின்து பழம்பூவானது பதனழிந்து கட்டுவிட்டு அருகிலுள்ள இலையின்மீது விழ, அவைகள் வெளியிலசைந்துகொண் டிருக்குந்தன்மை, (எதுபோலுமெனின்) சரவணப்பொய்கையானது சிவகுமாரராகிய முருகக்கடவுளைச் சூழப் பசிய பூந்தட்டில் உயர்வாகிய நல்லதீபங்களையேற்றி அலைகளாகிய கைகளால் சுற்றுதலையொத்திருக்கும்.—எ-று.

செம்மற்போது - பழம்பூ. (௧0௯)

காசுறழ் பதுமப் போது களாசிய தாக மீச்செல்
பாசடை கவிகை யாகப் பலநனை விளக்க மாக
வீசிகள் கவரி யாக மிழற்றுபுள் ளியம தாக
மாசறு பொய்கை செய்க்கு வளம்பட வொழுகிற் றன்றே.

(இ-ள்.) மாணிக்கம்போன்ற தாமரைமலர் காளாஞ்சியாகவும், மேலேயுயர்ந்த பச்சிலைகள் குடைகளாகவும், பல அரும்புகள் தீபங்களாகவும், அலைகள் சாமரங்களாகவும். சப்திக்கின்ற பறவைகள் வாத்தியமாகவுங்கொண்டு குற்றமற்ற சரவணப்பொய்கையானது குமாரக்கடவுளுக்குச் செவ்வையாக உபசரித்தது.—எ-று.

சிறந்த நிலைமையினையுடையவர்கட் குபசாரஞ் செய்வோர், காளாஞ்சியேந்தல் - குடைபிடித்தல் முதலிய வுபசாரங்களைச் செய்வது முறைமையாதல் பற்றி, இச்சரவணப்பொய்கையும் குமாரக்கடவுளுக்குப் பதுமப்போது முதலியவற்றா லுபசரித்ததென்க. களாசி - காளாஞ்சி. (௧௧0)

அழனிவந் தன்ன கஞ்சத் தகன்றடத் திரைக ணுப்ப
ணுழிபட ராது சூழ்போங் துலவுவ தானை நீரால்
விழுமிய குமரன் பொய்கை வெளியுறு தமர ரிட்ட
வெழினிகள் புடையே மென்கா லெறிதலி னிரட்டல் போலும்.

(இ-ள்.) அக்கினியானது மேலோங்கியதுபோன்ற தாமரைமலரையுடைய அகன்ற தடாகத்தினது அலைகள் வஸ்திரத்தின் தன்மையாக நடுவிற் செல்லாது சூழ்ந்து உலாவுதல், (எதுபோலுமெனின்) மேன்மைபொருந்தியகுமாரக்கடவுள் தடாகத்தில் தெரியாதிருக்கும்படி தேவர்களா விடப்பட்ட திரைச்சீலைகள் பக்கங்களில் மெல்லிய காற்றுவீசுதலினால் அசைதலை யொத்திருக்கும்.—எ-று. (கககக)

கொன்படை சேவ லாகு மெகினமோர் கோடி யீசன்
றன்பெருங் குமரற் சூழத் தடத்தினின் மிழற்ற லெந்தை
பொன்பிறழ் பதுமன் செய்கை புரியுநா ளூர்தி யாவ
லென்புடை யிருத்தி யென்றே தமித்தமி யிரத்தல் போலும்.

(இ-ள்.) பெருமைபொருந்திய ஒருகோடி ஆணன்னங்கள் சிவபெருமானது பெருமையமைந்த திருக்குமாரனைச்சூழ்ந்துகொண்டு தடாகத்தில் சப்தித்தல், (எதுபோலுமெனின்) எமது பிதாவே! தேவரீர் பொன்போல் விளங்குகின்ற தாமரை மலரிலிருக்கின்ற பிரமனது சிருட்டித் தொழிலைச் செய்யுங்காலத்தில் அடியேன் வாகனமாகவிருப்பேன், ஆதலால், என்மீது எழுந்தருளுவீரென்று தனித்தனியே பிரார்த்தித்தலையொத்திருக்கும்.—எ-று. (ககஉ)

வளஞ்செறி யினைய பாலால் வான்சர வணமாம் பொய்கைத்
தளஞ்செறி பதும மொன்றிற் சராசரம் யாவும் காப்பா
னுளஞ்செறி கருணை யெய்தி யொப்பிலாக் குமர மூர்த்தி
யிளஞ்சிறு மதலை போல வினிதுவீற் றிருந்தான் மன்னோ.

(இ-ள்.) வளப்பமிக்க இத்தன்மையினவாகப் பெரிய சரவணமென்னும் பொய்கையில் இதழ்கள் நெருங்கிய ஒரு தாமரைமலரில் சராசரங்களனைத்தையுங் காத்தருளும்பொருட்டுத் திருவுள்ளத்தில் மிக்க கருணைகூர்ந்து ஒப்பற்ற குமாரக்கடவுள் மிகவும் இளங்குழந்தையைப்போல இனிமையோடு வீற்றிருந்தருளினர்.—எ-று.

தீர்த்திகைக் கங்கை தன்னிற் றிகழ்சர வணத்தில் வந்த
மூர்த்திகைக் குழவி யேபோன் முதற்புரி யாட னோக்கி
யார்த்திகை யுறாத வுள்ளத் தரிமுத லமரர் யாருங்
கார்த்திகைத் தெரிவை மாரை விளித்திவை கழற லுற்றார்.

(இ-ள்.) கங்கைநதியில் விளங்குகின்றசரவணப்பொய்கையினிடத்து அவதரித்த குமாரக்கடவுள் கைக்குழந்தையைப்போல முதலிற் செய்த திருவிளையாடலைப் பார்த்து விருப்பநீங்காத வுள்ளத்தினையுடைய திருமால் முதலிய தேவர்களனைவரும் கார்த்திகைப்பெண்களை யழைத்து இவைகளைச் சொல்லத்தொடங்கினார்கள்.—எ-று.

தீர்த்திகை - தீர்த்தத்தை யுடையது. குமாரக்கடவுள் பின்னரும் அநேக திருவிளையாடல்களைச் செய்யப்போகின்றவராகலின், இவ்விளையாட்டை, 'முதற்புரியாடல்' என்றார். (ககச)

சாற்றருஞ் சரவ ணத்திற் சண்முகத் தொருவ னாகி
வீற்றிருந் தருளு கின்ற விமலனோர் குழவி போலத்
தோற்றினன் அவனுக் குங்க டுணைமுலை யமுத மூட்டிப்
போற்றுதிர் நாளு மென்ன நன்றெனப் புகன்று வந்தார்.

(இ-ள்.) சொல்லுதற்கரிய சரவணப்பொய்கையில் ஆறுமுகங்களையுடைய ஒருவராக எழுந்தருளியிருக்கின்ற கடவுள் ஒரு குழந்தைபோலக் காணப்படுகின்றார், அவருக்கு உங்களுடைய இரண்டு முலைகளினின்றும் வருகின்ற பாலை யுண்பித்து

நாள்தோறும் பாதுகாக்கக்கடவீர்களென்றுகூற, அவர்கள் அவ்வாறே செய்கின்றோ மென்று கூறி (அச்சரவணப்பொய்கையினிடத்து) வந்தார்கள்.—எ-று. (௧௧௫)

மறுவறு மார லாகு மாதர்மூ விருவர் தாமு
நிறைதரு சரவ ணத்தி னிமலனை யடைந்து போற்ற
வுறுநர்க டமக்கு வேண்டிற் றுதவுவோ னாத லாலே
யறுமுக வொருவன் வேறா யறுசிறு ருருவங் கொண்டான்.

(இ-ள்.) குற்றமற்ற கார்த்திகைகளாகிய ஆறு பெண்களும், நீர் நிறைந்த சரவணப்பொய்கையில் எழுந்தருளியிருக்கின்ற குமாரக்கடவுளையடைந்து துதிக்கவும், ஆறு திருமுகங்களையுடைய ஒப்பற்ற குமாரக்கடவுள் தம்மையடைந்தவர்களுக்கு வேண்டியவைகளை யளித்தருளுகின்றவராதலால், (முன்பிருந்த வடிவத்தைவிட்டு) வெவ்வேறாக ஆறுகுழந்தைவடிவங் கொண்டருளினார்.—எ-று.

கார்த்திகைமாதர்கள் ஆறுருவமுடையவர்களாகலின், 'ஆரலாகுமாதர்மூவிருவர்' என்றும், வேண்டுவோர் வேண்டி யாங்கருளும் பெருமானாகலின், 'உறுநர்கடமக்கு வேண்டிற்றுதவுவோன்' என்றுங் கூறினார். (௧௧௬)

ஆறுரு வாத லோடு மறுவரு மகிழ்ந்து வேறு
வேறுதா மெடுத்துத் தத்தம் வியத்தகு துணைமென் கொங்கை
யூறுபா லமுத மன்னோற் குதவலு முறுவல் செய்து
மாறிலா வருளா லாற்ற வருந்தினன் போல வுண்டான்.

(இ-ள்.) அவ்வாறு ஆறுகுழந்தைகளாகவும் கார்த்திகைப்பெண்கள் அறுவரும் மகிழ்வடைந்து அவரவர்கள் ஒவ்வொருகுழந்தைகளை யெடுத்துத் தங்கள்தங்களுடைய புகழத்தக்க மெல்லிய ஸ்தனங்களில் சுரக்கின்ற பாலமுதத்தை அக்குமாரக்கடவுளுக்கு உண்பிக்கவும், புன்னகைகொண்டு நீங்காத கருணையினால் மிகவும் வருந்தினவரைப்போல உண்டருளினார்.—எ-று. (௧௧௭)

உண்டபி னறுவ ராகு மொருபெரு முதல்வன் றன்னைத்
தண்டழை பொதுளு நீபத் தண்ணிழற் பொய்கை தன்னில்
வண்டயி லுறாத கஞ்ச மாமலர்ப் பள்ளி சேர்த்திக்
கண்டுயில் செய்வித் தேத்தக் கருணையா லினைய செய்வான்.

(இ-ள்.) அவ்வாறு உண்டருளியபின்பு, ஆறு வடிவங்களாக விருக்கின்ற ஒப்பற்ற பெரிய குமாரக்கடவுளைக் குளிர்ந்த தழைகள்நெருங்கிய கடம்பவிருக்ஷத்தின் குளிர்ந்த நிழலையுடைய சரவணப்பொய்கையில் வண்டுகள் தேனையுண்ணாத சிறந்த தாமரைமலராகிய சயனத்திற் கிடத்தித் துயிலச்செய்து துதிக்க (அக்குமாரக்கடவுள்) கிருபையோடு இவைகளைச் செய்தருளுவாராயினர்.—எ-று.

வண்டயிலுறாதகஞ்சம் - வண்டுகள் தேனையுண்டு எச்சிற்படுத்தாத தாமரைமலர்; அதாவது, புதுமலர் என்றபடி. (௧௧௮)

துயிலவோ ருருவந் துஞ்சித் துண்ணென வெழுந்து மென்சொற்
பயிலவோ ருருவம் யாய்தன் பயோதரம் பவள வாய்வைத்
தயிலவோ ருருவ நக்காங் கமரவோ ருருவ மாட
வியலவோ ருருவம் வாளா விரங்கவோ ருருவஞ் செய்தான்.

(இ-ள்.) ஒருருவந் தூங்கவும், ஒருருவந் தூங்கி விரைந்தெழுந்து மெல்லிய மழலைச்சொற்களைப் பேசவும், ஒருருவம் தாய்முலையைத் தனது பவளம்போன்ற சிவ

ந்த வாயில்வைத்துப் பாலுண்ணவும், ஒருருவஞ் சிரித்துக்கொண்டிருக்கவும், ஒருருவம் விளையாடவும், ஒருருவம் வீணை அழுதுகொண்டிருக்கவுஞ் செய்தருளினர்.

ஒருருத் தவழ மெல்ல வோருருத் தளர்ந்து செல்ல
வோருரு நிற்றல் செல்லா தொய்யென வெழுந்து வீழ
வோருரு விருக்கப் பொய்கை யோருரு வுழக்கிச் சூழ
வோருருத் தாய்கண் வைக வொருவனே புரித லுற்றான்.

(இ-ள்.) ஒருருவமானது மெல்லத்தவழவும், ஒருருவந் தளர்ந்துசெல்லவும், ஒருருவம் நிற்கமுடியாமல் விரைவிலெழுந்து விழவும், ஒருருவம் வாளா விருக்கவும், ஒருருவம்அத்தடாகத்தைக்கலக்கிச்சூழ்ந்துவரவும், ஒருருவந் தாயினிடத்திலிருக்கவும் ஒரு குமாரக்கடவுளே செய்தருளினர்.—எ-று. (௧௨௦)

ஆடவோ ருருவஞ் செங்கை யறையவோ ருருவ நின்று
பாடவோ ருருவ நாடிப் பார்க்கவோ ருருவ மாங்க
ணோடவோ ருருவ மோர்பா லொளிக்கவோ ருருவம் யாண்டுந்
தேடவோ ருருவ மாகச் சிவன்மகன் புரித லுற்றான்.

(இ-ள்.) ஒருருவம் ஆடல்செய்யவும், ஒருருவஞ் சிவந்த கைகளைக்கொட்டவும், ஒருருவம் நின்றுபாடவும், ஒருருவம் விரும்பிப்பார்க்கவும், ஒருருவம் அங்கு ஓடவும், ஒருருவம் ஓரிடத்தி லொளிக்கவும், ஒருருவம் எங்குந் தேடவுமாகச் சிவகுமாரராகிய முருகக்கடவுள் செய்தருளினர்.—எ-று. (௧௨௧)

இத்திற மிருமூன் றான யாக்கையுங் கணம தொன்றிற்
பத்துநூ றுய பேதப் படும்வகை பரமாய் நின்ற
வுத்தம குமரன் றானெவ் வுயிர்தொறு மாட லேபோல்
வித்தக விளையாட் டின்ன மாயையால் விரைந்து செய்தான்.

(இ-ள்.) இவ்வாறு ஆறு திருவுருவங்களும் ஒரு க்ஷணநேரத்திற்குள் ஆயிரம் பேதமாகும்படி பரம்பொருளாகநின்ற உத்தமராகிய குமாரக்கடவுள் தாம் எல்லா வுயிர்களிலுமிருந்து விளையாடுதலைப்போல, இத்தகைய ஞானமயமாகிய திருவிளையாடலைத் தமது மாயையினால் விரைந்து செய்தருளினர்.—எ-று. (௧௨௨)

சிற்பர னாகி வந்த செய்யவே ளாடற் றன்மை
பற்பல திறமு நாடிப் பங்கயத் தயனு மாலுஞ்
சொற்படு மகத்தின் றேவு முனிவருஞ் சுரரும் யாரு
மற்புத மகிழ்ச்சி கொண்டாங் கின்னவா றறைத லுற்றார்.

(இ-ள்.) ஞானசொரூபியாக வெழுந்தருளிய குமாரக்கடவுளது திருவிளையாடலாகிய பலவகையினையும் விரும்பிப் பார்த்து, கமலாசனனாகிய பிரமனும் திருமாலும் சொல்லப்பட்ட மகபதியாகிய இந்திரனும் முனிவரர்களுந் தேவர்களுமாகிய அனைவரும் ஆச்சரியகரமான சந்தோஷத்தையடைந்து இவைகளைச் சொல்லத்தொடங்கினார்கள்.—எ-று. (௧௨௩)

சேயிவ னொருவ னேபல் சிறுருக் கொண்டு நம்மு
னேயெனு மளவை தன்னி லெண்ணில்பே தத்த னாகு
மாயினிக் குமர னாட லறிவரி தெமக்கு மெல்லா
மாயமு மியற்ற வல்லன் வரம்பிலா வறிவன் மாதோ.

(இ-ள்.) இவ்வொருகுழந்தையே பலகுழந்தைவடிவத்தையடைந்து நமக்கு முன்னே க்ஷணநேரத்திற்குள்ளே அளவற்ற பேதங்களை யுடையவராகின்றார்; இதனை

ஆலோசிக்குமிடத்தில், நம்மாலும் இப்புதல்வரது திருவிளையாடலை அறிதற்கருமையாகும். இவர் எல்லாமாயங்களையுஞ் செய்ய வல்லவர்; அளவற்ற ஞானத்தினை யுடையவர்.—எ-று. (௧௨௪)

கைப்பயில் குழவி போலக் காட்டிய கடவுள் செய்யு
மிப்பெரு மாயை போல யாவரும் புரித றேற்றார்
செப்பியென் வேறி யாமுஞ் செய்ததொன் றில்லை யன்று
னொப்பறு பரனே யாமென் றுரைசெய்து தொழுது நின்றார்.

(இ-ள்.) கையிற்பழகுகின்ற சிறுகுழந்தையைப் போல உருவங்கொண்டிருக்கின்ற இக்கடவுள் செய்கின்ற இந்தப்பெரிய மாயையைப்போல யாவருஞ் செய்யமாட்டார்கள், அதனைச் சொல்லியாவதென்ன? வேறே நாமும் செய்ததொன்றுமில்லை; ஆதலால், இக்குழந்தை வடிவாயுள்ளவர் ஒப்பற்ற சிவபெருமானே யாகுமென்றுகூறி வணங்கி நின்றார்கள்.—எ-று. (௧௨௫)

அழலெனு மீன வர்க்கத் தறுவருங் குமர னுடன்
முழுவது நோக்கி நோக்கி முதிருமற் புதநீ ரெய்திக்
குழவிக ளென்றே யுள்ளங் கோடல்விட் டகலா தஞ்சி
வழிபடு கடவு ளோரிற் போற்றினர் மனங்கொ ளன்பால்.

(இ-ள்.) நக்ஷத்திரவர்க்கத்திற் சேர்ந்த கார்த்திகைகளாகிய ஆறுபெண்களும் குமாரக்கடவுளது திருவிளையாடல்களனைத்தையும் பார்த்துப்பார்த்து மிகுந்த ஆச்சரியமடைந்து தமதுள்ளத்திற் குழந்தைகளாகச் சிந்தித்தலையொழித்து, நீங்காமல் அச்சங்கொண்டு தாங்கள்வழிபடுகின்ற தெய்வத்தைப்போல மனத்திற்பொருந்திய அன்பினால் துதித்தார்கள்.—எ-று.

அழல் - கார்த்திகை. திருமால் முதலியோர் பாலூட்டும்படி யேவியகாலத்துக் குழந்தைகளாகக்கருதிப் பாலூட்டிவந்தவர்கள் குமாரக்கடவுளது திருவிளையாடலைநோக்கி ஆச்சரியமுற்றவர்களாய் இக்குழந்தைகள் சிவஸ்வரூபமேயென்றுகருதி வழிபட்டனர்க ளென்பார், 'வழிபடுகடவுளோரிற் போற்றினர் மனங்கொளன்பால்' என்றார். (௧௨௬)

அம்புய முறமுஞ் செங்கே ழறுமுகம் படைத்த கோல
நம்பிதன் வரவு தன்னை நவின்றன மினிமே லங்க
ணெம்பெரு முதல்வி தன்பா லிலக்கத்தொன் பதின்மர் செவ்வே
டம்பிய ராகி வந்த தன்மையை விளம்ப லுற்றாம்.

(இ-ள்.) தாமரைமலர்போன்ற சிவந்தவொளியினையுடைய ஆறு திருமுகங்களைப்படைத்த அழகியமுருகக்கடவுளது திருவவதார மான்மியத்தைக் கூறினோம், இனி திருக்கயிலாயத்தில் எமது பெருமாட்டியாகிய உமாதேவியாரிடத்தில் இலக்ஷத்தொன்பது வீரர்கள் முருகக்கடவுளுக்குத் தம்பியர்களாய் அவதரித்த தன்மையைச் சொல்லுகின்றோம்.—எ-று. (௧௨௭)

திருவவதாரப்படல முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம் ௧௨௭.

---

உ
முருகன்றுணை.

# துவணவர் வருபடலம்.

நஞ்ச யின்றவ னெற்றிநாட் டத்தினு னல்கு
வெஞ்சு டர்ப்பொறி வெம்மையை யாற்றலள் விமலை
செஞ்சி லம்படி தாக்கலி னவமணி சிதற
வஞ்சி யோடின ளித்திற முணர்ந்தன ளகத்துள்.

(இ-ள்.) ஆலாகலவிஷத்தை யுண்டருளிய சிவபெருமான் நெற்றிக்கண்ணினாலளித்தருளிய வெவ்விய நெருப்புப்பொறிகளின் வெப்பத்தைச் சகிக்கமுடியாமல் உமாதேவியார், செவ்விய திருவடிச்சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்குதலினால் நவரத்தினங்கள் சிந்தும்படி அச்சமுற்று ஓடினவராய்த் தமது திருவுள்ளத்தில் இவ்வாறு சிந்திப்பாராயினர்.—எ-று. (க)

மாய வன்முத லமரர்க ளீசனை வணங்கி
நீயோர் மைந்தனைத் தருகென நெற்றிநாட் டத்தா
லாய வன்சுட ருதவியோர் மதலையா யமர்வா
னேயி னுன்சர வணத்தெனத் தெரிந்தன ளிறைவி.

(இ-ள்.) திருமால் முதலிய தேவர்கள் சிவபெருமானை வணங்கித் தேவரீர் ஒரு புதல்வனைத் தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அச்சிவபெருமான் நெற்றிக் கண்ணினிடமாக நெருப்புப்பொறிகளை யுண்டாக்கிக் குழந்தையாயிருக்கும்பொருட்டுச் சரவணப்பொய்கைக் கனுப்பியருளினுரென்று உமாதேவியார் தமது திருவுள்ளத்திலுணர்ந்தருளினர்.—எ-று. (உ)

அன்ன தற்பின ருமையவ ளௌனதுபா லமலன்
றன்ன ருட்பெறு மதலைதோன் றுவகை தடுத்த
பொன்ன கர்க்கிறை விரிஞ்சன்மான் முதலபுத் தேளிர்
பன்னி யர்க்கெலாம் புதல்வரின் றுகெனப் பகர்ந்தாள்.

(இ-ள்.) அதன்பின்பு உமாதேவியார், என்னிடத்துச் சிவபெருமானது திருவருளைப்பெற்ற புதல்வன் தோன்றுதபடி தடைசெய்த தேவேந்திரன் பிரமன் திருமால் முதலிய தேவர்களது மனைவிமார்களுக்கெல்லாம் புத்திரசந்தானமில்லாமற் போகக்கடவதென்று சபித்தனர்.—எ-று. (ங)

இமைய மாமக ளித்திறம் புகன்று மீண்டேகிச்
சமயம் யாவைவு நிறுவிய கண்ணுதற் றலைவ
னமல மாந்திரு முன்னர்வந் தரிக்குமுன் னரிதாங்
கமல மாரடி கண்டனள் பணிந்துகண் களித்தாள்.

(இ-ள்.) பர்வதராஜபுத்திரியாகிய உமாதேவியார் இவ்வாறு சபித்துத் திரும்பிவந்து எல்லாச்சமயங்களையும் நிலைபெறுவித்த நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானது தூய்மையாகிய திருமுன்னே யடைந்து முன்பு திருமாலினால் காணுதற்கரிதா

யிருந்த தாமரைமலர்போன்ற திருவடிகளைத் தரிசித்து வணங்கிக் கண்களிப்படைந் தருளினர்.—எ-று. (௪)

உம்பர் யாவருங் குறையிரந் திடலுநீ யுதவுஞ்
செம்பொ றித்தொகை யாற்றலும் வெம்மையுந் தெரிந்து
வெம்பி யுற்றுடல் பதைப்புற வகன்றிவண் மீண்டே
னெம்பெ ருந்தகை யவ்வழ னீக்கலா லென்றாள்.

(இ-ள்.) தேவர்களனைவருந் தங்கள் குறைகூறி வேண்டிக்கொள்ளவும், தேவரீர் கொடுத்தருளிய நெருப்புப்பொறியினது வன்மையையும் உஷ்ணத்தையுமறிந்து, தேகமுழுதும் வெதும்பித்துடிக்கச் சென்று, எம்பெருமானே! தேவரீர் அவ்வக்கினிப் பொறிகளை இவ்விடத்தினின்று நீக்கினமையால் திரும்பி இங்கு வந்தேனென்று கூறியருளினர்.—எ-று. (௫)

கன்னி யிங்ஙனம் பகர்தலுங் கருணைசெய் தருளித்
தன்னி டத்தினி லிருத்தின னிருந்திடு தையன்
முன்ன மோடலிற் சிதறுநூ புரமணி முழுது
மென்னை யாளுடைய நாயகன் முன்னிலங் கினவால்.

(இ-ள்.) உமாதேவியார் இவ்வாறு கூறியருளவும், (சிவபெருமான்) திருவருள்புரிந்து தமதிடப்பாகத்திலிருத்தினர்; அவ்வாறிருந்தருளிய உமாதேவியார் முன்பு ஓடினமையால் திருவடிச்சிலம்பினின்றுஞ் சிதறிய இரத்தினங்களெல்லாம் என்னையடிமையாகவுடைய சிவபெருமான் திருமுன்னே விளங்கின.—எ-று. (௬)

தளிரின் மெல்லடிப் பரிபுர மாயின தணந்து
மிளிரு மந்நவ மணிகளி னிணையால் விமலை
யொளிரு நல்லுருத் தோன்றின வைம்முகத் தொருவன்
றெளிரு முச்சுட ரகத்திடை யமர்ந்திடுஞ் செயல்போல்.

(இ-ள்.) ஐந்து திருமுகங்களையுடைய சிவபெருமான் ஒளிபொருந்திய சோமசூரியாக்கினிகளின் மத்தியி லெழுந்தருளியிருக்குந் தன்மையைப்போல, துளிரைப் பார்க்கிலும் மென்மையாகிய திருவடியிலணிந்த சிலம்பினின்று நீங்கி விளங்குகின்ற அந்த நவரத்தினங்களில் சிவாக்கினையினால் உமாதேவியாரது விளங்குகின்ற நல்ல சாயை தோன்றின.—எ-று. (௭)

எண்ணி லாநவ மணிகளி னுமையுரு வனைத்துங்
கண்ணி னாற்றெரிந் தருளினால் வம்மெனக் கழற
வண்ண லோர்வகை மணிக்கொரு சத்திக ளாக
நண்ணி னார்நவ சத்திக ளமரர்நற் றவத்தால்.

(இ-ள்.) அளவிடப்படாத நவமணிகளில் உமாதேவியாரது திருவுருவங்களனைத்தையுஞ் சிவபெருமான் திருவிழிகளாற் பார்த்தருளிக் கருணையுடன் வாருங்களென்று திருவாய்மலர்ந்தருளியவுடன் தேவர்களது நல்ல தவத்தினால் ஒவ்வொரு இரத்தினத்திற்கு ஒவ்வொரு சத்திகளாக ஒன்பது சத்திகள் தோன்றினார்கள்.—எ-று.

பருப்ப தக்கொடி புரைநவ சத்திகள் பரமன்
றிருப்ப தத்திடை வணங்கிநின் றவனிடைச் சிந்தை
விருப்பம் வைத்தலு முனிவர்த மகளிர்போல் விரைவிற்
கருப்ப முற்றனர் யாவது முமையவள் கண்டாள்.

(இ-ள்.) பர்வதராஜ புத்திரியாகிய உமாதேவியாரையொத்த நவசத்திகளும் சிவபெருமானது திருவடிகளில் வணங்கியெதிரில் நின்று, அவரிடத்துச் சிந்தையில் விருப்பங்கொள்ளவும், (தாருகாவனத்திலிருந்த) ரிஷிபத்தினிகளைப் போல விரைவாகக்கருப்பமடைந்தார்கள்; இவையனைத்தையும் உமாதேவியார் பார்த்தருளினார்.

தாருகாவனத்து ரிஷபத்தினிகள், பிக்ஷாடனத் திருவுருவங்கொண்டு சென்றருளிய சிவபெருமானது திருமேனிப் பொலிவைக்கண்டவுடனே காமங்கொண்டு அதனால் கருப்பமடைந்த தன்மையைப்போல், இந்நவசத்தியர்களும் சிவபெருமானை வணங்கி அவ்வெம்பெருமான்மீது காமவிச்சையாகத் தங்களுள்ளத்தைச் செலுத்தி அதுகாரணமாகக் கருப்பங்கொண்டமையின், 'முனிவர்தமகளிர்போல் விரைவிற்கருப முற்றனர்' என்று கூறினர். (௯)

முனம்பு ரிந்துல களித்தவ ளனையர்பான் முதிருஞ்
சினம்பு ரிந்திவ ணெமக்குமா றாகிய திறத்தாற்
கனம்பு ரிந்தவிக் கருப்பமோ டிருத்திர் பல்கால
மினம்பு ரிந்தநீர் யாவரு மென்றுகூ ளிசைத்தாள்.

(இ-ள்.) முன்னமே உலகத்தைப்படைத்துக் காக்கின்ற உமாதேவியார் அந்த நவசத்திகளிடத்தில் மிக்ககோபங்கொண்டு நீங்கள் இவ்விடத்தில் எனக்கு விரோதிகளாகிய தன்மையினால் கனமாகிய இந்தக் கருப்பத்துடன் கூட்டமாகிய நீங்களனைவரும் அனேககால மிருக்கக்கடவீர்களென்று சபித்தனர்.—எ-று. (௧௦)

ஆவ தெல்லையி னடுக்கமுற் றஞ்சிமெ யங்கண்
மேவு மாதர்மெய் வியர்த்தன ரவ்வியர்ப் பதனிற்
றேவ தேவன தருளினாற் றினகரத் திரள்போ
லோவி லாவிறல் வீரர்க ளிலக்கர்வந் துதித்தார்.

(இ-ள்.) அவ்வாறாகியசமையத்தில் அங்குப்பொருந்திய நவசத்திகள் நடுங்கிப் பயந்து உடல் வியர்த்தார்கள்; அந்த வியர்வையில் தேவர்கள் நாயகராகிய சிவபெருமானது திருவருளினால் சூரியக்கூட்டங்களைப்போலக் கெடாத வலிமையினையுடைய இலக்ஷம் வீரர்கள் வந்துதோன்றினார்கள்.—எ-று.

சூரபதுமனது சேனாவீரர்களை மிகத்திரணமாகக்கருதிப் போர்செய்து வெல்லத்தக்க பேராற்றலுடையவர்களாகலின், 'ஓவிலா விறல் வீரர்கள்' என்று கூறினார்.

வடுத்த னைப்பொருங் கண்ணினர் வியர்ப்பினில் வந்தாங்
கடுத்த மானவ ரோரிலக் கத்தரு மசனி
கடுத்த சொல்லினர் பொற்றுகி லுடையினர் கரத்தி
லெடுத்த வாளினர் பலகைய ராகியீண் டினரால்.

(இ-ள்.) மாவடுவைப்போலுங் கண்களையுடைய நவசத்திகளினது வியர்வையில் வந்து தோன்றிய இலக்ஷம் வீரர்களும் இடிமுழக்கம் போன்ற சொல்லினையுடையவர்களாயும், பொன்னுடையினை யணிந்தவர்களாயும், கையில் கத்தி கேடகங்களையேந்தியவர்களாயும் வந்து நெருங்கினார்கள்.—எ-று. (௧௨)

அனையர் யாவரு மீசனை யடைந்தன ரன்புற்
றினிய வாகிய வமலனா மங்களை யேத்தி
வனைக ருங்கழல் வணங்கிமுன் னிற்றலு மற்றப்
புனித நாயக னவர்தமை நோக்கியே புகல்வான்.

(இ-ள்.) அவர்களனைவரும் சிவபெருமானை யடைந்தவர்களாய் அன்புகொண்டு இனிமையாகிய அவ்வெம்பெருமானது திருநாமங்களைத்துதித்து, அலங்கரிக்கப்

பட்ட பெரியவீரக்கழலையணிந்த திருவடிகளை வணங்கித் திருமுன்னே நிற்கவும், உடனே மலரகிதராகிய அவ்வெமது சிவபெருமான் அவ்வீரர்களைப் பார்த்து அருளிச்செய்கின்றார்.—எ-று. (௧௩)

மைந்தர் கேண்மினோ நீவிர்கள் யாவரும் வயத்தா
லிந்தி ராதியர் பகைவரை யடுவதற் கெமது
கந்த வேள்படை யாகுதி ரென்னவே கழறி
முந்து பேரருள் புரிந்தனன் யாவர்க்கு முதல்வன்.

(இ-ள்.) மைந்தர்களே ! கேளுங்கள்; நீங்களனைவரும் வெற்றியோடு இந்திரன் முதலிய தேவர்களது பகைவர்களாகிய அசுரர்களைக் கொல்லும்பொருட்டு எமது புதல்வனாகிய கந்தவேளினது சேனைகளாகவிருக்கக்கடவீர்களென்று அருளிச்செய்து யாவருக்கும் முதல்வராகிய சிவபெருமான் மிக்க திருவருள் செய்தருளினார்.—எ-று.

இன்ப நீருட னிவையருள் புரிதலு மிலக்க
நன்பெ ருந்திறன் மைந்தர்க ளாயினோர் நாளு
மன்பு மேதகு பரிசன ராகியே யமலன்
முன்பு நீங்கலா தொழுகினர் செய்பணி முறையால்.

(இ-ள்.) மகிழ்வாகிய தன்மையுடன் இவைகளை யருளிச்செய்யவும், நன்மையாகிய மிக்க வல்லமையையுடைய இலக்ஷம் வீரர்களும், நாள்தோறும் அன்பு மிகுந்த பரிசனங்களாய்ச் செய்கின்ற பணிவிடையின் முறைப்படி சிவபெருமான் திருமுன்னே நின்று நீங்காமலிருந்தார்கள்.—எ-று. (௧௫)

மாற்ற ருஞ்சினத் தம்மைமுன் கொடுமொழி வழங்கத்
தோற்று நன்மணி யுருவமாந் தோகையர் துளங்கிப்
போற்றி வந்தனை செய்துபின் னவள்பணி புரிந்தே
யாற்று தொல்கருப் பத்துடன் பற்பக லமர்ந்தார்.

(இ-ள்.) நீக்குதற்கரிய கோபத்தினால் உமாதேவியார் முன்பு சாபமிடவும், தாங்கள் தோன்றிய நல்ல மணியின் நிறமாகவேயுள்ள மாதர்கள் நடுக்கங்கொண்டு துதித்து வணங்கிப்பின்பு, அவ்வுமாதேவியாருக்குப் பணிவிடை செய்துகொண்டே சுமந்திருந்த பழைமையாகிய கருப்பத்துடன் அநேககாலம் வசித்திருந்தார்கள். (௧௬)

இகலு மாமணி மகளிர்தங் கருவினு ளிறைவற்
புகழு நந்தியங் கணத்தவர் குழவியாய்ப் போந்து
நிகரில் காளைய ராகிவீற் றிருந்தனர் நெறிசேர்
சுகனெ னும்படி பரமனை முன்னியே தொழுது.

(இ-ள்.) ஒன்றேடொன்று மாறுபட்ட (நிறத்தினையுடைய) பெரியநவமணி மாதர்களது கருப்பத்தில் சிவபெருமானைத் துதிக்கின்ற நந்திகணத்தவர்கள்குழந்தைகளாகவந்து ஒப்பற்றவாலிபர்களாய், ஞானநெறியை யடைந்த சுகப்பிரம ரிஷியைப்போலச் சிவபெருமானைத் தியானித்துத் தொழுதுவீற்றிருந்தார்கள்.—எ-று.

தொழுது வீற்றிருந்தனர், எனக்கூட்டுக. சுகப்பிரமமுனிவர் மாதாவினது கருப்பத்திற்றங்கியிருந்த காலத்தும் நீங்காத சிவ சிந்தனையுடையவராய் வசித்திருந்து அச்சிந்தனை மாறாமலே உலகத்தில் அவதரித்த தன்மையைப்போல, இவ்வீரர்களும் சிவத்தியானத்துடன் அவ்வன்னையர்களது கருப்பத்தில்வசித்திருத்தலின், 'நிகரில் காளையராகி வீற்றிருந்தனர் நெறிசேர் சுகனெனும்படி பரமனை முன்னியேதொழுது' என்றார். (௧௭)

அரத னங்களிற் றோன்றிய மங்கைய ரகட்டிற்
கருவின் வந்திடு மாடவ ரீசனைக் கருதிப்
புரியும் யோகுட னிருத்தலி னாற்றரும் பொறையாய்ப்
பரம் தாதலு முமையுடன் பரமனைப் பணிந்தார்.

(இ-ள்.) நவரத்தினங்களிற் றோன்றிய நவசத்திகளினது வயிற்றிலுள்ள கருப்பத்தில் வந்திருக்கின்ற வீரர்கள் சிவபெருமானைத் தியானித்துச் செய்கின்ற யோகத்துடனிருத்தலினால் சுமக்கமுடியாத பளுவாய்ப் பாரமாகவிருக்கவும் (அந்நவ சத்தியர்கள்) உமாதேவியாருடன் சிவபெருமானை வணங்கினார்கள்.—எ-று. (௧௮)

இருவர் தம்மையும் பணிந்தவ ரின்றுகா றினைய
கருவி னொந்தன மின்னினி யாம்பரிக் கல்லே
மருள்பு ரிந்திடு மென்றலு மாதியங் கடவுள்
பரிவி னாலுமை திருமுக நோக்கியே பகர்வான்.

(இ-ள்.) அச்சிவசத்திகளை வணங்கிய நவசத்தியர்கள், இன்றுவரையிலும் இந்தக்கருப்பத்தினால் வருந்தினோம்; இனியாங்கள் சுமக்கவலியில்லோம்; ஆதலால், திருவருள் செய்வீர்களாகவென்று வேண்டிக்கொள்ளவும், முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் அன்புடன் உமாதேவியாரது திருமுகத்தை நோக்கி அருளிச்செய் கின்றார்.—எ-று. (௧௯)

ஏல வார்குழற் கவுரிநின் செய்யதா ளிடையிற்
சாலு நூபுரத் துதித்தவ ருனதுசா பத்தாற்
சூலி னான்மிக மெலிந்தனர் பற்பகல் சுமந்தார்
பால னைப்பெற வினியருள் புரிகெனப் பணித்தான்.

(இ-ள்.) மயிர்ச்சாந்தணிந்த நீண்ட கூந்தலையுடைய பார்வதியே! உனது சிவந்த பாதங்களிலணிந்த சிலம்பினின்றுந்தோன்றிய இம்மாதர்கள் உனதுசாபத்தை யேற்றுக் கருப்பத்தினால் மிகவும் வருந்தினவர்களாய், அநேகநாள்கள் அக்கருப்பத் தைத் தாங்கினார்கள்; இனி, (அவர்கள்) புதல்வர்களைப் பெறும்படி அருளிச்செய்வா யாகவென்று கூறியருளினார்.—எ-று.

மெலிந்தனர் என்பது முற்றெச்சம். (௨௦)

இறைவ னிங்கிது பணித்தலு நன்றென விசையா
முறுவல் செய்துமை மாதரை நோக்கியொய்ம் பினரைப்
பெறுதி ராலினி யென்றலு மவர்வயிற் பெயரா
துறையும் யோகுடை வீரர்க ளித்திற முணர்ந்தார்.

(இ-ள்.) சிவபெருமான் இவ்விடத்து இதனையருளிச் செய்யவும், உமாதேவி யார் நல்லதென்று சம்மதித்து நகைபுரிந்து, அம்மாதர்களைப்பார்த்தருளி, இனி, வீரர் களைப்பெறக்கடவீர்களென்று கூறியருளவும், அம்மாதர்களது கருப்பத்தில் நீங்காது வசிக்கின்ற யோகத்தினையுடைய வீரர்கள் இத்தன்மையை யுணர்ந்தார்கள்.—எ-று.

மறத்த லில்லதோ ருணர்வுடை வீரர்கண் மற்றித்
திறத்தை நாடியே யோகுவிட் டுளமகிழ் சிறப்ப
விறத்த னீங்கிய பரம்பொரு ளருண்முறை யிறைஞ்சிப்
பிறத்த லுன்னியே முயன்றன ராயிடைப் பெயர்வார்.

(இ-ள்.) மறத்தலில்லாத உணர்வினையுடையவீரர்கள் இத்தன்மையையுணர் ந்து யோகத்தினின்றுநீங்கி மனமகிழ்வுண்டாக நாசரகிதராகிய சிவபெருமானது திரு

வருண்முறைமையைச்சிந்தித்துவணங்கிப் பிறக்கும்படிநினைத்துமுயற்சித்தவர்களாய் அக்கருப்பத்தினின்றும் நீங்குகின்றவர்களானார்கள்.—எ-று. (௨௨)

பரிபு ரந்தனின் முன்வரு மங்கையர் பனாதன்
கருணை கொண்டசொற் கேட்டலுங் கவற்சியை யகன்று
விரைவின் மேலவர் பதம்பணிந் தேத்தியே விடைகொண்
டொருவி மைந்தரை யளித்தனர் யாவரு மொருசார்.

(இ-ள்.) திருவடிச்சிலம்பினின்று முன்னே தோன்றிய நவமாதர்கள் உமாதேவியாரது கருணைபொருந்திய வார்த்தையைக் கேட்டவுடன் மனவருத்தத்தையொழிந்து, விரைவாக அச் சிவசத்திகளது திருவடிகளை வணங்கித் துதித்து விடை பெற்றுக்கொண்டு யாவரும் ஒருபக்கமாகச் சென்று புதல்வர்களைப் பெற்றார்கள்.—எ-று.

நந்தி தன்கண முதல்வர்க ளாகியே நணியோர்
பந்த நீங்கியே சனித்தன ரொன்றிலாப் பதின்ம
ரெந்தை யாரருள் பெயர்கொடே யிருநில வரைப்பிற்
சுந்த ரன்விடை முகத்தவன் றோன்றிய வாபோல்.

(இ-ள்.) நந்திகணத்தலைவர்களாக வந்திருந்த அவ்வீரர்கள், எமது சிவபெருமான் அருளிய திருநாமத்தைக்கொண்டே பெரிய நிலவுலகத்தில், ஸ்ரீசுந்தரமூர்த்தியும் இடபமுகத்தினையுடைய திருநந்திதேவரும் அவதரித்ததன்மையைப்போல, நவவீரர்களும் பந்தமொழிந்தே அவதரித்தார்கள்.—எ-று.

கமலினி அநிந்திதையார் என்னுஞ் சேடியர்கள் காரணமாக ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளும், சிலதரமுனிவரது வேண்டுகோள் காரணமாகத் திருநந்திதேவரும், தங்கட்கு முன்னிருந்த சுந்தரன் நந்தியென்னுந் திருநாமங்களைக்கொண்டே பாசபந்தங்களொழிந்தவர்களாய் உலகுயிர்களுக்குத் திருவருள்புரியுங் காரணமாக அவதரித்தருளிய தன்மைபோல, இந்நவவீரர்களும் தாங்கள் முன்பு பெற்றிருந்த திருநாமங்களுடன் பந்தங்களொழிந்தே அவதரித்தமையின், 'பந்த நீங்கியே சனித்தன ரொன்றிலாப் பதின்ம - ரெந்தையா ரருள்பெயர் கொடே யிருநில வரைப்பிற் - சுந்தரன் விடைமுகத் தவன் றோன்றிய வாபோல்' என்று கூறினார். 'சுந்தரன் விடைமுகத்தவன்' என்பதற்கு, சுந்தரனாகிய விடைமுகத்தவன் என இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகக் கொண்டு பொருள் கூறினுமாம். (௨௪)

பேர வாகுவை யுடையவ னிளவல்பே ரருளாற்
சூர வாகுலம் வானவர் பெறுவகை தொலைப்பா
னேர வாகுறுஞ் செம்மணிப் பாவைதன் னிடத்தில்
வீர வாகுவந் துதித்தன னுலகெலாம் வியப்ப.

(இ-ள்.) பெரிய பெருச்சாளி வாகனத்தை யுடைய விநாயகமூர்த்திக்கு இளையவராகிய முருகக்கடவுளது மிக்க திருவருளினால் சூரபதுமன் முதலியவர்களாலுண்டாகின்ற துன்பங்களைத் தேவர்க ளடையாவண்ண நீக்கும்பொருட்டு மிக்க அழகினையுடைய மாணிக்கவல்லியினிடத்தில் உலகமனைத்தும் அதிசயிக்கும்படி வீரவாகுத்தேவர் வந்து அவதரித்தனர்.—எ-று.

பேர, ஏர என்பன குறிப்புப் பெயரெச்சங்கள். (௨௫)

விரள வல்லியார் தந்திரு ரரிவியன் படையாங்
கரள வல்லிரு ளசற்றுவா னெழுந்தவெண் கதிர்போற்

திரள வல்லினை யனையபூண் முலையுடைத் தெய்வத்
தரள வல்லிபாற் றோன்றினன் வீரகே சரியே.

(இ-ள்.) சங்கிலிபூட்டாத யானைமுகத்தினையுடைய தாரகன், சூரபதுமன், சிங்கமுகன் என்னு மிவர்களது சேனைகளாகிய விஷம்போன்ற வலிய இருளை நீக்கும் படி தோன்றிய வெள்ளிய சந்திரனைப்போல, திரட்சியாகிய சூதாடுகருவியினையொத்த ஆபரணமணிந்த முலையினையுடைய தெய்வத்தன்மையமைந்த முத்துவல்லியினிடத்து வீரகேசரி யவதரித்தனர்.—எ-று. விரளம்-நீக்கம், நெகிழ்வு. (உசு)

மக்கள் வானவர்க் கருந்துயர் புரியும்வல் லவுணர்
தொக்க வீரமா மகேந்திரப் பெருவளந் தொலையச்
செக்கர் நூபுரப் புட்பரா கத்திபாற் சிறப்பாற்
றக்க வீரமா மகேந்திரன் வந்தவ தரித்தான்.

(இ-ள்.) மனிதர்களுக்குந் தேவர்களுக்குங் கொடிய துன்பத்தைச்செய்கின்ற வலிய அசுரர்கள் நிறைந்த வீரமாமகேந்திரபுரத்திலுள்ள பெருஞ்செல்வங்க ளழியும்படி, சிவந்த சிலம்பிற்றோன்றிய புஷ்பராகவல்லியினிடத்துத் தகுந்த சிறப்பினையுடைய வீரமாமகேந்திரர் வந்து அவதரித்தனர்.—எ-று. (உள)

ஆத வத்தனிக் கடவுளும் வடவையா ரழலுஞ்
சீத ளப்புது மதியமும் வெள்குறத் திகழ்கோ
மேத கத்தமர் பாவைபால் விண்ணவர் புரியு
மாத வத்தினல் வீரமா மகேச்சுரன் வந்தான்.

(இ-ள்.) ஒப்பற்ற சூரியதேவனும், அரிய வடவாமுகாக்கினியும், குளிர்ச்சியைத்தருகின்ற புதுமையாகிய சந்திரனும் நாணும்படி விளங்குகின்ற கோமேதகவல்லியினிடத்தில் தேவர்கள்செய்த பெரிய தபோபலத்தினல் வீரமாமகேச்சுரர் அவதரித்தனர்.—எ-று.

சூரியன்-வடவை, சந்திரன் இவைகளின் நிறம் கோமேதகத்திற்குரியன வென்க. (உஅ)

தான மாநிலத் தேவர்கண் மகிழ்வுறத் தருவ
ரான பேரொலா முடிவுற வறந்தலை யெடுப்பக்
கானல் சேர்வயி ரேரிய மின்னிடைக் கழற்கான்
மான வீரமா புரந்தர னென்பவன் வந்தான்.

(இ-ள்.) பெரிய சொர்க்கலோகவாசிகளாகிய தேவர்கள் மகிழ்ச்சியடையவும், அசுரர்களாயுள்ளவர்களெல்லாம் நாசமடையவும், தருமந்தலைத்தோங்கவும் ஒளிபொருந்திய வயிரேரியவல்லியினிடத்தில் பெருமை பொருந்திய வீரமாபுரந்தரர் அவதரித்தனர்.—எ-று. (உகூ)

சூர ராக்கமுந் துணைவர்தம் மாக்கமுஞ் சூழுந்
தீர ராக்கமும் வானவ ரேக்கமுஞ் சிதைய
வார ராக்கமழ் கொன்றைவே ணியனரு ளதனல்
வீர ராக்கதன் வந்தனன் வயிரமெல் லியல்பால்.

(இ-ள்.) சூரனது செல்வமும், அவன்தம்பியர்களது செல்வமும், அவனைச்சூழ்ந்திருக்கின்ற வீரர்களாகிய அசுரர்களது செல்வமும், தேவர்களது துன்பமுமொழியும்படி, நீண்ட பாம்புடன் நறுமணங்கமழுங் கொன்றைமலர் மாலையையுமணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானது திருவருளினல் வயிரவல்லியினிடத்தில் வீரராக்கதர் அவதரித்தனர்.—எ-று. (௩௦)

கரக தத்தனி மால்வரை யெடுத்தொரு கணத்திற்
புரக தத்தினை யிழைத்தவ னருளினாற் புணரிக்
குரக தத்திடைப் பைங்கனல் கொம்மென வெழல்போன்
மரக தத்திபால் வீரமார்த் தாண்டன் வந்தனனே.

(இ-ள்.) கதித்தலையுடைய ஒப்பற்ற பெரிய மேருமலையைத் திருக்கரத்தில் (வில்லாக) எடுத்து முப்புரத்தை நாசஞ்செய்த சிவபெருமானது திருவருளினால், சமுத்திரத்திலுள்ள வடவாமுகாக்கினியில் பசிய நெருப்பானது விரைவாகத் தோன்றிய தன்மைபோல மரகதவல்லியினிடத்தில் வீரமார்த்தாண்டர் அவதரித்தனர்.—எ-று.

கதம்-கதித்தல். புரம் ஹதம் என்பது, புரகதம் என்றாயிற்று. (கூக)

மையன் மாக்கரி வாம்பரி விரவிய மணித்தேர்
வெய்ய தானவர் பல்லொருகை யிமைப்பினில் விளிய
மொய்யி னார்த்தடு மானவன் பவளமா மொழிப்பேர்த்
தைய றன்வயின் வலியவீ ராந்தகன் சனித்தான்.

(இ-ள்.) மதமயக்கத்தையுடைய பெரிய யானைகளும், தாவுகின்ற குதிரைகளும், மணிகள் கட்டிய இரதங்களும், கொடிய அசுரர்களாகிய பல கூட்டங்களும் இமைப்பொழுதில் நாசமாகும்படி வன்மையோடு ஆரவாரித்துக் கொல்லுகின்ற வீரனாகிய வலிய வீராந்தகர் பவளவல்லியினிடத்து அவதரித்தனர்.—எ-று. (கூஉ)

கந்து தித்திடு வியனர மடங்கலுங் கடலின்
முந்து தித்திடு மாலமும் வடவையு முரண
நந்து தித்தநற் களமணிப் பாவைநற் றவத்தால்
வந்து தித்தனன் வீரதீ ரப்பெயர் வலியோன்.

(இ-ள்.) தூணில் தோன்றிய பெரிய நரசிங்கமும் முற்காலத்திற் கடலிற் றோன்றிய ஆலாகலவிஷமும், வடவாமுகாக்கினியும் மாறுகொள்ளும்படி நம்மால் துதிக்கப்பட்ட (சிவபெருமானது) நல்ல காளகண்டம்போன்ற இந்திரநீலவல்லியினது சிறந்த தவத்தினால் வீரதீரனென்னும்பெயரினையுடைய வீரர் வந்து அவதரித்தனர்.

மணி - இந்திரநீலமணி. (கூரு)

இந்த வீரரோன் பதின்மரு மீசன தருளாற்
றந்த மன்னையர் நிறங்கொடே பொலந்துகி றூங்கி
வந்து பற்பகல் வளர்தரு முறுப்பொடு மடவா
ருந்தி யின்வழி நான்முகத் தண்ணல்போ லுதித்தார்.

(இ-ள்.) இந்த ஒன்பது வீரர்களும் சிவபெருமானது திருவருளினால் தங்கள் தங்களுடைய தாய்மார்களது நிறத்துடன் பொன்னுடையை யணிந்து, பல நாள்கள் வளர்ந்த அவயவத்துடன் அம்மாதர்களுடைய நாபியின்வழியே நான்கு முகங்களை யுடைய பிரமனைப்போல வந்து அவதரித்தார்கள்.—எ-று.

'தந்த மன்னையர் நிறங்கொடு' என்றதனால், மாணிக்கவல்லியினிடமாகத் தோன்றிய வீரவாகுத்தேவர் செந்தாமரைமலரின் நிறமும், முத்துவல்லியினிடமாகத் தோன்றிய வீரகேசரி பாலின் நிறமும், புருடராகவல்லியினிடமாகத் தோன்றிய வீரமாமகேந்திரர் பொன்னின் நிறமும், கோமேதகவல்லியினிடமாகத்தோன்றிய வீரமாமகேச்சுரர் மஞ்சளுஞ் சிவப்புங் கலந்தாலொத்த நிறமும், வயிரேயவல்லியினிடமாகத் தோன்றிய வீரமாபுரந்தரர் மயிலின் கழுத்துப்போன்ற நிறமும், வயிரவல்லியினிடமாகத் தோன்றிய வீரராக்கதர் இந்திரவில்லின் நிறமும், மரகதவல்லியினிடமாகத் தோன்றிய வீரமார்த்தாண்டர் பச்சைக்கிளியின் நிறமும், பவளவல்லியினிடமாகத்

தோன்றிய வீராந்தகர்முருக்கம்பூவின் நிறமும், இந்திரநீலவல்லியினிடமாகத் தோன்றிய வீரதீரர் காயாம்பூவின் நிறமும் பெற்றுள்ளவர்களென வறிக.

திருமாலினது நாபிக்கமலத்தின்வழியே தோன்றிய பிரமனைப்போல, இந் நவவீரர்களும் நவசத்தியர்களது நாபியின்வழியாகவே தோன்றினமையின், 'மடவாருந்தியின்வழிநான்முகத்தண்ணல்போலுதித்தார்' என்று கூறினர். (௩௪)

வேறு.

உதிதருமத் திறல்வீர ரரியணைமே லம்மையுட னுறைந்த நாதன்
பதமலர்கள் பணிந்தெழலு மவர்க்கண்டு பார்ப்பதியைப் பரிவா னோக்கி
மதியுடையர் திறலுடையர் மானவருங் கலத்தினர்நம் மைந்த ரின்னோர்
புதியரலர் நந்திதனிக் கணத்தவரென் றுன்சுருதிப் பொருளாய் நின்றான்.

(இ-ள்.) இவ்வாறு அவதரித்த அந்த வன்மையினையுடைய நவவீரர்களும் சிங்காசனத்தில் உமாதேவியாரோ டெழுந்தருளிய சிவபெருமானது திருவடித்தாமரைகளை வணங்கி யெழுந்திருத்தலும், வேதப்பொருளாயுள்ளசிவபெருமான் அவ்வீரர்களைப்பார்த்து உமாதேவியாரை அன்புடன் நோக்கியருளி, புத்திசாலிகளும், வலிமையுடையவர்களும், மானத்தையே ஆபரணமாக வுடையவர்களுமாகிய இவர்கள் நமது புதல்வர்கள்; புதிதானவர்களல்லர்; நந்திகணத்திற் சேர்ந்தவர்கள் என்று திருவாய்மலர்ந்தருளினர்.—எ-று. (௩௫)

தேவியது கேட்டுமைந்தர்க் கருள்புரிய வவர்க்கெல்லாஞ் சிவன்வெவ் வேறு
தாவில்சுடர் வாளுதவி வியர்ப்பில்வரு மோரிலக்கந் தனய ரோடு
நீவிர்களு மொன்றிநுங்கட் கிறைவனு கியசேயை நீங்க லின்றி
யேவலவன் பணித்தனசெய் தொழுகுதிரென் றுனவரு மிசைந்து தாழ்ந்தார்.

(இ-ள்.) உமாதேவியார் அதனைக் கேட்டருளி, புதல்வர்களாகிய அந்தநவவீரர்களுக்குத் திருவருள்புரியவும், உடனே சிவபெருமான் அவர்க ளனைவருக்கும் வெவ்வேறாகக் கெடாத ஒளிபொருந்திய வாளாயுதத்தைக்கொடுத்தருளி வியர்வையிற் றோன்றிய இலக்ஷம்பிள்ளைகளுடன் நீங்களுஞ் சேர்ந்திருந்து உங்கட்கு முதல்வனாகிய கந்தவேளைப் பிரியாமல் அவனிடுகின்ற ஏவலைச் செய்துகொண்டிருங்களென்று திருவாய்மலர்ந்தருளினர்; அவர்களும் அதற்கிசைந்து வணங்கினர்கள்.—எ-று. (௩௬)

ஒன்பானு மிலக்கத்தோ ரோரிலக்கத் தோர்தம்மோ டொன்றிப் புல்லி
யன்பாகி யெம்பெருமான் சினகரத்தை யகலாம லங்கண் வைக
மென்பானல் புரையும்விழிச் சத்திகளொன் பதின்மர்களும் விமலக் கன்னி
தன்பாலை யிகவாம லவள்பணித்த தொழில்புரிந்து சார்த லுற்றார்.

(இ-ள்.) நவவீரர்கள் இலக்ஷம் வீரர்களோடு சேர்ந்து தழுவிச் சினேகித்து அன்புடன் எமது சிவபெருமானது திருக்கோயிலை விட்டு நீங்காமல் அங்கு வசித்திருக்க, (அவர்களைப் பெற்ற) மெல்லிய நீலோற்பல மலர்போன்ற கண்களையுடைய நவசத்தியர்கள் நின்மலையாகிய உமாதேவியாரை விட்டு நீங்காமல் அவ்வம்மையாரிட்ட பணிவிடைகளைச் செய்துகொண்டு வசித்திருந்தார்கள்.—எ-று. (௩௭)

துணைவர்வருபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௦௧௪.

---

உ

முருகன் றுணை.

# சரவணப்படலம்.

ஏற்ற மானவ ரென்றெழு பதின்மரோ டிலக்கர்
தோற்ற மெய்திய தன்மையை யித்துணை சொற்றும்
மாற்றல் சேர்புனற் சரவணத் தடந்தனி லறுவர்
போற்ற வைகினோன் கயிலையிற் புகுந்தமை புகல்வாம்.

(இ-ள்.) உயர்வுபொருந்திய நவவீரர்களும் இலக்ஷம் வீரர்களும் அவதரித்த தன்மையை இதுவரையிற் கூறினோம். இனி சிறப்புப்பொருந்திய நீரையுடைய சரவணப்பொய்கையில் கார்த்திகைமாதர்கள் பாதுகாக்கும்படி யெழுந்தருளியிருந்த குமாரக்கடவுள் திருக்கயிலாயத்தை யடைந்ததன்மையைக் கூறுவோம்.—எ-று. (க)

தருப்ப மிக்குளார் காணுறாத் தாவில்சீர்வெள்ளிப்
பொருப்பி லுற்றிடு பரம்பொருள் கருணையாற் பொறைகூர்
கருப்ப மற்றுயிர் முழுவதுந் தந்திடுங் கன்னிப்
பருப்ப தக்கொடிக் கவ்வழி யினையன பகர்வான்.

(இ-ள்.) மிக்க அகங்கார முடையவர்களால் காணப்படாத கெடாத சிறப்பினையுடைய வெள்ளிமலையில் எழுந்தருளி யிருக்கின்ற பரம்பொருளாகிய சிவபெருமான் சுமையாகிய கருப்பமில்லாமல் காருண்ணியத்தினால் எல்லா வுயிர்களையும் பெற்றருளிய கன்னிகையாகிய பார்வதி தேவியாரைப்பார்த்தருளி அப்பொழுது இவ்வார்த்தைகளை யருளிச் செய்வாராயினர்.—எ-று. (உ)

பொம்ம லுற்றிடு நான்முக னாதியோர் புந்தி
விம்ம லற்றிட முந்துநம் விழியிடைத் தோன்றிச்
செம்ம லர்ப்பெருஞ் சரவணத் திருந்தநின் சேயை
யிம்ம லைக்கணே யுய்க்குதும் வருகென விசைத்தான்.

(இ-ள்.) (உமையவளே!) மிகுதியாகப் பொருந்திய பிரமன் முதலியவர்களது மனவருத்தநீங்கும் வண்ணம் முன்பு நமது விழியினிடத்திற்றோன்றிச் செவ்விய மலர்களையுடைய பெரிய சரவணப்பொய்கையில் வளர்ந்திருக்கின்ற உனது புதல்வனை இம்மலையினிடத்து அழைத்துக்கொண்டு வருவோம், ஆதலால் நீவரக்கடவை யென்று அருளிச் செய்தனர்.—எ-று. (ங)

வேறு.

செம்புலி யதளினான் செப்பிற் றோர்தலு
மம்பிகை யுவகையோ டன்பு கொண்டெழீஇ
நம்பெரு மதலையை நாங்கொண் டேகுது
மெம்பெரு முதல்வநீ யெழுதி யாலென்றாள்.

(இ-ள்.) சிவந்த புலித்தோலை யாடையாகவுடைய சிவபெருமான் இவ்வாறு அருளிச்செய்ததனைக் கேட்டருளவும் உடனே உமாதேவியார் மகிழ்வு மன்புங் கொண்

டெழுந்து எமது சிறந்த 'முதல்வரே! நமது பெருமைதங்கிய புதல்வனை நாமழைத்துக் கொண்டு வருவோம், நீர் வருவீராகவென்று அருளிச்செய்தனர். எ-று. (ச)

கொம்மைவெம் முலையினாற் குறிப டுத்திய
வம்மையீ துரைத்துழி யருளி ஞலெழா
மைம்மலி மிடறுடை வான நாயக
னிம்மென வவளொடு மேற தேறினன்.

(இ-ள்.) குவிவாகிய விருப்பந்தரத்தக்க ஸ்தனங்களால் தழும்பு படுத்திய உமாதேவியார் இதனை யருளிச்செய்தவுடனே காளகண்டராகிய சிவபெருமான் அருளுடன்எழுந்து அவ்வம்மையாருடன் விரைவாக இடபவாகனத்திலேறியருளினர்.எ-று.

கொம்மை வெம்மலையினாற் குறிபடுத்தியதாவது, ஸ்ரீ காஞ்சிபுரத்தில் கம்பாநதிப் பெருக்கைக் கண்டஞ்சிச் சிவலிங்கப்பெருமானைத் தழுவி முலைச்சுவடும் வளைச்சுவடுஞ் செய்தருளினமையை. (ரு)

நந்தியி னெருத்தமே னங்கையா ளொடு
நந்திவந் திடுதலு நாக மேலுளார்
நந்திய வினைத்தொகை நந்திற் றென்றிடா
நந்திதன் கணத்தொடு நண்ணிப் போற்றினர்.

(இ-ள்.) இடபத்தின் பிடரியில் உமாதேவியாரோடு சிவபெருமான் எழுந்தருளிவரவும்,சுவர்க்கலோக வாசிகளாகிய தேவர்கள் நமது கொடிய தீவினைத்தொகைகளனைத்தும் அழிந்தனவென்று கூறிக்கொண்டு திருநந்திதேவரது கணங்களுடன் அடைந்து துதித்தார்கள்.—எ-று.

நந்திய எனற்பாலது, நந்திய எனக்குறுக்கல் விகாரம் பெற்றது. (சு)

அந்தமில் விடத்தினை யடக்கு கையுடைச்
சுந்தர னாதியாந் தொல்க ணத்தினோ
ரெந்தைத னுருவுகொண் டிருந்த மேலவர்
வந்திரு மருங்குமாய் வழுத்தி யீண்டினர்.

(இ-ள்.) முடிவில்லாத ஆலாகலவிஷத்தை யடக்கிய திருக்கரத்தினையுடைய ஆலாலசுந்தரர் முதலிய பழைய சிவகணங்களும், சிவசாரூபங் கொண்டிருந்த பெரியோர்களு மடைந்து இருபக்கங்களிலுந் துதித்து நெருங்கினர்கள்.—எ-று.

'அந்தமில் விடத்தினை யடக்குகையுடைச்சுந்தரன்' என்பதன் வரலாற்றை மேல் தக்ஷகாண்டம் ததீசி யுத்தரப்படலத்திற் காண்க. (எ)

ஆன்முக நந்தியெம் மடிக ளுய்த்திடத்
தேன்முக நறுமலர் சிதறிச் செங்கையாற்
கான்முறை வணங்கியே கமலக் கண்ணவ
னான்முகன் மகபதி பிறரு நண்ணினர்.

(இ-ள்.) இடபமுகத்தினையுடைய திருநந்திதேவர் அருகிற் செலுத்துதலும், கமலக்கண்ணனாகிய திருமாலும் பிரமனும் இந்திரனும் மற்றைத் தேவர்களும் தேன் பொருந்திய நல்ல மலர்களைச்சிந்திச் செவ்விய கரங்களால் திருவடிகளை முறைமைப்படி வணங்கிக் கொண்டுவந்தார்கள்.—எ-று. (அ)

சல்லரி வயிர்துடி தடாரி சச்சரி
கல்லென விரங்குறு கரடி காகளஞ்

செல்லுறழ் பேரிகை திமிலை யாதியாம்
பல்லிய மியம்பின பாரி டங்களே.

(இ-ள்.) சல்லரியும், ஊதுகொம்பும், உடுக்கும், தடாரியும், சச்சரியும், கல்லென்றுமுழங்குகின்றகரடிகையும், எக்காளமும், மேகம்போலு முழக்கத்தினையுடைய பேரிகையும், திமிலையு முதலாகிய பல வாத்தியங்களைப் பூதகணங்கள் வாசித்தன.

கல் என்பது ஒலிக்குறிப்பு. (௯)

வேறு.

வேத நான்குங் குடிலையும் வேறுள
பேத மாய கலைகளும் பேரிசை
நாத மோடு நணுகின விஞ்சையர்
கீதம் யாவு மிசைத்துக் கெழுமினர்.

(இ-ள்.) நான்கு வேதங்களும் பிரணவமும், மற்றைய வேறுபாட்டினையுடைய கலைகளும் மிகுந்த நாதத்துடன் வந்தன, வித்தியாதரர்கள் சங்கீதங்க ளனைத்தையும் பாடிக்கொண்டு நெருங்கினார்கள்.—எ-று.

வேதம் குடிலை கலைகள் என்பன, அவற்றின் அதிதேவதைகளை. (௧௦)

வள்ளல் வேணியின் மாமதி யீண்டியே
பிள்ளை வெண்பிறை யைப்படர் பேரராக்
கொள்ளு மென்று குறித்தது போற்றல்போல்
வெள்ளி வெண்குடை வெய்யவ ரேந்தினர்.

(இ-ள்.) சிவபெருமானது சடைமுடியிலுள்ள இளமைபொருந்திய வெண்பிறையினை, ஊர்ந்துசெல்லுகின்ற பெரும்பாம்புகள் பிடித்துக்கொள்ளுமென்று நினைத்துப் பூரணச்சந்திரன்வந்து அவ் வெண்பிறையினைப்பாதுகாத்தல்போல வெள்ளியாலாகிய வெண்குடையினைச் சூரியர்கள் தாங்கினார்கள்.—எ-று. (௧௧)

சகர ரொன்னுந் தலைவர்க டம்வழிப்
பகிர தப்பெயர்ப் பார்த்திவன் வேண்டலு
நிகரி லோனரு ணீத்தத் தொழுக்கெனப்
புகரில் சாமரம் பூதர்கள் வீசினர்.

(இ-ள்.) சகரராஜாக்களது பரம்பரையிற் றோன்றிய பகிரதனென்னும் பெயரையுடைய அரசன் வேண்டிக்கொள்ளவும், அதனால் ஒப்பற்ற சிவபெருமான் கொடுத்தருளிய கங்கையாற்றினொழுக்கைப்போல, பூதகணங்கள் குற்றமற்ற சாமரைகளை வீசினார்கள்.—எ-று.

சாமரம் வெண்ணிறமுடைமையின் கங்கைநதிபோலவும், அவற்றை வீசுதல் அக்கங்கையினொழுக்குப்போலவுந் தோன்றின வென்க. பகிரதனது பிரயத்தினத்தாற் கங்காநதி உலகில் வந்தமையின், 'பகிரதப்பெயர்ப்பாத்திபன் வேண்டலும் நிகரிலோ னருணீத்தம்' என்றார். (௧௨)

சீறு மால்கரி சீயம் வயப்புலி
யேறு பூட்கை யிரலையெண் கேமுதல்
வேறு கொண்ட வியன்முகச் சாரதர்
நூறு கோடியர் நொய்தெனச் சுற்றினர்.

(இ-ள்.) சீறுகின்ற மதமயக்கத்தையுடைய யானையும், சிங்கமும், வெற்றிபொருந்திய புலியும், இடபமும், யாளியும், மானும், கரடியும் இவை முதலாகச்சொல்

லப்பட்ட வேறுபாட்டினையுடைய பெரிய முகங்களைக்கொண்ட நூறுகோடி பூதர்கள் விரைவாகச் சூழ்ந்தார்கள்.—எ-று. (௧௩)

இமிலு டைப்பல வேற்றிருங் கேதனந்
திமில விண்புன னக்கிச் சிதறுவ
வமல னைத்தொழு தாற்றுமெய் யன்பினாற்
கமல முய்த்திடுங் காட்சியர் போன்றவே.

(இ-ள்.) முசுப்பினையுடைய பல பெரிய இடபக்கொடிகள் பேரொலிபொருந்திய ஆகாயகங்கையிற் படிந்து நீரைச் சிதறுந்தன்மை (எதுபோலுமெனின்,) சிவபெருமானைத்துதித்துச் செய்கின்ற மெய்யன்பினால் அருக்கியநீரைச் சிந்துகின்ற அன்பர்களையொத்திருந்தன.—எ-று.

திமிலம்-பேரொலி. கேதனம் காட்சியர் போன்ற வென்க. (௧௪)

அன்ன காலை யகிலமு மீன்றருள்
கன்னி தன்னொடு காமர்வெள் ளேற்றின்மேன்
மன்னி வைகு மதிமுடி வானவன்
றன்ன தாலயத் தைத்தணந் தேகினான்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் சர்வலோகங்களையும் பெற்றருளிய உமாதேவியாரோடு அழகிய வெள்ளிய இடபத்தின்மேல் வீற்றிருந்தருளிய சந்திரசேகரராகிய சிவபெருமான் தமது திருக்கோயிலைவிட்டுச் சென்றருளினார்.—எ-று. (௧௫)

### வேறு.

தன்ன தாலய நீங்கியே கயிலையைத் தணந்து
பொன்னி னீடிய விமையமால் வரைப்புறத் தேகி
யன்ன மாடுறுஞ் சரவணப் பொய்கையை யடைந்தா
னென்னை யாளுடை நாயக னிறைவியுந் தானும்.

(இ-ள்.) என்னை யடிமையாகவுடைய சிவபெருமான் உமாதேவியாருந் தாமுமாகத் தமது திருக்கோயிலினின்றும் புறப்பட்டுத் திருக்கயிலாயத்தினின்று நீங்கிப் பொன்னினாலுயர்ந்திருக்கின்ற பெரிய இமையமலையினருகிற் சென்று அன்னப் பறவைகள் விளையாடுகின்ற சரவணப்பொய்கையை யடைந்தருளினார்.—எ-று. (௧௬)

பிறையு லாஞ்சடைத் தேவனு மவன்றனைப் பிரியா
துறையு மாதுமோ ரறுவகை யுருவுகொண் டுற்ற
சிறுவ னீர்மையை நோக்கியே திருவருள் செய்து
நிறையும் வான்புனற் பொய்கையங் கரையிடை நின்றார்.

(இ-ள்.) இளம்பிறை தவழுஞ் சடைமுடியினையுடைய சிவபெருமானும் அவ்வெம்பெருமானை விட்டு நீங்காதிருக்கின்ற உமாதேவியாரும் ஒப்பற்ற ஆறு திருவுருவங்களைக் கொண்டிருக்கின்ற குமாரக்கடவுளது தன்மையைப் பார்த்துத் திருவருள் புரிந்து நிறைந்த மிக்க நீரையுடைய சரவணப்பொய்கையின் கரையினிடத்து நின்றார்கள்.—எ-று. (௧௭)

முண்ட கச்சர வணந்தனின் மூவிரு வடிவங்
கொண்டு லாவிவீற் றிருந்திடு மொருபெருங் குமர
னண்டர் நாயகன் றன்னுட னகிலமீன் றாளைக்
கண்டு மாமுக மலர்ந்தனன் றனதுளங் களித்தான்.

(இ-ள்.) தாமரை மலர்களையுடைய சரவணப்பொய்கையில் ஆறுதிருவுருவங்களோடு மூலாவியெழுந்தருளியிருக்கின்ற ஒப்பற்ற பெரிய குமாரக்கடவுள் தேவர்கள் நாயகராகிய சிவபெருமானுடன் சர்வலோகங்களையு மீன்றருளிய உமாதேவியாரையும் பார்த்தருளி, சிறந்த திருமுகமலர்ந்து திருவுள்ளங் களித்தனர்.—எ-று.

மலர்ந்தனன் - முற்றெச்சம். (௧அ)

அந்த வேலையிற் கவுரியை நோக்கியெம் மைய
னிந்த நின்மகன் றனைக்கொடு வருகென வியம்பச்
சுந்த ரங்கெழு விடையினுந் துண்ணென விழிந்து
சிந்தை கொண்டபே ராதரந் தன்னொடுஞ் சென்றாள்.

(இ-ள்.) அந்தச் சமையத்தில் உமாதேவியாரை எமது சிவபெருமான் பார்த்தருளி இதோ விருக்கின்ற உனது புத்திரனைக் கொண்டுவரக்கடவை யென்றருளிச் செய்யவும், (உடனே உமாதேவியார்) அழகுமிக்க இடபத்தினின்றும் விரைவாக இறங்கி மனத்திற் பொருந்திய மிகுந்த அன்புடன் சென்றருளினர்.—எ-று. (௧௯)

சரவ ணந்தனிற் றனதுசே யாறுருத் தனையு
மிருக ரங்களா லன்புட னெடுத்தனள் புல்லித்
திருமு கங்களோ ராறுபன் னிருபுயஞ் சேர்ந்த
வுருவ மொன்றெனச் செய்தன ளுலகமீன் றுடையாள்.

(இ-ள்.) எல்லாவுலகங்களையு மீன்றருளிய உமாதேவியார் சரவணப்பொய்கையில் சென்று தமது திருக்குமாரரது ஆறு திருவுருவங்களையும் தமது இரண்டு திருக்கரங்களால் அன்புடன் எடுத்தணைத்து ஆறு திருமுகமும் பன்னிரண்டு திருப்புயமுமுடைய ஒரு திருவுருவமாகச் செய்தருளினர்.—எ-று. (௨௦)

எந்தை சத்திக ளுயிரொலா மொடுங்குறு மெல்லை
முந்து போலவொன் றாகியே கூடிய முறைபோ
லந்தமில்லதோர் மூவிரு வடிவுமொன் றாகிக்
கந்த னென்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்.

(இ-ள்.) எல்லா வுயிர்களும் ஒடுங்குங்காலத்தில் எமது தந்தையாகிய சிவபெருமானது அநந்த சத்திகளும் முன்போல ஒன்றாகச் சேருந்தன்மைபோல, முடிவில்லாத ஆறுதிருவுருவங்களு மொன்றாகி, உமாதேவி புத்திரராகிய குமாரக்கடவுள் ஸ்கந்தர் என்னுந் திருநாமத்தைப் பெற்றருளினர்.—எ-று. (௨௧)

முன்பு புல்லிய குமரவேண் முடிதொறு முயிர்த்து
மின்பி றங்கிப் புறந்தனை நீவலும் விமலை
தன்பெ ருந்தனஞ் சுரந்துபால் சொரிந்தன தலையா
மன்பெ னப்படு கின்றதித் தன்மையே யன்றோ.

(இ-ள்.) முன்பு தழுவியணைக்கப்பட்ட குமாரக்கடவுளது முடிகள்தோறும் உச்சிமோந்து மின்போல் ஒளிவிளங்குகின்ற அவரது முதுகினைத் தடவுதலும், உமாதேவியாரது பெரிய ஸ்தனங்கள் பாலைச்சுரந்து சொரிந்தன ; இஃதன்றோ ? தலைமையாகிய அன்பென்று சொல்லப்படுவது.—எ-று. (௨௨)

ஆதி நாயகன் கருணையா யமலமாய்ப் பரம
போத நீரதா யிருந்ததன் கொங்கையிற் பொழிபா
லேதி லாததோர் குருமணி வள்ளமீ தேற்றுக்
காதன் மாமகற் கன்பினு லருத்தினள் கவுரி.

(இ-ள்.) முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானது கருணையாகியும், நின்மலமாகியும், பரமஞானகுணமாகியுமுள்ள தமது ஸ்தனங்களினின்று மொழுகுகின்ற பாலை உமாதேவியார் குற்றமற்ற ஒரு மாணிக்கக்கிண்ணத்திலேந்தி விருப்பமிக்க தமது சிறந்த புதல்வருக்கு அன்புடன் உண்பித்தருளினர்.—எ-று. (உ௩)

கொங்கை யூறுபா லருத்தியே குமரனைக் கொடுசென்
றெங்க ளுயகன் முன்னரோ யிறைஞ்சுவித் திடலு
மங்கை யாலவன் றனையெடுத் தகலமே லணைத்துப்
பொங்கு பேரரு ணீர்மையா லிருத்தினன் புடையில்.

(இ-ள்.) தமது ஸ்தனங்களினின்றுஞ் சுரந்த பாலை யுண்பித்துக் குமாரக்கடவுளை எடுத்துக்கொண்டு சென்று எமது சிவபெருமான் திருமுன்னே வணங்கச்செய்யவும், (அவ்வெம்பெருமான்) அக்குமாரக்கடவுளை அழகிய திருக்கரத்தாலெடுத்து மார்பிலணைத்து மிக்க திருவருட்டன்மையினல் தமதருகில் வைத்தருளினர்.—எ-று. ()

அருத்தி தந்திடு குமரவே ளொருபுடை யமரப்
பெருத்த மன்னுயிர் யாவையு முன்னரோ பெற்ற
வொருத்தி தன்னையுங் கையினு லொய்யென வாங்கி
யிருத்தி னன்றன திடந்தனி லெம்மையா ளிறைவன்.

(இ-ள்.) விருப்பத்தைத் தருகின்ற குமாரக்கடவுள் ஒருபுறத்தி லிருந்தருளவும், மிக்க உயிர்களனைத்தையும் முன்னமே பெற்றருளிய உமாதேவியாரையும் கைலாகு கொடுத்து விரைவாக எடுத்து எம்மையடிமையாகவுடைய சிவபெருமான் தமதிடப்பாகத்தில் வைத்தருளினர்.—எ-று. (உ௫)

ஏல வார்குழ லிறைவிக்கு மெம்பிரான் றனக்கும்
பால னாகிய குமரவே ணடுவுறும் பான்மை
ஞால மேலுறு மிரவொடு பகலுக்கு நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி வைகுமா றொக்கும்.

(இ-ள்.) மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடைய உமாதேவியாருக்கும் எமது சிவபெருமானுக்குந் திருக்குமாரராகிய சுப்பிரமணிக்கடவுள் அவ்விருவர் மத்தியிலெழுந்தருளியிருக்குந்தன்மை (எதுபோலுமெனின்,) உலகத்திற் பொருந்திய இராப்பகலென்னு மிரண்டிற்கு நடுவில் மாலையாகிய ஒரு பொழுது அழிவில்லாமல் தங்கியிருத்தலை யொத்திருக்கும்.—எ-று.

உமாதேவியாரை இரவாகவும், சிவபெருமானைப் பகலாகவும், குமாரக்கடவுளை இவற்றிடையிற் பொருந்திய மாலைக்காலமாகவு முவமித்தவாறு காண்க. (உ௬)

வேறு.

விடையுற்றிடு பரமற்குமவ் விமலைக்கும் விறற்சே
யிடையுற்றது கண்டாரயன் மகவான்முத லிமையோர்
கடையுற்றிடு கடலாமெனக் கல்லென்றிரைத் தணுகாப்
புடையுற்றன ரெதிருற்றனர் புறனுற்றனர் புகழ்வார்.

(இ-ள்.) வலிமைதங்கிய குமாரக்கடவுள் இடபவாகனத்தி லெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் மத்தியி லெழுந்தருளியிருத்தலைப் பிரமேந்திராதி தேவர்கள் பார்த்தவர்களாய்ப் பிரளயகாலத்துண்டாகுங் கடலினேசையைப்போலக் கல்லென்று ஆரவாரித்துக்கொண்டு நெருங்கி, அருகிலும் எதிரிலும் புறத்திலுஞ் சூழ்ந்து துதிக்கின்றார்கள்.—எ-று. (உ௭)

காமாரிதன் விழிதந்திடு கழிகாதல வொழியாத்
தோமாரியல் புளனாகிய சூரன்கொடுந் தொழிலால்
யாமாரினு மிழுக்குற்றன மெம்மையாளினி யென்னாப்
பூமாரிகள் பொழிந்தார்பணிந் தெழுந்தாசிகள் புகன்றார்.

(இ-ள்.) சிவபெருமானுடைய நுதல்விழிகள் தந்தருளிய சிறந்த குமாரக்கடவுளே! கெடாத குற்றம்பொருந்திய இயல்பினையுடைய சூரபதுமனது கொடுஞ்செய்கையினால் அடியேங்கள் யாவரினும் இழிந்தவர்களாயினோம்; இனி எங்களை யாட்கொள்வீராகவென்று புஷ்பவருஷம் பொழிந்து நமஸ்கரித்தெழுந்து ஆசி மொழிகளைக் கூறினார்கள்.—எ-று. (உஅ)

வாரற்புத முறவீங்கிய வன்னத்தன முருந்தின்
மூரற்பவ ளச்சேயிதழ் முழுமாமதி வதனத்
தாரற்பெயர் பெறுமங்கைய ரதுகாலையி லரன்முன்
பேரற்பொடு பணிந்தேயெழப் பெருந்தண்ணளி புரிந்தான்.

(இ-ள்.) கச்சானது அற்புத முறும்படி பருத்திருக்கின்ற அழகியகொங்கைகளையும், மயிலிறகினடியை யொத்த பற்களையும், பவளம்போன்ற சிவந்த இதழையும், பூரணச்சந்திரன்போன்ற முகத்தினையுமுடைய கார்த்திகைப் பெண்கள் அந்தச் சமயத்தில் சிவபெருமான் திருமுன்னே பேரன்புடன் வணங்கி நிற்க, (சிவபெருமான்) மிகக்குளிர்ந்த திருவருள் புரிந்தருளினார்.—எ-று. (உகூ)

கந்தன்றனை நீர்போற்றிய கடனாலிவ னுங்கண்
மைந்தன்னெனும் பெயராகுக மகிழ்வாலெவ ரேனு
நுந்தம்பக லிடையின்னவ னோன்றாள்வழி படுவோர்
தந்தங்குறை முடித்தேபரந் தனைநல்குவ மென்றான்.

(இ-ள்.) (நமது குழந்தையாகிய) இக்கந்தனை நீங்கள் பாதுகாத்த முறைமையினால் இவன் உங்கள் மைந்தன் என்னும் பொருள்பட (கார்த்திகேயன் என்று) பெயர் வழங்கக்கடவது; யாவராயினும் மகிழ்வுடன் உங்களுக்குரிய தினமாகிய கார்த்திகையில் இந்தக் கந்தனது வலிய பாதங்களை யுபாசிக்கின்றவர்களது குறைகளை நிறைவேற்றி முத்தியையுங் கொடுப்போமென்று அருளிச்செய்தனர்.—எ-று. (௩0)

என்னாவருள் புரிகின்றுழி யிமையத்தவள் சேயைத்
தன்னாரரு ளொடுசென்றெதிர் தழுவித்தனத் திழிபால்
பொன்னார்மணி வள்ளத்துமுன் பூரித்தருத் திடவே
யன்னாண்முலை யமுதுக்கவை யாறாய்த்தொழு கினவே.

(இ ள்.) என்றிவ்வாறு திருவருள் புரியும்பொழுது, உமாதேவியார் குமாரக்கடவுளைத் தமது பேரருளோடுஞ்சென்று எதிரில் தழுவி ஸ்தனங்களினின்றுமொழுகுகின்ற பாலினைப்பொன்மயமாகிய மாணிக்கக் கிண்ணத்தில்முன்பு நிறைத்து ஊட்டவும், அவ்வுமாதேவியாரது முலைப்பாலிற் சிந்தியதுளிகள் ஆறுபோன்று ஒழுகியோடின.—எ-று. (௩க)

வானார்சுர நதிபோற்சர வணத்தூடவை புகலுந்
தூநான்மறை கரைகண்டவன் முதல்வந்திடு துணைவ
ரானாவறு சிறுவோர்தமை யளித்தோன்சபித் திடலான்
மீனாயவண் வதிகின்றவர் புகும்பாலினை மிசைந்தார்.

(இ-ள்.) ஆகாயத்திற் பொருந்திய தேவகங்கையைப் போல அப்பாலின் பெருக்குச் சரவணப்பொய்கையில் பிரவேசிக்கவும், தூய்மையாகிய நான்கு வேதங்களையுங் கனாகண்ட வியாசமுனிவருக்கு முன்னே பிறந்த தமையன்மார்களாகிய நீங்காத ஆறு புத்திரர்களையும் பெற்ற தந்தையாகிய பராசரமுனிவரர் சபித்தமையினால் மீனுருவங்கொண்டு அத்தடாகத்தில் வசிக்கின்றவர்கள் அங்குப் பிரவேசித்த அப்பாலினை யுண்டார்கள்.—எ-று. (௩௨)

கயிலைக்கிறை யவண்மெய்த்தன கலசத்தினு முகுபா
லயினுற்றிடு பொழுதத்தினி லறனிற்புடை பெயரு
மயிலைத்தனு வொருவித்தவ வடிவுற்றெழு தருவார்
துயினுற்றுணர் பவரொத்தனர் மயலற்றிடு தொடர்பால்.

(இ-ள்.) திருக்கயிலாயத்திற்கு முதல்வியாகிய உமாதேவியாரது மெய்ம்மை பொருந்திய ஸ்தனங்களாகிய கலசத்தினின்று மொழுகிய பாலினை உண்டபொழுது, நீரிலுலாவுகின்ற மீனுருவினின்று நீங்கித் தவவடிவமடைந்து எழுந்த அப்பராசர புத்திரர்கள்,அஞ்ஞானம் நீங்கிய காரணத்தினால், நித்திரைசெய்து விழித்தவர்களை யொத்தார்கள்.—எ-று. (௩௩)

அன்னாறு வருமாயெழுந் தகன்பொய்கைவிட் டமலன்
முன்னாய்வணங் கினர்போற்றலு முனிமைந்தர்கள் பரங்கோ
டென்னாவுரை பெறுகுன்றிடை யிருந்தேதவம் புரிமின்
பின்னாண்மிசை யிவன்வந்தருள் செயுமென்றருள் செய்தான்.

(இ-ள்.) அந்த ஆறு சிறுவர்களும் பெரிய அத்தடாகத்தினின்றும் வெளிப்பட்டுச் சிவபெருமான் திருமுன்னே யடைந்து வணங்கித் துதிக்கவும், (அவ்வெம்பெருமான்) முனிமைந்தர்களே! திருப்பரங்குன்றமென்று கூறும் மலையினிடத்திருந்து தவத்தைச் செய்யுங்கள், சில காலத்திற்குப் பின்பு இந்தக்கந்தன் வந்து உங்களுக்கு அருள்புரிவான் என்று திருவாய்மலர்ந்தருளினார்.—எ-று. (௩௪)

நன்றாலெனத் தொழுதன்னவர் நாதன்விடை பெற்றே
சென்றாருடு மடவாரொடு திருமாலயன் முதலா
நின்றார்தமக் கருள்செய்தவர் நிலயம்புக வருளிப்
பொன்றாழ்சடை யினன்வெள்ளியம் பொருப்பின்றலை புக்கான்.

(இ-ள்.) அம்முனி புத்திரர்கள் அவ்வாறே நல்லதென்று வணங்கிச் சிவபெருமானிடத்து விடைபெற்றுச் சென்றார்கள். பின்பு, கார்த்திகைப் பெண்களுடன் திருமால் பிரமன்முதலாகநின்றவர்களுக்கெல்லாம் திருவருள் புரிந்து அவரவர்களிருப்பிடத்திற்குச் செல்லும்படி கட்டளையிட்டருளிப் பொன்னிறமாகத் தாழ்ந்து விளங்குஞ் சடைமுடியினையுடைய சிவபெருமான் திருக்கயிலாய மலையினிடத்து எழுந்தருளினார்.—எ-று. (௩௫)

அடையார்புர மெரிசெய்திடு மமலன்கயி லையிற்போய்
விடையூர்தியி னிழிந்தேதனி விறற்சேயொடும் வெற்பின்
மடவாளொடு நடவாப்பொலன் மாமந்திரத் தனைவயி
னிடையாரரி யணைமீமிசை யிருந்தானருள் புரிந்தே.

(இ-ள்.) பகைவர்களது முப்புரங்களையு மெரித்தருளிய சிவபெருமான் திருக்கயிலை மலையிற்சென்று இடபவாகனத்தினின்று மிறங்கி ஒப்பற்ற வெற்றியினையுடைய குமாரக்கடவுளுடனும் பார்வதி தேவியாருடனும் நடந்து, அழகிய பெரிய திரு

க்கோயிலினிடத்துள்ள சிங்காசனத்தின்மீது (அங்குள்ளவர்கட்குத்) திருவருள் புரிந்தெழுந்தருளி யிருந்தனர்.—எ-று. (௯௬)

சேயோனெனு முன்னோன்றனைச் சிலம்பின்வரு மொன்பான்
மாயோருத வியமைந்தரு மற்றுள்ளவி லக்கத்
தூயோர்களுந் தொழுதேமலர் தூவிப்பணிந் தேத்தி
யாயோர்தம துயிரேயென வவனைக்குறித் தணைந்தார்.

(இ-ள்.) சேய் என்னுந் திருநாமத்தினையுடைய முதல்வராகிய குமாரக்கடவுளை உமாதேவியாரது திருவடிச் சிலம்பிற்றோன்றியஒன்பது சத்திகளாற் பெறப்பட்ட நவவீரர்களும் மற்றுள்ள தூய்மைபொருந்திய இலக்ஷம் வீரர்களும் வணங்கிப் புஷ்பங்களைச் சிந்தித் தாழ்ந்து துதித்து அவர்கள் தங்களுயிரைப்போல அக்குமாரக் கடவுளைக்கருதிச் சூழ்ந்திருந்தார்கள்.—எ-று.

ஒன்பான் மாயோர் - நவசத்திகள். (௯௭)

சரவணப்படலமுற்றிற்று.

ஆ[திருவிருத்தம் - ௪௦௫௧.

உ

முருகன்றுணை.

# திருவிளையாட்டுப்படலம்.

அனந்தரம தாகவுமை யம்மையொடு பெம்மா
னனந்தலையில் வைகிய நலங்கொள்குமரேச
னினங்கொடு தொடர்ந்தவிளை யாரொடு மெழுந்தே
மனங்கொளரு ணீர்மைதனி னாடலை மதித்தான்.

(இ-ள்.) பின்பு உமாதேவியாருக்கும் சிவபெருமானுக்கும் நடுவில் எழுந்தருளியிருந்த நன்மை பொருந்திய குமாரக்கடவுள் கூட்டமாகத் தம்மைப் பின்றொடர்ந்துவந்த தம்பியர்களாகிய இலக்ஷத்தொன்பது வீரர்களுடன் எழுந்து அருள் பொருந்திய திருவுள்ளத்திற்கிசைந்தபடி திருவிளையாடல் புரிதற்குத் திருவுள்ளங்கொண்டருளினார்.—எ-று. (௧)

தட்டைநெகிழ் ழுங்கழல் சதங்கைகள் சிலம்பக்
கட்டழகு மேயவரை ஞாண்மணி கறங்க
வட்டமணி குண்டல மதாணிநுதல் வீர
பட்டிகைமி னக்குமர னாடல்பயில் கின்றான்.

(இ-ள்.) தண்டையும், சிலம்பும், அழகிய வீரக்கழலும், சிறுசதங்கைகளும் சப்திக்கவும், பேரழகினையுடைய கிங்கிணிச்சதங்கை யொலிக்கவும், வட்டமாகிய அழகிய இரத்தினகுண்டலமும் மதாணியும் நெற்றியிலணிந்த வீரப்பட்டிகையும் பிரகாசிக்கவும் குமாரக்கடவுள் திருவிளையாடல் செய்தருள்வாராயினர்.—எ-று.

தண்டையென்பது, தட்டை என வலித்தல் விகாரம் பெற்றது. அரைஞாண்- கிங்கிணி. (௨)

மன்றுதொறு லாவுமலர் வாவிதொ றுலாவுந்
துன்றுசிறு தென்றறவழ் சோலைதொ றுலாவு
மென்றுமுல வாதுலவும் யாறுதொ றுலாவுங்
குன்றுதொறு லாவுமுறை யுங்குமர வேளே.

(இ-ள்.) குமாரக்கடவுள் மன்றுகள்தோறு முலாவுவார்; மலர்கள் பொருந்திய தடாகங்கள்தோறு முலாவுவார்; நெருங்கிய சிறு தென்றற்காற்றுலாவுகின்ற சோலைகள்தோறு முலாவுவார்; எப்பொழுதுங் கெடாமல் பாய்கின்ற நீரினையுடைய நதிகள்தோறு முலாவுவார்; மலைகள்தோறு முலாவுவார்; அம்மலைகள்தோறு மெழுந்தருளியுமிருப்பார்.—எ-று. (௫)

குளத்தினுல வுந்நதி குறைந்திடு துருத்திக்
களத்தினுல வுந்நிரைகொள் கந்துடை நிலைத்தாந்
தளத்தினுல வும்பனவர் சாலையுல வும்மென்
னுளத்தினுல வுஞ்சிவ னுமைக்கினிய மைந்தன்.

(இ-ள்.) என துள்ளத்தி லுலாவுகின்ற சிவசத்திகளது இனிய திருக்குமாரராகிய முருகக்கடவுள் குளங்களிலுலாவுவார்; ஆற்றிடைக்குறையாகிய நிலங்களிலுலாவுவார்; பசுக்கள் தங்கி யுராய்கின்ற ஆதீண்டு குற்றிகளையுடைய இடங்களிலுலாவுவார்; முனிவர்களது பன்னசாலைகளி லுலாவுவார்.—எ-று.

துருத்தி - ஆற்றிடைக்குறை. கந்து - ஆதீண்டுகுற்றி. (௬)

இந்துமுடி முன்னவ னிடந்தொறு முலாவுந்
தந்தையுடன் யாயமர் தலங்களி னுலாவுங்
கந்தமலர் நீபமுறை கண்டொறு முலாவுஞ்
செந்தமிழ் வடாதுகலை சேர்ந்துழி யுலாவும்.

(இ-ள்.) சந்திரசேகரராகிய சிவபெருமா னெழுந்தருளி யிருக்கின்ற க்ஷேத்திரங்கள்தோறு முலாவுவார்; சிவபெருமானு முமாதேவியாரு மெழுந்தருளியிருக்குமிடங்கள்தோறு முலாவுவார்; மணம்பொருந்திய மலர்களையுடைய கடம்பவிருக்ஷங்களிருக்கு மிடங்களிலுலாவுவார்; செந்தமிழும் வடகலையுஞ் சேர்ந்துவழங்குமிடங்களிலுலாவுவார்.—எ-று. (௭)

மண்ணிடை யுலாவுநெடு மாதிர முலாவு
மெண்ணிடை யுறுதகட லெங்கணு முலாவும்
விண்ணிடை யுலாவுமதி வெய்யவ னுடுக்கோள்
கண்ணிடை யுலாவுமிறை கண்ணில்வரு மண்ணல்.

(இ-ள்.) சிவபெருமானது திருக்கண்களினின்றுந் தோன்றிய குமாரக்கடவுள் மண்ணுலகத்தி லுலாவுவார்; பெரிய திக்குகள்தோறு முலாவுவார்; அளவிடப்படாத கடல்களெங்கு முலாவுவார்; வானத்திலுலாவுவார்; சந்திரன் சூரியன் நக்ஷத்திரம் கிரகங்கள் முதலியவை வசிக்கு மிடங்களி லுலாவுவார்.—எ-று. (௮)

கந்தருவர் சித்தர்கரு டத்தொகைய ரேனோர்
தந்தமுல காதிய தலந்தொறு முலாவு
மிந்திர னிருந்ததொல் லிடந்தனி லுலாவு
முந்துதவர் வைகுமுல கந்தொறு முலாவும்.

(இ-ள்.) கந்தருவர்களும் சித்தர்களும் கருடர்களும் மற்றையர்களும் வசிக்கின்ற தங்கள்தங்கள் உலகமுதலிய விடங்களிலுலாவுவார்; இந்திரன் வாழ்ந்திருந்த பழைய சுவர்க்கத்தி லுலாவுவார்; உயர்ந்த தவசிகள் வசிக்கு முலகத்தி லுலாவுவார்.

அங்கமல நான்முக னரும்பத முலாவு
மங்கல நிறைந்ததிரு மால்பத முலாவு
மெங்கள்பெரு மாட்டித னிரும்பத முலாவுந்
திங்கண்முடி மேற்புனை சிவன்பத முலாவும்.

(இ-ள்.) அழகிய கமலாசனனாகிய பிரமனது அரிய பதத்தி லுலாவுவார்; மங்கலகரம் நிறைந்த திருமால் பதத்திலுலாவுவார்; எமது பெருமாட்டியாகியசிவசத்தியின் பதத்தி லுலாவுவார், சந்திரனைத் திருமுடியிலணிந்த சிவபெருமானது பதத்தி லுலாவுவார்.—எ-று. (அ)

இப்புவியி லண்டநிரை யெங்கணு முலாவு
மப்புவழ லூதைவெளி யண்டமு முலாவு
மொப்பில்புவ னங்கள்பிற வுள்ளவு முலாவுஞ்
செப்பரிய வோர்பரசி வன்றனது மைந்தன்.

(இ-ள்.) சொல்லுதற்கரிய ஒப்பற்ற சிவபெருமானது திருப்புதல்வராகிய குமாரக்கடவுள் இந்தப் பிருதிவியண்ட வரிசைகளிலெல்லாமுலாவுவார்; அப்பு-தேயு-வாயு-ஆகாயமாகிய இவற்றி னண்டங்களி லுலாவுவார்; மற்றுள்ள ஒப்பற்ற புவனங்களிலு முலாவுவார்.—எ-று. (கூ)

வேறு.

இருமூவகை வனத்தொடு மிளையோனெனத் திரியு
மொருமாமுக னொடுசென்றிடு முயர்காளையி னுலவும்
பெருமாமறை யவரேயென முனிவோரெனப் பெயருந்
தெரிவார்கணை மறவீரரிற் றிரிதந்திடுஞ் செவ்வேள்.

(இ-ள்.) குமாரக்கடவுள் ஆறு திருமுகங்களோடு பாலசுப்பிரமணியராக வுலாவுவார்; ஒரு அழகிய திருமுகத்துடன் செல்லுவார்; உயர்ந்த வாலிபனைப்போல உலாவுவார்; பெரிய வேதங்களை யோதுகின்ற வேதியர்களைப் போலவும் முனிவர்களைப் போலவும் உலாவுவார்; நீண்ட பாணங்களைக்கொண்டு இலக்குப் பார்க்கின்ற கொடிய வீரர்களைப்போலத் திரிவார்.—எ-று. (கூ0)

காலிற்செலும் பரியிற்செலுங் கரியிற்செலுங் கடுந்தேர்
மேலிற்செலுந் தனியாளியின் மிசையிற்செலுந் தகரின்
பாலிற்செலு மானத்திடை பரிவிற்செலும் விண்ணின்
மாலிற்செலும் பொருசூரொடு மலையச்செலும் வலியோன்.

(இ-ள்.) எதிர்த்த சூரபதுமனுடன் போர்செய்யும்படி சென்றருளும் பராக்கிரமத்தையுடைய குமாரக்கடவுள் காலால் நடந்துலாவுவார்; குதிரைமீதேறி யுலாவுவார்; யானைமீதேறி யுலாவுவார்; வேகமாக வோடுகின்ற தேர்மீதேறி யுலாவுவார்; ஒப்பற்ற யாளியின்மீதேறி யுலாவுவார்; ஆட்டின்மேலேறி யுலாவுவார்; விமானத்தின் மேல் விருப்பத்துடன் ஏறியுலாவுவார்; ஆகாயத்தின்க ணுள்ள மேகங்களி லேறியுலாவுவார்.—எ-று.

விமானம் என்பது, மானம் என முதற்குறையாயிற்று. (கூகூ)

பாடின்படு மணியார்த்திடும் பணைமென்குழ லிசைக்குங்
கோடங்கொலி புரிவித்திடுங் குரல்வீணைகள் பயிலு
மீடொன்றிய சிறுபல்லிய மெறியும்மெவ ரெவரு
நாடும்படி பாடுங்களி நடனஞ்செயு முருகன்.

(இ-ள்.) முருகக்கடவுள் ஓசையினிதாகிய ஒலிக்கின்ற மணிகளை முழக்குவார்; மூங்கிலினா லமைந்த மெல்லிய புள்ளாங்குழலை யூதுவார்; சங்கவாத்தியத்தை யூதுவார்; குரல்முதலிய சப்த சுரங்களையுடைய வீணைகளை வாசிப்பார்; ஈடாகப்பொருந்திய சிறு பறைகளை வாசிப்பார்; யாவர்களும் விரும்பும்படி பாடுவார்; களிப்பைத் தருகின்ற நடனத்தைச் செய்வார்.—எ-று.

பாடின்படுமணி - ஓசையினிதாகிய ஒலிக்கின்றமணி. பாடு-ஓசை. இதனை, "பாடின்படுமணி யிரட்டவொருகை" என்னுந் திருமுருகாற்றுப் படைக்கு நச்சினார்க்கினியர் கூறிய வுரையானறிக. (கஉ)

இன்னபல வுருவங்கொடி யாண்டுங்கும ரேச
னன்னயமொ டாடுற்றுழி நனிநாடினள் வியவா
முன்னையுல கீனயீன்றவண் முடிவின்றுறை முதல்வன்
பொன்னேர்கழ லிணைதாழ்ந்தனள் போற்றிப்புகல் கின்றாள்.

(இ-ள்.) இவ்வாறாகப் பல வுருவங்களைக்கொண்டு எவ்விடங்களிலுங் குமாரக்கடவுள் மிகுந்த விருப்பத்துடன் திருவிளையாடல் செய்யும்பொழுது, முன்னமே சர்வலோகங்களையு மீன்றருளிய உமாதேவியார் பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்து, அழிவற்று விளங்குகின்ற சிவபெருமானது பொன்போலு மிரண்டு திருவடிகளையும் வணங்கித் துதித்துக் கூறுகின்றார்.—எ-று. (கரு)

கூடுற்றநங் குமரன்சிறு குழவிப்பரு வத்தே
யாடற்றொழி லெனக்கற்புத மாகும்மவன் போல்வார்
நேடிற்பிற ரிலைமாயையி னினைநேர்தரு மனையான்
பீடுற்றிடு நெறிதன்னையெம் பெருமான்மொழி கென்றாள்.

(இ-ள்.) எமது பெருமானே! நம்மிடத்துத் தோன்றிய நமது குமாரன் சிறிய குழந்தைப்பருவத்தில் விளையாடுகின்றதொழில் எனக்கு மிகவும் ஆச்சரியமாக விருக்கின்றது; விசாரிக்குமிடத்தில் மாயாவித்தையில் அவனைப் போன்றவர்கள் வேறொருவருமில்லை; தேவரீரை யொத்த அக்குமாரனது சிறப்புமிக்க தன்மைகளனைத்தையுங் கூறியருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர்.—எ-று. (கசு)

அல்லார்குழ லவளின்னண மறியார்களின் வினவ
வொல்லார்புர மடுகண்ணுத லுன்றன்மக னியல்பை
யெல்லாவுயிர் களுமுய்ந்திட வெமைநீகட வினையா
னல்லாயிது கேண்மோவென வருளாலிவை நவில்வான்.

(இ-ள்.) இருள்போலுங் கரிய கூந்தலையுடைய உமாதேவியார் அறியாதவர்கள் போல இவ்வாறு வினவுதலும், பகைவர்களது முப்புரங்களையு மெரித்தழித்தருளிய நெற்றிக்கண்ணராகிய சிவபெருமான் பார்வதியே! உனது புத்திரனுடைய தன்மையைச் சர்வான்மாக்களுமுய்யும்வண்ணம் நீ எம்மைவினவினாய், இதனைக்கேட்பாயாகவென்று கருணையுடன் இவற்றை யருளிச்செய்கின்றார்.—எ-று. (கஎ)

வேறு.

ஈங்கன நமது கண்ணி னெய்திய குமரன் கங்கை
தாங்கினள் கொண்டு சென்று சரவணத் திடுத லாலே
காங்கெய னெனப்பேர் பெற்றான் காமர்பூஞ் சரவ ணத்தின்
பாங்கரில் வருத லாலே சரவண பவனென் றானான்.

(இ-ள்.) இவ்விடத்தில் நமது கண்ணிற்றோன்றிய குமரன், கங்கையானவள் சுமந்துகொண்டுபோய்ச் சரவணப்பொய்கையில் சேர்த்த காரணத்தினால் காங்கேயன் என்னும் பெயரைப்பெற்றனன்; அழகு மிக்க பொலிவினையுடைய சரவணப் பொய்கையில் குழந்தையாகத் தோன்றினமையால் சரவணபவன் என்னும் பெயரைப் பெற்றனன்.—எ-று. (கசு)

தாயென வாரல் போந்து தனங்கொள்பா லருத்த லாலே
யேயதோர் கார்த்தி கேய னென்றொரு தொல்பேர் பெற்றான்
சேயவன் வடிவ மாறுந் திரட்டிநீ யொன்றாச் செய்தா
யாயத னாலே கந்த னெனு நாமம் பெற்றான்.

(இ-ள்.) கார்த்திகை மாதர்கள் தாய்மார்களாக வந்து தங்கள் ஸ்தனங்களிற் பொருந்திய பாலையூட்டிய காரணத்தினால், சிறப்புப்பொருந்திய கார்த்திகேயன் என்று கூறும் பழைமையாகிய பெயரைப் பெற்றனன். அக்குழந்தையினது ஆறு உருவங்களையும் நீ ஒன்றாகத்திரட்டிச்சேர்த்தனை, அந்தக்காரணத்தினால் கந்தன் என்னும் பெயரைப் பெற்றனன்.—எ-று. (கஎ)

நன்முக மிருமூன் றுண்டா னமக்கவை தாமே கந்தன்
றன்முக மாகி யுற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்த மூவிரண் டெழுத்து மொன்றா
யுன்மக னுமத் தோரா றெழுத்தென வுற்ற வன்றே.

(இ-ள்.) நமக்குச் சிறந்த ஆறுமுகங்களுண்டு; அந்த ஆறுமுகங்களுமே இந்தக் கந்தனது முகங்களாகப் பொருந்தின. தாரகப் பிரமஸ்வரூபமாய் முதன்மையாகச் சொல்லப்பட்ட நமது சடாக்ஷரங்களும் ஒன்றாகச்சேர்ந்து இவ்வுனது குமாரனது பெயரின் ஒப்பற்ற ஆறெழுத்தாகப் பொருந்தின.—எ-று.

நந்தமூவிரண்டெழுத்தும் என்றது, பிரணவத்தோடு கூடிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை. உன்மகனுமத்தோரா றெழுத்தென்றது, குமாரக்கடவுளது ஸ்ரீசடாக்ஷரமந்திரத்தை. (கஅ)

ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றா
னேதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.

(இ-ள்.) ஆதலால் இந்தச் சண்முகன் நமது சத்தியேயாம். அவனுக்கும் எமக்கும் வேறுபாடில்லை. நம்மைப் போலவே சர்வ பரிபூரணனாக விருக்கின்றான். குற்றமற்ற குழந்தையை யொப்பான்; முற்றுணர்ச்சியையுடையவன்; தன்னைத் துதிப்பவர்களுக்குச் செல்வத்தையும் ஞானத்தையும் அழிவற்ற முத்தியையு மளிக்கத்தக்கவன்.—எ-று.

பேதகம் - வேறுபாடு. (கசு)

மேலினி யனைய செவ்வேள் விரிஞ்சனைச் சுருதிக் கெல்லா
மூலம தாகி நின்ற மொழிப்பொருள் வினவி யன்னான்
மாலுறச் சென்னி தாக்கி வன்சிறைப் படுத்தித் தானே
ஞாலமன் னுயிரை யெல்லா நல்கியே நண்ணும் பன்னாள்.

(இ-ள்.) இனி, அந்தக் குமாரன் பிரமனை வேதங்களுக்கெல்லா மூலமாகவுள்ள பிரணவத்தின் பொருளைக் கேட்டு அவன் மயங்கும் வண்ணந் தலையிற்குட்டிக்

கொடிய சிறையிலிட்டுத் தானே உலகத்துள்ள நிலைபெற்ற உயிர்களனைத்தையுஞ் சிருஷ்டித்துக்கொண்டு அநேககால மிருப்பான்.—எ-று. (௨0)

தாரகன் றன்னைச் சீயத் தடம்பெரு முகத்தி னானைச்
சூரபன் மாவை யேனை யவுணரைத் தொலைவு செய்தே
யாரணன் மகவா னேனை யமரர்க ளிடுக்க ணீக்கிப்
பேரருள் புரிவ னின்சேய் பின்னர்நீ காண்டி யென்றான்.

(இ-ள்.) உனது புதல்வனாகிய அந்தக் கந்தன் தாரகாசுரனையும், பெரிய சிங்கமுகாசுரனையும், சூரபன்மனையும் மற்றைய அசுரர்களையுஞ் சங்கரித்துப் பிரமேந்திராதி தேவர்களது துன்பங்களையொழித்து மிக்க கிருபைசெய்வான்; அதனைப் பின்பு நீ பார்ப்பாயாக வென்றருளிச் செய்தனர்.—எ-று. (௨௧)

என்றலு மிளையோன் செய்கை யெம்பெரு மாட்டி கேளா
நன்றென மகிழ்ச்சி கொண்டு நணுகலு முலக மெல்லாஞ்
சென்றரு ளாடல் செய்யுந் திருத்தகு குமரன் பின்ன
ரொன்றொரு விளையாட் டுள்ளத் துன்னியே புரித லுற்றான்.

(இ-ள்.) இவ்வாறு சிவபெருமா னருளிச்செய்யவும், அக்குமாரக்கடவுளது செய்கையை எமது தாயாகிய உமாதேவியார் கேட்டருளி நன்றென்று மகிழ்வடைந்திருக்கவும், எல்லா வுலகங்களிலுஞ் சென்று அருள்விளையாடல் புரிந்தருளுஞ் சிறப்புமிக்க குமாரக்கடவுள் பின்பு நிலைபெற்ற ஒரு திருவிளையாடலைத் திருவுள்ளத்திற் சிந்தித்துச் செய்யத் தொடங்கினர்.—எ-று. (௨௨)

குலகிரி யனைத்து மோர்பாற் கூட்டிடு மவற்றைப் பின்னர்த்
தலைதடு மாற்ற மாகத் தரையிடை நிறுவு மெல்லா
வலைகட றனையு மொன்றா வாக்குறு மாழி வெற்பைப்
பிலனுற வழுத்துங் கங்கைப் பெருநதி யடைக்கு மன்னோ.

(இ-ள்.) அஷ்டகுல பர்வதங்களையும் ஒரு இடத்தில் ஒன்றாகக் கூட்டுவார்; பின்பு அப் பர்வதங்களை இடமாறுதலாகப் பூமியில் வைப்பார்; அலைகின்ற எல்லாக் கடல்களையும் ஒன்றாகச்சேர்ப்பார்; சக்கரவாளகிரியைப் பாதலத்திற் செல்ல அழுத்துவார்; பெரிய கங்கைநதியையடைப்பார்.—எ-று. (௨௩)

இருள்கெழு பிலத்துள் வைகு மெண்டொகைப் பணியும் பற்றிப்
பொருள்கெழு மேரு வாதி யடுக்கலிற் பூட்டி வீக்கி
யருள்கெழு குமர வள்ள லாவிகட் கூறின் றாக
வுருள்கெழு சிறுதே ராக்கொண் டொல்லென வுருட்டிச் செல்லும்.

(இ-ள்.) இருள் நிறைந்த பாதலலோகத்தில் வசிக்கின்ற அஷ்டமா நாகங்களையும் பிடித்துப் பொன்னாக விளங்குகின்ற மேரு முதலாகிய மலைகளிற் கட்டியிறுக்கி, கருணாநிதியாகிய குமாரக்கடவுள் உயிர்களுக்கு ஒரு துன்பமுமில்லாமல், உருளை மிக்க சிறுதேராகக் கொண்டு விரைந்து உருட்டி விளையாடுவார்.—எ-று. (௨௪)

ஆசையங் கரிக டம்மை யங்கைகொண் டொன்றோ டொன்று
பூசல்செய் விக்கும் வானிற் போந்திடுங் கங்கை நீராற்
காய்சின வடவை மாற்றுங் கவின்சிறைக் கலுழ னோடு
வாசுகி தன்னைப் பற்றி மாறிகல் விளைக்கு மன்றே.

(இ-ள்.) அஷ்டதிக்கியானைகளைத் தமது அழகிய திருக்கரத்திற் பிடித்து ஒன்றோடொன்று போர்செய்ய மூட்டுவிப்பார். ஆகாயத்திற் செல்லுகின்ற கங்கைநதி

நீரினால் மிக்க கொடுமையினையுடைய வடவாமுகாக்கினியைத் தணிப்பார்; அழகிய சிறகினையுடைய கருடனுடன் வாசுகியென்னு நாகத்தைப் பிடித்துப் பகைமையாகப் போர்விளைவிப்பார்.—எ-று. (உ௫)

பாதல நிலயத் துள்ள புயங்களைப் படியிற் சேர்த்திப்
பூதல நேமி யெல்லாம் புகுந்திடப் பிலத்தி னுய்க்கு
மாதவ முதல்வன் றன்னை யவிர்மதிப் பதத்தி லோச்சுஞ்
சீதள மதியை வெய்யோன் சென்னெறிப் படுத்துச் செல்லும்.

(இ-ள்.) பாதலலோகத்துள்ள சர்ப்பங்களைப் பூமியிற் கொண்டுவந்து சேர்த்து நிலவுலகத்துள்ள மலைகளனைத்தும் பாதலத்திற் செல்லும்படி செய்வார். சூரியனை விளங்குகின்ற சந்திரபதத்தில் எடுத்தெறிவார்; குளிர்ச்சிபொருந்திய சந்திரனைச் சூரியன் செல்லுகின்ற மார்க்கத்தில் போட்டுச் செல்லுவார்.—எ-று. (உ௬)

எண்டிசை புரந்த தேவ ரிருந்ததொல் பதங்க ளெல்லாம்
பண்டுள திறத்தி னீங்கப் பறித்தனன் பிறழ வைக்குங்
கொண்டலி னிருந்த மின்னின் குழுவுட னுருமுப் பற்றி
வண்டின முறாத செந்தண் மாலைசெய் தணியு மன்றே.

(இ-ள்.) எட்டுத்திக்குகளையும் பாதுகாக்கின்ற அஷ்டதிக்குப் பாலகர்கள் வசித்திருந்த பழமையாகிய பதவிகளனைத்தையும், முன்னிருந்த தன்மையினின்று நீங்கப் பிடுங்கி மாற்றிவைப்பார். மேகத்தினிடத்திருந்த மின்னற்கூட்டங்களுடன் இடிகளையும் பிடித்து வண்டினங்கள் மொய்க்கப்பெறாத செவ்விய குளிர்ந்த மாலையாகச் சமைத்து அணிந்துகொள்ளுவார்.—எ-று.

மின்னினைக் கயிறாகவும், இடியை மலராகவுங் கொண்டு மாலை செய்து தரிப்பரென்க. (உ௭)

வெய்யவர் மதிகோ ளேனோர் விண்படர் விமானந் தேர்கண்
மொய்யுறப் பிணித்த பாச முழுவதுந் துருவ னென்போன்
கையுறு மவற்றில் வேண்டுங் கயிற்றினை யிடைக்க ணீர்ந்து
வையகந் திசைமீச் செல்ல வானியில் விடுக்கு மைந்தன்.

(இ-ள்.) குமாரக்கடவுள் ஆகாயத்திற் செல்லுகின்ற சூரியர்கள் சந்திரன் கிரகங்கள் முதலியவர்களது விமானங்களுந் தேர்களும் நெருங்கக்கட்டிய கயிறுகளனைத்தும் துருவனது கையிற் பொருந்தி யிருப்பனவற்றுள், தமக்குவேண்டிய கயிற்றை இடையில் அறுத்து, உலகத்திற்குந் திக்குகளுக்கும் மேலேசெல்லும்படி காற்றாடியைப்போல விடுவார்.—எ-று.

வானி - துகிற்கொடி, ஈண்டுக் காற்றாடி யென்னும் பொருளில் நின்றது.()

வடுத்தவிர் விசும்பிற் செல்லும் வார்சிலை யிரண்டும் பற்றி
யுடுத்திரள் பலகோ ளின்ன வுண்டையாக் கொண்டு வானோர்
முடித்தலை யுரந்தோள் கண்ட முகம்படக் குறியா வெய்தே
யடற்றனு விஞ்சை காட்டு மாறிரு தடந்தோ ளண்ணல்.

(இ-ள்.) பன்னிரண்டு திருத்தோள்களையுடைய ஸ்ரீ சண்முகக்கடவுள் குற்றமற்ற ஆகாயத்திற் செல்லுகின்ற நீண்ட விற்க ளிரண்டையும் பிடித்து நக்ஷத்திரக் கூட்டங்களையும் பலகிரகங்களையும் இவைபோல்வனவற்றையும் உருண்டையாகக்கொண்டு தேவர்களது முடி-தலை-மார்பு-தோள்-கழுத்து-முகம் இவைகளிற் பொருந்தக் குறியாகப் பிரயோகித்து வலிய வில்வித்தையைக் காட்டுவார்.—எ-று.

வார்சிலை யிரண்டும் என்றது, தனுசிராசியாகிய வில்லும், இந்திர வில்லுமென வறிக. (௪௯)

இத்திற முலகந் தன்னி லிம்பரோ டும்ப ரஞ்சிச்
சித்தமெய் தளர்த லன்றிச் சிதைவுறு வகைமை தேர்ந்து
வித்தக வெண்ணி லாடல் வியப்பொடு புரிந்தா னாவி
முத்தர்தம் விழியி னன்றி முன்னுறு நிமல மூர்த்தி.

(இ-ள்.) சீவன்முத்தர்களது ஞானநோக்கத்தின்முன்னேயன்றி (மற்றையர்களது ஊனநோக்கத்தின்) முன்னே பொருந்துதலில்லாத நின்மலராகிய முருகக்கடவுள், இவ்வாறு உலகத்தில், இந்நிலவுலகத்தவருடன் தேவர்களும் அச்சங்கொண்டு மனமும் உடலும் நடுங்குதலேயன்றி அழியாதிருக்குந் தன்மையைத் தேர்ந்து, ஞானமயமாகிய அளவற்ற திருவிளையாடல்களை ஆச்சரியமாகச் செய்தருளினர்.—எ-று.

ஆவிமுத்தர் - சீவன்முத்தர்கள். (௫0)

ஆயது காலை ஞாலத் தவுணர்க ளதனை நோக்கி
யேயிது செய்தார் யாரே யென்றுவிம் மிதரா யெங்க
ளையகன் வடிவந் தன்னை நனிபெரும் பவத்துட் டங்குந்
தீயவ ராத லாலே கண்டிலர் தியக்க முற்றார்.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் உலகத்திலுள்ள அசுரர்கள் அதனைப் பார்த்து, ஏ ! இது செய்தவர்கள் யாவரென்று ஆச்சரியமுற்றவர்களாய், மிக்கபெரும் பாவத்திற்பொருந்திய கொடியவர்களாதலால் எமது முதல்வராகிய குமாரக்கடவுளது திருவுருவத்தைக் காணாது மயங்கினார்கள்.—எ-று. (௫௧)

சிலபகல் பின்னும் வைகுந் திறத்திய லாயுள் கொண்டே
யுலகினி லவுணர் யாரு முறைதலி னவர்க்குத் தன்மெய்
நிலைமைகாட் டாது செவ்வே ணிலாவலு நேடி யன்னோர்
மலரயன் றெரியா வண்ணன் மாயமே யினைய தென்றார்.

(இ-ள்.) அவ்வசுரர்கள் அனைவரும் பின்னுஞ் சிலகாலம் வசிக்குந் தன்மையினையுடைய வாழ்நாளைப்பெற்று உலகத்தில் வசித்திருக்கவேண்டுதலின், குமாரக்கடவுள் அவ்வசுரர்களுக்குத் தமது திருவுருவத்தின் தன்மையைக் காட்டாமல் விளையாடல் செய்தருளவும், அவ்வசுரர்கள் தேடிப்பார்த்து (ஒன்றுங் காணாதவர்களாய்) இது பிரமனால் காணப்படாதவராகிய சிவபெருமானது மாயாலீலையே யென்று கருதினார்கள்.—எ-று. (௫௨)

ஆயதோர் குமரன் செய்கை யவனியின் மாக்கள் காணாத்
தீயன முறைபால் வெங்கோல் செலுத்திய வவுண ரெல்லா
மாய்வது திண்ணம் போலு மற்றதற் கேது வாக
மேயின விம்மி தங்கொ லிதுவென வெருவ லுற்றார்.

(இ-ள்.) அவ்வாறாகியகுமாரக்கடவுளது திருவிளையாடலை உலகத்திலுள்ள மனிதர்கள்பார்த்து, தீமையாகக் கொடுங்கோல் செலுத்திய அசுரர்களனைவரும் அழிந்துபோவது உண்மைபோலும், அதற்குக் காரணமாகப் பொருந்திய விம்மிதமோ இவ்வாறு காணப்படுவதுதென்று நடுக்கமுற்றார்கள்.—எ-று.

தீங்கு நேருங்காலத்து அதற்கறிகுறியாக முன்னர்துன்னிமித்தந் தோன்றுதல் முறைமையாகலின், இந்த விம்மிதங்களைக்கண்ட மனிதர்கள் இது அசுரர்கள்

அழிவதற்கு முன்னே அறிகுறியாகக் காணப்படுந் துன்னிமித்தம்போலுமென்று நடுங்கினரென்க. (௩௩)

புவனியின் மாக்க ளின்ன புகறலுந் திசைகாப் பாளர்
தவனனே மதிய மேனோர் சண்முகன் செய்கை நாடி
யவனுரு வதனைக் காணு ரவுணர்தம் வினையு மன்று
லெவரிது செய்தார் கொல்லென் றிரங்கினர் யாருங் கூடி.

(இ-ள்.) உலகத்திலுள்ள மனிதர்கள் இவ்வாறு கூறவும், திக்குப்பாலகர்களும் சூரியனும் சந்திரனும் மற்றவர்களு மொருங்குசேர்ந்து குமாரக்கடவுளது செய்கையை நோக்கி, அவரது திருவுருவத்தைக் காணுதவர்களாய் இது அசுரர்களது செய்கையுமல்ல; வேறு யார் செய்திருக்கலாமென்று வருந்தினார்கள்.—எ-று. (௩௪)

தேருறு மனைய தேவர் தேவர்கோன் சிலவ ரோடு
மேருவி லிருந்தான் போலும் வேதனு மங்கண் வைகு
மாருமங் கவர்பா லேகி யறைகுது மென்று தேறிச்
சூரர்கோன் றனக்கு மஞ்சித் துயரொடு பெயர்த லுற்றார்.

(இ-ள்.) இவ்வாறு ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த அந்தத்தேவர்கள் இந்திரன் சில தேவர்களுடன் மேருமலையி லிருக்கின்றான்; பிரமனும் அவ்விடத்திலேயே யிருக்கின்றான்; நாமனைவரும் அங்கு அவர்களிடத்திற்சென்று சொல்லிக்கொள்வோமென்று துணிந்து, சூரபன்மனுக்கும் பயந்து வருத்தத்துடன் செல்லத்தொடங்கினார்கள்.—எ-று. (௩௫)

வடவரை யும்பர் தன்னில் வானவ ரானோ ரேகி
யடைதரு கின்ற காலை யாறுமா முகங்கொண் டுள்ள
கடவுள்செய் யாட லேக்கி யவனுருக் காணு ராகி
யிடருறு மனத்தி னேடு மிருந்தவிந் திரனைக் கண்டார்.

(இ-ள்.) மேருமலையின் மேல் தேவர்கள் சென்றுசேர்ந்தபொழுது, ஆறு திருமுகங்களையுடைய குமாரக்கடவுள் செய்தருளுகின்ற திருவிளையாடலைப்பார்த்து அவரது திருவுருவத்தைக் காணுதவராய்த் துன்பம்பொருந்திய மனத்துடனிருந்த இந்திரனைக்கண்டார்கள்.—எ-று. (௩௬)

அரிதிரு முன்ன ரெய்தி யடிதொழு தங்கண் வைகி
விரிகட லுலகின் வானின் மேவுதொன் னிலைமை யாவுந்
திரிபுற வெவரோ செய்தார் தெரிந்தில மவரை யீது
புரிகல ரவுணர் போலும் புகுந்தவிப் புணர்ப்பென் னென்றார்.

(இ-ள்.) இந்திரன் திருமுன்னேயடைந்து பாதங்களைவணங்கி அவ்விடத்திலிருந்து, பரவிய கடல் சூழ்ந்த நிலவுலகத்திலும் ஆகாயத்திலும் பொருந்தியுள்ள பழைய நிலைமைகளனைத்தும் மாறுபடும் வண்ணஞ் செய்தவர்கள் யாவரோ? அவரை யறியோம்; அசுரர்கள் இவ்வாறு செய்யார்கள்; (அங்ஙனமாக) இது தோன்றிய காரணம் வேறியாதென்று வினவினார்கள்.—எ-று.

அரி - இந்திரன். (௩௭)

வானவ ரிறைவ னன்னோர் மாற்றமங் கதனைக் கேளா
யானுமிப் பரிசு நாடி யிருந்தன னிறையுந் தேரே
னனதை யுணர வேண்டி னனைவரு மேகி யம்பொன்
மேனிகொள் கமலத் தோனை வினவுது மெழுதி ரென்றான்.

(இ-ள்.) தேவர்கள் தலைவனாகிய இந்திரன் அத்தேவர்கள் கூறியவார்த்தையைக்கேட்டு யானும் இதனையே யாராய்ந்து கொண்டிருந்தேன்; இதனைச் சிறிதுந் தெளியேன்; அவ்வாறாகிய விதனை அறியவேண்டின் யாவருஞ்சென்று அழகிய பொன்போலும் வடிவத்தினையுடைய பிரமனைக்கேட்போம் எழுந்திருங்களென்று கூறினான்.—எ-று. (௩௮)

எழுதிரென் றுரைத்த லோடு மிந்திரன் முதலா வுள்ளோர்
விழியிடைத் தெரிய வன்னோர் மெய்த்தவம் புரிந்த நீரா
லழிவற வுலகி லாடு மறுமுகன் வதன மொன்றிற்
குழவிய தென்ன வன்ன குன்றிடைத் தோன்றி னானால்.

(இ-ள்.) எழுந்திருங்களென்று கூறவும், இந்திரன் முதலானவர்களது கண்களில் தெரியும்படி அவர்கள் உண்மையான தவத்தைச்செய்துள்ள தன்மையினால், சிறிது மழியாதிருக்கும் வண்ணம் உலகத்தில் திருவிளையாடல் செய்கின்ற ஸ்ரீசண்முகபெருமான் ஒருதிருமுகத்துடன் குழந்தையைப்போல அம்மேருமலையில் எழுந்தருளினார்.—எ-று. (௩௯)

வாட்டமொ டமரர் கொண்ட மயக்கறத் தனது செய்கை
காட்டிய வந்தோன் மேருக் கனவரை யசைத்துக் கஞ்சத்
தோட்டிதழ் கொய்து சிந்துந் துணையென வுயர்ந்த செம்பொற்
கோட்டினைப் பறித்து வீசிக் குலவினன் குழவி யேபோல்.

(இ-ள்.) மனவாட்டத்துடன் தேவர்கள் கொண்டிருந்த மயக்க நீங்கும் பொருட்டுத் தமது செய்கையைக் காட்டும்படி யெழுந்தருளிய குமாரக்கடவுள் பெரிய மேருமலையை யசைத்துத் தாமரைப்பூவி னிதழ்களைக் கிள்ளியெறியுந் தன்மையைப் போல, உயர்ந்த செம்பொன் மயமான சிகரத்தைப் பிடுங்கியெறிந்து குழந்தையைப் போல விளங்கினார்.—எ-று. (௪0)

தோன்றிய குமரன் றன்னைச் சுரபதி சுரரா யுள்ளோ
ரான்றதோர் திசைகாப் பாள ரனைவருந் தெரிகுற் றன்னோ
வான்றரை திரிபு செய்தோன் மற்றிவ னாகு மென்னாக்
கான்றிரி யரியை நேரும் விலங்கெனக் கலங்கிச் சொல்வார்.

(இ-ள்.) அவ்வா றெழுந்தருளிய குமாரக்கடவுளை இந்திரனும் தேவர்களும் பெரிய திக்குப்பாலகர்களுமாகிய அனைவரும்பார்த்து, ஐயோ? விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் மாறுபடுத்தினவன் இவனே யாகுமென்று காட்டிலுலாவுகின்ற சிங்கத்தைக்கண்ட மிருகங்களைப்போல மனங்கலங்கிக் கூறுகின்றார்கள்.—எ-று.

ஆன்ற - அகன்ற என்பதன்மரூஉ. (௪௧)

வேறு.

நொய்தாங் குழவி யெனக்கொள்கில நோன்மை நாடின்
வெய்தா மவுணக் குழுவோரினும் வெய்யன் யாரு
மெய்தாத மாய முளனாலிவன் றன்னை வெம்போர்
செய்தாடல் கொள்வ மிவனென்று தெரிந்து சூழ்ந்தார்.

(இ-ள்.) இவனைச் சிறுகுழந்தையென்று கொள்ளோம்; இவனது பராக்கிரமத்தை விசாரிக்குமிடத்தில் கொடிய அசுரர் கூட்டங்களிலும் மிகக்கொடியவன்; யாவராலுமடைதற்கரிய மாயவித்தையில் தேர்ந்தவன்; ஆதலால், இங்கு இவனைக் கொடிய போர்செய்து வெற்றிபெறுவோமென்றுணர்ந்து ஆலோசித்தார்கள்.—எ-று.

சூழுற்ற வெல்லை யிமையோர்க்கிறை தொல்லை நாளிற்
காழுற்ற தந்த மறவேகிவெண் காட்டி லீசன்
கேழுற்ற தாளர்ச் சனைசெய்து கிடைத்து வைகும்
வேழத்தை யுன்ன வதுவந்தது மேரு வின்பால்.

(இ-ள்.) ஆலோசித்தபொழுது, தேவேந்திரனானவன் முற்காலத்தில் (பானு கோபனால்) வயிரம்பொருந்திய தந்தங்கள் ஒடியவும் திருவெண்காட்டிற்சென்று சிவ பெருமானது ஒளிபொருந்திய திருவடிகளைப்பூசித்து (அத்தந்தங்களைப்) பெற்றிருக் கின்ற தனது வெள்ளையானையைச் சிந்திக்கவும், அவ்வெள்ளையானை மேருமலையினிட த்து வந்தது.—எ-று. (௪௫)

தந்தங்கள் பெற்று வருகின்ற தனிக்க ளிற்றின்
கந்தந் தனிற்போந் தடல்வச்சிரங் காம ரொள்வாள்
குந்தஞ் சிலைகொண் டிகல்வெஞ்சமர்க் கோல மெய்தி
மைந்தன் றனைவா னவரொடும் வளைந்து கொண்டான்.

(இ-ள்.) தந்தங்களைப் பெற்றுவந்த ஒப்பற்ற வெள்ளையானையின் பிடரியி லேறிக்கொண்டு வலிய வச்சிராயுதம், அழகுபொருந்திய வொள்ளியவாள், எறியீட்டி, வில் இவைகளையேந்தி வெவ்விய போர்க்கோலங்கொண்டு குமாரக்கடவுளைத்தேவர்க ளுடன் சூழ்ந்துகொண்டான்.—எ-று.

கந்தம் - பிடரி. (௪௬)

வன்னிச் சுடர்கால் விசையோடு மரீஇய பாங்கிற்
பன்னற் படுகுன் றவைசூழ்தரு பான்மை யேபோ
லுன்னற் கரிய குமரேசனை யும்பர் கோனு
மின்னற் படுவா னவரும்மிகல் செய்ய வுற்றார்.

(இ-ள்.) தீப்பொறியானது காற்றுவேகத்துடன் பொருந்தி யிருக்குமிடத் தில் பஞ்சுமலைகள் அதனைச்சூழ்ந்துகொண்ட தன்மையைப்போல, நினைத்தற்கரிய குமாரக்கடவுளுடன் தேவேந்திரனும் துன்பமடைந்திருக்கின்ற தேவர்களும் போர் செய்ய வடைந்தார்கள்.—எ-று.

குமாரக்கடவுளைத் தீச்சுடராகவும், தேவர்களைப் பஞ்சுமலையாகவும் உவமித் தவாறு காண்க. பன்னல் - பஞ்சு. (௪௭)

தண்ணார் கமலத் துணைமாதரைத் தன்னி ரண்டு
கண்ணா வுடைய வுமையாடரு கந்தன் வானோர்
நண்ணா ரெனச்சூழ் வதுநோக்கி நகைத்தி யாது
மெண்ணாது முன்போற் றனதாட லிழைத்த வேலை.

(இ-ள்.) குளிர்ச்சிபொருந்திய செந்தாமரை வெண்டாமரை மலர்களில் வசிக்கின்ற இலக்ஷுமி சரஸ்வதிகளை இரண்டு கண்களாகவுடைய உமாதேவியார் பெ ற்றருளிய குமாரக்கடவுள் தம்மைத் தேவர்கள் பகைவர்களைப்போலச் சூழ்ந்துகொ ண்ட தன்மையைப் பார்த்து நகைத்தருளி எதனையு மிலக்ஷியஞ்செய்யாமல் முன்பு போலத் தமது திருவிளையாடலைச்செய்துகொண்டிருந்த சமையத்தில்.—எ-று.

'தண்ணார்கமலத் துணைமாதரைத் தன்னிரண்டு - கண்ணா வுடைய வுமையா ள்' என்பதனை:—"திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழை யிடக்கண் ஞானப்-பெரு மக ளுதற்க ணாகப் பெற்றுவான் செல்வங் கல்வி - யருமைவீ டளிப்பாள் யாவ ளவ ளுயிர்த் துணைவன்காண - வொருமுலை மறைந்து நாணி யொசிந்தபூங் கொம்பி னின் றுள்"—என்னுந் திருவிளையாடற்புராணத்தானும், "காவெனப் பெயரிய கலைமகளை

முந்தைஞான்றுநின் கண்ணெனப் புரந்தாய் - மாவெ னப்பெய ருடையமற் றெனையு மலர்ந்த நின்விழி போற்புரிந் தருளி - யேவெ னப்பிறழ் தடங்கணுய் காமக் கண்ணி யாம் பெயரொய்துவை யென்னுப் - பூவெ னப்பயி லணிமிசைக் கிழத்தி போற்றிசை த்தலு மெதிரொழுந்தருளி" என்னுங் காஞ்சிப்புராணத்தானு மறிக.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (சசு)

எட்டே யொருபான் படைதம்மு ளெறிவ வெல்லாந்
தொட்டே கடவுட் படைதன்னொடுந் தூர்த்த லோடு
மட்டேறு போதிற் படுகின்றுழி வச்சி ரத்தை
விட்டே தெழித்தான் குமரன்மிசை வேள்வி வேந்தன்.

(இ-ள்.) யாகாதிபதியாகிய இந்திரன் குமாரக்கடவுள்மீது பதினெண்படைகளுள் எறியவேண்டிய ஆயுதங்களைப் பிரயோகித்தபின்பு தேவாஸ்திரங்களைச் செலத்தவும், அவைகள் தேன் நிறைந்த புஷ்பங்களைப்போன்று பட்டபொழுது வச்சிராயுதத்தைப் பிரயோகித்துக் கர்ச்சித்தனன்.—எ-று. (சஎ)

வயிரத் தனிவெம் படையெந்தைதன் மார்பு நண்ணி
யயிரிற் றுகளாய் விளிவாக வதனை நோக்கித்
துயரத் தழுங்க விமையோரிறை தொல்லை வேழஞ்
செயிருற் றியம்பி முருகேசன்முன் சென்ற தன்றே.

(இ-ள்.) ஒப்பற்ற கொடிய வச்சிராயுதமானது எமது குமாரக்கடவுளது மார்பிற்பட்டு மணற்பொடிபோலத் தூளாக வழிய, அதனை இந்திரன்பார்த்துத் துன்பமடையவும், உடனே பழைமையாகிய வெள்ளையானை கோபங்கொண்டு பிளிறிட்டுக் குமாரக்கடவுள் திருமுன்னே சென்றது.—எ-று.

அயிர் - நுண்மணல். (சஅ)

செல்லுங் கரிகண் டுமையாண்மகன் சிந்தை யாலோர்
வில்லுங் கணைகள் பலவும் விரைவோடு நல்கி
யொல்லென் றிடநா ணொலிசெய்துயர் சாபம் வாங்கி
யெல்லொன்று கோலொன் றதனெற்றியு ளேக வுய்த்தான்.

(இ-ள்.) பார்வதி புத்திரராகிய குமாரக்கடவுள் அவ்வாறுவந்த வெள்ளையானையைப் பார்த்தருளித் தமது மனத்தினால் ஒரு வில்லையும் அநேகபாணங்களையும் விரைவாக உண்டாக்கி உயர்ந்த அவ்வில்லைவளைத்து ஒல்லென்று நாணொலியெழுப்பி ஒளிபொருந்திய ஒருபாணத்தை அதன் நெற்றியிற்செல்லும்படி பிரயோகித்தருளினார்.—எ-று. (சக)

அக்கா லையில்வேள் செலுத்துங்கணை யண்டர் தம்மின்
மிக்கா னயிரா வதநெற்றியுண் மேவி வல்லே
புக்காவி கொண்டு புறம்போதப் புலம்பி வீழா
மைக்கார் முகிலச் சுறவேயது மாண்ட தன்றே.

(இ-ள்.) அப்பொழுது குமாரக்கடவுள் செலுத்திய பாணமானது தேவேந்திரனது ஐராவதத்தின் நெற்றியில்தாக்கி விரைந்து உள்ளே நுழைந்து சென்று உயிரைவாங்கிக்கொண்டு புறத்திற்செல்ல, கரியமேகங்களஞ்சும்படி புலம்பி வீழ்ந்து அவ்வியானை யிறந்தது.—எ-று.

'மைக்கார் முகில்' என்பதற்கு மிகக் கரியமேகம்போலு நிறத்தினையுடைய இந்திரன் எனப்பொருள் கூறினுமாம். (ருo)

தன்னோர் களிறு மடிவெய்தலுந் தான வேந்த
னன்னே வெனவே யிரங்கா வயல்போகி நின்று
மின்னே றெழ்தன் சிலைதன்னை வெகுண்டு வாங்க
முன்னேன் மதலை யொருகோலவன் மொய்ம்பி லெய்தான்.

(இ-ள்.) தனது ஒப்பற்ற வெள்ளையானையானது இறக்கவும், தேவேந்திரன் ஐயோ? வென்று இரக்கமுற்று அயலிற்சென்றுநின்று, மின்போன்று விளங்குகின்ற தனது வில்லைக் கோபித்து வளைக்க, சிவகுமாரராகிய முருகக்கடவுள் ஒருபாணத்தை அவ்விந்திரனது மார்பில் பிரயோகித்தனர்.—எ-று. (௯௪)

கோலொன்று விண்ணோர்க் கிறைமேற்கும ரேச னுய்ப்ப
மாலொன்று நெஞ்சன் வருந்திப்பெரு வன்மை சிந்திக்
காலொன்று சாபத் தொழினீத்தனன் கையி லுற்ற
வேலொன் றதனைக் கடிதேகுகன் மீது விட்டான்.

(இ-ள்.) தேவர்கள் தலைவனாகிய இந்திரன்மீது குமாரக்கடவுள் ஒருபாணத்தைப் பிரயோகித்தவுடன், மயக்கம்பொருந்திய மனத்தினையுடைய அவ்விந்திரன் வருந்தி மிக்கவலியிழந்து காலிற்பொருத்தி வளைக்கின்ற விற்றொழிலைவிட்டுத் தனது கையிற்பொருந்திய ஒரு வேற்படையை விரைவாகக் குமாரக்கடவுள் மீது பிரயோகித்தனன்.—எ-று. (௯௫)

குந்தப் படையோர் சிறுபுற்படு கொள்கை யேபோல்
வந்துற் றிடவற் புதமெய்தினர் மற்றை வானோர்
கந்தக் கடவுள் சிலையிற்கணை யொன்று பூட்டித்
தந்திக் கிறைவன் றடம்பொன்முடி தள்ளி யார்த்தான்.

(இ-ள்.) அவ்வேற்படையானது ஒரு சிறிய புல்லானது தாக்குகின்ற தன்மையைப்போல வந்து பொருந்துதலும், அதனைக்கண்ட மற்றைத்தேவர்கள் அதிசயமடைந்தார்கள்; உடனே, குமாரக்கடவுள் வில்லில் ஒருபாணத்தைப் பூட்டி ஐராவதத்தலைவனாகிய இந்திரனது பெரியபொற்கிரீடத்தைக் கீழேதள்ளியாரவாரித்தனர்.

துவசந் தனையோர் கணைகொண்டு துணித்து மார்பிற்
கவசந் தனையோர் கணையாற்றுகள் கண்டு விண்ணோ
னவசம் படவேழ் கணைதூண்டின னாழி வேண்டிச்
சிவசங் கரவென் றரிபோற்றிய செம்மன் மைந்தன்.

(இ-ள்.) திருமால் சக்கராயுதம் பெறவேண்டிச் சிவனே! சங்கரனே! என்று துதிக்கப்பெற்ற சிவபெருமானது திருக்குமாரராகிய முருகக்கடவுள், அவ்விந்திரனது கொடியை ஒரு பாணத்தினாலறுத்து, அவன்மார்பிலணிந்த கவசத்தை ஒரு பாணத்தினால் தூளாக்கி, அவ்விந்திரன் மூர்ச்சிக்கும்படி ஏழுபாணங்களைப் பிரயோகித்தனர்.—எ-று.

'ஆழிவேண்டிச்-சிவசங்கரவென் றரிபோற்றிய செம்மல்' என்பதன்வரலாறு:—முன்பொருகாலத்தில் குபன் என்னு மரசன் பொருட்டுத் திருமால் ததீசிமுனிவர்மீது தமது சக்கரத்தைவிடுத்து அவரது வயிரயாக்கையில் தாக்கிக் கூர்மழுங்கிப் பயனற்றதாகவும், அத்திருமால் வேறுசக்கரம்பெறவேண்டிப் பாசுபதவிரதம்பூண்டு சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து நாள்தோறும் ஆயிரந் தாமரைமலர்களைக் கொண்டு அருச்சனைசெய்துவர, சிவபெருமான் அவரது அன்பினுறுதியை யுணர்த்தவேண்டி அவற்றில் ஒருமலரை மறைத்தருளினர், அதனை யுணர்ந்த திருமால் தமது விரதங்கெ

டாதபடி அம்மலருக்குப் பதிலாகத் தமது கண்ணைத்தோண்டி யருச்சிக்கச் சிவபெருமான் பிரத்தியக்ஷமாய், அவர் விரும்பிய சக்கரத்தையும், மற்றும் வேண்டியவரங்களையுமுதவிக் கமலாக்ஷனென்னும் பெயரையுங் கொடுத்தருளின னென்பதாம்; இதனை:— "திகழுமாலவ னாயிரமலரா லேத்துவானொரு நீண்மலர் குறையப் - புகழி னாலவன் கண்ணிடந் திடலும் புரிந்து சக்கரங் கொடுத்தல்கண் டடியேன்- நிகழு நின்றிருப் பாதங்கள் பரவித் தேவதேவநின் றிறம்பல பிதற்றி - யகழும் வல்வினைக் கஞ்சிவந் தடைந்தே னாவடுதுறை யாதியம்மானே" என்னும் ஆளுடைய நம்பிகளருளிச் செய்த தேவாரத்தானு மறிக. (௩௪)

தீங்கா கியவோ ரெழுவாளியுஞ் செல்ல மார்பி
னாங்கார மிக்க மகவா னயர்வாகி வீழ்ந்தா
னோங்கார மேலைப் பொருண்மைந்தனை யும்ப ரேனோர்
பாங்காய் வளைந்து பொருதார்படு கின்ற தோரார்.

(இ-ள்.) கொரேமாகிய எழுபாணங்களும் மார்பிற்பட்டவுடன் மிக்க அகங்காரத்தினையுடைய இந்திரன் மூர்ச்சித்து விழுந்தனன்; உடனே உயர்ந்த பிரணவப் பொருளாகிய சிவபெருமானது புத்திரராகிய குமாரக்கடவுளைத் தேவர்களும் மற்றையர்களும் பின்வருவதை யுணராதவர்களாய் அருகிற்சூழ்ந்துநின்று போர்செய்தார்கள்.

இவ்வா றமரர் பொருமெல்லையி லீசன் மைந்தன்
கைவார் சிலையைக் குனித்தேகணை நான்கு தூண்டி
மெய்வா ரிதிகட் கிறைவன்றனை வீட்டி மற்று
மைவா ளியினாற் சமனாற்ற லடக்கி னானல்.

(இ-ள்.) இவ்வாறு போர்செய்கின்ற சமையத்தில் சிவகுமாரராகிய முருகக்கடவுள் தமது திருக்கரத்திற்பொருந்திய நீண்டவில்லை வளைத்து நான்கு பாணங்களைப்பிரயோகித்து மெய்ம்மைபொருந்திய சமுத்திரராஜனாகிய வருணனது தேகத்தையழித்து, பின்னும் ஐந்துபாணங்களால் இயமனது வன்மையை யடக்கினார்.—எ-று.

ஓரம் பதனான் மதிதன்னையு மொன்றி ரண்டு
கூரம் பதனாற் கதிர்தன்னையுங் கோதின் மைந்த
னீரம் பதனா லனிலத்தையு மேவு மூன்றால்
வீரம் பகர்ந்த கனலோனையும் வீட்டி நின்றான்.

(இ-ள்.) குற்றமற்றக் குமாரக்கடவுள் ஒரு பாணத்தினால் சந்திரனையும், கூர்மைபொருந்திய இரண்டு பாணத்தினால் சூரியனையும், இரண்டுபாணத்தினால் வாயுவையும், மூன்றுபாணத்தினால் வீரத்தைக்கூறிய அக்கினியையும் அழித்துநின்றருளினார்.—எ-று.

'ஒன்றிரண்டு கூரம்பு' என்பதற்கு, கூரிய மூன்று பாணம் எனப் பொருள் கூறுவாருமுளர். வ - அம்பு. (௩௭)

நின்றா ரெவருங் குமரேச னிலைமை நோக்கி
யின்றா ரையுமற் றிவனேயடு மென்று தேறி
யொன்றான சிம்புள் விறல்கண்டரி யுட்கி யோடிச்
சென்றா லெனவே யிரிந்தோடினர் சிந்தை விம்மி.

(இ-ள்.) நின்றவர்களனைவரும் குமாரக்கடவுளது தன்மையைப் பார்த்து இன்று இவனே அனைவரையுங் கொன்றுவிடுவானென்று துணிந்து, ஒரு சிம்புட்பற

வையின் வலிமையைக்கண்டு சிங்கம் நடுங்கியோடினாற்போல மனம்புழுங்கி விலகி யோடினார்கள்.—எ-று. (௩௮)

ஓடுஞ் சுரர்க டிறநோக்கி யுதிக்கும் வெய்யோ
னீடுங் கதிர்க ணிலவைத்துரக் கின்ற தேபோ
லாடுங் குமர னவரைத்துரந் தண்டர் முன்னர்
வீடுங் களத்தி னிடையேதனி மேவி நின்றான்.

(இ-ள்.) அவ்வாறோடிய தேவர்களது தன்மையைப்பார்த்து ஆகாயத்திலுதிக்கின்ற சூரியனது நீண்டகிரணங்கள் நிலாவையோட்டுவதுபோல, திருவிளையாடல் செய்தருளுகின்ற குமாரக்கடவுள் அவர்களைத்துரத்திவிட்டு, தேவர்கள்முன்னர் இறந்துகிடக்கின்ற போர்க்களத்தில் வந்து தனிமையாக நின்றருளினார்.—எ-று. (௩௯)

ஒல்லா தவரிற் பொருதேசில வும்பர் வீழ
நில்லா துடைந்து சிலதேவர்க ணீங்க நேரில்
வில்லா ளியாகித் தனிநின்ற விசாகன் மேனோ
னெல்லா னையுமட் டுலவுந்தனி யீச னொத்தான்.

(இ-ள்.) பகைவர்களைப்போன்று போர்செய்து சிலதேவர்க ளிறக்கவும், எதிரில் நில்லாமல் தோற்றுச் சிலதேவர்களோடவும், ஒப்பற்ற வில்லினையுடையவராகத்தனியே நின்றருளிய குமாரக்கடவுள் சர்வசங்கார காலத்தில் எல்லா வுயிர்களையுமழித்துலாவுகின்ற ஒப்பற்ற காலாக்கினிருத்திரனை யொத்தனர்.—எ-று. (௪௦)

வேறு.

சுரர்கள் யாருந் தொலைந்திட வென்றுதா
னொருவ னாகி யுமைமகன் மேவுழி
யருளி னாரத னச்செயல் கண்டுவான்
குருவை யெய்திப் புகுந்தன கூறினான்.

(இ-ள்.) பார்வதிபுத்திரராகிய முருகக்கடவுள் தேவர்களனைவரும் அழியும்படி செயித்து, தனித்துலாவுகின்ற சமையத்தில், அருளினையுடைய நாரதமுனிவர் அந்தச் செய்கையைப் பார்த்துப் பிரகஸ்பதிபகவானை யடைந்து நடந்த காரியங்களை யுரைத்தனர்.—எ-று. (௪௧)

நற்ற வம்புரி நாரதன் கூற்றினை
யற்ற மில்லுணர் வந்தணன் கேட்டெழீஇ
யிற்ற தேகொ லிமையவர் வாழ்வெனாச்
சொற்று வல்லை துயருழந் தேகினான்.

(இ-ள்.) நல்லதவத்தைச்செய்கின்ற நாரதமுனிவர் சொல்லியவார்த்தையைக் குறைவற்ற பேரறிவினையுடைய பிரகஸ்பதிபகவான் கேட்டெழுந்து, தேவர்களது வாழ்வனைத்துமழிந்ததே யென்று துன்பமடைந்து சொல்லிக்கொண்டு விரைந்து சென்றனன்.—எ-று. (௪௨)

ஆத பன்மதி யண்டர் தமக்கிறை
மாதி ரத்தவர் மால்கரி தன்னுடன்
சாதல் கொண்ட சமர்க்களந் தன்னிடைப்
போதன் மேயினன் பொன்னெனும் பேரினான்.

(இ-ள்.) வியாழபகவான், சூரியனும் சந்திரனும் இந்திரனும் திக்குப்பாலகர்களும் மதமயக்கத்தையுடைய ஐராவதமென்னும் யானையுடன் இறந்து கிடக்கின்ற போர்க்களத்திற் சென்றனன்.—எ-று. (௪௩)

ஆவி யின்றி யவர்மரி குற்றது
தேவ ராசான் றெரிந்து படருறுத்
தாவி லேர்கெழு சண்முக னவ்விடை
மேவி யாடும் வியப்பினை நோக்கினன்.

(இ-ள்.) உயிர்நீங்கி அவர்களிறந்து கிடக்கின்ற தன்மையைத் தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் பார்த்து வருத்தமுற்று, கெடாத அழகுமிக்க குமாரக்கடவுள் அவ்விடத்திற் பொருந்தி விளையாடுகின்ற அதிசயத்தைப் பார்த்தனன்,—எ-று. (௬௪)

முழுது ணர்ந்திடு மொய்சுடர்ப் பொன்னவ
னெழுதொ ணாத வெழினலந் தாங்கியோர்
குழவி தன்னுருக் கொண்ட குமரனைத்
தொழுது நின்று துதித்திது சொல்லுவான்.

(இ-ள்.) எல்லாவற்றையுமுணர்ந்த நெருங்கியகிரணங்களையுடைய வியாழபகவான் எழுதுதற்கரிய சிறந்த பேரழகைப்பெற்று ஒரு குழந்தைத் திருவுருவங்கொண்டுள்ள முருகக்கடவுளை வணங்கிநின்று துதித்து இதனை விண்ணப்பஞ் செய்கின்றனன்.—எ-று. (௬௫)

வேறு.

கரியரி முகத்தினன் கடிய சூரனென்
றுரைபெறு தானவ ரொறுப்ப வல்கலும்
பருவர லுழந்துதன் பதிவிட் டிப்பெரு
வரையிடை மகபதி மறைந்து வைகினன்.

(இ-ள்.) (எம்பெருமானே!) யானைமுகத்தினையுடைய தாரகன்-சிங்கமுகன்-கொடிய சூரபன்மனென்று கூறும் அசுரர்கள் வருத்துதலால், இந்திரன் நாள்தோறுந் துன்பமடைந்து தனது சுவர்க்கலோகத்தைவிட்டு இந்தப் பெரிய மேருமலையினிடத்து மறைந்து வசிக்கின்றான்.—எ-று. (௬௬)

அன்னவ னின்னடி யடைந்து நிற்கொடே
துன்னலர் தமதுயிர் தொலைத்துத் தொன்மைபோற்
றன்னர செய்தவுந் தலைவ னாகவு
முன்னினன் பிறிதுவே றொன்று முன்னலான்.

(இ-ள்.) அவ்விந்திரன் தேவரீரது திருவடிகளைச் சரணமடைந்து தேவரீரைக்கொண்டே, அப்பகை யசுரர்களது உயிரை வாங்கிப்பின்பு பழைமைபோலத் தனது அரசாட்சியையடையவும் (தேவர்களுக்குத்) தலைவனாகவிருக்கவுஞ் சிந்தித்திருக்கின்றான்; வேறொன்றையும் நினைந்தானில்லை.—எ-று. (௬௭)

பற்பக லருந்தவம் பயின்று வாடினன்
றற்பர சரவணத் தடத்திற் போந்தவுன்
னுற்பவ நோக்கியே யுவகை பூத்தனன்
சொற்படு துயரெலாந் தொலைத்து ளானென.

(இ-ள்.) அநேககாலம் அருமையாகிய தவத்தைச்செய்து வாடினான், பரம்பொருளாகிய எமது ஆண்டவரே! சரவணப்பொய்கையிற் றோன்றிய தேவரீரது திருவவதாரத்தைப் பார்த்து, சொல்லப்பட்ட தனது துன்பங்களனைத்தையும் நீக்கினவனைப்போலச் சந்தோஷமடைந்தான்.—எ-று. (௬௮)

கோடலு மராத்தொடு குரவுஞ் செச்சையுஞ்
சூடிய குமரநின் றொழும்பு செய்திட

சேடுறு மிந்திர னீயித் தன்மையி
னாடல்செய் திடுவதை யறிகி லானரோ.

(இ-ள்.) காந்தளும், கடம்பும், குராவும், வெட்சியுமாகிய மலர்களைத் தரித்தருளிய குமாரக்கடவுளே! தேவரீருக்கு ஊழியஞ் செய்யும்படி நினைத்திருந்த இந்திரன் தேவரீர் இவ்வாறுதிருவிளையாடல் செய்துகொண்டிருப்பதை யுணர்ந்தானில்லை.

நாரணன் முதலினோர் நாடிக் காணொணா
வாரண முதல்வனு முமையு மன்னவர்
சீரரு ளடைந்தனர் சிலரு மல்லதை
யாருன தாடலை யறியு நீரினார்.

(இ-ள்.) திருமால் முதலிய தேவர்களால் தேடிக்காணப்படாத வேதமுதல்வராகிய சிவபெருமானும், பார்வதிதேவியாரும், அவர்களது சிறந்த திருவருளைப்பெற்ற சிலருமே யன்றித் தேவரீரது திருவிளையாடலின் சிறப்பினை யுணரத்தக்க தன்மையை யுடையவர்கள் வேறு யாவர்?—எ-று. (௭0)

பற்றிய தொடர்பையு முயிரை யும்பகுத்
திற்றென வுணர்கில மேதந் தீர்கிலஞ்
சிற்றுணர் வுடையதோர் சிறியம் யாமெலா
முற்றுன தாடலை யுணர வல்லமோ.

(இ-ள்.) (அநாதிதொட்டுச்) சம்பந்தப்பட்டுள்ள பாசத்தையும் உயிரையும் பிரித்து இன்ன தன்மையதென்று அறியோம்; குற்றத்தினின்று நீங்காதவர்களும் சிற்றறிவினையுடைய சிறியர்களுமாகிய யாங்கள் தேவரீரது திருவிளையாடலின் றன்மையை யுணர்ந்தறிய வல்லோமோ?—எ-று. (௭௧)

ஆதலால் வானவர்க் கரச னற்றவு
மோதிதா னின்மையா லுன்ற னாடலைத்
தீதென வுன்னிவெஞ் செருவி ழைத்தன
னீதிசேர் தண்டமே நீபு ரிந்தனை.

(இ-ள்.) ஆதலால் தேவேந்திரன் மிகவும் அறிவின்மையினால் தேவரீரது திருவிளையாடலைக் குற்றமென்று கருதிக் கொடியபோர் செய்தனன்; அதற்குத்தேவரீர் ஞாயமான தண்டனையையே செய்தருளினீர்.—எ-று.

ஓதி - அறிவு. (௭௨)

மற்றுள தேவரு மலைந்து தம்முயி
ரற்றன ரவர்களு மறிவி லாமையாற்
பெற்றிடுங் குரவரோ பிழைத்த மைந்தரைச்
செற்றிடி னெவரருள் செய்யற் பாலினோர்.

(இ-ள்.) நல்லறிவின்மையினால் மற்றைத்தேவர்களும் போர்செய்து தங்கள் பிராணனை யிழந்தார்கள், (எம்பெருமானே!) பெற்றதாய்தந்தையர்களே குற்றஞ்செய்த தங்கள் மைந்தர்களைக் கொன்றால் அருள்செய்யத்தக்கவர்கள் வேறுயாவர்.—எ-று.

சின்மய மாகிய செம்மல் சிம்புளாம்
பொன்மலி சிறையுடைப் புள்ளி னாயகன்
வன்மைகொள் விலங்கினை மாற்ற லல்லது
மின்மினி தனையடல் விசய மாகுமோ.

(இ-ள்.) மெய்ஞ்ஞான சொரூபராகவுள்ள எமது ஆண்டவரோ! சரபமென்று சொல்லப்பட்ட பொன்மயமான சிறகினையுடைய பறவைவேந்தன், வலிமை

பொருந்திய சிங்கத்தை யழிப்பதேயன்றி மின்மினிப் பூச்சியைக் கொல்லுதல் வெற்றி யாகுமோ?—எ-று.

சிம்புட்பறவை சிங்கத்தைக் கொல்லுவதன்றி அற்பமாகிய மின்மினிப்பூச்சியைக் கொல்லுதல் தகுதியன்று; அங்ஙனமாக, சிம்புட்பறவை போல்பவராகிய தேவரீர் அசுரர்களாகிய சிங்கத்தைக் கொல்வதன்றி, மின்மினிப்பூச்சி போல்பவர்களாகிய இத்தேவர்களைக் கொல்லுதல் தகுதியோவென்று கூறினனென்பது கருத்து.

'சின்மயமாகிய செம்மல்' என்பதற்கு, வீரபத்திரர் எனவும், 'வன்மைகொள் விலங்கு' என்பதற்கு, நரசிங்கம் எனவும் பொருள்கொண்டு, செம்மலாகிய புள்ளிணுயகன் வன்மைகொள் விலங்கினை மாற்றலல்லது எனக் கூட்டிப் பொருள் கூறுவாருமுளர். (எச)

ஒறுத்திடு மவுணர்க ளொழிய வேரொடு
மறுத்தரு ளுணர்விலா வளிய ருன்னடி
மறத்தலி லன்பினர் மற்றின் னோர்பிழை
பொறுத்தருள் கருணையாற் புணரி போன்றுளாய்.

(இ-ள்.) கிருபைக்கடலாகவுள்ள எம்பெருமானே! வருத்துகின்ற அசுரர்கள் அழியும்படி அடியோடு களைந்தருள்வீராக; அவிவேகிகளாகிய ஏழைத்தேவர்கள் தேவரீரது திருவடியை மறவாத அன்பர்களாகும்; ஆதலால் இவர்கள் செய்த குற்றத்தைப் பொறுத்தருளல் வேண்டும்.—எ-று.

அளவிட்டுரைத்தற்கரிய பெருங்கருணை வள்ளலென்பார், 'கருணையாற் புணரிபோன்றுளாய்' என்று கூறினர். (எடு)

பரமுற வணிகரைப் பரித்துப் பல்வளந்
தருகலங் கவிழ்ந்திடச் சாய்த்து மற்றவ
ரொருதலை விளிதல்போ லுன்னிற் பெற்றிடுந்
திருவினர் பொருதுனைச் செருவிற் றுஞ்சினர்.

(இ-ள்.) பாரமாக வியாபாரிகளைத் தாங்கிப் பல வளங்களைத் தருகின்ற கப்பல் கவிழும்படி சாய்த்து, அவ்வியாபாரிகள் ஓரிடத்திலேயே இறப்பதைப்போல, தேவரீரால் அடையவேண்டிய செல்வத்தினையுடைய தேவர்கள் (அறியாமையினால்) தேவரீருடன் போர்செய்து அப்போர்க்களத்திலிறந்தார்கள்.—எ-று.

வணிகர்கள் தாங்க ளாதரவாகக் கொண்டிருந்த மரக்கலத்தைக்கவிழ்த்து ஒருங்கே கடலில் வீழ்ந்தழிவதுபோலத் தேவரீரையே ஆதரவாகக்கொண்டிருந்த தேவர்கள் தங்களறியாமையால் விரோதித்துப் போர்செய் தழிந்தனரென்று கூறினனென்க. (எசு)

தொழுதகு நின்னடித் தொண்ட ராற்றிய
பிழையது கொள்ளலை பெரும சிந்தையு
ளழிதரு மினையவ ரறிவு பெற்றிவ
ணெழுவகை யருளென விறைஞ்சிக் கூறினன்.

(இ-ள்.) எம்பெருமானே! தொழத்தக்க தேவரீரது திருவடித்தொண்டர்களாகிய தேவர்கள் செய்த குற்றத்தைச் சிந்தித்தல் வேண்டாம்; மனதில் வருந்துகின்றவர்களாகிய இத்தேவர்கள் இங்கு நல்லறிவடைந்து உயிர்பெற்றெழும்படி திருவருள் செய்யவேண்டுமென்று வணங்கி யுரைத்தான்.—எ-று.

பிழையது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. (எஎ)

பொன்னவ னின்னன புகன்று வேண்டிட
முன்னவர் முன்னவன் முறுவல் செய்துவான்
மன்னவ னாதியர் மால்க ளிற்றொடு
மங்கிலை யெழும்வகை யருள்செய் தானரோ.

(இ-ள்.) பிரகஸ்பதிபகவான் இவ்வாறு கூறி வேண்டிக்கொள்ளவும், அநாதிகாரணராகிய குமாரக்கடவுள் புன்னகைகொண்டருளி, இந்திரன் முதலிய தேவர்கள் மதமயக்கத்தையுடைய வெள்ளையானையுடன் அப்பொழுது உயிர்பெற்றெழும்படி திருவருள்புரிந்தனர்.—எ-று. (எஅ)

வேறு.

அந்தியின் வனப்புடைய மெய்க்குக னெழுப்புதலு மன்ன பொழுதே
யிந்திரனு மாதிர வரைப்பினரும் வானவரும் யாவரு மெழாஅச்
சிந்தைதனின் மெய்யுணர்வு தோன்றுதலு முன்புரி செயற்கை யுணராக்
கந்தனொடு கொல்சமர் புரிந்ததெனெ வுன்னினர் கலங்கி யெவரும்.

(இ-ள்.) செவ்வானம்போலும் அழகிய திருமேனியையுடைய குமாரக்கடவுள் எழுப்புதலும், அப்பொழுதே இந்திரனும் திக்குப்பாலகர்களும் தேவர்களுமாகிய எல்லாருமெழுந்து மனத்தில் மெய்யுணர்ச்சியுண்டாகவும் முன்பு தாங்கள் செய்த செய்கையையுணர்ந்து முருகக்கடவுளுடன் தானோ? நாம் போர்செய்தோம் என்று கலக்கங்கொண்டு யாவரும் நினைத்தார்கள்.—எ-று. (எகூ)

கலங்கின ரிரங்கினர் கலுழ்ந்தனர் புலர்ந்தனர் கவன்ற னருள
மலங்கினர் விடந்தனை யயின்றவ ரொனும்படி மயர்ந்த னலிசே
ருலங்கென வுலைந்தன ரொடுங்கினர் நடுங்கின ருரந்த னையிழந்
திலங்கெழின் முகம்பொலி விகந்தனர் பொருந்தமை யிகழ்ந்தனர்களே.

(இ-ள்.) தேவர்கள் கலங்கினார்கள்; இரங்கினார்கள்; அழுதார்கள்; வாடினார்கள்; கவலையுடைந்தார்கள்; மனமயங்கினார்கள்; விஷத்தையுண்டவர்களைப்போலச் சோர்ந்து நெருப்பிற் சேர்ந்த கொசுகைப்போல அலைந்தார்கள்; ஒடுங்கினார்கள்; நடுங்கினார்கள்; வலிமை யிழந்து விளங்குகின்ற அழகினையுடைய முகப்பொலிவிழந்தார்கள்; போர் செய்த தங்களைத்தாங்களே யிகழ்ந்தார்கள்.—எ-று. (அ0)

துஞ்சியெழு மன்னவர்க ளேழுலகு முன்னுதவு சுந்த ரிதரு
மஞ்சனரு ளோடுவிளை யாடுவது காண்டலும் வணங்கி யணையான்
செஞ்சர ணிரண்டினையு முச்சிகொடு மோயினர் சிறந்த லர்துணைக்
கஞ்சமல ரிற்பல நிறங்கொளரி யின்றொகை கவை இய தெனவே.

(இ-ள்.) இறந்து பின் உயிர்பெற்றெழுந்த அத்தேவர்கள் ஏழுலகங்களையும் முன்பு பெற்றருளிய உமாதேவியாரது திருக்குமாரராகிய முருகக்கடவுள் கருணையுடன் திருவிளையாடல் செய்தருளுவதைப் பார்த்தவுடனே வணங்கி, சிறப்புற்று மலர்ந்த இரண்டு தாமரைமலர்களில் பல நிறங்களையுடைய வண்டின்கூட்டங்கள் மொய்த்திருக்குந் தன்மையைப்போல, அக்குமாரக்கடவுளது செவ்விய இரண்டு திருவடிகளையும் முடியிற் சூடி மொய்த்தார்கள்.—எ-று. (அக)

கந்தநம வைந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை யுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலை புனையுந்
தந்தைநம வாறுமுக வாதிநம சோதிநம தற்ப ரமதா
மெந்தைநம வென்றுமிளை யோய்நமகு மாரநம வென்று தொழுதார்.

(இ-ள்.) கந்தப்பெருமானே! நமஸ்காரம்; ஐந்து திருமுகங்களையுடைய சிவபெருமான் தந்தருளிய முருகேசனே! நமஸ்காரம்; கங்கைக்கும் உமாதேவியாருக்கும் புதல்வரே! நமஸ்காரம்; பன்னிரண்டு திருப்புயங்களையுடைய பெருமானே! நமஸ்காரம்; கடப்பமலர்மாலையைத் தரித்த தந்தையே! நமஸ்காரம்; சண்முகங்களையுடைய முதல்வரே! நமஸ்காரம்; சோதிரூபமாயுள்ளவரே! நமஸ்காரம்; தற்பரம் பொருளாகிய எந்தையே! நமஸ்காரம்; என்றும் பாலரூபியாயுள்ளவரே! நமஸ்காரம்; குமாரக்கடவுளே! நமஸ்காரம் என்று துதித்தார்கள்.—எ-று.

தற்பரம் - தானே பரமாயுள்ளது; தனக்கு மேலிட்ட பரம் இல்லாததென்பது பொருள். (௮௨)

பொருந்துதலை யன்புட னெழுந்தவர்க ளிவ்வகை புகழ்ந்து மனமே
லரந்தைகொடு மெய்ந்நடு நடுங்குதலு மன்னதை யறிந்து குமரன்
வருந்தலிர் வருந்தலி ரெனக்கருணை செய்திடலு மற்ற வர்கடாம்
பெருந்துயரு மச்சமு மகன்றுதொழு தேயினைய பேசி னர்களால்.

(இ-ள்.) உயிர்பெற்றெழுந்த தேவர்கள் முதன்மை பொருந்திய பேரன்புடன் இவ்வாறு துதித்து மனத்தில் துன்பங்கொண்டு தேகம் நடுநடுங்குதலும், அதனைக் குமாரக்கடவுளறிந்து வருந்தாதீர்கள்; வருந்தாதீர்களென்று திருவருள் புரியவும், அத்தேவர்கள் மிக்க துன்பமும் அச்சமு மொழிந்து வணங்கி இவற்றைக் கூறுகின்றார்கள்.—எ-று.

தலையன்பு - முதன்மையாகிய அன்பு; பேரன்பு என்பது பொருள். (௮௩)

ஆயவமு தத்தினொடு நஞ்சளவி யுண்குநரை யவ்வி டமலாற்
றாயவமு தோவுயிர் தொலைக்குமது போலுனது தொல்ல ருளினா
லேயதிரு வெய்திட விருந்தனமுன் னோடமரி யற்றி யதனா
னீயெமை முடித்திலை யன்னதவ றெம்முயிரை நீக்கி யதரோ.

(இ-ள்.) இனிமையாகிய அமுதத்துடன் விஷத்தைக்கலந் துண்பவர்களை அவ்விஷத்தையன்றித் தூய்மையாகிய அமுதமோ உயிரை நீக்குவது; (அதுபோல) தேவரீரது பழைமையாகிய திருவருளினால் பொருந்திய செல்வத்தை யடையும்படியிருந்தோம்; உம்முடன் போர்செய்ததனால் தேவரீர் எங்களைக் கொன்றருளவில்லை; அப்போர்செய்த குற்றமே யெங்களுயிரை நீக்கியது.—எ-று.

அமுதத்தையும் விஷத்தையுங் கலந்துண்டவர்கள் இறத்தல், அவ்விஷத்தினாலேயேயன்றி அமுதத்தினாலன்று; அதுபோலத் தேவரீரோ டெதிர்த்துப் போர்செய்த அடியேங்களிறந்தமை எங்கள் குற்றமேயன்றித் தேவரீர் எங்களை யழித்திலீர் என்பது கருத்து. (௮௪)

பண்டுபர மன்றனை யிகழ்ந்தவன் மகத்திலிடு பாக மதியா
முண்டபவ மின்னமு முடிந்தில வதன்றியு முனைப்பொ ருதுநேர்
கொண்டிகல் புரிந்தன மளப்பில்பவம் வந்தகும் ரேச வெமைநீ
தண்டமுறை செய்தவை தொலைத்தனை யுளத்துடைய தண்ண ளியினால்.

(இ-ள்.) குமாரக்கடவுளே! முற்காலத்தில் சிவபெருமானை இகழ்ந்த தக்ஷனது வேள்வியிற் கொடுத்த அவிப்பாகத்தை யுண்ட பாவம் இன்னும் நீங்கவில்லை; அஃதன்றியும், தேவரீரை யெதிர்த்துப் போர்செய்தோம், அதனால் அநேக பாவங்களுண்டாயின. எங்களைத் தேவரீர் திருவுள்ளத்திற் பொருந்திய கருணையினால் முறையே தண்டித்து அப்பாவங்களைத் தொலைத்தருளினீர்.—எ-று.

தேவரீர் எங்களது பாவ நீங்கும்பொருட்டு மறக்கருணைபுரிந்து அப்பாவத்தை யொழித்தருளினீரென்று கூறினரென்க. (அ௫)

ஆதலி னெமக்கடிகள் செய்தவரு ளுக்குநிக ராற்று வதுதா
னேதுளது மற்றெமை யுனக்கடிய ராகவிவ ணீது மெனினு
மாதிபர மாகிய வுனக்கடியம் யாம்புதி தளிப்ப தெவனோ
தாதையர் பெறச்சிறுவர் தங்களை யவர்க்கருள்கை தக்க பரிசோ.

(இ-ள்.) ஆதலால் எங்களுக்குத் தேவரீர் செய்த திருவருளுக் கொப்பாக (அடியேங்கள்) செய்வதற்கு யாதிருக்கின்றது; எங்களைத் தேவரீருக்கடிமையாகக் கொடுப்போ மென்றாலும், முதன்மையாகிய பரம்பொருளாயுள்ள தேவரீருக்கு முன்னமே யாங்க ளடியோங்கள், இப்பொழுது நூதனமான எதனை யடிமையாக்கப் போகின்றோம். அன்றியும், தந்தையர்கள் பெற்றுக்கொள்ளும்படி மைந்தர்கள் தங்களை அத்தந்தையர்களுக்குக்கொடுத்தல் தகுதியாகுமோ.—எ-று.

பதிப்பொருளாகிய தேவரீர் எங்களை அநாதியே யடிமையாகக்கொண்டுள்ளவராகலின், இப்போது புதிதாக அடிமைப்படுத்துதல் யாங்ஙனமென்று கூறினரென்பார், 'மற்றெமை யுனக்கடியராகவிவணீதுமெனினு - மாதி பரமாகிய வுனக்கடியம் யாம் புதிதளிப்ப தெவனோ' என்றுகூறினர். இதனை:—"இரும்புநேர்நெஞ்சகக்கள் வனுனுமுனையிடைவிட்டுநின்றதுண்டோ - வென்றுநீயன்றுநானுன்னடிமையல்லவோ" எனவருந் தாயுமானவர் திருவாக்கானறிக. (அ௬)

அன்னதெனி னுந்தெளிவில் பேதையடி யேம்பிழை யனைத்து முளமே
லுன்னலை பொறுத்தியென வேகுமர வேளவை யுணர்ந்து நமைநீர்
முன்னமொரு சேயென நினைந்துபொரு தீர்நமது மொய்ம்பு முயர்வு
மின்னுமுண ரும்படி தெரித்துமென வோருருவ மெய்தி னனரோ.

(இ-ள்.) அவ்வாறாயினும், தெளிவில்லாத பேதைகளாகிய அடியேங்களது பிழைகளனைத்தையுந் திருவுள்ளத்திற் கருதாமல் மன்னித்தருளவேண்டுமென்று வேண்டுதலும், குமாரக்கடவுள் அதனையுணர்ந்து நீங்கள் நம்மை முன்னம் ஒருகுழந்தையாக நினைத்துப் போர்செய்தீர்கள், நமது வலிமையையும் உயர்வையும் நீங்களின்னுமுணரும்படி தெரிவிக்கின்றோமென்று ஒரு திருவுருவத்தை யடைந்தருளினர்.

சிறியவர்கள் செய்த குற்றத்தைப் பெரியவர்கள் பொறுத்தருளவேண்டுவது முறைமையென்று துதித்துவணங்கினரென்பார், பேதையடியேம்பிழையனைத்துமுளமே லுன்னலைபொறுத்தி, என்று கூறினர். "பிழைத்தவைபொறுக்கையெல்லாம் பெரியவர் கடமைபோற்றி" என்னுந் தமிழ்வேதத்தானறிக. (அ௭)

எண்டிசையு மீரெழு திறத்துலகு மெண்கிரியு மேழு கடலுந்
தெண்டிரையு நேமிவரை யும்பிறவும் வேறுதிரி பாகி யுள்சீ
ரண்டநிரை யானவு மனைத்துயிரு மெப்பொருளு மாகி யயனும்
விண்டுமர னுஞ்செறிய வோருருவு கொண்டனன் விறற்கு மரனே.

(இ-ள்.) வெற்றிபொருந்திய குமாரக்கடவுள் அஷ்டதிக்குகளும், பதினாலுலகமும், அஷ்டகுலபர்வதங்களும், சப்தசமுத்திரங்களும் பெரும்புறக்கடலும் சக்கரவாளகிரியும் மற்றும் வேறு திரிபாகவுள்ள சிறந்த அண்டவரிசைகளும் சகலவுயிர்களும் சகல பொருள்களுமாகிப் பிரம விஷ்ணு ருத்திரர்களென்னு மூவர்களுந் தம திருவிற் பொருந்த ஒரு திருவுருவத்தைக் கொண்டருளினர்.—எ-று.

இவ்வுருவம் பாரமேசுவரரூப மெனவும், விசுவரூபமெனவும் பெயர்பெறும்.

மண்ணளவு பாதலமெ லாஞ்சரண மாதிர வரைப்பு மிகுதோள்
விண்ணளவெ லாமுடிகள் பேரொளியெ லாநயன மெய்ந்ந டுவெலாம்
பண்ணளவு வேதமணி வாயுணர்வெ லாஞ்செவிகள் பக்க மயன்மா
லெண்ணளவு சிந்தையுமை யைந்தொழிலு நல்கியரு ளீச னுயிரே.

(இ-ள்.) மண்முதல் பாதலம் வரையிலுந் திருவடிகளும், திக்கெல்லைகள் பெரிய தோள்களும், ஆகாயவெல்லை யனைத்துந் திருமுடிகளும், பெரிய வொளிப்பொருள்களெல்லாம் திருவிழிகளும், மத்தியப்பிரதேசங்களெல்லாம் திருமேனியும், பண்ணமைந்த வேதங்கள் அழகிய வாய்களும், உணர்வனைத்துஞ் செவிகளும், பிரமவிஷ்ணுக்கள் பக்கங்களும், உமாதேவியார் நினைக்கின்ற மனமும், பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் சிவபெருமான் உயிரும்.—எ-று.

பேரொளியெலாம், என்றது சோமசூரியாக்கினிகளை.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (அ௯)

ஆனதொரு பேருருவு கொண்டுகும ரேசனுற வண்டர் பதியு
மேனையரு மற்புதமி தற்புதமி தென்றுதொழு தெல்ல வருமாய்
வானமிசை நோக்கினர்கண் மெய்வடிவம் யாவையும் வனப்பு முணரார்
சானுவள வாவரிது கண்டனர் புகழ்ந்தினைய சாற்றி னர்களால்.

(இ-ள்.) இவ்வாறாகிய ஒரு பெரிய திருவுருவத்தைக்கொண்டு குமாரக்கடவுள் நின்றருளவும், தேவேந்திரனும் மற்றைத்தேவர்களும் இது ஆச்சரியம் ஆச்சரியமென்று எல்லோருமாகத்தொழுது வானத்திற் பார்த்துத்திருவுருவத்தின்வடிவத்தையும் அழகையும் முற்றிலும் அறியாதவர்களாய்க் கஷ்டத்துடன் முழந்தாளளவாகக் கண்டு புகழ்ந்து இவ்வாறு சொல்லுகின்றார்கள்.—எ-று. (௯0)

வேறு.

சேணலம் வந்த சோதிச் சிற்பர முதல்வ வெம்முன்
மாணல முறநீ கொண்ட வான்பெருங் கோலந் தன்னைக்
காணல மடியேங் காணக் காட்டிடல் வேண்டு மென்ன
நீணலங் கொண்டு நின்ற நெடுந்தகை யதனைக் கேளா.

(இ-ள்.) ஆகாயமனைத்துஞ் சுழல்கின்ற சோதிரூபமாகவுள்ள ஞானமுதல்வரோ! மாட்சிமையாகிய நன்மைபொருந்த எங்களுக்குமுன்னே தேவரீர் கொண்டருளிய சிறந்த பெரிய திருக்கோலப்பொலிவை யறியோம், அடியேங்கள் நன்றாய்ப் பார்க்கும்படி காட்டியருளல் வேண்டுமென்று பிரார்த்திக்கவும் விசுவரூபங்கொண்டு நின்றருளிய குமாரக்கடவுள் அவ்வசனத்தைக்கேட்டு.—எ-று.

நீணலம் - சிறப்புமிக்க நீண்ட திருவுருவும்.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (௯௧)

கருணைசெய் தொளிகண் மிக்க கண்ணவர்க் கருளிச் செவ்வே
ளருணமார் பரிதிப் புத்தே ளநந்தகோ டிகள்சேர்ந் தென்னத்
தருணவில் வீசி நின்ற தனதுரு முற்றுங் காட்ட
விரணிய வாக்க ணின்ற விந்திரன் முதலோர் கண்டார்.

(இ-ள்.) குமாரக்கடவுள் திருவருள்சுரந்து மிகுந்த ஒளிபொருந்திய ஞானக்கண்ணை அவர்களுக்குக்கொடுத்து, செந்நிறமமைந்த அநேககோடி சூரியர்கள் ஒன்றாய்ச்சேர்ந்து நின்றதன்மைபோல, இளம்பிரகாசத்தோடெழுந்தருளி நின்ற தமது

திருவுருவ முழுவதையுங்காட்டி யருளவும், பொன்மயமாகிய மேருமலையில் நின்ற இந்திரன்முதலிய தேவர்கள் தரிசித்தார்கள்.—எ-று.

'ஒளிகண்மிக்க கண்ணவர்க்கருளி' என்றது, மாமிசநேத்திரமன்றித் திவ்வியநேத்திரங் கொடுத்தருளினமையை. தருணம் - இளமை. (௧௨)

அடிமுதன் முடியின் காறு மறுமுக னுருவ மெல்லாங்
கடிதவ னருளா னோக்கிக் கணிப்பிலா வண்ட முற்று
முடிவறு முயிர்கள் யாவு மூவருந் தேவர் யாரும்
வடிவினி லிருப்பக் கண்டு வணங்கியே வழுத்திச் சொல்வார்.

(இ-ள்.) பாதாதிகேச பரியந்தம் ஸ்ரீ சண்முகக்கடவுளது திருவுருவமனைத்தையும் விரைவாக அவரது திருவருளால் தரிசித்து, அளவில்லாத எல்லா அண்டங்களும் அழிவற்ற ஆன்மகோடிகளும் திரிமூர்த்திகளும் மற்றைத்தேவர்களும் தமது திருமேனியிற்றங்கி யிருத்தலைக்கண்டு வணங்கித்துதித்துச் சொல்லுகின்றார்கள்.—எ-று.

திருவருளின்றித் தரிசித்தல் கூடாமையின், 'அறுமுகனுருவமெல்லாங் கடிதவனருளானோக்கி'என்று கூறினார். இதனை—"அவனருளாலே யவன்றாள்வணங்கி" என்னுந் திருவாசகத் திருமுறையா னறிக. (௧௩)

அம்புவி முதலாம் பல்பே ரண்டமு மங்கங் குள்ள
வும்பரு முயிர்கள் யாவு முயிரலாப் பொருளு மாலுஞ்
செம்பது மத்தி னோனுஞ் சிவனொடுஞ் செறிதல் கண்டோ
மெம்பெரு மானின் மெய்யோ வகிலமு மிருப்ப தம்மா.

(இ-ள்.) பிருதிவி முதலாகக்கொண்டுள்ள பல பெரிய அண்டங்களும், அவ்வவ்விடங்களிற் பொருந்திய தேவர்களும், எல்லாவுயிர்களும், உயிரல்லாத சடப்பொருள்களும், திருமாலும் செந்தாமரையிலுள்ள பிரமனும் சிவபெருமானுடன் பொருந்தி யிருத்தலைப்பார்த்தோம்; ஆதலால், எமது பெருமானே ! தேவரீரது திருவுருவமோ? எவ்விடங்களிலும் நிறைந்துள்ளது.—எ-று. (௧௪)

அறிகில மிந்நாள் காறு மகிலமு நீயே யாகி
யுறைதரு தன்மை நீவந் துணர்த்தலி னுணர்ந்தா மன்றே
பிறவொரு பொருளுங் காணேம் பெருமநின் வடிவ மன்றிச்
சிறியம்யா முனது தோற்றந் தெரிந்திட வல்ல மோதான்.

(இ-ள்.) அதனை இந்நாள்வரையிலு மறியோம், அனைத்துந் தேவரீரேயாகிப் பொருந்தியுள்ள தன்மையைத் தேவரீரெழுந்தருளி யுணர்த்தியதனால் உணர்ந்தோம்; எம்பெருமானே! தேவரீரது திருவுருவமேயன்றி வேறொரு பொருளையுங்கண்டிலோம்; சிறியோர்களாகிய யாங்கள் உமது தோற்றத்தை யுணரவல்லமோ ?-எ-று.

'நீவந்துணர்த்தலி னுணர்ந்தாமன்றே' என்பதனை—"அறிவித்தாலன்றியறியாவுளங்கள்" என்னும் அருள்வாக்கா னறிக. (௧௫)

முண்டக னொருவன் றுஞ்ச முராரிபே ருருவாய் நேமிக்
கண்டுயி லக்கந் தை நீங்கக் கண்ணுதற் பகவ னெல்லா
வண்டமு மணிப்பூ ணார மாகவே யாங்கொர் மேனி
கொண்டன னென்னுந் தன்மை குமரநின் வடிவிற் கண்டேம்.

(இ-ள்.) ஒரு பிரமன் அழியவும், திருமால் பேருருவங்கொண்டு திருப்பாற்கடலில் தூங்கிய கொர்வமொழியும் பொருட்டு நெற்றிக்கண்ணராகிய சிவபெருமான் சகல அண்டங்களும் அழகிய பூணாரமாகும்படி அப்பொழுது ஒரு திருமேனி கொண்

டருளின ரென்று கூறுந்தன்மையை, குமாரக்கடவுளே! தேவரீரது திருவுருவத்திற் கண்டோம்.—எ-று. (௯௬)

நாரணன் மலரோன் பன்னா ளுடவுந் தெரிவின் றாகிப்
பேரழ லுருவாய் நின்ற பிரான்றிரு வடிவே போலுன்
சீருரு வுற்ற தம்மா தெளிகில ரவரு மெந்தை
யாரரு ளெய்தி னம்போ லடிமுடி தெரிந்தி டாரோ.

(இ-ள்.) திருமாலும் பிரமனும் அநேககாலந்தேடியுங் காணப்படாமல் பெரிய அழல்வடிவமாகநின்றருளிய சிவபெருமானது திருவுருவத்தைப்போலவே தேவரீரது சிறந்த திருவுருவம் விளங்கியது. பிரம விஷ்ணுக்களும் இந்த வுருவத்தை யுணரமாட்டார்கள்; எமது ஆண்டவரது திருவருளைப்பெற்றிருந்தால் நம்மைப்போல அவர்களும் அடியையு முடியையு மறியமாட்டார்களோ? (அறிவார்கள்.)—எ-று. (௯௭)

அரியொடு கமலத் தேவு மாடல்செய் தகிலந் தன்னை
டொருவனை யொருவர் துங்கி யுந்தியான் முகத்தா னல்கி
யிருவரு மிகலு மெல்லை யெடுத்தபே ருருநீ கொண்ட
திருவுரு விதனுக் காற்றச் சிறியன போலு மன்றே.

(இ-ள்.) திருமாலும் பிரமனும் போர்புரிந்து உலகத்துடனொருவனை யொருவர் விழுங்கி, உந்தியினாலும் முகத்தினாலும் பெற்று இருவர்களும் போர்செய்த விடத்து (சிவபெருமான்) எடுத்த பெரிய திருவுருவம் தேவரீர் கொண்டருளிய இத்திருவுருவத்திற்கு மிகச் சிறியவைபோலும்.—எ-று. (௯௮)

ஆகையா லெம்பி ரானீ யருவுரு வாகி நின்ற
வேகநா யகனே யாகு மெமதுமா தவத்தா லெங்கள்
சோகமா னவற்றை நீக்கிச் சூர்முத றடிந்தே யெம்மை
நாகமே லிருத்து மாற்றா னண்ணினை குமர னேபோல்.

(இ-ள்.) ஆதலால், எமதுபெருமானே! தேவரீர் அருவமாகவும் உருவமாகவுமெழுந்தருளிய முழுமுதற் கடவுளேயாகும், நாங்கள்செய்த பெரிய தவத்தினால் எங்களது துன்பங்களையொழித்துச் சூரபன்மனைக்கொன்று எங்களைச்சொர்க்கத்தில் வாழவைக்கும்பொருட்டுக் குழந்தை வடிவத்துடன் எழுந்தருளினீர்.—எ-று.

அருவம், உருவம், அருவுருவம் என்பன பதியிலக்கணமாகலின், 'எம்பிரானீயருவுருவாகிநின்ற வேகநாயகனேயாகும்' என்று கூறினர். (௯௯)

எவ்வுரு வினுக்கு மாங்கோ ரிடனதா யுற்ற வுன்றன்
செவ்வுரு வதனைக் கண்டு சிறந்தன மறம்பா வத்தி
னவ்வுரு வத்தின் றுப்பு மகனுது மின்னும் யாங்கள்
வெவ்வுரு வத்திற் செல்லேம் வீடுபே றடைது மன்றே.

(இ-ள்.) எல்லா உருவங்களுக்கும் வாசஸ்தானமாயுள்ள தேவரீரது செவ்விய திருவுருவத்தைக்கண்டு சிறப்படைந்தோம்; புண்ணியபாவ வடிவங்களாயுள்ள இருவினைகளாகிய வலியினின்று நீங்குகின்றோம்; இன்னும் அடியேங்கள் கொடிய பிறவியிற்செல்லோம்; முத்திப்பேறடைவோம்.—எ-று. (௧௦௦)

இனையன வழுத்திக் கூறி யிலங்கெழிற் குமர மூர்த்தி
தனதுபே ருருவை நோக்கிச் சதமகன் முதலா வுள்ளோர்
தினகரன் மலர்ச்சி கண்ட சில்லுணர் வுயிர்க ளென்ன
மனமிக வெருவக் கண்க ளலமர மயங்கிச் சொல்வார்.

(இ-ள்.) இந்திரன்முதலிய தேவர்கள் இவ்வாறு துதித்துக்கூறி விளங்குகின்ற அழகினையுடைய குமாரக்கடவுளது பெரிய விசுவரூபத்தைத் தரிசித்து, சூரியனொளியைப்பார்த்த அற்பவுணர்ச்சியையுடைய உயிர்களைப்போலத் தங்கள் மனம் மிக நடுங்கவும் கண்கள் சுழலவும் மயக்கமுற்றுக் கூறுவார்கள்.—எ-று. (க0க)

எல்லையி லொளிபெற் றன்று லெந்தைநின் னுருவு மின்னு
மொல்லுவ தன்றாற் காண வொளியிழந் துலந்த கண்க
ளல்லதும் பெருமை நோக்கி யஞ்சுது மடிய முய்யத்
தொல்லையி னுருவங் கொண்டு தோன்றியே யளித்தி யென்றார்.

(இ-ள்.) எமது ஆண்டவரே! தேவரீரது திருவுருவம் அளவில்லாதபேரொளியைப் பெற்றுள்ளது, அதனைக்காணத்தக்கதன்று; கண்கள் ஒளிமாழ்கிக்கெட்டன. அன்றியும், தேவரீரது பெரிய திருவுருவத்தைக்கண்டு அஞ்சுகின்றோம்; அடியேங்களுய்யும்படி பழைய திருவுருவத்தைக்கொண்டு எழுந்தருளி யெங்களைக் காத்தருள்வீராகவென்று பிரார்த்தித்தார்கள்.—எ-று. (க0உ)

என்றிவை புகன்று வேண்ட வெம்பிரா னருளால் வான்போய்
நின்றபே ருருவந் தன்னை நீத்தறு முகத்தோ னாகித்
தொன்றுள வடிவத் தோடு தோன்றலுந் தொழுது போற்றிக்
குன்றிருஞ் சிறைக ளீர்ந்த கொற்றவன் கூற லுற்றான்.

(இ-ள்.) என்று இவ்வார்த்தைகளையுரைத்து வேண்டிக்கொள்ளவும், எமது குமாரக்கடவுள், கிருபையுடன் ஆகாயமளாவிச்சென்று நின்ற விசுவரூபத்தையொழித்து ஆறு திருமுகங்களையுடையவராய்ப் பழைய திருவுருவத்துட னெழுந்தருளவும், மலைகளினது பெரிய சிறகுகளையரிந்த இந்திரன் வணங்கித் துதித்துச் சொல்லத் தொடங்கினான்.—எ-று. (க0ங)

தொன்னிலை தவாது வைகுஞ் சூரனே முதலா வுள்ள
வொன்னல ருயிரை மாற்றி யும்பரும் யானும் பாங்கர்
மன்னிநின் றேவல் செய்ய வானுயர் துறக்க நண்ணி
யென்னர சியற்றி யெந்தா யிருத்தியென் குறையீ தென்றான்.

(இ-ள்.) எமது தந்தையே! தனது பழைய நிலைமையினின்று நீங்காதிருக்கின்ற சூரபன்மன் முதலியவர்களுடைய உயிரை நீக்கித் தேவர்களும் யானும் அருகில் நின்று எவல் செய்யும்படி வானத்தில் உயர்ந்துள்ள சொர்க்கலோகத்தை யடைந்து எனது அரசாட்சியைச்செய்து இருந்தருள்வீராக; இதுவே என் வேண்டுகோளென்று கூறினான்.—எ-று. (க0ச)

இகமொடு பரமும் வீடு மேத்தினர்க் குலப்பு றாம
லகனம ரருளா னல்கு மறுமுகத் தவற்குத் தன்சீர்
மகபதி யளிப்பான் சொற்ற வாசகஞ் சுடரோன் றங்கிப்
பகவனுக் கொருவ னல்கப் பராவிய போலு மாதோ.

(இ-ள்.) தம்மைத் துதிக்கின்ற அன்பர்களுக்கு இம்மை மறுமை வீடு என்னு மூன்றையும் திருவுள்ளத்திற் பொருந்திய கருணையினால் கொடுத்தருளுகின்ற குமாரக்கடவுளுக்கு இந்திரன் தனது செல்வத்தைக் கொடுக்கின்றேனென்று கூறிய வார்த்தையானது (எதுபோலு மெனின்) ஒருவன் அக்கினிதேவனுக்கு ஒரு தீப்பொறியைக் கொடுப்பதாகப் பிரார்த்தித்துத் துதித்த தன்மையை யொக்கும்.—எ-று.

வானவர் கோனை நோக்கி வறிதுற நகைத்துச் செவ்வே
னீநமக் களித்த தொல்சீர் நினக்குநா மளித்து நீவிர்
சேனைக ளாக நாமே சேனையந் தலைவ னாகித்
தானவர் கிளையை யெல்லாம் வீட்டுதுந் தளரே லென்றான்.

(இ-ள்.) குமாரக்கடவுள் தேவேந்திரனைப்பார்த்து வறிதாகப் புன்னகை புரிந்தருளி, நீ நமக்குக்கொடுத்த பழைமையாகிய உனது செல்வத்தை நாம் உனக்குக் கொடுத்தோம்; நீங்கள் சேனைகளாக நாமேசேனாதிபதியாய் அசுரர்களது வமிசங்களனைத்தையும் நாசஞ்செய்கின்றோம்; நீவருந்தாதே யென்றருளிச்செய்தார்.—எ-று.

கோடலங் கண்ணி வேய்ந்த குமரவே ளினைய கூற
வாடியல் கடவுள் வெள்ளை யடற்களிற் றண்ணல் கேளா
வீடுற வவுண ரெல்லாம் வியன்முடி திருவி னோடுஞ்
சூடின னென்னப் போற்றிச் சுரரொடு மகிழ்ச்சி கொண்டான்.

(இ-ள்.) அழகிய காந்தள் மலர்மாலையையணிந்த முருகக்கடவுள் இவ்வார்த்தைகளை யருளிச்செய்யவும், போர்த்தொழிலையுடைய வலிய ஐராவதத்தலைவனாகிய தேவேந்திரன்கேட்டு, அசுரர்களனைவரு மழியத் தனது செல்வத்துடன் பெரிய மகுடத்தையு மணிந்தவனைப்போன்று துதித்துத் தேவர்களுடன் பெருமகிழ்வடைந்தனன்.

அறுமுகத் தேவை நோக்கி யமரர்கோ னிந்த வண்டத்
துறைதரு வரைக ணேமி யுலகுயிர் பிறவு நின்னான்
முறைபிறழ்ந் தனவா லிந்நாண் முன்புபோ லவற்றை யெல்லா
நிறுவுதி யென்ன லோடு நகைத்திவை நிகழ்த்த லுற்றான்.

(இ-ள்.) தேவேந்திரன் ஆறுதிருமுகங்களையுடைய குமாரக்கடவுளைப்பார்த்து இந்த அண்டத்திலுள்ள மலைகளும், கடல்களும், உலகுயிர்களும் மற்றவைகளும் இப்பொழுது தேவரீரால் முறை பிறழ்ந்தன; அவற்றை முன்போலவே அமைத்தருள்வீராகவென்று பிரார்த்திக்கவும் (முருகக்கடவுள்) புன்னகைபுரிந்து இவற்றை யருளிச் செய்யத்தொடங்கினர்.—எ-று. (௧0அ)

இன்னதோ ரண்டந் தன்னி லெம்மில்வே றுற்ற வெல்லாந்
தொன்னெறி யாக வென்றோர் தூமொழி குமரன் கூற
முன்னுறு பெற்றித் தான முறையிறந் திருந்த தெல்லா
மந்நிலை யெவரு நோக்கி யற்புத மடைந்து நின்றார்.

(இ-ள்.) இவ்வண்டத்தில் எம்மால் வேறுபட்டவைக ளனைத்து முன்போலவே யாகுகவென்று ஒரு தூய்மையாகிய வார்த்தையினைக் குமாரக்கடவு ளருளிச்செய்தவுடனே முறைமாறிக் கிடைந்தவைகளெல்லாம் முன்பு இருந்தவண்ணமேயாயின; யாவரும் அத்தன்மையைப்பார்த்து ஆச்சரியமடைந்து நின்றார்கள்.-எ-று.

வேறு

நிற்கு மெல்லையி னிலத்திடை யாகிப்
பொற்கெ னத்திகழ் பொருப்பிடை மேவுஞ்
சிற்கு ணக்குரிசில் சேவடி தாழூஉச்
சொற்க நாடுள சுரேச னுரைப்பான்.

(இ-ள்.) அவ்வாறு ஆச்சரியமடைந்து நிற்கும்பொழுது, இந்நிலவுலகத்திலுள்ளதாய்ப் பொன்போல் விளங்குகின்ற மேருமலையின்கண் எழுந்தருளிய சிற்குணரா

கிய முருகக்கடவுளது திருவடிகளைவணங்கி விண்ணுலகத்தலைவனாகிய தேவேந்திரன் கூறுவான்.—எ-று.

சுரேசன் - சுரர்களுக்கு ஈசன். (௧௧௦)

ஆண்ட கைப்பகவ வாரண மெய்ந்நூல்
பூண்ட நின்னடிகள் பூசனை யாற்ற
வேண்டு கின்றும்வினை யேமது செய்ய
வீண்டு நின்னருளை யீகுதி யென்றான்.

(இ-ள்.) வீரத்தன்மைபொருந்திய எமது கடவுளே! வேதங்களென்னும் மெய்ம்மையாகிய நூல்களால் தாங்கப்பெற்ற தேவரீரது திருவடிகளை அருச்சனை செய்யும்படிவிரும்புகின்றோம்; தீவினையையுடையவர்களாகிய அடியேங்கள் அதனைச் செய்யும்பொருட்டு இப்பொழுது தேவரீர் திருவருள் செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்.—எ-று.

பூண்ட என்பதற்கு, அடைந்துதுதிக்கின்ற எனப்பொருள் கூறலுமொன்று.

என்ன லுங்குக னிசைந்து நடந்தே
பொன்னி னானுயர் பொருப்பினை நீங்கித்
தன்ன தொண்கயிலை சார்ந்திடு ஞாங்கர்
மன்னி நின்றதொரு மால்வரை புக்கான்.

(இ-ள்.) என்று இவ்வாறு கூறவும்: முருகக்கடவுள் அதற்குத் திருவுள்ளமிசைந்து பொன்னினால் உயர்வடைந்திருக்கின்ற மேருமலையை நீங்கிச் சென்று தமது ஒள்ளிய திருக்கயிலாசத்திற் கருகில் பொருந்தியுள்ளவொரு பெரிய மலையை யடைந்தருளினர்.—எ-று. (௧௧௨)

குன்றி ருஞ்சிறை குறைத்தவ னேனோ
ரொன்றி யேதொழு துவப்புள மெய்தி
யென்று நல்லிளைய னாகிய வெங்கோன்
பின்றொ டர்ந்தனர் பிறங்கலில் வந்தார்.

(இ-ள்.) மலைகளின் பெரிய சிறகுகளை யறுத்த தேவேந்திரனும் மற்றையர்களும் அடைந்து வணங்கி மனத்திற் களிப்படைந்து, எப்பொழுதும் மிக்க இளையவராகிய எமது முருகக்கடவுளுக்குப்பின்றொடர்ந்தவர்களாய் அம்மலையினிடத்தில் வந்தார்கள்.—எ-று. (௧௧௩)

சூரல் பம்புதுறு கன்முழை கொண்ட
சாரல் வெற்பினிடை சண்முகன் மேவ
வாரும் விண்ணவ ரவன்கழ றன்னைச்
சீரி தர்ச்சனை செயற்கு முயன்றார்.

(இ-ள்.) ஸ்ரீ சண்முகப்பெருமான் பிரப்பங்காடு நெருங்கிய துறுகற்களையுடைய குகைகளோடு கூடிய சாரலமைந்த மலையினிடத்தெழுந்தருளவும், தேவர்களனைவரும் அவ்வெம்பெருமானது திருவடிகளைச் சிறப்புப்பொருந்திய அருச்சனை செய்தற்கு முயற்சிசெய்தார்கள்.—எ-று.

விண்ணவராரும், எனக் கூட்டுக. (௧௧௪)

அந்த வேலையம ரர்க்கிறை தங்கண்
முந்து கம்மியனை முன்னுற வன்னான்
வந்து கைதொழலு மந்திர மொன்று
நந்த மாநகரி னல்கிவ ணென்றான்.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் தேவர்கள் தலைவனாகிய இந்திரன் தங்களது முதன்மையாகிய விசுவகன்மனை நினைத்தவுடனே அவன்வந்து கைகூப்பிவணங்கவும், நமது சொர்க்கத்தைப்போல ஒரு ஆலயத்தை இங்குச் சிருட்டிக்கக்கடவை யென்று கூறினான்.—எ-று. (கக௫)

அருக்கர் தந்தொகை யனைத்தையு மொன்று
வுருக்கி யாற்றியென வொண்மணி தன்னாற்
றிருக்கி ளர்ந்துலவு செய்யதொர் கோயில்
பெருக்கெ னப்புனைவர் கோன்புரி குற்றான்.

(இ-ள்.) அவ்விசுவகன்மனானவன் சூரியர்கூட்டங்க ளனைத்தையு மொன்றாக வுருக்கிச்செய்ததுபோல ஒளிபொருந்திய நவரத்தினங்களால் அழகுமிக்கு விளங்குகின்ற சிறந்த ஒரு திருக்கோயிலை விரைவாகச் செய்தனன்.—எ-று.

'அருக்கர் தந்தொகை' என்றது பன்னிரண்டு சூரியர்களை. அவர்கள்:—தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்திரு, துவட்டன், என்பவர்கள். (கக௬)

குடங்கள் போன்மகு டங்கெழு வுற்ற
விடங்கொள் கோபுர விருக்கையி னுப்பண்
கடங்க லுழ்ந்திடு கரிக்குரு குண்ணு
மடங்கல் கொண்டதொர் மணித்தவி சீந்தான்.

(இ-ள்.) கும்பம்போலச் சிகரங்கள் விளங்கப்பெற்ற விசாலமாகிய கோபுரத்தினையுடைய அத்திருக்கோயிலின் மத்தியில், மதத்தைச்சிந்துகின்ற யானையின் மூளையை யுண்ணுகின்ற சிங்கங்களால் சுமக்கப்பட்ட ஒரு ஆசனத்தைச் சிருஷ்டி செய்தனன்.—எ-று.

குருகு - யானையின் தலை மூளை. (கக௭)

ஈந்த வெல்லைதனி லிந்திர னேவப்
போந்து வானெறி புகுந்திடு தூநீர்
சாந்த மாமலர் தழற்புகை யாதி
யாய்ந்து தந்தனர்க ளண்டர்கள் பல்லோர்.

(இ-ள்.) அவ்வாறு செய்தமைத்தவுடனே, தேவேந்திரனது ஏவலினால் பல தேவர்கள் சென்று விண்ணிற் செல்லுகின்ற பரிசுத்தமான ஆகாயகங்கையும், சந்தனமும், சிறந்த மலர்களும், தூபதீபாதிகளுமாகிய இவைகளை ஆராய்ந்துகொண்டு வந்தார்கள்.—எ-று. (கக௮)

வேறு.

அன்ன காலையி லண்டர்கண் மேலையோன்
சென்னி யாறுடைத் தேவனை வந்தியா
வுன்ன தாளருச் சித்தியா முய்ந்திட
விந்நி கேதன மேகுதி நீயென்றான்.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் தேவர்கள் தலைவனாகிய இந்திரனானவன், ஆறு திருமுகங்களையுடைய குமாரக்கடவுளை வணங்கி நாங்கள் தேவரீரது திருவடிகளை அருச்சித்துய்யும்படி தேவரீர் இத்திருக்கோயிலுள்ளெழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்.—எ-று.

நிகேதனம் - தேவாலயம். (கக௯)

கூற்ற மன்னதுட் கொண்டுவிண் ணோரெலாம்
போற்ற மந்திரம் புக்குந னந்தலை
யேற்ற ரித்தொகை யேந்தெழிற் பீடமேல்
வீற்றி ருந்தனன் வேதத்தின் மேலையோன்.

(இ-ள்.) வேதத்தின் முடிந்த பொருளாகிய முருகக்கடவுள் அவ்வார்த்தையைத் திருவுள்ளத்தமைத்துத் தேவர்களனைவருந் துதிக்கும்படி அவ்வாலயத்துள்ளே யெழுந்தருளி, நடுவில் உயரமாக இட்டிருக்கின்ற சிங்கங்களால் சுமக்கப்பட்ட பீடத்தின்மேல் வீற்றிருந்தருளினர்.—எ-று. (சுஉ௦)

ஆன காலை யமரர்கள் வாசவன்
ஞான நாயக நாங்க ளுனக்கொரு
தானை யாகுந் தலைவனை நீயென
வான நீத்தத்து மஞ்சன மாட்டினர்.

(இ-ள்.) அந்தச் சமயத்தில் தேவர்களும் இந்திரனும், ஞானநாயகரே! அடியேங்கள் தேவரீருக்கொரு சேனையாகவிருக்கின்றோம்; தேவரீரோ சேனாதிபதியாகுமென்று ஆகாய கங்கையினால் அபிஷேகம் செய்தார்கள்.—எ-று.

தலைவனை என்பதில் ஐகாரம் சாரியை. (சுஉக)

நொதுமல் பெற்றிடு நுண்டுகில் சூழ்ந்தனர்
முதிய சந்த முதலமட் டித்தனர்
கதிரு நன்பொற் கலன்வகை சாத்தினர்
மதும லர்த்தொகை மாலிகை சூட்டினர்.

(இ-ள்.) மிருதுவாகிய மெல்லிய வஸ்திரத்தைச் சாத்தினர்கள். முதிர்ந்த சந்தன முதலிய கலவைப்பொருள்களைப்பூசினார்கள்; ஒளிவிளங்குகின்ற நல்லபொன்னாபரணவகைகளைத் தரித்தார்கள்; தேன்பொருந்திய மலர்த்தொகுதிகளாற் கட்டப்பட்ட மாலையைச் சூட்டினார்கள்.—எ-று.

நொதுமல்-நொய்மை. முதல என்றது, சந்தன முதலிய வாசனைத்திரவியங்களை கதிரும் - பெயரெச்சம். (சுஉஉ)

ஐவ கைப்படு மாவியும் பாளித
மெய்வி ளக்கமும் வே றுள பான்மையு
மெவ்வெ வர்க்கு மிறைவர்க்கு நல்கியே
செவ்வி தர்ச்சனை செய்தன ரென்பவே.

(இ-ள்.) பஞ்சதூபங்களும் கர்ப்பூர தீபமும், மற்றுள்ள பொருள்களும் யாவர்களுக்கு முதல்வராயுள்ள முருகக்கடவுளுக்குச் சமர்ப்பித்துச் சிறப்பாகிய முறைமையோடும் அருச்சித்தார்கள்.—எ-று.

'ஐவகைப்படு மாவி' என்றது, நறுமணங்கமழும் பொருட்டுப் பொடித்துத் தூபமிடுகின்ற ஐவகை விரைப்பொருள்களை; அவை:—கோட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம் என்பன. "கோட்டந் துருக்கந் தகரமகிலாரம் - ஓட்டிய வைந்தும் விரை"—என்பதனாலறிக. (சுஉ௩)

புரந்த ரன்முதற் புங்கவர் தம்முளத்
தரந்தை நீங்க வருச்சனை செய்துபின்
பரிந்து தாழ்ந்து பரவலு மாயிடைக்
கரந்து வள்ளல் கயிலையிற் போயினன்.

(இ-ள்.) இந்திரன் முதலிய தேவர்கள் தமதுள்ளத்திற் பொருந்திய துன்பம் நீங்கும் வண்ணம் அருச்சனை புரிந்து பின்பு அன்புடன் வணங்கித்துதிக்கவும், அருள் வள்ளலாகியகுமாரக்கடவுள் அவ்விடத்தினின்று மறைந்து திருக்கயிலாயத்திற்குச் சென்றருளினர்.—எ-று. (கஉ௪)

வெற்பின் மிக்குயர் வெள்ளியம் பொற்றையிற்
சிற்ப ரன்மறைந் தேகலுந் தேவரும்
பொற்பின் மேதகு பொன்னக ரண்ணலு
மற்பு தத்துட னவ்வரை நீங்கினர்.

(இ-ள்.) ஞானசொரூபராகிய முருகக்கடவுள் மலைகளிற் சிறந்துள்ள வெள்ளியங்கிரியில் அந்தர்த்தானமாய்ச் சென்றருளினவுடனே, தேவர்களும் அழகுமிகுந்த சுவர்க்கத்தலைவனாகிய இந்திரனும் ஆச்சரியத்துடன் அம்மலையினின்று நீங்கினார்கள்.—எ-று. (கஉ௫)

ஈசன் மைந்த னிளைய னிமையவர்
பூசை செய்யப் பொருந்தலி னவ்வரை
மாசில் கந்த வரையென யாவரும்
பேச வாங்கொர் பெயரினைப் பெற்றதே.

(இ-ள்.) சிவகுமாரராகிய முருகக்கடவுளைத் தேவர்களனைவருஞ் சேர்ந்து பூசித்தற்கிடமாயிருந்தமையால் அம்மலையானது குற்றமற்ற கந்தகிரியென்று யாவருந்துதிக்கும்படி அவ்விடத்து ஒரு பெயரைப்பெற்றது.—எ-று. (கஉ௬)

ஆன கந்த வடுக்கலைத் தீர்ந்துபோய்
வான மன்னன் மனோவதி நண்ணின
னேனை வானவர் யாவரு மவ்வவர்
தான மெய்தினர் தொன்மையிற்றங்கினர்.

(இ-ள்.) விண்ணுலகத் தலைவனாகிய தேவேந்திரன் அவ்வாறாகிய கந்தகிரியை நீங்கிச்சென்று மனோவதிநகரத்தை யடைந்தனன்; மற்றைத் தேவர்களனைவரும் தங்கள் தங்களிடத்தை யடைந்து முன்போலிருந்தார்கள்.—எ-று. (கஉ௭)

உயவ லூர்திகொண் டொய்யென முன்னரோ
கயிலை யங்கிரி யேகிய கந்தவேள்
பயிலும் வீரரும் பாரிட மள்ளரு
மயலின் மேவர வாயிடை வைகினன்.

(இ-ள்.) தமது திருவுள்ளத்தையே வாகனமாகக் கொண்டு முன்னமே விரைவாகத் திருக்கயிலாயத்திற் கெழுந்தருளிய முருகக்கடவுள், தம்மைச் சூழ்ந்துலாவுகின்ற நவவீரர்களும் பூதகணங்களும் தமக்கு அருகில் பொருந்த அங்கு எழுந்தருளியிருந்தனர்.—எ-று.

உயவல் - நினைத்தல். (கஉ௮)

**திருவிளையாட்டுப்படல முற்றிற்று.**

ஆக திருவிருத்தம்-ககஎகூ.

உ

முருகன்றுணை.

# தகரோறுபடலம்.

சூரன்முத லோருயிர் தொலைக்கவரு செவ்வே
ளாருமகிழ் வெள்ளியச லத்தினமர் போழ்தின்
மேருவி லுடைப்பரன் விரும்பவகி லத்தே
நாரதனெர் வேள்வியை நடாத்தியிட லுற்றான்.

(இ-ள்.) சூரபன்மன் முதலிய அசுரர்களது உயிரை நீக்கும்படி யவதரித்தருளிய முருகக்கடவுள் எவர்களும் விரும்புகின்ற திருக்கயிலாய மலையின்கண் ணெழுந்தருளியிருக்கும் நாள்களில், மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமான் விருப்பங்கொள்ளும்படி, நாரதமுனிவர் இந்நிலவுலகத்தில் ஒரு யாகஞ் செய்யத்தொடங்கினார்.

மாமுனி வருஞ்சுரரு மாநில வளைப்பிற்
றேமறு தவத்தினுயர் தொல்லை மறையோரு
மேமமொடு சூழ்தர வியற்றிய மகத்திற்
றீமிசை யெழுந்ததொரு செக்கர்புரை செச்சை.

(இ-ள்.) சிறந்த முனிவர்களும் தேவர்களும் இந்தப் பெரிய உலகத்தில் குற்றமற்ற தவத்திற் சிறந்துள்ள வேதியர்களும் மகிழ்வாகச் சூழ்ந்திருக்கும்படி செய்த யாகத்தில்,அவ்வியாகாக்கினியினின்றுஞ்செவ்வானம்போலுஞ் நிறத்தினையுடைய ஒரு ஆட்டுக்கடாவானது தோன்றியது.—எ-று. (உ)

அங்கிதனில் வந்ததக ராற்றுமகந் தன்னி
னங்களின மேபலவு நாளுமடு கின்றா
ரிங்கிவரை யானடுவ னென்றிசைவு கொண்டே
வெங்கனலை யேந்துபரி மீதெழுதல் போலும்.

(இ-ள்.) யாகாக்கினியி னின்றுந் தோன்றிய ஆட்டுக்கடாவானது (எவ்வாறிருந்ததெனின்,)உலகத்தில்செய்யப்பட்ட யாகங்களில் (இவர்கள்)நம்மினங்களாகிய பல ஆடுகளையேஎப்பொழுதுங்கொல்லுகின்றார்கள்; ஆதலால், யான் இங்கு இவர்களைக்கொல்வேனென்று துணிவுகொண்டு கொடிதாகிய அக்கினியைச் சுமக்கின்றவாகனமாகிய ஆட்டுக்கடாவானது மேலெழுந்து வந்தது போன்றிருந்தது.—எ-று.

அக்கினிதேவனுக்கு ஆட்டுக்கடாவாகனமாகலின், 'வெங்கனலை யேந்து பரி' என்று கூறினார். (ந)

மாருதமு மூழிதனில் வன்னியும் விசும்பிற்
பேருமுரு மேறுமொரு பேருருவு கொண்டே
யாருவது போல்விரைவு மத்தொளியு மார்ப்புஞ்
சேரவெழு மேடமடு செய்கைநினைந் தன்றே.

(இ-ள்.) வாயுவும், பிரளயகாலாக்கினியும் மேகத்தினின்றும் பெயர்ந்து விழுகின்ற இடியேறும் ஒரு பெரியவுருவத்தைக்கொண்டு வருவதைப்போல, வேகமும் செ

ந்நிறமும், கர்ச்சனையுந் தோன்றும்படி யெழுந்த ஆடானது (உயிர்களைக்) கொலைசெய்யுந் தொழிலை நினைத்தது.—எ-று.

அத்தொளி - செவ்வொளி, அத்து - செம்மை. (ச)

கல்லென மணித்தொகை களத்தினிடை தூங்கச்
சில்லரிபெய் கிங்கிணி சிலம்படி புலம்ப
வல்லைவரு கின்றதகர் கண்டுமகத் துள்ளோ
ரெல்லைவரு மச்சமொ டிரிந்தனர்க ளன்றே.

(இ-ள்.) மணித்தொகுதிகள் கலீலென்று சப்தித்துக்கொண்டு கழுத்தில் தொங்கவும், சிறுபருக்கைக்கற்கள் இடப்பட்ட கிங்கிணியும், சிலம்பும் கால்களிற் சப்திக்கவும் விரைவாக வருகின்ற ஆட்டுக்கடாவைப் பார்த்து அந்தயாகசாலையிலிருந்தவர்களனைவரும் பயத்துடன் விலகி ஓடிப்போனார்கள்.—எ-று. (ரு)

இரிந்தவர்கள் யாவரையு மிப்புவியும் வானுந்
துரந்துசிலர் வீழ்ந்துதொலை வாகநனி தாக்கிப்
பரந்ததரை மால்வரை பராகமெழ வோடித்
திரிந்துயிர் வருந்தவடல் செய்தது செயிர்த்தே.

(இ-ள்.) அவ்வாறு ஓடினவர்களனைவரையும் இந்நில வுலகத்திலும் விண்ணுலகத்திலுந் துரத்திச் சிலர் வீழ்ந்திறக்கும் வண்ணம் நன்றாய்முட்டி, விசாலமாகிய பூமியிலும் பெரியமலைகளிலுந் துகளெழும்பும்படி யோடித்திரிந்து கோபித்து உயிர்கள் வருந்தும்படி கொலைசெய்தது.—எ-று.

செயிர்த்து அடல்செய்தது என்க. (சு)

எட்டுள திசைக்கரி யிரிந்தலறி யேங்கக்
கிட்டியெதிர் தாக்குமதி கேழ்கிளரு மானத்
தட்டிரவி தேரொடு தகர்ந்துமுரி வாக
முட்டுமவர் தம்பரியை மொய்ம்பினொடு பாயும்.

(இ-ள்.) அஷ்டதிக்கு யானைகளும் விலகியலறி யேக்கமுறும்படி நெருங்கியெதிரில் மோதும்; சந்திரனது நன்னிறம் விளங்கும் விமானத்தின் தட்டானது சூரியனது தேருடன் உடைந்து முரிந்துபோகும்படி முட்டும், அவர்களது விமானத்திலுந் தேரிலுங் கட்டியுள்ள குதிரைகளை வலிவுடன் பாயும்.—எ-று.

எட்டுளதிசைகரியாவன.—ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் என்பன. இவை முறையே கிழக்காதி எட்டுத்திக்கிலு முள்ள யானைகள். (எ)

இனையவகை யாற்றகரி யாண்டுமுலை வுற்றே
சினமொடுயிர் கட்கிறுதி செய்துபெயர் காலை
முனிவர்களு நாரதனு மொய்ம்புமிகு வானோ
ரனைவர்களு மோடின ரருங்கயிலை புக்கார்.

(இ-ள்.) இவ்வாருக அவ்வாட்டுக்கடாவானது எவ்விடங்களிலும் உலாவிக் கோபத்துடன் உயிர்களுக்கு அழிவையுண்டாக்கிச் செல்லுகின்ற சமையத்தில், முனிவரர்களும், நாரதரும் வலிமை மிக்கதேவர்களனைவரும் ஓடினவர்களாய் அரியதிருக் கயிலாயத்தை யடைந்தார்கள்.—எ-று. (அ)

ஊறுபுக வன்னவ ருலைந்துகயி லைக்க
ணேறிவரு காலையி லிலக்கமுடை னென்பான்

வீறுதிறல் வீரரொடு மேவியுல வுற்றே
யாறுமுக வண்ணல்விளை யாடல்து கண்டார்.

(இ-ள்.) (யாகத்திற்கு) விக்கின முண்டாகவும், அவர்களனைவரும் நடுக்க மடைந்து திருக்கயிலாயமலையில் ஏறிவருகின்ற பொழுது, மிக்கவல்லமையையுடைய இலக்ஷத்தொன்பது வீரர்களுடன் கூடியுலாவிக்கொண்டு ஸ்ரீசண்முகக்கடவுள் விளையாடுதலைக் கண்டார்கள்.—எ-று. (க)

ஈசனிடை நண்ணுகில மீண்டுகும ரேச
னேசமொடு நந்துயர நீக்கவெதிர் வந்தா
ஞசிறுவ னல்லனிவ னண்டர்பல ரோடும்
வாசவனை வென்றுயிரை மாற்றியெழு வித்தான்.

(இ-ள்.) (இதன்பொருட்டுச்) சிவபெருமானிடத்துச் செல்லோம், இங்கு முருகக்கடவுள் விருப்பத்துடன் நமது துன்பங்களை நீக்கியருளும் பொருட்டு எதிரில் வந்தருளினர்; ஆ, இவர் சிறுவரல்லர்; தேவர்கள் பலருடன் இந்திரனையும் வென்று அவர்களுயிரை நீக்கிப்பின்பு உயிர்கொடுத்தெழுப்பியருளினர்.—எ-று.

ஆ - என்பது, வியப்புக்குறிப்பிடைச்சொல். (க0)

எங்குறை முடித்திட லிவற்கெளிது நாமிப்
வுங்கவனொ டுற்றது புகன்றிடுது மென்னுத்
தங்களி லுணர்ந்துசுரர் தாபதர்கள் யாரு
மங்கவன்மு னேகின ரருந்துதிகள் செய்தே.

(இ-ள்.) நமது குறைகளை நீக்குதல் இம்முருகக்கடவுளுக்கு எளிதாகும்; ஆதலால், நாம் இவருடன் நடந்த சங்கதியை விண்ணப்பஞ் செய்துகொள்வோமென்று, தேவர்களும் முனிவர்களனைவரும் தங்களுக்குள்ளே யுணர்ந்து, அருமையாகிய தோத்திரங்களைச் செய்து அவ்வெம்பெருமானுக்கு முன்னே சென்றார்கள்.—எ-று.

வந்துபுகழ் வானவரு மாமுனிவர் தாமுந்
தந்திமுக வற்கிளவ றன்னடி வணங்கக்
கந்தனவர் கொண்டதுயர் கண்டுமிக நீவிர்
நொந்தனிர் புகுந்தது நுவன்றிடுதி ரென்றான்.

(இ-ள்.) புகழையுடைய தேவர்களும் சிறந்த முனிவர்களும் திருமுன்னே யடைந்து விநாயகமூர்த்திக் கிளையவராகிய முருகக்கடவுளது திருவடிகளை வணங்குதலும், அம்முருகக்கடவுள் அவர்களடைந்துள்ள துன்பத்தைப் பார்த்தருளி நீங்கள் மிகவும் வருந்தினீர்கள்; நடந்த சங்கதியை (முறையே) சொல்லக்கடவீர்களென்று வினவியருளினர்.—எ-று. (கஉ)

கேட்டியிளை யோய்மறை கிளத்துமொரு வேள்வி
வேட்டனமி யாங்களது வேலையிடை தன்னின்
மாட்டுகன லூடொரு மறித்தக ரெழுந்தே
யீட்டமுறு மெம்மையட வெண்ணியதை யன்றே.

(இ-ள்.) குமாரக்கடவுளே! தேவரீர் கேட்டருள்வீராக; அடியேங்கள் வேதத்திற் சொல்லப்பட்ட ஒரு யாகத்தைச் செய்தனம், அச்சமயத்தில் சுவாலிக்கின்ற அந்த யாகாக்கினியில் ஒரு ஆட்டுக்கடாவானது தோன்றிக் கூட்டமாகவிருந்த எங்களைக் கொல்ல நினைத்தது.—எ-று.

மாட்டுதல் - நன்ருக எரித்தல். மறித்தகர் - இருபெயரொட்டு. எண்ணிய ைத என்பதில், ஐகாரம் சாரியை. (கங)

ஆடெழு கிளர்ச்சியை யறிந்துமகம் விட்டே
யோடியிவ ணுற்றன முருத்தது துரந்தே
சாடியது சிற்சிலவர் தம்மையத ணலே
வீடியத ளப்பிலுயிர் விண்ணினெடு மண்மேல்.

(இ-ள்.) ஆடானது தோன்றிய தன்மையை யுணர்ந்து, யாகத்தை விட்டு விரைந்தோடி இங்கு அடைந்தனம், அந்த ஆடுகோபித்துச் சிலரைத் துரத்திக் கொன்றது; அதனல், விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் அநேக உயிர்களழிந்தன.-எ-று.

விண்ணினெடு மண்மேல் அளப்பிலுயிர் வீடியது எனக் கூட்டுக. (கச)

நீலவிட மன்றிது நிறங்குலவு செக்கர்க்
கோலவிட மேயுருவு கொண்டதய மேபோ
லோலமிட வெங்குமுல வுற்றதுயி ரெல்லாங்
காலமுடி வெய்துமொரு கன்னன்முடி முன்னம்.

(இ-ள்.) இது கருநிறம்பொருந்திய விஷமன்று, செவ்வானம்போலும் நிறம் விளங்குகின்ற வடிவினையுடைய விஷமே ஆட்டுக்கடாவைப்போல் உருவுகொண்டு வந்தது; (யாவரும்) ஓலமிடும்படி எவ்விடத்து முலாவுகின்றது ; (அவ்வாட்டினல்) ஒருநாழிகைப் பொழுதாவதற்குள்ளே எல்லாவுயிர்களும் உயிர்விட்டிறக்கும்.—எ-று.

காலமுடிவெய்தும் என்றது, அகாலமிருத்துவினல் இறக்கும் என்றபடி.

சீற்றமொ டுயிர்க்கிறுதி செய்துலவு மேடத்
தாற்றலை யடக்கியெம தச்சமு மகற்றி
யேற்றகுறை வேள்வியையு மீறுபுரி வித்தே
போற்றுதி யெனத்தொழுது போற்றிசெயும் வேலை.

(இ-ள்.) கோபத்துடன் உயிர்களுக் கழிவுசெய்து உலாவுகின்ற அவ்வாட்டினுடைய வல்லமையை யடக்கி, யாங்க ளடைந்திருக்கின்ற அச்சத்தையு மொழித்து, நேர்ந்த யாகக் குறைவினையும் நிறைவேற்றி எங்களைக் காத்தருள்வீராக வென்று வணங்கித்துதிக்கும்பொழுது.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (கரு)

எஞ்சுமவர் தம்மையிளை யோன்பரிவி னேக்கி
யஞ்சல்விடு மின்களென வங்கைய தமைத்தே
தஞ்சமென வேபரவு தன்பரிச னத்துண்
மஞ்சுபெறு மேனிவிறல் வாகுவொடு சொல்வான்.

(இ-ள்.) மனம் வருந்தியிருக்கின்ற நாரதமுனிவர் முதலியவர்களை முருகக்கடவுள் அன்புடன் பார்த்து நீங்கள் அஞ்சாதீர்களென்று அபயாஸ்தங்கொடுத்தருளி, ஆதரவாகச் சூழ்ந்து துதிக்கின்ற தமது பரிசனவீரர்களுள் அழகு பொருந்திய திருமேனியினையுடைய வலிய வீரவாகுத்தேவருடன் அருளிச்செய்கின்றார்.—எ-று.

மஞ்சு-அழகு. அன்றி, பராக்கிரமம் எனினுமாம். (கசு)

மண்டுகனல் வந்திவர் மகந்தனை யழித்தே
யண்டமொடு பாருலவி யாருயிர்க டம்மை
யுண்டுதிரி செச்சைதனை யொல்லைகுறு குற்றே
கொண்டணைதி யென்றுமை குமாரனுரை செய்தான்.

(இ-ள்.) பற்றியெரிகின்ற யாகாக்கினியிற்பிறந்து இவர்களது யாகத்தை யழித்து விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலுமுலாவி அரிய உயிர்களைக் கொலைசெய்து திரிகின்ற அந்தச் செம்மறியாட்டை விரைவாகச்சென்று கொண்டுவரக்கடவை யென்று பார்வதிபுத்திரராகிய முருகக்கடவுள் கட்டளையிட்டருளினார்.—எ-று. (கஅ)

வேறு.

குன்றெழு கதிர்போன் மேனிக் குமரவே ளினைய கூற
மன்றலந் தடந்தோள் வீர வாகுவாந் தனிப்பேர் பெற்றா
னன்றென விசைந்து கந்த னணிமலர்ப் பாதம் போற்றிச்
சென்றனன் கயிலை நீங்கிச் சினத்தகர் தேட லுற்றான்.

(இ-ள்.) உதயகிரியிலுதயமாகின்ற இளஞ்சூரியன் போன்ற திருமேனிப் பிரகாசத்தையுடைய முருகக்கடவுள் இவ்வாறு கட்டளையிட்டருளவும், நறுமணங்கமழும் (மலர்மாலையையணிந்த) பெரிய திருத்தோள்களையுடைய வீரவாகுத்தேவர் என்னும் ஒப்பற்றதிருப்பெயரைப்பெற்றவர் அவ்வாறேசெய்கின்றேனென்று இசைவுற்று அக்கந்தப்பெருமானது அன்றலர்ந்த புதிய தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கித்திருக்கயிலையினின்று நீங்கிச்சென்று கோபத்துடனுலாவுகின்ற அவ்வாட்டுக் கடாவைத் தேடுவாராயினார்.—எ-று. (கக)

மண்டல நேமி சூழு மாநில முற்று நாடிக்
கண்டில னாகிச் சென்றேழ் பிலத்தினுங் காண கில்லா
னண்டர்தம் பதங்க ளோடி யயன்பத முன்ன தாகத்
தண்டளிர்ச் செக்கர் மேனித் தகர்செலுந் தன்மை கண்டான்.

(இ-ள்.) வட்டமாகிய சமுத்திரஞ்சூழ்ந்த பெரிய நிலவுலகமுழுதுந் தேடிக் காணாதவராய் ஏழ்பாதாளங்களிலுஞ் சென்று தேடிக்காணாமல், தேவர்கள் வசிக்கின்ற சொர்க்காதிலோகங்களிலுந்தேடிப் பின்பு பிரமபதத்துக்கெதிரில் குளிர்ந்த செந்தளிர்போன்ற மேனியினையுடைய ஆட்டுக்கடாவானது செல்லுகின்ற தன்மையைப் பார்த்தருளினார்.—எ-று. (உO)

ஆடலந் தொழின்மேல் கொண்டே யனைவரு மிரியச் செல்லு
மேடமஞ் சுறவே யார்த்து விரைந்து போய் வீரவாகு
கோடவை பற்றி யீர்த்துக் கொண்டுராய்க் கயிலை நண்ணி
யேடுறு நீபத் தண்டா ரிளையவன் முன்ன ருய்த்தான்.

(இ-ள்.) யாவர்களும் அஞ்சியோடும்வண்ணம் போர்த்தொழிலை மேற்கொண்டு செல்லுகின்ற அவ்வாடானது நடுங்கும்படி வீரவாகுத்தேவர் ஆரவாரித்து விரைந்துசென்று அதன் கொம்புகளைப் பிடித்திழுத்துக்கொண்டு மீண்டு திருக்கயிலையை யடைந்து இதழ்களமைந்த கடப்பமலர்மாலையையணிந்த முருகக்கடவுள் திருமுன்னே கொண்டுவந்து சேர்த்தனர்.— எ-று. (உக)

உய்த்தனன் வணங்கி நிற்ப வுளமகிழ்ந் தருளித் தேவர்
மெய்த்தவர் தொகையை நோக்கி யேழக மேவிற் றெம்பா
லெய்த்தினி வருந்து கில்லீர் யாருநீர் புவனி யேகி
முத்தழல் கொடுமுன் செய்த வேள்வியை முடித்தி ரென்றான்.

(இ-ள்.) அவ்வாறு கொண்டுவந்து சேர்த்து நமஸ்கரித்து நிற்கவும், முருகக்கடவுள் திருவுள்ள மகிழ்கூர்ந்து, தேவர் கூட்டங்களையும் முனிவர் கூட்டங்களையும் பார்த்தருளி எம்மிடத்து இவ்வாட்டுக்கடாவந்து சேர்ந்தது. இனி நீங்கள் சோர்

ந்து வருந்தாதீர்கள், நீங்க ளனைவரும் நிலவுலகத்திற் சென்று, திரியாக்கினியைக் கொண்டு முன்பு செய்த யாகத்தை நிறைவேற்றுங்கள் என்று அருளிச்செய்தனர்.

முத்தழலாவன :—ஆவகனீயம், காருகபத்தியம், தக்கணாக்கினி என்பன; இவற்றுள், ஆவகனீயம் என்பது நாற்சதுரமாய் யாகசாலையின் வடக்கில் வைக்கப்படுவது. காருகபத்தியம் முச்சதுரமாய் அதன் தெற்கில் வைக்கப்படுவது. தக்கணாக்கினி அதற்குத் தெற்கில் பிதிரர்களுக்குப் பலி ஓமமுதலியவைகளைச் செய்வதற்கு வைக்கப்படுவது. (உஉ)

ஏர்தரு குமரப் புத்தே ளிவ்வகை யிசைப்ப வன்னோர்
கார்தரு கண்டத் தெந்தை காதல வேள்வித் தீயிற்
சேர்தரு தகரி னேற்றைச் சிறியமோ முய்யு மாற்றா
லூர்திய தாகக் கொண்டே யூர்ந்திடல் வேண்டு மென்றார்.

(இ-ள்.) அழகுபொருந்திய குமாரக்கடவுள் இவ்வாறு அருளிச்செய்யவும், அவர்கள் (அக்கடவுளைப் பார்த்துக்) காளகண்டராகிய எமது சிவபெருமானது புதல்வரே! யாகாக்கினியில் தோன்றிய ஆட்டுக்கடாவை அடியேங்க ளுய்யும்பொருட்டு(த்தேவரீர்) வாகனமாகக்கொண்டு நடத்தியருளல்வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து கொண்டார்கள்.—எ-று. (உரு)

என்னலுந் தகரை யற்றே யானமாக் கொள்வம் பார்மேன்
முன்னிய மகத்தை நீவிர் முடித்திரென் றருள யார்க்கு
நன்னய மாடல் செய்யு நாரதன் முதலோர் யாரு
மன்னதோர் குமர னெந்தை யடிபணிந் தருளாற் போந்தார்.

(இ-ள்.) இவ்வாறு விண்ணப்பஞ் செய்து கொள்ளவும், (முருகக்கடவுள்) அவ்வாட்டினை அவ்வாறே வாகனமாகக் கொள்ளுகின்றோம்; நிலவுலகத்தில் நீங்கள் செய்யக்கருதிய யாகத்தை நிறைவேற்றுங்களென்று கூறியருளவும், யாவருக்கும் நல்வார்த்தையினையே கூறுகின்ற நாரதர் முதலிய யாவர்களும் அவ்வெமது முருகக்கடவுளது திருவடிகளை வணங்கித் திருவருளோடு சென்றார்கள்.—எ-று. (உச)

நவையில்சீர் முனிவர் தேவர் நயப்பநா ரதனென் றுள்ளோன்
புவிதனில் வந்து முற்றப் புரிந்தனன் முன்னர் வேள்வி
யவர்புரி தவத்தி னீரா லன்றுதொட் டமல மூர்த்தி
யுவகையா லனைய மேட மூர்ந்தன னூர்தி யாக.

(இ-ள்.) குற்றமற்ற சிறப்பினையுடைய முனிவர்களுந் தேவர்களும் விரும்பும் வண்ணம் நாரதரென்னும் பெயரையுடைய முனிவரர் இந்நிலவுலகத்திற்கு வந்து முன்செய்த யாகமானது நிறைவேறும்படி செய்துமுடித்தனர். அந்நாரதர் முதலியவர்கள்செய்த தவத்தினால் அந்நாள் தொடங்கி மலரகிதராகிய முருகக்கடவுள் சந்தோஷத்துடன் அவ்வாட்டுக்கடாவை வாகனமாக நடத்தியருளினார்.—எ-று. (உரு)

தகரோறுபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஉ0ச.

---

உ

முருகன்றுணை.

# அயனைச்சிறைபுரிபடலம்.

மேடமூர்த்தி யாகவுய்த்து விண்ணுமண்ணு முருகவே
ளாடல்செய் துலாவிவெள்ளி யசலமீதி லமர்தரு
நீடுநாளி லொருபகற்க ணெறிகொள்வேதன் முதலினோர்
நாடியீச னடிவணங்க வவ்வரைக்க ணண்ணினர்.

(இ-ள்.) முருகக்கடவுள் (நாரதமுனிவரது யாகத்தில் தோன்றிய) ஆட்டுக்கடாவினை விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் நடாத்தித்திருவிளையாடல்செய்துகொண்டு உலாவித் திருக்கயிலாயமலையி லெழுந்தருளியிருக்கும் நாள்களில், ஒருநாள் நல்லொழுக்கமமைந்த பிரமன் முதலியவர்கள் சிவபெருமானது திருவடிகளைத் தரிசித்து வணங்கும் பொருட்டு அம்மலையினிடத்து வந்தார்கள்.—எ-று. (க)

ஏனுதியா னெனுஞ்செருக் கிகந்துதன் னுணர்ந்துளார்
மனுதிகொண்ட செய்கைதாங்கி மரபின்முத்தி வழிதரு
மனுதியீச னடிவணங்கி யருளடைந்து மற்றவன்
றனுதுமன்ற நீங்கிவாயில் சாருகின்ற வேலையில்.

(இ-ள்.) யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களாகிய இருமாப்பினின்று நீங்கித் தன்னையறிந்துள்ள மெய்ஞ்ஞானியர்களது அந்தக் கரணுதி செயல்க ளனைத்தையும் தம்மதாகக்கொண்டுநின்று முறையேமுத்தியைத் தந்தருளுகின்ற அநாதி நித்தியராகிய சிவபெருமானது திருவடிகளை வணங்கித் திருவருள் பெற்று, அவ்வெம்பெருமா னெழுந்தருளியிருக்கின்ற திருவோலக்க மண்டபத்தினின்று நீங்கித் திருக்கோபுரவாயிலை யடைகின்ற சமையத்தில்.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (உ)

ஒன்பதோடி லக்கமான வணிகவீர ருண்மகிழ்ந்
தன்பினோடு சூழ்ந்துபோற்ற வமலனம்பொ னலய
முன்புநீடு கோபுரத்துண் முழுமணித் தலத்தின்மே
லின்பொடாடி வைகினு னிராறுதோள் படைத்துளான்.

(இ-ள்.) பன்னிரண்டு திருத்தோள்களையுடைய குமாரக்கடவுள் இலக்ஷத்தொன்பது சேனுவீரர்கள் மனமகிழ்ந்து அன்புடனே சூழ்ந்துவணங்கும்படி சிவபெருமானது அழகிய பொன்மயமான திருக்கோயிலினெதிரிலுள்ள உயர்ந்த கோபுரத்தில்பெரியமணிகள் இழைக்கப்பட்டுள்ள மேடையின்மீது மகிழ்வுடன் திருவிளையாடல் செய்துகொண்டிருந்தனர்.—எ-று.

முழுமணி-தொளையிடப்படாத பெரியமாணிக்கம். (ந)

அங்கண்வைகு முருகனம்ப னடிவணங்கி வந்திடும்
புங்கவர்க்கு ளாதியாய போதினுனை நோக்குறு
விங்குநம்முன் வருதியா லெனுவிளிப்ப வேகியே
பங்கயாச னத்தினேன் பணிந்திடாது தொழுதலும்.

(இ-ள்.) அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுள் சிவபெருமானது திருவடிகளை வணங்கிவருகின்ற தேவர்களுக்குள் தலைவனாகிய பிரமனைப்பார்த்தருளி, இங்கு நமக்கு முன்னேவரக்கடவையென் றழைத்தருள, பிரமன்சென்று சாஷ்டாங்கநமஸ்காரஞ் செய்யாமல் சமவந்தனஞ்செய்யவும்.—எ-று.

இதுமுதலிரண்டுபாடலுங் குளகம். (ச)

ஆதிதேவ னருளுமைந்த னவனுளத்தை நோக்கியே
போதனே யிருக்கெனப் புகன்றிருத்தி வைகலு
மேதுநீ புரிந்திடு மியற்கையென்ன நான்முக
னுதனுணை யாலனைத்து நான்படைப்ப னென்றனன்.

(இ-ள்.) முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் பெற்றருளிய முருகக்கடவுள் பிரமனது மனக்கருத்தையுணர்ந்து, பிரமனே! இருக்கக்கடவையென்றுகூறி யிருக்கச்செய்து,தினந்தோறும் நீ யாதுதொழில் செய்கின்றவன் என்று வினவியருள, உடனே பிரமன் நான் சிவபெருமானது கட்டளையினால் எல்லாவற்றையுஞ் சிருஷ்டிப்பேனென்று கூறினான்.—எ-று. (ரு)

வேறு.

முருக வேளது கேட்டலு முறுவல்செய் தருளித்
தரணி வானுயிர் முழுவதுந் தருதியே யென்னிற்
சுருதி யாவையும் போகுமோ மொழிகெனத் தொல்சீர்ப்
பிரம னென்பவ னித்திறம் பேசுத லுற்றான்.

(இ-ள்.) முருகக்கடவுள் அதனைக்கேட்டருளியவுடன் புன்னகைபுரிந்தருளி, நீ மண்ணுலகத்தும் விண்ணுலகத்துமுள்ள உயிர்களனைத்தையுஞ் சிருஷ்டிக்கின்றவனாயின் வேதங்களனைத்துந் தெரியுமோ? கூறக்கடவையென்று வினவியருளவும், பழைமையாகிய சிறப்பினையுடைய பிரமன் இவ்வாறுகூறத் தொடங்கினான்.—எ-று.

ஐய கேளனை யாதிகா லந்தனி லளித்த
மையு லாவரு களத்தின னளப்பிலா மறைகள்
செய்ய வாகமம் பற்பல புரிந்ததிற் சிலயா
னுய்யு மாறருள் செய்தன னவையுணர்ந் துடையேன்.

(இ-ள்.) ஐயனே! கேட்டருள்வீராக; அடியேனைப் பூர்வத்தில் படைத்தருளிய கருநிறம்விளங்குங் கண்டத்தினையுடைய சிவபெருமான் அளவற்றவேதங்களையும் சிறந்த சிவாகமங்களையும் அநேகமாக அருளிச்செய்து, அவற்றுள் சிலவற்றை அடியேனுய்யும்பொருட்டு உபதேசித்தருளினார்; அவற்றையுணர்ந்துள்ளேன்.—எ-று. ()

என்று நான்முக னிசைத்தலு மவற்றினு ளிருக்கா
மொன்று நீவிளம் புதியென முருகவே ளுரைப்ப
நன்றெ னுமறை யெவற்றிற்கு மாதியி னவில்வா
னின்ற தோர்தனி மொழியைமுன் னோதின னெறியால்.

(இ-ள்.) என்றிவ்வாறு பிரமன் கூறவும், முருகக்கடவுள் அவ்வேதங்களுள் இருக்குவேதமென்று கூறும் ஒன்றினை நீ சொல்லக்கடவை என்றருளிச்செய்யவும், அப்பிரமன் நல்லதென்று எல்லாவேதங்களுக்கும் முதலிற்கூறும் வண்ணம் பொருந்திய பிரணவத்தை முறைமைப்படி முதலெடுத்துக் கூறினான்.—எ-று. (அ)

தாம மாத்தலை யிருந்தவன் குடிலைமுன் சாற்றி
மாம றைத்தலை யெடுத்தனன் பகர்தலும் வரம்பில்

காமர் பெற்றுடைக் குமரவே ணிற்றிமுன் கழறு
மோமெ னப்படு மொழிப்பொரு ளியம்புகென் றுரைத்தான்.

(இ-ள்.) தாமரைமலரில் வசிக்கின்ற பிரமன் பிரணவத்தை முதலில்கூறிப் பின்பு சிறந்தவேதத்தின் அடியையெடுத்துச் சொல்லவும், அளவற்ற பேரழகினையுடைய குமாரக்கடவுள் (அதனைப்பார்த்தருளி) நிற்கக்கடவை; நீ முதலிற்கூறிய ஓம் என்று சொல்லப்பட்ட மொழியின் பொருளை யுரைக்கடவையென்று கட்டளையிட்டருளினர்.—எ-று. (௯)

முகத்தி லொன்றதா வவ்வெழுத் துடையதோர் முருக
னகைத்து முன்னெழுத் தினுக்குரை பொருளென நவில
மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன் விக்கித்
திகைத்தி ருந்தனன் கண்டில னப்பொருட் டிறனே.

(இ-ள்.) தமது திருமுகங்களி லொன்றாக அவ்வோங்காராக்ஷரத்தினையுடைய முருகக்கடவுள் நகைத்தருளி, அம் முதலெழுத்தின்பொருளை யுரைக்கக்கடவையென்றருளிச் செய்யவும், (பிரமன்) அப்பொருளின் தன்மையை யுணராதவனாய் மிகுதியாகிய தனது கண்களை விழித்து வெட்கங்கொண்டு விக்கித் திகைப்புற்றிருந்தனன்.—எ-று.

'முகத்திலொன்றதா வவ்வெழுத்துடையதோர் முருகன்' என்பதனை :— "ஓமெனப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்-மாமுகத்து ளொன்றாம்" என மேல் மகேந்திரகாண்டத்து வருமாற்றானறிக. (௧0)

ஈசன் மேவரு பீடமா யேனையோர் தோற்றும்
வாச மாயெலா வெழுத்திற்கு மறைகட்கு முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க் கெம்பிரான் கழறு
மாசி றாரகப் பிரமமா மதன்பய னுய்ந்தான்.

(இ-ள்.) சிவபெருமா னெழுந்தருளியிருக்கின்ற பீடமாகியும் மற்றையர்கள் தோற்றுதற்குரிய வாசஸ்தானமாகியும் எல்லா எழுத்துக்களுக்கும் வேதங்களுக்கும் முன்னுள்ளதாகியும் காசிப்பதியிலிறப்பவர்களுக்கு எமது சிவபெருமானுபதேசிக்கின்றகுற்றமற்ற தாரகப்பிரமமாகியும்விளங்கும் அந்தப்பிரணவாக்ஷரத்தின் பொருளை ஆராய்ச்சிசெய்தனன்.—எ-று. (௧௧)

தெருள தாகிய குடிலையைச் செப்புத லன்றிப்
பொருள றிந்தில னென்செய்வான் கண்ணுதற் புனித
னருளி னாலது முன்னரோ பெற்றில னதனான்
மருளு கின்றனன் யாரதன் பொருளினை வகுப்பார்.

(இ-ள்.) ஞானரூபமாகிய பிரணவத்தைச் சொல்லுதலன்றி அதன்பொருளை யுணர்ந்திலன்;யாதுசெய்வன்; நெற்றிக்கண்ணராகிய சிவபெருமானதுதிருவருளினால் அதனை முன்னமே யறிந்தானில்லை; ஆதலால், மயங்குகின்றனன்; அதன்பொருளைச் சொல்லவல்லவர்கள் யாவர் ? (ஒருவருமில்லை.)—எ-று. (௧௨)

தூம றைக்கெலா மாதியு மந்தமுஞ் சொல்லு
மோமெ னப்படு மோரெழுத் துண்மையை யுணரான்
மாம லர்ப்பெருங் கடவுளு மயங்கினு னென்று
ஞமி னிச்சில வறிந்தன மென்பது நகையே.

(இ-ள்.) பரிசுத்தம்பொருந்திய எல்லாவேதங்களுக்கும் முதலிலும் முடிவிலும் ஓதப்படுவதாகிய ஓம் என்றுசொல்லப்பட்ட ஓரெழுத்தின் உண்மைப்பொருளையுணராதவனாய், சிறந்த தாமரைமலரிலிருக்கின்ற பெருங்கடவுளாகிய பிரமதேவனு மயக்கமுற்றனனாயின், இனி அதன்பொருளை நாம் கொஞ்சந் தெரிந்திருக்கின்றோமென்று கூறுதலும் நகையேயாகும்.—எ-று. (கரு)

எட்டொ ணாதவக் குடிலையிற் பயனினைத் தென்றே
கட்டு ரைத்திலன் மயங்கலு மிதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வதித் தன்மைய தோவெனாச் செவ்வேள்
குட்டி னனய னன்குமா முடிகளுங் குலுங்க.

(இ-ள்.) (பசுஞானத்தினால்) அறிதற்கரிதாகிய அந்தப்பிரணவத்தின் பொருளினை இத்தன்மையினதென்று சொல்லவறியாது மயங்கிநிற்கவும், முருகக்கடவுள் பிரமனைப் பார்த்தருளி, நீ இதன்பொருளையுணர்ந்திலை; இவ்வாறு தானோ நீ சிருஷ்டிசெய்வதென்று அவனதுநான்குமுடிகளுங் குலுங்கும்படி குட்டியருளினார்.—எ-று.

மறைபு ரிந்திடுஞ் சிவனருண் மதலைமா மலர்மே
லுறைபு ரிந்தவன் வீழ்தரப் பதத்தினா லுதைத்து
நிறைபு ரிந்திடு பரிசன ரைக்கொடே நிகளச்
சிறைபு ரிந்திடு வித்தனன் கந்தமாஞ் சிலம்பில்.

(இ-ள்.) வேதங்களையருளிச்செய்த சிவபெருமானது திருப்புதல்வராகிய முருகக்கடவுள் சிறந்த தாமரைமலரில் வசிக்கின்ற பிரமன்கீழே விழும்படி திருவடியினாலுதைத்தருளித் தம்மைச்சூழ்ந்திருக்கின்ற பரிசனர்களைக்கொண்டு கந்தமாதனபருவதத்தில் விலங்கிட்டுச் சிறைசெய்வித்தருளினார்.—எ-று.

நிகளம் - விலங்கு. (கசு)

அல்லி மாமலர்ப் பண்ணவன் றனையருஞ் சிறையில்
வல்லி பூட்டுவித் தியாவையும் புரிதர வல்லோ
னெல்லை தீர்தரு கந்தமால் வரைதனி லேகிப்
பல்லு யிர்த்தொகை படைப்பது நினைந்தனன் பரிவால்.

(இ-ள்.) அகவிதழ்களையுடைய சிறந்த தாமரைமலரிலிருக்கின்ற பிரமனை அரிய சிறையில் விலங்கிடுவித்து, எல்லாக்கிருத்தியங்களையுஞ் செய்யவல்லவராகிய முருகக்கடவுள் தமது பெருங்கருணையினால், அளவற்ற (உயர்ச்சியினையுடைய) கந்தமாதனபருவதத்தை யடைந்து பல வுயிர்க்கூட்டங்களையுந் சிருஷ்டிக்கும்பொருட்டுத் திருவுள்ளங்கொண் டருளினார்.—எ-று. (கசு)

ஒருக ரந்தனிற் கண்டிகை வடம்பரித் தொருதன்
கரத லந்தனிற் குண்டிகை தரித்திரு கரங்கள்
வரத மோடப யந்தரப் பரம்பொருண் மகனோர்
திருமு கங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்.

(இ-ள்.) சிவபெருமானது திருப்புதல்வராகிய முருகக்கடவுள் ஒருதிருக்கரத்தில் ருத்திராக்ஷ ஜெபமாலிகையைத் தாங்கியும், மற்றொரு திருக்கரத்தில் கமண்டலத்தைத் தாங்கியும், மற்றிரண்டு திருக்கரங்களை அபயவரதங்களாக வமைத்துக்கொண்டும் ஒருதிருமுகத்துடன், சதுர்முகனாகிய பிரமனைப்போலச் சிருஷ்டித்தொழில்புரிந்தருளினார்.—எ-று. (கஎ)

உயிரி னுக்குயி ராகியே பரஞ்சுட ரொளியாய்
வியன்ம றைத்தொகைக் கிறைதாய் விதிமுத லானைக்குஞ்

செயலி னுக்கெலா மாதியாய் வைகிய செவ்வே
ளயனெ னப்படைக் கின்றது மற்புத மாமோ.

(இ-ள்.) உயிர்க்குயிராகியும், பரஞ்சுடரொளியாகியும்,பெரியவேதங்களின் முடிவிலுள்ளதாகியும், சிருஷ்டிமுதலிய தொழில்களனைத்திற்கும் முற்பட்டதாகியுமுள்ள பரம்பொருளாகிய முருகக்கடவுள் பிரமனைப்போலச் சிருஷ்டிசெய்வதும் ஒரு ஆச்சரியமோ?—எ-று.

விதிமுதலுனைக்குஞ் செயல் என்றது, பஞ்சகிருத்தியங்களை; அவை - சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்பன. (கஅ)

தண்ணெ னம்புயத் தவிசினோன் சிறைபுகத் தானே
யெண்ணி லாவுயிர்த் தொகையளித் தறுமுக னிருந்தா
னண்ண லந்திசை முகனொடு வந்துசூ ழமர
ருண்ண டுங்கியே தொழுதுதம் பதங்களி னுற்றார்.

(இ-ள்.) குளிர்ச்சிபொருந்திய தாமரைமலரிலிருக்கின்றபிரமதேவன்சிறையிலிருக்க, ஆறு திருமுகங்களையுடைய குமாரக்கடவுள் அளவில்லாத உயிர்த்தொகைகளைச் சிருஷ்டிசெய்திருந்தருளினர். பெருமைபொருந்திய பிரமதேவனுடன் சூழ்ந்து வந்த தேவர்கள் மனநடுக்கங்கொண்டு வணங்கித் தத்தம்பதங்களி லடைந்தார்கள். ()

அயனைச்சிறைபுரிபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஉஉரு.

---

உ

முருகன்றுணை.

---

# அயனைச்சிறைநீக்கு படலம்.

ஆல மாமிடற் றண்ணல்சே யித்திற மளப்பில்
காலம் யாவையு மளித்தன னிருத்தலுங் கரியோ
னுனு மாமுக னுவளக நீக்குவா னுடிச்
சீல வானவர் முனிவரைச் சிந்தனை செய்தான்.

(இ-ள்.) விஷந்தங்கிய சிறந்த கண்டத்தினையுடைய சிவபெருமானது திருப்புதல்வராகிய முருகக்கடவுள் இவ்வாறு அநேககாலங்களாக எல்லாவற்றையுஞ் சிருஷ்டிசெய்துகொண் டிருக்கவும், திருமால் பிரமதேவனது சிறையினைநீக்குதற்கு விரும்பி நல்லொழுக்கமமைந்த தேவர்களையும், முனிவர்களையுந் தமது திருவுள்ளத்திற் சிந்தித்தருளினர்.—எ-று. (க)

உவளகம்-சிறை.

சீத ரத்தனிப் பண்ணவன் சிந்தனை தேறி
யாத பத்தினர் பரிமுகர் வசுக்களன் னையர்க
ளேத மற்றிடும் விஞ்சைய ருவணரோ டியக்கர்
மாதி ரத்தவர் யாவரும் விரைந்துடன் வந்தார்.

(இ-ள்.) ஒப்பற்ற திருமாலினது எண்ணத்தையுணர்ந்து,சூரியர்களும், அசுவினிதேவர்களும், வசுக்களும், சப்தமாதாக்களும், குற்றமற்ற வித்தியாதரர்களும்,கரு

டர்களும், இயக்கர்களும், திக்குப்பாலகர்களும் ஆகிய யாவர்களும் உடனே விரைந்து வந்தார்கள்.—எ-று. (௨)

மதியு மேனைய கோள்களுங் கணங்களும் வான்றோய்
பொதிய மேயவ னாதியாம் பொருவின்மா தவரும்
விதிபு ரிந்திடு பிரமரோன் பதின்மரும் வியன்பா
ரதனை யேந்திய சேடனு முரகரு மடைந்தார்.

(இ-ள்.) சந்திரனும், மற்றையகிரகங்களும், கணங்களும், மேகங்கள் தவழும் பொதியமலையி லெழுந்தருளியிருக்கின்ற அகஸ்தியர்முதலிய தவமுனிவர்களும், பிரம புத்திரர்களாகிய நவப்பிரமாக்களும், பெரிய உலகத்தைச் சுமக்கின்ற ஆதிசேடனும், மற்றைய நாகர்களும் வந்தார்கள்.—எ-று.

வான்றோய் என்பதற்கு, ஆகாயத்தையளாவிய எனவும், விதிபுரிந்திடு பிரம ரோன்பதின்மர் என்பதற்கு, சிருட்டித்தொழிலைச்செய்கின்ற நவப்பிரமாக்கள் எனவும் பொருள்கூறினுமாம். (௩)

இன்ன தன்மையி லமரரு முனிவரு மெய்த
வன்னர் தம்மொடுஞ் செங்கண்மால் கயிலையை யடைந்து
முன்னர் வைகிய நந்திகண் முறையினுய்த் திடப்போய்த்
தன்னை யேதனக் கொப்பவன் பொற்கழ றாழ்ந்தான்.

(இ-ள்.) இவ்வாறு தேவர்களும் முனிவர்களும் வந்துசேர்ந்தவுடனே திரு மால் அவர்களுடன் திருக்கயிலையையடைந்து, முதற்றிருவாயிலி னெழுந்தருளியிருக் கின்ற திருநந்திதேவர் முறைமைப்படி யுள்ளே யனுப்பச் சென்று, தமக்குத்தாமே யொத்தவராகிய சிவபெருமானது பொன்மயமாகியதிருவடிகளைவணங்கினர்.—எ-று.

பொற்றி ருப்பத மிறைஞ்சியே மறைமுறை போற்றி
நிற்ற லுஞ்சிவ னருள்கொடே நோக்குறீஇ நீவி
ரெற்றை வைகலு மில்லதோர் தளர்வொடு மெம்பா
லுற்ற தென்கொலோ வென்றலு மாலிவை யுரைப்பான்.

(இ-ள்.) பொன்மயமாகிய திருவடிகளைவணங்கி வேதமுறைமைப்படி துதி த்து நிற்கவும், சிவபெருமான் திருவருளோடு பார்த்தருளி, நீங்கள் எக்காலத்தும் அ டையாததாகிய துன்பத்துடன் எம்மிடத்தடைந்தது யாதுகாரணம் என்று வினவியரு ளலும், திருமால் இவ்வார்த்தைகளை யுரைப்பாராயினர்.—எ-று. (௫)

வே று.

இறைவ நின்மக னீண்டுறு போதனை
மறைமு தற்பத வான்பொருள் கேட்டலு
மறிகி லானுற வன்னவன் றன்னைமுன்
சிறைபு ரிந்தனன் சிட்டியுஞ் செய்கின்றான்.

(இ-ள்.) முதற்பெருங்கடவுளாகிய எமதாண்டவரே! தேவரீரது புதல்வ ராகிய குமாரக்கடவுள் இங்குவந்த பிரமனை வேதத்தின்முதற்பதமாயுள்ள ஓங்காரத் தின் சிறந்தபொருளை வினவுதலும், அவன் அதன்பொருளையுணராது மயங்க, அந்தப் பிரமனை முன்னே சிறையிலிட்டருளினர்; பின்பு சிருஷ்டித்தொழிலுஞ் செய்தருளு கின்றனர்.—எ-று. (௬)

கந்த வேளெனக் கஞ்சனு மையநின்
மைந்த னுமவன் வல்வினை யூழினு

லந்த மில்பக லாழ்சிறைப் பட்டுள்
ளொந்து வாடின னுவுழந் தானரோ.

(இ-ள்.) எமது ஆண்டவரே! குமாரக்கடவுளைப்போலப் பிரமனும் தேவரீரது புதல்வனேயாகும்; ஆதலால் அவன் தனது பொல்லாததீவினையினால் அளவற்றகாலம் கொடிதாகிய சிறையிலகப்பட்டு மனம்வருந்தி வாடித் துன்புறுகின்றனன்.

ஆக்க மற்ற வயன்றன் சிறையினை
நீக்கு கென்று நிமலனை வேண்டலுந்
தேக்கு மன்பிற் சிலாதனற் செம்மலை
நோக்கி யொன்று நுவலுதன் மேயினன்.

(இ-ள்.) (தேவரீரது திருவருட்) செல்வமற்றவனாகிய பிரமனடைந்திருக்கின்ற சிறையினைநீக்கி யருள்வீராக வென்று மலரகிதராகிய சிவபெருமானை வேண்டிக்கொள்ளவும்,(சிவபெருமான்) மிக்க அன்பினையுடைய சிலாதமுனிவரது நல்லபுத்திரராகிய திருநந்திதேவரைப் பார்த்தருளி ஒருவார்த்தையருளிச் செய்வாராயினர்.-எ-று.

குடிகைச் செங்கையி னானைக் குமரவே
ளிடுவித் தான்சிறை யென்றன ராண்டுநீ
கடிதிற் சென்றுநங் கட்டுரை கூறியே
விடுவித் தேயிவண் மீள்கெனச் சாற்றினன்.

(இ-ள்.) (இவர்கள்) கமண்டலத்தையேந்திய கையினையுடைய பிரமனை நமது சுப்பிரமணியன் சிறையிடுவித்தனனென்று கூறினர்கள்; ஆதலால் நீ அங்கு விரைவிற்சென்று நமது உறுதிமொழியைக்கூறி அவனை விடுவித்து இங்கு வரக்கடவையென்று அருளிச்செய்தனர்.—எ-று. (கூ)

எந்தை யன்ன திசைத்தலு நன்றெனா
நந்தி யக்கண நாதனைத் தாழ்ந்துபோ
யந்த மற்ற வடற்கணஞ் சூழ்தரக்
கந்த வெற்பிற் கடிநக ரெய்தினன்.

(இ-ள்.) எமது முதல்வராகிய சிவபெருமான் அவ்வாறு கட்டளையிட்டருளவும், திருநந்திதேவர் அப்பொழுதே நன்றென்றுகூறிச் சிவபெருமானை வணங்கிச்சென்று, கெடாத வலிமையினையுடைய சிவகணங்கள் தம்மைச் சூழும்படி கந்தமாதனகிரியிலுள்ள காவலையுடைய நகரத்தை யடைந்தருளினர்.—எ-று. (க0)

எறுழு டைத்தனி யேற்று முகத்தினா
னறுமு கத்த னமர்ந்த நிகேதனங்
குறுகி மற்றவன் கோல மலர்ப்பத
முறைத னிற்பணிந் தேத்தி மொழிகுவான்.

(இ-ள்.) வலிமைபொருந்திய ஒப்பற்ற இடபமுகத்தினையுடைய திருநந்திதேவர் ஸ்ரீசண்முகப்பெருமானெழுந்தருளியிருக்கின்ற ஆலயத்துக்குட்சென்று, அவரது அழகிய தாமரைமலர்போன்ற திருவடிகளை முறைப்படிவணங்கித் துதித்துச்சொல்லத்தொடங்கினர்.—எ-று. (கக)

கடிகொள் பங்கயன் காப்பினை யெம்பிரான்
விடுதல் கூறி விடுத்தன னீங்கெனைத்
தடைப டாதவன் றன்சிறை நீக்குதி
குடிலை யன்னவன் கூறற் கெளியதோ.

(இ-ள்.) எமது சிவபெருமான் இவ்விடத்தில் அடியேனை நறுமணங்கமழுந் தாமரைமலரிலிருக்கின்ற பிரமனது சிறையை விடுவிக்கும்படி கட்டளையிட்டனுப்பியருளினர்; பிரணவப்பொருள் அந்தப்பிரமனால்சொல்லக்கூடியதோ? ஆதலால் அப்பிரமனது சிறையைத் தடையில்லாமல் நீக்கியருளக்கடவீர்.—எ-று. (௧௨)

என்னு முன்ன மிளையவன் சீறியே
யன்ன வூர்தி யருஞ்சிறை நீக்கல
னின்னை யுஞ்சிறை வீட்டுவ னிற்றியே
லுன்னி யேகுதி யொல்லையி லென்றலும்.

(இ-ள்.) என்றிவ்வாறு திருநந்திதேவர் கூறுவதற்குமுன்னே முருகக்கடவுள் கோபங்கொண்டருளி, அன்னவாகனனாகிய பிரமனது கொடியசிறையை நீக்கமாட்டேன். நீ இங்கு நிற்பையாயின், உன்னையுஞ்சிறையிலிடுவேன்; ஆதலால் இதனைச்சிந்தித்து விரைந்து செல்லக்கடவையென்று கூறியருளினர்.—எ-று. (௧௩)

வேற தொன்றும் விளம்பில னஞ்சியே
யாறு மாமுகத் தண்ணலை வந்தியா
மாறி லாவெள்ளி மால்வரை சென்றன
னேறு போன்முக மெய்திய நந்தியே.

(இ-ள்.) இடபம்போலுந் திருமுகத்தினையுடைய திருநந்திதேவர் பயங்கொண்டு அதற்குப் பதில்வார்த்தை யொன்றுஞ்சொல்லாதவராய், ஆறு திருமுகங்களையுடைய முருகக்கடவுளைத் துதித்து மாறுபாடில்லாத பெரிய திருக்கயிலாயமலையை யடைந்தருளினர்.—எ-று. (௧௪)

மைதி கழ்ந்த மணிமிடற் றண்ணன்முன்
வெய்தெ னச்சென்று மேவி யவன்பதங்
கைதொ ழூஉநின்று கந்தன் மொழிந்திடுஞ்
செய்தி செப்பச் சிறுநகை யெய்தினன்.

(இ-ள்.) (அவ்வாறடைந்து) கருநிறம்விளங்குங் காளகண்டத்தினை யுடைய சிவபெருமான் திருமுன்னே விரைவாகச்சென்றுசேர்ந்து, அவ் வெம்பெருமானது திருவடிகளைக் கைகூப்பி வணங்கி, குமாரக்கடவுள் கூறியருளிய சங்கதிகளை யுரைத்தருளவும் (சிவபெருமான்) புன்னகைகொண் டருளினர்.—எ-று. (௧௫)

கெழுத கைச்சுடர்க் கேசரிப் பீடமேல்
விழுமி துற்ற விமலன் விரைந்தெழீஇ
யழகு டைத்தன தாலய நீங்கியே
மழவி டைத்தனி மால்வரை யேறினன்.

(இ-ள்.) மிக்க பேரொளியினையுடைய சிங்காசனத்தின்மேல் சிறப்புடன் வீற்றிருந்தருளுஞ் சிவபெருமான் விரைந்தெழுந்தருளி அழகுபொருந்திய தமது திருக்கோயிலின்புறத்திற் சென்று, ஒப்பற்ற பெரியமலைபோன்ற இடபவாகனத்தின்மீது எழுந்தருளினர்.—எ-று. (௧௬)

முன்னர் வந்த முகில்புரை வண்ண னுங்
கின்ன ரம்பயில் கேசர ராதியோர்
நன்னர் கொண்டிடு நாகரு நற்றவ
ரொன்ன ருந்தொழு தெந்தைபின் னேகினர்.

(இ-ள்.) முன்னே வந்திருக்கின்ற மேகவண்ணராகிய திருமாலும், கின்னர மென்னும் வாத்தியத்தினை வாசிக்கின்ற வித்தியாதரர்முதலியவர்களும், நன்மைமிக்க நாகர்களும், நல்ல தவமுனிவர்களனைவரும் எமது சிவபெருமானுக்குப் பின்னே நமஸ்கரித்துக்கொண்டு சென்றார்கள்.—எ-று. (கஎ)

படைகொள் கையினர் பன்னிறக் காழக
வுடையர் தீயி னுருகெழு சென்னிய
ரிடிகொள் சொல்லின ரெண்ணரும் பூதர்கள்
புடையி லீண்டினர் போற்றுதன் மேயினர்.

(இ-ள்.) ஆயுதங்களையேந்திய கையினையுடையவர்களும், பல நிறங்களையுடைய வஸ்திரங்களை யணிந்தவர்களும், தீப்போலு முருவமமைந்த தலையினையுடையவர்களும், இடிமுழக்கம்போன்ற சொல்லினையுடையவர்களுமாகிய அளவற்ற பூதகணங்கள் அருகில் நெருங்கித்துதிக்கின்றவர்களானார்கள்.—எ-று.

காழகம்-வஸ்திரம். (கஅ)

இனைய காலை யினையவர் தம்மொடும்
வனிதை பாதியன் மால்விடை யூர்ந்துராய்ப்
புனித வெள்ளியம் பொற்றை தணந்துபோய்த்
தனது மைந்தன் றடவரை யெய்தினன்.

(இ-ள்.) இவ்வாறாகிய சமயத்தில், இவர்களனைவருடனும் பார்வதிபாகராகிய சிவபெருமான் பெரிய இடபவாகனத்திலெழுந்தருளிப் பரிசுத்தமாகிய வெள்ளிமலையை நீங்கிச்சென்று தமது திருப்புதல்வராகியமுருகக்கடவு ளெழுந்தருளியிருக்கின்ற பெரிய கந்தமாதனகிரியை யடைந்தருளினர்.—எ-று. (கக)

சாற்ற ருந்திறற் சண்முக வெம்பிரான்
வீற்றி ருந்த வியனகர் முன்னுறா
வேற்றி னின்று மிழிந்துவிண் ணோரெலாம்
போற்ற முக்கட் புனிதனுட் போயினன்.

(இ-ள்.) மூன்றுகண்களையுடைய சிவபெருமான் சொல்லுதற்கரிய வல்லமையமைந்த ஸ்ரீ சண்முகப்பெருமான் வீற்றிருந்தருளிய திருக்கோயிலின்முன்னே சென்றருளி இடபவாகனத்தினின்று மிறங்கித் தேவர்க ளனைவருந் துதிக்கும்படி உள்ளே பிரவேசித்தருளினர்.—எ-று. (உ0)

அந்தி போலு மவிர்சடைப் பண்ணவன்
கந்தன் முன்னர்க் கருணையொ டேகலு
மெந்தை வந்தன னென்றெழுந் தாங்கவன்
வந்து நேர்கொண் டடிகள் வணங்கியே.

(இ-ள்.) செவ்வானம்போன்று விளங்குகின்ற சடைமுடியினையுடைய சிவபெருமான், கந்தக்கடவுளது திருமுன்னே பெருங்கருணையோடு சென்றருளவும், அக்கடவுள் எமதுதந்தையாகிய சிவபெருமான் வந்தருளினரென்று எழுந்து எதிரிலடைந்து அவரது திருவடிகளை வணங்கி.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (உக)

பெருத்த தன்மணிப் பீடிகை மீமிசை
யிருத்தி நாதனை யேமுல கின்றிடு
மொருத்தி மைந்த னுயிர்க்குயி ராகிய
கருத்த நீவந்த காரியம் யாதென்றான்.

(இ-ள்.) பெரிதாகிய தமது இரத்தின சிங்காசனத்தின்மீது சிவபெருமானை எழுந்தருளுவித்து, சப்தலோகங்களையு மீன்றருளிய பார்வதிபுதல்வராகிய முருகக்கடவுள் (அவ்வெம்பெருமானைப் பார்த்து) உயிர்க்குயிராகிய எமது கர்த்தரே! தேவரீர் இங்கெழுந்தருளியது யாதுகாரணமென்று வினவியருளினர்.—எ-று. (உஉ)

மட்டு லாவு மலரய னைச்சிறை
யிட்டு வைத்தனை யாமது நீக்குவான்
சுட்டி வந்தன மாற்சுரர் தம்முடன்
விட்டி டையவென் றெந்தை விளம்பினன்.

(இ-ள்.) (அதற்குச்சிவபெருமான்) தேன்பொருந்திய தாமரைமலரில் வசிக்கின்ற பிரமனைச் சிறையிலிட்டுவைத்தனையாம்; அச்சிறையைநீக்கக்கருதித் தேவர்களுடன் இங்குவந்தனம்; ஐயனே! அந்தச் சிறையை நீக்கிவிடக்கடவாயென்று எமது முதல்வராகிய சிவபெருமான் அருளிச்செய்தனர்.—எ-று. (உஙு)

நாட்ட மூன்றுடை நாயக னிவ்வகை
யீட்டு மன்பொ டிசைத்திடு மின்சொலைக்
கேட்ட காலையிற் கேழ்கிளர் சென்னிமேற்
சூட்டு மௌலி துளக்கினன் சொல்லுவான்.

(இ-ள்.) மூன்றுகண்களையுடைய சிவபெருமான் இவ்வாறு பொருந்தியபேரன்புடன் கூறியருளிய இனியமொழியைக் (முருகக்கடவுள்) கேட்டபொழுது, பேரொளிவிளங்குஞ்சென்னியில்தரித்த திருமுடியையசைத்துக் கூறியருளுவார்.-எ-று.

உறுதி யாகிய வோரெழுத் தின்பய
னறிகி லாதவ னவிகள் வைகலும்
பெறுவ னென்பது பேதைமை யாங்கவன்
மறைகள் வல்லது மற்றது போலுமால்.

(இ-ள்.) (ஆன்மாக்களுக்கு) உறுதியைத்தருவதாகிய ஓங்கார வெழுத்தின் பொருளை யுணராதவனாகிய அப்பிரமன் சதாகாலமும் உயிர்களைச் சிருஷ்டிக்கின்றானென்று கூறுவது அறியாமையேயாம். அவன் வேதங்களையுணர்ந்தானென்பதும் அதுபோலவேயாம்.—எ-று. (உகு)

அழகி தையநின் றாருள் வேதமுன்
மொழிய நின்ற முதலெழுத் தோர்கிலா
னிழிவில் பூசை யியற்றலு நல்கிய
தொழில்பு ரிந்து சுமத்தினை யோர்பரம்.

(இ-ள்.) ஐயனே! இஃது நன்றாகவிருக்கின்றது; தேவரீரது திருவருள்மயமாகிய வேதத்தின்முதலிற் சொல்லும்படி நின்ற முதலெழுத்தின்பயனை யுணர்ந்தானில்லை. (அவ்வாறாகிய அப்பிரமன்) குற்றமற்ற பூசனையைச்செய்யவும் சிருஷ்டித்தொழிலைக்கொடுத்து ஒரு சுமையை யவனுக்குச் சுமத்தியருளினீர்.—எ-று. (உசு)

ஆவி முற்று மகிலமு நல்கியே
மேவு கின்ற வியன்செயல் கோடலாற்
றாவில் கஞ்சத் தவிசுறை நான்முக
னேவர் தம்மையு மெண்ணலன் யாவதும்.

(இ-ள்.) எல்லாவுயிர்களையும் எல்லாப்பொருள்களையும் சிருஷ்டித்துக்கொண்டிருக்கின்ற உயர்ந்ததொழிலைக் கைக்கொண்டிருத்தலால், கெடுதலில்லாத கமலாசனனாகிய பிரமன் யாரையும் எதனையும் மதித்திலன்.—எ-று. (உஎ)

நின்னை வந்தனை செய்யினு நித்தலுந்
தன்ன கந்தை தவிர்கில ஞதலா
லன்ன வன்ற னருஞ்சிறை நீக்கல
னென்ன மைந்த னியம்பிய வேலையே.

(இ-ள்.) தேவரீரை எப்பொழுதுந் துதித்தாலும், தனது அகங்காரத்தை நீங்கிலன்; ஆகையால்,அந்தப்பிரமனது அரியசிறையினைநீக்கமாட்டேனென்று முருகக்கடவுள் கூறியருளிய பொழுது.—எ-று.

இதுமுதலிரண்டுபாடலுங் குளகம். (உஅ)

வேறு.

மைந்தநின் செய்கை யென்னே மலரயன் சிறைவி டென்று
நந்திநம் பணியா லேகி நவின்றதுங் கொள்ளாய் நாமும்
வந்துரைத் திடினுங் கேளாய் மறுத்தெதிர் மொழிந்தா யென்னுக்
கந்தனை வெகுள்வான் போலக் கழறினன் கருணை வள்ளல்.

(இ-ள்.) கருணாநிதியாகிய சிவபெருமான் (முருகக்கடவுளைப்பார்த்து) மைந்தனே! உனதுசெய்கையாது? பிரமனது சிறையைநீக்கக்கடவையென்று நமதுகட்டளையினால் நந்திவந்து சொன்னதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை; நாம் வந்துசொல்லியுங் கேட்கவில்லை, தடுத்து எதிர்மொழிகூறினாய் என்று கந்தப்பெருமானைக் கோபிப்பவனைப்போலக் கூறியருளினார்.—எ-று. (உகூ)

அத்தன தியல்பு நோக்கி யறுமுகத் தமல னைய
சித்தமிங் கிதுவே யாகிற் றிசைமுகத் தொருவன் றன்னை
யுய்த்திடு சிறையி னீக்கி யொல்லையிற் றருவ னென்னாப்
பத்தியி னிறைஞ்சிக் கூறப் பராபரன் கருணை செய்தான்.

(இ-ள்.) (அப்பொழுது) ஆறுதிருமுகங்களையுடைய மலரகிதராகிய முருகக்கடவுள் சிவபெருமானது திருவுள்ளத்தினை யுணர்ந்து, ஐயனே! தேவரீரது திருவுள்ளம் இங்கு இவ்வாறிருப்பின், நான்கு முகங்களையுடைய பிரமனை இட்டிருக்கின்ற சிறையினின்றுநீக்கி விரைவில்விடுவேனென்று அன்புடன்வணங்கி யுரைத்தருளவும், பரம்பொருளாகிய சிவபெருமான் கருணைசெய்தருளினார்.—எ-று. (௩0)

நன்சிறை யெகின மேன நாடுவா னருளை நல்கத்
தன்சிறை நின்றோர் தம்மைச் சண்முகக் கடவு ணோக்கி
முன்சிறை யொன்றிற் செங்கேழ் முண்டகத் தயனை வைத்த
வன்சிறை நீக்கி நம்முன் வல்லைதந் திடுதி ரென்றான்.

(இ-ள்.) நல்ல சிறகினையுடைய அன்னமும் பன்றியும் (திருமுடியையுந் திருவடியையுந்) தேடும்படி யெழுந்தருளிய சிவபெருமான் கிருபைசெய்தருளவும், தமக்கருகில் நிற்கின்றவர்களை ஸ்ரீசண்முகப்பெருமான் பார்த்தருளி, முன்னொருபக்கத்தில் செந்நிறம்பொருந்திய கமலாசனனாகிய பிரமனை இட்டிருக்கின்ற வலியசிறையினைநீக்கி நமக்குமுன்னே விரைவாகக் கொண்டுவாருங்களென்று கூறியருளினார். ()

என்றலுஞ் சார தர்க்குட் சிலவர்க ளேகி யங்க
ணென்றொரு பூழை தன்னு ளொடுங்கின னுறையும் வேதா
வன்றளை விடுத்தல் செய்து மற்றவன் றனைக்கொண் டேகிக்
குன்றுதொ ருடல் செய்யுங் குமரவேண் முன்ன ருய்த்தார்.

(இ-ள்.) இவ்வாறு கட்டளையிட்டருளவும் பூதர்களுள் சிலர்சென்று, அவ்விடத்து ஒருகுகையில் ஒடுங்கியிருக்கின்ற பிரமனது வலிய விலங்கைத்தறித்து அப்

பிரமனை யழைத்துக்கொண்டுவந்து, குன்றுகடோறுந் திருவிளையாடல் புரிந்தருளுகின்ற குமாரக்கடவுள் திருமுன்னேவிட்டார்கள்.—எ-று.

பூழை-குகை. (௩௨)

உய்த்தலுங் கமலத் தண்ண லொண்கரம் பற்றிச் செவ்வே
ளத்தன்முன் விடுத்த லோடு மாங்கவன் பரமன் றன்னை
மெய்த்தகு மன்பாற் றாழ்ந்து வெள்கின னிற்ப நோக்கி
யெய்த்தனை போலும் பன்னா ளிருஞ்சிறை யெய்தி யென்றான்.

(இ-ள்.) அவ்வாறு திருமுன்னே கொண்டுவந்துவிடவும் முருகக்கடவுள் கமலாசனனாகிய பிரமனது அழகிய கையைப்பிடித்துச் சிவபெருமானுக்கு முன்னே விடவும், அந்தப்பிரமன் சிவபெருமானை மெய்யன்போடு வணங்கி வெட்கமடைந்து நிற்றலும், (சிவபெருமான் அப்பிரமனைப்) பார்த்து அநேககாலம் பெரியசிறையிலகப்பட்டு நீ வருந்தினை போலும் என்றுகூறி யருளினார்.—எ-று. (௩௩)

நாதனித் தன்மை கூறி நல்லருள் புரித லோடும்
போதினை யைய வுன்றன் புதல்வனாற் றியவித் தண்ட
மேதமன் றுணர்வு நல்கி யானெனு மகந்தை வீட்டித்
தீதுசெய் வினைகண் மாற்றிச் செய்தது புனித மென்றான்.

(இ-ள்.) சிவபெருமான் இவ்வாறு அருளிச்செய்து சிறந்த திருவருள்புரியவும், பிரமன் எமது ஆண்டவரே! தேவரீரது திருக்குமாரராகியகந்தப்பெருமான்செய்த இந்தத்தண்டனை குற்றமுடையதன்று; நல்லுணர்வளித்து யான்என்னு மகங்காரத்தை யொழித்துத் துன்பத்தைச் செய்கின்ற தீவினைகளை நீக்கிப் பரிசுத்தஞ்செய்தது என்று கூறினான்.—எ-று. (௩௪)

அப்பொழு தயனை முக்க ணாதியம் பரமன் காணூஉ
முப்புவ னத்தின் மேவு முழுதுயிர்த் தொகைக்கு மேற்ற
துப்புர வதனை நன்று தூக்கினை தொன்மை யேபோ
லிப்பக றொட்டு நீயே யீந்தனை யிருத்தி யென்றான்.

(இ-ள்.) அப்பொழுது மூன்றுகண்களையுடைய சிவபெருமான் பிரமனைப் பார்த்தருளி மூன்றுலகங்களிலும் வசிக்கின்ற உயிர்க்கூட்டங்களனைத்திற்கும்,தகுந்த உறுதியை நன்றாகவிளக்கிக் காட்டினை; இனி, இன்றுதொடங்கி முன்போல நீயே (உலகுயிர்களைச்) சிருஷ்டித்துக்கொண்டு வசிக்கக் கடவையென்று அருளிச் செய்தனர்.—எ-று. (௩௫)

அருளுரு வாகு மீச னயற்கிது புகன்ற பின்னர்
முருகவேண் முகத்தை நோக்கி முறுவல்செய் தருளை நல்கி
வருதியா லைய வென்று மலர்க்கையுய்த் தவனைப் பற்றித்
திருமணிக் குறங்கின் மீது சிறந்துவீற் றிருப்பச் செய்தான்.

(இ-ள்.) திருவருளுருவமாகவுள்ள சிவபெருமான் பிரமனுக்கு இவ்வார்த்தைகளை யருளிச்செய்தபின்பு முருகக்கடவுளது திருமுகத்தைப்பார்த்து நகைத்துத் திருவருள் புரிந்து, ஐயனே! வருகவென்று தாமரை மலர்போன்ற திருக்கரத்தை நீட்டி அவனை யெடுத்து மேன்மைபொருந்திய தமது அழகிய துடையின்மேல் சிறப்புடன் வீற்றிருக்கும்படி செய்தருளினார்.—எ-று. (௩௬)

காமரு குமரன் சென்னி கதுமென வுயிர்த்துச் செக்கர்த்
தாமரை புரையுங் கையாற் றழுவியே யயனுந் தேற்று

வோமென வுரைக்குஞ் சொல்லி னுறுபொரு ளுனக்குப் போமோ
போமெனி லதனை யின்னே புகலென விறைவன் சொற்றான்.

(இ-ள்.) அழகு மிக்க முருகக்கடவுளது உச்சியை விரைந்து மோந்து செந்தாமரை மலர்போன்ற திருக்கரத்தினால் தழுவி, பிரமனாலும் தெளியப்படாத ஓம் என்று கூறுஞ் சொல்லினது மெய்ப்பொருள் உனக்குத் தெரியுமோ? தெரியுமாயின், அதனை இப்பொழுதே சொல்லக்கடவை யென்று சிவபெருமான் அருளிச்செய்தனர்.

முற்றொருங் குணரு மாதி முதல்வகே ளுலக மெல்லாம்
பெற்றிடு மவட்கு நீமுன் பிறருணரா தவா றுற்றச்
சொற்றதோ ரினைய மூலத் தொல்பொருள் யாருங் கேட்ப
விற்றென வியம்ப லாமோ மறையினா லிசைப்ப தல்லால்.

(இ-ள்.) முற்றுணர்ச்சியை யுடைய முதற்பெருங் கடவுளாகிய எந்தையே! கேட்டருள்வீராக, சர்வலோகங்களையும் பெற்றருளிய உமாதேவியாருக்குத் தேவரீர் முன்பு அயலாரறியாவண்ணம் உரைத்தருளிய இவ்வாறாகிய பழைய இரகசியார்த்தத்தை இரகசியமாகக் கூறுவதன்றி யாவருங் கேட்கும்படி இத்தன்மையதென்று கூறுதல் கூடுமோ?—எ-று. (௩௮)

என்றலு நகைத்து மைந்த வெமக்கருண் மறையி னென்னாத்
தன்றிருச் செவியை நல்கச் சண்முகன் குடிலை யென்னு
மொன்றொரு பதத்தி னுண்மை யுரைத்தன னுரைத்தல் கேளா
நன்றருள் புரிந்தா னென்ப ஞானநா யகனா மண்ணல்.

(இ-ள்.) என்றிவ்வாறு அருளிச் செய்யவும், ஞானமுதல்வராகிய சிவபெருமான் மைந்தனே! அதனை எமக்கு மறைவாகவே கூறக்கடவை யென்று தமது சிறந்த திருச்செவியைச் சாய்த்துக் கொடுத்தருளவும், சண்முகப்பெருமான் குடிலை யென்று கூறும் ஒப்பற்ற மொழியின் உண்மைப்பொருளை அருளிச்செய்தனர்; அவ்வாறருளிச் செய்ததை (அவ்வெம்பெருமான்) கேட்டருளிச் சிறந்த திருவருள் புரிந்தனர்.

அன்னதோ ரைய மாற்றி யகமகிழ் வெய்தி யங்கட்
டன்னிளங் குமரன் றன்னைத் தலைமையோ டிருப்ப நல்கி
யென்னையா ளுடைய நாதன் யாவரும் போற்றிச் செல்லத்
தொன்னிலை யமைந்து போந்து தொல்பெருங் கயிலை வந்தான்.

(இ-ள்.) அவ்வாறாகிய சந்தேகத்தை யொழித்துத் திருவுள்ள மகிழ்ந்து அங்குத் தமது இளைய திருக்குமாரராகிய முருகக்கடவுளை முதன்மை பெற்றிருக்கும்படி திருவருள்புரிந்து, எம்மை யடிமையாகவுடைய சிவபெருமான் யாவருந் துதித்துச் சூழ்ந்து வரும்படி முன்போல் இடபவாகனத்தி லெழுந்தருளிச் சென்று பழைமையாகிய பெரிய திருக்கயிலாயத்தை யடைந்தருளினார்.—எ-று. (௪௦)

முன்புறு மயன்மா றேவர் முனிவரை விடுத்து முன்னோன்
றன்பெருங் கோயில் புக்கான் றவில்சீர்க் கந்த வெற்பிற்
பொன்புனை தவிசி னேறிப் புடைதனில் வயவர் போற்ற
வின்பொடு குமர மூர்த்தி யினிதுவீற் றிருந்தா னன்றே.

(இ-ள்.) முன்னே நெருங்கிவருகின்ற பிரமன் திருமால் தேவர்கள் முனிவர்கள் முதலியவர்களைத் தத்தம் இடங்களுக்குச் செல்லவிடுத்துச் சிவபெருமான் தமது பெரிய திருக்கோயிலை யடைந்தருளினார். பின்னர் முருகக்கடவுள் கெடாத சிறப்பினையுடைய கந்தமாதன பருவதத்தில் பொன்னினா லலங்கரிக்கப்பட்ட ஆசனத்தி லெழுந்

தருளித் தமக்கருகில்வீரர்கள் போற்றும்படிப்பேரின்புடன் இனிமையோடு வீற்றிருந் தருளினார்.—எ-று. (சக)

ஆங்குறு குமரப் புத்தே ளருமறைக் காதி யாகி
யோங்குமெப் பொருட்கு மேலா மோரெழுத் துரையி னுண்மை
நீங்கற வணங்கிக் கேட்பச் சிறுமுனிக் குதவி மற்றும்
பாங்குறு மிறைவ னூலும் பரிவின னுணர்த்தி னானால்.

(இ-ள்.) அந்தக் கந்தமாதனபருவதத்தி லெழுந்தருளியிருக்கின்ற முருகக் கடவுள், அரியவேதங்களுக்குமுதன்மையாய் உயர்ந்த எல்லாப் பொருள்களுக்கும் மேலானதாகிய ஓம் என்னும் ஓரெழுத்தினது உண்மைப்பொருளைக் குற்றமற வணங்கிக்கேட்க, அகஸ்திய முனிவருக்கு உபதேசித்துச் சிறப்புப்பொருந்திய மற்றைப் பதிநூல்களையும் அன்புடன் உபதேசித்தருளினார்.—எ-று. (சஉ)

அயனைச் சிறைநீக்குபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க,உசுரு.

---

உ

முருகன்றுணை.

---

# விடைபெறு படலம்.

எல்லை யன்னதின் மாலருள் கன்னிய ரிருவர்
சொல்ல ரும்பெரு வனப்பினர் சுந்தரி யமுத
வல்லி யென்றிடும் பெயரினர் கந்தவேள் வரைத்தோள்
புல்லு மாசையாற் சரவணத் தருந்தவம் புரிந்தார்.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் திருமால் பெற்ற இரண்டு பெண்கள் சொல்லுதற்கரிய பேரழகினை யுடையவர்களும், சுந்தரி அமுதவல்லி யென்று கூறும் பெயரினை யுடையவர்களுமாகிய இவர்கள் முருகக்கடவுளது மலைபோன்ற தோள்களைத் தழுவவேண்டுமென்னும் விருப்பத்தினால் சரவணப்பொய்கையில் அருமையாகிய தவத்தைச் செய்தார்கள்.—எ-று. (க)

என்னை யாளுடை மூவிரு முகத்தவ னிரண்டு
கன்னி மாருமா யொன்றிநோற் றிடுவது கருத்தி
லுன்னி யேயெழிஇக் கந்தமால் வரையினை யொருவி
யன்னை தோன்றிய விமகிரிச் சாரலை யடைந்தான்.

(இ-ள்.) என்னை யடிமையாகவுடைய ஸ்ரீ சண்முகக்கடவுள், இரண்டு பெண்களுஞ் சேர்ந்து தவஞ்செய்திருத்தலைத் தமது திருவுள்ளத்திற் சிந்தித்து எழுந்தருளிப் பெரிய கந்தமாதன பருவதத்தினின்று நீங்கித் தமது அன்னையாராகிய உமாதேவியார் திருவவதாரஞ் செய்த இமயமலைச்சாரலை யடைந்தருளினார்.—எ-று. (உ)

பொருவில் சீருடை யிமையமால் வரைக்கொரு புடையாஞ்
சரவ ணந்தனிற் போதலுந் தவம்புரி மடவா

ரிருவ ரும்பெரி தஞ்சியே பணிந்துநின் றேத்த
வரம ளிப்பதென் கூறுதி ரென்றனன் வள்ளல்.

(இ-ள்.) ஒப்பற்ற சிறப்பினையுடைய பெரிய இமயமலையினோர் புறத்திலுள்ள சரவணப்பொய்கையை யடைந்தருளவும், அங்குத் தவஞ்செய்துகொண்டிருந்த இரண்டு பெண்களும் மிகவும் அச்சமுற்று வணங்கிநின்று துதிக்க முருகக்கடவுள் உங்கட்கு என்ன வரம்வேண்டும் கூறுங்களென்று அருளிச்செய்தனர்.—எ-று. (௫)

மங்கை மார்தொழு தெம்மைநீ வதுவையான் மருவ
விங்கி யாந்தவம் புரிந்தனங் கருணைசெய் யென்ன
வங்கவ் வாசகங் கேட்டலு மாறுமா முகத்துத்
துங்க நாயக னவர்தமை நோக்கியே சொல்வான்.

(இ-ள்.) அந்தப் பெண்கள் வணங்கி அடியேங்களைத் தேவரீர் திருமணஞ்செய்து கூடும்படி நாங்கள் இங்குத் தவஞ்செய்தனம், ஆதலால் திருவருள் புரியவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யவும், அங்கு அவ்வார்த்தைகளைக்கேட்டவுடன் ஆறு திருமுகங்களையுடைய பரிசுத்தராகிய முருகக்கடவுள் அவர்களை நோக்கி யருளிச்செய்கின்றார்.—எ-று. (௬)

முந்து மின்னமு தக்கொடி மூவுல கேத்து
மிந்தி ரன்மக ளாகியே வளர்ந்தனை யிருத்தி
சுந்த ரிப்பெய ரிளையவ டொல்புவி தன்னி
லந்தண் மாமுனி புதல்வியாய் வேடர்பா லமர்தி.

(இ-ள்.) மூத்தவளாகிய இனிய அமுதவல்லியே! நீ மூன்றுலகத்தாருந் துதிக்கின்ற இந்திரன் மகளாகி வளர்ந்துகொண்டிருக்கக் கடவை ; இளையவளாகிய சுந்தரியே ! நீ பழைமையாகிய நிலவுலகத்தில் சிறந்த சாந்த குணத்தினையுடைய சிவமுனிவனது புத்திரியாக (ப்பிறந்து) வேடர்களிடத்தி லிருக்கக்கடவை.—எ-று. (௭)

நன்று நீவிர்கள் வளர்ந்திடு காலையா நண்ணி
மன்ற னீர்மையா லுங்களை மேவுது மனத்தி
லொன்று மெண்ணலீர் செல்லுமென் றெம்பிரா னுரைப்ப
நின்ற கன்னியர் கைதொழு தேகினர் நெறியால்.

(இ-ள்.) நீங்கள் சிறப்போடு வளர்ந்துகொண்டிருக்குங் காலத்தில் யாம் அங்குவந்து திருமணமுறைப்படி உங்களைச் சேருவோம்; நீங்கள் மனத்தில் சிறிதுஞ் சிந்தித்து வருந்தாதீர்கள் ; போகக்கடவீர்களென்று எமது முருகக்கடவுள் அருளிச்செய்ய, அங்கு எதிரில்நின்ற அக்கன்னியர்கள் முறைப்படி கைகூப்பி வணங்கிச் சென்றார்கள்.—எ-று. (௮)

ஏகு மெல்லையி லமுதமா மென்கொடி யென்பாள்
பாக சாதனன் முன்னமோர் குழவியாய்ப் படர்ந்து
மாக மன்னநின் னுடன்வரு முபேந்திரன் மகள்யா
னாகை யாலெனைப் போற்றுதி தந்தையென் றடைந்தாள்.

(இ-ள்.) அவ்வாறு செல்லும்பொழுது மெல்லிய அமுதவல்லி யென்பவள் இந்திரனுக்கு எதிரில் ஒருகுழந்தையாகச்சென்று சுவர்க்காதிபதியே!நான்உன்னுடன் பிறந்த உபேந்திரனுக்குப் புத்திரி ; ஆகையால், தந்தையே ! என்னைப் பாதுகாக்கக் கடவையென்று சேர்ந்தனள்.—எ-று. (௯)

பொன்னின் மேருவி லிருந்தவன் புதல்வியை நோக்கி
யென்னை யீன்றயா யிங்ஙனம் வருகென விசைத்துத்

தன்ன தாகிய தனிப்பெருங் களிற்றினைத் தனது
முன்ன ராகவே விளித்தன னித்திற மொழிவான்.

(இ-ள்.) பொன்மயமாகிய மேருமலையிலிருக்கின்ற இந்திரன் அந்தப்புதல்வியைப் பார்த்து, என்னைப் பெற்றதாயே! நீ இங்கே வருகவென்று கூறித் தனது ஒப்பற்ற பெரிய ஐராவதமென்னும் யானையைத் தனக்கு எதிரில் அழைத்து இவ்வாறு கூறுவான்.—எ-று. (அ)

இந்த மங்கைநந் திருமக ளாகுமீங் கிவளைப்
புந்தி யன்பொடு போற்றுதி யினையவள் பொருட்டா
லந்த மில்சிறப் பெய்துமே லென்றலு மவளைக்
கந்த மேற்கொடு நன்றெனப் போயது களிறு.

(இ-ள்.) இந்தப் பெண்குழந்தை நமது சிறந்த புதல்வியாகும், ஆதலால் இங்கே இக்குழந்தையை மனத்திற் பொருந்திய பேரன்புடன் பாதுகாக்கக்கடவை; இக்குழந்தையின் நிமித்தமாகப் பின்னர் முடிவில்லாத சிறப்புண்டாகுமென்று கூறவும், அந்த ஐராவத மென்னும் யானையானது அவ்வாறே நல்லதென்று அக்குழந்தையைத் தனது பிடரியின்மேல் வைத்துக்கொண்டு சென்றது.—எ-று. (கூ)

கொவ்வை போலிதழ்க் கன்னியை மனோவதி கொடுபோ
யவ்வி யானையே போற்றிய தனையகா ரணத்தாற்
றெய்வ யானையென் றொருபெய ரெய்தியே சிறிது
நொவ்வு றாதுவீற் றிருந்தனள் குமரனை நுவன்றே.

(இ-ள்.) கொவ்வைக் கனிபோலும் இதழையுடைய அந்தப் பெண்குழந்தையை மனோவதி நகரத்திற்குக்கொண்டு சென்று அந்த வெள்ளையானையே பாதுகாத்தது; அந்தக் காரணத்தினால் தெய்வயானை யென்றுகூறும் ஒரு பெயரைப் பெற்றுச் சிறிதும் வருந்துதலில்லாமல் முருகக்கடவுளைத் துதித்துக்கொண்டு வசித்திருந்தனள்.

பெருமை கொண்டிடு தெண்டிரைப் பாற்கடல் பெற்றுத்
திரும டந்தையை யன்புடன் வளர்த்திடுந் திறம்போற்
பொருவில் சீருடை யடலயி ராவதம் போற்ற
வரிசை தன்னுட னிருந்தன டெய்வத மடந்தை.

(இ-ள்.) மேன்மைபொருந்திய தெளிவாகிய அலைகளையுடைய திருப்பாற்கடலானது இலக்ஷ்மியைப் பெற்று அன்புடன் வளர்த்த தன்மையைப்போல ஒப்பற்ற சிறப்பினையுடைய வலிய ஐராவதமென்னும் வெள்ளை யானையானது பாதுகாத்தலால், தெய்வயானை யென்னும் அப்பெண் முறைமைப்படிவளர்ந்திருந்தனள்.—எ-று.

முற்று ணர்ந்திடு சுந்தரி யென்பவண் முருகன்
சொற்ற தன்மையை யுளங்கொடு தொண்டைநன் னாட்டி
லுற்ற வள்ளிபஞ் சிலம்பினை நோக்கியாங் குறையு
நற்ற வச்சிவ முனிமக ளாகவே நடந்தாள்.

(இ-ள்.) எல்லாவற்றையுமுணர்ந்த சுந்தரியென்னும் பெண்ணானவள், முருகக்கடவுள் அருளிச்செய்த தன்மையைத் திருவுள்ளத்திற் சிந்தித்து, சிறந்த தொண்டைநாட்டிலுள்ள வள்ளிமலையை நோக்கி அங்கு வசித்திருக்கின்ற நல்ல தவத்தினையுடைய சிவமுனிவருக்குப் புதல்வியாகும்பொருட்டுச் சென்றனள்.—எ-று. (கஉ)

இந்த வண்ணமிவ் விருவர்க்கும் வரந்தனை யீந்து
கந்த மால்வரை யேகியே கருணையோ டிருந்தான்

றந்தை யில்லதோர் தலைவனைத் தாதையாய்ப் பெற்று
முந்து பற்பக லுலகெலாம் படைத்தமேதோர் முதல்வன்.

(இ-ள்.) இவ்வண்ணமாக இவ்விரண்டு பெண்களுக்கும் வரத்தைக்கொடுத்து, தமக்கொரு தந்தையில்லாதவராகிய சிவபெருமானைத் தமக்குத் தந்தையாகப் பெற்று முன்னே யநேககாலம் எல்லா வுலகங்களையும் படைத்தருளிய ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் கந்தமாதன பருவதத்தை யடைந்து பெருங்கருணையுடன் வீற்றிருந்தருளினர்.—எ-று. (கங)

வேறு.

இத்திறஞ் சிலபக லிருந்து பன்னிரு
கைத்தல முடையவன் கயிலை மேலுறை
யத்தனொ டன்னைதன் னடிப ணிந்திடச்
சித்தம துன்னின னருளின் செய்கையால்.

(இ-ள்.) இவ்வாறு சிலகாலம் வசித்திருந்தருளி, பன்னிரண்டு திருக்கரங்களையுடைய குமாரக்கடவுள் திருக்கயிலாயத்தில் வீற்றிருந்தருளும் தமது தந்தை தாயர்களது திருவடிகளை வணங்கும்பொருட்டுத் திருவருட் செய்கையினால் திருவுள்ளங் கொண்டனர்.—எ-று. (கச)

எள்ளருந் தவிசினின் றிழிந்து வீரரா
யுள்ளுறும் பரிசன ரொருங்கு சென்றிடக்
கொள்ளையஞ் சாரதர் குழாமும் பாற்பட
வள்ளலங் கொருவியே வல்லை யேகினான்.

(இ-ள்.) இகழ்தலில்லாத சிங்காசனத்தினின்று மிறங்கி வீரர்களாகப் பொருந்திய பரிசனர்கள் சூழ்ந்துடன் வர, கூட்டங்களாகவுள்ள பூதகணங்களும் அருகில் நெருங்கிவர, குமாரக்கடவுள் அக்கந்த மாதன பருவதத்தினின்றும் விரைந்து சென்றருளினர்.—எ-று

சிறந்த முழுமணிகளா லிழைக்கப்பட்ட சிங்காசனமாகலின், 'எள்ளருந் தவிசு' என்று கூறினர். (கரு)

ஏயென வெள்ளிவெற் பெய்தி யாங்கனங்
கோயிலி னவைக்களங் குறுகிக் கந்தவே
டாயொடு தந்தையைத் தாழ்ந்து போற்றியே
யாயவர் நடுவுற வருளின் வைகினான்.

(இ-ள்.) கந்தப்பெருமான் விரைவாகத் திருக்கயிலாயத் திருமலையை யடைந்து அங்குள்ள திருக்கோயிலின் சபாமண்டபத்தில் சேர்ந்து தமது தாய் தந்தையர்களாகிய சிவசத்திகளை வணங்கித் துதித்து அவ்விருவர்களின் மத்தியில் திருவருளோடு எழுந்தருளி யிருந்தனர்.—எ-று.

ஏ என்பது விரைவுக்குறிப்பு. (கசு)

அண்ணலங் குமரவே ளங்கண் வைகலும்
விண்ணவர் மகபதி மேலை நாண்முத
லுண்ணிகழ் தங்குறை யுரைத்து நான்முகன்
கண்ணனை முன்கொடு கயிலை யெய்தினர்.

(இ-ள்.) பெருமைபொருந்திய அழகிய குமாரக்கடவுள் அங்கு வசித்தருளுதலும் தேவர்களும் இந்திரனும் முன்னர் அநேககாலமாகத் தங்கள் மனத்திற்பொருந்

திய குறைகளை முறையிட்டுப் பிரமனையுந் திருமாலையும் முன்னே யழைத்துக்கொண்டு திருக்கயிலைமலையை யடைந்தார்கள்.—எ-று.

மேலைநாண்முதல் என்றது, சூரபன்மன் அரசாட்சி பெற்ற காலந்தொடங்கி என்றபடி. (கஎ)

அடைதரு மவர்தமை யமல னுலய
நடைமுறை போற்றிடு நந்தி நின்மெனத்
தடைவினை புரிதலுந் தளர்ந்து பற்பக
னெடிதுறு துயரொடு நிற்றன் மேயினார்.

(இ-ள்.) அவ்வாறடைந்த திருமால் முதலிய தேவர்களை, சிவபெருமானது திருக்கோயிற்றிருவாயிலை முறைப்படிக் காவல் செய்கின்ற திருநந்திதேவர் நில்லுங்களென்று தடைசெய்யவும், அவர்கள் தளர்ச்சியடைந்து அநேக நாள்கள் மிகுதியாகப் பொருந்திய துன்பத்துடன் நின்றார்கள்.—எ-று.

நில்லும் என்றது, நின்ம் எனவந்தது. (கஅ)

அளவறு பற்பக லங்க ணின்றுளார்
வளனுறு சிலாதனன் மதலை முன்புதம்
முளமலி யின்னலை யுரைத்துப் போற்றலுந்
தளர்வினி விடுமினென் றிதனைச் சாற்றினான்.

(இ-ள்.) அளவில்லாத அநேககாலம் அங்கு நின்றுகொண்டிருந்த திருமால் முதலிய தேவர்கள் சிறப்புமிக்க சிலாதமுனிவர் புத்திரராகிய திருநந்திதேவருக்கு முன்னே தங்களுள்ளத்திற் பொருந்திய துன்பத்தை விண்ணப்பஞ்செய்து துதிக்கவும், அவர் நீங்கள் இனி துன்பத்தை விடுங்களென்று இவ் வார்த்தையை யருளிச்செய்கின்றார்.—எ-று. (கசு)

தங்குறை நெடும்புனற் சடில மேன்மதி
யங்குறை வைத்திடு மாதி முன்போய்
நுங்குறை புகன்றவ ணுய்ப்தி னுய்ப்பனு
லிங்குறை வீரென வியம்பிப் போயினான்.

(இ-ள்.) உயர்வுபொருந்திய பெரிய கங்கைநதியைத்தரித்த சடைமுடியின் மேல் இளம்பிறையையணிந்த சிவபெருமான் திருமுன்னே யடைந்து உங்கள் குறைகளை விண்ணப்பஞ்செய்து அங்கு எளிதாக உங்களைச் சேர்ப்பேன்; ஆதலால், இவ்விடத்திலேயே யிருக்கக்கடவீர்களென்று கூறிச் சென்றருளினார்.—எ-று.

உறை-உயர்வு. அன்றி, நீர்த்துளிகள்பொருந்திய எனப் பொருள் கூறலுமொன்று. மதியங்குறை என்பதனை, குறைமதியம் என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. நொய்து-எளிது. (உ0)

போயின நந்தியெம் புனிதன் கண்ணுதற்
றாயனை வணங்கினன் றொழுது வாசவன்
மாயவ னுன்முகன் வானு ளோரெலாங்
கோயிலின் முதற்கடை குறுகி னாரென்றான்.

(இ-ள்.) மலரகிதராகிய திருநந்திதேவர் உள்ளே சென்று, நெற்றிக்கண்ணராகிய சிவபெருமானைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, (எமதாண்டவரே!) இந்திரன் திருமால் பிரமன் தேவர்கள் முதலிய வனைவரும் திருக்கோயிலின் முதற்றிருவாயிலை யடைந்திருக்கின்றார்களென்று விண்ணப்பஞ் செய்தனர்.—எ-று. (உக

அருளுடை யெம்பிரா னனையர் யாரையுந்
தருதிநம் முன்னரே சார வென்றலும்
விரைவொடு மீண்டனன் மேலை யோர்களை
வருகென வருளினன் மாசில் காட்சியான்.

(இ-ள்.) பேரருள் வள்ளலாகிய சிவபெருமான் அவர்களனைவரும் நம்மெதிரில் வரும்படியழைத்துக்கொண்டு வரக்கடவையென்று கட்டளையிட்டருளவும்,குற்றமற்ற காட்சியினையுடைய திருநந்திதேவர் விரைவாகத் திரும்பிவந்து திருமால் முதலிய தேவர்களை நீங்கள் வரக்கடவீர்களென்று அருளிச்செய்தனர்.—எ-று. (உஉ)

விடைமுக னுரைத்தசொல் வினவி யாவருங்
கடிதினி லேகியே கருணை வாரிதி
யடிமுறை வணங்கின ரதற்குள் வாசவ
னிடருறு மனத்தின னினைய கூறுவான்.

(இ-ள்.) இடபமுகத்தினையுடைய திருநந்திதேவர் உரைத்தருளிய வார்த்தையை யாவர்களுங்கேட்டு விரைந்துசென்று கிருபைக்கடலாகிய சிவபெருமானது திருவடிகளில் முறைமைப்படி வணங்கினார்கள்; அதற்குள்ளே இந்திரனானவன் துன்பம் பொருந்திய மனத்தினையுடையவனாய் இவ்வார்த்தைகளை விண்ணப்பஞ் செய்கின்றான்—எ-று.

முறை வணங்கலாவது,—அஷ்டாங்க பஞ்சாங்கமாக வணங்குதல். (உ௩)

பரிந்துல கருள்புரி பவையொ டொன்றியே
யிருந்தருண் முதல்வகே ளெண்ணி லாவுக
மருந்திறற் சூர்முத லவுணர் தங்களால்
வருந்தின மொடுங்கினம் வன்மை யின்றியே.

(இ-ள்.) உலகங்களை விரும்பிப் பெற்றருளிய உமாதேவியாரோடு பொருந்தி வீற்றிருந்தருளும் எமது ஆண்டவரே ! கேட்டருள்வீராக, அளவற்றயுகங்களாக மிக்கவலிமையினையுடைய சூரபன்மன் முதலிய அசுரர்களால் வலிகுறைந்து வருந்தியொடுங்கினோம்.—எ-று.

'அருள்புரி' என்பதற்கு, முப்பத்திரண்டு தருமங்களையுஞ் செய்து பாதுகாத்தருளிய எனப்பொருள் கூறினுமாம். அடைந்தவர் குறையினை நீக்கிப் பேரருள் புரியுங் கருணையாளரென்பார், 'பரிந்துலகருள்புரி பவையொ டொன்றியே-யிருந்தருண்முதல்வ' என்றார். (உ௪)

அந்தமி லழகுடை யரம்பை மாதரு
மைந்தனு மளப்பிலா வானு ளோர்களும்
வெந்தொழி லவுணர்கள் வேந்தன் மேவிய
சிந்துவி னகரிடைச் சிறைக்கண் வைகினர்.

(இ-ள்.) முடிவில்லாத பேரழகினையுடைய அரம்பை மாதர்களும், என் புத்திரனாகிய சயந்தனும், அளவற்றதேவர்களும், கொடுந்தொழிலையுடைய அசுரர்கள் தலைவனாகிய சூரபன்மன் வசிக்கின்ற கடலிற்பொருந்திய மகேந்திரபுரியில் சிறையிலிருக்கின்றார்கள்.—எ-று. (உ௫)

இழிந்திடு மவுணரா லியாதொர் காலமு
மொழிந்திட லின்றியே யுறைந்த சீரொடு
மழிந்ததென் கடிநக ரதனை யானிவண்
மொழிந்திடல் வேண்டுமோ வுணர்தி முற்றுநீ.

(இ-ள்.) எக்காலத்தும் அழிவில்லாமல் பொருந்திச் சிறப்புடனிருந்த எனது காவலையுடைய அமராவதி நகரமானது, இழிவு பொருந்திய அசுரர்களால் அழிவுற்றது; இவ்வாறழிந்த தன்மையைத் தேவரீர் முற்றுணர்ச்சியை யுடையவராதலால், அடியேன் இங்கு விண்ணப்பித்தல் வேண்டுமோ? (வேண்டுவதில்லை.)—எ-று.

முன்னுற யான்றவ முயன்று செய்துழித்
துன்னினை நங்கணோர் தோன்ற லெய்துவா
னன்னவ னைக்கொடே யவுணர்ச் செற்றுநும்
மின்னலை யகற்றுது மென்றி யெந்தைநீ.

(இ-ள்.) எம்பெருமானே! முன்பு அடியேன் தவத்தைமுயற்சித்துச்செய்தபொழுது அங்குத் தேவரீரெழுந்தருளி நம்மிடத்து ஒரு புதல்வன் தோன்றுவான்; அப்புதல்வனைக் கொண்டு அசுரர்களையழித்து நீங்களடைந்திருக்கின்ற துன்பத்தையொழிக்கின்றோம் என்று அருளிச்செய்தீர்.—எ-று. (உஎ)

அப்படிக் குமரனு மவத ரித்துள
னிப்பகல் காறுமெம் மின்ன றீர்த்திலை
முப்புவ னந்தொழு முதல்வ தீயரேந்
துப்புறு பவப்பயன் றொலைந்த தில்லையோ.

(இ-ள்.) அவ்வாறே புதல்வரும் அவதரித்தனர்; (அவர் அவதரித்தும்,) இந்நாள்வரையிலும் எங்களது துன்பத்தை யொழித்தீரில்லை; மூன்றுலகத்தாரும் வணங்குகின்ற முதற்பெருங் கடவுளாகிய எம்பெருமானே! கொடியவர்களாகிய எங்களது வலிய தீவினைப்பயன் இன்னும் ஒழியவில்லையோ?—எ-று. (உஅ)

சூருடை வன்மையைத் தொலைக்கத் தக்கதோர்
பேருடை யாரிலை பின்னை யானினி
யாரொடு கூறுவ னாரை நோகுவ
னீருடை முடியினோய் நினது முன்னலால்.

(இ-ள்.) சூரபன்மனது பராக்கிரமத்தை யொழிக்கத்தக்க தன்மையையுடையவர்கள் வேறொருவரு மில்லை; கங்கைநதியையணிந்த சடைமுடியையுடைய எமதாண்டவரோ! தேவரீரது சந்நிதியிலல்லாமல் பின்னை யாருடன் சொல்லுவேன்; யாரை நொந்துகொள்ளுவேன்.—எ-று. (உகூ)

சீகர மறிகடற் சென்று நவ்விசேர்
காகம தென்னவுன் கயிலை யன்றியே
யேகவோ ரிடமிலை யெமக்கு நீயலாற்
சோகம தகற்றிடுந் துணைவ ரில்லையே.

(இ-ள்.) அலைகள்மடங்குகின்ற கடலிற்சென்று கப்பலையடைந்தகாகத்தைப்போலத் தேவரீரது திருக்கயிலையை யன்றி அடைக்கலமாகச் செல்லுதற்கு வேறோரிடமுமில்லை; அடியேங்களுக்குத் தேவரீரை யன்றித் துன்பத்தை யொழிக்கத்தக்க துணையாயுள்ளவர்கள் ஒருவருமில்லை.—எ-று.

நவ்வி-கப்பல். 'கலத்தலை யகன்றிடாக் காகம்போலவே' என்றார்முன்னும்.

ஏற்றெழு வன்னிமே லினிது துஞ்சலாந்
தோற்றிட வெவ்விட மெனினுந் துய்க்கலா
மாற்றல ரலைத்திட வந்த வெந்துய
ராற்றரி தாற்றரி தலமிப் புன்மையே.

(இ-ள்.) மிகுதியாகப் பற்றியெரிகின்ற நெருப்பின்மேல் இனிமையோடு தூங்கலாம், கடலிற்றோன்றிய கொடிய ஆலாகல விஷமெனினும் உண்டுவிடலாம், பகையசுரர்கள் வருத்த அதனாலடைந்த கொடியதுன்பத்தைச் சகித்தலரிது, இவ் விழிந்த காரியத்தைச் சகிக்கமாட்டாதவர்களா யிருக்கின்றோம்.—எ-று.

வன்னிமேல் துஞ்சுதலினும், விடத்தைத் துய்த்தலினும் சூராதியரா லுண் டாகுந் தீங்கு மிகக் கொடிய தென்பார், 'ஆற்றரி தாற்றரி தலமிப் புன்மையே' என்று கூறினார். (சுக)

தீதினை யகற்றவுந் திருவை நல்கவுந்
தாதைய ரல்லது தனயர்க் காருள
ராதலி னெமையினி யளித்தி யாலென
வோதினன் வணங்கின னும்பர் வேந்தனே.

(இ-ள்.) துன்பத்தை யொழிக்கவும் செல்வத்தைத் தரவும் தந்தையர்களே யன்றிப் புதல்வர்களுக்கு வேறு யாரிருக்கின்றார்கள்; ஆதலால் அடியேங்களை இனிக் காத்தருள்வீராகவென்று தேவேந்திரன் முறையிட்டு வணங்கினான்.—எ-று. (சுஉ)

அப்பொழு தரியய னைய வெய்யசூர்
துப்புட னுலகுயிர்த் தொகையை வாட்டுதல்
செப்பரி தின்னினிச் சிறுதுந் தாழ்க்கலை
யிப்பொழு தருள்கென வியம்பி வேண்டினார்.

(இ-ள்.) அந்தச் சமையத்தில் திருமாலும் பிரமனும் (சிவபெருமானை நோக்கி) ஐயனே! கொடிய சூரபன்மன் வலிமையோடும் உலகத்திலுள்ள உயிர்க்கூட்டங்களை வருத்துதல் சொல்லுதற்கரிதாகும், இனிமேல் சிறிதுங் காலதாமசஞ் செய்யவேண்டாம், இப்பொழுதே திருவருள் செய்வீராகவென்று கூறிவேண்டிக் கொண்டார்கள்.—எ-று. (சுங)

இகபர முதவுவோ னிவற்றைக் கேட்டலு
மிகவரு ளெய்தியே விடுமி னீரினி
யகமெலி வறலென வருளி யாங்கமர்
குகன்முக நோக்கியே யினைய கூறுவான்.

(இ-ள்.) (ஆன்மாக்களுக்கு) இம்மை மறுமைப் பயன்களை யளித்தருள்பவராகிய சிவபெருமான் இவ்வார்த்தைகளைக் கேட்டருளுதலும், மிக்க திருவருள்கூர்ந்து இனி நீங்கள் மனம் வருந்துதலை யொழிந்திருங்களென்று அருளிச்செய்து, அங்கெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளது திருமுகத்தைப் பார்த்தருளி இவ்வார்த்தைகளை யருளிச்செய்கின்றார்.—எ-று.

சிவபெருமானே ஆன்மாக்களுக்கு இம்மை மறுமைப்பயன்களை யளித்தருள்பவ ராகலின், 'இகபர முதவுவோன்' என்று கூறினார். "பந்தம்வீடு தரும் பரமன்" என்றார் ஸ்ரீ சேக்கிழார்பெருமானும். (சுச)

வேறு.

பாரினை யலைத்துப் பல்லுயிர் தமக்கும் பருவரல் செய்துவிண் ணவர்த
மூரினை முருக்கித் தீமையே யியற்றி யுலப்புறா வன்மைகொண் டுற்ற
சூரனை யவுணர் குழுவொடுந் தடிந்து சுருதியி னெறிநிறீஇ மகவான்
பேரர சளித்துச் சுரர்துய ரகற்றிப் பெயர்தியென் றனனெந்தை பெருமான்.

(இ-ள்.) எமது தந்தையாகிய சிவபெருமான் (குமர!) நீ உலகத்தை வருத்திப் பலவுயிர்களுக்குந் துன்பத்தைச் செய்து தேவர்களது சுவர்க்கலோகத்தை யழித்

துக் கொடுமையினையே செய்து கெடாத வலிமையடைந்திருக்கின்ற சூரபன்மனை அசுரர்கூட்டங்களுடன் கொன்று, வேதவொழுக்கத்தை நிலைநிறுத்தி, இந்திரனது பெரிய அரசாட்சியைக்கொடுத்துத் தேவர்களது துன்பத்தை யொழித்து மீண்டுவரக் கடவை யென்றருளிச்செய்தனர்.—எ-று. (௫௫)

அருத்திகொள் குமர னினையசொல் வினவி யப்பணி புரிகுவ னென்னப்
புரத்தினை யட்ட கண்ணுதல் பின்னர்ப் பொள்ளென வுள்ளமேற் பதினொ
ருருத்திரர் தமையு முன்னலு மவ்னொ ருற்றிட விவன்கையிற் படையா
யிருத்திரென் றவரைப் பலபடை யாக்கி யீந்தன னெம்பிரான் கரத்தில்.

(இ-ள்.) அன்புபொருந்திய குமாரக்கடவுள் இவ்வார்த்தையைக் கேட்டருளி அக்காரியத்தைச் செய்கின்றேனென்று கூறியருளவும், முப்புரங்களையு மெரித்தருளிய நெற்றிக்கண்ணராகிய சிவபெருமான் அதன்பின்பு விரைவாகத் தமதுள்ளத்தில் பதினொருருத்திரர்களையும் நினைத்தருளுதலும் உடனே அவ்வுருத்திரர்கள் வந்துசேர, (சிவபெருமான் அவர்களைநோக்கி, நீவிர்) இந்தக் குமரனது கையில் ஆயுதமாக விருங்களென்று அவர்களைப் பல ஆயுதங்களாகச்செய்து எமது கந்தப்பெருமானுடைய திருக்கரத்தில் கொடுத்தருளினர்.—எ-று.

பதினொருருத்திரராவார் :—மகாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன் என்பவர்கள். (௫௬)

பொன்றிகழ் சடிலத் தண்ணறன் பெயரும் பொருவிலா வுருவமுந் தொன்னு
ணன்றுபெற் றுடைய வுருத்திர கணத்தோர் நவிலருந் தோமரங்கொடிவாள்
வன்றிறற் குலிசம் பகழியங் குசமு மணிமலர்ப் பங்கயந் தண்டம்
வென்றிவின் மழுவு மாகிவீற் றிருந்தார் விறன்மிகு மறுமுகன் கரத்தில்.

(இ-ள்.) பொன்மயமாக விளங்குகின்ற சடைமுடியினையுடைய சிவபெருமானது திருப்பெயரையும், ஒப்பற்ற அவரது திருவுருவத்தையும் முன்னாளில் சிறப்பாகப் பெற்றிருக்கின்ற பதினொரு ருத்திரர்களும் சொல்லுதற்கரிய தோமரம், கொடி, வாள், மிக்க வலிமைபெற்ற வச்சிரம், அம்பு, அங்குசம், மணி, கமலம், தண்டம், வெற்றிபொருந்திய வில், மழு என்னும் ஆயுதத்தினுருவங்களைக் கொண்டு, வலிமைமிக்க ஸ்ரீ சண்முகப்பெருமானது திருக்கரத்தில் சேர்ந்திருந்தார்கள்.—எ-று.

தோமரம்-எறியீட்டி. மணி-கண்டாமணி. பங்கயம்-தாமரைவடிவினதாகிய ஒருவகையாயுதம். மழு-பரசு. (௫௭)

ஆயதற் பின்ன ரேவின்மூ தண்டத் தைம்பெரும் பூதமு மடுவ
தேயபல் லுயிரு மொருதலை முடிப்ப தேவர்மேல் விடுக்கினு மவர்தம்
மாயிருந் திறலும் வரங்களுஞ் சிந்தி மன்னுயி ருண்பதெப் படைக்கு
நாயக மாவ தொருதனிச் சுடர்வே னல்கியே மதலைகைக் கொடுத்தான்.

(இ-ள்.) அதன்பின்பு, பிரயோகித்தால் பழைமையாகிய பல வண்டங்களிலுள்ள பெரிய பஞ்சபூதங்களையு மழிக்கத்தக்கதும், நிலைபெற்ற எல்லா வுயிர்களையும் ஒருங்கே நாசஞ்செய்யத்தக்கதும், எத்தகைய வலியவர்கள் மீது விடுத்தாலும் அவர்களது மிகுந்த பராக்கிரமத்தையும் வரங்களையுங்கெடுத்து அவர்களிடத்துப்பொருந்திய உயிரை யுண்ணத்தக்கதும்,எவ்வகை யாயுதங்களுக்கும் முதன்மையாகவுள்ளதுமாகிய ஒப்பற்று விளங்குகின்ற ஒரு வேலாயுதத்தைப்படைத்துக் குமாரக்கடவுளது திருக்கரத்திற் கொடுத்தருளினர்.—எ-று. (௫௮)

அன்னதற் பின்ன ரெம்பிரான் றன்பா லாகிநின் றேவின புரிந்து
மன்னிய விலக்கத் தொன்பது வகைத்தா மைந்தரை நோக்கியே யெவர்க்கு
முன்னவ னுமிக் குமரனோ டேகி முடிக்குதி ரவுணரை யென்னுத்
துன்னுபல் படையு முதவியே சேய்க்குத் துணைப்படை யாகவே கொடுத்தான்.

(இ-ள்.) அதன்பின்பு எமது கந்தப்பெருமானுக்கருகில் சூழ்ந்துநின்று ஏவற்றொழிலைச்செய்து வசித்திருந்த இலக்ஷத்தொன்பது வீரர்களையும் பார்த்தருளி, யாவருக்கு முதல்வனாகிய இந்தக் கந்தனுடன் சென்று அசுரர்களை யழிக்கக்கடவீர்களென்று வலிபொருந்திய பல ஆயுதங்களையுங் கொடுத்து அவர்களைத் தமது திருப்புதல்வராகிய முருகக்கடவுளுக்குத் துணைப்படையாகத் தந்தருளினார்.—எ-று. (௩௯)

நாயக னதற்பி னண்டவா பரண னந்தியுக் கிரனொடு சண்டன்
காயெரி விழியன் சிங்கனே முதலாங் கணப்பெருந் தலைவரை நோக்கி
யாயிர விரட்டி பூதவெள் ளத்தோ டறுமுகன் சேனையாய்ச் சென்மி
னீயிரென் றருளி யவர்தமைக் குகற்கு நெடும்படைத் தலைவரா வளித்தான்.

(இ-ள்.) அதன்பின்பு சிவபெருமான் அண்டாபரணன், நந்தி, உக்கிரன், சண்டன், பற்றி யெரிகின்ற தீக்கண்ணன், சிங்கன் முதலாகிய பெரிய கணத்தலைவர்களைப் பார்த்தருளி நீங்கள் இரண்டாயிரம் வெள்ளம் பூதர்களுடன் நமது சண்முகனுக்குப் படைத்துணையாகச் செல்லுங்களென்று கட்டளையிட்டருளி அவர்களைக் கந்தப்பெருமானுக்குச் சிறந்த படைத்தலைவர்களாகத் தந்தருளினார்.—எ-று. (௪0)

ஐம்பெரும் பூத வன்மையு மங்க ணமர்தரும் பொருள்களின் வலியுஞ்
செம்பது மத்தோ னாதியா மமரர் திண்மையுங் கொண்டதோர் செழுந்தேர்
வெம்பரி யிலக்கம் பூண்டது மனத்தின்விரைந் துமுன்செல்வதொன் றதனை
யெம்பெரு முதல்வன் சிந்தையா லுதவி யேறுவான் மைந்தனுக் களித்தான்.

(இ-ள்.) பெரிய பஞ்சபூதங்களின்வலிமையையும், அப்பஞ்சபூதங்களினிடத்துப் பொருந்தியுள்ள பொருள்களினதுவலிமையையும், செந்தாமரையில் வசிக்கின்ற பிரமன் முதலிய தேவர்களது வல்லமையையும் பெற்றுள்ளதும், வெவ்விய இலக்ஷங் குதிரைகள் பூட்டப்பட்டுள்ளதும், மனவேகத்திலும் விரைந்து முன் செல்லத்தக்கதுமாகிய ஒரு சிறந்த இரதத்தை எமது முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் மனத்தினாற் படைத்து அதில் ஏறும்படி தமது திருப்புதல்வராகிய குமாரக்கடவுளுக்குக் கொடுத்தருளினார்.—எ-று.

ஐம்பெரும்பூதம்-பிருதிவி முதலியன. (௪௧)

இவ்வகை யெல்லாம் விரைவுட னுதவி யேகுதி நீயெனக் குமரன்
மைவிழி யுமையோ டிறைவனைத் தொழுது வலங்கொடே மும்முறை வணங்கிச்
செவ்விதி னெழுந்து புகழ்ந்தன னிற்பத் திருவுளத் துவகையாற் றழுவிக்
கைவருக வானுய்த் துச்சிமே லுயிர்த்துக் கருணைசெய் தமலைகைக் கொடுத்தான்

(இ-ள்.) இவ்வண்ணம் எல்லாப் பொருள்களையும் விரைவாகப் படைத்துக் கொடுத்து நீ (போர்க்குச்) செல்லக்கடவை யென்றருளிச் செய்யவும், உடனே முருகப்பெருமான் மைதீட்டிய கண்களையுடைய உமாதேவியாருடன் சிவபெருமானைத் தொழுது மூன்றுதரம் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து நன்றாகவெழுந்து துதித்து நிற்கவும், (சிவபெருமான்) தமது திருவுள்ளத்திற் பொருந்திய மகிழ்வுடன் திருக்கரத்தினால் தழுவி யெடுத்துத் துடையின்மேல்வைத்து உச்சிமோந்து திருவருள்புரிந்து பார்வதி தேவியாரது திருக்கரத்திற் கொடுத்தருளினார்.—எ-று. (௪௨)

கொடுத்தலும் வயின்வைத் தருளினற் புல்லிக் குமரவேள் சென்னி மோந் துன்பா, லடுத்திடு மிலக்கத் தொன்பது வகையோ ரனிகமாய்ச் சூழ்ந்திடப் போந்து, கடக்கரு மாற்ற லவுணர்தங் கிளையைக் காதியிக் கடவுளர் குறையை, முடித்தனை வருதி யென்றருள் புரிந்தாண் மூவிரு சமயத்தின் முதல்வி.

(இ-ள்.) அவ்வாறு கொடுத்தருளுதலும், அறுவகைச்சமயங்களுக்குந் தலைவியாகிய உமாதேவியார் குமாரக்கடவுளைத் தமதருகில்வைத்து திருவருளுடன் அணைத்து உச்சிமோந்து உன்னருகிற் சூழ்ந்துள்ள இலக்ஷத்தொன்பதுவீரர்களும் சேனைகளாகச் சூழும்படி சென்று, பிறரால் வெல்லுதற்கரிய வல்லமையையுடைய அசுரர்கூட்டங்களையழித்து இந்தத்தேவர்களது மனக்குறையை யொழித்து வரக்கடவையென்று அனுக்கிரகஞ் செய்தனர்.—எ-று.

அரியயனாதி யனைவரையும் வென்ற வீரர்க ளாகலான், 'கடக்கரு மாற்ற லவுணர்' என்று கூறினர். மூவிரு சமயம் என்பதனை முன்னர்க் காண்க. (சங)

அம்மையித் திறத்தா லருள்புரிந் திடலு மறுமுகன் றெழுதெழீஇ யனையோர், தம்விடை கொண்டு படர்ந்தனன் றனைத் தலைவரா மிலக்கமே லொன்பான், மெய்ம்மைகொள் வீரர் யாவருங் கணங்கள் வியன்பெருந் தலைவரு மிருவர், செம்மல ரடிகண் மும்முறை யிறைஞ்சிச் சேரவே விடைகொடு சென்றார்.

(இ-ள்.) உமாதேவியார் இவ்வாறு திருவருள் புரியவும் ஸ்ரீ சண்முகக்கடவுள் நமஸ்கரித்தெழுந்து அத்தாய்தந்தையர்களிடத்து விடைபெற்றுச் சென்றருளினர். சேனைத்தலைவர்களாகிய மெய்ம்மைபொருந்திய இலக்ஷத்தொன்பது வீரர்களும், பெரிய கணத்தலைவர்களும், அச்சிவசத்திகளினது செந்தாமரை மலர்போலுந் திருவடிகளில் மூன்றுதரம் நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு குமாரக்கடவுளுடன் சென்றார்கள்.—எ-று. (சச)

நின்றிடு மயன்மான் மகபதி யெந்தாய் நீயெமை யளித்தனை நெஞ்சத் தொன்றொரு குறையு மில்லையா லிந்நா ளுய்ந்தன முய்ந்தன மென்று பொன்றிகழ் மேனி யுமையுட னிறைவன் பொன்னடி பணிந்தெழ நுமக்கு நன்றிசெய் குமரன் றன்னுட னீரு நடமென விடையது புரிந்தான்.

(இ-ள்.) அங்கு எதிரில் நின்றுகொண்டிருந்த பிரமனும் திருமாலும் இந்திரனும் எமது ஆண்டவரே! தேவரீர் எங்களைப் பாதுகாத்தருளினீர்; எங்கள் மனத்தில் இனி ஒரு குறையுமில்லை; இந்நாளில் பிழைத்தோம் பிழைத்தோமென்று பொன்போல் விளங்குந் திருமேனியினையுடைய உமாதேவியாருடன் சிவபெருமானது அழகிய திருவடிகளை வணங்கி யெழுதலும், (அவ்வெம்பெருமான் அவர்களை நோக்கி) உங்களுக்கு உதவிசெய்யச்சென்ற நமது கந்தனுடனே நீங்களுஞ் செல்லக்கடவீர்களென்று விடைகொடுத்தருளினர்.—எ-று. (சரு)

விடைபெறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க,ருகo.

உ

முருகன்றுணை.

# படையெழு படலம்.

கண்ணுதல் விடைபெற் றரியயன் மகவான் கடவுளர் தம்மொடு கடிதி
னண்ணலங் குமரன் றன்னொடு சென்றே யயல்வரு மருத்தினை நோக்கித்
தண்ணளி புரியு மறுமுகத் தெந்தை தனிப்பெருந் தேர்மிசை நீபோய்ப்
பண்ணொடுமுட்கோன்மத்திகைபரித்துப்பாகனுய்த்தூண்டெனப்பணித்தான்

(இ-ள்.) சிவபெருமானது உத்தரவைப் பெற்றுக்கொண்டு திருமாலானவர் பிரமன் இந்திரன் தேவர்கள் முதலியவர்களோடு விரைந்து பெருமை பொருந்திய அழகிய முருகக்கடவுளுடன் சென்று அருகில் வருகின்ற வாயுதேவனைப் பார்த்து, சிறந்த திருவருள்புரிகின்ற ஸ்ரீ சண்முகப்பெருமானது ஒப்பற்ற பெரிய இரதத்தின் மேல் நீ சென்று குதிரைக் கடிவாளத்தையும் முட்கோல் மத்திகையையும் பிடித்துக் கொண்டு சாரதியாய்த் தேரை நடத்தக்கடவை யென்று கட்டளையிட்டனர்.—எ-று.

பண் - குதிரைக் கல்லணை; ஈண்டுக்கடிவாளமென்னும் பொருளில் நின்றது. முட்கோல் - முள்ளைத் தலையிலுடைய கோல். மத்திகை - குதிரைச்சம்மட்டி; இஃது இக்காலத்துச் சாட்டியென வழங்கும். (௧)

மன்புரி திருமா லினையன பணிப்ப மாருத னிசைந்துவான் செல்லும்
பொன்பொலி தேரின் மீமிசைப் பாய்ந்து பொருக்கென மருத்துவர் நாற்பா
னொன்பது திறத்தார் புடைவரத் தூண்டி யுவகையோ டறுமுகத் தொருவன்
முன்புற வுய்த்துத் தொழுதுமற் றிதன்மேன் முருகநீ வருகென மொழிந்தான்.

(இ-ள்.) காத்தற்றொழிலைச்செய்கின்ற திருமால் இவ்வாறு கூறவும், அதற்கு வாயுதேவன் சம்மதித்து ஆகாயவழியாகச் செல்லுகின்ற பொன்மயமாக விளங்கும் இரதத்தின்மேல் விரைவாகத்தாவி நாற்பத்தொன்பது வாயுக்களுந் தன்னைச் சூழ்ந்து வர, இரதத்தைச் சந்தோஷத்துடன் நடத்திக்கொண்டு ஸ்ரீ சண்முகப்பெருமான் திருமுன்னே கொண்டுவந்து நிறுத்தி வணங்கி, முருகப்பெருமானே! தேவரீர் இந்த இரதத்தின்மீது எழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தான்.—எ-று. (௨)

மாருத னினைய புகன்றுகை தொழலு மற்றவன் செயற்கையை நோக்கிப்
பேரருள் புரிந்து கதிரிளம் பரிதி பிறங்குசீ ருதயமால் வரைமேற்
சேருவ தென்னக் குமரவே ளனைய செழுமணி யிரதமேற் செல்லச்
சூரினி யிறந்தா னென்றுவா சவனுஞ் சுரர்களு மார்த்தனர் துள்ளி.

(இ-ள்.) வாயுதேவன் இவ்வாறு விண்ணப்பஞ்செய்து கைகூப்பி வணங்கவும், முருகக்கடவுள் அவ்வாயுதேவனது தொழிலைப்பார்த்துத் திருவருள் புரிந்து கிரணங்களையுடைய பாலசூரியன் சிறப்புப் பொருந்திய பெரிய உதயகிரியில் எழுந்தருளுவதுபோலச் செழிய மணிகள் பதித்த இரதத்தின்மீது எழுந்தருளுதலும், இந்திரனும் தேவர்களும் இனி சூரபன்மன் இறந்தானென்று கூறித் துள்ளி ஆரவாரித்தார்கள்.—எ-று. (௩)

வேறு.

ஓங்கு தேர்மிசைக் குமரவேள் மேவலு முவப்பா
லாங்க வன்றன தருள்பெறுந் திறலினோ ரணுகிப்
பாங்கர் நண்ணினர் முனிவருந் தேவர்கள் பலரு
நீங்க லின்றியே யவர்புடை சூழ்ந்தனர் நெறியால்.

(இ-ள்.) உயர்ந்த இரதத்தின்மேல் கந்தப்பெருமான் எழுந்தருளுதலும், சந்தோஷத்துடன் அவ்வெம்பெருமானது திருவருளைப்பெற்றுள்ள வீரர்கள் வந்து அருகிற் சேர்ந்தார்கள்; முனிவர்களும் பல தேவர்களும் நீங்குதலில்லாமல் முறைப்படி அவர்கள் பக்கங்களில் சூழ்ந்தார்கள்.—எ-று. (௪)

இனந்த னோடவர் முருகனை யடைதலு மிருநீர்
புனைந்த சென்னியன் கயிலையி லிருந்தவெம் பூத
ரனந்த வெள்ளத்தி லிராயிர மாகும்வெள் ளத்தர்
வனைந்த வார்கழற் றலைவர்தம் முறைகொடு வந்தார்.

(இ-ள்.) அவ்வீரர்கள் தங்களினத்துடன் முருகக்கடவுளையடையவும், பெரிய கங்கைநதியைத்தரித்த திருமுடியினையுடைய சிவபெருமானது திருக்கயிலாயத்தில்தங்கியிருந்த அநேகவெள்ளம் பூதர்களில் இரண்டாயிரம்வெள்ளம் பூதர்கள் வீரகண்டாமணியையணிந்த காலினையுடைய தங்கள் தலைவர்களது உத்தரவின்படி வந்தார்கள்.—எ-று. (௫)

எழுவி யன்கதை நேமிவெஞ் சூலம்வா ளெறிவேன்
மழுமு தற்படை யாவையு மேந்திய வலியோர்
நிழன்ம திப்பிறை நெளிந்தென நிலாவுமி ழெயிற்ற
ரழலு குத்திடும் விழியின ரசனியி னறைவார்.

(இ-ள்.) எழுத்தண்டமும், பெரிய கதையும், சக்கரமும், கொடிய சூலமும், வாளும், எறியீட்டியும், மழுப்படையும் முதலிய ஆயுதங்களனைத்தையுந் தாங்கிய வீரர்களும், சாயையினையுடைய இளம்பிறையைக் கடைந்துவைத்தாற்போல ஒளிவீசுகின்ற கோரைப்பற்களையுடையவர்களும், நெருப்புப்பொறி சிந்துங் கண்களையுடையவர்களும், இடிமுழக்கம்போலப் பேசுகின்றவர்களும்.—எ-று.

இதுமுதல் ஆறுபாடலுங் குளகம். (௬)

நெடியர் சிந்தினர் குறியின ரைம்பெரு நிறனும்
வடிவில் வீற்றுவீற் றெய்தினர் வார்சடைக் கற்றை
முடியர் குஞ்சியர் பலவத னத்தரோர் முகத்தர்
கொடிய ரென்னினு மடைந்தவர்க் கருள்புரி குணத்தோர்.

(இ-ள்.) மிகவுயர்ந்தவர்களும், மிகத் தாழ்ந்தவர்களும், சமவடிவினர்களும், பெரிய பஞ்சவர்ணங்களும் வரிசை வரிசையாகத் தமதுருவத்திற் பொருந்தினவர்களும், நீண்ட கற்றையாகிய சடைமுடியை யுடையவர்களும், தலைமயிரை யுடையவர்களும், பல முகங்களை யுடையவர்களும், ஒரு முகத்தினை யுடையவர்களும் கொடியவர்களாயிருந்தாலுந் தம்மைச் சரணமாக வடைந்தவர்களுக்குக் கிருபை செய்கின்ற குணமுடையவர்களும்.—எ-று.

ஐம்பெருநிறனுவன - வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை என்பன. (௭)

நீறு கண்டிகை புனைதரும் யாக்கையர் நெடுநஞ்
சேறு கண்டனை யன்றிமற் றெவரையு மெண்ணார்
மாறு கொண்டவ ருயிர்ப்பலி நுங்குவோர் மறலி
வீறு கொண்டதொல் படைதனைப் படுத்திடு மேலோர்.

(இ-ள்.) விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்த தேகத்தையுடையவர்களும், மிக க்கொடிய விஷம்பொருந்திய கண்டத்தினையுடைய சிவபெருமானை யன்றி வேறெவரையும் (தம்மனத்திற்) சிந்தியாதவர்களும், பகைகொண்டவர்களது உயிரைப் பலியாக வுண்ணுகின்றவர்களும், இயமனது மேன்மைபொருந்திய பழைய சேனைகளை யழிக்கத்தக்க மேலோர்களும்.—எ-று. (அ)

அண்டம் யாவையு மாண்டுறை யுயிர்த்தொகை யனைத்து
முண்டு மிழ்ந்திட வல்லவ ரன்றியு முதரச்
சண்ட வங்கியா லடுபவ ரட்டவை தம்மைப்
பண்டு போற்சிவ னருளினுல் வல்லையிற் படைப்போர்.

(இ-ள்.) சகல அண்டங்களையும், அவ்வண்டங்களில் வசிக்கின்ற உயிர்க்கூட்டங்களையும் உண்டு பின்பு உமிழவல்லவர்களும், இவரன்றியும் கொடிய உதராக்கினியினுல் (எவற்றையும்) கொல்லவல்லவர்களும், அப்படிக் கொன்றவைகளைச் சிவகடாக்ஷத்தினுல் முன்போல் விரைவில் படைக்கவல்லவர்களும்.—எ-று. (சு)

முன்னை வைகலி னிறந்திடு மிந்திரன் முதலோர்
சென்னி மாலைகந் தரத்தினி னுரத்தினிற் சிரத்திற்
கன்ன மீதினிற் கரத்தினின் மருங்கினிற் கழலிற்
பொன்னின் மாமணிக் கலனெடும் விரவினர் புனைவார்.

(இ-ள்.) சென்ற கற்பத்தில் இறந்த இந்திராதியர்களது தலைமாலைகளைக் கழுத்திலும், மார்பிலும், தலையிலும், செவிகளிலும், கைகளிலும், இடையிலும் பாதங்களிலும் பொன்னினுலாகிய இரத்தினுபரணங்களுடன்கலந்து தரிக்கின்றவர்களும்.

இந்த வண்ணமாஞ் சாரதப் படையின ரீண்டித்
தந்தம் வெஞ்சமர்த் தலைவர்க ளோடுசெண் முகன்பால்
வந்து கைதொழு தேத்தியே யிறுதி சேர்வைக
லந்த மில்புன லண்டம துடைந்தென வார்த்தார்.

(இ-ள்.) இவ்வாருகிய தன்மையினையுடைய பூதப்படைவீரர்கள் நெருங்கித் தங்கள் தங்களது வெவ்விய போர்த்தலைவர்களுடன் ஸ்ரீ சண்முகக் கடவுளிடத்திலடைந்து கைகூப்பி வணங்கித்துதித்துச் சர்வசங்காரகாலத்தில் முடிவில்லாத அப்புவண்டம் உடைந்தாற்போல ஆரவாரித்தார்கள்.—எ-று. (கக)

ஆர்த்த சாரத ரெந்தைபா லாயின ரதுகாற்
பேர்த்து மாயவ ரிடித்தெனப் பூதரிற் பெரியோர்
வார்த்த யங்கிய தண்ணுமை திமிலைவான் படகஞ்
சீர்த்த காகள முதலிய வியம்பினர் சிலரோ.

(இ-ள்.) இவ்வண்ணம்ஆரவாரித்த பூதர்கள் எமது முருகக்கடவுளருகில்வந்துசேர்ந்தார்கள்; அப்பொழுது பின்னும் அவர்கள் இடியிடித்தாற்போலப் பூதகணங்களிற் சிலர் வாருடன் விளங்குகின்ற மத்தளம், பம்பை, பெரிய பேரிகை, சிறப்புப்பொருந்திய எக்காளம் முதலிய வாத்தியங்களை முழக்கினுர்கள்.—எ-று. (கஉ)

ஆன காலையி லதுதெரிந் தறுமுகத் தொருவன்
வான ளாவிய புணரிகள் சூழ்ந்திட வயங்கும்
பானு நாயகன் வந்தெனப் பரந்துபா ரிடத்துச்
சேனை சூழ்தரக் கயிலைநீத் தவனிமேற் சென்றான்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் ஆறுதிருமுகங்களையுடைய குமாரக்கடவுள் அதனை யுணர்ந்து மேகங்கள் பொருந்திய கடல்கள் சூழ்ந்துவர (நடுவில்) விளங்குகின்ற சூரியன்வந்தாற்போல, பூதச்சேனைகள் பரவிச் சூழ்ந்துவரும்படி திருக்கயிலாயத்தினின்று நீங்கி நிலவுலகத்தில் வந்தருளினார்.—எ-று. (௧௩)

கொள்ளை வெஞ்சினச் சாரத ரிராயிரங் குணித்த
வெள்ளம் வந்திடக் கந்தவே ளவனிமேன் மேவக்
கள்ள வான்படை யவுணர்கள் கலந்துசூழ்ந் தென்னப்
பொள்ளெ னத்துக ளெழுந்தது வளைந்தது புவியை.

(இ-ள்.) மிகுதியாகிய வெவ்வியகோபத்தினையுடைய இரண்டாயிரம்வெள்ளம் பூதகணங்கள் சூழ்ந்துவரும்படி முருகக்கடவுள் நிலவுலகத்தில் வந்தருளுதலும், வஞ்சகத்தினையுடைய பெரிய அசுரப்படைகள் கலந்து சூழ்ந்துகொண்டாற்போலப் பூமியினின்றும் விரைவாகப்புழுதிகள் கிளம்பி உலகத்தை மூடிக்கொண்டன.—எ-று.

கொள்ளை - மிகுதி. (௧௪)

எழுத ருந்துகண் மாதிர வரைப்பெலா மேகி
யொழியும் வான்பதஞ் சென்றதா லங்கவை யுறுதல்
குழுவின் மல்கிய சாரத ரார்ப்புமுன் குறுகி
மொழிதல் போன்றன விண்ணுளோ ரிமைப்பில்கண் மூட.

(இ-ள்.) பூமியினின்றுங்கிளம்பிய புழுதிகள் திக்குகடோறும்பரவி, இஃதொழிந்த விண்ணுலகத்துஞ் சென்றன; தேவர்கள் தங்களது இமைத்தலில்லாத கண்களைமூடிக்கொள்ளும்படி அப்புழுதிகள் அவ்விண்ணுலகத்திற்செல்லுதல் (எதுபோலுமெனின்) மிகுந்த கூட்டமாகிய பூதர்களது ஆரவாரத்தை முன்னேசென்று கூறுதலையொத்திருந்தன.—எ-று. (௧௫)

கழிய டைத்திடு நேமிகள் பலவொடு ககன
வழிய டைத்திடு பூழியு மொலியுமன் னுயிர்கள்
விழிய டைத்தன நாசியை யடைத்தன விளம்பு
மொழிய டைத்தன வடைத்தன கேள்வியின் மூலம்.

(இ-ள்.) கழிகளையுடைய பலகடல்களையும், ஆகாயவழியையும் மூடிக்கொள்ளுகின்ற புழுதியும்,சேனைகளாலுண்டாகு மொலியும், நிலைபெற்ற உயிர்களது விழிகளை மூடின; நாசியையடைத்தன; சொல்லுகின்ற வார்த்தைகளைத் தடுத்தன; செவிகளையடைத்தன.—எ-று.

கேள்வியின்மூலம் - கேட்டற் கேதுவாயுள்ள செவி. (௧௬)

பேரி டங்களாந் தனுவுடைப் பூதர்கள் பெயரப்
பாரி டங்கடா மிடம்பெறா வாதலிற் பல்லோர்
காரிடங் கொளும் வான்வழிச் சென்றனர் கண்டோ
ரோரி டங்களும் வெள்ளிடை யிலதென வுரைப்ப.

(இ-ள்.) மிகப்பெரிதாகிய சரீரத்தினையுடைய பூதர்கள் செல்லுதற்குப் பூமி இடம்போதாமையினால், பார்த்தவர்கள் எவ்விடங்களிலும் வெள்ளிடையின்

றென்று கூறும்வண்ணம் அநேக பூதர்கள் மேகங்கள் தங்கிய ஆகாய வழியே சென்றனர்.—எ-று. (கஎ)

அவனி வானெலாம் பூழியான் மறைத்தலு மதனைச்
சிவன்ம கன்றன தொளியினு லகற்றினன் செல்வான்
கவன வாம்பரி யிரதமேற் பனிபடுங் காலைத்
தவன நாயக னதுதடிந் தேகுதன் மையைப்போல்.

(இ-ள்.) வேகமாகச் செல்லுகின்ற குதிரைகள் பூட்டிய தேரின்மீதேறிவருகின்ற சூரியன் பனிக்காலத்தில் அந்தப்பனியை நீக்கிச்செல்லுந் தன்மைபோல, பூமியும் ஆகாயமுமாகிய எல்லாவிடங்களும் புழுதியினால் மறையவும், அம்மறப்பினைச் சிவகுமாரராகிய குமாரக்கடவுள் தமது திருமேனிப் பிரகாசத்தினால் நீக்கிக்கொண்டு சென்றருளினார்.—எ-று. (கஅ)

தவனநாயகன் - சூரியன்.

படையெழுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,கூஉஅ.

―――――

உ

முருகன்றுணை.

―――――

## தாரகன்வதைப்படலம்.

வெம்மை தீர்ந்திடு மப்பெரு நெறியிடை விரைந்து
செம்மை சேர்தரு குமரவேள் படையொடு செல்ல
வம்ம சேர்ந்தது தாரகற் குறையுளா யடைந்தோர்
தம்மை வாட்டியே யமர்கிர வுஞ்சமாஞ் சைலம்.

(இ-ள்.) குளிர்ச்சியாகப்பொருந்திய அந்தப் பெரியவழியில், சேனைத்தொகுதிகளுடன் விரைவாகச் செம்மை பொருந்திய குமாரக்கடவுள் சென்றருளவும், தாரகாசுரனுக்கு வாசஸ்தானமாய் அங்கு அடைந்தவர்களை வருத்திக்கொண்டிருக்கின்ற கிரவுஞ்சமென்னும் பெயரினையுடைய மலையானது காணப்பட்டது.—எ-று. (க)

விண்டு லாய்நிமிர் கிரவுஞ்ச கிரியினை விண்ணோர்
கண்டு ளம்பதை பதைத்தனர் மகபதி கலக்கங்
கொண்டு நின்றன னாரத னணுகியே குமரன்
புண்ட ரீகநேர் பதந்தொழு தின்னன புகல்வான்.

(இ-ள்.) மேகங்கள் தவழப்பெற்று உயர்ந்தோங்கியுள்ள கிரவுஞ்சமலையைத் தேவர்கள்பார்த்து மிகவும் மனம் பதைத்தார்கள்; இந்திரன் கலக்கமுற்று நின்றனன்; (அப்பொழுது,) நாரதமுனிவர் சென்று முருகக்கடவுளது தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கி இவ்வார்த்தைகளை யுரைப்பாராயினர்.—எ-று.

விண்டுலாய் நிமிர் என்பதற்கு, மூங்கில்கள் பொருந்தி யுயர்ந்தோங்கிய எனப் பொருள் கூறலுமொன்று. (உ)

தூய நான்மறை யந்தணர் முனிவரிச் சுரத்திற்
போய வெல்லையி னெறியதாய் வரவரப் புணர்த்து

மாய்வு செய்துபின் குறுமுனி சூளினிவ் வடிவா
யேய தொல்பெயர்க் கிரவுஞ்ச மால்வரை யிதுகாண்.

(இ-ள்.) (எம்பெருமானே !) தூய்மையாகிய நான்கு வேதங்களையு முணர்ந்த வேதியர்களும்,முனிவர்முதலியவர்களும் இக்காட்டின்வழியே செல்லும்பொழுது, வழியாகநின்று வரவர வழியை நெருக்கி அவர்களை யழித்து, பின்பு அகஸ்தியமுனிவரது சாபத்தினால் இவ்வுருவமாகப் பொருந்திய பழைய கிரவுஞ்சமென்னும் பெயரையுடைய பெரிய மலை யிதுவேயாகும்.—எ-று. (௩)

மால்வரை என்பதற்கு, மயக்கத்தைச் செய்கின்ற மலை எனப் பொருள் கூறினும் பொருந்தும்.

நேரி லிக்கிரிக் கொருபுடை மாயநீ ணகரிற்
சூரெ னப்படு மவுணனுக் கிளவலாந் துணைவன்
போரி லச்சுத னேமியை யணியதாப் புனைந்தோன்
றார கப்பெயர் வெய்யவன் வைகினன் சயத்தால்.

(இ-ள்.) ஒப்பற்ற இந்தக் கிரவுஞ்சமலையினொருபுறத்திலுள்ள பெரிய மாய நகரத்தில் சூரபன்மனென்று கூறும் அசுரனுக்கு இளைய சகோதரனும், போர்க்களத்தில் திருமாலினது சக்கரத்தை ஆபரணமாகத் தரித்தவனுமாகிய தாரகனென்று கூறுங் கொடியவன் இங்கு வெற்றியோடு வசிக்கின்றனன்.—எ-று. (௪)

இன்ன வன்றனை யடுதியே லெளிதுகா ணின்னையோன்
முன்ன வன்றனை வென்றிட லெனமுனி மொழிய
மின்னு தண்சுடர் வேலவ னவற்றினை வினவி
யன்ன வன்றனை முடிக்குது மிவணென வறைந்தான்.

(இ-ள்.) ஆதலால், இந்தத் தாரகாசுரனைக் கொன்றருளுவீராயின், இவன் தமையனாகிய சூரபன்மனை வெல்லுதல் மிக விலேசாகும் என்று நாரதமுனிவர் கூறவும்,குளிர்ந்த ஒளிவீசுகின்ற வேற்படையினை யேந்திய குமாரக்கடவுள் அவ்வார்த்தைகளைக் கேட்டருளி இவ்விடத்து அந்தத் தாரகாசுரனை யழிக்கின்றோமென்று கூறியருளினார்.—எ-று.

காண் என்பது அசைநிலை. (௫)

வேறு.

சிறந்திடு முருகவே ளினைய செப்பலு
நிறைந்திடு மமரரு மிறையு நெஞ்சினி
லுறைந்திடு கவலொரீஇ யுவகை யெய்தினு
ரிறந்தனன் றாரக னின்றெ டேயென.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய முருகக்கடவுள் இவ்வாறு கூறியருளவும் இன்றோடே தாரகாசுரன் அழிந்தானென்று நெருங்கிவந்துள்ள தேவர்களும் இந்திரனும் தங்கள் மனத்திற் பொருந்திய துன்ப நீங்கிச் சந்தோஷமடைந்தார்கள்.—எ-று.

இந்திராதியர்களது மனத்தில் நெடுநாளாகத் தங்கியிருத்தலின், 'நெஞ்சினிலுறைந்திடுகவல்' என்று கூறினர். (௬)

ஐயர்கள் பெருமகிழ் வடைய வாறிரு
கையுடை முருகனக் காலை தன்புடை
மெய்யரு ளெய்திய வீர வாகுவாந்
துய்யனை நோக்கியே யினைய சொல்லுவான்.

(இ-ள்.) தேவர்கள் பெருமகிழ்வடையும்படி பன்னிரண்டு திருக்கரங்களையுடைய ஸ்ரீ சண்முகப்பெருமான் அந்தச்சமையத்தில் தம்மிடத்து மெய்ம்மையாகிய திருவருளைப்பெற்றுள்ள பரிசுத்தராகிய வீரவாகுதேவரைப் பார்த்தருளி இவ்வார்த்தைகளை யருளிச்செய்கின்றார்.—எ-று. (எ)

உற்றவக் கிரிகிர வுஞ்ச மாகுமான்
மற்றத னொருபுடை மாய நொச்சியுட்
செற்றிய வசுரர்தஞ் சேனை தன்னுட
னற்றமி றாரக னமர்தன் மேயினான்.

(இ-ள்.) எதிரில் பொருந்திய அம்மலையானது கிரவுஞ்சமலையாகும்; அம்மலையினொருபுறத்துள்ள மாயாநகரத்தில் நெருங்கியிருக்கின்ற அசுரப்படைகளுடன் கேடுதலில்லாத தாரகாசுரன் வசிக்கின்றான்.—எ-று.

செற்றுதல் - நெருக்குதல். (அ)

ஏயநின் றுணைவர்க ளிலக்கத் தெண்மர்க
ளாயிர வெள்ளமா மடல்கொள் பூதர்கள்
சாய்வறு தலைவர்க டம்மொ டேகியே
நீயவன் பதியினை வளைத்தி நேரிலாய்.

(இ-ள்.) ஒப்பற்ற வீரவாகுவே! பொருந்திய உன் தம்பியர்களாகிய இலக்ஷத்தெட்டுவீரர்களையும், வல்லமை பொருந்திய ஆயிரம் வெள்ளம் பூதர்களையும், அழிவில்லாத சேனைத்தலைவர்களையும் அழைத்துக்கொண்டு சென்று நீ அவ்வசுரனது நகரத்தைச் சூழக்கடவாய்.—எ-று. (கூ)

தடுத்தெதிர் மலைந்திடு மவுணர் தானையைப்
படுத்தனை தாரகப் பதக னெய்துமே
லடுத்தம ரியற்றுதி யரிய தேலியா
முடித்திட வருகுது முந்துபோ வென்றான்.

(இ-ள்.) உன்னைத்தடுத்து எதிர்த்துப்போர்செய்கின்ற அசுரப்படைகளைக் கொன்று, பாவியாகிய தாரகாசுரன் வருவானாயின் அவனுடனெதிர்த்துப் போர் செய்யக்கடவை; (நீ அவனைக் கொல்லுதல்) அரிதாயின், யாம் அவனைக்கொல்லுதற்கு வருகின்றோம்; ஆதலால், நீ முன்னே செல்லக்கடவையென்று கூறியருளினார்.—எ-று.

கலமிகு குமரவே ணவில வின்னணம்
வலமிகு சிறப்புடை வாகு நன்றெனத்
தலைமிசை கூப்பிய கரத்தன் றாழ்ந்துமுன்
னிலமிசை யிறைஞ்சின னேர்ந்து நிற்பவே.

(இ-ள்.) நன்மைமிகுந்த முருகக்கடவுள் இவ்வாறு அருளிச்செய்யவும், சிறப்புப்பொருந்திய வீரவாகுத்தேவர் அவ்வாறே நன்றென்று கூறித் தலையின்மேற் குவித்த கரத்தினையுடையவராய் வணங்கித் திருமுன்னே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து நிற்கவும்.—எ-று.

இதுமுத லிரண்டொடலுங் குளகம். (கக)

ஏந்தலந் துணைவரா மிலக்கத் தெண்மரா
யாய்ந்திடு பூதரா யாதி நோக்கியே
வாய்ந்திடு பெருந்திறல் வாகு தன்னுடன்
போந்திடு மவுணரைப் பொரவென் றேவினான்.

(இ-ள்.) முதல்வராகிய முருகக்கடவுள், வீரவாகுத்தேவரது தம்பியர்களாகிய இலக்ஷத்தெட்டு வீரர்களையும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட பூதர்களையும் பார்த்தருளி, நீங்கள் அசுரர்களை யழிக்கும்பொருட்டு மிக்க வல்லமை பொருந்திய வீரவாகுவினுடன் செல்லுங்களென்று கட்டளையிட்டனுப்பியருளினார்.—எ-று. (கஉ)

ஏவலு மனையவர் யாரு மெம்பிரான்
பூவடி வணங்கியே போதற் குன்னலு
மாவியு ளாவியா மமலன் பாங்குறுந்
தேவர்கள் கம்மியற் கிதனைச் செப்புவான்.

(இ-ள்.) அவ்வாறு கட்டளையிட்டனுப்புதலும் அவர்களனைவரும் எமது பெருமானாகிய முருகக்கடவுளது தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கிச் செல்லுதற்கு நினைத்தவுடனே, உயிர்க்குயிராகிய அவ் வெமது முருகப்பெருமான் தமக்கருகிலிருக்கின்ற தேவதச்சனைப்பார்த்து இதனை அருளிச்செய்கின்றார்.—எ-று.(கங)

மேதகு பெருந்திறல் வீரவாகுவை
யாதியர் தமக்கெலா மளிக்கும் பான்மையா
லேதமி லாதபல் லிரத நல்கென
வோதின னுலகெலா முதவுந் தொன்மையோன்.

(இ-ள்.) மிகச்சிறந்த பராக்கிரமத்தினையுடைய வீரவாகுமுதலியவர்களனைவருக்குங் கொடுக்குந்தன்மையாகக் குற்றமற்ற பலஇரதங்களை யுண்டாக்கக்கடவையென்று, சர்வலோகங்களையும் சிருஷ்டிக்கத்தக்க புராதனராகிய முருகக்கடவுள் அருளிச்செய்தனர்.—எ-று.

வீரவாகுவை என்பதில் ஐகாரம் சாரியை. (கச)

அத்திறங் கேட்டதோ ரமரர் கம்மிய
னொத்ததோர் மாத்திரை யொடுங்கு முன்னரே
சித்திர வயப்பரி சீயங் கூளிக
ளித்திறம் பூண்டபல் லிரத நல்கினான்.

(இ-ள்.) (முருகக்கடவுள் இவ்வாறுகூறியருளவும்,) அவ்வார்த்தையைக்கேட்ட தேவதச்சனானவன் ஒருமாத்திரைப்பொழுதுக்குள்ளே அழகும் வெற்றியும்பொருந்திய குதிரைகளையும் சிங்கங்களையும், பேய்களையும், பூட்டப்பட்ட பலஇரதங்களை யுண்டாக்கினான்.—எ-று. (கரு)

வேறு.

அன்ன தேர்த்தொகை யதனை யெம்பிரான்
மின்னு காலவேல் வீர வாகுவும்
பின்ன ரெண்மரும் பிறருஞ் சாரத
மன்ன ரும்பெற வழங்கி னனரோ.

(இ-ள்.) அவ்வாறாகிய தேர்க்கூட்டங்களை எமது முருகக்கடவுள் ஒளிவிளங்குகின்ற இயமன்போலுங் (கொடுமைவாய்ந்த) வேற்படையினை யேந்திய வீரவாகுத்தேவரும், அவர்தம்பியராகிய எட்டுவீரர்களும் இலக்ஷம் வீரர்களும் பூதசேனாதிபர்களும் பெற்றுக்கொள்ளும்படி கொடுத்தருளினார்.—எ-று. (கசு)

பாகர் தூண்டிடப் படருந் தேர்கண்மேல்
வாகை சேர்தரும் வாகு வேமுத
லாகி னோரடைந் தம்பொன் மால்வரைத்
தோகை மைந்தனைத் தொழுது போற்றினார்.

(இ-ள்.) பாகர்கள் தூண்டச் செல்லுகின்ற இரதங்களின்மேல் வீரவாகுத்தேவர் முதலாயுள்ளவர்கள் ஏறிவந்து, அழகிய பெரிய பர்வதராஜ புத்திரியாகிய உமாதேவியாரது திருப்புதல்வராகிய முருகக்கடவுளைவணங்கித்துதித்தார்கள்.-எ-று

தோகை - உவமையாகுபெயர். (௧௭)

தொழுது வள்ளலைச் சூழ்ந்து மும்முறை
விழுமி தாகிய விடைபெற் றேகினார்
பழுதி னீத்தமோர் பத்து நூறெனக்
குழுமிப் பாரிடங் குலவிச் செல்லவே.

(இ-ள்.) முருகக்கடவுளை வணங்கி மூன்றுதரம் பிரதக்ஷணஞ் செய்து சிறப்புமிக்க விடைபெற்றுக்கொண்டு குற்றமற்ற ஆயிரம்வெள்ளமென்று கூறும் பூதங்களாக * சேர்ந்து மிகுந்த சந்தோஷத்துடன் தம்மைத்தொடர்ந்து செல்லும்படி சென்றார்கள்.—எ-று. (௧௮)

பாய பூதர் தம் படைக்கு வேந்தரா
யேயி னார்க்குவீ றிலக்கத் தெண்மராய்
மேயி னார்க்கெலாம் வீர வாகுவோர்
நாய கம்பெறீஇ நடுவட் போயினான்.

(இ-ள்.) பரவிவருகின்ற பூதர்களுக்குத் தலைவர்களாய்ப் பொருந்தியவர்களுக்கும்மேன்மையமைந்த இலக்ஷத்தெட்டு வீரர்களுக்கும் வீரவாகுத்தேவர் ஒப்பற்ற முதன்மைத்தன்மையை யடைந்து (அவர்களுக்கு) நடுவில் சென்றனர்.—எ-று. (௧௯)

அமர்வி ளைக்கமுந் தவனை யேவியே
தமர வேலையிற் றானை சூழ்தர
விமைய வர்க்கிறை யேனை யோர்தொழக்
குமர வேள்கடைக் கூழை யேகினான்.

(இ-ள்.) போர்செய்யும்பொருட்டு அவ்வீரவாகுத்தேவனை முன்னேயனுப்பிவிட்டு, ஒலிபொருந்திய சமுத்திரம்போலச் சேனைகள் தம்மைச் சூழ்ந்துவரவும், இந்திரனும் மற்றையர்களும் வணங்கிவரவும், முருகக்கடவுள் கடைப்படையின் பின்னே சென்றருளினார்.—எ-று.

கடைக்கூழை - பின்னணியாகச்செல்லும் படைவகுப்பு. (௨௦)

வேறு.

பிற்பட வெம்பிரான் பெயர வேவலான்
முற்படு வீரனை முயங்கிப் பாரிடச்
சொற்படை படர்வன தூமந் தன்னொடு
சிற்பர னகையழல் புரத்துச் சென்றபோல்.

(இ-ள்.) புகையினுடன் சிவபெருமானது புன்னகையின் அக்கினியானது திரிபுரத்தின்மீதுசென்ற தன்மையைப்போல எமது முருகக்கடவுள் பின்னேசெல்லவும், அவரது கட்டளையினால் முன்னே செல்லுகின்ற வீரவாகுத் தேவருடன் கலந்து புகழமைந்த பூதப்படைகள் சென்றன.—எ-று.

பூதப்படைகள் முன்னணியிற் செல்லக் குமாரக்கடவுள் பின்னணியிற்செல்லுதல், சிவபெருமான் திரிபுரமெரித்தருளிய காலத்தில் அவரது நகைத்தழல் பின்னும் அத்தழற்புகை முன்னுஞ் சென்றாற்போன் றிருந்த தென்க. (௨௧)

அரிநிரை பூண்டதே ரலகை பூண்டதேர்
பரிநிரை பூண்டதேர் படைக்கு ளேகுவ
விரிகடல் வரைப்பினின் மேக ராசியுங்
கிரியுறழ் கலங்களுங் கெழுமிச் செல்வபோல்.

(இ-ள்.) நீர் பரந்த கடலினிடத்தில் மேகக் கூட்டங்களும், மலைபோன்ற பெரிய மரக்கலங்களுங் கூடிச் செல்லுதல்போல, சிங்கவரிசைகள் பூட்டிய இரதங்களும்,பேய்கள் பூட்டிய இரதங்களும்,குதிரை வரிசைகள்பூட்டிய இரதங்களுஞ் சேனைகளுக்குள்ளே கலந்து செல்கின்றன.—எ-று. (உஉ)

இடையக விரதமோ டிரதந் தாக்கிய
படையொடு படைவகை செறிந்த பல்வகைக்
கொடியொடு கொடிநிரை துதைந்த கூளிய
ரடுசமர் பயின்றிடு மமைதி போலவே.

(இ-ள்.) பூதங்கள் நெருங்கிப் போர்செய்யுந் தன்மைபோல, விசாலமாகிய இரதங்களுடன் இரதங்கள்தாக்கின. ஆயுதவகைகளுடன் ஆயுதவகைகள்நெருங்கின. பலவகையான கொடிகளுடன் கொடிகள் நெருங்கின.—எ-று. (உ௩)

சங்கொடு பணைதுடி தடாரி காகளம்
பங்கமி றண்ணுமை யாதிப் பல்லிய
மெங்கணு மியம்பின வெழுந்து பூழிபோய்ச்
செங்கம லத்தவன் பதத்தைச் செம்மிற்றே.

(இ-ள்.) சங்கு, முரசு, உடுக்கு, பேரிகை, எக்காளம், குற்றமற்ற மத்தள முதலாகிய வாத்தியங்கள் எவ்விடத்திலு முழங்கின. புழுதிகள் கிளம்பிச் சென்று செந்தாமரை மலரில் வசிக்கின்ற பிரமனது சத்தியலோகத்தை மூடியது.—எ-று
செம்முதல் - மூடுதல். (உச)

சாற்றுமிவ் வியல்புறத் தானை வீரருஞ்
சீற்றவெம் பூதருஞ் செல்ல வாகையான்
கோற்றொழி லகற்றிய கோட்டு மாமுகன்
போற்றிய மாயமா புரியைச் சேர்ந்தனன்.

(இ-ள்.) சொல்லப்பட்ட இவ்வாறாகியதன்மை பொருந்தும்படி சேனைவீரர்களும்கோபத்தினையுடைய வெவ்விய பூதர்களும் தம்மைச் சூழ்ந்துவர, வீரவாகுத்தேவர் கொடுங்கோன்மையினையுடைய யானைமுகத்தைக்கொண்ட தாரகாசுரன் அரசு செய்கின்ற பெரிய மாயாநகரத்தை யடைந்தனர்.—எ-று.

கோற்றொழிலகற்றல் - செங்கோன்மையை யொழித்தல். [கொடுங்கோல் செலுத்துதல் என்றபடி.] (உரு)

வேறு.

சேர்ந்திடு மெல்லை பூதர் சேனைபோய் நகரம் புக்கு
நேர்ந்திடு மவுண ரோடு நின்றமர் விளைத்து நின்று
ரோர்ந்தன ரதனைத் தூத ரோடித்தங் கோயில் புக்குச்
சார்ந்திடு திருவில் வைகுந் தாரகற் றொழுது சொல்வார்.

(இ-ள்.) அவ்வாறு சேர்ந்தபொழுது, பூதச்சேனைகள் நகரத்தினுள்ளே பிரவேசித்து எதிர்த்த அசுரர்களுடன் நின்று போர்செய்தார்கள். இதனைத் தூதுவர்கள

றிந்து அரண்மனையிலோடிச்சென்று நிலைபெற்ற பெருஞ்செல்வத்துடன் வசிக்கின்ற தாரகாசுரனை வணங்கிச் சொல்லுகின்றார்கள்.—எ-று. (உசு)

எந்தைமற் றிதுகே ணும்மு னிமையவர் தொகையை யிட்ட
வெந்துயர்ச் சிறையை நீக்க விரிசடைக் கடவுண் மைந்தன்
கந்தனென் றொருவன் வந்தா னவுணரைக் கடக்கு மென்னு
வந்தர நெறிசெல் விண்ணோ ரறைந்திடக் கேட்டு மன்றே.

(இ-ள்.) எம்பெருமானே! இதனைக் கேட்பீராக, உமது தமையன் மிகுந்த துன்பமடையும்படி தேவர்களை யடைத்து வைத்திருக்கின்ற சிறையை நீக்கும்பொருட்டு விரிந்த சடைமுடியையுடைய சிவபெருமானது புதல்வனும் கந்தனென்னும் பெயரினையுடையவனுமாகிய ஒருவன் வந்தனன்; அவன் அசுரர்களைச் செயிப்பானென்று ஆகாயவழியாகச் செல்லுகின்ற தேவர்கள் சொல்லக்கேட்டோம்.—எ-று. (உஎ)

என்னிவர் மாற்ற மென்னு யாந்தெரி குற்றே மாக
வன்னவ ரியம்பி யாங்கே யாயிரத் திரட்டி யென்னப்
பன்னுறு பூத வெள்ளம் படர்ந்திடக் குமரன் போந்தான்
முன்னுறு தூசி நந்த முதுநக ரலைத்த தென்றார்.

(இ-ள்.) இத்தேவர்கள் இவ்வாறு கூறுகின்றதென்னவென்று நாங்கள் ஆலோசித் திருந்தோம்; அவர்கள் சொன்னவண்ணமே, இரண்டாயிரம் வெள்ளம் பூதங்கள் தன்னைச் சூழ்ந்து வரும்படி கந்தன் வந்தனன்; அவனுக்கு முன்னே வந்த தூசிப்படையானது நமது பழைமைபொருந்திய மாயாநகரத்தை யழித்தது என்று கூறினார்கள்.—எ-று.

தூசி - கொடிப்படை. (உஅ)

என்றலும் வடவைத் தீயி லிழுதென மளக்கர் வீழத்
துன்றிய வெழுச்சி மானத் துண்ணெனச் செற்றந் தூண்ட
மின்றிக ழரிமா னேற்று வியன்றவி சிருக்கை நீங்கிக்
குன்றுறழ் மகுட மண்ட கோளகை தொடவெ ழுந்தான்.

(இ-ள்.) என்று இவ்வாறு கூறவும் (அத்தாரகாசுரன்) வடவாமுகாக்கினியில் நெய்க்கடல் போய் வீழ, அதனாலுண்டாகிய தீயின் சுவாலை யொப்பாகத் திடீரென்று கோபமதிகரிக்க, மின்போல் விளங்குகின்ற ஆண்சிங்கங்களால் தாங்கப்பட்ட ஆசனத்தினின்று நீங்கி, மலைபோன்ற பெரியகிரீடமானது அண்டகோளத்தை முட்டும்படி யெழுந்தனன்.—எ-று. (உகூ)

எழுந்துதன் மருங்கு நின்ற வொற்றரை நோக்கி யிந்தச்
செழுந்திரு நகர்மேல் வந்த சேனையை முளிபுற் கானிற்
கொழுந்தழல் புகுந்த தென்னக் கொல்வனந் தானை முற்று
முழுந்துருள் கின்ற முன்ன ரொல்லைதந் திடுதி ரென்றான்.

(இ-ள்.) அவ்வாறெழுந்து தனக்கருகில்நின்ற தூதுவர்களைப் பார்த்து, இந்தச் செழுமைபொருந்திய அழகிய மாயாநகரத்தின்மேல் போர்செய்யவந்தசேனைகளை உலர்ந்த புற்களையுடைய காட்டில் மிக்க அக்கினியானது பிரவேசித்த தன்மையைப்போலக் கொல்லுவேன்; நமது சேனைகளனைத்தையும் உழுந்து உருளுங்காலத்திற்கு முன்னே விரைவாக அழைக்கக்கடவீர்களென்று கூறினான்.—எ-று.

முளிபுல் - உலர்ந்தபுல். (கூ0)

வேறு.

அன்னபணி முறைபுரிவா ரொற்றுவர்கள் போயிடலு மவுண ளின்ற
கொன்னுறுவேற் பரிசனரைக் கொடுவருதி ரிரதமெனக் கூற லோடு
முன்னமொரு நொடிவரையிற் றந்திடலு மதனிடையே மொய்ம்பிற் புக்குப்
பின்னர்வரு மமைச்சர்கடந் தொகைபரவ மதர்ப்பினொடு பெயர்த லுற்றான்.

(இ-ள்.) தூதுவர்கள் அவ்வேலையை முறைப்படிசெய்யும்படி செல்லுதலும், தாரகாசுரன், தனக்கெதிரில் நின்ற அச்சத்தைத்தருகின்ற வேலினையேந்திய பரிசனர்களைப்பார்த்து இரதத்தைக் கொண்டுவாருங்களென்று கூறவும், (அவ்வீரர்கள்) அவ்வாறே ஒரு நொடிபபொழுதுக்குள்ளே (இரதத்தைக்) கொண்டுவந்து நிறுத்தவும் அவ்விரதத்தின்மேல் பராக்கிரமத்துடனேறி தனக்குப்பின்னே வருகின்ற மந்திரிக்கூட்டங்கள் துதிக்க வீரத்துடன் செல்லத்தொடங்கினான்.—எ-று. (௬௧)

வீடுவான் போலுமினித் தாரகனென் றவன்சீர்த்தி விரைவில் வந்து
கூடியே புரள்வதுவு மரற்றுவதுங் காப்பதுமாங் கொள்கைத் தென்ன
நீடுசா மரத்தொகுதி பலவிரட்ட வெள்ளொலிய னிமிர்ந்து வீசப்
பீடுசேர் தவளமதிக் குடைநிழற்ற வலம்புரிகள் பெரிது மார்ப்ப.

(இ-ள்.) இனி, தாரகாசுரன் இறந்துவிடுவானென்று அவன் கீர்த்தியானது விரைவாக வந்து சேர்ந்து புரள்வதும் அழுவதும் தடுப்பதுமாகிய தன்மையைப்போல நீண்ட பல சாமரைக்கூட்டங்களை வீசவும், வெள்ளைவஸ்திரங்களை விரித்து வீசவும், பெருமைபொருந்திய வெள்ளிய சந்திரவட்டக்குடை நிழலைச்செய்யவும், வலம்புரிச்சங்குகள் மிகுதியாகச் சப்திக்கவும்.—எ-று.

ஒலியல் - சீலை.

இதுமுதல் ஆறுபாடலுங் குளகம். (௬௨)

ஈமத்தே நடம்புரியுங் கண்ணுதலோ னெடாதசிலை யென்ன மாலோன்
மாமத்தே யெனக்கிடந்த முழுவயிரத் தண்டமொன்று வயிரக் கண்டைத்
தாமத்தேர் பெறுகின்ற மடங்கல்பல வீர்த்துவருஞ் சகடத் திண்காற்
சேமத்தேர் மிசைப்போத வேனையபல் படைக்கலமுஞ் செறிந்து நண்ண.

(இ-ள்.) மசானத்தின்கண் திருநடனஞ்செய்யுஞ் சிவபெருமான் எடுக்காத மலையைப்போலவும், திருமாலினது பெரிய மத்தைப்போலவும் இருந்த ஒரு வச்சிரத் தண்டத்தை வயிரமணிமாலைகளினது அழகுபொருந்திய அநேக சிங்கங்களிழுத்து வருகின்ற வலிய சக்கரங்களையுடைய சேமத்தேரின்மேல் வரவும், மற்றைய பல ஆயுதங்களும் நெருங்கிவரவும்.—எ-று.

கண்ணுதலோன் எடுத்த சிலையாகிய மேருமலையைப்போல இத்தண்டமும் மிகப் பருத்துள்ளதாகலின், இதனைக் 'கண்ணுதலோ னெடாத சிலையென்ன' என்று கூறினர். எடாத சிலை - எடுக்காதவில் லெனினுமாம். மாலோன் மாமத்து- திருமால் பாற்கடல்கடைந்தபோது மத்தாகநாட்டிய மந்தரமலை. சேமத்தேர் - தனக்குக் காவலாகப் பொருந்தியுள்ள தேர். (௬௩)

ஒற்றர்கூ வியவேலை யேற்றெழுந்த வவுணர்கட லொருங்கு செல்லக்
கொற்றமால் கரிபரிதே ரினத்தினொடு வந்தீண்டக் குழவித் திங்கட்
கற்றைவார் சடைக்கடவுள் வாங்கியபொன் மால்வரையைக் காவலாகச்
சுற்றுமால் வரையென்னப் படைத்தலைவர் பஃறேரிற் றுவன்றிச் சூழ.

(இ-ள்.) தூதுவர்கள் அழைத்த பொழுது எதிர்த்துவந்த அசுரர்களாகிய சேனைக்கடல் நெருங்கிவரவும், வெற்றிபொருந்திய மதமயக்கத்தினையுடைய யானை

களுங் குதிரைகளும் தேர்க்கூட்டத்துடன் வந்து பொருந்தவும், இளம்பிறை யணிந்த கற்றையாகிய நீண்டசடைமுடியை யுடைய சிவபெருமான் (வில்லாக)வளைத்தருளிய பெரிய மேருமலையைக் காவலாகச் சூழ்ந்திருக்கின்ற பெரிய மலைகளைப்போலச் சேனைத்தலைவர்கள் பலதேர்களில் நெருங்கிச்சூழவும்.—எ-று.

பொன்மால்வரையைக் காவலாகச் சுற்று மால்வரை - அஷ்டகுல பர்வதங்களும் பிறவுமாம். (௬௪)

மொய்யமர்செய் கோலமொடு முப்புரமே னடந்தருளு முக்கண் மூர்த்தி, பையரவின் றலைத்துஞ்சுங் கணைதூண்ட மூண்டதழல் பதக ரானோர், மெய்யுடல முழுதுநுங்கித் தலைக்கொள்ளப் பெருந்தூம மிசைக்கொண் டென்னச், செய்யமுடி யவுணர்பெருங் கடலினிடை யெழும்பூழி சேட்சென் றோங்க.

(இ-ள்.) நெருங்கிய போர்க்கோலங்கொண்டு திரிபுரத்தின்மீது சென்றருளிய முக்கண்ணராகிய சிவபெருமான் படம்பொருந்திய சேஷசயனத்தில் நித்திரை செய்கின்ற திருமாலாகிய பாணத்தைப் பிரயோகித்தலும், அதுகாரணத்தினாலுண்டாகிய அக்கினியானது பாவிகளாகிய திரிபுராதியர்களது தேகமனைத்தையும் விழுங்கியதிகரிக்க அதன்பெரும்புகையானது மிகுதியாக மேலே கிளம்பிய தன்மைபோலச் செவ்விய கிரீடத்தையணிந்த அசுரர்களாகிய பெரிய கடலினிடத்துத் தோன்றிய புழுதிகள் ஆகாயமளவுஞ் சென்றோங்கவும்.—எ-று.

சிவபெருமான் திரிபுரமழிக்கச்சென் றருளிய பொழுது திருமால் பாணமாகவமைதலின், 'பையரவின் றலைத்துஞ்சுங் கணை' என்றார். (௬௫)

கார்க்குன்ற மன்னதிறற் கரிமீதும் பரிமீதுங் கடிதிற் றாண்டுந்
தேர்க்குன்ற மதன்மீதும் வயவர்கடங் கரங்களினுஞ் செறிப தாகை
யார்க்கின்ற துயர்ந்தோங்கி யசைகின்ற தெம்மருங்கு மம்பொ னாட்டிற்
றார்க்கின்ற பூழியினைத் துடைக்கின்ற பரிசேபோற் றுவன்றித் தோன்ற.

(இ-ள்.) கரிய மலைபோலும் வல்லமையையுடைய யானைகளின்மேலும், குதிரைகளின்மேலும், விரைவாக வோட்டுகின்ற மலைபோன்ற இரதங்களின்மேலும், வீரர்களது கைகளிலும் நெருங்கியிருக்கின்ற கொடிகள் (காற்றினால்) உயர்ந்து ஓங்கி ஒலியுடன் அசைந்துகொண்டிருத்தல் (எதுபோலுமெனின்,) அழகிய பொன்மயமாகிய சொர்க்கலோகத்தில் எவ்விடங்களிலும் அடைக்கின்ற புழுதியைத் துடைக்குந் தன்மையைப்போலப் பொருந்தி விளங்கவும்.—எ-று. (௬௬)

வாகையுள பல்லியமு மியம்பத்தன் னகர்நீங்கி மன்னர் மன்ன
னேகியதோர் படிநோக்கி யுவரிமிசைக் கங்கைகள்வந் தெய்து மாபோற்
சாகையுள பன்மரனும் பல்படையுங் குன்றுகளுந் தடக்கை யேந்திச்
சேகுடைய பெருஞ்சிற்றப் பூதர்படை யார்த்தெதிர்ந்து சென்ற தன்றே.

(இ-ள்.) வெற்றி பொருந்திய பல வாத்தியங்களு மொலிக்கும்படி தனது நகரத்தைவிட்டு நீங்கி அரசர்க்கரசனாகிய தாரகாசுரன் சென்றதன்மையைப் பார்த்து, சமுத்திரத்தினிடத்துப் பல நதிகள் வந்து பொருந்துந்தன்மைபோல கிளைகள் பொருந்திய பல விருக்ஷங்களையும், பல ஆயுதங்களையும், பல மலைகளையும் பெரிய கைகளில் தாங்கிக்கொண்டு, வீரத்தையும் பெருங்கோபத்தினையுமுடைய பூதகணப்படைகள் ஆரவாரித்துக்கொண்டு எதிரில் சென்றன.—எ-று. (௬௭)

எல்லோருந் தொழுதகைய குமரனடி யிணைவழுத்தி யிகல்வெம் பூதர்
கல்லோடு மரனோடுங் கதையோடுங் கணிச்சியொடுங் கழுமுள் விச

வில்லோடுங் கணேயோடும் வேலோடு நேமியொடு மிக்க வெல்லா
மல்லோடும் புரையுமனத் தவுணர்படை யெதிர்சிதறி யமர்செய் திட்டார்.

(இ-ள்.) யாவர்களும் வணங்கத்தக்க முருகக்கடவுளது இரண்டு திருவடிகளை வணங்கிப் பகைக்கின்ற கொடிய பூதவீரர்கள், கற்களையும், மரங்களையும், தண்டங்களையும், கோடரிகளையும், கழுமுட்களையும் வீசுதலும், இருள்போன்று விளங்கும் வஞ்சகமனத்தினையுடைய அசுரப்படைகள், விற்களையும் அம்புகளையும் வேற்படைகளையும் சக்கரங்களையும் சிறந்த மற்றெல்லா ஆயுதங்களையும் பிரயோகித்துப் போர்செய்தார்கள்.—எ-று. (ருஅ)

வேறு.

என்னுறு படைக ளிவ்வா றெதிர்தழீஇ யடரும் வேலை
விண்ணுறு பூழி யென்னும் விரிதரு புகைமீச் செல்ல
மண்ணுறு குருதி யான வன்னியை மாற்று வார்போற்
கண்ணுறு மிமையோர் கண்கள் கடிப்புனல் கான்ற வன்றே.

(இ-ள்.) மதிக்கத்தக்க சேனைவீரர்கள் இவ்வாறு ஒருவரோடொருவ ரெதிர்த்துப் போர்செய்யும்பொழுது, ஆகாயமளவாகக் கிளம்பிய புழுதியென்னும் மிகுந்த புகையானது மேலுயர்ந்தோங்க, உலகத்திற்பொருந்திய உதிரமென்னும் அக்கினியைத்தணிப்பவர்களைப்போல (அப்போரைப்) பார்த்துநின்ற தேவர்களது கண்களில் மிகுந்த நீரானது பெருக்கெடுத்தன.—எ-று. (ருகூ)

இரிந்திட லின்றி நேர்வந் தேற்றமர் புரித லாலே
சொரிந்திடு குருதி பொங்கத் தோளொடு சென்னி துள்ளச்
சரிந்திடுங் குடர்கள் சிந்தத் தானவர் பல்லோர் மாயப்
பொருந்திறல் வயத்தான் மேலாம் பூதருஞ் சிலவர் பட்டார்.

(இ-ள்.) தோற்றோடுதலில்லாமல் நேரில்வந்து எதிர்த்துப் போர்செய்த தன்மையினால் ஒழுகுகின்ற உதிரமானது பெருக்கெடுக்கவும், தோள்களுந் தலைகளுந் துடிக்கவும், சரிந்த குடல்கள் சிந்தவுமாகப் பலஅசுரர்களிறக்க, போர்செய்யும் வலிய வெற்றியிற் சிறந்தவர்களாகிய சில பூதர்களும் இறந்தார்கள்.—எ-று. (சo)

தேருடைத் தெறிந்து பாய்மாத் திறத்தினைச் சிதைத்து நீக்கி
யாருடைத் திகிரிச் சில்லி யங்கையா லெடுத்துச் சுற்றிப்
போருடைத் திறலோர் தம்பாற் பொம்மென நடாத்தும் பொற்பாற்
காருடைப் பூதர் சில்லோர் கண்ணனே போன்று ரன்றே.

(இ-ள்.) இரதங்களை உடைத்து எறிந்து, குதிரைகளின் வலிமையைக் கெடுத்தொழித்து, அச்சாணியையுடைய தேர்ச்சக்கரங்களை அழகிய கைகளால் எடுத்துச் சுழற்றிப் போர்த்தொழிலில் வல்லவர்களாகிய அசுரர்களிடத்து விரைவாகச் செலுத்துஞ் சிறப்பினால், கருநிறத்தினையுடைய சில பூதர்கள் திருமாலை யொத்திருந்தார்கள்.—எ-று.

தேராகவும் குதிரையாகவும் வடிவங்கொண்டுவந்த அசுரர்களையழித்தும், தேர்ச்சக்கரத்தைக்கொண்டு போர் செய்தும் வெற்றிகொண்டவர் கண்ணபிரானாதலால், 'காருடைப் பூதர் சில்லோர்கண்ணனேபோன்றார்.' என்றுகூறினார். (சக)

தேர்பரித் தெழுந்து மண்ணிற் செல்லுறாப் பவளச் செங்காற்
கார்பரித் தன்ன தோகைக் கவனவாம் புரவி யீட்டம்
போர்பரித் தொழுகு சேற்றப் பூதர்கள் புடைத்துச் சிந்திப்
பார்பரித் திடவே செய்தார் படிமக ளிடும்பை தீர்ப்பார்.

(இ-ள்.) இரதங்களைச் சுமந்துகொண்டெழுந்து ஆகாயத்திற்செல்லுகின்ற பவளம்போலுஞ் சிவந்த கால்களையும் மேகத்தைச் சுமந்தது போலுங் கரிய சிறகுகளையும் வேகத்தினையுமுடைய குதிரைக்கூட்டங்களைப் போரைக்கொண்டு செல்லுகின்ற கோபத்தினையுடைய பூதவீரர்கள் பூமிதேவியினது (சுமையாகிய) துன்பத்தையொழிக்கின்றவர்களாய் அடித்துச் சிதறிப் பூமியில் விழும்படி செய்தார்கள்.—எ-று.

வாலுடைக் களிற்றி னீட்டம் வாரியே கரத்தா லெற்றிக்
காலுடைத் திகிரித் திண்டேர் கழல்களா லுருட்டிக் காமர்
பாலுடைப் புரவித் தானை பதங்களா லுழக்கிச் சென்றார்
வேலுடைத் தடக்கை யண்ணல் விடுத்தருள் வீர வீரர்.

(இ-ள்.) வேற்படையையேந்திய பெரிய திருக்கரங்களையுடைய முருகக்கடவுள் விடுத்தருளிய வீராதிவீரர்களாகிய பூதர்கள் வாலையுடைய யானைக்கூட்டங்களைத் தங்கள் கைகளால் வாரி மோதியும், ஏர்க்காலமைந்த சக்கரங்களையுடைய வலிய இரதங்களைத் தங்கள் கால்களால் உருட்டியும், அழகினைத் தம்மிடத்திலுடைய குதிரைச்சேனைகளைக் கால்களால் கலக்கியும் சென்றார்கள்.—எ-று. (சஙு)

வாருறு புரசை பூண்ட வன்களிற் றொருத்தல் யாவுஞ்
சூருறு நிலைய வாகித் துஞ்சிய தொகுதி சூழப்
பேருறு குருதி நீத்தம் பிறங்கழற் கதிர்கா ணாது
காருற வூர்கோ டோன்றுங் காட்சியை யொத்த தன்றே.

(இ-ள்.) நீண்ட கழுத்தணிகயிற்றினையுடைய வலிய ஆண்யானைகளனைத்தும், துன்பமிக்க தன்மையினவாய் இறந்துகிடக்கின்ற தொகுதியைச்சூழ்ந்து அதிகரித்துள்ள உதிரப்பிரவாகமானது (எதுபோலுமெனின்,) விளங்குகின்ற உஷ்ணமாகிய கிரணத்தினையுடைய சூரியன் றோன்றாமல் மேகங்கள் மூடிக்கொள்ள அதனைச் சூழ்ந்து பரிவேடமானது தோன்றுகின்ற காட்சியை யொத்திருந்தது.—எ-று.

பேர் - முதனிலைத்தொழிற்பெயர். (சசு)

கண்ணெதிர் நின்று போர்செய் கார்கெழு மவுணர்ப் பற்றித்
துண்ணெனப் பூதர் வீசத் துளங்கிய கலன்க ளோடும்
விண்ணிடை யிறந்து நொய்தின் வீழ்வது விசும்பிற் றப்பி
மண்ணிடை மின்னு வோடும் வருமுகில் போன்ற தன்றே.

(இ-ள்.) கண்ணுக்கெதிரில்நின்று போர்செய்கின்ற கருநிறமமைந்த அசுரர்களைப்பிடித்துப் பூதவீரர்கள் விரைவாகவெடுத்து வீசவும், அவர்கள் அசைகின்ற ஆபரணங்களோடும் ஆகாயத்தினின்று நீங்கி விரைவாகக் கீழே விழுகின்ற தன்மை (எதுபோலுமெனின்) ஆகாயத்தினின்றுந் தவறி நிலவுலகத்தில் மின்னலுடனே வருகின்ற மேகத்தினை யொத்திருந்தது.—எ-று. (சஎ)

ஆயிர வெள்ள மாகுங் கணவரு மாங்க ணுள்ள
பாயிருங் குன்ற மெல்லாம் பன்முறை பறித்து வீசி
மாயிருந் தகுவர் தானை வரம்பில படுத்து நின்றா
ரேயென வுலகைச் சிந்து மிறுதிநா ளெழிலி போல்வார்.

(இ-ள்.) கணப்பொழுதிற்குள்ளே யுலகத்தையழிக்கத்தக்க ஊழிக்காலத்திற்றோன்றும் மேகங்களை யொத்தவர்களாகிய ஆயிரம்வெள்ளம் பூதவீரர்களும் அங்குள்ள விசாலமாகிய பெருமலைகளனைத்தையும் பலமுறைபிடுங்கியெறிந்து மிகப் பெரிய அவுணச்சேனைகள் பலவற்றை யழித்துநின்றார்கள்.—எ-று.

ஊழிக்காலத்து மேகம் உலகமழியும்பொருட்டு விடாமழை பொழிவது போலப் பூதவீரர்கள் பெருமலைகளைப் பிடுங்கி வீசி யசுரப்படைகளை யழித்தலின், 'ஏயென வுலகைச் சிந்து மிறுதிநா ளெழிலி போல்வார்' என்று கூறினர். (சுசு)

நிணங்கவர் ஞமலி யோர்சார் ஞெரேலெனக் குரைப்பப் புள்ளின்
கணங்களு மலகை தானுங் கறங்கிடக் ககனத் தோங்கிப்
பிணங்களி னடுக்க லீண்டிப் பேரமர் விலக்கி யார்க்கு
மணங்குறு நிலைய வாகி யடுத்தன நடுவ ணம்மா.

(இ-ள்.) மாமிசங்களைக் கவ்வுகின்ற நாய்கள் ஒரு பக்கத்தில் விரைந்து குரைக்கவும், பறவைக்கூட்டங்களும் பேய்களும் சப்திக்கவும், மத்தியில்பிணமலைகள் ஆகாயத்தளவாக வுயர்ந்து நெருங்கிப் பெரிய போரைத் தடுத்து யாவர்களுக்குந் துன்பந்தருந்தன்மையினவாகப் பொருந்தின.—எ-று. (சஎ)

தரைத்தடஞ் சிலைய தாகத் தறுகண்வெம் பூத ராஞேர்
வரைத்துணை யன்ன தாளே வலிகெழு குழவி யாகத்
திரைத்திழி குருதி நீராத் தீர்ந்திடு திறலோர் யாக்கை
யரைத்தென நடப்ப வேற்று ரவுணரு மடுபோர் செய்வார்.

(இ-ள்.) பெரிய பூமியே அம்மியாகவும், அஞ்சாமையை யுடைய கொடிய பூதவீரர்களது மலைகளையொத்த கால்களே வலிமைமிக்க குழவியாகவும், புரண்டொழுகுகின்ற உதிரமே நீராகவும் உயிர்நீங்கிய அவுணவீரர்களது தேகத்தை அரைத்தாற்போல நடக்கவும், எதிர்த்தவர்களாகிய அசுரர்களும் கொல்லுகின்ற போர் செய்தார்கள்.—எ-று. (சஅ)

தத்துறு புரவித் திண்டேர்த் தானவர் நிகளத் தந்தி
பத்துநா றென்றில் வீழப் பழுமரப் பணைகொண் டெற்றி
முத்தலை யெஃகம் வீசி முசலத்திற் புடைத்து மொய்ம்பாற்
குத்திநின் றழக்கிப் பாய்ந்து கொன்றனர் பூத வீரர்.

(இ-ள்.) தாவிச் செல்லுகின்ற குதிரைபூட்டிய தேரினையுடைய அவுணவீரர்களது சங்கிலி பூட்டப்பட்ட ஆயிரம் யானைகள் ஒருமிக்க விழும்படி ஆலமரத்தின் கிளைகளைக்கொண்டடித்தும், முத்தலைச்சூலங்களை யெறிந்தும், இருப்புலக்கையினலடித்தும் தோள்களால் குத்தி நின்று கலக்கிப்பாய்ந்தும் பூதவீரர்கள் கொன்றார்கள்.

விழுந்தன படிவம் யாண்டும் விரிந்தன கவந்த மேன்மே
லெழுந்தன குருதித் தாரை யீர்த்தன நீத்த மாக்
வழுந்திய விறந்தோர் யாக்கை யார்த்தன பறவை செய்ய
கொழுந்தசை மிசைந்து நின்று குரவையாட் டயர்ந்த கூளி.

(இ-ள்.) இறந்து விழுந்தனவாகிய உடம்புகள் எங்கும் பரவிக் கிடந்தன. கவந்தங்கள் கிளம்பிக் கிளம்பிக்குதித்தன. உதிரப்பெருக்குகள் இறந்து அழுந்திக்கிடந்தவர்களது சரீரத்தைப்பெருவெள்ளமாகி இழுத்தன. பறவைகள் இரைச்சலிட்டன. பேய்கள் சிவந்த கொழுவிய தசைகளையுண்டு நின்று கைகோத்தாடின.—எ-று. (ருo)

கண்டன னினைய தன்மை தாரகன் கடிய சீற்றங்
கொண்டனன் வைய நீங்கிக் குவலய மிசைக்குப் புற்றுத்
தண்டமொன் றெடுத்துப் பூதப் படையினைத் தரையில் வீட்டி
யண்டமுங் குலுங்க வார்த்திட் டடிகளா லழக்கிச் சென்றான்.

(இ-ள்.) தாரகாசுரன் இவ்வாருகிய தன்மையைப் பார்த்துக் கொடிய கோபத்தை யடைந்து இரதத்தினின்று நீங்கிப் பூமியில் குதித்து ஒரு தண்டாயுதத்தைக் கையிலெடுத்துப் பூதச்சேனைகளைப் பூமியில்விழும்படிகொன்று அண்டமுங் குலுங்கும்படி யாரவாரித்துக் கால்களா லுதைத்துக்கொண்டு சென்றனன்.—எ-று. (ருக)

அல்லெனப் பட்டமேனி யவுணர்கட் கரசன் கையிற்
கல்லெனப் பட்ட தண்டாற் புடைத்தலுங் கரங்கள் சென்னி
பல்லெனப் பட்ட சிந்திப் பாய்புன லொழுக்கிற் சாய்ந்த
புல்லெனப் பட்ட தம்மா பூதர்தஞ் சேனை யெல்லாம்.

(இ-ள்.) இருள்போலுங் கரிய தேகத்தினையுடைய அவுணராஜனுகிய தாரகன்தனது கையிலுள்ள 'மலைபோன்ற தண்டாயுதத்தினுல் அடிக்கவும் கொடிய பூதப்படைக ளனைத்தும், கைகளும் தலைகளும், பற்களும் இழந்து வேகமாயோடுகின்ற நீரோட்டத்தி னெதிரி லகப்பட்டுச் சாய்ந்த புல்லைப் போன்றன.—எ-று. (ருஉ)

பிடித்திடு வயிரத் தண்டம் பெருங் கடற் பூத வெள்ள
முடித்திடல் புகழோ வன்ருற் ருரக மொய்ம்பின் மேலோ
னடித்திடுங் காலை கீண்ட தம்புவி யடிப்பா னோங்கி
யெடுத்திடுங் காலை கீண்ட தெண்டிசை யண்டச் சூழல்.

(இ-ள்.) பராக்கிரமத்தையுடைய தாரகாசுரன் கையில் பிடித்துள்ள வயிரத்தண்டமானது பெரிய கடல்போன்ற பூதச்சேனைகளை யழித்தல் அதற்கொரு புகழாகுமோ? அவ்வசுரன் அடிக்கும்பொழுது பூமி பிளந்தது, அடிக்கும்படி ஓங்கி யெடுக்கும்பொழுது அண்டகோளத்தின் எட்டுத் திக்குகளும் பிளந்தன.—எ-று. (ருரு)

தாரிடங் கொண்ட மார்பத் தாரகன் வயிரத் தண்டம்
போரிடங் கொண்டோர் சென்னி புயமுரங் கரங்கள் சிந்திக்
காருடங் கண்ட பாந்தட் கணமெனத் துடிப்ப வீட்டிப்
பாரிடந் தன்னை யெல்லாம் பாரிட மாக்கிற் றம்மா.

(இ-ள்.) மாலையையணிந்த மார்பினையுடைய தாரகாசுரன் ஏந்திய வயிரத்தண்டமானது (எதிர்த்துப்) போர்செய்தவர்களது புயம் மார்பு கரம் முதலியவைகளைச் சிதறிக் கருடனைக் கண்ட சர்ப்பக்கூட்டங்களைப் போலத் துடிக்கும்படி கொன்று பூதச்சேனைகளைப் பூமியில் தள்ளியது.—எ-று. (ருச)

அன்றரி விடுத்த வாழி யாரமா வணிந்த தீயோன்
கொன்றன னனிக மென்னுங் கொள்கையு மவன்மேற் செல்லும்
வன்றிற றம்பா லில்லா வண்ணமு மதித்து நோக்கி
நின்றிலர் பூதர் வேந்தர் நெஞ்சழிந் துடைந்து போனுர்.

(இ-ள்.) முற்காலத்தில் திருமால் விட்ட சக்கரத்தை ஆரமாகவணிந்த கொடியவனுகிய தாரகன் சேனைகளனைத்தையுங் கொன்ற தன்மையும், அவன்மீது எதிர்த்து நின்று போர்செய்தற்குத் தங்களுக்குச் சத்தியில்லாமையும் ஆலோசித்துப் பார்த்துப் பூதகணத்தலைவர்கள் எதிர்த்து நிற்கமாட்டாதவர்களாய் மனவலி கெட்டுத் தோற்றுப்போனுர்கள்.—எ-று. (ருரு)

திண்கண நிரையின் வேந்தர் சிந்துழிச் சீற்றந் தூண்ட
வெண்கண மாகி யுள்ள விலக்கருஞ் சிலகா லூன்றி
மண்கணை முழவம் விம்ம வயிரெழுந் திசைப்ப வாங்கி
யொண்கணை மாரி தூவி யவுணனை யொல்லை சூழ்ந்தார்.

(இ-ள்.) வல்லமைபொருந்திய பூதசேனைத்தலைவர்கள் தோற்றோடும் பொழுது கோபமதிகரிக்க மதிக்கத்தக்க கூட்டமாயிருந்த இலக்ஷம் வீரர்களும் விற்களைக் கால்களில் மாட்டிவளைத்து மத்தளமுதலிய வாத்தியங்கள் முழங்கவும், ஊதுகொம்புகள் சப்திக்கவும் சிறந்த பாணவருஷங்களைப் பிரயோகித்துத் தாரகாசுரனைச் சூழ்ந்துகொண்டார்கள்.—எ-று. (௫௬)

சூழ்ந்தனர் துரந்த வாளி தோன்முகத் தவுணன் யாக்கை
போழ்ந்தில வூறதேனும் புணர்த்தில புன்மை யாகித்
தாழ்ந்திடு நிரப்பின் மேலோ னொருமகன் றலைமை தாங்கி
வாழ்ந்தவர் தமக்குச் சொல்லுஞ் சொல்லென வறிது மீண்ட.

(இ-ள்.) இலக்ஷம் வீரர்களும் சூழ்ந்து கொண்டு பிரயோகித்தபாணங்கள் யானைமுகத்தினையுடைய தாரகாசுரனது சரீரத்தைப் பிளக்காமலும்யாதொரு இடையூறு செய்யாமலும் இழிவுபொருந்தித் தாழ்வடைந்துள்ள தரித்திரத்திற் சிறந்த ஒருவன் மேன்மைபெற்றுச் செல்வத்துடன் வாழ்கின்றவர்களிடத்தில் சென்று சொல்லுகின்ற சொற்களைப்போலப் பிரயோசனமற்றுத்திரும்பின.—எ-று. (௫௭)

தரைபடப் புகழ்வைத் துள்ள தாரகன் றடமார் பத்தைப்
புரைபடச் செய்தி டாது பொள்ளெனப் பட்டு மீண்டு
நிரைபடத் திறலோ ருய்த்த நெடுங்கணை யான வெல்லாம்
வரைபடச் சிதறுங் கல்லின் மாரிபோ லான வன்றே.

(இ-ள்.) நிலவுலகத்தில் தனது புகழை நிலைநிறுத்திய தாரகாசுரனது பெரிய மார்பினைத்துளைபடுத்தாமல் வரிசையாக வீரர்களால் விடப்பட்ட பெரிய பாணங்களெல்லாம் விரைவிற்பட்டுத்திரும்பி மலையில்பட்டுச் சிதறுகின்ற கல்மழைபோலாயின.—எ-று. (௫௮)

விடுகணை மாரி யாவு மீண்டிட வெகுண்டு விண்ணோர்
படைமுறை வழங்கி நிற்பப் பதகன்மே லவைக ளெய்தா
வுடையதம் வலியுஞ்சிந்தி யொல்லென மறிந்து செல்லக்
கடவுள ரதனை நோக்கிக் கரங்குலைத் திரங்க லுற்றார்.

(இ-ள்.) வீரர்கள் விடுகின்ற பாணவருஷங்களனைத்தும் திரும்பிவிடவும், இலக்ஷம் வீரர்களுங் கோபங்கொண்டு தேவாஸ்திரங்களை வரிசையாக விட்டார்கள், பாவியாகிய தாரகாசுரன்மேல் அப்பாணங்கள் சென்றுபட்டுத் தமது வலிகெட்டு விரைவில் திரும்பிச்செல்லவும், அதனைக்கண்ட தேவர்கள் தங்கள் கரங்களை விரித்து விசனமடைந்தார்கள்.—எ-று. (௫௯)

மற்றது காலை தன்னில் வலியினன் வயிரத் தண்டஞ்
சுற்றினன் றற்சூழ் கின்ற சுடர்மணிக் கடுமான் றேர்க
ளெற்றினன் புழைக்கை நீட்டி யிலக்கர்தந் தொகையும் வாரிப்
பொற்றனு வோடும் வீழப் புணரியின் மீது விட்டான்.

(இ-ள்.) அந்தச் சமயத்தில், வலிமைபொருந்திய தாரகாசுரன் வச்சிரதண்டத்தைச் சுழற்றித்தனக்குச் சுற்றிலுமுள்ள ஒளிபொருந்திய இரத்தினங்களிழைக்கப்பட்டதாய் வேகமாயோடுகின்ற குதிரைகள் பூட்டிய இரதங்களை யுடைத்தனன். பின்பு துதிக்கையை நீட்டி இலக்ஷம் வீரர்களையும் வாரி அவர்களது அழகியவிற்களுடன் சமுத்திரத்தில் விழும்படி வீசியெறிந்தனன்.—எ-று. (௬0)

துளும்பிய வளக்கர் தன்னிற் சூழுற நின்ற தெங்கின்
வளம்படு பழுக்காய் வர்க்க மாருத மெறியச் சிந்திக்

குளம்புகு தன்மை யென்ன வீழ்தரு கொற்ற வீர
ரிளம்பிறை புரையும் வில்லோ டெழுந்தொரு புடையிற் போனார்.

(இ-ள்.) கரையிற் சூழ்ந்து நிற்கின்ற தென்னமரத்தினது வளப்பம் பொருந்திய பழுத்த தேங்காய்க் கூட்டங்கள் காற்றுவீசுதலால் சிதறிக்குளத்தில் விழுகின்ற தன்மையைப்போல, அலைவீசுகின்ற கடலில் விழுந்த வெற்றிபொருந்திய வீரர்கள் இளம்பிறையையொத்தவிற்களுடன் கரையேறி யொருபுறஞ்சென்றார்கள்.—எ-று.(சுக)

கொற்றவி லுழவன் வீர கோளரி யதனை நோக்கிச்
செற்றமொ டேகிச் செவ்வேள் சேவடி மனத்துட் கொண்டு
பற்றிய தனுவை வாங்கிப் பகழிநூ றுய்த்துத் தீயோன்
பொற்றட மவுலி தள்ளிப் புணரியு நாண வார்த்தான்.

(இ-ள்.) வெற்றிபொருந்திய வில்வீரனாகிய வீரகோளரி அதனைப்பார்த்துக் கோபத்துடன் சென்று குமாரக்கடவுளது திருவடிகளை மனதில் தியானித்துக்கொண்டு தமது கையிற்பிடித்த வில்லை வளைத்து நூறுபாணங்களைவிட்டுக் கொடியவனாகிய தாரகனது பொன்னாலாகிய பெரிய மகுடத்தை வீழ்த்திக் கடலொலியும் பின்னிடும்படிக் கர்ச்சித்தான்.—எ-று. (சுஉ)

ஆர்த்திடு மோதை கேளா வண்டர்க ளனையன் மீது
தூர்த்தனர் மலரின் மாரி தோன்முக னதனைக் காணு
வேர்த்தனன் மான முற்றான் வீரகே சரிமே லங்கைத்
தார்த்தடந் தண்ட முய்த்துத் தனதுமான் றேறிற் சென்றான்.

(இ-ள்.) அவ்வாறுகர்ச்சித்த ஆரவாரத்தைக்கேட்டு தேவர்கள் அவ்வீரகோளரியின்மீது புஷ்பவருஷம்பெய்தார்கள்; அதனைத்தாரகாசுரன்பார்த்து உடல்வேர்த்து வெட்கமுற்றவனாய் வீரகோளரியின்மீது தனது கையிலிருந்த மாலையணிந்த பெரிய வச்சிரதண்டத்தைவிட்டுக் குதிரைகள்பூட்டிய தனது தேரின்மீது போய் ஏறிக்கொண்டான்.—எ-று. (சுங)

வேறு.

சென்றோர் மாமுடி புனைவுழித் தண்டமத் திறலோன்
மன்றன் மார்பகம் படுதலும் வீழ்ந்தனன் மயங்கி
வென்றி மொய்ம்புடை யாண்டகை யதுகண்டு வெகுண்டு
குன்ற மன்னதோட் டாரக னொடுபொரக் குறித்தான்.

(இ-ள்.) தாரகன் போய் ஓர் பெரிய மகுடத்தை யணிந்துகொள்ளும்பொழுது அவன்விடுத்த வச்சிரதண்டமானது அவ்வீரகோளரியின் மணம்பொருந்திய மார்பிற்றாக்குதலும் மயங்கி வீழ்ந்தனன். அப்படி மயங்கி வீழ்ந்ததனை வீரவாகுத்தேவர் பார்த்துக் கோபங்கொண்டு மலைபோன்ற தோளினையுடைய தாரகனுடன் போர்செய்தற்கு நினைத்தார்.—எ-று. (சுச)

வேறு.

குறித்தேவிறற் புயன்றாரகக் கொடியோனெதிர் குறுகி
வெறித்தேன்மலர்த் தொடைதூங்குதன் விறற்கார்முகங் குனியாப்
பொறித்தேயுறு கனல்வாளிகள் பொழிந்தேயவன் புரத்திற்
செறித்தேயுற வளைத்தானொரு சிலைதானவர் தலைவன்.

(இ-ள்.) வீரவாகுத்தேவர் போர்செய்யக் கருதிக் கொடியவனாகிய தாரகாசுரனுக்கு எதிரிலடைந்து மணம் பொருந்திய தேன்நிறைந்த மலர்மாலை தொங்குகின்ற தமது வலிய வில்லை வளைத்து அக்கினியாஸ்திரங்களைப் பூட்டிப் பிரயோகித்து

அத்தாரகனது தேகத்தில் தைக்கும்படி செலுத்திநிற்கவும் அசுரராஜனுகிய தாரகன் ஒருவில்லையெடுத்து வளைத்தனன்.—எ-று. (சுரு)

பொழிந்தான்சர மழைநம்மவன் புரமேலது பொழுதி
னிழிந்தான்சிலை யுயர்ந்தான்கணை யீரெழுதொட் டிறுப்ப
வழிந்தாயெனை யெதிர்ந்தாயிதற் கையமிலை யென்று
மொழிந்தானெரு சூலந்தனை மொய்ம்பிற்செல வுய்த்தான்.

(இ-ள்.) வீரவாகுத்தேவரது சரீரத்தில் தாக்கும்படி பாணவருஷங்களைப் பிரயோகித்தான். அப்பொழுது வீரவாகுத்தேவர் தாரகாசுரனது வில்லைப் பதினன்கு பாணங்களைவிட்டு ஒடிக்கவும் (அத்தாரகன்) நீ என்னேடு எதிர்த்தமையால் அழிந்தனை, இதற்குச் சந்தேகமில்லையென்று கூறி ஒரு சூலத்தை யெடுத்து வலிவோடும் வீரவாகுத்தேவர்மீது தாக்கும்படி விடுத்தனன்.—எ-று. (சுசு)

பொருமூவிலை வேலங்கவன் பொன்மார்புறப் பொருமிப்
பெருமோகமொ டேநின்றிடப் பின்னங்கது காணு
வுருமேறென வதிர்தாரக னுடனேயவன் றுணையாய்
வருமூவரு மொருநால்வரு மாறுற்றம ரிழைத்தார்.

(இ-ள்.) போர் செய்தற்குரிய திரிசூலமானது அவ்வீரவாகுத்தேவரது மார்பிற் பட்டவுடனே (அவர்) விம்முதலுற்று மிகுந்தமயக்கத்துடன்நிற்கவும், பின்பு அதனைப் பார்த்து இடியேறுபோலக் கர்ச்சித்து நின்ற தாரகாசுரனேடு அவ்வீரவாகுத்தேவருக்குத் தம்பியர்களாயுள்ள ஏழு வீரர்களும் பகைத்துப் போர்செய்தார்கள்.—எ-று.

அமரர்செய்திடு மெழுவீரரு மவுணன்றனக் குடையக்
குமரன்பதந் தலைக்கொண்டிடுங் கோமானது காணு
வெமர்மற்றிவ ரெல்லோர்களு மிரிந்தார்பொரு தென்னுச்
சமர்முற்றிட வருதாரகத் தருவன்முன மடைந்தான்.

(இ-ள்.) அவ்வாறு போர்செய்த ஏழு வீரர்களும் தாரகாசுரனுக்குத் தோற்கவும், குமாரக்கடவுளது திருவடிகளைச் சிரசிற்கொண்டு வணங்குகின்ற வீரவாகுத்தேவர் அதனைப்பார்த்துப் போர்செய்து எம்மவர்களாயுள்ள இவர்களெல்லாம் தோல்வியுற்ருர்களென்று நினைத்துப் போர்முடியும்படி எதிர்த்துத் தாரகாசுரனுக்கு முன்னே சென்றனர்.—எ-று. (சுஅ)

ஒருகார்முக மிருகால்வளை வுறவேகுனித் துகுதே
னருகாதொழு கியதன்மையி னவிர்நாணெலி யெடுப்பத்
திருகாநெடு வரையானவுந் தெருமந்தன வவுண
ரிருகாதையு நனிபொத்தின ரேங்குற்றன ரிரிவார்.

(இ-ள்.) ஒப்பற்ற வில்லினை இருநுனிகளும் வளையும்படி வளைத்து, இடைவிடாது தேனெழுகுகின்ற தன்மையைப்போல விளங்குகின்ற நாணெலி யுண்டாக்கவும், மாறுபடாத பெரிய மலைகளும் சுழன்றன. அசுரர்கள் இரண்டு காதுகளையும் மிகவும் பொத்திக்கொண்டு ஏக்கமுற்றவர்களாக வோடினர்கள்.—எ-று. (சுகூ)

நாண்கொண்டிடு மொலிகேட்டலு நடுங்காவெரு வுற்ருர்
பூண்கொண்டிடு சிலைவாங்கலு மகிழ்வுற்றிடு புலவோர்
சேண்கொண்டிடு முகில்வேண்டின ரதுவந்திடச் சிறந்தே
மாண்கொண்டத னுருமுச்செல மயங்கித்தளர் வதுபோல்.

(இ-ள்.) வானத்தி லுலாவுகின்ற மேகத்தின்வரவை விரும்பினவர்கள் அம்மேகம் வந்தவுடன் சந்தோஷித்துப் பின்பு அதனது மாட்சிமைபொருந்திய இடியொலிதோன்ற மயக்கமுற்று வருந்துவதைப்போல வீரவாகுத்தேவரது பூண்கட்டியுள்ள வில்லை வளைக்கவும், அதனை நோக்கி மகிழ்ச்சியடைந்த தேவர்கள் அவ்வின்னாணியிற்பொருந்திய சத்தத்தைக் கேட்டவுடனே நடுங்கிப் பயந்தார்கள்.—எ-று. (எ0)

வேறு.

மேதா வியர்கள் பரவுந்திறல் வீரவாகு
மாதாரு வன்ன சிலைதன்னை வளைத்து வாகைத்
தாதார் பிணையல் புனைதாரகன் றன்னை நோக்கித்
தீதா மழல்போல் வெகுண்டேயிது செப்பு கின்றான்.

(இ-ள்) விவேகிகள் புகழ்கின்ற சாமர்த்தியத்தினையுடைய வீரவாகுத்தேவர் பெரியமரம்போன்றவில்லைவளைத்து மகரந்தம்பொருந்திய வெற்றிமாலை யணிந்துள்ள தாரகனைப் பார்த்து கொடிய அக்கினியைப்போலக் கோபித்து இதனைக் கூறுகின்றார்.—எ-று. (எக)

பொன்றா வலிகொண் டமராடிய பூதர் தம்மை
வன்றாழ் சிலைகொண் டிடுவீரரை வன்மை தன்னால்
வென்றா மெனவுன் னினைபோலும் விரைந்து நின்னைக்
கொன்றாவி யுண்ப னெனலுங்கொடி யோனு ரைப்பான்.

(இ-ள்.) கெடாத வலிமையைப்பெற்றுப் போர்செய்த பூதங்களையும் பலம்பொருந்திய வளைத்த வில்லினையுடைய வீரர்களையும் உனது பராக்கிரமத்தினால் செயித்தோமென்று நினைத்தனைபோலும்; உன்னை விரைவாகக் கொன்று உனதுயிரையுண்பேனென்று (வீரவாகுத் தேவர்) கூறவும், கொடியவனாகிய தாரகாசுரன் சொல்லுவானாயினான்.—எ-று. (எஉ)

மாயன் றனைவென் றவனேமியை மாசில் கண்டத்
தேயும் படியே புனைந்தேன்வலி யெண்ணா றாதே
நீயிங் கடுவா மெனக்கூறினை நீடு மாற்றஞ்
சீயந் தனையு நரிவெல்வது திண்ண மாமோ.

(இ-ள்.) திருமாலைவென்று அவன்விடுத்த சக்கரத்தைக் குற்றமற்ற கண்டத்திற் பொருந்தும்படி அணிந்தவனாகிய எனது வல்லமையைச் சிறிதும் எண்ணாமல் நீ இங்கு என்னைக்கொல்வேனென்று வீரங்கூறினை. ஒருநரியானது சிங்கத்தைச் செயிப்பது உறுதியாகுமோ (ஆகாது).—எ-று. (எ௩)

சாருங் குறள்வெம் படையாவையுஞ் சாய்ந்த வீர
ராருந் தொலைவுற் றனர்நீயு மயர்ந்து நின்றாய்
வீரம் புகல்வாய் விளிகின்ற விளக்க நேர்வாய்
பாரென் வலியா லுனதாவி படுப்ப னென்றான்.

(இ-ள்.) போர்செய்யும்படிவந்த கொடிய பூதப்படைகளனைத்து மழிந்தன. வீரர்களனைவருந் தொலைந்தார்கள். நீயும் சோர்ந்துநின்றனை. சௌரியம் பேசுகின்றவனே! நீ அவிகின்ற தீபத்தையொப்பாய்; எனது வல்லமையினால் உனதுயிரைக்கொன்றுவிடுவேன் பார் என்று கூறினான்.—எ-று. (எச)

என்னுந் துணையிற் சரமாயிர மேந்த லுய்ப்பத்
தன்னங் கையிலோர் சிலைவாங்கினன் றூர கப்பேர்

மன்னன் கடிது கணையாயிர மாறு தூண்டிச்
சின்னம் புரிந்து கணைநூறு செலுத்தி ஞனல்.

(இ-ள்.) என்று சொன்ன பொழுதில், வீரவாகுத்தேவர் ஆயிரம் பாணங்களைப் பிரயோகிக்க, தாரகாசுரன் தனது கையில் ஒருவில்லையெடுத்து அதற்கு மாருக ஆயிரம்பாணங்களை விரைவாகப்பிரயோகித்து (அவர்விடுத்த) பாணங்களையழித்துப் பின்பு நூறு பாணங்களைப் பிரயோகித்தான்.—எ-று. (எரு)

எவ்வக் கொடியோன் ஹெடுவாளியை யேந்தல் காணு
வவ்வக் கணைகள் விடுத்தேயவை முற்று மாற்றக்
கைவிற் கொருவ னிவனுகுமிக் காளை தன்னைத்
தெய்வப் படையான் முடிப்பேனெனச் சிந்தை செய்தான்.

(இ-ள்.) குற்றம்பொருந்திய கொடியவனுகிய தாரகாசுரன் பிரயோகித்த பாணங்களை வீரவாகுத்தேவர் பார்த்து அததற்குரிய பாணங்களை விடுத்து அப்பாணங்களனைத்தையுமழிக்கவும், (தாரகாசுரனைவன்) கையிற்பொருந்திய விற்போருக்கு ஒப்பற்றவனுயுள்ள இவ்வீரனைத் தேவாஸ்திரங்களால் கொல்லுவே னென்று தன்மனத்தி லெண்ணினுன்.—எ-று. (எசு)

வேறு.

வெங்கனற்படை தாரகன்விட வீரவாகு வெகுண்டுபின்
செங்கனற்படை யேவியன்னது சிந்தவேவரு ணப்படை
யங்கணுய்த்திட வவுணர்கோம னடுபுனற்கிறை படையினைத்
துங்கமுற்றிய வீரனுய்த்தது துண்டமாம்வகை கண்டனன்.

(இ-ள்.) தாரகாசுரன் கொடிய அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகிக்க வீரவாகுத்தேவர் தாமுங் கோபித்துப் பின்பு செவ்விய அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து அதனையழிக்கவும், அசுரராஜனுகிய தாரகன் வருணுஸ்திரத்தைப் பிரயோகிக்க உடனே உயர்வுபொருந்திய வீரவாகுத்தேவர் வருணுஸ்திரத்தை விடுத்து அதனைத் துண்டித்தனர்.—எ-று. (எஎ)

இரவிதன்படை யவுணன்விட்டன னிவனுமப்படை யேவியே
விரைவிலன்னது தொலைவுகண்டனன் வீரமேதகு தாரக
னுரமிகுந்தனி யூதைவெம்படை யுந்தினனது கந்தவே
ளருண்மிகுந்தனி யடியன்மாற்றின னனையதொல்படை தனைவிடா.

(இ-ள்.) தாரகாசுரன் சூரியாஸ்திரத்தைப்பிரயோகித்தனன், வீரவாகுத்தேவரும் அந்தச் சூரியாஸ்திரத்தையே பிரயோகித்து அந்தப் பாணத்தை விரைவிலழித்தனர். உடனே வீரம் பொருந்திய தாரகன் மிகுந்த வல்லமையையுடைய ஒப்பற்ற வாயுவாஸ்திரத்தைப் பிரயோகித்தான், அந்த வாயுவாஸ்திரத்தையே முருகக்கடவுளது திருவருள் நிரம்பப்பெற்ற ஒப்பற்ற மெய்யன்பராகிய வீரவாகுத் தேவர் விட்டு அழித்தனர்.—எ-று. (எஅ)

அனிலவெம்படை வீறழிந்திட வவுணர்கோமக னம்புயன்
றனதுதொல்படை யேவினனது தணிவில்செற்றமொ டேகலும்
வனைகருங்கழல் வீரவாகுவு மற்றவன்படை தூண்டியே
நினையுமுன்னது தொலையுசெய்தன னிகரில்வானவர் புகழவே.

(இ-ள்.) கொடிய வாயுவாஸ்திரமானது வலிகெடும்படி தாரகாசுரன் பழைமையாகிய பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அந்தப் பிரமாஸ்திரமானது மிகுந்த

கோபத்துடன்வரவும், பெரிய வீரக்கழலையணிந்த வீரவாகுத் தேவரும்ஒப்பற்ற தேவர்கள் புகழும்படி அந்தப் பிரமாஸ்திரத்தையே விட்டு நினைக்கு முன்னமே அதனை யழித்தனர்.—எ-று. (எகூ)

ஆயதன்மைகள் கண்டுதாரக னற்புதத்தின ளுகியே
மேபவானவர் படைகள்யாவையும் வீரன்மற்றிவன் வென்றனன்
மாயநீர்மையி னிங்கிவன்றிறல் வன்மைகொள்ளுது மினியெனுத்
தீயபுந்தியி லினையவாறு தெரிந்துசிந்தனை செய்துமேல்.

(இ-ள்.) தாரகாசுரன் அவ்வாருகிய தன்மையைப்பார்த்து ஆச்சரியமடைந்தவனுய் நம்மிடத்திற் பொருந்திய தேவாஸ்திரங்களை யெல்லாம் வீரனுகிய இவன் செயித்து விட்டனன்; ஆதலால் இனி மாயவித்தையினுல் இவ்விடத்தில் இவனது வலிய பராக்கிரமத்தை யழிப்போமென்று தனது கொடியமனத்தில் இவ்வாறுணர்ந்து சிந்தித்துப் பின்பு.—எ-று.

இதுமுதல் மூன்று பாடலுங் குளகம். (அ0)

தொல்லைமாயையின் விஞ்சைதன்னை நவின்றுளங்கொடு துண்ணென
மல்லன்மேவரு தாரகாசுரன் வடிவமெண்ணில தாங்கியே
யெல்லைதீர்தரு படைவழங்கின னெங்குமாகி யிருட்குழா
மொல்லைவந்து பரந்தபோலவ னொருவனின்றமர் புரியவே.

(இ-ள்.) வளப்பமிக்க தாரகாசுரன் பழைமையாகிய மாயைக்குரிய மந்திரத்தை மனத்தில் செபித்து விரைவாக அளவற்ற வடிவங்களைக் கொண்டு இருட்கூட்டங்கள் விரைந்துவந்து எவ்விடத்தும் பரவிய தன்மையைப்போல அளவற்ற பாணங்களைவிட்டுத் தானொருவனே நின்று போர்செய்யவும்.—எ-று. (அக)

கண்டுமற்றது வானுளோர்கள் கலங்கியேங்கினர் முன்னரே
விண்டுநீளிடை நின்றபூதர் வெருண்டுபின்னரு மோடினுர்
மண்டுபேரமர் செய்தயர்ந்திடு மானவீரரு மச்சமேல்
கொண்டுநின்றனர் முறுவல்செய்தனர் குணலையிட்டன ரவுணரே.

(இ-ள்.) அதனைத் தேவர்கள் பார்த்து மனங்கலங்கி வருந்தினுர்கள்; முன்னமே விலகியோடி நெடுந்தூரத்தில் நின்ற பூதர்கள் பின்னும் வெருண்டு ஓடினுர்கள். நெருங்கிய பெரும்போர்செய்து சோர்ந்திருக்கின்ற பெருமைபொருந்திய எட்டுவீரர்களும் அச்சங்கொண்டு நின்ருர்கள். (இதனைப் பார்த்த) அவுணர்கள் சிரித்துக் குணலைக்கூத்தாடினுர்கள்.—எ-று.

குணலை என்பது ஒருவகைக் கூத்து. (அஉ)

வேறு.

தாரகப்பெய ரவுணர்கோன் மாயையின் சமரு
மாருமச்சுறு கின்றது மாடன்மொய்ம் புடையோன்
பேரழற்பொறி கதுவுற நோக்கியே பிறங்கும்
வீரபத்திர னெடும்படை யெடுத்தனன் விடுவான்.

(இ-ள்.) தாரகனென்னும் பெயரையுடைய அசுரராஜனது மாயப்போரும், அப்போரைநோக்கி யாரும் அஞ்சுகின்றதுமாகிய தன்மையை,வீரவாகுத்தேவர் தமது கண்களில் மிகுந்த தீப்பொறியுண்டாகப் பார்த்து அவன்மீது பிரயோகிக்கும்படி விளங்குகின்ற பெரிய வீரபத்திராஸ்திரத்தையெடுத்தனர்.—எ-று. (அரு)

துங்க வுக்கிரச் சிம்புண்மாப் படையினைத் தூயோன்
செங்கை பற்றலு மன்னது தாரகன் செயலா
லங்க ணின்றிடு மாயைகண் டச்சமுற் றழுங்கிப்
பொங்கு பானுமுன் னிருளென முடிந்ததப் பொழுதே.

(இ-ள்.) வீரவாகுத்தேவர் மிகுந்த உக்கிரத்தையுடைய (வீரபத்திராஸ்திரமாகிய) சரபாஸ்திரத்தைத் தமதுகையிலெடுக்கவும், அத்தன்மையை தாரகாசுரனதுசெய்கையினால் அங்குப்பொருந்தியிருந்த மாயையானது கண்டு அச்சங்கொண்டு வருந்தி, மிகுந்த (கிரணங்களையுடைய) சூரியனைக்கண்ட இருள்போல உடனே யழிந்தது. ( )

தன்பு ணர்ப்புறு மாயைதா னுடையதலுந் தமியாய்
முன்பு நின்றமே தோர் தாரகன் மொய்ம்புளான் றன்னைப்
பின்பு மாயையிற் படுத்தமே வோர் சூழ்ச்சியைப் பிடித்து
மின்பொ லிந்ததன் றேரைவிட் டோடினன் விரைவில்.

(இ-ள்.) தனது செய்கையினாலுண்டாகிய மாயையானது அழியவும் தனியனாக முன்னே நின்ற தாரகாசுரன் பின்பு, வீரவாகுத்தேவரைத் தனது மாயைக்குள்ளாக்கும்பொருட்டு ஒரு உபாயத்தைக் கருதி விரைவாக மின்போல் விளங்குகின்ற தனது இரதத்தைவிட்டு ஓடிப்போயினான்.—எ-று. (அரு)

தார கன்றொலைந் தோடலுந் தனக்கிணை யில்லோன்
போர ழிந்துவென் னிட்டவன் றன்மிசைப் புத்தேள்
வீர வெம்படை விடுப்பது வீரமன் றென்னாச்
சீரி தாகிய தூணியு ளன்னதைச் செறித்தான்.

(இ-ள்.) தாரகாசுரன் நீங்கியோடவும், தமக்கொருவரு மிணையில்லாதவராகிய வீரவாகுத்தேவர் போரில் தோற்றுப் புறங்கொடுத்தோடினவன்மீது வலிமைபொருந்திய வீரபத்திராஸ்திரத்தைப் பிரயோகிப்பது வீரமல்லவென்று கருதி அதனைச் சிறப்புப் பொருந்திய அம்பறாத்தூணியில் வைத்தனர்.—எ-று. (அசு)

அற்ற போர்வலித் தாரகன் பின்விரைந் தணுகிப்
பற்றி நாண்கொடு புயந்தனைப் பிணித்தெனைப் பணித்த
கொற்ற வேலன்மு னுய்க்குவன் யானெனக் குறித்து
மற்ற வன்றனைத் தொடர்ந்தன னெடுந்திறல் வாகு.

(இ-ள்.) மிக்க வல்லமையையுடைய வீரவாகுத்தேவர் போரில் வலியற்றவனாகிய தாரகாசுரன் பின்னே விரைவாகச் சென்று அவனைப்பிடித்து வில்நாணினைக் கொண்டு அவனது புயத்தைக் கட்டி என்னை யனுப்பியருளிய வெற்றிபொருந்திய முருகப்பெருமான் முன்னே கொண்டுபோய்ச் சேர்ப்பேனென்று நினைத்து அவனை பின்றொடர்ந்து சென்றனர்.—எ-று. (அஎ)

வேழ மாமுகற் கிளவலை யுன்னியே வீர
னாழி மால்கட லாமென வார்த்துவை தணுகச்
சூழு மாயையி னிருக்கையாந் தொல்கிர வுஞ்சப்
பாழி யொன்றுசென் றொளித்தனன் றாரகப் பதகன்.

(இ-ள்.) வீரவாகுத்தேவர் விநாயகமூர்த்திக்கு இளையவராகிய முருகக்கடவுளைச் சிந்தித்துக்கொண்டு வட்டமாகிய பெரிய கடலைப்போல ஆரவாரித்து வைதுகொண்டு அவன்பின்னே செல்லவும். சூழ்ந்துள்ள மாயையின் வாசஸ்தானமாகிய பழைய கிரவுஞ்சகிரியின் ஒரு குகையில் பாவியாகிய தாரகாசுரன் ஓடியொளித்தனன்

முன்ன மங்கவன் போகிய பூழையுண் முடுகிப்
பொன்னின் வாகையந் தோளுடை யாண்டகை புகலு
மன்ன தோர்வரை யகமெலா மாயிரங் கதிரின்
மன்ன னேகுறு விருணிலம் போன்றுவை கியதே.

(இ-ள்.) முன்னே தாரகாசுரன்ஓடியொளித்தகுகைக்குள்ளே பொன்போல் விளங்குகின்ற வெற்றிபொருந்திய தோட்களையுடைய வீரவாகுத்தேவர் விரைவாகச் செல்லவும், தாம் சென்ற அம்மலையினிடங்களெல்லாம் சூரியப்பிரகாசமில்லாத இருளுலகம் போன்றிருந்தன.—எ-று. (௯)

நீளு மாவிருள் படர்தலுஞ் சில்லிடை நெறியாற்
றாளி னெற்றியே படர்ந்தனன் றாரகற் காணா
னாளி மொய்ம்புடை மேலையோ னடுக்கலின் புணர்ப்பான்
மீளு கின்றதோர் நெறியையுங் கண்டிலன் வெகுண்டான்.

(இ-ள்.) மிகப் பெரிய விருளானது பரவியிருந்தமையால் சிலவிடங்களில் காலினால் தடவிக்கொண்டு வழிபிடித்துச்சென்று தாரகாசுரனைக் காணாதவராய், அம்மலையின் வஞ்சனையினால் திரும்பிவரும் வழியையுங் காணாமல் யாளிபோலும் பராக்கிரமத்தினையுடைய வீரவாகுத்தேவர் கோபமடைந்தனர்.—எ-று. (௧௦)

செற்ற மிக்கவன் மாயையிவ் வரையெனச் சிந்தித்
துற்ற காலையி லவுணனா கியகிர வுஞ்சப்
பொற்றை யுன்னது கண்டுமோ கத்துயில் புரிந்து
மற்ற வன்றன துணர்வினை மையல்செய் ததுவே.

(இ-ள்.) மிகுந்த கோபத்தினையுடைய வீரவாகுத்தேவர் இம்மலை மாயாரூபமாயுள்ளதென்று நினைத்துக்கொண்டு நின்றபொழுது, அசுரனாகிய அந்தக் கிரவுஞ்சமலையானது அவ்வாறு நிற்றலையுணர்ந்து மயக்கத்தைத்தருகின்ற நித்திரையையுண்டாக்கி அவ்வீரவாகுத்தேவரது அறிவினை மயக்கியது.—எ-று. (௧௧)

இயலி சைத்தமிழ் முனிவர னிசைத்தரு ளிசைவால்
வியனு டைத்திறல் வாகுவை யவ்வரை மிகவு
மயலு டைப்பெரு மாயம தியற்றலு மயங்கித்
துயில லுற்றனன் றொல்லையி லுணர்வெலாந் துறந்தே.

(இ-ள்.) முத்தமிழாசிரியராகிய அகஸ்தியமுனிவரரிட்ட சாபசம்பந்தத்தினால் அந்தக் கிரவுஞ்சமலையானது பெருமையிற் சிறந்த வீரவாகுத்தேவருக்குமிகுந்த மயக்கத்தையுண்டாக்கவும், அவர் உடனே பழைமையாகப் பொருந்திய தமது அறிவனைத்தையு மிழந்து தூங்கினார்.—எ-று.

"இயலி சைத்தமிழ் முனிவர னிசைத்தருள்" என்பதன் வரலாற்றை மேல் அசுரகாண்டம் கிரவுஞ்சப்படலத்திற் காண்க. (௧௨)

அம்ம லைக்கணே முன்னவ னுறங்கலு மனைய
செம்ம லுக்கிளை யோரிரு நால்வருஞ் சிறந்த
தம்மி னத்தரோ ரிலக்கருஞ் சாரதர் பலரும்
விம்ம லுற்றனர் சிறையிலாப் பறவையின் மெலிந்தார்.

(இ-ள்.) அந்தக் கிரவுஞ்சமலையினிடத்தில் தங்களுக்கு மூத்தவராகிய வீரவாகுத்தேவர் தூங்குதலும், அவருக்கிளையவர்களாகிய எட்டு வீரர்களும் சிறப்புப்பொருந்திய தமது கூட்டத்தினராகிய இலக்ஷம் வீரர்களும், பல பூதர்களும் துன்பமுற்றவர்களாய்ச் சிறகில்லாத பறவையைப்போல வருந்தினார்கள்.—எ-று. (௧௩)

உடைந்து போயின தாரகன் றன்னைநம் முரவோன்
றொடர்ந்து சென்றனன் மீண்டில னவனொடுந் துன்னி
யடைந்து வெற்பினிற் போர்புரி வான்கொலோ வங்கட்
படர்ந்து நாடுதும் யாமுமென் றெண்ணினர் பலரும்.

(இ-ள்.) அவ்வீரர்கள் பலரும், முன்புதோற்றோடிய தாரகாசுரனை நமது தலைவராகிய வீரவாகுத்தேவர் பின்றொடர்ந்து சென்றனர்; இன்னுந்திரும்பிவரவில்லை; அங்குச்சென்று மலைக்குள்ளே போர்செய்கின்றனரோ? நாமும் அங்குச் சென்று பார்ப்போம் என்றுகூறி யாலோசித்தார்கள்.—எ-று. (௬௪)

எண்ணி யேயிசைந் திளையரோ டெண்மரு மிலக்க
நண்ணும் வீரரும் பாரிடந் தன்னுணு யகரு
மண்ணல் வான்படை யேந்திலே யாயிடை யகன்று
விண்ணு லாவுறு கிரவுஞ்ச மெய்தினர் விரைவில்.

(இ-ள்.) இவ்வாறு ஆலோசித்து அங்குச் செல்வதற்கு இசைந்து தம்பியர்களாகிய எட்டுவீரர்களும், இலக்ஷம் வீரர்களும் பூதசேனைத்தலைவர்களும் சிறந்த தேவாஸ்திரங்களைத் தாங்கிக்கொண்டு அப்போர்க்களத்தினின்று நீங்கிவிரைவாக மேகங்கள் தவழுகின்ற கிரவுஞ்சகிரியை யடைந்தார்கள்.—எ-று.

விண்ணுலாவுறுஎன்பதற்கு,ஆகாயத்தையளாவியஎனப்பொருள்கூறினுமாம்.

ஆய வெற்பினில் வீரவா குப்பெய ரடலோன்
போய பூழையுண் மற்றவர் யாவரும் புகலுந்
தீய தொல்வரை முன்னவற் கிழைத்திடு திறம்போன்
மாய மெண்ணில புரிதலு மயங்கியே வதிந்தார்.

(இ-ள்.) அந்தக் கிரவுஞ்சகிரியில் வல்லமைபொருந்திய வீரவாகுத்தேவர் சென்ற குகையினுள்ளே இவர்களனைவரும் பிரவேசிக்கவும், உடனே பழைமையாகியகொடிய அக்கிரவுஞ்சகிரியானது வீரவாகுத் தேவருக்குச் செய்த தன்மையைப் போலவே அநேக மாயைகளைச் செய்யவும், அதனால் அவர்களனைவரும்மயங்கி அவ்விடத்திலேயே யிருந்தார்கள்.—எ-று. (௬௬)

வெற்றி வீரவா குப்பெய ரண்ணலும் வீரர்
மற்றி யாவரு மபங்கலுந் தாரகன் வாரா
வுற்று நோக்கிநம் மாயையா லிவரொலா மொருங்கே
யிற்று ளாரென மகிழ்ந்துமால் வரைமிசை யெழுந்தான்.

(இ-ள்.) வெற்றிபொருந்திய வீரவாகுத்தேவரொன்னும் முதல்வரும் மற்றையவீரர்களும் மயக்க முற்றிருக்கவும், தாரகாசுரன் வந்து அதனை உற்றுப்பார்த்து இவர்களனைவரும் நமது மாயையினால் ஒருமிக்க இறந்தார்களென்று தனக்குள் நினைத்து மகிழ்வுற்றுப்பெரிய அந்தக் கிரவுஞ்சமலையின்மீது தோன்றினான்.—எ-று. (௬௭)

அண்ட மீமிசை நின்றவா னவர்களிவ் வனைத்துங்
கண்டு கட்புனல் பனிவர வரற்றியே கலங்கிக்
கொண்ட துன்பொடு பதைபதைத் தோடினர் கூளித்
தண்டம் யாவையும் வெருவின தலைவரின் மையினால்.

(இ-ள்.) வானத்தின்மீது நின்றுகொண்டிருந்த தேவர்கள் இவையனைத்தையும் பார்த்துக் கண்களில் நீரொழுகும்படி யழுது மனங்கலங்கி மிகுந்த துன்பத்துடன் துடிதுடித்து ஓடினார்கள். தங்களுக்குத் தலைவர்களில்லாமையினால் பூதப்படைகளனைத்தும் அச்சமடைந்தன.—எ-று. (௬௮)

மலையின் மீமிசை யெழுதரு தாரகன் மற்றோர்
தலைமை யாகிய விரதமேல் கொண்டுதா னவர்கள்
பலரும் வந்துவந் தார்த்தனர் சூழ்தரப் பைம்பொற்
சிலைய தொன்றினை வாங்கியே செருநிலஞ் சென்றான்.

(இ-ள்.) கிரவுஞ்சமலையின்மீது தோன்றிய தாரகாசுரன் பின்பு ஒரு பெரிய இரதத்தின்மீதேறிக்கொண்டு அநேக அசுரர்கள் மிக்க ஆரவாரத்துடன் தன்னைச் சூழ்ந்து வரும்படிப் பசிய பொன்மயமான ஒருவில்லைவளைத்துப் போர்க்களத்திற்குச் சென்றனன்.—எ-று. (௩௯௯)

நீடு தன்சிலை நாணொலி கொண்டுநீள் சரங்கள்
கோடி கோடிமற் றொருதொடை யாகவே கொளுவி
யாடல் சேர்தரு பூதர்மேற் பொழிதலு மலமந்
தோட லுற்றனர் திசையினும் விண்ணினு முலைந்தே.

(இ-ள்.) நீண்ட தனது வில்லை நாணொலிகாட்டி நீண்ட கோடாகோடி பாணங்களைப்பூட்டி வெற்றிபொருந்திய பூதவீரர்கள்மீது ஒரோமுறையாகப் பிரயோகிக்கவும், (அப்பூதர்கள்) வலிகுன்றி எட்டுத்திக்குகளிலும் வானத்திலும் அலைந்தோடத் தொடங்கினார்கள்.—எ-று. (௪00)

ஆன காலையி னாரத னினையகண் டழுங்கி
மேனி துண்ணென வியர்ப்புற வழிக்கொடு விரைந்து
போன விண்ணவர் தம்மொடு சென்றுபுத் தேளிர்
சேனை காவல னின்றதோர் கடைக்கூழை சேர்ந்தான்.

(இ-ள்.) அந்தச் சமையத்தில் நாரதமுனிவர் இவை யனைத்தையும் பார்த்து வருத்தமுற்றுத் தமதுதேகத்தில் திடீரென்று வியர்வையுண்டாகும்படி நடந்து தமக்கு முன்னமே விரைவில் சென்ற தேவர்களுடன் கலந்து போய்த் தேவசேனாதிபராகிய ஸ்ரீசண்முகப்பெருமா னெழுந்தருளியிருக்கின்ற கடைப்படையை யடைந்தனர்.

அரிது மாதவம் புரிதரு நாரத னடலின்
விரவு மாயிரம் பூதவெள் ளத்தொடு மேவுங்
கருணை சேரறு முகத்தனைக் கண்டுகண் களித்துச்
சுரர்க ளோடுபோ யிறைஞ்சியே யினையன சொல்வான்.

(இ-ள்.) அருமையாகிய பெரிய தவத்தைச் செய்கின்ற நாரதமுனிவர் பலம்பொருந்திய ஆயிரம் வெள்ளம் பூதர்களுடனெழுந்தருளியிருக்கின்ற கருணாநிதியாகிய ஸ்ரீ சண்முகப்பெருமானைத் தரிசித்துக் கண்களிகூர்ந்து தேவர்களுடன் சென்று வணங்கி இவ்வார்த்தைகளைக் கூறுகின்றனர்.—எ-று. (௪0௨)

ஐய நின்படை வீரர்கள் பெருஞ்சமராடி
வெய்ய தானவர் தானைகள் வரவர வீட்டிச்
செய்ய மந்திரித் தலைவரை யமைச்சரைச் செற்றுப்
பொய்யின் மொய்ம்புடைத் தாரகன் றன்னொடும் பொருதார்.

(இ-ள்.) ஐயனே! தேவரீரது படைவீரர்கள் பெரும்போர் புரிந்து மேலுமேலு மெதிர்த்துவந்த கொடிய அசுரப்படைகளைக் கொன்று, சிறந்த தலைமைபொருந்திய மந்திரிகளையும் அமைச்சர்களையு மழித்து உண்மையான வல்லமையை யுடைய தாரகாசுரனுடனும் எதிர்த்துப் போர்செய்தார்கள்.—எ-று. (௪0௩)

தலைக்க ணாகிய வீரனுந் தம்பியர் பிறரு
மிலக்க வீரரும் பாரிடத் தலைவர்கள் யாரும்
புலைக்கொ டுந்தொழிற் றாரகன் றன்னொடும் பொரத்தன
மலைக்க ணுய்த்தன னவர்தமைச் சூழ்ச்சியின் வலியால்.

(இ-ள்.) முதன்மையாகச் சென்ற வீரவாகுத்தேவரும் அவரது தம்பியர்களும் இலக்ஷம்வீரர்களும் பூதகணத்தலைவர்களும் மற்றையர்களும் கொடுமையாகிய புலைத்தொழிலினையுடைய தாரகாசுரனோடு போர்செய்யவும், அவன் தனது மாயையின் வல்லமையினால் அவர்களைத் தனது கிரவுஞ்சமலையில் சேர்ந்தனன்.—எ-று. ()

உய்த்த காலையி லவுணனா கியகிர வுஞ்ச
மெத்து மாயைக ளனையவர்க் கிழைத்தலும் வெருவிப்
பித்த ராமென மயங்கினர் போலுமாற் பின்ன
ரித்தி றந்தனை யுணர்ந்தனன் றாரக னென்போன்.

(இ-ள்.) அவ்வாறு சேர்த்தபொழுது அசுரனாகியகிரவுஞ்ச மலையானது மிகுந்த மாயைகளை அவர்களிடத்திற் செய்யவும், அவர்கள் பயந்து பித்தர்களைப்போல மயங்கினார்கள். பின்பு, தாரகாசுரன் இத்தன்மையையுணர்ந்தனன்.—எ-று. (௧௦௫)

தெரிந்து தாரகன் மகிழ்வொடு பறந்தலை சென்று
திரந்து நம்பெருந் தானையைக் கணைமழை சொரிய
முரிந்து போயின நிகழ்ச்சியீ துயிர்த்தொகை முற்று
மிருந்த நாயக வறிதியே யாவையு மென்றான்.

(இ-ள்.) தாரகாசுரன் இதனையறிந்து மகிழ்ச்சியோடும் போர்க்களத்தையடைந்து நமதுபெரிய சேனைகளைத்துரத்திப் பாணவருஷங்களைப் பிரயோகித்தலும் நமது சேனைகள்தோற்றோடின. இதுநடந்தசங்கதி. எவ்விடங்களிலும் நிறைந்துள்ள எமதாண்டவரே! தேவரீர் இவையனைத்தும்அறிவீரன்றோ? என்று கூறினார்.—எ-று.

என்ற காலையி னாரத னுள்ளமு மிமையோர்
நின்று தாமயர் கின்றது மமரர்கோ னெஞ்சிற்
றுன்று சோகமு நான்முக னாதியோர் துயரு
மொன்ற நோக்கியே யறுமுகப் பண்ணவ னுரைப்பான்.

(இ-ள்.) இவ்வாறு கூறிய பொழுது, ஸ்ரீ சண்முகக்கடவுள் நாரதமுனிவரது மனத்தையும் தேவர்கள் எதிரில் நின்று சோர்ந்திருத்தலையும், தேவேந்திரனது மனத்திற்பொருந்தியுள்ள வருத்தத்தையும், பிரமனாதியர்களது துன்பத்தையும் பொருந்தப்பார்த்து உரைத்தருள்வாராயினார்.—எ-று. (௧௦௭)

வேறு.

ஆருமிது கேண்மினம ராடுகள னேகித்
தாரகனை வேல்கொடு தடிந்தவுணர் வைகு
மோரரண மானகிர வுஞ்சகிரி செற்றே
வீரர்தமை யோரிறையின் மீட்டிடுவ னென்றான்.

(இ-ள்.) நாம் உரைப்பதனை நீங்களனைவருங் கேளுங்கள், போர்க்களத்திற்குச்சென்று வேலாயுதத்தைக்கொண்டு தாரகாசுரனைக்கொன்று,அசுரர்கள் வசிக்கின்றகாவலையுடையதாகிய கிரவுஞ்சத்தையும் அழித்து, ஒரு கணப்பொழுதுக் குள்ளே நமது வீரர்களையும் மீட்போம் என்று அருளிச்செய்தனர்.—எ-று. (௧௦௮)

எந்தையிவை கூறுதலும் யாருமவை தேர்ந்து
சிந்தையுறு கின்றதுயர் செற்றுமுடி வில்லா
வந்தமின் மகிழ்ச்சியுட னடியிசை பாடிக்
கந்தனடி வந்தனை புரிந்தனர் களிப்பால்.

(இ-ள்.) எமது தந்தையாகிய முருகக்கடவுள் இவ்வார்த்தைகளை யருளிச் செய்யவும், அவற்றை யாவர்களு முணர்ந்து தங்கள் மனத்திற் பொருந்திய துன்பங்களை யொழித்து, கெடாத பெருங்களிப்பினால் முடிவில்லாத மகிழ்வோடும் ஆனந்தக் கூத்தாடியும் இசைகளைப்பாடியும் அவ்வெமது முருகக்கடவுளது திருவடிகளைவணங்கினார்கள்.—எ-று. (கoக)

கந்தமுரு கேசனது காலைமுது பாகாய்
வந்ததொரு வந்தினை மகிழ்ச்சியொடு நோக்கிச்
சிந்தைதனின் முந்தும்வகை தேரதனை வல்லை
யுந்துதி விரைந்தெதன வுரைத்தருள லோடும்.

(இ-ள்.) அப்பொழுது முருகக்கடவுள் பெரிய சாரதியாக வந்துள்ள வாயுதேவனை யன்புடன் பார்த்தருளி நீ மனோவேகத்திலும் அதிவேகமாகச் செல்லும்படி இரதத்தை விரைந்தோட்டக் கடவையென்று கட்டளையிட்டருளுதலும்.—எ-று.

இதுமுத லிரண்டு பாடலுங் குளகம். (கக0)

என்னவினி தென்றுதொழு தேழெழுவ கைத்தாந்
தன்னினம தாகியவர் தாங்கள்புடை போதக்
கொன்னுனைய தாமுளவு கோல்கயிறு பற்றித்
துன்னுபரி மானிரைக டூண்டிமிக வார்த்தான்.

(இ-ள்.) முருகக்கடவுள் இவ்வாறருளிச்செய்யவும், வாயுதேவன் அவ்வாறே நல்லதென்று நமஸ்கரித்துத்தனது அமிசங்களாயுள்ள நாற்பத்தொன்பதுவாயுக்களும் தன்னைச்சூழ்ந்துவரும்படிக்கூர்மையாகியசாட்டியினையும், கயிற்றினையுங் கையிற்பிடித்துக்கொண்டு, நெருக்கமாகக் கட்டியுள்ள குதிரைகளைத் தட்டியோட்டி மிகுதியும் ஆரவாரித்தான்.—எ-று. (கசக)

### வேறு.

ஆன காலைதனி லண்டமும் வையந்
தானு மங்குள தடங்கிரி யாவு
மேனை மாகடலு மெண்டிசை யுள்ள
மான வேழமு நடுங்கின மன்னோ.

(இ-ள்.) அந்தச் சமையத்தில் அண்டமும், உலகமும், அங்குள்ள பெரிய மலைகளும், மற்றைப் பெரிய கடல்களும் எட்டுத்திக்குகளிலுமுள்ள பெரிய அஷ்டகஜங்களும் நடுங்கின.—எ-று.

ஏனைமா கடல் என்றது, சப்த சமுத்திரங்களும் பெரும்புறக்கடலுமாம். ()

வாவு கின்றபல மாநிரை தூண்டத்
தேவர் தங்கள்சிறை தீரிய செல்வோன்
மேவு தொல்லிரதம் விண்ணெறி கொண்டே
யேவ ரும்புகழ வேகிய தன்றே.

(இ-ள்.) தாவிச்செல்கின்ற பல குதிரைகளை யோட்டவும், தேவர்களது சிறையினை நீக்கும்பொருட்டுச் சென்றருளும் முருகக்கடவுள் எழுந்தருளிய பழைமையாகிய இரதமானது ஆகாயவழியாய் யாவர்களுந் துதிக்கும்படிச் சென்றது.

ஆதி யங்குமர னவ்வழி பொற்றேர்
மீது செல்லுதலும் விண்முகில் பல்வே
றோதும் வண்ணமுட னுற்றென வானிற்
பூத சேனைபுடை போயின வன்றே.

(இ-ள்.) முதல்வராகிய முருகக்கடவுள் பொன்மயமாகிய இரதத்தின்மேல் ஆகாயவழியாகச் சென்றருளுதலும், அவ்வாகாயத்திலுள்ள மேகங்கள் பலவகையாகிய நிறங்களுடன்சென்றாற்போல ஆகாயத்தில் பூதப்படைகள் அவரருகில் சூழ்ந்து சென்றன.—எ-று. (கசச)

போர ழிந்துபுற கிட்டெதிர் பூத
ராரு நேர்ந்துதொழு தாற்றலொ டெய்த
நார ணன்றனது நன்மரு காவோன்
றூர கன்றிகழ் சமர்க்கள முற்றான்.

(இ-ள்.) போரில்தோற்றுப்புறங்கொடுத்துத் தமக்கெதிரில்வந்தபூதர்களனைவரும் எதிரிலடைந்து வணங்கி வல்லமையுடன் பின்றொடர்ந்து வர, திருமால்மருகராகிய முருகக்கடவுள் தாரகாசுரன் நிற்கின்ற போர்க்களத்தை யடைந்தருளினார்.

கவன மோடுபடர் காலினு முந்திச்
சிவன்ம கன்றனது சேனைய தானே
ருவரி யாமெனவு றுந்திற நோக்கி
யவுணர் தானையை யணிந்தெதிர் சென்றார்.

(இ-ள்.) சிவகுமாரராகிய முருகக்கடவுளது சேனாவீரர்களா யுள்ளவர்கள் விரைந்து செல்லுகின்ற வாயுவைப்பார்க்கிலும் விரைவாகக் கடலைப்போல வருகின்ற தன்மையைப்பார்த்து, அசுரர்கள் தங்களுடையசேனைகளை அணிவகுத்துக்கொண்டு எதிரில் சென்றார்கள்.—எ-று. (ககூ)

சகந்து திக்கவரு சாரதர் தாமு
மகந்தை யுற்றவவு ணத்தொகை யோரு
மிகந்த வன்மையொ டெதிர்ந்திக லெய்தி
வெகுண்டு பேரமர் விளைத்திட லுற்றார்.

(இ-ள்.) உலகத்தார் துதிக்கும்படி வந்த பூதர்களும், அகங்காரம் பொருந்திய அசுரர்கூட்டங்களும் மிகுந்த பராக்கிரமத்துடன் எதிர்த்துப் பகைகொண்டு கோபித்துப் பெரும்போர் செய்தார்கள்.—எ-று.

இகத்தல்-அளவுகடத்தல். (ககஎ)

கரங்கொ ணேமிகள் கணிச்சிக ளெவாய்ச்
சரங்க ளாதியன தானவர் விட்டா
ருரங்கொண் மால்வரைக ளோங்குமெ ழுக்கண்
மரங்கள் விட்டனர் மறங்கெழு பூதர்.

(இ-ள்.) அசுரர்கள் தங்கள்கைகளிலேந்திய சக்கரங்களையும், மழுக்களையும், தீயமைந்த வாயினையுடைய பாணமுதலியவைகளையும் விட்டார்கள்; கொடுமைமிக்க பூதவீரர்கள் பலம்பொருந்திய பெரியமலைகளையும் உயர்ந்த எழுக்களையும் விருக்ஷங்களையும் விட்டார்கள்.—எ-று. (ககஅ)

முரிந்த தேர்நிரை முடிந்தன மாக்க
ணெரிந்த தானவர் நெடுந்தலை சோரி
சொரிந்த பூதர்மெய் துணிந்தன வானிற்
றிரிந்த பாறுகள் செறிந்தன வன்றே.

(இ-ள்.) இரதவரிசைகள் முரிந்தன ; குதிரைகளிறந்தன ; அசுரர்களது பெரிய தலைகள் நொறுங்கின ; உதிரப்பெருக்குக ளொழுகின ; பூதவீரர்களது உடல்களறுபட்டன ; ஆகாயத்திற் பருந்துகள் நெருங்கிப்பறந்தன.—எ-று. (ககக)

நிறங்கொள் செங்குருதி நீத்தம தாகிக்
கறங்கி யோடின கவந்தமோர் கோடி
மறங்கொ டாடுவ வயின்றொறு மாகிப்
பிறங்கு கின்றன பிணங்கெழு குன்றம்.

(இ-ள்.) செந்நிறம் பொருந்திய உதிரங்கள் வெள்ளமாக இரைச்சலிட்டோடின ; ஒருகோடிக் கவந்தங்கள் வீராவேசங்கொண்டு ஆடின ; பக்கங்களிலெல்லாம் பிணமலைகள் விளங்கின.—எ-று. (கஉ0)

அனைய வாறிவ ரருஞ்சம ராற்றப்
புனையல் வாகையுள பூதர்க டம்மால்
வினையம் வல்லவுணர் வெவ்வலி சிந்தி
யினைத லோடுமிரி குற்றன ரன்றே.

(இ-ள்.) அவ்வாறு இவ்விருதிறத்து வீரர்களும் அருமையாகிய போரைச் செய்யவும், வெற்றிமாலையையணிந்த பூதவீரர்களால் வஞ்சனையில் மிகுந்த அசுரர்கள் கொடிய வல்லமையனைத்து மொழிந்து வருத்தத்துடன் ஓடினார்கள்.—எ-று. (கஉக)

தன்ப டைத்தொலைவு தாரக னோக்கிக்
கொன்ப டைத்தகுனி விற்குனி வித்தே
மின்ப டைத்தபல வெங்கணை தூவி
வன்ப டைக்கணம் வருந்த நடந்தான்.

(இ-ள்.) தாரகாசுரன் தனது சேனைகள் தோற்றோடிய தன்மையைப் பார்த்து வலிமைபொருந்திய வில்லைவளைத்து ஒளிபொருந்திய பலபாணங்களைப் பிரயோகித்து வன்மைமிக்க பூதகணங்கள் வருத்தப்படும்படி சென்றனன்.-எ-று. (கஉஉ)

நடந்தெ திர்ந்தகண நாதரை யெல்லாந்
தொடர்ந்து பல்கணை சொரிந்து துரந்தே
யிடந்தி கழ்ந்தவிமை யத்திறை நல்கு
மடந்தை தந்ததிரு மைந்தன்மு னுற்றான்.

(இ-ள்.) பூமியில் நடந்து எதிர்த்துப் போர்செய்கின்ற பூதகணத்தலைவர்களனைவரையும் பின்றொடர்ந்துசென்று பல பாணங்களை விட்டுத் துரத்தி, விசாலமாகிய பர்வதராஜபுத்திரியாகிய உமாதேவியாரது திருப்புதல்வராகிய முருகக்கடவுளுக்கு முன்னே வந்தனன்.—எ-று. (கஉந)

உற்ற காலைதனி லொற்றரை நோக்கிச்
சற்று நீதியறு தாரக வெய்யோன்
செற்ற மென்னுமழல் சிந்தையின் மூள
மற்றி வன்கொலரன் மாமக னென்றான்.

(இ-ள்.) அவ்வாறுவந்தபொழுது நீதியென்பது சிறிதுமில்லாதவனாகிய அத்தாரகனென்னுங்கொடியவன் தனது தூதுவர்களைப் பார்த்துக் கோபாக்கினியானது மனத்தில் அதிகரிக்க, இவன்தானோ சிவன்குமாரனென்று வினவினான்.—எ-று.

என்ன லுங்குமர னிங்கிவ னேயா
மன்ன வென்றிடலு மற்றவ னேறுங்

துன்னு தேர்கடிது தூண்டி யெவர்க்கு
முன்ன வன்மதலை முன்னுற வந்தான்.

(இ-ள்.) தாரகன் இவ்வாறுவினவுதலும், (அத்தூதுவர்கள்) அரசனே! இவன்தான் குமரன் என்று கூறவும், தாரகாசுரன் தான் ஏறிவருகின்ற இரதத்தை விரைவாகநடத்திக்கொண்டு எத்தகையோர்க்கும் முதல்வராகிய சிவபெருமானது திருப்புதல்வராகிய முருகக்கடவுளுக்கு முன்னே வந்தனன்.—எ-று. (௧௨௫)

வேறு.

முழுமதி யன்ன வாறு முகங்களு மூந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரு
மழகிய கரமீ ராறு மணிமணித் தண்டை யார்க்குஞ்
செழுமல ரடியுங் கண்டா னவன்றவஞ் செப்பற் பாற்றே.

(இ-ள்.) பூரணச்சந்திரன் போன்ற ஆறு திருமுகங்களையும், பன்னிரண்டு திருக்கண்களிலும் விளங்குகின்ற கருணையையும், வேலா யுதத்தையும், மற்றைய ஆயுதங்களின் சிறப்பையும், அழகியபன்னிரண்டு திருக்கரங்களையும், அழகிய இரத்தினங்களிழைத்த தண்டைகள் முழங்குகின்ற சிறந்த தாமரைமலர்போன்ற திருவடிகளையும் பார்த்தனன்; ஆதலால், அந்தத் தாரகனது தவத்தின் மேன்மை ஒருவரால் புகழ்ந்து சொல்லத்தக்க தன்மையை யுடையதோ?—எ-று. (௧௨௬)

தற்பம துடைய சிந்தைத் தாரக னினைய வாற்றாற்
சிற்பர மூர்த்தி கொண்ட திருவுரு வனைத்து நோக்கி
யற்புத மெய்தி நம்மே லமர்செய வந்தா னென்றாற்
கற்பனை கடந்த வாதிக் கடவுளே யிவன்கொ லென்றான்.

(இ-ள்.) அகங்காரம் பொருந்திய மனத்தினையுடைய தாரகாசுரன் இவ்வண்ணம் ஞானமுதல்வராகிய முருகக்கடவுள் கொண்டருளிய திருவுருவனைத்தையும் பார்த்து ஆச்சரியமடைந்து இவன் நம்மீது போர்செய்யும்படிவந்தனனென்றால் கற்பனைதீதராகிய முதற்கடவுள் இவன்தானேவென்று சிந்தித்தான்.—எ-று. (௧௨௭)

இந்தவா றுன்னிப் பின்ன ரியார்க்குமே லாகு மீசன்
றந்தமே தார் வரமும் வீரத் தன்மையும் வன்மைப் பாடு
முந்துதாம் பெற்ற சீரு முழுவது நினைந்து சீறிக்
கந்தவே டன்னை நோக்கி யினையன கழற லுற்றான்.

(இ-ள்.) முதலில் இவ்வண்ணம் நினைத்துப் பின்பு யாவர்க்கும் மேலாகிய சிவபெருமான் கொடுத்தருளிய வரமும், வீரமும், வல்லமையும், முன்னமே தானடைந்திருக்கின்ற செல்வமும் மற்றுமுள்ளவைகளையு மெண்ணிக் கோபங்கொண்டு முருகக்கடவுளைப் பார்த்து இவ்வார்த்தைகளைக் கூறத் தொடங்கினான்.—எ-று. ()

நாரணன் றனக்கு மற்றை நான்முகன் றனக்கும் வெள்ளை
வாரணன் றனக்கு மல்லான் மதிமுடி யமல னுக்குந்
தாரணி தனிலெ மக்குஞ் சமரினை யிழைப்ப விங்கோர்
காரண மில்லை மைந்தா வந்ததென் கழறு கென்றான்.

(இ-ள்.) சிறுவனே! திருமாலுக்கும், நான்குமுகங்களையுடைய பிரமனுக்கும், வெள்ளை யானையையுடைய இந்திரனுக்குமேயல்லாமல், உலகத்தில் சந்திரசேகரராகிய சிவபெருமானுக்கும் எங்களுக்கும் போர்செய்யும்படி இங்கு ஒரு காரணமுமில்லை. (அப்படியிருக்க)நீவந்தகாரணம்யாது? சொல்லக்கடவையென்றுவினவினான்.

அறவினை புரிந்தே யார்க்கு மருளொடு தண்டஞ் செய்யு
மிறையவ னுகு மீச னிமையவர் தம்மை நீங்கள்
சிறையிடை வைத்த தன்மை திருவுளங் கொண்டு நுந்தம்
விறலொடு வன்மை சிந்த விடுத்தன னெம்மை யென்றான்.

(இ-ள்.) (அதற்கு முருகக்கடவுள் அத்தாரகனை நோக்கி) நீதியை நடத்தி யாவர்க்கும் அருளையும் தண்டத்தையுஞ் செய்கின்ற முதல்வராகிய சிவபெருமான் நீங்கள் தேவர்களைச் சிறையில்வைத்திருக்கின்ற தன்மையைத் திருவுள்ளங்கொண்டு உங்களுடைய வெற்றியையும் வல்லமையையும் அழிக்கும்பொருட்டு எம்மை யனுப்பி யருளினர் என்று கூறியருளினர்.—எ-று. (கூ0)

வேறு.

கூரிய வேற்படைக் குமர நாயகன்
பேரரு ணிலைமையா லினைய பேசலும்
போரினை யிழைத்திடும் பூட்கை மாமுகத்
தாரக னென்பவன் சாற்றன் மேயினான்.

(இ-ள்.) கூர்மையாகிய வேலாயுதத்தை யேந்திய குமாரக்கடவுள் பெருங் கருணையுடன் இவ்வாறு அருளிச்செய்யவும், போர்செய்யத்தக்க யானை முகத்தினையு டைய தாரகாசுரன் சொல்லத்தொடங்கினன்.—எ-று. (கூக)

செந்திருத் திகழுமார் புடைய செங்கணன்
சுந்தரக் கலுழன்மேற் றோன்றிப் போர்செய்தே
யந்தரக் கதிர்புரை யாழி யுய்த்ததென்
கந்தரத் தணிந்தது காண்கி லாய்கொலோ.

(இ-ள்.) செல்விய இலக்ஷுமிவிளங்குகின்ற மார்பினையுடைய திருமால்அழ கிய கருடன்மீது எறிவந்து என்னுடன் போர்செய்து ஆகாயத்தி லுலாவுகின்ற சூரிய னைப்போன்ற தனதுசக்கரம் விட்டதை யான் என் கழுத்தி லணிந்துகொண்டிருப்ப தை நீ பார்க்கவில்லையோ?—எ-று. (கூஉ)

இன்றுகா றெம்முட னிகலிப் போர்செயச்
சென்றுளார் யாவருஞ் சிறிது போழ்தினுட்
பொன்றுவா ரிரிந்தனர் போவ ரல்லது
வென்றுளா ரிலையது வினவ லாய்கொலோ.

(இ-ள்.) இன்று வரையிலும் எம்முடன் பகைத்துப் போர்செய்ய வந்தவர் கள் யாவரும் சற்று நாழிகைக்குள்ளே இறப்பார்கள்; அன்றித் தோற்பார்களேயல்ல து; எம்மை வென்றவர்களேகிடையாது; இதனை நீகேட்டதில்லையோ?—எ-று. (கூரு)

முட்டிவெஞ் சமரினை முயல முன்னநீ
விட்டிடு தலைவரை வென்று வெற்பினிற்
பட்டிட வியற்றினன் பலக ணங்களை
யட்டன னவற்றினை யறிந்தி லாய்கொலோ.

(இ-ள்.) எதிர்த்துக் கொடும்போர் செய்யும்பொருட்டு முன்னம் நீ யனுப் பிய தலைவர்களை நான் வெற்றிகொண்டு மலையில் இறக்கும்படி செய்தேன்; அன்றி யும், அநேக கணங்களையுங் கொன்றேன்; அவற்றை நீ யறியவில்லையோ?—எ-று.

ஆகையா லெம்முட னமரி யற்றியே
சோகம தடையலை சூல பாணியா

லேகுதி பாலநீ யென்று கூறலும்
வாகையங் குமரவேண் மரபிற் கூறுவான்.

(இ-ள்.) ஆதலால் எம்முடன் போர்செய்து மூர்ச்சிக்கவேண்டாம், சிறுவனே! நீ நினது தந்தையாகிய) சிவபெருமானிடத்திற்குச் செல்லக்கடவை யென்று கூறவும், வெற்றியினையுடைய அழகிய குமாரக்கடவுள் முறைப்படி அருளிச்செய்கின்றார்.—எ-று. (சுரு)

தாரணி மறையவன் றதீசி தன்மிசை
நாரணன் விடுத்ததோர் நலங்கொ ளாழிதன்
கூரினை யிழந்துபோய்க் குலாலன் சக்கர
நீர்மைய தானது வினவ லாய்கொனீ.

(இ-ள்.) மாலையையணிந்த வேதியனாகிய ததீசியின்மேல் திருமால் விட்ட நன்மைபொருந்திய சக்கரமானது தனது கூர்மழுங்கிக்கெட்டுக் குலாலன் சக்கரம் போலப் பயனற்றொழிந்ததன்மையை நீ கேட்டதில்லையோ?—எ-று. (சுசு)

சூற்புயன் மேனியான் றுங்கச் செங்கையின்
பாற்படு திகிரிபோற் பழியிற் றுஞ்சுமோ
வேற்புறு படைக்கெலா மிறைவ னாகுநம்
வேற்படை நின்னுயிர் விரைவி னுண்ணுமால்.

(இ-ள்.) தகுதியாகிய ஆயுதங்களுக்கெல்லாம் அரசாயுள்ள நமது வேலாயுதமானது சூல்கொண்ட கரிய மேகம்போலும் நிறத்தினையுடைய திருமாலினது உயர்வாகிய செவ்விய கரத்திற்பொருந்திய சக்கரத்தைப்போலப் பழிப்புக்கிடமா யழியுமோ? உனது உயிரை விரைவில் உண்டுவிடும்.—எ-று. (சுஎ)

உங்கள்பே ராற்றலிவ் வுலகை வென்றன
விங்குநாம் வருதலு மிமைப்பின் மாய்ந்தன
வங்கண்மா ஞாலமுண் டமரு மாரிருள்
பொங்குபே ரொளிவர விளிந்து போனபோல்.

(இ-ள்.) அழகிய இடமகன்ற பெரிய உலகத்தை விழுங்கிப் பொருந்தியிருந்த அரிய இருளானது மிகுந்த பேரொளியினையுடைய சூரியன் உதயமானவுடனே கெட்டொழிந்த தன்மைபோல, (இதுவரையில்) உங்கள் சாமர்த்தியங்கள் இவ்வுலகத்தை வென்றன; (இப்பொழுது) நாம் இங்கு வருதலும் கணப்பொழுதிற்குள்ளே அழிந்தன.—எ-று. (சுஅ)

ஈட்டிய மாயைக ளெவையுந் தன்வழிக்
காட்டிய கிரியையுங் கள்வ நின்னையுந்
தீட்டிய வேல்கொடு செற்றுச் சேனையை
மீட்டிடு கின்றனன் விரைவி னென்றான்.

(இ-ள்.) வஞ்சகனே! எல்லா மாயைகளையுஞ் செய்து தன் வழியாகவே உலகத்திற் காட்டிய கிரவுஞ்ச மலையையும், உன்னையும் கூர்மைபொருந்திய வேலைக்கொண்டு கொன்று விரைவினில் சேனைகளை மீட்கின்றேம் என்றருளிச் செய்தனர்.

என்றலுஞ் சிறியே யிகலித் தாரகன்
குன்றுறழ் தன்சிலை குனியக் கோட்டியே
மின்றிகழ் நாணொலி யெடுப்ப விண்மிசைச்
சென்றிடு மமரருந் தியக்க மெய்தினார்.

(இ-ள்) முருகக்கடவுள் இவ்வாறு அருளிச் செய்யவும், தாரகாசுரன் பகைத்துக் கோபித்து, மலையை யொத்த தனது வில்லை வளைத்து மின்போன்ற நாணொலி காட்டவும், ஆகாயத்திற் செல்லுகின்ற தேவர்களும் மயக்கமுற்றார்கள்.—எ-று.

விண்மிசைச் சென்றிடு மமரருந் தியக்கமுற்றனர் என்றதனால் மண்மிசை வாழும் மற்றையர்களும் மயங்கித் துன்புற்றன ரென்று கூறியதாயிற்று. (௧௪௦)

எய்திய காலையி லெந்தை கந்தவேள்
கைதனி லிருந்ததோர் கார்மு கந்தனை
மொய்தனில் வாங்கிநாண் முழக்கங் கோடலு
மைதென வுலகெலா மழுங்கிற் றென்பவே.

(இ-ள்.) இவ்வாறு நாணொலி காட்டிய சமையத்தில் எமது தந்தையாகிய கந்தப்பெருமான் தமது திருக்கரத்திலேந்திய ஒரு வில்லை வல்லமையோடு வளைத்து நாணொலி காட்டவும் உலகமனைத்தும் விரைவாக வருந்தின.—எ-று. (௧௪௧)

நாரியின் பேரொலி நாதன் கோடலு
மாரணன் முதலினோர் தாமு மஞ்சினார்
பேருல கெங்கணும் பேதுற் றேங்கின
தாரக முதல்வனுந் தலைது ளக்கினான்.

(இ-ள்.) முருகக்கடவுள் மிகுந்த நாணோசையைக் காட்டுதலும், பிரமன் முதலியதேவர்களும் அஞ்சினார்கள்; பெரிய உலகமுழுதும் நடுங்கி யேக்கமுற்றன; தாரகாசுரனும் தன் தலையை யசைத்தனன்.—எ-று. (௧௪௨)

துளக்கிய தாரக சூரன் கைத்தலங்
கொளற்குரி வில்லுமிழ் கொள்கைத் தாமென
வளக்கதிர் நுனைகெழு வயிர வான்கணை
யளக்கரு மெண்ணில வார்த்துத் தூண்டினான்.

(இ-ள்.) அவ்வாறு தலையை யசைத்த தாரகாசுரன் தன் கையினிடத்திற் கொள்ளுதற்குரிய வில்லானது கக்குகின்ற தன்மையைப்போல் வளப்பமிக்க ஒளியோடு கூடிய கூர்மையினையுடைய வயிரம்பொருந்திய அளவில்லாத அநேக பாணங்களை ஆரவாரித்து விட்டனன்.—எ-று. (௧௪௩)

ஆயதோர் காலையி லாறு மாமுகன்
மீயுயர் சிலைதனின் விரைவி லாயிரஞ்
சாயகந் தூண்டியே தார காசுர
னேயின பகழிக ளியாவுஞ் சிந்தினான்.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் ஸ்ரீசண்முகக்கடவுள் மிகவும் உயர்ந்த தமது வில்லில் விரைவாக ஆயிரம் பாணங்களைத் தொடுத்துவிட்டுத் தாரகாசுரன் விட்டபாணங்க ளனைத்தையும் அழித்தனர்.—எ-று. (௧௪௪)

சிந்திய காலையிற் செயிர்த்துத் தாரக
னுந்தினன் பின்னரு மொரரயி ரங்கணை
கந்தனு மனையது கண்டு வல்லையி
னைந்திரு பகழிதொட் டவற்றை நீக்கினான்.

(இ-ள்.) அவ்வாறு அழித்தபொழுது தாரகாசுரன் கோபங்கொண்டு பின்னும் ஆயிரம் பாணங்களை விட்டனன்; அதனைக் குமாரக்கடவுள்பார்த்து விரைவாகப் பத்துப் பாணங்களைவிட்டு அவைகளை விலக்கினர்.—எ-று. (௧௪௫)

மீட்டுமத் தாரகன் விசிகம் வெஞ்சிலை
பூட்டிய வாங்கலும் புராரி காதல
னீட்டமொ டொருகணை யேவி யாங்கவன்
றோட்டுணை வில்லினைத் துண்ட மாக்கினன்.

(இ-ள்.) பின்னும் அந்தத் தாரகன் கொடிய வில்லில் பூட்டிப் பிரயோகிக்கும்படிப் பாணங்களை யெடுக்கவும் சிவகுமாரராகிய முருகக்கடவுள் வலிவோடும் ஒரு பாணத்தைவிட்டு அவன் தோளோடு சம்பந்தமான வில்லை வெட்டியெறிந்தனர். ()

வேறு.

அங்கோர் சிலையைக் குனித்தானது காலை தன்னி
லெங்கோ முதல்வ னொருபாணியி னேந்து வில்லிற்
செங்கோல் வகையா யிரம்பூட்டினன் செல்ல வுய்த்தான்
வெங்கோ னடாத்தி வருதாரக வெய்யன் மீதில்.

(இ-ள்.) அப்பொழுது, தாரகாசுரன் வேறொரு வில்லை யெடுத்துவளைத்தனன்; அத்தருணத்தில் எமது முதல்வராகிய முருகக்கடவுள் ஒரு திருக்கரத்திற்பிடித்திருக்கின்ற வில்லில் செவ்விய ஆயிரம் பாணங்களைத் தொடுத்துக் கொடுங்கோல் செலுத்தி வந்த தாரகாசுரன்மேல் தாக்கும்படி விடுத்தனர்.—எ-று. (கசஎ)

சேரார் பரவுந் திறல்வேலவன் செய்கை நோக்கித்
தாரார் முடித்தா ரகவீரன் றனது வில்லி
லோரா யிரம்வா ளிகள்பூட்டின னெல்லை யுய்த்து
நேராய் விரவுங் கணையாவையு நீறு செய்தான்.

(இ-ள்.) சத்துருக்கள் வணங்குகின்ற வீரம்பொருந்திய குமாரக்கடவுளினது செய்கையைப் பார்த்து மாலையை யணிந்த தாரகாசுரன் தனது வில்லில் ஆயிரம் பாணங்களைத் தொடுத்துப் பிரயோகித்து எதிரில் நெருங்கிவந்த பாணங்களனைத்தையும் நீறாக்கினன்.—எ-று. (கசஅ)

வெய்யா னநந்தங் கணைதூண்ட விமல னல்குந்
துய்யா னவைக ளறுத்துக் கணைகோடி தூண்டி
மையா ரவுணர் புகழ்தாரக மான வேழ
மெய்யாகும் வண்ணஞ் செறித்தானவன் யாக்கை யெங்கும்.

(இ-ள்.) கொடியவனாகிய தாரகாசுரன் அநேக பாணங்களை விடவும், சிவகுமாரராகிய முருகக்கடவுள் அதனைக்கண்டித்துக் கோடாகோடி பாணங்களைவிட்டுக் கருநிறம்பொருந்திய அசுரர்கள் புகழ்கின்ற தாரகனாகியயானையானது முள்ளம்பன்றியாகும் வண்ணம் உடல் முழுவதும் பாணங்களால் நிரப்பியருளினார்.—எ-று.

தாரகாசுரனாகிய யானையின்மேல் குமாரக்கடவுள் பிரயோகித்தபாணங்கள் தைத்திருத்தல் முள்ளம்பன்றியினுடம்பில் முட்சிறகிருத்தல் போன்றிருந்ததென்பார், 'தாரகமானவேழ மெய்யாகும் வண்ணஞ் செறித்தானவன்யாக்கையெங்கும்' என்று கூறினார். எய்-முள்ளம்பன்றி. (கசகூ)

ஒருகோடி வாளி யுறலோடு முருத்து நீச
னிருகோடி வாளி விடவன்னதை யேவி னீக்கி
முருகோ டியதா ரகசூரசன் முகங்கொள் கையும்
பொருகோடும் வீழ விடுத்தானிரு புங்க வாளி.

(இ-ள்.) ஒரு கோடிபாணங்கள் தன்னுடம்பில் படுதலும், நீசனாகிய தாரகாசுரன் கோபித்து இரண்டுகோடி பாணங்களைப் பிரயோகிக்க, அவற்றை முருகக்கட

வுள் தமது பாணத்தினால் அழித்து நறுமணங்கமழும் மாலையை யணிந்த தாரகாசுரனது முகத்திற் பொருந்திய துதிக்கையும், போர்செய்தற்குரிய தந்தங்களும் அற்று விழும்படி இரண்டு பாணங்களை விட்டருளினார்.—எ-று. (௧௬௦)

வந்தங் கிரண்டு சரமும்பட மாயை மைந்தன்
றந்தங்கள் கையோ டிறலோடுந் தளர்ச்சி யெய்தி
முந்துங் கணையா யிரந்தன்னை முனிந்து தூண்டிக்
கந்தன் றடந்தேர்த் துவசந்துகள் கண்டு நின்றான்.

(இ-ள்.) அவ்விரண்டு பாணங்களும் வந்துபடுதலால், மாயையின் புதல்வனாகிய தாரகாசுரனது தந்தங்கள் துதிக்கையுடன் அற்றுவிழவும், அவன்வருந்தி உயர்ந்த ஆயிரம் பாணங்களைக் கோபத்துடன் விட்டுக் கந்தப்பெருமானது இரதத்திற் கட்டியிருந்த கொடியைத் துகளாக்கினான்.—எ-று. (௧௬௧)

மல்லற் கொடியிற் றதுகண்டு மறங்கொள் வெய்யோன்
வில்லைக் கணைநான் கிரண்டா னிலமீது வீட்டித்
தொல்லைக் கனலின் கணையாயிரந் தூண்டி யன்னோன்
செல்லுற்ற திண்டேர் பரிபாகொடு சிந்தி நின்றான்.

(இ-ள்.) (முருகக்கடவுள்) தமது சிறந்த கொடியானது அறுபட்டமையையுணர்ந்து வீரம்பொருந்திய தாரகாசுரனது வில்லினை எட்டுப் பாணங்களாலறுத்துப் பூமியில் தள்ளிப் பழமையாகிய ஆயிரம் அக்கினியாஸ்திரங்களை விட்டு அவன் ஏறிச் செல்லுகின்ற இரதம் குதிரை சாரதியென்னு மூன்றையும் அழித்தருளினார்.—எ-று.()

வேறங் கொருதேர் மிசையேறியொர் வில்லை வாங்கி
நூறைந் திருதீ விசிகந்தனை நொய்தி னேவி
மாறின்றி வைகும் பரமன்வடி வான செவ்வே
ளேறுந் தடந்தேர் வலவன்புயத் தெய்த வுய்த்தான்.

(இ-ள்.) (உடனே தாரகன்) வேறொரு இரதத்தின்மேலேறி ஒரு வில்லை வளைத்து ஆயிரம் அக்கினியாஸ்திரங்களை விரைவாகச் செலுத்தி நாசரகிதராக வெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானது திருவுருவமாகிய முருகக்கடவுள் ஏறிநடத்துகின்ற பெரிய தேர்ப்பாகனாகிய வாயுதேவனது தோள்களில் படும்படி விட்டனன்.—எ-று.

வென்றோர் புகழுங் குமரன்வியன் றேர்க டாவிச்
சென்றோன் வருத்தந் தெரிந்தாயிரந் தீய வாளி
வன்றோன் முகத்தா ரகனெற்றியுண் மன்ன வுய்ப்பப்
பொன்றோய் தனது தடந்தேரிற் புலம்பி வீழ்ந்தான்.

(இ-ள்.) (பஞ்சேந்திரங்களைச்) செயித்த பெரியோர்கள் புகழ்கின்ற முருகக்கடவுள், தமதுதேரைச்செலுத்துகின்ற சாரதியின் துன்பத்தையுணர்ந்து கொடிய ஆயிரம் பாணங்களை வலிய யானைமுகத்தினையுடைய தாரகாசுரனது நெற்றியில் தாக்கும்படி விட்டருளுதலும், (அவன்) பொன்மயமாகிய தனது பெரிய இரதத்தில் புலம்பிக்கொண்டு வீழ்ந்தனன்.—எ-று. (௧௬௪)

வீழுற் றிடலும் விழுசெம்புனல் வெள்ள மிக்கே
தாழுற்ற பாரிற் புகுந்தேபுடை சார்த லுற்ற
பாழிக் கடலிற் பரிமாமுகம் பட்ட செந்தீச்
சூழிக் களிற்றின் வதனத்தினுந் தோன்று மென்ன.

(இ-ள்.) பெரிய சமுத்திரத்திலுள்ள வடவையாகியகுதிரைமுகத்திற்பொருந்திய தீயானது முகபடாமணிந்த யானையின் முகத்திலுந் தோன்றுமென்று சொல்லும்படி (தாரகாசுரன் தேரின்மேல் புலம்பி) விழ்தலும், அவன்முகத்தினின்று மொழுகுகின்ற உதிர வெள்ளமானது மிகுந்து தாழ்ந்த பூமியிலே விழுந்து பக்கங்களில் ஓடத்தொடங்கின.—எ-று. (கருரு)

மன்னு கியதா ரகனங்கண் மயங்கி வீழ
வன்னான் றனது படைவீர ரதனை நோக்கிக்
கொன்னார் சினங்கொண் டுடுபோரைக் குறித்து நம்பன்
றென்னா ளுதவுந் திறன்மைந்தனைச் சூழ்ந்து கொண்டார்.

(இ-ள்.) அசுரர்கள் தலைவனாகிய தாரகாசுரன் அவ்விடத்தில் மயங்கி விழவும், அவனது சேனைவீரர்கள் அதனைப் பார்த்து அச்சந்தரத்தக்க மிகுந்த கோபங்கொண்டு போர்செய்யக்கருதி, பூர்வத்தில் சிவபெருமான் பெற்றருளிய வெற்றிபொருந்திய குமாரக்கடவுளைச் சூழ்ந்துகொண்டார்கள்.—எ-று. (கருசு)

சூலந் திகிரிப் படைதோமரந் துய்ய பிண்டி
பாலஞ் சுடர்வே லெழுநாஞ்சில் பகழி தண்ட
மாலங் கணையங் குலிசாயுத மாதி யாக
வேலும் படைகள் பொழிந்தார்த்தன ரெங்கு மீண்டி.

(இ-ள்.) அவர்களெவ்விடங்களிலுஞ் சூழ்ந்துகொண்டு சூலம், சக்கரம், தோமரம், நல்ல பிண்டிபாலம், ஒளி பொருந்திய வேல், எழு, கலப்பை, அம்பு, தண்டம், மழு, வளைதடி, வச்சிராயுதம் முதலியனவாகப் பொருந்திய ஆயுதங்களைப் பிரயோகித்து ஆரவாரித்தார்கள்.—எ-று. (கருஎ)

கறுத்தா னவர்தஞ் செயல்கண்டுதன் கார்மு கத்தை
நிறுத்தா வளையாக் கணைமாமழை நீட வுய்த்து
மறுத்தா னுடைய கொடுந்தானவர் வாகை சிந்தி
யறுத்தான் விடுதொல்படை யாவையு மாடல் வேலோன்.

(இ-ள்.) வெற்றிபொருந்திய வேற்படையை யேந்திய குமாரக்கடவுள் கறுவுதலையுடைய அவ்வசுரர்களது செய்கையை நோக்கித் தமதுவில்லையெடுத்து நிறுத்தி வளைத்துப் பாணவருஷங்களை மிகுதியாகப் பெய்து, குற்றம் பொருந்திய கொடிய அசுரர்களது வெற்றியையொழித்து அவர்கள் விடுகின்ற பழைமையாகிய ஆயுதங்களனைத்தையும் விலக்கியறுத்தருளினார்.—எ-று.

கார்முகம் - வில். (கருஅ)

வெய்தாகிய தீங்கணை மாரி விசாகன் மீட்டும்
பெய்தா னவுணர் முடிதன்னைப் பிறங்கு மார்பைத்
துய்தா னுறும்வா யினையங்கையைத் தோளைத் தாளைக்
கொய்தான் குருதிக் கடலெங்கணுங் கொண்ட தன்றே.

(இ-ள்.) பின்னும் முருகக்கடவுள் கொரோமாகிய பாணவருஷங்களைப் பெய்து அசுரர்களது முடிகளையும், விளங்குகின்ற மார்புகளையும், உணவு கொள்கின்ற வாய்களையும், அழகிய கைகளையும், தோள்களையும், கால்களையும் அறுத்தெறிந்தனர்; அதனால் எவ்விடங்களிலும் உதிரமானது கடல்போலத் தேங்கியது.—எ-று.

விசாகன் - விசாகநக்ஷத்திரத்தி லவதரித்தவர். துய் - உணவு. (கருகூ)

வில்லோர் பரவுந் திறல்வேலவன் வெய்ய கோலா
லல்லோ டியதீ மனத்தானவ ராயி னோரிற்
பல்லோ ரிறந்தார் குருதிக் கடல்பாய்ந்து நீந்திச்
சில்லோர் கடத்த முயிர்கொண்டு சிதைந்து போனார்.

(இ-ள்.) வில்வீரர்கள் புகழுகின்ற வெற்றியினையுடைய முருகக்கடவுளினது கொடிய பாணங்களால் இருளும் பின்னிடத்தக்க கொடிய மனத்தினையுடைய அசுரர்களில் அனேகர் இறந்தனர்; சிலர் உதிரக்கடலிற் பாய்ந்துநீந்தித் தங்கள் தங்களுயிரைக்கொண்டு தவறியோடினார்கள்.—எ-று.

மிக்க வஞ்சக நெஞ்சமுடையவ ரென்பார், 'அல்லோடிய தீமனத்தானவர்' என்று கூறினார். (கசுo)

மைக்கார் சிவந்த தெனுந்தாரகன் மைய னீங்கி
யக்கால தன்னி லெழுந்தே யயல்போற்றி நின்று
தொக்கார் தமையாரையுங் காண்கிலன் றுன்ப மெய்தி
நக்கா னவர்தஞ் செயல்கண்டு நவிற லுற்றான்.

(இ-ள்.) கரியமேகமானது சிவந்ததென்று சொல்லும்படி உதிரவெள்ளத்தில் மூழ்கிக்கிடந்த தாரகாசுரன் அப்பொழுது மயக்கந் தெளிந்தெழுந்து தனதுபக்கத்தில் தன்னைப் புகழ்ந்து நெருங்கி நின்றவர்கள் யாரையுங் காணாதவனாய் வருத்தங்கொண்டு அவர்களது செய்கையைநோக்கிச் சிரித்துக்கூறுகின்றனன்.—எ-று. (கசுக)

வேறு.

செய்யவார்சடை யீசனல்கிய சிறுவனிங்கொரு வன்பொரக்
கையிழந்துமு கத்தினூடு கவின்கொள்கோடுமி ழந்தனன்
மையலெய்திவி ழுந்தனன்பொரும் வலியதானையு மாண்டன
வையவிங்கொரு தமியனின்றன னழகிதாலென தாண்மையே.

(இ-ள்.) சிவந்த நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமான்பெற்ற சிறுவனாகிய இவனொருவன் போர்செய்தலால் எனது துதிக்கையினை யிழந்து முகத்திற் பொருந்தி யிருந்த அழகிய தந்தங்களையுமிழந்தேன்; மயக்கமுற்றுவிழுந்தேன்; போர்செய்த வலிய சேனைகளும் அழிந்தன; ஐயோ? இங்கு நான் ஒருவனே நின்றேன்; எனது வீரம் நன்றாயிருக்கின்றது.—எ-று. (கசுஉ)

தாவில்வெஞ்சிலை வன்மைகொண்டு சரங்களெண்ணில தூண்டியே
மேவலானிவ னுயிர்குடிப்பதும் வெல்லுகின்றது மரியதாற்
றேவர்மாப்படை தொடுவனிங்கினி யென்றுசிந்தனை செய்துபி
னேவரும்புகழ் தாரகாசுர னினையசெய்கை யியற்றினான்.

(இ-ள்.) கெடாத கொடிய வில்லின் வல்லமைமைக் கொண்டு அநேகபாணங்களைவிட்டுப் பகைவனாகிய இவனது உயிரை வாங்குவதும், வெற்றி பெறுவதும் அருமையாகும்; ஆதலால், இனிப் பெரிய தேவாஸ்திரங்களை விடுவேனென்று சிந்தித்துப் பின்பு யாவர்களும் புகழ்கின்றதாரகாசுரன் இச்செய்கையைச் செய்தனன். ()

வேறு.

அடலரி நான்முக னாதி வானவப்
படையினை யாவையும் பவஞ்செய் தாரகன்
விடவிட வந்தவை வெருவி மேலையோன்
புடைதனி லொடுங்கியே போற்றி நின்றவே.

(இ-ள்.) பாவத்தொழிலைச் செய்கின்ற தாரகாசுரன் வலிமைபொருந்திய திருமால் பிரமன்முதலிய தேவர்களது பாணங்களைவரிசைவரிசையாகப் பிரயோகிக்கவும், அவ்வாறு விடப்பட்டுவருகின்ற பாணங்கள் அச்சத்துடன்சென்று முருகக்கடவுளினருகில் வணங்கி யொடுங்கி நின்றன.—எ-று. (கசுசு)

செங்கண்மா லயன்முதற் றேவர் மாப்படை
துங்கமோ டேகியே துளங்கி வேலுடைப்
புங்கவன் பாங்கரிற் போற்றி நிற்றலு
மங்கது கண்டன னவுணர் மன்னவன்.

(இ-ள்.) அரிப்பிரமேந்திராதி தேவர்களது பெரிய ஆயுதங்கள் மேன்மையோடு சென்று நடுங்கி வேற்படையை யேந்திய முருகக்கடவு ளருகில் துதித்து நிற்கவும், அசுரர்கள் தலைவனாகிய தாரகன் அதனைப் பார்த்தனன்.—எ-று. (கசுரு)

ஒருவின னகந்தையை யுள்ள மோரிறை
வெருவினன் விம்மித மிகவு மெய்தினு
னெரிகனுழ் விழியின னிவனை வென்றிட
லரியது போலுமென் றகத்தி லுன்னினன்.

(இ-ள்.) நெருப்புப்பொறி பறக்கின்ற கண்களையுடைய தாரகாசுரன் அகங்காரத்தை யொழிந்தனன்; ஒரு க்ஷணநேரம் மனம் நடுங்கினன், மிகவும் ஆச்சரியமடைந்தனன்; பின்பு, இந்தச்சிறுவனை வெல்லுதல் அருமையாகுமென்று தன் மனதில் நினைத்தனன்.—எ-று.

குமாரக்கடவுளால் தனது வலி குன்றுதலின், 'ஒருவினனகந்தையை' என்றும், அப்பெரும்போரில் தனக்காற்றக் கூடாமையால், 'உள்ளமோரிறைவெருவினன்' என்றும், தான்விடுகின்ற பெரிய தேவாஸ்திரங்களனைத்துஞ் சிறிதும் பயனற்று ஒடுங்கி நிற்றலின், 'விம்மித மிகவு மெய்தினன்' என்றும், இக்குமரன் உருவிற் சிறியனும் உரத்திற் பெரியனுமாக விருத்தலின் இவன் பரப்பிரம சொரூபியேயாமாகலின் இவனைவெல்லுதல் முடியாதகாரியமென்று மனத்தெளிவு பிறந்தமையின், 'இவனை வென்றிட லரியதுபோலுமென் றகத்தி லுன்னினன்' என்றுங்கூறினர்.

பாங்கரின் மாதுடைப் பரமன் றொல்படை
யீங்கினி விடுதுமென் றெண்ணி யப்படை
வாங்கின னருச்சனை மனத்தி னாற்றின
னோங்கிருஞ் சினமுட னெல்லை யேவினன்.

(இ-ள்.) பார்வதி பாகராகிய சிவபெருமானது பழைமையாகிய பாசுபதாஸ்திரத்தை இனி இவ்விடத்து விடுவோமென்று நினைத்து அந்த அஸ்திரத்தை யெடுத்து மானத பூசைசெய்து பொங்குகின்ற மிகுந்த கோபத்துடன் விரைவாகப் பிரயோகஞ்செய்தனன்.—எ-று. (கசுஎ)

சங்கரன் றொல்படை தறுக ணுலமும்
புங்கவர் படைகளும் பூத ராசியு
மங்கத நிரைகளு மளப்பில் சூலமும்
வெங்கன லீட்டமும் விதித்துச் சென்றதே.

(இ-ள்.) பெரிய பாசுபதாஸ்திரமானது அஞ்சாமையினையுடைய மழுப்படையையும், தேவாஸ்திரங்களையும், பூதக்கூட்டங்களையும், சர்ப்பவரிசைகளையும், அளவற்ற சூலங்களையும், வெவ்விய அக்கினிக் கூட்டங்களையுஞ் சிருஷ்டித்துக்கொண்டு சென்றது.—எ-று. (கசுஅ)

கலைகுலாம் பிறைமுடிக் கடவுண் மாப்படை
யலகிலா வுயிர்களு மண்டம் யாவையு
முலைவுறு தலமர வுருத்துச் சேறலு
மிலைகுலா மயிலுடை யெந்தை நோக்கினன்.

(இ-ள்.) கலைகள் விளங்கும் இளம்பிறையை யணிந்த சடைமுடியினையுடைய சிவபெருமானது பாசுபதாஸ்திரமானது அளவற்ற உயிர்களும் எல்லா அண்டங்களுங் கெடாது மயங்கும் வண்ணங் கோபித்துச் செல்லுதலும், அதனை அச்சவடிவாகிய வேற்படையினை யேந்திய எமது முருகக்கடவுள் பார்த்தருளினார்.—எ-று. ()

கந்வே ளனையது கண்டு தந்தையைச்
சிந்தையி லுன்னியோர் செங்கை நீட்டியே
யந்தவெம் படையினை யருளிற் பற்றினன்
றந்தவன் வாங்கிய தன்மை யென்னவே.

(இ-ள்.) அதனை எமது கந்தப்பெருமான் பார்த்தருளித் தமதுபிதாவாகிய சிவபெருமானைத் திருவுள்ளத்திற் சிந்தித்து, வெவ்விய அந்தப் பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்தவன் (மீளவும்) வாங்கிக்கொண்ட தன்மையைப்போலத் தமது ஒரு திருக்கரத்தைநீட்டித் திருவருளுடன் அதனைப் பிடித்துக்கொண்டனர்.—எ-று. (கஎ0)

நெற்றியில் விழியுடை நிமலன் காதலன்
பற்றிய படையினைப் பாணி சேர்த்தினன்
மற்றது தாரக வலியன் கண்ணுறீஇ
யிற்றது நந்திரு வினியென் றேங்கினன்.

(இ-ள்.) நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானது திருப்புதல்வராகிய முருகக்கடவுள் தாம் பிடித்த பாசுபதாஸ்திரத்தைத் தமது ஆயுத வரிசைகளில் சேர்த்தருளினர். வலிமைபொருந்திய தாரகாசுரன் அதனைப் பார்த்து இனி நமது செல்வமானது அழிந்ததென்றெண்ணி ஏக்கங் கொண்டனன்.—எ-று.

பாணி - ஆயுதம். (கஎக)

தேவர்க டேவனார் தெய்வத் தொல்படை
யேவின னதனையு மெதிர்ந்து பற்றினன்
மூவிரு முகமுடை முதல்வன் வன்மையை
நாவினி லொருவரா னவிலற் பாலதோ.

(இ-ள்.) நான் தேவதேவராகிய சிவபெருமானது தெய்வத்தன்மை பொருந்திய பெரிய பாசுபதாஸ்திரத்தை விட்டேன்; அதனையுங் கையால் எதிர்ந்து பிடித்தனன், ஆதலால் ஆறுமுகங்களையுடைய இம்முதல்வனது பராக்கிரமத்தை (இன்னதன்மையதென்று) ஒருவர் நாவினால் சொல்லுந் தன்மையதோ? (அன்று).—எ-று. ()

ஆயினு மரன்மக னறத்தின் போரலாற்
றீயதோர் கைதவச் செருவ துன்னலான்
மாயைக ளாற்றியே மறைந்து நின்றுநா
னேயென வியற்றுவ னமரொன் றெண்ணினன்.

(இ-ள்.) ஆயினும், இச்சிவகுமாரன் தருமவழியேயுள்ள போரையல்லாமல், கொடிதாகிய வஞ்சகப்போரைச் செய்யநினையான், ஆதலால் நான் மறைந்து நின்று மாயைகளைச் செய்து விரைவிற் போர்செய்கின்றேனென்று நினைத்தனன்.—எ-று. ()

கையனு மிவ்வகை கருத்தி லுன்னியே
யொய்யென வேகிர வுஞ்ச வெற்பின்முன்

வையமொ டேகிநீ வல்ல மாயைகள்
செய்குதி செய்குதி யென்று செப்பினான்.

(இ-ள்.) கீழ்மகனாகிய தாரகாசுரன் இவ்வாறு தன் மனத்தில் நினைத்து விரைவாகத் தேருடனே கிரவுஞ்சமலையி னெதிரிற்சென்று (அதனைப்பார்த்து) நீ தகுந்த மாயைகளைச்செய்யக்கடவை செய்யக்கடவை யென்று கூறினான்.—எ-று. (௧௭௪)

வேறு.

செப்பிய விறுவரை கிரவுஞ்சந் திகழ்வுறு மாயையி னிகழ்வுன்னி
முப்புர வகைபல வெனநிற்ப முரணுறு தாரக முதல்வன்று
னப்புர நிருதர்க ளெனநின்ற் னகல்வரை பலபல முகிலாக
வொப்பறு சூரன திளையோனு முருமென வவையிடை யுலவுற்றான்.

(இ-ள்.) இவ்வாறு சொல்லி முடிவதற்கு முன்னே கிரவுஞ்சமலையானது விளங்குகின்ற மாயையின் தன்மையை நினைத்துப் பல திரிபுரங்கள்போன்று நிற்கவும், வலிமைபொருந்திய தாரகாசுரன் அந்தத் திரிபுராதியர்களைப்போல நின்றனன்; பெரிய அம்மலையானது அநேக மேகங்களாக வரவும், ஒப்பற்ற சூரபன்மன் தம்பியாகிய தாரகாசுரனும் அம்மேகத்தினிடத்தில் இடிகளைப்போல உலாவினான்.—எ-று. (௧௭௫)

வேலைக ளுருவினை வரைகொள்ள விசயமு துடையதொ ரசுரேசன்
காலமு திறுதியி னுலகுண்ணுங் கனையொலி யனலிக ளெனநின்றான்
சீலமின் முதுகிரி நெடுநேமித் திருவரை சூழ்தரு மிருளாக
மால்கரி முகமுள வவுணன்றான் வரையறு பாரிட நிரையானான்.

(இ-ள்.) அந்தக்கிரவுஞ்சமலையானது பல கடல்களினுருவத்தைக் கொள்ளவும், வெற்றிபொருந்திய தாரகாசுரன் ஊழிமுடிவில் உலகத்தை யழிக்கின்ற ஒலிபொருந்திய பிரளயாக்கினியைப்போல நின்றனன்; ஒழுக்கமற்ற பழைய அம்மலையானது பெரிய அழகிய சக்கரவாளகிரியைச் சூழ்ந்துள்ள இருளாக வரவும், பெரிய யானைமுகத்தினையுடைய தாரகாசுரன் அளவற்ற பூதக்கூட்டங்களாயினான்.—எ-று.

மால்கரி என்பதற்கு, மதமயக்கம் பொருந்திய யானை எனப் பொருள்கூறலுமொன்று. (௧௭௬)

இந்திரன் முதலுள சுரர்வைகு மேழுட னொருதிசை வேழம்போ
லந்தநெ டுங்கிரி வரலோடு மருகினி லுறுகுல கிரியாகித்
தந்தியின் முகமுள வவுணன்றான் சடசட முதிரொலி யுடன்வந்தான்
முந்திய தந்தம துருமாறி முறைமுறை நின்றதொர் திறனேபோல்.

(இ-ள்.) பூர்வத்திலுள்ள தங்கள் தங்களுருவத்தை மாற்றிக்கொண்டு முறைமுறையாகவந்து நின்ற தன்மையைப்போல அந்தப்பெரிய கிரவுஞ்சமலையானது இந்திரன்முதலாகிய தேவர்கள் வசிக்கின்ற எட்டுத்திக்குகளிலுமுள்ள யானைகளைப்போல வரவும், யானைமுகத்தையுடைய தாரகாசுரன் அவற்றினருகிலுள்ள அஷ்டகுல பருவதங்களாய்ச் சடசடத்த பேரொலியுடன் வந்தனன்.—எ-று. (௧௭௭)

வாயுவி னுருவென மலைசெல்ல மதகரி முகமுள பதகன்றான்
றேயுவி னுருவென வரலுற்றான் றிரியவு நெடுவரை விரைவோடுங்
காய்கன லுகுநெடு ழிகளாகிக் ககனமு திடையுற மிடைகாலை
யாயிர கோடிவெய் யவரேபோ லலமர லுற்றன னறமில்லான்.

(இ-ள்.) கிரவுஞ்சமலையானது காற்றுருவங் கொண்டுவரவும், மதம்பொருந்திய யானை முகத்தினையுடைய தாரகாசுரன் நெருப்புருவங் கொண்டுவந்தனன்; மீண்

கும் விரைவாக அம்மலையானது மிக்க தீப்பொறிகளைச் சிந்துகின்ற ஞெகிழிகளாய் ஆகாயத்தில் நெருங்கினபொழுது, பாவியாகிய தாரகன் ஆயிரங்கோடி சூரியர்களைப் போலச் சுழன்றனன்.—எ-று.

ஞெகிழி - நெருப்புறு கொள்ளி. (கஎஅ)

அவ்வகை தாரகன் வரையோடு மளவறு மாயையின் வடிவெய்தி
யெவ்விடை யுஞ்செறி தரலோடு மெம்பெரு மானவ னிவைகாணூத்
தெவ்வலி கொண்டுறு மிவனுவி சிந்துவ னென்றுள மிசைகொண்டே
கைவரு வேற்படை தனைநோக்கி யினையன சிலமொழி கழறுற்றான்.

(இ-ள்.) அவ்விதமாகத் தாரகாசுரன் கிரவுஞ்சமலையுடன் கலந்து அளவற்ற மாயாரூபங்களை யடைந்து எவ்விடங்களிலும் நெருங்கி நிற்கவும் அதனை எமது முருகக்கடவுள் பார்த்து, போரில் வலிமைபெற்றுள்ள இவ்வசுரனது உயிரை அழிக்கின்றேனென்று திருவுள்ளத்திற் சிந்தித்துத் தமது திருக்கரத்திற்பொருந்திய வேலாயுதத்தை நோக்கி இவ்வாறு சிலவார்த்தைகளை யருளிச்செய்வாராயினர்.—எ-று.

பெருமானவன் என்பதில், அவன் பகுதிப்பொருள் விகுதி. (கஎகூ)

தாரக னென்பதொர் பேரோனைச் சஞ்சல முறுகிர வுஞ்சத்தை
யோரிறை செல்லுமு னுடல்கீறி யுள்ளுயி ருண்டு புறத்தேகிப்
பாரிடர் தம்மை யிலக்கத்தொன் பதின்மர்க ளாக வுரைக்கின்ற
வீரரை மீட்டிவண் வருகென்றே வேற்படை தன்னை விடுத்திட்டான்.

(இ-ள்.) தாரகனென்னும் பெயரையுடைய அசுரனையும், துன்பமிக்க கிரவுஞ்சமலையையும் ஓர் கணநேரத்திற்குள்ளே உடலைப் பிளந்து உள்ளே யிருக்கும் உயிரை யுண்டு,புறத்தில்வந்து பூதர்களையும் இலக்ஷத்தொன்பது வீரர்களையும் மீட்டுக்கொண்டு இங்கு வரக்கடவையென்று வேலாயுதத்தை விடுத்தருளினர்.—எ-று. (கஅ0)

சேயவன் விட்டிடு தனிவைவேல் செருமுய ருரகன் வரையோடு
மாயிடை செய்த புணர்ப்பெல்லா மகிலமு மழிதரு பொழுதின்கண்
மாயையி னாகிய வுலகெங்கு மலிதரு முயிர்களு மதிசூடுந்
தூயவன் விழியழல் சுடுமாபோற் றுண்ணென வட்டது சுரர்போற்ற.

(இ-ள்.) சர்வசங்கார காலத்தில் மாயையினா லுண்டாகிய உலகங்களையும், அவ்வுலகில் நிறைந்த உயிர்களையுஞ் சந்திரசேகரராகிய சிவபெருமானது நேத்திராக்கினியானது தகிக்குந் தன்மைபோல, முயற்சித்துப் பொருகின்ற தாரகாசுரன் கிரவுஞ்சமலையுடன் கலந்து அவ்விடத்திற்செய்த மாயைகளனைத்தையும் முருகக்கடவுள் விடுத்தருளிய ஒப்பற்ற கூரிய வேலாயுதமானது தேவர்கள் துதிக்கும்படி விரைவாக அழித்தது.—எ-று. (கஅக)

வேறு.

அரண்டரு கழற்கா லைய னறுமுகத் தெழுந்த சீற்றந்
திரண்டொரு வடிவின் வேறாய்ச் சென்றதே யெனவு நான்கு
முரண்டரு திடர்தோ ளண்ணன் முத்தலை படைத்த சூல
மிரண்டொரு படையாய் வந்த தென்னவு மேகிற் றவ்வேல்.

(இ-ள்.) அழகுபொருந்திய வீரக்கழலையணிந்த முருகக்கடவுளினது ஆறு திருமுகங்களினின்றுந் தோன்றிய கோபமானவை ஒரு வடிவமாகத் திரண்டு அவரிடத்தினின்று நீங்கிச் சென்ற தன்மைபோலவும், வலிமைபொருந்திய நான்கு பெரிய திருத்தோள்களையுடைய சிவபெருமானது இரண்டு முத்தலைச்சூலம் ஒரு ஆயுதமாக வடிவெடுத்துவந்த தன்மைபோலவும் அவ்வேற்படை சென்றது.—எ-று

அரண் - அழகு. சிவபெருமானுக்கு எட்டுத் திருத்தோள்களென்று நூல்களிற் கூறியிருக்க, ஈண்டு 'நான்கு முரண்டரு தடந்தோளண்ணல்' என்றது நூல் வழக்குப்போலும். (கஅஉ)

முடித்திட லரிய மாய மூரிநீர்க் கடலை வற்றக்
குடித்திடு கின்ற செவ்வேற் கூற்றம்வந் திடுத லோடுந்
தடித்திடு மெயிற்றுப் பேழ்வாய்த் தாரக னிதனைப் பற்றி
யொடித்திடு கிற்பே னென்னு வொல்லென வுருத்து வந்தான்.

(இ-ள்.) (பிறரால்) அழித்தற்கரிய வலிய மாயாசமுத்திரத்தை வற்றும்படி குடிக்கின்ற சிவந்த வேற்படையாகிய இயமன் வருதலும், தடித்த பற்களமைந்த பிளப்பாகிய வாயினையுடைய தாரகாசுரனானவன் இவ்வேலைப் பிடித்து ஒடித்துவிடுவேனென்று கோபத்துடன் விரைந்து வந்தனன்.—எ-று. (கஅங)

அச்சமொர் சிறிதுமில்லா வவுணர்கோ னுவணன் மேற்செ
னச்சர வென்னச் சீறி நணுகலு மவன்மார் பென்னும்
வச்சிர வரையின் மீது வானுரு மேறுற் றென்னச்
செச்சையந் தெரியல் வீரன் செலுத்தும்வேல் பட்ட தன்றே.

(இ-ள்.) சிறிதும் அச்சமில்லாத தாரகாசுரனானவன் கருடன்மீது எதிர்த்துச்செல்லுகின்ற விஷம்பொருந்திய பாம்பைப்போலச் சீறிக்கொண்டுசெல்லவும், அழகிய வெட்சிமலர்மாலையை யணிந்த முருகக்கடவுள் விட்டருளிய வேற்படையானது அவ்வசுரனது மார்பென்று கூறும், வயிரமலையின்மீது பெரிய இடியேறு விழுந்தாற்போலத்தாக்கியது.—எ-று.

செச்சை - வெட்சிமலர். இடியேறு - ஆண்இடி. (கஅச)

தாரகன் மார்ப மென்னுந் தடம்பெரு வரையைக் கீண்டு
சீரிய கிரவுஞ் சத்திற் சேர்ந்துபட் டுருவிச் சென்று
வீரமும் புகழுங் கொண்டு விளங்கிய தென்ன வங்கட்
சோரியுந் துகளு மாடித் துண்ணென மீண்ட தன்றே.

(இ-ள்.) (அவ்வேற்படையானது) தாரகாசுரனது மார்பென்று கூறும் மிகப்பெரிய மலையைப் பிளந்து, சிறந்த கிரவுஞ்சமலையிற் சென்று தாக்கி ஊடுருவிச்சென்று, வீரத்தையும் புகழையும் பெற்றுவிளங்கிய தன்மையைப்போல, அவ்விடத்திலேயே (தாரகனது) உதிரத்திலும், (கிரவுஞ்சமலையினது) புழுதியிலுங்கலந்து விரைவாகத் திரும்பியது.—எ-று. (கஅரு)

மீண்டிடு சீற்ற வைவேல் வெற்பினுட் டுஞ்சு கின்ற
வாண்டகை வீரர் தம்மை யாயிடை யெழுப்பி வான்போய்
மாண்டகு கங்கை தோய்ந்து வாலிய வடிவா யையன்
றாண்டிய கரத்தில் வந்து தொன்மைபோ லிருந்த தம்மா.

(இ-ள்.) அவ்வாறு திரும்பிவருகிற கோபத்தினையுடைய கூரிய வேற்படையானது அம்மலையில் (மயக்கத்தால்) தூங்கிக்கொண்டிருந்த ஆண்தன்மையையுடைய வீரர்களை அங்கு எழுப்பிவிட்டு, பின்பு ஆகாயத்திற் சென்று மாட்சிமை பொருந்திய கங்கையில் முழுகித்தூய்மையாகிய வடிவத்துடன் முருகக்கடவுள் விட்டருளிய திருக்கரத்தில் வந்து முன்போலவே யிருந்தது.—எ-று. (கஅசு)

தண்டமி தியற்றுங் கூர்வே லூரக வவுணன் மார்பும்
பண்டுள வரையும் பட்டுப் பறிந்தபே ரோசை கேளா

விண்டது ஞால மென்பார் வெடித்தது மேரு வென்பர்
ரண்டம துடைந்த தென்பா ராயின ரகிலத் துள்ளோர்.

(இ-ள்.) (துஷ்டர்களைத்)தண்டிக்கின்ற கூரிய வேலாயுதமானது தாரகாசுரனது மார்பிலும் பழைமையாகிய கிரவுஞ்சகிரியிலும் பட்டு ஊடுருவிச்சென்ற பேரோசையை உலகத்திலுள்ளவர்கள்கேட்டுப் பூமிபிளந்தது; மேருவெடித்தது; என்று கூறுவார்கள். இஃதன்றியும் அண்டமே யுடைந்ததென்றுங் கூறுவாராயினர்.—எ-று. ()

வடித்ததை யன்ன கூர்வேன் மார்பையூ டறுத்துச் செல்லத்
தடித்திடு கின்ற யாக்கைத் தாரக னநந்த கோடி
யிடித்தொகை யென்ன வார்த்திட் டிம்மென வெழுந்து துள்ளிப்
படித்தலந் தன்னில் வீழ்ந்து பதைபதைத் தாவி விட்டான்.

(இ-ள்.) புதிதாய் வடித்ததுபோன்றுள்ள கூரிய வேலாயுதமானது பருத்த உடம்பினையுடைய தாரகனது மார்பைப்பிளந்துகொண்டு செல்லவும், அவன் அநேகங்கோடி இடிக்கூட்டங்க ளிடித்தாற்போல இரைச்சலிட்டு விரைந்து எழுந்து துள்ளிப்பூமியில் விழுந்து பதைபதைத்து உயிரைவிட்டனன்.—எ-று (கஅஅ)

தடவரை யனைய மொய்ம்பிற் றாரகன் வேலாற் பட்டுப்
புடவியில் வீழா நின்றான் பொள்ளென வானிற் றுள்ளிக்
கடலுடைந் தென்ன வார்க்குங் காலையிற் கலக்க மெய்தி
யுடுகண முதிர்ந்த தஞ்சி யோடின னிரவி யென்போன்.

(இ-ள்.) பெரிய மலைபோன்ற தோளினையுடைய தாரகாசுரன் வேலாயுதத்தாற்பிளக்கப்பட்டுப் பூமியில் விழுகின்றவன் விரைவாக ஆகாயத்திற் கிளம்பி ஆரவாரிக்கும்பொழுது நக்ஷத்திரக்கூட்டங்கள் நடுக்கமுற்று உதிர்ந்தன; சூரியனும் அஞ்சியோடினன்.—எ-று. (கஅகூ)

தளர்ந்திட லில்லா வீரத் தாரகன் பட்டு வானிற்
கிளர்ந்தனன் வீழு மெல்லைக் கீழுறு பிலமும் பாரும்
பிளந்தன வரைகள் யாவும் பிதிர்ந்தன வதிர்ந்த தண்ட
முளந்தடு மாறி யோலிட் டோடின திசையில் யானை.

(இ-ள்.) சோர்வில்லாத பராக்கிரமத்தினை யுடைய தாரகாசுரன் இறந்து ஆகாயத்திற்கிளம்பி விழும்பொழுது அடியிலுள்ள பாதலமும் பூமியும்பிளந்தன; மலைகளனைத்துமுதிர்ந்தன; அண்டம் அதிர்ந்தன; அஷ்டதிக்குயானைகள் மனங்கலங்கி யோலமிட்டோடின.—எ-று. (ககூ௦)

தண்ணளி சிறிது மில்லாத் தாரகன் கிளர்ந்து வான்போய்
மண்ணிடை மறிந்த தன்மை வன்சிறை யிழந்த நாளிற்
றிண்ணிய மேரு வின்னுஞ் செல்லலாங் கொல்லென் றுன்னி
விண்ணிடை யெழுந்து வல்லே வீழ்ந்ததே போலு மன்றே.

(இ-ள்.) இரக்கமென்பது சிறிதுமில்லாத தாரகாசுரன்ஆகாயத்திற் கிளம்பிப் பூமியில் திரும்பவும் விழுந்ததன்மை (எதுபோலுமெனின்) பெரிய மேருமலையானது வலிய சிறகுகளையிழந்த காலத்தில் நாம் இன்னமும் மேலேபறக்கக்கூடுமென்று நினைத்து வானத்திற்கிளம்பி விரைந்து வீழ்ந்ததை யொக்கும்.—எ-று. (ககூக)

வெற்றிய தாருங் கூர்வேல் வெற்பினை யட்ட காலைச்
செற்றிய பூழி யீட்டஞ் சிதறிய பொறிக ளெங்கும்
பற்றிய புகையும் வந்து பரந்தன கரந்த தண்டம்
வற்றிய கடல்கள் வானிற் கங்கையும் வறந்த தன்றே.

(இ-ள்.) வெற்றிபொருந்திய கூரிய வேலாயுதமானது கிரவுஞ்ச மலையை யழித்தபொழுது நெருங்கிய புழுதிக்கூட்டங்கள் சிதறின; தீப்பொறிக ளெவ்விடத்தி லும் பற்றிக்கொண்டன; புகைகளும் வந்து பரவின; அண்டமானது மறைந்தது; சமுத்திரங்கள் வற்றின; ஆகாய கங்கையும் வற்றியது.—எ-று. (ககஉ)

சிறந்திடு மாய வெற்பைத் திருக்கைவேல் பொடித்த காலைப்
பிறந்திடு கின்ற தீயைத் தீயெனப் பேச லாமோ
வறிந்தவர் தெரியிற் குன்ற மவுணனு கையினன் மெய்யி
னுறைந்திடு குருதி துள்ளி யுகுத்தவா றுகு மன்றே.

(இ-ள்.) மாயையிற் சிறந்த கிரவுஞ்சமலையை (முருகக் கடவுளது) திருக் கரத்திற் பொருந்திய வேலாயுதமானது பொடியாக்கியபொழுது அங்குத்தோன்றிய நெருப்பினை நெருப்பென்று கூறலாமோ? இதனை யுணர்ந்தவர்கள் ஆராயுமிடத்தில் கிரவுஞ்சமலை ஒரு அசுரனுகையால் அதின் உடம்பிற்பொருந்திய உதிரமானது துள் ளிச்சிதறியதன்மையாகும்.—எ-று.

கிரவுஞ்சமலையின்மீது முருகக்கடவுள் விடுத்த வேற்படை தாக்கியபோது ண்டாகியதீ செந்நிறமுடைத்தாயிருத்தலின், அதுகிரவுஞ்சனுகிய அசுரனது உதிரமே யாமென்றுகூற விளங்கினமையின், 'மெய்யி னுறைந்திடுகுருதி துள்ளியுகுத்தவாறுகு மன்றே' என்று கூறினர். (ககங)

யானுற்ற குன்றந் தன்னை யெறிந்தன னென்று செவ்வே
டானுற்ற நதியை வந்து தடிந்ததே யென்ன வெற்பி
னூனுற்ற நெடுவேல் பாய வுதித்திடும் பொறியி னீட்டம்
வானுற்ற கங்கை புக்கு வறந்திடு வித்த தன்றே.

(இ-ள்.) யான் வசித்திருந்த கிரவுஞ்சமலையைப் பிளந்தனனென்று முருகக் கடவுள் வசித்திருந்த கங்கைநதியை யடைந்து அதனையழித்த தன்மையைப்போல அம்மலையினிடத்து மாமிசந்தங்கிய நெடிய வேலாயுதமானது பாய்தலால், அதிற் றோன்றியதீப்பொறிக் கூட்டங்கள்ஆகாயகங்கையிற்புகுந்துவற்றச்செய்தது.—எ-று

தீப்பொறிகள் விண்ணிற்சென்று ஆகாய கங்கையைத் தூர்த்தல், நாம் வசித்த மலையை முருகக்கடவுள் தமது வேலைக்கொண்டழித்தமையால் அவர் வசித் திருந்த கங்கையை நாம் தூர்ப்போமென்று சென்று அதனை வற்றச்செய்தாற்போன் றிருந்ததென்க. (ககச)

திறனுடை நெடுவே லட்ட சிலம்பினிற் சிதறித் தோன்றும்
பொறிகளுந் துகளு மார்ப்பும் பொள்ளெனச் செறிந்த தன்மை
மறிகடன் முழுது மங்கண் வடவையு மடைந்தொன் றாகி
யிறுதியி னுலகங் கொள்ள வெழுந்தது போலு மாதோ.

(இ-ள்.) வலிமை பொருந்திய நீண்ட வேலாயுதத்தினல்பிளக்கப்பட்டகிர வுஞ்சமலையினின்றுஞ் சிதறித்தோன்றுகின்ற தீப்பொறிகளும் துகள்களும் ஆரவா ரமும் எங்கும் விரைவாக நெருங்கியதன்மை(எதுபோலுமெனின்,) அலைமடங்குகின்ற கடல்களனைத்தும் வடவாமுகாக்கினியும் ஒன்றாகக்கூடிச் சர்வசங்காரகாலத்தில் உல கத்தையழிக்க வெழுந்ததுபோன்றிருந்தது—எ-று.

பொறிகள் வடவையாகவும், துகள்கள் கடலாகவும், ஆர்ப்பு ஊழிக்காலத் துண்டாம் பேரொலியாகவு முவமித்துக் கூறினமையுணர்க. (ககரு)

தந்தியின் வதனங் கொண்ட தாரக வவுணன் மார்பிற்
சிந்துறு குருதிச் செந்நீர் திரைபொரு தலைத்து வீசி

பந்தமி னீத்த மாகி யயிற்படை யட்ட குன்றில்
வந்திடு பூழை புக்கு மறிகடன் மடுத்த தன்றே.

(இ-ள்.) யானைமுகத்தையுடைய தாரகாசுரனது மார்பில் ஒழுகின்ற உதிர வெள்ளமானது அலைகளை மோதியடித்துவீசி அளவற்ற பெருவெள்ளமாய் வேலாயுத மானது அழித்த கிரவுஞ்சமலையில் உண்டாகிய துவாரத்தின் வழியாகப் பிரவேசித்து அலைமடங்குகின்ற கடலில் போய் விழுந்தது.—எ-று.

பூழை-துவாரம். (கககசு)

விட்டவேன் மீண்டு கந்த வேள்கரத் திருப்பத் தீயோன்
பட்டதும் வெற்பு மாய்ந்த பான்மையு மவுணர் யாருங்
கெட்டது நோக்கி மாலுங் கேழ்கிளர் கமலத் தேவு
முட்டிலா மகத்தின் வேந்து முனிவருஞ் சுரரு மார்த்தார்.

(இ-ள்.) முருகக்கடவுள் விட்டருளிய வேற்படையானது திரும்பிவந்து அவரது திருக்கரத்திலிருக்கவும், கொடியவனாகிய தாரகாசுரன் இறந்ததன்மையும் கிரவுஞ்சகிரி யழிந்ததன்மையும் அசுரர்களனைவரும் அழிந்ததன்மையும் பார்த்துத் திருமாலும் நன்னிறம் விளங்குங் கமலாசனனாகிய பிரமனும் கெடுதலில்லாத இந்திரனும் முனிவர்களும் தேவர்களும் ஆரவாரித்தார்கள்.—எ-று. (ககள)

ஆடினர் குமரற் போற்றி யங்கைக ளுச்சி மீது
சூடினர் தண்பூ மாரி தூர்த்தன ரவனைச் சூழ்ந்து
பாடினர் தொழுது முன்னம் பன்முறை பணிந்து நின்றார்
நீடிய வுவகை யென்னு நெடுங்கட லாழ்நீரார்.

(இ-ள்.) மிகுந்த சந்தோஷமென்னும் பெரிய கடலில் மூழ்கிய தன்மையினையுடைய திருமால் முதலிய தேவர்கள் குமாரக்கடவுளைத் துதித்து ஆனந்தக்கூத்தாடினார்கள்; அழகிய கைகளைச் சிரமேற்குவித்து வணங்கினார்கள்; குளிர்ந்த கற்பக மலர்மாரி பெய்தார்கள், அவ்வெம்பெருமானைப் பிரதக்ஷிணஞ்செய்து பாடினார்கள்; திருமுன்னே தொழுது பலதரம் நமஸ்கரித்து நின்றார்கள்.—எ-று. (ககஅ)

ஆங்கது காலை தன்னி லளப்பிலா மாயை வல்ல
வோங்கல திறப்ப வங்க ணுறங்கிய வீர ரெல்லாந்
தீங்குறு மைய னீங்கிக் கதுமெனச் சென்று செவ்வேள்
பூங்கழல் வணங்கி நின்று போற்றியே புடையி னின்றார்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் அளவற்ற மாயா வல்லபத்தினையுடைய கிரவுஞ்சமலையானது அழிதலும், அவ்விடத்தில் உறக்கங்கொண்டிருந்த வீரர்களனைவரும் தீமைபொருந்திய மயக்கமொழிந்து விரைவாகச் சென்று முருகக்கடவுளது அழகிய திருவடிகளை நமஸ்கரித்துத் திருமுன்னின்று துதித்து அருகில் நின்றார்கள்.—எ-று.

வாருறு கழற்கால் வீர வாகுவே முதலா வுள்ள
வீரர்க டம்மை யெல்லாம் வேலுடைக் கடவு ணோக்கித்
தாரகன் வரையுட் பட்டுத் தகுமுணர் வின்றி நீவி
ராருநொந் தீர்கள் போலு மாயையூ டழுந்தி யென்றான்.

(இ-ள்.) வாரமைந்த வீரக்கழலையணிந்த கால்களையுடைய வீரவாகுத்தேவர் முதலிய வீரர்களனைவரையும் வேற்படையை யேந்திய முருகக்கடவுள் பார்த்தருளி, தாரகாசுரனது கிரவுஞ்சமலையிலகப்பட்டு அவனது மாயையில் முழுகி உணர்ச்சியற்று நீங்களனைவரும் வருந்தினீர்கள்போலும் என்று கூறியருளினார்.—எ-று.

தாரகன்வரை - தாரகாசுரனது ஆட்சிக்குட்பட்டமலை. (உ00)

செய்யவ னினைய வாறு சீரருள் புரிய வீர
ரையநின் னருளுண் டாக வடியமு றுடைவ துண்டோ
மையலோ டுறங்கு வார்போன் மருவுமின் புற்ற தன்றி
வெய்யதோர் கிரிமா யத்தான் மெலிந்தில மிறையு மென்றார்.

(இ-ள்.) இவ்வாறு முருகக்கடவுள் சிறந்த திருவருள் புரியவும், அந்த வீரர்கள், ஐயனே! தேவரீரது திருவருளிருக்க அடியேங்கள் துன்பமடைவதுண்டோ? (நாங்கள்) மயக்கத்துடன் தூங்குகின்றவர்களைப் போலப் பொருந்திய இன்பமடைந்ததேயன்றிக் கொடிய கிரவுஞ்சகிரியின் மாயையினால் சிறிதும் வருந்தினோமில்லையென்று கூறினார்கள்.—எ-று. (௨௦௧)

என்றலும் வீர மொய்ம்பி னேந்தலை விளித்துச் செவ்வே
வென்றிகொள் சூரன் பின்னோன் விட்டிடத் தான்முற் கொண்ட
வன்றிறற் படையின் வேந்தை மற்றவன் கரத்தி[...]ல்கி
நன்றிது போற்று கென்றே நவின்றுநல் லருள்[...]ரிந்தான்.

(இ-ள்.) என்றிவ்வாறுகூறவும், ஸ்ரீசுப்பிரமணிய[...]டவுள் வீரவாகுத்தேவரை யழைத்து, வெற்றிபொருந்திய சூரபன்மன் தம்பியாகிய தாரகாசுரன் பிரயோகிக்க, அதனைத் தாம் முன்பு திருக்கரத்திற் பிடித்தருளிய[...]க்க வலிமையினையுடைய ஆயுதங்களில் முதன்மைபொருந்திய பாசுபதாஸ்திர[...]தை அவ்வீரவாகுத்தேவரது திருக்கரத்திற் கொடுத்தருளி, இதனை நன்றாகப்பா[...]க்கக் கடவையென்று கூறிச் சிறந்த திருவருள் புரிந்தனர்.—எ-று.

படையின்வேந்து - பாசுபதா[...]ரம். (௨௦௨)

தாரகன் போரிற் றுஞ்சு[...]ரதர் தம்மை யெல்லா
மாருநீ ரெழுதி யென்[...]வொலா மெழவே செய்து
பாரிட வனிகஞ் சூ[...]ண்ணவர் பரவல் செய்யச்
சீரிய வயவ ரீண்[...]செருநில மகன்றான் செவ்வேள்.

(இ-ள்.) தாரக[...]ன் செய்த போரிலிறந்த பூதர்களனைவரையும் நீங்களெல்லாருமெழுந்திருமென்[...] அருளிச்செய்து அவர்களனைவருமெழுந்திருக்கச்செய்து பூதப்படைகள் சூ[...] வரவும், முனிவர்கள் துதிக்கவும், சிறந்த வீரர்கள் நெருங்கி வரவும் முருகக்[...]ள் போர்க்களத்தை விட்டு நீங்கினார்.—எ-று. (௨௦௩)

தாரகன் வதைப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கடுருக.

---

உ

முருகன்றுணை.

# தேவகிரிப் படலம்.

மாகவந் தங்கள் கூளி வாய்ப்பறை மிழற்ற வாடு
...கவந் தங்கு மெல்லை யகன்றுசெங் கதிர்வே லண்ணல்
சே...வந் தங்கொண் டுள்ள சுரருட னனிகஞ் சுற்றி
யேகவ... தங்க ணின்ற விமகிரி யெல்லை தீர்ந்தான்.

(இ-ள்.) ஒ...ஒளி பரந்த வேற்படையினையுடைய குமாரக்கடவுள் பேய்கள் வாய்ப்பறையடிக்க...டிப் பெரிய கவந்தங்களாடுகின்ற போர்க்களத்தின் எல்லையைவிட்டு நீங்கித் துன்ட...தின் முடிவைப் பெற்றுள்ள தேவர்களும் படைவீரர்களுஞ் சூழ்ந்து செல்லச்சென்... அவ்வழியிற்பொருந்திய இமையமலையின் எல்லையைவிட்டு நீங்கியருளினார்.—எ-... (க)

அரியயன் மகத்தின் ே...வ னமரர்க ளிலக்கத் தொன்பான்
பொருதிறல் வயவ ரோ...பூதர்கள் யாரும் போற்றத்
திருநெடு வேலோன் றெ...ற் செவ்விதி னடந்து மேல்பா
லிரவியி னிரவி செல்ல விமை...யர் சயிலஞ் சேர்ந்தான்.

(இ-ள்.) திருமாலும், பிரமனும், இ...ரனும், தேவர்களும், போர்செய்யத்தக்க வீரத்தினையுடைய இலக்ஷத்தொன்பது வ...ளும், மற்றைப் பூதர்களனைவருந் துதிக்கும்படி அழகிய பெரிய வேற்படையை யே...ு குமாரக்கடவுள் சிறப்புடன் தென்றிசைநோக்கி நடந்தருளிச் சூரியன் அஸ்தமன...யில் செல்லுஞ் சமையத்தில் தேவகிரியை யடைந்தருளினார்.—எ-று.

மேல்பாலிரவி-அஸ்தமனகிரி. (உ)

ஒப்பறு சூர்பின் னோனை யொருவன்வே லட்ட ...
யிப்புற வுலகி னுள்ளார் யாவரு முணர்வ ரின்னே...
யப்புற வுலகி னுள்ளா ரறிந்திட யானே சென்று
செப்புவ னென்பான் போலச் செங்கதிர் மறைந்து போ...ன்.

(இ-ள்.) ஒப்பற்ற சூரபன்மன் தம்பியாகிய தாரகாசுரனை மு...க்கடவுளது வேற்படையானது அழித்ததன்மையை இந்தப்புறத்திலுள்ள உலகத்...ர்கள் யாவருமறிவார்கள், இதனை, இப்பொழுதே அந்தப்புறத்திலுள்ள உலகத்தவ...ள் அறியும்படி யானேசென்று கூறுவனென்று சென்றவனைப்போலச் செவ்...ய கிரண...களையுடைய சூரியன் அஸ்தமித்தனன்.—எ-று. (ங)

பானுவென் றுரைக்குமேலோன்பகற்பொழுதெலாங்கைக்கொண்டா
னேனைய மதியப் புத்தே ளிரவினுக் கரச னுறு
ஞனிவற் றிடையே சென்று நண்ணுவ னென்று செந்தீ
வானவன் போந்த தென்ன வந்தது மாலைச் செக்கர்.

(இ-ள்.) சூரியனென்று சொல்லப்பட்டபெரியோனுனவன் பகற்கா...முழுமையுந் தான் கைக்கொண்டனன். மற்றையசந்திரனுனவன் இராக்காலத்திற்கு...ல

னுயினன்; ஆதலால் யான் இவ்விருபொழுதிற்கும் நவெில்சென்று (அரசனுகப்)பொருந்துவேனென்று சிவந்த அக்கினிதேவன் சென்றதுபோல மாலைகாலத்துச் செவ்வானந்தோன்றியது.—எ-று. (௪)

வம்பவிழ் குமுத மெல்லா மலர்ந்திடு மாலை தன்னில்
வெம்படை பயிலத் தோன்றும் வேளுக்குத் தான்முன் வந்த
வம்புதி முரச மாயிற் ருகையாற் ருனும் வெற்றிக்
கொம்பென விளங்கிற் றென்ன வெழுந்தது குழவித் திங்கள்.

(இ-ள்.) நறுமணம் விரிந்த அல்லிமலர்களனைத்தும் மலர்கின்ற மாலைக்காலத்தில் வெவ்விய ஆயுதப்பயிற்சியைச் செய்யும்பொருட்டுத் தோன்றிய மன்மதனுக்கு, (சந்திரன்) தான் முன்னேபிறந்த கடலானது முரசாக வமைந்தது; ஆகையால், அச்சந்திரனும் வெற்றிபொருந்திய ஊதுகொம்பாகவிளங்கினுற்போல இளம்பிறை உதையமாயிற்று.—எ-று. (௫)

ஏற்றெதிர் மலைந்து நின்ற விகலுடை யவுணர் தம்மேற்
காற்றெனத் தேர்க டாவிக் கடுஞ்சமர் புரிந்த வெய்யோன்
மாற்றருஞ் செம்பொன் மார்பில் வச்சிரப் பதக்க மிற்று
மேற்றிசை வீழ்ந்த தென்ன விளம்பிறை விளங்கிற் றன்றே.

(இ-ள்.) எதிர்த்துப் போர்செய்து நின்ற (மாந்தேகர் என்னும்) அசுரர்கள் மீது வாயுவேகமாகத்தேரைச் செலுத்திக் கொடும்போர்செய்த சூரியன் உயர்ந்தமாற்றினையுடைய செம்பொன்மயமாகிய மார்பிலணிந்திருந்த வயிரப்பதக்கம் அறுபட்டு மேற்றிசையில் வீழ்ந்தாற்போல இளம்பிறையானது விளங்கினது.—எ-று.

சூரியனுதயமாகிவரும்போதும் மீண்டும் அஸ்தமிக்கும்போதும் மாந்தேகர் என்னும் அசுரர்கள் எதிர்க்க அவர்களுடன்போர்செய்து செல்லுவனென்பது புராண வரலாருகலின், 'ஏற்றெதிர் மலைந்து நின்ற விகலுடைய வுணர்தம்மேற் - காற்றெனத் தேர்கடாவிக்கடுஞ் சமர்புரிந்த வெய்யோன்' என்று கூறினர். மாற்றரும் என்பதற்கு, நீக்குதற்கரிய எனப்பொருள் கூறினுமாம். (௬)

கானத்தி னேன மொத்த கனையிருட் சூழன் மற்றவ்
வேனத்தி னெயிற்றை யொத்த திளம்பிறை யதனைப் பூண்ட
கோனொத்த தண்ட மந்தக் கூரெயி றுகுத்த முத்தந்
தானொத்து விளங்கு கின்ற தாரகா கணங்க ளெல்லாம்.

(இ-ள்.) நெருங்கிய இருளின் சூழ்ச்சியானது காட்டுப்பன்றியையொத்தது; இளம்பிறையானது அப்பன்றியின் கோரைப்பல்லை யொத்தது; ஆகாயமானது அப்பன்றிக் கொம்பையணிந்த சிவபெருமானையொத்தது ; நக்ஷத்திரங்களனைத்தும் அப்பன்றிக்கொம்பு சிந்திய முத்துக்களையொத்து விளங்கின.—எ-று. (எ)

அல்லிது போந்த காலை யாரமா மாலை யென்னக்
கல்லென வருவி தூங்குங் கடவுள்வெற் பொருசா ரெய்தி
மெல்லிதழ் வனசத் தேவும் விண்டுவும் விண்ணின் றேவும்
பல்லிமை யோருஞ் செவ்வேள் பதமுறை தொழுது சொல்வார்.

(இ-ள்.) இத்தன்மையாகிய இராக்காலம் வந்தவுடனே பெரிய முத்துமாலையைப்போலக் கல்லென்னும் ஓசையுடன் அருவியொழுகுகின்ற தேவகிரியின் ஒருபுறத்திற்சென்று மெல்லியஇதழ்களையுடைய கமலாசனனுகிய பிரமனும், திருமாலும், இந்திரனும், பலதேவர்களும் முருகக்கடவுளினது திருவடிகளை முறைப்படி வணங்கி விண்ணப்பஞ் செய்கின்றூர்கள்.—எ-று. (அ)

வன்கணே யுடைய சூர்பின் வருத்திட வின்னாள் காறும்
புன்கணே யுழந்தே மன்னுன் பொருப்பொடு முடியச் செற்று
யுன்கணே வழிபா டாற்ற வுன்னின மின்ன வெற்பின்
றன்கணே யிறுத்தல் வேண்டுந் தருதியிவ் வரமதென்றார்.

(இ-ள்.) கொடுமையினையே யுடைய சூரபன்மன் தம்பியாகிய தாரகாசுரன் துன்பஞ்செய்தலால் இதுவரையிலும் துன்பத்தையே யடைந்திருந்தனம்; தேவரீர் அந்தத்தாரகன் கிரவுஞ்சமலையுடன் அழியும்படி கொன்றருளினீர்; ஆதலால் (அடியேங்கள்) தேவரீரைப் பூசைசெய்தற்கு விருப்பங்கொண்டோம்; தேவரீர் இந்த மலையினிடத்தே யெழுந்தருளியிருத்தல்வேண்டும்; இந்த வரத்தை எங்கட்குக் கொடுத்தருள்வீராகவென்று பிரார்த்தித்தார்கள்.—எ-று. (௯)

பசைந்திடு மார்வங் கொண்ட பண்ணவ ரினைய தன்மை
யிசைந்தனர் வேண்டு மெல்லை யெஃகுடை யண்ண லங்க
ணசைந்திடு தன்மை யுன்னி யருள்செய வதுகண் டன்னோர்
தசைந்துமெய் பொடிப்பத் துள்ளித் தணப்பில்பேருவகை பூத்தார்.

(இ-ள்.) மிகுந்த விருப்பங்கொண்டுள்ள தேவர்கள் இத்தன்மையான காரியத்திற்கு ஒருங்குசேர்ந்து வேண்டிக்கொண்ட சமையத்தில் வேற்படையையுடைய முருகக்கடவுள் தாம் அங்கு எழுந்தருளியிருக்குந் தன்மையை விரும்பித் திருவருள் புரியவும், அதனைத் தேவர்கள்பார்த்து உடல்பூரித்து உரோமாஞ்சிதங்கொள்ளக் குதித்துக் கெடாத பெருமகிழ்வடைந்தார்கள்.—எ-று. (௧0)

ஒண்ணில வுமிழும் வேலோ னொளிகழற் றானை யோடுங்
கண்ணனே முதலா வுள்ள கடவுளர் குழுவி னோடும்
பண்ணவர் கிரிமேற் சென்று பாங்கரிற் றொழுது போந்த
விண்ணவர் புனைவன் றன்னை விளித்திவை புகல லுற்றான்.

(இ-ள்.) ஒள்ளிய பிரகாசத்தைவீசுகின்ற வேற்படையையேந்திய முருகக்கடவுள் சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த சேனைகளுடனும்,திருமால் முதலிய தேவர் கூட்டத்துடனும் தேவகிரியின்மீது சென்றருளித் தமக்கருகில் தொழுதுகொண்டு வந்த தேவதச்சனை யழைத்து இவ்வார்த்தைகளை யருளிச்செய்வாராயினர்.—எ-று.

புகலுறுஞ் சூழ்ச்சி மிக்கோய் புங்கவ ராயு ளோருந்
தொகலுறு கணர்கள் யாருந் துணைவரும் யாமு மேவ
வகலுறு மினைய வெற்பி னருங்கடி நகர மொன்றை
விகலம தின்றி யின்னே விதித்தியால் விரைவி னென்றான்.

(இ-ள்.) சொல்லப்பட்ட தந்திரத்தில் வல்ல தேவதச்சனே! தேவர்களும், கூட்டமான கணங்களும், துணைவர்களாகிய இலக்ஷத்தொன்பது வீரர்களும், யாமும் தங்குவதற்கு விசாலமான இம்மலையினிடத்து மிகுந்த காவலையுடைய ஒரு நகரத்தை மிகப்பெரியதாக இப்பொழுதே விரைவில் செய்யக்கடவையென்று திருவாய் மலர்ந்தருளினர்.—எ-று.

விகலமது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. விகலம்-குறைபாடு. ()

வேறு.

குழுங்கல் வேட்டுவக் கோதைய ராடலுங்
கழங்கு நோக்கிக் களிப்பவன் மற்றிது

வழங்கு மெல்லே வகுப்பனென் றன்னவன்
றழங்கு நூபுரத் தாள்பணிந் தேகினன்.

(இ-ள்.) மாலையையணிந்த வேடுவமாதர்கள் செய்யும் விளையாட்டினையும், அம்மனேக்காயாடுதலையும் பார்த்து மகிழ்கின்ற முருகக்கடவுள் இவ்வாறு கட்டளையிட்டவுடனே (தேவதச்சன்) அம்முருகக்கடவுளினது சப்திக்கின்ற சிலம்பையணிந்த திருவடிகளை வணங்கி அவ்வாறே செய்கின்றேனென்று கூறிச்சென்றனன்.—எ-று.

குழங்கல்-மாலைவிசேடம். "குழங்கன் மாலை மல்லுப் பூத்தகன்ற மார்பீர்" என்பதனானறிக. (௧௩)

மகர தோரணம் வாரியின் மல்கிய
சிகர மாளிகை செம்பொனின் சூளிகை
நிகரில் பற்பல ஞெள்ளல்க ளீண்டிய
நகர மொன்றினே யாயிடை நல்கினன்.

(இ-ள்.) மகரதோரணங்கள் கட்டிய மிகுந்த பலவாயில்களும், சிகரங்கள் பொருந்திய மாளிகைகளும், செம்பொன் மயமான மண்டபங்களும், ஒப்பற்ற அநேக வீதிகளும் நெருங்கிய ஒருநகரத்தை அங்கு உண்டாக்கினன்.—எ-று.

வாரி-வாயில். ஞெள்ளல்கள் - வீதிகள். (௧௪)

அவ்வ ரைக்க ணகன்பெரு நொச்சியுட்
கைவல் வித்தகக் கம்மியர் மேலவ
னெவ்வெ வர்க்கு மிறைவ னிருந்திடத்
தெய்வ தக்குல மொன்றுசெய் தானரோ.

(இ-ள்.) கைத்தொழிலிற் சிறந்த தேவதச்சனானவன் அம்மலையினிடத்தில் விசாலமாகிய பெரிய மதிலுக்குள்ளே யாவர்க்கு முதல்வராகிய முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கும்பொருட்டு ஒரு திருக்கோயிலை யுண்டாக்கினன்.--எ-று. (௧௫)

மாற்ற ரும்பொன் வரையுண் மணிக்கிரி
தோற்றி யென்னச் சுடர்கெழு மாழையி
னேற்ற கோட்டத் திழைத்தனன் கேசரி
யாற்று கின்ற வரதனப் பீடிகை.

(இ-ள்.) உயர்ந்த மாற்றினையுடைய பொன்மயமாகிய மேருமலையினுள்ளே மாணிக்க மலைதோன்றிய தன்மைபோல, ஒளிவிளங்குகின்ற பொன்னினால் அமைத்த ஆலயத்திற்குள்ளே இரத்தின சிங்காசனத்தை யுண்டாக்கினன்.—எ-று. (௧௬)

இனைய தன்மையு மேனவு நல்கியே
மனுவின் றாதை வருதலு மள்ளர்த
மனிக மோடு மமரர்க டம்மொடு
முனையின் வேற்படை மொய்ம்பனங் கேகினன்.

(இ-ள்.) இத்தன்மையானவைகளையும் மற்றும் வேண்டியவைகளையு முண்டாக்கி மனுவின் தந்தையாகிய தேவதச்சன் திரும்பிவரவும், வீரர்களாகிய சேனைகளுடனும்தேவர்கூட்டங்களுடனும் கூரியவேற்படையினையேந்திய முருகக்கடவுள் அங்குச்சென்றருளினர்.—எ-று. (௧௭)

அறுமு கத்தவ னந்நக ரேகியே
துறும லுற்றிடுந் தொல் பெருந் தானையை

யிறுதி யற்ற விருக்கைகொ ளாவண
நிறுவ லுற்று நிகேதனத் தெய்தினன்.

(இ-ள்.) ஆறு திருமுகங்களையுடைய முருகக்கடவுள் அந்நகரத்துட்சென்று நெருங்கியுள்ள பழைய பெரிய சேனைகளை அளவற்ற மாளிகை வரிசைகளையுடைய பெரியவீதிகளில் நிறுத்தித் தாம் ஆலயத்தினுள்ளே சென்றருளினர்.—எ-று. (கஅ)

இரதம் விட்டங் கிழிந்துபொற் பாதுகை
சரணம் வைத்துத் தணப்பரும் வீரருஞ்
சுரரு முற்றுடன் சூழ்தரத் துங்கவே
லொருவன் மற்றவ் வுறையுளி னேகினன்.

(இ-ள்.) உயர்ந்த வேற்படையினையேந்திய முருகக்கடவுள் இரதத்தினின்றுங் கீழேயிறங்கிப் பொன்மயமாகிய பாதுகைகளில் திருவடியைவைத்துக் கெடுதலில்லாத வீரர்களும் தேவர்களும் தம்முடன் நெருங்கிச்சூழ்ந்துவர அவ்வாலயத்தினுள்ளே சென்றருளினர்.—எ-று.

ஒப்புயர்வில்லாப் பெருமானாகலின், 'துங்கவேலொருவன்' என்றுகூறினர்.

ஊறில் வெய்யவர் யாரு மொரோவழிச்
சேற லெய்திச் செறிந்தென வில்விடு
மாறில் செஞ்சுடர் மாமணிப் பீடமே
லேறி வைகினன் யாரினும் மேலையோன்.

(இ-ள்.) யாவர்களினுஞ் சிறந்தவராகிய முருகக்கடவுள் குற்றமற்ற பன்னிரண்டு சூரியர்களும் ஓரிடத்திற்குவந்து நெருங்கியிருந்த தன்மையைப்போல ஒளிவீசுகின்ற மாறுபாடில்லாத செவ்வொளியினையுடைய பெரிய இரத்தினப்பீடத்தின்மீதேறியெழுந்தருளியிருந்தனர்.—எ-று. (உ०)

பொழுது மற்றதிற் பூவின னாதியா
விழுமை பெற்றிடும் விண்ணவர் யாவருங்
குழும லுற்றுக் குமரனை யவ்விடை
வழிப டத்தம் மனத்திடை யுன்னினர்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் பிரமன்முதலாகிய சிறப்புப்பொருந்திய தேவர்களனைவரும் ஒருங்குகூடி முருகக்கடவுளை அவ்விடத்தில் ஆராதிக்கும்பொருட்டுத் தம்மனத்தில் நினைத்தார்கள்.—எ-று.

விழுமை - உயர்வாகிய தன்மை. (உக)

புங்க வன்விழி பொத்திய வம்மைதன்
செங்கை தன்னிற் சிறப்பொடு தோன்றிய
கங்கை தன்னைக் கடவுள ருன்னலு
மங்கண் வந்ததை யப்பெரு மாநதி.

(இ-ள்.) சிவபெருமானது திருவிழிகளை மூடியருளிய உமாதேவியாரது அழகிய திருக்கரத்தில் சிறப்பாகத் தோன்றிய கங்காதேவியைத் தேவர்கள் நினைக்கவும், உடனே அவ்விடத்தில் அந்தப் பெரிய கங்கைநதியானது வந்தது.—எ-று.

"அம்மைதன் செங்கை தன்னிற் சிறப்பொடு தோன்றிய கங்கை, என்பதன் வரலாற்றைமேல் தக்ஷகாண்டத்தில்கூறியிருத்தலின்,ஆண்டுக்காண்க. வந்ததை என்பதில் ஐகாரம் சாரியை.

சோதி மாண்கலன் றாயன பொற்றுகில்
போது சாந்தம் புகைமணி பூஞ்சுட
ராதியாக வருச்சனைக் கேற்றன
வேது மாயிடை யெய்துவித் தாரரோ.

(இ-ள்.) ஒளி பொருந்திய சிறந்தஆபரணங்களையும், தூய்மையாகிய பீதாம்பரங்களையும்,புஷ்பம் சந்தனம் தூபம் மணி அழகிய தீபம் முதலிய அருச்சனைக்கு வேண்டிய யாவற்றையும் அவ்விடத்திற்கு அழைப்பித்தார்கள்.—எ-று. (௨௫)

அண்டர் தொல்லை யமுத மிருத்திய
குண்ட முற்ற குடங்கர் கொணர்ந்திடா
மண்டு தெண்புனல் வானதி தன்னிடை
கொண்டு கொண்டனர் வேத நுவன்றுளார்.

(இ-ள்.) தேவர்கள் பழைமையான அமிர்தத்தை வைத்திருந்த ஆழமான குடங்களைக் கொண்டுவந்து, அங்குப் பொருந்தியுள்ள தெளிவாகிய நீரையுடைய ஆகாயகங்கையினிடத்தில் வேதங்களையோதி முகந்தெடுத்துக்கொண்டார்கள்.-எ-று.

'அண்டர் தொல்லையமுதம்' என்பதற்கு பழைய தேவாமுதம் எனப் பொருள் கூறலுமொன்று. (௨௬)

அந்த வெல்லை யயன்முதற் றேவரு
முந்து கின்ற முனிவருஞ் சண்முகத்
தெந்தை பாங்கரி னீண்டி யவன்பெயர்
மந்தி ரங்கொடு மஞ்சன மாட்டினார்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் பிரமன் முதலிய தேவர்களும், உயர்வுபொருந்திய முனிவர்களும் எமது தந்தையாகிய முருகக்கடவுளருகில் நெருங்கி அவரது திருநாமமாகிய சடாக்ஷர மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு அபிஷேகஞ் செய்தார்கள். ()

வெய்ய வேற்படை விண்ணவற் கின்னண
மைய மஞ்சன மாட்டிமுன் சூழ்ந்திடுந்
துய்ய பொன்னந் துகிலினை நீக்கியே
நொய்ய பன்னுகி னூதனஞ் சாத்தினர்.

(இ-ள்.) கொடுமையமைந்த வேற்படையினையேந்திய முருகக்கடவுளுக்கு இவ்வண்ணமாக அழகியதிருமஞ்சனஞ்செய்வித்து,முன்புதரித்திருந்த தூய்மையாகிய அழகியபொன்னுடையைக்களைந்து மிருதுவாகிய பல வஸ்திரங்களைப் புதிதாகத் தரித்தார்கள். எ-று. (௨௬)

வீற்றொர் சீய வியன்றவி சின்மிசை
யேற்றி வேளை யிருத்தி யவன்பெயர்
சாற்றி மாமலர் சாத்தித் தருவிடைத்
தோற்று பூவின் றொடையலுஞ் சூட்டினர்.

(இ-ள்.) முருகக்கடவுளை வேறொரு பெரிய சிங்காசனத்தின்மேல் எழுந்தருளச்செய்து அவரது திருநாமங்களையோதிச் சிறந்த மலர்களைக்கொண்டு அருச்சித்துக் கற்பகத்தருவில் தோன்றிய கற்பகமலர் மாலையைத்தரித்தார்கள்.—எ-று. (௨௭)

செய்ய சந்தனத் தேய்வைமுன் கொட்டின
மைய பாளித மப்பினர் நாவியுந்

துய்ய நானமுந் துன்னமட் டித்தனர்
மெய்யெ லாமணி மேவரச் சாத்தினர்.

(இ-ள்.) அரைத்த செஞ்சந்தனத்தை முன்னே பூசினார்கள்; அழகிய பச்சைக்கர்ப்பூரங்களை யப்பினார்கள்; புனுகுந் தூய்மையாகிய கஸ்தூரியும்பொருந்தப் பூசினார்கள்; திருமேனிமுழுவதும் ஆபரணங்களால் அலங்கரித்தார்கள்.—எ-று. (உஅ)

சந்து காரகி றண்ணென் கருப்புரங்
குந்து ருக்கமொண் குக்குலு வப்புகை
செந்த ழற்சுடர் சீர்மணி யார்ப்பொடு
தந்து பற்றித் தலைத்தலை சுற்றினர்.

(இ-ள்.) சந்தனம், கரிய அகில், பச்சைக்கர்ப்பூரம், குந்துருக்கம், ஒள்ளிய குங்கிலியம் இவைகளாலாகிய தூபங்களையும், செவ்வொளியினையுடைய தீபத்தையும் சிறந்த மணியோசையுடன் எடுத்தேந்தி அவ்வவ்விடங்களில் சுற்றினார்கள்.—எ-று.

இத்தி றத்தவு மேனவு மெஃகவேற்
கைத்த லத்துக் கடவுட்கு நல்கியே
பத்தி மைத்திற னுற்பணிந் தேத்தினர்
சித்தி சங்கற்பஞ் செய்திடுஞ் செய்கையோர்.

(இ-ள்.) தங்களுக்கு இஷ்டசித்தியுண்டாகக் கருதிச் சங்கற்பஞ் செய்துகொண்டதேவர்கள் இவைகளையும் மற்றைப்பொருள்களையும் கூரிய வேற்படையினையேந்திய முருகக்கடவுளுக்குச் செய்து அன்புடன் வணங்கித் துதித்தார்கள்.—எ-று.

தேவு கொண்ட சிலம்பினிற் பண்ணவ
ரேவ ருங்குழீஇ யின்னணம் பூசனை
யாவ தாற்ற வதுகொண் டமர்ந்தனன்
மூவி ரண்டு முகனுடை மொய்ம்பினோன்.

(இ-ள்.) தேவகிரியில் தேவர்களனைவரும் ஒருங்குசேர்ந்துஇவ்வாறு பூசனையைச் செய்யவும் ஆறு திருமுகங்களையுடைய சுத்தவீரராகிய ஸ்ரீசுப்பிரமணியகக்கடவுள் அப்பூசையை யேற்றுக்கொண் டெழுந்தருளியிருந்தனர்.—எ-று. (கூக)

அமரர் வெற்பி லயிற்படை யேந்திய
விமல னுற்றது சொற்றன மேலினிச்
சமரி டைப்படு தாரகன் றந்திடு
குமர னுற்றது மற்றதுங் கூறுகேம்.

(இ-ள்.) வேற்படையினையேந்திய முருகக்கடவுள் தேவகிரியில் எழுந்தருளியதன்மையை இதுவரையில் சொன்னோம், இனி, போர்க்களத்தில் இறந்த தாரகாசுரன் பெற்ற புத்திரனாகிய அசுரேந்திரன் வந்த தன்மையினையும் மற்றவைகளையுங் கூறுவோம்.—எ-று. (கூஉ)

தேவகிரிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சருகூ.

---

உ
முருகன்றுணை.

# அசுரேந்திரன் மகேந்திரஞ்செல் படலம்.

எந்தை குமர னெறிந்ததனி வேற்படையாற்
றந்தி முகமுடைய தாரகன்றான் பட்டதனை
முந்துசில தூதர் மொழிய வவன்றேவி
யந்தமிலாக் கற்பிற் சவுரி யலக்கணுற்றாள்.

(இ-ள்.) எமது தந்தையாகிய முருகக்கடவுள் விட்டருளிய ஒப்பற்ற வேலாயுதத்தினால் யானைமுகத்தினையுடைய தாரகாசுரன் இறந்த தன்மையை முன்னே சில தூதுவர்கள் போய்ச் சொல்லுதலும், அவன் மனைவியாகிய அழிவற்ற கற்பினையுடைய சவுரியென்பவள் (அதனைக்கேட்டு) விசனமடைந்தனள்.—எ-று. (க)

வாழ்ந்த துணைவியர்கண் மற்றுள்ளோ ரெல்லோருஞ்
சூழ்ந்து பதைத்திரங்கத் துன்பத் துடனேகி
யாழ்ந்த கடல்படியு மம்மென் மயிலென்ன
வீழ்ந்து கணவன் மிசையே புலம்புறுவாள்.

(இ-ள்.) தன்னுடன் வாழ்ந்திருந்த துணைவியர்களும் மற்றுள்ள அனைவர்களும் சூழ்ந்து பதைத்து வருந்தத் துன்பத்துடன் சென்று, ஆழமான கடலில் மூழ்குகின்ற அழகிய மெல்லிய (சிறகினையுடைய) மயிலைப்போலத் தனது நாயகன்மீது விழுந்து புலம்புவாளாயினாள்.—எ-று. (உ)

சங்குற் றிடுசெங்கைத் தண்டுளவோன் றன்பதமா
மங்குற் றனையன் றயன்பதஞ்செல் வாயன்று
கங்கைச் சடையான் கயிலையிற்சென் றுயல்லா
லெங்குற் றனையவ் விறைவனருள் பெற்றாயே.

(இ-ள்.) (பாஞ்சசன்னிய மென்னுஞ்) சங்கைத்தரித்த கரத்தினையும்,குளிர்ந்த துளபமாலையையணிந்த(மார்பினையுமுடைய) திருமாலினது பதவியாகிய அந்த வைகுந்தத்திற்குச் சென்றாயல்லை. பிரமபதவிக்குச் செல்கின்றவனல்லை. கங்கைநதியையணிந்த சிவபெருமானது ஸ்ரீகயிலாயபதவிக்குச் சென்றனையேயன்றி வேறு எங்குச் சென்றனை; அச்சிவபெருமானது திருவருளைப் பெற்றிருக்கின்ற என் பிராணநாயகனே!—எ-று. (௩)

உந்துதனி யாழி யுனக்கணியாத் தந்தோனு
மிந்திரனு மேனை யிமையவர்க ளெல்லோரு
மந்தகனுந் தாமு மனைவர்களு மின்றன்றோ
சிந்தைதனி லுள்ள கவலையெலாந் தீர்ந்தனரே.

(இ-ள்.) (சத்துருக்கள்மீது) விடுகின்ற ஒப்பற்ற சக்கரத்தை உனக்கு ஆபரணமாகக் கொடுத்த திருமாலும், இந்திரனும், மற்றை யெல்லாத்தேவர்களும் இயமனும் மற்றுள்ளவர்களும் தங்கள் தங்கள் மனத்திலுள்ள துன்பங்களனைத்தும் இன்றல்லவோ நீங்கினார்கள்.—எ-று. (௪)

பொன்னகரோர் யாரும் புலம்புற் றிடவவுணர்
மன்னவரோ டென்பால் வரும்பவனி காணாதேன்
றுன்னு பறவையினஞ் சூழத் துயிலுமுனை
யின்ன பரிசேயோ காண்பேனு லெம்பெருமான்.

(இ-ள்.) பொன்னுலகத்திலுள்ள தேவர்களனைவரும் துன்பத்தையடையும் வண்ணம்அசுரராஜாக்களுடன் என்னிடத்திற்கு வருகின்ற பவனியைக் காணாதவளாகிய யான் நெருங்கியபறவைக்கூட்டங்கள் சூழும்படித் தூங்குகின்ற உன்னை எம்பெருமானே! இத்தன்மையாகவோ காண்பேன்.—எ-று. (ரு)

துயிலல், ஈண்டு இறந்து கிடத்தல்.

புல்லா திருந்தனையான் புல்லுவது கண்டுமது
பல்லோருங் காணிற் பழியென் றொழிந்தாயேன்
மல்லாருந் தோளாய் மயக்குற்றே றற் கோருரையுஞ்
சொல்லாய் வறிதே துயின்றாய் துனியுண்டோ.

(இ-ள்.) யான் உன்னைத் தழுவுவது பார்த்தும் நீ என்னைத் தழுவாதிருக்கின்றனை; அப்படித் தழுவுவது பலருங் காணில் பழியாகுமென்று நீங்குவாயானல், மற்போரமைந்த தோட்களையுடைய என் பிராணநாயகனே! மயங்கியிருக்கின்ற எனக்கு ஒரு வார்த்தையுஞ் சொல்லுகின்றிலை; சும்மா தூங்குகின்றனை; என்மீது ஏதேனும் வருத்தமுண்டோ?—எ-று. (சு)

துனி யென்றது, ஊடலை.

மையோ டுறழு மணிமிடற்றோன் றந்தவர
மெய்யா மெனவே வியந்திருந்தே னிந்நாளும்
பொய்யாய் விளைந்ததுவோ பொன்றினையா லென்றுணைவா
வையோ விதற்கோ வருந்தவமுன் செய்தாயே.

(இ-ள்.) யான் இதுவரையிலும், இருளையொத்த நீலகண்டத்தினையுடைய சிவபெருமான் கொடுத்த வரமானது உண்மையானதென்று வியப்புற்றிருந்தேன். அவ்வரம் பொய்யாக விளைந்ததோ? என்னுயகனே; நீ இறந்தனை, ஐயோ! இதற்குத் தானோ? நீ முன்பு அரிய தவத்தைச் செய்தனை.—எ-று. (எ)

தன்னோ டிணையின்றித் தானே தலையான
முன்னோ னருள்புரிந்த முன்னோ னிளவல்வரி
னென்னோ வவனோ டெதிர்ந்தா யிறந்தனையே
யன்னோ விதிவலியை யாரோ கடந்தாரே.

(இ-ள்.) தமக்கொருவருமொப்பின்றித் தாமே முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் பெற்றருளிய விநாயக மூர்த்திக்குத் தம்பியாகிய கந்தன் போர்செய்ய வந்தால் அவனுடன் ஏன் எதிர்த்தனை; இறந்தாயே! ஐயோ! விதியின் வல்லமையை யார் கடந்தார்கள்.—எ-று.

தன்னிகருயர்ச்சியில்லாத் தன்மையனாகலின், 'தன்னோடிணையின்றித் தானே தலையான முன்னோன்' என்றார். முன்னோனிளவல் - மூத்தபிள்ளையாராகிய விநாயகமூர்த்திக்குத் தம்பியாராகிய முருகக்கடவுள். (அ)

சந்தார் தடம்புயத்துத் தானவர்க டற்சூழ
வந்தார் கமழு மரியணைமேல் வைகியநீ

சிந்தா குலத்திற் செருநிலத்திற் றுஞ்சினையா
லெந்தாய் புகலா யிதுவுஞ் சிலநாளோ.

(இ-ள்.) சந்தனமணிந்த பெரிய புயத்தினையுடைய அசுரர்கள் தன்னைச் சூழும்படி அழகிய மாலைகள் மணம் வீசுகின்ற சிங்காசனத்தில் வீற்றிருந்த நீ (இப்பொழுது) மனவருத்தத்துடன் போர்க்களத்தில் இறந்தனை; எந்தையே! இவ்வாறு வீழ்ந்து கிடத்தலுஞ் சிலகாலமோ? நீ சொல்லக்கடவாய்.—எ-று.

தாய்போலப் பேரன்பு வைத்திருந்த கணவனாகலின், 'எந்தாய்' என்று கூறினர். (கூ)

வென்றிமழு வேந்தும் விமல னுனக்களித்த
துன்றும் வரத்தியலை யுன்னினையாற் சூழ்ச்சியினை
யொன்று முணரா துயிருந் தொலைந்தனையே
யென்று தமியே னினியுன்னைக் காண்பதுவே.

(இ-ள்.) வெற்றிபொருந்திய மழுப்படையை யேந்திய சிவபெருமான் உனக்குக் கொடுத்தருளிய நிலைபெற்ற வரத்தின் தன்மையை நினைந்தனை, இந்தத் தந்திரத்தைச் சிறிதும் உணராமல் உயிரையும் விட்டனை; அடியேன் இனி எக்காலத்தில் உன்னைப் பார்ப்பது.—எ-று. (கo)

வன்னி விழியுடையான் மைந்த னமர்புரிய
முன்னைவலி தோற்று முடிந்தா யெனக்கேட்டுப்
பின்னுமிருந் தேனென்னிற் பேரன் புடையோர்யா
ரென்னினியான் செய்கே னெனவே யிரங்குற்றாள்.

(இ-ள்.) அக்கினிநேத்திரத்தையுடைய சிவபெருமானது மைந்தனாகிய சுப்பிரமணியன் வந்து போர்செய்தலால், முன்னிருந்த வல்லமையையிழந்து இறந்தனையென்று சொல்லக்கேட்டுப் பின்னும் உயிர்தரித்திருந்தேனானல் (என்னை விட) மிகுந்த அன்புடையவர்கள் யாரிருக்கின்றார்கள், இனியான் யாது செய்வேன் என்றுகூறி வருத்தமுற்றனள்.—எ-று. (கக)

மற்றைத் துணைவியரும் வந்தீண்டி மன்னவனைச்
சுற்றிப் புலம்பித் துயருற் றிடும்வேலை
யற்றத் தினனாகி யாசுரத்தின் பாற்போன
கொற்றப் புதல்வன் வினவிக் குறுகினனால்.

(இ-ள்.) மற்றையமனைவியர்களும் வந்து நெருங்கித் தாரகாசுரனைச் சூழ்ந்து புலம்பித் துன்பமுற்றிருக்குஞ் சமையத்தில், ஆசுரமென்னும் நகரத்திற்குச் சென்ற வெற்றிபொருந்திய புதல்வனாகிய அசுரேந்திரன் கேள்விப்பட்டுச் சோர்வுபொருந்திய மனமுடையவனாய் வந்து சேர்ந்தனன்.—எ-று.

'அற்றத்தினனாகி' என்பதற்கு, அவ்விடத்தினின்று நீங்கினவனாய் எனப் பொருள்கூறினுமாம். அற்றம்-மறைவு, சோர்வு. ஆசுரம்-சிங்கமுகாசுரனதுநகரம். (கஉ)

தண்டா விறல்சேருந் தன்றாதை வீந்ததனைக்
கண்டா னுயிர்த்தான் கலுழ்ந்தான் கரங்குலைத்தா
னண்டாத சோகத் தழுங்கினன் வெய்யகன
லுண்டா னெனவீழ்ந் தயர்ந்தா னுணர்ந்தனனே.

(இ-ள்.) கெடாத வல்லமைபொருந்திய தன் தந்தையாகிய தாரகன் இறந்ததைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டான், அழுதான், கைகளையுதறினன், அடங்காத

சோகத்தில் மூழ்கினன், கொடிய அக்கினியை யுண்டவனைப்போலப் பூமியில்விழுந்து சோர்வடைந்தான், பின்பு தெளிவடைந்தான்.—எ-று. (கரு)

என்றுமுறு வின்ன லிடைப்பட் டவனெழுந்து
சென்றுதன தன்னை திருத்தா ளிடை வீழா
வுன்றலைவன் யாண்டையா னேதாயன் னேயென்று
நின்று புலம்பி நினைந்தினைய செய்கின்றான்.

(இ-ள்.) எக்காலத்துமடையாத துன்பத்தில் மூழ்கிய அவ் வசுரேந்திரன் எழுந்துபோய்த் தனது அன்னையாகிய சவுரியினது பாதங்களில் வீழ்ந்து, தாயே! உன் நாயகன் எங்கு சென்றனன் சொல்வாயாக வென்று நின்று புலம்பிப் பின்னர் ஆலோசித்து இவைகளைச் செய்வானாயினன்.—எ-று. (கச)

அன்னைமுத லோரை யகல்வித் தொருசாரிற்
றுன்னுதிரென் றேவித் தொலையாத தானவரிற்
றன்னுழையோர் தம்மாற் றழலின் தனமுதலா
மன்னு கருவி பலவும் வருவித்தான்.

(இ-ள்.) தாய் முதலியவர்களை அவ்விடத்தினின்றும் விலக்கி, ஒருபக்கத்தில் சென்றிருங்களென்று அனுப்பிவிட்டுப் போரில் அழியாத அசுரர்களில் தனக்கருகிலுள்ளவர்களால் நெருப்பு விறகு முதலாகப் பொருந்திய பல கருவிகளையும் வரவழைத்தனன்.—எ-று. (கடு)

வந்த பொழுதுதனில் வன்களத்திற் றுஞ்சுகின்ற
தந்தைதனை முன்போற் றகவுபெற வொப்பித்தோ
ரெந்திரத்தேர் மீதேற்றி யீமத் திடையுய்த்துச்
சந்தனப்பூம் பள்ளி மிசையே தருவித்தான்.

(இ-ள்.) அவைகளைக் கொண்டுவந்தபொழுது வலியபோர்க்களத்திலிறந்து கிடக்கின்ற தன் தந்தையாகிய தாரகாசுரனை முன்போல் தகுதியாகப்பொருந்தி, சக்கரத்தினையுடைய ஒரு தேரின்மீதேற்றிச் சுடலையிற்கொண்டுபோய்ச் சேர்ப்பித்துச் சந்தனக்கட்டைகளாலாகிய அழகிய சயனத்தில் கிடத்தினன்.—எ-று. (கசு)

ஈமக் கடன்க ளியற்றித்தன் றாதைதனைத்
தாமக் கனலாற் றகனம் புரிந்திடலுங்
காமுற் றனனென் கணவனுடன் செல்வதற்குத்
தீமுற் றருதி யெனவன்னை சென்றுரைத்தாள்.

(இ-ள்.) தகனக்கிரியைகளைச் செய்து, தன் தந்தையாகிய தாரகனை ஒளி பொருந்திய அக்கினியினால் தகனஞ் செய்யவும், அவன் தாயாகிய சவுரி யென்பவள் என் கணவனுடன் நானும் இறந்துபோவதற்கு விருப்பங்கொண்டேன், ஆதலால் முன்னே அக்கினியை வளர்க்கக்கடவையென்று அவனெதிரிற்சென்று கூறினள். ()

நற்றாய் மொழிந்ததனைக் கேட்டு நடுநடுங்கிப்
பொற்றாள் பணிந்தென்னைப் போற்றி யிருத்தியெனச்
சொற்றா னதுமறுத்துத் தோகை சுளித்துரைப்ப
வற்றாக வென்றா னசுரேந் திரனென்பான்.

(இ-ள்.) அசுரேந்திரன் தன்னைப் பெற்றதாயானவள் கூறிய வசனத்தைக் கேட்டு மிகவும் நடுங்கி தன்னன்னையின் பொன்போன்ற தாள்களைவணங்கி (தாயே!

நீ இறவாமல்) என்னைப் பாதுகாத்துக்கொண் டிருக்கக்கடவா யென்று கூறினன்; (அதற்குஅவள்) அவ்வசனத்தைத்தடுத்துக் கடிந்துரைக்கவும், அசுரேந்திரன் ஆனல் அப்படியே யாகட்டுமென்று கூறினன்.—எ-று. (கஅ)

ஏனையதோர் தாயர்களும் யாமுங் கணவனுடன்
வானகம்போ யெய்த வழங்கென் றிடவிசையா
வான படியே யழலமைக்க வன்னையரா
மானனையா ரெல்லோரும் வான்கனலி னுள்புக்கார்.

(இ-ள்.) மற்றைத்தாய் மார்களும் (அசுரேந்திரனிடத்தில் சென்று) நாங்களும் கணவனுடன் சுவர்க்கஞ் சென்றடையும் பொருட்டுத் தழலை வளர்க்கக்கடவை யென்று கூறுதலும், அதற்கு அவன் சம்மதித்து அப்படியே நெருப்பைவளர்க்கவும் அவனது தாய்மார்களாயுள்ள மான்போன்ற கண்களையுடைய அசுரமாதர்க ளனைவரும் உயர்ந்த அக்கினியிற்பிரவே சித்தார்கள்.—எ-று. (சகூ)

புக்கதொரு காலை புலம்பியே யந்நகரை
யக்கணமே நீங்கி யசுரேந் திரனென்போன்
றக்க கிளைஞர்சிலர் தற்சூழ வேயேகி
மைக்கடலுள் வைகு மகேந்திரமூ தூருற்றன்.

(இ-ள்) தனது தாய்மார்களெல்லாம் அக்கினியில் பிரவேசித்தவுடனே அசுரேந்திரன் துக்கமடைந்து அந்த மாயாபுரியைவிட்டு நீங்கித் தகுந்த பந்துக்களில் சிலர்தன்னைச் சூழ்ந்துவரச்சென்று, கரியகடலின் நடுவிலிருக்கின்ற புராதனமாகிய மகேந்திரபுரியையடைந்தனன்.—எ-று. (உ0)

வேறு.

உளந்தளர் வெய்தித் தொல்லை யொளிமுக னிழந்து மேனி
தளர்ந்தனன் வறியன் போன்று தாரக முதல்வன் றந்த
விளந்தனி மைந்தன் வல்லே யேகலு மனைய நீர்மை
வளந்திகழ் தொல்லை வீர மகேந்திரத் தவுணர் கண்டார்.

(இ-ள்.) தாரகாசுரன் பெற்ற இளம்புதல்வனுகிய அசுரேந்திரன் மனத்தளர்ச்சியடைந்து தன்முகத்தில் முன்னிருந்த பொலிவுகெட்டு உடல்வாடித்தரித்திரனைப்போல விரைவாகச்செல்லுதலும், அவ்வாறு செல்லுந்தன்மையை மிக்க வளப்பத்துடன்விளங்குகின்ற பழைமையாகிய வீரமகேந்திரபுரியிலுள்ள அசுரர்கள் பார்த்தார்கள்.—எ-று. (உக)

உரங்கிள ரவுணர் காணூஉ வெய்யெனத் துளங்கி யேங்கிக்
கரங்களை விதிர்த்துக் கண்ணீர் காலெறி படர்ந்து செல்லப்
பெருங்கட லுடைந்த தேபோற் பேதுற வெய்தி யாற்ற
விரங்கியிக் குமர னுற்ற தென்கொலென் றிசைக்க லுற்றார்.

(இ-ள்.) வலிமைமிக்க அசுரர்கள் (அவ்வசுரேந்திரனைப்) பார்த்து விரைவாக நடுங்கியேக்கமுற்றுக் கைகளை விதிர்த்துக் கண்ணீரானது காலின்வழியே பரவியோட மனமயக்கங்கொண்டு பெரிய கடலுடைந்தாற்போல மனங்கலங்கி மிகுதியாக அழுது இச்சிறுவன் வந்தது என்னகாரணமென்று சொல்லத்தொடங்கினர்கள்.

வஞ்சமுங் கொலையுஞ் செய்யான் மற்றிவ னிதற்குந் தாதை
வெஞ்சினங் கொடுபோ கென்று விடுத்தனன் போலு மென்பார்
தஞ்சம தாகி யுள்ள தாரகன் கொடுமை நோக்கி
யஞ்சியே யவனை நீங்கி யடைந்தனன் கொல்லோ வென்பார்.

(இ-ள்.) இவ்வசுரேந்திரன் வஞ்சனைகளையுங் கொலைகளையுஞ் செய்யான், ஆதலால் இவனது தந்தை மிகுந்த கோபங்கொண்டு போவென்று தன்னகரத்தைவிட்டுத்துரத்திவிட்டனன்போலும் என்று கூறுவார்கள்; (வேறுசிலர்) இவனுக்காதரவாயுள்ள தாரகாசுரனது கொடுமைகளைப்பார்த்துப் பயந்து அவனைவிட்டு நீங்கிவந்தனனோ? என்று கூறுவார்கள்.—எ-று. (௨௩)

சீரொடு துறக்க நீத்துத் தேவர்கோ னுருவ மாற்றிப்
பாரிடை யுழந்தா னென்பார் மற்றவன் பரனை வேண்டிப்
பேரிகன் மாயம் வன்மை பெற்றுவந் தடுபோர் செய்யத்
தாரக னிறந்தான் கொல்லோ தளர்ந்திவன் வந்தா னென்பார்.

(இ-ள்.) இந்திரன் தனது செல்வத்துடன் சொர்க்கலோகத்தை விட்டு வேற்றுருவங்கொண்டு பூமியில் உழல்கின்றானென்று கூறுவார்கள், அந்த இந்திரன் சிவபெருமானைப் பிரார்த்தித்து, மிக்க போருக்குரிய மாயத்தையும் வல்லமையையும் பெற்றுப் பின்னும் வந்து நெருங்கிய போர்செய்ய, அதுகாரணமாகத் தாரகன் இறந்தனனோ? இவன் தளர்ச்சியடைந்து வந்தனன் என்று கூறுவார்கள்—எ-று. (௨௪)

மாண்கிளர் தார கப்பேர் மன்னவன் பகைஞ ராற்று
மேண்கிளர் சமரில் வீந்தா னென்பதற் கேது வுண்டாற்
சேண்கிளர் நிவப்பா லெங்குந் தெரிகிர வுஞ்ச வெற்பிற்
காண்கில மவுணர் தம்மைப் பூழியே காண்டு மென்பார்.

(இ-ள்.) மாட்சிமைபொருந்திய தாரகாசுரன் சத்துருக்கள் செய்கின்ற வலிமைமிக்க போரில் இறந்தானென்பதற்குக் காரணமுண்டு; (அது யாதெனில்,) ஆகாயத்தில் விளங்குகின்ற உயர்வினால் எவ்விடத்திலுங் காணப்பட்ட கிரவுஞ்சமலையில் அசுரர்களைக் கண்டோமில்லை, அங்குப் புழுதிகளையே கண்டோம் என்று கூறுவார்கள்.—எ-று. (௨௫)

பையர வணையிற் றுஞ்சும் பகவன தாழி தன்னை
யையபொன் னணிய தாக வணிந்திடு மவுண னோடு
மொய்யமர் புரிவார் யாரே முரணொடு வெம்போர் சில்லோர்
செய்யினு மவரா லன்னோன் முடிகிலன் றிண்ண மென்பார்.

(இ-ள்.) படம்பொருந்திய சேஷசயனத்தில் நித்திரை செய்கின்ற திருமால் விடுத்த சக்கரத்தை அழகிய பொன்னாபரணமாகத் தரித்துள்ள தாரகாசுரனுடனே நெருங்கிய போர்செய்ய வல்லவர்கள் யாவர்; சிலர் பராக்கிரமத்துடனெதிர்த்துக் கொடிய போரினைச் செய்தாலும் அவர்களால் அவன்இறவான்; இது சத்தியம்என்று கூறுவார்கள்.—எ-று. (௨௬)

அங்கையை யொருவன் வாளா லறுத்திடப் புலம்பி நங்கோன்
றங்கைவந் தமரர் தம்மைச் சயந்தனைச் சிறைசெய் வித்தா
ளிங்கிவன் றானுந் துன்புற் றேகுவா னின்று மற்றே
புங்கவர் தமக்கே யின்னல் புரிகுவன் போலு மென்பார்.

(இ-ள்.) நமது தலைவனாகிய சூரபன்மன் தங்கையாகிய அசமுகியினுடைய அழகிய கையை ஒருவன் வாளாலறுத்தலால், அவள் இங்கு வந்து தேவர்களையும் சயந்தனையும் சிறைசெய்வித்தனள். இங்கே இவனும் துன்பங்கொண்டு செல்கின்றான், இன்றும் அவ்வண்ணமே தேவர்களுக்குத் துன்பத்தை யுண்டாக்குவான்போலும் என்றுகூறுவார்கள்.—எ-று. (௨௭)

மணிகிள ரெழிலி வண்ணன் மற்றவ னொடுபோ ராற்று
னணியுல களித்த செம்ம லமர்த்தொழில் சிறிதுந் தேருன்
றணிவறு செயிர்மீக் கொண்ட தாரக னொடுபோர் செய்யி
னிணையக லீச னன்றி யாவரே வல்லரென்பார்.

(இ-ள்.) கருநிறம் விளங்கும் மேகவண்ணனாகிய திருமால் இந்தத் தாரக னுடன் எதிர்த்துப் போர்செய்யமாட்டான்; அழகிய உலகத்தைச் சிருஷ்டித்த பிரமன் போர்த்தொழில் சிறிது முணரான்; தணிவற்ற மிகுந்த கோபத்தினையுடைய தாரகனுடன் போர்செய்ய வேண்டுமாயின் ஒப்பற்ற சிவபெருமானே யல்லது வேறு யாவர் வல்லவர்கள் என்று கூறுவார்கள்.—எ-று. (௨௮)

இமையவர் கருடர் நாக ரியக்கர்கந் தருவ ரேனோர்
நமரிடு பணிக ளாற்றி நாடொறுந் திரிந்தா ரற்றாற்
சமரெதி ரிழைப்பா ரின்றித் தளர்ந்தன மிந்நாள் காறு
மமரினி யுளது போலு மையம தில்லை யென்பார்.

(இ-ள்.) தேவர்களும், கருடர்களும், நாகர்களும், இயக்கர்களும், மற்றவர் களும் நம்மவர்கள் இடுகின்ற ஏவற்றொழிலைச் செய்துகொண்டு திரிந்தார்கள், அதனால், நாம் இந்நாள்வரையிலும் எதிர்த்துப்போர்செய்பவரில்லாது வருந்தினோம்,இனி நமக்குப் போர்கிடைக்கும்போலும் இதற்குச் சந்தேகமில்லை என்று கூறுவார்கள். ()

சேயிவ னலக்க ணெய்திச் செல்லுறு பரிசா லங்க
ணுயதோர் தீங்கு போலு மையமின் றிதனை நாடி
நாயகன் விடுக்கு முன்ன நம்பெருந் தானை யோடு
மாயமா புரிகா றேகி யறிந்தனம் வருது மென்பார்.

(இ-ள்.) சிறுவனாகிய இவன் வருத்தங்கொண்டு செல்லுதலால் அவ்விடத் தில் யாதேனுந் தீங்கு நேர்ந்திருக்கக்கூடும்; இதற்குச் சந்தேகமில்லை. நாம் இதனை விசாரித்து நமது தலைவனாகிய சூரபன்மன் நம்மை அனுப்புதற்கு முன்னமே நாம் நமதுபெருஞ்சேனைகளுடன் பெரிய மாயாபுரிவரையிலுஞ்சென்று தெரிந்துகொண்டு வருவோம் என்று கூறுவார்கள்.—எ-று. (௩௦)

எனைப்பல வினைய வாற்று லியாவரு மவுண ரீண்டி
மனப்படு மைதெ லோடும் வயின்வயி னுரையா நிற்ப
நினைப்பருந் திருமிக் குள்ள நெடுமகேந் திரத்திற் சென்று
வனைப்பெருங் கழற்காற் சூர மன்னவன் கோயில் போந்தான்.

(இ-ள்.) என்றிவ்வாறு பலவகையாக அசுரர்களனைவரும் நெருங்கிவந்து மனவருத்தத்துடன் அவ்வவ்விடங்களில்நின்றுகொண்டுசொல்லும்படி நினைத்தற்கரிய பெருஞ் செல்வத்தினையுடைய நீண்ட மகேந்திரபுரியில் சென்று பெரிய வீரக்கழலை யணிந்த கால்களையுடைய சூரபன்மனது அரண்மனையை யடைந்தனன்.—எ-று.

போந்துதா ரகன்றன் மைந்தன் பொள்ளெனப் படர்த லோடும்
வாய்ந்தபே ரவைய மன்றில் வரம்பிலா வவுணர் போற்ற
வேந்தெழி லரிக டாங்கு மெரிமணித் தவிசின் மீக்கண்
வேந்தர்கள் வேந்தன் சூரன் மேவினீற் றிருந்தான் மாதோ.

(இ-ள்.) தாரகாசுரன் புதல்வனாகிய அசுரேந்திரன் விரைவாகவந்து உள்ளே செல்லவும், நிலைபெற்ற பெரியசபாமண்டபத்தில் அளவில்லாத அசுரர்கள் துதிக்கப்

பேரழகினையுடைய சிங்கங்களால் சுமக்கப்பட்ட ஒளிவிளங்கும் இரத்தினாசனத்தில் அரசர்க்கரசனாகிய சூரபன்மன் ஏறி வீற்றிருந்தனன்.—எ-று. (௯௨)

வீற்றிருந் தரசு போற்றும் வேந்தனை யெய்தி யன்னோன்
காற்றுணை முன்னர் வீழ்ந்து கரங்களா லவற்றைப் பற்றி
யாற்றவு மரற்றல் செய்ய வவுணர்கோ னதுகண் டைய
சாற்றுதி புகுந்த தன்மை தளர்ந்தனை புலம்ப லென்றான்.

(இ-ள்.) சிங்காசனத்திலிருந்து அரசாட்சிசெய்கின்ற சூரபன்மனை யடைந்து அவனது கால்களினெதிரில்விழுந்து கைகளால் அக்காலைப்பிடித்து மிகவுங் கதறியழுதலும், அதனைச் சூரபன்மன் பார்த்து, குழந்தாய்! நடந்த தன்மையைச் சொல்லக்கடவை; நீ வருந்திப் புலம்பாதேயென்று கூறினான்.—எ-று. (௯௩)

என்றலு மைந்தன் சொல்வா னிந்திரன் புணர்ப்பா லீசன்
வன்றிறற் குமரன் பூத வயப்படை தன்னொ டேகி
யுன்றன திளவ றன்னை யொண்கிர வுஞ்ச மென்னுங்
குன்றொடும் வேலாற் செற்றுக் குறுகினன் புவியி லென்றான்.

(இ-ள்.) சூரபன்மன் இவ்வாறு கூறவும் அசுரேந்திரன் கூறுவான், இந்திரனது தந்திரத்தினால் சிவபெருமான் பெற்ற மிக்க வல்லமையையுடைய குமரனாகிய சண்முகன் வெற்றியமைந்த பூதப்படைகளுடன் வந்து உனது தம்பியை ஒளிபொருந்திய கிரவுஞ்சமலையுடன் தனது வேற்படையினால் அழித்துப் பூமியில் வந்தனன் என்று கூறினான்.—எ-று.

அசுரேந்திரன் தாரகனைக்குறித்துச் சொல்லுமிடத்து, என் தந்தைதன்னை யெனக் கூறின், சூரபன்மனை வேறுபிரித்துக் கூறியதுபோலத் தோன்றுமாகலானும், சூரபன்மனைப்போலவே வரத்திலுந் திறத்திலும் மாயா வஞ்சகத்திலுஞ் சிறந்தவனாகலானும், அச் சூரபன்மனுடன் சேர்த்து, 'உன்றன திளவறன்னை' என்றும், தாரகனைப்போலவே மாயாதந்திரத்தில் மிகச் சிறந்துள்ளதாகலின், 'ஒண்கிரவுஞ்சம்' என்றுங் கூறினார். (௯௪)

வெய்யசூ ரதனைக் கேளா விழுமிதென் றுருமி னக்குச்
சையமா மவுண னோடு தாரக வலியோன் றன்னை
மையுறழ் கண்டத் தண்ணன் மைந்தனோ வடுதல்செய்வான்
பொய்யிது வெருவன் மைந்த வுண்மையே புகறி யென்றான்.

(இ-ள்) கொடிய சூரபன்மன் அதனைக்கேட்டு நல்லதென்று இடியிடித்தாற்போலச் சிரித்துக் கிரவுஞ்சனென்னும் அசுரனுடன் பலசாலியாகிய தாரகனை இருள்போலுங் கண்டத்தினையுடைய சிவபெருமானது புதல்வனோ கொல்லுபவன். இது பொய்; மகனே! நீ பயப்படாதே சத்தியத்தைச் சொல்லக் கடவையென்று கூறினான்.—எ-று.

நாம் அழியாவரம்பெற்றிருப்பதுபோலவே நமது தம்பியாகிய தாரகனும் அழியா வரம் பெற்றவனாகலானும், தந்தை கொடுத்த வரத்தை மைந்தனழிப்பது கூடாதாகலானும் இவ் வார்த்தை நம்பக்கூடிய தன்றென்று கூறினனென்பார், 'பொய்யிது வெருவன் மைந்த வுண்மையே புகறி யென்றான்' என்று கூறினார். (௯௫)

தாதைகேள் சரத மீது தாரகத் தந்தை தன்னை
மேதகு கிரவுஞ் சத்தை வேல்கொடு பரமன் மைந்தன்
காதினன் சென்று னீமக் கடன்முறை யெந்தைக் காற்றி
மாதுயர் கொண்டு நின்பால் வந்தன னென்றான் மைந்தன்.

(இ-ள்.) (அதற்கு அசுரேந்திரன்) தந்தையே! கேட்பாயாக, இது உண்மை, என் தந்தையாகிய தாரகனையும், உயர்வுபொருந்திய கிரவுஞ்சத்தையும் சிவகுமாரனாகிய சண்முகன் தனது வேலாயுதத்தாற் கொன்று சென்றனன். நான் என் தந்தைக்குத் தகனக்கிரியைகளைச் செய்துமுடித்து மிகுந்ததுன்பத்துடன் உம்மிடத்தில்வந்தேனென்று கூறினன்.—எ-று. (௫௬)

வேறு.

தோட்டுணைவ னுமிளவ றுஞ்சினனெ னுஞ்சொற்
கேட்டலு முளத்திடை கிளர்ந்தது சினத்தீ
நாட்டமெரி கால்வபுகை நண்ணுவன துண்ட
மீட்டுபொறி சிந்துவன யாக்கையுரு ரோமம்.

(இ-ள்.) தனது புயத்துணைவனுயுள்ள இளையதம்பியாகிய தாரகன் இறந்தனனென்று சொல்லிய வசனத்தைக் கேட்டவுடன் (சூரபன்மனுக்கு) உள்ளத்திற் கோபாக்கினி கிளம்பியது; கண்கள் நெருப்புப்பொறிகளைக் கக்கின; மூக்கினின்றும் புகையுண்டாயின; சரீரத்திலுள்ள உரோமங்களெல்லாம் நெருங்கிய நெருப்புப் பொறிகளைச் சிந்தின.—எ-று. (௫௭)

நெறித்தபுரு வத்துணைக ணெற்றிமிசை சென்ற
கறித்தன வெயிற்றினிரை கவ்வியத ரத்தைச்
செறித்தன துடித்தன தெழித்தவிதழ் செவ்வாய்
குறித்தது மனங்ககன கூடமு முடிக்க.

(இ-ள்.) நெறித்த இரண்டு புருவங்களும் நெற்றிக்குமேற் சென்றன; பல்வரிசைகள் உதட்டை மடித்துக் கடித்தன; உதடும் சிவந்தவாயும் நெருங்கித் துடித்துக் கர்ச்சித்தன; மனமானது அண்டகூடத்தை யழிக்க நினைந்தது.—எ-று. (௫௮)

இவ்வகை சினத்தெரி யெழுந்துமிசை கொள்ள
வவ்வெரியி னுற்றலை யவித்தததது போழ்தில்
வெவ்வினைகொ டாரகன் மிசைத்தொடரு மன்பாற்
றெவ்வர்புகழ் சூரனிடை சேர்ந்ததுய ராழி.

(இ-ள்.) பகைவர்கள் புகழ்கின்ற சூரபன்மனிடத்தில் இவ்வண்ணமாகிய கோபாக்கினியானது தோன்றி யதிகரிக்கவும், அச்சமையத்தில் பாவத்தொழிலையுடைய தாரகன்மீது பொருந்தியுள்ள அன்பினுல் உண்டாகிய துன்பக்கடலானது அவ்வக்கினியின் வல்லமையை யழித்தது.—எ-று. (௫௯)

துப்புநிகர் கண்புனல் சொரிந்தநதி யேபோன்
மெய்ப்புறம் வியர்த்தமுகம் வெள்ளமவை யீண்டி
யப்புணரி யானதுய ராழியது வென்றே
செப்புபொரு ளுண்மையது தேற்றியது போலும்.

(இ-ள்.) பவளம்போற் சிவந்த கண்கள் ஆற்றைப்போல நீரைச் சொரிந்தன; உடம்பிலும் முகத்திலும் வியர்வை யுண்டாயின; அந்நீர் பெருகி அந்தக் கடலாகிய துன்பசாகரம் அதுவேயென்று கூறும் பொருளினது உண்மையைத் தெளிவித்த தன்மையையொக்கும்.—எ-று. (௬0)

பருவர லெனும்புணரி யூடுபடி வுற்றே
யரியணை மிசைத்தவறி யம்புவியில் வீழா
வுருமென வரற்றின னுணர்ந்ததனை யஞ்சி
நரலையொடு பாரக நடுங்கியதை யன்றே.

(இ-ள்.) துன்பமென்னுங் கடலில் முழுகிச் சிங்காசனத்தினின்றுந் தவறிப் பூமியில்விழுந்து இடிபோலக் கதறியழுதனன்; அவ்வொலியைக்கேட்டுப் பயந்து கடலும் உலகமும் நடுக்கங் கொண்டது.—எ-று.

நரலை-கடல். நடுங்கியது என்பது வழுவமைதி. (சக)

கூற்றுள நடுங்கிய குலைந்தது செழுந்தீக்
காற்றுவெரு வுற்றது கதிர்க்கடவுள் சோம
னேற்றமிகு கோளுடு விரிந்தபுவி முற்று
மாற்றிய பணிக்கிறையு மஞ்சிய தலேந்தே.

(இ-ள்.) இயமன் மனநடுங்கிக்குலைந்தனன்; செழியஅக்கினியும் வாயுவும் நடுங்கின; சூரியனும் சந்திரனும் உயர்வுபொருந்திய மற்றைக் கோள்களுடன் விலகினார்கள்; உலகமுழுவதுஞ் சுமக்கின்ற ஆதிசேஷனும் நடுங்கிப் பயங்கொண்டனன்.

கூற்று என்பது, பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாகவிருத்தலின், 'கூற்றுள நடுங்கிய குலைந்தது' என்று கூறினர். நடுங்கிய-செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். (சஉ)

பாங்கருறு தானவர்கள் பாசறையின் மூழ்கி
யேங்கினர் விழுந்தன ரிரங்கினர் தளர்ந்தா
ராங்கனைய போழ்துதனி லந்நகர மெல்லா
மோங்குதுயர் கொண்டுகலு ழோசைமலிந் தன்றே.

(இ-ள்.) பக்கங்களிலிருந்த அசுரர்கள் துன்பத்தில் முழுகி எக்கமுற்று விழுந்து இரங்கித் தளர்ச்சியடைந்தார்கள்; அந்தச் சமையத்தில் அந்நகரமுழுவதிலும் மிகுந்த துன்பங்கொண்டு அழுகின்ற வோசையே மிகுதியாக விருந்தது.—எ-று

பாசறை-துன்பம். மலிந்தன்றே என்றது, தொகுத்தல்விகாரம். (சரு)

ஆனபொழு தத்தினி லழுங்கலுறு சூரன்
போனதொரு சீற்றவழல் புந்தியிடை மூள
மானமொடு நாணமட வல்லையி லெழுந்தே
தானுடைய வேவலர் தமக்கிவை யுரைப்பான்.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் வருந்திய சூரபன்மன் முன்பு தன்னிடத்தினின்றும் விலகிநின்ற கோபாக்கினியானது மீண்டும் மனத்தில் மூளவும், மானமும் நாணமுந் தன்னைவருத்த விரைவாக வெழுந்து தனது ஏவலாளர்களை நோக்கி இவ்வார்த்தைகளைக் கூறுவானாயினன்.—எ-று.

தானுடைய வேவலர்-தான் அடிமையாகக்கொண்டுள்ள ஏவலாளர். (சச)

மன்னிளவ லாருயிரை மாற்றிவரு கந்தன்
றன்னிகல் கடந்துசய மெய்திவரல் வேண்டு
மென்னிரதம் வெம்படை யிடுங்கவசம் யாவு
முன்னுகண மொன்றின்முன முய்த்திடுதி ரென்றான்.

(இ-ள்.) நிலைபெற்ற தம்பியின் அரிய உயிரை யழித்து வருகின்ற கந்தனது வலியைக் கடந்து வெற்றிபெற்று வருதல் வேண்டும், ஆதலால் எனது தேரும் வெவ்விய ஆயுதங்களும் தரிக்கப்பட்ட கவசமுதலிய வனைத்தும் நினைக்கப்பட்ட ஒரு கணப்பொழுதிற்குள்ளே எதிரில் கொண்டுவாருங்களென்று கூறினன்.—எ-று. (சரு)

இறையிவை புகன்றிட லுமேவலர்கள் யாரு
முறையிலவை யுய்த்திடுதன் முன்னினர்கள் போனு

ரறைகழ லுடைத்தகுவ ரன்னசெய லுடிக்
குறைவிலணி கங்களொடு கொம்மென வணைந்தார்.

(இ-ள்.) சூரபன்மன் இவ்வாறு கூறியவுடனே ஏவலாளர்க ளனைவரும் முறைப்படியே அவற்றைக் கொண்டுவரும்பொருட்டுச் சென்றார்கள்; சப்திக்கின்ற வீரகண்டையையணிந்த கால்களையுடைய அசுரர்கள் அதனையுணர்ந்து குறைவற்ற சேனைகளுடன் விரைவாக வந்தார்கள்.—எ-று. (சகூ)

ஆயசெயல் காண்டலு மமைச்சரி லமோகன்
மாயைதரு சூரனடி வந்தனை புரிந்தே
யேயதொரு மாற்றம திசைப்பலது கேண்மோ
தீயசின மெய்திட லெனுவினைய செப்பும்.

(இ-ள்.) அந்தச் செய்கையைக் கண்டவுடன் மந்திரிமார்களில் அமோகனென்பவன் மாயையின் புதல்வனாகிய சூரபன்மனது பாதங்களை வணங்கி (அரசனே?) அடியேன் தகுதியாகிய ஒருவார்த்தை கூறுகின்றேன், அதனைக் கேட்டருளவேண்டும், கொடிய கோபங்கொள்ளவேண்டாமென்று கூறி இவ்வார்த்தைகளைச் சொல்லுகின்றான்.—எ-று. (சஎ)

வேறு.

நஞ்சுறை படைகள் கற்று நவையுறு தொன்ன லாரை
வஞ்சினத் தெறியும் வீரர் வளநக ரதனை மாற்றோ
ரிஞ்சியைச் சூழ்ந்து போருக் கெய்தினு மெண்ணி யன்றி
வெஞ்சினத் தினைமேல் கொண்டு விரைந்தம ரியற்றச் செல்லார்.

(இ-ள்.) விஷம்பொருந்திய ஆயுத வித்தையில் பழகித் தோல்வியடையாமல் பகைவர்களைச் சபதத்துடன் கொல்லப்பட்ட வீரர்கள் தங்களது வளப்பம்பொருந்திய நகரத்தை அல்லது கோட்டையைச் சத்துருக்கள் சூழ்ந்துகொண்டு போருக்குவந்தாலும் (அரசர்களாயுள்ளவர்கள்) ஆலோசித்தன்றி மிகுந்தகோபத்தையடைந்து விரைவாக யுத்தத்திற்குச் செல்லார்கள்.—எ-று.

வஞ்சினம் - சபதம். (சஅ)

குலத்தினை வினவி யுள்ளக் கோளினை வினவி வந்த
நிலத்தினை வினவித் தொல்லோர் நெறியினை வினவிக் கொண்ட
சலத்தினை வினவிப் போர்செய் தானையை வினவி யன்னோர்
வலத்தினை வினவி யல்லான் மற்றொன்று மனங்கொள் வாரோ.

(இ-ள்.) (பகைவர்களது) குலத்தை விசாரித்தும், அவர்கள் மனத்தில் கொண்டிருக்கின்ற அபிப்பிராயத்தை விசாரித்தும், அவர்களிருக்கின்ற தேசத்தை விசாரித்தும், முன்னோர்களது வரன்முறைகளை விசாரித்தும், பொருந்திய கோபத்தின் காரணத்தை விசாரித்தும், போர்செய்தற்குரிய சேனைகளின் அளவை விசாரித்தும், அவர்களது பராக்கிரமத்தைவிசாரித்தும் அதன்பின்னேயல்லாமல் வேறொன்றையு மனத்தில் கொள்வார்களோ?—எ-று.

சலம் - கோபம். (சகூ)

வரத்தினில் வலியி னோரோ மாயையில் வலியி னோரோ
கரத்தினிற் படைக்க லத்தின் கல்வியில் வலியி னோரோ
வுரத்தினில் வலியி னோரோ வுணர்ச்சிசே ரூக்க மான
சிரத்தினில் வலியி னோரோ வென்றிவை தேர்வ ரன்றே.

(இ-ள்.) வரத்திற் சிறந்தவர்களோ? மாயையில் வல்லவர்களோ? கையிற் பொருந்திய ஆயுத வித்தையில் தேர்ந்தவர்களோ? வல்லமையிற் சிறந்தவர்களோ? ஊக்கத்தோடு கூடிய அறிவினையுடைய மேன்மையிற் சிறந்தவர்களோ? என்று இவற்றைத் தேர்ந்துணர்வார்கள்.—எ-று. (௬௦)

ஒற்றரைத் தூண்டி யன்னோ ருறுவலி யுணர்வ ரேனு
மற்றுமோ ரொற்றி னல்லா லன்னது மனத்துட் கொள்ளார்
சுற்றுறு மணிக மன்றி யொரு புடை துவன்றிச் சூழும்
பெற்றியு முளதோ வென்னு வேயொரீஇத் தேர்வர் பின்னும்.

(இ-ள்.) தூதுவர்களை யனுப்பி அப்பகைவர்களது வலிமையை யுணர்ந்தார்களாயினும், பின்னும் ஓர் தூதினாலல்லாமல் அவற்றை மனத்திற் கொள்ளார்கள்; சூழ்ந்திருக்கின்ற சேனைகளே யல்லாமல் வேறோர் புறத்தில் நெருங்கியிருந்து சமையமறிந்து சூழ்ந்துகொள்ளுகின்ற சேனைகளு முண்டோவென்று தூதுவர்களை யனுப்பி விசாரித்தலை யொழிந்து வேறு வகைகளினாலும் தேர்ந்தறிவார்கள்.—எ-று.

வேயொரீஇத் தேர்தல் - தூதுவர்களை யொழித்துத் தாம் தனியே மறைந்துசென்று உண்மையை விசாரித்துணர்தல்; இதனை—“ ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப், பெற்றோ மேணயாத் தெரிதந்துங்—குற்ற, மறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று, முறையிடினுங் கேளாமை யன்று ” என்னுங் குமரகுருபரதேசிகர் திருவாக்கா னறிக. (௬௧)

வினையது விளைவை யென்று மெல்லிய வென்கை வெஃகா
ரணிகமு மனையர் தன்மை யதனையுஞ் சிறுமைத் தாக
நினைகிலர் தமக்கு மாற்றார் நேர்ந்தவ ராகின் மேலோர்
முனையுறு புலத்தி லாற்று மும்மையு முன்னிச் செய்வார்.

(இ-ள்.) போரின் ஆரம்பத்தை எப்பொழுதும் சுலபமானதென்று சொல்லுதற்கு விரும்பார்கள்; சேனைகளையும், அச்சேனைகளின் தன்மையையும் இலேசாக எண்ணமாட்டார்கள்; தம்முடன் சத்துருக்க ளெதிர்த்தார்களாயின் சிறந்த அரசர்களாயுள்ளவர்கள் போர்க்களத்திற் செய்யவேண்டிய சாமபேத தானங்களை ஆலோசித்துச்செய்வார்கள்.—எ-று. (௬௨)

மூவியன் மரபி னானு முற்றுறா தொழிந்த காலைக்
கோவியன் மரபுக் கேற்பக் கொடுஞ்சினந் திருகிக் கொட்புற்
றேவியல் படைஞ ரோடும் படையொடு மெதிர்ந்து சுற்றி
மேவலர் பான்மை யுன்னி வெற்றிகொண் டனைவ ரன்றே.

(இ-ள்.) (பகைவர்களை வசப்படுத்துவதற்கு உபாயமாகச் சொல்லப்பட்டுள்ள சாமபேத தானமென்னும்) மூன்று வகையான முறைமைகளினாலும் முடியாது போனபொழுது, இராசாங்கத்திற்குத் தக்க முறைமைப்படி மிகுந்த கோபத்தினால் மாறுபட்டுச் சூழ்ந்து பாணங்களைப் பிரயோகிக்குந் தன்மையினையுடைய சேனைகளுடனும் ஆயுதங்களுடனும் எதிர்ந்து சூழ்ந்து பகைவர்களது தன்மையைச் சிந்தித்து வெற்றிபெற்று வருவார்கள்.—எ-று. (௬௩)

நேர்ந்திட வலியி லோரு ஞாட்பிடை நேர்தி ரென்னுச்
சேர்ந்திடும் போழ்தும் வேந்தர் செருவினைக் குறித்துச் சென்று
சார்ந்திடல் பழிய தன்றோ வெல்லினுந் தானை தூண்டிப்
பேர்ந்திடச் செய்வ ரல்லதே பெறலரும் புகழ தன்றே.

(இ-ள்.) போர்செய்யத்தக்க வல்லமையில்லாதவர்களும் போரில் எதிர்க்கக் கடவீர்களென்று அடைந்த காலத்தும், அரசர்களா யுள்ளவர்கள் போரைக் குறித்துச் சென்றடைதல் பழிப்பல்லவோ? அவர்களைச் செயிக்கவேண்டுமோயினும் தமது சேனைகளையனுப்பிப் (பகைவர்களைப்) புறங்கொடுக்கச் செய்வார்கள். அஃதே அடைதற்கரி புகழாகும்.—எ-று. (ருச)

ஈதரோ வுலகி னுள்ள விறைவர்த மியற்கை யாகு
மாதலா னின்னைப் பாரி லழிவிலா யகில மாள்வா
யேதமொன் றடையாய் வானோர் யாரையு மேவல் கொண்டாய்
போதனு நெடுமா லோனும் வைகலும் புகழ வுற்றாய்.

(இ-ள்.) உனக்கொப்பாரில்லாத கெடாதமுதல்வனே! எல்லா உலகங்களை யுமரசாட்சி செய்பவனே! யாதொரு துன்பமு மில்லாதவனே! தேவர்களெனைவரையும் ஏவல்கொண்டவனே! பிரமனும் திருமாலும் தினந்தோறும் புகழுந் தன்மையைப் பெற்றவனே! ஆதலால் இதுவே உலகத்திலுள்ள அரசர்களுக்கு இயற்கையாகும்.

இன்னதோர் மிடல்பெற் றுள்ள விறைவநீ யளிய னாகும்
பொன்னக ரவன்சொற் கேட்டுப் பூதமே படையா வீச
னென்னலி னுதவும் பிள்ளை நேர்ந்திடி னவனை வெல்ல
வுன்னினை போதி யென்னி னுனக்கது வசைய தன்றோ.

(இ-ள்.) இத்தன்மையாகிய வலிமையைப் பெற்றுள்ள அரசனே! நீர் எளியவனாகிய இந்திரனது சொல்லைக்கேட்டுப் பூதங்களைச் சேனையாகக் கொண்டு சிவன் நேற்றுப்பெற்ற புதல்வனானவன்வந்து எதிர்த்தால் அவனை வெல்லும்பொருட்டு நினைத்துச் செல்லுவையாயின் அது உனக்கு இகழ்ச்சியல்லவோ?—எ-று.

சிவகுமாரன் மிகச் சிறுவனாகலின் அவனுடன் நீ எதிர்த்துப் போர்புரியச்செல்லுதல் பழியாகுமேயன்றிப் புகழாகாதென்று கூறினனென்பார் 'ஈசனென்னலி னுதவும் பிள்ளை நேர்ந்திடி னவனை வெல்ல வுன்னினை போதி யென்னி னுனக்கது வசைய தன்றோ' என்று கூறினர். (ருசு)

மாற்றலர் வன்மை யோராய் மற்றவர் படைஞர் தங்க
ளாற்றலை யுணராய் நின்ற னரும்பெருந் தலைமை யுன்னாய்
போற்றிடு மமைச்ச ரோடும் புரிவன சூழாய் வாளா
சீற்றமங் கதுமேல் கொண்டு செல்லலுந் திறலின் பாற்றோ.

(இ-ள்.) பகைவர்களது வல்லமையை யுணர்ந்தாயில்லை; அவர்களது சேனையின் சாமர்த்தியத்தையு முணர்ந்திலை; உனது அரிய பெரிய தலைமையை நினைந்திலை; துதிக்கப்பட்ட அமைச்சர்களுடன் செய்யவேண்டுவனவற்றை யாலோசித்தாயில்லை; சும்மா மிகுந்த கோபங்கொண்டு செல்லுதலும் வீரத்தின் பாற்பட்டதோ?—எ-று.

வீரமும் வலியு மிக்கோ ராயினும் விதிவந் தெய்திற்
பாரிடை வலியி லோரும் படுத்திடப் படுவர் நின்போற்
பேருட லழியா வாற்றல் பெருமையா லிறுவா யெய்தத்
தாரகன் மழலை தேருஞ் சிறுவனுந் தடியப் பட்டான்.

(இ-ள்.) வீரமும் வல்லமையும் மிக்கவர்களானாலும் ஊழ்வினை வந்தடைந்தால் உலகத்தில் பலவீனர்களும் கொலைசெய்ய அதனாலிறப்பார்கள். உன்னைப்போலப் பெரிய உடம்பானது அழியாதிருக்கின்ற வலிமையைப் பெருமையால் தாரகா

சூரனுக்கு மரணகாலஞ் சமீபித்தலால், அவன் மழலைவார்த்தையில் தெளியாத சிறுவனாலுங்கொல்லப்பட்டனன்.—எ-று. (ருஅ)

கல்கல மிழற்றுந் தண்டைக் கழலடிச் சிறுவன் கைம்மாத்
தலையுடை யிளவ றன்னைத் தடிந்ததற் புதத்த தன்றால்
வலியரு மொருகா லத்தில் வன்மையை யிழப்ப ராற்ற
மெலியரு மொருகா லத்தில் வீரராய்த் திகழ்வ ரன்றே.

(இ-ள்.) கலகலவென்று சப்திக்கின்ற தண்டையை யணிந்த காலினையுடைய ஒரு சிறுவன் யானைத்தலையினையுடைய தாரகனைக் கொன்றது ஆச்சரியமல்ல; பலசாலிகளும் ஒருகாலத்தில் தங்கள் வலிமையை யிழப்பார்கள்; மிக்க மெலியவர்களும் ஒருகாலத்தில் வீரராய் விளங்குவார்கள்.—எ-று. (ருகூ)

யாருநே ரன்றி வைகு மிறைவநீ சிறுவன் றன்மேற்
போரினை முன்னி யேகல் புகழ்மைய தன்றா லன்னான்
சீரொடு மதுகை யாவுந் தேர்ந்துபின் னவனிற் றீர்ந்த
வீரரைப் படையொ டேவி வெற்றிகொண் டமர்தி யென்றான்.

(இ-ள்.) தனக்கொருவரும் ஒப்பின்றி வாழ்கின்ற அரசனே! நீ அந்தச் சிறுவன்மீதுபோரைச் செய்யக்கருதிச் செல்லுதல் புகழன்று. ஆதலால், அவனது சிறப்பையும் வெற்றிமுதலியவற்றையு முணர்ந்து, இறந்த தாரகன் தவிர மற்றைய வீரர்களைச் சேனைகளுடன் அனுப்பி வெற்றிபெற்றிருக்கடவை என்று கூறினான்.—எ-று.

அறிதரு மமைச்சர் தம்மு ளமோகனித் தன்மை தேற்ற
வுறுதியீ தென்று சூர னுள்ளுறு சினத்தை நீத்து
விறல்கெழு மரிமா னேற்று விழுத்தகு தவிசி னேறிச்
செறிதரு முழைஞர் தம்முட் சிலவரை நோக்கிச் சொல்வான்.

(இ-ள்.) (அரசமுறைமைகளை) உணர்ந்த மந்திரிமார்களுள் (சிறந்த) அமோகனென்பவன் இவ்வாறு கூறித் தெளிவிக்க, உடனே சூரபன்மன் இது உறுதியான காரியமென்று தன்மனத்திலிருந்த கோபத்தை யொழித்து வலிமையோடு விளங்குகின்ற ஆண்சிங்கங்களால் சுமக்கப்பட்ட ஆசனத்திலேறியிருந்து அங்கு நெருங்கியுள்ள ஏவலாளர்களில் சிலரைப் பார்த்துக் கூறுகின்றான்.—எ-று. (சுக)

பகனொடு மயூரன் சேனன் பரிதியம் புள்ளின் பேரோன்
சுகனிவர் முதலா வுள்ள தூதரைத் தருதி ரென்னப்
புகழ்புனை சூர பன்மன் பொன்னடி யிறைஞ்சி யேத்தி
தகுவர்க டலைவர் மற்றச் சாரணர் தம்மை யுய்த்தார்.

(இ-ள்.) பகன் மயூரன் சேனன் சக்கரவாகன் சுகன் இவர்கள் முதலாயுள்ள தூதுவர்களை யழையுங்க ளென்று கூறவும், உடனே அசுரத்தலைவர்கள் கீர்த்திபொருந்திய சூரபன்மனது அழகிய பாதங்களை வணங்கித் துதித்து அந்தத் தூதுவர்களை அழைத்துக்கொண்டுவந்து விட்டார்கள்.—எ-று. (சுஉ)

சாரண ரினையர் போந்து தாண்முறை பணிந்து நிற்பச்
சூரனங் கவரை நோக்கித் துண்ணென நீவி ரேகிப்
பாரிடை வந்த கந்தன் பான்மையும் படைவெம் பூதர்
சேருறு தொகையும் யாவுந் தேர்ந்திவண் வருதி ரென்றான்.

(இ-ள்.) இவ்வாறு தூதுவர்கள் வந்து சூரபன்மனது பாதங்களை முறையே வணங்கி நிற்கவும், அவன் அவர்களைப்பார்த்து நீங்கள் விரைவாகச் சென்று பூமியில்

வருகின்ற கந்தனது தன்மையினையும் சேனைகளாகப் பொருந்திய கொடிய பூதர்களது கூட்டத்தினையும் மற்றவைகளையு முணர்ந்துகொண்டு இவ்விடத்திற்கு வரக்கடவீர்களென்றுகூறினன்.—எ-று. (சுசு)

ஒற்றுவ ருணர்ந்தந் நீர்மை யுச்சிமேல் கொண்டு தங்கோன்
பொற்றடங் கழல்க டாழ்ந்து புடவியை நோக்கிச் சென்றார்
மற்றவர் போய பின்னர் மாறிலாச் சூர பன்மன்
வெற்றிகொ ளவுணர் போற்ற வீற்றிருந் தரசு செய்தான்.

(இ-ள்.) அத்தன்மைகளனைத்தையுந் தூதுவருணர்ந்து தங்கள் முதல்வனாகிய சூரபன்மனது பொன்மயமாகிய(வீரக்கழலையணிந்த)பெரியபாதங்களில் வணங்கி (அவ்வார்த்தைகளைச்) சிரமேற்கொண்டு பூமியை நோக்கிச் சென்றார்கள்; அவர்கள் போனபின்பு மாறுபாடில்லாத சூரபன்மனுனவன் வெற்றிபொருந்திய அசுரர்கள் துதிசெய்யும்படி வீற்றிருந்து அரசாட்சி செய்தனன்.—எ-று. (சுச)

ஏதமில் சூர பன்ம னிளவற்ன் முடிவு நேடி
மாதுயர் கொண்டு தேறி வைகிய தன்மை சொற்றாம்
மாதியங் கடவுண் மைந்த னமரர்தங் கிரியை நீங்கிப்
பூதல மீது வந்த நெறியினைப் புகல லுற்றாம்.

(இ-ள்.) துன்பமில்லாத சூரபன்மனுனவன் தன் தம்பியாகிய தாரகனது மரணத்தைக் குறித்து, மிகுந்த துன்பமடைந்து பின்பு தெளிவடைந்த தன்மையைக் கூறினோம். இனி, முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானது திருப்புதல்வராகிய முருகக்கடவுள் தேவகிரியைவிட்டுநீங்கி இந்நிலவுலகத்தில் வந்தருளியமுறைமையைக்கூறுகின்றோம்.—எ-று. (சுரு)

அசுரேந்திரன் மகேந்திரஞ் செல்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க,சுஉஅ.

---

உ

முருகன்றுணை.

# வழிநடைப்படலம்.

குருமணி மகுட மாறுங் குழைகளுந் திருவில் வீசத்
திருமணி வரையின் மேவுந் திருக்கைவேற் பெருமா னுக்குக்
கருமணி யாழிப் புத்தேள் கையுறை யாக வாங்கோர்
பருமணி நீட்டிற் றென்னப் பானுவந் துதயஞ் செய்தான்.

(இ-ள்.) நன்னிறம் விளங்கும் நவமணிகளிழைத்த ஆறு மகுடங்களும், பன்னிரண்டு குண்டலங்களுஞ்சிறந்த பேரொளி வீசும்படி வளப்பமிக்க மணிமயமான தேவகிரியிலெழுந்தருளியிருக்கின்ற சண்முகக் கடவுளுக்கு நீலரத்தினங்களையுடைய சமுத்திரராஜன் காணிக்கையாக ஒரு பெரியமணியை நீட்டினற்போலச் சூரியன் (கீழ்த்திசைக்கடலில்) உதயமாயினன்.—எ-று.

கீழ்க்கடலில் சூரியனுதித்தது சமுத்திரராஜன் முருகக்கடவுளுக்குக் கையுறை தந்ததுபோன்றிருந்ததென்க. (௧)

**வேறு.**

மங்குல் வானமேல் வெய்யவன் கதிரென வழங்குஞ்
செங்கை கூப்பியே தொழுதிடு வானெனச் செல்ல
வங்கவ் வேலையி லறுமுகன் கடவுள்வெற் பகன்று
பொங்கு தானையு மமரருஞ் சூழ்தரப் போந்தான்.

(இ-ள்.) மேகங்களுலாவுகின்ற ஆகாயத்தில் தோன்றிய சூரியன் தனது கிரணங்களென்று கூறுஞ் செவ்விய கரங்களைக்குவித்து (முருகக்கடவுளை) வணங்குகின்றவனைப்போலச்செல்லுகின்ற அந்தச்சமயத்தில் முருகக்கடவுள் பெரிய சேனைக் கூட்டமுந் தேவர்களுந் தம்மைச் சூழ்ந்துவரும்படி தேவகிரியினின்று நீங்கிச் சென்றருளினர்.—எ-று. (உ)

தன்னை நீக்கியே சூழ்வுறுந் தவமுடைப் பிருங்கி
யுன்னி நாடிய மறைகளின் முடிவினை யுணரா
வென்னை யாளுடை யானிடஞ் சேர்வனென் றிமையக்
கன்னி பூசனை செய்தகே தாரமுன் கண்டான்.

(இ-ள்.) தம்மைவிட்டுச் சிவபெருமானை மாத்திரம் பிரதக்ஷிணஞ் செய்த தவத்தினையுடைய பிருங்கிமுனிவரர் விசாரித்தறிந்த வேதங்களின் முடிவினை யுணர்ந்து, எம்மையாளாகவுடைய சிவபெருமானது இடப்பாகத்தை யடைவேனென்று பார்வதிதேவியார் பூசைசெய்தருளிய (மகத்துவத்தையுடைய) ஸ்ரீ கேதாரகிரியை (முருகக்கடவுள்) தமக்கு முன்னே பார்த்தருளினர்.—எ-று.

பிருங்கிமுனிவரர் உமாதேவியாரை நீக்கிச் சிவபெருமானை மாத்திரம் பிரதக்ஷிணஞ்செய்து சென்ற காரணத்தினால் நாம் சிவபெருமானை நீங்காதிருக்கும் வண்ணம் இடப்பாகம் பெறவேண்டுமெனக் கருதிப் பூசனைசெய்தமையின், 'இமையக் கன்னிபூசனைசெய்த கேதாரமுன்கண்டான்' என்று கூறினர். (௩)

பைய ராவின்மேற் கண்டுயில் பண்ணவன் றனக்குந்
தையல் பாதிய னேபரம் பொருளெனுந் தன்மை
மையன் மானுட ருணர்ந்திட மறைமுனி யெடுத்த
கைய தேயுறைத் திட்டதோர் காசியைக் கண்டான்.

(இ-ள்.) படம்பொருந்திய சேஷசயனத்தில் நித்திரைசெய்யுந் திருமாலுக்கும் பார்வதி பாகராகிய சிவபெருமானே மேலான கடவுளென்னுந் தன்மையை மயக்கத்தினையுடைய மனிதர்களுணர்ந்துகொள்ளும் பொருட்டு வியாசமுனிவர் தூக்கிய கையே தெரிவித்தருளிய ஸ்ரீகாசிப்பதியைத் தெரிசித்தருளினர்.—எ-று.

வியாசமுனிவர் விஷ்ணுவே பரப்பிரமமென்று ஸ்ரீவிசுவநாதர் சந்நிதியில் உயரத்தூக்கிய கையானது ஸ்தம்பிக்கச்செய்து, அக்காரணத்தினால் சிவபெருமானே பரம்பொருளென்று நாட்டிய மான்மியத்தால் விளங்குதலின், 'தையல் பாதியனே பரம்பொருளெனுந்தன்மை - மையன் மானுடருணர்ந்திட மறைமுனியெடுத்த - கைய தேயுறைத் திட்டதோர் காசியைக்கண்டான்' என்று கூறினர். (௪)

பருப்ப தப்பெயர்ச் சிலாதனற் பாலகன் பரம
னிருப்ப வோர்வரை யாவனென் றருந்தவ மியற்றிப்

பொருப்ப தாகியே யீசனை முடியின்மேற் புனைந்த
திருப்ப ருப்பதத் தற்புதம் யாவையுந் தெரிந்தான்.

(இ-ள்.) ஸ்ரீசைலமென்னும் பெயரினையுடைய சிலாதபுத்திரராகிய திருநந்திதேவர் சிவபெருமா னெழுந்தருளி யிருப்பதற்கு யான் ஒருமலையாவேனென்று அரிய தவத்தைச்செய்து மலைவடிவங்கொண்டு சிவபெருமானைத் தமது திருமுடியின் மீது சுமக்கப்பெற்றுள்ள அழகிய மல்லிகார்ச்சுன பருவதத்தின் ஆச்சரிய மனைத்தையுந் தெரிசித்தருளினர்.—எ-று.

திருநந்திதேவர் சதாகாலமும் சிவபெருமானைச் சுமக்கும்பொருட்டு மலைவடிவங்கொண்டு தவஞ்செய்து அம்மலையின்மேல் சிவபெருமா னெழுந்தருளி யிருக்கப்பெறுதலின், 'அருந்தவமியற்றிப் பொருப்பதாகியே யீசனைமுடியின்மேற்புனைந்த திருப்பருப்பதம்' என்று கூறினர். (ரு)

அண்ட மன்னுயி ரீன்றவ ளுடன்முனி வாகித்
தொண்ட கங்கெழு சுவாமிதன் மால்வரை துறந்து
மண்டு பாதலத் தேகியே யோர்குகை வழியே
பண்டு தான்வரு வேங்கட கிரியையும் பார்த்தான்.

(இ-ள்.) அண்டங்களையும் அவ்வண்டங்களிலுள்ள உயிர்களையும் பெற்றருளிய பார்வதி தேவியாரோடு கோபித்துத் தொண்டகமென்னும் பறை முழங்குகின்ற கந்தமாதன பருவதத்தைக்கடந்து நெருங்கிய பாதலத்துட்சென்று அங்குள்ள ஒரு குகையின்வழியாய் முன்னே தாம் எழுந்தருளிவந்த திருவேங்கடகிரியையுந் தெரிசித்தருளினர்.—எ-று.

மாங்கனியை விநாயகமூர்த்திக்குத் தரும்பொருட்டு உமாதேவியார் கூறித் தடுத்த காரணத்தால் கோபித்துத் திருக்கயிலையினின்று நீங்கிப்பாதலத்துட்சென்று குகையின் வழியாகத் தாம் முன்பு வெளிப்பட்டமையின், 'ஓர் குகைவழியே பண்டுதான்வரு வேங்கடகிரி' என்று கூறினர். தொண்டகம்-குறிஞ்சிப்பறை. (சு)

சிலந்தி மாசுண மும்மதக் கரிசிவ கோசன்
மலைந்தி டுஞ்சிலை வேட்டுவன் கீரனே மடவார்
பலந்த ரும்வழி பாட்டினாற் பாட்டினாற் பரனைக்
கலந்து முத்திசேர் தென்பெருங் கயிலையுங் கண்டான்.

(இ-ள்.) சிலந்திப்பூச்சி, பாம்பு, மும்மதங்களையுடைய யானை, சிவகோசரியார், போர்செய்தற்குரிய வில்லினையுடைய வேடுவராகிய கண்ணப்பநாயனர், நக்கீரதேவர், கன்னியர் ஆகிய இவர்கள் பலத்தைக் கொடுக்கின்ற பூசனையினாலும் தோத்திரத்தினாலும் சிவபெருமானுடன் இரண்டறக்கலந்து முத்தியையடைந்த பெரிய தென்கயிலாயமாகிய திருக்காளத்திமலையைத் தெரிசித்தருளினர்.—எ-று.

பிரமதேவனை யவமதித்த மாதவனூறனென்பவன் சிலந்தி வடிவமெடுத்துக் காளத்தியப்பருக்கு வாய்நூலால் ஆலயங்கட்டிச் சாபநீங்கப்பெற்றும், சிவபெருமானுக்காபரணமாகவிருந்த காளனென்னும் சர்ப்பராஜன் மாதர்கள்பாற்கொண்ட காமங்காரணமாச் சாபமேற்றுச் சிவபூசைசெய்து அச்சாப நீங்கப்பெற்றும், அத்தியென்னுங்கணநாதன் உமாதேவியாரால் யானையாகும்படி நேர்ந்த சாபநீங்கும் பொருட்டுப்பூசிக்கப்பெற்றும், சிவகோசரியார் என்னுஞ் சிவவேதியர் நித்திய பூசைசெய்து பேறுபெற்றும், வில்வேடராகிய கண்ணப்ப நாயனர் ஊனமுது படைத்துத் தமது கண்ணைத்தோண்டிச் சிவபெருமானது திருக்கண்ணில் அப்பி ஆறுதினத்தில் முத்தி

பெற்றும், நக்கீரதேவர் சிவபெருமானோடெதிர்த்து விதண்டாவாதங்கூறி ஞானப்பூங்கோதையம்மையாரது கூந்தலையிகழ்ந் தரைத்தகாரணத்தினால் கயிலைபாதி காளத்திபாதி என்னும் அந்தாதிப் பிரபந்தம்பாடிப் பேறுபெற்றும், இரண்டு பரத்தையர் மாதர்கள் அடைந்து சிவலிங்கப்பெருமானோடையிக்கிய முற்றும் பேறுபெற்றமையின், 'பரனைக்கலந்து முத்திசேர் தென்பெருங் கயிலையுங் கண்டான்' என்று கூறினர். (எ)

கொடிய வெஞ்சினக் காளியிக் குவலய முழுது
முடிவு செய்வனென் றெழுந்தநாண் முளரியான் முதலோ
ரடைய வஞ்சனு மவள்செருக் கழிவுற வழியாக்
கடவு ளாடலால் வென்றதோர் வடவனங் கண்டான்.

(இ-ள்.) கொடிதாகிய பெருங்கோபத்தினையுடைய காளியானவள் இவ்வுலகமுழுவதையும் அழிக்கின்றேனென்று எழுந்தகாலத்தில் பிரமன் முதலியவர்களனைவரும் மிகவும் பயப்படவும், அவளதுகெர்வமழியும்பொருட்டு நித்தியராகிய சிவபெருமான் திருநடனத்தினால் வெற்றிபெற்றருளிய திருவாலங்காட்டைத் தெரிசித்தருளினர்.—எ-று.

சிவபெருமான் வீரகாமாளியுடனெதிர்த்து அவளது செருக்கழியும்படித் திருநடனஞ்செய்து வென்றருளினமையின், 'அழியாக்கடவுளாடலால் வென்றதோர் வடவனம்' என்று கூறினர். (அ)

அம்பு ராசிகொள் பிரளயத் தினுமழி வின்றி
யும்பர் மாலயற் குறையுளாய்க் கயிலைபோ லொன்று
மெம்பி ரான்றனி மாநிழ றன்னில்வீற் றிருக்குங்
கம்பை சூழ்தரு காஞ்சியந் திருநகர் கண்டான்.

(இ-ள்.) உலகத்தைக் கடல் மூடிக்கொள்ளுகின்ற பிரளயகாலத்திலும் அழிவில்லாமல், தேவர்கள் திருமால் பிரமன் முதலியவர்களுக் கிருப்பிடமாய்த் திருக்கயிலாயத்தை யொத்ததாய் எமது சிவபெருமான் ஒப்பற்ற மாமரநீழலில் வீற்றிருந்தருளுங் கம்பாநதிசூழ்ந்த ஸ்ரீகாஞ்சிபுரத்தைத்தெரிசித்தருளினர்.—எ-று.

வேதமே மாமரமாகவமைதலின், 'தனிமா' என்றார். (கூ)

ஏல வார்குழ லுமையவள் பூசைகொண் டிருந்த
மூல கார ணாகிய முதல்வனா லயமு
மாலும் வேதனு மமரரும் வழிபடு மற்றை
யால யங்களா யுள்ளவுங் கண்டன னையன்.

(இ-ள்.) ஏலவார்குழலாளென்னும் ஸ்ரீகாமாட்சியம்மையாரது பூசனையையேற்றிருந்தருளிய மூலகாரணராகிய திருவேகம்பநாதர் எழுந்தருளியிருக்கின்ற திருவேகம்பமென்னும் ஆலயத்தையும், திருமாலும் பிரமனும் தேவர்களும்பூசித்த மற்றைய ஆலயங்களையும் முருகக்கடவுள் தெரிசித்தருளினர்.—எ-று. (கo)

வேறு.

என்னிக ரொருவரு மில்லென் றிருவரு மிகலு மெல்லை
யன்னவர் நடுவு தோன்றி யடிமுடி தெரியா தாகி
யுன்னினர் தங்கட் கெல்லா மொல்லையின் முத்தி நல்கித்
தன்னிக ரின்றி நின்ற தழற்பெருஞ் சயிலங் கண்டான்.

(இ-ள்.) (பிரம விஷ்ணுக்களாகிய) இருவரும் எனக்குச் சமானம் ஒருவருமில்லையென்று ஒருவரோடொருவர் எதிர்த்துப் போர்செய்யுங்காலத்தில், அவர்க

ளுக்கு மத்தியில் தோன்றி அடியுமுடியுங் காணப்படாததாய், நினைப்பவர்களுக்கெல்லாம் விரைவாக முத்தியைக் கொடுத்துத்தனக்கு ஒப்பின்றி விளங்கிநின்ற பெரிய அக்கினிவடிவாகிய ஸ்ரீஅருணசலத்தைத் தெரிசித்தருளினர்.—எ-று.

பிரம விஷ்ணுக்கள் தாமே பரம்பொருளென்று ஒருவரோ டொருவர் எதிர்த்துப் பெரும்போர் புரிந்தகாலத்து அவர்கள் மத்தியில் சிவபெருமான் அக்கினிமலையாக வெழுந்தருளி அவர்களால் அடியு முடியுங் காணப்படாமல் விளங்கினமையின், 'அன்னவர் நடுவுதோன்றி யடிமுடி தெரியாதாகி' என்றும், நினைக்க முத்தியைத் தரும் க்ஷேத்திரமாகலின், 'உன்னினர்தங்கட்கெல்லா மொல்லையின் முத்திநல்கி' என்றுங் கூறினர். (கக)

மண்ணுல கிறைவன் செய்யு மணந்தனை விலக்கி யெண்டோ
ளண்ணலோர் விருத்தன் போல்வந் தாவண வோலை காட்டித்
துண்ணென வழக்கில் வென்று சுந்தரன் றனையாட் கொள்ளும்
பெண்ணையம் புனல்சூழ்வெண்ணெய்ப்பெரும்பதிதனையுங்கண்டான்.

(இ-ள்.) இந்நிலவுலகத்தரசராகிய நரசிங்கமுனையரைய நாயனரால் செய்விக்கப்பட்ட திருக்கல்யாணத்தைச் சிவபெருமான் ஒரு விருத்தவேதியராகவந்து தடுத்து அடிமையோலையைக்காட்டி விரைவாக வழக்கில் வென்று ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளைத் தடுத்தடிமைகொண்டருளிய அழகிய பெண்ணைநதிசூழ்ந்த பெரிய திருவெண்ணெய் நல்லூரொன்னும் பெரிய திருப்பதியையுந் தெரிசித்தருளினர்.—எ-று.

ஆவணவோலை - அடிமையோலை. (கஉ)

தூசிஞ லம்மை வீசத் தொடையின்மேற் கிடத்தித் துஞ்சு
மாசிலா வுயிர்கட் கெல்லா மஞ்செழுத் தியல்பு கூறி
யீசனே தனது கோல மீந்திடு மியல்பா லந்தக்
காசியின் விழுமி தான முதுகுன்ற வரையுங் கண்டான்.

(இ-ள்.) இறந்துபோகின்ற குற்றமற்றவுயிர்களுக்கெல்லாம் உமாதேவியார் தமது திருத்துடையின்மேல் கிடத்தி உத்தரியத்தினல் வீச, சிவபெருமானே ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் முறைமையை யுபதேசித்துத் தமது சாரூபத்தைக் கொடுக்கின்ற தன்மையினல் அந்தக் காசிப்பதியினுஞ் சிறந்ததாகவிளங்கும் ஸ்ரீவிருத்தாசலத்தையுந் தெரிசித்தருளினர்.—எ-று.

விருத்தாசலத் திருப்பதியில் இறக்கின்ற வுயிர்களை உமாதேவியார் தமது திருத்தொண்டையின்மேல் வலச்செவிமேலாகக் கிடத்தி உத்தரீயத்தினல்வீச, சிவபெருமான் ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேசஞ்செய்து முத்தியிற் சேர்த்தலின், 'காசியின்விழுதானமுதுகுன்றவரையுங்கண்டான்' என்று கூறினர். (கங)

விரிகனல் வேள்வி தன்னில் வியன்றலை யரிந்து விட்டிப்
பொருவரு தவத்தை யாற்றும் பதஞ்சலி புலிக்கா லண்ண
லிருவரு முணர்வாற் காண வெல்லையி லருளா லீசன்
றிருநட வியற்கை காட்டுந் தில்லைமூ தூரைக் கண்டான்.

(இ-ள்.) தீயானது மிகுத்தெரிகின்ற வேள்வியில் பெரியதலையையரிந்து இட்டு ஒப்பற்ற தவத்தைச்செய்கின்ற பதஞ்சலி வியாக்கிரபாதர்களாகிய இரண்டு முனிவர்களும் மெய்யறிவினுல் தெரிசிக்கும்படி அளவற்ற பெருங்கருணையினல் சிவபெருமான் திருநடனத்தின் இயல்பைக் காட்டியருளுகின்ற பழைமையாகிய திருத்தில்லைப்பதியைத் தெரிசித்தருளினர்.—எ-று.

பதஞ்சலி வியாக்கிரபாதர்கள் வேள்வியில் தலையரிந்திட்டுத் தவஞ்செய்து ஞானவுணர்வாற் றெரிசிக்கும்படி சிவபெருமான் ஆனந்தத்தாண்டவம் புரிந்தருளின தொன்பது புராணவரலாறு. (கச)

தண்டளிர்ச் சோலைத் தில்லைத் தபனிய மன்றி லென்றுந்
தொண்டையங் கனிவாய் மாது தொழச்சுராட் புருட னுள்ளத்
தண்டரு மதிக்க லாற்று வற்புதத் தனிக்கூத் தாடல்
கண்டனன் கசிவா லுள்ளங் களிப்புற வணங்கிப் போனான்.

(இ-ள்.) குளிர்ந்த துளிர்களையுடைய சோலை சூழ்ந்த திருத்தில்லைப்பதியிலுள்ள கனகசபையில், ஆதொண்டைக்கனி போலும் அதரத்தினையுடைய சிவகாமியம்மையார் எக்காலத்திலும் வணங்கும்படி விராட்புருடனுடைய இதயகமலத்தில் தேவர்களாலும் மதித்தற்கரிய அற்புதத் திருநடனஞ் செய்தருளுதலைத் தெரிசித்து அன்பினால் மனமகிழ்வுடன் வணங்கிச் சென்றனர்.—எ-று.

'சுராட்புருடனுள்ளத்து' என்பதனை—'திருவளராரூர்மூலந் திருவானைக் காவேநாபி - மருவளர் பொழில்சூழண்ணு மலைமணி பூரநீவி-ரிருவருங் கண்டமன்ற மிதயமாம்' எனவருந் திருவிளையாடற்புராணத்தானறிக. சுராட்புருடன் - விருட்புருடன். (கடு)

குடமுனி கரத்தி லேந்துங் குண்டிகை யிருந்து நீங்கிப்
படிதனில் வேறு வேறாய்ப் பற்பல நாமந் தாங்கிக்
கடல்கிளர்ந் தென்னச் செல்லுங் காவிரி யென்னு மாற்றின்
வடகரை மண்ணி யின்பால் வந்தனன் கருணை வள்ளல்.

(இ-ள்.) அகத்திய முனிவரர் தமது திருக்கரத்திலேந்திய கமண்டலத்தினின்று நீங்கி உலகத்தில் வெவ்வேறு பிரிவுகளாய்ப் பற்பலபெயர்களைக்கொண்டு கடல் புரண்டு வருவதுபோலச்செல்லுகின்றகாவிரியாற்றின் வடகரையிலுள்ள மண்ணிநதிக்கரையில் அருள்வள்ளலாகிய முருகக்கடவுள்வந்து சேர்ந்தருளினார்.—எ-று.

அரிசில் முதலிய பலநாமங்களைக்கொண்டு பிரிந்து செல்லுதலின், 'பற்பல நாமந்தாங்கி' என்று கூறினர். (கசு)

வழிநடைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க,சுசச.

---

உ

முருகன்றுணை.

---

# குமாரபுரிப்படலம்.

அளவில் பூதவெம் படையொடு மண்ணியா றதன்கட்
குளகன் வந்துழி யெழுந்திடு பூழிவான் குறுகி
யொளிரும் வெய்யவன் கதிர்தனை மறைத்தலா லோடி
வளைநெ டுங்கடன் மூழ்குவான் புக்கென மறைந்தான்.

(இ-ள்.) முருகக்கடவுள் அளவற்ற கொடிய பூதப்படைகளுடனே மண்ணிநதியினிடத்து எழுந்தருளியபொழுது மேலெழுந்த புழுதிகள் ஆகாயத்தை

யடைந்து ஒளிவிளங்குகின்ற சூரியனது கிரணங்களை மறைத்தமையினால், அச்சூரியனானவன் ஒடி வளைவாகிய பெரியகடலில் (அப்புழுதிகளைநீக்கும்பொருட்டு) ஸ்நானஞ்செய்யச்சென்ற தன்மையைப்போல மேற்கடலில் அஸ்தமித்தனன்.—எ-று.

குளகன் - முருகக்கடவுள். 'வளைநெடுங்கடல்' என்பதற்கு, சங்குகளையுடைய பெரிய கடல் எனப் பொருள்கூறினுமாம். (க)

மறைந்த காலையிற் றோன்றின மாலையு நிசியுங்
குறைந்த திங்கள்வந் துதித்தது தாரகை குறுகி
நிறைந்தெ ழுந்தவோர் மன்னவ னிறந்துழி நீங்கா
துறைந்த வொன்னலர் யாவருங் கிளர்ந்தவா றெப்ப.

(இ-ள்.) ஒரு சக்கரவர்த்தியானவன் இறந்த காலத்தில் அவனை நீங்காமல் மறைந்துவசித்திருந்த பகைவர்களனைவரும் வெளிப்பட்டு விளங்கிய தன்மையைப் போலச் சூரியன் அஸ்தமித்தபொழுது மாலைக்காலமும் இரவுந்தோன்றின; பிறைச்சந்திரன்வந்து உதித்தது; நக்ஷத்திரங்கள் நெருங்கி (ஆகாயமுழுவதும்) நிறைந்து தோன்றின.—எ-று.

குறைந்த திங்கள் - கலைகுறைந்த சந்திரன்; இளம்பிறை. (உ)

மிக்க தாருக வனத்தினை யொத்தது விசும்பிற்
றெக்க பேரிருண் மாதரொத் தனவுடுத் தோற்றஞ்
செக்க ரீசனை யொத்ததொண் போனகஞ் செறிந்த
கைக்க பாலம தொத்தது கதிரிளம் பிறையே.

(இ-ள்.) ஆகாயத்தில் நிறைந்திருந்த பெரிய இருளானது மிகுந்த தாருகாவனத்தை யொத்திருந்தது; நக்ஷத்திரத் தோற்றங்கள் அத்தாருகாவனமாதர்களை யொத்திருந்தன; செவ்வானமானது (பிக்ஷாடனவடிவங்கொண்டு சென்ற) சிவபெருமானை யொத்திருந்தது;கிரணங்களையுடைய இளம்பிறையானது ஒள்ளிய உணவு நிறைந்த (அவரது) திருக்கரத்திலுள்ள பிரமகபாலத்தை யொத்திருந்தது.—எ-று. (ங)

நிலவு லாவிய ககனமா நீடுபாற் கடலிற்
குலவு கின்றதோர் பொருளெலாங் கொண்டுகொண் டேகி
யுலகி னல்குவான் முயலெனு மொருமக னுய்ப்பச்
செலவு கொண்டதோர் தோணிபோன் றதுசிறு திங்கள்.

(இ-ள்.) இளம்பிறையானது (ஆகாயத்திலுதித்து வருதல் எதுபோலுமெனின்,) ஒளிவிளங்குகின்ற ஆகாயமாகிய பெரிய திருப்பாற்கடலிற் பொருந்தியுள்ள பொருள்களனைத்தையும் பலமுறை யெடுத்துக்கொண்டு சென்று உலகத்திற்கு உதவும்படி முயல் என்று கூறும் ஒரு மாலுமியானவன்செலுத்த அதனால் செல்கின்றதாகிய ஒரு மரக்கலத்தை யொத்திருந்தது.—எ-று.

ஆகாயத்தைப் பாற்கடலாகவும் இளம்பிறையைத் தோணியாகவும், அப்பிறையிலுள்ள முயலை அத்தோணியை யோட்டும் மாலுமியாகவும் உவமித்துக்கூறினார்.

ஆன காலையி லறுமுகப் புங்கவ னமல
மேனி சேரொளி நிலவொடு கங்குலை வீட்டிப்
பானு மேவரு மெல்லெனச் செய்தலிற் பரமாம்
வான நாயகன் கயிலைபோன் றிருந்ததவ் வையம்.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் ஆறு திருமுகங்களை யுடைய முருகக்கடவுளது நின்மலமாகிய திருமேனிப்பிரகாசமானது நிலவையும் இருளையுமொழித்து

ச்சூரியனுதயமாய் வருகின்ற பகற்காலம்போலச் செய்தமையினுல், அந்தப் பூமியானது பரம்பொருளாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுந் திருக்கயிலாயத்தை யொத்திருந்தது.—எ-று.

அவ்வையம் என்றது, மண்ணிநதிச் சார்பான பூமியை. (ரு)

வேறு.

வீசு பேரொளி விறற்குக னிவ்வா
றுசின் மண்ணியி னகன்கரை நண்ண
வீச னுமவனை யெய்துபு வேதாக்
கேச வன்முதல்வ ரின்ன கிளப்பார்.

(இ-ள்.) மிக்க ஒளி வீசுகின்ற வலிய குமாரக்கடவுள் இவ்விதமாகக் குற்றமற்ற பெரிய மண்ணிநதிக்கரையைச் சார்ந்த பூமியையடைந்தருளவும், பிரமன் திருமால் முதலிய தேவர்கள் சர்வேசுவரராகிய அம்முருகக்கடவுளையடைந்து இவ்வாறு விண்ணப்பஞ் செய்வார்கள்.—எ-று. (சு)

ஆண்ட விந்நதி யகன்கரை யெல்லா
மாண்ட வாலுக மலிந்தினி தாகு
நீண்ட சோலைக ணிரந்தன தோன்றி
யீண்டி யீண்டையி னிறுத்துள வன்றே.

(இ-ள்.) ஆழமாகிய இந்த மண்ணிநதியின் பெரிய கரையிடங்களனைத்தும் சிறந்த வெண்மணல்கள் நிறைந்து இனிமையாகிய நீண்ட சோலைகள் மிகுந்துள்ளன; காந்தள்மலர்கள் இங்கு மிகுதியாக நெருங்கியுள்ளன.—எ-று.

தோன்றி - காந்தள். (எ)

பிறைபு னைந்திடு பெருந்தகை தான
மிறுதி யில்லன விருந்தன வற்றா
னறிய தாகுமிந் நதிக்கரை தன்னி
லிறைவ விவ்விடை யிருந்தரு ளென்றார்.

(இ-ள்.) சந்திரசேகரராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஆலயங்கள் அளவில்லனவாக விருக்கின்றன; அக்காரணத்தினுல் நன்மைமிகுந்துள்ளதாகிய இம் மண்ணிநதிக்கரையில், எம்பெருமானே! தேவரீர் எழுந்தருளியிருத்தல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.—எ-று. (அ)

வனையு மேனியயன் மான்முதல் வானோ
ரினைய செப்புதலும் யாரினு மேலோன்
வினைய மெத்தவுள விச்சுவ கன்மப்
புனைவ னுக்கிது புகன்றிடு கின்றான்.

(இ-ள்.) அலங்கரிக்கப்பட்ட தேகத்தினையுடைய பிரமன் திருமால் முதலிய தேவர்கள் இவ்வாறு விண்ணப்பஞ்செய்துகொள்ளவும், யாவரினுஞ் சிறந்தவராகிய முருகக்கடவுள் சிற்பத்தொழிலில் மிகுதியாகத் தேர்ந்துள்ள விசுவகன்மனென்னுந் தேவதச்சனைப்பார்த்து இவ்வார்த்தைகளை யருளிச்செய்கின்றார்.—எ-று. (கூ)

மெய்வி தித்தொழிலில் வேத னிகர்க்குங்
கைவ லோயொரு கணம்படு முன்ன
ரிவ்வி டத்தினி லெமக்கொரு மூதூர்
செவ்வி திற்புனைவு செய்குதி யென்றான்.

(இ-ள்.) மெய்ம்மையாகிய சிருஷ்டித்தொழிலில் பிரமனையொத்திருக்கின்ற கைதேர்ந்த விசுவகன்மனே! ஒரு கணப்பொழுதிற்குள்ளே யாம் இவ்விடத்தில் தங்குவதற்கு மிக்கசிறப்பினையுடைய ஒரு நகரத்தை அழகாகப் படைக்கக்கடவை யென்று கட்டளையிட்டருளினர்.—எ-று. (௧0)

என்ன லோடுமவ் விடந்தனி லெங்கோன்
றுன்னு தொல்படை சுராதிப ரோடு
மன்ன வங்கணொரு மாநகர் நெஞ்சத்
துன்னி நல்கலு முவந்தனர் யாரும்.

(இ-ள்.) என்று அருளிச்செய்யவும், அம்மண்ணியாற்றங்கரையில் எமது முதல்வராகிய முருகக்கடவுள் நிலைபெற்ற பழைய சேனைகள் இந்திராதிதேவர்கள் முதலியவர்களுடன் வீற்றிருந்தருளுதற்கு அவ்விடத்தில் ஒரு பெரியநகரத்தை மனதிற் கருதிச் சிருஷ்டிக்கவும் யாவருஞ் சந்தோஷித்தார்கள்.—எ-று.

சூரபன்மனுதியர்களால் சிறிதுஞ் சிதைவுபடாமல் வெற்றிபெறக்கூடியதாகலின், 'துன்னுதொல்படை' என்று கூறினர். (௧௧)

அப்பு ரத்தையறி வன்கடி தாற்றி
முப்பு ரத்தையடு முன்னவ னல்கு
மெய்ப்பு ரத்தவனை நோக்குபு மேலோ
யிப்பு ரத்திடை யெழுந்தரு ளென்றான்.

(இ-ள்.) விசுவகன்மன் அந்நகரத்தை விரைவாகப் படைத்து, திரிபுரதகனராகிய சிவபெருமான் பெற்றருளிய மெய்ம்மையாகிய திருமேனியையுடைய முருகக்கடவுளைநோக்கி, எமதாண்டவரே! தேவரீர் இந்நகரத்தில் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்.—எ-று.

முப்புரம்-பொன் வெள்ளி-இரும்புகளினாலாகிய மூன்று புரம். (௧௨)

என்ற லோடுமிர தத்தி னிழிந்தே
துன்றும் வானவர் சுராதிப ரானோர்
சென்ற பூதர்கள் செறிந்துட னேக
மன்றன் மாநகரில் வள்ளல் புகுந்தான்.

(இ-ள்.) என்றிவ்வாறு பிரார்த்திக்கவும், முருகக்கடவுள் இரதத்தினின்று மிறங்கி நிலைபெற்ற தேவர்களும் இந்திராதியர்களும் தொடர்ந்துசென்ற பூதர்களும் தம்முடன் நெருங்கிச் சூழ்ந்துவர, மங்கலகரம் பொருந்திய பெரிய நகரத்தில் வந்து சேர்ந்தருளினர்.—எ-று.

மன்றல் என்பதற்கு, நெடுந்தெருக்களையுடைய எனினுமாம். (௧௩)

செல்லு மாமுகில் செறிந்திடு காப்பின்
மல்லன் மாநகர் வளந்தனை நோக்கி
யெல்லை யில்லறிவன் யாமுறை தற்கு
நல்ல மாநகரி தென்று நவின்றான்.

(இ-ள்.) அளவற்ற மெய்யறிவினராகிய முருகக்கடவுள் (ஆகாயத்தில்) செல்லுகின்ற மேகங்கள் நெருங்கப்பெற்ற மதில்சூழ்ந்த சிறப்புப்பொருந்திய பெரிய நகரத்தின் வளப்பத்தைப் பார்த்தருளி, இது நாம் வசிப்பதற்கு நல்ல நகரமாகுமென்று அருளிச்செய்தனர்.—எ-று.

பேரறிவினராகலின், 'எல்லையில்லறிவன்' என்று கூறினர். (௧௪)

வீர வேளிது விளம்புத லோடு
மாரும் வானவர்க ளம்மொழி கேளா
வேறொ லாமுடைய விந்நகர் சேய்ஞ
லூர தென்றுபெய ரோதின ரன்றே.

(இ-ள்.) பராக்கிரமத்தினையுடைய முருகக்கடவுள் இவ்வாறருளிச்செய்ய வும், தேவர்களனைவரும் அவ்வார்த்தையைக் கேட்டு அழகனைத்தும் நிரம்பப் பெற்று ள்ள இந்த நகரத்திற்குச் சேய்ஞலூரென்று பெயர் கூறினார்கள்.—எ-று.

சேய்ஞலூர் என்பதற்கு, முருகக்கடவுளால் விரும்பப்பட்ட நல்ல ஊர் என் பது பொருள். சேய்-முருகக்கடவுள். சேய்நலூர் என்பது போலியாகவந்தது. (கரு)

ஆய காலையணி கப்படை சூழ
வேய பின்னிளைஞ ரிந்திரன் வேதா
மாய னேனையர் வழுத்திட வாண்டைக்
கோயில் செல்லுபு குமார னிருந்தான்.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் முருகக்கடவுள் தம்மைச் சேனைகள் சூழும்படிச் சென்றருளியபின்பு, தம்பியர்களாகிய நவவீரர்களும் இந்திரனும் பிரம னும் திருமாலும் மற்றையர்களுந் துதிக்கும்படி அங்குள்ள ஆலயத்தில் சென்று வீற் றிருந்தருளினார்.—எ-று.

அனிகப்படை - இருபெயரொட்டு. (கசு)

வேறு.

பன்னிரு புயத்தொகை படைத்தகும ரேசன்
றன்னருள டைந்துவிதி தன்னைமுத லானோ
ரன்னவன் விடுத்திட வகன்றுபுடை யேகித்
தொன்னிலை யிருக்கைக டொறுந்தொறு மடைந்தார்.

(இ-ள்.) பிரமன் முதலிய தேவர்கள் பன்னிரண்டு திருப்புயங்களையுடைய முருகக்கடவுளது திருவருளைப்பெற்று, அவ் வெமது முருகப்பெருமான் விடை கொடுத்தனுப்ப அவ்விடத்தினின்று நீங்கி வெளியேவந்து பழைய முறைமைப்படித் தங்கள்தங்களுக்கமைத்துள்ள இடங்களில் அடைந்தார்கள்.—எ-று.

தன்னை என்பது சாரியை. அவரவர்களது உயர்வுதாழ்வுகளுக்குத் தக்கபடி யே யமைக்கப்பட்டதாகலின், 'தொன்னிலையிருக்கைகள்' என்றார். (கஎ)

தானைக டமக்குரிய சாரத ரிலக்க
ரேனையர் வழுத்தவெமை யாளுடைய வள்ளல்
கோனக ரிருக்கவிடை கொண்டுசெல் குழாத்துள்
வானவர் தமக்கிறை செயற்கையை வகுப்பாம்.

(இ-ள்.) சேனைகளுக்குரிய இரண்டாயிரம்வெள்ளம் பூதர்களும், இலக்ஷம் வீரர்களும், மற்றையர்களுந் துதிக்கும்படி எம்மையடிமையாகவுடைய முருகக்கட வுள் சிறந்த திருக்கோயிலுள் வீற்றிருந்தருளுதலும், அவ் வெம்பெருமானிடத்து விடைபெற்றுச் செல்லுகின்ற கூட்டங்களில் தேவர்கள் தலைவனாகிய இந்திரனது தன்மையை இனிக் கூறுவோம்.—எ-று.

ஏனையர் என்றது நவவீரர் முதலியோர்களை. (கஅ)

வேறு.

தாங்கரும் பெருந்திறற் றூரகாசுரன்
பாங்கமர் குன்றொடும் பட்ட பான்மையா
லாங்கனம் புரந்தர னவலம் யாவது
நீங்கின னுவகையா னிறைந்த நெஞ்சினன்.

(இ-ள்.) அடைதற்கரிய மிக்க வல்லமையினையுடைய தாரகாசுரன் அருகிலிருந்த கிரவுஞ்சமலையுடன் அழிந்ததன்மையினால் அப்பொழுது இந்திரனானவன் மகிழ்ச்சியினால் நிறைந்த மனத்தினையுடையவனாய்த் தனது துன்பங்களனைத்தும் ஒழிந்திருந்தனன்.—எ-று.

சிவபெருமானது திருவருளால் பெற்ற திறலாகலின், 'தாங்கரும் பெருந்திறல்' என்று கூறினார். உவகையால் நிறைந்த நெஞ்சினனாய் நீங்கினன் எனக் கூட்டுக. (கக)

விருந்திய லமிர்தினை விழுமமில்வழி
யருந்தின னெனவாகந் தண்ணெனப்
புரந்தர னிருந்துழிப் புக்குத் தாழ்ந்ததால்
வரந்திகழ் சிரபுர வனத்திற் றெய்வதம்.

(இ-ள்.) புதிதாகப் பொருந்திய சிறந்த அமுதத்தைக் கஷ்டமில்லாத வழியில் உண்டவனைப்போல இந்திரன் தேகங்குளிர்ந்து சந்தோஷித்திருக்கின்ற சமையத்தில், சிறப்புமிகுந்த சீகாழிப்பதியின்வனத்திலுள்ள வனதேவதை (அங்கு அவ்விந்திரனை) அடைந்து நமஸ்கரித்தது.—எ-று.

விருந்து - புதுமை. திருப்பாற்கடலை வருந்திக் கடைந்து அரிதிற் பெற்றுண்ணுமாறு போன்றின்றி எளிதிற் கிடைப்பின் அதனாலடையும் பெருங்களிப்பினனைப்போல விருந்தன னென்பார், 'ஆகந்தண்ணெனப் புரந்தர னிருந்துழி' என்று கூறினார். (உ0)

முகில்பொதி விண்ணக முதல்வன் பூண்களு
நகில்பொதி சாந்துடை நங்கை பூண்களுந்
துகில்பொதி கிழியொடு தொல்லை வைத்தவை
யகில்பொதி காட்டகத் தடிக ளுய்த்ததே.

(இ-ள்.) மேகங்கள் பொருந்திய சொர்க்காதிபதியாகிய இந்திரனது ஆபரணங்களும், கலவைச்சாந்தணிந்த ஸ்தனங்களையுடைய இந்திராணியினது ஆபரணங்களும் வஸ்திரத்திற்கட்டிய முடிப்பினுடனே முன்னாளில் வைக்கப்பட்டவைகளை அகில்விருக்ஷங்கள் பொருந்திய காட்டின்கண்ணுள்ள வனதேவதையானது கொண்டுவந்து சேர்த்தது.—எ-று.

நகில்பொதி சாந்துடை என்பது, சாந்துபொதிநகிலுடை எனமாற்றிப் பொருள் கூறப்பட்டது. (உக)

முந்துற வுய்த்தபின் முதல்வ கேட்டிநீ
பைந்தொடி யணங்கொடு பரமன் காழியில்
வந்தனை நோற்றநாள் வைத்த பூணிது
தந்தனன் கொள்கெனச் சாற்றி நின்றதே.

(இ-ள்.) முன்னே கொண்டுவந்து வைத்தபின்பு, முதல்வரோ! நீர் கேட்பீராக; சிவபெருமான் வீற்றிருந்தருளுஞ் சீகாழிப்பதியில் பசிய வளையலையணிந்த இந்திராணியுடனே அடைந்து நீர் தவஞ்செய்துகொண்டிருந்த காலத்தில் (என்னிடத்

தில் அடைக்கலமாக) வைத்த ஆபரணமிதுவாகும்; இதனைக் கொடுத்தேன்; நீர் பெற்றுக் கொள்வீராக வென்று கூறி நின்றது.—எ-று.

வந்தனை - முற்றெச்சம். கொள்க்வென என்பது, கொள்கென எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது. (உஉ)

நிற்புறு கின்றுழி நேமி யண்ணற்கு
முற்படு கின்றவன் முளரிப் பண்ணவன்
கிற்புறு செய்யபூண் கிழியை நோக்கினன்
கற்புடை யாள்விடுந் தூதின் காட்சிபோல்.

(இ-ள்.) அவ்வாறு கூறி நின்றபொழுது, சக்கரத்தினை யேந்திய திருமாலின் அவதாரமாகிய உபேந்திரனுக்குத் தமையனாகிய இந்திரனானவன் வனதேவதை (கொடுத்த) முடியப்பட்டுள்ள செவ்விய ஆபரண முடிப்பைக் கற்பினையுடைய இந்திராணியினால் அனுப்பப்பட்ட தூதினது காட்சியைப்போலப் பார்த்தனன்.—எ-று.

திருமால் இந்திரனுக்குத் தம்பியாக உபேந்திரனென்னும் பெயரோடு வருதலின், 'நேமியண்ணற்கு முற்படுகின்றவன்' என்று கூறினார். முளரிப்பண்ணவன்- வனத்திலுள்ள தெய்வம். முளரி - காடு. கிற்புறுதல் - கட்டப்படுதல். செய்ய பூண்- திருத்தமாகச் செய்யப்பட்டுள்ள ஆபரணம். (உங)

எரிமணி யணிகல னிட்ட பூந்துகில்
விரிதரு பொதியினை விரலி னீக்கினன்
திருமக ளமர்தரு தெய்வத் தாமரை
வரியளி சூழ்வுற மலர்ந்த தென்னவே.

(இ-ள்.) திருமகள் வாழ்கின்ற தெய்வத்தன்மை பொருந்திய தாமரைமலரானது வரிகளையுடைய வண்டுகள் மொய்த்தலால் மலர்ந்த தன்மையைப்போல, ஒளி விளங்குகின்ற இரத்தினாபரணங்கள் வைக்கப்பட்டுள்ள வஸ்திரமவிழ்ந்த முடிப்பினைத் தனது விரலினால்நீக்கினன்.—எ-று.

கலன் - போலி. (உச)

துண்ணெனக் கிழியதன் றொடர்பு நீக்கலு
மொண்ணுதற் றுணைவிபூ ணும்பர் தோன்றலுங்
கண்ணுறக் கண்டவட் கருதி னனரோ
வெண்ணுதற் கரியதோ ரின்பந் துய்த்துளான்.

(இ-ள்.) விரைவாக அம்முடிப்பின் கட்டினை யவிழ்த்தன வுடனே ஒளி பொருந்திய நெற்றியினையுடைய இந்திராணியினது ஆபரணங்கள் மேலே தோன்றவும், நினைத்தற்கரிதாகிய அவளது சுகத்தையனுபவித்தவனாகிய இந்திரன் (அவ்வாபரணங்களைத்) தனது கண்களால் பொருந்தப்பார்த்து அவ்விந்திராணியைத் தன்மனத்தில் நினைத்தனன்.—எ-று.

துண்ணென என்பது, விரைவுக் குறிப்பு. கிழியதன் என்பதில், அது பகுதிப்பொருள் விகுதி. அரோ - அசைநிலை. உரு)

பூட்கையின் முலையுடைப் பொன்னங் கொம்பின்மேல்
வேட்கைய தாயினன் மிகவும் பற்பகல்
வாட்கையின் றிருந்தது மனத்தின் முன்னினன்
காட்கொளுங் காமநோய்க் கவலை யெய்தினன்.

(இ-ள்.) யானைக்கோடுபோலும் ஸ்தனங்களையுடைய அழகிய பொற்கொம்புபோன்ற இந்திராணியின்மேல் மிகுதியும் விருப்பமுற்றனன்; அநேககாலம் அவளுடன் கூடி வாழ்தலில்லாதிருந்த தன்மையை மனத்தில் நினைத்தனன் ; அதனால் மிகுதியாகப்பொருந்திய காமநோயினால் மனவருத்தமடைந்தனன்.—எ-று.

பூட்கை-யானை; ஈண்டு ஆகுபெயராய் அதன் கோடுக்காயிற்று. வாழ்க்கை-காழ்க்கொளும் என்பன, வாட்கை-காட்கொளும் என்றாயின. காழ்-வயிரம்; ஈண்டு மிகுதியென்னும் பொருளில் வந்தது. (உசு)

நெய்ம்மலி தழலென நீடிக் காமநோ
யிம்மென மிசைக்கொள விரங்கி யேங்கினன்
விம்மினன் வெதும்பினன் வெய்து யிர்த்தனன்
மைம்மலி சிந்தையன் மருட்கை யெய்தினான்.

(இ-ள்.) மயக்கம் பொருந்திய மனத்தினையுடைய இந்திரன் காமநோயானது நெய்விட்டெரிக்கு நெருப்பைப்போல அதிகரித்து விரைந்து மேற்கொள்ளவும், அதனால் இரங்கி ஏக்கங்கொண்டனன்; விம்மினான்; வெதும்பினான்; பெருமூச்செறிந்தான்; மருட்சியடைந்தான்.—எ-று. (உஎ)

பசையற வுலர்வுறு பராரைப் பிண்டியிற்
றசைமலி முழுதுட றளர்ந்து வாடினா
னிசைவரு கைவலோ னெழுது பாவைபோ
லசைவில னிருந்தன னணங்குற் றென்னவே.

(இ-ள்.) ஈரம் வற்றி யுலர்ந்த பருத்த அடியினையுடைய அசோகமரத்தைப் போலத் தசை நிறைந்துள்ள தனது சரீரமுழுவதுந் தளர்ச்சியுற்று வாட்டமடைந்தனன்; புகழமைந்த கைதேர்ந்தவனாகிய சித்திரக்காரனொருவ னெழுதிய சித்திரப் பாவையைப்போலவும் தெய்வமருள் கொண்டவனைப்போலவும் அசைவற்றவனாயிருந்தனன்.—எ-று. (உஅ)

முருந்துறழெயிற்றினாண் முலைத்த டங்களிற்
பொருந்துற மூழ்கியே புணர்ந்து வைகலு
மிருந்திடு கின்றவ னிடர்ப்பட் டின்னணம்
பிரிந்திடின் வருந்துதல் பேசல் வேண்டுமோ.

(இ-ள்.) மயிலிறகினடி போலும் பற்களையுடைய இந்திராணியினது ஸ்தனங்களாகிய தடாகத்தில் பொருந்த முழுகிக்கலந்து சதாகாலமும் அனுபவித்திருந்த இந்திரன் அவ்விந்திராணி பிரிவாளாயின் இவ்வாறு துன்பமுற்று வருந்துதலைச் சொல்லவேண்டுமோ?—எ-று.

முருந்து - மயிலிறகினடி. (உகூ)

மெய்ந்நனி யலசுற விரக மீக்கொள
வின்னணஞ் சசிபொருட் டினையு நீர்மையோன்
பொன்னணி தன்னையும் புனைதல் வேண்டலன்
றன்னுழை யவர்தமை நோக்கிச் சாற்றுவான்.

(இ-ள்.) தேகம் மிகவும் வருந்தவும், காமநோய் அதிகரிக்கவும் இவ்வாறு இந்திராணியின் நிமித்தம் வருந்துந்தன்மையினையுடைய இந்திரன் பொன்னாபரணங்களையும் அணிய விரும்பாதவனாய்த் தன்னருகிலுள்ள பரிசனர்களைப் பார்த்துக் கூறுகின்றான்.—எ-று.

வேண்டலன் - முற்றெச்சம். (௩0)

இக்கிழி யொன்றினை யேந்தி முந்துபோற்
சிக்குற வீக்கியே சேமித் துங்கள்பால்
வைக்குதி ரென்றலும் வணங்கி நன்றெனு
வக்கண மனையவ ரதனை யாற்றினர்.

(இ-ள்.) இந்த ஒரு முடிப்பினையெடுத்து முன்போல இறுகக்கட்டிப் பத்திரப்படுத்தி உங்களிடத்தில் வைத்திருங்களென்று கூறியவுடன், அவர்கள் அவனை வணங்கி அவ்வாறே நல்லதென்று அப்பொழுதே அதனைச்செய்தார்கள்.—எ-று.

சேமித்தல் - காவல் செய்தல். (ருக)

அன்னதோ ரளவையி லடவித் தேவினைக்
கொன்னுனை வச்சிரக் குரிசி னேக்குரு
நின்னுழை யளித்திட நீசெல் கென்றலு
மன்னவ நன்றென வணங்கிப் போயதே.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் அச்சந்தருகின்ற கூரிய வச்சிராயுதத்தையேந்திய இந்திரன் வனதேவதையைப் பார்த்து, நீ உனதிடத்தைக் காவல்செய்யும்பொருட்டுச் செல்லக்கடவையென்று கூறுதலும், உடனே அவ்வனதேவதை அரசனே ! நல்லதென்று வணங்கிச் சென்றது.—எ-று.

கொன்னுனை வச்சிரம் என்பதற்கு, கொலை செய்யத்தக்க கூர்மையினையுடைய வச்சிராயுதம் எனப்பொருள் கூறினுமாம். (ருஉ)

போந்திடு காலையிற் புலோம சைப்பெய
ரேந்திழை காமநோ யெரியின் றுப்பினுற்
காந்திய வுளத்தினன் கனலும் யாக்கைய
னேய்ந்தனன் றட்பமே யுளம்வைத் தேகினன்.

(இ-ள்.) அவ்வனதேவதை சென்றவுடனே இந்திராணியின் மீதுண்டாகிய விரகதாபமென்னுந் தீயின் வன்மையினால் எரிகின்ற மனத்தினனும் வெப்பமிகுந்த தேகத்தினனுமாகிய இந்திரன் சோர்வடைந்து சீதளத்தை விரும்பி அவ்விடத்தினின்றுஞ் சென்றனன்.—எ-று.

ஏந்திழை - அன்மொழித்தொகை. துப்பு - வலிமை. (ருரு)

ஒளியிழை யுழத்திய ரொளிமென் கூந்தலி
னளியின நறவுதுய்த் தலரிற் கண்படு
தளியிருந் தண்டலை ஞாங்கர் பொங்கிய
புளினமொன் றதன்மிசை புக்கு வைகினன்.

(இ-ள்.) ஒளிவிளங்குகின்ற ஆபரணங்களை யணிந்துள்ள உழத்தியர்களது பிரகாசிக்கின்ற மெல்லிய கூந்தலினிடத்து வண்டுக்கூட்டங்கள் தேனையுண்டு மலர்களில் தூங்குகின்ற குளிர்ந்த பெரிய சோலையின் பக்கத்தில் உயர்ந்துள்ள ஒரு மணற்குன்றின்மேல் சென்றிருந்தனன்.—எ-று.

உழத்தியர் - மருதநில மாதர்கள். புளினம் - மணற்குன்று. (ருச)

தீந்தழல் வெங்கதிர் திளைத்த வாறென
நீந்தருங் கங்குலி னிலவுத் தீப்படப்
பூந்துணர் பரவிய புளினம் பொன்னகர்
வேந்தனுக் காற்றவும் வெம்மை செய்ததே.

(இ-ள்.) உஷ்ணமாகிய கிரணத்தினையுடைய சூரியனது ஒளி பட்டாற்போல, கடத்தற்கரிய அவ்விராத்திரியில் சந்திரகிரணங்களாகிய தீயானது படுதலால், பூங்கொத்துக்கள் பரவிக்கிடக்கின்ற அம்மணற் குன்றானது பொன்னுலகத்தலைவனாகியஇந்திரனுக்கு மிகவும் வெப்பத்தையுண்டாக்கியது.—எ-று.

'தீந்தழல் வெங்கதிர் திளைத்தவாறெனு' என்பதற்கு, கொடிய அக்கினியில் சூரியன் மூழ்கியதைப்போன்றுள்ள எனப்பொருள் கூறலுமொன்று. (ருடு)

சூற்புயன் மாறிய சுரத்திற் றொக்குறு
மாற்பரல் வரைபுரை மணலின் றிட்டையின்
பாற்படு கின்றனன் பனிம திக்கதிர்
மேற்பட வசைந்தனன் வினையம் வேறிலான்.

(இ-ள்.) சூல் கொண்ட மேகங்கள் மழைபெய்தலில்லாத பாலைவனத்திற் பொருந்தி யிருக்கின்ற பெரிய பருக்கைக்கற்களாலாகிய மலையினையொத்த அம்மணற்குன்றின்மே லிருக்கின்ற இந்திரன் குளிர்ச்சிபொருந்திய சந்திரகிரணங்கள் தன்மீது பட்டவுடன் அதனை நீக்கிக்கொள்ளத்தக்க செயலறியாதவனாய்நடுக்கங்கொண்டிருந்தான்.—எ-று.

வினையம் வேறிலானாய் அசைந்தன னென்க. (ருசு)

திங்களும் வெங்கனல் சிதறிக் காய்ந்திடத்
துங்கவேள் படையுடன் பிறவுஞ் சூழ்ந்திட
மங்கிய வுணர்ச்சியன் மயலின் வன்மையான்
புங்கவர் மன்னவன் புலம்ப லெய்தினன்.

(இ-ள்.) தேவேந்திரனானவன் சந்திரனும் கொடிய கிரணத்தை வீசியெரிக்கவும், உயர்ந்த மன்மத பாணங்களுடன் மற்றவைகளுஞ் சுற்றிக் கொள்ளவும் புத்திமயங்கினவனாய் விரக தாபத்தின் கொடுமையால் புலம்பத்தொடங்கினன்.—எ-று.

மட்டமர் புரிகுழன் மடந்தை யென்னுட
லிட்டுயிர் வவ்வின ளிருந்த யாக்கையுஞ்
சுட்டிடு கிற்றியாற் றூய திங்கணீ
பட்டவர் தம்மையும் படுப்ப ரோவென்பான்.

(இ-ள்.) தூய்மையாகிய சந்திரனே! தேன்பொருந்திய முறுக்காகிய கூந்தலையுடைய இந்திராணியானவள் என் உடலைவிட்டு உயிரைக் கவர்ந்தனள்; நீ, அவ்வுயிரின்றிக்கிடந்த உடலையுஞ் சுடுகின்றனை; இஃதென்னை? செத்தவர்களையுங் கொல்லுவார்களோ? என்று கூறுவான்.—எ-று.

இறந்தவர்களைப் பின்னுமழித்தல் உலகிலில்லை. அங்ஙனமாக நீ என்னை வருத்துதலுனக்குத் தருமமன்றென்று கூறின னென்பார், 'பட்டவர் தம்மையும் படுப்பரோ வென்பான்' என்று கூறினார்.

இதுமுதல் ஆறுபாடல்கள் சந்திரதூஷணம். (ருஎ)

எஞ்சலி லமுதினை யார்க்கு நல்குநீ
நஞ்சினை புகுத்திநண் ணலரிற் றப்பியே
யுஞ்சன னிவனுயி ரொழிப்பன் யானெனா
வஞ்சினம் பிடித்தியோ மதிய மேயென்பான்.

(இ-ள்.) சந்திரனே! குறையாத அமுதத்தை யாவர்களுக்குங் கொடுக்கின்ற நீ விஷத்தைச் சிந்துகின்றாய்; இவன் பகைவர்களிடத்தினின்றுந் தப்பிப்பிழை

த்திருக்கின்றான், ஆதலால் இவனது உயிரை நான் வாங்குகின்றேனென்று நீ சபதஞ் செய்துகொண்டனையோ? என்று கூறுவான்.—எ-று.

தேவர்களுக்கு அமுதத்தைக் கொடுக்கின்ற நீ, என்னை அத்தேவர்களினின்றும் வேறு பிரித்து விஷத்தைத்தருகின்றனை; இவன் பகைவர்களின்றுந் தப்பிப் பிழைத்திருக்கின்றன னாகலான் இவனைக் கொல்லவேண்டுமெனச் சபதங்கொண்டனை போலுமெனக் கூறினனென்க. (௩௯)

நிற்றலும் வருதிநீ நீடு தண்ணளி
யுற்றிட லன்றியே யொறுத்தி லாய்மதி
யற்றமின் றுன்னிவந் தடுதி யாரிடைக்
கற்றனை யித்திறங் கள்வ நீயென்பான்.

(இ-ள்.) சந்திரனே! நீ தினந்தோறும் வருகின்றனை (அப்படி வரும்போதெல்லாம்) மிகுந்த குளிர்ச்சிபொருந்தி யிருப்பதன்றி நீ வருத்தினையில்லை; இன்று சமயங்கருதி வந்து கொல்லுகின்றனை; கள்வனே! நீ இத்தன்மையை யாவரிடத்திற்கற்றுக்கொண்டனை யென்று கூறுவான்.—எ-று.

நாள்தோறுந் தண்ணளித்தருகின்ற நீ சமையங் கருதிவந்து வருத்துகின்றனை; இஃதுன் சுபாவ குணமன்றாகலான் யாவரிடத்திற் கற்றுக்கொண்டனை யென்று கூறி வருந்தின னென்க. (௪0)

பெண்ணிய லாரிடைப் பிறங்கு காமமு
முண்ணிகழ் விரகமு முனக்கு முண்டதை
யெண்ணலை யழல்சொரிந் தென்னைக் காய்தியாற்
றண்ணளி மதிக்கிது தகுவ தோவென்பான்.

(இ-ள்.) மாதர்களால் தோன்றுகின்ற காமமும், உள்ளே யுண்டாகின்ற விரகமும் உன்னிடத்திலுமுண்டு; நீ அதனைநினைந்தாயில்லை; (கிரணங்களாகிய)நெருப்பைச் சிந்தி என்னைச் சுடுகின்றனை; குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனுக்கு இது தகுதியோ? என்று கூறுவான்.—எ-று.

பெண்ணியலார் - மாதர்களிலக்கணத்திற் சிறிதுங் குறைவில்லாதவர்கள். உண்ணிகழ் விரகம்-மனத்தில் தோன்றுகின்ற விரகம். (௪௧)

அரியநற் றவம்பல வாற்றி யின்றுகா
றுரியதோ ரென்பல தூனில் யாக்கையேன்
பரிவுறச் சுடுவதிற் பயனென் பாரிலிவ்
வொருவனை விடுகென வுரைத்து வேண்டுவான்.

(இ-ள்.) அநேகம் அருமையாகிய நல்லதவங்களை இதுவரையிலுஞ் செய்து (உடம்பிற்கு) உரிய எலும்பையன்றித் தசையில்லா திருக்கின்ற என்னைவருந்தும்படி சுடுவதனால் யாது பயன்? ஆதலால், இந்நிலவுலகத்தில் இவ்வொருவனை விடுவாயாக வென்று கூறி வேண்டிக்கொள்ளுவான்.—எ-று.

விடுகென என்பது, தொகுத்தல் விகாரம். (௪௨)

அண்டமே னின்றனை யவனி வானக
மெண்டிசை யெங்கணு மெளிது காண்டியா
லொண்டொடி யொருத்தியென் னுயிர்கொண் டுற்றனள்
கண்டதுண் டோமதிக் கடவு ணீயென்பான்.

(இ-ள்.) சந்திரனே! நீ ஆகாயத்தினிடத்தில் நிற்கின்றனே, ஆதலால் உலகம் ஆகாயம் அஷ்டதிக்குகள் ஆகிய எவ்விடங்களையும் சுலபமாகப் பார்க்கின்றாய்; ஒள்ளிய வளையலையணிந்த ஒரு பெண்ணானவள் எனதுயிரைக்கவர்ந்து சென்றனள், நீ அவளைப்பார்த்தனையோ? என்றுகூறுவான்.—எ-று. (சங)

யான்முதற் றோன்றின னெனது பின்னவன்
கான்முளை யாகிய காம நீபல
பான்மையி னெனையடல் பழிய தேயலான்
மேன்மைய தாகுமோ விளம்பு வாயென்பான்.

(இ-ள்.) மன்மதனே! யான் முன்னே பிறந்தேன், என்பின் பிறந்த தம்பியாகிய உபேந்திரனது புதல்வனாகவுள்ள நீ பல விதங்களாலும் என்னைக் கொல்லுதல் உனக்குப் பழியேயன்றி மேன்மையாகுமோ? சொல்லக்கடவை யென்று கூறுவான்.

இதுமுத விரண்டுபாடல்கள் சந்திர தூஷணம். (சச)

பரேருள வுனதுமெய் படுத்த கண்ணுதன்
ஞரேலென வுதவிய நிலம னீண்டுள
ஞரேகண மொடுங்குமு னுயிரும் வாங்குமாற்
பொரேலினி மதனநீ போகு போகென்பான்.

(இ-ள்.) மிகுந்த அழகினையுடைய உனது தேகத்தை யெரித்தருளிய சிவபெருமான் விரைந்து பெற்ற திருப்புதல்வராகிய முருகக்கடவுள் இங்கெழுந்தருளியிருக்கின்றார், ஒரு க்ஷணநேரத்துக்குள்ளே உனதுயிரையு மழித்தருளுவார்; மன்மதனே! இனி என்னோடெதிர்த்துப் போர்செய்யாதே போகக்கடவை போகக்கடவை யென்று கூறுவான்.—எ-று.

மன்மதனே! நீ என்னை வருத்துவையாயின் முன்பு உன்னை யெரித்தருளிய சிவபெருமானது திருப்புதல்வராகிய முருகக்கடவுள் இங்கிருக்கின்றனர், அவரிப்போது உன்னை யழிப்பாராதலால் நீ என்னை வருத்தாதே யென்று கூறினனென்க. (சரு)

வானுழை திரிதரு மதியம் போக்கிய
தீநுழை புண்ணில்வேல் செறித்த தென்னவேள்
கோனுழை கின்றன வதனிற் கூடளி
யீநுழை கின்றன போலு மென்கின்றான்.

(இ-ள்.) ஆகாயத்திலுலாவுகின்ற சந்திரனால் விடப்பட்ட (கிரணங்களாகிய) தீப்பட்ட புண்ணில் வேலைநுழைத்தாற்போல மன்மத பாணங்கள் புகுகின்றன; அவ்வம்பிற் பொருந்தியுள்ள வண்டுகள் (அப்புண்ணில்) ஈ நுழைவதை யொக்கும் என்று கூறுவான்.—எ-று. (சசா)

வன்றிறற் கொலைஞர்கண் மானிற் கூவிமா
னென்றறக் கவர்தல்போ லுயிரென் காலினை
யின்றது போலவந் துள்புக் கீர்த்ததாற்
றென்றலுக் கியான்செய்த தீதுண் டோவென்பான்.

(இ-ள்.) மிக்க வல்லமையினையுடைய கொலையாளிகள் மானைப்போலக் கூச்சலிட்டு எல்லாமான்களையும் பிடித்துக்கொள்வதுபோல, பிராணனென்னும் வாயுவை இன்று அக்காற்றைப்போலவே வந்து உள்ளே நுழைந்து இழுத்தமையினால், தென்றலுக்கு யான் யாதேனுந் தீங்குசெய்ததுண்டோ? என்று கூறுவான்—எ-று.

இச்செய்யுள் தென்றலைத் தூஷித்தது. (சஎ)

வாகுலப் பரியதோர் மாதர் மாலெனு
மாகுலப் புணரியு ளழுந்தி னோரையும்
வீகுலத் தொகையினுள் விட்டி சைத்திடுங்
கோகிலப் பறவையுங் கொல்லு மோவென்பான்.

(இ-ள்.) அழகு நீங்குதலில்லாததாகிய மாதர்களது ஆசையென்கின்ற துன்பக்கடலில் வருந்துகின்றவர்களையும் பறவைக்கூட்டத்தில் வேருகவெடுத்துச் சொல்லப்பட்ட குயிலும் கொல்லுமோ? என்று கூறுவான்.—எ-று. (சஅ)

நம்முரு வாயின னுகர் கோனெனுத்
தம்மன முன்னியே தளர்வு நீக்கில
கொம்மென வரற்றியுங் கூவ லின்றியு
மெம்முயிர் கொள்வன விருபு ளாமென்பான்.

(இ-ள்.) இந்திரன் நமதுருவத்தை யடைந்தன னென்று தங்கள் மனத்தில் நினைத்துக் குயிலுங் கோழியும் எனது தளர்ச்சியை நீக்கவில்லை. (பின்யாதுசெய்வதென்றுல்,) விரைந்தொலித்தும் கூவாதொழிந்தும் எமதுயிரை வாங்குகின்றன என்று கூறுவான்.—எ-று.

இந்திரன் சூராதியர்களது துன்புத்திற்கஞ்சிக் குயிலாக உருவங்கொண்டு மறைந்து சென்றனனென்பதும், கௌதம முனிவரது பத்தினியாகிய அகலிகையைப் புணரும்பொருட்டு அர்த்தராத்திரியில் கோழிவடிவங் கொண்டு கூவினனென்பதும் புராணவரலாறு. (சகூ)

தண்டுத லின்றியே தானு நானுமாய்ப்
பண்டொரு வனிதையைப் பரிவிற் கூடினே
மண்டரு மறிகுவ ரற்றை நாட்சின
முண்டுகொல் கதிரின முதிக்கி லானென்பான்.

(இ-ள்.) தடையில்லாமல் சூரியனும் யானுமாக முற்காலத்து ஒரு பெண்ணை அன்புடன் புணர்ந்தோம்; இதனைத் தேவர்களும் அறிவார்கள். அந்நாளுண்டாகிய கோபமிருக்குமோ? இன்னுஞ் சூரியனுதிக்கவில்லையே யென்று கூறுவான்.—எ-று.

பண்டொருவனிதை யென்றது, பெண்வடிவங் கொண்ட அருணனை; சூரியனது தேர்ப்பாகனுகிய அருணன் ஒருகாலத்தில் இந்திரசபையைக் காணவிரும்பிச் சூரியனிடத்து விடைபெற்றுச் சென்றபொழுது, தான் அங்கு உள்ளே போவதற்குக் கூடாமையால் பெண்வடிவங்கொண்டு சென்று தேவரம்பையர்களுடன் கலந்திருந்தனன்; இந்திரன் அவ்வருணனுகிய பெண்ணினழகைக் கண்டு மோகித்துப் புணர்தலும் ஒரு குழந்தை பிறந்தது; பின்னர் அருணன் சூரியனிடத்துச்சென்று நடந்த சங்கதியைக் கூறவும், சூரியன் அதனை விசாரித்து அப்பெண்வடிவெடுக்கச்செய்து தானுங் கண்டு மோகித்துப் புணர்ந்தனன், அப்பொழுது ஒருகுழந்தை பிறந்தது; அவ்விருவரில் இந்திரனுக்குப் பிறந்தவன் வாலியும், சூரியனுக்குப் பிறந்தவன் சுக்கிரீவனுமாம். (ருo)

கோழிலை மடற்பனைக் குடம்பை சேர்தரு
மாழையம் பசலைவாய் மகன்றி லென்பவை
காழக வரிசிலைக் காமன் கோடுபோ
லூழியும் வீந்திடா தொலிக்கு மோவென்பான்.

(இ-ள்.) கொழுமையாகிய இலைகளையுடைய மடலமைந்த பனைமரங்களிலுள்ள கூண்டிற் பொருந்திய பொன்போன்ற அழகிய பசியவாயினையுடைய அன்றி

லென்னும் பறவையானது வயிரம்பொருந்திய வரிந்தவில்லினையேந்திய மன்மதனது வெற்றிச் சின்னத்தைப்போல ஊழிக்கால மளவும் இறவாமல் சப்திக்குமோ? என்று கூறுவான்.—எ-று.

அன்றிற் பறவை நெடுநேரம் இடைவிடா தொலிக்கின்றமையின், 'ஊழியும் வீந்திடா தொலிக்குமோ வென்பான்' என்று கூறினர். (ருக)

துன்னல ராகிய தொகையி னோர்தமைத்
தன்னிடை வைத்தெனைத் தளர்வு கண்டதா
லன்னது மன்றியின் றுயிர் கொள்ளவு
முன்னிய தோகட லுறங்க லாதென்பான்.

(இ-ள்.) சமுத்திரமானது பகைவர்களாகிய கூட்டங்களைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு என்னை வருத்தியது; அதுவுமன்றி, தூங்காமல் இன்று எனதுயிரை வாங்கவும் நினைத்ததோ? என்று கூறுவான்.—எ-று. (ருஉ)

இவ்வகை யாமினி யெல்லை முற்றவும்
வெவ்வழல் சுட்டிடும் விரக நோய்தெற
வுய்வகை யொன்றில னுயங்க லல்லது
செய்வது பிறிதிலன் றெருளில் சிந்தையான்.

(இ-ள்.) இவ்வாறு இராத்திரிமுழுவதும் கொடிய நெருப்பைப்போற் சுடுகின்ற விரகதாபமானது தன்னை வருத்துதலால், தெளிவற்ற மனத்தினையுடையவனாகிய இந்திரன் தானுய்யும்வகை சிறிதுமில்லாதவனும் வருந்துதலேயன்றி வேறொன்றையுஞ் செய்வதற்கில்லாதவனுமாயினன்.—எ-று.

யாமினி - இரவு. (ருங)

வேறு.

ஆக்க மித்திற மடைவுழிப் பக்துநூ றடுத்த
நோக்க முற்றவன் சசிபொருட் டுற்றநோ யதனை
நீக்கு கின்றனன் யானென நினைந்துளா னென்ன
மாக்கள் பூண்டதேர் வெய்யவன் குணதிசை வந்தான்.

(இ-ள்.) இத்தன்மையான துன்பத் தோற்றங்களுண்டாகும்பொழுது ஆயிரங்கண்களையுடைய இந்திரன் இந்திராணியின் நிமித்தமடைந்த காமநோயினை யான் நீக்குகின்றேனென்று நினைத்து வந்தவனைப்போலக் குதிரைகள் பூட்டிய தேரினையுடைய சூரியன் கீழ்த்திசையில் உதயமாயினன்.—எ-று. (ருச)

வெம்பு தொல்லிரு ளவுணர்தங் குழுவினை வீட்டி
யும்பர் மேற்செலு மதியெனு மடங்கலை யுருத்துப்
பைம்பொன் வெஞ்சுடர்க் கரங்களா லதன்வலி படக்குஞ்
சிம்பு ளாமெனத் தோன்றினன் செங்கதிர்க் கடவுள்.

(இ-ள்.) சிவந்த கிரணங்களையுடைய சூரியன் வெதும்புகின்ற பழைய இருளாகிய அசுரர்கூட்டங்களைக் கொன்று, வானத்திற் செல்லுகின்ற சந்திரனென்னுஞ் சிங்கத்தைக் கோபித்துப் பசிய பொன்னிறமாகிய வெவ்விய கிரணங்களென்னுங் கைகளால் அதன் வல்லமையை யடக்குகின்ற சிம்புட்பறவையைப்போல உதயமாயினன்.—எ-று.

அசுரர்கள் கருநிறமுடையவர்களாகலின் அவர்களை இருளாகவும், சிங்கம் வெண்ணிறமுடையதாகலின், அதனை மதியாகவும் உவமித்துக் கூறினர். சிங்கத்தின்

வலிமையை யடக்குவது சிம்புளாகலின் 'அதன்வலிபடுக்குஞ்சிம்புளாமென' என்று கூறினார். (ருரு)

தொடர்ந்த ஞாயிறு விடுத்திடுங் கதிர்களாந் தூசி
படர்ந்த காலையி னிலவெனு மனிகமுன் பட்ட
வடைந்த மீனெனுந் துணைவரும் பொன்றின ரமர்செய்
துடைந்த மன்னரிற் போயின னுடுபதிக் கடவுள்.

(இ-ள்.) ஆகாயத்தில் உதயமாகிய சூரியன் அனுப்பிய கிரணங்களாகிய தூசிப்படைகள் பரவிச்சென்ற சமையத்தில் சந்திரிகை யென்னுஞ் சேனைகள் முன்னே யிறந்தன; சேர்ந்துவந்த நக்ஷத்திரங்களென்னுந் துணைவர்களும் இறந்தார்கள். யுத்தஞ்செய்து தோற்றோடிய அரசர்களைப்போலச் சந்திரன் (ஒளிமழுங்கிச்) சென்றனன்.—எ-று. (ருசு)

விரிந்த பல்கதி ரனிகத்தை வெய்யவன் விடுப்பத்
துரந்த சோமனை யவன்புறங் காட்டினன் றொலைந்து
கரந்து போதலும் பின்னுறச் சென்றில களத்தி
லிரிந்து ளோரையுந் தொடர்வரோ சூரர்த மினத்தோர்.

(இ-ள்.) சூரியன் தனது பரந்த பல கிரணங்களாகிய சேனைகளை யனுப்புதலும் அவைகள் சந்திரனைத்துரத்தின; அந்தச்சந்திரன் முதுகுகாட்டினவனாய் வலியிழந்து மறைந்து செல்லவும், அவைகள் அவனைப் பின்றொடர்ந்து சென்றில; போர்க்களத்தில் தோற்றோடினவர்களையும் சூரர்களது கூட்டத்திலுள்ளவர்கள் பின்றொடர்ந்து செல்வார்களோ? (செல்லார்).—எ-று.

சூரர்தமினத்தோர் என்பதற்கு, வீரர்களது கூட்டத்திலுள்ளவர்கள் எனவும், சூரியனது (கிரணமாகிய) கூட்டத்திலுள்ளவர்கள் எனவும் சிலேடைப் பொருள் தோன்றுமாறு காண்க. (ருஎ)

திங்க டன்குறை யுணர்த்தவாய் திறந்தெனச் செய்ய
பங்க யங்கள்போ தவிழ்ந்தன குமுதங்கள் பலவுந்
தங்க ளுயக னுடைந்தது நோக்கியே தபனற்
கங்கை கூப்பிய திறனென வொடுங்கிய வன்றே.

(இ-ள்.) சந்திரனது குறைவினைத் தெரிவிக்கும்பொருட்டு வாயைத் திறந்தாற்போலச் செந்தாமரைகள் அரும்பலர்ந்தன; அல்லிமலர்களனைத்தும் தங்கள் தலைவனாகிய சந்திரன் தோற்றோடியதைப் பார்த்துச் சூரியனுக்கு அழகிய கைகளைக் கூப்பி வணங்கிய தன்மையைப்போலக் குவிந்தன.—எ-று.

சூரியனுதயமானவுடனே தாமரைகள் மலர்தலும், அல்லிமலர்கள் கூம்புதலுஞ் செய்தனவென்பது கருத்து. (ருஅ)

வனமெ ழுந்தன வசனமு மெழுந்தன வரியி
னினமெ ழுந்தன மாக்களு மெழுந்தன வெழில்சே
ரனமெ ழுந்தன புள்ளெலா மெழுந்தன வவற்றின்
மனமெ ழுந்தன வெழுந்தன மக்களின் றொகையே.

(இ-ள்.) நீர் எழுந்தொலித்தன; தாமரைகளும் மலர்ந்தன; வண்டின் கூட்டங்களெழுந்தன; மிருகங்களுமெழுந்தன; அழகுபொருந்திய அன்னப்பறவைகளெழுந்தன; மற்றைப் பறவைகளனைத்து மெழுந்தன; அவற்றின் மனங்கள் தத்தந் தொழில்களிற் சென்றன; மனிதர்களு மெழுந்தார்கள்.—எ-று.

சூரிய னுதித்தவுடனே சராசரங்களாகியயாவும் நித்திரைதெளிந்தெழுந்தன வென்க. (ருகூ)

ஞாயி றுற்றவவ் வளவையி னனந்தலை யுலகி
லேயெ னச்செறி யிருளெலா மறைந்திருந் தென்னச்
சேய ரிக்கணி தந்திடு தெளிவில்கா மத்து
மாயி ருட்டொகை யொடுங்கிய திந்திரன் மனத்துள்.

(இ-ள்.) சூரியன் உதயமாகிய சமையத்தில், மத்தியமாகிய நிலவுலகத்தில் நிறைந்திருந்த இருட்கூட்டங்களனைத்தும் விரைவில் மறைந்திருந்தாற்போலச் செவ்வரி பரந்த கண்களையுடைய இந்திராணியினால் கொடுக்கப்பட்ட தெளிவில்லாத காமமாகிய மிக்க இருட்கூட்டமானது இந்திரன் மனத்துள் ஒடுங்கியது.—எ-று.

சேயரிக்கணி தந்திடு தெளிவில் காமமாவது:—இந்திராணியின்மீதுண்டாகிய காமம். எத்தகைய மனத்தினையு மயக்குந் திறத்தினையுடைமையால், 'தெளிவில் காமம்' என்று கூறினர். (சு0)

கையி கந்துபோய்த் தன்னுயி ரலைத்தகா மத்தீப்
பைய விந்திடு பாந்தள்போற் றணிதலும் பதைப்புற்
றெய்யெ னக்கடி தெழுந்தன னகைத்துவெள் குற்று
ஐய கோவிது வருவதே யெனக்கென வறைந்தான்.

(இ-ள்.) அளவுகடந்து சென்று தனதுயிரை வருத்திய காமாக்கினியானது படமடங்கிய பாம்பைப்போலத் தணியவும், (தேவேந்திரனாகியவன்) மனம் பதைத்து விரைந்தெழுந்து நகைத்து வெட்கமுற்றவனாய் ஐயோ! இஃதெனக்குண்டாவதோ வென்று கூறினன்.—எ-று.

பையவிந்திடு பாந்தள் செயலற்றுக்கிடத்தல்போலச் சூரிய னுதித்தவுடன் இந்திரன் மனத்திருந்த காமாக்கினி தணிந்தமையின், 'பையவிந்திடு பாந்தள்போற் றணிதலும்' என்று கூறினர். (சுக)

தீமை யுள்ளன யாவையுந் தந்திடுஞ் சிறப்புந்
தோமில் செல்வமுங் கெடுக்குநல் லுணர்வினைத் தொலைக்கு
மேம நன்னெறி தடுத்திரு ளுய்த்திடு மிதனாற்
காம மன்றியே யொருபகை யுண்டுகொல் கருதில்.

(இ-ள்.) தீமைகளனைத்தையுங் கொடுக்கும்; சிறப்பினையுங்குற்றமற்றசெல்வத்தினையு மழிக்கும்; நல்லறிவைத் தொலைக்கும்; இன்பத்தைக் கொடுக்கின்ற புண்ணியவழியைத்தடுத்து நரகத்திற்சேர்க்கும்; இக்காரணத்தினால், விசாரிக்குமிடத்தில் காமத்தைப்பார்க்கிலும் பகையாயுள்ளது வேறொன்றுண்டோ?—எ-று.

தோம் - குற்றம். ஏமம் - இன்பம். (சுஉ)

என்ப துன்னியே யிந்திர னண்டைவைப் பிகந்து
தன்பு றந்தனிற் கடவுளர் குழுவெலாஞ் சார
வன்பொ டேபடர்ந் தறுமுக னடிகளை யடைந்து
முன்பு தாழ்ந்தன னுரோமமுஞ் செங்கையு முகிழ்ப்ப.

(இ-ள்.) என்றிவ்வாறு நினைத்து இந்திரன் அவ்விடத்தினின்று நீங்கித் தன்பின்னே தேவர்கூட்டங்களனைத்துஞ் சூழ்ந்துவர, அன்புடன் சென்று சண்முகக்கடவுளது திருவடிகளின்முன்னடைந்து மயிர்க்கூச்செறியக் கைகளைக்குவித்து வணங்கினன்.—எ-று.

ஆண்டை - ஐயீற்றுக்குற்றியலுகரம். (சுரு)

தொழுத கையினன் கோட்டிய மெய்யினன் றுகிலத்
தெழுது பாவையி லான்றமை புலத்தின னிறைஞ்சிப்
புழுதி தோய்தரு முறுப்பினன் சுருதியின் பொருண்மை
முழுது மூறிய துதியின னாகிமுன் னின்றான்.

(இ-ள்.) குவித்த கைகளையுடையவனும் தாழ்ந்து வணங்கிய தேகத்தையுடையவனும் வஸ்திரத்தெழுதிய சித்திரத்தைப்போல ஒடுங்கிய ஐம்புலனையுடையவனும், நமஸ்கரித்துப் புழுதிபடிந்த அவயவங்களையுடைவனும் வேதப்பொருள்கள் முழுவதுமமைந்த தோத்திர முடையவனுமாய் (எமது முருகக்கடவுள்) திருமுன்னே நின்றனன்.—எ-று.

ஆன்றமை புலமாவது—, அவ்வப்புலன்கள் இலயித்துள்ள அவ்வவ்விஷயங்களிலேயே சென்றமைந்திருத்தல். இதனை—" ஐந்துபேரறிவுங்கண்களேகொள்ள வளப்பருங் கரணங்களுன்குஞ்-சிந்தையேயாகக் குணமொருமூன்றுந் திருந்துசாத்துவிதமேயாக - விந்துவாழ் சடையா னடிக்கு மானந்த வெல்லையில் தனிப்பெருங் கூத்தின் - வந்தபேரின்ப வெள்ளத்துட்டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்" என வரும் அருள்வாக்கானறிக. (கூச)

கரிய வன்றனைச் செய்யவன் கருணைசெய் தருளி
வருதி யென்றுகூய் மறைகளும் வரம்புகாண் கில்லா
வரன தாள்களை யருச்சனை புரிதுநா மதனுக்
குரிய வாயபல் கரணமுந் தருதியென் றுரைத்தான்.

(இ-ள்.) முருகக்கடவுள் இந்திரனைக்கருணையோடுபார்த்தருளி வரக்கடவையென்று அழைத்து, வேதங்களாலும் அளவறியப்படாத சிவபெருமானதுதிருவடிகளை நாம் அருச்சனைசெய்வோம்; நீ அதற்கு வேண்டுவனவாகிய பல உபகரணங்களைச் சேகரித்துக் கொடுக்கக்கடவை யென்று அருளிச்செய்தனர்.—எ-று.

கரியவன் - இந்திரன், 'மறைகளும் வரம்புகாண்கில்லா வரன்' என்பதனை, "நின்னுன் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும் - பன்னு ளருச்சித்தும் பாதந் தலைசுமந்து - முன்னுமம் வாசித்து முன்னையறி யேனென்று - சொன்னுலடியனேன் சோதனைத்தோ நின்னியல்பே" என வருந் திருவிளையாடற்புராணத்தானறிக. (கூரு)

உரைத்த வெல்லையிற் றெழுதுபோ யுழையரிற் பலரைக்
கரைத்து வீற்றுவீற் றேவியே கடிமலர்க் கண்ணி
திரைத்து கிற்படா நறும்புன லவிபுகை தீபம்
விரைத்த கந்தங்க ளெனவுந் தந்தனன் விரைவில்.

(இ-ள்.) அவ்வா றருளிச்செய்தபொழுது இந்திரன் விரைவாக வணங்கிச் சென்று தனது பரிசனங்களிற் பலரையழைத்து வெவ்வேறாக அனுப்பி மணம் பொருந்திய மலர்மாலை, திரைச்சீலை, நறியநீர், நைவேத்தியம், தூபம், தீபம், வாசனைத்திரவியங்கள் முதலிய யாவற்றையும் விரைவில் கொடுத்தனன்.—எ-று.

நறும்புனலாவது - பத்துத்துவரிலும் ஐந்துவிரையிலும் முப்பத்திருவகை ஓமாலிகையிலும் ஊறிய நீர். பத்துத்துவராவன:—பூவந்தி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், கருங்காலி, நாவல், ஆல், அரசு, அத்தி, இத்தி என்பன; "பூவந்தி திரிபலை புணர்கருங்காலி-நாவலொடு நாற்பான்மரம்" ஐந்து விரையாவன—"கோட்டந் துருக்கந் தகரமகிலார-மோட்டிய வைந்தும் விரை" முப்பத்திருவகை ஓமாலிகையாவன:—இலவங்கம் பச்சிலை கச்சோலமேலங், குலவிய நாகணங்கோட்டம் - நிலவிய நாகமதாவரிசி தக்கோல நன்னாரி, வேகமில் வெண்கோட்டம் மேவுசீர்-போகாத, கத்

தாரிவேரி யிலாமிச்சங் கண்டில் வெண்ணெய், யொத்தகடு நெல்லி யுயர்தான்றி - துத்தமொடு, வண்ணக்கச்சோலமரோனுக மாஞ்சியுட, னெண்ணுஞ் சயிலேக மின் புழுகு - கண்ணுநறும், புன்னை நறுந்தாது புலியுகிர் பூஞ்சரளம், பின்னுதமாலம்பெருவகுளம் - பன்னும், பதுமுகநுண்ணேலம் பைங்கொடுவேரி, கதிர்நகையாயோமாலிகை". என்னு மிவையெனக்கொள்க. இதனை:— "பத்துத்துவரினு மைந்து விரையினு, முப்பத்திருவகையோமாலிகையினு - மூறிய நன்னீர்" எனவருஞ் சிலப்பதிகாரத் தொடருக்கு அடியார்க்கு நல்லார் கூறிய விசேடத்தானறிக.

வீற்று வீற்றேவுதல் - தனித்தனியே யனுப்புதல். (௬௬)

அவ்வக் காலையி லாறுமா முகனுடை யடிக
டெய்வக் கம்மியற் கொண்டொரு சினகர மியற்றிச்
சைவத் தந்திர விதியுளி நாடியே தாதை
யெவ்வெக் காலமு நிலையதோ ருருவுசெய் திட்டான்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் சண்முகக்கடவுள் தேவதச்சனைக்கொண்டு ஒரு திருக்கோயில் கட்டுவித்துச் சைவாகமவிதிப்படி சிவபெருமான் எப்பொழுதுஞ் சானித்தியமாயிருக்கப்பட்ட ஒரு திருவுருவத்தை விரும்பி அமைத்தனர்.—எ-று.

சிவாலயப் பிரதிஷ்டை முதலிய கிரமங்களை யுணர்த்துவது சிவாகமங்களேயாகலின் 'சைவத்தந்திர விதியுளி' என்று கூறினர். (௬௭)

தேவு சான்மணிப் பீடத்தி லீசனைச் சேர்த்தி
யாவி னைந்து மமுதமும் வரிசையா லாட்டித்
தாவி லாததோர் வாலிதா மணித்துகில் சாத்திப்
பூவின் மாலிகை செய்யசாந் தத்தொடும் புனைந்தான்.

(இ-ள்.) தெய்வத்தன்மை பொருந்திய இரத்தினாசனத்தில் சிவபெருமானையெழுந்தருளச்செய்து பஞ்சகௌவியங்களையும் பஞ்சாமிர்தத்தையும் முறைப்படியபிஷேகித்துக் குற்றமற்ற ஒரு வெண்மையாகிய அழகிய வஸ்திரத்தையணிந்து பூமாலை சந்தன முதலியவைகளையுஞ் சாத்தினர்.—எ-று.

பஞ்சகௌவியங்களாவன பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பன. பஞ்சாமிர்தம்-பால், நெய், தேன், சர்க்கரை, பழம்என்பன; பழம்நீக்கித் தேங்காய்த்திருகல் கூட்டி ஐந்துவகையாகக் கொள்ளுதலும், தேங்காய்த்திருகலின்பால் கூட்டி ஐந்தென்று கொள்ளுதலும், பழவர்க்கங்களுள் ஒன்று, நெய் தயிர் பால் இனம்பற்றி ஒன்று; இவ்விரண்டோடு தேன், சர்க்கரை நீர்கூட்டி ஐந்தென்று கொள்ளுதலுமுண்டு.

மருந்தி னூற்றவுஞ் சுவையன வாலுவ நூல்போய்த்
திருந்தி னார்களும் வியப்பன திறம்பல வாகிப்
பொருந்து கின்றன நிரலமை கருனையம் புழுக்கல்
சொரிந்து பொற்கலத் தருத்தினன் மந்திரத் தொடர்பால்.

(இ-ள்.) தேவாமிர்தத்தைக்காட்டிலும் மிக்க சுவையுடையனவாய்ப் பாகசாஸ்திரத்தில் பழகித் திருந்தியுள்ளவர்களும் வியக்கத்தக்கதாய்ப் பலவிதங்களாகப் பொருந்தியுள்ளனவாய்ச் செவ்விதாகிய பொறிக்கறிகளை அழகிய அன்னத்துடன் பொற்றும்பாளத்திலமைத்து மந்திரத்தினால் நிவேதித்தனர்.—எ-று.

வாலுவநூல் - பாகசாஸ்திரம். நிரல் - ஒழுங்கு. (௬௯)

கந்தம் வெள்ளிலை பூகநற் காயிலை கலந்து
தந்து பின்முறை யருத்தினன் புகைசுடர் தலையா

வந்த பான்மைக ளியாவையும் வரிசையா லுதவி
முந்து கைதொழூஉப் போற்றினன் மும்முறை வணங்கி.

(இ-ள்.) பின்பு முகவாசங்களையும் வெற்றிலைப்பாக்குகளையும் கலந்துவைத்துப் பின்பு முறைமைப்படி நிவேதித்துத் தூப தீப முதலிய உபசாரங்களை யெல்லாம் முறைப்படிசெய்து எதிரில்நின்று கைகூப்பி மும்முறை வணங்கித்துதித்தனர்.

முகவாசம் ஐந்து, அவை - தக்கோலம், ஏலம், இலவங்கம், கர்ப்பூரம், சாதிக்காய் என்பன; இதனை—"தக்கோலமேலந் தகைசாலிலவங்கங்-கர்ப்பூரஞ் சாதியோ டைந்து" என்பதனானறிக. (எ0)

வேறு.

இருவரு முணர்கிலா திருந்த தாள்களைச்
சரவண மிசைவரு தனயன் பூசனை
புரிதலு முமையொரு புடையிற் சேர்தரா
வருள்விடை மீமிசை யண்ண லேன்றினன்.

(இ-ள்.) பிரமவிஷ்ணுக்களா லறியப்படாத திருவடிகளைச் சரவணோற்பவராகிய முருகக்கடவுள் பூசனைசெய்யவும், சிவபெருமான் உமாதேவியாருடன் அருள் வடிவமாகிய விடையின்மேல் எழுந்தருளினர்.—எ-று.

அருள்விடை - தருமதேவதையாகிய விடை. (எக)

கார்த்திகை காதலன் கறைமி டற்றுடை
மூர்த்திநல் லருள்செய முன்னி வந்தது
பார்த்தன னெழுந்தனன் பணிந்து சென்னிமேற்
சேர்த்திய கரத்தொடு சென்று போற்றினன்.

(இ-ள்.) கார்த்திகேயராகிய முருகக்கடவுள் நீலகண்டராகிய சிவபெருமான் தமக்கு நல்ல திருவருள்செய்யக்கருதி வந்தருளினமையைப்பார்த்து எழுந்து வணங்கிச் சிரமேற்குவித்த திருக்கரங்களுடன் சென்று துதித்தனர்.—எ-று.

பார்த்தனனெழுந்தனன் - முற்றெச்சம். (எஉ)

செயிர்ப்பறு நந்திதன் றிறத்தில் வீரரும்
வியர்ப்பினில் வந்தெழு வீர ருங்குழீஇக்
கயற்புரை கண்ணுமை கணவற் காணூஉ
மயிர்ப்புறம் பொடிப்புற வணங்கி யேத்தினர்.

(இ-ள்.) சாந்தமூர்த்தியாகியதிருநந்திதேவரது கணத்தலைவர்களாயிருந்தநவவீரர்களும் வியர்வையில் தோன்றிய இலக்ஷம் வீரர்களும் ஒன்றுசேர்ந்து, கயற்கெண்டைபோலுங் கண்களையுடைய பார்வதிபாகராகிய சிவபெருமானைத் தெரிசித்துத் தேகத்தில் மயிர்க்கூச்செறிய வணங்கித் துதித்தார்கள்.—எ-று. (எங)

முண்டகன் முதல்வரு முரண்கொள் பூதருங்
கண்டன ரனையது கரங்கள் கூப்பியே
மண்டனின் மும்முறை வணங்கி வானக
மெண்டிசை செவிடுற வேத்தன் மேயினர்.

(இ-ள்.) முண்டகன் முதலாகப்பொருந்திய பலசாலிகளாயுள்ள பூதர்களும் சிவபெருமானெழுந்தருளினமையைப்பார்த்துத் தங்கள்கைகளைக்கூப்பிப் பூமியில் மும்முறை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஆகாயமும் எட்டுத்திக்குகளும் செவிடுபடும்படித் துதிக்கத்தொடங்கினர்கள்.—எ-று. (எச)

வேறு.

ஆயந்து காலை தன்னி லருவுரு வாகு மண்ணல்
சேயினை நோக்கி யுன்றன் வழிபடற் குவகை செய்தே
நீயிது கோடி யென்னா நிரந்தபல் புவன முற்று
மேயென முடிவு செய்யும் படைக்கலத் திறையை யீந்தான்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் ரூபாரூபியாயுள்ள சிவபெருமான் தமது திருப்புதல்வராகிய முருகக்கடவுளைப்பார்த்தருளி, யாம் உனது பூசனைக்கு மகிழ்வடைந்தனம், ஆதலால் இதனை நீ பெற்றுக்கொள்ளென்று வரிசையாயுள்ள பல புவனங்களையும் க்ஷணப்பொழுதில் நாசஞ்செய்யத்தக்க ஆயுதவரசாகிய பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்தருளினார்.—எ-று. (௭௫)

மற்றிது நம்பாற் றோன்றும் வான்படை மாயன் வேதாப்
பெற்றுள தன்றி யாரிப் பெரும்படை பரிக்கு நீரார்
முற்றுயி ருண்ணும் வெஞ்சூர் முரட்படை தொலைப்பா னீது
பற்றுதி மைந்த வென்னாப் பராபர னருளிப் போனான்.

(இ-ள்.) இது நம்மிடத்தில் தோன்றிய பெரிய ஆயுதம்; இதனைப் பிரமவிஷ்ணுக்களும் பெற்றவரல்லர்; இப் பெரிய ஆயுதத்தைத் தாங்கத்தக்க தன்மையையுடையவர்கள் யாவர்; இது சகலவுயிர்களையும் நாசஞ்செய்யும்; ஆதலால், குமாரனே! நீ கொடிய சூரனது வலிய சேனைகளை யழிக்கும்பொருட்டு இதனை வாங்கிக்கொள்ளக் கடவை யென்று கொடுத்து மறைந்தருளினார்.—எ-று.

முற்றுயி ருண்ணும் என்பதனை வெஞ்சூர் என்பதற்கு அடைமொழியாக்கி, எல்லாவுயிர்களையு மழிக்கின்ற கொடிய சூரபன்மனது எனப் பொருள்கூறுதலு மொன்று. (௭௬)

கருணைசெய் பரமன் சேணிற் கரந்தனன் போன காலை
யருள்பெறு நெடுவே லண்ண லன்னவற் போற்றிப் பின்னை
யிரவிய விலக்கத் தொன்பான் வீரரு மயனு மேனைச்
சுரர்களும் வழுத்திச் செல்லத் தூயதன் றேரிற் புக்கான்.

(இ-ள்.) தமக்குத் திருவருள்புரிந்த சிவபெருமான் வானத்தில் மறைந்து சென்றவுடனே, அவரது திருவருளைப்பெற்ற நெடிய வேலினையுடைய முருகக்கடவுள் அவ்வெம்பெருமானைத்துதித்து, பின்பு நெருங்கிய இலக்ஷத்தொன்பது வீரர்களும் பிரமன் முதலிய தேவர்களுந் தம்மைத் துதித்துக்கொண்டு உடன்வரத் தூய்மையாகிய தமது இரதத்தில் சென்று ஏறியருளினார்.—எ-று. (௭௭)

சில்லியந் தேர்மேற் செவ்வேள் சேர்தலு முலவை வேந்தன்
வல்லைதன் றமர்க ளோடும் வாம்பரி கடாவி யுய்ப்ப
வெல்லையிற் பரிதி தோன்ற வெழுதரு முயிர்க ளேபோ
லொல்லென வெழுந்த தம்மா வுருகெழு பூத வெள்ளம்.

(இ-ள்.) சக்கரங்களையுடைய அழகிய இரதத்தின்மீது முருகக்கடவுளெழுந்தருளியவுடனே வாயுதேவன் விரைவாகத் தனது பந்துக்களுடன் தாவுகின்ற குதிரைகளைத் தட்டியோட்டுதலும்; காலையில் சூரிய னுதயமான வுடனே உயிர்கள் நித்திரைவிட்டெழுவதைப் போல மிகப்பெரிய வடிவினையுடைய பூதப்படைகளாகிய வெள்ளங்கள் விரைவாக எழுந்தன.—எ-று.

சில்லி - தேர்ச்சக்கரம். (௭௮)

சாரத நீத்த மெல்லாந் தரையினின் றெழுந்து சூழ்ந்து
போரணி யணிந்து போந்த புடைதனி லிலக்கத் தொன்பான்
வீரருஞ் சுரர்கள் யாரு மேவினர் வந்தார் வான்றேய்
தேர்மிசை யவர்க்கு நாப்பட் சென்றனன் குமரச் செம்மல்.

(இ-ள்.) பூதச்சேனைகளனைத்தும் போர்க்கோலங்கொண்டு ஒருங்குகூடிப் பூமியினின்றுங் கிளம்பிச் சென்றன; பக்கத்தில் இலக்ஷத்தொன்பது வீரர்களும் தேவர்களும் சூழ்ந்து வந்தனர்; அவர்களுக்கு மத்தியில் ஆகாயத்தையளாவிய இரதத்தின் மேல் முருகக்கடவுள் சென்றருளினர்.—எ-று. (எக)

மண்ணியங் கரையிற் றென்பால் வகுத்தசேய் ஞல்லூர் நீங்கி
யெண்ணிய வுதவும் பொன்னி யிகந்திடை மருதி னோடு
தண்ணியன் மஞ்ஞை யாடுந் தண்டுறை பறிய லூருங்
கண்ணுத லிறைவன் றான மேனவுங் கண்டு போனான்.

(இ-ள்.) மண்ணியாற்றின் தென்புறத்திலுண்டாக்கிய திருச்சேய்ஞலூரினின்று நீங்கி மனோபீஷ்டங்களைத் தருகின்ற காவிரிநதியைக் கடந்து திருவிடைமருதூருடன் குளிர்ந்த தன்மையினையுடைய திருமயிலாடுதுறையினையும், திருப்பறியலூரையும்,நெற்றிக்கண்ணராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் மற்றைய ஆலயங்களையுந் தரிசித்துக்கொண்டு சென்றனர்.—எ-று.

அவரவர்களது மனோபீஷ்டங்களை யுதவுகின்ற கங்கை முதலிய சப்தநதி தீர்த்தங்களில் ஒன்றாக விருத்தலின், 'எண்ணிய வுதவும் பொன்னி' என்று கூறினர். தண்ணியன் மஞ்ஞையாடுந் தண்டுறை என்பது,திருமயிலாடுதுறை; இது மாயூரம் எனவழங்குகின்றது. (அ௦)

எழில்வளஞ் சுரக்குந் தொல்லை யிலஞ்சியங் கான நோக்கி
மழவிடை யிறைவன் பொற்றாள் வணங்கியே மலர்மென் பாவை
முழுதுள திருவு மென்று முடிவின்மங் கலமு மெய்த
விழுமிதி னோற்றுப் பெற்ற வியன்றிரு வாரூர் கண்டான்.

(இ-ள்.) அழகிய வளப்பங்களைத்தருகின்ற பழைமையாகிய திருவிலஞ்சியங்கானத்தைத் தரிசித்து, இளமையாகிய இடபவாகனத்தையுடைய சிவபெருமானது பொன்மயமாகிய திருவடிகளை நமஸ்கரித்து, இலக்ஷுமியானவள் சகல செல்வங்களையும் என்றுமழியாதிருக்கின்ற மங்கலத்தையும் அடையும்பொருட்டு உயர்வாகிய தவத்தைச்செய்து பெற்றுக்கொண்ட மேன்மை பொருந்திய திருவாரூரைத் தரிசித்தருளினர்.—எ-று.

'மலர்மென்பாவை - முழுதுள திருவுமென்று முடிவின் மங்கலமுமெய்த - விழுமிதினோற்றுப் பெற்ற வியன் திருவாரூர்' என்பதன்வரலாறு - முன்பொருகாலத்தில் திருமாலானவர் பகைவர்களை வெல்லும்பொருட்டுக் கரத்தில் வில்லைத்தாங்கிக்கொண்டு அதனைத் தமது வலதுகாற் பெருவிரலாலும் மோவாய்க்கட்டையாலும் பற்றிக்கொண்டு நிற்கையில், பகைவர்கள் அதிற் பூட்டியிருந்த நாரியைச் செல்லுருவங்கொண்டுவந்து தறித்துவிட்டமையால், உடனே நிமிர்ந்த அவ்வில்லின் வேகத்தினால் தமது தலையறுபட்டுத் திருக்கண்ண மங்கையென்னும் பதியில் விழுந்தது; அதனைக் கண்ட திருமகள் இறந்துகிடக்கின்ற தனது நாயகனை உயிர்ப்பிக்கவேண்டித் திருவாரூரையடைந்து சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து, அத்தவப்பேற்றால் சகல செல்வங்களையும் தனது நாயகனையும் பெற்று வாழ்ந்திருந்தனள் என்பது. இதனை -

"நாகம்மிசை நடித்தவருக் குயிர்வேண்டித் திருதவஞ்செய்நளினக் கோயில் - சேகுமனத் தவராகு மருவாரூர்தனை யெரித்தார் திருவாரூரே" என்பதனுணுணர்க. திருமகள் பூசித்த காரணத்தால் திருவாரூர் என்றும், கமலை என்னும் பெயரையுடைய அத்திருமகள்பூசித்த ஆலயமாதலால் கமலாலயம் என்றும்பெயர் வழங்குமாறு காண்க. (அக)

குமாரபுரிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க,எஉடு.

உ

முருகன்றுணை.

# சுரம்புகுபடலம்.

புற்றிடங் கொண்ட புத்தேள் புரந்தரற் கருள்செய் திட்ட
நற்றலந் தன்னைச் சேர்ந்த நகரமுள் ளனவுங் காணூஉக்
கொற்றவெங் கதிர்வே லண்ணல் கொல்லுலை யழலிற் செக்கர்
பற்றிய விரும்பு போலும் பாலையங் கானத் துற்றான்.

(இ-ள்.) வெற்றிபொருந்திய வெவ்விய கிரணங்களையுடைய வேற்படையையேந்திய முருகக்கடவுள் புற்றினைத் தமக்கிடமாகக்கொண்ட ஸ்ரீ வன்மீகநாதர் தேவேந்திரனுக்குத் திருவருள்புரிந்தருளியதாகிய நல்ல திருவாரூர்த்திருப்பதியை யடுத்த க்ஷேத்திரங்களனைத்தையுந் தரிசித்து, பின்பு, கொல்லனது உலைக்களத்திலுள்ள அக்கினியினல் (காய்ச்சப்பட்டுச்) செந்நிறம் பொருந்திய இரும்புபோன்றுள்ளதாகிய பாலைநிலத்தை யடைந்தருளினர்.—எ-று.

'புற்றிடங்கொண்ட புத்தேள் புரந்தரற்கருள் செய்திட்ட-நற்றலம்' என்பதனை மேல் தக்ஷகாண்டத்திற் கூறுதலின் ஆண்டுக்கண்டுணர்க. (க)

வேறு.

எழு நேமியும் பெரும்புறக் கடலுமெண் டிசையுஞ்
சூழ வன்னதா லழிவின்றித் தொன்மைபோ லாகி
யாழி யுள்ளுறும் வடவையி னவற்றினைப் பருகி
யூழி தன்னினு மிருப்பதவ் வுயிர்பெரும் பாலை.

(இ-ள்.) அவ்வுயர்ந்த பெரிய பாலைநிலமானது எழுகடல்களும் பெரும்புறக்கடலும் எட்டுத்திசையிலுஞ் சூழ, அவற்றாலழிவில்லாமல் முன்போலவே யமைந்து சமுத்திரத்திற் பொருந்திய வடவாமுகாக்கினியைப் போல அக்கடல்நீரையுண்டு ஊழிக்காலத்திலும் அழியாதிருப்பது.—எ-று.

எழுநேமி - உவர் நீர்க்கடல் முதலியன. (உ)

அண்டர் நாயக னுலகடு மகந்தனக் காகும்
பண்ட மேசெறி பல்வள மாருயிர் பசுக்கண்
மண்டு நேமிநெய் நிலங்கல மாயுற மலர்தீக்
குண்ட மாயது கள்ளிசூழ் கொடியவெம் பாலை.

(இ-ள்.) தேவர்கள் நாயகராகிய சிவபெருமான் சர்வசங்காரமாகிய யாகத்தைச் செய்வதற்கு உதவியாகிய சமித்து முதலிய பொருள்களே உலகத்தில் நெருங்கிய பல வளங்களாகவும், அரிய உயிர்களே யாகப்பசுக்களாகவும், நீர்நிறைந்த கடல்களே நெய்யாகவும், பூமியே யாகசாலையாகவும் அமைந்து நிற்க, கள்ளிமரங்கள் சூழ்ந்த மிகக்கொடிதாகிய பாலைநிலமானது யாகாக்கினியானதுபற்றி யெரிகின்ற யாககுண்டமாகவிருந்தது.—எ-று. (௩)

வண்ண வொண்சுதை மெய்யுடை வரநதி கேள்வ
னண்ணு தொல்லுல காகியே நரலையுற் றென்னத்
தண்ணி லாவெழு நாத்தலை யிரண்டுடைத் தழலின்
பண்ண வற்குல காயது முதுபெரும் பாலை.

(இ-ள்.) சமுத்திரமானது அழகமைந்த வொள்ளிய வெண்ணிறமாகிய தேகத்தினை யுடைய கங்கைநதித் தலைவனாகிய வருணராஜன் நிலைபெற்று வசிக்கின்ற உலகமாகவிருந்தாற்போல, பழைமையாகிய பெரிய பாலைநிலமானது உஷ்ணவடிவாகிய எழுநாவினையும் இரண்டுதலைகளையுமுடையஅக்கினிதேவன்வசிப்பதற்கு உலகமாக விருந்தது.—எ-று.

சுதை என்பதற்கு, சுண்ணச்சாந்து எனினுமாம். (௪)

உடைய தொல்குலக் கேண்மையா லவ்வனத் துறையுங்
கொடிய வன்னிபாற் சென்றதோ வெப்பமேல் கொண்டு
நடுந டுங்கிவெம் புகையுமிழ்ந் தரற்றிநா வுலர்ந்து
கடல்ப டிந்துநீர் பருகுமால் வடவையங் கனலே.

(இ-ள்.) வடவாமுகாக்கினியானது தனது பழைய குலமாயுள்ள நண்பினால் அப்பாலையின்கண் வசிக்கின்ற கொடிய தீயினிடத்திற் சென்றதோ? வெப்பமதிகரித்து நடுநடுங்கி வெவ்விய புகையை யுமிழ்ந்து இரைந்து நாவறண்டு கடலில் முழுகி நீரையுண்ணுகின்றது.—எ-று.

வடவைத் தீயானது வெப்பங்கொண்டு கடலிற் புகுந்து நீரைப் பருகுதல், இப்பாலை நிலத்துடன் கேண்மையுற்றுச் சென்றிருந்த காரணந்தான் போலுமென்று கூறியதனால், இப்பாலை நிலத்தீ அவ்வட வாக்கினியினும் மிகக் கொடியதென்று கூறியதாயிற்று. (௫)

கற்றை யங்கதிர்ப் பரிதியு மதியுமக் கானஞ்
சுற்றி யேகுவ தல்லது மிசைபுகார் சுரரு
மற்று ளார்களு மனையரோ யெழிலியு மருத்து
மெற்றை வைகலு மதன்புடை போகவு மிசையா.

(இ-ள்.) கூட்டமாகிய அழகிய கிரணங்களையுடைய சூரியனும் சந்திரனும் அப்பாலைவனத்தைச்சுற்றிச்செல்வதேயன்றி மேலேசெல்லார்கள்; தேவர்களும்மற்றுள்ளவர்களும் அவ்வாறேசெல்லார்கள்; மேகங்களும் வாயுக்களும் எக்காலத்திலும் அதனருகில் போவதற்குஞ் சம்மதியா.—எ-று. (௬)

சேனம் வெம்பணி யொண்புறு விரலைமான் செந்நா
யானை யாதிக ளவ்வனத் திருக்கவு மாவி
போன தில்லையா லங்கியிற் றோன்றிய பொருள்கண்
மேனி கன்றுவ தன்றியே விளியுமோ வதனால்.

(இ-ள்.) பருந்து, வெவ்விய பாம்பு, ஒள்ளிய புறு, கலைமான், புள்ளிமான், செந்நாய், யானைமுதலியவைகள் அந்தவனத்தில் வசித்துக்கொண் டிருக்கவும் அவை

ளிறக்கவில்லை; நெருப்பிற்றோன்றிய பொருள்கள் அந்நெருப்பினால் உடல்வாடுகை தல்லது இறக்குமோ? (இறவா).—எ-று.

நெருப்பிற்றோன்றிய பொருள்கள் அந்நெருப்பினா லழியாவாறுபோல, பாலைநிலத்திற் றோன்றிய சேனம் முதலியன இறந்தில வென்க. (எ)

எண்ணி னுஞ்சுடும் பாலையங் கானிடை யெழுந்த
கண்ணா கன்புகை யழல்படு கின்றகாட் சியவே
விண்ணி னீலமுஞ் செக்கரு மவற்றினால் வெடித்த
புண்ணு மொக்குளுங் கதிர்களு முடுக்களும் போலாம்.

(இ-ள்.) ஆகாயத்தில் நீலநிறமுஞ் செந்நிறமுங் காணுதல், நினைப்பினுஞ் சுடக்கூடிய பாலைவனத்தி லுண்டாகிய மிகுந்த புகையும் நெருப்புந்தோன்றுகின்ற காட்சியினையொக்கும்; சூரிய சந்திரர்களும் நக்ஷத்திரங்களும் அப்புகையினாலும் தீயினாலும் வெடிக்கப்பட்ட புண்ணையுங் கொப்புளத்தையு மொக்கும்.—எ-று.

ஆகாயத்தின் நீல நிறமானது பாலை நிலத்தினின்றுந் தோன்றும் புகையையும், செவ்வானமானது அப்பாலை நிலத்தீயின் சாயையையும், சூரிய சந்திரர்களும் நக்ஷத்திரங்களும் அத்தீயால் வெடித்த புண்ணையுங் கொப்புளத்தையு மொத்திருந்தன வென்க. (அ)

வேக வெய்யவன் புடையுறு தவ்வன மிசையே
போக வோரிறை யெழுந்தழல் சுட்டது போலு
மேகு தேரொரு காலிலா திழந்ததா லிருகால்
பாகி ழந்தன னவன்கதி ரங்கிபட் டனவே.

(இ-ள்.) வேகமாகச்செல்லுகின்ற சூரியன் பக்கத்திற் செல்லாமல் அவ்வனத்தின்மேலே சென்றமையினால் ஒரு கணப்பொழுதில் அவ்வனத்தீ யெழுந்து சுட்டதினாலாக விருக்கலாம்; ஆகாயத்தில்ஓடுகின்ற இரதமானது ஒரு சக்கரமில்லா திழந்தது; அருணனாகியதேர்ப்பாகன் இரண்டுகாலுமிழந்தனன்; அச்சூரியனது கதிர்களும் அக்கினிமயமாயின.—எ-று.

சூரியனது இரதத்திற்கு ஒற்றைச் சக்கரமென்பதும் அத்தேர்ச்சாரதியாகிய அருணனுக்குக் காலில்லையென்பதும் புராணவரலாறு. (கூ)

தங்க டொல்பவ மகன்றிலா விண்ணவர் தம்மைத்
துங்க முத்தியின் பொருட்டினு லடைபவர் தொகைபோ
லங்க நொந்துதம் போலவே வெப்பமுற் றயருங்
கங்க நாடியே நீழலுக் கடைவன கலைகள்.

(இ-ள்.) தமது பழையபிறவிகளைநீக்கிக்கொள்ளாத தேவர்களைக்குறித்துத் தூய்மையாகிய முத்தியின் பொருட்டுக் கூட்டமாகச்சென் றடைகின்றவர்களைப் போல, உடல்வருந்தித் தம்மைப்போலவே வெப்பமுற்று வருந்துகின்ற பருந்தினைக் குறித்துக் கலைமான்கள் நிழலுக்குச் செல்லுகின்றன.—எ-று.

தங்கள் பிறவியை நீக்கிக்கொள்ளவறியாத தேவர்களையடைந்து தம்பிறவி நோயை நீக்கக்கருதுகின்றவர்கள் அத்தேவர்களால் ஒருபயனையுமடையா வாறுபோலப் பாலைத்தீயால் வருந்துகின்ற பருந்துக்களைக் கலைமான்கள் நிழலைக்கருதியடைந்து அவற்றால் ஒருபயனையுமடைந்திலவென்பது கருத்து. (கo)

கோல வெங்கதிர் மதியிவர் வைகலுங் கொடிய
பாலை வெஞ்சுரத் தாரழல் வெம்மைபட் டனரோ

காலை தன்னினு மாலையம் பொழுதினுங் கங்குல்
வேலை தன்னினும் பிறவினும் வேலைநீர் படிவார்.

(இ-ள்.) அழகிய சூரிய சந்திரர்கள் நாள்தோறுங் கொடிய பாலைவனத்தி லுள்ள தீயினது வெம்மையை யடைந்தனர்களோ? காலையிலும் மாலையிலும் இரவிலும் மற்றைக்காலங்களிலும் கடல்நீரில் முழுகுகின்றனர்.—எ-று.

பாலை வெஞ்சுரம் - இருபெயரொட்டு. (௧௧)

தொடரும் வானவர் யாவரு மையைதா டொழுவார்
கொடிய பாலைமுன் னுணர்கிலா தணுகினர் கொல்லோ
வடிசி வந்தகம் வெம்பியே யமுதமுண் டதற்காப்
படியின் மேலென்றுஞ் செல்கிலர் விண்மிசைப் படர்வார்.

(இ-ள்.) கூட்டமாகச்செல்லுகின்ற தேவர்களனைவரும் துர்க்கையின் பாதங்களை வணங்கவேண்டியவர்களாய், இந்தக் கொடிய பாலைவனத்தின் தன்மையை முன்னமே யுணர்ந்துகொள்ளாமற் சென்றனரோ? பாதங்கள் சிவந்து மனம் வெதும்பி (அது தணியும்பொருட்டு) அமுதமுண்டு அப்பாலை நிலத்தின் கொடுமையைக்கருதிப் பூமியில் எப்பொழுதும் நடந்து செல்லாதவர்களாய் ஆகாயத்தின்வழியாகச் செல்லுகின்றனர்.—எ-று.

ஐயை - துர்க்கை. (௧௨)

ஒள்ளி தாகிய தலைமையிற் பிறந்துளோ ருலக
மெள்ளு நல்குர வெய்தலா விழிந்தவர் கண்ணுங்
கொள்ளு மாறொரு பயன்குறித் தேகல் போற் கொடிய
கள்ளி தன்புடை நீழலுக் கொதுங்குவ கரிகள்.

(இ-ள்.) கீர்த்திபொருந்திய உயர்குடியிற் பிறந்துள்ளவர்கள் உலகத்தாரிகழ்கின்ற தரித்திரம் வருமாயின் தாழ்ந்தவர்களிடத்தும் ஒரு பிரயோசனத்தைக் கருதிச்செல்வதுபோலக் கொடியகள்ளிமரத்தின்நீழலில் யானைகளொதுங்கி நிற்கின்றன.

இரவி கம்மியன் சுட்டுறு கோல்கதி ரெரிதீ
மருவு செந்தரை பொறிமணி கொள்கலம் வறுங்கான்
கரிக ளேகரி காற்குழ றுதிக்கைநீர் கானல்
புரித ரும்பணி வெந்திடும் பணிக்குலம் போலும்.

(இ-ள்.) சூரியனே பொற்கொல்லனாகவும், அச்சூரியக்கிரணமே சுட்டுக்கோலாகவும்,பொருந்திய செம்மண் தரையே எரிகின்ற தீயாகவும், தீப்பொறிகளே மணிகளாகவும், வறிய அப்பாலைவனமே குமுட்டியாகவும்,யானைகளே கரிகளாகவும், அவ்வியானைத்துதிக்கையே காற்றைத்தருகின்ற ஊதுகுழலாகவும், கானலே நீராகவும்,வேகின்ற பாம்புகளே செய்யப்பட்ட ஆபரணமாகவும் விளங்கும்.—எ-று. (௧௪)

ஆன்ற வான்புவி நதிப்புனல் பாதல மதன்கட்
டோன்று நீத்தநீர் யாவையு மொருங்குறத் துற்றுச்
சான்ற பாலையஞ் செந்தழ லப்புன றன்னைக்
கான்ற வாறெனக் கிளர்வன வந்நிலக் கானல்.

(இ-ள்.) உயர்ந்த வானத்திலும் பூமியிலுமுள்ள ஆற்று நீர்களும் பாதலத்திற்றோன்றிய பிரவாகங்களுமாகிய எல்லாவற்றையு மொருமிக்கக்குடித்துப் பெரியபாலைவனமாகிய நெருப்பானது தான் குடித்த அந்நீரைப் பின்னுங் கக்கினதுபோலக் கானனீர் விளங்குகின்றன.—எ-று. (௧௫)

விஞ்சு கானல்வெண் டேரினை யாறென விரும்பி
நெஞ்சி னுன்னியே யிரலைமான் மடப்பிடி நெடுந்தாட்
குஞ்ச ரந்திரிந் துலைவன கொடியவெம் பணிகா
னஞ்சு தன்னையு மருந்துவ ஞமலிநீர் நசையால்.

(இ-ள்.) மிகுந்த கானனீராகிய வெள்ளிய பேய்த்தேரினை நதியென்று விருப்புற்று மனதில் நினைத்துக் கலைமானும் புள்ளிமானும் பெண்யானையும் பெரிய கால்களையுடைய ஆண்யானைகளும் திரிந்து அலைகின்றன; இதுவன்றியும், கொடிதாகிய வெவ்விய பாம்புகள்கக்கிய விஷத்தையும் நாய்கள் நீரினிட்த்துக்கொண்ட விருப்பத்தினுல் உண்ணுகின்றன.—எ-று. (கசு)

செய்ய மண்மக ளுலப்புறு வுந்தியந் தீயாய்
வெய்ய வன்செலற் கரியவப் பாலையே வுதலான்
மொய்யில் வெம்பணி புகையழ லுமிழ்வன முரணு
மையு றுங்கொடு நஞ்சொடு கான்றசெம் மணிகள்.

(இ-ள்.) சூரியன் செல்லுதற்கரிதாகிய அப்பாலை நிலமானது செவ்விய பூமிதேவியினது கெடாத உதராக்கினிபோன்றிருத்தலால், வல்லமையில்லாத வெவ்விய பாம்புகள் கக்கிய கருமையாகிய கொடியவிஷமும் மாணிக்கங்களும் அப்பாம்புகள் புகையையும் தீயையும் உமிழ்தலையொத்திருக்கும்.—எ-று.

உந்தியந்தீ-உதராக்கினி. பாம்புகள் விஷத்தைக் கக்குதல் புகையை யுமிழ்வதுபோலவும், மாணிக்கங்களைக் கக்குதல் அழலை யுமிழ்வதுபோலவு மிருந்தன வென்க. (கஎ)

முளையி னஞ்சொரி முத்தமு முந்துசெம் பரலு
மளவில் பாந்தளின் மணிகளு மீண்டியே யமர்தல்
விளிவி லவ்வனத் தீச்சுடத் தனதுமெய் வெடித்தே
யுளையு மண்மகண் மொக்குளுற் றிடுதிற னொக்கும்.

(இ-ள்.) மூங்கில்கள் சொரிந்த முத்துக்களும், உயர்ந்த செந்நிறம் பொருந்திய பருக்கைக்கற்களும், அளவற்றபாம்புகள் கக்கிய மாணிக்கங்களும், நெருங்கியிருத்தல், அழிவில்லாத பாலைவனத்தின் தீயானது சுடுதலால் தனதுதேகம் வெடித்து வருந்துகின்ற பூமிதேவியானவள் (அத்தேகத்தில்) கொப்புளத்தை யடைந்த தன்மையை யொத்திருக்கும்.—எ-று. (கஅ)

கள்ளி பட்டன பாலையுந் தீந்தன கரிந்து
முள்ளி பட்டன வெரிந்தன குராமர முளிந்து
கொள்ளி பட்டன காரகி லன்னதாற் கொடுந்தீப்
புள்ளி பட்டது போன்றது பாலையம் புவியே.

(இ-ள்.) கள்ளிமரங்கள் பட்டுப்போயின; பாலைமரங்களும் தீந்தன; முள்ளிச்செடிகள் கரிந்து எரிந்தன; குராமரங்கள் உலர்ந்து கொள்ளியாக எரிந்தன; கரிய அகில்மரமும் அவ்வாறேயாயிற்று; அதனுல் அப்பாலை நிலமானது கொடிதாகிய தீப் புள்ளிபட்டதுபோன் றிருந்தது.—எ-று. (கக)

இன்ன தாகிய பாலையஞ் சுரத்திடை யிறைவன்
றன்ன தாகிய தானைக ளொடுந்தலைப் படலு
மின்னு மாமுகில் பொழிந்தபின் றண்ணளி மிக்கு
மன்னு கின்றபூங் குறிஞ்சிபோ லாயதவ் வனமே.

(இ-ள்.) இத்தன்மையாகிய பாலைவனத்தில் முருகக்கடவுள் தமது சேனைகளுடன் எழுந்தருளியபொழுது அவ்வனமானது மின்னுகின்ற பெரியமேகங்கள் மழைபொழிந்தபின்பு மிகுந்த குளிர்ச்சியுடன் பொருந்தியிருக்கின்ற அழகியகுறிஞ்சி நிலத்தைப்போல விளங்கியது.—எ-று. (உ௦)

ஆற்ற ருந்திற லங்கிதன் னரசியன் முறையை
மாற்றி யெம்பிரான் வருணற்கு வழங்கின னென்ன
வேற்ற மாகிய வெம்மைபோய் நீங்கியே யெவரும்
போற்று நீரொடு தண்ணளி பெற்றதப் புவியே.

(இ-ள்.) எமது முருகக்கடவுள் சகித்தற்கரிய வல்லமைபொருந்திய அக்கினி தேவனது அரசாட்சியின் முறைமையைத் தவிர்த்து, வருணதேவனுக்குக் கொடுத்தருளினனென்று சொல்லும்படி அந்தப் பாலைவனமானது மிகுதியாகிய வெப்பந் தணிந்தொழிந்து யாவரும் புகழத்தக்க நீர்வளப்பத்துடன் மிக்க குளிர்ச்சியையுமடைந்தது.—எ-று. (உக)

காத னீங்கலா தலமரு மாருயிர்க் கரண
மாதி யீசன தருளின லவனதா கியபோ
லேது நீரிலா தழல்படு வெய்யகா னிளையோன்
போத லாற்குளிர் கொண்டது நறுமலர்ப் பொழிலாய்.

(இ-ள்.) விஷய விருப்பத்தினின்று நீங்காது அலைந்துகொண் டிருக்கின்ற அரிய பசுகரணங்கள் முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானது திருவருளினால் சிவகரணமாகிய தன்மையைப்போல, சிறிதும் நீர்வளமின்றி அக்கினிமயமாகிய கொடிய பாலைவனமானது எமது முருகக்கடவுள் எழுந்தருளுதலால், நறுமணங்கமழும் மலர்கள் நிறைந்த சோலையாய்க் குளிர்ச்சிபெற்றிருந்தது.—எ-று.

ஆன்மாக்களிடத்துச் சிவனருளடைந்தபோது பசுகரணங்கெட்டுச் சிவகரணமானவாறுபோல பாலைவனத்தில் முருகக்கடவுளடைதலால் அது வெம்மை நீங்கித் தண்மையை யடைந்ததென்க. (உஉ)

புறநெ றிக்கணே வீழ்ந்துளோர் சிவனருள் புகுங்கா
லறிவு மாற்றலுங் குறிகளும் வேறுபட் டனபோல்
வறிய செந்தழல் வெவ்வனம் வேலவன் வரலா
னறிய தண்மலர்ச் சோலையா யுவகைநல் கியதே.

(இ-ள்.) புறச்சமயங்களில் வீழ்ந்தலைகின்றவர்கள் சிவபெருமானது திருவருளுண்டாகியபொழுது தங்களது அறிவும்,வல்லமையும், செய்கையும் வேறுபட்ட தன்மையைப்போல, கொடிதாகிய செவ்விய நெருப்பினையுடைய பாலைவனமானது முருகக்கடவுள் எழுந்தருளிய காரணத்தால் நறுமணங்கமழுங் குளிர்ந்த மலர்ச்சோலையாய்க்களிப்பைத்தந்தது.—எ-று. (உங)

வேறு.

நீரறு முரம்பின் றன்மை நீங்குமச் சுரத்தின் றன்பா
லீரறு புயத்தன் செல்ல வெழில்கெழு பரங்குன் றத்திற்
பாரறு தவம்பூண் டுள்ள பராசரன் சிறார்க ளாய
வோரறு வகைமை யோரு மோதியா லதனைக் கண்டார்.

(இ-ள்.) நீர்ப்பசையற்ற பரலடுத்துயர்ந்த நிலத் தன்மையினின்று நீங்கியுள்ள அந்தப்பாலைவனத்தில் பன்னிரண்டு தோள்களையுடைய முருகக்கடவுளெழுந்

தருளியபொழுது, அழகுவிளங்குகின்ற திருப்பரங்குன்றத்தில் உலகத்தில்நிகரில்லாத தவத்தைச்செய்துகொண்டிருந்த பராசர புத்திரர்களாகிய ஆறுமுனிவர்களும் ஞான திருஷ்டியினால் அதனையறிந்தார்கள்.—எ-று. (உச)

தத்தனே யனந்த னந்தி சதுர்முகன் பரிதிப்பாணி
மெய்த்தவ மாலி யென்ன மேவுமூ விருவர் தாமு
மத்தன தருளை முன்னி யடுக்கலி னிருக்கை நீங்கி
யுத்தர நடவை யெய்தி யொய்யெனப் படர்த லுற்றார்.

(இ-ள்.) தத்தன், அனந்தன், நந்தி, சதுர்முகன், சக்கரபாணி, மெய்ம்மையாகிய தவத்தினையுடைய மாலி என்று சொல்லப்பட்ட ஆறுமுனிவர்களும் சிவபெருமானது திருவருளை நினைத்துத் திருப்பரங்குன்றத்தினின்று நீங்கி வடதிசை நோக்கி நடக்கத்தொடங்கி விரைவாகச் செல்லத்தொடங்கினார்கள்.—எ-று.

மெய்த்தவமாலி என்பதனை, மெய்ம்மையாகிய தவமாலி என ஒரு பெயராகக் கொள்ளுதலுமாம். (உரு)

ஆர்வல ராகு மைந்த ரறுவரு மளகை நேடிப்
பார்வல்வந் தணையு மாபோற் பாலையென் றுரைக்கு மெல்லை
நேர்வரு கின்ற காலை நெடும்படை நீத்தஞ் சூழச்
சூர்வினை முடிப்பான் செல்லுந் தோன்றல்வந் தணிய னானான்.

(இ-ள்.) அன்பினையுடைய ஆறுமுனிவர்களும் தாய்ப்பறவையைத் தேடி அதன் குஞ்சுகள் வந்து அணையுந்தன்மைபோலப் பாலைவனத்திற்கு நேராக வரும் பொழுது, நெடிய சேனைவெள்ளங்கள் சூழும்படி சூரர்களது கொடுஞ் செய்கையை யொழிக்கும்பொருட்டு எழுந்தருளுகின்ற முருகக்கடவுள் வந்து சமீபித்தருளினார்.

அணிமையிற் சேயோ னண்ண வாறுமா முகமும் பன்னி
ரிணைதவிர் புயமுங் கையு மேந்தெழிற் படையின் சீரு
மணியணி மார்புஞ் செங்கேழ் வான்றுகின் மருங்கும் பாதத்
துணையுமத் துணையிற் கண்டு தொழுதுகண் களிப்புக் கொண்டார்.

(இ-ள்.) முருகக்கடவுள் சமீபத்திற் சென்றவுடனே அவரது ஆறு திருமுகங்களையும், ஒப்பற்ற பன்னிரண்டு திருத்தோள்களையும், திருக்கரங்களையும், அக்கரங்களிலேந்திய அழகிய ஆயுதங்களின் சிறப்பையும், இரத்தினாபரணங்களணிந்த திருமார்பையும், செந்நிறமமைந்த சிறந்த பீதாம்பரமணிந்த இடையினையும், இரண்டு திருவடிகளையும் அப்பொழுது தரிசித்துக் கண்களிப்படைந்தார்கள்.—எ-று.

சேயோன் என்பதற்கு, தூரத்தில்வந்தவராகிய முருகக்கடவுள் எனப் பொருள்கூறலுமொன்று. (உஎ)

மூவிரு திறத்தி னோரு முற்றொருங் குணர்ந்த வள்ளல்
பூவடி வணங்கித் தேனீப் புதுநறா வருந்தி யார்த்து
மேவருந் தன்மைத் தென்ன வியப்பொடு வழுத்தி நின்று
தேவர்க டேவ வெம்பாற் றிருவருள் செய்தி யென்றார்.

(இ-ள்.) ஆறு முனிவர்களும் முற்றுணர்ச்சியினையுடைய முருகக்கடவுளது தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கி, தேனீயானது புதிய தேனை யுண்டு ரீங்காரஞ் செய்துகொண்டுவருந் தன்மையைப்போல அற்புதத்துடன் துதித்து நின்று தேவதேவராகிய எமதாண்டவரே! எங்களுக்குத் திருவருள் செய்தருள்வீராகவென்று பிரார்த்தித்தார்கள்.—எ-று. (உஅ)

என்றிவை யிருமூ வோரு மிசைத்துழி யுயிர்கட் கெல்லா
மொன்றிய வுயிரு மாகி யுணர்வுமா யிருந்த மூர்த்தி

தன்றிரு மலர்த்தாண் முன்னர் தலையளி யோடு தாழ்ந்து
நின்றுகை தொழுதிட் டன்னோர் நிலைமையை மகவான் கூறும்.

(இ-ள்.) இவ்வாறு ஆறு முனிவர்களும் இவ்வார்த்தையை விண்ணப்பஞ் செய்து நிற்கவும், நிலைபெற்ற எல்லா வுயிர்களுக்கும் உயிரும் உணர்வுமாக வெழுந்தருளிய முருகக்கடவுளினது தாமரைமலர்போன்ற திருவடிகளின் முன்னே இந்திரன் பேரன்புடன் கைகூப்பி வணங்கிநின்று அம்முனிவர்களது வரலாற்றைக் கூறுவானாயினன்.—எ-று. (உக)

மறுவறு பராச ரன்றன் மதலைக ளாகு மின்னோ
ரறுவருஞ் சிறாரே யாகி யாடுறு செவ்வி தன்னி
னிறைதரு சரவ ணத்து நெடுந்தடம் புனலிற் பாய்ந்து
முறைமுறை புக்கு மூழ்கி முகேரென வலைக்க லுற்றார்.

(இ-ள்.) இந்த ஆறு முனிவர்களும் குற்றமற்ற பராசரமுனிவரரது புதல்வர்களாம், இவர்கள் குழந்தைப்பருவமுள்ளவர்களாய் விளையாடுகின்றகாலத்தில் நீர் நிறைந்துள்ள பெரிய சரவணப்பொய்கையில் குதித்து வரிசையாக மூழ்கிமூழ்கி முகேரென்னும் பேரோசையுடன் நீரைக்கலக்கினார்கள்.—எ-று.

முகேர் என்பது, ஒலிக்குறிப்பு. (ருo)

உலைத்தலை யுணர்ச்சி கொள்ள வுள்ளுயிர் திரியுமாபோ
னிலைத்தலை யின்றி யார்க்கு நீந்தல்செய் துண்டு நீத்த
மலைத்தலை யடையு மெல்லை யாயிடை வதிந்த மீன்க
டலைத்தலை யிரிய வின்னோர் தன்மையங் கதனைக் கண்டார்.

(இ-ள்.) ஐம்புலன்கள் கெட்டவழியிற் செல்லும்பொழுது உடலினுள்ளிருக்கின்ற உயிரானது அலையுந்தன்மைபோல யாவர்க்கும் நிலைக்கக்கூடாதத்தாய் இம்முனிவர்கள் நீந்துகின்ற ஆழமாகிய அச்சரவணப்பொய்கை இவர்களால் கலக்கப்பட்டிருந்தபொழுது, அப்பொய்கையில் சஞ்சரித்திருந்த மீன்கள் பலவிடங்களில் சிதற இம்முனி புத்திரர்கள் அத்தன்மையைப் பார்த்தார்கள்.—எ-று. (ருக)

அங்கது தெரிந்து நின்றோ ராண்டுறு மீன்கள் பற்றித்
துங்கம துடைய கோட்டின் சூழலுய்த் துலவு மெல்லைச்
செங்கதி ருச்சி வேலைச் செய்கட னிரப்ப வுன்னிப்
பங்கமி லோன்மை பூண்ட பராசர னங்கண் வந்தான்.

(இ-ள்.) அவ்விடத்தில் அதனைப்பார்த்து நின்ற இவ்வறுவர்களும் அப்பொய்கையிலுள்ள மீன்களைப் பிடித்து உயர்ந்த கரையில்போட்டு விளையாடிக்கொண்டிருந்த சமைத்தில் சூரியன் உச்சியில் வரும்பொழுது செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றக்கருதிக் குற்றமற்ற தவவுறுதியைமேற்கொண்ட பராசரமுனிவரர் அவ்விடத்தில் வந்தனர்.—எ-று. (ருஉ)

வள்ளுறை கொண்ட தெய்வ வான்சர வணத்து வந்தோன்
பிள்ளைக ளாகு மின்னோர் பிடித்தபுன் றொழிலை நோக்கித்
தள்ளருஞ் சினமேல் கொண்டு தனயர்கா ணீவி ரீண்டே
துள்ளுறு மீனமாகிச் சுலவுதி ரென்று சொற்றான்.

(இ-ள்.) வளவிய நீர் நிறைந்த சிறந்த தெய்வத்தன்மை பொருந்திய சரவணப்பொய்கையினிடத்து வந்த அப்பராசரமுனிவரர் தம்புதல்வர்களாகிய இவ்வறுவர்களும் மீனைப்பிடித்த அவ்விழிதொழிலைப் பார்த்துத் தடுத்தற்கரிய கோபங்கொண்டு,

புதல்வர்களே! நீங்கள் இவ்விடத்திலேயே துள்ளுகின்ற மீன்களாகி யலைந்துகொண்டிருங்களென்று சாபமிட்டனர்.—எ-று. (ருக)

அவ்வுரை யிறுக்கு முன்ன ரறுவரு மேனை ளாற்றும்
வெவ்வினை யூழின் பாலான் மீனுரு வாகி யஞ்சி
யெவ்வமி தகனு கின்ற தெப்பக லுரைத்தி யென்னச்
செவ்விதி னுணர்ந்து மேலைத் திருமுனி புகல லுற்றான்

(இ-ள்.) அவ்வாறு சாபங் கூறி முடிவதற்குமுன்னே ஆறு புதல்வர்களும் முன்னுளிற்செய்துள்ள தீவினைப்பயனால் மீனுருவமடைந்து பயந்து துன்பம்பொருந்திய இச்சாபம் எப்பொழுது நீங்குவது சொல்லுமென்று கேட்க, அப்பராசரமுனிவரர் நன்றாக ஆலோசித்துக் கூறத்தொடங்கினர்.—எ-று. (ருச)

இத்தடந் தன்னின் மேனு ளிரா றுதோ ளுடைய வண்ண
லத்தன தருளால் வைக வனையனை யெடுக்கு மம்மை
மெய்த்தன முகுக்குந் தீம்பால் வெள்ளமா மதனை நீவிர்
துய்த்திடு மெல்லை தன்னிற் றொல்லுரு வாதி ரென்றான்.

(இ-ள்.) மேல்வருங்காலத்தில் இச்சரவணப்பொய்கையில் பன்னிரண்டு திருத்தோள்களையுடைய ஸ்ரீசண்முகக்கடவுள் சிவபெருமானதுதிருவருளினால் (குழந்தை வடிவாகத்)தங்கியிக்க, அக்கடவுளை யெடுக்கின்ற உமாதேவியாரது மெய்ம்மையாகிய ஸ்தனங்களினின்றுஞ் சிந்துகின்ற மதுரம்பொருந்திய பாலானது வெள்ளமாகப்பெருகும், அப்பாலை நீங்கள் உண்ணும்பொழுதில் பழைய உருவத்தையடைவீர்களென்று சாபவிமோசனங் கூறினர்.—எ-று. (ருரு)

என்றிவை முனிவன் கூறி யிரும்பகற் கடனை யாற்றிச்
சென்றன னதற்பின் மீனின் றிருவுரு வமைந்த வின்னோ
ரன்றுதொட் டளப்பில் கால மலமரு முணர்ச்சி யெய்தி
மன்றலஞ் சரவ ணத்து மாண்பெருந் தடாகத் துற்றார்.

(இ-ள்.) இவ்வார்த்தைகளைப் பராசரமுனிவர் கூறி உச்சிக்கடனை முடித்துச் சென்றனர்; அதன்பின்பு அழகிய மீனுருவத்தை யடைந்த இம்முனிவர்கள் அன்றுதொடங்கி அளவற்றகாலம் புத்திகலங்கி, மலர்மண நிறைந்த அழகிய மாட்சிமை பெற்ற பெரிய சரவணப்பொய்கையில் வசித்திருந்தார்கள்.—எ-று. (ருசு)

ஐயநீ யனைய பொய்கை யமர்தலு மவ்வை கண்டாங்
கொய்யென வெடுப்பக் கொங்கை யுகளநின் றிழிந்த தீம்பா
றுய்யதோர் தீர்த்த மாகித் துறுமலு மதனைத் துய்த்து
மையனீங் குற்றுத் தொல்லை வாலிய வடிவம் பெற்றார்.

(இ-ள்.) ஐயனே! தேவரீர் அச்சரவணப்பொய்கையி லெழுந்தருளியிருந்தபொழுது தாயாகிய உமாதேவியார் பார்த்து விரைந்தெடுத்த காலத்தில் (அவ்வம்மையாரது) இரண்டு ஸ்தனங்களினின்றும் ஒழுகிய மதுரம்பொருந்திய பாலானது பரிசுத்தமாகிய ஒரு தீர்த்தமாகிச் சென்று நெருங்கவும், இவர்கள் அப்பாலைக் குடித்து மயக்கநீங்கிப் பழைய நல்ல உருவத்தைப்பெற்றார்கள்.—எ-று. (ருஎ)

தொல்லுரு வடைந்த வின்னோர் தூமதி வேணி யண்ண
னல்லரு ளதனால் வந்து நவையகல் பரங்குன் றத்தி
னெல்லையில் விரதம் பூண்டாங் கிருந்தன ரெந்தை யீண்டுச்
செல்லுவ துணர்ந்து போந்தா ரென்றனன் றேவர் செம்மல்.

(இ-ள்.) பழைய உருவத்தை யடைந்த இம்முனிவர்கள் தூய்மையாகிய சந்திரனையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானது சிறந்த திருவருளினால் குற்றமற்ற திருப்பரங்குன்றத்திற்கு வந்து அளவற்ற விரதங்களை மேற்கொண்டு அவ்விடத்திலிருந்தார்கள்; எம்பெருமானே! தேவரீர் இங்கெழுந்தருளுவதை யுணர்ந்து (இப்பொழுது) வந்தார்கள் என்று தேவேந்திரன் கூறினன்.—எ-று. (௬௮)

தம்மக வுரைக்குங் கூற்றந் தாதையர் வினவு மாபோ
லம்மக பதிசொற் கேளா வருள்செய்து பராச ரன்றன்
செம்மல்க டம்மை நோக்கிச் செயிரறு குணத்து நீவி
ரெம்மொடு செல்வீ ரென்றான் யாவையு முணர்ந்த பெம்மான்.

(இ-ள்.) தமது புதல்வர்கள் சொல்லுகின்ற வசனத்தைத் தந்தையர்கள் கேட்குந் தன்மைபோல எல்லாவற்றையு முணர்ந்த முருகக்கடவுள் அவ்விந்திரன் கூறிய வார்த்தைகளைக்கேட்டுத் திருவருள் புரிந்து அப்பராசர புத்திரர்களைப்பார்த்துக் குற்றமற்ற குணத்தினையுடைய நீங்கள் எம்முடன் வாருங்களென்று கட்டளை யிட்டருளினார்.—எ-று. (௬௯)

பராசரன் மைந்த ரன்ன பான்மையை வினவிச் செவ்வேற்
கராசர ணடைந்தே மென்று கட்டுரைத் திறைஞ்சிச் செல்லச்
சராசரம் யாவுந் தந்த சண்முகன் றழல்கட் கெல்லா
மிராசர்தந் தன்மை யெய்து மிருஞ்சுரங் கடந்து போனான்.

(இ-ள்.) பராசரர் புதல்வர்களாகிய ஆறுமுனிவரும் அவ்வார்த்தையைக்கேட்டு சிவந்தவேற்படையேந்திய திருக்கரத்தினையுடைய எம்பெருமானே! தேவரீரைச் சரணமாக வடைந்தோமென்று கூறி வணங்கிச் செல்ல, இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளுமாகிய வனைத்தையுந்தருளிய ஸ்ரீசண்முகப்பெருமான் அக்கினிகளுக்கெல்லாம் அரசத்தன்மை யடைந்துள்ள பெரிய பாலைவனத்தைக் கடந்து சென்றருளினர்.—எ-று. (௭௦)

சுரம்புகு படலமுற்றிற்று.

திருவிருத்தம்-௧,௭௬௫.

---

உ

முருகன்றுணை.

# திருச்செந்திப்படலம்.

சுரம்து கடந்து நீங்கிச் சோதிவே லுடைய வள்ளல்
விரிபுனற் சடிலத் தண்ணன் மேவுசெங் குன்றூர் நோக்கிப்
பருமணி வயிர முத்தம் பலவளம் பிறவு மாழித்
திரையெறி யலைவா யாகுஞ் செந்திமா நகரம் புக்கான்.

(இ-ள்.) ஒளிபொருந்திய வேற்படையினை யேந்திய முருகக்கடவுள் பாலைவனத்தைக் கடந்து சென்று, பரந்த கங்கைநீரையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளுந் திருச்செங்குன்றூரைத் தரிசித்து, பருத்த மணிகளையும், வயிரங்களையும் முத்துக்களையும் பல வளங்களாகிய மற்றப்பொருள்களையுங் கடலலை

கள் வாரி மோதுகின்ற திருச்சீரலைவாயாகிய பெரிய திருச்செந்திப்பதியை யடைந்தருளினர்.—எ-று. செந்திமாநகரம்-திருச்செந்தூர். (க)

அறுமுக னங்க ணேகி யகிலகம் மியனை நோக்கி
யிறையிலோர் சினக ரத்தை யியற்றுதி யீண்டை யென்னத்
திறனுணர் புனிவர் செம்மல் சிந்தையி னுடித் தேவ
ருறைதிரு நகரம் வெஃக வொருதிருக் கோயில் செய்தான்.

(இ-ள்.) ஸ்ரீசண்முகப்பெருமான் திருச்செந்தூரை யடைந்து விசுவகன்மனைப்பார்த்து இவ்விடத்தில் விரைவாக ஒருஆலயத்தையுண்டாக்கக்கடவை யென்றருளிச் செய்தனர்; அத்தன்மையை யுணர்ந்த விசுவகன்மன் மனத்தினால் நினைத்துத் தேவர்கள் வசிக்கின்ற பொன்னுலகமும் விரும்பும் வண்ணம் ஒரு திருக்கோயிலையமைத்தனன்.—எ-று.

அகிலகம்மியன்-விசுவகன்மன். (உ)

பொன்னுறு மிரத நீங்கிப் புறனெலாந் தானை நண்ண
வந்நக ரதனு ளேகி யரும்பெருந் துணைவர் பூதர்
மன்னவ ரயன்மா லாதி வானவர் யாரும் போற்ற
மின்னுபொற் பீடத் தையன் வீற்றிருந் தருளி னானே.

(இ-ள்.) பொன்மயமாகிய இரதத்தினின்று மிறங்கிச் சேனைகளனைத்தும் வெளியிலிருக்க, அவ்வாலயத்தினுள் ளெழுந்தருளி அருமையாகிய பெரியதம்பிமார்களும், பூதகணத்தலைவர்களும், பிரமன் திருமால்முதலிய தேவர்களனைவருந்துதிக்கும்படி விளங்குகின்ற பொற்பீடத்தில் எமது முருகக்கடவுள் வீற்றிருந்தருளினர்.

வேறு.

பானிமிர் மென்குரற் பாற்படு நல்யாழ்
கானமி சைத்தனர் கந்தரு வத்தோ
ரானபல் சட்டுவ மங்கைதொ றேந்தி
வானமிர் தைச்செவி வாக்குறு மாபோல்.

(இ-ள்.) செம்மையாகிய பல அகப்பைகளைக் கைகளில் ஏந்தித் தேவாமிர்தத்தைக் காதின்வழியே விட்டாற்போலக் கந்திருவர்கள் மிகுந்த வெண்ணிறத்தினையுடைய தந்திரிகள் பூட்டப்பட்டுள்ள சிறந்த யாழ்களில் பல கானங்களையமைத்துப் பாடினார்கள்.—எ-று. (ச)

சுருதியெ லாமுணர் தூயவன் வானோர்
புரவலன் மாமுனி புங்கவர் யாரு
மருமலர் மாரி வழுத்தினர் வீசி
யிருபுடை தன்னினு மெய்தின ரீண்டி.

(இ-ள்.) சகல வேதங்களையுமுணர்ந்த பிரமன், தேவர்கள் தலைவனாகிய இந்திரன், பெரிய முனிவர்கள், தேவர்கள் முதலிய யாவர்களும் இரண்டுபக்கங்களிலும் நெருங்கிவந்து நறுமணங்கமழும் புஷ்பவருஷம்பொழிந்து துதித்தார்கள்.—எ-று.(ரு)

வாலிய தூயொளி வானதி யாவும்
பாலகன் மெய்யணி பார்த்தன ராடி
யேனுறு பாங்கரி னீண்டிய வாபோற்
காலினர் சாமரை கைக்கொ டசைத்தார்.

(இ-ள்.) வெண்ணிறத்தினையுடைய தூய்மையாகிய ஒளியமைந்த ஆகாய கங்கைகளெல்லாம் முருகக்கடவுளினது திருமேனியின் அழகைப் பார்த்தவர்களாகி

யசைந்து தருதியாகிய பக்கங்களில் நெருங்கி நிற்குந்தன்மையைப்போல வாயுக்கள் வெண்சாமரைகளைக் கையிற்கொண்டு விசிறினார்கள்.—எ-று. (சு)

ஒண்ணிழன் மாமதி யோரிரு வடிவா
யண்ணன் முகத்தெழி லார்ந்திட நண்ணி
விண்ணிடை நின்றென வெங்கனல் வருணன்
றண்ணிழல் வெண்குடை தாங்கினர் நின்றார்.

(இ-ள்.) ஒள்ளிய சாயையினையுடைய பெரிய சந்திரன் இரண்டுருவங் கொண்டு வந்து முருகக்கடவுளினது திருமுகத்தழகைப் பெறும்பொருட்டு ஆகாயத்தில் நின்றாற்போல அக்கினிதேவனும் வருணதேவனும் குளிர்ந்த நிழலைத் தருகின்ற வெண்குடைகளைப் பிடித்துக்கொண்டு நின்றார்கள்.—எ-று. (எ)

கட்டழல் கான்றிடு காமரு நாக
மெட்டும லாதன யாவையு மீண்டி
யுட்டெளி வாற்பணி வுற்றென வால
வட்டம சைத்தனர் வானவர் பல்லோர்.

(இ-ள்.) கண்களில் தீப்பொறிகளைக் கக்குகின்ற அழகிய அஷ்டநாகங்களும், அவையல்லாத மற்றைய நாகங்களும் எல்லாம் ஒருங்குகூடித் தெளிந்த மனத்துடன் வணங்கினாற்போலப் பல தேவர்கள் ஆலவட்டங்களை வீசினார்கள்.—எ-று. (அ)

வானுயர் தோள்விறல் வாகெனு மண்ண
லுனுடை வாள்கொடு சார்ந்தய னிற்ப
வேனைய தம்பியெ ரெண்ம ரிலக்க
ரானவர் போற்றி யகன்கடை நின்றார்.

(இ-ள்.) மிகவுமுயர்ந்த தோளினையுடைய வீரவாகுத்தேவர் தாம் உடைவாளைப்பிடித்து அருகில் அடைந்து நின்றுகொண்டிருக்க, மற்றைத்தம்பியர்களாகிய எட்டுவீரர்களும் இலக்ஷம் வீரர்களும் பெரியதலைவாயிலில் துதித்துக்கொண்டு நின்றார்கள்.—எ-று. (கூ)

வேறு.

பொருந்தி யின்னவர் புறத்துற வங்க
ணிருந்த ஞானமுத லெல்லையில் காலம்
வருந்து கின்றமக வான்முக நோக்கித்
தெரிந்தி டாதவரி னின்னன செப்பும்.

(இ-ள்.) இவர்களனைவரும் புறத்தில் சூழும்படி அங்கெழுந்தருளியிருந்த ஞானமுதல்வராகிய முருகக்கடவுள் அநேககாலமாக வருந்துகின்ற இந்திரனது முகத்தைப் பார்த்தருளி ஒன்று மறியாதவனைப்போல இவ்வார்த்தைகளை யருளிச்செய்வாராயினார்.—எ-று. (கo)

துறந்து நீதியமர் சூர்முத லானோர்
பிறந்த வாறுமவர் பேணிய நோன்பு
மிறந்த செய்யவர மெய்திய வாறுஞ்
சிறந்து பின்னரசு செய்திடு மாறும்.

(இ-ள்.) நீதிகடந்து கொடுங்கோல் செலுத்தி வாழ்கின்ற சூரபன்மன் முதலிய அசுரர்கள் பிறந்ததன்மையும், அவர்கள் விரும்பிச்செய்த தவமும், மிகுதியாகப் பெற்ற வரமும், சிறப்புற்றுப்பின்பு அரசுசெய்த தன்மையும்.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (கக)

மற்ற வெய்யவர்த மாயமு முற்கொள்
வெற்றி யும்வலியு மேன்மையு நம்பா
லிற்றை நாள்வரை யியற்றிய துன்பு
முற்று மொன்றற மொழிந்திடு கென்றான்.

(இ-ள்.) அக்கொடியவர்களது மாயமும், முன்னடைந்த வெற்றியும், வல்லமையும், மேன்மையும், அவர்கள் உங்களிடத்தில் இது வரையில் செய்த துன்பமுமாகிய எல்லாவற்றையும் விடாமல் சொல்லக்கடவை யென்று கூறியருளினார்.—எ-று.()

கோக்கு மாரனிவை கூற விசைந்தே
மீக்கொள் பொன்னுலக வேந்தய னின்ற
வாக்கின் வல்லகுர வன்றனை யன்பா
னோக்கி நீயிவை நுவன்றருள் கென்றான்.

(இ-ள்.) முதல்வராகிய முருகக்கடவுள் இவ்வாறு அருளிச் செய்தவுடனே, அதற் கிசைந்து ஏற்றுக்கொண்ட விண்ணுலகத் தலைவனாகிய இந்திரன் தன்னருகில் நின்ற வாக்கில் வல்ல தனது ஆசிரியராகிய பிரகஸ்பதிபகவானை அன்புடன் பார்த்து நீர் இதனை உரைத்தருள்வீராக வென்று கூறினான்.—எ-று.

மீக்கொள் பொன்னுலகவேந்து என்பதற்கு,மேலிடத்திற் பொருந்திய பொன்னுலகத் தலைவனாகிய இந்திரன் எனப் பொருள் கூறினுமாம். (கங)

வச்சி ரங்கொள்கரன் மற்றது செப்ப
வச்செ னக்குரவ னன்ன திசைந்தே
செச்சை மொய்ம்புடைய சேயிரு பொற்றா
ளுச்சி கொண்டுதொழு தின்ன துரைப்பான்.

(இ-ள்.) வச்சிராயுதத்தை யேந்திய கையினையுடைய இந்திரன் அவ்வாறு கூறியவுடனே வியாழபகவான் விரைவாக அதற்கிசைந்து வெட்சிமாலையை யணிந்த தோளினையுடைய முருகக்கடவுளது பொன்மயமாகிய இரண்டு திருவடிகளையுஞ் சிரமேற்கொண்டு வணங்கி இவ்வார்த்தையைக் கூறுவாராயினார்.—எ-று. (கச)

அறிதி யெப்பொருளு மாவிக டோறுஞ்
செறிதி யெங்கடுயர் சிந்துதன் முன்னிக்
குறிய சேயுருவு கொண்டனை யார்க்கு
மிறைவ நின்செயலை யாருணர் கிற்பார்.

(இ-ள்.) எவர்களுக்கும் முதல்வராகிய எமது பெருமானே! தேவரீர் எல்லாப்பொருள்களையும் அறிவீர், உயிர்கள்தோறும் (அவ்வுயிர்க்குயிராய்) நிறைந்திருப்பீர், எங்களது துன்பத்தை நீக்குதற்கு நினைத்துச் சிறிய குழந்தையுருவத்தைக் கொண்டருளினீர், தேவரீரது திருவருட் செயலை யாவர் உணரவல்லவர்கள்.—எ-று.(கரு)

எல்லை யில்புவனம் யாவையும் யாண்டு
மொல்லு மூவரு முயிர்த்தொகை யாவுந்
தொல்லை மேனிகொடு தோன்றினை யானீ
வல்ல மாயவியன் மற்றெவர் தேர்வார்.

(இ-ள்.) தேவரீர் அளவற்ற புவனங்களும், மற்றவைகளும், எவ்விடத்தும் பொருந்தியுள்ள திரிமூர்த்திகளும், உயிர்க்கூட்டங்க ளனைத்தும் தாமேயாகவுள்ள பழைமையாகிய திருவுருவத்தைக்கொண் டெழுந்தருளினீர். தேவரீரது வல்லமையாகிய மாயாவிலக்கணத்தை வேறே யாவரறியத்தக்கவர்கள்.—எ-று. (கசு)

வெய்யர் தன்மையை வினவிய தன்மை
யைய வன்னதை யறிந்திட வன்றே.
கைய ரேந்துயர் களைந்துள மீதிற்
செய்ய வின்புதவு சீரரு ளாமால்.

(இ-ள்.) எமது ஆண்டவரே! அசுரர்களது தன்மைகளைத் தேவரீர் வினவியருளியது அதனைத் தெரிந்துகொள்ளும் பொருட்டன்று, வஞ்சகர்களாகிய எங்களுடைய துன்பத்தை யொழித்து மனத்தில் சிறந்த இன்பத்தைத் தருகின்ற நல்ல திருவருளேயாகும்.—எ-று. (கஎ)

ஆகையா லவுணர் தன்மைக ளெல்லாம்
போகு மெல்லைபுகல் கின்றன னென்னு
வாகை சேர்குமர வள்ளலை நோக்கி
யோகை யோடரச னேதிடு கின்றான்.

(இ-ள்.) ஆதலால், அவ்வசுரர்களது வரலாறுகளனைத்தையும் அடியேனுக்குத் தெரிந்தவரையில் கூறுகின்றேனென்று வெற்றிபொருந்திய அருள்வள்ளலாகிய முருகக்கடவுளைப்பார்த்து மிகுந்த சந்தோஷத்துடன் வியாழபகவான் சொல்லத்தொடங்கினர்.—எ-று. (கஅ)

திருச்செந்திப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். - க,எஅரு.

---

## உற்பத்திகாண்டம் முற்றுப்பெற்றது.

---

கச்சியப்பசிவாசாரியர் திருவடிவாழ்க.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சிவசண்முகபரப்பிரஹ்மணேநம:

---

இரண்டாவது,

# அசுரகாண்டம்.

## மாயைப்படலம்.

ஊரி லான்குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரி லானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரி லானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்.

(இ-ள்.) ஊரில்லாதவரும், குணங்குறியில்லாதவரும், செயலில்லாதவரும், சொல்லப்பட்ட பெயரில்லாதவரும், முதலில்லாதவரும், முடிவில்லாதவரும், வேறொரு சார்பில்லாதவரும், வரவு போக்கில்லாதவரும், மேலில்லாதவரும், தமக்கு ஒப்பில்லாதவருமாகிய முருகக்கடவுள் எனது உயிர்த்தெய்வமாய் என்னுள்ளத்தில் எழுந்தருளியிருக்கின்றனர்.—எ-று.

எல்லாவுலகங்களுந் தம்மதேயன்றித் தமக்காகவும், தமக்கன்னியமாகவும் வேறுபிரித்துக் கூறுதற்கு ஒரு ஊரினையுமில்லாதவ ரென்பார், 'ஊரிலான்' என்றும், நிர்க்குணமூர்த்தியென்பதும், உருவாதிமூன்றும் ஆன்மாக்கள் பொருட்டுக்கொண்டருளிய வருட்படிவமே யன்றித்தமக்குச் சிறிதுமில்லாதவ ரென்பதுங் குறிப்பிப்பார், 'குணங்குறியிலான்' என்றும், சூரிய சந்நிதானத்தின் முன்னே முத்தொழிலுந் தாமே நிகழ்தல்போலத் தமது சந்நிதிமுன்னே அவ்வத்தொழில்கள் நிகழாநிற்பத் தாம் வாளாவிருத்தலின், 'ஒருசெயலிலான்' என்றும், எல்லாப் பெயர்களுந் தமக்குள்ளே யடங்கிநிற்பத் தமக்கென்றொரு பெயரினை மேற்கொள்ளாதவ ரென்பார், 'உரைக்கும் பேரிலான்' என்றும், அநாதி நித்தியரென்பார், 'முன்னிலான் பின்னிலான்' என்றும், எல்லாந் தம்மை யாதரவாகப்பற்றிநிற்பத் தாம் ஒன்றையுமாதரவாகப்பற்றுதலில்லாதவ ரென்பார், 'பிறிதோர்சாரிலான்' என்றும், தோற்றமிறுதி யில்லாதவ ரென்பார், 'வரல்போக்கிலான்' என்றும், தமக்குமேல் ஒரு தலைவனில்லாதவரென்பார், 'மேலிலான்' என்றும், சமான ரகிதரென்பார், 'தனக்கு நேரிலான்' என்றும், இத்தகைய பதிலக்கணங்களை யுடைய ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமானே எனதுயிர்த் தெய்வமாயுள்ளக் கோயிலின்கணெழுந்தருளியிருந் தனுக்கிரகிக்கின்றனரென்பார், 'உயிர்க்கடவுளா யென்னுளே நின்றான்' என்றுங் கூறினார்.

இஃது ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளினது நிஷ்களவடிவத்தைத் துதித்தது. (௧)

வீறு காசிபன் சிறுர்களாய் மேவிய வறுபா
னாறு கோடிய தாகிய வவுணருக் கரசன்
மாறின் மங்கல கேசியா மரக்கியை மணந்து
பேற தாகவே சுரசையென் றொருமகட் பெற்றான்.

(இ-ள்.) மேன்மைபொருந்திய காசிபமுனிவரது புதல்வர்களாயுள்ள அறு பத்தாறு கோடி அசுரர்களுக்கு அரசனுயுள்ள அசுரேந்திரனென்பவன் மாறுபாடில் லாத மங்கலகேசி யென்னும் அரக்கியைக்கூடி, அதன் பலனுகச் சுரசை யென்னும் ஒரு புதல்வியைப் பெற்றனன்.—எ-று. (உ)

தூய வம்மகள் வளர்ந்தபின் புகரெனுந் தொல்லோன்
றீய மாயையின் கல்விகள் யாவையுந் தெருட்டி
யாய விஞ்சையின் வல்லப நோக்கியே யவட்கு
மாயை யென்றுபேர் கூறினன் மனத்திவை மதிப்பான்

(இ-ள்.) தூய்மையாகிய அச்சுரசை யென்னும் புதல்வியானவள் வளர்ந்த பின்பு பழைமையாகிய சுக்கிராசாரியர் கொடிய மாயாவித்தைகள் முழுமையுங் கற் பித்து அவ்வித்தையின் சாமர்த்தியத்தைப்பார்த்து அவளுக்கு மாயை யென்று பெய ரிட்டுத் தன் மனத்தில் இவற்றை நினைக்கின்றார்.—எ-று. (௩)

இன்ன லெய்திய வவுணர்கள் சிறுமையு மிமையோர்
மன்ன னாதியர் பெருமையும் வானநாட் டுறைவோர்
நன்ன லந்தொலைந் தசுரரான் மெலிந்திட நந்தி
சொன்ன வாய்மையுங் கருதினன் புகரெனுந் தூயோன்.

(இ-ள்.) துன்பமடைந்துள்ள அசுரர்களது தாழ்வினையும், இந்திராதி தேவர் களது உயர்வினையும், விண்ணுலகத்தில் வசிக்கின்ற தேவர்கள் நல்ல இன்பத்தையிழ ந்து அசுரர்களால் துன்பமுறும்படித் திருநந்திதேவரிட்ட சாபத்தினையும் தூய்மையி னையுடைய சுக்கிராசாரியர் நினைத்தனர்.—எ-று. (௪)

கருதி யின்னண மேல்வருந் தன்மையுங் கண்டு
குருதி தோயும்வே லவுணர்கோன் பயந்தகோற் றொடியை
வருதி யென்றுகூய் வரம்பறு பேரருள் வழங்கி
யொருதி றந்தனைக் கேளெனத் தேசிக னுரைப்பான்.

(இ-ள்.) சுக்கிராசாரியர் இவ்வாறு சிந்தித்து மேல்நடக்கவேண்டிய முறை மையினையும் பார்த்து, உதிரந் தோய்ந்த வேலினை யேந்திய அசுரேந்திரன்பெற்ற அழ கிய வளையலையணிந்த அந்த மாயையை வாவென்றழைத்து அளவற்ற கிருபை புரிந்து ஒருசங்கதியைக் கேளென்று கூறுவாராயினர்.—எ-று. (௫)

வனச மங்கைதன் கணவனால் வாசவன் றன்னால்
முனிவர் தேவரா லளப்பிலா வவுணர்கண் முடிந்தா
ரனையர் மேன்மையை யாவரு முணர்குவ ரதனா
லுனது தந்தையும் வலியிழந் தேயொடுங் குற்றான்.

(இ-ள்.) திருமகள் நாயகனாகிய விஷ்ணுவினாலும், இந்திரனாலும், முனிவர் களாலும், தேவர்களாலும், அளவற்றஅசுரர்கள் அழிந்தார்கள்; அவ்வசுரர்களது பெரு மையை யாவரு மறிவார்கள்; அதனால் உன் தந்தையாகிய அசுரேந்திரனும் வல்லமை யிழந்து ஒடுங்கியிருக்கின்றான்.—எ-று. (௬)

மின்பொ ருட்டினுற் கேதகை மலர்ந்திடும் விளங்கு
மென்பொ ருட்டினுன் மாமழை சொரிந்திடு மீட்டும்
பொன்பொ ருட்டினுல் யாவுமுண் டாமதுபோல
வுன்பொ ருட்டினு லவுணர்க்கு மேன்மைய துள்தாம்.

(இ-ள்.) மின்னல் காரணமாகத் தாழைகள் மலரும், விளங்குகின்ற என்னிமித்தமாக மிக்க மழைகள் பெய்யும்; பொன்னினுல் எல்லா நன்மையுமுண்டாகும் அத்தன்மைபோல, உன்னிமித்தமாக அசுரர்களுக்குச் சிறப்புண்டாகும்.—எ-று. (எ)

வாச மாமலர் மடந்தையும் வந்தடி வணங்கப்
பேசொ ணுதவோர் பேரழ குருக்கொடு பெயர்ந்து
காசி பன்றனை யடைந்துநின் வல்லபங் காட்டி
யாசை பூட்டியே யவனெடும் புணருதி யல்லில்.

(இ-ள்.) நீ நறுமணங்கமழுந் தாமரைமலரில் வசிக்கின்ற திருமகளும் வந்து பாதங்களில் வணங்கும்படிச் சொல்லுதற்கரிய ஒரு பெரிய சுந்தர வடிவங்கொண்டு சென்று காசிபமுனிவரை யடைந்து உனது வல்லமையைக்காட்டி ஆசையையுண்டாக்கி அம்முனிவருடன் இரவில் புணரக்கடவை.—எ-று. (அ)

அல்லி டைப்புணர்ந் தசுரர்க டம்மையுண் டாக்கி
மெல்ல வங்கவர் தங்கட்கு நாமமும் விளம்பி
யெல்லை யில்வளம் பெற்றிட வவுணருக் கியலுந்
தொல்லை வேள்வியும் விரதமு முணர்த்துதி தோகாய்.

(இ-ள்.) மாயையே! நீ இரவில்புணர்ந்து அசுரர்களைப் பெற்று மிருதுவாக அவர்களுக்குப் பெயருமிட்டு அளவற்ற பெருஞ்செல்வத்தை யடையும்பொருட்டு, அசுரர்களுக்கிசைந்த பழைமையாகியயாகத்தையும் அதற்குவேண்டிய விரதத்தையும் உபதேசிக்கக் கடவை.—எ-று. (௯)

இன்ன தன்மைகண் முடிந்தபி னின்சிறு ரெவரு
நன்ன லந்தனை யடைய்வு நண்ணல ரெல்லாம்
பன்ன ரும்பழி மூழ்கவு மருந்தவம் பயில
வன்னை மீளுதி யென்றனன் புகரெனு மாசான்.

(இ-ள்.) இத்தன்மைகள் நிறைவேறிய பின்பு, உன் புதல்வர்களனைவரும் மிக்க சுகமடையவும், பகைவர்களனைவரும் சொல்லுதற்கரிய பழியில் மூழ்கவும் நீ அருமையாகிய தவத்தைச் செய்தற்கு அன்னையே! நீ மீண்டுவரக்கடவை யென்று சுக்கிராசாரியர் கூறினுர்.—எ-று. (௧0)

குரவன் வாய்மையை வினவியே கோதில்சீ ரவுணர்
மரபு மேம்படு தன்மையான் மற்றிவை யெல்லா
மருளு கின்றனை யாதலா லிப்பணி யடியேன்
புரிகு வேனென வவனடி வணங்கியே போனுள்.

(இ-ள்.) இவ்வாறு சுக்கிராசாரியர் கூறிய உண்மை மொழியை (மாயையானவள்) கேட்டுக் குற்றமற்ற சிறப்பினையுடைய அசுரர்களது சந்ததி விருத்தியாகும் பொருட்டு இவை யனைத்தையுங் கூறுகின்றீர்; ஆதலால், அடியேன் இத்தொழிலைச் செய்வேனென்று அவரது பாதங்களை வணங்கிச் சென்றனள்.—எ-று. (௧௧)

மயிலை யன்னவ ளவுணர்த மன்னற்கு மிணைய
செயலை யோதியே யவன்விடை யுங்கொடு சென்று

கயிலை யென்னநீ றுடியே காசிப னிருந்து
பயிலு நோன்புடை யெல்லையை நாடியே படர்ந்தாள்.

(இ-ள்.) மயில்போலுஞ் சாயலையுடைய அம்மாயையானவள் தந்தையாகிய அசுரேந்திரனுக்கும் இத்தன்மையை யுரைத்து அவனுத்தரவையும் பெற்றுக்கொண்டு சென்று, திருக்கயிலை மலையைப்போல (வெண்ணிறமாகச்) சர்வாங்கமும் திருவெண்ணீற்றை யணிந்துகொண்டு காசிபமுனிவர் இருந்து தவஞ்செய்கின்ற இடத்தைத் தேடிச் சென்றனள்.—எ-று. (௧௨)

திருவு மாரவே ளிரதியுந் திலோத்தமை யென்ன
மருவு தையலு மோகினி யென்பதோர் மாது
மொருத னித்திரு வடிவுகொண் டாலென வுலகிற்
பொருவின் மாயவள் பேரழ குருக்கொடு போனாள்.

(இ-ள்.) உலகத்தில் ஒப்பில்லாத மாயையானவள் திருமகளும், மன்மதனது மனைவியாகிய இரதியும், திலோத்தமை யென்பவளும், மோகினி யென்பவளும் ஒப்பற்ற ஒருவடிவங்கொண்டாற்போல மிகுந்த அழகினையுடைய உருவங்கொண்டு சென்றனள்.—எ-று. (௧௩)

மண்ணுற் றோர்களு மாதிரத் தோர்களு மதிதோய்
விண்ணுற் றோர்களு மன்னவ ளெழினலம் விரைவிற்
கண்ணுற் றோர்சில ரணுகினர் காமவேள் கணையின்
புண்ணுற் றோர்விளக் கழலுறு பறவையிற் புலர்ந்தார்.

(இ-ள்.) இந்நிலவுலகத்திலுள்ளவர்களும், திசைகளிலுள்ளவர்களும், சந்திரன் தவழும் விண்ணுலகத்துள்ளவர்களும் அம்மாயையினது அழகின்றன்மையை விரைவாகப் பார்த்து இஃது இத்தன்மையினதென் றுணராதவர்களாய், மன்மதபாணத்தால் புண்பட்டுத் தீபாக்கினியில் விழுகின்ற விட்டிற்பறவையைப்போல வருந்தினார்கள்.—எ-று. (௧௪)

மதியு ஞாயிறுஞ் சூழ்தரு மேருவின் வடபால்
விதிம கன்றவம் புரிதரும் வியனிலை மருங்கி
னதிர்சி லம்பொடு மேகலை புலம்புற வனையா
டிதிகொ லென்றெலாத் தேவரு மையுறச் சென்றாள்.

(இ-ள்.) சந்திர சூரியர்கள் சூழ்ந்து வலம்வருகின்ற மகமேருமலையின் வடபாகத்தில் பிரமபுத்திரராகிய காசிபமுனிவர்தவஞ்செய்துகொண் டிருக்கின்ற உயர்ந்த தவச்சாலைக்குச் சமீபத்தில் ஒலிக்கின்ற மேகலையுஞ் சிலம்புஞ் சப்திக்கும்படி அந்த மாயையானவள் தன்னைப்பார்த்த தேவர்களெல்லாம் இவள் திதிதேவியோ வென்று சந்தேகிக்கும்படிச் சென்றனள்.—எ-று. (௧௫)

சென்ற மாயையக் காசிப னிருக்கையிற் றிருவாழ்
மன்றல் வாவியுந் தடங்களுஞ் சோலையு மணிசெய்
குன்று மாமலர்ப் பள்ளியு மண்டபக் குழாமுந்
தன்ற னாணையாற் றுண்ணெனச் சூழ்தரச் சமைத்தாள்.

(இ-ள்.) அவ்வாறு சென்ற மாயையானவள் அந்தக்காசிபமுனிவரது ஆசிரமத்தில் திருமகள்வாழும் நறுமணங்கமழ்கின்ற மலர்வாவிகளும், தடாகங்களும், சோலைகளும் மாணிக்கத்தாலாகிய செய்குன்றுகளும், சிறந்த புஷ்பசயனமும், மண்டபக் கூட்டங்களும் தனது கட்டளையினால் விரைவிலுண்டாகும்படிச் செய்தனள்.—எ-று.

செய்குன்று - மேடை. (௧௬)

இனைத்தெ லாமவண் வருதலு மெந்தைதன் னடியை
மனத்தி னிற்கொடு பொறியினை யுரத்தினுல் வாட்டித்
தனித்து நோற்றிடுங் காசிபன் புகுந்தவத் தகைமை
யனைத்து நோக்கியீ தென்கொலென் றதிசய மடைந்தான்.

(இ-ள்.) இவைகளெல்லாம் அவ்விடத்தி லுண்டாகவும், எம்பெருமானது திருவடிகளை மனதில் தியானித்துக்கொண்டு பஞ்சேந்திரியங்களை அறிவினுலடக்கித் தனித்திருந்து தவஞ்செய்கின்ற காசிபமுனிவரர் புதிதாகத் தோன்றிய அத்தன்மைகளனைத்தையும் பார்த்து இஃதென்னையென்று ஆச்சரியமடைந்தனர்.—எ-று. (கஎ)

முற்று மாங்கவை யாசையி னெடிதுபன் முறையா
லுற்று நாடியே மாயைதன் செயலென வுணரா
னிற்றெ லாமிவ ணியற்றினர் யாரென வெண்ணிச்
சுற்று நோக்கினன் யாரையுங் காண்கிலன் றூயோன்.

(இ-ள்.) பரிசுத்தராகிய காசிபமுனிவரர் அவைகளனைத்தையும் ஆசையுடன் விரைவாகப் பலமுறையுற்றுநோக்கி, இவை மாயையின் செயலென்றுணராதவராய் இவையனைத்தையும் இவ்விடத்திற் செய்தவர்கள் யாவரொன்று நினைத்துச் சுற்றிலும் பார்த்து ஒருவரையுங் காணுதவராயினுர்.—எ-று. (கஅ)

வேறு.

மெய்த்தவ வுணர்ச்சியை விடுத்து மேலையோ
னத்தன தருளினு லணங்கு மாயையால்
வைத்தன கண்ணுறு மனங்கொள் காதலாற்
சித்திர மெனவெரீஇ யினைய செப்புவான்.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய காசிபமுனிவர் உண்மையாகிய தவவுணர்ச்சியை விட்டு, சுக்கிராசாரியரது அருளைக்கொண்டு மாயையானவள் தனது மாயாவல்லபத்தால் அங்கு அமைத்துள்ளவைகளைப்பார்த்து மனதிற்பொருந்திய ஆசையால் சித்திரத்தை யொப்பாகஸ்தம்பித்து மயங்கி நின்று இவற்றைக் கூறுவார்.—எ-று.

அத்தனதருளினுல் என்பதற்கு, சிவபெருமான் திருவருளால் எனினுமாம்.

வானநா டிழிந்ததோ மகத்தின் வேந்துறை
தானநா டிழிந்ததோ தனத னுதியோ
ரேனைநா டிழிந்ததோ விதுவன் றேலிவை
யானவா றுணர்கிலே னழுங்கு சிந்தையேன்.

(இ-ள்.) விண்ணுலக மிறங்கியதோ? இந்திரன் வசிக்கின்ற அமராவதிநகரமிறங்கியதோ? குபேரன் முதலியவர்களது மற்றையநகரங்க ளிறங்கினவோ? இஃதில்லையாயின், வருந்துகின்ற மனத்தினையுடைய யான் இவை வந்தவாறறியேன். ()

ஆரணன் செய்கையோ வகில முண்டுமிழ்
நாரணன் செய்கையோ வவர்க்கு நாடொணுப்
பூரணன் செய்கையோ பிறர்பு ரிந்ததோ
காரணந் தேர்கிலேன் கவலு நெஞ்சினேன்.

(இ-ள்.) இவை பிரமன் செயலோ? உலகங்களையுண்டுமிழ்ந்த திருமாலின் செயலோ? அல்லது, அப்பிரமவிஷ்ணுக்களால் தேடியறிதற்கரிய சிவபெருமானது செயலோ? மற்றவர்களது செயலோ? வருந்துகின்ற மனத்தினனுகிய யான் இதன்காரணத்தையின்னதென் றுணரேன்.—எ-று. (உக)

புன்னெறிக் கானிடைப் புகுந்த வித்திரு
நன்னெறிக் கேதுவோ நலந்த விர்ந்திடுந்
துன்னெறிக் கேதுவோ தொல்லை ஞாலமே
லெந்நெறிக் கேதுவென் றிதுவுந் தேர்கிலேன்.

(இ-ள்.) அருநெறியினையுடைய இக்காட்டில் தோன்றிய இந்தச் செல்வமானது நல்லவழிக்கு ஏதுவோ? நன்மை நீங்கிய தீயவழிக்கு ஏதுவோ? பழைமையாகிய இந்நிலவுலகத்தில் எவ்வழிக்கேதுவென்று இதனையுமுணரேன்.—எ-று. (உ௨)

என்றிவை சொற்றிவண் யாவ தாயினு
நன்றத னியற்கையு நமக்கு முன்னரே
யொன்றறத் தெரிவுறு முணர்ச்சி யிங்ஙனஞ்
சென்றது பழுதெனச் சிந்தித் தானரோ.

(இ-ள்.) என்று இவைகளைக் கூறி, இவ்விடத்து இது யாதாயினுமாகுக; இதின் சுபாவங்களையெல்லாம் நமக்கு முன்னமே ஒன்றையும்விடாமல் தெரியத்தக்க அறிவானது இவ்விடத்தில் சென்றது தவறுகுமென்று சிந்தித்தனர்.—எ-று. (உ௩)

தெற்றெனத் தன்மனந் தேற்றித் தொன்மைபோ
னற்றவ மியற்றுவா னணுகும் வேலையின்
மற்றது தெரிந்திடு மாயை தூமணிப்
பொற்றையிற் றமியளாய்ப் பொலிந்து தோன்றினள்.

(இ-ள்.) விரைவாகத் தனது மனத்தை ஒருமைப்படுத்திக் கொண்டு முன்போலவே தவஞ்செய்யும்பொருட்டுச் செல்லும்பொழுது அதனை யுணர்ந்த மாயையானவள் (தன்னாலியற்றப்பட்ட) மாணிக்க மலையின்மேல் தனியளாய் விளங்கித்தோன்றினள்.—எ-று. (உ௪)

தோன்றின ணிற்றலுந் தொல்லை நான்முகற்
கான்றதோர் காதல னவளை நோக்கினன்
வான்றிகழ் கற்பக வல்லி செய்தவத்
தீன்றதோர் கொடியிவ ளெய்திற் றூவென்றான்.

(இ-ள்.) மாயையானவள் அம்மாணிக்க மலையின்மேல் தோன்றிநிற்கவும், பழைமையாகிய பிரமனுக்குச் சிறந்த புதல்வராயுள்ள காசிபமுனிவரர் அம்மாயையைப்பார்த்தவராய் விண்ணுலகத்தில் விளங்குகின்ற கற்பகக்கொடியானதுதான் செய்த தவத்தினால் பெற்றதாகிய ஒரு பூங்கொடியானது இங்குவந்ததோவென்று கூறினர்.

நாற்றலை யான்மக னம்மு னிக்கொடி
தோற்றிய தற்புதச் சூழ்ச்சிக் கேதுவென்
றூற்றுறு தவத்திற னகற்றி யாயிடை
வீற்றிருந் திடுவது விடுத்துப் போயினன்.

(இ-ள்.) பிரமபுத்திரராகிய காசிபமுனிவரர் நமக்கெதிரில் இப் பூங்கொடி தோற்றியது அற்புதமான காரிய நடத்தற்கேதுவாகு மென்று தாம் செய்கின்ற தவத்தை விட்டு அவ்விடத்தெழுந்தருளுதலையும் விட்டு நீங்கிச் சென்றனர்.—எ-று. (உ௬)

கண்ணகன் வரைமிசைக் கடிது போயுறீஇ
யண்ணிய னுதலு மரிவை யாருபுறப்
பெண்ணுரு வேகொலிப் பெற்றித் தாலெனு
வெண்ணினன் மையலுக் கெல்லை காண்கிலான்.

(இ-ள்.) இடமகன்ற மலையின்மீது விரைவாகச் சென்று சமீபித்தவுடன் பெண்ணுகத்தோற்றவும், இத்தன்மையாகக் காணப்படுவது பெண்ணுருவமோவென்று ஆசைக்களவு காணுதவராய்ச் சிந்தித்தனர்.—எ-று. (உஎ)

புண்டரி கத்திகொல் பொன்னம் பாவைகொ
லண்டர்த மணங்குகொ லென்னி னன்னரைக்
கண்டறி வேனெனைக் காதல் பூட்டிய
வொண்டொடி யினையளென் றுணர்கி லேனரோ.

(இ-ள்.) வெண்டாமரையிலிருக்குங் கலைமகளோ? திருமகளோ? தேவர்களுக்கரசியாகிய இந்திராணியோ? இவர்களாயிருப்பின் அவர்களை முன்னரே யான் கண்டறிந்திருக்கின்றேன். எனக்குக் காமத்தை யுண்டாக்கிய இப்பெண்ணுனவள் இன்னுளென்று அறியேன்.—எ-று. (உஅ)

சேயிருங் கமலமேற் செம்மல் செய்கையா
லாயவ ளென்னிலிவ் வழகு பெற்றிடா
ளேயது தேறின னல்லை யில்லதோர்
மாயையே பெண்ணென வந்த வாறென்பான்.

(இ-ள்.) (இப்பெண்ணுனவள்) பெரிய செந்தாமரை மலரில் வசிக்கின்ற பிரமனது சிருஷ்டியினுலுண்டானவளா யிருப்பின் இத்தன்மையான அழகைப்பெற்றிருக்கமாட்டாள். ஆ ஆ! நான் அதைத் தெளிந்தேன். அளவில்லாததாகிய மாயையே இப்பெண்ணுருவங்கொண்டுவந்தது என்று கூறுவார்.—எ-று. (உகூ)

புகன்றிவை பற்பல பொருவி னுன்முகன்
மகன்றன தருந்தவ வலியும் போதமு
மகன்றனன் புணர்ச்சிவேட் டழுங்கி நைவதோர்
மகன்றிலின் பரிசென வருத்த மெய்தினன்.

(இ-ள்.) ஒப்பற்ற பிரமபுத்திரராகிய காசிபமுனிவர் இவ்வாறு பற்பலவிதங்களாகக் கூறித் தமது அரிய வலிமையையும் ஞானத்தையு மிழந்தவராய்ப் புணர்ச்சியை விரும்பி வருந்திவாடுகின்ற அன்றிற் பறவையைப்போல வருத்தமடைந்தனர். ()

உண்ணிக மூன்பொருட் டுயிர்கொல் வேட்டுவர்
கண்ணியுட் பட்டதோர் கலையின் மாழ்குவான்
பெண்ணர சாயவிப் பேதைக் கென்கொலோ
வெண்ணமென் றிடருழந் திரங்கி யேங்கினன்.

(இ-ள்.) உண்ணுதற்குரிய மாமிசத்தின்பொருட்டு உயிர்களைக் கொல்லுகின்ற வேடுவர்களது வலையிலகப்பட்ட மானைப்போல மயங்குகின்றவராகிய காசிபமுனிவரர் பெண்கள் நாயகமாகிய இம்மாதினுக்கு எண்ணம் யாதோவென்று துன்புற்று ஏக்கங்கொண்டனர்.—எ-று. (௩க)

அதுபொழு தவுணரை யளிக்க வந்திடுந்
திதிநிகர் மடமகள் சிறந்த கண்களாற்
பொதுவிய னேக்கொடு புணர்ச்சி நோக்கினைக்
கதுமெனக் காட்டினள் முனிவன் காணுற.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் அசுரர்கள் பெறும்பொருட்டுத் தோன்றிய திதிதேவியையொத்தமாயையானவள் தனது அழகியகண்களினுல் பொதுநோக்கத்துடன் புணர்ச்சி நோக்கத்தையுங் காசிபமுனிவர் பார்க்கும்படி விரைவாகக்காட்டினள். ()

கண்டனன் முனிவரன் கலங்கி னான்பொதுக்
கொண்டதோர் நோக்கியல் குறித்துக் கூடுத
லெண்டரு நோக்கினா லிவளை யெய்துமா
றுண்டென நினைந்தன னுவப்பி னும்பரான்.

(இ-ள்.) காசிபமுனிவரர் (அம்மாயையினது) பொதுநோக்கத்தைகுறித்துப் பார்த்துக்கலங்கினவராய்ப் பின்பு, நினைக்கத்தக்க புணர்ச்சிநோக்கத்தினால் இவளையணைதல் கூடுமென்று சந்தோஷமிகுதியினால் நினைத்தனர்.—எ-று. (கூரு)

பெருந்துய ருதவுவெம் பிணியுந் தீர்ப்பதோர்
மருந்துமற் றுதலு மையன் மேதகு
மருந்தவ முனிவர னனைய மாதுதன்
திருந்திய நோக்கியற் றெளிந்து செப்புவான்.

(இ-ள்.) மிகுந்த துன்பத்தைத் தருகின்ற கொடியவியாதியும், அவ்வியாதியை நீக்குகின்ற மருந்தும் அந்நோக்கமேயாகவும், மிக்க காமமயக்கத்தினையுடைய அரியதவசிரேஷ்டராகிய காசிபமுனிவரர் அம்மாயையினது செவ்விய பார்வையின் தன்மையையுணர்ந்து கூறுகின்றார்.—எ-று.

இதனை— "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு - நோய்நோக் கொன் றந்நோய் மருந்து" என்னுந் திருக்குறளானறிக. (கூசு)

கற்பனை முதலிய கடந்த கண்ணுதற்
சிற்பரன் யாவையுஞ் சிதைய வீறுசெ
யற்புத மும்மவ னருளும் போன்றதாற்
பொற்புறு கின்றவிப் பூவை நாட்டமே.

(இ-ள்.) அழகுபொருந்திய இப்பெண்ணினது பார்வையானது கற்பனாதீதராகிய நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் எல்லாப்பொருள்களு மழியும்படிச் சங்கரிக்கின்ற அற்புதத்தையும், அவரது திருவருளையும் ஒத்திருந்தது.—எ-று.

விரகநோயைத் தருதலால், சிவபெருமானது சங்காரத்தொழிலினற் புதத்தையும், புணர்ச்சிக்குறிப்பைத் தருதலால் அவரது திருவருளையும் போன்றதென்க.

மாயையுங் கொலையுமே மருவி வைகலு
மாயதோ ருலகினை யளிக்கு நீர்மையாற்
பாயிருந் திரைக்கட னடுவட் பள்ளிகொ
டேயனை நிகர்த்ததித் தோகை நோக்கமே.

(இ-ள்.) இப்பெண்ணினது பார்வையானது மாயமுங் கொலையும்பொருந்தி நாள்தோறும் நிலைபெற்ற உலகத்தைப்பாதுகாக்கின்ற தன்மையினால் (கரையை மோதிப்) பாய்கின்ற பெரிய அலைகளையுடைய திருப்பாற்கடலின் மத்தியில் பள்ளி கொள்ளுந் திருமாலை யொத்தது.—எ-று. (கூசு)

இயலிருண் மேனியா லிடியி னார்ப்பினால்
வியனுயிர் முழுவதும் வெருவச் செய்துடன்
பயனுறு தீம்புனல் பரிவி னீதரு
புயலையு நிகர்த்தன பூவை பார்வையே.

(இ-ள்.) இப்பெண்ணினது பார்வைகள் அழகமைந்த இருள்வடிவினாலும் இடியின் ஆரவாரத்தாலும், மிகுதியாகிய உயிர்கள் முழுவதையும் நடுங்கச் செய்து

அதனுடன் பயனுகப்பொருந்திய மதுரமாகிய நீரினை விருப்பத்துடன் தருகின்ற மேகத்தையு மொத்தன.—எ-று. (கூஎ)

என்பன பலபல வெண்ணி யன்னவ
டன்படி வத்துருத் தகைமை காணுறீஇ
யன்பினில் வியந்துநின் றழுங்கு நெஞ்சொடு
நன்பெரு நயப்பினு னவிறன் மேயினன்.

(இ-ள்.) என்பனவாகிய எண்ணங்களைப் பலவகையாக நினைத்து அவளது வடிவத்தின் தன்மையைக்கண்டு ஆசையோடு புகழ்ந்து நின்று வருந்துகின்ற மனத்துடன் மிகப்பெரிய விருப்பத்தினுல் சொல்லத் தொடங்கினுர்.—எ-று. (கூஅ)

வேறு.

வானுறு புயலின் றோற்றம் வரம்பில்சீர்க் கங்குல் வண்ண
மேனைய கருமை யெல்லா மிலக்கணத் தொருங்கே யீண்டி
மீனுறழ் தடங்க ணுள்பான் மேவிய வென்ப தல்லா
னமார் கூந்தற் கம்மா நாம்புக லுவமை யாதோ.

(இ-ள்.) ஆகாயத்திற்பொருந்திய மேகத்தின் நிறமும், அளவற்ற சிறப்பினையுடைய இருளின் வடிவமும்,மற்றைக்கருமைகளைத்தும் முறைமைப்படி ஒருங்கே கூடப்பெற்றுச் சேற்கெண்டைபோலும் பெரியகண்ணினையுடைய இந்தப் பெண்ணினிடத்துச் சேர்ந்துள்ளனவென்று கூறுவதல்லாமல், நறுமணங்கமழுங் கூந்தலுக்கு நாம் சொல்லப்போகின்ற உவமைப்பொருள் வேறே யாதிருக்கின்றது?—எ-று. (கூகூ)

கோட்டுடைக் குழவித் திங்கள் குனிசிலை யிரண்டு மானின்
சூட்டுடை நுதற்கொவ் வாது தொலைந்துபோய்த் தொல்லை வான
நாட்டிடைக் கரந்துந் தோன்ற நணுகியுந் திரியு மென்னின்
மீட்டிதற் குரைக்க லாகு முவமைகள் வேறு முண்டோ.

(இ-ள்.) வளைவாகிய இளம்பிறையும், வளைந்த வானவில் தனுசிராசியென்னும் இரண்டு வில்லும் இப்பெண்ணினது சுட்டியை யணிந்த நெற்றிக்கு ஒப்பாகாமல் நீங்கிச்சென்று பழைமையாகிய விண்ணுலகத்தில் மறைந்தும் வெளிப்பட்டுந் திரியுமாயின், பின்னும் அந்நெற்றிக்குச் சரியாகச் சொல்லக்கூடிய உபமானப்பொருள்கள் வேறுயாதிருக்கின்றன?—எ-று. (சo)

அருவத்திற் றிகழுங் காம னுடலஞ் சிலையு நெற்றி
யுருவத்துக் குடைந்து வான்புக் கோதுங்கிய மகவான் வில்லு
மருவத்தந் துணைத்து மென்னின் மற்றவை யிரண்டு மாதின்
புருவத்தைப் போலா தம்மின் மீமிசைப் பொருந்து மன்றே.

(இ-ள்.) அருவமாக விளங்குகின்ற மன்மதனது வெற்றிபொருந்திய கரும்புவில்லும் நெற்றியினுருவத்திற்குத் தோற்று வானத்திற் சென்று மறைந்துள்ள இந்திரதனுசும் ஒப்பாக எடுத்துக் கூறுவோமாயின், அவை யிரண்டும் இப்பெண்ணினது புருவங்களுக்கு ஒப்பாகா ; அவை தமக்குத்தாமே யொக்கும்.—எ-று. (சக)

வண்ணமா வடுக்கோ னீலம் வாளயில் கயல்சே லென்றே
யெண்ணின வவற்றி லொன்றும் யாவது மியல்புற் றன்றூற்
கண்ணிணைக் கிணையே தென்னிற் காமர்பாற் கடலு ளெங்கோ
னுண்ணிய வெழுநஞ் சென்னி லொருசிறி தொப்ப தம்மா.

(இ-ள்.) அழகிய மாவடுவும், அம்பும், நீலோற்பலமும், வாளும், வேலும், கயற்கெண்டையும், சேற்கெண்டையுமென்று கூறப்பட்டனவற்றுளொன்றும் வேறு

ள்ளவைகளும் ஒப்புள்ளதன்று; ஆயின் இவளது கண்களுக்கு ஒப்பாவதுயாதென்னில், அழகிய பாற்கடலினிடத்தில் எமது சிவபெருமானுண்ணும்படி தோன்றிய ஆலாகல விஷமாயின் சிறிது ஒப்பாகும்.—எ-று. (௬௨)

எள்ளென்று மோத்தி யென்று மேர்கொள்சம் பகப்போ தென்றுந்
தள்ளருங் குமிழ தென்றுஞ் சாற்றின ரவைக ணடிற்
றெள்ளிது மன்று வேறு செப்பவோர் பொருளு மில்லை
யுள்ளதொன் றுரைக்க வேண்டுந் துண்டத்துக் குவமை தேரின்.

(இ-ள்.) எள்ளின் பூவென்றும், ஓந்தியென்றும், அழகிய சண்பக அரும்பென்றும், நீக்குதற்கரிய குமிழம்பூவென்றும் உவமையாகப் புலவர்கள் கூறினார்கள்; அவைகளைப் பார்க்குமிடத்தில் தெளிவாகப் பொருந்தியது மன்று. வேறுவமை சொல்லுதற்கு வேறொருபொருளுமில்லை. இவள் மூக்கிற்கு உவமையைத் தேர்ந்து கூறுமிடத்தில் உள்ள பொருளில் ஒன்றைச் சொல்லவேண்டும்.—எ-று.

ஒத்தி-வலித்தல்விகாரம். (௬௩)

கெண்டையந் தடங்கட் பாவை கேழ்கிள ரிதழ்க்கொப் புன்னிற்
றெண்டையங் கனியுண் டென்று சொல்வனே லதுவுந் துப்பா
லுண்டிடும் விருப்பினோருக் குலப்புறு வமிர்த நல்கிக்
கொண்டிருந் திடினே யொப்பா மில்லையேற் கூடா தன்றே.

(இ-ள்.) சேற்கெண்டைபோலும் விசாலமாகிய கண்களையுடைய இப்பெண்ணினது செந்நிறம் விளங்குகின்ற இதழுக்கு உவமை கூறவேண்டின், கோவைக்கனியுள்ளதென்று கூறுவேனாயின், அதுவும் பானமாகவுண்ணும் விருப்பமுடையவர்களுக்குக் கெடாத அமிர்தத்தைக் கொடுத்துக்கொண் டிருப்பின் ஒப்பாகும், அஃதில்லையாயின் கூடாதாகும்.—எ-று. (௬௪)

முகையுறு தளவும் புள்ளின் முருந்தமுங் குருந்து முத்து
மகையுறு முடுவுஞ் சாற்றி னணியெயி றதற்கொவ் வாவா
னகையது தெரிந்தோர் வெஃக நன்னலம் புரியு நீரா
னிகர்பிறி தில்லை திங்க ணிலாவெனி லாகு மன்றே.

(இ-ள்.) முல்லையரும்பையும், மயிலிறகினடியையும், குருந்தமலரையும், முத்தையும், அசைகின்ற நக்ஷத்திரங்களையும் உவமை கூறின் அவை அழகிய பற்களுக்கு ஒப்பாகா. அப்பல்லின் தன்மையை யுணர்ந்தவர்கள் விரும்பும்படி நல்ல இன்பத்தைக்கொடுக்கின்றமையினால், ஒப்புவேறொன்றுமில்லை. சந்திரனது ஒளியாயின் அஃதொருவாறொக்கும்.—எ-று.

பற்கள் பார்ப்பவர்களுக்கு விருப்பந் தருவதுபோலச் சந்திரகிரணமுங் காண்போர்க்கு விருப்பத்தைத் தருதலான், 'திங்கணிலவெனிலாகும்' என்று கூறினார்.

மயிரெறி கருவி வள்ளை தோரண மணிப்பொன் னூசல்
பெயர்வன நிகர்க்கு மென்று பேசுதல் பேதை நீர்த்தாஞ்
செயிரற வுலோக மாக்குந் திசைமுகக் கொல்லன் செய்த
வுயிரெறி கருவி போலு மொண்குழைக் காது மாதோ.

(இ-ள்.) ஒள்ளிகுண்டலமணிந்த காதுகள் மயிர்களை வெட்டுகிற கத்திரியும், வள்ளைத் தண்டும், மகரதோரணமும், அழகிய பொன்னூசலும் அசைவதை யொக்குமென்று சொல்லுதல் அறியாமையேயாகும்; (வேறெதற் கொப்பாகுமெனில்) குற்றம்

நீங்க உலகத்தைச் சிருஷ்டிக்கின்ற பிரமனாகிய கொல்லன்செய்த உயிரை யழிக்குங் கருவியை யொக்கும்.—எ-று. (சசு)

கொங்குறு கூந்த லாடன் கோலவாண் முகத்துக் கொப்பாந்
திங்களென் றுரைக்கிற் றேயும் வளர்வுறுஞ் சிறப்ப தன்றாற்
பங்கய மெனினு முண்டோர் பழுதுமற் றதற்கு மென்னி
லங்கதற் கதுவே யல்லா லறையலாம் படிமற் றுண்டோ.

(இ-ள்.) நறுமணங்கமழுங் கூந்தலையுடைய இப்பெண்ணினது அழகிய ஒளிபொருந்திய முகத்திற்குச் சந்திரனை ஒப்பென்று கூறுவோமாயின், அது தேய்தலையும் வளர்தலையும் பொருந்தும் ஆதலால் அது சிறப்பன்று. தாமரைமலரைக் கூறுவோமாயினும் அதற்கு மொருகுற்ற முளதென்றால், அம்முகத்திற்கு அதுவே யொப்பன்றிவேறொன்று ஒப்புசொல்லுந் தன்மையுளதோ? (இல்லை).—எ-று. (சஎ)

சரந்தெறு விழியி னுடன் களத்தின தெழிலைச் சங்கங்
கரந்தன கமுகு மற்றே யன்னது கண்டு நேரா
வரந்தரு புலவர் சொற்றார் மற்றவ ரதற்கோ நாளு
மிரந்திடு தொழில ராகி யிழுக்கமுற் றார்க ளன்றே.

(இ-ள்.) அம்பின் மேன்மையை யழிக்கத்தக்க கண்களையுடைய இப்பெண்ணினது கழுத்தினழகினைச் சங்குங்கமுகுங் கவர்ந்தன; அதனைப்பார்த்து அக்கழுத்திற்கொப்பாக மேன்மை பொருந்திய புலவர்கள் கூறினார்கள். இதற்காகத்தானே அப்புலவர்கள் நாள்தோறும் இரக்குந் தொழிலர்களாய் வருந்தினார்கள்.—எ-று.

"பொய்சொன்னவாய்க்குப் போசனங்கிடைக்காது" என்பதுபோல, புலவர்கள் உவமையில்லாப் பொருளை உவமையாகக் கூறினமையின், புலவர்கள் இரக்குந்தொழிலராயினரென்க. (சஅ)

மாயவ னதரஞ் சேர்த்தி வரன்முறை யிசைத்த பச்சை
வேயெனு மதுவும் யான்செய் மெய்த்தவ மனைய நீரா
ரேயபொற் றோள்கண் டஞ்சித் தோற்றதா லென்னி லன்னான்
சேயவன் வணக்கா தேந்துஞ் சிலைகொலோ நிகர்ப்ப தம்மா.

(இ-ள்.) திருமாலினது அதரத்தில் சேர்க்கப்பட்டு முறைமைப்படியே வாசிக்கப்பெற்ற பச்சைமூங்கிலும் யான் செய்த மெய்ம்மையாகிய தவத்தையொத்த தன்மையினையுடைய இப்பெண்ணினது தூய்மையாகிய அழகிய தோள்களைப் பார்த்துப் பயந்து தோல்வியடைந்ததாயின், அத்திருமால் புதல்வனாகிய மன்மதன் வளைக்காமல் கையில் ஏந்திய கருப்பு வில்லோ ஒப்பாவது.—எ-று.

பொற்றோள் என்பதற்கு, பொன்னாபரணமணிந்த தோள் எனப் பொருள் கூறினுமாம். (சகூ)

பூந்தள வனைய மூரற் பொற்கொடி கரத்துக் கொவ்வா
காந்தளு நறிய செய்ய கமலமா மலரு மென்னின்
மாந்தளிர் பொருவ துண்டோ வள்ளுகிர் கிள்ளை நாசி
யேய்ந்தள வற்றுக் காம ரிலைச்சினை யாய தன்றே.

(இ-ள்.) அழகிய முல்லை யரும்பையொத்த பற்களையுடைய பொற்கொடி போல்பவளது கைகளுக்குக் காந்தள்மலரும் நறுமணங்கமழும் அழகிய செந்தாமரை மலரும் ஒப்பாகாவெனின், மாந்தளிரொக்குமோ? கூரியநகத்திற்குக் கிளியின் மூக்கானது ஒருவாறொத்து உவமையி னளவைக்கடந்து, மன்மதனது முத்திரையை யொத்திருக்கின்றது.—எ-று. (௫0)

பொருப்பென வெழுந்து வல்லின் பொற்பெனத் திரண்டு தென்னந்
தருப்பயி லிளநீ ரென்னத் தண்ணென வமுதுட் கொண்டு
மருப்பெனக் கூர்த்து மாரன் மகுடத்தில் வனப்பு மெய்தி
யிருப்பதோர் பொருளுண் டாமே லிணைமுலைக் குவமை யாமே.

(இ-ள்.) மலைபோலுயர்ந்து சொக்கட்டான் காய்போல் அழகாகத்திரண்டு தென்னமரத்திற்பொருந்திய இளநீரைப்போலக் குளிர்ந்து அமுதத்தை யுட்கொண்டு யானைக் கோடுபோலக்குவிந்து மன்மதனது கிரீடத்தைப்போல மிக்க அழகடைந்துள்ள ஒருபொருளிருக்குமாயின் அஃது இப்பெண்ணினது இரண்டுஸ்தனங்களுக்கும் ஒப்பாகும்.—எ-று. (நுக)

அந்திரு வன்னுண் மேனி யமைத்துவெம் முலைக்கண் செய்வான்
சுந்தர வள்ள நீலுண் டுகிலிகை விதிகொள் போழ்திற்
சிந்திய துள்ளி யொன்றி னொழுக்கங்கொல் சிறப்பின் மிக்க
வுந்தியின் மீது போய வுரோமத்தி னொழுக்க மன்றே.

(இ-ள்.) பிரமதேவன் அழகிய திருமகளை யொத்த இப்பெண்ணினது வடிவத்தை யமைத்து விருப்பத்தைத் தருகின்ற முலைக்கண்ணை யமைக்கும்பொருட்டு அழகிய கிண்ணத்தினின்றும் நீலநிறம்பொருந்திய எழுதுகோலைக் கையிலெடுத்தபொழுது சிதறிய ஒரு துளியின் ஒழுக்கோ? மிக்க சிறப்பினையுடைய நாபிக்கு மேற்சென்றுள்ள உரோமரேகை.—எ-று.

நீலம் என்பது, நீல்எனக் கடைகுறைந்து நின்றது. துள்ளி - விரித்தல் விகாரம். (நுஉ)

மாசடை யாத நீல மணியுறழ் வண்ண மாலோன்
காசடை யகலந் தாங்குங் கனங்குழைத் திருவும் போற்றுந்
தேசுடை மாதி னுந்திச் சிரினுக் கனையன் றுஞ்சும்
பாசடை நேர்வ தாமோ பகரினும் பழிய தன்றே.

(இ-ள்.) களங்க மடையாத நீலமணிபோன்ற நிறத்தினையுடைய திருமாலானவர் கவுத்துவமணியணிந்த தமது மார்பில் தரித்திருக்கின்ற கனத்த காதணியையுடைய திருமகளுந் துதிக்கத்தக்க அழகினையுடைய இவளது வயிற்றினழகுக்கு அத்திருமால் நித்திரை செய்கின்ற பச்சையாலிலை யொப்பாகுமோ? அதனை ஒப்புக் கூறினும் இழிவன்றே?—எ-று. (நுங)

கண்டுழி மாயு மன்றே மின்னெனிற் ககன மாகக்
கொண்டிடி னுருவின் றாகுங் கொடியெனிற் றுடிய தென்னிற்
றிண்டிற லுக மென்னிற் சிரிதன் றணங்கி னுப்ப
னுண்டிலை யென்று மானு முண்மைக்கோ ருவமை யுண்டோ.

(இ-ள்.) இப்பெண்ணின் இடையை மின்னல் என்று கூறுவோமாயின் அது தோன்றினவுடனே யழியும். ஆகாயமென்று கூறுவோமாயின் அதற்கு உருவமில்லை. கொடியென்றும் உடுக்கையென்றும் மிக்க வலிமையினையுடைய பாம்பென்றுங் கூறுவோமாயின் அவைசிறந்தவுவமையன்று. உண்டென்றும் இல்லையென்றுஞ்சந்தேகிக்க நின்ற ஒரு பொருளுக்கு உவமானப் பொருளு முளதோ இல்லை.—எ-று. (நுச)

மயலுடைப் பணியு மால வட்டமும் வனப்புச் செய்த
வியலுடைத் தேரு மச்சுற் றிரங்கியே யுயிர்க்கு மென்றாற்
கயலுடைக் கண்ணா ளல்குற் கொப்பவோ காமர் வீடவ்
வியலுறப் பென்பர் யாரு மேலது காண்டு மன்றே.

(இ-ள்.) சேல்போலுங் கண்களையுடைய இப்பெண்ணினது நிதம்பத்திற்கு, மயக்கம் பொருந்திய (விஷத்தினையுடைய) பாம்பும், ஆலவட்டமும், அலங்கரிக்கப்பட்ட அழகிய தேரும், அச்சங்கொண்டு இரங்கி மூச்சுவிடுமோயின் அவை ஒப்பாகுமோ? மன்மதனது அரசிருக்கை மண்டபமாயுள்ளது அந்த அவயவமென்று கூறுவார்கள். அதனை நாம் பின்னர் காண்போம்.—எ-று. (ருரு)

கோழிலை யரம்பை யீனுங் குருமணித் தண்டை வேழத்
தாழிருந் தடக்கை தன்னை நிகரெனிற் றகுவ வன்றுன்
மாழையுண் கருங்கண் மாதின் மகரிகை வயங்கு பொற்பூண்
சூழுறு கவானே போலு மவையெனிற் சொல்ல லாமோ.

(இ-ள்.) தழைத்த இலையினையுடைய வாழையினிடத் துண்டாகிய அழகிய நிறமமைந்த தண்டையும், தாழ்ந்து தொங்குகின்ற பெரிய யானைத் துதிக்கையையும் ஒப்பென்று கூறுவோமாயின், அவை தக்கதன்று. மாவடு போன்று மை யுண்ணப்பட்ட கரிய கண்ணினையுடைய இப்பெண்ணினது கிம்புரி வடிவமாக விளங்குகின்ற பொன்னாபரணமணிந்துள்ள துடைகளுக்கு அவைகள் ஒப்பென்று கூறுதல் சரியாகுமோ?—எ-று.

மகரிகைவயங்கு பொற்பூண் - ஒருகூறு கிம்புரிவடிவாயிருக்குங் குறங்குசெறியென்னுமணி; 'மகரிகைவயங்கு பொற்பூண்' என்பதற்கு மகரிகைபோல விளங்குமாபரணம் எனப்பொருள்கொள்க. குறங்குசெறி-துடையி லணியப்படு மாபரணம்.

அலவனு ஞெண்டை யின்னு ளணிகெழு முழந்தாட் கொப்பாப்
புலவர்கள் புகழா நின்ற வழக்கலாற் பொருந்திற் றன்றுற்
றிலகநன் மணியே போல்வா டெய்வத வடிவுக் கிந்த
வுலகினு ளிழிந்த தொன்றை யுரைக்கினஃ துவமை யாமோ.

(இ-ள்.) அப்பெண்ணினது அழகுமிக்க முழங்காலுக் கொப்பாகப் புலவர்கள் நண்டினை உவமானமாகப் புகழ்கின்ற வழக்கமே யன்றி அஃது ஒப்புப்பொருளான்று ; உயர்ந்த மாணிக்கம் போல்பவளது தெய்வீக வடிவத்திற்கு இந்நிலவுலகத்தில் இழிவாகிய ஒருபொருளை ஒப்புக்கூறினல் அஃதுவமையாகுமோ? (ஆகாது).—எ-று.

தமனியத் தியன்ற பொற்பிற் றுவிலா வாவந் தானுஞ்
சிமையநேர் கொங்கை மாதின் றிகழ்கணைக் காலுந் தூக்கிற்
சமமிது பொருளி தென்றே தமியனேன் றுணிந்து சிந்தை
யமைவுற வறித றேற்றே னையமுற் றிடுவன் யானே.

(இ-ள்.) பொன்னினல் அழகாகச் செய்யப்பட்டுள்ள கெடாத அம்புக்கூட்டையும், மலைபோன்ற ஸ்தனங்களையுடைய இப்பெண்ணினது விளங்குகின்ற கணைக்காலையும் ஒப்புநோக்குமிடத்து இது உவமானம், இது உவமேயம் என்று அடியேன் தீர்மானித்து மனதாரத் தெரிந்துகொள்வதற்கு முடியாமல் சந்தேகமடைகின்றேன்.

அரும்புறு காலைக் கொங்கைக் கழிவுற்று முகமொவ் வாது
சுரும்புற மலர்ந்த பின்னுந் தொலைந்துகை யினுக்குந் தோற்றுத்
திரும்பவு மடிக்கு மஞ்சிச் சிதைந்தது கமல மென்றுற்
பெரும்பய முற்று நோற்றும் பிழைத்தது போலு மன்றே.

(இ-ள்.) தாமரைமலர் அரும்பாயிருக்கும்பொழுது கொங்கைகளுக்குத் தோற்று, முகத்திற்கொவ்வாமல் வண்டுகள் பொருந்தவிரிந்தபின்பும் பதனழிந்து, கைகளுக்குத்தோற்றுப் பின்னும் கால்களுக்கும்ஒப்பாகாதுபயந்து தோற்றதாயின், (இவ

ளது அவயவங்களுக்கு ஒப்பாகவேண்டுமென்று) மிகுந்த நீரிற்பொருந்தித் தவஞ் செய்துந் தவறியதுபோலும்.—எ-று. (ருகூ)

மேக்குயர் கூன லாமை விரைசெறி குவளைத் தோடு
தாக்குறு பந்து பிண்டித் தண்டளிர் சார்பு கூறிற்
றாக்குறு துலையின் றட்டுத் தொகுத்தொரு வடிவில் வேதா
வாக்குறின் மாதின் றாளுக் கதுநிக ராகும் போலும்.

(இ-ள்.) இப்பெண்ணினது கால்களுக்கு முதுகானது உயர்ந்துவளைந்துள்ள ஆமையும், மணமமைந்த கருங்குவளையிதழும், அடிக்கப்படுகின்ற பந்தும், அசோகினது குளிர்ந்த தளிரும், ஒப்பென்று கூறவேண்டுமாயின், இவையனைத்தையும் நிறைசெய்கின்றதராசித்தட்டிலமைத்து ஒரேயுருவமாகப் பிரமன் படைத்தால் அதனை ஒருவாறு ஒப்புக்கூறலாம்.—எ-று. (சுo)

ஆவியி னெய்ய பஞ்சு மனிச்சமா மலரு மன்னத்
தூவியு மிதிக்கிற் சேந்து துளங்குறு மடிக ளென்று
ணவியங் குழலின் மாது நடந்திட ஞால மாங்கோர்
பூவதோ வதுபூ வன்றேற் பொன்னடி பொருந்து மோதான்.

(இ-ள்.) பாலின் புகையைப்பார்க்கிலும் நொய்தாகிய பஞ்சிலும், சிறந்த அனிச்சமலரிலும், அன்னத்தூவியிலும் மிதித்தால் பாதங்கள் சிவந்து வருந்துமாயின் மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடைய இப்பெண்ணனவள் நடக்கும்பொருட்டுஇந்நிலவுலகமானது ஒருமலரோ? மலரல்லவாயின் அழகிய பாதங்கள்பொருந்துமோ.—எ-று.

கயலுறழ் கருங்கட் செவ்வாய்க் காரிகை தனது சாயன்
மயிலெனக் கூறி னல்லான் மற்றதற் குவமை யில்லை
யியலுறு வடிவிற் கொப்ப தேதுள திவளை போலச்
செயலுறத் தெழுதிற் றுண்டேற் சித்திர மஃதே போலும்.

(இ-ள்.) கயல்மீன்போன்ற கரியகண்ணினையும் செந்நிறம் பொருந்திய வாயினையுமுடைய இப்பெண்ணினது சாயலுக்கு மயில் ஒப்பென்று கூறுவதன்றி, அதற்கு வேறு உவமை கிடையாது. அழகுபொருந்திய வடிவத்திற்கொப்பாகவுள்ளது யாதிருக்கின்றது? (வேண்டுமாயின்,) இவளைப்போலச் செய்கையமைத் தெழுதப்பட்ட சித்திர மிருக்குமானல் அது இவளது உருவத்திற்கொப்பாகும்.—எ-று. (சுஉ)

ஆனன நான்கு செய்தாட் காயிர மடங்மேர் கொண்ட
மானினி தன்னை வேதா வகுத்திலன் கொல்லோ வன்னுன்
ருனமைத் துளனே யென்னிற் றலைபல தாங்கி யிந்தத்
தூநிலா நகையி னளைத் தொடர்ந்துபின் றிரிவ னன்றே.

(இ-ள்.) பிரமனை நான்முகனுகச் செய்த திலோத்தமையைக் காட்டிலும் ஆயிரமடங்கு அதிகமாகிய அழகுபொருந்திய இப்பெண்ணைப் பிரமன் படைக்கவில்லைபோலும்; அவன் படைத்திருப்பானுயின், பலதலைகளையுடையவனுய் இந்தச்சந்திரிகைபோன்ற பல்லொளியினையுடைய இவளைப் பின்றொடர்ந்து திரிவான்.—எ-று. ()

மையறு புவியில் வந்த மாதிவ ளடியி னுள்ள
துய்யதோர் குறிகள் வானிற் றொல்பெருந் திருவில் வைகுஞ்
செய்யவன் றனது தேவி சிரத்தினு மில்லை யென்றுன்
மெய்யுறு குறிகளெல்லா மினைத்தென விளம்பற் பாற்றோ.

(இ-ள்.) குற்றமற்ற இந்நிலவுலகத்தில் வந்துள்ள இப்பெண்ணினது காலினுள்ள நல்ல இலக்கணங்கள் விண்ணுலகத்தில் பழைய பெருஞ் செல்வத்துடன்

வாழ்கின்ற இந்திரன் மனைவியினது தலையிலுமில்லையாயின், இவளது தேகத்திலுள்ள இலக்கணங்களை இத்தன்மையதென்று கூறுதல் முடியுமோ.?—எ-று. (சுச)

வேறு.

என்று முன்னியவ் வேந்திழை தன்முனஞ்
சென்று காமர் திருவினுஞ் சீரியோய்
நன்று நன்றுநி னல்வர வேயெனு
நின்று பின்னு நெறிப்பட வோதுவான்.

(இ-ள்.) காசிபமுனிவர் இவ்வாறு நினைத்து அந்தமாயையி னெதிரில் சென்று அழகிய திருமகளைப்பார்க்கிலுஞ் சிறந்த அழகினையுடைய பெண்ணே! நினது வரவு நன்று நன்று, என்று கூறிப்பின்னும் முறையேசொல்லத்தொடங்கினர்.—எ-று.

யாது நின்குலம் யாதுநின் வாழ்பதி
யாது நின்பெயர் யாருனைத் தந்தவ
ரோது வாயென் றுரைத்தன னுள்ளூறு
காத லான்மிகு காசிப னென்பவே.

(இ-ள்.) மனதில் மிகுந்த ஆசையினையுடைய காசிபமுனிவரர் அம்மாயையைநோக்கி நின்குலம் யாது? நினது ஊர் யாது? நின் பெயர்யாது? உன் தந்தை தாயர்கள் யார்? சொல்லுவாயாகவென்று வினவினர்.—எ-று. (சுரு)

வனிதை கூறுவுண் மாதவ நீயிது
வினவி நிற்றல் விழுமிதன் றென்னிடைத்
தனிய னாகியுஞ் சார்ந்தனை நோற்பவர்க்
கினிய வேகொ லினையதோர் நீர்மையே.

(இ-ள்.) (அதற்கு) மாயை கூறுகின்றாள், முனிவரே! நீர் இவைகளை என்னிடத்திற் கேட்டுக்கொண்டு நிற்பது உமக்கு மேன்மையல்ல. அன்றியும் என்னிடத்தில் தனித்துவந்திருக்கின்றீர், இத்தகைய செய்கைகள் வனத்தில் தவஞ்செய்கின்ற முனிவர்களுக்குநன்றோ?—எ-று. (சுஎ)

ஏதி லோன்மை யிகந்துணர் வில்லதோர்
பேதை மாந்தரிற் பேசியெற் சார்வது
நீதி யேயன்று நின்கட னாற்றிடப்
போதி யென்ன முனிவன் புகலுவான்.

(இ-ள்.) குற்றமற்ற தவஞ்செய்வதை யொழித்து அறிவில்லாத பேதை மனிதர்களைப்போலப் பேசிக்கொண்டு எம்மிடத்திற்கு வருதல் உமக்கு நியாயமன்று, ஆதலால் உமது கடமைகளை முடித்துக்கொள்ளும் பொருட்டு நீர் செல்லக்கடவீரென்று மாயை கூறியவுடன் காசிபமுனிவர் கூறுவாராயினர்.—எ-று. (சுஅ)

மங்கை கேட்டி வரம்பறு பற்பக
லங்கம் வெம்ப வகமெலி வுற்றிடச்
சங்கை யின்றித் தவம்பல செய்திட
லிங்கு வேண்டிய தெய்துதற் கேயன்றோ.

(இ-ள்.) பெண்ணே! கேட்பாயாக, அளவற்ற காலம் உடல்வருந்தி மனம் வாட்டமடையும்படிச் சந்தேகமின்றி அநேக தவங்களைச்செய்தல் இவ்வுலகத்தில் விரும்பிய பொருள்களைப் பெறுதற்பொருட்டன்றோ.—எ-று. (சுகூ)

பொன்னை வேண்டிக்கொ லோபொன்னின் மாநகர்
தன்னை வேண்டிக்கொ லோசசி யாம்பெயர்

மின்னை வேண்டியே யல்லது வேறுமற்
றென்னை வேண்டியவ் விந்திர னேற்றதே.

(இ-ள்.) பொன்னை விரும்பியோ? சிறந்த பொன்னுலகத்தைவிரும்பியோ? இந்திராணி யென்னும் பெயரையுடையபெண்ணை விரும்பியல்லாமல் வேறேயெதனை விரும்பி அவ்விந்திரன் தவஞ்செய்தது.—எ-று. (எ0)

ஐதின் மேனி யலசுற யான்றவஞ்
செய்த திங்குனைச் சேருதற் கித்திற
னொய்தின் மேவினை நோற்றதற் குப்பய
னெய்தி யுற்ற தினித்தவம் வேண்டுமோ.

(இ-ள்.) அழகிய தேகம் வருந்தும்படி யான் தவஞ்செய்தது இவ்விடத்தில் உன்னை யடையும்பொருட்டேயாம். நீயும் இவ்வண்ணமே எளிதாக வந்தனை; யான் செய்ததவத்தின் பயன் வந்து நேர்ந்தது, ஆதலால் இனி நான் தவஞ்செய்ய வேண்டுமோ?(வேண்டுவதில்லை.)—எ-று. (எக)

பேரு மூரும் பிறவும் வினவினேற்
கோர வொன்று முரைத்திலை யாயினுஞ்
சேர வேபின் றெளிகுவன் காமநோ
யீரு கின்ற திரங்குதி நீயென்றான்.

(இ-ள்.) உனது பெயரையும் ஊரையும் வினவிய யான் உணர்ந்துகொள்ளும் பொருட்டுக் கூறினையில்லை; ஆயினும் பின்பு ஒருமிக்க அறிந்துகொள்ளுகின்றேன். இப்பொழுது என்னைக் காமநோய் வருத்துகின்றது, ஆதலால் நீ மனமிரங்கவேண்டு மென்று கூறினர்.—எ-று. (எஉ)

மாயை கேட்டு வறிது நகையளாய்
நீயிவ் வாறு நெடுந்தவஞ் செய்தது
மாயி லென்பொருட் டோவஃ தன்றரோ
தூயை வஞ்சஞ் சொலன்முறை யோவென்றாள்.

(இ-ள்.) இவ்வார்த்தைகளை மாயையானவள் கேட்டு வறிதே நகைத்து, முனிவரோ! நீர் இவ்வாறு பெருந்தவஞ் செய்ததும் ஆராயுமிடத்தில் என்னிமித்தமாகவோ? அன்று, பரிசுத்தராகிய நீர் வஞ்சகமொழிகளை யுரைத்தல் தகுதியோ வென்று கூறினள்.—எ-று. (எ௩)

மற்றிவ் வண்ண மயில்புரை சாயலாள்
சொற்ற காலை யனையவள் சூழ்ச்சியை
முற்று மோர்ந்து முதிர்கலை யாவையுங்
கற்று ணர்ந்திடு காசிபன் கூறுவான்.

(இ-ள்.) என்று இவ்வாறு மயில்போலுஞ்சாயலினையுடைய மாயையானவள் கூறியபொழுது, அவளது வஞ்சகமொழியை முற்றிலுமுணர்ந்த சகல கலாவல்லவராகியகாசிபமுனிவரர் கூறுகின்றார்.—எ-று. (எச)

பொய்ம்மை யாதும் புகல்கில னுன்முகன்
செம்மல் யானது தேருதி போலுமா
லிம்மை யேபர மீந்திடு வோயிவண்
மெய்ம்மை யேயுரைத் தேனுள வேட்கையால்.

(இ-ள்.) பொய்மொழியொன்றுங் கூறேன். யான் பிரமபுத்திரனென்பதை நீ அறிந்து கொள்ளக்கடவை; இம்மையிலேயே பரபோகத்தைத் தரத்தக்கமாதே! மனவிருப்பத்தால் இங்கு உண்மையினையே கூறினேன்.—எ-று. (எரு)

பன்னெ டுந்தவம் பற்பக லாற்றியான்
முன்னி நின்றது முத்திபெற் றுய்ந்திட
வன்ன தேயெற் கருள்செய வந்தனை
யுன்னை மேவலன் றோவுயர் முத்தியே.

(இ-ள்.) யான் பலபெருந்தவங்களை அநேககாலஞ்செய்து கருதியிருந்தது முத்திபெற்றுய்யும்பொருட்டேயாம்; அதனையே எனக்குக் கொடுக்கும்பொருட்டு வந்திருக்கின்றனை. உன்னைப் புணர்வதல்லவோ? அவ்வுயர்ந்த முத்தியாகும்.—எ-று.

முத்தியென்பதனைச் சிலேடைவகையால் மோக்ஷம்பெற வெனவும், வாய் முத்தங்கொள்ள வெனவும் பொருள்கொள்க. (எசு)

ஈத லான்மற் றெனக்கொரு பேறிலை
யாத லாலுனை யேயடைந் தேனெனக்
காதன் மாதுமக் காசிபற் கண்ணுற்றீஇ
யோத லாம்பரி சொன்றை யுணர்த்துவாள்.

(இ-ள்.) இதனையன்றி யான் அடைய வேண்டிய பேறு வேறொன்றில்லை, ஆதலால் உன்னையே யடைந்தேன் என்று கூறவும், விருப்பமிக்க அம்மாயையுங் காசிபமுனிவரைப் பார்த்துச் சொல்லத்தக்க ஒருவார்த்தையைக் கூறுகின்றாள்.—எ-று.

வேறு.

மங்கல மியைந்திடு வடாதுபுல முள்ளேன்
செங்கனக மேருவரை சேர்ந்ததொரு தென்பாற்
கங்கைநதி யின்கரை கலந்திட நினைந்தே
னங்கணுறு கின்றதொ ரரும்பயன் விழைந்தே.

(இ-ள்.) யான் மங்களகரம் பொருந்திய வடதேசத்திலுள்ளவள். செம்பொன்மயமான மேருமலையின் தென்புறத்திலுள்ள கங்காநதிக் கரையை அங்குள்ள ஒரு பெரிய பயனை விரும்பியடையக் கருதினேன்.—எ-று. (எஅ)

வல்லையவ ணேகுறுவன் மாதவ வலத்தோய்
நில்லிவ ணெனப்பகர நீனிறம தாகுஞ்
செல்லுறழு மேனிதரு செம்மலருண் மைந்த
னெல்லையிது கேண்மென வுரைக்கலுறு கின்றான்.

(இ-ள்.) மிக்க தபோபலத்தினையுடைய முனிவரே! யான் விரைவாக அங்குச் செல்கின்றேன். நீர் இவ்விடத்திலேயே யிருப்பீர் என்று கூறுதலும், உடனே காசிபமுனிவரர் விரைந்து (பெண்ணே!) இதனைக் கேட்பாயாகவென்று கூறுவாராயினர்.—எ-று.

'நீனிறமதாகுஞ் செல்லுறழுமேனிதரு செம்மலருண்மைந்தன்' என்பதற்கு, நீல நிறம்பொருந்திய மேகம்போலுந் திருமேனியையுடைய திருமாலின் புதல்வனாகிய பிரமன் பெற்ற காசிபமுனிவரர் எனப்பொருள்கொள்க. (எகூ)

கங்கைநதி யாதிய கவின்கொணதி யேழு
மங்கணுல கந்தனி லரன்பதிகள் யாவு

மங்குறவழ் மேனியவன் வாழ்பதியு மற்று
மிங்குறவ ழைப்பனெறி மைப்பொழுது தன்னில்.

(இ-ள்.) யான் கங்கைநதி முதலிய அழகுபொருந்திய சப்தநதிகளையும், அழகிய இடமகன்ற நிலவுலகத்துள்ள சிவாலயங்களையும், மேகம்போலுநிறத்தினையுடைய விஷ்ணு வாலயங்களையும், மற்றுள்ளவைகளையும் ஒரு இமைப் பொழுதிற்குள்ளே இங்கு வரவழைப்பேன்.—எ-று. (அ0)

பொன்னுலகும் விஞ்சையர்கள் போதுலகு மேனோர்
மன்னுலகு மாதிரவர் வாழுலகு மங்கட்
டுன்னியதொர் தேவரொடு சூழ்திருவி னோடு
மின்னபொழு தேவிளைவி னீண்டுதர வல்லேன்.

(இ-ள்.) பொன்னுலகத்தையும், வித்தியாதரர்கள் வாழும் உலகத்தையும், மற்றையர்கள் வாழுமுலகத்தையும், திக்குப்பாலகர்கள் வாழுமுலகத்தையும், அவ்விடங்களிற் பொருந்திய தேவர்களுடனும் பொருந்திய செல்வங்களுடனும் இப்பொழுதே விரைவாக இங்கு அழைத்துக்கொடுக்க வல்லேன்.—எ-று. (அக)

மூவகைய தேவரையு முச்சகம துள்ளோர்
யாவரையு நீதெரிய வெண்ணுகினு மிங்ஙன்
மேவரவி யற்றிடுவென் வெஃகல்புரி வாயேற்
காவலுறு பேரமிர்த முங்கடிதி னீவேன்.

(இ-ள்.) திரிமூர்த்திகளையும், திரிலோகத்திலுள்ள அனைவரையும் நீ பார்க்கும்படி விரும்பினாலும் இங்கு வரும்படிச் செய்வேன். விரும்புவையாயின், காவலையுடையதேவாமிர்தத்தையும் விரைவிலழைத்துக்கொடுப்பேன்.—எ-று. (அஉ)

எப்பொருளை வேண்டினு மிமைப்பினுன வாக
வப்பொருளி யாவையு மளிப்பனஃ தல்லான்
மெய்ப்புதல்வர் வெஃகினும் விதிப்பனவர் தம்மை
யொப்பிலை யிவர்க்கெனவு மும்பரிடை யுய்ப்பேன்.

(இ-ள்.) எந்தப் பொருளை விரும்பினாலும் இமைப் பொழுதில் அவை உனதாகும்படி அப்பொருள்க ளனைத்தையுந் தருவேன். அதுவன்றியும், புத்திரர்களை விரும்பினுந்தருவேன். அப்புத்திரர்களை இவர்களுக் கொப்பொருவருமில்லை யென்று கூறும்படி சிறந்த பதவியில் வைப்பேன்.—எ-று. (அங)

அந்தமிகு மேனகை யரம்பைமுத லானோர்
வந்துனடி யேவல்செய வல்லைபுரி கிற்பேன்
சிந்தைநனி மால்கொடு தியங்குமென தாவி
யுய்ந்திட நினைந்தருடி யொல்லைதனி லென்றான்.

(இ-ள்.) மிக்க அழகினையுடைய மேனகை அரம்பை முதலியர்கள் வந்து உனது அடித்தொழும்பு செய்யும்படி விரைவில் செய்வேன். ஆதலால் விரைவாக மனத்தில் மிக்க மையல்கொண்டு தியங்குகின்ற எனது உயிரானது பிழைக்கும்படி நினைந்து கிருபைசெய்வாயாகவென்று கூறினான்.—எ-று. (அச)

வேறு.

முனியிது புகற லோடு முற்றிழை முறுவ லெய்தித்
தனியின ளென்று கொல்லோ சாற்றினை யினைய நீர்மை
யினியது தவிர்தி மேலோர்க் கிசையுமோ யானு முன்ன
நினைவுழிச் செல்வ னேற்று நீயிவ ணிருத்தி யென்றே.

(இ-ள்.) காசிபமுனிவரர் இவ்வாறு கூறிய வுடனே மாயையானவள் புன்னகையடைந்து யான் தனித்திருக்கின்றே னென்று கருதியோ? நீர் இத்தகைய வார்த்தைகளை யுரைத்தீர். இது பெரியோர்களுக்குத் தகுதியோ? யானும் முன்பு நினைத்த விடத்திற்குச் செல்லுகின்றேன், நீர் இங்குத் தவஞ்செய்திருப்பீராகவென்று கூறி —எ-று.

இதுமுதலிரண்டு பாடலுங்குளகம். (அரு)

கங்கையின் றிசையை முன்னிக் கடிதவட் செல்வா ளென்ன
வங்கவள் போத லோடு மருந்தவன் றொடர்ந்து செல்ல
மங்கையு மருவ மெய்தி மாயையிற் கரந்து நிற்ப
வெங்கணு நோக்கிக் காணு னிடருழந் திரங்கி நைவான்.

(இ-ள்.) கங்கைநதித் திசையைக்கருதி விரைவாக அவ்விடத்திற் செல்கின்றவளைப்போல அம்மாயையானவள் செல்லுதலும், அருமையாகிய தவத்தினையுடைய காசிபமுனிவரர் பின்றொடர்ந்து செல்ல, உடனே அவள் அருவமடைந்து மாயையாக ஒளித்துநிற்க, (காசிபமுனிவர்) எவ்விடங்களிலும் பார்த்துக் காணுதவராய்த் துன்புற்று இரங்கி வருந்துவாராயினர்.—எ-று. (அசு)

மாயைப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அசு.

---

உ

முருகன்றுணை.

---

# காசிபன் புலம்புறுபடலம்.

தேனீர் மையெனப் புகல்வாள் சிறிதுந்
தானீ ரமிலா டனிமா யவளே
மானீ ருமதாம் வயினுற் றனளோ
வேனீர் மொழியா திரிகின் றதுவே.

(இ-ள்.) தேனின் தன்மைபோல இனிமையாகப் பேசுகின்றவளும் மனத்தில்சிறிதுமிரக்கமில்லாதளுவம் மாயாரூபியுமாகிய அந்தப்பெண்கொடியானவள்மான்களே! உங்களிடத்திற்கு வந்தனளோ? நீங்களேன் பேசாதோடுகின்றீர்கள்.—எ-று. ()

சிலைவா ணுதலா டிறன்மா யையெனும்
வலைவீ சியெனு ருயிர்வவ் வினளாற்
கலைவீ ரிவணீ ரதுகண் டனிரோ
நிலையீர் வெருளா நெடிதோ டுதிரால்.

(இ-ள்.) வில்லைப்போலும் ஒளியமைந்த நெற்றியினையுடைய அந்தப்பெண்ணனவள் மாயவலையைவீசி எனது அரிய உயிரை யபகரித்தனள்; கலைமான்களே! நீங்களதனைப்பார்த்தீர்களோ? ஓரிடத்திலும் நிற்காமல் வெருண்டோடுகின்றீர்கள். (உ)

கடிதேர் களிறே கழிகா தலையாய்ப்
பிடிதேர் பரிசாற் பெயர்வாய் தமியே
னெடிதே தளரா நெறிநே டினையக்
கொடியா டனையுங் கொணராய் கொணராய்.

(இ-ள்.) மதநாற்றம்பிடித்துச் செல்லுகின்ற யானையே! மிகுந்தவிருப்பங் கொண்டு பெண்யானையை நாடிச்செல்கின்றனை; யான் தனித்து மிகவும் வருந்துகின்றேன்; நீ செல்லும் வழியில் அந்தக் கொடிபோல்பவளையுங் கொண்டுவரக்கடவை; கொண்டுவரக்கடவை.—எ-று. (ரு)

அருளா லுனையே யளியென் றனராற்
பெரியா ரவர்சொற் பிழையா குவதோ
தரியா வரியே தமியே னுயிரைத்
தெரிவா னினைவோ திரிகின் றனையே.

(இ-ள்.) பெரியவர்களா யுள்ளவர்கள் இரக்கமிருக்குந் தன்மையால் உன்னை அளியென்று கூறினார்கள், அச்சொல் தவறுமோ? ஓரிடத்தில் நிலைத்துநில்லாத வண்டே! என்னுயிர்போல்பவளைத் தேடவேண்டுமென்று உனக்கு எண்ணமோ? எங்குந் திரிகின்றனையே.—எ-று.

வண்டே! உனக்கு அளி என்று பெயரிட்டது கிருபையையுடையை யென்னுங் காரணநோக்கியேயாம்; அங்ஙனமாக, நீ அப்பெயர்ப்பொருளை விளக்காது பெயரைமாத்திரங் கொண்டிருக்கின்றனை; இஃதென்னையென்று கூறினனென்க. (சு)

மேவிப் பிரிவாள் விழிபோ லுவோ
யாவிக் குறவோ வலைமன் மதனப்
பாவிக் குமினிப் படையாய் வருவாய்
வாவிக் குவளா யெனைவாட் டுதியோ.

(இ-ள்.) தடாகத்திலுள்ள நீலோற்பல மலரே! என்னையடைந்து பிரிந்தவளது கண்ணைப்போலக் கொல்லுகின்றனை; நீ அப்பெண்ணுக்குச் சிநேகமோ? அல்லவே; இனி மன்மதனாகிய பாவிக்கும் ஆயுதமாகவருவாய், அப்பொழுதென்னை வருத்துவையோ?—எ-று. (ஜ)

செந்தா மரைமேற் றிருவா மெனவே
வந்தா டணியா மயல்செய் தகல்வா
ளெந்தோ வினவா வவளைக் கொணர்வான்
சாந்தா கிலையென் சந்தே யுரையாய்.

(இ-ள்.) சந்தனமரமே! செந்தாமரை மலரிலிருக்கின்ற திருமகளைப்போல வந்தவள் நீங்காத காமமயக்கத்தை யுண்டாக்கிச் சென்றனள், ஐயோ? அவ்வியல்புகளையெல்லாங்கேட்டு அவளைக்கொண்டுவரும்பொருட்டு நீ தூதாகாதிருப்ப தென்ன காரணம்.—எ-று. (கூ)

பொன்னிற் பொலிவுற் றிடுபூங் கமலந்
தன்னிற் றுணையோடு தழீஇத் தணவா
வன்னப் பெடைகா ளறனோ புகலீ
ரென்னைத் தனிவைத் தவளே கியதே.

(இ-ள்.) பொன்னிலுஞ் சிறந்து விளங்குகின்ற அழகிய தாமரை மலரில் சேவலுடன் கலந்து பிரியாதிருக்கும் பெண்ணன்னங்களே! என்னைத் தனியே வைத்து அவள் சென்றது தருமந்தானோ? நீங்கள் சொல்லுங்கள்.—எ-று. (எ)

தணியா வகைமா றமியேற் கருளித்
துணியா வகல்வாள் படர்தொன் னெறியைக்
குணியா வுரைசெய் குதியென் றிடினுங்
கணியா யிதுவோ கணிதன் னியல்பே.

(இ-ள்.) வேங்கைமரமே! தனியனுகிய எனக்கு நீங்காதமோகத்தைக்கொடுத்து மனந்துணிந்துசென்றவள் போன பெரிய வழியை நீ கணித்துச் சொல்லக்கடவையென்று யான் கூறினும், கணித்துக்கூறினு யில்லை. இதுதானே? கணியாகிய நினது தன்மை.—எ-று.

'கணியாயிதுவோ கணிதன்னியல்பே' என்பதற்கு, நீ கணித்துக்கூறினு யில்லை; இது தானே சோதிடசாஸ்திரியினது சுபாவகுணம் என்னுஞ் சிலேடைப் பொருள் தோன்றுமாறு கொள்க. (அ)

படைவேள் கணையே பரிதிக் குறவே
மடவார் முகமே மதியின் பகையே
விடமே புரையும் விழிமெல் லியனின்
னிடமே வருவா ளொளியா திசையாய்.

(இ-ள்.) சேனைகளையுடைய மன்மதனது பாணமே! சூரியனது நட்பே! பெண்களது முகமே! சந்திரன்பகையே! விஷத்தையொத்த கண்களையும் மெல்லிய வடிவினையுமுடையவள் உன்னிடத்திற்கே வருவாள்; அப்பொழுது நீ மறைக்காமல் உரைக்கக்கடவை.—எ-று. (கூ)

நின்றீர் மிகவுந் நெடியீர் பெரியீ
ரின்றீ ரமிலா தெனைநீங் கினண்முன்
சென்றீ ரவள்போஞ் செயல்கா ணுதிர்செய்
குன்றீர் மொழியீர் குறைசெய் துளனே.

(இ-ள்.) செய்குன்றுகளே! எதிரில் நிற்கின்றீர்கள்; மிகவு முயர்ந்திருக்கின்றீர்கள்; பருத்து மிருக்கின்றீர்கள்; இன்று இரக்கமில்லாது என்னைவிட்டுச் சென்றவளுக்கு முன்னே வந்திருக்கின்றீர்கள். நீங்கள் அவள்சென்ற செய்தியை யறிவீர்கள். உங்களுக்கு யான் ஏதேனுங்குறைசெய்துள்ளேனே? என் கூறுதிருக்கின்றீர்கள். (க0)

மயிலே ரியலா ளொருமா யவளே
யியலே தறியே னிவணின் றனளோ
பயிலே சிலநீ பகர்வா யதனுற்
குயிலே யெனதா ருயிர்கொள் ளுதியோ.

(இ-ள்.) குயிலே! மயில்போலுஞ் சாயலை யுடையவளாக வந்தவள் ஒரு மாயையேயாம்; அவளது தன்மையை யான் அறியேன்; இங்கிருக்கின்றனளோ? நீ சில குறிப்புமொழிகளை யுரைக்கின்றனை; அதனுல் எனது உயிரை வாங்குகின்றனையோ?—எ-று. (கக)

நின்பால் வரவே நினைவாய் மொழிவா
ளென்பா லிலையிவ் வழியே கினளான்
மென்பா லெனமே வியமாருதமே
தென்பால் வருவாய் செயல்கூ றுதிநீ.

(இ-ள்.) மெல்லிய தன்மையாகவந் துலாவுகின்ற தென்றலே! நின்னிடத்திற்கு வரவேண்டுமென்னும் எண்ணத்துடன் கூறினவள் என்பக்கத்திலில்லை; இவ்

வழியேசென்றனள் ; நீ தென்றிசையினின்றும் வருகின்றனை, ஆதலால் அவளதுசெய லைக் கூறக்கடவை.—எ-று. (கஉ)

ஆரத் தடமே யருணீ ரினையுள்
ளீரத் தினையென் றெவரும் புகல்வார்
சாரிற் சுடுவாய் தளரே லெனவே
சோர்வுற் றிடுமென் னுயர்தீர்க் கிலையே.

(இ-ள்.) முத்துக்களையுடைய தடாகமே! இரக்கமாகிய தன்மையினையுடையாய் ; உள்ளே குளிர்ச்சியினையு முடையாயென்று யாவர்களுங் கூறுவார்கள். (அங்ஙனமாக) யான் வந்தாற் சுடுகின்றனை ; தளரேல் என்று கூறிச் சோர்வடைந்துள்ள என்துயரத்தைத் தீர்த்தாயில்லை.—எ-று. (கங)

களிசேர் மயிலே கவிரா கியவாய்க்
கிளியே குயிலே கிளைதா னலவோ
தளரா வகைநீர் தகவே மொழியா
வளியே னுயிருக் கரணா குதிரால்.

(இ-ள்.) களிப்பினையுடைய மயிலே! முருக்கம்பூப்போலும் வாயினையுடைய கிளியே! குயிலே! உங்களுக்கு அவள் இனமல்லவோ? யான் தளராதவண்ணம் தருந்த வசனங்களைக் கூறி எனது உயிருக்குக் காவலாக விருங்கள்.—எ-று. ()

அறவே துயர்செய் தணுகா திகலித்
துறவே துணிவா டொடர்புந் தொடர்போ
வுறவே யினிநீ ருவள்போ நெறியைப்
புறவே தமியேன் பெறவே புகல்வீர்.

(இ-ள்.) புறக்களே! மிகவுந் துன்பத்தைச் செய்து, இங்கு வராமல் பகைத்து விலகிச் சென்றவளுடைய சிநேகமும் ஒரு சிநேகமோ? இனி நீங்கள் எனக்கு உறவானவர்கள், அவள் சென்றவழியை மாத்திரம் யான் அறிந்துகொள்ளும் பொருட்டுச் சொல்லுங்கள்.—எ-று. (கரு)

எனவே பலரு மியல்சேர் முனிவன்
மனமால் கொடுசொற் றிடமற் றதனை
வினவா மகிழா வியன்மெய்ம் மறையா
வனமே யனையா ளவணுற் றிடலும்.

(இ-ள்.) என்று பலவிதமாக ஒழுக்கமமைந்த காசிபமுனிவரர் மனமயக்கத்துடன் கூறுதலும், அதனைக்கேட்டு மனமகிழ்ந்து மிகச்சிறந்த தனதுருவத்தை மறைக்காமல் அன்னம்போன்ற சாயலையுடைய மாயையானவள் அங்கு எதிரில் வந்து தோன்றுதலும்.—எ-று. (கசு)

வேறு.

நோற்குறு முனிவன் றன்பா னுைப்தென மாயை யெய்தித்
தீர்க்கலா மையல் பூட்டிச் செய்தவ மழித்தா ளந்தோ
பார்க்கில னிதனை யென்னுப் பரிவுசெய் தகன்றான் போலக்
கார்க்கடல் வரைப்பி னேகிக் கதிரவன் கரந்தா னன்றே.

(இ-ள்.) தவஞ்செய்கின்ற காசிபமுனிவரிடத்திற்கு மாயையானவள் விரைவாகவந்து நீங்காத ஆசையையுண்டாக்கி, அந்தோ அவர்செய்கின்ற தவத்தை யழித்தனள், யான் இதனைப் பார்க்கமாட்டேனென்று வருத்தங்கொண்டு சென்றவனைப்போலச் சூரியன் கரிய மேற்றிசைக்கடலிற் சென்று அஸ்தமித்தனன்.—எ-று. (கள)

தந்தைகா சிபனென் றேதுந் தவமுனி யவன்பாற் சார
வந்துளாள் யாயே யன்றோ மற்றிவர் தலைப்பெய் கின்ற
முந்துறு புணர்ச்சி காண்டன் முறைகொலோ புதல்வற் கென்னச்
சிந்தைசெய் தகன்றான் போன்று தினகரக் கடவுள் சென்றான்.

(இ-ள்.) தனக்குத் தந்தையாயுள்ளவர் காசிபமுனிவர் அவரைப் புணர்தற்குவந்திருப்பவள் தாயல்லவோ? அவ்விருவர்களது முதன்மையாகிய புணர்ச்சியைப் பார்ப்பது புதல்வனுக்கு முறைமையோவென்று ஆலோசித்து அகன்றவனைப்போலச் சூரியன் அஸ்தமித்தனன்.—எ-று. (௧௮)

அந்தமி னிருத ரென்னு மளவைதீர் பானுட் கங்குல்
வந்திடு மின்னே யென்னு வல்லையின் மதித்து வானத்
திந்திர னாணை போற்று மிலங்கெழி னேமிப் புத்தேள்
சிந்துவிற் கரத்தல் போன்று செங்கதிர்ச் செல்வன் போனான்.

(இ-ள்.) முடிவில்லாத அசுரர்களென்று சொல்லப்பட்ட அளவற்ற அர்த்தராத்திரிகள் இன்றே யுண்டாகுமென்று விரைவாகத் துணிந்து விண்ணுலகத் தலைவனாகிய இந்திரனது அதிகாரத்தைச் செலுத்துகின்ற ஆக்ஞாசக்கரமாகிய தெய்வமானது கடலில் மறைந்தாற்போலச் சூரியன் அஸ்தமித்தனன்.—எ-று. (௧௯)

வேலையி னிரவி செல்ல விண்ணவர் யாருங் கொண்ட
வாலிய திருவுஞ் சீரும் வன்மையு மகல மாயை
பாலுறு மவுணர் தானைப் பல்குழுப் பரவிற் றென்ன
மாலையு மிருளின் சூழ்வும் வல்லைவந் திறுத்த வன்றே.

(இ-ள்.) சூரியன்மேற்றிசைக் கடலில் அஸ்தமிக்கவும் எல்லாத் தேவர்களிடத்திலும் பொருந்திய நல்லசெல்வமும், சிறப்பும், வல்லமையுங் கெடும்படி மாயையினிடத்திற் பொருந்திய பல அசுரர்சேனைக் கூட்டங்கள் உலகத்தில் பரவி நின்றாற்போல மாலைக்காலமும் இருட்கூட்டமும் விரைவாகவந்து தங்கின.—எ-று. (உ०)

மாகமே னிமிர்ந்த செக்கர் மாலையம் பொழுது நல்கூர்ந்
தீகென விரக்கு நீரார்க் கிம்மியின் றுணைய தேனு
மோகையால் வழங்கா நீதி யொன்னலா னொருவன் செல்வம்
போகுமா றென்ன வாளா பொள்ளெனப் போயிற் றுமால்.

(இ-ள்.) ஆகாயத்தின்கண் தோன்றிய செவ்வானத்தினையுடைய மாலைக்காலமானது வறுமையடைந்து இரக்கின்றவர்களுக்கு இம்மியளவேனும் சந்தோஷத்துடன் கொடாத நீதியற்ற உலோபியினது செல்வம் வீணாக அழிந்துபோவதைப்போலச் சும்மா விரையில் அழிந்துபோயிற்று.—எ-று. (உ௧)

இரும்பிறை யுருவி னெஃகார் கூர்ங்குயத் தினுமீர்க் கல்லா
வரம்பெறு மிருளின் கற்றை கணங்களு மருளு நீராற்
பரம்பிய தியாண்டு மாகிப் பாரெனப் பட்ட மாது
கரும்படா மொன்று மேற்கொள் காட்சியைப் போன்ற தன்றே.

(இ-ள்.) பெரிய பிறைச்சந்திரன்போலும் வடிவினையுடைய எஃகினாற்செய்யப்பட்ட கூரிய கொடுவாளினாலும் அறுக்கமுடியாத அளவற்ற இருட்கூட்டங்கள் பேய்களும் மயங்கும்படி நிரம்பின. அது பூமிதேவியானவள் ஒரு கரியவஸ்திரத்தைத் தன்மேல் போர்த்துக்கொண்ட தன்மையை யொத்திருந்தது.—எ-று. (உ௨)

வண்டுழாய் மோலிமைந்தன் மாலிருட் கங்குல் வேழத்
தெண்டரு வதனம் பட்ட விரும்புகர்ப் புள்ளி யென்ன

வண்டர்தந் தருக்கள் சிந்து மணிமல ரென்ன வான்றோய்
கொண்டலிற் படுமுத் தென்னத் தாரகை குலவிற் றன்றே.

(இ-ள்.) வளவிய துளபமாலையையணிந்த திருமால் புதல்வனாகிய மன்மதனது பெரிய இருளாகிய யானையின் மதிக்கத்தக்க முகத்திலுண்டாகிய புகர்ப்புள்ளிகளைப்போலவும், தேவதருக்கள் சிந்துகின்ற அழகிய மலர்களைப்போலவும், ஆகாயத்திற்பொருந்திய மேகத்திற்றோன்றிய முத்தைப்போலவும் நக்ஷத்திரங்கள் விளங்கின. ()

துண்ணென வுலக முற்றுஞ் சூழ்ந்தபே ரிருளா நஞ்சைத்
தெண்ணில வாகி யுள்ள செங்கையால் வாரி நுங்கி
விண்ணவர் புகழ நீல வியனிறந் தன்பாற் காட்டுங்
கண்ணுதல் போன்று முந்நீர்த் தோன்றினன் கதிர்வெண் டிங்கள்.

(இ-ள்.) விரைவாக உலகமுழுவது மூடியுள்ள பெரிய இருளாகிய விஷத்தினை சந்திரிகையாகிய செவ்வியகரங்களால் வாரிவிழுங்கித்தேவர்கள் புகழும்படிப் பெரிய நீலநிறத்தைத் தம்மிடத்தில் காட்டுகின்ற சிவபெருமானைப்போலக் கிரணங்களையுடைய சந்திரன் (கீழ்த்திசைக்) கடலில் உதயமாயினன்.—எ-று. (உச)

அழுந்துறு பாலின் வேலை யமரர்கள் கடைந்த காலைச்
செழுந்துளி மணிக ளோடுந் தெறித்தென வுடுக்க டோன்றக்
கழுந்துறு மவுண ரென்னுங் காரிரு டொலைய வங்க
ணெழுந்ததோ ரமுதம் போன்று மிலங்கின னிந்து வென்பான்.

(இ-ள்.) தேவர்கள் ஆழமாகிய பாற்கடலைக் கடந்தபொழுது செழியபாலினது துளிகள் மணிகளுடன் மேலேதெறித்தாற்போல நக்ஷத்திரங்கள்தோன்றவும், கொடிய அசுரர்களென்னுங் கரிய இருள்நீங்கும் வண்ணந் தோன்றிய அமுதத்தைப்போலவும் சந்திரன் விளங்கினன்.—எ-று.

கழுந்து - கொடுமை. (உரு)

இரவெனும் வல்லோன் ஞால மென்பதோ ருலையில் வேலைக்
கரியுறு வடவைத் தீயிற் களங்கொடு வெண்பொன் சேர்த்தி
விரைவொடு செம்மை செய்து மீட்டுமோர் மருந்தாற் றொல்லை
யுருவுசெய் தென்னச் செங்கே ழொளிமதி வெளிய னானான்.

(இ-ள்.) இராக்காலமென்று கூறும் வல்லவனானவன் உலகமாகிய உலைக்களத்தில் சமுத்திரமாகிய கரியிற்பொருந்திய வடவாக்கினியில் வெள்ளியையும் இரசகுளிகையையும் ஒன்றாகச்சேர்த்து உருக்கிச் சிவக்கச்செய்து பின்னும் வேறொருமருந்தினால் பழைய வெள்ளியுருவமாகச் செய்தாற்போலச் செந்நிறத்துடன் தோன்றிய சந்திரன் வெண்ணிறமுடையவனாயினன்.—எ-று. (உசு)

அண்டருங் ககன மென்னு மகலிருந் தடத்திற் பூத்த
விண்டதோர் குவளை யாம்பல் போலுமான் மீன்கள் வெள்ளைப்
புண்டரீ கத்தைப் போலும் புதுமதி யதன்கட் டேனார்
வண்டின மொப்ப தன்றே மாசுதோய் களங்க மாதோ.

(இ-ள்.) நக்ஷத்திரங்கள் அடைதற்கரிய ஆகாயமாகிய பெரிய தடாகத்தில் முறுக்கவிழ்ந்து விரிந்த நீலோற்பல மலர்களையும் அல்லிமலர்களையு மொத்திருந்தன. புதிய சந்திரன் வெண்டாமரைமலரை யொத்தனன். அந்தச் சந்திரனிடத்திலுள்ள களங்கம் அவ்வெண்டாமரை மலரிலுள்ள தேனையுண்ணுகின்ற வண்டின் கூட்டங்களையொத்திருந்தன.—எ-று. (உஎ)

அலைதரு நேமி யென்னு மான்றதோர் தடத்தின் பாலா
நிலவென்னும் வலையை யோச்சி நிழன்மதிப் பரத னீர்த்துப்
பலநிறங்கொண்ட மீன்கள் பன்முறை கவர்ந்து வான்மேற்
புலருற விரித்த தேபோற் பொலிந்தன வுடுவின் பொம்மல்.

(இ-ள்.) அலைகளையுடைய சமுத்திரமென்னும் பெரியதடாகத்தில் வெள்ளிய நிலவென்று கூறும் வலையைவீசி ஒளிபொருந்திய சந்திரனென்னும் வலைஞனானவன் இழுத்துப்பலநிறமமைந்த மீன்களைப் பலமுறைபிடித்து உலரும்படி ஆகாயத்தில் பரப்பினாற்போல நக்ஷத்திரக்கூட்டங்கள் விளங்கின.—எ-று. (உஅ)

கழிதரு முவரி நீத்தங் கையகப் படுத்து மாந்தி
யெழிலிகள் வான மீப்போ யிருநிலத் துதவல் கண்ணூஉப்
பழிதவிர் மதியப் புத்தேள் பாற்கடல் பருகி யாண்டும்
பொழிதரு மமிர்த மென்னப் புதுநிலாப் பூத்ததன்றே.

(இ-ள்.) கழிகளையுடைய உவர்க்கடலின்நீரைத் திரட்டி யுண்டு மேகங்கள் ஆகாயத்திற்சென்று பெரிய நிலவுலகத்தில் மழையாகப்பெய்தலைப் பார்த்துக் குற்றமற்ற சந்திரனானவன் திருப்பாற்கடல் நீரையுண்டு எவ்விடங்களிலுஞ் சிந்துகின்ற அமிர்தத்தைப்போலப் புதிய சந்திரிகை விளங்கியது.—எ-று. (உகூ)

மலர்ந்திடுங் கடவுட் டிங்கள் வாணிலாக் கற்றை யெங்குங்
கலந்தன வுலகில் யாருங் களித்தனர் குமுத மாதி
யலர்ந்தன தளிர்த்த சோலை யம்புயப் போது செவ்வி
புலர்ந்தன வொடுங்கு கின்ற புகைந்தன பிரிந்தோர் புந்தி.

(இ-ள்.) விளங்குகின்ற தெய்வத்தன்மைபொருந்திய சந்திரனது ஒளியமைந்த சந்திரிகை எவ்விடத்தும் நிறைந்தன ; உலகத்தில் யாவருங் களிகூர்ந்தனர்; அல்லி முதலியவைகள் மலர்ந்தன; சோலைகள் தளிர்த்தன ; தாமரைமலர்கள் அழகுகெட்டுக் குவிந்தன; ஒரு தலைக்காமமுடையவர்களது மனம்புகைந்தன.—எ-று. (௩0)

அல்லவை புரியா ரேனு மறிவினிற் பெரியா ரேனு
மெல்லவர் தமக்கு நண்பா யினியவே புரிதற் பாற்றே
பல்லுயிர்த் தொகைக்கு மின்பம் பயந்திடு மதிகண் டன்றே
புல்லிய கமல மெல்லாம் பொலிவழிந் திட்ட வன்றே.

(இ-ள்.) தகுதியற்றவைகளைச் செய்யாதவராயினும் அறிவிற்சிறந்தவர்களாயினும் யாவரிடத்தும் நட்புடையவர்களாய் இனிமையானவைகளைச் செய்தற்குமுடியுமோ? பல உயிர்க்கூட்டங்களுக்கும் இன்பத்தைத்தருகின்ற சந்திரனைப்பார்த்தன்றோ அகவிதழ்களையுடைய தாமரைகளனைத்தும் பொலிவழிந்தன.—எ-று. (௩க)

திங்களின் மலர்ந்த செவ்வித் தேன்முரல் குமுத மெங்கோன்
பங்கமுற் றார்கண் மேவான் பதுமமே னொடுங்கிற் றென்னாத்
தங்களி லுரைத்தல் போலாஞ் சசிக்கது வுண்மை யெம்பா
லிங்கிலை யென்ப போன்ற விசையளி பொதிந்த கஞ்சம்.

(இ-ள்.) சந்திரனால் விரிந்த செவ்வல்லிமலர்களில் வண்டுகள் ரீங்காரம்பாடுதல் (எதுபோலுமெனின்) எமது தலைவன் பங்கமுற்றவர்களிடத்திற் செல்லமாட்டான்; ஏன் தாமரைகளனைத்துங் குவிந்தனவென்று தங்களில் கூறுவதை யொத்தன ; குவிந்ததாமரைமலரினுள் ளிருக்கின்ற வண்டுகள்முழங்குவது,நீங்கள் சொல்லியது சந்திரனிடத்தில் உண்மையே எங்களிடத்தி லில்லையென்று கூறுவதை யொத்தன.

'பங்கமுற்றார்' என்பதற்கு, குற்றம்பொருந்தியவர்களென்றும், சேற்றிற் பொருந்தியவர்களென்றும் பொருள் கொள்க. (சுஉ)

கங்குல்வந் திறுத்த காலைக் கடிமனைக் கதவம் பூட்டிச்
செங்கண்மா றன்னைப் புல்லித் திருமக ளிருந்தா ளென்னக்
கொங்கவிழ் கின்ற செங்கேழ்க் கோகன தங்க ளெல்லாம்
பொங்கிசை மணிவண் டோடும் பொதிந்தன பொய்கை யெங்கும்.

(இ-ள்.) தடாகங்களிலெல்லாம் இராக்காலம்வந்தவுடனே விளங்குகின்ற தனது வீட்டின் கதவினை உள்ளேபூட்டிக்கொண்டு சிவந்த கண்களையுடைய திருமாலைத் தழுவிக்கொண்டு திருமகளிருப்பதைப்போல, மணம்வீசுகின்ற செந்தாமரைமலர்களெல்லாம் இசைபாடுகின்ற வண்டுகளுடன் குவிந்திருந்தன.—எ-று. (சுரு)

வேறு.

ஆனதோர் காலையி லமரர் தம்மையுந்
தானவர் தம்மையுந் தந்த காசிபன்
வானக மெழுதரு மதியின் றெண்ணிலா
மேனிய தடைதலும் வெதும்பி னனரோ.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் தேவர்களையும் அசுரர்களையும் பெற்ற காசிபமுனிவரர் ஆகாயத்திலுதயமாகிய சந்திரனது தெளிந்த நிலாவானது தமதுடம்பிற்படுதலும் வெப்பமடைந்தவராயினார்.—எ-று. (சுசு)

குலைந்தனன் றன்னுளங் குறைந்த வன்மைய
னலந்தன னுயிர்த்தன னறிவு சோர்ந்தனன்
புலர்ந்தன னொடுங்கினன் புலம்பி யங்கண்வா
னிலந்தனி லெழுதரு நிலவை நோக்கினன்.

(இ-ள்.) தமது மனதிடங்குலைந்தனர்; வலிகுன்றினர்; அலைந்தனர், பெருமூச்சுவிட்டனர், அறிவுசோர்ந்தனர், வாட்டமடைந்தனர், ஒடுங்கினர், புலம்புதலுற்று அவ்விடத்து ஆகாயத்திலுதயமாகிய சந்திரனைப்பார்த்தனர்.—எ-று. (சுஎ)

காலையி லெழுந்தசெங் கதிரி னயகன்
மாலையம் பொழுதினின் மறைந்து கீழ்த்திசை
வேலையில் விரைவுடன் மீண்டும் வந்துளான்
போலுமந் தோவிது புதுமை யோவென்பான்.

(இ-ள்.) காலையில் உதயமாகிய சூரியன் மாலையில் அஸ்தமித்துக் கீழ்க்கடலின் வழியாய் விரைவாகத்தோன்றினனோ? ஐயோ! இஃதென்ன ஆச்சரியமோ? என்று சந்திரனைநோக்கி மயங்கிக்கூறுவார்.—எ-று. (சுஅ)

ஞாயிறு மன்றெனி னடுவ ணாகியே
பாயிரும் புணரியுட் பயின்று தோன்றலா
லேயென வுலகட வெண்ணி யாண்டுறுந்
தீயெனுங் கடவுளே திங்க ளன்றென்பான்.

(இ-ள்.) சூரியனுமல்லவெனில் பெரிய கடலின் மத்தியிலிருந்து உதயமாதலால் ஒரு க்ஷணநேரத்தில் உலகத்தை யழிக்கும்படி நினைத்து அக்கடலிலிருக்கின்ற அக்கினிதேவனே இவ்வாறுதித்திருக்கலாம், இஃது சந்திரனன்று என்று கூறுவார்.—எ-று. (சுகூ)

இந்துவென் றுலகெலா மிசைப்ப நின்றதோர்
செந்தழற் கடவுளித் திசையிற் செல்வுழி

வந்ததோர் சோதிகொல் வான மெங்கணு
மந்தியஞ் செக்கரொன் றடைந்த வாறென்பான்.

(இ-ள்.) சந்திரனென்று உலகமெல்லாங்கூறும்படி நின்ற அக்கினிதேவன் இந்த மேற்றிசையிற் சென்றபோதுண்டாகிய ஒளிதானோ ஆகாய முழுவதும் மாலைச் செக்கராகத்தோன்றியது என்று கூறுவார்.—எ-று. (௩அ)

காண்டகு மதியெனக் கழறுஞ் செந்தழன்
மூண்டிடு புகைகொலோ முன்னம் வானமு
மீண்டுறு தரணியுந் திசையு மெங்குமாய்
நீண்டதோ ரிருளென நிமிர்ந்த வாறென்பான்.

(இ-ள்.) காணுதற்குத்தகுந்த சந்திரனென்று சொல்லப்பட்ட தீயினின்று முண்டாகியபுகைதானோ? முன்னே ஆகாயத்திலும் பூமியிலும் திசைகளிலும் மற்றெவ் விடங்களிலும் பெரிய இருளென்னும்படித் தோன்றியது.—எ-று. (௩௯)

தெண்டிரைப் பிறந்திடுந் திங்கட் செந்தழல்
கொண்டது வாலிதாங் கோலங் காரிடைக்
கண்டன னித்திறங் கரையி லாவிக
ளுண்டதிற் பெற்றதிவ் வுருவ மேயென்பான்.

(இ-ள்.) தெளிவாகிய அலைகளையுடைய கடலில் தோன்றிய சந்திரனாகிய சிவந்த அக்கினியானது வெண்ணிறங்கொண்டிருக்கின்றது, இதனை யான் இன்றிரவி லுணர்ந்தேன். அளவற்ற உயிர்களை உண்டதினால் இவ்வெள்ளிய உருவத்தைப்பெற் றது என்று கூறுவார்.—எ-று. (௪0)

ஊனமில் செக்கரா யுதித்துப் பின்னரே
வானிற னாகிய மதியத் தீத்தரத்
தானிறை புலிங்கமே யலது தாரகை
மீனெனப் படுவது வேறுண் டோவென்பான்.

(இ-ள்.) குற்றமற்ற செவ்வானமாகத்தோன்றிப் பின்பு வெள்ளிய நிறத் தோடுங் கூடினதாகிய சந்திரனென்னும் அக்கினியானது சொரிந்த தீப்பொறிகள் நிறைந்தனவேயன்றி நக்ஷத்திரமென்று சொல்லப்படுவது வேறுண்டோ? என்று கூறுவார்.—எ-று. (௪௧)

மால்கட லதனிடை வந்த பான்மையா
லாலமி தாகுமா லமரர்க் கன்றெழு
நீலமெய் யுருவினை நீத்துத் திங்களின்
கோலமொ டின்றிவட் குறுகிற் றேயென்பான்.

(இ-ள்.) பெரிய திருப்பாற்கடலில்தோன்றிய தன்மையினால், இஃது விஷ மேயாகும். அது தேவர்களுக்காக அக்காலத்திற்றோன்றிய கரிய உருவத்தைவிட்டு இன்று சந்திரனென்னு முருவத்துடன் இங்குவந்ததோ என்று கூறுவார்.—எ-று. ()

இங்கிவை யாவுமன் றேர்கொள் வேலையில்
வெங்கனன் முழுவதும் விடமு மார்ந்தெழீஇ
மங்குலிற் சிதறிட வானிற் புக்கனன்
றிங்களே யாமிது திண்ண மென்கின்றான்.

(இ-ள்.) யான் இப்பொழுது கூறியவை யாவும் அன்று; அழகிய கடலிலு ள்ள கொடிய வடவாக்கினியையும் விஷத்தையு முழுவது முண்டெழுந்து மேகத்தை

ப்போலப் பொழியும்பொருட்டு வந்தனன். அவ்வாறு தோன்றினவன் சந்திரனே யாம். இது சத்தியம் என்று கூறுவார்.—எ-று. (சரு)

இனியன மருட்கையா லிசைத்த காசிப
முனிவர னென்பவன் முன்னை மாயையை
நினைபவ னாகியே நெடிது காதலா
லனையவ டனைவிளித் தரற்றன் மேயினான்.

(இ-ள்.) மயக்கத்தினால் இவ்வாறு கூறிய காசிப முனிவரர் பகலில் தன்னிடம்வந்து நின்ற மாயையை நினைத்தவராய் மிகுந்த ஆசையினால் அம்மாயையையழைத்துப் புலம்பத்தொடங்கினார்.—எ-று. (சச)

வேறு.

கொங்குண் கோதைத் தாழ்குழ னல்லீர் கொடியேன்மு
னெங்கு மெங்குங் காணுறு கின்றீ ரொழின்மின்னின்
பொங்குஞ் சோதி போலெதிர் புல்லும் படிநில்லீர்
மங்கும் போதோ சேருதிர் நெஞ்சம் வலியீரோ.

(இ-ள்.) வாசனைபொருந்திய பூமாலையையணிந்த தாழ்ந்த கூந்தலையுடைய மாதரசே! கொடியேனாகிய என் கண்முன்னே மின்னினின்றுந் தோன்றிய வொளியைப்போல எவ்விடங்களிலுங் காணப்படுகின்றீர். யான் எதிரே தழுவும்படி நிற்கமாட்டீர்; கடினசிந்தையுடையீர்! யான் இறக்கும்போதோ அணையப்போகின்றீர்.—எ-று.

முன்னஞ் செய்தீர் காதலை நோன்பை முதலோடும்
பின்னஞ் செய்தீர் மாரனை யேவிப் பிழைசெய்தீர்
சின்னஞ் செய்தீர் நல்லுணர் வெல்லாஞ் சிறியேனுக்
கின்னஞ் செய்யும் பெற்றியு முண்டே லிசையீரோ.

(இ-ள்.) முன்னே ஆசையையுண்டாக்கினீர். என் தவத்தை அடியோடுங் கெடுத்தீர். மன்மதனையேவித் துன்பஞ்செய்தீர்; வளவிய அறிவனைத்தையுங் கெடுத்தீர்; அடியேனுக்கு இன்னும் (துன்பஞ்) செய்யத்தக்க தன்மையுமுண்டோ? சொல்லக்கடவீர்.—எ-று. (சசு)

வாகாய் நின்ற குன்றமும் யாவும் வருவித்தீ
ரேகா நின்றீ ரிவ்விடை தன்னி லெனைநீங்கிப்
போகா நின்றீர் வல்லையின் மீண்டும் புவியெங்கு
மாகா நின்றீர் நுஞ்செயல் யாரோ யறிகிற்பார்.

(இ-ள்.) அழகாகப்பொருந்திய செய்குன்று முதலியவைகளையும் உண்டாக்கினீர்; இவ்விடத்தினின்றுஞ்சென்றீர்; பின்னர் என்னைநீங்கிப்போயினீர்; விரைவாகப்பின்னும் உலகமெங்கும் நிறைந்தீர்; உமது செயலை யாவரறிய வல்லவர்கள்.—எ-று.

பற்றே நும்பா லாயினன் முன்னம் பயில்செய்கை
யற்றேன் வேளா லாற்றவு நொந்தே னஃதாயு
முற்றே னல்லே னும்மொடு மின்னு முழல்கின்றேன்
பெற்றேன் வாளா மாய்ந்தன னென்னும் பிழையொன்றே.

(இ-ள்.) உம்மிடத்தில் விருப்பமுடையவனாயினேன்; முன்பு செய்திருந்த தவத்தொழிலை நீங்கினேன்; மன்மதனால் மிகவும் வருந்தினேன்; அப்படிவருந்தியும் உம்மோடு சேர்ந்தேனல்லேன்; இன்னும் வருந்துகின்றேன்; வீணாக இறந்தேனென்னுங் குற்றமொன்றையே பெற்றேன்.—எ-று. (ச௮)

நேயங் கொண்டீ ராமென வந்தீர் நெறியில்லா
மாயங் கொண்டீர் வன்றிறல் கொண்டீர் மயல்செய்யுங்
காயங் கொண்டீ ராருயிர் நிற்கக் கருதீரேற்
றூயங் கொண்டீர் கூற்றொடு போலுந் தனிவந்தீர்.

(இ-ள்.) தனிமையாக வந்தவரே! அன்புடையவரைப் போல எம்மிடத்து வந்தீர்; முறைப்படி நில்லாத மாயத்தைக்கொண்டீர்; மிக்கமன வுறுதியைக் கொண்டீர்; மயக்கத்தைச் செய்கின்ற தேகத்தைக்கொண்டீர்; எனது அரிய உயிர் தங்கும்படி நினையீராயின், இயமனுடன் உரிமைகொண்டவராவீர்.—எ-று. (சகூ)

வேண்டேன் வேறோர் மாதரை நும்பால் வியன்மோகம்
பூண்டே னும்மை மாயவ ரென்னும் பொருள்கண்டே
னீண்டே சென்றீர் போற்கர வுற்றீ ரெய்தீரேன்
மாண்டே னின்னே யாருயிர் நிற்பான் வருவீரே.

(இ-ள்.) யான் வேறொரு மாதரை விரும்பேன்; உம்மிடத்துமிக்க மோகத்தைக்கொண்டேன்; நீர் மாயாரூபி யென்னும் பொருளையுணர்ந்தேன்; இவ்விடத்திற் சென்றவர்போல் மறைந்தீர்; நீர்வராதிருப்பீராயின் யான் இறந்துவிடுவேன்; ஆதலால் எனது அரிய உயிர்தங்கும்படி வரக்கடவீர்.—எ-று. (ருo)

ஒன்றே யாகு மாயம தானீ ருலகெல்லாம்
வென்றே செல்வீ ரென்னுயிர் கொள்வான் விழைவீரே
னன்றே நன்றே நல்குவன் யானே நனிநண்பாற்
சென்றே யோர்கா னீமம தீரச் சேர்வீரே.

(இ-ள்.) ஏகமாகிய மாயையினால் கடல்சூழ்ந்த உலகனைத்தையும் வென்று செல்லுகின்றவரே! எனதுயிரைக் கொள்ளும்பொருட்டு விரும்புவீராயின் நன்று நன்று; யானேமிகுந்த பிரியத்துடன் தருகின்றேன்; ஒருதரம்வந்து எனதுமிக்க ஆசை தீரும்படி என்னைத்தழுவுவீர்.—எ-று. (ருக)

என்னா வென்னா வித்தகை பன்னி யிடராழித்
துன்னா மாழ்கிச் சோர்தரு மெல்லைத் துகடீரு
மின்னா நின்ற மாயவ ளன்னான் விழிகாண
முன்னாய் நின்றா ளவ்வினை கட்கு முதலானாள்.

(இ-ள்.) என்று பலதரம் இவ்வாறுகூறித் துன்பக்கடலில் மூழ்கி வருந்திச் சோர்ந்திருக்கும்பொழுது, எத்தொழிலுக்கும் முதன்மையானவளாகிய குற்றமற்ற மாயையானவள், அம்முனிவர் கண்ணிற்காணும்படி முன்னேநின்றனள்.—எ-று. ()

**காசிபன் புலம்புறுபடல முற்றிற்று.**

ஆ திருவிருத்தம் - கஅ.

௨

முருகன்றுணை.

# அசுரர் தோற்று படலம்.

கந்தார் மொய்ம்பிற் காசிப னென்போன் கடிதங்கண்
வந்தாள் செய்கை காணுத லோடு மகிழ்வெய்தி
யந்தா வுய்ந்தேன் யானென மின்கண் டலர்கின்ற
கொந்தார் கண்டல் போனகை யோடுங் குலவுற்றான்.

(இ-ள்.) ஸ்தம்பம்போன்ற தோளிணையுடைய காசிபமுனிவரர் விரைவாக அவ்விடத்தில்வந்த மாயையினது தன்மையைப் பார்த்தவுடன் மகிழ்வடைந்து, ஆ! ஆ!! யான் உய்ந்தேன் என்று கூறி, மின்னலைக்கண்டு விரிகின்ற கொத்தாகிய தாழம்பூவைப்போலப் புன்னகையுடன் விளங்கினார்.—எ-று. (க)

ஆடா நின்றான் குப்புற லுற்றா னவடன்மேற்
பாடா நின்றான் யாக்கைபொ டிப்பிற் படர்போர்வை
மூடா நின்றா னன்னதொர் மாயை முன்சென்றான்
வீடா நின்ற தன்னுயிர் காக்கும் விதிகொண்டான்.

(இ-ள்.) அழிகின்ற தமதுயிரைக் காக்கின்ற விரதத்தை மேற்கொண்டுள்ள காசிபமுனிவர் அம்மாயையின் முன்னே சென்றவராய்க் கூத்தாடினார், துள்ளிக்குதித்தார்; அவள்மீது பதம் பாடினார்; புளகாங்கிதத்தினாலுண்டாகிய வேர்வையினால் மூடப்பட்டனர்.—எ-று. (உ)

வேறு.

என்னேசெய வேண்டிற்றவை யெல்லாமிசை வாலே
முன்னேபுரி கிற்பேனிவண் முனிகின்றதை யொருவி
நன்னேயமொ டணையாளுதிர் நனிவல்லையி லென்னாப்
பொன்னேரடி மிசைதாழ்தலு மவளின்னது புகல்வாள்.

(இ-ள்.) யான் என்னசெய்யவேண்டுமோ? அவையனைத்தையும் உமதிஷ்டப்படி முன்னே செய்வேன். இவ்விடத்தில் என்மீது கோபித்துக்கொள்வதையொழித்து அதிக விரைவாக நல்ல பிரியத்துடன் ஆளக்கடவீரென்று அம்மாயையினது பொன்போன்ற பாதங்களில் வணங்கவும், அம்மாயை இதனைக் கூறுவாள்.

வெருவுற்றிட லிவணின்றவென் வியன்மெய்யினுக் கியையுந்
திருமிக்குறு தகவாகிய திறன்மேனியு மேற்கொ
ளுருவொப்பதொர் வடிவும்முட னுடனெய்திடு வாயேன்
மருவுற்றிடு கின்றேனென மயில்சொற்றன ளன்றே.

(இ-ள்.) முனிவரோ! நீர் அஞ்சாதீர்; இவ்விடத்தில் நின்ற எனது பெருமிதமிக்க உருவத்திற்குத்தக்க அழகியவடிவத்தையும்,யான் இனிமேல்கொள்ளுகின்ற உருவத்திற்குத்தக்க உருவத்தையும் உடனே யெடுப்பீராயின் உம்மைத்தழுவுகின்றேன் என்று மாயைகூறினள்.—எ-று. (ங)

ஏமுற்றிடு முனிவர்க்கிறை யிதுகேட்டலு முன்னங்
காமக்கடல் படிகின்றவன் களிசேர்தரு முவகை
நாமக்கட லிடையாழ்ந்தன னன்றாலிஃ தென்றான்
சேமத்திரு நிதிபெற்றிடு மிரவோனெனத் திகழ்வான்.

(இ-ள்.) காமங்கொண்டிருக்கின்ற காசிபமுனிவரர் இதனைக் கேட்டவுடனே முன்னே காமக்கடலில் மூழ்கினவர் (இப்பொழுது) களிப்புமிக்க சந்தோஷமாகிய பெரிய கடலில் மூழ்கினவராய் இஃது நன்றென்று கூறி, சேமத்திலிருந்த பெரிய செல்வத்தை யடைந்த தரித்திரனைப்போலச் சந்தோஷமடைந்தனர்.—எ-று. (௫)

அற்றேமொழி தருதன்மையி லார்வத்தொடு தமியேன்
குற்றேவல்செய் கிற்பேனிளங் கொடியேரிடை யென்னாச்
சொற்றேதவ முயல்வன்மையிற் றுகடீர்தரு மனிலப்
பொற்றேரவற் கிலதென்பதொர் புத்தேளுருக் கொண்டான்.

(இ-ள்.) இளங்கொடி போலும் அழகிய இடையினையுடையாய் அடியேன் நீ கூறியபடி அவ்வாறே மிகுந்த விருப்பத்துடன் ஊழியஞ் செய்கின்றேன் என்று கூறித் தமது தபோபலத்தினால் குற்றமற்ற தென்றற் றேரினையுடைய மன்மதனுக்கும் இவ்வளவு அழகுகிடையாதென்று கூறும்படி ஒரு தேவவுருவங் கொண்டனர்.

அன்றாயதொ ருருவெய்திய வறிவன்றனை வியவா
நன்றாலுன தியல்பாமென நகையாக்கரம் பற்றாக்
குன்றாகிய முலையாளவற் கொடுபோந்தன ளங்கட்
பொன்றாழ்கிரி யெனவோங்குமொர் பொலன்மண்டபம் புகுந்தாள்.

(இ-ள்.) அப்பொழுது புதிதாக வுண்டாகிய காசிபமுனிவரது வடிவத்தைப்பார்த்து மலைபோலும் ஸ்தனத்தினையுடைய அம்மாயையானவள் வியந்து உனதுதன்மை மிகநன்றென்று நகைத்துக் கரத்தைப் பிடித்து அவரையழைத்துக்கொண்டு சென்று அவ்விடத்திலுள்ள மகமேருகிரியைப்போலு முன்னதமான ஒரு பொன்மண்டபத்தில் பிரவேசித்தனள்.—எ-று. (எ)

வேறு.

கற்பனை யின்றியே கடிதின் முன்னுறு
மற்புத மண்டபத் தாணை யால்வரும்
பொற்புறு சேக்கையிற் பொருந்தி னாரரோ
வெற்படு கங்குலின் முதலி யாமத்தில்.

(இ-ள்.) கற்பித்தலில்லாமல் விரைவாக எதிரில் காணப்பட்ட அற்புதமாகிய மண்டபத்தில் அவளுடைய கட்டளையினாலுண்டாகிய அழகுபொருந்திய சயனத்தில் சூரியன் அஸ்தமித்த முதல் யாமத்தில் சேர்ந்தனர்.—எ-று. (அ)

சூருறு வெம்பசி தொலைப்ப வைகலு
மாரஞ ரெய்தினோ னரிதின் வந்திடு
பேரமு துண்குறு பெற்றி போலவக்
காரிகை தனைமுனி கடிதிற் புல்லினான்.

(இ-ள்.) துன்பத்தைத் தருகின்ற கொடிய பசியை நீக்கிக்கொள்ளும்பொருட்டுத் தினந்தோறும் மிகுந்த வருத்தமடைகின்ற ஒருவன் தனக்கு அருமையாகக் கிடைத்த தேவாமிர்தத்தை (மிகுந்த விரைவாக) உண்ணுந் தன்மைபோல, காசிப முனிவரர் மாயையை விரைவாக ஆலிங்கனஞ் செய்தனர்.—எ-று. (௯)

புல்லனு மெதிர்தழீஇப் புகரில் காசிபன்
றொல்லையி லுணர்வொடு தொலைவில் செய்தவம்
வல்லையில் வாங்குறு மரபி லன்னவன்
மெல்லித ழமிர்தினை மிசைதின் மேயினள்.

(இ-ள்.) அம்முனிவர் அவ்வாறு ஆலிங்கனஞ்செய்தலும், அவளும் எதிரே ஆலிங்கனஞ்செய்து குற்றமற்ற அம்முனிவரது துன்பமற்ற அறிவினுடன் அவர் செய்த அழியாத தவத்தையும் விரைவில் வாங்குகின்றவளைப்போல அவருடைய மெல்லிய இதழிலுள்ள அமிர்தத்தைப்பானஞ் செய்யத்தொடங்கினள்.—எ-று (௧௦)

பின்னுற மாயவள்பெரிதுங் காமுறு
மன்னவன் புணர்தர வறிவ தொன்றையுந்
தொன்னெறி யளித்தெனத் தொண்டைச் சேயிதழ்
முன்னுறு மமிர்தினை முனிக்கு நல்கினள்.

(இ-ள்.) பின்பு அம்மாயையானவள் தன்மீது மிகுந்த மோகங்கொண்டிருக்கின்ற காசிபமுனிவர் தன்னைப்புணரும்பொருட்டுத் தான் முன்னே இழுத்துக்கொண்ட அறிவைமாத்திரம் பழையபடியே திரும்பக்கொடுத்தாற்போலத் தனது கொவ்வைக்கனிபோலுஞ் சிவந்த இதழினிடத்துள்ள அமிர்தத்தைக் காசிபமுனிவருக்குக் கொடுத்தனள்.—எ-று. (௧௧)

உட்டெளி வின்றியே யுலப்பின் றோடிய
மட்டறு காமமாம் வாரி யுற்றுளா
னட்டொளிர் பொன்னனு ளல்கு லாஞ்சுழிப்
பட்டன னின்பமாம் பரவை நண்ணுவான்.

(இ-ள்.) மனத்தில் தெளிவில்லாமல் அழியாதுபெருக்கெடுத்தோடிய அளவற்ற காமமாகிய கடலில் மூழ்கியுள்ள காசிபமுனிவர் இன்பக்கடலில் மூழ்கும்பொருட்டு நெருப்பிற்காய்ச்சப்பட்டு மாற்றேறிய பொன்போன்ற அம்மாயையினது நிதம்பமாகிய சுழியிலகப்பட்டனர்.—எ-று. (௧௨)

தோமறு முனிவரன் சுரதத் தாற்றினாற்
காமரு மதனநூல் கருத்திற் சிந்தியாத்
தேமொழி மயிலொடு செறிந்து போகமார்
பூமியி னோரெனப் புணர்தன் மேயினன்.

(இ-ள்.) குற்றமற்ற காசிபமுனிவரர் அழகுபொருந்திய மதனாகமத்தை மனதில் நினைத்துப் போகபூமியி லுள்ளவர்களைப்போலத் தேன்போலு மொழியினையுடைய மாயையுடன் கூடிச் சுரதமுறைப்படிப் புணரத்தொடங்கினர்.—எ-று. (௧௩)

செம்மயி லன்னவித் தெரிவை தன்னிடை
யெம்மையு மில்லதோ ரின்ப மிங்ஙன
மெய்ம்மையி னல்கிய விதியி னோர்க்கியா
னம்மசெய் கின்றதோ ரளவுண் டோவென்றான்.

(இ-ள்.) செவ்விய மயில்போன்ற இந்தப் பெண்ணினிடத்தில் எப்பொழுது மில்லாததாகிய ஒரு புதிய இன்பத்தை இவ்விடத்தில் உண்மையாகக்கொடுத்த ஊழினுக்கு யான் செய்யக்கூடிய ஒரு உபகாரமுண்டோவென்று கூறினர்.—எ-று.

ஆறறி முனிவர னநங்க நூன்முறை
வீறொடு புணர்தலும் வெய்ய மாயவள்

கீறின ணகத்தினுற் கீண்ட பாறெறு
மூறிய காமநீ ரொழுகிற் றென்பவே.

(இ-ள்.) நல்ல முறைமையினையுணர்ந்த காசிபமுனிவரர் மதனுகமப்படி வேகத்தோடு புணரவும், கொடியமாயையானவள் தனது நகத்தினுல் கீறினள்; அப்படிக் கீறியவிடங்களிலெல்லாம் சுரக்கின்ற காமநீர் ஒழுகியது.—எ-று.

வீறு - மதனநூலிற்சொல்லப்பட்ட வேகம்; காமமுற்றவர்களுக்குத் தேக முழுதுங் காமநீர் பரவியிருக்குமென்பது பிரமாண மாகலின், 'கீண்டபாறெறு - மூறியகாமநீரொழுகிற்று' என்று கூறினர். (கரு)

உணர்வுடை முனிவர னுயர்ந்த விஞ்சையர்
மணமுறை யிதுவென மாயை தன்னொடு
புணர்தொழில் புரிந்தனன் போக முற்றினன்
றுணையறு மின்பெனுங் கடலிற் றோய்ந்துளான்.

(இ-ள்.) நல்லுணர்ச்சியையுடைய காசிபமுனிவரர் உயர்ந்த காந்தருவவிவாக முறைமை இதுவாகுமென்று கூறும்படி அம்மாயையுடன் கலவித்தொழில் செய்து போகமுற்றினவராய் ஒப்பற்றகாமவின்பமென்னுங் கடலினிடத்து மூழ்கினவராயினர்.—எ-று.

இன்பெனுங் கடலிற்றோய்தல்-புணர்ச்சிமுடிவில் அவசமாய்முலையிடைத் துயிறல். (கசு)

வேறு.

அந்த வேலையின் முகுந்தனு மம்புயத் தவனு
மிந்தி ராதியர் யாவரு முனிவர ரெவருந்
தந்த முள்ளமே னடுக்குற மாயவ டன்பால்
வந்து தோன்றினன் சூரபன் மாவெனும் வலியோன்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் அரிப்பிரமேந்திராதி தேவர்களனைவரும், எல்லா முனிசிரேஷ்டர்களும் தங்கள் தங்கள் மனத்தில் நடுக்கமுண்டாகும்படிப் பலசாலியான சூரபன்மனென்பவன் மாயையினிடத்தில் வந்து பிறந்தனன்.—எ-று. ()

துயக்க மில்லதோர் சூரன்வந் திடுதலுந் தொல்லை
முயக்க வேலையி லிருவர்பான் முறைமுறை யிழிந்த
வியர்ப்பில் வந்தனர் முப்பதி னுயிர வெள்ளம்
வயக்க டுந்திறற் றுனவர் யாரினும் வலியோர்.

(இ-ள்.) சோர்வில்லாத சூரபன்மன்பிறந்தவுடனே, முன்புணரும்பொழுது அவ்விருவர்களிடத்தினின்றும் முறையே யொழுகிய வியர்வைநீரில் எவரினுஞ் சிறந்த வலிமையுடையவர்களாய் வெற்றியும் மிக்க பராக்கிரமமும்பொருந்திய முப்பதினுயிரம் வெள்ளம் அசுரர்கள் பிறந்தார்கள்.—எ-று. (கஅ)

அன்னர் தம்மையு முதலவன் றன்னையு மங்க
ணின்மி னீரென நிறுவியே யாயிடை நீங்கி
மின்னு நூலணி முனியொடு மாயவள் வேறோர்
பொன்னின் மாமணி மண்டப மதனிடைப் புகுந்தாள்.

(இ-ள்.) அந்த முப்பதினுயிரம் வெள்ளம் அசுரர்களையும் அவர்கள் தலைவனுகிய சூரனையும் அவ்விடத்தில் நீங்கள் நில்லுங்களென்றுகட்டளையிட்டு நிறுத்திவிட்டு, அவ்விடத்தினின்று நீங்கி மாயையானவள் விளங்குகின்ற பூணூலையணிந்த காசிப

முனிவருடன் வேறே யொருபொன்னாலாகிய மிக்க மணிகளிழைத்த மண்டபத்திற் புகுந்தனள்.—எ-று. (௧௯)

மானை நேர்பவ ளாயிடைத் தொல்லுரு மாற்றி
மேன சூரரிப் பிணவுருக் கொள்ளலும் விரையிற்
றானு மோர்திறன் மடங்கலே றுமெனச் சமைந்தான்
மோன மாய்முன மருந்தவ மியற்றிய முதல்வன்

(இ-ள்.) மான்போன்ற (விழியினையுடைய)மாயையானவள் அவ்விடத்தில் தனது பழையவடிவத்தை நீக்கி அச்சந்தரத்தக்க ஒரு பெரிய பெண்சிங்கத்தின் வடிவத்தைக் கொள்ளவும், உடனே மவுனமாகவிருந்து முன்னந்தவஞ்செய்த காசிபமுனிவர் தாமும் ஒருவலிய ஆண்சிங்க வடிவங்கொண்டனர்.—எ-று. (௨௦)

மங்கை யோடவன் மடங்கலாய் மகிழ்வுடன் புணரக்
கங்குல் வாயிரண் டாகிய யாமமேற் கடிதே
யங்கை யோரிரண் டாயிர மாயிர முகமாய்ச்
சிங்க மாமுகன் றோன்றினன் றிடுக்கிடத் திசைகள்.

(இ-ள்.) இரவில் இரண்டாஞ்சாமத்தில் காசிபமுனிவர் மாயையுடன் சிங்கவடிவங்கொண்டு மகிழ்வோடு புணரவும், திக்குகளனைத்துந் திடுக்கிடும்படி விரைவாக இரண்டாயிரங் கைகளையும் ஆயிரஞ் சிரங்களையுமுடைய சிங்கமுகாசுரன்பிறந்தனன்.—எ-று. (௨௧)

இத்தி றத்திவ ரிருவரும் புணர்வுழி யாக்கை
மெத்தி வீழ்தரும் வியர்ப்பினில் விறலரி முகராய்ப்
பத்து நால்வகை யாயிர வெள்ளமாம் படைஞர்
கொத்தி னோடுவந் துதித்தனர் கூற்றுயிர் குடிப்பார்.

(இ-ள்.) இவர்களிருவரும் இவ்வாறுபுணர்ந்தவுடனே உடம்பினின்றும் மிகுதியாகவொழுகிய வியர்வைநீரில் வலியசிங்கமுடையவர்களாய் இயமனது உயிரையுண்ணத்தக்கவர்களாய் நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் கூட்டமாகவந்து பிறந்தார்கள்.—எ-று. (௨௨)

மற்று மத்தொகை யோரையு மாமகன் றனையு
நிற்றி ரீண்டென மாயவள் வீற்றொரு நிலயந்
தெற்றெ னப்புகுந் தோர்பிடி யுருக்கொடு சேரக்
கொற்ற மால்களிற் றுருவினை முனிவனுங் கொண்டான்.

(இ-ள்.) பின்னும் மாயையானவள் அந்தநாற்பதினாயிரம் வெள்ள மசுரர்களையும் சிங்கமுகாசுரனையும் நீங்கள் இவ்விடத்திலேயே நில்லுங்களென்று கூறி, விரைவாக வேறோர்மண்டபத்திற் புகுந்து ஒருபெண்யானையினுருவங்கொண்டு வருதலும் காசிபமுனிவரும் வெற்றிபொருந்திய பெரிய ஆண்யானையின் வடிவத்தைக் கொண்டனர்.—எ-று. (௨௩)

பேரு மும்மத மால்களிற் றருக் கொடு பிடிமேற்
சேரு கின்றுழி மூன்றெனச் செல்லும்யா மத்தி
லீரி ரண்டுவா ளெயிற்றுடன் யானைமா முகத்துத்
தாரகாசுரன் றோன்றினை னவுணர்க டழைப்ப.

(இ-ள்.) மூன்றாவதுசாமத்தில் (காசிபமுனிவரர்)மதமொழுகுகின்ற பெரிய யானையி னுருவத்துடன் பெண்யானைவடிவங்கொண்ட மாயையைச் சேரும்பொ

ழுது ஒளிபொருந்திய நான்குதந்தங்களோடு பெரியயானைமுகத்தையுடைய தாரகாசுரன் அசுரர்கள் விருத்தியாகும்படிப் பிறந்தனன்.—எ-று. (உச)

ஏனு மங்கவர் மெய்ப்படு வியர்ப்பினு மிபத்தின்
கோல மானவர் தோன்றின ரவர்குழுக் குணிக்கி
னூனு பத்தின்மே லாயிர வெள்ளமா நவின்றார்
மூல நாடியே யிப்பரி சுணர்த்திய முனிவர்.

(இ-ள்.) பொருந்திய அவ்விருவர்களது உடம்பிலுண்டாகிய வியர்வை நீரினின்றும் யானைமுகத்தினையுடைய அசுரர்கள் பிறந்தார்கள்; அவர்களது தொகையைக்குறிக்குமிடத்தில், நாற்பத்தோராயிரம் வெள்ளமென்று பழைமையை யாராய்ந்து இத்தன்மையையுணர்த்திய வியாச முனிவர் கூறினார்.—எ-று.

வியாசமுனிவர் அருளிச்செய்த முன்னூலிற் கூறியுள்ளதேயன்றி யானொன்றும் புதிதாய்க் கூறிலனென்பார், 'மூலநாடியே யிப்பரிசுணர்த்திய முனிவர்நவின்றார்' என்று கூறினார்.

இது கவிக்கூற்று. (உரு)

ஆண்டு தாரகன் றன்னையு மவுணர்க டமையு
மீண்டு நிற்றிரென் றோர்மணி மண்டபத் திறுத்து
மாண்ட யாமமேற் றகர்ப்பிணா வுருக்கொள மாயை
பூண்ட வன்பினன் செச்சையி னுருக்கொடு புணர்ந்தான்.

(இ-ள்.) அவ்விடத்தில் தாரகாசுரனையும் மற்றைய அசுரர்களையும் பார்த்து நீங்கள் இவ்விடத்தில் நில்லுங்களென்று கூறி, வேறே ஒரு அழகியமண்டபத்திற்புகுந்து நான்காவது சாமத்தில் மாயையானவள் பெட்டையாட்டி னுருவங்கொள்ள அவள்மீது விருப்பத்தினையுடைய காசிபமுனிவரர் ஆண்யாட்டினுருவங்கொண்டு புணர்ந்தனர்.—எ-று. (உசு)

புணர்ந்த காலையி லசமுகி தோன்றினள் புவியோர்க்
கணங்கு செய்தகர் முகவரா யங்கவர் வியர்ப்பிற்
கணங்கொண் முப்பதி னாயிர வெள்ளமாங் கணிதத்
திணங்கு தானவ ருதித்தன ரிமையவர் கலங்க.

(இ-ள்.) அவ்வாறு புணர்ந்தபொழுது அசமுகிபிறந்தனள், உடனே அவர்களது வியர்வையில் உலகத்திலுள்ளவர்களுக்குத் துன்பத்தைச்செய்கின்ற ஆட்டுமுகமுடையவர்களாய் முப்பதினாயிரம் வெள்ளமென்னுங் கணக்கினையுடைய அசுரர்கள் தேவர்கள்மனங்கலங்கும்படிப் பிறந்தார்கள்.—எ-று. (உஎ)

மீள மற்றவர் தம்மையு நிறுவிவே றுள்ள
சூளி கைப்பெரு மண்டபந் தொறுந்தொறு மேகி
யாளி வல்லியம் புரவிமா னோரியெண் கேனங்
கூளி யாதியாம் விலங்கின துருவெலாங் கொண்டார்.

(இ-ள்.) பின்னும் அவர்களை அவ்விடத்தில் நிறுத்திவிட்டு வேறிடங்களிலுள்ள முகப்புக்களோடு கூடிய பெரியமண்டபங்கள்தோறுஞ் சென்று யாளி, புலி, குதிரை, மான், முதுநரி, கரடி, பன்றி, இடபம்முதலிய மிருகங்களினுருவங்களனைத்துங் கொண்டார்கள்.—எ-று. (உஅ)

இறுதி யில்லதோர் விலங்கின துருவுகொண் டிரவின்
புறம தாகிய புலரிசேர் வைகறைப் பொழுதின்

முறையின் மாயையு முனிவனு மாகியே முயங்கி
யறுப தாயிர வெள்ளமா மவுணரை யளித்தார்.

(இ-ள்.) அளவற்ற மிருகங்களின் வடிவங்களைக்கொண்டு இரவிற்குவேறாகிய அருணோதயத்திற்கு முந்திய விடியற்காலத்தில் முறைப்படி மாயையுங் காசிப முனிவரும் புணர்ந்து அறுபதினாயிரம் வெள்ளம் அசுரர்களைப்பெற்றார்கள்.—எ-று.()

மிகுதி கொண்டிடு மிரண்டுநூ றாயிர வெள்ளந்
தகுவர் தம்மையுஞ் சூரனே முதலினோர் தமையும்
புகலு மோரிராப் பொழுதினி லளித்ததற் புதமோ
வகில மும்வல மாயவட் கிச்செய லரிதோ.

(இ-ள்.) மிகுதியாகவுள்ள இரண்டுநூறாயிரம் வெள்ளம் அசுரர்களையும் சூரன்முதலியவர்களையும் சொல்லப்பட்ட ஒரு இராப்பொழுதில் பெற்றது ஆச்சரியமோ? எல்லாம் வல்ல மாயையென்பவளுக்கு இது ஒரு அரியசெய்கையோ?—எ-று.

ஆங்க வெல்லையி னண்டமா யிரத்தெட்டி னுள்ளுந்
தீங்கு கொண்டிடுங் குறிகளுள் ளனவெலாஞ் செறிந்து
நீங்க லின்றியே நிகழ்வன நீர்மைகண் டெவரு
மேங்கு கின்றனர் விளைவதென் னேவென விரங்கி.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் ஆயிரத்தெட் டண்டங்களிலெல்லாம் துற்குறிகளனைத்தும் நெருங்கி இடைவிடாதுண்டாயின்; இத்தன்மையைப் பார்த்து எல்லாரும் இவ்வுற்பாதத்தால் என்னதீங்குவிளையுமோவென்று வருந்தி யேக்கமுற்றவர்களானார்கள்.—எ-று. (ருக)

அல்லெ னும்பொழு திறத்தலு மாயவ ளரிவைத்
தொல்லை நல்லுருக் கோடலு முனியுமத் துணையே
வல்லை தன்னுரு முன்னையிற் கொண்டனன் மற்றவ்
வெல்லை தன்னிடை யுதயவா யணுகின னிரவி.

(இ-ள்.) இராப்பொழுது நீங்கினவுடனே மாயையானவள் தனது பழைய நல்லுருவத்தையடையவும் அப்பொழுதே காசிபமுனிவரும் விரைவாகத் தமதுபழைய உருவத்தை யடைந்தனர்; அந்தச் சமையத்தில் உதயகிரியில் சூரியன் உதித்தனன்.

நிட்டைக் கேற்றிடு முனிவனை மாயவ ளிசியில்
விட்டுப் போந்தில ளற்புத மென்விளைந் ததுவோ
கிட்டிக் காண்பனென் றுதயமாங் கிரிப்புறத் தணுகி
யெட்டிப் பார்த்தன னென்னவே யுதித்தன னிரவி.

(இ-ள்.) நிஷ்டைசெய்தற்குரிய காசிபமுனிவரை இரவில் மாயைவிட்டு நீங்கினாளில்லை; அதனால் என்ன ஆச்சரியம் விளைந்ததோ? நான்சென்று பார்க்கின்றேனென்று உதயகிரியின் அருகில்வந்து எட்டிப் பார்ப்பவனைப்போலச் சூரியனுதயமாயினன்.—எ-று. (ருரு)

வேறு.

எல்லவந் திடுதலு மீன்ற மாயவள்
செல்லுறு மப்புவி செறிந்து சேணினுஞ்
சொல்லிய திசையினுந் துவன்றி யார்த்திடு
மொல்லெனுஞ் சனத்தினை யுவந்து நோக்கினள்.

(இ-ள்.) சூரியனுதயமாகவும், அவ்வசுரர்களைப்பெற்ற மாயையானவள் தான் சென்ற அந்த இடத்தில் நெருங்கி ஆகாயத்திலும் சொல்லப்பட்ட திசைகளிலும் பொருந்தி ஒல் என்று இரைகின்ற சனங்களை விரும்பிப்பார்த்தனள்.—எ-று. (௬௪)

விண்டுறு தானவர் வெள்ளம் யாவையுங்
கண்டன னெந்தைதன் கரும மிச்செயல்
கொண்டில மாயையிற் கூடிற் றீதென
வண்டரு மற்புத மடைகுற் றுன்முனி.

(இ-ள்.) காசிபமுனிவரா் இவ்வாறுவெளிப்பட்ட அசுரர் வெள்ளங்களையெல்லாம் பார்த்துப் பிரமனதுசிருஷ்டியாகிய இச்செயலைநாம் செய்தோமில்லை. ஆதலால்,இதுமாயையினலுண்டானதேயாம் என்றுகூறி அளவற்ற ஆச்சரியமடைந்தனர்.

பற்பக லருந்தவம் பயின்ற தூயனும்
பொற்புறு மாயையும் புதல்வர் தந்தொகை
யற்புத மோடுகண் டன்பி னீரராய்
நிற்புழித் தெரிந்தன னேரில் சூரனே.

(இ-ள்.) அநேககாலம் அரிய தவத்தைச்செய்த காசிபமுனிவரும் அழகு பொருந்தியமாயையும் தமது புதல்வர்கூட்டங்களை ஆச்சரியத்துடன்பார்த்து விருப்பமுற்றவர்களாய் நிற்கும்பொழுது ஒப்பற்ற சூரபன்மன் அவ்விருவர்களையும் பார்த்தனன்.—எ-று. (௬௫)

இருமுது குரவரு மீண்டுற் றூரவர்
திருவடி வணங்கியாஞ் செய்தி றத்தினை
மரபொடு வுனவுதும் வம்மி னீரென
வரிமுகன் றூரக னறியக் கூறினன்.

(இ-ள்.) தந்தைதாயர்களாகிய இருவரும் இங்குஇருக்கின்றூர்கள், அவர்களது திருவடிகளை வணங்கி நாம் செய்யவேண்டியகாரியங்களை முறைப்படி வினவுவோம் வாருங்களென்று (சூரபன்மனனவன்) தனது தம்பியர்களாகிய சிங்கமுகனும் தாரகனும்அறியும்படிக் கூறினன்.—எ-று. (௬௭)

அறைகழ லிளையவ ரதனைத் தேர்வுறீஇ
யுறுதியி தாமென வுரைத்துப் பின்வரத்
துறுமல்கொண் டிருந்ததன் றொல்ப தாதியை
நிறுவின னவ்விடை நின்று நீங்கினன்.

(இ-ள்.) சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த தம்பிமார்கள் அதனையுணர்ந்து இதுவே உறுதியென்று கூறிப் பின்றொடர்ந்துவர, நெருங்கியிருந்த தனதுபெருஞ்சேனைகளை நிறுத்திவிட்டு அவ்விடத்தினின்று நீங்கிச்சென்றனன்.—எ-று. (௬௮)

அசுரர்தோற்றுபடல முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம் - ௧௭௬.

உ
முருகன்றுணை.

# காசிபனுபதேசப்படலம்.

நீங்கிய சூர்முத னெறியி னேகியே
யாங்கவ ரடிதொழு தருள்செய் மேலையீர்
யாங்கள்செய் கின்றதென் னிசைமினீ ரென
வோங்கிய காசிப னுரைத்தன் மேயினன்.

(இ-ள்.) அவ்வாறு நீங்கிய சூரபன்மன் முறைப்படி சென்று அத்தாய் தந்தையர்களது பாதங்களைவணங்கி எங்களைப்பெற்ற பெரியோர்களே! நாங்கள் செய்யவேண்டுவதுயாது? நீங்கள்சொல்லுங்களென்று வினவுதலும், சிறந்த காசிபமுனிவரர் சொல்லத்தொடங்கினர்.—எ-று. (க)

உறுதிய தொன்றினை யுணர்த்து கின்றன
னற்றகழன் மைந்தர்கா ளரிய மாதவ
நெறிதனின் மூவிரு நிற்றி ரன்னதன்
முறைதனை வாய்மையான் மொழிவன் கேண்மினோ.

(இ-ள்.) சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த புதல்வர்களே! யான் ஒரு உறுதியை உங்களுக்குக்கூறுகின்றேன். (அஃதென்னையெனின்,) நீங்கள்மூவரும் அருமையாகிய சிறந்த தவமார்க்கத்தில் நில்லுங்கள் அத்தவத்தின் முறைமையை உண்மையாகச்சொல்லுகின்றேன்கேளுங்கள்.—எ-று. (உ)

சான்றவ ராய்ந்திடத் தக்க வாம்பொருண்
மூன்றுள மறையெலா மொழிய நின்றன
வான்றதோர் தொல்பதி யாரு யிர்த்தொகை
வான்றிகழ் தளையென வகுப்ப ரன்னவே.

(இ-ள்.) பெரியோர்கள் ஆராய்ச்சி செய்யத்தக்க பொருள்கள் மூன்றுண்டு; அவை வேதங்களனைத்துங் கூறும்படி நின்றன. (அவை யாவையெனின்,) எங்கும் நிறைந்துள்ளதாகிய பழைமையாகிய பதியும், அரிய பசுவர்க்கங்களும், உயர்ச்சிபொருந்திய பாசமும் என்று வகுத்துக் கூறுவார்கள்.—எ-று. (ங)

அளித்திடல் காத்திட லடுதன் மெய்யுணர்
வொளித்திடல் பேரரு ளுதவ லேயெனக்
கிளத்திடு செயல்புரி கின்ற நீலமார்
களத்தினன் பதியது கழறும் வேதமே.

(இ-ள்.) சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்று கூறப்பட்ட பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்கின்ற நீலகண்டராகிய சிவபெருமானே பதியாகும்; அவ்வுண்மையை வேதங்கள் எடுத்துக்கூறும்.—எ-று. (ச)

பற்றிக லில்லதோர் பரம னீர்மையை
யிற்றென வுரைப்பரி தெவர்க்கு மென்பராற்

சொற்றிடும் வேதமுந் துணிகி லாவவன்
பெற்றியை யினைத்தெனப் பேச வல்லமோ.

(இ-ள்.) உறவும் பகையுமில்லாத சிவபெருமானது தன்மையை யாவர்களுக்கும் இத்தன்மையதென்று சொல்லுதற்கரிதாகும் என்று கூறுவார்கள்; சொல்லப்பட்ட வேதங்களுந் துணிந்து கூறா; யாம் அந்தச்சிவபெருமானது தன்மையை இவ்வளவினதென்று கூறவல்லமோ?—எ-று. (௫)

மூவகை யெனுந்தளை மூழ்கி யுற்றிடு
மாவிக ளுலப்பில வநாதி யுள்ளன
தீவினை நல்வினைத் திறத்தின் வன்மையா
லோவற முறைமுறை யுதித்து மாயுமே.

(இ-ள்.) மூன்றுவகையான பாசங்களிற் கட்டுப்பட்டிருக்கின்ற பசுக்கள் அளவற்றன. அவை அநாதியாகவே யுள்ளன. (அப்பசுக்கள்) பாவபுண்ணியங்களின் வல்லமையினால்ஒழிவில்லாமல் மாறிமாறிப் பிறந்திறக்கும்.—எ-று. (௬)

பாரிடை யுதித்திடும் பாரைச் சூழ்தரு
நீரிடை யுதித்திடு நெருப்பில் வாயுவிற்
சீருடை விசும்பிடைச் சேரு மன்னவைக்
கோரிடை நிலையென வுரைக்கற் பாலதோ.

(இ-ள்.) பூமியில் பிறக்கும், பூமியைச் சூழ்ந்துள்ள கடலில் பிறக்கும், நெருப்பிலும் வாயுவிலும் சிறப்புப்பொருந்திய ஆகாயத்திலும் பிறக்கும், அப்பசுக்களுக்கு ஓரிடத்து நிலையென்று சொல்லுதல் கூடுமோ?—எ-று. (௭)

மக்களாம் விலங்குமா மாசில் வானிடைப்
புக்குலாம் பறவையாம் புல்லு மாமதின்
மிக்கதா வரமுமாம் விலங்க ருனுமாந்
திக்கெலா மிறைபுரி தேவும் யாவுமாம்.

(இ-ள்.) மனிதர்களாகப் பிறக்கும், மிருகங்களாகப் பிறக்கும், குற்றமற்ற ஆகாயத்திற் சேர்ந்துலாவுகின்ற பறவைகளாகப் பிறக்கும், புல்லாகப் பிறக்கும், அதிற்சிறந்த விருக்ஷமுதலிய தாவரங்களாகப் பிறக்கும், மலைகளாகப் பிறக்கும். அஷ்டதிக்குகளிலும் அரசுரிமையைச் செய்கின்ற தெய்வங்களாகவும் மற்றவைகளாகவும் பிறக்கும்.—எ-று. (௮)

பிறந்திடு முன்செலும் பிறந்த பின்னர்மெய்
துறந்திடுஞ் சிலபக லிருந்து துஞ்சுமாற்
சிறந்திடு காளையிற் றேயு மூப்பினி
லிறந்திடு மதன்பரி சியம்ப லாகுமோ.

(இ-ள்.) பிறக்கு முன்னமே யிறக்கும்; பிறந்தபின்பு இறக்கும்; சிலநாளிருந்து இறக்கும். சிறப்புப்பொருந்திய காளைப்பருவத்தில் இறக்கும். கிழப்பருவத்தில் இறக்கும் அதன் தன்மையைச் சொல்லுதல் கூடுமோ?—எ-று. (௯)

சுற்றுறு கதிரெழு துகளி னும்பல
பெற்றுள வென்பதும் பேதை நீரதாற்
கொற்றம துடையதோர் கூற்றங் கைக்கொள
விற்றவும் பிறந்தவு மெண்ணற் பாலவோ.

(இ-ள்.) சூரியனுக்கு முன்னேதோன்றிச் சுழன்றுகொண்டிருக்கின்ற அணுக்களைப்பார்க்கிலும் மிகுதியாகவுள்ளனவென்று கூறுவதும் அறியாமையேயாம். வெற்றிபொருந்தியுள்ள ஒப்பற்ற இயமன் கைக்கொள்ளும்படி இறந்தனவும் பிறந்தனவுமாகிய பசுக்களைக் கணக்கிட முடியுமோ?—எ-று. (௬0)

கலைபடு முணர்ச்சியுங் கற்பும் வீரமு
மலைபடு வெறுக்கையும் வலியு மற்றது
மலைபடு புற்புத மாகு மன்னவை
நிலைபடு பொருளென நினைக்க லாகுமோ.

(இ-ள்.) சாஸ்திரவுணர்ச்சியும், கற்பும், வீரமும், மலைபோன்ற செல்வமும், வல்லமையும், மற்றவைகளும் நீரிலுண்டாகுங் குமிழிபோலத்தோன்றி மறையும்; அவைகள் நிலையாயுள்ள பொருள்களென்று நினைக்கக் கூடுமோ?—எ-று. (௬௧)

தருமமென் றொருபொரு ளுளது தாவிலா
விருமையி னின்பமு மெளிதி னுக்குமா
லருமையில் வரும்பொரு ளாகு மன்னது
மொருமையி னோர்க்கலா லுணர்தற் கொண்ணுமோ.

(இ-ள்.) தருமமென்று ஒருபொருளுண்டு, அது கெடுதலில்லாத இம்மை மறுமை யின்பங்களை எளிதாகத் தரும்; அத்தருமம் அருமையாகக் கிடைக்கக் கூடிய பொருளாகும். அது ஒருமைப்பட்ட மனமுடையவர்களுக்கல்லாமல் (மற்றவர்கள்) அறியக்கூடுமோ?—எ-று. (௬௨)

தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடு
மருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேற்
றெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்.

(இ-ள்.) தருமத்தைப் போற்றினால் அன்புண்டாகும்; அருளென்னுங் குழந்தையு முண்டாகும்; அவ்விரண்டு முண்டானவுடன் தவமென்று கூறுஞ் சிறப்புண்டாகும்; அதன்பின்பு ஞானமுண்டாகும்; அந்த ஞானத்தைப்பெற்ற உயிர் சிவத்தை யடையும்.—எ-று. (௬௩)

சேர்ந்துழிப் பிறவியுந் தீருந் தொன்மையாய்ச்
சார்ந்திடு மூவகைத் தளையு நீங்கிடும்
பேர்ந்திட லரியதோர் பேரின் பந்தனை
யார்ந்திடு மதன்பரி சறைதற் கேயுமோ.

(இ-ள்.) அச்சிவத்தை யடைந்தவிடத்துப் பிறவியுந்தீரும்; அநாதியாகவே சார்ந்துவந்த மூவகைப் பாசங்களும் நீங்கும்; நீங்குதற்கரிய ஒப்பற்ற பேரின்பத்தை யடையும்; அதன் தன்மையை யுரைத்தற்கு முடியுமோ?—எ-று. (௬௪)

ஆற்றலை யுள்துமா தவம தன்றியே
வீற்றுமொன் றுளதென விளம்ப லாகுமோ
சாற்றருஞ் சிவகதி தனையு நல்குமாற்
போற்றிடி னனையதே போற்றல் வேண்டுமால்.

(இ-ள்.) உயிர்க்குறுதியாயுள்ளது மகத்தாகிய தவமே யன்றி வேறொன்றுள்ளதென்று கூறலாகுமோ? சொல்லுதற்கரிய சிவகதியையுந் தரும்; விரும்பிச்செய்ய வேண்டின் அதனையே செய்தல் வேண்டும்.—எ-று. (௬௫)

அத்தவம் பிறவியை யகற்றி மேதகு
முத்தியை நல்கியே முதன்மை யாக்குறு
மித்துணை யன்றியே யிம்மை யின்பமு
முய்த்திடு முளந்தனி லுன்னுந் தன்மையே.

(இ-ள்.) அந்தத் தவமானது பிறவியை யொழித்து மேன்மை பொருந்திய முத்தியைக் கொடுத்து முதன்மையாக்கும்; இதுவன்றியும், இம்மை யின்பத்தையுங் கொடுக்கும்; ஆதலால், அத்தவமே மனத்தில் நினைக்குந் தன்மையையுடையது.—எ-று.

ஆதலிற் பற்பக லருமை யாற்புரி
மாதவ மிம்மையு மறுமை யுந்தரு
மேதுவ தாகுமா லிருமை யும்பெற
லாதியம் பகவன தருளின் வண்ணமே.

(இ-ள்.) ஆதலால், அநேககாலம் அருமையாகச்செய்த பெரிய தவமானது இம்மை மறுமைப்பயன்களைத் தருதற்குக் காரணமாகும்; இவ்விருமை யின்பங்களையும் பெறுதல் முதற்கடவுளாகிய சிவபெருமானது திருவருள் முறைமையேயாம். ()

ஒருமைகொண் மாதவ முழந்து பின்முறை
யருமைகொள் வீடுபே றடைந்து ளோர்சிலர்
திருமைகொ ளின்பினிற் சேர்கின் றோர்சில
ரிருமையு மொருவரே யெய்தி னோர்சிலர்.

(இ-ள்.) ஒருமைப்பட்ட மகத்தாகிய தவத்தைச்செய்து பின்பு அருமையாகிய முத்தியையடைந்தவர்கள் சிலர், செல்வமிக்க போகவின்பத்தில் சேர்கின்றவர்கள் சிலர், போகமோக்ஷங்களிரண்டையும் ஒருவரே அடைந்தவர்கள் சிலர்.—எ-று.

ஒருமை - மனவொற்றுமை. திருமை - செல்வந்தருந்தன்மை. (கஅ)

ஆற்றலிற் றம்முட லலசப் பற்பக
னோற்றவ ரல்லரோ நுவலல் வேண்டுமோ
தேற்றுகி லீர்கொலோ தேவ ராகியே
மேற்றிகழ் பதந்தொறு மேவுற் றோரெலாம்.

(இ-ள்.) தேவர்களாய் மேலாக விளங்குகின்ற பதவிகள் தோறும் அடைந்துள்ளவர்களெல்லாம் மனோதிடத்தினாலே தமது உடல் வருந்தும்படி அநேக காலம் தவஞ்செய்தவர்களல்லரோ? இதனை யான் சொல்லவேண்டுமோ? நீங்கள் தெளியீர்களோ?—எ-று. (கக)

பத்திமை நெறியொடு பயிற்றி மாதவ
முத்திபெற் றரனடி முன்னுற் றோர்தமை
யித்துணை யெனலரி திருமை யும்பெறு
மெய்த்தவர் மாலொடு விரிஞ்ச னாதியோர்.

(இ-ள்.) பெரிய தவத்தை அன்புடன் செய்து முத்திபெற்றுச் சிவபெருமானது திருவடியையடைந்தவர்களை இவ்வளவென்னு கூறுதல் அரிது. இருமை யின்பங்களையும் பெற்ற மெய்ம்மையாகிய தவத்தினராவார் திருமால் பிரமன் முதலியவர்களேயாம்.—எ-று. (உ0)

பல்லுயிர் தன்னையு மாய்த்துப் பாரினுக்
கல்லல்செய் தருந்தவ மாற்றி டாதவர்க்

இல்லையே யிருமையு மின்ப மாங்கவர்
சொல்லரும் பிறவியுட் டுன்பத் தாழுவார்.

(இ-ள்.) பலவுயிர்க்கூட்டங்களையு மழித்து உலகத்திற்குத் துன்பத்தையுண்டாக்கி அரியதவத்தைச் செய்யாதவர்களுக்கு இருமை யின்பங்களு மில்லையாம். அவர்கள் சொல்லுதற்கரிய பிறவித் துன்பத்தில் மூழ்குவார்கள்.—எ-று.

உயிர்க்கொலை செய்தலும், உலகினர்க்குத் துன்பஞ்செய்தலும், தவநெறியொழித்து அவநெறியொழுகுதலுமாகிய தீச்செயலையுடைய கொடியவர்களுக்கு இருமை யின்பங்களு மின்றாய் முடிவதுடன் பிறவித்துன்பமும் நேருமென்க. (உக)

அறிந்திவை யுரைப்பினு மவனி மாக்கடா
மறங்கொலை களவொடு மயக்க நீங்கலர்
துறந்திடு கின்றிலர் துன்ப மற்றிலர்
பிறந்தன ரிறந்தனர் முத்தி பெற்றிலார்.

(இ-ள்.) நாம் இவற்றையறிந்து கூறினும், உலகத்துள்ள மனிதர்கள் கொடுமை, கொலை, களவு, மயக்கமென்னு மிவைகளை நீங்கார்கள்; துறவு கொள்ளார்கள்; துன்ப நீங்கார்கள்; பிறந்திறந்தார்கள்; முத்தி பெற்றாரில்லை.—எ-று. (உஉ)

தவந்தனின் மிக்கதொன் றில்லை தாவில்சீர்த்
தவந்தனை நேர்வது தானு மில்லையாற்
றவந்தனி னரியதொன் றில்லை சாற்றிடிற்
றவந்தனக் கொப்பது தவம தாகுமே.

(இ-ள்.) தவத்திற் சிறந்தது வேறொன்று மில்லை; கெடாத சிறப்பினையுடைய தவத்தை யொத்தது மொன்றில்லை; தவத்தினும் அருமையானது ஒன்றுமில்லை; சொல்லுமிடத்தில் தவத்திற் கொப்பது அத்தவமே யாகும்.—எ-று. (உ௩)

ஆதலின் மைந்தர்கா ளறத்தை யாற்றுதிர்
தீதினை விலக்குதிர் சிவனை யுன்னியே
மாதவம் புரிகுதிர் மற்ற தன்றியே
யேதுள தொருசெய லியற்றத் தக்கதே.

(இ-ள்.) ஆதலால் புதல்வர்களே! தருமத்தைச் செய்யுங்கள், தீமைகளை நீக்குங்கள்; சிவபெருமானைக்கருதி மகத்தாகிய தவத்தைச் செய்யுங்கள், அத்தவத்தையன்றி செய்யத்தக்க செயல் வேறே யாதிருக்கின்றது.—எ-று. (உ௪)

வேறு.

உடம்பினை யொறுத்து நோற்பா ருலகெலாம் வியப்பவாழ்வ
ரடைந்தவர்க் காப்ப ரொல்லார்க் கழிவுசெய் திடுவர் வெஃகு
நெடும்பொருள் பலவுங் கொள்வர் நித்தரா யுறைவ ரீது
திடம்பட வுமக்கோர் காதை செப்புவ னென்று சொல்வான்.

(இ-ள்.) உடலை வெறுத்துத் தவஞ்செய்கின்றவர்கள் உலக மெல்லாம் புகழும்படி வாழ்வார்கள்; தம்மை யடைந்தவர்களை ஆதரிப்பார்கள்; பகைவர்களுக்கு அழிவை யுண்டாக்குவார்கள்; தாங்கள் விரும்பிய சிறந்த பல பொருள்களையு மடைவார்கள்; அழிவில்லாதவர்களாய் வாழ்வார்கள்; இஃது உறுதியாகும்படி உங்களுக்கு ஒரு சரித்திரங் கூறுவேனென்று காசிபமுனிவர் உரைப்பாராயினர்.—எ-று. (உ௫)

**காசிபனுபதேசப்படல முற்றிற்று.**

**ஆக திருவிருத்தம் - உ0௧.**

உ

முருகன்றுணை.

# மார்க்கண்டேயப்படலம்.

நச்சக வமிர்த மன்ன நங்கையர் நாட்ட வைவே
றைச்சக மயக்கல் செய்யாத் தடுப்பருந் தவத்தின் மிக்கா
ணிச்சகம் புகழு கின்ற விருபிறப் பாளர் கோமான்
குச்சக னென்னும் பேரோன் கொடிமதிற் கடகம் வாழ்வோன்.

(இ-ள்.) விஷத்தைத் தன்னுள்ளே பொதியப் பெற்ற அமிர்தத்தை யொத்த மாதர்களது கண்களாகிய கூரிய வேற்படையானது தைத்து மனத்தினை மயங்கச்செய்யாத தடுத்தற்கரிய தவத்திற் சிறந்தவர். இவ்வுலகத்தார் புகழுகின்ற வேதியர்கள் தலைவராயுள்ளவர், குச்சகமுனிவனென்னும் பெயரையுடையவர்; கொடிகள் கட்டிய மதில் சூழ்ந்த கடகம் என்னும் நகரத்தில் வாழ்பவர்.—எ-று. (க)

அவற்கொரு புதல்வ னுண்டா லருமறை பயின்ற நாவான்
கவுச்சிக னென்னும் பேரோன் கரையொரு சிறிதுங் காணுப்
பவக்கடல் கடக்கு மாற்றுற் பராபர முதல்வற் போற்றித்
தவத்தினை யிழைப்ப வாங்கோர் தண்புனற் றடாகஞ் சார்ந்தான்.

(இ-ள்.) அம்முனிவருக்கு ஒரு புதல்வருண்டு, அவர் அரிய வேதங்களைப் பழகிய நாவினையுடையவர்; கவுச்சிகனென்னும் பெயரையுடையவர்; சிறிதும் எல்லை காணமுடியாத பிறவிக்கடலைக் கடக்கும் முறைமையினுல் சிவபெருமானைத் துதித்துத் தவஞ்செய்யும்பொருட்டு அவ்விடத்து ஒரு குளிர்ந்த நீரையுடைய தடாகத்தையடைந்தனர்.—எ-று. (உ)

அத்தலை யொருசா ரெய்தி யானினந் தீண்டு குற்றி
யொத்தென வசைத லின்றி யுயிர்ப்பொரீஇ யுலக மெல்லாம்
பித்தென வுன்னி மாயாப் பேரின்ப வளக்கர் மூழ்கி
நித்தனை யெழுத்து மன்னு னிலைமையு நினைந்து நோற்றுன்.

(இ-ள்.) அத்தடாகத்தில் ஓரிடத்திற்சென்று ஆதீண்டு குற்றியைப்போல அசைவில்லாமல் சுவாசத்தையடக்கி உலகமனைத்தையும் பித்தாகக்கருதிக் கெடாத பேரின்பக்கடலில் மூழ்கிச் சிவபெருமானது ஸ்ரீ பஞ்சாக்ஷரங்களையும் அவ்வெம்பெருமானது அருட்பெருங்குணங்களையுஞ் சிந்தித்துத் தவஞ்செய்தனர்.—எ-று. (௩)

ஓவிய மவுன முற்றுங் குணவொடு முறக்க நீங்கித்
தாவற நோற்கும் வேலைத் தடமனை கடமை யாதி
மேவிய விலங்கு தத்த மெய்யகண் டூயம் யாவும்
போவது கருதி யன்னுன் புரத்திடை யுராத்துப் போமால்.

(இ-ள்.) சித்திரப்பதுமையானது மவுனமுற்றுற்போல ஊணும் உறக்கமுமொழிந்து குற்றநீங்கத் தவஞ்செய்யும்பொழுது, பெரிய மரை கடமை முதலாகப் பொருந்திய விலங்குகள் தத்தமது உடம்பிலுள்ள தினவுகளனைத்தும் நீங்கக்கருதி அவரது தேகத்தில் உராய்ந்துகொண்டு போகும்.—எ-று. (௪)

இப்பரி சியன்ற போழ்தும் யாவது முணரா னாகி
யொப்பற நோற்கும் வேலை யொல்லையி லதனை நாடி
முப்புரஞ் சிதைய மேனாண் முனிந்தவ னருளி தென்னாச்
செப்பின னிமையோர் சூழச் சேணிடைத் திருமால் சேர்ந்தான்.

(இ-ள்.) இவ்வாறு நிகழ்ந்துகொண்டிருக்கும்பொழுதும் எதனையு முணராதவராய் ஒப்பின்றித்தவஞ் செய்யுநாளில், திருமால் அதனை விரைவாக ஆராய்ந்து திரிபுரங்களு மழியும்படி முன்னாளில் கோபித்தருளிய சிவபெருமானது திருவருளிதுவாகுமென்று கூறினவராய்த் தேவர்கள் தம்மைச்சூழும்படி ஆகாயமார்க்கத்தில் வந்தருளினார்.—எ-று. (ரு)

அற்புத மெய்தி மைந்த னருந்தவம் புகழ்ந்து முன்போ
யெற்படு மவன்றன் மேனி யெழின்மலர்க் கரத்தா னீவி
வெற்பன முனிவ நின்பேர் மிருககண் டுய னென்னாச்
சொற்பயி னுமைஞ் சாத்த வெழுந்துகை தொழுது நின்றான்.

(இ-ள்.) ஆச்சரிய மடைந்து கவுச்சிகரது அரியதவத்தைப் புகழ்ந்து எதிரில் சென்று ஒளிவிளங்குகின்ற அவரது தேகத்தை அழகிய தாமரைமலர் போன்ற தமது திருக்கரத்தினால் தடவி, மலைபோன்ற (தவத்தினையுடைய) முனிவனே! நின் பெயர் மிருககண்டூயன் என்று புகழமைந்த திருப்பெயரளிக்கவும், (அம்முனிவர்) எழுந்து கைகூப்பிவணங்கி நின்றனர்.—எ-று. (சு)

தொழுதெழு முனியை நோக்கித் தூமதிச் சென்னி யோன்றன்
முழுதுறு கருணை நின்பான் முற்றுக முன்னஞ் செய்த
பழுதவை நீங்க வென்னாப் பரிவுசெய் தருளி வானோர்
குழுவுட னுவண வூர்தி கொம்மென மறைந்து போனான்.

(இ-ள்.) அவ்வாறு வணங்கியெழுந்த மிருககண்டூய முனிவரைப்பார்த்துத் தூய்மையாகிய இளம்பிறையணிந்த திருமுடியினையுடைய சிவபெருமானது பூரண கடாக்ஷம் நின்னிடத்திற் பொருந்தக்கடவது; நீ பூர்வத்தில் செய்த தீவினைகளனைத்தும் நீங்கக்கடவன என்று அன்புடன் கூறியருளிக் கருடவாகனராகிய திருமால் தேவர் கூட்டத்துடன் விரைவாக மறைந்து சென்றனர்.—எ-று. (எ)

போனபின் முனிவர் மேலோன் புரமெரி படுத்த முக்கண்
வானவ னருளி னாலே வல்விரைந் தேகித் தாதை
யானவன் முன்ன ரெய்தி யடிமுறை வணங்க வன்னான்
றானுள மகிழ்ந்து கண்டாங் கெடுத்தனன் றழுவிக் கொண்டான்.

(இ-ள்.) (அத்திருமால்) சென்றவுடனே முனிசிரேஷ்டராகிய மிருககண்டூயர் திரிபுரமெரித்த முக்கண்ணராகிய சிவபெருமானது திருவருளினால் மிக்கவிரைவாகச்சென்று தமதுதந்தையாகிய குச்சகமுனிவ ரெதிரிலடைந்து அவரதுபாதங்களை முறைபடிவணங்க, அக்குச்சக முனிவர் மனமகிழ்ந்து பார்த்து எடுத்துத் தழுவிக் கொண்டனர்.—எ-று. (அ)

தவத்திடை யுற்ற தன்மை மொழிகெனத் தனயன் றானு
முவப்புறு தாதை கேட்ப வுள்ளவா றுரைத்த லோடு
நிவப்புறு முவகை மிக்கு நின்குலத் தவர்க்கு மின்போ
லெவர்க்குள தினைய நோன்மை யாதுநிற் கரிய தொன்றே.

(இ-ள்.) பின்பு தவத்திலுண்டான தன்மைகளை நீ கூறக்கடவை யென்ற வுடனே, புதல்வராகிய மிருககண்டேய முனிவர் மகிழ்வடைந்துள்ள தமது பிதாவானவர் கேட்கும்படி உள்ளபடியே கூறுதலும், மிகுந்த சந்தோஷத்துடன் உனது வமிசத்தினர்களுள் இத்தன்மையாகிய தவப்பேறு உன்னைப்போல யாருக்குள்ளது; நினக்கு அரியது யாதிருக்கின்றது.?—எ-று. (கூ)

பாருளார் விசும்பின் பாலார் பயனுகர் துறக்க மென்னு
மூருளா ரல்லா வேனை யுலகுறு முனிவர் தம்மி
லாருளார் நின்னை யொப்பா ரையநீ புரிந்த நோன்மை
காருளார் கண்டத் தெந்தை யன்றிமற் றெவரோ காண்பார்.

(இ-ள்.) பூமியிலுள்ளவர்களும், ஆகாயத்தி லுள்ளவர்களும், போகத்தை யனுபவிக்கின்ற சொர்க்கலோகவாசிகளும், மற்றைய உலகங்களிலுள்ள முனிவர்களுமாகிய இவர்களில் அப்பனே! உன்னையொத்தவர்கள் யாரிருக்கின்றனர்; நீ செய்த தவத்தை நீலகண்டராகிய எமது சிவபெருமானையன்றி வேறுயாவரறிவார்கள்.-எ-று.

எனப்பல புகழ்த லோடு மிவன்வழி மரபு தன்னின்
மனப்படு மொருசேய் பின்னுண் மறலியைக் கடக்குங் கூற்றால்
வினைப்பகை யியல்பு நீக்கும் விமலன தருளால் வேறோர்
நினைப்பது வரலுந் தாதை நெடுமகற் குரைக்க லுற்றான்.

(இ-ள்.) என்று பலவாறாகப் புகழ்தலும், இவரது சந்ததிப் பரம்பரையில் மனமொருமைப் பட்ட ஒரு புதல்வர் பிற்காலத்தில் இயமனை வெல்லும் பான்மையினால், வினைப்பகையாகிய இயல்பினை யொழிக்கின்ற சிவபெருமானது திருவருளினால் வேறொரு எண்ணம் நிகழவும், குச்சகமுனிவர் தமது சிறந்த புதல்வராகிய மிருககண்டேயமுனிவருக்குச் சொல்லத் தொடங்கினார்.—எ-று. (கக)

கிளத்துவ துனக்கொன் றுண்டாற் கேண்மதி யைய மேனா
ளளப்பரு மறைக ளாதி யறைந்தன யாவ ரேனுந்
தளத்தகு பரிசு மன்றாற் சால்புடை யந்த ணாளர்
கொளப்படு கடனே யாகு நாற்பெருங் கூற்ற தன்றே.

(இ-ள்.) ஐயனே! கேட்பாயாக, உனக்குக்கூறவேண்டுவ தொன்றுளது; முன்னாளில் அளவிடப்படாத வேதமுதலியவைகள்கூறியுள்ளன; யாவராலும் நீக்கத் தக்க தன்மையுடையதுமன்று; நல்லொழுக்கமமைந்த வேதியர்கள் அனுசரிக்கத்தக்க முறைமையேயாகும்; அது நான்கு பெரிய பகுதியினையுடையது.—எ-று. (கஉ)

உனற்கரும் பிரமந் தன்னி லொழுகலி லறத்தி னிற்றல்
வனத்திடைச் சேறல் பின்னர் மாதவத் துறவில் வாழ்த
லெனப்படு மவற்றி னாதி யியற்றினை யின்று காறு
நினக்கது புகல்வ தென்னோ நீயவை யறிதி யன்றே.

(இ-ள்.) நினைத்தற்கரிய பிரமசரியத்தில் நிற்றலும், கிரகஸ்தாச்சிரமத்தில் நிற்றலும், வானப்பிரஸ்தத்தை யடைதலும், பின்னர் பெரிய தவத்திற்குரிய சந்நியாசத்தில் வாழ்தலுமென்று கூறப்பட்ட நான்கனுள்ளே நீ இதுவரையிலும் முதலதாகிய பிரமசரியத்தைச் செய்தனை; ஆதலால் உனக்கு அதனைப்பற்றிக் கூறவேண்டுவதென்னை; அதனை நீ யறிவாய்.—எ-று. (கங)

பின்னவை யிரண்டும் பின்னர்ப் பேணுதல் பேச வொண்ணா
முன்னது மியற்ற லாலே முற்றிய திடையின் வைத்துச்

சொன்னதோர் கடனிஞ் ஞான்று தொடங்கிய வேண்டுந் தூயோ
யன்னத னிலைமை தன்னை யாற்றினை கோடி யென்றான்.

(இ-ள்.) பின்னுள்ளனவாகிய வானப்பிரஸ்த சந்நியாசங்களிரண்டும் பின்னே கைக்கொள்ளுவதாம்; சொல்லுதற்கரிய பிரமசரியமும் இதுவனாயில் செய்தமையினால் நிறைவேறியது; இடையில் வைத்துச் சொல்லப்பட்ட கிரகஸ்தாசிரமத்தை இப்பொழுது ஆரம்பித்தல் வேண்டும்; பரிசுத்தனாகிய புதல்வனே! அந்தக் கிரகஸ்தாசிரமத்தின் நிலைமையைச் செய்துகொள்ளக்கடவையென்று கூறினர்.—எ-று.(கச)

முனிவர னிதனை யாங்கண் மொழிதலு மிதனைக் கேளா
வினியதோ ருறுதி சொற்றா ரெந்தையா ரெனக்கீண் டென்னா
மனமுற முறுவல் செய்து மதலையா மொருவற் கீது
வினையறு தவத்தி னீரும் விளம்புதன் மரபோ வென்றான்.

(இ-ள்.) குச்சகமுனிவரர் அவ்விடத்து இதனைக் கூறுதலும், இவ்வார்த்தைகளைக்கேட்டு எமது தந்தையார் எனக்கு இவ்விடத்தில் நல்லதாகிய ஒரு உறுதிக்கூறினர் என்று உள்ளே நகைத்துக்கொண்டு புதல்வனாகிய ஒருவனுக்கு இதனைப் பாவமற்ற தவத்தினையுடைய தேவரீரும் கூறுதல் முறைமையோவென்றுரைத்தனர்.

வேறு.

பேதைப் படுக்கும் பிறவிக் கடனீந்து
மோதித் திறத்தை யுணர்ந்துடையோ னாதலினாற்
காதற் புதல்வன் கவுச்சிகனென் போன்றனது
தாதைக் கினைய பரிசுதனைச் சாற்றுகின்றான்.

(இ-ள்.) அறியாமையை யுண்டாக்குகின்ற பிறவிக்கடலை நீந்தும் ஞான விலக்கணங்களை யறிந்துள்ளவராதலால், (குச்சகமுனிவரது) ஆசைப்புதல்வராகிய கவுச்சிகனென்னும் பெயரையுடைய மிருககண்டயே முனிவரர் தமது தந்தையாரை நோக்கி இவ்வாறு கூறத்தொடங்கினர்.—எ-று. (கரு)

முன்னருள பாச முயக்கறுக்க வேண்டியநான்
பின்னுமொரு பாசம் பிணிக்கப் படுவேனேற்
றன்னிகரி லீசன் றனையெவ்வா றெய்துவன்யா
னின்னலெனு மாழி யிடைப்பட் டுலைவேனே.

(இ-ள்.) முன்னமே என்னுடன் பொருந்தியுள்ள பாசபந்தத்தை நீக்கிக் கொள்ளவேண்டியவனாகிய யான் பின்னும் ஒரு பாசத்தால் கட்டப்படுவேனாயின் ஒப்பற்ற சிவபெருமானை எவ்வாறடைவேன். துன்பக் கடலில் வீழ்ந்து வருந்துவேனே.—எ-று. (கஎ)

மொய்யான தில்லா முடவனொரு வன்றனது
கையா னவையிரண்டுங் கந்தாத் தவழ்தருவா
னையா வதற்கு மரும்பிணியொன் றெய்தியக்கா
லுய்யானே யானு முவன்போற் றளர்வேனே.

(இ-ள்.) ஐயனே! தனது கைகளிரண்டையும் பற்றுக்கோடாகக் கொண்டு தவழ்கின்றவனாகியவலிமையற்ற ஒருமுடவன் அக்கைகளுக்கும் அரிய ஒருபிணிவந்து சேர்ந்தால் அவன் பிழைக்கமாட்டானே; யானும் அம்முடவனைப் போலத் தளர்ச்சியடைவேனே?—எ-று. (சஅ)

மொய்யுற் றிடவே முயலுந் தவத்தினன்றிப்
பொய்யுற்ற வில்லொழுக்கம் பூண்டுவினை போக்குவது
மெய்யுற் றிடுதுகளை மிக்க புனலிருக்கச்
செய்யற்சின் னீரிடத்துத் தீர்க்குஞ் செயலன்றே.

(இ-ள்.) அறிவுண்டாகும்படிச் செய்யும் தவத்தினாலல்லாமல் பொய்ம்மையாகிய இல்லொழுக்கத்தை மேற்கொண்டு இருவினைகளை நீக்குவது (எதுபோலுமெனின்) உடம்பிற்பொருந்திய அழுக்கை மிகுந்த நீரிருக்க (அந்நீரையொழித்து)ச் சேறுகலந்த கொஞ்சநீரில் நீக்கிக்கொள்ளுந் தன்மையதன்றோ?—எ-று. ()

மண்ணுலகி லுள்ள வரம்பில் பெரும்பவத்தைப்
பெண்ணுருவ மாகப் பிரமன் படைத்தனனு
லண்ண லஃதுணர்தி யன்னவரைச் சிந்தைதனி
லெண்ண வரும்பாவ மெழுமையினு நீங்குவதோ.

(இ-ள்.) நிலவுலகத்திற் பொருந்திய அளவற்ற பெரிய பாவங்களைப் பிரமன் பெண்ணுருவாகப் படைத்தனன்; தந்தையே! தாங்களதனை யறிவீர்கள்; அப்பெண்களை மனத்தில் நினைப்பதனாலுண்டாகின்றபாவமானது எழுபிறப்பிலும் நீங்கத்தக்கதோ?—எ-று. (உ0)

ஆதரவு கொண்டே யலமந்த வைம்புலமாம்
பூதவகை யீர்க்கப் புலம்புற்ற புன்மையினேன்
மாதரெனுங் கணமும் வந்தென்னைப் பற்றியக்கா
லேதுசெய்கே னந்தோ வெனக்கோ விதுவருமே.

(இ-ள்.) பொறிகளின் ஆதரவைக்கொண்டு விடையங்களில் சுழன்று திரிந்த ஐம்புலன்களாகிய பூதக்கூட்டங்களிழுக்க அதனால் வருந்துகின்ற இழிவினையுடையயான் பெண்களென்னும் பேய்களும் வந்து என்னைப் பிடித்துக்கொண்டால் யாது செய்வேன்; ஐயோ! எனக்குத்தானோ இது வரவேண்டும்.—எ-று. (உக)

பன்னாளும் பாரிற் பருவரலின் மூழ்குவிக்கும்
பின்னு ணிரயப் பெரும்பிலத்தி னூடுய்க்கு
மெந்நாளி லாண்டகையோர்க் கின்பம் பயந்திடுமோ
மின்னார்க டம்மை விழைவுற்ற வேட்கையதே.

(இ-ள்.) பெண்களைவிரும்பிய விருப்பமானது, உலகத்தில் அநேககாலந் துன்பத்தில் மூழ்கச்செய்யும், பின்பு நரகமென்னும் பெரிய பாதலத்திற் கொண்டு செலுத்தும், எக்காலத்தில் ஆடவர்களுக்கு இன்பத்தைத் தருமோ?—எ-று. (உஉ)

துன்ப நுகரும் வினையின் தொடர்ச்சியினோ
ரின்ப நுகர்வார்போ லேந்திழையார் கட்பட்டார்
தன்பன் மிகநடுங்க ஞாளி தசையில்லா
வென்பு கறித்திட்டா லிருஞ்சுவையும் பெற்றிடுமோ.

(இ-ள்.) துன்பத்தை யனுபவிக்கவேண்டிய பாவத்தொடர்பினையுடையோர் தாங்கள் இன்பத்தை யனுபவிக்கின்றவர்களைப்போலப் பெண்களின் வசப்பட்டார்கள்; நாயானது தனது பற்கள் மிகவும் நடுங்கும்படி பசையற்ற எலும்பினைக்கடித்தால் அவ்வெலும்பு மிக்க சுவையினையும் பெறுமோ?—எ-று. (உங)

அஞ்சனவைவ் வேற்க ணரிவையர்தம் பேராசை
நெஞ்சுபுகி னொருவர் நீங்கு நிலைமைத்தோ

வெஞ்சல்புரி யாதுயிரை யெக்நாளு மீர்ந்திடுமோ
னஞ்சமினி தம்மவோர் நாளு நலியாதே.

(இ-ள்.) மைதீட்டப்பட்ட கூரியவேல்போலுங் கண்களையுடைய பெண்க ளிடத்துப் பொருந்திய பேராசையானது ஒருவன் மனத்தில் புகுமாயின் அது நீங் குந்தன்மையினை யுடையதோ? கொல்லாமல் உயிரை எப்பொழுதும் அறுக்கும். ஐயோ! விஷம் இதனிலும் நன்று, அது இதனைப்போல எப்பொழுதும்வருத்தாது.

கள்ளூற்ற கூந்தற் கனங்குழைநல் லார்கருத்திற்
கொள்ளப் படுமெண் குணிக்குந் தகைமையதோ
தள்ளற் கரிதாகித் தம்மொடுபன் னாட்பழகி
யுள்ளூற்ற தேவு முணர்தற் கரிதன்றே.

(இ-ள்.) தேன் பொருந்திய (மலர்மாலையணிந்த) கூந்தலையும் கனத்தகாத ணியையுமுடைய மாதர்கள் தங்கள் மனத்தில் நினைக்கும் எண்ணமானது அளவிடத்த க்கதோ? நீக்குதற்கரிதாய்த் தம்முடன் அநேககாலமாகப் பழகிக்கொண்டு அந்தர்யா மியாயிருக்கின்ற கடவுளுக்கும் அறிதற்கரிதாகும்.—எ-று. (உரு)

ஓதலு மொன்று வுளமொன்றுச் செய்கையொன்றுப்
பேதை நிலைமை பிடித்துப் பெரும்பவஞ்செய்
மாதர் வலைப்பட்டு மயக்குற்று ரல்லரோ
சாதல் பிறப்பிற் றடுமாறு கின்றோர்.

(இ-ள்.) சொல்வதொன்று; மனத்தில்நினைப்பதொன்று; செய்வதொன்று; அறியாமையாகிய நிலைமையைக் கைக்கொண்டு பெரும்பாவங்களைச் செய்கின்ற பெ ண்களது ஆசைவலையிற்சிக்கி மயக்கமுற்றவர்களல்லரோ? சனன மரணங்களில் அ லைந்துகொண் டிருப்பவர்கள்—எ-று. (உசு)

ஆனு லுலகி லருங்கற் பினையுடைய
மானு ரிலரோ வெனவே வகுப்பீரேற்
கோனுன தங்கள் கொழுந னியல்வழுவாத்
தேனுர் மொழியாரு முண்டு சிலர்தாமே.

(இ-ள்.) ஆனால், உலகத்தில் பெருங்கற்பினையுடைய பெண்கள் கிடையா ரோ? வென்று சொல்வீராயின், முதல்வனாகிய தங்கள்கணவனது சொல்லைக்கடவாத தேன்போலு மொழியினையுடைய பெண்களுஞ் சிலருண்டு.—எ-று. (உஎ)

உற்ற வுலவையிடை யோர்புலிங்க மூட்டியக்காற்
கற்றை விடுசுடர்மீக் கான்று கனன்மிக்குப்
பற்றுதல் செல்லாத பலவினும்போய்ப் பற்றிடுமா
லற்றெனலா மீங்கோ ரரிவைமுயங் காதரமே.

(இ-ள்.) காற்றுப்பொருந்திய விடத்தில் ஒரு சிறிய தீப்பொறியைப் பற்ற வைத்தால் ஒளிவிடுகின்ற மிகுந்த சுடரையெழுப்பி அக்கினியை யுண்டாக்கித் தீப் பற்றாத பல பொருள்களிலுஞ் சென்று பற்றும்; அதுபோலவாகும் இவ்வுலகத்தில் ஒரு பெண்ணைப் புணருகின்ற விருப்பம்.—எ-று. (உஅ)

சந்திரற்கு நேருவமை சாலுந் திருமுகத்துப்
பைந்தொடிக்கை நல்லார் பலரும் புடைசூழக்
குந்தமொத்த நாட்டத்துக் கோதமனுர் பன்னியினு
லிந்திரற்கு நீங்கா விடர்ப்பழியொன் றெய்தியதே.

(இ-ள்.) சந்திரன் போன்ற அழகிய முகத்தினையும் பசியவளையலையணிந்த கையினையுமுடைய அநேகமாதர்கள் தன்னைச் சூழ்ந்திருந்தும் வேல்போலுங் கண்ணினையுடைய அகலிகையினால் இந்திரனுக்கு நீங்காத துன்பத்தோடு கூடிய ஒருபழியுமுண்டாயிற்று.—எ-று. (உக)

வேறு.

கூன்முகத் திங்க ணெற்றிக் கோதையர் குழுவுக் கெல்லாந்
தான்முத லிறைவி யாகத் தன்கையாற் சமைக்கப் பட்ட
மான்முக நோக்கி முன்னோர் மலரயன் மைய லெய்தி
நான்முக னானா னென்ப நாமுண ராத தன்றே.

(இ-ள்.) வளைவாகிய இளம்பிறைபோலும் நெற்றியினையுடைய பெண்கள் கூட்டத்திற்கெல்லாம் தானே முதன்மையான தலைவியாயிருக்கும்பொருட்டுத்தனது கையினாலேயே படைக்கப்பட்ட பெண்ணாகிய திலோத்தமையின் முகத்தைப்பார்த்து முன்பு ஒரு பிரமன் மயக்கங்கொண்டு நான்குமுகங்களையுடையவனாயினனென்று கூறுவார்கள்; அஃது நாம் அறியாததன்று.—எ-று. (௩0)

மற்றுள முனிவர் தேவர் மாயமாங் காமந் தன்னா
லுற்றிடு செயற்கை யெல்லா முரைப்பினு முலப்பின் றாமா
லற்றெலா நிற்க யானவ் வாயிழை மடந்தை கூட்டம்
பெற்றிடு மொழுக்கந் தன்னைப் பேணலன் பிறப்பு நீப்பேன்.

(இ-ள்.) மற்றைய முனிவர்களுந் தேவர்களும் மாயமாகிய காமத்தாலடைந்த செய்கைகளனைத்தையும் சொல்லினும் முடிவுபெறாவாம்;அவைநிற்க, யான் அந்தத் திருத்தமாகிய ஆபரணங்களை யணிந்த மாதர்கூட்டங்களை யடைந்து வாழும் இல்லொழுக்கத்தை விரும்பேன்; பிறவியை யொழித்துக்கொள்ளுவேன்.—எ-று. (௩க)

பூண்டகு விலங்கற் றிண்டோட் புரந்தரன் முதலோர் சீரும்
வேண்டல னில்வாழ் வென்னும் வெஞ்சிறை யகத்தும் வீழேன்
மாண்டகு புலத்தின் மாயு மயக்கொரீஇத் தவமென் றோது
மீண்டிய வெறுக்கை மேவி யின்பமுற் றிருப்ப னென்றான்.

(இ-ள்.) ஆபரணமணிந்த மலைபோலும் வலிய தோள்களையுடைய இந்திரன் முதலியவர்களது செல்வத்தையும் விரும்பேன்; இல்வாழ்க்கை யென்னுங்கொடிய சிறையிலும் வீழ்ந்தலையமாட்டேன்; மிகுதியாகப்பொருந்திய ஐம்புலனா லழிகின்ற மயக்கத்தை யொழித்துத் தவமென்று கூறும் நிலைபெற்ற செல்வத்தையடைந்து பேரின்பமுற்றிருப்பேனென்று கூறினார்.—எ-று. (௩உ)

இவைபல வுரைத்த லோடு மிருந்தகுச் சகன்றா னிந்தக்
குவலய மதிக்கு மாற்றாற் கூறுமில் லொழுக்கந் தன்னை
நவையென விகழா நின்றா னான்மறைத் துணிவுங் கொள்ளான்
றவமயல் பூண்டா னென்னாத் துயர்கொடு சாற்ற லுற்றான்.

(இ-ள்.) இத்தகைய பலவார்த்தைகளைக் கூறவும், அவற்றைக்கேட்டிருந்த குச்சகமுனிவரர் இந்தநிலவுலகம்புகழும்படிக்கூறப்பட்ட இல்லொழுக்கத்தைக் குற்றமென்று இகழ்கின்றனன்; நான்கு வேதங்களின் துணிவையு மேற்றுக்கொள்ளான்; தவவிருப்பங்கொண்டனன் என்று துன்புற்றுக் கூறத்தொடங்கினார்.—எ-று. (௩௩)

புலத்தியன் போலு மேலோய் பொருவின்மங் கலஞ்சேர் பொன்னின்
கலத்தியல் வதுவை பூண்டோர் கன்னியைக் கலத்தல் செய்து

குலத்தியன் மரபி னோம்பக் குமரரைப் பயந்தே யன்றோ
நலத்திய றவத்தை யாற்றி நண்ணருங் கதியிற் சேரல்.

(இ-ள்.) புலத்திய முனிவரைப்போலுந் தவத்திற்சிறந்த புதல்வனே! ஒப்பற்ற மங்கலகரம் பொருந்திய பொன்னாபரணமாகிய திருமங்கிலியத்தையணிதலாகிய விவாகத்தைச்செய்து ஒரு கன்னிகையைப்புணர்ந்து நமது குலமுறைமையைப்பாதுகாக்கும்படி புதல்வர்களைப்பெற்றன்றோ? பின்பு நன்மைமிக்க தவத்தைச்செய்து கிடைத்தற்கரிய முத்தியையடைவது.—எ-று. (௫௪)

மன்பதை யுலக மேபோன் மாலுறு மயங்கு காம
வின்பநீ நுகர்தற் கேயோ விசைத்தன னிறந்த மேலோர்
துன்பமு நிரயஞ் சேர்வுந் துடைத்திடுந் தொன்மை நோக்கி
யன்புறு புதல்வர்க் காக வரிவையைக் கோடி யையா.

(இ-ள்.) ஐயனே! மக்கட்பரப்பினையுடைய இந்நிலவுலகத்தைப்போல மோசங்கொண்டு மயங்குகின்ற காமவின்பத்தை நீயனுபவிப்பதற்கோ? யான் கூறினேன்; காலஞ்சென்ற பிதிரர்களுடைய துன்பமும் அவர்கள் நரகமடைதலையும் நீக்குகின்ற பழைமையைநினைத்து அன்புபொருந்தியபுதல்வர்களைப்பெறுதற்காக ஒருபெண்ணைக் கலியாணஞ்செய்துகொள்ளக்கடவாய்.—எ-று. (௫௫)

சித்திர மிலகு செவ்வாய்ச் சீறடிச் சிறுவர் தம்மைப்
புத்திர ரென்னுஞ் சொற்குப் பொருணிலை யயர்த்தி போலா
மித்தக வதனை நாடி யில்லறம் பூண்டு நிற்ற
லுத்தம நெறியே யாகுந் தவத்தின தொழுக்கு மஃதே.

(இ-ள்) அழகு விளங்குகின்ற சிவந்தவாயினையும் சிறிய கால்களையுமுடைய சிறுவர்களைப் புத்திரர்களென்று கூறப்பட்ட சொல்லிற்குள்ளபொருளின் தன்மையை மறந்தனைபோலும், இத்தன்மையையுணர்ந்து இல்லறத்தைப் பூண்டொழுகுதல் உத்தமமார்க்கமேயாம்; தவவொழுக்கமும் அவ்வில்லொழுக்கம் பூண்டொழுகுவதேயாம்.—எ-று.

புத்திரர் என்பதற்கு, புத்தென்னும் பிள்ளைப்பேறில்லார் பெறு நரகத்தை யறுத்துப் பிதிரர்களை முத்தியிற் சேர்ப்பவர்கள் என்பது பொருள்; இதனை:—"பத்தி செய் சமயபேதப் பகுதிக்குப் பொதுவாய் நிற்கும்-புத்தெனு நரகை நீக்கிப் பொருவறு வீட்டைநல்கு - முத்தமவனந்தஞான வுருவெடுத்திலகா நிற்குஞ் - சத்திய மிகத்திற்பேறு தருவதில் வாழ்க்கை யென்பார்" என்னுஞ் செய்யுளானறிக. (௫௬)

குவவுறு நிவப்பின் மிக்க கோடுயர் குடுமிக் குன்றி
னிவர்வுறு காத லாள ரியற்படு சார லெய்தித்
திவவொடு போத லன்றிச் சேணுற வுகளுந் தன்மைக்
குவமைய தாகு மின்னே யுயர்தவத் தொழுக வுன்னல்.

(இ-ள்.) நீ இப்பொழுதே உயர்ந்த தவநெறியிலொழுகும்படிச் சிந்தித்தல் (எதுபோலுமெனின்), குவிவாகிய உயரத்தில் மிக்க பெரிய சிகரங்களோடுகூடியமலையின்மேல் ஏறவேண்டிய விருப்பமுடையவர்கள் அழகமைந்த அம்மலைச் சாரலையடைந்து படியின் வழியே செல்லுவதல்லாமல், உச்சியை யடையும்பொருட்டுப் பாயுந்தன்மைக்கொப்பாகும்.—எ-று. (௫௭)

தருவினில் விலங்கி லன்ன தகையன பிறவிற் சால
வருபயன் கோடற் கன்றோ மற்றவை வளாதல் செய்யார்

பெருகுமில் லறத்தி னோடும் பெருமகப் பொருட்டா னீயு
மரிவையை மணந்து பின்ற ளருந்தவம் புரிதி யன்றே.

(இ-ள்.) மரங்களிலும் மிருகங்களிலும் அவைபோன்ற மற்றவைகளிலும் மிகுதியாக வுண்டாகின்ற பலனை யடையும்பொருட்டன்றோ? அவற்றை நீக்காமல் பாதுகாக்கின்றனர்; மிகுந்த இல்லறம் நடத்துவதுடன் சிறந்த புத்திரப்பேற்றின் பொருட்டாகவும் நீயும் ஒரு பெண்ணை மணந்து, அதன்பின்பு அரியதவத்தைச் செய்யக்கடவை.—எ-று. (ருஅ)

இந்தநன் னிலைமே னாளே யெண்ணிலை யிந்நாள் காறு
முந்துசெய் கடன தாற்றி முற்றினை முறையே பன்னாட்
சிந்தனை செய்த வானோர்க் கவிமுதற் சிறப்புச் செய்யாய்
மைந்தநீ யின்னே நோற்கும் வண்ணமே யெண்ணற் பாற்றோ.

(இ-ள்.) புதல்வனே! இந்த நல்ல இல்லற நிலைமையைமுன்னமே நினைந்தாயில்லை; இது வரையிலும் முதலிற்செய்யவேண்டிய பிரமசரிய விரதத்தைச்செய்து முடித்தனை; முறைப்படி அநேககாலமாக (உன்னால் கொடுக்கப்படுகின்ற அவிப்பாகத்தினிமித்தம்) எண்ணங்கொண் டெதிர்பார்த்திருக்கின்ற தேவர்களுக்கு அவிப்பாகமுதலிய சிறப்புக்களைச் செய்தாயில்லை; நீ இப்பொழுதே தவஞ்செய்யும்பொருட்டே நினைத்தல் தகுதியோ?—எ-று. (ருக)

இந்திரர் புகழுந் தொல்சீ ரில்லறம் புரிந்து ளோர்க்குத்
தந்தம தொழுக்கந் தன்னிற் றகுமுறை தவறிற் றேனுஞ்
சிந்திடுந் தீர்வு முண்டாற் செய்தவர்க் கனைய சேரி
னுய்ந்திட லரிதால் வெற்பி னுச்சியிற் றவற லொப்ப.

(இ-ள்.) இந்திரன் முதலியவர்களால் புகழப்பட்ட பழைமையாகிய சிறப்பினையுடைய இல்லறத்தைநடத்தினவர்களுக்குத் தத்தம் ஒழுக்கங்களில்செய்யவேண்டிய முறைமைகள் தவறினும், அத்தவறுதலை நீக்குகின்ற பிராயச்சித்தங்களுண்டு. மலையினது உச்சியினின்றுந் தவறினாற்போலத் தவஞ்செய்பவர்களிடத்து அத்தவறுண்டாகுமாயின் பிழைத்தலரிதாகும்.—எ-று.

மலையுச்சியினின்றுந் தவறிவிழுந்தவன் உயிர்நீங்கி யழியுமாறுபோலத், தவமுடையவர் அத்தவவொழுக்கினின்றுந் தவறுவார்களாயின், அவர்கள் பின்கடைத்தேறுதல் கஷ்டமென்று கூறினனென்க. (சo)

சுழிதரு பிறவி யென்னுஞ் சூழ்திரைப் பட்டுச் சோர்வுற்
றழிதரு துயர நேமி யகன்றிடல் வேண்டு மேனுங்
கழிதரு நாளா னல்லாற் கதுமெனத் துறக்க லாமோ
வழிமுறை நும்மு னோரின் மற்றது புரிதி மன்னோ.

(இ-ள்.) சுழற்சியைத்தருகின்ற பிறவியென்னுஞ் சூழ்ந்த அலையிலகப்பட்டுச்சோர்வடைந்து கெடுகின்ற துன்பக்கடலைவிட்டு நீங்கவேண்டுமோயினும், கழிக்கவேண்டியநாள்களைக் கழித்தல்லாமல் விரைவாகத் துறக்கக்கூடுமோ? பழையமுறைப்படி உனது பூர்வீகர்களைப்போல நீயும் அவ்வில்லொழுக்கம் பூணக்கடவை.—எ-று.

தேவரு முனிவர் தாமுஞ் செங்கண்மா லயனு மற்றும்
யாவரு மடந்தை மாரோ டில்லறத் தொழுகுந் தன்மை
மேவரப் பணித்தா னன்றே விமலையோ டணுகி மேனாட்
டாவரும் புவன மாதி சராசரம் பயந்த தாணு.

(இ-ள்.) முன்னாளில் சிவசத்தியுடன்கலந்து கெடுதலில்லாத உலகமுதலிய சராசரங்களைப்பெற் றருளிய சிவபெருமான் தேவர்களும் முனிவர்களும் சிவந்த கண்களையுடைய திருமாலும் பிரமனும் மற்றையாவர்களும் பெண்களுடன் இல்லறநடத்த வேண்டுந்தன்மையைப் பொருந்தும்படி கட்டளையிட்டருளினர்.—எ-று. (சஉ)

மறுக்கலை யவன்றான் செய்த வரம்பினை வழியை வேண்டி
வெறுக்கலை யெனது கூற்றை விலக்கலை யுலகின் செய்கை
செறுக்கலை யிகலு மாற்றாற் செப்பலை சிறிது மாற்றந்
துறக்கலை யெமரை யின்னே தொன்முறை யுணர்ந்த தூயோய்.

(இ-ள்.) பழைமையாகிய முறைமையையுணர்ந்த புதல்வனே! அச்சிவபெருமா னமைத்தருளிய வரம்பினை மறுக்காதே; சந்ததியை விரும்பி எனது வார்த்தையை வெறுக்காதே; உலகத்தின்செய்கையை விலக்காதே; விரோதமாகத் தடுக்காதே; சிறிதும் எதிர்மொழிகூறாதே;எமதுமுன்னோர்களை இப்பொழுதே நீதுறந்துவிடாதே.

வேறு.

ஆடக வனப்புடை யருந்ததியை நீங்கான்
மாடுற விருத்தியும் வசிட்டமுனி யென்போ
னீடுதவ நோன்மைகொடு நின்றனன தன்றிப்
பீடுகெழு ஞாலமிசை பெற்றபழி யுண்டோ.

(இ-ள்.) வசிட்டமுனிவரர் பொன்போலு மழகினையுடைய அருந்ததியை விட்டு நீங்காமல் பக்கத்தில்வைத்துக் கொண்டிருந்தும் உயர்ந்த தவவிரத்தை மேற்கொண்டு நின்றனரேயன்றி பெருமைவிளங்குகின்ற இந்நிலவுலகத்தில் பழியினையடைந்ததுண்டோ? (இல்லை.)—எ-று. (சச)

துயக்குறு பவத்திடை தொடர்ச்சியறு தூயோர்
நயப்பொடு வெறுப்பகலி னாளுமட மானார்
முயக்குறினு மாதவ முயன்றிடினு மன்னோர்
வியத்தகு மனத்துணர்வு வேறுபடு மோதான்.

(இ-ள்.) பந்தத்தைத்தருகின்ற பிறவியினிடத்தில் செல்லுதலற்ற பெரியோர்கள் விருப்பு வெறுப்புக்களை விட்டிருப்பாராயின்,நாள்தோறும் யௌவனமாதர்களுடன் புணர்ந்தாலும், அன்றி மகத்தாகியதவத்தைச்செய்தாலும், புகழத்தக்க அவர்களது மனவுணர்ச்சி வேறுபடுமோ?—எ-று. (சரு)

மேனவியல் பான்வரையு மெல்லியலை மேவிற்
றானமுள தாகுமரி தானதவ மாகும்
வானமுள தாகுமிவண் மண்ணு முளதாகு
மூனமில தாகுமரி தொன்றுமிலை யன்றே.

(இ-ள்.) உயர்ந்த முறைப்படி விவாகஞ்செய்துகொண்ட பெண்ணைப்புணர்ந்தால் அதனால் தானமுண்டாகும், அருமையாகிய தவமுண்டாகும், சொர்க்கமுண்டாகும், இந்நிலவுலகத்தில் பூமியுமுண்டாகும், துன்பமுண்டாகாது, அவர்களுக்கு அருமையானது ஒன்றுமில்லை.—எ-று. (சசு)

காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுறு கற்பினர்த மெய்புரையி னிற்கு
மீண்டையுள தெய்வதமு மாமுகிலு மென்றா
லாண்டகைமை யோர்களு மவர்க்குநிக ரன்றே.

(இ-ள்.) பார்த்தற்குத் தகுந்த தமதுகணவர்களைத் தெய்வங்களைப்போலத் துதிக்கின்ற கற்பினையுடைய மாதர்களது சத்தியவசனத்திற்கு இவ்வுலகத்திலுள்ள தெய்வங்களும் பெரியமழையும் அடங்கி நடக்குமாயின், அம்மாதர்களுக்குப் புருஷர்களும் ஒப்பானவரல்லர்.—எ-று. (சஎ)

ஆயிழையொ டின்புறு மறத்தைமுத லாற்றாய்
தூயதவ நன்னெறி தொடங்கல்புரி வாயேன்
மாயமிகு காமவிடம் வந்தணுகி னம்மா
மேயவிதி காக்கினும் விலக்கியிட லாமோ.

(இ-ள்.) மாதர்களுடன் இன்பமடைகின்ற இல்லறத்தை முதலில் நடத்தாதவனாய்த் தூய்மையாகிய நல்ல தவமார்க்கத்திற் பிரவேசிப்பையாயின், மாயை மிக்க காமமாகிய விஷமானதுவந்து சேர்ந்தால், ஐயோ! நிலைபெற்ற பிரமன் அதனைத்தடுத்தாலுந் தடுக்கமுடியுமோ.—எ-று. (சஅ)

துறந்தவர்கள் வேண்டியதொர் துப்புரவு நல்கி
யிறந்தவர்கள் காமுறு மிருங்கட னியற்றி
யறம்பலவு மாற்றிவிருந் தோம்புமுறை யல்லாற்
பிறந்தநெறி யானுளதொர் பேருதவி யாதோ.

(இ-ள்.) துறவுபூண்டவர்கள் விரும்புகின்ற உணவைக்கொடுத்து, பிதுர்க்கள் விரும்புகின்ற மிக்க கடைமைகளைச்செய்து, பல தருமங்களையுஞ் செய்து விருந்தினரை யுபசரிக்கும் முறைமையேயல்லாமல் (உலகத்தில்) பிறந்த தன்மையினாலுண்டாகியபேருதவியா திருக்கின்றது?—எ-று. (சகூ)

மெத்துதிற லாடவரு மெல்லியனல் லாருஞ்
சித்தமுற நன்கினொடு தீதுசெய லூழே
யுய்த்தபடி யல்லதிலை யாமுழவ ரொண்செய்
வித்துபய னேயலது வேறுபெற லாமோ.

(இ-ள்.) மிகுந்த வல்லமையையுடைய புருஷர்களும் மெல்லியமாதர்களும் மனப்பூர்வமாக நன்மைதீமைகளைச் செய்தல் ஊழ்கூட்டுகின்ற முறைப்படியேயன்றி வேறில்லையாம்; பயிரிடுவோர் வளப்பந்தங்கிய வயல்களில் விதைத்த விதையின் பயனையல்லது வேறேயும் பெறலாகுமோ?—எ-று. (ருo)

நற்றவம தாகுமில றந்தனை நடாத்திச்
சுற்றமற நீங்குதுற வேதுறவ தம்மா
மற்றது புரிந்திடி னுனக்குநவை வாரா
வற்றது மறுத்துரைய லாணைநம தென்றான்.

(இ-ள்.) நல்ல தவமுறைமையாகிய இல்லறத்தினை நடத்திப் பின்பு சுற்றத்தினர் நீங்கும்படி துறக்கின்ற துறவே சிறந்த துறவு. அவ்வாறு செய்வையாயின் உனக்குப்பழிகள் சம்பவியா; அதனைத் தடுத்துக்கூறாதே, நம்மீது ஆணையென்று கூறினர்.

அன்னபல மாமுனி யறைந்திட லுமோரா
முன்னமறை யாதிய மொழிந்ததுணி வென்றார்
பன்னக மணிந்திடு பரன்பணியு மென்றா
சொன்னினி யுரைப்பதென வெண்ணியினை கின்றான்.

(இ-ள்.) அத்தகைய பல வார்த்தைகளைச் சிறந்த குச்சகமுனிவர்கூறுதலும், மிருககண்டு முனிவர் அவைகளையுணர்ந்து (இவர் தாம் சொல்வது) முதலிலேயே

வேதமுதலியவை கூறுகின்ற துணிபொருளென் றுரைத்தனர்; அன்றியும், சர்ப்பா பரணராகியசிவபெருமானது கட்டளையுமென்றுகூறினர். இனி யாதுசொல்வதென்று சிந்தித்து வருந்துகின்றவராயினர்.—எ-று. (ருஉ)

தத்தமத ருட்குரவர் தாவில்வள நீங்கி
யத்திபிடை யாழ்கெனினு மன்பினது செய்கை
புத்திரர்க டங்கள்கட னும்புதுமை யன்றே
யித்திற மறுக்கல னிசைந்திடுவன் யானும்.

(இ-ள்.) தங்கள்தங்களது அன்புள்ளபெரியோர்கள் கெடாதசெல்வத்தை விட்டுக் கடலில்மூழ்கக்கடவை யென்று கூறினும், விருப்பத்துடன் அதனைச் செய்வது புத்திரர்களுடைய கடமையாகும்; இது புதுமையல்ல; ஆதலால் யானும் இதனைத் தடுக்காமல் ஒப்புக்கொள்ளுகின்றேன்.—எ-று. (ருங)

தந்தைசொன் மறுப்பவர்க டாயுரை தடுப்போ
ரந்தமறு தேசிகர்த மாணையை யிகந்தோர்
வந்தனைசெய் வேதநெறி மாற்றினர்கண் மாறாச்
செந்தழல் வாயநிர யத்தினிடை சேர்வார்.

(இ-ள்.) தந்தையின் சொல்லை மறுப்பவர்கள், தாயின்வார்த்தையைத் தடுப்பவர்கள், முடிவில்லாத ஆசாரியர்களதுகட்டளையைக் கடந்தவர்கள், துதிக்கத்தக்க வேதநெறியை மாற்றினவர்கள் என்று கூறுமிவர்கள் நீங்காத செந்தழலையுடைய நரகத்திலடைவார்கள்.—எ-று. (ருச)

ஆதலின் விலக்கன்முறை யன்றென வலித்துக்
கோதறு குணத்தின்மிகு குச்சகர்த மம்பொற்
பாதம திறைஞ்சிமுனி யேல்பணியி னிற்ப
னோதுவ துனக்குள தெனக்கழற லுற்றான்.

(இ-ள்.) ஆதலால் தடுப்பது முறைமையல்லவென்று துணிந்து குற்றமற்ற சிறந்தகுணத்தினையுடைய குச்சகமுனிவரது அழகிய பொன்மயமாகிய பாதங்களில் நமஸ்கரித்து (தந்தையே!)கோபங்கொள்ளாதீர்; தேவரீர்கட்டளைப்படி நிற்கின்றேன்; ஆயின், உம்மிடத்தில் சொல்லவேண்டுவதொன்றுளதென்று கூறத்தொடங்கினர்.

தன்னுரைகொ ளாதமனை வாழ்க்கையது தன்னின்
வெந்நிரயம் வீழும்வகை யேவிழுமி தம்மா
வன்னரொடு மேவியம ராடவர் தமக்குப்
பின்னுமொரு கூற்றுமுள தோபிணியு முண்டோ.

(இ-ள்.) தனதுசொல்லை யேற்று நடவாத மனைவியுடன்வாழ்வதிலும் கொடியநரகத்தில் விழுவதே மேலாகும். அத்தகைய மனைவியுடன்கூடி வாழ்கின்ற புருஷர்களுக்கு வேறேயொரு இயமனும் பிணியுமுண்டோ? (இல்லை.)—எ-று. (ருரு)

என்னுரையி னிற்சிறிது மெஞ்சலில வாகி
மன்னுமியல் பெற்றிடு மடந்தையுள ளேலக்
கன்னிதனை யான்வரைவல் காயெரிமு னென்னாச்
சொன்னமொழி கேட்டுமகிழ் வுற்றுமுனி சொல்லும்.

(இ-ள்.) எனதுவார்த்தையில் சிறிதுங் குறைவில்லாமல் நிலைபெற்ற பெருங்குணத்தைப் பெற்றுள்ள பெண்ணிருப்பாளாயின் அந்தப் பெண்ணை யான் எரி

கின்ற அக்கினிசாக்ஷியாக மணஞ்செய்து கொள்வேனென்று கூறிய வார்த்தையைக் கேட்டுக் குச்சகமுனிவரர் மகிழ்கூர்ந்துரைப்பா ராயினர்.—எ-று. (ருஎ)

வேறு.

யானு முய்ந்தன னென்கிளை யுய்ந்தன வினையதா னினையின்று
டானு முய்ந்தன் டவங்களு முய்ந்தன தண்ணளி யதுமற்றால்
வானு முய்ந்தன மண்ணுல குய்ந்தன வாசவ னெனவாழுங்
கோனு முய்ந்தன னென்னுரை மறுமனுட் கொண்டனை யதனாலே.

(இ-ள்.) (புதல்வனே!) எனது வார்த்தையைத் தடுக்காமல் உன் மனதிற் கொண்டனை; அதனால் யானும் உய்ந்தேன்; எனது சுற்றமும் உய்ந்தன; இத்தன்மையினால் உன்னைப் பெற்றதாயும் உய்ந்தனள்; தவங்களும் உய்ந்தன; தண்ணிய கிருபையும் அவ்வாறே யுய்ந்தன; விண்ணுலகமு முய்ந்தன; மண்ணுலகமு முய்ந்தன; இந்திரனென்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற தேவராசனு முய்ந்தனன்.—எ-று. (ருஅ)

வேண்டும் வேட்கையை யுரைத்தியான் மைந்தநீ விளம்பிய வியல்பெல்லாம்
பூண்டு குற்றமோர் சிறிதுமில் லாததோர் பூவையைப் புவியின்பாற்
றேண்டி நின்வயிற் புணர்க்குவ னங்கது செய்கலா தொழிவேனேன்
மாண்டு றந்திடுங் குறைமதிக் கதிரென மாய்கவென் றவமென்றான்.

(இ-ள்.) புதல்வனே! நீ வேண்டிய விருப்பத்தை யுரைக்கக்கடவாய்; நீ சொல்லிய தன்மைகளையெல்லாம் பொருந்திச் சிறிதுங் குற்றமில்லாத ஒரு பெண்ணை இந்நிலவுலகத்தில் தேடி உன்னிடத்திற் சேர்ப்பேன்; அதனைச் செய்யாதொழிவேனாயின் எனது தவமானது கலைகுறைந்தழிகின்ற அபரபக்ஷத்துச் சந்திரனைப் போல அழியக்கடவதென்று கூறினர்.—எ-று. (ருகூ)

இனைய பான்மையிற் குச்சகன் சூளுரை யியம்பலுந் திருமான்முன்
புனையு மெய்ப்பெயர் தரித்தசே யாங்கவன் பொலங்கழ றனைப்பூண்டோர்
தனைய னும்பொருட் டாலிது புகன்றனை தவத்தினிற் றலையான
முனிவ நீயுனக் கரியதா யொருபொருண் முச்சகந் தனிலுண்டோ.

(இ-ள்.) இவ்வாறு குச்சகமுனிவரர் உறுதிமொழி கூறவும், முன்னாளில் திருமாலினால் மிருககண்டேயனென்னும் மெய்ம்மையாகிய திருப்பெயரைப்பெற்ற கவுச்சிகமுனிவரர் அந்தக்குச்சகமுனிவரது அழகிய பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தேவரீர் ஒரு புதல்வன்கடைத்தேறும்பொருட்டாக இதனை யுரைத்தருளினீர்; முதன்மையாகிய தவத்தினையுடைய பிதாவே! ஒருபொருள் உமக்கு அருமையாய்த்திரிலோகங்களிலுமுண்டோ?—எ-று. (கூ0)

ஆவ தேனும்யா னுரைப்பதுண் டத்தனை யற்றவ ரருளும்பாய்
சாவ தாயினர் தன்னைய ரில்லவர் தங்கைய ரிலராளோர்
காவ லாடவர் தம்முட னுதித்திடார் காசினி தனிலன்னோர்
வீவ தாயினர் பெருங்கிளை யில்லவர் வியத்தகு திருவற்றோர்.

(இ-ள்.) ஆயினும் யான்சொல்வதொன்றுண்டு, (அஃதியாதெனின்) தந்தையையிழந்தவர்களும் பெற்றதாய் இறக்கப் பெற்றவர்களும், தனக்கு மூத்தவரில்லாதவர்களும், சகோதரிகளில்லாதவர்களும் தங்களுக்குக் காவலாயுள்ள ஆண்மக்களுடன் பிறவாதவர்களும், உலகத்தில் அவ்வுடன்பிறந்தவர்க ளிறக்கப்பெற்றவர்களும், மிக்க சுற்றத்தினரில்லாதவர்களும், புகழத்தக்க செல்வமில்லாதவர்களும்.—எ-று.

இதுமுதல் பன்னிரண்டுபாடல்கள் குளகம். (கூக)

குடிப்பி றந்திலர் பிணியுறு மிருமுது குரவர்பாற் குறுகுற்றோர்
கடுத்த யங்கிய மிடற்றிறை யாதியாங் கடவுளர் பெயர்கொள்ளா
தடுத்த மாக்கடம் பெயர்பெறு பீடில ரலகைதன் னுமத்தோர்
படித்த லந்தனிற் புன்னெறிச் சமயமாம் படுகுழிப் பட்டுள்ளோர்.

(இ-ள்.) நல்லகுடியிற் பிறவாதவர்களும், பிணியாளராகிய தாய்தந்தையர்களிடத்திற் பிறந்தவர்களும், நீலகண்டராகிய சிவபெருமான் முதலியோர்களாகிய தேவர்கள் பெயரைக்கொள்ளாமல் பொருந்திய விலங்கின்பெயரைப்பெற்ற பெருமையற்றவர்களும், பிசாசின் பெயரைப் பெற்றவர்களும், உலகத்தில் அற்பசமயநெறியாகிய படுகுழியில் வீழ்ந்துள்ளவர்களும்.—எ-று. (சுஉ)

பிணியர் மூங்கையர் பங்கினர் வெதிரினர் பிறர்மனை தனிற்செல்வோர்
கணிகை மாதரின் விழிப்பவர் பன்முறை காளையர் தமைநோக்கி
நணிய காதலான் முன்கடை நிற்பவர் நலம்பெறப் புனைகின்றோர்
தணிவி லுண்டியர் துயின்மிகு மியல்பினர் தன்னினு மூப்புற்றோர்.

(இ-ள்.) நோயாளர்களும், ஊமையர்களும், முடவர்களும், செவிடர்களும், அயல்வீட்டிற் செல்கின்றவர்களும், வேசியர்களைப்போல விழிக்கின்றவர்களும், புருஷர்களைப்பலமுறை பார்த்துப் பொருந்திய காமவிச்சையால் தலைவாயிலில் நிற்பவர்களும், அழகுண்டாகும்படி அலங்கரித்துக் கொள்பவர்களும், பேருண்டியுண்பவர்களும், பெருந்தூக்கமுடையவர்களும், தன்னினும் வயதில் முதிர்ந்தவர்களும்.—எ-று.

ஒருமை தங்கிய கோத்திர மரபின ருயர்ந்தவர் குறளானோர்
பருமை தங்கிய யாக்கையர் மெல்லுருப் படைத்தவர் பயனில்லாக்
கருமை தங்கிய வடிவினர் பொன்னெனக் கவின்றெழு காயத்தோ
ரிருமை தங்கிய பசப்பினர் விளர்ப்பின ரொருவையி னுருமிக்கோர்.

(இ-ள்.) ஒருமைப்பட்ட கோத்திரமரபுடையவர்களும், உயரமானவர்களும் குள்ளமானவர்களும், பருத்ததேகமுடையவர்களும், சிறுத்த தேகமுடையவர்களும், பயனற்ற கருநிறம்பொருந்திய வடிவமுடையவர்களும், பொன்போல் அழகுற்றுப் பொருந்திய தேகமுடையவர்களும்,பெருமைதங்கிய பசப்பினையுடையவர்களும், வெண்ணிற முடையவர்களும், உதிரம்போலச் சிவந்த வடிவமுடையவர்களும்.—எ-று.

நாணி லாதவ ராடவர் புணர்ச்சியி னணியவர் நகைக்கின்றோ
ரோணி லாதவர் பெருமிடல் சான்றவ ரிருமுது குரவோர்த
மாணை நீங்கினர் சினத்தின ரிகலின ரடுதிற முயல்கின்றோர்
காண வேண்டினர் நடமுத லாயின காமனாற் கவல்கின்றோர்

(இ-ள்.) வெட்கமில்லாதவர்களும், புருஷபோகத்திற் பொருந்தியவர்களும், சிரித்துக்கொண்டிருப்பவர்களும், வலிமையில்லாதவர்களும், மிக்க வலிமையுடையவர்களும், சிறந்த தாய் தந்தையர்களது கட்டளையை மறுத்தவர்களும், முன்கோபமுடையவர்களும், பகைத்தலையுடையவர்களும், கொலைத் தொழிலுக்கு முயல்கின்றவர்களும், கூத்துமுதலிய வேடிக்கைகளைப்பார்க்க விருப்பமுடையவர்களும்,மன்மதனால் வருந்துகின்றவர்களும்.—எ-று (சுடு)

ஈச னன்பிலர் பெருந்தகை முனிவரை யிகழ்பவ ருயிர் மீது
நேச மென்பன வில்லவர் தங்குல நெறிதனி னில்லா தோர்
மாசு தங்கிய குணத்தினர் நிறையிலார் மனமெனுங் காப்பில்லோர்
றேசி கன்றனை மனிதனென் றுன்னினர் தேவரைச் சிலையென்றோர்.

(இ-ள்.) சிவபெருமானிடத்து அன்பில்லாதவர்களும், அருட்பெருங்குணத்தினையுடைய முனிவர்களைப் பழிக்கின்றவர்களும், உயிர்களின்மேல் சிறிதும் விசுவாசமில்லாதவர்களும், தங்கள் குலவொழுக்கத்தில் நில்லாதவர்களும், குற்றம்பொருந்திய குணமுடையவர்களும், கற்பில்லாதவர்களும், மனமென்றுகூறுங் காவலில்லாதவர்களும், ஆசாரியனை மனிதனாக நினைக்கின்றவர்களும், தெய்வங்களைக் கல் என்று கூறுகின்றவர்களும்.—எ-று. (சுசு)

பத்தின் மேற்படு மாண்டினர் பூத்திடு பருவம்வந் தணுகுற்றோ
ரொத்த பண்பில ரச்சமின் மனத்தின ருருமென வுரைசெய்வோ
ரத்த னன்னையிந் தருளுமு னொருவர்பா லார்வமுற் றவர்ச்சேர
வைத்த சிந்தையர் பெருமித முற்றுளோர் மடமொடு பயிர்ப்பில்லோர்.

(இ-ள்.) பத்துவயதிற்கு மேற்பட்டவர்களும், ருதுவாகும் பருவம் வந்தடைந்தவர்களும், புருஷனுக்கொத்த குணமில்லாதவர்களும், அச்சமில்லாத மனமுடையவர்களும், இடிபோலிரைந்து பேசுகின்றவர்களும், தந்தை தாயர்கள் கலியாணஞ்செய்து கொடுப்பதற்குமுன்னே ஒரு புருஷன்மேல் விருப்பங்கொண்டு அவர்களைச் சேரும்படிக்கொண்ட மனமுடையவர்களும், செருவமுடையவர்களும், மடமும் பயிர்ப்புமில்லாதவர்களும்.—எ-று. (சுஎ)

பிறப்பி னெல்லையில் விழியிலார் தோற்றிய பின்றையே யிழக்கின்றோர்
மறுப்ப யின்றிடுங் கண்ணினர் படலிகை வயங்கிய நோக்கத்தார்
குறிப்பின் மெல்லென வெஃகியே விழித்திடுங் குருடர்சாய் நயனத்தோர்
சிறப்பில் பூனையி னுட்டத்தர் கணத்தினிற் றிருதரு செங்கண்ணோர்.

(இ-ள்.) பிறவிக்குருடர்களும், பிறந்தபின் குருடாகின்றவர்களும், பூவிழுந்த கண்ணையுடையவர்களும், படலமறைத்தாற் போன்ற பார்வையை யுடையவர்களும், குறிப்பாகமெல்லென்று நிதானித்து விழிக்கின்ற குருட்டுக் கண்ணினர்களும், சாய்வாகிய கண்ணினையுடையவர்களும், சிறப்பற்ற பூனைக்கண்ணையுடையவர்களும் பேய்களைப்போலச் சுழலுகின்ற செங்கண்ணையுடையவர்களும்.—எ-று. (சுஅ)

தூறு சென்னியர் நரைமுதிர் கூந்தலர் துகளுறு மைம்பாலார்
வீறு கோதையர் சின்னமார் குழலினர் விரிதரு மளகத்தோ
ரீறில் செம்மயிர்ப் பங்கியர் நிலனிடை யிறக்கிய கேசத்தோ
ரூறு சேர்தரு மோதியர் விலங்கென வுரமிகு குரலுள்ளோர்.

(இ-ள்.) பம்பையாகிய தலைமயிரையுடையவர்களும், முதிர்ந்த நரைபொருந்திய கூந்தலையுடையவர்களும், அழுக்கமைந்த கூந்தலையுடையவர்களும், அதிகமாகிய கூந்தலையுடையவர்களும், குறைவாகிய கூந்தலையுடையவர்களும், விரிந்த கூந்தலையுடையவர்களும், கெடாதசெம்பட்டமயிர் வரிசையையுடையவர்களும், பூமிவரையில் தாழ்த்திய கூந்தலையுடையவர்களும், (பிளவுமுதலிய) குற்றம்பொருந்திய கூந்தலையுடையவர்களும், மிருகங்களைப்போல உரத்த குரலையுடையவர்களும்.—எ-று. (சுக)

சிறகு கண்ணினர் மிகநெடுந் துண்டத்தர் சேர்ந்திடு புருவத்தோர்
குறிய காதின ருயர்தரு மெயிற்றினர் கோணுறு கண்டத்தோர்
மறுவி ராவிய முகத்தினர் சுணங்குறு மணிமுலை மார்பத்தோர்
வெறிய தாகிய நுசுப்பிலர் சிலையென வியன்மிகு வயினுள்ளோர்.

(இ-ள்.) சிறுத்த கண்ணையுடையவர்களும், மிகப்பெரிய மூக்கினையுடையவர்களும், நெருங்கிய புருவத்தையுடையவர்களும், குறுங்காதை யுடையவர்களும்,

உயர்ந்தபற்களையுடையவர்களும், கோணலாகிய கழுத்தையுடையவர்களும், களங்கம் பொருந்திய முகத்தினையுடையவர்களும், தேமல் படராத அழகிய தனம்பொருந்திய மார்பினையுடையவர்களும், சிறிதாகிய இடையில்லாதவர்களும், கல்லைப்போன்ற கடினமாகிய வயிற்றினையுடையவர்களும்.—எ-று. வயின்-வயிறு. (எ0)

காய நான்முறை யுரைத்திடு மியல்பிலாக் கடிதட நிதம்பத்தோர்
வாயு மங்கையு நகமுமுள் ளடிகளும் வனப்புறு சிவப்பில்லோர்
மேய சின்மயிர் பரந்திடு பதத்தினர் மென்சிறை யெகினம்போற்
றூய நன்னடை யில்லவ ரங்குலி தொல்புவி தோயாதோர்.

(இ-ள்.) உறுப்பிலக்கணநூலிற் கூறப்பட்ட அழகில்லாத நிதம்பத்தினையுடையவர்களும், வாயும், உள்ளங்கையும், நகமும், உள்ளங்காலுமாகிய இவைகள் அழகு பொருந்திய சிவப்பில்லாதவர்களும், சிறுரோமம் பரவிய காலையுடையவர்களும், மெல்லிய சிறகினையுடைய அன்னம்போலத் தூய்மையாகிய நல்லநடையில்லாதவர்களும், கால்விரல்கள் பூமியிற்படியாதவர்களும்.—எ-று. (எக)

இனைய தன்மைய ராகிய மாதர்க ளேனைய ரிவர்யாவரும்
புனையு மங்கல மாகிய கடிவினை புரிதர வரையாதோ
ரனைய ரோயெனின் வேண்டலன் முழுவது மவரிய லணுகாத
வனிதை யுண்டெனின் வேண்டுவன் றேர்ந்தனை மரபினிற் றருகென்றான்.

(இ-ள்.) இத்தகைய தன்மையினை யுடையவர்களாகிய மற்றைய மாதர்களனைவரும், செய்யப்பட்ட கலியாணமாகிய மணச்சடங்கு செய்யும்பொருட்டு எடுத்துக்கொள்ளப்படாதவர்கள்; அவர்களாயிருப்பின் விரும்பேன்; முழுவதும் அம்மாதர்களது குற்றங்கள் பொருந்தப்பெறாத பெண்ணிருந்தால் மணஞ் செய்யவிரும்புவேன்; இதனை ஆராய்ந்து முறைப்படிக் கொண்டுவருவீராகவென்று கூறினார்.—எ-று. (எஉ)

காட்டி னின்றிடு குற்றியி னோற்புறு கவுச்சிக னிவைகூறக்
கேட்டு மூரலு முவகையுங் கிடைத்தனன் கேடில்சீ ருலகுள்ள
நாட்ட கந்தனி லுடிநல் லியல்புள நங்கையை நின்பாலிற்
கூட்டு கின்றனன் மாலுத லொழுகெனக் குச்சக னுரைசெய்தான்.

(இ-ள்.) வனத்தில் நிற்கின்ற குற்றியைப்போன்று தவஞ்செய்கின்ற கவுச்சிகமுனிவர் இவ்வார்த்தைகளை யுரைக்கவும், குச்சகமுனிவர்கேட்டு நகைப்புஞ் சந்தோஷமுங்கொண்டவராய் அழிவற்ற சிறப்பினையுடைய இந்நிலவுலகத்திலுள்ள தேசங்களில் விசாரித்து நல்ல இலக்கணமமைந்த பெண்ணை உன்னிடத்திற் சேர்க்கின்றேன்; நீ மயங்காதே யென்று கூறினார்.—எ-று. (எ௩)

உரைத்த குச்சகன் மைந்தனை நிறுவியே யொல்லைசென் றகிலத்திற்
றிருத்த குஞ்சுடர் மலிதரு செம்பொனிற் செய்ததோ ரணிநாப்ப
ணிருத்தி சேர்தரக் குயிற்றிடவேண்டியோ ரருமணி தனைக்கொள்வான்
கருத்தி லுன்னுபு தெரிபவன் போலொரு கன்னியைத் தேர்கின்றான்.

(இ-ள்.) அவ்வாறு கூறிய குச்சகமுனிவரர் தமது புதல்வராகிய கவுச்சிகமுனிவரை அவ்விடத்தில் நிறுத்திவிட்டு விரைவாகச்சென்று உலகத்தில் அழகுமிக்க பிரகாசத்தினையுடைய செம்பொன்னாற் செய்யப்பட்ட ஒரு ஆபரணத்தின் நடுவில் அன்புபொருந்தும்படி யமைக்கவேண்டி ஒரு அருமையாகிய மாணிக்கத்தைக் கொள்ளும்பொருட்டு மனத்தில் நினைத்து அதனைத் தேடுகின்றவரைப்போல ஒருகன்னிகையைத் தேடுவாராயினார்.—எ-று. (எ௪)

வேறு.

அன்னவன் றன்னேர் முனிவரர் சிலர்வந் தணுகலு மவரொடும் வினவிச்
சென்னிதன் றேயத் தநரமய மென்னுஞ் செயிரிலா வனத்துசத் தியன்பாற்
கன்னிகை யிருத்த லுணர்ந்துமற் றவன்பாற் கதுமெனச்சேறலுங் காணூஉத்
தன்னடி வணங்க வெதிருறத் தொழுது தழுவியே யவனொடுஞ் சார.

(இ-ள்.) அந்தக் குச்சகமுனிவருக்கெதிரில் சில முனிவர்கள் வரவும், அவர்களைக் கேட்டுணர்ந்து சோழதேசத்தில் குற்றமற்ற அநாமயமென்னும் வனத்தில் வாசஞ் செய்யும் உசத்திய முனிவரிடத்தில்பெண்ணிருப்பதை யுணர்ந்து, அம்முனிவரிடத்தில் விரைவாகச் செல்லவும், (அவர் அதனைப்) பார்த்துத் தமது பாதங்களில் வீழ்ந்து வணங்கத் தாமும் எதிரில்வணங்கித்தழுவி அவ்வுசத்திய முனிவருடன் வரவும்.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (எடு)

மாசற வியன்ற வுறையுளிற் கொடுபோய் வரன்முறை வழாமலே யமைத்த
வாசனத் திருத்திக் கன்னிகை யொடுதன் பன்னியை யாயிடை யழைத்துத்
தேசிக னுற்றான் பணிமினீ ரென்னாச் சென்னியா லிறைஞ்சுவித் துரிய
பூசனை புரிந்து நகையொடு முகமன் புகன்றள வளாயினன் புனிதன்.

(இ-ள்.) பரிசுத்தராகிய உசத்திய முனிவரர், குற்றமற வமைத்துள்ள தமது ஆசிரமத்திற் கழைத்துக்கொண்டுபோய் முறைமை தவறாது செய்துள்ள ஆசனத்திலிருத்தித் தமது புதல்வியையும் மனைவியையும் அவ்விடத்திற்கழைத்து நமது ஆசிரியர் வந்திருக்கின்றார், ஆதலால் நீங்கள் அவரை நமஸ்கரியுங்களென்று கூறித் தலையால் வணங்கச் செய்து தகுதியாகிய பூசனை செய்து நகைப்புடன் உபசாரவார்த்தைகளையுரைத்து அளவளாவினார்.—எ-று. (எசு)

அறுசுவை கெழுவு நறியசிற் றுண்டி யமுதினிற் றாயன வருத்திக்
குறைவறு மடிகட் கென்னிடை வேண்டுங் கொள்கைய தென்னெனக் கூற
மறுவறு தவத்துக் குச்சக முனிவன் மகிழ்ந்துநீ மாதவம் புரிந்து
பெறுமக டன்னை யெனதொரு மகற்குப் பேசுவான் பெயர்ந்தன னென்றான்.

(இ-ள்.) அறுவகைச் சுவைகளும் பொருந்திய நல்ல சிற்றுண்டியை அமுதத்தைப்பார்க்கிலும் இனிமை யுடையனவாக வுண்பித்து, குறைவற்ற தேவரீருக்கு அடியேனிடத்து வேண்டுவதாகிய கொள்கை யாதென்று வினவுதலும், குற்றமற்ற தவத்தினையுடைய குச்சகமுனிவர் மகிழ்கூர்ந்து நீ மகத்தாகிய தவத்தைச்செய்து பெற்ற உனது புதல்வியை எனது ஒரு புதல்வனுக்குப் பேசும்படி வந்தனன் என்று கூறினார்.—எ-று. (எஎ)

இனையசொல் வினவி முனிவரன் மகிழா வென்மகள் விருத்தையை யியல்சேருன துமைந் தற்கு நல்கமுன் செய்த வுயர்தவ மென்கொலென் றுரைத்து
மனமுற நகையு முவகையுங் கிளர மணவினை யிசைந்துமா தவத்துப்
புனிதனை யங்கட் சிலபக லிருத்திப் போற்றிசெய் தொழுகுறும் பொழுதின்.

(இ-ள்.) உசத்தியமுனிவர் இவ்வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து என் மகளாகிய விருத்தையைநல்லொழுக்கமைந்த உமது புதல்வனுக்கு மணஞ்செய்து கொடுக்கும்பொருட்டு யான் முன்செய்த சிறந்த தவம் யாதென்று கூறி மனத்தில் மகிழ்வும் நகைப்புமுண்டாக மணஞ்செய்து கொடுக்கவிசைந்து, மகத்தாகிய தவத்தினையுடைய

குச்சகமுனிவனை அங்குச் சிலநாளிருக்கச்செய்து உபசரித்துக்கொண்டு வருகின்ற நாள்களில்.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (எஅ)

வேறு.

பங்கமி லுசத்தியன் பன்னி யாகிய
மங்கலை விடுத்திட மகள்வி ருத்தைதா
னங்குள விருளைய ராயந் தன்னுடன்
செங்கயல் பாய்புன றிளைப்பப் போயினள்.

(இ-ள்.) பழுதற்ற உசத்திய முனிவரது பத்தினியாகிய மங்கலையென்பவ ளனுப்ப அவள் புதல்வியாகிய விருத்தை யானவள் அங்குள்ள தோழிப்பெண்கள் கூட்டத்துடன் அழகிய கயல்மீன்கள் பாய்கின்ற நீரில் ஸ்நானஞ் செய்யும்பொருட் டுச் சென்றனள்.—எ-று. (எகூ)

காடுற வந்திடு கலுழி மாண்புன
லாடினண் மகிழ்சிறந் தணங்க ளொரொடு
மாடுறு பொதும்பர்போய் மலர்கொய் தன்னவை
சூடின ளிருந்தன டொடலை யாற்றியே.

(இ-ள்.) காட்டின் வழியாய் வருகின்ற மாட்சிமை தங்கிய கான்யாற்றின் நீரில் தோழிகளுடன் சேர்ந்து அன்புடன் மூழ்கிப் பக்கத்திலுள்ள சோலையிற் சென்று மலர்களைப் பறித்து மாலையாகப் புனைந்து தரித்துக்கொண்டிருந்தனள்.—எ-று.

பாசிழை மங்கையர் பண்ணை யோடெழீஇ
யாசறு பொதும்பினு மணங்கை யன்னவண்
மாசறு தாரகை மரபிற் சூழ்தருந்
தேசுறு மதியெனத் திரும்பும் வேலையே.

(இ-ள்.) பசிய ஆபரணத்தை யணிந்த பெண்கள் கூட்டத்துடன் சென்று குற்றமற்ற சோலையினின்றுந் தெய்வப்பெண்ணை யொத்த விருத்தையானவள் களங்கமற்ற நக்ஷத்திரங்களின் நடுவில் சந்திரனைப்போல விளங்கித் திரும்பிவருகின்ற சமையத்தில்.—எ-று. பண்ணை - கூட்டம்.

இதுமுதல் மூன்றுபாடலுங் குளகம். (அக)

உருகெழு கனையொலி யுருமுக் கான்றிடுங்
கருமுகி லிஃதெனக் கனன்று காய்கனல்
சொரிதரும் விழியது சூர்த்த மெய்யது
பெருமத நதியொடு பெயரு கின்றதே.

(இ-ள்.) அச்சத்தைத் தருகின்ற கனைப்பொலியாகிய இடிகளைக் கக்குகின்ற கரிய மேகம் இதுவென்று சொல்லும்படிக் கோபித்து மிகுந்த தீப்பொறிகளைச் சிந்துகின்ற கண்ணினை யுடையதும், அசைகின்ற வடிவினை யுடையதும், மிக்க மதமாகிய நதியுடன் செல்கின்றதும்.—எ-று. (அஉ)

தாழுறு கரத்தது தடத்தின் சால்பெனக்
காழுறு மெயிற்றது கறைகொள் காலதா
லேழுயர் குறும்பொறை யிபமென் றேற்றெதிர்
பாழிய வரைதுகள் படுத்துச் சென்றதே.

(இ-ள்.) தொங்குகின்ற துதிக்கையினை யுடையதும், மலையின் தன்மை போல வயிரம்பொருந்திய கொம்பினை யுடையதும், உரல்போன்ற காலினை யுடைய துமாகிய எழிடமுயர்ந்த காட்டானையொன்று எதிர்த்துத் தனக்கெதிரிலுள்ள பெரிய மலைகளைத் தூளாக்கிச் சென்றது.—எ-று.

தடம்-மலை; வளையமெனினுமாம். எழுயர் - எழிடமுயர்ந்த ; அவை-மத்தக முதலியன. குறும்பொறை - காடு. (அ௩)

காண்டலும் வெருவினர் கவன்றவ் வாறுசெ
லாண்டகை யோர்களு மகன்று சிந்தினர்
நீண்டிடு கடலிடை நிமிர்ந்த வெவ்விட
மீண்டலு மிரிந்தபுத் தேளி ரென்னவே.

(இ-ள்.) பெரிய கடலினிடத்தில் தோன்றிய மிகக் கொடிய விஷமானது நெருங்குதலும் (அதனைக்கண்டு) பயந்தோடிய தேவர்களைப்போல யானையைப் பார்த்தவுடன் அவ்வழியிற் செல்லுகின்ற ஆண்மக்களும் பயந்து வருந்திச் சிதறி யோடினார்கள்.—எ-று. (அ௪)

கன்னிகை விருத்தையாள் கண்டு துன்புறு
வன்னமென் னடையின ரகன்று சிந்தலு
மென்னினி யிழைப்பதென் றிரங்கி யேங்கியே
யுன்னருங் கடுப்பினி லுளுற்றி யோடலும்.

(இ-ள்.) கன்னிகையாகிய விருத்தையானவள் யானை வருதலைப் பார்த்து வருந்தி அன்னம்போலும் மெல்லிய நடையினையுடைய தனது தோழியர்கள் சிதறி யோடவும், நாம் இனி யாதுசெய்வதென்று வருந்தி எக்கமுற்று நினைத்தற்கரிய வேகத்துடன் முயன்றோடுதலும்.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (அ௫)

கீழ்ந்தறை போகிய கிளைஞ ராமெனத்
தாழ்ந்திடு பசும்புதல் செறியத் தான்மறைந்
தாழ்ந்திடு கூவலொன் றணுக வன்னதில்
வீழ்ந்தன ளழுந்தினள் விளிவுற் றுளரோ.

(இ-ள்.) தாழ்ந்திருக்கின்ற பசிய புதலானது மூடிக்கொள்ள அதனால் மறைந்து ஆழமாகிய ஒரு கிணறிருக்க அக்கிணற்றில் தாழ்ந்திருக்கின்ற சுரங்கத்தின் வழியே சென்றவர்களைப்போல விழுந்து மூழ்கி யிறந்தனள்.—எ-று. (அ௬)

முடங்குளை யலங்குறு முதிய பூநுதன்
மடங்கலி னேறெதிர் வரினு மாறுகொள்
கடங்கலுழ் மால்கரி கல்லென் றார்ப்பொடு
நடந்தது மலையமா னாடு சாரவே.

(இ-ள்.) முடங்கலாகிய புறமயிர்களலைகின்ற பேரழகமைந்த நெற்றியினையுடைய ஆண்சிங்க மெதிரில்வரினும் பகைக்கக்கூடிய மதம்பொழிகின்ற பெரிய யானையானது மலைநாட்டிற் செல்லும்பொருட்டுக் கல்லென்னு மோசையுடன் நடந்தது. ()

இரிந்திடு மாதரார் யாண்டு மாகியே
விரிந்திடு வோர்குழீஇ வியர்க்கு மேனியர்
சரிந்திடு கூந்தலர் தளரு நெஞ்சினர்
பிரிந்திடு முவகையர் பெயர்ந்து நாடினர்.

(இ-ள்.) எந்தப்பக்கங்களிலுஞ் சிதறியோடினவர்களாகிய தோழியர்கள் ஒன்று சேர்ந்து வியர்த்த தேகமும் அவிழ்ந்தகூந்தலும் வருந்திய மனமுமுடையவர்களாய்நடந்துவந்து தேடினார்கள்.—எ-று. (அஅ)

தண்டம தெங்கணுந் தானஞ் சிந்திடக்
கொண்டலி னெய்திய கோட்டு மாதிரங்
கண்டிலர் கன்னிகை தனையுங் காண்கில
ருண்டிலை யெனவுயி ருயிர்ப்பு நீங்கினர்.

(இ-ள்.) வழிமுழுவதும் மதநீர் சிந்தும்படி மேகம்போல வந்த கொம்பினையுடைய யானையையும் விருத்தையையுங் காணுதவர்களாய் உயிருண்டோ இல்லையோ வென்று சொல்லும்படி மூர்ச்சை யடைந்தார்கள்.—எ-று.

தண்டம் - யானைசெல்லும்வழி. (அகூ)

மண்ணிடை யாறென வழிக்கொண் டேகவே
கண்ணிணை புனலுகக் கலுழ்ந்து சோர்வுறத்
துண்ணென வுணர்வுறத் துளங்கிச் சூழ்கனல்
புண்ணுறு வோரெனப் புலம்பன் மேயினர்.

(இ-ள்.) பூமியில் ஆறொழுகுவதுபோலக் கண்களினின்றும் நீரொழுகும்படி அழுது சோர்ந்து திடீரென்று மூர்ச்சை தெளியவும், நடுங்கிப் புண்ணில் தீப்பட்டவர்களைப்போலப் புலம்பத் தொடங்கினார்கள்.—எ-று. (கூ0)

வேறு.

பெண்ணுக் கணிகலமே பேரழகுக் கோருருவே
கண்ணுக் கணியே கமலத்துச் செந்திருவே
மண்ணிற் புனல்படிந்தாய் வானதியு மாடுவதற்
கெண்ணித் துணிந்தோ வெமைவிட்டுப் போயினையே.

(இ-ள்.) பெண்களுக்குள் ஆபரணம் போல்பவளே! மிக்க அழகினுக்கு ஒரு வடிவமாயுள்ளவளே! கண்களுக்கு அணியாயுள்ளவளே! தாமரைமலரிலிருக்கும் திருமகள் போன்றவளே! நீ மண்ணுலகிலுள்ள நீரில் மூழ்கினை, பின்னர் ஆகாய கங்கையிலும் மூழ்குவதற்கு எண்ணித் துணிவுகொண்டோ? எங்களை விட்டுப் பிரிந்து சென்றனை.—எ-று. (கூக)

வன்னப் புனலாட்டி வல்லே புறங்காத்தென்
மின்னைத் தருதி ரெனவே விடைகொடுத்த
வன்னைக்கென் சொல்வே மடுகளிற்றின் முன்னாக
வுன்னைத் தனிவிட் டுயிர்கொண்டு போந்தனமே.

(இ-ள்.) அழகிய நீரில் மூழ்குவித்துச் சீக்கிரத்தில் எமது புதல்வியைப் புறத்திற் பாதுகாத்து வீட்டிற் கொண்டுவந்து சேருங்களென்று கூறியனுப்பிய உனது அன்னைக்கு நாங்களென்ன சொல்லுவோம்; கொல்லுகின்ற யானையின் முன்பாக உன்னைத் தனியேவிட்டு எங்களுயிரை மாத்திரம் மீட்டுக்கொண்டு வந்தோம்.—எ-று. ()

ஐய ருசத்தியரு மன்னையெனு மங்கலையும்
வையம் பரவுகின்ற மாதுலராங் குச்சகருங்
கைய றவின்மூழ்கக் கரந்தா யினியொருகாற்
செய்ய முகமுந் திருநகையுங் காட்டாயோ.

(இ-ள்.) தந்தையாகிய உசத்தியமுனிவரும், தாயாகிய மங்கலையும், உலகத்தார் துதிக்கின்ற மாமனாராகிய குச்சகமுனிவரும் வருந்தும்படி மறைந்து சென்றனே; இனி யொருதரம் உனது அழகிய முகத்தையும் நகையையும் நாங்கள் பார்க்கும் வண்ணங் காட்டாயோ?—எ-று. (௬௩)

என்னப் பலவும் புலம்பி யிரங்குற்றே
யுன்னற் கருஞ்சி ருசத்தியன்று னற்றவத்தின்
மன்னுற்ற தெய்வ வனத்தின் மனைவாழ்க்கைப்
பன்னிக் கிவையுரைத்துப் பாவைநல்லா ராவலித்தார்.

(இ-ள்.) என்று பலவிதமாகப் புலம்பி வருந்தி நினைத்தற்கரிய சிறப்பினையுடைய உசத்தியமுனிவரிருந்து தவஞ்செய்கின்ற தெய்வீகம்பொருந்திய அநாமய மென்னும் வனத்தையடைந்து அவரது மனைவியாகிய மங்கலைக்கு இந்தப்பெண்கள் நடந்தவைகளை யுரைத்துப் புலம்பினார்கள்.—எ-று. (௬௪)

கேட்டிடலு மன்னை வயிறதுக்கிக் கேழ்கிளர்தீ
யூட்டரக்கே யென்ன வுருகி மனமறுகி
வாட்டடங்க ணீர்குதிப்ப வாய்வெரீஇத் தன்கணவன்
றாட்டுணையில் வீழ்ந்து புகுந்தபடி சாற்றினளால்.

(இ-ள்.) இதனைக்கேட்ட தாயானவள் வயிற்றைப்பிசைந்துகொண்டு செந்நிறம்விளங்கும் நெருப்பிற்பட்ட அரக்கைப்போல மனமுருகிநடுக்கங்கொண்டு வாள்போன்ற பெரியகண்களினின்றும் நீரொழுகத் தனது கணவனாரது பாதங்களில் வீழ்ந்து குழறிய வார்த்தைகளுடன் நடந்தனவற்றை யுரைத்தனள்.—எ-று. (௬௫)

ஒன்றுபுரி காட்சி முனிவ னுவைகேட்டுக்
கன்றுபிரி தாயிற் கவன்றரற்றிக் கன்னியொடு
சென்றுபிரி வுற்றோரை நோக்கிச் சினக்களிறு
கொன்றதுவோ வஞ்சாது கூறுமெனச் செப்புதலும்.

(இ-ள்.) ஒருமைப்பட்ட மனத்தினையுடைய உசத்தியமுனிவர் அவ்வார்த்தைகளைக்கேட்டுக் கன்றைப்பிரிந்த தாய்ப்பசுவைப்போல வருந்தியழுது தமது புதல்வியுடன் சென்று திரும்பி வந்தவர்களைப் பார்த்துக் கோபத்தினையுடைய யானை கொன்றதோ? அஞ்சாமல் சொல்லுங்களென்று கூறவும்.—எ-று.

இதுமுதல் நான்குபாடலுங் குளகம். (௬௬)

தூயபுன லாடித் துறைபுகுந்து சூழ்பொதும்பி
லாயமுட னுடி யகன்றிங்கு வந்திடலுங்
காயுமழல் வெங்கட் கடகளிறு வந்ததுகண்
டோயுமுணர் வெய்தி யெல்லோமு மோடினமால்.

(இ-ள்.) (அதற்கு அப்பெண்கள் கூறுகின்றனர்) நாங்கள் நல்லநீரில் மூழ்கிக் கரையேறிச் சுற்றிலுமுள்ள சோலைகளில் கூட்டத்துடன் சென்று விளையாடி இங்குத் திரும்பிவரும்பொழுது சுடுகின்ற தீப்பொறிகளைக் கக்குகின்ற யானையானது வந்ததைப்பார்த்து அறிவுசோர்ந்து அனைவரும் ஓடினோம்.—எ-று. (௬௭)

ஓடி யுலையா வொருவர் நெறியொருவர்
கூடி லதா வணியின் குழாஞ்சிந்திச்
சாடு மதகரியிற் றப்பி விருத்தைதனைத்
தேடியங்ஙன் காணாது சென்றனம்யா மென்றிடலும்.

(இ-ள்.) ஓடிவருந்தி ஒருவர் போனவழி யொருவர்போகாமல் ஆபரணங்களைச் சிதறிக் கொல்லுகின்ற மதயானையினின் றுந்தப்பித்துக்கொண்டு விருத்தையைக் காணாமல் அவ்விடத்தில் தேடிப்பார்த்து வந்தோமென்று கூறுதலும்.—எ-று. (௬௮)

சென்றாங்கவ் வெல்லைதனிற் றேடித் தியங்குற்று
நின்றான் மகட னிறங்கிளரும் பொற்கலனோ
ரொன்றாக வெவ்வே றொருநெறியிற் சிந்திடக்கண்
டென்றாய் படர்ந்தநெறி யீதுகொல்லென் றேமுற்றான்.

(இ-ள்.) உசத்தியமுனிவர் அவ்விடத்திற்குச்சென்று அங்குத்தேடிக் காணாது மயக்கி நின்று பின்பு தமது புதல்வியின் மார்பிலணிந்த பொன்னாபரணங்கள் ஒவ்வொன்றாகத் தனித்தனியேஒரோவழியில் சிதறிக்கிடத்தலைப்பார்த்து என்னம்மை போனவழி யிதுபோலுமென்று கூறி வருந்தினார்.—எ-று. (௬௯)

பூண்போ கியநெறியே தொட்டுப் புதல்விதனைக்
காண்போ மெனவே கனங்குழையா ரோடேகி
மாண்போய கூவலொன்று வந்தணுக வாங்கதனிற்
சேண்போய தன்மகளைக் கண்டு தெருமந்தான்.

(இ-ள்.) ஆபரணங்கள் சிதறிக்கிடக்கின்ற வழியைப் பிடித்துக்கொண்டு தமது புதல்வியைக் காண்போமென்று பெண்கள் கூட்டத்துடன்சென்று ஒருபாழுங் கிணற்றைக் கண்டு, அதனில் விழுந்திறந்த தமது புதல்வியின் உருவத்தைப் பார்த்து வருத்தமடைந்தனர்.—எ-று. (௧௦௦)

வேறு.

கூவலுறு வதுநோக்கி நெடிதுயிர்த்து விழிவழிநீர் குதிப்பக் குப்புற்
றுவலியா மகளையெடுத் தகன்கரையின் பாற்படுத்தி யழுங்க லோடும்
பாவையர்க டழீஇக்கொண்டு புலம்பினரா லதுகேட்டுப் பயந்த நற்றாய்
காவினுறு கோகிலம்போ னெடிதரற்றிப் பெருந்துயரக் கடலுட் பட்டாள்.

(இ-ள்.) தமதுமகள் கிணற்றில்கிடப்பதைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டுக் கண்களில் நீரொழுக அக்கிணற்றில் குதித்து வருந்தி அப்புதல்வியையெடுத்துப் பெரியகரையில் சேர்த்து வருந்தவும், (அவருடன்வந்த) மாதர்கள் அப்பிரேதத்தைத் தழுவிக்கொண்டு புலம்பினார்கள்; அதனைக்கேட்ட பெற்றதாயானவள் சோலையிலுள்ள குயிலைப்போல மிகுதியாகப்புலம்பி மிக்க துன்பக்கடலில் மூழ்கினாள்.—எ-று.(௧௦௧)

தன்பால்வந் தவதரித்த நங்கைதனைக் கைவிட்டுத் தரியா ளாகி
யன்பாலே யுயிர்பதைப்ப வயிறதுக்கி யாகுலியா வரற்றி யேங்கி
மின்பாலோர் மின்படிந்த தன்மையென வவளாக மிசையே வீழ்ந்து
தென்பாலிற் புகுந்தனையோ வோமகளே யெனப்புலம்பித் தேம்ப லுற்றாள்.

(இ-ள்.) தன்னிடத்தில்வந்து பிறந்த மகளைக்கைவிட்டு மனந்தரியாதவளாய் அன்பினால் உயிர்பதைக்கும்படி வயிற்றைப்பிசைந்து வருந்தி அழுது எக்கங்கொண்டு,மின்னலின்மீது ஒருமின்னல்விழுந்தாற்போல அவளுடம்பின்மேல்விழுந்து ஐயோ! மகளே ! நீ யமலோகஞ் சேர்ந்தனையோ? என்று புலம்பி விம்மினாள்.—எ-று.

அன்னேயோ வன்னேயோ வாகொடிய தறனேயோ வறியே னந்தோ
முன்னேயோ நெடுங்காலங் குழவியின்றிப் பெருநோன்பு முயன்று பெற்ற
மின்னேயோ வுயிரிழந்து வெள்ளிடையிற் கிடந்திடுமோ லிதியார் செய்கை
யின்னேயோ யாதொருத்தி பெண்பிறந்து பெற்றபய னிதுவே யன்றே.

(இ-ள்.) ஓ! அன்னையே! ஓ! அன்னையே! ஆ! தருமந்தானேகொடியது; ஐயோ! யானறியேன்; முன்னே அநேககாலம் குழந்தையில்லாமல்பெருந்தவத்தைச் செய்து பெற்ற மகளோ உயிர்நீங்கி மைதானத்திற் கிடக்கின்றாள்; விதியின் செய்கை இதுதானோ? இப்பொழுது யானொருத்தி பெண்ணாகப்பிறந்து அடைந்தபயன் இது வல்லவோ?—எ-று. (௧0௫)

புலிக்கணங்க டிரிகானி லொருமானை வளர்த்ததனைப் போக்கி நின்றே, யலக்கணுறு வோரென்வே கைவிட்டுத் தமியேனு மழுங்கா நின்றேன், மல ர்க்கமலத் திருவைநிக ரென்மகளைக் கொல்லியமுன் வந்ததந்தக், கொலைக்க ளிற்றின் வடிவன்றே கொடியேன்செய் பெரும்பவத்தின் கோலமன்றே.

(இ-ள்.) புலிக்கூட்டங்கள் திரிகின்ற காட்டிலே ஒருமானைவளர்த்து அதனைப் போக்கடித்து வருந்துகின்றவர்களைப்போல் என்மகளைக்கைசோரவிட்டு நானும் வருந்துகின்றேன்; தாமரைமலரில் வசிக்கின்ற திருமகள்போல்பவளாகிய எனது புதல்வியைக் கொல்லும்படி முன்னேவந்தது கொலைத்தொழிலையுடைய அந்தயானையின் வடிவமன்று, கொடியவளாகிய யான்செய்தபெரும்பாவத்தின்வடிவமல்லவோ.-எ-று.

அறங்காட்டிற் சென்றதுவோ தெய்வதமு மிங்கிலையோ வரிதா முத்தித்
திறங்காட்டுந் தவநெறியும் பொய்த்தனவோ கலியுமினிச் சேர்ந்த தேயோ
மறங்காட்டும் வனக்களிறு வந்தடர்க்க வீண்டெனது மாது மாண்டு
புறங்காட்டிற் கிடந்திடுமோ வென்னேயென் னேயிதுவோர் புதுமை யாமே.

(இ-ள்.) தருமமானது காட்டிற்சென்றதோ? தெய்வமும் இங்கில்லையோ? அருமையாகிய முத்தித்திறத்தைக் காட்டுகின்ற தவமார்க்கமும் பொய்யாயினவோ? இனிக் கலியுகமும் வந்துவிட்டதோ? கொடுமைபொருந்திய காட்டானையானதுவந்து கொல்ல இங்கே எனது மகள் இறந்து காட்டின்புறத்திலிருப்பாளோ? இஃது யாது காரணம் இஃதொரு புதுமையாகும்.—எ-று. (௧0௫)

வேறு.

என்றிவை பலவும் பன்னி யிடருழந் தரற்றும் வேலை
மன்றலங் குழலின் மாதர் வளைந்தன ரிரங்கி மாழ்க
வொன்றிய கேளி ரல்லா ரியாவரு முருகி னைந்தா
ரன்றவ ணிகழ்ந்த பூச லாகுல மறைதற் பாற்றே.

(இ-ள்.) என்றிவ்வாறு பலவார்த்தைகளையுங் கூறித் துன்புற்றுப் புலம்பும் பொழுது மணம்வீசுகின்ற அழகிய கூந்தலையுடைய மாதர்கள் சூழ்ந்து வருந்திப்புலம்புதலும், நெருங்கிய பந்துக்களல்லாதவர்க ளனைவரும் மனமுருகி வருந்தினார்கள்; அப்பொழுது அங்குநடந்த பேரோசையினையுடைய வருத்தமானது இவ்வளவினதென்று சொல்லுந்தரத்ததோ?—எ-று. (௧0௬)

கோட்டமில் சிந்தை யோனுங் குச்சகன் குறுகி யங்க
ணாட்டநீர் பனிப்பச் சோரு நங்கையர் தம்பா லெய்தி
மீட்டினித் தருவன் மாதை விம்மலி ரென்னு வேறோர்
மாட்டுற விருந்த தந்தைக் கினையன வகுத்துச் சொல்வான்.

(இ-ள்.) குற்றமற்ற மனத்தினையுடைய குச்சகமுனிவர் அவ்விடத்தடைந்து கண்களில் நீரொழுகும்படி வருந்துகின்ற பெண்களிடத்திற்குப்போய் இறந்த பெண்ணை யெழுப்பித் தருகின்றேன் நீங்கள் அழாதீர்களென்று கூறி, வேறோர்பக்கத்திலிருந்த உசத்தியமுனிவரைப் பார்த்து இவ்வார்த்தைகளை வகுத்துக் கூறுவாராயினார்.—எ-று. (௧0௭)

மறைமுத லாய நூன்னூன் மருளற வுணரா மாக்கள்
சிறியரே முதியர் பாலர் சேயிழை மகளி ரின்னோ
ருறுவதோ ரவலஞ் செய்தா யூழ்வினை முறையு மோரா
யறிவநீ யின்னே யாயி னாரிது தணிக்கற் பாலார்.

(இ-ள்.) வேதமுதலாகிய நுண்ணியநூல்களை மயக்கநீங்கப்படியாத மனிதர்களும், சிறியவர்களும், முதியவர்களும், குழந்தைகளும், பெண்களுமாகிய இவர்கள் அடைகின்ற துன்பத்தை யடைந்தீர்; ஊழின்முறைமையு மறியீர்; விவேகியாகிய நீரோ இவ்வாறாயின், இந்த விசனத்தைத் தணிப்பவர்கள் வேறுயாவர்?—எ-று. (௧0௮)

கேளையா மனத்திற் றுன்பங் கிளத்தலை கேடு நீங்கி
நீளயா வுயிர்த்தார் போலிந் நேரிழைக் கன்னி தன்னை
நாளையான் விளித்து நின்பா னல்குவ னல்க நீநங்
காளையா னவற்குப் பின்னாட் கடிமணம் புரிதி யன்றே.

(இ-ள்.) கேளும் உசத்தியரே! மனத்தில் வருத்தங்கொள்ளாதீர்; குற்ற நீங்கி நன்றாய்நெடுநாழிகை நித்திரைசெய்தெழுந்தவர்களைப்போல இந்தப்பெண்ணினை நாளையத்தினம் அழைத்து உம்மிடந்தருவேன். நீர் நமது புதல்வனுக்கு அவளை விவாகஞ்செய்து கொடுக்கக்கடவீர்.—எ-று. (௧0௯)

ஐயமென் றுளத்தி லுன்னி யழுங்கலை விதியு மற்றே
மெய்யுணர் வதனாற் கண்டாம் விருத்தைதன் யாக்கை தன்னை
மொய்யுறு தயிலத் தோணி மூழ்குவித் திருத்தி யின்றே
யொய்யென நோற்று மீட்டுத் தருகுவ னுயிரை யென்றான்.

(இ-ள்.) இது சந்தேகமானகாரியமென்று மனத்தில் நினைத்து வருந்தவேண்டாம்; விதியும் அவ்வாறேதான்; யாம் இதனை ஞானதிருஷ்டியினால் கண்டோம்; ஆதலால், விருத்தையின்தேகத்தைத் தயிலம் நிறைத்துள்ள தோணியில் போட்டுவைத்திருக்கக்கடவீர்; இன்றே யான் விரைவாகத்தவஞ்செய்து இவளுயிரைமீட்டுத் தருகின்றேனென்று கூறினார்.—எ-று. (௧௧0)

சாற்றிய துணர்ந்து தாதை தயிலத்தி லிட்டு மாதைப்
போற்றின னிருப்ப மேலோன் போயொரு பொய்கை மூழ்கிக்
கூற்றுவற் புகழ்ந்து நோற்பக் கொடுங்குழை மடவா ரஞ்சக்
காற்றென முன்னர் வந்த களிறுமீண் டணைந்த தம்மா.

(இ-ள்.) குச்சகமுனிவரர் கூறியதனை உசத்தியமுனிவ ருணர்ந்து தன்மகளைத் தயிலத்தோணியிலிட்டுக் காத்துக்கொண்டிருந்தனர், உடனே குச்சகமுனிவர் சென்று ஒருதடாகத்தில் மூழ்கி இயமனைப்புகழ்ந்து தவஞ்செய்யவும், குண்டலமணிந்த காதினையுடைய பெண்கள் அஞ்சும்படி முன்பு காற்றைப்போல் விரைந்துவந்த காட்டானையானது பின்னும் அவ்விடத்திற்குவந்தது.—எ-று. (௧௧௧)

தடமிகு புனலுட் புக்குத் தாளினா லுழக்கிச் சாடிப்
படவர வனைய செய்கைப் பருவலித் தடக்கை தன்னா
லிடைதொறுந் துழாவி நின்ற விருந்தவ முனிவற் பற்றிப்
பிடர்மிசை யேற்றிக் கொண்டு பெரிதுசேண் பெயர்ந்த தன்றே.

(இ-ள்.) நீர்நிறைந்த அந்தப் பெரியதடாகத்துள் புகுந்து காலினால் மிதித்துக் கலக்கிப் படப்பொருந்திய பாம்பின்றன்மைபோன்று அசைந்தாடுகின்ற மிக்க வலிமையினையுடைய துதிக்கையினால் மற்றிடங்களெங்குந்தேடி அந்நீருள் நிற்கின்ற

மிக்க தவத்தினையுடைய குச்சகமுனிவரைப் பிடித்தெடுத்துப்பிடரியில் வைத்துக்கொண்டுமிகவும் நெடுந்தூரத்திற் சென்றது.—எ-று. (௧௧௨)

கோதறு குணத்தின் மேலாங் குச்சக னென்னுந் தொல்பேர்
மாதவ னுணர்ந்து பின்னர் மதக்களி றதனைநோக்கி
யீதெனைப் பற்றிச் செல்வ தென்கொல்கா ரணமென் றெண்ணி
யோதியின் வலியா லன்ன தூழ்முறை யுன்ன லுற்றான்.

(இ-ள்.) குற்றமற்ற குணத்திற்சிறந்த மிக்கதவத்தினையுடைய குச்சகமுனிவருணர்ந்து பின்பு அம்மதயானையைப் பார்த்து, இது என்னை எடுத்துக்கொண்டு செல்வதற்கு யாதுகாரணமென்று நினைத்து ஞானவிசேஷத்தினால் அந்த யானையின் முன்னைய வினையின்முறைமையைச் சிந்திப்பாராயினர்.—எ-று. (௧௧௩)

மாவ தத்தினை யிழைத்திடும் பூட்கையின் மதநீர்
காவ தத்தினுங் கமழ்தரு கலிங்கநாட் டதன்பா
லாவ தத்தநேர் மாக்கள்வா ழரிபுர மதனிற்
றேவ தத்தனென் றுளனொரு வணிகரிற் றிலகன்.

(இ-ள்.) பெரிய கொலைத்தொழிலைச் செய்கின்ற யானையின் மதநீரானது காததூரம் மணம்வீசுகின்ற கலிங்கதேசத்தில் காமதேனுவைப்போலுங் கையினையுடைய கொடையாளிகள் வசிக்கின்ற அரிபுரமென்னு நகரத்தில் வணிகர்திலகனாய்த் தேவதத்தனென்று ஒருவனிருந்தனன்.—எ-று.

ஆ அது அத்தம்நேர் எனப்பிரிக்க. (௧௧௪)

தவத்தி னன்னவன் பெறுமகன் றருமதத் தனெனப்
புவிக்கண் மேலவர் புகழ்செய வறம்புரி புகழோன்
கவற்சி யின்றியே மூவகைப் பொருளையுங் காண்போ
னுவப்பு நீடிய விருநிதிக் கிறையினு முயர்ந்தோன்.

(இ-ள்.) அத் தேவதத்தன் தவத்தினாற்பெற்ற புதல்வனாகிய தருமதத்தனென்று உலகத்துள்ள மேலோர்கள் புகழும்படி தருமஞ்செய்யுங் கீர்த்தியினையுடையவன்; மனவாட்டமில்லாமல் அறம்பொருளின்பமென்னும் முப்பொருளையுமுடையவன்; மகிழ்வுமிக்க பெருஞ் செல்வத்தினை யுடைய குபேரனைப் பார்க்கிலுஞ்சிறந்தவன்.—எ-று.

இருநிதிக்கிறை என்பதற்கு, சங்கநிதி பதுமநிதி யென்னு மிரண்டு நிதிகளுக்குந் தலைவன் எனப் பொருள்கூறலு மொன்று. (௧௧௫)

தந்தை யன்னையு மிறத்தலுந் தமியனே யாகிச்
சிந்தை வெந்துய ருழந்துபி னொருவகை தேற
வந்த வேலையி னவன்பெருந் திருவினை யகற்ற
வந்து தோன்றினன் மனமருள் செய்வதோர் வாதி.

(இ-ள்.) அவனது தாய்தந்தையர்க ளிறக்கவும்,தனியனாய் மிக்கமனவருத்தமடைந்து பின்பு ஒருவாறு மனந்தேறியிருக்கின்ற சமையத்தில் அவனது பெருஞ்செல்வத்தை யழிக்கும்பொருட்டு மனமயக்கஞ் செய்யக்கூடிய ஒரு இரசவாதியானவன் அங்கு வந்தனன்.—எ-று. (௧௧௬)

முண்டி தப்படு சென்னியன் றுதுவின் முயங்கு
குண்ட லத்தினன் கோலநூன் மார்பின னீற்றுப்
புண்ட ரத்திய னெற்றியன் கஞ்சுகன்புதியோன்
கண்டி கைக்கலன் புனைந்துளோன் வேத்திரக் கரத்தோன்.

(இ-ள்.) முண்டிதமாகிய தலையினையும், பஞ்சலோகங்களால் செய்யப்பட்ட குண்டலத்தினையும், அழகிய பூணூலணிந்த மார்பினையும், விபூதிபுண்டரமணிந்த நெற்றியினையும் மேற்சட்டையினையும், ருத்திராக்ஷமாலையினையும் பிரம்பேந்தியகையினையுமுடையனனாய் அந்தஇரசவாதிபுதியனாகவந்தனன்.—எ-று. (கசஎ)

அவனைக் கண்டன னடிமுறை வணங்கின னருவாஞ்
சிவனைக் கண்டன னுமெனப் பெருமகிழ் சிறந்தான்
புவனிக் குள்ளவ ரென்னினுஞ் சாலவும் புதியர்
தவமிக் கோரிவ ரென்றுகொண் டுறையுளிற் சார்ந்தான்.

(இ-ள்.) தருமதத்தன் அந்த இரசவாதியைப் பார்த்து அவன் கால்களில் முறைப்படிவணங்கி அருபியாகிய சிவபெருமானைத் தரிசித்ததைப்போல மிக்க மகிழ்ச்சியடைந்தவனாய், இவர் இவ்வுலகத்துள்ளவரா யிருப்பினும் மிகப்புதியர்; மகாதபசி என்று கூறி வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு சென்றனன்.—எ-று. (கசஅ)

பொன்ன ருங்கலந் திருத்துபு குய்யுடைப் புழுக்க
னன்ன லம்பெற வருத்தினன் முகமனு நவின்றான்
பின்ன ரன்னவன் றனையெதிர் நோக்கினன் பெரியோ
யென்னி வண்வந்த தென்றனன் வணிகருக் கிறைவன்.

(இ-ள்.) வணிகர்தலைவனாகிய தருமதத்தன் பொன்னாலாகிய பரிகலமமைத்துத் தாளித்த பொறிக்கறிகளுடன் நல்ல அன்னத்தைப் பிரியமாக வுண்பித்து உபசார வார்த்தையு முரைத்துப் பின்பு அவனை எதிரில்நோக்கி, பெரியவரோ ! நீர் இவ்விடத்திற்கு யாதுகாரணமாக வந்தீரென்று வினவினன்.—எ-று. (கசகூ)

ஈசன் றந்திடு விஞ்சையொன் றெமக்குள தெவர்க்கும்
பேசுந் தன்மைய தன்றது குரவர்பாற் பெரிது
நேசம் பூண்டவர்க் குரைப்பது நெஞ்சினிற் சிறிது
மாசின் றாயநிற் குணர்த்துவ னஃதென வகுத்தான்.

(இ-ள்.) (அதற்கு இரசவாதி கூறுகின்றான்) எமக்குச் சிவபெருமான் கொடுத்தருளிய ஒரு வித்தையிருக்கின்றது, அது யாவரிடத்திலுஞ் சொல்லத்தக்கதன்று, குருபத்தியிற்சிறந்தவர்களுக்குச் சொல்லவேண்டுவது; அதனைச் சிறிதும் மனக்குற்றமில்லாத உனக்குக் கூறுகின்றேனென்று கூறினன்.—எ-று. (கஉ0)

சரத மேயிது சம்புவின் வந்ததோர் தகைசா
லிரத முண்டது பொன்னெனச் செய்தன மெமக்கோ
ரரிது மன்றது போல்வன பலவுள வவைதாம்
விரத மாதவ ரல்லதி யார்கொலோ விரும்பார்.

(இ-ள்.) எமக்குச் சிவபெருமானாற் கிடைத்ததென்னு மிஃதுண்மையேயாம், எம்மிடத்தில் உயர்வுபொருந்திய இரசமென்பதொன்றுண்டு, அதனைக்கொண்டு (எல்லாப் பொருள்களையும்) பொன்னாகச்செய்தோம், எமக்கு அஃதொரு அருமையன்று. அதுபோன்ற வித்தைகள் எம்மிடத்திற் பலவுள்ளன; அவ்விரசவாதவித்தையை நிராசையினையுடைய முனிவரர்கள்தவிர, வேறுயார்தாம் விரும்பாதவர்கள்.—எ-று.

'சம்புவின்வந்ததோர் தகைசா லிரதமுண்டது பொன்னெனச்செய்தனம்' என்பதற்கு, சிவபெருமானிடத்துண்டாகிய உயர்வுபொருந்திய இரதமென்பதொன்றுண்டு, அவ்விரதத்தைப் பொன்னாகச்செய்தோம்எனப் பொருள்கூறலுமாம். (கஉக)

காரி ரும்பையு நாகத்திற் காட்டுதுங் கரிய
சீரி ரும்பினைப் பொன்னென வுரைபெறச் செய்வா
மேரு வுங்கயி லாயமு மென்றிரு வெற்பை
யாரு நோக்கவே காட்டுது மிவைநமக் கரிதோ.

(இ-ள்.) 'கரிய இரும்பையும் நாகத்தைப்போலக் காட்டுவோம்; கருமையாகிய சிறந்த இரும்பினைப் பொன்னைப்போல மாற்றுரைத்துப் பார்க்கச்செய்வோம்; பொன்மலையாகிய மேருவையும் வெள்ளிமலையாகிய கயிலாயத்தையும் யாவர்களும் பார்க்கும்படிக் காட்டுவோம். இவை நமக்கு அருமையோ?—எ-று.

'காரிரும்பையு நாகத்திற்காட்டுதும்' என்பதற்கு, கருமையாகிய பெரியபடத்தினையும் பாம்பினிடத்திற்காட்டுவோம் எனவும், 'கரியசீரிரும்பினைப் பொன்னென வுரைபெறச் செய்வோம்' என்பதற்கு, கருநிறம்பொருந்திய சிறந்த இரும்பைக் கரும்பொன்னென்று சொல்லும்படி செய்வோம் எனவும் உள்ளுறைகூறியதாகக் கொள்க. மேரு பொன்மலையும், கயிலாயம் வெள்ளிமலையுமாகலின், யாம்செய்யும் பொற்குவியல் மேருமலைபோன்றிருக்கவும், வெள்ளிக்குவியல் கயிலாயமலைபோன் றிருக்கவுங் காட்டுவோமெனவும், அவ்விரண்டும் ஸ்தூலரூபமாய்ப் பிரத்தியக்ஷப்பிரமாணமா யிருத்தலின், 'யாருநோக்கவேகாட்டுதும்' எனக் கூறியதாகக் கொள்க. (௧௨௨)

எய்து மீயமு மிரதமும் வெள்ளிய தெனவே
செய்து மன்றியும் வங்கத்திற் செம்பொனுந் தெரிப்பா
நொய்தி னன்னது வலியுறக் காட்டுது நுவலுங்
கைத வம்பயின் மாக்களுக் கினையன கழறும்.

(இ-ள்.) பொருந்தியஈயத்தையும் இரசத்தையும் வெள்ளியென்றுசொல்லும்படிச்செய்வோம்; அன்றியும், ஈயத்தில் தங்கங்காட்டுவோம்; அவை விரைவாக நிலைபெற்று நிற்கவுஞ்செய்வோம்; வஞ்சகத்தொழிலிற் பழகியுள்ள மனிதர்களுக்கு இவற்றைக் கூறமாட்டோம்.—எ-று.

'ஈயமுமிரதமும் வெள்ளியதெனவே செய்தும்' என்பதற்கு, ஈயமும் இரசமும் வெண்ணிறமுடையதாகச் செய்வோம் எனவும், 'வங்கத்தில் செம்பொனுந்தெரிப்பாம்' என்பதற்கு, கப்பல்களிற் பொன்னிருக்கக்காட்டுவோம் எனவும் உள்ளுறை கூறியதாகக் கொள்க. (௧௨௩)

இரும்பி னிற்செம்பு வாங்குவ மீயமு மற்றே
வரம்பி லாதமே தார் தரணியண் டங்களை மரபி
னரும்பொன் வண்ண மாக்குவம் வல்லவா றறைய
விரும்பி னுமெனின் யாண்டுமோ ரளப்பில வேண்டும்.

(இ-ள்.) இரும்பில் செம்பெடுப்போம்; ஈயத்திலுஞ் செம்பெடுப்போம்; அளவற்ற பிருதிவியண்டங்களை முறைப்படி அரிய பொன்வண்ணமாகச் செய்வோம்; எமது சாமர்த்தியத்தன்மையைச்சொல்ல விரும்புவோமாயின் அநேகவருஷங்கள் செல்லும்.—எ-று.

'இரும்பினிற் செம்புவாங்குவமீயமுமற்றே' என்பதற்கு, இரும்பைக்கொடுத்து அதற்குப்பதிலாகச் செம்பைவாங்குவோம், ஈயத்தைக்கொடுத்து அதுபோலவே பதிலுக்குச் செம்பைவாங்குவோம் எனவும், 'தரணியண்டங்களை மரபி னரும்பொன் வண்ணமதாக்குவம்' என்பதற்கு, மண்ணண்டத்தைப் பொன்னண்டமாக்குவோமெனவும், பிருதிவி பொன்னிறமுடையதாகலின், தரணியண்டங்களை மரபினரும் பொன் வண்ணமதாக்குவமெனவுங் கூறியதாகக்கொள்க. (௧௨௪)

ஒன்று கோடிபொன் னுக்குவங் கோடிய துளவேற்
குன்று போலவே கோடியிற் கோடிசெய் குவமா
னின்றனக்குள பொருளெலாந் தருதியே னினது
மன்றன் மாளிகை நிதிக்கிட மில்லென வகுப்பாம்.

(இ-ள்.) ஒருபொன்னைக் கோடிபொன்னுக்குவோம்; கோடிப்பொன்னுண்டாயின் மலைபோலக் கோடாகோடியாகச் செய்வோம்; உன்னிடத்திலுள்ள பொருள்களையெல்லாந் தருவையாயின் நினது மங்கலகரமாகிய மாளிகையில் பொருள்வைப்பதற் கிடமில்லையென்று சொல்லுபடிச் செய்வோம்.—எ-று. (சஉ௫)

என்னவேமொழி சோரனை வணங்கின னிமைப்பின்
முன்ன ருள்ளதுந் தான்றன துரிமையான் முயலப்
பின்ன ரெய்திய நிதியமும் பேழையா னவற்றின்
மன்னு பூண்களுங் கொணர்ந்தனன் முன்புற வைத்தான்.

(இ-ள்.) என்றிவ்வாறுகூறிய திருடனாகிய இரசவாதியைத் தருமதத்தன் வணங்கினவனாய், முன்புள்ள பொருள்களையும், தான்தனது வியாபாரமுயற்சியினால் பின்பு சம்பாதித்தபொருள்களையும் பெட்டிகளில் வைத்திருந்த ஆபரணங்களையுங் கொண்டுவந்து எதிரில்வைத்தனன்.—எ-று. (சஉ௬)

வைத்த மாநிதி நோக்கலும் வணிகரிற் றிலக
ருய்த்த செல்வமு மிதுகொலோ வோவென வுரையாக்
கைத்த லங்கொடு கைத்தலம் புடைத்துடுக் கணங்க
ணத்த வேலையி லொருங்குபட் டாலென நகைத்தான்.

(இ-ள்.) அவ்வாறு வைத்த பெருஞ்செல்வத்தைப் பார்த்தவுடன், ஓ கோ; உனதுபூர்வீகர்களாயுள்ள வணிகர் குலச்சிரேஷ்டர்கள் சம்பாதித்தபொருளும் இவ்வளவுதானோவென்று கூறிக் கையோடு கையைத்தாக்கி இராக்காலத்தில் நக்ஷத்திரக் கூட்டங்களுதித்தாற்போலச் சிரித்தனன்.—எ-று.

நத்தவேலை - இராக்காலம். (சஉ௭)

இந்த நின்பொரு ணம்முடை விஞ்சையி லிறைக்கும்
வந்தி டாதுநா முருக்குறு முகந்தனில் வழுவிச்
சிந்து கின்றதற் கிலையிது நமதுபின் றிரியி
னந்த மில்பொருள் கொடுக்குவம் வைத்தியென் றறைந்தான்.

(இ-ள்.) நீ கொண்டுவந்து வைத்த இந்தப் பொருள் நமது வித்தைக்குச் சிறிதும் போதாது, இந்தப் பொன் நமது உருக்குமுகத்தில் சிதறி யொழுகுவதற்குக் காணாது, நமக்குப் பின்னே திரிவையாயின் அளவற்ற பொருளைத் தருவோம்; இதனையெடுத்துவைக்கக் கடவையென்று கூறினான்.—எ-று. (சஉ௮)

முனிய லையநீ வேண்டிய பெருநிதி முழுது
மினிது நாடியே கொணருவ னிருத்தியென் றுரைத்துப்
புனையு மாடையு நிலங்களு மணிகளும் பூணு
மனையு மாக்களும் பகர்ந்தன னிகரிலா வணிகன்.

(இ-ள்.) ஐயனே ! தேவரீர் கோபித்துக்கொள்ளாதீர், நீர் கேட்டவளவு பெருஞ்செல்வத்தைச் சேகரித்துக்கொண்டு வருகின்றேன், இவ்விடத்திலேயே யிருப்பீராகவென்று கூறி, ஒப்பற்ற தருமதத்தனனவன் அணிந்துகொள்ளுகின்ற ஆடைகளையும், நிலங்களையும், இரத்தினங்களையும், ஆபரணங்களையும் வீடுகளையும், பசுக்களையும் விற்றனன்.—எ-று. (சஉ௯)

பொருமத த்தினை யிழைத்திடு மருப்புயர் புழைக்கைப்
பெருமதக்கரி யென்னவே மயங்கினன் பெரிதும்
வருவ தத்தமென் றறத்தையும் பகர்ந்துமெய் வணிகன்
றருமதத்தனும் பெயரினை நிறுவினன் றரைமேல்.

(இ-ள்.) மிகுந்த மதநீரைச்சிந்துகின்ற உயர்ந்த கொம்புகளும் துதிக்கையும் பொருந்திய மதயானையைப்போல மயங்கினவனாய் மிகவும் பொருள் கிடைக்குமென்று நினைத்துத் தருமத்தையும் விற்று அவ்வணிகனானவன் தருமதத்தனென்னும் பெயரை உலகத்தில் நிலைநிறுத்தினான்.—எ-று.

தருமதத்தன் - தருமத்தைத் தத்தஞ்செய்தவன். (௬௫௦)

இத்தி றத்தினிற் றேடிய பெருநிதி யெனைத்துங்
கைத்த லங்கொடு தாங்கியே கரவன்முன் காண
வைத்து நிற்றலு மகிழ்ந்தன னவையெலாம் வாங்கி
மொய்த்த செங்கனற் றீயிடை யுருக்குதன் முயன்றான்.

(இ-ள்.) இவ்வாறாகச் சேகரித்த மிகுந்த செல்வத்தையெல்லாம் கையினாலெடுத்துக்கொண்டு போய் அந்தத் திருடன் முன்னே வைத்து அவன் காணும்படி எதிரில் நிற்கவும், அவன் மகிழ்வடைந்து அவற்றை யெடுத்து மூட்டிய செஞ்சுவாலையையுடைய நெருப்பில் வைத்து உருக்கத் தொடங்கினான்.—எ-று. (௬௫௧)

திரட்டி யாவையு மோருரு வாக்கினன் செழும்பொ
னிரட்டி தூக்கிய விரதமாங் கொருசிலை யிட்டு
மருட்டி யாடக முழுவது முறைத்தவை வலிதா
வுருட்டி மட்பெருங் குகையினின் மருந்தையுள் ளுறுத்தான்.

(இ-ள்.) பொன்னை யெல்லாம் உருக்கித் திரட்டி யொன்றாகச் செய்து அதனை நிறுத்தெடுத்து அப்பொன்னுக்கு இருமடங்கு இரசத்தை ஒரு அம்மியில் விட்டுத் தருமத்தனை மயக்கி இப்பொன்முழுமையு மரைத்துப் பெரிதாக வுருண்டைசெய்து மண்ணாற்செய்த பெரியகுகைக்குள் மருந்தையுள்ளேவைத்தனன்.—எ-று. (௬௫௨)

பண்ணு றுத்திய கனகமுள் ளிட்டதன் பாலு
மெண்ணு றுத்திய மிசைக்கணுங் களங்கமொன் றிட்டு
மண்ணு றுத்திநற் றுகில்கொடு பொதிந்தனன் மருங்கிற்
கண்ணு றுத்திய செந்தழற் புடைமிசை கரந்தான்.

(இ-ள்.) பக்குவப்படுத்திய தங்கத்தைக் குகைக்குள் வைத்து அதன் பக்கத்திலும் மேலிடத்திலும் ஒரு இரச குளிகையைப் போட்டுச் சீலைமண் செய்து பக்கத்தில் மூட்டிய பெரிய நெருப்புப்புடத்தில் வைத்துமூடினான்.—எ-று. (௬௫௩)

நூற்று நான்கொடு நான்குகுக் குடபுட நொய்தின்
வீற்று வீற்றதா விட்டது நோக்கினன் மிகவு
மாற்று வந்தது பழுக்குமோர் வராகியின் மருளேல்
காற்றி லாதவோ ரறையுள்காட் டென்றனன் கரவன்.

(இ-ள்.) அந்தத் திருட்டு இரசவாதியானவன் நூற்றெட்டுக் குக்குடபுடங்களை வரிசைவரிசையாகப் போட்டுப் பார்த்தவனாய் மிகவும் மாற்றுவந்திருக்கின்றது; ஒருவராகிப் புகையிற் பழுக்கும்; நீ மயங்காதே; காற்றில்லாத ஒரு அறைவீட்டைக் காட்டென்று கூறினான்.—எ-று.

குக்குடபுடம் - கோழியளவு உயரத்தில் வைக்கும் புடம். (௬௫௪)

சேமஞ் செய்ததோ ருறையுளைக் காட்டலுஞ் சென்று
வாமஞ் செய்ததோ ரிந்தனக் குவான்மிசை மறவோ
ரீமஞ் செய்தசெந் தழற்சொடு வராகிமே லிட்டுத்
தூமஞ் செய்தன னங்கியு மவனெதிர் துரந்தான்.

(இ-ள்.) காவலாகச் செய்யப்பட்ட ஒரு அறைவீட்டைக் காட்டவும் (அந்த இரசவாதி) அதற்குள்ளே சென்று அங்கு அழகாக அடுக்கியுள்ள விறகுக் குப்பலின் மேலே வீரர்களைச் சுட்ட சுடலையிலுள்ள நெருப்பைக் கொண்டுவந்து பற்றவைத்து வராகியென்னு மருந்தையும் மேலேதூவிப் புகையையெழுப்பி நெருப்பையும் அந்தத் தருமதத்தன்மீது படும்படிச் செய்தான்.—எ-று. (கஙுகு)

ஓங்கி நாட்டநீர் பொழிதர வாருயி ருலைய
வீங்கு கின்றமெய் வெதும்புற வெங்கணும் வியர்ப்ப
மூங்கை யாமென மொழிகிலான் போவது முயலான்
பாங்கி ருந்திடு வணிகர்கோன் பட்டதார் பகர்வார்.

(இ-ள்.) கண்களில் நீரானது பொங்கிச் சிந்தவும், அரிய மனம் வருந்தவும், பருத்த தேகம் வெதும்பவும், அத்தேக முழுதும் வியர்க்கவும், ஊமையைப் போலப் பேசாதவனாய் வெளியிற்போவதற்கும் முயற்சி செய்யாதவனாய் அவனருகிலிருந்த தருமதத்தனானவன் அடைந்த வருத்தத்தை யாவர் சொல்ல வல்லவர்கள்.—எ-று. ()

எல்லை யன்னதிற் பொதிந்திடு பொற்குகை யெடுத்து
மெல்லெனத்தன தாடையிற் கரந்தனன் வெய்யோன்
வல்லை யக்குகை போலவொன் றிருந்தது மருங்கிற்
செல்ல வைத்தனன் றழற்பெரும் புகையையுந் தீர்த்தான்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் கொடியவனாகிய இரசவாதியானவன் புடத்தில் வைத்த பொற்குகையை வெளியிலெடுத்து மெதுவாகத் தனது ஆடையில் மறைத்த வனாய் அப்பொற்குகை போன்றிருந்த வேறொரு இரும்புக் குகையை வினாவாக அப் புடத்தில் வைத்து அந்தப் புடத்தீயின் பெரும்புகையையுந் தணித்தனன்.—எ-று. ()

தத்த விக்குகை நின்கையிற் றுங்கினை தழன்மேல்
வைத்தி யென்றன னவனது புரிதலு மரபி
னத்த குஞ்செயற் குரியன யாவையு மமைத்து
வித்த கம்பெறச் சேமியா வொருசெயல் விதித்தான்.

(இ-ள்.) தருமதத்தனே! இந்தக்குகையை உன்கையி லெடுத்துப் புடத்தீயின்மேல் வைக்கக்கடவையென்று கூறினன்; உடனே தருமதத்தன் அவ்வாறெடுத்து வைக்கவும், முறைப்படி அதற்குச் செய்யவேண்டிய முறைமைக ளனைத்தையுஞ் செய்துநன்றாகப் புதைத்து அத்தருமதத்தனுக்கு ஒரு செயலைக் கட்டளையிட்டனன்.

வேறு.

உண்டி யிகந்துரை யாடலை யாகிப்
பெண்டிரை வெஃகல் பெறாப்பிறர் தம்மைக்
கண்டிட லின்று கருத்தினி லெம்மைக்
கொண்டிரு முப்பகல் கோதில் குணத்தோய்.

(இ-ள்.) குற்றமற்ற நற்குணத்தினையுடைய தருமதத்தனே! மூன்றுநாள்வரையில் உணவை யொழித்து ஒருவரிடத்தும் பேசாமல் மாதர்போகத்தை விரும்பாமல் பிறர்முகத்தைப் பாராமல் மனத்தில் எம்மைச் சிந்தித்துக் கொண்டிருக்கக்கடவை

நெய்கமழ் செஞ்சடை நீலிதன் முன்னோர்
மொய்கனல் வேள்வி முடித்திட வுண்டாற்
செய்கட னன்னது தீர்த்தபி னுலாம்
வைகலி னேகுது மற்றிவ ணென்றான்.

(இ-ள்.) நெய்மணங்கமழும் சிவந்த சடையினையுடைய காளிகாதேவியின் சந்நிதியில் அக்கினி சம்பந்தமாகிய ஒரு யாகத்தைச் செய்து முடிக்கவேண்டி யிருக்கின்றது; அவசியமாகச் செய்யவேண்டிய கடமையாகிய அதனைச் செய்து முடித்தபின்பு இவ்விடத்தில் நாலாவது தினத்தில் வருகின்றோமென்று கூறினான்.—எ-று. (கசO)

அம்முறை செய்கென வாங்கவ னடியை
மும்முறை தாழ்ந்து முதற்பெரு வணிகச்
செம்மல் வன்புடை சென்றில னின்றான்
மைம்மலி சிந்தையன் வல்லை யகன்றான்.

(இ-ள்.) முதன்மை பொருந்திய பெரிய வணிககுல சிரேஷ்டனாகிய தருமதத்தனானவன் அவ்வாறே செய்வீராகவென்று அந்த இரசவாதியின் கால்களில் மூன்றுதரம் நமஸ்கரித்து அவனுடனே செல்லாமல் நிற்கவும், வஞ்சகம்பொருந்திய மனத்தினையுடைய அந்த இரசவாதியானவன் விரைவாக அவனைவிட்டு நீங்கிச் சென்றனன்.

காவத மோரொரு கன்னலி னாகப்
போவது செய்து புறத்துரு மாறி
வாவினன் வேறோர் வளாகம துற்றா
னேவலின் வைகின னித்தலை வணிகன்.

(இ-ள்.) (இரசவாதியானவன்) காததூரத்தை ஒரு நாழிகைப்பொழுதாகக் கடந்துசென்று புறத்தில் தனது உருவமாறி விரைந்தகன்று வேறொரு நாட்டை யடைந்தனன். தருமதத்தனானவன் அவனது கட்டளைப்படியே அக்குகையைக் காவல் செய்திருந்தனன்.—எ-று. (கசஉ)

முப்பகல் போதலு மூதறி வுள்ளோன்
செப்பிய நாள்வரை சென்றுள வன்றே
யிப்பகல் வந்தில னென்னை யவற்சொற்
றப்புவ னோவென வேதளர் கின்றான்.

(இ-ள்.) மூன்றுநாள் கழியவும் (தருமதத்தனானவன்) பேரறிவினனாகிய இரசவாதி கெடுவிட்டுப்போன நாளெல்லைகள் சென்றன ; இன்றும் வரவில்லை ; இஃதென்னை ? அவன்சொன்னசொல் தவறுவானோவென்றுதளர்ச்சியடைகின்றவனாயினான்.

நீடிய தொல்புகழ் நீலி யிருக்கை
நாடினன் மேதகு நன்னக ரெங்குந்
தேடினன் மாலுறு சிந்தைய னானான்
வாடினன் மீண்டனன் மாளிகை வந்தான்.

(இ-ள்.) (தருமதத்தன்) அதிகரித்துள்ள பழமையாகிய புகழையுடைய காளிகாதேவியின் ஆலயத்திற் றேடிப்பின்பு மேலாகிய சிறப்பினையுடைய அந்நகரமெங்கும் தேடிப்பார்த்து மயக்கம் பொருந்திய மனத்தினை யுடையவனாய் வாட்டங்கொண்டு திரும்பித் தனது மாளிகைக்கு வந்தனன்.—எ-று. (கசச)

அடுத்துமுன் வைத்த வருங்குகை தன்னை
யெடுத்தது நோக்க விரும்பது வாக

வடுத்தவிர் சிந்தையன் மாயைகொ லென்னு
விடுத்தன னன்னது வீழுமுன் வீழ்ந்தான்.

(இ-ள்.) குற்றமற்ற மனத்தினையுடைய தருமதத்தன் தன் மாளிகைக்குவந்து முன்னே புடமிட்டுவைத்த அருமையாகிய குகையை யெடுத்துப்பார்க்கவும்,அது இரும்புக் குகையாயிருக்க, இது என்ன மாயமோவென்று கீழே விட்டு அதுபூமியில் விழுவதற்கு முன்னே தானும் (அயர்ந்து) வீழ்ந்தனன்.—எ-று. (கசரு)

அத்த மனைத்து மகன்றிட லோடும்
பித்தின் மனத்தொடு பீழைய னாகி
யெய்த்தன னாயுளி னெல்லையு மெய்தத்
தத்தனும் விண்ணிடை சார்ந்தன னன்றே.

(இ-ள்.) தன்னிடத்துள்ள பொருள்களனைத்தும் நீங்கவும் பித்தங்கொண்ட மனத்துடன் துன்பமுற்றவனாய் இளைத்திருந்தனன், ஆயுளின் முடிவெல்லையும் உண்டாக அத்தருமதத்தனும் இறந்து விண்ணுலகிற் சென்றனன்.—எ-று. (கசசு)

அறந்தனை விற்ற வருஞ்செய லாலே
மறந்தரு தத்தனு மால்கரி யாகிப்
பிறந்தனன் முன்னுறு பெற்றிய தெல்லா
மறந்தன னென்று மனத்திடை கொண்டு.

(இ-ள்.) தருமப் பொருள்களை விற்ற கொடுஞ்செய்கையினால் பாபியாகிய தருமதத்தனும் மதமயக்கத்தினையுடைய காட்டானையாய்ப் பிறந்தனன்; தான் முனிருந்த தன்மைகளனைத்தும் மறந்தனன் என்று (குச்சக முனிவர்) தமதுள்ளத்திற் சிந்தித்து.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (கசஎ)

மாற்றுவ னிப்பவம் வல்லையி னென்னாச்
சாற்றினன் முன்பு தவம்புரி வேலை
நோற்றிடு மோர்பக னோன்பவை தானிவ்
வாற்றலி பத்துழை யாகுக வென்றான்.

(இ-ள்.) யான் இதன் பாபத்தை விரைவாக வொழிப்பேனென்று கூறி முன்பு தவஞ்செய்தபொழுது, ஒருநாள் செய்த தவமானது வலிமைபொருந்திய இவ்யானையினிடத்திற் செல்லுகவென்று கூறினர்.—எ-று. (கசஅ)

இப்பரி சங்க ணியம்புத லோடு
மப்பொழு தன்னவ னாண்டுறு வேழ
மெய்ப்படி வந்தனை வீட்டினன் யாருஞ்
செப்பரி தாகிய தேவுரு வானான்.

(இ-ள்.) இவ்வாறு அங்குக் குச்சகமுனிவர் கூறுதலும், அந்தச்சமயத்தில் அத் தருமதத்தனானவன் அப்பொழு தடைந்திருந்த காட்டானையின் உருவத்தை யொழித்தவனாய் யாவராலும்சொல்லுதற்கரிய தேவவுருவத்தைப்பெற்றனன்.—எ-று.

அந்தர துந்துபி யார்த்தன வானோர்
சிந்தினர் பூமழை சேணிடை நின்றும்
வந்தது தெய்வத மானம தன்பா
லிந்திர னாமென வேறின னன்றே.

(இ-ள்.) தேவதுந்துபிகள் ஆரவாரித்தன; தேவர்கள் கற்பகமலர்மாரி பொழிந்தார்கள்; விண்ணுலகினின்றும் தெய்வவிமானம் வந்தது அந்த விமானத்தின்மேல் (தருமதத்தன்) இந்திரனைப்போல ஏறினன்.—எ-று. (கடுo)

பாசிழை மங்கையர் பற்பலர் சுற்ரு
வீசினர் சாமரை விண்ணுறை கின்ரு
ராசிகள் கூறின ரங்கவ ணிற்குந்
தேசிக ஞரடி செங்கை குவித்தான்.

(இ-ள்.) சிறந்த ஆபரணத்தை யணிந்த பல தேவமாதர்கள் சூழ்ந்து சாமரை வீசினர்கள்; விண்ணுலக வாசிகளாகிய தேவர்கள் ஆசிமொழிகளைக் கூறினர்கள்; (தருமதத்தன்) அவ்விடத்தில் நிற்கின்ற குச்சகமுனிவருடைய திருவடிகளில் தனது கைகளைக் குவித்து வணங்கினன்.—எ-று. (கடுக)

நோக்கினன் மாதவ நோன்மையு ளானை
வாக்கினில் வந்தன வந்தனை செய்தா
னீக்கரும் வல்வினை நீக்கினை யென்று
மேக்குயர் புங்கவர் விண்ணுல குற்ருன்.

(இ-ள்.) மகத்தாகிய தவவல்லமையையுடைய குச்சக முனிவரைப்பார்த்து நீக்குதற்கரிய கொடிய தீவினையினின்றும் என்னை நீக்கி யருளினீரென்று தனது வாக்கில் வந்தவைகளைப் பலவாருகச் சொல்லித் துதித்து வணங்கினவனும் உயர்வுபொருந்திய தேவர்கள் வாழுஞ் சொர்க்கலோகத்தை யடைந்தனன்.—எ-று. (கடுஉ)

விண்ணிடை யேயவன் மேவுத லோடு
மண்ணிடை நின்றிடு மாதவன் முன்போ
லெண்ணரு நோன்ப தியற்றலு மன்னோன்
கண்ணிய தென்றிசை காவலன் வந்தான்.

(இ-ள்.) அத்தருமதத்தன் சொர்க்கலோகத்தை யடைந்தவுடனே, பூமியில் நின்ற குச்சக முனிவரர் முன்போல நினைத்தற்கரிய தவத்தைச்செய்யவும், அம்முனிவர் சிந்தித்திருந்த தென்றிசைத்தலைவனுகிய இயமனுனவன் அவருக்கு முன்னே பிரத்தியக்ஷமாயினன்.—எ-று. (கடுரு)

முன்னுறு கூற்றுவன் முப்பகை வென்ரு
யுன்னிலை நோக்கி யுவந்தன நம்பா
லென்னைகொல் வேண்டிய தென்றலு மன்னோன்
றன்னடி வீழ்ந்திது சாற்றுத லுற்ருன்.

(இ-ள்.) அவ்வாறு பிரத்தியக்ஷமாகிய இயமனுனவன் (குச்சகமுனிவரைப் பார்த்து) முப்பகையினையும் வென்ற முனிவரே! உமது தவநிலைமையைப் பார்த்து மகிழ்வடைந்தனம், ஆதலால் நம்மிடத்து உனக்கு வேண்டியது யாதென்று வினவுதலும், முனிவரர் அவ்வியமனது பாதங்களில் வீழ்ந்து இவ்வார்த்தையைக் கூறுவாரரயினர்.—எ-று.

முப்பகை என்பன,—காமம் வெகுளி மயக்கங்கள். (கடுச)

உந்திய சீர்த்தி யுசத்தியன் மானென்
மைந்தன் மணஞ்செய வந்தன னன்னுண்
முந்துறு மென்னன் முடிந்தனன் முன்போற்
றந்தரு ளென்றிது சாற்றுத லோடும்.

(இ-ள்.) மிகுந்த சிறப்பினையுடைய உசத்தியமுனிவர் புதல்வியை எனது புதல்வன் மணஞ்செய்யும்படிப் பேசுதற்குவந்தனன், அப்பெண்ணனவள் நேற்றைப் பொழுது (கிணற்றில்விழுந்து) இறந்துபோயினள், ஆதலால் அவளுக்கு முன்போல வே உயிர்கொடுத்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தலும்.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (கடுடு)

அத்தகு போழ்தினி லந்தக னென்போ
னித்தவன் வேண்டிய வேந்திழை யாவி
வைத்தன மேயது வல்லையின் மீட்டிங்
குய்த்திடு வாயென வொற்றொடு சொற்றான்.

(இ-ள்.) அந்தச்சமைத்தில் இயமனானவன், இந்தத்தவமுனிவர் விரும்பிய பெண்ணினுயிரை நாம் கொண்டுபோய்வைத்துள்ளதனை விரைவாக மீட்டுக்கொண்டு வந்து இவ்வுடலிற் சேர்க்கக்கடவையென்று தன் தூதுவனுடன் கூறினன்.—எ-று.()

கொற்றவ னிங்கிது கூறி மறைந்தான்
சொற்ற துணர்ந்திடு தூதுவன் முன்போ
யுற்றிடு மவ்வுயி ரைக்கொடு போந்து
மற்றவள் யாக்கையுள் வந்திடு வித்தான்.

(இ-ள்.) இயமனானவன் இவ்வாறுகூறி மறைதலும், அவ்வியமன்கூறியவார்த்தையையுணர்ந்த தூதுவனானவன் முன்னேசென்று தங்கியிருந்த அந்த உயிரைக் கொண்டுவந்து அந்தப் பெண்ணினுடம்பில் சேர்த்தனன்.—எ-று. (கடுஎ)

வேறு.

உடற்குளுயிர் வந்திடலும் புகுந்ததுமெய் யுணர்வுசிறி துயிர்த்த நாசி,
துடித்தனகால் பதைத்ததுரந் துளங்கிமுகம் விளங்கியதாற் றுவண்ட தாக,
மெடுத்தனகை யசைந்தனதோ ளிமைத்தனகண் விழித்தனவா லிணைய காலை,
மடக்கொடியுந் துயிலுணர்ந்தாள் போலெழுந்தா ளெல்லோரு மருங்கிற் சூழ்ந்தார்.

(இ-ள்.) அவ்வுடலினுள்ளேஉயிர்வந்துபுகுதலும் மெய்யுணர்வுண்டாயிற்று, நாசிகள் சிறிது மூச்சுவிட்டன, கால்கள் துடித்தன, நெஞ்சுபதைத்தது, முகம்பொலிவுற்று விளங்கியது, தேகந்துவண்டது, கைகள் மேலெடுத்தன, தோள்களசைந்தன, கண்கள் இமைத்து விழித்தன, இவ்வாறாகிய சமையத்தில் இளங்கொடிபோல்பவளாகியவிருத்தையும் நித்திரைதெளிந்தவளைப்போன் றெழுந்தனள்; உடனே அவளது பந்துக்களனைவரும் அருகில் சூழ்ந்தார்கள்.—எ-று. (கடுஅ)

அன்னையவ ளணைத்தழுவி யிரங்குற்று டந்தையெடுத் தணைத்துப் பல்காற்
சென்னிதனி லுயிர்த்தேத னிருகுறங்கின் மீமிசையே திகழச் சேர்த்தி
யென்னடிக ளென்கடவு ளெனதுதவப் பயனுகு மெந்தை நென்னற்
சொன்னபடி தவமியற்றி யுய்வித்தா னிவளையென்று துணிவிற் சொற்றான்.

(இ-ள்.) தாயாகிய மங்கலையானவள் அந்தவிருத்தையைத் தழுவிக்கொண்டு அழுதனள்; பின்னர் தந்தையாகிய உசத்தியமுனிவர் வாரியெடுத்து மார்போடணைத்துப் பலதரம் உச்சிமோந்து தமது துடையின்மேல் விளங்கவைத்துக்கொண்டு எனது குருவாகியும், கடவுளாகியும் தவப்பயனுகியும் எந்தையாகியுமுள்ள இந்தக் குச்சக முனிவர் நேற்றுச்சொன்னவண்ணந் தவஞ்செய்து இப்புதல்வியை யெழுப்பினரென்று உறுதியுடன் கூறினர்.—எ-று. (கடுக

சுற்றுகின்ற கிளைஞர்களு மல்லோரு மதிசயிப்பத் தொல்லை ஞாலம்
பெற்றதிரு வனையாடன் பெண்ணணங்கை முகநோக்கிப் பேதை நீயிங்
டுற்றதுவு மிறந்ததுவு மீண்டதுவு முறைப்படவே யுரைத்தி யென்னப்
பொற்றொடியா ளதுவினவிப் புகுந்ததொரு பரிசனைத்தும் புகலலுற்றாள்.

(இ-ள்.) அங்குச் சூழ்ந்துள்ள பந்துக்களும் மற்றவர்களும் ஆச்சரிய மடையும்படி உலகத்தார் புகழ்கின்ற திருமகளையொத்த மங்கலையானவள் தனது புதல்வியின் முகத்தைப் பார்த்து, மகளே! நீ இவ்விடத்தில் இருந்தமையும் இறந்தமையும், மீண்டு உயிர்பெற்றெழுந்தமையும் முறைப்படி சொல்லக்கடவை யென்று கூறவும், விருத்தையானவள் அதனைக் கேட்டு நிகழ்ந்த விருத்தாந்தங்களனைத்தையுஞ் சொல்லத் தொடங்கினாள்.—எ-று. (கசுo)

நீடியமங் கையர்பண்ணை தன்னுடனே போந்ததுவு நெடுநீர்க் கான்யா
றாடியது மீண்டதுவுங் கடகளிறு போந்ததுவு மதனைக் கண்டே
யோடியதுந் தானொருத்தி தனித்ததுவுங் கூவலிடை யுலைந்து வீழ்ந்து
வீடியது மீண்டதுவுந் தென்றிசைக்க ணிகழ்வனவும் விரித்துச் சொற்றாள்.

(இ-ள்.) அநேகந் தோழிப்பெண்களுடன் வீட்டை விட்டுச் சென்று கான்யாற்றில் முழுகித் திரும்பிவந்தமையும், வரும் வழியில் யானைவந்தமையும், அந்த யானையைக் கண்டு பயந்தோடினமையும், தான் ஒருத்திமாத்திரந் தனித்தமையும், கிணற்றில் வருத்தத்துடன் வீழ்ந்திறந்தமையும், பின் உயிர்பெற்றெழுந்தமையும், இயமலோகத்தில் நடந்தமையுமாகிய எல்லா விஷயங்களையும் விரித்துக் கூறினாள்.—எ-று. ()

சொன்னமொழி யதுகேளா மிகமகிழும் வேலைதனிற் றுகளி றாயோன்
கொன்னவிலு முத்தலைவேற் கூற்றுவன்ற னருள்பெற்றுக் குறுகலோடு
முன்னுறவே யெதிர்சென்று பெருங்கிளையும் பன்னியுமா முனியும் பெற்ற
கன்னியும்வந் தடிவணங்கிப் போற்றிசெய வரன்முறையே கருணை செய்தான்.

(இ-ள்.) விருத்தை கூறியவார்த்தையைக் கேட்டு யாவரும் மகிழ்கூர்ந்திருக்குஞ் சமையத்தில் மெய்ஞ்ஞானியாகிய குச்சகமுனிவர் கொலைத் தொழிலினையுடைய முத்தலைச்சூலத்தையேந்திய இயமனது அருளைப்பெற்றுத் திரும்பிவந்தவுடனே, உசத்தியமுனிவரும் மங்கலையும் விருத்தையும் சுற்றத்தினரும் விரைவாக எதிரில் சென்று அவரது பாதங்களை வணங்கித் துதித்தலும், அம்முனிவரர் அவர்களனைவருக்கும் முறைப்படி கிருபைசெய்தனர்.—எ-று. (கசுஉ)

என்னுயிரும் பெருங்கிளைஞர் தம்முயிரு மில்லறத்திற் கியன்ற பன்னி
தன்னுயிரு நட்டோர்க டமதுயிரு நின்றிடயான் றவத்திற் பெற்ற
மின்னுயிர்தந் தருளினையா லரிதோநிற் கிதுவம்மா வேலை ஞால
மன்னுயிர்காத் தளிப்பவனு நீயெனவே யெனதுள்ள மதித்ததன்றே.

(இ-ள்.) எனது உயிரும், பெரிய சுற்றத்தினர்களுடைய உயிரும், எனது இல்லறத்திற்குரிய மனையாட்டியி னுயிரும் சிநேகர்களுயிரும் நிலைபெறும்படி யான் தவஞ்செய்து பெற்ற புதல்வியினுயிரைத் தந்தருளினீர், தேவரீருக்கு இஃதோரரிய காரியமோ? கடல்சூழ்ந்த உலகத்தில் வசிக்கின்ற உயிர்களையெல்லாம் காத்தளிக்கின்ற கடவுளுந் தேவரீரா யன்றி வேறில்லை யென்று என் மனம் நினைக்கின்றது.—எ-று.()

வள்ளலையுன் திருவுளத்தை யாருணர்வார் கவுச்சிகனு மகற்கியான் பெற்ற, தெள்ளமிர்த மனையமொழி விருத்தையெனுங் கன்னிகையைத் திசையினுடிக்,கொள்ளுதற்கு வந்தனையோ கூற்றுவனூற் போனவுயிர் குறுகி மீண்டு, மெள்ளவரும் படியழைத்துத் தந்திடுவான் வந்தனையோ விளம்பு கையா.

(இ-ள்.) அருள்வள்ளலே! உமது திருவுள்ளத்தை யாரறிவார்கள்; கவுச்சிக ராகிய உமது புதல்வருக்கு நான்பெற்ற தெளிவாகிய அமிர்தம்போலும் மொழியினை யுடைய விருத்தை யென்னும் புதல்வியை இந்தத் திசையில் தேடி மணஞ் செய்விக் கும்பொருட்டு வந்தீரோ? அல்லது, இயமனால் இறந்துபோன உயிரினைச் சென்று திருப்பிமெல்ல வரும்படி அழைத்துக்கொடுக்கும்பொருட்டு வந்தருளினீரோ? ஐய னே! இதனை யுரைப்பீராக.—எ-று. (கசுச)

எனமுனிவன் றனைநோக்கி முகமன்க ளிவைபலவு மெடுத்துக் கூறி
யனையவனை யுடன்கொண்டு சுற்றத்தா ரெல்லாரு மடைந்து சூழ
மனைவியொடும் புதல்வியொடு மடமாதர் தங்களொடும் வல்லை யேகித்
தனதுறையு ளிடைப்புகுந்து வீற்றிருந்தா னுற்றரிய தவத்தின் மேலோன்.

(இ-ள்.) செய்தற்கரியதவத்தினையுடைய உசத்தியமுனிவர் குச்சகமுனிவ ரைப் பார்த்து இவ்வாறு பல உபசாரவசனங்களை யெடுத்துக்கூறி அவரைத் தம்மு டனழைத்துக்கொண்டு சுற்றத்தின ரனைவருஞ் சூழ்ந்து வரும்படி தமது பத்தினியுட னும் புத்திரியுடனும் மற்றைப்பெண்களுடனும் விரைவாகச்சென்று தமது பன்னசா லையையடைந்து வாழ்ந்திருந்தனர்.—எ-று. (கசுரு)

பின்புமொரு சிலவைகல் குச்சகனை யவணிருத்திப் பெரியோ யிங்ங
னென்புதல்வி தனையளிப்ப னுன்மதலை தனைக்கொண்டே யேகு கென்னத்
தன்புதல்வற் கொடுவரலும் விருத்தையெனுங் கன்னிகையைத்தழல்சான்றாக
வன்பினொடு நன்னாளி லோரைதனில் விதிமுறையே யருள்செய் தானால்.

(இ-ள்.) உசத்தியமுனிவர் பின்னுஞ் சிலகாலம் குச்சகமுனிவரை அவ்வி டத்திலிருக்கச்செய்து ஒருதினம் அம்முனிவரைப் பார்த்துத் தவமுதல்வரே! உமது புதல்வனுக்கு எனதுபுதல்வியை இவ்விடத்தில்மணஞ்செய்துகொடுப்பேன்; ஆதலால் உமது புதல்வனை யழைத்துவருவீராக என்று கூற, அவ்வாறே அவர் தமதுபுதல்வரா கிய கவுச்சிக முனிவரை யழைத்துக்கொண்டுவரவும், விருத்தையென்னும் பெண்ணை அக்கினி சாட்சியாக நல்ல சுபதினத்திலே நல்ல இலக்கினத்தில்வேதவிதிப்படி அன் புடனே மணஞ்செய்துகொடுத்தனர்.—எ-று. (கசுசு)

### வேறு.

அருள்புரிந் திடுதலு மன்பி னுனிபைந்
திருவரு மில்லற மியற்றப் பல்பகல்
கருணைசெய் குச்சகன் கண்டு மாதவம்
புரிதர வேவட புலத்திற் போயினன்.

(இ-ள்.) அவ்வாறு மணஞ்செய்துகொடுக்கவும், அவ்விருவர்களும் அன்பும் மனவொற்றுமையு முடையவர்களாய் அநேககாலம் இல்லறநடத்தினார்கள்; அவர்களு க்கு ஆசீர்வாதஞ்செய்கின்ற குச்சகமுனிவர் அதனை நோக்கி மகத்தாகிய தவத்தைச் செய்யும்பொருட்டு வடதிசைநோக்கிச் சென்றனர்.—எ-று. (கசுஎ)

போதலு மிருந்திடும் புனித வேதியன்
மாதவ வலியினன் மாதி னோன்பினன்
மேதினி வியந்திட மிருகண் டென்னவோர்
காதல னுதித்தனன் கனிப்பில் காட்சியான்.

(இ-ள்.) அம்முனிவரர் தவத்திற்குச்செல்லவும், இல்லறத்திலிருந்தபரிசுத்த ராகிய கவுச்சிகமுனிவரது தபோபலத்தாலும் விருத்தை யென்பவள் செய்த விரதா

னுஷ்டானங்களாலும் உலகத்தார் புகழும்படிப் பார்க்கத்தக்க அளவற்ற அழகினையுடையவராய் மிருகண்டு என்னும் ஒரு சற்புத்திரர் பிறந்தனர்.—எ-று. (கசுஅ)

அப்புதல் வற்கியாண் டாறு சென்றுழி
மெய்ப்பிர மச்செயல் விளங்கு பான்மையான்
முப்புரி நூல்வினை முடித்துத் தாதைபோற்
செப்பரு மாதவஞ் செய்யப் போயினன்.

(இ-ள்.) அந்தப் புதல்வருக்கு ஆறுவயதானவுடனே பிரமசரியானுஷ்டானத்தை யனுஷ்டிக்கவேண்டிய முறைமைக்குத் தக்கபடி உபநயனஞ்செய்து பின்பு தமது தந்தையைப்போலக் கவுச்சிகமுனிவர் சொல்லுதற்கரிய தவஞ்செய்யும்பொருட்டுச் சென்றனர்.—எ-று. (கசுகூ)

ஊற்றமா மிருககண் டூய னென்றிடு
மாற்றன்மா முனிவர னகல வன்னவன்
றோற்றமா கியசுதன் றொன்மை நாடியே
போற்றின னுதியிற் புரியுஞ் செய்கடன்.

(இ-ள்.) தவவலிமையையுடைய மிருககண்டூயமுனிவரர் தவஞ்செய்யச்சென்றவுடனே அவர் புதல்வராகிய மிருகண்டுமுனிவர் பழைய முறைமையையுணர்ந்து பிரமசரியவிரதத்தை யனுஷ்டித்தனர்.—எ-று. (களo)

சொற்கலை தெரிமருத் துவதி யென்றிடு
முற்கலன் மகடனை முறைவ ழாதுபின்
னற்கலை யணிகல னல்கி நீக்கிய
வற்கலை யுடையினன் வதுவை முற்றினன்.

(இ-ள்.) பின்பு முற்கலமுனிவர் புதல்வியாகிய கலைஞானங்களை யுணர்ந்த மருத்துவதி யென்பவளை முறைமை தவறாமல் நல்ல ஆடையாபரணங்களை யளித்து, அவற்றை நீக்கிய மரவுரியினையுடைய மிருகண்டுமுனிவர் மணஞ்செய்தனர்.-எ-று. ()

இருந்தன னநாமய மென்னும் பேரொடு
பொருந்திய வனத்திடைப் புதல்வ ரின்றியே
வருந்தினன் றமரொடு மாது தன்னொடு
மருந்தவன் காசியை யடைதன் மேயினன்.

(இ-ள்.) அரிய தவத்தினையுடைய மிருகண்டுமுனிவர் அநாமயமென்னுந் தபோவனத்தில் சிலகாலமிருந்து பின்னர் புத்திரப்பேறின்மையால் வருத்தமுற்று, பந்துக்கள் மனைவி முதலியவர்களுடன் காசிநகரத்தையடைந்தனர்.—எ-று. (களஉ)

அடைந்ததோர் பொழுதினி லமரர் யாவருங்
கடைந்திடு திரைக்கட லனைய கங்கைநீர்
குடைந்தன னுடினன் குழுமி மாதவர்
மிடைந்திடு மறுகிடை விரைவின் மேவினன்.

(இ-ள்.) காசிநகரத்தை யடைந்தவுடனே தேவர்களனைவருஞ் சேர்ந்து கடைந்த திருப்பாற்கடலையொத்த கங்கைநதி நீரில் ஸ்நானஞ்செய்து பெரிய தவமுனிவர்கள் நெருங்கி வசிக்கின்ற வீதியில் விரைவாகச் சென்றனர்.—எ-று. (களங)

பொன்றிரண் மாமதில் புடைய தாமணி
கன்றிகை யென்பதோர் கடவு ளாலயஞ்

சென்றனன் சூழ்ந்தனன் றிங்கள் வேணியான்
மன்றமர் திருவடி வணங்கிப் போற்றினன்.

(இ-ள்.) பொன்னலாகிய திரண்ட பெரிய மதிலினைப் பக்கத்திலுடைய மணிகன்னிகை யென்னும் பெயாையுடைய சிவாலயத்துள்ளேசென்று பிரதக்ஷிணஞ் செய்து சந்திரனையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் கனகசபையில் திருநடனஞ்செய்தருளுந் திருவடிகளை வணங்கித் துதித்தனர்.—எ-று. (கஎச)

மெய்ப்படு மறைபுணர் மிருகண் டென்பவ
னப்பெருங் கோயிலுக் கணித்தொர் பாங்கரிற்
செப்புறு மாகமத் தெளிவு நாடியே
மைப்பெருங் கண்டனை வழிபட் டானரோ.

(இ-ள்.) மெய்ம்மையாகிய வேதங்களையுணர்ந்த மிருகண்டுமுனிவர் அந்தப் பெரிய திருக்கோயிலினருகில் புகழ்ந்து சொல்லப்பட்ட சிவாகமத்தின் முறைமையையுணர்ந்து காளகண்டராகிய சிவபெருமானைப் (பிரதிஷ்டைசெய்து) பூசித்து வந்தனர்.—எ-று. (கஎரு)

ஆதவம் பனிமழை யனிலத் தச்சுறாப்
பாதவ மாமெனப் பருவ மாறினும்
பேதைபங் குடையவெம் பிரானை யுன்னியே
மாதவம் புரிந்தனன் மதலை வேண்டியே.

(இ-ள்.) புதல்வனைப் பெறுதற்கு விருப்பங்கொண்டு வெயில் பனி மழை காற்று என்னுமிவைகளுக்கஞ்சாமல் மரத்தைப்போல ஆறு பருவங்களிலும் பார்வதி பாகராகிய சிவபெருமானை நினைத்து மகத்தாகிய தவத்தைச்செய்தனர்.—எ-று.

பருவம் ஆறாவன :—கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. (கஎசு)

அருந்தவ மோரியாண் டாற்றத் தொல்லைநாட்
பொருந்திய மூவெயில் பொடித்த புங்கவன்
வரந்தனை யுதவுவான் வந்து தோன்றலு
மிருந்தவ முனிவர னிறைஞ்சிப் போற்றினன்.

(இ-ள்.) இவ்வாறு அருமையாகிய தவத்தை ஒருவருஷகாலஞ் செய்யவும், முற்காலத்தில் ஒன்றாகக் கூடியிருந்த முப்புரங்களையு மெரித்தழித்தருளிய சிவபெருமான் வரமளிக்கும்பொருட்டு எதிரில்வந்து காட்சிகொடுத்தருளுதலும் மிக்க தவசிரேஷ்டராகியமிருகண்டுமுனிவரர் வணங்கித் துதித்தனர்.—எ-று. (கஎஎ)

முந்துறு முனிவரன் முகத்தை நோக்கிநீ
சிந்தையில் விழைந்ததென் செப்பு கென்றலு
மைந்தனை வேண்டினன் வரத்தை நல்கென
வெந்தையு முறுவல்செய் தினைய கூறுவான்.

(இ-ள்.) எதிரில் நிற்கின்ற மிருகண்டுமுனிவரது முகத்தைப் பார்த்து நீ மனதில் எதனை விரும்பித் தவஞ்செய்தனை, அதனையுணர்க்கக்கடவை யென்றருளிச் செய்யவும், (அம்முனிவர்) அடியேன் புதல்வனை விரும்பித்தவஞ்செய்தேன், ஆதலால் அடியேனுக்குப் புத்திரப்பேறு தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, எமது சிவபெருமான் புன்னகையுடன் திருவாய்மலர்ந்தருளுவார்.—எ-று. (கஎஅ)

வேறு.

தீங்குறு குணமே மிக்குச் சிறிதுமெய் யுணர்வி லாமன்
மூங்கையும் செவிடு மாகி முடமுமாய் விழியு மின்றி
யோங்கிய வாண்டு நூறு முறுபிணி யுழப்போ னாகி
யீங்கொரு புதல்வன் றன்னை யீதுமோ மாத வத்தோய்.

(இ-ள்.) மகத்தாகிய தவமுனிவரோ! கொடிய குணமே மிகுந்து சிறிதும் நல்லறிவில்லாமல் ஊமையுஞ் செவிடும் முடமுங் குருடுமாய் நீடித்துள்ள நூறுவயதளவும் பொருந்திய நோயையனுபவிக்கின்றவனாய் இங்கு ஒரு புதல்வனை யளிக்கவோ?—எ-று. (கஎக)

கோலமெய் வனப்பு மிக்குக் குறைவிலா வடிவ மெய்தி
யேனுறு பிணிக ளின்றி யெமக்குமன் புடையோ னாகிக்
காலமெண் ணிரண்டே பெற்றுக் கலைபல பயின்று வல்ல
பாலனைத் தருது மோநின் னெண்ணமென் பகர்தி யென்றான்.

(இ-ள்.) மிக்க பேரழகும், நிறைந்த வடிவமும், நோயின்மையும், எம்மிடத்தி லன்புமுடையவனாய்ப் பதினாறு வயதுபெற்றுப் பலசாஸ்திரங்களையும் பழகித்தேர்ந்த புதல்வனை யளிக்கவோ? உனதெண்ணத்தை யுரைக்கக்கடவையென்று அருளிச்செய்தனர்.—எ-று. (கஅ0)

மாண்டகு தவத்தின் மேலா மறைமுனி யவற்றை யோரா
வாண்டவை குறுகி னாலு மறிவுள னாகி யாக்கைக்
கீண்டொரு தவறு மின்றி யெம்பிரா னின்பா லன்பு
பூண்டதோர் புதல்வன் றானே வேண்டினன் புரிக வென்றான்.

(இ-ள்.) மாட்சிமை பொருந்திய தவத்தினாலுயர்ந்துள்ள மிருகண்டுமுனிவரர் அவ்வசனங்களைக்கேட்டு ஆலோசித்து, எமது ஆண்டவரோ! அற்பவயதிருந்தாலும் நல்லறிவுடையவனாய் உடம்பில் யாதொரு குற்றமுமில்லாமல் தேவரீரிடத்திலன்புபொருந்திய ஒரு புதல்வனையே அடியேன் பெற விரும்பினேன் அதற்குத் திருவருள்புரியவேண்டுமென்று கூறினர்.—எ-று. (கஅக)

என்றிவை துணிவி னாலே யிசைத்தலு மீச னிற்கு
நன்றிகொள் குமரன் றன்னை நல்கின மென்று சொல்ல
நின்றிடு முனிவன் போற்றி நெஞ்சக மகிழ்ச்சி யெய்தி
யொன்றிய கேளி ரோடு முறைந்தன னுறையு நாளில்.

(இ-ள்.) என்று இவ்வாறு மனவுறுதியுடன் மிருகண்டுமுனிவர் கூறுதலும், சிவபெருமான் அவரைப்பார்த்தருளி நல்லிணக்கம் பொருந்திய புதல்வனை யுனக்களித்தோமென்று கூறியருளினர், உடனே எதிரில் நின்ற அம்முனிவர் சிவபெருமானைத் துதித்துச் சந்தோஷமடைந்து நெருங்கிய பந்துக்களுடன் அவ்விடத்திலேயே வாசஞ்செய்துகொண்டுவந்தனர், அக்காலத்தில்.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (கஅஉ)

பூதல விடும்பை நீங்கப் புரைதவிர் தரும மோங்க
மாதவ முனிவ ருய்ய வைதிக சைவம் வாழ
வாதிதன் னருளி னாலே யந்தகன் மாள வன்னான்
காதலி யுதரத் தாங்கோர் கருப்பம்வந் தடைந்த தன்றே.

(இ-ள்.) உலகத்திலுள்ள துன்பமொழியவும், குற்றமற்ற தருமங்கள் செழிக்கவும், மகத்தாகிய தவத்தினையுடைய முனிவர்களுய்யவும், வைதிகசைவம் வாழ்வுபெறவும், சிவபெருமானது திருவருளினால் இயமன் இறக்கவும், மிருகண்டரது மனைவியாகிய மருத்துவதியின் வயிற்றில் ஒரு கருப்பமுண்டாயிற்று.—எ-று. (கஅ௩)

அடைதலு மதனை நோக்கி யறிதரு முனிவ னண்டை
விடையவ னடியார் யார்க்கும் வேண்டிய வேண்டி யாங்கே
நெடிதுயல் வளனு மீந்து நிறைதரு திங்க டோறுங்
கடனியன் மரபு மாற்றிக் காசியின் மேவி னானே.

(இ-ள்.) அவ்வாறு கருப்பமுண்டாகவும், அதனை பார்த்துணர்ந்த மிருகண்டு முனிவரர் சிவனடியார்களனைவருக்கும் வேண்டியவைகளை வேண்டியபடியே மிருதியாகப் பலபொருள்களையுங் கொடுத்து, கருப்ப நிறைந்து வருகின்ற மாதங்கடோறும் செய்யவேண்டிய கிரியைகளை முறைப்படி செய்துகொண்டு அக்காசிப்பதிலேயே வாழ்ந்திருந்தனர்.—எ-று.

திங்கடோறுங் கடனியன் மரபு என்றது, கருப்பாதானம், புஞ்சவனம், சீமந்தம், விண்டுபலி. இவற்றுள், கருப்பாதானம்-கருப்பந்தரிக்கும்படிச்செய்யுங் கிரியை. புஞ்சவனம் - ஆண்குழந்தை பிறக்கும்படிக் கருப்பவதியின் நாசியில் மருந்து பிழியுங் கிரியை, சீமந்தம்-மூன்றிடத்து விளர்ப்புள்ள பன்றிமுள்ளினால் தலைமயிரை வகிர்ந்துசெய்யுங் கிரியை. விண்டுபலியாவது-கருவானது வலியுற்றிருக்கும்படி காத்தற்கடவுளாகிய விண்டுவை காலையிலும் மாலையிலும் பூசிக்குங் கிரியை; இவ்விண்டுபலி சீமந்தத்துள்ளே யடங்கும். இவற்றுள் புஞ்சவனம்-இரண்டாமாதத்திலும் நான்காமாதத்திலுஞ்செய்வது. சீமந்தம்-நான்காமாதத்திலும் எட்டாமாதத்திலுஞ் செய்வது. புஞ்சவனமாவது-வாமதேவமந்திரத்தால் ஆயிரந்தரமாவது நூற்றெட்டுத்தரமாவது ஓமஞ்செய்து அத்திரமந்திரத்தினால் ஆலந்தளிர் - பால்-உளுந்து இவைகளைக்கொண்டு கருப்பவதியின் நாசியிற் பிழிதல். சீமந்தமாவது - வியாகிருதிமந்திரத்தாலும் அகோரமந்திரத்தாலும் நூற்றெட்டுத்தரம் ஓமஞ்செய்து தருப்பை அத்திமரக்கொம்பு பன்றிமுள் இவைகளைக் கூட்டி வித்தியாங்கமந்திரத்தினால் நெற்றிமுதல்மேலிழுத்தல். விண்டுபலியாவது-இருடிகேசாதிமந்திரங்களால் திருமாலை காலைமாலைகளில் ஆவாகனஞ்செய்து அருச்சித்து வியாகிருதாதி மந்திரங்களால் நூற்றெட்டோமமும், விஷ்ணுமந்திரத்தால் ஆறோமங்களும், நெய்யினால் ஆறோமங்களுஞ் செய்து பின்னர் எட்டுப் பிரமசாரிகளுக்கு அன்னமூட்டுதலாம். (கஅ௪)

கறையுயிர்த் திலங்கு தந்தக் காய்சின வரவங் கவ்வக்
குறையுயிர்ப் படிவத் திங்க ளமிர்தினைக் கொடுத்திட் டாங்கு
மறையுயிர்த் தருளுஞ் செவ்வாய் மதலையை வயாவின் மாழ்கிப்
பொறையுயிர்த் தருளிற் றந்தாள் பொறைதரு திருவைப் போல்வாள்

(இ-ள்.) பொறுமையினையுடைய திருமகளை யொத்த மருத்துவதி யம்மையானவள் விஷத்தைச் சிந்திக்கொண்டு விளங்குகின்ற பற்களையுங் கோபத்தினையுமுடைய இராகுக் கிரகமானது பிடித்துக்கொண்டபொழுது உயிர்வருந்திய சந்திரன் அமிர்தத்தைக் கொடுத்தாற்போல வேதங்களை யோதுகின்ற செவ்விய வாயினையுடைய புதல்வனைக் கருப்பவேதனையினால் முன்னே வருந்திப் பின்பு அன்புடன் பெற்றனள்.

மீனமு முடிந்த நாளு மேவுற மிதுனஞ் செல்ல
வூனமில் வெள்ளி தானு மொண்பொனு முச்ச மாகுந்
தானமுற் றினிது மேவத் தபனனே முதலா வுள்ள
வேனையர் முனிவர் நாக ரிடந்தொறு மிருப்ப மன்னோ.

(இ-ள்.) பங்குனிமாதமும் ரேவதி நக்ஷத்திரமும் பொருந்தவும், மிதுனலக்கினம் நடக்கவும், குற்றமற்ற சுக்கிரனும் ஒள்ளிய பிரகஸ்பதியும் உச்சமாகிய ஸ்தனத்தை யடைந்து இனிமையாகப் பொருந்தவும், சூரியன் முதலியமற்றைக் கிரகங்கள் ஏழாமிடம் பத்தாமிடமென்னு மிவைகளில் தங்கவும்.—எ-று.

ஊனமில் வெள்ளிதானு மொண்பொனு முச்சமாகுந் தானமுற் றினிதுமேவ' என்றது, பத்தாமிடமாகிய மீனத்தில் சுக்கிரனும், இரண்டாமிடமாகிய கடகத்தில் குருவும் உச்சமாகப் பொருந்தவென்க. ஏனையர் - சுக்கிரன் குருவல்லாத மற்றைச் சப்தகிரகங்கள். முனிவர் சப்தமகேந்திரமும், நாகர் தசமகேந்திரமுமாம். முனிவர் - நாகர் என்பன, சங்கியாநாமபதங்கள். இடந்தொறு மிருப்ப என்பது, நண்ணினன் என்னும் மேல்வருந் தொடருடன் முடிகிறது. (கஅ௬)

நண்ணினன் புவியின் மைந்த னவமணிக் குலமும் பொன்னுஞ்
சுண்ணமு மலருந் தாதுந் தூயமென் கலவைச் சாந்துந்
தண்ணுறு நானச் சேறுந் தலைத்தலைக் கொண்டு தாவில்
விண்ணவர் மண்ணு ளோர்கள் வியப்புற வீசி யார்த்தார்.

(இ-ள்.) புதல்வர் பூமியில் அவதரித்தனர், உடனே நவரத்தினங்களையும் பொன்னையும் பொற்சுண்ணங்களையும் மலர்களையும் பூந்தாதுகளையும் தூய்மையாகிய மெல்லிய கலவைச்சந்தனத்தையும் குளிர்ந்த நறிய கஸ்தூரிக்குழம்பையும் கெடாத தேவர்கள் வெவ்வேறாக எடுத்து உலகத்தார் அதிசயிக்கும்படி வீசி யாரவாரித்தார்கள்.

தேவதுந் துபிக ளார்த்த செய்தவை யோம்பி மாற்று
மூவர்க ளன்றி யேனோர் முறைமுறை யாசி செய்தார்
யாவதென் றுணர்த றேற்ற திந்நக ரன்றி நேமி
காவல்செ யுலகம் யாவுங் களிமயக் குற்ற வன்றே.

(இ-ள்.) தேவதுந்துபிகள் ஆரவாரித்தன; சிருஷ்டி திதி சங்காரமென்னு முத்தொழிலையுஞ் செய்கின்ற திரிமூர்த்திகளைத் தவிர மற்றையர்கள் முறைமுறையாக ஆசீர்வதித்தார்கள்; இது யாது காரணமென்றுணர்ந்து கொள்ளாமலே இக்காசிப்பதியே யன்றிக் கடல்சூழ்ந்த உலகமுழுவதும் பெருமகிழ்வடைந்தன.—எ-று. ()

தந்தையு மதனைக் கேளாத் தடம்புனற் கங்கை மூழ்கி
யந்தணர் முதலோர்க் கெல்லா மாடகம் பலவு நல்கி
முந்துறு கடன்க ளாற்ற முளரிமேன் முனிவன் மேவி
மைந்தனுக் குரிய நாம மார்க்கண்ட னென்று செய்தான்.

(இ-ள்.) புத்திரனுதித்த தன்மையை மிருகண்டு முனிவர் கேட்டு மிக்க நீரையுடைய கங்கைநதியில் ஸ்நானஞ்செய்து வேதியர் முதலிய வனைவருக்கும் பொன்முதலிய பலவற்றையுந் தானஞ்செய்து முதன்மையாகிய சாதகன்மங்களை நிறைவேற்றவும், பிரமன் அவ்விடத்தில் வந்து அக்குழந்தைக்கு மார்க்கண்டன் என்று நாமகரணஞ் செய்தனன்.—எ-று.

முந்துறு கடன்கள் - சாதகன்மம் உத்தாபனமென்பவைகள். சாதகன்மமாவது - அத்திரமந்திரத்தால் நூறு ஓமஞ்செய்து வாமமந்திரத்தால் புத்திரன்முகத்தை எதிர்நோக்கிப் பஞ்சப்பிரமமந்திரங்களை யுச்சரித்து உச்சியை மோந்து புருடமந்திரத்தை வலக்காதில் செலுத்துதல். உத்தாபனமாவது - அசுத்தமாகிய அறைவீட்டினின்றும் சுத்தமாகியவிடத்தில் குழந்தையைச் சேர்ப்பிக்குங் கிரியை. நாமகரணம் பெயரிடுதலிற் செய்யுங் கிரியை. (கஅ௯)

மறுப்படாத் திங்கள் போல வளர்தலு மதியந் தோறு
முறுப்படை யுபநிட் டான மோதனம் பிறவு முற்ற
நெறிப்படு மோரி யாண்டி னெடுஞ்சிகை வினையு மாற்றிச்
சிறப்புடை யிரண்டா மாண்டிற் செவிநெறி புரித லுற்றான்.

(இ-ள்.) களங்கமற்ற சந்திரனைப்போல வளர்தலும் மாதந்தோறும் உருவம் வளரத்தக்க உபநிஷ்டானத்தையும் அன்னப் பிராசனத்தையும் மற்றைக் கிரியைகளையுஞ் செய்து முடித்து முறைமைப்படி நடக்கின்ற முதல்வருஷத்தில் சவுளக்கிரியையினையும் நடத்திச் சிறப்புப்பொருந்திய இரண்டாம் வருஷத்தில் கர்ணவேதனக் கிரியையினையும் நடத்தினர்.—எ-று.

உபநிஷ்டானம் - சந்திரனைத் தரிசிப்பித்தல். அன்னப்பிராசனம் - அன்னமூட்டுதலிற்செய்யுங் கிரியை. சவுளமாவது-மயிர்வினைக்குச் செய்யுங் கிரியை. (கக0)

ஏதமி லைந்தின் முந்நூ லிலக்கண விதியுஞ் செய்தே
யோதிடுங் கலைக ளெல்லா முள்ளுற வுணர்த்துங் காலை
வேதமும் பிறவுங் கொண்ட வியன்பொரு டெரிந்து மேலா
மாதியே சிவனென் றெண்ணி யவனடி யரணென் றுற்றான்.

(இ-ள்.) குற்றமற்ற ஐந்தாவது வருஷத்தில் உபநயனக்கிரியையினையுஞ் செய்து ஓதத்தக்க கலைஞானங்க ளனைத்தையும் மனத்திற் பொருந்தும்படி போதித்துவரும் நாள்களில், வேதத்திலும் மற்றைய நூல்களிலுஞ் சொல்லப்பட்ட சிறந்த மெய்ப்பொருளையுணர்ந்து மேலாகிய முதற்கடவுள் சிவபெருமானே யென்று சிந்தித்து அவரது திருவடிகளைத் தமக்குப் புகலிடமாக வடைந்தனர்.—எ-று.

முந்நூலிலக்கணவிதி - உபநயனம். அது பரசிவத்தைத் தரிசிப்பித்தற்குச் சமீபமாகிய நயத்தையுண்டாக்குங் கிரியை. (ககக)

அரனைமுன் னிறைஞ்சி யன்னை யன்பனைத் தாழ்ந்து தங்கள்
குரவனை வணக்கஞ் செய்து கோதறு முனிவர் தம்மைப்
பரவியே பயந்த மேலோர் பாதபங் கயங்கள் சூடிப்
பிரமமா மொழுக்க நாளும் பேணினன் பிறப்பு நீப்போன்.

(இ-ள்.) தமது பிறவியை நீக்க வல்லவராகிய மார்க்கண்டேயர் சிவபெருமானை முதலில் வணங்கி அச்சிவபெருமா னடியார்களை வணங்கித் தங்கள் ஆசாரியனை வணங்கிக் குற்றமற்ற முனிவரர்களைத் துதித்து, பெற்றதாய் தந்தையர்களது திருவடித் தாமரைகளைச் சிரத்திற் பூண்டு பிரமசரிய விரதத்தை நாள்தோறும் அனுஷ்டித்து வந்தனர்.—எ-று. (ககஉ)

இந்தவா றியலுங் காலை யெண்ணிரண் டான யாண்டும்
வந்ததா லதனை நோக்கி மைந்தனை நோக்கி வாளா
தந்தையும் பயந்த தாயுந் தனித்தனி யிருந்து சால
வெந்துயர்க் கடலின் மூழ்கி விம்மலுற் றிரங்கி னைந்தார்.

(இ-ள்.) இவ்வாறு நடக்கின்ற சமையத்தில் பதினாறாவதாகிய வயதும் வந்தது; அப்பதினாறாவது வயதையும் தமது புதல்வனையும் பார்த்துத் தாய்தந்தையர்களிருவரும் தனித்தனியிருந்து மிகவுங் கொடிய துன்பக்கடலில் முழுகி இடைவிடாமல் விம்மி யழுது வருந்தினார்கள்.—எ-று. (ககரு)

ஆங்கது மதலை காணூ வடியிணை வணங்கி யன்னோர்
பாங்குற வணுகி நீவிர் பருவர லுறுகின் றீரா

லீங்கிது வென்னே யென்னும் யாதுமொன் றறித றேற்றே
னீங்குமி னவல நும்பா லெய்திய நிகழ்த்து மென்றான்.

(இ-ள்.) அதனைப் புதல்வராகிய மார்க்கண்டேயர் பார்த்து அத்தாய் தந்தையர்க ளருகிலடைந்து அவர்களது பாதங்களில் வணங்கி நீங்கள் துன்புறுகின்றீர்கள்; இஃது யாது காரணம்; நீங்கள் விசனமடையத்தக்க காரியமொன்றும் யானறியேன்; துன்பத்தினை விடுங்கள்; உங்களிடத்தில் துன்பமுண்டான தன்மையை யுரைப்பீர்களாக வென்று கூறினார்.—எ-று. (கசுச)

கூறிய மொழியுட் கொண்டு குமரநீ யிருக்க நம்பால்
வேறொரு துயர மெய்தி மெலிவது முண்டோ மேனா
ளேறுடை யமல மூர்த்தி யாண்டுநின் றனக்கீ ரைந்து
மாறுமென் றளித்தா னந்நா ளடைதலி னவலஞ் செய்தேம்.

(இ-ள்.) அதற்கு அவர்கள் அப்புதல்வர் கூறியவார்த்தையை யேற்றுக்கொண்டு புதல்வனே! நீ எங்களுக்குப் புதல்வனாக விருக்க நம்மிடத்து வேறொரு துன்பம் நேர்ந்து அதனால் வருந்துவது முண்டோ? பூர்வத்தில் இடபவாகனராகிய சிவபெருமான் உனக்குப் பதினாறு வயதென்று அருளிச் செய்தனர்; அப்பதினாறுவது வயது வந்தமையினால் நாங்கள் வருந்தினோம்.—எ-று. (கசுரு)

என்றுரை செய்த தாதை யிடருறு முகத்தை நோக்கி
யொன்றுநீ ரிரங்கல் வேண்டா முயிர்க்குயி ராகி யென்று
நின்றிடு மரனை யேத்தி யருச்சனை நிரப்பிக் கூற்றின்
வன்றிறல் கடந்து நும்பால் வல்லைவந் தடைவன் மன்னோ.

(இ-ள்.) என்று இவ்வாறு கூறிய தந்தையாரது வருந்துகின்ற முகத்தைப் பார்த்து நீங்களொன்றுக்கும் வருந்தாதீர்கள்; உயிர்க்குயிராய் எப்பொழுது மழியாதிருக்கின்ற சிவபெருமானை யருச்சித்து இயமனது வல்லமையைக் கடந்து விரைவாக வருவேன்.—எ-று. (கசுசு)

இருத்திரா லீண்டே யென்னா வேதுக்கள் பலவுஞ் செப்பிக்
கருத்துற நெடிது தேற்றிக் கான்முறை வணங்கி நிற்பத்
திருத்தகு குமரற் புல்லிச் சென்னியு மோந்து முன்னர்
வருத்தமு நீங்கிச் சிந்தை மகிழ்ந்தனர் பயந்த மேலோர்.

(இ-ள்.) நீங்கள் இவ்விடத்திலேயே இருங்களென்று பல காரணங்களைக் கூறி அவர்களது மனத்தை மிகவுந் தேற்றிப் பாதங்களை வணங்கி யெதிரில் நிற்கவும், அவரைப் பெற்ற தாய்தந்தையர்கள் அழகுமிக்க அப்புதல்வரைத் தழுவி உச்சிமோந்து முன்னுள்ள வருத்தமு மொழிந்து மனமகிழ்ந்தார்கள்.—எ-று. (கசுஎ)

இருமுது குரவர் தந்த மேவலி னீச னென்னு
மொருவன தருளு மன்பு முடனுறு துணையாய்ச் செல்லப்
பொருவரு மகிழ்ச்சி பொங்கப் பொள்ளெனப் பெயர்ந்து போகித்
திருமணி கன்றி கைப்பேர்ச் செம்பொனா லயத்திற் புக்கான்.

(இ-ள்.) தாய் தந்தையர்களது கட்டளைப்படியே சிவபெருமானது கருணையும் அன்பும் பொருந்திய துணையாகத் தம்முடன் வரவும் ஒப்பற்ற மகிழ்ச்சி யதிகரிக்கவும் விரைவாக நீங்கிச் சென்று அழகிய மணிகன்னிகை யென்னும் செம்பொன்மயமாகிய ஆலயத்திற் பிரவேசித்தனர்.—எ-று. (கசுஅ)

என்புநெக் குருகக் கண்ணீ ரிழிதர வலஞ்செய் தீசன்
முன்புற வணக்கஞ் செய்து முடிமிசை யடிகள் சூடித்

தென்புலத் தொருசா ரெய்திச் சிவ னுருச் செய்து பன்னு
ளன்புட னருச்சித் தேத்தி யருந்தவ மியற்றி யிட்டான்.

(இ-ள்.) எலும்பு நெக்குவிட்டுருகவும் கண்ணீரொழுகவும் பிரதக்ஷிணஞ்செய்து சிவபெருமான் திருமுன்னே வணங்கி அவரது திருவடிகளைத் தம்முடியில் தரித்துத் திருக்கோயிலின் தென்புறத்தில் ஒருபக்கத்தி லடைந்து சிவப்பிரதிஷ்டை செய்து அநேக நாள்கள் அன்புடன் பூசித்துத் துதித்து அருமையாகிய தவத்தைச் செய்திருந்தனர்.—எ-று. (ககக)

வேறு.

ஈசனு மவ்வழி யெய்தி நற்றவம்
பூசனை யதனொடு புரிதி யாலது
மாசில தாதலின் மகிழ்ந்து நீயினிப்
பேசுக வேண்டிய பெறுதற் கென்னவே.

(இ-ள்.) அந்தச் சமையத்தில் சிவபெருமான் எழுந்தருளி, நீ நல்ல தவத்தைப் பூசனையுடனே கலந்து செய்கின்றனை, அது குற்றமற்றதேயாம், ஆதலால் நாம் மகிழ்வடைந்தனம், நீ விரும்பியதைப் பெறும்பொருட்டு இனிக் கூறக்கடவை யென்றருளிச் செய்தலும்.—எ-று.

இதுமுதல் மூன்று பாடலுங் குளகம். (உ00)

ஐயனே யமலனே யனைத்து மாகியு
மெய்யனே பரமனே விமல னேயழற்
கையனே கையனேன் காலன் கையுறா
துய்யநேர் வந்துநீ யுதவென் றோதலும்.

(இ-ள்.) ஐயனே! நின்மலரே! எல்லாந் தாமே யாகிய மெய்ப்பொருளானவரே! பரம்பொருளா யுள்ளவரே! விமலரே! அக்கினியை யேந்திய திருக்கரத்தையுடையவரே! இழிந்தவனாகிய அடியேன் இயமன் கையிலகப்படாமல் கடைத்தேறும்பொருட்டுத் தேவரீர் எனதெதிரில் எழுந்தருளிக் காத்தருளல் வேண்டுமென்று பிரார்த்திக்கவும்.—எ-று. (உ0க)

அஞ்சலை யஞ்சலை யந்த கற்கெனச்
செஞ்சர ணிரண்டையுஞ் சென்னி சேர்த்தலு
முஞ்சன னினியென வோத வொல்லையி
னஞ்சணி மிடற்றினன் மறைந்து நண்ணினன்.

(இ-ள்.) உடனே சிவபெருமான் நீ இயமனுக்குப் பயப்படாதே பயப்படாதேயென்று அருளிச்செய்து தமது இரண்டு திருவடிகளையும் அவரது முடியில் சூட்டவும், அவர் இனி யான் உய்ந்தேனென்று கூற, காளகண்டராகிய சிவபெருமான் விரைவாக மறைந்தருளினர்.—எ-று. (உ0உ)

நண்ணிய பின்னரே நவையின் மைந்தனுக்
கெண்ணிரண் டாண்டெனு மெல்லை செல்லலும்
விண்ணிடை முகிலென விசைகொண் டொல்லையிற்
றுண்ணென வோர்யம தூதன் தோன்றினன்.

(இ-ள்.) அவ்வாறு மறைந்தருளியபின்பு குற்றமற்ற புதல்வராகிய மார்க்கண்டேயருக்குப் பதினாறுவது வயது நிறைந்தவுடனே, ஆகாயத்திலுள்ள கரிய மேகத்தைப்போல அதிவேகமாகப் பார்த்தவர்கள் நடுங்கும்படி ஒரு யமதூதுவன் அங்கு வந்தனன்.—எ-று. (உ0௩)

பண்டுமுப் புரமெரி படுத்த புங்கவன்
புண்டரீ கப்பதம் பரவும் பூசனை
கண்டனன் வெருவிமார்க் கண்டன் றன்னையா
னண்டுவ தரிதென வகன்று போயினன்.

(இ-ள்.) (அவ்வாறுவந்த) யமதூதன் முன்னாளில் திரிபுரத்தை யெரித்தருளிய சிவபெருமானது தாமரை மலர்போன்ற திருவடிகளைத்துதிக்கின்ற பூசனையைப் பார்த்துப் பயந்து இனி யான் இம்மார்க்கண்டன் சமீபத்திற் செல்லுதல் கஷ்டமென்று கூறிக்கொண்டு நீங்கிச்சென்றனன்.—எ-று. (உ0ச)

தீயெழ நோக்கியே சென்றி டாதுசேண்
போயதோர் வல்லியம் போலுந் தன்மையான்
வேயென வந்துபின் மீண்டு தென்புல
நாயக னடிதொழா நவிறன் மேயினன்.

(இ-ள்.) தீப்பற்றியெரிய அதனைப்பார்த்து அதனருகிற் செல்லாமல் தூரத்திற் செல்லும் புலிபோலுந் தன்மையினையுடைய யமதூதன் விரைந்து திரும்பி வந்து இயமனது பாதங்களை வணங்கிச் சொல்லத் தொடங்கினன்.—எ-று. (உ0ரு)

இந்திரர் புகழ்தரு மிறைவ கேட்டியா
லந்தியி னிறமுடை யண்ணல் பாலுறு
சிந்தைய னவனடி சேருஞ் சென்னியோன்
சந்தத மவன்புகழ் சாற்று நோன்மையோன்.

(இ-ள்.) இந்திரர்களால் புகழப்பட்ட தலைவனே! கேட்பீராக, செவ்வானம்போலுந் திருமேனியினையுடைய சிவபெருமானிடத்திற்பொருந்திய சிந்தையினையுடையவனும் அவரது பாதசேகரனும், சதாகாலமும் அவரது புகழையேதுதிக்கின்ற விரதத்தையுடையவனும்.—எ-று.

இதுமுத லிரண்டுபொடலுங்குளகம். (உ0கா)

ஈசன தருச்சனை யியற்று கின்றன
ளைசறு மனத்தின னறிவ னந்தணன்
காசியி னிடத்தன்மார்க் கண்ட னெனப்
பேசிய சிறப்புடைப் பெயர்பெற் றோங்குவான்.

(இ-ள்.) சிவார்ச்சனை செய்கின்றவனும், குற்றமற்ற மனத்தினை யுடையவனும், மெய்ஞ்ஞானமுடையவனும், பிராமணனும், காசிக்ஷேத்திரவாசியும் மார்க்கண்டனென்னும் பெயரினையுடையவனுமாகச் சொல்லப்பட்ட உயர்வினையுடைய ஒருவனிருக்கின்றனன்.—எ-று. (உ0எ)

அன்னதோர் பாலனை யணுக வஞ்சினன்
முன்னரு மேகலன் முக்க ணெம்பிரான்
றன்னுழை யிருந்தனன் றண்டநாயக
வுன்னுதி யிதுவென வுணரக் கூறினன்.

(இ-ள்.) அந்தச்சிறுவனை யான் அடைதற்கு அஞ்சினேன், அவனெதிரினுஞ் செல்லேன், அவன் திரிநேத்திரராகிய சிவபெருமானிடத்திருக்கின்றான். தண்டாதிபனே! இதனை யாலோசிப்பீராகவென்று, அந்தயமதருமன் உணரும்படிக் கூறினன்.

கூறிய வளவையிற் கூற்றன் றப்பினை
யாறிய செந்தழற் கருத்தி னலெனச்

சீறின னுயிர்த்தனன் சிறுவ னுங்கவ
னீறில னாகிய விறைவ னேவென்றான்.

(இ-ள்.) இவ்வாறு கூறியவுடனே இயமனானவன் எரிந்து தணிந்திருக்கின்ற நெருப்பில் நெய்யைவிட்டாற்போலச் சீறிப் பெருமூச்சு விட்டவனாய் அந்தச் சிறுவன் அழிவில்லாதவராகிய கடவுளோவென்று கூறினான்.—எ-று. (உ0க)

கருதியென் கணகளை யென்று தண்டக
னுரைசெய நின்றதோ ரொற்ற னோடியே
வருதிர்நும் மழைத்தனன் மன்ன னென்றிடக்
கரணர்கள் வந்தனர் கழல்வ ணங்கினார்.

(இ-ள்.) எமது கருணீகளை யழைக்கக்கடவை யென்று இயமனானவன் கூறியவுடனே அவ்விடத்திருந்த ஒரு தூதுவனோடிச் சென்று (அக்கருணீகர்களை நோக்கி) உங்களை நம்மரசரழைக்கின்றார் வாருங்களென்று கூறுதலும், அக்கருணீகர்கள் வந்து இயமனது பாதங்களை வணங்கினார்கள்.—எ-று. (உக0)

இறையவ னவ்வழி யெவருங் காணொணா
வறைகழ லண்ணலை யருச்சித் தேத்திய
மறுவறு காட்சியான் மார்க்கண் டப்பெயர்ச்
சிறுவனுக் கிறுவரை செப்பு மென்னவே.

(இ-ள்.) யமதருமராஜன் அப்பொழுது (அவர்களைப் பார்த்து) யாவர்களாலுங் காணுதற்கரிய சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளையுடைய சிவபெருமானை அருச்சனை செய்து துதித்த குற்றமற்ற காட்சியினையுடைய மார்க்கண்டனென்னுஞ் சிறுவனுக்கு முடிவுநாளைக் கூறுங்களென்றுசொல்லவும்.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (உகக)

சித்திர குத்தரொன் றுரைக்குஞ் சீரியோ
ரொத்திடு மியற்கைய ருணர்வின் மேலையோர்
கைத்தல மிருந்ததங் கணக்கு நோக்கியே
யித்திறங் கேளென விசைத்தன் மேயினார்.

(இ-ள்.) சித்திரகுத்தரென்று கூறுஞ் சிறப்பினையுடையவர்களும், ஒரேவிதமான சுபாவமுடையவர்களும் அறிவிற் சிறந்தவர்களுமாகிய அக்கருணீகர்கள் கையிலிருந்த தங்கள் கணக்குகளைப்பார்த்து இத்தன்மையைக் கேட்பீராகவென்று சொல்லத்தொடங்கினார்கள்.—எ-று. (உகஉ)

கண்ணுத லிறையவன் கருதி மேலைநா
ளெண்ணிரண் டாண்டென விறுதி கூறினா
னண்ணலே சென்றதா லதுவு மாங்கவன்
பண்ணிய பூசனை யறத்தின் பாலதே.

(இ-ள்.) நெற்றிக்கண்ணராகிய சிவபெருமான் திருவுள்ளத்தில் நினைத்து முற்காலத்திலே பதினாறுவயதென்று முடிவுகூறியிருக்கிறார்; அரசனே! அவ்வயதுஞ் சென்றது; அவன் செய்த பூசனையும் புண்ணியத்தின் பகுதியதேயாம்.—எ-று. (உகந)

முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினு
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார்.

(இ-ள்.) முதிர்ந்த தவத்தினையுடைய முனிவர்களாயினும், எல்லாச் செல்வங்களையும் பொதுவறப் பெற்று வாழ்கின்றோர்களாயினும், நல்லறிவினராயினும், மிக்க வலிமையுடையவராயினும் விதியை வெல்லுந் தன்மையினை யுடையவர்கள் யாவர்? (ஒருவரு மில்லை.)—எ-று. (உகச)

ஆதலி னமருல கடைவ தாயினன்
பேதுறு நிரயமும் பிழைத்து நீங்கினு
னீதவ னிலைமையென் றிருவ ருஞ்சொல
மேதகு தண்டகன் வெகுட்சி யெய்தினன்.

(இ-ள்.) ஆதலால் தேவருலகத்தை யடைவானாயினன், வருத்துகின்ற நரகத்தையுந் தப்பித்துக்கொண்டான், இது அவனது தன்மையென்று இரண்டு கருணீகர்களுங்கூற, அதனைக்கேட்ட மேன்மைபொருந்திய இயமனானவன்கோபங்கொண்டனன்.—எ-று. (உகரு)

அந்தக னத்துணை யமைச்ச னாகிய
வெந்திறற் காலனை விளித்துக் காசியி
லந்தண னொருமக னவன தாவியைத்
தந்திடு கென்றலுந் தரணி யெய்தினன்.

(இ-ள்.) அப்பொழுது இயமனானவன் தனது மந்திரியாகிய மிக்க வலிமை பொருந்திய காலனையழைத்து நீசென்று காசிப்பதியில் ஒரு பிராமணச் சிறுவனிருக்கின்றான் அவனுயிரைக் கொண்டுவரக்கடவை யென்று கூறுதலும், உடனே அக்காலன் நிலவுலகத்திற்கு வந்தனன்.—எ-று. (உகசு)

மற்றவன் காசியில் வந்து மாசிலா
நற்றவ னிருந்துழி நணுகி நான்மறைக்
கொற்றவன் பூசையுங் குறிப்பு நோக்கியே
யெற்றிவன் வருவதென் றெண்ணி யேங்கினன்.

(இ-ள்.) அந்தக் காலனானவன் காசிப்பதியை யடைந்து குற்றமற்ற நல்ல தவத்தினையுடைய மார்க்கண்டேய ரிருக்குமிடத்திற்குவந்து அவர் செய்கின்ற சிவபூசையையும் சிவத்தியானத்தையும் பார்த்து, இவன் நம்முடன்வருவ தெவ்வாறென்று நினைத்து எக்கங்கொண்டனன்.—எ-று. (உகஎ)

விழியிடைத் தெரிவுற மேவி மைந்தனைத்
தொழுதனன் யாரைநீ சொல்லு கென்றலு
முழுதுல குயிரொலா முடிக்கு மாணையான்
கழலிணை யடிமைசெய் கின்ற காலன்யான்.

(இ-ள்.) அவரது கண்களுக்குத் தெரியும்படிச்சென்று நின்று, அம்மார்க்கண்டேயரை வணங்கினன் (உடனேஅவர் இக்காலனைப் பார்த்து) நீயாரென்று வினவுதலும், அவன் எல்லாவுலகத்துமுள்ள உயிர்களைச்சங்கரிக்கின்ற அதிகாரத்தினையுடைய இயமனது பாதங்களுக்கடிமை செய்கின்ற காலன்யான்.—எ-று. (உகஅ)

போந்ததிங் கெவனெனப் புகலு வீரெனி
னேய்ந்தது மொழிகுவ னாதி நாயக
னீந்திடு காலமெண் ணிரண்டு நென்னலே
தேய்ந்தது தென்புலஞ் சேர்தல் வேண்டுநீர்.

(இ-ள்.) நீ இங்குவந்த காரணம் யாதென்று கேட்பீராயின், யான் ஆலோசித்து வந்ததைச் சொல்லுகின்றேன், உமக்குச் சிவபெருமான் கொடுத்தருளிய பதினறு வயதும் நேற்றேமுடிந்தது. ஆதலால் நீர் யமலோகத்திற்கு வருதல் வேண்டும்.

**வேறு.**

தடுக்குந் தன்மைய தன்றிது சதுர்முகத் தவற்கு
மடுக்குந் தன்மையே புதுவது புகுந்ததோ வன்றே
கொடுக்குந் தன்மைபோற் காத்திடுந் தன்மைபோற் கூற்றன்
படுக்குந் தன்மையுங் கறைமிடற் றிறையருட் பணியே.

(இ-ள்.) இது தடுக்கக்கூடிய காரியமன்று ; பிரமனுக்குங்கூட உண்டாகக் கூடியதே; புதிதாக வுண்டாகியதுமல்ல. சிருஷ்டிக்குந் தன்மையைப்போலவும், இரக்ஷிக்குந் தன்மையைப்போலவும், இயமனது சங்காரத்தன்மையும் காளகண்டராகிய சிவபெருமானது திருவருட் பணியேயாம்.—எ-று. (உஉ0)

ஆத லானுமை விளித்தன னன்றியு மமலன்
பாத மாமல ரருச்சனை புரிவது பலரு
மோத வேமன மகிழ்ந்துமைக் காணிய வுன்னிக்
காத லாகியே நின்றனன் றென்றிசைக் கடவுள்.

(இ-ள்.) ஆதலால் உம்மையழைத்தனன் ; அதன்றியும், நீர் சிவபெருமானது திருவடித்தாமரைகளை யருச்சிப்பதைப் பலருங் கூறக்கேட்டமையால் மனமகிழ்ந்து யமதருமராஜன் உம்மைப் பார்க்க விரும்பி ஆசைகொண்டிருக்கிறான்.—எ-று.()

அடுத லோம்பிய செய்கைய னென்பதா லவனைக்
கொடிய னென்பரா லறிவிலார் செய்வினை குறித்து
முடிவி லாருயி ரெவற்றிற்கு முறைபுரிந் திடலா
னடுவ னென்கின்ற தவன்பெய ருலகெலா நவிலும்.

(இ-ள்.) சங்காரத்தொழிலை நடத்துந் தன்மையினால் (அந்த யமதருமனை) அவிவேகிகள் கொடியவனென்று கூறுவார்கள், அவரவர்கள்செய்த புண்ணிய பாவங்களை யுணர்ந்து ஆயுண்முடிவில் அரியவுயிர்களனைத்திற்கும் தண்டநீதிகளைச் செய்கின்றமையினால் நடுவன் என்று அவன்பெயரை உலகமனைத்துங் கூறும்.—எ-று. ()

சிந்தை மீதினில் யாவது மெண்ணலீர் தென்பா
லந்த கன்புர மடைதிரே லவனெதி ரணுகி
வந்து கைதொழு தேத்தியே நயமொழி வழங்கி
யிந்தி ரன்பத நல்குவன் வருதிரொன் றிசைத்தான்.

(இ-ள்.) தேவரீர் திருவுளத்தில் வேறொன்றும் எண்ணவேண்டுவதில்லை, தாங்கள் யமலோகத்திற்குவருவீராயின் அவ்வியமன் எதிரில்வந்து வணங்கித்துதித்து உபசாரவசனங்களைக் கூறித் தங்களுக்கு இந்திரபதவியைக் கொடுப்பான், ஆதலால் வருவீராகவென்று கூறினன்.—எ-று. (உஉரு)

மாற்ற மிங்கிது கேட்டலு மதிமுடி யரனைப்
போற்று மன்பர்க ளிந்திர னுலகினும் போகார்
கூற்று வன்றன துலகினு நும்மொடு குறுகா
ரேற்ற மாகிய சிவபத மடைந்தினி திருப்பார்.

(இ-ள்.) காலன் கூறிய இவ்வசனத்தைக் கேட்டவுடனே (மார்க்கண்டேயர் அவனைப்பார்த்துச்) சந்திரசேகரராகிய சிவபெருமானைத் துதிக்கின்ற அன்பர்கள்

இந்திரலோகத்திற்கும் செல்லமாட்டார்கள், உங்களுடன் யமலோகத்திற்கும் வரமாட்டார்கள், உயர்வுபொருந்திய சிவலோகத்தையே யடைந்து வாழ்வார்கள்.—எ-று. ()

நாத னூர்தம தடியவர்க் கடியவ னுனு
மாத லானும தந்தகன் புரந்தனக் கணுகேன்
வேதன் மாலமர் பதங்களும் வெஃகலன் விரைவிற்
போதி போதியென் றுரைத்தலு நன்றெனப் போனுன்.

(இ-ள்.) யான் சிவபெருமானது அடியவர்க்கடியனு யுள்ளவன், ஆதலால் உங்கள் யமபுரத்திற்கு வரமாட்டேன், பிரமவிஷ்ணுக்களது பதவிகளையும் விரும்பேன், சீக்கிரம் போகக்கடவை என்று கூறவும், அக்காலன் நல்லதென்று கூறிச்சென்றனன்.—எ-று. (உஉகு)

போன காலனு மறலியை வணங்கியே புகுந்த
பான்மை யாவையு முரைத்தலு முளம்பதை பதைப்ப
மேனி மார்பகம் வியர்ப்புற விழிகனல் பொழியக்
கூனல் வார்புரு வக்கடை நிமிர்ந்திடக் கொதித்தான்.

(இ-ள்.) அவ்வாறு சென்ற காலன் இயமனை வணங்கி நடந்தவிருத்தாந்தங்களை யெல்லாம் கூறவும், அதனைக்கேட்ட யமதருமன் மனம்பதைக்கவும், உடலும் மார்பும் வியர்க்கவும், கண்களில் அக்கினிப்பொறிபறக்கவும், வளைந்து நீண்ட புருவங்களின் கடைகள் நெற்றிமீது செல்லவும் மிகுந்த கோபங்கொண்டனன்.—எ-று.

அழைத்திர் மேதியை யென்னலும் போந்ததா லதன்மேற்
புழைக்கை மால்கரி யாமென வெரிநிடைப் புகுந்து
நிழற்று கின்றதோர் கவிகையுந் துவசமு நிவப்ப
வழுத்தி வீரர்கள் சுற்றிட வந்தகன் வந்தான்.

(இ-ள்.) நமது மகிடத்தை அழையுங்களென்று கூறினவுடன் அது வந்து எதிரில் நின்றது, உடனே அதன்முதுகில் துதிக்கையினையுடைய பெரிய யானையைப்போல் ஏறிக்கொண்டு, பிடிக்கின்ற குடையும் கொடியும் உயர்ந்து விளங்கவும், வீரர்கள் துதித்துக்கொண்டு சூழ்ந்துவரவும் இயமன் வந்தான்.—எ-று. (உஉஎ)

போந்து காசியின் முனிமக னிருந்துழிப் போகிச்
சேந்த குஞ்சியு முகில்புரை மேனியுஞ் சினத்திற்
காந்து கண்களும் பிடித்ததோர் பாசமுங் கரத்தி
லேந்து தண்டமுஞ் சூலமு மாகியே யெதிர்ந்தான்.

(இ-ள்.) காசிக்குவந்து மார்க்கண்டேய ரிருக்கின்ற இடத்திற்குச் சென்று செந்நிறம் பொருந்திய தலைமயிர்களும் மேகம்போன்ற கரிய வடிவமும் கோபத்தினலே சுவாலிக்கின்ற கண்களும் கையிற்பிடித்த பாசமும் ஏந்திய தண்டசூலங்களுமுடையவனுக அவரெதிரி லடைந்தனன்.—எ-று. (உஉஅ)

வேறு.

வந்து தோன்றலு மார்க்கண்ட னென்பவ
னந்த கன்வந் தணுகின னுமெனச்
சிந்தை செய்தவன் செய்கையை நோக்கியே
யெந்தை யாரடி யேத்தி யிறைஞ்சினன்.

(இ-ள்.) இயமன்வந்து எதிரில்நின்றவுடனே மார்க்கண்டேயர் (அவனைப்பார்த்து) இயமன்வந்திருக்கின்றனன்போலுமென்று நினைத்து அவனது செய்கையை உற்றுநோக்கி எம்பெருமானது பாதங்களைத் துதித்து வணங்கினர். எ-று. (உஉகூ)

அன்ன வேலையி லந்தகன் மைந்தநீ
யென்னி னைந்தனை யாவ தியற்றினை
முன்னை யூழின் முறைமையு முக்கணன்
சொன்ன வா றுந் துடைத்திட லாகுமோ.

(இ-ள்.) அப்பொழுது யமதருமன் (மார்க்கண்டரைப்பார்த்து) குழந்தாய்! நீ யாது நினைந்தனை, யாதுசெய்தனை, பழையவிதியையும் சிவபெருமான் அருளிய வாக்கியத்தையுந் தடுக்க முடியுமோ?—எ-று. (உகூ0)

சிறிது மூழ்வினைத் திண்மையுந் தேர்கிலா
யுறுதி யொன்று முணர்கிலை போலுமா
லிறுதி யேபிறப் பென்றிவை யாவரும்
பெறுவ ரன்னது பேசுதல் வேண்டுமோ.

(இ-ள்.) நீ சற்றும் ஊழின் வலியை யுணர்ந்தாயில்லை. யாதொரு உறுதியையும் அறிந்திலைபோலும்; சனன மரண மென்பதை எல்லாரும் அடைவார்கள், அதைப்பற்றி வேறு கூறுதல்வேண்டுமோ?—எ-று. (உகூக)

பீடு சாலும் பெருந்தவர்க் காயினுங்
கூடு ருவிது கூடுமென் றுன்னியே
நாடி யின்னண நண்ணுதல் கற்றுண
ராட வர்க்கு மியற்கைய தாகுமோ.

(இ-ள்.) பெருமை மிக்க மகத்தாகிய தபசிகளுக்காயினும் சனனமரணங்களை யொழித்துக்கொள்ள முடியாத இக்காரியம் கைகூடுமென்று நினைத்து இவ்வாறிருத்தல் படித்துணர்ந்த விவேகிகளுக் கழகாகுமோ.—எ-று. (உகூஉ)

ஈச னார்த மிணையடி மீமிசை
நேச நெஞ்சினை நித்தலு நீபுரி
பூசை வெம்பவம் போக்குவ தன்றியான்
வீசு பாசம் விலக்கவும் வல்லதோ.

(இ-ள்) நீ சிவபெருமானது உபயபாதங்களின்மீது அன்பு பொருந்திய மனதினையுடையவனாய் நீ நாள்தோறும் செய்கின்ற பூசையானது உனது பாவங்களை யொழுக்குமேயன்றி, என்னால் வீசப்படும் பாசத்தைத் தடுக்கவும் வல்லபத்தினையுடையதோ.—எ-று. (உகூகூ)

சிந்து வின்கட் செறிமண லெண்ணினு
முந்து வானத் துடுவினை யெண்ணினு
மந்த மின்றியெ னாணையின் மாண்டிடு
மிந்தி ரன்றனை யெண்ணிட லாகுமோ.

(இ-ள்) கடலினிடத்துப் பொருந்திய மணலை யெண்ணினாலும், உயர்ந்த ஆகாயத்திற் காணப்படுகின்ற நக்ஷத்திரங்களை யெண்ணினாலும், எனது ஆணையினாலிறந்த அளவற்ற இந்திரர்களை எண்ண முடியுமோ? (முடியா)—எ-று. (உகூச)

இற்ற வானவர் தம்மையு மென்னினீ
றுற்ற தானவ ராகியுள் ளோரையு
முற்ற வோதின் முடிவில தாதலான்
மற்றை யோரை வகுத்திடல் வேண்டுமோ.

(இ-ள்.) என்னுலிறந்த தேவர்களையும் அசுரர்களா யுள்ளவர்களையும் முழுது மெடுத்துச் சொன்னல்முடியாது? ஆதலால் மற்றவர்களைப்பற்றிக் கணக்கிடல்வேண் டுமோ? (வேண்டுவதில்லை).—எ-று. (உகூரு)

கனக்கு முண்டகக் காமரு கண்ணினன்
றனக்கு முண்டு சதுர்முகற் குண்டுமற்
றெனக்கு முண்டு பிறப்பிறப் பென்றிடி
னுனக்கு முண்டென் றுரைத்திடல் வேண்டுமோ.

(இ-ள்.) பிறப்பிறப்புக்கள் கனத்த தாமரை மலர்போன்ற அழகிய கண் களையுடைய திருமாலுக்கும் பிரமனுக்கும் எனக்கு முண்டென்றுசொன்னல், உன க்கு முண்டென்று கூறவேண்டுமோ?—எ-று. (உகூசு)

வாச மாமல ரிட்டு வழிபட
வீச ஞர்முன் னெனக்கருள் செய்தன
வாசி லாவிவ் வரசிய லேந்திய
பாச சூலம் படைமழுத் தண்டமே.

(இ-ள்.) நல்ல மணம் பொருந்திய புஷ்பங்களாலருச்சித்து வழிபட்ட மையால் குற்றமற்ற இவ்வரசும் நான்பிடித்துக்கொண்டிருக்கின்ற பாசமும் சூலமும் மழுவும் தண்டமும் சிவபெருமான் முற்காலத்தில் எனக்கு அருள்செய்தனர்.—எ-று.

தேவர் காப்பினுஞ் செய்தளித் தீறுசெய்
மூவர் காப்பினு மொய்ம்பின ராயினு
மேவர் காப்பினுங் காத்திட வின்றுநின்
னுவி கொண்டன்றி மீண்டு மகல்வனே.

(இ-ள்.) ஆதலால் தேவர்கள் வந்து உன்னைக் காத்தாலும், சிருஷ்டி, திதி சங்காரங்களைச் செய்கின்ற திரிமூர்த்திகள்வந்து காத்தாலும், இன்னம் வலிவுள்ளவர் கள் யார்வந்து காத்தாலுங் காக்கக்கடவர். இன்று யான் உனது உயிரைக் கொண்டன் றி மீண்டு 'போவேனே? (போகேன்.)—எ-று. (உகூஅ)

துன்ப மென்பது கொள்ளலை சூலித
னன்ப ராயினு மந்தம்வந் தெய்திடிற்
றென்பு லந்தனிற் சேர்த்துவன் றிண்ணமே
யென்பி னீயினி யேகென் றியம்பலும்.

(இ-ள்.) வருத்தமடையாதே சிவபெருமானது அடியவர்களா யிருந்தாலும் மரணகாலஞ் சமீபித்தால்அவர்களை யமலோகத்திற் சேர்ப்பேன், இது நிச்சயம், ஆத லால் என்னுடன் இனி நீ வரக்கடவை யென்று கூறுதலும்.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (உகூக)

மைந்த னங்கது கேட்டு மறலிகே
ளெந்தை யாரடி யார்தமக் கில்லையா
லந்த மென்பதுண் டாயினு நின்புரம்
வந்தி டார்வெள்ளி மால்வரை யேகுவார்.

(இ-ள்.) மார்க்கண்டேய ரதனைக்கேட்டு, இயமனே! கேட்பாயாக, எம் பெருமானது அடியவர்களுக்கு மரணங்கிடையாது, ஒருவேளை யுண்டானாலும் நினது நகரத்திற்கு வரமாட்டார்கள் பெரிய கைலாய மலைக்குச் செல்லுவார்கள்.—எ-று. ()

அனையர் தன்மை யறைகுவ னங்கவர்
புனித மாதவ ராயினும் பொற்புடை

மனையின் வாழ்க்கையின் மல்கின ராயினும்
வினையி னீங்கிய வீட்டின்ப மெய்துவார்.

(இ-ள்.) அவர்களது தன்மையைச் சொல்லுகின்றேன், அச்சிவனடியவர்கள் நிருமலமாகிய துறவோடு கூடிய பெருந்தபசிகளாயிருந்தாலும், அதுவன்றி அழகுபொருந்திய இல்லறத்தினரா யிருந்தாலும் கன்மரகிதமான முத்தியின்பத்தையடைவார்கள்.—எ-று. (உ௪௧)

ஏதந் தீர்சுடர் தன்னையு மெண்ணுமைம்
பூதந் தன்னையும் போதிகன் றன்னையும்
பேதஞ் செய்வர் பிறப்பொழித் தோரவர்
பாதஞ் சேர்தல் பரபதஞ் சேர்வதே.

(இ-ள்.) குற்றமற்ற சந்திர சூரியர்களையும், நினைக்கத்தக்கபஞ்சபூதங்களையும், ஆன்மாவையும் ஞானிகள் கடந்து நிற்பர், அவர்களது பாதத்தை யடைதலே மோக்ஷ வீட்டையடைந்ததாம்.—எ-று. (உ௪உ)

உன்னை யெண்ண லரும்பரை யெண்ணலர்
மன்னை யெண்ணலர் மாமலர்ப் பண்ணவன்
றன்னை யெண்ணலர் தண்டுள வோனையு
பின்னை யெண்ணலர் பிஞ்ஞக னன்பினோர்.

(இ-ள்.) சிவனடியார்கள் உன்னையும் ஒருபொருளாக நினைக்கமாட்டார்கள், தேவர்களையும் மதிக்கமாட்டார்கள், அத்தேவர்கள் தலைவனாகிய இந்திரனையும் கருதார்கள்; பெரிய தாமரைமலரிலிருக்கின்ற பிரமனையும் சிந்திக்கமாட்டார்கள்; குளிர்ச்சிபொருந்திய துளசிமாலையணிந்த திருமாலினையும் நினைக்கமாட்டார்கள்.—எ-று.

நாதன் றன்னையு நாதன தம்புயப்
பாதஞ் சேர்ந்து பரவினர் தம்மையும்
பேதஞ் செய்வது பேதைமை நீரொன
வேதங் கூறும் விழுப்பொருள் பொய்க்குமோ.

(இ-ள்.) சிவபெருமானையும் அச்சிவபெருமானதுதாமரைமலர்போன்ற திருவடிகளை யடைந்து துதித்தவர்களையும் வேறுபடுத்துக்கூறுதலறியாமையென்று வேதம் சொல்லுகின்ற உயர்ந்த பொருளானது பொய்க்குமோ? (பொய்யா).—எ-று. ()

செம்மை யாகிய சிந்தையர் சீரியோர்
வெம்மை யென்பதை வீட்டி விளங்கினோர்
தம்மை யுந்துறந் தேதலை நின்றவ
ரிம்மை தன்னினு மின்பத்தை மேவுவார்.

(இ-ள்.) செம்மையாகிய மனத்தினையுடையவர்களும், சிறந்த தன்மையினையுடையவர்களும், கொடுந்தொழில்களை யெல்லாம் விட்டிருக்கின்றவர்களும், தற்போதமிழந்து நின்றவர்களும் இப்பிறப்பிலேயே பேரின்பத்தையடைவார்கள்.

இன்மை யாவதி யாண்டுமில் லாதவர்
நன்மை யென்ப தியல்பென நண்ணினோர்
புன்மை யான பொருள்விரும் பாரவர்
தன்மை யாவரோ சாற்றவல் லார்களே.

(இ-ள்.) எவ்விடங்களிலும் இல்லையென்னுந் தன்மை யில்லாதவர்களும், நல்ல காரியங்களையே சுபாவமாகக் கொண்டவர்களும், இழிந்த பொருள்களை விரும்ப மாட்டார்கள். அவர்களது தன்மையை யெடுத்துச்சொல்ல வல்லவர்கள் யார்? எ-று.

வேறு.

அன்னார் தன்மை தேர்கிலை வையத் தவர்போல
வுன்னா நின்றா யாங்கவர் தம்பா லுறுகின்ற
வென்னா விக்குந் தீங்கு நினைத்தா யிவையெல்லா
முன்னா விக்கு மித்தலை மைக்கு மொழிவன்றோ.

(இ-ள்.) அவர்களது தன்மையை அறிந்தாயில்லை; என்னை உலகத்தவர்கள்போல நினைத்தனை, முன் சொல்லிய பெரியோர்களது சார்பிலிருக்கிற எனது உயிருக்குந் தீங்குநினைத்தனை; இவையனைத்தும் உனது உயிருக்கும் அதிகாரத்திற்குங் கேடல்லவோ?—எ-று. (உ௪எ)

தீதா கின்ற வாசக மென்றன் செவிகேட்க
வோதா நின்றாய் மேல்வரு மூற்ற முணர்கில்லாய்
பேதாய் பேதாய் நீயிவ ணிற்கப் பெறுவாயோ
போதாய் போதா யென்றுரை செய்தான் புகரில்லான்.

(இ-ள்.) குற்றமான வசனங்களை யென்காதில் கேட்கும்படிக் கூறினாய்; மேலேவருகின்ற துன்பத்தை யுணர்ந்துகொண்டாயில்லை. ஏ பேதையே! நீ இவ்விடத்தில் நிற்கப்பெறுவையோ? இங்கு நில்லாமல் போகக்கடவை போகக்கடவை யென்று குற்றமற்ற மார்க்கண்டமுனிவர்கூறினார்.—எ-று. (உ௪அ)

கேட்டான் மைந்தன் கூறிய மாற்றங் கிளர்செந்தீ
யூட்டா நின்ற கண்ணினன் யானச் சுறுமாற்றல்
காட்டா நின்றாய் நம்முயிர் கூற்றன் கைக்கொள்ள
மாட்டா னென்றே யெண்ணினை கொல்லோ வலியில்லாய்.

(இ-ள்.) மார்க்கண்டேயர் கூறிய வசனத்தை இயமன் கேட்டு விளங்குகின்ற தீப்பொறி பறக்கின்ற கண்ணினையுடையவனாய் ஓ வலியற்றவனே! யான் அஞ்சக்கூடிய வலிமையைக் காட்டுகின்றனை, நமது உயிரை இயமன் கைக்கொள்ளமாட்டானென்று நினைத்தனையோ?—எ-று. (உ௪௯)

என்றான் வானத் தேறென வார்த்தா னிவனேரோ
நின்றால் வாரா னென்று நினைந்தே நெடுநீலக்
குன்றா மென்னப் பாலகன் முன்னங் கொலைவேலான்
சென்றான் பாசம் வீசுவ தற்குச் சிந்தித்தான்.

(இ-ள்.) என்று கூறி மேகத்திலுள்ள இடிமுழக்கத்தைப்போலக் கர்ச்சித்து நாம் இவனெதிரில்நின்றால் வரமாட்டானென்று நினைத்து கொலைத்தொழிலையுடைய வேலினையேந்திய அந்த யமதருமன் பெரிய நீல மலையைப்போல அச்சிறுவரது எதிரில் சென்று பாசத்தை வீசுதற்கு நினைந்தனன்.—எ-று. (உ௫௦)

எறிந்தான் பாச மீர்த்திட லுற்றா னிதுபோழ்தி
லறிந்தா னானா மீசனை யேத்தி யடிநீழற்
பிறிந்தா னல்லன் மற்றினி யிந்தப் பெருமைந்தன்
மறிந்தா னன்றோ வென்றிமை யோரு மருளுற்றார்.

(இ-ள்.) பாசத்தைவீசிப்பிடித்திழுக்கத்தொடங்கினான்; அப்பொழுது அதனையுணர்ந்த மார்க்கண்டேயர் சிவபெருமானைத்துதித்துத் திருவடி நிழலைப் பிரியாமல் இருந்தனர், இனி இச்சிறந்த முனி குமாரன் இறந்தன னல்லவோவென்று கூறித் தேவர்களு மயங்கினார்கள்.—எ-று. (உருக)

ஈர்க்கும் பாசங் கந்தர முற்று மிடரில்லா
மார்க்கண் டன்முற் றோன்றின னின்பால் வருதுன்பந்
தீர்க்கின் றாநீ யஞ்சலை யென்றே திரையாழிக்
கார்க்கண் டத்துக் கண்ணுத லையன் கழறுற்றான்.

(இ-ள்.) பிடித்திழுக்கப்பட்ட பாசமானது கழுத்தை யடைந்தும் வருந்தாதிருக்கின்ற மார்க்கண்டேயருக்கெதிரில்நீலகண்டராகிய சிவபெருமானெழுந்தருளிவந்து உனக்குண்டாகுந் துன்பங்களை நீக்குகின்றோம், நீ யாதுக்குமஞ்சவேண்டுவதில்லையென்று திருவாய்மலர்ந்தருளினார்.—எ-று. (உருஉ)

மதத்தான் மிக்கான் மற்றிவன் மைந்த னுயிர்வாங்கப்
பதைத்தா னென்னா வுன்னிவெ குண்டான் பதிமூன்றுஞ்
சிதைத்தான் வாமச் சேவடி தன்னாற் சிறிதுந்தி
யுதைத்தான் கூற்றன் விண்முகில் போன்மண் ணுறவீழ்ந்தான்

(இ-ள்.) திரிபுர சங்காரஞ் செய்த சிவபெருமான் இந்த இயமன் மிகுந்த மதமுடையவன் இச்சிறுவனது உயிரை வாங்கும்பொருட்டு அவசரப்பட்டானென்று தமது இடது திருவடியைச் சற்றே தூக்கி யுதைத்தனர், உடனே கரிய மேகத்தைப் போல இயமன் பூமியில் விழுந்தனன்.—எ-று. (உருங)

வீழுங் காலத் தம்புய னாதி விண்ணோர்கள்
வாழுந் தன்மைத் தெவ்வுல கென்னா மறுகுற்றார்
சூழும் வேலை யார்த்தில தண்டத் தொகையெல்லாங்
கீழும் மேலுந் நெக்கன பாருங் கிழிந்தன்றே.

(இ-ள்.) அப்படி விழுந்தபொழுது (உண்டாகிய வோசையைக்கேட்டுப்) பிரமாதி தேவர்கள் நாம்இனி யெந்தவுலகத்தில் வாழப்போகின்றோ மென்று கவலை யுற்றார்கள். உலகத்தைச் சூழ்ந்துள்ள கடல்களும் முழங்கவில்லை, அண்டக் கூட்டங்களெல்லாம் கீழுமேலும் கட்டுவிட்டன. மண்ணுங் கிழிந்தது.—எ-று.

கிழிந்தன்றே என்பது, தொகுத்தல் விகாரம். (உருச)

பாங்காய் நின்ற தானையு மூரும் பகடுந்தா
னேங்கா நின்றே பார்மிசை வீழா விறவுற்ற
தீங்காய் நின்ற செய்வினை யாளர் சிதைவாகிப்
போங்கா லத்திற் சேர்ந்தவர் தாமும் போகாரோ.

(இ-ள்.) பக்கத்துநின்ற சேனைகளும் அவனேறிய வாகனமாகிய எருமைக்கடாவும் வருந்திப் பூமியில்விழுந்திறந்தன, கொடுந்தொழிலைச்செய்கின்றவர் அழிந்து போகுங்காலத்தில் அவர்களைச் சேர்ந்தவர்களும் அழியாதிருப்பார்களோ? (அழிவார்கள்).—எ-று. (உருரு)

அந்தக் காலத் தெம்முயிர் காப்பா னரனுண்டால்
வந்தக் கூற்ற னென்செய்வ னென்னா வடதொன்னூற்
சந்தப் பாவிற் போற்றுதல் செய்தே தனிநின்ற
மைந்தற் காணூஉ வெம்பெரு மானு மகிழ்வுற்றான்.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் எனதுயிரைக் காக்கும்பொருட்டுச் சிவபெருமானிருக்கின்றார், ஆதலால், இயமன்வந்து என்னை யாதுசெய்வானென்று பழைய ஆரிய பாஷைநூலாகச் சந்தப்பாக்களினால் தோத்திரங்களைச்செய்து தனியே எதிரில்நின்ற மார்க்கண்டேயனைப் பார்த்துச் சிவபெருமான் மகிழ்வடைந்தனர்.—எ-று. (உ௩௬)

வேறு.

மைந்த நீநமை வழுத்தி மாசிலா
முந்து பூசனை முயன்ற தன்மையா
லந்த மில்லதோ ராயு ணிற்கியாந்
தந்து நல்கினு மென்று சாற்றினன்.

(இ-ள்.) குழந்தாய்! நீ நம்மைத் துதித்துக் குற்றமற்ற உயர்ந்த பூசனையை முயற்சியுடன் செய்துகொண்டு வந்தமையால் நாம் உனக்கு முடிவற்ற ஆயுளைக் கொடுத்தருளினோமென்று திருவாய்மலர்ந்தருளினர்.—எ-று. (உ௩எ)

சாற்று மெல்லையிற் றனது தாளிணை
போற்று கின்றவன் பூசை செய்திடு
மேற்ற தாணுவுக் கிடைய தாகவே
கூற்றின் கூற்றுவன் குறுகுற் றனரோ.

(இ-ள்.) அவ்வாறு வரமளிக்கும் பொழுது தமது திருவடிகளைத் துதிக்கின்ற மார்க்கண்டேயரால் பூசிக்கப்பட்ட சிவலிங்கத்தினிடத்தில் காலகாலராகிய சிவபெருமான் மறைந்தருளினர்.—எ-று. (உ௩அ)

மறைய வன்கணு மன்னு தென்புலத்
திறைய வன்கணு மிகல்பற் றின்றரோ
வறிவர் தேர்குறி னையன் செய்தன
முறைய தாகுமான் முதன்மைப் பாலதே.

(இ-ள்.) மார்க்கண்டரிடத்திலும் நிலைபெற்ற தென்றிசைத்தலைவனாகிய இயமனிடத்திலும் (எமது சிவபெருமானுக்கு) விருப்பும் வெறுப்பு மில்லை; இதனை விவேகிகள் விசாரிக்கு மிடத்து அவ்வெம்பெருமான் செய்தருளினமை முதன்மையாகிய முறைமையேயாம்.—எ-று. (உ௩௯)

நின்ற மைந்தனு நித்தன் மேனியை
யொன்று மன்பினு ளுன்னி யேமணி
கன்றி கையெனுங் கடவு ளாலயஞ்
சென்று நாதன்றாள் சென்னி சேர்த்தினன்.

(இ-ள்.) எதிரில்நின்ற மார்க்கண்டரும் சிவபெருமானது திருவுருவத்தைப் பொருந்திய அன்புடன் தியானித்துக்கொண்டு மணிகன்னிகை யென்னுங் கோயிலுக்குச் சென்று சிவபெருமானது திருவடிகளை வணங்கினர்.—எ-று.

ஒன்றுமன்பு - நீங்காதஅன்பு. (உ௪0)

புந்தி நைந்திடப் புலம்பி நாட்டநீர்
சிந்தும் வேலையிற் றிளைத்துச் சாம்பிய
தந்தை யன்னைதா டழுவித் தாழ்ந்திடா
முந்து மாகுல முழுது மாற்றினன்.

(இ-ள்.) மனமானது வருந்தப் புலம்பிக் கண்களில் நீர்சிந்துகின்ற அக்கண்ணீர்க்கடலில் மூழ்கி வருந்திய பிதா மாதாக்களினது பாதங்களைத் தழுவி வணங்கி அவர்களிடத்தில் முன்ன மிருந்த துக்கமுழுவதையும் நீக்கினுர்.—எ-று. (௨௬௧)

அங்கண் சில்பக லமர்ந்து நீங்கியே
செங்க ணேறுடைச் செல்வன் மல்கியே
தங்கு கின்றநற் றனம் யாவையும்
பொங்கு காதலிற் போற்றன் மேயினுன்.

(இ-ள்.) அவ்விடத்தில் சிலகால மிருந்து பின்னர் அங்கு நின்றுஞ் சென்று சிவந்த கண்களையுடைய இடபவாகனரூடராகிய சிவபெருமா னெழுந்தருளி யிருக்கின்ற நல்ல ஸ்தலங்களை யெல்லாம் மிக்க அன்பினுலடைந்து துதிக்கத் தொடங்கினுர்.

அத்த னுலய மனைத்தும் வைகலும்
பத்தி யோடுமுன் பரவி யேமிகுஞ்
சுத்த னுகியே தொலைவி லாருயிர்
முத்தி யெய்தினுன் முழுது ணர்ந்துளான்.

(இ-ள்.) சிவபெருமானது ஆலயங்களை யெல்லாம் நாள்தோறு மடைந்து சந்நிதிக்குமுன்சென்று பத்தியுடன் துதித்து மிக்கபரிசுத்தராய்ச் சகல கலைகளையுமுணர்ந்த மார்க்கண்டேயர் அழியாத சீவன்முத்தராயினர்.—எ-று. (௨௬௩)

விண்ணின் பாலுளன் விரும்பிப் போற்றுவோர்
கண்ணின் பாலுளன் கருத்தின் பாலுளன்
மண்ணின் பாலுளன் மற்ற வன்செய
லெண்ணின் பாலதோ விசையின் பாலதோ.

(இ-ள்.) அவர் விண்ணுலகத்தில் வசிப்பார், தம்மை விரும்பித் துதிக்கின்றவர்களது ஞானக்கண்ணி லெழுந்தருளி யிருப்பார், அவர்களுள்ளத்தி லெழுந்தருளி யிருப்பார், நிலவுலகத்தில் வசிப்பார், அவரது அருட்செயல் அளவுக்கடங்குமோ? அன்றிப் புகழிலடங்குமோ?—எ-று. (௨௬௪)

முண்ட கத்திடை முளைத்த வன்றுயில்
கொண்ட வெல்லையைக் குணிக்கிலாவதெ
னண்ட நல்கியோன் றுஞ்ச வாங்கவன்
கண்ட கற்பமோ கணக்கி லாதவே.

(இ-ள்.) தாமரைமலரில் தோன்றிய பிரமன் நித்திரை கொள்ளுங் கற்பகாலத்தை அளவிட்டுரைப்பதென்னை, உலகங்களைச் சிருஷ்டித்த அப்பிரமன் இறக்க அம்மார்க்கண்டேய முனிவர் பார்த்த அப்பிரம கற்பங்களோ அளவிறந்தன.—எ-று.

அன்ன வன்றனை யலக்கண் செய்திடுந்
தென்ன வன்னுயிர் சிதைந்து போதலாற்
பன்ன கத்திறை பரித்த பார்மிசை
மன்னு பல்லுயிர் வளர்ந்து மல்கிற்றே.

(இ-ள்.) அம்மார்க்கண்டேய முனிவரைத் துன்பப்படுத்திய இயமன் உயிர் விட்டிறந்தமையால் ஆதிசேஷனுல் சுமக்கப்பட்டநிலவுலகத்தில் நிலைபெற்றுள்ள பலவுயிர்களும் விருத்தியாகிப் பரவியது.—எ-று. (௨௬௬)

முடிவின் றுமுயிர் முற்றும் பற்பகன்
மடிவின் றுகிய மலியும் பான்மைபாற்

படியின் மங்கையும் பரம்பொ றுதுமா
லடியின் வீழ்ந்துதன் னயர்வு கூறினாள்.

(இ-ள்.) அளவில்லாத உயிர்களனைத்தும் அனேக காலம் இறத்தலில்லாமல் விருத்தியாகின்ற தன்மையினால், பூமிதேவியும் அப்பாரம் பொறுக்க முடியாமல் திருமாலினது பாதங்களில்வீழ்ந்து வணங்கித் தனது துன்பத்தை விண்ணப்பஞ் செய்துகொண்டனள். எ-று. (உ௬எ)

கொண்டல் வண்ண னுங் குலிச பாணியும்
புண்ட ரீகமேற் பொலிந்த போதனு
மண்டர் யாவரு மணுகி யாலமார்
கண்டன் மேவுறுங் கயிலை மேவினர்.

(இ-ள்.) மேகவண்ணராகிய திருமாலும், வச்சிராயுதத்தை யேந்திய கையினையுடைய இந்திரனும், தாமரைமலரில் வசிக்கின்ற பிரமனும், மற்றைத் தேவர்களனைவருஞ் சேர்ந்து விஷந்தங்கிய கண்டத்தினையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளுந் திருக்கயிலையை யடைந்தார்கள்.—எ-று. (உ௬அ)

காவி யம்மலர் கடுத்த கந்தரத்
தேவு பொற்பதஞ் சென்னி சேர்த்தியே
தாவில் பங்கயச் சதுர்மு கத்தனும்
பூவை வண்ணனும் போற்றன் மேயினர்.

(இ-ள்.) அழகிய நீலோற்பல மலர்போலுங் கண்டத்தினையுடைய சிவபெருமானது அழகிய திருவடிகளைத் தங்கள் முடியிற் சூடிவணங்கி, அழிவற்ற கமலாசனனாகிய பிரமனும், காயாம்பூவைப்போலும் நிறத்தினையுடைய திருமாலுந் துதிக்கத் தொடங்கினார்கள்.—எ-று. (உ௬௯)

நீல கண்டனு நிமலன் முன்னரே
சாலு மன்பொடுந் தாழ்ந்து போற்றலு
மாலை நோக்கிநீர் வந்த தென்னென
வேலு மாற்றினு லிதனைக் கூறுவான்.

(இ-ள்.) காளகண்டராகிய சிவபெருமானது திருமுன்னேநின்று மிக்க பேரன்போடும் வணங்கித் துதிக்கவும், (அவ்வெம்பெருமான்) திருமாலைப்பார்த்து நீங்கள் வந்த காரணம் யாதென்று கேட்டருளவும், (அத்திருமால்) தக்கமுறைமையோடும் இதனைக்கூறுவாராயினர்.—எ-று. (உஎ0)

வேறு.

பங்கய மிசைவரு பகவ னுதியா
விங்குள தலைவர்க ளெவரு மித்துணைத்
தங்கட மரசிய றவாது போற்றினு
ரங்கவர் தமக்குநீ யளித்த வண்ணமே.

(இ-ள்.) தாமரைமலரி லிருக்கின்ற பிரமன் முதலாக இங்கு வந்துள்ளவர்களனைவரும் இதுவரையில் அவரவர்களது அரசுமுறைமைகளைத் தேவரீர் அவர்களுக்களித்தருளியவண்ணமே தவறாமல் காத்துக்கொண்டு வந்தார்கள்.—எ-று (உஎக)

ஐயநீ யெனக்குமுன் னளித்த காப்பினைத்
துய்யநின் றிருவரு டுணைய தாகவே
வைகலும் புரிகுவன் வழாது மற்றதற்
கெய்திய தோர்குறை யிசைப்பன் கேட்டிநீ.

(இ-ள்.) ஐயனே! தேவரீர் அடியேனுக்கு முன்னர் அளித்தருளிய காத்தற்றொழிலைத் தூய்மையாகிய தேவரீரது திருவருளையே துணையாகக்கொண்டு தவறுமல் நாள்தோறுங் காத்து வருகின்றேன், அத்தொழிலுக் கொருகுறை யுண்டாயிற்று, அதனைச் சொல்லுகின்றேன் தேவரீர்கேட்டருள்வீராக.—எ-று. (உ௭உ)

நின்பெருந் திருவரு ணினைகி லாமையாற்
றென்புலக் கோமகன் சிதைந்து போயினன்
மன்பதைக் குலம்பிற வளர்ந்து மிக்கன
துன்பமுற் றனளவை சுமக்கும் பூமகள்.

(இ-ள்.) தேவரீரது பெரிய திருவருட்டிறத்தை யெண்ணுமையால் தென்றிசைத்தலைவனுகிய இயமன் இறந்துபோயினன்; மக்கட் கூட்டங்கள் வளர்ந்து மிகுதியாக விருக்கின்றன; அதனுல், அவ்வுயிர்களைச் சுமக்கின்ற பூமிதேவியானவள் வருந்துகின்றனள்.—எ-று. (உ௭௩)

தன்புடை யெவற்றையுந் தாங்கு கின்றவ
டுன்புற வுயிரெலாந் தோன்றித் தோன்றியே
பின்பிற வாமலே பெருகி வைகுமே
லென்படு மென்படு மெனது காவலே

(இ-ள்.) தன்னிடத்து எல்லாப் பொருள்களையுந் தாங்குகின்ற பூமிதேவியானவள் வருந்தும்படி எல்லாவுயிர்களும் பிறந்து பிறந்து பின்பு இறவாமல் விருத்தியாய் நிலைத்திருக்குமாயின், எனது காவற்றொழில் யாது பயன்படும்?—எ-று. (உ௭௪)

இறுத்திடு மரசினுக் கெவரு மில்லைநீ
செறுத்திட லந்தகன் செய்த தீமையைப்
பொறுத்தரு ளவன்றனைப் புரிதி யிங்கிது
மறுத்திட லென்றடி வணங்கி வேண்டவே.

(இ-ள்.) சங்காரத் தொழிலுக்கு எவர்களுமில்லை, இயமன்செய்த கொடுமையைப்பற்றித் தேவரீர் கோபங்கொள்ளாமல் பொறுத்தருளி அவனை மீட்டும் எழுப்பியருளவேண்டும்; இதனைத் தேவரீர் தடைசெய்யாதருள்வீராகவென்று திருவடிகளில் வணங்கி வேண்டிக்கொள்ளவும்.—எ-று. (உ௭௫)

அந்தக வெழுகென வமல நாயகன்
முந்தருள் புரிதலு முடிந்த கூற்றுவன்
வந்தனன் றொழுதனன் வணங்கித் தாள்பட
வுய்ந்தன னடியனென் றுணர்ந்து போற்றினன்.

(இ-ள்.) இயமனே! நீ எழுந்திருக்கக் கடவையென்று மலரகிதராகிய சிவபெருமான் மிக்க திருவருளைச் செய்யவும், இறந்த இயமன் உயிர்பெற்றெழுந்து திருமுன்னடைந்து தொழுது வணங்கித் தேவரீரது திருவடி பட்டமையால் அடியேன் உய்ந்தேனென்று கூறித் துதித்தனன்.—எ-று. (உ௭௬)

போற்றிடு தருமனைப் புராரி நோக்கியே
சாற்றிடு கின்றனன் றயங்கு கண்டிகை
நீற்றொடு புனைந்தெமை நினையு நீரர்பாற்
கூற்றுவன் யாமெனக் குறுகு வாயலை.

(இ-ள்.) அவ்வாறு துதித்த இயமனைச் சிவபெருமான் பார்த்து அருளிச்செய்கின்றனர், விளங்குகின்ற ருத்திராக்ஷகண்டிகையையும் விபூதியையுந் தரித்து

எம்மைத்தியானிக்கின்ற அடியார்களிடத்தில் யான் இயமனென்று நீ அடையாதிருக்கக் கடவை.—எ-று. (உ எ எ)

நண்ணருங் கதிபெறு நமது தொண்டரை
மண்ணுல கத்தவர் மனித ரேயென
வெண்ணலை யவர்தமை யாமென் றெண்ணுதி
கண்ணுறி னன்னவர் கழலின் வீழ்தியால்.

(இ-ள்.) அடைதற்கரிய முத்திபெறுதற் குரியவர்களாகிய நமது அடியார்களை இவர்கள் மண்ணுலகத்துள்ளவர்களென்றும் மனிதர்களென்றும் நினையாதே; அவ்வடியார்களை யாமென்றே நினைக்கக்கடவை; அவர்களைக் கண்டால் பாதங்களில் வீழ்ந்து வணங்கக்கடவை.—எ-று. (உ எ அ)

கண்ணிய மனமொழி காய மீறதா
வெண்ணிய கருவிக ளிடைய தாகவே
புண்ணிய மொடுபவம் புரியு மேனையர்
விண்ணொடு நிரயமேன் மேவச் செய்திநீ.

(இ-ள்.) நினைக்கப்பட்ட மனம்வாக்குக் காயமீறாகஎண்ணப்பட்ட கருவிகளைத் துணையாகக்கொண்டு புண்ணிய பாவங்களைச் செய்கின்ற மற்றவர்களை நீ சொர்க்க நரகங்களில் அடையச்செய்யக் கடவை —எ-று. (உ௯ க)

என்றருள் புரிந்துநின் படையொ டேகென
மன்றம ரடிமிசை வணங்கி முன்னரே
பொன்றிய பகட்டொடும் பொருநர் தம்மொடுந்
தென்றிசை புகுந்துதன் செயலின் மேவினன்.

(இ-ள்.) என்றிவ்வாறு திருவருள்புரிந்து நினதுபரிவாரங்களுடன் செல்லக் கடவையென்று கட்டளையிட்டருளவும், கனகசபையில் திருநடனஞ்செய்தருளும் அவ்வெம்பெருமானது திருவடிகளில் வணங்கி முன்னமே இறந்தெழுந்த எருமைக்கடாவுடனும் வீரர்களுடனும் யமலோகத்தை யடைந்து தனது தொழிலில் தங்கியிருந்தனன்.—எறு. (உ அ0)

சித்தசற் புரிதரு செங்கண் மான்முதன்
மொய்த்திடு கடவுளர் முனிவர் மும்முறை
நித்தனை வணங்கினர் கயிலை நீங்கினர்
தத்தம துறையுளிற் சார்தன் மேயினர்.

(இ-ள்.) மன்மதனைப் பெற்ற திருமால் முதலாக நெருங்கிய தேவர்களும் முனிவர்களுஞ் சிவபெருமானை மும்முறை வணங்கித் திருக்கயிலையினின்று நீங்கினவர்களாய்த்தங்கள் தங்கள் வாசஸ்தானங்களுக்குச் சென்றார்கள்.—எ று. (உ அ க)

கொன்னவி லடுபடைக் கூற்றன் பண்டுபோ
லின்னமும் விளைகுவ தென்கொ லோவென
மன்னருள் பெற்றமார்க் கண்டன் மாக்கதை
பன்னினர் முன்னமும் படர்தற் கஞ்சுமால்.

(இ-ள்.) அச்சத்தைத் தருகின்ற கொலைப்படையினை யேந்திய இயமனானவன் முன்புபோல இன்னும் யாது விளையுமோவென்று கருதி,நிலைபெற்ற திருவருளைப்பெற்ற மார்க்கண்டேய முனிவரது திவ்யசரித்திரத்தைச் சொல்லுகின்றவர்களுக்கு முன்னேயும் அடைதற்கு அஞ்சுவான்.—எ-று. (உ அ உ)

ஆதலிற் குச்சக னருந்த வத்திலோர்
மாதுயி ரளித்தனன் மால்க ளிற்றினைக்
காதுகை நீக்கியொண் கடவு ளாக்கியே
மேதகு விண்ணிடை மேவச் செய்தனன்.

(இ-ள்.) ஆதலால், குச்சக முனிவர் தமது அருமையாகிய தவத்தினால் ஒரு பெண்ணின் உயிரை மீட்டுக்கொடுத்தனர், பெரிய யானையைக் கொல்லுந் தொழிலினின்று நீக்கிச் சிறந்த தேவனாகச்செய்து உயர்ந்த விண்ணுலகத்தி லடையச்செய்தனர்.—எ-று. (உஅரு)

உதவிய மிருககண் டேயன் மாலயன்
முதலவர் புகழ்தரு முதன்மை பெற்றனன்
விதிமுறை யவனருண் மிருகண் டொப்பிலோர்
புதல்வனைப் பெற்றனன் புரிந்த நோன்மையால்.

(இ-ள்.) (அக்குச்சகமுனிவர்) பெற்ற மிருககண்டேய முனிவர் திருமால் பிரமன் முதலியவர்கள் புகழத்தக்க முதன்மையைப் பெற்றனர், விதிப்படி அம்மிருககண்டேயர் பெற்ற மிருகண்டு முனிவர் தாம்செய்த அரிய தவத்தினால் ஒப்பற்ற (மார்க்கண்டேயரென்னும்) ஒரு புதல்வனைப் பெற்றனர்.—எ-று. (உஅசு)

அப்பெருந் திருமக னாற்று நோன்பினாற்
றப்பரும் விதியினைத் தணந்து கூற்றுவன்
றுப்பினை யகற்றியே தொலைவு கண்டுபின்
னெப்பொழு தத்தினு மிறப்பின் றாயினன்.

(இ-ள்.) அந்தப் பெருமை வாய்ந்த சிறந்த திருப்புதல்வராகிய மார்க்கண்டேய முனிவரர் செய்த தவத்தினால் தவிர்க்கமுடியாத விதியைக் கடந்து இயமனது வலிமையையொழித்து அவனிறக்கச்செய்து, பின்பு எக்காலத்திலும் இறப்பில்லாமல் சிரஞ்சீவி பெற்றனர்.—எ-று. (உஅஎ)

**மார்க்கண்டேயப்படல முற்றிற்று.**

ஆக திருவிருத்தம் - சஅசு.

---

உ

முருகன்றுணை.

---

# மாயையுபதேசப்படலம்.

அன்னது சரதமே யறிதி ராதலா
லின்னமு மொழிகுவ னியற்று நோன்பென
முன்னுறு காசிப முனிவன் செப்பலு
நன்னய மாயவ ணகைத்துக் கூறுவாள்.

(இ-ள்.) (புதல்வர்களே! யாமிது காறுங் கூறிய) அச்சரிதம் உண்மையே அதனை யறிந்துகொள்ளுங்கள். ஆதலால் நீங்களனுஷ்டிக்க வேண்டிய விரதங்களை இன்னமுஞ்சொல்லுகின்றேன் கேளுங்களென்று எதிரில் நிற்கின்ற காசிபமுனிவரர்

கூறுதலும், (அவரருகில்நின்ற) நல்ல சாதுரியத்தினையுடைய மாயையானவள் சிரித்துக்கொண்டு சொல்லத்தொடங்கினாள்.—எ-று. (க)

மறைதெரி முனிவநீ வாய்மை யாகிய
வுறுதியை மொழிந்தனை யுயர்ந்த வீடுறு
மறிவுடை முனிவரர்க் கன்றி நாமருள்
சிறுவருக் கித்திறஞ் செப்ப லாகுமோ.

(இ-ள்.) வேதங்களை யுணர்ந்த முனிவரோ! நீர் உண்மையாகிய உறுதியைக் கூறினீர் உயர்வுபொருந்திய மோக்ஷவீட்டை யடைகின்ற ஞானத்தினையுடைய முனிவரர்களுக்கல்லாமல் நாம் பெற்ற புதல்வர்களுக்கு இவ்வாறு சொல்லுதல் கூடுமோ?

நன்பெருஞ் செல்வமு நவையில் கொற்றமு
மின்பமு மழிவிலா திருக்கு மாயுளு
மன்பெருஞ் சீர்த்தியு மறுவில் வாழ்க்கையு
மன்புடை யினையவ ரடைதல் வேண்டுமால்.

(இ-ள்.) நம்மிடத்து அன்புள்ளவர்களாகிய இவர்கள் நன்மை மிக்க பெருஞ்செல்வத்தையும், குற்றமற்ற வெற்றியையும், சுகத்தையும், அழியாத ஆயுளையும், நிலைபெற்ற பெரிய கீர்த்தியையும், களங்கமற்ற வாழ்வினையு மடைதல்வேண்டும். (ங)

காதலா லவையெலாங் கடிதிற் பெற்றிட
மாதவ முனிவர வகுத்தி யென்றலு
மீதுகொ லோவுன தெண்ண நீயவர்க்
காதகு மியல்பினை யறைதி யென்னவே.

(இ-ள்.) விருப்பத்துடன் அவை யனைத்தையும் இவர்களடையும் வண்ணம் மகத்தாகிய தவத்தினையுடைய முனிவரோ! நீர் வகுத்துக்கூறக் கடவீரென்று சொல்லுதலும், (அதனைக் கேட்ட காசிபமுனிவரர் அம்மாயையைப்பார்த்து) உன் னபிப்பிராயம் இதுவோ? ஆயின், நீயே இவர்களுக்காகத்தக்க வியல்புகளைச்சொல்லக்கடவை என்று கூறுதலும்.—எ-று. (ச)

மாயவ டன்சிறார் வதன நோக்கியே
தூயவிம் முனிவரன் சொற்ற துண்மையே
யாயினு முங்களுக் காவ தன்றவை
நீயிர்கள் கேண்மென நெறியிற் கூறுவாள்.

(இ-ள்.) மாயையானவள் தன் புதல்வர்களது முகத்தைப்பார்த்துப், பரிசுத்தராகிய இம்முனி சிரேஷ்டர் கூறியது உண்மையே; ஆயினும் உங்களுக்கவை வேண்டியவைகளல்ல; (உங்கட்கு வேண்டியவற்றை யான் கூறுகின்றேன்) நீங்கள் கேட்கக் கடவீர்களென்று முறைப்படி சொல்லத்தொடங்கினாள்.—எ-று. (ரு)

மாற்படு புந்தியின் மறுவில் சேதனம்
பாற்படு முயிர்க்கெலாம் பவத்தின் மாண்பய
னூற்படு கல்வியி னுவல்வ ளத்தினின்
மேற்படு கின்றதில் விழுமி தில்லையே.

(இ-ள்.) மயக்கத்தினையுடைய மனத்திற்பொருந்திய குற்றமற்றநல்லறிவும், பலவகை யாகவுள்ள எல்லா உயிர்களுக்கும் பிறந்ததனு லடையவேண்டிய சிறந்த பயனுமாகிய விரண்டும், சாஸ்திரவுணர்ச்சியிலும், புகழ்ந்து சொல்லப்பட்ட செல்வத்திலும் மேலாகச் சொல்வதில் வேறேயுயர்ந்த தொன்றுமில்லை.—எ-று. (சு)

திருமைகொள் வளனொடு தீதில் கல்வியி
னிருமையி னொன்றினை யெய்தி டாதெனி
னருமைகொ ளவ்வுயி ரதனி னுற்றவும்
பெருமைய துடையது பேயின் றோற்றமே.

(இ-ள்.) சிறப்புமிக்க வளப்பம் குற்றமற்ற கல்வியென்னு மிரண்டிலொன்றை அடையாது போகுமாயின்; அருமையாகிய அந்த வுயிரைப்பார்க்கிலும் பேய்ப் பிறப்பே மிக்க மேன்மையை யுடையது.—எ-று. (எ)

பிறந்தநல் லுயிர்க்கெலாம் பெருமை நல்கிய
விறந்ததோர் பொருண்மைய திரண்டின் வன்மையு
மறிந்தவர் தெரிவரே லரிய கல்வியிற்
சிறந்தது திருவெனச் செப்ப லாகுமால்.

(இ-ள்.) (உலகத்தில்) பிறந்த நல்ல வுயிர்களுக்கெல்லாஞ் சிறப்பைத் தருகின்ற அளவற்ற அவ்விரண்டு பொருள்களின் உறுதியை விவேகிகள் ஆராய்வாராயின், அருமையாகிய கல்வியிலுஞ் சிறந்தது செல்வமே யென்று சொல்லத்தகும்.—எ-று.

சொற்றரு கலையெலாந் தொடர்ந்து பற்பகல்
கற்றவ ராயினுங் கழிநி ரப்பினு
லற்றவ ராவரே லாக்கம் வேண்டியே
பற்றலர் தம்மையும் பணிந்து நிற்பரால்.

(இ-ள்.) சொல்லத்தக்க சாஸ்திரங்களை யெல்லாம் விடாமல் அநேககாலம் படித்தவர்களாயினும், மிக்க வறுமையினால் பொருளில்லாதவர்களாயிருப்பின் அப் பொருளை விரும்பிப் பகைவர்களையும் வணங்கி நிற்பார்கள்.—எ-று. (கூ)

அளப்பருங் கல்வியு மாக்கம் யாவையுங்
கொளப்படு தன்மையிற் குறைவு றாதவை
வளர்த்தலின் மேதக வனப்புச் செய்தலிற்
கிளத்திடின் மேலது கேடில் செல்வமே.

(இ-ள்.) அளவிட்டுரைத்தற்கரிய கல்வியையும் எல்லாச் செல்வங்களையுங் கொள்ளத்தக்க தன்மையில் குறையாமல் அவற்றை வளர்க்குந் தன்மையினாலும் உயர்ந்த அழகை யுண்டாக்குதலினாலும் சொல்லுமிடத்து உயர்ந்ததாயுள்ளது அழிவற்ற செல்வமேயாம்.—எ-று. (க0)

நூலுறு கல்வியை நுனித்து நாடியே
வாலறி வெய்திய வரத்தி னோர்களு
மேலுறு திருவொடு மேவு றாரெனின்
ஞாலமங் கவர்தமை நவையுள் வைக்குமால்.

(இ-ள்.) சாஸ்திரங்களிற் பொருந்திய வித்தைகளை நுட்பமாக விசாரித்து உண்மை யறிவடைந்த சிறப்பினை யுடையவர்களும் மேன்மைபொருந்திய செல்வத்தை யடையாதிருப்பார்களாயின், உலகமானது அவர்களைக் குறைவாக மதிக்கும். (கக)

அளப்பரும் விஞ்சையே யன்றி மேன்மையு
முளப்படு கருமமு முயர்ந்த சீர்த்தியுங்
கொளப்படு கொற்றமும் பிறவுங் கூட்டலால்
வளத்தினிற் சிறந்தது மற்றொன் றில்லையே.

(இ-ள்.) அளவற்ற கல்வியையன்றி மேன்மையையும் நினைக்கத்தக்க தருமத்தையும் உயர்வுபொருந்திய கீர்த்தியையும் அடையத்தக்க வெற்றியையும் மற்றவைகளையுஞ் சேர்ப்பதனால் செல்வத்தினுஞ் சிறந்தது வேறொன்று மில்லை.—எ-று. (கஉ)

ஆக்கமிங் கொருவரா லணுக வேண்டுமே
லூக்கமுண் டாவரோ வுறுவ ரன்னது
நீக்கமில் கொள்கையி னிற்ப ரேயெனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால்.

(இ-ள்.) ஒருவரால் செல்வத்தை யடையவேண்டுமோயின், முயற்சி யுடையவர்களாயிருப்பின் அச்செல்வத்தை யடைவார்கள். அம்முயற்சியையும் விடாது செய்வார்களானால் உயர்வுபொருந்திய பெருஞ்செல்வமானது விரைவில் வந்து சேரும். ()

அவ்வளம் பலவகைத் தாகு மாங்கவை
யெவ்வரும் பெறுகில ரியல்பின் யாவையுஞ்
செவ்விதி னீர்பெறச் சிந்தை செய்யுமி
னுய்வது வேறிலை யுறுதி யீதலால்.

(இ-ள்.) அந்தச் செல்வம் பலவகையாக விருக்கும்; அவைகளை யாவருமடைந்தாரில்லை; முறைப்படி அவையனைத்தையும் நன்றாக நீங்களடையும்பொருட்டு மனத்தில் நினையுங்கள்; உறுதியிதுவேயன்றிப் பிழைக்கத்தக்க வழிவேறு கிடையாது.

எங்கள்பா னென்னலின் யாமந் தோன்றலாற்
றுங்கமா நிருதர்தங் கதியிற் றுன்னினீ
ருங்களுக் கொன்னல ரும்பர் யாவருந்
தங்கடம் முயற்சியாற் றலைமை பெற்றுளார்.

(இ-ள்.) எங்களிடத்தில் நேற்று இராத்திரி நீங்கள் பிறந்தமையால் உயர்வாகிய அசுரப்பிறவியை யடைந்தீர்கள், ஆதலால், உங்களுக்குப் பகைவர்களா யுள்ளவர்கள் தேவர்கள், அவர்களனைவரும் தங்கள் தங்கள் முயற்சியினால் முதன்மைபெற்றிருக்கின்றார்கள்.—எ-று. (சரு)

நீவிர்க் ளணையரி னிவந்த கொள்கைய
ராவிர்கள் போலுமா லாக்க மெய்துவான்
மூவிரு முயலுதிர் முயலும் பெற்றியை
யேவிருங் கேட்கயா னெடுத்துக் கூறுகேன்.

(இ-ள்.) நீங்கள் அவர்களைப் பார்க்கிலும் உயர்ந்த செல்வமுடையவர்களாவீர்கள்; ஆதலால், அச்செல்வத்தை யடையும்பொருட்டு நீங்கள் மூவரும் முயற்சி செய்யுங்கள்; அதற்கு வேண்டிய முயற்சியின் தன்மையை யாவருங் கேட்கும்படி யானெடுத்துச் சொல்லுகின்றேன்.—எ-று.

போலும் - ஒப்பில்போலி. ஆல்-அசை. (சசு)

ஆனதோ ரித்திசை யாலந் தீவெனத்
தானறை கிற்பரித் தரைக்கு நேரதாய்ப்
போனதோ ருத்தர பூமி யாயிடைத்
தானவர் நோற்றிடத் தகுவ தென்பவே.

(இ-ள்.) நிலைபெற்ற இந்தத் திசையை ஆலந்தீவென் றுரைப்பார்கள், இவ்விடத்திற்கு நேராகப் போகப்பட்டுள்ள உத்தரபூமியில் அசுரர்கள் தவஞ்செய்யத்தக்க விடமென்று கூறுவார்கள்.—எ-று.

ஆயிடை - சுட்டு நீண்டு யகரவுடம்படுமெய்பெற்றது. (௧௭)

அப்புவி யதனிடை யாற்றற் கிறிலா
விப்பரி சனமொடு மேகி யாயிடை
யொப்பறு குண்டமு மொழிந்த செய்கையு
மெய்ப்பட வியற்றுதிர் வேள்வி செய்யவே.

(இ-ள்.) அந்த ஆலந்தீவில் முடிவில்லாத வல்லமையையுடைய இந்தப் பரிசனங்களுடன் சென்று, அவ்விடத்தில் ஒப்பற்ற ஓமகுண்டத்தையும் மற்றைத் தொழில்களையும் யாகஞ் செய்யும்பொருட்டு மெய்ம்மைபொருந்த அமைக்கக்கடவீர்கள். ()

காரிகொ ளிந்தனங் கதழ விட்டுமுன்
ஞாழன் மூட்டியே யழலின் பண்டமுஞ்
சோரியு மூன்களும் பிறவுந் தூவியே
வீரர்கள் புரிதிரால் வெய்ய வேள்வியே.

(இ-ள்.) வீரர்களாகிய புதல்வர்களே! விஷசம்பந்தமான விறகினை நன்றாக எரியும்படி யிட்டு முன்னே அரிய அக்கினியை மூட்டி அவ்வக்கினிக்கு வேண்டிய பொருள்களையும், உதிரத்தையும், மாமிசங்களையும், மற்றைப் பொருள்களையும் இட்டுக் கொடிதாகிய யாகத்தைச் செய்யக்கடவீர்கள்.—எ-று. (௧௯)

செங்கண்மா லயன்முதற் றேவர் யாவரு
மெங்கணு யகனென விறைஞ்ச மேதகு
கங்கைவார் சடைமுடிக் கடவுட் போற்றியே
பொங்குதீ வேள்வியைப் புரிதிர் பற்பகல்.

(இ-ள்.) செந்தாமரைமலர்போலுங் கண்களையுடைய திருமால் பிரமன் முதலிய தேவர்களனைவரும் எங்கள் முதல்வனென்று வணங்கும்படிச் சிறப்புற்றுள்ள கங்கைநதியையணிந்த நீண்டசடைமுடியையுடைய சிவபெருமானைத்துதித்து அநேக காலம் மிகுதியாகத் தீப்பற்றி யெரிகின்ற யாகத்தைச் செய்யக்கடவீர்கள்.—எ-று.

அம்மகம் புரிதிரோ லருளின் முன்னுறீஇ
மைம்மலி மிடறுடை வான நாயகன்
மெய்ம்மையி னீவிர்கள் வெஃகி யாங்கெலா
மிம்மையி னெய்துமா றினிது நல்குமால்.

(இ-ள்.) அவ்வாறாகிய யாகத்தைச் செய்வீர்களாயின், கருநிறம் விளங்குங் கண்டத்தினையுடைய சிவபெருமான் கருணையோடும் உங்களுக்கு முன்னே யெழுந்தருளி நீங்கள் உண்மையாக விரும்பியவை யனைத்தையும் இம்மையிலேயே யடையும்படி இனிமையோடு கொடுத்தருளுவார்.—எ-று. (௨௧)

மூண்டவிவ் வேள்வியை முயல மூவிரு
மாண்டுசென் றுற்றுழி யன்ன தற்கவண்
வேண்டிய பொருளெலாம் வேறு வேறதா
யீண்டுற வுதவுவ னேகு வீரென்றாள்.

(இ-ள்.) நிலைபெற்ற இந்தயாகத்தை முயன்று செய்யும்படி நீங்கள் மூவரும் அந்த ஆலந்தீவில் சென்றிருக்கும்பொழுது, அந்த யாகத்திற்கு அங்கு வேண்டிய பொருள்களனைத்தும் வெவ்வேறாக வந்து பொருந்தும்படிச் செய்கின்றேன்; ஆதலால் நீங்கள் போகக்கடவீர்களென்று கூறினாள்.—எ-று. (௨௨)

தந்திர நெறிகளுந் தவறில் பான்மையு
மந்திர முறைகளு மற்று முள்ளவு
மிந்திர வளனுறு மியல்பின் மூவர்க்கு
முந்திர வுதவிய முதல்வி நல்கினள்.

(இ-ள்.) முன்னளிரவில்பெற்ற தாயாகிய மாயையானவள் இந்திரச்செல்வத்தை யடையத்தக்க வியல்பினையுடைய (சூரன் சிங்கமுகன் தாரகனென்னும்) மூன்றுபுதல்வர்களுக்கும் சாஸ்திர நெறிகளையும், அவற்றினின்றுந் தவறாத முறைமைகளையும், மந்திர முறைமைகளையும், மற்றுமுள்ளவைகளையும் போதித்தனள்.—எ-று.

தந்திரநெறிகளும் என்பதற்கு,உபாயமானமார்க்கங்களையும் எனப்பொருள் கூறினுமாம்.　　(உரு)

இன்னதோர் காலையி னீன்ற மாயவ
டன்னொடு தந்தையைத் தாழ்ந்து போற்றியே
யன்னவர் விடுத்திட வவுணர் மேலையோன்
பின்னவர் தம்மொடும் பெயர்வுற் றேகினன்.

(இ-ள்.) இவ்வாறு போதித்த சமையத்தில், அவுணர்கள் தலைவனாகிய சூரபன்மன் தங்களைப்பெற்ற தாயாகிய மாயையினையும் தந்தையாகிய காசிப முனிவனையும் வணங்கித் துதித்து, அவர்கள் ஏவுதலினால் தன் தம்பியர்களுடன் அவ்விடத்தினின்று நீங்கிச்சென்றனன்.—எ-று.　　(உச)

மாயை யுபதேசப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ருகo.

---

உ

முருகன்றுணை.

# மாயை நீங்கு படலம்.

ஏகிய காலையி லினையின் மாயவண்
மோகமொ டயலுறு முனியை நோக்கியே
போகுவன் யானினிப் புதல்வர்ப் பேணுவா
னீகவ லேலென நிறுவிப் போயினள்.

(இ-ள்.) அவ்வாறு சென்றபொழுது ஒப்பற்றமாயையானவள் மோகத்துடன் தன்னருகில்நிற்கின்ற காசிபமுனிவனைப்பார்த்து (முனிவரே!) யான் புதல்வர்களைப்பாதுகாக்கும்பொருட்டுச் செல்லுகின்றேன்; ஆதலால் நீர் வருந்தாதிருக்கக்கடவீரென்று கூறிவிட்டுச்சென்றனள்.—எ-று.　　(க)

போதலு முனிவரன் புந்தி யுள்ளுறு
மாதர வுந்திட வவள்பின் னேகியே
யேதில னுமென வெணைவிட் டேகுத
னீதிய தாகுமோ வுரைத்தி நீயென்றான்.

(இ-ள்.) மாயை சென்றவுடனே, காசிபமுனிவர் தாம் மனத்திற்கொண்டு ள்ள மோகமானது செலுத்துதலால் அம்மாயையின் பின்னேதொடர்ந்து நீ என்னே அயலானைப்போல விட்டுச்செல்லுதல் நீதியாகுமோ ? நீயே சொல்லக்கடவையென் று கூறினர்.—எ-று. (உ)

ஆயிழை புகலுவா ளழுங்கன் மாதவ
சேயினர் பொருட்டுனேச் சேர்ந்த தன்றியீண்
டேயது நின்னுட னிருக்க வன்றியான்
மாயவ ளறிகென மறைந்து போயினள்.

(இ-ள்.) அதற்கு மாயைகூறுவாள், முனிவரே! நீர் வருந்தாதீர்; யான்புதல் வர்களைப்பெறும் பொருட்டு உம்மைச்சேர்ந்ததேயன்றி, இங்குவந்தது உம்முடன்வா ழ்வதற்கன்று; யான்மாயையென்பதைத்தெரிந்துகொள்ளக்கடவீரென்றுகூறி மறைந் துசென்றனள்.—எ-று. (ங)

அருவினள் சேறலு மற்பு தத்தவண்
வருபொருள் யாவையு மறைந்து போயின
வெருவரு முறைபுரி வேந்தை விட்டக
திருவொடு பெயர்வதோர் செல்வம் போலவே.

(இ-ள்.) மாயையானவள் அருவமாக மறைந்துசென்றவுடன் அஞ்சத்தக்க கொடுங்கோன்மையைச் செலுத்துகின்ற அரசனைவிட்டுச் செல்கின்ற திருமகளுடன் போகின்ற செல்வத்தைப்போல, ஆச்சரியமக அங்குண்டாகிய பொருள்க ளனைத்தும் மறைந்துபோயின.—எ-று.

கொடுங்கோலரசனைவிட்டுத் திருமகளும் மற்றைச் செல்வங்களும் நீங்கு தல்போல, மாயை சென்றவுடனே அங்குண்டாகிய பொருள்களனைத்தும் மறைந் தனவென்க. (ச)

மாணல னெய்திய மாயை தன்னுருக்
காணல னாகிய கமலத் தோன்மகன்
பூணலன் றெளிவினைப் பொருமி யேங்கியே
யாணல னழிவுற வழுங்கி மாழ்குவான்.

(இ-ள்.) மாட்சிமை தங்கிய அழகினைக்கொண்ட மாயையி னுருவத்தைக் காணாதவராகிய காசிபமுனிவர் மனந்தெளியாதவராய் விம்மியேக்கமுற்று ஆண்தன் மையழியும்படி வருந்தித் துன்பக்கடலில் மூழ்கினர்.—எ-று. (ரு)

வாவியுந் தடங்களும் வரையு மேனவுந்
தேவருங் காமுறச் செறிந்த வற்புதம்
யாவையுங் காண்கிலா னிரங்கி நின்றன
ளுவியில் குரம்பைய னுகு மென்னவே.

(இ-ள்.) பொய்கைகளும், தடாகங்களும், மலைகளும், மற்றவைகளும் தே வர்களும் விரும்பும்படி நெருங்கிய அற்புதங்க ளனைத்தையுங் காணாதவராய் உயிரில் லாவுடம்புள்ளவரென்று சொல்லும்படி வருந்தி நின்றனர்.—எ-று.

குரம்பை - உடம்பு. (சு)

மைந்தன துறுதுயர் மலரின் மேவிய
தந்தைத னுணர்வினுற் றகவி னுடியே

யந்தர நெறியில்வந் தங்கண் மேவலு
மெந்தைவந் தனன்கொலென் றெழுந்து தாழவே.

(இ-ள்.) கமலாசனத்தி லெழுந்தருளி யிருக்குந் தந்தையாகிய பிரமதேவன் தனது புத்திரராகிய காசிபமுனிவ ரடைந்துள்ள துன்பத்தைத் தனதுணர்ச்சியினால் தகுதியாக வாராய்ந்து ஆகாயமார்க்கமாகவந்து அங்கு அடைந்தவுடனே, (அக்காசிப முனிவர்) எமது தந்தை வந்தனரென்று எழுந்து வணங்கவும்.—எ-று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (எ)

ஆசிகள் செய்துநின் னரிய நோன்பொரீஇக்
காசிப மெலிவது கழறு கென்றலும்
பேசின னிகழ்ந்தன பிரமன் கேட்டுளங்
கூசின னவன்மனங் கொள்ளத் தேற்றுவான்.

(இ-ள்.) பிரமன் ஆசீர்வாதஞ்செய்து, காசிபனே! உனது அருமையாகிய தவத்தை விட்டு நீ வருந்துவதைக் கூறக்கடவையென்று வினவுதலும், (அம்முனிவர்) நடந்தவைகளை யுரைத்தனர்; அதனைப்பிரமன் கேட்டு மனங்கூசினவனாய் அம்முனிவரது மனத்திற் பொருந்தும்படி தெளிவிப்பானாயினான்.—எ-று. (அ)

வேதமுங் கலைகளு முணர்ந்து மேலதா
மூதறி வெய்திய முனிவ நீயொரு
மாதுதன் பொருட்டினான் மைய லெய்தியே
பேதுறு கின்றியோ பேதை மாந்தர்போல்.

(இ-ள்.) வேதங்களையும் கலைஞானங்களையுமறிந்து மேலாகிய பேரறிவினை யடைந்த முனிவனே! நீ ஒருபெண்ணின் காரணமாக மயக்கத்தை யடைந்து மூடமனிதர்களைப்போல மனம்வருந்துகின்றனையோ?—எ-று. (௯)

கண்டதோர் நறவமே காம மேயென
வெண்டரு தீப்பொரு ளிருமைத் தென்பரா
லுண்டுழி யழிக்குமொன் றுணர்வை யுள்ளமேற்
கொண்டுழி யுயிரையுங் கொல்லு மொன்றரோ.

(இ-ள்.) காணப்பட்ட கள்ளும் காமமுமென்று நினைக்கத்தக்க கொடியபொருள்கள் இரண்டென்று கூறுவார்கள்; அவற்றுள் ஒன்று, உண்டவிடத்து அறிவைமயக்கும், மற்றொன்று மனத்தில் நினைத்தவிடத்து உயிரையுங் கொன்றுவிடும்.—எ-று.()

உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற்
கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத்
தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினாற்
கள்ளினுங் கொடியது காமத் தீயதே.

(இ-ள்.) அது நினைத்தாலுஞ்சுடும், உணரத்தக்ககாதில் கேட்டாலுஞ் சுடும்; அடைந்து பின்பு அதனை நீக்கினாலுஞ்சுடும்; இத்தன்மையினால் காமாக்கினியானது கள்ளைப்பார்க்கிலும் மிகக்கொடியதேயாம்.—எ-று. (கக)

ஈட்டுறு பிறவியும் வினைகள் யாவையுங்
காட்டிய தினையதோர் காம மாதலின்
வாட்டமில் புந்தியான் மற்றந் நோயினை
வீட்டின ரல்லரோ வீடு சேர்ந்துளார்.

(இ-ள்.) மேலுமேலுஞ் சேர்க்கப்பட்ட பிறவியையும், வினைகளனைத்தையும் காட்டப்பட்டது இத்தகைய காமமேயாதலால், சோர்வற்ற நல்லறிவினால் அந்தக் காமநோயை யொழித்தவர்களல்லரோ மோக்ஷவீட்டை யடைந்தவர்கள்.—எ-று. (கஉ)

நெஞ்சினு நினைப்பரோ நினைந்து ளார்தமை
யெஞ்சிய துயரிடை யீண்டை யுய்த்துமேல்
விஞ்சிய பவக்கடல் வீழ்த்து மாதலா
னஞ்சினுந் தீயது நலமில் காமமே.

(இ-ள்.) (காமத்தை) மனத்திலும் நினைப்பார்களோ? அவ்வாறு நினைத்தவர்களை மிகுதியாகிய துன்பத்தில் பொருந்தும்படிச் செலுத்திப் பின்பு அதிகரித்துள்ள பிறவிக்கடலில் தள்ளும், ஆதலால் பயனில்லாதஅக்காமமானது விஷத்தைப்பார்க்கிலுங் கொடியதாகும்.—எ-று. (கங)

ஆதலிற் காமமுற் றழுங்க லீபுணர்
மாதரும் வஞ்சக மாயை யாகுமாற்
றீதிவ் ணிழைத்தனை தீரத் தொன்மைபோ
னீதவம் புரிகென நிறுவி யேகினான்.

(இ-ள்.) ஆதலால் நீ காமங்கொண்டு வருந்தாதே; நீபுணர்ந்த பெண்ணும் கொடிய வஞ்சகத்தையுடைய மாயையேயாகும்; நீ இங்குப்பாவஞ் செய்தனை; அப்பாவம் நீங்கும்படி முன்போலத் தவத்தைச் செய்யக்கடவையென்று கூறி அவனை நிறுத்திவிட்டுச் சென்றனன்.—எ-று. (கச)

மாறக னுன்முகன் வாய்மை தேர்தலுந்
தேறினன் மையனோய் தீர்ந்து காசிப
னேறமர் கடவுளை யிதயத் துன்னியே
வீறொடு நோற்றனன் வினையி னீங்குவான்.

(இ-ள்.) மாறுபாடில்லாத பிரமனது உண்மை மொழிகளைக் கேட்டுணர்ந்தவுடனே, காசிபமுனிவரர் காமநோய் நீங்கித் தெளிந்தவராய் அப்பாவத்தினின்று நீங்கும்பொருட்டு இடபவாகனத்தினையுடைய சிவபெருமானைத் தமது மனத்தில் தியானித்து மேன்மையோடு தவஞ்செய்தனர்.—எ-று. (கரு)

ஆண்டவ ணகன்றிடு மணங்கு தன்சிறார்
மூண்டிடு தீமக முயலு மெல்லையில்
வேண்டிய துதவுவான் விமலற் போற்றியே
பூண்டனள் பெருந்தவம் புகரி னேவலால்.

(இ-ள்.) அப்பொழுது அவ்விடத்தினின்று நீங்கியமாயையானவள் தனது புதல்வர்கள் பற்றியெரிகின்ற அக்கினி சம்பந்தமாகிய யாகத்தைச் செய்யும்பொழுது அவர்களுக்கு வேண்டிய பொருள்களை யுதவும் பொருட்டுச் சுக்கிரபகவானது கட்டளையினால் சிவபெருமானைத் துதித்துப் பெரியதவத்தைச் செய்தனள்.—எ-று. (கசு)

காசிபன் மாயையைக் கலந்த வண்ணமு
மாசுறு மவுணர்கள் வந்த வண்ணமும்
பேசின மங்கவர் பெற்ற பேற்றினை
யீசன தருளினா லினியி யம்புவாம்.

(இ-ள்.) காசிபமுனிவரர் மாயையைப் புணர்ந்ததன்மையும், குற்றம் பொருந்திய அசுரர்கள் தோன்றியதன்மையும் இதுவரையில் கூறினோம்; இனி, அவ்வசுரர்கள் சிவபெருமானது திருவருளினால் அடைந்த பேற்றைச்சொல்லுகின்றோம்.-எ-று.

**மாயைநீங்குபடல முற்றிற்று.**

ஆ திருவிருத்தம்-ருஎஎ.

உ
முருகன்றுணை.

# அசுரர்யாகப் படலம்.

அன்னைத னேவலா லழன்ம கஞ்செய
வுன்னின னாகியே யொல்லை யேகிய
முன்னவ னிளைஞர்தம் முகத்தை நோக்கியே
யின்னது கேண்மென விசைத்தன் மேயினன்.

(இ-ள்.) மாதாவின் கட்டளையினால் அக்கினி சம்பந்தமாகிய யாகத்தைச்செய்தற்கு நினைத்து விரைவாகச் செல்லுகின்ற சூரபன்மன் தம்பியர்களது முகத்தைப் பார்த்து இதனைக்கேளுங்களென்று சொல்லத்தொடங்கினான்.—எ-று. (க)

அடல்கெழு பெருமக மதனை யாற்றவே
வடதிசை செல்வுழி மல்கு தானையின்
கடையொடு நெற்றியிற் காவ லாகியே
படருதி ராலெனச் சூரன் பன்னினன்.

(இ-ள்.) வலிமை மிக்க பெரிய யாகத்தைச் செய்யும்பொருட்டு நாம் வடதிசைக்குச் செல்லும்பொழுது, மிகுதியாகிய இந்தச் சேனையின் கடையிலும் முதலிலும் காவலாகச் செல்லுங்களென்று சூரபன்மன் கூறினான்.—எ-று. (உ)

இனிதென வடிதொழு திளவ லாரக
னனிகம தீற்றினி லேடைவ லென்றனன்
முனிதரு கோளரி முகத்து மொய்ம்பினன்
றனியக னெற்றியிற் சார்வ லென்றனன்.

(இ-ள்.) அவ்வாறே நல்லதென்று சூரபன்மனது பாதங்களை வணங்கித் தம்பியாகிய தாரகன் யான் சேனைகளின் பின்னணியில் செல்லுகின்றேனென்று கூறினான்; கோபிக்கின்ற வலிய சிங்கமுகாசுரன் விசாலமாகிய சேனைகளின் முன்னணியில் செல்லுகின்றேனென்று கூறினான்.—எ-று. (ங)

பின்னவ ரிருவரும் பேசி யித்திற
முன்னவன் விடைகொடு முறையிற் போயினா
ரன்னவர் பணியினா லார்ப்புற் றேயெழீஇச்
சென்னெறி படர்ந்தன சேனை வெள்ளமே.

(இ-ள்.) தம்பிமார்களிருவரும் இவ்வாறு கூறிச் சூரனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு முறையே சென்றார்கள்; அவர்களது கட்டளையினால் சேனைகளாகிய வெள்ளங்கள் ஆரவாரித்தெழுந்து செல்லவேண்டியவழியே சென்றனன்.—எ-று. (ச)

வேறு.

தானவ ரனிக வெள்ளந் தரைமிசைப் பெயர்த லோடு
மாநில மடந்தை யாற்றாள் வருந்தினள் பணிக ளோடு
கோனுமங் கயரா நின்றான் குலவரை கரிகண் மேரு
வானவுஞ் சலித்த வாதி கமடமு மழுங்கிற் றன்றே.

(இ-ள்.) அசுரர்களது சேனைவெள்ளங்கள் பூமியில் நடந்து செல்லுதலும், பெரிய பூமிதேவியானவள் தாங்கமுடியாதவளாய் வருத்தமடைந்தனள்; அஷ்டமாநாகங்களுடன் ஆதிசேஷனும் அங்கு வருந்தினன்; அஷ்டகுலாசலங்களும் அஷ்டகஜங்களும் மேருமலையும் சலிப்படைந்தன; ஆதிகூர்மமும் வருந்தியது.—எ-று.

அசுரர்களது மிகுதியைத் தாங்கமுடியாமல் பூமிதேவியும், அப்பூமியைத் தாங்கியிருக்கின்ற அஷ்டமாநாகம், ஆதிசேஷன், அஷ்டகுலாசலம், அஷ்டதிக்கியானை, மேரு, ஆதிகூர்மம் இவைகள் வருந்தினவென்க. (ரு)

மண்டுறு பூழி யீட்ட மலரய னுலகந் தாவி
விண்டல மீது போதன் மேதினி யசுர வெள்ள
மெண்டரு நிலைமைத் தன்றால் யான்பொறுக் கல்லே னென்னாக்
கொண்டல்வண் ணத்த னோடு கூறுவான் சேறல் போலும்.

(இ-ள்.) நெருங்கிய புழுதிக்கூட்டமானது பிரமனுலகத்தைத் தாவி (அதன்மேலுள்ள) ஆகாயத்திற் செல்லுதல் (எதுபோலுமெனின்,) பூமிதேவியானவள் அசுரச்சேனைகள் அளவிட்டுரைக்குந் தன்மையுடையனவன்று; ஆதலால் யான் சுமக்கமாட்டேனென்று மேகவண்ணராகிய திருமாலுடனே விண்ணப்பஞ் செய்துகொள்ளும்படிச் செல்லுதலை யொக்கும்.—எ-று. (சு)

காமுறு மவுணர் தானைக் கனைகழற் றழனி முன்ன
ராழியங் கடலு நேரா யார்த்திடுங் கொல்லோ வென்னா
வூழுறு சினங்கொண் டென்ன வுலப்பிலா வவுணர் தாளிற்
பூழிய தெழுந்து சென்று புணரிவாய் பொத்திற் றன்றே.

(இ-ள்.) வயிரம் பொருந்திய அவுணச் சேனைகளது சப்திக்கின்ற வீரக்கழலினது ஓசையின்முன்னே ஆழமாகியசமுத்திரமும் நேராக சப்திக்குமோ வென்று முறைப்படி கோபங்கொண்டாற்போலக் கெடுதலில்லாத அசுரர்களது கால்களிலுள புழுதிகளெழுந்துசென்று கடலின் வாயை மூடியது.—எ-று. (எ)

மரந்துகள் பட்ட மேரு வரையெனச் சிறந்த மெய்ப்பூ
தரந்துகள் பட்ட யாதுந் தனதெனத் தாங்கு சேட
னுரந்துகள் பட்ட நேரு முயிர்துகள் பட்ட தொன்னாட்
புரந்துகள் பட்ட தேபோற் புவிதுகள் பட்ட தன்றே.

(இ-ள்.) மரங்கள் துகளாயின; மேருபருவதமென்று சொல்லப்பட்ட மெய்ம்மையாகிய மலையானது துகளாயிற்று; எவற்றையுந் தன்னதென்று தாங்குகின்ற ஆதிசேஷனது வலிமையானது துகளானது; எதிர்ந்த வுயிர்கள் துகளாயின; முன்னாளில் முப்புரங்களும் துகளாயெரிந்த தன்மையைப்போல நிலவுலகந் துகளாயிற்று.

ஆடலி னவுண வெள்ளத் தரவமு மனையர் செல்ல
நீடிய பூழி தானு நெறிப்பட வருத லோடு
நாடிய வமர ரஞ்சி நடுக்குறா நமது வேதா
வீடினன் கொல்லோ நீத்தம் விண்ணூறும் போலு மென்றார்.

(இ-ள்.) வெற்றிபொருந்திய அவுணச்சேனைகளினாரவாரமும், அவர்கள் செல்லுதலால் மிகுதியாகக் கிளம்பியபுழுதியும் முறைப்படி மேலெழுந்து வருதலும், அதனைப்பார்த்த தேவர்கள் அஞ்சி நடுக்கங்கொண்டு நமது பிரமன் இறந்தனனோ? அதனால் பிரளயவெள்ளமானது நமது விண்ணுலகத்தை யடைகின்றதோ? என்று கூறினார்கள்.—எ-று. (கூ)

மாசக திருவின் மிக்க மாயவண் முன்னந் தந்த
தேசுறு மவுண வெள்ளந் திசையெலா மயுத மென்னும்
யோசனை யெல்லை யாக வும்பரி னிடத்து மற்றைக்
காசினி யிடத்து மாகிக் கலந்துடன் றழுவிச் சென்ற.

(இ-ள்.) குற்றமற்ற அழகிற் சிறந்த மாயையானவள் முன்பு பெற்ற அழகு பொருந்திய அவுணச்சேனைகள் திசைகளிலெல்லாம் பதினாயிரம் யோசனை யளவாக வானத்திலும் பூமியிலுமாகக் கலந்து ஒன்றாகச் சூழ்ந்துசென்றன.—எ-று. (க0)

அஞ்சின னமரர் வேந்த னயர்ந்தன னங்கிப் புத்தே
ளெஞ்சினன் வன்மை கூற்ற னினைந்தன னிருதி யெய்த்தான்
றஞ்சமில் வருணன் வாயுத் தளர்ந்தனன் றனதன் சோர்ந்தா
னெஞ்சழிந் தனனீ சான னிருதர்பே ரரவஞ் சூழ.

(இ-ள்.) அசுரர்களது பேரோசையானது சூழ்ந்தெழுந்தவுடனே, தேவராஜனாகிய இந்திரன் பயந்தனன்; அக்கினிதேவன் சோர்வடைந்தனன்; இயமன் வலிகுன்றினன்; நிருதி வருந்தினன்; ஆதரவில்லாத வருணனானவன் இளைத்தனன்; வாயுவானவன் தளர்ச்சியடைந்தனன்; குபேரன் சோர்வடைந்தனன்; ஈசானன் மனங்கலங்கினான்.—எ-று. (கக)

வள்ளுறு மெயிற்றுச் செங்கண் வலிகெழு மவுணர் தானை
வெள்ளம தேகப் பூழி விரிந்தெழீஇ யாண்டும் போகிப்
பொள்ளென மெய்யே தீண்டிப் புறத்தெழி லழித்த வானோ
ருள்ளுணர் வழித்த தன்றே யனையர்க ளார்க்கு மோதை.

(இ-ள்.) கூர்மை பொருந்திய பற்களையும் சிவந்த கண்களையுமுடைய வலிமை மிக்க அசுரர்களாகிய சேனைவெள்ளமானது செல்லவும், (அதனாலுண்டாகிய) புழுதிகள் பரந்தெழுந்து எவ்விடங்களிலுஞ் சென்று விரைவாகத் தேவர்களது தேகத்தைத் தீண்டி அவர்களது உடம்பின் புறத்தழகைக் கெடுத்தன; அவ்வசுரர்கள் ஆரவாரிக்கு மோசையானது அத்தேவர்களது உள்ளறிவைக் கெடுத்தது.—எ-று. (கஉ)

பெருமிவ் வவுணர் தானைப் பெருக்கின தணியின் முன்ன
ராரழல் வெருவு சீற்றத் தரிமுகன் செல்லக் கூழை
தாரக விறலோன் செல்லத் தலையளி புரிந்து நாப்பட்
சூரனென் றுரைக்கும் வெய்யோன் றுண்ணென வேகினானால்.

(இ-ள்.) செல்லுகின்ற இந்த அவுணச்சேனைகளாகிய படைவகுப்பின் முன்னே அரிய அக்கினியுமஞ்சத்தக்க கோபத்தினையுடைய சிங்கமுகன் செல்லவும், பின்னணியில் தாரகனாகிய வீரன் செல்லவும், சூரனென்று கூறுங் கொடியவன் நடுவில் மிகுந்த அன்பு காட்டிக்கொண்டு விரைவாகச் சென்றனன்.—எ-று. (கங)

வேறு.

ஆன பொழுதத் தவர்க்கா ணியநினைந்து
தானவர்கள் போற்றுந் தனிக்குரவன் றண்டரள
மானமிசை யூர்ந்து வந்தணுகி வல்லவுணர்
சேனையெனச் செல்லுந் திரைக்கடலைக் கண்ணுற்றான்.

(இ-ள்.) அந்தசமயத்தில் அசுரர்களால் துதிக்கத்தக்க ஒப்பற்ற ஆசிரியனாகிய சுக்கிரன் அவ்வசுரர்களைக்காணும்படி நினைந்து குளிர்ந்த முத்துப்பல்லக்கின்

மீதேறி வந்தடைந்து, வலிய அசுரச்சேனைகளாகப்போகின்ற அலையினையுடைய கடலைப்பார்த்தனன்.—எ-று. (கச)

கண்ணின்ற வீரர் கடுப்பும் பெருமிடலு
முண்ணின்ற காழ்ப்பு முரனுங் கொடுந்திறலு
மெண்ணங்கொள் வேர்வு மிகலுந் தெரிவுற்றுத்
துண்ணென்ன நெஞ்சம் புகருந் துளக்குற்றான்.

(இ-ள்.) தனக்கு முன்னே நிற்கின்ற வீரர்களது கடுமையினையும், மிக்க வல்லமையினையும், மனத்திற் பொருந்திய வயிரத்தினையும்,மனவூக்கத்தினையும்,கொடியவல்லமையினையும், மிகுதியாக நினைக்கின்ற கோபத்தினையும்,பகைமையினையும் பார்த்து சுக்கிரனும் விரைவாக மனங்கலங்கினன்.—எ-று. (கரு)

கண்டே னிவர்தங் கடுந்திறலி னுட்சிதனைப்
பண்டே யவுண ரளப்பிலரைப் பார்த்துணர்வேன்
றண்டே னிதழியான் றன்னருளின் வண்ணமோ
வுண்டே யிவருக் கொருவர்நிக ருற்றாரே.

(இ-ள்.) யான் முற்காலத்தில் அநேகம் அசுரர்களைப் பார்த்தறிந்திருக்கின்றேன், இப்போது இவ்வசுரர்களது மிக்கவல்லமைத் தன்மையைப்பார்த்தேன், (இவர்களிவ்வாறிருத்தல்) குளிர்ந்த தேன்பொருந்திய கொன்றைமலர்மாலையை யணிந்த சிவபெருமானது திருவருட்டிறமோ? இவர்களுக்குச் சமானமானவர்கள் யாராயினுமிருப்பார்களோ? (இரார்).—எ-று. (கசு)

வானோ ரிறையுடனு மாலுடனு மற்றுள்ள
வேனோ ருடனு மிகலாடி வென்றிடுகை
தானோர் பொருளோ தமையெதிர்ந்த மாற்றலர்த
மூனோ டுயிரை யொருங்குண்ணுந் தீயவர்க்கே

(இ-ள்.) தம்மை யெதிர்த்த சத்துருக்களது உடலையுமுயிரையும் ஒருங்கே யுண்ணத்தக்க கொடியவர்களாகிய இவர்களுக்கு இந்திரன் திருமால் முதலானதேவர்களோடும் மற்றவர்களோடும் எதிர்த்துப்போராடி அவர்களை வெல்லுதல் ஒருபெரியகாரியமோ.—எ-று. (கஎ)

இன்னோர்தம் வன்மைக் கிறுதி யிலவேனு
முன்னோர் தமைப்போன் முயலுந் தவவலியும்
பின்னோர் வரமும் பெரும்படையுங் கொண்டிலரா
லன்னோ விவர்க்குங் குறையுண்மை யாகியதே.

(இ-ள்) இவர்களதுபலத்திற்கு அளவில்லை ஆனாலும்,முன்னிருந்தவர்களைப்போல செய்யப்பட்ட தவவலிமையும், பின்னர் ஒப்பற்றவரமும்,உயர்ந்த ஆயுதங்களும்பெற்றுக் கொண்டாரில்லை. ஐயோ! இவர்களுக்குங்குறைபாடுண்டாகியதே.

தண்டத் திறையைக் கடந்த தனியாற்றல்
கொண்டுற் றவற்கே குறைகண் டிலமேனை
யண்டத் தவர்க்கு மனைவர்க்கு மொவ்வொர்குறை
யுண்டத் தகைமை யெவரு முணர்குவரால்.

(இ-ள்.) இயமனை வென்ற ஒப்பற்ற வலிமையினையுடைய சிவபெருமானிடத்தில் யாதொரு குறையுங்கண்டிலோம்; மற்றத்தேவர்களுக்கும் இன்னமுள்ளவர்களுக்கும் ஒவ்வோர்குறையுளது, அத்தன்மையை யாவருமறிவார்கள்.—எ-று. (கஅ)

ஆதலினின் ஞேர்பா லடைவுற் றிடும்வறுமை
போதுசில நோன்பு புரியி னகன்றிடுமா
லீதுநிலைத் தன்றே யிழிந்தோ ருயர்ந்திடுவர்
காதிபுதல்வ னிதற்குக் கரியன்றோ.

(இ-ள்.) ஆகையினால் இவர்களிடத்திற் பொருந்திய வறுமையானது சில காலந் தவஞ்செய்வார்களாயின் நீங்கும்; இவ்வறுமை நிலையாயுள்ளதன்று; தாழ்ந்தவர்களு முயர்வடைவார்கள்; இதற்குக் காதிபுத்திரராகிய விசுவாமித்திரரே சாக்ஷியாகும்.—எ-று.

விசுவாமித்திரர் அரசனாயிருந்து வசிட்டமுனிவரால் பலமுறை அவமானமடைந்து பின்னர் தவஞ்செய்து பிரமரிஷியாயினமையின், 'காதிபுதல்வ னிதற்குக் கரியன்றோ' என்று கூறினர். (உ0)

என்னப் பலவு மிசைத்துநின்று தானவர்கண்
மன்னர்க்கு மன்னாக வாழ்வெய்து சூரபன்மன்
முன்னுற் றிடவு முகமன் மொழிந்திடவு
முன்னுற் றனனு ணர்வுசேர் காப்பியனே.

(இ-ள்.) என்று பலவிதமாகச்சொல்லி நின்று விவேகியான சுக்கிராசாரியன் அசுரவரசர்களுக்குள் அரசனாகும்படியான வாழ்வினை யடையப்போகின்ற சூரபத்மனது எதிரிற் செல்லவும், உபசாரவார்த்தை கூறவும் நினைத்தனன்.—எ-று. (உக)

தீயின் றிறமுருக்குஞ் சீற்றத் தவுணனெதிர்
போயங் குறவும் புகன்றிடவுந் தானரிதா
லேயுந் தகுவருட னென்னுழையிற் சார்வதற்கோர்
மாயங்கொள் விஞ்சை புரிவே னெனமதித்தான்.

(இ-ள்.) அக்கினியின் தன்மையை யழிக்கத்தக்க பெருங்கோபத்தினையுடைய சூரபன்மனெதிரிற் செல்வதற்கு அவனோடு பேசுவதற்குங் கஷ்டமேயாம், பொருந்திய அசுரர்களுடன் அவன் என் வசப்பட்டு நிற்கும்படி ஒரு மாயா மந்திரத்தைச் செபிப்பேனென்று எண்ணினான்.—எ-று. (உஉ)

மண்ணி னுயிரை வசிகரிக்கு மந்திரமொன்
றெண்ணி விதிமுறையே நோக்கி யெதிர்சென்று
நண்ணிய வெஞ்சேனை நரலைநடு வட்புக்கா
னண்ண லவுணற் கணித்தா யடைகுற்றான்.

(இ-ள்.) உலகின்கண்ணுள்ள உயிர்களை வசீகரப் படுத்துகின்ற வோர் மந்திரத்தை முறைப்படிசெபித்துக்கொண்டு சூரனைப்பார்த்தபடியே அவனெதிர்முகமாகச் சென்று அவனுடன் வருகின்ற கொடிய சேனா சமுத்திரத்தி னடுவிலே புகுந்து அரசனாகிய சூரனுக்குச் சமீபத்திற் சென்றனன்.—எ-று.

புக்கான் - முற்றெச்சம். (உ௩)

கள்ள மிகுமவுணர் சிந்தையெனுங் காழிரும்பா
யுள்ள வுருகி யுரைகெழுமா யத்தீயி
னெள்ள வருங்கறையு மேகிநயந் திட்டனவால்
வெள்ளி மிகப்புணர்க்கின் மேலையுரு நின்றிடுமோ.

(இ-ள்.) மிக்க வஞ்சகம்பொருந்திய அசுரர்களது மனமென்று கூறும் வலிய இரும்பாயுள்ளவைகள் சொல்லப்பட்ட மாயையாகிய தீயில் உருகி, இகழத்தக்க

குற்றமும் நீங்கி நயப்படைந்தன ; சுக்கிராசாரியே (வசிகரமந்திரத்தை யுச்சரித்து) மிக்க உபாயஞ்செய்யின், முன்னையகுணவுருவம் நிலைக்குமோ?—எ-று.

'வெள்ளி மிகப்புணர்க்கின் மேலையுரு நின்றிடுமோ' என்பதற்கு, வெள்ளியை மிருதிவாக (ஒருபொருளின்மேல்) மேலேபூசினால் அதின்முன்னுருவம் நிற்குமோவில்லா, எனச் சிலேடைப் பொருள்தோன்றுமாறு காண்க. (உச)

சூழிக் கடலிற் றுவன்றுமவு ணர்ப்படைஞர்
காழற்ற புந்தியொடு கைதொழலுஞ் கேசரிக்கும்
பூழைக் கரன்றனக்கு முன்னைப் புரவலன்முன்
கேழுற்ற வாசி குரவன் கிளத்திடுவான்.

(இ-ள்.) சூழ்தலையுடைய கடலைப்போல நெருங்கியுள்ள அசுரச் சேனைகள் இளகிய மனத்தினுடனே கைகூப்பி வணங்குதலும், சிங்கமுகனுக்கும் தாரகாசுரனுக்கும் தமையனாகிய சூரபன்மனுக்கு முன்னே சென்று நின்று சுக்கிராசாரியன் உறுதியான ஆசிமொழிகளை யுரைப்பானாயினன்.—எ-று. (உரு)

வாலாதி மான்றேர் மகபதிக்கு மேனையர்க்கு
மேலாதி தானவர்கள் வெய்யதுயர் நோயகற்ற
வேலாதி யேகடுக மென்றுரைக்கு மின்மருந்து
போலாதி யென்ன வவுணன் புகன்றிடுவான்.

(இ-ள்.) பந்தயக் குதிரைகளைக் கட்டப்பட்டுள்ள இரதத்தையுடைய இந்திரனுக்கும் மற்றையர்களுக்கும் மேலாகக்கடவை; அசுரர்களது கொடிய துன்பமாகிய நோயை நீக்குதற்கு ஏலாதி கடுகமென்று சொல்லப்பட்ட இனிய மருந்தைப் போலாகக்கடவையென்று ஆசீர்வதிக்கவும், அதற்குச் சூரபன்மன் சொல்லுகின்றான்.

வாலாதி — பந்தயக்குதிரை. (உசா)

காரையூர் கின்ற கடவுளர்கோன் வைகலூறு
மூரையோ மேலை யுலகுதனி லுள்ளாரோ
பாரையோ கட்செவிகள் பாதலத்தை யோவெந்தா
யாரைநீ தேற்றே னிவணுற்ற வாறென்னே.

(இ-ள்.) எந்தையே! மேகத்தை வாகனமாகச் செலுத்துகின்ற இந்திரன் சதாகாலமும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஊரிலுள்ளவரோ? அதற்கு மேலுள்ள உலகத்திலுள்ளவரோ? நிலவுலகத்துள்ளவரோ? சர்ப்பங்கள் வாழ்கின்ற பாதலலோகத்துள்ளவரோ? தேவரீர் யார்? யான் தெளியாதவனா யிருக்கின்றேன்? நீர் இங்குவந்த காரணம் யாதோ?—எ-று. (உஎ)

உன்பாலென் னெஞ்ச முருகு மஃதன்றி
யென்பா னதுமுருகா நிற்கு மெனையறியா
தன்பாகி நின்ற தருந்தவத்தை யாற்றவனந்
தன்பா லுறுகுதற்குத் தாளுமெழு கின்றிலவே.

(இ-ள்.) தேவரீர் விஷயத்தில் என் மனமுருகுகின்றது ; இஃதன்றி, எனதெலும்பு முருகுகின்றது, என்னை யறியாமல் அன்பே யுருவமாகி நிற்கின்றது; அடியேன் அருமையாகிய தவத்தைச் செய்யும்பொருட்டு வனத்திற் செல்வதற்குக் கால்களும் எழவில்லை.—எ-று. (உஅ)

நன்னேயம் பூண்டு நடந்தா யுயிரெல்லா
மன்னே யெனவந் தளிக்குந் தகையாயோ

பின்னே யுனையெதிர்ந்தேன் யாக்கை மிகவருந்தி
முன்னே தமியேன் புரிந்ததவ மொய்ப்பன்றோ.

(இ-ள்.) தேவரீர் நல்ல அன்புகொண்டு இங்கு வந்தருளினீர்; எல்லா வுயிர்களையுந் தாய்போல வந்து காக்குந் தகுதியை யுடையவரோ? இப்பொழுது தேவரீரை யெதிர்ப்பட்டேன்; தேகம் மிகவும் வருந்தி முன்பு அடியேன்செய்த தவம் உறுதியானதன்றோ?—எ-று. (உக)

வேறு.

என்றலுங் கவிஞன் கேளா விருவிசும் பாற்றிற் செல்வே
னுன்றனி மரபிற் கெல்லா மொருபெருங் குரவ னேனே
னன்றிகொள் புகரோ மென்னு நாமமுற் றுடையே னின்பாற்
சென்றன னுறுதி யொன்று தெளித்திடல் வேண்டி யென்றான்.

(இ-ள்.) என்றிவ்வாறு சூரபன்மன் கூறவும், சுக்கிராசாரியன் அதனைக்கேட்டுச் (சூரனைப்பார்த்து) யான் ஆகாயமார்க்கத்திற் செல்லுகின்றவன்; ஒப்பற்ற உனது குலமரபுகளனைத்திற்கும் பெரிய ஆசாரியனாயுள்ளவன்; நன்மை பொருந்திய சுக்கிரன் என்னும் பெயரையுடையவன்; (அவ்வாறாகிய யான்) ஒரு உறுதி கூறவேண்டி உன்னிடத்தில் வந்தேனென்று கூறினான்.—எ-று. (கூ0)

அவுணர்கண் முதலா யுள்ளோ னுங்கது வினவி யார்த்த
வுவகைய னாகி யெந்தா யுய்ந்தன னிவண்யா னென்னக்
கவிஞனை யணுகி நின்று கைதொழூஉப் பரவ லோடுஞ்
சிவனருண் முறையா லன்னோ னித்திறஞ் செப்ப லுற்றான்.

(இ-ள்.) அசுரர்கள் தலைவனாகிய சூரபன்மன் அவ்வார்த்தையைக் கேட்டு மிக்க மகிழ்வடைந்தவனாய், எந்தையே! அடியேன் இங்குக் கடைந்தேறினேனென்று சுக்கிராசாரியனை நெருங்கிநின்று கைகூப்பி வணங்கவும், சுக்கிரன் சிவபெருமானது திருவருண்முறைமையினால் இவ்வாறு சொல்லத்தொடங்கினான்.—எ-று. (கூக)

நூன்முறை கேள்வி சான்றோய் நோற்றுநீ யிருக்கு மெல்லை
யூறுசெய் கிற்ப ரொன்னா ருனையவை குறுகா வண்ணங்
கூறுதுந் திறனென் றென்னாக் கூற்றுவற் கடந்த மேலோன்
மாறின்மந் திரமொன் று மரபுளி வழாம லீந்தான்.

(இ-ள்.) சாஸ்திர சம்பந்தமாகிய கல்வி கேள்விகளிற் சிறந்த சூரபன்மனே! நீ தவஞ் செய்துகொண்டிருக்கு மிடத்துப் பகைவர்கள் அதற்கு இடையூறு செய்வார்கள்; ஆதலால் உன்னை அவ்விடையூறுகள் சேராத விதமாக ஒரு உறுதி கூறுகின்றேமென்று காலகாலராகிய சிவபெருமானது மாறுபாடில்லாத ஒரு மந்திரத்தை விதிப்படித் தவறாமல் உபதேசித்தனன்.—எ-று. (கூஉ)

மொய்கெழு கூற்றை வென்ற முதல்வன்மந் திரத்தை நல்கி
வைகலு மிதனை யுன்னி மனத்தொடு புலனொன் றாக்கிப்
பொய்கொலை களவு காமம் புன்மைக ளுறாமே போற்றிச்
செய்குதி தவத்தை யென்னாச் செவியறி வுறுத்தல் செய்தான்.

(இ-ள்.) வலிமை மிக்க இயமனை வென்றருளிய சிவபெருமானது மந்திரத்தை யுபதேசித்து இம்மந்திரத்தை நாள்தோறுஞ் சிந்தித்து மனத்துடன் ஐம்புலன்களையும் ஒருமைப்படுத்திப் பொய், கொலை, களவு, காமம், இழிவு முதலியவைகளடையாமல் பாதுகாத்துத் தவத்தைச் செய்யக்கடவையென்று காதில் உபதேசித்தனன். ()

அப்பரி சனைத்துந் தேரா வவனடி வணங்கி யெந்தா
யிப்பணி புரிவ னென்ன வெல்லைதீ ராசி கூறி
மெய்ப்புகர் மீண்டு சென்றான் மேதகு மவுணர் சூழ
வொப்பரு மாயை செம்மல் வடபுலத் தொல்லை போனான்.

(இ-ள்.) சூரபன்மன் அத்தன்மையனைத்தையுமுணர்ந்து அவனது பாதங்களை வணங்கி, எந்தையே! அடியேன் இந்தப் பணியை (த்தவறாமற்) செய்கின்றேனென்று கூறவும், மெய்ம்மைபொருந்திய சுக்கிரன் அளவற்ற ஆசீர்வாதங் கூறித் திரும்பிச்சென்றனன்; பின்பு ஒப்புரைத்தற்கரியமாயை புதல்வனாகியசூரன் மேன்மைபொருந்திய அசுரர்கள் தன்னைச்சூழ்ந்துவரும்படி உத்தரதிசையில் விரைவாகச் சென்றனன்.—எ-று. (௬௪)

வழிமுறை பயக்க நோற்கும் வடபுலந் தன்னி லேகிப்
பழுமர வனத்தி லாங்கோர் பாங்கரிற் குறுகிச் சூர
னழல்கெழு மகத்தை யாற்ற வயுதயோ சனையுள் வைத்துச்
செழுமதி லதுசூழ் பான்மை செய்திடச் சிந்தை செய்தான்.

(இ-ள்.) சூரனானவன் தனது வமிசத்தினர்கள் முறையே விருத்தியாகும்படித் தவஞ்செய்கின்ற உத்தரதிசையிற் சென்று ஆலமரங்கள் நிறைந்த வனத்தில் ஒரு பக்கத்திலடைந்து, அக்கினி மிகுந்தெரிகின்ற யாகத்தைச் செய்யும்படிப் பதினாயிரம் யோசனைப் பூமியை யுள்ளே யடக்கி அப்பூமியைச் சூழ்ந்திருக்குந் தன்மையாகச் செழிய மதிலானது செய்யும்படித் தன் மனத்தில் நினைத்தனன்.—எ-று. (௬௫)

அடல்கெழு தானை யாகு மவுணர்தங் குழுவைக் கூவிப்
படிதனி லடுக்கல் யாவும் பறித்தனர் கொணரு வித்து
வடவரை நிவப்பிற் சூழ வாரியாப் புரிவித் தாங்கே
நடுநெடு வாயில் போக்கி ஞாயிலு மியற்று வித்தான்.

(இ-ள்.) வலிமை மிக்க சேனைகளாகிய அசுரர் கூட்டங்களை யழைத்து இப்பூமியிலுள்ள மலைகளனைத்தையும் பறித்துக்கொண்டு வரச்செய்து மேருமலையி னுயர்ச்சியைப்போலச் சூழ்ந்திருக்கும்படி மதிலாகச் செய்வித்து, அம்மதிலின் நடுவில் பெரிய வாயல்களை யமைத்து மதிலுறுப்புக்களையுஞ் செய்வித்தனன்.—எ-று. (௬௬)

நூற்படு செவ்வி நாடி நொய்தென வங்கட் செய்த
மாற்பெரு மதிலைச் சூழ வரம்பறு தானை தன்னை
யேற்புடை யரண மாக வியற்றுவித் தியாருஞ் செல்ல
நாற்பெருந் திசையி னூடு நலனுற வாய்தல் செய்தான்.

(இ-ள்.) சிற்பநூலிற் கூறிய முறைமையை யுணர்ந்து அங்கு விரைவாகச் செய்த மிகப்பெரிய மதிலைச் சூழும்படி அளவற்ற சேனைகளைப்பொருந்திய வேலியாகச் செய்வித்து அனைவருஞ் செல்லும்பொருட்டுப் பெரிய அந்நான்கு திசைகளிலும் நன்மை பொருந்தும்படி வாயில்களை செய்தனன்.—எ-று. (௬௭)

பூமியும் வானு மொன்றப் பொருப்பினாற் புரியப் பட்டு
நாமியம் புரிதா நின்ற நாமநீள் காப்பு மப்பா
லேமுறு மவுண வெள்ளத் தொடுத்திடு மெயிலுஞ் சேர்ந்து
நேமியங் கிரியுஞ் சூழ்ந்த நிசியுநேர்ந் திருந்த வன்றே.

(இ-ள்.) பூமியும் ஆகாயமும் ஒன்றுபடும்படி மலைகளினால் செய்யப்பட்டு நாம் சொல்லுதற்கரிதாக நின்ற மிக்க புகழையுடையகாவலும், அதன்புறத்தில் இருள்

நிறம் பொருந்திய அவுணவெள்ளங்களா லமைக்கப்பட்ட மதிலு மொன்றுகூடிச் சக்ரவாளகிரியையும் அதனைச் சூழ்ந்துள்ள இருள் பூமியையு மொத்திருந்தன.—எ-று.

ஏமுறுமவுணர் என்பதற்கு, இன்பம்பொருந்திய அவுணர்கள் எனப்பொருள் கூறினுமாம். ஏமம் என்பது எம் எனக் கெடுதல் விகாரம் பெற்றது. மலையாலமைக்கப்பட்ட மதில் சக்ரவாள கிரியையும், அவுணர்களா லமைக்கப்பட்ட மதில் இருள் பூமியையும் ஒத்திருந்தன வென்க. (கூஅ)

ஞாயிலின் வேலி மான நகங்களா லடுக்கல் செய்த
பாயிரு நொச்சி தன்னிற் படைகுலாம் புரிசை தன்னில்
வாயில்க டோறும் போற்ற மந்திர முறையாற் கூவி
நேயமொ டுபோர் மாதை நிறுவினா னிகரி லாதான்.

(இ-ள்.) ஒப்பற்ற சூரனானவன் மதிலுறுப்பினையுடைய வேலியைப்போல மலைகளால் அடுக்கிச் செய்யப்பட்ட பரவிய மதிலிலும், சேனைகளா லமைக்கப்பட்ட மதிலிலுமுள்ள வாயில்கடோறுங் காவல் செய்யும்படி வீரலக்ஷுமியை மந்திரமுறைமையால் வரவழைத்து அன்புடன் நிறுத்தினான்.—எ-று. (கூக)

ஆளரி முகத்தன் முன்னோ னடுக்கலாற் படையாற் செய்த
நீளிகல் வாரி முன்னர் நெறிகொண்மந் திரத்தாற் கூவிக்
கூளிக டொகையு மோட்டுக் குணங்கரின் றொகையுஞ் சீற்றக்
காளிக டொகையுஞ் சூழ்போய்க் காப்புற நிறுவி விட்டான்.

(இ-ள்.) ஆண்தன்மையினையுடையசிங்கமுகம்படைத்த அசுரனுக்குத்தமையனாகிய சூரனானவன் மலைகளாலும் சேனைகளாலுஞ் செய்யப்பட்ட மிக்க வலிமையமைந்த மதில்களின் முன்னே முறைமையினையுடைய மந்திரத்தினால் வரவழைத்துப் பூதக்கூட்டங்களும், உயர்ந்த பேய்க்கூட்டங்களும், கோபம் பொருந்திய காளிக்கூட்டங்களுஞ் சூழ்ந்து காவல்செய்யும்படி நிறுத்தினான்.—எ-று. (௪0)

கயிரவ மனைய செங்கட் காளிகண் முதலோர் தம்மைச்
செயிரற நிறுவிப் பின்னர்ச் சீர்கொண்மந் திரத்தாற் பன்னி
யயிரற நெடிது போற்றி யவுணர்கோ னங்கண் வந்த
வயிரவ கணத்தை வேள்வி காத்திட வணங்கி வைத்தான்.

(இ-ள்.) செவ்வல்லிமலர்போலுஞ்சிவந்தகண்களையுடையகாளிமுதலியவர்களைக் குற்றநீங்கும்படி நிறுத்திப் பின்பு சூரபன்மன் சிறந்த மந்திரத்தைச்செபித்துச் சோர்வின்றி மிகுதியாகத் துதித்து, அங்கு வந்த வயிரவகணத்தைத் தான் செய்யும் யாகத்தைக் காவல் செய்யும்படி வணங்கி இருத்தினான்.—எ-று. (௪க)

வேறு.

தள்ளரி தாகிய காப்பிவை செய்திடு தனிவீர
னுள்ளுற வாயிர வாயிர யோசனை யுறுநீளங்
கொள்வதொ ராழமு மாயிட வோரோம குண்டந்தா
னள்ளிடை யேபுரி வித்தனன் மாமக நலமாக.

(இ-ள்.) நீக்குதற்கரிய இத்தகைய காவலமைத்த ஒப்பற்ற வீரனாகிய சூரபன்மன் உள்ளிடத்திற் பொருந்த ஆயிரயோசனை நீளமும் ஆழமுமுடையதாய் ஒரு ஓமகுண்டத்தை (த்தான் செய்யும்) சிறந்த யாகமானது நன்கு முடியும்படி நடுவில் செய்வித்தனன்.—எ-று. (௪உ)

ஆதித னக்கனல் வேள்வி யியற்றிட வடுசூரன்
வேதித னைப்புரி வித்திடு காலையில் வியன்ஞாலம்
பாதக ரெம்மை வருத்தின ரென்று பதைப்புற்றுப்
பேதுற வெய்தி யிரங்கி யொடுங்கினள் பெயர்விலலாள்.

(இ-ள்.) கொலைத்தொழிலையுடைய சூரனானவன் சிவபெருமானைக் குறித்து அக்கினி சம்பந்தமாகிய யாகத்தைச் செய்யும்பொருட்டு ஓமகுண்டத்தைச் செய்விக்கும்பொழுது பெரிய பூமிதேவியானவள் பாதகர்களாகிய இவ்வசுரர்கள் எம்மை வருத்தினார்களென்று பதைத்து மனங்கலங்கிப் பெயர்தலில்லாதவளாய் வருந்தி யொடுங்கினாள்.—எ-று. (௬௩)

ஆழம தாயிர யோசனை யாவவ ணகழ்செய்கை
யூழுற நாடிய சேடனு மாயிடை யுறைவோருங்
கீழுறு வாரிவ ணெய்துவர் தானவர் கிளையென்னாத்
தாழுற வேகினர் முன்னுறு தொன்னிலை தனைநீங்கி.

(இ-ள்.) ஆயிரம் யோசனை யாழமாக அவ்விடத்திற் பூமியைத் தோண்டுந் தன்மையை முறைப்படி யுணர்ந்த ஆதிசேடனும், அங்கு வசிப்பவர்களும், அவுணர் கூட்டங்கள் பூமியைத் தோண்டுகின்றார்கள், ஆதலால்இங்கு வருவார்களென்று நினைத்துத் தாங்கள் முன்பு வசித்திருந்த பழையவிடங்களினின்றுநீங்கி அதற்குங்கீழுள்ள லோகத்திற் சென்றார்கள்.—எ-று. (௬௪)

ஆழ்ந்திட வம்மக வேதியி யற்றலு மதுபோழ்திற்
றாழ்ந்திடு தீர்த்தமெ ழுந்திட நாடிய தனிவேந்தன்
சூழ்ந்தனர் நுங்களை யுண்குவர் மீதெழ றுணிபன்றே
போழ்ந்தனை பாதல மேகென வவ்வழி போகிற்றால.

(இ-ள்.) அந்த ஓமகுண்டத்தை யாழமாகத்தோண்டவும், அப்பொழுது பாதாள கங்கையானது மேலெழுந்துவரவும், அதனைப்பார்த்த ஒப்பற்ற சூரபன்மன் எம்மைச்சூழ்ந்துள்ளவர்கள் உங்களை யுண்டுவிடுவார்கள், ஆதலால் மேலே பொங்கிவருதல் துணிவன்று; கீழே கிழித்துக்கொண்டு செல்லக்கடவையென்று கூறவும், (அக்கங்கை) அப்பாதலவழியே சென்றது.—எ-று. (௬௫)

போதலு மப்புன லவ்வழி சீழிடை போகின்ற
பாதல மீறெனு மேழ்நிலை யோரது பாராகின்
றீதிவண் வந்துள தென்னென வற்புத வியலெய்தாப்
பேதுறு கின்றனர் தீங்கிது வென்று பிடித்தாராய்.

(இ-ள்.) அப்பாதாளகங்கையானது அப்பொழுது கீழ்நோக்கிச் செல்லப்பெற்ற பாதலமீறாக ஏழுலகங்களிலு மிருகின்றவர்கள் அதனைப் பார்த்து இக்கங்கை இங்கு வந்தது யாதுகாரணமென்று ஆச்சரியமடைந்து, இது தீமையைத் தரத்தக்கதென்று கருதினவர்களாய் மனங்கலங்கினார்கள்.—எ-று.

பாதலமீறெனுமேழ்நிலையாவன.—அதலம், விதலம், சுதலம், தராதலம்,இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன. (௬௬)

சீறரி மாமுகன் முன்னவ னாகிய திறன்மேலோன்
மாறகல் குண்டம திவ்வகை நாப்பண் வகுப்பித்தே
நூறுட னெட்டது சூழ்தர வாக்குபு நவல்வேதி
வேறுமொ ராயிர வெட்டவை சுற்ற விதிப்பித்தான்.

(இ-ள்.) கோபிக்கின்ற சிங்கமுகாசுரனுக்குத் தமையனாகிய சூரபன்மன் மாறுபாடில்லாத ஓமகுண்டத்தை இவ்வாறு மத்தியில் செய்வித்து அதனைச் சூழும் படி நூற்றெட்டு ஓமகுண்டங்களை யமைத்து, அவற்றைச்சூழப் பின்னும் ஆயிரத் தெட்டு ஓமகுண்டங்களை யமைப்பித்தனன்.—எ-று. (சஎ)

மூவகை வேதியு மானபின் வேள்வியை முயல்வானு
யாவதொர் பல்பொருள் வேண்டி நினைந்தன னருள்யாயைப்
பாவனை பண்ணலு மங்கது கண்டனள் பரிவெய்தித்
தேவர்க டேவன தின்னரு ளாலிவை சேர்விப்பாள்.

(இ-ள்.) மூவகையாகிய ஓமகுண்டங்களுஞ் செய்தமைத்த பின்பு யாகஞ் செய்யத் தொடங்குகின்றவனும் அதற்கு வேண்டிய பல பொருள்களையும் விரும்பி, தன்னைப் பெற்ற மாயையை நினைத்தனன், இவன் இப்படி மாயையை நினைவுடன் அதனை யுணர்ந்த மாயையானவள் அவனது வேண்டுகோளுக் கிணங்கித் தேவதேவரா கிய சிவபெருமானது இனிய திருவருளால் இவைகளைச் சேர்ப்பிப்பா ளாயினள். ()

மூவகை வேதியாவன—ஆவகனீயம், காருகபத்தியம், தக்கணாக்கினி யென்பன; இவற்றுள், ஆவகனீயம் என்பது நாற்சதுரமாய் யாகசாலையின் வடக்கில் வைக்கப்படுவது; காருகபத்தியம் முச்சதுரமாய் அதன் தெற்கில் வைக்கப்படுவது; தக்கணாக்கினி அதற்குத் தெற்கில் பிதிரர்களுக்குப் பலி ஓம முதலியவைகளைச் செய்வதற்கு வைக்கப்படுவது எனவறிக. (சஅ)

சியம் வயப்புலி யாளியொ டெண்கு திறற்கைம்மாப்
பாய்பரி செச்சைக ளாதிய வாகிய பன்மாவின்
றாய புழுக்கலி னூனவி நேமி தொகுப்பித்தா
ளாய வுடற்குரு திக்கட றன்னையு மமர்வித்தாள்.

(இ-ள்.) சிங்கம், வெற்றிபொருந்திய புலி, யாளி, கரடி, வலிய யானை, தாவுகின்ற குதிரை, ஆடுகள் முதலிய பல மிருகங்களின் தூய்மைபொருந்திய மாமிச வுணவுகளாகிய அவிர்ப்பாக மலைகளைச் சேர்ப்பித்தனள், அம்மிருகங்களின் உடலிலுள்ள உதிரமாகிய கடலையும் அமைப்பித்தனள்.—எ-று. (சகூ)

பழிதரு மெண்ணெயெ னுங்கட லோரிடை பயில்வித்தா
ளிழுதெனும் வாரிதி தானுமொர் சாரி லிருப்பித்தா
டொழுதகு பாறயிர் நேமியு மோரிடை தொகுவித்தாள்
வழிதரு மட்டெனும் வேலையு மோரிடை வருவித்தாள்.

(இ-ள்.) பழிப்பைத் தருகின்ற வேப்பெண்ணெ யென்னுங் கடலை யோரிடத்தில் அமைப்பித்தனள்; நெய்க்கடலையும் ஒரு புறத்திலிருக்கச் செய்தனள்; தொழத்தக்க பால் தயிர் என்னுங் கடலையும் ஓரிடத்தில் அமைப்பித்தனள்; ஒழுகுகின்ற தேனென்னுங் கடலையும் ஓரிடத்தில் வருவித்தனள்.—எ-று.

மட்டு - கள் எனினுமாம். (ரு௦)

ஐயவி காருறு தீங்கறி யேமுத லழல்காலும்
வெய்யன பல்வளன் யாவையு மோர்புடை மிகுவித்தா
ணெய்யுறு முண்டியின் மால்வரை யோர்புடை நிறைவித்தாண்
மையறு தொல்பசு யாவையு மோர்புடை வருவித்தாள்.

(இ-ள்.) சிறுவெண்கடுகு, கார்ப்பினையுடைய இனிய மிளகுமுதலிய உஷ்ணத்தைத் தருகின்ற கொடியனவாகிய பல பொருள்களையும் ஒரு பக்கத்தில் நிறைப்பித்

தனள்; நெய்பொருந்திய அன்னமாகிய பெரிய மலையினை ஒரு புறத்தில் நிறைப்பித்தனள்; குற்றமற்ற பழைய பசுக்களனைத்தையும் ஒரு புறத்தில் வருவித்தனள். (ருக)

அரும்பெற னாயக மாகிய வேதியி னகனுப்பண்
வரும்பரி சானிறு வுற்றிட மேனுயர் வடிவாகிப்
பெரும்புவி யுண்டுமிழ் கண்ணபி ரான்றுயில் பெற்றித்தா
யுரம்பெறு வச்சிர கம்பமு தொன்றினை யுய்த்திட்டாள்.

(இ-ள்.) பெறுதற்கரிய நாயகமாகிய நடுக்குண்டத்தின் மத்தியில் தக்க முறைமையாக நிறுத்தும்படி மிகவுயர்ந்த வடிவமுடையதாய்ப் பெரிய நிலவுலகத்தை யுண்டுமிழ்ந்த திருமால் துயில்கொள்ளுந் தன்மையை யொத்ததாய் வலிமை பொருந்திய ஒரு வச்சிரஸ்தம்பத்தைச் சேர்ப்பித்தனள்.—எ-று. (ருஉ)

தெரிதரு செந்நெலின் வாலரி யோர்புடை செறிவித்தா
ளரிசன நீவிய தண்டுல மோர்புடை யமைவித்தாண்
மருமலர் மான்மத மாதிய வோர்புடை வருவித்தாள்
சுருவையு நீடுத ருப்பையு மோர்புடை தொகுவித்தாள்.

(இ-ள்.) காணப்பட்ட செந்நெல்லிலுள்ள வெள்ளிய அரிசிகளை ஒரு புறத்தில் சேர்ப்பித்தனள், மஞ்சள் கலந்த அரிசியை ஒரு பக்கத்தில் அமைப்பித்தனள்; மணம்பொருந்திய மலர், கஸ்தூரி, முதலிய பொருள்களை ஒரு புறத்தில் வருவித்தனள்; சுருவையையும் நீண்ட தருப்பைகளையும் ஒருபுறத்தில் சேர்ப்பித்தனள்.—எ-று.

சுருவை - நெய்துடுப்பு. (ருங)

ஆலமு யிர்க்கும் வரம்பில தாருவி னணிகொம்பர்
வாலிதின் மெய்ச்சமி தைக்குல மாமென வரையேபோற்
சாலமி குத்தன ளோர்புடை வேள்வி தனக்கென்றோர்
பாலினி ரைத்தனள் கொள்கல மாகிய படியெல்லாம்.

(இ-ள்.) விஷத்தைத் தருகின்ற அளவற்ற மரங்களின் அழகிய கிளைகளை தூய்மையாகிய நல்ல சமித்துக் கூட்டமென்று சொல்லும்படி மலைபோல மிகுதியாக ஒருபுறத்தில் சேர்த்தனள்; பாத்திரவிதங்களனைத்தையும் யாகத்திற்கு உதவவேண்டி ஒருபுறத்தில் நிறைந்தனள்.—எ-று. (ருச)

பொன்னி னகந்தொறும் வெள்ளி முளைத்திடு பொருளேபோற்
செந்நெலி னுற்றிடு தீம்பொரி யோர்புடை செறிவித்தே
துன்னிய வெண்முதி ரைக்குல மோர்புடை தூர்த்திட்டாள்
பின்னரும் வேண்டுவ யாவையு நல்கினள் பெருமாயை.

(இ-ள்.) பொன்னினிடந்தோறும் வெள்ளிகள் முளைக்குந் தன்மையைப் போலச் செந்நெலினின்றுண்டாகிய இனிய பொரிகளை ஒரு புறத்தில் சேர்ப்பித்து, வெண்மைபொருந்திய புன்செய்த் தானியவகைகளை ஒரு புறத்தில் நிறைப்பித்தனள்; பெரிய மாயையானவள் பின்னும் யாகத்திற்கு வேண்டிய பொருள்களனைத்தையும் அமைத்தனள்.—எ-று. (ருரு)

மூவகை யாயிர யோசனை யெல்லையின் முரண்வேள்விக்
காவன நல்கினள் போதலும் யாய்செய லதுநோக்கி
யோவிது யாரின் முடிந்திடும் வேண்டுவ வுய்த்தாளே
யேவரு மெண்ணவிவ் வேள்வியி யற்றுவ னினியென்றான்.

(இ-ள்.) மாயையானவள் மூவாயிரம் யோசனை யெல்லையளவும் மாறுபாட்டினையுடைய யாகத்திற்கு வேண்டியவைகளை வுண்டாக்கி விட்டுச் செல்லவும், சூரன்

தன் தாயாகிய மாயையின் செய்கையைப்பார்த்து, ஓகோ! இது யாராலாகும். யாகத்திற்கு வேண்டியவைகளைச் சேர்த்தனள்; ஆதலால், இவ்வியாகத்தை யாவர்களும் மதிக்கும்படி இனிச் செய்வேனென்று கூறினன்.—எ-று.

ஆபிசார வேள்வியாகலின், மூரண் யாகம் என்று கூறினர். (ருசு)

ஊன்புகு பல்வகை யுயிரு மீண்டிய வுலகெல்லாந்
தான்புகு தன்விறல் காட்டிய நாட்டிய தாணுப்போன்
மேன்புகு சூர னடுத்திகழ் வேதியின் மிகுநாப்பண்
வான்புகு வச்சிர கம்ப நிறீஇயினன் வலிதன்னால்.

(இ-ள்.) சரீரங்களில் பொருந்தியுள்ள பலவகை உயிர்களும் நெருங்கியிருக்கின்ற சகல வுலகங்களிலும் வியாபித்துள்ள தமது வலிமைத்திறத்தினைக் காட்டும்படி யெழுந்தருளிய ஸ்தாணுரூபமாகிய சிவபெருமானைப் போல, உயர்வுபொருந்திய வச்சிரஸ்தம்பத்தை மேன்மைபொருந்திய சூரனனவன்மத்தியில் விளங்குகின்ற ஓமகுண்டத்தின் நடுவில் தனது வலிமையினால் எடுத்து நாட்டினன்.—எ-று. (ருஎ)

வச்சிர கம்ப நிறீஇயின பின்னர் மகம்போற்று
மொச்சியி னாற்றிசை வாயி றொறுந்தொறு நொய்திற்போ
யச்சுறு வீர மடந்தையை யுன்னி யருச்சித்துச்
செச்சைக ளாதிப வூன்பலி நல்குபு செல்கின்றான்.

(இ-ள்.) வச்சிர ஸ்தம்பத்தை நாட்டியதன் பின்பு அந்த யாகத்திற்குக் காவலாக ஏற்படுத்தப்பட்டுள்ள மதிலின் நாற்புறத்திலுமுள்ள வாயில்களிலெல்லாம் விரைவாகச் சென்று பார்ப்பவர்களுக்கு அச்சத்தைத் தருகின்ற துர்க்காதேவியைத் தியானித்துப் பூசித்துச் செம்மறிக்கடா முதலியவற்றின் ஊனினைப்பலியாகக் கொடுத்துச் சென்றனன்.—எ-று. (ருஅ)

வேறு.

செல்லுஞ் சூர னெச்சியி னப்பட் செறிகின்ற
கல்லென் வெஞ்சொற் பூதர் தொகைக்குங் கணமென்றே
சொல்லும் பேயின் பல்குழு வுக்குஞ் சோர்வின்றி
யொல்லும் பான்மை யூன்பலி யாவையு முதவுற்றான்.

(இ-ள்.) அவ்வாறு சென்ற சூரன் அம்மதிலின் நடுவில் நெருங்கியிருக்கின்ற கல் என்னு மோசையைக் காட்டுங் கொடிய சொற்களையுடைய பூதர் கூட்டங்களுக்கும், கணமென்று சொல்லப்பட்ட பல பேய்க் கூட்டங்களுக்கும் சோர்வில்லாமல் தக்கபடி ஊன்பலிக ளனைத்தையுஞ் செய்தனன்.—எ-று. (ருகூ)

சீற்றத் துப்பிற் காளிக ளுக்குந் தென்பாலிற்
கூற்றைக் காயும் வயிரவர் தங்கள் குழுவுக்கு
மேற்றத் தோடு மர்ச்சனை செய்தே யினிதாகப்
போற்றிப் போற்றி யூன்பலி வேண்டுந புரிகுற்றான்.

(இ-ள்.) கோபத்திறத்தினையுடைய காளிகளுக்கும், தென்றிசையிலுள்ள இயமனைக் கொல்லத்தக்க வயிரவர்கூட்டங்களுக்கும் உயர்வோடும் அருச்சனை செய்து நன்றாகத் துதித்துத்துதித்து, வேண்டிய ஊன்பலிகளைச் செய்தனன்.—எ-று. ()

சூழா மெட்டே யாயிர வேதி தொறுநாப்பட்
காழார் நஞ்சி னிந்தன மிட்டுக் கனன்மூட்டித்

தாழா மேகன் றம்பிய ரோடுந் தகுசூர
னூழா னுடற் றானவி வர்க்க முறநேர்ந்தான்.

(இ-ள்.) தகுதியாகிய சூரபன்மனனவன் சூழ்ந்துள்ள ஆயிரத்தெட்டுக்குண்டங்களின் நடுவில் வயிரம்பொருந்திய எட்டி விறகினையிட்டுத் தீ மூட்டித் தனது தம்பிமார்களுடன் விரைவாக விதிப்படி யாராய்ந்து மாமிசாவிர்ப்பாகங்களைத் தக்கபடி அத்தியி விட்டனன்.—எ-று. (௬௧)

நேருந் தோறு மெந்தைத னாம நெறிசெப்பிச்
சேரு மன்பா லன்ன தவன்பாற் செலவுய்த்துச்
சூரன் பின்ன ரிம்மக மாற்றுந் தொழில்வல்லோ
னூரென் றுன்னித் தாரக னைப்பார்த் துரைகின்றான்.

(இ-ள்.) அவிர்ப்பாகங் கொடுக்கும்பொழுதெல்லாம் பொருந்திய அன்புடன் சிவபெருமானது திருநாமங்களை முறைப்படி யுச்சரித்துக்கொண்டு அந்த அவிர்ப்பாகங்களை அவ்வெம்பெருமானிடத்திற் செல்லும்படி அர்ப்பணஞ்செய்து பின்பு சூரபன்மன் யாகத்தைச் செய்யத்தக்க கிரியாவல்லவன் யாரென்று ஆலோசித்து தாரகனைப் பார்த்துக் கூறுகின்றான்.—எ-று. (௬௨)

ஏற்றஞ் சேரிவ் வேதிக டோறு மிறைதாழா
தூற்றங் கொண்டே யேகினை வேள்வி யுலவாம
லாற்றுந் தன்மை வல்லவ னீயே யதுவல்லே
போற்றிங் கென்னுக் கூறி நிறுத்திப் போகுற்றான்.

(இ-ள்.) உயர்வுபொருந்திய யாககுண்டங்களினிடத்திலெல்லாஞ் சற்றுந் தாமதிக்காமல் விரைவாகச் சென்று அந்த யாகங் கெடாத வண்ணம் செய்யத்தக்கவன் நீயே ஆதலால், அதனை விரைவாகச் செய்யக்கடவை யென்று கூறி அவனை நிறுத்திவிட்டுப் போயினன்.—எ-று. (௬௩)

அப்பா லேகி நூறுட னெட்டா மகல்வேதி
துப்பா லெய்தி முன்னவை யேபோற் றொடர்வேள்வி
தப்பா தாற்றிச் சீய முகத்தோன் றனைநோக்கி
யிப்பா லுற்றிம் மாமக மாற்று யினிதென்றான்.

(இ-ள்.) அப்பாற்சென்று விசாலமாகிய நூற்றெட்டு ஓமகுண்டங்களினிடத்திலும் வலிமையோடுமடைந்து முன்செய்தமைபோலவே தொடர்ச்சியாயுள்ள யாகத்தைத் தவறாமல் செய்து சிங்கமுகாசுரனைப்பார்த்து நீ இவ்விடத்திலிருந்து இந்தப் பெரிய யாகத்தை நன்றாகச் செய்யக்கடவையென்று கூறினன்.—எ-று. (௬௪)

வேறு.

தெரிய வின்னணஞ் செப்பி யவுணர்கோ
னரியின் மாமுகத் தானை யவணிறீஇப்
பெரிது நள்ளுறு பெற்றியிற் செய்ததன்
னுரிய வேதியி னெல்லையின் மேவினான்.

(இ-ள். அவனுணரும்படி இவ்வாறு கூறிச் சூரபன்மனனவன் சிங்கமுகாசுரனை அவ்விடத்தில் நிறுத்திவிட்டு, மிகவும் நடுவிலிருக்கும் வண்ணமாகச் செய்துள்ள தனக்குரிய ஓமகுண்டத்தினிடத்தில் விரைவாகச் சென்றனன்.—எ-று. (௬௫)

வேதி யெய்தி விதியுளி யர்ச்சனை
யாது மோர்குறை யின்றியி யற்றியே

மாதோர் பங்குடை வள்ளலை யுன்னியோ
ரேதில் வேள்வி யியற்றுதன் மேயினான்.

(இ-ள்.) ஓமகுண்டத்தை யடைந்து விதிப்படி எல்லா அருச்சனைகளையும் யாதொரு குறைவுமில்லாமற் செய்து பார்வதி பாகராகிய சிவபெருமானைத் தியானித்துக் குற்றமற்ற ஒரு யாகத்தைச் செய்யத்தொடங்கினான்.—எ-று. (சுசு)

நஞ்சு பில்கு நவையுடைத் தாருவின்
விஞ்சு சாகை வியன்றுணி யாவையும்
புஞ்ச மோடு பொருக்கென வேதியிற்
றுஞ்சி டும்வகை சூரனுந் தூவினான்.

(இ-ள்.) விஷத்தைச் சிந்துகின்ற குற்றத்தினையுடைய எட்டி மரத்தின் மிகுதியாகிய கிளைகளின் பெரிய துண்டுகளனைத்தையும் கூட்டத்துடன் விரைவாக அவ்வோமகுண்டத்தில் எரிந்தழியும்படிச் சூரபன்மன் இட்டனன்.—எ-று. (சுஎ)

ஆல மாகி யமர்தரு வின்றெலி
கோலி னுக்கிய கொந்தழ லிட்டுமுன்
னேல மூட்டி யிழுதெனு மாமழை
சீல மந்திரத் தோடு சிதறினான்.

(இ-ள்.) விஷரூபமாகப் பொருந்திய எட்டிமரத்திற் செய்த தீக்கடை கோலினுண்டாக்கிய திரண்ட அக்கினியை ஓமகுண்டத்தி லிட்டு முதலில் இசைவாக மூட்டி நெய்யென்னும் பெரியமழையை தூய்மையாகிய மந்திரத்துடன் விட்டனன்.

அன்ன தற்பின ரம்பொற் குழிசிக
ளுன்னு கின்ற துணிபடு மூன்றொகை
வன்னி யின்கண் மரபினின் றுய்த்தனன்
செந்நி றக்குரு திக்கடல் சிந்தியே.

(இ-ள்.) அதன்பின்பு சிவந்த உதிரக்கடல்களை யிறைத்து, அழகிய பொற்பாண்டங்களில் பொருந்திய மாமிசத்துண்டங்களை அக்கினியில் முறைப்படி நின்று கொண்டு அளித்தனன்.—எ-று. (சுக)

செய்ய தோர்மகச் செந்தழன் மீமிசைத்
துய்ய வோதனஞ் சொன்முறை தூர்த்தன
னெய்யு மெண்ணெயு நீடிய சோரியும்
வெய்ய பாலுந் ததியும் விடுத்துமேல்.

(இ-ள்.) செவ்விதாகிய ஒப்பற்ற யாகாக்கினியில் நெய்யும் எண்ணெயும் மிகுதியாகிய உதிரமும் வெவ்விய பாலும் தயிருமாகிய இவைகளைவிட்டுப் பின்பு தூய்மையாகிய அன்னத்தைச் சொல்லப்பட்ட முறைமைப்படியே நிரப்பினான்.—எ-று. ()

மேன சாலியின் வெண்பொரி யின்குவை
யான நல்கி யழிதரு மீற்றினில்
வானு லாய மறிகட லாமெனத்
தேனு மாலியுந் தீமிசைச் சிந்தியே.

(இ-ள்.) சிறந்த சம்பாநெல்லினது வெள்ளிய பொரிக்குவியல்களை யிறைத்து, சர்வசங்காரகாலத்தில் ஆகாயமளவாகப் பொங்குகின்ற அலைகள் மடங்குங் கடலைப்போலத் தேனையுங் கள்ளையும் யாகாக்கினியில் பெய்து.—எ-று.

ஆலி - கள்.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (எச)

தேரரை யையவனஞ் சூழ்தடத் துற்றநீ
வார மேன லிறுங்கொடு மற்றவு
மூரி யெள்ளு முதிரையின் வர்க்கமுஞ்
சேர வுய்த்தன னெய்க்கடல் சிந்தினன்.

(இ-ள்.) மூங்கிலரிசி, மூலை நெல், நீர் சூழ்ந்த தடாகத்திற் பொருந்திய குள நெல், தினை, சோளம் முதலியவைகளும், சிறந்த எள்ளும், துவரை முதலிய பயறுவர்க்கங்களும் பொருந்தும்படி யிட்டு நெய்யாகிய கடலை வார்த்தனன்.—எ-று. (எஉ)

கொடிய வையவி கூர்கறி யாதியாப்
படியில் வெய்ய பலபொருள் யாவையு
நெடிது மோச்சின னேயம தாகிய
கடலை வன்னி கவிழ்த்தன னென்பவே.

(இ-ள்.) காரம்பொருந்திய கடுகு, சிறந்த மிளகு முதலாக உலகத்திலுள்ள கொடிதாகிய பல பொருள்களனைத்தையும் மிகுதியாக இட்டவனாய், நெய்க்கடலை யாகாக்கினியி லூற்றினான்.—எ-று. (எங)

இன்ன பல்வகை யாவு மியல்பினாற்
பொன்னு லாஞ்சடைப் புண்ணியன் றன்னையே
முன்னி வேள்வி முயன்றனன் ஞாலமேற்
றுன்னு சீர்த்தியன் சூரபன் மாவெனும்.

(இ-ள்.) நிலவுலகத்திற் பொருந்திய கீர்த்தியினையுடைய சூரபன்மனானவன் இவ்வாறாகிய பலவகைப் பொருள்களனைத்தையும் முறைமைப்படி யமைத்து, பொன்மயமாக விளங்குகின்ற சடைமுடியினையுடைய சிவபெருமானைத் தியானித்து யாகத்தைச் செய்யும்படி முயற்சி செய்தனன்.—எ-று. (எச)

வேறு.

சூர னுமவ னவ்வழிப் பெருவளஞ் சுட்டி
வீர வேள்வியை வேட்டலுஞ் செந்தழல் விரைவி
னூரு மச்சுற வெழுந்துமீச் சென்றன வடுதீப்
பாரை நுங்கிவா னுலகெலா முணவெழும் பரிசின்.

(இ-ள்.) சூரபன்மனானவன் அவ்விடத்தில் மிகுந்த செல்வத்தைக் குறித்து வீரயாகஞ் செய்தபொழுது பிரளய காலாக்கினியானது நிலவுலகத்தை யழித்து விண்ணுலகங்களனைத்தையு முண்ணும்படி மேலெழுந்து செல்லுந் தன்மையைப்போல (அவ்வியாகத்திலுண்டாகிய) சிவந்த அக்கினியானது யாவரு மஞ்சும்படி விரைவில் கிளம்பி மேலோங்கிச் சென்றது.—எ-று. (எரு)

வானம் புக்கது மாதிரம் புக்கது மலரோன்
றானம் புக்கதெவ் வுலகமும் புக்கது தரைக்கீ
ழேனம் புக்குமுன் றேடருங் கழலினாற் கியற்றுங்
கானம் புக்கதோர் வேள்வியி னெழுங்கொழுங் கனலே.

(இ-ள்.) பாதலத்தில் (திருமாலாகிய) பன்றியானது புகுந்து முற்காலத்தில் தேடியறிதற்கரிய திருவடிகளையுடைய சிவபெருமானைக் குறித்து ஆலந்தீவில் புகுந்து செய்யப்பட்ட யாகத்தினின்று மேலெழுகின்ற செந்தழலானது விண்ணுலகத்தை யடைந்தது; திக்குகளை யடைந்தது; பிரமனுலகத்தை யடைந்தது; மற்றெவ்வுலகத்திலுஞ் சென்றடைந்தது.—எ-று. (எசு)

பானு வின்பதஞ் சுட்டது பனிமதி பதமு
மீனெ னும்படி நின்றவர் பதங்களு மேலோர்
போன மேக்குயர் பதங்களுஞ் சுட்டது புலவோர்
கோனு றம்பதஞ் சுட்டது வேள்வியிற் கொடுந்தீ.

(இ-ள்.) யாகத்தி னின்றெழுந்த கொடிய தீயானது சூரிய மண்டலத்தைச் சுட்டது; குளிர்ந்த சந்திர மண்டலத்தையும், நக்ஷத்திர மண்டலங்களையும், பெரியோர்கள் சென்ற சிறந்த தவலோகங்களையும் சுட்டது; தேவர்கள் தலைவனாகிய இந்திரன் வசிக்கின்ற சுவர்க்கலோகத்தைச் சுட்டது.—எ-று. (எஎ)

செற்று வாசவன் பதந்தனைச் சுட்டபின் சேண்போய்
மற்றை மேலவர் பதமெலாஞ் சுட்டது மருங்கிற்
சுற்று பாலர்தம் புரங்களுஞ் சுட்டது சூர
னற்ற மில்வகை யாற்றிய வேள்வியு ளனலே.

(இ-ள்.) சூரபன்மன் சோர்வில்லாமல் செய்த யாகத்திலுண்டாகிய அக்கினியானது இந்திரபதவியை யெரித்தழித்த பின்பு மேலே சென்று, மற்றைய மேலுலக வாசிகளது பதவிகளனைத்தையுஞ் சுட்டது. அருகில் சூழ்ந்துள்ள திக்குப் பாலகர்களது நகரங்களையு மெரித்தது.—எ-று. (எஅ)

கால மெண்ணில தவம்புரி காசிப முனிவன்
பால னீண்டையில் வலியினோர் மகமது பயில
வேல நீடுதீ யுலகெலா முருக்கிய தென்னின்
மேல வன்செயும் பரிசெலாம் யாவரே விதிப்பார்.

(இ-ள்.) அநேக காலமாகத் தவஞ்செய்துகொண்டிருக்கின்ற காசிப முனிவரது புதல்வனாகிய சூரபன்மன் இவ்வுலகத்தில் தனது வல்லமையினால் ஒரு யாகத்தைச் செய்யவும் (அந்த யாகத்தினின்றுந்) தகுதியாக அதிகரித்தெழுந்த தீயானது உலகங்களனைத்தையு மழித்ததேயானால், இனி அவ்வசுரன் செய்யுந் தன்மைகளனைத்தையும் யாவரெடுத்துச் சொல்லவல்லவர்கள்.—எ-று. (எகூ)

கார்ம றைத்தன கதிர்மதி மறைத்தன கரியோ
னூர்ம றைத்தன வயன்பத மறைத்தன வுலவா
நீர்ம றைத்தன நெருப்பையு மறைத்தன நீடும்
பார்ம றைத்தன விடையிடை யெழும்புகைப் படலே.

(இ-ள்.) (அந்த யாகத்தினின்றும்) இடையிடையே யெழுகின்ற புகைப்படலங்கள் மேகங்களை மறைத்தன; சூரிய சந்திரர்களை மறைத்தன; இந்திரனுலகத்தை மறைத்தன; பிரமனுலகத்தை மறைத்தன; கெடாத கடல்நீரை மறைத்தன; வடவாக்கினியை மறைத்தன; பெரிய நிலவுலகத்தை மறைத்தன.—எ-று. (அ0)

சொற்ற வேதியிவ் வியற்கையா லெரிந்தது சூரன்
பிற்றை யோர்கட மெட்டுநா றுயிரபேத
முற்ற வேதிகள் யாவையு மெரிந்தன வொருங்கே
முற்றும் வன்னிக ளிறுதிநா ளுலகின்மொய்த் தெனவே.

(இ-ள்.) சொல்லப்பட்ட ஓமகுண்டமானது இத்தன்மையாக எரிந்தது, சூரபன்மனது தம்பியர்கள் செய்கின்ற நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு என்னும் பேதங்களையுடைய ஓமகுண்டங்களனைத்தும், அக்கினிகளெல்லாம் ஊழிக்காலத்தில் உலகத்தில் மொய்த்துக்கொண்டாற்போல ஒன்றாகத் திரண்டெரிந்தன.—எ-று. (அக)

வேள்வி யித்திறஞ் சூர்புரி தன்மையை விரைவிற்
கேள்வி யாலுண ரிந்திர னச்செயற் கேடு
சூழ நாடினன் முடிப்பருந் தன்மையிற் றுளங்கி
யாழ்வ தோர்துயர்க் கடலிடை யழுந்தின னயர்ந்தே.

(இ-ள்.) சூரபன்மன் இவ்வாறு யாகஞ்செய்கின்ற தன்மையை விரைவாகக் கேட்டுணர்ந்த இந்திரனானவன் அந்த யாகம் அழியும்படி யெண்ணி அதனை யழிப்பதற் கருமையானதால் நடுக்கமுற்றுச் சோர்ந்து ஆழமாகிய துன்பக்கடலில் மூழ்கினன்.—எ-று. (அஉ)

சூன்மு கக்கொண் டன் மேனியு முனிவரர் தொகையு
நான்மு கத்தனுஞ் சூரபன் மன்செய னுடிப்
பான்மை மற்றிது யாவரோ புரிவரிப் பதகன்
மேன்மை பெற்றிட முயன்றனன் கொல்லென வெருண்டார்.

(இ-ள்.) சூல்கொண்ட மேகம்போலுங் கரிய தேகத்தினையுடைய இந்திரனும் முனிவர் கூட்டங்களும், பிரமனும் சூரபன்மனது செய்கையை யுணர்ந்து இத்தன்மையாகிய யாகத்தை யாவர் செய்யத்தக்கவர்கள் இந்தப் பாவியாகிய அசுரன் மேன்மை பெறும்படி முயற்சி செய்தனனோ வென்று மருட்சி கொண்டார்கள்.—எ-று.

'சூன்முகக்கொண்டன் மேனி' என்பதற்கு, திருமால் எனப்பொருள் கூறினுமாம். (அகூ)

இந்த வண்ணத்தி னொருபதி னுயிரம் யாண்டு
முந்து சூர்தன தினைஞரோ டருமக முயல
வந்தி வார்சடைக் கண்ணுத னின்மல னவன்பால்
வந்தி லானது தேர்ந்தன னிருதர்கோன் மாதோ.

(இ-ள்.) இவ்வண்ணமாகப் பதினுயிரம் வருஷம் முதன்மையாகிய சூரபன்மன் தன் தம்பியர்களுடன் அருமையாகிய யாகத்தை முயன்று செய்யவும், செவ்வானம் போலும் நீண்ட சடைமுடியையும் நெற்றிக்கண்ணையுமுடைய சிவபெருமான் அவ்வசுரனிடத்தில் எழுந்தருளினாரில்லை; அதனைச்சூரபன்மனுணர்ந்தனன்.—எ-று.(அச)

கண்ணு தற்பர னருள்செயாத் தன்மையைக் கருத்தி
லெண்ணி யிச்செயற் குறுவனோ சிவனென விசையாப்
பண்ணு மத்தொழில் பின்னவர் தங்கள்பாற் பணித்து
விண்ண கத்தின்மீச் சென்றனன் கடவுளர் வெருவ.

(இ-ள்.) நெற்றிக்கண்ணராகிய சிவபெருமான் திருவருள்புரியாத தன்மையைச்சூரன் தன் மனத்தில் நினைத்துச் சிவபெருமான் இந்தச் செயலினுக்கு எழுந்தருளுவரோவென்று கூறித் தான் செய்கின்ற அந்த யாகத்தொழிலைத் தன் தம்பியர்களிடத்தில் செய்யும்படிக் கட்டளையிட்டுத் தேவர்க ளஞ்சும்படி ஆகாயத்தி லெழும்பிச் சென்றனன்.—எ-று. (அரு)

வான கத்திடை நிற்புறு சூரபன் மாவாந்
தான வர்க்கிறை வாள்கொடே யீர்ந்து தன் மெய்யி
னுன னைத்தையு மங்கிமே லவியென வோச்சிச்
சோனை யொத்ததன் குருதியை யிழுதெனச் சொரிந்தான்.

(இ-ள்.) ஆகாயத்திலெழும்பி நின்ற சூரபன்மனாகிய அசுரராசனானவன் தன்னுடம்பிலுள்ள மாமிசங்களை யெல்லாம் வாளாலரிந்து யாகாக்கினியில் அவிர்பாகமா

கச் செலுத்தி விடாமழைபோன் றொழுகுகின்ற தனது உதிரத்தை நெய்யாகச் சொரிந்தனன்.—எ-று. (அசு)

சோரி நெய்யவா வூன்களே யவியவாச் சூரன்
வீர மாமகம் புரிவுழித் தனதுமெய்ம் மிசையூ
னீர வீரவே முன்னையின் வளர்தலு மிதுகண்
டாரு மச்சுறத் தெழித்தனன் விம்மித மானன்.

(இ-ள்.) சூரபன்மன் இரத்தமே நெய்யாகவும் மாமிசங்களே ஓம திரவியமாகவுங் கொண்டு பெரிய வீரயாகத்தைச் செய்தபொழுது தன் சரீரத்திலுள்ள மாமிசங்களையெல்லாம் அறுக்க அறுக்க அவைகள் பழையபடியே வளர்தலும் அதனைப் பார்த்து ஆச்சரிய மடைந்தவனாய்க் கேட்பவர்களுக்கு அச்சமுண்டாகும்படி கெர்ச்சனை செய்தனன்.—எ-று. (அஎ)

சிந்தை யிற்பெரு மகிழ்ச்சிய னாகியிச் செய்கை
யெந்தை யற்புறு நிலையதோ வெனமனத் தெண்ணு
மந்த ரப்புய நிருதர்கோன் பின்னுமம் மரபா
லந்த ரத்திடைத் தசைப்பெரு வேள்வியை யயர்ந்தான்.

(இ-ள்.) மந்தரமலைபோன்ற புயத்தினையுடைய சூரபன்மன் மனத்தின் மிகுந்த மகிழ்ச்சி யுடையவனாகி, இவ்வாறு செய்ததனாலேயே எந்தையாகிய சிவபெருமான் மகிழ்ந்து வருவரோ என்று நினைத்துப் பின்னும் அவ்வண்ணமே ஆகாயத்தில் நின்று கொண்டு மாமிசத்தால் பெரிய யாகத்தைச் செய்தனன்.—எ-று. (அஅ)

ஆண்டொ ராயிர மிம்மக மந்தரத் தியற்ற
நீண்ட மாலுட னான்முகன் றேடரு நிமல
னாண்டும் வந்திலன் சூரனத் தன்மைகண் டழுங்கி
மாண்டு போவதே யினிக்கட னெனமனம் வலித்தான்.

(இ-ள்.) ஆயிரவருஷம் இந்த யாகத்தை ஆகாயத்தி னின்றுகொண்டு செய்யவும், திருவிக்கிரமனாகிய திருமாலும் பிரமனுந் தேடிக் காணுதற்கரிய சிவபெருமான் அப்பொழுதும்வாராமையினால் சூரன் அத்தன்மையைக்கண்டு வருந்தி (வருத்தத்துடன் இவ் யாகத்தைச் செய்வதா என்றுகருதி) நாம் இறந்து படுவதே இனித் துணிபு என்று எண்ணினான்.—எ-று. (அகூ)

உன்னி யித்திறஞ் சூரபன் மாவெனு மொருவன்
வன்னி சுற்றிய வாதிகுண் டத்திடை வதிந்து
செந்நி றத்ததா யாணையா லங்கியிற் சிதையாக்
கொன்னு னைத்தலை வச்சிர கம்பமேற் குதித்தான்.

(இ-ள்.) ஒப்பற்ற சூரபன்மன் இவ்வாறு நினைத்து, தீயினாற் சூழப்பட்ட முதற்குண்டத்தி லழியாது செந்நிறத்துடன் மாயையினுடைய தபோபலத்தால் நிற்கின்ற பெரிய நுனியோடுகூடிய வச்சிரகம்பத்தின் தலையின்மீது குதித்தனன்.—எ-று.

கடிதி னுச்சிநின் றுருவியே வச்சிர கம்பத்
தடித னிற்சென்று சூரபன் மாவெனு மவுணன்
படிவ முற்றுநுண் டுகளுற வுளம்பதை பதைத்து
முடிய மற்றது கண்டனன் மடங்கன்மா முகத்தோன்.

(இ-ள்.) சூரபன்பன் விரைவாக வச்சிரகம்பத்தி னுச்சியினின்றும் (அதைத்) தழுவியபடியே அதனடியிற் சென்று உள்ளந் துடி துடிக்கச் சரீரமுழுமையும் சிறு

துளாம்படி எரிந்து இறந்தனன். இவன் அவ்வாறிறந்ததனை (அவனதிளையவனாகிய) சிங்கமுகாசுரன் பார்த்தான்.—எ-று. (கக)

கண்ட காலையி னுளம்பதை பதைத்தது கண்கண்
மண்டு சோரிநீர் கான்றன கரங்களும் வாயுங்
குண்ட வேள்வியிற் றொழின்மறந் திட்டன குறிப்போ
ருண்டு போலுமென் றையுற வொதுங்கிய துயிரே.

(இ-ள்.) பார்த்தவுடனே மனந் துடித்தது; கண்களில் இரத்தம் வடிந்தன; கைகளும் வாயும் ஓமகுண்டத்தில் நெய் விடுதலையும் மந்திரஞ் செபித்தலையும் மறந்தன; பார்ப்பவர்கள் உயிர் உண்டோ இல்லையோ என்று கூறும்படி பிராணனும் ஒடுங்கியது.—எ-று. (கஉ)

துயர்ப்பெ ருங்கட னடுவுற வாழ்ந்துதொல் லுணர்ச்சி
யயர்த்து மால்வரை யாமென மறிந்தன னறிவு
பெயர்த்தும் வந்துழிப் பதைபதைத் தலமந்து பெரிது
முயிர்த்து வாய்திறந் தன்னவன் புலம்புத லுற்றான்.

(இ-ள்.) சிங்க முகாசுரன் துன்பமாகிய பெரிய கடலின் நடுவில் மூழ்கிப் பழைய வுணர்ச்சி நீங்கிப் பெரிய மலையைப்போல வீழ்ந்தனன்; பின்னும் மூர்ச்சை தெளிந்தவுடனே பதை பதைத்து அலைந்து மிகவும் பெருமூச்சு விட்டு வாயைத் திறந்து புலம்பத் தொடங்கினான்.—எ-று. (கரு)

வேறு.

மாயை தரும்புதல்வா மாதவஞ்செய் காசிபற்கு
நேய முருகா நிருதர் குலத்திறைவா
காயமுட னின்னையான் காணே னெலங்கொளித்தாய்
தீய மகம்பலநாட் செய்துபெற்ற பேறிதுவோ.

(இ-ள்.) மாயை பெற்றபுதல்வனே! மகத்தாகிய தவத்தைச் செய்கின்ற காசிபமுனிவருக்கு அன்புள்ள சிறுவனே! அசுரர்குலத் தலைவனே! யான் உன்னைச் சரீரத்துடன் கண்டிலனே! நீ எங்கேயொளித்தனை? நீ கொடிதாகிய யாகத்தை அநேக நாள்களாகச் செய்து அடைந்த பயன் இதுதானோ?—எ-று. (கச)

தாயுந் தலையளிக்குந் தந்தையுநீ தானவரா
யாயுந் தலைவனுநீ யாவியுநீ யென்றிருந்தோ
நீயங் கதனை நினையா திறந்தனையே
மாயுஞ் சிறியோர்க்கு மற்றிங்கோர் பற்றுண்டோ.

(இ-ள்.) தாயும், காப்பாற்றுகின்ற தந்தையும் நீயே: அசுரர்களை விசாரித்துப் பாதுகாக்குந் தலைவனும் நீயே: எங்களுயிரும் நீயே யென்று நினைத்திருந்தோம். (அவ்வாறிருக்க) நீ அதனை நினையாம லிறந்தனையே! இனிச் சாகப்போகின்ற சிறியவர்களாகிய எங்களுக்கு வேறொரு சார்பிருக்கின்றதோ?—எ-று. (கரு)

வீரனே தானவர்க்குண் மிக்கோனே மிக்கபுகழ்ச்
சூரனே நின்போற் றொடங்கியிந்த வேள்விதனை
யாரனே கம்வைக லாற்றினா ராற்றியநீ
யீரநே யங்கொள்ளா தெம்மையகன் றேகினையே.

(இ-ள்.) வீரனே! அசுரர்களுக்குள் தலைவனே! மிக்க கீர்த்தியையுடைய சூரனே! உன்னைப்போல இந்த யாகத்தைத் தொடங்கி வேறு யாவர் அநேக காலஞ்

செய்தவர்கள்? அவ்வாறு செய்த நீ (எங்கள்மீது) குளிர்ந்த அன்புகொள்ளாது எங்களை விட்டு நீங்கினையே.—எ-று. (கஅ)

நின்க ணருளில்லா நீர்மையுண ராய்பன்னாட்
புன்க ணுறுவாய் புரமூன்று முன்னெரித்த
வன்க ணனைக்குறித்தே மாமகஞ்செய் தாயதற்கோ
வுன்க ணுளதா முயிர்தனையுங் கொண்டனரே.

(இ-ள்.) உன்னிடத்தில் (சிவபெருமானுக்கு) கருணையில்லாத தன்மையை நீ யறிந்தாயில்லை. அநேககாலம் வருத்தமடைந்தவனாய் முற்காலத்துத் திரிபுரங்களையு மெரித்த அஞ்சாமையினையுடைய அச்சிவபெருமானைக் குறித்து மகத்தாகிய யாகத்தைச் செய்தனை ; அதற்காகவோ உன்னிடத்துள்ளதாகிய உயிரைக் கொண்டனர்.

உன்போ லுயிர்விட் டுயர்மகஞ்செய் தோருமரன்
றன்போ லருளாத் தகைமையரு மாங்கவைகண்
டென்போ லுயிர்கொண் டிருந்தோரு மில்லிவருள்
வன்போ டியமனத்து வன்கண்ண ராரையா.

(இ-ள்.) உன்னைப்போல பெரிய யாகத்தைச் செய்து உயிரை விட்டவர்களும், சிவபெருமானைப் போல அருள்செய்யாத குணமுடையவர்களும், அதனைப் பார்த்து என்னைப்போல உயிர் தரித்திருந்தவர்களும் ஒருவருமில்லை. இம்மூவருள் ஐயனே கடினமாகிய மனத்தினையும் அஞ்சாமையினையு முடையவர்கள் யாவர்?—எ-று. ()

ஈச னருளா லெரிவேள் வியையோம்பிப்
பேசரிய வன்மைதனைப் பெற்று நமதுயிரு
மாசில் வளனு மகற்றுவரொன் றேயயர்ந்த
வாசவனு மின்றோ மனக்கவலை தீர்ந்ததுவே.

(இ-ள்.) சிவபெருமானது திருவருளினால் அக்கினி சம்பந்தமாகிய யாகத்தைச் செய்து சொல்லுதற்கரிய பராக்கிரமத்தைப் பெற்று, நமது உயிரையும், குற்றமற்ற செல்வத்தையும் நீக்குவார்களென்று சோர்வடைந்திருந்த இந்திரனும் மனக்கவலை நீங்கப்பெற்றது இன்றுதானோ?—எ-று. (கக)

எல்லாரும் போற்ற வெரிவேள் வியையோம்பிப்
பல்லா யிரநாட் பழகி யெமக்குமிது
சொல்லா திறந்தாய் துணைவராய் நம்முடனே
செல்லா ரிவரொன்று சிந்தைதனிற் கொண்டனையோ.

(இ-ள்.) யாவர்களுந் துதிக்கும்படி அக்கினி சம்பந்தமாகிய யாகத்தைச் செய்து அநேக காலம் பழகியிருந்த எங்களுக்கும் இதனைச் சொல்லாது இறந்தனை ; இவர்கள் (நாம் சொன்னால்) நம்முடன் துணைவர்களாக வரமாட்டார்களென்று மனத்தினெண்ணினையோ ?—எ-று. (௪00)

ஈண்டாருங் காண வெரியினிடைத் தம்பமிசை
வீண்டா யுயிர்போய் விளிந்தாய் மிகும்வன்கண்
பூண்டாய்நின் மெய்யு மொளித்தாய் புலம்புமியா
மாண்டாலு முன்றன் மதிவதனங் காண்போமோ.

(இ-ள்.) இவ்விடத்தில் யாவர்களும் பார்க்கும்படி அக்கினியின் மத்தியிலுள்ள வச்சிரஸ்தம்பத்தில் வீழ்ந்தனை ; அதனால் உயிர்நீங்கி யிறந்தனை ; அஞ்சாமையை யடைந்தனை; உனது தேகத்தையும் மறைத்தனை ; யாங்களிறந்தாலும் உனது பூரண சந்திரனை யொத்த முகத்தைப் பார்ப்போமோ ?—எ-று. (௪0க)

என்றின் னனசொற் றிரங்கி யரிமுகத்தோன்
முன்றன்னை நல்கி முலையளிக்குந் தாய்காணுக்
கன்றென்ன வீழ்ந்தழுங்கக் கண்டதனைத் தாரகனுங்
குன்றென்னத் தன்கை குலைத்தரற்றி வீழ்ந்தனனே.

(இ-ள்.) என்றித்தகைய பல மொழிகளை யுரைத்து மனம் வருந்திச் சிங்கமுகாசுரன்முன்பு தன்னைப் பெற்று முலையூட்டுகின்ற தாய்ப் பசுவைக் காணாத கன்றைப்போலப் பூமியில் விழுந்து புலம்ப அதனைத் தாரகாசுரனும் பார்த்து மலைபோன்ற தனது துதிக்கையை யுதறிக்கொண்டு புலம்பி வீழ்ந்தனன்.—எ-று. (கOஉ)

வீழ்ந்தா னுயிர்த்தானவ் வேள்விக் களமுற்றுஞ்
சூழ்ந்தான் புரண்டான் றுளைக்கையி னுனிலத்தைப்
போழ்ந்தா னெனவே புடைத்தான் றுயர்க்கடலு
ளாழ்ந்தான்விண் ணஞ்ச வரற்றினன் றாரகனே.

(இ-ள்.) தாரகாசுரன் பூமியில் வீழ்ந்தனன்; பெருமூச்சு விட்டனன்; அந்த யாகசாலை முழுமையுஞ் சுற்றினன்; புரண்டனன்; துதிக்கையினால் பூமியைப் பிளப்பவனைப்போல மோதினன்; துன்பக்கடலில் மூழ்கினன்; தேவர்களஞ்சும்படி யழுதனன்.—எ-று.

விண்ணஞ்ச வரற்றினன் என்பது, தானவாகுபெயர். (கOங)

சிங்க முகனுந் திறல்கெழுவு தாரகனுந்
தங்கண் முதல்வன் றவறுற் றதுநோக்கி
யங்க ணரற்ற வதுகண்ட தானவர்கள்
பொங்குங் கடல்போற் பொருமிப் புலம்பினரே.

(இ-ள்.) சிங்கமுகாசுரனும் வலிமை மிக்க தாரகாசுரனும் தங்கள் தமயனாகிய சூரபன்மன் இறந்ததைப் பார்த்து அவ்விடத்திற் புலம்புதலும் அதனைப் பார்த்த மற்றைய அசுரர்கள் பொங்குகின்ற கடலைப்போல விம்மி யழுதார்கள்.—எ-று.

தாரகனுஞ் சீயத் தனிவீ ரனுமவுண
ராரு நெடிதே யரற்று மொலிகேளாச்
சீரில் வியனுலகிற் றேவர்கோன் றன்னொற்றாற்
சூரன் மகத்தீயிற் றுஞ்சுஞ்செயலுணர்ந்தான்.

(இ-ள்.) தாரகாசுரனும் ஒப்பற்ற சிங்கமுகாசுரனும் மற்றைய அசுரர்களும் மிகுதியாகப் புலம்புகின்ற வோசையைக் கேட்டுச் சிறப்பினையுடைய பெரிய விண்ணுலகத்துள்ள தேவேந்திரன் தனது தூதுவர்களால் சூரபன்மன் யாகாக்கினியில் இறந்த செயலை யுணர்ந்தனன்.—எ-று. (கOரு)

தண்டா ரகலச் சதமகத்தோன் றானவர்கோன்
விண்டா னெனவே விளம்புமொழி கேளா
வண்டா மகிழ்ச்சியெனு மார்கலியிற் பேரமுத
முண்டா னெனவேத னுள்ளங் குளிர்ந்தனனே.

(இ-ள்.) குளிர்ந்த கற்பகமலர்மாலையையணிந்த மார்பினையுடைய இந்திரன், சூரபன்மன் இறந்தானென்று கூறிய வார்த்தையைக்கேட்டு அளவற்ற மகிழ்ச்சியென்னுங் கடலிற்றோன்றிய சிறந்த அமுதத்தை யுண்டவனைப்போலத் தனது மனங் குளிர்ந்தனன்.—எ-று. (கOசு)

சிந்தை குளிர்ந்து செறியுமுரோ மஞ்சிலிர்த்து
முந்து துயர முழுதுந் தொலைத்தெழுந்து
வந்து புடைசூழும் வானோ ருடன்கடவுட்
டந்தி மிசையெய்தித் தனதுலக நீங்கினனே.

(இ-ள்.) (இந்திரன்) மனங்குளிர்ந்து நெருங்கிய மயிர்க்கூச்செறிந்து முன்புள்ள துன்பங்களனைத்தையு மொழித்து எழுந்துவந்து அருகில் சூழ்ந்துள்ள தேவர்களுடன் வெள்ளையானையின்மீதேறித் தனது உலகத்தினின்று நீங்கினான்.—எ-று. ()

பொன்னுலக நீங்கிப் புரைதீர் மதிக்கடவு
டன்னுலக நீங்கித் தபனன் பதங்கடந்து
துன்னு மவுணர் துயருஞ் செயல்காண்பான்
மின்னுலவு மேக வியன்பதத்தில் வந்தனனே.

(இ-ள்.) (இந்திரன்) நெருங்கிய அசுரர்கள் வருந்துகின்றசெயலைக் காணும்பொருட்டு சுவர்க்கலோகத்தினின்று நீங்கிக் குற்றமற்ற சந்திரனுலகத்தைக் கடந்து சூரியனுலகத்தைக்கடந்து மின்னலுலாவுகின்றபெரியமேகமண்டலத்திற்குவந்தனன்.

விண்ணோடர் தங்களுடன் வேள்விக் கிறைவிசும்பி
னண்ணு மகிழா நகையாத்தன் னற்றவத்தை
யெண்ணு வியவா விரங்கு மவுணர்தமைக்
கண்ணார நோக்கிக் களிப்புற்று நின்றனனே.

(இ-ள்.) தேவர்களுடனே இந்திரன் மேகமண்டலத்திற்கு வந்து சந்தோஷத்துடன் சிரித்துத் தனது நல்ல தவத்தைக்குறித்துப் புகழ்ந்து வருந்துகின்ற அசுரர்களைக் கண்ணாரப்பார்த்துக் களிப்படைந்து நின்றனன்.—எ-று. (கoக)

நின்றதொரு காலை நிருத ருடனரற்றித்
துன்றுதுயர் மூழ்கிச் சோர்கின்ற சீயமுக
னன்றெனுயிர் போக நானிருப்ப தேயிங்ங
னென்று கடிதுமனத் தெண்ணி யெழுந்தனனே.

(இ-ள்.) அவ்வாறு நின்றபொழுது, அசுரர்களுடன் அழுதுகொண்டு நெருங்கிய துன்பத்தில் மூழ்கி வாடுகின்ற சிங்கமுகாசுரன் நல்லது எனதுயிர்போன்ற தமயனிறந்தபின்பு நானிங்கு இருத்தல் தகுதியோவென்று மனத்தில் நினைத்துக்கொண்டு விரைவாக வெழுந்தனன்.—எ-று. (கக0)

அன்ன திறலவுண னுயிரமென் றுள்ளவகன்
சென்னிபல வுந்தனது செங்கைவா ளாலீர்ந்து
முன்ன முதல்வன் முயன்ற பெருவேள்வி
வன்னி யதனுண் மறம்பேசி யிட்டனனே.

(இ-ள்.) அத்தகைய வலிமையினையுடைய சிங்கமுகாசுரன் ஆயிரக்கணக்காயுள்ள பெரிய தனது பல தலைகளையும் தான் கையில் வைத்திருந்த வாளினாலறுத்து, முன்பு சூரபன்மன் யாகஞ்செய்த பெரிய யாகத்தீயில் வீரமொழிகளைக் கூறியிட்டனன்.—எ-று.

மந்திரங்களைப் படாந்தமாக உச்சரித்தன் முதலியவைகளைச் செய்தானென்பார் மறம்பேசி என்றார். (கககு)

ஈர்ந்து தலைக ளெரியி லிடுமுன்னர்ச்
சேர்ந்த வனையான் சிரங்க ளவைமுழுதும்

பேர்ந்து மரிந்து பிறங்கு தழலினிடை
நேர்ந்து தனிநின்று னிருதர்க் கிறையோனே.

(இ-ள்.) அசுரர்கள் தலைவனாகிய சிங்கமுகன் தலைகளை யறுத்து யாகத்தீயி லிடுதற்கு முன்னம் அவன் தலைகளனைத்தும் பழையபடியே யுண்டாயின; அவை யனைத்தையும் பின்னுமரிந்து விளங்குகின்ற அக்கினியிலிட்டுத் தனியே நின்றனன்.

முன்னோ னெழுந்து முயலுஞ் செயனோக்கிப்
பின்னோன் றனது பெருஞ்சிரமுந் தான்கொய்து
மன்னோன் மகமியற்றும் வான்றழலி னுள்ளிட்டா
னன்னோ வெனவே யவுணர் குழுவிரங்க.

(இ-ள்.) அசுரர்கூட்டங்கள் ஐயோவென்று புலம்பும்படி மூத்தவனாகிய சிங்கமுகாசுரன் எழுந்து நின்று செய்யுஞ் செய்கையைப் பார்த்து அவன் தம்பியாகிய தாரகாசுரன் தனது பெரிய தலையை யறுத்துத் தான் செய்கின்ற பெரிய யாகாக்கினியி லிட்டனன்.—எ-று. (கசஙா)

சென்னி தனையரிந்து செந்தழலி னுய்ப்பணிடு
முன்ன மதுபோல வேறே முளைத்தெழலும்
பின்னு மனையானப் பெற்றிதனை யேபுரிய
வன்ன படிகண்ட வவுணர் தமிற்சிலரே.

(இ-ள்.) தலையையறுத்து யாகாக்கினியிலிடுதற்குமுன்னமே பழையபடியே வேறே முளைத்துத் தோன்றுதலும் பின்னும் அத்தாரகன் அவ்வண்ணமே செய்ய, அச்செய்கையைப் பார்த்த அசுரர்களில் சிலர்.—எ-று. (ககச)

தங்கள் சிரமுந் தனிவாளி னற்றுணியா
வங்கி மிசையிட்டு மதன்க ணுறவீழ்ந்து
மங்கி யுயிரதனை மாற்றிடலுஞ் சூரன்போற்
சிங்க முகனுமெரி செல்லத் துணிந்தனனே.

(இ-ள்.) தங்கள் தலைகளையும் ஒப்பற்ற வாளினால் வெட்டி யாகத்தீயிலிட்டும், அவ்யாகத்தீயில் விழுந்து வாடி யுயிரை விடவும், சூரபன்மனைப்போலச் சிங்கமுகாசுரனும் அந்த யாகத்தீயில் விழும்படித் துணிவுகொண்டனன்.—எ-று. (ககரு)

மோனத்தின் வேள்வி முயன்றதொரு முன்னவன்போல்
வானத் தெழுவான் வலித்துமனங் கொண்டிடலுங்
கானக் கடுக்கை கலைமதிசேர் செய்யசடை
ஞானப் பொடிபுனையு நாதனது கண்டனனே.

(இ-ள்.) மவுனமாகவிருந்துகொண்டு யாகஞ்செய்த சூரனைப்போல வானத்தின்மீது செல்லும்பொருட்டு மனந்துணிதலும், மணம் பொருந்திய கொன்றைமலர் மாலையையுங் கலைகளையுடைய இளம்பிறையையுந் தரித்த சிவந்த சடையினையும், ஞானமயமாகிய விபூதியைத்தரித்த திருமேனியினையுமுடைய சிவபெருமான் அதனைப் பார்த்தருளினார்.—எ-று.

தீக்ஷை செய்துகொண்டு யாகம்புரிபவர்கள் இடையிற் பேசப்படாமையை யுணர்த்துவார் மோனத்தின் வேள்வி என்றார். (ககசு)

அசுரயாகப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கூசரு.

உ

முருகன்றுணை.

# வ ர ம் பெ று ப ட ல ம்.

கண்ட கறைமிடற்றுக் கண்ணுதலோன் சுந்தரனை
விண்டு முதலோர் வியப்பவே வெண்ணையிலாட்
கொண்ட தொருபனவக் கோலந் தனைத்தரித்துத்
தண்டு மொருகை தனிலூன்றி வந்தனனே.

(இ-ள்.) அதனைப் பார்த்தருளிய காளகண்டராகிய சிவபெருமான் திருமால் முதலிய தேவர்கள் வியக்கும்படி ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளைத் திருவெண்ணெய்நல்லூரில் தடுத்தடிமைகொள்ளும்பொருட்டுக் கொண்டுவந்துள்ளதாகிய விருத்தவேதியத் திருவுருவங்கொண்டு ஒரு திருக்கரத்தில் ஊன்றுகோலையும் ஊன்றிக்கொண்டு வந்தனர்.—எ-று.

கண்டதைக் கொண்டு காணுததையும் அறிவிக்கலாம் ஆதலால் சுந்தரமூர்த்திசுவாமிகளது சரித்திரத்தை உலகி லனைவரு மறிவார்களே யென்று வெண்ணையிலாட்கொண்ட பனவக்கோலம் என்றார். (௧)

அங்கண் மகவேதி யணித்தாக வேகுறுகிச்
சிங்க முகனைச் சிவபெருமான் கண்ணுற்றே
யிங்கு மிகநீ ரெவரு மிரங்குகின்றீர்
நுங்கள் பரிசு நுவலு மெனமொழிந்தான்.

(இ-ள்.) சிவபெருமான் அவ்விடத்திலுள்ள ஓமகுண்டத்தின் சமீபத்தில் சென்று சிங்கமுகாசுரனைப் பார்த்து நீங்களனைவரும் இவ்விடத்தில் மிகவும் வருந்துகின்றீர்கள்; உங்கள் எண்ணத்தைக் கூறுங்களென்று அருளிச்செய்தனர்.—எ-று.

எந்தை பெருமா னியம்ப வதுநாடித்
தந்தை யனையார் தமியேந் துயர்கண்டு
வந்து வினவுகின்றார் மற்றிங் கிவரருள்சேர்
சிந்தை யினரென்று சீயமுக னுன்னினனே.

(இ-ள்.) எமது சிவபெருமான் இவ்வாறு அருளிச்செய்யவும், அதனையுணர்ந்த சிங்கமுகன் இவர் நமது பிதாவையொத்தவர்; அடியேங்களது வருத்தத்தைப் பார்த்து இவ்விடத்தில் வந்து இதனை வினவுகின்றனர்; இவர் இரக்கம் பொருந்திய மனத்தினையுடையவர் என்று நினைத்தனன்.—எ-று. (௩)

உன்னி யமல னுகள மலர்ப்பதமேற்
சென்னி பலவுஞ் செறியப் பணிந்தெழுந்தெம்
மின்னல் வருவாயு மெமது வரன்முறையும்
பன்னி யிடுவ னெனவே பகர்கின்றான்.

(இ-ள்.) இவ்வாறு நினைத்து சிவபெருமானது இரண்டு திருவடித்தாமரைகளின்மீது தனது பல தலைகளும் பொருந்தும்படி நமஸ்கரித்தெழுந்து நின்றுகொண்டு, எங்களது துன்பத்தின் வரலாற்றையும், எமது பிறப்பின் வரலாற்றையும் சொல்லுகிறேனென்று கூறத்தொடங்கினன்.—எ-று. (௪)

வேறு.

தந்தை யாவான் காசிபனே தாயு மாயை தானென்பாண்
மைந்தர் யாங்க ளொருமூவர் மக்கள் பின்னும் பலருண்டா
லெந்த மன்னை பணிதன்னு லியாங்க ளீசன் றனக்காக
விந்த வனத்தின் மூவருமிவ் வேள்வி தன்னை யியற்றினமே.

(இ-ள்.) எங்கள் தந்தையாயுள்ளவர் காசிபமுனிவர்; தாயும் மாயை யென்பவள்; அவர்களுக்கு நாங்கள் மூன்று புதல்வர்கள்; எங்களையன்றியும் (அவர்களுக்கு) அநேகம் புதல்வர்களிருக்கின்றார்கள்; நாங்கள் எங்கள் மாதாவின் கட்டளையினால் சிவபெருமானைக்குறித்து இக்காட்டில் மூவர்களுமாக இந்த யாகத்தைச் செய்தனம்.

அங்கப் பரிசே யாண்டுபல வகல மகத்தை யாற்றிடவுங்
கங்கைச் சடையோன் முன்னின்று கருணை சிறிதுஞ் செய்திலனு
லெங்கட் கெல்லா முன்னவனு மிகல்வெஞ் சூர னதுநாடி
மங்குற் செறியும் வானிற்போய் வாளாற் றசையீர்ந் திட்டனனே.

(இ-ள்.) அவ்வண்ணமே அநேக வருஷகாலங் கழியும்படி யாகத்தைச் செய்யவும், கங்கைநதியைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமான் எங்கள் முன்னெழுந்தருளிச் சிறிதுங் கிருபைசெய்தாரில்லை; அதனை எங்களுக்கெல்லாந் தலைவனுயுள்ள வலிய சூரனுணர்ந்து, மேகங்கள் நெருங்கிய ஆகாயத்திற்சென்று வாளினால் தனது உடல் தசைகளை யரிந்து அந்த யாககுண்டத்திலிட்டனன்.—எ-று. (சு)

மின்போ லிலங்கும் வாளாற்றன் மெய்யிற் றசைக ளீர்ந்துளத்திற்
றுன்போ ரிறையு மில்லாத சூரன் மகத்தீ மிசையிடலு
முன்போற் றன்னான் வளர்ந்திடவே பின்னு மஃதே முயன்றதற்பின்
றன்போ லொளிர்வச் சிரகம்பத் தலைவீழ்ந் துருவித் தழல்புக்கான்.

(இ-ள்.) மின்னலைப்போல விளங்கும் வாளினால் தனதுடம்பின் தசைகளை யரிந்து மனத்திற் சிறிதுந் துன்பமில்லாத சூரபன்மன் அந்த யாகாக்கினியிலிடுதலும் பழையபடியே அவன் தசை வளரவும் பின்னுமவ்வாறே செய்து அதற்குமேல் தன்னைப்போல விளங்குகின்ற வச்சிரகம்பத்தினுச்சியில் விழுந்து அடியிலுருவி யோமத் தீயில் விழுந்தனன்.—எ-று. (எ)

புக்கு முன்னோ னீறுகிப் போந்த காலை யாங்கண்டு
மிக்க மனத்திற் றுயர்கொண்டு வெருவிப் புலம்பி யெமதுயிரு
மொக்க விடவே நினைந்தேமா லும்மைக் கண்டோ ரிறைதாழ்த்தோந்
தக்க திதுநம் வரன்முறையுந் தமியேந் துயரு மெனமொழிந்தான்.

(இ-ள்.) தமயன் விழுந்து நீறுகிப் போனவுடனே அதனை யாங்கள் பார்த்து மனத்தில் மிகுந்த வருத்தத்தை யடைந்து பயந்து புலம்பி எங்களுயிர்களை யெல்லாம் ஒருமிக்க விடும்படி நினைந்தோம், தேவரீரைக் கண்டமையால் சற்று நேரம் தாழ்ந்தோம். தகுந்தபடியே எங்கள் வரலாறும் எங்களது துன்பமும் இதுவே யாமென்று கூறினன்.—எ-று. (அ)

மொழிந்த காலை யங்கணின்ற முக்க ணிறைநும் முன்னோன்போ
லொழிந்து நீரு மாயாதே யுமது சூரன் றனையின்னே
யழிந்த தீயு ணின்றெழுவித் தருள்செய் கின்ற மதுகாண்டிர்
கழிந்த சோகம் விடுதிரெனக் கங்கை தன்னை நினைந்தனனே.

(இ-ள்.) சிங்கமுகன் இவ்வாறு கூறியவுடனே அவ்விடத்தி லெழுந்தருளிய சிவபெருமான் அவனைப் பார்த்து உங்கள் தமயனைப்போல நீங்களும் இறந்துபோ

காவண்ணம் உங்கள் சூரபன்மனை இப்பொழுதே அவனிறந்த இத்தீயினின்று மெழுப்பித் தருகின்றோம்; அதனைப் பாருங்கள்; மிகுந்த துன்பத்தை யொழியுங்களென்று கூறிப் பின்பு கங்கைநதியை நினைத்தருளினார்.—எ-று. (கூ)

முன்னா ளம்மை யங்குலியின் முளைத்த கங்கை தனிலெங்கோன்
மின்னார் சடையிற் கரந்தனவே யன்றி மகவான் விரிஞ்சன்மா
லென்னா நின்ற மும்மையினோ ரிருக்கை தோறு மளித்தவற்றுட்
பொன்னாட் டிருந்த நதிதன்னைப் புந்தி மீதி லுன்னினனே.

(இ-ள்.) எமது சிவபெருமான் முற்காலத்தில் உமாதேவியாரது விரல்களிற் றோன்றிய கங்கைகளில் தாம் மின்போல் விளங்கும் சடைமுடியில் மறைத்தனவே யன்றி இந்திரன் பிரமன் திருமால் என்று கூறப்பட்ட மூவர்களி னிருப்பிடங்களிலிருக்கும் வண்ணம் அளித்தருளிய கங்கைகளில் இந்திரலோகத்திருந்த கங்கையைத் தமது திருவுள்ளத்தில் நினைத்தருளினார்.—எ-று.

கங்கையினுற்பத்தியைப் பின்வருந் தக்ஷகாண்டத்திலுள்ள ததீசி உத்தரப் படலத்திற்காண்க. (௧௦)

மாயோன் றன்பான் முற்கொண்ட வலிசேர் தண்ட மேந்திவரு
தூயோ னுன்ன வக்கங்கை துண்ணென் றுணர்ந்து துளங்கி விண்ணோ
ராயோ ரெவரும் வெருக்கொள்ள வளப்பின் முகங்கொண் டார்த்தெழுந்து
சேயோ ரெல்லா மணித்தாகத் திசையோ ரஞ்சச் சென்றதுவே.

(இ-ள்.) திருமாலிடத்தினின்று முன்னே யெடுக்கப்பட்ட முதுகெலும்பாகிய தண்டத்தை யேந்தி வந்தருளிய சிவபெருமான் நினைத்தருளியவுடனே அத்தேவகங்கை அதனை விரைவாக வுணர்ந்து நடுங்கித் தேவர்களனைவரும் அஞ்சும்படி அளவற்ற முகங்களைக்கொண்டு ஆரவாரித் தெழுந்து தூரத்திலுள்ளவர்களெல்லாஞ் சமீபிக்கும்படித் திக்கிலுள்ளவர்கள் அஞ்சும்படிச் சென்றது.—எ-று. (௧௧)

மேலா கியவிண் ணுலகனைத்தும் விரைவிற் கடந்து மேதினியின்
பாலா யெங்கள் பிரான்பதங்கள் பணிந்து பணியாற் படர்செந்தீ
யேலா நின்ற நடுக்குண்டத் திடையே புகலு மெறிகடல்வா
யாலா லம்வந் துதித்ததென வவுணர் கோமா னார்த்தெழுந்தான்.

(இ-ள்.) உயர்வாகிய மேலுலக மனைத்தையும் விரைவாகத் தாண்டி நிலவுலகத்திற்கு வந்து எமது சிவபெருமான் திருவடிகளை வணங்கி அவரது திருவருளினால் மிகுந்த தீயினையுடைய நடுக்குண்டத்தில் பிரவேசிக்கவும், அலை வீசுகின்ற கடலினிடத்தில் ஆலாகலம் வந்து தோன்றியதுபோல அசுரர்கள் தலைவனாகிய சூரபன்மன் ஆரவாரித் தெழுந்தனன்.—எ-று.

முன்னஞ் சலரூபமான பாற்கடலிற்றோன்றிய விஷம் தேவர்களை யுபத்திரவித்ததுபோலவே, வெண்ணிறம்பொருந்திக் கடல்போலார்த்துவந்த கங்கைநீரினின்றும் தோன்றிய சூரபன்மன் தேவர்களை வருத்துவோனுங் கருநிறமுடைய சரீரமுடையவனுமாதலால் அவனுக்காலாலத்தை யுவமையாக்கி, எறிகடல்வா யாலாலம் வந்துதித்ததென என்றார். (௧௨)

தொன்மை போல வேதியினிற் சூர பன்மாத் தோன்றலுமத்
தன்மை கண்ட வரிமுகனுந் தார கப்பேர் வீரனுமா
யின்மை கொண்டோர் பெருவளம்பெற் றென்ன மகிழ்வுற் றெல்லையிலா
வன்மை யெய்திக் கடிதோடி மன்னன் பதமேல் வணங்கினரே.

(இ-ள்.) ஓமகுண்டத்தினின்றுஞ் சூரபன்மன் முன்போலவே தோன்றுத லும் அதனைப்பார்த்த சிங்கமுகாசுரனும் தாரகாசுரனும் தரித்திரர்கள் பெருஞ்செல் வத்தைப் பெற்றாற்போல மகிழ்வடைந்து அளவற்ற தைரியத்தையடைந்து விரை வாக வோடிச்சென்று அச்சூரபன்மனது பாதங்களில் வணங்கினார்கள்.—எ-று. (கரு)

தங்கோன் றன்னைப் பின்னோர்க டாழுஞ் செயலைத் தானவர்கண்
டெங்கோன் வந்தான் வந்தானென் றெவருங் கேட்ப வெடுத்தியம்பிப்
பொங்கோ தஞ்சேர் கடன் மதியப் புத்தேள் வரவு கண்டதென
வங்கோ தையினல் வாழியவென் றவனைப் போற்றி யார்த்தனரே.

(இ-ள்.) தங்கள் தமயனாகிய சூரபன்மனைத் தம்பிமார்கள் வணங்குந் தன்மையைப் பார்த்த அசுரர்கள் எங்களிறைவன் வந்தனன் வந்தனனென்று யாவர்க ளுங் கேட்கும் வண்ணம் இரைந்து கூறி, மிகுந்த குளிர்ச்சியினையுடைய கடலானது பூரணச்சந்திரனது வரவைப்பார்த்து மிகுதியாக முழங்கினாற்போல மிகுந்த வோசை யுடன் நீ வாழக்கடவையென்று துதித்து ஆரவாரித்தார்கள்.—எ-று.

பாற்கடலானது தன்னிடத்துத்தோன்றிய சந்திரனை நிறைந்த கலைகளு டன் காண்கின்ற பௌர்ணமியன்று சந்தோஷத்துடன் மிகுந்தொலிப்பதுபோல, அசுரர்களுந் தங்களுடன்பிறந்த சூரபன்மன் ஓமகுண்டத்தின் நிறைந்த கங்காஜலத் தில் முன் பதினாயிரவருஷமாகச்செய்த யாகத்தாலடைந்த இளைப்பு முதலியவைக ளின்றிச் சுகமே அட்டகாசத்துடன் தோற்றியதைக்கண்டபோதே இனி நமக்கொன் றுங் குறைவு இல்லை என்று நினைத்து ஆர்ப்பரித்தார்களென்பதை விளக்க, கடன் மதியப் புத்தேள் வரவுகண்டதென என்றார். (கச)

எண்மேற் கொண்ட நிருதர்குழா மேத்த வெரிநின் றெழுசூரன்
மண்மேற் கொண்ட திறங்காணூஉ வானோர் தொகையு மகபதியும்
விண்மேற் கொண்ட புயல்கண்ட வியன்கோ கிலம்போல் வெருவித்தம்
முண்மேற் கொண்ட செல்லலொடு மோடித் தம்மூ ருற்றனரே.

(இ-ள்.) அளவற்ற அசுரர்கூட்டங்கள் துதிக்க அக்கினியினின்றுமெழுந்த சூரபன்மன் பூமியில் வந்து நிற்குந் தன்மையைத் தேவர்கூட்டங்களும் இந்திரனும் பார்த்து ஆகாயத்தில் தோன்றிய மேகத்தைக் கண்ட பெரிய குயிலைப்போலப் பய ந்து தங்கள் மனத்திற் பொருந்திய வருத்தத்துடன் ஓடித் தங்களூரை யடைந்தார்கள்.

வசந்தகாலத்தில் தே மா முதலிய நல்ல விருக்ஷங்களிலிருந்து தளிர்களைக் கோதி இனிமையோடு கூவுகின்ற குயிற்கூட்டங்கள், கரியமேகங்கள்பெய்யு மழைக ளாலும் இடிகளின் தொனிகளாலும் அதிகவெளிச்சமான மின்னல்களாலும் கூதிர் முதலியவைகளாலும் இருட்செறிவாலும் இலை முதிர்வாலும் குரலடைந்து வெளியில் வராமல் கார்காலத்தில் மேகத்தைக்கண்டவுடனே ஒதுங்கி இருக்குமிடந்தெரியாமன் மறைவதைப்போல, தேவர்களும் கொடிய கரிய சூரனது வருகையையும் அசுரர்களி னாரவாரத்தையுங்கண்டுங் கேட்டும் இனி நாம் இங்கிருந்தால் முற்காலங்களி லசுரர்க ளாலுண்டானகெடுதி இக்காலத்திலும் உண்டாகுமென்று கருதி தங்களனுபவத்தா லொளித்தவர்கள் ஆதலால் குயிலை உவமைகூறினார். தேவர்கள் பலராலும் புகழத் தக்கவர்களும் அசுரர்கள் புகழப்பெறாதவர்களு மாதலால், குயிலுக்கு வியன் என்னும் அடைகொடுத்து, புயலுக்கு அடைகொடாதொழிந்தனர். (கடு)

வேறு.

அரந்தைதனை யிகந்தவிரு துணைவர்களும் பாங்கருற வவுணர் சேனை
பரந்துபல வாழ்த்தெடுப்பச் சூரபன்மன் றிகழ்வேலைப் படியும் வானு

நிரந்தபுனற் கங்கைதனை வருவித்து மறையவன்போ னின்ற வெம்மான்
கரந்துதனை யுணர்கின்ற வுருவினொடு தோன்றினனாற் ககன மீதே.

(இ-ள்.) துன்பநீங்கிய இரண்டு தம்பியர்களும் அருகில் நிற்கவும் மிகுதியான அசுரர்சேனைகள் பல வாழ்த்தொலி கூறவும் சூரபன்மன் விளங்குகிற சமையத்தில் மண்ணிலும் விண்ணிலும் பரவிநின்ற ஜலரூபமான கங்கையை யழைப்பித்துப் பிராமணனைப்போல எதிரில் நின்ற சிவபெருமான் மறைந்து தம்மை அவர்களறியக்கூடிய வடிவத்துடன் ஆகாயத்திலெழுந்தருளினார்.—எ-று.

சிவபெருமானுக்கு அட்டமூர்த்த முதலிய அனேக திருவுருவங்களிருப்பினும் அன்பர்கள் அந்தர்முக பகிர்முகங்களிற்கண்டு தரிசிப்பது கைலாசபதியாகிய ஸ்ரீகண்டபரமேசுவர ரூபமாதலால், தனையுணர்கின்ற வுருவினொடு தோன்றினன் என்றார். அது எந்த உருவமென்னிற் கீழ்ப்பாட்டில் விளங்கக்கூறிய உருவமேயாம். (கசு)

நாரிபா கமுமிமையா முக்கண்ணுந் திருப்புயங்க ணான்கு மாகி
மூரிமால் விடைமேல்கொண் டெம்பெருமான் மேவுதலு முன்னி நோக்கிப்
பாரின்மீ மிசைவீழ்ந்து பணிந்தெழுந்து பலமுறையும் பரவிப் போற்றிச்
சூரனா ராதபெரு மகிழ்சிறந்து துணைவரொடுந் தொழுது நின்றான்.

(இ-ள்.) பார்வதிபாகமும் இமையாத மூன்று கண்களும் நான்கு திருப்புயங்களுமுடையவராய் வலிமை பொருந்திய பெரிய இடபவாகனரூடராய் எழுந்தருளுதலும் சூரபன்மன் நினைத்துப் பார்த்துத் தன் தம்பியர்களுடன் பூமியில் விழுந்து நமஸ்கரித்தெழுந்து பலமுறை வணங்கித் துதித்து நீங்காத பெருமகிழ்ச்சியடைந்து வணங்கி நின்றனன்.—எ-று.

மூரிமால்விடை - பெரிய திருமாலாகிய விடை எனினுமாம். (கஎ)

நின்றுபுகழ் சூரபன்மன் முகநோக்கி நமையுன்னி நெடிது காலம்
வன்றிறன்மா மகமாற்றி யெய்த்தனையால் வேண்டுவதென் வகுத்தி யென்னப்
பொன்றிகழு மலர்க்கமலப் பொகுட்டுறைவோன் முதலியபுத் தேளிர் யாரு
மின்றெமது தலைமையெலாம் போயிற்றா லெனவிரங்க விதனைச் சொல்வான்.

(இ-ள்.) தமது திருமுன்னின்று துதிக்கின்ற சூரபன்மனது முகத்தைப்பார்த்து நீ நம்மைக் குறித்து அநேககாலம் மிக்க திறத்தினையுடைய பெரிய யாகத்தைச் செய்து இளைத்தனை உனக்கு வேண்டிய வரம் யாது சொல்லக்கடவை யென்றருளிச் செய்யவும், பொன்போல் விளங்கும் தாமரைமலர்ப் பொகுட்டிலிருக்கின்ற பிரமன் முதலிய தேவர்களனைவரும் எங்கள் முதன்மைகளனைத்தும் இன்றே யொழிந்ததென்று கூறி வருந்தும்படி சூரபன்மன் இதனைக் கூறுவானாயினன்.—எ-று. (கஅ)

கொன்னாரும்புவிப்பாலாய்ப் பலபுவனங்கொண்டவண்டக் குழுவுக் கெல்லா
மன்னாகி யுறல்வேண்டு மவைகாக்குந் தனியாழி வரலும் வேண்டு
முன்னாமு னவையனைத்துஞ் செல்லுவதற் கூர்திகளு முதவல் வேண்டு
மெந்நாளு மழியாம லிருக்கின்ற மேனியுமெற் கீதல் வேண்டும்.

(இ-ள்.) அடியேன் கடினமாகிய பிருதிவி பூதத்திலுள்ள பல புவனங்களைக் கொண்டிருக்கின்ற அண்டத் தொகுதிகளுக்கெல்லாம் அரசனா யிருக்கவேண்டும்; அவ்வண்டங்களைக் காக்கப்பட்ட ஒப்பற்ற ஆக்கினா சக்கரமுங் கிடைக்கவேண்டும்; நினைக்கு முன்னே அவ்வண்டங்கள் தோறுஞ் செல்லத்தக்க வாகனங்களையுந் தரல்வேண்டும், எப்பொழுது மழியாம லிருக்கின்ற தேகத்தையுங் கொடுத்தருளல் வேண்டும்.—எ-று.

பூதங்களிற் பிருதிவிகடினபதார்த்தமாதலால், கொன்னாரும்புவி என்றார். ()

அலையாழி மிசைத்துயில்கூர் பண்ணவனே முதலோர்க ளமர்செய் தாலு
முலையாது கடந்திடுபே ராற்றலொடும் பலபடையு முதவல் வேண்டுந்
தொலையாமே யென்ஞான்று மிருந்திடலும் வேண்டுமெனச் சூரன்வேண்டக்
கலையார்வெண் மதிமிலைச்சுஞ் செஞ்சடிலத் தனிக்கடவுள் கருணை செய்வான்.

(இ-ள்.) அலைகளையுடைய கடலின்மேல் தூங்குகின்ற திருமால் முதலியவர்கள் போர்செய்தாலும் கெடாமல் அவர்களைச் செயிக்கின்ற மிகுந்த வல்லமையுடன் பல ஆயுதங்களையு மளித்தருளல் வேண்டும்; அழியாமல் என்று மிருக்கவும் வேண்டும் என்று சூரபன்மன் வேண்டிக்கொள்ளவும், கலைகள் பொருந்திய வெள்ளிய சந்திரனை யணிந்த சிவந்த சடைமுடியையுடைய ஒப்பற்ற சிவபெருமான் வரமளிப்பாராயினர்.—எ-று.

தேவிற்றிருமால் என்றபடி - தேவர்வருக்கத்துள் திருமாலுயர்ந்தவர் என்பதையுணர்த்த ஏகாரத்தொடுகூறினர். சிவபெருமான் அந்தத் திருமால்முதலிய தேவர்களுக்குப் பதியாதலால் தேவர்தேவன் என்னும் மகாதேவனுயிருத்தலை யுணர்க. பண்ணவன் பூசைமுதலியவற்றுக்காக (படைக்கப்படுவென்) பிரதிட்டிக்கப்படுபவன்.

மண்டனக்கா யிரகோடி யண்டங்க ளுளவாரு மற்ற வற்று
ளெண்டமோ ராயிரத்தெட் டுகெநூற்றெட் டாள்கவென வருளா னல்கி
யெண்டொகைபெற் றிடுகின்ற வவ்வண்டப் பரப்பெங்கு மேகும் வண்ணந்
திண்டிறல்பெற் றிடுகின்ற விந்திரஞா லமதென்னுந் தேரு நல்கி.

(இ-ள்.) பிருதிவிதத்துவத்தில் ஆயிரங்கோடி யண்டங்க ளிருக்கின்றன; அவ்வண்டங்களில் ஆயிரத்தெட்டண்டங்களை நூற்றெட்டு யுகம் அரசாட்சி செய்யக் கடவையென்று திருவருளோடு வரத்தைக் கொடுத்து, எண்ணத்தக்க தொகையினையுடைய பெரிய அந்த அண்டங்களி லெல்லாஞ் செல்லும்பொருட்டு மிக்க வலிமையினையுடைய இந்திரஞாலமென்னும் இரதத்தையு மளித்து.—எ-று.

வடநூலார் இந்திரஞாலத்தேரை இந்திரலோகரதம் என்பர்.

இதுமுதல் ஐந்துபாடலுங் குளகம். (உக)

எண்ணுபலபுவனங்கள்கொண்டவண்டத்தொகைதன்னையென்றும்போற்றக்
கண்ணனது நேமியினும் வலிபெறுமோ ரடலாழி கடிதி னல்கி
யண்ணலுறு சினவேற்றுக் கோளரியூர் தியுநல்கி யகிலத் துள்ள
விண்ணவர்கள் யாவருக்கு மன்றுமுதன் முதல்வனு மேன்மை நல்கி.

(இ-ள்.) கணக்கிடப்பட்ட அநேக புவனங்களையுடைய அண்டக் கூட்டங்களை யெல்லாம் எப்பொழுதுங் காக்கும்பொருட்டுத் திருமாலினது சக்கரத்தைப் பார்க்கிலும் மிக்க பலம்பொருந்திய ஒரு சக்கரத்தை விரைவாகக் கொடுத்தருளிப் பெருமைபொருந்திய கோபமிக்க ஆண்சிங்க வாகனத்தையு மளித்து எல்லா வுலகங்களிலுமுள்ள சகல தேவர்களுக்கும் அன்று தொடங்கித் தலைவனு யிருக்கத்தக்க மேன்மையுங் கொடுத்து.—எ-று.

திருமால் இந்த ஒரு அண்டத்தைமாத்திரங் காப்பவர். சூரபன்மன் இத்திருமாலுடன் ஆயிரத்தெட்டுத் திருமால்களையும் அவர்களாற் காக்கப்படுகின்ற ஆயிரத்தெட் டண்டங்களையும் ஆளவேண்டியவனுதலால் அவனது சக்கரந் திருமாலினது சக்கரத்தைப் பார்க்கிலும் வலிமைபெற்றிருக்கவேண்டியது முறைமையாதலால், கண்ணனது நேமியினும் வலிபெறுமோ ரடலாழி என்றார். (உஉ)

மேற்றிகழும் வானவரைத் தானவரை யேனவரை வெற்றி கொள்ளு
மாற்றலொடு பெருந்திறலும் பாசுபத மாப்படையே யாதி யாகித்
தோற்றமுறு கின்றதெய்வப் படையனைத்து மெந்நாளுந் தொலைந்தி டாம
லேற்றமிகும் வச்சிரமா கியமணிமே னியுமுதவி யிதற்குப் பின்னர்.

(இ-ள்.) விண்ணுலகத்தில் வசிக்குந் தேவர்களையும் அசுரர்களையும் மற்றை யர்களையும் வெற்றிகொள்ளத்தக்க வீரத்தோடு மிக்க வல்லமையையும் பாசுபதம் முதலிய பெரிய அஸ்திரங்களையும் மற்றைப் பெருமைபொருந்திய எல்லாத்தெய்வப்படைகளையும் எக்காலத்திலுமழியாமல் பெருமையடைந்திருக்கத்தக்க அழகிய வச்சிரசரீரத்தையுமளித்து அதன்பின்பு.—எ-று.

அஸ்திரங்களிற் பாசுபதாஸ்திரம் உயர்ந்ததாதலால் அதனை முன்னேவைத்து, பாசுபதமாப்படை என்றார். பாசுபதாஸ்திரம் - பசுபதியின் அஸ்திரம். சிவாஸ்திரம் என்பது பொருள். சரீரத்துடன் நீடித்தகாலம் இருப்பவர்களுக்கு நரை திரை பிணி மூப்பு துர்ப்பலம் அழகின்மை முதலியவை உண்டாவது வழக்கம். இவனுக்கவைகளில்லாத சரீரத்தை யளித்தாரென்பார், ஏற்றமிகும் வச்சிரமாகிய மணிமேனி என்றார். (உரு)

ஆறுசேர் கங்கைதனை விண்ணுலகு தனிலேவி யக்கங் கைக்குங்
கூறுசேர் பெருவேள்விச் செந்தழற்குந் தோற்றமெய்திக் குலவும் வண்ணம்
வீறுசேர் பெருங்கடல்போ லொருபதினா யிரகோடி வெள்ள மாகுந்
தாறுபாய் கரிதிண்டேர் வயப்புரவி யவுணரெனுந் தானை நல்கி.

(இ-ள்.) கங்கைநதியைச் சொர்க்கத்திற்கனுப்பிவிட்டு அந்தக் கங்கைக்கும் புகழத்தக்க சிறப்பினையுடைய பெரிய யாகாக்கினிக்கும் புகழுண்டாகி விளங்கும்படி உயர்வுபொருந்திய பெரிய கடலைப்போலப் பதினாயிரங்கோடி வெள்ளமென்று சொல்லப்பட்ட அங்குசத்தை மோதுகின்ற யானையும், வலிய தேரும், வெற்றிபொருந்திய குதிரையும், அசுரர்களென்று கூறும் பதாதியுமாகிய சதுரங்கசேனைகளையுமளித்து.—எ-று. (உச)

வேறு.

துன்னுறு பெரும்புகழ்ச் சூர பன்மனுக்
கின்னதோ ரருள்புரிந் திட்ட வெல்லையி
னன்னவற் கிளைஞர்வந் தடிப ணிந்தெழத்
தன்னிக ரில்லதோர் தலைவன் கூறுவான்.

(இ-ள்.) (ஆயிரத்தெட்டண்டங்களும் இந்திரலோக ரதமும் வலிமிக்க சக்கரமும் சிங்கவாகனமும் வச்சிர சரீரமும் பதினாயிரங்கோடிச் சேனைகளும் நீடித்த ஆயுளும் பெற்றமையால் உண்டான) நெருங்கிய பெரும்புகழையுடைய சூரபன்மனுக்கு இவ்வாறு வரமளித்தவுடன் அவன் தம்பியர்கள்வந்து திருவடிகளில் வணங்கி நிற்கவும், ஒப்பற்ற சிவபெருமான் அருளிச்செய்கின்றார்.—எ-று. (உரு)

வேறு.

சூரனென்பவன் றோளிணை போலவே
வீர மெய்தி விளங்கிநூற் றெட்டுகஞ்
சீரின் மேவுதிர் தேவர்கள் யாரையும்
போரில் வென்று புறந்தரக் காண்டிரால்.

(இ-ள்.) நீங்கள் சூரபன்மனது இரண்டு தோள்களைப்போல வீரத்தையடைந்து விளங்கி நூற்றெட்டுயுகம் சிறப்புடன் வாழக்கடவீர்கள். திருமால் பிரமன்

இந்திரன் முதலியவர்களாகிய தேவர்களனைவரையும் போரில் செயித்துப் புறங்கொடுத்தோடச்செய்யுங்கள்.—எ-று. (உசு)

தேவர் யாவருஞ் சென்று தொழப்படு
மூவ ராகி மொழிந்திடு நுங்களைத்
தாவி லாதநஞ் சத்தியொன் றேயலா
லேவர் வெல்பவ ரென்று விளம்பிமேல்.

(இ-ள்.) தேவர்களனைவரும் வந்து வணங்கப்பட்ட மூவர்களாகப் புகழ்ந்து கூறத்தக்க உங்களைக் கெடுதலில்லாத நமது சத்தி யொன்றே யல்லாமல் வேறு யாவர் வெல்ல வல்லவர்களென்று கூறிப் பின்பு.—எ-று.

மூவர்கள் என்றது, பிரமன் - திருமால் - உருத்திரன் என்பவர்களை. உருத்திரரன்றே இங்குப்போந்து வரமளிப்பவனென்னில், அன்றாம். இங்குக்கூறியது திரிமூர்த்திகளுக்குக் கருத்தாவாகிய சிவபெருமானையேயாம். சிவபெருமான் திரிமூர்த்தி பரன் என்பதை, "பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த, நாவேறு செல்வியு நாரணனு நான்மறையு, மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச், சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்னுந் தமிழ்வேதத்தானுணர்க.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம். (உஎ)

ஈறு றாத விரதமுந் தன்பெயர்
கூறு தெய்வப் படையுங் கொடுத்திடா
வேறு வேறு மிகவருள் செய்துமே
லாறு சேர்சடை யாண்டகை யேகினன்.

(இ-ள்.) அழியாத தேரையும், தமது திருநாமத்துடன் விளங்கும் பாசுபதாஸ்திரத்தையுங் கொடுத்தருளித் தனித்தனியே மிகுதியுந் திருவருள் புரிந்து பின்பு கங்கையையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானெழுந்தருளினார்.—எ-று. ()

வரம்பெறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சுஎக.

உ

முருகன்றுணை.

# சுக்கிரனுபதேசப்படலம்.

அற்று கின்ற வேலையின் முன்னோ ரரணம்போற்
சுற்று நிற்குந் தானவர் தங்கோன் றொலைவில்சீர்
பெற்றா னென்னுந் தன்மையை யுன்னிப் பெருவன்மை
யுற்று ரொல்லென் றார்த்தன ராற்ற வுவப்புற்றார்.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் யாகத்தின் காவலுக்காக ஓர் மதிலைப்போல வளைந்து சூரபன்மனது கட்டளையால்நின்ற அசுரர்கள் தமது அரசன் அழிவற்ற செல்வத்தைப் பெற்றனனென்னுந் தன்மையை நினைத்து மிகுந்த வலிமையுற்றவர்களாய் ஒல்லென்று ஆரவாரித்துச் சந்தோஷமடைந்தார்கள்.—எ-று. (க)

ஊழியில் வேதன் கண்டுயில் வேலை யுலகஞ்சூ
ழாழிக ளேழு மாணையி னிற்ற லதுநீங்கி
மாழைகொண் மேருச் சுற்றிய தென்ன மகத்தெல்லை
சூழுற னீங்கிச் சூர்முத றன்பாற் றுன்னுற்றார்.

(இ-ள்.) ஊழிக்காலத்தில் பிரமன் நித்திரை கொள்ளும்பொழுது உலகத்தைச் சூழ்ந்துள்ள சப்த சமுத்திரங்களும் கடவுளது ஆணையினால் கரை புரளாமல் நிற்றலை விட்டுக் கரையை மோதிக்கொண்டு பொன்மயமான மேருமலையைச் சூழ்ந்துகொண்டாற்போல யாகசாலையி னெல்லையைச் சூழ்ந்திருத்தலை யொழிந்து சூரபன்மனை நெருங்கிச் சூழ்ந்துகொண்டார்கள்.—எ-று. (உ)

கண்டா ரார்த்தார் கான்மிசை வீழ்ந்தார் கமழ்வேரி
கொண்டா ரொத்தார் கைதொழு கின்றார் குப்புற்றா
ரண்டா வோகை பெற்றனர் தொன்னா ளயர்வெல்லாம்
விண்டார் வெஞ்சூர் தன்புடை யாகி விரவுற்றார்.

(இ-ள்.) சூரபன்மனைக் கண்டார்கள்; ஆரவாரித்தார்கள், அவன் பாதங்களில் வீழ்ந்தார்கள்; மணம் பொருந்திய மதுபானஞ் செய்தவர்களை யொத்தார்கள்; கைகூப்பி வணங்கினார்கள்; குதித்தார்கள். அடங்காத மகிழ்வடைந்தார்கள்; கொடிய சூரபன்மனருகில் நெருங்கி வந்தார்கள்; முன்னுளிருந்த வருத்தமெல்லாம் நீங்கினார்கள்.—எ-று.

முன்னுளிலிருந்த வருத்தமாவது, பதினாயிரவருஷம் அசையாமல் நின்று யாகத்தைக் காத்தவருத்தம். (ஙு)

முன்னா குற்றோ ரிற்சிலர் தம்மை முகநோக்கி
யிந்நாள் காறு நீர்வலி யீர்கொ லெனவோதி
மன்னா குற்றோ னல்லருள் செய்ய மகிழ்வெய்தி
யன்னார் யாரு மின்னதொர் மாற்ற மறைகுற்றார்.

(இ-ள்.) தனக்கு முன்னே வந்தவர்களில் சிலருடைய முகத்தைப் பார்த்து இதுகாறும் நீங்கள் தைரியமுடையவர்களா யிருந்தீர்களோவென்று வினவிச் சூரபன்மன் நல்ல கருணை செய்யவும், அவர்களனைவரும் மகிழ்வடைந்து இவ்வார்த்தையைக் கூறுகின்றார்கள்.— எ-று.

நீர் வலியீர்கொல்-இளைக்காமற் காத்தீர்களா எனினுமாம். (சு)

தீயுண் டாகுங் கண்ணுதல் கொண்ட சிவனுண்டு
நீயுண் டெங்கட் கோர்குறை யுண்டோ நிலையாகி
யேயுஞ் செல்வஞ் சீரொடு பெற்றோ மிடரற்றோந்
தாயுண் டாயின் மைந்தர் தமக்கோர் தளர்வுண்டோ.

(இ-ள்.) நெற்றியில் அக்கினிக் கண்ணையுடைய சிவபெருமா னிருக்கின்றனர்; நீரு மிருக்கின்றீர். ஆதலால் எங்களுக்கு ஒரு குறையுண்டோ? நாங்கள் நிலையாகப் பொருந்தியுள்ள செல்வத்தைச் சிறப்புடன் பெற்றுக்கொண்டோம்; துன்பமொழிந்தோம்; தாயிருந்தால் பிள்ளைகளுக்கு ஒரு குறையுண்டாகுமோ?—எ-று. (ரு)

என்பார் தம்பா லன்பின னாகி யிறைபின்னோர்
தன்பா லாக நிற்புழி யிந்தத் தகுவன்றான்
வன்பா லானுஞ் செய்வதெ னென்னா வானோர்க
டுன்பா யச்சுற் றேங்கின ராவி தொலைவார்போல்,

(இ-ள்.) என்றுகூறிய அசுரர்களிடத்தில் அன்புடையவனுகிச் சூரபன்மன் தம்பிமார்கள் தன்னருகில் நிற்கும்படி நிற்கும்பொழுது, தேவர்கள், இந்த அசுரன் மிகுந்தவலிமையுடையவனுயினுன், இனி நாம் யாதுசெய்வதென்று உயிர்விடுகின்ற வர்களைப்போலத் துன்பத்துடன் அச்சங்கொண்டு ஏக்கமடைந்தார்கள்.—எ-று.

துன்பங்களில் மரணத்துன்பத்தைவிடக் கொடியதொன் றின்மையால், எங்கினராவி தொலைவார்போல் என்ருர். (சு)

வேறு.

சேனை நள்ளிடைச் சீர்கெழு வன்மையான்
மேன தன்மை விருப்பினிற் கண்ணுறீஇ
மான மேற்சென்று மன்னெடுந் தானவர்
சோனை மாரியிற் றூமலர் தூவினுர்.

(இ-ள்.) சேனைகளின் மத்தியில் சிறப்புமிக்க சூரபன்மன்உயர்ந்துவிளங்குந் தன்மையை விருப்பத்துடன்பார்த்து அசுரர்கள் அசுரேந்திரனுடன் விமானத்தி லேறிச்சென்று சோனைமாரிபோலத் தூய்மையாகிய மலர்மாரிபெய்தார்கள்.—எ-று.

சோனைமாரி விடாது பெய்யுஞ் சிறுமழை; இது இக்காலத்து மலைநாட்டி லுளது. (எ)

தூசு வீசினர் சூர்முதல் வாழியென்
ருசி கூறின ராடினர் பாடினர்
பேச லாத பெருமகிழ் வெய்தினுர்
வாச வன்றன் மனத்துயர் நோக்கினுர்.

(இ-ள்.) உத்தரீயத்தை விசிறினுர்கள்; சூரபன்மன் வாழ்கவென்று ஆசி மொழிகளையுரைத்தார்கள். ஆடினுர்கள்; பாடினுர்கள்; சொல்லுதற்கரிய பெருங் களிப்படைந்தார்கள்; இந்திரனது மனத்துயரைப்பார்த்தார்கள்.—எ-று.

தூசுவீசுதல் பண்டைக்காலத்துள்ள ஒரு உயர்ந்த மரியாதை. இதனைக் காஞ்சிமண்டலத்தில் தேவஸ்தானங்களில் உச்சவத்திற் சிலவிடங்களிற் காணலாம்.()

அண்ண லாரரு ளாலழல் வேதியின்
கண்ணில் வந்த கணிப்பில் படைக்கெலா
மெண்ணி லோரை யிறையவ ராக்கினு
னண்ணி நாளு நவையறப் போற்றவே.

(இ-ள்.) சூரபன்மன் சிவபெருமானது திருவருளினுல் ஓமகுண்டத்தினின் றுந் தோன்றிய அளவற்ற சேனைகளனைத்தையும் நாள்தோறும் பொருந்திக் குற்ற மறக்காக்கும்பொருட்டு அளவற்ற அசுரர்களைத் தலைவர்களாகச்செய்தனன்.—எ-று.

கண்ண கன்புயக் காவலன் றனைகண்
மண்ணும் வானமு மாதிர வெல்லையுந்
தண்ண றச்செலத் தம்பியர் தம்மொடு
மெண்ணி வேள்வி யிருங்கள நீங்கினுன்.

(இ-ள்.) அசுரர் சேனைகள் மண்ணுலகமும் விண்ணுலகமும் திக்கெல்லை களும் நெருங்கிச் செல்லத் தன் தம்பிமார்களுடன் விசாலமாகிய புயத்தினையுடைய சூரபன்மன் ஆலோசித்துப் பெரிய யாகசாலையினின்று நீங்கினுன்.—எ-று. (கo)

நீங்கி மீண்டு நெடுந்தவத் தந்தைதன்
பாங்க ரெய்திப் பணிந்து பரமனுல்

வாங்க லுற்ற வரத்தியல் கூறியே
யாங்கள் செய்வகை யென்னினி யென்னவே.

(இ-ள்.) அங்குநின்று நீங்கிப் பின்பு மிக்க தவத்தினையுடைய தந்தையாகிய காசிபமுனிவரை யடைந்து வணங்கிச் சிவபெருமானிடத்திற்பெற்ற வரத்தின் தன்மைகளையுரைத்து இனி யாங்கள் செய்யவேண்டுவது யாதென்று வினவவும்.—எ-று.

சதா தவஞ்செய்பவராதலால் காசிபமுனிவரை நெடுந்தவத்தந்தை என்றார்.

தந்தை கேட்டுச் சதமகன் வாழ்வினுக்
கந்த மாகிய தோவண்ட ருக்கிடர்
வந்த தோவெம் மறைநெறி போனதோ
வெந்தை யாரரு ளித்திற மோவெனா.

(இ-ள்.) தந்தையாகிய காசிபமுனிவர் அதனைக்கேட்டு, இந்திரனதுவாழ்வினுக்கு நாசம் நேர்ந்ததோ? தேவர்களுக்குத் துன்பஞ் சம்பவித்ததோ? எமது வைதிகவொழுக்கந் தவறியதோ? எந்தையாகிய சிவபெருமானுடைய திருவருட்டன்மை இவ்வாறு நேர்ந்ததோவென்று.—எ-று.

சிவபெருமான் திருவுளங்கொண்டால் இவர்களைச் சாதுக்களாக்கவுங்கூடும்: அவ்வாறு செய்யாமையால் எந்தையாரருள் இத்திறமோ என்றார். (கஉ)

உன்னி யுள்ளத் துணர்வுறு காசிபன்
றன்னின் வந்த தனயரை நோக்கியே
முன்னை நுங்கண் முதற்குருப் பார்க்கவ
னன்ன வன்க ணடைகுதி ரன்பினீர்.

(இ-ள்.) இவ்வாறு ஆலோசித்துத் தெளிந்த காசிபமுனிவரர் தம்மிடத்துக்குவந்த புதல்வர்களைப்பார்த்து, அன்புள்ளபுதல்வர்களே! பண்டைக்காலந்தொடங்கி உங்கள்முதலாசிரியன் சுக்கிரன் ஆதலால் அவனிடத்திற்குச்செல்லுங்கள்.—எ-று.

முதலாசிரியன் - பரம்பரைக்குரு. (கரு)

அடைதி ரேயெனி னன்னவ னுங்களுக்
கிடைய றுவகை யித்திரு மல்குற
நடைகொள் புந்தி நவின்றிடு நன்றெனா
விடைபு ரிந்து விடுத்தனன் மேலையோன்.

(இ-ள்.) அவ்வாறு செல்வீர்களாயின் அந்தச் சுக்கிரன் உங்களுக்கு இச்செல்வம் நீங்காமல் விருத்தியாகும்படி நடக்கவேண்டிய புத்திகளைக்கூறுவான்; அதுவே நல்லது: ஆதலால் அவனிடஞ்செல்லுங்களென்று காசிபமுனிவரர் விடைகொடுத்தனுப்பினர்.—எ-று. (கசு)

விட்ட காலை விடைகொண்டு வெய்யவன்
மட்டி லாத வயப்படை யோடெழா
விட்ட மான வியற்புக ரோனிடங்
கிட்டி னனது கேட்டன னுங்கவன்.

(இ-ள்.) காசிபமுனிவர் விடைகொடுத்தனுப்பியவுடன், கொடிய சூரபன்மன் விடைபெற்றுக்கொண்டு அளவற்ற வெற்றிபொருந்திய சேனைகளுடன் பிரயாணப்பட்டுத் தங்களிடத்தில் விருப்பமான சுபாவத்தினையுடைய சுக்கிரனிடத்திற்குச் சென்றனன்; அதனைச் சுக்கிரன் கேள்விப்பட்டனன்.—எ-று.

87

அசுரர்களிடத்திலேயே விருப்பமுள்ளவனாதலால், " இட்டமான இயற்புக ரோன் " என்றார். (௧௫)

கேட்டு ணர்ந்திடு கேழ்கிளர் தேசிகன்
வாட்ட நீங்கி மகிழ்நறை மாந்தியே
வேட்ட மெய்தி விரைந்துதன் சீடர்தங்
கூட்ட மோடெதிர் கொண்டு குறுகவே.

(இ-ள்.) சூரனது வருகையைத் தூதுவர்கள்வந்து சொல்லக்கேட்டறிந்த ஒளிமிக்க சுக்கிரன் (அசுரகுலஞ்செழிக்கவில்லையே யென்றிருந்த) வருத்தத்தை யொழித்து, இனி நமக்கென்னகுறைஎன்று மதுபானஞ்செய்து தனது சிஷ்யகூட்டத்துடன் விருப்பமடைந்து விரைவாக எதிர்கொண்டு சென்றனன்.—எ-று.

மகிழ்நறை மாந்தி என்பதனை, சந்தோஷமாகிய மதுவையுண்டு என்று கூறினுமமையும். (௧௬)

கண்ட சூரன் கதுமெனத் தன்பெருந்
தண்ட முன்சென்று தம்பியர் தம்மொடு
மண்டு காதலின் மன்னிய தேசிகன்
புண்ட ரீகமென் பொன்னடி தாழ்ந்தெழ.

(இ-ள்.) அதனைப்பார்த்த சூரபன்மன் விரைவாகத் தம்பிமார்களுடன் தனது பெரிய சேனைகளின் முன்னேசென்று, மிகுந்த விருப்பத்துடன் வந்த சுக்கிரனது தாமரை மலர்போலும் மெல்லிய வழகிய பாதங்களில் வணங்கி யெழுதலும்.

நன்று வாழிய நாளுமென் றாசிக
ணின்று கூறி நிருதர்க் கிறைவனைத்
தன்று ணைக்கரத் தாற்றமு விப்புக
ரொன்றும் வாழ்தன் னிருக்கைகொண் டேகினன்.

(இ-ள்.) உடனே சுக்கிரன், சூரபன்மனே! நீ எப்பொழுதுஞ் சுகமாக வாழக்கடவையென்று ஆசிமொழிகளை எதிரில் நின்றுரைத்து, அவனைத் தனது இரண்டு கரங்களாலுந் தழுவிக்கொண்டு தான் எப்பொழுதும் வாசஞ்செய்கின்ற தன திருப்பிடத்திற்கு அழைத்துக்கொண்டுசென்றனன்.—எ-று. (௧௭)

ஏகு மெல்லை யிளவற் கிளவலை
வாகு சேர்ந்தநம் மாப்படை போற்றென
யூக மோடு நிறீஇயுர வோனெடும்
போகன் மேயினன் புந்தியில் சூரனே.

(இ-ள்.) அறிவற்ற சூரபன்மன் சுக்கிரனது இருப்பிடத்திற்குச் செல்லும்பொழுது தாரகாசுரனை வெற்றிபொருந்திய நமது பெரிய சேனைகளைக் காக்கக் கடவையென்று அணிவகுப்புடன் நிறுத்திச் சிங்கமுகாசுரனுடன் சென்றனன்.

புந்தியில்சூர னென்றது, சூரபன்மன் சுக்கிரனுடைய குண குணங்களை ஆராயாமற் சென்று மாயாவாதோபதேசங்கேட்டு வீணாய்க் கெடும்படிச் சென்றதனாலேயேயாம் என்க. (௧௮)

ஆரு யிர்த்துணை யான வரிமுகன்
வார முற்றுடன் வந்திட வந்திடுஞ்
சூர பன்மனைச் சுக்கிரன் றன்னிடஞ்
சேர வுய்த்துச் செயன்முறை நாடியே.

(இ-ள்.) அரிய உயிர்த்துணைவனுமுள்ள சிங்கமுகாசுரன் (தமயனென்னும்) அன்போடு தன்னுடன் வரும்படி வந்த சூரபன்மனை சுக்கிரன் தன்னிருப்பிடத்திற் கழைத்துக்கொண்டுபோய் (இவனை வசப்படுத்தினலன்றோ நமது பகைவர்களாகிய தேவர்களை ஜயிக்கலாம் என்று) தனக்குள் நினைத்து அதற்காகச் செய்யவேண்டிய முறைகளை யாலோசித்து.—எ-று. (உ0)

ஆச னங்கொடுத் தங்க ணிருத்தியே
நேச நெஞ்சொடு நீடவு நல்லன
பேசி நீர்வரும் பெற்றியென் னேவெனத்
தேசி கன்சொலச் செம்ம லுரைசெய்வான்.

(இ-ள்.) சுக்கிரன் ஆசனமளித்து அதிலிருக்கச்செய்து அன்பு பொருந்திய மனத்துடன்(பிறரைக்கொண்டு ஏதாயினும்ஒருகாரியத்தைச்சாதித்துக்கொள்ளவேண்டியவர்களிற் சிலர் அயலாரை அளவுகடந்து புகழ்வதுபோல்) இவனும் மிகவும் நன்மொழிகளை யுரைத்து நீங்கள் வந்த காரணம் யாதென்று வினவுதலும், சூரபன்மன் கூறுகின்றனன்.—எ-று. (உக)

ஓங்கு வேள்வி யுலப்பறச் செய்தது
மாங்க ணம்வந் தரனருள் செய்ததுந்
தாங்க ரும்வளந் தந்ததுங் காசிபன்
பாங்கர் வந்த பரிசும் பகர்ந்துமேல்.

(இ-ள்.) உயர்ந்த யாகத்தைக் கெடுதலின்றிச் செய்ததும், அங்குச் சிவபெருமானெழுந்தருளி வரமளித்ததும், தாங்குதற்கரிய பெருஞ்செல்வமளித்ததும், காசிபமுனிவரிடத்திற்கு வந்த தன்மையுங் கூறிப் பின்பு.—எ-று.

தாங்கருஞ்செல்வம் - அளவற்றசெல்வம். (உஉ)

தாதை கூறிய தன்மையு முற்றுற
வோதி யாமினி யூக்கி யியற்றிடு
நீதி யாது நிகழ்த்துதி நீயெனத்
தீது சான்மனத் தேசிகன் கூறுவான்.

(இ-ள்.) தந்தையாகிய காசிபமுனிவர் கூறிய வார்த்தைகளை முழுவதுங் கூறி, நாங்கள் இனி முயன்று செய்யத்தக்க முறைமை யாது? அதனைத் தேவரீர் சொல்லக்கடவீரென்று வினவுதலும், (தேவர்கள்முனிவர்கள் முதலியவர்களைக் கெடுக்கவேண்டுமென் றுத்தேசித்திருக்கிற) தீமைமிக்க நெஞ்சகத்தையுடைய சுக்கிராசாரியன் கூறுகின்றனன்.—எ-று. (உ௩)

பாச மென்றும் பசுவென்று மேதகு
மீச னென்று மிசைப்பர் தலையெனப்
பேசன் மித்தை பிறிதிலை யாவியுந்
தேசு மேவு சிவனுமொன் றுகுமே.

(இ-ள்.) பாசமென்றும், பசுவென்றும், மேன்மை பொருந்திய பதியென்றுங் கூறுவார்கள்; அவற்றுள் பாசமொன்று உளதென்று கூறுதல் மித்தையாகும். பசுவும் (பதியைவிட) வேறில்லை; ஒளி பொருந்திய பதியும் ஏகமாகும்.—எ-று.

சுக்கிரன் சூரபன்மனுக் கிதோபதேசஞ் செய்பவனைப்போல மாயாவாத போதனை செய்கின்றான்:—மாயாவாதம் என்பது பலவகைப் புறமதங்களி லொன்று. அது சீவன்-ஈசுவரன்-உலகு-என்னும் இவைகள் முக்காலங்களிலும் இல்லவேயில்லை

யென்றும், பிரமமொன்றேயுளதென்றும் அப்பிரமமும், (விசாரித்தவன்) தன்னைத்தவிர இல்லையென்றும் துணிபுகூறித் திரிய நிற்கு நிலையினை யுடையதேயாம். இந்த மதத்தை நூல்களிலும் சிலர்களது பிரசங்கங்களிலுங் காணலாம். ஆனால் ஒருவன்கூட மாயாவாதம்தான் தனது மதமென்று ஒப்புக்கொள்ளுதலாவது, மாயாவாதம் என்று தலைச்சாத்திட்டு வழங்குநூலை இது எனது மதமென்று ஒப்புக்கொள்ளுதலாவது இல்லை. இப்பொழுது இந்தமதம் தங்களை வேதாந்திகளென்று சொல்லிக்கொள்ளுகிற சங்கரமதத்தினரதாகப் பல அன்னிய மதத்தர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு வழங்கி வருகின்றது. மாயாவாதகண்டனையை எந்த மதத்தினர்களாவது செய்யும்போது அவர்களுடன் சண்டைபோடுபவர்கள் மேற்கூறிய வேதாந்திகளென்பவர்களைத் தவிர வேறு மதத்தினர்களில் இதுகாறும் (மேற்படி மதத்துக்காகப் பரிந்து) வெளிவருகின்றவர்களைக் காணேம். இம்மதம் அந்தரங்க பகிரங்கங்களில் மேற்கூறிய சங்கர மதத்தினரதாகவே அநுஷ்டிக்கப்படுகின்ற தென்பதை அநுபவத்தாலறியப்படுகின்றது. இதுநிற்க : இம்மதம் முத்திக்குவிரோதமானதும், முத்தியன்றியுள்ள ஏனைய மூன்றையுங்கூட ஒருவனை அநுஷ்டிக்கவொட்டாமற் செய்வதும், அநுஷ்டிக்கினும் உலகிலுள்ளவர்களது புகழ்தலைக் கருதி யநுஷ்டிக்கச் செய்வதுமாக உள்ளதென்பதனை இத்தேசங்களிலுள்ள சில வேதாந்திகளென்று சொல்லிக்கொள்ளுகிற மாயாவாதிகளது ஆலயப்பணிவிடை விக்கிரகப்பிரதிஷ்டை யுச்சவநடத்தல் முதலியவைகளி லிருக்கும் அசிரத்தையாதிகளாலேயே அறியலாம்.

இதுவன்றி, இம்மதம் கேவலம் உலோகாயதமதத்தின் அநுஷ்டானமான மாதர்போகாதிகளையே யடையவிரும்புவிக்கும். அதனாலன்றோ இந்தமதத்தை நமது ஸ்ரீமணிவாசகப்பிரான், "மிண்டிய மாயா வாத மென்னுஞ்-சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்-துலோகா யதனெனு மொண்டிறற் பாம்பின்-கலாபே தத்த கடுவிட மெய்தி" என்று இகழ்ந்து கூறியருளினர். பிறரும் "மாயாவாத வனசரர் வெருட்ட" என்றும், "மாயாவாதப் பேய்க்கும் வாருமே" என்றும், "மாயாவாதி பேயாகி" என்றும் பிறண்டுங் கூறியிருப்பதெல்லாம் அம்மதத்திலுள்ள ஆபாசத்தைநோக்கியன்றே. இம்மதம் பலமதத்தர்களாலேயுந் தூஷிக்கப்படுவதை யுணர்ந்தும் வேற்று மதத்தர்களில் அனேகர்கள் அம்மதத்தைச் சோம்பலினிமித்தம் அநுஷ்டிக்கின்றார்கள். இதுநிற்க : இச்சுக்கிரன் இம்மதத்தினனுவெனில் இவனிம்மதத்தினனுனல் சிவபெருமானை நோக்கிச் சூரனைத் தவஞ்செய்யும்படி எச்சரித்தனுப்புவானு? அதுவுமன்றி, உங்களுக்குச் சிவபெருமானளித்த அண்டங்களில் ஒன்றி னியல்பைக் கூறுகின்றேன் என்பனு? சிலர் ஒருகாரியத்தை நிறைவேற்றும்பொருட்டுத் தங்களுக்குடன்பாடல்லாதவைகளையும் ஒப்புக்கொள்ளுதலை உலகில் காண்கிறோமே; அதுபோலவே சுக்கிரனும் தேவர்கள் நிமித்தம் அந்தச்சமையத்துக்குமாத்திரம் இதை உடன்பாடாக வைத்துக்கொண்டதே அன்றி வேறில்லை.

இவ்வுபதேசத்தைக் கேட்டுக்கொண்ட சூரபன்மனுவது இம்மதத்தை அநுஷ்டித்தானு என்னி லதுவுமில்லை. எவ்வாறென்றால், இவன் திக்குவிஜயஞ் செய்யும்போது ஸ்ரீகைலாசத்திற்குச் சென்று ஸ்ரீகண்டபரமேசுவரனை நமஸ்கரித்திருக்கிறான். இதனைப் பின்வரும் திக்குவிஜயப் படலத்தின் கஙக-ம் கஙஉ-ம் பாடல்களாலுணர்க. இதுவன்றியும், மகேந்திர காண்டத்தில் சூர னமைச்சியற் படலத்தில் சிங்கமுகனது பிரசங்கமாகிய க00-வது பாடலில் "பேறுதந்திடுபிஞ்ஞகன்" எனவும், சூரபன்மனது பிரசங்கமாகிய கக0-வது பாடலில் "ஆதிநாயகன்" எனவும், சூரபன்மனும் அவனுடனிருந்த சிங்கமுகாசுரனும் பிற்காலத்திற் பிரசங்கிக்கப்பட்டிருத்தலா

லும், போர்புரியச் செல்லும்போது திருநீறுதரித்துச் சென்றானென்று கூறப்படுதலாலும் இவனதுமதம் சைவமென்றும், சும்மா சுக்கிரன் சொல்லும்பொழுது கேட்டதேயன்றி அதனை யுடன்பாடாகக் கொண்டானில்லையென்றும் விளங்குகின்றது. சொன்னவனுங் கேட்டவனும் நம்பாத உபதேசத்தை மற்று வேறு யாவர்தான் விரும்புவார்கள். இந்த அப்பிரயோசனமான பிரசங்கத்தை முன்னர் அவர்கள் நடத்தியபடியாலதைச் சொல்லாமல் ஏன் விடவேண்டுமென்று வியாதமுனிவருங் கூறினாராயிருக்கலாம்; ஆதலா லிதையொரு உண்மையுபதேசமென்று கருதாதொழிக.

இந்த வுபதேசத்தைச் சுக்கிரன் உபதேசிக்கும்போது தனது சைவசமயத்துக்கே தோஷங்காட்டி, தான் வேறு மதஸ்தனாக நின்று கூறுகின்றான். அதனாலன்றோ இவன் பாசம்-பசு என்னும் இரண்டும் இல்லை; பதியொன்றே நித்தியம் என்று கூறினான். பாசம் என்றும் அனாதிநித்தியம் எனவும், பசுவும் என்றும் அனாதிநித்தியம் எனவும் நூல்கள் கூறாநிற்கும்.

"துன்றும் பவத்துயரு மின்புந் துணைப்பொருளு - மின்றென்ப தெவ்வாறுமில்"—என்றும், "குன்றாத—பல்லுயிர் வெவ்வேறு படைத்து மவைகாத்து-மெல்லையிளைப்பொழிய விட்டு வைத்தும்"—என்றும், "இனாத நூலின ரியம்புவ பலதிற மெண்ணிற்-கனவெ னத்தலை மயங்குவ கழிகசை வத்த-மனாதி யாலறி வரியன நிறைவின வலிய-அனாதி சத்திநித் தியத்தன வைந்துமெய்ப் பொருளே."—என்றும், "பதியும்பதிக் கடிமையாம் பசுவும்பசுவின் - முதிரு மாணவப் பகையுமம் முழுப்பகைதுமிப்பக் - கதிய மாயையுங் கருமமு மெனப்படு மவைதா - மதியு ளோர்கள்பின் னிரண்டையு மலத்தொடு மொழிவார்"—என்றும் கூறாநிற்பவைகளை மறந்து, பதியொன்றேயுளது; பசுபாசங்களில்லை யென்று கூறினான்.

இதுமுதல் ஐந்து பாடலுங் குளகம். (உசு)

தீய நல்லன வேயெனச் செய்வினை
யாயி ரண்டென்ப ரன்னவற் றேதுவா
லேயு மாற்பிறப் பென்பரின் பக்கட
ரேயு மென்பர் துயருறு மென்பரால்.

(இ-ள்.) தீயன நல்லனவென்று செய்யும் வினைகளிரண்டாகுமென்று கூறுவார்கள்; அவ்வினைகளின் காரணத்தால் பிறவியுண்டாகுமென்று கூறுவார்கள்; (அவை) இன்பக்கடலில் மூழ்குமென்று கூறுவார்கள்; துன்பமடையுமென்று கூறுவார்கள்.—எ-று.

சைவர்களாகிய நம்மாலொப்புக்கொள்ளப்பட்ட புண்ணிய பாவங்க ளவனுக்கு (மாயாவாதிக்கு) உடன்பாடன்மையைக் காட்ட "என்பரால்" என்றார். இருவினையாதிக ளுளவென்பதனை—"இருவினை யென்ப மனமுதன் மூன்றி னியற்றுறு மிதமகிதங்கள்-பெருவினைப் பயன்கள் புண்ணிய பாவம் பேசுமிக் கருமத்தின் பயன்கள் - மருவிடு மின்ப துன்பமா மவைதா மாய்வினவ் விருவினை தோற்று-மொருதனு விளைப்ப மற்றொரு தநுவி னுளைப்படுங் கெட்டுங்கே டிலவாய்"—என்பதனானுணர்க. ()

ஒருமை யேயன்றி யூழின் முறைவிரா
யிருமை யுந்துய்க்கு மென்பரவ் வெல்லையி
லரிய தொல்வினை யானவை யீட்டுமேல்
வருவ தற்கென்பர் மன்னுயிர் யாவையும்

(இ-ள்.) ஒருமுறையன்றி பிராரத்துவ சம்பந்தத்தினால் இம்மை மறுமைகளை யநுபவிக்குமென்று கூறுவார்கள்; அவ்வாறநுபவிக்குஞ் சமையத்தில் அரிய

பழய வினைகளைச் செய்யுமாயின், இவ்வுயிர்களெல்லாம் மீண்டும் பிறத்தற்கே வினைகளைச் செய்கின்றனவென்று கூறுவார்கள்.—எ-று.

இந்த ஒருதோற்றமன்றி மற்றைய மறுமை முதலியவை இல்லை என்று கொண்டவனுதலால் துயருறுமென்பரால் என்ருன் என்ருர். இருவினைகளை யநுபவித்தே தீரவேண்டுமென்பதனை—"புரிதரு முறையிற் பிறழ்ந்துயிர் தெய்வம் பூதமென் றிவற்றினு ளொன்ருன்-மருவுழி விழைந்த விழைந்தில விழைந்த வன்றிவே ருவனவென்னத்-திரிவிதப் படுவ பயனிழி வினைக டீர்வுசெய் யினுநுகர்ந் தன்றி - யிரிதரா முழுது மிதுவிலை யானு மியையும்பண் ணுமையும் பலிக்கும்"—என்பதனுனுணர்க.()

ஈட்டு கின்ற விருவினை யாற்றலான்
மீட்டு மீட்டும் விரைவி னுதித்திடும்
பாட்டின் மேவும் பரிசுணர்ந் தன்னவை
கூட்டு மென்பர் குறிப்பரி தாஞ்சிவன்.

(இ-ள்.) செய்கின்ற இருவினைத் திறத்தினுல் மீண்டு மீண்டும் விரைவாகத் தோன்றும், பின்பு அழியும், இத்தன்மையை யுணர்ந்து உணர்தற்கரிய சிவபெருமான் அவற்றைக் கூட்டுவானென்று கூறுவார்கள்.—எ-று.

ஒருகருத்தாவினுலூட்டப்படுதல் தனக் குடன்பா டன்மையால் "குறிப்பரி தாஞ்சிவன் கூட்டுமென்பர்" என்ருன் என்ருர். ஒரு கருத்தாவினுல் ஊட்டப்படும் என்பதை "அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்குஞ்-சகலர்க்கு வந்தருளுந் தான்"—என்பதனுனுணர்க. (உஎ)

சொற்ற வாதியுந் தோமுறு வான்றளை
யுற்ற வாவியு மொன்றல வொன்றெனிற்
குற்ற மாகுமக் கோழுதற் கென்பரான்
மற்ற தற்கு வரன்முறை கேட்டிநீ.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட பதியும் குற்றம்பொருந்திய பெரிய பாசத்தை யடைந்த பசுவும் ஏகமன்று; ஏகமென்று கூறின், அந்தப்பதிப்பொருளுக்குக் குற்றமாமென்று கூறுவார்கள்; ஆதலால் அதற்கு வரன்முறைமைகளை நீகேட்கக்கடவை.

இவனிவ்வாறு பதி பசு பாசங்களில் பசுபாச மில்லையென்று கூறி, தன் மதத்தை நாட்டத்தொடங்கினுன் என்பார், மற்றதற்கு வரன்முறை கேட்டிநீ என்ருன் என்ருர். (உஅ)

ஆதி யந்தமின் ருகி யமலமாஞ்
சோதி யாயமர் தொல்சிவ னுடலின்
காத லாகிக் கருதுதன் மாயையாற்
பூதம் யாவும் பிறவும் புரிவனுல்.

(இ-ள்.) முதலு முடிவு மில்லாததாய் நிர்மலசோதியாய்ப் பொருந்திய பழமையாகிய சிவபெருமான் திருவிளையாட்டின் விருப்பமுடையவராய் நினைப்பு மாத்திரமாயுள்ள தமது மாயையினுல் சகல பூதங்களையும் மற்றவைகளையும் படைப்பார்.

இது அவன் மதத்திற் சிருட்டிக்கிரமங் கூறு முறை யென்பதனை—"மன்னும் பிரமத் தினில்வானுய் வானில் வளியா யந்தவளி - தன்னி னழலா யழலின்பாற் சலமாய்ச் சலத்திற் ருரணியாய்ச் - சொன்ன விதனின் மருந்தாகித் தோற்று மருந்திலன்னமா-யன்ன மதனிற் றுவக்காதி யாறு தாது வாயினவால்" என்றும், "தோலுதிர மாங்கிசமேதை யென்பு மச்சையாகிய கொழுப்புமாகும்"என்றும்வருவனவற்ருனறிக.

இதுமுதல் பதினுன்குபாடலுங் குளகம். (உக)

இடங்கொள் மாயையின் யாக்கைக ளாயின
வடங்க வுந்நல்கி யன்னவற் றாடுதான்
கடங்கொள் வானிற் கலந்துமற் றவ்வுடன்
மடங்கு மெல்லையின் மன்னுவன் றென்மைபோல்.

(இ-ள்.) வியாபகமாகிய மாயையினால் சகலசரீரங்களையும் படைத்து அச்சரீரங்களில் அக்கடவுள் கடாகாயத்தைப்போலக் கலந்து நின்று பின்னர் அச்சரீரமழியும்பொழுது மகா காயத்தைப்போலப் பழையபடியே நிலைபெற்றிருப்பார்.—எ-று. ()

கடாகாய மடாகாயங்கள் நாமமாத்திரத்தால் வேறே யன்றி யதார்த்தத்தில் வேறில்லை. கடமடங்களாகிய உபாதிகளுக்கு நாசமுண்டானவுடனே அவ்வாகாயம் மகாகாயமாக விளங்குவதுபோல, பிரமமும் தேகேந்திரியாதி கரணங்களினின்றும் வேறுபட்டவுடனே சுத்தப்பிரமமாக விளங்குமென்ப தவன்மதம். இதனை,—"கோச வுருவிற் பிரமந்தான் கூடித் தோன்று நீடுமொரு - காச மருவுங் கடந்தோறு நின்றாற் போலக் கதிரவன்றன்-வீசு கிரண முருவின்கண் வெளிப்பட் டிடுவ ததிற்பற்றும்-பா சமதனுக் கின்றாகு மென்றாற் பரத்திற் பற்றுண்டோ." என்பதா லுணர்க. (௫0)

இத்தி றத்தினெஞ் ஞான்றுமவ் வெல்லைதீர்
நித்த னாட லில்லைமை புரிந்திடு
மித்தையாகும் வினைகளும் யாவையு
முத்தி தானு முயல்வது மன்னதே.

(இ-ள்.) இவ்வாறு எக்காலத்திலும் அந்த முடிவில்லாதவராகிய சிவபெருமான் திருவிளையாடலைச் செய்வார்; இருவினைகளும் மித்தையாகும்; மற்றவைகளும் முத்தியும் அதன் சாதகமும் அவ்வாறே மித்தையாம்.—எ-று. (௫க)

பொய்ய தாகும் பொறிபுல மென்றிடின்
மெய்ய தோவவை காணும் விழுப்பொருள்
மையில் புந்தியும் வாக்கும் வடிவமுஞ்
செய்ய நின்ற செயல்களு மன்னதே.

(இ-ள்.) பொறிகளும் புலன்களும் மித்தையானால் அவற்றால் காணப்பட்ட உயர்ந்த பொருள்களானவை உண்மையாகுமோ? தெளிவாகிய புத்தியும், வாக்கும், வடிவமும் செய்யும்படி நின்ற செயல்களும் அவ்வாறு மித்தையேயாம்.—எ-று.

திரிகாலங்களிலும் பிரமத்தைத்தவிர அன்னிய பதார்த்தங்கள் கிடையாது. தேகேந்திரியாதி கரணமென்பதெல்லாம் கானல்நீரும் கந்தர்ப்பநகரமும்போலவிசாரிக்குமிடத்தி லில்லவேயில்லை. கிளிஞ்சிலில் வெள்ளிபோல அபாவமான பிரபஞ்சங் காணப்படுகிறது. பழுதையிலுள்ள பாம்பு கடித்திறந்தவனும், கட்டையிற் கள்ளனாற் பொருளழிவடைந்தவனும், பேய்த்தேரால் தாகநீக்கிக்கொண்டவனும், வந்தியாபுத்திரனாற் சுகதுக்கமடைந்தவனு மிருந்தால் இந்திரியாதிகளாற் பீடிக்கப்படுகிறவனுமிருப்பான். இந்திரியங்களேமித்தையாகும்போது அவைகளாலுண்டாகிற விஷயங்க ளெப்படி நித்தியமாகும்? என்றாகிப்பதவன்மதம். இதுவன்றியும்,பிரமத்தைத்தவிர வேறு பதார்த்தமில்லாதபோது மோக்ஷமென்பதென்ன? அதை விரும்பினவன் யார்? என்பதைவிசாரித்தால், மோக்ஷமே இல்லையென்று துணியப்படும் கொள்கையினை யுடைய (இவன்) மாயாவாதி. நம்மைப்போல சாயுச்சிய சத்தத்தையாவது மோக்ஷ சத்தத்தையாவது உபயோகப்படுத்துகிறதில்லை. அனர்த்தநிவிர்த்தி ஆனந்தபிராப்தி என்று உச்சரிப்பதே வழக்கம். இதனை,—" கருவி யெல்லா நானெனவே கருதல்பந்த மக்கருத்

தை-யொருவ முத்தி யுண்டாகு முள்ளம் வித்தாஞ் செய்தியினுன்-மருவு மாயா காரி யங்க ளவித்தை மாய வேமாயை-பிரியும் பிரியா ஞானமது பிறக்கும் பிறவா வபேத மே.''—என்பதனு லுணர்க. (௬௨)

அன்ன செய்கைக ளன்மைய தாகுமேற்
பின்ன ரங்கதன் பெற்றியின் வந்திடு
மின்ன லின்ப மிரண்டுமெய் யாகுமோ
சொன்ன முன்னைத் துணிபின வாகுமே.

(இ-ள்.) அத்தகைய தொழில்கள் மித்தையானுல் பின்பு அச்செய்கைகளினு லுண்டாகின்ற சுகதுக்கங்களிரண்டும் உண்மையாகுமோ? முன் சொன்னபடி மித் தையேயாம்.—எ-று.

இதன் விஷயங்களை முன்பாட்டில் விளக்கியிருப்பதிற் பார்க்கவும். (௬௩)

மித்தை தன்னையு மெய்யெனக் கொள்ளினு
மத்த குந்துய ரானது மின்பமு
நித்த மாகு நிமலனை யெய்துமோ
பொத்தி லான பொதியுடற் காகுமே.

(இ-ள்.) அம்மித்தையினையும் மெய்யாகக் கொள்ளினும் அந்தத்துன்பவின் பங்களும் அழிவில்லாத சிவபெருமானை யடையுமோ? அவை (மாமிசத்தினுல்) மூட ப்பட்டுள்ள சுமையாகிய உடம்பிற்கு வந்து பொருந்தும்.—எ-று.

சடமாகிய சரீரம் உணர்வற்றதென்பதை உணராதவனுதலால், போகாதி களை உடம்பு அநுபவிக்குமென்முன். (௬௪)

தோன்று கின்றதுந் துண்ணென மாய்வது
மேன்று செய்வினை யாவதுஞ் செய்வது
மான்ற தற்பரற் கில்லை யனையதை
யூன்றி நாடி னுடற்குறு பெற்றியே.

(இ-ள்.) தோன்றுவதும் விரைவாக அழிவதும் முயன்று சகல வினைகளைச் செய்வதும் எங்கும் நிறைந்த சிவபெருமானுக்கில்லையாம். அதனை ஊன்றி விசாரிக்கு மிடத்தில் உடலினிடத்துப் பொருந்திய தன்மையேயாம்.—எ-று.

உபாதி பேதங்கள் கடாதிகளுக்கே அன்றி அதனுள் விளங்கும் ஆகாயத்தி லின்மைபோல, சரீராதிகளுக்கே தோற்றமன்றிப் பிரமத்திற்கில்லையென்பதவன்மதம்.

போவ தும்வரு கின்றதும் பொற்புட
னுவ தும்பி னழிவதுஞ் செய்வினை
யேவ தும்மெண்ணி லாத கடந்தொறு
மேவு கின்றதொர் விண்ணினுக் காகுமோ.

(இ-ள்.) போதலும் வருதலும் அழகாகத் தோன்றுதலும், பின்னர் அழித லும், செய்யும் சகல வினைகளும் அளவற்ற கடங்கடோறும் நிறைந்துள்ள ஆகாயத் திற்குண்டாகுமோ?—எ-று.

முன் சொன்னதையே பின்னுஞ் சொல்லி வற்புறுத்தினுன். (௬௫)

அன்ன போலெங்கு மாவியொன் றுகியே
துன்னி நின்றிடு தொல்பரன் வேறுபா
டென்ன தும்மில னென்றுமொர் பெற்றியான்
முன்னு மங்கது வாய்மையென் ருேர்திநீ.

(இ-ள்.) அத்தன்மைபோல எவ்விடங்களிலும் ஏகான்மாவாய் நெருங்கி நின்றுள்ள பழமையாகிய சிவபெருமான் யாதொரு வேறுபாடுமில்லாதவர்; எக்காலத்து மொரேதன்மையுடையவர்; நிலைபெற்ற இதனை நீ உண்மையென் றுணரக்கடவை.—எ-று. (௬௭)

தஞ்ச மாகுந் தருமநன் றுலென
நெஞ்ச கத்து நினைந்து புரிவதும்
விஞ்சு கின்ற வியன்பவந் தீதென
வஞ்சு கின்றது மாமறி வின்மையே.

(இ-ள்.) துணையாயுள்ள தருமம் நல்லதென்று மனத்தில் நினைத்து அதனைச் செய்தலும், மிகுதியாகிய பெரிய பாவம் கொடியதென்று அஞ்சுதலும் அறிவின்மையேயாம்.—எ-று. (௬௮)

யாது யாதுவந் தெய்திய தன்னதைத்
தீது நன்றெனச் சிந்தைகொள் ளாதவை
யாதி மாயையென் றுய்ந்தவை யாற்றுத
னீதி யான நெறிமைய தாகுமே.

(இ-ள்.) ஏது ஏது வந்தாலும் அதனை நல்லது கெட்டது என்று மனத்தில் நினையாமல் அவை சகத்காரணமாகிய மாயை யென்று விசாரித்து அவற்றினைச் செய்தல் நீதியான முறைமையாகும்.—எ-று.

மாயை மா-யாதொன்று, மா-இல்லையோ அது மாயையென்ப தவன்மதம்.

தருமஞ் செய்க தவறுள பாவமாங்
கருமஞ் செய்யற்க வென்பர் கருத்திலா
ரிருமை தன்னையும் யாவர்செய் தாலுமேல்
வருவ தொன்றில்லை மாயம்வித் தாகுமோ.

(இ-ள்.) தருமத்தைச் செய்யுங்கள்; விரோதமான பாவமாகிய கருமங்களைச் செய்யாதீர்களென்று அறிவில்லார் கூறுவார்கள்; அந்தப் புண்ணியபாவங்களை யாவர் செய்யினும் பின்னர் அதனால் வரும் பலன் யாதொன்றுமில்லை. (அநிர்வசனீயமாகிய) மாயையானது காரணமாகுமோ?—எ-று. (௬௦)

கனவி னெல்லையிற் காமுறு நீரவு
மினைய வந்தவு மேனை யியற்கையு
நனவு வந்துழி நாங்கண்ட தில்லையா
லனைய வாமிவ ணுற்றுஞ் செயலெலாம்.

(இ-ள்.) சொப்பனவஸ்தையில் விருப்பமாக வுண்டானவையும் வெறுப்பாக வுண்டானவையும் மற்றுள்ளவையும் சாக்கிராவஸ்தை யுண்டானவுடன் நாம் கண்டதில்லை; நாம் செய்யுந் தொழில்களனைத்தும் அந்தச் சொப்பனவஸ்தை போலவேயாம்.

வியவகாரத்தில் ஜகத்தாதிகள் உள்ளதாகக் காணப்படும் என்றும், பாரமார்த்திகத்தில் மித்தை யென்றும் கொள்வ தவன் மதமாதலால், "நனவு வந்துழி நாங்கண்டதில்லை" என்றான். வியவகாரம் சொப்பனம்போலவும், பாரமார்த்திகம் சொப்பனத்தின் முடிவாகிய சாக்கிரமும் போலாம் என்ப தவன்மதம். (௬௧)

இம்மை யாற்று மிருவினை யின்பய
னம்மை யெய்தினன் றேவடை யப்படும்
பொய்ம்மை யேயது பொய்யிற் பிறப்பது
மெய்ம்மை யாகும தோசுடர் வேலினோய்.

(இ-ள்.) இப்பொழுது செய்கின்ற புண்ணியபாவங்களின் பலனை மறுமையிருந்தாலல்லவோ அடையக்கூடும்? ஒளிவிளங்கும் வேலினையுடைய சூரபன்மனே! அது பொய்யே யாகும்; பொய்யிற் பிறந்தது மெய்யாகுமோ?—எ-று.

மறுமையிருந்தாலன்றோ புண்ணியபாவப் பகுப்புப் பார்க்கவேண்டும்: மறுமையே இல்லை ஆதலா லிஷ்டம்போல நடக்கலாமென்ப தவன்மதம். (சஉ)

நெறிய தாகுமிந் நீர்மையெ லாம்பிற
ரறிவ ரேயெனி னன்னதொர் வேலையே
பெறுவர் யாமுறும் பெற்றியெ லாமவை
யுறுதி யுண்டெனி னுண்மைய தாகுமே.

(இ-ள்.) முறைமையாகவுள்ள இத்தன்மைகளை யெல்லாம் அயலா ரறிவார்களாயின் அப்பொழுதே நாமடையுந் தன்மைகளனைத்தையு மடைவார்கள்; உறுதியிருந்தால் உண்மை கைகூடும்.—எ-று.

தானுரைத்தவைகள் மிகவும் அரியவை என்று குறிப்பிப்பவ னாதலால், இந் நீர்மை யெல்லாம் பிறரறியில் அவர்களுந் தன்னைப்போ லாவார்களென்று கூறினன்.

சிறிய ரென்றுஞ் சிலரைச் சிலரைமே
னெறிய ரென்று நினைவது நீர்மையோ
விறுதி யில்லுயிர் யாவுமொன் றேயெனு
வறிதல் வேண்டுமஃ துண்மைய தாகுமே.

(இ-ள்.) சிலரைச் சிறியவர்களென்றும் சிலரை மேலாகிய தன்மையுடையவர்களென்றும் நினைத்தல் முறைமையோ? அழிவில்லாத வுயிர்களனைத்தும் ஒன்றேயென்று தெரிந்துகொள்ளல் வேண்டும்; அஃதுண்மையே யாகும்.—எ-று. (சச)

உண்மை யேயிவை யோதியி னுருணர்
நுண்மை யாமினி நுங்களுக் காகிய
வண்மை யுந்தொல் வழக்கமு மற்றவுந்
திண்மை யோடுரை செய்திடக் கேட்டிநீ.

(இ-ள்.) ஞானிகளா யுள்ளவர்க ளுணரத்தக்க உண்மைகள் இவையேயாம்; இனி உங்களுக்கு வேண்டிய செல்வமும் பழய வழக்கங்களும் மற்றவைகளும் ஆகிய இரகசியங்களை உறுதியாகச் சொல்ல நீ கேட்கக்கடவை.—எ-று. (சரு)

தேவர் தம்மினுஞ் சீதர னாதியோ
ரேவர் தம்மினு மேற்றம தாகிய
கோவி யற்கையுங் கொற்றமு மாணையு
மோவில் செல்வமு முன்னிடை யுற்றவே.

(இ-ள்.) தேவர்களைப் பார்க்கிலும் திருமால் முதலிய மற்றவர்களைப் பார்க்கிலும் உயர்வாயுள்ள தலைமையும் வெற்றியும் ஆக்கினையும் கெடாத செல்வமும் உன்னிடத்திற் பொருந்தின.—எ-று. (சசு)

வேறு.

உற்றதோர் மேன்மை நாடி யுன்னைநீ பிரம மென்றே
தெற்றெனத் தெளிதி மற்றத் திசைமுகன் முதலோர் தம்மைப்
பற்றலை மேலோ ரென்று பணியலை யிமையோ ருங்கள்
செற்றல ரவரை வல்லே செறுமதி திருவுஞ் சிந்தி.

(இ-ள்.) இப்பொழுது கிடைத்துள்ள உயர்வைக் குறித்து நீ உன்னையே பிரமமென்று விரைவி லுணரக்கடவை; வேறுள்ள பிரமன் முதலாயுள்ளவர்களைப் பொருளென்று கருதாதே; உயர்ந்தவர்களென்று வணங்காதே; தேவர்கள் உங்கள் பகைவர்கள்; அவர்களது செல்வத்தை யழித்து விரைவில் அவர்களைச் சிறைசெய்யக் கடவை.—எ-று.

நீயே பிரமம் என்றுபதேசித்தான். தத்துவம் மசி என்னுஞ் சொல்லினல் உபதேசிப்ப தவன் மதவழக்கம். ஆசிரியர் வாக்கியத்தைக் காட்டாது அதன் பொருளைக்காட்டினர். இதனை,

"உன்னை யொருத்த னுயர்சிவமென் றோதியக்கா
லென்ன மகிழ்ச்சியங்கே யெய்தினய்—பின்னையுனைப்
பாவிபசு வென்ருற் பதைபதைப்பா யாகையினற்
சீவனல்ல நீயே சிவம்.''—என்பதனு லுணர்க. (சுஎ)

இந்திர னென்போன் வானோர்க் கிறையவ னவனே நென்ன
லந்தமி லவுணர் தங்க ளாருயிர் கொண்டா னன்ன
னுய்ந்தனன் போகா வண்ண மொல்லையி லவனைப் பற்றி
மைந்துறு நிகளஞ் சேர்த்தி வன்சிறை புரிதி மாதோ.

(இ-ள்.) இந்திரனென்பவன் தேவர்களுக்கரசன்; அவன்ருன் முன்பு அநேக மசுரர்களது அரிய உயிரை யழித்தனன்; அவன் பிழைத்துப் போகாவண்ணம் அவனை விரைவிற் பிடித்து வலிமிக்க விலங்கு பூட்டி வலிய சிறையிலிடக்கடவை.—எ-று. ()

சிறையினை யிழைத்துச் செய்யுந் தீயன பலவுஞ் செய்து
மறைபுகன் முனிவர் தம்மை வானவர் தம்மைத் திக்கி
னிறையவர் தம்மை நாளு மேவல்கொண் டிடுதி யன்ன
ருறைதரு பதங்க ளெல்லா முதவுதி யவுணர்க் கம்மா.

(இ-ள்.) இந்திரனைச் சிறைசெய்து செய்யவேண்டிய பலகொடுமைகளையுஞ் செய்து, வேத மோதுகின்ற முனிவர்களையும் தேவர்களையும் திக்குப்பாலகர்களையும் ஏவல் கொள்ளக்கடவை; அவர்கள் வசிக்கும் பதவிகளை யெல்லாம் அசுரர்களுக்குக் கொடுக்கக்கடவை.—எ-று. (சுகூ)

கொலையொடு களவு காமங் குறித்திடு வஞ்ச மெல்லா
நிலையெனப் புரிதி யற்ரு னினக்குமேல் வருந்தீ தொன்று
மிலையவை செய்தி டாயே லிறைவநீ விரும்பிற் றெல்லா
முலகிடை யொருங்கு நண்ணு வுனக்கெவர் வெருவு நீரார்.

(இ-ள்.) கொலை களவு காமம் குறிக்கப்பட்ட வஞ்சகம் முதலிய எல்லாவற்றையும் உறுதியாகச் செய்யக்கடவை; அதனல் உனக்குப் பின்னல் வருங் கெடுதிகளொன்று மில்லை; அவற்றைச் செய்யாதொழிவையாயின், அரசனே! நீ விரும்பியவை யனைத்தும் உலகத்தில் ஒருமிக்க வந்து சேரா; அதுவுமன்றி, உனக்குப் பயப்படத்தக்கவர்கள் யாவர்?—எ-று. (ருo)

வண்டுழாய் மிலைச்சுஞ் சென்னி மால்விடைப் பாகன் றந்த
வண்டமா யிரமே லெட்டு மணிகமோ டின்னே யேகிக்
கண்டுகண் டவணீ செய்யுங் கடன்முறை யிறைமை யாற்றி
யெண்டிசை புகழ மீண்டே யீண்டுவீற் றிருத்தி யென்ருன்.

(இ-ள்.) வளவிய துளசிமாலையை யணிந்த முடியினையுடைய திருமாலாகிய இடபவாகனுருடராகிய சிவபெருமான் கொடுத்தருளிய ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் இப்பொழுதே சேனைகளுடன் சென்று அவற்றைப் பார்த்துப்பார்த்து நீ அங்குச் செய்யுங் கடன் முறைமையாகிய அரசாட்சியைச் செலுத்தி அஷ்டதிக்குகளும் புகழும்படி மீண்டுவந்து இவ்வண்டத்திலேயே வாசஞ்செய்யக் கடவையென்று கூறினன்.

சுக்கிரனுபதேசப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - எஉஉ.

---

உ

முருகன்றுணை.

---

# அண்டகோசப்படலம்.

தீயதோ ரினைய மாற்றஞ் செப்பலு மிதுநன் றெந்தை
யேயின பணியி னிற்ப னிறையவ னெனக்குத் தந்த
வாயிரத் தெட்டென் றேது மண்டங்க ணிலைமை யாவு
நீயுரை யென்ன வாசா னிருபனுக் குரைக்க லுற்றான்.

(இ-ள்.) சுக்கிராசாரியன் இத்தகைய கொடிய வார்த்தைகளைக் கூறவும், இதுநல்லது: யான் எமது குரவனிட்ட கட்டளைப்படி நடக்கின்றேன். சிவபெருமான் எனக்குக் கொடுத்தருளிய ஆயிரத்தெட்டு அண்டங்களின் நிலைமைகளனைத்தையும் நீர் கூறக்கடவீரென்று சூரபன்மன் சொல்லவும், சுக்கிராசாரியன் கூறத் தொடங்கினான்.—எ-று.

இந்த அண்டகோச விலக்கணம் இப்பொழுது இந்நாடுகளில் இக்கந்தபுராணத்தின் முதனூலாக ஒப்புக்கொள்ளப்பட்டு வழங்கும் காந்தத்தினுறுப்பாகிய சிவரஹஸ்யகண்டத்தில் இல்லையென்று அறிகிறோம்; அதேநூலின் அசுரகாண்டத்தில் ௯-வது அத்தியாயத்தில் சசு-ம் சரு-ம் சுலோகங்களில் சுக்கிரன் சூரபன்மனுக்கு இந்த அண்டவிலக்கணத்தை விஸ்தாரமாக எடுத்துக்கூறினன் என்றுமாத்திரம் எழுதி இருக்கின்றது.

இதிலுள்ளதுபோல வேறொன்றுங்காணேம். அந்த சுலோகங்களினருத்தத்தைமட்டும் இங்கெழுதுகின்றேன் "எனவுரைத்துப் பின்னும் அவ்வண்டத்தினுடைய அகலம், நீளம், மலைகள், கடல்கள், அனேகம்தீவுகள், பற்பல உலகங்கள், தேவர்கள், உலோகபாலகர்கள் திக்குயானைகள் மனுக்கள் பிராணிகள் இவைமுதலிய எல்லாவற்றையும் அச்சுக்கிரன் விஸ்தாரமாக எடுத்துக்கூறி" என்றிருக்கிறது.

ஆசிரியர் மொழிபெயர்க்கும்போதிருந்தபுஸ்தக மிப்பொழுதில்லையாயிருக்கலாம். (க)

மேலுள பொருளுந் தத்தம் விளைவது நிற்க விப்பான்
மூலமாம் பகுதி தன்னின் முளைத்திடும் புந்தி புந்தி
யேலுறு மகந்தை யொன்றி னெய்துமைம் புலனு மாங்கே
வாலிய ககனந் தொட்டு மாநிலங் காறும் வந்த.

(இ-ள்.) மற்றைப்பொருள்களும் அவற்றினின்றுண்டாகப்படுவனவும்நிற்க, மேல் மூலப்பிரகிருதியினிடத்திலுண்டாகிய புத்திதத்துவமும், அப்புத்திதத்துவத்தில் பொருந்திய மஹாங்காரதத்துவமும், அதனில் ஐம்புலன்களும், அவ்வைம்புலன்களாகிய பஞ்சதன்மாத்திரைகளில் நிருமலமாயுள்ள ஆகாயமுதற்கொண்டு பிருதிவிவரைக்கும் முறையே யுண்டாயின.—எ-று. (உ)

அப்பெரும் புவிக்குத் தானே ராயிர கோடி யண்ட
மொப்பில வென்ன வுண்ட ரொன்றினுக் கொன்று மேலாச்
செப்புறு நிலைமைத் தன்று தெரிந்திடிற் பரந்து வைகும்
வைப்பென லாகு மன்ன மற்றவை யம்பொன் வண்ணம்.

(இ-ள்.) அந்தப் பெரிய பிருதிவி பூதத்தில் ஒப்பற்ற ஆயிரங்கோடி யண்டங்கள் இருக்கின்றன; அவைகள் ஒன்றுக்கொன்றுசொல்லுமிடத்தில் உயர்வான நிலைமையினை யுடையனவல்ல,விசாரிக்குமிடத்தில் அவைகள் விரிந்து விளங்குகின்ற இடங்களென்றுசொல்லலாம். பின்னும்அவ்வண்டங்கள் அழகிய பொன்னிறங்களை யுடையனவாம்.—எ-று. (௩)

அங்கண்மா ஞாலத் தண்ட மாயிர கோடி தன்னி
லிங்குநீ பெற்ற வண்ட மாயிரத் தெட்டி னுள்ளுந்
துங்கமா மண்ட மொன்றி னியற்கையைச் சொல்லு கின்றேன்
செங்கைசேர் நெல்லி யென்னச் சிந்தையிற் காண்டி யன்றே.

(இ-ள்.) இடமகன்ற பெரிய பிருதிவி பூதத்துள்ள ஆயிரங்கோடி யண்டங்களில் இப்பொழுது நீ சிவபெருமானளிக்கப் பெற்றுள்ள ஆயிரத்தெட்டு அண்டங்களுள் பரிசுத்தமான ஓர் அண்டத்தின் தன்மையைச் சொல்லுகின்றேன்; அதனை உள்ளங்கை நெல்லிக்கனிபோல மனதாரக் காணக்கடவை.—எ-று. (௪)

கதிரெழு துகளெண் மூன்று கசாக்கிர கந்தா ஞகு
மிதுதொகை யிருநான் குற்ற திலீக்கையவ் விலீக்கை யெட்டா
லுதிதரும் யூகை யன்ன யூகையெட் டியவை யென்ப
வதினிரு நான்கு கொண்ட தங்குலத் தளவை யாமே.

(இ-ள்.) சூரிய வெளிச்சத்தில் காணப்படுகின்ற பரமாணுக்கள் இருபத்திநாலு கொண்டது மயிர்நுனியாம்; இம்மயிர் நுனி யெட்டுக்கொண்டது ஈராம்; அவ்வீர் எட்டுக் கொண்டது உண்டாக்கப்பட்ட பேனும்; அப்பேனெட்டுக் கொண்டது கோதுமையாம்; அக்கோதுமை யெட்டுக்கொண்டது ஓரங்குலமாம். எ-று. (ரு)

அங்குல மறுநான் கெய்தி னதுகரங் கரமோர் நான்கு
தங்குத றனுவென் றுகுந் தனுவிரண் டதுவோர் தண்ட
மிங்குறு தண்ட மான விராயிரங் குரோசத் தெல்லை
பங்கமில் குரோச நான்கோ ரியோசனைப் பால தாமே.

(இ-ள்.) இருபத்துநாலு அங்குலங் கொண்டது ஒரு கரமாம்; நான்கு கரங் கொண்டது ஒரு வில்லாம்; இரண்டு விற்கொண்டது ஒரு தண்டமாம்; இத்தண்டம் இரண்டாயிரங் கொண்டது ஒரு குரோசவளவையாம்; குற்றமற்ற நான்கு குரோசங் கொண்டது ஒரு யோசனை தூரமாம்.—எ-று.

அண்டவளவை கூறவந்த ஆசிரியர் அளக்குங்கோலுக்கும் அளவை கூறுகின்றார். இது இவரது வழக்கமாத்திரமன்று; மற்றைய நூலாசிரியர்களிடத்தும் இந்த வழக்கம் உண்டென்பதனை—" இன்னுழை கதிரி னணுவிரு நான்கெட் டிணங்குறல்

கசாக்கிர கந்தான் - மன்னுத விருநான் கிலீக்கையெட் டஃது மருவுதல் யூகையெட் டஃது - துன்னுத லியவை யஃதிரு நான்கு துறுமுத லங்குல மறுநான் - கன்னது சேரின் முழமது நான்கு தனுவத னிரட்டியோர் தண்டே." என்றும்,—" இராயிரந் தண்டங் குரோசமே குரோச மிரட்டிசேர்ந் ததுகெவி யூதி-குரோசநான் குறல்யோசனையது நூறு கோடிமண் ணண்டத்தி னளவை-தராதல முதலாத் தத்துவக் கண்டந் தனித்தனி யாயிர கோடி - விராவுமன் முதலா வொன்றனுக் கொன்று விளம்பிய வளவைமிக் குறுமால்."—என்றும் வருவனவற்று ணுணர்க. (சு)

அந்தயோ சனையி னெல்லை யைம்பதிற் றிரண்டு கோடி
வந்ததிவ் வண்டத் திற்கு மாயிரும் பரவை வைப்பு
முந்திய நிவப்பு மாகு மொழிந்திடு மண்டங் கட்கு
மிந்தவா றளவைத் தென்றே யெண்ணுதி யிலைகொள் வேலோய்.

(இ-ள்.) அந்த யோசனை யளவு நூறுகோடி கொண்டுளது இவ்வண்டத்தின் சுற்றளவாம். பெரிய கடல்சூழ்ந்த இப்பூமியின் உயரம் அந்த நூறு கோடி யோசனையின் அகலமேயாம். சொல்லப்பட்ட மற்றையண்டங்களுக்கும் தகட்டு வடிவமான வேலினையுடைய சூரபன்மனே! இதுவே அளவையென்று அறிந்துகொள்ளக்கடவை.(எ)

ஒண்புவ னிக்குக் கீழாம் யோசனை யைம்பான் கோடி
திண்புவி தனக்கு மேலாய்ச் சேர்தரு மளவு மஃதே
மண்புகழ் மேரு வுக்கு மாதிர மவையோ ரெட்டு
மெண்படு மைம்பான் கோடி கடாகத்தி னெல்லை யோடும்.

(இ-ள்.) வளப்பந் தங்கிய கீழ்யோசனை ஐம்பதுகோடியாம்;கடினமான பூமிக்கு மேலாகச் சொல்லப்படும் யோசனையும் அந்த ஐம்பது கோடியேயாம். உலகம் புகழ்கின்ற மேருமலை தொட்டு எட்டுத் திக்குகளின் உள்ள அண்ட கடாகத்தின் எல்லைவரைக்கும் சுற்றளவும் எண்ணப்படுகின்ற ஐம்பது கோடியாம்.—எ-று. (அ)

அண்டமார் கடமோர் கோடி யதற்குமீ தினிமேலார் கோடி
திண்டிறற் காலச் செந்தீ யுருத்திரர் செம்பொற் கோயி
லொண்டழற் கற்றை யுள்ள தொருபது கோடி மீக்கட்
கொண்டெழு தூம மெல்லை குணிக்கினைங் கோடி யாமே.

(இ-ள்.) அவ்வண்டத்திற் பொருந்திய கீழேயுள்ள கடாக ஓடு ஒரு கோடி யோசனையாம்; அதற்குமேல் ஒருகோடி யோசனை மிக்க திறலினையுடைய காலாக்கினியுருத்திரனது செவ்விய பொன்னாலாகிய ஆலயமாம். அந்த உருத்திரனது திருமேனியிலுள்ள ஒள்ளிய அக்கினிச்சுவாலை பத்துக்கோடி யோசனையாம். அதற்குமேல் அத்தீயின் புகை செல்லும் எல்லை ஐந்துகோடி யோசனையாம்.—எ-று. (கூ)

அரித்தவி சுயர்ச்சி யாங்கோ ராயிர மளவைத் தர்கும்
பரத்தலு மதற்கி ரட்டி படர்தரு காலச் செந்தீ
யுருத்திர ரழலின் மேனி யோசனை யயுத மாகுந்
திருத்தகு பலகை வாள்விற் செஞ்சர மேந்திச் சேர்வார்.

(இ-ள்.) அவ்வுருத்திரரது சிங்காதனத் துயரம் ஓராயிர யோசனையாம். அகலம் இரண்டாயிர யோசனையாம். விரிந்த அக்கினிச்சுவாலையினையுடைய காலாக்கினியுருத்திர நாயனாரது நெருப்பின் வண்ணமான வடிவம் பதினாயிர யோசனை உயரமாம். அத்தகைய பதினாயிர யோசனையுள்ள உருவத்துடன் திருக்கரங்களில் அழகிய கத்தி கேடயம் வில் அம்பு இவைகளைத் தாங்கினவராக எழுந்தருளியிருப்பார்.—எ-று.(க0)

ஓங்கிய காலச் செந்தீ யுருத்திரர் தம்மைப் போல்வா
ராங்கொரு பதின்மர் சூழ்வ ரன்னவ ரேவ லாற்றிப்
பாங்குற வொருபான் கோடிப் பரிசன மேவு மன்னோர்
பூங்கழல் வழுத்தி யாதி கமடமப் புவனம் வைகும்.

(இ-ள்.) அவ்விடத்தில் உயர்ந்த காலாக்கினி யுருத்திரனைப் போன்றவர்களாய் பத்து உருத்திரர்கள் அவனைச் சூழ்ந்திருப்பார்கள்; அவர்களுக்கு ஊழியஞ் செய்கின்றவர்களாய் அவர்களது பக்கத்தில் பத்துக் கோடி சிவகணங்களிருப்பார்கள்; அவருடைய திருவடித் தாமரைகளைத் துதித்துக்கொண்டு ஆதிகூர்மமானது அந்தப் புவனத்தில் வாசஞ்செய்துகொண்டிருக்கும்.—எ-று. (கக)

அன்னதோர் புவன மீக்க ணடுக்குறு நிலைய வாகித்
துன்னுறு நாலேழ் கோடி தொகைப்படு நிரயத் தெல்லை
யுன்னத மான கோடி யொன்றொழி முப்பான் மேலும்
பன்னிரண் டிலக்க மண்டத் தளவுறும் பரப்பு மன்னோ.

(இ-ள்.) அந்தப் புவனத்தின்மீது ஒன்றின்மீதொன்றாக நெருங்கி யிருக்குந் தன்மையினை யுடையனவாய் இருபத்தெட்டுக்கோடி நரகங்கள் இருக்கின்றன; அவைகளின் விசாலம் உயர்ந்த இருபத்தொன்பது கோடியாம். அதற்குமேல் அண்ட வெளியானது பனிரண்டு லட்ச யோசனையாம்.—எ-று. (கஉ)

உற்றிடு நிரய மீதி லொன்றிலா விலக்க நூறு
பெற்றிடு முயர்வு தன்னிற் பிறங்குமோர் புவனங் கீழ்மண்
பற்றிய விரும்பு நாப்பண் பச்சிமம் பசும்பொற் சோதி
மற்றதன் மேல்பா கத்தில் வதிவர்கூர் மாண்ட ரென்போர்.

(இ-ள்.) பொருந்தியநரகத்திற்குமேற்புறத்தில் தொண்ணூற்றொன்பது இலட்சயோசனை யுயரத்தில் ஒருபுவனம்விளங்கும்; அப்புவனத்தின்கீழ்ப்பாகம் மண்ணாகவும் இடைப்பாகம் இரும்பாகவும் மேல்பாகம் பசுமை வாய்ந்த ஒளியோடு கூடிய பொன்னாகவும் விளங்கும் அதனது மேற்புறத்தில் கூஷ்மாண்ட உருத்திரர் வாசஞ்செய்வார்.—எ-று. (கங)

காழக முகத்தர் கூர்வாய்க் கணிச்சியம் படைசேர் கைய
ரூழியங் கனலை யன்ன வுருவினர் திரியுங் கண்ணர்
மாழையம் பீட மீக்கண் வைகுகூர் மாண்டர் தம்பாற்
சூழுருத் திரரா யுள்ளோர் தொகுதியை யளக்கொ ணாதால்.

(இ-ள்.) கருமையான முகத்தினையுடையவரும் கூரியவாயினையுடைய மழுவாயுதத்தினைத்தாங்கிய கையினையுடையவரும் ஊழித்தீயையொத்த உருவினையுடையவரும் சுழலுகின்ற கண்ணினையுடையவருமாய் அழகிய பொன்னாலாகிய சிங்காதனத்தின்மீது எழுந்தருளியிருக்கின்ற அக்கூர்மாண்ட ருத்திரனைச் சூழ்ந்திருக்கிற ருத்திரர்களது கூட்டத்தை அளவிடுதற்கு முடியாது.—எ-று. (கச)

அப்புவ னத்து மீதே யந்தர மிலக்க மொன்பான்
செப்புவ ரதனுக் கும்பர் சிறந்தபா தலங்க ளென்ப
வொப்பறு பிலமொன் றற்கே யொன்பஃ திலக்க மாக
விப்படி யறுபான் மூன்று மிலக்கமேழ் பிலத்தி னெல்லை.

(இ-ள்.) அந்தக்கூர்மாண்ட புவனத்திற்குமேல் எண்பது லட்சயோசனை ஆகாயவெளியென்று கூறுவார்கள்;அதற்குமேல் சிறந்த பாதாளங்கள் இருக்கின்றன

என்பார்கள்; ஒப்பற்ற ஒவ்வொரு பாதாளங்களுக்கும் ஒன்பதுலட்ச யோசனையாக எழுபாதாளங்களுக்கும் அறுபத்துமூன்று இலட்சயோசனையாம்.—எ-று. (கரு)

பரத்தினி லுறுங்க னிட்ட பாதல மெட்டி லக்க
மரத்தினுக் ககற்சி வெவ்வே றயுதமா மவைமுப் பாக
முரத்தகு மவுணர் கீழ்பா லொள்ளெயிற் றுரகர் நாப்பண்
டிருத்தகு மரக்கர் மேல்பாற் சிறந்துவீற் றிருந்து வாழ்வோர்.

(இ-ள்.) அவ்வேழுபாதலங்களுக்கு வேறாகவிளங்குகின்ற கனிஷ்டபாதளத்தின் அகலம் எட்டுஇலட்சயோசனையாம்; அவ்வெட்டுப்பாதாளங்களுக்கும் தனித்தனி அகலம் பதினாயிரயோசனையாம்; அவை மூன்றுபாகமாகவுடையன கீழ்ப்பாகத்தில் பலம்பொருந்திய அசுரர்களும் மத்தியபாகத்தில் ஒள்ளியபற்களையுடைய நாகர்களும் மேல்பாகத்தில் திருத்தமான அரக்கர்களும் சிறப்புடன் தங்கிவாழ்வார்கள்.

இதன்மிசை யிலக்க மொன்பா னாடக ரிருக்கை யாகு
மிதன்மிசை வெளியோர் கோடி யிலக்கமு மிருப துண்டா
லிதன்மிசைக் களிறு பாந்த ளெட்டுடன் சேட னேந்து
மிதன்மிசைப் புவியி னீட்ட மெண்பஃ திலக்க மாமே.

(இ-ள்.) இதற்குமேல் ஒன்பது இலட்சயோசனையில் ஆடகேச ருத்திரர் புவனமாம்; அதன்மேல் வெளி ஒருகோடியே இருபது இலட்சயோசனையாம்; அதற்குமேல் அட்டகெஜங்களோடும் அட்டமா நாகங்களோடும் ஆதிசேடன் இந்தப் பூமியைச் சுமந்துகொண்டிருப்பான் இதற்குமேல்; பூமியின் அளவை எண்பது லட்சயோசனையாம்.—எ-று. (கஎ)

ஈடுறு பிலங்கட் கெல்லா மிறைவராய்ப் பாது காப்போ
ராடகர் தாமே நாக ரவுணர்வா ளரக்க ரன்னோர்
தாடொழு சனங்க ளண்ட கடமுதற் றரையீ றாகக்
கோடியோ ரைம்பா னாகுங் குணித்தனை கோடி யன்றே.

(இ-ள்.) பெருமையுற்ற பாதலங்கட்கெல்லாம் தலைவராகவிருந்து அப்பாதலங்களிலுள்ளவர்களைக் காப்பவர் ஆடகேச ருத்திரராம். நாகர்களும் அசுரர்களும் வாளாயுதத்தினையுடைய அரக்கர்களும் அவ்வாடகேச ருத்திரரது திருவடிகளை வணங்குகின்ற பரிசனங்களாம். அண்டத்தினடியிலுள்ள அண்டகடாகமுதல் பிருதுவிவரையிலும் ஐம்பதுகோடி யோசனையென்று எண்ணிக்கொள்ளக்கடவை. (கஅ)

பலவகைப் பிலங்கட் கெல்லாம் பரமதா யுற்ற தொல்பா
ருலகினுள் விரிவு மங்க ணுள்ளவு முரைப்பன் கேட்டி
குலவிய சம்பு சாகங் குசைகிர வுஞ்சங் கோதி
லிலவுகோ மேத கம்புட் கரமிவை யேழு தீவே.

(இ-ள்.) பலவிதமான பாதலங்களுக்கு மேலே உயர்ந்ததாய் இருக்கின்ற பழய பூமியின் விரிவையும், அப்பூமியின்கண்ணுள்ள பாகுபாடுகளையும் சொல்லுகின்றேன்: சூரபன்மனே! கேட்பாயாக: விளங்குகின்ற சம்புத்தீவு, சாகத்தீவு, குசத்தீவு, கிரவுஞ்சத்தீவு, குற்றமில்லாத சான்மலித்தீவு, கோமேதகத்தீவு, புஷ்கரத்தீவு என அந்தப்பூமியின் சப்ததீவுகளாம்.—எ-று. (கக)

பரவுமிவ் வுலகி லுப்புப் பாறயிர் நெய்யே கன்ன
லிரதமா மதுநீ ராகு மெழுகட லேழு தீவும்
வரன்முறை விரவிச் சூழு மற்றதற் கப்பாற் சொன்னத்
தரையது சூழ்ந்து நிற்குஞ் சக்கர வாளச் சையம்.

(இ-ள்.) பரந்த இந்தப்பூலோகத்திலே உப்புக்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், பெரிய தேன்கடல், நன்னீர்க்கடல் என ஏழுகடல்களாம்; இவற்றைச்சூழ ஏழுதீவுகளும் முறைப்படி பொருந்திச்சூழ்ந்திருக்கும்; அதற்கப்புறத்தில் பொன்னிலமிருக்கின்றது; அப்பொன்னிலத்தைச்சூழ சக்கரவாளகிரி சூழ்ந்து நிற்கும்.—எ-று. (உ0)

அன்னதற் கப்பால் வேலைக் கரசனும் புறத்தி லாழி
பின்னது தனக்கு மப்பாற் பேரிருள் சேர்ந்த ஞால
மன்னவ காண்டி யப்பால் வலிகெழு மண்டத் தோடு
துன்னுமிப் பொருள்கள் யாவுஞ் சூழ்ந்துகொன் டிருக்கு மன்றே.

(இ-ள்.) அச்சக்கரவாளகிரிக்கு அப்புறத்தில் கடல்களுக்கு அரசன் என்று சொல்லப்பட்ட பெரும்புறக்கடலுள்ளது; அப்பெரும்புறக்கடலைச் சூழ்ந்து பெரிய இருள்சூழ்ந்த பூமியுளது; அரசனே! அதற்கு அப்பால் வலிமைமிக்க அண்டப்பித்தியானது (நெருங்கி)இப்பொருள்கள் அனைத்தையுஞ்சூழ்ந்துகொண்டிருக்கும்; இதனை நீ சென்று காண்பாயாக.—எ-று. (உக)

எல்லைதீர் முன்னைத் தீவோ ரிலக்கமாங் கடலு மற்றை
யல்லன தீவு நேமி யதற்கதற் கிரட்டி யாகச்
சொல்லின ராங்ஙன் கண்ட தொகையிரு கோடி யன்றி
நல்லதோ ரைம்பான் மேலு நான்கெனு மிலக்க மாமே.

(இ-ள்.) அளவு மிகுந்த முன் சொல்லிய சம்புத்தீவின் விசாலம் ஓரிலக்க யோசனையாம்; அச்சம்புத்தீவைச் சூழ்ந்துள்ள உப்புக் கடலின் அகலமும் ஓரிலட்ச யோசனையாம்;அதுவன்றியுள்ள தீவுகளினதும் கடல்களினதும் விரிவை ஒன்றற்கொன்று இரட்டிப்பாக அறிந்தவர்கள் கூறினார்கள்; அவ்வாறு அறிந்தவர்கள் கூறிய தொகை இரண்டு கோடியே ஐம்பத்துநான்கு இலட்ச யோசனையாம்.—எ-று. (உஉ)

ஐயிரு கோடி சொன்னத் தணிதல மதுசூழ் நேமிச்
சையமோ ரயுத மாகுஞ் சார்தரு புறத்தி னேமி
யெய்திய கோடி மேலு மிருபதோ டிலக்க மேழா
மையிருள் சேர்ந்த பாரி னெல்லைமேல் வகுப்பன் மன்னே.

(இ-ள்.) (இதற்கப்பாலுள்ள) அழகிய பொன்னிலத்தின் அகலம் பத்துக் கோடி யோசனையாம்; அதனைச் சூழ்ந்துள்ள சக்கரவாளகிரியின் அகலம் பதினாயிர யோசனையாம்; அதனைச்சூழ்ந்துள்ள பெரும்புறக்கடலானது ஒருகோடியே இருபத்தேழு இலக்க யோசனையாம்; அதற்குமேலுள்ள கரிய இருள்பொருந்திய பூமியின் அகலத்தைப் பின்பு சொல்லுகின்றேன்.—எ-று. (உஙூ)

ஆரிரு ளுலக முப்பா னஞ்செனுங் கோடி மேலு
மோரொரு பத்தொன் பானூ றற்றநான் கயுத மாகும்
பேரிருள் சூழ்ந்த வண்டப் பித்திகைக் கனமோர் கோடி
பாரிடை யகலந் தேரிற் பாதியோ ரைம்பான் கோடி.

(இ-ள்.) இந்த இருள்பொருந்திய உலகமானது ஐந்து கோடியே பத்தொன்பது இலட்சத்து நாற்பதினாயிர யோசனையாம்; அதற்கப்பால் பெரிய அண்டப்பித்திகையின் கனமானது ஒருகோடியோசனையாம். பூமியின் மத்திய விசாலத்தை ஆராயுமிடத்து ஒரு பாதி ஐம்பதுகோடி யோசனையாம்.—எ-று. (உச)

நடைதரு தொன்னூ லாற்று ணம்புகல் கணிதந் தன்னை
யுடையதோர் திசையே யிவ்வா றெழிந்தமா திரத்தும் வைக்கின்

வடகொடு தென்றி கீழ்மேன் மற்றுள கோண முற்று
நொடிதரிற் கோடி கோடி நூறுயோ சனைய தாமே.

(இ-ள்.) வழக்கம் பொருந்திய புராதனமான சாத்திரமுறைப்படி நாம் கூறிய கணக்கினையுடையது ஒரு திசையாம். இவ்வண்ணமே மற்றைய திக்குகளிலும் இவ்வளவினை வைத்துப் பார்த்தால்,வடக்குடன் தெற்குங் கிழக்குடன் மேற்கும் இதுவன்றியுள்ள கோணங்களாகிய வடகிழக்குடன் தென்மேற்கும் தென்கிழக்கொடு வடமேற்குமாகிய திக்குகளின் எல்லைகளைச்சொல்லுமிடத்துத் தனித்தனி நூறு நூறு கோடி யோசனைகளாம்.—எ-று. (உரு)

முள்ளுடை மூல மான முண்டகத் தவிசின் மேய
வள்ளறன் வலது மொய்ம்பின் வந்தசா யம்பு மைந்த
னள்ளிலை வேற்கை நம்பி யன்புடை விரதன் ஞால
முள்ளதோ ரெல்லை முற்று மொருதனிக் குடையுள் வைத்தான்.

(இ-ள்) முள்ளோடு கூடிய நாளத்தினையுடைய கமலாசனத்தில் வசிக்கின்ற பிரமதேவரது வலது தோளின் வழியாகப் பிறந்த சுவாயம்பு மனுவின் புத்திரனாகிய கூரிய இலைபோன்ற வேற்படையேந்திய கையினையுடைய பிரிய விரதன் என்பவன் பூமி முழுமையும் தனது ஒரு குடைநிழலில் ஆண்டான்.—எ-று. (உசு)

அங்கவன் றனது மைந்த ரங்கிதீ ரன்மே தாதி
துங்கமாம் வபுட்டி ஞேடு சோதிட்டுத் துதிமான் றொல்சீர்
தங்குமவ் வியனே மிக்க சவனனு மெழுவர் தாமும்
பங்குகொண் டேழு தீவும் பாதுகாத் தரசு செய்தார்.

(இ-ள்.) அப்பிரியவிரதனது புத்திரர்களா யுள்ளவர்கள் அங்கிதீரன் - மேதாதி - உயர்ச்சிபொருந்திய வபுஷ்டு - ஜோதிஷ்டு- துதிமான் - பழய சிறப்புப்பொருந்திய அவ்வியன் - பெரிய சவனன் என்னும் பெயர்களையுடைய எழுபேர்களும் இந்தப் பூமியின் எழுதீவுகளையும் பங்குபிரித்துப் பாதுகாத்து அரசுசெய்துவந்தார்கள்.

வேறு.

சீரியசம் புத்தீபம் புரந்த வங்கி தீரனென்போன் றனருளுஞ் சிறுவ ராயோர், பாரதன்கிம் புருடனரி கேது மாலன் பத்திரா சுவனனிளா விருத னென்போ, னேருடைய விரமியனல் லேமப் பேரோ னியற்குருவா மொன்பதின்ம ரிவர்கள் பேரா, லோரொருவர்க் கொவ்வொன்று நாவற் றீவை யொன்பதுகண் டமதாக்கி யுதவி னுனல்.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய சம்புத்தீபத்தை யாண்ட அங்கிதீரன் என்பவன் பெற்ற புத்திரர்கள் ஒன்பது பேர்கள்: (அவர்களுடைய பெயர்கள்) பாரதன்-கிம்புருஷன்- ஹரி-கேதுமாலன் - பத்திராசுவன்-இளாவிருதன்-அழகுபொருந்திய இரமியன் - நல்ல இரணியன்- குரு என்னும் இவர்களாம்; இவர்கள் பேர்களினாலேயே சம்புத்தீபத்தை அங்கிதீரன் ஒன்பதுபாகமாகப்பிரித்து ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு கண்டமாகக் கொடுத்தான்.—எ-று. (உஅ)

விண்ணுயர்சம் புத்தீவி னடுவு நின்ற மேருவரை செங்கமலப் பொருட்டுப் போல, நண்ணுமதற் கியோசனையுன் னதமெண் பத்து நான்குளவா யிரமாகு ஞால மாழ்ந்த, தெண்ணிரண்டா யிரஞ்சென்னி யகல முப்பா னிராயிரமாம் பராரையெல்லை யதனிற் பாதி, வண்ணமிகு மேகலைமூன் றதனுளுச்சி வாய்த்திடுமே கலையினிற்பல் சிகரமல்கும்.

(இ-ள்.) சம்புத்தீவின் நடுவிலிருக்கின்ற மகம்மேரு மலையானது செந்தாமரைப் பூங்கொட்டையைப்போலிருக்கும்; அம்மலையின் உயர்ச்சி எண்பத்திநாலாயிரயோசனையாம்; அம்மலை பூமியினடியில் சென்றிருத்தல் பதினாயிரயோசனையாம்; அதன்தலையகலம் முப்பத்திராயிர யோசனையாம்; அதன் பருத்த இடையகலம் பதினாறாயிர யோசனையாம்; அம்மலையில் அழகிய மூன்று மேகலைகள் இருக்கின்றன; உச்சியாகிய அம்மேகலையில் அனேகங் கொடுமுடிகள் நெருங்கி யிருக்கின்றன.—எ-று. (உக)

மேருவரை யதற்குநடுப் பிரமன் மூதூர் மிக்கமனோ வதியதற்கு மேலைத் திக்கி, னாரணன்வாழ் வைகுண்டம் வடகீழ் பாலி னாதனமர் சோதிட்கந் திசைக ளெட்டுஞ், சீரியலிந் திரன்முதலா மெண்மர் தேயந் தெற்குமுதல் வடக்களவு மருங்கு தன்னி, னேரியதோர் தேசமது செவ்வே போகு நெடும்பூழை யொன்றுளது நினைக மாதோ.

(இ-ள்.) அம் மேருமலையின் மத்தியில் பிரமனது பெரிய நகரமாகிய மனோவதியும், அதன் மேற்புறத்தில் திருமால்வசிக்கின்ற வைகுண்டமும், ஈசான்னியத்தில் சிவபெருமானெழுந்தருளியிருக்கின்ற சோதிஷ்க நகரமுமிருக்கும். அஷ்ட திக்குகளிலும் சிறப்புப்பொருந்திய இந்திரன் முதலிய திக்குப்பாலகர்களது இடங்களாம். அதன்பக்கத்தில் தெற்குமுதல் வடக்களவும் ஒழுக்கமாகிய ஓர் தேசம் நேரொழுங்கானதாய் பெரிய குகையின் வடிவாயிருக்கின்றது. சூரபன்மனே! இதனை யுணர்வாயாக.

அந்தவரைக் கீழ்த்திசைமந் தரமாம் வெண்மை யதன்றெற்குக் கந்தமாதனம்பொன் மேல்பால், சுந்தரமாம் விபுலநீ லம்வ டக்குச் சுபார்சுவமாதுளைப்போது கடம்பு சம்பு, நந்தியதோர் போதியால் குணபா லாதி நாற்றிசையில் வரைமீது நிற்கு நாவன், முந்துமிரண் டாயிரயோ சனையா மேனைமுத்தருவு மிதிற்பாதி மொழியு மெல்லை.

(இ-ள்.) அம்மேருமலையின் கீழ்த்திசையில் வெண்ணிறமுடைய மந்தரகிரியும், அம்மேருவின் தென்றிசையில் பொன்னிறமான கந்தமாதனகிரியும், மேற்றிசையில் அழகிய நீல நிறமுடைய விபுலகிரியும், வடதிசையில் மாதுளைப்பூவினிறமுள்ள சுபார்சுவகிரியும் இருக்கும். கிழக்குமுதலிய நான்கு திக்குகளிலுமுள்ள மந்தரமுதலிய மலைகளின் சிகரங்களில் முறையே கடம்பும், நாவலும், மிகப்பெரிய அரசும், ஆலும் நிற்கும்; இவற்றுள் கந்தமாதனகிரியின்மீதுள்ள நாவல்மரம் இரண்டாயிரம் யோசனையுயரமும் ஏனைய மூன்றுமரங்களும் தனித்தனி ஆயிரம்யோசனை யுயரமுமாகவிருக்கும்.—எ-று. (ருக)

அத்தகைய கீழ்த்திசையி லருண மேல்பா லசிதோதந் தென்றிசைமானதமே யல்லா, வுத்தரத்தின் மாமடுநீர் நிலையாய் மேவு முய்யானஞ் சயித்திரதங் குணக்கு வைகும், வைத்தபெரு நந்தனந்தக் கிணத்தி லோங்கும் வைப்பிரசங் குடக்கமரும் வடாது பாங்கின், மெத்துதிரு தாக்கியமுற் றிடுமிவ் வாறு மேருவரைச் சாரலிடை விரவு மன்றே.

(இ-ள்.) அவ்வாறாகிய கீழ்த்திசையில் அருணமென்னும் பொய்கையும், மேற்றிசையில் அசிதோதமென்னும் பொய்கையும், தென்றிசையில் மானசமென்னும் பொய்கையும், அவையல்லாத வடதிசையில் மகாமடுவென்னும் பொய்கையுமிருக்கும். (இதுவன்றியும்) கிழக்கில் சயித்திரதமென்னும் வனமும், தெற்கில் வைக்கப்பட்ட பெரிய நந்தவனமும், மேற்கில் வைப்பிரசவனமும், வடக்குப்பக்கத்தில் பெரிய திருதாக்கிய வனமுமிருக்கும். இவ்வண்ணமாக அம்மேருமலைச்சாரலில் பொருந்தியிருக்கும்.—எ-று. (ருஉ)

கடிகமழு நாவலொன்று தென்பா னின்ற காரணத்தாற் பாரதன்றன்
கண்ட முற்று, மிடனுடைய நாவலந்தீ வெனப்பேர் பெற்ற தித்தருவின் றீங்
கனிநீ ராறாய் மேருத், தடவரையைப் புடைசூழ்ந்து வடபாற் சென்று சாம்
புநதப் பெயர்பெறுமச் சலிலந் துய்த்தோ, ருடன்முழுதும் பொன்மயமா
யயுத மேலு மொருமூவா யிரமாண்டங் குறுவ ரன்றே.

(இ-ள்.) மேருமலையின் தென்புறத்தில் மணம் வீசுகின்ற ஒருநாவன்மரம் பொருந்திய காரணத்தினால் பரதகண்டமுழுமையும் விசாலமாகிய நாவலந்தீவென்று பெயரைப்பெற்றது; இந்நாவல்மரத்தின் பழத்திலுள்ள நீரானது ஆறாகிப் பெரிய மேருமலையைச் சூழ்ந்துகொண்டு வடக்குத்திசையிற்சென்று சாம்புநதமென்னும் பெயரைப்பெறும்; அந்த நீரையுண்டவர்கள் தங்களுடம்பு முழுவதும் பொன்மயமாகிப் பதின்மூவாயிர வருஷம் உயிருடன் அவ்விடத்தில் வசிப்பார்கள்.—எ-று. (௬௩)

நாற்றிசையில் வரைப்பரப்பு மேல்கீழ் தானு நவின்றிடின்மே ருவிற்பா
தி யதற்குக் கீழ்பான், மாற்றரிய மாலியவான் மேல்பாற் கந்த மாதனந்தெ
ன் றிசைநிசத மேம கூட, மேற்றவிமம் வடபானீ லஞ்சு வேத மியற்சிருங்க
மெட்டுவரை யிவையா நீல, மேற்றிகழ்பொன் மணிகனகம் பனியே நீலம்
வெண்மைமதி காந்தமிவை மேனி தாமே.

(இ-ள்.) அம்மேருமலைக்கு நான்கு திக்குகளிலுமுள்ள மலைகளினகலம் மேலுங்கீழுங் கூறுமிடத்து மேருமலையிற் பாதியாகும்; கீழ்த்திசையில் நீக்குதற்கரிய மாலியவானும், மேற்றிசையில் கந்தமாதனமும், தென்றிசையில் நிஷதமும் ஏமகூடமும் உயர்ந்த இமயமும், வடதிசையில் நீலமும் சுவேதமும் நல்ல சிருங்கமும் அஷ்டகுல பருவதங்களாம்; இம்மலைகளின் நிறங்கள் நீலமும், உயர்ந்தபொன்னும், பதுமராகமும், பொன்னும், பனியும், நீலமும் வெண்மையும் சந்திரகாந்தமுமாகும்.—எ-று. (௬௪)

நிசதமொடு பொற்கூட மிமையங் கீழ்மே னெடுங்கடலைத் தலைக்கூடி
நிமிருஞ் சோமன், றிசையுளபூ தரமூன்று மனைய வெட்டுத் திண்கிரியு மிரா
யிரயோ சனைவான் செல்லும், வசையில்கந்த மாதனமா லியவா னென்னு
மால்வரைக டமதகல மயுத மற்றை, யசலமிரு மூன்றுமிரா யிரமித் தீவு
ளமருநவ கண்டவெல்லை யறைவன் மாதோ.

(இ-ள்.) நிஷதமும் ஏமகூடமும் இமையமும் கீழ்க்கடலையும் மேற்கடலையும் பொருந்தி நீண்டிருக்கும். வடதிசையிலுள்ள நீலம், சுவேதம், சிருங்கம் என்னு மலைகளும் அவ்வாறே அக்கீழ் மேற்கடலைச் சார்ந்திருக்கும். முன்கூறிய அஷ்டகுல பருவதங்களும் (தனித்தனி) இரண்டாயிரம் யோசனை மேலே யுயர்ந்திருக்கும்; குற்றமற்ற கந்தமாதனம் மாலியவான் என்னும் பெரியமலைகளின் அகலம் பதினாயிரம்யோசனையாம். ஏனைய ஆறு மலைகளும் (தனித்தனி) இரண்டாயிர யோசனை யுயரமாம். சம்புத்தீவி னுள்ளிருக்கின்ற நவகண்டங்களின் அளவினை இனிக் கூறுகின்றேன்.

கோதில்வட கடன்முதலாச் சிருங்கங் காறுங் குருவருடஞ் சிருங்கமு
தற் சுவேத மட்டு, நீதியிர ணியவருடஞ் சுவேத நீல நெடுங்கிரியி னடுவணிர
மியமா மேருப், பூதரஞ்சூழ் வருடமிளா விருத மாகும் பொலிந்தகந்த மாத
னமேற் புணரி நாப்பண், கேதுமால் வருடமா லியவான் றொட்டுக் கீழ்கடலி
னிறுவாய்பத் திரம தாமே.

(இ-ள்.) குற்றமற்ற வடகடல் முதல் சிருங்ககிரி வரையிலும் குருவருடமாம். சிருங்ககிரி முதல் சுவேதகிரிவரையிலும் நீதிபொருந்திய இரணிய வருடமாம்.

சுவேதகிரிக்கும் பெரிய நீலகிரிக்கும் நடுவில் இரமிய வருடமாம். மேருமலையைச் சூழ்ந்த வருடம் இளாவிருத வருடமாம். விளங்குகின்ற கந்தமாதன பருவதத்திற்கும் மேற்றிசைக்கடலுக்கும் மத்தியில் கேதுமால் வருடமாம். மாலியவான்கிரிமுதல் கீழ்க்கடல்வரையிலும் பத்திர வருடமாம்.—எ-று. (௯௬)

அம்புவியி னிசதமுத லேமங் காறு மரிவருட மேமமுத லிமைய நாப்பண், கிம்புருடந் தென்கடற்கு மிமைய மென்னுங் கிரிக்குநடுப் பாரதமாங் கேது மாலோ, டிம்பர்புகழ் பத்திரமுப் பத்து நாலா யிரநின்ற தொன்பதினாயிரமா மெல்லை, யும்பர்தம துலகனைய பரத மென்னு மொன்றொழிந்த கண்டமெட்டு முற்று ளோர்க்கே.

(இ-ள்.) அழகிய நிசதகிரி தொடங்கி ஏமகூட கிரிவரையிலும் அரிவருடமாம்; ஏமகூடகிரிமுதல் இமையகிரிவரையிலும் கிம்புருட வருடமாம். தென்கடலுக்கும் இமையகிரிக்கு மத்தியில் பாரதவருடமாம். அந்த வருடத்தி னளவைகளைக் கூறுமிடத்துக் கேதுமாலவருடத்தோடு இவ்வுலகத்தாரால் புகழப்படுகின்ற பத்திராசுவருடம் தனித்தனி முப்பத்துநாலாயிரம் யோசனையாம். ஒழிந்த எழுவருடங்களும் தனித்தனி ஒன்பதினாயிரம் யோசனையாம். நவகண்டங்களில் பாரதகண்டந் தவிர மற்றைய கண்டங்கள்தம்மை யடைந்தவர்களுக்குச் சுகத்தைக் கொடுத்தலால் தேவருலகத்தை யொத்திருக்கும்.—எ-று. (௯௭)

ஆங்குருநாட் டுறைபவரோர் பொழுதின் யாய்பா லாடுவு மகடுவு மாகத் தோன்றித், தாங்கள்விழை விற்புணர்வ ரவர்க்குத் தெய்வத் தருமலர்களுதவுமுணுக் கனியுங் காயு, மோங்குபச்சை நிறமாயு ளயுத மேனு மொருமூவா யிரமதற்குள் வடபா கத்திற், பாங்கமர்வர் முனிவரர்சா ரணரே சித்தர் பதின்மூவா யிரமாயுள் படிகம் வண்ணம்.

(இ-ள்.) குருவருடத்தில் வசிப்பவர்கள் ஓரோகாலத்தில் மாதாவினிடத்தில் ஆணும் பெண்ணுமாகப் பிறந்து தாங்களிருவரும் விருப்பத்தினால் புணர்ந்திருப்பர்; அவர்களுக்குணவு கற்பக விருக்ஷத்தின் மலர்களால் கொடுக்கப்பட்ட கனிகளுங் காய்களுமாம்; அவர்களுடைய சிறந்த நிறம் பச்சையாகும்; அவர்கள் வயது பதின்மூவாயிரமாம்; அவ்வருடத்திற்கு வடதிசையில் படிக நிறமுள்ள முனிவர்களும் சாரணர்களும் சித்தர்களும் பதின்மூவாயிரம் வருஷம் ஆயுளுடையவர்களாக வசிப்பார்கள்.

பரவுபத்தி ராசுவத்தோர் கனிகாய் துய்ப்போர் பதின்மூவா யிரமாயுள் படைத்த சேயோ, ரிரமியத்தோர் பலநுகர்வோர் மதிநேர் மெய்ய ரிராயிரமைஞ் ஞூறயுத மாண்டு பெற்றோர், பொருவரிய விரணியத்தி னுள்ளோராலின் புன்கனிகண் மிசைகுவர்பூங் குவளை போல்வார், வருடமவர்க் கொருபதினா யிரமே யன்றி மற்றுமிரண் டாயிரமாச் சொற்ற தொன்னூல்.

(இ-ள்.) புகழப்பட்ட பத்திராசுவ வருடத்தில் வசிப்பவர்கள் கனி காய்களை யுண்பவர்களும் செந்நிறமுடையவர்களும் பதின்மூவாயிரம் வயதுடையவர்களுமாம். இரமிய வருடத்தில் வசிப்பவர்கள் பழங்களை யுண்பவர்களும் சந்திரன்போன்ற வெண்ணிறமான தேகத்தை யுடையவர்களும் பன்னீராயிரத்தைந்நூறு வயதுடையவர்களுமாம்; ஒப்பற்ற இரணியவருடத்தில் வசிப்பவர்கள் சிறிய ஆலங்கனியை யுண்பவர்களும் நீலோற்பலம் போன்ற நிறமுடையவர்களும் பன்னீராயிரம் வருடம் சீவித்திருப்பவர்களுமா மென்று பழமையாகிய சாஸ்திரங் கூறுகின்றது.—எ-று. (௯௮)

விராவுமிளா விருதத்தோர் வெளிய மெய்யர் மிசைவது தீங் கரும்பிரதமயுத மேனு, மிராயிரமா யுசுங்கேது மாலந் தன்னி லிருப்பவர்பைங் குவளை

நிற மினிதி னுண்டல்,பராரையுள கண்டகியின் கனியே யாயுள் பத்துளவா யி ரமரிகண்டத்து வாழ்வோ, ரொராயிரமோ டொன்பதினா யிரம தெல்லை யுண வுகனி காய்மதிய மொளிய தன்றே.

(இ-ள்.) பொருந்திய இளாவிருத வருடத்தில் வசிப்பர்கள் வெண்ணிறமான தேகமுடையவர்களும் இனிய கருப்பஞ்சாற்றை யுண்பவர்களும் பன்னீராயிரம் வய துடையவர்களுமாம்; கேதுமால வருடத்தி லிருப்பவர்கள் பசிய நீலோற்பலம் போ ன்ற நிறத்தையும் பருத்த அடியினையுடைய கண்டகி விருக்ஷத்தின் கனிகளாகிய உண வையும், பதினாயிரம் வயதினையு முடையவர்களாம்; அரிவருடத்தில் வசிப்பவர்கள் சந்திரன்போன்ற வெண்ணிறத்தையும் கனி காய்களாகிய உணவையும் பதினாயிரம் வயதினையு முடையவர்களாம்.—எ-று. (சo)

இந்தவிரு நாற்கண்டத் துறையு நீரா ரின்னல்பிணி நரைதிரைமூப் பி றையுஞ் சேரார், முந்தையுகம் போலலனை மூன்றி னுள்ளு மொய்ம்புநிறை யறிவுடல முயற்சி யாயு, ளந்தமில்சீர் முதலெல்லா மொருதன் மைத்தா வடைகுவர்முன் பாரதத்தி லவத ரித்து, வந்துபுரி வினைப்பயனை நுகர்வ ரெ ன்பர் வானமுகில் சென்றுபுனல் வழங்கா தங்கண்.

(இ-ள்.) இந்த எட்டுக் கண்டங்களினும் வசிப்பவர்கள் துன்பமும் வியாதி யும் நரையுந் திரையும் மூப்பும் சிறிது மடையார்கள். கிரேதாயுகத்தைப்போலவே மற் றைய மூன்று யுகங்களிலும் வலிமையும் நிறைந்த அறிவும் சரீரமும் முயற்சியும் ஆயு ளும் அழிவற்ற சிறப்பு முதலிய வெல்லாவற்றினையும் ஒரே தன்மையாக அடைவார் கள்; அவ்வருடங்களிற் சென்று பிறப்பதற்கு முன்னே பாரதவருடத்தில் வந்து பிற ந்து செய்த வினைப்பயனை யநுபவிக்கும்பொருட்டு அவ்வெட்டு வருடங்களிலுஞ் செ ன்று பிறந்து அநுபவிப்பார்களென்று மேலோர் கூறுவர்; பாரதகண்ட மன்றியுள்ள வேனைய கண்டங்களில் மேகங்கள் சென்று மழை பெய்கிறதில்லை.—எ-று. (சக)

போற்றியகிம் புருடத்தோ ரிறலித் தீய புன்கனியே மிசைவர்நிறம் பொன்மை யாயுள்,சாற்றியிடு மோரயுத மேம கூடத் தடவரைத்தென் பாலி மைய வடபா றன்னி, லேற்றமிகுங் கயிலைநிற்கு மதற்கு மீதே யிமையாமுக் கட்பகவ னுமையா ளோடும், வீற்றிருப்ப னூழிதனி லண்டங் காறு மே லொடுகீழ் சென்றிடுமவ் வெற்பு மாதோ.

(இ-ள்.) புகழப்பட்ட கிம்புருஷவருடத்தில் வசிப்பவர்கள் பொன்னிறத் தையும் மதுரமாகிய இத்திப்பழ வுணவையும் பதினாயிரம் வயதினையு முடையவர்க ளாம். பெரிய ஏமகூடகிரிக்குத் தெற்கும் இமையகிரிக்கு வடக்குமாகிய இடத்தில் மிக்க உயர்வினையுடைய திருக்கயிலைமலை நிற்கும்; அம்மலையின்மேல் இமைத்தலில் லாத மூன்று கண்களையுடைய சிவபெருமான் உமாதேவியாருடன் வீற்றிருந்தருளு வர்; அம்மலையானது ஊழிக்காலத்தில் அண்டவெல்லைவரையிலுங் கீழும் மேலும் ஊடுருவி வளர்ந்துநிற்கும்.—எ-று. (சஉ)

பாரதத்து ளாரவனி கிளைத்து மற்றும் பலதொழிலும் புரிந்துமறம் பாவ மீட்டிப், பேரருள்பௌ திகமெழுவா யான மூன்றிற் பெறுபயன்கொ ண் டுய்வரென்பர் பெருமை யரற்றல், சீரறிவு நிறையாயு ளுருவ முண்டி செ ய்கியுகங் களுக்கியைந்த திறனே சேர்வர், தோரைமுதற் பலபைங்கூழ் வி ளையு ளாக்கந் தூயகனி காய்கந்தம் பிறவுந் துய்ப்பார்.

(இ-ள்.) பாரதவருஷத்தில் வசிப்பவர்கள் பூமியை யுழுதும், வேறு விதமான பல தொழிலைச் செய்தும், புண்ணிய பாவங்களைச் சேகரித்தும், ஆதி பௌதிக மூத

லியமூன்றினுலு மூண்டாகும் பயனை யநுபவித்தும் இறுதியில்திருவருள்பெற்று முத்தியடைவார்களென்று கூறுவார்கள். இவர்கள் பெருமையும் வலியும் சிறந்த அறிவும் பூர்ண ஆயுளும் உருவமும் உணவும் தொழிலும் மாறி மாறி யுகங்களுக் கேற்றபடியடைவார்கள் ; மலைநெல் முதலாகிய பல பயிரின் விளைபொருள்களையும் கந்தமூலபலன்களையும் மற்றுள்ளனவற்றையும் புசிப்பார்கள்.—எ-று. (சரு)

நாலிருகண் டத்தோரும் விண்ணு ளோரு நரகினரு மவ்விடத்தி னண்ணி வைகி, மேலையிரு வினையாற்றி யவற்றிற் கேற்ற வியன்பயன்க டுய்ப்பரென விளம்பு மாற்றாற், சிலமிகு பாரதமாங் கண்ட மொன்றே தீவினைநல் வினையாகுஞ் செயற்கைக் கெல்லா, மூலமொரு குறைபெறினே வந்து தேவர் முனிவர்களுந் தவம்பூசை முயல்வ ரங்கண்.

(இ-ள்.) ஏனைய எட்டுக்கண்டங்களில் வசிப்பவர்களும், தேவர்களும், நரகலோக வாசிகளும், அப்பாரத கண்டத்தை யடைந்து இருந்து, முன்னே யிருவினைகளைச்செய்து அவ்விருவினைகளால் உண்டான பிராரத்துவங்களை யநுபவிப்பார்களென்று கூறுவதனுல், ஒழுக்கமிகுந்த பாரதகண்ட மொன்றே புண்ணிய பாவமென்று சொல்லப்பட்ட வினைகளுக்குக்காரணமாம். தங்களுக்கு ஒரு குறைவுண்டாமாயின் அக்குறைவை நிறைவாக்கிக் கொள்ளும்பொருட்டுத் தேவர்களும் முனிவர்களும் அவ்விடத்தை யடைந்து பூசைதவம் முதலியனவற்றைச் செய்வார்கள்.

கவிபுகழும் பரதனுமிந் திரனும் பேரோன் கசேருகன்று மிரபன்னன் கபத்தி நாகன், சவுமியனே கந்தருவன் வருணனென்னுந் தனயருடன் குமரியெனும் வனிதை தன்னை, யுவகைதனி னுதவியவர் தத்தம் பேரா லொன்றற்கோ ராயிரம்யோ சனைய தாகப், புவிபுகழ்பா ரதத்தைநவ கண்ட மாக்கிப் பொற்பினுட னையவர்க்குப் புரிந்தா னன்றே.

(இ-ள்.) புலவர்களால் புகழப்பட்ட பரதன் - இந்திரன்-கஜேருகன் - தாம்பரபர்ணன் - கபத்தி-நாகன்-சௌமியன்-கந்தருவன் - வருணன் என்று கூறப்பட்ட எட்டுப் புத்திரர்களையும், குமாரி யென்னும் ஓர் புத்திரியையும் விருப்பத்துடன் பெற்று, பூமியிலுள்ளவர்களால் புகழப்படுகிற பாரதவருஷத்தில், அவ்வருஷத்து அரசனும், இந்திரன் முதலிய ஒன்பதின்மருக்குத் தந்தையுமாகிய பரதன் தம்புத்திரர்கள் பேரினுலேயே தமது கண்டத்தை ஒன்பது கூறாக்கி அவர்களுக்கு அளித்தான்.

கங்கைகவு தமியமுனை கவுரி வாணி காவிரிநன் மதைபாலி கம்பை பம்பை, துங்கபத் திரைகுசைகோ மதிபாஞ் சாலி சூரிசிகி பாபகரை தூத பாபை, சங்கவா கினிசிகைபா ரத்து வாசி சார்வரிசந் திரபாகை சரயு வேணி, பிங்கலைகுண் டலைமுகரி பொருநை வெஃகாப் பெண்ணைமுத லாறனந்தம் பெருகி நண்ணும்.

(இ-ள்.) இவற்றுள் குமரி கண்டத்தில் கங்கையும், கௌதமியும், யமுனையும், கௌரியும், வாணியும், காவிரியும், நர்மதையும், பாலியும், கம்பையும், பம்பையும், துங்கபத்திரையும், குசையும், கோமதையும், பாஞ்சாலியும், சூரியும், சிகியும், பாபகரையும், தூதபாபையும், சங்கவாகினியும், சிகையும், பாரத்துவாசியும், சார்வரியும், சந்திரபாகையும், சரயுவும், வேணியும், பிங்கலையும், குண்டலையும், பொன்முகரியும், தாம்பிரபரணியும், வெஃகாவும், பிணுகியும் ஆகிய அனேக ஆறுகள் பிரவாகமாக வோடிக்கொண்டிருக்கின்றன.—எ-று. (சசு)

மன்னுமகேந் திரமலயஞ் சையஞ் சத்தி மாநிருடம் பாரியாத் திரமேவிந்த, மென்னுமலை யோரேழுங் காஞ்சி யாதி யெழுநகருந் தானமொரா

யிரமே லெட்டும், பன்னுமரு மறைமுதலோர் மேய தேயம் பற்பலவுஞ் சுருதிமுறை பயில்வு மேவி, மெய்ந்நெறிசேர் வதுகுமரி கண்ட மேனை மிலேச்சரிட மோரெட்டும் வியப்பி லாவே.

(இ-ள்.) நிலைபெற்ற மகேந்திரமும்,பொதியமும், சையமும், சத்திமாநிருடமும், பாரியாத்திரமும், விந்தமுமாகிய எழு மலைகளும், காஞ்சியாதிய சத்தபுரிகளும், ஆயிரத்தெட்டுச் சிவஸ்தலங்களும், வேதமோதுகின்றவேதியர்முதலானவர்கள்வாசஞ் செய்கின்ற இடங்களும், வேத ஒழுக்க வழக்கமும் பொருந்தி சத்திய வழியே பொருந்தியிருப்பது அக்குமரிகண்டமேயாம். மற்றை யெட்டுக் கண்டங்களிலும் மிலேச்சர்கள் வசிப்பார்கள்; ஆதலால் அவைகள் சிறந்தனவல்ல.—எ-று. (சஎ)

இங்கிவைசம் புத்தீவி னிடனே தண்பா லிருங்கடல்சூழ் சாகத்தி னெல்லை தன்னிற், றங்கியகோ மேதாதியவற்கு மைந்தர் சாந்தவயன் சிசிரன்கோதயனு னந்தன், றுங்கமிகு சிவனொடுகே மகன்சி றந்த துருவனிவர் பேரா லேழ் வருடமாக்கி, யங்கவருக் கருள் புரிந்தான் கடவுள் வாயு வாரியர்விந் தகர்குகர ராண்டு வாழ்வார்.

(இ-ள்.) இங்ஙனங் கூறப்பட்ட இவை சம்புத்தீவின்கண் ணுள்ளனவாம். தண்ணியபெரிய பாற்கடலால் சூழப்பட்ட சாகத்தீவினிடத்தில் இருந்த அரசன் மேதாதியென்பவன்; அவனுக்குப் புத்திரர்கள், சாந்தவயன்-சிசிரன் - கோதையன்-உயர்ச்சி மிகுந்த சிவன் - கேமகன்-சிறந்ததுருவன் என்னும் இவர்களாம்; இவர்கள் பேரினாலேயே அந்தச் சாகத்தீவை எழுகண்டங்களாக வகுத்து அவர்கள் தந்தை அவர்களுக்கு அளித்தான். அத்தீவிலுள்ளவர்களுக்குத் தெய்வம் வாயுவாம்; அங்கு வசிப்பவர்கள் ஆரியர் - விந்தகர் - குகரர் என்பவர்களாம்.—எ-று. (சஅ)

சோமகமே சுமனஞ்சந் திரமேமுந்துந் துந்துபிலப் பிராசனநா ரதியந் தொல்சீர்க், கோமதமா மெழுகிரியுஞ்சிவைவி பாபை குளிரமிர்தை சுகிர்தை மது தத்தை சித்தி, மாமைதரு கிரமையெனு மாறங் கேழு மருவியிடுந் ததிக்கடற்ற்றன் வளைய நின்ற, வேமமுறு குசத்தீவில் வபுட்டு வென்னு மிறையவற்குஞ் சிறுவர்களா யெழுவ ருண்டால்.

(இ-ள்.) அவ்விடத்தில் சோமகம்-சுமனம்-சந்திரம்-உயர்ந்த துந்துபி-வப்பிராசனம்-நாரதீயம்-பழய சிறப்பினையுடைய கோமதம் என்னும் எழு மலைகளும், சிவை-விபாபை-குளிர்ச்சியினையுடைய அமிர்தை - சுகிர்தை - மது - தத்தை - சித்தி-அழகு பொருந்திய கிரமை என்னும் எழு நதிகளும் பொருந்தியிருக்கும். இதுவன்றி, தயிர்க்கடலாற் சூழப்பட்ட இன்பம் பொருந்திய குசத்தீவில் (அரசாண்ட) வபுஷ்டு வென்னும் அரசனுக்கும் எழு புத்திரர்களுண்டு.—எ-று. (சகூ)

சுப்பிரத னுரோகிதனே தீரன் மூகன் சுவேதகன்சித் தியன்வயித்தி தன்னென் றோது, மிப்புதல்வர் பேராலேழ் வருட மாக்கி யீந்தனனுன் னதங்கு முதங் குமார மேகம், வைப்புறுசந் தகமகிட மேது ரோண மலையேழுஞ் சோனைவெள்ளி மதிமே தோமை, யொப்பறுநேத் திராவிமோ சனைவி ருத்தி யோரேழு நதியுளவா னுலவை புத்தேள்.

(இ-ள்.) (அவர்கள் பெயர்களாவன) சுப்பிரதன்-உரோகிதன்-தீரன்-மூகன்-சுவேதகன் - சித்தியன் - வயித்திதன் என்பனவாம். இவர்கள் பெயரினாலேயே அந்தப் பூமியை எழு வருஷங்களாகப் பிரித்து அவர்கள் தந்தையான வபுஷ்டு என்பவர் அவர்களுக்கு அளித்தனர். (அவ்வருஷங்களில்) உன்னதம் - குமுதம் - குமாரம் - மேகம் - செல்வம் பொருந்திய சந்தகம்-மகிடம்-துரோணம் என்னும் எழு மலை

களும், சோணை - வெள்ளி - மதி - தோமை - ஒப்பில்லாத நேத்திரா - விமோசனை-விருத்தி என்னும் ஏழு நதிகளும் விளங்கும். அவ்விடத்தினர்களுக்குத் தெய்வம்-வாயுதேவன்.—எ-று. (௩0)

தர்ப்பகரே கபிலர்சா ரணர்நீலத்தர் தண்டர்விதண் டகராண்டைச் சனங்க ளாவர, ரப்புறநெய்ப் புணரிகிர வுஞ்ச தீப மதற்குமன்னன் சோதிட்டாமவன்றன் மைந்தர், மெய்ப்படுசா ரணன்கபிலன் கிருதி கீர்த்தி வேணுமானிலம்பகனுற் பிதனே யென்னச், செப்புமெழு பேராலேழ் வருட மாக்கிச் சிறப்புடனே யவரரசு செய்தற் கீந்தான்.

(இ-ள்.) தர்ப்பகர் - கபிலர் - சாரணர் - நீலர் - தண்டர் - விதண்டகர்-என்பவர்களே அங்குள்ள சனங்கள். இதுவன்றி,இதற்கப்பால் நெய்க்கடலாற் சூழப்பட்ட கிரவுஞ்ச தீபமாம். அதற்கு அரசன் - ஜோதிஷ்டு என்பவன். அவன் புத்திரர்கள் உண்மையினையுடைய சாரணன்-கபிலன் - கிருதி-கீர்த்தி - வேணுமான் - இலம்பகன்-உற்பிதன் என்று கூறப்படுகிற இவ்வேழுபேர்களது பெயரினாலேயே அந்தப் பூமியை ஏழு வருஷங்களாகப் பகுத்து, அவர்கள் தந்தை அவர்களுக்குச் சிறப்பாக அரசாளும்பொருட் டளித்தனன்.—எ-று. (௩க)

மன்னுகுசே சயமரிவித் துருமம் புட்பா வருத்தமிமந் துதிமானே மந்தரந்தா, னென்னுமலை யேழுசிவை விதூத பாபை யிமைபுனிதை பூரணையோடகில பாவை, சென்னெறிசேர் தம்பையெனு நதியோ ரேழு சேர்ந்துளது தபதர்சடா வகர்மந் தேகர்,பன்னுபுக ழனேகரவர் சனங்க ளாவார் பங்கயனே யங்குடைய பகவ னம்மா.

(இ-ள்.) நிலைபெற்ற குசேசயம்-அரி-வித்துருமம்-புஷ்பாவர்த்தம் - இமம் - துதிமான்-மந்தரம் என்னும் ஏழுமலைகளும், சிவை-விதூதபாபை- இமை - புனிதை - பூரணை-அகிலபாவை-நேரே ஓடுகின்ற தம்பை என்னும் ஏழு நதிகளும் பொருந்தியிருக்கின்றன. அவ்விடங்களில் வசிக்கும் சாதியர்கள், தபதர் - சடாவகர்-மந்தேகர்-சொல்லப்படும் புகழையுடைய அனேகர் என்னும் இவர்களாம். அக்கண்டகளுக்குத் தெய்வம் பிரமதேவன்.—எ-று. (௩௨)

மற்றதனுக் கப்பாலை யளக்கர்கன்னல் வளைந்துடைய தீபஞ்சான் மலியாமங்கட்,கொற்றவனுந் துதிமான னவன்றன் மைந்தர் குசலன்வெய்யன் றேவன்முனி யந்த கார, னற்றமிலா மனோரதன்றுந் துபியா மன்னோர்க் களித்தனனேழ் கூறுக்கி யசல மேழுஞ், சொற்றிமிரஞ் சுரபிவா மனம்வி ருத்தந் துந்துபிசம் மியத்தடம்புண் டரீக நிற்கும்.

(இ-ள்.) அதற்கப்பால் கருப்பஞ்சாற்றுக் கடலால் சூழப்பட்ட சான்மலித் தீவிற்கு அரசன் துதிமான்; அவனது புத்திரர்கள்,குசலன்-வெய்யன்-தேவன்-முனி-அந்தகாரன்- சோர்வில்லாத மனோரதன்-துந்துபி என்பவர்களாம்; இவர்கள் தந்தை இவர்கள் பேரினால் தனது தீவை ஏழாகப் பகிர்ந்தளித்தனன். அவ்விடங்களில் சொல்லப்படுகின்ற திமிரம்-சுரபி- வாமனம்- விருத்தம்- துந்துபி - சம்மியத்தடம்- புண்டரீகம் என்னும் ஏழு மலைகளும் நிலைபெற்று இருக்கின்றன.—எ-று. (௩௩)

போதுகுமு தங்கவரி யாதி யாமை புண்டரிகை மனோபமைசந் தினையயென் றோதுஞ், சீதநதி யேழுசெல்லும் புட்க லாதர் சிறந்திடுபுட் கரர்தனியர் சிசிர ரென்போ, ரேதமிலா துறைசனங்கள் கடவு ளீச னிதற்கும்மப்பான் மதுக்கடல்சூழ்ந் திருந்த தீப, மேதகுகோ மேதகமவ் வியனே தொன்னுள் வேந்தனவற் கெழுமைந்தர் மேனாள் வந்தார்.

(இ-ள்.) ஓடுகின்ற குமுதம்-கவரி- சகியாதி-யாமை - புண்டரிகை - மனோ பமை - சந்தியை என்னும் எழு நதிகளும் குளிர்ச்சியுடன் ஓடுகின்றன. குற்றமின்றி அவ்விடத்தில் வாழுஞ் சாதியர்கள் புஷ்கலாதர்-சிறந்த புஷ்கரர் - தனியர் - சிசிரர் என்னும் இவர்களாம். அத்தீவுகளிலுள்ளவர்களுக்குத் தெய்வம் சிவபெருமானும். இத ற்கப்பால் தேன்கடலால் சூழப்பட்ட கோமேத தீவிற்குமுன்னிருந்த அரசன் அவ்வி யனும்; அவன் புத்திரர்கள் எழுபேர்களாம்.—எ-று. (௫௪)

தூயவிமோ கனன்மோகன் சகலன் சோமன் சுகுமாரன் குமாரன்மதீ சகனு மைந்தர்க், காயதையேழ் கூறுபுரிந் தளித்தான் சிங்க மத்தமுத யஞ் சலகங் கிரவுஞ்ச மாம்பி, கேயமிர மியங்கிரியே ழயாதி தேனுக் கிளர்கபத்தி சுகுமாரி குமாரி யிக்கு, மாயைநதி யேழுளமந் தகரா மங்கர் மாகதர்மா னசர்மாக்கண் மதிமுன் றெய்வம்.

(இ-ள்.) அவர்கள் சுத்தமாகிய விமோசனன்-மோகன் - சகலன் - சோமன்-சுகுமாரன்-குமாரன்-மதீசகன் என்பவர்களாம். அவர்கள் தந்தை தனது தீவை எழா கப் பகிர்ந்து அவர்களுக்கு அளித்தான்; அவ்விடங்களில் சிங்கம்-அத்தம்- உதயம்-சல கம்-கிரௌஞ்சம் - ஆம்பிகேயம் - இரௌமியம் - என்னும் எழு மலைகளும், அயாதி- தேனு- பிரகாசிக்கின்ற கபத்தி - சுகுமாரி- குமாரி-இக்கு - மாயை-என்னும் நதிகள் எழும் இருக்கின்றன. அவ்விடங்களில் வசிக்கும் ஜாதியர், மந்தகர்-ஆமங்கர்-மாகதர் - மானசர் என்பவர்களாம். அத்தீவிலுள்ளவர்களுக்கு முதன்மையான தெய்வம் சந்திர னேயாம்.—எ-று. (௫௫)

புடையினது தூயபுனற் கடலாந் தீபம் புட்கரமன் னன்சவனன் புதல்வ ரானோ, ரடல்கெழுவு தாதகிமா பீத னென்போர்க் கதனையிரு கூறுபடுத் தளி த்தா னென்ப, விடபமகேந் திரம்வருணம் வராக நீல மிந்திரமந் திரியமெனு மேழு வெற்புக், குடிலைசிவை யுமைதரணி சுமனை சிங்கை குமரியெனு மெழு நதியுங் கொண்டு மேவும்.

(இ-ள்.) அதன்புறத்தேயுள்ள நன்னீர்க்கடலால் சூழப்பட்ட புஷ்கரதீவுக் கு அரசனாகிய சவனன் என்பவனுக்குப் புத்திரர்கள் வலிமை பொருந்திய தாதகி மா பீதன் என்னும் இவர்களாம். இவர்களுக்கு இவர் தந்தை தனது புஷ்கரதீவை இரண் டாகப் பகிர்ந்து அளித்தனன். அவ்விடங்களில் இடபம் - மகேந்திரம்-வருணம்-வரா கம்-நீலம்-இந்திரம் - மந்திரியம் என்னும் எழு மலைகளும், குடிலை - சிவை - உமை - தரணி-சுமனை-சிங்கை-குமரி என்னும் எழு நதிகளும் நிலைபெற்று இருக்கின்றன.

மேனிலா வியநகரர் நாக ரென்போர் மேவியமர் பரிசனம்வெய் யவனே புத்தே, ளானதோர் புட்கரத்தின் முடிவி லைம்ப தாயிரம்யோ சனை தன்னி னசல மொன்று,மானசோத் தரமெனவே சகடக் கால்போல் வட்டணைபெற் றிடுமதன்கண் மகவா னுக்கு, மேனையோ ரெழுவருக்குங் குணபா லாதி யெண்டிசையி னும்பதங்க ளெய்து மன்றே.

(இ-ள்.) அவ்விடங்களில் வசிக்குஞ் சாதியர் மேலாக விளங்குகின்ற நகரர், நாகர் என்பவர்களாம்; அத்தீவிலுள்ளவர்களுக்குத் தெய்வம் சூரியனும், அத்தீவின் ஈற்றில் ஐம்பதினாயிர யோசனை யுயரத்தையும், வண்டிச் சக்கரம்போன்ற வட்டவடி வினையும் பொருந்திய மானசோத்தர மென்னும் மலை நிற்கும்; அம்மலையின்மீது இந் திரன்முதல் ஈசான னீருயுள்ள திக்குப்பாலகர்களதுநகரங்கள் முறையே கீழ்த்திசை முதல் எட்டுத் திசைகளிலும் நிலைபெற்றிருக்கும்.—எ-று. (௫௭)

பொங்குதிரைப் புணரிகளின் முடிவு தோறும் புடையுறவே வளைந் தொவ்வோர் பொருப்பு நிற்கு, மிங்குளதோர் சாகமுதற் றீப முற்று மிருக் குநர்க்கு நரைதிரைமூப் பின்ன லில்லை, யங்கவர்கள் கலியினுங்கிம் புருடர் தன்மை யடைவர்பதி னுயிரமாண் டமர்வ ரப்பாற், றங்கியது தபனியப்பா ரதனைச் சூழ்போய்த் தடம்பெருநே மிப்பொருப்புச் சார்வுற் றன்றே.

(இ-ள்.) பொலிகின்ற அலைகளையுடைய கடல்களின் முடிவுகள்தோறும் அதன் அருகிற் சூழ்ந்து ஒவ்வொரு மலை நிற்கும்: இங்ஙனமுள்ள சாகத்தீவு முதலிய ஆறு தீவுகளிலும் இருப்பவர்களுக்கு நரையும், திரையும், மூப்பும், துன்பமும் இல்லை. அவர்கள் கலியுகத்திலும் கிம்புருட வருடத்தில் இருப்பவர்கள் தன்மையை யடைந்து பதினுயிரவருடம் இருப்பார்கள். இவை நிற்க: அப்பாலிருப்பது பொன் பூமியாம்; அதனைச் சூழ்ந்து விசாலமாகிய பெரிய சக்கரவாளகிரி பொருந்தி யிருக்கும்.—எ-று.

நேமிவரை யதற்கிப்பாற் சுடரே யப்பா னிசிப்படலஞ் செய்யமணி நிற னே மன்னர், காமருசீ ரியக்கரிராக் கதரே வெம்பேய்க் கணங்களமர்ந் திடு வர்திசைக் கடவு ளோருந்,தாமுடைய மாதிரத்தின் மேரு வின்கட் டங்குத ல்போல் வைகுவரங் கதனுக் கப்பா, லேமமுறு புறக்கடலங் கதனுக் கப்பா லிருளாகு மதற்கப்பா லெய்து மண்டம்.

(இ-ள்.) சக்கரவாளகிரிக்கு இப்புறத்தில் ஒளியும் அப்புறத்தில் இருளின் படலமும் பொருந்தியிருக்கும். (அது) மாணிக்கத்தின் நிறமுடையது; அதன் தலைவ ர்கள் இயக்ஷர்களாம்; இராட்சசர்களும் கொடிய பைசாசகணங்களும் அங்குவசிப்பவர் கள். திக்குப்பாலகர்களும் தத்தம் திக்கில் மாமேருகிரியில் தங்கி யிருத்தல்போல இருப்பார்கள். அதற்கப்பால் உயர்ச்சிபொருந்திய பெரும்புறக்கடல் இருக்கின்றது. அதற்கப்பால் இருள்நிறைந்த பூமியாம்; அதற்கப்பால் அண்டச்சுவராம்.—எ-று. ( )

ஊழினெறி யாற்றத்த முயிரைத் தாமே யொழிவுசெய்தோ ருந்தெரு ளு முணர்வி லோரு, மாழிவரைப் புறஞ்சூழ்வ ரப்பா லாகு மாரிருள்சே ரெல்லைதனி லநாதி யீசர், வாழுமொரு பெருங்கயிலை யுண்டவ் வண்ட மரு ங்கதனிற் கணநிரைகள் வதிந்து மல்குஞ், சூழுறுசம் புத்தீப் முதலா வண் டச் சுவர்காறும் புவியென்பர் தொல்லை யோரே.

(இ-ள்.) ஊழின் முறைமையினாலே தற்கொலை செய்துகொண்டவர்க ளும்,நன்மை தீமையாதியவற்றைப் பகுத்தறியும் உணர்வில்லாதவர்களும்,சக்கரவாள கிரியின் அப்புறத்திலுள்ள அரிய இருள் பொருந்திய இடத்தில் வசிப்பார்கள்; அவ்வ ண்டச்சுவரின் அருகில் அனாதியாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற ஒப்ப ற்ற பெரிய கைலாசகிரியுளது; அதிலே பூதக்கூட்டங்கள் நெருக்கமாகத் தங்கியிருப் பார்கள். சூழ்ந்த சம்புத்தீவு முதலாக அண்டச்சுவர் வரைக்கும் பூமியென்று பழய புலவர்கள் கூறுவார்கள்.—எ-று. (கூ0)

இப்புவியின் மேற்கணத்தி னுலக மாகு மிதன்மிசைக்குய் யகலோக மிதற்கு மீது, வைப்புடைய வீரைங்கால் வயங்கு தேய மற்றதன்மே லெழு புயனும் வழங்கு மெல்லை, முப்பதினு யிரகோடி முகிலொவ் வொன்றை முறைசூழ்வுற் றிடுமெதற்கு முன்ன ராகச், செப்பரிய கிம்புருடர் கருட ராஞேர் சித்தர்கள்விஞ் சையரியக்கர் செறியு மூதூர்.

(இ-ள்.) இந்தப் பூமிக்குமேல் கணர்கள் (பிசாசங்கள்) வசிக்கும் உலகங்க ளாம்; அதற்குமேல் குய்யகலோகம்; அதற்குமேல் பெருமைவாய்ந்த தசவாயுக்கள் சஞ்சரிக்கின்ற உலோகங்கள்; அதற்குமேல் சத்தமேகங்களும் சஞ்சரிக்கின்ற லோக

ங்கள்; அச்சத்தமேகங்களைத் தனித்தனி முப்பதிறுயிரங்கோடி மேகங்கள் முறையே சூழ்ந்திருக்கும்; அதற்குமேல் சொல்லுதற்கரிய கிம்புருடர்-கருடர் - சித்தர்-வித்தியாதரர் இயக்கர்கள் என்பவர்களது பழய வுலகங்கள் இருக்கின்றன. எ-று. (சுக)

இங்கிதன்மேற் சுரநதிசெல் லிடனே யப்பா லிரவிபதந் தரணிக்கோ ரிலக்க மாகு, மங்கதனின் முப்பான்முக் கோடி தேவ ரருக்கனுடன் வழிக்கொள்வ ரதற்கு மீதே, திங்களுல கோரிலக்க மும்பர் தன்னிற் செறிதருதா ரகையுலக மிலக்கஞ் சேணிற், பொங்கொளிசேர் புதனுலகி ரிலக்க மப்பாற் புகருலக மீரிலக்கம் பொருந்திற் றன்றே.

(இ-ள்.) இதற்குமேல் தேவகங்கை யொழுகுமிடமாம்; இதற்கப்பால் பூமிக்கு ஒரு இலட்சயோசனை தூரத்தில் சூரிய லோகமாம் ; அச்சூரியலோகத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களும் அச்சூரியனுடன் செல்லுவார்கள்; அதற்குமேல் இலட்சயோசனை தூரத்தில் சந்திரலோகமாம்; அதற்குமேல் இலட்சயோசனைஉயரத்தில் நட்சத்திரலோகமாம்; அதற்குமேல் இரண்டுலெட்ச யோசனை தூரத்தில் மிகுந்த ஒளியினையுடைய புதன் உலகமாம்; அதற்குமேல் இரண்டு இலட்சயோசனை யுயரத்தில் சுக்கிரலோகமாம்.—எ-று. (சுஉ)

அந்தரமேற் சேயுலகி ரிலக்க மேலே யரசனுல கீரிலக்க மதற்கு மீதே, மந்தனுல கீரிலக்க மதன்மே லோரேழ் மாமுனிவ ருலகிலக்க மாகு மப்பா, னந்துருவ னுலகிலக்கம் புவர்லோ கத்தி னலத்தகைய தொகைபதினைந் திலக்க மாகு, மிந்தவுல கத்துமிசை யுடைய தேய மெழுவகையா மருத்தின முங் கெழுவு மெல்லை.

(இ-ள்.) அதற்குமேல் இரண்டு இலட்ச யோசனை தூரத்தில் செவ்வாயுலகமாம்; அதற்குமேல் இரண்டுலெட்ச யோசனை தூரத்தில் குரு லோகமாம்; அதற்குமேல் இரண்டுலெட்ச யோசனை தூரத்தில் சனி லோகமாம்; அதற்குமேல் ஒரு இலட்ச யோசனை தூரத்தில் சத்தரிஷிகளின் லோகமாம் ; அதற்குமேல் லட்ச யோசனை தூரத்தில் துருவ லோகமாம்; (பூமியின்மீது) இதுகாறும் புவர்லோகமாம். (இப்புவர்லோகத்தினது) தொகை பதினைந்துலட்ச யோசனையாம்.—எ-று. (சுங)

தொகலோடு சேர்தருமிப் பதத்தின் மீதிற் சுவர்லோக மெண்பத்தஞ் சிலக்க மாங்கே, புகலோடு வானவரும் பிறரும் போற்றப் புரந்தரன்வீற் றிருந்தரசு புரிவ னப்பான், மகலோக மிருகோடி மார்க்கண் டாதி மாமுனிவர் பலர்செறிவர் மற்ற தன்மே,லிகலோகம் பரவுசன லோக மெல்லை யெண்கோடி பிதிர்தேவ ரிருப்ப ரங்கண்.

(இ-ள்.) பலவகைத் தொகுதியோடு சேர்ந்த இப்புவர்லோகத்தின்மேல் எண்பத்தைந்து இலட்ச யோசனை தூரத்தில் இருப்பது சுவர்லோகம்; அவ்விடத்தில் வெற்றியுடன் தேவர்களும் மற்றவர்களும் துதிக்கும்படி இந்திரன் வீற்றிருந்து அரசு செய்வான்; அதற்கப்பால் இரண்டு இலட்சயோசனை தூரத்தில்இருப்பதுமகலோகம்; அதனில் மார்க்கண்டேயர் முதலிய பெரிய முனிவர்கள் அநேகர்கள் இருப்பார்கள்; அதற்குமேல் எட்டுக்கோடி யோசனை தூரத்தில் இவ்வுலகத்தார்களால் புகழப்படுகின்ற சனலோகமிருக்கும்; அவ்விடத்தில் பிதிர் தேவர்கள் இருப்பார்கள்.—எ-று. ()

தவலோக முன்னதமீ ராறு கோடி சனகர்முத லாவுடைய வனகர் சேர்வ, ரவண்மேற்சத் தியவுலக மீரொண் கோடி யயனின்பத் தலமுலக மளிக்குந் தான, நவைதீரும் பிரமபத மூன்று கோடி நாரணன்வாழ் பேருலக மோ

ர்முக் கோடி, சிவலோக நாற்கோடி யதற்கு மீதே திகழண்ட கோளகையுங் கோடி யாமே.

(இ-ள்.) அதற்குமேல் பன்னிரண்டுகோடி யோசனை யுயரத்தில் தவலோக மிருக்கும்; அதனில் சனகர்முதலிய பெரியவர்கள் வாசஞ்செய்வார்கள்; அதற்குமேல் பதினறு கோடி யோசனை யுயரத்தில் சத்தியலோகமிருக்கும் அது பிரமதேவனது இன்பஸ்தானமும் லோகசிருஷ்டிஸ்தானமும் ஆகும்; அதற்குமேல் மூன்றுகோடியோசனை தூரத்தில் பிரமலோகமாம்; அதற்குமேல் மூன்றுகோடியோசனைதூரத்தில் திருமால் வசிக்கின்ற பெரிய உலகமாம்; அதற்குமேல் நாலுகோடி யோசனை தூரத்தில் சிவலோகம்; அதற்குமேல் கோடியோசனைதூரத்தில் விளங்குகின்ற அண்டப்பித்திகையிருக்கும். (சுரு)

வேதமொடு தந்திரமு மவற்றின் சார்பு மிருதிகளும் பிறநூலும் வேறுவேறு,வோதிடுமண் டத்தியற்கை மலைவோ வென்று னுண்மைதெரிந் திடிற்படைப்பு முலப்பில் பேத, மாதலினு லவ்வவற்றின் றிரிபு நாடி யறிந்தவுனக் கீண்டுண்மை யதுவே சொற்று, மேதமிலிவ் வண்டத்திற் புவன நூற்றெட்டிறையருள்சே ருருத்திரர்தம் மிருக்கை யாமே.

(இ-ள்.) வேதங்களும் ஆகமங்களும் அவற்றின் சார்பு நூல்களும் ஸ்மிருதிகளும் மற்றைய நூல்களும் அண்டத்தின் இயல்புகளை வேறுவேறாகக் கூறும்; (அப்படி வேறு வேறாகக்கூறினல்) மாறுபடாதோவெனின், மாறுபடா. (யாதாலெனில்), உண்மையை விசாரிக்குமிடத்து (கற்பங்கள் தோறும்) படைப்புகள் அளவற்ற பேதங்களாதலினல் அவைகள் முரணல்ல: ஆதலான், அங்ஙனஞ்சிருஷ்டிகளின்தற்கால முற்காலங்களை ஆராய்ந்தறிந்த (யாம்) இந்தக் கற்பத்திலுள்ள அண்டத்தின் இயல்பை அறிகின்ற உனக்குச் சொன்னேம்; குற்றமில்லாத இவ்வண்டத்தில் நூற்றெட்டுப்புவனங்களுள; அவைகள் சிவபெருமானது திருவருளைப்பெற்ற உருத்திரர்களது வாசஸ்தானமாம்.—எ-று. (சுசு)

வேறு.

இந்த வண்டத்தி னியற்கைய முன்னுனக் கிறைவன்
றந்த வண்டங்க ளாயிரத் தெட்டுமித் தகைமை
மைந்த நீசென்று காணுதி யெனவகுத் துரைப்ப
வந்த மில்லதோர் மகிழ்ச்சியி னுணர்ந்தன னவுணன்.

(இ-ள்.) சிவபெருமான் உனக்கு முன்னர் அளித்த ஆயிரத்தெட்டு அண்டங்களும் யான் கூறிய இந்த அண்டத்தின் தன்மையினை யுடையனவாம். இதனை, சூரபன்மனே! நீ சென்று பார்க்கக்கடவை என்று சுக்கிராசாரியன் வகுத்துக் கூறுதலும், அதனைக் கேட்ட சூரன் அளவற்ற மகிழ்ச்சியுடன் அவைகளை யறிந்தனன். (சுஎ)

அண்டகோசப்படல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - எஅகூ.

உ
முருகன்றுணை.

# திக்குவிசயப்படலம்.

குணங்கள் பற்பல வுணர்த்திய குரவன்றன் கழல்கள்
வணங்கி வாளரி முகனொடு விடைகொண்டு வயமா
னணங்கு வைகிய திறலுடைச் சூரர்கோ னவுண
ரிணங்கு தானையங் கடலிடைப் புக்கன னிமைப்பில்.

(இ-ள்.) தனக் கனேகவிதமான இலக்கணங்களை யுபதேசித்த ஆசிரியராகிய சுக்கிரபகவானது பாதங்களை வணங்கி, சிங்கமுகாசுரனுடன் வீரலட்சுமி கடாக்ஷம்பெற்ற சூரபன்மன் விடைபெற்றுக்கொண்டு ஒற்றுமையுடன் வந்திருக்கின்ற தனது சேனையாகிய கடலின் நடுவில் புகுந்தனன்.—எ-று. (க)

சேனை யின்றலை புகுதலுந் தாரகன் சென்று
கோனை வந்தனை செய்துதன் முன்னவற் குறுகி
யான பான்மையின் வணங்கிமுன் னின்றிட வாசான்
போன வெல்லையிற் புகன்றன பரிசெலாம் புகன்றான்.

(இ-ள்.) சூரபன்மன் தனது சேனையின் மத்தியிற் சென்றவுடனே, தாரகாசுரன்வந்து தனது மூத்த தமயனது பாதங்களை வணங்கி, பின்பு தனது நேர்தமயனாகிய சிங்கமுகாசுரனிருக்குமிடத்திற்குச்சென்று அவனை வணங்கவேண்டிய முறைப்படி வணங்கி எதிரில் நின்றான். உடனே சிங்கமுகாசுரன் தானுஞ் சூரனும் சுக்கிராசாரியனைச்சென்று கண்டபோது அவர் கூறிய சங்கதிகளை எல்லாம் விடாமற் கூறினான்.—எ-று. (உ)

ஆவ தாகிய பரிசெலாங் கேட்டுணர்ந் தவனுந்
தாவி லாததன் மனங்கொடு நன்றிது தலைவ
மேவ லார்களை யாமினி வென்றிட விரைவிற்
போவ தேகட னென்றன னன்னதோர் பொழுதின்.

(இ-ள்.) இனி நடக்கவேண்டிய விஷயங்களை யெல்லாம் கேட்டறிந்த தாரகன் தான் கேட்ட விஷயங்களை யெல்லாம் கெடாத தனது மனதில் அமைத்துக்கொண்டு, அரசே! இதுவே நல்ல காரியம்; இனி யாம் சத்துருக்களை ஜயிக்கும்பொருட்டு சீக்கிரம் போகவேண்டியதே முறைமை என்றனன். அந்தச்சமயத்தில்.—எ-று. (ஙு)

அந்தி வார்சடைக் கண்ணுதற் கடவுட னருளான்
மைந்தர் மூவரும் பெற்றதொல் வரங்களும் வலியுஞ்
சிந்தை யுள்ளுற நாடியே யளியொடுஞ் சேணில்
வந்து தோன்றினள் தொல்லைநா ளுேற்றிடு மாயை.

(இ-ள்.) பூர்வத்தில் தவஞ்செய்தவளாகிய மாயையானவள் தனது குமாரர்கள் மூவர்களும் செக்கர்வானம்போலுஞ் சடைமுடியினையுடைய சிவபெருமானது திருவருளால் அடைந்த பெரிய வரங்களையும், வலிமையையும் தனது மனத்துக்குள் நினைத்து, மிகுந்த களிப்புடன் ஆகாயத்தில்வந்துநின்றனள்.—எ-று. (ச)

தோன்று மெல்லையின் முந்துறக் கண்டுவெஞ் சூர
னன்ற தம்பியர் தம்மொடு மசமுகி யோடு
மூன்று மன்பொடு பணிதலு மன்னை தன் னுள்ள
மீன்ற ஞான்றினு முவந்தன ளாசிக ளிசைத்தாள்.

(இ-ள்.) ஆகாயத்தில் மாயையானவள் வந்து நின்றவுடனே, வெவ்விய சூர பன்மன் பெருமைபொருந்திய தனது தம்பிமார்களுடனும் தங்கையாகிய அசமுகி யுடனும் பொருந்திய அன்புடன் வணங்குதலும், பெற்ற தாயாகிய மாயை இவர்க ளைப் பெற்றகாலத்தடைந்த மகிழ்ச்சியைக்காட்டிலும் அதிக மகிழ்வுடையவளாய் ஆசீர்வதித்தாள்.—எ-று. (ரு)

ஆசி கூறியே வேள்வியிற் செய்கையு மதனுக்
கீச னல்கிய வரங்களுங் கேட்டன னீண்டு
நேச மோடுமைக் காணிய வந்தன னீவிர்
வாச வன்முத லோர்தமை வெல்லுதிர் வலியால்.

(இ-ள்.) மாயையானவள் ஆசீர்வதித்து, மைந்தர்காள்! நீங்கள் யாகத்திற் செய்தவைகளையும், அதற்காகச் சிவபெருமான் உங்களுக்கு அளித்த வரங்களையுங் கேட்டு இவ்விடத்தில் விருப்பத்துடன் உங்களைப் பார்க்க வந்தேன்; இனி நீங்கள் உங்கள் வல்லமையால் இந்திராதி தேவர்களை யெல்லாம் சயிக்கக்கடவீர்கள்.—எ-று.

வென்ற பின்னரொவ் வுலகமும் புரந்துமே தினியி
லென்றும் வாழுதிர் மாயைகள் வேண்டிடி னென்னை
யொன்று மன்புட னுன்னுதி ருன்னிய பொழுதே
சென்று வெஃகிய தன்மைகள் செய்தியான் முடிப்பேன்.

(இ-ள்.) ஜயித்தபின்னர் சகல உலகங்களையும் ஆண்டுகொண்டு இவ்வுல கத்தில் எப்போதும் வாழுங்கள்; மாயைகள் வேண்டியிருந்தால் விருப்பத்துடன் என்னை நினையுங்கள்; நினைத்தவுடனே யான் வந்து நீங்கள் விரும்பிய தன்மைகளைச் செய்துமுடிப்பேன்.—எ-று. (எ)

ஈத லாலுமைப் பிரியலன் பன்முறை யானே
காத லோடுமைக் காணிய செல்குவன் கலந்து
பேத நீரற விருத்திரா லீண்டெனப் பேசி
மாது மேகினண் மைத்தர்கண் மூவரும் வணங்க.

(இ-ள்.) இதுவன்றியும் உங்களை நான் பிரிந்து வேறிரேன்; பல தடவை களிலும் யானே வந்து உங்களை விருப்பத்துடன் பார்க்கின்றேன்; நீங்கள் மூவர்க ளும் பேதமற்ற மனதுடையவர்களாக இவ்விடத்தில் இருங்கள் என்று கூறி, சூராதி கள் வணங்கச் சென்றனள் மாயை.—எ-று. (அ)

தோடு லாவிழிப் பொற்றொடி யேகலுஞ் சூரன்
கோடி தேருடன் றானவர் தங்களைக் கூவி
நீடு நம்பெருந் தானைக் ணிதிபதிக் கேகப்
பாடன் மாமுர சறைமினோ கடிதெனப் பணித்தான்.

(இ-ள்.) காதளவுஞ்சென் றுலாவிவரும் கண்களையுடைய மாயை போன பின்பு, சூரபன்மன் அசுரர்களை யழைத்து, கோடித்தேர்களுடன் நமது பெரிய சேனை களைக் குபேர நகரத்திற்குச் செல்லும்படி முழங்குகின்ற பெரிய முரசினை அடியுங்க ளென்று கட்டளையிட்டான்.—எ-று. (கூ)

அரச னேவலு மவுணர்க ளன்னவா றறைந்து
முரச மெற்றினர் கேட்டலு மத்திசை முன்னி
யுரைசெய் நான்முக னுறங்குழிப் புவிகொள வொருங்கே
திரைசெய் வான்கடல் சென்றெனச் சென்றது சேனை.

(இ-ள்.) சூரபன்மன் கட்டளையிடவும், அசுரர்கள் அவ்வண்ணமே கூறி முரசடித்தார்கள். முரசோசையைக் கேட்டவுடன் வடதிசையை நோக்கிப் பிரமகற்பத்தில் உலகத்தை மூடிக்கொள்ளும்பொருட்டு அலை வீசுகின்ற பெரிய கடல்களெல்லாம் ஒன்றுசேர்ந்து சென்றாற்போல சேனைக்கூட்டங்கள் சென்றன.—எ-று. (கo)

பத்து நூறுட னுயிர மாதியாய்ப் பலவாங்
கொத்து நீடிய சென்னியர் கொடுமைசேர் குணத்தோர்
மெத்து பல்படை யேந்திய கரத்தினர் விறலோர்
கத்து வார்கட லார்ப்பின ரவுணர்தங் கணத்தோர்

(இ-ள்.) பத்து, நூறு, ஆயிரம் முதலான கணக்குகளையுடைய அநேகம் கூட்டமான தலைகளையுடையவர்களும், கொடுமை வாய்ந்த குணத்தினையுடையவர்களும், பெரிய பல ஆயுதங்களைத் தாங்கிய கைகளையுடையவர்களும், கடல்போன்ற ஒலியினையுடையவர்களும், வெற்றிபொருந்திய தன்மையினருமாகிய அசுரர்கள் (அநேகர்கள் சென்றார்கள்).—எ-று. (கக)

விண்ணிற் பாய்வன விரவிதேர் பாய்வன் வேலைக்
கண்ணிற் பாய்வன திசைகளிற் பாய்வன கனன்மேற்
பண்ணிற் பாய்வன வரைகளிற் பாய்வன பரவை
மண்ணிற் பாய்வன புரவிக ளளப்பில மாதோ.

(இ-ள்.) ஆகாயத்திற் றாவுவனவும், சூரியனது தேரிற் றாவுவனவும், கடலிற் றாவுவனவும், திக்குக்களிற் பாய்வனவும், நெருப்பின்மீது ஒழுங்குடன் பாய்வனவும், மலைகளிற் பாய்வனவும், கடல்சூழ்ந்த வுலகிற் பாய்வனவும் ஆகிய அநேகங் குதிரைகள் (சென்றன). எ-று. (கஉ)

பாறு சென்றிடக் கொடியினுஞ் சென்றிடப் பலபேய்
வேறு சென்றிடப் பாரிடஞ் சென்றிட விண்மேன்
மாறு சென்றிடப் பிளிறொலி சென்றிட மதநீ
ராறு சென்றிடச் சென்றன யானையி னனிகம்.

(இ-ள்.) பருந்துகள் பின்பற்றிச்செல்லவும், காக்கைகள் தொடரவும், அநேகம் பேய்கள் வேறாகவரவும், பூதங்கள்வரவும், மேகத்தொனிக்குப் பதிலாய் வீறிட்டுக்கொண்டு ஆறுபோல மதநீரை யொழுக்கினவையாய் யானைச் சேனைகள் சென்றன.

மேருச் சையமுங் கயிலையு மல்லது வேறு
நேரற் கொத்திடு கிரிமிசைச் செல்வன நீலக்
காரிற் செல்வன விண்மிசைச் செல்வன கடல்சூழ்
பாரிற் செல்வன செல்வன வாழியம் பஃறேர்.

(இ-ள்.) மேருமலையும் கைலாயமுமன்றி வேறேயுள்ள மலைகளை ஒப்புச்சொல்லுதற்குத் தக்க ஓடுகின்ற சக்கரங்கள் பூட்டிய அநேகம் தேர்கள் மலைகளின்மீது செல்லுகின்றன. கரிய மேகங்களின்மீது செல்லுகின்றன. சொர்க்கத்தின்மீது செல்லுகின்றன. கடல்சூழ்ந்த உலகிற் செல்லுகின்றன.—எ-று. (கச)

மூன்று கோடியோ சனையதாய் நாற்றிசை முற்று
மான்ற வெல்லையி னவ்வகைத் தாகிய வனிக
மேன்று சென்றன சென்றதோ ரளவையி னினன்போற்
றேன்று பொன்சுட ரளகையை யடைந்தன தூசி.

(இ-ள்.) மூன்றுகோடி யோசனை யகலம் நாற்புறங்களையும் பெரிதாக நெருங்கிச் சூழ்ந்து செல்லுகின்ற அத்தன்மையவான சேனைகள் வடக்குத்திசையை நோக்கிச் செல்லும்பொருட்டு முயற்சித்துப் பிரயாணப்பட்டபொழுதே சூரியனைப்போலப் பொற்பிரகாசம் வீசுகின்ற குபேரன்பட்டினத்தை முன்னணிப்படைக ளடைந்தன.

அடைந்தன தூசி என்பதை சேனைகளின் மிகுதியால் உண்டான தூசிகள் சென்றன எனினு மமையும். (கரு)

பூத மைந்தினு மிகவலி யுடையது பொலன்சே
ராத வன்றனித் தேரினுஞ் சிறப்புற்ற தவனிற்
சோதி பெற்றது பேருணர் வுள்ளது தொல்சீர்
மாதி ரங்களை யகற்சியான் மறைப்பது மன்னோ.

(இ-ள்.) பஞ்சபூதங்களைக் காட்டிலும் மிகுந்த வலிமையினை யுடையதும், அழகுபொருந்தியசூரியனது தேரைவிட சிறந்ததும்,அச்சூரியனைவிட பேரொளிபெற்றதும், மிக்க அறிவுள்ளதும், பெரிய சிறப்பினையுடைய திக்குக்களை விசாலத்தால் மறைப்பதும்.—எ-று. (கசு)

இதுமுதல் நான்குபாடலுங் குளகம்.

என்று மேயழி வில்லது மேருவோ டிகலுங்
குன்று போலுவ தகிலமு மிமைப்பினிற் குறுகிச்
சென்று மீள்வது குறிப்பினிற் செல்வது சிதையா
வொன்று கோடிய வாம்பரி பூண்டுள தொருங்கே.

(இ-ள்.) என்று மழியாததும், விந்தமலைபோல்வதும் எல்லாவுலகங்களிலும் இமையளவில் சென்று மீள்வதும், உத்தேசப்படி செல்வதும், தாவுகின்ற அழியாத ஒருகோடி குதிரைகளை வரிசையாகக் கட்டியதும்.—எ-று. (கஎ)

அழிவி லாப்பல சாரதி யுள்ளதங் களப்பில்
விழுமி தாகிய படையெலாங் கொண்டது மேவா
ரொழிய வன்னவர் தேர்மிசைச் செல்லுவ துருமேற்
றெழிலி யச்சுறப் பன்மணி கறங்குவ தென்றும்.

(இ-ள்.) மரணமடையாத அநேக சாரதிகளையுடையதும், அளவற்ற ஆச்சரியகரமான ஆயுதங்களை யுட்கொண்டதும், சத்துருக்கள் சாகும்படி அவர்கள் தேரின் மீது பாய்வதும், இடியேற்றினையுடைய மேகங்களும் நடுங்கும்படி பல மணிகள் சத்திப்பதும்.—எ-று. (கஅ)

பாரை நேர்தரு பரப்பின துலகெலாம் படைத்த
நாரி பாதிய னளித்தரு ளிந்திர ஞாலத்
தேரின் மால்வரை மிசையுறும் வயப்புலி செலல்போற்
சூர னேறியே போந்தன னவுணர்க டொழவே.

(இ-ள்.) பூமியையொத்த விசாலமுடையதும், எல்லாவுலகங்களையும் பெற்றருளிய பார்வதி பாகராகிய சிவபெருமான் அளித்தருளியதுமான இந்திரலோகமென்

னுந் தேரின்மீது மலையின்மீதுள்ள சிங்கம் ஏறிச்செல்வதுபோல அசுரர்கள் வணங்கும்படி சூரபன்மன் ஏறிச்சென்றனன்.—எ-று. (கசு)

ஆண்டவ் வெல்லையி லாயிர மாயிரம் யாளி
தாண்டு வெம்பரி யாயிர மாயிரந் தடந்தோ
ணீண்ட பாரிட மாயிர மாயிர நிரலே
பூண்ட தேர்மிசை யேறியே யரிமுகன் போந்தான்.

(இ-ள்.) அவ்விடத்தில் அப்பொழுது அநேகமாகிய யாளிகளையும், தாவுகின்ற அனேகமாயிரங் குதிரைகளையும், நீண்டபெரிய தோள்களையுடைய அநேகமாயிரம் பூதங்களையும், வரிசையாகக் கட்டப்பட்டுள்ள தேரின்மீது சிங்கமுகாசுரன் ஏறிச்சென்றனன்.—எ-று. (உ0)

காலு முள்ளமும் பின்னுற முன்னுறு கவனக்
கோல மாப்பதி னாயிரம் பூண்டதோர் கொடிஞ்சிச்
சால மார்தரு வையமேற் புகுந்துதா ரகனு
மால மென்பது சென்றென நடந்தன னன்றே.

(இ-ள்.) காற்றும் மனமும் பின்னிடையும்படி முன்னிட்டுச் செல்லுகின்ற வேகத்தினையுடைய அழகிய பதினாயிரங் குதிரைகள் பூட்டிய அனேக கொடிஞ்சிகளையுடைய ஓர் தேரின்மீது தாரகாசுரன் ஏறினவனாய் ஆலகால விஷம்செல்வதுபோலச் சென்றான்.—எ-று.

கொடிஞ்சி தாமரைமொக்கு வடிவமாச்செய்து தேரின்முன்னே அமைப்பது. (உக)

அன்ன தாரக வீரனு மரிமுகத் தவனு
மன்ன னேரிரு பாங்கரு மாயினர் வந்தார்
துன்னு தானவத் தானையந் தலைவர்க டொலையாப்
பொன்னின் மாமணித் தேரொடு மேகினர் புடையில்.

(இ-ள்.) அத்தகைய தாரகாசுரனும் சிங்கமுகாசுரனும் சூரபன்மன இருபுறத்திலுமாகவந்தார்கள்; இதுவன்றியும்,நெருங்கிய சேனாதிபதிகள் அழியாத பொன்னிற்செய்த மணிகளிழைத்த தேர்களின்மீதேறிக்கொண்டு பக்கத்திற் சென்றார்கள்.

விரவு கின்றதோ ரேனையர் சேனையின் வீரர்
கரியெ னுங்கடன் மீதினுங் கலினமார் கவனப்
பரியெ னுங்கடன் மீதினு முதல்வனைப் பரவி
யிருமரு ருங்கினும் போயினர் கூற்றனு மிரங்க.

(இ-ள்.) நெருங்கியமற்றவர்களும் சேனாதிபதியர்களும் மிகுதியான யானைகளின்மீதும் கடிவாளம்பூட்டிய வேகத்தினையுடைய குதிரைகளின்மீதும் ஏறிக்கொண்டு எமனும் இரங்கும்படி சூரனைத் துதித்துக்கொண்டு இரண்டு பக்கங்களிலும் சென்றார்கள்.—எ-று. (உரு)

அடல்செ றிந்திடு மொன்பதிற் றிருவகை யாகும்
படைக ளேந்தியே யளவிலா வவுணர்கள் பரவிக்
கடல்கி ளர்ந்தவண் சூழ்வன போன்றுகா வலர்தம்
புடையில் வந்தன ரசனியு மச்சுறப் புகல்வார்.

(இ-ள்.) பலம்பொருந்திய பதினெண்வகையாகிய ஆயுதங்களைத் தாங்கி அளவற்ற அசுரர்கள் துதித்துக்கொண்டு கடல்கள் பொங்கி யவ்விடத்திற் சூழ்ந்து வந்தாற்போல இடியஞ்சும்படி பேசுகின்றவர்களாய் சூராதிகளது பக்கத்தில் வந்தார்கள்.

இன்ன தன்மையி னுற்படை சூழ்தர விதன்பாற்
றுன்னு தேரென வுள்ளவுந் துரகமுள் ளனவும்
பன்னெ டுங்கரி யுள்ளவு மவுணர்கள் பலரு
மன்னி வந்திட நடுவுற வேகினன் மன்னன்.

(இ-ள்.) இத்தன்மையவாய் சதுரங்க சேனைகளுஞ் சூழ்ந்துவர இதனிடத்தில் நெருங்கியுள்ள தேர்களும் குதிரைகளும் பல பெரிய யானைகளும் அசுரர்களும் முறையே சூழ்ந்துவர மத்தியில் சூரபன்மன் சென்றனன்.—எ-று. (உரு)

வயங்க ளார்த்திடு தானவ ரோதையு மான்றே
ரயங்க ளார்த்திடு மோதையு மன்னவை யணித்தாய்க்
கயங்க ளார்த்திடு மோதையுங் கண்டையின் கலிப்பு
மியங்க ளார்த்திடு மோதையு மிக்கன வெங்கும்.

(இ-ள்.) எவ்விடங்களிலும் வீரர்கள்பேசும் வீரவசனங்களின் ஓசையும், பெரிய தேர்களிற்கட்டப்பட்டுள்ள குதிரைகளின் கனைப்பும், அத்தேர்களினருகில் யானைகள் கர்ச்சிக்கும் ஒலியும், (அவ்வியானைகளின் பக்கங்களிற்கிடக்கின்ற) மணிகளின் ஓசையும், வாத்தியங்களை வாசிக்கும் முழக்கமும் அதிகரித்தன.—எ-று. (உசு)

அரியெ னுந்திற லவுணர்க ளங்கையி லேந்து
முரிய வெம்படை முழுவது மொன்றொடொன் றுரிஞ்ச
வெரிபி றந்தன செறிந்தன வெம்பிரான் முனிந்த
புரமெ னும்படி யாகிய வரைகளும் புவியும்.

(இ-ள்.) சிங்கம்போன்ற வலிமையினையுடைய அசுரர்களது கைகளில்பிடிக்கப்பட்டிருக்கின்ற கொரேமான ஆயுதங்களெல்லாம் ஒன்றுடனொன்றுமோத அவைகளினின்றும் தீப்பொறிகள் பிறந்தன ; அத்தீப்பொறிகளால் மலைகளும் நாடுகளும் சிவபெருமான் சிரித்தெரித்த திரிபுரங்களைப்போல ஆயின.—எ-று. (உஎ)

நிரந்த தானவ ரெழுந்திடப் பூழிக ணிலமேற்
பரந்து வானகம் புகுதலு மனையது பாரா
விரிந்து போவதை நீங்கியே யவைதனை யெய்தக்
கரந்து வைகின னாழியந் தேருடைக் கதிரோன்.

(இ-ள்.) நெருங்கிய அசுரர்கள் எழுந்து செல்லவும், புழுதிகள் பூமியிற் பரவி ஆகாயமார்க்கமாகச் செல்லவும், ஒற்றைச்சக்கரமமைந்த அழகிய தேரினையுடைய சூரியன் அதனைப்பார்த்துத் தான் ஓடிப்போவதையொழிந்து அப்புழுதிகள் தன்னையடைதலால் மறைந்து தோன்றினன்.—எ-று (உஅ)

பூந டுங்கின பணிக்குல நடுங்கின புனைதீர்
வான டுங்கின மாதிர நடுங்கின வரைக
டாந டுங்கின புணரிக ணடுங்கின தறுகட்
டீந டுங்கின நிருதர்கோன் பெரும்படை செல்ல.

(இ-ள்.) அசுரராஜனாகிய சூரபன்மனது பெரியசேனைகள் செல்லுதலால் உலகங்கள் நடுங்கின; குற்றமற்ற ஆகாயம்நடுங்கின; அஷ்டதிக்குகள் நடுங்கின; மலைகள் நடுங்கின; கடல்கள் நடுங்கின; அஞ்சாமையினையுடைய தீக்கள் நடுங்கின.—எ-று.

இனைய தன்மையிற் சேனைக டம்மொடு மிறைவன்
றனதன் மாநகர் வளைந்தன னன்னதோர் தன்மை
யினவி யோடியே தூதுவ ரியக்கர்கோன் மேவுங்
கனக மாமணிக் கோநகர் சென்றனர் கடிதின்.

(இ-ள்.) இவ்வாறாகிய தன்மையினையுடைய சேனைகளுடனே சூரபன்மனானவன் குபேரனது பெரிய அளகாபுரியைச் சூழ்ந்துகொண்டனன்; தூதுவர்கள் அத்தன்மையைக்கேட்டுணர்ந்து விரைந்தோடி குபேரன் வசிக்கின்ற பொன்மயமாகிய மிக்க அழகினையுடைய உயர்ந்தநகரத்தை யடைந்தார்கள்.—எ-று. (௬௦)

வேறு.

சென்றிடு மொற்றர் தங்கோன் சேவடிக் கமலந் தாழ்ந்து
வன்றிறற் சூர பன்மன் மாநகர் வளைந்து கொண்டா
னின்றினி யழியும் போலு மீண்டுநீ யிருத்தல் சால
நன்றல வனிகத் தோடு நடத்தியா லமருக் கென்றார்.

(இ-ள்.) அவ்வாறு விரைந்துசென்ற தூதுவர்கள் தங்கள் தலைவனாகிய குபேரனது திருவடித்தாமரைகளை வணங்கி,வலிய பராக்கிரமத்தினையுடைய சூரபன்மன் நமது பெரிய அளகாபுரிப்பட்டினத்தைச் சூழ்ந்துகொண்டனன்; இனி இப்பொழுது இது அழிந்துவிடும்போலும்: ஆதலால் இவ்விடத்தில் நீர் சும்மாவிருத்தல் நன்றன்று; சேனைகளுடனே யுத்தஞ்செய்தற்குச் செல்லக்கடவீராகவென்று கூறினார்கள்.—எ-று. (௬௧)

தூதுவ ருரைத்தல் கேளாத் துன்புகூர் துளக்க மெய்தி
யேதமி லவுணர் தம்மை யாம்வெலற் கரிது முக்க
ணாதிதன் வரங்கொண் டுள்ளா ரவர்ப்புகழ்ந் தாசி செய்வான்
போதுதல் கடனே யென்னுப் பொருக்கென வெழுந்து போனான்.

(இ-ள்.) தூதுவர்களுரைத்த வார்த்தைகளைக் குபேரன்கேட்டுத் துன்பமிக்க நடுக்கங்கொண்டு குற்றமில்லாத அவுணர்களை நாம் வெல்லுதற்கருமையாகும்; அவர்கள் திரிநேத்திரராகிய சிவபெருமானிடத்து வரம்பெற்றிருக்கின்றனர்; ஆதலால், அவர்களைப்புகழ்ந்து ஆசீர்வாதஞ்செய்யும்படிச் செல்லுதலே முறைமையென்றுகூறி விரைவாகவெழுந்து சென்றனன்.—எ-று. (௬௨)

போயின னளகை யண்ணல் புட்பக மீது சென்று
தூயதோ ரியக்க ரோடுஞ் சூரனைத் தொழுது போற்றி
யேயின வாசி கூறி யானுமக் கடிய னென்ன
நீயினி திருத்தி யென்றே விடுத்தன னிருதர் போற்ற.

(இ-ள்.) எழுந்துசென்ற குபேரன் புஷ்பக விமானத்தின்மேலேறிச்சென்று தூய்மையாகிய இயக்சர்களுடன் சூரபன்மனை வணங்கித் துதித்துத் தக்க ஆசிமொழிகளை யுரைத்து யான்உங்களுக்கு அடியவன் என்று கூறுதலும், சூரபன்மன் அசுரர்கள் துதிக்கும்படி நீ இங்குச்சுகமாக விருக்கக்கடவையென்று கூறியனுப்பினன்.

வேறு.

அன்னது கண்டுழி யவுணர் மாப்படை
மின்னவிர் முகிலினம் வெருவ வார்த்தன
துன்னுறு மிளையவ ரோடுஞ் சூரனா
மன்னவ னவ்வழி மகிழ்ச்சி யெய்தினன்.

(இ-ள்.) பெரிய அவுணர்சேனைகள் அதனைப்பார்த்தவுடனே, மின்னலுடன்விளங்குகின்ற மேகங்களுமஞ்சும்படி ஆரவாரித்தன; நெருங்கிய தம்பிமார்களுடன் சூரபன்மன் அப்பொழுது மகிழ்வடைந்தனன்.—எ-று. (ருச)

அதுபொழு தவுணர்க ளளகை யூடுபோய்
நிதிகளு மணிகளு நீடு மானமுஞ்
சிதைவறு படைகளுந் தேரு மாக்களுங்
க்திகெழு களிறுடன் கவர்ந்து மேவினர்.

(இ-ள்.) அப்பொழுது அசுரர்கள் அளகாபுரியினுள்ளேபுகுந்து இருநிதிகளையும், இரத்தினங்களையும், உயர்ந்த விமானங்களையும், அழிவற்ற ஆயுதங்களையும், இரதங்களையும், குதிரைகளையும், வேகத்தினையுடைய யானைகளுடன் அபகரித்துச் சென்றார்கள்.—எ-று. (ருரு)

மைம்மலி தானவர் வலிந்து வவ்வலாற்
பொய்ம்மையில் பெருவளம் யாவும் போக்கிய
செம்மையி லந்நகர் திருவு நீங்கிய
கைம்மைதன் வடிவெனுங் காட்சித் தாயதே.

(இ-ள்.) கருநிறம்பொருந்திய அசுரர்கள் பலாத்காரமாக அபகரித்தலால் அழியாத பெரிய செல்வங்களை யெல்லா மிழந்த அந்த அளகாபுரியானது மங்கிலிய மிழந்த விதவையினது வடிவமென்றுகூறுங் காட்சியை யுடைத்தாயிருந்தது.—எ-று.

ஆறலை கள்வரி னவுணர் யாவருஞ்
சூறைகொண் டந்நகர் தொலைத்துப் போதலு
மூறுகொ ணிதிபதி யுள்ள நாணியே
வீறக லளகையின் மீண்டு மேகினன்.

(இ-ள்.) வழிபறிக்கின்ற கள்வர்களைப்போல அசுரர்களனைவரும் அவ்வளகாபுரியைக் கொள்ளையிட்டழித்துவிட்டுப்போகவும், அதனால் துன்பத்தையடைந்த குபேரனானவன் மனத்தில் நாணமுற்றுப் பெருமைகுலைந்த அளகாபுரிக்குத் திரும்பி வந்தனன்.—எ-று. (ருஎ)

ஆண்டுறு தனதனை யடித்தொண் டாற்றுவான்
மாண்டன னிவனென மனத்தி லுன்னியே
யீண்டிய தானையோ டிமைப்பிற் பாகரைத்
தூண்டுதிர் தேரெனச் சூரன் போயினன்.

(இ-ள்.) அவ்விடத்திலிருக்கின்ற குபேரனை நமது பாதங்களுக்கு ஊழியஞ் செய்தற்குச் சிறந்தவனென்று தன் மனத்தில் நினைத்துச் சூரபன்மன் நெருங்கிய சேனைகளுடன் பாகர்களைப்பார்த்து விரைவாகத் தேரை நடத்துங்களென்று கூறிச்சென்றனன்.—எ-று. (ருஅ)

அளகையை நீங்கியே யாசைக் கிறதா
யுளநக ரெய்தின னுளிரு நீலமார்
களனுரு வெய்திய கடவுள் வைகிய
வளநக ரீதென மன்ன னுன்னினன்.

(இ-ள்.) அளகாபுரியைவிட்டு நீங்கித் திக்குகளினிறுதியாகவுள்ள ஈசான நகரத்தையடைந்தனன்; அவ்விடத்தில், நீலநிறம் விளங்குகின்ற கண்டத்தினையுடை

ய சிவபெருமானது சாரூபத்தைப்பெற்ற ஈசானமூர்த்திவசிக்கின்ற வளவிய நகரமிது வாகுமென்று சூரபன்மன் மனத்தில் நினைத்தனன்.—எ-று. (௩௯)

அந்தமா நகரைவிட் டவுணர் கோமகன்
முந்துதன் படையொடு முனிந்து கீழ்த்திசை
யிந்திர னகர்புக விதனை நாடியே
வெந்துய ரமரர்கோன் விண்ணிற் போயினன்.

(இ-ள்.) அசுரராஜனாகிய சூரபன்மன் அந்தப்பெரிய ஈசானநகரத்தினின்று நீங்கி முதன்மையாகிய தனது சேனைகளுடன் கோபங்கொண்டு கீழத்திசையிலுள்ள இந்திரனது நகரத்தையடையவும், இதனையுணர்ந்து மிக்க துன்பத்தினையுடைய தேவேந்திரன் விண்ணுலகத்திற் சென்றனன்.—எ-று. (௪0)

போயதை நாடியப் புரத்தை முற்றவுங்
காயெரி கைக்கொளக் கடிதி னல்கியே
யாயிடை யனிகமோ டகன்று வெய்யசெந்
தீயுறு நகரிடைச் சேறன் மேயினன்.

(இ-ள்.) (இந்திரன்) சென்றதையுணர்ந்துஅவ்விந்திரநகரமுழுமையும் மிகுத்தெரிகின்ற அக்கினியானது பற்றியெரியும்படி விரைவாகக்கொளுத்திச் சேனைகளுடன் அவ்விடத்தினின்று நீங்கிக் கொடிய சிவந்த அக்கினிதேவன் வசிக்கின்ற நகரத்திற்குச்செல்லத்தொடங்கினன்.—எ-று. (௪௧)

சேறலு நாடியத் தீயின் பேரிறை
னீறகல் வெஞ்சின மெய்தி யாயிர
நூறெனுங் கோடியர் நொய்திற் சூழ்தர
மாறிகல் புரிந்திட வந்து நேர்ந்தனன்.

(இ-ள்.) அவ்வாறு செல்லுதலும் அதனையுணர்ந்து அக்கினிதேவன் முடிவில்லாத கொடுங்கோபமடைந்து இலக்ஷங் கோடி வீரர்கள் விரைவாகச் சூழ்ந்துவரப் பகைமையாகிய போர்செய்யும்படிவந்து எதிர்த்தனன்.—எ-று. (௪௨)

நேர்தலு மங்கித னீடு தானையுஞ்
சார்தரு மவுணர்தம் படையுந் தாமுறுப்
போர்தலை மயக்குறப் பொருத வெல்லையிற்
சூர்தரு கனல்படை தொலைந்து போயதே.

(இ-ள்.) அவ்வாறுவந்தெதிர்க்கவும் அக்கினிதேவனது பெரியசேனைகளும் வந்த அவுணர்சேனைகளும் ஒருவரோடொருவரெதிர்த்து போரானது இடமயங்கும்படி செய்தபொழுது அச்சத்தைத்தருகின்ற அக்கினிதேவனதுசேனை தோல்வியடைந்தது.—எ-று. (௪௩)

தன்படை யுடைதலுந் தழலின் பண்ணவன்
றுன்படை மனத்தனாய்த் தொல்லை யூழிநா
ளின்படை யுலகெலா மீறு செய்திடு
வன்படை பேருரு வல்லை தாங்கினன்.

(இ-ள்.) தனது சேனைகள் தோல்வியடையவும், அக்கினிதேவன் துன்பம் பொருந்திய மனத்தினையுடையவனாய், முன்பு ஊழிக்காலத்தில் இன்பமடைகின்ற உலகமனைத்தையும் அழிக்கின்றவலிமை பொருந்திய பெரிய உருவத்தை விரைவாகக் கொண்டனன்.—எ-று. (௪௪)

சிறந்திடு மவுணர்கோன் சேனை மாக்கடல்
வறந்திட விப்பகன் மாய்ப்பன் யானென
நிறைந்திடு மவுணமா நீத்த மெங்கணுஞ்
செறிந்தனன் வளைந்தனன் சிதைத்தன் மேயினன்.

(இ-ள்.) யான் இத்தினத்திலேயே சிறப்புப் பொருந்திய சூரபன்மனது பெரிய சேனாசமுத்திரத்தை வற்றும்படி யழிக்கின்றேனென்று நிறைந்து நிற்கின்ற அசுரர் சேனைகளாகிய பெரிய வெள்ளத்தில் எங்கும் நெருங்கி நின்று சூழ்ந்து அழிக்கத் தொடங்கினன்.—எ-று. (சரு)

கடல்கெழு சேனையைக் கலந்து பாகவன்
சடசட முதிரொலி தழங்கப் புக்குலா
யடலுறு மெல்லையி லதுகண் டாழிவாய்
விடமென வுருத்தனன் வீரன் றாரகன்.

(இ-ள்.) கடலைப்போல மிகுதியாக விளங்குகின்ற சேனைகளை அக்கினிதேவன் கலந்து சடசடவென்று பேரொலியுண்டாகப் புகுந்து கலக்கிக்கொல்லுகின்ற சமையத்தில் அதனை வீரனாகிய தாரகன்பார்த்துக் கடலிற்றோன்றிய விஷத்தைப்போலச் சீறினன்.—எ-று. (சசு)

உருத்திடு தாரக னொருதன் றேரொடு
மருத்தினும் விசையுற வந்து தானையை
யெரித்திடு மங்கியை யெதிர்ந்து செங்கையிற்
றரித்திடு கார்முகந் தன்னை வாங்கினன்.

(இ-ள்.) அவ்வாறு சீறிய தாரகாசுரன் தனது ஒப்பற்றதேருடனே வாயுவேகத்தினும் அதிவேகமாகவந்து சேனைகளை யெரித்தழிக்கின்ற அக்கினிதேவனை யெதிர்த்துத் தனது கையிற் பிடித்துள்ள வில்லை வளைத்தனன்.—எ-று. (சஎ)

வானவர் தமையுமிவ் வன்னி தன்னையு
மேனையர் தம்மையு முடிப்ப னின்றெனாத்
தேனிவ ரிதழியந் தேவன் மாப்படை
யானதை யெடுத்தன னருச்சித் தேத்தியே.

(இ-ள்.) யான் இப்பொழுது தேவர்களையும் இந்த அக்கினியையும் மற்றையர்களையும் அழிப்பேனென்று தேன்பொருந்திய கொன்றைமலர்மாலையை யணிந்த சிவபெருமானது பாசுபதாஸ்திரத்தைப் பூசனை செய்து துதித்தெடுத்தனன்.—எ-று.

எடுத்திடு மெல்லையி லெரிகண் டிங்கிது
தொடுத்திடி னுலகெலாந் தொலைக்கு மென்னையு
முடித்திடு நான்முகன் முதலி னோரையும்
படுத்திடு மின்றெனப் பையு ளெய்தினன்.

(இ-ள்.) (தாரகாசுரன்) அவ்வாறெடுத்த சமையத்தில் அதனை அக்கினிதேவன் பார்த்து இங்கே இதனைப் பிரயோகிப்பானாயின் அஃதிப் பொழுதே உலக மனைத்தையு மழிக்கும்; என்னையுங் கொன்றுவிடும்; பிரமன் முதலியவர்களையுங் கொல்லுமென்று துன்பமடைந்தனன்.—எ-று. (சகூ)

சுடுங்கனற் கடவுளுஞ் சுருக்கித் தன்னுரு
வொடுங்கின னுகுல முற்றுச் சிந்தையு
நடுங்கினன் றாரகன் முன்னர் நண்ணினன்
கடுங்கதி யதனொடுங் கரங்கள் கூப்பியே.

(இ-ள்.) கொடிய அக்கினிதேவனும் தனதுருவத்தைச் சுருக்கி யடங்கினன்; பின்னர் வருத்தமடைந்து மனமும் நடுங்கினவனாய் மிக்கவேகமாகக் கைகளைக் குவித்துக்கொண்டு தாரகாசுரனுக்கு முன்னே வந்தனன்.—எ-று. (௫௦)

தோற்றுவித் துலகெலாந் தொலைக்கு மெம்பிரான்
மாற்றரும் படைக்கல மற்றென் மேல்விடப்
போற்றினை யெடுத்தியெப் புவனத் துள்ளவ
ராற்றலு முயிர்களு மதன்மு னிற்குமோ.

(இ-ள்.) உலகனைத்தையுஞ் சிருஷ்டித்துப் பின் சங்கரிக்கின்ற எமது சிவபெருமானது நீக்குதற்கரிய பாசுபதாஸ்திரத்தை என்மீது விடும்படித் துதித்தெடுத்தனை; அப்பாசுபதாஸ்திரத்தின் முன்னே எவ்வுலகத்துள்ளவர்களது வலிமையும் உயிரும் நிற்குமோ? (நில்லாவாம்.)—எ-று. (௫௧)

கழிதரு சினங்கொளல் கடவுண் மாப்படை
விழுமிய தன்னதை விடுத்து ளாயெனி
னழிதரு முலகெலா மதுவு மன்றியே
பழிபெறு மன்னதோர் படையின் வேந்துமே.

(இ-ள்.) மிகுந்த கோபத்தைக்கொள்ளாதே; பாசுபதாஸ்திரம் சிறந்ததாகும்; அதனைப் பிரயோகிப்பையாயின் உலகமனைத்து மழியும்; அஸ்திரராஜனாகிய அப் பாசுபதாஸ்திரமும் பழிப்பினை யடையும்.—எ-று. (௫௨)

பொறுத்தியென் பிழையெனப் போற்றி நிற்றலுங்
கறுத்திடு மிடறுடைக் கடவுண் மாப்படை
செறுத்தவன் மீமிசைச் செல்ல விட்டிலன்
மறுத்தனன் சினத்தினை மகிழ்ச்சி யெய்தினன்.

(இ-ள்.) எனது குற்றத்தை மன்னிக்கக்கடவையென்று துதித்துநிற்கவும், (தாரகாசுரன்) நீலகண்டராகிய சிவபெருமானது பெரியபாசுபதாஸ்திரத்தைப் பகைவனாகிய அக்கினிதேவன்மேல் பிரயோகிக்கவில்லை; கோபத்தை யொழித்துச் சந்தோஷமடைந்தனன்.—எ-று. (௫௩)

எற்றிடு மெற்றிடு மிவனை வல்லியிற்
செற்றிடுஞ் செற்றிடுந் தீயன் சாலவுங்
குற்றிடுங் குற்றிடு மென்று கூறியே
சுற்றின ரவுணர்க டீயைச் சூழவே.

(இ-ள்.) அசுரர்கள் அக்கினிதேவனைச் சூழ்ந்துகொண்டு, இவனை அடியுங்கள் அடியுங்கள், விரைவில் கொல்லுங்கள் கொல்லுங்கள், இவன் மிகக்கொடியவன்: குத்துங்கள் குத்துங்களென்று கூறிச் சூழ்ந்துகொண்டார்கள்.—எ-று. (௫௪)

தானவர் யாரையும் விலக்கித் தாரக
னீநம தேவலி னிற்றி நின்னுயிர்
போனதை யுதவினம் போதி போதிநின்
மாநக ரிடையென வல்லை கூறினன்.

(இ-ள்.) தாரகாசுரன் அசுரர்களனைவரையும் விலக்கி (அக்கினிதேவனைப் பார்த்து) நீ நமது ஏவற்றொழிலில் நிற்கக்கடவை; உன் உயிர்போனதைக் கொடுத்தோம்; உனது பெரிய பட்டணத்திற் போகக்கடவை போகக்கடவை யென்று விரைந்து கூறினன்.—எ-று. (௫௫)

விடுத்தன னங்கியை விடுக்கு முன்னரே
யடுத்திடு தானவ ரவன்ற னூர்புகா
மடுத்திடு வளனெலாம் வாரி வாரிமீன்
படுத்திடு கொலைஞர்தம் பரிசின் மீண்டனர்.

(இ-ள்.) இவ்வாறு கூறி அக்கினிதேவனை யனுப்பினன்; அவ்வாறு அனுப்புதற்கு முன்னமே நெருங்கியிருந்த அசுரர்கள் அவ்வக்கினிதேவனது பட்டணத்துட் புகுந்து அங்குப் பொருந்திய செல்வங்களையெல்லாங் கொள்ளையடித்து கடலில் மீன்பிடிக்கின்ற பரதவர்களைப்போலத் திரும்பினார்கள்.—எ-று.

தொழில்களுக்குள் இரக்கமற்ற தாதலால், கொள்ளையடிப்பவர்களை மீன்பிடிப்பவர்களுக்கு உவமையாக்கி "மீன் படுத்திடு கொலைஞர்தம் பரிசின் மீண்டனர்" என்றார். (௫௬)

வேறு.

மீண்டன ரவுண ரங்கி வெள்கியே தன்னூர் புக்கா
னாண்டவ ணகன்று போனான் றாரக னவ்வா றெல்லாங்
காண்டலுஞ் சூர னென்போன் கலினமான் றேரைப் பாக
தூண்டுதி நடுவன் மேவுந் தொல்லைமா நகரத் தென்றான்.

(இ-ள்.) அசுரர்கள் திரும்பினார்கள்; அக்கினிதேவன் வெட்கமுற்றுத் தனது பட்டணத்தை யடைந்தனன்; தாரகாசுரன் அவ்விடத்தினின்று நீங்கிச் சென்றனன்; அவையனைத்தையுஞ் சூரபன்மன் பார்த்தவுடனே சாரதியே கடிவாளம்பூட்டிய குதிரைகள் கட்டப்பட்ட இரதத்தை இயமன் வசிக்கின்ற பழமையாகிய நகரத்திற்குத் தூண்டக்கடவை யென்று கூறினான்.—எ-று. (௫௭)

கடவுதி தேரை யென்னக் கைதொழு தைய நொய்தி
னடுதொழி லவன்பா லுய்ப்ப னன்னது காண்டி யென்னாப்
படர்தரும் வலவ ரோடும் பலிங்கனென் றுரைக்கு மேலோன்
சுடர்மலி கதிரு நாணத் துன்னெனத் தூண்டி யார்த்தான்.

(இ-ள்.) இரதத்தைச் செலுத்தக்கடவையென்று கூறவும், (தேர்ப்பாகன்) கைகூப்பிவணங்கி, ஐயனே! யான் விரைவாக இயமனது நகரத்திற்குத் தேரைச்செலுத்துவேன், அதனைப்பார்ப்பீராக வென்று தன்னுடன் வருகின்ற பாகர்களுடனே பலிங்கனென்னும் பெயரையுடைய முதற்பாகனானவன் ஒளிமிகுந்த சூரியனும் நாணும்படி விரைவாகத் தேரைத் தூண்டி யாரவாரித்தனன்.—எ-று. (௫அ)

ஆர்த்தன படருஞ் சேனை யதிர்ந்தன முரச மெங்கும்
போர்த்தன கரிதேர் வாசி புகுந்தன பூழி வேலை
தூர்த்தன துவசம் விண்ணைத் தொடர்ந்தன தூசி யென்னுந்
தார்த்தொகை முன்ன மேகித் தண்டனூ ரடைந்த வன்றே.

(இ-ள்.) செல்லுகின்ற சேனைகள் ஆரவாரித்தன; செயபேரிகைகள் சப்தித்தன; எவ்விடத்திலும் யானையும் தேரும் குதிரையும் நெருங்கின; புகுந்தனவாகிய புழுதிகள் கடலையடைந்தன; கொடிகள் ஆகாயத்தையளாவின; தூசியென்னும்படை வகுப்பு முன்னேசென்று இயமனது நகரத்தை யடைந்தது.—எ-று. (௫௯)

அடைதலு நடுவன் றன்பா லாங்கொர்தூ தெய்தி நந்தங்
கடிநகர் கலந்த வந்தக் காசிப முனிவன் மைந்தர்
கொடியவெஞ் சேனை யென்னக் கூற்றெனுங் கடவுள் கேளா
விடியுறு மரவ மென்ன வேங்கின னிரங்கு கின்றான்,

(இ-ள்.) அவ்வாறு செல்லுதலும், இயமனிடத்தில் ஒரு தூதுவன்சென்று (மன்னவனே!) அந்தக்காசிபமுனிவர் புதல்வர்களாகிய சூராதியர்களது கொடிய சேனைகள் நமது காவலமைந்த நகரத்தையடைந்தனவென்று கூறுதலும், அதனைக் கேட்ட யமதருமன் இடியோசையைக்கேட்ட பாம்பைப்போல ஏங்கி வருந்துவானாயினன்.—எ-று. (சுo)

வேறு.

முன்னுறு தனதனு முளரித் தேவனு
மன்னனை யெதிர்கொளா வழுத்திப்போயினு
ரன்னது புரிவதே யழகி தாமென
வுன்னின னடுவனு முணர்வி னும்பரான்

(இ-ள்.) நினைக்கத்தக்க குபேரனும் அக்கினிதேவனும் சூரபன்மனையெதிர் கொண்டு துதித்துச்சென்றார்கள்; (ஆதலால்) நாமும் அவ்வாறு செய்வதேயழகென்று அறிவிற் சிறந்த யமதருமனும் நினைத்தனன்.—எ-று. (சுக)

தேற்றமொ டெழுந்துதன் மகிடஞ் சேர்ந்தன
னேற்றமில் படைஞரு மீண்ட வேகியே
கூற்றுவ னிமைப்பினிற் குறுகிச் சூரனைப்
போற்றினன் றொழுதனன் புகலு மாசியான்.

(இ-ள்.) துணிவுகொண்டெழுந்து தனது எருமைக்கடாவிலேறிக்கொண்டு கொஞ்சஞ் சேனைகளுடன்சென்று இயமனானவன் இமைப்பொழுதில் சூரபன்மனை யடைந்து சொல்லுகின்ற ஆசிமொழிகளால் துதித்து வணங்கினான்.—எ-று. (சுஉ)

திருத்தகு மறலிதன் செய்கை நோக்கியே
யருத்தியின் மகிழ்வுறு மவுண னம்பணி
பரித்தனை யீண்டுநின் பரிச னத்தொடு
மிருத்தியென் றனையனை யேவிப் போயினான்.

(இ-ள்.) சிறப்புமிக்க இயமனுடைய செய்கையைப்பார்த்து அன்புடன் மகிழ்ச்சியடைந்த சூரபன்மன் நீ நமது கட்டளையை மேற்கொண்டு இங்கே உனது பரிசனங்களுடன் வாழக்கடவையென்று நிறுத்தி அவ்வியமனைப் போகச்செய்து சென்றனன்.—எ-று. (சுங)

இறுதியை யியற்றுவா னிருக்கை யென்பதோர்
மறிகட லதனிடை வளங்கொள் வாரியைத்
திறலுறு மவுணர்தஞ் சேனை சென்றரோ
முறைமுறை கவர்ந்தன முகிலின் றன்மைபோல்.

(இ-ள்.) உயிர்களை யழிவுசெய்கின்ற இயமனது நகரமென்றுகூறுங் கடலினுள்ள வளப்பமிக்க செல்வமாகிய நீரினை மேகத்தின் தன்மையைப்போல வலிமைமிக்க அசுரர்சேனைகள் சென்று வரிசைவரிசையாகக் கொள்ளையடித்துச் சென்றன.

இயமனது நகரமேகடல். அந்நகரத்திலுள்ள நிறைந்த செல்வமே அக்கடலின் நீர். அசுரசேனைகளே மேகங்கள். கடல்நீரை மேகங்கள் தாங்களே வலிந்தருந்துவதைப்போல அசுரர்களும் அந்நகரவாசிகளின் சம்மதமின்றிக் கொள்ளை யடித்தார்கள் என்பதையுணர்த்த, "முறைமுறைகவர்ந்தன முகிலின் றன்மைபோல்" என்றார்.

கூற்றுவன் பெருவலி குறைந்த வண்ணமும்
போற்றினன் போயதும் புந்தி யுன்னியே

யாற்றவு மகிழ்வுறீஇ யனிக மோடுதென்
மேற்றிசை நிருதிமேல் விரைவி னேகினன்.

(இ-ள்.) இயமன் தனது வலிமையையிழந்த தன்மையையும், தன்னைவணங்கிச்சென்றமையையும் மனதில் நினைத்து, சூரபன்மன் மிகவும் மகிழ்ச்சியடைந்து தனதுசேனைகளுடன் தென்மேற்றிசையிலுள்ள நிருதியின் நகரத்திற்கு விரைவாகச் சென்றனன்.—எ-று. (சுகு)

நிருதியு மிஃதெலா நேடி யாமிவர்ப்
பொருவது மரியதாற் போரி யற்றினும்
வருதிற லில்லையால் வசைய தேயெனக்
கருதின னவரொடு கலத்தற் குன்னினன்.

(இ-ள்.) இவ்வரலாறனைத்தையும் நிருதியுணர்ந்து நாம் இவர்களுடன்போர் செய்தலும் அருமையாகும்; போர்செய்தாலும் வெற்றிபெறுவதுமில்லை; அவ்வாறு செய்யினும் வசையேயாகுமென்று நினைத்து அவ்வசுரர்களுடன் சினேகித்துக்கொள்ளும்பொருட்டு நினைத்தனன்.—எ-று. (சுசு)

உன்னினன் றனையோ டொருங்கு மேவியே
மன்னவ னெதிர்புகா வழுத்தி மற்றவன்
றன்னடி வணங்கியுன் றமரி யானெனப்
பன்னினன் றூர்கன் பாங்க ரேகினன்.

(இ-ள்.) இவ்வாறுநினைத்துச் சேனைகளுடன்சென்று சூரபன்மனெதிரிற்போய் அவனதுபாதங்களைவணங்கி யான்உன்பந்துவென்று கூறிப்பின்பு தாரகாசுரனருகிற் சென்றனன்.—எ-று.

நிருதி முன்னே சூரனைச்சென்று கண்டு சமாதானஞ்செய்து பின்பு தாரகாசுரன் தண்டநாதனைச் செல்லுதலாலும், சூரன் நிற்பதற்கும் தாரகாசுரன்நிற்குமிடத்திற்குந் தூரமாயிருப்பதாலும் ஒருவேளை அவன் இங்குச்சமாதானஞ்செய்துகொண்ட சங்கதியையுணராமல் ஊரைக்கொள்ளையடிப்பிக்கப் போகின்றானென்று கருதி விரைந்து அவனிடஞ்சென்று சமாதானஞ் செய்துகொண்டானென்பதற்குப் பதில்'ஏகினன்' என்று சுருங்கக்கூறினர். (சுஎ)

அருகுற வருதலு மவுணர் கோமக
னிருதியி னகரினை நீங்கி யேகலும்
வருணனு மருத்துவும் வாரி தன்னினு
மிருள்செறி யுலகினு மிமைப்பிற் போயினர்.

(இ-ள்.) தன்னருகில் வந்தவுடனே சூரபன்மன் நிருதியின்பட்டணத்தை நீங்கிச்செல்லவும், வருணனும் வாயுவும், கடலிலும் இருள்நெருங்கிய உலகத்திலும் விரைவாக (ஒளித்து) ச்சென்றார்கள்.—எ-று.

"அருகுறவருதலும்" என்பதனை தனதுபந்துவாகவந்துவிட்டமையால் நிருதியினூரைவிட்டுச் சென்றானென்னினுமாம்.

வருணன் நீரிலும், வாயு இருளுலகிலுஞ் சென்றொளித்தன ரென்க. (சுஅ)

போதலு மவரவர் புரத்தைச் சூறைகொண்
டேதம் தியற்றுவித் தெழுவ கைத்தெனும்
பாதல வுலகினிற் படர்ந்து தானவ
ராதியர் போற்றிட வருள்செய் தேகினன்.

(இ-ள்.) அவ்வாறு மறைந்துசெல்லவும் அவரவர்களுடைய பட்டணத்தைக் கொள்ளையடித்துத் துன்பஞ்செய்வித்து ஏழுவகையாகிய பாதலலோகங்களிற்சென்று அங்குள்ள அசுரர்முதலியவர்கள் தன்னைத்துதிக்க, அவர்களுக்குக் கருணைசெய்து சென்றனன்.—எ-று.

பாதாளத்தி லசுரர்கள் வசிப்பதாக வசனமிருப்பதையுணர்த்தத் 'தானவரா தியர்போற்றிட வருள்செய்தேகினன்' என்றார். (௬௯)

உற்றன னுகர்கோ னுலகி னன்னவன்
சேற்றமொ டேசெருச் செய்யத் தானையால்
வெற்றிகொண் டேயவன் வியந்து போற்றிட
மற்றவ ணிருக்கையோர் வைகல் வைகினன்.

(இ-ள்.) சூரபன்மன் ஆதிசேடனுலகத்திற்குச் சென்றனன்; அதனையுணர்ந்த ஆதிசேடன் கோபத்துடன் எதிர்த்துப் போர்செய்தலும் தனதுசேனைகளால் வெற்றிபெற்று அவ்வாதிசேடன் தன்னைப்புகழ்ந்து துதிக்கஅவனதுநகரத்தில் ஒருதினம் வசித்திருந்தனன்.—எ-று. (எ௦)

அத்தலை யுரகர்கோ னமரர் தந்திட
வைத்திடு மமுதினை வலிதின் வாங்கியே
மெய்த்தகு தம்பிய ரோடு மேன்மையாற்
றுய்த்தன னகன்றனன் சூர பன்மனே.

(இ-ள்.) அவ்விடத்தில் ஆதிசேடன் முன்பு தேவர்கள் கொடுக்கவைத்துக் கொண்டிருந்த அமிர்தத்தைப் பலாத்காரமாகவாங்கி மெய்ம்மையாகிய தம்பிமார்களுடன் சூரபன்மன் மேன்மையோடு புசித்துச்சென்றனன்.—எ-று.

ஆதிசேடனிடத்தில் தேவர்களா லடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட வமுதத்தை அச்சேடனுல் பின்னொருவருக்குக் கொடுக்க முறைமையின்மையால் இது என்னதல்லவென்று கூறியும் வலிந்தெடுத்தருந்தினனென்பதனை யுணர்த்த "அமரர் தந்திட-வைத்திடு மமுதினை வலிதின் வாங்கியே-துய்த்தனன்" என்றார். (எக)

ஏனைய பிலந்தொறு மேகி யவ்வயின்
மேனதோர் விருந்தினை வியப்பி னுடியே
மானவர் படையொடும் வல்லை மீண்டனன்
போனதோர் நிலைதொறும் புகழை நாட்டினன்.

(இ-ள்.) மற்றைப்பாதலங்கடோறுஞ்சென்று ஆங்கங்குள்ள சிறந்த புதுமைகளை ஆச்சரியமாகப்பார்த்து வீரர்களாகிய சேனைகளுடன் சென்ற சென்றவிடங்கடோறும் புகழைநாட்டினவனுய் விரைவாகத் திரும்பிவந்தனன்.—எ-று.

புகழைநாட்டுதல்-தான்சென்ற விடங்கள்தோறுமுள்ள பூமிகளைத் தன்வசமாக்கித் தன்னரசாட்சிக்குட்படுத்துதல். (எஉ)

வேறு.

பூவுல கிடையே போந்து புணரியொன் றகன்று மற்றைத்
தீவினை யொருவிச் சூரன் சேனைமா நீத்தஞ் சூழ
மாவொடு புவனி போற்ற வரியரா வணையி னேமிக்
காவலன் றுயில்கூர் பாலின் கடலிடைக் கடிது புக்கான்.

(இ-ள்.) நிலவுலகத்திற்குவந்து ஒருகடலைக்கடந்து அந்தக்கடலி னப்புறத்திலுள்ள தீபத்தைக்கடந்து கடல்போன்ற சேனைகள் தன்னைச்சூழ்ந்துவரும்படி சூர

பன்மன் திருமகள் நிலமகளென்னு மிருவர்களுந்துதிக்க, புள்ளிகளையுடைய சேஷ சயனத்தில் சக்கரத்தினையுடைய திருமால் அறிதுயில்கொள்ளுந் திருப்பாற்கடலி னடுவில் விரைவாகச்சென்றனன்.—எ-று.

இந்த உப்புக்கடலின் அக்கரையும் பாற்கடலி னிக்கரையுமாக உள்ளது சாகத்தீவு. (௭௩)

புக்கதோர் வேலை யன்னன் போர்ப்படை யவுணர் யாரு
மைக்கடன் மேனி மாயோன் மன்னின னீண்டை யென்னு
வக்கட லதனைத் தொன்னு ளமரர்கள் கடைந்த தேபோன்
மிக்கதோ ரார்ப்பி னேடும் விரைவுடன் கலக்க லுற்றார்.

(இ-ள்.) அவ்வாறு சென்றபொழுது அவ்வசுரனது போர்ச்சேனைகளாகிய அசுரர்களனைவரும் இவ்விடத்தில் கருங்கடல்போலுந் தேகத்தினையுடைய திருமால் வசிக்கின்றானென்று அந்தத்திருப்பாற்கடலைமுன்னாளில் தேவர்கள் கடைந்ததன்மை யைப்போல மிக்க ஆரவாரத்துடன் விரைவாகக் கலக்கத்தொடங்கினார்கள்.—எ-று.

ஆர்த்திடு முழக்கங் கேளா வம்புயத் திருவும் பாரும்
வேர்த்துடல் பதைப்ப வஞ்சி வெருக்கொடு கரிய மேனித்
தீர்த்தன தகலத் தூடு சேர்ந்தனர் தழுவ வன்னோன்
பார்த்தன னஞ்ச லென்று பகர்ந்தனன் றுயிலை நீங்கி.

(இ-ள்.) அசுரர்கள் ஆரவாரித்த பேரோசையைக்கேட்டு கமலாசனத்தி லுள்ள ஸ்ரீதேவியும் பூதேவியும் வியர்த்துத் தேகம்நடுங்க அஞ்சிப்பயந்து கருநிறத்தினை யுடைய திருமாலினது மார்புடன்சேர்ந்து தழுவிக்கொள்ளவும் அதனைத் திருமால் பார்த்து நித்திரைதெளிந்து நீங்கள் அஞ்சாதீர்களென்று கூறினார்.—எ-று. (௭௫)

இம்மெனப் பணியின் மீது மெழுந்தன னிறுதி செய்யும்
வெம்மைகொள் கடவுட் டீயும் வெருவர வுருத்துச் சீறி
நம்மையும் பொரவுந் தீயோர் நண்ணினர் போலு மன்னார்
தம்வலி காண்டு மென்னத் தடக்கைகள் புடைத்து நக்கான்.

(இ-ள்.) திருமால் விரைவாகச் சர்ப்பசயனத்தினின்று மெழுந்து உலகத் தை யழிக்கின்ற வெப்பம்பொருந்திய ஊழித்தீயும் அஞ்சும்படிக் கோபித்துச் சீறிக் கொடியவர்களாகிய அசுரர்கள் நம்மிடத்தும் போர்செய்யும்பொருட்டு அடைந்தார் கள்போலும், அவர்களது வலிமையைப்பார்ப்போமென்று பெரிய கைகளைப்புடைத் துச்சிரித்தனர்.—எ-று.

திருமா லனேகமசுரர்களைக்கொன்றவராதலால் இவர்களுமவர்களைப்போன் றவர்களாகத்தானே இருப்பார்களென்று கருதிஅலக்ஷியமாக நினைத்தாரென்பார் "நம் மையும் பொரவும்" என்று உம்மைகொடுத்துக்கூறினார். உம்மை உயர்வுசிறப்பும்மை. கால்மாத்திரைப்பொழுதி லெழுந்தானென்பார் "இம்மென" என்றார். (௭௬)

சிந்தையி னுன்னு முன்னந் திறன்மிகு முவணர் கோமான்
வந்தன னவன்பொற் றோண்மேன் மடங்கலே றென்னப் புக்குச்
சந்திர னனைய சங்கஞ் சக்கரங் கதைவாள் சாப
மைந்தெனும் படையு மேந்தி யவுணர்தம் படைமுற் சென்றான்.

(இ-ள்.) திருமால் மனத்தில் நினைப்பதற்குமுன்னே வலிமைமிக்க கருடன் வந்தனன்; அக்கருடனது அழகியதோள்களின்மேல் ஆண்சிங்கம்போலப்புகுந்தேறிச் சந்திரன்போன்ற வெள்ளிய சங்கு-சக்கரம்-கதை-வாள்-வில் என்னும் பஞ்சாயுதங்க ளையுந் தரித்து அசுரர்சேனைகளுக்கு முன்னேசென்றனர்.—எ-று.

கருடன் திருமாலைப்போரின் மூதுகிடச்செய்தவனென்பதை யுணர்த்தத் "திறன்மிகு முவணர் கோமான்" என்றனர். உவணர்கோமான் கருடர்களுக் கரசன். கருடர் இறகுடையோர். (எஎ)

கோட்டினன் சார்ங்க மென்னுங் குனிசிலை யினைநா ணோதை
காட்டின னவுண ருள்ளங் கலக்கினன் கொண்ட செற்றம்
விட்டினன் றானை யாவும் விலக்கினன் பகழி மேன்மேற்
பூட்டினன் சோனைக் கொண்மூ வாமெனப் பொழித லுற்றான்.

(இ-ள்) திருமால் சார்ங்கமென்னும் வளைந்தவில்லை வளைத்து நாணோசை காட்டி அசுரர்களது மனங்கலங்கச்செய்து மேலு மேலும் பாணங்களைப்பூட்டி மேகத்தைப்போலப் பிரயோகிக்கத் தொடங்கினவராய் அசுரர்சேனைகளனைத்தையும் விலக்கித்தாங்கொண்ட கோபத்தைத் தணித்தனர்.—எ-று. (எஅ)

பொழிந்திடு கின்ற காலைப் போர்கெழு மவுணர் தானை
யழிந்தன தேரு மாவு மாடலங் கரிக டாமு
மொழிந்தன விறலும் போரி னூக்கமும் படையு மெல்லாங்
கழிந்தன சூறை யுற்ற காரென லாய வன்றே.

(இ-ள்.) திருமால் அவ்வாறு பாணங்களைப் பிரயோகிக்கின்ற சமயத்தில் போரில் மிக்க அவுணர்களது சேனைகள் அழிந்தன; தேர்களும் குதிரைகளும் வெற்றிபொருந்திய அழகிய யானைகளும் அழிந்தன; வலிமையும் போரின் முயற்சியும் ஆயுதங்களுமாகிய வனைத்து மொழிந்தன; அவை சூறைக்காற்றில கப்பட்டமேகங்களைப் போலச் சிதறின.—எ-று. (எகூ)

சூழ்ந்திடு மவுணர் சென்னி துணிந்தன தோளுந் தாளும்
வீழ்ந்தன கரங்கள் சிந்தி விரவின குருதி நீத்த
மாழ்ந்திடு புணரி யெல்லா மாயின வவனி தானுந்
தாழ்ந்தன பிணத்தின் குன்றந் தகைந்தன தபனன் றேரை.

(இ-ள்.) சூழ்ந்துள்ள அசுரர்களது தலைகள் வெட்டுண்டன; தோள்களும் கால்களும் வீழ்ந்தன; கைகள்சிந்தி எங்குஞ்சிதறின; உதிரவெள்ளம் ஆழமாகிய கடல்முழுவதுங் கலந்தன; பூமிதாழ்ந்தன; சூரியனது இரதத்தைப் பிணமலைகள் தடுத்தன.—எ-று. (அ0)

ஒடிந்தன விரத மாழி யுருண்டன கவனப் பாய்மா
மடிந்தன களிறு நொந்து மாண்டன வயவர் பல்லோர்
முடிந்தனர் குருதி நீத்த மூடின வதனுண் மூழ்கிப்
படிந்தன வலகை யீட்டம் பாரிடம் பரந்த வன்றே.

(இ-ள்.) இரதங்களொடிந்தன; சக்கரங்களுருண்டன; வேகத்தினையுடைய குதிரைகளிறந்தன; யானைகள் வருந்தி யிறந்தன; பலவீரர்கள் இறந்தார்கள்; உதிரவெள்ளம் மூடிக்கொண்டன; அவ்வுதிரவெள்ளத்தில் பேய்க்கூட்டங்கள் மூழ்கித் தோய்ந்தன; பூதக்கூட்டங்கள் எங்கும் பரவின.—எ-று. (அக)

சுடர்கெழு நேமி யண்ண றுயிலுறு பாலின் வேலை
யிடையொரு சிறிது மின்றி யெங்கணு மெருவை யாகி
யடைவது கடவு ளாடு மாரழ லதனை யுண்ணக்
கடையுகம் விரவு கின்ற காட்சியைப் போன்ற தம்மா.

(இ-ள்.) ஒளிவிளங்குகின்ற சக்கராயுதத்தை யேந்திய திருமால் நித்திரை செய்கின்ற திருப்பாற்கடலில் சிறிதுமிடமில்லாமல் எவ்விடத்திலும் உதிரமயமாகிச் செல்லுதல் (எதுபோலுமெனின்) சிவபெருமான் நடித்தருளுகின்ற பிரளயாக்கினி யானது அப்பாற்கடலையுண்ணும்படி யுகாந்தகாலத்தில் பரவிவருகின்ற காட்சியை யொத்திருந்தது.—எ-று. (அஉ)

விண்ணுலாம் படிவ மாயோன் மேதகு முவணத் தோடு
மண்ணுலாங் கடலா மென்ன வவுணரை வளைந்து சுற்றி
யெண்ணிலா வுருவங் காட்டி யாவரும் போகா வண்ண
மண்ணல்வாம் பகழி சிந்தி யமர்செய்தா னமர ரார்ப்ப.

(இ-ள்.) மேகம்போன்ற வடிவத்தினையுடைய திருமால் மேன்மைபொருந் திய கருடனோடு உலகத்தைச் சூழ்ந்துகொண்ட கடலைப்போல அசுரர்களைச்சூழ்ந்து வளைந்து தேவர்கள் ஆரவாரஞ்செய்ய, அளவற்ற மாயரூபங்களைக்காட்டி யாவர்களுந் தவறுதபடி பெருமை பொருந்திய வேகமாகிய பாணத்தைப்பிரயோகித்துப் போர் செய்தனர்.—எ-று. (அங)

அடுசமர் புரியு மெல்லை யாங்கவை யுருத்து நோக்கி
யுடைவதோ ரனிகந் தன்னை யொன்றுநீ ரஞ்ச லென்னு
வடவரை யனைய வாற்றன் மாபெருந் தனுவொன் றேந்தி
யிடியுழற் கலிமான் றேர்மேற் றூரக னிமைப்பின் வந்தான்.

(இ-ள்.) (திருமால்) இவ்வாறு கொலைத்தொழிலையுடைய போர் செய்யும் பொழுது அப்போரினைத் தாரகாசுரன் பார்த்து கோபித்துப் தோற்றோடுகின்ற தனது சேனைகளைக்கண்டு நீங்கள் சிறிதுமஞ்சாதீர்களென்று மேருமலைபோன்ற வலிமையி னையுடைய மிகப்பெரிய ஒருவில்லைப்பிடித்துக்கொண்டு இடிபோற் கனைக்கின்ற குதி ரைகள்பூட்டிய இரதத்தின்மேலேறி விரைவாகவந்தனன்.—எ-று. (அச)

வானில மளவு செய்த மலர்ப்பதத் தண்ணன் முன்னந்
தானெதிர் புகுந்து வெய்யோன் றன்பெருந் தனுவை வாங்கி
மேனகு சரங்கள் கண்ணன் மிசையுற வேலை மீதிற்
சோனைவிண் பொழிவ தென்னத் துண்ணெனத் தூவி யார்த்தான்.

(இ-ள்.) விண்ணுலகத்தையுமண்ணுலகத்தையுமளந்த தாமரைமலர்போன்ற பாதங்களையுடைய திருமாலுக்குமுன்னே தான் எதிரிற்சென்று தனதுபெரிய வில்லை வளைத்து மேலாகவிளங்குகின்ற பாணங்களை அத்திருமாலின்மேல் தாக்கும்படிக் கருங் கடலின்மேல் சோனைமேகமானது மழைபொழிவதைப்போல விரைவாகப் பிரயோ கித்து ஆரவாரித்தனன்.—எ-று.

அண்ணல்-(பிறரா) லடையப்படுந் தன்மையினையுடையவன். அண்ணுதல் அடைதல். (அரு)

ஆர்த்திடு மளவை தன்னி லச்சுத னயில்வே லென்னக்
கூர்த்திடு முலப்பில் வாளி கொடியதா ரகன்றன் மேனி
தூர்த்தனன் றேரும் பாகுந் தொலைத்தலுஞ் சோர்வி லாதான்
பேர்த்தொரு தடந்தே ருற்றுப் பெருஞ்சிலை வாங்கி னான்.

(இ-ள்.) தாரகாசுரன் அவ்வாறு ஆரவாரித்தபொழுது திருமாலானவர் கூரி யஅளவற்றபாணங்களைக் கொடியவனுகிய தாரகாசுரனது தேகத்தில் தாக்கும்படிப் பிரயோகித்து அவனது இரதத்தையும் பாகனையுமழித்தனர். உடனே சோர்வற்றதார கன் பின்னுமொரு பெரிய இரதத்திலேறிப் பெரியவில்லை வளைத்தனன்.—எ-று. ()

உற்றிடு மவுணன் மான்மே லொராயிரம் பகழி யோச்சி
யற்றமில் கருடன் மீது மாயிரம் விசிக முய்ப்ப
மற்றவை யவன்பாற் றீய மாசுணம் பலவுந் தங்கள்
பற்றலன் றன்னை வவ்வும் பரிசெனச் செறிந்த வன்றே.

(இ-ள்.) தேரிலேறிய தாரகன் திருமாலின்மீது ஆயிரம்பாணங்களைப் பிரயோகித்துக் கெடாத கருடன்மேலும் ஆயிரம்பாணங்களைப் பிரயோகித்தலும், அப்பாணங்கள் அக்கருடனிடத்துப் பலசர்ப்பங்கள் தங்கள் பகைவனைக் கௌவிக் கொல்லவருந்தன்மையைப்போல வந்து நெருங்கின.—எ-று. (அஎ)

ஆயிடை யுவணர் கோமா னலக்கணுற் றதனை நோக்கி
மாயவ னுலப்பி லாத வடிவினை யெய்தி யந்தத்
தீயவற் சூழ்ந்து வெம்போர் செய்துழி யவனுந் தங்க
டாயருண் மனுவை யுன்னித் தானுமந் நிலைய னானான்.

(இ-ள்.) அப்பொழுது கருடராஜன் வருந்திய தன்மையைத் திருமால் பார்த்து அளவற்ற வடிவங்களைக்கொண்டு கொடிய போர்செய்யும்பொழுது, அத்தாரகனும் தங்கள் தாயாகிய மாயையுபதேசித்த மந்திரத்தைத் தியானித்துத் தானும் அவ்வாறே பலவடிவங்களைக் கொண்டனன்.—எ-று. (அஅ)

தாரக வசுரன் றானுந் தணப்பில்பல் லுருவங் கொள்ளா
வீரிரு வைகல் காறு மிந்திரை கேள்வ னோடு
பேரமர் புரிந்த வெல்லைப் பிதாமக னிதனை நோக்கி
யாரிவ னெதிர்நிற் பாரொன் றதிசய நீர னானான்.

(இ-ள்.) தாரகாசுரனும் கெடாத பலவடிவங்களையெடுத்து திருமகள் நாயகனாகிய திருமாலுடன் நான்குநாள்வரையிலும் பெரும்போர் புரிந்தபொழுது இதனைப் பிரமதேவன்பார்த்து இவனுக்கெதிரில் யாவரெதிர்த்து நின்று போர்செய்வார்களென்று ஆச்சரியமடைந்தனன்.—எ-று. (அகூ)

எல்லையங் கதனின் மாயோ னெறுழ்வலி யவுண னேறுஞ்
சில்லியந் தேரு மாவுந் திறன்மிகு வலவன் றானும்
வில்லொடு துணிந்து வீழ விசிகமோர் கோடி யுய்த்தா
னெல்லையி னதனை நாடி யும்பர்கோ னுவகை பூத்தான்.

(இ-ள்.) அப்பொழுது திருமால் மிக்க வலிமையினையுடைய தாரகாசுரன் ஏறுகின்ற சக்கரமமைந்த அழகிய இரதமும் குதிரைகளும் வலிமைமிக்க பாகனும் வில்லுடனே துண்டித்து வீழும்படிக் கோடிபாணங்களை விரைவாகப் பிரயோகித்தனன்; அதனை இந்திரன்பார்த்து மகிழ்வடைந்தனன்.—எ-று.

உம்பர்கோன்-மேலுலகவரசன். உம்பர்-மேலிடம். (கூ0)

திண்டிறற் பரியுந் தேருஞ் சிலையொடு வலவன் றானுந்
துண்டம தடைத லோடுஞ் சூரனுக் கிளைய தோன்ற
றண்டமொன் றெடுத்துக் கீழ்போய்த் தலைபனித் தமர ரஞ்ச
வண்டமுங் குலுங்க வார்த்தங் கரிதனை யெதிர்ந்து சென்றான்.

(இ-ள்.) மிக்கவலிமையையுடைய குதிரைகளும் இரதமும் வில்லும் பாகனும் துண்டாகிவிழவும், சூரபன்மன் தம்பியாகிய தாரகன் ஒரு தண்டாயுதத்தையெடுத்துக்கொண்டு பூமியில் நடந்துசென்று தேவர்கள் தலைநடுங்கியஞ்சவும் அண்டங்குலுங்கவு மாரவாரித்துத் திருமாலை யெதிர்த்துச்சென்றனன்.—எ-று. (கூக)

எதிர்வரு மவுணன் றன்மே லெண்ணிலாப் பகழி மாரி
விதியினை யளித்த மாயன் வீசலு மவற்றை யெல்லாங்
கதைகொடு விலக்கிச் சிந்திக் கனன்றுமுற் கடிதிற் செல்ல
வதுதனை நோக்கி மாலு மாழியம் படையை யுய்த்தான்.

(இ-ள்.) எதிரில் வருகின்ற தாரகாசுரன்மீது அளவற்ற பாணவருஷங்களைப் பிரமனைப்பெற்ற திருமால் பிரயோகிக்கவும், அப்பாணங்களனைத்தையும் கதாயுதத்தால் விலக்கித்தள்ளிக் கோபித்து அத்திருமாலின் முன்னே விரைவாகச்செல்லுதலும், அதனைத் திருமால்பார்த்து தமது சக்கராயுதத்தைப் பிரயோகித்தனர்.—எ-று.

மாயன்-மாயையினையுடையவன். (கூஉ)

ஓரிமை யொடுங்கு முன்ன ருலகெலாந் தொலைக்குந் தன்மைப்
போரயி னேமி தானும் புராரிதன் வரத்தாற் சென்று
தாரக வசுரன் கண்டந் தன்னைவந் தணுகிச் செம்பொ
ஞரம தாயிற் றம்மா தவத்தினு மாக்க முண்டோ.

(இ-ள்.) ஒரு இமைப்பொழுதிற்குள்ளே உலகமனைத்தையு மழிக்குந்தன்மையினையுடைய போர்செய்கின்ற கூரிய சக்கரமும் சிவபெருமானது வரத்தினால் சென்று தாரகாசுரனது கழுத்தையடைந்து செம்பொன் மாலைபோன்று விளங்கியது: தவத்தைப்பார்க்கினுஞ் சிறந்த செல்வமுண்டோ? (இல்லை).—எ-று.

அம்மா-ஆச்சரியக்குறிப்பாகிய வோரிடைச்சொல். (கூரு)

பணியுறு கடவு ளேமிப் படையுமாங் கவுணன் கண்டத்
தணியதா யிருத்த லோடு மரனருள் வரத்தை யுன்னித்
தணிவிலற் புதத்த ஞகித் தாரகன் வலிய னென்று
மணிகிளர் நேமி மாயோன் மற்றிது புகல லுற்றான்.

(இ-ள்.) தன் கட்டளையில் நிற்கின்ற சக்கராயுதமும் அங்குத் தாரகாசுரனுடைய கழுத்தில் ஆபரணமாகவிருக்கவும், சிவபெருமான்கொடுத்தருளிய வரத்தினைச் சிந்தித்து அடங்காத அற்புதமடைந்தவராய்த் தாரகாசுரன் மிக்க பராக்கிரமசாலியென்று கருதிக் கருநிறம் விளங்குந் திருமேனியையுடைய திருமால் இவ்வார்த்தையைக்கூறுகின்றார்.—எ-று. (கூச)

அயனொடு ததீசி யென்னு மருந்தவத் தோனும் வெம்போர்
முயலுறு மவுணர் யாரு மொழிந்திடி னுனக்கொப் பல்லார்
செயலுளா யின்றி யுண்டாற் சிறுவிதி மகத்தைச் செற்ற
வயமிகு கழற்கால் வீரன் மற்றுனக் கிணையா மென்றான்.

(இ-ள்.) பிரமனும் அரிய தவத்தினையுடைய ததீசிமுனிவனும் கொடிய போரை முயன்று செய்கின்ற அசுரர்களனைவரும் சொல்லுமிடத்தில் உனக்கொப்பாக மாட்டார்கள்; யுத்தச்செய்கையில் ஒரு உபமானமுளது; தக்ஷனது யாகத்தை யழித்த வெற்றிமிக்க வீரக்கழலை யணிந்த பாதங்களையுடைய வீரபத்திரர் உனக்குச் சமானமாவாரென்று கூறினர்.—எ-று.

சிறுவிதி - உபப்பிரமா. (கூரு)

வன்றிறற் கடவு ளாழி மணிப்பணி யாயிற் றென்றால்
வென்றியு முனதே யன்றோ வேறினிப் போரு முண்டோ
வுன்றிற மிதுவே யென்னி னுனக்குமுன் னவரா யங்க
ணின்றவர் பெருமை தன்னை யாவர்கொ னிகழ்த்தற் பாலார்.

(இ-ள்.) மிக்க வலியினையுடைய தெய்வத்தன்மை பொருந்திய சக்கராயுத மானது இரத்தினுபரணமாக வமைந்ததாயின் வெற்றியுமுன்னதல்லவோ? இனி வேறு போருமுளதோ? உனது தன்மை இவ்வாறுயின், உனக்குத் தமயன்மார்க ளாய் அங்கு நிற்கின்ற அசுரர்களது மேன்மையை யாவர் கூறவல்லவர்கள்.—எ-று. ()

சங்கரன் மகிழு மாற்றுற் றழன்மகம் பன்னு ளாற்றி
யுங்களின் வலிபெற் றுள்ளா ரவுணரி லொருவ ரில்லை
யிங்குமை வெல்வார் யாரோ யெமக்குநீர் தமரோ வென்னு
மங்கல மரபி னுசி வரம்பில புகன்று போனுன்.

(இ-ள்.) சிவபெருமான் மகிழ்வடையும் வண்ணம் அக்கினி சம்பந்தமாகிய யாகத்தை நெடுநாள்செய்து உங்களைப்போல வலிமை பெற்றுள்ளவர்கள் அசுரர்களில் ஒருவருமில்லை; ஆதலால் இங்கு உங்களை வெற்றிபெறத் தக்கவர்கள் யாவர்? எமக்கு நீங்கள் உறவினர்களென்று மங்கலமுறைப்படி அளவற்ற ஆசிமொழிகளை யுரைத்துச் சென்றனர்.—எ-று.

சங்கரன் - இன்பமளிப்போன். சம்-இன்பம்; கரன் - அளிப்பவன். இது வடமொழி. (கஎ)

பார்த்தன ரனைய தெல்லாம் பாயிருள் கான்ற மேனி
நீர்த்திரை யனைய செங்கை நிருதராம் புணரி யாயோ
ரார்த்தன ரமரர் யாரு மகன்றன ரஞ்சி யங்கம்
வேர்த்தனர் விளிவோ ரென்ன மெலிந்தனர் விழுமத் துள்ளார்.

(இ-ள்.) பரவிய இருளைக் கக்குகின்ற தேகத்தினையும் நீரலைபோன்ற கை யினையுமுடைய அசுரர்களாகிய கடல்போன்றவர்கள் அவைகளனைத்தையும் பார்த்து ஆரவாரித்தார்கள்; அதனைப்பார்த்த தேவர்களனைவரும் உடல்வியர்த்துத் துன்பமுற் றவர்களாய் இறந்தவர்களைப்போல வருந்திப் பயந்து போனுர்கள்.—எ-று. (கஅ)

மாதவ னகன்ற காலை மற்றுமோர் வையத் தேறித்
தாதவிழ் தொடையல் வாகைத் தாரகன் றம்மு னேராய்ப்
போதலு மவனு மீண்டு புகுந்தவா றுணர்ந்து புல்லி
யாதர மகிழ்ச்சி யெய்தி யனிகமோ டகன்று னப்பால்.

(இ-ள்.) திருமால் சென்றவுடனே, மகரந்தஞ்சிந்துகின்ற வெற்றிமாலையை யணிந்த தாரகாசுரன் வேறொரு இரதத்திலேறிக்கொண்டு தனது தமயனுகிய சூரப ன்மனுக்கெதிரில் போகவும் அவன் இத்தாரகன் திரும்பிவந்ததை யுணர்ந்து தழுவிக் கொண்டு பெருமகிழ்வடைந்து சேனைகளுடன் வேறிடஞ் சென்றனன்.—எ-று.(கக)

ஆழியங் கிரியின் காறு மகலிட வனைப்பு முற்றச்
சூழுற நாடிப் போந்து தொல்லிரு விசும்பி னேகித்
தாழுறு நிலையிற் செல்லுந் தபனனே முதலோர் யாரும்
வாழியென் றுசி கூற வானுயர் துறக்கம் புக்கான்.

(இ-ள்.) சக்கரவாளகிரி வரையிலுமுள்ள நிலவுலக முழுவதுஞ் சுற்றிப்பா ர்த்துவந்து, பழமையாகிய பெரிய ஆகாயத்திற் சென்று தாழ்வாகிய நிலையிற் செல் லுகின்ற சூரியன் முதலியவர்களனைவரும் வாழியென்று ஆசிமொழிகளைக் கூறும்படி மிகவுமுயர்ந்த சுவர்க்கலோகத்தை யடைந்தனன்.—எ-று. (௬00)

வே று.

இந்தவா றவுணர்கோன் றுறக்கத் தேகலு
முந்திய வொற்றரிற் சிலவ ரோடியே
வந்தனன் சூரனும் வலியன் றானென
வந்தர நாயக னறியக் கூறவே.

(இ-ள்.) இவ்வாறு சூரபன்மன் சுவர்க்கலோகத்தை யடையவும் பழய தூதுவர்களில் சிலர் ஓடிச்சென்று வலிமைமிக்க சூரபன்மன் வந்தனனென்று சுவர்க்காதிபனாகிய இந்திரன் அறியும்படிக் கூறவும்.—எ-று. (கoக)

அஞ்சின னுயிர்த்தன னலந்து தேம்பினன்
றுஞ்சின னேயென வுணர்வு சோர்ந்துளா
னெஞ்சலில் வன்மைய திகந்து தன்னுடை
நெஞ்சினி லினையன நினைத்தன் மேயினான்.

(இ-ள்.) (அவ்விந்திரன்) அச்சங்கொண்டனன்; பெருமூச்சுவிட்டனன்; கலங்கியழுதனன்; செத்தவனைப்போல மூர்ச்சித்தவனாய்க் கெடாத வலிமைகுறைந்து தனது மனத்தில் இவைகளை நினைக்கத்தொடங்கினான்.—எ-று.

அலந்து தேம்பினன் என்பதை அங்கலாய்த்து விம்மினன் எனினுமாம்.()

அவ்வயிற் போந்திடு மவுணன் றன்னெதிர்
செவ்விதிற் சென்றியான் செருவி னேர்வனே
லிவ்வுயிர்க் கிறுதியா மிருப்ப னேலிடர்ப்
பவ்வமுற் றிறந்திடாப் பழியின் மூழ்குவேன்.

(இ-ள்.) அவ்விடத்தில்வந்த சூரபன்மனுக்கெதிரில் முறைப்படி யான்சென்று போர்செய்வேனாயின் இவ்வுயிருக்கழிவுண்டாகும்; இறவாதிருப்பேனாயின் துன்பக்கடலில்சேர்ந்து கெடாதபழியில் மூழ்குவேன்.—எ-று.

அவ்வயிற்போந்திடும் என்பதை அங்கு வந்துகொண்டிருக்கிற என்றுங் கூறலாம். (கoரு)

புன்செய லாயிவட் புகுந்தி டுஞ்செய
லென்செய லால்வரு மியற்கை யல்லது
பின்செய லொன்றிலை பிறர்செய் கின்றதுந்
தன்செய லென்பராற் சார்பின் மேலையோர்.

(இ-ள்.) இழிதொழிலாக இவ்விடத்தில் இப்பொழுதுண்டாகிய இத்தொழிலெல்லாம் என்செய்கையினால் வந்ததேயன்றி வேறேயொரு செயலுமில்லை; பற்றற்ற பெரியோர்கள் பிறர்செய்கின்றதுந் தன்செயலென்பார்கள்.—எ-று. (கoச)

திருவுறு கின்றுழி மகிழ்ந்துந் தீர்வுழிப்
பருவர லெய்தியும் பாசந் தன்னிடை
யரிதுணர் கேள்விய ரழுங்கு வார்கொலோ
வருவது வருமது மறுக்க லாகுமோ.

(இ-ள்.) செல்வமுண்டானபோது மகிழ்ந்தும், அச்செல்வநீங்கினபோது துன்பமடைந்தும் இந்தப்பாச சம்பந்தத்தில் அருமையாக உணர்ந்த கல்விகேள்விகளையுடைய பெரியோர்கள் வருந்துவார்களோ? வரவேண்டியது வந்தேதீரும்; அதனைத்தடுக்கமுடியுமோ?—எ-று. (கoடு)

ஆதலி னமரிழைத் தாவி நீங்கலன்
பேதுறு கின்றிலன் பீழை யுற்றுளோ
ரோதரு மகிழ்ச்சியு முறுவ ராங்கது
தீதுசெ யவுணர்தந் திறத்துக் காண்பனால்.

(இ-ள்.) ஆதலால் போரைச்செய்து இறவேன்; வருந்தேன்; துன்பமுற்றவர்கள் (ஒருகாலத்து)சொல்லுதற்கரிய மகிழ்ச்சியையுமடைவார்கள்; அதனைக்கொடுந்தொழிலைச்செய்கின்ற அசுரர்களிடத்திற் கண்டேன்.—எ-று. (க0௬)

நாணொடு மொன்னலர் நகையுங் கொள்ளலன்
றாணமு றுறழ்புயச் சூர பன்மனைக்
காணுவ னென்னினுங் கறுவு சிந்தையா
னேணுறு தளையிடு மெனையென் றெண்ணினான்.

(இ-ள்.) நாணத்துடன் பகைவர்களது நகைப்பினையும் மேற்கொள்ளேன்; ஸ்தம்பம்போன்றபுயத்தினையுடைய சூரபன்மனைச்சென்று காண்பேனாயினும், அவன் கறுவுகின்ற மனமுடையனாதலால் என்னைப் பெரியவிலங்கில் போடுவான் என்று நினைத்தனன்.—எ-று. (க0எ)

இம்முறை வாசவ னெண்ணி யேயெழீஇக்
கொம்மென மனையுடன் குயிலு ருக்கொடே
விம்முறு பீழையன் விண்ணிற் போயினான்
றெம்முனை யவுணர்க டேடிக் காண்கிலார்.

(இ-ள்.) இவ்வாறு இந்திரன் நினைத்தெழுந்து விரைவாக இந்திராணியுடன் குயிலுருவங்கொண்டு விம்முகின்ற துன்பமுடையவனாய் ஆகாயத்திற் பறந்துசென்றனன்; (அப்படிச் சென்ற இந்திரனை) பகையினையுடைய போர்முகத்திலுள்ள அசுரர்கள் தேடிக் காணாதவர்களானார்கள்.—எ-று. (க0அ)

ஒன்னலர் நாடுவ துணர்ந்து வானவர்
மன்னவ னுக்கமு மாயும் போலுமா
லென்னினிச் செய்வதென் றிரக்க மெய்தியே
பொன்னக ரெங்கணும் பொலிவு மாய்ந்ததே.

(இ-ள்.) பகைவர்கள் தேடுவதையுணர்ந்து தேவராஜனாகிய இந்திரனது செல்வமும் அழியும்போலும்: இனி யாதுசெய்வதென்று வருந்தி அப்பொன்னுலகமுழுமையும் பொலிவுகெட்டது.—எ-று. (க0௯)

பிடித்தன ரமரரை யவுணர் பேதுற
வடித்தனர் குற்றின ரனையர் தானையாற்
றடித்திடுந் தோள்களைத் தமது கைகளா
லொடித்தன ராமென வொல்லை வீக்கினார்.

(இ-ள்.) அசுரர்கள் தேவர்களைப்பிடித்தார்கள்; நடுங்கும்படியடித்தார்கள்; குத்தினார்கள்; அத்தேவர்களது உத்தரீயத்தினால் அவர்களது பெரியதோள்களைத் தங்கள் கைகளால் ஒடித்தாற்போல நெருக்கிக்கட்டினார்கள்.—எ-று. (ககO)

தண்ணளி யாவுமின் றூய தானவர்
விண்ணவர் தங்களை விழுமஞ் செய்திடா
வண்ணலந் திருவுறு மரசன் முன்னுறத்
துண்ணென வுய்த்தலுந் தொழுது போற்றுவார்.

(இ-ள்.) குளிர்ந்தகிருபை சிறிதுமில்லாதவர்களாகிய அசுரர்கள் தேவர்களை வருத்தப்படுத்தி மிக்கசெல்வத்தினையுடைய சூரபன்மனெதிரில் விரைவாகக்கொண்டு வந்து நிறுத்தவும், அத்தேவர்கள் அவனைவணங்கித் துதிக்கின்றார்கள்.—எ-று. (கசுக)

அவுணரி லுதித்தனை யாற்று நோன்புறீஇச்
சிவனருள் பெற்றனை திசையி னோர்முத
லெவரையும் வென்றனை யென்னி னிங்கெமை
நவைபடச் செய்வதே நன்று போலுமால்.

(இ-ள்.) அசுரர்குலத்தில் தோன்றினை; செய்யவேண்டிய விரதங்களைச் செய்து சிவபெருமானது திருவருளைப் பெற்றாய்; திக்குப் பாலகர் முதலிய யாவரையும் வெற்றிபெற்றனை; ஆயின், இவ்விடத்தில் எங்களைத் துன்பமுறச்செய்வதே உனக்கு நன்மைபோலும்.—எ-று. (கசுஉ)

மறலியு மிருக்குமோ மற்றை மாதிரத்
திறைவரு மிமையவர் யாரு முய்வரோ
விறுதியின் றாகுமே யுலக மீங்கொரு
சிறிதுநீ வெஞ்சினஞ் சிந்தை செய்யினே.

(இ-ள்.) இவ்விடத்தில் கொஞ்சங்கோபத்தை நீ மனத்திற்கொள்வையாயின் இயமனும் உயிர்பெற்றிருப்பானோ? மற்றைய திக்குப்பாலகர்களும் தேவர்களனைவரும் பிழைப்பார்களோ? உலகமும் அழிந்துவிடுமே.—எ-று. (கசுங)

இற்றையிப் பகன்முத லென்று மெங்களுக்
குற்றதோர் கடவுணீ யோம்பும் வேந்துநீ
பற்றுள தமருநீ பலரும் யாமினி
மற்றுன தேவலே மரபிற் செய்துமால்.

(இ-ள்.) இன்று இந்நாள்முதல் என்றைக்கும் எங்களுக்குப்பொருந்திய தெய்வம் நீயே, எங்களை இரட்சிக்கின்ற அரசனும் நீயே, தொடர்பாயுள்ள சுற்றமும் நீயே, யாங்களனைவரும் இனி உனது ஏவற்றொழிலை முறைப்படிச் செய்கின்றோம். ()

வேறு.

என்றிவை புகன்று போற்று மிமையவர் தம்மை நோக்கி
நன்றுநுஞ் செய்கை யென்னா நகைசெய்து யாப்பு நீக்கி
மன்றநம் பணிமேல் கொண்டு வைகுதி ரினிநீ ரென்னா
வன்றவர் தம்மை விட்டா னழன்மகத் தாவி விட்டான்.

(இ-ள்.) என்று இவ்வாறு கூறித் துதிக்கின்ற தேவர்களை யாகத்தீயில் உயிரை விட்டவனாகிய சூரபன்மன் பார்த்து உங்களது செயல்கள் நன்றென்று நகைசெய்து கட்டினையவிழ்த்து இனி நீங்கள் நமது ஏவலை மேற்கொண்டு வாழுங்களென்று அப்பொழுது அவர்களை விடுத்தனன்.—எ-று. (கசுரு)

வாசவன் வளத்தை யெல்லா மவுணர்கள் வவ்விச் செல்லப்
பேசரு மகிழ்ச்சி கொண்டு பின்னவர் பாங்க ரேகக்
காசிப னளித்த மேன்மைக் காதல னனிகஞ் சூழ
வோசைகொண் மறைக ளார்க்கு முயர்மக லோகம் புக்கான்.

(இ-ள்.) இந்திரனது செல்வங்களனைத்தையும் அசுரர்கள் கொள்ளை யடித்துச் செல்லவும், சொல்லுதற்கரிய சந்தோஷத்துடன் தம்பிமார்கள் பக்கத்தில் வர

வும் காசிபர் புதல்வனாகிய மேன்மைபொருந்திய சூரபன்மன் சேனைகள் தன்னைச் சூழ்ந்துவரும்படி ஓசைபொருந்திய வேதங்கள் முழங்குகின்ற உயர்ந்த மகலோகத்திற்குச் சென்றனன்.—எ-று. (ககசு)

கற்றுணர் கேள்வி யான்மார்க் கண்டேய னாதி வானோ
ருற்றிடும் பதமாந் தொல்பே ருலகமே முதல மூன்று
மற்றவர் பரவ நீங்கி மலரயன் பதத்திற் போகத்
தெற்றென வதனைத் தேர்ந்து திசைமுகன் றுணுக்க முற்றான்.

(இ-ள்.) சூரபன்மன் நூல்களைக் கற்றுக் கேட்டுணர்ந்துள்ள மார்க்கண்டேயர் முதலிய பெரியோர்கள் வசிக்கின்ற பதவியாகிய மகலோகம் சனலோகம் தவலோகமென்று சொல்லப்பட்ட மூன்றுலகங்களிலும் வசிப்பவர்கள் துதிக்க அவ்வுலகங்களைவிட்டு நீங்கி பிரமலோகத்திற்குச் செல்லவும், பிரமன் அதனை விரைவாக வுணர்ந்து நடுக்கமடைந்தனன்.—எ-று. (ககஎ)

வேறு.

வசையி னோன்புடை வாலறி வுள்ளோ
ரிசைகொள் வேத மியம்பினர் சூழ
நசையி னீரொடு நான்முக வேதா
வசுரர் கோனைய டைந்தன னன்றே.

(இ-ள்.) பழிப்பில்லாத தவத்தினையுடைய மெய்ஞ்ஞானிகள் இசையமைந்த வேதங்களைச் சொல்லிக்கொண்டு சூழ்ந்துவரப் பிரமதேவன் விருப்பத்துடன் சூரபன்மனிடத்திற்கு வந்தனன்.

பிரமதேவனுக்குச் சூரபன்மனிடத்திற் சற்றும் விருப்பமில்லையாயினும், பலசாலியானவனிடத்துத் தனது வெறுப்பைக் காட்டினால் கெடுதி நேரிடுமென்று கருதி, சந்தோஷமுள்ளவனைப்போல நடித்துச் சென்றானென்பார் 'நசையி னீரொடு நான்முக வேதா' என்றார். (ககஅ)

ஆழி மால்கட லன்னதொர் சேனை
சூழ வேவரு சூரனை யெய்தி
வாழி வாழிய வைகலு மென்னக்
கேழி லாசி கிளத்திய பின்னர்.

(இ-ள்.) ஆழமான பெரிய கடலைப்போலச் சேனைகள் சூழ்ந்துவரும்படி வருகின்ற சூரபன்மனெதிரிற்சென்று நீ எப்பொழுதும் வாழக்கடவை: வாழக்கடவை யென்று ஒப்பற்ற ஆசிமொழி கூறியபின்பு.—எ-று. (ககக)

மன்ன நீயிவண் வந்திட மேனா
னென்ன நோன்பை யியற்றின னோயா
னன்ன வாறுண ரோன்சிவ னல்லா
லுன்னி நாடி யுணர்ந்துளர் யாரே.

(இ-ள்.) சூரபன்மனே! நீ இங்குவரும்பொருட்டு யான் என்ன தவத்தைச் செய்தனனோ அதனை யுணரோன்; அத்தவத்தின் பயனைச் சிவபெருமானேயன்றி வேறே யார் ஆலோசித்தறியத் தக்கவர்கள்.—எ-று. (க௨௦)

கற்றை வார்சடை யான்கழல் பேணி
யற்ற நீங்கி யருந்தவ மாற்றி

மற்றிவ் வாறு வளத்தியல் யாவும்
பெற்று ளாய்பெரு வன்மை பிடித்தாய்.

(இ-ள்.) கூட்டமாகிய நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமானது திருவடிகளை விரும்பி சோர்வுநீங்கி அரியதவத்தைச்செய்து இவ்வாறுகிய வளப்பங்களனைத்தையும் பெற்றிருக்கின்றனை ; அதனுல் மிக்க பராக்கிரமத்தையடைந்தனை. ()

பொன்னை மேவு பொலன்கெழு மார்பன்
றன்னை வானவர் தங்களை யெல்லா
மின்ன நாளிளை யோற்கொடு வென்று
யுன்னை நேருள ரோவுல கத்தில்.

(இ-ள்.) திருமகளைக்கொண்டிருக்கின்ற அழகுமிக்க மார்பினையுடைய திருமாலையும் மற்றெல்லாத்தேவர்களையும் இப்பொழுது உனதிளைய தம்பியாகிய தாரகனைக்கொண்டு செயித்தனை. உலகத்தில் உனக்கு ஒப்பானவர்களுமுண்டோ ? ()

காத லான்மிகு காசிபன் மைந்த
ஞத லாலவு ணர்க்கிறை நின்மு
தாதை யான்சர தம்மிது நின்சீ
ரேது மென்புகழ் யான்பிற னன்றே.

(இ-ள்.) அசுரர்கள் தலைவனுகிய சூரபன்மனே! நீ அன்புமிக்க காசிபமுனிவனது புதல்வனுதலால் யான் உனது பாட்டனுகும் ; இஃதுண்மை ; உனது சிறப்பனைத்தும் எனது புகழேயாகும்; யான் அயலானன்று.—எ-று. (கஉ௩)

என்று பன்முக மன்க ளிசைத்தே
நின்று தம்பியர் தங்களை நேர்ந்து
பொன்றி டாதபொ லஞ்சிலை திண்டே
ரொன்று தன்படை யும்முத வுற்றுன்.

(இ-ள்.) என்று பல உபசாரவசனங்களைக்கூறி அவன் தம்பிமார்களையடைந்து அழியாத பொன்மயமான வில்லையும், வலிமை பொருந்திய ஒரு இரதத்தையும், தனது பிரமாஸ்திரத்தையுங் கொடுத்தனன்.—எ-று.

பிரமனுக்கு தன்னைக்குறித்துத் தவஞ்செய்தவர்களுக்குக் கொடுக்கும் அஸ்திரத்தை இவர்களுக்குக்கொடுப்பதற் கிஷ்டமின்மையை யுணர்த்தத் ‘ தன்படையும் ’ என்ருர். (கஉ௪)

வெருவ ரச்சுரர் வீற்றுறு பான்மை
யிருவ ருக்கும ளித்தலும் யாரும்
பரவு கொற்றவ னன்னது பாராப்
பெருமகிழ்ச்சிகொள் பெற்றிய ஞனன்.

(இ-ள்.) தேவர்களஞ்சும்படி வேறு வேருகச் சிங்கமுகன் தாரகனென்னுமிருவர்களுக்கும் வில் அம்பு முதலியவற்றைக் கொடுத்தலும், யாவர்களுந்துதிக்கின்ற சூரபன்மன் அதனைப்பார்த்து மிக்க மகிழ்வடைந்தனன்.—எ-று. (கஉ௫)

அருத்தி யெய்திய யன்றனை யங்க
ணிருத்தி மாயைமு னீந்தருண் மைந்தன்
மருத்து ழாய்முடி மன்னவன் வைகுந்
திருத்த கும்முல கத்திடை சென்ருன்.

(இ-ள்.) தம்பியர்களுக்கு ஆயுதாதிகளளித்ததைப்பார்த்து,மாயையின் மூத்த புதல்வனாகிய சூரபன்மன் விருப்பமுற்றுப் பிரமதேவனை அங்கிருக்கச்செய்து, நறுமணங்கமழுந் துளவமாலையையணிந்த திருமால் வசிக்கின்ற அழகுபொருந்திய வைகுந்தத்திற்குச் சென்றனன்.—எ—று. (கஉசு)

அந்த வேலையி லாண்டுறு மாலோன்
வந்து சூரபன் மாவினை யெய்தி
நந்த லில்லதொர் நாளொடு வாழ்கென்
றந்த மில்பல வாசி புகன்றான்.

(இ-ள்.) அந்தச் சமயத்தில் அங்கு வசிக்கின்ற திருமால் சூரபன்மனிடத்திற்கு வந்து தீர்க்காயுசுடையவனாய் வாழக்கடவை யென்று முடிவில்லாத பல ஆசி மொழிகளை யுரைத்தனர்.—எ—று. (கஉஎ)

ஆசி கூறின னாற்றவு மின்சொற்
பேச வேபெரு மாமகிழ் வெய்தி
மாசி லவ்வுல கெங்கணும் வல்லே
பாச னத்தொடு பார்த்தன னன்றே.

(இ-ள்.) ஆசீர்வசனங்கூறிய திருமால் மிகவும் இனிய வசனங்களைப் பேசவும் சூரபன்மன் மிக்க மகிழ்வடைந்து குற்றமற்ற அவ்வுலகமுழுவதையும் விரைவாகத்தனது உறவினர்களாகிய அசுரர்களுடன் சென்று பார்த்தனன்.—எ-று. (கஉஅ)

பார்த்த பின்பணி யின்மிசை வைகுந்
தீர்த்த னாண்டு திகழ்ந்துற நல்கிக்
கார்த்தி லங்குறு கந்தர முக்கண்
மூர்த்தி வைகிய மூதுல குற்றான்.

(இ-ள்.) அவ்வுலகத்தைப் பார்த்தபின்பு ஆதிசேடன்மீது வீற்றிருக்கின்ற திருமாலை அங்கு வசிக்கும்படி யிருக்கச்செய்து, கறுத்து விளங்குங் கண்டத்தினையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பழமையாகிய சிவலோகத்தை யடைந்தனன்.—எ-று. (கஉக)

வேறு.

அரியயன் முதலா வுள்ள வமரர்கள் யார்க்குந் தத்த
முரியதோ ராணை யெல்லா முலப்புறு துதவி வைகும்
பரமன துலக நண்ணிப் பரிசனம் யாவு நீங்கிச்
சுரர்புகழ் சூர பன்மன் றுணைவர்க ளோடு போனான்.

(இ-ள்.) திருமால் பிரமன் முதலாகப் பொருந்திய தேவர்களனைவருக்கும் தங்கள் தங்களுக்குரிய ஆணைகளையெல்லாம் கெடாமல் கொடுத்தருளி வீற்றிருக்கின்ற சிவபெருமானது சிவலோகத்தையடைந்து, தனது பரிசனங்களனைத்தையும் நீங்கித் தேவர்களால் துதிக்கப்பட்ட சூரபன்மன் தன் தம்பியர்களுடன் சென்றனன். ()

போந்தன னமலன் கோயிற் புறங்கடை வாயி னின்றே
யாய்ந்திடு நந்தி யெந்தை யருண்முறை யுய்ப்பச் சென்று
காந்தளை யனைய செங்கைக் கவுரியோ டுறைபு முக்க
ணேந்தன்மு னணுகி யார்வத் திறைஞ்சியே யேத்தி நின்றான்.

(இ-ள்.) அவ்வாறு சென்றவனாய் சிவபெருமானது திருக்கோயிலின் கடைவாயிலில் நின்று, சாஸ்திர ஆராய்ச்சியினையுடைய எமது தந்தையாகிய திருநந்திதேவர்

சிவபெருமானது கட்டளைப்படியே உள்ளே விடச்சென்று காந்தள் மலர்போலுஞ் சிவந்த திருக்கரத்தினையுடைய உமாதேவியாரோடு வீற்றிருந்தருளும் திரிநேத்திரரா கிய சிவபெருமான் திருமுன்னே யடைந்து அன்புடன் வணங்கித் துதிசெய்து நின் றனன்.—எ-று. (கருக)

கண்டநஞ் சுடைய வண்ணல் கருணைசெய் தினிநீ யேனை
யண்டமுஞ் சென்று நாடி யாணையா லகிலம் யாவு
மெண்டிசை புகழு மாற்ரு லிறைபுரிந் திருத்தி யென்னப்
புண்டரீ கத்தாள் போற்றி விடைகொண்டு புறத்து வந்தான்.

(இ-ள்.) விஷம்பொருந்திய கண்டத்தினையுடைய சிவபெருமான் கிருபை செய்து நீ இனி மற்றைய அண்டங்களையுஞ் சென்று பார்த்து ஆக்கினையினால் எல் லாவுலகங்களையும் எட்டுத்திக்கிலும் உள்ளவர்கள் புகழும்படி அரசாட்சி செய்து வா ழக்கடவையென்று அருளிச்செய்யவும், அவ்வெம்பெருமானது தாமரைமலர் போன்ற திருவடிகளைத் துதித்து விடைபெற்றுக்கொண்டு புறத்தில் வந்தனன்.—எ-று. (கருஉ)

புறந்தனில் வந்து சூரன் பொம்மெனத் தானை யெய்திச்
சிறந்திடு கின்ற வண்ட கோளகை சேர்த லோடு
மறந்தரு ஞமலி மேலோ ருருத்திரர் வரம்பி லோர்க
ளுறைந்தன ரனையு ரெல்லா முமாபதி யருளுட் கொண்டார்.

(இ-ள்.) புறத்தில்வந்து சூரபன்மன் விரைவாகச் சேனைகளையடைந்து சிற ப்புப்பொருந்திய அண்டகோளத்தை யடையவும் (அவ்விடத்தில்) வலிமை பொருந் திய ஞாளிவாகனத்தினையுடைய வயிரவர்களும் உருத்திரர்களுமாகிய அளவற்றவர்கள் வசித்திருந்தனர் ; அவர்களனைவரும் சிவபெருமானது திருவருளை யறிந்துகொண்டார் கள்.—எ-று. (கருரு)

பாங்குறு மண்டஞ் செல்லும் பான்மையில் வாயில் காட்டி
யாங்கவர் விடுப்ப மற்றை யண்டத்துச் சூர பன்ம
னோங்கிய தானை யோடு மொல்லையிற் போகி யாண்டு
மீங்கிது போல நாடி யாரையும் வென்று போனான்.

(இ-ள்.) பக்கத்திலுள்ள அண்டத்திற்குச் செல்லவேண்டிய முறைப்படி அவ்வயிரவர்களும் உருத்திரர்களும் வாயில்காட்டியனுப்புதலும்,சூரபன்மன் மற்றைய அண்டங்களிலும் மிக்க சேனைகளுடன் விரைந்து சென்று, அவ்வண்டங்களிலும் இவ்வண்டத்திற் செய்ததுபோலவே திக்குவிசயஞ்செய்து யாவரையுஞ் செயித்துச் சென்றனன்.—எ-று. (கருச)

ஏனையண் டங்க ளெல்லா மெம்பிரான் கணமா யுள்ளோ
ரானவ ரருளிற் போகி யகிலமு நாடி யங்கண்
வானவர் தம்மை வென்று வளமெலாங் கவர்ந்து தன்பாற்
ருனவர் பலரை யங்கட் டன்னர சளிப்ப வுய்த்தான்.

(இ-ள்.) மற்றைய வண்டங்களிலெல்லாம் எமது சிவபெருமானது கணங் களாயுள்ளவர்களது திருவருளினாற் சென்று எல்லாவற்றையும் பார்த்து அங்குத் தே வர்களைச் செயித்து அவர்களது செல்வங்களனைத்தையுங் கொள்ளையிட்டுத் தன்னிட த்திருந்த அநேக அசுரர்களை அவ்விடத்துத் தனது அரசாட்சியைச் செலுத்தும்படி வைத்தனன்.—எ-று. (கருரு)

இத்திறம் வீற்று வீற்று வெல்லையி லண்டந் தோறு
மெய்த்தம ராகி யுள்ள வவுணரை வேந்த ராக
வைத்தனன் றுணைவ ரோடு மீண்டனன் மற்றிவ் வண்டப்
பித்திகை யதனுட் சென்று பெறலருந் துறக்க முற்றான்.

(இ-ள்.) இவ்வாறு வெவ்வேறாக அளவற்ற அண்டங்கள்தோறும் தனது மெய்ம்மையாகிய பந்துக்களாயுள்ள அசுரர்களை அரசர்களாக வைத்துத் தம்பிமார்களுடன் திரும்பி இவ்வண்டச்சுவற்றினுள்ளே வந்து பெறுதற்கரிய சுவர்க்கலோகத்தையடைந்தனன்.—எ-று. (கசுசு)

திக்குவிசயப்படல முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம்-கஉடு.

உ

முருகன்றுணை.

# எதிர்கொள்படலம்.

திண்டிறன் மாயையின் செம்ம லித்திற
மண்டர்தந் துறக்கமே லடைந்த காலையிற்
பண்டிமை யோர்களாற் படருந் தானவர்
கண்டனர் மகிழ்ந்தனர் களிப்பின் மூழ்கினர்.

(இ-ள்.) மிக்க வலிமையினையுடைய மாயையின் புதல்வனாகிய சூரபன்மன் இவ்வாறு தேவர்கள் வசிக்கின்ற சுவர்க்கலோகத்தில் அடைந்தபொழுது முன்னே தேவர்களால் வருந்தியிருக்கின்ற அசுரர்கள் அதனைப் பார்த்து மகிழ்வடைந்தவர்களாய் ஆனந்தக்கடலில் மூழ்கினர்கள்.—எ-று. (க)

ஆயவன் வருவதை யவுணர் தம்பெரு
நாயகற் கொற்றர்போய் நவில வன்னவன்
றாயநல் லமுதினைக் கிடைத்துத் துண்ணென
மேயின னுமெனக் களிப்பின் மேயினான்.

(இ-ள்.) சூரபன்மன் வருவதைத் தூதுவர்களுணர்ந்து அசுரேந்திரனிடத்திற் சென்று கூறுதலும், அவ்வசுரேந்திரனனவன் தூய்மையாகிய நல்ல அமுதமானது கிடைக்கப்பெற்று விரைந்துண்டவனைப்போலப் பெருமகிழ் வடைந்தனன்.—எ-று.

தானையம் படையொடு தகுவர் கோமக
னனவெஞ் சூர்பெறு மளப்பி லாக்கமுங்
கூனலம் பிறைதவழ் குடிமிச் செஞ்சடை
வானவன் கருணையு மனங்கொண் டேகினன்.

(இ-ள்.) அசுரேந்திரனனவன் பராக்கிரமசாலியாகிய கொடிய சூரபன்மன் பெற்ற அளவற்ற செல்வங்களையும், வளைவாகிய அழகிய இளம்பிறை தவழுஞ் சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமான் அவனிடத்து வைத்துள்ள பெருங்கருணைத் தன்மையையும் மனத்திற் சிந்தித்துச் சிறந்த சேனசமூகத்துடனே சென்றனன். (ரு)

அன்னவன் புகர்தனை யடைந்து நங்குல
மன்னனை யுற்றிட வல்லை செல்லுவன்
முன்னுற வேகியெம் முறையுஞ் செய்கையும்
பன்னுதி யென்றுமுன் படர்வ தாக்கினன்.

(இ-ள்.) அவ்வசுரேந்திரன் சுக்கிராசாரியை யடைந்து யான் நமது குலவர சனாகிய சூரபன்மனைக் காணும்பொருட்டு விரைந்து செல்கின்றேன், ஆதலால் நீர் முன்னேசென்று எமது முறைமையினையுஞ் செய்கையினையுஞ் சொல்வீராகவென்று கூறி அவரைப் போகும்படி செய்தனன்.—எ-று. (௬)

அன்னதோர் காலையி லவுணர் தேசிகன்
முன்னுற மானமேன் முடுகி யேகலுந்
தன்னுறு கிளைஞருந் தானு மாங்கவன்
பின்னுற மன்னவன் பெயர்ந்து போயினன்.

(இ-ள்.) அவ்வாறாகிய சமயத்தில் அசுரர் குருவாகிய சுக்கிராசாரியன் முன்னதாக விமானத்தின்மேலேறிக்கொண்டுசெல்லவும், அசுரேந்திரன் தனது பொருந்திய உறவினருந் தானுமாக அச்சுக்கிராசாரிக்குப் பின்னே நீங்கிச் சென்றனன்.

மாசறு பேரொளி மான மீமிசைத்
தேசிகன் விரைவொடு செல்லு மெல்லையிற்
காசிப னருண்மகன் கண்டு சேணிடை
யீசனை யெதிர்ந்தென வெதிர்கொண் டேகினன்.

(இ-ள்.) குற்றமற்ற பேரொளியினையுடைய விமானத்தின்மேல் சுக்கிராசாரியன் விரைவாகச் சென்றபொழுது, காசிபமுனிவர் பெற்ற புதல்வனாகிய சூரபன்மன் தூரத்திலேயே கண்டு சிவபெருமானை யெதிர்கொண்டாற்போல எதிர்கொண்டு சென்றனன்.—எ-று.

சூரபன்மன் திருமால் முதலியவர்களை யெல்லாமடக்கி யாளுபவனாதலாலும் சிவபெருமானைத் தவிர மற்ற யாவரையும் வணங்காதவனாதலாலும், சுக்கிரனை எதிர்கொண்டு சென்றது சிவபெருமானை யெதிர்கொண்டு சென்றது போன்றது என்று அவனருமை விளங்க, 'ஈசனை எதிர்ந்தென' என்றார். (௭)

அஞ்சலி செய்தன னவுண னத்துணை
நெஞ்சக மகிழ்வொடு நின்று தேசிகன்
விஞ்சுக திருவொடு விசயந் தானெனு
வெஞ்சலி லாசிக ளெடுத்துக் கூறினன்.

(இ-ள்.) சூரபன்மன் கைகுவித்து வணங்கினன்; அப்பொழுது சுக்கிராசாரியன் மனத்தில் பெருமகிழ்வுகொண்டு நின்று உனக்குச் செல்வமும் வெற்றியும் பெருகக்கடவனவென்று குறைவற்ற ஆசீர்வாத மொழிகளை யெடுத்துரைத்தனன்.

ஆயது காலையி லனையன் பாங்கரின்
மேயின வரிமுகன் வேழ மாமுகத்
தீயவ னிருவருந் தேரொ டேகியே
தூயதோர் புகரடி தொழுது போற்றினர்.

(இ-ள்.) அந்தச் சமயத்தில் அச் சூரபன்மனுக் கருகிலிருந்த சிங்கமுகன் கொடிய தாரகனென்னு மிரண்டு அசுரர்களும் தங்களிரதத்துடனே சென்று தூய்மையாகிய சுக்கிராசாரியினது பாதங்களை வணங்கித் துதித்தார்கள்.—எ-று. (௮)

எத்திடு மவர்தமக் கியலு மாற்றினன்
மீத்தகு மாசிகள் விளம்பி வேந்தனைப்
பார்த்தன னுனக்கியாம் படுத்து கின்றதோர்
வார்த்தையுண் டன்னது வகுத்துங் கேட்டிநீ.

(இ-ள்.) இவ்வாறு துதித்த அவ்விருவர்களுக்குந் தக்க முறைமைப்படிச் சிறந்த ஆசிமொழிகளை யுரைத்து, பின் சூரபன்மனைப்பார்த்து உனக்கு யாம் கூறவேண்டுவதாகிய ஒருவார்த்தை யிருக்கின்றது; அதனை யாம் கூறுகின்றோம்; நீ கேட்கக்கடவை.—எ-று. (கூ)

பங்கமில் காசிபன் பன்னி யாகிய
நங்கையைப் பயந்துளா னுனித்த கேள்வியான்
சங்கையற் றிருந்ததா னவரைத் தாங்கினு
னெங்களுக் கோர்துணை யென்னுந் தன்மையான்.

(இ-ள்.) குற்றமற்ற காசிபமுனிவர் மனைவியாகிய உங்கள் தாயைப் பெற்றவன்; நுட்பமாகிய கல்வி கேள்விகளை யுடையவன்; அச்சமற்றிருந்த அசுரர்களைப் பாதுகாத்தவன்; எங்களுக்கு ஒப்பற்ற பெருந்துணையென்று கூறுந் தன்மையினையுடையவன்.—எ-று. (க0)

ஈண்டையில் வாசவ னெதிர்ந்து பற்பகன்
மூண்டிடு வெஞ்சமர் முற்றி வீரத்தைப்
பூண்டன னுதலிற் புழுங்கி மாரிநாண்
மாண்டிடு கதிரென மாழ்கி வைகினன்.

(இ-ள்.) இவ்விடத்தில் இந்திரன் போருக்கெதிர்ந்து அநேகநாள்கள் நெருங்கிய கொடிய போரைச்செய்து வெற்றிபெற்றுச் சென்றனன். ஆதலால் மனம் வருந்தி மழைக்காலத்தில் ஒளிமழுங்கி மறைந்த சூரியனைப்போலத் துன்பத்தில் மூழ்கியிருக்கின்றனன்.—எ-று. (கக)

அத்தகு மேலையோ னவனி மீமிசை
வித்திடு நாறுசெய் விளைவு காணுறு
வெய்த்திடு நிரப்பின னென்ன நின்னையே
நித்தலு நோக்கினன் சிறுமை நீங்கவே.

(இ-ள்.) அத்தன்மையாகிய சிறந்த அசுரேந்திரன் பூமியின்மேல் விதைக்கப்பட்ட நாற்றினுல் வருகின்ற விளைவைக் காணுமல் வருந்துகின்ற தரித்திரனைப் போலத் தனது சிறுமை நீங்கும்படி உன்னையே நாள்தோறும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனன்.—எ-று. (கஉ)

தவங்கொடு முந்துநீ தழலை வேட்டதுஞ்
சிவன்புரி வரங்களுஞ் செப்பக் கேட்டன
னுவந்தன னுகுல மொழித்து வைகினு
னிவந்தன வாங்கவ னெடிய தோள்களே.

(இ-ள்.) முன்பு நீ தவத்தை மேற்கொண்டு அக்கினி சம்பந்தமாகிய யாகத்தைச் செய்ததையும்,சிவபெருமா னெழுந்தருளிவந்து உனக்குக் கொடுத்த வரங்களையுஞ் சொல்லக் கேள்விப்பட்டுச் சந்தோஷித்தவனுய் மனவருத்தமொழித்து வசித்திருந்தனன்; அதனுல் அவனது பெரிய தோள்கள் பூரித்தன.—எ-று. (கங)

பற்றலர் புரமடு பரம னீந்திடப்
பெற்றதோர் வரத்தொடு பெயர்ந்தி யாரையும்
வெற்றிகொண் டிவண்வரு மேன்மை கேட்புறு
மற்றுனை யடைந்திட வருகின் றனெனு.

(இ-ள்.) பகைவர்களது முப்புரங்களையு மெரித்தருளிய சிவபெருமான் கொடுத்தருளப்பெற்ற வரத்துடன் திக்குவிசயஞ் செய்யச்சென்று யாவர்களையும் வெற்றி பெற்று நீ இங்குவந்த மேன்மையைக் கேள்விப்பட்டு உன்னைக் காணும்படி இங்கு வருகின்றனென்று கூறி.—எ-று. (௧௪)

வன்றிற லவுணர்கோன் வருதல் காட்டியே
புன்றொழில் படுத்திய புகரு ரைத்தலுந்
துன்றிய கனைகழற் சூர னென்பவ
னின்றன னுவகையா னிறைந்த நெஞ்சினன்.

(இ-ள்.) புல்லிய தொழிலையொத்த சுக்கிராசாரியன் மிக்க வல்லமையினையுடைய அசுரேந்திரன் வருதலைக் காண்பித்துக் கூறுதலும், ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த சூரபன்மனனவன் சந்தோஷத்தால் நிறைந்த மனமுடையவனுய் அவனை எதிர்கொண்டு நின்றனன்.—எ-று.

புன்றொழில் படுத்திய என்பதற்கு, சூரபன்மனை இழிதொழிலிற் பிரவேசிக்கச்செய்த எனப் பொருள் கூறலுமொன்று. (௧ரு)

ஆர்ந்ததொல் கிளையொடு மவுணர் காவலன்
சேர்ந்தனன் சூரனைச் செங்கை யாற்றொழாப்
பேர்ந்திடு மாவியைப் பிரிந்த தோருடல்
சார்ந்திடு கின்றதோர் தன்மை யென்னவே.

(இ-ள்.) சூரபன்மனைத் தனது செவ்விய கைகளால் தொழுது உயிரைப் பிரிந்த உடலானது மீண்டு ஒன்றுகக்கூடிய தன்மையைப்போல, நிறைந்த பழமையாகிய தனது உறவினர்களோடு அசுரேந்திரன் வந்து சேர்ந்தனன்.—எ-று. (௧௬)

ஆயிடை வெய்யசூ ரவுணர் கோவினை
நீயினி திருத்திகொ லென்ன நீயுளை
தீயன வடையுமோ சிறுமை யெய்துமோ
மேயநுங் குலமுறை விளங்கத் தோன்றினுய்.

(இ-ள்.) அவ்விடத்தில் கொடிய சூரபன்மன் அசுரேந்திரனைப் பார்த்து நீ சுகமாக விருக்கின்றனையோவென்று வினவுதலும், (அதற்கு அசுரேந்திரன்) நிலைபெற்ற உனது குலமுறையானது விளங்கும்படித் தோன்றிய சூரபன்மனே! நீ இருக்க எங்களைத் தீயவைகளடையுமோ? குறைவுண்டாகுமோ? (உண்டாகாது.)—எ-று. ()

என்றிவை நயமொழி யியம்பி யேபுடை
சென்றனன் மாயையின் செய்ய காதலன்
றுன்றிய தகுவர்த மனிகஞ் சூழ்தர
வென்றியோ டவனிமேல் விரைவின் மீளவே.

(இ-ள்.) என்று இவ்வாருகிய இனிய வசனங்களை யுரைத்துக்கொண்டு அசுரேந்திரன்அவனருகில்வர,மாயையினது சிறந்த புதல்வனுகிய சூரபன்மன் பொருந்திய அசுரர் சேனைகள் தன்னைச் சூழ்ந்துவரும்படி வெற்றியுடன் நிலவுலகத்திற்கு விரைந்து திரும்புதலும்.—எ-று. (௧அ)

வேறு.

மண்ணுல கத்தில் வெஞ்சூர் வந்தன னெனுஞ்சொற் கேளா
வண்ணலங் கமலத் தேவு மமரர்கோ மானு மேனை
விண்ணவ ராயுள் ளோரும் வியத்தகு முனிவர் யாருந்
துண்ணென வந்து மாயோன் றுயில்கொளுங் கடலிற் புக்கார்.

(இ-ள்.) நிலவுலகத்தில் கொடிய சூரபன்மன் வந்தனனென்று கூறுஞ் சொல்லைக்கேட்டு, பெருமைபொருந்திய அழகிய கமலாசனனாகிய பிரமனும், தேவேந்திரனும், மற்றைத் தேவர்களாயுள்ளவர்களும், வியக்கத்தக்க முனிவர்களனைவரும் விரைவாக வந்து திருமால் நித்திரைசெய்யுந் திருப்பாற்கடலில் சேர்ந்தார்கள்.—எ-று. ()

கொய்துழா யலங்கன் மோலிக் குழகனைக் குறுகி நின்று
கைதொழு திறைஞ்சித் தாங்கள் கனைகழற் சூரன் றன்னா
லெய்திடு சிறுமை யெல்லா மியம்பின ரினிமேல் யாங்கள்
செய்திடு கின்ற தென்கொல் செப்புதி பெரும வென்றார்.

(இ-ள்.) கொய்யப்பட்ட துளசிமாலையை யணிந்த முடியினையுடைய திருமாலை யடைந்து நின்று கைகளைக்கூப்பி வணங்கி, பிரமன் முதலியவர்கள் ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த சூரபன்மனால் அடைந்துள்ள துன்பங்களையெல்லாம் விண்ணப்பஞ் செய்தவர்களாய் இனிமேல் யாங்கள் செய்யவேண்டியது யாது? எம்பெருமானே! அதனைச் சொல்லுவீராகவென்று வினவினார்கள்.—எ-று. (உ0)

அன்றவ ருரைத்த மாற்ற மச்சுதக் கடவுள் கேளாப்
புன்றொழிற் றக்கன் வேள்வி புகுந்திடுந் தீமை தன்னா
லின்றிது பொருந்திற் றம்மா யாரிது விலக்கற் பாலா
ரொன்றினிச் செய்யுந் தன்மை கேண்மினென் றோத லுற்றான்.

(இ-ள்.) அப்பொழுது அத்தேவர்கள் முதலியோர்கள் கூறிய வார்த்தைகளைத் திருமால்கேட்டு, இழிதொழிலினையுடைய தக்ஷனது யாகத்தில் சேர்ந்திருந்ததனாலுண்டாகிய தீமையினால் இப்பொழுது இவ்வாறுண்டாயிற்று; இதனை விலக்குந் தன்மையுடையவர்கள் யார்? இனி நாம் செய்யவேண்டுவ தொன்றுண்டு அதனைக் கூறுகின்றேன் கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார்.—எ-று. (உக)

பண்டெயின் மூன்று மட்ட பராபரன் வரம்பெற் றுள்ளா
னண்டமெங் கெவையும் வென்றா னதலா னம்மால் வென்றி
கொண்டிடு திறத்தா னல்லன் கொடியவச் சூரன் றன்னைக்
கண்டுசென் றிடுது மீதே காரியம் போலு மென்றான்.

(இ-ள்.) மிகவுங் கொடியவனாகிய சூரபன்மன் பூர்வத்தில் முப்புரங்களையுமழித்த சிவபெருமான் கொடுத்தருளிய வரங்களைப் பெற்றவன்; எல்லா அண்டங்களையும் வென்றவன்; ஆதலால் அவன் நம்மால் வெற்றிபெறத் தக்க தன்மையுடையவனல்லன்; அதனால், அவனை நாம் சென்று கண்டுவருவோம்.—எ-று. (உஉ)

செங்கம லத்தோ னாதி தேவரு முனிவர் யாரு
மிங்கிது கரும மென்றே யிசைந்தன ராகி நிற்ப
வங்கவ ரோடு மாயோ னரவணைப் பள்ளி நீங்கித்
துங்கம துடைய தொல்சீர்ச் சூரனைக் காண வந்தான்.

(இ-ள்.) செந்தாமரை மலரில் வசிக்கும் பிரமன் முதலாகிய தேவர்களும் முனிவர்களுமாகிய அனைவரும் இதுவே தகுதியான காரியமென்று அதற்கிசைந்தவர்களாய் நிற்கவும், அவர்களுடன் திருமால் சேஷசயனத்தினின்றுநீங்கி உயர்வுபொருந்திய பெருஞ்செல்வத்தினையுடைய சூரபன்மனைக் காணும்படி வந்தனர்.—எ-று. (உரு)

மருத்துழாய் மவுலி யாதி வானவர் முனிவர் யாருந்
திருத்தகு சூர னேரே சென்றுநின் றாசி கூறி
யருத்திய தாகப் போற்ற வவர்களுட் பதினொர் கோடி
யுருத்திரர் தொகுதி யானொ ரொருங்குட னிற்பக் கண்டான்.

(இ-ள்.) நறுமணங்கமழுந் துளவமாலையை யணிந்த திருமால் முதலிய தேவர்களும் முனிவர்களுமாகிய அனைவரும் செல்வமிக்க சூரபன்மனுக்கெதிரில் சென்று நின்று ஆசிமொழிகளையுரைத்து அன்புடன் துதிக்கவும்,அவர்களுக்குள்ளே பதினொரு கோடி யுருத்திரர் கூட்டங்கள் ஒன்றாகச் சேர்ந்து நிற்பதைச் சூரபன்மன் கண்டனன்.

கண்டிடு மவுணர் தங்கள் காவல னிமையா முக்க
ணண்டர்தம் பெருமா னென்ன வமைந்ததொல் வடிவ முள்ளா
ரெண்டரு தொகையின் மிக்கா ரீங்கிவர் யாவ ரென்னத்
தண்டுளப வலங்கன் மோலிப் பண்ணவன் சாற்ற லுற்றான்.

(இ-ள்.) அவர்களைப் பார்த்த அசுரராஜனாகிய சூரபன்மன் சிவபெருமானைப்போலப் பொருந்திய பழய வடிவமுடையவர்கள் அளவு கடந்தவர்களாக விருக்கின்றனர்; இங்கு நிற்கின்ற இவர்கள் யாவரென்று கேட்கவும், குளிர்ந்த துளவமாலையணிந்த முடியினையுடைய திருமால் கூறத் தொடங்கினர்.—எ-று. (உ௬)

எதிர்கொள்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க௬0.

---

உ

முருகன்றுணை.

---

# உருத்திரர்கேள்விப்படலம்.

மன்னவர் மன்ன கேண்மோ மற்றிது புகல்வன் வேதா
முன்னொரு கற்பந் தன்னின் மூவகை யுலகு நல்கித்
துன்னுயிர் முழுது நல்கித் துண்ணென வகந்தை கொண்டு
தன்னையும் பரமென் றுன்னித் தாணுவை யயர்த்தா னன்றே.

(இ-ள்.) அரசர்க்கரசனாகிய சூரபன்மனே! கேட்பாயாக: இதனைக் கூறுகின்றேன். முன்பொரு கற்பத்தில் பிரமன் மூன்றுலகங்களையுஞ் சிருஷ்டித்து அவ்வுலகங்களில் நெருங்கியுள்ள உயிர்களனைத்தையும் படைத்து விரைவாக அகங்காரத்தைமேற்கொண்டு தன்னையும் பரம்பொருளென்று கருதிச் சிவபெருமானை மறந்தனன்,

பிரமன் பசுவேதவிரப் பதியன்மையை யுணர்த்த 'தன்னையும் பரமென்று' என்றார். (க)

எந்தையை மறந்து போதன் யாவையும் விதித்த லோடுந்
தந்திடு மளவே யன்றிச் சராசரம் பெருகா வாக
நொந்தனன் குறையென் னென்றே நோக்கின னெமைமுன் னீன்ற
வைந்தொழின் முதல்வன் றன்னை யயர்த்தனன் போலு மென்றான்.

(இ-ள்.) பிரமன் சிவபெருமானை மறந்து யாவற்றையும் படைக்கவும், அவ்வாறு படைக்கப்பட்டவைகள் தான் படைத்த வளவேயன்றி விருத்தியடையாமற் போகவும், அதனால் வருந்தினன்; யாது குறையென்று யோசித்தனன்; எம்மை முன்பு படைத்தருளிய பஞ்சகிருத்தியத் தலைவராகிய சிவபெருமானை யான் மறந்தேன்போலும் என்று கூறினான்.—எ-று. (உ)

இனியவ னருள்பெற் றன்றி யிவ்விதி முடியா தென்னாத்
தனயனு மளவில் காலந் தவம்புரிந் திடவு முக்கட்
பனிமதி முடியோ னன்னான் பாற்படா தொழிய வந்தோ
வினையினேன் முன்னந் தாதை வெளிப்படு மெவன்கொ லென்றான்.

(இ-ள்.) இனி அந்தச் சிவபெருமானது திருவருளைப் பெற்றாலன்றி இச்சிருஷ்டித் தொழில் நிறைவேறாதென்று பிரமன் அநேககாலந் தவஞ்செய்யவும், மூன்று கண்களையுடைய சந்திரசேகரராகிய சிவபெருமான் அவனெதிரில் தோன்றாமல் மறைந்துவிடவும், ஐயோ! பாவியாகிய எனக்கு முன்னே எமது பிதாவாகிய சிவபெருமான் எவ்வாறு வெளிப்படப்போகின்றார் என்று கூறினான்.—எ-று.

தன்னைச் சிவமாகக் கருதியது பாவகிருத்தியமாதலால் 'அந்தோ வினையினேன்' என்று கூறியதாகக் கூறினார். (ங)

கழியுடல் புயமேற் கொண்ட கண்ணுத லுறாத துன்னி
யிழுதைய ரென்ன வேங்கி யின்னலுற் றுயிர்த்து வல்லே
யழுதனன் மகவென் செய்வா னன்னதோர் வேலை கண்ணீர்
விழவிழ வலகை யாகி மிகவெழுந் தீண்டிற் றன்றே.

(இ-ள்.) கங்காளத்தைத் திருப்புயத்தி லணிந்தருளிய சிவபெருமான் எழுந்தருளாமையை யுணர்ந்து அறிவில்லாதவர்களைப்போல ஏக்கங்கொண்டு வருந்திப் பெருமூச்சுவிட்டு விரைவாக அழுதனன். அவனென்னசெய்வான்: அப்பொழுது கண்ணீர் விழவிழ அக்கண்ணீர் பேயுருவங்கொண்டு மிகுதியாகத் தோன்றி நெருங்கியது.

காண்டலு மலகை யீட்டங் கருத்திட ருழப்ப வீழ்ந்து
மாண்டனன் போலச் சோர மன்னுயிர்க் குயிராய் நின்ற
வாண்டகை யுணர்வு நல்கி யனையவன் கனவி னண்ணி
யீண்டினி வருந்தன் மைந்த வெழுகென வருளிச் செய்வான்.

(இ-ள்.) பிரமன் அப்பேய்க்கூட்டங்களைப் பார்க்கவும் மனம் வருந்த விழுந்து இறந்தவனைப்போல மூர்ச்சை யடையவும், உடனே நிலைபெற்ற உயிர்க்குயிராய் எழுந்தருளிய சிவபெருமான் உணர்வைக் கொடுத்து அவனது கனவிலெழுந்தருளி, புதல்வனே! நீ வருந்தாதே, எழக்கடவையென்றுகூறிப் பின்னர் அருளிச் செய்கின்றார்.

மதித்தனை பரமென் றுன்னை மறந்தனை யெம்மை யற்றால்
விதித்திறங் கூடிற் றில்லை விரைந்தது முடிய நந்தம்
பதத்துளார் தம்மை யுன்றன் பாங்குற விடுத்து மென்று
னுதித்திட லிறத்த லின்றி யுலகளித் துதவு மையன்.

(இ-ள்.) நீ உன்னைப்பரம்பொருளென்று கருதினை; எம்மை மறந்தனை; அதனால் சிருஷ்டித்தொழில் உனக்குக்கைகூடி வரவில்லை; விரைவாக உனது சிருஷ்டித்தொழில் நிறைவேறும்பொருட்டு நமது சிவலோகத்திலிருப்பவர்களை உன்னிடத்திற் கனுப்புகின்றேமென்று பிறப்பிறப்பற்றவராயிருந்து உலகங்களைப் படைத்துக்காக்கின்ற சிவபெருமான் கூறி யருளினர்.—எ-று. (கூ)

அந்நெறி கனவிற் காணு மற்புதத் தெழுந்து வேதன்
செந்நெறி பூண்டு வைகிச் சிந்தையிற் றேற்ற மெய்தி
யுன்னலு மறுவ ரைவ ருருத்திர கணத்தோர் தாதை
தன்னரு ளதனு னெற்றித் தலத்தினும் போந்து நின்றார்.

(இ-ள்.) அவ்வாறு கனவிற்கண்ட ஆச்சரியத்துடனெழுந்து பிரமன் நல்லொழுக்கம் பூண்டிருந்து தெளிவாகிய மனசுடனே தியானஞ்செய்யவும், பதினொருருத்திரர்கள் சிவபெருமானது கட்டளையால் பிரமனது நெற்றியின்வழியாகத்தோன்றி யெதிரில் நின்றார்கள்.—எ-று. (எ)

நிற்றலு மவரை நோக்கி நெற்றியந் தலத்தி னீவி
ருற்றதை யெவன்கொ லென்ன வுன்செயன் முடியு மாற்றான்
மற்றெமை விடுத்தா னம்ப னுதலின் வந்தே மென்றார்
பற்றலர் புரமூன் றட்ட பண்ணவன் வடிவங் கொண்டோர்.

(இ-ள்.) அவ்வாறு நிற்கவும், பிரமன் அவர்களைப்பார்த்து நீங்கள் நெற்றியின் வழியாக வந்தது யாதுகாரணமென்றுகேட்கவும், பகைவர்களது முப்புரங்களையழித்தருளிய சிவபெருமானது திருவுருவத்தைப்பெற்ற உருத்திரர்கள் (கூறுகின்றனர்). எங்களைச் சிவபெருமான் உனது சிருஷ்டித்தொழில் நிறைவேறும்பொருட்டு அனுப்பினராதலால் வந்தோமென்று கூறினார்கள்.—எ-று. (அ)

பரமன துருவாய் நின்றோர் பதினொரு வோரு மிவ்வா
றருள்செய விரிஞ்சன் கேளா வன்பினு லென்பால் வந்தீர்
விரைவுட னுயிர்க டம்மை விதிக்குதி ரென்னத் தத்த
முருவுபோற் பதினோர் கோடி யுருத்திரர் தொகையைத் தந்தார்.

(இ-ள்.) சிவரூபத்துடன் நின்ற பதினொரு ருத்திரர்களும் இவ்வாறருளிச்செய்யவும், பிரமன் அதனைக்கேட்டு அன்புடன் என்னிடத்தில் தோன்றிய உருத்திரர்களே! நீங்கள் விரைவாக உயிர்களைப்படையுங்களென்று கூறுதலும், தங்களுருவத்தைப்போல பதினொருகோடி யுருத்திரர் கூட்டங்களைப் படைத்தார்கள்.—எ-று. ()

ஆங்கது தெரிந்து வேதா வாவிகள் வினைக்கீ டன்றி
நீங்களிவ் வாறு செய்கை நெறியதன் றென்ன லோடு
மோங்கிய வுருத்தி ரேசர் சொல்லையெம் பதத்திற் போது
மீங்கிவ ணுயிரை முன்போ லீந்தனை யிருத்தி யென்றார்.

(இ-ள்.) அதனைப் பிரமனறிந்து நீங்கள் உயிர்களைக் கருமத்திற் கீடாகவன்றி இவ்வாறு படைத்தல் முறைமையல்லவென்று கூறுதலும், அதனைக் கேட்ட சிறந்த உருத்திரர்கள் நாங்கள் விரைவாக எங்கள் சிவலோகத்திற்குச் செல்லுகின்றேம்; நீ

இவ்விடத்தில் உயிர்களை முன்போலவே சிருஷ்டித்துக்கொண்டிருக்கக்கடவை யென்று கூறினார்கள்.—எ-று. (கo)

என்றிவை யுரைத்துப் போதன் யாவையும் படைப்பா னல்கி
யொன்றிய வுணர்வின் மிக்க வுருத்திரர் யாரும் வெள்ளிக்
குன்றுடை முதல்வன் றேன்னாட் கொடுத்திடும் புவனம் புக்கா
ரன்றுதா மளித்து ளோரை யமரரோ டிருத்தி ரென்றார்.

(இ-ள்.) என்றிவ்வாறு கூறிப் பிரமன் எல்லாவற்றையுஞ் சிருஷ்டிக்கும்படி யருள்செய்து, நிலைபெற்ற அறிவிற்சிறந்த உருத்திரர்களனைவரும் ஸ்ரீ கயிலாசபதியாகிய சிவபெருமான் முன்னாளில் தங்களுக்குக் கொடுத்தருளிய உலகத்தை யடைந்தார்கள். அக்காலத்து அப்பதினொரு ருத்திரர்கள் படைத்தருளிய பதினொருகோடி யுருத்திரர்களையும் நீங்கள் தேவர்களுடன் சேர்ந்திருங்களென்று கட்டளையிட்டார்கள்.

அவனியை யளித்தோன் றன்பா லடைந்துளா ரண்டந் தன்னிற்
புவனமே லிருந்தா ரன்னார் புரிந்திடத் தொன்னாள் வந்த
பவர்முத லுருத்தி ரேசர் பதினொரு கோடி யுள்ளா
ரிவர்சிவ னருளால் வானோ ரினத்துட னீண்டி யுற்றார்.

(இ-ள்.) உலகங்களைச் சிருஷ்டித்த பிரமனிடத்தில் தோன்றிய பதினொரு ருத்திரர்களும் அண்டத்தின் மேற்புவனத்தி லிருந்தார்கள். அவ்வுருத்திரர்கள் சிருஷ்டிக்க முற்காலத்திற் றோன்றிய பவர்முதலிய பதினொருகோடி யுருத்திரர்கள் இவர்களாகும்; இவர்கள் சிவபெருமான் றிருவருளினால் தேவர்கூட்டத்துடன் நெருங்கி வந்தார்கள்.—எ-று. (கஉ)

உருத்திரர் கேள்விப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கசுஉ.

---

உ

முருகன் றுணை.

---

# நகர்செய்படலம்.

எனவரி புகலக் கேளா வின்னதோ நிகழ்ச்சி யென்றா
னனையதற் பின்ன ராண்டை யமரர்கம் மியனை நோக்கி
வனைகழற் சூர பன்மன் மற்றியா முறைதற் கொத்த
புனைதிரு நகரம் வல்லே புரிமதி புலவ வென்றான்.

(இ-ள்.) என்று திருமால் கூறியதனைக் கேட்டு நிகழ்ந்த திவ்வாறோவென்று கூறினான்; அதன்பின்பு, வீரக்கழலையணிந்த சூரபன்மன் அவ்விடத்தில் வந்து நிற்கின்ற தேவதச்சனைப்பார்த்துத் தேவதச்சனே! யாம் வசிப்பதற்குத் தக்க அலங்காரத்தோடு கூடிய நகரத்தை விரைவிற் செய்யக்கடவையென்று கூறினான்.—எ-று.

சூரபன்மன் உருத்திரர்களைக் கண்டவுடனே தனக்கு வரமளித்த சிவபெருமானைப் போன்றவர்கள் எண்ணிறந்தவர்களுண்டோ என்று கருதியிருந்த சந்தேகத் திருமால் கூறிய கதையாலறிந்து தெளிந்து,இவ்வுருத்திரர்களெல்லாம் பசுக்களே;பசு

பதியல்லவொன்று துணிந்தானென்பதை உணர்த்துவார் 'அன்னதோ நிகழ்ச்சி என்றான்' என்றார். (க)

என்றலுங் கடவுட் டச்ச னிறைஞ்சியே நுமக்குச் செய்யும்
வென்றிகொண் மூதா ருக்கு வியலிட முரைத்தி யென்ன
நன்றெனப் புகரோன் றானே நகர்களுக் கெல்லை கூற
வன்றவை வினவித் தென்பா லளக்கரை யடைந்தா னன்றே.

(இ-ள்.) என்று கூறியவுடன் தேவதச்சன் சூரபன்மனை வணங்கித் தாங்கள் வெற்றியுடன் வசித்தற்குத் தக்க பெரிய இடத்தைக் கூறக்கடவீரென்று கூறுதலும், அதனைக் கேட்ட சுக்கிரன் நல்லதென்று தானே செய்யவேண்டிய நகரங்களுக்கு எல்லைகளை யுரைக்க, அவற்றைக் கேட்டுத் (தேவதச்சன்) தென்கடலை யடைந்தனன்.—எ-று. (உ)

ஆசறு கடலி னூடே யயுதமோ ரெட்டா யுள்ள
யோசனை யெல்லை முன்னோ னுறுநக ராகக் கோலிக்
காசினி வரைக டம்மாற் கதுமெனத் தூர்த்து மிக்க
பாசறை கொண்டே யொப்ப வணித்தலம் படுத்துப் பின்றை.

(இ-ள்.) குற்றமற்ற தென்றிசைக்கடலில் எண்பதினாயிர யோசனை விஸ்தீரணமாகச் சூரபன்மனிருப்பதற்கு நகரமாக வேற்படுத்தி, பூமியிலுள்ள மலைகளால் விரைவாக நிரப்பி, மிகுந்த பசிய பாறைகளைக் கொண்டு பூமியைச் சமப்படுத்திப் பின்பு.—எ-று.

இதுமுதல் இருபதுபாடலுங் குளகம். (ங)

காயுறு கதிர்கள் காஞ்சிக் கம்பைமா நீழல் வைகு
நாயகி நகர மென்ன நாடொறுஞ் சூழு மாற்றாற்
சேயுயர் விசும்பிற் போகச் செம்பொனான் மதிலைச் செய்து
வாயில்க ணான்க மைத்து ஞாயிலும் வகுத்து நல்கி.

(இ-ள்.) ஒளிவீசுகின்ற சூரியன் முதலிய கிரகங்கள் காஞ்சீபுரத்தில் கம்பாநதியின் கரையிலுள்ள மாமரநீழலி லெழுந்தருளியிருக்கின்ற உமாதேவியாரது திருக்கோயிலைத் தினந்தோறுஞ் சூழ்ந்துவருவதைப்போலச் சுற்றிவரும்படி மிகவுமுயர்ந்த ஆகாயத்தை யளாவும்படிச் செம்பொன்னினால் மதில்களைச் செய்து நான்கு வாயில்களை யமைத்து மதிலுறுப்புக்களையும் அமைத்துச் செய்து.—எ-று. (ச)

நாற்பெரு வாயி லூடு மேருவே நண்ணிற் றென்ன
மாற்பெருங் கோபு ரங்கண் மணிவெயி லெறிப்ப நல்கி
நூற்படு மொழுக்க நாடி நூறியோ சனையொன் றாகப்
பாற்படு மாட வீதி பற்பல வமைத்து மன்னோ.

(இ-ள்.) பெரிய நான்கு வாயில்களிலும் மகம்மேருவே வந்து நின்றாற்போல மிகப் பெரிய கோபுரங்களை இரத்தினப்பிரகாசம் வீசும்படி யமைத்து, சிற்பநூலிற் சொல்லப்பட்ட முறைமைப்படி யாலோசித்து நூறியோசனை நீளமாகப் பக்கத்திற்பொருந்திய பல மாடவீதிகளை யுண்டாக்கி.—எ-று. (ரு)

முப்புர மொருங்குற் றென்ன மும்மதி லவற்று ணல்கி
யொப்பருந் திருவின் வீதி யுலப்பில புரிந்து சோமன்
வைப்பெனச் செம்பொன் மாடம் வரம்பில வகுத்து மாதர்
மெய்ப்படு மாடல் கூரும் வியலிடம் பலவுஞ் செய்து.

(இ-ள்.) முப்புரங்களும் ஓரிடத்திலிருந்தாற்போல அப்பெரிய நகரத்துள் மூன்று மதில்களை யுண்டாக்கி, ஒப்பற்றசெல்வத்தினையுடைய அநேக வீதிகளை யுண்டாக்கி, குபேரநகரத்தைப்போலச் செம்பொன் மயமாகிய அளவற்ற மாளிகைகளை யுண்டாக்கி, மாதர்கள் நடனஞ் செய்கின்ற பெரிய பல நாடகசாலைகளை யமைத்து.

மாளிகை தோறுந் தெற்றி மண்டப மணிசேர் முன்றில்
கோளரி தயங்கு பொற்பிற் கோபுரங் குன்ற மம்பொற்
சூளிகை யரங்க மன்றஞ் சுடருமேற் றலங்க ளே
சாளரஞ் சோலை வாவி தனித்தனி யாகத் தந்து

(இ-ள்.) மாளிகைகள்தோறும் திண்ணை, மண்டபம், அழகிய முற்றம், சிங்கங்கள் விளங்குகின்ற அழகிய கோபுரம், செய்குன்று, அழகிய சூளிகை, சபை, மன்றம், விளங்குகின்ற மேல்மாடிகள், தூய்மையாகிய சாளரங்கள், சோலை, தடாகம், என்னுமிவைகளைத் தனித்தனியே யுண்டாக்கி.—எ-று. (எ)

வேறு.

ஆயத னடுவுற வ்யுத வெல்லையிற்
பாயதோர் நெடுமதில் பயில நல்கியே
மாயவ டிருமகன் வைக வாங்கொரு
கோயிலை யெழில்பெறக் குயிற்றி னானரோ.

(இ-ள்) அதன்மத்தியில் பதினாயிரம் யோசனை விஸ்தீரணமுள்ளதாய் அகன்ற ஒருபெரிய மதிலைப்பொருந்தும்படி யுண்டாக்கி, அவ்விடத்தில் சூரபன்மன் வசித்தற்கு ஓரரண்மனையை அழகுபொருந்தச் செய்தனன்.—எ-று. (அ)

வாரணம் விரவுதேர் மாக்கள் போந்திடுந்
தோரண வாயில்க டொடர்ந்த தெற்றிகள்
சீரணி தபனியச் சிகர கோபுரங்
காரணி மணிவரை கவின்கொள் சூளிகை.

(இ-ள்.) யானை, இரதம், குதிரை இவைகள் செல்லுகின்ற தோரணவாயில்கள், தொடர்ச்சியாயுள்ள திண்ணைகள், சிறப்புப்பொருந்திய பொன்மயமாகிய சிகரங்களையுடைய கோபுரங்கள், மேகங்கள் பொருந்திய மணிமயமாகிய செய்குன்றுகள், அழகுபொருந்திய முகப்புக்கள்.—எ-று. (௯)

ஆனைகள் பயிலிட மயங்கள் சேரிடஞ்
சேனைக ளுறைவிடந் தேர்கள் வைகிடந்
தானவர் தலைவர்கள் சாருந் தொல்லிட
மேனைய வரக்கர்க ளினிது சேரிடம்.

(இ-ள்.) ஆனைக்கூடங்கள், குதிரை லாயங்கள், சேனைகள் வசிக்குமிடம், இரதங்கள் தங்குமிடம், அசுரத்தலைவர்கள் வசிக்கின்ற பெரிய இடம், மற்றைய அசுரர்கள் இனிமையாகச் சேர்ந்திருக்குமிடம்.—எ-று. (௧௦)

நாடரும் விசும்புறை நாரி மாரொலா
மாடலை யியற்றிடு மரங்க மண்டபம்
பாடலின் முறைபயில் பைம்பொன் மண்டம்
மாடக யாழ்முரல் வயிர மண்டபம்.

(இ-ள்.) நினைத்தற்கரிய சுவர்க்கத்தில் வசிக்கின்ற அரம்பையர்களெல்லாம் நடனஞ் செய்கின்ற நாட்டிய மண்டபம், முறைப்படி பாடல்களைப் பாடுகின்ற பசிய பொன்மண்டபம், முறுக்காணிகளையுடைய வீணைகளை வாசிக்கின்ற வயிர மண்டபம்.

மயில்புற வோதிமம் வன்ன மென்கிளி
குயின்முத லாகிய குலவு மண்டப
மியிலுறு யூகமா னிரலை செச்சைகள்
பயிலுறு வாரணம் பரவு மண்டபம்.

(இ-ள்.) மயில், புறு, அன்னம், கிளி, குயில் முதலிய பக்ஷிகள் விளங்குகின்ற மண்டபம் ஒழுங்கான கருங்குரங்கு, மான், செம்மறிக்கடா, கோழி முதலியவைகள் மிகுதியாயிருக்கின்ற மண்டபம்.—எ-று. (௧௨.)

சந்தத மறையொலி தழங்கு மண்டப
முந்திய வேள்விக்கண் முயலு மண்டப
மந்திர வியல்பினோர் மருவு மண்டப
மிந்திரன் முதலினோ ரிருக்கு மண்டபம்.

(இ-ள்.) சதாகாலமும் வேதாத்தியயனம் செய்கின்ற மண்டபம், உயர்ந்த யாகங்களை நடத்துகின்ற மண்டபம், மந்திரோபாஸிகள் வசிக்கின்ற மண்டபம், இந்திரன் முதலானவரிருக்கின்ற மண்டபம்.—எ-று. (௧௩)

திருமிகு நிருதர்கோன் றேவர் போற்றிட
வரசியல் புரியுமத் தாணி மண்டப
மிருநிதி யுளவெலா மீண்டு மண்டபம்
பரனருள் படைக்கலம் பயிலு மண்டபம்.

(இ-ள்.) மிக்க செல்வத்தினையுடைய சூரபன்மன் தேவர்கள் துதிக்கும்படி அரசுசெய்கின்ற அத்தாணி மண்டபம், பெரியசெல்வங்களெல்லாம்நிறைந்திருக்கின்ற மண்டபம், சிவபெருமானளித்த ஆயுதங்களைவைத்திருக்கின்ற மண்டபம்.—எ-று. ()

அருந்துறு மமிர்துறழடிசின் மண்டப
நரந்தையே பாளித நறைகொள் சாந்தகில்
பெருந்துவர்க் காயடை பிறவுஞ் சாலவு
மிருந்திடு கின்றபே ரெழில்கொண் மண்டபம்.

(இ-ள்.) உண்ணப்பட்ட தேவாமிர்தத்தை யொத்த அன்னங்களைச் சமைக்கின்ற மண்டபம், கருப்பூரம், மணம்பொருந்திய சந்தனம், அகில், பாக்கு, வெற்றிலைமுதலானவைகள் மிகுதியாக இருக்கின்ற மிக்க அழகுபொருந்திய மண்டபம்.

மானனை யார்பலர் மருவு மண்டப
மானதோ ளூசலாட் டயரு மண்டபம்
பானிலா வுமிழ்தரு பளிங்கின் மண்டபம்
வானுயர் சந்திர காந்த மண்டபம்.

(இ-ள்.) மானைப்போன்ற விழியினையுடைய பல மாதர்கள் வசிக்கின்ற மண்டபம், ஊஞ்சல்விளையாட்டுமண்டபம், பால்போலும் நிலாவொளி வீசுகின்ற பளிங்கு மண்டபம், ஆகாயத்தை யளாவுகின்ற சந்திரகாந்த மண்டபம்.—எ-று. (௧௬)

மாமணி யொளிர்தரு வசந்த மண்டபங்
காமரு பவளமார் கவின்கொண் மண்டப

மேமரு மரகதத் தியன்ற மண்டபந்
தாமரை யுயிர்த்திடு தரள மண்டபம்.

(இ-ள்.) பெரிய இரத்தினப்பிரகாசம்வீசுகின்ற வசந்த மண்டபம், சந்தோஷத்தைத் தருகின்ற மரகதத்தாற்செய்தமண்டபம், தாமரை முத்துக்களால் செய்த மண்டபம்.—எ-று. (கஎ)

கோவியன் மரபினோர் கொள்கைக் கேற்றன
யாவையு நல்கியே யிதனுக் குள்ளுற
மாவுறு சூரபன் மாவுந் தன்குலத்
தேவியு முறையவோ ருறையுள் செய்தரோ.

(இ-ள்.) இராஜ வியல்புக்குத் தக்கவர்களது தன்மைக்கேற்றனவாகிய யாவற்றையும் உண்டாக்கி, இதன் நடுவில் திருமகள் விலாசம் பொருந்திய சூரபன்மன் தனது மனைவியுடன் வாழ ஒரு அந்தப் புரங்கட்டி.—எ-று. (கஅ)

இங்கிது சூழ்தர வெண்ணி லாதன
மங்கல நிறைதரு மாட வீதிக
ளங்கவன் றுணைவிய ராகி வந்திடு
நங்கையர் மேவர நலத்தி னல்கியே.

(இ-ள்.) இங்கு இதனைச்சூழ அநேகம் மங்கலகரம் பொருந்திய உப்பரிகை வீடுகளை சூரபன்மனது மனையாட்டியராக வருபவர்கள் வாசஞ் செய்யும்பொருட்டு செவ்வையாக உண்டாக்கி.—எ-று. (கக)

காவியுங் குமுதமுங் கமல முஞ்செறி
வாவிக ளோடைகள் பொய்கை வான்றொடு
பூவிய றண்டலை பொலன்செய் குன்றுடன்
யாவையு முறைபட வியற்றி னனரோ.

(இ-ள்.) செங்கழுநீரும் அல்லியும் தாமரையும் நெருங்கிய வாவிகள் ஓடைகள் பொய்கைகள் என்பனவற்றையும், பூக்களுடன் பொருந்திய சோலைகளையும், அழகிய செய்குன்றுகளுடன் மற்றவைகளையும் முறைப்படி யுண்டாக்கி.—எ-று. (உ0)

அள்ளலந் திரைக்கட லகழி யாகவே
யுள்ளுறு நகரிடை யுறையுங் கோயிலிற்
றள்ளரும் பொன்சுடர் தழைத்த பொற்பினால்
வெள்ளிய தானது மேலைப் பொன்னகர்.

(இ-ள்.) சேற்றினையுடைய கடலை அகழாக உள்ளே யிருக்கின்ற நகரத்தினுள்ள அரண்மனையில் நீக்குதற்கரிய மிக்க பொன்னொளி அதிகரித்து விளங்கும் அழகினால் விண்ணுலகத்திலுள்ள பொன்னகரம் (பிரகாசக் குறைவால்) வெள்ளி போன்றதானது.—எ-று. (உக)

வேறு.

இன்னவையு மேனவையு மெண்ணிமனத் தாலருளித்
தன்னிகரி லவுணர்பிரான் சயத்தோடு பெருந்தலைமை
மன்னவரு தலின்வீர மகேந்திரமே யாமென்றே
யந்நகருக் கோர்நாம மணிபெறுத்தி யளித்தனனே.

(இ-ள்.) இவைகளையும் மற்றவைகளையும் நினைத்து நினைத்து மனதாலுண்டாக்கி தனக்கொப்பில்லாத சூரபன்மன் வெற்றியுடன் மிகுந்த உயர்வினை அடையும்

படிவருதலால் அந்த நகரத்திற்கு வீரமகேந்திரமென்னும் பெயரை அழகுபடுத்தி யிட்டனன்.—எ-று. (உஉ)

ஏமபுர மிமையபுர மிலங்கைபுர நீலபுரஞ்
சோமபுர மெனப்புகலுஞ் சுவேதபுர மவுணர்புரம்
வாமபுரம் பதுமபுர மகேந்திரமா புரமென்னுங்
காமர்புரத் தெண்டிசைக்குங் காட்சிபெற வுதவினன்.

(இ-ள்.) ஏமபுரம், இமையபுரம், இலங்காபுரம், நீலபுரம், சோமபுரம் என்று கூறப்படுகின்ற சுவேதபுரம், அசுரபுரம், வாமபுரம், பதுமபுரம் என்னும் எட்டையும் மகேந்திராபுரியின் எட்டுத் திக்குகளிலும் அழகுற வுண்டாக்கினன்.—எ-று. (உ௩)

மாண்டகுசீர் கெழுவீர மகேந்திரமிவ் வாறுதவி
யாண்டதுபோ லகன்பரப்பி லாசுரமென் றொருநகர
நீண்டவட கடனடுவ ணிருதர்புகழ்ந் திடுமாற்றாற்
காண்டகைய சியமுகக் காவலற்கு நல்கினனே.

(இ-ள்.) தக்க மாட்சிமையினையுடைய சிறப்புப்பொருந்திய வீரமகேந்திர புரத்தை இவ்வண்ணமமைத்து, பெரிய வடகடலின் நடுவில் அசுரர்கள் புகழும்படி வீரமகேந்திரபுரியைப் போலவே சுற்றளவினையுடைய ஒரு நகரத்தை யுண்டாக்கி அதற்கு ஆசுரம் என்று பெயரிட்டு அதனை காட்சியமைந்த சிங்கமுகாசுரனுக்கென்று உண்டாக்கினன்.—எ-று. (உ௪)

மற்றுளவெம் புணரிதொறும் வயின்வயின்சேர் தீவுதொறுங்
கொற்றமிகுஞ் சூரபன்மன் குலவுபெருந் தானையெலாஞ்
சுற்றமுடன் மேவுதற்குத் தொன்னகரம் பலவமைத்துக்
கற்றுணருஞ் சிறுவரொடுங் கம்மியன்மீண் டேகினனே.

(இ-ள்.) மற்றைய விருப்பத்தைத் தருகின்ற கடலிடங்களிலும், இடையிடையே பொருந்திய தீவுகளிலும் வெற்றிபொருந்திய சூரபன்மனது விளங்குகின்ற பெரிய சேனைகளெல்லாங் கூட்டமாக வசித்தற்கு அநேகம் பெரிய நகரங்களை யுண்டாக்கிவிட்டுத் தன்னிடத்தில் கேட்டுணர்கின்ற சிஷ்யர்கூட்டத்துடன் தேவதச்சன் திரும்பிவந்தனன்.—எ-று. (உ௫)

வேறு.

நீடு மேரு நெடுவரைத் தென்புடை
நாடு சீர்கெழு நாவலந் தீவினிற்
கூடு கின்றபொற் கூடந் தனக்கொரு
மாடு போந்தனன் மாமயன் றந்தையே.

(இ-ள்.) உன்னதமான பெரிய மேருமலையின் தென்புறத்தில் நினைக்கத்தக்க சிறப்புடன் விளங்குகின்ற சம்புத்தீவில் பொருந்திய ஏமகூட மலையினருகில் பெரிய மயனது தந்தையாகிய விசுவகன்மன் வந்தனன்.—எ-று. (உ௬)

பகரு கின்றவப் பாற்படு மெல்லையிற்
குறவர் போற்றிடுந் தாரகற் காகவே
மகிழ்வி னீரொடு மாயா புரமெனு
நகர மொன்றை யணிபெற நல்கினன்.

(இ-ள்.) சொல்லப்பட்ட அவ்விடத்திலுள்ள பூமியில் சந்தோஷத்துடன் மாயாபுரியென்னு மொருநகரத்தை அசுரர்கள் துதிக்கின்ற தாரகாசுரனுக்காக அழகு பொருந்த உண்டாக்கினன்.—எ-று. (உ௭)

வினையர் தம்மொடு விச்சுவ கன்மனு
மினைய வூர்க ளியற்றியம் மாயையின்
றனய னுக்கிவை சாற்றலு நன்றெனு
வனிக மோடங் கடைந்தன னென்பவே.

(இ-ள்.) கற்குந் தொழிலினை யுடையார்களுடன் விசுவகன்மன் இந்த நகரங்களையெல்லாஞ் செய்து மாயையின் புதல்வனாகிய சூரபன்மனுக்கு இவைகளைக் கூறுதலும், அச்சூரபன்மன் நல்லதென்று சேனைகளுடன் அவ்விடத்திற்குச் சென்றனன்.—எ-று.

அவ்விடத்திற்குச் சென்றானென்பது மகேந்திரபுரிக்குச் சென்றானெனக் கதைமுகத்தா லுணர்க. (உஅ)

நகர்செய்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ககூ0.

---

உ

முருகன்றுணை.

---

# பட்டாபிடேகப்படலம்.

மற்றவ் வீர மகேந்திர நண்ணியே
யுற்று நாடியவ் வும்பர்தங் கம்மியன்
கற்ற விஞ்சை வியந்து களிப்புறீஇக்
கொற்ற நீடுதன் கோயிலை நண்ணினன்.

(இ-ள்.) சூரபன்மன் வீரமகேந்திரபுரியை யடைந்து உற்றுநோக்கி, அத்தேவதச்சன் கற்ற வித்தையைப்புகழ்ந்து களிப்படைந்து, வெற்றிபொருந்திய தனது பெரிய அரண்மனையை யடைந்தனன்.—எ-று. (க)

நண்ணு கின்றுழி நான்முக னாதியாம்
விண்ணு ளோர்கள் வியன்முடி சூட்டுது
மண்ண லுக்கென் றவற்றிற்கு வேண்டிய
வெண்ணில் பல்பொருள் யாவுமுய்த் தாரரோ.

(இ-ள்.) அவ்வாறுஅடைந்தபொழுது இவ்வரசனுக்கு நாம்பெருமைபொருந்திய முடி சூட்டுவோமென்று பிரமன் முதலிய தேவர்கள் அந்தச் சடங்குகளுக்கு வேண்டிய அளவற்ற பல உபகரணங்களையுங் கொண்டுவந்து சேர்த்தார்கள்.—எ-று.

கோவி னண்ணிய கொற்றவன் மற்றொரு
தாவில் பீடிகை தன்மிசை வைகியே
மாவு லாவிய மால்கடற் றெண்புன
றேவ ராட்டச் சிறப்புட னாடினன்.

(இ-ள்.) அரண்மனைக்குள் வந்த அரசன் கெடாத ஒரு பீடத்தின்மீதிருந்து திருமகள் வசிக்கும் பெரிய கடலிலுள்ள தெளிந்த நீரினால் தேவர்கள் அபிஷேகிக்க அபிஷேகஞ் செய்துகொண்டனன்.—எ-று.

'மாவுலாவிய மால்கடற் றெண்புனல்'என்பதைத் திருமகள் வசிக்குந் திருப் பாற்கடலி னீரினல் அபிஷேகிக்க எனினுமாம். (ங)

ஆடி யம்பொனி னுடையு டீஇமலர்
சூடி யொண்கலன் றாயன பூண்டுபின்
பீடு சேர்தரு பின்னவர் பால்வர
நீடு காத னிருதர் புகழவே.

(இ-ள்.) பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு அழகிய பீதாம்பர மணிந்து மலர்களைச் சூடித் தூய்மையாகிய சிறந்த ஆபரணங்களைத் தரித்துப் பெருமைபொருந்திய தம்பிமார்கள் பக்கத்தில் வரவும் மிக்க விருப்பத்தினையுடைய அசுரர்கள் புகழவும்.—எ-று. (ச)

நிகரி லாத நிருதர்க் கிறைதொழப்
புகரு மாமுனி வோரும் புகழ்ந்திட
மிகந டுங்கிய விண்ணவர் போற்றிட
மகப திக்கு மனந்தளர் வெய்தவே.

(இ-ள்.) ஒப்பில்லாத அசுரேந்திரன் வணங்கவும், சுக்கிரனும் பெரிய முனிவர்களும் புகழவும், மிகுந்த நடுக்கங்கொண்ட தேவர்கள் துதிக்கவும், இந்திரனுக்கு மனத்தளர்ச்சி யுண்டாகவும்.—எ-று.

அசுரர் சம்பந்தத்தாற் சுக்கிரனை முனிவர்களுக்கு முன்னேகூறினர். (ரு)

வந்து சீய மணித்தவி சேறின
னந்த வெல்லையி லச்சுதற் காமெனு
மிந்தி ரத்திரு மாமுடி யேந்தியே
சுந்த ரத்தொடு நான்முகன் சூட்டினன்.

(இ-ள்.) இரத்தினங்களழுத்திய சிங்காசனத்தில் வந்தேறி யிருந்தனன். அப்பொழுது திருமால்சூட்டிக்கொள்வதற்குத் தக்கதென்று சொல்லக்கூடிய சிற்பநூற்படி செய்யப்பட்டுள்ள அழகிய மகுடத்தைப் பிரமதேவன் எடுத்து அழகுபெறுமாறு சூட்டினன்.—எ-று. (சு)

கண்டு தானவர் காசிபன் காதலன்
புண்ட ரீகப் பொலன்கழ றாழ்ந்தெழா
வண்டொ ணுமகிழ் வாலடுந் தேறலை
யுண்டு ளாரி னுளங்களிப் பெய்தினர்.

(இ-ள்.) அவ்வாறு மகுடஞ் சூடிக்கொண்டதை அசுரர்கள் பார்த்து, சூரபன்மனது அழகிய தாமரை மலர்போன்ற பாதங்களில் வணங்கி யெழுந்து, அடங்காத பெருமகிழ்ச்சியினல் காய்ச்சப்பட்ட மதுவை யுண்டவர்களைப்போல மனக்களிப் படைந்தார்கள்.—எ-று.

அடுந்தேறல் - சாராய முதலியன. (எ)

அன்ன வேலை யமரர் முனிவர்கள்
பொன்ன வாநறும் போது கரங்கொடே
மன்னர் மன்னன் மணிமுடி யின்மிசை
முன்னி வாழ்த்தி முறைமுறை வீசினர்.

(இ-ள்.) அப்பொழுது தேவர்களும் முனிவர்களும் நல்ல சுவர்ண புஷ்பங்களைக் கையிலெடுத்துக்கொண்டு,அரசர்க்கரசனகிய சூரபன்மனது அழகிய முடியின்

மீது சுபமுண்டாகக் கடவதென்று நினைத்து வாழ்த்தி வரிசை வரிசையாகச் சொரிந்தார்கள்.—எ-று.

'முன்னிவாழ்த்தி' என்பதைத் தங்கள் க்ஷேமத்துக் கழிவில்லாதிருக்க நினைத்து வாழ்த்தி எனினுமாம். (அ)

## வேறு.

பாங்குறு தவிசின் பாலிற் றுணைவர்பங் கயன்மா றம்மை
யீங்கினி திருத்தி சொன்ன விருந்தன ரேவ லாலே
யோங்கிய மகவான் கொண்டான் களாசியொண் ணிதியின் கோமான்
றாங்கின னடைப்பை மற்றச் சமீரணர் கவரி கொண்டார்.

(இ-ள்.) அவ்வசுரனது தம்பியர்களாகிய சிங்கமுகனும் தாரகனும் பிரமவிஷ்ணுக்களைப்பார்த்து அருகிலுள்ள ஆசனங்களிலிருங்களென்று கட்டளையிடவும் அவ்வாறே யிருந்தார்கள். பின்னர் அவர்களது கட்டளையால் உயர்வு பொருந்திய இந்திரன் தம்பலப்படிகமேந்தினன்; ஒள்ளிய செல்வத்தினையுடைய குபேரன் அடைப்பை யேந்தினன் ; வாயுக்கள் வெண்சாமரை வீசினார்கள்.—எ-று.

அடைப்பை - வெற்றிலைச்சஞ்சி. (௯)

நிருதர்தங் குரிசி லான நெடுந்தகை யுடைவாள் கொண்டான்
பரிதியு மதியு மங்கட் பனிக்குடை நிழற்றி நின்றார்
வருணனு மகாரு மால வட்டம்வீ சினர்யாழ் வல்ல
கருடர்கந் தருவர் சித்தர் கானமங் கிசையா நின்றார்.

(இ-ள்.) அவுணர்கள் தலைவனாகிய அசுரேந்திரன் உடைவாளேந்தினன்; சூரியசந்திரர்கள் அங்குக்குளிர்ந்த குடைபிடித்து நின்றார்கள்; வருணனும் அவன் புதல்வர்களும் ஆலவட்டம் வீசினார்கள் ; யாழில் வல்ல கருட காந்தருவ சித்தர்கள் கானம் பாடினார்கள்.—எ-று. (௧0)

முத்தலை யயில்வே லேந்தி முறைநெறி யாற்றுங் கூற்று
மெய்த்தழற் கடவு டானும் வேத்திர மேந்தி யாண்டு
மெத்திறத் தவரு நீங்க வெரிவிழித் திடியி னார்த்துப்
பத்தியி னிறுவிச் சூரன் பல்புகழ் பரவி நின்றார்.

(இ-ள்.) கூரிய முத்தலைச் சூலத்தையேந்தி தனது முறைமையைச் செலுத்துகின்ற இயமனும், மெய்ம்மையாகிய அக்கினிதேவனும் பிரம்பைப்பிடித்துக்கொண்டு எவ்விடத்திலுமுள்ள எத்தகையோர்களும் விலகும்படி தீப்போலவிழித்து இடியைப்போல ஆரவாரித்து சனங்களை வரிசையாக நிறுத்திச் சூரபன்மனது பலவகையாகிய புகழைத் துதித்து நின்றார்கள்.—எ-று. (௧௧)

குரைகழ னிருதி யென்போன் கோடிக மதுகைக் கொண்டா
னிருமைசேர் குரவர் தாமு மெல்லைதீர் முனிவர் யாருந்
திரைகெழு கங்கைத் தூநீர் செம்பொனங் கலசஞ் சேர்த்துத்
துருவையின் மறையால் வாங்கித் துவலைதூர்த் தாசி சொற்றார்.

(இ-ள்.) ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த நிருதி யென்பவன் அணிகலச் செப்பைக் கையிலேந்தினன்; தேவ குரு அசுரகுருவாகிய இருவர்களும் அளவற்ற முனிவர்களுமாகிய அனைவரும் அலைகள்மிக்க கங்காநதியின் தூய்மையாகிய நீரைச் செம்பொன்னாலாகிய அழகிய கலசத்தில் விட்டுக்கொண்டு அறுகம்புல்லினால் வேத மந்திரங்களைச்சொல்லி அள்ளித்தெளித்து ஆசி கூறினார்கள்.—எ-று. (௧௨)

அரம்பைமே னகையே மிக்க வுருப்பசி யாதி யாகி
வரம்பறு மமரர் மாதர் வான்முறை விதியி னடி
நரம்பியல் சுருதி பாட லியத்தொடு படிந்து நண்ணித்
திரம்பயி னடன மூன்றுஞ் செவ்விதிற் புரிய லுற்றார்.

(இ-ள்.) அரம்பை மேனகை மிக்க ஊர்வசி முதலிய அளவற்ற தேவமாதர்கள் கிரமப்படி ஆராய்ந்து நரம்பமைந்த சுதியினையுடைய பாடலை வாத்தியங்களுடன் கலந்து பொருந்தி உறுதிபொருந்திய மூவகை நடனங்களையும் அழகாகச்செய்யத் தொடங்கினார்கள்.—எ-று.

ஊர்வசியானவள்-அரம்பையர்களைக்காட்டிலும் சிறந்த அழகுடையவளாதலால்'மிக்க ஊர்வசி'என்றார். நடன மூன்றாவன—தேசிகம்-வடுகு-சிங்களம் என்பன.

இத்திற மமரர் யாரு மேனையர் தாமு மீண்டித்
தத்தம துரிமை தன்னைத் தவாநெறி தலைக்கொண் டாற்ற
மைத்தகு சூர பன்மன் மடங்கலந் தவிசின் மீதே
மெய்த்திரு நிகழ மன்னிப் பின்னிவை விளம்ப லுற்றான்

(இ-ள்.) இவ்வாறு சகல தேவர்களும் மற்றவர்களும் நெருங்கித் தங்கள் தங்களது தொழில்களை ஒழிக்காத முறைமைப்படி மிகுதியாகச்செய்ய, இருள்போன்ற சூரபன்மன் சிங்காசனத்தின்மேல் மெய்ம்மையாகிய அழகுண்டாகும்படியிருந்து பின்னர் இவைகளைக் கூறுவானாயினான்.—எ-று. (கசு)

பட்டாபிடேகப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கooசு.

---

உ
முருகன்றுணை.

---

# அரசுசெய்படலம்.

களித்திடு ஞிமிறும் வண்டுங் கலந்திட நறவம் பொங்கித்
துளித்திடு துழாய்மா றன்னைச் சூரனு மவுணன் பாரா
வளித்தவன் றன்மூ தாதை யாயினை யதனு னின்னை
விளித்திடு மெல்லை தோறும் விரைந்திவண் மேவு கென்றான்

(இ-ள்.) களிப்படைகின்ற ஆண்வண்டும் பெண்வண்டுஞ் சேரும்படித் தேன்பொங்கித் துளிக்கின்ற துளசிமாலையையணிந்த திருமாலைச் சூரபன்மன்பார்த்து நீ என்னைப்பெற்றவனுக்குப் பாட்டனாயிருக்கின்றனை யாதலால் உன்னையழைக்கும்போதெல்லாம் இங்கு விரைந்துவரக்கடவையென்று கூறினான்.—எ-று. (க)

செங்கம லத்தின் மேவுந் திசைமுகத் தொருவன் றன்னைத்
துங்கமோ டரசு செய்யுஞ் சூரனும் வீரன் பாரா
விங்குநின் மைந்த ரோடு மென்னிடந் தன்னி லேகி
யங்கமை வகையு நாளு மறைந்தனை போதி யென்றான்.

(இ-ள்.) செந்தாமரை மலரில் வசிக்கின்ற பிரமதேவனை உயர்வோடு அரசு செய்கின்ற சூரபன்மன்பார்த்து இவ்விடத்தில் நீ உனது புதல்வர்களுடன் என்னிடத்திற்குவந்து பஞ்சாங்கங்களையும் நாள்தோறும் சொல்லிவிட்டுப் போகக்கடவையென்று கூறினன்.—எ-று. (உ)

அறத்தினை விடுத்த தீயோ னருக்கனை நோக்கி நம்மூர்ப்
புறத்தினி லரண மீதாய்ப் போகுத லரிது கீழ்மே
னிறுத்திய சிகரி யூடு நெறிக்கொடு புக்கு வான்போ
யெறித்தனை திரிதி நாளு மிளங்கதிர் நடாத்தி யென்றான்.

(இ-ள்.) தருமத்தையொழித்த கொடிய சூரபன்மன் சூரியனைப்பார்த்து நீ நம்மூர்ப்புறத்திலுள்ள மதிலின் மேற்புறமாகச்செல்லுதல் கூடாது; கீழ்ப்புறத்திலும் மேற்புறத்திலு மமைக்கப்பட்டுள்ள கோபுரத்தினுள்ளே வழிக்கொண்டுபோய் ஆகாயத்திற்சென்று தினந்தோறும் இளங்கதிரை வீசி யெறித்துத் திரியக்கடவையென்று கூறினன்.—எ-று. (ங)

அறைகழற் சூர பன்ம னவிர்மதி தன்னை நோக்கிப்
பிறையென வளரு மாறும் பின்முறை சுருங்கு மாறு
மறைவொடு திரியு மாறு மற்றினி விடுத்து நாளு
நிறைவொடு கதிரோன் போலிந் நீணகர் வருதி யென்றான்.

(இ-ள்.) சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த சூரபன்மனனவன் விளங்குகின்ற சந்திரனைப்பார்த்து நீ இளம்பிறையாக விருந்துவளர்தலும் பின்னர் முறைப்படி சுருங்குதலும் தெரியப்படாமல் உலாவுதலும் விட்டு எப்பொழுதும் பூரணக்கலைகளுடன் சூரியனைப்போல இப்பெரிய நகரத்திற்கு வரக்கடவையென்று கூறினன்.—எ-று. (ச)

பொங்கழன் முதல்வன் றன்னைப் புரவலன் விரைவி னோக்கி
யிங்குநம் மூதூ ருள்ளோர் யாவரே யெனினு முன்னி
னங்கவர் தம்பா லெய்தி யவர்பணி யாவு மாற்றிச்
செங்கம லம்போல் யாவர் தீண்டினுங் குளிர்தி யென்றான்.

(இ-ள்.) மிகுந்தெரிகின்ற அக்கினிதேவனைச் சூரபன்மன் விரைவாகப் பார்த்து இங்கு நமது பழமையாகிய நகரத்திலுள்ளவர்கள் யாவராயினும் நினைப்பார்களாயின் அவர்களிடத்திற்சென்று அவர்களது ஏவலனைத்தையுஞ்செய்து யார் உன்னைத்தொட்டாலுஞ் செந்தாமரை மலர்போலக் குளிர்ந்திருக்கக் கடவையென்று கூறினன்.—எ-று.

குளிர்ச்சி மற்றையமலர்களுக்குண்டேனும் தீப்போன்றநிறம் செந்தாமரைக்கேயிருத்தலால், 'செங்கமலம்போல்' என்று கூறினர். (ரு)

சுடர்முடி யவுணர் செம்ம றூல்பெருங் கூற்றை நோக்கிப்
படிமுழு துயிரை நாளும் படுப்பது போல நந்தங்
கடமத கரியை மாவைக் கணிப்பிலா வவுணர் தம்மை
யடுவது கனவு முன்னு தஞ்சியே திரிதி யென்றான்.

(இ-ள்.) விளங்குகின்ற இரத்தினகிரீடத்தை யணிந்த சூரபன்மன் பழமையாகிய பெரிய இயமனைப்பார்த்து நீ உலகத்திலுள்ள உயிர்களையெல்லாங் கொல்வதுபோல நமது மதயானைகளையும் குதிரைகளையும் அளவற்ற அசுரர்களையுங் கொல்வதற்குக் கனவிலும் நினையாமல் பயந்து திரியக்கடவையென்று கூறினன்.—எ-று. (சு)

அண்டரு முலவை யானை யவுணர்மாத் தலைவன் பாரா
வெண்டரு நம்மூ தூரில் யாவரும் புனைந்து நீத்த
தண்டுளி நறவ மாலை தயங்குபூண் கலிங்கஞ் சாந்த
நுண்டுக ளாடு சுண்ண மாற்றுதி னொய்தி னென்றான்.

(இ-ள்.) அடைதற்கரிய வாயுதேவனை சிறந்த சூரபன்மன்பார்த்து மதிக்கத்தக்க நமது பழமையாகிய நகரத்திலுள்ள யாவர்களுந் தரித்துக் கழித்த குளிர்ச்சியாகிய தேனைச்சிந்துகின்ற பூமாலைகளையும், விளங்குகின்ற ஆபரணங்களையும், ஆடைகளையும், சந்தனப்பொடிகளையும்,பூசிக்கொள்ளுகின்ற பொற்சுண்ணங்களையும் விரைவாக நீக்கக்கடவையென்று கூறினான்.—எ-று. (எ)

காவலன் வருணன் றன்னைக் கண்ணுறீஇ நம்மூ தூரி
னுவிவெண் பளிதஞ் சாந்த நரந்தமோ டளாவித் தீம்பா
லாவியின் வெளிய நொய்ய வரும்பனி நீரிற் கூட்டித்
தூவுதி யிடங்க டோறுங் காற்றது துடைக்க வென்றான்.

(இ-ள்.) சூரபன்மன் வருணனைப்பார்த்து நீ நமது பெரியநகரத்தில் புனுகு வெள்ளிய கர்ப்பூரம் சந்தன (முதலியவைகளை) கஸ்தூரியுடன் கலந்து மதுரம்பொருந்திய பாற்புகையைப் பார்க்கிலும் வெண்மையும் நுண்மையுமாகிய அரிய பனிநீரிற் கலந்து வாயுவானவன் துடைக்க நீ தெளிக்கக்கடவையென்று கூறினான்.—எ-று.

வாசவன் றன்னை நோக்கி மால்கெழு திருவின் மேலோன்
றேசுறு துறக்கம் வைகுந் தேவர்தங் குழுவி னோடு
மாசையங் கிழவ ரோடு மருந்தவ ரோடும் போந்து
பேசிய பணிக ளாற்றித் திரிமதி பிழையே லென்றான்.

(இ-ள்.) மிக்க செல்வத்திற் சிறந்தவனாகிய சூரபன்மன் இந்திரனைப்பார்த்து நீ அழகுபொருந்திய சுவர்க்கத்தில் வசிக்கின்ற தேவர் கூட்டங்களுடனும் திக்குப்பாலகர்களுடனும் அரிய தவமுனிவர்களுடனும் வந்து நாம்சொல்லுகின்ற ஏவல்களைச்செய்து வசிக்கக்கடவை; இதனைத் தவறுதேயென்று கூறினான்.—எ-று.

' ஏனையர்களைக்காட்டிலும் இந்திரன் பெரும்பகைவனாதலால்-அவனிடத்தில் சூரனுக்கிருக்கும் வயிரத்தைக்குறிப்பிக்க 'திரிமதிபிழையேல்' என்றான் என்றார்.(கூ)

இந்நெறி சூர பன்மன் யாவர்க்கும் வீற்று வீற்றுத்
தன்னுறு பணியி னிற்பான் சாற்றலு மனைய ரஞ்சி
யன்னது செய்து மென்றே யனையவா றொழுக வன்னான்
மன்னின னரசிற் பின்றை மணஞ்செய வுன்னி னானல்.

(இ-ள்.) இவ்வண்ணமாகச் சூரபன்மனானவன் யாவர்களுக்கும் தனித்தனியாகத் தனக்கிட்ட வேலைகளில் நிற்கும்படிச் சொல்லவும், அவர்கள்பயந்து அதனைச்செய்கின்றோமென்று அவ்வாறேநடக்கவும் அவன் அரசுசெய்துகொண்டிருந்தவனாய்ப் பின்பு கலியாணஞ் செய்துகொள்ளும்படி நினைத்தனன்.—எ-று. (க0)

மதிமுகத் திருவே போல்வாள் வானவர் புனைவன் றந்த
பதுமகோ மளையென் றோதும் பாவையைப் புகரோ னாடிச்
சதுர்முகன் முதலாந் தேவர் தானவர் பிறரும் போற்ற
விதிமுறை வதுவை செய்து விழைவொடு மேவி யுற்றான்.

(இ-ள்.) சந்திரனையொத்த முகத்தினையுடைய திருமகளைப்போன்றவளாகிய தேவதச்சன்பெற்ற பதுமகோமளையென்று கூறும் பெண்ணைச் சுக்கிரனும் பிர

மன்முதலிய தேவர்களும் அசுரர்களும் மற்றுள்ளவர்களும் பார்த்துத் துதிக்க வேத விதிப்படி கலியாணஞ் செய்துகொண்டு விருப்பத்துடன் கலந்திருந்தனன்.—எ-று.

அன்னதற் பின்னர் வானோ ரசுரர்கந் தருவர் சித்தர்
கின்னர ரியக்கர் நாகர் கிம்புரு டாதி யானோர்
கன்னிய ரளப்பி லாரைக் கடிமணஞ் செய்து கூடித்
துன்னுபன் மலர்த்தே னுண்ணுஞ் சுரும்பென வின்பந் துய்த்தான்.

(இ-ள்.) அதன்பின்பு தேவர்கள் அசுரர்கள் கந்தருவர்கள் சித்தர்கள் கின்னரர் இயக்கர் நாகர் கிம்புருடர் முதலாயுள்ளவர்கள் பெற்ற அநேகம் பெண்களைக் கலியாணஞ்செய்துகொண்டு புணர்ந்து, பொருந்திய பல மலர்களிலுள்ள தேனையுண்ணுகின்ற வண்டைப்போல இன்பத்தை யனுபவித்திருந்தான்.—எ-று. (கஉ)

அரிமுகத் தவுணர் வேந்தற் கந்தகன் மகளா யுள்ள
திருமிகு விபுதை தன்னைச் சீர்மணஞ் செய்து நல்கி
நிருதிதன் புதல்வி யான நேரிழை சவுரி தன்னைக்
கரிமுக விளவல் சேரக் கடிமணம் புரிவித் திட்டான்.

(இ-ள்.) அசுரராஜனை சிங்கமுகனுக்கு இயமன் புதல்வியாகிய அழகுமிக்க விபுதை யென்பவளைச் சிறந்த கலியாணஞ் செய்துகொடுத்து,பின்பு நிருதியின் புதல்வியாகிய சவுரியென்பவளைத் தம்பியாகிய தாரகாசுரனுக்குக் கலியாணஞ்செய்வித்தான்.—எ-று. (கரு)

இவ்வகை மணஞ்செய் பின்றை யிருதுணை யவரையு நோக்கி
மெய்வளம் பெறநுங் கட்கு விதித்திடு மூதூ ரேகி
யவ்விரு கோடி வெள்ள மனிகமோ டிருத்தி ரென்னுத்
தெவ்வடு சூர னன்னோர் செல்லுமா றேவி னானல்.

(இ-ள்.) இவ்வாறு கலியாணஞ்செய்ததன் பின்பு தனது இரண்டுதம்பிமார்களையும்பார்த்து நீங்கள் உண்மையாகிய வளப்பத்தையடையும்படி உங்களுக்கேற்படுத்திய பெரிய நகரங்களுக்குச்சென்று அந்த இரண்டுகோடி வெள்ளஞ் சேனைகளுடன் வசிக்கக்கடவீரென்று, பகைவர்களைக்கொல்லுகின்ற சூரபன்மன் அவர்களைச் செல்லும்படி யனுப்பினான்.—எ-று. (கசு)

ஏவியே தனது தானைக் கிறைவரிற் பலரை நோக்கி
நீவிர்க ளிரண்டு கோடி நீத்தமா மனிகத் தோடு
தீவுக டோறு மாழி யிடந்தொறுஞ் செய்த மூதூர்
மேவுதிர் விரைவி னென்னு வனையரை விடுத்தான் மன்னோ.

(இ-ள்.) தம்பிமார்களை யனுப்பிவிட்டுத் தனது சேனைத்தலைவர்களில் பலரைப்பார்த்து நீங்கள் இரண்டுகோடி வெள்ளஞ் சேனைகளுடன் தீவுகளிலும் கடலிடங்களிலுஞ் செய்துள்ள பெரிய நகரங்களுக்கு விரைவாகச்செல்லுங்களென்று அவர்களை யனுப்பினான்.—எ-று. (கஎ)

மாறிலாத் திசைக ளெட்டும் வானுல கேழு மிப்பாற்
கூறுபா தலங்கள் யாவு மொழிந்தவுங் குறுகி யேதன்
னீறிலா வாணை போற்ற வெல்லையி லவுணர் தம்மை
யாறெனுங் கோடி வெள்ளத் தனிகமோ டேகச் செய்தான்.

(இ-ள்.) மாறுபாடில்லாத எட்டு திக்குகளையும் மேலேழுலகங்களையும் கீழுள்ளனவாகச் சொல்லப்பட்ட பாதலங்களையும் மற்றுள்ள விடங்களையு மடைந்து அழியாத தனது அதிகாரத்தைச் செலுத்தும்பொருட்டு ஆறுகோடிவெள்ளஞ் சேனைகளுடன் அளவில்லாத அசுரர்களைப் போகும்படிச்செய்தனன்.—எ-று. (கஅ)

விட்டிடு காலை தானே விண்ணுமண் ணுலகுந் திக்கோ
டெட்டொடு பிலனே ழேழு மேனைய வரைப்பு மாகிக்
கிட்டின செறிந்து மொய்த்த கேடில்சீ ரவுணர் தானை
மட்டகல் வானம் பூத்த வுடுக்களின் மலிந்த வன்றே.

(இ-ள்.) அவ்வாறனுப்பிய பொழுதே விண்ணுலகமும் மண்ணுலகமும் அஷ்டதிக்குகளும் ஏழுபாதாளங்களும் மற்றை எவ்விடங்களுமாக நெருங்கிச்சென்று குற்றமற்ற சிறப்பினையுடைய அவுணர்சேனைகள் மொய்த்தனவாய் அளவுகடந்த ஆகாயத்திற் பூத்த நக்ஷத்திரங்களைப்போல நிறைந்தன.—எ-று. (கஎ)

எங்கணுந் தனது தானை யிடையறு தீண்ட லோடுந்
துங்கவெஞ் சூர பன்மன் றானுறை தொன்மூ தூரி
னங்கணே ரிலக்கம் வெள்ளத் தவுணர்த ந்தானை தன்னை
மங்கல விருக்கை தோறு மரபுளி யிருத்தி மன்னோ.

(இ-ள்.) எவ்விடங்களிலுந் தனது சேனைகள் வெள்ளிடையின்றி நிறைந்து நெருங்கவும் உயர்வுபொருந்திய கொடிய சூரபன்மனுனவன் தான் வசிக்கின்ற பெரியநகரத்தில் இலக்ஷம் வெள்ளம் அசுரர் சேனைகளை மங்கலகரமாகிய இடங்கள் தோறும் முறைமைப்படியமைத்து.—எ-று. (கஅ)

கரிபரி யாளி யெண்கு கடுவயப் புலியே யேன
மரிமனா முகத்து வீர ரவுணர்தந் தலைவ ரானோ
ரிருவகை நான்மை யோர்க்கு மெண்டிசை நகரு மீந்து
வருபடை யயுதத் தோடு மகேந்திரங் காக்கச் செய்தான்.

(இ-ள்.) யானை குதிரை யாளி கரடி புலி பன்றி சிங்கம் மான் என்றுகூறும் மிருகங்களின் முகங்களையுடைய அசுரர்கள் தலைவர்களாகிய எட்டுப்பேர்களுக்கும் ஏமபுர முதலிய எட்டு நகரங்களையுங்கொடுத்துப் பதினுயிரம் வெள்ளஞ் சேனைகளுடன் வீரமகேந்திரபுரியைக் காக்கும்படி செய்தனன்.—எ-று. (கக)

ஞாயில்கள் செறிந்த நொச்சி நாற்பெருந் தகைமைத் தான
வாயில்க டோறு நாப்பண் வளநக ரிஞ்சி தோறுங்
கோயிலி னிருக்கை தோறுங் குணிப்பிலா வீரர் தம்மை
நீயிர்கள் காமி னென்று நிலைப்பட நிறுவி யிட்டான்.

(இ-ள்.) உறுப்புக்களமைந்த மதிலினது பெரிய நான்குவாயில்களிலும், வளப்பம்பொருந்திய நகரத்தைச்சூழ்ந்துள்ள மதில்களிலும், அரண்மனையிடங்களிலும் அளவற்ற அசுரர்களை இவ்விடங்களை நீங்கள் காக்கக்கடவீர்களென்று நிலையாக நிறுத்தினன்.—எ-று. (உ0)

துர்க்குணன் றரும கோபன் றுன்முகன் சங்க பாலன்
வக்கிர பாலன் றீய மகிடனே முதலோர் தம்மைத்
தொக்கமந் திரிக ளாகத் துணைக்கொடே சூர பன்மன்
மிக்கவா னவர்கள் போற்ற வீற்றிருந் தரசு செய்தான்.

(இ-ள்.) துர்க்குணன் தருமகோபன் துன்முகன் சங்கபாலன் வக்கிரபாலன் கொடிய மகிடன்முதலானவர்களை நெருங்கிய மந்திரிகளாகத் துணைக்கொண்டு சூரபன்மனுனவன் சிறந்த தேவர்கள் துதிக்கும்படி வீற்றிருந்து அரசாட்சிசெய்தனன்.

அரசுசெய்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க0உரு.

உ

முருகன்றுணை.

# தேவரை யேவல்கொள் படலம்.

அரசு செய்தலு மந்தர நாதனுஞ்
சுரரு மேனை முனிவருந் தொக்குறீஇ
வரைசெய் மாட மகேந்திர மாபுரத்
தொருவ னேவலின் முன்ன மொழுகுவார்.

(இ-ள்.) மலைபோன்ற மாடங்களையுடைய பெரிய வீரமகேந்திராபுரியிலிருந்துகொண்டு சூரபன்மன் அரசுசெய்யும்பொழுது இந்திரனுந்தேவர்களும் மற்றைய முனிவர்களுங் கூட்டமாகச் சேர்ந்துவந்து அவன் ஏவுதற்கு முன்னமே செய்யவேண்டிய தொழில்களைக் குறிப்பாலுணர்ந்து நடந்துகொள்ளுவார்கள்.—எ-று. (க)

கொலைவல் சிங்க முகன்பதி குஞ்சரத்
தலைவன் மாப்பதி சார்ந்தவர் தம்பதி
பலவு மேகிப் பணித்தன வாற்றியே
யுலைவர் வைகலு மூசலி னீர்மையார்.

(இ-ள்.) தேவர்கள் நாள்தோறும் கொலைத்தொழிலில்வல்ல சிங்கமுகாசுரனிருக்கின்ற ஆசுரபுரத்திலும் தாரகாசுரனது பெரிய மாயாபுரத்திலும் மற்றைய அசுரர்களது நகரங்கள் பலவற்றிலுஞ்சென்று அவர்களிட்டவேலைகளைச் செய்துகொண்டு ஊஞ்சலாடுபவர்களைப்போல வருந்தித் திரிவார்கள்.—எ-று. (உ)

வேறு.

ஊனமுற்றோர் போலிவ்வா றுலைகின்ற காலத்தி லொருநாட் சூரன்
வானகத்துத் தலைவனையு மமரையும் வருகவென வலித்துக் கூவித்
தானவர்க்குத் தம்பியர்நீ ரவர்பணிநும் பணியன்றோ தரங்க வேலை
மீனனைத்துஞ் சூறைகொண்டு வைகலுமுய்த் திடுதிரென விளம்பி னானால்.

(இ-ள்.) தேவர்கள் இழிவடைந்தவர்களைப்போல இவ்வாறு வருந்தி யுலாவுகின்ற நாள்களில் ஒருநாள் சூரபன்மன் இந்திரனையுந் தேவர்களையும் வலிய வழைத்து நீங்கள் அசுரர்களுக்குத் தம்பிமார்களன்றோ? ஆதலால் அவர்கள் தொழில்களனைத்தும் உங்கள் தொழில்களன்றோ? கடல்மீன்கள் முழுவதையுங் கொள்ளையடித்துக் கொண்டுவந்து தினந்தோறுங் கொடுக்கக்கடவீர்களென்று கட்டளையிட்டனன்.எ-று.

உரைக்குமொழி யதுகேளா வனையரெலா முண்ணடுங்கி யுயங்கி வெள்கித்
திரைக்கடலின் மீன்றனக்குத் தருகென்று னிதற்கினிநாஞ் செய்வ தேதோ
விரைக்கமலத் தனிக்கடவு ளிப்படியு நந்தலையில் விதித்தா னென்னா
விரக்கமொடு மறுத்தலஞ்சி யத்திறமே புரிதுமென விறைஞ்சிப் போனார்.

(இ-ள்.) இவ்வாறு சூரபன்மன் கூறிய வார்த்தையைக் கேட்டுத் தேவர்களனைவரும் உள்ளே நடுக்கமும் வருத்தமும் வெட்கமுங்கொண்டு, இவ்வசுரன் அலைகளையுடைய கடலிலுள்ள மீன்களைப் பிடித்துவந்து தனக்குத் தரும்படிக் கட்டளை

யிட்டனன். இதற்கு இனி நாம் என்னசெய்யப்போகின்றோம்; நறுமணங்கமழுங் கமலாசனனாகிய பிரமன் இவ்வாறு செய்யவும் நமது தலையில் விதித்தானென்று விசனத்துடன் அதனை மறுத்தற்குப் பயந்து அவ்வாறே செய்கின்றோமென்று கூறி வணங்கிச் சென்றார்கள்.—எ-று. (ச)

போகின்ற நெறியின்க ணிமையவரும் புரந்தரனும் பொருமி யேங்கி
யாகின்ற தெமக்கேயோர் பழியன்றோ வனையதுவந் தணுகா முன்னர்ச்
சாகின்ற தேமிகவு மினிதாகு மெமக்கதுவுஞ் சாரா தந்தோ
வேகின்ற சிந்தையினோஞ் செய்வதெவ னெனப்புலம்பி வேலை புக்கார்.

(இ-ள்.) தேவர்களும் இந்திரனும் போகின்ற வழியில் விம்மி யேக்கமுற்று இவ்வாறு செய்வது நமக்கோர் பழியன்றோ? அப்பழிவந் தடைவதற்கு முன்னமே இறந்துவிடுவதே மிக்க நன்மை; நமக்கவ்விறப்பும் வராதே; ஐயோ! புழுங்குகின்ற மனத்தினையுடைய யாம் யாது செய்வோமென்று புலம்பிக்கொண்டே கடற்கரையை யடைந்தார்கள்.—எ-று. (ரு)

அவ்வேலை யிமையவர்கோன் வருணனெனுங் கடவுளைநின் றழையா விந்த
மைவேலை தனக்கிறைவ னீயன்றோ நின்னினுமோர் வலியா ருண்டோ
கைவேலைப் பணியியற்றித் திமிங்கிலமே முதலாய கணிப்பின் மீன்க
ளிவ்வேலை யேற்றுதியே லிடர்வேலைக் கரையிலெமை யெடுத்தி யென்றான்.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் தேவேந்திரன் கடற்கரையில் நின்றுகொண்டு வருணதேவனை யழைத்துச் சொல்லுகின்றனன்; இந்தக் கருங்கடலுக்குத் தலைவன் நீயன்றோ? நின்னினும் வலியவர்களுண்டோ? கையினால் வேலையைச் செய்து திமிங்கில முதலிய அளவற்ற மீன்களை இக்கரையிற் சேர்ப்பாயாயின், எம்மைத் துன்பக் கடலினின்றுங் கரையேற்றினவனாவாய் என்று கூறினான்.—எ-று. (சு)

வெள்ளைவா ரணக்கடவு ளுரைசெய்த மொழிகேட்டு விண்ணு ளோர்க்கு
வள்ளனீ யிரங்குதியோ வத்தொழில்யான் புரிவனென வருணன் கூறி
யள்ளல்வே லையுட்புகுந்து தனதுபெருங் கரதலத்தா லலைத்து வாரி
யுள்ளமீன் குலங்களெல்லாந் தடங்கரையில் வரையேபோ லுயர்த்த லுற்றான்.

(இ-ள்.) வெள்ளையானையையுடைய இந்திரன்கூறியவார்த்தைகளைக்கேட்டு, வருணதேவன்-தேவர்களுக்கரசனாகிய நீயோ வருந்துகின்றனை; அத்தொழிலை யான் செய்கின்றேனென்று கூறிச் சேற்றினையுடைய கடலிற் புகுந்து தனது பெரிய கைகளால் கலக்கிக் கடலிலுள்ள மீன் கூட்டங்களையெல்லாம் பெரிய கரையில் மலைபோலக் குவித்தனன்.—எ-று. (எ)

தடக்கடலின் வேலைதனில் வருணர்பிரா னொல்லைதனிற் றந்த மீனத்
தடுக்கன்முழு வதுநோக்கிக் கடவுளரை விளித்திவற்றை யாற்ற லாலே
யெடுப்பதுநுந்தொழிலென்றேயிந்திரன்றான்விளம்புதலுமிமையோரெல்லா
நடுக்கமுட னுளம்பதைப்ப விழிபனிப்பக்கரங்குலைத்து நாணுக்கொண்டார்.

(இ-ள்.) பெரிய கடலின் கரையில் வருணராஜன் விரைவாகக் கொண்டு வந்து சேர்த்த மீன்மலைகளை யெல்லாம் பார்த்துத் தேவர்களை யழைத்து இவைகளை வலுவாகச் சுமந்துகொண்டுபோவது உங்கள் தொழிலென்று இந்திரன் கூறுதலும், தேவர்களனைவரும் உடல் நடுக்கமும் மனப்பதைப்பும் கண்ணீரொழுகுதலு முடையவர்களாய்க் கரங்களை மறித்து நாணங்கொண்டார்கள்.—எ-று. (அ)

சின்னே திமிங் கிலகிலமீ னுதியமீ னடுக்கலினைத் தென்பால் வைகு
மன்னனுயிர் தனைவாங்கச் செங்கதிரோன் பெரும்புனலின் வடிவை வாட்டப்
பன்னகரா கியதிறத்தாற் பிணித்திடுமச் சுமையதனைப் பகட்டின் வேந்த
னின்னலுறு வானவர்பா லெடுத்தவவர் கொண்டேகி யிரங்கு கின்றார்.

(இ-ள்.) சின்னை, திமிங்கில முதலிய மீன்மலைகளை இயமன் உயிரை வாங்கவும், சூரியன் நீர்ப்பசையை வற்றச்செய்யவும், பாம்புகளாகிய கயிற்றினால் கட்டப்பட்ட அந்தச் சுமைகளை இந்திரன் வருந்துகின்ற தேவர்கள் தலையில் தூக்கிவைக்க அவர்கள் சுமந்துகொண்டே வருந்திச் செல்லுகின்றார்கள்.—எ-று.

தேவராஜனாகிய இந்திரனையன்றி யுள்ள ஏனைய தேவர்களெல்லாம் சுமையாளராகவே சென்றார்களென்பதை யுணர்த்த ‘பகட்டின் வேந்த - னின்னலுறு வானவர்பா லெடுத்த’ என்றார். (௯)

வேறு.

பன்னும் புகழ்ச்சூர பன்மனென்னுந் தீயவனால்
முன்னுந் துயர்க்கடலின் மூழ்கி முரணழிந்தேந்
துன்னும் பழியாந் தொழிலிதுவுஞ் செய்தனமா
லின்னும் படுவதொழி லேதோ வுணரேமே.

(இ-ள்.) சொல்லப்பட்ட புகழினையுடைய சூரபன்மனென்னுங் கொடியவனால் முன்புந் துன்பக்கடலில் மூழ்கி வலிமை குறைந்தோம்; பழிப்பினையுடைய இத்தொழிலினையுஞ் செய்தோம்; இன்னும் யாங்கள் செய்யவேண்டுவனவாக எத்தொழில்களுண்டாகுமோ அறிகிலோம்.—எ-று. (௧௦)

பேர்கின்ற நீலப் பிறங்கலனை யான்பணியா
லார்கின்ற தின்றோ ரலரே யஃதுயிரை
யீர்கின்ற தந்தோ விதியே யெமெக்கிதுவுந்
தீர்கின்ற கால முளதோநீ செப்பாயே.

(இ-ள்.) நடக்கின்ற நீலமலைபோன்ற சூரபன்மனது கட்டளையினாலுண்டாகிய பழிமொழியே எங்களுயிரைப் பிளக்கின்றது; ஐயோ! விதியே! எங்களுக்கு இதுவும் நீங்குங்காலமுண்டோ? நீ சொல்லக்கடவை.—எ-று. (௧௧)

பூவுலகந் தன்னிற் பொருந்துகின்ற மானுடரும்
பாவமென நூலிற் பகருகின்ற வித்தொழிலை
யேவர்புரி கின்றா ரெமக்கோவந் தெய்துமதோ
தேவ கதியி னிரயஞ் சிறப்புடைத்தே.

(இ-ள்.) நிலவுலகத்தில் வசிக்கின்ற மனிதர்களும் பாவத்தொழிலென்று சாஸ்திரங்களிற் கூறப்பட்ட இவ்விழிதொழிலை யாவர் செய்வார்கள்; எங்களுக்குத் தானோ இது வரவேண்டும்; ஓகோ! தேவசன்மத்தைப்பார்க்கிலும் நரகசன்மஞ் சிறப்புடையது.—எ-று. (௧௨)

தக்க துணராத தானவர்க டங்களினு
மக்களினுந் தாழ்வாம் வலைஞர்தொழில் செய்தனமா
லிக்ககன வாழ்வை விரும்பியே யாஞ்செய்த
மிக்க தவமும் வினையாய் விளைந்ததுவே.

(இ-ள்.) தகுதியாகிய காரியங்களை யுணராத அசுரர்களிலும் மனிதர்களிலுந் தாழ்ந்தவர்களாகிய வலைஞர்களது தொழிலைச் செய்தோம்; இவ்விண்ணுலகவாழ்வை விரும்பி நாம் செய்த மிகுந்த தவமும் பாவமாகவே விளைந்தது.—எ-று.

வலைஞர் என்போர் நீரில் வலையிட்டு மீன் பிடித்துச் சீவிப்போர். இவர்கள் கரையார் - செம்படவர் - நுளையர் - பாணர் - பரதவர் முதலியவர்கள். (கரு)

வேத நெறியை விலக்கினே மிக்குள்ள
போத நெறியா மதற்குப் புறம்பானேந்
தீதுடைய வெஞ்சூரன் சீற்றத்தாற் செப்புகின்ற
வேதநெறி செய்வேமே லெம்மினுயர்ந் தாரெவரே.

(இ-ள்.) நாம் வைதிகநெறிகளை விலக்கினோம்; மேலாயுள்ள ஞானமார்க்கத்திற்கும் புறம்பானோம்; கொடுமையினையுடைய சூரபன்மன் கோபத்தோடு கூறுகின்ற குற்றமான வழியிலேயே செல்லுவோமாயின் எம்மைக்காட்டிலுஞ் சிறந்தவர்கள் யாவர்?—எ-று. (கசு)

தேனுலவுந் தாருத் திருநிழற்கீ ழின்பமுறும்
வானவர்க ளென்றே மதிக்குந் தகைமையினே
மீனமொடு மீன்சுமந்தே யெல்லோர் களுநகைக்கத்
தானவர்முன் செல்வதினுஞ் சாதன்மிக நன்றுநன்றே.

(இ-ள்.) தேன் பொருந்திய கற்பகவிருக்ஷத்தின் அழகிய நீழலிலிருந்து இன்பத்தை யனுபவிக்கின்ற தேவர்களென்று மதிக்கத்தக்க தன்மையையுடைய நாம் இழிவாக மீனைச் சுமந்துகொண்டு எல்லோருஞ் சிரிக்கும்படி அசுரர்களுக்கெதிரிற் போவதைப்பார்க்கிலும் இறந்துபோவது மிகவும் நல்லது நல்லது.—எ-று. (சுஙி)

என்னு மொழிக ளியம்பிப் புலம்புற்றுத்
துன்னு நிருதர்புகழ் சூரன் றிருநகரின்
மன்னுதிசை யாளரொடும் வந்தனரா லவ்வளவி
லன்னசெயல் கண்டே யவுணருரை செய்குவார்.

(இ-ள்.) (தேவர்கள்) என்றித்தகைய வார்த்தைகளை யுரைத்துப் புலம்பிக்கொண்டு அசுரர்கள் நெருங்கித்துதிக்கின்ற புகழினையுடைய சூரபன்மனது அழகிய நகரத்திற்கு நிலைபெற்ற திக்குப்பாலகர்களுடன் வந்தார்கள்; அப்பொழுது அசுரர்களதனைப்பார்த்துக் கூறுகின்றார்கள்.—எ-று. (கசு)

மாதோயந் தன்னை வயிறலைத்து மற்றிவர்தா
மீதோ சிலமீன் றருகின் றனரென்பார்
மீதோ டியபரிதி வெய்யோன்முன் னுண்டவெறுங்
கோதோ வெமக்குக் கொணர்கின்றா ரென்றுரைப்பார்.

(இ-ள்.) சமுத்திரத்தைக் கலக்கி இவர்கள் இதோசில மீன்களைக்கொண்டு வருகின்றனரென்று கூறுவார்கள்; சிலர் ஆகாயத்திற் செல்லுகின்ற உஷ்ணம் பொருந்திய சூரியனுலுண்ணப்பட்ட கோதினையோ எங்களுக்குக் கொண்டுவருகின்றனரென்று கூறுவார்கள்.—எ-று. (கஎ)

தாங்கடற்குண் மீனந் தலைக்கொண்டு மேவுகின்றா
ரீங்கிவர்க்கு நாண மிலையோ சிறிதென்பார்
தீங்கிழைக்கின் யாரேனுஞ் செய்யாத தேதென்பார்
மூங்கையொத்து ளாரோ மொழியா ரிவரென்பார்.

(இ-ள்.) இவர்கள் கடலினிடத்துள்ள மீனைத் தலையிற் சுமந்துகொண்டு வருகின்றார்கள்; இவர்களுக்குச் சிறிதும் நாணமில்லையோவென்று கூறுவார்கள்; தண்டனைசெய்தால் யார்தாம் எதனைச் செய்யமாட்டோமென்பார் என்று கூறுவார்கள்; இவர்களென்ன ஊமர்களோ? பேசாதிருக்கின்றனரென்பார்கள்.—எ-று. (கஅ)

முந்துற்ற தொல்லை முழுநீரின் வேலைதொறும்
பந்தத் துடன்வாழ் பரதவரே செய்கின்ற
விந்தத் தொழிலு மிவர்க்குவரு மோவென்பார்
சிந்திப்ப தென்னே விதியின் செயலென்பார்.

(இ-ள்.) பழமையாகிய பெரிய கடற்கரைகள்தோறும் உறவினர்களுடன் வசிக்கின்ற பரதவர்களாற் செய்யப்பட்ட இம் மீன்பிடிக்குந் தொழில் இவர்களுக்கும் வருமோ வென்பார்கள்; நினைப்பதென்னே? இவை யனைத்தும் விதியின் செயலென்று கூறுவார்கள்.—எ-று. (கக)

வேத நெறிமுறைமை விட்டார் வினைசெய்யும்
பேதை நெறியே பிடித்தா ரிவரென்பார்
கோதுபடா நந்தங் குலத்தை மிகநலிந்தா
ரேதுபடா ரின்ன மிமையோ ரெனவுரைப்பார்.

(இ-ள்.) இவர்கள் வைதிகநெறி முறைமைகளை விட்டார்கள்; பாவத்தைச் செய்கின்ற மூடநெறியினையே கைக்கொண்டார்களென்று கூறுவார்கள்; குற்றமற்ற நமது வமிசத்தை மிகவும் வருத்தினார்கள் ஆதலால் இந்தத் தேவர்கள் இன்னும் எதனைத்தா னடையமாட்டார்களென்று கூறுவார்கள்.—எ-று. (உ0)

மண்ணோர் களுமிகழும் வன்பழிதன் பால்வரவும்
விண்ணோர்க் கிறைவன் விரைவினுயிர் விட்டிலனாற்
கண்ணோ பெரிது கருத்தோ சிறிதென்பார்
பெண்ணோ வலிதானே பேடோ வெனவுரைப்பார்.

(இ-ள்.) மண்ணுலகத்துள்ளவர்களும் இகழக்கூடிய கொடும்பழி தன்னை யடையவும் தேவர்களுக்கிறைவனாகிய இந்திரன் இன்னும் உயிர்விட்டானில்லை; இவ்விந்திரனுக்குக் கண்களோ மிகுதி; அறிவோ குறைவு என்று கூறுவார்கள்; இவன் பெண்ணோ? அலியோ? அல்லது பேடோ? என்று கூறுவார்கள்.—எ-று. (உக)

வேறு.

இந்த வாறு பலரு மியம்பிடப்
புந்தி நொந்து புலம்புபுத் தேளிர்க
டந்தி யூருந் தலைவனை முற்கொடு
வந்து தீயவன் வாய்தலுற் றாரரோ.

(இ-ள்.) பலரும் இவ்வண்ணமுரைக்க மனம் நொந்து வருந்துகின்ற தேவர்கள், வெண்ணிறம் பொருந்திய ஐராவதமென்னும் தேவயானையை வாகனமாகவுடைய இந்திரனை முன்னிலையாக்கிக்கொண்டு, கொடுந்தொழிலினையுடைய சூரபன்மனது வாயிலில் வந்து சேர்ந்தார்கள்.—எ-று. (உஉ)

பரிதி வேந்தன் பணிமுறை நாடியே
வருதி ரீண்டென்று வாயிலர் கூறிடப்
பொருதி ரைக்கடன் மீன்கொடு போய்ச்சுர
ரொருத னிப்பெருங் கோயிலு ளுய்த்தனர்.

(இ-ள்.) ஆக்கினாசக்கிரத்தினையுடைய சூரபன்மனது கட்டளையை யுணர்ந்து துவாரபாலகர்கள் வாருங்களென்றழைக்க, தேவர்கள் அலைவீசுகின்ற கடலினிடத்துள்ள மீன்களை வாரிக்கொண்டு சென்று ஒப்பற்ற அரண்மனைக்குட் சேர்த்தனர்.

எளித்த லெய்து மிமையவ ருய்த்தமீன்
றுளித்த தேன்றொடைச் சூர்முதல் காணுறீஇக்
களித்து வந்து கடவுளர் வைகலு
மளித்தி ரென்ன வழங்கிநென் றேகினர்.

(இ-ள்.) இழிந்த நிலைமையை யடைந்திருக்கின்ற தேவர்கள் சுமந்துகொண்டுவந்து சேர்த்த மீன்களைத் தேன்றுளிக்கின்ற பூமாலையை யணிந்த சூரபன்மன் பார்த்து மகிழ்வடைந்து, தேவர்களே' தினமுமிவ்வாறே கொண்டுவாருங்களெனவும், நல்லதென்று கூறிச் சென்றார்கள்.—எ-று. (உச)

என்று மாங்கவ ரிச்செய லாற்றியே
பொன்றி னாரிற் புலர்ந்து புலம்புறீஇத்
துன்று கின்ற துயர்க்கடன் மூழ்கியே
யொன்றும் வேத வொழுக்கமற் றாரரோ.

(இ-ள்.) அத்தேவர்கள் எந்நாளும் இவ்விழிதொழிலைச் செய்துகொண்டு இறந்தவர்களைப்போல வாட்டமுற்று புலம்புதலடைந்து நிலைபெற்ற துன்பக்கடலில் மூழ்கித் தாங்கள் கைக்கொண்டிருந்த வைதிக வொழுக்கங்களை விட்டார்கள்.

தேவரை யேவல்கோள்படல முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - கஎ௫௦.

---

உ

முருகன்றுணை.

---

# புதல்வரைப்பெறுபடலம்.

அதுபொழு தவுணர் கோமா னாற்றிய தவத்தின் சீராற்
பதுமகோ மளையென் றோதும் பாவைத னுதரம் போந்து
புதுமதிக் குழவி யேபோற் பொற்பொடு பொலிந்து முன்ன
மதலையங் கொருவன் வந்தான் மறலிக்கு மறலி போல்வான்.

(இ-ள்.) அக்காலத்தில் சூரபன்மன் செய்த சிறந்த தவத்தினால் பதுமகோமளை யென்பவளது வயிற்றின் வழியாய் இளஞ்சந்திரனைப்போல அழகுடன் விளங்கி இயமனுக்கும் இயமன் போல்பவனாய் வெளிப்பட்டு முதலில் ஒரு புதல்வன் பிறந்தனன்.—எ-று. (க)

வந்ததோர் மதலை தன்னை மன்னவர் மன்னன் காணூஉ
வந்தமின் மகிழ்ச்சி பொங்க வவுணர்தங் கிளைஞர்க் கெல்லா
நந்திய வெறுக்கை தன்னை நலத்தக வீச லுற்றா
னிந்திரன் முதலி னோரும் யாவரு மிடுக்க ணெய்த.

(இ-ள்.) பிறந்த புதல்வனைச் சூரபன்மன் பார்த்து அளவற்ற மகிழ்ச்சி யதிகரிக்க, அசுரர்களாகிய உறவினர்களுக்கெல்லாம் இந்திரன் முதலிய யாவரும் வருந்தும்வண்ணம் மிக்க செல்வங்களை நன்மை மிகும்படி வாரி யிறைத்தான்.—எ-று. (உ)

வீசிய பின்றை வானோர் மெல்லிய ரவுணர் மாத
ராசிகள் புகன்று போற்றி யன்னதோர் மைந்தன் றன்னைக்

காசொடு வயிர முத்தங் கதிர்பொலந் தொட்டில் சேர்த்தார்
மாசகன் மதிய மேபோற் பைப்பய வளர்த லுற்றான்.

(இ-ள்.) அவ்வாறு வீசியபின்பு, தெய்வப்பெண்களும் அசுரப்பெண்களும் ஆசிகூறி, அந்தப் புதல்வனைப் பொன்னும் வயிரமும் முத்தும் பிரகாசிக்கின்ற அழகிய தொட்டிலி லேற்றினார்கள்; அப்புதல்வன் களங்கமற்ற சந்திரனைப்போலக் கொஞ்சங் கொஞ்சமாக வளரத்தொடங்கினான்.—எ-று. (௩)

கட்டழ குடைய மைந்தன் கம்பலங் கொண்ட செம்பொற்
றொட்டிலிற் றுயிலு மெல்லை யொருபகற் சுடரி னென்றாழ்
விட்டதோர் நூழை தன்னான் மேவியே யனையன் மெய்யிற்
பட்டதங் கதனை நாடிப் பரிதியைச் சுளித்துப் பார்த்தான்.

(இ-ள்.) மிக்க அழகினையுடைய அந்தப் புதல்வன் மேற்கட்டியினையுடைய தொட்டிலில் தூங்குகின்ற சமயத்தில், ஒருநாள் சூரியனது வெயிலானது திறந்திருந்த பலகணியின் வழியாய் வந்து அவனுடம்பிற் பட்டது; அதனை யுணர்ந்து சூரியனைக் கோபித்துப் பார்த்தனன்.—எ-று. (௪)

பார்த்திடு கின்ற மைந்தன் பன்மணித் தொட்டி னின்றுஞ்
சேர்த்தெழுந் தண்டம் பாய்ந்து செங்கதிர்ச் செல்வற் பற்றிக்
கார்த்திடு புயங்கங் கவ்வும் படித்தெனக் கரத்திற் கொண்டு [டோ.
பேர்த்துமோ ரிறையில் வந்தான் றவத்தினும் பெரிதொன் றுண்

(இ-ள்.) அவ்வாறு நோக்கிய அந்தச் சிறுவன் பல மணிகளிழைத்த தொட்டிலினின்றுங் கோபத்துடனெழுந்து ஆகாயத்திற் பாய்ந்து சூரியனைப் பிடித்துக் கரும்பாம்பானது கௌவுந்தன்மையைப் போலக் கையிற் பிடித்துத் திரும்பவும் ஒரு க்ஷணநேரத்தில் வந்தனன்; ஆதலால், தவத்தினும் மேம்பட்ட தொன்றுண்டோ?

தானுறை யிருக்கை தன்னிற் றகுவர்கோன் றனயன் சாரா
வானதோர் செம்பொற் றொட்டி லணிமணிக் காலி னூடே
பானுவை வலிதிற் கட்டிப் பண்டுபோற் றுயின்றா னங்கண்
வானவ ரதனை நோக்கி மனம்வெரீஇ மறுக்க முற்றார்.

(இ-ள்.) தான் வசிக்கின்ற மாளிகைக்குச் சூரபன்மனது புதல்வன் வந்து செவ்விதாகிய பொன் தொட்டிலின் அழகிய இரத்தினக்காலினிடத்தில் சூரியனைப் பலமாகக் கட்டிவிட்டுப் பழயபடியே தூங்கினான்; அங்கிருந்த தேவர்கள் அச்செய்கையைப் பார்த்து மனங்கலங்கி வருத்தமடைந்தார்கள்.—எ-று. (௬)

பரிதிவிண் சேற லின்மைப் பிழைத்தலும் பார்தங் துள்ளோன்
கருதியிந் திரனே யேனைக் கடவுளர் யாருஞ் சூழ
நிருதர்கோன் றன்பால் வந்து நீடிருட் பகைவன் றன்னைத்
தருதிநின் மைந்தன் செய்த தனிச்சிறை நீக்கி யென்றான்.

(இ-ள்.) சூரியன் வானத்தில் வராமல் தவறுதலும், அதனைப் பிரமனுணர்ந்து இந்திரன் முதலிய மற்றைத் தேவர்களனைவருஞ் சூழ்ந்துவரும்படிச் சூரபன்மனிடத்திற்கு வந்து நின்புதல்வன் செய்த ஒப்பற்ற சிறையைத் தவிர்த்துச் சூரியனை விடுவிக்கக் கடவையென்று கூறினான்.—எ-று. (எ)

வேறு.

மறைபு ரிந்தநான் முகனிவை புகறலும் வானத்
திறைபு ரிந்திடு மிரவியை யென்மக னின்னே

சிறைபு ரிந்ததை யுணர்கிலே னவனது செய்யக்
குறைபு ரிந்ததென் பகர்தியென் றுரைத்தனன் கொடியோன்.

(இ-ள்.) வேதங்களை யுண்டாக்கிய பிரமன் இவ்வார்த்தைகளை யுரைக்கவும், சூரபன்மனானவன் ஆகாயத்தில் தனதரசுரிமையைச் செலுத்துகின்ற சூரியனை எனது புதல்வன் இப்பொழுது சிறைசெய்ததை யானறியேன்; அவன் அவ்வாறு செய்யச் சூரியன் என்ன குற்றஞ் செய்தனன்; சொல்லக்கடவையென்று கூறினான்.—எ-று.

சொற்ற வாசகங் கேட்டலு மாருயிர்த் தொன்மை
முற்று நாடிய நான்முக னின்மகன் முகமே
லற்ற மில்சுட ராதபந் தீண்டிய ததனாற்
பற்றி வெய்யவற் சிறைபுரிந் தானெனப் பகர்ந்தான்.

(இ-ள்.) சூரபன்மன் கூறிய வசனத்தைக் கேட்டவுடனே, அரிய உயிர்களினது பழைய வினைகளை நாடி யறிகின்ற பிரமன் உனது புதல்வனுடைய முகத்தின்மேல் அழியாத சூரியனது கிரணம் பட்டதனால் அச்சூரியனைப் பிடித்துச் சிறைசெய்தனனென்று கூறினான்.—எ-று. (க)

மகவு தன்செயல் கேட்டலுஞ் சூரபன் மாவாந்
தகுவர் கோன்மிக மகிழ்ந்துநீ ரென்மகற் சார்ந்து
மிகவு நன்மொழி கூறியே யாங்கவன் விடுப்பப்
பகல வற்கொடு போதிரா லீண்டெனப் பகர்ந்தான்.

(இ-ள்.) அசுரராசனாகிய சூரபன்மன் தன் புதல்வனது செய்கையைக் கேட்டவுடன் மிகவும் மகிழ்ந்து நீங்கள் என் மகனிடஞ் சேர்ந்து மிகவும் இனிய வசனங்களைக் கூறி இங்கே அவன் விடச் சூரியனை யழைத்துக்கொண்டு போங்களென்று கூறினான்.—எ-று. (கo)

கேட்ட நான்முக னன்றென விடைகொண்டு கிளர்பொ
னாட்டின் மேனகை முதலினோர் பாடலி னலத்தா
லாட்டு பொன்மணித் தொட்டிலின் மிசையுறு மண்ணன்
மாட்டு மேவிநின் றளவையி லாசிகள் வகுத்தான்.

(இ-ள்.) அதனைக் கேட்ட பிரமன் நல்லதென்று உத்தரவு பெற்றுக்கொண்டு பிரகாசிக்கின்ற பொன்னுலகத்துள்ள மேனகை முதலியோர்களது பாடலின் சிறப்பினால் ஆட்டுகின்ற பொன்னினாலும் மணிகளாலுமாகிய தொட்டிலிலிருக்கின்ற புதல்வனிடத்துச் சென்று நின்று அளவற்ற ஆசிமொழிகளை யுரைத்தனன்.—எ-று. (கக)

அன்பின் மைந்தனைப் புகழ்ந்துமுன் னிற்றலு மனையா
னென்பெ றும்பரி சுமக்கென வின்னதோ ரிரவி
துன்பு றுஞ்சிறை யகற்றுதி யென்றலுந் தொல்லோ
யுன்பெ ரும்படை தருதியேல் விடுவனென் றுரைத்தான்.

(இ-ள்.) விருப்பத்துடன் அச்சிறுவனைப் புகழ்ந்துகொண் டெதிரில் நிற்கவும், அவன் உங்களுக்கு யாது வேண்டுமென்று வினவுதலும், பிரமன் இந்தச் சூரியன் வருத்தமுற்றிருக்கின்ற சிறையினை நீக்கக்கடவையென்று கூறுதலும், அவன் பிரமனே! உனது பெரிய படையைத் தருவையாயின் விடுவன் என்று கூறினான். (கஉ)

உரைத்த மைந்தனுக் கயன்றன தகன்படை யுதவ
நிரைத்த செங்கதிர்ச் செல்வனை விடுத்தன னிருதன்

விளைத்த பங்கயக் கிழவனும் புதல்வனே வியந்து
பரித்தி யாலென வுதவினன் மோகவெம் படையே.

(இ-ள்.) அவ்வாறு கூறிய சிறுவனுக்குப் பிரமன் தனது பெரிய அஸ்திரத்தைக் கொடுக்கவும், அவ் வசுரகுமாரன் வரிசையாகிய சிவந்த கிரணங்களையுடைய சூரியனை விடுத்தனன்; உடனே நறுமணங்கமழுந் தாமரைநாயகனுகிய சூரியனும் அவனைப் புகழ்ந்து நீ பெற்றுக்கொள்ளக்கடவையென்று மோகனுஸ்திரத்தைக் கொடுத்தனன்.—எ-று. (கரு)

படைய ளித்தலும் பகலொடு பங்கயத் தவற்கு
விடைய ளித்தனன் ருதையத் தன்மையை வினவி
நடைய ளித்தனன் புதல்வனுக் கன்னதோர் நன்ன
ளிடைய ளித்தனன் பானுகோ பன்னெனு மியற்பேர்.

(இ-ள்.) தனக்கு அஸ்திரங்களைக் கொடுத்தவுடன், சூரியனுக்கும் பிரமனுக்கும் விடைகொடுத்தனன்; அவன் பிதாவாகிய சூரபன்மன் அத்தன்மையைக் கேட்டு அவர்கள் செல்லும்படி உத்தரவளித்தனன்; அந்தப்புதல்வனுக்கு அச் சுபதினத்தில் பானுகோபனென்னுஞ் சிறந்த பெயரையிட்டனன்.—எ-று. (கசு)

பானு கோபனென் றெருபெயர் பெற்றவப் பாலன்
மானே நேர்விழி மங்கையர் மதனென மயங்க
வான பேருரு வெய்தியே யம்புயத் திருவின்
கோனெ டேபொரு தவன்றனைப் பெருந்திறல் கொண்டான்.

(இ-ள்.) பானுகோபனென்று ஒப்பற்ற பெயரைப்பெற்ற அந்தப் புதல்வன், மான்போலுங் கண்களையுடைய மாதர்கள் இவன் மன்மதனென்று மயங்கும்படியான அழகிய பெரிய வடிவத்தை யடைந்து, தாமரைமலரில் வாழுந் திருமகள் நாயகனுகிய விஷ்ணுவினுடன் போர்செய்து அவரை வெற்றிபெற்றனன்.—எ-று.

பரிதி யின்பகை யாமிவற் பெற்றபின் பரிவா
னிருதர் காவல னங்கிமா முகத்தனை நிறஞ்சே
ரிரணி யன்றனை வச்சிர வாகுவை யெழிலார்
மருவு லாங்குழற் பதுமகோ மளைதர மகிழ்ந்தான்.

(இ-ள்.) சூரியன் பகைவனுகிய இப் பானுகோபனைப் பெற்றபின்பு சூரபன்மன் விருப்பத்துடன் அக்கினிமுகாசுரனையும் ஒளிபொருந்திய இரணியனையும், வச்சிரவாகுவையும் அழகும் மணமும் பொருந்திய கூந்தலையுடைய பதுமகோமளையானவள் புதல்வர்களாகப் பெற்றமையால் மகிழ்வடைந்தனன்.—எ-று. (கசு)

மைத்த கூர்விழி யேனைய தேவியர் மகிழ்வா
னுய்த்து நல்கிடச் சூரனும் வெய்யவ னெருங்கே
பத்து நூறுள மும்மைசேர் பாலரைப் பயந்தா
னித்தி றத்தவர் தம்முட னங்கண்வீற் றிருந்தான்.

(இ-ள்.) மை தீட்டப்பட்ட கூரிய கண்களையுடைய மற்றைத் தேவிமார்கள் மகிழ்வுடன் சேர்ந்து பெற, கொடியவனுகிய சூரபன்மன் ஏககாலத்தில் மூவாயிரம்புதல்வர்களைப் பெற்று அப் புதல்வர்களுடன் அம் மகேந்திராபுரியில் வீற்றிருந்தனன்.—எ-று. (கஎ)

வேறு.

சீற்ற முற்றிடு சிங்க முகன்கணே
தோற்றி னுன்தி சூரனென் ஞேர்மகன்
வீற்று நூற்றுவர் மேவின ரன்னவ
ராற்றல் யாவ ரறைந்திட வல்லரே.

(இ-ள்.) மிக்க கோபத்தினையுடைய சிங்கமுகாசுரனிடத்தில் அதிசூரனென்று ஒரு புதல்வன் பிறந்தனன்; இதுவன்றி வேறு நூறுபிள்ளைகள் பிறந்தார்கள்; அவர்களது வல்லமையை யாவரறியவல்லவர்கள்.—எ-று. (கஅ)

அந்த நாளி லவன்ற னிளவலாந்
தந்தி மாமுகத் தாரகன் றன்னிடை
முந்து செய்தவ மொய்ம்பினோர் மாமகன்
வந்து தோன்றினன் வான்கதிர்ப் பிள்ளைபோல்.

(இ-ள்.) அக்காலத்தில் அச்சிங்கமுகன் றம்பியாகிய யானை முகத்தினையுடைய தாரகாசுரனிடத்தில் தான் முன்புசெய்த தவத்தின் வல்லமையால் ஆகாயத்தி லுலாவுகின்ற பாலசூரியனைப்போல ஒரு சிறந்த புதல்வன்வந்து பிறந்தனன். (கக)

ஆமி வன்ன சுரேந்திர னென்றவற்
கேம மான சூரவ னிசைப்பவந்
நாம மெய்தி நலம்பெறு காளையாய்க்
காம னென்னக் கவின்றனன் யாக்கையே.

(இ-ள்.) இவன் அசுரேந்திரனென்று இன்பம் பொருந்திய சுக்கிராசாரியர் நாமகரணஞ்செய்ய அந்தப் பெயரைப் பெற்று நன்மைமிக்க காளைப்பருவமுடையவனாய் மன்மதனைப்போலச் சரீரலக்ஷணமுடையவனாயினன்.—எ-று. (உ0)

ஓத ருங்கலை யாவு முணர்கினு
மேத மாவதோர் விஞ்சை யியற்றிடான்
பாத கம்புரி யான்பழி பூண்கிலா
னீதி யன்றி யெவையு நினைகிலான்.

(இ-ள்.) இவ்வசுரேந்திரன் ஓதுதற்கரிய எல்லாக்கலைகளையு முணர்ந்தவனாயினும் குற்றம் பொருந்திய எந்த மாயவித்தைகளையுஞ் செய்யமாட்டான்; பாதகஞ் செய்யான்; பழியை மேற்கொள்ளான்; நீதியையன்றி வேறே அநியாயங்களைச் சிறிதும் நினையான்.—எ-று. (உக)

வீறு கொண்டகல் வீரம் புகன்றெதிர்
மாறு கொண்டவ ருண்டெனின் மற்றவ
ரீறு கொண்டிட வேற்றுர மேற்படை
யூறு கொண்டிட வுன்னுந் தகைமையான்.

(இ-ள்.) பெருமைகாட்டிப் பகைத்து வீரம்பேசி எதிரில் நின்று போர்புரிபவர்களுண்டாயின் அவர்களழியும்படி யெதிர்த்து மார்பில் அஸ்திரகாயம் படும்படி நினைக்குந் தன்மையினையுடையவன்.—எ-று. (உஉ)

சிகர மெண்ணில் சேட்படு கள்ளிதா
னகரு நல்கி யமர்ந்தென வன்னதோர்
மகனை நல்கி வளங்கெழு மாயமா
நகர வாழ்க்கையி னண்ணினன் றாரகன்.

(இ-ள்.) அநேகங் கிளைகளையுடைய உயர்ந்த சதுரக்கள்ளியானது அகிற் கட்டையை யுண்டாக்கிக்கொண்டிருந்தாற்போல அவ்வசுரேந்திரனைப் பெற்றுத் தாரகாசுரன் வளப்பமிக்க மாயமாநகரத்தில் வாழ்ந்துகொண்டிருந்தனன்.—எ-று. (உரு)

பல அகில்களில் சதுரக்கள்ளி வைரமாகிய அகிலும் ஒன்று.

புதல்வரைப் பெறு படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கoஎரு.

---

உ
முருகன்றுணை.

---

# வில்வலன் வாதாவிப் படலம்.

அன்னவ ருடன்வந்தா ளசமுகி யெனுநாம
மன்னின ளொருவன்றன் மனையெனு முறையில்லா
டன்னிறை தவிர்கின்றா டருமம திலாள் வானோர்
பன்னியர் தமைமுன்னோர் படர்புய முறவுய்ப்பாள்.

(இ-ள்.) அச்சுராதிகளுடன் பிறந்தவள்; அசமுகி யென்னும் பெயரினையுடையவள்; ஒருவனுக்கு மனைவியென்னும் முறையில்லாதவள்; தனது கற்பு நீங்கினவள்; தருமமில்லாதவள்; தேவர்களது மனைவிமார்களைத் தன் தமயன்மார்களது பெரிய புயங்களைச் சேரச்செய்கின்றவள்.—எ-று. (க)

ஆள்வினை புரியுள்ளத் தவமுனி வரராற்றும்
வேள்விகை யுறும்வண்ணம் வெந்தொழில் புரிகின்றா
ணீள்வினை வடிவானா ணிருதர்கள் குலமெல்லா
மாள்வினை யெனயாண்டும் வைகலு முலவுற்றாள்.

(இ-ள்.) மேலுமேலு முயற்சியாகச் செய்யுந் தவத்தினையுடைய முனிவர்கள் செய்கின்ற யாகமழியும்படிக் கொடுந்தொழிலைச் செய்கின்றவள்; நீண்ட தீவினையே வடிவமாக வுடையவள்; அசுரர்களது வமிசங்களெல்லாம் அழியும்படிவந்த வினையென்று சொல்லும்படி எவ்விடங்களிலும் எப்பொழுதுஞ் சஞ்சரித்துக்கொண்டிருப்பவள்.—எ-று. (உ)

கட்டழ குளதாகுங் காளையர் தமைநாடிக்
கிட்டினள் புணர்கிற்பாள் கேளிரை யிகழ்வோரை
யட்டன ளுகர்கின்றா ளனையவ ளொருவைகன்
முட்டின டுருவாச முனியுறு தனியெல்லை.

(இ-ள்.) பேரழகினை யுடையவர்களாகிய வாலிபர்களைத் தேடியடைந்து புணருகின்றவள்; தனதுறவினரை யிகழ்கின்றவர்களைக் கொன்று தின்பவள்; அத்தன்மையினையுடைய அசமுகியானவள், துருவாசமுனிவர் வசிக்கின்ற ஒப்பற்ற பன்னசாலையை யடைந்தனள்.—எ-று. (ரு)

அந்தநன் முனிதன்னை யாயிழை யவள்காணாச்
சிந்துவ னிவனின்னே செய்தவ மஃதன்றி

மைந்தர்கள் பெறுவேனல் வல்லையி லிவனென்னுப்
புந்தியி னினைவாயே போயவ னெதிருற்ருள்.

(இ-ள்.) அவ்வசமுகியானவள் அந்த நல்ல துருவாசமுனிவனைப் பார்த்து இம்முனிவன் செய்த தவத்தை இப்பொழுதே யழிப்பேன்; அதுவன்றி, இங்கு விரைவாகப் புதல்வர்களைப் பெறுவேன் என்று மனத்தில் எண்ணங்கொண்டுசென்று அம்முனிவனெதிரி லடைந்தனள்.—எ-று. (ச)

உறுதலு முனிநாடி யொண்டொடி தனியேநீ
குறுகிய தெவன்மாதோ கூறுதி யெனலோடு
மறுவறு முனிநின்பால் மனமகிழ் வொடுமேவிச்
சிறுவர்கள் பெறவந்தேன் செப்புவ திதுவென்ருள்.

(இ-ள்.) அவ்வாறு வருதலும், துருவாசமுனிவர் அவளைப் பார்த்துப் பெண்ணே! நீ தனியே வந்தது யாது காரணம்? சொல்லக்கடவையென்று வினவுதலும், குற்றமற்ற முனிவரோ! யான் மனமகிழ்வுடன் உம்மையணைந்து புதல்வர்களைப்பெறும்படி வந்தேன்; நான் சொல்லவேண்டிய திதுவாகுமென்று கூறினுள்.—எ-று. (ரு)

என்றலு முனிசூரற் கிளையவ ளெனநாடி
வென்றிகொண் மடமாதே மேவுறு தவமெல்லாங்
குன்றிடு முனையின்னே கூடுவ னெனினீயு
நின்றிடல் பழியல்லா னீதியு மலவென்றுன்.

(இ-ள்.) என்று கூறவும், துருவாசமுனிவர் இவள் சூரபன்மன் தங்கையென்று நினைத்து வெற்றிபொருந்திய மடமைத் தன்மையினையுடைய பெண்ணே! உன்னை இப்பொழுதே புணருவேனுயின், யான் முன்பு செய்த தவங்களனைத்துங் குறையும்; நீயும் இங்கே நிற்பது பழியேயன்றி நீதியுமன்று என்று கூறினுர்.—எ-று. (சு)

முனியிது பகர்வேலை மொய்குழன் மடமாது
ளினியுனை மருவாதே யேகல னெருவிப்போ
மனநினை வொழிகென்றே வன்மையி னெடுபுல்லி
யனையவ னிதழூற லாரமு தயிலுற்ருள்.

(இ-ள்.) துருவாசமுனிவர் இவ்வார்த்தைகளைக் கூறியபொழுது, நெருங்கிய கூந்தலையுடைய அசமுகியானவள் இனி உம்மைப் புணராமல் யான் போகேன்; நீர் என்னைவிட்டு நீங்கிப்போகவேண்டுமென்னும் மனக்கருத்தை விட்டுவிடக்கடவீரென்று கூறி, அத்துருவாசமுனிவனைப் பலாத்காரமாகப் புணர்ந்து இதழூறலாகிய அரிய அமிர்தத்தை யுண்டனள்.—எ-று. (எ)

ஆடெனு முகவெய்யா ளனையனை வலிதாகக்
கூடின ளதுபோழ்திற் குறுகின ரிருமைந்த
ரீடுறு வலிமிக்கா ரின்னவர் தமையன்னை
மாடுற வருகென்றே மகிழ்வொடு தழுவுற்ருள்.

(இ-ள்.) அசமுகியென்னுங் கொடியவள் அத் துருவாசனைப் பலாத்காரமாகப் புணர்ந்தனள்; அப்பொழுது இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள்; அவர்கள் மிக்க வலிமையுடையவர்கள்; அவர்களை அசமுகி அருகிலழைத்து மகிழ்வுடன் தழுவிக்கொண்டனள்.—எ-று. (அ)

தழுவினள் பரிவோடுந் தன்புதல் வரைநோக்கி
மழகளி றனையீர்கா ளல்லவு ணரில்வந்தீர்

விழுமிய தவமாற்றி மேவுதிர் வலியென்ன
வழிதரு நிறைகொண்ட வசமுகி யுரைசெய்தாள்.

(இ-ள்.) அவ்வாறு தழுவிய கற்பில்லாத அசமுகியானவள் அன்புடன் தன் பிள்ளைகளைப் பார்த்து, யானைக்கன்றுபோன்ற புதல்வர்களே ! வலிய அசுரர்குலத்திற் பிறந்தீர்கள் ; நீங்கள் உயர்ந்த தவத்தைச் செய்து வலிமையை யடையுங்களென்று கூறினாள்.—எ-று. (கூ)

தாயின துருவாயுந் தந்தைத னுருவாயு
மேயின விருமைந்தர் வில்வலன் வாதாவி
யாயதோர் பெயர்பெற்றே ரன்னைத னுரைகொண்டே
தூயதோர் முரவோன்றன் றுணையடி பணிகுற்றார்.

(இ-ள்.) தாயி னுருவமாகியும் தந்தையி னுருவமாகியும் பிறந்த அவ்விரண்டு புதல்வர்களும் வில்வலன் வாதாவியென்னும் பெயரைப் பெற்றவர்களாய்த் தமது தாயின்வாக்கியத்தை மேற்கொண்டு,தூய்மையாகிய தந்தையினது இரண்டு பாதங்களிலும் வணங்கினார்கள்.—எ-று. (கo)

மூண்டிடு வெகுளித்தீ முனிவர னடிதன்னைப்
பூண்டிடு திறன்மிக்க புதல்வரை யெதிர்நோக்கி
வேண்டிய தெவனென்ன வெய்யவ டருமைந்த
ரீண்டுன தவமெல்லாம் யாம்பெற வருளென்றார்.

(இ-ள்.) மிக்க கோபாக்கினியினையுடைய சிறந்த துருவாசமுனிவர் தமது பாதங்களை வணங்கிய மைந்தர்களை நேரே நோக்கி, உங்களுக்கு வேண்டுவதென்ன வென்று வினவினர்; உடனே கொடிய அசமுகிபெற்ற அவ்விருவர்களும் இங்கு உமது தவங்களனைத்தையும் யாங்கள் பெற்றுக்கொள்ளும்படித் தருவீராகவென்று கூறினார்கள்.—எ-று. (கக)

ஆற்றிடு தவமெல்லா மருளெனி னவைதாரோன்
வீற்றொரு பொருளுண்டேல் வினவுதி ரெனமேலோன்
சீற்றம துளராகிச் சிறுவர்க ளிவனுவி
மாற்றுது மிவனென்னா வல்லையி னெழலுற்றார்.

(இ-ள்.) யான் செய்த தவங்களையெல்லாங் கொடுக்கச்சொல்லிக் கேட்டீர்கள்: அத்தவங்களைத் தரமாட்டேன் ; வேறெந்தப் பொருளையாயினுங் கேளுங்களென்று துருவாசமுனிவர் கூறுதலும், அவ்விரண்டு புதல்வர்களும் கோபங்கொண்டவர்களாய் இங்கே இவனுயிரை யழிக்கின்றோமென்று விரைந்தெழுந்தார்கள்.—எ-று.

இறுதிசெய் திடவுன்னி யிகலுட னெழுகின்ற
சிறுவர்கள் செயனாடிச் சினமொடு முனிநீவிர்
மறுவறு தவருக்கே வைகலு மிடர்செய்வீர்
குறுமுனி நுமதாவி கொள்ளுக வினியென்றான்.

(இ-ள்.) தம்மைக் கொல்லும்படி நினைத்துப் பகைபாராட்டி யெழுந்த சிறுவர்களது செய்கையைப் பார்த்துத் துருவாசமுனிவர் மிக்க கோபத்துடன் நீங்கள் குற்றமற்ற முனிவர்களுக்கே நாள்தோறும் இடையூறு செய்யுங்கள் ; பின்பு அகத்திய முனிவர் உங்களுயிரை வாங்கக்கடவர் என்று கூறினர்.—எ-று. (கரு)

இனையது முனிசொற்றே யெமையடு வர்களென்னா
மனமுறு தனிவிஞ்சை மாயையின் மறைபோழ்திற்

றனயர்க ளிருவோருந் தந்தைத னைக்காணு
ரனைதனை விடைகொண்டே யாயிடை யொருவுற்றார்.

(இ-ள்.) இவ்வண்ணந் துருவாசமுனிவர் கூறி, இங்கிருந்தால் நம்மைக் கொல்வார்களென்று தன் மனத்திற் பழக்கமுடைய ஒப்பற்ற மந்திரவித்தையின் மாயையினால் மறைந்து செல்லும்பொழுது வில்வலன் வாதாவியென்னு மிருவர்களும் துருவாசமுனிவரைக் காணாதவர்களாய்த் தமது தாயாகிய அசமுகியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அவ்விடத்தினின்றுஞ் சென்றார்கள்.—எ-று. (கசச)

வேறொரு வனமெய்தி மெய்த்தவர் குழுவெல்லாங்
கோறலை மனமுன்னிக் குமரர்க ளிருவோருந்
தேறிய வுணர்வோடுந் திசைமுக வனைநோக்கி
யீறகல் பகலாக வெரியத னிடைநோற்றார்.

(இ-ள்.) அவ்வில்வலன் வாதாவியென்னு மிருவர்களும் வேறே யொருவனத்தை யடைந்து, மெய்ம்மையாகிய முனிவர் கூட்டங்களை யெல்லாங் கொல்லும்பொருட்டு மனத்தில் நினைத்து, தெளிவாகிய உணர்ச்சியுடன் பிரமனைக் குறித்து அநேககாலம் அக்கினியின் மத்தியினின்று தவஞ்செய்தார்கள்.—எ-று.

துருவாசனை நீங்கிச் சுக்கிரனை யடைந்து உபதேசம்பெற்று வனஞ்சென்று தவஞ்செய்தார்களென்றறிக. (கசரு)

செந்தழ லிடைநோன்பு செய்யவு மயனங்கண்
வந்தில னதுநாடி மற்றொரு செயலுன்னி
வெந்திற லிளையோனை வில்வல னெனும்வெய்யோன்
சுந்தர மணிவாளாற் றுணிபட வெறிகுற்றான்.

(இ-ள்.) சிவந்த அக்கினியின் மத்தியில் நின்று தவத்தைச் செய்யவும், பிரமன் அங்குப் பிரத்தியக்ஷமாகவில்லை; அதனை யுணர்ந்து வில்வலனென்னு மசுரன் வேறொரு செய்கையை நினைத்து மிக்க வல்லமைபொருந்திய தம்பியாகிய வாதாவியைத் தனது அழகிய வாளினால் துண்டாகும்படி வெட்டினான்.—எ-று. (கசசு)

கையன துடல்கீறிக் கறையொடு தசையெல்லா
நெய்யுட னவியாக்கி நீடிய கனலூடே
வையக மருடாதை மந்திர முறையுய்த்து
வெய்யவ னொருவேள்வி விரைவொடு புரிகுற்றான்.

(இ-ள்.) வாதாவியி னுடலைப் பிளந்து உதிரத்துடன் மாமிசங்களனைத்தையும் நெய்யும் அவியுமாகச் செய்து, மிகுதியாகிய அக்கினியில் பிரமமந்திர முறைப்படிச் செலுத்தி, வில்வலனானவன் ஒரு யாகத்தை விரைவாகச் செய்தனன்.—எ-று. ()

தவமொடு மகமாற்றச் சதுர்முக னதுகண்டே
யவனியின் மிசைவந்தே யரியதொர் செயல்செய்வா
யெவனருள் பரிசென்ன விணையடி தொழுதேத்தி
யவுணர்கள் வடிவாம்வில் வலனிவை யறைகின்றான்.

(இ-ள்.) தவத்துடன் வேள்வியையுஞ் செய்யவும், பிரமன் அதனை யுணர்ந்து நிலவுலகத்திலடைந்து, அருமையாகி யதவவேள்விகளைச் செய்கின்றவனே! உனக்கு வேண்டிய வரம் யாதென்று வினவுதலும், அசுரர்கள் வடிவத்தினையுடைய வில்வலன் அப்பிரமனது இரண்டு பாதங்களையும் வணங்கித் துதித்து இவ்வார்த்தைகளைக் கூறுவானாயினான்.—எ-று. (கசஅ)

வன்னியி லவியூணாய் மாண்டிடு மொருபின்னேன்
மெய்ந்நிறை வடிவோடும் விரைவுடன் வரல்வேண்டு
மென்னலும் வாதாவி யெழுகென வயனேதை
வன்னதொர் பொழுதின்க ணார்த்தவ னெழுந்திட்டான்.

(இ-ள்.) அக்கினியில் அவியுணவாக இறந்த எனது தம்பியானவன் பூரண வடிவத்துடன் விரைவாக வரவேண்டுமென்று கூறுதலும், உடனே பிரமனானவன் வாதாவியே! எழக்கடவையென்று கூறுதலும், அப்பொழுது அவ்வாதாவியானவன் ஆரவாரத்துடன் (அவ்வக்கினியினின்றும்) எழுந்தனன்.—எ-று. (கசு)

ஆங்கன மசுரேச னதிசய முளனாகித்
தீங்குட னொருசூழ்ச்சி சிந்தையி னிடையுன்னிப்
பூங்கமலத்தோனைப் போற்றிசெய் தடியேனுக்
கீங்கொரு வரமெந்தா யீகென வுரைசெய்வான்.

(இ-ள்.) அப்பொழுது வில்வலன் ஆச்சரியமடைந்தவனாய்த் தன் மனத்தில் ஒரு ஆலோசனையைச் செய்துகொண்டு, அழகிய கமலாசனனாகிய பிரமனைத் துதித்து, எந்தையே! அடியேனுக்கு இப்பொழுது ஒரு வரமளிக்கவேண்டுமென்று கூறுகின்றான்.—எ-று. (உ0)

புல்லயின் மறியேபோற் பொலிவுறும் வாதாவி
யொல்லையி னினிமேலு முடறுணி படுவானே
லெல்லையில் பரிவால்யா னெம்பியை யெழுகென்னத்
தொல்லையில் வடிவோடுந் தோன்றிமுன் வரல்வேண்டும்.

(இ-ள்.) புற்களைத்தின்னும் ஆட்டுக்கடாவைப்போல விளங்குகின்ற வாதாவியானவன் விரைவாக இனிமேலும் தேகம் வெட்டுப்படுவானாயின் அளவற்ற விருப்பத்தினால் யான் எனது தம்பியை உயிர் பெற்றுவரக்கடவை யென்று கூறியவுடனே பழய உருவத்துடனெழுந்து என்னெதிரில் வரவேண்டும்.—எ-று.

புல்லயின்மறி என்றது வெள்ளாட்டை ஒழித்துச் செம்மறியாட்டைக் குறிப்பிக்க. (உக)

இப்படி வரமொன்றே யான்பெற வருள்கென்றே
மெய்ப்படு முணர்வில்லா வில்வல னுரைசெய்ய
வப்படி பலகால மதுமுடி கெனநல்கிச்
செப்பறு மறைவேதாச் சேணுடை நெறிசென்றான்.

(இ-ள்.) இவ்வாறாகிய ஒரு வரத்தையே யான் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அருள்வாயாகவென்று உண்மையறிவில்லாத வில்வலன் கூறுதலும், சொல்லுதற்கரிய வேதங்களையுணர்ந்த பிரமன் அவ்வாறே அநேககாலம் அது நிறைவேறக்கடவதென்று கூறி ஆகாயமார்க்கமாகச் சென்றனன்.—எ-று. (உஉ)

சேறலு மதுகாலைச் சிறுவர்க ளிருவோரு
மேறென வமர்சூர்முன் னேகியுன் மருகோர்யாம்
வேறல வெனவோதி மேதினி முனிவோரைக்
கோறல்செய் பெருவன்மை கொண்டது முரைசெய்தார்.

(இ-ள்.) பிரமன் செல்லவும், அப்பொழுது அவ்விரண்டு சிறுவர்களும் சிங்கம்போன்று வீற்றிருக்கின்ற சூரபன்மனெதிரிற் சென்று, நாங்கள் வேறல்ல; உமது மருகர்களே யென்றுகூறி, உலகத்திலுள்ள முனிவர்களைக் கொல்லத்தக்க மிக்க வலிமையைப் பெற்றதையுங் கூறினார்கள்.—எ-று. (உ௩)

மன்னவ னவர்தம்மை மகிழ்வொடு நனிபுல்லி
யென்னுழை மருகீர்கா ளினிமையொ டுறுமென்ன
வன்னவர் சிலவைக லாயிடை தனில்வைகிப்
பின்னுற விருவோரும் பெருநில மிசைவந்தார்.

(இ-ள்.) சூரபன்மன் அவர்களை மிக்க மகிழ்வுடன் தழுவிக்கொண்டு, மருமக்கள்மார்களே! நீங்கள் என்னிடத்தில் சுகமாக வாழ்ந்துகொண்டிருங்களென்று கூறுதலும், சிலகாலம் அவர்கள் அவ்விடத்தில் வசித்திருந்து பின்பு பெரிய நிலவுலகத்திற்கு வந்தார்கள்.—எ-று. (உச)

நவைதவிர் குடகின்க ணால்வகை நெறிகூடுங்
கவலையின் வளமல்குங் கானக மிடைதன்னி
லவுணர்க டாமங்கோ ராச்சிர மஞ்செய்தே
யெவரெவ ரும்வெஃகு மெப்பொருள் களுமுய்த்தார்.

(இ-ள்.) குற்றமற்ற குடகுதேசத்தில் நான்கு வழிகளும் ஒன்றாகக் கூடுகின்ற இடெக்குவழியில், வளப்பமிக்க காட்டில் அவ்விரண்டசுரர்களும் ஒரு ஆச்சிரமத்தைச் செய்துகொண்டு,எவரெவர்களும் விரும்பத்தக்க எல்லாப் பொருள்களையும் சேகரித்து வைத்திருந்தார்கள்.—எ-று. (உரு)

அன்னதொ ரிடைதன்னி லாரிட ராயுள்ளோ
ரின்னுயிர் கொளவுன்னி யிருவரு ளிளமைந்தன்
பொன்னிவர் திரிகோட்டுப் பொருதக ராய்நிற்க
முன்னவன் விரதஞ்செய் முனிவரி னினிதுற்றான்.

(இ-ள்.) அவ்விடத்தில் முனிவர்களது இனிய உயிரை வாங்கும்படி நினைத்து அவ்விருவர்களுள் வாதாவியானவன் பொன்மயம் விளங்கும் முறுக்காகிய கொம்பினையுடைய பொருகின்ற ஆட்டுவடிவங்கொண்டு நிற்க, வில்வலன் தவவிரதத்தைச் செய்கின்ற முனிவர்களைப்போல இனிமையோடிருந்தனன்.—எ-று. (உசு)

வில்வல னெனவோதும் வெய்யவ னவ்வெல்லைச்
செல்வதோர் முனிவோரைச் செவ்விதி னெதிர்கொண்டு
வல்விரை வொடுதாழ்ந்து மற்றும தடியேன்ற
னில்வரு வீரென்னா வியல்பொடு கொடுசென்றே.

(இ-ள். வில்வலனென்று கூறுங் கொடிய அசுரனானவன், அவ்வழியே செல்லுகின்ற முனிவர்களைச் செம்மையோடு மெதிர்கொண்டு மிக்க விரைவுடன் வணங்கி, உமது அடிமையாகிய எனது பன்னசாலைக்கு வருவீராகவென்று தகுதியுடன் அழைத்துக்கொண்டு சென்று.—எ-று. (உஎ)

இப்பக லடிகேளுக் கிவ்விடை யுணவென்னா
வொப்பறு நெறிகூறி யோதன வகையெல்லா
மப்பொழு தினிலட்டே யயமெனு மிளையோனைத்
துப்புறு கறியாகத் துண்டம துறுவித்தே.

(இ-ள்.) இன்றைப் பகலில் சுவாமிகளுக்கு இவ்விடத்தில் போசனமென்று ஒப்பற்ற இனிய வசனங்களைக் கூறிப் போசனவகைகளனைத்தையும் அப்பொழுது சமைத்து, ஆடாகவுள்ள தம்பியை நெய்ப்பசை பொருந்திய பதார்த்தமாக வெட்டி.

உள்ளுறு குறியாகு மூன்முழு வதுநாடி
வள்ளுறு சுடர்வாளால் வகைவகை படவீர்ந்தே

யள்ளுறு கறியாக வட்டபி னவரவ்வூண்
கொள்ளுற நுகர்வித்தே கூவுவ னிளையோனை.

(இ-ள்.) உள்ளே பொருந்திய சின்னங்களாகிய மாமிச முழுவதையு மாராய்ந்து கூரிய ஒளிபொருந்திய வாளினால் வகைவகையாக அரிந்து அள்ளத்தக்கக கறியாகச் சமைத்தபின்பு அம்முனிவர்கள் அவ்வுணவை உட்கொள்ளும்படி யுண்பித்துப் பின்பு தன் தம்பியாகிய வாதாவியை யழைப்பான்.—எ-று. (உக)

கூவிய பொழுதின்கட் கொறியெனு முருவானோ
னாவிமெய் யுளனாகி யன்னவ ருதரத்தை
மாவலி யொடுகீண்டே வருதலு மிருவோருஞ்
சாவுறு முனிவோர்தந் தசையினை மிசைவாரால்.

(இ-ள்.) அவ்வாறு அழைத்தபொழுது ஆட்டினுருவத்தைக் கொண்ட வாதாவியான்வன் உயிரு முடலும்பெற்று அவர்களது வயிற்றை மிக்க வலிமையுடன் கிழித்துக்கொண்டு வெளியில் வருதலும், அதனால் இறக்கின்ற முனிவர்களது மாமிசத்தை அவர்களிருவரும் உண்பார்கள்.—எ-று. (கூ௦)

வேறு.

வீடுறு முனிவரூன் மிசைந்து தொன்மைபோ
லாடென முனியென வனையர் மேவியே
நாடொறு மிச்செய னடாத்தி யுற்றனர்
கேடுறு முனிவர்தங் கிளைகண் மாளவே.

(இ-ள்.) இறக்கின்ற முனிவர்களது மாமிசத்தை யுண்டு பின் பழமைபோல ஆடாகவும் முனிவனாகவும் அவ்வாதாவி வில்வலர்களிருந்து, அழிவற்ற முனிவர் கூட்டங்களழியும்படி நாள்தோறும் இக்கொடுந்தொழிலைச் செய்து வசித்திருந்தார்கள்.—எ-று. (கூக)

வில்வலன் வாதாவிப்படல முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம் ககoச.

---

உ

முருகன்றுணை.

---

# இந்திரன் கரந்துறை படலம்.

இப்படி யவுணர்க ளினைய ரேனையோர்
செப்பரு முனிவரைத் தேவர் தங்களை
யொப்பறு நரர்தமை யொறுப்ப மாயைதன்
வைப்புறு காதல னரசின் மன்னினான்.

(இ-ள்.) இவ்வாறு வில்வலன் வாதவியென்னு மசுரர்களும் இன்னும் மற்றைய அசுரர்களும் சொல்லுதற்கரிய முனிவர்களையும் தேவர்களையும் ஒப்பற்ற நரர்களையும் வருத்தும்படி மாயையினது செல்வம்போன்ற சூரபன்மன் அரசு செய்துகொண்டிருந்தனன். —எ-று. (க)

ஆயிரத் தெட்டெனு மண்டம் யாவையுஞ்
சேயுய ரிந்திர ஞாலத் தேர்மிசை
யேயெனு மளவையி லேகி வைகனு
நாயக முறையினை நடாத்தி நண்ணினான்.

(இ-ள்.) ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் மிகவுயர்ந்த இந்திரஞாலமென்னு மிரதத்தின்மேலேறி விரைவாகச் சென்று சதாகாலமும் அரசமுறைமையை நடத்தி வாழ்ந்துகொண்டிருந்தனன்.—எ-று. (உ)

ஒருபகற் பாதலத் தூடு வைகிடு
மொருபகன் மாதிர முலவிச் சேர்தரு
மொருபகல் விண்பதந் தோறு முற்றிடு
மொருபக லயன்பதத் துன்னி மன்னுமே.

(இ-ள்.) ஒருநாள் பாதலலோகத்தில் வசிப்பான்; ஒருநாள் திக்குகளி லுலாவிக்கொண்டு வருவான்; ஒருநாள் சொர்க்க பதங்களுக்குச் செல்லுவான்; ஒருநாள் பிரமபதத்திற்குச் சென்று வருவான்.—எ-று. (௩)

தண்ணறுந் துளவினன் றனது தொல்பத
நண்ணிடு மொருபக லொரு மிவ்வகை
யெண்ணரு முலகுதோ றேகி மாலையிற்
றுண்ணெனப் மீள்வனற் சூர பன்மனே.

(இ-ள்.) சூரபன்மன் குளிர்ச்சியும் மணமும் பொருந்திய துளவமாலையை யணிந்த திருமாலினது பதத்திற்கு ஒருநாள் செல்லுவான்; நாள்தோறு மிவ்வாறு அளவற்ற உலகங்கள் தோறுஞ் சென்று மாலைக்காலத்தில் விரைவாகத் திரும்பிவருவன்.—எ-று. (௪)

அவ்வகை யாலர சாற்று மெல்லையி
லெவ்வமில் சூர்முத லிந்தி ரன்னெனுந்
தெவ்வினை வன்சிறை செய்து தேவியை
வவ்விய வுன்னினன் வருவ தோர்கிலான்.

(இ-ள்.) சூரபன்மன் அவ்வண்ணம் அரசுசெய்துகொண்டு வருகிறகாலத்தில் மேல்வருவதை நினையாதவனாய் இந்திரனாகிய பகைவனைப் பிடித்துக் கொடிய சிறையி லடைத்துவிட்டு அவன் மனைவியை யபகரிக்கும்படி நினைத்தனன்.—எ-று.

உன்னிய தீயவ னொருதன் றூனையின்
மன்னனை விளித்துநீ வாசவன் றனை
யின்னதோர் பொழுதினி லெய்திப் பற்றியென்
முன்னுற விடுகென முன்ன மேவியே.

(இ-ள்.) அவ்வாறு நினைத்த சூரபன்மன் தனது, சேனாதிபர்களிலொருவனை அழைத்து நீ இந்திரனை இப்பொழுதே சென்று பிடித்து என்னெதிரில் கொண்டுவந்து விடக்கடவையென்று முன்னே யவனை யனுப்பிவிட்டு பின்பு.—எ-று. (௬)

நீடிய தன்பெரு நிலயங் காப்பவர்
கோடுறு நிசிசரர் குலத்துட் டோன்றினர்
கேடகம் வாளயில் கெழுவு கையினர்
பாடவ மடந்தையர் பவங்கள் போன்றுளார்.

(இ-ள்.) பெரிய தனது அந்தப்புரத்தைக் காப்பவர்களும், மாறுபாட்டினையுடைய அசுரர்குலத்திற் பிறந்தவர்களும், பலகையும் வாளும் வேலுந் தாங்கிய கைகளையுடையவர்களும், பாவமே வடிவங்கொண்டது போன்றவர்களும் சாமர்த்திய முடையவர்களுமாகிய பெண்கள்.—எ-று. (எ)

ஒன்பது கோடியர் தம்மை யொல்லையி
லன்புடன் விளித்துநீ ரமரர் தம்மிறை
யின்புறு தேவியைப் பற்றி யீமென
வன்பொடு போக்கினன் மன்னர் மன்னனே.

(இ-ள்.) ஒன்பது கோடிப்பேரை விரைவாக அழைத்து நீங்கள் தேவேந்திரனுடைய அனுபவத்திற்குரிய இந்திராணியைப் பிடித்துக்கொண்டுவந்து கொடுங்களென்று அரசர்க்கரசனாகிய சூரபன்மன் வலிமையுட னனுப்பினான்.—எ-று. (அ)

போக்கலு மவரெலாம் பொன்னி னாட்டின்மே
லூக்கம தாகியே யுருத்துச் சேறலு
நோக்கிய தூதுவர் நொய்திற் போகியே
மாக்கிள ரிந்திரன் மருங்கு நண்ணினார்.

(இ-ள்.) அவ்வாறனுப்புதலும் அம்மாதர்களனைவரும் சொர்க்கலோகத்தை நோக்கிக் கோபித்துக்கொண்டு செல்லவும், அதனைப் பார்த்த தூதுவர்கள் விரைவாகச் சென்று பெருமையுடன் விளங்குகின்ற இந்திரனது சமீபத்தி லடைந்தார்கள்.

வந்தன ரவுணரும் வயங்கொண் மாதரு
மந்தமில் படையொடு மடல்செய் நீரர்போற்
சிந்தனை யாவதோ தெரிந்தி லோமென
விந்திரன் வினவுற விசைத்து நிற்கவே.

(இ-ள்.) அளவற்ற ஆயுதங்களுடன் அசுரர்களும் வெற்றிபொருந்திய அசுரர் மாதர்களும் போர்செய்பவர்களைப்போல வந்தார்கள்; அவர்களெண்ணம் யாதோ? அறியோமென்று இந்திரன் கேட்கும்படிச் சொல்லிக்கொண்டு நிற்கவும்.—எ-று.

பொம்மென வவர்தமைப் போக்கித் தீயினும்
வெம்மைகொ ணெஞ்சினர் வினைய முன்னியே
யம்மனை மனைவியோ டகன்று மாயையா
னிம்மென விப்புவி தன்னி லேகினான்.

(இ-ள்.) அவர்களை விரைவாக அனுப்பிவிட்டு, நெருப்பினுங் கொடிய மனத்தினையுடைய அசுரர்களது ஆலோசனையை யுணர்ந்து தேவேந்திரன் அந்தப்புரத்தினின்றும் இந்திராணியுடன் நீங்கி மாயையினால் விரைவாகப் பூலோகத்திற்குச் சென்றனன்.—எ-று. (கக)

ஏகிய வெல்லையி னிகல்வெஞ் சூர்விடப்
போகிய மாதரும் பொருவில் வீரரு
நாகர்தம் மிறையமர் நகரை நண்ணினா
ராகர முதலிய விடந்தொ றுய்குவார்.

(இ-ள்.) அவ்வாறு சென்றவுடனே, பகையினையுடைய கொடிய சூரபன்மனனுப்பச் சென்ற மாதர்களும், ஒப்பற்ற அசுரர்களும் தேவேந்திரன் வசிக்கின்ற நகரத்தை யடைந்து அவனது அந்தப்புரமுதலியவிடங்களில் தேடுவாராயினர்.—எ-று.

வினைவயிற் சென்றிடும் வீரர் யாவருந்
துணைமக த்திறைவனைத் துருவிக் காண்கிலர்
மனைவியைக் காண்கிலர் மாதர் யாவரு
நினைவயர்த் துள்ளுறு கவலை நீடினார்.

(இ-ள்.) இந்திரனைப் பிடிக்குந் தொழிலிற் சென்ற அசுரர்களெல்லாம் நெருங்கிய யாகாதிபனாகிய இந்திரனைத் தேடியுங் காணவில்லை; மாதர்களனைவரும் இந்திராணியைத் தேடியுங் காணவில்லை; ஆதலால் யாவர்களும் மனஞ்சோர்ந்து மனக்கவலை யதிகரித்தார்கள்.—எ-று. (கங)

நாயக னிவ்விடை நம்மைக் கூவியே
யேயின செயலினை யீறு செய்கிலம்
போயினன் சசியொடும் புலவர் கோனென
வாய்வ னகரெலா மாய்வுற் றூரரோ.

(இ-ள்.) சூரன் நம்மை யழைத்து இவ்விடத்திற்கு அனுப்பிய காரியத்தை முடித்தோமில்லை, இந்திரன் தன் மனைவியுடன் போய்விட்டானேயென்று அவனது நகர முழுவதுந்தேடினார்கள்.—எ-று. (கச)

சுற்றினர் நகரெலாந் துருவித் தேவரைப்
பற்றினர் விலங்கலின் பகைவற் காட்டென
வெற்றினர் புலோமசை யாண்டை யாளெனக்
குற்றினர் வாய்தொறுங் குருதி பாயவே.

(இ-ள்.) ஊர் முழுவதுஞ் சுற்றித்தேடித் தேவர்களைப்பிடித்து இந்திரனைக் காண்பியுங்களென்று அடித்தார்கள்; இந்திராணி யெங்கிருக்கின்றனளென்று வாயில் உதிரங் கக்கும்படிக் குத்தினார்கள்.—எ-று. (கரு)

விண்ணவர் யாவரும் வேந்துந் தேவியு
நண்ணிய துணர்கில நாங்க ளெங்களைத்
துண்ணென வருத்தலிர் துயர்கின் றேமெனத்
தண்ணளி வருநெறி தளர்ந்து சாற்றவே.

(இ-ள்.) இந்திரனும் இந்திராணியும் சென்றதை யாங்களறியோம்; எங்களை விரைந்து வருத்தப்படுத்தாதீர்கள்; யாங்கள் துன்பமடைகின்றேமென்று தேவர்களனைவரும் (அசுரர்களுக்கு) இரக்கமுண்டாகும்படிச் சோர்வுற்றுக் கூறுதலும்.—எ-று.

விட்டனர் தேவரை விண்ணை நீங்கினர்
முட்டினர் மகேந்திர முதிய மாநகர்
கிட்டினர் வேந்தனைக் கிளர்ந்து வானிடைப்
பட்டது புகன்றனர் பழிகொ ணெஞ்சினர்.

(இ-ள்.) குற்றம்பொருந்திய மனத்தினையுடைய அசுரர்கள் தேவர்களை விட்டுச் சொர்க்கலோகத்தைக் கடந்து மகேந்திராபுரியை யடைந்து சூரபன்மனிடஞ் சென்று அவனைப் புகழ்ந்து, சொர்க்கத்தில் நடந்த விஷயங்களைக் கூறினார்கள்.

போயின ரிருவரும் புறத்த ராயென
வாயவர் மொழியலே யவுணர் மன்னவன்
றீயென வெகுண்டனன் றேடொ ணாதமேோர்
தூய்மணி யிழந்திடு மரவிற் றுன்புளான்.

(இ-ள்.) இந்திரனும் இந்திராணியும் ஊரைவிட் டோடிப்போனார்களென்று அவர்கள் கூறியவுடனே, சூரபன்மன் கிடைத்தற்கரிய தூய்மையாகிய மாணிக்கத்தையிழந்த பாம்பைப்போலத் துன்புற்றவனாய்த் தீயைப்போலப் பொங்கிக் கோபித்தனன்.—எ-று. (கஅ)

ஒற்றரிற் பலர்தமை யொல்லை கூவியே
பொற்றொடி யணங்கொடு பொன்னி னாட்டவர்
கொற்றவ னிருந்துழிக் குறுகி நாடியே
சொற்றிடு வீரெனச் சூரன் றாண்டினான்.

(இ-ள்.) சூரபன்மன் தனது தூதுவர்களிற் பலரை விரைவாக அழைத்து இந்திராணியுடன் இந்திரனும் இருக்குமிடத்தைத் தேடியறிந்து சொல்லக்கடவீர் என்று ஏவினான்.—எ-று. (கக)

தோடவிழ் தெரியலான் றாண்ட வொற்றர்க
ளோடினர் வீற்றுவீற் றுலக மெங்கணுந்
தேடினர் காண்கிலர் திரிகுற் றாரினி
நீடிய பொன்னகர் நிகழ்ச்சி கூறுகேன்.

(இ-ள்.) இதழ்விரிந்த மாலையையணிந்த சூரபன்மன் ஏவுதலும், தூதுவர்கள் தனித்தனியே யோடிச்சென்று உலகமெங்குந் தேடினார்கள் ; அவ்வாறுதேடியுங் காணாதவர்களாய்த் திரிந்தார்கள் ; இனி உயர்ந்த பொன்னுலகத்தின் விருத்தாந்தங்களைக் கூறுகின்றேன்.—எ-று. (உ0)

வேறு.

செல்லெனு மூர்தி யண்ணா றேவியுந் தானு நீங்கச்
சொல்லருங் ககனம் பூத்த சோமனு முடுவும் போன
வெல்லியம் பொழுது போன்றே யாதுமோர் சிறப்பு மின்றாய்ப்
புல்லென லாய தன்றே பொருவில்பொன் னகர மெல்லாம்.

(இ-ள்.) மேகவாகனனாகிய இந்திரன் இந்திராணியுடன் நீங்கிச் சென்றவுடனே சொல்லுதற்கரிய ஆகாயத்திலுதித்த சந்திரனும் நக்ஷத்திரங்களும் நீங்கிய இரவைப்போல ஒப்பற்ற பொன்னுலகமனைத்துஞ் சிறிதுஞ் சிறப்பில்லாமற் பாழடைந்திருந்தது.—எ-று. (உக)

அழிந்தன வளங்க ளெல்லா மாகுல மயங்கிற் றின்ப
மொழிந்தது வானோ ருள்ள மொடுங்கிய துலக மெங்கு
மெழுந்தது புலம்ப லோதை யாவர்தங் கண்ணுந் தெண்ணீர்
பொழிந்தது சுவர்க்க மாவி போனவர் போன்ற தன்றே.

(இ-ள்.) வளங்களனைத்து மழிந்தன ; வியாகூல மதிகரித்தது ; இன்பமொழிந்தது, தேவர்களது மனவலி குன்றியது ; அவ்வூர் முழுவதும் அழுகின்ற பேரோசைதோன்றியது ; எவர்களது கண்களும் தெளிவாகிய துக்க நீரைச் சிந்தின ; சொர்க்கலோகம் உயிர் நீங்கிய உடலைப்போன்றிருந்தது.—எ-று. (உஉ)

இன்னன நிகழு முன்ன ரிந்திர னிளவ லாகி
மன்னிய வுபேந்தி ரன்றான் வானவ ருலகை நீங்கி
முன்னைவை குண்டம் புக்கான் முனிவரர் கலிக்கா வஞ்சிக்
கன்னிகை நோற்று மேவுங் காஞ்சியை யடைந்த வாபோல்.

(இ-ள்.) முனிவர்கள் கலியுகத்திற்குப் பயந்து உமாதேவியார் தவஞ்செய்துகொண்டிருக்கின்ற காஞ்சிபுரத்தை யடைந்த தன்மையைப்போல (ச்சூரபன்மனால்)

இவ்வாறாகிய காரியங்கள் நடப்பதற்கு முன்னமே இந்திரனுக் கிளையவனாகப்பொருந்தியிருந்த உபேந்திரன் தேவலோகத்தை விட்டுப் பழமையாகிய தனது வைகுந்தத்திற்குச் சென்றனன்.—எ-று. (உஙு)

சேண்பதந் தன்னை நீங்குஞ் சிறியதோர் தந்தை தன்னைக்
காண்பது கருதிப் போந்து கடவுளர்க் கிறைவன் மைந்தன்
றாண்புரை கின்ற செம்பொற் றோளுடைச் சயந்த னென்போன்
மாண்பொடு சிறிது வைகல் வைகுண்டத் திருந்தா னன்றே.

(இ-ள்.) சொர்க்கத்தைவிட்டுச் சென்ற சிறிய தந்தையாகிய உபேந்திரனைக் காணக் கருதி தேவராசபுத்திரனும் செவ்விய பொற்றூண்போலுந் தோளினையுடையவனுமாகிய சயந்த னென்பவன் சென்று சில நாள்கள் சிறப்புடன் வைகுந்தத்திலிருந்தனன்.—எ-று. (உச)

இருந்திடு சயந்த னென்பொ னிந்திர னிறைவி யோடுங்
கரந்துடன் போந்த வாறுங் காமரு துறக்கந் தன்னில்
விரைந்துவந் தவுணர் தேடி மீண்டிட விண்ணு ளோர்க
ளரந்தையோ டுற்ற வாறு மங்ஙனந் தேர்ந்தா னம்மா.

(இ-ள்.) அவ்வாறிருந்த சயந்தன் இந்திரனும் இந்திராணியும் மறைந்து சென்றதனையும் அழகிய சொர்க்கலோகத்திற்கு அசுரர்கள் விரைவாகவந்து தேடிச் சென்றதன்பின்பு தேவர்கள் வருத்தத்துடனிருக்குந் தன்மையையும் அங்கிருந்தபடியே யுணர்ந்துகொண்டனன்.—எ-று. (உரு)

தந்தைதன் மெலிவு காணிற் றங்குடித் தலைமை யெல்லா
மைந்தர்கள் பரித்துக் கோடல் வழக்கதா மறனு மஃதே
யெந்தையு மில்லை யான்போ யென்னகர் காப்ப னென்னாப்
புந்தியி னுன்னி மைந்தன் பொன்னகர் தன்னில் வந்தான்.

(இ-ள்.) தந்தையினது வருத்தத்தைப் பார்த்தால் தங்களது கிருககாரியங்களனைத்தையும் புத்திரர்களாயுள்ளவர்கள் தாங்கிக்கொள்ளுதல் முறைமையாகும்; தருமமுறையும் அவ்வாறேயாகும் ; ஆதலால், எமது தந்தையுமில்லை ; யான்சென்று எனது நகரத்தைக் காப்பேனென்று மனத்தில் நினைத்துச் சயந்தனானவன் பொன்னகரத்தையடைந்தனன்.—எ-று. (உசு)

பொன்னகர் புக்க மைந்தன் புலம்புறு சுரரைக் கண்டு
தன்னுயிர் போலுந் தந்தை தாய்தனைக் காணு னாகி
யின்னலங் கடலின் மூழ்கி யேக்கமோ டிரக்க மிக்குப்
பின்னொரு செயலு மின்றிப் பித்தரோ போல வுற்றான்.

(இ-ள்.) அவ்வாறு பொன்னகரத்தை யடைந்த சயந்தனானவன் புலம்புகின்ற தேவர்களைப்பார்த்து தன்னுயிர்போன்ற பிதாமாதாக்களைக் காணாதவனாய்த் துன்பமாகிய கடலில் மூழ்கி ஏக்கமும் இரக்கமுமிகுந்து வேறொரு செயலுமில்லாமல் பயித்தியக்காரரைப்போல விருந்தனன்.—எ-று. (உஎ)

உற்றிடு மெல்லை தன்னி லும்பர்கோன் மதலை யுள்ளந்
தெற்றெனத் தெளிப்ப வுன்னி நாரத னென்னுஞ் சீர்சா
னற்றவ முனிவன் செல்ல நடுக்கமோ டெழுந்து தாழ்ந்து
மற்றொரு தவிசு நல்கி யிருத்தியே மருங்கு நின்றான்.

(இ-ள்.) அவ்வாறிருக்கின்ற சமயத்தில் இந்திரபுத்திரனாகிய சயந்தனது மனத்தைத் தேற்றும்பொருட்டுச் சிறப்புமிக்க நல்ல தவத்தினையுடைய நாரதமுனிவர் வருதலும், (சயந்தன்) நடுக்கங்கொண்டெழுந்து வணங்கி வேறொரு ஆசனங்கொடுத்து அதிலெழுந்தருளச்செய்து அவரருகில் நின்றனன். (உஅ)

நின்றிடு சயந்தன் சொல்வா னித்தலும் வருத்தஞ் செய்யும்
வன்றிறற் சூரற் கஞ்சி மற்றெனைப் பயந்த மேலோர்
சென்றனர் சென்ற வெல்லை தெரிந்திலே னெமக்குத் தீமை
யென்றினி யகலுங் கொல்லோ வெம்பிரா னியம்பு கென்றான்.

(இ-ள்.) அவ்வாறு நின்ற சயந்தன் கூறுவான்: நாள்தோறும் துன்பத்தைச் செய்கின்ற மிக்க வலிமையினையுடைய சூரபன்மனுக்குப் பயந்து என்னைப் பெற்ற தாய்தந்தையர்கள் போய்விட்டார்கள்; அவர்கள் சென்ற விடத்தை யானறியேன்; எமது முதல்வரோ! எங்களிடத்துண்டாகிய இத்தீங்கு எக்காலத்து நீங்கும் நீர் சொல்வீராகவென்று வேண்டினன்.—எ-று. (உகூ)

தருக்கினை யிழந்து நின்ற சயந்தனித் தன்மை கூறப்
பொருக்கென முனிவ னோர்ந்து பொங்குபே ரருளா னோக்கித்
திருக்கிளர் கின்ற தாங்கோர் செழுமணித் தவிசின் மீதி
லிருக்கென விருத்திப் பின்ன ரின்னன விசைக்க லுற்றான்.

(இ-ள்.) அகங்காரமொழிந்து நிற்கின்ற சயந்தன் இவ்வாறு கூறுதலும், நாரதமுனிவர் விரைவாக வுணர்ந்து மிக்க பேரருளோடும் அவனைப்பார்த்து அழகு விளங்குகின்ற நல்ல இரத்தினங்களிழைத்த ஒரு ஆசனத்தில் இருக்கச்செய்து பின்பு இவ்வாறு கூறத்தொடங்கினார்.—எ-று. (ஙo)

தீங்குவந் தடையு மாறு நன்மைதான் சேரு மாறுந்
தாங்கள்செய் வினையி னாலே தத்தமக் காய வல்லா
லாங்கவை பிறரால் வாரா வமுதநஞ் சிரண்டி னுக்கு
மோங்கிய சுவையின் பேத முதவினர் சிலரு முண்டோ.

(இ-ள்.) தீங்குவந்தடைதலும் நன்மைவந்தடைதலும் அவரவர்கள் செய்த வினையினாலே அவரவர்களிடத்துண்டாவதேயன்றி அவை அன்னியர்களால் வரமாட்டா; அமுதத்திற்கும் விஷத்திற்கும் பொருந்தியுள்ள சுவை பேதத்தைக் கொடுத்தவர்கள் சிலரிருக்கின்றனரோ?—எ-று. (ஙக)

இன்பம தடைந்த காலை யினிதென மகிழ்ச்சி யெய்தார்
துன்பம துற்ற போதுந் துண்ணெனத் துளங்கிச் சோரா
ரின்பமுந் துன்பந் தானு மிவ்வுடற் கியைந்த வென்றே
முன்புறு தொடர்பை யோர்வார் முழுவது முணர்ந்த நீரார்.

(இ-ள்.) எல்லாவற்றையு முணர்ந்த பெரியோர்கள் இன்பம் வந்து சேர்ந்தபொழுது நன்றென்று மகிழ்வடையார்கள்; துன்பம் வந்து சேர்ந்தபொழுதும் விரைந்து வருந்திச் சோர்வடையார்கள்; இன்பதுன்பங்களிரண்டும் இந்தத் தேகத்திற்குச் சுபாவமாகப் பொருந்தியதே யென்று முன்னைய வினைப்பயனை யுணர்வார்கள்.—எ-று.

வறியவர் செல்வ ராவர் செல்வர்பின் வறிய ராவர்
சிறியவ ருயர்ந்தோ ராவ ருயர்ந்துளோர் சிறிய ராவர்
முறைமுறை நிகழு மீது முன்னையூழ் வினையே கண்டா
யெறிகதிர் வழங்கு ஞாலத் தியற்கையு மினைய தன்றே.

(இ-ள்.) தரித்திரர்கள் செல்வவான்களாவார்கள்; செல்வவான்கள் பின்பு தரித்திரர்களாவார்கள்; தாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்களாவார்கள்; உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்களாவார்கள்; முறைமுறையே மாறிவருகின்ற இக்காரியம் பழய ஊழ்வினைப் பயனே யாகும்; சூரிய சந்திரர்கள் சஞ்சரிக்கின்ற உலகத்தியற்கையும் இவ்வாறே யாகும்.—எ-று. (௬௩)

ஆக்கமும் வறுமை தானு மல்லலு மகிழ்வு மெல்லா
நீக்கமி லுயிர்கட் கென்று நிலையெனக் கொள்ளற் பாற்றோ
மேக்குயர் கடவுட் டிங்கள் வெண்ணிலாக் கதிரின் கற்றை
போக்கொடு வரவு நாளு முறைமுறை பொருந்திற் றன்றே.

(இ-ள்.) செல்வமும் தரித்திரமும், துன்பமும் மகிழ்ச்சியும், நீங்குதலில்லாத சீவர்களுக்கு எக்காலத்தும் நிலையாகவுள்ளதென்று கொள்ளுந் தன்மையதோ? மேலே யுயர்ந்திருக்கின்ற தெய்வத்தன்மை பொருந்திய சந்திரனது வெண்மையாகிய நிலாக்கற்றையானது குறைதலும் வளர்தலும் எப்பொழுதும் முறைமுறையே பொருந்தியது.—எ-று. (௬௪)

ஆதலி னுமது தாழ்வு மவுணர்த முயர்வு நில்லா
வீதுமெய் யென்று கோடி யிந்நகர் தணந்து போன
தாதையும் பயந்த தாயுந் தம்முருக் கரந்து போந்து
மேதினி வரைப்பி னூடு மேவினர் போலு மன்றே.

(இ-ள்.) ஆதலால் உங்களது தாழ்ச்சியும் அசுரர்களது உயர்ச்சியும் நிலைபெற்றிரா; இதனை உண்மையென்று கொள்ளக்கடவை; இந்நகரத்தைவிட்டு நீங்கிச் சென்ற உனது தந்தையும் பெற்றதாயும் தங்களுருவத்தை மறைத்துச் சென்று நிலவுலகத்தில் வசிக்கின்றனர்போலும்.—எ-று. (௬௫)

மைந்தநீ தோற்று முன்னம் வானவர்க் கலக்கண் செய்த
தந்தியின் முகங்கொண் டுற்ற தானவன் றுஞ்சும் வண்ண
மந்தநா ளுனது தந்தை முயன்றன னதனைப் போல
விந்தவெஞ் சூரன் மாய வின்னமு முயல்வன் கண்டாய்.

(இ-ள்.) சயந்தனே! நீ பிறப்பதற்கு முன்னே தேவர்களுக்குத் துன்பஞ் செய்த கசமுகாசுரன் சாகும்படி அக்காலத்தில் உன் தந்தை முயற்சி செய்தனன்; அதுபோல இந்தக் கொடிய சூரபன்மனிறக்கும்படி இன்னமும் முயற்சி செய்வான்.

என்றிவை பலவுங் கூறி யின்னினி வெஞ்சூர் தானும்
பொன்றிடு முமது துன்பும் பொள்ளென வகன்று போகு
நன்றிது துணிதி யென்றே நாரத முனிவன் றேற்றிச்
சென்றனன் சயந்த னங்க ணிருந்தனனன் றெட்ப மெய்தி.

(இ-ள்.) என்று இத்தகைய பல வார்த்தைகளை யுரைத்து இனிமேல் கொடிய சூரபன்மன் இறப்பான்; உங்களது துன்பம் விரைவாக வொழிந்துபோகும்; இதனை நன்றாகத் துணியக்கடவையென்று நாரதமுனிவர் தெளிவித்துச் சென்றனர்; சயந்தன் அவ்வாறே தெளிவடைந்து அங்கு வசித்திருந்தனன்.—எ-று. (௬௬)

வருந்திய வமரர் தம்மை மனப்படத் தேற்றி நாளுந்
திருந்தலன் பணித்த வேவல் செய்திடத் தூண்டி வான்மே
லிருந்தனன் சயந்த னென்போ னிருநிலத் திடைமுன் போன
புரந்தரன் செய்த தன்மை யானினிப் புகலு கின்றேன்.

(இ-ள்.) வருத்தமுற்றிருக்கின்ற தேவர்களை மனதாரத்தேற்றி,நாளதோறும் பகைவனுகிய சூரபன்மனிடுகின்ற ஏவற்றெழிலைச் செய்யும்படித் தூண்டிக்கொண்டு சயந்தனென்பவன் விண்ணுலகத்தில் வசித்திருந்தனன்; இனி பெரிய நிலவுலகத்தில் முன்பு மறைந்து சென்ற இந்திரன் செய்ததன்மைகளை யான் சொல்லுகின்றேன். ()

மெய்த்தரு நீழல் வைகும் வெறுக்கையை வெறுத்துப் பாரிற்
சித்திர மனைவி யோடுந் தெக்கிண தேயம் புக்குப்
பத்துட னிரண்டு நாமம் படைத்ததொல் காழி நண்ணி
யித்தல மினிதே யென்னு விருந்தன னிமையோர் கோமான்.

(இ-ள்.) மெய்ம்மையாகிய கற்பகத்தருவின் நீழலில்வாழ்கின்றசெல்வத்தை வெறுத்து,அழகிய மனைவியாகிய இந்திராணியுடன் நிலவுலகத்திலுள்ள தென்னுட்டையடைந்து பன்னிரண்டு திருநாமங்களையுடைய பழய சீகாழிப்பதியை யடைந்து இந்தத்தலமே சிறந்ததென்று தேவேந்திரன் தங்கியிருந்தனன். (௩௯)

அந்நநல் லிருக்கை தன்னி லயர்வுயிர்த் திறைவி யோடு
மிந்திர னிருந்த பின்ன ரென்றுநா மிறைவற் போற்றிப்
புந்திகொண் மகிழ்வாற் பூசை புரிதுமென் றுன்னி யாண்டோர்
நந்தன வனத்தை வைப்பா னுடியே யினைய செய்வான்.

(இ-ள்.) அந்தச் சீகாழிப் பதியில் இந்திரன் இந்திராணியுடன் சோர்வு நீங்கியிருந்தபொழுது, இனி நாம் சிவபெருமானைத் துதித்து மனத்திற் பொருந்திய மகிழ்ச்சியினுல் பூசைசெய்வோமென்று நினைத்து அங்கு ஒரு நந்தனவனம் வைக்கும் பொருட்டு யோசித்து இவைகளைச் செய்வானுயினன். (௪0)

சந்தகில் பலவு தேமாச் சரளமே திலகந் தேக்குக்
கொந்தவி ழசோகு புன்கு குரவொடு நாளி கேர
நந்திய கதலி கன்ன னுகிளம் பூகம் வன்னி
முந்துயர் காஞ்சி வேங்கை முதலிய வேலி கோலி.

(இ-ள்.) சந்தனம், அகில், பலா, தேமா, சரளம், மஞ்சாடி, தேக்கு, கொத்தாகமலர்ந்த அசோகு, புன்கு, குரா, தெங்கு, விளங்குகின்றவாழை, கரும்பு, மிக்க இளமைபொருந்திய கமுகு, வன்னி, மேலேயுயர்ந்த காஞ்சி, வேங்கை முதலிய விருக்ஷங்களால் வேலி யமைத்து.—எ-று. (௪க)

சாதியே கோங்கு நாகஞ் பண்பக மிதழி ஞாழல்
பாதிரி வழையே குந்தம் பாரிசா தஞ்செ ருந்தி
போதுறு நரந்தம் வில்வம் பொலிகர வீரஞ் செச்சை
கோதறு மயிலை மௌவல் கொழுந்துசெவ் வந்தி முல்லை.

(இ-ள்.) சிறுசண்பகம், கோங்கு, புன்னுகம், சண்பகம், கொன்றை, குங்குமம், பாதிரி, சுரபுன்னை குருந்து, பாரிசாதம், செருந்தி, அரும்புகள் பொருந்திய நாரத்தை, வில்வம், விளங்குகின்ற அலரி, வெட்சி, குற்றமற்ற இருவாட்சி, வனமல்லி, மருக்கொழுந்து, சாமந்தி, முல்லை.—எ-று. (௪உ)

இவைமுத லாகி யுள்ள தருக்களும் புதலு மெல்லா
நவையறத் தெரிந்து வைத்தோர் நந்தன வனத்தைச் செய்ய
வவைமிக மலர்ந்த வம்மா வம்மலர் கொண்டு நாளுஞ்
சிவனடி யருச்சித் தங்கட் டேவியோ டிறைவ னுற்றுன்.

(இ-ள்.) இவை முதலாகப் பொருந்திய விருக்ஷங்களும் புதர்களுமாகிய வனைத்துங் குற்றநீங்கத் தெரிந்துவைத்து ஒரு நந்தனவனத்தை யமைக்கவும் அவைகள் மிகுதியாக மலர்ந்தன; அந்த மலர்களைப் பறித்து நாள்தோறுஞ் சிவபெருமானது திருவடிகளில் அருச்சனை செய்துகொண்டு அவ்விடத்தில் தனது மனைவியுடன் தேவேந்திரன் வசித்திருந்தனன்.—எ-று. (சரு)

உற்றிடு மெல்லை தன்னி னுலகினி லவுணர்க் கெல்லாங்
கொற்றவன் விடுத்த வொற்றர் குவலயந் துருவிச் செல்ல
வற்றது தெரிந்து வல்லே யமரர்கோன் றுணைவி யோடு
மற்றவண் வேணு வாகி மறைந்துநோற் றிருந்தான் மாதோ.

(இ-ள்.) அவ்வாறு வசித்திருக்கும் நாள்களில், நிலவுலகத்தில் அசுரர்களை வருக்குந் தலைவனாகிய சூரபன்மன் அனுப்பிய தூதுவர்கள் உலகத்தில் தேடிக்கொண்டு செல்லும்பொழுது அதனைத் தெரிந்து தேவேந்திரன் விரைவாகத் தனது மனைவியுடன் மூங்கிலுருவங்கொண்டு அங்கு மறைந்து தவஞ்செய்துகொண்டிருந்தனன்.

வேணுவி னுருப்போ னின்று மெலிவொடு நோற்று நாளுந்
தாணுவை வழிபட் டங்கட் சதமகன் சாரு நாளிற்
காணில ரொற்றர் போனார் கருமுகி லவுணர் தங்க
ளாணையிற் பெய்யா தாக வவ்வனம் வாடிற் றன்றே.

(இ-ள்.) மூங்கிலினுருவம்போல நின்று வருத்தத்துடன் தவஞ்செய்து நாள்தோறும் சிவபெருமானைத்தொழுது அங்கு இந்திரன் வசித்திருந்த நாள்களில், தூதுவர்கள் இந்திரனைக் காணாதவர்களாய்ப் போய்விட்டார்கள்; அசுரர்களது கொடுங்கோன்மையால் கரிய மேகம் மழைபெய்யாது பொய்க்கவும் அந்த நந்தனவனம் வாடியது.—எ-று. (சஞ)

நீடிய காமர் பூங்கா நெருப்புறு தன்மைத் தென்ன
வாடின நீரின் றாகி மற்றது மகத்தின் கோமா
னாடினன் கவன்று தொன்னா ளுன்முகத் தவனு மாலுந்
தேடரும் பரனை யுன்னி யிரங்கினன் செயல்வே றில்லான்.

(இ-ள்.) மிக்க அழகினையுடைய அந்நந்தனவனமானது நீரில்லாமல் தீப்பட்ட தன்மையைப்போல வாடின; இந்திரன் அதனையுணர்ந்து மனக்கவலையடைந்து, முன்னாளில் பிரமனுந் திருமாலுந் தேடுதற்கரியவராய் நின்ற சிவபெருமானைத் தியானித்து வேறு செயலில்லாதவனாய் வருந்தினன்.—எ-று. (சசு)

திருந்தலர் புரமூன் றட்ட சேவகற் பரவ லோடும்
பொருந்தலர் பூங்கா வாடிப் போயின வெனினும் பொன்று
விருந்தல மிதனில் யாறொன் றெய்துமான் மகவா னின்னே
வருந்தலை யென்றோர் மாற்றம் வானிடை யெழுந்த தன்றே.

(இ-ள்.) பகையசுரர்களது முப்புரங்களையு மழித்தருளிய சிவபெருமானைத் துதிக்கவும், மலர்கள் பொருந்திய நந்தனவனம் வாடிப்போயின வென்றாலும், அழியாத பெரிய இந்தத்தலத்தில் இந்திரனே! ஒரு நதி வந்து சேரும்; இப்பொழுது வருந்தாதே யென்று ஒரு அசரீரியானது ஆகாயத்தினின்றுந் தோன்றியது.—எ-று.

எழுவதோர் செஞ்சொற் கேளா வெம்பிரா னருளீ தென்னாத்
தொழுதனன் போற்றி மேனி துண்ணெனப் பொடிப்பச் சிந்தை

முழுவது மகிழ்ச்சி பொங்க மொய்ம்பொடே யிருந்தா னங்க
ணழகிய நதியொன் றுற்ற வரன்முறை யறைய லுற்றேன்.

(இ-ள்.) அவ்வாறெழுந்த ஒப்பற்ற அசரீரிவாக்கியத்தை இந்திரன் கேட்டு எமது சிவபெருமானது திருவருளிதுவாகுமென்று வணங்கித் துதித்துத் தனது தேகத்தில் புளகாங்கிதமுண்டாகவும், மனமுழுதும் பெருங்களிப்புண்டாகவும் மனோதிடங்கொண்டிருந்தனன்; அவ்விடத்தில் ஒரு நதி யோடிவந்த வரலாற்றை மேல் சொல்லத்தொடங்கினேன்.—எ-று. (சஅ)

இந்திரன் கரந்துறை படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ககருஉ.

---

உ

முருகன்றுணை.

---

# விந்தகிரிப் படலம்.

அந்தப் பொழுதத் தளிகொண் டுடையோர்
சிந்தைக் கெளிதாஞ் சிவன்மெய் யருளான்
முந்துற் றுணர்நா ரதமா முனிவன்
விந்தக் கிரிமுன் னுறமே வினனால்.

(இ-ள்.) அச்சமயத்தில் அன்புடையவர்களது மனதிற்கு எளிதாக விளங்குகின்ற சிவபெருமானது திருவருளினால் நல்லுணர்வுபொருந்திய நாரதமுனிவர் விந்தகிரியி னெதிரில் சென்று சேர்ந்தனர்.—எ-று. (க)

மேவிப் பலவா சிவிளம் புதலுந்
தேவப் படிவங் கொள்சிலம் புதொழா
வாவற் புதம்வந் தமெம்மண் ணலென
வேவப் படுபான் மையிசைத் திடுவான்.

(இ-ள்.) அவ்வாறு சென்று பல ஆசீர்வசனங்களைக் கூறவும், தெய்வவடிவங்கொண்ட விந்தமலையானது வணங்கி எமது முதல்வர் வந்தமை ஆஆ! அற்புதமென்று கூறவும்; (நாரதமுனிவர் அவ்விந்தமலையைத்) தூண்ட வேண்டியதன்மைகளைக் கூறுவாராயினர்.—எ-று. (உ)

மேருத் தனிவெற் புவிதிக் கரியோன்
மூரிச் சிலையா கியமொய்ம் பதனாற்
றூரித் துலகீன் றவடன் மரபாற்
பேரற் பொடுவந் துபிறக் கையினால்.

(இ-ள்) ஒப்பற்ற மேருமலையானது சிவபெருமானுடைய பெரிய வில்லாகிய திறமையினாலும், லோகமாதாவாகிய பார்வதிதேவியார் தமது மரபில் மிக்க அன்போடு வந்து தங்கிப் பிறந்தமையினாலும்.—எ-று.

இதுமுதல் ஐந்துபாடலுங் குளகம். (ரு)

குன்றுக் கிறையா யுறுகொள் கையினு
லென்றைத் தொடவிண் ணிலெழுந் துறலா
னின்றிப் புவியா வையுநித் தனடு
மன்றைப் பகல்கா றுமளித் திடலால்.

(இ-ள்.) மலையரசென்னும் அபிப்பிராயத்தினுலும், சூரிய மண்டலத்தை யளாவமேலெழுந்து நிற்கின்றமையாலும், இவ்வுலகமுழுவதையும் சிவபெருமான் சங்கரிக்கின்ற அந்நாள்வரையிலும் ஆதாரமாக நின்று காக்கின்றமையினுலும்.—எ-று. ()

ஓரா யிரமா முடியுள் ளதனுற்
காரார் களன்மே யகவின் கயிலை
சாரா வொருசார் வுறுதன் மையினுற்
சூரா னவனுற் றெலைவில் லதனுல்.

(இ-ள்.) ஆயிரஞ் சிகரங்க ளுடைமையினுலும், சிவபெருமானெழுந்தருளி யிருக்கின்ற அழகிய திருக்கயிலையைத் தனது ஒருபுறத்திற்கொண்டு நிற்குந் தன்மையினுலும், சூரபன்மனு லழிவின்மையினுலும்.—எ-று. (ரு)

தாழுங் கதிருந் தருமே னெறியில்
வாழுஞ் சசியு மலிதா ரகையு
மேமெழன் றிடுகோ ளுமியா வர்களுஞ்
சூழும் படிநின் றிடுதொன் மையினுல்.

(இ-ள்.) கீழேயுள்ள சூரியனும் அவனுக்கு மேலிடத்தில் வாழுகின்ற சந்திரனும், மிக்க நக்ஷத்திரங்களும், சத்தக்கிரகங்களும் மற்றவர்களும், பழமையாக வலம் வரும்படி நிற்கின்றதன்மையினுலும்.—எ-று. (சு)

கொன்னே யிமையோர் குடிகொண் டதனுற்
பொன்னேர் கொடுயர்ந் துபொருந் துதலாற்
பன்னே மிகள்சூழ் வருபான் மையினுற்
றன்னே ரிலையென் றுதருக் கியதே.

(இ-ள்.) மிகுதியாகத் தேவர்கள் வாசஞ்செய்வதனுலும், பொன்னுருவத்துடன் உயர்ந்திருப்பதனுலும், அநேக மலைகள் தன்னைச் சூழ்ந்திருக்குந் தன்மையினுலும், தனக்கு ஒப்பு வேறொன்று மில்லையென்று தருக்கடைந்தது.—எ-று. (எ)

பரந்தும் பர்நிமிர்ந் திடுபைம் பொன்வரை
பெருந்தன் மைமதித் திடுபெற் றியைநீ
தெரிந்தில் லைகொலன் னசெயற் கையெலாம்
விரைந்துன் னெடுசெப் பியமே வினனே.

(இ-ள்.) விரிந்து மேலெழுந்த அழகிய மேருமலையானது பெருமை யடைந்திருக்குந் தன்மையை நீ அறிந்ததில்லையோ? யான் அத்தன்மைகளனைத்தையும் விரைவாக உன்னுடன் கூறும்படி வந்தனன்.—எ-று (அ)

என்றுன் முனிவோ னிதுகேட் டிடலு
மொன்ற கியதே வுருவா யெதிரும்
வன்றழ் கிரிமா மறமுற் றுயிரா
நன்று லிஃதென் றுநகைத் தறையும்.

(இ-ள்.) என்று நாரதமுனிவர் கூறினர்; இவ்வார்த்தையைக் கேட்டவுடனே ஒரு தெய்வவடிவங்கொண்டுவந்து வணங்கிய மிக்க தாழ்வரைகளையுடைய விந்த

மலையானது மிக்க வீரங்கொண்டு பெருமூச்சு விட்டு இது நன்முயிருக்கிறதென்று நகைத்துக்கூறும்.—எ-று. (கூ)

இல்லா யுளதொல் லிறுமாப் பகலப்
பல்லா ரிகழப் பகரும் விதியா
னல்லா ரெனவே நனிநா ணமுறா
வில்லா கிவளைந் ததுமேன் மையதோ.

(இ-ள்.) வாசஸ்தானமாகவிருந்த பழைய இறுமாப்பு நீங்கவும், பல பேரிகழ்ச்சி செய்யவும் சொல்லப்பட்ட ஊழினல் பெண்களைப்போல மிகவும் வெட்கங்கொண்டு வில்லாகி வளைந்தது சிறந்ததோ?—எ-று. (க0)

பொன்னா ரிமவான் புரிநோன் பதனா
லன்னா னிடைவந் தமர்வுற் றனளான்
மன்னா குமவன் மகளா யினளோ
வென்னா ளுமியா வையுமீன் றருள்வாள்.

(இ-ள்.) பொன்மயமாகிய இமயபர்வதராசன் செய்த தவத்தினல் எக்காலத்தும் எல்லா வுயிர்களையும் பெற்றருளிய உமாதேவியார் அவ் விமயபர்வதராசனிடத்து வந்திருந்தருளினர்; இதுவன்றி அரசனுகிய அவனுக்குப் புத்திரியாகப் பிறந்தனரோ?—எ-று. (கக)

பாங்குற் றிடுபா ரினையாற் றுவனென்
றோங்குற் றனனெவ் வுலகும் பரியா
வாங்குற் றனவோ பலவன் னவையுந்
தாங்குற் றதுகண் ணுதல்சத் தியதே.

(இ-ள்.) தகுதியாகிய உலகத்தைத் தாங்குவேனென்று உயர்ந்தனன்; எவ்வுலகங்களையுஞ் சுமந்து அங்கு நின்றனவோ? பலவாகிய அவ்வுலகங்களை யெல்லாஞ் சுமந்துநிற்பது சிவசத்தியேயாம்.—எ-று. (கஉ)

விற்சூழ் கதிரோன் முதல்விண் ணவர்க
டற்சூழ்ந் தனரல் லதுசந் ததமு
மெற்சூழ்ந் திலரோ வெழுதீ வுளவாங்
கற்சூழ்ந் திலரோ கடல்சூழ்ந் திலரோ.

(இ-ள்) ஒளிபொருந்திய சூரியன் முதலிய தேவர்கள் தன்னைச் சூழ்ந்துவந்தனரோயன்றி என்றும் என்னைச் சூழ்ந்திலரோ? எழு தீவுகளிலுமுள்ள மலைகளையுஞ் சூழ்ந்திலரோ?—எ-று. (கங)

பன்னிற் குவடும் பலவுண் டெனவே
யுன்னிற் றிடுமோ வுயர்கள் ளிகளின்
சென்னித் தொகையைத் தெரிசிக் கினயன்
றன்னைத் திலனோ தலைநான் குளவே.

(இ-ள்.) சொல்லுமிடத்து உயர்ந்த கள்ளிகளைப்போலத் தனக்கும் பல சிகரங்களுண்டென்று நினைக்குமோ? தலைகளைப் பார்க்குமிடத்தில் பிரமன் தன்னை யொப்பானவ னல்லனோ? நான்குதலைக ளிருக்கின்றனவே.—எ-று. (கச)

கடிதா கியகு ரிதுகல் லெனவே
யடரா மல்விடுத் தனனன் றுதனை
நெடிதே யதுவுன் னிலனீள் பரிதிப்
படையா னினுமாற் றல்படைத் துளனோ.

கடிதா கியசூ ரிதுகல் லெனவே
யடரா மல்விடுத் தனனன் றுதனை
நெடிதே யதுவுன் னிலனீள் பரிதிப்
படையா னினுமாற் றல்படைத் துளனோ.

(இ-ள்.) கொடுமைபொருந்திய சூரபன்மன் இது கல்லென்று கருதி யழிக்காமல் விட்டனன். சக்கரத்தையுடைய திருமாலைப் பார்க்கிலும் மிக்க வல்லமையைப் படைத்துள்ளவனோ? இவன் மிகவுந் தீர்க்காலோசனை செய்தானில்லை.—எ-று (கரு)

தண்ணுற் றிடுபொன் மைதயங் குருவ
நண்ணுற் றனமென் றுளநா டினனோ
வெண்ணுற் றவனல் லுணர்வெய் திலனுன்
மண்ணிற் புனைபா வைவனப் பதுவே.

(இ-ள்.) குளிர்ச்சிபொருந்திய பொன்னிறமாக விளங்குகின்ற உருவத்தை யடைந்திருக்கின்றோமென்று மனத்தில் நினைத்தனனோ? இவ்வாறு நினைத்தவன் நல்லறிவுடையவனல்லன்; ஆதலால் அவனுருவம் மண்ணாற்செய்த பாவையினது அலங்காரத்தை யொக்கும்.—எ-று. (கசு)

தன்கண் ணுறுவா னவர்தாம் பலரு
மென்கண் ணமரா மலிகழ்ந் தனரோ
நன்கண் ணுதனு யகனுர் கயிலை
யின்கண் ணருகுற் றிலதெக் கிரியே.

(இ-ள்.) தன்னிடத்தில் வசிக்கின்ற தேவர்களெல்லாம் என்னிடத்தி லிருக்கமாட்டோமென்று இகழ்ந்தார்களோ? சிவபெருமானது கயிலாயத்தைச் சார்ந்து நில்லாத மலைகள் யாவை?—எ-று. (கஎ)

திருவைத் தவர்கண் டுயில்செங் கணரா
மருவித் தனைமுந் துமறைத் திடுநாள்
விரைவிற் படரூ தைவெகுண் டுபெறித்
தொருமுத் தலைகொண் டதுணர்ந் திலனோ.

(இ-ள்.) திருமால் தூங்குகின்ற பாயலாகிய ஆதிசேடன் முன்னம் தன்னை யடைந்து படங்களால் மூடிக்கொண்டபொழுது வேகமாக வீசுகின்ற வாயுவானவன் கோபித்து மூன்றுதலையைப் பிடுங்கி யெறிந்ததை யுணர்ந்திலனோ?—எ-று. (கஅ)

கிளர்ப்புற் றிடுசிம் புளோர்கே சரிமுன்
னளப்பற் றிடுதன் னுருவண் டமெலாம்
வளர்ப்புற் றிடுஞான் றொர்மணிப் பரல்போற்
குளப்புற் றனனீ துகுறித் திலனோ.

(இ-ள்.) ஒரு சிங்கத்தினெதிரில் விளங்குகின்ற சரபமானது அளவற்ற தனது உருவத்தை உலகமுழுவதும் வளர்த்து நின்றகாலத்தில் ஒரு சிறுபருக்கைக் கல்லைப்போலச் சிதறுண்டனன்; இதனை யுணர்ந்திலனோ?—எ-று. (கக)

வரபத் திரைகேள் வன்மறம் புரியுஞ்
சரபத் துருவுற் றழிதாழ் சிறையின்
விரவிப் படரூ தையின்மின் மினிபோற்
றிரிகுற் றனனன் னதுதேற் றிலனோ.

(இ-ள்.) வீரபத்திரர் கொடுமைசெய்கின்ற சரபவடிவங் கொண்டபொழுது அவரது தாழ்ந்த இறகினின்றும் வேகமாகவந்த காற்றில் மின்மினியைப்போ லுலாவினுன் ; அதனைத் தெளிந்தானில்லையோ ?—எ-று. (உ௦)

அறியுற் றிடுபா ரதமா னவெலாங்
குறியுற் றிடுதோன் முகர்குஞ் சரன்மே
லெறியுற் றமருப் பினிலே டெனலாய்ப்
பொறியுற் றிடுமென் பதுபொய்த் திடுமோ.

(இ-ள்.) அறியப்பட்ட பாரதமுழுவதையும் யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள் கஜமுகாசுரன்மேல் பிரயோகித்த கொம்பினுலே ஏடாக எழுதப்படுமென்பது பொய்யாகுமோ ?—எ-று. (உக)

தானோர் வரையல் லதுதா ரணியுண்
கோனே வலனல் லதுகோ கனத
வானே னலன்வா சவனல் லனவ
னேனே தனைமே லெனவெண் ணியதே.

(இ-ள்.) தானொரு மலையேயல்லாமல் திருமாலல்லன் ; அல்லது பிரமனே அல்லன்; இந்திரனுமல்லன் ; பின்னர் எதைக்கருதியோ தன்னை மேலென்று நினைத்தது.—எ-று. (உஉ)

என்னு வடவெற் பையிழித் துரையா
வந்நா கம்வியக் குமகந் தையினை
நன்னா ரதநீக் குவனு டுகெனு
முன்னு வுருநீத் ததுமொய் வரையே.

(இ-ள்.) என்று மேருமலையை யிகழ்ந்துகூறி, நாரதமுனிவரோ ! அம்மேருமலையானது தன்னைப் புகழ்ந்துகொண்டிருக்கின்ற அகங்காரத்தை யான் நீக்குகின்றேன் நீர் பாருமென்றுகூறி, வலிமைமிக்க அவ்விந்தமலையானது தனது தேவவடிவத்தை யொழித்தது.—எ-று. (உ௩)

வேறு.

எண்டரு முகுந்தர் கோடி யெல்லையின் மாயை யாக்கை
கொண்டனர் திரண்டு நீண்டு குலாய்நிமிர் கொள்கைத் தென்ன
விண்டொடர் விந்த மாங்கோர் விஞ்சையா லகன்று சேண்போய்ப்
புண்டரி கத்தன் மேய புரத்துணை நிமிர்ந்த தன்றே.

(இ-ள்.) கோடியென்னு மெண்ணினையுடைய விஷ்ணுக்கள் அளவற்ற மாயாவடிவத்தைக்கொண்டு ஒன்றுசேர்ந்து நீண்டு விளங்கி வளர்ந்த தன்மையைப் போல, ஆகாயத்தை யளாவிய விந்தமலையானது ஒருமந்திரத்தினுல் விலகி மேலே சென்று பிரமலோகம்வரையிலும் நிமிர்ந்து நின்றது.—எ-று. (உ௫)

உருக்கிளர் விந்த மென்னு முருகெழு பிறங்கல் மேல்போய்ப்
பரக்கம தாகி யம்பொற் பனிவரை காறு மான்று
நெருக்கிய தனைய பான்மை நிலமுழு தளந்த மேலோன்
றிருக்கிளர் பொன்னந் தூசு புனைந்தெனத் திகழ்ந்த தம்மா.

(இ-ள்.) விளங்குகின்ற விந்தமென்னு முருவமிக்க மலையானது மேலோங்கிப் பரந்து அழகிய இமாசலம்வரையிலும் விரிந்து நெருங்கி நின்றது ; அத்தன்மை

யெதுபோலுமெனின், உலகத்தை யளந்த திருமால் அழகிய பீதாம்பரந் தரித்ததைப் போன்று விளங்கியது.—எ-று. (உரு)

விந்தமிந் நெறியா லான்று மேக்குறக் கிளர்ந்து போகி
யந்தர நெறியை மாற்ற வலரிவெண் டிங்கள் சேயோன்
புந்திபொன் புகரோ காரி புயங்கநாள் பிறரு நோக்கிச்
சிந்தையிற் றுணுக்க மெய்தி யினையன செப்ப லுற்றார்.

(இ-ள்.) விந்தமலை இவ்வாறாக மேலே வளர்ந்துசென்று ஆகாய வழியை யடைத்துக்கொள்ளவும், சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், வியாழன், வெள்ளி, சநி, இராகு, கேது முதலிய கிரகங்களும், அசுவினியாதி நக்ஷத்திரங்களும், மற்றவர்களும் பார்த்து மனதில் நடுக்கங்கொண்டு இவ்வாறு கூறுவாராயினர்.—எ-று. (உசு)

தானவர் செயலோ வென்பார் தருமமில் லரக்க வெய்யோ
ரானவர் செயலோ வென்பா ரல்லவே லயன்மா லென்னும்
வானவர் செயலோ வென்பார் மாயமீ தாகு மென்பார்
மேனிமிர் பிறங்க லின்றி வெள்ளிடை யிலைகொ லென்பார்.

(இ-ள்.) இது அசுரர்களது செய்கையோ வென்பார்கள்; தருமமில்லாத இராக்கதர்களது செய்கையோ வென்பார்கள்; அன்றேல், பிரம விஷ்ணுக்களென்று கூறுந் தேவர்களது செய்கையோ வென்பார்கள்; இது மாயமாகுமென்று கூறுவார்கள்; மேலே வளர்ந்துள்ள இம்மலையையன்றி வெளியிடம் வேறில்லையோ வென்பார்கள்.—எ-று. (உஎ)

என்னிது வென்று போதத் தெம்பிரா னருளா னுட
வன்னது தெரித லோடு மாமிது விந்த மேருத்
தன்னுட னிகலொன் றுண்டாய்த் தராதல வரைப்பில் வானிற்
சென்னெறி விலக்கிற் றென்று சிந்தனை செய்து தேர்வார்.

(இ-ள்.) இது யாது காரணமென்று அறிவைக்கொண்டு எமது சிவபெருமானது திருவருளினால் ஆராய்ச்சிசெய்ய அதனுண்மை தெரிதலும், இது விந்தமலை மேருமலையுடனே பகைகொண்டு மண்ணிலும் விண்ணிலும் போகும் வழியை யடைத்ததென்று கூறி ஆலோசித்துத் தெளிகின்றார்கள்.—எ-று. (உஅ)

செம்பொன்மால் வரையின் பாங்கிற் சிவனடி யுன்னி நோற்றே
யம்புரா சியைமுன் னுண்டோ னமர்ந்தன னவனீண் டுற்றா
லும்பர்போய் நின்ற விந்த மொடுங்குமென் றியாரு மோர்ந்து
கும்பமா முனியை யுன்னி யினையன கூற லுற்றார்.

(இ-ள்.) சிவந்தபொன்மயமாகிய மேருமலையினருகில் முற்காலத்தில் கடலையுண்டவராகிய அகஸ்தியமுனிவரர் சிவபெருமானது திருவடிகளைச் சிந்தித்துத் தவஞ்செய்து கொண்டிருக்கின்றனர்; அவர் இங்குவந்தால் ஆகாயத்திலுயர்ந்த விந்தமலை யடங்குமென்று யாவருமுணர்ந்து, அகஸ்தியமுனிவரை நினைத்து இத்தகைய வார்த்தைகளைக் கூறத்தொடங்கினார்கள்.—எ-று. (உக)

விந்தகிரிப்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-ககஅக.

---

உ

முருகன்றுணை.

# அகத்தியப்படலம்.

பொன்னார் கழல்க ளருச்சித்திடப் போதுகொய்யுங்
கைந்நாக மாலை நினைந்தே கராவொன்று கௌவ
வென்னா யகனே யெனத்தன்கை யெடுத்தழைப்ப
வன்னானங் கெய்தி விடுவித்த தறிகிலாயோ.

(இ-ள்.) (திருமால்) சிவபெருமானது பொன்மயமான திருவடிகளை யருச்சிக்கும்பொருட்டு மலர் கொய்யச்சென்ற யானையானது தன்னை முதலைபிடித்துக்கொண்டபொழுது தன் துதிக்கையை நீட்டித் திருமாலை நினைந்து எனது நாயகரோ! என்று ஓலமிட்டழைத்தபொழுது திருமால் அங்குச்சென்று அந்த யானையைத் துன்பத்தினின்றும் நீக்கினதை யறிந்திலீரோ?—எ-று. (க)

பூவார் கமலத் தயனல்கிய பூவைதன்மேற்
றாவா மயலாய்க் கிளியாகித் தொடர்ந்துசெல்லக்
காவாய் பரனே யெனவோலிடுங் கலங்கலென்றே
தேவாதி தேவ னருள்செய்தது தேர்கிலாயோ.

(இ-ள்.) கமலாசனனாகிய பிரமன் தன்புதல்வியாகிய திலோத்தமையின்மீது நீங்காத மோகங்கொண்டு கிளியுருவத்துடன் தொடர்ந்து செல்லுங்காலத்தில் அவள் பரமனே! என்னை இரக்ஷிப்பீராகவென்று கூறுதலும், தேவதேவராகிய சிவபெருமான் அஞ்சாதேயென்று கூறி அவளை அத்துன்பத்தினின்றும் நீக்கியதை யுணர்ந்திலீரோ?—எ-று. (உ)

சத்தார் பிருகு தனதில்லைத் தடிந்தவெல்லை
யித்தா ரணியி லளவில்பிறப் பெய்துகென்ன
வத்தா வருளென் றரிநோற்றுழி யையன்வந்து
பத்தாக வென்று நிறுவுற்றது பார்த்திடாயோ.

(இ-ள்.) நன்மை யமைந்த பிருகுமுனிவர் தமது பத்தினியைத் திருமால் கொன்றபொழுது நீ இவ்வுலகத்தில் அளவற்ற பிறவியை யடையக்கடவையென்று சபித்தலும், திருமால் சிவபெருமானைநோக்கி எமதாண்டவரோ! திருவருள்செய்வீராகவென்று தவஞ்செய்தபொழுது அங்குச்சிவபெருமானெழுந்தருளி நீ பத்துப்பிறவியை யடையக்கடவையென்று கட்டளையிட்டருளியதை நீர் பார்த்திலீரோ?—எ-று. (ங)

தேவர்க் கெனினு நிலத்தின்கட் செறிந்துவாழ்வோ
ரேவர்க் கெனினு மொருதுன்புறி னெய்தி நீக்கல்
காவற் குரியார் கடனாமக் கடமை தூக்கின்
மேவற் கரிதாந் தனிமுத்தியின் மேலதன்றே.

(இ-ள்.) தேவர்களுக்கானாலும் உலகத்தில் நெருங்கி வசிக்கின்ற மற்றெவர்களுக்கானாலும் ஒரு துன்பநேர்ந்தால் சென்று அதனை நீக்குதல் இரக்ஷிக்குந்

தொழிலை யுடையவர்களது கடமையாம்; ஆலோசிக்குமிடத்தில் அக்கடமை அடைதற்கரிய முத்தியின்பத்தைப் பார்க்கிலுஞ் சிறந்ததன்றோ?—எ-று. (ச)

தெள்ளத் தெளிந்த மறைக்கள்வனைச் செற்ற மீன்போ
லள்ளற் கடலை யொருநீ யகன்கை யடக்கிக்
கள்ளத் தவுண னிலைகாட்டிநங் கண்ணில்வைத்த
கொள்ளைக் கருணை யுலகெங்கணுங் கொண்டதெந்தாய்.

(இ-ள்.) மிக்க தெளிவினையுடைய வேதத்தைத்திருடிய சோமுகாசுரனைக் கொன்ற மச்சாவதாரத்தைப்போலச் சேற்றினையுடையகடலை நீர் உள்ளங்கையிலடக்கிச் சோரத்தன்மைபொருந்திய விருத்திராசுரனைக்காட்டி எங்களிடத்தில் வைத்த பெரிய கருணையை எமது முதல்வரோ! உலகமுழுவது நிறைந்துள்ளது.—எ-று. (ரு)

விந்தக் கிரிநாரதன் சூழ்ச்சியின் மேருவெற்போ
டிந்தப் பொழுதத் திகல்கொண் டுலகெங்குமீறு
மந்தத் துயருங் கயிலைக்கிணை யாவலென்றே
சிந்தித் ததுகொ லெழுந்திட்டது சேணதெல்லாம்.

(இ-ள்.) நாரதரது போதனையினால் விந்தமலையானது இப்பொழுது மேருமலையோடு பகைத்து எல்லாவுலகங்களு மழிகின்ற ஊழிக்காலத்தில் வளர்ந்து நிற்கின்ற திருக்கயிலைக் கிணையாவேனென்று நினைத்ததோ? வானமெங்கும் பரவி மேலோங்கியது.—எ-று. (சு)

மண்ணுற்ற வெல்லை யளவிட்டிடு மால்கொ லென்றே
யெண்ணுற் றெவரும் வெருக்கொண்டிட வீண்டை விந்தம்
விண்ணுற்ற வண்டத் துணையாய்மிசைப் போவதையா
கண்ணுற்ற நோக்கம் விடுத்தேயிது காண்கிலாயோ.

(இ-ள்.) உலகமுழுவதையு மளந்த திருமாலோவென்று நினைத்து யாவர்களும் பயப்படும்படி இப்பொழுது விந்தகிரியானது மேலண்டம்வரையிலும் செல்லும் பொருட்டு மேலோங்குகின்றது; ஐயனே! தேவரீர் தியான நோக்கத்தைவிட்டு இதனைப்பார்த்திலீரோ?—எ-று. (எ)

மல்லற் கிரிவிண் ணெறிமாற்றலின் மற்றெமக்குஞ்
செல்லற் கரிதாயது பாருடைத் தேயமுற்று
மெல்லைப் பொழுது மயக்குற்ற விவற்றை நீக்க
வொல்லைக் குறியோய் வரல்வேண்டுமென் றுன்னலுற்றார்.

(இ-ள்.) வளப்பம்பொருந்திய விந்தமலையானது ஆகாய வழியை யடைத்தலினால் உலக முழுமையும் எங்களால் செல்லுதற்குக் கூடவில்லை; இரவும் பகலும் மயங்கின; இவ்விடையூறுகளை நீக்கும்பொருட்டு அகஸ்திய முனிவரோ! தேவரீர் விரைவாக வரவேண்டுமென்று நினைத்தார்கள்.—எ-று. (அ)

வேறு.

உன்ன லோடு முலக நனந்தலைப்
பொன்னின் மேருப் புடையொர் பொதும்பரின்
மன்னி நோற்றுறை வண்டமிழ் மாமுனி
தன்னு ளத்திலத் தன்மைகண் டானரோ.

(இ-ள்.) தேவர்களிவ்வாறு நினைத்தவுடனே பூமியி னடுவினிற்கின்ற மேருமலையி னொருபுறத்திலுள்ள ஒரு சோலையி லிருந்துகொண்டு தவஞ்செய்கின்ற வள

விய தமிழ்த்தலைவராகிய அகஸ்தியமுனிவர் தமதுள்ளத்தில் இத்தன்மையை யுணர்ந்தனர்.—எ-று. (கூ)

மேக்கு யர்ந்திடும் விந்தத்தி னாற்றலை
நீக்கி வான நெறியினைத் தொன்மைபோ
லாக்கி யண்டர் குறைப்பு மகற்றுவா
னூக்கி னான்முன் னுததியை யுண்டுளான்.

(இ-ள்.) முன்னாளில் கடலையுண்ட அகஸ்திய முனிவரர் மேலே வளர்ந்து சென்ற விந்தத்தின் வலிமையை யடக்கி ஆகாய வழியைப் பழயபடியே யாக்கித் தேவர்களது மனக்குறையையும் நீக்கும்படி நினைத்தனர்.—எ-று. (கo)

துள்ளி கண்ணிடைத் தூங்குறக் கைதொழ
வுள்ள மென்பொ டுருகவு ரோமமார்
புள்ளி பொங்கப் புகழ்ந்து புரிசடை
வள்ள றன்னை மனத்திடை முன்னினான்.

(இ-ள்.) கண்களில் ஆனந்தபாஷ்பஞ் சொரியவும், கரங்கள் வணங்கவும், மனம் எலும்புட னுருகவும், புளகாங்கித முண்டாகவும் முறுக்காகிய சடைமுடியையுடைய சிவபெருமானைத் தம் மனத்தில் தியானித்தனர்.—எ-று. (கக)

முன்னு மெல்லையின் மூரிவெள் ளேறெனு
மின்னு தண்சுடர் வெள்ளிவெற் பின்மிசைப்
பொன்னின் மால்வரை போந்தெனப் புங்கவன்
றுன்னு பாரிடர் சூழ்தரத் தோன்றினான்.

(இ-ள்.) அவ்வாறு தியானித்தபொழுது பெரிய இடபமென்று சொல்லப்பட்ட விளங்குகின்ற குளிர்ந்த சுடரோடு கூடிய வெள்ளிமலையின்மீது பெரிய பொன்மலை வந்தாற்போலச் சிவபெருமான் நெருங்கிய பூதகணங்கள் சூழ்ந்துவரும்படி எழுந்தருளினார்.—எ-று. (கஉ)

ஆதி யுற்றுழி யச்சமொ டேயெழீஇ
மூது ரைத்தமிழ் முற்றுணர் மாமுனி
கோதை யுற்றிடக் கொம்பொடு வாங்கிய
பாத வத்திற் பணிந்தனன் பன்முறை.

(இ-ள்.) பழய சொற்களமைந்த தமிழ் முழுவதையு முணர்ந்த அகஸ்திய முனிவர் சிவபெருமா னெழுந்தருளியபொழுது அச்சங்கொண்டெழுந்து, காற்றடிக்கும்பொழுது கிளைகளுடன் பலமுறையுஞ் சாய்ந்துசாய்ந் தெழுகின்ற மரத்தைப்போலப் பலமுறை வணங்கினார்.—எ-று. (கங)

சென்னி பாரிற் றிளைத்திடத் தாழ்ந்துபின்
முன்னர் நின்று முறைபடப் போற்றலு
மின்னு லாஞ்சடை விண்ணவன் வெஃகிய
தென்னை மற்ற தியம்புதி யாலென்றான்.

(இ-ள்.) சிரசானது பூமியில் படும்படி வணங்கி நின்று முறைப்படித் துதித்தலும், மின்போல் விளங்குஞ் சடைமுடியையுடைய சிவபெருமான் நீ யாது விரும்பினை? அதனைக் கூறக்கடவையென் றருளிச்செய்தனர்.—எ-று. (கச)

விந்த மால்வரை மேருவை மாறுகொண்
டுந்த ரத்தை யடைத்த ததன்வலி

சிந்த வென்கட் சிறிதருள் செய்கெனச்
சந்த நூற்றமிழ்த் தாபதன் கூறினன்.

(இ-ள்.) பெரிய விந்தகிரியானது மேருவுடன் பகைத்து ஆகாய வழியை யடைத்தது; அவ்விந்தத்தின் வலிமையைக் கெடுக்கும்பொருட்டு அடியேனுக்குச் சிறிது திருவருள் புரிவீராகவென்று சந்தங்களையுடைய தமிழ்நூலை யுணர்ந்த அகஸ்தியமுனிவர் கூறினர்.—எ-று. (கரு)

அக்க ணத்துனக் காற்றல் வழங்கின
மிக்க விந்தத்தை வேரொடும் வீட்டியத்
தெக்கி ணஞ்சென்று சீர்ப்பொதி யத்திடைப்
புக்கு வைகெனப் புங்கவன் செப்பினன்.

(இ-ள்.) உடனே சிவபெருமான் முனிவனே! உனக்கு வலிமையைத் தந்தருளினம்; உயர்ந்துள்ள அவ்விந்தமலையை வேருடனழித்து அந்தத் தென்றிசையை யடைந்து சிறந்த பொதியமலையினிடத்துச் சென்று வசிக்கக்கடவையென் றருளிச் செய்தனர்.—எ-று. (கசு)

என்ற லுந்தொழு தேத்திநின் பூசனை
நன்று செய்ய நளிதடங் கூவலு
நின்றி டாப்புன னீடவுந் தென்றிசைக்
கொன்றொர் தீர்த்த முதவுகென் றேத்தினன்.

(இ-ள்.) என்று அருளிச் செய்தவுடனே (அகஸ்திய முனிவரர்) வணங்கித் துதித்து தேவரீரது பூசனையை இடையூறின்றிச் செய்யும்பொருட்டுக் குளிர்ந்த தடாகங்களிலும் கிணறுகளிலும் நீர்நிலைத்து நிற்கமாட்டா; ஆதலால் தென்றிசையின்பொருட்டு ஒரு தீர்த்தத்தை யளித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.—எ-று. (கஎ)

அனைய காலை யருங்கயி லாயமே
லினிது வைகிய வேழ்நதி தன்னுளும்
புனித மாகிய பூம்புனற் பொன்னியைப்
பனிம திச்சடைப் பண்ணவன் முன்னினன்.

(இ-ள்.) அப்பொழுது அருமையாகிய திருக்கயிலாயத்தில் இனிமையோடும் வசிக்கின்ற சப்த நதிகளிலுந் தூய்மையாகிய அழகிய நீரையுடைய காவிரி நதியைக் குளிர்ந்த இளம்பிறையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் நினைத்தருளினர்.

அந்த வேலை யஃதுணர்ந் தேவெரீஇச்
சிந்தை பின்னுறச் சென்று திருமுனம்
வந்து காவிரி வந்தனை செய்தலு
மெந்தை நோக்கி யிதனை யியம்புவான்.

(இ-ள்.) அந்தச் சமயத்தில் அதனை யுணர்ந்து பயந்து மனோவேகமும் பின்னிடும்படி விரைவாகவந்து காவிரியானவள் திருமுன்னின்று வந்தனை செய்யவும் சிவபெருமான் பார்த்தருளி இதனை யருளிச்செய்வாராயினர்.—எ-று. (ககூ)

தீது நீங்கிய தென்றிசைக் கேகிய
கோதி லாத குறுமுனி தன்னொடும்
போதல் வேண்டும் பொருபுனற் காவிரி
மாது நீயென மற்றவள் கூறுவாள்.

(இ-ள்.) தீமையகன்ற தென்றிசைக்குச் செல்லுகின்ற குற்றமற்ற அகஸ்தியமுனிவனுடன் அலைவீசுகின்ற நீர்வடிவமான காவிரி மாதே! நீ போதல்வேண்டுமென் றருளிச்செய்யவும், அக்காவிரிமாது கூறுகின்றனள்.—எ-று. (உ0)

திண்மை யைம்பொறி செற்றுள னாயினு
மண்ண லேயிவ னாண்டகை யாகுமாற்
பெண்ணி யானிவன் பின்செல னீதியோ
வெண்ணி னீது மியற்கையன் றென்னவே.

(இ-ள்.) வலிமை மிக்க பஞ்சேந்திரியங்களைச் செயித்தவனா யிருப்பினும், எம்பெருமானே! இவன் ஆண்மகனாகும்; யானோ பெண்மகள்; ஆதலால், இவனுக்குப் பின்னே அடியாள் போதல் நீதியாகுமோ? யோசிக்குமிடத்தில் இது முறைமையுமன்று என்று கூறுதலும்.—எ-று. (உக)

திரிபில் சிந்தையன் றீதுநன் கிற்படா
வொருமை கொண்ட வுளத்தனம் மன்பருட்
பெரிய னீங்கிவன் பின்னுறச் செல்கென
வருள்பு ரிந்தன னால மிடற்றினன்.

(இ-ள்.) நீலகண்டராகிய சிவபெருமான் (காவிரியை நோக்கி) இவன் மாறுபாடில்லாத மனத்தினையுடையவன்; வெறுப்பு விருப்பிற்சேராத ஏகாக்கிரமான சிந்தனையை யுடையவன்; நமதன்பர்களில் மிகச் சிறந்தவன்; ஆதலால், இவன் பின்னால் நீ போகக்கடவையென்று கட்டளை யிட்டனர்.—எ-று. (உஉ)

ஆங்க தற்கிசைந் தந்நதி யின்றியான்
நீங்கி லாத முனியொடு பின்செல்வ
னோங்கன் மேய வொருவ விவன்றனை
நீங்கு காலத்தை நீயருள் கென்னவே.

(இ-ள்.) அக் காவிரிநதியானது அதற்கிசைந்து, திருக்கயிலாயத்தி லெழுந்தருளிய முதல்வரே! யான் குற்றமற்ற அகஸ்தியமுனிவனுடன் செல்கின்றேன்; இம்முனிவனை விட்டுப் பிரியுங்காலத்தைத் தேவரீர் அருளிச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தலும்.—எ-று. (உங)

நன்று நன்றிது நங்கைநின் காரணத்
தென்று நோக்கி யிவன்கரங் காட்டுவ
னன்று நீங்கி யவனியின் பாலதாய்ச்
சென்று வைகெனச் செப்பின னெந்தையே.

(இ-ள்.) இது நல்லது நல்லது: காவிரியே! இம்முனிவன் உன்னிமித்தம் எப்பொழுது (உன்னைப்) பார்த்துப்போவென்று கையைக் காட்டுவானோ அப்பொழுது நீ இவனை விட்டு விலகி நிலவுலகத்திற் சென்று வசிக்கக்கடவையென்று எமது சிவபெருமா னருளிச்செய்தனர்.—எ-று. (உச)

செப்பு மாற்றஞ் செவிக்கமு தாதலு
மப்பெ ரும்புன லாறவன் பின்செல
வொப்ப லோடு முயிர்க்குயி ராகியோன்
றப்பின் மாமுனிக் கின்னது சாற்றினன்.

(இ-ள்.) சிவபெருமா னருளிச்செய்த திருமொழிகள் செவிக்கு அமுதம் போன்றிருக்கவும், மிக்க நீரையுடைய அக்காவிரிநதி அம்முனிவர் பின்னே செல்லும்

படிச் சம்மதிக்கவும், உயிர்க்குயிராயுள்ள சிவபெருமான் குற்றமற்ற அகஸ்தியமுனிவரைப்பார்த்து இவ்வாறு அருளிச் செய்கின்றனர்.—எ-று. (உரு)

நீடு காவிரி நீத்தத்தை நீயினிக்
கோடி யுன்பெருங் குண்டிகைப் பாலென
நாடி யத்திறஞ் செய்தலு நன்முனி
மாடு சேர்ந்தனண் மாநதி யென்பவே.

(இ-ள்.) மிக்க பிரவாக வடிவமான இந்தக் காவிரியாற்றினை இனி நீ உனது பெரிய கமண்டலத்திற் சேர்த்துக்கொள்ளக்கடவை யென்றருளிச் செய்யவும், அகஸ்தியமுனிவர் அவ்வாறே விருப்புற்றுச் செய்துகொள்ளவும்; காவிரிமாது அவரது கமண்டலத்திற் சேர்ந்தனள் என்று பெரியோர்கள் கூறுவர்.—எ-று. (உசு)

ஆய காலை யகத்திய தென்றிசைத்
தேய மேகனச் சீர்விடை நல்குறுப்
பாயு மால்விடைப் பாகன் மறைந்தனன்
போயி னுன்செறி பூதரி னத்தொடும்.

(இ-ள்.) அப்பொழுது, அகஸ்தியனே! நீ தென்றிசை நாட்டிற்குச் செல்லக் கடவையென்று சிறந்த விடையளித்து, நெருங்கிய பூதர் கூட்டங்களுடன் பாய்கின்ற இடபவாகனராகிய சிவபெருமான் மறைந்தெழுந்தருளினர்.—எ-று. (உஎ)

வேறு.

அத்தனங் கொருவ வன்ன னருளடைந் தங்க ணீங்கி
மெய்த்தகு மதலை வேண்டி விதர்ப்பர்கோன் பயந்த லோபா
முத்திரை தனைமுன் வேட்டு முதுக்குறைத் திண்மை சான்ற
சித்தனை யளித்த வள்ள றென்றிசை நோக்கிச் சென்றான்.

(இ-ள்.) சிவபெருமான் அவ்விடத்தினின்றும் மறைந்தருளவும், அகஸ்தியமுனிவர் அவ்வெம்பெருமானது திருவருளைப்பெற்று, அவ்விடத்தினின்று நீங்கி விதர்ப்பராஜன் தவஞ்செய்து பெற்ற உலோபாமுத்திரையை முன்னே மணம்புரிந்து வலிமை மிக்க பேரறிவினையுடைய புலஸ்தியமுனிவரைப் பெற்ற அவ்வகஸ்திய முனிவர் தென்றிசையை நோக்கிச் சென்றனர்.—எ-று. (உஅ)

அகத்தியப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஉ0க.

---

உ

முருகன்றுணை.

---

# கிரவுஞ்சப்படலம்.

பொன்றிகழ் வரையி னின்றுங் குறுமுனி புவியே யாறுத்
தென்றிசைக் கேகு மெல்லைத் திறலரிக் கிளவல் வாழ்க்கை
வன்றிறன் மாய மூதூர் வந்தெய்த வாண்டை வைகு
மன்றிலம் பேர்பெற் றுள்ள வவுணனத் தன்மை கண்டான்.

(இ-ள்.) மேருமலையினின்றும் அகஸ்தியர் பூமியின் வழியாகத் தென்றிசைக்குச் செல்லுகின்ற சமயத்தில், வலிமைமிக்க சிங்கமுகன் தம்பியாகிய தாரகன் வசிக்கின்ற மிக்க திறமமைந்த மாயாநகரத்தை வந்தடைய, அங்கு வசிக்கின்ற கிரவுஞ்சமென்னும் பெயரைப்பெற்ற அசுரன் அவரது வருகையைப்பார்த்தனன்.—எ-று.

வானுய ருலகந் தன்னை வசுந்தரை யாக்கும் பாரை
யேனைய ககன மாக்கு மெறிதிரைப் பரவை தன்னை
மேனிமிர் பிறங்க லாக்கும் வெற்பினைப் புணரி யாக்கும்
பானுவை மதிய மாக்கு மதியினைப் பகலாச் செய்யும்.

(இ-ள்.) மேலுயர்ந்திருக்கின்ற சொர்க்கத்தைப் பூமியாகச்செய்வான்; உலகத்தை மற்றைய விண்ணுலகமாகச்செய்வான்; அலைகள் வீசுகின்ற கடலை உயர்ந்த மலையாகச்செய்வான்; மலையைக் கடலாகச்செய்வான்; சூரியனைச் சந்திரனாக்குவான்; சந்திரனைச் சூரியனாகச்செய்வான்.—எ-று. (௨)

அணுவினை மேரு வாக்கு மன்னதோர் மேரு வெற்பை
நுணுகிய வணுவே யாக்கு நொய்தெனப் புவனி தன்னைப்
புணரிய தாக்கு நேமிப் புணரியைப் புவன மாக்கு
மிணருறு நேமித் தீயை யெல்லைநீ ராகச் செய்யும்.

(இ-ள்.) அணுவை மேருவாக்குவான்; அந்த மேருவைப் பரமாணுவாகச் செய்வான்; இலேசாக உலகத்தைக் கடலாகச் செய்வான்; வட்டவடிவமாகிய கடலைப் பூமியாகச் செய்வான்; கொழுந்து விட்டெரிகின்ற வடவாமுகாக்கினியை நீராகச் செய்வான்.—எ-று. (௩)

கன்னலி னயுதத் தொன்றிற் கடவுளர்க் கேனு நீத்தோ
ரென்னவர் தங்கட் கேனு மெனைப்பல மாயஞ் சூழ்ந்து
பன்னெடுங் காலஞ் செல்லப் படுத்திடு மென்னி னம்மா
வன்னவன் வன்மை யாவு மாரறிந் துரைக்கற் பாலார்.

(இ-ள்.) ஒரு நாழிகையில் பதினாயிரத்தி லொருபாகத்திற்குள்ளே தேவர்களுக்காயினும், துறந்த யாவர்களுக்காயினும், இன்னும் பல மாயங்களைச் செய்து அநேககாலமாகும்படி அவர்களைத் தன் வசப்படுத்துவானாயின், ஆ ஆ! அவனது வலிமை யனைத்தையும் யார் அறிந்துரைக்கத் தக்கவர்கள்.—எ-று. (௪)

அத்தகு தகுவர் கோமா னடற்கிர வுஞ்ச னென்போன்
மெய்த்தமிழ் முனிவன் செல்லும் வியனெறி விந்த மேபோற்
கொத்துயர் குவடு மல்கிக் குன்றுருக் கொண்டு தன்பா
லுய்த்திடு மாறு போக்கி யுறுதலுங் குறியோன் கண்டான்.

(இ-ள்.) அத்தன்மையினையுடைய வலிமை மிக்க அசுரர்கள் தலைவனாகிய கிரவுஞ்சனென்பவன் அகஸ்திய முனிவர் செல்லுகின்ற பெரிய வழியில் விந்தமலையைப் போன்று பல சிகரங்களையுடைய மலையுருவத்தை யடைந்து தனக்குட் செல்லக்கூடிய ஒரு வழியை யுண்டாக்கிக்கொண்டு நிற்கவும், அதனை அகஸ்திய முனிவர் பார்த்தனர்.—எ-று. (௫)

காண்டலும் வியந்து நன்றிக் கடிவரா நடுவ ணாக
வீண்டிதோ ரத்த முண்டா லிவ்வழி நடத்து மென்னா
வாண்டத னிடையே போக வந்நெறி குரோச வெல்லை
மாண்டலு மிலதே யாக மற்றொரு சுரமுற் றன்றே.

(இ-ள்.) அதனைப் பார்த்தவுடனே அதிசயித்து நல்லது வியப்பைத் தருகின்ற இம்மலையின் நடுவே இதோ ஒருவழி யிருக்கின்றது; இவ்வழியே போவோமென்று அவ்விடத்தில் அவ்வழியே செல்ல, அவ்வழி ஒரு குரோசதூரஞ் சென்றவுடன் மறைந்துபோகவும், வேறொருவழி காணப்பட்டது.—எ-று. (௬)

அந்நெறி கண்டு தொன்னூ லறைமுனி யேக லோடுஞ்
சென்னெறி வேறின் றாகத் திரும்பினன் செல்லுங் காலை
முன்னுள நெறியுங் காணான் முனிவரன் மயங்க வோர்சார்
பின்னொரு வட்டை கண்டு பேதுற லோடும் போனான்.

(இ-ள்.) அவ்வழியை நோக்கிப் பழமையாகிய நூல்களை யியற்றிய அகஸ்தியமுனிவர் செல்லவும், போகின்ற வழி வேறே யில்லாமல் திரும்பினவராகச் செல்கின்ற சமயத்தில் பழய வழியையுங் காணாதவராய் அகஸ்தியமுனிவர் மயங்கவும் ஒரு பக்கத்தில் பின்னுமொரு வழியைக் கண்டு சஞ்சலத்துடன் சென்றனர்.—எ-று. (எ)

ஆறது செல்லுமெல்லை யடலெரி கனைந்து சூழச்
சூறைகண் மயங்க மங்கு றண்ணென மாரி தூவ
மாறக லுருமுச் சிந்த வல்லிருட் படலை சுற்ற
வீறகன் மாயை சூழ்ந்தா னெறுழ்வலி யவுணர் கோமான்.

(இ-ள்.) அவ்வழியே போகும்பொழுது வலிமை மிக்க தீயானது ஒலித்துச் சூழவும், சுழற்காற்றுச் சுற்றி யடிக்கவும், அச்சமுண்டாகும்படி மேகங்கள் மழை பொழியவும், ஒப்பற்ற இடியிடிக்கவும், மிக்க இருட்படலஞ் சுற்றவும், அளவில்லாத மாயைகளை மிக்க வலிமை பொருந்திய கிரவுஞ்சனென்னு மசுரன் செய்தனன்.—எ-று.

மட்டுறு குறிய செம்மன் மற்றது நோக்கித் தீயோர்
பட்டிமை யொழுக்கீ தென்னுப் பயின்றிடு போத நீரா
லுட்டெளி பான்மை நாட வாழ்த்திறந் தெரித லோடுங்
கட்டழ லென்னச் சீறிக் கரதலம் புடைத்து நக்கான்.

(இ-ள்.) மிகக் குறியவராகிய அகஸ்தியமுனிவரர் அதனைப் பார்த்துக் கொடிய அசுரர்களது வஞ்சக வொழுக்க மிதுவர்குமென்று, அப்பியசித்துள்ள ஞானவுணர்ச்சியினால் உள்ளே தெளியும்படி யாராய்ச்சி செய்ய, அதனால் நிகழ்ந்த செய்திகள் தெரியவும், மிக்க தீயைப்போலக் கோபித்துக் கைகளைக் கொட்டிச் சிரித்தனர்.

நன்றுநன் றவுணன் கொல்லா நமக்கிது புரியு நீரா
னின்றிவன் வன்மை நீப்பன் யானென வவுண வெய்யோன்
குன்றுரு வதனிற் குற்றிக் குறுமுனி பாணித் தண்டாற்
றுன்றிரும் பூழை யாக்கிச் சூளிவை புகல லுற்றான்.

(இ-ள்.) நன்று நன்று! நமக்கிதனைச் செய்யத்தக்கவன் அசுரனா? யான் இப்பொழுது இவனது வலிமையை யழிக்கின்றேனென்று அகஸ்தியமுனிவர் தமது திருக்கரத்திலுள்ள தண்டாயுதத்தினால் கொடிய கிரவுஞ்ச வசுரனது மலையுருவத்தின் மேல்குத்திப் பொருந்திய பெருந்துவாரமாகச் செய்து இச்சாப மொழியை யுரைப்பாராயினர்.—எ-று. (௧௦)

மாண்மதி பெறாத வெய்யோய் மற்றுநின் றன்மை நீங்கி
நீண்மலை யாகி யீண்டே நின்றுதீ யவுணர்க் கெல்லா
மேண்மிகு மிருக்கை யாகி யிருந்தவத் தோர்க்கு மேனைச்
சேண்மலி கடவு ளோர்க்குந் தீத்தொழி லிழைத்தி பன்னாள்.

(இ-ள்.) நல்லுணர்வற்ற கொடியவனே! நீ உனது பழய அசுரவடிவத்தை யொழிந்து பெரிய மலையுருவமாக இவ்விடத்திலேயே நின்று கொடிய அசுரர்களுக்கெல்லாம் காவலமைந்த இருப்பிடமாகிப் பெரிய முனிவர்களுக்கும் விண்ணுலகிற் பொருந்திய தேவர்களுக்கும் அநேககாலம் கொடுமை செய்யக்கடவை.—எ-று.

மாற்படு நமது பாணி வலிகெழு தண்டா லுன்றன்
பாற்படு புழைகள் யாவும் பற்பல மாயைக் கெல்லா
மேற்புடை யிருக்கை யாக வெம்பிரா னுதவுஞ் செவ்வேள்
வேற்படை தன்னிற் பின்னாள் விளிகுதி விரைவி னென்றான்.

(இ-ள்.) பெருமை மிக்க நமது கையிலுள்ள வலிய தண்டத்தினால் உன்னிடத்துள்ள பல துவாரங்களெல்லாம் அநேக மாயைகளுக்குத் தக்க இருப்பிடமாய் எமது சிவபெருமான் பெற்றருளிய முருகக்கடவுளது வேலாயுதத்தினால் விரைவிலழியக்கடவை யென்று கூறினார்.—எ-று. (௧௪)

பழிதரு மினைய சாபம் பகர்ந்துதன் சிரகந் தன்னி
லழிதரு புனலை வாங்கி யுளங்கொண்மந் திரத்தால் வீசி
யழிதர மாயை நீக்கி யாண்டொரீஇ மீண்டு தென்பால்
வழியது செவ்வ னாடி வண்டமிழ் முனிவன் போனான்.

(இ-ள்.) பழிப்பைத் தருகின்ற இத்தன்மையான சாபமொழியைக் கூறித் தமது கமண்டலத்துள்ள காவிரிநீரை யெடுத்து மனத்திற்பொருந்திய மந்திரத்தினாலிறைத்து அவனது மாயமொழியும்படி நீக்கி அவ்விடத்தினின்றுந் திரும்பித் தென்றிசைவழியை நன்றாக வுணர்ந்து அகஸ்தியமுனிவர் சென்றருளினர்.—எ-று. (௧௫)

கிரவுஞ்சப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௪௨௨௨.

---

உ
முருகன்றுணை.

---

# விந்தம்பிலம்புகுபடலம்.

அன்னதோ ரவுணர் கோமா னன்றுதொட் டசல மாகித்
துன்னெறி யவுணர் யாருந் துவன்றிய வரண மாகி
நென்னலின் முதனாள் காறு நின்றன னனையான் றன்னை
யென்னையா ளுடைய நீயன் றியாவரே யடுதற் பாலார்.

(இ-ள்.) அந்தக் கிரவுஞ்சனென்னு மசுரன் அக்காலந் தொடங்கி மலைவடிவங்கொண்டு துற்குணமுடைய அசுரர்கள் யாவரும் நெருங்கியிருத்தற் கிருப்பிடமாய்க் கடந்த மூன்றாநாள் வரையிலும் நின்றனன்; அவ்வசுரனை என்னை யடிமையாக வுடைய தேவரீரையன்றி வேறு யாவர் கொல்லவல்லவர்கள்.—எ-று. (௧)

பைந்தமிழ் முனிவன் வான்றோய் பனிவரை யதனை நீங்கிக்
கந்தரஞ் செறிபொற் கோட்டுக் கடவுளர் வரைச்சா ரெய்தி
யந்தம தடைந்தோர்க் கங்க ணருளினற் றனது மூல
மந்திர முணர்த்து முக்கண் வானவன் காசி புக்கான்.

(இ-ள்.) அகஸ்தியமுனிவர் ஆகாயத்தை யளாவிய இமயபருவதத்தினின்று நீங்கி மேகங்கள் தவழும் பொற்சிகரங்களையுடைய தேவகிரியின் சாரலை யடைந்து இறந்தவர்களுக்கு அவ்விடத்தில் திருவருளுடன் தமது தாரகமந்திரத்தை யுபதேசித் தருளுந் திரிநேத்திரராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுங் காசிப்பதியை யடைந்த னர்.—எ-று. (௨)

கங்கைசென் றெழுகுங் காசிக் கறைமிடற் றகில நாதன்
பங்கய வடிக டாழ்ந்து பரவல்செய் தாண்டு நீங்கித்
துங்கதைக் கொண்ட விந்தத் தொல்வரைக் கொருசா ரேகி
யங்கத னிலைமை நோக்கி யறிவனென் றியம்ப லுற்றான்.

(இ-ள்.) கங்கைநதி பெருக்கெடுத்துச் செல்லுகின்ற காசிப்பதியிலெழுந் தருளிய காளகண்டராகிய விசுவநாதப்பெருமானது தாமரைமலர்போன்ற திருவடிக ளைத் துதித்து அவ்விடத்தினின்று நீங்கி, உயர்ச்சிபொருந்திய விந்தமலையின் ஒரு புற த்திற் சென்று அகஸ்தியமுனிவரர் அவ்விந்தமலையின் தன்மையைப் பார்த்து ஒரு வா ர்த்தை கூறத்தொடங்கினர்.—எ-று. (௩)

சேயுயர் நிவப்பிற் றாகிச் சேண்புகும் விந்த மென்னு
மாயிருங் குவடு கேண்மோ மற்றியாம் பொதிய வெற்பிற்
போயிருந் திடவே யுன்னிப் போந்தன மதனுக் கின்னே
நீயொரு சிறிது செல்லு நெறியளித் திடுதி யென்றான்.

(இ-ள்.) மிகவுமுயர்ந்த நெடுமையினையுடையதாய் ஆகாயத்தை யூடுருவிச் சென்ற விந்தமென்று கூறும் பெரிய பருவதமே! நீ கேட்கக்கடவை யாம் பொதிய மலையில் சென்றிருக்கும்படிக் கருதி வந்தனம்; அதற்காக நீ இப்பொழுதே கொஞ் சம் வழிவிடக்கடவையென்று கூறினர்.—எ-று. (௪)

எறிகதிர் மதியி னுக்கு மேகருந் திறத்தால் வான
நெறியினை யடைத்துத் தொல்லை நெடியமால் போன்று நின்றேன்
குறியநிற் கஞ்சி யாறு கொடுப்பனோ வெனது தோற்ற
மறிகிலை மீண்டு போகென் றவ்வரை மொழிந்த தன்றே.

(இ-ள்) கிரணங்களை வீசுகின்ற சூரிய சந்திரர்களுக்கும் செல்லக்கூடாத தன்மையினால் ஆகாயமார்க்கத்தை யடைத்துப் பழய திரிவிக்கிரமாவதாரங் கொ ண்ட திருமாலைப்போன்று நிற்கின்றேன்; குறியவனாகிய உனக்குப் பயந்து வழிவிடு வேனோ? எனது தோற்றத்தை நீ யறிந்தாயில்லை; ஆதலால் நீ திரும்பிப் போகக்கட வையென்று அவ்விந்தமலை கூறியது.—எ-று. (௫)

கேட்டலு மதனைச் சீற்றங் கிளர்ந்திட நகைத்து நாதன்
றாட்டுணை யுன்னித் தொன்னாட் சதமகன் வேண்ட வாழி
மாட்டுறச் செறித்த கையை மலரயன் பதத்தின் காறு
நீட்டினன் றவமே யன்றி நெடும்பொருள் பிறவு முண்டோ.

(இ-ள்.) அகஸ்தியமுனிவர் அவ்வார்த்தையைக் கேட்டவுடனே கோபமதி கரிக்கும்படி நகைத்துச் சிவபெருமானது இரண்டு திருவடிகளையுந் தியானித்து முன் னாளில் இந்திரன் வேண்டுதலால் கடலை யடக்கும்படி நீட்டிய கரத்தினை பிரமபதம் வரையிலும் நீட்டினர்; ஆதலால், தவத்தைப்பார்க்கிலுஞ் சிறந்த பொருள் வேறேயு முண்டோ?—எ-று. (௬)

அற்புத மமரர் கொள்ள வாற்றவுங் குறியோன் விந்த
வெற்பின தும்பர் தன்னின் மீயுயர் குடங்கை சேர்த்தி
வற்புற வூன்ற வல்லே மற்றது புவிக்கட் டாழ்ந்து
சொற்பிலம் புகுந்து சேடன் றொன்னிலை யடைந்த தன்றே.

(இ-ள்.) மிகவுங் குறியவராகிய அகஸ்தியமுனிவர் தேவர்கள் ஆச்சரியமடையும்படி விந்தமலையின் சிகரத்தில் மிகவுமுயர்ந்த உள்ளங்கையை வைத்து வலிமையுடன் ஊன்றுதலும், அவ்விந்தமலையானது விரைவாகப் பூமியில் தாழ்ந்து சொல்லப்பட்ட பாதலத்திற் சென்று ஆதிசேஷனுடைய இருப்பிடத்தை யடைந்தது.

அள்ளலை யடைகின் றோரி லரம்புகு மடுக்க லஞ்சி
வள்ளலை யருளிக் கேண்மோ மற்றுனை வழிப டாம
லெள்ளலை யிழைத்து மேன்மை யிழந்தனன் றமியன் குற்ற
முள்ளலை யெழுவ தெஞ்ஞான் றுரையெனக் கூறிற் றன்றே.

(இ-ள்) நரகத்தை யடைபவர்களைப்போலப் பாதலத்திற் புகுந்த விந்தமலையானது பயந்து, வள்ளலே! கேட்டருள்வீராக: அடியேன் உம்மை வணங்காமல் இகழ்ச்சிசெய்து எனது மேன்மையை யிழந்தேன்; எனது குற்றத்தை மனத்திற் சிந்திக்க வேண்டாம் ; யான் எப்பொழுது மேலே யெழுவது என்று பிரார்த்தித்தது.—எ-று.

அன்னதோர் பொழுது தன்னி லலைகடல் செறித்த வங்கை
முன்னவன் விந்த வெற்பின் மொழியினை வினவ யான்போ
யிந்நெறி யிடையே மீளி னெழுதியா னீயு மென்னு
நன்னகை யோடு சொற்று ளாதன் சூழ்ச்சிக் கொப்ப.

(இ-ள்.) நீர் அலைகின்ற கடலையேந்திய உள்ளங்கையினையுடைய அகஸ்தியமுனிவர் விந்தமலை கூறிய வார்த்தையைக் கேட்டு, யான் சென்று பின்பு இவ்வழியே வருவேனாயின் நீயும் எழுந்திருக்கக்கடவை: என்று நாரதமுனிவரது தந்திரத்திற் கொப்பாகச் சிறந்த புன்னகையுடன் கூறினார்.—எ—று. (கூ)

வன்புலப் புவிக்குள் விந்த மறைதலு மறிவி னீராற்
புன்புலப் பகையை வென்றோன் கரத்தைமுன் போலச் செய்து
துன்புலப் புற்ற சிந்தைச் சுரர்கள்பூ மாரி தூர்ப்பத்
தென்புலப் பொதிய வெற்பிற் செல்வது சிந்தை செய்தான்.

(இ-ள்) கொடிய பாதலலோகத்தில் விந்தமலை மறையவும், மெய்யறிவினால் அற்பமாகிய ஐம்புலனென்னும் பகைவர்களை வென்ற அகஸ்தியமுனிவர் தமது கரத்தினை முன்போலச் சுருக்கிக்கொண்டு துன்பநீங்கிய மனத்தினையுடைய தேவர்கள் புஷ்பவருஷஞ் சிந்தத் தென்றிசையிலுள்ள பொதியமலையில் செல்வதற்குத் திருவுள்ளங் கொண்டனர்.—எ-று. (க0)

ஆயிடை விந்தம் பார்புக் கழுந்திட வகல்வா னத்துத்
தேயம்வெள் ளிடைய தாகத் தினகரன் முதலாந் தேவர்
பாய்சுடர் விளக்கம் யாண்டும் பரந்தன சிறையை நீங்கி
யேயென வளக்கர் நீத்த மெங்கணுஞ் செறியு மாபோல்.

(இ-ள்.) அப்பொழுது விந்தமலையானது பூமியில் புகுந்தழியவும், அகன்ற ஆகாயமானது வெளியாகவும் ஊழிக்காலத்தில் கரையைக் கடந்து கடல்நீரானது விரைவிலெவ்விடத்திலும் வியாபிக்குந் தன்மையைப்போல, சூரியன் முதலாகிய தேவர்களது விரிந்த ஒளிவிளக்கங்களெவ்விடங்களிலும் பரவின.—எ-று. (கக)

அதுபொழு தலரி யாதி யமரர்க ளகத்தி யன்பாற்
கதுமென வடைந்து போற்றிக் கைதொழு தெந்தை செய்த
வுதவியார் புரிவர் நின்னா லும்பரா றெழுகப் பெற்றோம்
பொதியமே லினிநீ நண்ணி யிருத்தியெம் பொருட்டா லென்றார்.

(இ-ள்) அப்பொழுது சூரியன் முதலாகிய தேவர்கள் அகஸ்தியமுனிவரிடத்து விரைவாக வடைந்து துதித்து வணங்கி, எந்தையே! தேவரீர் செய்த வுதவியை யார் செய்வார்கள்? தேவரீரால் ஆகாயமார்க்கத்தில் செல்லப் பெற்றோம்; இனித் தேவரீர் எங்கள் பொருட்டுப் பொதியமலையி லெழுந்தருளி யிருக்கக்கடவீர் என்று கூறினார்கள்.—எ-று. (கஉ)

என்றலும் விழுமி தென்னா விசைவுகொண் டமரர் தம்மைச்
சென்றிட வானிற் றாண்டித் தெக்கிணந் தொடர்ந்து செல்லக்
குன்றமர் குடாது தேயங் குறுகும்வில் வலன்வா தாவி
யன்றுயி ரிழப்ப நின்றா ரகத்தியன் வரவு கண்டார்.

(இ-ள்.) என்று கூறுதலும், அகஸ்தியமுனிவர் நன்றென்று திருவுள்ளமிசைந்து தேவர்களை விண்ணுலகத்திற் செல்லும்படி யேவித் தென்றிசையைத் தொடர்ந்து செல்லவும், மலைகள் நெருங்கிய குடகுதேசத்தில் தங்கி வசிக்கின்ற வில்வலன் வாதாவியென்னு மிருவர்களும் அப்பொழுது தங்களுயிரை யிழக்கும்படி நின்றவர்களாய் அகஸ்தியமுனிவரது வருகையைப் பார்த்தார்கள்.—எ-று. (கரு)

விந்தம் பிலம்புக படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஉரூ௫.

---

உ

முருகன்றுணை.

---

# வில்வலன் வாதாவிவதைப் படலம்.

கண்டன ரிவனே போலுங் காய்சினத் தவுண ராவி
கொண்டனன் வேலை முன்னங் குடித்துமிழ் கின்ற நீரா
னண்டரை யருள்வா னங்கோ லடைந்தன னவனுக் கின்னே
யுண்டியை யுதவி யாவி கொள்ளுது மென்றெ டென்றார்.

(இ-ள்.) அவ்வாறு பார்த்தவர்களாய், இவன்றான்போலும் மிக்க கோபத்தினையுடைய அசுரர்களது உயிரை வாங்கினன்; முன்பு சமுத்திரத்தைக் குடித்துப் பின்பு உமிழ்ந்த தன்மையுடையவன்; இப்பொழுது தேவர்களைக் காக்கும்பொருட்டு வந்திருக்கின்றனன்; அவனுக்கு இப்பொழுதே போசனமளித்து இவனது ஊனையுமுயிரையுங் கொள்வோமென்றார்கள்.—எ-று. (க)

என்றிவை புகன்ற பின்ன ரிளவல்வா தாவி யென்போன்
குன்றதன் புடையி லோர்சார் கொறியுருக் கொண்டு போந்து
மென்றழை புதலின் மேய வில்வல னென்னு மேலோ
னென்றிய புலத்தின் மிக்கோ ருருவுகொண் டுற்றா னன்றே.

(இ-ள்.) என்றிவ்வாறு கூறியதன்பின்பு இளையவனாகிய வாதாபியென்பவன் மலையின் ஒருபுறத்தில் ஆட்டுருவங் கொண்டுவந்து புதரின்கண்ணுள்ள மெல்லிய தழைகளை மேய்ந்துகொண்டு நிற்க, மூத்தவனாகிய வில்வலனென்பேரன் ஐம்புலன்களையு மடக்கிய முனிவருருவங்கொண்டு வந்தான்.—எ-று. (௨)

மீதுறு சடையு நீறு விளங்கிய நுதலும் வேடங்
காதணி குழையின் சீருங் கண்டிகைக் கலனு மேற்கொள்
பூதியுந் தண்டுங் கையும் புனையுரி யுடையு மாக
மாதவ வேடந் தாங்கி முனிவனேர் வல்லை சென்றான்.

(இ-ள்.) தலையில் பொருந்திய சடையும் நெற்றியிற் றரித்த விபூதியும் சுந்தரவேடமாகிய காதணிகுண்டலத்தின் சிறப்பும் உருத்திராக்காபரணமும் உத்தூளனமாகத் தரித்த விபூதியும் தண்டந் தாங்கிய கையும் மரவுரி உடையும் உடையவனாய் பெரிய தவவேடங்கொண்டு அகத்தியமுனிவ ரெதிரில் விரைவாக வந்தான்.—எ-று.

மெய்தரு புறத்துக் காமர் வியனுருக் கொண்டு தன்னுட்
கைதவங் கொண்டு செங்கேழ்க் காஞ்சிரங் கனிபோன் மேய
மைதிகழ் மனத்த னேர்போய் வண்டமிழ் முனிவற் போற்றி
யைதென வணங்கி முக்கா லஞ்சலி செய்து சொல்வான்.

(இ-ள்.) உடம்பின் வெளியில் வியக்கத்தக்க தவவேடங்களைப் பூண்டு தன்னுள் வஞ்சகமுடையவனாய் சுந்தரம்பொருந்திய எட்டிப்பழம்போல் வந்த களங்கம்பொருந்திய மனத்தினையுடைய வில்வலன் அகத்தியமுனிவர தெதிரிற் சென்று துதித்து விரைவாக வணங்கி மூன்றுதரம் அஞ்சலிசெய்து சொல்லத்தொடங்கினான்.

அடிகணீர் போத விந்நா ளருந்தவம் புரிந்தே னின்று
முடிவுற வந்தீர் யானு முனிவர்த நிலைமை பெற்றேன்
கொடியனே னிருக்கை யீதாற் குறுகுதிர் புனித மாகும்
படியென வுரைத்துப் பின்னும் பணிந்தனன் பதங்க டம்மை.

(இ-ள்.) சுவாமிகளே தேவரீர் இவ்விடம் வரும்பொருட்டு இதுவரைக்கும் தவம்செய்தேன்; இன்று அத்தவம் நிறைவேறினமையால் எழுந்தருளினீர். நானும் முனிவர் தன்மையை யடைந்தேன்; பாவியாகிய எனது ஆசிரமம் இது: இவ்விடம் புனிதமாகும்படி எழுந்தருளவேண்டும் என்று கூறிப் பின்னும் அவரது பாதங்களை வணங்கினான்.—எ-று. (௫)

பணிதலு மொருதன் கையிற் பரவையம் புனலை வாரி
மணிபடு பதுமம் போல வாய்க்கொளு முனிவன் றீயோன்
றுணிவினை யுணரா னாகித் துண்ணென வுவகை தோன்ற
வினையறு தவத்தின் மிக்கோ யெழுதியென் றிதனைச் சொற்றான்.

(இ-ள்.) வில்வலன் இவ்வாறு வணங்கவும் ஒரு கையினிடத்தில் கடலின் நீரை வாரி அழகுபொருந்திய தாமரைமலர்போன்ற வாயினிடத்தில் விட்டுக்கொள்ளத்தக்க அகத்தியமுனிவர் அசுரனது அபிப்பிராயத்தை யுணராதவராய் விரைவாக சந்தோஷம் உண்டாகும்படி ஒப்பற்றதவத்திற்சிறந்தவனே! எழுந்திருப்பாயாகவென்று இதனைக் கூறுவாராயினர்.—எ-று. (௬)

ஆறெதி ரெண்ம ராகு மாயிர முனிவர் தம்பால்
வேறுள தவத்தர் தம்பான் மிக்கநின் னியற்கை தன்னிற்
கூறுசெ யணுவின் காறுங் குணமில சரத மீது
தேறுதி யிருக்கை யேது செல்லுதும் வருக வென்றான்.

(இ-ள்.) நாற்பத்தெண்ணுயிரம் முனிவர்களிடத்தும் மற்றத் தபசிகளிடத்தி லும் உனது நற்குணத்தின் ஒரு பரமாணுவி னளவுகூட நற்குணம் கிடையாது; இது உண்மையென் றுணரக்கடவை ; நின் வீடெங்கே ? போவாம் வா என்றனர்.—எ-று.

என்றருண் முனியை நோக்கி யீதென துறையு ளென்னச்
சென்றனன் முடிவான் வந்த தீயவ னவற்கொண் டேகி
மன்றதன் னிருக்கை யுற்று மரபுறு தவிசிற் சேர்த்திப்
பொன்றிக ழடிகட் கேற்ற பூசனை புரிந்து சொல்வான்.

(இ-ள்.) என்று கூறிய அகத்தியனை நோக்கி இது என்வீடென்று கூறி, இறக்கும்பொருட்டு வந்த பாவியான வில்வலன் அவனை யழைத்துக்கொண்டு சென்று நிலைபெற்ற தனது வீட்டுக்குட்போய் தக்கஆசனத்திலிருத்தி, பொன்மயமான பாதங் களுக்கு ஏற்றபடி பூசைசெய்து சொல்லுகின்றான்—எ-று. (அ)

எந்தைநீ யானு மேனை யென்குலத் தவரு முய்ய
வந்தனை போலு மிந்நாண் மற்றென திருக்கை வைகி
வெந்திடு புற்கை யேனு மிசைந்தனை யெனக்குச் சேடந்
தந்தருள் புரிந்து போதி தவத்தரிற் றலைவ வென்றான்.

(இ-ள்.) எந்தையே! தேவரீர் அடியேனும் அடியேன்குலத்தவர்களும் ஈடே றும்படி இன்று எழுந்தருளினீராதலால் எனது வீட்டிலிருந்து சமைத்த புல்லுணவே னும் புசித்து அடியேனுக்குப் பிரசாதமளித்து தபசிகள் தலைவரோ! செல்வீராக வென் றான்.—எ-று. (கூ)

சொல்வல முனிவர் மேலோன் சூர்முதன் மருகா யுள்ள
வில்வலன் மாற்றங் கேளா விழுமிது பரிவின் மிக்கோ
யொல்வதோ ருணவு நின்பா லுவந்தியா மருந்திப் பின்னர்ச்
செல்வது கடனு மென்று செப்பினன் றீமை தீர்ப்பான்.

(இ-ள்.) சொல்வன்மையுடைய அகத்தியமுனிவர் சூரபன்மனது மருமக னாகிய வில்வலனது சொல்லைக் கேட்டு நல்லது அன்பின் மிக்கோய் ! உன்னாலாகக் கூடிய உணவை யான் விருப்பத்துடன் புசித்து பின்னர் செல்கின்றேன் என்று துன்பம் நீக்குகின்ற அகத்தியர் கூறினர்.—எ-று. (கo)

மேலவ னிதனைக் கூற வில்வலன் வணங்கி யெந்தாய்
சீலமோ டடிசில் செய்வன் சிறிதுபோ திருத்தி யென்று
காலையங் கதனி லாண்டோர் கயப்புனல் படிந்து மூழ்கிச்
சாலவும் புனித னாகி யடுவதோர் சாலை புக்கான்.

(இ-ள்.) அகத்திய னிதனைக்கூற, வில்வலன் வணங்கி எந்தையே ! யான் ஆசாரத்துடன் சமைப்பேன் சற்று நாழிகை இருப்பீராகவென்று கூறி, ஓர் தடாகத் திற்குச் சென்று நீராடி மிகவும் பரிசுத்தனாக வந்து சமையற் சாலைக்குட் புகுந்தான்.

அத்தலை நிலத்தை நீரா லாமயம் பூசி யாண்டுஞ்
சித்திர முறுத்தி யாவுந் தேடிவால் வளையின் சின்ன
மொத்ததண் டுலமா சேக வொண்புன லிடையே யிட்டு
முத்திற மண்ணி மற்றோர் முழுமணிக் குழிசி யுய்த்தான்.

(இ-ள்.) அந்தச் சமையல் பூமியை சாணங்கரைத்த நீரினால் மெழுகி, எவ்வி டங்களிலும் கோலமிட்டு. மற்ற உபகரணங்களெல்லாம் சேகரித்து, துண்டுபடுத்திய சங்குகளைப்போன்ற அரிசியின் அழுக்குப் போகும்படி நல்ல நீரிலிட்டு மூன்றுதரம் கழுவி வேறோர் மிக்க அழகினையுடைய பாத்திரத்தி லிட்டனன்.—எ-று. (கஉ)

தாக்குறு திறலின் வெய்ய தழல்பொதி கருவி யான
வாக்கிய செய்த தொன்றி லழலினை யதனுண் மூட்டித்
தேக்ககி லார மாட்டிச் சீருணத் தசும்ப ரொன்றில்
வாக்கிய வுலைப்பெய் தேற்றி மரபில்வா லரியுள் ளிட்டான்.

(இ-ள்.) மிக வுறுதியாக கடையப்பட்ட தீக்கடைக்கோலினின்று எடுத்த நெருப்பினை சுட்டு அமைத்த ஓரடுப்பில் மூட்டி தேக்கும் அகிலும் சந்தனமும் விறகாக மாட்டி ஓர் தாமிரபாத்திரத்தில் நீரை வடிக்கட்டிவிட்டு உலையேற்றி அரிசியை யதிலிட்டனன்.—எ-று. (கரு)

பதனறிந் துண்டி யாக்கிப் பாலுற வைத்துப் பின்னர்
முதிரையி னடிசி லட்டு முன்னுறு தீம்பால் கன்னல்
விதமிகு முணுக்கள் யாவு மேவுற வமைத்துக் கொண்டு
புதுமணங் கமழுந் தெய்வப் புனிதமாங் கறியுஞ் செய்தான்.

(இ-ள்.) பக்குவமறிந்து சமைத்துப் பக்கத்தில் வைத்துப் பின்னர் பருப்புச்சமைத்து மதிக்கத்தக்க மதுரமாகிய பாலுஞ் சர்க்கரையுங் கலந்து செய்கின்ற வேறுவேறான வுண்டிகளை யெல்லாம் பொருந்த வமைத்துக்கொண்டு நறுமணங்கமழுந்தெய்வீகமாகிய தூயபதார்த்த வகைகளையுஞ் செய்தனன்.—எ-று. (கச)

ஆற்றலான் மேடம் போலா யாரிட ருயிரை யெல்லா
மாற்றுவா னமைந்து நின்ற விளவலை வலிதிற் பற்றிக்
கூற்றமே போல மேவு முனிவன்முற் கொணர்ந்து கையி
லேற்றகூர்ங் குயத்தாற் காதி யிருதுணி யாக்கி னனே.

(இ-ள்.) தவவல்லமையினால் ஆட்வெடிவங்கொண்டு முனிவர்களது உயிர்களையெல்லாங் கொல்லும்படித் தோன்றிநின்ற வாதாவியை (வில்வலன்) இயமனைப்போலவே வலிவாகப்பிடித்து அகஸ்தியமுனிவருக்கு முன்னே கொண்டுவந்து கையிற்பிடித்துள்ள கூர்மையாகிய கொடுவாளினால் வெட்டி இரண்டு துண்டாகச் செய்தனன்.—எ-று. (கரு)

அணிப்படு போர்வை நீக்கி யங்கமு மகற்றி வாளாற்
றுணிப்பன துணித்து மீர்ந்துஞ் சுவைத்திடு முறுப்பூ னெல்லாங்
குணிப்பொடு குட்ட மிட்டுக் குழிசிகள் பலவிற் சேர்த்தி
மணிப்புனல் கொண்டு முக்கான் மரபினுன் மண்ணல் செய்து.

(இ-ள்.) அழகு பொருந்திய தோலையுரித்து எலும்புகளை நீக்கி வாளால் வெட்டவேண்டியவைகளை வெட்டியும், அறுத்தும், சுவை பொருந்திய உறுப்புக்களிலுள்ள மாமிசங்களை யெல்லாம் யோசித்துத் துண்டாகச்செய்து பல பாத்திரங்களிலமைத்துச் சுத்தசலத்தைக்கொண்டு முறைப்படி மூன்றுதரங்கழுவி.—எ-று. (கசு)

உரைத்தவக் கறிக்கு வேண்டு முவர்முத லமைந்த நல்கி
வருத்துறு கனன்மேற் சேர்த்தி வாலிதிற் புழுக்கல் செய்தே
யரைத்திடு கறியி னுண்டீ ளாதிதூ யிழுது பெய்து
பொரிப்பன பொரித்திட் டாவி போந்திடா வண்ணம் போற்றி

(இ-ள்.) சொல்லப்பட்ட அந்தக்கறிக்கு வேண்டிய உப்பு முதலியவைகளை வேண்டுமளவு போட்டு, சுடுகின்ற தீயின்மீது வைத்து நன்றாய் வேகவைத்து, அரைக்கப்பட்ட கறிமாத்தூளைத்தூவி நெய்விட்டுப் பொரிக்கவேண்டுவனவற்றைப் பொரித்து ஆவிபோகாமல் மூடி.—எ-று. (கஎ)

கறியினுண் பொடியு மேனைக் கந்தமார் துகளு மந்நாள்
வறையல்போ குற்ற தூய வாலரிப் பொடியு நீவி
யுறைகெழு துப்பும் வாக்கி யொழுகுபல் காயங் கூட்டித்
திறனொடு மளாவி யாங்கோர் சிற்சில பாகு செய்து.

(இ-ள்.) நுண்ணிய கறிமாத்தூளையும், மற்ற மணம்பொருந்திய தூள்களையும் அன்று வறுத்தெடுத்த நல்ல அரிசித்தூளையும் கலந்து தெளிவாகிய நல்ல நெய்யையும் விட்டுப் பொருந்திய பல காரவஸ்துக்களைச் சேர்த்துக் கலந்து, காயஞ்சேர்த்து அவ்விடத்துச் சிற்சில பாகுபாடு செய்து.—எ-று. (கஅ)

பின்னரும் பலகால் வேண்டும் பெற்றியிற் கரித்துச் செம்மி
முன்னுற வளிக்க நின்ற முதிரையின் புழுக்க லட்டுச்
செந்நல நீடுங் கன்னற் றீம்புளிங் கறியுஞ் செய்யா
வன்னதோர் தொடக்கம் யாவு மருளின னருளி லாதான்.

(இ-ள்.) பின்னும் பலதரம் வேண்டிய வண்ணந்தாளித்துமூடி, முதலிற் படைக்கவேண்டிய பருப்பில் உப்புமுதலியவை சேர்த்துப் பக்குவப்படுத்தி, செவ்விய இனிப்பும் புளிப்புங்கலந்த நல்ல புளிக்கறியுஞ் சமைத்து, அதனோடு கலந்த யாவற்றையும் இரக்கமற்ற வில்வலன் சமைத்தனன்.—எ-று. (கக)

ஆசினி வருக்கை யாதி யளவையில் கனிகள் கீறித்
தேசமர் கன்ன நீந்தேன் சேர்தரச் சிவணி யேனை
வாசமு மலரு மிட்டு வரம்பில வமைத்துப் புத்தேள்
பூசனைக் குரிய வன்பாற் பொருக்கெனக் குவவு செய்தான்.

(இ-ள்.) ஈரப்பலா, பலாமுதலிய அளவற்ற பல கனிகளையரிந்து ஒளி பொருந்திய கரும்பிரசத்திலும் இனிமையாகிய தேனிலும் சேரும்படிக் கலந்து மற்றைய வாசனைத் திரவியங்களையும் மலர்களையு மமைத்துப் பின்னுந் தேவபூசைக்குரியவைகளை அன்பினால் விரைவாகச்சேகரித்தனன்.—எ-று. (உ0)

குய்வகை யுயிர்ப்பின் மாந்திக் குவலயம் விரும்பு கின்ற
வைவகை யுணவு மாறு சுவைபட வளித்துப் பின்னு
மெவ்வகை யனவுந் தானே யிமைப்பினி லமைத்து வல்லே
கவ்வையி னோடுஞ் சென்று கடமுனி கழன்மேற் றாழ்ந்தான்.

(இ-ள்.) தாளிப்பின் பாகுபாடான மணங்களை சுவாசத்தாலறிந்து, உலகத்தார் விரும்புகின்ற ஐவகை யுணவுகளையும் அறுசுவைகளையும் பொருந்தச்செய்து, பின்னும் எவ்வகையானவைகளையுந் தானே இமைப்பொழுதிற்குள்ளே யமைத்து, விரைவாகக் காரியத்துடன்சென்று அகஸ்தியமுனிவரது பாதங்களில் வணங்கினான்.

எந்தைநீ யின்ன காலை யிரும்பசி யுடற்ற வாற்ற
நொந்தனை போலு மேனி நுணங்கினை தமியே னீண்டுத்
தந்தன னுணவி யாவுந் தளர்வற நுகரு மாறு
வந்தரு ளென்று வேண்ட மற்றதற் கிசைந்து போனான்.

(இ-ள்.) எமது முதல்வரோ! தேவரீர் இப்பொழுது மிக்க பசியானது வருத்த அதனால் மிகவும் வருந்தினீர்; தேகம் வாடினீர்; அடியேன் இப்பொழுது போசன வகைகளனைத்தையுஞ் சமைத்தேன்; சோர்வு நீங்கும்படி போசனஞ் செய்யும்பொருட்டு வந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கவும், (அகஸ்தியமுனிவர்) அதற்குச் சம்மதித்துச்சென்றனர்.—எ-று. (உஉ)

அட்டிடு சாலை மாட்டே யகத்தியற் கொடுபோ யாங்க
ணிட்டதோ ரிருக்கை தன்னி லிருத்தியே முகமன் கூறி
மட்டுறு தூநீர் கந்த மலர்புகை தீபங் கொண்டு
பட்டிமை நெறியிற் பூசை புரிந்துபின் பதநேர் குற்றுன்.

(இ-ள்.) சமையற்சாலையினருகில் அகஸ்தியரை யழைத்துக்கொண்டுபோய் அங்கு இடப்பட்ட ஆசனத்திலெழுந்தருளச்செய்து உபசார வார்த்தைகூறி மணம் பொருந்திய தூய்மையாகிய நன்னீரும், கந்தமும், மலரும், புகையுந், தீபமுங்கொண்டு வஞ்சகமுறையாகப் பூசனைசெய்து பின்பு திருவடிகளில் விழுந்தனன்.—எ-று. ()

வேறு.

தெள்ளுஞ் சுடர்ப்பொ னியல்கின்ற தட்டை திருமுன்னர் வைத்து நிரையா
வள்ளங்கள் வைத்து மிகுநார முய்த்து மரபிற் றிருத்தி மறையோ
னுள்ளங் குளிர்ப்ப வமுதன்ன வுண்டி யுறுபேதம் யாவு முதவா
வெள்ளம் படைத்த நறுநெய்ய தன்கண் விட்டான்றன் ஞவி விடுவான்.

(இ-ள்.) தன துயிரைவிடுகின்றவனாகிய வில்வலன், தெளிந்த நல்ல பொன்னாற்செய்யப்பட்ட தாம்பாளத்தைத் திருமுன்னர்வைத்து, கிண்ணங்களை வரிசையாக வைத்து, மிக்க நீரைவிட்டு முறைப்படி யலம்பி, அகஸ்தியர் மனமகிழும்படி அமுதம் போன்ற போசனவகைகளனைத்தையும் படைத்து,மிகுதியாகிய நல்ல நெய்யை அதில் விட்டனன்.—எ-று. (உச)

முறைவைப்பு நாடி முதன்மைக்கண் மேவு முதிரைப் புழுக்கன் மறியின்
கறிவர்க்க மேனை யவைசுற்றின் மேய கவினுற்ற கிண்ண மிசையே
யுறவிட்டு நீட மதுரித்த யாவு முடனுய்த் தொழிந்த வளனுஞ்
செறிவித்து மேலை முனிகைக்கு ணீடு சிரகத்தி னீரு தவினன்.

(இ-ள்.) வைக்கவேண்டிய முறைமையை யுணர்ந்து முதலில் வைக்கவேண்டிய பருப்பு முதலியவளைவைத்துப் பின்பு மற்றைய ஆட்டுக்கறி வர்க்கங்களனைத்தையும் அழகாகப்பொருந்திய கிண்ணங்களில் முறைப்படிவைத்து மிக்க மதுரம்பொருந்திய எல்லாப் பதார்த்தங்களையும் ஒருமிக்கவைத்து, மற்றப்பண்டங்களையும் வைத்து அவ் வகஸ்தியமுனிவரது கரத்தில் சிறந்த கமண்டலத்திலுள்ள ஆசமன நீரை விட்டனன்.—எ-று. (உரு)

பெருநீ ரடங்கு சிறுகையி னூடு பெறவுய்த்த தோய மதனை
யிருபான்மை யுண்டி யதுசூழும் வண்ண மிசையோடு சுற்றி யதுதா
னொருகா னுகர்ந்து பலகாலி னுக்கு முதவிப்பி னுள்ள படியு
மருகாது செய்து மிகவே விரும்பி யயில்வான் றவங்கள் பயில்வான்.

(இ-ள்.) கடல்நீரடங்கிய சிறிய கையினிடத்து விட்ட சலத்தைக்கொண்டு இரண்டுதரம் போசனத்தைச் சுற்றி அதனைப் பின்னர் தாமொருதரம் புசித்து பஞ்சப் பிராணுகுதியையும் முறைப்படி செய்து தவத்தைச் செய்கின்ற அகஸ்தியர் விருப்பத்துடன் புசிக்கத்தொடங்கினுர்.—எ-று. (உசு)

அடுகின்ற வுண்டி கறிவர்க்க மேனை யவையன்பி லாத வசுர
னிடுகின்ற தேது முடிவெய்து காறு மினிதுண்டு பின்றை முனிவன்
கடிகொண்ட நார மனையன் கொணர்ந்து கரமுய்ப்ப நுங்கி யெழுவான்
பொடிகொண்டு தன்கை மலர்நீவி மிக்க புனல்கொண்டு மண்ணல் புரியா.

(இ-ள்.) சமைத்த அன்னத்தையும் மற்றைப் பதார்த்த வர்க்கங்களையும் விருப்பமற்ற அவ்வசுரனிட்ட மற்றெவைகளையும் ஆகும்வரையிலும் இனிமையாகப் புசித்து,நல்ல மணம்பொருந்திய நீரை அவ்வில்வலன் கொண்டுவந்து கரத்தில் கொடுக்க அதனைப் பானம்பண்ணி யெழுந்தவராய் மண்பூசிக் கரங்களைத் தேய்த்து மிகுதியாகிய நீரைவிட்டலம்பி.—எ-று. (௪எ)

மைக்காரின் மெய்ய னருள்கின்ற நாரம் வாய்க்கொண் டுமிழ்ந்து பலகான்
முக்காலி னுங்கி வாய்பூ சறுத்து முறைநாடி யங்க மெவையு
மிக்கானு மூறு புரியாவ தன்றி வேறுள்ள செய்கை பலவு
மக்காலை யங்கொர் புடையுற் றியற்றி யவண்வீற் றிருக்கு மளவில்.

(இ-ள்.) கரிய மேகம்போன்ற தேகத்தையுடைய வில்வலன் விடுகின்ற நீரைக்கொண்டு பலதரம் வாய்கொப்பளித்து ஆசமனஞ்செய்து சுத்திசெய்துகொண்டு அங்கநியாசாதிகளை முடித்து வேறோரிடத்திற் சென்றிருந்து செய்யவேண்டிய மற்றைக் காரியங்களையுஞ் செய்து அவ்விடத்திலேயே யிருக்குஞ் சமயத்தில்.—எ-று. ()

வேதா வளித்த வரமுன்னி யேவில் வலனென்னும் வெய்ய வசுரன்
போதா விருந்த முனியாவி கோடல் பொருளாக நெஞ்சி னினையா
வாதாவி மைந்த விளையாய் விரைந்து வருகென்று கூற முனிவன்
றீதார் வயிற்றி னிடையே யெழுந்து திறன்மேட மாகி மொழிவான்.

(இ-ள்.) வில்வலனாகிய கொடிய அசுரன் பிரமன் தனக்களித்த வரத்தை நினைத்து தன் கிருகத்தில் வந்திருந்த அகஸ்தியமுனிவரது பிராணனை வாங்கத் தன் மனதில் நினைத்துக் குழந்தாய் தம்வி வாதாபி ! சீக்கிரம் வருவாய் என அழைத்தலும், அகத்தியமுனிவரது வயிற்றில் ஆடாயிருந்து சொல்லத் தொடங்கினான்.—எ-று.

வேறு.

எண்ணும லேமுன்பு கடலுண்ட தேபோல வெனதூனு முண்ட கொடியோ
னுண்ணூடு முயிர்கொண் டவிகொண்டு குறிதான வுதரங் கிழித்து வருவ
னண்ணாவில் வலனேயெ னக்கூறி யேதம்பி யரிபோன் முழங்கி யிடலு
மண்ணுடர் புகழ்கும்ப முனிதீயர் செய்திட்ட மாயந் தெரிந்து வெகுள்வான்.

(இ-ள்.) ஆலோசனையின்றி முன்பு கடல்நீரைக் குடித்ததுபோல எனது மாமிசத்தையுமுண்ட கொடியவனாகிய இவனது உள்ளிருக்கின்ற வுயிரையும் வாங்கிக் கொண்டு பலத்துடன் இவனது குறுகிய வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவேன் அண்ணா வில்வலனே ! என்று கூறி அவன் தம்பியாகிய வாதாவி சிங்கத்தைப்போல கர்ச்சனை செய்யவும், உலகத்தவர் புகழ்கின்ற அகத்தியர் கொடியவர்கள் செய்த மாயத்தை யுணர்ந்து கோபங் கொண்டனர்.—எ-று. (௫0)

ஊன்கொண்ட கறியாகி நுகர்வுற்ற வாதாவி யுயிர்போகி யுண்ட வியல்பே, தான்கொண்டு முடிகென்று சடரத்தை யொருகாலை தமிழ்வல்ல முனிதடவலுங், கான்கொண்ட வெரிமண்டு சிறுபுன் புதற்போன்று கடியோனு முடிவாகவே,வான்கொண்ட லெனவங்கண் முன்னின்ற வன்றம்பி மாய்வுற்ற துன்னி வருவான்.

(இ-ள்.) மாமிச பதார்த்தமாக உண்ணப்பட்ட வாதாவியின்து உயிர்நீங்கியான் உண்டபடியே இறக்கக்கடவனென்று அகத்தியர் ஒருதரம் தமது வயிற்றைத் தடவுதலும், காடாக்கினியாற் பற்றப்பட்ட சிறிய புதரைப்போல கொடிய வாதாவி யிறத்தலும், பெரிய மேகத்தைப்போல எதிரில்நின்ற வில்வலன் தம்பி இறந்ததை நினைத்துக்கொண்டு வரத்தொடங்கினான்.—எ-று. (௫௧)

மெய்க்கொண்ட தொன்னு ளுருக்கொண்டு முனிதன்னை வெகுளுற்றெ ர் தண்ட மதனைக், கைக்கொண்டு கொலையுன்னி வருபோழ்தின் முனிவன் கரத்திற் றருப்பை யொன்றை, மைக்கண்டர் படையாக நினைகுற்று விடவி ல் வலன்ருனு மடிவெய்தலு, மக்கண்ட கக்கள்வ ருறையுற்ற விடநீங்கி யப் பா லகன்ற னன்றோ.

(இ-ள்.) தனது பழைய உண்மையுருவத்தை யெடுத்துக்கொண்டு கோபத் துடன் ஒரு தண்டத்தைக் கையிற்றாங்கி அகத்தியமுனிவரைக் கொல்லும்பொருட்டு எதிர்த்துவரும்பொழுது அம்முனிவர் தமதுகையில் ஒருதருப்பையை யெடுத்து சிவா ஸ்திரமாகக்கருதி பிரயோகிக்கவும் வில்வலன் இறந்தனன். உடனே அந்த அஞ்சாமை யினையுடைய திருடர்கள் இருந்தவிடத்தை விட்டு வேறிடத்திற்குச் சென்றனர்.

வில்வலன் வாதாவிப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கஉசுஎ.

---

உ

முருகன்றுணை.

---

# காவிரி நீங்கு படலம்.

செங்கை தூங்கிய தீர்த்த நீரொடும்
கொங்கின் பாற்செலக் குறிய மாமுனி
மங்கு கின்றவம் மைந்தர் நேருறு
வங்கண் மேவினு ரருந்த வத்தர்போல்.

(இ-ள்.) சிறந்த அகத்தியமுனிவரர் தமது திருக்கரத்தில் தொங்குகின்ற காவிரிதீர்த்த நீருடனே கொங்குதேசத்திற் செல்லவும், இறந்த அவ்வில்வலன் வாதா விகள் அவ்விடத்தில் அருமையாகிய தவமுனிவர்களைப் போல எதிரில் வந்தார்கள்.

நேரு மைந்தர்க ளிருவர் நீனிறக்
காரின் மேனியர் கறங்கு கண்ணினர்
தீர ராற்றவுஞ் சினத்த ரொல்லென
வார வாரஞ்செய் தணுகி னரரோ.

(இ-ள்.) அவ்வாறு எதிரில்வந்த அவ்வில்வலன் வாதாவிகள் இருவரும் நீல நிறம் பொருந்திய மேகம்போன்ற தேகத்தை யுடையவர்களும் சுழலுகின்ற கண்ணி னையுடையவர்களும் பராக்கிரமமுடையவர்களும் மிக்க கோபமுடையவர்களுமாய் ஒல்லென்று ஆரவாரஞ் செய்துகொண்டு (அகத்தியமுனிவரை) நெருங்கினர்கள்.

அண்மை யாகுவ ரகல்வர் மாமுனி
கண்மு னெய்துவர் கரந்து காண்கிலார்
விண்மு கிற்குளே மேவி யார்ப்பரான்
மண்மி சைப்பினும் வருவர் சூழ்வரோ.

(இ-ள்.) சமீபத்தில் வருவார்கள்; தூரத்திற் செல்வார்கள்; சிறந்த அகத்திய முனிவரது கண்களுக்கெதிரில் அடைவார்கள்; பின் மறைந்து காணமாட்டார்கள்;

ஆகாயத்திலுள்ள மேகமண்டலத்தில் சென்று ஆரவாரிப்பார்கள்; பின் பூமியில் வருவார்கள்; அவனைச் சூழ்ந்துகொள்வார்கள்.—எ-று. (ரு)

கோதி லாற்றல்சேர் கும்ப மாமுனி
யீது நோக்கியே யிவரை முன்னமே
காதி னூநமைக் கருதி வந்தனர்
மாத வத்தினோன் மைந்த ராதலால்.

(இ-ள்.) குற்றமற்ற தவவல்லமையினையுடைய அகத்தியமுனிவர் இதனைப்பார்த்து இவர்களை நாம் முன்னமே கொன்றோம்; இவர்கள் துருவாசமுனிவரது புதல்வர்களாதலால் நம்மை (கொல்லக்) கருதிப் பின்னும் வந்தார்கள்.—எ-று. (சு)

பேர்கி லாதவிப் பிரம கத்திநோய்
தீரு மாற்றினாற் சிவன தாள்களை
யார்வ மோடிவ ணருச்சிப் பாமெனா
நேரின் மாமுனி நினைந் து நின்றரோ.

(இ-ள்.) நீங்காத இந்தப் பிரமகத்தி நோயானது நீங்கும்படிச் சிவபெருமானது திருவடிகளை இவ்விடத்தில் அன்புடன் அருச்சனை செய்வோமென்று ஒப்பற்ற அகஸ்தியமுனிவர் சிந்தித்து நின்று.—எ-று. (எ)

ஆசில் கொங்கினுக் கணித்தி னோரிடை
வாச மீதெனா மகிழ்ந்து வீற்றிரீஇ
யீச னார்தமை யிலிங்க மேனியி
னேச நெஞ்சினா னினைந்து தாபித்தான்.

(இ-ள்.) குற்றமற்ற கொங்குதேசத்திற்கருகில் ஓரிடத்தில் இஃதே சிறந்த ஸ்தானமென மகிழ்ந்து வீற்றிருந்து சிவபெருமானை இலிங்கத் திருவுருவத் தில் அன்புபொருந்திய மனத்தினால் நினைந்து ஸ்தாபித்தனர்.—எ-று. (சு)

தூய குண்டிகைத் தோய மன்றியே
சேய மாமலர் தீபந் தீம்புகை
யாய போனக மாதி யானவை
யேயு மாற்றினா லினிது தேடினான்.

(இ-ள்.) தூய்மையாகிய கமண்டலத்திலுள்ள தீர்த்தமேயன்றிச் செம்மையாகிய சிறந்தமலர், தீபம், இனிய தூபம், நன்மைபொருந்திய அன்ன முதலியவைகளைத் தக்க முறைமைப்படி நன்றாகச் சேகரித்தனர்.—எ-று. (எ)

விழுமி தாகிய விரதர் வீயவே
வழியி ருந்திடும் வஞ்ச ராவிகொள்
பழிய கன்றிடப் பரமன் றாண்மிசை
யழிவி லன்பொடே யருச்சித் தானரோ.

(இ-ள்.) உயர்வுபொருந்திய தவமுனிவர்கள் இறக்கும்படி வழியில் வாசஞ்செய்துகொண்டிருந்த வஞ்சகர்களாகிய அசுரர்களது பிராணனை வாங்கிய பிரமகத்தி தோஷம் நீங்கும்படி சிவபெருமானுடைய திருவடியின்மீது கெடாத அன்புடன் அருச்சனை செய்தனர்.—எ-று. (அ)

மங்கை பாகனை மற்றும் பற்பகல்
சிங்க லின்றியே சிறந்த பூசைசெய்

தங்கண் மேவினு னவன்க ணுகிய
துங்க வெம்பவந் தொலேந்து போயதே.

(இ-ள்.) உமாபாகத்தினேயுடைய சிவபெருமானைப் பின்னும் அநேககாலம் சிறந்த பூசை செய்துகொண்டு அவ்விடத்தில் இருந்தனர்; உடனே அவரிடத்திலிருந்த கொடிய பாவமானது தொலேந்தது.—எ-று. (கூ)

அனைய காலேயி லரிய தீந்தமிழ்
முனிவ ரன்செயன் முற்று நாடியே
துனியி னுரதன் ருெல்லே வானவர்க்
கினிய கோமக னிருக்கை யெய்தினுன்.

(இ-ள்.) அந்தச் சமயத்தில் அருமையும் இனிமையும் பொருந்திய தமிழ் முனிவராகிய அகத்தியரது செய்கை முழுமையு முணர்ந்துகொண்டு துன்பமற்ற நாரதமுனிவர் பழய தேவர்களுடைய விருப்பத்திற்குரிய இந்திர னிருக்குமிடத்திற்கு வந்தனர்.—எ-று. (க0)

தாணு வின்பதந் தன்னே யுன்னியே
வேணு வாகியே மெய்த்த வஞ்செயுஞ்
சேணின் மன்னவன் செல்லு நாரதற்
காணு மெல்லேயிற் கழல்வ ணங்கினுன்.

(இ-ள்.) சிவபெருமானுடைய திருவடிகளே நினேத்துக்கொண்டு மூங்கிலுருவங்கொண்டு நின்று உண்மையான தவத்தைச் செய்கின்ற இந்திரன் தன்னிடத்திற்கு வருகின்ற நாரதமுனிவரைக் கண்டவுடன் அவரது பாதங்களில் விழுந்து வணங்கினுன்.—எ-று. (கக)

எழுதி மன்னவென் றெடுத்து மார்புறத்
தழுவி நன்றிவட் சார்தி யோவெனு
வுழுவ லன்பினு னுரைப்ப வாசவன்
றெழுத கையினு னினேய சொல்லுவான்.

(இ-ள்.) அரசனே! எழுந்திருப்பாயாகவென்று வாரியெடுத்து மார்போடணேத்து இங்குச் சுகமாக இருக்கின்றனேயோவென்று விடாத அன்புடன் கூறவும், குவித்தகையுடன் இந்திரன் கூறத் தொடங்கினுன்.—எ-று. (கஉ)

இன்று காறுநின் னருளின் யானிவ
ணன்று மேவின னுதன் பூசனேக்
கொன்ற துண்டுதீங் குரைப்பன் கேட்டியாற்
குன்ற மன்னதோர் குணத்தின் மேலேயோய்.

(இ-ள்.) இதுகாறும் தேவரீரது திருவருளால் யானிவ்விடத்திற் சுகமாகவே யிருக்கின்றேன்; மலேபோன்றநற்குணம்வாய்ந்த முனிவனே! சிவபெருமானது பூசைக்கு மாத்திரம் ஒரு குறையுளது; அதனேக் கூறுகின்றேன் கேட்டருள்வீராக.—எ-று.

கோதின் மாமலர் குழுவு தண்டலேக்
கேது நீரிலே யிறந்து வாடுமாற்
போது மில்லேயாற் பூசை செய்வதற்
கீத ரோகுறை யென்றி யம்பினுன்.

(இ-ள்.) குற்றமற்ற சிறந்த மலர்கள் நிறைந்த சோலேக்கு சிறிதும் தண்ணீரில்லே; ஆதலால் அது அழிந்து வாடுகின்றது; சிவபூசைசெய்வதற்கு மலர்களுமில்லே; இதுதான் குறையாக விருக்கின்றது என்று கூறினுன்.—எ-று. (கச)

வேறு.

இன்னவை பலவுங் கூறி யிந்திரன் றவிசொன் றிட்டு
முன்னுற விருத்தித் தானு முனிவரன் பணியால் வைக
வன்னதோ ரறிஞ னின்னூ ரரசியல் பிறவு மீசன்
றன்னரு ளதனுன் மேனுள் வருவது தளரோன் மன்னே.

(இ-ள்.) இவைபோன்ற பல வார்த்தைகளையும் இந்திரன்கூறி ஒரு ஆசன மிட்டு தனக்கு முன்னே அவ்வாசனத்தில் எழுந்தருளச்செய்து தானும் அந்நாரத முனிவரது கட்டளையால் இருக்க, அந்நாரதமுனிவர் (இந்திரனே) உனது தேவலோ கத்தின் அரசாட்சி முதலியவைகளும் பிற்காலத்தில் சிவபெருமானது திருவருளினல் கிடைக்கும்; நீ வருந்தாதே என்று கூறினர்.—எ-று. (கடு)

ஆறணி சடையி னுனுக் கருச்சனை புரிதற் கிங்கோ
ரூறுள தென்றே யைய வுரைத்தனை யதுவும் வல்லே
மாறிடுங் கால மீண்டு வந்ததப் பரிசை யெல்லாங்
கூறுவன் கேட்டி யென்னுக் கோமகற் குரைக்க லுற்றுன்.

(இ-ள்.) கங்கையைத்தரித்த சடையினையுடைய சிவபெருமானைப் பூசிப்ப தற்கு இங்கு ஓரிடையூறுண்டென்று இந்திரனே! நீ கூறினை; அவ்விடையூறும் விரைவாக நீங்கக்கூடிய காலம் இப்பொழுதுண்டாயிற்று; அதன் விவரங்களனைத் தையுங் கூறுகின்றேன் கேட்கக்கடவையென்று இந்திரனுக்குக் கூறத்தொடங்கினர்.

தன்னிக ரிலாத முக்கட் சங்கரன் பொதிய வெற்பின்
முன்னுறை கென்று கும்ப முனிவனை விடுத்த வாறு
மன்னவன் விந்தந் தன்னை யகன்பிலத் திட்ட வாறுந்
துன்னெறி புரிந்த வெஞ்சூர் மருகனைத் தொலைத்த வாறும்.

(இ-ள்.) தமக் கொப்பில்லாத திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் அகஸ்தியமுனிவரைப் பொதியமலையிற் சென்றிருக்கும்படி முன்னேயனுப்பியருளி யதும், அவ்வகஸ்தியர் விந்தமலையினை அகன்ற பாதலத்திலழுத்தியதும், துன்மார்க்க மான காரியங்களைச்செய்த கொடிய சூரபன்மன் மருகராகிய வில்வலன் வாதாவிகளை க்கொன்றதன்மையும்.—எ-று. (கஎ)

அப்பழி தீரு மாற்று லதெனக் கொங்கி னண்ணி
முப்புர மெரித்த தொல்லை முதல்வனை யருச்சித் தேத்தி
மெய்ப்பரி வாகி யங்கண் மேவிய திறனு முற்றச்
செப்பினன் பின்னு மாங்கோர் செய்கையை யுணர்த்த லுற்றுன்.

(இ-ள்.) அந்தப் பிரமகத்தி தோஷம் நீங்கும்வண்ணம் விரைவாகக் கொங்குதேசத்தையடைந்து, திரிபுரதகனராகிய சிவபெருமானை யருச்சித்துத் துதித்து மெய்யன்போடு அங்கு வசித்த தன்மையுமாகிய எல்லாவற்றையு முரைத்தவராய்ப் பின்னும் அவ்விடத்து (நிகழ்ந்த) ஒரு செய்கையைக் கூறுவாராயினர்.—எ-று. (கஅ)

அருந்தவ முனிவன் கொங்கி னமலனை யருச்சித் தங்க
ணிருந்திடு கின்று ளுடி யேகின னவன்பா லாகப்
பொருந்துகுண் டிகையின் மன்னும் பொன்னியா றதனை யிங்கே
வரும்பரி சியற்றி னுன்றன் மனக்குறை தீரு மென்றுன்.

(இ-ள்.) அருமையாகிய தவத்தினையுடைய அகஸ்தியமுனிவரர் கொங்கு தேசத்தில் சிவபெருமானைப் பூசித்துத் துதித்து அங்கு வசிக்கின்றனர்; அதனை நான்

பார்த்துவந்தனன் ; அவரிடத்துப் பொருந்திய கமண்டலத்திலுள்ள காவிரி நதியை இங்கு வரும்படிச் செய்தால் உனது மனக்கவலை யொழியுமென்று கூறினர்.—எ-று.

குரவனீ துரைத்த லோடுங் குறுமுனி கொணர்ந்து வைத்த
வரநதி தனையிக் காவில் வரவியற் றிடுமா றென்கொல்
பெருமநீ யுரைத்தி யென்னப் பேரமு தருத்தி யேத்திக்
கரிமுகத் தேவை வேண்டிற் கவிழ்த்திடு மதனை யென்றான்.

(இ-ள்.) நாரதமுனிவர் இவ்வாறு கூறுதலும், பெருமானே! அகஸ்தியமுனிவர் கொண்டுவந்து வைத்திருக்கின்ற சிறந்த காவிரிநதியை இந்த நந்தனவனத்தில் வரும்படிச் செய்யும் விதம் யாது? நீர் கூறியருளவேண்டுமென்று பிரார்த்திக்கவும், (நாரதமுனிவர்) மிக்க நிவேதனங்களைப் படைத்து யானைமுகத்தினையுடைய விநாயகக்கடவுளைப் பிரார்த்தித்தால் அந்நதியைக் கவிழ்த்தருளுவரென்று கூறினர்.—எ-று.

குணப்பெருங் குன்ற மன்ன கோதிலா வறிவ னின்ன
புணர்ப்பினை யிசைத்த லோடும் புரந்தரன் பொருமனீங்கிக்
கணிப்பிலா மகிழ்ச்சி யெய்திக் காசிபன் சிறுவர் கொண்ட
வணிப்பெருந் திருவு நாடு மடைந்தனன் போன்று சொல்வான்.

(இ-ள்) பெரிய குணக்குன்றுபோன்ற குற்றமற்ற நல்லறிவினையுடைய நாரதமுனிவர் இவ்வாறாகிய உபாயத்தைக் கூறுதலும், இந்திரன் துன்பநீங்கி அளவற்ற மகிழ்வடைந்து, காசிபமுனிவரது புதல்வர்களாகிய அசுராதியர்க ளபகரித்துக்கொண்ட சிறந்த பெருஞ்செல்வத்தையும் தனது சுவர்க்கலோகத்தையும் கிடைக்கப் பெற்றவனைப்போன்று சொல்வானாயினன்.—எ-று. (உக)

எந்தைநீ யினைய வெல்லா மியம்பினை யதனால் யானு
முய்ந்தனன் கவலை யாவு மொருவினன் முனிவன் பாங்கர்
வந்திடு மாறு மீண்டு வரவுன தருளா லின்னே
தந்திமா முகற்குப் பூசை புரிகுவன் றக்கோ யென்றான்.

(இ-ள்.) எந்தையே ! தேவரீர் இவைகளனைத்தையுங் கூறி யருளினீர், அதனால் அடியேனுங் கடைத்தேறினேன் ; துன்பங்களனைத்தும் நீங்கினேன்; அகஸ்திய முனிவரிடத்தில் வந்திருக்கின்ற நதியானது இங்குத் திரும்பிவரும்படி, சிறந்த முனிவரே ! இப்பொழுதே யானைமுகத்தினையுடைய விநாயகக்கடவுளுக்குப் பூசை செய்வேனென்று கூறினன்.—எ-று. (உஉ)

அருண்முனி யிதனைக் கேளா வன்னதே கருமம் வல்லே
புரிகரி முகவற் கைய பூசனை யென்று கூறிப்
பரவிய விமையோர் கோனைப் பார்மிசை நிறுவிப் போந்து
சுரரொலாம் பரவு கின்ற தொல்லையம் பதத்தி னுற்றான்.

(இ-ள்.) அருளினையுடைய நாரதமுனிவர் இவ்வார்த்தைகளைக் கேட்டு அஃதே தக்க காரியம்: இந்திரனே! விநாயகக்கடவுளுக்கு விரைவாகப் பூசைசெய்யக்கடவையென்று கூறித் தம்மைத் துதித்த தேவேந்திரனைப் பூவுலகத்தில் நிறுத்திவிட்டுத் தேவர்களனைவருந் துதிக்கின்ற பழமையாகிய தவலோகத்திற்குச்சென்றனர்.—எ-று.

சேறலும் புணர்ப்பு வல்லோன் றிங்களு மரவுங் கங்கை
யாறொடு முடித்த வண்ண லருள்புரி முதல்வன் றன்னை
மாறகன் மேனி கொண்டு வரன்முறை தாபித் தன்னான்
சீறடி யமரர் கோமா னருச்சனை செய்து பின்னர்.

(இ-ள்.) தந்திரத்தில் வல்லவராகிய நாரதமுனிவர் சென்றவுடனே, சந்திரனையுஞ் சர்ப்பத்தையுங் கங்கைநதியுடன் சேர்த்தணிந்த சிவபெருமானீன்றருளிய விநாயகக்கடவுளை மாறுபாடில்லாத தனது சுயரூபத்தைக்கொண்டு முறைமைப்படிப் பிரதிஷ்டை செய்து அக்கடவுளது சிறிய திருவடிகளைத் தேவேந்திரன் பூசனை செய்து அதன் பின்பு.—எ-று. (உச)

இக்கொடு தென்னங் காயு மேனலி னிடியுந் தேனு
முக்கனி பலவும் பாகு மோதக முதல முற்றுந்
தொக்குறு மதுர மூலத் தொடக்கமுஞ் சுவைத்தீம் பாலு
மிக்கபண் ணியமு மாக விருப்புற நிவேதித் தானல்.

(இ-ள்.) கரும்பும், தேங்காயும், தினைமாவும், தேனும், பல முக்கனிகளும், வெல்லப்பாகும், மோதகமுதலிய பலகார வகைகளனைத்தும், சுவையமைந்த கிழங்கு வகைகளும், மதுரம்பொருந்திய பாலும், மிகுதியாகிய மற்றைப் பலகாரங்களுமாக அன்புடன் நிவேதனஞ் செய்தனன்.—எ-று. (உரு)

இவ்வகை நிவேதித் தேபின் னெம்பிரான் றன்னை யேத்த
மைவரை யனைய மேனி மதகரி முகத்துத் தோன்றல்
கவ்வையோ டனந்த கோடி கணநிரை துவன்றிச் சூழ
வவ்விடை விரைவாற் றோன்ற வஞ்சின னமரர் கோமான்.

(இ-ள்.) இவ்வண்ணம் நிவேதனஞ் செய்து, பின்பு எமது விநாயகக்கடவுளைத் துதிக்கவும், கருமலைபோன்ற திருமேனியினையுடைய யானைமுகக் கடவுள் ஆரவாரத்துடன் அநந்தங் கோடி சிவகணங்கள் நெருங்கிச் சூழும்படி அவ்விடத்தில் விரைந்தெழுந்தருளவும், (அதனைக் கண்டு) தேவேந்திரன் அச்சமுற்றனன்.—எ-று.

அஞ்சலை மகவா னென்ன வைங்கரக் கடவுள் கூற
நெஞ்சகந் துணுக்க நீங்கி நிறைந்தபே ருவகை யெய்தி
யுஞ்சன னென்று வள்ள லுபயமா மலர்த்தாண் மீது
செஞ்செவே சென்னி தீண்டச் சென்றுமுன் வணக்கஞ் செய்தான்.

(இ-ள்.) இந்திரனே! நீ அஞ்சாதே யென்று விநாயகக்கடவுளருளிச்செய்யவும், தன் மனத்திலுள்ள அச்சநீங்கி நிறைந்த பெருமகிழ்வடைந்து யான் பிழைத்தேனென்று விநாயகக்கடவுளது தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளில் தனது சிரம் செவ்வையாகப் பொருந்தும்படித் திருமுன்னே சென்று வணங்கினன்.—எ-று.

பூண்டிக ழலங்கன் மார்பிற் பொன்னகர்க் கிறைவன் மூக்க
ணண்டகை சிறுவன் றாண்மே லன்பொடு பணிந்து போற்ற
நீண்டதோ ரருளா னோக்கி நின்பெரும் பூசை கொண்டாம்
வேண்டிய பரிசென் னென்றான் வேழமா முகனை வென்றான்.

(இ-ள்.) ஆபரணங்களும் மாலையும் விளங்குகின்ற மார்பினையுடைய இந்திரன் சிவகுமாரராகிய விநாயகக்கடவுளது திருவடிகளில் அன்புடன் வணங்கித் துதிக்கவும், கஜமுகாசுரனை வென்றருளிய விநாயகக்கடவுள் மிக்க திருவருளோடு பார்த்தருளி (இந்திரனே!) நீ செய்த சிறந்த பூசனையை யேற்றுக்கொண்டனம்; உனக்கு வேண்டிய வரம் யாதென்று வினவி யருளினர்.—எ-று. (உஅ)

இந்திர னதுகேட் டைய வெம்பிராற் காக விண்டோர்
நந்தன வனத்தை வைத்தே னன்னது நார மின்றிச்
செந்தழ லுற்ற லென்னத் தினகரன் சுடரான் மாய்ந்து
வெந்துக லான தண்ணன் மேலடு புரமே யென்ன.

(இ-ள்.) அதனை இந்திரன் கேட்டு, ஐயனே! எமது சிவபெருமானைப் பூசிக்கும்பொருட்டு இவ்விடத்தில் ஒருநந்தனவனத்தை வைத்தேன்; அந்நந்தனவனம் நீரில்லாமல் நெருப்புப் பற்றிக்கொண்டதுபோலச் சூரியனது கிரணங்களால் தீய்ந்து, சிவபெருமான் முன்னுளிலெரித்த முப்புரங்களைப்போலக் கொடிய துகளாயின.—எ-று.

என்னலு மேந்தல் கேளா வேழ்பெருந் தலத்தி னீரு
முன்னுறத் தருகோ வான முழுப்பெருங் கங்கை தானும்
பன்னதி பிறவு மிங்ஙன் விளித்திடோ பரவை யாவுந்
துன்னுறு விக்கோ வொன்று சொல்லுதி வேண்டிற் றென்றான்.

(இ-ள்.) என்று கூறவும், விநாயகக்கடவுள் அதனைக் கேட்டருளி (இந்திரனே) பெரிய சப்த லோகங்களிலுமுள்ள நீரனைத்தையும் உனக்கு முன்னர் வருவிக்கவோ? மிகப் பெரிய ஆகாய கங்கையையும், மற்றும் பல நதிகளையும் இங்ஙனம் அழைக்கவோ? கடல்களனைத்தையுஞ் சேர்ப்பிக்கவோ? உனக்கு வேண்டிய தொன்றைச் சொல்லக்கடவை யென்று கூறியருளினர்.—எ-று. (௯௦)

ஐங்கரக் கடவு ளிவ்வா றறைதலு மனைத்து நல்கும்
பங்கயத் தயனு மாலும் பரவுறு பழையோ யிங்ங
னங்கவற் றொன்றும் வேண்டே னதுநினக் கரிதோ யானென்
றிங்குனைக் கேட்ப னென்னா வினையன விசைக்க லுற்றான்.

(இ-ள்.) விநாயகக்கடவுள் இவ்வாறு அருளிச்செய்யவும், (இந்திரன்) எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்த கமலாசனனாகிய பிரமனும், திருமாலும் துதிக்கின்ற முதல்வராகிய எமதாண்டவரோ! இவ்விடத்து அவைகளில் ஒன்றும் விரும்பேன்; அக்காரியந் தேவரீருக் கருமையானதோ? அடியேன் இங்குத் தேவரீரை ஒன்று கேட்பேனென்று இவ்வார்த்தைகளைக் கூறுவானாயினன்.—எ-று. (௯௧)

சகத்துயர் வடபொன் மேருச் சாரலி னின்றும் போந்து
மிகத்துய ரெவர்க்குஞ் செய்யும் வெய்யவள் சிறுவர்ச் செற்று
மகத்துயர் விதியின் சேய்க்கு வருவித்த விமலன் பொற்றா
ளகத்தியன் கொங்கின் பால்வந் தருச்சனை புரிந்து மேவும்.

(இ-ள்.) உலகத்திலுயர்ந்து நிற்கின்ற மகமேருமலையின் தாழ்வரையினின்றும் வந்து யாவர்களுக்கு மிக்க துன்பத்தைச் செய்யும்படியான அசமுகியின் புதல்வர்களாகிய வில்வலன் வாதாவிகளைக் கொன்று பிரமபுத்திரனாகிய தக்ஷனுக்கு யாகத்தில் துன்பத்தை யுண்டாக்கிய சிவபெருமானது திருவடித் தாமரைகளை அருச்சனை செய்துகொண்டு கொங்குநாட்டில் வசித்திருக்கின்றனர்.—எ-று. (௯௨)

அன்னவன் றனது மாட்டோ ரணிகமண் டலத்தி னூடே
பொன்னியென் றுரைக்குந் தீர்த்தம் பொருந்தியே யிருந்த தெந்தாய்
நன்னதி யதனை நீபோய் ஞாலமேற் கவிழ்த்து விட்டா
லின்னதோர் வனத்தி னண்ணு மென்குறை தீரு மென்றான்.

(இ-ள்.) அவ்வகத்தியரிடத்துள்ள அழகிய ஒரு கமண்டலத்தில் காவிரியென்னுந் தீர்த்தந் தங்கியிருக்கின்றது; எமதாண்டவரோ! தேவரீர் அவ்விடத்திற்குச் சென்று அந்த நல்ல நதியைப் பூமியிற் கவிழ்த்துவிட்டால் அது இந்த நந்தனவனத்திற்கு வரும்; அதனால் எனது குறை நீங்குமென்று கூறினன்.—எ-று. (௯௩)

பாகசா தனனிம் மாற்றம் பகர்தலும் பிறைசேர் சென்னி
மாகயா னனத்து வள்ளன் மற்றிது செய்து மென்னா

வோகையா லவனே யங்க ணிறுவிப்போ யொல்லை தன்னிற்
காகமாய் முனிபா லான கமண்டல மிசைக்க ணுற்றான்.

(இ-ள்.) இந்திரன் இவ்வார்த்தை கூறுதலும், சந்திரசேகரராகிய விநாயகக் கடவுள் யாமிவ்வாறே செய்கின்றோமென்று அருளிச்செய்து சந்தோஷத்துடன் இந்திரனை அவ்விடத்தில் நிறுத்திவிட்டுச் சென்று விரைவாகக் காகவடிவத்துடன் அகஸ்தியரிடத்துள்ள கமண்டலத்தின்மீது சென்றிருந்தனர்.—எ-று. (௩௪)

கொங்குறு முனிவன் பாங்கர்க் குண்டிகை மீதிற் பொன்னி
சங்கர னருளின் வந்த தன்மையும் புணர்ப்பு முன்னி
யைங்கரன் கொடியாய் நண்ண வகத்திய னவனென் றோரா
னிங்கொரு பறவை கொல்லா மெய்திய தென்று கண்டான்.

(இ-ள்.) கொங்குநாட்டிலிருக்கின்ற அகஸ்தியரிடத்துள்ள கமண்டலத்தின்மீது காவிரிநதி சிவபெருமானது திருவருளால் வந்திருக்குந்தன்மையினையும், அது அகஸ்தியர் கரத்தையெடுத்துப் போவென்று கூறும்பொழுது அவரை நீங்கிச் செல்லவேண்டிய தந்திரத்தையும் நினைத்து விநாயகக்கடவுள் காகமாகச் சென்றிருத்தலும் அகஸ்தியமுனிவர் (அக்காகவடிவங்கொண்டு வந்தவர்) விநாயகக்கடவுளென்றுணர்ந்துகொள்ளாமல் ஒரு சாதாரண காகம் வந்திருக்கிறதென்று பார்த்தனர்.—எ-று. ()

கண்டனன் பிள்ளை செல்லக் கரதல மெடாநின் றோச்ச
வண்டருக் கலக்கண் செய்த கயமுகத் தவுணற் செற்றோன்
குண்டிகை யதனைத் தள்ளிக் குளிர்புனற் கன்னி யன்னான்
பண்டையி லிசைவு செய்தான் பாரினீ படர்தி யென்றான்.

(இ-ள்.) அவ்வாறு பார்த்துக் காகம் போகும்படிக் கரத்தைத்தூக்கி ஓட்டுதலும், தேவர்களுக்கிடுக்கண்செய்த கயமுகாசுரனைக் கொன்ற விநாயகப்பெருமான் கமண்டலத்தைக் கவிழ்த்துக் குளிர்ந்த நீர்வடிவமான காவிரியே! இவ்வகஸ்தியன் முன்னமே ஒத்துக்கொண்டனன்; ஆதலால் நீ (கமண்டலத்தைவிட்டு) பூமியில் செல்லக்கடவை யென்றருளிச்செய்தனர்.—எ-று. (௩௬)

என்னலுங் காஞ்சி தன்னி லெம்பிரா னுலக மீன்ற
வன்னைத னன்பு காட்ட வழைத்திட வந்த கம்பை
நன்னதி போல விண்ணு ஞாலமு நடுங்க வார்த்துப்
பொன்னியா றுலகந் தன்னிற் பொள்ளெனப் பெயர்ந்த தன்றே.

(இ-ள்.) என்றருளிச்செய்தவுடனே, காஞ்சிபுரத்தில் சிவபெருமான் உமாதேவியாரது அன்பினை வெளிப்படுத்தும் பொருட்டு அழைத்தலால் பிரவாகித்து வந்த கம்பாநதியைப்போல ஆகாயமும் பூமியும் நடுங்கும்படி இரைந்துகொண்டு காவிரிநதி உலகத்தில் விரைவாகச் சென்றது.—எ-று. (௩௭)

பெயர்தலு முமைதன் பிள்ளை பிள்ளையி னுருவ நீத்துப்
பயிறரு மறைநூல் வல்ல பார்ப்பன மகன்போற் செல்லச்
சயமிகு தவத்தின் மேலோன் றன்மையங் கதனை நோக்கி
யுயிர்முழு தடவே தோன்று மொருவன்போ லுருத்து நின்றான்.

(இ-ள்.) அவ்வாறு காவிரி சென்றவுடனே விநாயகக்கடவுள் காகவடிவத்தையொழித்து வேதாத்தியயனத்தில் வல்ல ஒரு பிராமணச்சிறுவனைப்போலச் செல்லுதலும், அத்தன்மையாகச் செல்லுதலை வெற்றிபொருந்திய தவத்தினையுடைய அக

ஸ்தியர் பார்த்துப் பிரளயகாலத்தில் சகலவுயிர்களையுஞ் சங்கரிக்க வருகின்ற காலாக்கினியுருத்திரனைப்போலக் கோபங்கொண்டு நின்றனர்.—எ-று. (௩அ)

தேவனோ வவுணன் றானோ வரக்கனோ திறலின் மேலோன்
யாவனோ வறித றேற்றே னீண்டுறு நதியைச் சிந்திப்
போவனோ சிறிது மெண்ணா வகந்தையன் போலு மம்மா
யாவனோ வன்மை தன்னை யறிகுவன் விரைவி னென்றான்.

(இ-ள்.) இவன் தேவனோ? அசுரனோ? அரக்கனோ? வலிமையின் மிக்க இவன்யாவனோ அறிந்தேனில்லை; இங்கிருந்த நதியைக் கவிழ்த்துவிட்டுப் போகின்றானே, சற்றும் ஆலோசியாமல் ஒவ்வொன்றையுந் துடுக்காகச் செய்கின்ற அகங்காரமுடையவன்போலும்; ஆ, இவன் யாராகவிருக்கலாம், யான் இவனது வலிமையை ஒருக்ஷணப்பொழுதி லறிகிறேனென்று கூறினார்.—எ-று. (௩௯)

விரைந்தவன் பின்ன ரேக மெய்வழி பாடு செய்வோ
ரரந்தையை நீக்கு மெங்கோ னச்சுறு நீரன் போல
விரிந்தனன் போத லோடு மிருகையுங் கவித்த மாக்கித்
துரந்தனன் முனிவன் சென்னி துளக்குறத் தாக்க வுன்னி.

(இ-ள்.) (அகஸ்தியர்) விரைவாக அவருக்குப்பின்னே செல்லவும், உண்மையாக வழிபடுகின்றவர்களது துன்பத்தை நீக்குகின்ற எமது விநாயகக்கடவுள் அச்சங் கொண்டவரைப்போல விலகிச்செல்லுதலும், அகஸ்தியமுனிவர் அவரது தலையிற் குட்டும்பொருட்டு இரண்டு கரங்களையும் முஷ்டியாக மடக்கிக்கொண்டு பின்றொடர்ந் தோடினார்.—எ-று. (௪0)

குட்டுவான் றுணிந்து செல்லுங் குறுமுனிக் கணிய னாகிக்
கிட்டுவான் விசும்பி னூடு கிளருவான் றிசைக டோறு
முட்டுவான் பின்பு பாரின் முடுகுவா னனையன் கைக்கு
மெட்டுவான் சேய னாகி யேகுவா னெவர்க்கு மேலோன்.

(இ-ள்.) யாவரினுஞ் சிறந்தவராகிய விநாயகப்பெருமான் தமது சிரத்திற் குட்டும்பொருட்டுத் துணிந்து வருகின்ற அகஸ்தியமுனிவருக்குச் சமீபமாகச் செல்லுவர்; ஆகாயத்திற் கிளம்பிச் செல்லுவர்; எட்டுத்திக்குகளிலும் நெருங்கிச் செல்லுவர்; பின்னர் பூமியில் விரைந்து வருவர்; அவ்வகஸ்தியரது கரத்திற் கெட்டுவர்; நெடுந் தூரத்திலுஞ் செல்லுவர்.—எ-று. (௪௧)

இப்படி முனிவன் சீற்றத் தலமர யாண்டு மேகித்
தப்பினன் றிரித லோடுஞ் சாலவுந் தளர்ச்சி யெய்திச்
செப்பரி திவன்றன் மாயஞ் செய்வதெ னினியா னென்னா
வொப்பருந் தவத்தோ னுன்ன வெந்தையஃ துணர்ந்தா னன்றே.

(இ-ள்.) இவ்வாறு அகஸ்தியமுனிவர் கோபத்துடன் சுழலும்படி எவ்விடங்களிலுஞ் சென்று அவரது கரத்திற் சுகப்படாமல் தப்பித்துக்கொண்டு திரியவும், அவ்வகஸ்தியமுனிவர் மிகவுந் தளர்ச்சியடைந்து இவனது மாயஞ்சொல்லுதற் கரிது; இனி யான் யாது செய்வதென்று ஒப்பற்ற தவத்தினையுடைய அம் முனிவர் நினைத்தலும் அதனை எமது விநாயகக்கடவு ளுணர்ந்தனர்.—எ-று. (௪உ)

ஓட்டமோ டலவு முன்னோ னெல்லையிற் றனது மேனி
காட்டினன் முனிவன் காணாக் கதுமெனக் கலங்கி யந்தோ
கோட்டிப முகனோ வீண்டுக் குறுகின னவனை யானோ
வீட்டொடு துரந்தேன் கொல்லென் றேங்கின னிரங்கு கின்றான்.

(இ-ள்.) ஓட்டமாக எவ்விடங்களிலு மூலாவிய விநாயகக்கடவுள் தமது திருவுருவத்தைக் காட்டுதலும் அதனை அகஸ்தியர் பார்த்து மனங் கலங்கி விரைவாக ஐயோ! விநாயகப்பெருமானோ இவ்விடத் தெழுந்தருளியவர்? அவ்வெம்பெருமானை யான்றானே எதிரியாகத் துரத்தினேனென்று ஏக்கங்கொண் டிரங்குவாராயினர்.

இரங்கிய முனிவன் முன்ன மேந்தலைப் புடைப்பான் கொண்ட
கரங்களை யெடுத்து வானிற் கருரு மேறு வெற்பி
னுரங்கழி தரவே நீங்கா துரப்பினில் வீழ்வ தேபோல்
வரங்கெழு தனது நெற்றி வருந்துறத் தாக்க லுற்றான்.

(இ-ள்.) அவ்வாறு இரக்கமுற்ற அகஸ்தியமுனிவர் முன்பு விநாயகப்பெருமானைக் குட்டும்பொருட்டு மடக்கிய கரங்களை மேலே தூக்கிக் கரிய மேகத்திலுண்டாகிய பேரிடி மலையின் நடுவானது பிளக்கும்படி விடாமல் ஆரவாரத்துடன் விழுவதைப்போலச் சிறப்பு விளங்கப் பெற்ற தமது நெற்றிக்குத் துன்ப முண்டாகும்படிக் குட்டத்தொடங்கினர்.—எ-று. (௬௪)

தாக்குதல் புரிந்த காலைத் தாரகப் பிரம மான
மாக்கய முகத்து வள்ளல் வரம்பிலா வருளி னோடு
நோக்கியுன் செய்கை யென்னை நுவலுதி குறியோ யென்னத்
தேக்குறு தமிழ்தேர் வள்ள லினையது செப்பு கின்றான்.

(இ-ள்.) அவ்வாறு குட்டிக்கொண்டபொழுது பிரணவப்பொருளாகிய யானைமுகக்கடவுள் அளவற்ற கருணையோடும் பார்த்தருளி அகஸ்தியனே! நீ ஏன் இவ்வாறு குட்டிக்கொள்ளுகின்றனை கூறக்கடவை யென்றருளிச்செய்தலும், உயர்ந்த தமிழினையுணர்ந்த அகஸ்தியமுனிவர் இவ்வாறு கூறத்தொடங்கினர்.—எ-று. (௬௫)

அந்தண குமர னென்றே யையநின் சிரமேற் றாக்கச்
சிந்தனை புரிந்தேன் யாதுந் தெளிவிலே னதற்குத் தீர்வு
முந்தின னியற்று கின்றே னென்றலு முறுவல் செய்து
தந்தியின் முகத்து வள்ள லலமர றவிர்தி யென்றான்.

(இ-ள்.) ஐயனே! ஒன்று முணராத அடியேன் தேவரீரை ஒரு பிராமணச் சிறுவனென்று கருதி உமது தலையில் குட்டும்பொருட்டுச் சிந்தனை செய்தேன்; அதற்குப் பரிகாரமாக யானே நினைத்துச் செய்துகொள்ளுகின்றேனென்று கூறுதலும், விநாயகக்கடவுள் புன்னகைபுரிந்து வருத்தமொழியக்கடவையென்றருளிச்செய்தனர்.

என்றலுந் தவிர்ந்து முன்னோ னிணையடி மிசையே பல்காற்
சென்றுசென் றிறைஞ்சி யன்னோன் சீர்த்திய தெவையும் போற்றி
யுன்றிற முணரோன் செய்த தவற்றினை யுளத்திற் கொள்ளே
னன்றருள் புரிதி யென்ன நாயக னருளிச் செய்வான்.

(இ-ள்.) என்று கூறியவுடனே, (அகஸ்தியர் தாம்) குட்டிக்கொள்ளுதலையொழிந்து அவரது உபயபாதங்களில் பலமுறை சென்று வணங்கி அவரது புகழ்களனைத்தையுந் துதித்து, எம்பெருமானே! அடியேன் தேவரீரது தன்மையை யுணரேன்; யான்செய்த குற்றத்தைத் திருவுள்ளங்கொள்ளாதீர்; இனிமையோடு திருவருள்புரிவீராக வென்று கூறுதலும், விநாயகக்கடவுள் அருளிச்செய்கின்றார்.—எ-று. (௬௭)

புரந்தர னெந்தை பூசை புரிதரு பொருட்டா லீண்டோர்
வரந்தரு காமர் தண்கா வைத்தன னதுநீ ரின்றி

விரைந்தது பொலிவு மாழ்கி வெறுந்துக ளாத லோடு
மிரந்தனன் புனல்வேட் டெம்மை யியல்புடன் வழிபட் டிந்நாள்.

(இ-ள்.) இந்திரன் சிவபூசை செய்யும்பொருட்டு இவ்விடத்து ஒரு சிறப்புப்பொருந்திய குளிர்ந்த அழகிய நந்தனவனத்தை வைத்தனன்; அந்நந்தனவனம் நீரில்லாமல் விரைவாகப் பொலிவுகெட்டு மிக்க தூளாய்ப்போகவும், இப்பொழுது முறைமைப்படி எம்மைப் பூசித்து நீரை விரும்பிக் கேட்டுக்கொண்டனன்.—எ-று. (சஅ)

ஆதலிற் கொடிபோல் யாமுன் னரும்புனற் குடிகை மீது
காதலித் திருந்து மெல்லக் கவிழ்த்தன மதனை யீண்டுப்
போதலுற் றிடவுஞ் சொற்றும் பொறுதுநீ செய்த வற்றில்
யாதுமுட் கொள்ளே மவ்வா றினிதென மகிழ்து மன்றே.

(இ-ள்.) ஆதலால் காக்கையைப் போல் யாம் உனது அரிய நீரினையுடைய கமண்டலத்தின்மேல் விருப்பத்துடனிருந்து மெல்லக் கவிழ்த்தனம்; அதனை இவ்விடத்தில் போகவுங் கூறினோம்; அதனைக் குறித்து நீ மனந்தாளாமல் செய்தவைகளுள் யாதும் மனத்திற் கொள்ளோம்; அவ்வாறு செய்தவைகளை நன்றென்று மகிழ்கின்றோம்.—எ-று. (சக)

ஈண்டுநீ புரிந்த தெல்லா மெமக்கிதோ ராட லென்றே
காண்டுமா லன்றி நின்பாற் காய்சினங் கொண்டே மல்லே
நீண்டசெஞ் சடையெம் மைய னேயனீ யெமக்கு மற்றே
வேண்டிய வரங்க ளீதுங் கேண்மதி விரைவி னென்றான்.

(இ-ள்.) இவ்விடத்தில் நீ செய்தவை யனைத்தும் எமக்கு ஒரு திருவிளையாட்டாகப் பார்த்தோமே யன்றி நின்னிடத்து மிக்க கோபங்கொண்டோமல்லோம்; நீ நீண்டிருக்கின்ற சிவந்த சடைமுடியையுடைய எமது பிதாவினிடத்து மிக்க அன்புள்ளவன்: எம்மிடத்து மவ்வாறேயாம்; ஆதலால் நீ வேண்டிய வரங்களைத் தருகின்றோம் விரைவில் கேட்கக்கடவையென் றருளிச்செய்தனர்.—எ-று. (௫0)

வேறு.

என்னா விதுசெப் பலுமெம் பெருமான்
முன்னா கியதோர் முனிவன் பணியா
வுன்னா ரருளெய் தலினுய்ந் தனன்யா
னன்னா யகனே யெனவே நவில்வான்.

(இ-ள்.) என் றிவ்வா றருளிச்செய்தவுடனே எமது விநாயகக்கடவுளின தெதிரில் நின்ற அகஸ்தியமுனிவர் நமஸ்காரஞ்செய்து, சிறந்த எமது ஆண்டவரோ! தேவரீரது திருவருள் கிடைத்தமையால் அடியேன் உய்ந்தேனென்று கூறிக் கூறுவாராயினர்.—எ-று. (௫க)

நின்பா லினுமந் நெடுமா லுணரான்
றன்பா லினுமே தமியேன் மிகவு
மன்பா வதொர்தன் மையளித் தருணீ
யின்பா லதுவெஃ குவனெப் பொழுதும்.

(இ-ள்.) தேவரீரிடத்திலும் திருமாலினாற் கண்டறியப்படாதவராகிய சிவபெருமானிடத்திலுமே அடியேன் மிக்க அன்புள்ளவனாயிருக்குந்தன்மையைத் தேவரீர் கொடுத்தருளவேண்டும்; எப்பொழுதும் அதனையே மகிழ்வோடும் விரும்புகின்றேன்.—எ-று. (௫உ)

இன்னே தமியே னெனவே யினிநின்
முன்னே நுதலின் முறையா லிருகை
கொன்னே கொடுதாக் குநர்தங் குறைதீர்த்
தன்னே யெனவந் தருள்செய் யெனவே.

(இ-ள்.) இவ்வாறு அடியேனைப்போல இனித் தேவரீரது சந்நிதானத்தில் நின்றுகொண்டு முறைப்படி நெற்றியில் இரண்டு கைகளையும் வலிமையுடன் மாறி மடக்கிக்கொண்டு குட்டிக்கொள்பவர்களது குறைகளை யொழித்துத் தாய்போல வெழுந்தருளிக் கிருபைசெய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தலும்.—எ-று. (கரு)

முத்தண் டமிழ்தேர் முனியீ தறைய
வத்தன் குமர னவைநல் கினமா
லித்தன் மையவே யலதின் னமுநீ
சித்தந் தனில்வேண் டியசெப் பெனவே.

(இ-ள்.) இனிய முத்தமிழ்களையுணர்ந்த அகஸ்தியமுனிவ ரிதனைக் கூறுதலும் சிவகுமாரராகிய விநாயகக்கடவுள் அவ்வரத்தைக் கொடுத்தோம்; இதுவன்றி வேறேயும் உன் மனதில் விரும்பியவற்றைக் கூறக்கடவை யென்றருளிச்செய்யவும்.

கொள்ளப் படுகுண் டிகையிற் குடினை
வெள்ளப் பெருநீர் மிசையுற் றடிக
டள்ளக் கவிழ்வுற் றதுதா ரணிமே
லெள்ளிற் சிறிது மிலதென் றிடவே.

(இ-ள்.) பிரவாகமான காவிரிநதியை உள்ளே வைத்திருந்த கமண்டலத்தின்மீது தேவரீரெழுந்தருளியிருந்து கவிழ்த்துத்தள்ளினமையால் (அந்நீர் கமண்டலத்தைவிட்டு நீங்கிச் சென்றதன்றி) ஓரெள்ளிற் சிறியவளவைகூடக் கமண்டலத்தின் கணில்லையென்று கூறும்படிச் சென்றது.—எ-று. (கசு)

ஊனு யுயிரா யுலகா யுறைவோன்
மேனா ளருள்செய் யியன்மா நதிதான்
போனா லதுபோற் புனலொன் றுளதோ
நானா டிடவே நலமா னதுவே.

(இ-ள்.) ஊனாகியும் உயிராகியும் உலகாகியு மெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் முன்னாளில் அளித்தருளிய பெரிய காவிரிநதியானது போய்விட்டால் பின்னர் அடியேன் ஸ்நானஞ் செய்வதற்குப் பரிசுத்தமானதாகிய வேறொரு நதி அக்காவிரிபோன் றுள்ளதோ?—எ-று.

அகத்தியமுனிவர் விநாயகக்கடவுள்மாட்டு எந்தையே நுமது தந்தையாரளித்த காவிரிநீரிற் சிறந்ததொன் றுண்டோ வென்னாது "ஊனு யுயிரா யுலகா யுறைவோன்" என்று குறிப்பு மொழியினாற் கூறினர். சிவபெருமான் அகத்தியமுனிவரது மெஞ்ஞானானுபவப் பரம்பொருளாதலா லவனை யிவர் யாண்டுங் காணுமியல்புக்குத் தக்கபடி கூறினர். இதனாற் சிவபெருமானைத் தவிரப் பிரபஞ்சமென்னு மொன்று வேறில்லையென் றறியப்படுகிறது. ஆனால் இறைவன் பக்குவான்மாக்களது உணர்ச்சியளவிற்குத் தக்கபடி நிற்பவர். சிவஞானிகள் 'மரத்தை மறைத்தது மாமதயானை' என்பதைப்போல் உலகாதிகளையும் சிவபெருமானாகவே காண்கின்றார்கள். அல்லாதவர்கள் உலகாதிகளாகவே காண்கின்றார்கள். எங்கு மிருந்தாற் காண்பார்களே என்னில், "குருட்டுச் சேரியிற் கோடி யாதவர் - உலவினும் பேசினும் உறினு மென்ப

யன்'' என்ற திவர்களைக் கருதி யன்றே: இவ்வண்ணமே சிவஞானியர்களது அனுப மென்பதை, ''வானாகி மண்ணாகி வளியாகி வெளியாகி-யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய் - கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு - வானாகி நின் றாயை யென்சொல்லி வாழ்த்துவனே'' என்றும், பண்ணி னிசையாகி நின்றாய் போற்றி - பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி - எண்ணு மெழுத்துஞ்சொ லானாய் போற்றி-யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி-விண்ணு நிலனுந் தீயானாய் போற்றி-மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி - கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி - கயிலை மலையானே போற்றி போற்றி''—என்றும் வரும் வேதமொழிகளா னுணர்க.

அந்நீர் மையினு லடியேற் கிவணீ
நன்னீர் நவையற் றதுநல் கெனவே
கைந்நீர் மையினுற் கடுகின் றுணையா
முந்நீ ரயினு முனிவன் மொழிய.

(இ-ள்.) அந்தக் காரணத்தினால் அடியேனுக்கு இவ்விடத்தில் தேவரீர் குற்றமற்ற நல்ல தீர்த்தத்தைக் கொடுத்தருளவேண்டுமென்று உள்ளங்கையிற் பொருந்திய கடுகினளவாகக் கடல்நீரை யுண்டருளிய அகஸ்தியமுனிவர் கூறுதலும்.—எ-று.

முந்நீர்-ஆக்கல் காத்த லழித்த லென்னும் மூன்று நீர்மையினையுடைய நீர்.

காகத் தியல்கொண் டுகவிழ்த் திடமுன்
போகுற் றபுதுப் புனலாற் றிடையே
மாகைத் தலநீட் டினன்வா னுலவு
மேகத் திறைமால் கடல்வீழ்ந் தெனவே.

(இ-ள்.) விநாயகர் காகவடிவங்கொண்டு முன்பு கவிழ்க்க அதனால் பெருகியோடிய புதிய நீரினையுடைய காவிரிநதியில் விண்ணுலகத்திற் பொருந்திய மேகங்கள் பெரிய கடலில் வீழ்ந்தாற்போலத் தமது பெரிய துதிக்கையினை நீட்டினர்.

அள்ளிச் சிறிதே புனலம் முனிவன்
கொள்ளப் படுகுண் டிகையுய்த் திடலு
முள்ளத் தைநிரப் பியொழிந் ததெலாம்
வெள்ளத் தொடுபார் மிசைமே வியதே.

(இ-ள்.) (நீட்டிய) அத்துதிக்கையினால் கொஞ்ச நீரை மொண்டு அவ்வகஸ்தியமுனிவரது கமண்டலத்தில் விடவும், அந்நீர் கமண்டலத்தி னுள்ளிடத்தை நிறைத்து ஒழிந்த நீரனைத்தும் பிரவாகத்துடன் கலந்து பூமியில் பரவி யோடியது.—எ-று.

முன்னுற் றதுபோன் முனிகுண் டிகைநீர்
துன்னுற் றதுமேற் றுலையா வகையா
லென்னிப் புதுமை யெனநோக் கினனுற்
றன்னுற் றமனத் தவமா முனியே.

(இ-ள்.) முன்பிருந்ததுபோலவே அகஸ்தியமுனிவரது கமண்டலத்தில் நீர் நிரம்பி அது முற்றிலுமொழுகிப்போகாம லிருப்பதனால், தன் வசப்பட்ட மனத்தினையுடைய அகஸ்தியமுனிவர் இது என்ன ஆச்சரியமென்று பார்த்தனர்.—எ-று. (௬0)

பேருற் றிடுமிப் பெருநீ ரதனில்
வாரிச் சிறிதே வருகுண் டிகையிற்
பாரித் தனனிப் படிமுற் றுறுவா
ளுரிப் படிவல் லவரா யினுமே.

(இ-ள்.) (எனது கமண்டலத்தினின்றும்) பெயர்ந்து செல்லுகின்ற இந்தப் பிரவாக நீரில் விநாயகப்பெருமான் கொஞ்ச முகந்தெடுத்து யான் கொண்டுவந்த கமண்டலத்திலேயே நிறைத்தனர்; இவ்வாறு செய்தற்கு வல்லவர் யார்? ஆனாலும்.

அந்தத் திருமா லயனே முதலோர்
வந்தித் திடவே வரமீந் தருளி
முந்துற் றிடுமூ லமொழிப் பொருளா
மெந்தைக் கரிதோ விதுபோல் வதுவே.

(இ-ள்.) அந்தத் திருமால் பிரமன் முதலிய தேவர்கள் (அடியேனைத் துதிக்கும்படி வரத்தைக் கொடுத்தருளிய சிறந்த பிரணவப்பொருளாகிய எமது விநாயகக் கடவுளுக்கு இதுபோன்ற காரியங்கள் செய்தற்கருமையோ?—எ-று. (௬௨)

என்றே நினையா விபமா முகவற்
சென்றே பணியாச் சிறியேன் குறையா
யொன்றே துமிலே னுதவுற் றனைநீ
நன்றே கவிழு நதிநீ ரையுமே.

(இ-ள்.) என்று நினைத்து விநாயகக்கடவுளைச் சென்று வணங்கித் தேவரீர் கவிழ்த்தருளிய ஆற்றுநீரையுந் திரும்பக் கொடுத்தருளினமையால் அடியேன் யாதொரு குறையுமில்லாதவனாயினேன்.—எ-று. (௬௩)

முந்தே முதல்வா முழுதுன் னருளா
லந்தே யளவு மளியில் சிறியே
னுய்ந்தே னினியும் முனையுன் னுழிநீ
வந்தே யருள்கூர் மறவே லெனவே.

(இ-ள்.) எமதாண்டவரே! முற்காலத்திலேயே தேவரீரது பூரண கிருபையால் சிறிய அந்துப்பூச்சியளவும் இரக்கமற்ற அடியேன் எனது முடிவுகாலம் வரையிலும் கடைத்தேறினேன்; இனிமேலும் தேவரீரை நினைக்கும்பொழுதெல்லாம் (என் முன்னே) எழுந்தருளித் திருவருள் புரியவேண்டும்; இதனை மறவாதிருப்பீராக வென்று பிரார்த்தித்தலும்.—எ-று. (௬௪)

அற்றா கவென வருள்செய் தயலே
சுற்றா வருதொல் படையோ டுமெழாப்
பற்றா னவர்நா டுபரம் பொருள்சேய்
மற்றா ரும்வியப் பமறைந் தனனே.

(இ-ள்.) அவ்வாறாகுகவென்று திருவருள் புரிந்து தமக்கயலில் சூழ்ந்துவந்த பழய கணங்களுடனெழுந்தருளி மெய்யன்பர்களால் நினைக்கப்பட்ட சிவபெருமானது திருக்குமாரராகிய விநாயகக்கடவுள் மற்றை யாவர்களும் வியக்கும்படி மறைந் தருளினர்.—எ-று. (௬௫)

வேறு.

மறைகின்ற வெல்லைதனிற் குறுமுனிவிம் மிதமாய்மன் னுயிர்க ளெங்கு
முறைகின்ற தனிமுதல்வன் புதல்வன்றன் கோலத்தை யுணர்ந்து போற்றி
யறைகின்ற காவிரியைக் கண்ணுற்று நகைத்துவெகுண் டருள்கை நாடி[ன்.
யுறைகின்ற கொங்குதனை யொருவித்தென் றிசைநோக்கி யொல்லை சென்று

(இ-ள்.) விநாயகக்கடவுள் அவ்வாறு மறைந்தருளியபொழுது அகஸ்திய முனிவர் ஆச்சரியமுற்று நிலைபெற்ற எல்லா வுயிர்களிடத்தும் உயிர்க்குயிரா யெழுந் தருளியிருக்கின்ற சிவபெருமானது திருப்புதல்வராகிய விநாயகக்கடவுளது திருவுரு

வத்தைச் சிந்தித்துத் துதித்துச் சப்திக்கின்ற காவிரிநதியைப் பார்த்துச் சிரித்துக் கோபங்கொண்டு சிவபெருமானது திருவருட்டன்மையைச் சிந்தித்துத் தாம் வசிக்கின்ற கொங்குநாட்டினின்று நீங்கித் தென்றிசையை நோக்கி விரைவாகச் சென்றருளினர்.—எ-று. (சுசு)

காவிரிநீங்குபடலமுற்றிற்று.

ஆ_ திருவிருத்தம்-கரு௱௯.

---

உ

முருகன்றுணை.

---

# திருக்குற்றாலப்படலம்.

செற்றால முயிரனைத்து முண்டிடவே நிமிர்ந்தெழலுஞ் சிந்தை மேற்கொள்
பற்றாலங் கதுநுகர்ந்து நான்முகனே முதலோர்தம் பாவை மார்கள்
பொற்றாலி தனையளித்தோன் புகழ்போற்றி முகின்மேனிப் புத்தேள் வைகுங்
குற்றால மாவதொரு வளநகரைக் குறுமுனிவன் குறுகி னானால்.

(இ-ள்.) ஆலகால விஷமானது சகலவுயிர்களையு மழிக்கும்பொருட்டு ஓங்கியெழுந்துவருதலும், உயிர்கள்மீதுவைத்த கிருபையினால் அந்த விஷத்தையுண்டு பிரமன் முதலிய தேவர்களது பத்தினிமார்களது கழுத்திலிருந்த பிரகாசிக்கின்ற மங்கிலியத்தைக் காத்தருளியவராகிய சிவபெருமானது பிரதாபங்களைத் துதித்துக்கொண்டு அகஸ்தியமுனிவர் திருமால்வசிக்கின்ற வளப்பம்பொருந்திய குற்றாலமென்னு நகரத்தை யடைந்தனர்.—எ-று. (க)

அப்பதியி லச்சுதனுக் காலயமொன் றுளதம்ம வவனி மீதி
லொப்பிலதோர் திருமுற்ற மஃதென்ப ரிம்பரொலா மும்பர் தாமுஞ்
செப்புவரா யிடைதன்னி லந்தணர்க ளளப்பில்லோர் செறிவ ரன்னோர்
மெய்ப்படுநூன் முறைகண்டு மோகத்தாற் றமதுமத மேற்கொண் டுள்ளார்.

(இ-ள்.) அந்நகரத்தில் திருமாலுக்கொரு ஆலயமுண்டு; அதனைப்பூவுலகத்தின்கண் ஒப்பற்ற திருமுற்றமென்று மனிதர்களுந் தேவர்களுங் கூறுவார்கள்; அவ்விடத்தில் அநேகம் வேதியர்கள் வசிப்பார்கள்; அவர்கள் உண்மையான நூல்களை முறையே வாசித்தவர்களாயினும் மோகத்தினால் தங்கள் மதத்தையே மேலாகக்கொண்டுள்ளவர்கள்.—எ-று.

அகஸ்தியமுனிவர்சென்ற குற்றாலத்துப் பிராமணர்கள் வேதங்களைச்செவ்வனே உணர்ந்தவர்களென்றும், அதுவும் அத்தியயன மாத்திரத்தானன்றி அவ்வேதங்களின் பொருள்களை யாய்ந்தறிதற்குக் கருவிகளாகிய நிருத்த வியாகரணாதிகளையும் படித்தவர்களென்றும்,படித்து விடாமற்சிந்தித்துப் பொருளறிந்தவர்களென்றும்,அவ்வேதங்களிற்கூறும் உண்மையான பரம்பொருள் சங்காரகருத்தாவாகிய சங்கரனேயென்று உணர்ந்தவர்களென்றும், அவ்வாறுணர்ந்தும் தங்கள் மதத்திலேயே மிக்க மோகமுடையவர்களென்றும் குறிப்பிக்க 'மெய்ப்படுநூன் முறைகண்டு மோகத்தாற் றமதுமத மேற்கொண் டுள்ளார்' என்றார். (உ)

அன்னவர்க ளெம்பெருமான் றன்னடியார் தமைக்காணி னழன்று பொங்கி, முன்னுறுதொல் பகைஞரென மிகவிகழ்ந்து மற்றவர்த முகநோக் காராய்த், துன்னெறியே மேற்கொண்டு மறைபயில்வோ ரென்பதொரு சொல்லே தாங்கித், தந்நெறியும் புரியாதங் கிருந்தனரா லஃதுணர்ந்தான் றமிழ்நர் கோமான்.

(இ-ள்.) அவ்வேதியர்கள், எமது சிவபெருமானுடைய மெய்யடியார்களைக் கண்டால் மிகவுங்கோபங்கொண்டு எதிரில்வந்த பழய பகைவர்களைப்போல மிகத் தாழ்வான மொழிகளைக்கூறி அவ்வன்பர்களது முகத்தைப் பாராதவர்களாய்த் துன்மார்க்கத்தையே சிறந்ததாகக்கொண்டு, வேதாத்தியயனஞ் செய்பவர்களென்னும் பெயரைமாத்திரம் வகித்துத் தமது மதவொழுக்கத்தையும் நடத்தாதவர்களாய் அங்கு வசித்திருந்தார்கள்; அவ்வாறிருத்தலைத் தமிழ்த்தலைவராகிய அகஸ்தியமுனிவ ருணர்ந்தனர்.—எ-று.

இவ் வைணவர்கள் வெளிக்குமாத்திரம் வைதீகர்களாவும் அந்தரங்கத்தில் பாஞ்சராத்திரநூனெறிப்படி தீக்ஷை செய்துகொண்டு தங்கள் சரீரங்களில் சங்க சக்கராதி முத்திரைச் சூடிட்டு மண்ணினைத் திருநீற்றுக்குப் பதிலாகத் தரித்துத் தமது தெய்வமாகச் சொல்லப்படுகிற மாலையும் உண்மையாகத் துதியாமல், வீணே சிவதூஷணைகளைச் செய்துகொண்டு திரிந்து தங்கண் மதநடைகளையு மிழந்தவர்களென்று குறிப்பிக்க, 'துன்னெறியே மேற்கொண்டு மறைபயில்வோ ரென்னுமொரு சொல்லே தாங்கித் - தந்நெறியும் புரியாதங் கிருந்தனரால்" என்றார். (௫)

குறுமுனிவ னுங்கவர்தஞ் செயலுணர்ந்து குற்றால மென்னு மூதூர், மறுகினிடை யேநடந்து மாயவன்ற னாலயமுன் வருத லோடு, நெறிவருமவ் வாலயத்திற் செறிகின்ற வைணவர்க ணேடிது நோக்கிச், செறுநர்தமைக் கண்டுபதை பதைப்பார்போல் வெய்துயிர்த்துச் செயிர்த்துச் சொல்வார்.

(இ-ள்.) அகஸ்தியமுனிவர் அவ்வேதியர்களது சுபாவகுணத்தையுணர்ந்து பெரிய குற்றாலமென்னும்பதியின் வீதிவழியாகநடந்து திருமால் ஆலயத்தினெதிரில் வருதலும், முறையே பூசையாதிகள் நடக்கின்ற அவ்வாலயத்தில் கூட்டமாயிருக்கும் வைணவர்கள் உற்றுநோக்கிக் கொலையாளர்களைக் கண்டு பதைபதைப்பவர்களைப் போலப் பெருமூச்சுவிட்டுக் கோபித்துக்கொண்டு சொல்லத்தொடங்கினார்கள்.

அகத்தியமுனிவர் தமதநுஷ்டான மதமாகிய சைவசமயந்தவிர இதர சமயங்களி னழிவை விரும்பினவராதலால், திருமுற்ற க்ஷேத்திரத்தினையுடைய குற்றாலவாசிகளான வைணவர்களது அநுசிதக்கொள்கையை அழிக்க எண்ணி அவர்களியல்புகளையுணர்ந்து சென்றன ரென்பார். "குறுமுனிவ னுங்கவர்தஞ் செயலுணர்ந்து குற்றாலமென்னு மூதூர் - மறுகினிடை யேநடந்து மாயவன்ற னாலயமுன் வருதலோடும்" என்றார். அகத்தியமுனிவர் பிறமத அழிவைக் கருதினவ ரென்பதை "வைய மிசைத் தோற்றமுதற் சாங்காறு மன்றவுனைத் - தெய்வமெனப் பேணத் திருவிலிக ளென்குலத்தி-லெய்தியொரு ஞான்றும் பிறவற்க வெய்துறினும் - வெய்தெனமற் றங்கே விளிந்தொழிக வெம்மானே"—என்னு மவர் வாய்மொழியா னுணர்க. இதுநிற்க:

இவர்கள் மதக்கொள்கைகளாவன—ஆதி மூர்த்தியாய் அப்பிராகிருத, வைகுந்தத்திற் பஞ்சாயுததரராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஹரியானவர் தசாவதாராதிகளைச்செய்து சேதனர்களை இரட்சித்தலையாலும், தமது திருநாபியினின்றும் பிரமனையும் அவனிடத்தினின்றும் ஹரனையும் உண்டாக்கி முத்தொழில் நடத்திக் கடலைக் கடைந் தமுதமெடுத்துத் தேவர்களுக்களித்து லோகரக்ஷைசெய்கின்றமையாலும் அவ

ரோ திரிமூர்த்திபரன் என்று கருதிநிற்றலாதியானஇவைகளே. இவைகளை—"ஆதியா யருவமாகி யகண்டபூரணனாய் ஞானச்-சோதியாய்நின்ற மாயன் சுவேச்சையா லுருவு கொண்டு-நீதியார் கருணையாலே நீள்கடற் றுயின்றுநாலு-மோதினு னென்று பஞ்சரா த்திரி யுரைப்ப னுற்றே" எனவும், "மீனுமை கேழ னார சிங்கம்வா மனனாய் வென்றி-யானத விராமர் மூவ ராயனு யளித்தான் கற்கி-தானுயும் வருவ னின்ன மென்றவன் சாற்றித் தேவர்-கோனுயு நிற்ப னென்று கூறுவன் குறிப்பி னேடே" எனவும், "உந் தியி லயனை யீன்றங் கவனைக்கொண் டுலகுண் டாக்கி-அந்தநல் லுலக ழிக்க வரனையு மாக்கு வித்துத் - தந்திடுஞ் சகத்தி னுக்குத் திதிகர்த்தா தானே யாகி - வந்திடுந் தோ ற்ற மீறு நிலைமையும் பண்ணு மாயன்"எனவும்,"அலைகடல் கடைந்து வானோர்க் கமு தினை யளித்துத்தீய-கொலைபுரி யசுரர் தம்மைக் கொன்றுல கங்கள் காத்துங்-கலைமலி பொருளன் பர்க்குக் கருணையா லுரைத்து மிக்க-தலைமையி னிற்பன் மாய னென்று பின்சாற்றி னனே"—எனவும் வருவனவற்று னுணர்க. (ச)

ஒல்லாத கண்டிகையு நீறுமணிந் தனையதனு னுலகிற் றேவ
ரெல்லாரு மறியவைய மேற்றோனுக் கடியவனீ யீண்டு செல்லச்
செல்லாது கைத்தலத்தி லொருகோலுங் கொண்டனையாற் சிறியை போலு
நில்லாயெம் பெருமான்றன் மாநகர மணுகாது நீங்கு கென்றார்.

(இ-ள்.) தரிக்கத்தகாத உருத்திராக்ஷத்தையும் விபூதியையுந் தரித்துக்கொ ண்டிருக்கின்றாய் ஆதலால், தேவர்களும் அறியும்படி உலகத்தில் பிக்ஷையெடுத்தவ னுக்கு நீ தொண்டன்; இங்குவருதல் கூடாது; இதுவுமன்றிக் கையில் ஏகதண்டந் தாங்கி யிருக்கின்றாய், நீ அறிவில்லாதவன்போலும்: தாமதஞ்செய்யாமல் எம்பெருமா னது சிறந்த நகரத்திற் சார்தலைவிட்டுப் போகக்கடவையென்று கூறினார்கள்.

முற்காலத்தில் அகத்தியமுனிவரைக் கண்டவுடன் பாம்புபோற் சீறி, பகர த்தகா மொழிகளைப் பகர்ந்த கொடிய துஷ்டர்களாகிய வைணவர்களைப்போன்றவர் கள் இக்காலத்திலுஞ் சிற்சிலரைச் சிலவிடங்களிற் காணலாம். இவ்வைணவர்களெ ல்லாம் உபப்பிரமாவாகிய தக்ஷனது பரம்பரையார்களென்பதனை இப்படலத்தி னே ழாவது பாட்டின் நாலாவது வரியா லுணர்க. (ரு)

என்றிடலும் வெகுளாது நகைசெய்து மறைநெறியை யிகந்து நின்றீர்
துன்றியிவ ணுறைகின்ற துணரேனித் திறமெவருஞ் சொன்னு ரில்லை
நன்றுநெறி யென்றுவந்தே னும்பான்மை யுணர்வேனே னுனிம் மூதூர்
சென்றிடவு நினையேனுன் முனியற்க யான்மீண்டு செல்வே னென்றான்.

(இ-ள்.) என்று கூறுதலும், அகஸ்தியர் கோபிக்காமல் சிரித்துக்கொண்டு வைதீக ஒழுக்கத்தைத்தள்ளி நிற்பவர்களே! நீங்களிவ்விடத்தில்நெருங்கியிருப்பதை யானறியேன்; இவ்வாறு யாருங் கூறினார்களில்லை; இது நல்லவழியென்று நினைத்து வந்தேன்; முன்னமே உங்கள் தன்மையை யுணர்ந்திருப்பேனாயின், நான் இப்பெரிய நகரத்திற்கு வரும்படி நினையேன்; நீங்கள் கோபியாதீர்கள்; திரும்பிப்போகின்றே னென்று கூறினார்.—எ-று. (சு)

பொதியமலை தனிலேகு முனிவனிது புகன்றிடலும் பொறாது நீயிப்
பதியதனில் வருவதுவும் பாவமா மீண்டுநீ படர்தி யென்ன
விதிசரத மொழிந்தீர்க டொல்லோர்த நான்முறையு மீதே யென்னு
விதியருளுந் தக்கனார் வழிமுறையோர் தமைநீங்கி மீண்டு செல்வான்.

(இ-ள்.) பொதியமலைக்குச்செல்லுகின்ற அகஸ்தியமுனிவரிவ்வாறு கூறுத லும் அவ்வந்தணர்கள் மனந்தாளாமல் நீ இந்நகரத்திற்கு வருதலும் பாவமாம்; நீ திரு

ம்பிப்போகக்கடவையென்று கூறுதலும், இது உண்மையாகக் கூறினீர்கள்; பெரியோர்களது சாஸ்திரமுறைமையு மிவ்வாறேயாம் என்று பிரம புத்திரனாகிய தட்சனது பரம்பரையாராகிய அவ்வந்தணர்களைவிட்டுத் திரும்பிச் செல்வாராயினர்.

சிட்டர்புகழ் கயிலைமலை காத்தருளுந் திருநந்தி தேவன் செங்கேழ்
மட்டுறுபங் கயத்துறையு நான்முகத்தோன் றுருவாசன் மறைநூல் யாவுந்
தட்டறவே யுணர்பிருகு கவுதமன்கண் ணுவமுனிவன் றதீசி யின்னோ
ரிட்டபெருஞ் சாபமெலாம் பொய்த்திடுமோ வெனவுன்னி யேக லுற்றான்.

(இ-ள்.) மேலோர்களால் புகழப்பட்ட கயிலாயமலையைக் காத்தருள்கின்ற திருநந்திதேவரும், மணம்பொருந்திய செந்தாமரை மலரிலிருக்கின்ற பிரமனும், துர்வாசமுனிவரும், வேதசாஸ்திரங்களையெல்லாந் தடையின்றி யுணர்ந்த பிருகுமுனிவரும், கவுதமமுனிவரும், கண்ணுவமுனிவரும், ததீசிமுனிவருமாகிய விவர்களிட்ட கொடிய சாபங்களெல்லாம் பொய்க்குமோ? என்று தமது மனத்தில் நினைத்துக்கொண்டு சென்றனர்.—எ-று.

ஒருவன் செய்த நன்மை தீமைகள்அவனைச் சார்ந்தவர்களையு மடையுமாதலால், நந்தியும் பிரமனும் ததீசியும் கண்ணுவனும் கவுதமனும் பிருகுவும் துருவாசரும் ஆகிய இவர்களில் நந்தியெம்பெருமானும் பிரமதேவனும் ததீசிமுனிவரும் கண்ணுவமுனிவரும் இவ்வைணவர்களது பூருவீகர்களிடத்துக் கோபங்கொண்டிட்ட சாபங்களைப் பின்வருந் தக்ஷகாண்டத்திலுள்ள கதைகளாலுணர்க. மற்றைய மூவர்களில்

## பிருகுமுனிவரிட்ட சாபக்கதையின் விபரம்.

முன்னொருகாலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் கொடிய பகை உண்டாகி நெடுங்காலம் யுத்தஞ்செய்தார்கள்; அக்காலத்தில் அதிதிபுத்திரர்களாகிய தேவர்கள் தோல்வி யடையுந்தன்மையை யடைந்தார்கள். அப்பொழுது திருமாலத்தேவர்களுக்குத் துணையாகவந்து நின்று தமது சக்கரத்தைக் கையிலெடுத்தசைத்தனர். அத்னைக்கண் டதிதிகுமாரர்களான அசுரர்கள்பயந்து தங்களுக்குச் சிறியமாதாவும் திருமகளுக்குத்தாயும் பிருகுமுனிவருக்கு மனைவியுமாகிய கியாதிஎன்பவளது பன்னசாலையையடைந்து அடைக்கலமென்று உள்ளே ஒளித்துக்கொண்டார்கள். உடனே அக்கற்பிற்சிறந்த கியாதியுந் தனது சகோதரியின் புத்திரர்களும் அடைக்கலம் புகுந்தவர்களுமாகிய அசுரர்களைக்காக்கும்பொருட்டுத் தனது வீட்டுத்தலைவாசலில் உள்ளே வேறே யாரும் நுழையாதபடி காவல்பூண்டு நின்றனள். அப்பொழுது, ஓடிய அசுரர்களைத் தேடிக்கொண்டுவந்த திருமால் மாமியாகிய கியாதி நிற்குமிடத்தை யடைந்து உள்ளே போகும்படி எத்தனித்தனன். உள்ளே இப்போது போகக்கூடாது என்று பிருகுமுனிவரது மனைவியார் தடுத்தனர். திருமால் பெருங்கோபங் கொண்டவராய், மாமியென்றும் மகா முனிவராகிய பிருகுமுனிவரது மனைவியென்றும், பெண்டன்மையிற் சிறந்த கற்புடைய பெண்மணி யென்றுங் கருதாமல், சக்கராயுதத்தினாலவளது தலையை யறுத்தெறிந்தனர். உடனே கூகூவென்னுஞ் சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது சிறிதுங் கோணுதலில்லாத பல தவத்தினைச் செய்துமுடித்த பிருகுமுனிவர் நிட்டையிலிருந்தவாறே கண்விழித்துநோக்கி மனைவி இறந்ததையறிந்து துன்பங்கொண்டு பின்னர் உள்ளே அசுரர்களைச்சங்கரிக்கும்பொருட்டுச் சென்றுள்ள திருமாலின் முகத்தைப்பார்த்துக் கண்களில் தீப்பொறிபறக்க இதழ்துடிக்கக் கூறுவாராயினர். (திருமாலைப்பார்த்து) அடா கொடியபாவி! வளையலணிந்த தளிர்போலும் கைகளையுடைய பெண்பாலினை உனது மாமியாயுள்ளவளைச்சற்றும் அஞ்சாதுகொன்றனையே! இனி நீ எவ்வண்ணங் கடைத்தேறுவாய்? அடா பாவப்பாவியே! நூல்களாற்

கூறப்படுகின்ற சமயங்களுக்குட் சைவசமயமே உத்தம சமயமானால், நாம் நீலகண்டராகிய பரமேசுவரரது திருவடிக்கமலங்களை அன்றி வேறொன்றையுஞ் சிந்திக்காதிருப்பதுஞ்சத்தியமானால் நீ நரகவேதனையைத்தருகின்ற கொடியபத்துப்பிறவியையடையக்கடவை. நினது பாதசேவை செய்பவர்களெல்லாம் புறச்சமயநூற்படி அவைதீக தீக்ஷையைச்செய்துகொண்டு திரிபுரதகனராகிய சிவபெருமானது திருவடிகளினின்றும் பிழைத்தவர்களாய்ச் சந்நியாசிகளாங்காற்றிரிதண்டந்தாங்கி இழிசனராய்கெடாத நரகத்தை (மறுமையில்) இருப்பிடமாக அடையக்கடவர்கள். அவர்களை நல்லவர்களென்று கருதி வந்தனையாதிகளைச் செய்பவர்களும் எமலோகத்தையடைந்து கெடுவார்களாக: நீ அடையும் பிறப்புக்களும் துன்பத்தைத்தருந் தமோகுணம் பொருந்திய இழிந்த மீன் முதலியவைகளாகவும், அவ்வாறடையுங் கொடிய சனனங்களிலும் நீ துன்பங்களையே அடையவுங்கடவை என்று கொடிய சாபமிட்டனர்; இவ்வாறு சாபமிட்டுப் பின்னர் தமது புத்திரராகிய சுக்கிரபகவானு லுயிர்பெற்றெழுந்த மனைவியாகிய கியாதியுடன் சிவத்தியானஞ் செய்துகொண்டிருந்தனர். இவ்வாறு சாபமிட்டதனை. "எடுத்தி யம்பிய சைவ மேயெவற் றுள்ளு முத்தம மென்னில்யாங்களுங்-கடுத்த தும்பிய கண்ட ஞரடிக் கமல மன்றிவே றறிகி லேமெனிற்-றொடுத்து ழைக்குமிச் சத்தி யத்தினுற் றுயரு ழந்துநீ நரக வல்வினை - மடுத்த வெம்பிறப் பொருப தெய்துக வழுவு பாதகக் குழிசி யாயினாய்" எனவும், "நின்ற னக்கடித் தொண்டுபூண்டவர் நெறியலாப்புறத் தாற்று நூல்வழி-துன்று தீக்கையுற் றென்று முப்புரஞ் சுட்ட வெம்பிரான் றிருவ டிப்பிழைத் - தொன்று மூன்றுதண் டேந்தி யீனரா யுலப்பி லாதவெந் நிரைய மேவுக-மன்ற வங்கவர்க் கண்டு ளோர்களு மறலி யூரினைக் குறுகி மாய்கவே" எனவும், "எவ்வ மேமிகுந் தமோகு ணம்பயின் றிழிந்த யோனியின் னேன மாதியாம்-வெவ்வினைப்பவந் தோறு மின்னலே விரவு வாயென வெய்ய சாபமிட் - டவ்வி யத்தொகையிரிய நூறுமப் பிருகு வெள்ளியா லாவி பெற்றெழு - நவ்வி வாள்விழி மனைவி தன்னொடு நாரி பாகனை வழுத்தி வைகினான்" எனவும் வருவனவற்றானுணர்க. இதுவன்றி,

### கவுதமர் சாபமிட்ட கதையின் விபரம்.

முன்னொருகாலத்தில் கொடிய க்ஷாமமொன்றுண்டாயது; அப்பொழுது போசனாதிகளுக்குக் கஷ்டமடைந்த அனேகமாயிரம் பிராமணர்கள் சிவபெருமானது கடாக்ஷத்தாற் சர்வாபீஷ்டங்களிலுங் குறைவில்லாதவராகிய கவுதமமுனிவரது ஆசிரமத்தை அடைந்தார்கள். கௌதமமுனிவர் அவர்களையும் அவர்களது குடும்பங்களையும் குறைவற அன்னபானாதிகளாற் காப்பாற்றிக்கொண்டு வந்தனர். பின்னர்ச் சில காலங்கழித்து மழை செவ்வனே பெய்தமையால் க்ஷேமமுண்டாயது. உடனே அம்மறையவர்கள் கவுதமமுனிவரைப்பார்த்து நாங்களினி எங்கள்வனங்களுக்குச்செல்லுகின்றோமென்றார்கள். கவுதமமுனிவருக் கிவர்களைப்பிரிந்திருக்க இஷ்டமின்மையாலும் இவர்களைப்போல இன்னம் அநேகம் ஆயிரம் மறையோர்கள் வந்தாலும் போஷிக்கச்சக்தி இருக்கின்றமையாலும் அவர்களைப் போகவொட்டாமல் அவ்விடத்திலேயே குறைவில்லாச் செல்வத்துட னிருக்கச்செய்தனர். பின்னும் அவ்வந்தணர்கள் பலதரமும் விடைகேட்டும் அவரளிக்காமையா லவர்களனைவர்களு மொன்றுசேர்ந்து ஓராலோசனைசெய்தார்கள். அதாவது, கவுதமமுனிவர் கோஹத்திசெய்தவர், (பசுவைக் கொன்றவர்) ஆதலால் மஹாபாவியாயினர். அதுபற்றி அவரது கூட்டுறவு நமக்குதவாது நாம் போவோம் என்று கூறினார்கள். போதற்கிஷ்டமுள்ள இவர்கள் சும்மா போகாமற் பழிகூறிப்போகின்றார்களே என்னுங்கோபத்தால் கவுதமர் அவ்வந்தணர்களதெதிரிற்சென்று அவர்களைநோக்கி இவ்வாறு கூறுவாராயினர். ஹே! பிரா

மணர்களே! நீங்கள் நன்றியற்றவர்களாய் அபவாதங் கூறினமையால் உங்களை யான் சபிக்கின்றேன். உங்களுக்கு மெய்ப்பொருளாகிய சிவபெருமானிடத்திலும் அவரது திருவுருவங்களிலும் அவரது திருவடியிலும் அவரது திருநாமத்திலுந் தகுந்த சிவஞானத்திலும் சிவாலயதரிசனத்திலும் சிரேஷ்டம் பொருந்திய விபூதி ருத்திராக்ஷங்களை அணியக்கூடிய செல்வத்திலும், மற்றுமுள்ள சைவவிஷயங்களெவைகளிலும் உங்கள் மனஞ்செல்லாது கொடிதாகிய பாவவழியிற் செல்லக்கடவது. நித்திய நைமித்திய காமியாதி கருமங்களிலும் நன்மைபொருந்திய சாந்தி தாந்தியாதி ஞானகுணங்களிலும் விளங்குகின்ற வேதாத்தியயனுதிகளிலும் யாகயோகாதிகளிலும் தருமத்திலும் உங்கள் மனஞ்செல்லாமற் போகக்கடவது. இதுவன்றியும், கேவலம் பிறந்துபிறந்து சாகின்ற திருமாலாதி சாமான்ய தேவர்களைத் தெய்வமென்று கருதி அத்தேவர்களுக்குத் தேவனுகிய மஹாதேவனை இகழ்ந்து மாயன் முதலியவர்களைப் பரம்பொருளென்றுகூறிப் பாஞ்சராத்திர முதலிய புறமதங்களில் நீங்களும் உங்கள் சந்ததியார்களும் மாணுக்கர் பரம்பரைகளும் வீழ்ந்து நிலைகுலையக்கடவீர்கள். உங்களுக்கு நல்லகதியே கிடையாது. அந்தத்திருமால் முதலியவர்களும் உங்களுக்கு யாதொரு நன்மைகளையுஞ் செய்யாது போவார்களாக. கட்டாயமாக நீங்கள் சிவத்துரோகிகளாகக் கடவீர்களென்று சபித்தனர். இதனை, "பரசிவன்றன் சொரூபத்து மூர்த்தியினும் பத்தியினும் பகர்நா மத்துந்-தரமிகுமெஞ் ஞானத்து மற்றவன்பொன் னலயதற் றரிச னத்தும்-வரமிகுவி பூதியக்க மணிதரிக்குஞ் செல்வத்து மற்றுமுள்ள-வுரவுமிகு சிவவிடயமெவற்றினுநும் மனஞ்செல்லா தொழிந்து போக" எனவும், "நித்தியநை மித்திய கா மியகருமத் தினுநலமே நிகழுஞ் சாந்தி-யொத்தியலுந் தாந்திமுதன் ஞானசா தனங்களினு மொளிரும் வேத - வத்தியய னஞ்செபம்பல் யாகத்தும் யோகத்து மவிர்நன் னூல்சொல்-சுத்திமிகு தருமத்து நுங்கள்புத்தி செல்லாது தொலைந்து போக"—என்றும், "சீவர்கள்போற் பிறந்திறந்து திரிகின்ற மாயன்முதற் சிறிய தேவர் - பாவமறுத் தன்பனையாள் பரசிவனி னதிகனெனப் பற்றி மாயுந் - தாவறும யக்கநுமக் குண்டாக மாயன்முதற் சாற்றுந் தேவர்-யாவர்களு மவர்தகுதிக் கேற்பனவு நுமக்கருளா திரிந்து போக"—என்றும், "சக்கரஞ்சங் கங்கதைதா மரைமுதலா மடையாளந் தனுவிற் றுக்கித் -துக்கமிக வரசிலைபோற் பாதிமதி போற்சுடருந் தீப மேபோன்-மிக்கநுத லங்கிதங்கொண் டுறவட்ட வடிவும்விழைந் திட்டு நீவிர் - தக்கநெறி யொழுகாது தீநெறிச்சென் றளறனைத்துந் தாழ்ந்து சோர்க"—என்றும், "புத்திரனைச் சோதரனை மனைவியனைச் சுற்றமாய்ப் புணர்ந்து ளோரைப்-பத்திமிகு மறைநூலை நறும்புனலைத் தருமத்தைப் பழிசேர் கள்ளைச் - சுத்தியறு புலான்மீனை விற்றுழல்க பாடாண்டத் துட்டராகி - யொத்தியலாப் பாஞ்சராத் திரம்பௌத்த மருகமிவற் றுழல்க நாளும்"—என்றும் வருவனவற்றானுணர்க. இதுநிற்க:

இனித் துருவாசமுனிவரிட்ட சாபக்கதையின் விவரம்.

கோமேதகத்தீவிலுள்ள பூச்சக்கர நகரத்திற் புண்டரீகனென்னு மொரு மறையோன் வைணவமதத்தனுய்ச் சித்திரரேகை என்னு மனைவியுடன் இல்லறத்திலிருந்தனன். அவனுக்கனேகமாயிரம் மாணுக்கர்களுண்டு. அவன் மனைவி அழகிலும் வியபசாரத்திலும் சிறந்தவள். அவள் தனதுகணவனது சீடர்களையெல்லாம் புணர்ந்தவள். (விசேஷமாகச்சொல்லவேண்டுவதென்னை) இவளாற் புணரப்படாதவர்கள் அத்தீவிற் சுருக்கமேயாம். இவ்வாறு அவன் மனைவி கற்பற்றவளாயிருப்பதை யுணர்ந்தும் மோகத்தால் அவளை மனைவியாகக் காதலுடன்கொண்டு வாழ்ந்துவந்தனன். ஒருதினம் துருவாசமுனிவர் அனேகஞ் சீடர்களுடன் அப்புண்டரீகனிடஞ்சென்றனர். அவன் இவரையுபசரித்து அதிதி சத்காரங்களை நடத்திப் பின்பு சுவாமிகளுக் கிவ்விட

த்திலேயே பிக்ஷை என்று கூறி வெளியேசென்றான். உடனே அவன்மனைவி ஓடிவந் திவனை ஆலிங்கனஞ்செய்தனள். துருவாசமுனிவர் அருவருத்துதறிக்கோபித்துப்பார் த்தனர். அவரது கோபாக்கினிக்குப்பயந்து அவள் செம்மறியாட்டு மந்தையிலொளித் துக்கொண்டனள். முனிவர் கட்டளையா லவர்மாணக்கர்க ளவளைத்தேடிப்பிடித்து, அவ்வூரிலுள்ள ஆலமரத்தின் உச்சியில் தவசத்தியாலேற்றி வந்துவிட்டார்கள். பின்னர் வந்த புண்டரீகன் மனைவியைக்காணமல் வருந்தி ஆலிலிருப்பதை அறிந்து, முனிவர் கட்டளைப்படி அவளைச் சேர்ந்தவர்களெல்லாம் வந்திறங்கச் சொல்ல, கொஞ்சங்கொ ஞ்சமாகவிறங்கி அடிக்கிளையில் வந்திருந்தனள். அவ்விடத்திற்குப் புண்டரீகனது வே ண்டுகோளால்வந்த துருவாசமுனிவர் அவளைக் கீழே இறக்கிவிட்டு, பின்பு புண்டரீக னது முகத்தைப்பார்த்துப் புண்டரீக! கற்பிழந்த இவளுடன் வாழ்கின்றனையே! இவ ளை அவிசாரி என்றுணர்ந்தும் மறுமாதை நீ மணம்புரியாமையால், நீசிவகதியடையாய் என்று கூறினர். அதைக்கேட்ட புண்டரீகன் துருவாசரைப்பார்த்து நீர் மதவைராக் கியத்தா லிவ்வாறு கூறுவது தகுமா என்று துரொண்ணத்தோடு கூறுதலும், துருவாசர் கோபத்துடன் அவனைப் பார்த்து, அடா புண்டரீக! இன்றுமுதல் நின்பெயர் யோனி மனத்தன் என்றாகக்கடவது. நீ இழிந்த புறச்சமய வழியே நின்று விபூதியாதிகளை வெறுக்கக்கடவை என்று கூறி, அவன் மாணக்கர்களாகிய வைணவர்களைப் பார்த்து நீங்கள் உங்கள் ஆசிரியன் மனைவியைப் புணர்ந்தமையா லுங்கள் மனைவியர்களும் வேசையர்க ளாவார்களாக என்று அனேகவிதக் கொடுமொழிகளைக்கூறிச் சபித்த னர். இதனை, "வேக வெஞ்சின மீக்கொண்டு தன்மன-மாக வற்சித ரத்துருவாசனும்-யோகசித்தனை யோனிமனத்தின-ஞக நின்பெயரொன்றறைந்தானரோ" எனவும், "புன் புறச்சமயப்புற நின்றுநீ-என்பெ ருக்கணி யெந்தைபி ரானடி-யன்புறப் பெறு வாயலை வெண்ணிற-மின்பிறங்கு விபூதியும் வேண்டலை" எனவும், "பின்னு சிந்தைப் பிணக் கறுத் தாரண-மன்னு சிந்தைய ராக்கிய மாதவன் - பன்னி கொங்கையிற் பற்றுவைத் தீர்நுமர்-மின்ன ஞர்களும் வேசைய ராகுவார்" எனவும் வருவனவற்றானுணர்க. (அ)

ஏகலுறு குறுமுனிவ னுயிர்க்குயிராய் நின்றோனை யிகழ்வார் தங்கண்
மோகமுறு மகந்தையினை முதலோடுங் களைவனென முன்னி முன்னாட்
போகியதன் மாயையினு லிரதத்தி னுளிபடு பொன்னே போலப்
பாகவத மாகுவதோ ருருக்கொண்டான் கருணையினற் பரவை போல்வான்.

(இ-ள்.) அவ்வாறுசெல்லுகின்ற அகஸ்தியமுனிவர் உயிர்க்குயிராய் விளங்கு ஞ் சிவபெருமானை யிகழ்கின்றவர்களாகிய இவ்வேதியர்களது மோகம்பொருந்திய அகங்காரத்தை அடியோடழிக்கின்றேனென்று நினைத்து, முன்னமே பழகியுள்ள தமது மாயாவல்லபத்தினுல் இரசகுளிகையினுலுண்டாகிய பொன்னைப்போலப் பாகவதனென்னு முருவத்தைக் கருணைக்கடலாகிய அகஸ்தியமுனிவர்கொண்டனர்.

ஆளுடைய நாயகன்பா லன்புடையான் மாயவன்ற னடிய னேபோற்
கோளுடைய மாயத்தான் மேனிகொண்டு மீண்டுமெங்கட் குறுக லோடு
நீளிடையில் வரக்கண்ட வயிணவர்க ளெதிர்சென்று நெடிது போற்றித்
தாளிடையில் வீழ்ந்திடலு நாரணனுக் காகவெனச் சாற்றி நின்றான்.

(இ-ள்.) நம்மையடிமையாகவுடைய சிவபெருமானிடத்தில் அன்புள்ள அக ஸ்தியமுனிவர் திருமாலினது அடியவரைப்போல மாயையினுல் கொள்ளப்பட்ட வடி வத்துடன் திரும்பி அவ்விடத்திற்கு வருதலும், அவ்வாறு வருதலை நெடுந்தூரத்திலே யே பார்த்த வைணவர்கள் எதிரில் சென்று மிகுதியுந் துதித்துத் திருவடியில் விழுந்து

வணங்கவும், (நுமது வணக்கம்) திருமாலுக்குப் பிரீதியாகக்கடவதென்று கூறி நின்றனர்.—எ-று. (௧௦)

அடிமுறையின் வணங்கியெழும் வேதியர்தங் களைநோக்கி யரிபா லன்பு
முடிவிலைநும் பாலென்று மொழிந்தனரங் கதுகாண முன்னி வந்தாம்
படியதனி லுமக்குநிகர் யாருமிலை நுமைக்கண்ட பரிசால் யாமுந்
தொடர்வரிய பேருணர்வு பெற்றனமென் றேபின்னுஞ் சொல்ல லுற்றான்.

(இ-ள்.) தமது பாதங்களில் முறையே வணங்கி யெழுந்து நின்ற வேதியர்களைப் பார்த்து நீங்கள் அளவற்ற பகவத் பத்தி யுடையவர்களென்று சொன்னார்கள். அதனைப் பார்க்கும்பொருட்டு நினைத்து வந்தோம்; இவ்வுலகத்தில் உங்களுக்கொப்பானவர்க ளொருவருங் கிடையார்; அவ்வாறுள்ள உங்களைத் தரிசித்த முறைமையால் யாமும் அடைதற்கரிய பேருணர்வை யடைந்தோமென்று கூறிப் பின்னுங் கூறத் தொடங்கினார்.—எ-று. (௧௧)

முத்திதரு பேரழகர் திருமலையி னிடையுற்றோ முன்ன மின்னே
யத்திகிரி தனிலிருப்பச் செல்கின்றோ நம்பெருமா னமருங் கோயி
லித்தலமே யுளதென்ப ரதுபரவும் விருப்புடையோ மென்ன வன்னோர்
கைத்தலத்தோர் விரற்சுட்டி யதுதிருமா லிருக்கையெனக் காட்ட லுற்றார்.

(இ-ள்.) முத்தியைத் தருகின்ற பேரழகர் மலையில் முன்னம் வசித்தோம்; இப்பொழுது அத்திகிரியில் வசிக்கும்பொருட்டுச் செல்கின்றோம்; நமது கடவுளெழுந்தருளியிருக்கின்ற சந்நிதானம் இங்கிருக்கின்றதென்பார்கள்; அதனை வணங்கும் விருப்பினையுடையோமென்று கூறுதலும், அவ்வைணவர்கள் தங்கள் கையின் ஒரு விரலினால் குறித்து திருமால் எழுந்தருளுந் திருக்கோயில் அதுவே யென்று காட்டத் தொடங்கினார்கள்.—எ-று. (௧௨)

காட்டுதலுங் கைதொழுது மாலுறையு மந்திரத்தைக் கடிது நண்ணி
யீட்டமுடன் வலஞ்செய்து கண்ணபிரா னடியிணையை யிறைஞ்சி யேத்திப்
பாட்டிலுறு தொல்லடியார் தமைநோக்கி யிவனைவழி படுதற் குள்ளம்
வேட்டனமான் மஞ்சனமே முதலியன கொணர்மின்கள் விரைவி னென்றான்.

(இ-ள்.) அவ்வாறு காட்டியவுடனே கைகூப்பி வணங்கித் திருமாலெழுந்தருளிய ஆலயத்தை விரைவாகவடைந்து அவ்வைணவர் கூட்டத்துடன் வலமாக வந்து திருமாலினது பாதங்களை வணங்கித்துதித்து அருகிலிருக்கின்ற பழமையாகிய பாகவதர்களைப்பார்த்து இக்கடவுளைப் பூசிப்பதற்கு மனவிருப்பங்கொண்டனம்; விரைவில் திருமஞ்சன முதலியவற்றைக் கொண்டுவாருங்களென்று கூறினார்.—எ-று. (௧௩)

நன்றெனவே சிலரேகித் தூயதிரு மஞ்சனமு நறுமென் போது
மன்றலுறு செஞ்சாந்து மணித்துகிலு மேனையவு மரபிற் கொண்டு
சென்றுமுனி வரன்முன்ன முய்த்திடலு மனையவர்தந் திறத்தை நோக்கி
யின்றிவனை யருச்சனைசெய் விதிமுறையைப் பார்த்திடுங்கள் யாரு மென்றே.

(இ-ள்.) சிலர் அவ்வாறே நன்றென்று கூறிச் சென்று, தூய்மையாகிய திருமஞ்சனத்தையும் நறுமணங்கமழும் மெல்லிய மலரையும் வாசனை பொருந்திய செவ்விய சந்தனத்தையும் அழகிய வஸ்திரத்தையும் மற்றவைகளையும் முறைப்படி கொண்டு சென்று அகஸ்தியமுனிவருக்கு முன்னே சேர்க்கவும், அவர் அவ்வைணவர்களது செய்கையைப்பார்த்து, யான் இப்பொழுது இக்கடவுளை அருச்சனை செய்யும் விதிமுறைமைகளை யாவருங் காணக்கடவீர்களென்று.—எ-று. (௧௪)

அறுகுமதி நதிபுனையுஞ் செஞ்சடையெம் பெருமானை யகத்துட் கொண்
சிறுகுமுரு வுடையமுனி நாரணனார் திருமுடிமேற் செங்கை யோச்சிக்
குறுகுகுறு கெனவிருத்தி யொள்ளரக்கிற் புனைபாவைக் கோல மீது
மறுகுதழ லுற்றென்னக் குழைவித்தோர் சிவலிங்க வடிவஞ் செய்தான்.

(இ-ள்.) அகஸ்தியமுனிவர், அறுகையும் இளம்பிறையையும் கங்கைநதியையுந் தரித்த சிவந்த சடைமுடியையுடைய எமது சிவபெருமானை மனத்திற் சிந்தித்துக்கொண்டு திருமாலினது திருமுடியின்மேல் தமது செவ்விய கரங்களைவைத்துக் குறுகு: குறுகு: என்று சொல்லி யழுத்தி, ஒள்ளிய அரக்கிற்செய்த பாவைவடிவத்தின் மீது அஞ்சத்தக்க தீப்பற்றியதுபோலக் குழையச்செய்து ஒரு சிவலிங்க வடிவமாகச் செய்தனர்.—எ-று. (௧௫)

அல்லிமலர்ப் பங்கயனு நாரணனு மெந்நாளு மறியொ ணாத
வெல்லையிலாப் பரம்பொருளைத் தாபித்து மந்திரங்க ளெடுத்துக் கூறித்
தொல்லையுருக் கொண்டுமலர் மஞ்சனமே முதலியன தூய வாக்கி
யொல்லைதனி லருச்சிப்பக் காண்டலுமவ் வந்தணர்க ளுருத்துச் சொல்வார்.

(இ-ள்.) அகவிதழ்களையுடைய கமலாசனனாகிய பிரமனும் திருமாலும் எக்காலத்துமறியப்படாத சிவபெருமானைப் பிரதிஷ்டை செய்து மந்திரங்களை யெடுத்துரைத்துத் தமது பழய உருவத்தைக்கொண்டு திருப்பள்ளித்தாமம் திருமஞ்சன முதலியவற்றைச் சுத்திசெய்து விரைவாக அருச்சனை செய்தலை அவ்வேதியர்கள் பார்த்தவுடனே கோபித்துக் கூறுவார்கள்.—எ-று. (௧௬)

காயத்தான் மிகச்சிறியன் முப்புரத்தை நீறுக்குங் கடவுட் காற்ற
நேயத்தா னிவ்விடையே முன்வந்தான் யாமிகழ நில்லா தேகி
யாயத்தான் பாகவத வடிவாய்வந் திச்சமய மழித்தா னந்தோ
மாயத்தான் பற்றுமினோ கடிதென்று குறுமுனியை வளைந்து கொண்டார்.

(இ-ள்.) மிகவுங் குறிய வடிவினையுடைய விவன் திரிபுரசங்காரனாகிய சிவனுக்கு மிகவுமன்பன்; முன்னே இங்கு வந்தனன்; நாம் இகழ்ந்தமையினால் இங்கு நில்லாமற்சென்று பாகவதவடிவமடைந்து திரும்பி வந்து இந்தச் சமயத்தைக் கெடுத்தனன்; ஐயோ! இவன் மாயமுடையவன் ஆதலால் இவனை விரைவிற் பிடியுங்களென்று அகஸ்தியமுனிவரைச் சூழ்ந்துகொண்டார்கள்.—எ-று. (௧௭)

பற்றிடுவான் வளைகின்றோர் தமைநோக்கி யெரிவிழித்துப் பரவை தன்பா
லுற்றவிடம் விடுத்ததெனா முனிவன்றன் வெகுளித்தீ யுய்த்த லோடுஞ்
சுற்றியது சுற்றியவர் தமைப்பின்னும் பொறிபடுத்தித் துரந்து செல்ல
மற்றவர்க ளிரிந்தேதம் பதியிழந்து சிதறினரான் மண்மே லெங்கும்.

(இ-ள்.) தம்மைப் பிடிக்கும்படிச் சூழ்கின்ற அவ்வேதியர்களைப் பார்த்துத் தீப்போல் விழித்து, கடல் தன்னிடத்துள்ள விடத்தை யனுப்பினாற்போல அகஸ்தியர் தமது கோபத்தீயைச் செலுத்துதலும், அத்தீயானது அவ்வகஸ்தியரைச் சுற்றியிருந்தவர்களைச் சூழ்ந்துகொண்டு பின்னுஞ் சுட்டுத் துரத்திக்கொண்டு செல்லவும், அவர்கள் தங்களூரைவிட்டு விலகிப் பூமியெங்குஞ் சிதைந்தோடினார்கள்.—எ-று.

அன்னோர்கள் போயிடலு மின்றுமுதற் சிவனிடமீ தாயிற் றென்று [று
முன்னோனை யருச்சித்துப் பணிந்துவிடை கொண்டுதென்பான் முன்னிச் சென்
பொன்னோடு மணிவரன்றி யருவியிழி தருபொதியப் பொருப்பி னண்ணி
மன்னோமெய்த் தவம்புரிந்து வீற்றிருந்தா னப்பரமன் மலர்த்தா ளுன்னி.

(இ-ள்.) அவ்வைணவர்கள் செல்லுதலும், இது இன்றுமுதலாகச் சிவக்ஷேத்திரமென்று கூறிச் சிவபெருமானை யருச்சித்து வணங்கி விடைபெற்றுத் தெற்கு நோக்கிச்சென்று, பொன்னையும் மணியையும் வாரிக்கொண்டு அருவியாறோடுகின்ற பொதியமலையையடைந்து, சிவபெருமானது தாமரைமலர்போன்ற திருவடிகளைத் தியானித்து, மெய்ம்மையாகியதவத்தைச்செய்து எழுந்தருளியிருந்தனர்.—எ-று.(கக)

வேறு.

பூவிரி கின்ற காமர் பொதும்பர்சேர் பொதிய வெற்பிற்
றூவிரி கும்பத் தண்ணல் வந்திடு தன்மை சொற்றாம்
மாவிரி கின்ற சாதி வனத்திடை மலர்ப்பூங் காவிற்
காவிரி போந்த வாறு மேனவுங் கழறு கின்றாம்.

(இ-ள்.) புட்பங்கள் மலர்கின்ற அழகிய சோலை சூழ்ந்த பொதியமலையில் குற்றமற்ற அகஸ்தியமுனிவர் வந்த தன்மையைக் கூறினோம்; வண்டுகள் விலகியோடுகின்ற சண்பகவனத்தில் மலர்ந்த பூஞ்சோலையில் காவிரிநதி வந்ததன்மையையும் மற்றவைகளையுங் கூறுகின்றோம்.—எ-று. (உ0)

திருக்குற்றலப் படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கஙரு.

---

உ

முருகன் றுணை.

---

# இந்திரனருச்சனைப் படலம்.

கொடியுருக் கொண்டு முன்னங் குண்டிகை யிருந்த பிள்ளை
படிமிசை யதனைத் தள்ளப் படர்ந்தகா விரியின் றன்மை
விடலருந் தளையி னீக்கி வியனெறிப் படுத்த லோடு
மடிகளி னருளாற் செல்லு மாருயிர் போன்ற தன்றே.

(இ-ள்.) காகவடிவங்கொண்டு முன்னங் கமண்டலத்தின்மேலேறியிருந்த விநாயகக்கடவுள் அக்கமண்டலத்தைப்பூமியிற்சாய்க்கவுஞ் செல்லுகின்ற காவிரியின் தன்மை எதுபோலுமெனின், நீக்குதற்கரிய பாசத்தை யொழித்து நல்வழிப்படுத்தியவுடனே ஞானாசாரியரது திருவருளால் (நேரே முத்தியுலகத்திற்குச்) செல்லும் அரிய உயிரையொத்தது.—எ-று. (க)

பண்டொரு தந்தி யானேன் படர்சிறைப் புள்ளாய்த் தள்ளக்
குண்டிகை யிருந்த நீத்தங் குவலயம் படர்ந்த பான்மை
யெண்டருந் தடையால் வல்லோ னிருங்கடத் திட்ட பாந்தண்
மண்டலத் தொருவ னீப்ப வழிக்கொளல் போன்ற தன்றே.

(இ-ள்.) விநாயகக்கடவுள் முன்பு விரிந்த இறகினையுடைய காகவடிவங்கொண்டு சென்று கவிழ்த்தலும், கமண்டலத்தில் அடைபட்டிருந்த காவிரிநீர் பூமியை நோக்கிச்செல்லுந்தன்மை (எதுபோலுமெனின்,) தடைசெய்தலில் வல்லவனென்றெண்ணத்தக்க வொருவன் தனது மந்திரவலுவால் பெரிய குடத்திலிட்டுவைத்தி

ருந்த பாம்பானது உலகத்தில் வேறெருவன் வந்து கட்டவிழ்த்துவிடுதலுங் குடத்தை விட்டு விலகிச் செல்லுந்தன்மையை யொத்திருந்தது.—எ-று. (உ)

ஏதத்தி னொழுக்கு நீக்கு மிறைவனூ லொழுக்குந் தொல்லை
வேதத்தி னொழுக்கு நோற்று வீட்டினை யடையு நீரார்
போதத்தி னொழுக்கு மெங்கோன் புரிதரு கருணை யென்னு
மோதத்தி னொழுக்கு மென்னக் காவிரி யோடிற் றன்றே.

(இ-ள்.) துன்பத்தின் போக்கினைக் கெடுக்கின்ற பதிநூலினது ஒழுக்கத்தையும், புராதனமாகிய வேதத்தி னொழுக்கத்தையும் தவஞ்செய்து முத்தியினையடையும் பக்குவான்மாக்களது மெய்யறிவினொழுக்கத்தையும் எமது சிவபெருமான் ஆன்மாக்கள்பொருட்டுக் காட்டியருளுங் கருணையென்று சொல்லப்பட்ட பிரியத்தி னொழுக்கத்தையு மொத்ததென்று சொல்லும்படிக் காவிரிநதி பெருகி யோடியது.—எ-று

தள்ளரும் பரவை யேழுந் தரணியைச் சூழ்ந்து நின்ற
வுள்ளுறு தொடர்பு நாடி யாவையு மொருங்கு நண்ணிப்
பொள்ளெனப் புகுந்த தென்னப் புவியெலாம் பரவி யார்த்துத்
தெள்ளிதிற் கலங்கி நீத்தந் தெளிவிலா தொழுகிற் றுமால்.

(இ-ள்.) உலகத்தைச் சூழ்ந்திருக்கின்ற நீக்குதற்கரிய சப்த சமுத்திரங்களும் பூமியினுள்ளே யமைந்திருக்க வேண்டுமென்னுஞ் சம்பந்தத்தை யுணர்ந்து அக்கடல்க ளனைத்தும் ஒருங்கே சேர்ந்து விரைந்து வந்தாற்போல, பூமி முழுவதும் பரவி யாரவாரித்து நன்றாகக் கலங்குதலடைந்து அக்காவிரி வெள்ளமானது தெளிவில்லாம லோடியது.—எ-று. (ச)

தெண்டிரைப் புணரி யெல்லாந் தினைத்துணை யாக வாரி
யுண்டருண் முனிவன் றீர்த்த மொன்றினை வேண்டு மெல்லை
யண்டர்தம் பெருமா னல்க வன்னவன் கரத்தி லேந்துங்
குண்டிகைப் புனற்கு நேராக் கூறுதற் குவமை யுண்டோ.

(இ-ள்.) தெளிவாகிய அலைகளையுடைய கடல்களனைத்தையுந் தினையளவாகக் கரத்திலேற்று உண்டருளிய அகஸ்தியமுனிவர் ஒரு தீர்த்தத்தை விரும்பியபொழுது, தேவர்கள் நாயகராகிய சிவபெருமான் அவ்வாறேகொடுத்தருள, அவ்வகஸ்தியர் கரத்திலேந்திய கமண்டல நீரினுக்கு ஒப்பாகக் கூறுதற்கு வேறே யுவமை யிருக்கின்றதோ?—எ-று. (ரு)

தொல்லையிற் குறியோன் வந்தான் றுய்க்குமோ வின்னு மென்னு
வல்லையிற் றழைகள் பற்றி வாரிதி கூவிப் பாரி
னெல்லையிற் படர்ந்த தென்ன விலைசெறி பொதும்ப ரீட்ட
மொல்லையிற் பறித்து மேல்கொண் டோடிய தொலிகொ ணீத்தம்.

(இ-ள்.) பழய அகஸ்தியமுனிவர் வந்தனர்; அவர் நம்மை இன்னு முண்பாரோவென்று விரைவாகத் தழைகளைச் சுமந்துகொண்டு கடலானது இரைச்சலுடன் பூமியில் பரவிச் சென்றாற்போல, ஒலிமிக்க வளவிய காவிரிப் பிரவாகமானது இலைகள் நிறைந்த சோலைக்கூட்டங்களை விரைவாகப் பறித்துத் தன்மேற்சுமந்துகொண்டோடியது.—எ-று. (கூ)

சந்தமு மகிலுஞ் சங்குந் தரளமுங் கவரி தானுஞ்
சிந்துரத் தெயிறும் பொன்னு மணிமளுந் திரைமேற் கொண்டு

வந்திழி நதியின் றன்மை வருணனிப் பொருள்க ளெல்லா
மிந்திரன் றன்பா லோச்ச வேகுதல் போன்ற மாதோ.

(இ-ள்.) சந்தனமும், அகிலும், சங்குகளும், முத்துக்களும், சாமரையும், யானைத் தந்தங்களும், பொன்னும், இரத்தினங்களும் அலைக்கரங்களால் தன்மேற்கொண்டு பெருகிவருகின்ற காவிரிநதியின் தன்மையானது (எதுபோலுமெனின்), வருணராஜன் இப்பொருள்க ளனைத்தையும் இந்திரனிடத்திற் செலுத்தச் செல்லுதலை யொத்திருந்தது.—எ-று. (ச)

வரையெனுந் தடம்பொற் றேரு மதகரித் தொகையு மாந்தர்
நிரைகளுந் தரங்க மாவு நெறிக்கொடு மகவான் றன்பால்
விரைவொடு சேறல் சூரன் விண்ணவர்க் கரசன் மீது
பொரவிடு தானை வெள்ளம் போவன போன்ற தன்றே.

(இ-ள்.) மலையென்று சொல்லப்பட்ட விசாலமாகிய பொற்றேர்களும், மதம்பொருந்திய யானைக்கூட்டங்களும், மனிதர்களென்னும் பதாதிகளும், அலைகளாகிய குதிரைகளும் (உடன்வர), புறப்புட்டு இந்திரனிடத்து விரைவாக வருதல், சூரபன்மன் தேவேந்திரன்மேல் போர்செய்யும்படி யனுப்பிய சேனைவெள்ளங்கள் போதலை யொத்திருந்தது.—எ-று. (அ)

ஆவதோ ரினைய வாற்று லலையினு லகல்வான் முட்டிக்
காவதம் பலவா யன்று காசினி யளந்து கீழ்பாற்
போவதோர் பொன்னி நீத்தம் புரந்தர னிருந்து நோற்குந்
தாவறு வனத்திற் போதார் தண்டலை புகுந்த தன்றே.

(இ-ள்.) அவ்வாறாகிய தன்மையினல் அகன்ற ஆகாயத்தைமுட்டி பல காததூரம் அகன்று பூமியையளந்து கீழ்த்திசையைநோக்கிச் செல்லுகின்ற ஒப்பற்ற காவிரிநதிப் பிரவாகமானது இந்திரனிருந்து தவஞ்செய்கின்ற கெடுதலில்லாத (சண்பக) வனத்தில் மலர்கள் பொருந்திய சோலையிற் புகுந்தது.—எ-று. (கூ)

ஓடுநீர் நீத்தப் பொன்னி யொல்லையிற் காமர் காவிற்
பீடுற வருத லோடும் பேதுறு மகவான் காணு
வாடினு னகைத்தா னெங்கோ னருச்சனை முடிந்த தென்று
பாடினுன் முதல்வன் றுளைப் பரவினுன் படர்ச்சி தீர்ந்தான்.

(இ-ள்.) பெருக்கெடுத்தோடுகின்ற நீர்ப்பிரவாகத்தை யுடைய காவிரிநதியானது அழகிய நந்தனவனத்தில் சிறப்போடுவருதலும், துன்பமுற்றிருக்கின்ற இந்திரன் பார்த்து (சந்தோஷத்தினல்) ஆநந்தக்கூத்தாடி நகைத்து எமது சிவபெருமானுக்குச் செய்யும் அருச்சனை நிறைவேறியதென்று பாடி, முதற்பெருங்கடவுளாகிய அவ்வெம்பெருமானது திருவடிகளைத்துதித்து தனது துன்பம் நீங்கினன்.—எ-று. (கo)

சீரினை யகற்றி நீங்காத் திருவினை மாற்றித் தொல்பே
ரூரினைக் கவர்ந்து தன்னே ருயிருக்கு மிறுதி நாடுஞ்
சூரனை வென்று லென்னத் தொலைவிலா மதர்ப்பு மிக்கா
னூரவ னுளத்திற் கொண்ட வுவகையை யறைதற் பாலார்.

(இ-ள்.) தனது சிறப்பைக்கெடுத்து நீங்காத செல்வத்தையொழித்து பழமையாகிய பெரிய அமராவதியைக் கவர்ந்துகொண்டு தனதுயிருக்கும் அழிவுசெய்ய நினைத்திருக்கின்ற சூரபத்மாவைச் சயங்கொண்டாற்போல நீங்காத சந்தோஷத்தை

யடைந்தனன்; அவ்விந்திரன் தன் மனத்திற்கொண்ட சந்தோஷத்தினளவை இவ்வள வென்று எடுத்துச்சொல்லத் தக்கவர்கள் யார்.—எ-று. (கக)

பாடுறு பொன்னி நீத்தம் பாய்தலு மகவா னேபோல்
வாடுறு கின்ற தண்கா வல்லேயிற் கிளர்ச்சி யெய்தி
யாடுறு பசிநோ யுற்றோ ரரும்பெற லமிர்தம் வந்து
கூடுற நுகர்ந்தா லென்னக் குளிர்ப்பொடு தளிர்த்த தன்றே.

(இ-ள்.) பெருமைபொருந்திய காவிரிநதிப் பிரவாகமானது (நந்தனவனத்திற்) பாய்ந்தவுடனே, இந்திரனைப்போல வாட்டமுற்றிருந்த குளிர்ச்சிபொருந்திய அந்நந்தனவனமானது விரைவாக செழிப்படைந்து, மிக்க பசிநோயடைந்தவர்கள் பெறுதற்கரிய அமிர்தம்வந்து கிடைக்க அதனையுண்டாற்போல குளிர்ச்சியோடு தளிர்த்தது.—எ-று. (கஉ)

வானிறை கின்ற கொண்மூ வார்துளி தலேஇய பின்றைக்
கானிறை மரனும் பூடும் வல்லியுங் கவின்று லென்ன
மேனிறை யடைகண் மல்கி விரிதரு சினையும் போதுந்
தானிறை கின்ற தம்மா சதமகன் வளர்த்த பூங்கா.

(இ-ள்) ஆகாயத்தில் நிறைந்திருக்கின்ற மேகங்கள் நீர்த்துளிகளைச் சிந்திய பின்பு, காட்டில் நிறைந்திருக்கின்ற மரங்களும் பூண்டுகளும் கொடிகளும் செழித்து வளர்ந்தாற்போல, இந்திரன் வளர்த்த நந்தனவனமானது, மேலே நிறைந்திருக்கின்ற தழைகள் நிறைந்து மிகுந்த கிளைகளும் மலர்களும் நிறைந்திருக்கப்பெற்றது.—எ-று.

வேறு.

வானில மளவிட வளர்ந்த புன்னைக
ளானவை முழுவது மரும்பு கின்றன
தூநகை நித்திலத் தொடையன் மெய்யுடை
நீனிற மாயவ னிலேஇய தொக்குமால்.

(இ-ள்.) ஆகாயத்தை யளாவும்பொருட்டு வளர்ந்தனவாகிய புன்னை மரங்களானவைகள் முற்றிலும் அரும்புகொண்டிருக்குந் தன்மை (எதுபோலுமெனின்), பரிசுத்தம்வாய்ந்த ஒளியினையுடைய முத்தாரமணிந்த சரீரத்தோடு கூடிய நீலநிறம்பொருந்திய திருமாலினது நிலைமையையொக்கும்.—எ-று. (கச)

தண்ணுறு பாசடை தயங்கு புன்னைகள்
கண்ணுறு வியன்சினை கவினப் பூத்தன
வெண்ணுறு தாரகை யீண்டி மொய்த்திட
விண்ணுறு முகிலினம் விளங்கிற் றென்னவே.

(இ-ள்.) அளவற்ற நக்ஷத்திரங்கள் நெருங்கி மொய்த்துக்கொள்ள, வானத்திலுள்ள மேகக்கூட்டங்கள் விளங்கினாற்போல குளிர்ச்சிபொருந்திய பச்சையிலைகளோடு விளங்குகின்ற புன்னைகள் எண்ணத்தக்க பெரிய கிளைகள்தோறும் அழகாகப் பூத்தன.—எ-று. (கரு)

பண்படு மளியினம் பயிலு றுதன
சண்பக வணிமரந் தயங்கிப் பூத்தன
வெண்படு தபனியத் தியன்ற போதினை
விண்படு தருக்கொடு மேவல் போன்றவே.

(இ-ள்.) இசை பயின்றனவாகிய வண்டுக்கூட்டங்கள்சென்று மொய்க்கா தனவாகிய அழகிய சண்பகமரங்கள் அழகாகப்பூத்தன எதுபோலவெனின், மதிக்கத் தக்க பொன்னுலாகிய பூவினை சுவர்க்கத்திலுள்ள கற்பகவிருக்ஷம் சுமந்துகொண்டு நிற்றலைப்போல.—எ-று. (௧௬)

புயற்பட லந்தொடும் புதுமென் பாடலம்
வியற்பட மலர்ந்தபூ விழுமென் வண்டினம்
மயற்பட ஆதுவான் வயந்தக் கம்மியன்
செயற்படு மணிச்சிறு சின்னம் போலுமால்.

(இ-ள்.) மேகமண்டலத்தை யளாவிய புதிய தளிர்களையுடைய மெல்லிய பாதிரிமரங்கள் ஆச்சரியப்படும்படி மலர்ந்தன; (அவைகளெவைபோல வெனின்) மலர்களில் மொய்க்கின்ற மெல்லிய வண்டினங்களாகிய (சின்னமூதுவோர்) ஊதும் வண்ணஞ்செய்த மணிகளிழைத்த சிறு சின்னங்களைப்போல.—எ-று. (௧௭)

விண்டொடர் மதிகதிர் மிளிருந் தாரகை
கண்டிட வைகலுங் கணிப்பில் கண்ணடி
மண்டல நிரைத்துமன் மாது வைத்தெனக்
கொண்டலை யளவிய கோங்கு பூத்தவே.

(இ-ள்.) பூமிதேவியானவள் ஆகாயவழியாகச் செல்லுகின்ற சந்திரனும் சூரியனும் பிரகாசிக்கின்ற நக்ஷத்திரங்களும் பார்க்கும்படி நாள்தோறும் அளவற்ற கண்ணாடி மண்டலங்களை வரிசைப்படுத்தி வைத்தாற்போல மேகமண்டலத்தை யளாவிய கோங்குமரங்கள் அலர்ந்தன.—எ-று. (௧௮)

மாமலர்க் கொன்றையு மணிமென் பூவையுந்
தாமிரு புடையுறத் தளிர்த்த செய்யமா
வேமுறு மாலய னிடையில் வந்தெழு
தோமறு பரஞ்சுடர்த் தோற்றம் போன்றவே.

(இ-ள்.) (பொன்வண்ணமாக மலர்கின்ற) அழகிய மலர்களையுடைய கொன்றை மரமும், நீலமணிபோலுங் நிறம்வாய்ந்த மெல்லிய காசாவும் இருபுறமுநிற்க,அவைகளி னடுவில் தேமாதளிர்த்து நிற்றல், போரினாற் றுன்பமுற்று நின்ற திருமால் பிரமன் என்னு மிவர்களது மத்தியிற்றோன்றிய குற்றமற்ற சிவபெருமானது திருவுருவத்தை ஒக்கும்.—எ-று. (௧௯)

ஆதவன் மீதுபோ யசையுந் தாழைகண்
மேதகு பாளைகண் மிசைதந் தூற்றன
பூதல மணங்கினார் புனைய நீட்டிய
கோதறு நித்திலக் கோவை போன்றவே.

(இ-ள்.) சூரியமண்டலத்திற்கு மேற்சென்று அசைந்தாடுகின்ற தெங்குகள், பூமிதேவியானவள் தேவமாதர்கள் தரிக்கும்பொருட்டு எடுத்து நீட்டிய குற்றமற்ற முத்துமாலைகளைப் போன்றதாய் உயர்வுபொருந்திய பாளைகளைத் தம்மீது வாங்கினவைகளாக நின்றன.—எ-று. (௨௦)

வச்சிர மேனிய வளைகொள் காட்சிய
பச்சிளம் பூகம்வெண் பாளை கான்றன
நச்சுறு சோலையா நங்கைக் கெண்ணிலா
னொச்சமில சாமரை யிரட்டல் வேந்தல்போல்.

(இ-ள்.) வெண்ணிறம்பொருந்திய வடிவத்தை யுடையனவாகியும் கீற்றுப் பொருந்திய தன்மையினதாகியும் உள்ள பசிய இளையகமுகுகள் வெள்ளியபாளைகளை வாங்கினவை (எதுபோலுமெனில்), விரும்பத்தக்கசோலையாகியபெண்ணினுக்கு அநேகர் அளவற்ற சாமரைகளை வீசுதற்கு ஏந்துதலை யொத்தன.—எ-று. (உக)

மேற்றிகழ் செங்கர வீர மானவை
யாற்றவுஞ் சினைதொறு மரும்பு கின்றன
நாற்றடம் புயமுடை நாதற் கிந்திர
னேற்றிய மணிச்சுட ரென்ன லாயதே.

(இ-ள்.) மேலே சென்று விளங்குகின்ற செவ்வலரிகள், பெரிய நான்கு திருத்தோள்களையுடைய சிவபெருமானுக்கு இந்திரனிட்ட இரத்தின தீபங்களைப் போல மிகவும் கிளைகள் தோறும் அரும்புகின்றன.—எ-று. (உஉ)

அல்லிடை யன்றியே யலர்ந்த மாலதி
வல்லிக டருவெனு மகிழ்நர் தங்களைப்
புல்லுவ பகலினும் பொருந்து மோவெனு
முல்லைகண் மலர்ந்தன முறுவல் செய்வபோல்.

(இ-ள்.) இராத்திரியி லல்லாமல் விரிந்த மல்லிகைக ளென்னும் பெண்கள் மரங்களென்னும் புருடர்களைப் பகலினுந் தழுவுதல் தகுதியோவென்று நகைப்பன போல முல்லைகள் மலர்ந்தன. எ-று. (உஙு)

ஆசறு வாவியி லலர்ந்த காவிகள்
பாசடை யிடையிடை பரவு கின்றன
தேசுறு தருநிழற் றிருவிற் றுஞ்சிய
வாசவன் விழிகளின் மல்கு கின்றவே.

(இ-ள்.) குற்றமற்ற குளங்களில் விரிந்து நிற்கின்ற செங்கழுநீர்கள் இடையிடையே பசிய இலைகளோடு பரவிக்கிடப்பன, ஒளிபொருந்தியகற்பகவிருட்சநிழலி லிருந்த இந்திரனது கண்களைப்போல மிகுதியாகக் காணப்படுகின்றன.—எ-று. (உச)

தொல்லையின் முறைநெறி யொருவித் தோயமேல்
வல்லையி லங்கிகள் வந்துற் றுலென
வல்லியுஞ் சேயன வரத்த வாம்பலும்
புல்லிய கிடங்கினிற் பொலிந்து பூத்தவே.

(இ-ள்.) பழைய சிருட்டிக் கிரமத்திற்கு விரோதமாய் நீரினிடத்து விரைவாக அக்கினிகள் வந்திருந்தாற்போல, அகவிதழ்களையுடைய செந்தாமரைகளும் செந்நிறம்பொருந்திய செவ்வாம்பல்களும் பொருந்தியுள்ள கிடங்குகளில் விளங்கிப் பூத்தன.—எ-று. (உரு)

பாயிரும் புனற்கயம் பரந்த பாசடை
யாயின விடையிடை யவிழ்ந்த பங்கயச்
சேயலர் வண்டினந் திளைப்பச் சேர்வன
காயெரி புகையொடு கானம் புக்கபோல்.

(இ-ள்.) மிக்க நீரினையுடைய ஓடைகளில் விரிந்துள்ள பச்சையிலைகளின் இடையிடையே விரிந்த செந்தாமரைமலர்களிற் பற்றி யெரிகின்ற தீயானது புகையோடு சோலையில் வந்தாற்போல வண்டினம் மொய்த்திருக்கின்றன.—எ-று. (உசு)

எண்ணுமித் தருக்களுங் கொடியு மேனவுங்
கண்ணுற மலர்வது மரும்புங் காட்சியும்
வண்ணம தெற்றெனின் மாலைச் செக்கரும்
விண்ணுறு முடுக்களும் விரவிற் றொக்குமால்.

(இ-ள்.) எண்ணப்பட்ட இம்மரங்களும் கொடிகளும் மற்றவைகளும் பார்க்கும்படி மலர்வதும் அரும்புவதும் (எவ்வாறிருக்கின்றதெனின்), மாலைக்காலத்திலுண்டாகின்ற செக்கர்வானமும் ஆகாயத்திற் பொருந்திய நக்ஷத்திரங்களும் கலந்திருத்தலை யொக்கும்.—எ-று. (உஎ)

இந்திரன் மகிழ்வுற வினைய பான்மையா
னந்தன வனமெலா நன்று பூத்தலு
மந்தநன் மலர்கொடே யாதிக் கன்பினுன்
முந்துறு பூசனை முயல முன்னினுன்.

(இ-ள்.) இவ்வண்ணமாக நந்தனவனம் முழுமையும் இந்திரனுக்கு மகிழ்ச்சியுண்டாக நன்ருய் புஷ்பிக்கவும் அவ்விந்திரன் அந்த நல்ல மலரைக்கொண்டே சிவபெருமானுக்கு அன்புடன் உயர்ந்த பூசையைச் செய்யும்படி நினைத்தனன்.

விடியல்வை கறைதனின் மேவி வண்டுதேன்
புடையுறு முன்னரோ புரையி லாததோர்
கடிமலர் கொய்தனன் கொணர்ந்து கண்ணுத
லடிகளில் விதிமுறை யருச்சித் தானரோ.

(இ-ள்.) விடியற்காலத்தி லுண்டாகிற வைகறைப்பொழுதில்சென்று வண்டுகள் தேனின்பொருட்டு மொய்த்தற்கு முன்னமே குற்றமில்லாத ஒப்பற்ற நல்ல புஷ்பங்களைக் கொய்துகொண்டுவந்து சிவபெருமானது பாதங்களில் முறைப்படி யருச்சித்தான்.—எ-று. (உகூ)

அப்பெரு நாண்முத லாதி யண்ணலை
யிப்படி யருச்சனை யியற்றி வைகலு
மொப்புற நோற்றரோ வும்பர் கோமகன்
வைப்புறு சண்பக வனத்தின் வைகினுன்.

(இ-ள்.) அர்ச்சிக்க ஆரம்பித்த அந்த விசேஷமான தினந்தொட்டு சிவபெருமானை யவ்வாறே அருச்சனைசெய்துகொண்டு தினந்தோறும் ஒப்பற்ற தவத்தைச் செய்கின்றவனுய் இந்திரன் தான் உண்டாக்கிய சண்பகவனத்திலிருந்தனன்.—எ-று.

இந்திரனருச்சனைப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கூஅகூ.

உ

முருகன்றுணை.

# தேவர்புலம்புறுபடலம்.

அந்நா ளதனி லவுணர்க் கிறையேவ
றன்னான் மிகவுந் தளர்ந்து சிலதேவ
ரெந்நாளிப் புன்மை யெமைநீங்கு மென்றிரங்கிப்
பொன்னாடு விட்டுப் புவிதன்னிற் போந்தனரே.

(இ-ள்.) அக்காலத்தில் சூரபன்மனுக்கு ஊழியஞ் செய்தமையால் மிகவும் இளைப்படைந்த சில தேவர்கள் இவ்விழி தொழிலினின்றும் எக்காலத்தில் நீங்குவோமென்று விசனமடைந்தவர்களாய்ப் பொன்னுலகத்தை விட்டு மண்ணுலகத்திற்கு வந்தனர்.—எ-று. (௧)

தீந்தமிழின் வைப்பான தெக்கிண தேயநண்ணி
மாந்தர்புகழ் காழி வனம்போந்து வானவர்தம்
வேந்துதனைக் கண்டு விரைநாண் மலரடிக்கீழ்ப்
போந்து பணிந்து புகழ்ந்து புகல்கின்றார்.

(இ-ள்.) இனிய தமிழ்ப்பாஷைக் கிருப்பிடமாகிய தென்னாட்டிற்கு வந்து மனிதர்களால் புகழப்பட்ட சீகாழி வனத்தை யடைந்து அங்கிருந்த இந்திரனைக் கண்டு அவனது அன்றலர்ந்த மணம்பொருந்திய தாமரைமலர்போன்ற பாதங்களினருகிற் சென்று வணங்கித் துதித்துக் கூறுகின்றார்கள்.—எ-று. (௨)

ஒன்றே தரும மொழிந்து புவனமெலாஞ்
சென்றே யடுகின்ற தீயவுணர் தந்துடக்கி
லன்றே யெமைவிட் டகன்றா யுனக்கிதுவு
நன்றே யெமையாளு நாயகனு நீயன்றோ.

(இ-ள்.) தருமமொன்றை மாத்திரமகற்றி உலகங்களிலெல்லாஞ் சென்று கொலைசெய்கின்ற கொடிய அசுரர்களது கட்டுப்பாட்டினில் எங்களை விட்டு விட்டு விலகி வந்தீர்; இஃதுமக்கு ஞாயமான காரியந்தானோ? தேவரீரன்றோ எங்களை யாளுந் தலைவர்.—எ-று. (௩)

கோட்டுக் களிற்றோடுங் கோளரியோ டும்புவியை
வாட்டுற் றிடுஞ்சூர வல்லியத்தின் வன்சிறையி
லீட்டுற்ற தேவ ரெனும்பசுக்க டம்மையெலாங்
காட்டிக் கொடுத்துக் கரந்ததென்கொல் காவலனே.

(இ-ள்.) கொம்பினையுடைய யானையாகிய தாரகனுடனும், சிங்கமாகிய சிங்கமுகாசுரனுடனுஞ் சேர்ந்து உலகத்தை வருத்துகின்ற சூரபன்மனாகிய பெரும்புலியினது வலிய சிறையிலே யடைக்கப்பட்டுள்ள தேவர்களாகிய பசுக்களனைத்தையும் அரசனே! நீர் காட்டிக்கொடுத்து மறைந்ததென்ன காரணம்.—எ-று. (௪)

ஏனம் பசுமா னிரலை மனைபடுத்த
ஆனும் வடியு மொலிகடலி னுள்ளபல
மீனுஞ் சுமந்து விறலசுரர்க் கேவல்செய்து
மானங் குலைந்து மறந்தோ மறைகளுமே.

(இ-ள்.) பன்றியையும், பசுவையும், மானையும், கலை மானையும், கடமையையுங் கொன்றெடுத்த மாமிசத்தையும் கள்ளையும், சப்திக்கின்ற கடலிலுள்ள பல மீன்களையுஞ் சுமந்து வலிமைபொருந்திய அசுரர்களுக்கு ஏவற்றொழில் செய்து பெருமை கெட்டு வேதாத்தியயனத்தையும் மறந்தனம்.—எ-று. (௫)

மையார் களத்தார் வரம்பெற்ற சூரனுக்குச்
செய்யாத வேவலெலாஞ் செய்தோ நெறிநீதி
யெய்யாத மான மிவையெல்லாந் தாணிழந்தோ
மையா மிகவு மலுத்தோ மலுத்தோமே.

(இ-ள்.) காளகண்டராகிய சிவபெருமானிடத்தில் வேண்டிய வரங்களைப் பெற்ற சூரபன்மனுக்குச் செய்யத்தகாத ஏவல்களனைத்தையுஞ் செய்தனம்; நல்லொழுக்கம் நியாயம் கெடாத மானம் ஆகிய இவைகளனைத்தையு மிழந்தனம்; அதனால் ஐயனே! மிகவும் இளைத்தோ மிளைத்தோம்.—எ-று. (௬)

முன்னாளுந் தந்தி முகத்தவுண னேவல்செய்து
பன்னா ளுழன்றோம் பரம ரதுதீர்த்தார்
பின்னாளுஞ் சூரன் பெயர்த்து மெமைவருத்த
விந்நாடி ரிந்தோ மினித்தான் முடியாதே.

(இ-ள்.) பூர்வத்திலும் கஜமுகாசுரனது ஏவலைச் செய்து பல காலமலைந்தனம்; சிவபெருமான் அதனை நீக்கியருளினர். அதற்குப் பிற்காலத்துஞ் சூரபன்மன் மீண்டும் எங்களை வருத்தினமையால் இந்த நாட்டிற்கு ஓடிவந்தோம்; இனி எங்களால் முடியாது.—எ-று. (எ)

எந்நாளு முன்னைப் புகலென் றிருந்தவியாந்
துன்னா வவுணராற் சோர்ந்து துயருழப்ப
வுன்னா ருயிர்காத் தொளித்திங் கிருந்தனையான்
மன்னா வுனக்குத் தகுமோ வசையன்றோ.

(இ-ள்.) எக்காலத்திலுந் தேவரீரை யடைக்கலமாகவிருந்த யாங்கள் பகைவர்களாகிய அசுரர்களால் சோர்வுற்றுத் துன்பமடைந்திருக்க, அரசனே! நீர் உமதுயிரைக்காத்து இங்கு மறைந்திருக்கின்றீர்; இஃதுமக்குத் தக்கதோ? பழியல்லவோ?

சூரன் முதலாச் சொலப்பட்ட வெவ்வசுரர்
வீரங் குலைந்து விளிவதற்கு மிவ்வுலகி
லாரும் பழிக்கத் திரிகின்றோ மாகுலங்க
டீரும் படிக்குஞ் செயலொன்று செய்வாயே.

(இ-ள்.) சூரபன்மன் முதலாகச் சொல்லப்பட்ட கொடிய அசுரர்களது பராக்கிரமமிழந்து இறப்பதற்கும், இவ்வுலகத்தில் யாவரும் பழிக்கும்படித் திரிகின்ற எங்களுடைய துன்பங்கள் நீங்குவதற்கும் ஒரு செய்கையைச் செய்யக்கடவீர். (௯)

என்னாப் பலவு மியம்பி யிரங்குதலு
மன்னா கியமகவான் மாற்ற மவைகேளா
வன்னார் மனங்கொண்ட வாகுலத்தைக் கண்டுநெடி
துன்னா வயரா வுயிரா வுரைக்கின்றான்.

(இ-ள்.) என்றிவ்வாறு பல வார்த்தைகளைக்கூறி வருந்தவும்,அரசனாகிய இந்திரன் அவ்வார்த்தைகளைக் கேட்டு,அத்தேவர்கள் மனத்திற் கொண்டிருக்கின்ற துன்பத்தைப் பார்த்து மிகவுஞ் சிந்தித்துச் சோர்ந்து பெருமூச்சுவிட்டுக் கூறுகின்றனன்.

மாயை யுதவ வருகின்ற வெஞ்சூரன்
றீய பெருவேள்வி செய்யத் தொடங்குமன்றே
போய நமதுரிமை பொன்னுடுந் தோற்றனமென்
றோயு முணர்வா லுமக்கங் குரைத்திலனோ.

(இ-ள்.) மாயையானவள் பெற்ற கொடிய சூரபன்மன் கொடிதாகிய பெரிய யாகஞ்செய்யத் தொடங்கிய அக்காலத்திலேயே நமது அரசுரிமை நீங்கின ; பொன்னுலகத்தையுந் தோற்றோமென்று அறிவு கலங்கி உங்களுக்கு யான் அங்குச் சொல்லவில்லையோ ?—எ-று. (௧௧)

அற்றே மகஞ்செய் தமலன் றருவரங்கள்
பெற்றே நமது பெரும்பதமுங் கைக்கொண்டு
சற்றேனு மன்பில்லாத் தானவர்கோன் றாழ்வான
குற்றே வலைநம்பாற் கொண்டான் குவலயத்தே.

(இ-ள்.) அவ்வாறே யாகத்தைச் செய்து சிவபெருமானால் கொடுக்கப்பட்ட வரங்களைப் பெற்று நமது பெரிய பதவியினையுங் கைவசப்படுத்திச் சிறிது மன்பில்லாத சூரபன்மன் நிலவுலகத்தில் தாழ்வான குற்றேவலை நம்மிடத்திற் கொண்டனன்.

நீள்வா ரிதியி னெடுமீன் பலசுமந்து
தாழ்வாம் பணிபிறவுஞ் செய்துந் தளர்ந்துலகில்
வாழ்வா மெனவே மதித்திருந்தோ மற்றதன்றிச்
சூழ்வா லொருதீமை சூரபன்ம னுன்னினனே.

(இ-ள்.) நீண்ட கடலிலுள்ள பல பெரிய மீன்களைச் சுமந்தும், தாழ்வாகிய பிற குற்றேவல்களைச் செய்தும் உலகத்தில் வாழலாமென்று நினைத்திருந்தோம் ; இதுவன்றி, சூரபன்மன் தந்திரமாக ஒரு தீமையை நினைத்தனன்.—எ-று. (௧௩)

என்னே யத்தீமை யெனவே வினவுங்காற்
பொன்னே யனைய புலோமசையைப் பற்றுதற்குங்
கொன்னே யெனையுங் கொடுஞ்சிறையில் வைப்பதற்கு
முன்னே நினைந்தான் முறையில்லாத் தீயோனே.

(இ-ள்.) அத்தீமை யாதென்று வினவுமிடத்து, திருமகளை யொத்த (அழகினையுடைய) இந்திராணியை யபகரித்துக் கொள்வதற்கும், வீணாகவே என்னையுங் கொடிய சிறையில் வைப்பதற்கும் முறைமையில்லாத கொடிய சூரபன்மன் முன்னே நினைந்தனன்.—எ-று. (௧௪)

ஆன செயலுன்னி யனிகந் தனைநம்பால்
வானுலகி லுய்ப்ப மதியா லதுணர்ந்து
நானு மிவளு நடுநடுங்கி யச்சுற்று
மேனி கரந்து விரைந்துவிண்ணை நீங்கினமால்.

(இ-ள்.) அவ்வாறாகிய செய்கையை நினைத்துத் தனது சேனைகளை நம்மிடத்தில் விண்ணுலகத்திற்கனுப்ப, என தறிவினா லதனை யுணர்ந்து, யானும் இவ்விந்திராணியும் மிகவும் நடுங்கி யச்சங்கொண்டு உருவமறைந்து விரைவாக விண்ணுலகினின்றும் நீங்கினோம்.—எ-று. (௧௫)

மீனும் வடியும் வியன்றசையுந் தான்சுமந்த
வினை மதுவன்றி யீதோர் பழிசுமக்கின்
மான மழிய வருமே யதுவன்றித்
தீன முறுசிறையுந் தீராது வந்திடுமே.

(இ-ள்.) மீனும், கள்ளும், மிக்க மாமிசமும் சுமந்திருந்த அந்தப் பழிப்பேயன்றி இவ்வொரு பழியைச் சுமந்தால் மானங் கெடும்படி நேரிடும், அதுவல்லாமல் இழிவாகிய சிறையும் நீங்காமல் வந்து சேரும்.—எ-று. (௧௬)

வெய்யவர்தம் வன்சிறையின் வீழின் முடிவில்லா
வைய னடிக ளருச்சித் தியாமெல்லா
முய்ய வவுண ருயிரிழப்ப மாதவத்தைச்
செய்யு நெறியுண்டோ வெனச்சிந்தை செய்தனனே.

(இ-ள்.) கொடிய அசுரர்களது வலிய சிறையி லகப்பட்டால் அழிவில்லாத சிவபெருமானது திருவடிகளை யருச்சித்து யாமனைவருங் கடைத்தேறவும், அசுரர்கள் உயிர்விட்டிறக்கவும் மகத்தாகிய தவத்தைச் செய்யும் மார்க்கமுண்டோவென்று சிந்தித்தேன்.—எ-று. (௧௭)

சிந்தை யதனி லினைய செயலுன்னி
யந்த மறுதுயரத் தாழு நுமைவிட்டு
வந்து புவியின் மறைந்து தவஞ்செய்துமுக்க
ணெந்தை யடிக ளருச்சித் திருந்தனனே.

(இ-ள்.) மனத்தில் இவ்வாறாகிய செயலை நினைத்து முடிவற்ற துன்பக்கடலி லழுந்தியிருக்கின்ற உங்களை விட்டு நிலவுலகத்தில் வந்து மறைந்து தவத்தைச் செய்து திரிநேத்திரராகிய எமது சிவபெருமானது திருவடிகளை அருச்சனை செய்திருந்தனன்.—எ-று. (௧௮)

அல்லல் புரியு மவுணர்பணி யால்வருந்தித்
தொல்லையுள மேன்மையெலாந் தோற்றனமே மற்றினிநா
மெல்லவரும் வெள்ளி மலைக்கேகி யிறைவனுக்குச்
சொல்லி நமது துயரகற்றிக் கொள்வோமே.

(இ-ள்.) துன்பத்தைச் செய்கின்ற அசுரர்களிடுகின்ற குற்றேவலால் வருத்தமடைந்து பழமையாகவுள்ள மேன்மைகளனைத்தையுந் தோற்றோம். இனி நாமனைவரும் வெள்ளியங்கிரியை யடைந்து சிவபெருமானிடத்து முறையிட்டு நமது துன்பத்தை நீக்கிக்கொள்ளுவோம்.—எ-று. (௧௯)

வம்மி னெனவுரைப்ப வானோ ரதுகேளா
வெம்மி னதுகண்ட வியன்கண் டகியெனவு
மம்மென் மயிலெனவு மாடி நகைசெய்து
தம்மின் மகிழ்ந்து மதர்ப்பினொடு சாற்றலுற்றார்.

(இ-ள்.) வாருங்களென்று (இந்திரன்) கூறவும், அதனைத் தேவர்கள் கேட்டு வெவ்விய மின்னலைக் கண்ட தாழையைப்போலவும், அழகிய மேன்மை யமைந்த மயிலைப்போலவும் ஆடி நகைத்துத் தங்களுக்குள்ளே மகிழ்வடைந்து பூரிப்புடன் சொல்லத் தொடங்கினார்கள்.—எ-று. (௨௦)

கோவுநீ யெங்கள் குரவனுநீ தேசிகனீ
தேவுநீ மேலாந் திருவுநீ செய்தவநீ

யாவிநீ மற்றை யறிவுநீ யின்பதுன்பம்
யாவுநீ யாகி லெமக்கோர் குறையுண்டோ.

(இ-ள்.) எங்கள் அரசனும் நீயே; தந்தையும் நீயே; தேசிகனும் நீயே; தெய்வமும் நீயே; மேலாகிய செல்வமும் நீயே; யாங்கள் செய்த தவமும் நீயே; உயிரும் நீயே; மற்றைய அறிவும் நீயே; சுகதுக்கங்களாகிய வனைத்தும் நீயே யானல் எங்களுக்கொருகுறை யிருக்கின்றதோ ?—எ-று. (உக)

பார்த்துப் பணித்த பணிசெய்து நின்றன்னை
யேத்தித் திரித லெமக்குக் கடனாகு
நீத்துத் துயர நெறியுறுத்தி யெம்மையென்றுங்
காத்துப் புரத்த லுனக்குக் கடனையா.

(இ-ள்.) நீர் தெரிந்து கூறிய பணிவிடையைச் செய்து உம்மைத் துதித்துச் சஞ்சரிப்பது எங்களுக்குக் கடமையாகும்; ஐயனே! துன்பத்தை யொழித்து நல்வழிப்படுத்தி எங்களைப் பாதுகாத்தல் உமக்குக் கடமையாகும்.—எ-று. (உஉ)

தேரா வவுணர் திறந்தன்னை முன்றடிந்தாய்
சூரா தியருயிருங் கொள்ளுநெறி சூழ்கின்றாய்
பாராள் பவர்க்கும் பலமுனிவர்க் குஞ்சுரர்க்கு
மாராயி னீயன்றி யாரோ துணையாவார்.

(இ-ள்.) தெளிவில்லாத அசுரர்களது வல்லமையை முன்னே யழித்தீர்; சூரபன்மன் முதலியவர்களது உயிரையு மழிக்கும் மார்க்கத்தை யோசிக்கின்றீர்; உலகத்தையாளு மரசர்களுக்கும், பல முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஆராயுமிடத்து நீரோயன்றி வேறு யாவர் துணையாவர்கள்.—எ-று. (உங)

ஆதலா லெங்க ளலக்க ணகற்றிடுவான்
காதலா யத்தன் கயிலைக் கெமைக்கொண்டு
போதுநீ யென்னப் புரந்தரனு நன்றென்று
கோதிலா வுள்ளத் தொருசூழ்ச்சி கொண்டனனே.

(இ-ள்.) ஆதலால் எங்களது துன்பத்தை நீக்கும்படி விருப்பங்கொண்டு சிவபெருமானது திருக்கயிலாயத்திற்கு நீர் எங்களை யழைத்துக்கொண்டு போவீராக வென்று கூறுதலும், இந்திரன் நல்லதென்று குற்றமற்ற தன் மனத்தில் ஒரு உபாயத்தைச் சிந்தித்தனன்.—எ-று. (உச)

ஆவ தொருகாலை யமரர்கோன் றானெழுந்து
தேவர் தமைநோக்கிச் சிறிதிங் கிருத்திரென
வேவரையு மங்க ணிருத்தியொரு தானேகிப்
பாவை யயிராணி பாங்க ரணுகினனே.

(இ-ள்.) அவ்வாறாகிய சமயத்தில் தேவேந்திரனெழுந்து தேவர்களைப் பார்த்து நீங்கள் கொஞ்சநேர மிங்கிருங்களென்று அவ்விடத்திலிருத்தித் தாமொருவனாகவே சென்று பதுமைபோல்பவளாகிய இந்திராணியி னிருப்பிடத்தை யடைந்தனன்.

தேவர்புலம்புறுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௪௦அ.

உ

முருகன்றுணை.

# அயிராணி சோகப் படலம்.

அன்னம் பொருவு நடையா ளவன்வரலு
முன்னங் கெதிரா முறையாற் பலமுறையும்
பொன்னங் கழலிணையைப் பூண்டு வணங்கியெழீஇ
யென்னிங்கொ ரெண்ணமுட னேகிற் றிறையென்றாள்.

(இ-ள்.) அன்னம்போலும் நடையினையுடைய இந்திராணியானவள் அவ்வி ந்திரன் வந்தவுடனே முன்னே எதிர்கொண்டு முறைப்படி பலதரமும் அவனது அழ கிய பொற்கழலணிந்த இரண்டு பாதங்களையு மடைந்து வணங்கி யெழுந்து இறைவ ரே! நீர் இங்கு ஒரு எண்ணத்துடன் வந்த காரணம் யாதென்று வினவினாள்.—எ-று.

அம்மொழியைக் கேளா வரச னுரைசெய்வான்
வெம்மைபுரி சூரன் வியன்பணியா லேவருந்தி
யெம்மை யடைந்தா ரிணையசில தேவர்
தம்மு னிடர்பலவுஞ் சாற்றி யிரங்கினரே.

(இ-ள்.) அவ் வார்த்தையைக் கேட்டு இந்திரன் கூறுவான், கொடுமையை ச்செய்கின்ற சூரபன்மனது பெரிய குற்றேவலால் வருத்தமடைந்து இந்தச் சிலதேவ ர்கள் எம்மிடத்திற்கு வந்தார்கள்; (அவ்வாறு வந்து) தாங்கள் முன்படைந்துள்ள பல துன்பங்களையுங் கூறிவருந்தினார்கள்.—எ-று. (௨)

அன்னார் மனங்கொண்ட வாகுலமு நந்துயரும்
பொன்னார் சடைமுடியெம் புண்ணியற்குத் தாம்புகலி
னிந்நா ளவுணர்க் கிறுவாய் தனைப்புரிந்து
தொன்னா ளுரிமை யளிப்ப னெனுந்துணிவால்.

(இ-ள்.) அத் தேவர்கள் மனத்திற்கொண்டுள்ள வருத்தமும் நமது துன்ப மும், பொன்மயமாக விளங்குஞ் சடைமுடியினையுடைய எமது சிவபெருமானிடத்து முறையிட்டால் இக்காலத்தில் அசுரர்களுக்கு அழிவை யுண்டாக்கி முற்காலத் தடை ந்திருந்த அரசுரிமையை யளித்தருளுவனென்னுந் துணிவினால்.—எ-று. (௩)

ஆகின்ற துன்பத் தழலாற் பதைபதைத்து
வேகின்ற சிந்தை வியனமரர் தம்முடன்யான்
பாகொன்று தீஞ்சொ லுமைபாகன் பனிவரைக்குப்
போகின்றே னீது புகலுதற்கு வந்தனனே.

(இ-ள்.) துன்பமாகிய அக்கினியினால் பதைபதைத்து வேகின்ற சிந்தையி னையுடைய மிக்க தேவர்களுடனே யான் பால்போலும் இனிய மொழிகளையுடைய பார்வதி பாகராகிய சிவபெருமானது குளிர்ந்த வெள்ளியங்கிரிக்குப்போகின்றேன்; உன்னிடத்தில் இதனைச் சொல்லுதற்கு வந்தேன்.—எ-று. (௪)

என்னும் பொழுதி லிடருற் றிகல்வாளி
தன்னங்க மூழ்கத் தளர்ந்துவீழ் மஞ்ஞையென
வன்னம் பொருவு நடையா ளயிராணி
மன்னன் றிருமுன் மயங்குற்று வீழ்ந்தனளே.

(இ-ள்.) என்று கூறியபொழுது, அன்னம்போலும்நடையினையுடைய இந்திராணியானவள் வருந்தி, வலிய பாணமானது தனது தேகத்தில் தைத்து அதனால் வருந்தி விழுந்த மயில்போல இந்திரனுக்கு முன்னே மயங்கி விழுந்தனள்.—எ-று.

வீழ்ந்தா டரிக்கரிதாம் வெய்ய துயர்க்கடலி
லாழ்ந்தா டனதறிவு மற்றாள் பிரியாது
வாழ்ந்தாளென் செய்வாண் மகவா னதுகண்டு
தாழ்ந்தா குலத்தோ டெடுத்தான் றடக்கையால்.

(இ-ள்.) இந்திராணியானவள் சகித்தற்கு முடியாத துன்ப சமுத்திரத்தில் வீழ்ந்து முழுகித் தனதறிவு மறந்தவளாயினாள். அவ்விந்திரனை விட்டுப் பிரியாது வாழ்ந்தவளாகையால் இவ்வாறாயினாள்; என் செய்வாள். அவ்வாறு விழுந்ததனை இந்திரன் பார்த்து விசனத்துடன் தனது பெரிய கைகளால் அவளைக்குனிந்தெடுத்தனன்.

ஆர்வமொடு கையா லணைத்தே யவளைத்தன்
னூருமிசை யேற்றி யுணர்ச்சிவரும் பான்மையெலாஞ்
சேரவொருங் காற்றச் சிறிதே தெளிவுற்றாள்
காரின் மலிகின்ற மின்போலுங் காட்சியினாள்.

(இ-ள்.) விருப்பத்துடன்கையாலணைத்து அவ்விந்திராணியைத்தனது துடையின்மீது வைத்துக்கொண்டு அவளது மூர்ச்சை தெளியவேண்டிய விதங்களெல்லாம் ஒருங்கே செய்யவும்,மேகத்தில் விளங்குகின்ற மின்னலைப்போன்ற வடிவினையுடைய அவ்விந்திராணி சற்றே தெளிவடைந்தனள்.—எ-று. (எ)

சிந்தை மயக்கஞ் சிறிதகன்று தேற்றம்வர
முந்தை யிடர்வந்து முற்றுந் தனைச்சூழ்ந்த
வந்த மடமா னதுபோழ்திற் றன்னுள்ள
நொந்து நடுங்கி யினைய நுவல்கின்றாள்.

(இ-ள்.) மனோமயக்கம் சற்று நீங்கித் தெளிவடையவும் பழைய விசனங்களெல்லாம் தன்னை வந்து சூழ்ந்துகொள்ளவும் மடமானை யொத்த அவ்விந்திராணி அப்பொழுது தன் மனம் நொந்து நடுங்கி இவ்வாறு கூறுகின்றாள்.—எ-று. (அ)

பொன்னாடு விட்டுப் புவியின் வனத்திருந்து
முன்னா ரருள்கொண் டுவப்புற்று மேவினனா
லென்னா ருயிரோ யெனைநீ பிரிவாயேற்
பின்னார் துணையான் பிழைக்கு நெறியுண்டோ.

(இ-ள்.) பொன்னுலகத்தைவிட்டுப் பூவுலகத்திற்கு வந்து காட்டிலிருந்தும் உனது அரிய வருளினால் சந்தோஷமடைந்திருந்தேன். என் அரிய வுயிரோ! நீ யென்னைப் பிரிவாயானால்பின் யார் எனக்குத் துணை? இனி யான்பிழைக்கும் வழியுளதோ.

வாகத்து நேமிக்கும் வான்பாடு புள்ளினுக்கு
மேகத் திறமும் வியன்மதியு மாவதுபோ
னாகத் துறைவோர்க்கு நாயகமே நீயலதென்
சோகத்தை நீக்கித் துணையாவார் வேறுண்டோ.

(இ-ள்.) அழகிய சகோரத்திற்கும் வானம்பாடிக்கும் மேகங்களும் பெருமை மிக்க சந்திரனும் துணையாய் நிற்பதுபோல, தேவர்கள் தலைவனே! உன்னையன்றி எனது துன்பத்தை நீக்கித் துணையாக நிற்கின்றவர்கள் வேறே யிருக்கின்றார்களோ.

அன்றி யுனைப்பிரிந்து மாவிதனைத் தாங்கவல்லே
னென்றிடினும் யானொருத்தி யாருந் துணையில்லை
யொன்றுநெறி நீதி யுணராத தீயவுணர்
சென்றிடுவர் நாளு மவர்கண்டாற் றீங்கன்றோ.

(இ-ள்.) இதுவன்றி, உன்னைப் பிரிந்தும் உயிரோடிருக்க வல்லேனாயினும் யான் வேறு துணையற்ற தனிமையாக விருக்கின்றேன். நியாயவழி யொன்றையு மறியாத கொடிய வசுரர்கள் வருவார்கள்; அவர்கள் வந்தால் தீங்கல்லவோ.—எ-று.

நீடு புகழ்சேர் நிருதர்கோன் சூழ்ச்சியினாற்
றேடரிய பொன்னுலகச் செல்வத்தை விட்டிந்தக்
காடுதனில் வந்து கரந்து தவம்புரிந்து
பாடுபடு மாறும் பழிக்கஞ்சி யேயன்றோ.

(இ-ள்.) நாம் மிக்க புகழ்பொருந்திய சூரனது வஞ்சனையால் சம்பாதித்தற்கரிய விண்ணுலகச்செல்வத்தை விட்டு இந்தக் காட்டினிடம் வந்து மறைந்திருந்து தவம்புரிந் துழைக்கின்றதுவும் வசைக்கஞ்சியல்லவோ?—எ-று. (௧௨)

தீய வவுணர் திரிவ ரவர்சிறியர்
மாயை பலபலவும் வல்லார் பவமல்லா
லாய தரும மறியார் பழிக்கஞ்சார்
நீயு மதுணரா யன்றே நெடுந்தகையே.

(இ-ள்.) கொடிய அசுரர்கள் உலாவுவார்கள், இழிந்த அவர்கள் பல மாயையிலும் வல்லவர்கள், பாவமேயன்றி, தருமமாகியதொன்றையு முணராதவர்கள், பழிக்கஞ்சார்கள். அரசே நீயதுணராததன்றே.—எ-று. (௧௩)

உன்னன் புடைய வொருமகனு மிங்கில்லை
துன்னுஞ் சுரருமில்லை தொல்களிற்றின் வேந்துமில்லை
பின்னிங் கொருமா தருமில்லை பெண்ணொருத்தி
தன்னந் தனியிருக்க வஞ்சேனோ தக்கோனே.

(இ-ள்.) உனது விருப்பத்திற்குரிய மகனு மிங்கில்லை; நெருங்கிய தேவர்களுமில்லை; ஐராவதமுமில்லை; வேறே பெண்களுமில்லை யாதலால், தகுதியினையுடையோய்! பெண்ணாகிய யானொருத்தி தன்னந்தனியேயிருத்தற்கு அச்சமில்லாமலிருக்குமா.—எ-று. (௧௪)

பல்லா றுழுகிப் பவஞ்செய் யவுணரெனு
மொல்லா ரெனைக்காணி னோடிவந்து பற்றினர்போ
யல்லா தனபுரிவ ராகு லனையபழி
யெல்லாமுன் பாலன்றி யார்கண்ணே சென்றிடுமே.

(இ-ள்.) பல வழிகளாகத் திரிந்து பாவங்களைச் செய்கின்ற அசுரர்களென்று சொல்லப்பட்ட பகைவர்கள் என்னைக் கண்டால் ஓடிவந்து பிடித்துக்கொண்டு போய்த் தகாதகாரியங்களைச் செய்வார்களானால் அந்தப் பழிகளெல்லாம் உன்னையன்றி வேறே யாரைச் சாரும்.—எ-று. (௧௫)

மன்னே யிதுவோர் துணிவுரைப்பன் மன்னுயிர்கொண்
டின்னே தமியே னிரோ னுலகில் யாவரையு
முன்னே படைத்தளிக்கு முக்கணர்தம் வெற்பினுக்குன்
பின்னே வருவேன் பெயர்வா யெனவுரையா.

(இ-ள்.) அரசனே! யானொரு உறுதிமொழி கூறுகின்றேன். அது யாதென்றால், யான் தனித்தவளாக உயிரோ டிருக்கமாட்டேன். உலகின்கண்ணுள்ள யாவர்களையும் முன்னே படைத்துக் காத் தழிக்கின்ற சிவபெருமானது திருக்கயிலைமலைக்கு உன் பின்னரோ வருகிறேன்; எழுந்து நடப்பாயாகவென்று கூறி.—எ-று. (௧௬)

பின்றாழ் குழலி பெருந்துயரத் தோடெழுந்து
நின்றா ளிறையுன்னி நேயத் தொடுநோக்கி
நன்றா லுனது திறனென்று நாகரிறை
சென்றார்வ மோடவளைப் புல்லியிது செப்புகின்றான்.

(இ-ள்.) இந்திராணி மிக்க விசனத்துடன் எழுந்து நின்றனள். அதனை இந்திரன் விருப்பத்துடன்பார்த்துநினைத்து, உனது தன்மை மிகநல்லதென்று கூறி அவளருகிற் சென்று விருப்பத்துடன் ஆலிங்கனஞ் செய்து இதனைக்கூறுகின்றான்.

வாராய் சசியே வருந்தே லமரருடன்
காரார் களத்தோன் கயிலைக் கியான்போனா
லாராய்ந்து நின்னை யளிப்பவரற் றாலன்றோ
பேரார்வ மோடெனது பின்னீ வருவதுவே.

(இ-ள்.) வராய் இந்திராணியே! வருந்தாதே: யான் தேவர்களுடன் நீலகண்டராகிய சிவபெருமானது கயிலைக்குச்சென்றால், ஆலோசனையுடன் நின்னைக் காப்பவரில்லாமற் போனாலல்லவோ மிக்க விருப்பத்துடன் நீ எனது பின்னால்வரவேண்டும்.

செய்ய சடைமேற் சிறந்தமதிக் கோடுபுனை
துய்யவனும் வேலைத் துயின்றோனுஞ் சேர்ந்தளித்த
வைய னெமக்கோ ரரணாகி யேயிருக்க
நையன் முறையாமோ நங்காய் நவிலுதியால்.

(இ-ள்.) செந்நிறம்பொருந்திய சடையின்மீது சிறப்புப்பொருந்திய இளஞ்சந்திரனையணிந்த சிவபெருமானும் திருமாலுஞ் சேர்ந்து பெற்ற மகாசாத்தனார் நமக்கு ஓர் காவலாயிருக்க நாம் வருந்துதன் முறைமையோ பெண்ணே கூறக்கடவை.

ஏவென்ற கண்மடவா யீசனரு ளன்னோனை
வாவென் றளியால் வழுத்திமனத் துன்னினிங்கே
மேவுங் கயிலையில்யான் மீண்டு வருந்துணையுங்
காவென் றுனையவன்பாற் கையடையா நல்குவனால்.

(இ-ள்.) அம்பினைச்செயித்த கண்ணையுடைய பெண்ணே! சிவகுமாரனாகிய அம்மகாசாத்தனை யான் மனத்திலன்புடன் நினைத்துத் துதித்து வருவீரொன்றால் உடனே யிங்குப் போதுவர்; கயிலைக்கு யான் சென்று திரும்பிவருகிறவரைக்கும் உன்னைக் காக்கும்படி அவரது கையிலடைக்கலமாக வளிப்பேன்.—எ-று. (௨௦)

ஆற்றல் பெரிதுடைய வையனே நின்றன்னைப்
போற்றியருள் செய்யும் பொருந்துதியா லீண்டென்று
தேற்றுதலு மன்னன் சிறப்பெவன்கொல் செப்புகெனக்
கோற்றொடிகே ளென்னு வமரேசன் கூறுகின்றான்,

(இ-ள்.) மிக்க வன்மையினையுடைய அவ்வையனுரே உன்னை நன்ருய்க் காத்தருளுவர் ஆதலால் நீ உடன்வராம லிங்கிருக்கக்கடவையென்று இந்திரன் கூறுதலும், அதனைக் கேட்ட இந்திராணி அம்மகாசாத்தனிடத்துள்ள சிறப்புக்கள்யாவை? அவைகளைக் கூறக்கடவீரென்றனள். உடனே இந்திரன் வளையலணிந்த கரங்களையுடைய இந்திராணியே! கேளென்று கூறுகின்ருன்.—எ-று. (உக)

அயிராணி சோகப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௪௬௨௧.

---

உ

முருகன்றுணை.

---

# மகாசாத்தாப்படலம்.

முன்னம் பரம னருளின்றி முகுந்த னுதி
மன்னுஞ் சுரர்தானவர் வேலை மதித்த வேலைக்
கன்னங் கரிய விடம்வந்துழிக் காரி னங்க
டுன்னும் பொழுதிற் குயில்போற் றுணைக்குற் றிரிந்தார்.

(இ-ள்.) முற்காலத்தில் சிவபெருமானது திருவருளில்லாமல் திருமால் முதலாகப் பொருந்திய தேவர்கள் கடலைக் கடைந்தபொழுது மிகவுங் கறுத்த விடமுண்டானவிடத்தில், மேகக்கூட்டங்கள் வந்தவுடனே குயில்கள் சிதறியோடு வதைப்போல நடுக்கங்கொண்டு விலகியோடினூர்கள்.—எ-று. (க)

அண்ணற் கயிலைக் கிரிதன்னி லடைந்து செந்தீ
வண்ணத் தமல னடிபோற்ற வருந்த லென்றே
யுண்ணற் கரிய பெருநஞ்சினை யுண்டு காத்துக்
கண்ணற்கு மேனை யவர்க்கும்மிவை கட்டு ரைப்பான்.

(இ-ள்.) அவர்கள் சிவபெருமானது திருக்கயிலைமலையை யடைந்து செந்தீவண்ணராகிய அவ்வெம்பெருமானது திருவடிகளைத் துதிக்கவும், அவர் இத்தேவர்களை நோக்கி வருந்தாதீர்களென்று கூறிப் பிறரா லுண்ணுதற்கரிய மிக்க விஷத்தினையுண்டு அவ்வாபத்தினின்று மிரக்ஷித்துத் திருமாலாதி தேவர்களைப் பார்த்து இவ்வாறு கட்டளையிடுகின்றனர்.—எ-று. (உ)

இன்னுங் கடைமி னமுதம் மெழுமென்று கூற
வந்நின் றவர்பாற் கடலின்க ணடைந்து முன்போற்
பின்னுங் கடைந்தா ரிபமாமுகப் பிள்ளை தன்னை
முன்னம் வழிபட் டிலர்வந்து முடிவு தோரார்.

(இ-ள்.) இன்னமுங் கடையுங்கள் அமுதமுண்டாகுமென்று திருவாய்மலர்ந்தருளவும், அங்கு நின்ற தேவர்கள் பாற்கடலை யடைந்து முன்னம் விநாயகக்கடவுளைப் பூசிக்காதவர்களாய், வந்து முடிவதை யுணராமல் பழயபடியே பின்னுங் கடைந்தார்கள்.—எ-று. (௩)

என்னு யகற்கு வழிபா டியற்றாத நீராற்
கொன்னார் கடலி னடுமேத்தங் குலைந்து வீழ்ந்து
பன்னாகர் வைகு மிடஞ்செல்லவப் பான்மை நோக்கி
யன்னானை யர்ச்சித் தனரச்சுத ணாதி யானோர்.

(இ-ள்.) எமது விநாயகப்பெருமானைப் பூசிக்காததன்மையினால் வலிமைமிக்க அக்கடலின் நடுவில் மத்தானது சாய்ந்து விழுந்து பாதலலோகத்திற் செல்லுதலும், அத்தன்மையைக் கண்டு திருமால் முதலிய தேவர்கள் அவ்விநாயகக்கடவுளைப் பூசித்தார்கள்.—எ-று. (௪)

ஆரா தனைசெய் துழி மந்தர மாதி மைந்தன்
பேரா வருளாற் பிலநின்று பெயர்ந்து முன்போல்
வாரா நிலைபெற் றிடலோடு மகிழ்ந்து போற்றிக்
காரார் திருமான் முதலோர் கடலைக் கடைந்தார்.

(இ-ள்.) பூசைசெய்தவுடனே சிவகுமாரராகிய விநாயகக்கடவுளது நீங்காத திருவருளினால் அம்மத்தானது பாதலத்தினின்றுங் கிளம்பிப் பழயபடியே வந்து நிலைபெற்று நிற்றலும், கரிய நிறம்பொருந்திய திருமால் முதலிய தேவர்கள் சந்தோஷித்துத் துதித்துக் கடலைக் கடைந்தார்கள்.—எ-று. (௫)

கடைகின் றுழிச் செம்மதி யாமெனக் காமர் செம்பொ
னடைகின்ற கும்பத் தெழுந்திட்ட தமுத முங்கண்
மிடைகின்ற தொல்லைச் சுரர்தானவர் யாரும் வெஃகி
யுடைகின்ற வேலை யெனவார்த்தன ரொல்லை சூழ்ந்தார்.

(இ-ள்.) அவ்வாறு கடைந்தபொழுது செவ்விய சந்திரனென்று சொல்லும்படி அழகிய செம்பொன் மயமான கும்பத்தினிடத்தில் அமுதந் தோன்றியது. உடனே அவ்விடத்தில் நெருங்கியிருந்த தேவாசுரர்கள் முதலிய யாவர்களும் விருப்பமுடையவர்களாய் உடைகின்ற கடலைப்போல இரைந்துகொண்டு விரைவாகவந்து சூழ்ந்தார்கள்.—எ-று. (௬)

எம்மா லிதுவந் துளதா லெமக்கேயி தென்றே
தம்மா சையினாற் சுரர்தானவர் தம்மின் மாறாய்த்
தெம்மா னமுட்ன் பொரவுன்னலுந் தீர்வு நோக்கி
யம்மால் விரைவி னொருமோகினி யாயி னானே.

(இ-ள்.) எங்களால் இவ் வமுதந் தோன்றினமையால் இது எங்களுக்கேயென்று தங்க ளாசையினால் தேவாசுரர்கள் தங்களுக்குள் மாறுபட்டுச் சத்துருத்தன்மையாய்ப் போர்செய்யவிரும்பவும், அப் போரினை நீக்கக் கருதி விரைவாகத் திருமால் ஒரு மோகினிவடிவங் கொண்டனர்.—எ-று. (௭)

மூலம் பிறந்த விடம்போ லழன்மூண் டிடாம
னீலம் பிறந்து பிறரச்சுற நேர்ந்தி டாமன்
ஞாலம் பிறந்தோர் சுரர்தானவர் நச்ச வாங்கோ
ராலம் பிறந்த தெனமோகினி யாகி நின்றான்.

(இ-ள்.) முன்னே தோன்றிய விஷத்தைப்போல அக்கினியாக மூளாமலும் நீலநிறமாகப் பிறந்து பிறர் அஞ்சும்படி நேராமலும், மனுஷ்ய தேவாசுரர்கள் விரும்பும்படி இங்கொரு விஷம் பிறந்ததென்று சொல்லும்வண்ணம் திருமால் ஒரு மோகினியாக நின்றனர்.—எ-று. (௮)

சேணு ருலகிற் புவிதன்னிற் றிசையி லெங்குங்
காணு தவப்பெண் ணுருக்கண்டனர் காதல் கைமிக்
கூணு ரமுதந் தனைவிட்டு முன்னொன் று கண்டோர்
மாணு கியபல் பொருள்கண்டென வந்து சூழ்ந்தார்.

(இ-ள்.) வானத்திற் பொருந்திய சொர்க்கத்திலும் பூமியிலும், திக்குக்களிலும் மற்றெவ்விடங்களிலும் பார்த்தற் கருமையாயுள்ள அம் மோகினி வடிவத்தைப் பார்த்த அவர்கள் ஆசை யதிகரித்து, உண்ணுதற்குரிய அமுதத்தைக் கைவிட்டு முன்னே ஒரு அருமையான பொருளைக் கண்டவர்கள் மாட்சிமை தங்கிய பல பொருள்களைக் கண்டாற்போல வந்து சூழ்ந்துசொண்டார்கள்.—எ-று. (௯)

மெய்த்தா மரையே முதலாய விசிக நான்கு
முய்த்தான் மதவே ளதுகாலை யுலப்பில் காமப்
பித்தா யுணர்வு பிழையாகிப் பெரிது மாலா
யத்தா ருகமா முனிவோரினு மார்வ மிக்கார்.

(இ-ள்.) அச்சமயத்தில் மன்மதன் மெய்ம்மையாகிய தாமரைமுதலிய நான்குபாணங்களையும் விட்டனன். உடனே அவர்கள் கெடாத காமவிகாரங்கொண்டு அறிவுமயங்கி மிக்க மயக்கங்கொண்டு அந்தத் தாருகவனத்து இருடிகளைப் பார்க்கிலும் ஆசை யதிகரித்தவரானார்கள்.—எ-று. (௧௧)

எண்ணு வவுணர் தொகையல்லதை யெந்தை மாய
முண்ணாடு வானோர் களும்பெண்மய லுற்று நின்றார்
மண்ணாசை தன்னிற் பொருளாசையின் மாய வாழ்க்கைப்
பெண்ணாசை நீங்க லெளிதோ பெரியோர் தமக்கும்.

(இ-ள்.) அளவற்ற அசுரர்கூட்டங்க ளெல்லாமலும், எமதாண்டவரது மாயையை மனத்தில் நினைக்கின்றவர்களாகிய தேவர்களும் பெண்ணாசைகொண்டு நின்றார்கள்; பெரியோர்களுக்கும் மண்ணாசையிலும் பொன்னாசையிலும் கொடிதாகிய மாயவாழ்வினையுடைய பெண்ணாசையானது நீங்குதல் எளிதாகுமோ.—எ-று. (௧௨)

பூண்டுற்ற கொங்கைப் பொலன்மோகினி யான புத்தே
ளாண்டுற் றவர்தங் களைநோக்கி யமரை நீங்கு
மீண்டுற் றனன்யா னமுதும் முளதேது நீவிர்
வேண்டுற்ற தும்பா லுறக்கொண்மின் விரைவி னென்றான்.

(இ-ள்.) ஆபரணங்கள் நெருங்கிய ஸ்தனங்களையுடைய மோகினியாகிய திருமால் அங்குள்ளவர்களைப் பார்த்து நீங்கள் சண்டையை விடுங்கள்; யானும் இங்குவந்தேன்; அமுதமு மிங்கிருக்கின்றது; இவ்விரண்டில் நீங்கள் எதனை விரும்புகிறீர்களோ அதனை விரைவி லெடுத்துக்கொள்ளுங்கள்.—எ-று. (௧௨)

மாலா னவனங் கதுகூற மனந்திரிந்து
நோலா மையினு லிறக்கின்றவர் நோக்கி யெங்கள்
பாலா வதுநீ யெனமுன்வரும் பான்மை நாடி
மேலா மமுதே யெமக்கென்றனர் விண்ணு ளோர்கள்.

(இ-ள்.) திருமால் இவ்வாறு கூறுதலும் தவஞ் செய்யாமையினால் இறக்கின்ற அசுரர்கள் மனமாறுபட்டு அம்மோகினியைப்பார்த்து எங்களுக்குச் சேரவேண்டியது நீயேயென்று கூறுதலும், தேவர்கள் முதலிலுண்டான தன்மையை நினைத்து எங்களுக்கு மேலாகிய அமுதமே வேண்டுமென்று கூறினார்கள்.—எ-று. (௧௩)

வானு டவர்நல் லமுதங்கொடு மாயை நீங்கிப்
போனு ரொருசா ரவரோடு பொருத தீயோர்
தேனுர் மொழிமோ கினியாகிய செங்கண் மாலை
யானு விருப்பிற் கொடுபோயின ராங்கொர் சாரில்.

(இ-ள்.) மயக்கமொழிந்த தேவர்கள் நல்ல அமுதத்தை யெடுத்துக்கொண்டு ஒருபுறத்திற் சென்ருர்கள்; அவர்களோடு சண்டையிட்டுநின்ற அசுரர்கள் தேன்போலுஞ் சொல்லினையுடைய மோகினியாகிய திருமாலை அங்கு ஒரு புறத்தில் நீங்காத விருப்பத்துடன் கொண்டு சென்ருர்கள்.—எ-று. (கச)

கொண்டே கியதா னவர்தங்கள் குழுவை நோக்கித்
தண்டேன் மலர்ப்பாயலி னென்னைத் தழுவ வல்லா
னுண்டே யிதனி லொருவீர னுவனை யின்னங்
கண்டே னிலையென் றனன் பெண்ணுருக் கொண்ட கள்வன்.

(இ-ள்.) அவ்வாறு மோகினியை யழைத்துக்கொண்டு சென்ற அசுரர்களாகிய கூட்டத்தைப் பார்த்துப் பெண் வடிவங்கொண்டு நின்ற திருமால் குளிர்ந்த தேன்பொருந்திய புஷ்பசயனத்தில் என்னைத் தழுவக்கூடிய ஒரு வீரன் இந்தக் கூட்டத்தில் ஒருவ னுண்டன்ரே அவனை யான் இன்னுங் கண்டிலேனென்று கூறினர்.

ஈரு மவுணர் பலரும்மிது கேட்டெ னக்கு
மாரு யொருவ ரிலையாரினும் வன்மை பெற்றேன்
வீரு கியவீ ரனும்யானென வீற்று வீற்றுக்
கூரு வெனையே புணரொன்று குழீஇயி ஞரோ.

(இ-ள்.) இறக்கப்போகின்ற பல அசுரர்களும் அவ்வார்த்தையைக் கேட்டு எனக்குச் சமானமானவர்கள் யாருங் கிடையாது; யானே யாவரினும் பலசாலி; இறுமாப்பினையுடைய வீரனும் யானே யென்று அவரவர்களுங் கூறிக்கொண்டு என்னையே தழுவக்கடவையென்று கூறினர்கள்.—எ-று. (கரு)

கொம்மைத் துணைமென் முலையண்ணலைக் கூட யாரும்
வெம்மைப் படலா லிகல்கொண்டனர் வேறு வேறு
தம்மிற் பொருது முடிந்தார் கிளைதம்மி லுற்ற
செம்மைக் கனலான் முடிவுற்றிடுஞ் செய்கை யேபோல்.

(இ-ள்.) பருத்த மெல்லிய இரண்டு ஸ்தனங்களையுடைய மோகினியாகிய திருமாலைத் தழுவுதற்கு யாவருந் துரிதப்பட்டமையால் விரோதங்கொண்டு வேறு வேருகத் தங்களுக்குள்ளே போர்செய்து, மூங்கில்கள் தங்களிடத்திலேயே தோன்றிய செந்தீயினுல் எரிந்தழியுந் தன்மைபோல அழிந்தார்கள்.—எ-று. (கஎ)

அன்னுர் தொகையி லிருவோரரி மாயை யுன்னி
யென்னு மிவரோ டிறக்கின்றன மென்று நீங்கித்
தொன்னு ளுருவந் தனைமாற்றிச் சுரர்கள் போலாய்ப்
பொன்னு டவர்தங் குழுவோடு புகுந்து நின்ருர்.

(இ-ள்.) அவ்வசுரர் கூட்டத்திலிருவர்கள் திருமாலினது மாயையை யுணர்ந்து நாமெதற்காக இவர்களோடு போர் செய்திறக்கின்ரேமென்று அவ்விடத்தைவிட்டு விலகிப் பழைய அசுரர் வடிவத்தை யொழித்துத் தேவர்கள்போல வடிவங்கொண்டு தேவர் கூட்டத்துடன் கலந்திருந்தார்கள்.—எ-று. (கஅ)

மாண்டா ரவுண ரதுநோக்கி வரம்பின் மாயம்
பூண்டாரும் வெஃக மடமாதெனப் போந்த கள்வன்
மீண்டா னமரர் பலரும் விருப்புற் றுமேவ
வீண்டாழி தன்னி லமுதந்தனை யீத லுற்றான்.

(இ-ள்.) அசுரர்களனைவரு மிறந்தார்கள்; அதனைப் பார்த்து அளவற்ற மாயையைக்கொண்டு யாவரும் விரும்பும்படி மோகினியாக வந்த திருமால் திரும்பிவந்து தேவர்கள் பலரும் விருப்பத்துடனிருக்க, இவ்விடத்திற் கடலில் தோன்றிய அமுதத்தைப் பகிர்ந்துகொடுக்கத் தொடங்கினார்.—எ-று. (௧௯)

ஈயும் பொழுதி னிமையோர்க ளினத்தி னூடு
போயங் கிருந்த விருகள்வரும் பொற்பு மிக்க
மாயன் பகிரு மமிர்தந்தனை மந்தி ரத்தா
லாயும் படிகொண் டிலர்வல்லையி னார்த லுற்றார்.

(இ-ள்.) அவ்வாறு பகிர்ந்துகொடுக்கும்பொழுது தேவர் கூட்டத்துடன் கலந்து சென்று அங்கிருந்த இரண்டு திருடர்களும் அழகிற்சிறந்த திருமால் பகிர்ந்துகொடுக்கின்ற அமுதத்தை மந்திரத்தைக்கொண்டு கிரமப்படி பூசை செய்துகொள்ளாமல் விரைவாகப் புசித்தார்கள்.—எ-று. (௨0)

தண்டா மரைக்குப் பகைநண்பெனச் சாரு நீரார்
கண்டார் புடையுற் றவரிங்கிவர் கள்வ ரேயா
முண்டா ரமுதங் கடிதென் றுளத்துன்னி யங்கண்
விண்டா னவற்குக் குறிப்பால் விழிகாட்டி னரால்.

(இ-ள்.) குளிர்ந்த தாமரைக்குப் பகைவனும் நண்பனுமாக வருந்தன்மையினையுடையவர்களாகிய சந்திரசூரியர்கள் அதனைப் பார்த்தவர்களாய்ப் பக்கத்திலிருக்கின்ற இவர்கள் திருடர்களேயாம்; அதனாலேயே விரைவாக அமுதத்தை யுண்டனரென்று தங்களுக்குள் நினைத்து அவ்விடத்தில் நின்ற திருமாலுக்குத் தங்கள் கண்களால் குறிப்பாகக் காட்டினார்கள்.—எ-று. (௨௧)

காட்டுற் றிடலு மரிநோக்கியிக் கள்வ ரேயோ
வீட்டுற்ற வானோ ருடனுண்குவ ரென்று தன்கை
நீட்டுற் றிடுசட் டுவங்கொண்டு நிருதர் சென்னி
வீட்டிச் சுரருக் கமுதூட்டி விருந்து செய்தான்.

(இ-ள்.) அவ்வாறு காட்டுதலும், திருமால் பார்த்து இந்தத் திருடர்களோ தேவர்களுடனிருந்து அமுதம் புசிப்பவர்களென்று தமது கரத்திலிருந்த நீளம்பொருந்திய சட்டுவத்தினால் அவ்வசுரர்களது தலைகளைவெட்டித் தேவர்களுக்கு அமுதமூட்டி விருந்து செய்தனர்.—எ-று. (௨௨)

அண்டத் தவர்முன் னருந்துற்ற வமுத மன்னார்
கண்டத் திடையே வருமுன்ன துகண்டு மாயன்
றுண்டித்த சென்னி யழிவற்ற துணிந்த யாக்கை
முண்டத் துடனே துணிபட்டு முடிந்த வன்றே.

(இ-ள்.) தேவர்களுக் கெதிரிலே உண்ட அமுதமானது அவ்வசுரர்களது கண்டத்தின்கண் வருவதற்கு முன்னே அதனைப் பார்த்துத் திருமால் தமது சட்டுவத்தினால் வெட்டிய தலைகள் கெடாதிருந்தன. வெட்டுப்பட்ட தேகங்கள் முண்டத்துடன் வெட்டுப்பட்டு அழிந்தன.—எ-று. (௨௩)

மாளாத சென்னி யுடைத்தானவர் மாண்பு நோக்கி
நீளா ரமுதுண்டவர் விண்ணிடை நிற்ப வொன்னுத்
தாளா லுலக மளந்தோ னவர்தங் களுக்குக்
கோளா நிலைமை யிறையோ னருள்கொண்டு நல்க.

(இ-ள்.) அழியாத சிரத்தினையுடைய அவ்வசுரர்களது மாட்சிமையை யுணர்ந்து மிக்க அமுதத்தை யுண்டவர்கள் சொர்க்கத்தி லிருப்பார்களென்று திருவடியினால் உலகத்தை யளந்த திருமால் சிவபெருமானது திருவருளைக்கொண்டு அவ்வசுரர்களுக்குக் கிரகங்களாகிய பதவியைக் கொடுத்தருளவும்.—எ-று. (உச)

புன்னாக நாக மணிவா னடிபோற்றி நோற்றுச்
செந்நாக மோடு கருநாகத்தின் செய்கை பெற்றுப்
பின்னாக முன்னந் தமைக்காட்டிய பெற்றி யோரை
யந்நாக மீது மறைப்பா ரமுதுண்ட கள்வர்.

(இ-ள்.) அவ்வசுரர்கள் புன்னாகமலரையும் பாம்பையுமணிந்த சிவபெருமானது திருவடிகளைத் துதித்துத் தவஞ்செய்து செம்பாம்பு கரும்பாம்புகளின் வடிவத்தை யடைந்து அதன்பின்பு, முன்னே தங்களைத் திருமாலுக்குக் காட்டிக் கொடுத்த சந்திரசூரியர்களை அமுதத்தை யுண்ட அவ்விரண்டசுரர்களும் ஆகாயத்தில் நின்று மறைப்பார்கள்.—எ-று. (உரு)

வேறு.

கெழிய ராகுவுங் கேதுவு மேயென
மொழிய நின்ற முதற்பெயர் தாங்கியே
விழுமி தாகிய வெய்யவ னாதியா
மெழுவர் தம்மொ டிருவரு மீண்டினார்.

(இ-ள்.) இராகுகேதுக்களென்று சொல்லும்படிப் பொருந்திநின்ற முதற்பெயரைக்கொண்டு உயர்வுபொருந்திய சூரியன் முதலிய எழு கிரகங்களுடன் இவ்விருவர்களுஞ் சேர்ந்து நவக்கிரக நிலைமையைப் பெற்றார்கள்.—எ-று. (உசா)

ஈது நிற்கமுன் னின்னமு தந்தனை
யாத ரத்தொ டயின்றவிண் ணோர்தொழ
வோத வேலை யொருபுடை யாகவே
மாது ருக்கொண்ட மாதவன் வைகவே.

(இ-ள்.) இதிவ்வாறிருக்க முன்பு இனிய அமுதத்தை விருப்பத்துடனுண்ட தேவர்கள் வணங்கும்படிப் பாற்கடலி னொருபுறத்தில் மோகினி வடிவங்கொண்ட திருமால் இருக்கும்பொழுது.—எ-று. (உஎ)

நால்வ கைப்பட நண்ணிய சத்தியுண்
மாலு மாதலின் மற்றது காட்டுவா
னால கண்டத்த னச்சுத னச்சுறுங்
கோல மெய்திக் குறுகின னவ்விடை.

(இ-ள்.) காளகண்டராகிய சிவபெருமானது நால்வகையாகப் பொருந்திய சத்திகளுக்குள்ளே திருமாலும் ஒரு சத்தியாதலால் அதனைத் தெரிவிக்கும்பொருட்டு (அச்சிவபெருமான்) அத்திருமால் அஞ்சத்தக்க வடிவங்கொண்டு அவ்விடத்து வந்தருளினார்.—எ-று.

நால்வகைச் சத்திகளாவார், உமை - துர்க்கை - காடுகொள் - மால் - என்பவர் களேயாம். (௨அ)

தண்டு ழாய்முடி யான்றனி நாயகற்
கண்டு வெஃகக் கறைமிடற் றெம்பிரா
னுண்டெ மக்கு முனைப்புணர் காதனீ
கொண்ட வேட மினிதென்று கூறினன்.

(இ-ள்.) தண்ணிய துளவமாலையை யணிந்த திருமுடியினையுடைய திருமால் ஒப்பற்ற சிவபெருமானைப்பார்த்து விரும்ப, உடனே எமது சிவபெருமான் உன்னைப் புணரவேண்டிய விருப்பம் எமக்கு முள்ளது: நீ கொண்ட இம்மோகினிக் கோலம் நன்றென்று அருளிச்செய்தனர்.—எ-று. (௨௯)

ஆணி னீங்கிய வச்சுத னூற்றவு
நாணி யிவ்வுரு நல்கிய தன்மையாள்
காணி யாயுனைக் காதலித் தூற்றனள்
பேணி நிற்பதெ னென்னைப் பெருமநீ.

(இ-ள்.) ஆணுருவத்தை யொழித்துப் பெண்ணுருவ மடைந்துநின்ற திருமால் மிகவும் வெட்கங்கொண்டு அடியேனுக்கு இவ்வுருவத்தைத் தந்தருளிய உமாதேவியார் தேவரீரை நீங்காமல் பொருந்தியிருக்கின்றனர் ; எம்பெருமானே ! தேவரீர் என்னை விரும்பி நிற்பது யாதுகாரணம்.—எ-று. (௩0)

ஆதி காலத் தயன்செயன் முற்றிட
மாதை மேவிட வந்துனை வேண்டினங்
காத லோவன்று காரண னாகையின்
மீது சேர்தரும் வீரிய னல்லையோ.

(இ-ள்.) பிரதம மகாசிருஷ்டியில் பிரமனது சிருஷ்டித்தொழில் நிறைவேறும்பொருட்டு நாங்கள் தேவரீர் உமாதேவியாரைச் சேரும்படி வேண்டிக்கொண்டோம்; அக்காலத்தில் விருப்பமில்லாமல் அகிலகாரணராதலால் (உமாதேவியாரைச் சேராதுநின்ற) தேவரீர் ஊர்த்துவ இந்திரிய முடையரன்றோ.—எ-று. (௩௧)

நெற்றி யங்க ணிமல வுனக்கிகல்
பற்ற தில்லையெப் பான்மையர் கண்ணினு
மற்ற தாக வென் னுகந் தழுவுவா
னுற்ற காதலு முண்மைய தன்றரோ.

(இ-ள்.) நெற்றிக்கண்ணையுடைய எமதாண்டவரோ ! தேவரீருக்கு எத்தன்மையானவர்களிடத்திலும் விருப்பு வெறுப்புக் கிடையாது ; அங்ஙனமாக, அடியேனது வடிவத்தைத் தழுவுவதற்குண்டான ஆசையும் உண்மையானதன்று.—எ-று. ()

என்ன காரண மெண்ணிக்கொ லேகினை
யென்ன பான்மை யறிகில னெம்பிரா
னின்ன தாடலை நீயல்ல தேவரோ
பின்னை நாடி யறிவுறும் பெற்றியோர்.

(இ-ள்.) எமது பெருமானே! தேவரீர் யாதுகாரணத்தைக் கருதியோ இங்கு வந்தருளியது: அந்தக் காரணத்தை அடியேன் அறிந்தேனில்லை. சுவாமீ ! தேவரீரது திருவிளையாடலைத் தேவரீரேயன்றி வேறு யாவர் எண்ணி யறியத்தக்கவர்கள்.—எ-று.

அன்பி லாடவ ராடவ ரோடுசேர்ந்
தின்ப மெய்தி யிருந்தன ரில்லையான்
முன்பு கேட்டது மன்று முதல்வநீ
வன்பொ டென்னைப் புணர்வது மாட்சியோ.

(இ-ள்.) விருப்பத்துடன் புருடரைப் புருடர் சேர்ந்து இன்பமடைந்திருந்தவர்களில்லை; இவ்வாறு நடந்ததாக முன்னங் கேட்டதுமில்லை; ஆதலால் தேவரீர் பலாத்காரமாக அடியேனைப் புணர்வது மாட்சிமையாகுமோ. —எ-று. (கூச)

என்று மாய னிசைத்தலு மெம்பிரா
னன்று நீயு நமக்கொரு சத்திகா
ணன்று தாருகத் தந்தணர் பாங்குறச்
சென்ற போழ்தினுஞ் சேயிழை யாயினுய்.

(இ-ள்.) இவ்வாறு திருமால் கூறுதலும், சிவபெருமான் (அவரைப் பார்த்தருளி) மாலே! நீ நமக்கொரு சத்தியாகும்; முற்காலத்து யாம் தாருகாவனத்து முனிவர்களிடஞ் சென்றபொழுதும் நீ பெண்ணுருவங் கொண்டனை.—எ-று. (கூஇ)

முன்னை வேதன் முடிந்தனன் போதலு
முன்னொ டேவந் துவப்பொடு கூடினோம்
பின்ன ரிந்தப் பிரமனை யுந்தியா
லன்னை யாகி யளித்தனை யல்லையோ.

(இ-ள்.) முன்னிருந்த பிரமன் இறந்துபோதலும், நாம் உன்னை யடைந்து பிரியத்துடன் கூடினோம்; பின்னர் நீ இப்பொழுதிருக்கும் பிரமனை உந்தியின் வழியாய்த் தாயாகிப் பெற்றா யல்லையோ?—எ-று. (கூ௬)

ஆகை யாலுன் னணிநலந் துய்த்திட
வோகை யாலிவ ணுற்றனன் செல்கென
மாகை யாரப் பிடிப்ப வருதலும்
போகை யுன்னிப் பொருக்கென வோடினன்.

(இ-ள்.) ஆதலால் உன்னுடைய அழகிய இன்பத்தை யனுபவிக்கும்பொருட்டு மகிழ்ச்சியுடன் இங்கு வந்தனம்; நீ வரக்கடவையென்று திருமாலினது பெரிய கரத்தைப் பற்றும்படி வருதலும், அத்திருமால் நீங்கக் கருதி விரைவாக வோடினர்.

நாணி யோடிய நாரண னைப்பிறை
வேணி யண்ணல் விரைவுட னேகியே
பாணி யாலவன் பாணியைப் பற்றினன்
சேணி னின்று திசைமுகன் போற்றவே.

(இ-ள்.) வெட்கமுற்றோடிச் சென்ற திருமாலின் பின்னே சந்திரசேகரராகிய சிவபெருமான் விரைவாகச் சென்று ஆகாயத்தில் நின்ற பிரமன் துதிக்கும்படி தமது திருக்கரத்தினால் திருமாலினது கரத்தைப் பிடித்தனர்.—எ-று. (கூஅ)

பற்றி யேகிப் படிமிசை நாவலாற்
பெற்ற தீவிற் பெருங்கடற் சார்பினின்
மற்று நேரில் வடதிசை வைப்பினி
லுற்ற சாலத்தி னெண்ணிழ னண்ணினன்.

(இ-ள்.) கரத்தைப் பிடித்துக்கொண்டு சென்று, பூமியில் நாவன் மரத்தால் பேர்பெற்ற சம்புத்தீவிலுள்ள பெரியகடலின் கரையிலிருக்கின்ற ஒப்பற்ற வடபாரிசத்தில் பொருந்திய சாலவிருக்ஷத்தின் ஒள்ளிய நிழலை யடைந்தனர்.—எ-று. (௬௯)

நண்ணி யேதனி நாயக னவ்விடைப்
பெண்ணி னீர்மையைப் பெற்றிடு நாரண
னுண்ணெ கிழ்ந்து மயக்குற் றுருகியே
யெண்ணி லின்புறக் கூடின னென்பவே.

(இ-ள்.) சிவபெருமான் அவ்விடத்தடைந்து மோகினி வடிவங்கொண்ட திருமால் மனநெகிழ்ந்து மோகங்கொண்டு இளகி அளவற்ற இன்பமடையும்படிச் சேர்ந்தனர்.—எ-று. (௭௦)

மூன்று கண்ணன் முகுந்த னிருவரு
மேன்று கூடிய வெல்லையி லன்னவர்
கான்று மிழ்ந்த புனல்கண் டகியென
வான்ற தோர்நதி யாகிய கன்றதே.

(இ-ள்.) சிவபெருமானுந் திருமாலும் விரும்பிப் புணர்ந்தவிடத்தில் அவர்கள் கக்கியுமிழ்ந்த நீரானது கண்டகி யென்னும் பெயரினையுடைய பெரிய ஒரு நதியாக வோடியது.—எ-று. (௭௧)

அந்த நீரி னகம்புற மாழிக
டந்து வச்சிர தந்தி யெனப்படு
முந்துகீட முறைமுறை யாகவே
வந்து தோன்றின மாழையின் வண்ணமாய்.

(இ-ள்.) அந்தக் கண்டகிநதி நீரில் அகத்தும் புறத்துஞ் சக்கரரேகைகள் பொருந்தி வச்சிரதந்தி யென்று சொல்லப்பட்ட உயர்ந்த புழுக்கள் பொன்வண்ணமாய், வரிசைவரிசையாக உற்பத்தியாயின.—எ-று.

அன்னவர் என்பதை அத் திருமாலானவர் என்று கொள்ளினுமமையும். (௭௨)

ஆய மண்ணி லகங்கெழு பஞ்சர
மேயெ னத்தந் திருந்து சிலபகன்
மாயு மவ்வுயிர் மாய்ந்தபிற் கூடுக
டூய நேமிக் குறிகொடு தோன்றுமால்.

(இ-ள்.) அவ்வாற்றிலுள்ள மண்ணினை உள்ளே விளங்குகின்ற கூண்டாகக்கொண்டு சிலகாலமிருந்து அப்புழு உயிரிறந்தவுடனே அந்தக் கூண்டுகள் நல்ல சக்கரரேகைகளுடன் வெளிப்படும்.—எ-று. (௭௩)

நீர்த்த ரங்க நிரல்பட வீசியே
யார்த்தி ரங்கி யணைவுறு கண்டகித்
தீர்த்தி கைப்புனல் சென்றக் குடம்பைக
ளீர்த்து வந்திடு மிம்பர்கொண் டெய்தவே.

(இ-ள்.) அலைகளை வரிசையாக வீசிக்கொண்டு முழக்கங்காட்டி யாரவாரித்து வருகின்ற கண்டகிநதியின் வெள்ளமானது சென்று அப்புழுக்கூண்டுகளை இங்குக் கொண்டுவந்து சேர்க்கும்படி யடித்துக்கொண்டுவரும்.—எ-று. (௭௪)

அன்ன கீட மமர்ந்த குடம்பையை
யிந்நி லத்தர்கொண் டேகி யகத்துறை
பொன்னை வாங்கிப் பொறியினை நோக்கியே
யின்ன மூர்த்த மிஃதென நாடுவார்.

(இ-ள்.) புழுக்களிருந்த அக்கூடுகளை உலகத்துள்ளவர்கள் கொண்டு சென்று அவற்றுள்ளிருக்கும் பொன்னை யெடுத்து முத்திரைகளைப் பார்த்து இஃது இந்த மூர்த்தமென்று நினைப்பார்கள்.—எ-று. (சரு)

நாடி யேய்வை நாரண னாகவே
கூடு மன்பிற் குவலயத் தேசிலர்
தேடி யர்ச்சனை செய்வ ரதன்பெயர்
கேடில் சாளக் கிராமம தென்பரால்.

(இ-ள்.) அவற்றை யுற்றுநோக்கித் திருமாலாகவே நிலைபெற்ற அன்புடன் உலகத்துள்ள சிலர் சம்பாதித்துப் பூசிப்பார்கள்; அவர்கள் இதன்பெயரைக் குற்றமற்ற சாளக்கிராமமென்று கூறுவார்கள்.—எ-று. (சசு)

மாலு மெந்தையு மாண்பொடு கூடியே
சால மேவு தனிநக ரேயிதன்
மூல கார ணமாகையின் முந்தையோர்
மேலை நாம மதற்கு விதித்தனர்.

(இ-ள்.) திருமாலும் எமது சிவபெருமானும் மாட்சிமையோடு புணர்ந்திருந்த சாளக்கிரம க்ஷேத்திரமே இதற்கு உற்பத்திஸ்தானமாதலால் முன்னோர்கள் அதற்குச் சாளக்கிராமமென்று பெயரிட்டார்கள்.—எ-று. (சஎ)

இந்த வண்ண மிருக்க முராரியு
மந்தி வண்ணத் தமலனு மாகியே
முந்து கூடி முயங்கிய வெல்லையில்
வந்த னன்னெமை வாழ்விக்கு மையனே.

(இ-ள்.) இஃதிவ்வாறிருக்க, திருமாலும் சிவபெருமானுமாக முன்பு சேர்ந்து புணர்ந்தவுடனே எம்மை வாழச்செய்கின்ற ஐயனார் பிறந்தனர்.—எ-று. (சஅ)

மைக்க ருங்கடன் மேனியும் வானுலாஞ்
செக்கர் வேணியுஞ் செண்டுறு கையுமா
யுக்கி ரத்துட னோர்மகன் சேர்தலு
முக்க ணெந்தை முயக்கினை நீங்கினன்.

(இ-ள்.) கருங்கடல்போன்றவடிவமும் செவ்வானம்போன்ற சடையும் செண்டேந்திய கரத்தினையுமுடையவராய் உக்கிரத்துடன் ஒரு புதல்வர் தோன்றுதலும் திரிநேத்திரராகிய எமது சிவபெருமான் அப்புணர்ச்சியினின்று நீங்கினார்.—எ-று.

அத்த குந்திரு மைந்தற் கரிகர
புத்தி ரன்னெனு நாமம் புனைந்துபின்
னொத்த பான்மை யுருத்திரர் தம்மொடும்
வைத்து மிக்க வரம்பல நல்கியே.

(இ-ள்.) அவ்வாறுகத் தோன்றிய சிறந்த புதல்வருக்கு அரிகரபுத்திரனென்னும் நாமகரணமிட்டுப் பின்பு தகுந்த தன்மையினையுடைய உருத்திர கூட்டத்திற் சேர்த்துச் சிறந்த அநேகவரங்களையளித்து.—எ-று. (௫0)

புவன மீந்து புவனத் திறையென
வவனை நல்கி யமரரு மாதவ
ரெவரு மேத்திடு மேற்றமு நல்கினன்
சிவன தின்னருள் செப்புதற் பாலதோ.

(இ-ள்.) ஒருபுவனத்தைக்கொடுத்து அந்தப்புவனத்திற்கு அரசாகச்செய்து, தேவர்களும் எல்லாமுனிவர்களுந் துதிக்கத்தக்க மேன்மையையுமளித்தருளினர்; இவ்வாறளித்தருளிய சிவபெருமானது இனிய திருவருளைப்பற்றிச் சொல்லமுடியுமோ?

மூச்ச கத்தை முழுதருண் மேனிகொண்
டச்சு தன்றொழ வச்சுதன் போற்றிட
மெச்சி யேயவ ருக்கு விடைகொடுத்
தெச்ச மில்சிவ னேகின னென்பவே.

(இ-ள்.) மூவுலகங்களையுங் காத்தருளுகின்ற வடிவத்துடன் திருமால் நின்று வணங்கவும், புதல்வராகிய அரிகரபுத்திரர் துதிக்கவும் மகிழ்கூர்ந்து அவர்களுக்கு விடையளித்து அழிவில்லாத சிவபெருமான் மறைந்தருளினர்.—எ-று. (௩௨)

நாய கன்செல நான்முகத் தோனைமுன்
றாயெ னத்தருந் தாமரைக் கண்ணினன்
சேய வைகுண்டஞ் சேர்ந்தன னையனும்
போயி னன்றன் புவனத் தரசினில்.

(இ-ள்.) சிவபெருமான் எழுந்தருளியவுடனே, முன்பு பிரமனை தாயாக விருந்துபெற்ற திருமால் உயர்ந்த வைகுண்டத்தையடைந்தனர்; அரிகரபுத்திரரும் தமது புவன அரசாட்சிக்குச் சென்றனர்.—எ-று. (௩௩)

அங்கண் மேவி யரிகர புத்திரன்
சங்கை யில்பெருஞ் சாரதர் தம்மொடு
மெங்கு மாகி யிருந்தெவ் வுலகையுங்
கங்கு லும்பக லெல்லையுங் காப்பனால்.

(இ-ள்.) அரிகரபுத்திரர் அவ்விடத்திலிருந்துகொண்டு சங்கையற்ற பெரிய பூதர்களுடனே எவ்வுலகங்களிலுஞ்சென்று, இரவும் பகலும் அவ்வுலகங்களனைத்தையுங் காத்தருளுவர்.—எ-று. (௩௪)

மண்ண கத்தரும் வானவ ரும்மல
ரண்ண லுந்தின மர்ச்சிக்கு நீர்மையான்
கண்ண னும்புக ழப்படு காட்சியா
னெண்ணி னங்கவ னுக்கெதி ரில்லையே.

(இ-ள்.) அவ்வரிகரபுத்திரர் நிலவுலகத்துள்ளவர்களும் தேவர்களும் பிரமனும் நாள்தோறும் பூசிக்கத்தக்க தன்மையினையுடையவர்; திருமாலும் புகழத்தக்க தன்மையினையுடையவர்; ஆராயுமிடத்தில் அவருக்கொப்பானவர்களில்லை.—எ-று.

அன்ன நீர்மையன் காவென்ன தன்பினு
னுன்னை வந்தினிக் காத்தரு ளுத்தம
னென்ன வேலொடு மிசைந்துநின் றுளரோ
பொன்னி னாடு தனைந்த புலோமசை.

(இ-ள்.) அத்தன்மையினையுடைய அரிகரபுத்திரரோ எனது அன்பினால் இனி யுன்னைவந்து காத்தருளுகின்ற உத்தமமொன்று கூறுதலும், அதனைக்கேட்டுச் சொர்க்கத்தை விட்டு வந்திருக்கின்ற இந்திராணியானவள் அதற்குச்சம்மதித்து நின்றனள்.

வேறு.

இந்திரன் மங்கை யிசைந்தது காணு
நந்தமர் கையனு நம்பனு நல்கு
மைந்தனை யுன்னி வழுத்துத லோடு
மந்தமி லாவெம தைய னறிந்தான்.

(இ-ள்.) இந்திரனானவன் இந்திராணி சம்மதித்ததை யுணர்ந்து அரியரர்கள் பெற்ற மகா சாத்தாவை நினைத்துத் துதித்தலும், அதனை முடிவில்லாத எமது அரிகர புத்திர ருணர்ந்தனர்.—எ-று. (௰௭)

காருறழ் வெய்ய களிற்றிடை யாகிப்
பாரிட ரெண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரண மூர்பவன் முன்னுற வந்தான்.

(இ-ள்.) மேகம்போன்ற கொடிய யானைமேலெழுந்தருளி, அநேகம் பூதவீரர்கள் அருகில் சூழ்ந்துவரவும், பூரணை புட்கலையென்னும் இரண்டு தேவிமார்கள் இருபுறத்திற் பொருந்திவரவும் இந்திரனுக்கெதிரில் வந்தனர்.—எ-று. (௰௮)

முன்னுற மேவலு மூவுல கோர்க்கு
மன்னவ னாகிய வாசவ னையன்
பொன்னடி தாழ்ந்து புகழ்ந்தன னிற்ப
வென்னிவண் வேண்டு மியம்புதி யென்றான்.

(இ-ள்.) அவ்வாறு எதிரில் வருதலும் திரிலோகாதிபனாகிய இந்திரன் அரிகர புத்திரரது பொன்மயமாகிய திருவடிகளை வணங்கித் துதித்து நிற்க, (அவர் இந்திரனே !) இங்கு உனக்கு யாதுவேண்டியது கூறக்கடவையென் றருளிச்செய்தனர்.

கேட்டலு மின்ன கிளத்தினன் மாயை
மாட்டுறு சூரன் வருத்துத லாற்பொன்
னாட்டினை விட்டன னானிவ ளோடுங்
காட்டுறு வேயென வேகர வுற்றே.

(இ-ள்.) அதனை இந்திரன் கேட்டவுடனே இவ்வார்த்தைகளைக் கூறுவான்; யான் மாயையினிடத்துண்டாகிய சூரபன்மன் துன்பப்படுத்துதலால் இவ்விந்திராணியுடன் விண்ணுலகத்தை விட்டுக் காட்டிலுள்ள மூங்கிலைப்போல மறைந்து.—எ-று.

நோற்றிவண் மேவின னேதகும் வானோ
ராற்றரி தாவவு ணன்செயு மின்னல்
சாற்றினர் வந்து தளர்ந்தன மெம்மைப்
போற்றுதி யென்று புலம்பின ரன்றே.

(இ-ள்.) இங்குத் தவஞ்செய்துகொண்டிருந்தேன் ; அப்பொழுது துன்பமடைந்த தேவர்கள் வந்து சகிக்கமுடியாதபடிச் சூரபன்மன் செய்கின்ற உபத்திரவங்களைக ச-றி எங்களைப் பாதுகாக்கக்கடவையென்று புலம்பினார்கள்.—எ-று. (௬௧)

தள்ளரும் வானவர் தம்மொடு முக்கண்
வள்ள றனக்கெம் வருத்த முரைக்க
வெள்ளி மலைக்கு விரைந்துசெல் கின்றே
னெள்ளரி தாகிய வில்லிணை வைத்தே.

(இ-ள்.) நீக்குதற்கரிய தேவர்களுடன் சிவபெருமானிடத்திற் சென்று எங்கள் வருத்தத்தை முறையிடும்படிக்குப் பழிப்பில்லாத இந்திராணியை இவ்விடத்தில் வைத்துவிட்டு வெள்ளிமலைக்கு விரைந்து செல்கின்றேன்.—எ-று. (௬௨)

தஞ்சமி லாதுத னித்திவ் வனத்தே
பஞ்சுறழ் செய்ய பதத்திவை வைத்தால்
வஞ்சகர் கண்டிடின் வெளவுவ ரென்றே
யஞ்சின ளுன்ற னடைக்கல மையா.

(இ-ள்.) ஆதரவின்றித் தனித்து இவ்வனத்தில் செம்பஞ்சுபோலுஞ் சிவந்த கால்களையுடைய இந்திராணியை வைத்தால் தன்னை அசுரர்கள் கண்டால் அபகரிப்பார்களென்று பயப்படுகின்றனள்; ஆதலால் ஐயனே! இவ்விந்திராணி உனதடைக்கலம்.—எ-று. (௬௩)

ஆத்த னமர்ந்த வகன்கிரி நண்ணி
வாய்த்திடு மிவ்விடை வந்திடு காறும்
பூத்திடு காமர் புலோமசை தன்னைக்
காத்தரு ளென்றிது கட்டுரை செய்ய.

(இ-ள்.) சிவபெருமானெழுந்தருளியிருக்கின்ற திருக்கயிலைமலைக்குச்சென்று இங்குத் திரும்பிவருமளவும் மிக்க அழகினையுடைய இந்திராணியைக் காத்தருள்வீராகவென்று இவ்வார்த்தைகளைக் கூறுதலும்.—எ-று. (௬௪)

மேதகு செண்டுளை வீர னிசைப்பா
னேதமு றுதநின் னேந்திழை தன்னைத்
தீதடை யாது சிறப்பொடு காப்ப
னீதனி யென்று நினைந்திடல் கண்டாய்.

(இ-ள்.) உயர்வுபொருந்திய செண்டாயுதத்தினையேந்திய ஐயனார் கூறுவார்: (இந்திரனே!) குற்றமற்ற உனது மனைவியைத் துன்பமடையாமல் சிறப்புடன் காப்பேன்; தனியே யிருக்கின்றாளென்று நீ நினையாதே.—எ-று. (௬௫)

இல்லுறு நங்கையை யிங்ஙனம் வைத்தே
யல்லுறழ் கண்ட னருங்கயி லைக்குச்
செல்லுதி யென்றருள் செய்து திரும்பித்
தொல்லையெம் மையனொர் சூழலி னுற்றான்.

(இ-ள்.) உனது மனைவியாகிய இந்திராணியை இங்குவைத்துவிட்டுக் காளகண்டராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுந் திருக்கயிலாயத்திற்குப் போகக்கடவையென்றருளிச்செய்து, அவ்விடத்தினின்றும் விரைவாகத்திரும்பி எமது ஐயனார் வேறோரிடத்தி லடைந்தனர்.—எ-று. (௬௬)

வாளமர் நீந்தி வயந்தனின் மிக்க
காளனெ னப்படு கட்டுரை யோனை
யாளுடை யண்ண லருட்கொடு நோக்கிக்
கேளிவை யென்று கிளத்திடு கின்றான்.

(இ-ள்.) வாட்போரில்வென்று வெற்றியிற் சிறந்துள்ள மகாகாளனென்று சொல்லப்பட்ட வீரனை அரிகரபுத்திரர் அருளோடுபோர்த்து இவற்றைக் கேட்கக்கடவையென்று அருளிச்செய்கின்றார்.—எ-று. (௬௭)

மூவரின் முந்திய மூர்த்திவ னைக்குப்
போவது முன்னினன் பொன்னகர் மன்னன்
றேவியி ருந்தன டுங்குவ ராமே
காவல்கொ ணீயெனக் கற்பனை செய்தான்.

(இ-ள்.) பொன்னுலகாதிபதியாகிய இந்திரன் மும்மூர்த்திகள் தலைவராகிய சிவபெருமானது திருக்கயிலாயமலைக்குப் போகக்கருதினன்; அவன் மனைவியாகிய இந்திராணி யிங்கிருக்கின்றனள்; அவளுக்கு ஒரு தீங்கும்வராமல் நீ காவல்செய்யக் கடவையென்று கட்டளையிட்டனர்.—எ-று. (௬௮)

மகாசாத்தாப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௪௬௭.

---

உ

முருகன்றுணை.

---

# இந்திரன் கயிலைசெல் படலம்.

அத்துணை தன்னி லருந்துணை யில்லான்
மெய்த்துணை யாகிய மின்னினை நோக்கி
யெய்த்திட லைய னளிக்குவ னீண்டே
சித்தம் வருந்தலெ னத்தெளி வித்தான்.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் இந்திரன் தனது உயிர்த்துணைவியாகிய இந்திராணியைப்பார்த்து வருந்தாதே; உன்னை ஐயனார் பாதுகாப்பார்; ஆதலால் இவ்விடத்தில் விசனப்படாமலிருக்கக்கடவையென்று இந்திராணியைத்தெளிவித்தனன்.-எ-று.

மாதினை யவ்விடை மன்னுற வைத்தே
பேதுறு வானவர் பேரவை நண்ணிப்
போதுமெ னக்கொடு போந்து விரைந்தே
நாத னகன்கிரி நண்ணின னன்றே.

(இ-ள்.) இந்திராணியை அவ்விடத்திலிருக்கும்படிச் செய்துவிட்டு வருத்த முற்றிருக்கின்ற தேவர் கூட்டத்தை யடைந்து வாருங்களென்றழைத்துக்கொண்டு போய் விரைவாகச் சிவபெருமானது திருக்கயிலையை யடைந்தனன்.—எ-று. (௨)

அந்தர வைப்பி லமர்ந்தவர் தம்மோ
டிந்திர னக்கயி லைக்கிரி யெய்தி
நந்திபி ரானுறை நன்கடை சேரா
வந்தனை செய்து வழுத்தின னின்றான்.

(இ-ள்.) சொர்க்கத்திலிருந்த தேவர்களுடன் இந்திரன் திருக்கயிலையை யடைந்து திருநந்திதேவரிருக்கு முதற்றிருவாயிலிற் சென்று வணங்கித் துதித்து நின்றனன்.—எ-று. (௩)

நிற்றலும் வந்ததெ னீபுக லென்னச்
சொற்றன னங்கது தொன்மையி னுடி
யிற்றில கொல்லு னிருந்துய ரென்று
நற்றவர் காணுறு நந்தி யுரைப்பான்.

(இ-ள்.) அவ்வாறு நிற்கவும் (திருநந்திதேவர் இந்திரனே!) நீ வந்த காரணம் யாது கூறென்று வினவுதலும், இந்திரன் தான் வந்த வரலாறுகளனைத்தையு முரைத்தனன். அதனை முறையே கேட்டு நீ யடைந்துள்ள பெருந்துன்பம் இன்னும் நீங்கவில்லையோவென்று நல்ல தவத்தினர்களால் காணப்பட்ட திருநந்திதேவர் அருளிச்செய்வாராயினர்.—எ-று. (௪)

நால்வ ருணர்ந்திட நாயகன் ஞான
மூலவி யோக முதற்பொருள் காட்டி
மேல விருந்தனன் யாவரு மேகக்
காலமி தன்றென வேகழ றுற்றான்.

(இ-ள்.) சிவபெருமான் சனகாதி நான்கு முனிவர்களுமுணரும்படி ஞானாதாரமாக விளங்குகின்ற யோகமுதற்பொருளான சின்முத்திரையைக் காட்டிக்கொண்டு நிலைபெற்றெழுந்தருளியிருக்கின்றனர்; ஆதலால் யாவரும் உள்ளே செல்லுதற்கு இது காலமன்று என்றருளிச்செய்தனர்.—எ-று. (௫)

தேறுத வஞ்செய்சி லாதனன் மைந்தன்
கூறிய வாய்மை குறிக்கொள வோர்ந்து
மாறியி ருந்திடு வல்விட மற்று
மேறிய தென்ன விடர்க்கட லுற்றான்.

(இ-ள்.) உறுதியான தவத்தைச்செய்த சிலாதமுனிவர் புத்திரராகிய திருநந்திதேவரருளிச்செய்த உறுதிமொழியைச் சிந்தித்து இந்திரன் இறங்கிய விஷமானது மீண்டுமேறினாற்போலத் துன்பக்கடலில் மூழ்கினான்.—எ-று. (௬)

இம்பரின் வாசவ னின்ன லுழப்ப
வும்பர்க டாமு முடன்றளர் வுற்றார்
தம்பம தான தடம்புணை தாழ
வம்புதி தன்னி லழுந்திடு வார்போல்.

(இ-ள்.) பற்றுக்கோடாயுள்ள தெப்பமானது மூழ்கவும் கடலிலழுந்துகின்றவர்களைப்போல, இப்பொழுது இந்திரன் துன்பமடைந்தவுடனே அவனையாதாரமாக வடைந்துள்ள தேவர்களும் அவ்விந்திரனுடன் வருந்தினார்கள்.—எ-று. (எ)

செல்ல லுழந்துதி யங்கிய தேவ
ரொல்லவர் தம்மொடு மிந்திர னென்போ
னல்லருள் செய்திடு நந்திபி ரான்றன்
மெல்லடி போற்றி விளம்புதல் செய்வான்.

(இ-ள்.) வருந்தித் தியங்குகின்ற தேவர்களுடன் இந்திரன் நல்லருளைச் செய்கின்ற திருநந்திதேவரது மெல்லிய திருவடிகளைவணங்கிச் சொல்லத்தொடங்கினான்.—எ-று. (அ)

தூய்நெறி நீங்கிய சூரபன் மாவுக்
காயுவொ டாற்ற லளப்பில செல்வ
மேயவை யாவு மிருந்தவ நீரா
ஞயகன் முந்துற நல்கின னன்றே.

(இ-ள்.) நல்லொழுக்கமில்லாத சூரபன்மனுக்கு அளவற்ற ஆயுளும் அளவற்றசெல்வமும் இன்னும் மற்றவைகளும் அவன்செய்த பெருந்தவத்திற்காகச் சிவபெருமான் முன்பு கொடுத்தருளினர்.—எ-று. (௯)

நாங்கள் புரிந்திடு நல்வினை நீங்கித்
தீங்கு குறித்தெழு தீவினை சேர
வாங்கவ னேவலி னல்லலு ழந்தே
மீங்கிது வும்மிறை வன்செய லையா.

(இ-ள்.) நாங்கள்செய்துள்ள புண்ணியமொழிந்து பொல்லாங்கை யுத்தேசித்து வராநின்ற பாவமானது எங்களையடையவும், அச்சூரபன்மனது ஏவற்றொழிலால் துன்பமடைந்தோம். ஐயனே! இதுவும் சிவபெருமானது செயலேயாகும்.

சூன ரியற்கை சுரர்க்கருள் செய்யு
மாநிரு தர்க்கிறை வன்புரி துன்ப
மான துணர்த்தி யடைந்தன மென்னிற்
றூனது போழ்து தவிர்த்திடல் வேண்டும்.

(இ-ள்.) மாமிசம் விற்பவர்களது தன்மையைச்செய்யும்படி தேவர்களுக்குக் கட்டளையிடுகின்ற கொடிய அசுரர்கள் தலைவனாகிய சூரபன்மன் செய்கின்ற துன்பத்தை முறையிட்டுச்சென்றேமாயின், சிவபெருமான் உடனே அவனை யழிக்கவேண்டும்.—எ-று. (௧௧)

நீர்த்திரை போல நெறிப்பட யாங்கொ
ளார்த்திய கற்றி யறந்தவிர் சூரன்
மூர்த்திகொ ளாவியு மொய்ம்பொடு சீருந்
தீர்த்திடு கின்ற திறஞ்செயல் வேண்டும்.

(இ-ள்.) கடலலையைப்போல நாங்களலைந்துகொண்டிருக்கின்ற சஞ்சலத்தை நீக்கி நீதியற்ற சூரபன்மனது உயிரையும் வல்லமையையும், செல்வத்தையும் அழிக்குந்தன்மையைச் செய்யவேண்டும்.—எ-று. (௧உ)

அன்னது செய்திடி னன்பறு சூரன்
முன்ன ரருந்தவ முற்றிய காலைச்
சொன்னவ ரந்தொலை யுந்தொலை வானற்
பின்ன ரவன்சொல் பிழைத்தன னென்பார்.

(இ-ள்.) அவ்வாறு செய்தால் இரக்கமற்ற சூரபன்மன் முன்பு தவஞ்செய்த காலத்தில் அவனுக்குக்கொடுத்த வரங்களழியும்; அவ்வரமழிந்தால் பின்பு (உலகிலுள்ளவர்கள்) சிவபெருமான் சொல் தவறினனென்று கூறுவார்கள்.—எ-று. (௧௩)

அல்லதெம் மல்ல லகற்றில னென்னி
னல்லரு ளுக்கொரு நாயக னென்றே
யெல்லவ ரும்புக ழேற்றமு மின்றுந்
தொல்லை மறைப்படி யுந்தொலை வாமால்.

(இ-ள்.) அதுவன்றி எமது துன்பத்தை நீக்காதிருப்பராயின், நல்ல திருவருளுக்கு முதல்வரென்று யாவரும் புகழ்கின்ற உயர்வுமில்லாதுபோகும்; பழய வேதமுறைமைகளுங் கெட்டுப்போம்.—எ-று. (கச)

ஆகையி னிவ்வகை யாய்ந்தெமை யாளும்
பாக நினைந்து பரம்பொரு ளானோன்
மோகமி லார்பெற மோனக ஞான
யோகியல் காட்டி யுறைந்துள னேகொல்.

(இ-ள்.) ஆதலால் இம்முறைமைகளையுணர்ந்து எங்களை இரக்ஷிக்கவேண்டிய காலத்தையுமறிந்து பரம்பொருளாகிய சிவபெருமான் மோகமற்ற சனகாதியர் பெறும்பொருட்டு மௌனநிலையாகிய ஞானயோகவியலினைக் காட்டிக்கொண்டெழுந்தருளியிருக்கின்றனரோ.—எ-று. (கரு)

ஈங்கிவ னல்லதை யித்திற மாகுந்
தீங்கினை நீக்கவொர் தேவரு மில்லை
யோங்கிய மாலவ ரோடமர் செய்தே
யாங்கவ னேமியு மற்றன னையா.

(இ-ள்.) ஐயனே! இச்சிவபெருமானையன்றி இத்தன்மையான ஆபத்தை நீக்கக்கூடியவர்கள் வேறேயொரு தேவருமில்லை; உயர்ந்த திருமால் அவர்களோடு பகைத்துப் போர்செய்து தமது சக்கரத்தையு மிழந்தனர்.—எ-று. (கசு)

மூவரின் முந்திய மூர்த்திசெ யற்கை
யாவது மீதென வண்டரும் யானும்
பூவுல கத்திடை போந்திடி னின்னே
தீவினை யார்சிறை செய்வது திண்ணம்.

(இ-ள்.) திரிமூர்த்திகள் தலைவராகிய சிவபெருமானது திருவருட்செயலும் இவ்வாறுயிற்றென்று தேவர்களும் யானும் பூவுலகத்திற் செல்வோமாயின் இன்றைக்கே அசுரர்கள் எங்களைப்பிடித்துச் சிறைசெய்வது நிச்சயம்.—எ-று. (கஎ)

ஆதலி னுயிடை யண்டரும் யானும்
போதலி லைப்புனி தன்கழல் காணத்
தீதறு வேலை தனைத்தெரி வுற்றுன்
வாய்தலி னோர்புடை வைகுவ னென்றான்.

(இ-ள்.) ஆதலால் அவ்விடத்தில் தேவர்களும் யானும் போகமாட்டோம்; சிவபெருமானது திருவடிகளைத் தெரிசித்தற்குச் சமயம்பார்த்துகொண்டு தேவரீரது முதற்றிருவாயிலி னொருபுறத்திலிருப்பேனென்று கூறினான்.—எ-று. (கஅ)

பேர்பெறு நந்திபி ரானது கேளா
வார்வுறு மின்ன லகன்றிவ ணீவிர்
சேர்வுறு மென்றருள் செய்திட வாங்கே
யோர்புடை வாசவ னண்டரொ டுற்றான்.

(இ-ள்.) பெருமைபொருந்திய திருநந்திதேவர் அவ்வார்த்தைகளைக்கேட்டருளி நீங்கள் அடைந்த துன்பத்தினின்று நீங்கி இவ்விடத்திலேயே யிருங்களென்று திருவருள்செய்யவும், அங்கு ஒருபுறத்தில் இந்திரன் தேவர்களுடனிருந்தனன்.—எ-று.

வானவர் கோனரன் மால்வரை தன்னிற்
போனது முற்றது மீண்டு புகன்ருஞ்
மானபு லோமசை செய்கையு மல்லா
வேனையர் செய்கையும் யாவு மிசைப்பாம்.

(இ-ள்.) இந்திரன் திருக்கயிலைக்குச் சென்றமையும் அங்கிருந்தமையும் இங்குக் கூறினேம். இனி, பெருமைபொருந்திய இந்திராணியின் செய்கையும் மற்றவர்களது செய்கைகளுமாகிய வனைத்தையுங்கூறுவோம்.—எ-று. (உ௦)

இந்திரன்கயிலைசெல்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - கடுகஎ.

---

உ

முருகன்றுணை.

---

# அசமுகிப்படலம்.

நீங்காதுறை தனிநாயக னெடுமாலய னுணரா
வோங்காரமு தற்பண்ணவ னுறையுங்கிரி செல்லப்
பாங்காயணங் கினர்போற்றிடப் பயில்காழிவ னத்திற்
பூங்காவனந் தனிமேலசசி யிருந்தேதவம் புரிந்தாள்.

(இ-ள்.) திருமால் பிரமனென்னு மிருவருங் காண்டற்கரிய பிரணவத்தின் முதற்பொருளாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுந் திருக்கயிலாயத்திற் செல்லும்படித் தன்னை நீங்காதிருக்கின்ற தலைவனுகிய இந்திரன் செல்லவும், இந்திராணியானவள் தன்னருகிலிருந்த தேவமாதைகள் துதிக்கும்படி காழிவனத்திற் பொருந்திய பூங்காவிலே தவஞ்செய்திருந்தனள்.—எ-று. (க)

சேணுடிபு ரக்கின்றவன் சிந்தித்திடு கின்ற
மாணுகிய வினைமுற்றுற வருவான்றவம் புரிவாள்
காணுளவன் வருகின்றது காலம்பல தொலைய
நாணுடொறுந் தன்மேனியி னலமாழ்குற மெலிவாள்.

(இ-ள்.) விண்ணுலகத்தையாளுகின்ற இந்திரன் நினைத்துச்சென்ற மாட்சிமைதங்கிய காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வரும்பொருட்டுத் தவஞ்செய்துகொண்டிருந்த இந்திராணியானவள் அநேககாலஞ்சென்றும் அவ்விந்திரன் வராமையால் நாளுக்குநாள் தனதுடலழகு குன்றும்படி வருந்துகின்றவளாயினள்.—எ-று. (உ)

கொளையாரிசை யளிபாடிய குழலிந்திரன் பிரிவா
லுளையாமனம் பதையாத்தவத் துறைகின்றதொ ரளவில்
வளையார்கலி யுலகந்தனில் வாழ்சூரபன் மாவுக்
கிளையாள்பல ரிளையார்புணர்ந் தாலுஞ்சிறி திளையாள்.

(இ-ள்.) வண்டுகள் கூட்டமாகப் பொருந்தி இசை பாடுகின்ற கூந்தலினையுடைய இந்திராணியானவள் இந்திரனது பிரிவினால் மனம் வருந்திப் பதைத்துத்

தவஞ்செய்துகொண்டிருக்கின்ற காலத்தில் கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் வாழ்கின்ற சூரபன்மனது தங்கையும், பல்வாலிபர்கள் புணரினுஞ் சற்றுமிளைக்காதவளும்.-எ-று.

கழிகின்றதொர் கடலேபுரை காமந்தெறு நோயா
லழிகின்றவ ளெவர்தம்மையும் வலிதேபிடித் தணையு
மிழிகின்றதொ ரியல்பாண்முகி யினம்வாய்திறந் தெனவே
மொழிகின்றதொர் கடியாளச முகியென்பதொர் கொடியாள்.

(இ-ள்.) மிகுந்த கடலையொத்த காமநோயினால் வருந்துகின்றவளும், யாவரையும் வலிதாகப் பிடித்துப் புணருகின்ற இழிகுணமுடையவளும், மேகக்கூட்டங்களிடித்தாற்போலப் பேசுகின்ற முழக்கத்தினையுடையவளுமாகிய அசமுகியென்னுங் கொடியவள்.—எ-று. (௪)

பொறையில்லவ ளருளில்லவள் புகழில்லவள் சிறிது
நிறையில்லவ ளாணில்லவ ணிற்கின்றதொ ரறத்தின்
முறையில்லவள் வடிவில்லவண் முடிவில்லதொர் கற்பின்
சிறையில்லவ ளுலகோர்க்கொரு சிறையாமெனத் திரிவாள்.

(இ-ள்.) அவள் பொறுமை, கருணை, புகழ், நிறை, நாணம், தருமமுறை, அழகு, அழிவற்ற கற்பு என்னு மிவைகளில்லாதவளாய் உலகத்திற்கு ஒரு வெள்ளாட்டிபோன்றுலாவுவாள்.—எ-று.

சிறை-சிறைச்சாலை எனினுமாம். (௫)

கீழுற்றிடு முலகெத்தனை யவையாவையுங் கிளர்ந்தோர்
வாழுற்றிடு முலகெத்தனை யவையாவையு மாடே
சூழுற்றிடு முலகெத்தனை யவையாவையுஞ் சுற்று
ஆழுற்றிடு தன்னூர்தனி லொருநாழியில் வருவாள்.

(இ-ள்.) பாதலத்திற் பொருந்திய எல்லாவுலகங்களிலும், பெரியோர்கள் வசிக்கின்ற விண்ணிற்பொருந்திய எல்லாவுலகங்களிலும், அருகில் சூழ்ந்துள்ள எல்லாவுலகங்களிலும் சுற்றித்திரிந்து முறைமைப்படி பொருந்திய தனது நகரத்திற்கு ஒருநாழிகைப்பொழுதில் வருகின்றவள்.—எ-று. (௬)

பொய்யுற்றவள் களவுற்றவள் புரையுற்றிடு சுரையூன்
றுய்யுற்றவள் களியுற்றவள் சோர்வுற்றவள் கொலைசெய்
கையுற்றவள் விழியாலழல் காலுற்றவள் பவத்தின்
மொய்யுற்றவள் படிறுற்றவண் முனிவுன்றவண் மனத்தின்.

(இ-ள்.) பொய்பேசுகின்றவள்; திருட்டுத்தன்மைபொருந்தியவள்; குற்றம் பொருந்திய கள்ளும் மாமிசமுமுண்ணுகின்றவள்; களிப்புஞ் சோம்பலும் பொருந்தினவள்; கொலைசெய்யுந் தொழிலையுடையவள்; கண்களால் கோபத்தீயைச் சிந்துகின்றவள்; வஞ்சகம் பொருந்தினவள்; மனத்திற் கோபத்தையுடையவள்.—எ-று. (எ)

பொங்குஞ்சிகை யழன்மைத்தலை புகுந்தாலென வொளிருஞ்
செங்குஞ்சிய துடையாளெவர் செருச்செய்யினு மிடையா
டுங்கங்கெழு தூணத்திடை தோன்றிக்கன கனைமுன்
பங்கம்படத் துயிருண்டெழு பகுவாயரி நிகர்வாள்.

(இ-ள்.) பற்றியெரிகின்ற சுவாலையினையுடைய தீயானது ஆட்டின் தலையிற் புகுந்திருந்தாற்போன்று விளங்குகின்ற சிவந்த தலைமயிரையுடையவள்; போர்

செய்தாலும் பின்வாங்காதவள்; பெருமைபொருந்திய தூணிற்பிறந்து முன்பு இரணியனைப் பங்கப்படுத்தி யுயிரையுண்டெழுந்த பிளப்பாகிய வாயினையுடைய நரசிங்கம் போல்பவள்.—எ-று. (அ)

சீயப்பெரு முகன்றாரக னிகராகிய திறலாண்
மாயத்தொழில் பயில்கின்றவண் மணிமால்வரை புரையுங்
காயத்தவ ளடற்கூற்றையுங் கடக்கின்றதொர் வலியா
டோயப்புண ரிகளேழுமொர் துணையிற்கடந் திடுவாள்.

(இ-ள்.) சிங்கமுகாசுரன் தாரகாசுரனென்னு மிவர்களுக்குச் சமானமான வலியினையுடையவள்; மாயவித்தைகள் செய்கின்றவள்; பெரிய கருமலைபோன்ற தேகத்தையுடையவள்; கொலைசெய்கின்ற இயமனையுஞ் செயிக்கத்தக்க வலிமையினையுடையவள்; நீர் நிறைந்த சப்த சமுத்திரங்களையும் ஒரு க்ஷணப்பொழுதில் தாண்டுகின்றவள்.—எ-று. (௯)

மாலுற்றிட வாழ்சூரபன் மாவின்கிளை முழுது
மூலத்தொடு முடிவித்திடு முறையூழ்வினை யென்னச்
சூலத்தினை யேந்தித்தனி தொடர்துன்முகி யுடனே
யாலத்தின துருவாமென வாங்குற்றன ளன்றே.

(இ-ள்.) யாவரும் மயங்கும்படி சூரபன்மனது பந்துக்களையெல்லாம் அடியோடு அழிக்கும்படிவந்த ஊழ்வினையைப்போல சூலாயுதத்தைப் பிடித்துக்கொண்டு நிகரற்று வருகின்ற துன்முகியுடனே விஷத்தினுருவம்போன்று அங்கு வந்தனள்.

கானின்றுள பொழிலேர்தனைக் காணாநனி சேணா
ளாநன்றென வியவாப்புவி யமர்சோலையி தன்றால்
வானின்றுள வனத்தைக்கொடு வந்தேயிவண் மகவான்
றானின்றுவைத் தானிங்கிது தப்பாதென நிற்பாள்.

(இ-ள்.) வாசனைபொருந்திய சோலையினழகைநோக்கி மிகுந்த தூரத்தில் வருகின்றவள் ஆ! நன்றென்று புகழ்ந்து, இது நிலவுலகத்துள்ள சோலையன்று; சொர்க்கத்திலிருந்த நந்தனவனத்தை இந்திரன் இங்குக்கொண்டுவந்து வைத்தனன்; இது தவறாது என்று அங்கு நிற்பவள்.—எ-று. (௧௧)

ஏலாவிது காணாயென வீர்ந்தண்பொழி லெழிலை
யாலாலம தெனவேவரு மசமாமுகி யென்பாள்
பாலானதுன் முகிதன்னொடு பகராவது காட்டிக்
கோலாலம துடனேயது குறுகும்படி வந்தாள்.

(இ-ள்.) ஆலகால விஷத்தைப்போல வந்தவளாகிய அசமுகியென்பவள் தன்னருகில்வருகின்ற துன்முகியினுடனே ஏடி துன்முகியே! இதனைப்பாரென்று கூறிக் குளிர்ச்சிபொருந்திய சோலையினழகைக்காண்பித்து ஆரவாரத்துடன் அதனையடையும்படி வந்தனள்.—எ-று. (௧௨)

மட்டுற்றிடு தண்காவினை வருடைத்தனி முகத்தாள்
கிட்டிச்சினை நனைமாமலர் கிளையாவையு நோக்கித்
தட்டற்றிவ ணுறைகின்றவர் தமைநோக்குவ லென்னா
வெட்டுத்திசை யினுநாடுதற் கிடையுற்றனள் கடிதின்.

(இ-ள்.) அசமுகியானவள் தேன் பொருந்திய குளிர்ந்த பூஞ்சோலையையடைந்து, பெருங்கிளை, அரும்பு, சிறந்த மலர், சிறு கிளை முதலிய எல்லாவற்றையும்

பார்த்துத் தடையில்லாமல் இங்கு வசிக்கின்றவர்களைப் பார்ப்போமென்று, எட்டுத் திசையிலுஞ் சூழ்ந்து பார்ப்பதற்கு விரைவாக அச்சோலையின் மத்தியில் வந்தனள்.

அதுகண்டன னவணின்றதொ ரையன்படைத் தலைவன்
முதுகண்டகி யிவளாமச முகியென்பதொர் கொடியா
ளெதுகண்டிவண் வருகின்றன ளென்னேகருத் திவடன்
கதிகண்டன னிற்பேனெனக் காணுநெறி யதனில்.

(இ-ள்.) அங்கிருக்கின்ற ஐயனாரது படைத்தலைவனாகிய மாகாளன் அதனைப்பார்த்து, இவள் மகா பாவியாகிய அசமுகி யென்னுங் கொடியவளாம்; இவள் இங்கு எதைக்கருதி வருகின்றனள்? இவளது எண்ணம் யாது? இவள் என்னைப் பாராதபடி இவளது செய்கையைப் பார்த்துக்கொண்டு நிற்பேன்.—எ-று. (௧௪)

மற்றிங்கிவள் செயல்யாவையும் வரலாற்றொடு காணுத்
தெற்றென்றவண் மீள்கின்றுழிச் செவ்வேயெதிர் போந்து
குற்றந்தனக் கிசையுந்திற முடிப்பேனெனக் கொலைசெய்
விற்றங்கிய புயவேடரில் வேறாரிடை நின்றான்.

(இ-ள்.) இவளது செய்கைகளை முறைப்படியே வரலாற்றுடன் பார்த்து, விரைவாக இவள் திரும்பிச்செல்லும்பொழுது நேரிற் சென்று, இவள் செய்யுங் குற்றத்திற்குத்தக்கபடியே செய்வேனென்று, கொலைத்தொழிலமைந்த வில்லினைத் தோளிலேந்திய வேடுவனைப்போல வடிவங்கொண்டு வேறொருபுறத்தில் நின்றனன்.—எ-று.

நின்றானவ னதுகண்டில ளெஞ்சிற்களி தூங்கக்
குன்றாமுலை யசமாமுகக் கொடியாளவ ளுடனே
சென்றாண்மலர்க் காவெங்கணுந் திரிந்தாடிரிந் தளவிற்
பொன்றாழ்முலைச் சசிமாதவம் புரிகின்றது கண்டாள்.

(இ-ள்.) இவ்வாறு வீரமாகாளன் நின்றதனைப் பாராதவளாய் மனமகிழ்ச்சியுண்டாகும்படித் துன்முகியுடனே மலைபோலு முலைகளையுடைய அசமுகியானவள் சென்று அப்பூஞ்சோலை முழுவது முலாவினள்; அப்பொழுது, பொன்னாபரணந் தொங்குகின்ற ஸ்தனங்களையுடைய இந்திராணி தவஞ் செய்வதைப் பார்த்தனள்.

அந்தாவிவ ளயிராணிநம் மரசன்றனக் கஞ்சி
நந்தாவளந் தனைப்பெற்றபொன் னகரத்தைவிட் டிங்கே
வந்தாளிவ டன்னைக்கொடு வருவீரென வெங்கோன்
முந்தாதர முடனுப்பினன் முடிவற்றதன் படையே.

(இ-ள்.) அங்கேயிருக்கின்ற இவள் இந்திராணி நமது அரசனாகிய சூரபன்மனுக்குப்பயந்து, கெடாத வளப்பத்தினையுடைய பொன்னுலகத்தைவிட்டு இங்கு வந்தனள்; எமதரசன் இவளைப் பிடித்துவாருங்களென்று அளவற்ற தனது சேனைகளை முன்பு விருப்பத்துடனனுப்பினன்.—எ-று. (௧௭)

இங்குற்றதை யுணராமையி னிமையோர்புர நாடி
யங்குற்றில ளயிராணியென் றரசன்றனக் குரைப்ப
வெங்கட்டழ லெனச்சீறினன் மீண்டுஞ்சிலர் தமையித்
திங்கட்புரை முகத்தாடனைத் தேடும்படி விடுத்தான்.

(இ-ள்.) இவள் இங்கிருப்பதை யறியாமையினால் தேவலோகத்தில் தேடிப்பார்த்து இந்திராணி அங்கில்லையென்று அரசனுக்குக்கூற, அவன் கொடிய தீயைப்

போலக் கோபித்துப் பின்னுஞ் சில அசுரர்களை இந்தச் சந்திரன்போலும் முகத்தினை யுடைய இந்திராணியைத் தேடும்படி யனுப்பினான்.—எ-று. (சஅ)

வானெங்கணும் பிலமெங்கெணும் வரையெங்கணும் பரவை
தானெங்கணுந் திசையெங்கணுந் தரையெங்கணுந் தரையிற்
கானெங்கணு நமர்தேடினர் காணாரிவ டன்னை
யூனெங்கணும் வருந்தத்திரிந் துழன்றாரிது வுணரார்.

(இ-ள்.) நம்மவர்கள் இவளிங்கிருப்பதையுணராமல், ஆகாயமும், பாதலமும், மலைகளும், கடல்களும், திக்குகளும், பூமியும், பூமியிலுள்ள காடுகளுமாகிய எவ்விடங்களிலும், உடம்பெல்லாம் நோகும்படித் திரிந்தலைந்தார்கள்.—எ-று. (சகூ)

தண்டேனமர் குளிர்பூங்குழற் சசியென்பவ டனைநான்
கண்டேனினி யிவண்மையலிற் கவலாதொழி கென்றே
வண்டோலிடு தொடைமன்னவன் மகிழ்வெய்தமுன் னுய்ப்பக்
கொண்டேகுவன் யானேயிவ டனையென்றுகு றித்தாள்.

(இ-ள்.) தண்ணிய தேன்பொருந்திய குளிர்ந்த மலரையணிந்த கூந்தலையுடைய இந்திராணியென்பவளை நான்கண்டேன்; இனி இவளிடத்திற்கொண்டிருக்கின்ற ஆசையினால் வருந்தாமல் ஒழிந்திருக்கக்கடவையென்று, வண்டுகள் ரீங்காரஞ் செய்கின்ற மாலையையணிந்த சூரபன்மன் மகிழ்வெய்தும்படி இவளை அவனுக்கு முன்னே விடும்படிப் பிடித்துக்கொண்டு போவேனென்று நினைத்தனள்.—எ-று.

இத்தேமொழி தனையிந்திர னீண்டேதனி யாக
வைத்தேகின னிவடன்னைவ ருந்தாதளித் திடவோர்
புத்தேளிரு மிலரிங்கிது பொழுதாமவன் புகுமுன்
கொத்தேமலர்க் குழலாடனைக் கொடுபோவனென் றடைவாள்.

(இ-ள்.) இந்த இந்திராணியை இந்திரனானவன் இங்குத்தனிமையாகவைத்துப்போயினன்; இவளை வருந்தாமல் பாதுகாக்கும்படி ஒரு தேவர்களுமில்லை; ஆதலால் இதுவேசமயம்; அவ்விந்திரன் வருமுன்னே, கொத்தாகிய மலரையணிந்த கூந்தலையுடைய இவ்விந்திராணியைக் கொண்டுபோவேனென்று வருவாளாயினாள்.

தீனக்குரற் கடுஞ்சொல்லெனு முருமேறு தெழிப்பக்
கூனற்பிறை யெயிறாகிய மின்னுப்புடை குலவக்
கானக்கரும் படிவத்தொடு கால்கொண்டெழு விசையால்
வானப்புயல் வழுவிப்புவி வந்தாலென வந்தாள்.

(இ-ள்.) கரேமாகிய தொனியோடு கூடிய கடுமொழியென்று கூறப்பட்ட பேரிடியானது முழங்கவும், வளைந்த பிறைபோன்ற பற்களாகிய மின்னல்கள் அருகில் விளங்கவும், காடாந்தகாரமான கருநிறத்துடன் காற்றினால் மோதப்பட்டு வேகமாக ஆகாயத்திலுள்ள மேகமானது தவறி பூமியில்வந்தாற்போல வந்தனள்.—எ-று.

ஊற்றங்கொடு வருதுன்முகி யுடனேயச முகிதான்
றோற்றங்கிளர் மணிவெற்பெனத் துண்ணென்றவண் வரலு
மேற்றம்பெற நோற்றேதனி யிருந்தாளது காணுக்
கூற்றந்தனைக் கண்டாலெனக் குலைந்தாள்வலி குறைந்தாள்.

(இ-ள்.) வலிமையாக வருகின்ற துன்முகியுடனே அசமுகியானவள் உயர்ந்து விளங்குகின்ற நீல மலையைப்போல விரைவாக அங்குவருதலும், உயர்வை

யடையும்பொருட்டுத் தவஞ்செய்துகொண்டு அங்கிருந்த இந்திராணியானவ ளதனைப் பார்த்து இயமனைப் பார்த்தாற்போல மனம்வருந்தி வலிமைகுன்றினள்.—எ-று.

நீரோதமி சைத்தங்கிய நிருதக்குல மகளோ
பாரோர்மயக் குறுபேய்மக ளோபாரிடத் தணங்கோ
சூரோடுறு தனிக்கொற்றவை தொழில்செய்பவ டானோ
வாரோவிவ ளறியேனென வஞ்சிக்கடி தெழுந்தாள்.

(இ-ள்.) நீரையுடைய கடலின்மீது வசிக்கின்ற அசுரமாதோ? உலகத்தினரை மயக்குகின்ற பேய்மகளோ? பூதமாதோ? அச்சந்தருகின்ற வீரலக்ஷுமியின் ஏவற்றொழில் செய்பவளோ? இவள்யாரோ யானறியேனென்று பயந்து விரைவாக வெழுந்தனள்.—எ-று. (உச)

எழுகின்றவ டனைநில்லென விசைத்தேயெதி ரெய்தி
மொழிகின்றன ளயிராணிநின் முதிராவிள நலனும்
பழியில்லதொர் பெருங்காமரும் பயனற்றிவண் வறிதே
கழிவெய்திடத் தவம்பூண்டிடல் கடனோவிது விடுநீ.

(இ-ள்.) அவ்வாறெழுந்த இந்திராணியை நில்:என்று கூறி, இந்திராணியே! உனது முதிர்ச்சியடையாத இளமையும், பழிப்பில்லாத பேரழகும் பயனற்று இங்கு வீணாகக் கழியும்பொருட்டுத் தவஞ்செய்தல் முறைமையோ? நீ இதனை விடக்கடவை.

ஆரொப்புனக் குலகந்தனி லருளாழியம் பகவன்
மார்பத்துறை திருமங்கையு மற்றிங்குனக் கொவ்வாள்
பாரிற்கரந் திருந்தேதவம் பயில்வாயிதென் னுன்னைச்
சேரத்தவம் புரிகின்றனன் றிறற்சூரபன் மாவே.

(இ-ள்.) உலகத்தில் உனக்கொப்பானவர்கள் யார்? அருளையுடைய சக்கிரதரனாகிய திருமாலின்மார்பில் வசிக்கின்ற திருமகளும் இங்கே யுனக்கொப்பாகார்கள்; உலகத்தில் மறைந்திருந்து தவஞ்செய்கின்றனை; இஃது யாதுகாரணம்? உன்னைப் புணரும்படி வலிய சூரபன்மன் தவஞ்செய்கின்றனன்.—எ-று. (உரு)

இந்நாள்வரை யுனைநண்ணிய விமையோர்க்கிறை யுனது
நன்னாயக னாகப்பெரு நலனுற்றவ னன்றே
தன்னாலுணர் வரிதென்பர்க டன்பேரழ கதனாற்
பன்னாளவ னுடன்மேவினை பாகிற்படு கரிபோல்.

(இ-ள்.) இக்காலம்வரையிலும் உன்னைச் சேர்ந்திருந்த தேவேந்திரன் உனக்கு நல்ல புருஷனாகிய சிறப்பை யடைந்தவனல்லன்; தனது பேரழகைத் தன்னாலுணர்தற்கரிதென்று கூறுவார்கள்; அதனால், பாகனிடத்தி லகப்பட்ட யானையைப்போல, அநேககாலம் அவ்விந்திரனுடன் சேர்ந்து வாழ்ந்தனை.—எ-று. (உஎ)

தவறுஞ்சுர ருலகொன்றுளன் சதவேள்விய னெம்முன்
புவனம்பல வண்டம்பல புரக்குந்திரு வுளனா
லிவனங்கவன் பணியேபுரிந் திளைத்தேகரந் துழல்வா
னவனிங்கிவன் றனையேவல்கொண் டகிலந்தனி யாள்வான்.

(இ-ள்.) இந்திரன் அழிந்துபோகத்தக்க சுவர்க்கலோக மொன்றை மாத்திரமுடையவன்; எனது தமயனாகிய சூரபன்மன் பல புவனங்களையும் பல அண்டங்களையும் அரசாளுஞ் செல்வத்தையுடையவன்; இவ்விந்திரன் அச்சூரபன்மனது ஏவலை

யே செய்து இளைத்து மறைந்து வசிக்கின்றவன்; அச்சூரன் இவ்விந்திரனை யேவல் கொண்டு உலகங்களைத் தனிமையாக ஆள்கின்றவன்.—எ-று. (௨அ)

அழிவில்லவ னவனிங்கிவ னழியும்பரி சுடையான்
பழியில்லவ னவனிங்கிவன் பழிவேலையிற் றிளைப்பான்
கழியும்பட ருழந்தானிவன் களிப்புற்றுள னவனே
தொழுவன்பல ரையுமிங்கிவன் றொழுமோவவன் சிலரை.

(இ-ள்.) அச்சூரபன்மன் அழிவில்லாதவன்; இவன் அழிந்துபோகுந் தன்மையுடையவன்; அச்சூரன் பழிப்பில்லாதவன்; இவ்விந்திரன் பழிப்பாகிய கடலில் மூழ்குகின்றவன்; இவ்விந்திரன் பல பேர்களையுந் தொழுவான்; அச்சூரன் சிலரையுந் தொழான்.—எ-று. (௨௯)

அந்நேரில னொடுமேவுவ தறிகின்றிலை யனையான்
றன்னேவலி னொழுகித்திரி தமியோன்றனைத் துணையென்
றின்னேமெலிந் தனையீதுனக் கியல்போநினை தெழிலும்
கொன்னேகழிந் தனபற்பகல் குறியாயிது குணனே.

(இ-ள்.) அவ்வொப்பற்ற சூரபன்மனோடு சேரவேண்டுவதை நீ யுணர்ந்தாயில்லை; அச்சூரபன்மனது ஏவலின்படி நடக்கின்ற இந்திரனைத் துணையென்று கருதி இப்பொழுது வருந்தினை; இஃதுனக்குத் தகுதியோ? உனதழகும் அனேக காலங்களாக வீணே கழிந்தன; இது ஞாயமோ?—எ-று. (௩௦)

எத்தேவரு முகினூர்தியு மிகன்மேவரு மவுணக்
கொத்தேவரு மணங்கோருமுன் குற்றேவல்செய் திடவே
முத்தேவரும் புகழப்படு மொய்ம்புற்றிடு சூர்மு
னுய்த்தேயவ னொடுகூட்டுவ னுலகாண்டிட விருக்க.

(இ-ள்.) சகல தேவர்களும் இந்திரனும் வலிமிக்க அசுரகூட்டத்தினரும் தேவமாதர்களும் உனது குற்றேவல் செய்யும்படி திரிமூர்த்திகளாலும் புகழப்படுகின்ற வலிபொருந்திய சூரபன்மனுடன் நீ உடனிருந்து அரசாளும்படி யான் அழைத்துக்கொண்டு சென்று அவனுடன் சேர்த்துவைப்பேன்.—எ-று. (௩௧)

பொன்னேடிகல் பங்கேருகப் பூங்கோமளை தனையு
மன்னேன்வெறுத் திடுவன்பிற ரனைவோரையு மஃதே
யுன்னோடுள வறுகாதலி னுறுமிங்கிது சரத
மென்னோடினி வருவாய்கடி தென்றாளறங் கொன்றாள்.

(இ-ள்.) திருமகளினுஞ் சிறந்த பதுமகோமளையையும் அவன் விரும்பான்; மற்றவர்களையும் அவன் விரும்பான்; அளவற்ற ஆசையுடன் உன்னுடன் கூடி வாழ்வான்; இது உண்மை; ஆதலால் நீ என்னுடன் இனி வரக்கடவையென்று கூறினாள் பாவியாகிய அசமுகி.—எ-று. (௩௨)

அசமுகிப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௫௪௧.

உ

முருகன்றுணை.

# இந்திராணி மறுதலைப் படலம்.

தக்க வேழகத் தலையள் கூறிய
வக்கொ டுஞ்சொலை யணங்கு கேட்டலுந்
தொக்க தன்செவித் துளையி லங்கிவேல்
புக்க தேயெனப் பொருமி விம்மினள்.

(இ-ள்.) தகுதியாகிய அசமுகியானவள் கூறிய அந்தக் கொடுஞ்சொற்களை இந்திராணி கேட்டவுடனே தனது காதின்வழியே நெருப்பிற் காய்ச்சிய வேல் நுழைந்தாற்போல் துக்கித்து விம்மினள்.—எ-று. (க)

கைம்ம லர்க்கொடே கடிதிற் றன்செவி
செம்மி வல்வினைத் தீர்வு நாடியே
விம்மி யங்குறும் வெய்யள் கேட்டிட
விம்மெ னச்சில விசைத்தன் மேயினள்.

(இ-ள்.) தாமரைமலர்போன்ற கைகளால் விரைவாகத் தனது காதுகளை மூடிக்கொண்டு தீவினையினொழிவை நினைத்து வருந்துகின்றவளாகிய இந்திராணியானவள் அங்கு வந்து நிற்கின்ற அசமுகிக்குக் கேட்கும்படி விரைவாகச் சிலவார்த்தைகளைக் கூறத்தொடங்கினள்.—எ-று. (உ)

வடி நீயிவ ணிசைத்த தீமொழி
நேடி யோர்ந்துளார் நிரய மாநெறி
யூடு சேர்வரா லுரைத்த நிற்குமேற்
கூடு தீமையார் குறிக்கற் பாலரே.

(இ-ள்.) எடி! நீ இங்கு வந்து நின்று கூறிய தீமொழிகளை விசாரித்துணர்ந்தவர்கள் கொடிய நரகத்தை யடைவார்கள்; ஆதலால் அதனைக்கூறிய உனக்குப் பின்னால் வருகின்ற தீமையை யார் கணிக்கத்தக்கவர்கள்.—எ-று. (ங)

வேதம் யாவையும் விதித்த நான்முகன்
காத லன்றருங் கடவுண் மங்கைநீ
நீதி யில்லதோர் நெறியின் வாய்மையைப்
பேதை யாரெனப் பேச லாகுமோ.

(இ-ள்.) சகல வேதங்களையும் விதித்த பிரமபுத்திரராகிய காசிபர்பெற்ற தெய்வமங்கையாகிய நீ அநீதியான வார்த்தைகளை மூடசனங்களைப்போலப் பேசுதல் தகுதியோ? (ச)

தீங்கி யாவர்க்குஞ் செய்தி டாதவர்
தாங்க டுன்புறார் தமக்கு வேண்டினோ
ராங்கெ வர்க்குமுன் னல்லல் செய்வரா
லீங்கு நீயிவை யெண்ண லாய்கொலோ.

(இ-ள்.) யாவருக்கு மொரு தீங்கைச்செய்யாதவர்கள் தாங்களும் ஒரு தீங்கையடையமாட்டார்கள்; இது நிற்க: தமக்கு வேண்டியவர்களா யுள்ளவர்களுக்குத் துன்பஞ்செய்வார்களோ? இதனை நீ உணர்ந்தாயில்லையோ?—எ-று. (ரு)

தருமம் பார்த்திலை தக்க மாதவ
கருமம் பார்த்திலை கற்பும் பார்த்திலை
பெருமை பார்த்திலை பிறப்பும் பார்த்திலை
யுரிமை பார்த்திலை யுறவும் பார்த்திலை.

(இ-ள்.) தருமமும், தகுந்த மாதவமாகிய கருமமும், கற்பும், பெருமையும், பிறப்பும், உரிமையுமாகிய இவைகளை நீ சற்று முணர்ந்து பார்த்தாயில்லை.—எ-று.

பழியும் பார்த்திலை படியி கழ்ந்திடு
மொழியும் பார்த்திலை முறையும் பார்த்திலை
வழியும் பார்த்திலை வருவ பார்த்திலை
யிழியுந் தீயசொல் லியம்பற் பாலையோ.

(இ-ள்.) பழியும், உலகத்தார் பழிக்கத்தக்க மொழியும், முறைமையும், கிரமமும், மேல்வருவதுமாகிய இவைகளைப்பாராமல் நீ இழிவாகிய கொடுமொழிகளைக் கூறத்தக்கவளோ?—எ-று. (எ)

ஆன்ற தொல்வள னாற்ற லாயுள்பின்
னூன்று சீர்த்திக ளொருவுற் றோர்க்கிது
தோன்று நீயிவை துணியல் வாழிகேள்
சான்று நின்குலத் தகுவர் யாவரும்.

(இ-ள்.) பரவிய பெருவளமும், வல்லமையும், ஆயுளும், உறுதியினையுடைய கீர்த்தியாகிய இவைகள் நீங்கியுள்ளவர்களுக்கே இவ்வாறுதோன்றும்; ஆதலால் நீ இவ்வாறு கூறத்துணியாதே; இதற்கு நினது வமிசத்திலிருந்த அசுரர்களனைவரும் சாக்ஷியாகும்.—எ-று. (அ)

இந்தி ரற்கலா லேவர் பாலினுஞ்
சிந்தை வைத்திடேன் றீதில் கற்பினேன்
வந்தெ னக்கிது வகுத்து நின்கிளை
யுய்ந்தி டத்தகு முறைய தன்றிதே.

(இ-ள்.) குற்றமற்ற கற்பினையுடைய யான் இந்திரனிடத்திலல்லாமல் வேறு யாரிடத்திலுஞ் மனஞ்செலுத்தத் தக்கவளல்லேன்; அத்தகைய என்னிடத்திற்கு நீ வந்து இவ்வாறு கூறினுய்; இது நினது வமிசம் விருத்தியாகத் தக்கவார்த்தையன்று.—எ-று. (௯)

நூன்மை யாவையு நுனித்து நாடிச்செங்
கோன்மை யன்றியே கொடுமை செய்துள
மேன்மை மன்னரும் வேறு ளார்களும்
பான்மை யாற்பிலம் படுவர் திண்ணமே.

(இ-ள்.) சாஸ்திரங்களையெல்லாம் உய்த்துணர்ந்து செங்கோல் செலுத்துவதன்றி, கொடுங்கோல் செலுத்தியுள்ள சிறந்த அரசர்களும் மற்றையர்களும் முறைப்படி நிச்சயமாக நரகத்தை யடைவார்கள்.—எ-று. (௧0)

மீளில் வெந்துயர் வேலை சார்ந்துளா
ளுரு நாதனென் றறைதி யார்கணும்
கோளு நல்லவுங் குறுகு மல்லலு
நாளை யுங்கள்பா னணுகு றுதலோ.

(இ-ள்.) எனக்கு நாயகனுயுள்ளவன் நீங்காத துன்பக்கடலில் மூழ்கினவனென்று கூறினை; யாவர்களிடத்திலும் இன்ப துன்பங்கள் நிகழ்ந்துகொண்டேயிருக்கும்; இன்று சுகமாகவிருக்கின்ற உங்களை நாளைத் துன்பஞ் சேராதோ?—எ-று. (கக)

நீதி யாகிய நெறியி லாதவ
ளாத லான்மிக வறிவு மாழ்கியே
தீது கூறினுய் செவ்வி தன்றரோ
மாது நீயிது மறத்தி யுய்யவே.

(இ-ள்.) நீதியோடுகூடிய நல்லொழுக்க மற்றவளாதலால் மிகவும் அறிவு குறைந்தவளாய் இந்தப் பாவமொழிகளைக் கூறினை; இஃது அழகான காரியமன்று; அசமுகியே! நீ பிழைக்கும்பொருட்டு இதனை மறக்கக்கடவை.—எ-று. (கஉ)

ஏவ ரென்றனை யெய்தற் பாலினேர்
தேவர் சூழ்தரக் காப்பர் சிந்தையென்
ஞவி யைம்புல மளிக்கு மெங்கணுங்
காவ லுண்டுநீ கடிதிற் போகென்ருள்.

(இ-ள்.) என் சமீபத்தில் வரக்கூடியவர்கள் யார்? என்னைத் தேவர்கள் சூழ்ந்து நின்று காப்பார்கள்; என் மனத்தையும் பிராணனையும் ஐம்புலன்களையும் காக்கின்ற காவலும் எவ்விடங்களிலுமுண்டு. ஆதலால் நீ இங்கு நில்லாமல் விரைவாகப் போகக்கடவையென்று கூறினுள்.—எ-று. (கூ)

என்ற காலையி லெயிறு தீயுகக்
கன்று சேயிதழ் கறித்து வெய்துயிர்த்
தொன்றெ டொன்றுகை யுருமிற் ருக்கியே
நன்று நன்றெனு நகைத்துச் சீறினுள்.

(இ-ள்.) இவ்வாறு இந்திராணி கூறியவுடனே (அசமுகியானவள்) தீப்பொறி பறக்கும்படிப் பற்களைக் கடித்து,செவ்விய இதழை மடக்கிக் கடித்துப் பெருமூச்சுவிட்டுப் பேரிடி யிடித்தாற்போலக் கைகொட்டி நன்று நன்றென்று சிரித்துக் கோபித்தனள்.—எ-று. (கச)

மறுவில் வாசவன் மனைவி கூறிய
வுறுதி வெய்யவட் கூற்றஞ் செய்தில
வறிவில் பேதையா யலகை தேறலால்
வெறிகொள் பித்தனுக் குரைத்த மெய்ம்மைபோல்.

(இ-ள்.) குற்றமற்ற இந்திரன் மனைவியாகிய இந்திராணி கூறிய உறுதிமொழிகள் யாவும், அசமுகிக்கு, பிறப்பிலேயே அறிவற்ற பேதையாய்ப் பேயும் பிடித்துக் கள்ளுங் குடித்து வெறியுங்கொண்டு பித்தனுயிருக்கின்ற ஒருவனுக்குக் கூறிய உண்மைமொழிகளைப்போலப் பயன்படாது போயின.—எ-று. (கரு)

ஆன காலையி லசமு கத்தினு
ளூன வெந்துய ருழக்கும் பெற்றியால்
வான வர்க்கிறை மாதை நோக்கியே
தானு ரைத்தன ளினைய தன்மையே.

(இ-ள்.) அப்பொழுது அசமுகியானவள் குற்றந் தரத்தக்க கொடிய துன்பத்தை யடையவேண்டிய முறைமையினுல், இந்திராணியைப் பார்த்து இவ்வாறு கூறினுள்.—எ-று. (கசு)

கிட்டி நல்லன கிளத்தி னேனெனே
யொட்டி வந்திலை யுரைத்தி மாறுனே
யட்டு நுங்குவ னண்ணற் காகவே
விட்ட னன்னிது மெய்மை யாகுமால்.

(இ-ள்.) நான் உன்னை யடைந்து நன்மொழிகளை உரைத்தேன்; அதற்குச் சம்மதித்து என்னுடன் வராமல் மாறுகக்கூறினை; ஆதலால் உன்னைக் கொன்று தின்பேன்; என் தமயனுக்காகவே உன்னைக் கொல்லாது விட்டனன்; இது உண்மையேயாம்.—எ-று. (௧௭)

ஆர்த்தி யாவுநீ யகல வென்னுடைச்
சீர்த்தி யண்ணர்பாற் சேறல் சிந்தியாய்
பேர்த்தி டாதுனைப் பிடித்து வன்மையா
லீர்த்துப் போகின்றேன் சரத மீதரோ.

(இ-ள்.) உனது துன்பமனைத்து மொழியும்படி எனது கீர்த்திபொருந்திய தமயனிடத்து வருதற்கு நீ நினைத்தாயில்லை; ஆதலால் உன்னைப் பலாத்காரமாகப் பிடித்து இழுத்துக்கொண்டு போகின்றேன்; இஃதுண்மையாம்.—எ-று. (௧௮)

முடிவி லாற்றலார் மூவர் யாவருந்
தடைசெய் கிற்பினுஞ் சமரி னேற்பினும்
விடுவ னல்லன்யான் விரைவி னிற்கொடே
படர்வ னன்னது பார்த்தி மேலெனு.

(இ-ள்.) முடிவிலாற்றலையுடைய திரிமூர்த்திகளும் மற்றியாவர்களும் தடுத்தாலும், போருக்கென்றெதிர்த்தாலும் யானுன்னை விடமாட்டேன்; சீக்கிரமாகக் கொண்டுபோவேன்; இன்னும் நீ அதனைப் பார்க்கக்கடவையென்று.—எ-று. (௧௯)

வெய்ய ளவ்வயி ராணி மென்கரங்
கையிற் பற்றியே கடிதி னீர்த்துராய்
மொய்யிற் போயினுண் முரணி லாதவ
ளைய கோவெனு வரற்றன் மேயினுள்.

(இ-ள்.) கொடிய அசமுகியானவள் அவ்விந்திராணியினது கையைப் பிடித்து பூமியிற் பொருந்த விழுத்துக்கொண்டு விரைவாகச் சென்றனள்; அப்பொழுது பலமற்றவளாகிய இந்திராணியானவள் ஐயோ! வென்று புலம்பத்தொடங்கினுள்.

பாவி தீண்டலும் புலம்பிப் பைந்தொடி
யாவி போந்தென வவச மாகியே
யோவி லாதசொல் லுணர்வு மாய்ந்தனள்
காவி யொண்கணீர் கலுழத் தேம்பினுள்.

(இ-ள்.) அசமுகியானவள் தன்னைப் பிடித்தவுடனே இந்திராணியானவள் வருத்தமடைந்து பிராணன் போனுற்போல மூர்ச்சையடைந்து கெடாத தனது பழய உணர்வு கெட்டவளாய்ச் செங்குவளை மலர்போன்ற ஒள்ளிய கண்களில் நீர் சிந்தும்படி யழுதனள்.—எ-று. (௨௧)

ஐயர் கையில்வந் தவுண ரைச்செறுந்
துய்ய தீம்படை தோகை கண்ணுறு
வெய்ய சூர்கிளை வீட்ட வந்தென
மையு லாயகண் வாரி மிக்கதே.

(இ-ள்.) அந்தணர்கள் கரத்திற்சேர்ந்து மாந்தேயரென்னு மசுரர்களைக்கொல்லுகின்ற நல்ல வாருணாஸ்திரங்கள் இந்திராணியினது கண்களிற் பொருந்திக் கொடிய சூரனது வமிசத்தை யழிக்க வந்தாற்போல, அவ்விந்திராணியினது மை தீட்டிய கண்களினின்றும் நீர் மிகுதியாக வொழுகத்தொடங்கின.—எ-று. (உஉ)

காசி பன்றருங் கலதி கூற்றுவன்
பாச மன்னகைப் பட்டு விம்மினள்
வாச வன்றனி மனைவி வெங்கொலைப்
பூசை வாய்ப்படும் புள்ளின் பேடைபோல்.

(இ-ள்.) கொடுங்கொலையைச் செய்கின்ற பூனையின்வாயி லகப்பட்டுக்கொண்ட பெண்பறவையைப்போல இந்திராணியானவள் காசிபர் புதல்வியாகிய அசமுகியென்னு மூதேவியினது யமபாசம்போன்ற கையிலகப்பட்டுக்கொண்டு வருந்தினள்.

நாரி லாதவ ளலிந்து கொண்டனள்
பேரு மெல்லையிற் பேதுற் றேயுளஞ்
சோரு கின்றவள் சுற்று நோக்கியே
யாருங் காண்கில ளரற்றன் மேயினள்.

(இ-ள்.) அன்பில்லாதவளாகிய அசமுகியானவள் உபத்திரவப்படுத்திப்பிடித்துக்கொண்டு செல்லும்பொழுது, கலங்கி மனம் வருந்துகின்ற இந்திராணியானவள் சுற்றிலும் பார்த்து யாரையுங் காணமல் புலம்பத்தொடங்கினள்.—எ-று. (உச)

இந்திராணி மறுதலைப்படல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கடுளரு.

---

உ
முருகன்றுணை.

# மகாகாளர்வருபடலம்.

பையரா வமளி யானும் பரம்பொருண் முதலு நல்கு
மையனே யோலம் விண்ணோர்க் காதியே யோலஞ் செண்டார்
கையனே யோல மெங்கள் கடவுளே யோல மெய்யர்
மெய்யனே யோலந் தொல்சீர் வீரனே யோல மோலம்.

(இ-ள்.) படம்பொருந்திய சேஷசயனத்தையுடைய திருமாலும் பரம்பொருளாகிய சிவபெருமானும்பெற்ற ஐயனே! ஓலம்: தேவர்களுக்கு முதல்வரோ! ஓலம்: செண்டேந்திய கரத்தினையுடையவரோ! ஓலம்: எங்கள் கடவுளே! ஓலம்: மெய்யர்க்கு மெய்யரோ! ஓலம்: பழமையாகிய சிறப்பினையுடைய வீரரோ! ஓலம்: ஓலம்:.—எ-று.

ஆரணச் சுருதி யோர்சா ரடலுருத் திரனென் றேத்துங்
காரணக் கடவு ளோலங் கடனிறத் தெந்தா யோலம்
பூரணைக் கிறைவா வோலம் புட்கலை கணவா வோலம்
வாரணத் திறைமேற் கொண்டு வரும்பிரா னோல மென்றாள்.

(இ-ள்.) வேதங்கள் ஒருபாகத்தில் வலிமைபொருந்திய உருத்திரனென்று துதிக்கின்ற காரணக்கடவுளே! ஓலம்: கடல் வண்ணராகிய எந்தையே! ஓலம்: பூர

ணைக்குத்தலைவரோ! ஓலம்: புட்கலை மணவாளரோ! ஓலம்: அரசயானையின்மீதெழுந்தருளி வருகின்ற பெருமானே! ஓலம்: என்று கூறினள்.—எ-று. (உ)

ஒய்யெனச் சசியிவ் வாற்றா லோலிட வதுகேட் டெங்க
ளையனைக் குறித்துக் கூவி யரற்றுவாள் போலு மென்னா
மையினைத் தடுத்துச் சிந்து மருத்தென வந்தா னென்ப
வெய்யரிற் பெரிதும் வெய்யோன் வீரமா காள னென்போன்.

(இ-ள்.) விரைவாக இந்திராணியானவள் இவ்வாறு ஓலமிடுதலும், அதனைக் கேட்டு எங்கள் ஐயனாரைக்குறித்துக் கூவியழுதனள்போலுமென்று வீரர்களிற்சிறந்த வீரராகிய வீரமாகாளரென்பவர் மேகத்தைத்தடுத்துச் சிதறுகின்ற வாயுவைப்போல விரைந்துவந்தனர்.—எ-று. (ஙு)

சாத்தன தருளி னிற்குந் தானையந் தலைவன் வானோர்
வேத்தவை யான வெல்லாம் வியத்தகு வீர னுந்தி
பூத்தவன் முதலோர் யாரும் புகழவெவ் விடத்தை யுண்டு
காத்தவ னாமம் பெற்றோன் காலற்குங் காலன் போல்வான்.

(இ-ள்.) சாத்தனாரது கட்டளைப்படி நிற்கின்ற சேனாதிபதியாயுள்ளவர்; தேவராசசபைகளிலெல்லாம் வியக்கத்தக்க வீரர்; திருமால் முதலிய தேவர்களெல்லாரும் புகழும்படி கொடிய விஷத்தையுண்டு காத்தருளிய சிவபெருமானது திருநாமமாகிய மகாகாளரென்னும் பெயரைப் பெற்ற இயமனுக்குமியமன்போல்பவர்.—எ-று.

இருபிறை ஞெலிந்திட் டன்ன விலங்கெழி லெயிற்றன் ஞாலம்
வருமுகி றடிந்தா லென்ன வாள்கொடு விதிர்க்குங் கைய
னுருமிடிக் குரல்போ லார்க்கு மோதைய னுரப்புஞ் சொல்லன்
கரவிழைத் தெங்ஙன் போதி நில்லெனக் கழறி வந்தான்.

(இ-ள்.) கடைந்து வைத்த இரண்டு சந்திரனைப்போன்று விளங்குகின்ற அழகிய கோரைப்பற்களால் உலகத்தில்வந்த மேகத்தையழித்தாற்போல வாளையசைக்கின்ற கரத்தினையுடையவரும் இடியோசையைப்போல ஆரவாரிக்கின்ற ஓசையினையுடையவருமாகி, (அசமுகியே!) வஞ்சகம் புரிந்து எங்குப்போகின்றனை ; நில் என்று கூறி வந்தனர்.—எ-று. (ஞ)

கொம்மென வந்த வீரன் கூவிய சசியை நோக்கி
யம்மனை யழுங்கல் வாழி யசமுகி யென்னும் வெய்யாட்
கிம்மியின் றுணையு மஞ்சே லீண்டுனைத் தீண்டு கின்ற
கைம்முறை தடிந்து வல்லே விடுவிப்பன் காண்டி யென்றான்.

(இ-ள்.) விரைவாக வந்த மகாகாளர் ஓலமிட்ட இந்திராணியைப் பார்த்து அம்மையே! நீ வருந்தாதே அசமுகியென்னுங் கொடியவளுக்கு நீ இம்மியளவும் அஞ்சாதே; இங்கே உன்னைத் தொடுகின்ற கையினை முறையே வெட்டி விடுவிக்கின்றேன்; நீ பார்க்கக்கடவையென்று கூறினர்.—எ-று. (சு)

வீரன துரையைக் கேளா மெல்லிய லணங்கி னல்லாள்
பேரிடர் சிறிது நீத்துப் பெயலுறு துவலை தூங்கு
மாரியின் செலவு கண்ட வளவயற் பைங்கூழ் போல
வாருயிர் பெற்றாண் மற்றை யசமுகி யவனைக் கண்டாள்.

(இ-ள்.) இந்திராணியானவள் மகாகாளரது வார்த்தையைக் கேட்டு தனது துன்பஞ் சிறிது நீங்கி,பெய்கின்ற துளிசிந்துகின்ற மழையினது வருகையைக் கண்ட

வளவிய வயலிலுள்ள பயிரைப்போல அரிய உயிர்தரித்தவ ளாயினள்; அசமுகியான வள் அவ்வீரமகா காளரைப் பார்த்தனள்.—எ-று. (எ)

ஓவரும் புவனம் யாவு மொருங்குமுத் தொழிலு மாற்று
மூவருந் துறக்கம் வைகு முதல்வனுந் திசைகாப் பாளர்
யாவரு மென்முன் னில்லா ரீண்டெனை யிகழ்ந்து சீறித்
தேவர்தங் குழுவி னுள்ளா னொருவனோ செல்வ னென்றாள்,

(இ-ள்.) கெடாத சகல புவனங்களிலும் ஒருங்கே மூன்று தொழிலையுஞ் செய்கின்ற திரிமூர்த்திகளும் சொர்க்கலோக வாசியாகிய இந்திரனும் மற்றைத் திக்குப்பாலகர்க ளனைவரும் என் முன்னே நில்லார்கள். அவ்வாறிருக்க, இங்கே என்னை யிகழ்ந்து கோபித்துத் தேவர் கூட்டத்திலுள்ள வொருவனோ தப்பிச் செல்கின்றவனென்று கூறினாள்.—எ-று. (அ)

வெறித்திடு கண்ணி னோக்கி வெவ்வித ழதுக்கி வல்லே
கறித்தன ளெயிற்றின் மாலை கறகற கலிப்ப வார்த்து
முறித்தவன் றன்னை யுண்டு முரண்வலி தொலைப்ப னென்னாக்
குறித்தச முகத்தி நிற்பக் குறுகினன் றிறல்சேர் வீரன்.

(இ-ள்.) உருட்டிப்பார்க்கின்ற கண்ணினால் பார்த்து வெவ்விய உதட்டை யதுக்கிப் பல்லின் வரிசைகள் கறகறவென் றொலிக்கும்படி விரைவாகக் கடித்து ஆரவாரித்து இவனை முறித்துத் தின்று வலிய பலத்தை யழிப்பேனென்று எண்ணினவளாய் அசமுகி நிற்கவும், வலிமைபொருந்திய வீரமாகாளர் அவளெதிரிற் சென்றனர்

தட்டறு நோன்மை பூண்ட சசிதனைத் தமிய ளென்றே
பட்டிமை நெறியாற் பற்றிப் படருதி யிவளை யின்னே
விட்டனை போதி செய்த வியன்பிழை பொறுப்ப னின்னை
யட்டிடு கின்ற தில்லை யஞ்சலை யரிவை யென்றான்.

(இ-ள்.) தவறுதலில்லாத விரதத்தை யனுஷ்டிக்கின்ற இந்திராணியைத் தனித் திருப்பவளென்று கருதித் திருட்டுத்தனமாகப் பிடித்துச் செல்கின்றனை; இவளை இவ்விடத்திலேயே விட்டுச் செல்லக்கடவை; (அவ்வாறு செய்வையாயின்) நீ செய்த பெருங்குற்றத்தைப் பொறுப்பேன்; அசமுகியே உன்னைக் கொல்லமாட்டேன் பயப்படாதே யென்று கூறினார்.—எ-று. (௧௦)

கேட்டலு முருத்திவ் வார்த்தை கிளத்தினை நின்னை யாரே
யீட்டுட னிவளைப் போற்றென் றிப்பணி தலைதந் துள்ளார்
வேட்டன னவரைக் கேட்ப விளம்புதி யென்றாண் முந்நூழ்
மாட்டுறு கனலி யென்னத் தன்குல முடிப்பான் வந்தாள்.

(இ-ள்.) இவ்வார்த்தையைக் கேட்டவுடனே அசமுகி கோபங்கொண்டு மகாகாளரைப் பார்த்து நீ இவ்வாறு கூறினை; இவளைப் பெருமையுடன் காக்கும்படி உனக்கு யார் கட்டளையிட்டவர்கள்? அவர்கள் இன்னாரென்று அறிந்துகொள்ளுதற்கு விரும்பினேன்; சொல்லென்று கூறா வீட்டி னருகிலிருக்கின்ற தீயைப்போலத் தனது வமிசத்தை யழிக்கவந்த அசமுகி கூறினாள்.—எ-று. (௧௧)

தாரணி முதல மூன்றுந் தலையளி புரிந்து காப்பான்
காரணி செறிந்துற் றன்ன கரியவன் கடவுள் வெள்ளை
வாரண முடைய வையன் மற்றிது பணித்தா னென்பேர்
வீரரில் வீர னான வீரமா காள னென்றான்.

(இ-ள்.) பூமி முதலிய மூன்றுலகங்களையும் மிக்க அன்புடன் ஆள்பவரும், மேகங்களலங்கரித்து நின்றாற்போலுங் கருநிறமுடையவரும், தெய்வத்தன்மை பொருந்திய வெள்ளையானையினையுடையவருமாகிய ஐயனார் எனக்கு இவ்வேலையைக் கட்டளையிட்டனர்; எனது பெயர் வீரர்களில் வீரனாகிய வீரமாகாளன் என்று கூறினார்.

என்றலு மனைய வாய்மை யிந்திரன் றனக்கு மீசன்
பொன்றிரண் மார்ப னல்கும் புதல்வற்கும் பொதுமைத் தாகி
நின்றது வாகத் தேவர் நிருதரால் வருந்து மூழாற்
சென்றவன் மகவா னேவ லாளெனச் சிந்தை செய்தாள்.

(இ-ள்.) என்று கூறுதலும், அவ்வுண்மைமொழி தேவேந்திரனுக்கும் அரிகரபுத்திரனுக்கும் பொதுவாய் நின்றதன்மையினால் தேவர்கள் அசுரர்களால் வருந்துகின்ற ஊழினாற் சென்ற இந்திரனது ஏவலாளனே இங்கு வந்தவன் என்று நினைத்தனள்.—எ-று. (௧௩)

புந்தியி லிதனை யுன்னிப் பொள்ளெனச் சினமீக் கொள்ள
விந்திரன் றொழுவன் கொல்லா மெனையிடை தடுக்கு நீரான்
சிந்துவ னிவனை யென்னாச் செங்கையிற் சூலந் தன்னை
யுந்தின ளதுபோய் வீர னுரனெதிர் குறுகிற் றன்றே.

(இ-ள்.) மனத்தில் இவ்வாறு நினைத்துத் திடீரென்று மிக்க கோபமுண்டாக இந்திரனது ஊழியக்காரனா என்னை நடுவில் தடுக்குந்தன்மையினையுடையவன்? நான் இவனையழிப்பேனென்று தனது கையிலிருந்த சூலத்தை விட்டனள்; அது சென்று மகாகாளரது மார்பினெதிரிலடைந்தது.—எ-று. (௧௪)

குறுகி முன் வருத லோடுங் குரூஉச்சுட ரங்கி மூன்று
முறையினோ ரிடையுற் றன்ன முத்தலைப் படையைக் காணூஉ
வறைகழல் வீரன் றொன்னா ளங்கியை யட்ட தேபோ
லெறிகதிர் வாளான் மைந்த னிருதுணி படுத்தி னானே.

(இ-ள்.) தமக்குச்சமீபத்திலடுத்துவருதலும், நிறம் விளங்குகின்ற முச்சுடரும் முறையே ஓரிடத்திலடைந்திருந்தாற்போன்றுள்ள திரிசூலத்தைப்பார்த்து வீரகண்டையை யணிந்த காலினையுடைய வீரபத்திரர் முற்காலத்தில் அக்கினியை யழித்ததுபோல ஒளி வீசுகின்ற வாளினால் மகாகாளர் அச்சூலத்தை இரண்டு துண்டாக்கினார்.—எ-று. (௧௫)

படுத்தலு மணிக ணிலப் பையரா வுமிழ்ந்த தென்னக்
கடித்திடு மெயிற்றுப் பேழ்வாய்க் கருங்கண மழல்கான் றென்ன
விடித்திடு கொண்மூ வின்பா லெழுந்தமின் னென்ன வன்னாள்
விடுத்திடு சூல வைவேல் வெவ்வழல் பொழிந்த தன்றே.

(இ-ள்.) அவ்வாறு வெட்டினவுடனே, மாணிக்கங்களை கரிய படம்பொருந்திய பாம்பானது கக்கினாற்போலவும், கடிக்கப்பட்ட பற்களையுடைய பிளப்பாகிய வாயோடுகூடிய கரிய பேய்க்கூட்டங்கள் அக்கினியைக் கக்கினாற்போலவும், இடியிடிக்கின்ற மேகங்களினிடத்திலுண்டாகிய மின்னலைப்போலவும் அசமுகியானவள் விடுத்த கூரிய சூலாயுதமானது உஷ்ணம் பொருந்திய அக்கினியைக் கக்கியது.—எ-று.

காலத்தி னுலக முண்ணக் கடலுறு வடவை தானே
யாலத்தை மீது பூசி யசமுகி கரத்திற் கொள்ளச்
சூலத்தி னமைந்த தம்மா சோதனை கொடுப்ப னென்னாச்
சீலத்தின் மிக்கோன் கூர்வாள் செந்தழல் பொழிவித் தன்றே.

(இ-ள்.) பிரளயகாலத்தில் உலகங்களை யழிக்கும்பொருட்டுக் கடலிலுள்ள வடவாமுகாக்கினியானது விஷத்தை மேலே பூசிக்கொண்டு சூலவடிவங்கொண்டு அசமுகியின் கையிலிருந்ததென்பதற்குச் சாக்ஷி காட்டுகின்றேனென்று விளக்கிக் காட்டுவதைப்போல மகாகாளரது கூரிய வாளானது செந்தழலைப் பொழிவித்தது.

சூளினர்த் தெறியும் வீரன் சுடர்கொண்முத் தலைவே றன்னை
வாளினற் றடித லோடு மறிமுகத் தணங்கு சீறிக்
கேளினற் றனது பாங்கிற் கிடைத்ததுன் முகிகைச் சூலங்
கோளினற் கடிது வாங்கிக் கூற்றனு முட்க வார்த்தாள்.

(இ-ள்.) சபதத்துடன் ஆரவாரித்து வீசிய ஒளிபொருந்திய முத்தலைச்சூலத்தை வீரமாகாளர் வாளாயுதத்தால் வெட்டுதலும், அசமுகியானவள் கோபங்கொண்டு சிநேகத்தினல் தன்னுடன்வந்து நிற்கின்ற துன்முகியின் கையிலுள்ள சூலத்தைக் கோபத்துடன் விரைவாக வாங்கி இயமனும் வெட்கும்படி யாரவாரித்தனள்.—எ-று.

வசிகெழு சூலம் பற்றி மருத்துவன் றுணைவி யான
சசிதனை யிகுளை யாகுந் தையறன் கரத்திற் சேர்த்தி
நிசியின்மால் பாந்த ளோடு நெடுங்கதிர் நேர்புக் கென்ன
விசையொடு கொடியள் சென்றாள் வீரமா காளன் றன்மேல்.

(இ-ள்.) கூர்மை பொருந்திய சூலத்தைக் கையிலேந்தி இந்திரன் மனைவியாகிய இந்திராணியைத் தனது தோழியாகிய துன்முகியின் கையிலொப்பித்துவிட்டுக் கரிய மேகம் கேதுக்கிரகத்துடன் துணைசேர்ந்து சூரியனெதிரிற் சென்றாற்போல வீரமாகாளர்மீது அசமுகியானவள் வேகமாகச் சென்றனள்.—எ-று. (௧௯)

ஒற்றைமுத் தலைவே றன்னை யொப்பிலான் மருமமீது
குற்றிய முன்னி நீட்டிக் குறுகின ளமர்செய் போழ்திற்
கற்றையஞ் சுடர்க்கூர் வாளாற் காவல னெறிதலோடு
மிற்றது சூலங் கண்ட வசமுகி யிடைந்து போனாள்.

(இ-ள்.) ஒரு திரிசூலத்தை வீரமாகாளரது மார்பில் குத்தும்பொருட்டுக் குறிவைத்து நீட்டிக்கொண்டு எதிர்த்துப் போர் செய்யும்பொழுது, வீரமாகாளர் ஒளிபொருந்திய வாளினல் வெட்டுதலும் அச்சூலம் ஒடிந்தது; அதனைப்பார்த்த அசமுகி விலகிச்சென்றனள்.—எ-று. (௨௦)

இடைந்தன ளேகி யாண்டோ ரிருங்கிரி பறித்திட் டின்னே
முடிந்தனை போது மென்னு மொய்ம்புட னவன்மே லோச்சத்
தடிந்தனன் றடித லோடுந் தாரைவாட் படையும் வல்லே
யொடிந்தது கொடியள் காணு வொல்லொலிக் கடல்போ லார்த்தாள்.

(இ-ள்.) விலகிச்சென்று ஒரு பெரிய மலையைப் பிடுங்கி நீ இப்பொழுதே இறந்தனையென்று வலிமையோடு அவ்வீரமாகாளர்மீது வீசுதலும், அவர் அம்மலையைத் துண்டாக வெட்டினர்; அவ்வாறு வெட்டுதலும், அவரது கூரிய வாளாயுதமும் விரைவாக வொடிந்தது; அதனை அசமுகி பார்த்து, பேரொலியினை யுடைய கடலைப் போலக் கர்ச்சித்தனள்.—எ-று. (௨௧)

வீரமா காள கேண்மோ வேதனே யாதி விண்ணோ
ராருமவந் தாசி கூற வகிலமு மாளு கின்ற
சூரனு மெமது முன்னோன் றோளிடை யுய்ப்பக் கொண்டு
பேருவ னிவளை யோராய் விலக்கினை பேதை நீராய்.

(இ-ள்.) வீரமாகாளனே! கேட்பாயாக: பிரமன் முதலிய தேவர்களெல்லாம் வந்து ஆசி கூறும்படி எல்லாவுலகங்களையும் ஆளுகின்ற சூரபன்மனாகிய எனது தமயனது தோள்களிற் சேர்க்கும்பொருட்டு இவளைக் கொண்டு செல்கின்றேன்; இதனை நீ யுணர்ந்துகொள்ளாமல் அறிவில்லாரைப்போல் வந்து தடுத்தனை.—எ-று.

தடுத்திடன் முறைய தன்றாற் றாரகன் றானை வீர
ரடுத்திடிற் படுப்பர் கண்டா யன்றியும் யானே நின்னை
யெடுத்தனன் மிசைவன் றுய்க்கி னிரும்பசி யுலவா தென்னா
விடுத்தன னுய்ந்து போதி விளிவுறே லெளியை யென்றாள்.

(இ-ள்.) நீ தடுப்பது முறைமையல்ல; உன்னைத் தாரகாசுரனது சேனைவீரர்கள் வந்தாற்கொல்லுவார்கள்; அன்றியும், யானே உன்னை யெடுத்துண்பேன்; உண்டால் எனது பெரும்பசியான துதணியாதென்று விட்டுவிட்டனன்; ஏழையாகிய நீ சாகாமல் பிழைத்துப்போகக்கடவை யென்று கூறினாள்.—எ-று. (உரு)

பாதகி யினைய மாற்றம் பகர்தலும் வீரன் கேளா
வேதியி னினது சூலப் படையிற வெறிந்தே னின்னை
மாதென வடாது நின்றேன் மற்றிதை யுணர்ந்து வல்லே
போதியா லிவளை விட்டுப் போக்கலே கரத்தை யென்றான்.

(இ-ள்.) அசமுகியானவள் இவ்வார்த்தைகளைக் கூறுதலும், அதனை மகாகாளர் கேட்டு எனது வாளினால் உனது சூலாயுதம் அழியும்படி வெட்டினேன்; உன்னைப் பெண்ணென்று கொல்லாது விட்டேன்; இதனையுணர்ந்து இவ்விந்திராணியை விட்டுவிட்டு விரைந்து போகக்கடவை; கைகளைப் போக்கிக்கொள்ளாதே யென்று கூறினார்.—எ-று. (உச)

என்றலுங் கொடியள் கேளா வீங்கிவன் வாளு மின்றி
நின்றன னிவனோ டேபோர் நேருத னெறிய தன்றா
லன்றியு மிவனை வெல்ல லரிதினிச் சசியைக் கொண்டு
சென்றிட றுணிபா மென்னாத் திரும்பினள் சேடி தன்பால்.

(இ-ள்.) என்று கூறுதலும், இதனை அசமுகி கேட்டு இவன் வாளுமில்லாது நிற்கின்றான்; ஆதலால் இவனுடன் போர்செய்தலும் முறைமையன்று. அதுவன்றியும் இவனை வெல்வது அருமை. இனி நாம் இந்திராணியை யிட்டுக்கொண்டு போவதே நல்லதென்று துணிந்து துன்முகியின் பக்கமாகத் திரும்பினாள்.—எ-று. (உரு)

துன்முகி யாகி நின்ற துணைவிதன் சிறைப்பட் டுள்ள
பொன்மிகும் யாணர் மேனிப் புலோமசை தனைத்தான் பற்றிக்
கொன்மலி யம்பொன் மேருக் குவட்டினைக் கொடுபோங் காலின்
வன்மையி னோடு கொண்டு மறிமுகத் தணங்கு போனாள்.

(இ-ள்.) துன்முகியாகவே நின்ற தோழியின் கையில் பிடிபட்டு நின்ற பொன்போலும் அழகிய தேககாந்தியையுடைய இந்திராணியைத் தான் பிடித்துக்கொண்டு, வலிமைபொருந்திய மேருமலையின் சிகரத்தைப் பறித்துக்கொண்டு சென்ற சண்டமாருதத்தைப்போல அசமுகியானவள் வலிவாகப் பிடித்துக்கொண்டு சென்றனள்.—எ-று. (உசு)

போகலு மதனை யையன் பொருநரிற் றலைவன் பாரா
வேகுதி போலு நில்லென் றெய்தியே யுடைவாள் வாங்கிச்
சேகுறு மனத்தாள் கூந்தல் செங்கையாற் பற்றி யீர்த்துத்
தோகையைத் தொட்ட கையைத் துணித்தனன் விண்ணோர் துள்ள.

(இ-ள்.) அவ்வாறு போகவும், அதனை ஐயனாரது சேனைத்தலைவராகிய வீரமாகாளர் பார்த்துப் போகின்றாய்போலும்! நில்லென்று சென்று உடைவாளை யுருவி வயிரம்பொருந்திய மனத்தினையுடைய அசமுகியினது கூந்தலைச் செவ்வியகரத்தினால் பிடித்திழுத்துத் தேவர்கள் துதிக்கும்படி இந்திராணியைத்தொட்ட கையினை வெட்டினார்.—எ-று. (உஎ)

இருட்டுறு பிலத்துற் றோரை யெடுத்துவெள் ளிடையிட் டென்ன
மருட்டுறு மதிய ளாகி வருந்திய சசியென் பாளை
யருட்டிறத் தோடு விடு செய்துபின் னவுண மாதை
யுருட்டினன் றனது தாளா லுருமென வுதைத்துத் தள்ளி.

(இ-ள்.) இருள் நிறைந்த நரகத்திற் கிடந்தவர்களை யெடுத்து வெளியில் விட்டாற்போல மயக்கம் பொருந்திய அறிவினையுடையவளாக வருந்திய இந்திராணியை இரக்கத்துடன் விடுதலைசெய்து பின் அசமுகியைத் தமது பாதங்களால் இடியிடித்தாற்போல உதைத்துத்தள்ளி யுருட்டினர்.—எ-று. (உஅ)

அயமுகி வீழ்த லோடு மழுங்கியே யயலி னின்ற
வயமிகு துன்மு கத்து மங்கைதன் கரத்தி லொன்றைச்
செயிரறு சசியை நீயுந் தீண்டினை போலு மென்னாத்
துயல்வரு தொடையல் வீரன் றுணித்தனன் சோரி பொங்க.

(இ-ள்.) அசமுகி விழுந்தவுடனே, வருந்திக்கொண்டு பக்கத்தில் நின்ற வெற்றிமிக்க துன்முகியினது கைகளிலொன்றைக் குற்றமற்ற இந்திராணியை நீயுந்தீண்டினையல்லவோவென்று அசைகின்ற மாலையினை யணிந்த மகாகாளர் உதிரமொழுகும்படி வெட்டினர்.—எ-று. (உக)

வேறு.

மதர்த்திடு துன்முகி வன்கை வாளினாற்
சிதைத்திடு மொய்ம்புடைச் சேனை காவல
னுதைத்தன னனையளு மோவென் றோயுளம்
பதைத்தனள் புலம்பியே படியில் வீழவே.

(இ-ள்.) இறுமாப்பினையுடைய துன்முகியினது வலிமைபொருந்திய கையினை வாளினால் வெட்டிய வீரமாகாளர், அத்துன்முகியும் ஓ! வென்று கதறி மனந்துடித்துப் புலம்பிக்கொண்டு பூமியில் விழும்படி யுதைத்தனர்.—எ-று. (௩௰)

மகாகாளர்வருபடலமுற்றிற்று:

ஆக திருவிருத்தம் - ௧௯௦௩.

உ

முருகன் றுணை.

# அசமுகி சோகப் படலம்.

அறைபடு கழலினு னவுண மாதர்கை
யெறிதலுங் குருதிநீ ரெழுந்த தன்மையாற்
றிறல்கெழு வெய்யசூர் திருவைச் சுட்டிடுங்
குறைபடு ஞெகிழியின் கோலம் போலுமே

(இ-ள்.) சப்திக்கின்ற வீரகண்டையையணிந்த பாதங்களையுடைய மகாகாளர் அசுரமாதர்களினது கைகளை வெட்டியவுடனே உதிரமொழுகினமையால் அது வலிமைமிக்க கொடிய சூரபன்மனது செல்வத்தைச் சுடுகின்ற கொள்ளிக்கட்டையின்றன்மையை யொத்தது.—எ-று. (க)

திரைந்தெழு குடினைபோற் குருதி சென்றிடக்
கரந்துமி படுதலுங் கவன்று வீழ்ந்தனள்
வருந்தின ளரற்றினண் மறிமு கத்தினள்
விரிந்திடு கனலுடை வேலை போன்றுளாள்.

(இ-ள்.) இரைந்துகொண்டு வருகின்ற ஆற்று நீரைப்போல உதிரமொழுகும்படி கைகளறுபட்டவுடனே பற்றியெரிகின்ற வடவாமுகாக்கினி பொருந்திய கடல்போல்பவளாகிய அசமுகியானவள் கவலையடைந்து பூமியில் விழுந்து வருத்தமுற்றுப் புலம்பினள்.—எ-று. (உ)

மருண்டனள் பதைத்தனண் மறித்த கையினள்
வெருண்டன ளிலனுற வியன்கை யெற்றின
ளுருண்டனள் வெரிநுட னுரமுந் தேய்வுறப்
புரண்டனள் செக்கரிற் புயலிற் றோன்றுவாள்.

(இ-ள்.) செக்கர்வானத்துடன் காணப்பட்ட கருமேகம் போல்பவளாகிய அசமுகியானவள் மருண்டனள்; பதைத்தனள்; கைகளையுதறினள்; வெருட்சியடைந்தனள்; பூமியின்மேல் தனது பெரிய கையை யெடுத்து மோதினள்; உருண்டனள்; முதுகும் மார்புந் தேயும்படிப் புரண்டனள்.—எ-று. (ங)

புரந்தரன் றேவியைப் பொம்மெ னப்பிடித்
துரந்தரு வாயிலிட் டுண்ப னீண்டெனு
விரைந்தெழுஞ் சென்றிடு மீளும் வீழ்ந்திடு
மிருந்திடுஞ் சாய்ந்திடு மிரங்குஞ் சோருமே.

(இ-ள்.) இந்திரன் மனைவியாகிய இந்திராணியை யான் விரைவாகப் பிடித்து வலிமை பொருந்திய வாயில் போட்டு இங்கே யுண்டுவிடுவேனென்று துரிதப்பட்டு எழுவாள்; போவாள்; திரும்புவாள்; விழுவாள்; இருப்பாள்; சாய்வாள்; இரங்குவாள்; சோர்வாள்.—எ-று. (ச)

கடித்திடு மிதழினைக் கறைகண் மீச்செலக்
குடித்திடு முமிழ்ந்திடுங் குவல யத்திரீஇத்
துடித்திடும் பெயர்ந்திடுந் துளக்குஞ் சென்னியை
யிடித்தெனக் கறித்திடு மெயிற்றின் மாலையே.

(இ-ள்.) இதழைக் கடிப்பாள் ; உதிரங்கள் மேலேறும்படி யுறிஞ்சுவாள்; பின் உமிழ்வாள் ; தலையைப் பூமியில் சாய்த்துக்கொண்டு துடிப்பாள் ; சுற்றுவாள் ; அசைப்பாள் ; இடியிடித்தாற்போலப் பல்வரிசையைக் கடிப்பாள்.—எ-று. (ரு)

திகைத்திடு நன்றுநஞ் செய்கை யீதென
நகைத்திடு மங்குலி நாசி யிற்றொடும்
புகைத்தென வுயிர்த்திடும் புவியைத் தாள்களா
லுதைத்திடும் புகையழ லுமிழும் வாயினால்.

(இ-ள்.) திகைப்பாள் ; நமது செய்கை மெத்த நன்றாயிருக்கின்றதென்று சிரிப்பாள்; மூக்கின்மீது விரலைவைப்பாள்; புகைந்தாற்போலப் பெருமூச்சுவிடுவாள்; பூமியைக் கால்களாலே யுதைப்பாள் ; வாயினால் புகை நெருப்பைக் கக்குவாள். (சு)

உம்மென வுரப்பிடு முருமுக் கான்றென
விம்மெனச் சினத்திடு மெரிவி ழித்திடுந்
தெம்முனைப் புடையடுஞ் சேனை வீரனை
விம்மிதப் படுமுடல் வியர்க்கும் வெள்குமே.

(இ-ள்.) உம்மென்று அதட்டுவாள் ; இடியிடித்தாற்போல இம்மென்று கோபிப்பாள் ; தீப்பொறி பறக்கப் பார்ப்பாள் ; போர்முகத்தில் ஆயுதத்தினால் தன் கையை வெட்டிய வீரமாகாளனைப்பற்றி ஆச்சரியப்படுவாள்; உடல் வியர்ப்பாள்; வெட்கமடைவாள்.—எ-று. (எ)

அற்றிடு கரத்தினை யறாத கையினாற்
றெற்றென வெடுத்திடுந் தெரிந்து நோக்கிடு
மொற்றிடும் விழிகளி லுகுக்குஞ் சோரிநீ
ரிற்றெவர் பட்டன ரென்னி னென்னுமே.

(இ-ள்.) அறுபட்ட கையை அறுபடாத வேறொரு கையினாலெடுத்து அதனை உற்றுப்பார்ப்பாள் ; (அக்கையுடன்) பொருத்திப் பார்ப்பாள் ; கண்களில் உதிரநீர் சிந்தவிடுவாள் இன்று என்னைப்போல் யார் அனுபவித்தார்களென்று கூறுவாள். (அ)

வீவதே யினியெனும் வினையி னேன்றனக்
காவதோ விஃதெனு மைய கோவெனு
மேவரும் புகழ்தரு மெங்க ளண்ணர்பாற்
போவதெவ் வாறெனப் புலம்பு கொள்ளுமே.

(இ-ள்.) இனிச் சாவதேயென்று கூறுவாள் ; பாவியாகிய எனக்கு இவ்வாறுண்டாவதோ வென்பாள்; ஐயோவென்பாள்; யாவர்களும் புகழுகின்ற எங்கள் தமயனிடத்திற்கு எவ்வாறு போவதென்று புலம்புவாள்.—எ-று. (௯)

காசினி தனில்வருங் கணவர் கைதொடக்
கூசுவ ரேயெனுங் குறிய பங்கெனப்
பேசுவ ரேயெனும் பிறரும் வானுளோ
ரேசுவ ரேயெனு மென்செய் கேனெனும்.

(இ-ள்.) உலகத்தில் என்னைச் சேரவருகிற புருடர்கள் கையால் தொடுதற்குக் கூசுவார்களே யென்பாள்; மற்றவர்களும் சிறிய முடமென்று பேசுவார்களே யென்பாள்; தேவர்களும் இகழ்வார்களே யென்பாள்; யாது செய்வேனென்பாள்.

தேவர்க ளனைவருஞ் சிந்தித் தென்கரம்
போவது புணர்த்தனர் பொன்று வேனினி
யாவதன் முன்னரோ யவரை யட்டுல
கேவையு முடிப்பனென் றெண்ணிச் சீறுமே.

(இ-ள்.) தேவர்களனைவரும் ஒன்றுசேர்ந் தாலோசித்து எனது கைபோகும்படி செய்தனர். இனி நான் இறப்பேன் ; அப்படி யிறத்தற்கு முன்னமே தேவர்களைக்கொன்று எல்லா வுலகங்களையும் அழிப்பேனென்று நினைத்துச் சீறுவாள்.—எ-று.

பாருயிர் முழுவதும் படுத்தி டோவெனு
மாரழல் வடவையை யவித்தி டோவெனும்
பேருறு மருத்தினைப் பிடித்தி டோவெனு
மேருவை யலைத்தனன் வீட்டு கோவெனும்.

(இ-ள்.) உலகத்துள்ள உயிர்களனைத்தையும் யான் கொல்லவோவென்று கூறுவாள் ; வடவாமுகாக்கினியை யழிக்கவோ வென்பாள்; செல்லுகின்ற காற்றினைப்பிடிக்கவோ வென்பாள்; மேருமலையை யசைத்துக் கீழே விழச்செய்யவோவென்று கூறுவாள்.—எ-று. (கஉ)

பீளுறு மெழிலிகள் பிறவும் பற்றியே
மீளரி தெனும்வகை மிசைந்தி டோவெனு
நாளினை முழுவது நாளு டன்வருங்
கோளினை முழுவதுங் கொறித்தி டோவெனும்.

(இ-ள்.) சூல்கொண்ட மேகங்களையும் மற்றவைகளையும் பிடித்துத் திரும்பி வராவண்ணந் தின்றுவிடவோ வென்பாள்; எல்லா நட்சத்திரங்களையும் சூரியனுடன் வருகின்ற சகல கிரகங்களையும் கொறிக்கவோ வென்பாள்.—எ-று. (கரு)

சீர்த்தகை யிழந்தியான் றெருமந் துற்றது
பார்த்திக ழுங்கொலிப் பரிதி வானவ
னூர்த்திடுந் தேரொடு மவனைப் பற்றியே
யீர்த்தனன் வருவதற் கெழுந்தி டோவெனும்.

(இ-ள்.) சிறப்பாகிய கையை யிழந்து யான் வருந்திக்கொண்டிருப்பதை இந்தச் சூரியன் பார்த்து இகழ்வானோ? முழங்குகின்ற இரதத்துடன் அவனைப் பிடித்திழுத்துக்கொண்டு வருவதற்கு எழுந்திருக்கவோ வென்பாள்.—எ-று. (கச)

கண்டதோர் பரிதியைக் கறித்துச் சூழ்ச்சிசெ
யண்டர்கள் யாரையு மடிசி லாகவே
யுண்டெழு கடலையு முறிஞ்சிக் கைபுறத்
தெண்டிரை தனிற்கழீஇத் திரும்பு கோவெனும்.

(இ-ள்.) என்னைப்பார்த்த சூரியனைக் கறியாகமென்று, வஞ்சனை செய்த தேவர்க ளனைவரையும் உணவாகவுண்டு, எழு கடல்களையுங் குடித்து, தெளிவாகிய அலைகளையுடைய பெரும்புறக்கடலிற் சென்று கைகழுவித் திரும்பவோ வென்பாள்.

செந்நல நீடிய தென்னங் காயிடைத்
துன்னிய தீம்பயன் சுவைத்திட் டாலெனப்

பின்னூறு மதியினைப் பிடித்துக் கவ்விமெய்
யின்னமிர் தினைநுகர்ந் தெறிகெ னேனெனும்.

(இ-ள்.) செவ்விய நன்மை மிகுந்துள்ள இளநீரினிடத்திலிருக்கின்ற நல்ல நீரைக் குடித்தாற்போல, இரவில் வருகின்ற சந்திரனைப் பிடித்து வாயில் கவ்விக்கொண்டு அவனுடம்பிலுள்ள இனிய அமிர்தத்தைக் குடித்துவிட்டு எறியவோவென்று கூறுவாள்.—எ-று. (கசு)

இந்திரன் களிற்றினை யேனைத் தந்தியைச்
செந்துவர்க் காயெனச் சேர வாய்க்கொளா
வைந்தரு விலைகளா வவற்றுள் வெண்மலர்
வெந்துக ளாக்கொடு மிசைகெ னேனெனும்.

(இ-ள்.) அயிராவதத்தையும் மற்றைய யானைகளையும் நல்ல பாக்கைப்போல ஒருமிக்க வாயில்போட்டுக் கற்பகவிருக்ஷங்களை வெற்றிலைகளாகவும் அவற்றிலுள்ள வெண்மலர்களைச் சுண்ணாம்பாகவுங் கொண்டு தின்னவோவென்று கூறுவாள்.

தாக்குகோ பணிகளைத் தலைகி ழக்குற
நீக்குகோ பிலம்படு நிலயத் தோரையுந்
தூக்குகோ புவனியைச் சுழற்றி மேலகீ
ழாக்குகோ மாலென வருந்து கோவெனும்.

(இ-ள்.) பாம்புகளை மோதட்டுமோ? அவற்றைத் தலைகீழாகத்தள்ளட்டுமோ? பாதலத்திருப்பவர்களையுந் தூக்கட்டுமோ? உலகத்தைச்சுழற்றி மேல்கீழாக்கட்டுமோ? திருமாலைப்போல அவ்வுலகத்தை யுண்ணட்டுமோவென்று கூறுவாள்.—எ-று. (கஅ)

வேறு.

ஆரு மச்சுற வினையன வசமுகி வெய்யாள்
சூரன் றங்கைமா னுளத்தின ளிறப்பது துணிவாள்
பேரிடும் பைய டொலைவுறு மானமே பிடித்தாள்
வீர வன்மைய ளாதலி னுரைத்தனள் வெகுண்டாள்.

(இ-ள்.) சூரபன்மன் தங்கையாகிய அசமுகியானவள் மனமயக்கங் கொண்டு இறக்கத் துணிந்தவளாய் மிக்க விசனத்தையும் நீங்காத மானத்தையு மேற்கொண்டவளாயுள்ள சவுரியத்தன்மையோடு கூடிய வலிமையுடையவளாதலால் யாவரும் அஞ்சும்படி இவ்விதமான வார்த்தைகளை யுரைத்துக் கோபங்கொண்டனள்.—எ-று.

வெகுளு மெல்லையிற் கண்டன டுன்முகி வெய்ய
தகுவர் தங்குலத் துதித்தன ளாயினுந் தகவின்
புகுதி சால்புணர் புந்திய ளாதலிற் பொருக்கென்
றிகுளை முந்துற வந்தன ளினையன விசைத்தாள்.

(இ-ள்.) அவ்வாறு கோபித்தபொழுது பார்த்த துன்முகியானவள் கொடிய அசுரர்குலத்திற் பிறந்தவளாயினும் தகுதியாகிய தன்மையை யுணர்ந்த அறிவினையுடையவளாதலால் தன் தோழியாகிய அசமுகியினெதிரில் விரைவாக வந்து இவ்வார்த்தைகளைக் கூறுவாள்.—எ-று. (உ0)

வைய மென்செயும் வானக மென்செயு மற்றைச்
செய்ய வானவ ரென்செய்வர் வரைகளென் செய்யு
மைய மால்கடல் பிறவுமென் செய்திடு மவனாற்
கையி ழந்திடி னுலகெலா முடிப்பது கடனே.

(இ-ள்.) அசமுகியே! மண்ணுலகமென்னசெய்யும்? விண்ணுலகமென்ன செய்யும்? மற்றைய நல்ல தேவர்கள் என்ன செய்வார்கள்? மலைகளென்ன செய்யும்? கருங்கடல் முதலிய மற்றவைகளு மென்னசெய்யும், அவ்வீரமாகாளனால் கையறுபட்டால் உலகங்களை யெல்லா மழிப்பது முறைமையோ?—எ-று. (௨௧)

பாரும் வானமுந் திசைகளும் பல்லுயிர்த் தொகையுஞ்
சேர வேமுடித் திடுவதை நினைந்தனை செய்யி
னாரு நின்றனை யென்செய்வ ரவையெலா முடைய
சூர னேயுனை முனிந்திடு மவன்வளந் தொலையும்.

(இ-ள்.) பூமியும், அந்தரமும், திக்குக்களும், பல உயிர்களும் அழியும்படி ஒருமிக்க நாசஞ்செய்தலை மனதில் நினைத்தனை; அவ்வாறு நீ செய்தால் உன்னைத் தடுப்பவர்கள் யார்? இவை யனைத்தையுந் தன்னதாகவுடைய சூரபன்மன் தனது வளந் தொலைதலால் உன்னைக் கோபிப்பான்.—எ-று. (௨௨)

ஆத லான்மனத் தொன்றுநீ யெண்ணலை யவுணர்
நாத னாகிய வெய்யசூர் முன்னுற நாம்போ
யீதெ லாஞ்சொலி னிமையவர் கிளையெலா முடிக்கும்
போத லேதுணி வென்றனள் பின்னரும் புகல்வாள்.

(இ-ள்.) ஆதலால் மனத்தில் நீ ஒன்றையும் நினையாதே; அசுரேசனாகிய சூரபன்மனிடத்தில் நாம் சென்று இவையனைத்தையுங் கூறுவோமாயின் அவன் தேவர் வமிசங்களனைத்தையு மழிப்பான்; இனி நாம் போவதே யுறுதியென்றவளாய்ப் பின்னுங் கூறுவாள்.—எ-று. (௨௩)

வேறு.

ஞானமில் சிறுவிதி நடாத்தும் வேள்வியில்
வானவர் தங்களின் மடந்தை மார்களிற்
றானவர் தங்களிற் றத்த மெய்களி
லூனமில் லோராயா முரைக்க வல்லமோ.

(இ-ள்.) அறிவற்ற தக்கன் செய்த யாகத்தில் தேவர்களிலும் தேவமாதர்களிலும் அசுரர்களிலும் தங்கள் சரீரங்களில் காயமில்லாதவர்களை யாம் சொல்லத் தக்கவர்களோ?—எ-று. (௨௪)

நினைவருங் கண்ணுத னிமலற் கேயலா
லனையனை யடைதரு மறிஞர்க் கேயலா
லெனைவகை யோர்க்குமெவ் வுயிர்க்கு மேற்பதோர்
வினைபடு மிழிதுயர் விட்டு நீங்குமோ.

(இ-ள்.) நினைத்தற்கரிய சிவபெருமானுக்கும் அவ்வெம்பெருமானை யடைந்துள்ள மெய்ஞ்ஞானிகளுக்குமேயன்றி மற்றெத் தன்மையானவர்களுக்கும், எத்தகைய உயிர்களுக்கும் பொருந்தியுள்ளதாகிய தீவினையினாலுண்டான துன்பமானது விட்டு நீங்குமோ? (நீங்காது).—எ-று. (௨௫)

ஆகையின் மங்கைநீ யரற்றல் வெள்கியே
சோகமுங் கொள்ளலை துயரு மின்பமு
மோகமு முயிர்க்கெலா முறையிற் கூடுமா
லேகுது மெழுகென வியம்பித் தேற்றினாள்.

(இ-ள்.) ஆதலால் அசமுகியே! நீ புலம்பாதே; வெட்கமுற்றுச் சோர்வையுமடையாதே; துன்பமும் இன்பமும் மோகமும் எல்லாவுயிர்களுக்கும் முறைப்படியே வந்து சம்பவிக்கும்; நாம் போவம் வருவாயாகவென்று கூறித் தேற்றினள். (உசு)

வேறு.

மொழிந்து துன்முகி தெளித்தலு நன்றென முன்னு
வெழுந்து துண்ணென வசமுகி யென்பவ ளிலதாய்க்
கழிந்த துன்பொடு நின்றதோர் சசியினைக் காணூஉ
வழிந்த மானவெந் தீச்சுட வினையன வறைவாள்.

(இ-ள்.) இவ்வாறு துன்முகியானவள் (பல வார்த்தைகளைக்) கூறித் தேற்றவும், நல்லதென்று நினைத்துத் திடீரென்று அசமுகியானவளெழுந்து துன்பநீங்கினவளாக நிற்கின்ற இந்திராணியைப் பார்த்து அழிந்த மானமாகிய கொடிய தீயானது சுடும்படி இத்தகைய வார்த்தைகளை யுரைப்பாளாயினள்.—எ-று. (உஎ)

துப்பு றுத்திய வண்டங்கள் யாவினுஞ் சூரன்
வைப்பு றுத்திய திகிரியு மாணையும் வழங்கு
மிப்பு றத்தினி லொளிப்பினு மிதுவன்றி யண்டத்
தப்பு றத்தினி லொளிப்பினும் பிழைப்புமக் கரிதே.

(இ-ள்.) வலிமைபொருந்திய எல்லா அண்டங்களிலும் சூரபன்மனு லமைக்கப்பட்டுள்ள ஆக்ஞாசக்கரமும் அவனது செங்கோலும் செல்லும், ஆதலால் நீங்கள் இவ்வண்டத்தி லொளித்துக்கொண்டாலும் இதுவன்றி அண்டத்தின் அப்புறத்தி லொளித்துக்கொண்டாலும் இனி நீங்கள் பிழைப்பது கஷ்டந்தான்.—எ-று. (உஅ)

மறைத லுற்றிடு மிந்திரன் றன்னையிவ் வனத்தி
னுறைத லுற்றிடு முன்றனை யொழிந்தவா னவரை
யிறைத னிற்பற்றி யீர்த்துப்போ யென்னகர் தன்னிற்
சிறைப டுத்துவன் றிண்ணமெங் கோமகன் செயலால்.

(இ-ள்.) எமது அரசனது கட்டளையினால் நான் மறைந்திருக்கின்ற இந்திரனையும், இவ்வனத்தில் வசிக்கின்ற உன்னையும், மற்றைத் தேவர்களையும் விரைவாகப் பிடித்திழுத்துக்கொண்டுபோய் உண்மையாகச் சிறையிலடைப்பேன்.—எ-று. (உகூ)

உங்க டம்மையான் சிறைபடுத் தேனெனி னுலக
மெங்கு மாள்கின்ற சூரபன் மாவெனு மிறைவன்
றங்கை யன்றியா னெனதுரந் தனிலெழுந் தனவுங்
கொங்கை யன்றியான் பேடியே குறிக்கொளென் றகன்றாள்.

(இ-ள்.) யான் உங்களை சிறைசெய்யாது போவேனாயின் எல்லா வுலகங்களையு மரசாட்சி செய்கின்ற சூரபன்மனது தங்கையல்லேன்; எனது மார்பில் வளர்ந்திருப்பனவுங் கொங்கைகளல்ல; என்னை ஒரு பேடியேயென்று நினைத்துக்கொள்ளென்று கூறிச் சென்றனள்.—எ-று. (௩௦)

அசமுகிசோகப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௪௬௯௯.

உ

முருகன்றுணை.

# இந்திரன்மீட்சிப்படலம்.

அகல நின்றமெதோர் வீரமா காளனு மடலோ
னுகவை யோடுறு சசியினை நோக்கினின் னுளத்திற்
றகுவர் தங்களுக் கஞ்சலை யன்னையுன் றலைவன்
புகுது மெல்லையு மளிப்பனீண் டுறைகென்று போனான்.

(இ-ள்.) தூரமாக நின்ற பலசாலியான வீரமாகாளர் சந்தோஷத்துடன் இந்திராணியைப் பார்த்து அன்னையே! நீ அசுரர்களுக்காக உன் மனத்திற் பயங்கொள்ள வேண்டாம்; உனது நாயகன் வருமளவும் உன்னைப் பாதுகாப்பேன்; நீ இங்கிருவென்று கூறிச் சென்றனர்.—எ-று. (க)

போன காலையிற் புலோமசை யடவியம் புறனோர்
மானி னம்பிரிந் துற்றென வவ்வனம் வைகிக்
கோன வன்வினை முற்றிய நோற்றனள் குறிப்பா
லான் பான்மையை நாரத முனிவர னறிந்தான்.

(இ-ள்.) வீரமாகாளர் சென்றவுடனே இந்திராணியானவள் காட்டினொரு புறத்தில் ஒரு மானனது தனது கூட்டத்தினின்றும் பிரிந்து தனித்திருந்தாற்போல அந்நந்தனவனத்தி லிருந்துகொண்டு தனது நாயகன் சென்ற காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வரும்பொருட்டுத்தவஞ்செய்தனள்; அங்குநடந்த சங்கதிகளனைத்தையும் நாரதமுனிவர் குறிப்பாலுணர்ந்தனர்.—எ-று. (உ)

மேலை வெள்ளியம் பருப்பதந் தனில்விரைந் தேகிச்
சீல விண்ணவர் தம்முடன் சிவனடி பரவக்
கால மின்றியே யிருந்திடு மிந்திரன் கடைபோய்
ஞாலம் வைகிய புலோமசைக் குற்றவா நவின்றான்.

(இ-ள்.) உயர்ந்த திருக்கயிலைமலைக்கு விரைவாகச் சென்று சிவபெருமானது திருவடிகளைத் தெரிசித்தற்குக் காலமில்லாமையால் ஒழுக்கம்பொருந்திய தேவர்களுடனே அங்கு வசிக்கின்ற இந்திரனருகிற் சென்று உலகத்திலிருக்கின்ற இந்திராணிக்குண்டாகிய துன்பமனைத்தையுங் கூறினர்.—எ-று. (ங)

நவின்ற வாசகங் கேட்டலு மகபதி நனியுட்
கவன்று தேறியே முனிந்துபின் னிறையருள் கருதி
யவன்றன் மாமுறை தூக்கியே தன்னைநொந் தழுங்கித்
துவன்ற தேவரோ டெழுந்தன னரன்புகழ் துதித்தே.

(இ-ள்.) நாரதர் கூறிய வார்த்தையைக் கேட்டவுடனே இந்திரன் மனம்வருந்தித் தெளிந்து கோபித்துப் பின்பு சிவபெருமானது திருவருளை நினைத்து அவ்வெம்பெருமானது அருட்பெருங் குணத்தைச் சிந்தித்துத் தன்னை நொந்து வருந்தி அவரது புகழைத் துதித்து நெருங்கியுள்ள தேவர்களுட னெழுந்தனன்.—எ-று. (ச)

வந்து நந்தியெம் மடிகளி னடிமுறை வணங்கி
யந்த மில்பகல் வேலேநோக் குற்றன மமலன்
சிந்தை செய்தெமை யருள்புரிந் திடுகிலன் றீயே
முந்தி யற்றிய தீவினேப் பகுதியை முன்னி.

(இ-ள்.) திருநந்தி தேவரெதிரில்வந்து அவரது பாதங்களை முறையே வணங்கி அநேககாலமாகச் சமயம் பார்த்திருந்தோம்; சிவபெருமான் கொடியவர்களாகிய யாங்கள் முன்பு செய்த தீவினைப் பகுதியைச் சிந்தித்து எங்களைத் திருவுள்ளத்திற் கருதித் திருவருள் புரிந்தாரில்லை.—எ-று. (ரு)

கைம்மை யாம்பெய ரணங்கினோர் பெறுவகை கறுத்த
செம்மை யார்களத் தெம்பிரா னெமக்கருள் செய்வான்
பொய்மை தீர்தவ மியற்றிட நிலமிசைப் போது
மெம்மை யாங்கருள் புரிந்தனை விடுத்தியென் றியம்ப.

(இ-ள்.) தேவமாதர்கள் விதவைகளென்னும் பெயரடையா திருக்கும் வண்ணம் கருமையாகிய சிவந்த கண்டத்தினையுடைய சிவபெருமான் எங்களுக்குத் திருவருள் செய்யும்பொருட்டு உண்மையான தவத்தைச் செய்யும்படி நாங்கள் நிலவுலகத்திற்குச் செல்கின்றோம். அவ்விடத்திற்கு எங்களைத் திருவருள் புரிந்தனுப்புவீராகவென்று கேட்டுக்கொள்ளுதலும்.—எ-று. (சு)

நன்று போமென நந்தியெம் பெருந்தகை நவிலத்
துன்று வானவர் தம்மொடுங் கழுமலந் துன்னி
நின்ற வீரமா காளனைக் கண்டன னேர்போய்ச்
சென்று புல்லியே முகமனே ரளப்பில செப்பி.

(இ-ள்.) நல்லது போங்களென்று எமது திருநந்திதேவ ரருளிச்செய்யவும், நெருங்கிய தேவர்களுடனே சீகாழியை யடைந்து அங்கு நின்ற வீரமாகாளனைப்பார்த்து அவரெதிரிற்சென்று ஆலிங்கனஞ் செய்து அநேக உபசார வசனங்களைக்கூறி.

போதி யையவென் றனையனை யையன்பாற் புகுத்தி
மாது நோற்றுழிக் குறுகியே யவடுயர் மாற்றிக்
கேத மெய்திய வசமுகி சூளுரை கேளா
வேது செய்வதென் றுன்னின னிமையவர்க் கிறைவன்.

(இ-ள்.) ஐயனே! போவாயாகவென்று அவனை ஐயனாரிடத்திற் கனுப்பிவிட்டு, இந்திராணி தவஞ்செய்யுமிடத்திற்குப்போய்,அவளது துன்பத்தை நீக்கிக் குற்றம்பொருந்திய அசமுகியின் சபதமொழிகளைக் கேள்விப்பட்டு இனி யாது செய்வதென்று இந்திரன் நினைத்தனன்.—எ-று. (எ)

சுடர்ப்பெ ருங்குலி சத்திறை சூழ்ந்தனன் றுணியா
வடுத்த மங்கையை யுடன்கொடே விரைந்தவ ணகன்று
புடைக்கண் வந்திடுங் கடவுளர் தம்மொடும் புராரி
யெடுத்த வார்சிலைப் பொற்றையிற் கரந்தன னிருந்தான்.

(இ-ள்.) மிக்க ஒளிபெற்ற வச்சிராயுதத்தை யேந்திய இந்திரன் ஆலோசித்துத் துணிந்து இந்திராணியைத் தன்னுட னழைத்துக்கொண்டு விரைவாக அவ்விடத்தினின்று நீங்கி அருகில் சூழ்ந்துவந்த தேவர்களுடன் சிவபெருமானெடுத்தருளிய பெரிய வில்லாகிய மேருமலையிற் சென்று மறைந்திருந்தனன்.—எ-று. (அ)

இந்திரன் மீட்சிபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௬௪௨.

உ

முருகன்றுணை.

# சூரனரசிருக்கைப்படலம்.

இன்ன பான்மையின் மகபதி யிருந்தன னிப்பான்
முன்ன மேகிய வசமுகி வெய்யதுன் முகத்தா
டன்னொ டேகியே மகேந்திரத் தனிநக ரடைந்தா
ளன்ன காலையிற் சூரன்வீற் றிருந்தவா றறைவாம்.

(இ-ள்.) இத்தன்மையாக இந்திரன் சென்றிருந்தனன்; இது நிற்க: கொடிய துன்முகியுடனே முன்னஞ்சென்ற அசமுகியானவள் ஒப்பற்ற வீரமகேந்திரபுரத்தைச் சென்றடைந்தனள்; அப்பொழுது சூரபன்மன் அரசுவீற்றிருந்த தன்மையைச் சொல்லுகின்றோம்.—எ-று. (உ)

வேறு.

மீயுயர் கின்ற விண்ணினின் றிழிந்த விழுமிய மேதினி வரைப்பி
ஞயிர கோடி கொண்டவண் டத்தி லாடகப் பித்திகை யவற்றுட்
டீயன விலக்கி நல்லன வெடுத்துத் திசைமுகத் தவர்கள்செய் தென்ன
வேய்வற விளங்கு தபனியப் பொதுவொன் றொராயிரம் யோசனை யுறுமே.

(இ-ள்.) மிகப் பெரிதான ஆகாயபூதத்தின் வழியாகத் தோன்றிய பிருதிவி பூதத்திலுள்ள ஆயிரங்கோடி யண்டங்களின் பொன்மயமான பித்திகைகளுள் கெட்டவைகளைத் தள்ளி நல்லவைகளை யெடுத்துக் கெடாமல் விளங்குகின்ற பொற்சபையாகப் பிரமர்களால் செய்யப்பட்டு ஆயிரம் யோசனை அகல நிகளங்களையுடையனவாய் ஒரு சபை விளங்கும்.—எ-று. (௩)

இத்தலை யுளதாந் தொல்லையண் டத்தி லிடையிடை யெய்தியே யிலங்கு
மத்தமால் வரைகள் கைபுனைந் தியற்றி யம்புயா சனர்பலர் கூடி
வைத்தெனச் சூர னரசிய னடாத்து மன்றினி லாயிர கோடி
பத்தியி னிறுவு மாடகத் தூணம் பரந்ததப் பெருமையார் பகர்வார்.

(இ-ள்.) இந்தப் பிருதிவிலுள்ள பழைய அண்டங்களில் இடையிடையே விளங்கிக் கிடக்கின்ற பெரிய மேருமலைகளைப் பிரமர்களொருங்குசேர்ந்து அலங்கரித்து வைத்தாற்போலச் சூரபன்மனரசாட்சிசெலுத்துஞ் சபையினில் நாட்டப்பட்ட ஆயிரங்கோடிப் பொன் ஸ்தம்பங்கள் அகன்று காணப்பட்ட பெருமையை யார் சொல்லத்தக்கவர்கள்.—எ-று. (௪)

தொல்லையண் டத்தின் கண்டொறுங் கெழீஇய சுவணமா தரைமெலாந் தொ
தல்லனவிலக்கி நல்லனதெரிந்தே யமைத்தபோ லணிபெறுநிலத்தி[ கைசெய்
லெர்ல்லுறு புடையி லும்பரிலங்க ணுலப்பிலாக் குலகிரிக் குழுவிற்
பல்லிருந் துணிசெய் தணிபடுத் தென்னப் பன்னிற வோவியம் பயிலும்.

(இ-ள்.) பழய அண்டங்கள்தோறும் விளங்குகின்ற சொர்ன பூமிகளையெல்லாம் ஒருங்கு சேர்த்து அவற்றுள் நல்லனவற்றை யெடுத்து அல்லனவற்றைத் தள்ளிச் செய்ததுபோல அழகுண்டாகும் வண்ணம் அச்சபையில் பொருந்திய பக்கங்க

ளிலும் மேலிடத்திலும் அளவற்ற குலகிரிகளைப் பல பெரிய துண்டுகளாகச் செய்து அவற்றை வேலைசெய்தலங்கரித்து வைத்தாற்போலப் பல நிறங்களையுடைய பிரதிமைகள் பொருந்தியிருக்கும்.—எ-று. (௪)

பொன்னுலா வண்டத் தும்பர்க டோறும் பொருந்திய செக்கர்வான் புராரி
தன்னதா ணையினு லொருங்குசூழ்ந் தென்னத் தண்மலர் விதானமீத் தயங்கப்
பன்னிரு கோடி யாகியெங் கணுஞ்சூழ் பகலவர் சிலவரோ யன்றி
யன்னவர் பலரும் பணியிலுற் றென்ன வணிமணிக் கண்ணடி யொளிரும்.

(இ-ள்.) பிருதிவியண்டத்தின் மேலிடங்கள்தோறும் பொருந்தியுள்ள செக்கர்வானங்கள் சிவபெருமானது கட்டளையால் ஒன்று சேர்ந்து நின்றாற்போலத் தண்ணிய மலர்மாலைகளைத் தொங்கவிட்டுள்ள செம்பட்டுக்களாலமைத்த மேற்கட்டிகள் மேலே விளங்கவும், பன்னிரண்டுகோடித் தொகையினையுடையவர்களாய் எவ்விடங்களிலுஞ் சூழ்ந்துகொண்டிருக்கின்ற சூரியர்கள் சிலரன்றி அவர்கள் பலரும் சிவபெருமானது கட்டளையால் வந்து நின்றாற்போல அலங்கரிக்கப்பட்ட அழகிய கண்ணாடிகள் விளங்கும்.—எ-று. (௫)

மண்ணுலா வண்டத் திரவிக ளென்றாழ் வரம்பிலா மதிகளி னுளவாந்
தெண்ணிலாக் கற்றை யைம்பெரு நிறத்த செல்லினம் யாவையுஞ் செறிந்தே
யண்ணலார் மேலைக் கம்பலஞ் சூழ்போ யமர்ந்தென வாயிடைக் கவரி
யெண்ணிலா தனவும் பூந்துகிற் குழுவு மிடைவிராய் மிடைவன வெங்கும்.

(இ-ள்.) பிருதிவியண்டத்திலுள்ள சூரியர்களது வெயில்களும், அளவற்ற சந்திரர்களிடத்துண்டாகிய தெள்ளிய நிலாக்கற்றைகளும், பஞ்சவர்ணங்களையுடைய மேகங்களுமெல்லாம் நெருங்கி மேன்மைபொருந்திய மேற்கட்டியிலுள்ள கம்பலங்களைச் சூழ்ந்திருந்தாற்போல அநேகஞ் சாமரைகளும் பல நிறமான வஸ்திரங்களும் இடையிடையே கலந்து எவ்விடங்களிலும் நெருங்கியிருக்கும்.—எ-று. (௬)

பரக்குறு மண்டந் தொறுந்தொறு முளவாம் பகலினைப் பரிமுகத் தெரியி
னுருக்கியொன் றாக்கித் தவிசென வியற்றி யொளிறுதா ரகையவட் குயிற்றித்
தருக்குறு கின்ற மதிகளை மடங்கற் றகவுசெய் திருத்திய தென்னத்
திருக்கிள ரவையத் தவுணர்கோ னிருப்பச் சிறந்ததோ ரரியணை திகழும்.

(இ-ள்.) பரவிய அண்டங்கள்தோறுமுள்ள சூரியர்களை வடவாமுகாக்கினியிலிட்டு உருக்கி யொன்றாக்கிப் பீடமாகச் செய்து விளங்குகின்ற நக்ஷத்திரங்களை அவ்விடத்தில் இரத்தினங்களாக இழைத்துப் பூரணகலைகளோடு செருக்கி நிற்கின்ற சந்திரர்களைச் சிங்கத்தின்றன்மையாகச் செய்தமைத்தாற்போல அழகு விளங்குகின்ற அச்சபையில் சூரபன்ம னிருக்கும்பொருட்டுச் சிறப்புப்பொருந்திய ஒரு சிங்காசனம் விளங்கும்.—எ-று. (௭)

ஆனதோர் மன்றத் தரியணை மிசையே யாயிர கோடியண் டத்தின்
மேனிமிர் வடவை யங்கியும் விடமு மிசைந்தழி யாநெறி மேவித்
தானவர் பரவக் கூற்றெலா மொன்றாய்த் தணப்பில்பே ரணிகலந் தயங்க
வானிமிர்ந் தற்றா லென்னவெஞ் சூர மன்னவர் மன்னன்வீற் றிருந்தான்.

(இ-ள்.) அத்தன்மையான சபையில் சிங்காசனத்தின்மேல் ஆயிரங்கோடியண்டங்களிலும் மேல்நோக்கி வளருகின்ற வடவாமுகாக்கினியையும் ஆலாகல விஷத்தையுங் குடித்து இறவாததன்மையை யடைந்து எல்லா அண்டங்களிலுமுள்ள காலர்களனைவரும் ஒருருவங்கொண்டு நீங்காத ஆபரணங்கள் விளங்க ஆகாயத்தை யளா

வும்படி நிமிர்ந்திருந்தாற்போல அசுரர்கள் துதிக்கும்படி அரசர்க்கரசனுகிய கொடிய சூரபன்மன் கொலுவீற்றிருந்தனன்.—எ-று. (அ)

மேலைநா ளமல னுதவுபல் லண்ட மேவர நடாத்துதொல் லாணைக்
கோலொடு வெளிய சீர்த்திகண் முழுதுங் குறுகியே யிருருக் கொண்டு
பாலுற வந்து நின்றதே யென்னப் பாங்கரி லவுணர்க டாங்கும்
வாலிய துணைசேர் தவளவெண் கவிகை மாமதிக் கடவுளை மலைய.

(இ-ள்.) முற்காலத்தில் சிவபெருமானளித்தருளிய பல அண்டங்களிலுஞ் சென்று முறையே அரசு செலுத்துகின்ற செங்கோலுடன் வெண்ணிறம்பொருந்திய கீர்த்திகளனைத்து மொன்று சேர்ந்து இரண்டுருவமடைந்து பக்கத்தில் வந்து நின்றாற் போல, அசுரர்கள் அருகில்நின்று பிடிக்கப்பட்ட வெண்ணிறம்பொருந்திய இரட்டைக்குடைகள் பூரணச்சந்திரனை யொத்திருக்கவும்.—எ-று. (கூ)

காருறழ் படிவத் துவரிக ளனைத்துங் கண்ணகன் பாற்கடன் முழுது
மீருரு வெய்தி யெழுந்துமே லோங்கி யிருந்தென வைகலுஞ் செலுமத்
தாரக விறலோன் பஃறலைச் சீயத் தலைமையான் சார்ந்தய லிருப்ப
வாரழ லுருவப் பண்ணவ ரேபோ லமைச்சருங் குமரரு மமர.

(இ-ள்.) கருநிறம்பொருந்திய வடிவினையுடைய கடல்களனைத்தும் இடமகன்ற பாற்கடல் முழுவதும் வேறு வேருக இரண்டுருவங் கொண்டெழுந்து மேலே உயர்ந்திருந்தாற்போலத் தினந்தோறு மங்குவருகின்ற வெற்றிபொருந்திய தாரகனும் பல தலைகளையுடைய சிறப்போடு கூடிய சிங்கமுகனும் வந்து அருகிலிருக்கவும், அரிய நெருப்பின் வடிவமாயுள்ள உருத்திரர்களைப்போன்ற மந்திரிமார்களும் புதல்வர்களுமிருக்கவும்.—எ-று. (௧௦)

எவ்வெலா வண்டத் துறைதரு மருத்து மிரும்புனற் கிறைவரு மாகிச்
செவ்விதி னொருங்கித் தத்தமி னுலவாச் சீகரம் படுபனி சிதறி
யவ்வயின் வேண்டு மளவையிற் பலவா யவனடி பணிந்தெழுந் திறம்போன்
மைவரை யனைய வவுணர்க ளிரட்டும் வாலிய கவரிகள் வயங்க.

(இ-ள்.) எல்லா வண்டங்களிலும் வசிக்கின்ற வாயுக்களும் வருணர்களும் முறையே ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் சிவிறிகளில் மிக்க குளிர்ச்சியுண்டாகின்ற நீர்த்துளிகளை யிறைத்து அவ்விடத்திற்கு வேண்டியவாறே அநேக வுருவங்களைக் கொண்டு அச்சூரனது பாதங்களை வணங்கி யெழுந்தன்மையைப்போல, நீலகிரி போன்ற வடிவினையுடைய அசுரர்கள் வீசுகின்ற வெண்சாமரைகள் விளங்கவும்.—எ-று. ()

உரைத்திடு மண்டந் தொறுந்தொறு முள்ள வும்பரி லியக்கர்கோ னுலகிற்
றரைப்பெரு வரைப்பிற் பிறவினுள் ளதனிற் றவறிலா வற்புதத் தனவாத்[ய்
தெரித்தனரொடுத்துப்பொதிந்தென நறியதிரையன்மெல்லிலைதுவர்ப்பழுக்கா
விரைத்திடு சுண்ணங் கொள்கலம் பரியா வினைமுறை யோர்பலர் விரவ.

(இ-ள்.) சொல்லப்படுகின்ற பலவண்டங்களிலுமுள்ள சொர்க்கங்களிலும், அளகாபுரிகளிலும், பெரிய பூமியினிடங்களிலும், மற்றிடங்களிலு முள்ளவைகளில் குற்றமற்ற ஆச்சரியகரமானதாய் பரீக்ஷித்தெடுத்து மூடிவைத்திருப்பதுபோல, நல்ல மிருதுவான வெற்றிலைகளையும் பாக்குக்களையும் கருப்பூர சுண்ணங்களையும் உட்கொண்டிருக்கின்ற அடைப்பைகளைத் தாங்கினவர்களாய் முறைப்படி தாம்பூல மடித்துக் கொடுப்பவர்களாய் அநேகர்கள் நெருங்கவும்.—எ-று. (௧௨)

நின்றசோ தேரனை யரக்கருட் சிலரை நீரமுய்த் துள்ளகோ டிகமேற்
பொன்றரை யுழியின் மணிசொரிந் தென்னப் புகட்டுறு தம்பலக் களாசி
மன்றதொல் லறிவர் திருத்தினர் பொருவ மற்றவை யவுணர்க ளேந்தித்
துன்றிருந் துவர்க்கா யடைபிற பரிக்குந் தொழுவர்தங் குழுவொடு துவன்ற.

(இ-ள்.) நிலைபெற்றுள்ள சில சூரியர்களை யமைத்தாற்போன்று விளங்கும் நீர்தெளித்துள்ள பூந்தட்டின்மேல் பொன் தரையினிடத்தில் மாணிக்கத்தைச் சிந்தினாற்போலத் (தம்பலங்களைத்) துப்புகின்ற தம்பலப் படிகங்களைப் பழமையாகிய சிற்பிகள் திருத்தியமைத்ததை யொப்பாக விளங்கும்படி அப்படிகங்களை அசுரர்கள் ஏந்திக்கொண்டு நிலைபெற்ற பெரும்பாக்குக்களையும் வெற்றிலைகளையும், மற்றைய முக வாசங்களையு மேந்தி வருகின்ற ஏவலாளர் கூட்டங்களுடன் நெருங்கவும்.—எ-று. ()

ஆழியங் கிரியிற் கதிர்மணி வெயிலு மன்னது சூழ்ந்தபே ரிருளும்
வாழிய வமுது முவரியு மல்லா வாரிதி யும்பல மணியு
மூழியி னிறுதி யமையமே லெல்லா மொன்றிய தென்னமுன் னிருபால்
கேழுறு பின்ன ரவுணர்மாத் தலைவர் கிளையொடு துவன்றினர் கெழும.

(இ-ள்.) சக்கிரவாளகிரியிலுள்ள சூரிய சந்திரர்களது அழகிய வெய்யிலும், அச்சக்கிரவாளகிரியைச் சூழ்ந்துள்ள மிக்க இருளும் பாற்கடலும், உவர்நீர்க்கடலும், மற்றெல்லாக் கடல்களும், பலவகை மணிகளும் உலகத்தின் அழிவுகாலத்தில் அனைத்து மொன்றாய்ச் சேருந் தன்மையைப்போல எதிரிலும் பக்கங்களிலும் விளங்குகின்ற பின்புறத்திலும் பெரிய அசுரத்தலைவர்கள் தங்கள் பந்துக்களுடன் வந்து நெருங்கவும்.—எ-று. (௧௪)

மின்னவிர் விசும்பி னகட்டினை யளவி வெண்மதிக் கடவுண்மெய் யணுகிப்
பின்னுறு மமுத நீர்க்கட றிளைத்துப் பெரும்புறப் புணரியிற் படியா
வின்னிலு மருங்கில் வானகத் துள்ள வெழின்மலர்க் காவுதோ றுலாவித்
தன்னெறி யின்றி மென்மெல வசைந்து தண்ணென வசந்தன்முற் சார.

(இ-ள்.) மின்னலுடன் விளங்குகின்ற மேகங்களின் நடுவிற் கலந்து வெள்ளிய சந்திரனது உடலோடு பழகிப் பின்னர்ப் பாற்கடலின்மூழ்கிப் பெரும்புறக்கடலிற்றோய்ந்து இப்பூமியினிடத்திலும் சொர்க்கத்திலுமுள்ள அழகிய பூஞ்சோலைகள் தோறு முலாவித் தனது பேரோசையைக் காட்டாமல் மெல்லென வசைந்துகொண்டு குளிர்ச்சியுடன் வசந்தக்காற்று முன்னே வரவும்.—எ-று. (௧௫)

விண்படு நிறைநீர்ப் புதுமதிக் கடவுள் வியன்பனித் துவலையைத் துற்றுக்
கண்படு துறக்கத் தண்டலைப் பொதும்பிற் காமரம் போதிடைக் கவிழ்த்தி
யெண்படு பன்னாள் கழித்தபின் கவர்ந்தே யெழிலிகள் கரந்துநின் றீண்டைத்
தண்பனி யுறைப்பிற் கண்ணுறுத் துவலை தணப்பறச் சிதறிடத் தம்மில்.

(இ-ள்.) மேகங்கள், வானத்திலுள்ள பூரணச் சந்திரனது சீதளக் கிரகணங்களை யுண்டு தாங்கள் தூங்குகின்ற சொர்க்கத்திலுள்ள சோலையினிடத்துப் பொருந்திய மலர்களினிடத்திற் கவிழ்த்து அநேககாலங் கழித்துப் பின்னும் அவைகளைத் தாங்களே கிரகித்து மறைந்து நின்றுகொண்டு இவ்வுலகத்திற் பனி பெய்வதுபோல, கண்ணிற் காணப்படாத சிறு துளிகளை ஒன்றுக்கொன்றெதிரில் நின்றுகொண்டு விடாமற் சிந்தவும்.—எ-று. (௧௬)

தேனம ராம்பா லுருப்பசி யரம்பை திலோத்தமை மேனகை முதலாம்
வானவர் மகளி ரியக்கர்தம் மகளிர் வலிகெழு மரக்கர்தம் மகளிர்

*தானவர் மளிகர் விஞ்சையர் மகளிர் சாரணர் சித்தர்தம் மகளி*
*ரேனையர் மகளி ரியாவரும் வெவ்வே றியற்படு களிநட மியற்ற.*

(இ-ள்.) வண்டுகள் பொருந்திய கூந்தலையுடைய உருப்பசி, அரம்பை, திலோத்தமை, மேனகைமுதலிய தேவமாதர்களும், இயக்கமாதர்களும், வலிமைபொருந்திய அரக்கமாதர்களும், அசுரமாதர்களும், கந்தருவமாதர்களும், சாரணமாதர்களும், சித்தமாதர்களும், மற்றைய மாதர்களுமாகிய அனைவரும் வெவ்வேறாக மகிழ்ச்சியைத் தருகின்ற இலக்கணம் வாய்ந்த நடனங்கள் செய்யவும்.—எ-று. (௧௭)

*ஐந்திறத் துருவங் காலையி லுரைப்பா னமையமின் றாகியே வேதா*
*வந்தொரு புடையி லொதுங்கின னிருப்ப மற்றவ னுதவுறுங் குமரர்*
*நந்துறு பெருநீர்க் குடங்கரிற் கன்ன ஞடினர் நாழிகைப் பறையை*
*முந்துற விரட்டிப் பதந்தொறுஞ் சென்று முறைமுறை யுரைத்தனர் திரிய.*

(இ-ள்.) பிரமன் காலையில் பஞ்சாங்கஞ் சொல்லுதற்குச் சமையமில்லாமையால் வேறொரு புறத்தி லொதுங்கியிருக்கவும், அப் பிரமபுத்திரர்களா யுள்ளவர்கள் மிக்க நீர்க்குடங்களிலே விட்டிருக்கின்ற சங்கைக்கொண்டு நாழிகையறிந்தவர்களாய் நாழிகைப் பறைகளை ஓசையுண்டாகும்படி முழக்கிக்கொண்டு அசுரர்களுடைய இடங்கடோறுஞ் சென்று முறைப்படியே சொல்லிக்கொண்டு திரியவும்.—எ-று. (௧௮)

*தேர்த்திடு முழுவைச் சூழலிற் சிலமான் சென்றென வவுணர்தஞ் செறிவில்*
*வேர்த்துடல் பதைப்ப வரும்பல முனிவர் வேறுவே றாசிக ளிசையா*
*வார்த்திடு மொலியாற் கேட்டில வாமென் றஞ்சின ரவருறு புலத்தைப்*
*பார்த்திடுந் தோறும் வாழ்கெனப் பரவிப் பாணியை விரித்தனர் நிற்ப.*

(இ-ள்.) கொலைத்தொழிலில் தேர்ந்துள்ள புலிகளிருக்குமிடத்தில் சில மான்கூட்டங்கள் சென்றாற்போல, அசுரர்களின் நடுவில் உடல்வியர்த்து மனம் பதைக்கும்படி வருகின்ற அநேக முனிவர்கள் வேறுவேறாகநின்றுகொண்டு ஆசிகூறி, அங்கு முழங்குகின்ற பேரோசையினால் கேட்டிராதென்று பயந்தவர்களாய் அவர்களிருக்கின்ற திசையைப்பார்க்கும்பொழுதெல்லாம் நீங்கள் வாழக்கடவீர்களென்று துதித்துக் கையை விரித்து நிற்கவும்.—எ-று. (௧௯)

*திருக்கிளர் பொன்னாட் டிந்திர னல்லாத் தேவர்கள் யாவரு மவுணர்*
*நெருக்கின ருந்த வேகிநேர் புகுவோர் நெடுங்கடை காறுமுன் றள்ள*
*வெருக்கொடு சென்று மீண்டுமற் றாகி விபன்கடை காவலர் புடைப்பத்*
*தருக்குறு மவையங் காணிய பெறாது தம்முளங் குலைந்தனர் திரிய.*

(இ-ள்.) அழகுவிளங்குகின்ற சொர்க்கத்திலுள்ள இந்திரன்நீங்க, உள்ள மற்றைத் தேவர்களனைவரும் அசுரர்கள் நெருக்கித் தள்ளுங்காலத்தில் நேரே செல்லுகிறவர்கள் வெளிவாயில் வரையிற் கொண்டுவந்து தள்ளுதலும், பின்னும் அச்சத்துடன் அவ்வாறேயாய்ப் பெரிய வாயிற் காவலரடிக்கக் கெம்பீரம்பொருந்திய சபையைக் காணப்பெறாதவர்களாய்த் தங்கள் மனம் வருந்தித் திரியவும்.—எ-று. (௨௦)

*வெற்றவெங் கதத்த ரவுணர்கஞ் சுகிமேசர் மெய்யினர் வெறுக்கையஞ் சூரல்*
*பற்றிடுகரத்தர்செல்லெனுந்தெழிப்பர்பனிப்பிறையெயிற்றர்பல்லிமையோர்*
*பொற்றட மகுடஞ் சிதறிடப் புடைப்போர் புயலூறு சூறையிற் றுரந்துஞ்*
*சுற்றுற நிறுத்து மிருத்தியும் புகுந்தோர் தொல்பெயர் செப்பிமுன் றுதிப்ப.*

(இ-ள்.) வீணாகப் பெருங்கோபங் கொள்ளுகின்றவர்களும், மேற்சட்டையணிந்த தேகமுடையவர்களும், பொற்பிரம்பேந்திய கையினையுடையவர்களும், மேக

ம்போலுங் கர்ச்சனையுடையவர்களும், குளிர்ந்த இளம்பிறைபோலும் பற்களையுடைய வர்களும், பல தேவர்களது பொன்மயமாகிய கிரீடங்கள் சிதறும்படி யடிக்கின்றவர்களுமாகி அசுரர்கள் மேகத்திற் பொருந்திய சூறைக்காற்றைப்போலத் துரத்தியும், சுற்றிலும் நிறுத்தியும் இருக்கச்செய்தும் வந்தவர்களது பழைய பெயர்களைக் கூறி முன்னே துதித்து நிற்கவும்.—எ-று. (௨௧)

பொன்றிகழ் கமலத் திதழெலாம் விரிந்த போதினிற் பொகுட்டிடை தோறு
மின்றிகழ் நுசுப்பிற் றிருமகள் பலராய் வீற்றுவீற் றிருத்தலே போலக்
குன்றுறழ் கொங்கை மங்கையர் பல்லோர் கொண்டுதன் னுறையுளிற் சென்று
துன்றிய பல்வாந் தீபிகைத் தட்டஞ் சொன்முறை யாசியிற் சுற்ற.

(இ-ள்.) பொன்மயமாக விளங்குகின்ற இதழ்கள் விரிந்த தாமரைமலர்ப் பொகுட்டுக்கடோறும், மின்போல் விளங்கு மிடையினையுடைய பல இலக்குமிகள் தனித்தனியே வீற்றிருத்தல்போல, மலைபோலுந் தனங்களையுடைய பலமாதர்கள் தங்கள் வீட்டிற்சென்று கொண்டுவந்த பல தீபத்தட்டுகளைச் சொல்லப்பட்ட முறைமைப்படி மங்கலவாழ்த்துக்களுடன் சுற்றவும்.—எ-று. (௨௨)

தென்னுறு பாலை குறிஞ்சியே மருதஞ் செவ்வழி யென்னுநா னிலத்திற்
பின்னகம் புறமே யருகியன் மற்றைப் பெருகிய லுறழுவெண் ணிரண்டாய்
மன்னிய நாதத் திசைகளிற் பிறவில் வரம்பில வாயபாட் டதனுட்
கின்னரர் சித்த ரியக்கர்கந் தருவர் கிளத்துமங் கலத்தன விசைப்ப.

(இ-ள்.) அழகுபொருந்திய பாலை குறிஞ்சி மருதம் செய்தல் என்று கூறும் நான்கு நிலங்களிலுள்ள பண்களிலகம், புறம், அருகியல், பெருகியல் என்னு முறைப்படிப் பெருக்குவதனா லுண்டாகின்ற பதினாறாக நிலைபெற்றுள்ள நாதத்தி னிசைகளிலும் மற்றவைகளிலும் அளவற்றனவாகிய பாடல்களிலும் மங்கலகரமாயுள்ளவைகளைக் கின்னரர் சித்தர் இயக்கர் கந்தருவர்களென்னு மிவர்கள் பாடவும்.—எ-று. (௨௩)

மாகநல் வேள்வி யாற்றிய திறனு மதிமுடிப் பரனரு ளடைந்தே
யேகிய திறனுந் தனதனை முதலா யாரையு நிலையழித் தனவுஞ்
சேகுறு மண்டம் யாவையுங் கண்டு திருவுட னரசியற் றியதும்
பூகத நிலையத் தவுணர்கள் பல்லோர் புடைதனின் முறைமுறை புகழ.

(இ-ள்.) மகத்தாகிய அக்கினியாகத்தைச் செய்த வல்லமையையும் சந்திரசேகரராகிய சிவபெருமானது திருவருளைப்பெற்றுச் சென்ற திறத்தையும் குபேரன் முதலாகிய யாவரையும் வெற்றி பெற்றமையையும், வலிமைபொருந்திய அண்டங்களனைத்தையும் பார்த்துப் பெருஞ்செல்வத்துடன் அரசாட்சிசெய்த தன்மையையும், புகழ்வோர்களாகிய பல அசுரர்கள் அருகில் நின்றுகொண்டு வரிசைவரிசையாகப் புகழவும்.—எ-று. (௨௪)

கார்த்திடுமவுணர் திசையுளாரேனோர் கைதொழூஉத் தனதாளான் கழற்காற்
றார்த்திடு மலருந் தொல்பெருங் கவியுந் தூநெறி முனிவரர் தொகையுஞ்
சார்த்தினர் வரையா மந்திர நெறியாற் றலைத்தலை யாசிகள் சாற்றிச்
சேர்த்தனர் சிந்துந் துணருமக் கதமுஞ் சீர்த்தகால் வீசினன் றிரிய.

(இ-ள்.) கருநிறம்பொருந்திய அவுணர்களும் திக்குப்பாலகர்களும் மற்றையர்களும் கைகூப்பி வணங்கித் தனது வலிய வீரக்கழலையணிந்த பாதங்களில் சிந்துகின்ற மலர்களும் பழமையாகிய பெரிய சுக்கிரனும் நல்லொழுக்கத்தினையுடைய முனிவர் கூட்டங்களு மடைந்து வேதமந்திர முறைப்படி தனித்தனியே ஆசீர்வசனங்க

ளைக் கூறிக் கொண்டுவந்து சிந்திய மலர்களையும் அக்ஷதைகளையும் சிறந்த வாயுவான வன் ஒதுக்கினவனாகத் திரியவும்.—எ-று. (௨௫)

ஆடியன் முறையை யிபற்றினர் தமக்கு மடைந்துதற் புகழுநர் தமக்கும்
பாடியன் முறையில் வல்லுநர் தமக்கும் பரிவுசெய் தலைவர்க டமக்கும்
பீடுறு மகுடங் கடகநூன் முதலாம் பேரணி மணித்துகில் பிறவு
மாடுறுநிதியு மேனவு நின்று மலர்க்கைநீட் டினதொறும் வழங்க.

(இ-ள்.) முறைப்படியே நடனஞ்செய்தவர்களுக்கும், வேறிடங்களிலிருந்து வந்து தம்மைப்புகழ்ந்தவர்களுக்கும் பாடுந்தன்மையிற் சிறந்தவர்களுக்குந் தனக்கிஷ்டத்தை யுண்டாக்குகின்ற மற்றைத்தலைவர்களுக்கும் பெருமை பொருந்திய மகுடம், கடகம், பொற்பூணூல் முதலாகிய பெரிய ஆபரணம், அழகிய பீதாம்பரம் மற்றவைகளும், பொற்காசுகளும் மற்றை நிதிகளும் நின்றுகொண்டு மலர்போன்ற கைகளை நீட்டுந்தோறுங் கொடுக்கவும்.—எ-று. (௨௬)

தேவரு மேனை முனிவரும் பிறருஞ் செய்துறாத் தங்கள்பா லன்றி
யேவர்பா லானு மிறைவனா மொருதா னேதனோக் குற்றனன் வெகுளி
னாவிய திழப்பார் போல்வெரீஇப் புகழ்ந்து மவனுவப் புற்றிடி னுய்ந்து
மோவற நிற்ப ரசனிவீழ் தோறு முனைக்குமந் திரத்தினோ ரென்ன.

(இ-ள்.) தேவர்களும், மற்றைய முனிவர்களும், இவர்களல்லாதவர்களும் குற்றஞ் செய்யாத தங்களிடத்தல்லாமல் எவர்களிடத்தாயினும் அரசனாகிய தான் குற்றங் கண்டு கோபிப்பானாயின் உயிரிழப்பவர்களைப்போலப் பயந்து புகழ்ந்தும், அவன் மகிழ்வடைந்தால் தாங்கள் மகிழ்ந்தும், இடியிடிக்குந்தோறும் மந்திரஞ் சொல்பவர்களைப்போல இடைவிடாமற் புகழ்ந்துகொண்டு நிற்பார்கள்.—எ-று. (௨௭)

சூரனாசிருக்கைப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௬௬௬.

---

உ

முருகன்றுணை.

---

# அசமுகி நகர்காண் படலம்.

இன்னன பலபல வெய்தச் சூரனா
மன்னவ னிருத்தலு மற்றவ் வெல்லையிற்
றொன்னக ரணித்துறத் துன்மு கத்தினா
டன்னொடு மசமுகி தான்வந் தெய்தினாள்.

(இ-ள்.) இத்தகைய பலபல சிறப்புகள் பொருந்தச் சூரபன்மனாகிய அரசன் அரசுவீற்றிருக்கவும், அப்பொழுது அசமுகியானவள் துன்முகியுடனே பழமையாகிய வீரமகேந்திரபுரத்திற்குச் சமீபமாகவந்து சேர்ந்தனள்.—எ-று. (௧)

மோட்டுறு மகேந்திர முதிய மாநகர்
கூட்டுறு திருவெலாங் குலைய முன்னவண்

மாட்டுறு துணையொடு வந்துற் றாலெனக்
கீட்டிசை வாய்தலைக் கிட்டி னாளரோ.

(இ-ள்.) உயர்வுபொருந்திய வீரமகேந்திரபுரத்திலுள்ள செல்வங்களெல்லாமழியும்பொருட்டு மூதேவியானவள் தனது தோழியுடன் வந்தாற்போல அசமுகியானவள் கிழக்குவாயிலையடைந்தனள்.—எ-று. (௨)

கெழுதரு மசமுகக் கெடல ணங்குதன்
பழிதரு கையினைப் பார்த்து நேர்ந்துளா
ரழிதரு துன்புகொண் டழலிற் சீறினா
ரிழிதரு மிச்செயல் யார்செய் தாரெனா.

(இ-ள்.) அங்கு வந்த அசமுகியென்னு மூதேவியினது இழிவு பொருந்திய கையைப்பார்த்து எதிரில் வந்தவர்களெல்லாம் தாழ்வாகிய இச்செய்கையை யார் செய்தார்களென்று மிக்க துன்பத்துடன் தீயைப்போலக் கோபங்கொண்டார்கள்.

மானமி லசமுகி மகேந்தி ரப்புரந்
தானுறு துயர்க்கொரு தாரி காட்டல்போ
லூனுறு குருதிகை யுகுப்பச் சென்றுழி
யானது கண்டன ரவுணர் யாவரும்.

(இ-ள்.) மானமற்ற அசமுகியானவள் இனி மகேந்திரபுரமடையவேண்டிய துன்பத்திற்கு ஒரு வழிகாட்டினாற்போலக் கையினின்றும் மாமிச சம்பந்தமான உதிரமானது ஒழுகும்படிச் செல்லும்பொழுது அதனை அசுரர்களனைவரும் பாத்தார்கள்.

வட்டுறு பலகையின் வல்ல நாய்நிரைத்
திட்டனர் கவற்றினை யிசைத்த சூளொடுங்
கிட்டின ரிடந்தொறுங் கெழுமி யாடினர்
விட்டன ரத்தொழில் விரைந்துற் றார்சிலர்.

(இ-ள்.) சூதாடு பலகையிற்பொருந்திய சூதாடுகருவியினுள்ளே நாயை வரிசையாக வைத்தவர்களாய்ப் பாய்ச்சிகையைச் சொல்லிய பந்தயங்களுடன் நெருங்கியெவ்விடங்களிலு மாடிக்கொண்டிருந்தவர்களாகிய சில அசுரர்கள் அவ்வாட்டத்தை விட்டு விரைந்துவந்தார்கள்.—எ-று. (௫)

தெரிதரு கரியபொன் றிரித்திட் டாலெனப்
புரிதரு மருப்புடைப் புலியன் செச்சையை
முரிவரு பேரமர் மூட்டிக் கண்டுளார்
பரிவொடு பிரிந்தயல் படர்கின் றார்சிலர்.

(இ-ள்.) விளங்குகின்ற இரும்பினை முறுக்கிவைத்தாற் போன்று முறுக்கிக் கொண்டிருக்கின்ற கொம்புகளையுடைய மேகம்போன்ற கரிய ஆட்டுக்கடாக்களைத் தோல்வியில்லாத பெருஞ்சண்டையை மூட்டிப் பார்த்துக்கொண்டிருப்பவர்களாகிய சிலர் துன்பத்துடன் பிரிந்து பக்கத்தில் வருகின்றவர்க ளானார்கள்.—எ-று. (௬)

கார்ப்பெய லன்னதோர் கடாங்கொண் மால்கரி
கூர்ப்புறு மருப்புமெய் குளிப்பச் சோரிநீ
ரார்ப்பொடு தத்தமி லாடல் செய்வது
பார்ப்பது விட்டனர் படர்கின் றார்சிலர்.

(இ-ள்.) சிலர் மேகம் மழைபொழிவது போன்று மதத்தைப் பொழிகின்ற பெரிய யானைகள் கூர்மைபொருந்திய கொம்புகள் உடம்பிலழுந்தும்படி உதிரத்துட

னும் கர்ச்சனையுடனும் ஒன்றோடொன்று போர்செய்வதைப் பார்த்தலைவிட்டு வருகின்றவர்களானார்கள்.—எ-று. (எ)

துய்யதோர் கிஞ்சுகச் சூட்டு வாரண
மொய்யொடு தன்னுயிர் முடியு மெல்லையுஞ்
செய்யுறு வெஞ்சினச் செருவை நோக்கினு
ரொய்யென நீங்கியே யுறுகின் றார்சிலர்.

(இ-ள்.) சிலர் தூய்மையாகிய செஞ்சூட்டினையுடைய கோழிகள் வலிமையுடன் தன்னுயி ரழியுமளவும் செய்கின்ற வெவ்விய கோபத்தினையுடைய சண்டையைப் பார்ப்பதைவிட்டு விரைவாக நீங்கி வருகின்றார்கள்.—எ-று. (அ)

ஊனமில் பலபணி யுடன்று சீறியே
பானுவை நுகரவிண் படரு மாறெனை
வானிக ளோச்சினர் வானிற் கைவிடா
மேனிகள் வியர்ப்புற வெகுண்டுற் றார்சிலர்.

(இ-ள்.) சிலர் குற்றமற்ற பல பாம்புகள் கோபித்துச் சீறிச் சூரியனை யுண்ணும்படி ஆகாயத்திற் செல்லுந் தன்மையைப்போலக் காற்றாடிப்பட்டங்களை விட்டவர்கள் அதனை ஆகாயத்திலேயே விட்டுவிட்டுத் தேகம் வியர்க்கும்படி வெகுட்சியடைந்து வந்தார்கள்.—எ-று. (கூ)

வாம்பரி தேர்கரி மானம் பாண்டில்க
ளேம்பலோ டூர்ந்திட வியற்றுங் கற்பொரீஇ
யாம்பொரு ளல்லதொன் றடைவ தென்னெனச்
சோம்புத லின்றியே தொடர்கின் றார்சிலர்.

(இ-ள்.) சிலர் தாவிச்செல்லுகின்ற குதிரை, தேர், யானை, விமானம், வண்டிகள் இவைகளைச் சந்தோஷத்துடன் செலுத்தும்படிச் செய்து கற்றுக்கொள்ளுகின்ற கற்றலை யொழித்து நாம் பிரயோசனமற்ற காரியங்களைச் செய்கின்றோமென்று சோம்பலின்றிப் பின்றொடர்கின்றவர்க ளானார்கள்.—எ-று. (௧0)

குறிகெழு வெளிலொடு குற்றி நாட்டியு
மறிகுறி தீட்டியு மவையி லக்கமா
வெறிகுறு படையினை யெய்யுங் கோலினை
நெறிதொறும் விட்டவ ணேர்கின் றார்சிலர்.

(இ-ள்.) சிலர் இலக்காக விளங்குகின்ற தூண்களையுங் குற்றிகளையும் அடையாளங்களையும் வைத்து அவைகள் இலக்காக எறிகின்ற ஆயுதங்களையும் எய்கின்ற அம்புகளையும் அவ்வவ்விடங்களில் விட்டுவிட்டு அங்கு வருகின்றவர்களானார்கள்.

நாந்தக மாதியா நவிலுந் தொல்படை
யாய்ந்திடும் விஞ்சைக ளடிகண் முன்னமா
யேய்ந்திடுங் கழகமுற் றியற்று மாறொரீஇப்
போந்தன ரொருசிலர் பொருமன் மிக்குளார்.

(இ-ள்.) சிலர் வாள் முதலாகச் சொல்லப்பட்ட பழய ஆயுதங்களைப் பழகுகின்ற வித்தைகளைக் குருமுன்னிலையாகச் சபையில் நின்றுகொண்டு பழகுதலை விட்டுத் துன்பமிக்கவர்களாய் வந்தார்கள்.—எ-று. (௧௨)

வாட்படு கனலிகால் வானின் கண்ணவாங்
காட்புறு நரம்பியாழ் காமர் வீணைகள்

வேட்புறு மீர்ங்குழன் மிடறு காலிசை
கேட்பது விட்டவண் கிட்டி னூர்சிலர்.

(இ-ள்.) சிலர் ஒளிபொருந்திய அக்கினியின் சம்பந்தத்தால் தொனியுண் டாகின்ற வயிரம்பொருந்திய நரம்பிட்டிருக்கும் யாழ்களும், அழகியவீணைகளும், வாயுவின் சம்பந்தத்தால் தொனிக்கின்ற விரும்பத்தக்க புள்ளாங்குழலும், ஆகாயத்தின் சம்பந்தத்தால் தொனிக்கின்ற மிடறும் வெளிவிடுகின்ற இசைகளைக் கேட்பதை விட்டு அங்கு வந்தார்கள்.—எ-று. (கரு)

நாடக நூன்முறை நுனித்து நன்றுணர்
கோடியர் கழாயினர் கூத்த ரேனையோ
ராடுறு கோட்டிக ளகலுற் றங்ஙனங்
கூடின ரொருசிலர் குலையு மெய்யினர்.

(இ-ள்.) சிலர் நடனசாஸ்திரமுறைப்படி நுட்பமாக நன்குணர்ந்த நாடகர்களும், கழைக்கூத்தர்களும், கூத்தாடிகளும் மற்றையர்களும் ஆடுகின்ற ஆட்டத்தைப்பார்க்குங் கூட்டங்களினின்று நீங்கிவருந்திய தேகத்தினை யுடையவர்களாய் அவ்விடத்திற் சேர்ந்தார்கள்.—எ-று. (கசு)

புலப்படு மங்கலப் பொருண்முற் றுங்கொடு
நலப்படு வேள்விக ணடத்திக் கேளொடு
பலப்பல வதுவைசெய் பான்மை நீத்தொராய்க்
குலைப்புறு கையொடுங் குறுகுற் றூர்சிலர்.

(இ-ள்.) காணப்பட்ட மங்கலத்திரவியங்களனைத்தையுங்கொண்டு நன்மை பொருந்திய பல வேள்விகளை நடத்திப் பந்துக்களுடன் பலவிதமான கலியாணங்களைச் செய்யுந் தன்மைகளைவிட்டு உதறிய கையினையுடையவர்களாய்ச் சிலர் வந்தார்கள்.—எ-று. (கஎ)

மாலொரு மடந்தைபால் வைத்து முன்னுறு
சேல்விழி யொருத்திபாற் செல்ல வூடியே
மேனுறு சினத்திகல் விளைக்க நன்றிது
காலமென் றுன்னியே கழன் றுற் றூர்சிலர்.

(இ-ள்.) ஒரு பெண்ணினிடத்தில் மோகம்வைத்துக்கொண்டு முன்பு பழகிய வேறொரு பெண்ணினிடத்தில் செல்லும் பொருட்டு ஊடல்கொண்டு முன்னமேயுள்ள கோபத்தினால் சண்டைசெய்வதற்கு இது நல்லகாலமென்று நினைத்து சிலர் நழுவிச்சென்றூர்கள்.—எ-று. (கஅ)

தோடுறு வரிவிழித் தோகை மாருடன்
மாடம திடைதொறும் வதிந்த பங்கயக்
காடுறு பூந்தடங் காமர் தண்டலை
யாடலை வெறுத்தெழீஇ யடைகின் றூர்சிலர்.

(இ-ள்.) மாளிகைகடோறும் வசித்திருந்த காதளவுஞ் செல்லுகின்ற கண்களையுடைய பெண்களுடன் தாமரைமலர்கள் நிறைந்த தடாகங்களிலும், அழகிய சோலைகளிலுஞ் சென்று விளையாடுதலை விட்டெழுந்து சிலர் வருகின்றூர்கள்.—எ-று. (கக)

சுள்ளினைக் கறித்தனர் துற்று வாகையங்
கள்ளினைக் கொட்பொடு களிக்கு நெஞ்சின
ருள்ளுறுத் தியபுல னூசல் போன்றுளார்
தள்ளுறத் தள்ளுறத் தளர்ந்துற் றூர்சிலர்.

(இ-ள்.) கருவாட்டைக் கடித்துக்கொண்டு மிகுதியாகிய கள்ளைக்குடித்து அதனால் சுழற்சியாகக் களிப்படைகின்ற மனமுடையவர்கள். உள்ளே பொருந்திய ஐம்புலன்களும் ஊசல்போன் றலைகின்றவர்களாய்ச் சிலர் அம்மயக்கமானது தள்ள த்தள்ளத் தளர்ந்துவந்தார்கள்.—எ-று. (௧அ)

அனையபல் வகையின ரவளைக் கண்டுளார்
பனிவரு கண்ணினர் பதைக்கு நெஞ்சினர்
கனலொடு தீப்புகை காலு யிர்ப்பினர்
முனிவுறு கின்றனர் மொழிகின் றரிவை.

(இ-ள்.) அவ்வாறாகிய பல தன்மையையுடைய அசுரர்கள் அவ்வசமுகியைப் பார்த்து நீரொழுகுகின்ற கண்ணினையுடையவர்களும், பதைக்கின்ற மனமுடையவர்களும், தீயையும் புகையையுஞ் சிந்துகின்ற சுவாசமுடையவர்களும், கோபங்கொள்ளுகின்றவர்களுமாய் இவ்வார்த்தைகளைக் கூறுகின்றார்கள்.—எ-று. (௧௯)

வேறு.

அந்தக னுருத்தற் பேரோ னடல்வல் லியத்தோ னாதி
வந்திடு மவுணர் தம்மை மதிக்கிலா வலியோர் தம்மை
முந்துறு புரத்தை யட்டு முழுவது முடிப்பா னின்ற
செந்தழ லுருவத் தண்ணல் செய்கையோ வினைய தென்பார்.

(இ-ள்.) அந்தகாசுரன் கஜமுகாசுரன் வெற்றிபொருந்திய வியாக்கிராசுரன் முதலாகச் சொல்லப்பட்ட அசுரர்களையும், அளவிடப்படாத வலிமைபொருந்திய மற்றையர்களையும், முதன்மைபொருந்திய முப்புரத்தையுமழித்து இனி யாவற்றையு மழிக்கும்படி நிற்கின்ற சிவந்த அக்கினிவண்ணராகிய சிவபெருமானது செய்கையோ இச்செயலென்று கூறுவார்கள்.—எ-று. (௨௦)

மேதியஞ் சென்னி வீரன் வெவ்வலி நிசும்பன் சும்பன்
கோதறு குருதிக் கண்ணன் குருதியங் குரத்தன் முந்தே
பூதலம் புரந்த சீர்த்திப் பொருவிறு ரகனே பண்ட
னாதிய ராயுள் கொண்ட வையைதன் செயலோ வென்பார்.

(இ-ள்.) மகிஷாசுரன், மிக்க வலியினையுடைய நிசும்பன், சும்பன், குற்றமற்ற இரத்தாக்ஷன், இரத்தபீசன், முன்னே உலகத்தையாண்ட ஒப்பற்ற கீர்த்தியினையுடைய தாரகன், பண்டன் முதலாயுள்ள அசுரர்களது உயிரை வாங்கிய துர்க்கையின் செயலோவென்று கூறுவார்கள். (௨௧)

சிரபத்தி யளவை யில்லாத் திறலரி யொருநாற் றந்தக்
கரபத்தி னண்ணல் வானோர் யாரையுங் கலக்கஞ் செய்ய
வரபத்தி புரியா வன்னோர் வணங்கின ரடைய வந்நாட்
சரபத்தின் வடிவங் கொண்டான் றன்செய லாங்கொ லென்பார்.

(இ-ள்.) அநேகம் வரிசையான சிரங்களையுடைய நரசிங்கமானது ஒப்பற்ற நான்கு கொம்புகளையும், தும்பிக்கையினையுமுடைய அயிராவதத்தின் தலைவனாகிய இந்திரனையும், மற்றைத் தேவர்களையும் வருத்தவும் அவர்கள் மேலாகிய பத்தியைச் செய்து வணங்கித் தன்னை அடைக்கலமாகவடைந்த அந்நாளில் சரபவடிவங்கொண்டவரது செயலோவென்று கூறுவார்கள்.—எ-று. (௨௨)

வண்டுளர் கமலச் செங்கண் மாயனுந் தூய நீலங்
கண்டம தடைத்த தேவுங் கலந்தனர் தழுவிச் சேரப்

பண்டவர் புணர்ப்புத் தன்னி லுருத்திரர் பரிசா லுற்ற
செண்டுறு கரத்து வள்ளல் செய்கையே போலு மென்பார்.

(இ-ள்.) வண்டுகள் மொய்க்கின்ற தாமரைமலர்போலுஞ் சிவந்த கண்களையுடைய திருமாலும் தூய்மையாகிய கரிய விடத்தைக் கண்டத்திலணிந்த சிவபெருமானும் கலந்து புணர, முன்பு அவர்களது புணர்ச்சியில் உருத்திரத்தன்மையாகவந்து தோன்றிய செண்டேந்திய கரத்தினையுடைய அரிகரபுத்திரரது செயலோவென்பார்கள்.—எ-று. (உரு)

பிளிற்றுறு குரலி னல்வாய்ப் பெருந்துணை யெயிற்றுப் புன்கண்
வெளிற்றுறு தடக்கை கொண்ட வேழமா முகத்தெம் மேலோ
னொளிற்றுறு கலன்மார் பெய்தி யுயிர்குடித் துமிழ்ந்த தந்தக்
களிற்றுடை முகத்துப் பிள்ளை செய்கையோ காணு மென்பார்.

(இ-ள்.) பிளிறுதலையுடைய குரலும், நான்ற வாயும், பெரிய இரண்டு தந்தங்களும், சிறிய கண்ணும், வெண்ணிறம்பொருந்திய துதிக்கையினையுமுடைய கசமுகாசுரனது ஒளிபொருந்திய ஆபரணங்களையணிந்த மார்பினிடத்தடைந்து அவனுயிரைக் குடித்து உமிழ்ந்த ஏகதந்தமமைந்த யானைமுகத்தையுடைய விநாயகரது செயலோ இதனைப் பாருங்களென்று கூறுவார்கள்.—எ-று. (உச)

ஈசனை மதிக்கி லாதே யாமுதற் கடவு ளென்று
பேசிடு தலைவர்க் கேற்ற பெற்றியாற் றண்ட மாற்று
மாசறு சங்கு கன்ன னகட்டழற் குண்டம் போல்வான்
றேசுறு பானு கம்பன் முதலினோர் செயலோ வென்பார்.

(இ-ள்.) சிவபெருமானை மதிக்காமல் யாமே முதற்கடவுளென்று கூறிய தலைவர்களுக்குத் தக்க முறைப்படி தண்டத்தைச்செய்கின்ற குற்றமற்ற சங்குகன்னன், குண்டோதரன் அழகுபொருந்திய பானுகம்பன் முதலியவர்களது செயலோவென்று கூறுவார்கள். (உரு)

நஞ்சுமிழ் கெயிற்றுப் புத்தே ளணையணைப் பள்ளி மீது
தஞ்சமொடிருந்த வண்ண றன்செய லாமோ வென்பா
ரஞ்சுவ னினைய செய்கைக் கணையது நினைவன் றென்பார்
நெஞ்சினு மிதனைச் செய்ய நினைக்குமோ மலரோ னென்பார்.

(இ-ள்.) விஷத்தைச் சிந்துகின்ற பற்களையுடைய சேஷசயனத்தில் ஆதரவுடனிருந்த திருமாலினது செயலோவென்று கூறுவார்கள்; அத்திருமால் இச்செய்கையைச் செய்வதற்கு அஞ்சுவான், நாம் அவ்வாறு நினைப்பது சரியான நினைப்பன்றென்பார்கள்; பிரமன் இதனைச் செய்வதற்குத் தன்மனத்திலும் நினைப்பானோவென்பார்கள்.—எ-று. (உசு)

புரந்தர னென்னும் விண்ணோன் புணர்த்திடு செயலோ வென்பார்
கரந்தனன் றிரிவான் செய்ய வல்லனோ கருத்தன் றென்பா
ரிருந்திடு கடவு ளோர்க ளிழைத்திடு விதியோ வென்பார்
நிரந்துநம் பணியி னிற்போர் நினைப்பரோ விதனை யென்பார்.

(இ-ள்.) இந்திரனென்னுந் தேவனால் புணர்க்கப்பட்ட செயலோவென்பார்கள்; மறைந்து திரிகின்ற அவ்விந்திரன் செய்யவல்லவனோ இது சரியான கருத்தல்லவென்று கூறுவார்கள். இருக்கின்ற மற்றைத் தேவர்கள் செய்த செயலோவென்பார்கள், நமது ஏவலில் வரிசையாக நிற்கின்ற அத்தேவர்கள் இதனை நினைப்பார்களோவென்பார்கள்.—எ-று. (உஎ)

கழைத்துணி நறவ மாந்திக் களிப்புறு வுணர்ச்சி முற்றும்
பிழைத்தவ ராகு மன்றேற் பித்தர்செய் தனரா மென்பா
ரிழைத்தநா ளெல்லை சென்றோ ரியற்றியார் யாரோ வென்பார்
விழுப்பெரு முனிவர் சொல்லால் வீழ்ந்ததோ விவர்கை யென்பார்.

(இ-ள்.) மூங்கிற்குழாய்களி லடைத்துக்கொண்டு வருகின்ற கள்ளைக்குடித்துக் களித்து அறிவுமுற்றுங் கெட்டவர்களாயிருக்கவேண்டும்; அஃதன்றாயின், பித்துக்கொண்டவர்கள் செய்திருக்கலாமென்பார்கள், வாழ்நாள் முடியப்பெற்றவர்களில் இதனைச் செய்தவர்கள் யாரோவென்பார்கள், சிறந்த முனிவர்களது சாபத்தினால் இவர்கள் கைகள் துண்டித்து வீழ்ந்ததோவென்பார்கள்.—எ-று. (உஅ)

அங்கியின் கிளர்ச்சி யேபோ லவிர்சுடர்க் கூர்வா டன்னைத்
தங்களி லேந்தி யின்னோர் சான்றசூ ளுறவு சாற்றித்
துங்கமோ டமரி னேற்று முறைமுறை துணித்தார் கொல்லோ
விங்கிவ ரிருவர் கையு மிற்றன காண்மி னென்பார்.

(இ-ள்.) பற்றியெரிகின்ற தீயைப்போல விளங்குகின்ற ஒளியினையுடைய கூரிய வாட்படைகளை இவர்களொருவருக்கொருவர் பிடித்துக்கொண்டு மிக்க சபதங் கூறி உயர்வாகப் போரிலெதிர்த்து முறைமுறையாக ஒருவருக்கொருவர் வெட்டிக் கொண்டார்களோ? இவர்களிருவரது கைகளும் அறுபட்டமையைப் பாருங்களென் பார்கள்.—எ-று. (உகூ)

ஆரிவள் கரத்தி லொன்றை யடவல்லா ரொவர்கண் ணேயோ
பேருறு காதல் கொண்டு பெண்மதி மயக்கந் தன்னாற்
சீரிய வுறுப்பி லொன்று சின்னமாத் தருவ னென்று
கூருடை வாளா லீர்ந்து கொடுத்தனள் போலு மென்பார்.

(இ-ள்.) இவளது கைகளி லொன்றை வெட்டவல்லவர்கள் யார்? யாவரிடத்திலேயோ மிக்க காமங்கொண்டு பெண்புத்தியினாலே சிறந்த எனது உறுப்பில் ஒன்றை அடையாளமாகத் தருவேனென்று கூரிய வாளினால் அரிந்து கொடுத்தனள்போலுமென்று கூறுவார்கள்.—எ-று. (௩0)

கேடுறு மினைய டன்னைக் கேட்பதெ னினிநா மென்பார்
நாடிநாம் வினவி னேமே னம்மெலா முனியு மென்பார்
மாடுறப் போவ தென்னை மாநில வரைப்பின் காறு
மோடியே யறிது மென்பா ரினையன வுரைத்த லோடும்.

(இ-ள்.) கேட்டையடைந்திருக்கின்ற இவ்வசமுகியை இனி நாம் கேட்பதேனென்பார்கள்; நாமடைந்து கேட்போமாயின் நம்மையெல்லாங் கோபிப்பாளென்பார்கள், இவளுக்கருகில் போய்க் கேட்பதென்னை, இந்தப் பெரிய நிலவுலகமுழுவது மோடிச்சென்று பார்த்துவருவோமென்பார்ள், இவர்கள் இவ்வாறு கூறுதலும்.-எ-று.

சொல்லியற் சூரன் றங்கை துன்முகி யோடு கைபோய்
வல்லையிற் போதல் கேளா மம்மருற் றவுண மாதர்
சில்லியற் கூந்த றாழத் தெருத்தொறுஞ் செறிந்து கஞ்ச
மொல்லைமுத் துதிர்ப்ப தென்ன வொண்கணீ ருகுத்துச் சூழ்ந்தார்.

(இ-ள்.) துதிக்கத்தக்க சிறப்பினையுடைய சூரபன்மன் தங்கையாகிய அசமுகியானவள் துன்முகியுடனே கையறுபட்டு விரைந்துபோதலைக்கேட்டு அசுரமாதர்கள் மயக்கமடைந்து ஆபரணமணிந்த கூந்தல்கள் தாழும்படித் தெருக்கள்தோறும்

நெருங்கித் தாமரைமலர்கள் விரைவாக முத்துக்களைச் சிந்துவதுபோல ஒள்ளிய கண்களி னின்றும் நீரைச் சிந்திக்கொண்டு சூழ்ந்தார்கள்.—எ-று. (சூஉ)

அந்நகர் மகளிர் யாரு மாடவர் யாருஞ் சூழ்ந்து
துன்னின ரினைய வாற்றுற் றுயருழந் திரங்கிச் சோரப்
பின்னவர் தொகுதி நீங்கிப் பிறங்குகோ நகரம் போந்து
மன்னவர் மன்னன் வைகு மன்றினுக் கணிய ளானாள்.

(இ-ள்.) அம்மகேந்திரபுரியிலுள்ள அசுரமாதர்களும் புருஷர்களுஞ் சூழ்ந்து இவ்வாறு நெருங்கியவர்களாய் துன்புற்று வருந்திச் சோரும்படி அவர்களது கூட்டத்தினின்று நீங்கி விளங்குகின்ற இராசநகரத்தை யடைந்து அரசர்க்கரசனாகிய சூரபன்மன் வீற்றிருக்கின்ற சபாமண்டபத்திற்குச் சமீபமாகச் சென்றனள்.—எ-று. (சூசு)

அசமுகிநகர்காண்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஎ0உ:

உ
முருகன் றுணை.

# அசமுகிபுலம்புறுபடலம்.

மறிமுக முடைய தீயாள் மன்றினுக் கணிய ளாகிக்
கிறிசெயு மன்னை தன்னைக் கேளிரை மருகா னோரைத்
திறலுடை முன்னை யோரைச் சிந்தையி லுன்னி யாண்டைப்
பொறிமக ளிரியல் போகக் கதறியே புலம்ப லுற்றாள்.

(இ-ள்.) அசமுகியென்னுங் கொடியவள் சூரபன்மனது சபைக்கருகிற்சென்று மாயாசாலங்களைச் செய்கின்றவளாகிய தனது தாயையும் சுற்றத்தினரையும், மருகர்களையும், பலசாலிகளாகிய தமையன்மார்களையும் மனதில் நினைத்துக்கொண்டு அவ்விடத்திலுள்ள திருமகள் விலகி யோடிப்போகும்படிக் கதறிக்கொண்டு புலம்பத் தொடங்கினாள்.—எ-று. (க)

வேறு.

வெறியாரு மிதழிமுடிப் பண்ணவர்கோ னருள்புரிந்த மேனாள் வந்தாய்
பிறியாது நுமைப்போற்றித்திரிவனென்றுயம் மொழியும்பிழைத்தாய்போலு
மறியாயோ கரம்போன தஞ்சலென்று யிலைதகுமோ வன்னே யன்னே
சிறியேனுன் பெண்பிறந்து பட்டபரி பவமென்று தீருமையோ.

(இ-ள்.) நறுமணங்கமழுங் கொன்றைமாலையை யணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் எங்களுக்கு வரமளித்த அக்காலத்தில் வந்து மக்களே! உங்களைப் பிரியாமல் காத்துக்கொண்டு திரிவேனென்று கூறினாய்; இப்பொழுது அவ்வார்த்தையைத்தவறினைபோலும்;யான் கையிழந்ததனை நீ யறிந்திலையோ? பயப்படாதேயென்று கூறினாயில்லை; தாயே! தாயே! இஃதுனக்குத் தகுதியோ? சிறியவளாகிய யான் பெண்ணாகப் பிறந்தடைந்த அவமானம் எக்காலத்தில் நீங்கும் ஐயோ!—எ-று. (உ)

தாதையா னவரளித்த மைந்தர்களே விருப்புறுவர் தாயர் பெற்ற
மாதரார் பாலுவகை செய்திடுவ ரீதுலக வழக்க மென்பா

ராதலா லென்றுயர மகற்றவந்தா யிலையந்தோ வாரு மின்றி
யேதிலார் போற்றமியேன் கரமிழந்து மிவ்வுயிர்கொண் டிருப்ப தேயோ.

(இ-ள்.) தந்தையாயுள்ளவர்கள் பெற்ற புதல்வர்களிடத்தில் அன்புடையவர்களாயிருப்பார்கள். தாய்மார்களாயுள்ளவர்கள் தாங்கள் பெற்ற புதல்வியர்களிடத்தில் மகிழ்வினைக் காட்டுவார்கள், இவை உலகவழக்கமென்று பெரியோர் கூறுவர்; ஆதலால், புதல்வியாகிய எனது துயரத்தை நீக்கும்பொருட்டு வரவேண்டிய நீ வந்தாயில்லை. ஐயோ! யாருமில்லாமல் ஏழைகளைப்போல யான் கையிழந்தும் இன்னும் இவ்வுயிரைக்கொண்டிருப்பதோ?—எ-று. (௩)

வருவீரொங் கணுமென்றே யஞ்சாது புலோமசையை வலிதே வௌவிப்
பெருவீர முடன்வந்தே னெனதுகர தலந்துணித்துப் பின்னே சென்று
பொருவீர மாகாள னவளையுமீட் டேகினனப் பொதும்பர்க் கானி
லொருவீருஞ் செல்லீரோ நமரங்கா ணீருமவர்க் கொளித்திட் டீரோ.

(இ-ள்.) நம்மவர்களே! நீங்கள் எங்குஞ் சுற்றிவருவீர்களென்று துணிந்தேயான் மிக்க பராக்கிரமத்துடன் இந்திராணியைப் பிடித்திழுத்துக்கொண்டு அச்சமின்றிவந்தேன் அப்பொழுது போர்செய்தற்குரிய வீரமாகாளன் பின்னால் வந்து எனது கையை வெட்டியெறிந்து அவ்விந்திராணியையுந் திரும்ப வழைத்துக்கொண்டு சென்றனன்; சோலைசூழ்ந்த அக்காட்டில் நீங்கள் யாரும் போகமாட்டீர்களோ? அத்தேவர்களுக்குப் பயந்து நீங்களும் ஒளித்துக்கொண்டீர்களோ?—எ-று. (௪)

புரங்குறைத்தும் வலிகுறைத்தும் பொங்கியதொன் னிலைகுறைத்தும் புனையுருத, வரங்குறைத்தும் புகழ்குறைத்து மறையொழுக்கந் தனைக்குறைத்து மலிசீர் தொலலை, யுரங்குறைத்தும் வானவரை யேவல்கொண்டோ மென்றிருப்பீ ரொருவன் போந்தென், கரங்குறைத்த தறியீர்நுந் நாசிகுறைத் தனன்போலுங் காண்மின் காண்மின்.

(இ-ள்.) சொர்க்கலோகத்தை யழித்தும், தேவர்களது வல்லமையைக் குறைத்தும், அவர்களது உயர்ந்த பூர்வநிலைமைகளைக் குறைத்தும், கெடாத வரங்களைக் குறைத்தும், கீர்த்தியைக்குறைத்தும், வைதிகவொழுக்கங்களைக் குறைத்தும், மிக்க சிறப்பினையுடைய ஊக்கத்தைக் குறைத்தும் ஊழியஞ் செய்யப்பெற்றோமென்று நினைத்துக்கொண்டிருப்பீர்கள், அவர்களில் ஒருவன் வந்து எனது கையை வெட்டியெறிந்து சென்றதை நீங்களறிந்தீர்களில்லை. அது என் கையை யறுத்ததன்று; உங்கள் மூக்கினை யறுத்தமையேயாம்; பாருங்கள் பாருங்கள்.—எ-று. (௫)

மேயினன் பொன்னுலகின் மீன்சுமந்து பழிக்கஞ்சி வெருவிக் காணான்
போயினன் போயினன் வலியிலனென் றுரைத்திடுவீர் போலுமன்னா
னேயினா னொருவனையே யவன்போந்தென் கரந்துணித்தா னில்லக் கூரைத்
தீயினர் கரந்ததிற னாயிற்றே யிந்திரன்றன் செயலு மாதோ.

(இ-ள்.) சொர்க்கத்திலிருந்த இந்திரன் மீன்களைச்சுமந்து பழிக்கு அஞ்சிப் பயந்து மறைந்துபோயினன்; அவனைப் பலமற்றவனென்று கூறுவீர்கள்போலும், அவனொருவனையே யனுப்பினான் அவன்வந்து என்கையை வெட்டினான், இந்திரனது செய்கையும் வீட்டிறப்பில் தீயை மறைத்துவைத்த தன்மைபோலாயிற்றே.—எ-று.

எள்ளூற்ற நுண்டுகளிற் றுணையாகுஞ் சிறுமைத்தே பெனினும் யார்க்கு
முள்ளூற்ற பகையுண்டேற் கேடுளதென் றுரைப்பரஃ துண்மை யாமாற்
றள்ளூற்றுந் தள்ளூற்று மேவல்புரிந் துழல்குலிசத் தடக்கை யண்ணல்
கள்ளூற்றுமறைந்திருந்தேயெனதுகரந்துணிப்பித்தான்காண்மின்காண்மின்

(இ-ள்.) யாவர்களுக்கும் உட்பகையானது எள்ளின் துகளினுஞ் சிறியதேயானாலும், அதனால் கெடுதியுண்டென்று கூறுவார்கள்; அஃதுண்மையேயாம்; எவ்வாறெனின், பலமுறை தள்ளப்பட்டும் ஏவலைச்செய்துழலுகின்ற வச்சிராயுதமேந்திய பெரிய கைகளையுடைய இந்திரன் திருட்டுத்தனமாக மறைந்திருந்து எனது கையினை வெட்டுவித்தான் இதனைப் பாருங்கள் பாருங்கள்.—எ-று. (எ)

சங்கிருந்த புணரிதனி னடுவிருந்த வடவையெனுந் தழலின்புத்தே
ளங்கிருந்த குவலயமோ டவைமுழுதுங் காலம்பார்த் தொழிப்ப தேபோ
லங்கிருந்தென் கரந்துணித்த வொருவேனு முங்களைமே லடுவன் போலு
மிங்கிருந்தென் செய்கின்றீர் வானவரைச் சிறியரென விகழ்ந்திட் டீரே.

(இ-ள்.) சங்குகளையுடைய சமுத்திரத்தின் நடுவிலிருந்த வடவாமுகாக்கினியென்னு மக்கினிதேவன் இங்கிருந்த உலகத்துடன் அக்கடல் முழுவதையுங் காலம் பார்த்தழிக்குந் தன்மையைப்போல, அவ்விடத்திலிருந்து எனது கையினை வெட்டிய அவ்வீரமாகாளனும் பின்னாலுங்களைக் கொல்லுவான்போலும், நீங்களிங்கிருந்து யாதுசெய்கின்றீர், தேவர்களை அற்பமானவர்களென்று இகழ்ந்தீர்களே.—எ-று. (அ)

முச்சிரமுண் டிரணியனுக் கிருசிரமுண் டந்தவன்னி முகற்கு மற்றை
வச்சிரவா குவுக்கொருபான் சிரமுண்டே யவைவாளா வளர்த்திட் டாரோ
விச்சிரங்க ளென்செய்யு மொருசிரத்தோ னென்கரத்தை யிறுத்துப் போனா
னச்சுரருக் கஞ்சுவரோ பாதலத்தி லரக்கரிவர்க் களிய ரம்மா.

(இ-ள்.) இரணியனுக்கு மூன்றுதலைகளுண்டு, அந்த அக்கினிமுகாசுரனுக்கு இரண்டுதலைகளுண்டு, மற்றை வச்சிரவாகுவுக்குப் பத்துத்தலைகளுண்டு, அவர்களத்தலைகளை வீணாக வளர்த்தார்களோ? இத்தலைகள் யாதுசெய்யும், ஒருதலையினையுடைய வீரன் எனது கையை வெட்டிப்போயினான்; அந்தத் தேவர்களுக்கு இவ்வசுரர்களது நண்பர்களாகிய பாதலத்திலுள்ள அசுரர்கள் பயப்படுவார்கள்.—எ-று. (௯)

பிறைசெய்த சிறுருவக் குழவியுருக் கொண்டுறுநாட்பெயர்ந்து வானின்
முறைசெய்த செங்கதிரோனுதபமெய்தீண்டுதலுமுனிந்துபற்றிச்
சிறைசெய்த மருகாவோ மருகாவோ வொருவனெனைச் செங்கை தீண்டிக்
குறைசெய்து போவதுவோ வினவுகிலா யீதென்ன கொடுமைதானே.

(இ-ள்.) கலைகள் வளருகின்ற சந்திரனைப்போல நீ குழந்தைப்பருவமாய் வளர்ந்துவருங்காலத்தில் உதயஞ் செய்துவருகின்ற சூரியனது கிரணங்கள் உனதுடம்பிற்படவும் கோபித்து ஆகாயத்திற்றாவி அச்சூரியனைப் பிடித்துச் சிறையில் வைத்த ஓ மருகனே! மருகனே! ஒருவன் எனது கையைப்பிடித்து வெட்டிச்செல்வதோ? அதனை யாதென்று வினவினாயில்லை; இது என்னகொடுமை.—எ-று. (௧௦)

நீண்டாழி சூழுலகை யோரடியா லளவைசெய்தோ னேமி தன்னைப்
பூண்டாய்பொன் னாரமென விந்நாளு மோர்பழியே பூணா நின்றா
யீண்டாருங் குறும்பகைஞ ரென்கரம்போழ் திறமியற்ற வினிது வைய
மாண்டாய்நந் தாரகனே குறைமதிநீ ரோகின்பே ராற்ற லம்மா.

(இ-ள்.) நீண்ட கடல்சூழ்ந்த உலகத்தை யோரடியாலளந்த திருமாலினது சக்கரத்தைப் பொன்னாரமாப்பூண்டனை, இக்காலத்தும் ஒருபழியினையே பூண்டனை; இங்குப்பொருந்திய அற்பர்களாகிய பகைவர்கள் வந்து எனது கையை வெட்ட நீ இவ்வுலகத்தை யாண்டனை; நமது தாரகனென்னுந் தமையனே! நினது மிக்க வல்லமையானது கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரன்போன்றதோ.—எ-று. (௧௧)

வையொன்று வச்சிரக்கைப் புரந்தரனைத் தந்தியொடும் வான்மீச்
செல்ல, வெய்யென்று கரத்தொன்றா லெறிந்தனைவீழ்ந் தனன்கிடப்ப
வுதைத்தா யென்பர், மெய்யென்று வியந்திருந்தேன்பட்டிமையோ வவன்
றூதன் வெகுண்டுவந்தென், கையொன்று தடிந்தானே சிங்கமுக வீரவிது
காண்கி லாயோ.

(இ-ள்.) கூர்மைபொருந்திய வச்சிராயுதத்தைக் கையிலேந்திய இந்திரனை அவனேறிய வெள்ளையானையுடன் ஆகாயத்திற் செல்லும்படி ஒருகையினால் விரைவாக வெடுத்தெறிந்தனை. உடனே யவன்மேற்சென்று கீழ்வந்து விழுந்துகிடப்பதை நோக்கி நீ காலாலுதைத்தனையென்று கூறுவார்கள்; இஃதுண்மையென்று அதிசயத்திருந்தேன். அது பொய்யோ? அவ்விந்திரனுடைய தூதனொருவன் கோபித்துவந்து எனது ஒருகையை வெட்டினானே! சிங்கமுகத்தினையுடைய வீரனே! இதனை நீ பார்க்கவில்லையோ.—எ-று. (கஉ)

சூரனும் பெயர்படைத்த வவுணர்கடம் பெருவாழ்வே தொல்லை யண்டஞ்
சேரவே புரந்தனைநின் பரிதிசெங்கோல் குடையெங்குஞ் செல்லா நிற்கு
மாரும்வான வரவற்றிற் கச்சுறுவர் பொன்னகரோ னாணை போற்றும்
வீரமா காளனிடைக் கண்டிலனால் வலியர்முன மேவு றாவோ.

(இ-ள்.) சூரனென்னும் பெயரைப்பெற்ற அசுரர்கள் தலைவனே பழைமையாகிய அண்டங்களனைத்தையும் ஒருமிக்க அரசாட்சிசெய்தனை; நினது ஆக்ஞாசக்கரமாகிய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் எங்குஞ் செல்லும், தேவர்களனைவரும் அவற்றிற் கஞ்சுவார்கள், அவற்றை இந்திரனது கட்டளையைச்செய்கின்ற வீரமாகாளனிடத்திற் கண்டிலேன்; அவை வலியவர்களுக்கு முன்னே செல்லாவோ.—எ-று.

ஒன்னார்தஞ் சூழ்ச்சியினா லொருமுனிவ னென்சிறுவ ருயிர்கொண் டற்றா
னிந்நாளி லஃதன்றி யொருவனைக்கொண் டெனதுகையு மிழப்பித் தாரே
பின்னாளிவ் வருத்தமுற நன்றரசு புரிந்தனையாற் பிழையீ தன்றோ
மன்னாவோ மன்னாவோ யான்பட்ட விழிவரவை மதிக்கி லாயோ.

(இ-ள்.) பகைவர்களது வஞ்சனையினால் ஒருமுனிவன் எனது புதல்வர்களது உயிரை யழித்தனன்; அஃதன்றி இக்காலத்தில் ஒருவனைக்கொண்டு எனது கையினையும் வெட்டுவித்தார்கள், தங்கையாகிய யான் இத்தகைய வருத்தமடையும்படி நீ நன்றாக அரசுசெய்கின்றனை; இஃது குற்றமன்றோ? அரசனே! அரசனே யானடைந்த அவமானத்தை நீ சிறிதுங் கவனிக்கவில்லையோ?—எ-று. (கச)

காவல்புரிந் துலகாளு மண்ணாவோ வண்ணாவோ கரமற் றேன்கா
ணேவரெனக் குறவாவ ரூனமுற்றே ரிருப்பதுவு மிழுக்கே யன்றோ
வாவிதனை விடுவேனா தற்குமுன மென்மான மடுவ தையோ
பாவியொருபெண்பிறந்தபயனிதுவோவிதிக்கென்பாற்பகைமற் றுண்டோ.

(இ-ள்.) உலகத்தைப் பாதுகாத்து அரசாட்சி செய்கின்ற அண்ணாவோ! அண்ணாவோ! யான் கையினை யிழந்தேன்; யார் எனக்குறவானவர்கள் பங்கப்பட்டவர்களிருப்பதுவுந் தாழ்வல்லவோ? யான் உயிரை விடுகின்றேன்; அதற்கு முன்னமே என்மானம் என்னைக்கொல்லுகின்றது, ஐயோ! பாவியாகிய யான் ஒருபெண்ணாகப் பிறந்த பயன் இதுதானோ? விதிக்கு ஏதேனு மென்னிடத்திற் பகையுண்டோ?

அசமுகிபுலம்புறுபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஎகஎ.

---

உ
முருகன்றுணை.

# சூரன்றண்டஞ்செய் படலம்.

என்று பற்பல வுரைத்தன ளாவலித் திரங்கிப்
பின்றொ டர்ந்திடு துன்முகி தன்னொடும் பெயரா
மன்றின் மேவரு சூரபன் மாவெனும் வலியோன்
பொன்ற டங்கழன் முன்னரோ வீழ்ந்துபோய்ப் புரண்டாள்.

(இ-ள்.) என்றிவ்வாறு பற்பல விதங்களாகக் கூறினவளாய் அழுதிரங்கிக் கொண்டு தன் பின்னால் வருகின்ற துன்முகியோடுஞ் சென்று சபையிலிருக்கின்ற சூரபன்மனென்னும் பெயரினையுடைய வீரனது பெரிய வீரக்கழலையணிந்த காலினெதிரிற்போய் விழுந்து புரண்டனள்.—எ-று. (க)

புரண்டு மற்றவள் சகடையிற் பெயர்ந்திடும் போழ்தின்
மருண்டு பேரவையகத்தினோ ரஞ்சினர் மறுக
வரண்ட ருங்கழற் சூரபன் மாவெனு மவுண
னிரண்டு நோக்கினுந் தீயெழ விழித்திவை யிசைப்பான்.

(இ-ள்.) அவ்வசமுகியானவள் சகடத்தைப்போலப் புரண்டுருளுஞ் சமையத்தில், பெரிய சபையினிடத்துள்ளவர்கள் மருண்டு அஞ்சிவருந்தும்படி வலியவீரக்கழலையணிந்த சூரபன்மனென்னு மசுரன் தனது இரண்டு கண்களிலுந் தீப்பொறி பறக்கப்பார்த்து இவ்வார்த்தைகளை யுரைப்பானாயினன்.—எ-று. (உ)

என்னை யோவிவட் புலம்புதி யசமுகத் திளையோ
யுன்னை யோர்கிலா தென்னையு நினைகிலா துன்கை
தன்னை யும்மிவள் கரத்தையும் வாளினாற் றடிந்து
முன்னை யோரென விருந்துளார் யாரென மொழிந்தான்.

(இ-ள்.) தங்கையாகிய அசமுகியே! இங்கு என் புலம்புகின்றனை; உன்னை மதியாமலும் என்னை நினைக்காமலும் உனது கையையும் இத்துன்முகியின் கையையும் வாளால் வெட்டி வலிய வீரர்களென்று கூறும்படியிருந்தவர்கள் யார்? என்று வினவினான்.—எ-று. (ங)

புரந்த ரன்புணர் புலோமசை புவியிலோர் புறத்தி
லிருந்து நோற்றனு முன்றனக் கென்றுசென் றெடுத்தோம்
விரைந்து வந்தொரு விண்ணவ னெங்களை வெகுண்டு
கரந்து ணித்துமற் றவளைமீட் டேகினன் கண்டாய்.

(இ-ள்.) இந்திரன் மனைவியாகிய இந்திராணியானவள் பூமியி னொருபுறத்திலிருந்து தவஞ்செய்துகொண்டிருத்தலும், நாங்கள் அவ்விந்திராணியை உனக்கு மனைவியாக்கக்கருதிச்சென்றெடுத்தோம். உடனே ஒருதேவன் விரைந்துவந்து கோபித்து எங்கள் கைகளை வெட்டி, அவ்விந்திராணியைத் திரும்ப அழைத்துக்கொண்டு போயினான்.—எ-று. (ச)

என்னு முன்னரோ சொரிந்தன விழிகன லெரிவாய்
துன்னு தீம்புகைப் படலிகை யுமிழ்ந்தது துண்டம்

வன்னி காலுறு காலெலன வுயிர்த்தது மதிபோன்
மின்னல் வாளெயி றிதழினை மறைத்தது விரைவில்.

(இ-ள்.) என்று அசமுகி கூறுதற்கு முன்னே சூரபன்மனது கண்கள் நெருப்புப் பொறி சிந்தின; மூக்கானது தீயிற்பொருந்திய கொடிய புகைப்படலத்தை யுமிழ்ந்தது; பெருமூச்சானது அக்கினியாற் கக்கப்பட்ட வாயுவைப்போல உயிர்த்தது; சந்திரனைப்போல் விளங்குகின்ற வெள்ளிய பற்கள் விரைவாக இதழை மறைத்தது.

வெடிக்க லுற்றதெவ் வண்டமென் றையுற விரைவி
லிடிக்க லுற்றது தீயவாய் நகைவந்த திதழுந்
துடிக்க லுற்றது புருவமே னிமிர்ந்தது துள்ளிக்
கடிக்க லுற்றன வெயிற்றணி கறகற கலிப்ப.

(இ-ள்.) எந்த அண்டம் வெடித்ததென்று சந்தேகிக்கும்படி கொடிய வாயானது இடிபோல முழங்கியது; கோபநகை யுண்டாயிற்று; இதழ் துடித்தது; புருவம் மேலே நிமிர்ந்தது; பல் வரிசைகள் கறகறவென் றொலிக்கத் துடித்துக் கடித்தன.

புயற்பு றந்தொறு நித்தில முதிர்ந்தவா போல
வியர்ப்பு மிக்கன முறைமுறை யன்னது விளிய
மயிர்ப்பு றந்தொறும் புலிங்கம்வந் தடைந்தன வல்லே
செயிர்ப்பெ னுங்கனல் கிளர்ந்தது சிந்தையி னின்றும்.

(இ-ள்.) மேகத்தி னிடங்களினின்றும் முத்துக்களுதிர்வதுபோல வியர்வை தோன்றின; முறை முறை அவ்வியர்வைகள் வற்றும்படி மயிர்க்கால்கடோறும் தீப்பொறி யுண்டாயின; மனத்தினின்றும் விரைவாக கோபத் தீயானது கிளம்பியது.

நீடு வெஞ்சின மித்திற மவனிடை நிகழ
வோடு கின்றனர் திசையுளா ருலைந்தனர் முனிவ
ராடு கின்றதோர் தெய்வதக் கணிகைய ரவன்சீர்
பாடு கின்றவ ரியாவரும் பதைபதைத் திரிந்தார்.

(இ-ள்.) இவ்வாறு மிகக் கொடிய கோபமானது அச்சூரபன்மனிடத் துண்டாகவும், நாற்றிசையிலு முள்ளவர்கள் ஓடினார்கள்; முனிவர்கள் மனங் கலங்கினார்கள். நடனஞ் செய்கின்ற தேவதாசிகளும், அச்சூரபன்மனது சிறப்பைத் துதிக்கின்ற மற்றையர்களும் மனம் பதைத்து ஓடினார்கள்.—எ-று. (அ)

தாங்க லுற்றிடு திசைக்கரி யோடிய தரிக்கு
மோங்கன் மேருவுங் குலைந்தன பணியெலா முலைந்த
வேங்கு கின்றனர் வானவர் நடுங்கின ரிரவி
தீங்கு நாடியே போயினன் மீண்டனன் றிரிந்தான்.

(இ-ள்.) உலகத்தைச் சுமக்கின்ற திக்கு யானைகளோடின. பூமியைச் சுமக்கின்ற பெரிய மேருமலையுங் குலைந்தன. ஆதிசேஷன் முதலிய சர்ப்பக்கூட்டங்களனைத்து மலைந்தன; தேவர்கள் ஏக்கமுற்றார்கள். சூரியன் நடுக்கமுற்றவனாய் அத்தீங்கைக் குறித்துச் சென்று மீண்டு அலைந்து திரிந்தனன்.—எ-று. (௯)

பார்ந டுங்கின விண்ணெலா நடுங்கின பரவை
நீர்ந டுங்கின வயன்பத நடுங்கின நெடியோ
னூர்ந டுங்கின வவுணரு நடுங்கின ருலகத்
தார் நடுங்கில ரவன்சினஞ் சிறியதோ வன்றே.

(இ-ள்.) உலகங்கள் நடுங்கின; விண்ணுலக மனைத்தும் நடுங்கின; கடல் நீர்கள் நடுங்கின; பிரமபதம் நடுங்கின; திருமாலினது பரமபதம் நடுங்கின; அசுரர்களும் நடுங்கினார்கள்; உலகத்தில் யார் நடுங்காதவர்கள்? அச்சூரபன்மனது கோபமானது அற்பமானதோ? அன்று.—எ-று. (௧௦)

அண்ண லம்புகழ்ச் சூரபன் மாவென வறையுங்
கண்ணில் புன்மனத் தவுணர்கோ னித்திறங் கனன்று
துண்ணெ னச்சினத் தமரர்கள் யாரையுந் தொலைப்பா
னெண்ணி யுற்றிடு மிளையரைப் பார்த்திவை யிசைப்பான்.

(இ-ள்.) மிகச் சிறந்த கீர்த்தியையுடைய சூரபன்மனென்னுந் தாட்சணியமில்லாத கொடிய மனத்தினையுடைய அசுரராசனானவன் இவ்வாறு கனன்று விரைவாக் கோபித்து தேவர்க ளனைவரையு மழிக்கும்படி நினைத்து அருகிற் பொருந்திய தம்பியர்களைப் பார்த்து இவற்றைக் கூறுகின்றனன்.—எ-று. (௧௧)

மீனெ டுத்துநம் மேவலிற் றிரிந்தவிண் ணவர்கோன்
கானி டத்திருந் தொருவனைக் கொண்டிவர் கரங்க
ளூனெ டுத்திடத் தறித்தன னென்றிடி னொழிந்த
மானு டத்தரு மடுவரோ யிங்கினி மாதோ.

(இ-ள்.) நமது ஏவலினால் மீன்சுமந்து திரிந்த தேவேந்திரன் காட்டில் மறைந்திருந்து ஒருவனைக் கொண்டு இவள் கையில் மாமிசஞ் சிந்தும்படி வெட்டினானென்றால், இனி இவ்விடத்தில் மற்றைய மனிதர்களும் நம்மை யழிப்பார்களே? (௧௨)

பரம னேயலன் பங்கயத் தவிசினோ னல்லன்
றிருவு லாவரு மார்புடைத் தேவனு மல்ல
னிரிதரும் வாசவன் றானல னவன்பணி யியற்று
மொருவ னுமிவர் கைதடிந் தாவிகொண் டுறைவான்.

(இ-ள்.) சிவனுமல்லன், கமலாசனனாகிய பிரமனுமல்லன்; திருமகள் வசிக்கும் மார்பினையுடைய விஷ்ணுவுமல்லன்; ஓடிப்போன இந்திரனல்லன்; அவ்விந்திரனது ஏவலைச் செய்கின்ற ஒருவனும்: இவர்களது கையை வெட்டி உயிரோடு வசிக்கின்றவன்.—எ-று. (௧௩)

விண்ம யங்குறு செருவிடைத் தானையால் வீக்கி
யெண்மை கொண்டுறு மமரரைக் கொணர்தலு மெனது
கண்மு னின்றிடு மவுணர்தங் கழிபசி யொழிய
வுண்மி னீரெனக் கொடுத்திலே னறநினைந் துற்றேன்.

(இ-ள்.) தேவலோகத்தில் நடந்த யுத்தத்தில் எளிமையான தேவர்களை அவர்கள் ஆடைகளாலேயே கட்டிக்கொண்டு வருதலும், யான் எனது கண்ணெதிரில் நின்ற அசுரர்களது மிக்க பசி நீங்கும் வண்ணம் அவர்களை உண்ணுங்களென்று கொடுத்தேனில்லை; தருமத்தை நினைந்து சும்மா விருந்தேன்.—எ-று. (௧௪)

மறைவைத் தேயமர் கின்றதோர் வாசவன் றனையு
நறைவைத் தேயமர் பூங்குழற் சசியையு நான்முன்
சிறைவைத் தேனிலன் சிறியரோன் றுன்னினன் றீயின்
குறைவைத் தோர்கள்போ லாயினே னித்திறங் குறியேன்.

(இ-ள்.) இப்பொழுது மறைவாக வசிக்கின்ற இந்திரனையும் தேன்பொருந்திய மலராயணிந்த கூந்தலையுடைய இந்திராணியையும் முன்னம் நான் சிறையில்லைக்காது விட்டேன். அவர்கள் அற்பர்களென்று நினைத்தேன்; இவ்வாறு வருமென்றுணராத யான் கொள்ளிக்கட்டையைத் தனது ஆடையில் மறைத்து வைத்தவர்களையொத்தேன்.—எ-று. (கஙி)

கைப்ப டுத்திய வுயிர்ப்பலி கடிதினுண் ணுது
தப்ப விட்டதோர் மால்கரி யொத்தனன் றமியே
னிப்பு விக்கணே யிவர்கரங் குறைத்திட்ட தெனது
மெய்ப்ப டுத்திய ஹனமே யலதுவே றுண்டோ.

(இ-ள்.) யான் கையிலகப்பட்ட உயிர்ப்பலியை விரைவாக வுண்ணுமல் தவறவிட்ட பெரிய யானையை யொத்தேன்; இவ்வுலகத்தில் இவர்களது கையை வெட்டியது என்னுடம்பிற் செய்த பழுதேயன்றி வேறுண்டோ?—எ-று. (சக)

பூத ரந்தனைச் சிறைதடிந் திடுபுரந் தரனை
மாத ரார்புகழ் சசிதனை நாடுவான் வழிக்கொ
டேத ரின்னமுங் கண்டிலர் கொல்லவர் துணிவா
லேத மின்றியிப் புடவியிற் குறும்புசெய் திருத்தல்.

(இ-ள்.) மலைகளி னிறகையரிந்த இந்திரனையும், மாதர்களால் புகழப்பட்ட இந்திராணியையுந் தேடும்படிச் சென்ற தூதர்கள் அவ்விந்திரனு மிந்திராணியும் விசனமில்லாமல் குறும்பு செய்துகொண்டு இப்பூமியிலிருத்தலை இன்னமுங் கண்டார்களில்லையோ?—எ-று. (சஎ)

நீரி ருந்தனிர் புதல்வரு மிருந்தனர் நிகரி
றேரி ருந்தது நேமியு மிருந்தது சிறிதென்
பேரி ருந்தது யானுமிங் கிருந்தனன் பின்னை
யாரி ருந்துமென் னிருந்துமா கின்றதென் னந்தோ.

(இ-ள்.) நீங்களிருக்கின்றீர்கள்; நமது புதல்வர்களு மிருக்கின்றார்கள்; ஒப்பற்ற இந்திரஞால மென்னுந் தேரிருக்கின்றது; சக்கரமு மிருக்கின்றது; என் பெயருங் கொஞ்சமிருக்கின்றது; யானு மிருக்கின்றேன்; பின்னே யாரிருந்தும் எது விருந்தும் ஆகின்றதென்னை? ஐயோ!—எ-று. (சஅ)

வான ளாவுவெண் பஞ்சியின் மால்வரை வறிதே
தீநி லாயதோ ரளவையின் முடிந்திடுஞ் செயல்போற்
றூநி லாவெயிற் றினையர்கைச் சோரியின் றுளியாற்
போன தேபல வண்டமுங் கொண்டநம் புகழே.

(இ-ள்.) ஆகாயத்தை யளாவிய வெண்பஞ்சு மலையானது கொஞ்சந் தீப்பட்ட மாத்திரத்தில் அழியுந் தன்மையைப்போல தூய்மையாகிய இளம்பிறைபோலும் பற்களையுடைய இவர்களது கையிலுண்டாகிய இரத்தத் துளியினுல் பல அண்டங்களையு மரசாட்சி செய்கின்ற நமது கீர்த்தி யழிந்தது.—எ-று. (சகூ)

இழிவு மிங்கிவர்க் குறுவதே யிமையவர் தங்கள்
வழியி னின்றதோ ரரந்தையு மிவ்விடை வருமே
பழியு மென்னிடத் தெய்துமே யென்றுமிப் பழிதா
னெழிவ தில்லையே பொறுப்பதே யதனையென் னுயிரோ.

(இ-ள்.) இங்கு இவ்விருவர்களுக்கும் இழிவு முண்டாவதா? தேவர்களிட த்திருந்த துன்பமு மிங்குண்டாவதா? எனக்குப் பழியுண்டாவதா? இனி, இப்பழி எக்காலத்தும் நீங்காதே; ஆதலால் அதனை எனதுயிர் பொறுத்திருப்பதா?—எ-று.

மல்ல லந்தடந் தேர்கடக் கைம்மலை வயமா
வெல்லை யில்லவு மவுணரு மெங்கணு மிருப்பச்
சில்லை மென்குழ லசமுகி படுவதித் திறமோ
நல்ல நல்லவென் னரசியன் முறையென நக்கான்.

(இ-ள்.) வளப்ப மிக்க பெரிய தேரும், மதம்பொழிகின்ற யானையும், குதி ரைகளும், அளவற்ற அசுரர்களுமென்று சொல்லப்பட்ட நமது நால்வகைச் சேனைக ளும் எவ்விடங்களிலுமிருக்க ஆபரணமணிந்த மெல்லிய கூந்தலையுடைய அசமுகியா னவள் அனுபவிப்பது இத்தகைய துன்பமோ? எனது அரசாட்சியின் முறைமை மிக நன்றாயிருக்கிறதென்று கூறி நகைக்தனன்.—எ-று. (உக)

நக்க காலையிற் காலுறும் வார்கழ னரல
மக்க டங்களிற் பானுகோ பப்பெயர் வலியோன்
செக்க ரங்கியிற் கிளர்ந்துதன் றந்தைமுன் செவ்வே
புக்கு வந்தனை செய்துநின் றினையன புகல்வான்.

(இ-ள்.) அவ்வாறு நகைத்தபொழுது புதல்வர்களுக்குள் வலியவனாகிய பா னுகோபன் சிவந்த அக்கினியைப்போலக் கோபமதிகரித்துத் தனது தந்தையி னெதி ரில் கால்களிற் பொருந்திய வீரகண்டை முழங்க எதிரில் வந்து வணங்கி நின்று இவ் வார்த்தைகளைக் கூறுகின்றனன்.—எ-று. (உ௨)

ஐய கேண்மதி நமதுகுற் றேவலா லழுங்கித்
தொய்ய வுள்ளமோ டிந்திரன் கரந்தனன் சுரரு
நொய்ய ரித்தொழி னினைப்பதுஞ் செய்யலர் நுங்கை
கையி ழந்ததென் மாயமோ வுணர்கலேன் கவல்வேன்.

(இ-ள்.) தந்தையே! கேட்பாயாக: நமக்கு ஊழியஞ் செய்தலாலே வருந்தி யிளைத்த மனமுடையவனாய் இந்திரன் மறைந்து சென்றனன்; தேவர்களும் எளியவ ர்கள்; இக்காரியத்தை நினைக்கவுமாட்டார்கள். ஆதலால், உனது தங்கை கையை யிழ ந்தது யாது மாயமோ? அதனை யுணராதவனாதலால் யான் வருந்துகின்றேன்.—எ-று.

வந்தி பெற்றிடு கான்முளை யெட்டிவான் றவழு
மிந்து வைக்கரங் கொண்டன னென்பதோ ரியல்பே
யந்த ரத்தரி லொருவனே யினையவ ரங்கை
சிந்தி யுற்றன னென்றுநீ யுரைத்திடுந் திறனே.

(இ-ள்.) தேவர்களி லொருவனே இவர்களது கைகளை வெட்டினவ னெ ன்று நீர் கூறுந் தன்மை, மலடிபெற்ற பிள்ளை தனது கையை நீட்டி ஆகாயத்தி லுலா வுகின்ற சந்திரனைப் பிடித்துக்கொண்டானென்னுந் தன்மையை யொக்கும்.—எ-று.

வலிய ராகியே புரிந்தன ரெனினுமற் றவர்கண்
மெலிய ராற்றநீ வெகுளுறுந் தகைமைமே வினரோ
வொலித ருங்கடன் மீன்சுமந் துன்பணி யுழந்தா
ரலிய ரல்லதை யாண்டகை யார்கொலோ வனையோர்.

(இ-ள்.) அவர்கள் இக்காரியத்தைப் பராக்கிரமசாலிகளாய்ச் செய்தார்களா னாலும், மிகவும் எளியவர்கள்; நீர் கோபிக்கத்தக்க தன்மையை யுடையவர்களோ?

அத்தேவர்கள் சப்திக்கின்ற கடலிலுள்ள மீனைச் சுமந்து உமது ஏவலில் அலைந்தார்கள்; ஆதலால் அவர்கள் பேடிகளேயன்றி, ஆண்தன்மை யுடையவர்களோ?—எ-று.

நறைம லர்க்கம லத்தனை வெகுளினு நாரத்
துறையுள் வைகிய முகுந்தனை வெகுளினு மும்ப
ரெறிபு னற்சடை யிறைவனை வெகுளினு மியல்பே
சிறியர் தம்மையு முனிதியோ பெருமையிற் சிறந்தோய்.

(இ-ள்.) பெருமையிற் சிறந்த பிதாவே! தேன்பொருக்திய கமலாசனனாகிய பிரமனைக் கோபித்தாலும், பாற்கடலில் வசிக்கின்ற திருமாலைக் கோபித்தாலும், மேலே வீசுகின்ற கங்கையை யணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானைக் கோபித்தாலும் அது தகுதியேயாம். இதுவன்றி, அற்பர்களாகிய தேவர்களையுங் கோபிக்கின்றனையோ.—எ-று. (உசு)

முத்தி றப்படுந் தேவரோ யல்லதுன் முனிவிற்
கெத்தி றத்தின ரியைந்துளோ ரிளையர்க்கு மினைத்தே
சித்த முற்றிடும் வெகுளியைத் தீருதி யின்னோர்
கைத்த லந்தனை யிழந்துழிப் பெயருவன் கடிதின்.

(இ-ள்.) மூவகையாகிய பிரம விஷ்ணு ருத்திரர்களையன்றி உமது கோபத்திற்கு வேறு யாவர் பாத்திரராவார்கள்; உமது தம்பிமார்களுக்கு மிவ்வாறேயாம். மனத்திற்கொண்டுள்ள கோபத்தைத் தணிக்கக்கடவீர்; யான் இவர்கள் கையிழப்புண்டவிடத்திற்கு விரைவாகச் செல்லுகின்றேன்.—எ-று. (உஎ)

விசைய வாளினு லிங்கிவர் கரந்தனை வீட்டு
மசைவி லாடவன் றன்னைநின் னுளத்தின்மா லளித்த
சசியை யிந்திரக் கள்வனைத் தம்முயிர் தமக்குப்
பசையி லாததேோ ரமரரைப் பற்றினன் படர்வேன்.

(இ-ள்.) வெற்றி வாளினால் இவர்களது கையை வெட்டிய அஞ்சாத வீரனையும், உமது மனத்திற்குக் காமத்தை யுண்டாக்கிய இந்திராணியையும், இந்திரனாகிய கள்வனையும், தங்களுயிரைத் தங்களுக் குரித்தாகப் பெற்றிராத தேவர்களையும் பிடித்துக்கொண்டு வருகின்றேன்.—எ-று. (உஅ)

அங்க னுற்றிலர் மறைகுவ ரேயெனி னகில
மெங்கு நாடுவ னனையர்வாழ் துறக்கநா டேகிச்
செங்க னற்கொள வளிக்குவ னமரர்தந் திறத்தை
மங்கை மாரொடும் பற்றியோர் கன்னலின் வருவேன்.

(இ-ள்.) அவர்கள் அவ்விடத்தில்லாமல் மறைவார்களாயின், உலகமெங்குந் தேடுவேன்; அவர்கள் வசிக்கின்ற சொர்க்கத்திற்குச் சென்று அதனை அக்கினிக்கு இரையாகும்படிக் கொடுப்பேன்; தேவர் கூட்டத்தை அவர்கள் மாதர்களுடன் பிடித்துக்கொண்டு ஒரு நாழிகைக்குள் வருவேன்.—எ-று. (உகூ)

ஓதி யால்விடை தமியனுக் கென்றுநின் றிரப்பத்
தாதை யாகிய வவுணர்கோன் முனிவினைத் தணிந்து
போதி மைந்தநின் படையொடு மாங்கெனப் புகல
வாத வன்பகை யழுகிதென் றுவகையை யடைந்தான்.

(இ-ள்.) அடியேனுக்கு விடை தருவீராகவென்று வேண்டிக்கொள்ளவும், தந்தையாகிய சூரபன்மன் கோபந் தணிந்து மைந்தனே உனது சேனைகளுடன் அவ்விடத்திற்குச் செல்லக்கடவையென்று கூறுதலும், பானுகோபன் அவ்வாறே செய்கின்றேனென்று கூறி மகிழ்வடைந்தனன்.—எ-று. (௯0)

ஓகை சேர்தரு விண்ணவர் மணிமுடி யுரிஞ்சிச்
சேகை சேர்தரு தாதைதா ளுச்சியிற் சேர்த்தி
வாகை சேர்சிறு தந்தையர் தம்மையும் வணங்கிப்
போகை சேர்விடை கொண்டுதன் னிருக்கையிற் போனான்.

(இ-ள்.) மகிழ்ச்சி பொருந்திய தேவர்களது மணிமுடிகள் தேய்க்கப்பட்டு வயிரம்பொருந்தி யிருக்கின்ற தனது தந்தையின் பாதங்களை முடியில் வைத்து வெற்றிபொருந்திய சிறிய தந்தையர்களையும் வணங்கிப் போகும்படி விடை பெற்றுக்கொண்டு தனதிருப்பிடத்திற்குச் சென்றனன்.—எ-று. (௯க)

மைந்த னேகலுஞ் சூரபன் மாவெனும் வலியோ
னுந்து தீவிழி யுழையரிற் சிலவரை நோக்கி
யந்த நான்முக னிங்ஙனம் வருகுவ னவனை
நந்த முன்னுறக் கொடுவரு வீரென நவின்றான்.

(இ-ள்.) அவ்வாறு பானுகோபன் செல்லவும், சூரபன்மனென்னும் வீரனவன் கண்களில் தீப்பொறி பறக்கின்ற சில அசுரர்களைப் பார்த்து அந்தப் பிரமன் இங்கு வருவான்; அவனை நமக்குமுன்னே அழைத்துவாருங்களென்று கூறினான்.

எங்க ணுற்றுளா னயனெனக் கூவின ரேகிப்
பங்க யத்தனைக் கண்டுநிற் கொணர்கெனப் பணித்தா
னங்கள் கொற்றவ னென்றலு மொல்லென நடவா
வங்க மைந்துட னவுணர்கண் மன்னன்முன் னணைந்தான்.

(இ-ள்.) அவ்வசுரர்கள் பிரமன் எங்கிருக்கின்றானென்று விளித்துக்கொண்டே சென்று பிரமனைப் பார்த்து, எங்களரசன் உன்னை யழைத்துவரும்படி கட்டளையிட்டனனென்று கூறுதலும், அப்பிரமன் விரைவாக நடந்து பஞ்சாங்கத்துடன் சூரபன்மனெதிரில் வந்தனன்.—எ-று. (௯௩)

அணைந்த பூமகன் வைகலே பக்கநா ளவற்றாற்
புணர்ந்த யோகொடு கரணமே யுள்ளன புகல
நுணங்கு சிந்தையா லகிலமும் படைத்துளாய் நொய்திற்
றணந்த கையிவர்க் குதவுதி யென்றனன் றலைவன்.

(இ-ள்.) அவ்வாறு வந்த பிரமன் வாரம் திதி நட்சத்திரம் யோகம் கரணமாகிய பஞ்சாங்கத்தையு மற்றவைகளையுங் கூறுதலும், அவற்றைக் கேட்ட சூரபன்மன் நுட்பமாகிய மனத்தினால் எல்லாவற்றையும் படைத்த பிரமனே! நீ விரைவாக இவர்களது அறுபட்ட கையை முன்போல் படைக்கக்கடவை யென்று கூறினன்.—எ-று.

என்று தானிவை மொழிதலுந் திசைமுக னிசைந்து
வன்றி றற்கரங் கூடுக மற்றிவர்க் கெனலு
மொன்றோர் மாத்திரைப் பொழுதின்மு னவைவளர்ந் துறலு
நன்று நன்றுநின் வல்லப மென்றுசூர் நவின்றான்.

(இ-ள்.) என்றிவ்வாறு சூரபன்மன் கூறுதலும், பிரமன் அதற்கிசைவுற்று இவர்களுக்கு மிக்க வலிமைபொருந்திய கைகள் வளரக்கடவதென்று கூறுதலும் ஒரு, கணப்பொழுதிற்குள்ளே அவ்வாறே வளர்தலும், (அதனைப்பார்த்து) நினது வல்லமை நன்று நன்றென்று சூரபன்மன் கூறினான்.—எ-று. (௬௫)

அன்ன தற்பின்ன ரசமுகத் தணங்கினை யரசன்
றன்ன கர்க்குளே யிருந்திடச் செய்துதுன் முகத்தி
தன்னை மைந்தனோ டெய்த்தனன் புலோமசைத் தையன்
முன்னி ருந்துழி காட்டியே வருகென மொழிந்து.

(இ-ள்.) அதற்குமேல் சூரபன்மன் அசமுகியைத் தனது நகரத்திற்குள்ளே யிருக்கும்படித் திட்டஞ்செய்து துன்முகியைப்பார்த்து நீ பானுகோபனுடன் இந்திராணி யிருந்தவிடத்திற்குச்சென்று அவ்விடத்தைக் காட்டிவிட்டு வரக்கடவையென்று கட்டளையிட்டனுப்பினான்.—எ-று. (௬௬)

உழைத்தி ரிந்தபல் சிலதரை நோக்கியே யுலகிற்
றழைத்த செங்கதிர்க் கடவுளைத் தாரகா கணத்தை
யெழுச்சி கொண்டுறு கோளினை யாரையு மின்னே
யழைத்தி ராலெனச் சொற்றன னவுணர்கட் கரசன்.

(இ-ள்.) சூரபன்மன் தன்பக்கங்களி லுலாவிய பல தூதுவர்களைப் பார்த்து நீங்கள் சென்று உலகத்தில் செழிப்புடன் விளங்குகின்ற சூரியனையும் நக்ஷத்திரக் கூட்டங்களையும் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்ற கிரகங்களையும் மற்றவர்களையு மிப்பொழுதே சென்று அழைத்துவாருங்களென்று கூறினான்.—எ-று. (௬௭)

சேடர் பற்பலர் விடைகொடு சேட்புலஞ் சென்று
நேடி யன்னவர் தமையெலாங் கொணர்ந்துமுன் னிறுவ
மூடு கொண்டலிற் கரந்தமின் பின்னெழு முறைபோற்
கேடு கொண்டதொல் சினவெரி சூரனுட் கிளர்ந்த.

(இ-ள்.) அநேகம் ஏவலாளர்கள் (சூரபன்மனிடத்தில்) விடை பெற்றுக் கொண்டு ஆகாயத்திற்சென்று தேடிப்பார்த்து அச்சூரியன் முதலியவர்களை யெல்லாம் பிடித்துக்கொண்டுவந்து முன்னே நிறுத்த, மேகத்தில் மறைந்த மின்னல்தோன்றுந் தன்மையைப்போல, சூரபன்மனது உள்ளத்தில் மறைந்துகிடந்தமிகுந்தகோபாக்கினி யானது பின்னுமதிகரித்தது.—எ-று. (௬௮)

வியர்க்கு நெஞ்சினன் கதிர்முத லோர்தமை விளியா
வயர்க்கை யின்றியே வானிடைத் திரியுநீ ரறியா
வியற்கை யொன்றிலை யெங்கைதன் செங்கையை யெறிந்தோன்
செயற்கை காணுதிர் வறிதுநீ ரிருந்ததென் சேணில்.

(இ-ள்.) (கோபத்தால்) வியர்க்கின்ற மார்பினையுடைய சூரபன்மன் சூரியன் முதலியவர்களையழைத்துச் சோர்வின்றி ஆகாயத்திலுலாவுகின்ற நீங்கள் அறியாத காரியம் ஒன்றுமில்லை, எமது தங்கையின்கையை வெட்டினவனது தன்மையை யறிவீர்கள், அங்ஙனமாக, நீங்கள் ஆகாயத்தில் வீணாகவிருந்தது யாதுகாரணம்.—எ-று.

இளைய டன்கரங் குறைத்திடு மிமையவ னுயிரைக்
களைதல் செய்திலீ ரல்லதே லனையனைக் கட்டித்
தளைசெய் திவ்விடைக் கொணர்ந்திலீ ரல்லதத் தலையில்
விளைவை வந்தெமக் குரைத்திலீர் நன்றுநும் மிகுதி.

(இ-ள்.) நீங்கள் எனது தங்கையின்கையைவெட்டிய தேவனதுயிரை ஒழித்தீர்களில்லை; அவ்வாறுசெய்யாதுபோனாலும் அவனைப்பிடித்துக்கட்டி விலங்கிட்டு இவ்விடத்திற்குக்கொண்டுவந்தீர்களில்லை; அதுவில்லாதுபோனாலும் அவ்விடத்தில் நடந்தசங்கதியை எம்மிடத்துவந்து கூறினீர்களில்லை உங்கள் கௌரவம் நன்றாயிருக்கின்றது. ()

மறத்தி றத்தினு லெங்கைதன் கையையோர் வலியோன்
குறைத்த தற்குநீ ரகத்தரே யல்லது குறிக்கிற்
புறத்த ரன்றுநம் மாணையா லித்தொழில் புரிவீர்
முறைத்தி றங்கொலோ நுங்களுக் கிதுவென மொழிந்தான்.

(இ-ள்.) கோபத்தன்மையினால் எனது இளையவளாகிய அசமுகியின் கையை ஒருவீரன் வெட்டிவிடுதற்கு நீங்கள் உட்பட்டவர்களே தவிர உட்படாதவர்களல்ல நீங்கள் நமது உத்தரவினால் இந்த அரசுகளை நடத்துகின்றீர்கள்; இவ்வாறுசெய்தற்கு உடன்பட்டு நிற்பது உங்களுக்கு முறைமைதானா என்று கேட்டனன்.—எ-று. (சுக)

நீதி யில்லவ னீங்கிவை யுரைத்தலு நிருப
வேது மெங்களை வெகுளலை யிங்கிவள் கரத்தைக்
காது வான்றனைக் கண்டில மின்றுசெல் கதியின்
மீது சென்றவெம் விழியென வுரைத்தனர் விண்ணோர்.

(இ-ள்.) அநீதிமானாகிய சூரபன்மனிவ்வாறு கூறுதலும், அவனைப்பார்த்தவண்ணம் தேவர்கள் அரசனே! எங்களை எதற்காகவும் கோபித்துக்கொள்ளவேண்டாம் இவ்வசமுகியின் கையை வெட்டினவனை நாங்கள் கண்டோமில்லை ; எங்கள் கண்கள் நாங்கள் செல்லும் வழியிலேயே செல்லாநின்றன என்று கூறினார்கள்.—எ-று. (சுஉ)

துண்ட மாகியே யிவள்கரந் துணிபட்ட செய்கை
கண்டி லார்களாங் கதியிடைச் சென்றவாங் கண்க
ளண்டர் தஞ்செய லழகிதென் றனையரை யெல்லாந்
தண்ட வில்லதோர் சிறைபுரி வித்தனன் றலைவன்.

(இ-ள்.) சூரபன்மனதனைக்கேட்டு இவளது கை துண்டாக வெட்டப்பட்டதை அறியார்களாம் ; இவர்கள் விழிகள் செல்லும்வழியிலே செல்லாநின்றவாம் ; இத்தேவர்களது செய்கைகள் நன்றாயிருக்கின்றது என்றுகூறி, அவர்களையெல்லாம் கெடாத ஒரு சிறையிலடைப்பித்தான்.—எ-று. (சுரு)

### வேறு.

தினகரன் முதலினோர் சிறையிற் புக்கபின்
வினைஞரிற் சிலர்தமை விளித்து நீவிர்போய்த்
துனைவரு மருத்துவர் தொகையைத் தம்மென
முனிவொடு தூண்டினன் முடிவிலாற் றலான்.

(இ-ள்.) சூரியன் முதலானவர்கள் சிறையிலானபின்பு, சிலஏவலாளரை அழைத்து நீங்கள் சென்று எவ்விடங்களிலும் விரைந்து செல்கின்ற வாயுக்களின் கூட்டங்களை அழைத்துக்கொண்டு வாருங்கள் என்று அழிவில்லாத வலிபெற்ற சூரபன்மன் அனுப்பினான்.—எ-று. (சுச)

ஒற்றரி லொருசில ரொல்லை யேகியே
குற்றமின் மருத்துவர் குழாத்தைக் கூவியே
பற்றிமுன் னுய்த்தலும் பதைக்கு நெஞ்சினன்
றெற்றென வாங்கவர்க் கிதனைச் செப்புவான்.

(இ-ள்.) தூதர்களிற் சிலர் விரைந்துசென்று குற்றமற்ற வாயுக்கூட்டங்களை அழைத்து பிடித்துக்கொண்டு வந்தெதிரில் நிறுத்துதலும் துடிக்கின்ற மனத்துடன் சூரபன்மன் அவர்களைப்பார்த்து விரைவாக இவ்வண்ணங்கூறினான்.—எ-று. (௪௫)

வானிடை மண்ணிடை மாதிரத்திடை
மேனிகழ் கடலிடை வியன்பி லத்திடை
யூனிடை யுயிரிடை யொழிந்து நின்றிடு
மேனைய பொருளிடை யெங்கு நிற்றிரால்.

(இ-ள்.) (நீங்கள்) ஆகாயத்திலும் பூமியிலும் திக்குகளிலும் உயர்ந்து விளங்குகின்ற கடலிலும் பெரிய பாதலத்திலும் ஊனிலும் உயிரிலும் அன்றியுள்ள மற்றைய பொருள்களிலும் எவ்விடங்களிலும் நிற்கின்றீர்கள்.—எ-று. (௪௬)

ஏனுறு கின்றவென் னிளையள் கையையோர்
சேணினன் வாள்கொடு சேதித் திட்டதைக்
காணுதி ருமக்கெவர் கரக்கற் பாலினோர்
நீணகர் குறுகியிந் நிலைமை சொற்றிலீர்.

(இ-ள்.) பெருமைபொருந்திய எனது தங்கையின் கையை ஒருவானவன் வாள்கொண்டு வெட்டியதை பார்த்தே இருப்பீர்கள்; உங்களுக்கு யார் மறைப்பவர்கள் அவ்வாறு கண்டிருந்தும் இந்தப்பெரிய நகரத்துக்கு வந்து நம்மிடத்திற் சொல்லாது விட்டீர்கள்.—எ-று. (௪௭)

தரியலர் சூழ்ச்சியாற் றகுவர்க் கிப்பழி
வருவது நன்றென மகிழ்ந்து வைகினீர்
பெருமித நன்றெனப் பேசமா றுசொல்
லுரையற நின்றன ருலவைப் பண்ணவர்.

(இ-ள்.) சத்துருக்களின் தந்திரத்தால் அசுரர்களுக்கு இப்படிப்பட்ட காரியம் உண்டாவது நல்லதுதானென்று சந்தோஷத்துடன் இருந்தீர்கள் உங்கள்பெருமை நன்றாயிருக்கின்றது என்று சூரபன்மன் சொல்லுதலும் அதற்குத்தரம் ஒன்றுஞ்சொல்லாமல் மௌனமாக வாயுதேவர்கள் நின்றார்கள்.—எ-று. (௪௮)

வன்றிற லின்றியே மனத்தி லச்சமாய்
நின்றிடு கால்களை நீடு கால்களிற்
றுன்றிய கனைகழற் சூர னென்பவ
னொன்றொரு சிறைதனி லுய்த்திட் டானரோ.

(இ-ள்.) மிக்கவலியிழந்து மனதிலச்சத்துடனே எதிரில் நிற்கிற வாயுக்களை பெரியகால்களில் நெருங்கிய வீரகண்டையணிந்த சூரபன்மன் ஒருசிறையிலடைப்பித்தான்.—எ-று. (௪௯)

ஈற்றினை யிழைத்திட விருக்குங் கால்களைச்
சீற்றமொ டவுணர்கோன் சிறையில் வீட்டினான்
சாற்றிடி னுலகமேற் றவத்தி னால்வரும்
பேற்றினு முளதுகொல் பெருமைத் தானதே.

(இ-ள்.) உலகசங்காரத்தைச் செய்தற்கிருந்த வாயுக்களை அசுரனாகிய சூரபன்மன் சிறையிலிட்டனன்; சொல்லுமிடத்தில் இவ்வுலகமுதலிய எவ்வுலகங்களிலும் தவத்தினால் வரும்பேற்றைவிடச் சிறந்தது வேறே ஒன்றிருக்கின்றதோ? இல்லை.—எ-று.()

திரிதரு மருத்தனைச் சிறையில் வைத்தபின்
குழைகழல் வினைஞரைக் கூவி யிற்றையாண்
டிருதுநன் மதிமுத லெல்லையாளரைத்
தருதிரென் றுரைத்தலுந் தாழ்ந்து போயினர்.

(இ-ள்.) விடாமலுலாவுதலேயே தொழிலாகவுடையவாயுக்களை அசுரராஜனாகிய சூரபன்மன் சிறையில் வைத்ததற்குப் பின்பு, சத்திக்கின்ற வீரகண்டையணிந்ததூதுவர்களையழைத்து, நீங்கள் இந்தவருஷம், இருது, மாதம் முதலியவற்றின் அதிதேவர்களைக் கொண்டுவாருங்கள் என்றுகூறுதலும் அவர்கள் வணங்கினவர்களாகச் சென்றார்கள். ()

ஏவல ராயினோ ரேகி யெல்லையின்
காவல ராகிய கடவு ளோர்தமைக்
கூவினர் பற்றியே கொடுவந் துய்த்தலுந்
தேவர்கண் மாற்றலன் சீறிக் கூறுவான்.

(இ-ள்.) தூதர்களாயுள்ளவர்கள் சென்று, ஆண்டுமுதலிய எல்லைகளின் காவலாளிகளாகிய தேவர்களை அழைத்துப் பிடித்துக்கொண்டு வந்துநிறுத்துதலும் உடனே, தேவர்களுக்குப் பகைவனாகிய சூரபன்மன் அவர்களைநோக்கிச் சொல்லுகின்றான்.-எ-று.

புல்லிய மகபதி புணர்த்த வச்செய
லொல்லுவ தென்றதற் குள்ள மாகிநீ
ரெல்லிரு மனமகிழ்ந் திருத்தி ரென்னெடுஞ்
சொல்லிய வந்திலீ ரியாண்டுந் துன்னினீர்.

(இ-ள்.) எவ்விடங்களிலும் இருப்பவர்களே? இழிந்த இந்திரன்செய்த அக்காரியம் தக்கதென்று அதற்குச் சம்மதித்து நீங்கள்யாவர்களும் மனமகிழ்ச்சியுடனே இருந்தீர்கள்; இவ்வாறு நடந்ததனை எம்மிடத்தில் வந்துகூறினீரில்லை.—எ-று. (ரு௫)

நிரந்தர நம்பணி நெறியி னின்றுநீ
ரிருந்ததிற் பயனெவ னிருக்கலா மையால்
வருந்தவ றென்சுரர் மருங்குற் றீரென
வருந்தளை யிட்டன னவர்க டம்மையும்.

(இ-ள்.) சதாகாலமும் நமது ஊழியவழியிலே நீங்கள் இருந்ததனாலென்னபிரயோசனம்; நீங்களில்லாமற்போனால் வருந்தவறென்னை! (ஒன்றுமில்லை) நீங்கள் என்பகைவர்களாகிய தேவர்பக்கத்தைச் சார்ந்திருக்கிறீர்களென்று கூறி அவர்களையும் அரிய சிறையிலடைத்தனன்.—எ-று. (ருசு)

தூவலி கெழுவிய சூரன் பின்சில
வேவலர் தங்களை விளித்திட் டிப்புவி
காவலர் தமையெலாங் கடிது வம்மெனக்
கூவுதிர் தம்மெனக் கூறித் தூண்டினான்.

(இ-ள்.) மிகுந்த பராக்கிரமத்துடன் விளங்குகின்ற சூரபன்மன் வேறே சில தூதர்களை அழைத்து நீங்கள் இவ்வுலகத்தை ஆளுகின்ற அரசர்களையெல்லாம் விரைந்து வாருங்கள் என்று அழைத்துக்கொண்டு வாருங்கள் என்று கூறி அனுப்பினான்.—எ-று.

தூண்டலு மளவைதீர் தூத ரோடியே
யீண்டிய காவல ரினத்தை மாநிலந்
தேண்டினர் பற்றியே சென்று வென்றிகொ
ளாண்டகை யிறைவன தவையி னுய்ப்பவே.

(இ-ள்.) அவ்வாறனுப்புதலும் அளவற்றதூதுவர்கள் விரைந்துசென்று இவ்வுலகமுழுமையுந்தேடி உலகாளும் அரசர்களையெல்லாம் பிடித்துக்கொண்டு சென்று வெற்

றிபொருந்திய ஆண்டன்மையிற்சிறந்த அரசனாகிய சூரபன்மனது சபையிற்கொண்டு வந்து நிறுத்துதலும்.—எ-று. (ருசு)

ஆக்கையில் வியர்ப்புற வச்ச நாணுயிர்
தாக்குற நனியுளந் தளரக் கைதொழுங்
காக்குநர் தொகுதியைக் காவன் மன்னவ
னோக்கினன் வெகுண்டிது நுவறன் மேயினன்.

(இ-ள்.) உடம்பில் வியர்வைதோன்றவும், அச்சமும்நாணமும் வருத்தவும்; மனமானது மிகவுந்தளர்ச்சியடையவும்; நின்றுவணங்குகின்ற அரசர்கூட்டங்களை, உலகாளுமன்னனாகிய சூரபன்மன்பார்த்து,கோபங்கொண்டு இவ்வண்ணங்கூறுவானாயினன்.

எளித்துற லின்றிநம் மேவ னீங்கியே
களித்திடு சசியொடுங் கடவுள் வாசவ
னொளித்தன னிம்பரி னும்ப ரில்லைநீ
ரளித்தது சாலவு மழகி தாமரோ.

(இ-ள்.) அரசர்களே? தேவனாகிய இந்திரன் தன்னிந்திராணியுடனே எளிய தன்மையாக இராமல் நமது கட்டளையைக்கடந்து, மறைந்துபோயினன்: அவன் அவ்வுலகத்திலும் இவ்வுலகத்திலும் இல்லை; நீங்களரசாண்டது மிகவும் நன்றாயிருக்கின்றது.

குறித்திடு புரைமனக் கொண்ட லூர்பவ
னெறித்திக ழாணையி னின்ற தூதுவன்
மறித்திரு முகனுடை மங்கை தன்கர
மறுத்தவ ணிருந்தன னதுவுந் தேர்ந்திலீர்.

(இ-ள்.) நீங்கள் குற்றம்பொருந்திய மனமுள்ளவனென் றெண்ணத்தக்க மேகவாகனனாகிய இந்திரனுடைய ஆணையின் வழியாகநிற்கின்ற தூதனொருவன் அழகிய அசமுகியாகிய வென்னிளையவளது கையைவெட்டி அவ்விடத்தி லிருப்பதையும் உணர்ந்தீர்களில்லை.—எ-று. (ருகூ)

மறங்கிளர் தேறல்வாய் மடுத்து வைகலுங்
கறங்குறு நிலையராய்க் கலங்கி னீர்கொலோ
வுறங்கினி ரேகொலோ வோம்பலீர் கொலோ
பிறங்குதொல் வளமையாற் பித்துற் றீர்கொலோ.

(இ-ள்.) நீங்கள் தினந்தோறும் வீரத்தை மிகுதியாகச் செய்கின்ற கள்ளைக்குடித்து காற்றாடியின் தன்மையாகக் கலக்கமுற்றீர்களோ? அல்லது தூங்கினீர்களோ? உலகாளுகின்றீர்களில்லையோ? விளங்குகின்ற பெரிய செல்வத்தாற் பைத்தியங்கொண்டிருக்கின்றீர்களோ.—எ-று. (சுo)

ஓயுமென் பகைஞரோ டுறவுற் றீர்கொலோ
வாயவர் தங்களுக் கஞ்சி னீர்கொலோ
சேயிழை யாரிடைச் செருக்குற் றீர்கொலோ
நீயிர்க ளிருந்ததென் னிலைமை யென்னவே.

(இ-ள்.) இளைத்த எனது பகைவர்களுடனே சினேகங்கொண்டீர்களோ? அல்லது அவர்களுக்குப் பயந்தீர்களோ? பெண்கள் விஷயமாக இறுமாப்படைந்தீர்களோ? நீங்கள் இருந்தது, எந்தநிலைமையில்? என்று சூரபன்மன் கேட்டலும்.—எ-று. (சுக)

எண்டரு மெந்தைநீ யிசைத்த தன்மையிற்
கொண்டில மொன்றுமக் குவல யந்தனைப்
பண்டுதொட் டளிக்குதும் பகைஞர் யாரையுங்
கண்டிலங் காந்துறை கதையுங் கேட்டிலம்.

(இ-ள்.) புகழத்தக்க எந்தையே? தேவரீர் கூறியவைகளிலொன்றையும் நாங்கள் கைக்கொண்டோமில்லை; அந்தப்பூமியை முன்காலந்தொடங்கி அரசாளுகின்றோம்; உம்முடையபகைவர்கள் யாரையுங் கண்டோமில்லை: அவர்கள் மறைந்திருக்கும் கதையையுங் கேட்டோமில்லை.—எ-று. (சுஉ)

தாயெனு மேழகத் தலைய டுன்முக
வாயிழை யொடும்வர லதுவு மன்னர்கை
போயதுந் தெரிந்திலம் புந்தி கொள்ளுதி
மாயமி தாகுமான் மன்ன வென்னவே

(இ-ள்.) தாயாகிய அசமுகி துன்முகியுடன் வந்ததையும் அவர்களது கைகள் வெட்டுண்டதையும் அறியோம்; இதனை மனத்திற்சிந்திக்கக்கடவீர், அரசனே? இது மாயமாக விருக்கின்றது என்று கூறியவுடனே.—எ-று. (சுஈ)

மிடைதரு வெறுக்கையை மிசைந்து மால்கொளீஇப்
புடவியை யிடைதொறும் போற்றல் செய்திலீ
ரிடையுற வென்வயி னினைய தோர்பழி
யடைவது மாயையா மழகிதே யென்றான்.

(இ-ள்.) அரசர்களே? நீங்கள் நெருங்கிய செல்வத்தை யனுபவித்துக்கொண்டு அதனால் மயக்கமடைந்து உலகத்தை அந்தந்தச்சமயங்கடோறும் பாதுகாவாதிருக்கின்றீர்கள்; இத்தகையபழியானது என்னிடத்திற்பொருந்துவது மாயமாம்; இதுநன்றாயிருக்கின்றதென்று கூறினான்.—எ-று. (சுச)

வேறு.

ஒலிகெழு முவரிப் புத்தே ளுள்ளுறை வடவைச் செந்தீத்
தொலைவுழி யெழுவ தேபோற் சூரனுட் சினமீக் கொள்ள
மலிகதி ரிருள்புக் கென்ன வாளுரீஇ மருங்கே தானைத்
தலைவர் நின்றா ரையேவித் தனித்தனி தண்டஞ் செய்வான்.

(இ-ள்.) ஒலிபொருந்திய கடலின் நடுவிலிருக்கின்ற வடவாக்கினி பிரளயகாலத்தில் சொலிப்பதைப்போலச் சூரபன்மனிடத்தில் மிக்க கோபமுண்டாகவும், சூரியன் இருளின்பக்கத்தையடைந்தாற்போல (ஒளிபொருந்திய) வாளினையுருவிக் கையிற்பிடித்துக்கொண்டு பக்கத்தில்நின்ற சேனாதிபர்களைக்கொண்டு (அவ்வரசர்களை) வேறுவேறாகத் தண்டிப்பானாயினான்.—எ-று. (சுரு)

சிற்சிலர் தமது நாவைச் செங்கையைச் சேதித் திட்டான்
சிற்சிலர் துண்டந் தன்னைச் செவிகளைக் களைதல் செய்தான்
சிற்சிலர் மருமந் தன்னைச் சிறுபுறத் தொடுகொய் வித்தான்
சிற்சிலர் தாளைத் தோளைச் சென்னியைச் சேதிப் பித்தான்.

(இ-ள்.) சிலருடைய நாவையும், அழகிய கையையும் வெட்டினான்; சிலருடைய மூக்கையும், காதுகளையும், வெட்டினான்; சிலருடைய மார்பையும், பிடரியையும் வெட்டுவித்தான்; சிலருடைய கால்களையும், தோள்களையும், தலைகளையும் வெட்டுவித்தான்.—எ-று. (சுசு)

எரிதரு கழற்காற் சூர னித்திறம் பலீறண் டங்கள்
முறையினிற் செய்து சீய முழுமணித் தவிசிற் றீர்ந்து
விறல்கெழு மினையர் செல்ல விடைகொடுத் தயனை நோக்கி
மறைமுனி போதி யென்ன மற்றவ னினையசொற்றான்.

(இ-ள்.) ஒளிவீசுகின்ற வீரக்கழலையணிந்த கால்களையுடைய சூரபன்மன் இவ்வாறு பலதண்டங்களை முறைப்படிசெய்து பெரிய இரத்தினங்களிழைத்த ஆசனத்தினின்று நீங்கி வெற்றிபொருந்திய தம்பிமார்களைப் போகும்படி விடைகொடுத்து பிரமனைப் பார்த்து நீபோகக்கடவையென்று கூறுதலும், அப்பிரமன் இவ்வார்த்தைகளைக்கூறினான்.

மன்னவர் மன்ன கேண்மோ வான்கதி ருடுக்க ளேனோ
ரிந்நில மடந்தை வேலைக் கிறையவர் யாரு மென்று
முன்னுடைப் பணியி னிற்ப ருலகிவ ரின்றி யாகா
வன்னவர் பிழையுட் கொள்ளே லருஞ்சிறை விடுத்தி யென்றான்.

(இ-ள்.) அரசர்க்கரசனாயுள்ள சூரபன்மனே? கேட்பீராக, ஆகாயத்திலுலாவுகின்ற சூரியன் நக்ஷத்திரங்கள் முதலியவர்களும் இவ்வுலகபாலகர்களாகிய அரசர்கள்முதலியவர்களும், எப்பொழுதும் உமது ஏவலில் நிற்பார்கள்; உலகம் இவர்களில்லாமல் நடந்தேறமாட்டா; ஆதலால் அவர்களது குற்றத்தை மனத்திற்கொள்ளாதீர்; அவர்களை யிட்டிருக்கின்ற அரியசிறையினை விடுவீராகவென்று கூறினான்.—எ-று. (சுஅ)

குறையிரந் தினைய கூறிக் கோகன தத்தோன் வேண்ட
நறையிருந் துலவு தாரோ னன்றென விசைவு கொள்ளா
வுறையிருந் திலங்கும் வாட்கை யொற்றரை நோக்கி நந்தஞ்
சிறையிருந் தோரைத் தம்மி னென்றலுஞ் சென்றங் குய்த்தார்.

(இ-ள்.) பிரமதேவன் குறைகூறி இவைகளை வேண்டிக்கொள்ளுதலும் தேன்பொருந்தி யுலாவுகின்ற மலர்மாலையையணிந்த சூரபன்மன் நன்றென்று சம்மதித்து உறையிற்பொருந்தி விளங்குகின்ற வாளேந்தியகையினையுடைய தூதுவர்களைப்பார்த்து நமது சிறையிலிருக்கின்றவர்களை யழைத்து வாருங்களென்று கூறியவுடனே சென்று அவர்களைக்கொண்டுவந்து சேர்த்தார்கள்.—எ-று. (சுகூ)

வன்றளை யுற்றோர் தம்மை மன்னவர் மன்னன் பாரா
வென்றுநம் பணியி னிற்றி ரிந்திர னொடுசேர் கல்லிர்
சென்றிடு நுங்க டொன்மை செய்திட வென்ன வன்னோர்
நன்றிது புரிது மென்னா நயமொழி புகன்று போனார்.

(இ-ள்.) வலிய சிறையிலிருந்தவர்களை அரசர்க்கரசனாகிய சூரபன்மன் பார்த்து நீங்கள் எக்காலத்து நமது ஏவலில் நிற்கக்கடவீர்கள்; இந்திரனுடன்சேராதீர்கள்; உங்களது பழைய செயல்முறைகளைச் செய்யும்படிச் செல்லுங்களென்று கூற, அவர்கள் நல்லது அவ்வாறே செய்கின்றோமென்று பிரியவார்த்தை கூறிச்சென்றார்கள்.—எ-று.()

போதலுங் கமலத் தோற்கும் புதல்வர்க்கு மமைச்சர் யார்க்கு
மேதகு முனிவர் யார்க்கும் வியன்படைத் தலைமை யோர்க்கும்
போதலை யுதவிச் சூர னுறையுளிற் புகுந்தான் முன்செ
லாதபன் பகைஞன் செய்த செயலினை யறைத லுற்றேன்.

(இ-ள்.) அவர்கள் சென்றவுடனே பிரமனுக்கும் புதல்வர்களுக்கும் மந்திரிமார்களுக்கும் உயர்வுபொருந்திய முனிவர்களுக்கும் பெரியசேனாதிபர்களுக்கும் போகும்படி உத்தரவு கொடுத்து சூரபன்மன் தனதிருப்பிடத்திற்குச் சென்றனன்; இதுநிற்க, முன்னே சென்ற பானுகோபன் செய்த செய்கைகளை இனிக்கூறுகின்றேன்.—எ-று. (எக)

**தூான்றண்டஞ்செய்படலம் முற்றிற்று.**

ஆகத் திருவிருத்தம்-கஎஅஅ.

உ

முருகன்றுணை.

# அமரர்சிறைபுகுபடலம்.

எழலிகண் மொய்த்ததன் னிருக்கை போகிய
மழவுறு சூர்மகன் மாறி லாதபே
ரழகினை மெய்கொள வணிந்து தொல்படை
விழுமிய கொண்டனன் மிலைச்சித் தும்பையே.

(இ-ள்.) மேகங்கள் மொய்த்துக்கொண்டிருக்கின்ற உயர்ந்த தனது மாளிகையையடைந்த இளமைப்பருவத்தினையுடைய பானுகோபன் தனது தேகத்தில் நீங்காத பேரழகுண்டாகும்படி யலங்கரித்துக்கொண்டு, தும்பைப்பூமாலைசூடி பழைமையாகிய பெரிய ஆயுதங்களையெல்லா மெடுத்துக்கொண்டனன்.—எ-று. (க)

இருவகைப் பத்துநூ றிவுளி பூண்டிடு
மொருதனித் தேர்தனை யொல்லை யூர்ந்துராய்த்
திருமுதற் கடைதனிற் செல்லு மெல்லையில்
விரைவினிற் சுற்றின வனிக வெள்ளமே.

(இ-ள்.) இருபதினாயிரங் குதிரைகள் பூட்டப்பெற்றுள்ள ஒப்பற்ற ஒருபெரிய தேரின்மீதேறி அதனைச் சாரதியைக்கொண்டு விரைவாக வோட்டுவித்து அழகிய தலைவாயிலில் வரும்பொழுது, சேனாசயினியங்கள்வந்து விரைவாகச் சூழ்ந்துகொண்டன. ()

நிரைத்தெழு தானவர் நீத்த மாயிரம்
பரித்தொகை யன்னதே பாதி தேர்கரி
யுரைத்தவத் தானையோ டொல்லை யேகினான்
றிருத்தகு மிரவியைச் சிறையில் வீட்டினான்.

(இ-ள்.) வரிசையாக வருகின்ற ஆயிரம்வெள்ளங் காலாள்களும், ஆயிரம்வெள்ளங் குதிரைகளும், ஐந்நூறு வெள்ளம் தேர்களும், ஐஞ்ஞூறு வெள்ளம் யானைகளும், தன்னைச் சூழ்ந்து வரும்படி பானுகோபன் விரைவிற் சென்றனன்.—எ-று. (ங)

கிளர்ந்தன தூளிகள் கெழீஇய வீரர்தோள்
வளர்ந்தன வவரணி மாலையிற் படீஇ
யுளர்ந்தன வண்டின மும்பர் தம்மனந்
தளர்ந்தன நெளிந்தனன் றரிக்குஞ் சேடனே.

(இ-ள்.) புழுதிகள்கிளம்பின, நெருங்கியவீரர்களது தோள்கள்வளர்ந்தன, அவ்வீரர்களணிந்து கொண்டிருக்கின்ற மாலைகளிற்பொருந்தி வண்டுகளிரைந்தன, தேவர்களது மனந்தளர்ந்தன, பூமியைச்சுமக்கின்ற ஆதிசேடன் (அச்சேனைகளைச் சுமக்க முடியாமல்) உடல் நெளிந்தனன்.—எ-று. (ச)

பொள்ளென வாண்டெழு பூழி பாரினுந்
தள்ளறும் விசும்பினு நிரந்த தானவ
ரெள்ளுறு மமரர்தம் மிருக்கை நாடிய
வுள்ளொடு பவத்துக ளொருங்கு சென்றபோல்.

(இ-ள்.) அசுரர்கள் தங்களால் இகழப்படுகின்ற தேவர்களது இருப்பிடத்தை அடையவேண்டுமென்றெண்ணிய வெண்ணமானது அவர்களது பாவமாகிய புழுதிகளுடன் ஒன்றாகச்சென்றாற்போல விரைவாக அவ்விடத்தினின்றுமெழுந்த புழுதிகள் பூமியிலும் நீக்குதற்கரிய ஆகாயத்திலும் பரவின.—எ-று. (ரு)

வேறு.

ஏறிய பூழி நாப்ப ணீண்டிய விவுளி வாயின்
வீறுகொள் களிற்றுக் கையின் விலாழியுங் கரிக்க போலத்
தூறிய கடமு மொன்று யொழுகுதன் மழைசூழ் குன்றி
னாறுக ளிழிந்து வையத் தடைவது போலு மன்றே.

(இ-ள்.) மிக்க புழுதியின் நடுவிலே நெருங்கி நிற்கின்ற குதிரைகளின் வாயிலும், பெருமைபொருந்திய யானைகளின் துதிக்கைகளிலும், கபோலத்திலும் ஊறிய நுரையும் மதநீரும் ஒன்றாகச்சேர்ந்தொழுகுதல், எதுபோலுமெனின் மேகங்கள் மொய்த்துக்கொண்டிருக்கின்ற மலையினின்றும் காறுறுகளிறங்கிப் பூமியில் வருவதையொத்திருந்தன.—எ-று. (சு)

பானிற முதல வாய பல்வகை வண்ணத் துள்ள
கானிமிர் துவசக் காடுங் கவிகையின் கானு மொய்த்த
சேனமுங் கழுகு மேனைச் சிறைகெழு புள்ளும் வெம்போ
ரூனுகர் பொருட்டுத் தாமு மும்பருற் றிடுவ தேபோல்.

(இ-ள்.) பருந்துகளும் கழுகுகளும் மற்றை யிறகுகளையுடைய பக்ஷிகளும் கொடிய போரிலுண்டாகின்ற மாமிசங்களைத் தின்னும்பொருட்டுத் தாங்களும் மேலே செல்வதைப்போல வெண்ணிறமுதலாகிய பலவகை வர்ணங்களையுடைய நீண்ட கால்களமைந்த கொடிக்காடுகளும் குடைக்காடுகளும் எவ்விடங்களிலுநெருங்கின.—எ-று.(எ)

மண்ணுறு துகளின் மாலை மகேந்திர மூதூர் முற்றுந்
துண்ணென மறைத்த லோடுந் துளங்கியே சூரற் கஞ்சி
விண்ணிடை மதிபல் கோடி மேவல்போல் வெளிய செய்ய
தண்ணிழற் கவிகை யீட்டந் தலைத்தலை யீண்டிற் றன்றே.

(இ-ள்.) பூமியிலுண்டாகிய புழுதிக்கூட்டங்கள் பெரியமகேந்திரபுரி முழுமையும் விரைவாக மறைத்துக்கொள்ளுதலும் (அதனைப்பார்த்துச்) சூரபன்மனுக்காக நடுங்கிப்பயந்து அநேகங்கோடி சந்திரர்கள் ஆகாயத்திலுதயமானாற்போல நல்ல வெண்ணிறங்களையுடைய குடைக்கூட்டங்கள் அவ்வவ்விடங்களிலும் நெருங்கின.—எ-று. (அ)

முறையிது நிகழ மைந்தன் முதியமா நகர நீங்கி
யறைகட லகழி தாவி யவனியி னெல்லை யேகிச்
சிறைவரு துன்மு கத்துத் தெரிவையை நோக்கி நுங்கை
யெறிசுடர் வாளா லிற்ற தெவ்விடை யியம்பு கென்றான்.

(இ-ள்.) இவ்வாறாகிய அரசமுன்றமைகளுடன் பானுகோபன் பெரிய நகரத்தைவிட்டு நீங்கி அலைகள் மோதுகின்ற கடலாகிய அகழியைக்கடந்து, நிலவுலகத்திற்கு வந்து, அருகில்வருகின்ற துன்முகியைப்பார்த்து, ஒளிபொருந்தியவாளினால் உனது கை எவ்விடத்திலறுபட்டது, அதனைக் கூறக்கடவையென்று கூறினான்.—எ-று. (கூ)

என்னலுங் குமர கேண்மோ வெங்கரந் துணித்தோர் வீரன்
மன்னினன் சசியு முற்றாண் மதுமலர்ப் பொதும்ப ரொன்றி
னன்னது மிஃதே யென்றா ரணிவிரற் சுட்டிக் காட்டப்
பன்னிரு பெயர்ச்சீர் காழிப் பழுமரக் காவிற் சேர்ந்தான்.

(இ-ள்.) என்று கேட்கவும், (அத்துன்முகி கூறுவாள்) பானுகோபனே? கேட்பாயாக, தேன்பொருந்திய மலர்களையுடைய ஒருசோலையில் எமது கையைவெட்டிய ஒரு வீரனிருந்தனன்; அவ்விடத்திலேயே இந்திராணியுமிருந்தனள்; அச்சோலையு மிதுவேயென்று ஒரு அழகிய விரலினற் சுட்டிக்காட்டுதலும் அதனையுணர்ந்த பானுகோபன் துவாதசநாமங்களையுடைய சீகாழிப்பதியிலுள்ள முதிர்ந்த மரங்களோடுகூடிய சோலைக்குட்சென்றனன்.—எ-று. (கo)

தேசுறு மிரவி தன்னைச் செயிர்த்திடு சிறுவன் ற‍னைத்
தூசிமுன் சென்று காவைத் தொலைத்துவெள் ளிடைய தாக்க
வாசவன் மனையைக் கூர்வாள் வயவனை நாடிக் காணுன்
காசினி யாண்டுந் தேர்ந்து காமர்பொன் னுலகிற் போனுன்.

(இ-ள்.) பானுகோபனது சேனைகளின் முன்னணிப்படைகள் சென்று அச்சோலையையழித்து வெளியாக்கிவிடவும், அவ்விடத்தில் இந்திராணியையும்வீரமாகாளனையுந் தேடிப்பார்த்துக் காணுத பானுகோபன் அவர்களை உலகமுழுமையுந்தேடிக் காணுமையாற் பின்பு அழகிய தேவலோகத்திற்குச் சென்றனன்.—எ-று. (கக)

வேறு.

அந்நிலை யவுணர்க ளனிகம் யாவையு
முன்னுற வேகியே மொய்ப்ப வாங்கவர்
மெய்ந்நிறை மணிவெயில் விரிந்து சூழ்தலாற்
பொன்னகர் வேறெர்பொன் னகரம் போன்றதே.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் அசுரச்சேனைகளனைத்தும் முன்னதாகவேசென்று அத்தேவலோகத்தை மொய்த்துக்கொள்ளுதலும், அவர்களது சரீரத்தினிடத்தில் பொருந்தியுள்ள நீலமணிகளின் ஒளிகள் எங்கும் பரவிச் சூழ்ந்துகொண்டமையால் அந்தத் தேவலோகம் வேறொரு தேவலோகம்போன்றிருந்தது.—எ-று. (கஉ)

எழுந்திடு முனிவின ரிமைக்கும் வெவ்வழல்
வழிந்திடு கண்ணினர் மடித்த வாயினர்
கழிந்திடு திறலினர் ககன வாணர்க
ளழிந்திடு மார்ப்பின ரவுண ரெய்தினர்.

(இ-ள்.) அதிகமாகத்தோன்றுகின்ற கோபத்தினையுடையவர்களும், விளங்குகின்ற கொடிய தீப்பொறிகளைக்கக்குகின்ற கண்களையுடையவர்களும் மிகுந்த வீரத்தினையுடையவர்களும், தேவர்களழியும்படி யாரவாரிக்கின்றவர்களுமாகிய அசுரர்கள் சொர்க்கலோகத்திற்குச் சென்றூர்கள்.—எ-று. (கங)

மண்டல மேமுதல் வகுத்த வான்கதி
கொண்டிடு கந்துகக் குழுவின் மாலைகள்
விண்டொடர் செலவினில் விரவு பூழியா
லண்டமும் புவியென வைய மாக்கிய.

(இ-ள்.) மண்டலம் முதலாகச் சொல்லப்பட்ட சிறந்தகதிகளைக் கொண்டுள்ள குதிரைக்கூட்டங்களின் வரிசைகள் சொர்க்கலோகத்திற்குப் போகின்ற போக்கினுலுண்டாகிய புழுதிகள் ஆகாயத்தையும் மண்ணுலகமென்று சொல்லத்தக்க சந்தேகத்தையுண்டாக்கின.—எ-று. (கச)

இலகிய பொன்னக ரெல்லை யெங்கணு
மலைதரு மதநதி யாக்கி யாயிடை

நிலவிய கங்கைமா நீத்தம் யாவுமுண்
டுலவுத லுற்றன வொருத்தல் யானையே.

(இ-ள்.) விளங்குகின்ற பொன்னுலகத்தி னெவ்விடங்களிலும் ஆண்யானைகள் தங்கள் மதங்களை அலைகளைவீசுகின்ற பெரிய ஆறுக வொழுகச்செய்து அவ்விடத்தில் விளங்கும் பெரிய தேவகங்கையிலுள்ள நீர்முழுவதுங் குடித்து உலாவத்தொடங்கின.

வெங்கரி சொரிமதம் விரும்பும் வண்டினங்
கொங்கிவர் தருமலர்க் கூந்தல் வாசத்தா
லங்குள மாதர்மே லணுகி வையக
மங்கையர் கொல்லென மால்செய் கின்றவே.

(இ-ள்.) கொடிய யானைகள் சொரிகின்ற மதநீரை விரும்புகின்ற வண்டின் கூட்டங்கள் மணம் வீசுகின்ற மலரையணிந்த கூந்தலின் வாசனையினால் அங்குள்ள தேவமாதர்கள்மீது சென்று மொய்த்துப் பூலோகமாதரோவென்று கூறும்படி மயக்கத்தை யுண்டாக்கின.—எ-று. (கசு)

அற்றமில் வலியரைச் சிறிய ராயினோர்
பற்றிடின் மேனெறிப் பால ராவரால்
வெற்றிகொ ளவுணர்கோன் வேழத் தின்குழாஞ்
சுற்றிய பறவையுந் துறக்கம் புக்கவே.

(இ-ள்.) சோர்வில்லாத பெரியவர்களைச் சிறியவர்களாயுள்ளவர்கள் தொடர்ந்தால் உயர்ந்த தன்மையினை யுடையவர்களாவார்கள்; (அதுபோல) வெற்றிபொருந்திய பானுகோபனது யானைக்கூட்டங்களைச் சுற்றிச்சென்ற பறவைகளும் சொர்க்கலோகத்தையடைந்தன.—எ-று. (கஎ)

மன்னவ னோடினன் மைந்த னேயுளன்
முன்னுறு பகையினை முடித்தும் யாமென
விந்நில வரையெலா மேகிச் சூழ்ந்தபோற்
பொன்னகர் வளைந்தன பொலம்பொற் றேர்களே.

(இ-ள்.) இந்திரனோடிப்போயினன், அவன் புதல்வனாகிய சயந்தனே இவ்விடத்திலிருக்கின்றான் ஆதலால், நாம் நமது பழம்பகையை முடித்துக்கொள்ளலாமென்று உலகத்துள்ள மலைகளெல்லாஞ்சென்று சூழ்ந்துகொண்டாற்போல அழகிய பொன்மயமாகிய இரதங்கள் சொர்க்கலோகத்தைச் சூழ்ந்துகொண்டன.—எ-று. (கஅ)

விடர்நெறி யொழுகிய வெய்யர் மேலையோ
ரிடமுறு மகளிரை யெய்திப் பற்றல்போற்
கடிகமழ் தருவினைக் கலந்து சுற்றிய
கொடியினை யீர்த்தன கொடியின் கானமே.

(இ-ள்.) தூர்த்த மார்க்கத்திற் சஞ்சரிக்கின்ற கொடியவர்கள் பெரியவர்களிடத்துள்ள மாதர்களைப்பிடித்திழுப்பதைப்போல மணம் வீசுகின்ற கற்பகவிருக்ஷத்தைச் சூழ்ந்துள்ள வல்லிசாதகக்கொடிகளை அசுரர்கள் கையிற்பிடித்துள்ள துகிற்கொடிகள் பற்றியிழுத்தன.—எ-று. (கக)

வேறு.

செந்தோ டவிழுந் தாரானிச் செய்கை நிகழச் சேண்புகலு
மந்தோ வென்று பதைபதையா வலமந் தேங்கி யறிவழிந்து
வந்தோன் பானுப் பகைவனெனு மகவான் செம்ம லொடுவானோர்
நொந்தோ டினர்போ யுரைத்திடலு மனையோ னினைய நுவல்கின்றான்,

(இ-ள்.) செவ்விய இதழ்விரிந்த மலர்மாலையணிந்த பானுகோபன் (தனது சேனைகளால்) இவ்வாறு நிகழும்படிச் சொர்க்கலோகத்தை யடையவும், தேவர்கள் அதனையுணர்ந்து ஐயோ வென்று துடிதுடித்து அறிவழிந்து ஏக்கங்கொண்டு சயந்தனிடத்திற்கு ஓடிச்சென்று (யுத்தத்திற்காகப்) பானுகோபன் வந்தனனென்று கூறுதலும், அதனைக்கேட்ட அந்தச் சயந்தன் இவ்வாறு கூறுவானாயினன்.—எ-று. (உ௦)

எந்தை யாகுங் குரவனிலை யிமையோர் குழுவிற் பலரில்லை
தந்தை யெம்மோ யிங்கில்லை தமியே னும்மோ டிருந்தேனு
லந்த வசுரன் சென்றமையு மல்லல் புரியுந் திறம்போலு
முந்தை விதியை யறிவேனே வென்னே வின்று முடிந்திடுமே.

(இ-ள்.) எம்மையனுகிய வியாழபகவானுமில்லை, தேவர்கூட்டத்திலும் பலரில்லை, எனது தந்தையுந்தாயும் இங்கு இல்லை, தனித்தவனாய யான்மாத்திரம் உங்களிடமிருந்தேன், அந்தப் பானுகோபன் வந்தமையும் நம்மை வருத்தும் பொருட்டாகவேயிருக்கலாம்; முன்னைய ஊழ்வினையை யானறிவேனா? இப்பொழுது எவ்வாறு நடக்குமோ?—எ-று. (உக)

பாடின் றேருங்கு திருநீங்கப் பயந்தோர் கரக்கப் பழிவேலை
வீடின் றாகத் தமர்பரிய வெஞ்சூர் முதல்வன் பணிபோற்றி
யீடின் றாயு மிப்பகல்கா றிந்த நகரத் திருந்தேனற்
கேடின் றாகு மென்செய்கேன் கிளத்தீர் புரைதீ ருளத்தீரே.

(இ-ள்.) அழியாது வளர்கின்ற செல்வங்கள் கெடவும், தாய்தந்தையர்கள் மறையவும், பழியானது வற்றாத கடலைப்போல நிலைத்திருக்கவும், பந்துக்களனைவரும் விலகியோடவும், யான் கொடிய சூரபன்மனதுஊழியங்களைச்செய்துகொண்டு வலிமையற்றிருந்தும், இந்நாள் வரையிலும் இந்நகரத்திலேயேயிருந்தேன், இன்றுதான் அழிவு காலம்போலும், யாது செய்வேன் குற்றமற்ற மனத்தினையுடைய தேவர்களே? நீங்களே சொல்லுங்கள்.—எ-று. (உஉ)

தாயும் பயந்த தொல்லோனுந் தமரா குற்ற வமரர்களும்
பாயுங் கடல்சூழ் நிலவரைப்பிற் கரந்தா ரதனைப் பல்லவுண
ராயும் படியே திரிந்தனரா லற்றா மெல்லை யளியேமும் [டோ.
போயெங் குறைவோ நமையெல்லாம் போற்றும் படிக்கோர் புகலுண்

(இ-ள்.) தாயுந்தந்தையும் உறவினர்களாகிய தேவர்களும் அலைவீசுகின்ற கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் சென்று மறைந்தார்கள், அவர்கள் அவ்வாறு மறைந்திருத்தலைக் கண்டுபிடிக்கும்பொருட்டு அநேகம்அசுரர்கள் தேடித்திரிகின்றார்கள், அப்படி யிருக்கும்பொழுது நாமுஞ்சென்று எங்கு மறைந்திருப்போம்; நம்மையெல்லாங் காக்கத்தக்க ஓரடைக்கலஸ்தானமுண்டோ?—எ-று. (உ௩)

போவ தில்லை யாண்டுமினிப் புலம்பு மாறு மில்லையதி
னுவ தில்லை வருவதெல்லா மடையு மன்றி யகலுவதோ
வீவ தில்லை யவர்க்குவெரி நிறைஞ்சிப் புகழுவ திலையெதிர்ந்து
சாவ தல்லா லுய்ந்திடுத லிரண்டே யுறுதி தமியேற்கே.

(இ-ள்.) இனி யெங்கும் போவதில்லை, இனி வருந்தவேண்டுவதுமில்லை, அப்படி வருந்துவதனலாவதொன்றுமில்லை, வருவதெல்லாம் வராமல் நிற்குமோ? அவர்களுக்கு முதுகு காட்டுகின்றதில்லை, வணங்கித்துதிப்பதுமில்லை, இனி அவர்களுடனெதிர்த்து இறந்துபோவதென்பதொன்று, அல்லது பிழைப்பதொன்று இவ்விரண்டே என்னுடைய உறுதி.—எ-று. (உ௪)

அஞ்சேன் மன்னோ ரவர்க்கினியா னாவி பொருளாக் கொள்ளாதார்
நஞ்சே பொருவுந் தீங்குறினு நடுக்கஞ் செய்யா ரிடர்ப்படியார்
தஞ்சே வகத்தி னெறிபிழையா ரஃதே போலத் தானவர்கோன்
வெஞ்சே னைகளேற் றெதிர்செல்வேன் வெல்வேன் பலரைக் கொல்வேனே.

(இ-ள்.) அவர்களுக்கு இனி யான் பயப்படேன், தன்னுயிரை யொருபொருளாகக் கருதாதவர்கள், விஷத்திற்குச்சமானமான தீங்குவந்தாலுநடுங்கார்கள்; துன்பத்திலும் மூழ்கார்கள், தமது வீரத்தன்மையிற் பிழைக்கமாட்டார்கள், அதுபோல யானும் பானுகோபனது கொடிய சேனைகளை யெதிர்த்துச்செல்வேன், பலரை வெல்லுவேன், பலரைக் கொல்லுவேன்.—எ-று. (உரு)

செருவீ ரமுட னவர்ப்பொருவான் செல்வ னீரு மெற்போற்றி
வருவீர் வம்மின் வல்லாதீர் வல்லை யின்னே வழிக்கொண்மி
னொருவீ ரன்றி யெல்லீரு முள்ளத் தஞ்சி யொருவியழி
கருவீ ரேனு நன்றிறையுந் தளரேன் றுணிந்த தமியேனே.

(இ-ள்.) போருக்குரிய வீரத்தன்மையுடன் அவர்களுடனே யுத்தத்திற்குச் செல்லுகின்றேன், நீங்களும் என்னைச்சூழ்ந்து வரக்கூடியவர்கள் வாருங்கள்; வருவதற்குச் சக்தியில்லாதவர்கள் இப்பொழுதே புறப்பட்டுப் போய்விடுங்கள்; நீங்களொருவருமில்லாமல் அனைவரும் மனத்தில் அச்சங்கொண்டு விலகி யோடிவிடுவீர்களாயினும் துணிந்திருக்கின்ற யான் சற்றுந்தளர்ச்சியடையேன்.—எ-று. (உசு)

என்று சயந்தன் மொழிந்திடலு மிமையோர் கேளா விடருழவா
வுன்ற னுள்ள மீதாயி னெமக்கு வேறோ ருணர்வுண்டோ
வென்றி யவுணர் பணிபுரிந்து வீடா விழுமந் துய்ப்பதினும்
பொன்றி விடுத லினிதம்மா வெழுதி கடிதே போர்க்கென்றார்.

(இ-ள்.) என்று சயந்தன் கூறுதலும் அதனைத் தேவர்கள் கேட்டு வருந்தி உனது எண்ணமிவ்வாறாயின் எங்களுக்கு வேறேயொரு ஆலோசனை யிருக்கின்றதோ? வெற்றிபொருந்திய அசுரர்களுக்கு ஊழியஞ்செய்து நீங்காத துன்பத்தையனுபவிப்பதைப்பார்க்கிலும் இறந்துவிடுவதே நல்லது, ஆதலால் விரைவிற் போருக்கெழுந்திருக்கக்கடவையென்று கூறினார்கள்.—எ-று. (உஎ)

வேறு.

சயந்தனது கேட்டமரர் தங்குழுவை நோக்கித்
துயர்ந்தநும சிந்தனை துணிந்ததுகொ லென்னா
வியந்துகன கத்தவிசின் மேவுதல்வி டாத்தன்
கயந்தனை நினைப்பவ துணர்ந்தது கருத்தில்.

(இ-ள்.) சயந்தன் அதனைக்கேட்டுத் தேவர் கூட்டத்தை நோக்கி வருத்தமடைந்திருந்த உங்கள் மனந்துணிவு கொண்டதோ வென்று அவர்களைப்புகழ்ந்து சிங்காசனத்தைவிட்டெழுந்து தனது வெள்ளையானையை நினைத்தலும் (இவன் நினைத்தமையை அந்த யானையானது) மனத்திலுணர்ந்தது.—எ-று. (உஅ)

கல்லெழு நுதற்சிறிய கண்சுளகு கன்ன
மல்கிய கறைப்பத மருப்பிணை யிரட்டை
மெல்கிய புழைக்கரம் வெளிற்றுடலின் வேழம்
பில்கிய மதத்தொடு பெயர்ந்துளதை யன்றே.

(இ-ள்.) மலைபோன்று விளங்கும் நெற்றியையும், சிறிய கண்களையும், முறம்போன்ற செவிகளையும் நெருங்கிய உரல்போன்ற கால்களையும், நான்கு கொம்புகளை

யும், குறுகிய துவாரம் பொருந்திய துதிக்கையினையும் வெண்மையான வுடலினையு முடைய ஐராவதமானது ஒழுகுகின்ற மதநீருடனே வந்தது.—எ-று. (உகூ)

இந்திர குமரனை யிறைஞ்சி யெதிராகி
வந்திட வதன்பிடரில் வல்லைதனி லேறி
யுந்தின னடாத்தியய லும்பர்புற மொய்ப்பப்
புந்திகெழு வேர்வினொடு பொள்ளென வகன்றான்.

(இ-ள்.) சயந்தனை வணங்கி அவனெதிரில் வருதலும், அதன் பிடரியில் விரைவாகவேறிக்கொண்டு நடாத்தி அருகில் தேவர் கூட்டங்கள் சூழ்ந்து வரும்படி மார்பில் விளங்குகின்ற வியர்வையுடனே விரைவாகச் சென்றனன்.—எ-று. (௲௦)

போகிதரு காளைபசும் பொற்புய னிறத்தா
னாகம்வெளி தாகுமயி ராவதமி சைக்கண்
வாகுபெற மேவுவது மன்னுநெடு மால்பாற்
சீகரவ ளக்கரிடை செவ்விதிருந் தன்ன.

(இ-ள்.) நிலைபெற்ற திருமால் அலைவீசுகின்ற பாற்கடலின் நடுவில் அழகாக விருந்த தன்மையைப்போல் இந்திரகுமாரனாகிய சயந்தன் விளங்குகின்ற பசிய மேகநிற முடையவனாய் வெண்ணிறமுடைய ஐராவதத்தின்மீது அழகோடிருந்தனன்.—எ-று.()

பாங்கருறு வானவர்கள் பல்படையு மேந்தி
வீங்குதுயர் கொண்டகல வேறொரிடை காணார்
நீங்கல்வகை யென்பது நினைந்துதுணி வாகி
யாங்கவ னொடேகினர்க ளச்சமில ரேபோல்.

(இ-ள்.) மிக்க துன்பத்துடன் மறைந்து செல்லுதற்கு வேறோரிடங்காணாமல் இனி நாம் ஓடிப்போவது வசையேயாமென்று சயந்தனருகிலிருந்த தேவர்கள் நினைத்துத் துணிவுகொண்டு பல ஆயுதங்களையுந்தாங்கி அச்சமில்லாதவர்களைப்போல அந்தச் சயந்தனுடனே சென்றார்கள்.—எ-று. (௲உ)

பெருந்தவள மெய்க்கரி பிளிற்றொலியு முள்ளத்
தருந்தையுறு வானவர்த மார்ப்பொலியு மாற்றப்
பரந்தபகு வாய்முரசு பண்ணொலியு மொன்றாய்
வருந்தவ றெனக்ககனம் வாய்விடுதல் போலும்.

(இ-ள்.) மிக்க வெண்மையினையுடைய ஐராவதத்தின் பிளிற்றொலியும், மனத்தில் வருத்தமடைந்துள்ள தேவர்களது ஆரவாரமும் மிகவுமகன்ற வாயினையுடைய முரசங்களின் முழக்கமும் ஒன்றாகத்திரண்டொலித்தல் (எதுபோலுமெனின்), நீங்கள் போர்க்குச் செல்வீராயின் அபசெயமடைவீர்களென்று அந்தச் சொர்க்கலோகமானது விரைந்து கூறுவதுபோன்றிருந்தது.—எ-று. (௲௩)

ஊழிவரு காலனைய வும்பர்படை செல்லப்
பூழிநிமிர்ந் தேகின பொலத்துயர் நிலத்த
வாழிகொள் சுவர்க்கமெரி வௌவுநமை யென்னாக்
கேழிலுயர் மேனிலை கிளர்ந்தெழுதல் போலும்.

(இ-ள்.) ஊழிக்காற்றைப்போல விரைவாகச்செல்கின்ற தேவசேனைகளினால் புழுதிகள் கிளம்பி மேலேசெல்லுதல், பொன்னாலாகிய உயர்ந்த நிலத்திலுள்ள சொர்க்கமானது நம்மை அக்கினியெரித்து விடுமென்று அழகோடுயர்ந்த மேலிடத்திற்குப் பிரகாசத்துடனெழுந்து செல்லுதலையொக்கும்.—எ-று. (௲௪)

முறையிது நிகழ்ந்திட முரட்களிறு மேலான்
வறியமக வான்மதலை மாநகர நீங்கி
யெறிகதி ரருக்கனை யிருஞ்சிறையில் வீட்டுஞ்
சிறுவன னிகத்தினெதிர் சென்றுபுக லோடும்.

(இ-ள்.) இவ்வண்ணம் யாவும் நிகழும்படி வலிமை மிக்க வெள்ளையானையின் மீது வருகின்ற சயந்தன் தனது பெரிய நகரத்தைவிட்டுப் பானுகோபனுடைய சேனைகளுக்கெதிரில் சென்று புகுதலும்.—எ-று.

எறிகதிரருக்கனை யிருஞ்சிறையில் வீட்டுஞ் சிறுவன் – எறிகின்ற கிரணங்களையுடைய சூரியனை பெரிய சிறையிலிட்ட பானுகோபன் என்பது பொருள்.

இதுமுதலிரண்டுபாடலுங்குளகம். (கூரு)

வற்புறு தயித்தியர் வருஞ்சுரரை நோக்கி
முற்பகலி னெல்லையு முறைப்பணி புரிந்தார்
தற்பமுட னின்றுசம ருன்னிவரு வாரோ
வற்புத மிதற்புத மிதென்றறைய லுற்றார்.

(இ-ள்.) வலிமைபொருந்திய அசுரர்கள் எதிர்த்துவருகின்ற தேவர்களைப்பார்த்து நேற்றைப்பொழுது வரையிலும் முறையே ஊழியஞ்செய்தவர்கள் இன்று அகங்காரத்துடன் போரையுத்தேசித்து வருவார்களோ? இஃது ஆச்சரியம்ஆச்சரியமென்று கூறினார்கள்.—எ-று. (கூசு)

கிட்டினர்கள் வானவர் கிடைத்ததம ரென்னு
முட்டினர் தெழித்தவுணர் முன்பினிரு பாலா
ரொட்டினர் முனிந்தயில்க ளுய்த்தனர்கை வாளால்
வெட்டினர் குனித்துவில் வடிக்கணை விடுத்தார்.

(இ-ள்.) தேவர்கள் நெருங்கிச்சென்றார்கள், உடனேஅசுரர்கள் சண்டைநேர்ந்ததென்று கர்ச்சித்துக்கொண்டு எதிர்த்தார்கள், முன்னும் பின்னும் பக்கங்களிலும் பந்தயங்கூறிக்கோபமடைந்து தேவர்களுமசுரர்களுநின்றுகொண்டு வேற்படைகளைப்பிரயோகித்தார்கள், கைவாளால் வெட்டினார்கள், வில்லைவளைத்துக் கூரியபாணங்களைச்செலுத்தினார்கள்.—எ-று. (கூஎ)

எழுப்படை விடுத்தன ரெடுத்தகதை விட்டார்
மழுப்படை யெறிந்தனர் வயிர்க்குலிச முய்த்தார்
நிழற்பரவு முத்தலை நெடும்படைக டொட்டார்
சுழற்றின ருருட்டினர் சுடர்ப்பரிதி நேமி.

(இ-ள்.) எழுப்படைகளைவிட்டார்கள், கையிலெடுத்தகதாயுதத்தைப் பிரயோகித்தார்கள், மழுவாயுதங்களை விட்டார்கள், கூரியவச்சிராயுதத்தைச் செலுத்தினார்கள், ஒளிவீசுகின்றபெரியசூலாயுதத்தைப் பிரயோகித்தார்கள், விளங்குகின்றவட்டமாகிய சக்கராயுதத்தைச் சுழற்றிவிட்டார்கள்.—எ-று. (கூஅ)

மாரியென விப்படை வழங்கியிமை யோருஞ்
சீரவுண ராயினருஞ் சேர்ந்துபொரு மெல்லைச்
சோரியது தோன்றியது தூயவிரும் பெற்றும்
பாரிய வுலத்திடை பரந்தெழு கனற்போல்.

(இ-ள்.) தேவர்களும் சிறந்த அசுரர்களுமெதிர்த்து மழைபோல இத்தகைய வாயுதங்களைவிட்டுப்போர் செய்யுமிடத்தில் நல்லஇரும்பையடிக்கின்ற பெரியகல்லினிடத்தில் பரவியெழுந்த நெருப்பைப்போல உதிரந்தோன்றியது.—எ-று. (கூகூ)

அங்கமெழு செங்குருதி யாற்றினிமிர்ந் தோடி
யெங்கணு நிரந்தன விமைப்பிலவர் வைகுந்
துங்கமிகு மும்பரிடை சூர்மதலை சீற்ற
வெங்கன லெழுந்துமுன் மிசைந்திடுவ தேபோல்.

(இ-ள்.) தேவர்கள்வசிக்கின்ற தூய்மையாகிய சொர்க்கலோகத்தைப்பானுகோபனுடைய கொடிய கோபாக்கினியானது முன்னேயருந்துவதைப்போல உடலின்றுமுண்டாகியஉதிரங்கள் ஆற்றைப்போலப்பெருகியோடி எவ்விடங்களிலுநிரம்பின.—எ-று.

நீடிரு திறத்தரு நெடும்படைக ளேந்தி
யாடல்புரி காலையழிந் தாற்றலில ராகி
யோடினர்கள் வானவர்க ளொல்லைதொடர்ந் தேபின்
கூடினர்கள் வெவ்வவுணர் குற்றினர்கள் பற்றி.

(இ-ள்.) மிகுதியாகிய இருவகைச்சேனைகளும்பெரிய ஆயுதங்களைத்தாங்கிக்கொண்டுபோர்செய்கின்ற சமையத்தில் அந்தப்போரழிந்து தேவர்கள்வலிமையில்லாதவர்களாய் ஓடினார்கள், உடனேஅவர்களைப்பின்றொடர்ந்து சென்றுபிடித்துக்கொடிய அசுரர்கள் குத்தினார்கள்.—எ-று. (சுக)

சேண்கொடு முரிந்துபடர் தேவர்குழு வோரை
யேண்கொடு வருந்தகுவர் யாத்தனர் புயங்க
ணாண்கொடு திரும்பினர் நலங்கொள்கலை மானை
மாண்கொடு வரித்தொகுதி வவ்வியகன் றென்ன.

(இ-ள்.) சொர்க்கலோகத்தைத் தங்களுடையதாக்கிக்கொண்டு போரில்தோற்றோடிய தேவர்கூட்டங்களைப் பலசாலிகளாகிய அசுரர்கள் வில்லின் நாணினால் அவர்களதுபுயங்களைக்கட்டி நல்லகலைமான்களைப் புலிக்கூட்டங்கள் பிடித்துக்கொண்டு சென்றதுபோல விழுத்துக்கொண்டு திரும்பினார்கள்.—எ-று. (சுஉ)

இடுக்கணுறு தேவர்தமை யீர்த்தனர்கொ டேகி
மிடற்கதி ரருக்கனை வெகுண்டவன்மு னுய்ப்பக்
கடக்கரிய வன்மையொடு காவல்கொளு மென்றான்
றடக்களிறு மேல்வரு சயந்தனிவை கண்டான்.

(இ-ள்.) வருந்துகின்ற தேவர்களைப் பிடித்திழுத்துக்கொண்டுசென்று வலிய சூரியனைக் கோபித்தவனாகிய பானுகோபன் முன்னே விடுதலும், இவர்களைக் கடத்தற்கரிய வலிமையோடுங் காவல்செய்யுங்களென்று கூறினான், இவற்றைப் பெரிய வெள்ளையானையின்மேல் வருகின்ற சயந்தன் பார்த்தனன்.—எ-று. (சுஙு)

வேறு.

கண்டான் வெகுண்டான் புகையாரழல் கல்லென் மேக
முண்டா னெனவே யுமிழ்ந்தா னொருதன் சிலைக்கைக்
கொண்டான் குணத்தி னிசைகாட்டினன் கோட்டி நேர்போ
யண்டார் வெருவக் கணைமாரிக ளார்ப்பொ டெய்த்தான்.

(இ-ள்.) பார்த்துக் கோபித்துக் கல்லென்னு மோசையையுடைய மேகத்தையுண்டவனைப்போல புகையோடுகூடிய நெருப்பை யுமிழ்ந்தனன் ; ஒப்பற்ற தனது வில்லைக் கையிலெடுத்து வளைத்துக் குணத்தொனிசெய்து எதிரிற்சென்று பகைவர்களஞ்சும்படி ஆரவாரத்துடன் பாணவருஷங்களைப்பொழிந்தனன்.—எ-று. (சுச)

பொழியும் பொழுதத் தவுணப்படை போந்த வீரர்
மொழியு மனமு நனிதாழ்த்திட முன்ன ரேகி

யொழியுங் கடைநா ளரன்வெற்பை யுருது சூழ்வபாஞ்
சுழியுங் கடல்போ லவனூர்கரி சுற்றி யார்த்தார்.

(இ-ள்.) அவ்வாறு பொழியும்பொழுது, அவுணச்சேனைகளாகவந்த வீரர்கள் மனமும், வாக்கும், பின்னிடும்படி விரைவாகச்சென்று, பிரளயகாலத்தில் கயிலாயமலையைச் சுற்றிக்கொள்ளுகின்ற சுழிகளையுடைய கடல்களைப்போலச் சயந்தனேறிய வெள்ளையானையைச், சுற்றிகொண்டு கர்ச்சித்தார்கள்.—எ-று. (சரு)

சயந்தன் மிசையும் பொலங்கிம்புரித் தந்த வெள்ளைக்
கயந்தன் மிசையுஞ் சிலைவாங்கிக் கணைகள் கோடி
பயந்தந் திடத்தூர்த் தனர்சோமனைப் பன்ன கங்கள்
வயந்தன் னொடுபோய் முயலோடு மறைக்கு மாபோல்.

(இ-ள்.) சந்திரனைப் பாம்புகள் வெற்றியுடன் சென்று முயலுடனே மறைத்துக்கொள்ளுந் தன்மையைப்போல, சயந்தன்மேலும் பொன்னாலாகிய தந்தப்பூணணிந்த வெள்ளையானையின்மேலும் வில்லைவளைத்து அவனுக்குப் பயமுண்டாகும்படிக் கோடி பாணங்களைத் தூர்த்தார்கள்.—எ-று. (சசு)

கல்லென் றரற்றுங் கழல்வீரர் கனைந்து சுற்றிச்
செல்லென் றுவிட்ட கணையாவையுஞ் சிந்தி வல்லே
மல்லொன் றுமொய்ம்பிற் சயந்தன்சர மாரி தூண்டி
வில்லும் மனையோர் தனுவும்புவி வீட்டி னானல்.

(இ-ள்.) கல்லென்றொலிக்கின்ற வீரக்கழலையணிந்தஅசுரவீரர்கள் கர்ச்சித்துச் சூழ்ந்துகொண்டு, செல்லக்கடவனவென்று பிரயோகித்த பாணங்களனைத்தையும் மல்யுத்தஞ்செய்யும் புயத்தினையுடைய சயந்தன் விரைவாகப் பாணவருஷங்களைவிட்டு அறுத்து அவர்களது வில்லையுந் தேகத்தையும் பூமியில் வீழத்தள்ளினான்.—எ-று. (சஎ)

வீட்டிக் கணைக ளவுணப்படை மீது தூர்த்து
மோட்டுக் களிற்றின் றொகைதன்னை முகங்கொள் பாய்மா
வீட்டத் தினைத்தேர் களைவீர ரினத்தை யெல்லாம்
வாட்டிப் பின்வெள்ள மொருநூற்றினை மாய்வு செய்தான்.

(இ-ள்.) அவ்வாறு விழத்தள்ளி அசுரச்சேனைகளின்மேல் பாணங்களைச்செலுத்தி உயர்ந்த யானைக்கூட்டங்களையும் முற்பட்டுவருகின்ற குதிரைக்கூட்டங்களையும் இரதங்களையும் எல்லாவீரர்கூட்டங்களையும் வருத்தப்படுத்திப் பின்பு நூறுவெள்ளஞ் சேனைகளை யழித்தனன்.—எ-று. (சஅ)

வாலிற் புடைக்கும் புழைக்கைகொடு வாரி பெற்றுங்
காலிற் படுக்கு மருப்பாலடுங் கந்த ரம்போ
லோலிட் டுயிருண் டிடுமாங்கவ னூர்ந்த வேழஞ்
சீலக் கதிரைச் சிறையிட்டவன் சேனை தன்னை.

(இ-ள்.) அந்தச்சயந்தன் ஏறிவந்தவெள்ளையானையானது சிறந்த சூரியனைச்சிறையிலிட்ட பானுகோபனது சேனைகளை வாலினாலடிக்கும் துவாரம்பொருந்திய துதிக்கையைக்கொண்டு வாரிமோதும், காலினாற்கொல்லும், கொம்பினாற்கொல்லும், மேகம்போலிரைந்து உயிரையுண்ணும்.—எ-று. (சக)

நூறுய்ப் புகுதா னவர்வெள்ள நொடிப்பின் மாய
வீறுய்ப் படையும் பலபூண்களு மீன மாக

வாருய்க் குருதி பெயர்ந்தேயகல் வான நீத்த
மாருய்ப் பொருது மிசையோடி வளைந்து கொண்ட.

(இ-ள்.) நூறு என்னுந்தொகையாகவந்த அசுரவெள்ளங்கள் விணாவாக அழித லும், ஆயுதங்களும் பலஆபரணங்களும்மிகுகவும், உதிரம் ஆருகவும்பெயர்ந்து பெரிய தேவகங்கைக்கு விரோதமாயெதிர்த்து மேலேசென்று சூழ்ந்துகொண்டன.எ-று. (ருo)

காய்கொல் விபமேற் சயந்தன்னடு காலை தன்னிற்
பேய்கொல் லுணைத்தீண் டினமேல்வரும் பெற்றி யோராய்
தீகொல் பறவை புரைவாயெமர் சேனை தன்னை
நீகொல் லடுதி யெனவந்தன னீலகேசன்.

(இ-ள்.) பகைவர்களைக்கோபித்துக்கொல்லுகின்ற வெள்ளையானையின் மீதிரு ந்துகொண்டு சயந்தன் சேனைகளையழிக்கின்ற சமையத்தில் நீலகேசனென்னு மசுரன் (அச்சயந்தனைப்பார்த்து) உன்னைப்பேயா பிடித்துக்கொண்டது, மேல்வருகின்ற தன் மையையுணர்ந்தாயில்லை, தீயிலகப்பட்டவிட்டிற்பறவைபோல்வாய், நீயோவெமது சே னைகளைக்கொல்லத்தக்கவனென்று கூறிக்கொண்டுவந்தனன்.—எ-று. (ருக)

எண்ணத் தவரை யலைக்கின்ற விருண்ட கேசன்
றண்ணத் தவரை நிகர்கின்ற சயந்தன் முன்போய்
விண்ணத் தவரை முகிருங்குறும் வேட மென்ன
வண்ணத் தவரைக் குனித்தம்பெனு மாரி தூர்த்தான்.

(இ-ள்.) தியானத்தையுடைய முனிவர்களைவருத்துகின்ற நீலகேசனுனவன் குளி ர்ந்த சங்கையேந்திய திருமால்போலுங் கருநிறத்திணையுடைய சயந்தனுக்கு முன்னே சென்று வானவில்லைத்தாங்கியிருக்கின்ற மேகத்தைப்போல அழகியவில்லை வளைத்துப் பாணமழையைப்பெய்தனன்.—எ-று. (ருஉ)

தூர்த்தா னதுகாற் சயந்தன்னெதிர் தூண்டி வாளி
தீர்த்தான் சரமாரி யையன்றியுஞ் சின்ன மாக்கி
யார்த்தான் கவச மவனிட்டதை யம்பு நூருல்
வேர்த்தா னுயிர்த்தா னிருட்குஞ்சியன் மேக மொப்பான்.

(இ-ள்.) அவ்வாறு பாணங்களைப்பெய்தனன், அப்பொழுது சயந்தன் பாணங் களை யெதிரில்தூண்டி அவன் விட்ட பாணவருஷத்தை யழித்தனன்; அஃதன்றியும் நூறுபாணங்களால் அவன் தரித்துள்ள கவசத்தைப்பிளந்து ஆரவாரித்தனன்; அச்சமை யத்தில் மேகத்தையொத்த நீலகேசன் தேகம்வியர்த்துப் பெருமூச்சுவிட்டனன்.எ-று.()

பாசம் பிணித்த வரணம் பரிவெய் தநீல
கேசன் விடுத்தோர் பிறையம்பினைக் கேடில் விண்ணோ
ரீசன் சிறுவன் சிலைநாணை யிறுத்தி சைத்தான்
காசொன் றரவந் துணியப்பகை கௌவு மாபோல்.

(இ-ள்.) சங்கிலிகளால் பின்னப்பட்டுள்ள கவசமழிந்தவுடனே நீலகேசன் ஒரு அர்த்தசந்திரபாணத்தைவிட்டு குற்றம்பொருந்திய இராகுவென்னும் பாம்பானது வெட் டுண்ணும்படி விரோதியான சந்திரன் கடித்தாற்போல அழிவற்ற தேவேந்திரன் புதல்வ னுகிய சயந்தனது வில்லின் நாணினையறுத்துக் கர்ச்சித்தனன்.—எ-று. (ருச)

சின்னம் படலும் பெருநாண் சிலைவீ ழவிட்டுத்
தன்னந் தனியாஞ் சயந்தன் சமர்செய் வதற்கு
முன்னம் பயிற்று மொருமாயையை முன்னி யாற்றித்
துன்னந் தருபல் லுருவங்கொடு தோன்றி யுற்றுன்.

(இ-ள்.) தனியனாகிய சயந்தன் தனது பெரியநாணானது அறுபடவும் வில்லைப் பூமியில் விழும்படிவிட்டு, யுத்தஞ்செய்வதற்காக முன்னமே பழகியுள்ள ஒரு மாயாமந்திரத்தை நினைத்து வேறுவேறாயுள்ள பலவுருவங்களைக்கொண்டு வெளிப்பட்டு நின்றனன்.—எ-று. (ருரு)

வேறு.

ஒன்றேயெனுங் கரிமேல்வரு மொருவன்பல வுருவாய்ச்
சென்றேதிறம் பலவாலடச் செறிபேரிருட் குடுமிக்
குன்றேபுரை யவுணர்க்கிறை குறிப்பா லிதுமாய
மென்றேநினைந் தவைமாற்றிட யாதுஞ்செய வில்லான்.

(இ-ள்.) ஒரு வெள்ளையானையின்மேல் வந்த சயந்தன் பலவுருவங்களுடன்சென்று அநேக விதமாகச் சேனைகளைக்கொல்லவும், மலையையொத்த சேனாதிபனாகிய நீலகேசன் குறிப்பினால் இது மாயமென்றுநினைத்து இவற்றை நீக்குதற்கு வேறு செயலற்றவனாய்.—எ-று. (ருசு)

மலைவுற்றெதிர் நின்றார்த்திட வாயற்றனன் மயங்கித்
தொலைவுற்றன னிருட்குஞ்சியன் சூான்மக னனிக
மலைவுற்றன விரிகின்றன வலமந்தன வெருவி
யுலைவுற்றன விறுதிப்பக லொழிவுற்றிடு முயிர்போல்.

(இ-ள்.) பகைத்து எதிரில்நின்று ஆராவாரித்தற்குவலியில்லாதவனாய் மயக்கங்கொண்டு நீலகேசன் ஓட்டம்பிடித்தனன், உடனேபானுகோபனது சேனைகள் பிரளயத்திலழிகின்ற உயிர்களைப்போலப் பயந்தனவாய் ஓடத்தொடங்கின; சுழன்றன; பயந்தழிந்தன.—எ-று. (ருஎ)

சோமாசுரன் மாயாபலி சுரகேசரி பதுமன்
மாமாருத பலிதண்டகன் வாமன்மதி வருணன்
றீமாகதன் முதலாகிய சேனைப்பெருந் தலைவ
ராமாயமி தெனவந்தன ரவ்விஞ்சையை யுணரார்.

(இ-ள்.) சோமாசுரன், மாயாபலி, சுரகேசரி, பதுமன், மாருதபலி, தண்டகன், வாமன், மதிவருணன், மாகதன்முதலிய சேனாதிபதிகள் அச்சயந்தனது மந்திரவித்தையை யுணராதவர்களாய் ஆ! இது மாயமென்று கூறிக்கொண்டு வந்தார்கள்.—எ-று.

தாங்கற்றிடு மாயப்பெருந் தனிவிஞ்சைகண் முன்னி
யாங்குற்றிடு மரபாற்பொரு தன்னான்புரி மாய
நீங்கற்கரு நிலையாதலு நெஞ்சந் தடுமாறி
யேங்குற்றன ரென்செய்குதும் யாமென்று நினைந்தார்.

(இ-ள்.) தாங்கள்கற்றுக்கொண்டிருக்கின்ற மாயாமயமாகிய மந்திரங்களையெல்லாம் நினைத்து அவ்விடத்திற்குத்தக்கமுறைப்படிப் போர்செய்தும் அச்சயந்தன் செய்கின்றமாயையானது நீங்காமல் நிற்கவும், அவர்கள் மனந்தடுமாறி ஏக்கமுற்றுயாம் யாது செய்வோமென்று நினைத்தார்கள்.—எ-று. (ருகூ)

அந்நேருறு காலந்தனி லாகின்றதுந் தலைவர்
தன்னேவலின் மெலிவுற்றதுஞ் சயந்தன்பெருந் திறலுங்
கொன்னேதன தனிகக்கடல் குறைகின்றதுங் கண்டான்
முன்னேயிர வியையோர்பகற் சிறைவிட்டிய முதல்வன்.

(இ-ள்.) அப்பொழுது நடக்கின்றதனையும் சேனாதிபர்கள் தனது கட்டளையால் போர்செய்து வருந்துவதையும் சயந்தனுடைய மிக்க சாமர்த்தியத்தையும் வீணாகத்

தனது சேனசமுத்திரங் குறைவதையும் முன்பொருநாளில் சூரியனைச் சிறையிலிட்ட பானுகோபன் பார்த்தனன்.—எ-று. (கூ0)

**வே று.**

அந்த ரந்தனி லிரவியைச் செயிர்த்திடு மவுண
னிந்தி ரன்மகன் மாயைகொ லிதுவென வெண்ணு
முந்தை நாட்புக ருதவிய மூலமா ஞான
மந்தி ரந்தனை யுளந்தனில் விதிமுறை மதித்தான்.

(இ-ள்.) ஆகாயத்திலுலாவுகின்ற சூரியனைக்கோபித்த பானுகோபனனவன் இது இந்திரகுமாரனாகிய சயந்தன் செய்கின்ற மாயையாகுமென்று நினைத்து முற்காலத்தில் தனக்குச் சுக்கிரன் உபதேசித்த மூலஞானமந்திரத்தை விதிப்படி மனத்தில் நினைத்தனன்.—எ-று. (கூக)

மதித்து வெஞ்சுடர்ப் பகையினன் சேறலு மாயை
விதித்த பல்லுருப் போயின தமியனுய் விடலை
கதத்க ளிற்றின்மேற் றேன்றின னுயிரங் கதிரோ
னுதித்த காலையிற் கலையிலாக் குறைமதி யொப்ப

(இ-ள்.) பானுகோபன் அவ்வாறு மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டுசெல்லவும் மாயையினாலுண்டான பலவுருவங்களினின்றுநீங்கிச் சூரியனுதித்தவுடனே கலையொழிந்து நின்ற பிறைச்சந்திரனைப்போலத் தனித்தவனாய்ச் சயந்தன் கோபம்பொருந்திய யானையின்மீது நின்றனன்.—எ-று. (கூஉ)

ஆன காலையி லிதுபுகர் விஞ்சையென் றறிந்து
மான முஞ்சின முஞ்சுடச் சயந்தனுண் மறுகித்
தான வேழமே லிருந்துழித் தேரொடுஞ் சார்ந்து
பானு கோபனும் பெயரினு னினையன பகர்வான்.

(இ-ள்.) அந்தச்சமையத்தில் இது சுக்கிரனுடைய மந்திரமென்று தெரிந்துகொண்டு தன்னை மானமுங் கோபமுஞ்சுட, மனத்திலச்சங்கொண்டு மதமொழுகுகின்ற வெள்ளையானையின்மேல் சயந்தனிருந்த சமையத்தில் பானுகோபன் தேரிலேறின வண்ணமே அவனெதிரிற்சென்றுநின்று இவ்வாறு கூறுவானாயினன்.—எ-று. (கூகூ)

வருதி யிந்திரன் மதலைநின் மாயையும் வலியுங்
கருதி யான்வரு முன்னரே போயின கண்டாய்
பரிதி போலவே நின்னையு மிருஞ்சிறைப் படுப்பன்
பொருதி வல்லையே லென்றனன் சூர்தரு புதல்வன்.

(இ-ள்.) வாராய் சயந்தனே? உன்னுடைய மாயாவல்லபம் யான் வருதற்கு முன்னமே போயின, முன்பு சூரியனைச் சிறைசெய்ததுபோல் நீ போர்செய்யாது போவையாயின் உன்னையுஞ் சிறைசெய்வேனென்று பானுகோபன் கூறினன்.—எ-று. (கூச)

வல்ல ராயினோர் வெல்வது மற்றஃ தில்லோ
ரல்ல ராகியே தோற்பது மில்லையா லரனே
தொல்லை யூழ்முறை புணர்த்திடு நின்னைநீ துதிக்கச்
செல்லு மோவென வுரைத்தனன் சயந்தனுந் திறலோன்.

(இ-ள்.) பலசாலிகளாயுள்ளவர்கள் செயிப்பதும், அப்பலமில்லாதவர் செயமில்லாதவர்களாய்த் தோற்பதுமில்லை. அவரவர்கள் ஊழின்படி யெல்லாவற்றையு மனுபவிக்கச்செய்கின்றவர் சிவபெருமானேயாம்; ஆதலால் உன்னை நீயே புகழ்ந்துகொள்ளுதல் தகுதியோவென்று சயந்தன் கூறினன்.—எ-று. (கூரு)

தேற்ற மோடிவை புகறலு மிரவியைச் செயிர்த்தோ
னுற்ற வில்லவர் மொழிதிறம்புகன்றனை யன்றே
யேற்ற வீரரு மித்திற முரைப்பரோ வென்னாக்
கூற்ற மேயென விருந்ததோர் தன்சிலை குனித்தான்.

(இ-ள்.) உறுதியாக இவ்வாறு கூறுதலும், பானுகோபன் சயந்தனே? நீ வலிமையில்லாதவர்கள் சொல்லும் வார்த்தையை யுரைத்தனை, தக்கவீரர்களு மிவ்வாறுகூறுவார்களோவென்று இயமனைப்போலிருந்த ஒரு பெரியவில்லையெடுத்து வளைத்தனன். ()

சிலைவ ணக்கிய காலையிற் சயந்தனுஞ் சினத்து
மலைவ ணக்குதன் புயங்கொடே யொருசிலை வளைத்தா
னலைவ ணக்கரு ஞமலியெம் மடிகளை யடைந்தோர்
தலைவ ணக்கியே தத்தமி லிருவர்தாழ் வதுபோல்.

(இ-ள்.) கடனிறம்போலுங் கருமையாகிய வயிரவமூர்த்தியையடைந்த அடியவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் தலையைச்சாய்த்து வணங்குமாறுபோல பானுகோபன் வில்லை வளைத்தவுடனே சயந்தனும் மலையை வணங்கச்செய்கின்ற தனது தோள்களால் ஒருவில்லை வளைத்தனன்.—எ-று. (சுஎ)

பாற்றி னுஞ்சிறைக் கணைபல பரிதியம் பகைஞ
னூற்ற மோடுவான் புயலெனச் சொரிதலு மொருத்தன்
மேற்றி கழ்ந்திடு சயந்தனு மனையன விசிகங்
காற்றெ னும்படி தூண்டியே விலக்கினன் கடிதின்.

(இ-ள்.) பருந்துகளின் பெரிய இறகுகளை வைக்கப்பட்டுள்ள அநேகம்பாணங்களைப் பானுகோபன் முயற்சியுடன் ஆகாயத்துள்ள மேகத்தைப்போலப் பிரயோகிக்கவும், வெள்ளையானையின்மீது விளங்குகின்ற சயந்தனும் அவ்வாறாகியபாணங்களை வாயுவேகமாகப் பிரயோகித்து விரைவாக விலக்கினன்.—எ-று. (சுஅ)

அன்ன வன்விடுஞ் சரமெலாஞ் சூர்மக னறுத்துத்
துன்னு பல்கணை தூண்டின னவனவை தொலைத்தா
னின்ன தன்மையி னிருவரும் பொருதன ரிருளு
மின்னு மாகவே முறைமுறை மலைந்திடும் விதிபோல்.

(இ-ள்.) அந்தச்சயந்தன் விடுகின்ற பாணங்களையெல்லாம் பானுகோபன் அறுத்துப் பின்னும் நெருங்கிய அநேகபாணங்களை விட்டனன்; அவற்றையுஞ் சயந்தன் அறுத்தனன். இவ்வாறாக இருளும் மின்னலு மெதிர்த்துப் போர்செய்வதைப்போல இவர்களிருவரும் போர்செய்தார்கள்.—எ-று. (சுகூ)

இனைய வாறமர் புரிவுழி யிரவியம் பகைஞன்
வினைய நீரினாற் சொரிந்திடு பகழியை விலக்கித்
துனைய விந்திரன் மதலையா யிரங்கணை தூண்டி
யனைய னேந்திய சிலைப்பெரு நாணினை யறுத்தான்.

(இ-ள்.) இவ்வாறு போர்செய்யும்பொழுது பானுகோபன் தந்திரமாகவிடுகின்ற பாணங்களைச் சயந்தன் கண்டித்து விரைவாக ஆயிரம்பாணங்களைவிட்டுப் பானுகோபன் கையிற் பிடித்திருந்த வில்லிலுள்ள பெரியநாணினையறுத்தனன்.—எ-று. (எO)

அறுத்த காலையின் ஞாயிறு வெகுண்டுளோ னழலிற்
செறுத்து வேறொரு சிலைவளை இக் கணைமழை சிதறி
மறுத்து மாங்கவன் விடுஞ்சரஞ் சிந்திமற் றவன்மெய்
யுறுத்தினு னென்பவொ ராயிரஞ் சிலீமுக முய்த்து.

(இ-ள்.) அவ்வாறறுத்தபொழுது பானுகோபன் கோபங்கொண்டு வேறொரு வில்லைவளைத்துப் பாணவருஷங்களைப்பெய்து பின்னும் சயந்தன்விட்ட பாணங்களைக் கண்டித்து ஆயிரம்பாணங்களை அவனுடம்பிற்படும்படி விட்டனன்.—எ-று. (எக)

உய்த்த காலையிற் சயந்தனு மொராயிரங் கணைதூய்ப்
பத்தி யோடவன் றேர்கெழு பாய்பரி படுத்து
மெத்து பல்சரந் தானைமேல் வீசினன் விளிவோர்
வைத்த மாநிதி யாவர்க்கும் வழங்குமா றென்ன.

(இ-ள்.) அவ்வாறு விட்டவுடனே சயந்தனும் ஆயிரம்பாணங்களைவிட்டு வரிசையாக அவனது தேரிற்கட்டியுள்ள தாவுகின்ற குதிரைகளைக்கொன்று இறப்பவர்கள் தமது பொருள்களை விரைவிற்செலவிடுமாறுபோல உயர்ந்த பலபாணங்களைச் சேனைகள்மீது பிரயோகித்தனன்.—எ-று. (எஉ)

வாய்ந்த தோர்தன திரதமீ றுகமற் றொருதேர்
பாய்ந்து வெய்துயிர்த் தழலென வெகுண்டுபற் கறித்துச்
சேந்த மெல்லித ழதுக்கிவா னுருமெனத் தெழியா
வேந்து வார்சிலை குனித்தன னெறிகதிர்ப் பகைஞன்.

(இ-ள்.) பொருந்திய தனது தேர் அழிந்தவுடனே வேறொரு தேரிற்பாய்ந்து பானுகோபன் பெருமூச்சுவிட்டு நெருப்பைப்போலக் கோபித்துப் பல்லைக்கடித்து சிவந்த மெல்லிய உதட்டைக்கடித்து மேகத்திலுள்ள இடியைப்போலக் கர்ச்சித்து தான் பிடித்துள்ள பெரிய வில்லினை வளைத்தனன்.—எ-று. (எ௩)

கூனல் வெஞ்சிலை குனித்துநூ றுயிர கோடி
சோனை வெங்கணை தூண்டிவிற் றூணியைத் துணித்துத்
தான வெங்கரி தன்னுடன் முழுவதுஞ் சயந்தன்
மேனி முற்றவு மழுத்தினன் பகலினை வெகுண்டோன்.

(இ-ள்.) பானுகோபன் வளையாகிய கொடிய வில்லைவளைத்து சோனைமாரிபோல நூறுயிரகோடி வெவ்விய பாணங்களைப் பிரயோகித்துச் சயந்தனது வில்லையுந் தூணியையு மறுத்து மதமொழுகுகின்ற கொடிய வெள்ளையானையினுடம்பு முழுவதிலும் சயந்தனது தேகமுழுவதிலும் அழுத்தினன்.—எ-று. (எச)

வேறு.

வெய்ய வற்சிறை யிட்டவன் விட்டகோல்
சைய மொத்த சயந்தன்மெய்ம் மூழ்கலு
மைய லுற்றனன் மற்றொரு வெஞ்சமர்
செய்வ தற்கு தெளிதலின் றுயினன்.

(இ-ள்.) பானுகோபன் பிரயோகித்த பாணங்கள் மலைபோன்ற சயந்தனது தேகத்திற்படுதலும் மயக்கங்கொண்டு வேறொரு கொடும்போருஞ்செய்வதற்குத் தெளிவில்லாதவனாயினன்.—எ-று. (எரு)

நீண்ட வாளிக ளான நிறத்திடை
யாண்ட காலை யரிமகன் றந்திமேல்
வீண்டு விம்மி யுணர்ச்சியும் விட்டனன்
மாண்டி லானமுதங் கொண்ட வன்மையால்.

(இ-ள்.) நீண்ட பாணங்கள் தனது மார்பிற்பட்டவுடனே சயந்தன் வெள்ளையானையின்மீது விழுந்து வருந்தி மயங்கினன், அவன் அமுதத்தைப் புசித்திருக்கின்ற வலிமையினால் இறந்தானில்லை.—எ-று. (எசு)

நண்ணு பாசடை நாப்பணி டங்தொறுங்
தண்ணென் மாமலர்த் தாமரை பூத்தென
விண்ண வர்ககிறை மாமகன் மெய்யிடைத்
துண்ணெ னப்படு சோரி பொலிந்ததே.

(இ-ள்.) பச்சிலைகள்பொருந்திய (தடாகத்தில்) நடுவிடங்களிலெல்லாம் குளிர்ச்சியினையும் அழகினையுமுடைய தாமரைமலர்கள் மலர்ந்தாற்போல, இந்திரகுமாரனாகிய சயந்தனுடையதேகத்தில் விரைந்துவருகின்ற உதிரம்விளங்கியது.—எ-று. (எஎ)

கற்ற வாசவன் காளை தன் சீற்றநா
முற்ற வோதமு டியுங்கொ றன்னுணர்
வற்ற போது மவன்சினக் கண்ணழல்
வற்று வித்தமெய் வார்குரு திப்புனல்.

(இ-ள்.) கல்வியுணர்ச்சியையுடைய இந்திரகுமாரனாகிய சயந்தனடைந்துள்ள கோபத்தினை நாம் முழுவதுமெடுத்துச்சொல்லமுடியுமோ; அவன் தன்னுணர்ச்சியற்ற பொழுதும் அவனது கண்ணினின்றும் வருகின்றகோபாக்கினி உடம்பில்நின்று மொழுகுகின்ற உதிரவெள்ளத்தை வற்றச்செய்தது.—எ-று. (எஅ)

சயந்த னவ்வழி தன்னுணர் வின்றியே
யயர்ந்த போதத் தனையவு ணர்தியாங்
கயந்த னக்கிறை கண்டு கலங்கியே
துயர்ந்து நின்று சுளித்தெதிர் புக்கதே.

(இ-ள்.) அப்பொழுது சயந்தன் தனது அறிவுசோர்ந்து மயங்கியபொழுது அதனை அவனுடைய வாகனமாகிய வெள்ளையானைபார்த்து கலங்கித்துன்புற்று நின்று கோபித்து அப்பானுகோபனெதிரில் வந்தது.—எ-று. (எகூ)

காய்ந்த தொன்மைக் கதிரை முனிந்திடு
மேந்த லூர்தரு மெந்திரத் தேர்மிசைப்
பாய்ந்த காலைப் பரித்தொகை பாகுடன்
வீய்ந்து போன தெழித்தது வேழமே.

(இ-ள்.) வெயில்காய்கின்ற பழைமையாகிய சூரியனைக்கோபித்த பானுகோபனேறி நடாத்துகின்ற சக்கரத்தினையுடைய இரதத்தின்மேல் பாய்ந்தபொழுது, அதிற்கட்டிய குதிரைக்கூட்டங்கள் பாகர்களுடன் இறந்தன உடனே வெள்ளையானை கர்ச்சித்தது.—எ-று. (அ௦)

பாண்டில் சேர்தரு பண்ணமை செய்யதேர்
மாண்ட காலையில் வல்லையிற் கீழுறத்
தாண்டி வெள்ளையந் தந்தியைச் சீறினன்
மூண்டு பானுவை முன்சிறை செய்துளான்.

(இ-ள்.) சக்கரத்தினையுடைய அலங்கரிக்கப்பட்ட அழகிய இரதமானது அழிந்தவுடனே விரைவாகக் கீழேகுதித்து, சூரியனைக் கோபித்துச் சிறைசெய்த பானுகோபன் அழகிய வெள்ளையானையைக் கோபித்தனன்.—எ-று. (அக)

மற்ற வன்றன் மணியணி மார்பிடைச்
செற்ற மால்கரி சென்றுமுற் றூக்கலும்
பொற்றை யின்கட் புழைத்திடுஞ் சூசியி
னிற்ற வாலத னீரிரு தந்தமும்.

(இ-ள்.) கோபத்தினையுடைய பெரிய வெள்ளையானையானது சென்று அப் பானுகோபனது இரத்தினாபரணமணிந்த மார்பில் முன்னே தாக்குதலும் அதனுடைய நான்குதந்தங்களும்,மலையினிடத்தில்துளைக்கச்சென்ற ஊசியைப்போலஒடிந்துபோயின.

தந்த நான்குஞ் சடசட வார்ப்பொடு
சிந்த லுற்றன சீர்கெழு சூர்மக
னுந்து தொண்டலம் பற்றிமற் றோர்கையாற்
றந்தி வேந்தன் கவுளிடைத் தாக்கினான்.

(இ-ள்.) நான்குதந்தங்களும் சடசடவென்னுமாரவாரத்துடன் ஒடிந்த உடனே சிறப்புமிக்க சூரன் புதல்வனாகிய பானுகோபன் அவ்வெள்ளையானையினது உயர்ந்த துதிக்கையைப்பிடித்து மற்றொருகையினால் அதன்கன்னத்திலடித்தனன்.—எ-று. (அரு)

வேறு.

காழ்ந்த நெஞ்சினன் கரங்கொடு தாக்கலுங் கயமா
வாழ்ந்த தெண்டிரைப் பாற்கட லுடைந்தென வரற்றி
வீழ்ந்த யர்ந்தது சயந்தனு மறிந்தனன் விரைவிற்
சூழ்ந்த தொல்லுணர் வெய்தலு மவனிவை சொல்லும்.

(இ-ள்.) கடினமாகிய நெஞ்சினையுடைய பானுகோபன் தனதுகையினால் அதன்கன்னத்திலடிக்கவும் அவ்வெள்ளையானை ஆழமாகிய தெள்ளிய அலைகளையுடைய திருப்பாற்கடல் உடைந்தாற்போலப் பேரிரைச்சலிட்டுவீழ்ந்து சோர்ந்தது, சயந்தனும் கீழே விழுந்தனன், உடனே மூர்ச்சைதெளிந்து முன்னுணர்ச்சிவரவும் அச்சயந்தன் இவ்வார்த்தைகளைக் கூறுவானாயினன்.—எ-று. (அச)

மாயை போயது தனித்தனங் குறைந்தது வன்மை
தீயர் பற்றுவ ரழியுமிந் நகரெனச் சிறிது
நீயி ரங்கலை யினிமன னேவிதி நெறிகா
ணுயி னிங்கிவை யென்றனன சயந்தனு மறிஞன்.

(இ-ள்.) மனமே! நாம்செய்த மாயை யொழிந்தது; தனித்தோம், வலிகுன்றியது, கொடிய அசுரர்கள் பிடித்துக்கொள்வார்கள், இந்தப் பொன்னகர மழிந்துவிடும்; என்று நீ கொஞ்சமும் வருந்தாதே; ஆராயுமிடத்தில் இவையனைத்தும் விதியின்பயனாகுமென்று சயந்தன் கூறினன்.—எ-று. (அரு)

நுனித்து நாடியே யித்திற நுவன்றுநூற் றுணிபு
மனத்தில் வைத்திடு மிந்திரன் கான்முளை மயங்கித்
தனித்த நீர்மையுங் களிற்றொடு வீழ்ந்ததுந் தளர்வு
மனைத்து நோக்கியே தானவத் தலைவர்க ளார்த்தார்.

(இ-ள்.) நன்றுயாலோசித்துணர்ந்து இவ்வாறுகூறி, சாஸ்திரமுடிவை மனத்திற்கொண்டுள்ள இந்திரகுமாரனாகிய சயந்தன் மயக்கங்கொண்டு தனித்திருக்கின்ற தன்மையும் வெள்ளையானையுடன் கீழேவிழுந்ததும், தளர்ச்சியுமாகிய அனைத்தையும்பார்த்து அசுரத்தலைவர்கள் ஆரவாரித்தார்கள்.—எ-று. (அசு)

ஆர்த்த தானவத் தலைவர்கள் சயந்தனை யயலே
போர்த்த தாமெனச் சுற்றினர் பற்றினர் புவிமேற்
கூர்த்த வாலெயிற் றரவினம் யாவையுங் குழீஇப்போய்ச்
சேர்த்த வெல்லையி லிரவியைக் கரந்திடுந் திறம்போல்.

(இ-ள்.) உலகத்திலுள்ள கூர்மையாகிய வெள்ளியபற்களையுடைய பாம்பின் கூட்டங்களனைத்து மொன்றுகூடிச்சென்று சிறந்த பகற்காலத்தில் சூரியனைமறைத்துக்

கொள்ளுந் தன்மையைப்போல ஆரவாரித்த அசுரத்தலைவர்கள் சயந்தனை அயலிற் போர்த்துக்கொண்டாற்போலச் சூழ்ந்து பிடித்துக்கொண்டார்கள்.—எ-று. (அஎ)

தடித்த மொய்ம்புடைச் சயந்தனைத் தானவத் தலைவர்
பிடித்த காலையிற் கைதவன் கைதவன் பெரிது
மடித்தி டுங்கள் குற்றி டுங்களிங் கிவனுயி ரதனைத்
குடித்தி டுங்களென் றுரெலா வவுணருங் குழுமி.

(இ-ள்.) பருத்தபுயங்களையுடைய சயந்தனை அசுரத்தலைவர்கள் பிடித்துக்கொண்டபொழுது அசுரர்களனைவருங்கூடி இவன் மிகவும் வஞ்சகன் வஞ்சகன் அடியுங்கள் குத்துங்கள், இவனுயிரையுண்ணுங்களென்று கூறினார்கள்.—எ-று. (அஅ)

மன்னர் மன்னவன் றிருமக னவ்வழி மற்றோர்
பொன்னெ டும்பெருந் தேர்மிசைப் பொள்ளென வேகிப்
பன்ன ரும்புகழ் படைத்திடு சயந்தனைப் பற்றித்
துன்னி நின்றிடு மவுணருக் கொருமொழி சொல்வான்.

(இ-ள்.) அரசர்க்கரசனாகியசூரபன்மதுபுதல்வனாகியபானுகோபன் அவ்விடத்து வேறொருஇரதத்தின்மேல் விரைவாகவேறிசொல்லுதற்கரியபுகழையுடைய சயந்தனைப் பிடித்துச்சூழ்ந்திருக்கின்ற அசுரர்களுக்கு ஒருவார்த்தை கூறுகின்றனன்.—எ-று. (அகூ)

வரிவில் வாங்கியே யான்விடுஞ் சரம்பட மயங்கிப்
பெரிது மெய்தளர் வுற்றனன் பேசவுங் கில்லான்
கருத லானென விவன்றனை வருத்தலிர் கடிதே
சுரர்கு ழாத்தொடு புரிமினோ சிறையெனச் சொற்றான்.

(இ-ள்.) இச்சயந்தன் கட்டமைந்த வில்லைவளைத்து யான்பிரயோகிக்கின்றபாணங்கள் படுதலால் மயங்கிமிகவுந்தேகந்தளர்ந்தனன், பேசுதற்குங்கூடாதவனாயிருக்கின்றான், ஆதலால் பகைவனென்றுகருதி இவனைவருத்தாதீர்கள், இவனைத்தேவர் கூட்டத்துடன் சிறைசெய்யுங்களென்று கூறினான்.—எ-று. (கூ௦)

கொற்ற வன்மொழி வினவியே மந்தரக் குன்றைச்
சுற்று பாந்தள்போ லிந்திரன் றிருமகன் றுணைத்தோ
ளிற்ற கொல்லென நாணினால் யாத்தன ரிமையோ
ருற்று நின்றதோர் குழுவினு ளொருங்குற வுய்த்தார்.

(இ-ள்.) பானுகோபன் கூறியவார்த்தையைக்கேட்டு மந்தரமலையைச்சுற்றிய பாம்பைப்போல, இந்திரகுமாரனாகிய சயந்தனது, இரண்டுதோள்களு மொடிந்தனவோ வென்றுசொல்லும்படிநாணினாற்கட்டினவர்களாய்த்தேவர்களடைந்திருக்கின்ற கூட்டத்தில் சேரும்படிச்செலுத்தினார்கள்.—எ-று. (கூக)

வேறு.

தொழிலிது புரிந்த காலைச் சூர்மகன் றனது மாடே
தழியகா வலரை நோக்கிச் சயந்தனு மிவரு மல்லா
லொழியநின் றோரை யெல்லா மொல்லையிற் றருதிர் பின்ன
ரழியவிம் மூதூர் செந்தீ யரசனுக் களித்தி ரென்றான்.

(இ-ள்.) அவ்வாறுசேர்த்தபொழுது பானுகோபன் தன்னருகில் சூழ்ந்திருக்கின்ற ஏவலரைப்பார்த்து, சயந்தனும் இத்தேவர்களுமல்லாமல் மற்றொழிந்துள்ள தேவர்களையெல்லாம் விரைவில்கொண்டுவாருங்கள், பின்பு இந்தப்பழைமையாகிய பொன்னகரமழியும்படி சிவந்த அக்கினிதேவனுக்கு இரையாகக்கொடுத்து வாருங்களென்றுகூறினான்.—எ-று. (கூஉ)

என்றலு மிறைஞ்சி யன்னோ ரெழிலுடைத் துறக்கம் யாண்டுஞ்
சென்றனர் நாடி யேனைத் தேவரை மகளிர் தம்மை
யொன்றொரு வரையும் வீடா துடனுறப் பற்றி நாணாற்
பொன்றிர டடந்தோள் யாத்துப் புரவலன் முன்ன ருய்த்தார்.

(இ-ள்.) என்றுகூறுதலும் அவர்கள்வணங்கி அழகினையுடையசொர்க்கலோகமெங்குஞ்சென்று தேடிமற்றைத்தேவர்களையும் தேவமாதர்களையும் ஒருவரைவிடாமல் ஒருமிக்கப்பிடித்து நாணினால் பொன்னாபரணம் விளங்குகின்ற பெரியதோள்களைக்கட்டிப் பானுகோபன்முன்னேகொண்டுவந்தார்கள்.—எ-று. (சுரு)

உய்த்தபின் பதுமச் செல்வி யுறைதரு முறையுள் போலச்
சித்திரங் கெழுவு பொன்னந் திருநக ரெல்லை யெங்கும்
புத்தழல் கொளுவ லோடும் பொள்ளெனப் பொடிபட் டன்றே
முத்திற வரைப்பு மெங்கோன் முறுவலான் முடிந்த வாபோல்.

(இ-ள்.) அவ்வாறுசேர்த்தபின்பு திருமகள்வாழுமிடத்தைப்போல அழகுவிளங்கும் பொன்னகரத்தினிடங்களெங்கும் புதியதீயிட்டுக்கொளுத்தலும் எமதுசிவபெருமானுடைய புன்னகையினால் திரிபுரங்களுமெரிந்தழிந்த தன்மையைப்போல விரைவாகப் பொடிபட்டெரிந்தது.—எ-று. (சுச)

ஊழியி னன்றி யென்று மொழிவுறாத் துறக்க மூதூர்
பூழிய தான தன்றே புரந்தரன் வறியன் போனான்
வீழுறு சிறையி னுற்றார் மிக்கவ ரென்றால் யாரும்
வாழிய செல்வந் தன்னை நிலையென மதிக்க லாமோ.

(இ-ள்.) ஊழிக்காலத்திலல்லாமல் மற்றெக்காலத்திலுமழியாதசொர்க்கலோகமானதுபுழுதியாயிற்று; இந்திரன்வறியனாகச்சென்றனன்;சிறந்ததேவர்களெல்லாம் தாழ்வாகியசிறையிலடைப்பட்டார்கள்; ஆதலால்யாவரும் செல்வத்தை நிலையாகமதித்தல் கூடுமோ.—எ-று. (சுடு)

அளிபட லின்றி யென்று மலர்தரு நிழற்று மூதூர்
வெளிபடு சுடலை போலாய் வேற்றுருக் கோட லோடுங்
களிபடு பானு கோபன் கண்டன னவுணர் தம்மி
லொளிபடு காவ லோரை நோக்கியீ துரைக்க லுற்றான்.

(இ-ள்.) வண்டுகள் மொய்த்தலில்லாமல் எப்பொழுதும் விரிகின்றமலர்களையுடைய கற்பகத்தருக்கள் நிழலைச்செய்கின்ற பழைமையாகிய பொன்னகரமானது வெளியாகிய சுடலையைப்போலவழிந்து வேற்றுருவங்கொள்ளவும்அதனைக்களிப்பினையுடைய பானுகோபன்பார்த்து அசுரர்களில் ஒளிபொருந்திய காவலாளர்களைப்பார்த்து இதனைக் கூறத்தொடங்கினான்.—எ-று. (சுசு)

தாதுலாந் தெரிய லாகச் சயந்தனை யவனோ டுற்ற
வேதிலார் தம்மைப் பின்னோர் யாரையுங் கொடுமுன் னீவிர்
போதிரா லென்ன வற்றே போயின ருவணை நீங்கி
யாதவன் பகைஞன் மீளா வனிகமோ டவனி வந்தான்.

(இ-ள்.) மகரந்தங்கள்பொருந்திய மாலையையணிந்த மார்பினையுடைய சயந்தனையும் அவனோடுசேர்ந்த தேவர்களையும் மற்றவர்களையும் பிடித்துக்கொண்டு நீங்கள்முன்னேபோங்களென்றுகூறுதலும் அவர்கள் அவ்வாறே சொர்க்கலோகத்தைவிட்டுப்போனார்கள், பானுகோபன்மீண்டு தன்சேனைகளுடன் நிலவுலகத்திற்குவந்தனன்.—எ-று.(சுஎ)

மாநில மதிக்கும் வீர மகேந்திர புரத்துப் புக்குக்
கோனகர் முன்ன மேகிக் கொடிஞ்சிமான் றேரி னீங்கிச்
சேனையை நிறுவி வானச் சிறையினைக் கொண்டு சென்று
தானவர் மன்னன் முன்போய்த் தாண்முறை வணக்கஞ் செய்தான்.

(இ-ள்.) பெரியவுலகமானதுபுகழுகின்றவீரமகேந்திரபுரத்தையடைந்து இராச மாளிகையின் முன்னேசென்று குதிரைகள்பூட்டப்பட்டமேல்மொட்டையுடையஇரதத் தினின்றுநீங்கிச் சேனைகளைநிறுத்திவிட்டுத்தேவர்களாகியசிறையினையழைத்துக்கொண் டுசென்று சூரபன்மனுக்கு முன்னடைந்துஅவனதுபாதங்களைமுறைப்படிவணங்கினான்.

தண்டுளி நறவ மாலைத் தாதைதாள் வணங்கி யெந்தாய்
கண்டிலன் சசியை வானோர் காவலன் றனையுங் காணே
னண்டரைச் சயந்தன் றன்னை யாரையுங் கொண்டு சென்றேன்
விண்டொடர் துறக்க முற்றும் வெங்கனல் கொளுவி யென்றான்.

(இ-ள்.) குளிர்ந்த தேன்றுளிக்கின்ற மலர்மாலையையுடைய பிதாவாகிய சூரப ன்மனது பாதங்களைவணங்கி, எமது பிதாவே? யான் இந்திராணியைக்கண்டேனில்லை; இந்திரனையுங்காணேன்;ஆகாயத்திற்பொருந்தியுள்ள சொர்க்கலோகமுழுவதும் கொடிய தீயிட்டுக்கொளுத்தித்தேவர்களையும் சயந்தனையும் மற்றையர்களையுங்கொண்டு வந்தன னென்று கூறினான்.—எ-று. (௯௯)

என்றலு மகிழ்ந்து சூர னிளஞ்சிறு குமரற் புல்லித்
தன்றிரு முன்ன ரிட்ட சயந்தனை முதலி யோரைக்
கன்றின னுருத்து வாட்கைக் காவலர் சிலரை நோக்கித்
துன்றிய வினைய ரங்கம் யாவையுந் துணித்தி ரென்றான்.

(இ-ள்.) என்றுகூறுதலும் மகிழ்வடைந்து சூரபன்மன் தனது இளம்புதல்வனா கிய பானுகோபனைத் தழுவிக்கொண்டு தனக்கு முன்னே கொண்டுவரப்பட்ட சயந்தன் முதலியவர்களை மிகுதியாகக்கோபித்து வாளேந்திய கையினையுடைய சில காவலாளர்க ளைப்பார்த்து நமக்குமுன்னேயிருக்கின்ற இவர்களுடலனைத்தையும் வெட்டிவிடுங்களெ ன்று கூறினான்.—எ-று. (௧௦௦)

இரலைமான் றொகுதி தன்மே லிருஞ்சிறை வீடு பெற்ற
வுருகெழு புலிபாய்ந் தொப்ப வொப்பிலா வரசன் சொல்லால்
விரைவுட னவுணர் பல்லோர் விண்ணவர் தம்பாற் மேவித்
துருவையின் முகத்தி காணத் துண்ணெனத் துணிக்க லுற்றார்.

(இ-ள்.) மான்கூட்டங்களின்மேல் பெரியசிறையினின்றும் விடுபட்ட கோப மிக்க புலியானது பாய்ந்தாற்போல ஒப்பற்ற சூரபன்மனது கட்டளையால் பல அவுணர் கள் விரைவாகத் தேவர்களிடத்தடைந்து அசமுகியானவள் பார்க்கும்படி விரைந்துவெட் டத் தொடங்கினார்கள்.—எ-று. (௧௦௧)

கரத்தினைத் தாளைத் தோளைக் கன்னமூ லத்தைக் கல்லென்
றரற்றுறு கண்டந் தன்னை யணிகெழு துண்டந் தன்னைச்
சிரத்தினைத் துணிப்ப வன்னோர் சிறியரோ செய்த நோன்பி
னுரத்தினி லவைக ளெல்லா முடனுடன் பொருந்த லுற்ற.

(இ-ள்.) கைகளையும், கால்களையும், தோள்களையும், கன்னத்தினடியையும்,கல் என்றொலிக்கின்ற கழுத்தையும், அழகுமிக்க மூக்கையும், தலைகளையும் வெட்டவும், அத் தேவர்கள் சாமானியர்களோ? அவர்கள்செய்த தபோபலத்தினால் அவையனைத்தும் உட னுக்குடனே யுண்டாயின.—எ-று. (௧௦௨)

செல்லரு நெறிக்க ணின்ற சேணுளார் தம்மை யாருங்
கொல்லரி திறையு மங்கங் குறைத்தலு மரிதா மென்றாற்
சொல்லரி தினையர் வன்மை தொலைந்ததெம் வரத்தா லென்னு
வல்லரி புரைவெஞ் சூரன் மதித்துமற் றதனைக் கண்டான்.

(இ-ள்.) போதற்கருமையாகிய விடத்திலுள்ள தேவர்களை யாவர்களுங் கொல்லுதற்கரிதாகும்; அவர்களது அவயவங்களையுஞ் சற்றும் வெட்டுதற்கு முடியாதாயின், சொல்லுதற்கரிய இவர்களது வல்லமையானது யாம்பெற்றுள்ள வரத்தினால் தொலைந்ததென்று வலியசிங்கத்தையொத்த கொடிய சூரபன்மன் மதித்து அதனைப்பார்த்தனன்.

கண்டனன் முனிந்தின் னோரைக் காலமொன் றானும் வீடா
வெண்டரு நிரயம் போலு மிருஞ்சிறை யிடுதி ரென்றே
திண்டிற லசுரர் கேட்பச் செப்பலுஞ் சயந்தன் றன்னை
யண்டரைப் பிடர்தொட் டுந்தி யாங்கனங் கொண்டு போனார்.

(இ-ள்.) பார்த்துக்கோபங்கொண்டு இத்தேவர்களை ஒருகாலத்திலுங் கெடாத நினைக்கத்தக்க நரகம்போன்றுள்ள பெரிய சிறையிலிடுங்களென்று மிக்கவலிமைபொருந்திய அசுரர்கள் கேட்கும்படிக் கூறுதலும், (அவ்வசுரர்கள்) சயந்தனையும் தேவர்களையுங் கழுத்தைப்பிடித்துத்தள்ளி அச்சிறைச்சாலைக்குக் கொண்டுபோனார்கள்.—எ-று. (க0ச)

போயினர் சிறையி னெல்லை போற்றினர் தம்மை நோக்கி
யேயின னங்கோ னின்னோர் யாரையுங் காவல் கொண்மி
னீயிர்க ளென்னு வொற்றர் நீங்கினர் நின்றோர் தம்மை
யாயவர் வல்லி பூட்டி யருஞ்சிறைக் களத்தி லுய்த்தார்.

(இ-ள்.) சிறைச்சாலையி னருகிற்சென்று அச்சிறைச்சாலையைக் காப்பவர்களைப்பார்த்து எங்களை அரசனனுப்பினன், இவர்களனைவரையும் நீங்கள் காவல்செய்யுங்களென்று கூறித் தூதுவர்கள் சென்றார்கள்; அங்குநின்ற தேவர்களை அச்சிறைகாப்பாளர் விலங்குபூட்டி அரியசிறைச்சாலையிலிட்டார்கள்.—எ-று. (க0ரு)

மன்னவ னதற்குப் பின்னர் மைந்தனை யன்பா னோக்கி
நின்னக ரத்திற் போதி நீயென வனையன் போனு
னன்னதோர் சூர பன்ம னவையொரீஇ யுறையுள் புக்கா
னின்னலங் கடலி லுற்று ரிருஞ்சிறைப் பட்ட வானோர்.

(இ-ள்.) சூரபன்மன் அதன்பின்பு பானுகோபனை அன்புடன்பார்த்து நீ உனது மாளிகைக்குப் போகக்கடவையென்று கூறவும், அப்பானுகோபன் சென்றனன்; அந்தச் சூரபன்மனவன், இராஜசபையினின்றுநீங்கித் தன்னரண்மனைக்குச்சென்றனன்; பெரியசிறையிலகப்பட்ட தேவர்கள் துன்பக்கடலில் மூழ்கினார்கள்.—எ-று. (க0சு)

வேறு.

காடு போந்தன னிந்திரன் பொன்னகர் கரிந்து
பாடு சேர்ந்தது சயந்தனுஞ் சிறையிடைப் பட்டா
னாடில் விண்பதச் செய்கையீ தெம்பிரா னல்கும்
வீட தேயலாற் றுன்பறு மாக்கம்வே றுண்டோ.

(இ-ள்.) இந்திரன் காட்டில் ஓடியொளித்தனன்; பொன்னுலகமானது கரிந்து அழிந்துபோயிற்று; சயந்தனும் சிறையிலகப்பட்டனன்; ஆலோசிக்குமிடத்தில் விண்ணுலகத்தின்செய்கையிதுவாகும்; எமது சிவபெருமான் கொடுத்தருளும் முத்திச்செல்வமேயன்றித் துன்பமொழிந்த செல்வம் வேறேயுள்ளதோ?—எ-று. (க0எ)

### வேறு.

பட்வர வனையதோர் பருமவல்குலா
ரிடுகிய நுண்ணிடை யெழில னங்கினோர்
கொடுமைசெ யவுணரூர் குறுகி வேடர்பாற்
பிடியுறு மஞ்ஞையிற் பெரிது மஞ்சினார்.

(இ-ள்.) படம்பொருந்திய பாம்பினையொத்த பருமமென்னு மாபரணமணிந்த நிதம்பத்தையுடையவர்களும், சிறுகிய நுண்ணிய இடையினையுடையவர்களுமாகிய அழகிய தேவமாதர்கள் கொடுமையைச்செய்கின்ற அசுரர்களது நகரத்தினையடைந்து வேடர்களிடத்திற் பிடிபட்ட மயிலைப்போல மிகவும்வருந்தினார்கள்.—எ-று. (௧0அ)

சூரன்வாழ் பெருநகர் துன்னிக் காப்பொடு
சீரிலா வேவல்கள் செய்து மேவினார்
கூரும்வாய் வெங்குரீஇக் குடம்பை யுய்த்திடப்
பேருறு திலகுமின் மினியின் பெற்றிபோல்.

(இ-ள்.) கூரிய வாயினையுடைய தூக்கணங்குருவியினால் கூட்டிலடைக்கப்பட்டு விலகாது விளங்குகின்ற மின்மினிப் பூச்சியைப்போலச் சூரபன்மன் வசிக்கின்ற பெரிய நகரத்தையடைந்து இழிவாகிய ஏவல்களைக் காவலுடன் செய்து கொண்டிருந்தார்கள்.—எ-று. (௧0௯)

வாடிய மகபதி மதலை வானுளோ
ராடுறு துயர்க்கட லழுந்திச் சூரர்கோன்
வீடருஞ் சிறையிடை மேவி னாரவர்
பாடுறு திறத்தையார் பகரற் பாலினோர்.

(இ-ள்.) வருத்தத்தையுடைய இந்திரன் குமாரனாகிய சயந்தனும் தேவர்களும் அசைகின்ற துன்பக்கடலில் மூழ்கிச் சூரபன்மனுடைய நீங்காத சிறையிலடைபட்டு அவர்கள் வருந்துந்தன்மையை யார் சொல்லத்தக்கவர்கள்.—எ-று. (௧௧0)

இன்னலங் கடலினு மெடுத்து வீடுதந்
தன்னவர் பெருஞ்சிறை யகற்றும் வன்மையாற்
பின்னெவ ருண்டுயிர் பெற்றுக் காத்திடு
முன்னவர் தமக்கெலா முதல்வ நீயலால்.

(இ-ள்.) எல்லாவுயிர்களையும் பெற்றுக்காக்கின்ற தேவர்களுக்கெல்லா முதல்வராகிய தேவரீரையன்றித் துன்பக்கடலில் மூழ்கிக்கிடக்கின்ற அவர்களைக்கரையேற்றிக் கொடிய சிறையை நீக்கும் வலிமையினையுடையவர்கள் வேறே யாரிருக்கின்றார்கள். ()

வியந்தரு கதிரைமுன் வெகுண்டு ளானொடு
சயந்தன் விண்ணுலகிடைச் சமர்செய் தெய்த்துழி
வயந்தரு கோடுகண் மாய்ந்து தந்திவீழ்ந்
தயர்ந்தது புவியிடை யணுகிற் றத்துணை.

(இ-ள்.) பானுகோபனுடன் சண்டைசெய்து தேவலோகத்தில் இளைத்த சயந்தனுடன் கொம்புகளொடிந்து கீழேவிழுந்து மூர்ச்சையடைந்து பின்னர் தெளிந்தெழுந்த வெள்ளையானை உடனே நிலவுலகத்திற்கு வந்தது.—எ-று. (௧௧௨)

வாலிய வொளிகெழு வனத்தி லேகியே
மூலம தாகிய முக்கண் மூர்த்தியை
மேலுள தாணுவின் மேவச் செய்துபின்
சீலமொ டருச்சனை செய்து வைகிற்றே.

(இ-ள்.) திருவெண்காட்டிற்குவந்து மூலகாரணராகிய மூன்றுகண்களையுடைய சிவபெருமானை சிவலிங்க வடிவமாகப் பிரதிஷ்டைசெய்து ஆசாரத்துடன் அருச்சனை செய்து அங்கு வசித்துக்கொண்டிருந்தது.—எ-று. (கககூ)

அறிவுள மால்கரி யமலன் றந்திர
முறையது நாடியே முதிரு மன்பினான்
மறையுற வழிபடீஇ வைகு மெல்லையிற்
குறைபடு நாற்பெருங் கோடும் வந்தவே.

(இ-ள்.) விவேகத்தினையுடைய பெரியவெள்ளை யானையானது நின்மலராகிய சிவபெருமா னருளிச்செய்த ஆகமவிதிகளை முறைப்படி யுணர்ந்து நிறைந்த மெய்யன் பினால் மறைவாக வணங்கிக்கொண்டிருக்கின்ற காலத்தில் ஒடிந்துபோன நான்கு கொம்புகளு முன்போலுண்டாயின.—எ-று. (ககச)

பார்ப்பதி மருங்குறு பரவ னாணையான்
மாற்பெருங் களிற்றிடை வல்லை முன்புபோ
னாற்பெருந் தந்தமு நண்ண நோக்கியே
யேற்பரு மகிழ்ச்சியோ டிருந்த தவ்விடை.

(இ-ள்.) பார்வதி தேவியாரை ஒரு பாகத்திலுடைய சிவபெருமானது கட்டளையினால் அந்தப்பெரிய வெள்ளையானையினிடத்தில் விரைவாகப் பழையபடியே நான்குபெரிய கொம்புகளு முண்டாகவும் அதனைப்பார்த்து அடைதற்கரிய மகிழ்ச்சியுடன் அந்தயானை அவ்விடத்திலேயே யிருந்தது.—எ-று. (ககரு)

வேறு.

ஆயதோ ரமைதி யின்க ணணங்கொடு மேரு வெற்பிற்
போயின வமரர் கோமான் பொன்னகர் சூரன் மைந்தன்
காயெரி கொளுவி யங்கட் கடவுளர் குழுவி னோரைச்
சேயொடு பற்றி யேகிச் சிறைசெய்த தன்மை தேர்ந்தான்.

(இ-ள்.) அவ்வாறாகிய சமையத்தில் மிக்க வருத்தத்துடன் மேருமலையையடைந்தது. உடனே இந்திரன் தேவலோகத்தைப் பானுகோபன் தீயிட்டுக்கொளுத்தி அவ்விடத்திலிருந்த தேவர் கூட்டத்தினரையும் சயந்தனையும் பிடித்துக்கொண்டு சென்று சிறைசெய்த தன்மையை யுணர்ந்தனன்.—எ-று. (ககசு)

தேர்ந்தனன் றளர்ந்து மேருச் சிலம்பினின் மகவான் பன்னாள்
வார்ந்திடு கங்கை வேணி வள்ளலை யுன்னி நோற்பச்
சார்ந்துநிற் கென்னை வேண்டுஞ் சாற்றென முதல்வ னீதி
பேர்ந்தசூர் கிளையைச் செற்றெம் பேதுற வகற்று கென்றான்.

(இ-ள்.) இந்திரன் இதனையுணர்ந்து மனவருத்தங்கொண்டு அநேககாலம் மேருமலையிலிருந்துகொண்டு பெருகுகின்ற கங்கையை யணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானை நினைத்துத் தவஞ்செய்யவும் சிவபெருமான் அவ்விடத்திற்குவந்து உனக்குயாதுவேண்டுவது கூறக்கடவையென்று வினவுதலும் (அவ்விந்திரன்) கொடுங்கோன்மையினையுடைய சூரனது வமிசத்தையழித்து எமது வருத்தத்தை நீக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன்.—எ-று. (ககள)

என்றலு மெந்தை சொல்வான் யாமுமை தன்னை மேவி
யொன்றொரு குமரன் றன்னை யுதவுவ மவனே போந்து
வென்றிகொள் சூர னாதி யவுணரை விரைவிற் செற்று
மன்றநும் முரிமை யீவன் வருந்தலென் றுரைத்துப் போனான்.

(இ-ள்.) என்று கூறுதலும் எமது சிவபெருமான் கூறியருளுவார்: யாம் உமையவளை மணம்புரிந்து ஒருபுதல்வனையளிப்போம், அவன் வந்து வெற்றிபொருந்திய சூரபன்மன் முதலிய அசுரர்களை விரைவில் கொன்று உங்களது அரசுரிமையைக் கொடுப்பான், வருந்தாதேயென்று கூறி மறைந்தருளினார்.—எ-று. (௧௧௮)

சாதலுந் தொலைவு மில்லாத் தானவர்க் கிறைவ னேனோ
ரேதிலர் தம்மால் வீடா னென்றுதன் னுளத்தி லெண்ணிச்
சோதிகொள் பரம மாகித் தோன்றிடு முதல்வ னீயே
யாதலின் விமல மூர்த்தி யவரைமே லடுதி யென்றான்.

(இ-ள்.) இறத்தலும் அழிதலுமில்லாத சூரபன்மன் மற்றைய அன்னியர்களால் இறவானென்று சிவபெருமான் தமதுள்ளத்தில் நினைத்து, ஒளிபொருந்திய பிரமஸ்வரூபமாகத்தோன்றிய முதற்கடவுள் தேவரீரோ யாதலால், நின்மலராகிய சுப்பிரமணியப்பெருமானே? அவ்வசுரர்களை இனிக்கொன்றருளுவீராகவென்று வியாழபகவான் கூறினார்.—எ-று. (௧௧௯)

அவ்வுரை மகவான் றேறி யரியய னோடு சூழ்ந்து
மைவரு களத்தோன் றன்பான் மதனனை யுய்ப்ப வன்னோன்
மெய்விழி யெரியின் மாய்ந்து வெறுந்துகள் படலுந்தேவ
ரெவ்வெவ ரும்போய் வேண்ட விரங்கியே கருணை செய்தான்.

(இ-ள்.) சிவபெருமானருளிச்செய்த அந்த வார்த்தையை இந்திரனுணர்ந்து பிரமவிஷ்ணுக்களுடன் யோசித்துச் சிவபெருமானிடத்தில் மன்மதனை யேவுதலும், அவன் நெற்றிக்கண்ணிலுள்ள அக்கினியினால் இறந்து சாம்பராகவும் பின்பு எல்லாத் தேவர்களுஞ்சென்று வேண்டிக்கொள்ள, மனமிரங்கிக் கருணைசெய்தருளினார்.—எ-று.

அரியயன் மகவான் றேவ ரருங்கணத் தலைவர் யாரும்
பரவுற விமய வெற்பிற் படர்ந்துபின் னுமையை வேட்டுப்
பிரிவருங் கயிலை நண்ணிப் பின்னெம திரக்க நாடிக்
கருணையா லெந்தை நின்னை நெற்றியங் கண்ணாற் றந்தான்.

(இ-ள்.) திருமால் பிரமன் இந்திரன் தேவர்கள் அரிய கணநாதர்கள் முதலிய யாவர்களும் விரும்பும்படி இமயமலையையடைந்து பின்பு பார்வதியாரைத் திருமணம் புரிந்து நீங்குதற்கரிய திருக்கயிலையையடைந்து பின்பு எங்களதுவருத்தத்தையுணர்ந்து கருணையுடன் எமது சிவபெருமான் தேவரீரை நெற்றிக்கண்ணினால் தந்தருளினார். ()

எந்தைநீ வந்த பின்றை யிந்திர னயன்மா றேவ
ரந்தமின் முனிவ ரேனோ ரனைவர்க்கு மகன்ற வாவி
வந்தது போன்ற தம்மா வலியவெஞ் சூரற் செற்றுத்
தந்தம தரசு பெற்ற தன்மையர் போல வுற்றார்.

(இ-ள்.) எம்பெருமானே? தேவரீர் அவதரித்தருளிய பின்பு இந்திரன் பிரமன் திருமால் தேவர்கள் அழிவற்ற முனிவர்கள் முதலிய மற்றையர்களனைவர்க்கும் (உடலைவிட்டு) நீங்கிய உயிர் மீண்டும் வந்தது போன்றுள்ளது; இப்பொழுது வலிமை பொருந்திய வெவ்விய சூரபன்மனைக்கொன்று தங்கள் தங்களது அரசாட்சியைப்பெற்ற தன்மையர்களைப் போன்றிருந்தார்கள்.—எ-று. (௧௨௨)

ஆழ்தரு முந்நீர் நேமி யகன்கட லுழுவம் புக்கு
வீழ்தரு வோர்க டம்பால் வியன்கல மொன்று சேர
வூழ்தரு தொடர்பாற் பற்றி யுய்ந்தெனத் துன்ப வேலைக்
கீழ்தரு வோர்க ணின்னாற் கிளர்ந்துமே லெழுத லுற்றார்.

(இ-ள்.) ஆழமாகிய சமுத்திரத்தினடுவில்சென்று விழுந்தவர்களிடத்தில் பெரிய கப்பலொன்று வர, நல்வினைப்பயனால் அவர்களதனைப்பிடித்துக்கொண்டு கரையேறினாற் போலத் துன்பக்கடலில் மூழ்குகின்ற இவ்விந்திராதி தேவர்கள் தேவரீரால் விளங்கி மேலெழுந்தார்கள்.—எ-று. (கஉ௲)

புரந்தரன் முதலா வுள்ள புங்கவ ரெம்ம னோர்க
ளரந்தையை யகற்ற வுன்னி யையநீ போந்த பின்னுந்
தெரிந்திடு துணிபிற் சேர்ந்துந் தெம்முனைச் சூரற் கஞ்சிக்
கரந்தன ரிருந்தார் காணிற் கடுஞ்சிறைப் பிணிப்ப னென்னா.

(இ-ள்.) இந்திரன் முதலாகிய தேவர்கள் எங்களுடைய துன்பத்தை நீக்கும்பொருட்டுத் தேவரீர் திருவவதாரஞ்செய்ததற்குப்பின்பும் நாம் சுகப்படுவோமென்கிற துணிபுண்டாயிருந்தும் பார்த்தால் கொடிய சிறையில் பிடித்தடைப்பானென்று பகைவனாகிய சூரபன்மனுக்குப் பயந்து மறைந்திருந்தார்கள்.—எ-று. (கஉ௲)

எம்பிரா னின்னை முக்க ணெந்தையை வணங்க நேரிற்
றம்பெரு வடிவங் காணச் சாருவ ரொழிந்த காலை
யும்பர்கோன் முதலோர் தத்த முருக்கரந் துழல்வர் வான்மேல்
வெம்பணி சிலைகண் மாறும் வெய்யவர் நிலைமை யேபோல்.

(இ-ள்.) எமதாண்டவரே? ஆகாயத்தி லுலாவுகின்ற இராகுகேதுக்களும் தனுசிராசியும் மூலநட்சத்திரமும் மாறிமாறிவருகின்ற சூரியர்களுமாகிய இவர்களது கதியைப்போல இந்திரன் முதலானவர் தேவரீரையும் சிவபெருமானையும் வணங்கும்படி வந்தால் தமது பெரிய வடிவத்தை வெளிக்காட்டிக்கொண்டு வருவார்கள்; மற்றைப்பொழுதிலெல்லாம் மறைந்திருந்தார்கள்.—எ-று. (கஉ௫)

மறைந்திடு பாங்க ரின்ன வாசவன் முதலோர் யாரு
மறந்தவிர் சூர பன்ம னடுபடைத் தலைவர்க் காணிற்
பறைந்திட மார்ப முள்ளம் பனித்திட வியர்ப்ப யாக்கை
யிறந்தன ராகிப் பின்ன ரின்னுயிர் பெறுவ ரன்றே.

(இ-ள்.) இந்திரன் முதலியவர்களெல்லாம் தாங்கள் மறைந்திருக்குமிடத்தில் கொடுங்கோன்மையினையுடைய சூரபன்மனது கொலைசெய்யத்தக்க சேனாதிபர்களைக் கண்டால் மார்புதுடிக்க மனந்திடுக்கிட உடல் வியர்க்க இறந்தவர்கள்போலாகி அவர்கள் போனவுடன் இனிய உயிரைப் பெறுவார்கள்.—எ-று. (கஉ௬)

வினைப்பவ முழந்த விண்ணோர் வெந்தொழி லவுணர் கோனை
நினைப்பினு மவச மாவர் நெடுந்துயில் பெறுத நீரான்
மனப்படு கனவு நீத்தார் மற்றது வருமே லங்க
னனப்படு சூரற் காணி னுயிரையு மிழப்ப ரம்மா.

(இ-ள்.) பாவத்தினாலே வருந்துகின்ற தேவர்கள் கொடுங்கோன்மையினையுடைய சூரனை நினைத்தாலும் மூர்ச்சையாவார்கள், நித்திரையற்றவர்களாதலால் மனதிலுண்டாகின்ற கனவுநீங்கினார்கள்; அச்சொப்பனமுண்டாகுமாயின் அதிற் சூரனைக்கண்டால் பிராணனையு மிழப்பார்கள்.—எ-று. (கஉ௭)

பொன்னக ரிறுதி செய்து புதல்வனை யமர ரோடு
துன்னருஞ் சிறையுட் சேர்த்தித் துயர்ப்பெருங் கடலுள் வீட்டி
மன்னிய வெறுக்கை வௌவி மனையொடு கரப்பச் செய்து
மின்னமு மவுணர் கோமா னிந்திரற் கலக்கண் சூழும்.

(இ-ள்.) சூரபன்மன் சொர்க்கலோகத்தை யழித்துச் சயந்தனைத் தேவர்களுடன் அடைதற்கரிய சிறைசெய்து மிக்கதுன்பக்கடலில் வீழ்த்தி நிலைபெற்ற செல்வங்களையெல்லா மபகரித்து இந்திராணியுடன் மறைந்தோடும்படிச்செய்தும் இவ்விந்திரனுக்கு இன்னமுங் கெடுதியுண்டாகும்படி நினைக்கின்றனன்.—எ-று. (கஉஅ)

ஒப்பரும் வெறுக்கை தன்னு லோங்கிய விறலாற் சீரான்
மெய்ப்படு மிடலால் யார்க்கு மேன்மையா லழியா வாற்று
லிப்பகல் வானோர்க் கெல்லா மிடர்புரி கொடுமை நீரா
லப்பெருஞ் சூரற் கென்று மாருநே ரன்று மாதோ.

(இ-ள்.) அளவற்ற செல்வத்தாலும் உயர்ந்த வலிமையாலும் சிறப்பினாலும் சரீரபலத்தாலும் யாவனைப் பார்க்கினுஞ் சிறந்த மேன்மையாலும் அழியாத தன்மையாலும் இப்பொழுது தேவர்களுக்கெல்லாம் துன்பத்தைச் செய்கின்ற கொடுங்கோன்மையாலும் அந்தப்பெரிய சூரபன்மனுக்கு என்றும் யாவரும் ஒப்பாகமாட்டார்கள்.—எ-று.

ஏயதோ ரண்ட மொன்றி னிழைத்தன விவ்வா றேனை
யாயிரத் தோரே ழண்டத் தவன்செய லறித றேற்றாந்
தூயதோர் பரத்தின் மேலாஞ் சோதியா யெம்மைக் காப்பான்
மேயின வொருநீ யன்றி வேறியார் தெரிதற் பாலார்.

(இ-ள்.) நிலைபெற்ற இவ்வோரண்டத்திற் செய்தவைகள் இவ்வாறாயின மற்றைய ஆயிரத்தேழண்டங்களிலும் அவன் செய்கைகள் இன்னவையென்றறியோம், பரிசுத்தமான பரத்தைக்காட்டிலுஞ் சிறந்த சோதிரூபியாய் அடியேங்களை இரக்ஷிக்கும் பொருட்டெழுந்தருளிவந்த தேவரீரையன்றி வேறேயார் அவன் தன்மையையறியுந்தன்மையுடையவர்கள்.—எ-று. (கங0)

தொடர்ந்திடு சீர்பெற் றுள்ள சூரன தாணை யென்னிற்
கடந்திடல் புரியார் மாலுங் கமலமே லயனும் வானோ
ரடங்கலு முனிவர் யாரு மாயிர விருநா லண்டத்
தொடுங்கிய வுயிரு மன்னோன் பெருமையா ருரைக்கற் பாலார்.

(இ-ள்.) பொருந்திய சிறப்புக்களைப்பெற்றுள்ளசூரபன்மனதுகட்டளையானால் திருமாலும் கமலாசனனாகிய பிரமனும் சகலதேவர்களும் எல்லாமுனிவர்களும் ஆயிரத்தெட்டண்டங்களிலும் வசிக்கின்ற உயிர்க்கூட்டங்களுங் கடக்கமாட்டார்களென்றால் அச்சூரபன்மனது பெருமையை யாரெடுத்துச் சொல்லத்தக்கவர்கள்.—எ-று. (கஙக)

முடிவிலிவ் வளம்பெற் றுள்ள முரண்கெழு சூர பன்மன்
கெடுகில னன்று மேலோன் கிளத்திய வரத்தின் சீராற்
படியறு மமல மேனிப் பரஞ்சுடர்க் குமர நீயே
யடுவதை யன்றிப் பின்ன ரவனையார் முடிக்கற் பாலார்.

(இ-ள்.) அழிவில்லாத இந்த வளப்பங்களைப்பெற்றுள்ள வலிமைபொருந்திய சூரபன்மன் முற்காலத்தில் சிவபெருமான் கொடுத்தருளிய வரத்தின் விசேஷத்தால் அழியமாட்டான், ஒப்பற்ற நின்மலமான திருவுருவத்தினையுடைய பரஞ்சுடராகிய குமாரக்கடவுளே? தேவரீரேகொல்வதன்றி வேறேயார்அவனைக்கொல்லவல்லவர்கள்.—எ-று.

இந்திய லங்கஞ் சூரற் கயன்புகன் றுழல்வா னுளு
மிந்திரை கேள்வன் போர்செய் தெஞ்சின னெவர்க்கு மேலாய்
முந்திய சிவனன் னோற்கு முதல்வர மளித்தான் பின்னர்
வந்தடல் புரியா னீயே மற்றவற் கோறல் வேண்டும்.

(இ-ள்.) சூரபன்மனுக்குத் தினந்தோறும் பிரமன் பஞ்சாங்கஞ் சொல்லிக்கொண்டு திரிகின்றனன். திருமகள்மணாளனாகிய திருமால் போர்செய்து தோற்றனன். யாவர்களுக்கும் மேலாய் உயர்ந்து விளங்குகின்ற சிவபெருமான் அவர்களுக்கு ஆதியில் வரமளித்தனர்; அதனால் வந்து கொல்லமாட்டார். ஆதலால் தேவரீரே அவர்களைக் கொல்லவேண்டும்.—எ-று. (௯௯௫)

ஆவதோர் சூரன் றன்னை யவன்றுணை வோரை மைந்த
ரேவர்க டமையு மட்டே யெழில்பெறு சயந்த னோடுந்
தேவர்தஞ் சிறையை நீக்கித் திசைமுகன் மகவா னாதிக்
காவலர் பதங்க ணல்கிக் காத்தரு ளெம்மை யென்றான்.

(இ-ள்.) அவ்வாறாகிய சூரபன்மனையும் அவன் தம்பிமார்களையும் அவனுடைய புதல்வர்களனைவரையுங்கொன்று, அழகுபொருந்திய சயந்தனுடன் தேவர்களிருக்கின்ற சிறையை நீக்கி, பிரமேந்திராதி உலகபாலகர்களது பதவிகளை அவரவர்களுக்களித்து எம்மைக் காத்தருள்வீராகவென்று வியாழபகவான் கூறினார்.—எ-று. (௯௯௪)

இவ்வகை முகமா றுள்ள வெம்பிரா னுளத்துக் கேற்ப
வுய்வுறு மன்பாற் பொன்னோ னுரைப்பமுன் னறிந்த தொன்றை
மெய்வரு தொடர்பா லீன்றோர் விழைவினன் மழலை யோவாச்
செவ்வியன் மகார்வாய்க் கேட்குந் திறனென வினவிச் சொல்வான்.

(இ-ள்.) இவ்வாறு எமதாண்டவராகிய முருகக்கடவுளது திருவுள்ளத்திற்குச் சம்மதமாகும்படி உய்யத்தக்க அன்புடன் வியாழபகவான் கூறுதலும், முன்னறிந்துள்ள ஒருவிஷயத்தைப்பெற்ற தந்தைதாயர்கள் மிக்க அன்புடன் ஆசைகொண்டு மழலைவார்த்தை நீங்காத அழகினையுடைய குழந்தைகளின் வாயின்வழியாய்ச் சொல்லச்சொல்லிக் கேட்குந் தன்மையைப்போலக் குமாரக்கடவுள்கேட்டுப் பின்னர் அருளிச்செய்கின்றார்.

புன்றொழி லவுணர் தன்மை புறத்தவர் செய்கை யாவு
மொன்றிடை விடாது முற்று முள்ளவா றுரைத்தாய் நம்மு
னன்றிது பனுவற் கெல்லா நாதனை யொருநீ யன்றோ
வென்றவன் புறத்தை நீவி யினிதருள் புரிந்தா னெங்கோன்.

(இ-ள்.) நமக்கெதிரில் இழிதொழிலினையுடைய அசுரர்களது தன்மையையும் வெளியில் அவர்கள் செய்கின்ற செய்கைகளையும் ஒன்றுமிடையில் விடாமல் எல்லாவற்றையுமுள்ளபடியே கூறினை! நல்லது: நீ காப்பியங்களுக்கெல்லா மொரு தலைவனல்லையோவென்று கூறி அவன்முதுகை நன்றாய்த் தடவி எமது குமாரக்கடவுள் திருவருள் புரிந்தனர்.—எ-று. (௯௯௬)

அறிவினு ளறிவாய் வைகு மறுமுக வமல வெஞ்சூ
ரிறுசெய னினைக்கி லாகு மீண்டையோ ராட லுன்னிக்
குறுகினை யதுபோ லன்னோன் கொள்கையுந் தேர்ந்தாய் நிற்கோர்
சிறியனே னுரைத்தே னென்னுந் தீப்பிழை பொறுத்தி யென்றான்.

(இ-ள்.) அறிவுக்கறிவா யெழுந்தருளியிருக்கின்ற நின்மலராகிய சண்முகப்பெருமானே! கொடியசூரபன்மன் அழியவேண்டியதனைப்பற்றித் திருவுள்ளத்தில் நினைத்தால் உடனேயாகும்; அதைவிட்டு இவ்விடத்திலொரு திருவிளையாடலைக்கருதியெழுந்தருளினீர்; அதைப்போலவே அச்சூரனது செய்கைகளையுங் கேட்டறிந்தீர்; தேவரீருக்கு அடியேன் இச்சரித்திரங்களைச் சொன்னேனென்றுள்ள கொடிய பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்று வியாழபகவான் கூறினார்.—எ-று. (௯௯௭)

பொறுத்தியென் குற்ற மென்று பொன்னடித் துணையைப் பொன்னோன்
மறத்தலி லன்பிற் பூண்டு வணங்கினன் றொழுது போற்ற
வெறித்தரு கதிர்வே லண்ண லெம்முரை கொண்டு சொற்று
யுறத்தரு பிழையில் யாது முன்னலை யிருத்தி யென்றான்.

(இ-ள்.) சண்முகப்பெருமானே! அடியேனதுகுற்றங்களை மன்னித்தருள்வீராகவென்று வியாழபகவான் அழகிய உபயபாதங்களில் விழுந்து தவறுதலில்லாத அன்புடன் பிடித்துக்கொண்டு வணங்கித் துதிக்கவும், ஒளிவீசுகின்ற வேற்படையினையேந்திய முருகக்கடவுள், வியாழனே! நீ எமது கட்டளைப்படியே கூறினாய்; ஆதலால் இதிலுண்டாகக்கூடிய குற்றமொன்றுமில்லை; இதைப்பற்றி யொன்றும் நினையாதிருக்கக்கடவை யென்றருளிச்செய்தனர்.—எ-று. (கசுஅ)

வேறு.

பொன்னெனும் பெயரினன் பொருவில் கந்தவே
ளின்னரு ணிலைமைபெற் றிருந்த பின்னரே
தன்னய னிற்புறு சதமகத்தனை
யன்னிலை நோக்கியே யன்பிற் கூறுவான்.

(இ-ள்.) வியாழபகவான் ஒப்பற்ற முருகக்கடவுளது இனியதிருவருளைப்பெற்றிருந்ததன்பின்பு, அம்முருகக்கடவுள் தமதருகில்நிற்கும் இந்திரனை அப்பொழுது பார்த்து அன்புடன் கூறுவாராயினர்.—எ-று. (கசுகூ)

ஈண்டிது கேண்மனத் தேது மெண்ணலை
மூண்டிடு சூர்குல முடிய வானுளோர்
மீண்டிட விருஞ்சிறை விண்ப தத்தைநீ
யாண்டிட நல்குது மையுறே லென்றான்.

(இ-ள்.) இங்கே யிதனைக்கேட்பாயாக: உன்மனத்தில் வேறொன்றும் நினையாதே; படையினையுடைய சூரனதுவமிசமழியவும் கொடியசிறையினின்றுந் தேவர்கள் நீங்கவும் நீ சொர்க்கத்தை யாளவும் நாம் செய்வோம்; நீ சந்தேகப்படவேண்டாமென்றருளிச்செய்தனர்.—எ-று. (கஎ0)

இகபர முதவுவா னிதனைச் சாற்றலு
மகபதி பரிவொடு வணங்கி வானவத்
தொகையொடு போற்றியே துன்பெலா மொரீஇப்
புகலரு மகிழ்ச்சியுட் பொருந்தன் மேயினான்.

(இ-ள்.) இம்மை மறுமைகளை யளிக்கின்ற முருகக்கடவுள் இவ்வாறு கூறுதலும் உடனே இந்திரன் தேவர்கள் கூட்டத்துடன் அன்புடன் வணங்கித்துதித்துச் சகல துன்பங்களு நீங்கிச் சொல்லுதற்கரிய சந்தோஷத்திற்குள்ளாயினன்.—எ-று. (கஎக)

அமரர்சிறைபுகுபடலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஉகூக.

---

அசுரகாண்டமுற்றுப்பெற்றது.

ஆக காண்டம் இரண்டுக்குத் திருவிருத்தம்-ஙஎகஉ.

---

கச்சியப்பசிவாசாரியர் திருவடிவாழ்க.